OFFICE OF THE REGISTRAR OF BOOKS.
REGISTERED
13 SEP 1900
MADRAS.

# பொருளடக்கம்.

1. ஆசாரவிளக்கம்—விருதை - சிவஞானயோகிகள்—23, 112, 176, 226, 338.
2. ஆட்போக்கி—அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ.—206.
3. இந்தியாவி லிரும்புவேலை—டி. ஆர். இராமநாதஐயர், பி. ஏ., எல். டி.—141, 180.
4. இராஜவிசுவாசம்—பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.—201.
5. உபதேசம் (இராமகிருஷ்ண பரமஹம்ஸர்)—அனவரத விநாயகம்பிள்ளை, எம். ஏ.—475.
6. உபதேசமொழிகள்—உமாபதி—47.
7. உமையவள் பதிகம்—பிரணதார்த்திஹர சிவன், பி. ஏ.—106.
8. ஐயவினா — ஐயுற்றேன்—272.
9. கசாபியான்கா—சி. எஸ். சோக்கலிங்கம் பிள்ளை—151.
10. கடவுளுண்மை — சி. எஸ். சோக்கலிங்கம் பிள்ளை.—272.
11. கடற்கரையுலா—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.—258.
12. கமலினி—சருக்கை - இராமசாமி ஐயங்கார், பி. ஏ.—6, 81, 126, 161.
13. காங்கிரஸ் மகாசபை—கல்குளம் குப்புசாமிமுதலியார், பி.ஏ. 173, 401.
14. காதம்பரி—கல்யாணராம சாஸ்திரி, பி. ஏ.—19, 156, 185.
15. காதம்பரிச் சுருக்கம்—தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.—73.
16. கிரேக்கர் பிணநீற்றுக்குடுவை—என். எஸ். அருணசல ஐயர், பி. ஏ.—215.

17. இருட்டுப்பையன்—என். எஸ். அருணாசல ஐயர், பி. ஏ.—215.
18. சமாசாரக்குறிப்புக்கள்—39, 80, 115, 160, 199, 240, 278, 319, 360, 400, 438, 480.
19. சாந்திவிலாசம்—விருதை-சிவஞானயோகிகள்.—263, 317.
20. சிலப்பதிகாரவாராய்ச்சி—பிரணதார்த்திஹரசிவன், பி.ஏ.—132.
21. தமிழ்க்கவிசரிதம்—தி. மி. சேஷகிரி சாஸ்திரியார், எம்.ஏ.—65, 97.
22. தனிப்பாசுரத்தொகை—பரிதிமாற்கலைஞன்.—45, 109, 149.
23. தாமரைத்தடம்—வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார், பி. ஏ. 454.
24. திருநகர்த்தான் கொடுத்துதவிய திருந்துறை—சை. கிருஷ்ணமாசாரியன். —304.
25. திருப்பரங்கிரிக்குமரன் தாலாட்டு—திருஎவ்வுளூர் இராமசாமிசெட்டியார்.—355.
26. தேசாபிமானி—க. கிருஷ்ணசாமி ஐயர், பி. ஏ.—329, 378.
27. தோத்திர வெண்பா—டி. எஸ். ஏ.—32.
28. நக்கீரனார்தெய்வப்புலமை மாட்சி—நாகபட்டினம்-வேதாசலம் பிள்ளை.—281, 321, 361.
29. நாடகவிலக்கணச் சுருக்கம்—தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.—472.
30. நூதனவாசகப் புத்தகங்கள்—பத்திராதிபர்.—241.
31. நூல்விழைவு—சாமிநாதப் பிள்ளை.—121.
32. பகவத்கீதை—தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.—309.
33. பஞ்சபூதவிசாரணை—உமாபதி.—195.
34. பரீக்ஷை வினாக்கள்—78, 275, 358, 397, 433.
35. பர்த்ருஹரி—கா. கோபாலாசாரியர்.—27, 49, 247.



36. பாரத வாரம்—கல்குளம் - குப்புசாமி முதலியார், பி. ஏ.—441.
37. பிரகிருதிசாஸ்திரம்: சிலபொருள்கள் மேல்நோக்கி யெழுவதேன்?—சி. சுப்பிரமணியசாரி, பி. ஏ., எல்.டி.—432.
38. புத்தகக்குறிப்புகள்—236.
39. புருஷவசீகரம்—பிரணதார்த்திஹர சிவன், பி. ஏ.—193.
40. பெண்கல்விக் கும்மி—சிவசாமி.—60.
41. பெண்கல்வி விவாதம்—என். வி. சுந்தரராஜ ஐயர் பி. ஏ., எல். டி.—77.
42. பேகனார் சிற்றுரை—டி. ஆர். இராமநாத ஐயர், பி.ஏ., எல்.டி. 33, 209, 421, 466.
43. பொருண்முறைநூல்—கல்குளம் - குப்புசாமி முதலியார், பி. ஏ.—307, 395.
44. மதிவாணன்கதை—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.—41.
45. மல்லிகைமாதவர்—பிரணதார்த்திஹர சிவன், பி. ஏ.—57.
46. மார்க்கண்டேயகதாமணி—ந. கதிரைவேற் பிள்ளை.—218.
47. முத்திராராட்சசம்—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.—388, 413.
48. மைசூரரசு—ஸ்ரீநிவாசாசாரியர்.—55.
49. ருக்குமணி சரித்திரம்—கு. ரா. ஸ்ரீநிவாசஐயங்கார், பி.ஏ.—344, 428.
50. லீலை—ந. பலராமையர்.—86.
51. வாய்மை—சு. அ. இராமநாத ஐயர்—93.
52. வாழ்க்கைப்பயன்—சருக்கை-வரதாசாரியன்.—254, 300, 350, 369, 460.

53. விவேக சாகரர்—தே. ச. ஆண்டியப்ப பிள்ளை.—29, 110, 233.

54. வானம்பாடி—என். எஸ். அருணாசல ஐயர், பி. ஏ.—153.

55. விக்கிரமோர்வசி நாடகம்—சருக்கை இராமசாமி ஐயங்கார், பி. ஏ.—289.

56. விஞ்ஞாபனம்—பத்திராதிபர்—1.

57. விவேகசந்திரிகை—தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.—14, 138.

58. வெனிஸ்வர்த்தகன்—எஸ். வி. கள்ளபிரான் பிள்ளை, பி.ஏ.—296.

59. ஹிரண்மயி சரித்திரம்—தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.—265, 347, 416.

---

## விஷயதானஞ் செய்தவர்கள்.

1. அனவரதவிநாயகம் பிள்ளை, எம். ஏ.—ஆட்போக்கி; உபதேசம் (ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸர்.)
2. அருணாசலஐயர், பி. ஏ. (என். எஸ்)—கிரேக்கர் பிணைநீற்றுக்குடுவை; குருட்டுப் பையன்; வானம்பாடி.
3. ஆண்டியப்பபிள்ளை, (தே. ச.)—விவேகசாகரர்.
4. இராமசாமி ஐயங்கார், (சருக்கை), பி. ஏ.—கமலினி; விக்கிரமோர்வசி நாடகம்.
5. இராமசாமி செட்டியார், (திரு எவ்வுளூர்)—திருப்பரங்கிரிக்குமரன் தாலாட்டு.
6. இராமநாத ஐயர், (சு. அ.)—காப்பமை.
7. இராமநாதஐயர், (டி. ஆர்) பி. ஏ. எல்.டி.—இந்தியாவி லிரும்புவேலை; பேகரூர் சிற்றுரை.
8. உமாபதி—உபதேசமொழிகள்; பஞ்சபூத விசாரணை.
9. கதிரைவேற்பிள்ளை, (ந)—மார்க்கண்டேய கதாமணி.
10. கல்யாணராம சாஸ்திரி (ப. கி.), பி.ஏ.—காதம்பரி.
11. கள்ளபிரான்பிள்ளை, (எஸ். வி.) பி. ஏ.—வெனிஸ் வர்த்தகன்.
12. கிருஷ்ணசாமி ஐயர், (க) பி. ஏ.—தேசாபிமானி.
13. கிருஷ்ணமாசாரியன், (சை)—திருகேர்த்தாள் கொடுத்தருளிய திருத்துறை.



14. குப்புசாமி முதலியார், (கல்துளம்), பி. ஏ.—காங்கிரஸ் மகாசபை; பாரத ஸாரம்; பொருண்முறை நூல்.
15. கோபாலாசாரியர், (கா)—பர்த்ருஹரி.
16. சாமிநாதப்பிள்ளை,—நூல்விழைவு.
17. சிவகாமி—பெண்கல்விக் கும்மி.
18. சிவஞான யோகிகள். (விருதை)—ஆசாரவிளக்கம்; சாந்திவிலாசம்.
19. சுந்தரராஜ ஐயர், (என். வி.) பி. ஏ., எல்.டி.—பெண்கல்வி விவாதம்.
20. சுப்பிரமணியாசாரி (சி, பி. ஏ., எல். டி.—பிரகிருதி சாஸ்திரம்.
21. சூரியநாராயண சாஸ்திரியார், (வி. கோ.) பி. ஏ.—கடற்கரையுலா; தாமரைத்தடம்; மதிவாணன் கதை; முத்திராராட்சசம்.
22. சேஷகிரி சாஸ்திரியார், (தி. மீ.) எம். ஏ.—தமிழ்க்கவி சரிதம்.
23. சொக்கலிங்கம்பிள்ளை, (சி. எஸ்.)—கசாபியான்கா; கடவுளுண்மை.
24. பரிதிமாற் கலைஞன்—மணிப்பாசுரத்தொகை.
25. பலராமையர், (ந)—லீலை.
26. பிரணதார்த்திஹர சிவன், பி. ஏ.—உமையவள் பதிகம்; சிலப்பதிகார வாராய்ச்சி; புருஷவசீகரம்; மல்லிகைமாதவர்.
27. பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.—இராஜவிசுவாசம்.
28. வரதாசாரியன், (சருக்கை)—வாழ்க்கைப்பயன்.
29. வேதாசலம்பிள்ளை, (நாகபட்டினம்)—நக்கீரனார் தெய்வப்புலமை மாட்சி.
30. ஸ்ரீநிவாச ஐயங்கார், (து. ரா.) பி. ஏ.—ருக்குமணி சரித்திரம்.
31. ஸ்ரீநிவாசாசாரியர்,—மைசூரரசு.
32. ஸ்வாமிநாத ஐயர், (தி. அ.)—காதம்பரிச் சுருக்கம்; நாடகவிலக்கணச் சுருக்கம்; பகவத்கீதை; விவேக சந்திரிகை; ஹிரண்மயி சரித்திரம்.

# ஞானபோதினி.

ஸம்புடம் III. } 1899௵ ஆகஸ்டு௴ 20௳. { புத்தகம் 1.

## விஞ்ஞாபனம்.

செந்தமிழ் போற்றுஞ் செல்வர்காள் !

நுந்தம் ஆசீர்வாதத்தால் இப்பொழுது **ஞானபோதினிக்கு** மூன்றாவது பிராயம் ஆரம்பமான்கிறது. சென்ற இரண்டு வருடங்களில் நீவிர் நுமது எழுத்தினாலும் வாக்கினாலும் பொருளுதவி செய்தும் **ஞானபோதினியைப்** பாதுகாத்து வந்தது போன்று இனியும் அது மேன்மேலும் விருத்தியாகும்படி பலவாறு உதவி புரிவீர்களென்று உண்மையாய் நம்புகின்றனெம்.

இப்பத்திரிகையை முதல் முதலில் ஆரம்பஞ் செய்தபொழுது இதற்குக் கையொப்பக்காரர்கள் எவரேனு மிருந்திலர். ஆயினும் கைப்பணம் செலவிட்டு ஊக்கம்விடாமற் நடத்தினெம். செந்தமிழில் எழுதப்பட்டு வருகிறபடியால் இப்பத்திரிகை நீடியாது என்றார் சிலர்; வேறுசிலர் **ஞானபோதினிக்கு** இறுதிவந்துற்றதென்றனர். ஆனால் உலகவனுபவமும் தமிழ் மாட்டன்பு முடையார் எம்முயற்சி நன்முயற்சி என்று கூறினரேயன்றித் தங்களுடைய இஷ்டஜன பந்துக்களிடம் வியந்துபேசிக் கையொப்பஞ்சேர்த்து அனுப்பினர். இருதரத்தினருக்கும் எம் வந்தனம்; ஏனெனின் முன்னோர்தங் கூற்று பின்னோர்செய் உதவியைப்போன்று எந்தம் ஊக்கமுயர்த்தியது.

**ஞானபோதினி** வெளியானபின்னர், யாது காரணத்தாலோ, தமிழபிமானிகள் ஒன்று சேர்ந்து தமிழ் மாதைப்போற்ற முயன்

TSL
K m21.M80
M80-3-4

று வருகின்றனர். திராவிட பாஷைகள் விருத்தியடையும்பொ
ருட்டு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி சென்னைச் சர்வகலா
சாலையிற் பேச்சுமுண்டாயிற்று. இப்பொழுது சென்னையில் திரா
விடபாஷா சங்கமொன்று ஏற்பாடாகின்றது. அதில் அநேக கனதன
கவிகள் சேர்ந்திருக்கின்றனர். அச்சங்கத்தின் கருத்துக்களைப்பற்றி
முன்னொரு சஞ்சிகையில் வரைந்திருக்கின்றனெம். எழுத்திற்கண்
டவை நடையில் வருமாயின் திராவிட பாஷாபிவிருத்திக்கு
இதுவே நல்ல காலமென்பதற் கையமின்று. ஊர்கூடிச் செக்குத்
தள்ளுதல் என்ற நியாயமாய் முடியக்கூடாதென்பது எமது பிரார்த்
தனை. இச்சங்கத்திற்குக் கிளைகள் திருச்சிராப்பள்ளி முதலான
விடங்களில் ஏற்பட்டுவருகின்றன. இதுவும் நன்மைக்குறியே.
இது விஷயத்தில் நாம் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. இங்கியர்
கள் ஆரம்ப சூரர்களென்பதும் நாவல்லர் என்பதும் அஃதேபோ
ல் வாள் மானத்தில் நிற்க மாட்டார்களென்பதும். எங்கும் பிர
சித்தி. இஃது பொய்க்கூற்றேயொழிய மெய்யினன்று என்பதைத்
திராவிட பாஷா சங்கத்தினர் விளக்கிக்காட்டல்வேண்டு மென்பது
எந்தம் விருப்பம்.

சென்னையில் கிறிஸ்தவக்கல்லூரி, இராஜதானிக்கல்லூரி முத
லான கல்விச்சாலைகளிற் கற்றுவரும் மாணவர்கள் தமிழன்னைமேல்
முன்னிலும் அதிகப்பாசங்காட்டி வருகின்றனர். அவர்களைப் பார்
த்துச் சென்னை முத்தியாலுப்பேடை ஹைஸ்கூலில் வாசித்து வரும்
சில தமிழ்ச் சிறுவர்களும் சபை கூடித் தமிழ்ப்பாஷையைப் பயிலும்
முறைமைகளைக் கற்று வருகின்றனர். இரண்டு வாரத்திற்கு முன்னர்
இச்சிறுவர் வேண்டுகோளின்மேற் சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரிப்
பிரதம தமிழ்ப் பண்டிதராகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரிய நாராயண
சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. தமிழைப்பற்றி பிரசங்கஞ் செய்தனர்.
வெளியூர்களிலும் இது போன்ற சபைகள் ஏற்பட்டு நடக்குமாயின்
நலம்.

ஆனால் இலங்கையைச் சார்ந்த யாழ்ப்பாணத்தில் தமிழ்
விர்த்தியின் பொருட்டுத் தக்கோர் கூடிச் சட்ட திட்டங்கள் செய்து
வருஷாந்தரத்திற் சோதனையில் தேறினோர்க்குப் பரிசளித்து வரு
கின்றார்களென்பதை மனமகிழ்ச்சியுடன் உதய தாரகை, இந்து
சாதனம், முதலான பத்திரிகைகளில் வாசித்து வருகின்றனெம்.



இவ்வாறு தமிழ் விஷயத்திற் சிரத்தை எடுக்கும்படி காலம் வந்துறுவதைக் கண்டு களிக்கின்றனெம். தமிழர் தமிழ்க்கிரந்தங்களை நன்கு கற்றுப் பிறபாஷைகளில் நவமாய் வெளிப்படும் நூல்களை அப்பாஷைகளைக் கல்லாத நண்பருக்கும் பண்புடையாருக்கும் பயன்படுமாறு சுயபாஷைகளில் மொழி பெயர்த்துப் பிரசுரிப்பார்களானால் அன்னோர் பிறவிப்பயனை யடைவரென்பதற்கு ஐயமில்லை.

இது நிற்க. ஞானபோதினியின்மேல் அன்புற்று அது தழைத்தோங்கு மாற்றைச் சிந்தித்து மாணவருக்கு உபயோகமான பரீட்சை வினாக்களையும் சமாசாரங்களையும் சேர்க்கும்படி எம்மைத் தூண்டிய நண்பரனைவருக்கும் எம் வந்தனம்.

சென்ற இரண்டு வருஷங்களில் தமிழ்ச்சரிதர், இலக்கணம், பொருணூல், உடல்நூல், வைத்தியம், தத்துவம், கானம், நாடகம், கல்வி, சமயம், முதலான விஷயங்களைப் பற்றி, வாசகங்களும் கவிகளும் வரைந்தனுப்பிய பின் வரும் கனவான்களுக்கு நாம் எங்ஙனும் நன்றி பாராட்டுவோம். இவர்களில் அநேகர் சென்னைச் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றவர்களென்பது நன்கு விளங்கும். இவர் போல மற்றவரும் ஞானபோதினிக்கு உதவி புரிய வேண்டுகின்றனம்.

1. பிரமஸ்ரீ தி. மு. சேஷகிரி சாஸ்திரியாரவர்கள் எம்.ஏ.
2. ,, டி. ஆர். இராமநாத ஐயரவர்கள் பி.ஏ. எல்.டி.
3. ,, வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள் பி.ஏ.
4. ,, பிரணதார்த்தி ஹரசிவன் பி.ஏ.
5. ,, கல்யாணராம சாஸ்திரியாரவர்கள் பி.ஏ.
6. ,, சருக்கை - இராமசாமி ஐயங்காரவர்கள் பி.ஏ.
7. ,, சுந்தரம் ஐயரவர்கள் பி.ஏ.
8. ,, கோபாலசாரியரவர்கள்.
9. ,, பலராம ஐயரவர்கள்.
10. ,, ஸ்ரீநிவாசாச்சாரியாரவர்கள்.
11. ,, ஸாமிநாத ஐயரவர்கள்.
12. ம-ா-ா-ஸ்ரீ, கள்ளப்பிரான் பிள்ளையவர்கள் பி.ஏ.
13. ,, முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள் பி.ஏ.
14. ,, லக்ஷ்மண பிள்ளையவர்கள் பி.ஏ.
15. ,, அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் பி.ஏ.
16. ,, சேஷகிரிப் பிள்ளையவர்கள் பி.ஏ.

17. ம-௱-௱-ஸ்ரீ, இராமஸ்வாமியா பிள்ளையவர்கள் பி.ஏ.
18. ,, சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் பி.ஏ.
19. ,, திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள் பி.ஏ.
20. ,, குப்புசாமி முதலியாரவர்கள் பி.ஏ.
21. ,, சுப்பிரமணிய ஆசாரியார் பி.ஏ.
22. ,, வேதாசலம் பிள்ளையவர்கள்.
23. ,, வித்வான் திருமயிலை-சண்முகம் பிள்ளையவர்கள்.
24. ,, வி. வே, கி. நாராயணசாமிப் பிள்ளையவர்கள்.
25. ,, சிவஞானயோகிகள்.
26. ,, சொக்கலிங்கம் பிள்ளையவர்கள்.
27. ,, யாழ்ப்பாணம்-கதிரைவேற் பிள்ளையவர்கள்.
28. ,, திரு எவ்வுளூர்-இராமசாமி செட்டியாரவர்கள்.
29. ,, குருவிக்குளம்-ஜமீன்தாரவர்கள்.
30. ,, சாமுவேல் பிள்ளையவர்கள்.

மேற்காட்டிய பெயர்களைத்தவிர, இனிவெளிவருஞ் சஞ்சிகைகளுக்கு நானாவிஷயங்களைப்பற்றி எழுதுவதாய் வாக்களித்திருப்பவர்களிற் சிலருடைய பெயரைமட்டும் இவண் வரைகின்றும்.

1. பிரமஸ்ரீ, உ, வே. சாமிநாத ஐயரவர்கள்.
2. ,, சுந்தரராஜ ஐயரவர்கள் பி.ஏ.எல்.டி.
3. ,, சுவேதாரண்ய சாஸ்திரியாரவர்கள் பி.ஏ.
4. ,, இராமஸ்வாமி ஐயரவர்கள் பி.ஏ.
5. ,, சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்கள்
6. ,, சேதுராமபாரதியாரவர்கள்.
7. ,, ஸ்ரீரங்காசாரியரவர்கள்.
8. ம-௱-௱-ஸ்ரீ, சிவராம பிள்ளையவர்கள்.
9. ,, கந்தசாமிக் கவிராயரவர்கள்.
10. ,, மதுரை-சண்முகம் பிள்ளையவர்கள்.
11. ,, எம். பி. ஈசுவரமூர்த்தியா பிள்ளையவர்கள்.
12. ,, ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரவர்கள்.
13. ,, இராமநாதபுரம்-தங்கவேலுசாமித் தேவரவர்கள்.

### இப்பத்திரிகைக் கெழுதுங் கனவான்கள் தயைகூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயங்கள் :—

1. மையூருத கடிதாசியில் மையையே யுபயோகித் தெழுத கடவர்கள். எழுத்துக்களும் ஒன்றோடொன்று கலவாமல் தெளி வாயெழுதுதல் நலம். இவ்வாறு எழுதப்படாதகாலை அச்சடிப்



போரும் நாமும் படுங்கஷ்ட மிகுதியு முண்டென்பது முதலா வது கவனிக்க வேண்டிய விஷயம்.

2. பத்திரிகைக் கெழுதும் விஷயங்கள் கதாரூப மாகவும், சாஸ்திர விளக்க ரூபமாகவும், நாடக ரூபமாகவும், சமயபோத ரூப மாகவும், கல்வி முறைவிளக்க ரூபமாகவும் பலதிறத்தினு மெழுதப் படலாம். இவற்றுட் கதையும் நாடகமும் அந்நிய பாஷையி லிருந்து தமிழிற் சுயபாஷைப் போக்கறிந்து மொழி பெயர்க்கப் பட்டனவாதல், தமிழிலேயே யுள்ள வான்றோர் நூல்கள் வேறு ரூபப்பட்டுத் தோன்றியாதல் இருப்பின் மிக்கநலமு டையவாம். அன்றி எழுதுவோர் யாரும் யாவரானும் எழுதப்படா ததொரு கதை யியற்றுவே மென்று புகுதல் சாலாதன்றே! மொழி பெயர்த்தலும் ஆன்றோர் நூல்களை யாசரித் தெழுதலும் இசழ்வு டையவென்று கொள்ளுவோர் இவ்விருவகை யொழிந்த பிறவகை களிற் றம்மதியைச் செலுத்தி நல்விஷயங்க ளெழுதுக. சாஸ்திர விளக்கஞ் செய்வோர் பாமரர்க்கும் விளங்குமாறு எளிய நடையி லெழுதக்கடவர். சமய விஷயங்கள் சமரசமாயிருத்தலே சால்பு. இனி, செய்யுள் ரூபமாகச் சிறுநூல்கள் செய்தனுப்புவோரும் அவை யாவர்க்கும் விளங்கு மெளிய நடையிலெழுதப்படல் வேண் டுமென் றறியக்கடவர். பழையவழக்கம் பற்றி யமகந்திரிபில் யாத்த செய்யுட்கள் பத்திரிகைக்குப் பயன்படாவாகலின் அவை யொதுக் கப்படுமென்று முணரக் கடவர்கள்.

3. விஷயங்கள் ஒவ்வொரு சஞ்சிகையிலேயே முடியக்கூடி யனவாயிருப்பின் நலம். தொகுதியாக எழுதி நீட்டிக்க விரும்பு வோர் ஒருவருஷ சஞ்சிகைகள் கொள்ளுமளவறிந்து தம்விஷயத் தைச் சரிப்படுத்த வேண்டும். ஓராண்டெல்லையுங் கடந்து போமா யின் நூதனவருஷத்தோடு பத்திரிகை தொடங்குவோர் வருந்துவ ரென்பதைச்சற்று நோக்கக்கடவர்.

பத்திராதிபர்.

---

# கமலினி.

## அத்தியாயம்-XIV (தொடர்ச்சி).

மேற்கூறியார் அனைவருஞ் சிறிதுதூரஞ் சென்றதுந் திடீரெனப் பக்கத்திலொருவித சப்தங்கேட்டது. அச்சப்தத்தாற் பயந்தவர் கமலினி, கனகமாலை, ஏகாம்பரம் ஆகிய இம்மூவரே. மற்றையோர் சிறிதும் அஞ்சாது சென்றனர். உடனே கமலினி,

"என்ன, அருகில் யாரோ வருகிற சப்தங்கேட்டது. மேற் செல்வதன்முன் அதனை யாராய்தல் வேண்டும். மனிதர் பின்றொடர்ந்து வருவதாகத் தோன்றுகின்றது" என்றாள்.

இப்பொழுது செல்பவர் யாவரும் நம் கமலினியை எஜமானியெனப் பாராட்டுகின்றாராகலின் அவளிவ்வாறு கூறியதும் உடனே முன்னர்ப் போகும் வீரர்கள் சுற்றித் திரும்பிப்பார்க்க ஆரம்பித்தார்கள். மதிமுகன் இன்னமும் சும்மாவிருத்தல் தகுதியன்றென வெளிவந்தனன். கண்ணிமைப் பொழுதின் வீரர்தம் உடைவாள்கள் உறைகளினின்றும் வெளியே கழற்றப் பெற்றன. உடனே கமலினி கண்ணீர் ததும்பும் விழியுடன் மெய்ம்மயிர் பொடித்து மதிமுகனைத் தழுவிநின்றாள். இவர்கள் அனைவரும் இஃதென்ன புதுமையென அங்காந்த வாயுடன் நின்றனர். கனகமாலை,

"இவர்தாம் 'மதிமுகர்' எனப் பெயருடையவர். முன்னொருவிசை நம் கமலினியை மகா கொடுமையான தசையினின்றுந் தப்புவித்தவர். நம் கமலினியும் இவரையே வரித்துள்ளள், ஆதலின் நீங்கள் ஏதும் புதுமை பாராட்டாதீர்கள்" என்று யாவருமிவர் தம் செயலைக்குறித்து ஐயுறுவண்ணம் கூறினாள்.

இதுநிற்க. இதுகாறுங் காருண்ய வள்ளலென்ற நாமத்தைக் கூறினுமே யன்றி மற்றுமவன் றன்மையைச் சிறிதுங் கூறிலம். காஞ்சிக்கும் பழஞ்சீவரத்திற்கும் மத்தியிலுள்ளது ஒரேகாடு. அக்காட்டிற்றான் காருண்ய வள்ளலென்றவை வருடகாலமாய் வசிக்கின்றனன். இவனைச் சுற்றிநிற்பார் சுமார் முப்பது பிரபுக்களும் நூறு போர்வீரர்களுமே. அக்காட்டினிடையில் நிருமித்த ஒரு மண்டபம் மனிதர் பார்வைக்குத் தோன்றாது செடி கொடிக



ளான் மறைவுண்டு இருந்தது. அம்மண்டபத்தை யடைவது சாதாரணமாக அசாத்தியமே. அம்மண்டபத்தில் அவன்தன் பிரபுக்களுடன் காஞ்சியரசை யடையச் சமயம் பார்த்துக்கொண்டு காலத்தைக்கழித்துவந்தனன். கோமளாங்கி யென்பவள் ஒருத்தி காருண்ய வள்ளலுக்குச் சிசுருஷை செய்பவள். இவள் காருண்ய வள்ளல் மனைவியின் தோழி. மனைவி யிறந்தது முதல் இவள் இவனைப் பிரியாதிருந்தனள். இவளை யடிக்கடி வள்ளல் கமலினியின் க்ஷேமத்தை விசாரித்து வர அனுப்புவதுண்டு. அவளும் மாறுவேடம் பூண்டு மிகவும் இரகசியமாய்க் கமலினியின் சவுக்கியத்தை யறிந்து வந்து அரசனிடமுரைப்பாள். தன் தநயையைக் காணவேண்டுமென்று வள்ளல் பேரவாக் கொண்டிருந்தனன். மாணினி யென்பவள் ஒரு போர்வீரன் மகள். இவள் காருண்ய வள்ளலின் தானைத் தலைவனான மணிவண்ண னென்னும் பிரபுவின்மீது காமுற்றிருப்பது சாதாரணமாக எல்லோர்க்குந் தெரியுமேனும் அவனுக்கு மாத்திரந் தெரியாது.

காருண்யவள்ளல் கமலினி தன்னிடம் வரப் போகின்றாளெனத் தெரிந்ததும், மிகவும் சந்தோஷத்துடன் வரும் வழிபார்த்திருந்தான். அநேக நாட்களாகப் பிரிந்த தன் கண்ணினுண் மணியெனப் பாராட்டும் மகளைச் சிறிது நேரத்திற்கெல்லாம் பார்க்கக் கூடுமெனின் ஒரு தந்தைக்கு எவ்வளவு ஆநந்தம் பெருகும்? அவ்வளவு சந்தோஷத்தினும் பதின் மடங்கு நம் காருண்ய வள்ளல் அடைந்தான். மற்றுந் துன்பத்தசையில் மனைவியு மின்றியிருக்கின்றவனல்லனே? சமலினி முதலியோர் வெயின் மாலைப்பொழுதிற் காருண்ய வள்ளலை யடைந்தனர். தந்தையுந் தநயையுஞ் சந்தோஷ சாகரத்திலாழ்ந்தனர். கமலினி மதிமுகன் சௌரியத்தையும், அவன் றனக்குச் செய்த உபகாரத்தையும் விசையை தன்னை அன்புடன் பாராட்டியதையும், தான் எவ்வாறு அரண்மனை நீங்கி இவ்விடம் போந்தன ளென்பதையும் சாங்கோபாங்கமாய்க் கூறினாள். காருண்ய வள்ளலும் மதிமுகனிடத்து மிகுதியும் அன்பு பாராட்டினனேயன்றி அவனை மணிவண்ணன் கீழ்த் தானைத்தலைவனாக ஏற்படுத்தினன். அதி சீக்கிரத்திற் காஞ்சியைக் கைப்பிடிக்கத் தக்க வுபாயங்களைத் தேடிக்கொண்டிருந்தார்கள்.

பதினான்கா மத்தியாயம் முற்றிற்று.

## அத்தியாயம் XV.

" கொடுமை! கொடுமை! இக் கொடும்பா தகன்சொல்
கடுவெனப் பார்த்தென் கைகா னடுக்கின.
கைத்தவென் கண்ணுங் காதும்
இத்தனை தட்டரு மிருப்பரோ வுலகில்."

மிகவுஞ் சாக்கிரதையாகப் பாதுகாக்கும்படி அரசனே ஏவிய
குற்றவாளி தப்பித்துக் கொண்டு சென்றதைப் பற்றி வீரமார்த்
தாண்டன் மிகவும் மனம் வருந்தினான். கூடிய வரையும் மதிமுகனை
மறுபடியுஞ் சிறையிட முயன்றும் பயன்படாமையைக் குறித்து
விதியின் பயனேயென்று விசனப்பட்டான். அரசனுடைய கோ
பத்திற்குப் பாத்திர னானமையைக் குறித்துத் தன் விதியை நொந்
தான். மனைவியை வைதான். ஏது செய்து ஏதுபயன். கடைசியில்
மதிமுகன் தப்பிப் போனதற்கு அரசனே ஒருவாறு காரணமென
ன்று சிறிது தேறுதலடைந்தான். அரசன் தன்னையழையாம லிருக்
கிடின் இவ்வளவு அரந்தையும் நேர்ந்திரா தென்று எண்ணினான்.
" அரசனது அந்தரங்கப் பகைஞரது சிறைச்சாலையன்றே யிச்சிவ
ரச்சிறை. அவ்வாறிருப்ப என் இக்குற்றவாளியைப் பற்றி முக்கிய
மாகக் கவனிக்க உத்தரவளித்தான்? அவ்வுத்தரவை யேற்றுத்
திரும்புதற்கு முன்னரே குற்றவாளி பறந்தனன். இச்செய்கை
சாதாரணமெனக் குணிக்கற் பாற்றன்று. ஏதோ தெய்வசங்கற்ப
மிருத்தல் வேண்டும்" என்று பலவாறு யோசித்துப் பிறகு அரச
னிடமே சென்று அபயம் பெறல் வேண்டுமென்று தீர்மானித்
தான். வீரமார்த்தாண்டன் மறுநாள் வெயின்மாலைப் போழ்திற்
காஞ்சி யரண்மனை யடைந்தான். அரசன் வீரமார்த்தாண்டனைக்
கண்டதும் சந்தேகித்து,

" என்ன விசேடம்? நேற்றைச் சென்றவன் இன்றைக்கே
வந்தனையே! யான் குறித்த குற்றவாளியைச் சாக்கிரதையாகப்
பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனையா?" என்றான்.

வீரமார்த்தாண்டன் உடனே அரசன் காலில் வீழ்ந்து நடந்த
வனைத்தையுங் கூறின னன்றியுந் தன்னை மன்னிக்குமாறும் வேண்
டினன். அரசன் மிகவுங் கோபங்கொண்டு "எ! வீரமார்த்தாண்
டா! உன் செய்கைக்கேற்ற பெயர் உனக்கு வைக்கவில்லை. எம்மு



டைய சிம்மாதனத்திற்கே கேடுவருமாறு செய்தனை. சாமானிய இராணுவத் தலைவனை யத்தகைய உயரிய பதவியில் வைத்தது எம் மேற் பிழை. இனி ஒருகணமேனு மவ்விட மிருக்கவேண்டாம். யான் வேற்று மனிதனை யவ்விடத்திற் கனுப்புகின்றேன்" என்று கூறினான். வீரமார்த்தாண்டன்,

" தாங்கள் என்மீது அவ்வளவு கோபித்த லொண்ணாது. எப் பொழுது சிவரச்சிறைக்கு ஒருவன் வருகின்றானோ அப்பொழுதே அவன் மகா சாக்கிரதையுடன் பாதுகாக்கப்பட வேண்டியவன். இராசத்துரோகஞ் செய்தவனை யன்றிப் பின் எவர் அச்சிறைக்கு வரப்போகின்றார்கள்? தாங்களென்னை யழைப்பிக்க வேண்டுவதே யில்லை. என்னை யிவ்விட மழைப்பித்த சமயத்திற்றானே சிறையி னின்றுங் குற்றவாளி தப்பித்துச் சென்றான். ஆகையால் அவன் தப்பிச் செல்லுதலே தெய்வசங்கற்பம் போலும்" என்று கூறினான்.

அரசன் மீட்டும், " பிழையியற்றியது மன்றி எம்மீதே குற்ற மேற்றவுந் தலைப்பட்டனை. நன்றாயிருந்தது உன் புத்தி! என்முன் நில்லாதே. நாளையுனக்குச் சொல்லுகின்றேம்" என்று கொதித்த பார்வையுடன் கூறினான்.

வீரமார்த்தாண்டன் மிகவும் விநயமாய், " யான் தங்கள்மீது குற்றங் கூறவில்லை. நடந்த விஷயத்தையன்றே யான் கூறினேன். தாங்கள் கோபஞ்செய்து கொள்ளக்கூடாது. என்மீது கருணை புரிந்து யான் செய்தபிழையைப் பொறுத்தருளவேண்டும். மற் றும் இவ்வொருவருடகாலமாய்ச் சிவரச்சிறையி லேதேனும் பிழை நடந்ததா?" என்று கூறினான்.

" அக்குற்றவாளி யெம்மைக் கொலைசெய்ய எத்தனித்தவன். ஆகலினன்றோ மிகவுஞ் சாக்கிரதையாய்ப் பாதுகாக்குமாறு கூறி னேம். அவனோ தப்பிச்சென்றான். எச்சமயத்து எவ்வேடம்பூண்டு எம்மை யெதிர்க்கப் போகின்றானோ தெரியவில்லை. எல்லாவற்றிற் கும் நீ இனி அவ்விட மிருக்கக்கூடாது. நாளைக்காலையிற்றானே எம்மிடம் வரக்கடவாய். பகற் பொழுதெல்லா மெம்முடனேயே இருக்கக் கடவாய்" என்று சத்தியகீர்த்தி கூறினான்.

" எது தங்களிஷ்டமோ அதன்படி நடக்கச் சித்தனா யிருக் கின்றேன்" என்று வீரமார்த்தாண்டன் கூறி விட்டு விடைபெற் றுக் கொண்டு திரும்பிச் சென்றான்.

அரண்மனையை விட்டுச் சிறிதுதூரஞ் சென்றதும் ஒருமனிதன் தன்பின்னர் வருவதைக் கண்டான். அரண்மனைக்கு அருகிலுள்ள காவையணுகலும் அம்மனிதன் வீரமார்த்தாண்டனை நோக்கி "ஐயா! தாங்கள் சிறிது என் பொருட்டுத் தாழ்த்தல் வேண்டும்" என்று அதிகாரமாயும் வணக்கமாயுங் கூறினான். அவன் சொல்லியதாற் றிகைத்து "நீயாரப்பா? என்னிடத் துனக்கென்னவேலை? உடனேசொல், யான் முக்கியமான வேலையாய்ப் போகவேண்டும்" என்றான்.

பக்கலில் மரங்களினிடையில் நாலைந்து மனிதர் நகருவதாகச் சத்தங்கேட்டது. வீரமார்த்தாண்டன் காற்றினாலென்று சும்மாவிருந்தனன். மற்றுந்தன் சௌரியத்தில் மிகவும் நம்பிக்கை யுற்றார்க்கு மவுட்டியத்தன மதிகமாக விருக்குமென்பது யாவர்க்குந் தெரிந்ததன்றே!

"யான் வினவுங் கேள்விகளுக்குத் தடையின்றி விடைபகர்கிற்பையேல் என் வேலையைச் சொல்லுகின்றேன்" என்று மாறுவேடம் புனைந்து நின்ற சுந்தரன் கூறினான்.

"என்ன நீ மிகவும் அதிகாரத்துடன் மரியாதையின்றிக் கேட்கின்றாய்? யான் இன்னனென்று தெரியுமா உனக்கு" என்று வீரமார்த்தாண்டன் பகர்ந்தான்.

"நீதான் வீரமார்த்தாண்டன் என்னும் பெயரினை. சிவரச்சிறை காவலர் தலைவனன்றே நீ" என்றான் சுந்தரன்.

"யான் உன்னை யிதுகாறும் பார்த்திலேன். என்னை நீ எவ்வாறுணர்ந்தனை?" என்றான் வீரமார்த்தாண்டன்.

"இறைவனைப் பார்த்தவரெவருமில்லை. மற்றெல்லோரையும் இறைவன் கண்டுளன்" என்றான் சுந்தரன்.

"அப்பா! என்ன அடக்கமான குணம்! இறைவனுக்குச் சமானனென வொப்பிட்டுக் கொண்டனையே! நின் இயல்பே இயல்பு!!" என்றான் வீரமார்த்தாண்டன்.

"ஏது பரிகாசஞ் செய்யவுந் தலைப்பட்டனையோ? சும்மா இரு. அரண்மனையுள் நீ சென்றதெத்தன் பொருட்டு? உடனே கூறுவாய். இல்லையேல்—" என்றான் சுந்தரன்.



"அதை வினவுதற்கு நீயாரடா? உனக்கு யான் கூறக் கடமைப்பட்டவனல்லேன்" என்றான் வீரமார்த்தாண்டன்.

"தானாகவே கூறப்போகின்றாயா? அன்றிப் பலாத்காரத்தாற் கூறப்போகின்றாயா?" என்றான் சுந்தரன்.

"நிராயுதபாணியாக விருக்கின்றாய் எனச் சும்மா விருந்தால் ஏது பேச்சுமிஞ்சுகின்றாய்" என்று வீரமார்த்தாண்டன் உறையினின்றும் வாளினை நீக்கினான். மேகத்தில் மறைந்தமின்னல் வெளித் தோன்றியதெனப் பிரகாசித்தது. சுந்தரனுஞ் சிறிது திகைத்தவனேனுஞ் சிறிது கூவினான். உடனே நான்கு போர்வீரர்கள் பூமாதேவியின் வயிற்றினின்று முற்பவித்தாரென மிகவுஞ் சீக்கிரமாக வீரமார்த்தாண்டனெதிரில் நின்றனர். வீரமார்த்தாண்டன் சிறிதும் தளராமற் பக்கலில் நின்ற வீரனைத் தன் கட்கத்தாற் றாக்கினான். நால்வரும் நாற்புறமாக வளைந்து கொள்வதன் முன் ஒரு மரத்திற்கு நேரே தன் முதுகைக்காட்டிக்கொண்டு இந்நால்வருடனும்போர்புரிந்தான். இந்நால்வர் ஊறு செய்வானெய்யுங் குறிகளைத்தடுத்தனனேயன்றி யவர்களுக்குச் சிறிதும் காயம்படுமாறு வீரமார்த்தாண்டன் ஒரு வீச்சுந் தன்வாளால் வீசவில்லை. அவர்கள் வீச்சுக்களைத் தடுத்துக்கொண்டே நின்றான். வெற்றி தோல்வி தெரியாமல் சமானமான போர் செய்வதனால் இருதிறத்தினருஞ் சிறிது களைப்புற்றனர். ஒருவரை யொருவர் உருத்துப்பார்த்துக் கொண்டு நின்றனர். ஒரு கணத்தில் வீரமார்த்தாண்டன் பாயும் புலியென இரண்டு வீரரை வீழ்த்திவிட்டு மற்றையவனை யூறுபடுத்தி நின்றனன். நான்காமவன் புறங்காட்டிச் சென்றனன். சுந்தரன் போர் நடந்துகொண்டிருக்கும் பொழுதே சென்றனன். வீரமார்த்தாண்டன் தெய்வகதியால் தப்பினேமென் றெண்ணினான். "அரண்மனையில் நடந்த விடயத்தை யிவர்கள் எதன்பொருட்டுக் கேட்கவேண்டும்? வழிபறிக்குங் கள்வரெனல் சாலாது. எவரையோ வழிமறிக்க எண்ணினார்களெனின் என்பெயரை யுரைத்தார்களன்றே! காருண்யவள்ளலின் சேனையைச் சார்ந்தவரோ? 'அவர்களாக விருந்தாற்றான் அரண்மனை விடயங்களை யாராய விருப்புற்றவர்களா யிருப்பார்கள். எல்லாவற்றிற்கு மரசனிடம் நாளைவந்துங் கூறுவா" மென்று விசையாய்ச் சிவரத்திற்குச் சென்றான். யாவற்

றையுந் மனைவிக்குரைத்தான். அவள் மிகுதியும் வெளியே வருத்தந் தோற்றுவித்தனளேனும் மனத்திற் சந்தோஷத்தை யடைந்தா ளென்பதிற் சந்தேகமில்லை.

பதினைந்தா மத்தியாயம் முற்றிற்று.

---

## அத்தியாயம்—XVI

“ தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரான்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே.”

பொழுது புலர்ந்தது. சிவாத்தினின்று வீரமார்த் தாண்டனும் அவன் மனைவியாய குணவதியும் இரண்டு காளைகள் கட்டிய பெட்டிவண்டியிற் காஞ்சியை நோக்கி வந்தனர். சுதந்தர மிகுந்த உத்தியோகத்தினின்றும் க்ஷணந்தோறும் அரசன் கோபத்திற்கும் சந்தோஷத்திற்கும் பாத்திரனாகும் படியான வேலைக்குத் தான் மாற்றப்பட்டதைப்பற்றி மிகவும் வருத்தப்பட்டான். மற்றும் தன் மனைவி பலரோடுங் கலக்கு மாறும், அநேகரைச் சிநேகஞ் செய்யு விசையை தனியேயிருத்தலினால் அவளுடன் உல்லாசமா யிருக்கு மாறும் நேரிடு மென்று வீரமார்த்தாண்டன் மிகவும் வருத்தப் பட்டான். எப்பொழுதும் மனைவியைப் பிரிய மனமிலனாகலான விபரீதமான எண்ணங்க ளெல்லா மவன் மனத்திலுற்பவித்தன. மற்றுக் குணவதியோ சிறையினின்றுந் தப்பி மறுபடியும் தன் குழுவுடன் சேர ஏகுங் கிள்ளையென மனமகிழ்ந்தாள். கணவனது கடோரமான சட்டுப்பாடுகளினின்றும் உல்லாசமாக அரண்மனைக் குப்போகலா மென்னும் பேரவா அவளுக்கு மிகவும் சந்தோஷத் தை யுண்டு பண்ணிற்று. தன் மனைவியின் குணத்தை முற்றும் அறிந்தவனல்லன் வீரமார்த்தாண்டன். அவன் குணவதியை நோக்கி,

“ எனக்கு அரண்மனைக்குப் போவதைக் குறித்து மிகவும் வருத்தமாயிருக்கின்றது. இவ்வளவு துன்பமு மப்பாதகக் குற்றவாளியால் ஏற்பட்டன. அவனை யான் காண்பனேற் சித்திரவதை செய்வேன்” என்று சொன்னான்.



“ அரண்மனைக்குப் போவதனால் நமக்கென்ன வருத்தம் நேரப்போகின்றன? அரசனது நல்லெண்ணத்தை யடைந்தால் நல்ல ஸ்திதிக்கு வரலாம். மற்றும் பிரபுக்களுடனும், ஆஸ்தானிகருடனும் ஊடாடலாம்” என்றாள் குணவதி.

“ உன்னினின்றும் பிரியுமாறு நேரிடுமோ வென்றுதான் மிகவும் வருத்தப்படுகின்றேன். மன்னன் மனைவியிலான். எங்குஞ் சுற்றித்திரிவான். அவன் மெய்காப்பாளனால் மிகுந்த அரந்தைக்குட்பட வேண்டிவரும்” என்று வீரமார்த்தாண்டன் செப்பினன்.

“ கிராமங்களில் வசித்தலைப் பார்க்கிலும் நகரங்களில் வசித்தலே மேலானது. நல்ல நாகரிகங்களைத் தெரிந்து கொள்ளலாம். விநோதக் காட்சிகளைக் காணலாம். கவுரவம் பெறலாம். எல்லா விதத்தும் மேன்மை யுறலாம்” என்றாள் குணவதி.

“ அஃதென்னையோ? நீ அரண்மனையுள்ளாருடன் கூடிக்கொண்டு என்னைத் துறப்பையேல் இப்பொழுதே யான் அவ்விடஞ் சொல்லாமல் ஓடிக்காருண்ய வள்ளலுடன் சேருகின்றேன். என் உத்தரவின்றி வெளியேறுதலும் உல்லாசமாய்த் திரிதலுங் கூடாது இதற் குடன்படுவையேற் போகலாம். இல்லாவிடின் வழியை மாற்றச் செய்கின்றேன்” என்றான் வீரமார்த்தாண்டன். குணவதி பிறகு யாவற்றினுக்கும் யோசித்துக் கொள்ளலா மென்று மெல்லெனத் தன்கணவனைத் தழுவிக் கொண்டு,

“ என்ன, அவ்வாறெல்லாம் சொல்லுகின்றீர்களே. என் கண்ணாளராகிய உங்களைப் பிரிந்து யான் எவ்வாறு ஒரு கணமேனுந் தாழ்ப்பேன். உங்களை யன்றி யெனக்கு என்ன உல்லாச மிருக்கின்றது? தாங்கள் என் மீது அன்பு பாராட்டுவீர்களாயின் அதுவே போதுமானது. காட்டிலிருந்தாற்றா னென்ன? குகையிலிருந்தாற்றான் என்ன? எல்லாவற்றிற்கும் அரண்மனையில் தாங்கள் நன்மையை யடையலாம். மேலான பதவிக்கு வரலா மென்றல்லவா கூறினேன்” என்று குணவதி மிகவும் பாசாங்குடன் மழலை மிழற்றுங் கிள்ளையெனக் கூறினாள்.

வீரமார்த்தாண்டன் தன் மனைவியின் ஆலிங்கனத்தால் மிக மனமகிழ்ந்து முத்தங்கொண்டு,

'ஒருபொழுது நினைப்பிரியே னொருபொருளு மதியேன்யான்
பொருவறுநின் முகநோக்கிப் புயல்வீழுந் துளிநோக்கி
விரதமனுட் டிக்குமொரு வியன்புள்ளை மானவுன்றன்
கருதரிய வின்பசுகங் காமித்து வாழ்வேன்யான்.'

என்று பாடி அவளைச் சந்தோஷித்தனன். குணவதியும் தன் நாயகன் தன் வலையிற்சிக்கியத னிமித்தம் மனமகிழ்ந்தாள். வழியினில் யாதொரு தடையு மின்றி இருவரு மரண்மனையை யடைந்தனர்.

சருக்கை இராமசாமி ஐயங்கார்.

---

## விவேக சந்திரிகை—II.

---

### அஜாகருகதை.

#### நிருக சக்ரவர்த்தியின் விருத்தாந்தம்.

கிருதயுகத்தில் நிருக சக்ரவர்த்தி யென்னும் சூரிய வம்சத்தரசன் அறம் வழுவாமல் அரசு புரிந்து வந்தான். இவ் அவனிபாலன் அநேக வேள்விகளை யியற்றி எண்ணிறந்த கோதானங்கள் செய்தான். ஒரு நாள் ப்ரஹ்ம சர்மா வென்னும் ஓர் அந்தணன் அரசனால் ஒரு கோதானம் கொடுக்கப்பெற்று அப்பசுவினைத் தன் வீட்டிற் கட்டிவைத்தான். அப்பசு தப்பித்துக் கொண்டு ஓடிப்போய், வெகு நாட்களாக நிருக சக்ர வர்த்தியின் பசுமந்தையில் ஒளித்திருந்தது. அரசன் இதை யறியாமல் அப்பசுவினை வேறொரு பிராமணனுக்குக் கொடை யளித்தான். இந்தப் பிராமணன் அதனைத் தன் அகத்தில் வைத்துக் கொண்டிருக்கையில், ப்ரஹ்ம சர்மா தன் பசுவைத் தேடிக் கொண்டு வந்து பின் சொன்ன வேதியன் இல்ல மடைந்து அதனைப் பெயரிட்டழைக்க, அஃதவனண்டை வந்து நின்றது. அப்பொழுது இவ்விருவரும் என்னுடையது பசு என்னுடையது பசு வென்று தம்முட் சச்சரவு செய்து கொண்டு நிருக சக்ர வர்த்தியின் பால் அணுகினர். அரசன் அந்தப்புரத்திலேயே இருந்து கொண்டு இவர்களை விசாரியாதிருந்தான். அவ்வளவில் அந்தணரிருவரும், செல்வச் செருக்கினால் அஜாக ருகனாயிருந்த நிருகனை ஜங்கம ஜந்துவாய்ப் போம்படி சபித்தனர். ஆகவே எவ்வளவு தர்மிஷ்டனாயிருந்தும் என்ன ! நிருக சக்ர வர்த்தி தன் அஜாக்கிரதை யினாலல்லவா, சாபத்துக்கு இலக்காயினன் ?— **உத்தரராமாயணம்.**



#### மணிமந்தன் விருத்தாந்தம்.

அஷ்ட திக்பாலகர்களுள் ஒருவனும், தனத்துக்கெல்லாம் அதிபதியுமான குபேரனும், அவன் சேநாபதி மணிமந்தனும், பரிவார சகிதமாய்ப், புஷ்பக விமானத்தில் இவர்ந்து சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது மணிமந்தன் அஜாக்கிரதையினால், மஹா தபோதனராகிய அகஸ்தியர் மீது எச்சி லுமிழ்ந்தான். அகஸ்தியர் நிமிர்ந்து பார்த்து, குபேரனுடன் செல்லும் மணிமந்தன் இக்காரியம் செய்தவனென உணர்ந்து, "அடே நீசனாகிய மணிமந்தா நீ அஜாகருகனாய், அலக்ஷ்யமாய் என்மேல் உமிழ்ந்த காரணத்தினால் நீ கேவலம் மனுஷ்யர்களால் ஜன சேனையுடன் நாசமாய்ப் போகக்கடவை" என்றும்,—குபேரனை நோக்கி 'அடேகுபேரா, உன்சேனாபதி செல்வச்செருக்கினால் அகங்கரித்து இவ்வடாதசெயலை யிழைக்கையில் நீபார்த்தும் வாளா விருந்தமையால், உம் பரிவார மவ்வளவும் மனுஷ்யர்களால் அதமாய்ப் போகும்படியான துக்கம் உனக்குச் சம்பவிக்கக்கடவது" என்றும் சபித்தார். பீமன் ஆரண்யத்திற் குபேரனைப் பரிவாரத்துடன் தோல்வியடைந்து பரிபவமுறச் செய்தான். இவ்வாறு முநிசாபம் நிறைவேறியது. ஆகையால் அஜாகருகர்களாய் எந்தக்காரியம் செய்தாலும், மிகப்பெரிய விபத்துக்கள் சம்பவிக்கும்.—**பாரதம்.**

### பதார்த்தங்களைப் பரீக்ஷித்துக் கிரஹித்தல்.

#### அநுமான் சீதையை இலங்கையில் தேடிய கதை.

கிஷ்கிந்தை நகரத்தலைவனாகிய சுக்ரீவன் ஸ்ரீராமனது நட்பைப்பெற்று, சீதையைத் தேடும்பொருட்டுத் தன்வேலையாட்களைப் பலதிக்குக்களுக்கும் அனுப்பினான். அவ்வண்ணம் பலவிடங்களுக்கும் போயிருந்த வானரங்கள் சீதையை யெங்கணும் காணாதவர்களாகித் திரும்பிவந்து சேர்ந்தனர். தென்பக்கம் சென்ற ஆஞ்சநேயன் நூறுயோஜனைகள் விஸ்தீரணமுள்ள கடலைத்தாண்டி இலங்கையையடைந்து எல்லாத்திக்குக்களிலும் தேடிக்கொண்டு, இராவணனது அந்தப்புரத்திற் சூக்ஷ்மரூபத்துடன் பிரவேசித்தார். அப்பொழுது அர்த்தராத்திரியாயிருந்தது. சகல ஜீவராசிகளும் அருந்துயிலில் அமர்ந்திருந்தன. அநுமார் அவ் அந்தப்புரத்தில் ஹம்ஸ தூலிகா தல்பத்தின்மேல் இராவணனுடன் சயனித்திருந்த மண்டோதரியைக் கண்டான். இம்மண்டோதரி ரூபத்திற் கோமளாங்கியான சீதையை யொத்திருந்தாள். ஆகையால் ஆஞ்சநேயன் அவளைச் சீதையென்றே கருதினவனாய்ப் பதைபதைப்படைந்து "ஹா ! ஹா ! காரியம் மிஞ்சிப்போய் விட்டதல்லவா ! இக்கொடியனாகிய இராவணன் துர்ப்புத்தியினால் ஜநக நந்திநியினது கற்பை அழித்தானே. இனி என்ன செய்வேன் !" என்று சிந்தித்துக்கொண்டு சாவதானமாய் மண்டோதரியின்

தேகமெல்லாம் பரீக்ஷித்தான். கடைசியில் மாருதி அவள்பாதங்களைப் பரிசோதித்து பார்த்துத் தன்மனத்திற்கு, ள்" ஜானகியின் பாதங்களிற் பத்மரேகை யுண்டென்று ஸ்ரீராமன் அருளியிருக்கின்றார், இவள்காலில் காகரேகை யிருக்கின்றமையால் இவள் மண்டோதரியே யாதல் வேண்டும். அந்தோ, பதிவிரதா சிரோமணி யாகிய அம்மை திவியின்கண் நான் வாளா தோஷாரோபணம் செய்து மஹா பாதகத்துக் காளானேன் அல்லவா! ராம! ராம! யான் இவளது அடையாளங்களைச் சரியாய்ப் பரீக்ஷியாது போயிருப்பேனேயாகிற் காரியமெல்லாம் விபரீதமாகி ஸ்ரீராமனுக்கு எத்தகைய அபகீர்த்தி சம்பவித்திருக்கும்!" என்று நினைத்துக்கொண்டே வெளியே சென்றான். அவ்விடத்தி னின்றும் அஞ்சனை மைந்தன் இராவணனது அசோக வனம்புக்கு, வைதேஹியைத் தன் கண்ணாரக்கண்டு களிகூர்ந்தான். இப்படியே நாமும் ஆஞ்சநேயனைப்போற் பார்ப்பதிற் சிறிதுசாவதானத்துடன் நன்றாய்ப்பரீக்ஷித்து விஷயங்களைக் கிரஹித்தல் வேண்டும்.—ஸ்ரீமத்ராமாயணம்.

## எப்பொருளும் பயனற்றதன்றென அறியற்பாலது.

### ஜடபரத ரிஷி விருத்தாந்தம்.

கிருதயுகத்தில் பரதமஹாராஜன் வெகுதார்மிகனாய் தன்னுயிரைப்போல் மன்னுயிரைப்பரிபாலித்து வந்தான். உலக வியாபாரத்தில் எத்தனைகால மிருப்பினும் அவ்வளவுக்கும் கஷ்டம் அதிகமாகுமென்று ஆலோசித்து, தன் குமாரனுக்குப்பட்டங்கட்டிவிட்டுத் தான் தவஞ்செய்யும் பொருட்டு கானகம் சென்றான். அவனுக்கு அந்த ஜன்மம் போய் பிராமண ஜன்மம் வந்தது. ஓர் அக்கிரகாரத்தில் ஒரு வேதியனுக்குப் புதல்வனாய்த் தோன்றினான். இக்குழந்தை களிமண்கட்டிபோல சிறிதும் அசையாமல் ஓரேயிடத்தில் இருந்தமையால், ஜடபரதன் என்னும் பெயரால் அழைக்கப்பெற்றது. அன்னம் போட்டால் சாப்பிட்டுக்கொண்டும், தண்ணீர் கொடுத்தால் அருந்திக்கொண்டும் இருக்கும். இல்லாவிடில் வெறுமனேயாவதிருக்கும். இப்படி யிருந்தமையால் எல்லாரும் இஃதோர் பயனற்ற பண்டமெனக்கருதித்தெருவில் உட்காரவைத்தார்கள். தெருவில் போகின்றவர்களெல்லோரும் "இந்தப்பூதத்தைப் பாருங்கள்" என்று தேங்காயுடைத்தாற்போல் அக்குழந்தையின் தலையில் குட்டிவிட்டுப் போவார்கள்.

சிலநாள் சென்றபின் இவன் மானுட வடிவாகவாவது இருக்கட்டுமென்று வயலில் கொண்டுபோய் வைத்தார்கள். ஞானியாகிய ஜடபரதர், யார் என்ன செய்தாலும் ஒன்றையும் பாராட்டாமல் தன் பிரமஞானத்தில் உலகத்தை மறந்திருந்தார். இவ்வாறிருக்கையில் ஒருநாள் ஜநகமஹாரஜா பல்லக்கில் உட்கார்ந்துகொண்டு, கபிலர்பால் ஸாங்க்யஸித்தாந்த உபதேசம் பெறும் பொருட்டு அவ்வயலின் வழியே போய்க்கொண்டிருந்தார். பல்லக்கைச் சுமக்குமா ஜனங்



கள் எண்ணிற் குறைந்தவர்களாயிருந்தமையின், அப்பொழுது பெருத்த சரீரத்துடன் பூதம்போல் வயலில் உட்கார்ந் திருந்த ஜடபரதரைப் பயனற்றவரெனக்கருதி இழுத்துக் கொண்டு சென்று அவரைப் பல்லக்கைச் சுமக்கப் பண்ணினர். * ஜடபரதர் மாத்திரம் தரையில் ஜந்துக்கள் காலின் கீழகப்பட்டு நசித்துவிடாம லிருக்கவேண்டுமென்று பாவத்துக்குப் பயந்தவராய் வெகு சாக்கிரதையாய் தாண்டித்தாண்டி அடிகளை வைத்துக்கொண்டு போனார். * ஜடபரதருடன்கூடப் பல்லக்கு சுமந்தவர்கள் சரியாய் அடிவைத்து பாரத்தை சுமந்து சென்றனர். இதனால் உள்ளே உட்கார்ந்திருந்த ஜநகனுக்கு அதிர்ச்சி அதிகமாய் உண்டாயிற்று. ஜநகன்—நீ நிரம்ப மெல்லியவனாயிருக்கின்றாயா? பல்லக்கைச் சுமந்துகொண்டு சரியாய் நடக்கமுடியாதா? என்று ஜடபரதரைப் பரிஹாசம் செய்தான். அப்பொழுது பிரமஞானியாகிய ஜடபரதர் தனக்கிப்பொழுது சரியானசமயமும் சரியான பாத்திரமும் கிடைத்த தென்று ஜனகனைநோக்கி—ஐயா, அரசனே, நீயிவ்வளவு அஞ்ஞானியாயிருக்கலாமா? நான் சுமக்கிறதென்றால் என்ன? நீ உட்கார்ந்திருப்பதென்றால் என்ன? நான் நீ என்னும் பேதம் உண்டா? உலகத்தில் பிராப்த வஸ்துவாகிய பிரஹ்மம் எவ்விடத்திலும் நிறைந்து நாநாரூபமாய்க் காணப்படுகின்றது. இதையறியாதவர்களே பதார்த்தங்களின்கண் பேதம் கற்பிப்பவர்கள்—என்று வேதாந்தஸாரத்தை யெடுத்துச்சொன்னார். இதைக் கேட்டபின்னர் ஜனகன் பல்லக்கினின்று கீழே இழிந்து நமஸ்காரம்செய்து, "ஸ்வாமி, என் அபராதத்தை க்ஷமித்தல்வேண்டும்," என்று வேண்டிக் கொண்டு அவராலேயே ஸாங்கிய ஸித்தாந்தத்தை யுபதேசிக்கப்பெற்றான். இதனால் எந்தமனிதனானாலும், எவ்வளவு அற்பமாய்க் காணப்பட்டாலும் அவனை அலக்ஷ்யம் செய்யலாகாதென்பது போதரும்.—பாகவதம்.

𑌅𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌮𑍂𑌲𑌮𑌨𑍌𑌷𑌧𑌮𑍍 ।
𑌅𑌯𑍋𑌗𑍍𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌯𑍋𑌜𑌕𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ॥

அமந்த்ரமக்ஷரம் நாஸ்தி நாஸ்திலே மநௌஷதம்
அயோக்ய: புருஷோநாஸ்தி யோஜகஸ்தத்ரதுர்லப:

மந்திரமாகாத எழுத்தில்லை! மருந்தாகாத வேர் இல்லை; அயோக்யனான (பயன்படாத) புருஷனில்லை. ஆனால் இவற்றைச் சரியாய் உபயோகிப்பவன் கிடையாது (அருமை) - சுக்ரநீதி.

## இளமைப் பழக்கம்.

### கிளிப்பிள்ளைகள் விருத்தாந்தம்.

நைமிசாரண்யத்தில் ஒரு மாமரத்தின் பொந்தில் ஒருகிளி இரண்டு குஞ்சுகளை யீன்று அவற்றை வளர்த்துக் கொண்டு வந்தது. ஒரு நாள் தீனி கொண்டு வரும்பொருட்டு தாய்க்கிளி வெளியே போயிருந்தது. அச்சம

யத்தில் ஒருவேட்டைக்காரன் வலையை வைத்துக்கொண்டு காத்திருந்தான். கிளிக்குஞ்சுகள் கூட்டினின்றும் வெளியே வந்து மெள்ள மெள்ள மேற்கிளையினின்று கீழ்க்கிளைக்கு வந்துகொண்டே இறங்கி வலையில் விழுந்துவிட்டன. விழுந்ததும் வேட்டைக்காரன் அவற்றைப் பிடித்துத் தன்பையில் போட்டுக்கொண்டு போய்க்கொண்டிருந்தான். அவற்றில் ஒருகுஞ்சு பையில் சிறிது கிழிசலாய்த் தோன்றிய ஒரு சந்தில் புகுந்து சப்தம் செய்யாமல் மெதுவாய் அருகிலிருந்த ஓரிருஷி யாசிரமம் போய்ச்சேர்ந்தது. அங்குள்ள ரிஷிகுமாரர்கள் பிராண பயத்தினால் பறந்தோடிவந்த சுகத்தைப் பிடித்துக்கொண்டு ஆதரவுடன் அதற்கு ஆஹார மளித்தனர். இது ரிஷிபோஷணையையடைந்து அங்கே தங்கிவிட்டது. வேடன், ஒரு குஞ்சு பறந்தோடி விட்டதைக்கண்டு, அதனை மறுபடியும் பிடிக்க முடியாமல், தன்னிடத்திருந்த மற்றொன்றைப் பத்திரப் படுத்திக் கொண்டு, சமீபத்திலிருந்த ஒரு பட்டணத்தை யடைந்து அங்குள்ள ஒரு கசாப்புக் கடைக்காரனுக்கு அதை விற்றான். அதை அவன் கூட்டில் வைத்து தன் வீட்டிலும் கடையிலும் கட்டிவைத்துக்கொண்டு போஷித்து வந்தான். இப்படியிருக்கும்பொழுது ஒரு நாள் அக்கிளியானது, கூட்டின் கம்பியொன்று தளர்ந்திருந்தமையால் அதை மெள்ள விலக்கிக்கொண்டு அவ்வழியாய்த் தப்பித்துக்கொண்டு நைமிசாரண்யம் போய்ச்சேர்ந்தது. அவ்வழியே வந்துகொண்டிருந்த ஓர் வேதியன் வழிநடந்த களைப்பினால் அந்தக்கிளியிருந்த மரத்தின்கீழ் வந்துட்கார்ந்தான். அப்பொழுது கிளியானது—அவன் யாரோ வந்திருக்கின்றான்; வெட்டு! குத்து! ஆட்டுமாம்சம் ஆறுகாசு! கோழியிறைச்சி மூன்றுகாசு! மூஞ்சியிலே போட்டேன், போபோ உன்பழைய துனியையெடு! என்று கத்திற்று. பிராமணன், இதென்ன, இக்கிளி கெட்டவார்த்தைகளைப் பாடுகின்றது. இதன் சகவாஸம் யோக்கியமானதன்று என்று வழியைத்தொடர்ந்து போய் ஒரு ஸரோவர்த்தைக்கண்டான். அதன் கரையிலிருந்த மரத்தின்கீழ் உட்கார்ந்தான். ரிஷிகளின் பரணசாலையில் வளர்ந்தகிளி மரத்தின்மேல் உட்கார்ந்திருந்தது. அதுகீழே உட்கார்ந்திருந்த பார்ப்பானைப் பார்த்து "ஸ்வாமி, ஸ்வாகதமா? சிரம பரிஹாரம் செய்துகொள்ளுங்கள். இதோ தங்களுக்கு வேண்டிய கனிகள் இருக்கின்றன. புஜித்து உங்கள் க்ஷுத்பாதையைத் தீர்த்துக்கொள்ளுங்கள். தங்களுடைய தர்சனவிசேஷத்தினால் அடியேன் தந்யனானேன்." 'ஸத்யம்வத,தர்மஞ்சர' என்று சப்திக்கத்தொடங்கியது. அந்தப் பிராமணன் அதைக்கேட்டு ஆனந்தமும் ஆச்சரியமுமடைந்து கிளியை ஏறிட்டுப்பார்த்து "ஓ சுகமே, இப்பொழுது அரைநாழிக்குமுன் ஒருமரத்தின்கீழ் உட்கார்ந்தேன். அங்கிருந்தகிளி துர்பாஷைகள் பேசிற்று. அதைச் சகியாமல் இங்கேவந்தேன். நீ இவ்வாறு மநோரஞ்சகமாய்ப்பேசி உபசரிக்கின்றாய். இதென்ன ஆச்சரியம். இப்படி யுங்கள் சுபாவங்கள் வேற்றுமைப்பட்டிருப்பதற்குக்காரணம் என்னை? என்று வினவ, அதற்கு கிளியானது, 'ஸ்வாமீ,



இதன் உண்மையைத்தங்களிடம் விண்ணப்பம் செய்கிறேன். நாங்களிருவரும் ஒரு தாயின் பிள்ளைகள். வேட்டைக்காரன் கையில் அகப்பட்டு நான்தப்பித்துக்கொண்டு முனிவர் தபோவனம் சேர்ந்தேன். அது கசாப்புக்காரனிடம் சேர்ந்தது. நான் முனிவர்கள் பேசும் வார்த்தைகளைக் கேட்டு அவ்வாறு பேசுகின்றேன். அது கசாப்புக்காரன் கடையில் அவன் பேசும் பேச்சுகளைக் கேட்டு அவ்வண்ணம் பேசுகின்றது. எங்களிருவரது குணபேதத்துக்குக் காரணம் எங்கள் பால்யாப்பியாசமே "இளமைப்பயிற்சி" என்றது. ஆகையால் சிறுபொழுதிலேயே நன்னெறியைப் பின்பற்ற வேண்டும்.
—பாரதம்.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

## காதம்பரி.

---

### ஐந்தா மத்தியாயம்.

### வேட்டைச்சிறப்பு.

ஒருகால் காலைச்சந்தியினிராகத்தாற்சிவந்து ஆகாய கமலினியின் மதுவினாற்சிவந்த இறக்கைகளையுடைய விருத்த ஹம்ஸ மென்னும்படி சந்திரன் மந்தாகினியின் மணற்குன்றினின்று மேல்சமுத்திரக் கரையினிலிறங்க, கிழஞ்சென்ற இரங்கு வென்னு மானின் ரோமம் போல் வெளுத்து, திக்சக்கிரம் விஸ்தாரத்தையடைய, கஜ ரக்தத்தினாற் சிவந்த சிங்கத்தின் சடைமயிர் போன்ற வண்ணமாயும், காய்ச்சிய அரக்கின் கம்பிகள் போலச் சிவந்ததாயும், விஸ்தாரமாயும் உள்ள சூரிய கிரணங்களால் பத்மராக ரத்னக்குச்சித்துடைப்பங்களாற் போலும் ஆகாய குட்டிம புஷ்பங்களனைய நக்ஷத்திர கணங்கள் விலக்கப்பட, சந்தி செய்வதனிமித்தம் உத்தர திக்கிலுள்ள சப்த ருஷிமண்டலம் மானஸ ஸரஸின் கரையைக்குறித்தென இறங்க, கரையில் மோதி உடைந்த சிப்பியினின்று தெரித்த முத்துக்களின் சமூகத்தை அருணன் கையினாற் றள்ளுண்டு கீழ்நழுவிய நக்ஷத்திரக் கூட்டத்தைப் போலும் வெண்மையாக்கப்பட்ட மணற்கரையையுடைய மேற் சமுத்திரம் வகிக்க, பனித்திவலைகளை வர்ஷிப்பதாயும் விழித்த மயில்களுடன் கூடியதாயும் பராக்கிரமிக்கும்சிங்கங்களுடையதாயும் பிடிகளின் கூட்டத்தால் எழுப்பப்படும் மதகஜங்களையுடையதாயும் உள்ள வனமானது இரவின் சலத்தால் மங்கிய மகரந்தப் பொடியையுடைய புஷ்ப சமூகத்தை உதயகிரி சிகரத்தில் நிற்கும் சூரியனைக் குறித்தென பல்லவங்களாகிய அஞ்சலிகளால் வகிக்க, கழுதையின் ரோமம் போல் புகைவண்ணமான வனதேவதைகளின் உப்பரிகையன்ன விருட்ச நுனிகளில் தபோவன அக்கினிஹோத்திர தூமரேகைகள் தர்மக்கொடிகள் போலும் புறாக்களின் கூட்டம்போலுங் காணப்பட, பனித்

துளியை வஸிப்பதாயும் கமல வனத்தை யசைப்பதாயும் சுரதத்தினாற் சோர்வுற்ற வேடக் கன்னிகளின் வியர்வை நீர்த்துளியைத் துடைப்பதாயும் காட்டெருமைகள் அசைவு போடுமமயம் கக்கிய நுரையின் பிந்துவை வஸிப்பதாயும் அசையும் தளிர், கொடி இவையிற்றினுக்கு நர்த்தனோப தேசத்தில் இச்சையுள்ளதாயும் மலரும் தாமரைகளின் மதுத்துளிகளை நிரம்ப வர்ஷிக்கச்செய்வதாயும் குசுமவாசனையினால் களிப்புற்ற வண்டுக்கூட்ட முடையதாயும் இரவின் முடிவிலுண்டான ஜாட்டியத்துடன் கூடியதாயும் மெல்ல மெல்ல சஞ்சரிப்பதாய், காலைக்காற்றுவீச, கமல வனத்தை எழுப்பும் மங்கள பாணர்களாயும் யானைக் கபோல பேரிகைகளாயும் ஆம்பல்களின் உட்புறத்தில் நெருக்கமாய் மூடிய தளங்களின் பக்கங்களிற் றூக்கிய இறக்கைகளின் சேர்க்கையுடன் கூடியதாயுமுள்ள வண்டுகளின் ஹுங்காரங்கள் தொனிக்க காலைக்குளிர் காற்றினால் வீசப்பெற்று காய்ச்சிய அரக்கினால் கெட்டி செய்யப்பட்ட இமைகளுடன் கூடியனபோல் தூக்கக்கலக்கத்தினால் மந்தமான* தாரங்களையுடைய கண்களை கரம்புநிலத்தில் படுத்து புகைவண்ணமான இருதய ரோமவரிசையை யுடைய வனமிருகங்கள் மெல்ல மெல்லத் திறக்க, வேடர்கள் இங்கு மங்குஞ் சஞ்சரிக்க, பம்பாசரசின் கலஹம்சங்களின் கோலாகல மானது செவிக்கினிப்பை உண்டாக்க, மயில்களை ஆடச்செய்து மனோகரமான வனகஜங்களின் காதுகளாகிற தாளசப்தங்கள் உல்லாசத்தை யடைய, கிரமமாய் ஆகாசமார்க்கத்திலிறங்குகிற சூரியனாகிற யானையின் கீழ்நோக்கிய நுனியுடைய சாமரங்களோவென (மஞ்சளும் சிவப்புமாயுள்ள கிரணசமூகங்கள்,) காணப்பட, மெள்ளமெள்ள சூரியன் உதயத்தை யடைய, பம்பாசரசின் அருகாமையிலுள்ள தருக்களின் உச்சியில் சஞ்சரிப்பதாயும் கிரிசிகரங்களில் நிற்பதாயும் சூரியனிடத் துதித்ததாயும் அபகரிக்கப்பட்ட † தாரையை யுடையதாயும்முள்ள பாலாதபமானது சுக்கிரீவன்போலும் வனத்தை ஆக்ரமிக்க, நன்றாய்ப்பொழுதுவிடிய, சீக்கிரத்தில் பகலின் எட்டாவது பாகத்தை யடைந்து சூரியன் நன்றாய்ப் பிரகாசிக்க, கிளிகள் இஷ்டப்பிரகாரம் திக்குகள் தோறுஞ்செல்ல, மரக்கூடுகளில் மறைந்து அசையாதிருக்கும் குஞ்சுகளுடன் கூடியிருந்தாலும் சப்தமின்மையால் அவ்விருட்சம் சூன்யமானது போற்றோன்ற, எனது பிதாவும் மரப்பொந்திலேயே யிருக்க, யானும் குழந்தையாதலின் பலமற்ற சிறு இறகுகளுடன் பிதாவின் சமீபத்தில் பொந்திலிருக்க, திடீரென்று அம்மகா வனத்தில் வசிப்பவை யெல்லாம் நடுங்கச்செய்வதாய் பரபரப்பாய்க் கிளம்பும் பட்சிகளின் இறக்கைச் சப்தத்துடன் கூடியதாய், பயந்தயானைக் குட்டிகளின் சீத்காரத்தால் விருத்தி யடைந்ததாய், அசையுங் கொடிகளாற் கலங்கிய மதங்கொண்ட வண்டுகளின் நாதத்தால் அதிகரித்ததாய், உயரத் தூக்கிய மூக்குடன் அலையும் வனவராகங்களின் அரவத்தால் பயங்கரமாய்

* பொம்மை † நட்சத்திரன், வாலியின் மனைவி



கிரிகுகைகளிற்றூங்கி யெழுந்த சிங்கங்களின் நாதத்துடன் சேர்ந்ததாய், தருக்கள் ஆட்டங்கொள்ளும்படி பகீரதனால் இரக்கப்பட்ட கங்காப்பிரவாகத்தின பேரிரைச்சல் போன்றதாய் வனதேவதைகள் பயத்துடன்கேட்கப்பெற்றதாய் வேடர்கள் கோலாகலத் தொனியானது பரவிற்று. கேட்டதும் நான் இதுவரையில் கேளாததால் மிகவும் நடுக்கமுற்று குழந்தையாதலின் காதுகளை மூடிக்கொண்டு பயத்தினாற் கலங்கி சமீபத்திலிருந்த பிதாவையே கதியாய் நினைந்து அவரது ஜரையினால் தளர்ச்சியுற்ற இறக்கைகளின் நடுவை யடைந்தேன்.

அதன்பின் பரபரப்புடன் “இதோ கஜேந்திரனால் ஒடிந்த தாமரையின் வாசனை”, “இதோ பன்றிகளால் கடிபட்ட கோரைக்கிழங்குரசத்தின் வாசனை” “இதோ யானைக் குட்டிகளா லொடியுண்ட ஆத்தியின் கசப்பு வாசனை”, “இதோ விழுந்த பழுப்புகளின் சலசலசப்தம்” “இதோ காட்டெருமைகளின் வச்சிரக் கொம்பு நுனிகளால் பெயர்க்கப்படும் புற்றுகளின் தூளிகள்.”, “இதோ மான் கூட்டம்”, “இதோ காட்டானைக் கூட்டம்”, “இதோ பன்றிவர்க்கம்”. “இதோ வனமஹிஷ பிருந்தம்”, “இதோ மயில் கூட்டத்தின் சப்தம்.”, “இதோ காடைகளி னினிய கூச்சல்.”, “இதேம் குரரிப்புள் ளோசை” “இதோ சிம்மநகத்தினாற் பிளவுண்ட கும்பத்தையுடைய யானையின் பிளிறல்”, “இதோ ஈரச்சேற்றினால் அழுக்கடைந்த பன்றிவரிசை.”, “இதோ நூதனமான புல்லின் ரசத்தினால் கறுத்த அசைவு போடும் மான்களின் நுரைக்கட்டிகள்”, “இதோ மதங்கொண்ட கந்தகஜத்தின் கன்னத்தைச் சொரிந்து கொண்டதனால் உண்டான வாசனையைக் கிட்டிச் சப்தஞ் செய்யு மதுகர ரீங்காரம்.”, “பாணம் விழுந்ததனால் உண்டான ரக்தபிந்துக்களால் நனைந்தபழுப்புகளுடைய இது புள்ளிமானின் மார்க்கம்.” “இவை கஜத்தின் கால்பட்டுக் கசங்கிய தருவின் தளிர்கள்.” “இதோ கட்கிமிருகங்களின் விளையாட்டு.” “இதோ நகனுனியாற் கீறுண்டு சமனற்றதாயும் இரத்தத்தினால் சிவந்தும் யானைமுத்துக்களினா லழகுற்றதாயு முள்ள சிங்கத்தின்மார்க்கம்.”, “இதோ புதிதாய்ப் பிரசவித்த மான் பேட்டின் கர்பரக்தத்தால் சிவந்தபூமி.”, “இதோ கூட்டத்தினின்று பிரிபட்ட கஜேந்திரனின் மதசலத்தினால் மலினமாயும், வனமாகிய மங்கையின் கூந்தலெனும்படியாயுமுள்ள சஞ்சார வீதி.”, “இதோ சமரியின் கூட்டம் தொடருங்கள்”. “இது உலர்ந்த மிருகமலத்தால் கெட்ட வனபூமி, சீக்கிரஞ் செல்லுங்கள்.” “மரத்தின் மேலேறுங்கள்” “திசைகடோறும் பாருங்கள்” “சப்தத்தை யுற்றுக்கேளுங்கள்” “வில்லையெடுங்கள்” “சாக்கிரதையாய் நில்லுங்கள்.” நாய்களைவிட்டு விடுங்கள்” என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு வேட்டையில் அவாவினராய் மரங்களால் மறைவுபட்ட தேகங்களையுடைய ஒரு பெரியஜனக்கூட்டத்தின் காட்டைக்கலக்கடிக்கும் கோலாகலத்தைக் கேட்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பூச்சினால் நனைந்த மிருதங்கத்தின் தொனி போல் கம்பீரமாயும், மலையின் இடுக்குகளில் விருத்தியடைந்து திரும்பும் எதிரொலியால் உரத்ததாயும் உள்ளவேடர் சரத்தினாலடிபட்ட சிங்கங்களின் கர்ச்சனையாலும், பயந்த பெண்யானைகளினின்று பிரிந்தனவாயும், தனித்துச்சஞ்சரிப்பனவாயும் இடைவிடாது துதிக்கையை யடித்தலால் சப்தத்துடன் சேர்ந்ததாயும் மேக கர்ச்சனையை யொத்ததாயும், உள்ள கஜயூதபதிகளின் கண்ட கர்ச்சனையினாலும், வேகமுள்ள வேட்டை நாய்களால் பங்கமடைந்த சரீரமுடையனவாயும் சஞ்சலமாயும் பயத்தினால் கலங்கியும் இருக்கும் விழிகளையுடையனவாயு முள்ள மான்களின் தீனவொலியாலும், பதிகள் கொலையுண்டமையால் வியோகமடைந்து குட்டிகளால் தொடரப்பட்டு தூக்கிய காதுகளுடன் சப்தத்தை நின்று நின்று கேட்டு இங்குமங்கும் பிரமிக்கும் பெண்யானைகளின் புதிய பதிவிநாசசோகத்தால் தீர்க்கமான சீத்காரத்தினாலும், சிலநாள் முன்னர் பிரசவித்தனவான பெண்கட்சி மிருகங்கள் பயத்தினால் குட்டிகளை நழுவவிட்டுத் தேடுவதில் கண்டம் விட்டு அதிதீனமாய்க் கதறுஞ் சப்தத்தாலும், தருநுனிகளினின்று கிளம்பி வெகு பயத்துடன் செல்லும் பறவைகளின் கூக்குரலாலும், பசுவைத்தொடர்ந்தோடும் வேடர்களின் கால்களினால் ஏககாலத்தில் பலமாய் உதைபட்ட பூமிக்குக் கம்பத்தை யுண்டாக்கக்கூடிய சரண சப்தத்தாலும், காதுவரையிழுக்கப்பட்ட நாண் உடையனவாயும் மதங்கொண்ட குயிற்பேட்டின் கண்டக்கூச்சல்போல் இனியவாயும், சரசமூகங்களை வர்ஷிப்பனவாயுமுள்ள தனுஸுகளின் நாதத்தாலும், காற்றின் வேகத்தினால் தொனிக்கு நுனியையுடையனவாயும் கடினமான எருமையின் முதுகில் விழுவனவாயுமுள்ள வாள்களின் ஓசையாலும், வேகமாய் கூச்சலிட்டுக்கொண்டு ஓடும் நாய்களின் வனாந்தரங்களில் வியாபிக்கும் தொனியாலும், அக்காடெல்லாம் கலக்கமுற்றது.

சிறிது நேரத்தில் வேட்டையின் கோலாகலம் அடங்க, மழை பொழிந்து ஓய்ந்த மேகக்கூட்டம் போன்றதாயவ்வனம், கடைந்ததின்பின் தெளிவடைந்த ஜலத்தையுடைய பால் சமுத்திரம் போலாக, குறைந்த பயத்தையுடையயான் குதூகலமுற்றவனாய்ப் பிதாவின் மடியினின்று சிறிது வெளிக்கிளம்பி பொந்திலிருந்தபடியே தலையை நீட்டி பயத்தினால் தரளமான விழியுடன் குழந்தைப்பருவத்தினால் இது என்னவென்று பார்க்க விரும்பி அத்திசையைநோக்கிக் கண்களைச் செலுத்தினேன். அவ் வனாந்தரத்தினின்று எதிர்வருவதாயும் கார்த்தவீரியார்ச்சுனனுடைய ஆயிரம் புயங்களால் தடுக்கப்பட்டு பலவாறாய் ஓடிய நர்மதாப்பிரவாகம் போன்றதாயும், காற்றினாற் சலிக்கும் தமாலச்சோலை போல்வதாயும், காளராத்திரிகளின் நாழிகைகளெல்லாமொருமித்து வந்தனபோல்வதாயும், பூகம்பத்தினால் ஆட்டங் கொண்ட அஞ்சனக்கற்றூண் சேர்க்கை போல்வதாயும், இரவி கிரணத்தினால் தீர்க்கப்பட்ட காரிருள் போல்வதாயும், சஞ்சரித்து வரும் அந்தக பரிவாரம் போல்வதாயும், கிழியுண்ட இரஸாதலத்தினின்று வெளிவந்த அசுரகணம் போல்வதாயும், ஓரிடத்திற்சேர்ந்த அசுப கர்மங்கள் போல்வதாயும், தண்டகாரண்ய வாசிகளான முனிகணங்கள் எல்லோரும் இட்ட சாபங்கள் சேர்ந்து சஞ்சரிப்பன போல்வதாயும், அனவரதம் நெருக்கமான சரசமூகங்களை வர்ஷித்த இராமனால் கொலையுண்ட கரதூஷணனுடைய சேனாசமுத்திரம் அவரிடத்து பக்தியின்மையாற் பிசாசசென்மத்தை யடைந்தன போல்வதாயும், ஒருமித்துச் சேர்ந்த கலிகால பந்துவர்க்கம் போல்வதாயும், குளிக்கச் செல்லும் காட்டெருமைக் கூட்டம் போல்வதாயும், மலையுச்சியினின்று சிங்கத்தின் கால்களால் இழுபட்டு விழுந்து சிதறிய காளமேகபடலம் போல்வதாயும், வனமிருகங்களனைத்திற்கும் விநாசத்தின் பொருட்டு உண்டான தூமகேதுசாலம் போல்வதாயும், வனத்தை அந்தகாரமாய்ச் செய்வதாயும், அநேகாயிரக்கணக் காடும் உள்ள வேடசேனையை மிகுபயத்தையுண்டாக்குவதால் துர்ச்சகுனத்தைக் காண்பிக்கும் வேதாள சமூகத்தைப் போலும் கண்டேன்.



ஐந்தா மத்தியாயம் முற்றிற்று.

கல்யாணராம சாஸ்திரி.

---

## ஆசாரவிளக்கம்.

---

### சூத்திரம். II.

அதிகாரி.

(1) நாத்திகராகிய உலோகாயதர் (சாருவாகர்) தெய்வம் ஆன்மா மறுமை கொள்ளாராயினும், இகத்தில் உண்ணல் உடுத்தலாதி தேகசுகங்களும், மகளிர்புணர்ச்சி யாதிபோக சுகங்களுமே மானுடரா லடையத்தக்க சுகங்கள் என்பார். அவர் தஞ்சுகங் கருதி மகளிர் புத்திராதி அந்நியர் சுகங்களைப் பேணலோடு கொலையாதி தீமைகளையும் வெறுப்பர். ஆகலின் அன்னோர் உடன்மனச்சுகங்களைப் பயப்பனவாகிய நல்லாகாரம் சுசிநடைகளைக் கைக்கொள்ளப் பின்னிடார்.

(2) அநுபவசாத்திரிகள் தெய்வம் கதிகொள்ளாவிடினும் உடன் மனங்களுக்குச் சுகந்தரும் நல்லாகாரங் கொளலாதி சுசியையும் கள்ளாமை பொய்யாமை முதலிய நன்னெறிகளையும் வேறது செய்திபலன்களை நுணுகியோர்ந்து அத்தியாயவசியமெனக் கொள்ளாநிற்பர்.

(3) புத்தர் உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்ஞானம் என்னும் பஞ்சகந்தமன்றி ஆகாயம் காலம் திக்கு ஆன்மா தெய்வம் இன்றென்பர். அங்ஙனங் கூறினும்; அருள் அவாவின்மை தவவிருப்பம் மனத்தாலும், இனியவைகூறல் மெய்மைகூறல் பயனுளகூறல் அறமுரைத்தல் வாக்காலும், வணக்கம் ஈகை தவஞ்செயல் காயத்தாலும் செய்யப்படும் புண்ணியம்; தீயனசிந்தித்தல் ஆசை கோபம் மனத்தாலும், கடுஞ்சொல் பொய் பயனில்சொல் கோட்சொல்லல் வாக்காலும், களவு கொலை வீண்செய்கை காயத்தாலும் செய்யப்படும்பாவம், எனப்பாவனுகந்தம் இருபதில் நல்வினை தீவினை கொண்டு தீக்காட்சி தீவாய்மை தீமுயற்சி தீயூற்றம் தீக்கடைப்பிடி தீநெறி தீச்செய்கை தீயுளத்தோர் தலைப்பாடுடைமை கொலை முதலிய தீயொழுக்கங்களை வெறுத்து தேகமனங்களுக்கு விருத்தியும் சுகமுந் தரத்தக்க நல்லாகாராதிகொளல் முதலிய சுகாதார நடைகளை ஆசரிப்பர்.

(4) பாட்டாசாரியர் வேதமன்றித் தெய்வமின்று கன்மமே சகல நன்மையும் பலனும் மோக்கமும் கொடுப்பது என்பாராய் நன்னீரிற் குளித்தல் நல்லாகாரங்கொளல் நல்லிடஞ்சாரல் நன்னெறி கடைபிடித்தல் ஆதிய சதாசாரங்களையும் சோம யாகாதிகளையும் புரிவர். உண்மையிற்கூறி லவர் ஆசாரப்பிர்மவாதிகள் அல்லது ஆசார சம்பன்னர் என்னத் தக்கவராவர்.

(5) சத்தப்பிர்மவாதிகள் சத்தமே உலகம் உயிர் பொருள்களாகப் பரிணமித்திருப்பது அங்ஙனமுணர்வதே முக்தி சுகமென்பாரேனும் தாமும் பிறவும் ஒன்றி னின்றுணமை கருதினும் தமக்குத் தீங்குவிளைக்கு மாகாரம் பொருள் ஜெந்துக்களை உண்ணல் அணுகல்செய்யாது தமது தேகமனச் சுகங் கருதுவர்.

(6) ஏகான்மவாதிகள் உண்மையில் பிர்மத்தையன்றி உடல் உயிர் உலகு இன்று. உடல் உயிர் உலகு கானற்சலம்போல இல்லாதன வென்பாரேனும் பொய்யென்னும் விஷம் பாஷாணாதிகளை யுண்ணார். அனல் பாம்பு கிணறுதிகளிடமேகார். பொய்க்கு என்றுவது (விவகார தசையில் இல்லாததும் உண்டு என்று) நன்னீரிற் குளித்தல் நல்லாகாராதி கொளல் நற்சேர்க்கை நல்லவை யெண்ணல் (தீயவையுண்ணல் சாரல் எண்ணல் ஒழிதல்) ஆதிய சதாசாரங்கொண்டு தம்முடல் உயிர்பேணி சத்கருமங்களையும் புரியா நிற்பர்.

(7) பிர்மஞான சங்கத்தார் (Theosophists) பிர்ம்மமொன்றே சைதன்யமாயிருந்து சூக்ஷ்மமாய் ஸ்தூலமாய் ஜடமாய் தாவரமாய் திரியக்காய் மானிடமாய் விருத்தியடைந்து சித்தராய் முக்தியடையும். பிர்மமாகிய சகல அருவவுருவங்களும் தம்மியல்பில் விருத்தியாய்க்கொண்டிருக்கின்றன வென்பாரேனும் செயற்கையால் தம்முடல் மனாதிகளுக்குத் துன்பம் பயப்பனவாகிய தீப்பொருள் தீச்சேர்க்கை யொழிந்து நல்லாகாரங்கொளலாதி ஆ



சரித்துச் செயற்கையாலும் அவைகளின் விருத்தி சுகங்கருதுவர். நன்னெறியு மவ்விருத்திகளுக் கின்றியமையாதன வென்பர்.

(8) ஆருகதர் அருகன்றெய்வம் கன்மங் கதிதரும். உடைதுறந்து பாயுடுத்துத் தலைபறித்து நின்று தந்தது வாங்கியுண்டு மெய்கழுவாது விளக்கிடாது உறங்காதிருப்பது தவம்; எனச் சுகவீனத்திற் கேதுவாகிய அநாசாரங்களைக் கைக்கொள்வாரேனும் இச்சை கொலை களவு கள் காமம் குரோதம் லோபம் மதம் மாச்சரியம் நீக்குஞ் சீலமும் தானமும் ஆவசிய சற்கருமமாய்க் கொண்டு தமக்குத்துன்பம் இறுதிபயப்பனவாகிய பொருள்களை யுட்கொள்ளல் சாரலாதிய நீங்கி பொழுகுவர்.

(9) கிறித்துவர் பராபரனால் உலகம் இன்மையினின்று சிருட்டிக்கப்பட்டது. கடவுள் உடலைச்செய்து தன்ஜீவ சுவாசத்தை ஊதி உயிர் (ஆன்மா) ஆக்கினார். அவ்வாதிபிதாவினின்றும் பிரஜா விருத்தியாகிய உயிரும் உடலும் விருத்தியாய் வருகின்றன. ஆதிப்பிதாவின் பாவத்தால் அது செய்யாத ஜீவரெல்லாம் பாவிகளானார். புண்ணியமும் அதனால் சுவர்க்கமுமின்று. எத்துணை புண்ணியஞ் செய்யினும் கிறித்துவை நம்பார் நரகத்தையும், கிறித்துவை நம்பினோர் எல்லாப்பாவமும் மன்னிக்கப் பெற்று சுவர்க்கத்தையும் அடைவர். திரியக்காதி ஜெந்துக்களுக்கு பகுத்தறிகிற ஆன்மா இன்று. மனிதனின் பொருட்டாக்கப்பட்டனவாகலி னவைகளைக் கொன்றுதின்னலாம் என்பாரேனும் மனிதக் கொலைசெய்யாமை தன்னைப்போல் பிறரைநேசித்தல் பிறனில்விழையாமை கள்ளாமை பொய்யாமை முதலிய நன்னடக்கைகளைத் தமது கடமையெனக் கொள்வதோடு உடன்மனச்சுகங்களுக் கவசியமான நல் லாகாரங்கொளல் நல்லிடஞ்சாரல் நல்லுடைதரித்தல் நல்வாயுச் சுவாசித்தல் முதலிய சுசியாசாரங்களையுங் கைக்கொண்டொழுகுவர்.

(10) கிறித்துவரிற் கத்தோலிக் மதத்தர் புரோடஸ்டாண்ட் கொள்கையோடு பலவொன்றுபட்டு முன்னோர் பின்னோர் பாவங்களுக்காகத் தேவ குமாரன் தண்டனை யடைந்தனர். பாவஞ் செய்தார் உண்மையைத் தங் குருவிடம் மனஸ்தாபப்பட்டுக் கூறில் மன்னிக்கப்படுவர். போப்புவின் அருட்சீட்டுப் பெறில் இறந்தோர் துறக்கம் புகுவர் என மெய்மை குரு பக்திகளை விளக்கும் ஆசாரங்களோடு புரோடஸ்ட்டாண்டாரினும் சுசியாசாரங்களைப் பெரிதும் வேண்டுவர்.

(12) முகம்மதியர் அல்லா (கடவுள்) தன்னூறினின்றும் (நூறு=ஒளி) முகம்மது நபியை மயில் முதலிய பல ரூபங்களாகப் படைத்துப் பின்னர் அவரொளியினின்றும் உலகெலாம் படைத்தார். அந்நபியிடம் ஈமான் (பக்தி) கொண்டா லன்றிச் சுவர்க்கம்புகார். ஜீவர் நால் வகுப்பினர். அவர் தந்தந் தன்மைப்படி யொழுகிப் பலன் அடைவர். படைப்பெல்லா மனிதர்க்காக

லேயார். திரியக்காதி ஜந்துக்கள் ஆன்மாவற்றன. அவைகளைக் கொன்று தின்னலாம்; என்று ஊன் தின்பார் எச்சிலை வெறுகாரேனும் கான்முகங் கழுவல் குளித்தல் நல்லாகாராதி கொளல் முதலிய சுசிகளையும் பொய்யாமை முதலிய நன்னெறிகளையும் தருமம் முதலிய புண்ணியங்களையும் கைக்கொள்வர்.

(13) யூதர் கிறித்தவ மதத்தின் பழைய ஏற்பாட்டைப் பெரும்பாலு மொப்பியவர். சிலசுசி பல நெறிகளை விரும்புவர்.

(14) பார்சியர் அக்கினியை வணங்குவர். சிற்சில சுசிகளையும் பலநெறிகளையும் சுகாதாரங்களையுங் கைக்கொள்வர்.

(15) பாஞ்சாராத்திரர், விண்டு அரூபர், அவர் மாயைஜீவர் மாயாகாரியமாக ஆனார். சுயேச்சையால் பிரபஞ்சரக்ஷணார்த்தம் அவதாரங்களாகிய பிறப்பையடைவர். ஆனந்தமும் அணுரூபமுமுடையது ஆன்மா அதுவிண்டு வருளால் விரஜாநதியாற் கழுவப் பட்டுமாயை நீங்கும்.

(16) வைகானசர். உயிர் நக்ஷத்திரம் போன்றது. அதனைக் களங்க மறைக்கும். அக்களங்கம் (மாயாதேசம்) போய் திவ்யதேக மடையும் பொருட்டு விண்டுவை அர்ச்சாவிக்கிரகங்களில் சேவித்துப் பூசிக்கவேண்டும்.

(17) வைணவர் (மாத்வர்) விண்டு வைகுண்டத்துருவத் தோடிருக்கின்றார். சூரியன் கிரணம்போல ஜீவர்களி னுள்ளங்களில் வியாபிக்கிறார். ஜீவன் சுகரூபி. அஞ்ஞானத்தால் பந்தனுகிறான். அது நீங்கினால் விண்டுகதி யடைவன். கதியில் இங்குள்ள சரீரரூபங்களோடு ஜீவரிருப்பர்.

(18) சுத்த சைவர் அசுத்த சைவர் மிச்சிர சைவர் சித்தாந்த சைவர் அநாதி சைவர் அவாந்தர சைவர் பேதசைவர் அறுசைவர் ஆதிசைவர் ஒருவருக்கொருவர் மாறுபட்ட அபிப்பிராயங்களை யுடையவர்.

இங்ஙனங்கூறிய சைவவைஷ்ணவர் ஒருவர்க்கொருவர் தேவதோபாசனவிஷயத்தில் வெவ்வேறு கொள்கைகளை யுடையரேனும், சௌசம் ஸ்நானம் ஸல்லாகாரங்கொளல் நல்லிடஞ் சாரல் முதலிய சுசிகளையும் பொய்யாமை கொல்லாமை கள்ளாமை முதலிய நன்னெறிகளையும் இகபரங்களுக் கவசியமான சதாசாரங்களாகக் கொண்டொழுகா நிற்பர்.

இன்னும்வரும்.

விருதை. சிவஞானம்.



# பர்த்ருஹரி.

## I. நீதிப்பால்.

### 5. கீழோர் நெறி.

தீயோர்தன்மை இனைத்தென்று ஆராயப் புகுங்கால், ஒருயிர்க்குத் துயர் நேர்ந்த விடத்து அதனை யொழிக்கப் பரிவு கொள்ளாதிருத்தலும், காரண மின்றி ஓநாய் ஆட்டைப் பாய்ந்தழித்தது போலக் கோழிப் பகை கொண்டு நல்லோரைப் பகைத்துப் போரியற்றப் புகுதலும், பிறர் பொருள் தாரங்களை விடமெனக் கருதாது விட்டிற்பறவை விளக்கைக் கனியெனக் கருதுமா போல் தனக்கு இன்பந்தருவன வென்று அவற்றின் மேல் விருப்பங் கொள்ளுதலும், நல்லோரிடத்தும் சுற்றத்தாரிடத்தும் செல்வங் கண்டு மகிழ்ந்து மனத்தின்கண் நிறைவு கொள்ளலை யொழித்து "அயல் வாழ்த்தால் ஐந்து பட்டினி" என்பதாக அழுக்காறு கொள்ளுதலும், ஆகிய இவையே அக்கீழோர்க்குப் பிறப்பிலமைந்த முக்கிய குணங்களாம். இத்தகைய தீக்குண முடையான் ஒருவன் பல நூல்கள் கற்று வல்லானாயினும் அவனை விலக்கி வாழ வேண்டும். அவன் கலைவலா னென்று அவனுடன் கலக்க வொண்ணாது. மணியுடைய தென்று பணியொடு பழகலாமோ? "பாம்பென்றாற் படையுங் கலங்குமன்றோ?" "துஷ்டனைக் கண்டால் தூர விலகு" எனவும் சொல்லப்படுகின்றதே. அன்றியும் பிறரிடத்தில் குற்றங் காண்பதே அவனுக்குத் தொழில். வெட்க முடையா னொருவனை, இவன் ஏதோ காலபேதத்தால் தகாதகாரியத்தைச் செய்ததால் வெட்கியிருக்கின்றா னென்று எண்ணாமல், மூடனென்கின்றான். சாந்திராயண முதலிய விரதங்காத்து நெறிப்பட்டா னொருவனை இவன் நோன்பு கொண்டு நல்லொழுக்கத்தி னிற்பானென் றுன்னாதே, இடம்பனென்று இயம்பிக்களிக்கின்றான். உள்ளும் புறமுமொத்த தூய்மை யுடையானொருவனை உண்மையில் தூயனே யென்றுணராமே, இவன் குழைத்திடுகள்ளன் மாயவேடத்தான் என்று இகழ்ச்சி செய்கின்றான். சூரனை ஒருவனை பராக்கிரம சாலியென்று கொள்ளாது, இவன் இரக்கமின்றி உயிர்க்கொலைபுரிவோன் என்று கொடுமை கூறுகின்றான். மௌன நிலையினுள்ள முநிவனை ஆன்ம தத்துவமறிந்த பெரியோரென்றறியாமல், இவர் மூடரெனச் சிறுமைசெய்கின்றான். மென்மையாய் அகங்கனியப் பேசுமொருவனை, எல்லார்க்கும் நயம்வரச் செவிக்கினிய செஞ்சொல்லைப்பேசும் நல்லோனென மதியாமே, இவன் அழுகள்ள னென்று அவமதிக்கின்றான். சிறந்த பெருமையான தோற்றமுடைய வொருவனை, இந்தக்கெம்பீர மானதோற்றம் இவனுக்கியல்பாயமைந்ததென்று கொள்ளாமல், இவன் வீண் செருக்குடையா னெனச் சிந்தையுட் கொண்டு நிந்திக்கின்றான். தான் எடுத்த தொன்றினை விளக்க

முறப் பேசுந்திறமை யமைந்த வொருவனை, பலரும்வியக்கு மொழித்திறமமைந்த நாவல னென்று நினையாது, இவன் பயனற்ற சங்கதிகளில் வெற்றெனச் சொற்றொடுக்கும் வீணனென்று கூறிக்குலைகின்றான். ஆதலால் மேலோரிடத்தில் கீழோரால் இகழப்படாத நற்குணமேது? ஒருவரிடத்து நற்குணங்களிருப்பினும் அவற்றைவிட்டுத் தீக்குணம் தேடுவதே இவரது தொழில். இவருக்கும் வேப்பம் பழத்தையும் பிணத்தையுமே விரும்பும் காக்கைக்கும் யாதுவேற்றுமை? இப்படி மேன்மக்களிடத்துக் குற்றம் ஆராயும் இயல்புடைய பேதை தன் தீக்குணங்களாலேயே கேடுறுவான். தீயகுணங்கள் தீமைக்கு மூலமல்லவோ?

பகலில் ஒளியிழந்த சந்திரனும், யௌவனம் கழிந்த ஸ்திரீயும், தாமரையில்லாத ஓடையும், கல்வி யறிவில்லான் வனப்பும், பொருளாசையுள்ள பிரபுவும், யோக்கியனுக்கு வந்த வறுமையும், அரசனை அண்டைகொண்ட கீழ்மகனும் துன்பத்துக்கேது என்னுமாறு, இழிதகவுடையோன் வேந்தன் சார்பில் தங்கியிருப்பனேல் அவனது கொடுமையை வெளிப்படுத்தக்கூடாமையால் அஃது எவர்க்கும் துயர்க்கிடமாகின்றது. அத்தகைய தீயவனுக்கு அரண் கொடுத்த கோமகன் கோபத்தைக் குடிகள் அஞ்சுகின்றனர். கடுஞ்சினமுடைய மன்னவனுக்குத் தன்னவனென்றும் பிறனென்று முண்டோ? நெருப்புத் தன்னவனென்றும் பிறனென்றும் பார்க்குமோ? தனக்கு ஆகுதி முதலியவற்றால் திர்ப்திசெய்து உபசரிக்கும் கர்த்தாவையும் அத்தீ தகிக்குமன்றோ? ஆனதுபற்றி அவ்வேந்தனை அடுத்து வாழ்வது அவலமே. பின்னும் அவன், தன்னை யடுத்துள்ள ஒருவன் அடங்கி மௌனமாயிருப்பின் அவனை ஊமையென்கின்றான். மொழித்திற முடையனானால் பயனில சொல்லும் வாய்ப்பதட்ட முடையான் என்கின்றான். அரசனுக்கு எந்தவேளையில் என்ன அபேக்ஷையுண்டாகுமோ வென அருகிலிருந்தால் பயமற்றவன் என்கின்றான். தொலைவிலிருந்தால் அவனைக் கண்ணோக்குவதேயில்லை. பொறுமையுள்ளவனாயிருந்தால் தைரியமில்லாதவன் இவன் உபயோகியல்லன் என்கின்றான். தன் சீற்றத்தையும் கடுஞ்சொல்லையும், பொறானாயின், இவன் அற்பன், இழிகுலத்தானாகலின் தனக்கியல்பான இழிகுணத்தைக் காட்டுகிறான் என்கின்றான். ஆதலால், சொல்லவும் கருதவுமோ ரெல்லையிலடங்காத மெய்ப்பொருளைத் தமது யோகசித்தியால் அறியவல்ல முக்காலமுணர்ந்த முனிவர்க்கும் இப்படிப்பட்ட கொடியமன்னனை அடுப்பது அசாத்தியம். எவன்தான் இத்தீயவனையடுத்து நலம்பெற்றவன்? தன் நாவலால் தீயோரைச் செழிக்கச்செய்து, நல்லோரைப்பகைத்து, விதிவிலக்குக்களை கடந்தொழுகித் தீச்செயலே மிகுந்துள்ள ஒரு கீழ்மகனுக்கு அதிர்ஷ்டவசத்தால் பெருஞ்செல்வம் கிடைத்திருப்பினும் அதனால் ஒருவர்க்கும் பயனில்லை. அவனைத்துணையாகப் பற்றுவதும் அம்பிதுணையாக ஆழிழிந்தவரொக்கும். அவனோடு குணவான்களுக்கு எங்ஙனம்நட்புப்



பொருந்தும்? "நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல - விளியுஞ் சிறியவர் கேண்மை - விளிவின்றி - யல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே - தொல்புக ழாளர் தொடர்பு" என்றவாறு நல்லோர் நட்பு நடுப்பகல் நீங்கி நாழிகையேறயேற நிழல் நீளுவதுபோல நாளுக்குநாள் நலங்கொண்டு வளரும். தீயோர் சிநேகம் காலையிற்றோன்றும் நிழல் முதல்நீண்டு அப்பால் வரவரக் குறுகுவதுபோல, தொடக்கத்தில் மிகுதியாகத் தோன்றிப் பிறகு நாள் செல்லச்செல்லக் குறைந்துவரும். கீழோர், மேலோரது நட்புக்குரியரல்லராயினும் அவரோடு பகை கொள்ளாதிருக்கலாமன்றோ? அவ்வாறின்றிக் காரணமில்லாமலே அவர்களுக்குப் பகையாகின்றனர், புல்லையும் புனலையுங்கொண்டு பிழைக்கு மான் மீன்களுக்கு வேடனும் செம்படவனும் ஏதுவில்லாமலே பகையாகின்றன ரன்றோ? ஆகலால், எப்போதும் உயர்ந்தோர்க்குத் தீமையிழைப்பதே இழிந்தோரியல்பாம. இதனை அடியில்வரும் சிறு கதையால் அறியலாம்:—

ஒருகுன்றினின் றிழிந்துவரும் சிற்றாற்றின்றலைப்பில் நீர்பருகிக்கொண்டிருந்த ஓநாயொன்று அந்நீரோட்டத்தின் கீழ்ப்புறத்துத் தண்ணீர்குடித்துநின்ற ஓராட்டுக்குட்டியைக்கண்டு அதனைக்கொன்று தின்னக்கருதி அதனைநோக்கி, அடா, "துஷ்டா! யான்பருகும் நீரினைக்கலக்கும் நினது துணிவென்னே!" என்ன, அதற்கு ஆட்டுக்குட்டி "ஐயனே! இவ்வருவி நுமதிடத்தினின்று என்பால் வராநிற்க நீர் பருகும் நீரை யான்கலக்கினேன் என்பது யாங்ஙனங் கூடும் என்று பணிந்துகூற, ஓநாய் "இதுநிற்க, ஓராண்டுமுன்னர் என்னை நீ இகழ்ந்தாயல்லையோ'? என்றுசீற, அச்சிற்றாடு "சுவாமி! அடியேன்பிறந்து இன்னும் ஆறுதிங்களாகவில்லையே! அங்ஙனமாகத் தங்களை யோராண்டுமுன்னர் இகழ்ந்தேனென்றுரைப்பது வியப்பே" என்று இரங்கிக்கூறலும், அக்கொடிய ஓநாய் பிறிதேது முரையாடாது அதன்மேற்பாய்ந்து அதனைக்கொன்று தின்றது.

கா. கோபாலாசாரியர்.

---

## "விவேகசாகரர்"

### அல்லது "மதியின்மகத்துவம்."

### 1-வது அதிகாரம்.

ஈழமண்டல முதலென வுலகத் தெண்ணு மண்டலத் தெறிபடைவேந்தர்
தாழுமண்டலஞ் செம்பியன்மரபினோர்தா மெலாம் பிறந் தினிய பல்வளத்தின்.
வாழுமண்டலங் கனகமு மணிகளும் வரம்பில் காவிரி நுரம்பினிற்கொழிக்குஞ்
சோழமண்டல மிதற்கிணை யாமெனச் சொல்லு மண்டலஞ் சொல்வதற் கில்லையே."

என்று ஆன்றோரால் புகழப்பெற்ற சோழ மண்டலத்தின் கண்ணுள்ள காவிரி நதிக்கரையினிடமாகத் 'திரிசிரபுரம்' என்றோர் புரியுள்ளது. சின்னாட்கு முன்னர் அப்புரியில் நவாபு ஒருவர் அரசு புரிந்து வாழுங்கால் 'விவேகசாகரர்' என்றோர் வேளாளனிருந்தார். அவருடைய வெள்ளிய வுரோமஞ் செறிந்த சிரசையும், சிறிய நுதலையும், குழிந்த கண்களையும், குண்டலச் செவிகளையும், கோரதந்தங்களையும், தடித்த வதரத்தையும், குகைபோன்ற வாயையும், திரை படர்ந்த முகத்தையும், கொக்குக் கழுத்தையும், மயிரடர்ந்த கை கால்களையும், தாழி வயிற்றையும், காரினுங் கரிய கந்தலாடையையும், கையிற்பிடித்த கோலினையும், காலிலணிந்த வானுளச் செருப்புகளையும், கரிய மேனியையும் அவனையறியா வொருவர் ஆராய்ந்து நோக்கின், இவ்வுருவம் 'கங்கு பூசிவருகின்ற கலிகாலமோ' தெய்வமோ, மானுடமோ, பிசாசமோ வென்று மிகவு மையுறுவர். ஒருக்கால் இவரை மானுடரென்று தெளிந்து விடினும், இவர் கோலத்தை நோக்குங்கால் இவரை மதியீனரென்றும், ஏழை என்றும் பல்விதமாகப் பகரவுங்கூடும். ஆயினும், உண்மையில், அவர் அப்படியல்லர். அவர் உழுங்குலமாகிய வேளாண் குலத்துதித்து, குலத்தொழிலாகிய உழுதல், பயிரிடல் முதலிய விபசாயம் செய்து, தன் விடா முயற்சியால் பொருள் முதலிய சம்பாதனஞ் செய்து, தானே விவாகம் செய்து கொண்டு இல்லறம் வழுவாது இனிது நடத்திப் பின்னர் தானீட்டிய பொருள்கள் யில்லாளிடம் ஒப்புவித்து விட்டு தத்துவ ஞானமும், மலபரிபாகமு மெய்தி யிக்கோலங் கொண்டனர்.

இவர், உண்மையறிவு பெற்றவுடன் தான் வாழு மூர்க்கு அரசனாகிய நவாபுவினிடம் சென்று தன்னறிவின் மயத்தைக் காட்டி, அந்நவாபுக்கு நல்லறிவும் நற்கதியும் நாடி யளித்ததையே இக்கதையிற் சொல்லப்படும்.

ஒரு நாள் நவாபு தமது பரிவாரங்களுடன் கொலு மண்டபத்தில் வீற்றிருந்து தம்குடிகளின் யோக க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டிருக்குங் காலத்தில், 'விவேக சாகரர்' தன் விகார ரூபத்துடனே திடீரென வுத்தரவின்றி யுட்புகுந்து நவாபின் முன்னர் வந்து நின்றார். வந்தவர் வழக்கப்படி நவாபுக்கு மரியாதை செய்யாமை கண்டு சபையோருட் சிலர் இவரை அடித்துத் துன்பம் செய்ய வெழுந்ததை நவாபு அறிந்து, அவர்களைக் கை காட்டி யமர்த்தி விட்டு, இவ்விகார ரூபம் சாதாரணமாய் மானுடர்களால் பெறக்கூடாத சிற்சில மகத்துவங்கள் பெற்றிருக்கவே வேண்டுமென மனத்திலூகித்துக் கொண்டு, அவரை நோக்கி "நீ யார்? உமக்கு எந்தவூர்? எப்பொழுது பிறந்தீர்?" என்று திடீரென வினவினர். அதற்கு அவர், "என் பெயர் விவேகசாகரன் என்பர். இவ்வுலகமே என்னூர், நானிப்புவியி லுதிக்குமாறு என் மாதா நினைத்தது எப்பொழுதோ அப்பொழுது தான் நானும் பிறந்தேன்" என்று கூறவும், அக்காலத்து வழக்கப்படி நவாபு கீழ் வருமாறு கேள்விக ளிடலாயினர்.



நவாபு :—உமக்கு மாதா, பிதா, சகோதரர்களுண்டா?

விவேக :—எனக்கு மாதா, பிதா, சகோதரர்களிருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லோரும் இப்பொழுது இறந்து விட்டார்கள்.

நவாபு :—இறந்து விட்டால், அவர்களிருக்கிறதாக எங்ஙன முரைத்தீர்?

விவேக :—நான் வீட்டிலிருந்து வரும் பொழுது அவர்களெல்லாரும் நித்திரை செய்து கொண்டிருந்தனர். நித்திரைக்கும் மரணத்துக்கும் கொஞ்சமே வித்தியாச மாதலானும், நித்திரை மரணத்துக்குச் சகோதர மாதலானும், நான் அவர்கள் இறந்ததாகச் சொன்னேன்.

நவாபு இவர் மிகவும் விகடஸ்தன் போலு மென்றறிந்துகொண்டு கீழ்வரும் பல கேள்விகளைக் கேட்கலாயினர்.

நவாபு :—மிகவும் வேகமாயோடுவ தெது?

விவேக :—மனோபவம்.

நவாபு :—என்றும் நிறையாத குடா மெது?

விவேக :—கஞ்சனுடைய அர்த்தாபேட்சை.

நவாபு :—வாலிபனிடத்தில் விரும்பப்படாதெது?

விவேக :—கீழ்ப்படியாமை.

நவாபு :—அவனிடம் நகத்தக்கதெது?

விவேக :—ஆணவம், அதாவது தானெனுமகங்காரம்.

நவாபு :—முதிர்ச்சியில் நகத்தக்கதெது?

விவேக :—பேராசை.

நவாபு :—வியாபாரியிடத்தில் இருக்கக்கூடாத குற்றமெது?

விவேக :—பொய்யுரைத்தல்.

நவாபு :—அகத்திலபாயம் விளைவிப்பவர் யாவர்?

விவேக :—கற்பில்லாத மனைவியும், அவதூறுகூறும் வேலைக்காரனும்.

நவாபு :—குணத்துக்குவராதநோய்களெவை?

விவேக :—பயித்தியமும், கடனும்.

நவாபு :—தன் தாயின் நாவினைச்சுடும் பிள்ளையெது?

விவேக :—மெழுகுதிரி.

நவாபு :—கணவனுக்குத் தீராதவியாதி யெது?

விவேக :—தன் மனையாளினுண்மையின்மை.

நவாபு :—ஆஹா! உமது மூளையே மூளை.

விவேக :—ஆஹா! உமது அழகே யழகு—என்று துணிவுடன் பரிகாசமாய்க் கூறிவிட்டு சமஸ்தானத்தில் நிற்கவும், நவாபு

கொஞ்ச நேரம் தனது பிரதான மந்திரியினிடம், இவருக்கு என்ன பரிசு கொடுக்கலாமென்று யோசிக்கலாயினார்.

(இன்னும்வரும்.)

தே. ச. ஆண்டியப்ப பிள்ளை.

---

## தோத்திரவெண்பா. *

---

### காப்பு

மாபா ரதமெழுத மாலுறுநற் கொம்புநனி
யேவா தொடித்தருளு மேரம்ப—பூபாரம்
பேசுவள மும்வேதப் பேரொலியும் மல்குந்தென்
காசிவெளைப் பாவுளாக்கக் கா.

1. சீரார் வளப்பொலிவுஞ் சில்வண் டினச்செறிவுங்
காவார்ந் தெழில்பொழியுங் காசியே—தேரார்
திரிபுரத்தைச் சங்கரித்துத் தேடவருஞ் சொர்க்கத்
தொருபதத்தி லுய்த்திடுவா ரூர்.

2. கார்கடல் முன்னருந்திக் காத்தளிக்குங் கும்பமுனி
யார்வமோ டர்ச்சித்த காசியே—தேர்கொடுவா
பிர்மப்பா காவென்றுர் பித்தா வெனவழைக்கத்
தர்மப்பா காவென்றுர் காப்பு.

3. தேவமறை யாகமங்கள் தெய்வபலா வென்றுதொழும்
பரவமறு கற்பகத்தென் காசியே—மூவுலகும்
முன்புணர்வார் நீணிலத்தில் முன்னப்பர் தான்றுதிக்க
அன்புணர்வா ரத்தர்தன் ஞர்வு.

4. தோன்றுநர்க்கு முத்திதரும் தொல்புகழ்க் குற்றுலங்
கான்றகுஞ்சு னீர்மல்குங் காசியே—ஆன்றமயிற்
புள்ளே றிவருவார் போதமழ லைக்குவந்தார்
வெள்ளே றிவருவார் வீடு.

5. கோட்புரியு நாரதர்தன் கோட்டான் குணமொழித்
தாட்பெறுநல் லன்புற்ற காசியே—கோட்டிப

---

*தென்காசி நகர்க்கண் கோயில் கொண்டருளிய ஸ்ரீ காசிவிசுவேசர்பேரிற் பாடியது.



மூர்ந்தருள் வாசவனும் மூரியெழு நாவுமன்பு
கூர்ந்துதொழப் பட்டார் குடி.

6. வாசவன்றன் வச்சிரத்தை வன்முனையாய்ப் பெற்றிடவே
யாசையோ டர்ச்சித்த காசியே—பாசமறு
வெம்மறலி நற்பாதத் தானடித்தார் வெம்பழியின்
செம்மறனைக் காத்தளித்தார் சேர்வு.

7. பண்டு விசுவேசர் பார்புகழும் பொன்வழுதி
கண்டுகொளக் காட்சியருள் காசியே—வண்டுளவோன்
நத்தன் புருகூதன் நாடிமிகப் போற்றுபத
வத்தன் னரனின்றன் ஞர்வு.

8. கானமாஞ் செண்பகத்தின் காழசுரன் கொல்லுதவிக்
கானமாண் டீர்க்கைசூழ் காசியே—கானவான்
கண்ணப்ப னெச்சில் கனிந்தே களித்துண்டா
ரெண்ணப் பவமறுத்தா ரில்.

9. வானுச்சி மைஞகம் வாள்சிறகு காத்திடுவான்
தானிச்சித் தர்ச்சித்த காசியே—தேனிச்சுங்
கேதகைத்தா மங்களித்தார் கேடிகழ்நல் லைம்முகத்தார்
மாதொருபா கத்தார் மனை.

10. ஆர்க்க சதுர்மறை யந்தணர்க ளெல்லவருங்
காக்க கடிநகர்த்தென் காசியே—ஊர்க்கு
மாதமும் மாரி மலிருகநல் லாடவரும்
மாதருந்தங் கற்புமா ண.—ஆ.

[இப்பாடல்களை யாக்கியோர் எதுகைத்தொடை நயத்தைப் பெரிதுங் கவனித்தாங்கு மோனைத் தொடை நயத்தையும் அத்துணை கவனியாது விடுத்தமை மிகவும் பரிதபிக்கத்தக்கதே.—பூ]

---

## ஒத்த சமயம்.

### பேகனுரது 3 - ம் சிற்றுரை.

---

ஒத்த சமயம், அதாவது நாடு அடங்கலும் ஓரேசமய நெறியைத் தழுவி நடத்தல்.

மக்கள் கட்டுப்படுதற்கு முக்கிய காரணம் ஒத்தசமய நெறியாதலின், சமயநெறியே யோக்கியமான ஒற்றுமைக்கு அடங்கிப்போந்தால் எவ்வளவோ பாக்கியமாம். கிறித்தவர் அல்லாதார்களிடத்திற் சமய நெறியைப்பற்றிய பிரிவும் சச்சரவும் கிடையா; ஏனென்றால் ஆதியில் வெறுங்கவிகளாய் மாத்தி

சம் பேர்பெற்றவரே அன்னாராற் சமயகுரவர்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமையால் அன்னார் சமயநெறி எப்படிப்பட்டதென விளங்குவதனால் அன்னார் சமய நெறிகளிற் சடங்குகளுந் தந்திரங்களும் ஜாஸ்திப்பட்டும் மந்திரங்களமைந்த ஸ்திரமான கொள்கைகள் கம்மிப்பட்டும் வழங்கும். கிறித்தவச்சமயக் கடவுள் கடுக்கும் தெய்வமென உரைபெறுதலால், அவரை வழிபடும் சமயத்திற் கலப்பும் பிரிவும் ஆகாததாம். **சமய நெறியில் ஒற்றுமை யாவதென்ன? அதனாற் கூடுதல் என்ன? எம்மட்டும் ஒற்றுமை இயலும், அதற்கு உபாயம்யாது?** எனக்கொஞ்சம் விவரிக்கப் பார்ப்போம்.

**சமயநெறி யொற்றுமையாற் கூடுதல் என்ன?** கடவுளுக்கு உவப்பு இருப்பது இருக்கட்டும். சமயநெறிக்கு வெளிப்பட்டார் விஷயத்தில் ஒற்றுமையாற் கூடுதலும், அதற்கு அடங்கிய உட்பட்டார் விஷயத்தில் ஒற்றுமையாற் கூடுதலும் என இரு பிரிவுபடும்.

**I. சமயநெறிக்கு வெளிப்பட்டார் விஷயத்திற் ஒற்றுமையால் கூடுதலாவது.** ஒழுக்கம் சிதைவதிற்கூட அவ்வளவுகேடு இல்லை எனலாம், சமயநெறியிற் பிளவுகளையும் கட்சிகளையும்போல நாட்டுக்கு எதுவும் அவ்வளவு சீரழிவாகாது. பாருங்கள், உடம்பில் இரத்தம்கெட்டு, எந்த உறுப்பாவது அழுகிச் சிதைவதிற்கூட அவ்வளவுசேதமில்லை. உடம்பிற் பிளப்பு உண்டாவதிற் சேதம்ஜாஸ்தி. சமயநெறியைவிட்டு மக்களைவிலகச்செய்து அவர்கள் அணுகாதிருக்கக் காரணமாய் ஏற்பட, சமயநெறிப்பிளவைவிட வலியதுயாது? "ஆண்டவன் வெளியில் உளன்" என ஒரு சாரார் கூற, "பார், மரும ஸ்தலங்களில் ஆண்டவன் உளன்" என மற்றொருசாரார் கூற, அதாவது புறம்பானவர் அவயத்து ஸ்ரீ கிறித்து பிரகாசிக்கிறார் எனவும், ஆலய வமைப்பில் பிரகாசிக்கிறார் எனவும் பலர் பலவாறு உரைப்ப, "வெளிப்படாதே" "வெளிப்படாதே" என ஆண்டவன் இடை விடாது காதில் ஓதியதற்கு நியாயமிருந்தது. புறச்சமயத்தவரைத் திருத்துவதை ஏற்ற ஸெயிண்ட் பால் குரு, அன்னார் க்ஷேமத்துக்கு முயன்ற அவர் "புறத்தவர் உள்ளே வந்து, நாம் பலவாறு பிரிந்து பேசக் கேட்டால் நம்மைப் பயித்தியக்காரர் என்னாரா" என்றார். நாஸ்திகரும், ஈன ஒழுக்கத்தினரும் சமய நெறியில் இத்தனை பிளப்புக்கள் இருக்கக் கண்டு சமய நெறியினின்று விலகிச் சமய நெறியைத் தூற்றுவர். இகழ் உரையிற் கைகாரரான ராபிலே கற்பனை செய்து புஸ்தகசாலை ஒன்றில் உள்ள புஸ்தகங்களுக்கு ஜாபிதா தாம் எழுதினது போலும், அதனிற் 'சமய நெறியை இகழ்வார் பேய்க்கூத்து' எனப்புத்தகம் ஒன்று இருப்பது போலும் சொல்லியிருக்கும் இழிமொழியை இங்கு உதகரித்தல் தகாதெனினும், சமய நெறியை இகழ்வார் நடவடிக்கை அவ்வாறு உதகரித்தால் தான் விளங்கும்படியுள்ளது. சமய நெறியிற் கக்ஷிப்பட்டார் பேய்க்கூத்தே ஆடுகிறார்கள், எவ்



வளவோ விகாரமாய் ஆடுவர், அவ்வாறு ஆடுவதைப் பார்த்து அற்பபுத்தியரும் இம்மை வாழ்வு நோக்கத்தினரும் அசைந்துபோய்ப் பக்திமார்க்கத்தை யவமதிப்பர்.

**II. சமயநெறிக்கு உட்பட்டவர் விஷயத்தில் ஒற்றுமையாற் கூடுதலாவது:**—சச்சரவு நீங்கிய அமைதியாற் கணக்கில்லா லாபம் உண்டு. சச்சரவில்லாத அமைதியாற் சமய நெறியில் விசுவாசம் கெட்டிப்படும், அப்புறம் அன்பு தோன்றும், அறிவு கலங்காது பகுத்தறிவு விரிவுபெறும், உழைத்துப்போராடிப் பிரபந்தங்கள் எழுதிக் கக்ஷியாடுவது நின்று, நெஞ்சடக்கம், ஒழிவு, அன்பு இப்புண்ணிய காரியங்கள் வளர்ச்சி பெறும்.

**III. சமயநெறியில் ஒற்றுமை எம்மட்டும் இயலும்:**—எம்மட்டும் இயலும் எனல் முக்கிய சங்கதியாம். இச்சங்கதியில் இருவழியும் பிழைபடச் செல்ல இடம் உண்டு. "ஜெஹூ, இராஜியா, நீஏன் இராஜிக்குப்போகிறாய், இந்தண்டைவா, எனக்குப் பின்னிடை". இராஜி எங்கே வந்தது, ஒருவர் வழிகாட்டி முன்செல்ல மற்றையர் எல்லாம் பேசாது வழிபடவேண்டும் என்பர் ஒருசாரார். இத்தரத்தார்க்குச் சமய நெறியில் வேறு பட்டார் பேரில் துவேஷம் ஜாஸ்தி. இராஜிப்பேச்சைக்கேட்டாற் கடுங்கோபந்தான். உலக விவகாரங்களிற் கட்சிப்பட்டார் விவாதச்சங்கதிகளிற் சில அம்சங்களை மற்றைக்கட்சிப்படியும் எடுத்துச் சாமர்த்தியமாய்ப் பிணைத்து ஒருக்கி மத்தியஸ்தம் செய்கிறோமே, அப்படியே சமய நெறியிலும் புணர்த்தக்கூடும் போல, லோடிஷியர்முதலிய மெலிந்த நெஞ்சினர், புணர்க்கப்பார்ப்பர். கடவுளுக்கும் மனிதர்க்கும் மத்தியஸ்தம் செய்ய இறங்குவர். இவ்விருவழி மீச்செலவும் ஏலாது. "நம்முடன் பொருந்தாதார் நமக்கு எதிரியே, நம்மையெதிராதார் நம்முடன் பொருந்தியவரே" என முடிகாரய கிறித்தவர் இணங்கும் பொருட்டு ஆண்டவர் இட்ட இரண்டு ஆணையையும் நற்சிந்தையுடன் உரைக்கப்பெறின், அதாவது சமயநெறியில் இன்னின்ன அம்சங்கள் மூலக் கொள்கைகளைப் பற்றியன, முக்கியமான சங்கதிகளாவன எனவும் மற்றைப்படி மூலக்கொள்கைகளைப் பற்றாமல் ஆளுக்கு ஆள் வேறுபடும் அபிப்பிராய வித்தியாசத்தாலும், ஒழுங்கின் நிமித்தமாகவும் நற்சிந்தையாலும் இன்னின்ன அம்சங்கள் நேரிட்டன எனப் பகுத்தறியப்பெறின், கிறிஸ்து நியமித்த ஒற்றுமை நிகழ்வுறும். நான் சரியாய்ப் பகுத்தறியவேண்டும். சங்கதிகள் என்பன அற்பம் போலும், ஏற்கனவே முடிவு பெற்றுப்போனவென்றும் தோன்றலாம். அப்படியல்ல. இது வரையிற் பகுத்தறியப்பட்ட அம்சங்கள் வேண்டியமட்டும் இது வரையிற் பகுத்தறியப்பட்டிருந்தாற் கிறித்தவர்களுக்குள் இவ்வளவு பிரிவுகள் ஏன் உண்டாயிருக்கும்.

**IV. என் சிற்றறிவுக்கு எட்டிய மட்டும் நான் சொல்லக் கூடியதாவது:**—இருவகை வம்புப்பேச்சுக்களாற் சமய நெறியிற் பிளப்பு உண்டாக

லாம். முதலாவது :—கட்சிப்படுவதில் ஏற்படும் எரிச்சலுக்கு ஈடுசெய்யாத அவ்வளவு சொற்ப சங்கதியைப் பற்றிப் பிளப்பு நேரிடலாம். பாதிரியர் ஒருவர் சொற்படி கிறிஸ்துவின் மேலுடுப்பில் நூல் பிரிவு இருந்ததில்லையாயினும் கோயிலின் போர்வையில் பல வர்ணங்கள் இருந்தன. அதாவது ஒற்றுமைச் சங்கதி ஒன்றும், ஒழுக்க வொத்துமைச் சங்கதி வேறுமாக ஏற்படுகிறது. இரண்டாவது, பிரிவுக்குக்காரணமான அம்சம்பெருத்த சங்கதியாயிருப்பது நிஜமாயினும், கக்ஷிப்போராட்டத்தில் நுணுக்கி மறைபொருளாக்கித் தேறுதலில் அது வெற்றுயுக்தி சாமார்த்தியமா யிருக்கிறதேயன்றிப் பொருண்மையற்ற சங்கதியாயிருக்கிறது. சிலசமயங்களில் அறிவிலிகள் சேர்ந்து ஒருமைப்படாது பிடிவாதமாய்க் கக்ஷியாட இவ்விருவரும் ஒன்றைக் கருதிப்பேசுவதும் அதனை உணராது அவ்விருவரும் சண்டைபோடுவதும் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருக்கும் அறிஞர்க்குத் தெரிவது சாதாரணமாம். மனிதர்க்குள்ளேயே இவ்வளவு ஏற்றத்தாழ்ச்சி ஏற்படின் நமது உள்ளத்தைத்திருத்தமாய் அறியும் இறைவனுக்கு அறிவின்மந்தமான மக்கள் ஒருவரோடொருவர் சச்சரவுப்பட்டுப் பிரியும் அம்சங்கள் வேறல்ல, ஒரேகருத்தையுடையன என ஏன் தோன்றாதோ? இறைவனுக்கு அவ்வம்சங்கள் எல்லாம் சரிப்பாடாய் ஒப்பாகலாமே. இப்படிப்பட்ட தர்க்கட்சி விஷயமாய் ஸெண்ட்பால் குரு உரைப்பதாவது. "பேச்சுக்களிற் கொடியபுதுமைகளையும் பொய்ந்நூலறிவுப் போராட்டத்தையும் நீக்குங்கள்". பொய்விரோதங்களை மனிதர் கற்பனையால் உண்டாக்குவர். உண்டாக்கிக் கெட்டி மொழிகளால் உரைப்பர், கருதிய பொருளை மறந்து வெறு மொழிகளையே ஆதரித்துக் கட்சியாடுவர். சமயநெறியொற்றுமையில் இருவிதப் பொய் ஒற்றுமையுண்டு. அதாவது அறிவு எம்மட்டு மில்லாப் பொய் ஒற்றுமை ஒன்று, ஒளியின்றேல் ரங்கின் வேற்றுமைபுலப்படவில்லையே, அறிவிலிகள் அவலம்பிக்கும், சமயநெறியிற் குற்றந்தோன்றாது, பிரிவு போராட்டமிராது, இவ்வொற்றுமை ஒப்பாகாதுபொய்யாம். சமயநெறியில் முக்கியமான கொள்கைகள் நேர்விரோதமாயிருக்க அவற்றை எப்படியோ சேர்த்துப் பொருத்திவைத்தாலும் பொய் ஒற்றுமைதான். ஏனென்றால் இச்சங்கதியில் மெய்பொய் என்னப்படுவன நெபுகட்நெஸரது உருவத்தின் கால் விரல்களில் அமைத்த களிமண்ணையும், இரும்புகளையும் ஒக்கும், ஒட்டிப்போகலாம், கலப்பதில்லை.

**V. சமயநெறி யொற்றுமை நிலைப்படுத்த உபாயமாவது** :—சமயநெறியொற்றுமை வேண்டி, அன்பின் வழிப்பட்ட முறைகள், மக்கள் இணங்கும் வழிப்பட்ட முறைகள், இவற்றிற்குக் கெடுதி நேரிடாமல் பார்க்கற்பாலதும் உளது, கிறித்தவர்களிடத்தில் உபதேசக்கத்தி எனவும் செம்மையாளும் மன்னன் கத்தியெனவும் இருவகைக்கத்திகள் உள. சமயநெறியொற்றுமையை ஆதரிப்பதில் அவ்விரண்டு கத்திகளில் ஒவ்வொன்றும் எம்



மட்டும் வேலைக்கு உதவலாமோ அம்மட்டுக்குமின்றி உதவப்படுதல் தகாது. இவ்விருகத்திகளுக்கும் வேறான மகமதின் கத்தியும் அதனையொத்த கத்தியும் மூன்றாவதாயுண்டு. அதனை நாம் ஆளுதல் தகாது. யுத்தங்களை நடத்திச் சமயநெறிகளை நிலைப்படுத்தலும், நடுக்கத்தாற் பிறர் உணர்ச்சியை நம் வசப்படுத்தப்பார்ப்பதுவும் தகா. வெளிப்படையான அவதூறு, வெளிப்படையாய்த் தெய்வமிகழ்தல், துரைத்தன விவகாரத்தை எண்ணிச் சமய நெறியில் வித்தியாசமாய் நடத்தல், இவற்றைக்கண்டிக்கும் பொருட்டுக் கத்தியை யொவாறு வழங்கலாம்போ லிருக்கிறது. அப்படியிருக்கத் துரைத்தனக் கட்டுப்பாட்டுக்கு விரோதம், ரகசியமான கலகங்கள், கலாபங்கள், இவை நடக்கும்படி கத்தியையெடுத்துக் கொடுத்து வழங்குதலும், குடிகளிடத்தில் ஆவேசமுண்டாக்கிக் கத்தியை வீசிக்கொண்டு புறப்பட்டுக் கடவுள் சம்மதப்பட்டிருக்கும் துரைத்தனம் தலைகிழாய் மாறும்படி வேலை செய்தல் எவ்வளவும் தகாது. ஏனென்றால் இவ்வாறான நடவடிக்கையாற் கடவுள் நியமனம் ஒன்றன் பொருட்டு மற்றொரு நியமனத்துக்கு விரோதஞ்செய்வதாம். கிறித்தவர்களாக மக்களை நோக்குவதை விசேஷமாயும், நம்மைப்போல மற்றையரும் மக்கள்தாமே யென்பதை மறந்தும் நடப்பது ஆம். தன்பெண்ணைப் பலியிட்டதைப் பார்த்துக்கூசாத அகமெம்நனைப்பார்த்து, லுகிரீஷஸ் கவி, "சமய ஆவேசத்தால் இவ்விபரீதம் நேரிட்டது" என முறையிட்டார். அவரே யின்னு மிருந்து பிரான்ஸில் பிராடஸ்டண்டுகளைக் கும்பலாய்ப் பலியிட்டதையும், இங்லண்டில் வெடிமருந்துச் சூதுக் குமுக்கு நடந்ததையும் பார்த்திருந்தாரானால் என்ன தான் முறையிட்டிராரோ! சிற்றின்ப ஆவாவும், நிரீசுவரதமும் எழுமடங்கு அதிகம் அவரிடத்தில் உண்டாய் இருக்கும். மன்னன் கத்தி வந்து சமய நெறியைக் காப்பாற்றுவதில் எப்படி உஷாராயிருக்க வேண்டியிருக்கிறதோ, அப்படியே குடிகளை ஏவிக் கத்திப்பிரயோகம் செய்ய விடுவது கொடும் பழியாம். அப்பேர்ப்பட்ட நடவடிக்கை ஞானஸ்நாந விரோதச் சமயத்தாரிடத்திலும், அவரைப் போன்ற கொலைபாதகரிடத்திலும் இருக்கிறபடி இருக்கட்டும். இறுமாப்பாற் "பரலோகத்துக் கேறி இறைவனாவேன்" என்ற சைதான மொழி தோஷமானால் நாம் நகரத்துக்கு இறங்கிச் சைதான சுவரூபம் இறைவன் அடைந்தார் என்னும் பழி ஏற்கும்படி நடந்து கொள்ளக் கூடாது. சமய நெறி நிலைப்படுங் கருத்தான் அரசாளுபவரைக் கொன்று ஜனங்களைச் சூறையாடித் துரைத்தனங்களைத் தலைகிழாக்குவது கடவுளுக்கு நரகச்சுவரூபம் உண்டாக்குவது தானே. இறைவனது ஞான வொளியை வர்ணிக்கையில், அது புறாவின் சொரூபம் எடுத்து வந்தது எனச் சொல்கிற வேதப்பிரமாண மொழியைத் தள்ளி, பருந்து கழுக்கள் சொரூபம் பெற்று இறங்கிற்று எனச் சொல்ல வேண்டியிருக்கும். கிறித்தவர் தர்ம ஒழுக்கத்தினர் என்றது நீங்கிக் கொள்ளை யடிப்பவர், கொலைபாதகர் எனச் சொல்லவுரியராவர்; ஆகையால்

உபதேசக் குருச்சபையார்தம் கொள்கையினாலும், ஆணையினாலும், மன்னவர் வேண்டுமானால் தம்சத்திப் பிரயோகத்தாலும், கிறித்தவச்சமயப் படிப்பு, மற்றநன்னெறிப்படிப்புப் படைத்த சிறந்தோர்தம் நற்போதனையினாலும், சமயநெறிப் பேச்சு எடுத்து வதைசெய்வார்களைக் கண்டிப்பார்களாக. நாம் ஆத்திரப்படுவதனால் இறைவன் காரியம் நடையுறுவதில்லை என ஸெண்ட்பால் செப்பிய மொழியைச் சமயநெறி யோசனையில் எப்போதும் ஓதுக்கக் கடவேம். பிறரைச் சமயநெறிக்கொள்கையில் நம்முடைய வழிப்படுத்த வலிக்கட்டாயம்செய்தவர் காரியத்தை நெருங்கப்பார்க்கப் போனால் ஏதோ சொந்தத்துக்குப் பொருள்லாபம் அடையக் கோரி அவ்வாறு வலிக்கட்டாயம் செய்ததாக முடியுமென்ற பெரியவர்மொழிசரிதான்; அவர் நிஜத்தையுரைத்தவரே.

## தமிழாக்கியோர் குறிப்பு.

தென் இந்தியாவில் முக்கியமாய் வழங்கும் சமயம் இந்து சமயம். இச்சமயத்தில் நீறிடுவார், நாமமிடுவார் என இரண்டு பெருத்த பிரிவுகள் உண்டு. நீறிடுவார் கோயிலிற் பிரிவுச்சண்டை அவ்வளவாய்க்காணோம். நாமத்தினரில் வடகலை, தென்கலைச்சண்டை விபரீதமாயுளது, வெகுகாலமாய்ச் சண்டைபோட்டு, ஒரு பிரிவினர் மேல் மற்ற பிரிவினர்க்கு எப்படியாவது கழுத்தையறுத்தாலும் ஆறுதெனும் பகைக்கொதிப்பெடுத்து நிற்கிறது. ஏகாதசியிற் பிதிர்த்தெவசம் இட்டால் என்ன, அவர்க்குத்தோன்றிய நியாயத்தின் பொருட்டு, மறுதினம் அதையிட்டால் என்ன எந்தப்பாத்திர மந்திரம் சொன்னால் என்ன, விட்டாலென்ன, வடமொழி வேதம் ஓதினால் என்ன, தென்மொழி வேதம் ஓதினால் என்ன, கடவுளுக்கு இருமொழியும் சரியாய் ஒப்புத்தானே. சமயநெறியிற் பல ஒழுக்கங்கள் இருக்கலாம். இதற்காக யாரையும் பகைப்பது அக்கிரம நடத்தையாயிற்றே ஆதியில் ஸ்ரீ சங்கரர் கொள்கைகளை ஒழுங்குபடுத்தினரே யன்றி, ஒழுக்கங்கள் எப்படியாவது இருந்து போகட்டும் எனவில்லையா? கெட்டியாய் அக்கிரமவொழுக்கங்கள், தாமே நாளடைவில் ஒழியும்.

சமயநெறியில் வேறுபட்டாரைப் பகைப்பவர்போல் துஷ்டர்கள் இல்லை. ஒரு குலத்திலோ, கோயிலிலோ ஏதோ ஓர் ஒழுக்கம் நடைபெற்றுவர, நமது ஒழுக்கம் அக்குலத்திலும் அக்கோயிலிலும் நிறைவேறவேண்டும் எனப் பிடிவாதம் செய்வது, தெய்வத்துக்குச் சம்மதமா?

திருநெல்வேலியிற் சாணார்கள்பேரில் மறவர் அவ்வளவு பகை பாராட்டுவானேன்?

சமயநெறியில் வேறுபட்டவர்பேரிற் பகைபாராட்டுகிறவரையில் இந்தியர் க்ஷேமப்படமாட்டார்கள். ஐரோப்பாவிற் சமயநெறியிற் பிளப்பு உண்டு, பிளவுபட்டார் ஒருவரையொருவர் பகைத்து விவகாரங்களில் அக்



கிரமங்களுக்குப்போவதில்லை. தம்தம் சம்பம் வனுக்கக்கோரி அக்கிரமத்திற் புத்தி சொல்லுவார் பேகனாது சிற்றுரையை வாசித்துச்சிந்திப்பாராக.

டி. ஆர். இராமநாத ஐயர்.

---

## சமாசாரங்கள்.

---

இந்தியாவிற் பள்ளிப்பிள்ளைகள் செய்யும் புரட்டைப்போன்று ஸ்காட்லாண்டில் முக்கிய நகரமாகிய அபர்டீனில் ஒரு சோதகர் செய்ததாக ஆங்கிலேயப் பத்திரிகைகளில் வாசித்தனம். ஒரு பாடத்திற்குச் சோதகர் வேண்டுமென்று விளம்பரஞ் செய்ததாயும், அப்பாடத்திற் பிரசித்திபெற்ற ஜேம்ஸ் கிராண்டு எனும் நிபுணன் பேர்கொண்ட மற்றொருவன் அப்ளிக்கேஷன் செய்து சோதகனாய் நியமிக்கப்பட்டானென்றும், பரீட்சை நடந்த பின்னர் அவன் திருத்திய ஆன்ஸர் பேப்பர்களைப் பார்க்கும் பொழுது அவன் போலி மனிதனென்றுகண்டு பிடிக்கப்பட்டானென்றும் பேர் மாருட்டஞ்செய்ததற்காக ஆறுமாதம் தண்டனை விதிக்கப்பெற்றானென்றும், ஹிந்துவில் வெளியிடப்பட்டிருக்கின்றது. வெட்கம். வெட்கம்.

***

பதினெண் புராணங்களில் ஒன்றாகிய மச்சபுராணம் இதுவரை அச்சிடப்படாமல் இப்பொழுது தாம்ஸன் கம்பெனியார் அச்சிட்டு வருகின்றனர். அருமையான புராணமாதலால் திருமயிலை வித்வான் ம-ா-ா-ஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள் சிரத்தையுடன் பிழை சேரிடாமற் பார்த்து வருகின்றார்கள். இந்தப்புராணத்தை ஆக்கியோர் வடமலையப்பர் என்பார். இவர் திருநெல்வேலியில் நாலைந்து தலைமுறைக்குமுன் கீர்த்திபெற்ற "பிள்ளையன்" குடும்பத்தின் தலைவர். இவர் வழியிற்றோன்றிய சுப்பிரமணிய பிள்ளையன் பி. ஏ. அவர்களனுமதியின் பேரில் அவர் வீட்டிலுள்ள மூலப்பிரதியுடன் ஒத்துப் பார்த்து இப்புராணம் அச்சிடப்பட்டு வருகின்றது. இதில் 5000 பாட்டுக்களுள. இப்புத்தகம் செப்டெம்பர்மீ 15உ வெளிவரும். இதன் உத்தேச விலை ரூ 2—8—0. இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை ப்ராட்வே, தாம்ஸன் கம்பெனியாருக்கு எழுதி வரவழைத்துக்கொள்ளலாம்.

***

சிவஸ்தலங்களிலொன்றாகிய திருமுல்லைவாயிலுக்கு நாளதுவரை புராணம் எழுதப்படாமல் தலமான்மியம் அனேகருக்குத் தெரிந்திலது. அக்குறையை நீக்கும்பொருட்டுத் திருமயிலைவித்வான் ம-ா-ாஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள் ஒரு புராணம்பாடித் தாம்ஸன்கம்பெனியில் அச்சிட்டுவருகின்றனர். கூடியசீக்கிரத்தில் வெளிவரும்.

சென்னை ஐக்கோர்ட்டு முதல் ஜட்ஜிவேலைக்குச் சென்னையில் அட்வோகேட்டு வேலைபார்த்துவந்த ஆர்னால்டு ஒயிட்டு துரையவர்கள் நியமனஞ் செய்யப்பட்டனர். அவர் சீமையிலிருந்து சென்னைக்குவந்து கொஞ்சக்காலமானபோதிலும் அவர் நிரம்பவும் சுகுணர், ஆழ்ந்தயோசனையுடையவர், சரியான நீதிசெலுத்தத் தக்கவர், என்றபேச்சு எங்கும் நடமாடுகின்றது.

* * *

பாரிஸ்டர் பரீட்சை கொடுத்தவர்களையன்றி மற்றோரை முதல் ஜட்ஜி வேலைக்கு நியமித்தல் கூடாதென்ற வழக்கத்தைபற்றி பார்லிமெண்டு சபையிற் கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றிற்குத்தக்க விடை கொடுக்கப்பட்டதாய்த் தெரியவில்லை.

* * *

இத்தருணம் மேற்கூறியநிபந்தனை எடுபடுமாயின் முதல் ஜட்ஜிவேலை இப்பொழுது ஷை வேலையைப்பார்த்துவரும் திவான்பகதூர் ம-ா-ா-ஸ்ரீ, சுப்பிரமணிய ஐயரவர்களுக்கே ஆகுமென்பதற்கு ஐயமில்லை.

* * *

சென்னை முன்ஸிப்பாலிடியார் லாயர் நார்ட்டன் துரையவர்களைச் சட்டநிரூபணசபைக்கு மெம்பராகத் தெரிந்தெடுத்தமையாற் பொதுஜனவிஷயங்களைப் பயப்படாமற் சட்டநிரூபண சபையில் எடுத்துப்பேசத்தகுந்தவரென்று எல்லோரும் சந்தோஷப்படுகின்றனர்.

* * *

சென்னைச் சர்வகலாசாலையின் ஒரு பகுதியை திராவிட பாஷாவிருத்திக்காகஏற்படுத்தவேண்டி, ஆராய்ந்து அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்படி ஏற்படுத்திய கமிட்டியார், அது முடியாதென்றும், திராவிட பாஷைகளில் தனியே பரீட்சைகள் நடத்தித் தேறினவர்களுக்குப் பட்டஞ்சூட்டுதல் கூடாமையென்றும் ரிப்போர்ட்டு செய்யப் போகிறார்கள்.

* * *

முக்கிய சோதனைக்காரர் எந்தக் கல்லூரியிலாகிலும் எந்தப் பாடத்திற் சோதனை செய்யும்படி திட்டப்படுத்தப்படுகிறாரோ அந்தப் பாடத்தைப் பரீட்சைக்குமுன் இரண்டு வருடத்திற்குக் கற்பிக்கக் கூடாதென்று எம். ஏ. பிரமஸ்ரீ என். வைத்திய நாத ஐயரவர்கள் சர்வகலாசாலையின் அடுத்த ஸெனேட்டு மீட்டிங்கில் பேசப்போகிறார். அங்ஙனஞ் செய்தல் பொதுவாய் நன்மைபயக்கத் தக்கதாயினும் நிறைவேறுதல் துர்லபம். தவிரவும் பி. ஏ. பரீட்சை சோதகர் பி. ஏ., பரீட்சையில் தேறினவர்களாயும், எம். ஏ. பரீட்சாசோதகர் எம். ஏக்களாயும் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தப் போகின்றார். இதுவும் துர்லபமே. ஏனெனில் சர்வகலாசாலையிற் பட்டம் பெறாதவர்கள் சோதனை செய்யத் தகுந்தவர்களாய் அநேகர் இருக்கலாம். ஆங்கிலேய தேசத்தில் மிகவும் கீர்த்திபெற்றவர்களி லனேகர் சர்வகலாசாலைகளிலொதுங்காதவரும் அவற்றிற் பட்டம் பெறாதவர்களுமே.

# ஞானபோதினி.

ஸம்புடம் III. } 1899ஞு செப்டம்பர்மீ 20உ { புத்தகம் II.

## மதிவாணன் கதை.

### XI - ஆம் அத்தியாயம்.

புரவியேறிப் போன முருகனே காவலனெறியுண்டு கிடந்த களங்குறுகி வினவியபோது பிக்குணிக் கோலம்புனைந்து வீடுகடோறும் ஐயமேற்றுச் செல்லாநின்றகரவாளனொருவன் கரவாளினெறிந்து பொள்ளென மறைந்து போயினனென்றார் அவ்வயின் நின்றார். உதுகேட்ட காவலர் தலைவன் பரியினின்றிழிந்து ஆயிடை நிகழ்ந்தனவற்றை யெல்லாம் நன்னர் நோக்கிய பின்றைப் பிக்குணிக்கோலம் புனைந்து போந்தான் எவ்வழிப்போந்தனனென்பதனையும் எவ்வெவ் வில்லங்கடோறும் ஐயமேற்றனனென்பதனையும் காவலன் புலவர் வீட்டு வாயிலினிற்புழி அக்கயவன் எவ்விடம் நின்றனனென்பதனையும், அவனது உயரம் நிறம் தோற்றம் முதலியனவற்றையும் பற்றி ஆய்ந்தறிந்து கொண்டனனன்றி அத்தீயோன்றன் அடிச்சுவடுகளைக் கண்டு குறித்துக்கொண்டு பிக்குணிக் கோலப் பேய்மகன் சென்ற திசைவழிச் சில காவலரையேவி நேடுமா விடுத்துத் தான் வேலவர்தம் இல்லத்தை நோக்கிக் கனவட்டமிவர்ந்து கடுகிச் சென்றனன்.

முருகன் வகுத்துரைப்ப நடந்தசெய்தி யனைத்தையுங் கேட்ட வேலவரும் மாயவன் மாட்டுவெறுப்பு மீக்கூர்ந்து 'என்னணமேனும் மாயவனைக் காவலிற் செறிக்குதும்' என்றுறுதி பூண்டெழுந்தனர்.

இடையிற் சென்ற காவலரோ பொய்ப்பிக்குணிக் கோலத்தான் றன்வேடத்தை மாற்றிவிடுவானென்பதனை மறந்தனராய்

வழிக்கட்டிரிதந்த பிக்குணிகள் யாவரையும் பற்றிக் காவலிற்செறித்தனர். இனிவேலவமுருக னிருவரும் வேற்றுக்கோலங் கொண்டு கொய்யுளைக்கலிமா வேறித் தென்மேற்றிசையிற் சென்று திருப்பரங்குன்றத் துற்றுத் துருவத்தலைப்பட்டனர்.

இவ்வாறிவர்கள் தேடாநிற்ப மாயவனோ பரங்கிரிக்கருகிலுள்ள கூத்தியர்குன்ற மென்னுஞ் சிற்றூரின்கண் ஒரு நாடகக் கணிகையினில்லத்தினுற்றுக் கட்டிலிற் படுத்துக் கவலையற்றுறங்குவானாயினன். சிறிதுநேரத்தினுளெல்லாம் ஆயிடையோ ரரவமெழும்பிற்று. அஃதென்னென அக்கணிகையும் விசாரிப்பச் சென்றனள். சென்று மாயவனைத் தேடிப் பிடிப்பான் காவலர் ஊரூராய்ப் போய் வீடு வீடாய்ச் சோதிக்கின்றனரெனக் கேள்வியுற்றனள்; மனங்கலங்கினள், பெருமூச்செறிந்தனள், 'ஐயகோ! யாவரேனும் என் மீதும் ஐயங்கொள்ளுவாரோ?' என்று பயந்து தன் மனோவிகாரங்களை வெளிக்காட்டாது உள்ளடக்கினள்; இனி யவ்வயின் நிற்றலும்நேரி தன்றென வீட்டைநோக்கி விரைந்து செல்லுமாறு அடியெடுத்துவைத்தவள் 'அம்மவோ! நான் விரைதல்பற்றி யையப்படி னென்செய்வது' என்று சிறிது மெல்லெலென நடந்தனள். அப்போழ்தத்து மாயவனது நிலைமை நினைவிற்கு வரலும் எடுத்தடிவைத்தேகினள். இந்நாடகக் கணிகையின் செயல்களையுற்றுநோக்கிக் கொண்டிருந்த வொருகாவலன் பிறரறியாது அவளைப் பின்பற்றிச் சென்றான். சென்ற கணிகையோ மாயவனை யெழுப்பி "மறைதி! மறைதி! நின்னைநேடுகின்றனர்" என்றனள். இச்சொற்கள் செவிப்பட்ட மாயவன் எழுந்தனன் புனைந்தனன் பறையர்தங் கோலம்! கைப்பறை யெடுத்துக் கணகணென்றடித்துப் பொய்ப்பறை யனுமுடன் போந்தனன் வெளியில். எதிர்கண்ட காவலர் அவனை யயிர்த்து "ஓ! பறையோய்! நீ யெம்முடன்போதுதி. அல்லாக்கால் நின்னைச் சிறையகஞ் செறிப்பாம்" என்றனர். "ஓ! நும்முடன் போதுதற்கென்னை? இழிகுலத் தேனையு மொருபொருட் படுத்தூ அழைக்கு நுந்தங்குழூஉவிற்செல்லும் பெரும்பேறு பெற்றேன்" என்றன னெவரையு மேமாற்று மாயவன். உடனே யவனைப் பற்றிக்கொண்டு நால்வர் காவலர் நண்ணினர் மதுரை நோக்கி. பரங்கிரி யருகர்ப் பலர் பறையர் ஓடோடிவந்து "அண்ணா! போதியோ? அப்பா! போதியோ!! ஐயா! போதியோ!! எம



அரசே! போதியோ!" என்று தாங்கொண்டு செல்லும் பறையனை நோக்கி யழுதல்கண்ட காவலர் சிறிது மனமிளகினரேனும் இடங்கொடுத்திலர். இவ்வாறிவர்கள் இடங்கொடுத்தலின்றி மாயவனைப் பற்றிக்கொண்டு செல்லுறூஉம் நெறிக்கட் பசுமலையருகின் எதிரே யெண்மர் குருதிபடிந்த குந்தக்கையினர் போதரக்கண்டு அவரோடும் பேசிக்கொண்டிருந்தனர். அப்போழ்தத்து அவர்களுளொருவன் காவலரை நோக்கிக் "கயவருட் கயவனாகிய மாயவனென்னை யிக்கோலங் கண்டனன்! காண்மின்" என்று கூறித்தன் னுடலினை யவர்கட்குக் காட்டிநின்றான்; அவர்களு ளின்னொருவன் "இவனை மாயவன் குத்திய குந்தம் இது காண்டிர்" என்று சொற்றுச் செந்நீர் தோய்ந்த குந்த மொன்று காட்டினன்; அவ்வமயத்திற் கீழ்த்திசையிற் குதிரையேறி விரைந்து செல்லாநின்ற வொருவனைச்சுட்டி மூன்றாவன் "ஓ! ஆவயினோடுகின்றனன் மாயவன்! ஆவயினோடுகின்றனன் மாயவன்!!" என்று கூயினான். இது கேட்ட காவலரிருவர் அவனைப்பற்றுமாறு ஓடினார்கள். இதற்கிடையிற் பறையர்கோலப் பாதகன் வடமேற்றிசை வழியா யோடிவிட்டனன். கண்ணுற்ற காவலரிருவரும் மாயவனைப் பின்பற்றி யோடினர். பரியாளனைப் பற்றிய சென்ற காவலரிருவரும் போய்ப் பார்ப்புழிக் குதிரை வீரன் முருகனே யென்று தெளிந்து வெட்கமுற்றனரே யன்றித் தாம் போந்த செய்தியையும் நடந்த செய்தியையும் முதலோடிறுதியாக முற்று மொழிந்தனர். இவ்வாறிவர்கள் மொழியக்கேட்டு நின்ற முருகன் சேய்மைக் கண்ணே யொருவன் முன்னர் விரைந்தோடுதலையும் அவனைப் பிடிப்பா னிருவர் பின்னர்ச் செல்லுதலையுங் கண்ணுற்று அருகினின்ற காவலரிருவரையுந் தன்னொடுகடுகி வருமாறு சொல்லிவிட்டுத் தனதுகலிமாவினைத் துனைவிற் செல்லும்வண்ணந் தூண்டிச் சென்றனன்.

இஃதிவ்வாறாகப் பறையர் கோலத்தொடு மோடிப்போன மாயவன் மாடக்குளத்தினிறங்கி மடைப்புழையிற் புகுந்து மதகினீர் தாங்குமோரவின்கீழொளித்துக் கொண்டனன். பின்பற்றிச் சென்ற காவலரோ இதனை யறியகில்லாது தவித்தனர். அவ்வயிற் சுற்றிச் சுற்றி வந்தனர்; 'இவ்வழியினேயே யவன் போந்தனன்; அதற்குளவன் யாங்ஙனம் மறைந்துவிட்டனன்? இஃதென்னை விந்தை!' என்றுரைத் துளங்கவலா, நிற்புழி முருகனும் மற்றையகாவல ரிரு

வரும் போந்தனர். உடனே முருகனும் அவர்தமு ளிருவரைமடையின் மறுபுறத்து நிறீஇ யொருவனை மடைப்புழையுள் நுழைந்து நேடுமாறேவி மற்றொருவனுந் தானுமாய் மாயவனொளித்துக் கொண்டபுறத்தே நின்றனர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் மடைப்புழையின்கண் நுழைந்து மாயவனை நேடிய சென்ற காவலனுடலம் வெளியே போந்து விழுந்தது; யாவரு மதனை யுற்றுநோக்கிச் சென்ற காவலனிறந்துவிட்டன னென்றெண்ணி யுளங்கவன்றனர். இதற் கிடையின் முருகன் நெடியதோரிருப்புச் சலாகை தருவித்து அதனை மடையினுட் செலுத்திக் குத்துவான் புக்கனன். புக்கவளவில் உள்ளிருந்த மாயவன் மடையின் மறுபுறஞ்சென்று வெளியேறினன். உடனே யாண்டு அவனை யெதிர்பார்த்து நின்ற காவலரிருவரும் ஒய்யெனக்கூய் அவன்மேற் பாய்ந்து பற்றலும் அவன் இவர்களைப் பொட்டெனக் கதுப்பினிற் புடைத்து மல்லினிற்கொண்டு பிடித்துப் போர் புரிந்துழிக் காவலனொருவன் காலொடிந்து வீழ்ந்தனன். இத்துணையும் நிகழ்தலை மடையி னிப்புறத்திருந்து கண்ட முருகன் காவலனொடுஞ் சென்று பற்றப்புகுதலும் மற்போர் நின்றது; மாயவன் றலைகுனிந்தனன்; உடனே முருகனும மாயவனை நோக்கி "என்னே! மாயவ! என்னையுன் னாற்றல்! எம்மனைவரையுமின்னணம் வருந்துமாறு வைத்தனையே! இதன்காரணம் யாதுகொல்? வாய்திறந்துரைத்தி" யென்று வினவினன். வினவலும் மாயவனொன்றும் பேசிலன். அஃதுணர்ந்து முருகனும் அவனைப் பற்றித் தளையிடுமாறு கட்டளை யிட்டனன்; இட்டதுகேட்ட மாயவன் "என்னைத் தளையிடுவோன் நீயேயோ? புல்லறிவாள!" என்று கூறி முருகன் மேற்பாய்ந்தனன்; பாய்தலும் பக்கத்திருந்த காவலர் மாயவனைப்பற்றிப் பிடித்து அவன் கைகால்களில் யாப்பிட்டனர்.

பதினோராமத்தியாயம் முற்றிற்று.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி.



## தனிப்பாசுரத்தொகை.

### XXXI. கற்பு.

கற்பென் பதுகலை கல்லாமை யன்று; மற்
றிற்படி கடவா திருத்தலு மன்று;
தீய வழியினிற் செல்வுழிக் கணவனை
யேயே யிஃதெனை யென்னா திருந்து
வாயிலாப் பூச்சியாய் மன்னுத லன்று;
மாடுபோ லுழைத்துக் கூடி வாழ்ந்து
காலந் தன்னைக் கழித்தலு மன்று;
கனவி சான்றாய்க் கலந்த தலைவன்
மனையற மாட்சியை மாண்புற வகுத்துக்
கற்பித்த லானது கற்பாம்; காதலன்
சொற்கட வாதவற் றாநெறி நிறீஇக்
கனவினும் வேறு காளையர் தம்மை
நினையா திருக்கு நேர்மையே
யென்று கூறுப மன்றவான் றோரே.

### XXXII. மனன்.

வாழிய மனனே! வாழிய மனனே!
ஐம்பொறி யென்னும் பைம்பரி களினிவர்ந்
துலக பாலரி னுலவித் திரிதியால்;
புதியன வற்றுட் கதுமெனப் புகுதியால்;
இனியவிவ் வுலகி னிருக்கு மெவற்றானு
மனிதனிற் சிறந்த மாண்பொரு ளில்லையம்
மனிதன் றன்னுள் வயங்கு மெவற்றினு
மனனிற் சிறந்த மாண்பொரு ளும்மிலை
யென்று கலைஞரா னியம்பப் பெறுதியால்;
குன்றுறு குரங்கெனக் கூறுவ ரறியார்;
நினைத்த விடனெலா நினைத்தவந் நொடியினே
சென்று சேர்தியால்; துன்றிய துணையே!
என்னைநின் விரைவு! என்னைநின்
னாற்றல்! என்னாற் சாற்ற லரிதரோ.

## XXXIII. கணவன்.

ஓரிலாட் கோண்முறை யுற்ற தலைவனு
யேருலா மனைக்கொடி யினிது படர்தர
வாய்த்தகொள் கொம்பராய் வான்குணம் பூத்துக்
காய்த்துப் புகழ்நலங் கனிபயன் மரமாய்ப்
பணமணி தன்னைப் பரிவுடன் போற்றும்
பணியென மனைவியைப் பாதுகாக் குநனாய்த்
தன்னில் லாளைத் தனக்கிணை யாய
தலைவியா மதிக்குந் தன்மை யாளனாய்
வயங்குந னலனோ நயங்கொளுங் கணவன் ?
மற்றுள மார மணந்த தையலைச்
சற்றுமரு ளின்றித் தவிக்கிய புரியுநன்
கண்ணவ னேவக் காதலி தனக்குப்
புண்ணவ னென்றே புகல்வர்
மேதகு பொருளிய லோதுர வோரே.

## XXXIV. வாய்மை.

வாய்மையே ! சிறப்பொடு மாட்சிசேர் குணமே !
மேற்கோ ளெவற்றினு மேற்படு மியல்பே !
உள்ளது சொல்லலா முண்மையே ! சிறிதும்
வேறுபா டுறையா மெய்ம்மையே ! மாந்தர்தம்
மொவ்வே றுறுப்பு மோரணி கலனை
வெவ்வே றுகச் செவ்வே யுடைத்து ;
கண்ணும் வாயு நண்ணுங்கொ லணிகலன் ?
*கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மென்ப !
வாயினுக் கருங்கலம் வாய்மைநீ யென்பல்.
அறமெனுங் கடவு ளணிதரு முடியே !
பிறவுயிர் தமக்குப் பெட்பொடு நன்மை
விளைத்தற் கோலினின் னளத்த னேரிதோ ?
என்னணம் பொய்ம்மையாத் தன்னும்
நன்றுந் தீது மொன்றலில வாகவே ?

## XXXV. காமம்.

காமமே ! சுடுதீக் காமமே ! கடல்சூழ்
பூமியிற் றோன்றிய புகையின் கொடியே !
பற்றென் கணிகையர்ப் பெற்றதாய்க் கிழவியே !
அறிவி னொளியினை யறவே மறைக்கு



மாசின் படலமே ! பாசத் தளையினைப்
பூட்டி யாட்டிடும் பொல்லாப் பேயே !
வழிமறித் தடிக்கு மிழிதொழி லாளர்போல்
விழிமருட் டிக்கொடு வினைநிச் செலுத்திநல்
லுள்ளத் துறுபொருட் பொள்ளெனக் கவர்வோய் !
நின்கையிற் பட்டு நிருபரெத் துணையரோ
நன்கறந் துறந்தனர் ; நங்கைய ரெனையரோ
வீன மெய்தினர் ; ஞான முனிவரர்
மோனிலை குன்றினர் ; வேறென் ?
நினைத்தீக் குணனே நினைத்தலுந் தீதே.

பரிதிமாற் கலைஞன்.

---

# இராமகிருஷ்ணர் உபதேசமொழிகள்.

நாஸ்திகனொருவன் ஆஸ்திகனொருவன் ஆகிய இருவர் ஒரே மார்க்கமாகப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். வழியில் ஒரு பாழ்ங்கோயில் இருந்தது. ஆஸ்திகன் பக்தியோடு கோயிலைப்பிரதக்ஷிணஞ் செய்தான். இதைக்கண்ட மற்றொருவன் இவனை யிகழ்ந்துகொண்டு ஒதுங்கி நின்றான். தற்செயலாய், கோயிலை வலம் வந்த பக்தன் பாதத்தில் முள் தைக்கவும், வெளியில் நின்றவன் முன்பு வெள்ளித்துண்டொன்று கிடக்கவும் நேர்ந்தது. பக்தன் நொண்டிக்கொண்டே திரும்பிவந்து தன் தோழனை யடைந்தான். தோழனோ தான் கண்டெடுத்ததைப் பக்தனுக்குக் காட்டிப் பயனில்லாத பக்தியிற் பயில்வானேன் என்று அவனைப்பரிகாசம் பண்ணினான். பக்தன் நாஸ்திகனது வஞ்சகமொழியினை மனம்பற்றி "ஆனால் தெய்வமொன்றில்லைபோல் தான் தோன்றுகிறது. இருக்குமாயின் இப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் உண்டாதற் கிடமில்லையே" என்று சொல்லிப்பெருமூச்செறிந்தான். அந்த க்ஷணத்திலே ஒரு பெரியவர் அவ்விடத்துக்கு வந்து ஒருவன் சிரித்துக்கொண்டு நிற்றலையும் மற்றொருவன் அழ மூஞ்சியாய் நிற்றலையும் கண்டு சங்கதியென்னவென்று இருவரையும் நோக்கி விசாரித்தார். நடந்ததை விஸ்தாரமாய்க் கேட்டறிந்த பிற்பாடு, பெரியவர் நாஸ்திகனைப்பார்த்து "கருமப்பிரகாரம் உனக்கு இப்பொழுது ஒரு பெரிய பொக்கிஷக்குவியல் அகப்படவேண்டியதுண்டு. உன் பக்திக்குறைவினால் ஒரு சிறு வெள்ளித்துண்டே கிடைக்கப்பெற்றனை" என்றார். பிறகு, பக்தனை நோக்கி. "இந்த ஆபத்காலத்தில் உன்னை யொரு சர்ப்பந்தீண்டவிருந்தது. உன் பக்தி துணை

நின்று இவ்வாபத்தினின்றும் உன்னைக்காத்தது" என்றார், இந்த நியாயம் இருவர்க்கும் சம்மதமாகவே அவர்கள் தங்கள் வழிநோக்கிச் சென்றனர். பக்தன் முன்னையினும் அதிகமாய்ப் பக்தி செய்யத்தொடங்கினான். நாஸ்திகன் தன் வம்புக்கொள்கைக்காகத் துக்கித்தான்.

ஓர் அரசன் விஷ்ணுபகவானுக்குச் சமர்ப்பிக்கும்பொருட்டுப் பெரிய கோயிலொன்று ஆடம்பரமாகக் கட்டி, அதற்கேற்ப ஆடம்பரமாய்ப்பூஜை தொடங்கும் நாள் ஒன்று சோதிடரைக்கேட்டு நியமித்தான். கும்பாபிஷேகத்தின் பொருட்டு அளவுபடாத திரவியம் வேறெடுத்து வைத்து, பக்கத்து ராச்சியங்களில் உள்ள ஜனங்களையும் அரசர்களையும் அழைத்தற்கு வேண்டிய ஏற்பாடு செய்துகொண்டிருந்த அரசன் சொப்பனத்திற் பகவான் தோன்றி "ஓர் ஏழைக்குயவன் தன்னுடைய இருதயத்தில் எனக்காக ஆலயமொன்று கட்டி, உன்னுடைய கோயிலை என்று திறக்கவேண்டுமென்று நிச்சயித் திருக்கிறாயோ அன்றைக்கே தன் உளக்கோயிலை எனக்குச் சமர்ப்பித்தல் வேண்டு மென்று தீர்மானித் திருக்கிறான். ஆதலால் நீவேறொரு நாள் தெரிந் தெடுத்துக் கொள். என்னுடைய பெரிய பக்தனுக்கு அகிதஞ்செய்ய நான் ஒருப்படேன்" என்றார். அரசன் காலையில் விழித்துக்கனவைச் சிந்தித்துச் சொல்வான் "நான்மூடத்தனமாய்ப் பெருமை பாராட்டிக்கொள்ளும் என்னுடைய கோயிலைப்பார்க்கிலும் ஏழைக்குசவன் மனக்கற்பிதக்கோயிலே பகவானுக்குப் பரிசுத்தமுள்ளதும் உகந்தது மாயிற்று. ஆ! சம்பத்தைப் பார்க்கிலும் அந்தரங்கபக்தி எவ்வள வுயர்ந்தது!" இவ்வாறு சொல்லிக் கொண்டே அரசன், குயவனிருக்கும் ஏழைக்குடிசையைத் தேடிப் பிடித்து அவன் காலில் விழுந்து தன்னைச் சிஷனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான்.

ஒரு தத்துவஞானியைக் கடவுளின்லக்ஷண மென்ன வென்று சிலர் கேட்டார்கள். அவர் இந்தக் கேள்வியை யோசித்துச் சொல்வதற்கு மூன்று நாள் வேண்டு மென்றார். நாலாம் நாள் அக்கேள்வி திரும்பக் கேட்கப்பட்டபொழுது இன்னும் மூன்று நாள்வேண்டும் என்றார். அதன்பிறகு கேள்வி மீட்டுங் கேட்கப் பட்டது. அப்பொழுது இன்னும் மூன்று நாள் வேண்டு மென்றார். கடைசியில் "எவ்வளவு தூரம் அதைப்பற்றி யோசிக்கிறேனோ அவ்வளவு தூரம் விஷயம் கஷ்டமாகி, இன்னதென்று வரையறுத்துச்சொல்லக் கூடாததாயிருக்கிறது" என்று சொன்னார்.

உமாபதி.



# பர்த்ருஹரி.

## 1 நீதிப்பால்.

### 6. மேலோர்நெறி.

நல்லோர் சேர்க்கையில் ஆசையும், பிறர் குணத்தில் விருப்பும், குருவினிடத்து வணக்கமும், கல்வியில் அவாவும், தம்மனைவியினத்திலின்பமும், பழியினச்சமும், பரமடனித்துப்பக்தியும், தமக்குப் பரிபவம் நேர்ந்துழிப் பராக்கிரமும், தீயோரினத்துப்பிரிவும், ஆகிய இக்குற்றமற்றகுணங்கள் எவரிடத்துள்ளனவோ அப்படிப்பட்ட மகாபுருஷரே யாவராலும் வணங்கற்பாலார். மனமடங்குதலும், வேதாந்தவிசாரமும், நல்லோர்சேர்க்கையும், இவற்றானாகும் சந்தோஷமும் ஆகிய இந்நான்கும் பேரின்பவீட்டின் தலைவாயில் காப்போராம் எனவும், மகத்ஸேவையே முக்திக்கு த்வாரம் எனவும் கூறியவாறு, பெரியாரைத் துணைக்கோடலே வீடுபேற்றுக்கு வழியாம். இம்மையில் அடக்கத்தைச்செய்து, புகழையுண்டாக்கி, மறுமையில் உயர்கதியிலுய்ப்பவராய் நல்லறிவுடையாரே நட்டாரெனப்படுவாரென்றும் கூறப்பட்டுளதே. அதனால் நல்லார்நட்பே கொள்ளத்தக்கது. அல்லார் கேண்மை தள்ளத்தக்கது. சான்றொழுது வழிபடும் தெய்வத்தினிடத்துச் செய்வதுபோலக் குருவினிடத்தும் எவனொருவன் நிர்மலபக்தியைச் செய்கின்றானோ அந்த மஹாத்மாவுக்கு எல்லாப்பொருளுங் கைகூடும் எனவும், ஒருவனுக்குக் குருவே பிரமன், குருவே திருமால், குருவே சிவனும். ஆதலின் அக்குருவையே நமஸ்கரிக்கின்றேன் எனவும் சொல்லியிருத்தலால் "குருவாய்மொழியே திருவாய்மொழி" யென்றும், "குருப்ரசாதமே வரப்ரசாதம்" என்றும் எண்ணி அக்குருவினடியைக் கனவிலுமறவாமல் அவருக்கு வந்தனைவழிபாடு தவறாதியற்றி அவரருளை நாடல்வேண்டும்.

இன்னணம் நல்லொழுக்கங் கொண்ட அறிவுடையார்க்கு ஆபத்தில் தைரியமும் செல்வத்தில் பொறுமையும், வேந்தரவைக்கண் பேசுந்திறமும், போரில் புறங்கொடாமையும், புகழ்த் தேட்டத்தில் விருப்பமும், கல்வி கேள்விகளில் ஊற்றமும் இயல்பிலமைந்த குணங்களாம். அன்னோர் கைக்கு ஈகையும், தலைக்குக் குருபாத சேவையும், முகத்துக்கு வாய்மையும் மனத்துக்குத் தூய்மையும், புயத்துக்கு வீரமும், செவிக்குக் கேள்வியுமே அணியாக அமைந்து அழகு செய்கின்றமையால், அவருக்கு வேறோரணிவேண்டுவதில்லை. பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப் பார்க்கவேண்டுமோ? பூமிக்கு மலைகளும், கடல்களும் மரங்களும் பாரமல்ல; இரப்போர் மனமறிந்து அதனைப் பூர்த்திசெய்ய எவன் பிறவி உபயோகப்படவில்லையோ அவனே

உலகுக்குச் சுமையென்றும், பயமின்மை, சித்தநிர்மலம், தக்கார்க்கீதல், வேட்டல், பிறர்க் கின்னாசெய்யாமை, பொய்யாமை, கோப மின்மை, மனத்தையடக்கல், கோட் சொல்லாமை, பூததயை, மென்மை, வெட்கம், பெருந்தன்மை, தைரியம், அகத்தூய்மை, செருக்காமை, ஆகிய இக்குணங்கள் தேவர்களடைதற்குரிய சம்பத்தைப் பெறத்தக்க யோக்கியதையுடன் பிறந்தவனுக்குண்டாகின்றன என்றும் கூறப்படலான், கொலை செய்யாமையும், பிறர்பொருள்மேல் மனஞ் செல்லுமிடத்து அதனை யடக்கியாளுதலும், தனக்கியலும் அளவினால் ஈவதும், அந்நியரான பெண்கள்விஷயமான பேச்சில் மூங்கராதலும், குருவினிடத்து வணக்கமும், சகல சாஸ்திரங்களையும் கற்பதும், இன்னு மிவைபோன்ற தூயகுணங்களெல்லாம், சொல்லரிய பெருஞ் செல்வப்பேற்றிற்கு வழியாம். இச்சுப குணங்க ளெல்லாம் மேலோரிடத்தே உள்ளன. ஆனதுபற்றி அவரே எவ்வித மேம்பாட்டிற்கு முரியர்.

ஆபத்திலும், சம்பத்திலும் மேலோருடைய மனநிலை யெத்தன்மையதெனின், தமக்குத் தலைபோகத்தக்க துன்பம் வருங்காலத்தும் அவர்மனம் மலைபோலச் சலியாது உறுதியாயிருக்கும்; இன்பம் வருங்காலத்தில், மலர்போல் மெல்லியதாகும். இன்னும் அம்மேலோர் பிரியமும் நியாயமுமான வழியில் ஜீவிப்பரேயன்றி அந்யாயார்ஜிதமான பொருளைக்கொண்டு காலங்கழியார். உயிர்போகும் சமயமாயினும் தீய காரியங்களைச்செய்ய ஒருப்படார். அசத்துக்களை யாசியார்; தம்மித்திரனாயினும் அவனை இரவார். அவனும் தனவீனனாயிருப்பனாயின் அவனை ஒருபோதும் இரவார். புலி பசித்தால் புல்லைத்தின்னுமோ? கற்றூண் பெரும்பாரந் தாங்கினும் தளர்ந்து வளையுமோ? அதுபோல் உயர்ந்தோர் பெருந்துன்பம் தம்மேல் வருங்கால் அதற்கு உடைந்து இழிதொழிலைப் புரிவரோ? புரியார். இன்னதொரு கலங்காநிலைமை அவருக்கு இயற்கையா யமைந்ததேயாம். அன்றியும், அம்மேலோர் தானத்தை இடம்பமாகச் செய்யாது மறைவாகச்செய்வர். தமதிருப்பிற்கு அதிதிகள் வருவராயின் அவரைக்கண்டு எங்கே நமது சோற்றில் பங்குக்கு வருவாரோ என்று அஞ்சி தம்வயிறு வளர்ப்பதே பெரிதாகமதித்துக் கதவையடைத்துக்கொண்டுபோகார்.

ஓரூரில், உறு கண்வரலிந்து தன்னையுற்றடைந்தோர்க்கு உதவிசிறிதும் புரியாத உலோபியான வேதியனொருவன் இருந்தனன். அவன் ஒருவரும் வாராத அமயம்பார்த்து உண்பது வழக்கம். இங்ஙனம் அவன் பலநாள் செய்துவராநிற்க, ஒருநாள் அவனிலும் மிண்டனான விப்பிரனொருவன் அவனில்லத்தில் உணவுகொள்ளவந்தனன். அதனையறிந்த அவ்வுலோபி தன் மனையாளை நோக்கி, "அடீ! இஃதென்ன இழவு? இத்தனைநாளும் எப்படியோ விருந்தினர்க்குத் தப்பிவந்தோம். இன்று வந்துள்ள இவ்வதிதி உணவுகொண்டன்றி ஒழியான்போலும். இதற்குச் செயற்பாலதென்?" என, அவ்வில்லாள், "ஸ்வாமீ! யானொருபாயம் உரைப்பேன். அவ்வண்ணம் புரி



யின் இவ்வந்தணன் அகல்வான்: அஃதாவது—நீவிர் என்னையடிப்பவர்போல இந்நெற்கூண்டைத் தண்டங்கொண்டு புடைத்திடுக. யானும் அடிபொறாது அழுபவள்போல நடிப்பேன். இவ்வநர்த்தங்கண்டு விருந்தினன் தானே விலகிடுவான்" என்றுரைக்க, அதனைக்கேட்டு அவள்புருடன், "இஃதொரு நல்லதந்திரம் இம்பினை" என்று மகிழ்ந்து அவள்சொன்ன வண்ணமே அந்நெற்கூண்டைத் தண்டங்கொண்டுதாக்க, அம்மாயக்காரி 'ஐயோ! அப்பா!' என்று கதறி யழுதாள். அதனைக்கண்டு, இவர் செய்வது மாயமென்றறிந்த பார்ப்பானும் வெளியே செல்வான்போலக்காட்டி இடைகழியிற் பதுங்கியிருந்தனன். அப்பொழுது அவ்விருவரும் 'இன்று நாம்பிழைத்தோம்; வந்தவிருந்தினன் தொலைந்தனன்' என்று களிகொண்டு உட்புகுந்து உணவுக்கிருக்க, கணவன் மனைவியை நோக்கி 'யான் உன்னை நோகாமல் அடித்தேன்' என்றான். அதற்கவள் 'யான் ஓயாது அழுதேனே' என்றாள். அவ்வமயத்துப் பதுங்கியிருந்த பார்ப்பானும் 'யானும் போகாமல் வந்தேனே' என்று சென்று அன்னம்படைத்த மற்றொருகலையின் புறத்திருந்தனன். இங்ஙனங் கொடாமுண்டரா யிராமல் உயர்ந்தோர் வந்தவிருந்தினர் கருத்தறிந்து உபசரிப்பர். அவர் விருப்பைக் குறிப்பாலறிந்து பூர்த்திசெய்து தாம் செய்த உதவியை வெளியில் விளம்பிக்களிக்காது மௌனங்கொண்டு தமக்குப் பிறர்செய்த உதவியைப் பலர்கூடிய சபையிற் பரக்கப்பேசுவர். பொருள்பெற்று நல்வாழ்வடைந்தகாலத்தும் செருக்குறார். செல்வத்தாற் செருக்குறுவோர் அவமானமடைதல் திண்ணம். பன்னாள் வறுமைப்பிணியால் வருந்தியலைந்த ஒருவனுக்குத் தற்செயலாய்ச் செல்வம்வந்துற்றபோது தனது முன்னையநிலையை நினையாதவனாகித் தன்னிடம்வந்தோரைச் சிறுமைசெய்துவந்தான். ஒருநாள் ஒருபுலவன் அவனுழைச்சென்று ஓராசநத்திருக்க அச்செல்வன் அதுகண்டு பொறாது அப்புலவனைச்சீறி நோக்கி 'உனக்கும் கழுதைக்கும் எவ்வளவு தூரம்' என்றிகழ்ந்து கேட்டதும் அவ்வித்துவான் 'ஒருசாண்தான்' என்று தன்னிடமிருந்து அவனிடமளவு அளந்துகாட்டினன். ஆனதுபற்றிப் பெரியார்செல்வத்திற் கர்வியார். மேலும் வண்டுகள் பொழில்களின் மலர்களின் மதுவினைப் பருகுதல்போல் உயர்ந்தார் பிறரிடத்துள்ள நற்குண நற்செய்கைகளை மட்டும் எடுத்துரைப்பர். காக்கை பொழிலில் பூத்துச்செழித்த பலமரங்க ளிருப்பினும் அவற்றைவிட்டு வேப்பங்கனியை உண்ணக் கருதுமாபோல் இழிந்தோர் அந்நியரிடத்து துர்க்குணத்தையும் துஷ்ட கிருத்தியத்தையுமே எடுத்துரைப்பர். ஆகையால் புல்லோரைவிடுத்து நல்லோரையடுத்துறவாடவேண்டும். பழுக்கக்காய்ச்சிய இரும்பில் நீர்த்துளியைத் தெறித்தால் நீர் என்னும் பெயரும் அற்றுப்போகின்றதன்றோ? அந்நீர்த்துளிதானே தாமரையிலைமேல் தங்கியபோது முத்தினது தோற்றத்தை யடைகின்றது. பின்னும் அந்நீர்த்துளி கடலிப்பியின்வாய் விழுமாயின் விலைபெற்ற முத்தாகவே மாறுகின்றது. இவ்வாறே அதம மத்திம

உத்தமர்களின் விருத்தியும் இருக்கின்றது. ஆதலால் மேலோர் சேர்க்கையே கொள்ளத்தக்கது. மற்றும், ஒருவனுக்கு மனைவி மக்கள் சிநேகன் இவர் அனுகூலராயமைதல் புண்ணியத்தாலேதான். ‘தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.’ ‘தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை’ என்னும் முதுமொழிகளைக் கடைப்பிடித்துப் பெற்றோர் சொல்லைக்கேட்டுத் தவறுதியற்றி அவர் மனமகிழ ஒழுகும் புதல்வரே நற்புதல்வராவர். தாய் தந்தையர் உயிரோடிருக்கும்போது அவர் வார்த்தைக்குக் குறுக்குச் சொல்லாது அதன்படி நடந்து, அவர் இறந்தபின் வருஷச் சடங்கின் மறுதினத்தில் பூரிபோஜனம் அளித்து, கையில் பிண்டதானஞ் செய்பவனே புத்திரனாகின்றான் என்று சொல்லப்பட்டாலும், புத்திரன் என்னும் மொழிக்கு புத் என்னும் நரகத்தினின்று பெற்றோரை விடுவிப்பவன் என்று பொருளாதலாலும், அந்நிரயத்தைக்கடத்தித் தன் மாதா பிதாக்களை நற்கதிக் குய்ப்பவனே நன்மகனாவனேயன்றி, தந்தை தாயரைப்பேணி அவரைப் பெருமைப் படுத்தாது, என்னை வருந்தித் தவஞ்செய்து பெற்றாரோ என்று அன்னோரைச் சிறுமைப்படுத்தி தீயொழுக்கங்கொண்ட பிள்ளையும் பிள்ளையோ? அவன் பெற்றோர்க்குப் பெரும்பிணியன்றோ?

மனைவியிருக்கவேண்டியமுறையாவது, கணவன்சொல்லை வேதவாக்கியமாகக்கொண்டு அவன் மனங்கோணாது அவன் உள்ளமுவக்குமாறு ஒழுகவேண்டும். படுநீலியாகிய ஒருத்தியைப் பெண்டுகொண்ட ஒருவேதியன் பெரியவரொருவரைத் தன்னகத்தில் போஜனத்துக்கழைத்து, தனக்குக் காலையில் வெளியே கிராமகாரிய நிமித்தம்போக நேரிட்டமையால் பெரியவருண்ண வருவதைத் தன்மனையாளுக்கறிவித்துச் சமையல் முதலிய காரியங்களைச் செய்து சித்தப்படுத்திவைக்கும்படி திட்டப்படுத்திவிட்டுப் புறப்பட்டுப் போய்த் தன் வேலைகளை முடித்துக்கொண்டு பதினைந்துநாழிகைக்கு மீண்டு வீடுவந்து சேர்ந்தபோது தன் இல்லாள் இடைகழித்திண்ணையில் முன்றானையை விரித்துத் தன்கை தலைக்கணையாக்கொண்டு கும்பகருணனை வெல்லக்கருதிப்படுத்திருக்கக்கண்டு “ஐயோ பாவம்! வேலைசெய்த இளைப்பால் படுத்துத் தூங்கிவிட்டாள்” என்று தனக்குள் எண்ணிக்கொண்டு உட்புகுந்தான். அங்கு முற்றம் தாழ்வாரமெல்லாம் வைக்கோலும் சாணியுமாய் மெழுகிப்பெருக்கப்படாமல் இருப்பதைக்கண்டு, “இன்று அதிகவேலையை ஒன்றியாகச்செய்ய நேர்ந்தமையின் மற்றவேலைகளைப்பார்க்க அவகாசமில்லைபோலும் ஆயினும் பாதகமின்று” என்று மடைப்பள்ளியிற் புகுந்தபோது நளுக்கென்று எச்சிலை காலில் மிதிபடப்பார்த்து “சிறுபெண்ணாயினமையின் இத்துணைநேரம் எவ்வாறு பசிபொறுத்திருப்பாள்; நல்லது பூஜை நைவேத்தியங்கள் செய்துவிட்டுப் பிறகு அவளைப்பறிமாற எழுப்புவோம்” என்று பூஜைமுடித்து நைவேத்தியத்துக்குச் சமைத்த பதார்த்தங்களை ஸ்வாமியின் திருமுன்னர்ப் படைக்கும்படி அடுப்பிற் கையைவைத்தபோது அங்கிருந்து ஒரு பூனைக்குட்டி



எழுந்தோட அடுப்பு சிதம்பரமாயிருக்கக்கண்டு மிக்க சீற்றத்தோடு மனைவியிடம் வந்து “அடிபாபி நீ! ஏனடி சமைக்கவில்லை” யென்று கேட்க, அவள் “உங்களப்பன்தான் பாவியாக, நானேன் பாவியாவேன் என்ன,” அவன் “அடிமுண்டை! அவர்நல்ல வேதவித்தடி; அவர்திறத்தில் அபசாரப்படாதேயடீ” யென்ன, அவள் “உங்கள் ஆத்தாள் முண்டை; உங்கள் அக்காள் தங்கைகள் முண்டைகளாக, நானேன் முண்டையாவேனென்றுகூற” வேதியன் சினந்து. “என் வீட்டிலிராதி; ஓடிப்போ” என்று தெழித்துரைக்க, அவள் “உனக்கேதுவீடு? ‘பானை பிடித்தவள் பாக்கிய’ மென்று நான் வந்தபிறகுதான் வீடும் மாடும் மற்றை வளங்களும் பெருகின. எனக்குத்தான் இல்லாள் எனவும் மனைவியெனவும் பேர். நீதான் ஓடிப்போ” என்று அஞ்சாது எதிர்மொழியக்கேட்ட அந்தணன் யாதுஞ்செய்ய வல்லனல்லனாய், “ஏ! கருணாநிதே! என்னைக் கொண்டுபோகாயோ!” என்றிரங்கி வருந்தியுரைக்க, அவ்வடங்காப்பிடாரி “நீபோனால் சனிதொலைந்தது” என்று வேங்கைபோல் எரியெழ விழித்துக் கணவனென்றுன்னாமல் அவனை யிழித்துரைத்தாள். இப்படிப்பட்ட பெண்களைப் பற்றியன்றோ “பேய் கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே” என்று கூறினர். இவ்வாறின்றிக் கொழுநனைப்போற்றி அவனிடத்துப் பக்தியும், கற்புநிலை தவறாமையும், வாய்மையுடைமையும் மேற்கொண்டவளே நன்மனைவியாவள் என்று சொல்லப்படுகின்றது.

சிநேகன் இலக்கணமாவது, தன்னோடு தோழமை கொண்டவனிடத்துச் சம்பத்திலும் விபத்திலும் ஒருபடிப் பட்டிருத்தல். “கெடுமிடத்துக் கைவிடுவார் நட்புத்” தீதாம். நட்புசெய்தற் குரியாரை முன்னரே நன்காராய்ந்து பின்னர்ச்செய்தல் தகுதி. “நல்லிணக்க மல்ல தல்லற்படுத்து” மென்றபடி கல்வி கேள்வி, ஒழுக்கங்களில் சிறந்த நல்லோரோடு நட்புக் கொள்ளல் பான்மையே யன்றி இங்ஙனமல்லாத புல்லரோடு சிநேகஞ் செய்யிற் பொல்லாத துன்பங்கட்குள்ளாகிக் கிலேசப்பட்டு நாசப்படுவரென்பதற்கு இலேசமுமையமில்லை. குளவியானது எழுவகைத் தோற்றத்தினும் இழிந்த பிறவியினையுடைய புழுவைத் தன்னுருவினமைப்பது போலப் பெரியோர் தம்மையடைந்தவர் தாழ்ந்தவரேனும் செம்மையினவர்க்குச் சிந்தையுவந்து கல்வியதனைக் கசடற வளித்துப் பேதைமைநீக்கி மேதையுண்டாக்கி இழுக்கெலாமிரிய ஒழுக்கம் புரியப் பயிற்றித் தமைப்போல் சீர்மைபெறச் செய்வர். இருவரும் “பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது” போலச் சிறப்புறுவர். பால் தன்னோடு சேர்ந்தநீரை மனிதர் பிரிக்கக்கருதி நெருப்பிற் காய்ச்ச நீர் சுண்டினவாறே தன்தோழன் பொன்றினமை கண்டு பொறாமை கொண்டு “பசைந்தாரிற் றீர்தலிற்றீப் புகுதனன்று” என்பதை யுன்னியேபோலும் பொங்கித் தீயில்விழுகின்றது. இப்படிப் பொங்கிய பாலை யடக்கச் சிறிது நீரைத் தெளித்தவுடனே “நமது

இன்னுயிர்த்தோழன் எழுந்தன" வென்று அது தன்னிலையி லடங்குகின்றதன்றே? இவ்விதமாய்ப் பாலும் நீரும்போலச் சிநேகர் மனமொழிமெய்களில் ஒத்திருக்கவேண்டும். அல்லாமலும் உடையிழந்த ஒருவனுக்குக் கை அவன்மனத்தினும் முந்தி உதவுதல்போல நண்பனுக்குநேர்ந்த இடுக்கணைத் தான் முந்தியறிந்துகளையவேண்டும். தான்மேனிலையடைந்து தனது சிநேகன் கீழ்நிலையி லிருப்பினும் அவனை மறக்கவொண்ணாது. பாலியசிநேகராய்ப் பள்ளியிற்பழகி ஒற்றுமைப்பட்டிருந்த இருவரில் ஒருவன் புண்ணியவசத்தால் பெருஞ்செல்வமும் பேரதிகாரமும் பெற்று வாழ்ந்துவருங்காலத்தில் அவனைப்பார்க்க விரும்பி அவனுடைய பூர்வசிநேகன் அவனிடம் சென்றபோது அவன் செல்வத்தால் மதித்து இவனைத்தனது நண்பனென்றும மதிக்காமல் "நீ யார்?" என்று இறுமாப்பொடு கேட்க, இவன் "யான் நினது பழைய நண்பன்; நினக்குக் கண்களிரண்டும் அவிந்துபோய்விட்டன வெனக் கேள்வியுற்று உன்னைத் துக்கம் விசாரிக்கவந்தேன்" என்று அவன் நாணி முகங்கவிழ்ந்து மனம்வருந்த உரைத்தான்; ஆதலால் பொருட்செருக்கும் பொச்சாப்பும் இன்றிப் பூர்வஸ்திதியை நினைந்து நட்புப்பாராட்டுவோனே உத்தம மித்திரனாவன். எனவே புத்திர மித்திரகளத்திரங்கள் ஒருவனுக்கு நன்கமைவது புண்ணியத்தின்பாலதேயாம். சத்புருஷர் தமது பணிவால் உயர்வடைகின்றனர். பிறருடைய சிறுமை புறங்காத்துச் சீரெல்லாந் தூற்றுதலால் தம் நற்குணத்தை விளங்கச்செய்கின்றனர். பிறர்பொருட்டுப் பெருமுயற்சிகொண்டு உழைத்தலால் தமக்கு வேண்டியபொருளைப் பெறுகின்றனர். இழியோர் தம்மைச் சீற்றத்தாற் கூறும் கொடியமாற்றங்களைப் பொறுத்தலால் அன்னோரைத் துயர்ப்படுத்துகின்றனர். இவ்வாறு வியக்கத்தக்க நற்குண நற்செய்கைகளையே அணிகலனாக்கொண்ட மேலோர் எவர்க்குத்தான் பூஜ்யரல்லர்? எங்கும் கைதொழுது பூஜிக்கக் கனம்பெறுவாரன்றோ?

இதனை அடியில்வரும் சிறுகதையா லறியலாம்:—இரவிகுலத் துதித்த இராகவன் தாய்சொல்லைத் தாங்கித் தரணிதுறந்து தன்காதலியோடு கானகம் புகுந்து தவமுனிவர் துயர்களையத் தண்டகவன முதலிய இடங்களில் வதிந்து பஞ்சவடியிற் றங்குழி, சூர்ப்பனகையின் தூண்டுதலால் இராவணன் தன் மாமனான மாரீசனை மாயமானாக ஏவ, அவனும் அவ்வாறே பொன்மானுருக்கொண்டு பஞ்சவடி புகுந்து தனது தோற்றத்தால் ஜானகி தன்னைத்தைக்கவர அவரும் அதனைத் தனக்குப் பிடித்தளிக்குமாறு ஐயனை அதன் பின் ஏவ, அவனும் அம்மானினைத் தொடர்ந்து பற்ற முயன்றும் அது கையுறாமையின் கணை தாந்து வீழ்த்தலும் பொய்ம்மானுருக்கொண்ட அப்புல்லிய அரக்கனும் ஜானகியின் பேரையும் இலக்குவன் பேரையும் இராமன் குரலிற்கூவி இறக்க, அக்குரல்கேட்ட ஏழை, இலக்குவன் விலக்கியுங் கேளாது அவனை அண்ணல்பால் விடுத்தனள். அவ்வற்றம் நோக்கி யரக்கர்கோன் துறவி யுருக்கொண்டு இறைவிபாற் சென்று தீமொழி பல கூறி, ஓம



குண்டலத்தி னவியை நாய்கவர்ந்து செல்வதேபோல் தேவியை நிலத்தொடு பெயர்த்து இரதத்தினேற்றிச் செல்லாநிற்கச் சடாயு எதிர்த்து அவனோடு இளைக்காது போரியற்றி இறுதியிற் சிவனளித்த வாளால் எறியுண்டு வீழ்ந்தனர். பின்னர் இராமன் காதலியைக் காணாது தேடியலைபவர் அக்கழுகரசனைக் கண்ணுற்று அவரால் நிகழ்ந்தன யாவுமறிந்து அவருடைய ஞானபக்தி சீர்மைக்குவியந்து அவர்க்குத் தீக்கடனும் நீர்க்கடனும் செய்து "சிறுகாலையிலா நிலையோதிரியா - குறுகா நெடுகாகுணம் வேறுபடா - உறுகால் கிளர் பூதமெலா முகினும் - மறுகா நெறி"யாகிய வைகுந்தமளித்துச் சென்றனன். எனவே, அறி வொழுக்கமமைந்த மேலோரை அனைவரும் போற்றி பொழுகுவர் என்பது இதனால் விளங்குவ தன்றியும், குகன், விபீஷணன், துருவன், பிரகலாதன் முதலோரது திவ்விய சரித்திரங்களாலும் நன்கறியலாகும்.

நே. எஸ். கோபாலாச்சாரியார்.

---

## மைசூரரசு.

---

### ௩—வது முடிபுனைந்த சருக்கம்.

அவ்வணஞ் சிலபகல் சென்றபின் சோதிட நூலோர் ராய்ந்துரைத்ததோர் நல்வேளையில், அரசிமருமகளைச் சிங்காதனத்திருத்தி மணிமுடிபுனைந்து, "ஐயனே! என் கண்மணியொக்கும் பெண்மணியைப்போல் இம்மண் முழுமையுமுனது வரைப்புபத்தாலாக" வென வழங்கி, அதற்கொத்த கணையாழியையும் அவள் விரலிலணிந்து வாழ்த்தினாள். அங்ஙனம் பார்ப்பனிகளாகிய சுமங்கலிகள் பலர்சோபனம் பாடவும் மேகார்ச்சனை யென்னப் பலவித மேளங்கள் முழங்கவும், இருடிகளும் மனஞ்சலிக்கத்தக்க அழகியர் நடிக்கவும், இன்னு மித்தகைய பலவாடம்பரத்தோடு அவன் மகுடம் புனைந்துகொண்டனன்.

அத்தருணத்தில் அறிவிலும் வயதிலும் முதிர்ந்தோர் சிலரெழுந்து அரசனே! நின் பவளவாய்ச்சியான பட்டத்துத்தேவியையே மணந்து, இருமையிலுஞ் சைப்பதற்கிடமாகிய அபல்மாதர் கண்வலையிற் படாமல் ஆமைபோல் ஐந்தடக்கி அரசாண்டொழுகக்கடவை யென்று ஆசீர்வதித்தனர். இவர்கள் இப்படி வாழ்த்த வெல்லோரும் களிக்குமாறு அவரவர்க்கேற்றபடி பரிசளித்துக், கல்வியிலுங் கருத்தினுஞ் சிறந்த தேர்ச்சித் துணைவருடனாராய்ந்து புரந்து தனது மலர்க்குழலாகிய மாதரசியோடு மகிழ்ந்து களித்திருந்தனன்.

இவ்வாறு நிகழ்கையில் அவன் மாமியது தாயதியாகிய சாந்தரிகய னென்னு மொரு துடுக்கனிழைத்த சில பிழைகளைக்கண்டு, அவனை யதிகாரத்தினின்று மகற்றி, அவன் புரந்துவந்த புரத்தைத் தனது இளைஞனை கிருட்டிணனுக்குப் பட்டங்கட்டினன்.

பெருமகனிப்படி பெருமிதத்துடன் ஒழுகும்போழ்தில் ஒருநாள் அவனது அருமைநாயகியாகிய தேவாசம்மணி யருகிலணைந்து, மலர்க்கரங்குவித்து முல்லைமுகையொத்த பல்வரிசை யிளநிலவை வீசக் கிளிபெனவாய்திறந்து கீழ்வருமாறு கிளக்கலாயினள்: "எனதுயிர்க்கிறைவரே! மாயையின் கருணையால் யாமிருவருங் கூடிவாழும் இவ்வரியபேறு நமக்குண்டானதால் அவனுவக்குமாறு ஒன்றுரைக்கின்றேன். அது அவள்மனத்திற் கிசைந்ததுமன்றி யிக்கடல் சூழ்ந்த காசினியிலு மது திறத்திற்கும் தக்கது. உதவிகுன்றுமைக்கு முரியதாம். அஃதென்னெனின் அந்நீலியினருளாலே நம்மிருவரையு மிணைப்பதற்குப் புருடகாரமாகிய விலிங்கிக்கும், அந்தணராகிய வமைச்சரிருவர்க்கும் புரியத்தக்க வொரு நன்மையே" யென்னக்கேட்ட புரவலன் குறுமுறுவல் செய்து, அதை இன்னதென விளக்குக வென்ன மற்றுந்தெரிக்கின்றனள். "இனி நமது மரபிற் பிறந்து இப்புவியை யாளும் புரவலர்கள் இவ்விலிங்கியின் பெயராகிய உடையார் என்பதைத் தாங்களுந் தரித்து அவனது உடையாகிய காவிச் சீலையைக் கொடியிற் பிணிப்பதுமன்றி, அவ்வேதிய ரிருவோரது குலத்தின்கண் உதிப்பவர்க்கே யமைச்சத் தொழிலை யளிக்கவேண்டு" மென்றி வேண்டிக் கொண்டனள். அதற்கவன் அகமகிழ்ந்து பாலை வென்ற பணிமொழியும், வேலைவென்ற விழியிணையும், நூலைவென்ற நுண்ணிடையும் படைத்த பைங்கிளியே! இங்ஙனம் நீவேண்டியனவ யெல்லாம் தடையின்றி யடைகவென வறைந்தனன். அவ்வாரவ்விருவரும் ஆவியொன்று உடலிரண் டென்னுமாறு பல்லாண்டு மகிழ்ந்துறைகையில், அப்புறம் அவனியை யளிக்கப்புதல்வ னில்லாமையை நினைந்துறைந்து, எண்டோளியை யிதயத்தி லிருத்தி நோற்ற நோன்பினை அத்தேவிகண்டு களித்துச் சூரர்களாகிய சுதர்களிருவர் தோன்றுமாறு வரந்தந்தனள். அவ்வரத்தினுடனே மன்னன் மனைவி கருவுற்றுத் தக்கபருவத்தில் முத்தையுயிர்க்குஞ் சங்குபோ லிரண்டு செல்வரைப் பெற்றெடுத்தனள். புரவலன் அப்புதல்வர்கட்கு முறையே பெரியமலைச் சாமராஜ வுடைய ரென்றும், சாமராஜுவுடைய ரென்றும் நாமகரணம் புரிய வக்குமர் கறுங்களபமென்ன நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாய் வளர்ந்து வந்தனர்.

பின்னர், அத் தம்பதிகளிருவரும் பதுமையின் கோயிலை யடைந்து அதற்கெதிராகச் செழித்தோங்கும் செண்பகத்தருவில் மணிகளிழைத்த பொற்றொட்டி லொன்றைத் தொங்கக் கட்டி, அங்கிருந்து நஞ்சனங் கூட்டிற் கெழுந்து அங்கு விண்டு பதியும் இளந்திங்களும் பொருந்திய சடாத



ரனை வணங்கித்துதித்து, மற்றும் அவ்விடத்திருந்துபோந்து கதிரவனுராய்ந்து செல்கின்ற கொடிமுடிகளுள்ள யாதவகிரி மீதிவர்ந்தனர். அவ்வா றிவர்ந்தவர், முற்றிலுந் தாமரைக்காடு பூத்து, இடையிலோர் கொடி மின்னலுமின்னப் பெற்ற கருமுகி லொன்று காணப்படுவதுபோல் திருவுரத்தில் வீற்றிருக்கும் திருமகளோடு திகழ்கின்ற திருநாராயணனது பெருங்கோயிலுட்புகுந்து, அளவிடற் கரிய வண்ட கோடிகள் முளைத்தற் கேற்ற மூலதாமரையுந்தியனுகிய அவ்வெம்பெருமானடித் தாமரைகளைத் தொழுது துதித்து, மற்றுந் திருநாராயண புரமென்னும் அவ்வழகிய நகரைச்சூழ ஆகாயமளாவத்தக்கதோர் பொன்னெயி லிழைத்து, அதனது நாற்புறத்திலும் திவாகரனு நுழைந்து செல்லற் கொத்த நான்கு கோபுரமும் கட்டுவித்து அதற்கு மேலக்கோட்டை யென்னுந் திருநாமமுமமைத்து மீண்டு தமது வளநகரை யடைந்தனர்.

ஸ்ரீநிவாசாசாரியர்.

## மல்லிகை மாதவர். *

அல்லியின்முகைகளதிமணம்வீசியவிழ்தலுமந்தரமதனின்
மெல்லியமேககணங்களுமேவிமேதினியனைத்தையுநோக்க
வெல்லிவந்தடுத்ததென்றனைவோருமிருப்பிடநாடிடும்வேளை
மல்லிகைதனக்கோர்மாணிளங்கன்றையளித்தனன்மாதவனென்போன். (1)

அளித்தலுமவர்தமளவிலாக்காதலனைத்தையுமன்புபாராட்டிக்
களித்தினிதிருந்தங்கடுகியகாலைக்கதிரவனுதித்தலுந்தமக்குத்
துளித்திடுநறுந்தேன் றூமலர்மாலைசூட்டிடுங்காலமாமென்ன
விளித்தினிதுரைத்துவேந்தனன்மகளைவிடுத்தனன்மாதவன்மன்னே. (2)

மாதவனுக்குவிடைகொடுமேவமல்லிகைமனத்திடைநினைப்ப
ணீதிமன்னவன்றன்மக்களெனுநீண்டபுகழிற்குநிதிக்குவைதனக்கும்
பூதலமாளும்பெரும்புகழதற்கும்பூண்டிடாதன்பெனதுண்மைக்
காதலையறிந்துந்தகுதியைநினைந்துங்கருதினன்மணமவனென்னவே. (3)

இத்தகைநினைந்தங்கிருந்திடுமெல்லையிவளருஞ்செவிலிசென்றடைந்தே.
யுத்தமனுன்றனிடமிருந்தகன்றவவனெவனென்றலுமென்ற
னத்தையாரின்றவண்ணல்காணவனேயடியெனையன்புடனுனைச்
சித்தமாய்மணந்துசீர்பெறச்செய்துசிந்தையாகுலந்தவிர்ப்பவனே. (4)

என்றனள்செவிலியீசனதருளீங்கிருந்தவாறென்னெனவியந்து
நின்றனணீதிநிகழ்ந்ததைநாடிநிமலனதருடனைப்போற்றி
யின்றனதரசுமிப்பெரும்புவியுமினிமையார்ந்திலங்குபல்வளமு
முன்றனக்குரிமையுடையனவல்லவுரியவனுனதுமாதவனே. (5)

* Adapted from Tennyson's 'Lady Clare' with slight modifications.

செவிலியன் றுரைத்தவாசகங்கேட்டுச்சேலுறழ்கண்ணியும்பதறி
நவின்றனும்மாற்றங்கனவிலோவின்றிநனவிலோநாடுதியன்னாய்
தவிருறுமொழியின்றன்மையையெனக்குத்தருவையென்றிரத்தலுஞ்செவிலி
புவியிசையீசனிருத்தல்போற்றிண்ணம்பூவைநீயென்மகளெனவே. (6)

இறந்ததநம்மரசன்மகளுமென்மார்பிலிறந்திடவவளைநான்மறைத்துச்
சிறியவென்குழந்தைமாய்ந்ததென்றுரைத்துச்சீருடன்புதைத்துவிட்டுடனே
வறியவென்மகளேமன்மகளென்றுவழங்கியேவளர்த்துநான்வந்தே
னறிதியிவ்விடயமரியவென்மகளேயனைத்துமேயறியநான்சொன்னேன். (7)

வேறு.

மெய்யெனிலுரைத்தமாற்றமேதினிகவரவேண்டிப்
பொய்யினைப்புகன்றநீயும்பூதலத்திடையுலாவு
மையனைப்புருடர்தங்கட்கரசனையவனதான
வையகமனைத்துநீங்கிவாழியசெய்தாய்பாவி. (8)

வெளிப்படவொண்ணுதிந்தவிடயமதின்றுநீயு
மொளித்திடல்வேண்டும்வேறுமோதலையுறுதியாகக்
களிப்புறநீங்கள்நாளைக்கணவன்காதலியுமாகி
யளிக்குமன்னவன்றனிற்குப்பொருளெனச்செவிலிசொன்னாள். (9)

பிறவியாற்பிச்சையேற்கும்பேதையேனுகுங்காலை
யிறைவியாவென்றுகூறியில்லனபுகறலென்றோ
மறைகவென்பொன்னங்காப்பும்வயிரவட்டிகையுமின்னே
தறையிடுகாக்கைக்கன்னந்தனதுடற்பகட்டுமென்கொல்? (10)

அன்றருங்குழந்தாய்நீயுமனைத்தையுங்கரத்தல்வேண்டு
மென்றனுமரசிகூறுமெனதுளம்பொறுக்கலாற்று
தின்றவனியுத்துநானுமியம்பியாடவர்தமுண்மை
நின்றவரென்மேனேயமுள்ளவாறறிவெனென்றாள். (11)

என்னைகோனேயமாவதெனதருமணியேயின்று
சொன்னவுன்னுடைமைகட்குச்சுதந்தரநாட்டிநிற்பா
னென்னவவ்வரசிகூறுமெனதுயிர்நீப்பெனேனும்
மன்னனென்காதற்காளைவளங்களையின்னேயீவென். (12)

ஐயகோமகளேயுன்பாலன்பிலைவீடுபட்டுப்
பொய்யதும்புதன்றவுன்றன்பேதையேற்கொருமூத்திவாய்
கையளையின்றுகாத்தகற்பகமனையாயானு
முய்யுமாறுற்றசெய்கையுவக்குமாறிருந்ததென்றாள். (13)

அன்னைநீயுரைத்தமாற்றமனைத்துமேயுண்மையாயி
னென்னையீன்றெடுத்ததாயர்க்கினியதோர்முத்தமீந்தேன்



பின்னையென்றலைமீதுன்றன்பெருமைசார்கரங்கள்வைத்து
முன்னமேபோவதற்குமுடிவிலாவாசிசொல்லாய். (14)

வேறு.

அரசியர்க்குரியதோராடைநீத்துடன்
திருவறுவாழ்க்கையர்சிறுமைபூண்டுபின்
பருமலைச்சாரலிற்பள்ளத்தாக்கிற்கான்
வருகுழலிடையொருமலர்கொடேகினாள். (15)

தையலுந்தனிவழிதாளினேகலு
மொய்யெனப்பின்றொடர்ந்தோடிக்கன்னியின்
கையிடைத்தலையுறக்கருதிக்காதலிற்
செயியமாதவன்றருமானுஞ்சென்றதே. (16)

மாதவன்றனதரண்மாடநின்றிழிந்
தேதமில்லழகினையிகழ்ந்தமல்லிகாய்!
பூதலத்திடையுயர்பூவணையிவ
ணேதுமில்லேழைபோலெய்தலென்னையோ? (17)

ஏழைபோலுடையுடுத்தியங்கக்கண்டிரே
லூழையேதொடர்ந்தனெனென்றுட்கொள்ளுவிர்
தாழவில்லிரந்துணப்பிறந்ததையல்யான்
வாழவோவரசொடும்வசையொன்றின்றியே. (18)

தந்திரமெனதிடையிபற்றறுங்கலேன்
சுந்தரமாயவென்சொல்லுஞ்செய்கையு
நந்துநின்செல்வமாநல்லியுய்குவேன்
மந்திரமனையவுன்மருமங்காண்கிலேன். (19)

என்றவனுரைத்தலுமிவளுமேறட்டு
நின்றவனிணைவிழிநிமிர்ந்துநோக்கித்த
னொன்றியசெவிலியினுரையனைத்தையும்
பின்றலின்மனத்தொடும்பேசினாளரோ. (20)

நட்டவனெள்ளுநகைசெய்தங்கவன்
கிட்டவந்தவடனைச்சிறுமுத்திட்டுடன்
பட்டமாளுரிமையுன்பரமதில்லையே
லொட்டியவுறவினேனுசிதமாகவே. (21)

பட்டமாளுரிமையுன்பரமதில்லையே
லொட்டியவுறவினேனுசிதமாகவே
நட்டநாமிருவருநாளைக்காலையே
சட்டமாய்மணந்திடச்சகலவாழ்வொடும். (22)

என்னவேயெனுமெனதுரிமையாவையு
மின்னவேயாகுநின்னுரிமைபோகுமோ
பின்னவையனைத்தையும்பெருக்காளுமென்
றன்னையேயாளுநடலைவியல்லவோ ? (23)

இவ்வகையுரைத்தலுமிருவர்தாமுமாங்
கவ்வயினொருவனாயொருவரன்புடன்
கௌவியமனத்தராய்க்கரங்கடாங்கொடு
வௌவியேயவர்பரவசர்களாயினர். (24)

உலகினரியல்பினையுற்றுநோக்கியே
யலகிலாவன்பினையாளும்பான்மைதாங்
குலமன்றுகுணமுயர்குறிப்புங்குன்றிடா
நலனுறமுறுதியுநண்புமென்றனர். (25)

பி. ஏ. பிரணதார்த்திஹரசிவன்.

---

# பெண்கல்விக்கும்மி.

1. மாமதி யொத்த முகமுடை யீரிள
மாங்குயி லொத்த குரலுடையீர்
மாமயி லொத்துள மெய்யுடை யீரினும்
மாரதி நாணும் வனப்புடையீர்.

2. வேலைப் பழித்த விழியுடை யீரிள
வேயைப் பழித்தமென் றோளுடையீர்
வேளை வருத்திடும் மென்னுத லீர்வாரும்
வேடிக்கை யாய்க்கும்மிப் பாட்டுரைக்க.

3. ஆதியி லீசன் படைத்தெது மேநம்மை
ஆடவர் தங்கட் குறுதுணையாய்
மேதினி தன்னில் விடுவித் திடமிக
மேன்மை யுடன்நாமும் வாழ்ந்திருந்தோம்.

4. சின்னஞ் சிறுவய திற்சதங் கைபூண்டு
சிறிதேனுஞ் சிந்தனை யில்லாதே
அன்னை முதற்பல பேருங் களிக்கவே
ஆண்டுமோ ரைந்து கழித்துவந்தோம்.

5. பன்ன லரிய பலவித நூல்களும்
பக்குவ மாகப் படித்தபின்பு
கன்னிப் பருவங் கழித்துத் தகுந்ததோர்
கல்யாணஞ் செய்து களித்திருந்தோம்.



6. நாயகர் தங்கட் குயிரென்ன வேநாமும்
நாடுந் தழைக்க நடந்துவந்து
நாதன் கருணை நயத்தா லனைவரும்
நன்மக்கட் பெற்று நலமடைந்தோம்.

7. மக்களைப் பெற்று வளர்த்தெடுத் துப்பின்னும்
மந்திரி யாகி மணாளர்கட்குத்
தக்க மதியை யுரைத்து மவருறுந்
தாபந் தனையுமே தாங்கிநின்றோம்.

8. உண்டபின் னுண்டு முறங்கிய பின்னே
யுறங்கி யிருந்துமுன் னுமெழுந்து
கண்ட பொழுது களித்து மவர்தமைக்
காணாத போழ்து கலங்கியுமே.

9. உண்பது மின்றி யுறக்கமு மின்றியே
உற்ற வுடையும் புதியதின்றிக்
கண்பனி பெய்து கதறித் தவித்துப்பின்
கண்டதும் நாமுங் களிப்படைந்தோம்.

10. செல்வ மிருக்கிற் சிறப்படைந் தேபின்னுஞ்
சிந்தனை செய்யிற் றுயரடைந்தும்
நல்வழி தீவழி யெவ்வழிப் போயினும்
நாத ருடனே நயந்திருந்தோம்.

11. புத்தெனும் பாழு நரகி லிருந்து
புருஷர்கள் தப்பிப் பிழைக்கும்வணம்
புத்திரர்ப் பெற்றுப் புகழ்பெற வேநாமும்
பூர்வீக வம்சந் தழைக்கச்செய்தோம்.

12. மாதமோர் பத்துங் கருத்தரித் தேதின
மாதேவன் றன்னை மனத்தில்வைத்து
வேதனை யாவும் வகித்துக் குழந்தைகள்
வேண்டிய வாறுபெற் றேவளர்த்தோம்.

13. இல்லற மல்லது நல்லற மன்றெனு
மின்றமிழ்த் தொல்லுரைக் கேற்றபடி
எல்லா விதநன்மை தீமை யனைத்தையும்
ஏகமாய் நின்றுநா மேற்றுவந்தோம்.

14. இத்தகை யாகிய வுத்தமிப் பெண்க
ளிருந்தமை யுண்மை யெனப்புகல
அத்தம யந்தி யருந்ததி சீதையும்
ஆனவோர் சாவித் திரியமையும்.

15\. சொன்னதோர் சொல்லிற் கிரண்டுரையாமையிற்
சோர்வின்றி வாழ்ந்த வரிச்சந்திரன்
தன்னுடைத் தேவி யுடன்றானும் பாஞ்சாலி
தக்கபெண் ணாயக மெத்தனையோ.

16\. பெண்களிருந்த பெருந்தன்மை யாலேயே
பேறு பெறுவதற் கேதுவாய
விண்ணுள தேவர் முனிவர்தங் கட்கிடும்
வேள்வியில் நாமே சிறந்திருந்தோம்.

17\. நாமிருந் திட்ட நயத்தை யறிந்தநம்
நாயகர் நம்மைச் சிறப்பித்திட
நாமன்றி வேள்வி சடங்கு விருந்துகள்
நாடிடி லூதிய மில்லையென்றார்.

18\. கற்புடை மங்கைத னைக்கொண்ட வாடவர்
காதலிக் குந்தன்மை யீதெனவே
சற்புரு ஷர்பிர மன்முதன் மூவரும்
சற்றும் பிரியா தெடுத்துரைகின்றார்.

19\. நங்கள் மதியினால் பெண்கள் மதிமிகத்
தாழ்ந்ததென் றெண்ணந் தலையெடுத்தோ
மங்குங்கா லந்தங் களுக்கு நெருங்கிடில்
மாதர்கள் மூத்தவ ரென்றெணியோ.

20\. இத்தனை நாளும் படித்த படிப்பை
இகழ்ச்செய் தெம்மை யேய்த்துவிட்டு
புத்திகெட் டார்கள்பெண் கள்ளென்றும் நந்தமைப்
பேயென்றும் பேசிப் புறக்கணித்தார்.

21\. கல்விநம் மைவிட் டகலவு மேயவர்
கண்ட படியெல்லா மேசலுற்றார்
செல்வ மிழந்திட்ட சிற்றர சர்போலச்
சீவனஞ் செய்து பிழைக்கலுற்றோம்.

22\. ஆலால மாவிடம் போலவரென் றுநம்மை
யாகாத வஞ்சகர் தாமெனவுஞ்
சீல முடையார் பிணியென்று மேநம்மைச்
சீர்கெட வேயிகப் பேசலுற்றார்.

23\. மாதர்த முண்மணம் மாறு படாமலே
மாதவத் தாட்டியர் தாமிருக்க
காத லிடையிற் கடைப்படுத் திட்டவர்
கர்மத்தை நாமே கலைத்தோமென்பதர்.



24\. இந்த விதமா யிகழ்ந்துமே நம்மை
யினித்தலை தூக்கிக் கிளம்பவொட்டார்
பந்தம் பலவு மியற்றி யடிமையாய்ப்
பாரி லிருக்க விடுத்தனரே.

25\. நம்ம சிறுமிகள் நாளுமே வாழ்ந்திட
நாதர் வரித்து மணம்முடிக்கத்
தம்மனத் தெண்ணப் படிநட வாமலே
தக்க வயதின்றித் தானஞ்செய்தார்.

26\. இந்த விதமா யிளமைப் பிராயத்தில்
இல்லற வாழ்க்கைத் துணைகொளலால்
அந்த மிலாவிடை யூறு லநேகர்கள்
ஆதர வின்றி யலறுகின்றார்.

27\. இத்துணை நம்மை யினிது விடாமலே
இன்னுங் கெடுக்கக் கொடிகட்டியே
எத்தனை ரூபா யெனக்குக் கொடுக்கின்றாய்
யென்கிறார் பெண்கள் தமைமணக்க.

28\. என்ன பணத்தைக் கொடுத்தாலு மேயதை
ஏளனஞ் செய்து மெடுத்துக்கொண்டு
கன்னி படித்தவள் தானோ புகலுமின்
கல்வி யழகே யழகென்பரே.

29\. இன்னும் சிலபுரு ஷர்கள் படித்தவர்
என்றொரு பேரை யெழுதிக்கொண்டு
என்ன விதம்பெண் ணழகில்லை யாயினும்
என்னுடை தேவை மணமென்கிறார்.

30\. கருணை சிறிதும் மனதிலி லாமலே
கைக்கிறை யப்பணம் வேண்டுமென்பார்
மருவிய பெண்டிர் மறிக்க விரும்பிபின்
மாமணஞ் செய்வதற் கையமுண்டோ?.

31\. இத்தகை யாகிய துன்பத் திடைப்பட்டே
ஏங்கித் தவிக்கின்ற வேழைபலர்
சித்தங் கலங்கிப் புழுங்கிச் சிறுமிகள்
சீசீ நமக்கினிக் கூடாதென்பர்.

32\. ஐயவுன் பத்தினி பெற்றெடுத் துள்ளது
ஆண்மக வோபெண் மகவோவெனக்
கையைப் பிசைந்துபெண் ணென்றலு மேயவர்
கன்னி பெறுதல் கடையென்பரே.

33. புத்தியி லும்யுத்தி தன்னிலும்பெண்கள்
புருஷர் தமக்குப்பின் னிட்டவரோ
எத்தகை யாகிய வாழ்க்கைச் சுகத்திலும்
எங்குள ராடவர் நாமன்றியே ?

34. பிள்ளை வளர்த்தல் பிறர்பிணி தீர்த்தல்பின்
பிச்சை யிரப்போர்க் கிரங்குதலும்
உள்ள பொழுது முழைத்துக் களைத்தவற்
குற்சாகஞ் செய்திடல் வேண்டியுமே.

35. மெல்லிய தேகம் நமக்களித் திட்டவிம்
மேன்மை சிறிது முணராமல்
வல்லமை தங்கட்குத் தானுள தென்றுமே
வஞ்சனை செய்து வளங்குறைத்தார்.

36. மானிலந் தன்னில் மனிதர் புரிந்திடும்
மாக்கடமைகள் பலவற்றினுள்
சூனிய ரென்று சொலப்படும் மாதர்கள்
சோர்வின்றிச் செய்திட லெத்தனையோ.

37. இல்லற மென்னு மிருட்கடல் தன்னில்
இலங்கும் மரக்கல மொத்துளநம்
நல்ல தனம்பின் கலங்கவிழ் மாறும்
நாடுங் கதிநாடிற் காணுவரே.

38. வீணி லிவர்களை நோவதி லும்நம்
வினைப்பயன் றன்னையே நொந்துகெண்டு
காணிலிந் தப்பல துன்பங் களுக்குமே
காரணம் நாமன்றி வேறிலையே.

39. இத்தனை நாளும் மிடியுண்டு மற்றும்
மிடுக்க ணடைந்தது மேனினிநாம்
பத்தி யுடனே படித்த படிப்பைப்
படியாமல் வீணே விடுத்ததுதான்.

40. இந்த விதம்பல துன்ப மடைகின்ற
இந்திய மாத ரினிச்சுகிக்கச்
செந்தமி ழேனுஞ் சிறக்கச் சிறுமிகள்
சீருடன் கற்கச் செயம்பெறுவோம்.

41. கல்வித் தலைவி கலைமக ளென்பவள்
காரிகை யன்றிப்பின் ஆணிலைநம்
செல்விகள் கற்கச் சிறக்க மணந்துமே
சீரடை வார்சிவ காமிசொன்னேன்.

சிவகாமி.



## தமிழ்க்கவி சரிதம்.

இன்னுஞ் சிலர் கி. பி. ஆறாம் நூற்றூண்டிலிருந்தன னென்பார். பாணனது காலம் கி. பி. ஏழாம் நூற்றூண்டின் முற்பகுதி யென்று நிலை நிறுத்தப்பட்டுளது. கி. பி. ஆறாம் நூற்றூண்டும் எட்டாம் நூற்றூண்டின் தொடக்கமும் முறையே தண்டி பவபூதிகளினது காலங்களெனக் குறிக்கப்பட்டுள. பாரவி மாகன் காலத்திற்கு முன்னரே வாழ்ந்திருத்தல் வேண்டுமென்பது காணப்படுகின்றது. இவ்வாறே முற்பகுதிகளில் யாம் சீத்தலைச் சாத்தனாரும் மருத்துவன் ருமோதரனாரும் கரிகால சுபவாகுகளினது காலத்தில் அஃதாவது கி. பி. இரண்டாம் நூற்றூண்டில் வாழ்ந்திருந்தனர் எனவும் நக்கீர கபில பரணர்கள் வமிசசேகர பாண்டியன் காலத்தும் அவன் மகன் வமிச சூடாமணி காலத்தும் வாழ்ந்திருந்தன ரெனவும் இடைக்காடர் பாண்டிய குலேசனது காலத்தும் அவன் மகன் அரிமர்த்தனனது காலத்தும் வாழ்ந்திருந்தன ரெனவும் காட்டியிருக்கின்றும். இவ்வாறு வெவ்வேறு காலங்களில் வாழ்ந்திருந்த இப்புலவர்கள் ஒருங்கு கூட்டப்பட்டுத் தமக்கு முன்னேயாதல் பின்னேயாதல் பிறந்து விளங்கிய அரசர்களது காலத்தில் இருந்தவராக்கப் படுகின்றனர்.

இவ்வாறு பாவலர் சங்க மீரிஇயினுன் போசராச னொருவனே யன்றியாம் விக்கிரமசாகை யெனச்சகாப்தம் கணக்கிடேஉம் விக்கிரமாதித்தியராசனும் பிற்கூறப்படும் நவரத்தின மெனைய பெயர் பெற்ற மகான்களை யாதரித்தனன் எனவுங் கூறுப:—தன்வந்திரி, க்ஷபணகன், அமரசிம்மன், சங்கு, வேதாளபட்டன், கடகற்பரன். காளிதாஸன், வராக மிகிரன், வரருசி.

தமிழ்ச்சங்கங்களையும் போசராசனதவைக்களத்தே வாழ்ந்திருந்தனரெனக் கூறப்படும் வடமொழிப் புலவர் குழாங்களையும் ஒப்பிட்டு யாம் செய்த வாராய்ச்சி தமிழ்ப் புலவர்கள் வடதிசையாளரிடத்திருந்தே சங்கங்களைப்பற்றிய கருத்துக்களை மேற்கொண்டன ரென்றெண்ணுமாறு நம்மைத் தூண்டாநின்றது. எனினும் சங்கத்தைப் பற்றிய வெண்ணம் இன்ன காலத்திலேயே முதன் முதல் தமிழ்ப்புலவரது மனத்தில் உதித்ததென்று வரைந்து சுட்டுதலரிதாகின்றது.

மேற்போந்த தமிழ்ச் சங்கத்திற்குப் பல விடயங்களினும் இணையானதும், அஃது அங்குரித்தற் கேற்ற மூலமெனக் கோடற்குத் தக்கதுமான வேறு சங்கமொன்று எடுத்துக்கூறுகின்றும். படைத்திட்டுக்கொண்ட சில செய்திகளொடு கூடிக்கிடந்த வம்மூலமே பின்னர் எதையுமெளிதாக நம்பி விடாப்பிடியாக் கொள்ளு மியல்புடைய இந்திய பண்டிதர்களால் அத்தகைய பெரிய தமிழ்ச்சங்கமாக வோங்கி வளர்ந்திருக்கலாம்.

திகம்பர தர்சனமென்னு மொரு சைனசமய நூலின்கண் விக்கிரமசகம் 526 - இல், அஃதாவது கி. பி. 470 - ஆம் ஆண்டிற் பூஜ்யபாதர் என்போரது மாணாக்க ரொருவராய* வச்சிரநந்தியென்பவரால் தென்மதுரையில் ஒரு திராவிட சங்கங்கூட்டப்பட்ட தென்று கூறப்பட்டுளது. (மும்பாய்புரி யாசாங்கத்து ஆசியா சங்கபத்திரிகை. சம்புடம். XVII, புத்தகம் - 44, எச - ஆம் பக்கம் பார்க்க.) இச்சங்கமானது தெற்கே போந்து தங்கள் சமயக்கோள்களைத்தாபித்தற் பொருட்டு முயன்று நின்ற திகம்பர சைனர்களது கூட்டமாயிருந்தது. தமிழினும் வடமொழியினும் வல்லுநராயிருந்த பல சமயாசாரியர்கள் அதன் அவயவிகளாயிருந்திருத்தல் வேண்டும். மேற்கூறிய கூட்டத்தின் காலமும் வமிசசேகர பாண்டியன தரசாட்சி விஷயமாக வில்சன் துரை குறித்தகாலமும் ஏறக்குறைய வொன்றுகின்றன; அஃதாவது, கி. பி. ஐந்தாவது அல்லது ஆறுவது நூற்றாண்டாம். யாம் அவரது மக்கன்ஸீ சேகரங்களின் விரித்துரைபட்டியின் 46—47—ஆம் பக்கங்களினின்றும் ஒரு பகுதியை யெடுத்துரைக்கின்றாம். அது வருமாறு:—

“வரகுண பாண்டியன தரசாட்சிக்குச் சிறிது பின்னர் 24 அல்லது 25 அரசிளங்குமரவரிசை காணப்பட்டுள; அவர்கட்குப் பின்னர் ஒருபுதிய வமிசத்திற்கு ஆதி கூடஸ்தனாகத் தோன்றும் வமிசசேகர பாண்டியன் அரசுரிமை யெய்துகின்றனன். மதுரையின்கட் கோட்டையும் அரண்மனையுங் கட்டினமையும் பழைய நகரத்தினைப் புதுப்பித்தமையு மாகிய வினையிற்றை யிவ்வரசனே செய்தன னெனக் கூறுதற்கட் பஃறிறப்பட்ட சரிதைகளுமிணங்குகின்றன. பலரும் ஐயுறுமாறு நகரைப் புதுப்பித்த னென்பதற்கு யாம் புதிது உண்டாக்கப் பட்ட தெனப்பொருள் கொள்வேமேல் இவ்வரசிளங்குமரன் கிறிஸ்து பிறக்குமுன்ன ரிருந்திருத்தல் வேண்டுமென்பது போதரும்; ஆனால் இது வரகுணபாண்டியனுக்கிட்ட காலவளவினோடும் மற்றைய வரசிளங்குமரர்தங்கால வளவினோடும் முரணுமாறு காண்க. இவ்வமிசத்தி னிறுதிக்கட் கூறப்படுங் கூன்பாண்டியனினின்றும் மேலே கணக்கிட்டுக்கொண்டு செல்வேமேல் வமிசசேகர பாண்டியனைக் கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டில் வைக்குமாறு நேரிடும்.”

தட்சிண தேசத்திலுள்ள மதுரையின்கண் திகம்பர சைனர்களாலேற்படுத்தப் பெற்ற திராவிட சங்கத்தின் காலமும் மூன்றாந் தமிழ்ச் சங்க மேற்பட்டதாகக் கூறுங் காலமு மொன்று மாற்றினைக் கூர்ந்து யோசிக்கு மிடத்துப் பின்னர்க் கூறியது ஒரு வேளை திகம்பரசைனர்களது சமயக்குழாத்தினையே இந்துக்கள் தங்கண் மதக்கோளிற் கேற்றவாறு மாற்றிச் சொல்லிக் கொண்டனரோ வென்றையுறற் கிடனாகும்; இஃதுண்மையென் றேற்படில் இது மிகவு முக்கியமான விஷயமாதலேயன்றி மதுரையிற் சைனர்கூட்டம் மேற்பட்ட காலமே தமிழ்க்கவி சரிதத்தைப்பற்றி யெழுதுதற்கேற்ற வுறுதியானவாரம்பமாகுமென்க.



இக்கொள்கைக் கநுகூலமாகத் திருக்குறளுஞ் சிலப்பதிகார மணிமேகலைகளும் யாக்கப்பட்டகாலங்களைப்பற்றியாம்முன்னரேயெய்திய முடிவுகளை யெடுத்துரைக்கலாம். அவையாவன பிற்கூறிய விருநூல்களும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செழித்தோங்கிய கரிகாலச்சோழன் முதலாவன் காலத்து யாக்கப்பட்டனவென்பதும், மணிமேகலையினுண் மேற்கொளாய்ப் பெற்ற திருக்குறள் கி. பி. முதனூற்றாண்டில் யாக்கப்பட்டதென்பதுமேயாம். மூன்றாஞ் சங்கமேற்பட்ட காலத்து அரசாட்சி செய்தவனாகிய வமிசசேகர பாண்டியன் காலத்தினராய நக்கீரர் அச்சங்கத்தின்கண் முதற்புலவராயிருந்திருக்கவேண்டும்: அவர்தாங் கண்டருளிய இறையனாரகப்பொருளுரையிற் சிலப்பதிகாரச் செய்யுட்களிற் சிலவற்றை யெடுத்துக்காட்டுவதனானே, நக்கீரர் களவியற் பொருள் காண்டற்குச் சிலகால முன்னரே சிலப்பதிகார மியற்றப்பட்டிருத்தல் வேண்டும். இவ்விடயமானது முற்பக்கங்களிற் குறிப்பிக்கப்படாது போயினமையின் அது சிலப்பதிகாரமும் அதன்றொடர்ச்சியாகிய மணிமேகலையும் நக்கீரரது இறையனாரகப் பொருளுரைக்கு முற்பட்டனவெனக் காட்டுதல் கருதி யீண்டெடுத்துக் கூறப்பட்டது.

தமிழிலக்கியங்களிற் சமயநூல்கள் மற்றையவற்றினு மிகச்சிறப்புடையவாம்; அன்றியும் அவை வடமொழிச் சமயநூல்களினும் அதிகமாகக் கவனிக்கற்பாலவாம். வேதங்களும் மிருதிகளும்புராணங்களும் ஆகமங்களும்இந்துமத முழுதிற்கும் முதற்பகுதியாகாநிற்பப் பிற்பகுதியானது தென்னிந்தியாவின்கண் நிகழாநின்ற வழக்கவொழுக்க சமயங்களினிடத்துத் தமிழிலக்கியங்களிலாங்காங்குச் செறிந்து காணப்படுகின்றது. வைதிக கிரியைகளினும் மற்றைய கிரியைகளினும் வேதகானஞ்செய்யப்படுதல் போலவே தென்னிந்தியாவிற் பல்வகைப்பட்ட மதக்கிரிகைகளினும் தேவாரத் திருப்பதிகங்களும் நாலாயிரப்பிரபந்தப் பாட்டுகளும் பாடப்படுகின்றன. இக்கிரியைகள் முதன்முதலில் தென்னிந்தியாவிலுண்டாய்ப் பின்னர் எங்ஙுருவிலாவது இந்தியாமுழுவதும் பரவிவிட்டன. தென்னாடுகளில் விசேடமாய்க் காணப்படுஞ் சைவவைணவசமயங்கள் வடமொழியை யறவே நீத்துவிட்டுத் தமிழ்மொழியி னுணர்ச்சிமட்டிலேயே திருத்தியடைவனவாம். ஆகவே தமிழிலக்கியத்திற் சமயப்பகுதியைப்பற்றிச் சரித்திர ரீதியாகச்செவ்வனே யாராய்ச்சிசெய்தல்தமிழ்பயிலுவோர்க்குப்பெரிதும்பயன்படும்; சமயநூல்களை யேற்படுத்தியவராகக் கூறப்படுஞ் சமயாசாரியர்களின் சரிதங்களையுங் காலவரையறையினையு மறிவுறுத்தப் போதுமானவிடயங்களை யவர்க்கு அளிக்குமென்பதற்கையமின்று. மேலுஞ்சமயம் ஆதியில் உற்பவித்ததற்குக் காரணமாயிருந்த சாதனங்களையறியத்தக்க நிலைமையிலிருப்பதுடன், காலக்கிரமத்திலஃதடைந்த வேறுபாடுகளையுஞ் சீர்திருத்தங்களையும் படிப்படியாய் வளர்ந்து தற்காலநிலைமையயையடைந்த வழியுமினிது தெரிக்குந்தன்மை

யுடையராவோம்; இன்னும் பிறர்கொண்டதவறான வெண்ணங்களையும் பிசகியகோட்பாடுகளையும் மாற்றித் தோம்பலபொருந்தப் பாரித்துரைக்குங் கட்டுரையினைத் தெளித்துப் புராணப்பொய்க்கதைகளி னுட்பொதிந்துகிடக்கு முண்மையினைக் கொழித்துப் பிரித்தெடுக்கு மாற்றலு முடையராவோம். தமிழிலக்கியத்தின் சமயப்பகுதியினையதிநுட்பமாயுஞ் சரித்திரரீதியாயு மாராய்வதனானே போதரும் பெரும் பயன் அளவிலதென்பதைச் சிற்சிலவுதாரண முகத்தானே விளக்குதும்.

ஒவ்வொரு வைணவாலயத்துள்ளும், திருமால், இலக்குமி, இன்னும் பலதேவர்கள் முதலிய யாவரோடு மொருங்கு வைத்துப் பூசிக்கப் பெறும் வைணவசமய குரவராம் பன்னி ராழ்வார்களின் கால வரையறையினைப் பற்றி யொருவாறு பேசப்புகுவாம். அவ்வாழ்வார்கள் தம்பெயரினையும் அவர்கள் பிறந்த வாண்டெனக் குறிக்கப்படுங் காலத்தினையு மடியிற்காண்க.

1. பொய்கையாழ்வார் : துவாபரயுகம்; 862902 - ஆம் ஆண்டு. அஃதாவது 6091வருடங்களுக்கு முன்பு அல்லது கி. மு. 4201.
2. பூதத்தாழ்வார் : அவ்வாண்டே.
3. பேயாழ்வார் : அவ்வாண்டே.
4. திருமழிசையாழ்வார் : அவ்வாண்டே.
5. நம்மாழ்வார் ; கலியுகந் தோன்றிய 43 - ஆம் நாள்; அஃதாவது கி. மு. 3101.
6. மதுரகவியாழ்வார் : துவாபரயுகம் 863879 - ஆம்ஆண்டு; அஃதாவது கி. மு. 3224.
7. குலசேகராழ்வார் : கலியுகம் 28-ஆம் ஆண்டு; அஃதாவது கி. மு. 3075.
8. பெரியாழ்வார்: கலியுகம் 47-ஆம் ஆண்டு; அஃதாவது கி.மு. 3056.
9. கோதையாழ்வார் (ஆண்டாள்) : கலியுகம் 98-ஆம் ஆண்டு; அஃதாவது கி. மு. 3005.
10. தொண்டரடிப்பொடியாழ்வார் ; கலியுகம் 289. ஆம் - ஆண்டு; அஃதாவது கி. மு. 2814.
11. திருப்பாணாழ்வார் : கலியுகம் - 343 ; அஃதாவது கி. மு. 2760.
12. திருமங்கையாழ்வார் : கலியுகம் 398; அஃதாவது கி. மு. 2705.

மேற்குறித்த ஆழ்வார்களின் காலவரையறை அதிசயிக்கத்தக்கவாறு பாரித்துரைக்குங் கட்டுரைபற்றிவந்த பெற்றியதேயாமாகலிற், சிறிது



முண்மையெனக் கோடற் பாலதன்று. மேற் குறித்தாங்கு கூறுவார்தங் கூற்று எட்டுணையும் நிலைபெறா தென்பது பின்னரியாங் கூறுவதனானே யினிது விளங்கும். இவ்வாசிரியர்களா லெழுதப்பெற்ற நூல்களின் நடையினையும் உட்பொதிந்த பொருளினையும் ஆங்காங்கு எடுத்துக்கொண்ட மேற்கோள்களையுஞ் சரிதங்களையுஞ் சிறிது உற்று நோக்கின் அஃது அவர்தங் கூற்றுப்பொய்யெனத்தக்க சான்று பகரும். நாலாயிரப் பிரபந்தத்தினையும் யாம் மேற் குறித்த பத்துப்பாட்டு (பத்துச் செய்யுள்களான் முடிந்தது) அகநானூறு, புறநானூறு, கலித்தொகையாதிய பிரபந்தங்களையும் யாவரேனு மொருவர் செய்யுணடை பாஷைநடைகளைப்பற்றி நன்கறிவான் சீர்தூக்கிச் செவ்வனே யாராயப்புக்குழி, வைணவர்களின் தோத்திர ரூபமாயுள்ள பாடல்களனைத்தும் பொதுவிற் புதியனவாகவே காணப்படுகின்றன வென்றும், சங்கத்துப் புலவர்களெனக் கூறப்படும் பத்துப்பட்டாதிய நூல்களின் ஆசிரியர்தஞ்செய்யுட்கள் பழைய சொற்களும் சொற்றொடர்களும் நிரம்பப் பெற்றுள்ளன வென்று முணராதிரார். நாலாயிரப் பிரபந்தத்தின் பாஷைநடை, செய்யுணடை சொற்றொடர்ப் பொலிவு முதலியவற்றினைப் பற்றி யாங் கூறுவதைச் சித்தாந்தப்படுத்த வேண்டிய விடனிதன்று. மேற் குறித்த தோத்திரப்பாக்கள் யாக்கப்படுங் காலத்திலோ அன்றி யவைகட்கு முந்தியோ இருந்தவர்களாயும் மேற் கூறிய நூல்களிலாங்காங்கு கூறப்பட்டவர்களாயு முள்ள மன்னர் குறுநில மன்னராதியவர்களின் சரிதையைக் கூறப்புகுவாம். மேற் கண்ட பன்னிரு குரவருள் ஒருவராய விஷ்ணுசித்த ரென்றும் பட்டாபிரான் என்றும் பெயர் வாய்ந்த பெரியாழ்வாரைப் பற்றி முதற்கட் கூறுவாம்.

மதுரை மாநகரின்கண் வல்லபதேவ பாண்டியன் அரசு புரிந்தொழுகு நாளில் அவ் விண்டுசித்தரென்னும் பெரியோர் அவண்போந்து ஆண்டு வைணவமதத்தை நிலைநிறுத்தி யம்மன்னனையு மம்மதத்தை மேற்கொண்டொழுகுமாறு செய்தனர். அக்காலத்தில் ஒரு சன்னியாசி மதுரையையடைந்து ஓரந்தணன் வீட்டுத்தெற்றியிற் படுத்துறங்கிக் கொண்டிருந்தான். அரசன் நகரிசோதனையின் பொருட்டு மாறுவேடம்புனைந்து வழக்கம்போலூரைச் சுற்றிவருகையிற் றெற்றியிலிருந்த சன்னியாசியுடன் பேசத்தொடங்கினான். அப்போழ்து துறவி மன்னனைநோக்கி "ஐய! விண்ணுலகவின்பத்தை யடையுமாறு முயறலேதகுதி. அதுபற்றி உண்மைக்கடவுளை யோர்ந்தறிந்து வழிபட்டு ஏனைய தேவதாந்தரங்களை விடுத்து நல்வழிச் சேறலே யமைவுடைத்" தென்று கூறிவிடுத்தான். அவ்வுபதேசமொழியின் உண்மையறிந்த மன்னன் மாளிகையடைந்து மறுநாட்காலை யிதனைக் குறித்து மந்திரியை யுசாவத்தலைப்பட்டனன், அமைச்சனும் மன்னனை நோக்கி "ஐய! பெரியதோர் தறிநட்டு அதன் நுனியில் பொன்முடிப் பொன்றை யமைத்து, தத்தஞ்சமயத்தின துண்மையை யெடுத்து மொழி

வார் தமக்குள் உண்மையெனத் தனது மதத்தை நிலைநிறுத்துவாற்கு அப்பொன்முடிப்புக் கொடுக்கப்படுமென்று யாண்டும் பறையறைவித்தாலொருகாலுண்மைவெளிப்படும்" என்று மொழிந்தான். புத்தர்களும், சைனர்களும், சைவர்களும், இதர மதத்தினர்களும் ஒருங்குசேர்ந்து வல்லபதேவ பாண்டியன் அவைக்கண் ஈண்டினர். திருமால் வில்லிபுத்தூரில் வதிதரும் விண்டுசித்தருடைய கனவிற்றோன்றி அவரையும் பாண்டியனவைக்கேகுமாறேயிடுமென்றும், ஏனைய சமயவாதிகளை அவர் வென்று வெகுமதி பெறுவாரென்றும் அவர்க்குத்திருமாலே யருளிச்செய்தார். திருமாலின் ஆணையைச்சிரமேற் கொண்டு சித்தரும் சிவிகையேறி தமது பரிவாரத்துடன் மதுரைக்கு வழிக்கொண்டனர்.

மன்னனும் அடியார்களாற் றாங்கப்பட்ட சிவிகையிலிவர்ந்து விண்டுசித்தர் வருவதை யுணர்ந்து தானும் தனது அமைச்சருடன் அவரை யெதிர்கோட்கருதிச் சென்று வணங்கி ஆதித்தியம் புரிந்து தனது அரண்மனையிலே பேயவரை யிரீஇனான். பிறகு நடந்த சமயவாதத்திற் சித்தரே வென்றனர்; விண்டுவே பரம்பொருள் என நிலை நிறுத்தினர். வென்றவர் கொள்ளுமாறு வைத்திருந்த பொன் முடியும் தம்பத்தின் முடியிலிருந்து சித்தர் தம் அடியில் விழுந்தது. ஆண்டுக்குழீஇயிருந்தார் கண்ணும் மனமும் மலர்ந்தன. விண்டு சித்தர் தம் பெருமையென்னென யாவரும் வியந்தார்.

மேற் கூறிய வல்லபதேவன் என்னும் பாண்டியன் யாவன்? யாண்டுந் தன் புகழ் பரப்பிய அதிவீரராம பாண்டியனே யவ் வல்லபதேவ பாண்டியன் என்று வற்புறுத்துஞ் சாசன மொன்றைத்தான் கண்டு பிடித்ததாகவும், வல்லபதேவனால் நன்கொடை யளித்தமைக்குச் சான்றாக அநேகம் சாசனங்கள் தமக்குக்கிடைத்த வென்றும், ஆயினும் பின்னர்க் கூறிய சாசனங்களிற் காலங் குறிக்கப்பட வில்லையென்றும் டாக்டர் கால்டு வெல்துரையவர்கள் சொல்லுகின்றார். எனினும் அதிவீரராம பாண்டியனே வல்லபதேவ பாண்டியனென்று வலியுறுத்துஞ் சாசனத்திற் காலங்குறிக்கப் பட்டிருக்கின்றது. அச்சாசனம் பாண்டியனது அரசாட்சியின் நாற்பதாவது ஆண்டாகிய சகம் 527-இற் பொறிக்கப்பட்டது. அஃதாவது கி. பி. 1605-ஆம் ௵மாம். எனவே வல்லபதேவன் பட்ட மடைந்த ௵ கி. பி. 1565-ஆகும் (* கால்டுவெல்துரை யெழுதிய திராவிட பாஷைகளின் ஒப்புநோக் கிலக்கணம் 145-ஆம் பக்கம் பார்க்க.)

வைணவசமய நூல்களி னுரையாசிரியருளொருவராகிய பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் விண்டுசித்தரைப் புகழ்ந்துரைக்கும் பாவினுளொன்றாகிய,

* Caldwell's Comparative Grammar of the Dravidian Languages.



"பாண்டியன் கொண்டாப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தோத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்.
பாதங்கள் யாமுடைய பற்று."

என்னும் வெண்பாவினுக் குரையெழுதப்புகுங்கால்,

"பாண்டியன் கொண்டாட, தென்னன்கொண்டாட என்னுமாபோல் தமக்குப்பரத்துவநிர்ணயம் பண்ணித்தரும்படி பட்டர்பிரான் வந்தானென்று பாண்டியனான ஸ்ரீ வல்லபதேவன் சொல்லிக்கொண்டாட" என்றுரையெழுதிப்போந்தார்.

மேற்குறித்த உரையாசிரியராகிய பிள்ளைலோகஞ்சீயர் என்பவர் அஷ்டதிக்கஜங்கள் (எட்டுத்திசையானைகள்) என்ற சிறப்புப்பெயர்வாய்ந்த மணவாளமாமுனிவர்தஞ் சீடர்களெண்மரிலொருவராகியபரவஸ்துப்பட்டர்பிரான் ஜீயருடைய மாணாக்கரென்று கூறப்படுவதனானே சற்றேறக்குறைய கி. பி. 14-ஆம் நூற்றாண்டினிறுதியி லிருந்தாரென்பது புலப்படும்.

முன்னரியாஞ்சுருக்கமாய்க்கூறிப்போந்தவிண்டுசித்தரதுசரிதையையே விடயமாகக்கொண்டு, கி. பி. 1509 முதல் கி. பி. 1530 வரையிலரசாண்ட கிருஷ்ணதேவராயன் அவைக்களத்து வீற்றிருந்த அலசாணிப்பெத்தண்ணன் என்னுங்கவி ஆந்திரபாடையிலொரு நூலியற்றியிருக்கின்றான். ஆதலான் இக்கவி நூலியற்றியகாலஞ்சற்றேறக்குறைய கி. பி.1520 ஆம்ஆண்டெனக்கொள்ளலாம்எனவே விஷ்ணுசித்தியமு என்றவக்காவியத்தின் நாயகனாகிய விண்டுசித்தர் வசித்தகாலஞ் சற்றேறக் குறைய கி. பி. 1509 - ஆம் ஆண்டெனத் துணியலாம்.

அற்றேற் பல்லோர் குழீஇய அவைக்களத்தே வைணவ மதத்தை மெய்ச் சமயமென்று நிலை நிறுத்திய விண்டு சித்தரது காலத்தரசாண்ட வல்லபதேவ பாண்டியனும், கி. பி. 1605 - ஆம் ஆண்டி லரசாட்சி புரிந்த அதிவீரராம பாண்டிய னென்னுஞ் சிறப்புப் பெயர் வாய்ந்த வல்லபதேவ பாண்டியனு மொருவனே யென்றெண்ண லடாது. அவர் தங்காலமென் னென்றாய்வுழி, கி. பி. 1113 ஆம் ஆண்டில் மகிஷாசுர புரத்தில் (Mysore) அரசாண்ட விஷ்ணுவர்த்தன னென்னும் மன்னன் காலத் திருந்தனர் இராமாநுஜாசாரியர் என்பவர்; இவரானே யேற்படுத்தப்பட்ட சமயம் இவரது சீடர்களாய எழுபத்து நான்கு சிங்காதனாதிபதிகளுடைய காலத்திலாவது அன்றியவர்க்குப் பிற்காலத்திலாவது பரவுதலுற்றிருத்தல் வேண்டும். வைணவசமயத்தையுண்டாக்கியவர் இராமாநுசரென்றுகொள்ளப்படுவதனானே விண்டுசித்தர் அவர்களுக்கும் முன்னிருந்தாரென்று நம்புதற்கிடனின்று. மேலும் மதுராபுரிக்கு யடிகோலி நிருமித்த குலசேகரபாண்டியனாதியாகக்கூன்பாண்டியனுமவன்புதல்வனுமிறுதியாக மதுரையி லரசாண்ட மன்னவருடையகால

த்தி லெவ்வமயத்தி லேனும் மதுரையில் வைணவமதம் நிலைபெறநாட்டப் பட்டது என்று எவ்வாற்றானு மறியகில்லேமாதலினங்ஙனங் கோடலேலாது.

ஆலாசிய மான்மியம் முதலிய தலபுராணங்கள் யாவும் மதுரையிற்கோயில்கொண் டெழுந்தருளிய சிவபெருமான துயர்வு தோன்றக் கூறப்பட்டனவாமாதலின், அவைகளுள் வைணவ மதத்தினுயர்வைக் குறிக்கும் விடயம் ஒன்றேனு மொரு தலைபாகக் கூறப்பட மாட்டாது; எனவே யதனை அப்புராணங்களு ளிருக்குமாறு எதிர்பார்த்தல் தவறு, என்றவாதமு முண்டாகலாம். அதற்கு யாமு முடன்படுகின்றோம்; எனினும் மதுரையி லெவ்வமயத்தி லேனும் வைணவ மதம் தாபிக்கப் பட்டிருந்த துண்மையாமாயின், அஃது ஆதியிலிருந்த சமயப் புலவர்களாலாவது, முனிவர்களாலாவது, உரையாசிரியர்களாலாவது தமது நூலின்கட் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டளவும் பௌத்தமதமும் சமணசமயமு மத்தேயத்திற் பரவி யிருந்தனவென்றும் அக்காலத்தின் பின்னரே யச்சமயங்கள் க்ஷீணதசை யடைந்தன வென்றும் பன்னூல்களையும் நன்காய்ந்த புலவர்களானே கொள்ளப்படுகின்றன. கி.பி. எட்டாவது நூற்றாண்டிற்கு முன்னமே வைணவமதம் உண்டாய தென்பது கொள்ளற்பால தன்று. இவ்வல்லபதேவ பாண்டியன் இன்னானென்றும், அவனுடைய காலம் இன்னதென்றும் ஆய்ந்தறிந்து அளவிட்டுரைத்த லேலாதெனினும் விண்டுசித்தர் கி. மு. 3056 என்னும் அவ்வளவு முற்பட்ட காலத்திற் றோன்றவில்லை யென்று யாமொருதலையாய்த் துணிந்து கோடலாம். இன்னணங் கூறிய வுறுதிமொழி ஏனைய வைணவாசிரியருட் சிலர்தங் காலத்தைப் பின்னராய்வதனாற் பெறப்படுங் காரணங்களினானே நன்குறுதிப்படல் காண்க.

தனது பராக்கிரமத்தானேயாண்டுந் தன்புகழ் நிறீஇயவனும் ஏனைய மன்னர்களைத் தன்னடிப்படுத்தி யாண்டவனுமாய கோச்செங்கணானென்னுஞ் சோழனைப்பற்றித் தமது பிரபந்தத்திற் சிறப்பித்துக் குறிக்குந் திருமங்கையாழ்வாரது காலத்தைப்பற்றி யினி யாராயத்தொடங்குவாம். கோச்செங்கணான் சேரநாட்டின்மேற் படையெடுத்துச்சென்று சேரமன்னன் கணைக்காலிரும்பொறையினைக் கழுமலமென்னுமிடத்து வென்கண்டு அவனைச் சிறைகொண்டனன். அப்போரினைப்பற்றிப் பொய்கையா ரியற்றிய நாற்பதுபாக்களானியன்ற களவழி நாற்பது என்னுஞ் சிறுநூலின்கண் பரக்கக் காணலாம். இந்நூலின் கடையிற் பின்வருமாறு இறுதிக்கூற்றொன்று சேர்க்கப்பட்டுளது:

“சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும்பொறையும் போர்ப்புறத்துப் பொருதுழிச் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட களவழி நாற்பது முற்றிற்று.”



# காதம்பரிச் சுருக்கம்.

## பீடிகை.

காவ்யம் கத்திய பத்திய காவ்யங்களென இருவகைப்படும். கத்-பேசுதல்; பத்-யாப்பிலக்கணப்படி யாத்தல்; அதாவது சாதாரணமாய் விவகாரத்திற் பேசப்படும் பாஷையைப்போல் இயற்றப்படும் நூல் கத்தியகாவ்யம். எதுகை, மோனை, ஓசை, அணி முதலியவை அமையப்பெற்று விசேஷமான கற்பனைகளுடன் இயற்றப்படுவது பத்தியகாவ்யம். காவ்யமானது ரஸாத்மகமாயிருத்தல் வேண்டும்; அதாவது (ரஸம்) சுவை பொருந்தி யிருத்தல்வேண்டும்; “ரஸாத்மகம் காவ்யம்” என்றிருத்தலினென்க. கத்திய நூல்களுக்கும் பத்திய நூல்களுக்கும் ரஸமே பிரதானம் அந்த ரஸம் ஸ்வதந்த்ரமானது. ரஸத்துக்கும் யமகம், ப்ராஸம் (எதுகை), சிலேஷம் (சிலேடை) வர்ண நாமாதுர்யம் (வருணனைப்பொலிவு), சப்தரசனை (சொற்பொலிவு) என்னும் இவற்றிற்கும் சம்பந்தம் எத்துணையுமின்று.

செய்யுள் நூல்கள் உண்டாய பின்னர் வசனநூல்கள் உண்டாவது இயற்கை நியமமாம். ஏனெனில், அறிவில்லாக்காலத்துப் பொய்க்கற்பனைகள் உண்டாவது போல, அறிவு உண்டானபின்பு செய்யப்படுவதில்லை; அப்பொழுது விசாரணை சக்தி ஜநிக்கின்றது. விசாரணை சக்தி பிறக்கும்பொழுது மனிதர்களுடைய மனது ஸத்யாஸத்யங்களை ப்ரதிபாதிக்கும் விஷயங்களில் ஈடுபடச்செய்கின்றது. இத்தகைய விஷயங்களுள்ள நூல்களுக்கு யாப்பினால் யாத்ததாய செயற்கை நடையாகிய செய்யுள் நடை சரிப்படுவதில்லை. விவகாரத்திலுள்ள இயற்கை நடை அல்லது வசனநடை பெரிதும் பயன்படும். இக்காரணத்தினால் அறிவும் நாகரீகமும் பெருகப்பெருக, பத்தியநூல்கள் குறைந்து கத்திய அல்லது வசன நூல்கள் நிறைந்து வருகின்றன.

இவ்வாறு வசனநூல்கள் அதிகமாகி, நூலியற்றுதல் இவ்விதமென இலக்கியமாதல் வித்தியாபிவிர்த்திக்கோர் அடையாளம். கேட்போர் காதுக்கு இன்பம் பயக்கும் ஸ்வரஸம், யோகம், சொல்லணி, பொருளணி முதலிய வெளிச்சாதனங்கள் செய்யுளுக்கு வேண்டியனபோல் வசனத்துக்கு ஆவசியகமின்று. பொருட் பொலிவினாலும், ஸாமஞ்ஜஸ்யத்தினாலும், வசனநூல்கள் படிப்போர் உள்ளத்தை களிக்கச்செய்கின்றன.

இத்தகைய வசனநூல்களைப் பண்டைக்காலத்திலே பாணன், ஸுபந்து, தண்டி என்பவர்கள் கீர்வாணவாணியில் இயற்றினார்கள். இவர்களுட் பாணகவியே சிறந்தவன்.

இந்தப் பாணகவியின் தந்தை சித்ரபாநு; தாய் ராஜ்யதேவி. இவர் பிறந்த பதினான்காம் ஆண்டில் தந்தை கால தர்மத்தை அடைந்தார். பத்ர

நாராயணன், ஈசாநன், மயூரன் என்பவர்கள் இவரது பாலிய ஸ்நேஹிதர்கள்.

பாணனது ஜந்மஸ்தாநம் சோண நதியின் மேற்கிலுள்ள ப்ரீதிகூடமென்னும் கிராமம். இதே நதித் தீரத்தில் யஷ்டிக்ரஹ மென்னும் கிராமமொன்றுள்ளது. இங்கிருந்து முன்னே போனால் ஸ்ரீகண்ட மென்னும் தேசம் சமீபிக்கின்றது. அந்தத்தேசத்திலே தான் ஹர்ஷராஜனுடைய ராஜதாநி. பாணகவி அவ்வரசனுடைய ஆதாரத்தில் இருந்தவர். கி. பி. 650-ஆவது வருஷத்திற் பாணன் ஜீவித்திருந்ததாய் ஓர் இதிஹாஸத்தினால் தெரிய வருகின்றது.

பாணகவி காதம்பரி, ஹர்ஷசரித்ரம், சண்டிகா சதகம், பார்வதீ பரிணய நாடகம், ரத்நாவலி நாடகம் என்னும் ஐந்து நூல்களை வடமொழியிலேயே இயற்றினர். இவ்வைந்தனுட் காதம்பரி என்னும் நூலே உலகத்தில் மிகவும் ப்ரசித்தமானது. இது சம்பூர்ண வசநரூபமானது. இதில் அதிமநோஹரமான கதை உளது. இதிற் காதம்பரி என்னும் கந்தர்வ கந்நிகை முக்கிய நாயகியாயிருத்தல் பற்றி கவி இந்நூலினுக்குக் காதம்பரி யென்னும் நாமம் சூட்டினர்.

இக்காப்பியத்தில் வடமொழியின் கண்ணே சகல வணிகளும், குணங்களும் உள. சிருங்கார கருணாரஸங்கள் தாமே ஸாக்ஷாத்காரமாயிருக்கின்றன, அற்புத ரஸமும் கூடிய வரையில் உள்ளது. இடையிடையே நீதி போதகமான பாகங்களும் உள. இதிற் காட்டப்பட்டிருக்கும் கற்பனா சக்தியைக் கண்டு எல்லாப்புலவர்களும் பெரிதும் வியப்புறுவர். வர்ணிக்கும்படியான லோகத்தர் பத்ததி பாணனுக்கேதகும். ஸம்ஸ்கிருத பாஷை இயற்கையிலேயே மநோஹரமானது. அதிலும் பாணனைப் போன்ற கவிச்சிரேஷ்டன் கையிற் கிடைத்த பின்னர்ச் சொல்ல வேண்டுவ தியாதிருக்கின்றது.

இந்நூல் பூர்வபாகம் உத்தரபாக மென்னும் இரண்டு பிரிவுகளையுடையது. நூலின் ஏறக்குறைய முக்காற் பங்கு பூர்த்தியானதும் பாணன் பரலோக மடைந்தான். அநந்தரம் அவனுடைய குமாரனாகிய பூஷண பட்டன் என்பவன், தந்தையியற்றிய பாகத்துக்குப் பூர்வ பாகம் எனப்பெயரிட்டுத் தான் உத்தரபாகத்தை யியற்றி நூலைப்பூர்த்தி செய்தான். பிதாவின் ஆப்திகத்துக்குள்ளாகப் பூர்த்தி செய்ய வேண்டு மென்று சங்கற்பித்துக் கொண்டு அவ்வாறே இயற்றி முடித்ததாகச் சொல்லுகின்றனர். இவ்வாறு பூர்த்தியெய்திய நூலானது தன் தந்தையின்பேராலேயே வழங்கப்பெற்றுப் பிரசித்தமாகவேண்டும் என்னுங்கருத்துடன் தன்பெயரை அவன் தான் இயற்றிய உத்தரபாகத்திற் காட்டவில்லை. இஃதவனது வினயகுணத்துக்கும் பிதிர்பக்திக்கும் பூஷணமேயன்றோ?



இக்காதம்பரிக் கதையை அடிமுதல் நுனிவரையிற்படித்து இதிற் காட்டியிருக்கும் கதாதோரணையை ஞாபகத்துக்குக் கொண்டுவந்தால் மனத்துக்கு ஆநந்தமும் ஆச்சரியமும் உண்டாகாமற் போகாவென்று சுவாநுபமாய்ச் சொல்லுகின்றேன். எத்தனைமுறைபடிக்கினும் மீண்டும் மீண்டும் படிக்கவேண்டுமென்ற அவாவேமேலெழுகின்றது. அத்தகைய சமத்காரங்களமைந்த வர்ணனைகள் இதிலுள. இவ்வாறு அநேககுணங்களால் மநோஹரமானதனாலும் இந்நூல் ஆயிரத்திருநூறு வருடங்களுக்குமுன்பு இயற்றப்பட்டிருத்தலாலும், படிப்பவர்களுக்குப் பண்டைக்காலத்துக் கற்பனைகளும், அக்காலத்தரசர்களுடைய ஐசுவரியம் நடவடிக்கை முதலியவை இதனால் அறியப்படுகின்றவாறு மற்றொன்றாலும் தெரியவராது என்பது நிராக்ஷேபமானது.

இத்தகைய ஸமஸ்கிருத காதம்பரியிலுள்ள அதிமநோஹரமான கதையை நம் தமிழ்நாட்டாரும் படித்தாநந்திக்குமாறு சுருக்கமாய்த் தமிழ்ப்படுத்துகின்றேன்.

இதில் இராஜ ஸம்பத் வர்ணனை, விந்தியாரண்ய வர்ணனை, அகஸ்திய மஹர்ஷியின் பார்யை லோபாமுத்ரை மூப்படைந்த வனவர்ணனை, பஞ்சவடியில் ஸீதாராம லக்ஷ்மணர்கள் இருந்த காலத்திய விர்த்தாந்தம், பம்பா ஸரோவரத்தின் அருகில் ஸப்ததாள விருக்ஷங்களின் பக்கத்திலுள்ள சால்மலி விருக்ஷ வர்ணனை, மாதங்கன் முதலாய கிராதர்களது வேட்டை வர்ணனை, இளங்கிள்ளைக்கு வந்த கஷ்டகாலவர்ணனை, ஜாபாலி முதலிய ருஷிகள் உறையுந் தபோவன வர்ணனை, சந்திரா பீடன் வித்தியாப்பியாசம், சந்திரா பீடனுடைய வித்தியா மந்திரத்தினின்று பார்த்தால் உஜ்ஜயினி அளிக்கும் காட்சிவர்ணனை, சந்திரா பீடனுக்குச் சுகநாஸன் உபதேசித்த இராஜநீதி, அச்சோதப் பொய்கைவர்ணனை, மஹாசுவேதையென்னும் கந்தர்வப் பெண்மீது மோகங்கொண்ட புண்டரீகன் எனும் நண்பனை அசத் மார்க்கத்தினின்று விலக்க வேண்டுமென்று கபிஞ்ஜலருஷி மனப்பூர்வமாய்ச் செய்த முயற்சியின் வர்ணனை, மஹாசுவேதையினது கற்பின் வர்ணனை, கந்தர்வலோகத்திலுள்ள காதம்பரியின் கன்னிமாட வர்ணனை, காதம்பரியின் மநோரதப்ராப்தி, வைசம்பாயனனென்றும் கிளியின் பரிணமம் ஆகிய இவ்வளவும் வெகு மநோஹரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. முக்கியமாய், கலங்காத மனவுறுதியுடைய ஸ்திரீ புருஷர்கள் தம் நண்பர்களுக்குக் கஷ்டம்வந்த காலையில், அவர்கள் நிமித்தம் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதும் அவர்களுக்குச் சுபமங்கள சௌபாக்கியங்கள் உண்டாகு நிமித்தம் எத்தனை ஸாஹஸம் செய்கிறார்கள் என்பதும் அப்படி ஒருவர் மேல் அத்தியந்தம் பிரீதியுற்றிருக்கும் காலத்தும் பாபவாஸனையினாற் சில கெடுதிகள் வந்துறுகின்றன வென்பதும் அப்பாபம் பரிஹாரமாவதற்கு

எம்பெருமானுடைய தியானமே பரமசாதன மென்பதும் இந்நூலின் தேர்ந்தக் கருத்துக்களாம்.

### காதம்பரிக் கதையில் வரும் பாத்திரங்கள்.

**சூத்திரகன்**—விதிசா நகரத்தின் அரசன், (சந்திராபீடனது இரண்டாஞ் ஜன்மம்)

**குமாரபாலிதன்**—அவனது அமைச்சன்.

**மாதங்கன்**—ஒருவேடன்.

**ஜாயாலி**—ஒரு ருஷி, இவரது ஆச்சிரமத்தில் வைசம்பாயனனென்னுங் கிளி காலம் கழித்தது.

**ஹாரீதன்**—அவர் குமாரன்.

**தாராபீடன்**—உஜ்ஜயிநீ தேசாதிபதி, சந்திராபீடனுக்குப் பிதா.

**விலாஸவதீ**—அவனது பட்டஸ்திரீ.

**சந்திராபீடன்**—குமாரன் (புண்டரீகனது சாபத்தாற் பூமிமிசையவதரித்த சந்திரன்).

**பத்திரலேகை**—சந்திரா பீடனுடைய பணிவிடைப் பெண் (பூமியில் அவதரித்த ரோஹிணி;

**சுகநாஸன்**—தாராபீடனது அமைச்சன்.

**மநோரமை**—சுகநாஸன் மனைவி.

**வைசம்பாயனன்**—சுகநாஸனுடைய புதல்வன், சந்திராபீடனது நித்யமித்திரன் (புண்டரீகனது இரண்டாஞ் ஜன்மம்; இவனே மஹாசுவேதையின் சாபத்தாற் கிளியாய்ப் பிறந்தனன்).

**இந்திராயுதம்**—சந்திரா பீடனது குதிரை (கபிஞ்ஜலனுடைய இரண்டாம் ஜன்மம்)

**சுவேதகேது**—இந்த முனிவர் லக்ஷ்மி தேவியினால் புண்டரீகனென்னு மகனைப் பெற்றவர்.

**புண்டரீகன், கபிஞ்ஜலன்**—உயிர்த் தோழர்களான ருஷிகுமாரர்கள், புண்டரீகன் சந்திரனுடைய சாபத்தினால் வைசம்பாயனனானான். கபிஞ்ஜலன் ஒருமுனிவரது சாபத்தால் இந்திராயுதமென்னும் குதிரையானான்.

**ஹம்ஸன்**—மஹா சுவேதையின் தந்தை, இவன் கந்தர்வன்.



**கௌரி**—மஹாசுவேதையின் அன்னை. இவள் கந்தர்வஸ்திரீ.

**மஹாசுவேதை**—கௌரீ ஹம்ஸர்களென்னும் கந்தர்வதம்பதியின் மகள்; புண்டரீகன் மீது காதல் கொண்டவள்,

**தரளிகை**—மஹாசுவேதையின் பணிவிடைப்பெண்.

**சித்திரரதன்**—காதம்பரியின் தந்தை, கந்தர்வன்.

**மதிரை**—காதம்பரியின் அன்னை. கந்தர்வஸ்திரீ

**காதம்பரி**—ஷைகந்தர்வ தம்பதியின் மகள். சந்திரா பீடன் மீது காதல் கொண்டவள்.

**கேயூரகன்**—காதம்பரியின் சேவகன்.

**மதலேகை**—காதம்பரியின் பணிவிடைப் பெண்.

**லக்ஷ்மி**—சூத்திரக ராஜனுக்குக் கிளியைக் காணிக்கையாய்க் கொணர்ந்த சண்டாள கந்நிகை.

தி. அ. ஸ்வாமிநாதையர்.

---

## பெண்கல்வி விவாதம்.

மாதர்கள் படித்த லாலே மற்றுத்தங் கடமை மீறி
நாதரைப் பணியா ரென்று நம்மவர் பலரு மஞ்சித்
தீதது தீத தென்று செப்புவர் தேரி னஃது
பேதைமை மட்டு மன்று பெரும்பழி நமக்கெல் லாமே.

---

1 பேதைமை மாதர்க் கென்றும் பெருங்கல னுமென் றௌவை
யோதியவுண்மை தன்னை யுணர்ந்துபெண் கல்வி பற்றி
வாதுக ளாடு மைந்தர் வகையறிந் திலரே யென்றும்
யாதனு பவமு மெய்தா விளைஞர்க ளுணரா ரென்றும்.

2 ஆடவர்க் குரித்தாங் கல்வி யணிபுனை மகளிர் தாமு
நாடுதல் வழக்கன் றென்று நல்லுற மாதர் நம்முட்
டேடுவ தொழுக்க மென்றுந் தேர்கிலர் சிறியா ரென்றுங்
கூடிய பலரு மொன்றாய்க் கூறுவர் சீறு வாரே.

3 மாந்தருக் கழகு கல்வி மாதருக் கழகு கற்பு
வேந்தருக் கழகு செங்கோல் வித்தகர்க் கழகு ஞானஞ்
சார்ந்தற நெறியுற் றூர்க்குச் சலனறு தன்மை மற்று
நேர்த்தக வில்லே லார்க்கு நலன்தரு வீர மாகும்.

4 நலனொடு பலனு மாகு நங்கைய ரிடத்தே சற்புக்
குலனையும் விளங்கச் செய்யும் கொண்டவர்க் கணியு மாகும்
பலனெனா நலனென் னாகும் படிப்பினாற் பாவை யர்க்குப்
பொலனணி மகளிர்க் கெல்லாம் பொற்புண்டோ கற்பின் மிக்கே ?

5 அரிவையர் கல்வி தன்னா லடக்கமு மேனைக் கல்விக்
குரியநற் குணமு மெய்தா ரோங்கெழு செருக்கே கொள்வ
ரரியநல் லறிவா லான்ற வாடவர் கொள்வா ராயிற்
றெரிவைய ரடங்கா ரென்று செப்பவும் வேண்டுங் கொல்லோ ?

6 நுண்ணறி விலரே யென்பர் நூற்பய னன்றா ராய்ந்து
தண்ணளி நிலையி னிற்குந் தன்மைய ரல்ல ரென்ப
ரெண்ணெழுத் தோதி யென்கொ லிகபர சாத கந்தான்
பெண்ணவ ளடையு மென்பர் பேசுவர் பலவா றெல்லாம்.

---

7 நாட்டினின் மங்கை யர்க்கஞ் ஞானமாந் தளையை நன்றாய்
மாட்டிப்பஞ் சரங் கூட்டி லிட்டு மலர்விழி புறஞ்செ லாமல்
வீட்டின்க ணடைத்து வைத்து வெள்ளிபொற் கலனான் மேலும்
பூட்டித்தா மகிழ்கின் றாரே புல்லறி வாள ரந்தோ !

நா. வெ. சுந்தரராஜ ஐயர்.

(இன்னும்வரும்.)

---

## பரீட்சைவினாக்கள்.

### Madras Christian College—VI-Form—August 1899.

I. (a) குசேலோபாக்கியானத்தை யியற்றினார் பெயரிட காலசமயங்களும் அவர்செய்த வேறுநூல்களும் யாவை? (b) பொருளெழுதுக:— தவிசு, இறும்பூது, சீகரம், வளி, உகைத்தல், ஏர்தல், மீகான், மறுகு, பனகம், கைதை, மூங்கா, உதகம், கான்முளை, நகுலம். (c) வைகறை, நல்குரவு, அந்தணன், பன்னகம்: இவற்றிற்குத் தாதுப்பொருள் கூறுக. (d) தொழிற்பெயரும் வியங்கோள் வினைமுற்று மெவ்வெப்பொருளில் வரும்? உதாரணமெழுதுக.

II i. இனி வருவனவற்றை யினிதுவிளக்குக:—(1) மாமகரம், வண்டுவரைக்கேதவழ மாலோதமூடாடுந் தண்டுவரை. (2) கள்ளமருவீசுங் கழற்றாமரைமலர். (3) பாமேகவண்ணனான்பதம். (4) கார்க்குழலரிக்கண்மாதர். (5) உறுவர்குழாமெலா, மின்னும் பார்க்க வெழுதிடுஞ் சித்திரன். (6) கறைதபுகலை. (7) கந்தடுகளிற்றினரலல். (8) வானிற், கழிமதி வருகவென்றாட் கசிந்தழுமழவு. ii. 'கோமறுகக் கோனாகை மேந்தினான்'; 'திருவிற்கு நாயகன்': இத்தொடர்கட்கு இவ்விரண்டு பொருள் கூறுக. iii. கைகடந்து, செய்கென்றான், மிக்கன்று, நாகணை, இன்னணம், வைத்தஃது, அனையன்: இவற்றிலுள்ள இலக்கணவிசேடமென்ன? iv. 'எண்ணாதொன்றை யியற்றுதலென்றுந்தீதே': இக்கருத்தடங்கிய குறளை யெடுத்தெழுதுக.

III. (a) i. பான லந்துவ ளைப்பன்மி னார்கண்வா
யான லந்துவ ளைப்பற்று றாதவன்
வான லந்துவ ளைப்படுப் போன்பின்வாழ்
கான லந்துவ ளைப்பதி கண்ணுற்றான்.

இதற்குப் பதவுரை யெழுதுக.

ii பெருகிய செல்வ ருள்ளும் பயனிலா ருளராற் பேணி
யருகிய செல்வ ருள்ளும் பயனுளா ருளரென் றாய்ந்து
பெரியவர் சொலுஞ்சொற் றேற்றும் பெரியநீர்க் கடலு மாங்காங்
குரியவெண் மணற்சிற் றூறற் கேணியு முரிய நீரால்.

இதற்குப் பொழிப்புரை யெழுதுக.

(b) முதற்பாட்டின் முதலடிக்கணுள்ள பொருள் கோள்யாது? அச்செய்யுளெச்சொல்லணி யுடைத்தாம்? இரண்டாம்பாட்டின்கணுள்ள பொருளணியாது? அதினின்றும் பண்படியாகப்பிறந்த தெரிநிலைவினை, மொழியிறுதிப்போலி, தொகுத்தல் விகாரம், கொடுந்தமிழ் நாட்டுத்திசைச்சொல், பலபொருளொருசொல் ஆகிய இவற்றிற்கு உதாரணமெழுதுக.

IV (1) 'கூருகிரும் வாளெயிறுந் தானிழந்த கோளரிபோல்'; 'கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற்போல்': இவ்வுவமைகள் யார்யாரா லெவ்வெவ்வமயங்களி லென்னென்னகருதி யுபயோகிக்கப்பட்டுள? (2) முக்குற்றமும் ஐந்துதுந்துபியுமாவன யாவை? (3) 'முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற்போல' என்னும் பழமொழி பொதிந்துள பாவடிகளை யெடுத்து வரைக.? (4) வெல்கொடி, ஊர்புகுந்தான், எழுசுடர், பலதலை, சிற்றுயிர், வாம்பரி, பஃறுவாரம், செல்வுழி, தந்நகர்: இத்தொடர்கட்குப் புணர்ச்சி விதி யெழுதுக.

V. (a) கண்ணனுக்குங் குசேலருக்கு முள்ள வுயர்விழிவுகளைக் குறிக்கும்பொருட்டு வாயில் காவலரருகினிருந்த சில புல்லறிவாளர் கூறிய வுவமங்கள் யாவை? (b) பெருமான், வேதியன், பார்ப்பான், பாணன், கணவன் என்பனவற்றிற்குப் பெண்பாற்பெயர்களும், மனைவி, பரத்தி, இல்லாள் என்பனவற்றிற்கு ஆண்பாற்பெயர்களும் எழுதுக. (c) திணைபாலிடமெலாஞ் செல்லும் வினைகள் யாவை? (d) தன்மைப் பன்மை வினைமுற்றுவிகுதிகளிற் பிரயோக வேறுபாடு முண்டோ? காரணத்துடன் விடுக்க.

VI. “அவாசிக் கண்ணதாய பைடண புரிவாசியாகிய மணிபத்திரன் என்போன் நன்னெறிபற்றி ஒழுகலான் உளதாய நல்குரவால் பரிபவமுற்று, இவ்வறுமை கெட்டது; சீச்சீ, தயைசாந்தி முதலாகிய குணங்கள் பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத் தோன்றுகின்றனவென்று கணந்தோறும் ஆகுலித்தக் குடும்பப் பாதுகாப்பின் கக்கத்தினால் அறிவு மழுக்கமடைகின்றது; தானிய முதலிய பொருளிலாவீடு இடுகாடு ஒக்கும்; அவன் கல்வி முதலிய குணச் சிறப்புற்றோன் ஆயினும் மனிதர் எண்ணிக்கையில் உறான்; இங்ஙனம் பலவகைத்தாய கவற்சி மிடிமையினால் எய்துகின்றது; ஆகலான் பட்டினியிருந்து உயிர் துறப்பலெனத் துணிந்து மணிபத்திரன் கண்வளர்ந்தான்”: இவ்வாக்கியத்தின்கணுள்ள வடசொற்களைக் களைந்து அவையிருந்தவிடங்களில் இயன்றவளவு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பெய்துவரைக. இன்னுமிதன்கணுள்ள பிழைகளிவையென வெடுத்துரைத்து அவற்றைத் தக்கவாறு திருத்திக்காட்டுக.

VII. (1) வேத்தவைக்குச் சிறந்தானுஞ் சிறவானு மிவரெனக் குறிக்கும் பாடலையும், முற்றெச்சம், இடைப்பிறவரல், உபலக்கணம் என்பனவற்றைக் கூறும் விதிகளையும் வரைக. (2) ‘வான், பான், பாக்கு: இவை மூன்றுஞ் சிறுபான்மை தொழிற்பெயர் விகுதிகளாயும் வரும்’: இக்கூற்றை யுதாரணங்காட்டி நிறுவுக. (3) ‘மழைபெய்து நெல் விளைந்தது’: ‘கோழிகூவிப் பொழுதுபுலர்ந்தது’: இவற்றுட் ‘பெய்து’, ‘கூவி’ யென்னு மெச்சங்கட்கு முடிபிலக்கணந் தக்கவிதி வரைந்து கூறுக. (4) ‘எவன்’’ என்னும் வினைக் குறிப்பு எவ்வெவ்வாறு விகாரப்பட்டுவரும்? அவற்றைப் பிரயோகிக்கும் விதம்யாது?

VIII. (*a*) மயிர்வினைஞன், சப்தம் ஆகிய இவற்றிற்கு வேறு ஐந்து பிரதிபதங்கள் கூறுக. (*b*) தொகைநிலைத்தொடர்கள் இத்துணைய வெனத் தொகுத்தும் வகுத்தும் காட்டுக. (*c*) தற்குறிப்பேற்றம், மேன்மேலுயர்ச்சி யென்னு மணிகளை யுதாரணமுகத்தான் விளக்குக. (*d*) ஏவல்வினை, முன்னிலைவினை; தொகையுவமை, உவமைத்தொகை: இவை தம்முள் வேற்றுமை யென்ன?

IX. ‘கல்வியினும் அறிவுபெருமையது’ என்னும் நீதி கற்பிக்குங் கதையினைச்சுருக்கி யொரு பக்கத்திற்குக் குறையாமற் செவ்விய தமிழ்நடையிலெழுதுக.

---

## சமாசாரக்குறிப்புகள்.

**மாணிக்க வாசகர் காலமும் கடைச்சங்கமும்:**—இப்பெயர் கொண்ட புத்தகம் ஆங்கிலத்தில் வெளியாயிருக்கிறது. இதை ஆக்கியோர் ம-ா-ா-ஸ்ரீ



திருமலைக்கொழுந்துப் பிள்ளையவர்கள், பி. ஏ. இதில் மாணிக்கவாசகருடைய காலத்தை நிர்ணயப்படுத்தும் பொருட்டு அநேக மேற்கோள்கள் எடுத்துக் காட்டப் புகுந்துழி பிரம்மஸ்ரீ சேஷகிரி சாஸ்திரியாரவர்கள் ஆங்கிலத்தில் எழுதிப்பிரசுரித்த தமிழ்க்கவி சரிதத்திலிருந்தும் சில விஷயங்களை வரைந்து அவை தம்புத்திக்கு நேர்ப் படாமையால் தமக்கு எட்டியவாறு அவற்றின் குறைகளைத் தீட்டியிருக்கின்றனர். தமிழ்க்கவி சரிதம் தமிழிலும் மொழிபெயர்க்கப் பட்டு நம்பத்திரிகையிற் பிரசுரமாய் வருகின்றபடியால் அதன் மகிமை பத்திரிகை வாசிப்போரனைவருக்கும் விளங்கும். பிள்ளையவர்களின் பிரசுரமும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வந்தால் இருவர் திறத்தையும் உண்மைநாடுந் தமிழறிஞர் உள்ளவாறு கண்டறியக் கூடும். ஆனால் பிள்ளையவர்கள் புத்தகத்தில் இதற்குமுன் எவராலும் தெள்ளிதிற்றெரியும்படி காட்டப்படாத அநேக நுட்ப விஷயங்கள் மிகுந்த ஆராய்ச்சி செய்து தரப் பட்டிருக்கின்றன வென்பதை “நுனிப்புல்” மேய்வோரும் காணுவர். இப்புத்தகத்தின் விலை அணா 8. இது சென்னைப் புத்தகசாலைகளெவற்றிற் கெழுதினாலும் கிடைக்கும்.

***

**சுகாதார விளக்கம்:**—இதை யாக்கியோர் திருநெல்வேலியிலிருக்கும் டாக்டர் அப்பாவு பிள்ளையவர்களே. இவர் எல். எம். எஸ். பரீக்ஷைகொடுத்து வைத்திய சிகிற்சைகளிற் கைதேறினவராதலால் இவருடைய புத்தகத்தில் அநுபவசித்தியிற்கண்ட அநேக அற்புத விஷயங்களுள. இதில் உடற்கூற்றினைப்பற்றியும் பூச்சிகளாலும் சிற்றுயிர்களாலும் உண்டாகும் வியாதிகளின் இலக்ஷணங்களைப் பற்றியும் அவற்றை நீக்கக் கருதிய வைசூரிப்பால்களைப் பற்றியும், சுத்தமான இடம், காற்று, நீர், உடை, உணுக்களைப் பற்றியும், தேகமனோமுயற்சிகளின் தன்மைகளையும் அவற்றின் மிகுதி குறைவால் உடம்பிற்குவரும் துன்பங்களையும்பற்றியும் வெளிப்படையாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இஃதன்றியும், இப்பொழுது பம்பாய், பெங்களூர் முதலானவிடங்களிற் கணக்கற்ற உயிரைக் கொள்ளை கொள்ளும் விஷபேதி, கொள்ளைநோய் இவற்றைப் பற்றி விவரமாய் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 4. புத்தகத்திலுள்ள விஷயத்தை உத்தேசிக்க விலைசொற்பம். லோகோபகாரத்தின் பொருட்டு விலையைக்குறைத்து ஏற்படுத்தினர் போலும். சென்னையில் தாம்ஸன் கம்பெனியிலும் மற்றும் புத்தகசாலைகளிலும் அகப்படும்.

***

**நளவெண்பா:**—புகழேந்திப் புலவர் செய்த இக்காவியத்தை ம-ா-ா-ஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் சுத்தமாய் நல்ல கடிதத்தில் பரந்த முகவுரை செய்யுள் முதற்குறிப்பகராதியுடன் பிரசுரித்திருக்கின்றனர். இதன்விலை அணா 4. சென்னைத் தாம்ஸன் கம்பெனியில் விலைக்கு அகப்படும்.

கனம். ஆர்நால்டு ஒயிட்துரையவர்கள் சென்ற மாசம் 28௳ சென்னை ஹைகோர்ட்டுப் பிரதம நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டாரென்று லண்டன் கெஜற்றில் பிரசுரமாகியதை நாளது மாசம் 21௳ சென்னை கெஜற்றில், எக்ஸ்ட்ராடினெரியாகக் கவர்ன்மெண்டார் பிரசுரித்திருக்கிறார்கள். இன்று உத்தியோகத்தை யொப்புக்கொண்டனர்.

* * *

தற்காலத்தில் தமிழ் நாட்டில் பிரபலமாய் விளங்கும் வித்வச்சிரோமணியாகிய ஸ்ரீலஸ்ரீ சபாபதிநாவலரவர்கள் தாமிதுகாறுந் தங்கிய சிதம்பர க்ஷேத்திரத்தை விட்டுத் தமிழ்நாடுய்யும் வழிதேடுவதற்கு முக்கிய நிலையமாகிய சென்னைக்கு வந்திருக்கிறார்கள். நாளது மாசம் 17௳ ஞாயிற்றுக்கிழமையன்று புரசைப்பாக்கத்தில் ஒரு சிறந்த பிரசங்கஞ் செய்தனர். அவர் செய்த பிரசங்கத்தைக் கவனித்துப்பார்த்தால், அவர் சாதாரணமான வித்வான்களோடு கூட்டவொண்ணாத வித்வ சாமர்த்திய முடையவரென்பதும், ஏனைய சமயப்பிரசாரகர்கள் மதவாதிகள் யாவர்க்கும் கிட்டாத சிறந்த சமரசசுபாவம் அமையப்பெற்றவரென்பதும், இக்காரணங்களால் ஆங்கிலமொழிகற்றுத் தமிழிலும் பேரபிமானம் பூண்ட நல்லோர் சபையில் நடுநாயகமாக வீற்றிருக்கத்தக்கவரென்பதும் நன்கு புலப்படுகின்றன. இதற்குதாரணமாக அன்று செய்த பிரசங்கத்தில் வாக்குச்சாதுரியமும் கேட்போரை வசிகரிக்குந் தன்மையும் மிகக்காணப்பட்டன. சைவ வைணவ ஸ்மார்த்த மாத்துவ சமயங்கள் நான்கையும் தம்முட் சமத்துவ முடையனவாகக்காட்டி ஒருசமயவாதி மற்றொரு சமயவாதியைக் கண்டித்து ஏராளமாய்த்தோன்றுந் துண்டுப்புத்தகங்களைக் கடிந்துபேசினார். அவர் சொல்லியதிலிருந்து, இனி யவர் சென்னையையே தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு சர்வசமய பரிபாலனஞ் செய்ய வுத்தேசித்திருக்கின்றாரென்றும், அதற்குப் பண்டிதருதவியும் மற்றையோருதவியும் அவருக்கு அத்தியாவசியமென்றும், அப்பரிபாலனந்தான் பிரசங்க ரூபமாயும் சிறு புத்தகரூபமாயும் சமயவாதங்களாலன்றிச் சமயபோதத்தால் நடத்தப்படுமென்றும் அறிகிறோம். இப்பெரியோரது முயற்சி ஈசுரானுக்கிரகத்தாற் சித்திக்குமாயின் தமிழ்நாடுய்வதிற் றடையேயில்லை. தமிழ்நாட்டாரி லொவ்வொருவரும் அம்முயற்சி கடைக்கூடுதலிற் றம்மாலியன்ற வுதவிசெய்தல் இவர்களுக்குச் சிறந்த தருமமாகும்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 OCT. 1899
MADRAS.

# ஞானபோதினி.

ஸம்புடம் III. } 1899௵ அக்டோபர்மீ 20௳ { புத்தகம் III.

## கமலினி.

### அத்தியாயம். XVII.

“நன்றுதீ தென்றவை யொன்றையு நாடான்
சென்றுதீ தென்றே சிறந்திடு முறையாற்
பகர்ந்தனன் சுந்தரன் பார்த்திப னிடத்து.”

மேலை யத்தியாயத்திற் கூறிய விடயங்கள் நடந்த மறுநாட் காலையிற் சுந்தரன் அரசனைத் தரிசனஞ் செய்யுமாறு அரண்மனையை யணுகினான். கமலினி காரிருளிற் கடிந்தேகியவன்றைமுதல் மேகங்களான் மறைவுண்ட வேனிற்கால மதியினை யொத்த முகங்கொடு விசயை சுந்தரன் முன் எதிர்ப்பட்டாள். அழகுற்றார் அசட்டையாயணியு மாபரணங்கள் மிகுதியும் விளங்குமன்றே! விசயை தன் அழகை வெளித்தோற்றுவிக்கும் எண்ண மிலளேயாயினும் இச்சமயம் ஆடவர் மனத்தை யபகரிக்கும் பேரழகு வாய்ந்தவளெனத் தோன்றினள். ஆசையபிகரித்தார் ஆபத்துக்களை யணுவளவேனும் சிந்தியாரன்றே! மற்றும் காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் அபகரித்துச் சென்றதை யொப்பத் தான் சிரமப்பட்டுக் கொணர்ந்த கமலினியை மதிமுகன் எடுத்துச்சென்றான். அரசனிடம் மதிமுகன் எது கூறுவனோவென்று அவன் சஞ்சலமுற்றதும் இவ்வளவு அவ்வளவோ? ஏதோ தெய்வகதியாற் பல பொய்பேசித்தப்பித்துக்கொண்டான். ‘பயங்கொள்ளிக்குப் பலமரணங்கள்’ என்று கூறுமொழி யுண்மையேயன்றோ? அதுபோல நம் சுந்தரன் அற்ப விஷயங்களிலும் பயந்து பொய் கூறித்தப்பித்துக் கொண்டானன்றே. ஆசையானது இப்பொழுது அவனுக்கு இயற்

கையானமைந்தபயங்கொள்ளித்தனத்தையும் மறைத்துக்கொண்டு வெளித்தோன்றியது.

முன்னொருகால் அரண்மனைப் பாங்கர் ஒரு சோலையுளதென்று கூறினமே, அச்சோலைக்கு விசயை தன் எண்ணமுந் தானும் உறவு கொண்டாட ஏகினள். "இதுவே நல்ல சமயம். இவளழகோ நம் மனத்தைக் கலக்குகின்றது. அடைந்தாலிவளையாளலாம். கமலினியிடத்தில் வேண்டியதுபோற் களவினில் மணம் புரியுமாறு வேண்டலொண்ணாது; நல்ல தன்மையாய் நம்மை மணக்குமாறு வேண்டலாம். தெய்வம் வரங்கொடுத்தாற் பூசாரிவரங் கொடுப்பதற்கென்ன? முயற்சியிருந்தாலெவ்விதநன்மையுங்கைகூடும். நாமும் விசயையைப் பின்றொடர்வாம்" என்று கூறிச் சுந்தரனும் அதே சோலையிற் சென்றான்.

விசயை ஆண்டுச் சென்றதும் புட்பச்செடிகளானடர்ந்த ஒரு புதரின்முன் உட்கார்ந்தனள். அவளுடன் வார்த்தையாட ஒரு தோழியும் வரவில்லை. அத்தனிமைப் பிரதேசத்தில் துக்கமென்னும் பதுமை உட்கார்ந்திருந்ததுபோற் றோன்றிற்று. விம்முவாள், பெருமூச்சு விடுவாள், அழுவாள், இரங்குவாள். "அழகிற் சிறந்த ரோஜாமலரும் முட்கள் நிரம்பியிருக்குஞ் செடியிலன்றோ உற்பவிக்கின்றது! அவ்வாறாக நாம் துன்பப்படுவது ஓர் அதிசயமோ?" என்று முணுமுணுத்த குரலுடன் கூறுவாள். சிறிது நேரம் இரு கையையும் கோத்துக் கொண்டு சும்மா விருப்பாள். மறுபடியும் "கமலினியைப் பிரிந்த தினமுதல் யான் உயிரிலாச் சவமென இருக்கின்றேன். அவளோ தந்தையபா லேகினள். நம்மைப்பற்றிச் சிறிதேனும் நினைப்பாளோ? ஆம்! நினைத்துத்தான் ஏது பயன்? யாம் நினைத்துக்கொண்டேயிருந்து என்ன செய்தோம்?" என்று கூறுவாள். உடனே திடீரென்று எழுந்து "என்ன அப்புதரின்கண் ஏதோ ஓசைப்படுகின்றதே!" என்பாள். "சீ! அஃது ஏதுமில்லை. நமது மனத்தின் சொரூபமே!—நல்ல வேளையாய் நமது தந்தை தம் எண்ணத்தைத் தெரிவித்தார். இலரேல் அவளை நான் கஷ்ட சம்பவத்தினின்றுங் காப்பாற்றினே னென்னும் சந்தோஷமும் இல்லாமற் போய்விடுமே. கனகமாலை திரும்பிவந்து கமலினியின் சவுக்கியத்தைப்பற்றித் தெரிவிப்பாளோ? தந்தையபால் தந்திரமாய் அன்னைக்கு 'எங்குச் சென்றனளோ? ஒருகால் தப்



பித்துச் சென்ற மதிமுகனே அழைத்துச்சென்றனனோ?' என்று கூறினேன். இல்லாவிடின் அவன் பின் வீரர்களை அனுப்பியிருப்பார்.— என்ன யாதோ ஒரு சப்தம் அப்புதரின் பக்கத்திற் கேட்கின்றதே!—நாமிங்கிருத்தலொண்ணாது. எவையும் துட்டமிருகங்கள் இருத்தலுங்கூடும். நான் இங்கிருப்பதை யுணர்ந்தால் என்னைப் பின்றொடருமன்றே. எல்லாவற்றிற்குந் தெய்வமே கதி" என்றிவ்வாறு மெதுவாகக் கூறிக்கொண்டே அவ்விடத்தினின்றும் நகர்ந்தாள். மெல்ல மெல்ல அவ்விடத்தை விட்டு நீங்கி அரண்மனையருகுற்றனள். உடனே சத்தியகீர்த்தி சோலைக்கு வருவதைக் கண்டாள். கண்டதும் ஏது செய்வாள்? தலையைக் குனிந்து கொண்டு அரண்மனைக்கே செல்ல எத்தனித்தாள். உடனே சத்திய கீர்த்தி "ஏது இவ்வளவு காலையிற் சோலைக்குத்தனியே சென்றனை? தோழியரெவரையுங் காணேமே!" என்று வினவினான்.

"இரவு முழுதும் சிறிது தலைவலியாயிருந்தது. குளிர்ந்த சோலைக்காற்றினால் மிதப்படுமென்று யான் வந்தேன். தோழியர் யான் வரும்பொழுது நித்திரையினீங்கிலர்" என்று விசயை விடைபகர்ந்தாள்.

"அவ்வாறாயின் என்னுடன் சோலைக்குத் திரும்பிவருவாய். நாமிருவரும் சிறிது உலாவலாம்" என்று அரசன் கூறினான்.

"இதுகாறு மங்கிருந்தேனாதலின் யான் அரண்மனைக்குச் செல்லுகின்றேன்; மற்றும் இளைப்பாயிருக்கின்றது" என்று விசயை கூறினாள்.

"ஆயின் நீ செல்வாய்" என்றான் தந்தை.

விசயை தன்னை உடன்வருமாறு கட்டாயப்படுத்தாததனித்தம் மிகவுஞ் சந்தோஷமெய்தினாள். அவளுக்குத் தந்தையின் சமூகஞ் சிறிதும் பிடிக்கவில்லை போலும்!

சத்தியகீர்த்தி சோலைக்குட் சென்றான். சென்றதும் சுந்தரன் அரசனை வணங்கி நின்றான். அரசன் புன்னகையுடன் அவனைத் தன்னுடன் வருமாறு அழைத்துச்சென்றான். இருவரும் உத்தியானத்தின் ஒருபக்கம் மேடையின்மீது உட்கார்ந்தார்கள். அரசன் சுந்தரனைப்பார்த்து

" என்னவிசேடம்? உன்னை இரண்டு தினங்களாகப் பார்க்கவேயில்லையே!" என்று கூறினன்.

" ஏதும் விசேடமில்லை. நேற்றைச் சாயங்காலம் தங்களைக் காணவந்தேன். காவலாளிகள் தாங்கள் எவருடனே வார்த்தையாடிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். தங்களை வீணிற் சிரமப்படுத்த லொண்ணாதென்று காத்துக்கொண்டிராது திரும்பிச் சென்றேன்" என்றான் சுந்தரன்.

" நேற்றுமாலையோ? ஆம் ஆம்!! வீரமார்த்தாண்டனுடன் பேசிக்கொண்டிருந்தேன். உனக்கு ஒரு விசேடம் தெரியுமோ?"

" என்னவிசேடம் யான் ஒன்றுமறிகிலேன்."

" நாம் முக்கியமாய்க் காத்துக்கொண்டிருந்த இரண்டு பறவைகளும் தப்பி ஓடிவிட்டன."

" தாங்கள் சொல்வது தெரியவில்லையே!"

" மதிமுகன் சிவரச் சிறையினின்றுந் தப்பிச்சென்றனன்; கமலினி அரண்மனையினின்றுந் தப்பிச் சென்றனள்."

" என்றைக்கு? ஏதும் தெரியவில்லையே!"

" இருவரும் ஒரேசமயத்தில் முந்தாநாளிரவு தப்பிச் சென்றார்கள்."

" கமலினியேனுந் தப்பிச் செல்லலாம். மதிமுகன் அக்கடுஞ் சிறையினின்றுந் தப்பித்துக்கொண்டதெவ்வாறு? யாரேனும் உதவி செய்திருப்பார்களோ?" என்று சுந்தரன் கூறினன்.

" சடகோபரென்ற முனிவரைக் கட்டிப் போட்டுவிட்டு வீரமார்த்தாண்டனிவ்விடம் வந்தசமயத்தில் தப்பித்துக் கொண்டனனும். யாரும் உதவிசெய்யவில்லையென்றே தோன்றுகின்றது."

" இருவரும் ஒரேசமயத்தில் தப்பித்து விட்டார்கள் எனின் ஏதோ சந்தேகமுண்டாகின்றது."

" எனக்கு என்னே ஒன்றுந் தோன்றவில்லை."

" இது காகதாலிய நியாயமாயிராது. இருவருக்கும் தூதர் எவரேனுமிருந்திருப்பார்கள் என்றே தோன்றுகின்றது."



" எவன் தூதனாகவிருந்திருப்பானென்று உனக்குத் தோன்றுகின்றது."

" இன்னனென்று இப்பொழுது கூறமுடியாது. என்மீது கோபியாதிருந்தால் யான் கூறுகின்றேன்".

" என்ன? கூறுவாய்?"

" யாரோ ஒரு பெண்தான் தூதாயிருந்திருக்க வேண்டும். இஃது எனக்கு நிச்சயமாய்த்தெரியும். இன்னளென்று தங்களுக்குச் சீக்கிரம் தெரிவிக்கின்றேன்."

" ஆயின் சீக்கிரம் தெரியப்படுத்துவாய். நாம் வீரமார்த்தாண்டனை அரண்மனைக்கு வருமாறு கட்டளையிட்டேம்; அவன் நல்ல வீரனாகையால் அவனை நம்மெய்காப்பாளர் தலைவனாய் நியமித்தேம். இப்பொழுது நம்மெய்காப்பாளனை மாணிக்கத்தை அங்குச் செல்லுமாறு கட்டளையிட்டேம்."

" வீரமார்த்தாண்டனையா மெய்காப்பாளனாக நியமித்தீர்கள்? சரிதான் அவனும் எனது அத்தைமகன்; ஆயினுமெங்கள் குடும்பத்திற்கு மவன் குடும்பத்திற்கும் பகைமை."

" அவன் உன் உறவினனென்றெமக்கு இதுகாறுந்தெரியாது."

" ஆயின் அவன் இன்றைக்கு இங்கு வரவேண்டுமே"

" இன்னுஞ் சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் தன் மனைவியுடன் வருவான்" என்றான் அரசன்.

" அவன் வந்தபிறகு தங்களைக் காண்கின்றேன். யான் செல்ல விடையளிக்குமாறு வேண்டுகின்றேன்."

" எமக்கும் அரண்மனை செல்லவேண்டியிருக்கின்றது. ஆயினும் இவ்விடயத்தைக் கேட்டுச் செல்வாய்?"

" என்ன? கேட்கச் சித்தனாயிருக்கின்றேன்."

" கமலினி தந்தைபாலனுகினளோ என்னவோ? சீக்கிரத்தில் தமயனுக்கும் எனக்கும் போர் நடக்குமென்று நினைக்கின்றேன். அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் இரகசியமாய்ச் செய்யவேண்டும்."

" அதற்கென்ன, உடனே செய்யலாம். முக்கியமாய்க் கமலினியும் மதிமுகனும் எதிர்ப்பட்டிருந்தால் அபாயமிருக்கின்றது.

மற்றும் இருவரும் காருண்யவல்லியை யடைந்திருந்தால் வெகு சீக்கிரத்திற் போரை எதிர் பார்க்கலாம். ஏனெனில் மதிமுகன் எல்லோரையுந் தூண்டுவான் என்பதற்குச் சந்தேகமில்லை. முன்னமே நம்மீது பகை பாராட்டியிருந்தவர்கள் இவன் தூண்டுதலினாற் றயிரிய மடைவார்கள். எல்லாவற்றிற்கும் இரகசியமா யிருவரையுஞ் சேர்த்துவைத்த பெண்ணைப்பற்றி விசாரித்த பிறகுதான் யோசிக்கவேண்டும். யான் விடைபெற்றுக் கொள்கின்றேன்" என்றுரைத்துச் சென்றான். சத்திய கீர்த்தியும் சிறிது நேரத்திற்கெல்லா மரண்மனை யடைந்தான்.

சருக்கை-இராமசாமி ஐயங்கார்.

---

## லீலை : ஒரு நவீனகம்.

### அத்தியாயம். 7.

'கண்ட னள்கனை யாழியைக் கள்வனுக்
கொண்ட னண்மனக் குய்யமி லான்றனை.'

மேலத்தியாயத்திற் கூறியாங்கு லீலை தன்னின்னுயிர்ப்பாங்கி சாரதையுடன் பரியிவர்ந்து மேற்செல்லுமளவில், லீலை யின்னலென்பதை யிதுகாறுமறிந்தில ளாதலின் மனங்கவன்றவளாய்ச் சாரதையை நோக்கி "இந்துவைப்பழித்த விளவெழினுதலாய்! என்னே நந்நிலைமை! பொன்னினு மெம்மை யன்புடன் போற்றிய அன்னையின் மொழியை யாதரியாமையின் எண்ணிலும் இடர்க்கடன் மூழ்கி யிரங்குவாரார்கொலோ? சக்கிரதரர் இல்லஞ்சாருமுன் இன்னும் நிகழற்பால துன்பமு மெனைத்தோ? மதுரை யெய்தும்வழியு முணரகில்லேம். என்ன சாரதே! சாரங்கதரன் அக்கணையாழியைக் கொண்டதெதுபற்றியோ? சக்கிரதரரை யிதுகாறும் யான் கண்ணிற் கண்டிலனெனினு மெமது பிதா சுதரிசனர்க்குரிய நண்பரென்று கேட்டுளேன். அவர், உடன்கொண்டு வரவெழுதிய கணையாழியைக்கொண்டு சேறலின்றி யவன் போதரல் தகாமையே யாயினும் அதனை யிழந்தவாற்றினை யெழுமவர்க்கு இனிது தெரித்தல் வேண்டுமன்றோ? இன்றேல் அவர் மனக்கவற்சியா னலிவருந்துவா ரென்பதற்கையமின்று" என்று கூறிக் கொண்டே மேற்போமளவில் ஆண்டுக்குழீஇயிருந்த சிலவணிகரைக்கண்டு "ஐயா! நீவிர் யாண்டுச் செல்லுகின்றீர்? யாங்கள் கூடன்மா நகரைக் குறித்துளேம். அவ்வூருய்க்குமாற்றினைச் சற்றே யெம்மீது தயைபுரிந்து தெரிப்பீராக" வெனலுமவர்; "தாயே! யாங்களும் மதுரைக்கேகல் வேண்டும்;



வழியுமிதுவே; ஆயினு மிதனைச்சார்ந்த கொடுங்காட்டி லோரரிமாவுளதெனப் பல்லோர் மொழியக் கேட்டுளேம்; 'எமக்கு முன்சென்ற வணிகர் குழாத்துளோரிருவரை யக்கோளரிகொன்று தின்றுவிட்டதென்றும், மனிதரூனைப் புசித்தமையானே மயங்கிப்பித்தேறி யலைகின்றதென்றுங் கூறினார், ஆதலி னிவ்வதர்விடுத்து இதனயலோடுங் கொடிவழிபற்றியேக நினைத்துளேம். நீவிரும் எம்முடன் போதரல் சால்புடைத்தெனினும் நுமக்குத் தோன்றியவாறே செய்க" என்று பணிந்து கூறினார்.

மங்கைய ரிருவருஞ் சிறிதுபொழுது சிந்தித்து அவருடன் போதலே நன்றெனக் கொண்டார். வணிகரனைவருந் தமது காளைகளின் மீதும் பரிகளின்மீதும் பொதியேற்றிய பின்னர்க் கடலொலிபோன்ற ஆரவாரத்துடன் அவணின்று பிரிந்தேகுங் கொடிவழிகொண்டேகுவா ராயினார். அவர் தம்முட் பாடுவார் சில்லோர்; கூடன் மான்மியம் கூறுவார் சில்லோர், அண்ணலார் சரிதையை யன்புட னஞ்செவித் தேக்குவார் சில்லோர்; பரிகளைத் தூண்டுவார் சில்லோர். இவர்தங் கலிப்புங் கொய்யுளைப் புரவியின் குரத்தெழுமோதையும் ஒய்யென வாய்குவித் தொலிசெயு மார்ப்புந் துற்றிய சதங்கையின் சும்மையுஞ் சேர்ந்தே யெழுதிரை முழக்கோ, கொண்டலின் குமுறலோவென வயிர்க்குமாறு விரவும். மேற்கிளம்பிய புழுதி மேகபடலமென இரவியை மறைத்தலின் மாலையம்பொழுதென மயங்கினள் லீலை. இன்னணந் தன்மேற் படிந்தபராக முகற்றுவான் மேற்கடல் திளைப்பவிரைவுடனகலும் பரிதி யேகப் பணைப்பொழுதிருந்தது. புழுதி தங்கள் கண்களிற் படிவுறுவண்ணம் லீலையுமவள் பாங்கியும் பரியேறிவரும் வணிகர் சிலருடன் முன் சென்றனர். ஏனையோர் பின் சென்றார். இவர்களிங்ஙனஞ் செல்வுழி யக்கொடிவழியின் பாங்கருள்ள காட்டின் மிகவடர்ந்த பக்கலையண்மினார் அவ்வமயத்திலொரு பெரும்பூசையுறுமுவதென்னவரு மொலிதன்னைச் செவிமடுத்து "இஃதென்னைகொல்?" எனவொருவரை யொருவர் வினவுவாராயினார்; சிலர் காட்டுப்பூசையின் குளிறலென்றனர்; சிலர் வயவரி வேங்கையின் வாயொலி யென்றனர்; சிலர் எட்டடிதாவுமெண்கொலி யென்றனர்; அற்றன்று, பத்தடிபாயுஞ் சித்திரகாயஞ் செய்யொலி யென்றார் சில்லோர்; கோளரிவிடேஉங்குறட்டை என்றார் சில்லோர்; பாதவத்திடையே பரந்து செல்லுறாஉம் பவனத்தொலியே யென்றார் சில்லோர். இங்ஙனம் யாவரும் மத்துறுதயிரிற் கலங்கி மனந்தடுமாறுகையிற் கோடையிடியென வொருகுமுறலைக் கேட்டனர். சிறிது நேரத்திற்கெல்லாம்,

விதுவெண் கீற்றென விளங்கெயி றதுக்கிய விரிவா
யதுபி ளந்துகண் டழுக வாலிமிர்த் தரத்த
மதுவின் மாந்தியம் மாழையிற் கிழித்தவா ளரிபோ
லெதிர்ந டந்தோ ரிகலரி யுருமென விடித்து.

வணிகமாக்க ளனைவரும் வெருண்டனர் ; சிலர் மயங்கி விழுந்தனர் ; சிலர்
கண் புதைத்தனர் ; சிலர் மருளமருள விழித்தனர் ; பரிமேற்படுக்கு
நருங் கலினம் விடுக்குநரு மையகோவென வழுதரற்றுநரு மாயதவ்வணிகர்
குழாம். கொக்கென நரைத்த குருடன்கைக் குமரியெனக் கைக்குளடங்கா
மலுகைக்குநரை மீறிப்பாய்ந்தோடின பலபாய்மா. லீலையுமவள் பாங்கியு
மென்செய்வதென வேங்கினர். அன்றரி யடர்த்த வண்ணலார் சரபமேயின்
றெமக்குறுதுணை இன்று வேறென்றனர். இன்னண மிடிவிழுந்தேங்கியவரா
வெனவிடிந்த மனத்தினையுடையராய் மயங்குறுமெல்லை வணிகருட் சில்
லோர் "வந்தது துன்பமும் நொந்தனஞ் சிந்தையும். இனியாவதென் ? இனி
யதை யடர்த்தலே யமைவெனக் கட்கமோங்கிய கையராய் நாற்புறமு
மதைச் சூழ்ந்தனர். கோளரியுங் கொண்டது குணிக்கருங்கோபம். முன்
வந்தவர் கண்மேற் பாய்தலு மவர்தமுட் சிலரைப் போழ்தலுஞ் சிலரை
யறைதலுஞ் சிலரை வாயாற் கௌவிமென்று மென்றுதின் றெறிதலுஞ்
சில பாய்மாக்களைக் குடர்கிழித்தலு மிக வெளிதாய விநோத விளையாட்
டென வெண்ணியது. அன்னணம் நிகழ்வுழியவ்வரிமானுக்குச் சமனோலை
கொண்டொரு பகழி யதன் மூளையுட்புக்கது. உடனேவ்வாரிதி குடித்த காரிடி
யென்னக் கடுங்குரல்விடுத்து நெடுவானதிர்த்துக் கடைவாய் நெரித்துக்
கட்பொறி கனற்பொறி கடிதினிற் காலக் கால்விசைத் தோடித் தன்னை
யெதிர்நோக்கிவரு மிருவரைக்கண்டு வில்லும் வாளுங்கொல்லுங் கணையுங்
கொண்டெதிர்பாயுங் குரிசில ரிருவரு ளொருவன்மேற் பாய்தலும் அவன்
பரியினைக் கிழித்தலுமொருநொடிப் பொழுதி னிகழ்ந்தன. மேலிருந்தோன்
கீழ்வீழ்ந்தான். அவன்மேலும் பாய்ந்ததரிமா. பக்கலினின்ற மற்றொரு
வீரன் பரியினின்றேயென விழிதலும் வாளுறை நீத்தலும் வயவரி
விலாவில் வயங்குறுங்கட்க மொழுங்குற உய்த்தலும் மண்மேற்கிடந்தவயவ
னை மீட்டலும் மாத்திரைப் போழ்தி னிகழ்ந்தன. வாட்படை தைத்த
விலாப்புடை யரியு மிவன் யார்கொலென மிகுவெகுண்டு அவன் மார்
பக் குருதி யேர்பெறக் குடிப்பான் றன்பின்புறத் தாளினை மண்பெற
வூன்றி முன்னிரு தாளினை யன்னவ னகலத்திருத்தித் தனது பேழ்
வாய்திறந்து கோவெனக் குமுறி யார்த்ததைக் கண்ட நம் வீரன் றனது
லாகவத்தினு லொருபுறம்விலகி யோவென விரைந்து அதனை மண்மேற் புர
ட்டினன். மீட்டும்

"அளைந்து மார்பினு ளழிதரு குருதியைக் குடிப்பா
னுளைந்து கோளரி யெழுதலு முளைமிசை மிதியா
வளைந்த வாளெயிற் றிடைவலித் தடக்கையிற் பிடித்தான்
பிளந்து போழ்களாய்க் கிடந்ததப் பெருவலி யரியே."

இவ்வற்புத வீரச்செயலினைக் கண்ணுற்ற வேனையவன் "நண்ப! உன்
றனக்கித்துணை வலியுண்டெனக் கனவினுங் கண்ணிலேன்; நந்தமாலவாய



ண்ணலேயிற்றை ஞான்று நினக்கிவ் வயவரி கொல்லும் பெருவலி யீந்தனர்!
நின்மேலெல்லாங் குருதிபெருகுகின்றதே! ஏதேனுமூறு நிகழ்ந்ததோ?
என்றனாருயிரளித்த வண்ணல்! விரைவினி லுரைத்தி" எனலும் "புரூரவ!
இந் நெய்த்தோர்ப் பெருக்கமக் கோளரியுடலினின்றெழுந் தெம்மேற் பாய்ந்
ததேயொழிய வென்னுடற்கண் விரவியவுயிர்ப்புனலன்று. நினக்கு மூறிலை
யன்றே?" வென்று அவன் கூறலும் புரூரவன் "பொங்கராவணிந்த கங்கா
ளனருள்பெறு சிங்காரலோசன! நீ யுள்ளளவுமெனக்கூறுமுளதோ? பண்ணி
யற்றேமொழிப் பாவையரிருவர் ஆண்டு அவ்வணிகர் குழாத்துள் நனி நலிகி
ன்றனர்; யாஞ்சென்று தேற்றுவாம்; வருதி" யெனலும் இருவருமேகி யவ்
வணிகர் குழாத்தின் நாப்பட் பரிமேலிருந்தே பரிதவித்துருகும் பாவையர்
பாற் சென்று "மங்கைமீர்! அரியினை யொழித்தோம் நும்மரந்தையை
யொழிமின்" என்று கூறினர். வணிகருங்கூடினர். ஆராய்வுழி இறந்தவர்
இருவரே. ஆயினு மோரொன்பதின்மர் ஊறுகொண்டவர். சிறிது போழ்
திற்கெல்லாஞ் சிங்கார புரூரவ ரிருவரும் ஆண்டுக்காணப்பட்ட ஒரு சிற்றூற
லில் நானமுடித்துத் தாமுடன் கொண்டுவந்திருந்த புத்துடைபுனைந்து அவ்
வணிகரை யண்மி "ஐயன்மீர்! நீவி ரிறந்தவரை யடக்கஞ்செய்த பின்னர்
யாண்டுச் செல்வீர்? மேலு மிம்மங்கைய ரியாவர்? நும்மைச் சார்ந்தவரா
யெண்ணற் கிடனின்றே" வெனலும், அவர்கள் "வீரர்காள்! தெய்வமே
நும்மை யிவணுய்த்ததுபோலும். இன்றே லின்றியாவரும் மாண்டிருப்
போம். இவ்வரியினுக்கஞ்சியே யவ்வழியொருவி யிவ்வழிப்போந்தோம்;
எமது தீவினைப்பயனு லிவண்வந் திருவரைமாய்த்து ஒன்பதின்மர்க் கூறுசெ
ய்தது; எனினும் நும்மாலன்றே யாங்கள் பிழைத்தேம். எமரிற் சில்லோர்
இவணின் றோட்டெடுத்தனர். சிறிது போழ்திற்கெல்லாம் அவரையு முட
ன்கொண்டு போதரல்வேண்டும். அம்மங்கையர் மதுரையேகும் மாண்பினர்.
யாங்களுமப் பெற்றியரே யெனினும் நீவிர் அவர்தமையுடன்கொண் டருகிலு
ள்ள வொரு சீறூர் சேர்வீராயின் மிக்க நன்மை புரிந்தவராவீர்" என்று மிக
க்கரைந்தனர்.

சிங்காரபுரூரவ ரிருவரும் அம்மாதர்பாற் சென்று "அம்ம! நீவிர் மதுரை
யேகும் பெட்பினரென் றுணர்ந்தேம். யாமுமப் பெற்றியரேம். ஆதலின் நீவி
ரெம்முடன் போதுதற்கு மனமுளதே லெம்முடன் போதுமின்" எனலும்,
லீலை "ஐய! நீவிர் செய்த பேருதவிக்கு யாங் கைம்மாறு செய்யுமாற்றல்
சிறிதுமில்லேம். இப்பொழுதும் நீவிரே யருள்புரிந்தெம்மை மதுரையினுய்த்
தல்வேண்டும். யாஞ்செல்லுமாற்றிடை யிவ்வணிகரைக்கண்டேம். அவருட
னவண் வரலும் அரியாலயர்ந்தோம். மதிமுடிச் சொக்கனருளா லிடர்விடு
த்தோம். இனி யெம்மை யுடன்கொண்டு கூடன்மாநகரங் குறுகுக நுமது
கடனே" என்றனள். லீலையினது பேரழகுந் தேமொழியுஞ் சிங்காரன் மனத்
தைக் கவர்ந்தன. சிங்காரனும் அவளது திட்டிவாயிலி னுட்புகுந்து அவுடன்

மனங் கொள்ளை கொள்வான் சென்றனன். புரூரவன் றனதிறந்த பாய்மாவினுக்குப் பதிலா யொருவணிகனது புரவியைக் கொண்டு அவற்கு மனமுவக்கப் பொருளளித்து அதன்மே லிவர்ந்துவந்தனன். உடனே யந்நால்வரும் மதுரையேகும் வழிக்கொண்டனர்.

ஒற்றையாழியந் தேரவன் மேற்றிசைப்பாய வொருகன்னற் பொழுதிருக்க விவர் கொடிவழி விடுத்துப் பெருவழிக்கொண்டனர். லீலையுஞ் சிங்காரனுந் தாங்கள் தத்தமூரினின்று கிளம்பிய புறப்பாடுமுதல் இதுகாறும் நிகழ்ந்தவற்றை யொருவர்க்கொருவர் கூறிக்கொண்டே மேற்சென்றனர். ஒருவரையொருவர் நனிவிரும்பினர். இதுகாறு மடைந்த துன்பமியாவற்றையு மொருவாறொரீஇயினர். சிங்காரனது சிங்கவேறனைய தோற்றமும், விலங்கலனைய வலம்பொருதோளும் லீலையினுளத்தைத் தம்வயப்படுத்தின. இவடன் மந்தநகையும் இந்து நுதலும் சுந்தரவுருவமும் அவன்றன் மனத்தைப் பிணித்தன. லீலை சிங்காரனை நோக்கி "நண்ப! நீ கூறிய சாரங்கதரன் எத்தகைமையன்? அவனைக் கண்ணுற்கண்டனையோ?" என்று வினவலும், சிங்காரன் "அத்தீயனை நினைப்பதுந்தீது. அவனைப்பற்றிப் பேசுதலொழிந்து, வேறேதேனும் பேசுவல்" என்று மேற்சென்றான். இங்ஙனமவன் சென்றதெற்றிற்கோவெனின் சாரங்கதரனைப்பற்றிப் பேசின் அம்மடந்தை யச்சுறுவாளென்றவையப்பாட்டானே யன்றி வேறன்று. இன்னணம் மேற்செல்வுழி ஓரெளியவறியன் வற்றலென வுலர்ந்த யாக்கையன், வினைப்பயனுன் விளைந்த விகார வுருவினன், மண்ணுலகிலுள்ள நோயனைத்துங் குடிகொண்டனைய காட்சியன், வளைந்து மார்பளவுந் தொங்குறுங் கீழிதழுடையான், நாசியின் றோற்றஞ் சிறிதுமில்லான், மேற்பல்லின்றிக் கீழ்ப்பல்லுடையவன், முதுகின் புறம் நோக்கும் முகமுடையான், வலக்கண்ணு மிடக்காதுமற்றோன். இத்தகைய குரூபி இவர்களைக் கண்ணுறலுந் தன்னாலியன்றவளவிற் பரபரப்புடன் எழுந்து பிச்சையிடுமாறு வேண்டினன். சிங்காரன் மிகப் பரிதபித்துத் தன்னுடைப் பையினிற்பெய்திருந்த ஒரு சிறுபையினை யவிழ்த்து அவ்வெளியவற் கொரு பொற்காசினை யளிக்கப்போனுமளவிற் குதிரை யெதையோகண்டு மருண்டு குதித்தது. உடனே சிங்காரன் கைப்பையிலிருந்த யாவுங் கீழ்வீழ்ந்தன. கீழ்வீழ்ந்த காசினையும் ஒரு செப்புக் கணையாழியினையும் புரூரவன் கீழிழிந்து எடுத்துக்கொடுத்தனன். பளபளப்பற்ற வக்கணையாழியின் முகப்பி லேதோவொரு சக்கிரம் வரைந்திருந்தது. இக்கணையாழியினைப் புரூரவன் எடுத்துத் தனது நண்பன் கரத்திற் கொடுக்குமமயத்தில், அதனை லீலையுங் கண்ணுற்றனள். லீலை யிடமிரண்டு சிங்காரன் பேரிலையுற்றாள். நேற்றிரவு தனது பள்ளியறையிற் புகுந்த மனிதனுருவத்தையுஞ் சிங்காரனையு மொப்பிட்டுப் பார்க்கிலவை சற்றேறக்குறைய வொன்றாகவே காணப்பட்டன. அகன்ற மார்பும், முழந்தாளளவுந் தாழ்ந்த கையினையும் சிவந்த மேனியும் அண்ணியு



சரீரமும் இவள்கொண்ட கூற்றினை வலியுறுத்தின. யாவரும் வெருவுமாறு வெவ்வினைபுரியுஞ் சாரங்கதரனெனுங் கள்வர்தலைவ னிவனே யெனத் தீர்மானித்தாள். இல்லாவிடிற் றனது கையிலிருந்து நேற்றிரவிழந்த கணையாழி யிவனிடமெப்படிச் சேர்ந்ததென் றையுறுவாள். நன்காயுமிடத்து நேற்றிரவு கண்டவுருவு மிவனதுருவமு மொன்றெனத் துணிந்தாள். நம்மை மோசஞ்செய்து யாண்டேனுங் கொண்டேகுவரோ? எத்தொழில் புரிவாரோ? என்று மனம் வெதும்பினாள். இதற்கென்செய்வலோவென் றேங்கினாள். இவளிங்ஙனங் கலங்குழி ஒன்றையுங் கவனியாத சாரதை கணையாழியைப் பாராதவளாதலி னித்தகைய வையங்கொண்டிலள். லீலையின்மனம் எரிமலையினுட்புறமெனக் கொதித்துக் கலங்குவதை யாங்ஙன மறிவானிளைஞனாய சிங்காரன்? அவன் ஒன்றுங் குறிக்கொளானாயிதுகாறும் பேசிவந்தவாறே யவளுடன் பேசிவந்தான். ஆயினும் லீலையோ சாரங்கதரனைப்பற்றி யிவனைக்கேட்டபோழ்து சரியான விடைகொடாமையி னிவன் சாரங்கதரன்றானென வெட்டுணையு மையமின்றிக் கடைப்பிடித்தாள். இத்தீயனி னின்றுந் தப்பியோடுவ தெங்ஙனமென மேன்மேலுமெண்ணுறுவாளாயினாள். சிங்காரன் பேசும் மொழிகட்கு எவ்விதமான விடையுங் கொடாதவளாய் "ஓ, நண்ப! பரிதியும் மேற்றிசைப் புகுந்தனன். ஆதலின் ஆண்டுப் புலப்படும் அச்சீறூர் சென்றடைவாம். புரவியினைச் சிறிது வேகமாய்த் தூண்டுதி" என்றுகூறித் தன் பரியினையுந் தூண்டினள். உடனே நால்வரும் புரவியினை வியாக்கிரகதியினுகைத்துச் சென்றனர். பரியேற்றத்தின் மிகப்பயின்ற லீலையின் றிறமையைக்கண்டு நம்பி சிங்காரன் மிகமனமுவந்தான். சற்றுநேரத்திற்குள், அச்சீறூரை யந்நால்வரு மடைந்தனர். இருட்படாம் போர்த்திரவெனு மங்கையும் வந்திறுத்தனள். உடுக்களும் வானயாற்றிலெழுந்த புற்புதங்களென மிளிர்ந்தன. சிங்காரபுரூரவர் இம்மங்கையர்க்குத்தக விடுதி யமைப்பானாலோசிப்புழி யவ்வூரிலுள்ள வொரு சாவடியில் நால்வரு மிறுத்தலே நன்றெனவோர்ந்தார். உடனே யாண்டு அந்நால்வருஞ்சென்று நோக்குழியச்சாவடி மிகப்பழைய வொரு சிறு குடிலாய் நின்றது. அவண் விளக்கொளிவைத்துக் குடியிருப்பவன் ஒருமிக வெளியவயோதிகனும். சிங்காரன் கீழிழிந்து அவ்விருத்தன்பாற் சென்று, இரகசியமாயவன் கையிலொரு பொற்காசினைக் கொடுத்துத் தமக்கு வேண்டிய வுண்டி முதலியவற்றினைச் சேகரிக்க வேண்டினன். அவனுமக்காசினைக் கைக்கொண்டாவணஞ் சென்றான். சிங்காரபுரூரவரிருவரு மக்குடிலினுட்புறத்தைக் காண்பான்புக்கனர். அவ்வமயத்தில், லீலை யதுதான் றப்பியோடற்குத் தக்க வமயமென் றுன்னினளாய்த் தனது பாங்கியை நோக்கிச் "சாரதா! பரியினை வேகமாய்த் தூண்டு. நாம் நமதுயிரினை யவாவுவாமே லீண்டிருத்தலாகாது. யாண்டுந் தன்றுபெயர் மாத்திரையானே யச்சுறுத்திய சாரங்கதரனிட மகப்பட்டேமிட்

டோம். இனிப்பறத்தலே தகுதி" யெனலும், இருவருந் தத்தம் புரவியினையுளவுகோல் கொண்டுபுடைக்க வவைகண்மிக்க கடுப்புடன் பாய்ந்தோடின. பரிகளின் குரத்தோசை கேட்டவீரரிருவருங் குடிற்புறம்வந்து, மங்கையரிருவரும் வாம்பரிமேற் பறத்தலை நோக்கலும் அவர்க ளங்ஙனம் மறைதற்குக் காரணமறிகிலராய் மருள மருள விழித்திருந்தனர். பாய்மாக்களு மிவர்தங் கட்புலனுக்கு மறைந்தன; மேலு மவை இன்னண மிருமூன்றுகாத மிமைப்பொழுதினிற் கடந்தன. லீலையுஞ் சாரதையு மிகக் களைத்தவர்களாய்ப் பரிகளையும் மந்தகதியாய் விட்டுச்சென்றனர். சிற்சில வமையத்தில் லீலை தம்மை யாவரேனுந் துரத்தி வருகின்றனரோ வென்றையுற்று நாற்புறமு முற்று நோக்குவாள். இன்னணந் துன்புறுவதினு முயிர் மாய்த்தலே தகுதியென்றுன்னுவாள். சாரங்கதரனிடனின்றுந் தன்னைத் தப்புவித்த பெருமான் கருணையைப் புகழ்பவளாய்ப் பின்வருமாறு சிந்திக்கத் தொடங்கினள்.

"இவ்வழகிய விளைஞன் சாரங்கதரன்றானோ வலனோ? அவன் முகத்திற் றீயற்குரிய குறிப்பைச்சிறிதுங் கண்டிலமே. மேலுமெமக் கிடர்புரியவெண்ணினனெனிற் றனிமையி லவளுடன்வந்த போழ்தே யேன்புரிந்திலன்? ஆதலினவனைச் சாரங்கதரனெனக் கொண்ட வெண்ணந் தவறு—ஓ! இல்லை!!! நேற்றிரவு எமது கணையாழியைக் கொள்ளைகொண்டவனுருவு மிவனதுருவு மொத்திருக்கின்றனவே! மேலு மக்கணையாழியையு மிவனிடத்திற் கண்டேம். நேற்றிரவு கண்டபோழ் தவன் முகத்தை மறைத்துவந்தனனன்றே. ஆதலி னவனைப்பற்றி யித்துணைகாறும் மயங்கநேரிட்டது. ஐயகோ! பெரும!! என்னே நின் விளையாட்டு!!! ஏழையேம் படுந்துயர மேனோ வறிந்திலை?—'அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங் கடுத்தது காட்டு முகம்' என்ற தேவரும்பொய்த்தனரோ! இஃதென்னை யிறும்பூது!! அவ்விளைஞனை நினைக்கும்போதெல்லா மென்மன மூசலாடுகின்றது. இவ்விளவயதி லவன் ஏனித்தொழில் பூண்டான்? மிக்க வீரமுங் கோளரி செருக்குமாற்றலுங் கண்டோர் மனத்தைக் கவரும் பேரழகுமுடைய தோன்றலித்தீத்தொழில் கைக்கொண்டு தீயனெனப்பெயர் புனைந்து யாவரும் வெறுக்கும் பூட்கையனு யொழுகல் பண்டை வினைப்பயனன்றோ? ஊழ்வினை யுருத்துவந் தூட்டுமென்று பெரியார் கூறியதற்குச் சான்று வேறு வேண்டுவதின்று.—இல்லை! இல்லை!! அவன் கள்வனே யல்லன். அக்கணையாழிபோல் வேறொன்றவனிடத்தி லேனிருத்தல்கூடாது? நாங்கொண்ட வெண்ணம் முற்றிலுந்தவறு. தீயவற்குத் தெய்வமு முதவிபுரியுங்கொலோ? வானரி போழுங் கோள்வலி கொள்வனோ? என்னே யெம்மடமை!—ஓகோ! அச்சிறு குடிலிலிருந்த முதியோனிட மேதோ விரகசியமாய்ச் சிலமொழி புகன்றனனே. எம்மை மோசஞ்செய்ய வவனையுந் தன் வயப்படுத்தவே



யவற்குப் பொற்காசளித்தனன்போலும். அம்முதியனும் மறுமொழியின்றி வெளியேறிச் சென்றனன். இவையாவற்றையு முற்று நோக்குழியிவன் சாரங்கதரனே யென்பதற்குச் சிறிது மையமின்றே. தப்பியோடியது தெய்வவுதவியாற்றான்.—என்னினும் அவனது அழகும் ஆற்றலும் மிகப்பரிதபிக்கத் தக்கன.

"எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின்
றுய்தற் கொருமை பெறவெண்ணு துழல்வோ னுடம்பு பொற்கலத்திற்
பெய்தற் குரிய பால்கமரிற் பெய்த தொக்கு மென்பரால்."

என்று பல்வேறு விதமாய்ச் சிந்தித்துச் சாரதையை நோக்கி "என்பொருட்டு நீயுந் துன்புற்றனை" என்றுபச்சரித்துக் கூறித் தான் கணையாழியைக் கண்டதுந் தம்முடன் வந்தாருளொருவனைச் சாரங்கதரனே யென்றறிந்ததுமாதிய யாவையுஞ் சாங்கோபாங்கமாய்ச் சொல்லிமுடித்தாள். பிறகு இருவரும் பரிவிட்டிழிந்து அற்றைஞான்று வைகறையி லுணவுகொண்டவராதலிற்றுங்கொண்டுவந்தவாற்றுணவினைப் புசித்திளைப்பாறிப் பிறகு பரியிவர்ந்து முகம்விட்டவாறே சென்றனர். இவர்களிங்ஙனந் தலைதெரியாமற் சேறலினுன் மதுரை யேகும்வழிக் கெதிர்வழியிற்சென்றனர்.

ஏழாமத்தியாய முற்றிற்று.

ந. பலராமையர்.

---

## வாய்மை.

---

வாய்மையாவது வாயினது தன்மை. ஒவ்வோரங்கத்துக்கும் ஒவ்வோரணிகலனிருக்கின்றது. கண்ணுக்கணிகலன் கண்ணோட்டம் என்றாற்போல வாயினுக்கு உண்மையே சிறந்த அணிகலனாம். இது பற்றியன்றே "வாயினுக் கருங்கலம் வாய்மை நீ யென்பல்" என்றார் நந்தம் ஆசிரியரும். வாய் பொய்ம்மையும் பேசுந்தன்மை யுடையதே யெனின்; அற்றன்று, அஃதணிகலப்போலி யென்று விடுக்க. ஆனால் இது சிலர் அணியும் அணிகலத்தின்மேற் செல்லாது. பற்கள் வீழப்பெற்ற சிலர் தங்கத்தாற் கட்டிய பற்களும் பொய்ப்பற்களும் வைத்துக்கொள்வது போன்ற அணிகலனன்று இந்த வாய்மை. இஃது ஒருவனுடைய இதயத்தினின்றும் தோன்றுவனவாய எண்ணங்களின் வெளிப்பாடேயாமெனக.

இப்பொழுது வாய்மை என்பது உண்மைக்கு மறுபெயரேயாமாறு காண்க. இவ்வுலகத்தில் உண்மையாக இருக்கின்றவர்கள் தொகை மிகவும்

கொஞ்சம். இப்பொழுது ஒருவன் ஒரு பொய்யினைப் பிழையினாற் சொல்லிவிட்டானானால் அவன் 'ஆம். யான் சொன்னது பொய்யே!' என்று தைரியமாய்ச் சொல்லி யொப்புக்கொள்ள மாட்டான். 'அன்று. யான் அப்படிச் சொன்னேனல்லேன்; அவர்கள் பொய்சொன்னார்களே யொழிய யான் மெய்தான் பேசினேன்' என்பான். இஃது எவ்வளவு கெட்டகாரியம்! அவனுக்கு உண்மையைச் சொல்லத் தைரியமில்லை. இப்பொழுது வாய்மையினின்றும் தவறாதவர்கள் எவரேனு முளரோ என்று யாம் யோசிப்போமாயின் யாம் அத்தகையரைக் காண்பதரிது. அரிச்சந்திரன் ஒருவன் தான் உண்மையினின்றுந் தவறாதவன். அவனை விசுவாமித்திரர் எவ்வளவோ தூண்டிப்பார்த்தும் அவன் அவற்றிற் கிணங்காமல் உண்மையினின்றும் சிறிதேனும் தவறினானல்லன். தன்னுடைய மனைவி மக்கள் யாவரையும் விட்டுப் பிரிந்தகாலத்தும் அவன் சக்கிரவர்த்தித் தானத்திலிருந்து ஓரற்பமான கீழ்மகனாயிருக்குந் தன்மைக்கு வரவேண்டிய காலம் வந்துழியும் அவன் அந்தச் சத்தியத்தினின்றும் பிறழ்ந்திலன். இஃது அவனுடைய மனவுறுதியைக் காட்டுகின்றது. இவன் இவ்வளவு கஷ்டங்களை அனுபவிப்பதைக்காட்டிலும் ஒரு பொய் சொல்லிவிட்டுச் சுகமாயிருக்கலா மென்று கருதாமல் ஒரு பொய் சொல்லி அவ்வாறு வாழ்வதனினும் இழிவான காரியம் வேறொன்றும் இல்லையென்று கருதிய தன்மையாலன்றோ அவன் மெய்யையே பேசுபவனாயினான். அப்பொழுது ஒரு சிறு பொய் சொல்ல அரிச்சந்திரன் அஞ்சினதற்கு மாறாகத் தற்காலத்து மித்தியை என்பாளையே மணந்துகொண்டு அவள் வசப்பட்டு எப்பொழுதும் பொய்யையே பேசிக்கொண்டிருக்கும் புல்லறிவாளர் பலருளர். அவரை அவனோடு ஒருங்கே சேர்த்து யாம் எவ்வாறு ஒப்பிட வல்லேம்! இப்பொழுது இப்பட்டினத்திலுள்ளவர்களில் எவரேனும் ஒரு சிற்றிடர்ப்பாட்டிலகப்பட்டுக்கொள்ளும் பொழுது பொய் சொல்லாமல் நிசத்தையே சாதிப்போர் எவரேனு முளரோ? தமிழ் வல்லீர்! மௌனஞ் சாதியாதீர்! எழுந்து சொல்லுமின்! இல்லை. உண்டென்று யான் ஒருகாலும் நினையேன். யுதிஷ்டிரரும் ஒரு சமயத்திற்பொய் சொல்லினர். ஆனால் அவருக்கு நாம் பொய்சொல்லப்போகிறோம் என்ற நினைவுமில்லை. அவ்வாறு அவர் நினைத்தனரென்று யாம் சொல்லவும் முடியாது. அன்று அவருக்குப் பொய்யென்பது தெரியாது என்று கூறவுங் கூறலாம். அப்பொழுது இது பொய்யன்று. ஏனெனின் மனத்தொடு கூறினாரல்லராதலின். இக்கருத்தே பற்றி யன்றோ ஆசிரியர் திருவள்ளுவநாயனார்,

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்" எனவும்,

"உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்" எனவுங்



கூறுவாராயினர். இனி வாய்மை யென்பதென்னை?

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்."

என்றார் அப் பெருநாவலரே.

அஃதாவது ஒருவன் உண்மையோ பொய்யோ எது பேசினாலும் சரி. அது காரணமாகப் பிறனொருவனுக்கேனுந் தீங்கு நேரிடாமலிருக்குமாயின் அது வாய்மையேயாம். அதில் அநேகவிதமான பாகுபாடுகள் உள. ஒருகால் ஒருவன் ஒன்று பேசுவதனால் மற்றொருவனுக்குத் தீங்கொன்று நேரிடாமலு மிருக்கலாம். அவ்விடத்து அவனுக்கு ஒரு நன்மையும் பயவாமலு மிருக்கலாம். அச்சமயத்தில் இது வாய்மையோ வன்றோ? இதற்கு விடைகொடுப்பது மிகவும் கடினம். திருவள்ளுவ நாயனாருடைய வாக்கின்படியே போவோமாயின் அது வாய்மையே யன்றிப்பொய்யன்றாம்; ஆனால் மற்றொன்றிருக்கின்றது. அஃதாவது ஒருவன் பொய் சொல்வதனால் மற்றொருவனுக்குத் தீங்கு நேரிடுமாயின் அப்பொழுதும் எல்லாம் பொய் என்று சொல்லக்கூடாது. ஏனென்றாற் சொல்லுகின்றார் நாயனார் 'ஒருவன் ஒரு பொய் பேசுவதனாற் பலருக்கு நன்மை பயக்குமாயின் அது பொய்யன்று. மெய்யே' என்கின்றார். இப்பொழுது உதாரணமாக: ஒருவன் அநியாயம் செய்து கொண்டிருக்கின்றான். அவன் அநியாயம் செய்கின்றான் என்று சிலர் சேர்ந்து அவன்பேரிற் பொய் வழக்குத் தொடுத்துவந்து அவனை அவ்வூரைவிட்டுத் துரத்த எத்தனிக்கின்றனர். அவன் நான் ஒன்றுஞ் செய்திலேன் என்கின்றான். இவர்களும் ஆம் அவனொன்றுஞ் செய்யவில்லை என்று சொல்லிவிட்டோமாயின் அவனை விட்டு விடுவார்களே என்று அஞ்சி எல்லோருமாய் ஒருங்கே கூடிப் பொய்சொல்லி அவனை ஊரினின்றுந் துரத்துகின்றார்கள். இவ்விடத்து இவர்கள் பேசினது பொய். இவர்கள் இந்தப் பொய் பேசினதனால் ஒருவனை ஊரைவிட்டுத் துரத்திவிட்டார்கள். ஆயினும் இது பொய்யாகுமா? ஆகாது. ஏனெனின் இப்பொய்யானது இவன் ஒருவனை ஊரைவிட்டுத் துரத்திவிட்டபோதிலும் ஊரிலுள்ளவர்கள் யாவருக்கும் நன்மை பயத்தற்குக் காரணமாயிருக்கின்றது. ஊரினுடைய நன்மைக்காக ஒருவனைக் கெடுக்கலா மென்று நீதிநூலுஞ் சொல்லுகின்றது. ஆகையால் இங்கே ஒருவனை ஊரை விட்டுத்துரத்தி விடுதற்காகப் பொய் சொன்ன போதிலும் அது பொய்யாகாது. இது நிற்க.

இனி ஒருவன் பொய் பேசினாலும் அவனுடைய இதயமானது அவனைத் தண்டிக்கும் என்பது தேற்றம். நீ ஏன் பொய் பேசினாய் என்று வருத்தும். இவன் இதற்காக அடிகள் வாங்கிக்கொண்டிருந்து விடுவதைக் காட்டிலும் இவ்வாறு அடிக்கடி துன்புறுத்தும் இதயத்திற்கு இவன் மறுமொழி சொல்வது மிகவும் அசாத்தியம். இது விஷயமாக முன்னரே யாமெடுத்துக்காட்டிய

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்ற திருக்குறட் பாவினை யுற்று நோக்குக. இப்பொழுது ஒருவன் உண்மையே பேசிக் கொண்டிருந்தால் எல்லோரும் அவனிடத்தில் நம்பிக்கை வைப்பார்கள். பொய் பேசுவதே தொழிலாயிருந்த ஒருவன் திடீரென்று ஒரு காலத்தில் உண்மை பேசினபோதிலும் அவனை ஒருகாலும் மெய் சொல்லுவோனாக மதிக்க மாட்டார்கள். ஒருவன் உண்மை பேசினாலும் பொய் பேசினாலும் எல்லோரும் அவனை மறவார்கள். மேலும் அதிகமாக ஒருவன் பொய் சொல்வானாயின் அவனை ஒருகாலும் ஒருவரும் மறவார். மேலும் அவனை எவ்விடத்திற் கண்டாலும் அவனை இகழத்தலைப்படுவார்கள். ஒருவன் உண்மையே பேசிக்கொண்டிருந்தால் அவனுக்கு ஒரு காலத்திற் பொய் பேச வேண்டுமாயின் அது வெகு சுலபம். பொய்யே பேசிக்கொண்டிருந்தால் அவனுக்கு உண்மை பேசுவது மிகவும் கஷ்டம். அப்படியே யொரு மெய்பேசிய போதிலும் அவனை யாரும் நம்ப மாட்டார்கள்.

இப்பொழுது உதாரணமாக:—ஒருமாணாக்கன்ஒருபிழை செய்கின்றானென்று வைத்துக் கொள்வோம். அவனை 'யார் செய்தது?' என்று கேட்டக்கால் அவனுக்கு மெய்யாகவே உண்மையைச் சொல்ல இஷ்டமேயில்லை. ஆயினும் அவனை நீ உண்மை பேசாவிடில் உன்னைத் தண்டிப்பேன் என்று சொல்ல அவனுக்கு மெய்யாகவே உண்மை பேச இஷ்டமில்லாத காலத்தில் தண்டனைக்குப் பயப்பட்டுக்கொண்டு உண்மை பேசினாலும் அதனாலொரு பிரயோசனமுமில்லை. அவன் தானாகவே பயப்படாமல் தைரியமாய் எழுந்திருந்து 'ஆம், யானே பிழை செய்தேன்' என்று தான் முழு மனத்துடனும் உண்மை பேசுவானாயின் அதுவே மிகவு முயர்வுடைத்தாம். ஏனெனில் அவனுக்கு உண்மை சொல்ல இஷ்டம் இல்லை. தண்டிப்பேனென்று சொல்லா விட்டாற் கட்டாயமாய்ப் பொய்யையே தான் சொல்லியிருப்பான். தண்டனைக்காகப் பயந்து கொண்டு உண்மையைச் சொல்லிவிடுகின்றான். மற்றவனோ எவ்வகையிலும் உண்மையே பேசத்தலைப்பட்டிருக்கின்றான். இப்பொழுது மனமார உண்மை பேசுகின்றவன் வேறு தருமங்களும் செய்யவேண்டாம். மேலும் பொய்பேசுகிற வழக்கத்திலுள்ளவன்கூடத் தருமம் செய்கிறதிற் பிரயோசன மில்லை. ஏனெனில் அவ்வகைப் பட்ட பொய்யன் என்ன அறஞ்செய்தாலு மென்னை பயனுடைத்தாமோ; எல்லாப் பாடைகளிலும் எல்லாத்தேயங்களிலும் இதைப்பற்றிக் கதைகள் புலவுள்ளன. அவையனைத்தையும் யாமெலாம் படித்து அறிந்து வாய்மை பேசுதலையாய அறமெனமேற்கொண்டு ஒழுகுவோமாக.

"இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுக்கு
மம்மை யருநரகத் தாழ்விக்கு—மெய்ம்மை



யறந்தேயும் பின்னு மலர்மகளை நீக்கு
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய்"—சிறுபஞ்சமூலம்.

சு. அ. இராமநாதையர்.

---

## தமிழ்க்கவி சரிதம்.

---

யாம் முன்னரே கூறிய புறப்பாட்டு என்னுஞ் செய்யுட்டிரட்டின்கண் ஒரு பாவி லித்தகையபோரைப்பற்றிக் குறிக்கப்பட்டுளது. ஈண்டுக்கூறியிருக்கும் இறுதிக்கூற்றினானே, செங்கண்ணன் என்னுஞ் சோழனுக்கும் கணைக்கா லிரும்பொறையென்னுஞ் சேரனுக்கும் போர்நிகழ்ந்ததென்பதும் பின்னவன் பற்றுண்டு குடவாயிற்கோட்டத்துச் சிறைவைக்கப்பட்டனனென்பதுந்தெரியவருகின்றன.

"சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன்செங்கணனோடு போர்ப்புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற்கிடந்து தண்ணீர்தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித்துஞ்சியபாட்டு" என்னு மிறுதிக்கூற்றினையறிக.

இக்களவழி நாற்பதிற்கு ஆங்கில மொழிபெயர்ப்பினோடு அந்நூற்பொருளடக்கத்தைப்பற்றிய சில குறிப்புக்களு மடங்கிய இனியவரலாறொன்று **ஸ்ரீ கனகசபைபிள்ளையவர்கள், பி. ஏ.**, எழுதியிருக்கின்றனர். அதனை. **இந்தியபுராதனகலைஞன்** பதினெட்டாஞ் சம்புடத்தில் 258-முதல் 260 வரையுமுள்ள பக்கங்களிற்காண்க.

**பெரியதிருமொழியின்கண்** கோச்செங்கண்ணனைப் பற்றி மிகவு மூயர்வாகச்சொல்லப்பட்டுளது. அவனைக்குறிக்கும் * அப்பகுதிகளி னின்றும் அவன் திருநறையூரின்க ணெழுந்தருளியிருக்கும் திருமாலைவணங்கும் வழக்கமுடையானென்பதும், பாண்டியசேரநாடுகளை வென்றனனென்பதும், எழுபது கோயில்கள் கட்டினனென்பதும், பலவரசர்களோடும் போர்புரிந்து

---

* பைங்கணா ளரியுருவாய் வெருவ நோக்கிப் பருவரைத்தோ ளிரணியனைப் பற்றி வாங்கி, யங்கைவா ளுகிர்நுதியா லவன தாகம் மங்குருதி பொங்குவித்தா னடிக்கீழ் நிற்பீர், வெங்கண்மா களிறுந்தி விண்ணி லேற்ற விறன்மன்னர் திறலழிய வெம்மா வுந்த, செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயிற் றிருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன் மண்ணெல்லா முன்னளியச் சென்று வென்றிச், செருக்களத்துத் திறலழியச் செற்றவேந்தன் சிரந்துணிந்தான் றிருவடிநுஞ் சென்னி வைப்பீ, ரிருக்கிலங்கு திருமொழிவாயெண்டோ ளீசற் கெழின்மாட மெழுபதுசெய் துலக மாண்ட, திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயிற் றிருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே.

பெருஞ்சேனைகொண்டு அவர் தமை யழித்தனனென்பதும் அறிகின்றோம். ஆயினும் அவனைச் சைவர்கள் ஒருமுனிவராகக் கருதுவதனோடு பெரியபுராணத்திற் சிறப்பித்துக்கூறப்படும் நாயன்மார் அறுபத்துமூவருளொருவராக வடக்கிக்கொண்டாடுகின்றார்கள். இந்நூலின்படி யிவன் சுபதேவசோழற்குக் 'கமலாவதி யென்பாளிடம் பிறந்தவனாகின்றான். தாயாகிய கமலாவதி மகப்பெறும் போழ்தத்து அரசன் சில சோதிடம் வல்லுநரைக் கூய் அது நல்லோரையேயோ வென்று வினாயவழி அவர்கள் அற்றென்றென மறை விடை கொடுத்தனரே யன்றி அதற்கோர் நாழிகைப்பொழுது கழித்து மகப்பிறக்குமேல் அம்மகவு சக்கிரவர்த்தியா மென்றுங் கூறினர். இங்ஙனஞ் சோதிடர் சொற்றன ரென்பது செவிக்கொண்ட கமலாவதி, குறித்த நல்லோரை வருமளவுந் தன்னைத் தலைகீழாய்க்கட்டி நாலவிடுமாறு செய்து கொண்டு 'செங்கண்ணன்' என்னும் பெயரிய வோராண்மகவைப் பெற்றெடுத்தாள். தாதையாகிய சுபதேவ சோழனும் அவ்வாண்மகவிற்குரிய சடங்குகள் யாவற்றையுஞ் செவ்வனே செய்து முடித்துப் புதல்வன் தக்க பிராய முற்றுழி அவனைத்தனது நாட்டினுக்கிறைவனாக நிறீஇத் தான் வனம் புகுந்து எஞ்சிய காலத்தினைத் தவஞ்செயலிற் கழிப்பானாயினான்.

செங்கண்ணன் வாழ்க்கையைப் பற்றிய இவ்விரு கூற்றுக்களும் ஒன்றோடொன்று முரணுமாறில்லை. சைவர்கள் கூற்றின் வண்ணம் அவன் சைவசமயநெறி மேற்கொண்ட முனிவராவன். இவ்விடயம் அவன் திருமாலையும் ஒருங்கு வணங்குதலொடும் மாறு படவில்லை. ஆதலின் யாம் அவ்விருவகைக்கூற்றும் ஒரே செங்கண்ணனைக் குறிக்கு மெனக் கோடலியலும். அன்றியும் இப்பெயர் நமக்குத்தற்காலங் கிடைக்ககூடிய சோழர் வமிசாவளிகளிற் பன்முறையுங் கூறப்படவில்லை. **தென்னிந்திய சிலாசாதன வாராய்ச்சிப் பத்திரிகையின்** நான்காஞ் சம்புடத்தின்கட் காணப்படும் யாவரும் மிகுதியும் நம்பிக்கை வைக்கத்தகுந்த ஒரு சோழ வமிசாவளியில் ஒரேயொரு செங்கண்ணன் கூறப்படுகின்றனன்; அவன் பெயர் கரிகாலச் சோழன்முதலாவற்குப் பின்னும் கி. பி. 890 - ஆம் யாண்டு பட்ட மெய்திய விசயாலயற்கு முன்னுங் கூறப்பட்டுளது. யாம் முன்னரே காட்டியாங்குக் கரிகாலச்சோழன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற் செழித்தோங்கினனாகவே கோச்செங்கண்ணன் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடையிலிருந்திருக்க வேண்டும். எனவே கோச்செங்கண்ணன் காலத்தையொருவாறு ஏறக்குறையக் கி. பி. ஏழாவது அல்லது எட்டாவது நூற்றாண்டெனக் கொள்வோமாயின், திருமங்கையாழ்வார் அவனது காலத்திற்குப்பின்னரிருந்திருக்க வேண்டும்; ஆகவேயவர் கி. மு. 2705 ஆம் ஆண்டிற்பிறந்திருக்கவே முடியாது!!!

திருமங்கையாழ்வாரது சீவியசரித்திரசம்பந்தமாக அதனாற்போதரும் அநுமானத்தோடும் எடுத்துரைக்கற்பாலவிஷயமொன்றுண்டு. **பின்பழகி**



**யமணவாளஜீயர்** என்னும்வைணவமுனிவரொருவர் செய்ததாகக்கூறப்படும் **குருபரம்பரை** யென்னும் நூலினிடத்து, திருமங்கையாழ்வார் சைவமுனிவர்கட்குள் மிகுந்த ஆற்றல்படைத்தவரும் அறுபத்துமூன்று நாயன்மார்களுட்டலைவரெனக் கருதப்படுபவருமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரொடும் சமயவாதஞ் செய்தன ரென்பதும் அவ்வாதத்தின்கட் பின்னவரைத் தோற்கடித்து அவரிடத்தினின்றும் தாம் அவரை வென்றதற் கறிகுறியாக அவர் கொண்டிருந்த முத்தலைச்சூலத்தைப் பறித்துக்கொண்டனரென்பதும் கூறப்பட்டுள. இவை யுண்மையென்றேற்படுமேல் திருமங்கை யாழ்வாருக்குக் கூறப்பட்ட அத்துணைப் பழமையும் குறைந்தொழியுமென்க. எவ்வாறெனின்சைவசமய குரவராகிய திருஞானசம்பந்தர் அவ்வளவு பழமையானகாலத்து வாழ்ந்திருந்தன ரென்று யாண்டுங் கூறப்படவில்லை.

சைனமதம் குறைவுறுங்காலத்தில் அவர் வாழ்ந்திருந்தல்வேண்டும். அவர் பல சைனக்குருக்களையும் வாதப்போரில்வென்று அரசன் ஆணைபெற்று அவர்தம்முட் பெரும்பாலோரைக் கழுவேற்றினரென்று கூறுப. ஆயினுஞ் சரித்திரசம்பந்தமாக ஆராயுமிடத்து இத்தகைப் பெருங்கொலை நிகழ்ந்திருக்கமாட்டாதென்றும் இக்கூற்றினால் ஞானசம்பந்தர் மூலமாய்ச் சைனசமயம் இறுதியுற்றதென்றும் அவர் அரசன் கூன்பாண்டியனைச் சைவசமயத்திற்குத் திருப்பி மதுரையி லரசனா லாதரிக்கப்பட்டிருந்த சைனகுரவரிற் சில்லோரைத் துரத்திவிட்டனரென்றுந் துணிதற்கிடனுண்டு. இச்செய்திகள்யாவும் ஞானசம்பந்தர்காலம் ஏறக்குறையக் கி. பி. ஏழாவது நூற்றாண்டென்னுங் கூற்றை வலியுறுத்துகின்றன. ஆனால் அத்துவிதமதத்தாபகராகிய ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள் செய்ததாகக்கூறப்படும் **சௌந்தரியலகரி** என்னும்சமஸ்கிருத நூலின்கண் இவர் '**திராவிடசிசு**' * என்று குறிப்பிக்கப்பட்டுளரென்று பலருங் கூறுப. ஆனால் **லக்ஷ்மீதர பண்டிதர்** என்னுமொருவரியற்றிய அதன் வியாக்கியானத்தில் 'திராவிடசிசு' என்பதற்கு 'த்ராவிடஜாதி சமுத்பவோபால: ஏதஸ்தோத்ரஸ்யகர்த்தா' என்று கூறப்பட்டுளது அதன் பொருள்: திராவிடசாதியிற்பிறந்த குழந்தையும் இத்தத்துதிரூபமாயுள்ள நூறுபாடல்களை யாக்கியோருமாயவர் எனவே சங்கராசாரிய சுவாமிகளே என்பதாம். ஆனால் அந்தச்சமஸ்கிருதநூலைத் தமிழ்மொழியின்கட் செய்யு

---

* तवस्तन्यं मन्ये धराणिधरकन्ये हृदयतः
पयः पारावारं परिवहाति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजाने कमनीयः कवयिता ॥
द्रविडजाति समुद्भवो बालः एतत् स्तोत्रकर्ता ॥
इति लोल्लक्ष्मीधर पण्डितः ।

ளாக மொழிபெயர்த்த வீரகவிராயரென்பார் 'திராவிடசிசு' என்னும் அச்சொற்றொடரை "வருணநன்றூறு கவுணியன் சிறுமதலை"* என்று மொழிபெயர்த்துளர்; அதன் பொருள்: பிராமணசாதியாகிய உத்தமகுலத்திற் கௌண்டின்னிய கோத்திரத்திற்பிறந்த சிறுகுழந்தை என்பதாம். இச்சொற்கள் சிறிதேனுமையமின்றி ஞானசம்பந்தரையே குறிக்கும்.

இவ்வாறு வியாக்கினங்கள் மாறுபடுதலின் அவைதம்முள் இதுதானுண்மையென்று ஒருதலை துணிந்துகூறுதற்கியலவில்லை. ஆனாற் பின்னர்க் கூறிய வுரைப்பொருளுக்கு ஆதாரமாகச் சங்கராசாரிய சுவாமிகள் தமது **சிவபுஜங்கஸ்தோத்திர**த்தின்கண் இயற்பகை நாயனாரையும் சிறுத்தொண்ட நாயனாரையும் சண்டேச நாயனாரையும் தமது **சிவானந்தலகரி**யின்கட் கண்ணப்ப நாயனாரையும் பற்றிக் குறிப்பித்திருத்தலால் ஈண்டுக்கூறிய இந்நான்கு நாயன்மாரையும்போலவே அறுபத்து மூவருளொருவரென்றடக்கப்படும் அந்த ஞானசம்பந்தரையும் இவர் குறித்திருத்தலியலாதோ என்று கூறுவாருமுளர். நாம் சௌந்தரியலகரியும் இன்னு மற்றைய சிறுநூல்களும் சங்கராசாரிய சுவாமிகள் செய்தனவேயென்று வுறுதியாய்க் கூறுங்காறும் இவ்வாதம் ஒருதலை துணிந்துரைத்தற் கியலாதாம்பிற வெனவிடுக்க. இன்னும் சங்கராசாரிய சுவாமிகள் தமது சௌந்தரிய லகரியின்கண் ஞானசம்பந்தரையேகுறித்தாரெனக் கொண்ட போதிலும் நாம் சங்கராசாரிய சுவாமிகளுக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் முன்னரிருந்தன ரென்றாதல் இருவருமேக காலத்திலிருந்து சம்பந்த சுவாமிகள் மற்றையோரினு மூத்தவராயிருந்தன ரென்றாதல் கூறலாமே யன்றி வேறொன்றும் முடியாது. சங்கராசாரியரது காலம் கி. பி. எட்டாவது நூற்றாண்டின் பிற்பகுதியென்று தீர்மானிக்கப் பட்டுளதாதலின் திருஞான சம்பந்தரும் அதேகாலத்திலாதல் அதற்குச்சற்று முன்னராதலிருந்திருக்க வேண்டும். பிற் கூறியதே மிகவும் நம்புதற்பாற்று; ஆயின் இவ்வனுமானத்தினால் ஞான சம்பந்தருக்குந் திருமங்கை யாழ்வாருக்கும் சமயவாத நிகழ்ந்து அதன்கண் ஞானசம்பந்தர் தோற்றுத் தமது முத்தலைச் சூலத்தைப் பறிகொடுத்தன ரென்பது மெய்யென நாம் ஒப்புக்கொள்ளுவேமாயின் சங்கராசாரியர்காலத்திற்கு முன் திருமங்கையாழ்வாரிருந்தன ரென்பது மாத்திரை ஏற்படுமென்றறிக.

மேற் கூறியதினும் அதிக முக்கியமானதும் திருமங்கையாழ்வார் காலத்தினை யொருவாறாக வேனும் வரையறைப் படுத்த வல்லதுமாகிய இன்னொரு

---

*"தருணமங்கலை யுனதுசிந்தை தழைந்தபாலமு தறிஞ
லருணகொங்கையி லதுபெருங்கவி யலைநெடுங்கட லாகுமே
வருணநன்றூறு கவுணியன்சிறு மதலையப் புயல்பருகியே
பொருணயப்பெறு கவிதையென்றொரு புனிதமாரி பொழிந்ததே."



விடயமுளது. திருமங்கை யாழ்வார் தமது பிரபந்தத்தின்கண் ஈரிடங்களில் தொண்டையர் கோனைப் பற்றிக் கூறுகின்றனர். **பெரிய திருமொழி**யிரண்டாம் பத்தின்கண் முப்பதாம் பாடலில் திருவல்லிக்கேணியிலெழுந்தருளிய திருமாலைத் "தொண்டையர் கோன் செய்தநன் மயிலைத் திருவல்லிக்கேணி நின்றான்" என்கின்றனர். இதற்குத் தன்னரசர்கட்கு வாசஸ்தானமாகிய மயிலாப்பூரைத் தன்னருகே கொண்ட திருவல்லிக் கேணியிலெழுந்தருளித் தொண்டைராசனாற் செய்யப்பட்ட விக்கிரகத்தின்கண் இருப்போன் எனப்பொருள் கூறப்படும். இப்பொருள் **பெரிய வாச்சான் பிள்ளை** வகுத்த வியாக்கியானத்தை ஒட்டிக் கூறப்பட்டது.

பெரிய திருமொழி யிரண்டாம் பத்தின்கண் எண்பதாம் பாடலில் திருமால் காஞ்சிமாநகரி லெழுந்தருளி **வயிரமேக** னென்னும் தொண்டைமானால் வணங்கப்பட்டன ரென்று கூறப்பட்டுளது.

இவனுமிவற்கு முற்கூறப்பட்ட வரசனும் கி. பி. 1064 - ஆம் ஆண்டு முதல் 1113 - ஆம் ஆண்டு வரை அரசாண்ட குலோத்துங்கச் சோழனது மகனாகிய முதல் தொண்டைமானது வமிசத்தினராக வேனும் அல்லது அவர்களுளொருவர் அம்முதல் தொண்டைமானேயாக வேனு மிருக்கலாம். முதற்கட் கூறப்படுவோன் திருவல்லிக்கேணியில் திருமால் விக்கிரகத்தை விதிப்படி தாபித்தவனாகவும் பின்னர்க் கூறப்படுவோன் அக்கடவுளை வணங்கும் ஒரு தொண்டை ராசனாகவுங் கூறப்படுகின்றனர்; 'வணங்கும்' என்ற நிகழ்காலப் பெயரெச்சப் பிரயோகமும், மூலப்பாசுரத்தி லுபயோகப்படுத்தப்பட்ட "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடி மாலை வயிரமேகன் தான் வலிதான் புகழ் சூழ்ந்த கச்சி" யென்ற நீண்ட வடைமொழியும், திருமங்கை யாழ்வார் தங்காலத்திருந்த விஷ்ணு பக்தனாகிக் கச்சியம் பதியைத் தன் வலியினாலும் புகழினாலும் போற்றிய தொண்டைராச னொருவனைக் குறிப்பிக்கின்றன வென்று நாம் துணிதற்கி[illegible] கரு[illegible]. அவ்வரசன் அவ்வாழ்வாரது காலத்தினனென் றேற்பட்டா[illegible] கூறியன அவ்வரசற்குப் பொருந்தும்.

## அநுபந்தம்.

### ஆலாசியமான்மியத்தின்படி பாண்டியர் [illegible]வமிசாவளி.

1. குலசேகரபாண்டியன் - அவன்மகன்
2. மலயத்துவசபாண்டியன் - அவன் மனைவி காஞ்சனமாலை - அவர் தம்மகள்
3. தடாதகை - அவள் கணவன் சுந்தரபாண்டியன் - அவர் தம்மகன்
4. உக்கிரபாண்டியன் (உக்கிரப்பெருவழுதி?) ஹாரதாரி யென்னும் பெயர்வாய்ந்தவன் - அவன் மனைவி காந்திமதி - இவனொருசங்கங்கூட்டினான் - அவன்மகன்

160956
Rm241, M97 M9773-4

5. வீரபாண்டியன் - அவன்மகன்
6. அபிடேகபாண்டியன் - அவன்மகன்
7. விக்கிரமபாண்டியன் - அவன்மகன்
8. இராசசேகரபாண்டியன்-கரிகாலச்சோழனு மிவன் காலத்தினனே-இராசசேகரன்மகன்
9. குலோத்துங்கபாண்டியன்
10. அனந்தகுணபாண்டியன் - அவன்மகன்
11. குலபூடணபாண்டியன் - இவன் சுந்தரசாமந்தனெனவுங் குலசேகரனெனவுங் கூறப்படுவான் - காடுவெட்டிய (காந்தாரச்சேதி) சோழன் இவன் காலத்தினனே - குலபூடணன்மகன்
12. இராசேந்திரபாண்டியன் - அவன் சகோதரன் இராசசிங்கன் காடுவெட்டிய சோழனதுமகளை மணந்து தன்சகோதரனொடு மாறுபட்டுக் கலகஞ்செய்தான் - இராசேந்திரன்மகன்
13. இராசேசபாண்டியன் - அவன்மகன்
14. இராசகம்பீரபாண்டியன் - அவன்மகன்
15. பாண்டியவமிசப்பிரதீபபாண்டியன் - அவன்மகன்
16. புருகூதவிசித்துப்பாண்டியன் - அவன்மகன்
17. பாண்டியவமிசபதாகபாண்டியன் - அவன்மகன்
18. சுந்தரேசபாத சேகரபாண்டியன் - சோழன்பாண்டிநாட்டின் மீது படையெடுத்துப்போந்து தொலைவுண்டான். சுந்தரேசபாத சேகரன் மகன்
19. வரகுணபாண்டியன் - பாணபத்திரன் (பத்ரகாயகன்) இவன் காலத்திருந்தான். வரகுணன் மகன்
20. இராசராசபாண்டியன் - அவன்மகன்
21. சுகுணபாண்டியன் - அவன்மகன்
22. சித்திரரதபாண்டியன் - அவன்மகன்
23. சித்திரபூடணபாண்டியன் - அவன்மகன்
24. சித்திரத்துவசபாண்டியன் - அவன்மகன்
25. சித்திரவருமபாண்டியன் - அவன்மகன்
26. சித்திரசேனபாண்டியன் - அவன்மகன்
27. சித்திரவிக்கிரமபாண்டியன் - அவன்மகன்
28. இராசமார்த்தாண்டபாண்டியன் - அவன்மகன்
29. இராசசூடாமணிபாண்டியன் - அவன்மகன்
30. இராசசார்த்துலபாண்டியன் - அவன்மகன்
31. துவிசராசகுலோத்தமபாண்டியன் - அவன்மகன்
32. ஆயுதப்பிரவீணபாண்டியன் - அவன்மகன்
33. இராசகுஞ்சரபாண்டியன் - அவன்மகன்



34. பரராசபயங்கரபாண்டியன் - அவன்மகன்
35. உக்கிரசேனபாண்டியன் - அவன்மகன்
36. மகாசேனபாண்டியன் - அவன்மகன்
37. சத்துருஞ்சயபாண்டியன் - அவன்மகன்
38. பீமரதபாண்டியன் - அவன்மகன்
39. பீமபராக்கிரமபாண்டியன் - அவன்மகன்
40. பிரதாபமார்த்தாண்டபாண்டியன் - அவன்மகன்
41. விக்கிரமகஞ்சுகபாண்டியன் - அவன்மகன்
42. யுத்தகோலாகலபாண்டியன் - அவன்மகன்
43. அதுலவிக்கிரமபாண்டியன் - அவன்மகன்
44. அதுலகீர்த்திபாண்டியன் - அவன்மகன்
45 கீர்த்திபூடணபாண்டியன் - பிரளயத்தினுலுலகவழிவும் அதன்மறு படைப்புமுண்டாயின.
46. வமிசசேகரபாண்டியன் - மிலேச்சர்களையுந் துருக்கர்களையுந் தொலைத்தான்; மூன்றுஞ்சங்கப்புலவர்களாகச் சரஸ்வதியின் அவதாரம்:—கபிலர், பரணர் முதலாயினர், விக்கிரமசோழன் இவன் காலத்தினனே. வமிசசேகரன்மகன்
47. வமிசசூடாமணிபாண்டியன் - சண்பகமாற (சம்பகபாண்டிய)னென்னும் பெயர்வாய்ந்தவன். நக்கீரர் இவன்காலத்திற் செழித்தோங்கினர்.
48. பிரதாபசூரியபாண்டியன் - அவன்மகன்
49. வமிசத்துவசபாண்டியன் - அவன்மகன்
50. இரிபுமர்த்தனபாண்டியன்
51. சோழவமிசாந்தகபாண்டியன்
52. சேரவமிசாந்தகபாண்டியன்
53. பாண்டியவமிசேச பாண்டியன்
54. வமிச சிரோமணி பாண்டியன்
55. பாண்டியேசுவர பாண்டியன்
56. குலத்துவச பாண்டியன்
57. வமிச விபூடண பாண்டியன்
58. சோம சூடாமணி பாண்டியன்
59. பூபசூடாமணிபாண்டியன். இவன் காலத்தி லொரு பிரளயமுண்டாயிற்று. நக்கீரன் முதலாயினர் அதன்கணடித்துக்கொண்டு போகப்பெற்று மீட்டு முயிர்த்தெழுந்தனர்.
60. பாண்டியகுலேசபாண்டியன் "குலசேகரபாண்டியனென்றும் பெயர்கூறப்படுவான். இடைக்காடர் (மத்தியவனுசிரீ) இவன்காலத்திற் செழித்தோங்கினர். குலசேகரன் மகன்

61. அரிமர்த்தனபாண்டியன்-வாதவூரடிகள் (மாணிக்கவாசகர்) இவன் காலத்திற் செழித்தோங்கினர். அரிமர்த்தனன் மகன்
62. சகந்நாதபாண்டியன் - அவன்மகன்
63. வீரபாகுபாண்டியன்.
64. விக்கிரமபாகுபாண்டியன்.
65. பராக்கிரமபாகுபாண்டியன்.
66. சுரபிபாண்டியன்.
67. குங்குமபாண்டியன்.
68. கற்பூரபாண்டியன்.
69. காருண்ணியபாண்டியன்.
70. புருடோத்தமபாண்டியன்.
71. சத்துருசாசனபாண்டியன்.
72. குப்ஜபாண்டியன். கூன்பாண்டியன் (சுந்தரபாண்டியன்) என்றுங் கூறப்படுவான். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் குலச்சிறை நாயனாரும் (குலபந்தனர்) இவன்காலத்திற் செழித்தோங்கினர்.
73. மதுரேசுவரபாண்டியன்.

## சியூவெல் துரைகாட்டும் பாண்டியராச மரபட்டவணை.

1. குலசேகரபாண்டியன்.
2. மலயத்துவசபாண்டியன்.
3. தடாதகை.
4. உக்கிரபாண்டியன்.
5. வீரபாண்டியன்.
6. அபிடேகபாண்டியன்.
7. விக்கிரமபாண்டியன்.
8. இராசசேகரபாண்டியன்.
9. குலோத்துங்கபாண்டியன்.
10. அநந்தகுணபாண்டியன்.
11. குலபூடணபாண்டியன். இராசசிங்கன்
12. இராசேந்திரபாண்டியன்.
13. இராசேசபாண்டியன்.
14. இராசகம்பீரபாண்டியன்.
15. பாண்டியவமிசப் பிரதீபபாண்டியன்.
16. புருகூதபாண்டியன்.
17. பாண்டியவமிசபதாகபாண்டியன்.
18. சுந்தரேசுரபாதசேகரபாண்டியன்.
19. வரகுணபாண்டியன்.
20. இராசராசபாண்டியன்.
21. சுகுணபாண்டியன்.
22. சித்திரரதபாண்டியன்.
23. சித்திரபூடணபாண்டியன்.
24. சித்திரத்துவசபாண்டியன்.
25. சித்திரவர்மபாண்டியன்.
26. சித்திரசேனபாண்டியன்.
27. சித்திரவிக்கிரமபாண்டியன்.
28. இராசமார்த்தாண்டபாண்டியன்.
29. இராசசூடாமணிபாண்டியன்.
30 இராசசார்த்தூலபாண்டியன்.
31. துவிசராசகுலோத்துங்கபாண்டியன்.
32. ஆயுதப்பிரவீணபாண்டியன்.



33. இராசகுஞ்சரபாண்டியன்.
34. பரராசபயங்கரபாண்டியன்.
35. உக்கிரசேனபாண்டியன்.
36. மகாசேனபாண்டியன்.
37. சத்துருஞ்சயபாண்டியன்.
38. பீமரதபாண்டியன்.
39. பீமபராக்கிரமபாண்டியன்.
40. பிரதாபமார்த்தாண்டபாண்டியன்.
41. விக்கிரமகஞ்சுகபாண்டியன்.
42. யுத்தகோலாகலபாண்டியன்.
43. அதுலவிக்கிரமபாண்டியன்.
44. அதுலகீர்த்திபாண்டியன்.
45. கீர்த்தி விபூஷணபாண்டியன்.
46. வமிசசேகரபாண்டியன்.
47. வமிசசூடாமணிபாண்டியன்.
48. பிரதாபசூரசேனபாண்டியன்.
49. வமிசத்துவசபாண்டியன்.
50. இரிபுமர்த்தனபாண்டியன்.
51. சோழவமிசாந்தகபாண்டியன்.
52. சேரவமிசாந்தகபாண்டியன்.
53. பாண்டியவமிசேசபாண்டியன்.
54. வமிசசூடாமணிபாண்டியன்.
55. பாண்டியேசுரபாண்டியன்.
56. குலத்துவசபாண்டியன்.
57. வமிசவிபூடணபாண்டியன்.
58. சோமசூடாமணிபாண்டியன்.
59. குலசூடாமணிபாண்டியன்.
60. இராசசூடாமணிபாண்டியன்.
61. பூபசூடாமணிபாண்டியன்.
62. குலேசபாண்டியன்.
63. அரிமர்த்தனபாண்டியன்.
64. சகந்நாதபாண்டியன்.
65. வீரபாகுபாண்டியன்.
66. விக்கிரமபாண்டியன்.
67. சுரபிபாண்டியன்.
68. குங்குமபாண்டியன்.
69. கற்பூரபாண்டியன்.
70. காருண்ணியபாண்டியன்.
71. புருடோத்தமபாண்டியன்.
72. சத்துருசாசனபாண்டியன்.
73 குப்ஜன் அல்லது சுந்தரபாண்டியன்.
74. வீரபாண்டியசோழன்.

## உரியால் பாண்டியராச வமிசாவளி.

1. சோமசேகரபாண்டியன்.
2. கற்பூரசுந்தரபாண்டியன்.
3. குமாரசேகரபாண்டியன்.
4. குமாரசுந்தரபாண்டியன்.
5. சுந்தரராசபாண்டியன்.
6. சண்முகராசபாண்டியன்.
7. மேருசுந்தரபாண்டியன்.
8. இந்திரவர்மபாண்டியன்.
9. சந்திரகுலதீபபாண்டியன்.
10. மீனகேதனபாண்டியன்.
11. மீனத்துவசபாண்டியன்.
12. மகரத்துவசபாண்டியன்.
13. மார்த்தாண்டபாண்டியன்.
14. குவலயானந்தபாண்டியன்.
15. குண்டலபாண்டியன்.
16. சத்துருபீகரபாண்டியன்.
17. சத்துருசங்காரபாண்டியன்.
18. வீரவர்மபாண்டியன்.
19. வீரபாகுபாண்டியன்.
20. மகுடவர்த்தனபாண்டியன்.
21. வச்சிரசிங்கபாண்டியன்.
22. வர்மகுலோத்துங்கபாண்டியன்.
23. அதிவீரராமபாண்டியன்.
24. குலவர்த்தனபாண்டியன்.
25. சோமசேகரபாண்டியன்.
26. சோமசுந்தரபாண்டியன்.
27. இராசராசபாண்டியன்.
28. இராசகுஞ்சரபாண்டியன்.

29. இராசசேகரபாண்டியன்.
30. இராசவர்மபாண்டியன்.
31. இராமவர்மபாண்டியன்.
32. வரதராசபாண்டியன்.
33. குமாரசிங்கபாண்டியன்.
34. வீரசேனபாண்டியன்.
35. பிரதாபராசபாண்டியன்.
36. வீரகுணராசபாண்டியன்.
37. குமாரசந்திரபாண்டியன்.
38. வரதுங்கபாண்டியன்.
39. சந்திரசேகரபாண்டியன்.
40. சோமசேகரபாண்டியன்.
41. பராக்கிரமபாண்டியன்.

சியூவெல், தென்னிந்திய சிலாசாதன ஆராய்ச்சி. சம்புடம்-II. பக்கம் 214—220.

தமிழ்க்கவிசரிதம் முற்றிற்று.

தி. மி. சேஷகிரி சாஸ்திரி.

---

## உமையவள்பதிகம்.

---

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆதிசிவனுக்குடம்பாதியுமைமயேயென்ப ரறிவிலாமாந்தர்தாமு
மச்சிவனைப்பிரிந்தனுவேனுமப்புற மியங்குசெயலுளதோசொலார்
சோதியுருவாயசீபாதியெனவடிபணிந் தன்புமேலிட்டுநாளுஞ்
சோர்விலதனுமந்தனைத்துதித்தோதத் துறக்கமுதலாயபதவி
யாதிமுதன்மூவருமடைந்தாரெனிற்பிறகு னருமையளவின்னதெனவே
வடியேனியம்புதற்கெளிதாகுமோவென்ற னன்னையேயழகுறையுமுன்
காதிருபுறத்தினுமிலங்குகுழையொடுபொருத கண்கணின்றாசலாடக்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௧)

அடியேன்படுந்துயரமாற்றவில்லையென்ற னற்பமிகுசிந்தையாலே
யளவிலாத்துன்பத்திடைப்பட்டுவாடினே னயர்ந்திலேனின்னுமின்னும்
மிடிவேறுவாட்சனாடிசேவைசெய்தலே வாழ்க்கையின்பயனென்னவே
வஞ்சமனமெனையவர்தம்வனமுலையினாழ்த்தியே வசமாக்கநானுமவனே [ங்
கொடியபலவெண்ணங்களுட்கொண்டுவெம்பினேன் கோதிலாவுன்னருளெனு
கொங்கவிர்ந்தூர்வெள்ளமதனாலடித்தெனதுகோதொலாமாற்றியருள்வாய்
கடிமலர்கடேவிருகைகூப்பியஞ்சலித் தடியவர்களேத்திநிற்கக்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௨)

மேதினியிடைப்பிறந்தேதுமறியேன்வஞ்ச மேவியுளவாழ்க்கைதனையே
மெய்யெனக்கொண்டுகருமைவிழியினார்களது மேலுள்ளமையலாலே
பேதித்தசிந்தையுடனுவிசோர்ந்திட்டுப் பிதற்றுவேனொருவேளையிற்
பிரமஞானத்தையேபருகியவர்போல ப்ரசங்கிக்கவெத்தனித்து



சேதனமசேதனமெனக்கூறுகொண்டுமே செகமதனைமாயையென்பேன்
சிற்றறிவினேனெனதுபற்றறுக்காமற் சினந்துமுனையேசிறிப்பேன்
காதுபரமதவாதிகட்கருளுவோயென்கொல் கடையேற்புறக்கணித்தாய்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௩)

மண்ணதனின்மானுடப்பிறவியையெடுத்தவர்களை மாட்சிமைபெறக்கருதியே
மரமடர்ந்துள்ளவோர்கானகந்தன்னிலும் மலைமுழையிலும்மற்றுமோர்
தண்ணதனிடத்திலுந்தவமியற்றித்தக்க தன்மையினையடைவர்பிறருந்
தம்மாலியன்றளவுபூசைகள்செய்துனது தாள்பணிந்தேத்திநிற்பர்
பண்ணதுநிறைந்தபலபாடல்களியற்றிடுவர் பணிவிடைகள்பலபுரிகுவார்
பலவானசீவகோடிகளிலும்மென்போன்ற பாவமிகுமாக்கைகொண்டு
கண்ணிருந்தும்முனதுகாட்சிகாணாதவொரு கயவனைக்கண்டதுண்டோ
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௪)

பார்க்கின்றவுலகமும்பரவுலகமென்பதும் பலசீவராசிகளுமே
பரிசிக்கவுள்ளதொருதாவரஞ்சங்கமம் பண்புடையவிந்துநாத
மார்க்கின்றகடலுமற்றுள்ளயாவும்மவ் வெவற்றுரியதொழிலுறவண
மாணையிட்டோனொருவனுகவேண்டுமம்மவைக ளாக்கியோனாகுமவனே [ர்
தார்க்கொன்றைவேய்ந்தசிவனேயென்பர்வேறுதிருமாலென்பர்புத்தரென்ப
தண்ணளிசுரக்குமுனையேகடவுளென்பர்சிலர் தன்மயப்பிரமமென்பர்
காக்கின்றநீயெனதுகன்மிடந்தீரக் கனிந்தருடலென்றுபுகலாய்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௫)

வன்மைமிகுநெஞ்சினேன்சன்மமொருகோடியாம் வாரிதியினிடைமூழ்கியே
வாழ்வுமெய்யென்றுமிவ்வுலகமிலையென்றுமே வாதித்துவாணுட்பய
னின்பமுறுமாதர்தங்கல்வியாமென்றுமிப் புவியிடத்துக்கண்களா
லினிதெனக்கண்டதேகாட்சியாமிதனைநாங் கொண்டதேகோலமாமென்
றுன்மகிமையறியாதுலைக்குலோகாயத வுறுஞ்சுழலில்முக்கமூழ்கி
யுயிர்பருகுநோக்கியர்களுடலெழுகின்றசுக வுள்ளருவியீர்த்தலைப்பக்
கன்மவாரிதியிடைக்கப்பலேயெற்றுண்டு கதறினேன்கரையேற்றுவாய்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௬)

தெய்வமுளதென்றுபலதேவாலயஞ்சென்று தேகமதினீறணிந்துந்
தேவாரமோதியுந்திருவடிபணிந்துபின் றிருவிழாச்சேவித்துமே
மெய்சிலிர்த்துக்கைகள்கூப்பியேமேனோக்கி மெய்ம்மறந்துங்கண்ணினீர்
மேருமலையருவியாமென்னச்சொரிந்துபின் மேன்மையுறவிரதம்பல
செய்தாரட்போகவிச்சென்றுளிலோதெய்வ முளதோவெனுஞ்சங்கைதான்
செவ்வனேயென்றன்துபிடர்பிடித்தூந்திடச் செய்யும்வகையேதுமறியேன்
கைதொழுதவன்பரைக்கைவிடாதருணித்ய கல்யாணிகாத்தாளுவாய்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௭)

தாயினுநமக்குற்றபெருமித்தரணியிற் றானுமிலையென்னி னுலகத்
தாயாமுனைத்தவிரவேறுகதியுள்ளதோ தமியேனையாதரிக்கச்
சேயெனையினிக்கதறவிடுவையேயுலகுளா ரேசவாருன்னையதனாற்
செய்யவிருபங்கயக்கையிலெனையேந்தியே சிரமுமோந்தெனைநோக்குவாய்
பேயிவனெனக்கொண்டுபேசாதுவிடுவையேற் பேதையுன்கலைபிடித்துப்
பெருங்கூச்சலிட்டுப்பிறர்க்குத்தெரித்துனைப் பிரியாதுசெய்வேனியான்
காயிலையருந்தித்தவஞ்செய்யுமன்பரைக் காக்குநீயெனையாளுவாய்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௮)

பாடானபாடெலாம்பட்டேனினித்துயர மெதுவுமேபடயாற்றலேன்
பஞ்சைபோலுன்பாதமேத்தாதபாவியர்கள் பாற்சென்றுகெஞ்சவென்னை
நாடாதுதன்னுடையமார்பையேநாடிச் செருக்குற்றநாய்களையுமே
நன்மையுஞ்செய்துமென்பல்லைத்திறந்தவரை நாணுவிதம்புகழ்ந்து
பாடாதுபாடிமிகவேத்தித்துதித்துமவர் பார்வைகோணாதபோழ்து
பரிவோடுநங்குறைகளைப்புகலவவர்முகம் பரிதியெதிரிந்துவாகக்
காடானபல்வகையவெண்ணங்கலங்கிடக் கைபிசைந்தேகதறுகோ
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௯)

அறமென்பதின்னதென்றறியாதபாவிநா னரனடிதொழாதபாவி
யடியவர்களைக்கண்டுநொடியாகிலும்மவரை யாதரிக்காதபாவி
பிறவியையொழிக்கவேபேரின்பநிட்டையைப் பேணுதலிலாதபாவி
பிரமன்முதலாயுள்ளதேவரைச்சற்றுமே பேசிடாப்பெரியபாவி
யுறுதியுடனுட்கசிந்தொருவேளையாயினும் முன்னைநினையாதபாவி
யுன்னுமமதையோதுமடியார்களுரைகேட்டு முள்ளன்பிலாதபாவி
கறுவுநெஞ்சங்கொண்டபாவியெனையாட்கோடல் கன்னியுன்கடனதன்றோ
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௧௦)

நீயுலகமாதாவெனப்புகலலுண்மையே னின்மக்கள்பலபேர்களு
ளினதருடனக்கிலக்காகவேவேண்டுமந் நீதியின்றொருவனே
நேயமுடனீகுறிப்பிட்டகையுண்மையே னோதாயபயமீவாய்
நெடியகுணசாலியேநின்றனருடந்தனது நேயனைக்கரையேற்றுவாய்
தூயதாகியசிந்தைமேவியேயுன்றனைத் துரியநிலையிற்றுதித்துத்
துலங்கியிடுஞானியர்கள்வாழியவர்சிந்தையிற் றுன்னுமுன்னடியும்வாழி
காயமுடனுன்னரியகாட்சியீந்தருளவல காதளவுநீண்டகண்ணாய்
கலைபலவுமோலமிட்டலறியுங்காணாத கௌமாரிகௌரியுமையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பி. ஏ. பிரணதார்த்திஹரசிவன்.



## தனிப்பாசுரத் தொகை.

### XXXVI. வெகுளி.

வெகுளித் தீயே! வெகுளித் தீயே!
துறக்கு மனத்தையுங் கறக்குங் காற்றே!
உற்ற குணக்கல னெற்றுஞ் சுறவமே!
உடற்பெரும் புற்றினின் றுடன்றெழு பரவே!
தெள்ளிய வறிவின ருள்ளத் தடத்தையும்
பொள்ளென வுழக்கும் புல்லிய கடாவே!
வீட்டுநூல் வலவரையு மாட்டிடும் பேயே!
சேர்ந்தார்க் கோறல் சார்ந்த சினமே!
தீயரைக் காணிற் சேயரா யொதுங்குக
வென்ற முதுமொழி நன்றென வோர்ந்தனென்;
நீயுந் தீயோய் துயை யல்லையால்;
ஆதலின் விலகிப் போதுவல் யானும்.
நன்னெறி யொரீஇப் புன்னெறிச்
செலுத்துந் தன்மைய சிறுமைத் தியமே!

### XXXVII. மயக்கம்.

மயக்க விருளே! மயக்க விருளே!
தியக்க மென்னுஞ் சிறையகப் படுமுயிர்
தப்பியே காவகை தகைக்குறுங் கதவமே!
ஒப்பில்வான் மணியென வொளிருங் குரவர்
செப்புயர் மாற்றச் செங்கதிர் தோன்றலும்
புல்லிய ருளக்குகை புகுதுங் கூகாய்!
நல்ல நெறியினை நாடுபு மாணவர்
செல்லுழிக் குழறுந் தீயையால்! உறுதிக்
கொடியி னுதவி கூட்டிநிற் களைகுவல்.
பொய்ம்மெய் யாகவு மெய்பொய் யாகவுந்
தருபொலா முகுரமே! தனித்தெருட் குசிபூ
டுருவுமா றுன்னை யுறக்கிழிப் பல். எனை
மெய்ப்பொருட் டலைவியின் விலக்கினுந்
துய்ப்பல் வட்டையிற் றுன்னுமான் ஞமலியே!

பரிதிமாற் கலைஞன்.

# விவேகசாகரர்

அல்லது

# மதியின்மகத்துவம்.

---

## 2-ஆவது அத்தியாயம்: (32-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

---

சின்னேரத்தில் இருவருந் தமக்குள் தீர்க்காலோசனை செய்துகொண்டு, சற்றுந்தாமதியாது விடைபகர்ந்த விவேகசாகரருக்கு எதுகொடுப்பினுந் தகுமென முடிவுக்கு வந்தபின்னர், அவரைப்பார்த்து "ஐய! உட்காருக. உமது மதியின் மகத்துவம் என்ன தானுவமை பெறும்? உம்மைப்போலெங்கனு மெப்பொழுது மெவரையும் பார்த்துமறியோம் பகரக் கேட்டுமறியேம். உமக்கு வேண்டுவதுயாதோ வதனையளிக்க முழுமனமுடையேம்" என்று வியப்பொடு நவாபு விளம்புவாரானார். இதுகேட்ட விவேக சாகரரோ தமக்குள், 'இதற்கு மகிழ்ந்தனரே! என்னே யிவர்மதி! என்னே யிவர்தயை!' யென்று நினைந்துகொண்டு, நவாபுவை நோக்கி, "இலனென்னுமெவ்வமுரையாமையீதல், குலனுடையான் கண்ணேயுள" வெனு மான்றோர் வாக்குக்குச் சான்றுவார்நீரே. ஆயினும், நானுரைத்தியுற்றது நீரளிக்கவல்லீரோ வென்பது சிறிது சந்தேகந்தான்" என்று கூறலும், "ஹா! நன்று, நன்று. குவலயமெல்லாங் கட்டியாளுங் கோவாகிய யாமோ வல்லோமல்லோம்? அதைப்பற்றியையஞ்சற்றும் கொள்ளாதீர். நிற்க, நீருரைத்த குறளுக்குப் பொருளை விளக்கினால் நலமாயிருக்கும்!" என்று நவாபு அதிசயமனத்தொடு வேண்டிக் கொண்டனர்,

உடனே, விவேகசாகரர் தம்மனத்தில் அதன்பொருள் பலவற்றையும் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து ஒழுங்குபடுத்து வைப்பார்போற் கொஞ்சநேரம் தன்சிரசைக் குனியவைத்துக்கொண்டு மௌனஞ் சாதித்தபின்னர்க் கீழ்வருமாறு அக்குறளின் பொருளைச் சரமாரியாய்ப் பொழிந்தனர்:—(1) இரப்போனைநேர்படவிலனெனு மெவ்வமுரையாமையீதல், கு-ள. (2). இரப்போனுக் கீந்தனுப்பிய பின்னவனைப் புறங்கூறுக விலனெனு மெவ்வமுரையாமையீதல், கு-ள. (3) தன்னையிலனென்னு மெவ்வம்பட விரப்போனே யுரையாமையீதல், கு-ள. (4) தன்னையிலனென்னு மெவ்வம்படப் பிறருரையாமையீதல், கு-ள. (5) இரப்போன் றானிலனென்னு மெவ்வமுரையாமை முன்னீதல், கு-ள. (6) இரப்போனிடத்துந் தான் றன்னிலம்பாடா மெவ்வத்தினை யுரையாமையீதல், கு-ள. (7) தனது கொடைக்குறை நிரம்பவேண்டியாதல், தன் கொடைப் பெருமையைப்பிறர் புகழவேண்டியாதல் தன் வாயினானே (இல்லா) இலம்பாடா மெவ்வத்தினையு முரையாமையீதல், கு-ள. (8) கொ



டைபேற்றுக் கொண்டவன்றன் எச்சவிலம்பாடா மெவ்வத்தினைத் தீர்க்கும் பொருட்டு எங்கணும் போயுரையாமையீதல், கு-ள. (9) தானுளனாகவும் (எதிர்காலநோக்கி) வஞ்சமாக விலனென்று கழியுமொருவன் றன்னில்லாப் படிற்று எவ்வத்தினை யுரைத்துத் திரிதல்போல் உரையாமையு மீதலுங், கு-ள. (10) தானிலனாகவும் (பிறராலீகை யேவப்படாவாறு) இரப்போர்வர வஞ்சித்தன்னிலம்பாடா மெவ்வத்தினைப் பிறரறியவேண்டி யுரையாமையு மேன்றவர்க்கீதலும், கு-ள. (11) தானுளனாகவும் கொடைக்குணமின்மை பற்றிப் பிறரிலனென்னு மெவ்வமுரையாமையீதல், கு-ள. (12) இரந்து ஈயப் பெற்றோன்றன்பால் வந்தோர் மாட்டும் தானிலனென்னு மெவ்வமுரையாமையீதல், கு-ள. (13) கொடுப்போன்றனது கொடைக்காலநீட்டிப்பான் இலனென்னு மெவ்வமுரைக்கப்படாமையீதல், கு-ள. (14) தன்கொடைக் குறைநோக்கிப் பிறர் தன்னை யிலனென்னு மெவ்வமுரை யாமையீதல், கு-ள,—

இங்ஙனம் பல்விதமாகப் பொருள் நல்விதமாக வுரைத்துக்கொண்டிருக்குந் தன்மையை வியப்புமருவியங்காத்து கேட்டுக்கொண்டிருந்த நவாபுவானவர், "ஐயா! ஓரடிக்குப் பொருளாயி ரென்பதடிக் கென்னவாம்! முடிந்ததோ? இன்னும் பாக்கிதானோ?" வென்று கேட்டலும், விவேகசாகரர் "ஆய்விட்டது. இன்னுங் கொஞ்சந்தான்" எனவிநயமாய் மறுமொழி மொழிந்துகொண்டே, "(15) இலனென்னு மெவ்வமுரையாமையு மீதலும், குலனுடையான் கண்ணேயுள" வென்றுரைத்தனர்.

நவாபு:—முடிந்ததா? பதினைந்து உரை கூறியு மதன் பொருளோயவில்லையா? விரிந்துகொண்டே போகின்றதே. நும்மதிநூற்றுத் தான்போலும். ஆஹா! நான் கேட்டதேயில்லை. நமது பிரபல சமஸ்தானவித்வான் முன்னொருகா லிப்பாவுக்குப் பொருளுரைக்கும்பொழுது பரிமேலழகருரையைத்தான் சண்டப் பிரசண்டஞ் செய்தனரேயன்றி இவ்விதமாக மதிநுட்பத்தைக்காட்டும் பல்பொருள் பகர்ந்திலர். முடிந்ததா?

விவேக:—இன்னு மொன்றே யொன்று. அப்பொருளேப்பொருட்குந் தாய்ப்பொருள். அதன் பொருளையுரைக்க ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் முடியாததாகும்.

நவாபு:—அஃதென்னே? அத்தகையினதாயின் அதையுரையாதோ மற்றதையுரைத்தீர். நீர் திருவள்ளுவரினும் பெரியவரே! ஏனெனில் அப்பாவையாத்துழி யவரிப்பொருள் பலவற்றையும் நினைந்துகூட விரார்ரென என் சிற்றறிவுக்குத் தோன்றுகின்றது.

விவேக:—(தனக்குள்) ஆம்! உமதறிவுஞ் சிற்றறிவே! அதன் மதிப்புமத்தகைத்தே! (நவாபுவைப்பார்த்து) அப்படியன்று. ஆதிசேஷனாலுரைக்கப்படாப் பொருளுக்கு என்பொருளே மூலமாதலானும், என்பொருளுக்

ளுத் திருவள்ளுவர் குறளே மூலமாதலானும், அன்றியும், அவர் யாவுள் என் பொருளும், என்பொருளுள் ஏனையர் பொருளுமமைந்து கிடத்தலானும், ஆதி கருணராகிய திருவள்ளுவனாரே பெரியராவர். அவரே பொப்புயர்வற்றவர்.

நவாபு :—இருக்கட்டும். அப்பொருளென்னை ? உரைத்துவிடும். எல்லோரும் அங்காந்து அலமருகின்றனரே. உமது வாயினின்று வருவதெல்லாம் வம்பென்று முன்னரேயே கேட்டுளோம். அது சாரியாய்த்தானிருக்கிறது.

விவேக :—வேறென்ன ? இதுதான். (16) இக்கூறப்பட்ட பொருளேயன்றி வேறெப் பொருள்படவுந் தானிலனென்னு மெவ்வத்தினை யுடைபடக் கிடவாமையீதல் குலனுடையான் கண்ணேயுள.

இவ்வுரை கூறக்கேட்ட சபையார்கள் பிரமையும் ஆவலுந்தீர்ந்து ஆநந்த பரவசத்தராய் அகமகிழ்ந்தனராய்த் தத்தம் அபிப்பிராயத்தைப் பற்பல விதமாகப் பகருவாராயினர். சிலர் இவர் கம்பர்தாமோ வென்றனர். சிலர் இவர் காளமேகமோ வென்றனர். சிலர் இவர் ஒட்டக்கூத்தரோ வென்றனர். சிலர் புகழேந்தியோ வென்றனர். சிலர் இவர் பரிமேலழகனைப் பழிக்கவந்த அரிமேலழகரோ வென்றனர். சிலர் சிவபெருமானை யெதிர்த்த நக்கீரரோ வென்றனர். சிலர் அழுக்குக்குள்ளிரும் மாணிக்கமே யென்றனர். சிலர் பார்க்கக்கரியவராயினும் பார்த்தாற் பெரியவரே யென்றனர். சிலர் காட்டத்திற் கனலும் பாலினெய்யும் போற்றனது கருமேனியி லருமதியுடையரே யென்றனர். சிலர் விகடகவியே யென்றனர். இன்னுஞ் சிலர் சிலர் பலபல விதமாய்ப் புகழ்ந்து கொண்டிருந்தனர். இங்ஙனந் தத்தம் அகத்துளடங்கா வதிசயப் பெருக்கையவர்பேரில் வாரிவாரிச் சொரிந்தபின்னர், நவாபு மந்திரி முதலியவர்களின் சம்மதத்தின்பேரில், 'வித்வான் விகட', வென்னு மிருமொழியுஞ் சேர்த்து 'வித்வான் விகடவிவேக சாகரர்' என்று பட்டங் கொடுத்துச் சபையோர்களுக்கு விடைகொடுத் தனுப்பலாயினர்.

2-ஆவது அத்தியாயம் முற்றிற்று.

தே. ச. ஆண்டியப்ப பிள்ளை.

---

## ஆசாரவிளக்கம்.

---

### சூத்திரம் - 2.

19. **ஔஷதவாதிகள்:** மூலிகைக்கற்பம் செந்தூராதி கற்பம் முப்பூக் கற்பம் என்னப்பட்ட கற்பபேதங்களை யுண்டு ராஜததாமத ஆகாரங்கள் அசுத்தமரண வாயு இடம் மனிதர் சேர்க்கை காமம் குரோதம் அசூயை அகங்



காரம் மோகம் மனச்சலனம் பொய்களவு கொலை கள்முதலிய தீயனயாவும் பத்தியமாக வர்ஜித்து சத்வாகாராதி சுத்தவாயுவாதி சேர்க்கை சாந்தம் பொறை கருணை நிச்சலன சித்தாதிகளை நற்பத்தியமாகக் கொண்டு [illegible]ம் மனம் ஆன்மாச்சுகமுஞ் சித்தியு மடைதல் முத்தியென்பர். உண்மையிற் கூறில் இவர் சதாசாரங்கள் முற்றும் பரம்பொருளாய்க் கொண்ட சதாசார சம்பன்னுக்ரேச ரென்னப்படத்தக்கவராவர்.

20. **பாசுபதர்:** உயிரே எங்கும் நிறைந்த எல்லாப் பொருளுமெனவும் உபவீதாதிதுறந்து முத்தண்டு கௌபீனந் தரித்துத் தவம்புரிதல் முத்தியெனவுங் கூறுவரேனும் சுகாதாரமான கொள்கைகளிற் பலவும் நெறிகளிற் பலவும் கைக்கொள்வர்.

21. **வாமிகள்:** சத்தியே ஆன்மாக்கள், சிவன் பாசமாகிய பிரபஞ்சம் ஆயது; அவ்வறி வடைந்தார் மதுபானம், புரிந்து எந்தச்சாதி மாதரைப் புணர்ந்தாலும் என் ? எல்லாஞ் சத்தியே என்பர்.

22. **பைரவர்:** ஆதி வைரவனே அட்டமூர்த்தமாயும் எல்லாவுயிர்க்குமுயிராயுமிருப்பன் ; அவனை உபாசித்து மதுபான இரத்த பானங்களைப் புரிந்து வீரத்வங் குறையாமல் அவனுருவாயிருப்பது முத்தி யென்பர்.

23. **காளாமுகர்:** அட்டமி சோமவாரம் மாத சிவராத்திரி முதலிய சில விரதங்களையனுட்டிக்கில் ஜீவன் அஞ்ஞானநீங்கி ஆதித்தனொளியில் நக்ஷத்திர வொளிபோலச் சிவனிற்கலக்கும் என்று சௌசம் ஸ்நாநம் சுசி ஆகாரச்சுருக்கம் கொல்லாமையாதி நன்னெறிகளை விசேடமாய்க் கொள்வர்.

24. **மகாவிரதியர்:** இலிங்கத்தைத் தலைகழுத்துப் பூணூலாதிகளிற் றரித்து நன்னெறி நிற்கில் முத்தியென்று தீநெறியின் விலகி நன்னெறியையே கடைப்பிடித்துச் சுசியாதி யாசாரங்களை யபேக்ஷிப்பர்.

25. **சித்தாந்திகள்:** பதியாகிய பிரமம் ஒன்று. பசு பதி பாசம் மூன்றுமுள்ளன. பாசமாகிய ஜகத்து மாறுதலன்றி முற்று மில்லாமலே போகாது. ஜீவர்கள் தங்கள் புண்ணிய பாவங்களுக்கும் பக்குவங்களுக்கும் தக்கபடி பல கொள்கைகளையுடைய பல மதத்தினராவர். யார் யாரெம்மதத்திற் பிரவிருத்திக்கின்றனரோ அவரவர்க்கு அம்மதமே நிலாக்யமென ருசிக்கும். அறியாத செயலால் வருந் துக்காதிகள் அவற்றின் றன்மைகளை யறிதற்கேதுவாவன போல நாத்திக மதங்கள் ஆத்திக மதங்களை யோர்தற்கும் கீழ்ப்பட்ட மதக்கொள்கைகள் மேற்பட்ட மதங்களை யுணர்தற்கும் ஏதுவாகின்றன. அக்கராப்பியாசம் அரும்பெரு நூல்கள் படித்தலுக்கும் அவற்றினுண்ணிய பொருளை யுணர்தலுக்கும் பரம்பரா சாதனமாதல் போல மதங்களெல்லாம் பரம்பொருளை யுணர்ந்தடைதற்கும் பரம்பரா சாதனங்களாம். ஆகலின் மதமொன்றுந் தள்ளத்தக்கதன்று.

ஞானமே முக்திக்குச் சாக்ஷாத் சாதனம். சகல வுயிர்க்குங் கடவுளொருவனாதலாற் பாரபக்ஷமின்றிச் செயலுக்குத்தக்க பலனருள்வன். ஒருவன் சைசவப் பருவத்தில் ஆகார நித்திரையை மாத்திரம் வெஃகுவன். எதிர்ப்பட்ட மண் முதலியனவும் ஆகாரம் போலுண்பன். 3 - வயதில் வேடிக்கை விளையாடல் பாராட்டல்களையே விரும்புவன். அப்பொழுது சர்ப்பம் தேள் அக்கினியாதிகளையுந்தனது விளையாட்டுக் கருவிகளாக அவையிற்றின் றீங்கறியாது நச்சுவன். 4, 5, வயதில் அவற்றோடு அலங்கார முதலியன விழைவன். 6,7, வயதிற் பிராணிகளின் றுன்பறியாது வருத்தியாடலைமகிழ்ந்து நயப்பன். முதற்புத்தகங்கற்குங்கால் அதனைக் கடினமெனவோர்வன். 2-வது 3-வது 4-வது புத்தகம் பயிலும்போழ்து அஃதஃதை யுயர்வென்றும் முன்படித்தன தாழ்ந்தனவென்றும் புந்திசெய்வன். கல்விகேள்வியநுபவங்களாற்றான் முன்னரோர்ந்தனபிழை இப்போழ்தோர்வனசரியான வென்றுணர்வன். யௌவனபருவத்துக் காமநுகர்ச்சியே பொருளெனமதிப்பன்: பலமகளிர் விழைச்சாற் பலரோகங்களை யடைந்து வருந்திக் காமந் துக்கமுந் தருமெனவுள்ளுவன். உலகப்பொருளின்பங்களையே பொருளென ஆர்வங்கூர்வன். முதிர்ந்தவயதாம் பொழுது அறிஞர்பாற் கேள்விநூலோர்வு தன்னநுபவம் ஆதியவற்றால் அறிவுமுதிர்ந்து தான்முன்னன்றென்றறிந்து செய்தவிஷயங்களிற் பல தீயனவாதலும் அவைகளிற்றான் பேதஞானங்கொடு பிரீதிவைத்து அதனாற் பல தீமைசெய்ததும் சென்றன கருதியுணர்ந்து தானறிந்து செய்த விஷயங்களெல்லாம் தன் பருவத்துக்கும் அறிவுக்குமேற்கத் தானறிந்த வண்ணம் இச்சித்துச் செய்தனவன்றி உண்மையிலங்ஙனமல்லவென்றும் தன் சிறு பருவங்களிற் பலரிடங் கூடியாடியவர் சொற்களை நம்பிக் காதலித்து முயன்றனவெல்லாம் தான் அவைகளின் நன்மை தீமையுயர்வு தாழ்வுகளை யுணர்தற் கேதுவாயினவென்றும் ஊகித்துத் தெருண்டு உயர்நெறிகடைப்பிடிப்பன். இங்ஙன மநுபவத்துக்காண்டுமன்றே. இவ்வண்ணமே உயிர்கள் தத்தங் கருமபக்குவ தாரதம்மியத்தாற் பல வேறுபட்ட சமயங்களிற்றாம் பற்றிய வொன்றையே வுயர்வென்றும் ஏனையவென்றும் பயனற்ற தீநெறிகளென்றும் உணர்கின்றனர். அவையெல்லாம் அனைவர்க்குந் தெய்வ மொன்றாகலின் உயர் ஞானமடைதற்குச் சாதனமா மென்பர்; சுகாதாரங்களாகிய நல்லாகாரம் நற்சேர்க்கை நல்லிடஞ்சாரல், நற்பயிற்சி நன்னெறி ஆதிய ஞானசாதனங்களாகிய சகலசதாசாரங்களையுங் கைக்கொள்ளாநிற்பர்.

இனி உடல் இன்றிமனுதி (ஆன்மா) இன்று; நல்லாகாராதியின்றி அவ்விரண்டுமின்று. ஐம்பூதங்களும் பௌதிகங்களுமின்றி அம்மூன்றுமின்று; அம்மூன்றும் பூதபௌதிகங்களுமின்றி உலகமில்லை. ஆகலின் உலகமும் உடலுயிர்களும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத் துணையுஞ் சாதனமுமாம் ஆகவே உலகிற் பொருள்கள்யாவும் உடலுயிர்களின் பிரயோசனகாரியாக



வே இருக்கின்றன. பிருதிவிக் கூறாகிய **இரும்பு கத்தி ஜலம் அக்கினி பாஷாணம் பாம்பு** தீங்கை விளைக்கின்றனவே யெனில் அவை உடலுயிர்களுக்கு நன்மை விளைக்கும் வகையறிந் துபயோகிக்குங்கால் இன்றியமையா தனவாயும் அவசியமாயினவாயும் ஆம். எங்ஙனமெனில் அவைமிக்க வுபயோகமான கருவி ஆகாரம் பாகித்தல் ஔஷதங்களுக்காம். பொதுப்பட நல்லதிரவியங்கள் நன்மையும் தீயதிரவியங்கள் தீமையும் பயப்பனவேனும் உபயோகிக்கும் வழியால் அவைமாறவுஞ் செய்யும். நலந்தீங்கு பயப்பன வறிந்துபயோகித்தற்கு அநுபவமுடையார்பாற் கேட்டறிதல் வேண்டும். அவ்வநுபவவறிவின் றொகுதியே இந்நூலாதலின் இது சுகம் நன்மைவேண்டுவாரனைவர்க்கும் அத்தியாவசியம் என்பது சொல்லாமே யமையும்.

(இன்னும் வரும்.)

விருதை - சிவஞானம்.

---

## சமாசாரங்கள்.

---

சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப்பரீட்சை கர்த்தர்கள்:—

A. 1. ம-ள-ள-ஸ்ரீ, வி. டி. சேஷாத்திரியாசாரியரவர்கள், பி. ஏ., [அக்கிராசனாதிபதி], 2. ம-ள-ள-ஸ்ரீ, வி. கனகசபை பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல். 3. பிரமஸ்ரீ, எஸ். நாராயணசாமி ஐயரவர்கள், பி. ஏ., 4. தண்டலம் - பாலசுந்தரமுதலியாரவர்கள். 5. திருமணம். செல்வகேசவராயமுதலியாரவர்கள், எம். ஏ. 6. ரெவரண்ட் லாஜரஸ் அவர்கள். பி. ஏ. [இவர்கள் யாவரும் பிரதம கர்த்தர்கள்].

B. 1. பிரமஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள்; பி. ஏ. 2. பிரமஸ்ரீ. ஏ. வி. பஞ்சநாதஐயரவர்கள், பி. ஏ. 3. ம-ள-ள-ஸ்ரீ, சி. கோபாலராவவர்கள், பி. ஏ. 4. ம-ள-ள-ஸ்ரீ, வி. சி. சேஷாசாரியரவர்கள், பி. ஏ., பி. எல். 5. ம-ள-ள-ஸ்ரீ, பம்மல். சம்பந்தமுதலியாரவர்கள், பி. ஏ., பி. எல். 6. பிரமஸ்ரீ, சி. வி. சுவாமிநாதையரவர்கள். [இவர்கள் யாவரும் உதவிக்கர்த்தர்கள்.]

***

**இந்தியன் சிவில் சர்விஸ்:**—கி. பி. 1897 - ஆம் வருஷத்தினிறுதியில் திருவிடை மருதூர்-பிரமஸ்ரீ, இராசப்பையரவர்களுடைய கனிஷ்ட குமாரர் ஸ்ரீ ஆர்-நாராயண ஐயரவர்கள் இந்தியன் சிவில் சர்விஸ்ப் பரீக்ஷைக்குப் படிப்பதற்காக இங்கிலாந்துக்குச் சென்றனர். சென்றவர் தம்முடைய ஜாதி குலாசாரமுதலியன கெடாமைப் பொருட்டுத் தமது சகோதரரையும் உடனழைத்துக்கொண்டு போயிருக்கின்றார். இந்தியாவைக்காட்டிலும் இங்

னேர்ந்து எவ்வளவோ அதிக மடங்கு குளிர் மிகுந்த பூமியாதலின் இவ்விருவரும் ஒருவித நோய்க்கும் இலக்காகாது தப்பியது இத்தென்னிந்தியாவின் அதிருஷ்டமேயாம். இவர் சில மாதங்கட்கு முன்னர் நிகழ்ந்த 'கேம்பிரிட்ஜ் ஹிஸ்டரி ட்ரைபாஸ்' என்னும் கடோரமான பரீட்சையில் மிகவும் கவுரவத்தோடும் வெகுமதியோடும் முதல் வகுப்பில் முதலாவராகத் தேறி யாவராலும் கொண்டாடப்பெற்றனர். இப்பொழுது சில நாள்கட்கு முன்னர் நடந்த 'இந்தியன் சிவில் சர்விஸ்' பரீட்சையிலும் இத்தென்னாடு முழுவதும் களிபெருங் களியாட்டயரும்வண்ணந் தேறினார். இனி இவ்வளவோடு நின்றுவிடாமல் அவ்விடத்திலேயே அவர் 'பாரிஸ்டர் அட்லா' பரீட்சைக்கும் படித்துவாரா நின்றனரெனக் கேள்வியுறுகின்றோம். அதன்கண்ணும் அவர் தேறுவாரென்பதற் கெட்டுணையு மையப்பாடில்லை. இது நிற்க. சென்னைக்கிறித்தவ கலாசாலையிற் சரித்திரபாடஞ் சொல்லும் வித்வான் கெல்லெட் துரையவர்கள் சீமைக்குத் தாம் பர்லோவிற் சென்றிருந்தபோது நம்முடைய நாராயணையரவர்களைப் பார்த்தனரெனவும் அங்ஙனம் பார்த்தபோது அவர்கள் இருவரும் மிகுந்த ஆசார சீலர்களாயிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனரெனவும் கேள்வியுறுகின்றோம். இவ்விடயத்தைச் சென்னை "டைம்ஸ்" பத்திரிகையின் வாயிலாகவும் உணரலாம். இனி இச்சென்னை இராசதானியினின்றும் எவ்வளவோ நிர்ப்பந்தத்தின்பேரிற் பலவிதமான இடர்ப்பாடுகளையுங் கடந்து கொண்டு சீமைக்குச்சென்று தாமெடுத்த காரியங்களில் தோல்வியடையாமல் வெற்றிபெற்று விளங்குறூஉம் நமது நாராயணையர் மாட்டியாமனைவரும் மிகவும் வந்தனமுள்ளவராயிருத்தலன்றி அவர் சீமையினின்றும் புறப்பட்டுச் சென்னைக்கு வருங்காலத்தில் அவரை அவரது சகோதரருடன் நமது குழூஉவிற் சேர்த்துக்கொள்ளவேண்டுவதல்லாமல் அவர் பொருட்டு எல்லாம் வல்ல முழுதற்கடவுளுக்குத் தெள்ளேணம் கொட்டுவோமாக.

***

**சென்னைத் திராவிட பாஷாசங்கம்**:—சென்ற செப்டம்பர்மாதம் இருபத்துமூன்றாந்தேதி சனிக்கிழமை யன்று மாலை இச்சங்கம் மறுபடியும் கூடிற்று. இச்சங்கத்தின் தொடக்கத்தையும் இஃது ஏற்பட்டதற்குக் காரணங்களையும் இது மேற்கொண்டு முயலு நோக்கங்களையும் பற்றி விரிவாய் யாம் முன்னொரு சஞ்சிகையில் எழுதியிருக்கின்றோம். இப்பொழுது கூடிய பொழுது ஐவர் கௌரவ அங்கத்தினராக விரும்பித் தத்தம் பெயர்களைச் சங்கத்தின் காரியதரிசியாரவர்களிடம் எழுதிக்கொடுத்திருக்கின்றனரென்பதும் ஏறக்குறைய நூற்றுமுப்பதின்மர் மேற்குறித்த சங்கத்தின்கட் சாதாரண அவயவிகளாகத் தாம்விரும்புமாற்றை அன்னார்க்குத் தெரிவித்திருக்கின்றனரென்பதும் பத்திரிகைகளிற் கண்ணுணர்ந்தோம். இச்சங்கம் இன்ன தினத்திற் கூடப்போகின்றதெனத் தக்கவாறு யாவர்க்கும் புலப்



படும் வண்ணம் பிரசுரிக்கப்படவில்லையென்று சிலர் எம்மிடத்துக் கூறுகின்றனர். இஃதுண்மையேல் மிகவும் பரிதபிக்கத்தக்கதே; ஆயினும் சங்கம் முன்னுக்கு வரல்வேண்டுமென்பதும் நீடூழிகாலம் நிலைத்துநிற்கவேண்டுமென்பதும் பலர்க்கும் பயன்படத்தக்க வழிகளில் அஃதுழைத்தொழுகவேண்டுமென்பதும் யாவரும் விரும்பும் விஷயங்களாம். இனி இச்சங்கத்திற்குப் பிரிவுகள் மதுரை, திரிசிரபுரம் முதலிய தமிழ்நாட்டு நகரங்களிலும், மைசூர், இராசமகேந்திரபுரம், திருவனந்தை முதலிய பிறநாட்டு நகரங்களிலும் ஏற்படுத்தப்படல்வேண்டுமென்று அச்சங்கத்தார் விரும்பும்வண்ணம் அவைகள் வேண்டியவா றேற்பட்டுத் தழைத்தோங்குவனவாக. அன்றியும் இச்சென்னைமாபுரியின்கண் இயன்றுள இச்சங்கத்திற்கு அவயவிகளாகப் பலரும் சேர்ந்து ஒருங்கே உழைத்து நந்தம் திராவிடபாஷைகளனைத்தும் பிறபாஷைகட்குத் தலைதாழ்த்தலின்றி ஏக்கழுத்தத்தோடும் எழுந்துநிற்குமாறு முயல்வாராக.

***

**மகாபோதி சங்கம்**:—வங்காளத்திலிருந்து **தர்மபாலர்** என்ற பௌத்த சமய குரவரொருவர் சென்னைக்குவந்து நான்குவாரமாகின்றன. சென்ற ௴ 27-ஆம் தேதி மாலை திருவல்லிக்கேணியிற் கடற்கரை யோரத்தெருவில் பி.ஏ, சிங்கார வேலுச்செட்டியார் அவர்கள் வீட்டுத் தெருவாயிலிற் சபைசேர்ந்துழி மேற்கூறிய தர்மபாலர் அவர்கள் உபந்யசித்தனர். அதன்கண் இந்தியாவிற் பறையர் செம்படவர் சான்றூர் முதலான சுமார் நூறு லக்ஷம் பேர் இழிகுலத்தினராகி எண்ணப்படுதலையும் அவர்களிடத்தில் அன்புகூர்ந்து அக்கறைப்பட்டு அவர்கள் சீர்திருந்தும்படி மற்றைய இந்துக்கள் பாடுபடாமையையும் எடுத்துக்காட்டி மிகவுந்துக்கித்தனர். தாம் போயிருந்த அமெரிக்கா கண்டத்தில் இவ்விடத்துப் பறையருக்கு ஒப்பான ஸ்திதியிலுள்ள ஜனங்கள் படிப்புள்ளவர்களாயும் ஸ்நானபானாதிகளிற் சுசிருசியுள்ளவர்களாயும் இருக்கின்றார்களென்றும் இந்தியாவில் இப்பேர்ப்பட்ட நல்லொழுக்கங்களை இழிகுலத்தவர்க்குக் கற்பிக்க யாரொருவரும் ஏற்பட்டு முயலவில்லையென்றும் பரிதபித்துச் சொன்னார். சம்பாத்தியப் பைத்தியம் பிடிக்காது உபாய ஜீவனஞ்செய்து கொண்டு உயர்குலத்தார் இழிகுலத்தார் முதலியயாவர்க்கும் ஒரே வழியாய் நற்போதனை செய்து இழிகுலத்தவர் கூடத் திருந்தும்வகை முயலுமாறு மக்கள் பலர் ஏற்படவேண்டுமென்றனர். பௌத்த சமயத்தை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் **மகாபோதி** சங்கத்தின் அவயவிகளாயும் பௌத்த மதத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள் சங்கத்தின் நோக்கங்களுக்கு அநுகூலப்பட்டவர்களாயும் சேரும்படி உபந்யாசங் கேட்க வந்தாரை வேண்டி முடிவு கட்டினர். [இந்தியாவில் வருணபேதம் இருப்பதனால் எவ்வளவோ தீமைகள் உண்டாகின்றன. இவ்வருண பேதம் நீங்கும்படி பௌத்த சமயத்தவரும் முயலலாம். இந்து சமயத்தவரும் முயலலாம். இந்து சமயத்தவர் பௌத்த சமயத்திற் சேருவது அவ்வளவு

உசிதமன்று. சமயர்துறப்பார் உடனே வழுவுவா ரென்ப தொருதலையாதலின், ஒவ்வொருவருஞ் சமயங்களை மாற்றாமல் தாம் மருவிய ஒழுக்கங்களில் மாத்திரந் திருந்துவது தகுதி. இந்து சமயத்துக்கும் பௌத்த சமயத்துக்கும் யாம் அறிந்த மட்டிற்றோன்றிய வேறுபாடு யாதோவென்றால் இந்து சமயத்திற் பரம்பொருள் என்ற ஒழிவில் பொருளுண்டு; ஆனாற் பௌத்த சமயத்திலோ அத்தகைப் பரம்பொருள் ஒன்றுளதாக யாண்டுங் கூறப்படவில்லை; அருளே சிறப்புடை யறமெனக்கொள்ளுப வாதலின் அப்பொருளைப் பற்றிய விசாரமே அவர்க்குவேண்டுவதன்று போலும்; இவ்வாறே மணிமேகலையின்கண் ஆபுத்திரன் அருளறமேற்கொண்டு இந்திரன் முதலியோர் துறக்கநாட்டிற் கழைப்பவும் போகலனாய் இவ்வுலகின் கண்ணே நின்று உயிர்க்குதவி செய்து வாழ்ந்திருந்தனன் என்பதனையுங் காண்க.]

***

**ஒரு சைவப்பிரசங்கம்** :—நிகழும் அக்டோபர்மீ முதல்தேதி ஞாயிற்றுக்கிழமை 3-மணிக்குமேல் தொண்டைமண்டலம் துளுவவேளாளர் கல்விச்சாலையில் ஸ்ரீசபாபதிநாவலரவர்கள் "தேவர் குறளும் திருநான்மறை முடிவும்" எனும் ஔவையார் திருவாக்கை எடுத்துக்கொண்டு அச்செய்யுளிற் போந்த 'முனிமொழியும்' என்பதற்கு 'வியாசசூத்திரம்' எனப்பொருளுரைப்பாருளராயினும், அப்பொருள் செம்பொருள், இலக்கணைப் பொருள், குறிப்புப்பொருள் என்னுமூன்றனுள் ஒன்றுவான் செல்லாமையின் அங்ஙனம் பொருள்விரித்தல் பொருந்தா தென்றுரைத்து, மற்றதற்கு 'வாதவூர் முனிவர்சொல்லும்' எனப்பெயரெச்சப் பொருட்டாக வைத்துரைத்துக் 'கோவை திருவாசகமும்' என்பனவற்றோடுங் கூட்டிக்கூறுதல் வேண்டுமென்றும், வியாசசூத்திரம் மாயாவாதப்பொருள் போதிப்பதா மென்றும், மாயாவாதம் பல வழூஉக்களும் நிறைந்து அயக்குவர் பொருட்டுக் கட்டப்பட்ட பொய்ந்நெறிச்சமயமாமென்றும், அதனைச் சித்தாந்தசைவர்மயங்கித்தம் மதமாக அவலம்பித்தல் கூடாதா மென்றும், இன்னோரன்ன வெல்லாம் அறிந்துய்த்தற்கு ஒருபெரியசபை இச்சென்னைமா நகரில் ஏற்படுத்தல் வேண்டுமென்றும், அதற்குப் பொருளுதவி செய்து நலம்பெறுதல் நம்மனோர்க்கு இம்மை மறுமைக்குறுதி பயப்பதா மென்றும் விரித்துச் சொற்செறிவுற விளக்கி முடித்தார்.

***

**ஒருதெலுங்குநாடகம்** :—பிரதாபருத்ரீயம் என்ற பெயருடைய வொரு தெலுங்கு நாடகமானது நிகழும் அக்டோபர்மீ 14-ஆந்தேதி சனிக்கிழமையன்றிரவு சென்னை வித்வன்மனோரஞ்சனீ சபையோரால் மகாராணி பொதுஜன மண்டபத்தில் நடித்துக்காட்டி யரங்கேற்றப்பட்டது. இதனை யாக்கியோர் சென்னைக்கிறித்தவ கலாசாலையிற் சம்ஸ்கிருத பாஷையிற் றலைமைப் புலமை நடாத்திவரும் பிரமஸ்ரீ வேதம் வேங்கடராய சாஸ்திரியாரவர்க



ளென்பவர். இஃது ஆசியரசமும் வீரரசமுமிகுந்த நாடகம். இஃதப்பாஷையிற் பலராலும் கொண்டாடப்படுகின்றது. இதனை நடித்ததற்கண் யுகந்தர வேடக்காரரும் பெரிகாடு வேடக்காரரும் செக்கிமுக்கி சாஸ்திரி வேடக்காரரும் இனிது பாவங்களை வெளிப்படக் காட்டிக் காணுநரை மகிழ்வித்தார்கள். கோதாவரி நதியின் காட்சியும் அதிற் படவுசெலுத்தும் விதமும் நன்றாயிருந்தன. வித்யாநாத வேடக்காரர் ஸ்நாநஞ் செய்துவிட்டு ஈரவஸ்திரங்களுடன் வந்திருப்பாராயின் அது மிகப்பொருத்த முடைத்தாயிருக்கும். பாடினபாத்திரங்களுட் சிலர் தாளத்திற்கியையப் பாடினாரல்ல ரென்பது நமது அபிப்பிராயம்.

***

**மக்கட்சேதம்** :—இமயமலைச் சாரலிலுள்ள டார்ஜிலிங்கு என்னும் நகரிலுள்ள ஐரோப்பியரும் மற்றையோருமாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் நிலநடுக்கத்தினால் நிலைதவறி வீழ்ந்து கங்காநதியை யடைந்து கடலுற்றன ரென்றும், பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள நியூகினி பாபுவா தீவிற்குச்சமீபத்திலிருந்த ஆமே யென்னும் ஒரு சிறு தீவானது தன்னகத்திருந்த 6000 - ஜனங்களுடனுந் தண்ணீரில் திடீரென்று யாவரும் எதிர் பாராதவண்ணம் மூழ்கிவிட்டதென்றும் ஆங்கில மொழியிற் பிரசுரமாகும் பத்திரிகைகளிற் படித்த யாம் அவ்வபாயங்களான் இறுதியுற்றார் பொருட்டுப் பரிதாபப்படுகின்றோம்.

***

**உலகழிவு** :—வருகிற நவம்பர்மீ 13-ம் தேதியன்று எட்டுக்கிரகங்கள் விருச்சிகராசியிற் கூடுகின்றனவா மாதலானும் கலியுகம்பிறந்து 5,000-வருடம் நிறைவேறுதலின் ஐயாயிரப்புரட்டு நிகழுமென்று பூர்வீகர் கூறுதலானும் அன்றுதொட்டு முதன் மூன்று தினங்களுக்குள் உலகமழியப்போவதாகப் பலர் நம்புகின்றார்கள். இது மெய்தான் என்று சில சோதிடருஞ் சொல்லுகின்றார்கள். ஜெர்மானியா தேசத்து வானநூற் புலவர் ஒருவரும் இதனை வலியுறுத்துகின்றாராம். இந்தவெண்ணம் மிகவுந் தவறானதென்றும் இதுபற்றிச் சனங்கள் மருளுவது பேதைமையென்றுஞ் சில ஆங்கில ககோளசாஸ்திரிகள் சொல்லுகின்றனர். இவர்களது பொய்ம்மெய்யைச் சீக்கிரம் அறிந்துவிடலாம்.

***

**ஒருகடிதம்** :—ஞானபோதினிப் பத்திராதிபரவர்கட்கு :—ஐயா ! சென்றசஞ்சிகையின்கண் அச்சிடப்பட்டுள்ள **காதம்பரிச்சுருக்கம்** என்ற விஷயத்தை யான் தவறாகத் தங்கள் பத்திரிகைக்கு அனுப்பிவிட்டேன். அவ்விஷயத்தை நமது ஞானபோதினியிற் பதிப்பிக்குங் கருத்து எனக்கில்லாமையின் என்னைத்தாங்கள் மன்னித்தலுடன் காதம்பரியை யுள்ளவாறே நேரே மொழிபெயர்த்து வருகின்ற ஸ்ரீ. ப. கி. கல்யாணராம சாஸ்திரிகளும் இது காரணமாக என்மீது வேறு அபிப்பிராயங் கொள்ளாதிருத்தலும் வேண்டியிக்கடிதம் வரையாநின்றேன். இங்ஙனம். **தி. அ. சுவாமிநாதையர்.**

**பிழைதிருத்தம்.** இப்பத்திரிகையினது சென்ற சஞ்சிகையின் முகப்பில் உமாபதி யென்பவர் எழுதிய உபதேசமொழிகளை ஸ்ரீ அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் எழுதியனவாகக் காட்டப்பட்டதனை உமாபதியே யெழுதியனவாகக் கொண்டு அவ்வாறு திருத்துக.

***

**பாலியென்னுந் தீவு** :—இந்து மகாசமுத்திரத்தின்கணுள்ள ஜாவாவென்னுந் தீவிற் கருகிலுள்ள பாலியென்னுந் தீவிலிடத்துத் தமிழ்மொழியோடொற்றுமையுற்ற பாஷை பேசுவோர் பலருளரெனவும், அவர் பேசும் அப்பாஷையைக் கூர்ந்துகேட்பவர் தமிழென்றே யதைக்கூறுவ ரெனவும், அத்தீவிற் சிவன்கோயிலும் புத்தசைத்தியமும் இந்திரன் கோட்டமுமே யுள்ளனவெனவும் திருமாலுக்குக் கோயில்கள் ஆண்டுக்கில்லையா வெனவும், புத்ததேவனைச் சிவபெருமானது இளவலாக ஆண்டுளார் கூறுகின்றன ரெனவும் யாமுணர்கின்றோம். இதனானே அத்தீவிலுள்ளார் இந்தியாவினின்றுஞ் சென்று சேர்ந்தவரென்றுதல் சுமாத்திரா ஜாவாவாதி தீவுகளெல்லாம் முன்னொருகாலத்தில் இந்தியாவுடன் சேர்ந்திருந்து பின்னர் நிகழ்ந்த சலப்பிரளயங்களிற் கபாடபுர முதலியன கடல்கொள்ளப்பட்டுப் போயின போது கடலினாற் பிரிக்கப்பட்டுத் தீவுகளாயின வென்றுதல் கூறுதற்கிடனுண்டு.

***

**ஸ்ரீசிதம்பரம் கலாவிநோதசபா** :—சிதம்பரந் தெற்கு ரதவீதியிலுள்ள இதன் காரியதரிசியாராகிய சி. ஜி. சுந்தரேச ஐயரென்பார் பின்வருமாறு எழுதுகின்றார் :—“இச்சபை சென்ற விளம்பி௵ பங்குனி௴ முதல் தேதி சோமவாரம் ஆரம்பிரக்கப்பட்டு நிலைபெற்றுவருகிறது. இதில் ஸ்ரீ “நடராஜ விலாசம்” என்று ஒருபுஸ்தகசாலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இச்சபையில் யாவரும் புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் இனாமாகப் படித்துணரலாம். இச்சபையோர் மாசம் ஒருமுறை ஸ்ரீ நடராஜ மூர்த்திமகிமை முதலிய சத்விஷயங்களைப்பற்றி உபந்நியாசஞ் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் ; ஒரு கோசாலை ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறார்கள் ; சிதம்பரமாகாத்மியம் முதலிய நாலுமாகாத்மியங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வசனகாவியமாய் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்றும் உத்தேசிக்கிறார்கள். இச்சபையோர் எண்ணும் சத்காரியங்களெல்லாம் இடையூறின்றி முடியும்படி ஸ்ரீ நடராஜப் பிரபுவைச் சதாபிரார்த்திக்கிறேன்.”

***

**கிறிஸ்தவ நேசன்** :—இப்பெயர் கொண்ட தமிழ்ப்பத்திரிகை மாதமிருமுறை ரெவரண்ட் தேவதாசன் தாவீது அவர்கள், பி. ஏ. யாற் பிரசுரிக்கப்படுகின்றது. இது செவ்விய தமிழ் நடையில், எழுதப்பட்டும் பலவ[illegible] பெரிய விஷயங்களை யெடுத்துக்கூறியும் வருகின்றது. ஆகலின் இது [illegible] சாமானிய பத்திரிகைகளினுஞ் சிறந்ததாமெனக. இது கிறிஸ்தவர்க்கே[illegible] றி மற்றையோர்க்கும் பயன்படத்தக்க பொருள்களடங்கியுள்ளதா மெ[illegible] பதுங் காண்க. இப்பத்திரிகையை நமக்கு அனுப்பிய அன்னார்மாட்டு யாம் வந்தன முள்ளவராகின்றோம்.

# ஞானபோதினி.

ஸம்புடம்-III. } நவம்பர்௴ 20௳. { புத்தகம் - 4.

## நூல்விழைவு.*

இயற்கையிலேயே யாவரும் பேரவாக்கொண்டு, உலகத்தின் சகலசுகசெல்வங்களினும் விசேடித்ததாமென மதிக்குமாறு மேற்பட்டு நிற்பதும்,

“கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை”

என்றவாறே இருபாலார்க்குமாவதும் ஆகிய அக்கல்வி, தன் முன்னர் உயர்ந்த மாணிக்காதி இரத்தினங்கள் பரற்கற்களோ யெனத் தாழவும், தூய உருக்கு வெள்ளி அற்ப வெள்ளிய மண்ணாங்கட்டியே யென மாறவும், தேவலோகத்தே யுள்ளதென்னும் ஆயிரத்தெட்டு மாற்றுயர்ந்த நால்வகைப் பொன்னினு மேற்பட்ட சுவர்ண சுத்தப்பொடிகள் சமுத்திரக்கரை மணற்குவியலேயென்ன மனத்திடைக்கொள்ளவுந், தக்கபடி தான்மதிப்பேறி மாண்புற்றதன்றோ ? இக்கல்வியொளியைக் கண்ட கண்ணுக்குச் சூரியசந்திராதியர் மழுங்கிய மழுக்கமாய் மாசுபடிந்த வட்டச்சேகண்டிகளே யாவர். இதன் இனிமைக்குத் தேனும் அமுதுந் தீண்டாவேம்பே. கருத்தூன்றி நோக்குங்கால் காலவளர்ச்சியினும் அது குறைவின்றி மனமாசகற்றி விளக்கிச் சுசீலாதிகளை என்றும் விளைவிக்கின்றது. அன்றியும் அது

“மாவு மாக்களு மையறி வினவே
மக்க டாமே யாறறி வுயிரே”

என்றபடி பகுத்தறிவுறு மான்மாக்களாகிய எம்மை, மகாபதவியாம் மோக்ஷவீட்டிற் கொண்டுய்த்துங் கருவியாகச் சோதி

* Adapted from Richard de Bury's *Philobiblon*.

சொரூபன் சுவதந்திரியத்தோடு சீர்பெற வாழவளித்த பேரளியே
யாம். அது தேவாதியர்கட்கும் தெவிட்டாத ஞானாமிர்தமாகி அரு
ந்தவருந்த மேலுமேலுந் தன்மேல் அதி விருப்பத்தையே யூட்டித்
தானே திவ்விய பானமுமாகி, தன்னைச் செவியுறுவோனுக்கு
எட்டுணையேனும் உவர்ப்பிறப்பியாது மாச் சஞ்சல இதயனுக்கும்
அதனைமாற்றி ஆநந்தப்பூரிப்பை உறுத்துகின்றது. சமாதானசம்
பந்தம் படைத்துச் சன்மார்க்கத்துக்கு விரோதி எவ்வாற்றானுந்
தன்னையடுத்து நடப்பார் அநுப்பிரமாணமுந் தவற்றிற் றவறுத
படி நடாத்துந் தண்ணளியுடைத்து. அரையர்களைச் செங்கோன்
மைக் கட்படுத்துவதும், மிருதி கர்த்தாக்கட்கு அம்மிருதி நீதி
தெளிப்பதுங் கல்வியே. நிமைப்பண்புடைய முள்ளரிப்பூடு வே
ரோடரிபட்டுத் தீக்கப்படுவதும், அநாகரீக மழிபட்டொழிவதும்,
சாதுரிய நயவற்புத வசனச்சார்பின் மேலெடுப்பும், பருப்பதத்
தின் உன்னத சிகரத் தீபதோற்றமேபோன்று மட்டறு பிரகாசக்
கனச்சீர்த்திதரலும், தன்னையடைந்தோர் தேயநகராதிகளின் தெ
ள்ளியபெரியரும் அரசபூஷண சேயரு மாதலும் மறுவறு கல்வி
யான் மன்னு கருமமேயன்றோ? ஈண்டுக் காட்டிய வித்தைப் பெ
ருஞ்சிறப்புறு மிவர்க்கும், அரசர் மந்திரியராதியர்க்கும், ஓங்கிய
இத்தீங்கல்வியாகிய தாங்கியவாளும் வேலும் இன்றேல், இவர்பாற்
கண்ணியகாரண மேன்மைக்கு உளவாம் எஃகவாள் வேல் ஆகிய
படைகள், அற்ப இருவிகனுடைய சொற்பக் கொழுக்களும், விறகு
தலையரின் வெட்டரிவாட்களும் ஆமாறு ஆவது அன்றி, அன்னப்
பிடியும் வெல்லப்பிடியினன்றோ வாகும்! ஆகலின் மகா வல்லபத்
துக்கும், விருப்பக் கிளர்ச்சிக்கும் உரிய கலையாகிய நிதி சேமிக்கப்
பட்ட வைப்பாவதும், அக்கல்வியாகிய வானபானத்தைப் பருக
விடாய்த்தவர்க்கென்று தங்கும் மானசசரசாம் நிலைத்தல மாவ
தும், ஐய மகன்ற சத்தியப் பிரமாணத்தோடு புகலிற் புத்தக
மென்னும் திப்பிய நிலைக்களமன்றி வேறியாது? சைவவைஷ்
ணவ சீலர்கள் முறையே திருமுறையெனவும் சிகோசமெனவும்
அடைமொழிதந்துந் தாராதும் பரிபாஷையாக வுரைத்து வரு
வதும், பாரதிப்பெண் பாங்காய்க் கரத்தேந்தக்கொண்டிற்றதும்,
பிரமதேவனுடைய பேருக்கும் பெருமைக்கும் ஏதுவாயுள்ள
தும், அஃது அவனுக்கும் ஏனையோர்க்குஞ் செய்துவந்தன்மை



யினிமித்தம் அருமையகொண்ட சோமுகனாற் கவரப்பட்டதும்,
திருவேர்மார்புடை மீனத்தாற் றிரும்ப அயன்பாற் சேர்க்கப்பட்ட
தும், அக்காரணத்தாலேயே யென்றுங் கூறும்படி அம்மீனக்
கொடிபிடித்த பாண்டியர்களாற் பெரிதுங் காக்கப்பட்டதும்,
துரோணவாசிரியற்கும் சகாதேவனுக்கும் துவசமாநின்றதும்,
"பாடையேறினும் ஏடதுகைவிடேல்" எனவும், "புத்தாம் அத்த
பூடணம்" எனவும், பழமொழியேற்றதும், வித்துவான்களால்
நாலுவிதமாப்புகழ்ப்பட்டும் அவற்றினைமேவிட்டதும் ஆகிய புத்
தகப்பொலிவு இத்தகையதென்று வந்தவந்தபடியே மொழிய
முடிவுபெறுதலின்றே யெனினும், அப்புலவர் கூற்றுஞ் சிலவற்றை
நவிலலும் நன்றே. அஃது, உயர்வினுயர்வும், ஒளியினொளியும்,
சீவியநிரந்தமுமாக நின்றன்றோ ஆதாரவாய்க் கலையை உலையாது
காத்துவருகின்றது? அயிவினுயர்வை வினவுவார்க்குந் தேடுவார்
க்கும் திருநிலையாகு மதினின்றன்றோ தீர்க்கவிடையுந் தெளிபொரு
ட்பேறுந் திருத்தியிற் சேரக்கிடைப்பது? புத்தகமே மாணவர்
கட்கு வானசோதி மண்டலங்களின் மகிமைகளையும், எட்டுத்திசை
யும் பதினாறுகோணமு மியைந்த வனைத்தையுங் கண்கூடாக நிமிட
த்திற்காட்டிக் களிப்பிக்கின்றது. கருடகாந்தரு வாதிய வானோர்
தத்தம் பொன்வண்ணச்சிறகை விரிப்பதும் அவர் இருக்காதிய
புத்தகம் விரிக்கும் பொற்பாலேயன்றோ? ஒன்றென்றும் இரண்
டென்றும் மூன்றென்றும் நான்கென்றும் சாகைகளாலளப்பில
வென்றுங் கூறப்படும் வேதரூபமார்க்கமாய்த் தெய்வமு மிதிலட
ங்கியன்றோ துதித்து வணங்கப்படுகின்றது? மா நிபுணமுடைப்
புலவர்கட்கும் இதன் பெருமை விசேடங்களை அகலவுரைக்கப்
புகின் முன்னும் பின்னு முனாக்க வேண்டுவனவற்றின் முறை
பிறழ்ந்து மயக்கநிலைமைக் கிடமாகின்றது. ஆதலின் முறை
பிறழ்வே யெனினுங் கூறுவனசில கூறற்குப் பின்னிடல் கூடா
தென்று மேலுஞ்சில கூறின் என்னையோ? புத்தகங்களிலேயே
யன்றோ ககோள பூகோளங்களோடு அவற்றினுக்கும் அப்பாலுக்
கப்பாலாஞ் சுவர்க்க நிரயங்களினுடையவும், அவற்றிலாம்

"ஊர்வ பதினொன்று மொன்பது மானுட
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ்—சீரிய

வந்தமாந் தேவர் பதினுன் கயன்வகுத்த
வந்தமில்சீர்த் தாவரா லேந்து"

என்னுஞ் சராசர நிலைமைகளினுடையவும் மேலான ஞானம் ஆரியவராகப்பட்டமிசிரர்கட்கும், முனிவராதியர்கட்கும் உண்டாயினதாகக் கண்டாம். சுவடிகளிலே, வேற்றுலகம் புக்கபெரியரை அவரவர் ஆன்ம சரீரத்தோடு முகமுகமாகத் தரிசித்து ஆங்குக் கண்டு ஆனந்தித்துக் கடந்தவற்றோடு இனிக்காலாந்தரங்களின் வரவிருப்பனவற்றையும் கரங்கமற கண்ணாடியிற்போற் கண்டுகளிக்கின்றோம். அந்தோ! காலசமுத்திரத்துள் எத்துணையரிய கலைவல்லோர் வீரர் புண்ணிய புருடராதியர்தம் வியப்புக்குரிய செயலாதிய சித்திகள் மூழ்கித்தோற்றுது போயின. அங்ஙனமாகவும் வேண்டுவனவற்றிற் பலவற்றை நிலைநிறுத்தி எமக்குத் தெரிவித்து நிற்பன அச்சு வடிவ அச்சுவடிகளேயன்றி வேறியாவுள?

அகத்தியன் பாணினி முதலிய இலக்கண சாத்திரிகள், தேரையன் மச்சமுனி முதலிய வைத்திய சாத்திரிகள், மனுயாக்கிய வற்கியன்முதலிய நீதிசாத்திரிகள், பதஞ்சலி சாக்கியன் முதலியயோக சாத்திரிகள், நளன் வீமன்முதலிய பாகசாத்திரிகள், மரீசி புருகுச்சன்முதலிய சோதிடசாத்திரிகள், இன்னும் தருக்க-தத்துவ-வேதாந்தாதி சாத்திரிகள்பெயரோடு, வள்ளல்கள், சக்கிரவர்த்திகள், அறவோர், துறவோர் முதலியவர்கள் நாமமும் இச்சாரதாகரவிலட்சணமின்றேல் இலவாயன்றோ வொழியும்? உயர்ந்த கோபுரங்களும், ஓங்கிய மாடமாளிகைகளும், ஒப்பற்றபட்டணங்களும், ஒள்ளியதீவுகளும், கால்சாய்ந்து தரைமட்டாயின என்றபடியும் நில்லாது இன்னதானத்திருந்தன வென்னுஞ் சுட்டுக்கும் இடமின்றாய்த் தோற்றுதொழிந்தனவே! திரிமூர்த்திகளு மறுமூர்த்திகளும்,

" ஆதி பகவன் றனதுட நணிப்பான் பணிய வல்விறைவன்
பாத மிறைஞ்சும்..."
" பாளைக்குழல் வள்ளி பதம்பணியும்
வேளை..."

எனக் கூறுமாறு, தேவியர்தாட்பற்றலாக் கிரந்தங்களிற் சானுமஃது புத்தகமென்னும் பிராந்தியேயாமென்றுங் கூறலாமே. சொல்லியவண்ணமே வித்துவவேந்தர்களின் நாமமுமழியவேண்டியிரு



ந்தும், அங்ஙனமாதலின்றி அவராலியற்றப்பட்ட புத்தகங்கண் மூலமாய் அவர்புகழுடம்பு பொற்பழிந்திலவே, இதனுனன்றோ,

" கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு"

என்று பெரியாருங்கூறினர். இப்பால், பிராசீன நவீனவிடயங்களை அழிவற்ற கிரந்தங்களின் மூலமாகக் கிரகித்துக் கொள்ளும் வித்துவ சமூகத்துள்ளும் எவர் புத்தகத்துக்குச் சரியீடு அல்லது மதிப்புக்காட்ட வல்லார்?

சத்தியஞ் சிறந்ததே; அது மானுடர் மேலா மதித்துவிரும்பும்

* " கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினுந்
தனிமு டிகவித் தாளு மரசினு
மினிய சோம ரசத்தினு மேன்றதே"

ஆதலின், இச்சத்தியத்தின் பெருமை மேலோரான் உயிரினுமேலாகவே கொள்ளப்பட்டது. சிநேக வாச்சலியச்சீரின் புனித மகத்துவமும் இதனிடத்தே யுளது. நிலைப்பட்டது இதனையன்றி வேறுமுண்டோ? பெரியோர், இதயமூலம் - வாய்மூலம் - இலிகித மூலம் என்ற மூன்று நிலைக்களம் இதற்குள வென்பர். அவற்றுள் இதய மூலம் வெளிப்படா ஞானமாய்ப் புதைந்தழி பொருள் போலாம்; வாய்மூலம் பேச்சேயாகி ஆகாய விரிவில் அழிந்தொடுங்குமன்றோ? இலிகித மூலமோ என்றுங் காத்துவைத்தபடி அவ்விரண்டையுந் தழுவிக்கொண்டு யாவருக்கு முபயோகமாம். இவ்விலிகித மூலம் புத்தகரூபமேயன்றோ?

"கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்
திருவென விருந்தே டவிழென வவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிச்......

*இத்தேவாரத்தின் கடைசியடி தவிர்ந்தன ஆங்கிலத்தின் கருத்தோடு சரியாய்ப்பொருந்தி யிருத்தலால், கடைசியடி மட்டும் மாற்றி இசைத்துக் கோடற்பட்டது. திருநாவுக்கரசு சுவாமிகள். திருவிடைமருது.

சித்திரப் பாவையி னத்தக வடங்கிப்......
போவெனப் போதல்......"
"அழலி னீங்கா னணுகா னஞ்சி
நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசர் னுவக்கு மத்திற
மறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே"

எனக் கூறப்பட்டுள்ள பற்பல கட்டங்களை யாமடையாது, எமக் கடிமையேபோல் அல்லது நம்மிட்டமேபோல இருந்து நம்மாட் டுப் பொருள்விருப்பாதிய நீத்துநின்று கலைபல தெளிக்குங் கார ணகுரு புத்தகம் புத்தகமேயாம்.

சாமிநாதபிள்ளை.

---

## கமலினி.

---

### XVII-ஆம் அத்தியாயம் (தொடர்ச்சி).

அரசன் சமுகத்தை விட்டு நீங்கிய சுந்தரன் அவனுக்குத் தெரியா வண்ணம் அரண்மனையுள் நுழைந்து விசயை வசிக்கும் அறைக்கட் சென்றான். விசயை தனியே யுட்கார்ந்திருந்தாள். சுந்தரன் வந்ததும் திடுக்கிட்டு "என்ன விசேடம்?" என்று கேட்டனள். அவன் விசயை சொல்லாமலே ஓராதனத்தமர்ந் தனன். சுந்தரன் மறுமொழி யாதும் பகராமைபற்றி மனமுளைந்து ஒருபக்கந் திரும்பினாள். சுந்தரன் தன் சமுகம் இவட்கு வெறுப் பாயிருக்கின்றதென் றுணர்ந்து உரைவழங்கலாயினான்.

"அம்ம! சில தினங்களாக மிக்க வருத்தமுற்றிருப்பதை யுற் றுநோக்கிய யான் ஒருவாறு தேறுதல் கூறலாமென்று வந்தேன்."

"என் விஷயத்திலவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்ட தற்காக மிக்க வந்தனமுள்ளவளாக விருக்கின்றேன்." என்று சிறிது பரிகாசக் குரலுடன் கூறினாள்.

விசயையினது வார்த்தைகளின் பொருளுணராச் சுந்தரன் "அரசியின் மனத்தளர்ச்சியை யறிந்து அதற்குத் தகுந்த ஏற்பா டுகள் செய்தல் குடிகளோவ்வொருவருக்குங் கடமையாகும். மற் றுந் தங்களைப்போன்ற இயற்கையரசியின் மனவருத்தத்தை மாற்று



முயலுதற்கு உலகிலுள்ள பிராணிகளுங் கடமைப்பட்டிருக்கின் றன" என்று கூறினான்.

விசயை இவன்றன் உயர்வுநவிற்சியான மொழியினைக்கே ட்டு "யாறு இயற்கையரசி? வசந்தகாலத்தை யன்றோ இயற்கை யரசியென்று கூறுவர். அத்தகைய இயற்கை யரசியையுஞ் சில் லோர் புகழ்வர், சில்லோர் இகழ்வர். அவ்வாறாக அற்ப பெண் ணாகிய என்னைச் சகலப்பிராணிகளும் கொண்டாடுகின்றனவென் றால் அது முழுப்பொய் என்று சொல்லாமே விளங்கும். இவை யெல்லாமிருக்கட்டும். தங்கள் காரியமென்னை? சீக்கிரஞ்சொல் லும். என்தோழியருடன் நீராடச்செல்லவேண்டும்" என்றுகூறி னாள்.

"கமலினித்தேவி தந்தைபால் ஏகினள். மகிமுக னழைத் துச்சென்றான். நம்கனகமாலை இவ்விருவர்க்குந் தூதுசென்றன ளன்றோ! அவள் வந்துவிட்டனளோ?" என்று சுந்தரன் கேட்ட னன்.

"மேற்கூறிய விஷயங்கள் யார் உமக்குச் சொன்னார்?"

"யார்கூறினாற்றான் என்ன? உண்மை யிதுவெனின்:"

"அப்புறம் யாது விசேடம்?"

"கனகமாலை வந்துவிட்டால் எல்லாம் விசேஷந்தான்."

"அவள் வந்தனளோ என்னவோ தெரியவில்லை. உமக்குத் தெரியுமா?"

"என்னைக்கேட்டால் தெரியுமா? விசயவல்லி அம்மாவைக் கேட்டாற்றான் தெரியவரும்."

"ஏது பரிகாசத்திற்காரம்பித்துவிட்டீர்கள்! அந்தவேலை அரசனை யடைந்த பார்ப்பார்க்கன்றே உரித்து."

"இவ்வாறெலா மிழிவுபடுத்துக் கூறவேண்டாம். உன்னு டைய குணங்களையெல்லா முணர்ந்தேன். மகிமுகனையும் கமலி னியையும் அரசனதெண்ணத்திற்கு மாறாகக் கூட்டிவைத்தவள் நீயல்லையோ? இதுவிஷயம் அரசனுணர்ந்தால் அரங்கைக்கேது வாம். அவனிடத்திற் கூறவேண்டாமெனின் என்னை மணக்கு மாறு வாக்குத்தத்தஞ் செய்வதுடன் அரசன் உன்னைவினவும் போதும் என்னையே மணப்பலென்று கூறுவதாகவும் வாக்களி

இதுவிஷயத்தைப்பற்றி யோசிக்க இரண்டுதினங்கள் கொடுக்கின்றேன். இவ்வளவு கடோரமாயிருக்கின்றேனென்று எண்ணவேண்டாம். உன்மீது காதல்கொண்டே யிவ்வாறு கூறுகின்றேன். நீ என்னை வெறுத்தலின் இவ்வாறு கூறினேன். இல்லாவிட்டால் நல்லவிதத்திற் கேட்டிருப்பேன்'' என்றான் சுந்தரன்.

"உன்னை வெறுக்கின்றேன் என்று தெரிந்தும் என்னை மணக்குமாறு வேண்டுதல் நியாயமோ? கமலினியை இரகசியமாய் எடுத்துச்சென்ற கள்வன் நீயல்லையோ? அவள் உன்கைக்கெட்டாததனால் என்னை வருத்தத் தலைப்பட்டனையோ? அரசனிடத்திற் கூறினாலுஞ்சரி கூறாமற் போனாலுஞ்சரி. யான் தூதுநடந்தவள் என்று நீ கூறுமொழியி னுண்மை அரசனே தெரிந்து கொள்வான்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்றாள்.

சுந்தரன் தனியே சிறிதுநேரம் உட்கார்ந்திருந்து தனக்குள் யோசிக்கலாயினான்: "இவளோ மிகவும் பயப்படாச் சித்தமுள்ளவளாயிருக்கின்றாள். ஒருகால் இனியமொழி பகர்ந்திருந்தால் உடன்பட்டிருப்பாளோ? நமக்கெப்பொழுதும் பெண்களை வசீகரிக்குஞ் சக்தியில்லை. நாம் பயத்தினாலும், பலாத்காரத்தினாலும் பெண்ணை வசீகரிக்க முயலுகின்றோம். எப்பெண்ணும் நம்மை விரும்புகின்றாளிலள். நாம்விரும்பினா லென்னபயன்? ஒருவர்மீது ஒருவர் அன்பிருந்தாலன்றோ இன்பமுண்டாம்.

"ஒருதலைக் காம மன்னினர்க்
கின்னலே யன்றிமற் றின்ப மில்லையே''

என்று கூறியிருக்கின்றது. ஆம், இப்பொழுது நூலிற்கூறியபடி நடக்கிற தென்றால் முடிகின்றதா? சுலபமாய் எழுதிவிடலாம். நடக்கிற தென்றாலன்றோ கஷ்டந்தெரியும்? இப்பொழுது நாம் அரசனுக்குத தெரிவித்துத் தகுந்த உபாயஞ்செய்து விசயையை நாம் அடையவேண்டும். முன்னர்ஒருகிளி கையினின்றுந் தப்பிச்சென்றது. இப்பொழுது இக்கிளியையேனும் பாதுகாத்து அடையவேண்டும்'' என்று பலவாறு நினைந்து எழுந்து சென்றான்.

**பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.**

---



## XVIII - ஆம் அத்தியாயம்.

"எண்ணின் றியேது ணியுமெவ்வழி யானு மோடு
முண்ணின் றுருக்கு முரவோருளை கோட லின்று
நண்ணின் றியேயு நயவாரையு நயந்து நிற்குங்
கண்ணின் றுசாம நனிகாமுறு வாரை வீழ்க்கும்.''

குணவதியும் வீரமார்த்தாண்டனும் அரண்மனையை யடைந்தனர். அரசன் ஆக்கினையால் அரண்மனையி னொருபக்கமே இவர்கள் வசிக்குமாறு நேரிட்டது. வீரமார்த்தாண்டனுக் கிவ்வாறிருத்தல் விருப்பில்லையேனு மென்செய்வான். அரசன் ஆணைப்படி நடக்கவேண்டியதாயிற்று. குணவதியோ தான் அரண்மனையிலேயே தங்குமாறு நேரிட்டதேயென மிகவும் மனமகிழ்ந்தாள்.

இப்பொழுது நம் கதையைத் தொடருமுன்னம் குணவதி வீரமார்த்தாண்டன் ஆகிய இவ்விருவர்தம் பரஸ்பர அன்பைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

இதுகாறுங் கூறியவைகளான் வீரமார்த்தாண்டன் குணவதிபால் மிகவு மன்புற்றவன் என்பது தெற்றென விளங்கும். வீரமார்த்தாண்டனுக்குக் குணவதிபாலுள்ள அன்பு உண்மையாகவும் அளவற்றதாகவு மிருந்தது. இனி எவ்வாடவரானும் அவ்வளவு அன்பு ஒரு மனைவியின்மீது பாராட்டுதலரிது. இவனது அளவற்ற அன்பானது மிகுதியும் பொறாமைக் கிடங்கொடுத்தது. வீரமார்த்தாண்டன் பொறாமைப்பட்டானெனின் தன்மனைவி சோரம்போய்விட்டாளென்றும் சோரம்போய் விடுவாளென்றும் நினைக்கவில்லை. ஒரு கணமேனுந் தன்னைவிட்டுப் பிரியாமலிருத்தலினும் அடிக்கடி தன்னிடத்து அன்புபாராட்டுவதாயுங் கூறுவதினும் விருப்புடையவனாயிருந்தான். இவ்வாறான அன்பு சீக்கிரத்திற் குணவதியாற் பொறுக்க முடியாமற்போயிற்று. முதலிற் குணவதி புதுமணப்பகட்டொழிந்ததும் வீரமார்த்தாண்டன்றன் கழிபெருங் காதலழிந்து மனையாளிடத்து வைக்கவேண்டிய அன்புடன் வாழ்வானென்று நினைத்தாள். வீரமார்த்தாண்டனிடத்தப்படியல்லாமல் நாளுக்குநாள் அப்பொறாமை யதிகரித்தது. குணவதிக்கிவ்விதவாழ்க்கையிற் சிறிதும்பிரியமில்லை. நாளடைவிற் பரபுருடரை இச்சிக்கு மெண்ணமு மதிகரித்தது. அதிகரிக்கவே அன்னோர்க்குரிய தைரியமும் வளர்ந்தது. முதலிற் சடகோபரைத் தன்வலையிற்படு

த்த முயன்றனள். அது பயன்படாமற்போயிற்று. இன்னுஞ்சிலகால மங்கையிருந்திருப்பளாயின் ஒருகாற் சடகோபனை வசப்படுத்தியிருக்கவுங்கூடும்; இப்பொழுது அரசனையேதன்வலையிற் சிக்குமாறு செய்ய எண்ணங்கொண்டு தன் அழகை எடுத்துக்காட்டும் அணிகளும்உடைகளுந் தரித்துக்கொண்டு மயிலெனநடப்பாள். அரசன் மருண்டுநோக்குவான். புன்முறுவல் செய்வான். உடனே குணவதி மனமுளைந்து தன் அழகு அரசனை வசீகரிக்கவில்லையென்று வேறுவிதமாக உடையும் அணியுந்தரிப்பாள். வீரமார்த்தாண்டன் இவள்செயலை வினவினால் அவனிடத்தாசை மிகுதியா லிவ்வாறெலாஞ்செய்வதாகக் கூறுவாள். அவநம்பிக்கையில்லாது அவன் மற்றும் அன்புபாராட்டுவான்.

அரசனும் மனைவியிலானன்றே! இவளழகின் மயங்கினனேனும் வெளித்தோற்றுவிக்கச் சமயம் நேரிடாதிருந்தான். வீரமார்த்தாண்டன் வந்த மறுநாள் அரசனை யணுகித் தான் காஞ்சிக்கு மதிமுகன் தப்பி யோடியதைத் தெரிவிக்க வந்தகாலத்திற் சில கள்வர் தன்னைத்தடுத்தமையையும் அவர்கள்வினவிய கேள்விகளையுந் தான் மறுமொழிகூறாது அவர்களுடன் பொருது அவர்களைத்தொலைத்ததையும்விவரமாய்க்கூறினான். மற்றும் அக்கள்வர்கள் காருண்யவள்ளலைச் சார்ந்தவீரர்களாயிருத்தற்குத்தகுந்தகாரணங்கள்கூறினான். அரசன் அத்தனையுங்கேட்டுக்கொண்டு அதற்குத்தான் செய்யவேண்டியதைப்பற்றிக் கேட்டான். வீரமார்த்தாண்டன் "அன்னார் கள்வரேயாயின் அதனால்தீங்கேது மிலது. காருண்யவள்ளலின் வீரர்களாயின் அது மிகுதியும் அஞ்சற்பாலது" என்றான்.

"எவ்வாறு? நாம் ஏன் அஞ்சவேண்டும்." என்று அரசன் கேட்டனன்.

"ஏனெனிற் பகைவர்தம் ஒற்றர் நாட்டினில் வந்து செய்திகளைத் தெரிந்து கொள்வாராயின் நம்முடைய குறைவுகளைத் தெரிந்து கொண்டு அதற்கேற்பச் சைனியங்கள் சந்நத்தஞ் செய்துகொண்டு யுத்தத்திற்கு வரக்கூடும்" என்றான் வீரமார்த்தாண்டன். "எவ்வித ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்."

"யாவனேனுமொரு வீரனைச் சிலயுத்தவீரர்களுடன் நமது நாட்டினெல்லையைச் சுற்றிலும் பகைவர் வாராவண்ணம் பாது



காத்தலும் அப்படிவருபவர் எண்ணத்தையறிதலும் அப்பகைவர்களில் முக்கியமானவரைச் சிறைபிடித்தலும் இன்னும் சமயோசிதமாகச் செய்ய வேண்டியவற்றைச் செய்தலும் வேண்டும்" என்றான் மெய்காப்பாளன்.

"அத்தகையா னொருவன் இவ்வரண்மனையி லெவனுளன்" என்று வினவினன் அரசன்.

"அவனின்னனென்று என்னால் தெரிவிக்க முடியாது; யான் வந்தே இரண்டு தினங்கள் தாமே யாகின்றன. தாங்கள் தெரிந்தெடுக்கலாம்."

"உன்னைத்தவிர மற்றெவனும் அத்தகைய உதவிபுரிதற் கேற்றவனல்லனென்று தோற்றுகின்றது. ஆனால் நீ எப்பொழுதும் அத்தகைய வேலையிலே யிருத்தற்கேலாது. நம் சுந்தரன்-ஏதோ உனக்கும் உறவினனாம்-அவனும் இவ்விஷயத்தில் உதவிபுரிவான். இருவரும்மாற்றி மாற்றி யித்தகைய காவல் செய்யுங்கள். அரசனிடத் தந்தரங்கமான பிரியம் வைத்திருப்பவர் இன்னாரென்று யானறிவேன். அவர்களை நல்ல ஸ்திதியிற் சீக்கிரங் கொணரத் தகுந்த ஏற்பாடு செய்வேன். தடையேதும் பகராது செல்லக்கடவாய். இப்பொழுது சுந்தரனையும் வரவழைத்து அவன் எண்ணத்தையும் அறிவேன். நீ செல்வாய்" என்று அரசன் கூறினான்.

வீரமார்த்தாண்டன் "தங்களிஷ்டப்படியே செய்யச் சித்தனாயிருக்கின்றேன்" என்று கூறிவிட்டுமிகவும் மனக்கலக்கத்துடன் சென்றான். மனைவியைக்கண்டான்; கண்ணீர்ததும்பிற்று. அவள் மனக்கலக்கம் எய்தியதற்கேது வென்னவென்று விசாரித்தாள். வீரமார்த்தாண்டன் பெருமூச்சுவிட்டுக்கொண்டு "உன்னைப் பிரியுமாறுநேரிட்டிருக்கிறது. அதுவும் யானே யானைதன் தலையில்மண்ணைவாரிப் போட்டுக்கொண்டா லென்னச் செய்துகொண்டேன்" என்றான்.

"அப்படி என்ன நேரிட்டது?" என்று குணவதிகேட்டனள்.

"சீக்கிரத்திற் போர்நிகழுதற்கேது விருத்தலின் எல்லைகாக்க என்னையும் சுந்தரனையுஞ் நியமித்தனன் அரசன்."

"இக்கட்டளைக்குத் தாங்களெவ்வாறு காரணம்?"

"போர்நிகழ்வதற்கேற்ற நிமித்தங்கள் யானே கூறினேன்."

"தெரிந்தவிஷயத்திற் கூறத்தானேவேண்டும். இராஜத்துரோகம் செய்யலாமோ? நீங்க ளிக்கட்டளையை எதிர்பாராதிருந்தும் தெய்வச்செயலாய் உங்களையே தொடர்ந்தது. சீக்கிரம்போர் முடிந்துவிடும். எல்லாம் சரியாய்ப் போய்விடும். கவலைப்படுவதிற் பயனென்ன? போய்த்தான் தீரவேண்டும்" என்று குணவதி நியாயங்காட்டினாள்.

வீரமார்த்தாண்டன் இவள் கூறியமொழிகளைக் கொடுமொழியெனப் பாவித்து உறுத்து நோக்கினான். குணவதியுங் கலக்கங்கொண்டன ளெனப் பாசாங்குசெய்தாள். வீரமார்த்தாண்டன் தன் விதியைநொந்து "அன்பிலாப் பெண்டிரை யடையுமாறு தெய்வம் நியமித்ததே" என்று கூறிச்சென்றான்.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

## சிலப்பதிகாரவாராய்ச்சி.

(தொடர்ச்சி)

இந்நூல் முன்னர்க்கூறியாங்கு ஐம்பெருங்காப்பியங்களு ளொன்று. காப்பியமென்ப தொருவகை நூல்விகற்பம். இவ்வகைநூல் எல்லாப்பாஷைகளிலுமிருக்கின்றது. ஆனால் தமிழ்க்காப்பியத்திற்குக் கூறியுள்ள விலக்கணங்களும், காப்பியமெழுதுவோர்க் கேற்பட்ட நிபந்தனைகளும், வேறெந்தப்பாஷையிலுங் காணலரிது. காப்பியக்கவிக ளொவ்வொருவரும் தந்தம் மனத்திற்கிசைந்தாங்கு கவியெழுதொணாது நெடுநாளா யேற்பட்டுள்ள நிபந்தனைகளையே கவனிக்கவேண்டியிருக்கின்றது. இதனால், கவிகள் தங்களுடைய மனோபாவப்படி தங்குதடையின்றிக் கவிமாரிபெய்தல் கூடாது. நடுவே தங்கள் நிபந்தனைகளாற் றட்டுண்டு தங்களுற்சாகத்தை யிழக்கின்றார்கள். ஒரு காவியமெழுதுவோன் தானெழுதும் விடயத்தைத் தானே மனத்தாலும் [illegible]த்தாலு மனுபவித்திருந்தா லொழிய அவ்விடயம் படிப்பவர்மனத்தைக் கவரமாட்டாது. இவ்விதம் தானனுபவிப்பதை யப்பொழுதே யெழுதிவிடவும் வேண்டும். அஃதாவது, அப்படியவன் மனத்தா லனுபவிக்கும்பொழுது செய்யப்படுங் கவிகளானவைகள் அக்கவியே யறியாவண்ணம் அநாயாசமாய் வருகின்றன, இவ்வண்ணமியற்றுங்கவிகள் அவன்போன்ற மாணாக்கர்களின்



மனத்தைக்கவர்தல் திண்ணம். இத்தகைய கவிகளை யியற்றிக்கொண்டிருக்கும்பொழுது, 'அந்தோ! இச்செய்யுட்களவ்வவற்றிற்குரிய நிபந்தனைகட்குட்பட்டிருக்கவேண்டுமே!' யென்கிற எண்ணங்குறுக்கிட்டுவிட்டால் உடனே கவியின் நயம்போய், தசைநீத்த எலும்புபோல், சாரமற்ற செய்யுட்களாகின்றன. கவித்திறமே பறந்துவிடுகின்றது, உண்மையான கவித்துவம் நிபந்தனையற்றுக் கவியின் அடிவயிற்றிலிருந்து அவன் மெய்ம்மறந்துள்ள போழ்து அநாயாசமாய் விளைவதாதலின். ஆகவே, கவித்திறத்தைக் கெடுக்கு மிந்நிபந்தனைகளின் தன்மையைக் கூறவேண்டுமோ?

இந்நிபந்தனைகள் முற்காலத்தவர்களுக்குச் சிறந்தவிலக்கணங்களாகவேயிருந்திருக்கவேண்டும். இல்லையேல், கல்வியிலும் புத்தியிலும் நம்மைக்காட்டிலும் பலமடங்கு சிறந்துவிளங்கிய நூலாசிரியர்கள் பலரும் ஆண்டுவருவார்களா? எப்படியாயினும், விடயமும் அவ்விடயத்தாலாய ஜனனுகூலப்பயனும், இப்பயனை விளைக்கும்பொழுதுண்டாகக்கூடிய சுகமுமே குறிப்பாயுள்ள விக்காலத்தவர்க்கு, மனத்தினுடைய போக்கிற்கிடையூறும் பயனளித்தல் சிறிதேனுமின்றியுமுள்ள இந்நிபந்தனைகள் அருவருக்கத்தக்கனவே. காப்பியமாக்கலே கருத்தாய்க்கொண்டு, நீர்விளையாட்டு, பொழில்விளையாட்டு, உண்டாட்டு முதலியவைகளை இடவொற்றுமையின்றித் தருமிக்குப் பொற்கிழியளித்த படலத்திற், பரஞ்சோதிமுனிவர் வருணித்திருப்பதும்; காட்சியின்பிறகு காமவேதனையாற் றனியே வருந்திக்கொண்டிருக்கும் இராமனையும் சீதையையும் கணத்தைக் கற்பமென்றெண்ணும்படி விட்டுவிட்டு மற்றையவர்களின் நீர்விளையாட்டு முதலியவைகளைக் கல்வியிற் சிறந்த கம்பநாட்டார் வருணித்திருப்பது மிக்காலத்தவர்க் கினிமையை விளைத்தில. இன்னணம், காவிய நிபந்தனைகளாய பேய்கள் கவிகளனைவரையும் பிடித்துச் சிலவேளையி லவர்களுடைய, அருமைப்புதல்வராய காப்பியங்களையே கெடுத்துவிடுகின்றன. இக்காப்பியத்தின்கதி யிவ்வகையிருப்ப, அந்தோ! கோவை, கலம்பகம் முதலிய பிரபந்தங்களிலோ ஒவ்வொருசெய்யுளும் நிபந்தனைக்குட்பட்டிருத்தல் வேண்டும்!

தமிழ்க்காப்பிய மிப்படியிருக்க, ஆங்கிலக்காப்பியமோ இதற்கு முற்றும் வேறாகவேயிருக்கின்றது. அதிலுள்ள நிபந்தனைகளெல்லாம், காவியத்திற் கூறும் விடயம் ஒரே விடயமாயிருக்கவேண்டுமென்பதும், அவ்விடயம் அந்தக்காவியத்திலேயே முடிவடைந்துவிடவேண்டு மென்பதும், அந்த விடயமானது சிறந்ததா யிருக்கவேண்டுமென்பதுமே. ஆதலின், இவைகள் கவிகளுக்கு நிபந்தனைகளே யல்ல.

இச்சிலப்பதிகாரத்தில் தமிழ்க்காப்பிய விலக்கணங்களும் ஆங்கிலக்காப்பியவிலக்கணங்களும் ஒருங்கே பொதிந்துள்ளன. அவ்விலக்கணங்களைக் கூறவேண்டியதவசியமில்லை யெனக்கொண்டு விடுத்து இந்நூலின் நடையைப் பற்றிச்சொல்லப்புகுவாம்.

இந்நூல், இடையிடை விருத்தப்பாக்களும் வெண்பாக்களும் பெய்யப்பெற்றுப் பெரும்பான்மை அகவற்பாக்களாலேயே யாக்கப்பட்டுளது. இவ்விதம் முழுமையும் அகவற்பாக்களாலேயே யாக்கப்பட்டுள்ள வேறுகாப்பியம் மணிமேகலையொன்றே. அதுவும் புருஷார்த்தங்கள் நான்கனுள் வீட்டையேபற்றிப் பேசுதலின் இத்தகைச் சிறப்பினதன்று. மற்றையகாப்பியங்களாய சிந்தாமணியும், மேற்கோளாகக் காட்டப்பட்ட செய்யுட்களைநோக்க, வளையாபதி குண்டலகேசியும் விருத்தப்பாக்களாலேயே யாக்கப்பட்டுள வாதலின், சிலப்பதிகாரமொன்றே ஐம்பெருங்காப்பியங்களுள் முழுமையும் அகவற்பாக்களால் யாக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலிலேயே அகவற்பாவின் சிறப்பும், நயனும், பொலிவும், பயனும், செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றன. அகவற்பாக்களாலேயே யாக்கப்பட்ட பத்துப்பாட்டிற் கித்தகைச் சிறப்பில்லை. அதன் நடை கரடுமுரடாயிருந்து இன்பந்தரத்தக்க சொன்னயமும் நளினமும் பெறுமையால்.

இக்காப்பியத்தின் நடை மிகவின்பமாகவும் மனத்தைக் கவரத்தக்கதாகவுமிருக்கின்றது. இதற்குக் காட்டாய், அந்திமாலை சிறப்புச்செய்காதையில், "அஞ்செஞ்சீரடி யணிசிலம்பொழிய," என்னும் வரிமுதல் 10-வரிகளைக்கொள்ளலாம். இவ்விதமாய வினியநடைக்கு நம்மிளங்கோவடிகளை மேற்புலக்கவியாகிய தென்னிஸனுக்கு ஒப்பிடலாம். இதன் நடை, இருபுறமு மிளங்கால் தவழ வினியகதியுடனொழுகும் சிற்றாறுபோன்றது. இதற்கிலக்கியமாய், மனையறம்படுத்த காதையிற் கோவலன் கண்ணகியை நலம்புனைந்துரைக்கும், "மாசறுபொன்னே வலம்புரிமுத்தே" முதலெட்டு வரிகளைக் காணலாம். இன்னுஞ் சிலவிடங்களிற் கம்பீரமாகவும் பெருந்தன்மையாகவு மிருக்கின்றது. "வான்கண் விழியா வைகறை யாமத்து" (நாடுகாண்காதை 1—3) இந்தவிடயத்தில் நம் கவியை ஆங்கிலக்கவி மில்றனுக்கொப்பிடலாம்.

இந்நூல்முழுமையும் ஒரே விசற்பமான அகவற்பாக்களால்யாக்கப்பட்டிருந்தும் படிப்போர்க்கு அலுப்பாயிருக்கவில்லை, அஃது எழுதப்பட்டிருக்கும் அழகினால். கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பனே யாயினும் சேர்ந்தாற்போல் 20-செய்யுட்கள் ஒரே சந்தத்திலெழுதுவாராயின், அது படிப்பவர்க்கு அலுப்பை விளைக்கும். அதிலேயும், ஒரு புத்தகம் முழுமையும் ஒரேவிதமான பாவிலெழுதுவதென்றால் எவ்வளவு வெறுப்பிற்கிடமாயிருக்கவேண்டும். இக்காப்பியத்திலோவெனில், அப்படியன்று; இளங்கோவடிகளின் இனிமையும், பொலிவும், கம்பீரமும், பிறரைத் தன்வசப்படுத்தும் தன்மையும் பொருந்திய நடையின் சிறப்பால் அத்தகைய கெடுதலேற்படவில்லை. இவ்விதமெழுதுந் தேர்ச்சியாற் கதையின் போக்கைக் களிப்புடன் தொடர்ந்து போகும்படி செய்கின்றார், களைப்பிற் கிடமின்றி. இக்கருத்தை நிறைவேற்றுவான் கருதியே நளினபதங்களைப் பெரும்பான்மையும் பிரயோகித்திருப்



பது. இன்னணை யின்சொல்மழை பொழிவார்க்கு வன்சொல் வழங்குதலும் கூடுமெனக் காட்டவே, வேட்டுவவரியில் வேடர்கள் ஐயைக்குப் பலியிடுகையிற் பாடிய பல பாடல்களு மியற்றினர் போலும்!

இன்னும், நமது நூலாசிரியர் ஆங்காங்குப் பற்பல விடங்களில் அருமையான சிலேடைய பதங்களை யுபயோகிப்பதனால் தம் பிரபந்தத்தைச் சிறப்பித்திருக்கின்றார். அத்தகைய சிலேடைகளின் நயத்தைப் படித்தே தெரிந்துகொள்ளவேண்டும். வேறு கவிகளின் சிலேடைகள்போலக் கடினம் சம்பந்தமின்மையென்னு மிருகுற்றமுந் தவிர்ந்து சுலபமாகவும் கூறிய விடத்திற்குப் பொருத்தமாகவு மிருக்கின்றன. அவைகள் அவராற் கருதப்படாமல் இயல்பிலேயே அமைந்திருக்கவேண்டு மென்று தோன்றுகின்றன, அவ்வளவு அழகாயிருத்தலின். இதற்குக் காட்டாய், புறஞ்சேரியிறுத்த காதையிலுள்ள, "பண்ணீர் வண்டு பரிந்தினைந்தேங்கிக், கண்ணீர் கொண்டுகாலுற நடுங்க" முதலியவைகளைக் கூறலாம்.

இவ்வண்ணம் பலவகையுபாயங்களாற் களிப்பை யுண்டுபண்ணியதுடன், அகவற்பாவினாலாய வனுகூலங்களையும் நன்கு புலப்படுத்தி யிருக்கின்றார். இத்தகைய நடையாலாகிய பயனென்னையோவெனின், (1) சொல்லவேண்டிய சரித்திரத்தைச் சுருக்கமாகவும் இனிமையாகவு முறைக்கச் சாதனமாயிருத்தலே. பயனற்ற சொன்மாலை தொடுத்தலியலாது கதையின் தொடர்ச்சியும் தேவையில்லாத பலவித விடயங்களாற் சிதைவுறாது. புதிதாய்ப் படிப்பவர்க்குச் சுலபமாய்க் கதையின் செலவு நன்கு புலப்படும். அன்றி, விருத்தங்களால் மட்டும்யாக்கப்பட்ட காப்பியங்கட் கத்தகைய சிறப்பில்லை யென்பதற்குக் கம்பராமாயணத்தைச் சான்று கூறுவாம். இராமாயண கதையையே யறியாத வொருவன் கம்பராமாயணத்தைப் படிப்பானானால் அவன் எளிதிற் கதையை யறிந்து கொள்ளுதலருமை. (2) இன்னும், விருத்தம் கொள்வதுபோலக், கருத்தை விளக்குவதற்கு அவசியமாய் வேண்டிய சொற்களைக்காட்டிலு மதிகமாய்க்கொள்ளாது ஒரு கருத்தை விருத்தத்தாலறிவிப்பதற்கெவ்வளவு சொற்கள் வேண்டுமோ, அவைகளைக்காட்டிலும் குறைவான வார்த்தைகளாலேயே அகவற்பாவிற் கூறலாம். ஆனால், கம்பன் போன்ற கவியாயின் விருத்தத்திலும் குறைந்த சொற்களால் நிறைந்த கருத்தைக்காட்டலாம். இருந்தாலும், அதுகூடக் கல்லாடர் போன்ற கவியின் அகவலுக் கீடாகமாட்டாது. அதைக்கீழ்வருவன வற்றாற் காணலாம்:— அந்திமாலையை வருணிப்பதில்,

**கம்பன்** :—"கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப் பிரிந்
தலந்தவர்க் குயிர்சுடும் விடமுமாய்."

**இளங்கோ** :—"தாழ்துணை துறந்தோர் தனித்துய ரெய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ்வெய்த."

கல்லாடர் :—தணந்தோ ருளத்திற் காமத்தீப்புக
மணந்தோர் நெஞ்சத் தமுதகீர்விட."

என வருணித்துளர். இவைகளிற் பின்னிரண்டும் அகவற்பாவினடிகள்.
அவைகள் சிறந்து விளங்குதல் காண்க. முன்னது விருத்தத்தினடிகள்,
இவ்விதம் விருத்த மெழுதும் கவிகளு மருமை, ஆதலின். இவ்விடயத்தில்
அகவற்பாவின் பெருமை யதிகமே.

இனி யிக்காப்பியத்தி லிடையிட்டுள்ள வெண்பாக்கள் விருத்தங்களை
நோக்குவராம். வெண்பாக்கள் அதிக இனிமையா யிருக்கின்றன. அவைகள்
இனிமையிற்றுற் றனித்தாலும் புகழேந்தியின் வெண்பாக்களை யொக்கும்.
விருத்தங்களை ஒட்டக்கூத்தனுடைய விருத்தங்களுக் கொப்பிடலாம்.

இனிக் கானல்வரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை முதலியவைகளி
லுபயோகிக்கப்பட் டிருக்கும் பாட்டுக்கள் மிக வின்பமாகவும், செவிக் கினிமை
யாகவு மிருக்கின்றன, அவைகள் படிப்பவர்களின் மனத்தைக் கவராதவிடா.
வாழ்த்துக் காதையில் தேவந்தி, கண்ணகி யடித்தோழி, காவற்பெண் முதலி
யவர்கள் கண்ணகியின் நிலைக்கு முன்னின் நிலைக்கு மிரங்கற்கவிக ளெவர்
மனத்தையு முருக்கத்தக்கனவா யிருக்கின்றன. இவ்விஷயத்தில் நமது கவி
யினுடைய வல்லமை யொருவர்க்கும் வாராது. பாடல்களைத்தாம் சங்கீதம்
நிறைந்துள்ளன.

"கன்று குணிலாக் கனியுகுத்த மாதவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!"

முதலியவைகளே சான்றாகும்.

இக்காப்பியத்திற்குள்ள மற்றைப் பெயர்களைப்பற்றிக் கவனிப்போம்.
அவையாவன "இயலிசை நாடகப் பொருட் டொடர்நிலைச் செய்யுள்",
க்காப்பியம்" "உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்", "நாட
லாவதற்கு, இயலிசை நாடகமென்ற முத்தமிழும் விரவி யுள்ளதென்பது
கருத்து. இசைத்தமிழிற்குக் கானல்வரி, வேட்டுவவரி முதலியவற்றையும்,
நாடகத்தமிழிற்கு ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை முதலியவற்றையும்,
இயற்றமிழிற்கு மற்றைப் பாகத்தையுங் கூறலாம். இரண்டாவது, நாடகம்
போன்ற காப்பியம்; இந்நூலில், சாதாரணமாய்க் கதை பகர்தலன்றி, நாட
கத்தில் நடித்தல்போல், பலருடைய சம்பாஷணைகளும் விளக்கமாவும்,
வாசக மன்றித் றைக்கக் கூடியனவாகவும் புகன்றிருத்தலின், மூன்றாவ
தற்கு, வாசகமிடையிட்ட நூல், கானல்வரி, ஆய்ச்சியர்குரவை, வாழ்த்துக்கா
தை முதலியவிடங்களி லாங்காங்குச் சிலவாசகங்க ளுளவாதலின். இவ்வண்
ணம்பெரும்போக்காய் நமதாசிரியருடைய நடையை யாராய்ந்து வந்தோம்.
இனியவருடைய கதையைநோக்கி யவற்றி லவர்க்காதார மாகவிருந்த விட



யங்க ளின்னின்னவை யென்றும், அவ்விடயங்களைச்சொண் டிவ்விதமாய்க்
கதையைவளர்த்து அதற்கு உருக்கொடுத்தாரென்றும் நன்காராய்வோம்.
இதிற் கூறியுள்ளவிஷயம் இளங்கோவடிகளினுடைய காலத்திலேயே
இதற் கூறியுள்ளவிஷயம் இக்காப்பியத்திற்கு முதனூலில்லை. கண்கூடாக் கண்ட சில
நடந்ததாதலின், இக்காப்பியத்திற்கு முதனூலில்லை. கருவிகளாகக்
ரிடத்திருந்து நேரில் தெரிந்துகொண்ட நடவடிக்கைகளையே அதில்,
கொண்டு எழுதினர். இதை நாம் காட்சிக் காதையிற் காண்கின்றோம். வேங்
செங்குட்டுவனிடத்து மலைக்குறவர்கள் வந்து, 'குன்றத்தின்பேரில் கணவ
கையி னிழலிலிருந்து ஒருமுலை யிழந்தா ளொருத்திக்கு அவளுடைய கண்ணுற்
னைக்காட்டி அவளைச் சுவர்க்கமேற்றின னிந்திரன் அக்காட்சியை அம்மா
றேம்', எனவும், ஆங்கருகிருந்த மதுரை வித்வான் சாத்தனரென்பார் சொல்லியிருக்கிற
தின் வரலாற்றைத் தானறிந்தமட்டுங் கூறினர், எனவுஞ் குறித்த
து. இன்னும், மாடலனென்பானோரந்தணன் அப்பத்தினியைக் நீர்ப்
மூன்பின் சரித்திரமனைத்தையும் சாங்கோபாங்கமாய்ப் புகன்றதாக சாத்தனர்
படைக்காதையிற் காண்கின்றோம். இவை யனைத்தையுமறிந்த சொன்னதாகப்
இளங்கோவடிகட் குரைத்து அவரை ஒரு காவியமெழுதச்
பதிகத்திலுளது. பதிகத்திற்கூறிய கதை வருமாறு:—
சோழநாட்டுத் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்திற் கோவலனென்
பானோர் வணிகனிருந்தான். அவன் காதல்கொண்ட மாதவி யென்பாளோர்
நாடகக்கணிகையாற் றன்செல்வமனைத்தையுமிழந்து, மிடியுற்று வருந்தினன்.
தான்செய்த மதியீனச் செயலுக்கிரங்கி, இனியாகிலும் கடைசியாயிருக்கும்
தனது மனைவியின் காற்சிலம்புகளு ளொன்றைவிற்று அதனாலாய பொருளை
வாணிப முதலாக்கி வர்த்தகஞ் செய்யலாமென்று நினைத்தான். அதன்
பொருட்டு மதுரைக்கேகி யங்குக்கண்ட வோர்தட்டா னிடத்து அச்சிலம்
பைக்காட்டினன். அந்தோ! அப்பாதகன் அதுபோன்ற சிலம்பொன்றை
அவ்வூர் அரண்மனையிலிருந்து திருடியுள்ளானாதலின், அத்தீய செயலினின்
றும் தப்புவதற் கதுவே தருண மென்றெண்ணி அவனைநோக்கி, அந்நகை
யதிக விலையினதாதலாற் சாமானியர்கள் வாங்கமாட்டார்களென்றும், அதை
வாங்கத்தகுந்த அரசன்மனைவி யிடத்துக் காட்டி வருகின்றேனென்றும் சொ
ன்னான்! பேதைக் கோவலன் சம்மதித்தான். உடனே, அப்பொற்கொல்லன்
அரசனிடத்துப்போய்ச் சோரம்போன சிலம்பைத் தன்வசத்திருக்கும் கள்வ
னிடத்துக் கண்டு வந்ததாகச் சொன்னான். அவ்வரசனோ, விசாரணையே
யின்றிப் பதட்டமாய் அவனைக்கொல்லக் கட்டளையிட்டான். அன்னமே
அவனும் வெட்டுண்டான். அதுகேட்ட அவன் மனைவியாகிய கண்ணகி,
கதறித் தன்வருத்தத்தாலும் அளவிலாச் சினத்தாலும் தன் முலைகளிலொன்
றைத்திருகி மதுரைமா நகரத்தில் வீசியெறியவும், அவ்வூர்தீயுண்டு சாம்பலா
கிவிட்டது. இவ்வளவே பதிகங்கூறும் விஷயம்.

பிரணதார்த்தி ஹரசிவன்.

# விவேக சந்திரிகை.

## யாதவர்களது நாசம்.

துவாரகாபுரியின்கண் அரசுபுரிந்துவந்த ஸ்ரீகிருஷ்ணனுக்கு அநேகபத்தினிகள் இருந்தனர். இவர்களுக்குப்பிறந்த பிள்ளைகளும் பேரன்மார்களும் அநந்தம். இவர்களுக்கும் மற்றும் இவர்களது பந்துக்களுக்கும் யாதவர்கள் என்று பெயர். இந்த யதுகுலமே ஒரு பெருஞ்சேனையாயிருந்தது. இவர்களெல்லாரும் கிருஷ்ணனுடைய பலத்தால் மதமடைந்து கட்குடித்தல் முதலிய கெட்ட நடத்தைகள் உள்ளவர்களாயிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் தனது மூப்பையும் இவர்களது துன்மார்க்கத்தையும் பார்த்து யதுகுலத்திற்கு நாசம் சமீபித்திருக்கின்றதென்று எண்ணிக் கட்குடி முதலிய துஷ்கிருத்தியங்களைச் செய்யக்கூடாதென்று யாதவர்களுக்குப் புத்திமதி கூறினார். ஆனால் அவர்கள் அதைக்கேட்டவர்களல்லர். ஒரு நாள் இவர்களெல்லாரும் தீர்த்த யாத்திரைக்காகக் கடற்கரைக்குப் போயினர். அங்கே போஜனம் முதலியவற்றை முடித்துக்கொண்டு, கிருஷ்ணனுடைய பரிவார மவ்வளவும் முன்னத்திற்கு வந்தபடி யெல்லாம் மத்தியபானம் செய்து ஆடிக்கொண்டிருந்தார்கள். இது கிருஷ்ணனுடைய கட்டளைக்கு விரோதமாயிற்று. இவ்வாறு மிதமில்லாமற் குடித்துப் பிரஞ்ஞைதப்பி இச்சனங்களுக்குட் சண்டை உண்டாயிற்று. கடைசியில் இவர்களெல்லாரும் சமுத்திரதீரத்தில் முளைத்திருந்த கோரைப்புல்லைப் பிடுங்கிக்கொண்டு ஒருவரை ஒருவர் அடிக்கத்துவக்கினார்கள், இந்தச்சண்டையினால் யதுகுலமவ்வளவும் நாசமாயிற்று. இப்படி மத்தியபானத்தால் யாதவர்கள் அழிந்தார்கள். இத்தகைய தீயசெய்கையால் மஹா விஷ்ணுவின் வம்சத்தாருக்கே கேடு நேர்ந்திருக்க மற்றவர்கள் கதி என்ன? ஆகையாற் கள்ளுண்ணல் முதலிய பாதகங்களுக்குத் தினையளவும் இடந்தரலாகாது.—ஹரிவம்சம்.

## பரீக்ஷித்து மகாராஜா கதை.

பாண்டவர்கள் இராச்சியத்தை விட்டு சுவர்க்கத்துக்குப் போகுங் காலையில் அவர்களுக்குப்பின் சிங்காசனம் ஏறுவதற்கு அவர்கள் பிள்ளைகள் ஒருவருமில்லையாகையால், அர்ச்சுனனுடைய தௌஹித்திரனாகிய பரீக்ஷித்துக்குப் பட்டங்கட்டினார்கள். இவ்வரசன் கலியை அடக்கி அரசாட்சி செய்து வந்தான். ஒரு நாள் மன்னன் வேட்டைக்குச்சென்று வெகு தூரம் திரிந்து களைப்படைந்து, சமீகமகாமுனியின் ஆச்சிரம மடைந்து அங்கே உட்கார்ந்தான். அங்கே அந்த யோகியானவர் நிஷ்டாபரராய்த் தன்னைத்தான் மறந்து தவஞ்செய்து கொண்டிருந்தார். ஆகையால் அம்முனிவர் அரசனுடன் பேசவில்லை. அரசன்கோபத்துடன் இவ் இருஷி கபடி, பிரபுவாகிய நம்மை லட்சியஞ் செய்யாதிருக்கின்றான் என்று துர் அபிப்பிராயங் கொண்டான்; பிறகு சும்மா இராமல், அங்கே செத்துவிழுந்து கிடந்தசர்ப்பத்தை அம்முனியின் கழுத்தில் மாலையாகப் போட்டுவிட்டுப் போய்விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்இருஷி குமாரர்கள்வந்து தந்தையின்மீது போடப்பட்டிருந்த பாம்பைக்கண்டு, தந்தைக்கேதோ அபாயம் சம்பவித்ததென்று திகிலடைந்து சுற்றுமுற்றும் பார்த்தார்கள். அங்கே குதிரைகளின் அடிச்சுவடுகளையும் மனிதர்களின் அடிகளினுடைய அடையாளங்களையும் கண்டு இங்கேயாரோ க்ஷத்திரியன் வந்து இத்தகைய அடாத செய்கையைச் செய்து போயிருத்தல் வேண்டுமென்றறிந்து "அக்ஷத்திரியாதமன் இன்னும் ஏழுதினத்திற்குட் பாம்பு கடித்து இறக்கக்கடவன்" என்று சபித்தார்கள். பின்னர்த் தந்தைக்கு இவ்விதக்கெடுதி நேர்ந்ததே என்று துக்கித்துக்கொண்டிருக்கையில், இருஷி கண் திறந்து பார்த்து, நடந்த விருத்தாந்த மெல்லாம் அறிந்து, தார்மிஷ்டனாகிய பரீக்ஷித்து மகாராஜனுக்குக் கெடுதி நேர்ந்ததே யென்று துயருற்று, அச்சாபத்தைப் போக்கடிக்கவகை யறியாமல் அரசனுக்கு இச்செய்தியைச் சொல்லியனுப்பினார். அரசன் இவ்வார்த்தையைக் கேட்டு வருத்தமடைந்து கங்காநதியின் மத்தியில் ஒரு திட்டில் உட்கார்ந்துகொண்டு ஸ்ரீபாகவதத்தை வைராக்கியத்துடன் கேட்கவாரம்பித்தான். இவ்வாறு ஆரம்பித்த ஏழாநாளையில் தக்ஷகன் பிராமண வேடம் பூண்டு நதியைக்கடந்து அரசனிருப்பிடஞ் சேர்ந்து அவனுக்கு ஒரு எலுமிச்சம் பழங் கொடுத்தான். அரசன் அதைவாங்கிக் கொள்ளலும் அப்பழமே பாம்பாய் மன்னனைக் கடித்தது. பாம்பாற் கடியுண்ட பார்த்திபன் அப்பொழுதே அந்தகன் ஊருக்கேகினான். இருஷிசாபம் நிறைவேறி விட்டது. மரணத்தினின்று தப்பித்துக் கொள்வதற்கு என்ன உபாயம் செய்தும் பலிக்கவில்லை. இவ்வாறே, அற்பசேஷ்டையைச் செய்வதனால் அநுகூலம் யாதொன்றும் இல்லாமற் போயினும், பெரிய அபாயம் விளையுமென்பது மாத்திரம் திண்ணம்.—பாகவதம்.

நகுர்வீத வ்ருதாசேஷ்டாம் நவார்யஞ்ஜலிநா பிபேத் ।
நோத்ஸங்கே பக்ஷயேத் பக்ஷ்யாந் நஜாது ஸ்யாத்குதூஹலீ ॥

**மநுஸ்மிருதி.**

பயனற்ற சேஷ்டை செய்யக்கூடாது, ஜலத்தை அஞ்சலிக்கையுடன் குடிக்கக்கூடாது, (தொடை முதலாயின) தட்டக்கூடாது. எப்பதார்த்தத்தையும் எறியக்கூடாது, எவ்வளவு ஆத்திர முள்ளவனாயினும் உரக்கக்கூவக்கூடாது.

## பரிகாசம் செய்யக்கூடாது.

இராவணன் பிரமதேவனை நோக்கித்தவஞ் செய்து அவரிடம் வேண்டியவரங்களைப் பெற்றுத் திக்குவிஜயஞ் செய்யும் பொருட்டுப் பிரயாணப்பட்டான். முதலிற் சிலதேவதைகளை ஜயித்து, கின்னர கிம்புருஷர்களை வருத்தி,

பிறகு நதிகள், குளங்கள், ஏரிகள் இவற்றைப் பாழாக்கி, ஊர்களை யழித்து, ஜனங்களை ஹிம்சித்து, கடைசியில் கிராமங்களையும் பட்டணங்களையும் அக்கினிக்கு இரையாக்கினான். மேலும் தன் அண்ணனாகிய குபேரன்மீது படையெடுத்துச்சென்று, அவனைத்தோற்கடித்து, அவனது புஷ்பக விமானத்தைப் பற்றிக்கொண்டு அதில்தான் உட்கார்ந்து கொண்டு ஆகாச மார்க்கமாய்ப் போய்க்கொண் டிருக்கையிற் சிறிது தூரத்திற்குப்பிறகு அவ்விமானம் நின்றுவிட்டது. இப்படி நின்றுபோனதற்குக் காரணமென்ன வென்று அருகிலிருந்த மாரீசனை வினவ, அவன், இவ்விமானம் குபேரனுக்கன்றி மற்றொருவருக்கும் போகாதென்று தோன்றுகின்றதென்று கூறிக்கொண் டிருக்கையில், பரமசிவனது ஆப்தகிங்கரராகிய நந்திகேசுவர மூர்த்தி இராவணனைக் கண்டு,—'இது கைலாஸபர்வதம் ; இதன்மீது பிரமாதிதேவர்க ளாயினும் சிவபிரானது ஆணையின்றிச் செல்வது அசாத்தியம்; ஆகையால் நீ பின்செல்லக்கடவாய் ; இல்லாவிடில் நீ கெடுவாய்' என்று உரத்துச்சொன்னார்.

அப்பொழுது தசக்கிரீவன், சங்கரனது இரண்டாம் ரூபமான நந்திகேசுவரரைப்பார்த்து-- இக்குரங்கு எங்கே இருப்பது ? எங்கிருந்து வந்தது ? இதன்முகம் முழுநீளம் இருக்கின்றது, இதன்தலைமீதுள்ள கொம்புகள் எவ்விடத்தன ? இத்தீவாந்தர வானரத்தை இங்கேகொண்டுவந்துவிட்டவர்கள் யார் ? என்றிவ்வாறு நந்தியின் முகத்தைப்பார்த்து பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டும் உறுமிக்கொண்டும் கேலிசெய்து நகைத்தான். இவற்றையெல்லாம் கண்ட நந்திகேசுவரர் சீற்றத்துடன், ராவணனைநோக்கி 'அடே துராத்மா! உன்பராக்கிரமம் எவ்வளவு ? துன்மார்க்கத்தால் வேருடன் நீயே அழியப்போகின்றனையே ! ஆகையால் உன்னை நான் கொல்லாமல் விட்டேன். என்முகத்தைப்பார்த்துக் குரங்கென்று சொல்லி நீபரிகாசம் செய்தமையால் உன்பட்டணமும் செல்வமும் குரங்கினாலேயே நாசமடையக் கடவது' என்று சபித்தார்.

இவ்வாறு சபிக்கப்பட்ட வெகுகாலத்திற்குப்பிறகு இராவணன் சீதாதேவியை எடுத்துக்கொண்டுபோய், அசோகவனத்தில் வைத்திருந்தபொழுது, அந்தத்தேவியைத் தேடும்பொருட்டு, ஆஞ்சநேயன்வந்து அவ்வனத்தையழித்தார். இராவணன் இந்தச் சங்கதியைக்கேட்டு அநுமானைப்பிடித்துக்கட்டி அவர்வாலைக் கொளுத்தவேண்டுமென்று அதற்குத் துணியைச்சுற்றிக் கிடைத்த எண்ணெய், நெய் எல்லாவற்றையும் சேர்த்து ஏற்றிவிட்டான். இக்குரங்கு தன்வாலினால் இலங்கையைக்கொளுத்திப் பாழாக்கி, கடைசியில் ஸ்ரீராமனது வானரசைனியமே இராவணனுடைய நாசத்திற்குக் காரணமாயிற்று. நந்திசாபமும் பலித்தது. ஆகையால் எப்பொழுதும் எவரையும் பரிகாசஞ் செய்யக்கூடாது.—உத்தர ராமாயணம்.



[illegible] ।
[illegible] ॥

—மநுஸ்மிருதி.

(பெரியோர்கள் எதிரில்) 'சிட்டிக்கை' போடுதல், குழந்தைவிளையாட்டுத்தனமாய்க் கைகொட்டி நகைத்தல், பயமுறுத்தல், இவை முதலியவற்றை அறிவுள்ளவர்கள் செய்தல் கூடாது.

தி. அ. சுவாமிநாதஐயர்.

---

## இந்தியாவி லிரும்புவேலை.

---

இந்தியாவில் இரும்பைக்காய்ச்சி இரும்புவேலை செய்வதைப்பற்றி நமது பம்பாய் ஜட்ஜி சீரியர் மிஸ்டர் ரானடே எழுதியுள்ளதைத் தமிழ்ப்படுத்திச் சுருக்கிவிடுக்கின்றோம்.

இரும்புகாய்ச்சுகிற வேலையைப்பற்றி இதுவரைக்கும் நடந்த விருத்தாந்தங்களை எடுத்துக்காட்டினால், நமது இங்கிலிஷ்த் துரைத்தனத்தார்க்குக் கைத்தொழிலில் உள்ள உயர்வுவிளங்கும். இரும்புவேலையோ மற்றத்தொழில்களுக்குத் தலைமையானது, இஃது ஓங்கினால் மற்றைப்படி நாட்டின் சம்பத்து ஓங்கும். இதற்கு ஆன யத்தனங்களில் எவ்வளவு ஆபத்துக்கள் நேரிட்டனவெனத் தெரிவதிற் பிரயோசனம் உண்டு. இந்தியாவில் இரும்பு மண் கிடக்கிற விஸ்தாரத்தையும் அவ்வளவிருந்தும் இரும்புவேலை நடப்பது மட்டாயிருப்பதையும் பார்த்தால், பரிதாபமாயிருக்கின்றதென மருந்துப்பட்டாள காப்டின் டவுன்ஷெண்ட் முறையிடுகின்றார். இரும்பு மண்ணில் முதல்தரமானது கணக்குக்கு மிஞ்சிக்கிடப்பது மிஸ்டர் பால், டாக்டர் வாட் இவர்களாற் கவர்மன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டது, மற்றைப்படி பூலோகத்தில் எங்கும் இவ்வளவு மண் அகப்படாதாம். இப்படியிருக்க இந்தியாவில் இருப்பு செப்பு வேலைச்சாலைகளிருப்பது 42 தான். அவற்றிலும் வெளிச்சீமை இரும்பு செம்பே உதவிவருகின்றது, 12000 தொழிலாளிகள்தாம் அவ்வாறு பிழைக்கிறார்கள். இக்காலத்து இரும்புவேலை நிலைமை இத்தன்மைத்தாக முற்காலத்துநிலைமை என்னவென்றால்:—

இந்தியாவுக்கு வேண்டிய இரும்பு இந்தியாவில் உற்பத்தியானதன்றி, வெளிச்சீமைகளுக்கும் இந்தியாவின் இரும்புசென்றதுண்டு. முதல்தரமாயுமிருந்தது. டெல்லியில் அடித்த இருப்புஸ்தம்பம் 1500 வருஷத்திற்கு முன் செய்தது, இன்னும் நிலைத்திருக்கிறது. வேலைத்திறம் ஐரோப்பாவில் விசேஷித்துக் கொஞ்சநாள்தான் ஆயிருக்கிறபடியால், இப்படிப்பட்ட ஸ்தம்

பத்தை அடிக்க இக்காலத்து ஐரோப்பியர்க்கு ஒருவேளை தெரியலாமே
தவிர சுமார் - 50 வருஷத்துக்கு முன் ஐரோப்பியர்க்கு அசாத்தியமாயிருந்தி
ருக்கும். அகன்ற வாய்அமைந்த பீரங்கிகளை அஸ்ஸாமிற் செய்து வந்த
துண்டு. எஃகு இந்தியாவிலிருந்து போய், டமாஸ்கஸின் கத்திவேலை
நடந்தது. இந்தியாவின் எஃகு இங்கிலண்டின் கத்திக்காகவும் ஏற்றுமதியாயி
ற்று. இந்தியாவின் உலைகள் ஓய்ந்து கருமான்தொழில் அழிந்து சீமை இரும்பு
இப்போது வழங்குகின்றது. நமது இரும்பு நசித்ததே தவிர, இரும்பை இந்
தியர் வழங்குவது ஜாஸ்தியாய் ஏறிவிட்டது. சீமையிரும்பு இந்தியாவில்
இறங்கும் கணக்கைப்பார்த்தால் 1888-9 வருஷத்தில் தெரியவருவதாவது.

| | | |
|---|---|---|
| இரும்பு இறங்கியது. | 2-லக்ஷம் டன் | விலை 2½ கோடி ரூ. |
| எஃகு | 125,00 டன் | 34 லக்ஷம் ரூ. |
| தண்டுவாளம், சாமான்கள் ... | | 1 கோடி ரூபாய்க்குமேல் |
| ரயில் இரும்புசாமான், கருவி ... | | 2½ கோடி |
| ஆலைவேலைக்குரிய சாமான் ... | | 2½ கோடி ரூபாய் |
| கவர்மன்ருர் இறக்கினது. | | 1 கோடி |

மேலே கண்ட வருஷத்தில் இறங்கிய இரும்பின் மொத்த மதிப்பு 11
கோடி ரூபா. இதற்கு 20 வருஷத்துக்கு முன் 2½ கோடி ரூபாய்க்குத்தான் இற
ங்கினது. 20 வருஷத்தில் 4 மடங்கு ஏறினதனுல் இந்தியாவின்சொந்த இரு
ம்பு வழங்கினது இவ்வளவுஅழிந்ததாம், இந்தியாவில் இரும்புவேலை அழிந்த
தற்குக் காரணம் வெளிநாட்டு இரும்பு வநுத்ததனுல் மாத்திரமன்று, உலைக
ளில் தீ ஊட்ட விறகு வரவா கம்மிப்பட்டு வருவதும் காரணம்தான். இந்தி
யர்களுக்கு நிலக்கரிச் சமாசாரம் என்னாளும் தெரியாது, அவர்களுக்குக்
கட்டைக்கரிதான் தெரியும். ஒரு டன்இரும்பு காய்ச்சி எடுக்க, 14-டன் விறகு
இல்லாமல் ஆகாது. கட்டைக்கரியிட்டு வேலைசெய்தால் இரும்பின் பட்டு
படி விசேஷப்பட்டு விலையாகாது. விறகுச்செலவுதான் இந்தியாவில்
இரும்புகாய்ச்சத் தடையாயிருப்பது. இரும்புமண் ஏராளமாய் எவ்விடத்
திலும் கிடைப்பதாயிருக்க, இந்தியாவில் நிலக்கரி வேண்டிய இடங்களி
லெல்லாம் அகப்படாமல், சில குறித்தவிடங்களிலேயே கிடைக்கின்றது.
அவ்விடங்களிற் கிடைக்கும் நிலக்கரிசொற்பமல்ல. 35,000 சதுரமயில் விஸ்
தீரணத்துக்கும் மேற்பட்ட நிலக்கரிபற்றிய இடம் இருப்பதுநிஜம். நிலக்
கரி கிடைக்கும் இடங்களாவன :—

(1) வர்தா, கோதாவிரிப் பள்ளம்.
(2) ஸோன்நதி, அதன் உபநதிகள், இவைகளையடுத்த பள்ளம்.
(3) தாமுடநதி, அதன் உபநதிகள், இவைகளையடுத்த பள்ளம்.
(4) விந்தியமலைத்தொடரின் தாழ்வரை.
(5) இமயமலைத்தொடரின் தாழ்வரை



கூடியமட்டும் இவ்விடங்களில் துரைத்தனத்தாரும் ரயில்வேயாரும்
நிலக்கரி தோண்டாமலிருக்கவில்லை. 1879—80-ம் வருஷத்தில் 15-லக்ஷம்
டன், நிலக்கரி இநதியாவில் தேவையாயிருந்ததில், 10-லக்ஷம் டன் நிலக்கரி
இந்தியாவில் உற்பத்தியானது. இப்புறம், நடந்த 14-வருஷங்களில் நிலக்கரி
உற்பத்தியும் செலவும் இரட்டித்து, 1888—89-ம் வருஷத்தில் 20 லக்ஷம்
டன் நிலக்கரி இந்தியாவில் உற்பத்தியாகிச் செலவானது மன்றிச் சுமார்
9-லக்ஷம் டன் நிலக்கரி வெளிச்சீமையிலிருந்து வரவேண்டியிருந்தது.

இருப்பு வேலைக்கு நிலக்கரி அருகிற் கிடைப்பது அகத்தியமாயிருப்ப
தன்றிச் சுண்ணும்புக்கல்லும் வேண்டியமட்டும் பக்கத்தி லிருந்தால் தான்
இரும்புமண் தளர்ந்து உருகும். தீயைத்தாங்குங் களிமண்ணும் இருந்
தால்தான் உலைகள் வீறல் இன்றிக் கெட்டிப்பட்டிருக்கும். இவ்விரண்டு
பொருளும் இந்தியாவில் நிலக்கரி அகப்படும் இடங்களிற் பெரும்பான்மை
கிடைப்பனவாம், ரயிலுக்கும் கடலுக்கும் நெருக்கமாயிருத்தல், நிலக்
கரி சுண்ணும்பு வேண்டியன கிடைத்தல், இவ்விரண்டும் அவசியமான
படியால், இரும்புவேலை லாபகரமாய் நடக்கக்கூடியது, இரும்புமண்
கிடைக்கிற எல்லாவிடங்களிலு மல்ல, நிலக்கரி சுண்ணும்பு முதலியனவும்
கிடைக்கக்கூடிய விடங்களில் மாத்திரம் ஆம். இச்சங்கதியைப் பற்றி
மிஸ்டர் பால் சொல்வதாவது :—ராணிகஞ்ச் நிலக்கரி வெளியில் உயர்ந்த
இரும்பும் எஃகும் காய்ச்சி யெடுக்கலாம். வேலையைச் சாக்கிரதையுடன் நடத்
தினுல், இங்கிலாண்ட் சீமை இரும்புக்கும் மலிவாய் வங்காளத்தில் விலைப்ப
டும் ஹஜரிபாக் ஜில்லாவில் பலமோ வெளியிலும் இதேபிரகாரம் வேலை
நிறைவேறும். இம்மட்டும்வங்காளத்துக்கு ஆயிற்று. பம்பாய்க்கோவென்ருற்
சந்தாவெளியில் வேலைசெய்தால், பம்பாயிலும், மத்திய மாகாணங்களிலும்
சீமை இரும்புக்கும் மலிவான இரும்புகிடைக்கும். நெர்மதைநதி வெளி
அஸ்ஸாமில் மேட்டு ஸ்தலம், இவ்விடங்களும் இப்படியே பயன்படும். மற்
றைப்படி இந்தியாவில் எவ்விடத்தில் வேலைசெய்யினும் சீமை இரும்புக்கு
ஈடு ஆகாதெனலாம். காப்டின் டவுன்ஷெண்டினுடைய அபிப்பிராய
மாவது, ஹஸரிபாக் வெளிதான் எல்லாவற்றிற்கும் முதல்தரம். தென் இந்
தியாவிற் சேலம் ஜில்லாவில் இரும்பு மண்மற்ற எந்த இடத்தையும்விட வி
சேஷமானது; சேலத்தில் விறகுக்கு நிலக்கரிகள் கஷ்டமானுலும், அக்கஷ்
டத்தை எப்படியாவது வென்றுவிட வழியுளது. சேலத்தில் உயர்ந்தரகத்து
இரும்பும் ராணிகஞ்ச், வாதாவெளிகளில் தாழ்ந்தரகத்து இரும்பும் வேலை
செய்யும்படி அமைக்கலாமாம். நிலக்கரி கிடையாத விடங்களிற் காடுகள்
இருக்கப்பெற்ருல் அக்காடுகளைச் சரியான ஏற்பாட்டில் வைத்து நடத்தி
னுல், கட்டைக்கரியைக்கொண்டே வேலையை நிரைவேற்றலாம் என, மிஸ்
டர் பால் அபிப்பிராயப்படுகின்ருர். ஸர்ஜார்ஜ் மோல்ஸ்வர்த் சொற்படி கட்
டைக்கரியால் வேலை நடத்தலாம். ஆனுல் மேற்பார்வை ஒழுங்காய் நடத்

தல் முக்கியம். டாக்டர் வாட் துரையின் இன முடிவான அபிப்பிராயமாவது,
நாளைவரையில் உள்ள காலதேச வர்த்தமானங்களை யநுசரித்துப் போகுமட்
டில், வங்காளம், ஜபல்பூர், சந்தாவெளிகளிலே இரும்புவேலை விசால
மாய் நடத்தி இலாபம் பெறலாம்.

சீமை இரும்புசாமானை வாங்குவதிற் சீமைக்கடை விலை ரூ. 100-ஆனால்
அங்கிருந்து ஏற்றி இறக்கும் செலவும், கப்பற் செலவும் ரூ. 50-அதிகப்படு
கின்றது. இது கண்டிப்பென்று அனுபோகப்பட்ட உத்தியோகஸ்தர் அபிப்
பிராயப்பட்டதாக டாக்டர்வாட் தமது டிக்ஷனெரிப்புத்தகத்திற் சொல்லி
யிருக்கின்ருர். ரயில் 1-மைல் நீளத்துக்கு இரும்பு ஸ்லீபர்களுக்குச் சீமை
யில் பட்டிபடி 2000 - பவுன், இந்தியாவில் இறங்க அதன் விலை ரூ. 31000,
கப்பல் சார்ஜும், இறக்கும் சார்ஜும், செலவை ஜாஸ்திப்படுத்துகின்றன.
இறங்கியபின் ரயில் சார்ஜும் மாற்று வட்டமும் சேர்ந்து இன்னும் 100-க்கு
50-சேர்கின்றது. சென்ற 30-வருஷத்தில் 150-கோடி ரூபாய் இரும்பு சீமையி
லிருந்து இந்தியாவுக்கு வந்ததில், எடுப்புக்கூலிச்செலவு ரூ.50-கோடி பிடித்
திருக்கும். இவ்வளவும் நம்நாட்டு இரும்பு ஆக இருந்திருந்தால், 50-கோடி
ரூபாய் மீந்திருக்குமல்லவா? ரயில்வே முதல் முதல் போடும் முன்னேமே
இரும்பு வேலைச்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் எவ்வளவு கஷ்டம்
நேரிட்டிராது! துரைத்தனத்தார் தமது நாட்டுக்கு வேண்டிய ரயில்வே
வேலையைத் தாமே நடத்தினுல் தப்பு ஆகாது. உப்பு, அபினி பயிரிடுகிற தொ
ழிலைத் தம்கையில் வகித்த துரைகளுக்கு ரயில்வேலை யெடுத்தபின் அதை
ச்சார்ந்த இரும்புவேலையைக் கையாடுவதில் என்ன ஆக்ஷேபனை இருந்தது;
இப்படியே ஆதியிலேயே நடந்திருந்தால் எவ்வளவு [illegible] நாட்டி
லேயே விளைய வந்து கொண்டிருக்கும். கருமார் எத்தனையயர் அத்தொ
ழிலை நடத்திப் பிழைத்துவருவர். கருமார் தொழில் இந்தியாவில் அடி
யோடே அழிந்ததே!

இந்தியா கவர்மன்ருர் நாட்டின் நன்மை நாடாது பராமரித்தார்
எனல் முற்றும் மாளாது. அக்கரைப்பட்டுச் செலவிட்டு - பூமிக்குள் ஆழ்ந்து
கிடக்கின்றதை சோதனைசெய்யச் சர்வேயர்களை நியமித்து இரும்பு மண்
ணுள்ள இடங்களை நிதானித்துக் குறித்தனர். வெளிப்பட்ட மண்களைச்
சுட்டுச் சோதனைசெய்யச் செலவிட்டனர். அநேக கம்பெனிகளுக்கு ஆதா
யம் காட்டி வேலைசெய்யத்தூண்டுதல் செய்தனர், கவர்மன்ருருக்கு வேண்
டிய சாமான்களை நாட்டிலேயே கொள்ளும்படி உத்தரவு செய்தனர். இவை
யெல்லாம் கருணை எண்ணத்தால் இயன்றதே. இவ்வளவு நற்சிந்தைக்குத்
தக்கவாறு ஊக்கத்துடனும் உறுதியுடனும் முதல்முதல் ஓரே நோக்கமாய்
முனைந்து நடவடிக்கை நடத்தாததனுல், இடைப்பட்டுக் குடிகள் செய்த எத்
தனங்கள் தோற்றுப்போய், பெருந்தவேலையெடுக்கும் புத்தியே இந்தியா



வில் தலையெடுக்காமல் முற்றுந்தவறிற்று. இந்த யத்நங்கள் தவறிய வழிகளை
விவரிக்க நான் ஏற்றமையால் அப்படியே அவ்யத்நங்களை முறையாய் எடுத்து
உதகரிப்பேன்.

**சேலத்து இரும்பு வெளி**:—(1825-61 இ.) 1825-ம் வருஷத்தில் கவர்
மன்ருரிடத்தில் மிஸ்டர் ஹீத் முன்பணம் பெற்று இந்தியா எஃகு, இரு
ம்பு, க்ரோம் கம்பனி என்று பெயரிட்ட கம்பெனியை 1833-ம் வருஷத்தில்
ஏற்படுத்தினர். தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மலையாளம், தென்கன்ன
டம், இந்த நான்கு ஜில்லாக்களிற் குத்தகைப் பாத்தியம் ஷை கம்பெனியார்
பெற்றனர். தென்ஆற்காடு ஜில்லாவிற் பரங்கிப்பேட்டையிலும், மலையாள
ஜில்லாவிற் பேப்பூரிலும், சேலம் ஜில்லாவிற் பலபட்டியிலும் இரும்பு
காய்ச்சி வேலை செய்யச் சூளையாபீசுகள் வைக்கப்பட்டன. இங்கே தேறிய
எஃகு சிலாகிக்கப்பட்டு இங்லாண்டிற் செல்ஸீயில். அதற்கு ஒரு பண்டசாலை
யும்வைக்கப்பட்டது. மிஸ்டர்ஹீத் கூட்டிய கம்பெனியார் வேலையை மற்றொரு
கம்பெனியார் வாங்கி, இவர்கள் பரங்கிப்பேட்டையிலும் பேப்பூரிலும் 1858
ம்வருஷ வரையில் வேலை நடத்தினர். அவர்களுக்குக் கட்டை விறகும் கிளிஞ்
சற் சுண்ணும்பும் 25-மைல் தூரத்திலிருந்து வரவேண்டியிருந்தது. இவ்
வளவு அல்லாட்டமிருந்தும் அவர் செய்த வராப்பு இரும்பை இங்லாண்டில்
ஷெப்பீல்ட் கருமார் பார்த்து இங்கிலண்ட், ஸ்வீடன் இரும்புக்கும் உயர்ந்த
தரம் என்னப்பட்டு எஃகு பண்ண டன் ½-பவுனுக்கு விலையானது மல்லா
மல், இந்த இரும்பைக்கொண்டு ப்ரிடானியா குழாய் வாராவதியும் மெ
னேவாராவதியும் இங்லாண்டிற் கட்டப்பட்டன. அக்காலத்தில் விறகுக்கஷ்
டம், போக்கு வரவுக்கஷ்டங்களன்றியும், கப்பல் ஏற்றும் கஷ்டமும் இருந்
தது. வருஷத்தில் 4மீ° தான் காய்ச்சல் வேலை நடக்கும். இதனுல் இரும்பு
சீமைக்கு ஏறுவதில் இடையூறுகள் நேரிட்டுச் சிப்பந்திச் செலவு மிகுந்து,
பங்குக்காரர்களுக்கு இலாபம் காட்டத்தவறினர். ஷெப்பீல்ட் கருமார்
எதிர்பார்த்தபடி, இந்தியா இங்லாண்டுக்கு இரும்பு அனுப்பக்கூடியது நின்று
போய், 1860-61- ம் வருஷத்தில் பரங்கிப்பேட்டை வேலை ஓய்ந்தது.

2\. **பேபூர் இரும்புவேலை ஸ்தானம்**:—1833-ம் வருஷத்தில் தொடங்
கப்பட்டது. அடிக்கடி எஜமானர்கள் மாறினர். 1857-ம் வருஷத்தில் தேறிய
இரும்பு, தம்வேலைக்கு உதவும்எனப் பீரங்கிப் பட்டாளத்தின்ரால் அங்கீகரி
க்கப்பட்டது. ரோட்டுகள் சரியான நிலைமையில் இல்லாதபடியாலும், தூர
த்தினின்று விறகுவரவேண்டி யிருந்தபடியாலும், இலங்கைத்தீவிலிருந்து
கடல்வழியாய்க் கட்டை வரவேண்டியதாயிற்று. 1859-ம் வருஷத்தில் ஜெர்
மானியவேலைக்காரர்கள் ஒதுங்கினர். 1861-ம் வருஷத்தில் வேலை திரும்பியும்
செய்யப்பட்டதானுலும், பிற்பாடு வேலை நிறுத்தப்பட்டுப் போயிற்று. பொ
துவாய்ச் சிந்தித்துப்பார்த்தால் இவர்கள்வைத்த முதற்பொருள் சொற்ப

மானதனால் எப்போதும் விலைக்கு இரும்பு போய்க்கொண்டிருக்க வேண்டி
யது தவறி, விறகுக்காக அவதிப்பட்டு இந்தக் கம்பெனி தோற்றது.

சென்ற 30 - வருஷங்களிற் போக்கு வரவு அவதி எவ்வளவோ நீங்கிப்
போயிற்று, விறகு அவதியும் நீங்கிற்று எனலாம். ஸிங்கரெனி நிலக்கரி வெ
ளிக்கும் சேலத்துக்கும் டிராம்போட்டு நிலக்கரி கொண்டுபோனால் நஷ்
டம் வாராது. (ஈ-ஸ்ட் கோஸ்ட் ரெயில்வே முடிந்து வண்டி நெடுகலும்போ
கின்றது. டிராம்வே இன்றியே, நிலக்கரி சேலம் வெகுவாய்ச்சேர இடம்
ஏற்பட்டு விட்டது) காப்டின் டவுன்ஷெண்ட் சொற்படி (பிக் இரும்பு) வார்
ப்பு இரும்பு வேலைமட்டும் நடத்தல் பிரயோஜனப்படாது. இரும்பைச் சேர்
ந்த சகலவேலையும், அடித்த இரும்பு, இரும்புத்தகடு, நீராவிச்சுத்தி இப்போர்
ப்பட்ட முதன்மைபட்ட வேலை யந்திரங்களும் அமைந்த பெருந்த வேலைச்
சாலை நடை பெற்றால்தான் வேலைகூடிவரும். வேலை தொடங்கிக் கொஞ்ச
வருஷத்திற்கு லாபம் எதிர்பார்க்கக் கூடாதுதான். இந்தச் சந்தர்ப்ப பர்
கிடையாதா? கவர்மன்றார் போட்டுக் கொடுப்பதுபோல, நஷ்டப்பிராப்
திக்கு இடம் இல்லாதாயின் முதல்போட நாட்டார் ஏற்படுவர், பிற்பாடு
இலாபத்துக்கு வேலை நடக்கும்.

3. 1894—ம் வருஷத்தில் செங்கல்பட்டுஜில்லா இரும்புமண்ணைக் காய்
ச்ச ஒருகம்பெனிபுறப்பட்டது. அப்போதும் விறகு அவதியே எதிரிட்டது.
கோதாவரிக்கரியை எதிர்பார்த்தார்கள், அதற்கு வேண்டிய முதல் சேராமல்
கம்பெனி மறைந்தது. மதிராஸுக்கு வருஷத்தில் சீமை இரும்பு—18 லக்ஷம்
ரூபாய்க்கு இறங்குகிறது.

4. இனிமேல் வங்காளப்பக்கத்துப் பேச்சை எடுப்போம். நிலக்கரியும்
இரும்புமண்ணும் சேர்ந்துகிடைக்கின்ற இடங்களாவன, பீர்பம் ஜில்லா,
ஹஸரீபாக்ஜில்லா, ராணிகஞ்சஜில்லா. இந்திரநாராயண சர்ம என்ற ஒருவர்
1774-ம் வருஷத்தில் பீர்பம் இரும்பு பாத்தியத்திற்காக வருஷ-1-க்கு ரூ. 5,000
கட்ட ஒப்பி மனுப்பண்ணினார். அதற்குக் குத்தகை நிறைவேறவில்லை.

5. பர்ட்வானுக்கு மேற்கேயுள்ள ஜில்லாக்களில் இரும்புவேலைசெய்ய
மோட்அண்ட்பார்க்வர் என்னும் கம்பெனியாரும், பீர்பம், பசடேஜில்லாவிற்
சிலவிடங்களில் இரும்புசெய்ய ஸம்மர் அண்ட ஹிட்லி என்றகம்பெனியாரும்
உத்தரவுபெற்றுச் சீமைவிலைக்கு வரி தள்ளி விலைக்கு இரும்பு கொடுத்துவர
ஏற்றனர். சீமையிலிருந்து குண்டுகளும் ஷெல்களும் கல்கத்தாவிற் சேர
எவ்வளவு பிடிக்குமோ அதற்கு முக்கால்விலைக்கு அவற்றைத் தாங்கள்
போடுவதாய் மோட் அண்ட்கம்பனியார் ஒப்பினர். 15,000 ரூபா முன்பணம்
கவர்ன்மன்றாரிடத்தில் வாங்கி 1779ம் வருஷ முதல் 1789ம் வருஷ வரையில்
வேலைநடத்தினர். 1789-ம் வருஷத்திற் குண்டுசாமான் வேலை கைவிடப்பட்டு



1795 ம் வருஷத்திற் குத்தகையும் ஓய்ந்தது. வேலை நடந்துவந்த காலங்களிற்
கல்கத்தாவிற் சீமை இரும்பு மணங்கு ஒன்றுக்கு 10 ரூபா யாக, நாட்டு
இரும்புரூ. 5-க்கு விற்றது.

6. 1854-ம் வருஷத்தில் - பீர்பம் இரும்பின் நிர்வாகத்தைப்பற்றி நிய
மிக்கப்பட்ட டாக்டர் ஓல்டாம் விறகுநயமில்லாமையைப்பற்றி பீர்பம் இரு
ம்பை ஆதரிக்கவில்லையென்று ரிப்போர்ட்டு செய்தார். இப்படி ரிப்போர்ட்
டாயிருந்ததை லக்ஷ்யம் செய்யாமலே மாகே கம்பெனியார்-1855வருஷத்தில்
பீர்பம் இரும்புவேலைக் கூட்டம் ஒன்றைக்கிளப்பி, அவர்கள் விட்ட இரும்பு
சரியான தென்று பாஸ்செய்யப்பட்டது.

1858 ம் வருஷத்தில் மிஸ்டர் ஸோவர்பியும் விரோதமாக அபிப்பிராயம்
வெளியிட்டதற்கு மாகேகம்பெனியார் சமாதானம் காட்டினர். தினம் 1-க்கு
2 டன் இரும்பு செய்யமுடியும்; டன் 1-க்கு ரூபா 37 விலைப்படும்
என்று இவ்வளவுக்கும் வேலை அடிக்கடி தடைப்பட்டு 1860 - ம் வருஷத்
தில் மிஸ்டர் பிளான்போர்ட் இன்னும் விசேஷமுதல் இட்டு வேலை நடந்
தால் பட்டுபடி குறையும், நஷ்டம் நேரிடாது, சீமை இரும்புக்கும் நய
மாக முடியும், வேலையான இரும்பு சீமை இரும்புக்கும். திறமை, அவ்விட
த்து இரும்பு மண், கரி, சுண்ணாம்பு இவைகள் சாதாரணவேலைக்குப் போது
மானது, விரிவாய வேலை செய்யப்பெறின் போதாது என்றிப்போர்ட் செய்
தார். இவ்வளவுக்கும் வேலை நின்றது. 1875-ம் வருஷத்தில் பர்ன் கம்பெனி
யார் திரும்பியும் வேலையில் இறங்கி அவர்களும் பிற்பாடு விட்டுவிட்டனர்.
பீர்பம் வெளிவேலை நடவாததற்கு விறகு அவதியேகாரணம், விறகு அவதி
முன்னுக்கு இப்பொழுது ஜாஸ்தி. ராணிகஞ்சைவிட ஜாஸ்தி இரும்பு மண்
உடையதாயினும், ராணிகஞ்சில் நிலக்கரிச் சகாயமானது பற்றி, பீர்பம்
இரும்பு தோற்றது.

7. **ராணிகஞ்சவேலி**:—வங்காள இரும்புகம்பெனி ஒன்று 1874 - ம்
வருஷத்தில் உண்டாய் 1879 - ம் வருஷத்திற் ஓய்ந்தது. 10 லக்ஷம் முதல்
வைத்தது சுத்தமாய்ப் போதாமற் போய், எடுத்த நிலத்துக்குக் கிரயம்
கொடுத்ததில் முதல் பின்னப்பட்டது. நயமாய்க் குடிகளிடத்தில் முதல்
எழுப்பப் பார்த்தும் முடியாமற் கடுமையான வட்டிக்குக்கடன் வாங்க நே
ரிட்டது. வார்ப்படம் வேண்டியது கவர்மன்றார் விலைக்கு வாங்கியும்
பொருள் சுருங்கி, கூலிக்காரர்க்குக் கூலி நிர்வாகம் செய்யப்படாமல், பங்
குக்காரர்களுடைய பொருள் அழிந்தது. இரும்புமன் முதல்தரம், சுண்ணா
ம்பு நீறு, நிலக்கரி வேண்டியது கிடைத்தது, 12700 டன் வார்ப்பு இரும்பு
இவர்களுக்குக் கிடைத்தது. இரும்புமண் 37 டன், கரி 27 டன், சுண்ணாம்பு
23 டன், இவற்றைக்கொண்டு 20 டன் வார்ப்புஇரும்பு கிடைத்தது. 100 க்கு
22 ஆகத்தேறியதாம். சிரவலில் டன் 1 க்குப் பட்டுபடி ரூபா 40 ஆயிற்று

ரூபா 33 வரைக்கும் குறையக்கூடியதா யிருந்தது. மிஸ்டர் பால் சொற்படி, வெளிச்சீமை இரும்பைவிட, இறைமையாயும் நயமாயும் முடிந்திருக்கும், பொருள் உதவி அற்றுக் கெடுற்றது. சொற்ப முதல் வைத்ததால் இலாபம் கிடைக்காது போனதும் மற்றப்படி விரோதம் இருக்கவில்லை என்பதும் மேற்காட்டினடவுன் ஷெண்டினுடைய அபிப்பிராயம்.

3 ஷு பொறுத்து இந்த வேலைத்தலத்துக்குப் பாரகோர் வேலை எனப் பெயரிட்டு, கவர்மன்ருர் விசாரணையை வகித்து மிஸ்டர் ஆர். வீ. ஷவார்ட்ஸ் வேலைபார்க்க நியமிக்கப்பட்டார். 1884-ம் ஷுத்தில் தீக்காற்று உலை ஒன்று கட்டி வேலை நடந்ததில் 1889-ம் ஷு வரையில் 30000 டன் இரும்புக்கும் அதிகமாய் உற்பத்தி செய்யப்பட்டது. அப்படியே இன்னும் ஓர் உலை வைத்து ஷு 1 க்கு 15000 டன் முதல் 20000 வரையில் நிறைவேறுகின்றது. குழாய், ரயில்வே, ஸ்லீபர், வாராவதி ஸ்தம்பங்கள், இரும்புச் சித்திரவேலை, ரயில் இருசுப்பெட்டி, விவசாயக்கருவி இவைகளெல்லாம் நிறைவேறி வருகின்றன. ஐரோப்பாவில் நடக்கும் முறைப்படி விசேஷமாய் இரும்பு இந்தியாவில் ஆகலாம் என்றற்கு இந்த வேலைத்தலமே நல்லருசுவாம். 1889-ம் ஷுத்துக்கு இப்புறம் கவர்மன்ருர் நியமனப்படி இன்னொரு கம்பெனியார் இந்த வேலையை நடத்தி வருகின்ருர்.

8. ஜபல்பூர் ஜில்லா வெளி. மிஸ்டர் ஒல்பொட்ஸ் என்ற ஒருவர்க்குப் பாத்தியம் கொடுபட்டு அவர் ஐரோப்பிய முறைப்படி கட்டைக்கரியால் இரும்பு காய்ச்சப்பார்த்து வருகின்ருர். இதன் பக்கத்தில் உமரியா நிலக்கரி வேலை தொடங்கியிருக்கின்றது. ஜபல்பூருக்கு வட கிழக்கில் உள்ள இரும்பு மண் வேலை சீக்கிரத்தில் ஆரம்பம் ஆம்.

9. தெண்டர்கெர. ஓமர்பனி இரும்புக்கனிகள், மோபனி நிலக்கரிக்கனி: இவற்றில் வேலை செய்யும்படி நிர்மதை இரும்பு, நிலக்கரிக்கம்பெனியார்க்கு உத்தரவு கிடைத்திருக்கின்றது. ஜபல்பூருக்கு ரயில்பாதை போட்ட தேதி முதல் 5-வருஷத்துக்குள் 5000 - டன் இரும்புக்குக் குறையாமல் இரும்பு எடுத்துக்காட்டவேண்டிய நிபந்தனையிருந்தும், இரும்பு வேலையை இக்கம்பெனியார் இன்னும் ஆரம்பிக்க வில்லை. இவ்விடத்து இரும்பு மண் மிகுந்த பலிதகரமானது. சுதேச முறைப்படி இவ்விடத்து மண்ணைக்காய்ச்சியெடுத்த இரும்பிட்டு 1830 - ம் ஷுத்திலேயே ஸாகர்க்கு சமீபத்திலுள்ள பியஸ்நதியின்மேல் தொங்குவாராவதி கட்டப்பட்டது.

10. சண்டாஜில்லா இருப்பு:—இவ்விடத்து மண்ணில் மற்ற விடங்களைவிட, ஜாஸ்தி இரும்பு கிடைக்கக்கூடியது; பாஸ்பரஸ் (கிபாக்கினி) கலந்திராதிருப்பது இதன் பெருமை. இந்த மண்ணைச்சோதிக்கும்படி மிஸ்டர் நீஸ்க்கு கவர்மன்ருர் உத்தரவு செய்தனர். 1875 - ம் ஷுத்தில்



முதல்முதல் சோதித்ததிற் நிலக்கரிச் சாம்பல் கலவை மிகுந்து உருகத் தவறிற்று. இரண்டாந்தரம் சோதனை நடந்தபொழுது, ஒருவாறு குணந்தான். இவ்விடத்து இரும்புமண் சிறந்ததே, அங்கே கிடைக்கிற வரோரா நிலக்கரி சிலாக்கியமன்று. ராணிகஞ்சு நிலக்கரி அவ்வளவு கரி இதனில் தேறவில்லை. நீறுபூப்பது ஜாஸ்தி. வரதா நதிப்பள்ளத்தில் உயர்ந்த ரகத்து நிலம் கரி அகப்படும். அக்கரியை வருத்தி வேலைசெயின், இரும்பு கைகூடும் என்று காப்டின் டவுன் ஷெண்ட் நம்புகின்ருர்.

11. மத்திய விந்தியாவில் நிர்மதைப்பள்ளம். இந்தியா கவர்மன்ருர் ஆதரவு அடைந்து இரும்பு வேலைச்சாலை ஒன்றைவைக்கக் கர்நல் கீடிங்ஸ் பார்த்தனர். அவரை ஸ்வீடனுக்குப்போய் அவ்விடத்துவேலை முறைகளை யறிந்து வரும்படி ஸடேட் ஸெக்ரடெரி ஏவினர். மிதாண்டர் என்ற எஞ்சினிரை 1861 - ம் ஷுத்தில் அழைத்து வந்தார். கட்டைக்கரியை எரித்தனர், உருக்குச்சுண்ணம் நெருக்கத்திற் கிடைத்ததும் சௌகரியமாயிற்று. காற்று உலை, உருளும் மில்கள், கட்டைக்கரியடுப்புகள், சூளைகள், எல்லாம் கட்டப்பட்டன. 2-லக்ஷ ரூபாய் விரயமானபின், இன்னும் செலவு செய்யக் கவர்மன்ருர் அமைமனதுப்பட்டு, எஞ்சினீர் மிதாண்டர்க்கு ஐரோப்பிய உதவிகள் நியமித்துக்கொடுக்காது, 1864 - ம் ஷுத்தில் இந்தியாவைவிட்டு ஒழிந்தார், மீதிநின்றது 5000 - ரூபாய்க்குக்கூட விலையாகவில்லை.

டி. ஆர். இராமநாதையர்.

(இன்னும் வரும்.)

---

## தனிப்பாசுரத்தொகை.

---

### XXXVIII. நூல்.

சீலஞ் சிறந்தொளிர் நூலென் பதுதா
னியற்கைப் பொருள்களி னினிய காட்சியாம்
பெயற்கார் சூழ்இமழை பெய்தலுங் கற்ருே
ருள்ளச் செறுவி னுறுவிதை முளைத்துத்
தள்ளரும் பயிராய்த் தழைத்துக் கவியெனுங்
கதிர்க்குலை யீன்று கவின்ருெடர் நிலைப்படூஉ
முதிர்ச்சிசால் புலவர் முற்களஞ் சென்றவட்
சொல்லினி தாய்ந்தபின் றெருகுத்துய்த் திட்டநல்
லில்லமே யன்ருே வென்போ லியர்க்கு?
மாணவர் மனக்குடி பேணுபுத் தகமும்
பாவல வண்டர் படிதே மலரு

மாவலி னாடுநர்க் கன்புறு பொழிலுங்
கனிவுசேர் காரண குருவும்
பனுவ லென்னப் பகருமஃ தன்றோ?

## XXXIX. மாணவன்.

தந்தைக் குதவுந் தனிமகன் போல
விந்தைக் களத்தின் மேதக வெய்தியுந்
தலைவனை விழையுந் தலைமகள் புரையக்
கலைவலா சானைக் கண்டுகளி சிறந்து
முருவைவிட் டகலா வொண்ணிழ லொப்பக்
குருவை யடுத்துக் குற்றேவல் செய்தும்
பரமனை வழிபடூஉம் பத்தன் மானக்
குரவனை மனத்திற் கொண்டு துதித்துங்
கார்பெயச் செழிக்குங் கழனி கடுப்ப
வேர்பெறு மவன்சொலை யினிதுள மடுத்து
மரசற் கிறையிடு மவன்குடி யியையப்
பாசபு நற்பதம் பைம்பொன் கொடுத்தும்
மன்னுந னேகன் மாணவ
னென்ன வகுத்தன ரியல்புணர்ந் தோரே.

## XL. தொழில்.

மன்பே ருலக மண்டிணி ஞாலத்
தன்பின் வணங்கி யாற்றலா னன்றே
தொழிலெனப் பெற்றனை? விழுமிய துணையே!
நின்றன் சிறப்பை நனித்தறி கிலர்சில
ரொன்றலி லுளைபல வுளையா நின்றனர்.
ஓவா விலம்பா டுறினும் புன்றொழி
லாவா கொடிதென் றறிந்து தான்றனி
நற்றொழில் புரிதலே நன்றிது நிற்க.
மற்றினி யொருவன் மகிழ்ந்துமேற் கொண்ட
தொழிலினைப் பிறர்தா மிழிவெனக் கூறினுங்
கைவிட லீயான் கருந்தொழின் முடிக்குமேன்
மெய்வலி யொடுமவன் வீற்றுவள முடையா
னீதொரு தலையென் றியம்புவர்
மூதறி வுடைய முத்தமிழ் வாணரே.

பரிதிமாற்கலைஞன்.



## கசாபியான்கா. *

நீலநதிக் கரையதனி னேர்ந்தபெருஞ் சண்டையிலே
பாலனொரு பதின்மூன்று பருவத்தான் றந்தைமொழி
மேலதெனக் கொளுமுளத்தான் மேன்மையுடை யான்றனக்குக்
காலவிதி வசத்தாலோர் கனல்விபத்து நேர்ந்ததுவால். (௧)

ஆங்கிலவர் பலர்சூழ்ந்தே யழகாகக் கடலின்மே
னீங்கலிலாத் தொழிலினராய்க் கரையருகே நின்றுகொண்டு
தூங்காநிற் குங்கலத்தைத் தூண்டினரால், லோரியன்டும் †
பாங்காகப் படர்ந்ததுவாற் பாராவா ரத்தின்மேல். (௨)

சென்றதனிக் கப்பலின்கீழ்த் தீப்பற்றிக் கொண்டதனு
லன்றவர்க ளவ்வனலை யவிப்பதற்கோர் சூழ்ச்சிகொளா
நின்றனரா லப்போழ்து நெடுநெடென மீகாமன்
சென்றனனாற் கப்பலின்கீழ்ச் சீர்திருத்தஞ் செய்வதற்கே. (௩)

செல்லுகின்ற மாலுமிதன் சீரான புத்திரனை
மெல்லத்த னருகழைத்து வீரமுட னிவ்விடத்தே
சொல்லும்வரை நில்லென்று சொல்லிக்கீழ்த் தட்டினுக்கே
பொல்லையினி லகன்றனனா லூக்கமுட னரணிக்க. (௪)

தீயுமதி கரித்துமரக் கலத்திலுள செய்யகொடி
பாயுமுத லனைத்திலும் பற்றியதோ டமையாம
லாயுந்தி யுடையதொழி லாளர்தமைச் சுற்றியவர்
வீயும்வகை செய்ததனால் வீரர்மிக வெருண்டிட்டார். (௫)

வெருண்டவந்தத் திறலுடைய வீரர்களிற் சில்லோர்க
ளுருண்டனர்க டண்கடலி லுதவியொரு வருமின்மை
தெருண்டனராய்த் திக்கிரையா னார்கள்சில சிலைவீரர்
மருண்டசிலர் வாய்பிளந்த வண்ணந்தம் முயிர்நீத்தார். (௬)

அந்தோவம் மரக்கலந்தா னழல்பற்றி யவிவதுகண்
டந்தோவந் தோவென்றே யலறுபுகூ யவரவர்கள்
முந்தார்வத் தொடுஞ்சென்றார் மொழிபிறழா மேனின்ற
மைந்தனைக்கூ யுயிரோம்ப வருதியென வழைத்திலரால். (௭)

* Casabianca. † L'orient (the name of the Ship.)

கப்பலின்கீழ்ச் சென்றவன்றன் காண்மூளையின் றனக்காருந்
துப்பின்றி யிருந்ததனும் றூய்மையுடை மனத்தினனா
யொப்பில்லா னிவனென்றே யுலகுபுகழ்ந் துரைக்கும்வித
மெய்ப்பதட்ட மொன்றுமின்றி வீரமுட னின்றிருந்தான். (௮)

காசபியன் காவெனுமக் காளையவன் றந்தைசொலை
நேசமுட னேபோற்ற நின்றனனாற் றனைச்சுற்றி
வீசுமன லொழுங்கினையும் வில்லிடுமொண் சுடரினையும்
பேசரிய புகையினையுங் கண்டுமிடம் பிறழ்ந்திலனால். (௯)

மூற்றியவோர் கனியொழிய முறைதவறித் தீவெளியா
னற்காயு முதிர்ந்திடுமிந் நானிலத்தென் றான்றோர்கள்
சொற்றமொழிக் கிலக்கியமாய்ச் சுடர்தணிப்பான் கப்பலின்கீ
ழுற்றபெருந் தன்மையுடை மானுமிதன் னுயிர்துறந்தான். (௧௦)

உற்றதிருத் தாதையினை யூக்கமுட னுடல்வலியும்
பெற்றுநிலத் துதித்தவந்தப் பிள்ளையொரு முறைவிளித்து
முற்றுவனன் கணத்தென்று மொழிந்தனையெற் கெந்தாய்நீ
சொற்றபணி முடிந்ததுவோ சொல்லென்று வேண்டினனால். (௧௧)

நெருப்புமதி கரித்ததுவா னின்றவிடம் பெயர்ந்திலனாற்
பருப்பதத்தை நிகர்தோளாய் பரிவுடனே யெனையீன்றோய்
திருப்பதத்தைத் தாங்குகின்றேன் சேயன்க சாபியன்கா
விருப்புடனீ ரெனக்கின்னே விடையளித்திர் விரைந்தையா! (௧௨)

ஐங்குரவர் தம்மாணை மறுத்தலழ கன்றென்று
பங்கமிலா நெஞ்சத்துப் பதித்தவனா தலினாலே
பொங்குபெரு நெருப்பினிலே போக்கினான் றன்னுயிரைக்
கங்கில்பே ரன்புடைய காசபியன் காவென்பான். (௧௩)

தவஞ்செய்து பெற்றமகன் றன்றந்தைக் காற்றுகைம்மா
திவன்றந்தை யென்னேற்றான் கொல்லென்னு மேற்றமொழி
யவன்றந்தைக் காற்றினனா யாருயிர்போ யொழியமிகுந்
தவர்தங்கி யிறையுண்டவ் வுததியினிற் சொரிந்தனனால். (௧௪)

முற்றும்.

சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.



## வானம்பாடி.*

1. வாழி களிமிகு ஞானியே வாழி! நீ
வானகப் புள்ளலையே!
யாழென நின்மன முற்றுமு னெண்ணா
திசையின் மழைபொழிவாய்!
வாழிடம் வானகமோ? மற்றஃ ததன்புறமோ?

2. நாடாது பூமியை விட்டே நிமிர்தீயி
னற்சுடர் போன்றுநீயும்
வாடாது வானக நீலக் கடலினின்
மன்னிமேன் மேற்புகுவாய்!
பாடியே நீயெழுவாய்! மேலெழப் பாடிடுவாய்!

3. சூழ்ந்திடு மேகமும் வெள்ளியின் சோதியைத்
துன்னி மிகவிளங்க
ஆழ்ந்திடுஞ் சூரியன் பொன்னொளி யின்மிதந்
தாடுவை நீதுலங்க
தாழ்ந்த வுருவொழிந்தே வர்ந்த களிப்பெனவே!

4. கூர்கதி ரோடு விளங்கிய வெள்ளியைக்
கண்ணுற் றிருக்குங்காலை
சேர்வெண் ணுதய நெருங்கிய போதது
தேய்ந்திட நாங்களதைத்
தேர்வோ மிருப்பதென்றே - அது - தெற்ற மறைந்திடினும்.

5. சுற்றிலுஞ் சூழ்ந்தசெம் மாலையு மிப்போது
தானாக வேகரைய
முற்ற வெளிச்சமே யாக மறைந்தவம்
பீனம்போ னீமறைய;
தெற்ற மறைந்திடினும்-நின்-தேனிசை கேட்டிடுவோம்!

6. விண்ணினில் விண்மீன மெல்லாம் விளங்கத்
தனிமுகில் விட்டுநின்றே
வெண்மதி தண்ணொளி வாரி வழங்கிட
வானக மூழ்கும்! இன்றே
மண்ணகம் விண்வரையு நின்னிசையா னிறையும்.

* Translated from Shelley's 'Ode to Skylark'

7. யாரோநீ யென்றே யறிந்திலோம் யாமுன்னை
யொத்ததுங் கண்டறியோங்
காரென வின்னிட நின்றே பொழிந்திடுங்
கான மழையினைப்போன்ம்
பாருறு வின்மழையிற் பெருகுந் தனியழகோ ?

8. இன்பதன் பங்க ளிழைத்திடு முண்மையைக்
கேளா வுலகத்தினோர்
முன்பரி வோடவை கேட்டிட வேவாத்
தானாகப் பாடியவோர்
தன்கருத் தின்னொளியி லாழ்ந்த கவியெனவே !

9. ஒப்பின்மா டத்தி லுயர்குடிக் கன்னிகை
தன்விரா கந்தணிக்க
விப்புவி யெல்லா மடங்கிய வேளையிற்
சுற்றும் பொழில்வழியத்
தப்பறு காதலினின் றாழிசை பாடுநள்போல் !

10. தன்னை மறைத்திடும் புல்லொடு பூவின்கீழ்ச்
சார்ந்தினி தாவிருந்து
மின்விடுந் தன்னொளி யின்னகை யோடுகண்
காணாத போதுமினத்
துன்னும் பனியவலிற் பொன்னொளி மின்மினிபோல்

11. உற்ற விலைமறைத் தோர்வீ டெனச்செய
வோகையொ டாங்குவந்து
பெற்ற விதழ்பிரித் தோர்முத்த மிட்ட
பனிக்காற்றைத் தான்மறந்து
முற்று மயக்கிடுநல் வாசரோ ஜாமலர்போல் !

12. புல்லி னுனியில் விழுந்தொலி சேர்ந்த
வசந்தத் துளிகளுமே
புல்லு மழையா லெழுந்திடும் பூவுமற்
றெவ்வித வின்பத்தினு
மொல்லுங்கம் பீரத்தினா லோங்கிடு நின்னிசையே !

13. பட்சியே நீபர ஞானியே யாயினுங்
கற்பினின் னின்கருத்தை
மெச்சிடுங் காதலி னும்மன்றிக் கள்ளினு
மித்தகைத் தேவகான
நிச்சய மாமென் றுளம்-சேர்ந்திடக் கேட்டிலமே !



14. விவாகசந் தோஷத்திற் பாடிடு மங்களம்
வெற்றியின் மங்களமுந்
தவாதே யிசைத்திடு நின்னிசை யின்முன்னே
தாம்பகட் டாகுமன்றோ ?
எவாறோ வவையிற்றிலோ ரிருங்குறை தோன்றுவதே !

15. எந்தப் பொருள்களின் னின்னிசைக் கூற்றா
மியம்புவாய் நீயெமக்கே
எந்த வயல்க ளலைகண் மலைகளோ
எவ்விண் வெளிவடிவம் ?
சொந்த வினவிருப்போ துன்பறி யாமைகொலோ ?

16. நின்றூய வாவ னிறைந்திடு மின்பத்திற்
சோர்வென்ப தொன்றுமிரா
தென்றென்றுந் துன்பத்தின் சாயலு நின்னிடை
யெய்தவொண் ணாதுபுள்ளே !
நன்றாகக் காதல்கொள்வோய் காதற் றெவிட்டறியாய் !

17. தூங்கி யிருப்பினுந் தூங்கா விழிப்பினு
மாதியந் தங்களினை
நாங்க ளறிந்ததைக் காட்டிலு நீமிக
நன்றா யறிந்திருப்பாய் !
ஆங்கன்றே னின்னிசைதா னாறா யொழுகலெவன் ?

18. சென்ற தெதிர்வதைப் பார்த்திருப் போநாங்கள்
சோர்வோ மிலாததெண்ணி
நன்றாகச் சந்தோஷத் தோடு நகைப்பினு
நாமொழி யோம்வருத்த
மென்று மினியவிசை துன்பினைச் சொல்வதன்றோ ?

19. பிறரை வெறுத்தல் பெருமை களைப்பயந்
தன்னை யொழித்திடுவோம்
பறமொன்றுஞ் செய்யாது மானுட ரெல்லாம்
விசன மொழிப்பினுநா
முறுதலு மெப்படியோ வொப்பிலா நின்களிப்பே ?

20. இன்ப மிழைத்திடு மெவ்விசை யோசைக்கு
நின்னிசை மேலிசைக்கும் !
நின்பாட லெந்நூல் களிலு மிலாததோர்
நற்பயன் றான்கொடுக்கு
மென்போதும் பாவலர்க்கே ! மண்ணை யிகழ்ந்தவனே !

21. நின்னுளங் கண்டே களித்திடு மின்பத்தி
னீபாதி யெற்குரைத்தி
யின்னிசைப் போதையி னாலென் னிதழ்நின்
றெழுந்திடு நல்லிசையை
யுன்னிசை நாடுமென்போ லுலகமு நாடிடுமே !

என். எஸ். அருணாசல ஐயர்.

---

## காதம்பரி.

---

### ஆறாம் அத்தியாயம்.

---

### வேடர்கோடுமை.

அப்பெருவேடச்சேனையின் இடையில் இளமைப்பருவத்தனாய், இரும்
பினாற் செய்ததுபோல் அதி கடினமான தேகத்தினனாய், வேறு சன்ம
மெடுத்துவந்த ‘ஏகலவியன்’ போல்பவனாய், அரும்புகட்டிய மீசையை
வகித்தலாற் புதிய மதரேகையால் அலங்கரிக்கப்பட்ட கபோலச்சுவருடைய
இளங் கஜேந்திரன் போல்பவனாய், கருங்குவளைபோற் சியாமளமான சரீர
காந்தியின் பிரவாகத்தினால் யமுனாசலத்தினால் வனத்தை நிறைப்பவன்
போல்பவனாய், தோளின்மீது பரவிய மிகச்சுருண்ட நுனியையுடைய தலை
மயிரால் கஜமதத்தினால் மலினமான சடைகளுடன் கூடிய சிங்கத்தை யொத்
தவனாய், நீண்ட நெற்றியனாய், உன்னதமான கூரிய மூக்குடையவனாய், ஒரு
காதிலிட்ட நாகரத்தினத்தின் செக்கச்சிவேலென்னுங் ஒளியினால்மிகுதியாய்ச்
சிவப்படைந்த இடது விலாவில் இலையிற் படுக்கும் வழக்கத்தினால் ஒட்டிய
தளிர்களினது சிவப்பின் சோபையை வகிப்பவனாய், அப்பொழுது கொன்ற
கஜகபோலத்தினின்றெடுத்த ஏழிலம்பாலையின் வாசனையை வகிக்கும் மதத்
தினால் மணங்கமழ்காரகிற் சேற்றாற்போலும் தேகத்திற் பூச்சுடையவனாய்,
அவன்றலைக்குமேல் அவ்வாசனையால் மயங்கி மயிற்றோகைக்குடையென்னப்
பிரமிக்கும் வண்டினத்தால் தமாலத்தளிர்களாற் போலும் மறைவுபட்ட
வெயிலுடையனாய், புயவலியால் செயிக்கப்பட்டுப் பயத்துடன் சேவிக்கும்
விந்தியாடவியால் அசையும் காதணித்தளிர்களைக்கொண்டு கையினாற்போ
லும் துடைக்கப்பட்ட கபோலவியர்வை யுடையவனாய், மானினத்தினழிவு
நிசியின் ஸந்தியைப்போல் மிகுதியும் சிவப்புற்று உதிரத்தால் நனைந்தது
போன்ற கண்களால் திசைகளைச் சிவக்கச்செய்பவனாய், முழங்கால்வரை
தொங்குவனவாய் யானைத்துதிக்கையை அளவெடுத்துச் செய்தனபோன்ற



சண்டிகைக்கு ருதிரபலிகொடுப்பதனிமித்தம் அடிக்கடி தீட்டிய சஸ்திரங்
களாற் கிறுண்டு மேடு பள்ளமான முன் பாகங்களையுடைய இருகைகளாற்
சோபையுற்றவனாய், இடையிடையிலொட்டிய சிறிதுலர்ந்த மானுதிரத்தின்
துளியுடன் கூடிய வியர்வை நீர்த்திவலைகளால் வியாபிக்கப்பட்டுள்ள விந்தி
யவரைபோல் அகன்ற மார்பினாற் குன்றிமணிகளுடன் கூடிய கஜமத்தக
முத்துக்களாலான ஆபரணத்தினாற் போலும் விளங்குபவனாய், அடிக்
கடி மற்போர் பழகுவதனாற் சிறுத்த இடையுடையவனாய், இருதொடைக
ளால் யானைமதம்பட்டு மங்கிய இரண்டு கற்றூண் முளைகளைப்பரிகசிப்
பவன் போல்பவனாய், அரக்குச்சிவப்பான பட்டையுடுத்தவனாய், காரண
மிலாது கொடிய தன்மையினால் மும்மடிப்பையடைந்து பயங்கரமான
புருவத்தினாற் குடிலமான நெற்றியில் மிகுந்த பக்தியுடன் ஆராதிக்கப்
பெற்ற பார்வதியால் “என்மனிதனிவன்” என்று திரிசூலத்தினால் அடை
யாளம் பண்ணப்பட்டவன் போல்பவனாய், பழக்கப்பெற்றுக் கூடத்தொ
டர்வனவாயும் களைப்பினால் வெகுதூரத்திற் பின் வருவனவாயும் சுபாவ
மாய்ச் சிவந்திருத்தலின் உலர்ந்திருந்தாலும் மானிரத்தத்தைப் பெருக
விடுவனபோன்ற நாபுகளாற் சிரமத்தைத் தெரிவிப்பனவாயும் வாய்திறந்
திருத்தலின் நன்குகாணப்படும் பற்களினொளிகளையுடைய மேலுதட்டின்
பாகங்களைப் பல்லிடுக்கிலொட்டிய சிம்மத்தின்சடைகளைப்போல் வகிப்பன
வாயும் பெருஞ்சோழிமாலைசூடிய கழுத்துடையனவாயும் மகாவராகங்
களின் கடைப்பற்கடிகளால் தளர்ச்சியுற்ற சிறிய உடலுடையனவாயும்
மிகுந்தவலிமையுடைமையால் சடைமுளையாத சிம்மக்குட்டிகள் போன்ற
னவாயும் மான்பேடுகளுக்கு வைதவ்யம் கொடுப்பதில் தேர்ந்தனவாயும்
பல வர்ணங்களுடையனவாயு முள்ள நாய்களாலும் பெரியனவாதலிற்
சிம்மங்களுக் கபயங் கொடுக்கும்படி யாசிக்கவந்த பெண்சிம்மங்களோ
வென்றையுறக்கூடிய பெண்நாய்களாலும் தொடரப்பெற்றவனாய், சிலராற்
சமரீவால்களையும் கஜதந்தங்களையும் எடுத்துக்கொண்டும் சிலரால் தேன்
நிறைந்த இலைத்தொன்னைகளுடனும் சிலராற் சிம்மங்கள்போற் கஜகும்ப
முத்துக்குவியல்களைக் கையில்வகித்தும் சிலரால் அரக்கர்கள்போல் மாம்ச
த்தை எடுத்துக்கொண்டும் சிலராற் பூதங்கள்போற் சிங்கத்தின் தோலை
யுடுத்திக்கொண்டும் சிலரால் க்ஷபணகர்கள் போல் மயில்தோகையை வகி
த்துக்கொண்டும் சிலராற் குழந்தைகள்போல் காக்கையிறகைச் செருகிக்
கொண்டும் சிலராற் கிருஷ்ணன் நடத்தையை காண்பிப்பவர்போற் பிடுங்
கி எடுத்த கஜதந்தங்களுடனும் சிலரால் மழைகாலநாட்கள்போல் மேகநி
ழலால் மங்கிய [1]அம்பரங்களுடனும் பலபல நடவடிக்கையுடைய வேடக்
கூட்டத்தால் அனுசரிக்கப்பட்டவனாய், காடுபோல் [2] கட்கதேனுகமுடை

---

1. ஆகாயம், வஸ்திரம், 2. கட்கம் தேனுகமென்னு மிருவகைக்கத்தி
கள், கட்கமிருகமும் காராம்பசுவும்.

யவனும், புதியமேகம்போல் மயிலிறகின் அழகைவகித்த வில்லையுடையவனும், பகாசுரன்போல் 1 ஏகசக்கிரத்தைப் பிடித்தவனும், கருடன்போற் பிடுங்கப்பட்ட அனேக மகா 2 நாகங்களின் 3 தந்தங்களையுடையனும், பீஷ்மன் போற் 4 சிகண்டியின் சத்துருவாய், கோடைப்பகல்போல் இடைவிடாது உண்டாகும் 5 மிருகதிருஷ்ணையுடையனும், வித்யாதரன் போல் 6 மானஸவேகனும், பராசரர்போல் 7 யோஜனகந்தியைத் தொடர்பவனும், கடோத்கஜன் போற் 8 பீமரூப முடையவனும், பார்வதியின் கூந்தல் போல் 9 நீலகண்டசந்த்ரகாபரணனும், இரண்யாக்ஷன் போல் மகாவராகத்தின் கடைப்பற்களாற் பிளவுண்ட மார்புடையவனும், அதிகாமுகன் போல் அனேகஸ்த்ரீகளைச் சிறைபிடித்தவனும், ராக்ஷஸன் போல் 10 ரக்தலுப்தகனும் சங்கீதவித்தை போல் 11 நிஷாதசகிதனும், அம்பிகையின் திரிசூலம் போல் மகிஷாரத்தத்தினாற் சிவந்த உருவமுடையனும், புதிய யௌவனத்திலிருப்பவனாயினும் பல 12 வயஸ்களைப் போக்கியவனும், 13 சாரமேயங்களைக் கொள்பவனாயினும் பல மூலங்களையுண்பவனும், 14 கிருஷ்ணனாயினும் 15 சுதர்சனமிலனும் இஷ்டப்படி சஞ்சரிப்பவனாயினும் 16 துர்க்கா சரணனும், 17 நரபாத சமீபத்திருப்பினும் ராஜசேவையறியானும், விந்தியவரையின் புத்திரன் போல்பவனும், யமனது அம்சாவதாரம் போல்பவனும், பாபத்தின் சகோதரன் போல்பவனும், கலிகாலத்தின் திறமையனையனும், பயங்கரமானவனாயினும் மிகுந்த பல முடைமையாற் கம்பீரத்தன்மையனாய்க் காணப்படுபவனும், அவமதிக்க முடியாத உருவமுடையனும் மாதங்கனெனப் பெயர்பூண்ட வேடர்தலைவனைக் கண்டேன். அவன் பெயரைப் பின்னாலறிந்தேன்.

என்மனத்தில் தோற்றியது: " அந்தோ, இவர்களது வாழ்க்கை அஞ்ஞான நிறைந்தது; நடவடிக்கையோ நல்லோர் வெறுக்கத்தக்கது; பாருங்கள்! அம்பிகை பூஜைக்கு நரமாம்சம் தேடுவதில் தர்மபுத்தி; சாதுக்கள் நிந்திக்கும் மது, மாம்சம் முதலியது ஆகாரம்; வேட்டையில் உழைப்பு; நரிபோலூளையிடலே வித்தை; நன்மை தீமையை யுபதேசிக்கும் ஆசான் கோட்டான்; பறவை விஷயமான அறிவே ஞானம்; நாய்களிடத்துப் பழக்

1. ஒருசக்ரம், ஏகசக்ரநகரம், 2. யானை, பாம்பு, 3. பற்கள், யானைதந்தங்கள், 4. த்ருபதன்மகன், மயில், 5. மான்களிலாசை, கானலருவி, 6. மனத்தால் வேக முற்றவன், மானஸஸரஸை நோக்கி வேகமாய்ச் செல்பவன், 7. வ்யாஸமகா முனியின் தாய் ஸத்யவதி, கஸ்தூரிமான், 8. பீமனது உருவமுடையவன், பயங்கரமான உருவுடையவன், 9. சிவன் தலையிலுள்ள சந்திரன், மயிலின்கண்கள், 10. ரத்தத்திலாசையுடையவன், வேடர்களால் விரும்பப்பட்டவன், 11. வேடன், நிஷாதஸ்வரம், 12. வயது, பறவை, 18. தனதான்யங்கள், ஓர் வகைமான், 14. கிருஷ்ணபகவான், கறுத்தவன், 15. பார்வைக்கழகானவன், சக்ராயுதம். 16. கோட்டையே வீடாய், காளியே கதியாய். 17. அரசன்பாதம், மலைத்தாழ்வரை.



கம்; சூன்யவனங்களிற் செங்கோல்; குடித்தல் உற்சவம்; கொடிய செய்கைகளுக்குதவும் விற்களே மித்திரர்; சர்ப்பங்கள் போலும் விஷம் பூசியமுகமுடைய பாணங்களே உதவியாட்கள்; பாடல் மூடமான்கள் மரணத்திற்கேதுவானது; சிறைபிடிக்கப்பட்ட பெண்டிர் பிறர் மனைவிகள்; கொடிய தன்மையுடைய புலிகளுடன் வாசம்; பசுரத்தத்தினால் தேவபூசை; மாம்சத்தினாற் பலிகர்மம்; களவினால் ஜீவனம்; நாகரத்தினங்களே யணிகள்; காட்டுயானை மதநீராற் சந்தனப்பூச்சு; எதன்கண் வசிக்கின்றனரோ அவ்வனத்தையே வேருடனழிக்கின்றனர்." இவ்விதம் யான் நினைந்து கொண்டிருக்கையில் அவ்வேடர் தலைவன் காட்டிலலைந்ததனாலாயகளைப்பை நீக்க விரும்பி அந்தச்சால்மலிவிருக்ஷத்தின் கீழாய்வந்து வில்லைக் கீழேயிறக்கி அவனதாட்கள் பரபரப்பாய்க் கொணர்ந்த ஆசனத்தில் உட்கார்ந்தான். இளமைப் பருவத்தனான மற்றொரு வேடன் வேகமாய் இறங்கி இருகைகளாற் களைந்த நீருடைய ஓடையினின்று வைடூர்ய நீரனையதாய்ப் பிரளயகால சூரியகிரண வெப்பத்தாலுருகிய ஆகாயத்தின் பாகம் போல்வதாய்ச் சந்திரமண்டலத்தினின்றொழுகியதெனக்கூடியதாய் உருகிய முத்துக்குவியலையொத்ததாய் மிகத்தெளிந்திருத்தலின் தொட்டே யறியக்கூடியதாய்ப் பனிபோல் குளிர்ந்ததாய்த் தாமரைத்தாதுவின் மணம் பொருந்தியதாய் உள்ள நீரையும் புதிதாய்ப் பிடுங்கி எடுத்து மாசுநீக்கிய நிர்மலமான தாமரைக் கொட்டைகளையும் தொன்னையிற் கொணர்ந்து வைத்தான். வேடர்தலைவன் தண்ணீரருந்தியபின் அக்கொட்டைகளை ஒவ்வொன்றாய்ச் சந்திரகலைகளை ராகுவிழுங்குவதுபோற் கடித்துத்தின்றான். சிரமம் நீங்கினதும் அவன் தாகம் தீர்த்துநின்ற வேடக் கூட்டத்தால் தொடரப்பெற்று இஷ்டமான திசையைக்குறித்துச் சென்றனன்.

அரக்கன்போல் அதிவிகாரமான உருவமுடைய ஒரு கிழவேடன் மாத்திரம் மானின்புலால் கிடையாமையால் மாம்சத்தை விரும்பினவனாய் வேடக்கூட்டத்தினின்று பிரிந்து அம்மரத்தினடியிற் சிறிதுநேரம் தாமதித்தான். வேடர்தலைவன் மறைவுற்றதும் அக்கிழவேடன் ரத்தத்துளிகளாற் சிவந்தது போன்றதாய் கபிலவண்ணமான புருவங்களாற் சூழப்பெற்றிருத்தலின் பயங்கரமானதாயுள்ள பார்வையால் எங்களுயிரைக் குடிப்பவன்போலும் கிளிக்கூடுகளிருக்குமிடங்களைக் கணக்கிடுபவன்போலும் பக்ஷிமாம்சம் தின்ன விருப்புற்றகழுகுபோல் ஏறநினைந்து அம்மரத்தை அடிமுதல் நுனிவரை சிறிது நேரம் உற்றுப்பார்த்தனன். அக்கணமே அவன் பார்வையில் நடுங்கிய கிளிகளின் உயிர்கள் வெளிப்போயின வெனலாகும். கொடியர் எதைச்செய்யத் துணியார்? அந்தோ? அனேக பனையளவு உயர்ந்ததாய் ஆகாயத்தை யளாவும் கிளைநுனிகளுடைய அம்மரத்தின்மீது அவன் படிகளாற் போலும் எளிதாய் ஏறிப் பறக்கும் திறமையற்றுப் பிறந்து சின்னாட்களே யானமையாற் சரும்பையின் ரக்தவர்ணம் பொருந்தியிருத்தலிற்

சால்மலிப்பூக்களே யென்று ஐயுறக்கூடிய சிலவற்றையும் புதிதாய் முளைத்த சிறகுகளை யுடைமையால் இளந்தாமரையிலைகளைப்போன்ற சிலவற்றையும் எருக்கிலைகளனைய சிலவற்றையும் சிவப்படையும் மூக்கு நுனிகளையுடைய சிலவற்றையும் சிறிதலர்ந்த தளங்களாற் செந்நிறமான நுனிகளையுடைய தாமரை மொட்டுக்களின் அழகை வகிக்கும் சிலவற்றையும் ஓயாத தலையாட்டத்தால் வேண்டாமென்று தடுப்பவை போன்றனவாய் எதிர்க்க வகையறியாது தனித்து நின்றன. கிளிக்குஞ்சுகளை மரத்தின் பழங்களைப் பறிப்பது போற் கிளையிடுக்குகளினின்றும் பொந்துகளினின்றும் எடுத்தனன். உயிர் நீக்கியபின் பூமியில் அவைகளை யெறிந்தான்.

ப. கி. கல்யாணராம சாஸ்திரி.

## சமாசாரக் குறிப்பு.

**கவர்மன்றர் புதுவிதிகள்:**—சென்னைக் கவர்மன்றார் இதுகாறு மில்லாத சில புதுவிதிகள் கல்விவிஷயமாக ஏற்பாடு செய்திருக்கின்றனர். அவையாவன:—கவர்மன்றாரிடத்தினின்றும் எவ்விதத்திலாவது உதவிபெறு கின்ற எந்தப் பள்ளிக்கூடங்களின் அல்லது கலாசாலைகளின் உபாத்தியாயர்களும் மாநேசர்களும் அவற்றைச்சார்ந்த பிறவுத்தியோகஸ்தர்களும் இராசாங்கசம்பந்தமான விஷயங்கள் பேசப்படுஞ் சபைகளுக்குப் போகக்கூடாதென்பதும் சந்தேகம் நேரிட்டவிடத்துப் பொதுசனக் கல்விசாரணைத் தலைவரது உத்தரவு பெறவேண்டுமென்பதும் மேற்கூறிய நிபந்தனைகளை மீறிநடப்பவர்கள் கவர்மன்றாரிடத்தினின்றுந் தாங்கள் பெறும் உதவியை யொருதலையா யிழந்துவிடுவார்களென்பதுமேயாம். இவ்விதிகள் யாவும் கி. பி. 1900-ஆம் ஆண்டு ஏப்பிரல்மீ முதற்றேதிதொடங்கி வலியுறுத்தப்படுமாம். இவ்விதிகள் வங்காளம் பம்பாயாகிய இராசதானிகளிற் காணப்படவில்லை. இவை யித்தென்னிந்தியாவிற்கென்று புதுமையாக வேற்பட்டனபோலும்! இவ்விதிகளினால் விளையுந் தீங்குகள் பலவாம்; அன்றியும் மிக்க நாகரீகமுஞ் சீர்திருத்தமும் பரந்தகொள்கைகளும் வியாபகவுணர்ச்சியுமுடைய நமது அரைத்தனத்தாருக்கு இவ்வாறு விதிக்கும்படி யோசனை தோன்றியது நம்முடைய துரதிர்ஷ்டமேயன்றி வேறன்று. கி. பி. 1857-1858-ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த பேரிந்திய கலகத்தின்போது இந்தியாவின் சகல இராசதானிகளும் மாகாணங்களுங் குழம்பி மாறுபட்டிராநிற்ப, இச் சென்னை இராசதானி யொன்றுமட்டுமேயன்றோ கவர்மன்றாருக்குச் சார்பாய்க் கலகப்படுதலின்றிக் கீழ்ப்படிந்து நின்றது? இதன் விசுவாசத்திற்கு அறிகுறியாகவேயன்றோ சென்னைமாநகரத்தின்கண் அறிகுறிமண்டபம் (Memorial Hall) ஒன்று கட்டப்பட்டதுமென்க. இவற்றையெல்லாந் துரைத்தனத்தார் மறந்துபோகவு மில்லையென் றெண்ணுதற் கிடமுண்டு. இந்த மாசம் 11-ஆந் தேதியன்று சென்னைப் போதகாசிரியர் கூட்டங்கூடித் துரைத்தனத்தாருக்கு அவ்விதிகளைக் களையும்வண்ணம் ஒரு விண்ணப்பமெழுதியிருக்கின்றனர். 15-ஆந் தேதியன்று சென்னைப் பச்சையப்பன் மண்டபத்திற் சென்னைச் சனங்கள் யாவருங்கூடி அவ்விதிகளை யொழிக்குமாறு கவர்மன்றாருக்கு ஒரு மனுச்செய்திருக்கின்றனர். இவற்றையெல்லாந் துரைத்தனத்தார் நல்லெண்ணத்தோடு மேற்றுக்கொண்டு அப்புதுவிதிகளை நீக்குவாரென்று நம்புகின்றனம். அவை நீங்கும்படி யெல்லாம்வல்ல முழுமுதற் கடவுளைத் தொழுகின்றனம்.

# ஞானபோதினி.

ஸம்புடம் III. } 1899௵ டிசம்பர்மீ 20உ { புத்தகம் 5.

## கமலினி.

### அத்தியாயம் - XIX.

"பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லன்மின்".

வீரமார்த்தண்டன் அரண்மனைக்கு வந்ததும் வருவதாக அரசனிடத்துக் கூறிச்சென்ற சுந்தரன் சிலதினங்கட்குப் பின்னர் அரசனைக் காணவந்தனன். அரசனிடத்துக் காவலன் சுந்தரன் வரவையுணர்த்தினான். அரசன் உடனே வருமாறு கட்டளையிட்டான். சுந்தரன் அரசனை வணங்கி அவன் நியமித்த ஆதனத்தமர்ந்தான். பின்னர் அரசன் சுந்தரனை நோக்கி, "மூன்று நான்கு தினங்களாக ஏன் வரவில்லை?" என்று வினவினான்.

"அன்றே வருவதாகக் கூறிச்சென்றவன் உடம்பு ஒருவாறாக இருந்ததனால் வரவில்லை. அதற்காக மன்னிக்கவேண்டும்." என்றான் சுந்தரன்.

"என்ன உடம்பு? இப்பொழுது சவுக்கியந்தானே" என்றான் அரசன்.

"இப்பொழுது ஒன்றுமில்லை. மற்று வீரமார்த்தாண்டனும் அவன் மனைவியும் நேற்று வந்தார்களெனக் கேள்விப்பட்டேன். யானும் அவர்களைப் பார்க்கவேண்டும்."

"வீரமார்த்தாண்டன் என்றதும் அவன் கூறியவிஷயம் ஞாபகத்துவந்தது. முன்னொருநாள் நம்மைக்கண்டு அவன் சீவரத்தை நோக்கிச் செல்லுகையின் யாரோ வழி மறித்தார்களாம்."

சுந்தரன் சிறிதும் பயத்தாற் பின்னிடையாது "அப்படி வழிமறிப்பவர்யார்? ஒருகால் கள்வரேயோ? அன்றிக்கலகச் சபையினரி லொருவரோ?" என்று கூறினன்.

"மற்றும் அவர்கள் அரண்மனையில் நடந்தவிஷயத்தை யுரைக்குமாறு வற்புறுத்தினராம்."

"அதற்கவன் யாதுகூறினன்? தப்பிக் கொள்ளுவதற்கு விஷயமனைத்தையும் சொல்லிவிட்டானா?" என்று பரபரப்புடன் கேட்டனன்.

"ஒன்றுங் கூறவில்லையாம். மற்றும் வீரமார்த்தாண்டனை இழித்துக் கூறினனாம். அவன் கோபங்கொண்டு போர்யத்தனிக் கையில் நிலத்தின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளித்தோன்றுவதென்னச் சிலவீரர்கள் எதிர்த்து நின்றார்களாம். நம் வீரமார்த்தாண்டன் தன் வல்லமையால் அவர்களை முதுகுகாட்டச்செய்தானாம். மற்றும் முதலிற் சமாசாரம் வினவினவன் பறந்தனனாம். இதுவிஷயங்களை நம்மிடங் கூறினன். அப்பகைவர் இன்னரென்று அறியக்கூடவில்லை. யாராய் இருக்கலாம் என்று உனக்குத்தோன்றுகின்றது" என்று அரசன் வினவினன்.

"தாங்கள் கூறியவற்றை யாலோசிக்கின் பகைவர் தம்சேனையைச் சேர்ந்தவர் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. மற்று யான் முன்கூறிய கலகச்சபையினரா யிருத்தலுங்கூடும்" என்றான் சுந்தரன்.

"அக்கலகச் சபையினராயிருந்தால் அரண்மனையில் நடந்த விஷயங்களை யறிய ஆவல்கொள்வார்களா? மற்றும் வீரமார்த்தாண்டன்பெயரைக் கூறினார்களாம். அவன் இன்னவனென்று தெரிந்தும் அவனுடன் போர்செய்தெற்கோ?" என்றான் அரசன்.

"ஆயின் பகையரசன் சேனையாகத்தான் இருத்தல்வேண்டும். ஒருகால் ஓடியவன் மதிமுகனேயோ? அவனாயிருந்தாற் புறங்காட்டி யோடானே! ஒருகால் நிகழும் போரில் வீரமார்த்தாண்டன் சயித்தால் தன்னைச் சிறைசெய்வான் என்று ஓடிவிட்டனனோ! எவ்வாறாயினும் மதிமுகன் கமலினியுடன் பகையரசனைச் சார்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறாயின் கட்டாயம் பொருமாறு வருவான். ஆதலின் யாம் சாக்கிரதையாயிருத்தல் வேண்டும்.



மற்றும் வீரமார்த்தாண்டனை எதிர்த்தவர் அவ்வரசனைச் சார்ந்தவராயின் அவர்கள் பின்னும் நம்நாட்டிற்குள் வந்து துன்பஞ்செய்யாதிருக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்" என்றான் சுந்தரன்.

"எத்தகைய ஏற்பாடு செய்யவேண்டும்?"

"ஒரு சேனைத்தலைவனைச் சிலருடன் எல்லைப்புறமாகச் சுற்றும்படியாகவும் பகையரசன் சேனைகளி லெவரையும் சிறைகொணருமாறும் நியமிக்கவேண்டும்."

"அத்தகைய சேனைவீரன் மிகவும் நம்பிக்கையுற்றவனாயிருத்தல்வேண்டும். அவன் இன்னனென்று எனக்குத் தோற்றவில்லை."

"மாணிக்கம் அவ்வகை உத்தியோகத்திற் கேற்றவனாயினும் சிவரச்சிறையிற்கன்றோ தாம் காக்குமாறு அனுப்பியிருக்கின்றீர்கள். ஏன்? வீரமார்த்தாண்டனை யனுப்பலாமே".

"எப்பொழுதும் ஒருவனையே அத்தகைய வேலைக்கனுப்புதல் உசிதமன்று. கடிமணம் புணர்ந்தகாளையன்றோ அவன்? அழகிய தன்மனைவியை அகத்துவிட்டு எப்பொழுதும் வெளிச்சேறல் அவன்மனத்திற் கேற்பதன்று. மற்றும் அவன் அரசனிடத்து அன்புற்றவனென்று அறிந்திலம், ஒருவற்கிருவர் மாறிமாறிச் சென்று இத்தகைய வேலையைச் செய்யின் யாதொரு தீங்கிற்கு மிடமில்லை" என்றான் அரசன்.

"இரண்டாமவன் வேறு எவனும் எனக்குத் தோற்றவில்லையே."

"நமக்கு எப்பொழுதும் உண்மையா யிருப்பவன் நீயல்லையோ? ஏன் நீயே செல்லலாகாது?" என்றான் அரசன். சுந்தரன் போர் என்றாற் காததூரம் பின்செல்லும் வீரனேனும் அரசனுக்குத் தன் இழிவைக்காட்ட மனமிலனாய்,

"ஆயின் யான் செல்கின்றேன். என்று முதல் இவ்வித ஏற்பாடுகள் செய்வதாய்த் தாங்கள் நினைத்திருக்கின்றீர்கள்." என்றான் சுந்தரன்.

"ஏன் நாளைமுதல் என்று இவ்வித ஏற்பாடு செய்திருக்கிறேன். நாளைக்கு வீரமார்த்தாண்டன் செல்வான். மறுநாள் நீசெல்லக்கடவாய்" என்றான் அரசன்.

அப்படியே யென்று சுந்தரன் வீரமார்த்தாண்டனைக் காணுமாறு சென்றான். வீரமார்த்தாண்டன் சுந்தரன்றன் அத்தைமகனேனும் இதுகாறும் ஒருவரையொருவர் பார்த்திலர். ஆனால் வீரமார்த்தாண்டனுக்குச் சுந்தரன் உறவினனென்று தெரியும்.

சுந்தரனைக்கண்டதும் வீரமார்த்தாண்டன் திடுக்கிட்டான். உயரம் பருமன் முதலிய அன்று காட்டில் தன்னை இழிவாயுரைத்தவனுடன் ஒப்பாயிருந்தமையினாலோ அவ்வாறு திடுக்கிட்டான்? ஆம். ஆயினும் மனக்கலக்கத்தை வெளித்தோற்றுவிக்காமல் "உட்காருங்கள்" என்று மார்த்தாண்டன் கூறினான்.

சுந்தரன் உட்கார்ந்ததும் தானும் உட்கார்ந்தான். இருவருஞ் சிறிது மவுனமாய் ஒருவரை யொருவர் நன்றாய்ப்பார்த்தனர். வீரமார்த்தாண்டன் சுந்தரனைப் பார்க்கப் பார்க்கச் சந்தேக மதிகரித்தது. பிறகு சிறிதுநேரத்திற் கப்பால் சுந்தரன்,

"வீரமார்த்தாண்டா! நாம் ஒருவரை யொருவர் இதுகாறும் பார்த்ததில்லை. யான் உன்மாமன்மகன். உன் தந்தைக்கு மென் தந்தைக்கு நேரிட்ட மனஸ்தாபத்தால் ஒருவரை யொருவர் இதுகாறும் பார்க்க முடியாதிருந்தது. எம்தந்தை இறந்ததும் அம்மனஸ்தாபம் மரித்துவிட்டது. இனியாம் உறவினராக விருக்க வேண்டும்" என்றான் சுந்தரன்.

சுந்தரன் குரலினால் வீரமார்த்தாண்டன் தன் சந்தேகம் ஏறங்குறைய நீங்க அவனை மிகவும் வெறுப்புடன் உற்று நோக்கினான். அதைச் சுந்தரன் அறியவில்லை. பின்னர் வீரமார்த்தாண்டன்,

"புதிதான உறவினனைப்பார்க்க மிகவும் சந்தோஷமடைகின்றேன். இதுகாறும் ஒருவரை யொருவர் பாராது பிரிந்திருந்தது பெரிதும் தௌர்ப்பாக்கியமே. தம்பெயர் சுந்தரரோ?" என்றனன்.

"ஆம் உன் மனைவியையும் யானிதுகாறுங் கண்டிலேன்; ஆகலின் அம்மாது சிரோமணியையும் பார்க்க விரும்புகின்றேன்" என்றான் சுந்தரன்.

வீரமார்த்தாண்டன் "குணவதி!" என்று கூப்பிட்டான். அவள் உடனே "ஏன்" என்று வந்தனள்.

வீரமார்த்தாண்டனுடன் அயலானவன் இருப்பதைக்கண்டு தான் உரத்த குரலுடன் விடைபகர்ந்ததன்நிமித்தம் வெட்கப்பட்டுக்கொண்டு சிறிது தூரத்தில் நின்றனள். உடனே வீரமார்த்தாண்டன் "இவர்தாம் என் அம்மான் மகனார். இதுகாறும் ஒருவரை யொருவர் தெரியாமலிருந்தாலும் இன்று இறைவனருளால் ஒன்று சேரப்பெற்றோம்" என்றான்.



"அம்மா! உன்னைக்கண்டு யான் மிகவும் சந்தோஷமுற்றேன். இன்றைத்தினத்தை நாம் நல்லநாளாக என்றும் நினைக்கவேண்டும்" என்றான் சுந்தரன்.

"ஆம் உண்மையாக இது சுதினமே. தாங்களினி யடிக்கடி இவ்விடம் வருவீர்களென்று நம்புகின்றேன். இன்றைக்கு இவ்விடமே போஜனஞ்செய்து போகலாம்" என்றாள் குணவதி.

வீரமார்த்தாண்டன் சிலகாரணங்களிற்காக இவனிருத்தலிற் பிரியமிலனேனும் தன்மனைவி விரும்பியதனால் தானும் சுந்தரனை இருக்கும்படி வேண்டினான். சுந்தரன் அவர்கள் வேண்டுகோட்கிணைந்தனனேனும் தன் வீட்டிற்குப் போஜனயானதும் செல்லல் வேண்டுமென்றனன்.

உண்டு கொண்டபின் சுந்தரன் "உன்னை யாவனோ சிலதினங் கட்குமுன் அரண்மனைக் கருகிலுள்ள காட்டிலெதிர்த்தனனாமே!" என்றான்.

வீரமார்த்தாண்டன் சுந்தரனை உறுத்து நோக்கிக்கொண்டு,

"ஆம். யாவரோ எதிர்த்தார்கள்? அவர்க ளின்னாரென்று அறியக்கூடவில்லை. அவர்களுட்டலைவன் வீரர்கள்வந்ததும் மறைந்து விட்டனன். யாதுகாரணமோ? தெரியவில்லை. அவனை யின்று காண்பேனேனும் என்னை அவமதித்துப் பேசியதற்காகக் கொலைசெய்யா தொழியேன்" என்று பற்களைக் கடித்துக்கொண்டு உக்கிரத்தோடுங் கூறினான்.

சுந்தரன் உடம்முழுதும் நடுங்கிற்று. சிறிது நேரம் சும்மாவிருந்து தன் பயங்கொள்ளித்தனத்தை யொருவாறு மறைத்துக்கொண்டு,

"அவனை யின்னனென்று அறியமுடியவில்லையே! பயனென்னை?" என்றான் சுந்தரன்.

"அவன் உயரத்தினாலும், பருமனாலும், குரலினாலும் இப்பொழுதேனும் அறிவேன்" என்றான் வீரமார்த்தாண்டன்.

"அவன் முகக்குறியாலறிய முடியாமற்போனாற் சந்தேகமின்றி இன்னானென்று சுட்டிக் கூறுதல் முடியாதன்றே" என்றான் சுந்தரன். வீரமார்த்தாண்டன் இன்னும் தன் எண்ணத்தைத் தெரிவிக்க மனமிலனாய்,

"ஆம். நீ கூறுவது உண்மையே. ஆயின் அன்னோர் பகையரசரைச் சார்ந்தவரென்று யான் அயிர்த்தேன். அரசன் என்னை எல்லைகாப்பதனிமித்தம் தலைமை கொள்ளும்படி நியமித்தான். உன்னையும் நியமிப்பதாகக் கூறினான்" என்றான் மார்த்தாண்டன்.

"ஆம் என்னிடத்துங் கூறினான். யானும் ஒப்புக்கொண்டேன். அரசனுக்குத் துன்பமுண்டானால் அதை நீக்குதல் குடிகளின் கடமையேயன்றோ?" என்றான் சுந்தரன்.

"உண்மைதான். ஒருகால் அவர்கள் அரசன் அந்தரங்கக் குடிலராயிருத்தலுங் கூடுமென்று தோன்றுகின்றது. சீக்கிரத்திலின்னொன்று அவர்களைத் தெரிந்துகொள்வேன்" என்றான் மார்த்தாண்டன்.

"ஏதேனும் தெரிந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கின்றனையோ" என்றான் சுந்தரன்.

"அதைப்பற்றிப் பின்னர்த் தெரிவிக்கின்றேன்" என்றான் வீரமார்த்தாண்டன்.

சுந்தரன் சிறிது நேரத்திற்கெல்லாம் வீரமார்த்தாண்டனிடத்துங் குணவதியிடத்தும் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குச்சென்றான். வீட்டிற்குச் செல்லும்போது வீரமார்த்தாண்டன் கூறியவைகளை நினைந்து நினைந்து பயங்கொண்டு பின்னர் அடிக்கடி திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டு "அன்றெதிர்த்தவன் யான்தான் என்று அறிந்துவிட்டானோ" என்று நினைந்து வீட்டை யடைந்தான்.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.



## அத்தியாயம்—XX.

"கோயில் புக்குநற் குருமணி நெடுமுடிக் குரிசில்
வேயின் மிக்கநல் லுருவமை வெள்வளைத் தோளி
யாய மைக்கணாள் குணவதி யணிபுய மவாவிற்
றோய வுற்றன னவளிவன் காதலை யுவந்தாள்".

குணவதி தனியே ஓர் அறையின்கண் உட்கார்ந்திருந்தாள். அவடன் முகஞ்சிறிது ஒளி குன்றியுந் தீர்க்காலோசனையான் மனமொருநிலைப்பட்டவள் போலவுந் தோன்றினாள். அவடன் முக வெண்மையானது அச்சமயம் உடுத்திருந்த நீலவன்ன ஆடைக்கு ஒருகாட்டாக இருந்தது.

இவ்வாறு முகம் வேறுபாடடைந்திருப்பினும் மிகுந்த கட்டழகுடையாளெனத் தோன்றினாள். அவள் கூந்தல் இருளின் சமுகங்களெனப் பின்னிக் கட்டப்பட்டிருந்தது. அவள் தன் இனிய பார்வையானது ஆடவர் மனத்தை யபகரிக்கும் பான்மையதாக விருந்தது.

அவள் தனியாக இருக்கின்றாளென்றன்றே கூறினோம். ஆம். தன் தோழியாகிய சுந்தரியை அறையினின்றும் அனுப்பிவிட்டாள். ஏனெனின் தன்மனத்தின் நிலைமையை ஆலோசனையனிற்றெனை உணருவாளென்று போலும். ஒருகால் அரசன் மீதுற்ற ஆசையை வெளித்தோற்றுவிக்காது அடக்குவதற்காகவோ இவ்வாறு செய்தனள். அன்றியாரோ வருவதை எதிர்பார்த்திருக்கின்றாளாகலிற் பிறர் அறையின்கண் இருத்தலாகாதென அவளை யனுப்பினாள் போலும்.

அரண்மனையில் வந்ததுமுதல் அரசனிடத்துக் காதல்கொண்டிருப்பதாக யாம் முன்னர்க் கூறினோமன்றே. குணவதி அரசனிடத்துக் காதல்கொண்டுளளேனும் சிற்சில சமயங்களில் தான் தன் புருடனுக்குத் துரோகஞ் செய்வதையுன்னி மனமழிவாள். எவ்வளவு கெட்ட எண்ணமுடையவரேனும் அப்போதைக்கப்போது மேகத்தில் மறைந்த சூரியன் தன் கிரணங்களைக்காட்டி மறைதல் போல நல்லெண்ணமும் அவர்பால் உதிக்குமன்றே. அரசனறன் உருவத்தை அவள் மனத்தினின்றும் வெளியோட்ட முயன்றும் பயன் படாமற் பின்னும் மிகவும் அன்புடன் குடிகொ

ண்டது. அவனைப்பற்றி நினைக்கவேண்டா மெனினும் பேராசை யாகிய கள்வன் தூண்டப் பின்னும் அதிகமாக நினைக்கும்படி நேரிட்டது. இவ்வாறு இருக்குஞ்சமயத்திற் றான் அரசனை யடைந்தாற் பெறக்கூடிய பதவியையும் பெருமையையும் நினைப்பாள். பெருமூச்சு விடுவாள். வீரமார்த்தாண்டனிடத்து எவ்வாறினி யொழுகுவதென மருளுவாள். அச்சங்கொள்வாள். தன்மன மிவ்வாறு எண்ணத்தலைப்பட்டதே யென வருந்துவாள். கடைசியாகத் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியினின் றெழுந்து அறையினுலாவத் தலைப்பட்டாள். அரசனைப்பற்றிய எண்ணத்தை யொழிக்கத் தன் தலைவன் தன்மீது வைத்திருக்குங் காதலை நினைப்பாள். அவனை மோசஞ் செய்யவேண்டியதைக்குறித்து மனநைவாள். அரசனைக் காமித்தலா லடையக்கூடிய கேட்டினை நினைவாள். மற்றும் அவன்மனத்தைச் சந்தோஷிப்பிக்கு மாற்றல் தனக்கில்லாமையால் அவனிடத்திற்றானே இருத்தல் இனி முடியாதென உன்னினாள். மற்றும் அவனிடத்திலேயே எப்பொழுது மிருத்தல் முடியாது. சிலகாலத்திற்குப்பிறகு பிரிவதனினும் இப்பொழுதே பிரிதல் நலமென்று நினைப்பாள்.

“பாவமும் பழியு நல்கும் பல்வகைப் புகழ றங்கள்
யாவையு மழிக்கு மெய்து மின்பமு மதனா லெய்து
நோவுநன் மரபுஞ் செய்யு நோன்புநல் லொழுக்கு மேன்மை
சாவுமெண் ணாரும னிற்குந் தயங்குபுன் காம மென்பார்”

என்ற முன்னோர் மொழியினை நினைந்துருகுவாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் உடல் நடுங்கிற்று. அறையின் நாற்புறமும் பார்த்தாள். மறுபடியும் மறுபடியும் அரசன் பக்கலே தன் எண்ணஞ் செல்வதைத் தடுக்கமாட்டாது நின்றாள். உடனே தன் அறையின் கதவங்கள் திறக்கப்பட்டன. சுந்தரிதான் வருவாள் என்று அப்புறம் பாராமலே ஓராதனத்தமர்ந்தாள். உடனே அரசன் அவள்முன்பு நின்றான். கனவுதானோ தன்னெண்ணத்தின் உருவுதானோ என்று சந்தேகித்துப்புறங்கையாற் கண்களைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் பார்த்தாள். அரசனே என்று தீர்மானித்து வெருண்டு நின்றாள். ஒன்றும் பேசாமற் சிறிது தூரஞ்சென்று தலைகுனிந்து நின்றாள்.



ஆ! ஆ!! என்னே மாதர்களின் தன்மை. அன்பனைக்காண வேண்டுமென்று வேணவாக்கொண்டு அவன் எதிரில் வந்ததும் தலைகுனிந்து விரும்பாதவள்போலவும் ‘ஏழைப்பெண்ணின் தனிமையைக் கெடுக்கவந்தவன் நீ’ என்னும்படி மேல்வேடம் போட்டுங்கொண்டு நிற்பதென்னோ? ஆங்கிலக்கவியாகிய பைரன் * என்பவர் ஸ்திரீகளின்றன்மையைக் கூறும்பொழுது அன்னாரினிய சொற்களனைத்தும் நீரின்மேலெழுதிய எழுத்தாமெனவும், வன்சொற்களெல்லாம் மணல்மேலெழுத்தெனவும் கூறுகின்றனர். அவர்மொழி மெய்ம்மொழி யென்பதற்குச் சந்தேகமுமுளதோ?

“வணங்குங் கொழுநனை நோக்குகின்றிலளாற் றாபமே யடைவா னாயகன் வெளியைச் சார்ந்ததுஞ் சேடியர் வருந்திப் பூயனை யழைத்து வந்திடின் மிகவும் பொருள்செயாள் மூங்கையாய் நிற்பாள்.”

என்ற வடமொழிப் புலவர்தம் மொழியும் மெய்ம்மையே.

சிறிது நேரத்திற்கப்பாற் குணவதி அரசனைக்கிட்டி வணங்கி,

“மகாராஜ! தாங்க...ளிவ்விடம் வந்ததனால்...யாங்கள் பாக்கியவந்தரானோம். எளியகுடியாகிய எம்பாற் கட்டளையிடக்கூடிய தென்னையோ!” என்று கூறினாள்.

“யான் நினைத்தன வனைத்தும் பொய்யாயினவோ? என்ன மூடன்யான்” என்றான் அரசன்.

“ஏதேனுந் தாங்கள்கூறிய விஷயத்தில் மாறுபாடாக என் தலைவர் நடந்தனரோ?” என்றாள் குணவதி.

“உன்னிடத்துப் பிரியம்வைத்த அரசனிடத்து இம்மாதிரியான மொழிபகர்தல் நேரிதோ?” என்றான் அரசன்.

“யான் கூறியவற்றி லேதேனும் பிழையுளதாயிற் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.”

“யான் பொறுத்தருளும்படியான குற்றம் நீயாதுஞ் செய்திலை. யான் கூறுவதாக இவ்விடம்வந்த விடயத்தில் ஏதேனுங் குற்றமிருப்பின் மன்னிக்குமாறு யான் வேண்டுகின்றேன்.”

* Byron.

"தங்கள் கட்டளைக்குப் பாத்திரையாகிய அடிச்சியிடத்திற் பொறுத்தருள வேண்டுமென்று தங்களைப்போன்ற மகா புருடர் கூறுதல் தகுதியன்று."

"ஏ! குணவதி! உன்னிடத்திற் காதல் கொண்டுளேன்; உன்னைக்கண்ட நாண்முதல் என் மனம்வேறு எப்பொருளிடத்தும் பற்றாது வருந்துகின்றது. அவ் வருத்தத்தை யொழிப்பவள் நீயேயென்று உன்னிடத்து வந்தனென்" என்றான் அரசன் அவள் முகத்தையுற்று நோக்கிக்கொண்டே.

குணவதி மறுமொழி கூறவில்லை. அவள்முக மொருவாறு மாறியதைக்கண்ட அரசன் தேறுதலடைந்து மறுபடியும் "உன் மீது காதல் கொண்டுள்ள அரசனிடத் தொருமொழி கூறலாகாதோ?" என்று கூறினான்.

"தாங்கள் கூறுவது ஒன்றுந்தெரியவில்லை" என்று மெல்லிய குரலுடன் குணவதி கூறினாள்.

உடனே அரசன் மின்னென அருகிற்சென்று அவள் மிருதுவாகிய கரங்களைப்பற்றி முத்தங்கொண்டு "உண்மையில் இன்றே யான் கிருதார்த்தனாயினேன். என் மனைவி யிறந்ததுமுதல் உன்னைப்போன்ற மாதினைக் காணாததனால் இவ்வாறு வீணே காலத்தைக் கழித்தேன்."

"தாங்கள் கூறுவது உண்மையோ வென்று என்மன மையிர்க்கின்றது" என்றாள் குணவதி.

"அதற்குச் சந்தேகமு முண்டோ? யான் கூறுவத னுண்மையை விளக்குமாறு ஏதேனு முனக்குச்செய்ய வேண்டுமானாற் கூறுவாய். பின்னர் யான் கூறுவத னுண்மையை யறிவாய்"

"ஆயின் என்னை நேசிக்கின்றீர்கள்" என்று கீழ்நோக்கிய பார்வையுடன் குணவதி சொன்னாள்.

"யான் உன்மீது காதல் கொண்டுளேன் என்பதற்குத் தடையுமுண்டோ? நீ என் காதலை நிராகரிப்பையேல் யான் இறப்பது உண்மையே" என்றான் அரசன்.

"ஆம்! ஆம்! உண்மையே! ஒருபெண் தன் கௌரவத்தையும் நாணத்தையும் விட்டுத்தன் குடிகுலம் முதலியவற்றின் பெருமை



யையும் ஒழித்துக் கடிமணம் புணர்ந்த கணவனையுங்கடிந்து வேறொரு ஆடவன்மீது காதல் கொள்ளுதல் நேரிதோ?" என்றாள் குணவதி.

குணவதி இவ்வாறு கூறியதும் அரசன் சிறிது மயங்கினான். பிறகு அவள்கூறிய சொற்களைக் கவனித்துப் பார்த்து, "உன்னுடைய காதற்றிறத்தை யானுவக்கின்றேன்" என்று கூறுவதையொப்ப அவள்முகத்தை நோக்கினான். அவள் முகத்தைச் சிறிது உற்று நோக்கியதும் ஆசையென்னும் அனலானது அழகாகிய வாயுவாற்றூண்டப்பெற்றுத் தழுவி முத்தங்கொண்டான். குணவதி யவனைத்தடுக்காமல் அசைவற்றுப் பதுமையென நின்றாள். இருவரும் ஓராதனத்தமர்ந்தார்கள்.

"இவையனைத்துந் தங்களுக்காகச் செய்யவேண்டும். ஆகலின் தங்கள் முழுப்பிரியத்தையடைய இச்சிக்கின்றேன்" என்றாள் குணவதி.

"நீயே இனி யென்னின்னுயிர்த் துணைவி" என்று அரசன் கூறினான். குணவதி கரத்தைத் தன்கரங்களில் வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான். அரசன் தன் அழகில் மிகவும் மயங்கியுளனென்பதை யறிந்துகொண்டு "என்னருமை மகாராஜா!" என்று அரசனை அணைத்து "உங்களிடத்து யான் வைத்துள அன்பு இத்துணைத்தோ? இனித் தாங்கள் என்னைச் சிறிது காலத்திற்குப்பின் அசட்டை செய்யாமலிருப்பதாய் வாக்களிக்கவேண்டும்.—நான் உங்கள் உள்ளன்பை நம்புகின்றிலேனென்றாவது தன்னயங் கருதிக்கூறுகின்றேனென்றாவது நினையாதீர்கள்—என் மனத்தின் நிலை இற்றென யானே அறிய முடியாவண்ண மிருக்கின்றது. என் செய்வேன்!" என்று கூறினாள்.

"ஏ! குணவதி! என்காதலில் ஐயப்பாடுறுகின்றது மிகுதியும் பிழையே. உன்னை இராஜமகிஷியென யாவரும் பாவிக்கும் வண்ணம் செய்யாமற் போவேனோ? அப்பொழுதல்லவோ என் காதலின் பெருமையை யுணருவாய்?" என்றான் அரசன்.

"உலகினர் என்னை வையாமலும் அவமதியாமலு மிருப்பார்களாயின் அதுவே எனக்குப்பெரிய மரியாதையாம். கொண்ட கணவனைவிட்டுக் கொற்றவனைக் கைப்பற்றிய பாதகி என்று உலகோர்

கூறுவரோ; என்செய்வேன். மற்றும் என் புருஷன்—அன்று வீரமார்த்தாண்டன் என்னை என்செய்வானோ? அவன் என்மீது மிகவும் அன்புபாராட்டியவனேனும் கொடியவனாயினனே. அரசனெனவும் அஞ்சான். யாவரையும் கொலைசெய்து தன்னையுங்கொலைசெய்து கொள்ளும்படியான மனவுறுதி யுடையவன்” என்று பிரலாபித்துக் குணவதி கூறினாள்.

“வீரமார்த்தாண்டன் அடிக்கடி வெளியே தங்கியிருக்கவேண்டும். அச்சமயங்களில் யானிவ்விடம் வருகின்றேன். அவனுக்கு நம்சிநேகம் ஏன் தெரியவேண்டும்? இவ்வாறு சில காலங்கழிக்கலாம். பின் எல்லாவற்றிற்கும் பார்த்துக்கொள்ளலாம்” என்றான் அரசன்.

“அவ்வாறு வஞ்சனைசெய்துகொண்டு எவ்வாறு இருத்தல் கூடும்? மனம் ஒருபாலிருப்ப யான் எவ்வாறு அவனை அன்புடன் பாராட்டவல்லேன்? அன்றியும் அரசர்க்குரியளாயபின் அற்பருக்கு உரியளாவேனோ? அவனை அரண்மனைக்கு வாராவண்ணஞ் செய்யுங்கள்” என்றாள் குணவதி.

“உடனே செய்தல்கூடாது. பத்துத்தினங்கள் நீயும் பொய்ம்மையன்பு அவன்பாற் பாராட்டித்தான் வரவேண்டும். பிறகு அவனை அரண்மனைக்கு வாராவண்ணம் வெளியேயே காக்கும்படி செய்கின்றேன்” என்றான் அரசன்.

“ஆயின் தங்களிடத்து ஒருவரம் வேண்டுகின்றேன். அஃதாவது அவனை வருத்தக்கூடாது என்பதே.”

“ஏன் அவனை வருத்தவேண்டும்? யான் உன் இஷ்டப்படியே செய்கின்றேன்” என்றான்.

அரசனும் மனமகிழ்ச்சியுடன் குணவதியினிடத்து மிக்க அன்புபூண்டு ஒழுகலாயினான். வீரமார்த்தாண்டன் தன்மனைவியை அடிக்கடி விட்டுப் பிரியவேண்டியதன் நிமித்தம் வருத்தப்பட்டான். என்செய்வான்? பாவம்!

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.



## காங்கிரஸ் மகாசபை.—IV.

(II - ம் சம்புடம், 448 - ம். பக்கத்தொடர்ச்சி.)

காங்கிரஸ் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட 1885 - வருஷம் இந்தியா முழுதும் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் சென்று பயின்ற மாணவர்கள் 34,31,725-பெயர். பன்னிரண்டு வருஷம் சென்றபின் பயின்று வந்த மாணவர்கள் 43,20,727 - அதாவது நூற்றுக்கு 26-பேர் வீதம் அதிகப்பட்டிருக்கிறது. கல்வி விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் 1885-வருஷத்தில் ரூபாய் 2,37,434-செலவு செய்திருந்தார்கள். 1896-வருஷத்தில் 3,52, 65,296 -ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். கல்வி விஷயத்தில் செலவு முதலில் நூற்றுக்கு 62-வீதம் இருந்ததைக் காட்டிலும் அதிகமாகியிருக்கிறது. பெண் கல்வியிலும் கவர்ன்மெண்டார் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆரம்பத்திலிருந்ததைப் பார்க்கிலும் இரண்டு மடங்கு அதிகமாய் பெண்கல்வி விருத்தி அடைந்திருக்கிறது. ஆங்கிலேயரும் மற்ற வெள்ளையரும் தற்காலத்திய நிலைமையை அடைந்திருப்பதற்கு அவர்களுடைய ஸ்திரீகளும் கற்றறிந்தவர்களாயிருப்பதுவே ஓர் முக்கியமான காரணம். இந்தியா நானிருக்கும் நிலைமையிலேயே யிருப்பதற்கு இத்தேசத்து ஸ்திரீகள் கல்வி யறிவில்லாமலிருப்பதுவே முக்கியமான காரணங்களுள் ஒன்று. பெண்களைக் கல்வியில் அபிவிருத்தியடையச் செய்யாமல் மடமையில் விருத்தியடையும்படி விட்டுவிடுவது மிகவும் நகைக்கத்தக்கது. பெண்கல்வி யில்லையாயின் ஒவ்வொரு ஜாதியின் தொகையும் அரைமடங்கு குறைந்துபோனதை யொக்கும். இப்படி யாதாமொரு காரணத்தினால் கல்வியை ஆதரவின்றிவிடும் ஒவ்வோர் ஜாதியும் கடைசியில் க்ஷீணதிசை யடைவதில் ஐயமில்லை. பூர்வீகத்திருந்த இந்தியர்களும், பெண்கல்வியை மேன்மையாகக் கொண்டார்களே யன்றி வேறில்லை. ஆடவர், மகளிர் இவ்விருபாலார்க்கும் கல்வி இன்றியமையாத தென்பது,

“குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து

நல்லம்யா மென்னும்நடுவு நிலைமையால்
கல்வியழகே யழகு."

என்னு மூதுரையாற் போந்த விஷயமே. அக்காலத்திலேயே பெண்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமெனும் எண்ணமும் முயற்சியு மிருந்திருப்பதாகத் தெரிகிறபோது, இப்போது பெண்கல்வியில் அதிகக் கவனம் வைத்தல் ஆவசியகமென்பது நாம் நாடோறும் கற்றும் கேட்டும் பார்த்தும் வருகிற விஷயமல்லவா? கவர்ன்மென்டார் தாம் பெண்கல்வியில் எடுத்துக்கொள்ளும் சிரமத்தோடு சுதேசிகளும் இதில் கவனம்வைத்து விருத்தி செய்தல் மிகவும் முக்கியமான காரியம்.

கல்வி விருத்தியும் அதைச்சார்ந்த விஷயங்கள் விருத்தியாகத்தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. முற்காலத்தில் கற்றறிந்த சிலருக்கும் தத்தம் சமாசாரங்கள் தெரிவித்துக் கொள்ளுதல் மிகவும் அருமையாயிருந்தது. 1854-வருஷத்திற்கு முன்னர் தபால் ஓரிடமிருந்து மற்றோரிடம் போகவேண்டுமானால் மயிலுக்குத்தகுந்தபடி தபாற்கூலி கொடுக்க வேண்டியதாயிருந்தது. அதுமுதற்கொண்டு ஒரு கடிதம் கன்னியாகுமரியிலிருந்து இமாசலத்திற்குப்போக வேண்டுமானாலும் சரி, அல்லது, இந்தியாவில் மற்றெவ்விடங்களுக்கும் போனாலுஞ்சரி தபாற்கூலி ஒரே விதமாக ஏற்படுத்தப்பட்டுளது. 1880-வருஷந்தான் தபாற்கார்டு உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மணிஆர்டர் அதாவது தபால் மார்க்கமாகப் பணம் அனுப்புதல் 1862-வருஷந்தான்நடவடிக்கையில் வந்தது. இந்தியாவில் 1854-வருஷம் இருந்த தாபாலாபீசுகளினும் இப்போது ஒன்பதினாயிரம் அதிகமாயிருக்கின்றன. வரத்துப்போக்கான தபால்கள் பதினெண் மடங்குக்கு அதிகமாகவேயிருக்கின்றன. இவற்றை யெல்லாம் பார்க்கும்போது கல்வி முன்னிலும் இப்போது எவ்வளவு விருத்தியடைந்திருக்கிறதென்பது தெரியவரும்.

சென்னையில் 1887-ம் வருஷத்தில் நடந்த மூன்றாவது காங்கிரஸில்வரும்படியின் பேரில் வரி *சரியாகப் போடவில்லை யென்றும், வருஷத்தில் 1,000-ரூபாய்க்குக் குறைந்தவருமானத்தின் பேரில் வரி போடுவதை நிறுத்தவேண்டு மென்றும், அதற்கும் அதற்கு

* Income-tax.



மேற்பட்ட தொகையின் பேரிலுந்தான் வரி போடுதல் வேண்டுமென்றும், அதனால் வரும்வரவு நஷ்டத்தை மற்ற அநாவசியமான செலவுகளைக் குறைத்துச் சரிபடுத்திக்கொள்ளலா மென்றும், அப்படியும் குறைவு வந்தால், சீமையிலிருந்துவரும் பருத்திநூல் வஸ்திரங்கள் முதலியவைகளுக்கு இறக்குமதி வரி போட்டு வரும்படி குறையா வண்ணம் பார்த்துக்கொள்ளலா மென்றும், தீர்மானம் செய்யப்பட்டது. இது விஷயம் காங்கிரசில் இதுவரை பத்துத்தரம் பிரஸ்தாபம் செய்யப்பட்டுளது. ஆயினும் இதுவரையில இதுவிஷயத்தில் கவர்ன்மென்டார் யாதொரு ஏற்பாடும் நடத்தவில்லை. கூடிய சீக்கிரத்தில் தகுந்த ஏற்பாடு செய்வார்களென நம்புகிறோம்.

1886-வருஷம் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது காங்கிரஸில், கிரிமினல்கேஸ் செஷன் விசாரணைக்காலத்து ஜூரிகளுடைய அபிப்பிராயம் தெரிந்து தீர்மானம்சொல்லும் வழக்கம் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் இடங்களைத் தவிர மற்ற விடங்களிலும் பரவச்செய்தல் ஆவசியகமென்று தீர்மானம் செய்தார்கள். இது விஷயத்தைக் குறித்தும் காங்கிரஸில் பத்துத்தரம் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். கவர்ன்மென்டாரும் எவ்விடத்தில் இதைப் பரவச்செய்யவேண்டுமோ அவ்விடங்களில் நாளடைவில் இவ்வழக்கத்தைப் பரவச்செய்துகொண்டு வருகிறார்கள்.

இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளில் மாணவர்களைப் பரீக்ஷை மாத்திரம் செய்து பட்டங்கொடுக்கிறார்களே யொழிய, சீமையில் நடப்பதுபோல பலவிஷயங்களையும் தாமே கற்பிக்கிறார்களில்லை. எந்தச்சட்டத்தினால் ஈண்டுள்ள சர்வகலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டனவோ அந்தச்சட்டத்தைச் சீர்திருத்தஞ்செய்து, இந்தியாவிலிருக்கும் சர்வகலாசாலைகளை யெல்லாம் இவ்விஷயத்திலாகிலும் சீமையிலிருப்பனபோல் செய்யவிக்க வேண்டுமென்று 1896-வருஷத்தில் கல்கத்தாவில் நடந்த பன்னிரண்டாவது காங்கிரஸில் தீர்மானம் செய்யப்பட்டது. இதைப்பற்றி கவர்ன்மென்டார் இன்னம் தகுந்த ஏற்பாடு செய்யவில்லை. இத்தகைய ஏற்பாட்டினால் வரும்பயனை அடைதற்குரிய வேறுவிதமான ஏற்பாடு ஒன்று இவ்வருஷத்தில் நடந்திருக்கின்றது. பம்பாய் இராஜதானியிலிருக்கும் டாடா என்பவர் இதுவிஷயத்தைக் குறித்து

அதிக திரவியசகாயஞ் செய்துளர். கவர்ன்மெண்டாரும் அதைப் பெற்றுத்தாங்களும் தகுதியாய்ச்செலவுசெய்து விசேட வாசிப்பை விருத்திசெய்து நூதன * ஸர்வகலாசாலைக்கும் ஓர் கௌரவம் ஏற்படுத்தி, அதில் வாசித்துப் பட்டம்பெறும் இந்தியர்களால் இந்தியாவை அதிகமாய் எவ்விஷயத்திலும் விருத்திசெய்ய வேண்டுமென்பது கவர்ன்மெண்டாருடைய எண்ணமாயிருக்கிறது. இதைச் சார்ந்த ஏற்பாடுகளெல்லாம் கூடிய சீக்கிரத்தில் நிறைவேறுமென் றெண்ணுகிறோம்.

(இன்னும்வரும்,)

கல்குளம்-குப்புசாமி முதலியார்,

---

## ஆசாரவிளக்கம்.

### சூத்திரம் - 2.

உயர்குலத்திற் பிறந்தானொருவன் அசுத்ததேகம், அசுசியுடை அசுத்தவிடப்பயிற்சி தீயாகாரம் தீயார்புணர்ப்புகள் களவு கொலையாதிய தீமையும் உளனாகில் ஆசாரசம்பன்னரும் ஏனையரும் அவனைப்பார்க்கவும் அணுகவும் அருசியுடையராய் விலகுவர்; ஏசருமிகழ்வர். அவன் நோயும் மனத்துன்பமு மிழிவு மிடையறாதுடையன். இழிகுலத்திற் பிறந்தானொருவன் சுசிநல்லாகாராதி கொளல் நல்லுடை நல்லிடப்பயிற்சி நல்லவர் சேர்க்கை அறம் பொறை தயை மெய்ம்மை இன்சொல் ஐம்புலனடக்கல் முனியாமை கொல்லாமை கள்ளாமை கல்வி தெய்வபக்தியாதிய நன்னடை யுளனாகில் அன்னோனை எத்தகை யுயர்வருணத்தாரும் உயர்நிலையினரும் விரும்பிப் புகழ்ந்து கொண்டாடாநிற்பர். அன்னான் தேகபலமும் சுகமும் மனமகிழ்ச்சியும் ஆறுதலும் செல்வமுங் கீர்த்தியும் அடைந்து நீண்ட சுகவாழ்வை யடைவன். உள்ளபடி கூறி லன்னான் அறம் பொருள் இன்பம் வீடு எனும் புருடார்த்தங்கண் முற்றுமடைவன். இவை நம்மநுபவத்தாற் கண்டவே ஆகலின் அவ்வியப் பொருண் மாத்திரமன்றி ஆயுள்நோயின்மை சுகம் மகிழ்ச்சி அறிவு தவமாதிய பலநன்மைத்தொகுதிகளை யொருங்கே தரும் கற்பதருக்களாகிய சதாசாரங்கள் யாவரும் வேண்டத்தக்கனவேயாம். இவை "ஒழுக்க முயர்குலத்தினன்று" என்றசுருதியினும், விநாயகபுராணத்தில்,

"தாழ்ந்த வருணத் துதித்தவருந் தக்கோ ராவ ரொழுக்கத்தால்
வீழ்ந்த வொழுக்கத் தாரிழிவர் மேலாம் வருணத் துதித்திடினுஞ்

* Post-Graduate University.



சூழ்ந்து துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்கு மதனா லுயிர்தனினும்
வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக வழுக்கி னிடும்பை யேதருமே"

என்ற வசனத்தானும் வற்புறுத்தப்படும்.

### மிருகம் பக்ஷி ஜெந்துக்களினுணர்வு.

உடலைப்பேணல் உயிரைப்பேணல் இரைதேடல் உண்ணல் தண்ணீர் குடித்தல் தன்னினம் பேணல் தன் சிசுவைப் பேணல் நித்திரை புணர்ச்சி ஆசை அச்சம் வெகுளி அன்பு இன்பதுன்பமறிதல் இவற்றினில் மனிதரும் மிருகங்களும் சமமேயாம். பரோபகாரம் சுசிகுணித்தல் நன்றியறிதல் எஜமானன் கட்டளைப்படி நடத்தல் ஞாபகசக்தி கற்பித்தனசெயல் கற்பித்தனகூறல் தம் மினப்பாடையறிதல் முன்னுணர்தல் முதலிய பகுத்தறிவும் நன்னெறியும் ஆசாரமும் பல மிருகம் பக்ஷி ஜெந்துக்களுக்கு முண்டு.

### உதாரணங்கள்.

குருவி:—வலியானென்ற கரிக்குருவி உருவம் பலங்களிற்சிறிதேயாயினும் அறிவினும் ஊக்கத்திலும் பருத்த உபகாரசித்தமும் பகுத்தறிவு முடையதாம். அஃது இராஜாளி கருடன் முதலிய பெருத்தபக்ஷிகளையும் அலக்ஷியம் செய்யும். படைகுருவிகள் பெருங்கூட்டமாய்க் கதிர்ப்பயிர் அல்லது பழுத்த மரங்களிற் கூடியிருந்துழித் தானொருன்னதவிடத்து வைகி நான்கு பக்கங்களிலும் வேவு பார்த்திருந்து அக்குருவிகளை யடித்துக்கொல்லும்; இலகுடு இராஜாளி வல்லூறு முதலிய பக்ஷிகள் வருவதைத் தெரிந்து இன்னின்ன வருகின்றனவென்று வெவ்வேறு சப்தங்களாற்சொல்லும்; அச்சத்தங்கேட்டவுடன் படைகுருவிகள் திடீரென்று கலைந்தோடி விடுகின்றன. அல்லது அடுத்துள்ள மரப்புதர்களி லொளித்துக்கொள்கின்றன. புறா முதலிய பக்ஷிகள் பூமியில் மேய்ந்துகொண் டிருக்குங்காற் பாம்பு காட்டுப்பூனை வருவதைக்கண்டு தன் பாடையாற் கூறும். அதுகேட்ட பக்ஷிகள் உடனே பறந்து தப்பிக்கொள்கின்றன. இங்ஙனம் பக்ஷிகளுக்கு வரும் விபத்துக்களை மீகாமன்போ லதிருஷ்டமாயோர்ந்து அறிவித்து ரக்ஷிக்கும் பரோபகார சிந்தையும் இரக்கமும் ஜெந்துக்களின் றன்மைகளறியுமறிவும் விஷயங்களை யறிவிக்கும் பாஷாஞானமும் இன்ன பக்ஷியால் அல்லது ஜெந்துவாற் றீங்குண் டென்றறியும் பகுத்தறிவும் கரிக்குருவியால் விளங்கக் காண்கும். இக்குருவியின் சத்தங்களைச் செவியுற்றுக் கவனித்து அஃது இன்னின்ன சொல் இன்னதென் றதன் பாடையாலோர்ந்து எதிர் பார்த்திருந்து படைகுருவி இராஜாளி முதலிய பக்ஷிகளைப் பிடிக்கும் பக்ஷி வேட்டம் வல்லுநரநேக ரிக்காலத்து முளர். அன்னவருள் எட்டயபுரம் குறுநிலமன்னர் வம்சத்து மேலரண்மனை ஸ்ரீவெங்கடேசரெட்டுப்பாண்டியன் என்பார் குறிக்கத்தக்கவராவர்.

**காக்கை:**— தன் குஞ்சுகளுக் கிரைதேடித்தரும். ஆகார மெதிர்ப்பட்டுழித் தன்னினத்தை அழைத்துடனிருந் துண்ணும். தன்னினத்துக்கு மரணம் வந்துழிப் பெருங்கூட்டங்கூடிக் கரைந்தழுது விசனங்கொண்டாடும். நீரிற்குளித்துச் சரீரமிறகுகளைப் புனிதப்படுத்திக்கொள்ளும். தனக்குத்தீங்கு செய்வாரை அறிந்து தான்றப்ப முயல்வதோடு தன்னினத்துக்கு மறிவிக்கும். ஆதலாற் காக்கைக்கு ஆகார நித்திரை புணர்ச்சியோடு தன்னினம் பேணல் விருந்தோம்பல் சரீர சுத்திக்காகக் குளித்தல் தன்னினத் துயருக் காற்றுது வருந்தல் முதலிய நல்லொழுக்கங்களு மாசாரமுமுள.

**நாய்:**—தன் எஜமான் சொத்துக்களை யந்நியர் கவராது காக்கும் தனக்கொருகா லாகார மீந்தாரிட மாயுள்காறும் அன்புபாராட்டும். தனக்கு அன்பர்களைக் கண்டெரியாத நிசியிலும் போய்த் தான்றெரிந்து அன்பு காட்டும். தன்னை வளர்க்கு எஜமானன் அடிக்கினும் கூரியவேலாற் குத்தினும் உயிருள்ள மட்டும் நன்றி பாராட்டுதலன்றி யெதிர்த்துத் தீங்கு செய்யாது. தன் எஜமானன் வீட்டிற்றான் செல்லுமிடஞ் செல்லாவிடங்களை யறிந்து கிரமந்தவறாது நடக்கும். உடையான் மூன்று நான்கு அடுக்குமாடி வீட்டின் மேலிருக்கினும் தான் கண்ணுற் பாராமலே மோப்பத்தாலிருக்குந் திசையறிந்து அத்திக்கிற்கிட்டி நின்று அன்புகாட்டி வாலாட்டித் தாவும். தனக்குயிர்போவதாகுனு மிலட்சியம் பண்ணுது. உடையான்கட்டளைப்படி செய்யமுந்தும். ஆதலின் நாய் நன்றி உடையாற்பணிதல் ஞாயகம் வீரம் மோப்பத்தாலறிதல் ஆகிய நற்குணங்களி லெந்தமனிதனையு மேற்கொள்ளும்.

**எறும்புகள் :**—தூரத்திலுள்ள தம்மாகாரங்களை மணத்தாலறிந்து தம்மினத்துக்கறிவித்துக் கூட்டமாய்க்கூடிக் கொண்டுபோய்த் தம்மிடம் சேர்க்கின்றன. ஆகாரம் பெருந்துண்டாயிருக்கும்பொழுது ஒன்றிரண்டாற் கொண்டுபோகக் கூடாதிருந்தால் அஃதறிந்துபலவொன்று சேர்ந்திருக்கின்றன. சாரிபோமெறும்புகள் தம்வழியிற் றீங்குநேரிட்டால் திரும்பிப்பின் வருமெறும்புகளிடந் தம்பாஷைபாலறிவிக்க வவை மற்றவைக்கறிவிக்க விவ்வாறு குழு முழுதுணர்ந்து திரும்பிச் செல்லும். தங்கட்காகாரமல்லாத தீயபதார்த்தங்களையறிந்து அவைகளைப் புசித்தலையு மணுகலையு மொழிகின்றன. தமக்கினிய நெய் தேன் வெல்ல முதலிய வைகளோடு விஷமான தீயபதார்த்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கினும் அவற்றினையறிந்து தவிர்க்கின்றன. பின் வரப்போகிற மழையைக் காற்றின் ஓட்டத்தாலுணர்ந்து மழைநீராற் றீங்குறுவழிசேர்ந்து தம்முட்டைகளோடும் சேகரித்து வைத்த ஆகாரங்களோடுஞ் சென்று வசிக்க முயல்கின்றன. தம்மிற் பெரியார் விதித்தபடி செய்யும் பயபத்தியும் ஒழுக்கமுமுடையன. ஒற்றுமையுடையன. ஒன்றுக்கொன்று சிநேக வாச்சல்யமுடையன. இவை தந்தேகத்துக் கொத்த நல்லாகா



ரங்கொளல் சேர்த்தல் ஒற்றுமை தம்மவர்க்கன்பு முன்னுணர்வு பாஷை முதலிய பகுத்தறிவுகளுடையன.

**பட்டுப்பூச்சிப் புழு :**—தான் புழுவடிவு நீங்கி அழகிய பக்ஷிவடிவாவதற்கு வேண்டிய 45-முதல் 90-நாள் வரை தனக்கு வேண்டிய ஆகாரத்தை இருங்கேயுண்டு பருத்துத் தன்வாயினின்று தான் கொண்ட ஆகாரத்தைப் பருநூல் சிறுநூல் பசையாக்கி வெளிப்படுத்திக் கோழிமுட்டை போன்ற கூடமைத்து அதனுட்பகுதியிற் சென்று வழியடைத்து உட்பகுதியிற் காகிதம் போன்ற மிருதுவான வுட்கவசமிட்டுத் தானிருத்தற்கு மிருதுவான பஞ்சுமெத்தையிட்டு வசித்து மீதமுள்ள ஆகாரத்தைத் தனக்காகாரமாக்கி அழகிய பறவை வடிவானவுடன் கூட்டைப்பீறி வெளிப்பட்டுத் தேன் இலை முதலிய இரை தேடியருந்தி யெச்சத்தோடு இலைகளில் முட்டையிடும். அது பொரித்துப் புழுவாயிரண்டாவது ஜன்மமாகிய பறவையாவதற்கு மேற்கூறியவாறு புரியும். தம்பலப்பூச்சிப்புழு என்னப்படும் இதற்குப் பின்னறிவும் நுணுகிய சிற்பத்தொழிற்றேர்ச்சியும் சுகாகாரந்தேடலுமாகிய வுணர்வுகள் மலிந்துகிடக்கின்றன. (அவை யறிவன்று இயல்பெனில் :—ஒன்றுக்கொன்று காரண காரியங்களாகிய இவ்வளவு பிற்பிரயோசன காரியங்களைத் தனக்கென வோருணர்வின்றி யியக்குவாருமின்றி அஃது நடத்தல் கண்கூடாகலிற் பின் முன்னோர்ந்த வோர் முற்றறிஞன் றொன்றுதிருந்து இயக்கினாலன்றி நிகழாதெனத் தெள்ளிதிலோரக் கிடந்தமை காண்க.)

குரங்குகள் பல வறிவுகளோடு தன் சிசுப்பேணல் தனக்கனியாயஞ் செய்தாரை யெதிர்த்தடித்தல் வலாதேல் காப்பாளரா யறிந்து தன் குறைகளைச் செய்கைகளாற் கூறல் உடையான் கற்பித்தன செயல் முதலிய விசேடஞானங்களுடையன. இங்ஙனமே வானம்பாடி கிளி தேனீ தூக்கணம்புள் நாகணவாய்ப்புள் யானை குதிரை கிகைப்பூச்சி முதலியன பல விசேடஞானங்களுடையன. அற்பவாயுளையுடைய கண்செவியாதி யிந்திரியங்களற்ற சில புழுக்கள் வேறு ஜெந்துக்கள் தன்னையடுத்து வருவதைக் காற்றினசைவாற் பரிச மூலமாயறிந்து தப்பியுய்ய முயல்கின்றன. ஞெண்டுகள் வளைதோண்டி யளறு கொழிக்குந் தன்மையாலும், தவளைகள் அரற்றுஞ் சப்த பேதத்தாலும், கொக்கினம் படையேறலென்ற களைசாருந் தன்மையாலும், ஆடுகள் கிடைகொளா தியங்குந் தன்மையாலும், அவைகள் மழையை முன்னறிந்த வுண்மையை விளக்குகின்றன. அவ்வுமையங்களின் அவைகள் செய்யும் செயல்களின் சின்ன பேதங்களாகிய அறிகுறிகளாலறிந்து கொள்ளும் வண்ணம் பழகிய வுழவரும் ஆயருமுளர். இங்ஙன மெத்தனை மதிநுட்பமுடைய கல்வி வல்லுநரும் முன்னறிதற் கரிய வரவையிலேசினீர் அநிலங்களின் ஓட்டண வியக்க பேதங்களால் அறியுமதியதிநுதகை வலவுநுதி பிராணிகளுடையன. வாயுமானியான் மழையாதியறியும் வாயு

தத்வ சாத்திரிகளும் மழையாதி யுண்டாமிடம் வரைவுபடுத்தி நிச்சயிக்க வேலாமை யநுபவித்துக்காண்டும்.

இனித்தாபரமாகிய * தடியுண்டாரும் இலையில் வேறு பதார்த்தங்கள் வைக்கப்பட்டால் நெகிழவிட்டுக் குருவிகள் உட்கார்ந்தால் ஒட்டிக்கொண்டு இலைமுகிழ்த்து அதன்றசையை மாம்சபேதிபோற் கரைத்துட்கொண்டு பசையற்ற வென்பு இறகு எச்சம் இவைகளைவிரித்து விடுக்கின்றது. கொடிகள் தமக்காதாரங் கண்டு பற்றிப்படர்கின்றன. ஜலம் பால் எண்ணெய்களை வேரினாற்றினால் தம்வளர்ச்சிக்கு வேண்டிய சத்துக்களை யுட்கொண்டு சரிவாயுவையுமுட்கொண்டு பருக்கின்றன. தம்வளர்ச்சிக்கு வேண்டாத மற்ற சத்துக்களைத்தவிர்க்கின்றன. ஸ்பரிசமறிந்து உட்டண சீதளங்களால் வாட்டங் கிளர்ச்சிகளை யடைகின்றன.

இங்ஙனம் ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் வரை யுள்ள வெல்லாவுயிர்களும் தம்முடல் விருத்திக்கும் சுகத்துக்கு மாவன விரும்பி யாகாதன வெறுக்கின்றன. ஐயறிவோடு விவேகமு (பகுத்தறிவு) முடைய மானுடர்க்குரிய சுசிநெறி யாசாரங்களும் விருத்தி சுகங்களுக்காவன கொண்டு ஆகாதனவெறுப்பனவேயாம். மிருகம், பக்ஷி, கிருமி, கீடாதிவுயிர், கணம், உடற்கு விருத்தி சுகங்களைப் பயக்கும் நல்லாகாராதி விரும்பிக் கெடுதியினின்று தப்பமுயல்வதால் எல்லாவுயிர்களையுந் தம்பிரயோசனத்துக்காகப் பெற்ற வைகளனைத்தையும் வயப்படுத்து ஆளும்வன்மையுமேலானஞானமுமுடைய மானிடர்க்கவை (விருத்திசுகங்கள் பயக்குஞ் சதாசாரங்களை) எவ்விதத்துந் தவிர்க்கக்கூடாத மிக்க வத்யாவசிய மென்பது நிர்ப்பாதித சித்தாந்தம். ஆகவே சதாசாரங்கள் இத்தேயத்தார் இவ்வகுப்பார் இச்சாதியார் இத்தன்மையார் இந்நிலைமையார் இக்காலத்தார் இப்பிராயத்தார்களுக்கேயுரியனவென்று பிரித்துக் குறிக்கக்கூடாத இன்றியமையா மானுடயாக்கைபெற்றாரனைவர்க்கு முற்றதுணைத் தொகுதியாமென்பது தெளிவு.

(இன்னும்வரும்)

விருதை - சிவஞானம்.

## இந்தியாவி லிரும்புவேலை—II.

12. பஞ்சாபியில் நாதுன் ஸமஸ்தானம்:—இதனை ஆளும் சுதேசவரசர் சிர்மூரில் விசேஷத்திரவியச் செலவிட்டு ஐரோப்பிய யந்திரசாதனங்களைச் சேகரித்து இரும்பு வேலைச்சாலையை ஸ்தாபித்தார். 1890-ம் வருஷத்தில் மாட்சிமை தங்கிய வைஸ்ராய் அவர்கள் வந்திருந்து ஆடம்பரத்துடன் வேலைப்பிரவேசம் செய்யப்பட்டது.

* தடி=மாம்சம்



13. கம்மோன் இரும்புக்கனிகள். 1855-ம் வருஷத்தில் கோர்ட் - ஆவ்-டிரக்டரஸ் ஜான் ஹென்வுட்டை அனுப்பி கம்மோன் இருப்புச் செப்பு மண்ணைப் பார்த்து ரிபோர்ட்செய்யச் சொன்னார்கள். இந்தியாவின் வடக்குப் பக்கத்தில் எவ்வளவு உற்பத்தியாகக்கூடும் என்று சோதிக்க ஈஸ்ட் இந்தியா ரெயில்வே கம்பனியர் மிஸ்டர் ஸோவர்பி-யை நியமித்தனர். 15¼ லக்ஷம் செலவிட்டு வேலை செய்தால் வருஷம் 1 - க்கு 1300 டன் தண்டவாள இரும்பும், 3500 டன் அடித்த விரும்பும் உற்பத்திசெய்யலாம், அதனால் முதல் பொருளுக்கு 100 - க்கு 6½ வட்டி கிட்டும், என்ற யோசனை - 1856ம் வருஷத்தில் ஜெனரல் ஸ்டராசியால் செய்யப்பட்டு வெளியாயிற்று. 1857-ம் வருஷத்தில் இந்த வேலைக்கு மிஸ்டர் ஸோவர்பியை கவர்ன்மெண்டார் நியமித்தனர். 1860 - ம் வருஷத்தில் கட்டுப்படியை மாத்திரம் கவர்ன்மெண்டார்க்குக் கொடுத்துவிட்டு இந்த வேலையை ஒரு கம்பெனியார் எடுத்துக்கொண்டனர். அப்புறம் வேலை திர்ப்தியாய் நடவாது, வேலை தோற்றுப்போன காரணம் தெரிவிக்க டாக்டர் ஓல்டாம் நியமிக்கப்பட்டனர், வேலை செய்தவற்கு வேலை தெரியாமல் தாறுமாறாய்ச் செலவாய் நஷ்டம் நேரிட்டது எனத்தெரிய வந்தது. 1862 - ம் வருஷத்தில் டேவிஸ் கம்பெனி, ட்ரம்மண்ட் கம்பெனி, என்ற இரண்டு கம்பெனியார் அதுவரையில் வெவ்வேறாய் வேலை செய்தவர்கள், கலந்து கம்மோன் இரும்புவேலைக் கம்பெனியெனப் பெயர் வகித்தனர். கவர்ன்மெண்டார் லைஸன்ஸு கொடுப்பதாய்ச் சொல்லியிருந்து, அந்த லைஸன்ஸு பிறக்க இரண்டு வருஷம் பிடிக்கவே, முதல் கிளம்ப அட்டிப்பட்டு, கம்பெனியார் வேலை நிறுத்தும்படி யாயிற்று. 1877 - ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் திரும்பியும் முயற்சித்து விசேஷச் செலவிட்டும், சீர்ப்படவில்லை.

14. பீரங்கி பட்டாளங்களுக்குக் குண்டு முதலானவை செய்ய எல்லா வேலை நடத்தக் காஸிப்போர்ப் பண்டசாலையில் கடைசியாகக் கவர்ன்மெண்டார் பார்த்ததில், காரியம் முழுதிலும் கைகூடி வந்ததெனப் பயநீயர்ப் பேப்பரிற் கண்டிருக்கிறது.

இராணுவச் சௌகரியங்களை யோசிக்குமளவில் இந்திய கவர்ன்மெண்டார்க்குத் தத்தம் இஷ்டப்படி யுத்தப்படை குண்டுசாமான்கள் கிடைக்கப்போகவிருப்பது அவசியம் என யார்தான்சொல்லமாட்டார்கள். கவர்ன்மெண்டார் தாம்சொந்தமாய் நடத்துகிற ரெயில்பாதைகளுக்கு வேண்டிய வண்டிசாமான், மற்றும் சாமான் இவற்றைச் சேகரித்துக்கொள்ள கவர்ன்மெண்டார் சுவாதீனப்பட்ட இரும்புவேலைஸ்தானம் இருக்கவேண்டாமா? அல்லது இலாபமாகாதா? அப்படி இரும்புவேலை கவர்ன்மெண்டாராற் சொந்தமாய் நடத்தினால், ஊர்க்குடிகளுக்கு இரும்புவேலை யிருப்பதையும் வாங்கி நடத்தலாமே, இலாபந்தானே, அப்படியே சர்க்கார்வேலை, குடிவேலை எல்லாம் கலந்துபோகும்படி அகத்திடம்நேரிடும்.

தாராளமாய் இரும்புவேலைசெய்யக் குடிகளும் கவர்ன்மெண்டாரும்
பண்ணினமுயத்தனங்கள் இன்னின்ன, அப்பிராயத்தினங்கள் எப்படிமுடிக்
தன என்பதைப்பற்றிச் சுருக்கமாய் தெரிவித்தனம். இதனைப்படித்துச்
சிந்திப்பார்க்கு இவைகள் தோற்றுப்போனதற்குக் காரணம் ஏற்படுவதாவது
என்னவென்றால்:—

1. காரியத்திற்கு வேண்டியமட்டும் முதல் வைக்கப்பட்டு வேலை
தொடங்காதது, குடிகள் சேர்ந்தகம்பெனிகளுக்கு வேண்டிய முதற்பொ
ருள்கிடையாமல் அசைந்தது.

2. நல்லவிறகுகிடைக்காமலும், கிடைத்தால் கட்டுபடி விசேஷப்ப
ட்டது.

3. வேலைசெய்ய நியமித்தஸ்தானங்கள் சுளுவில் போக்குவரத்து
ஆகும்படிக் கடலுக்காவது ரெயிலுக்காவது நெருக்கமாய் இல்லாமற்
போனது.

4. கவர்ன்மெண்டார்க்கு நிலையான உறுதிப்பாடின்றி, இலாபத்தின்
மேல் எண்ணம் அடிக்கடிவந்து புத்திகலைந்து வந்தது.

5. சோதனை யத்நங்களுக்கு ஏற்பட்ட வேலைக்காரர்களிடத்தில்
வேண்டியமட்டும் சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் வேலைநடத்துவிக்
கும் திறமையும் இல்லாமற்போனது.

6. துரைத்தன ஒழுங்குப்படி வேலைநடத்துவதிற் கச்சேரியிற் சாவ
காசப்பட்டு உத்தரவுகள் கிடைக்கும்படியிருந்தது. சோதனைப்பிரயத்தன
ங்கள் நடந்தகாலத்துக்கு மட்டுமாவது பொருள் ஒத்தாசைசெய்தோ,
வட்டிக்கு உத்தரவாதமாக நின்றோ, உபகரிக்கக் கவர்ன்மெண்டார் சம்மத
ப்படாமற் போனது. யத்நங்கள் பிசகிப்போனதற்குக் காரணங்களை ஊன்
றிப்பார்த்தால் சாக்கிரதையாயிருந்திருந்தால் அந்தப்பிசகுகள் சம்பவித்
திராவெனத் தெரிகிறது. கடல்வழியாயும், நிலத்துவழியாயும் போக்கு
வரவுக்கு இருந்த சங்கடங்கள், பிற்பட்டு நாளது தேதியில் நீங்கியுள.
போக்கு வரவுச்சுளுவுகள் எவ்வளவோ ஏற்பட்டுப்போயிருக்கின்றன.
கனிவேலைக்குச் சோதனைக் குத்தகைகளும், வேலை நடத்தக் குத்தகை
களும், கொடுக்க கவர்ன்மெண்டார் யோசனை செய்திருப்பதில், குத்தகை
பிடிப்பார்க்குத் தைரியம் பிறக்கும்படி பாரி யோசனையில்லையென, பய
நியர் சஞ்சிகைகள் புதிதாய் வெளிவந்தவற்றில் காட்டப்பட்டிருக்கிறது.
சொல்ப விஸ்தீர்ணத் தாவுசுளுக்குச் சொற்பக் கெடுவுக்குக் குத்தகை விடும்
படி யோசனை செய்வதைவிடச் சும்மாவிருக்கலாம், வேலையைப்பாரியாய்நட
த்துவதானால் 50-வருஷத்துக்குக் குறையாமல் நீண்ட கெடுவிதிக்கவேண்டும்.
25லக்ஷம் முதலுக்குக்குறையாமல் முதல் சம்பாதிக்கப் பெறுவார்க்கே இவ்
வுபகாரங்கள் செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்ட கம்பனிகள் ஏற்படும்



பக்ஷத்தில், சர்வேவேலை, முந்திய சோதனை வேலைகள் விவரமாய் நடத்தக்
கவர்ன்மெண்டாரே சொந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும். தம்மிடத்து
அநுபோகசாலிகளான உத்தியோகரும் கம்பனியாரிடத்து அத்தகைய உத்தி
யோகரும் கலந்து வேலைபார்க்கவேண்டும், வைநாட்டில் தங்கச்சுரங்கவேலை
இவ்வாறு நடை பெற்றது. மோசக்கருத்து இல்லை யோக்கியக்கருத்தே கம்
பனியார்க்கு உளது, ஏற்பட்ட வேலைக்காரரும் இனப்பட்டவர்தான், எனக்க
வர்ன்மெண்டார்க்குத் தீரத்தெரிந்தபின், ரயில்வேகம்பனியார்க்குக் கவர்ன்
மெண்டார்நடத்திய பிரகாரமே, கோவேலை ஆரம்பித்தற்கு முற்பட்டு சோ
தனையும், யத்நங்கள் மாத்திரம் நடந்துபோம் காலங்களுக்கு யோக்கியமான
வட்டி போட்டுக் கொடுக்கக் கவர்ன்மெண்டார் பாத்தியப்பட வேண்டும்,
இம்மட்டு வட்டி நாசிக்குமேல் இலாபம் கிடைக்கும் பக்ஷமானால் தமக்கு
இலாபத்தில் பங்கு வேண்டுமென்னும் பாத்தியத்தைக் வைத்துக் கொள்ள
வேண்டும்.

கைப்பொருள் நெருக்கமுறும் வேளைகளில் கம்பனியார் தம் சொத்து,
யந்திர சாதனங்கள் இவற்றின் ஈட்டின் பேரில் டிபென்சர் கடன் குடிகளி
டத்தில் வாங்கவோ, அல்லது கவர்ன்மெண்டார் தாமே கடன் உதவவோ,
வேண்டும். குறித்த கெடுவுக்குள் யோக்கியமாய் வேலைநடத்தும்பக்ஷத்
தில், கம்பனியார் பெறும்நிலங்கட்குக்கிரயம்கேட்கக்கூடாது. கம்பனியார்
க்குக்குறைந்தபக்ஷம் இவ்வளவு இலாபம்சேருகிறவரையில் சர்க்கார் மகிமை
யாவது அபராதமாவது விதிக்கிறதில்லை என் நிபந்தனை வேண்டும்.

கம்பெனியார் உற்பத்தி செய்யும் இரும்பில் இவ்வளவு இரும்பு இன்ன
விலைக்குத் தவறாமல் சர்க்கார் கிரயத்துக்கு எடுக்கிறது என ஒப்பந்தம்
வேண்டும், இங்லண்டில் கடைவிலை, கப்பல்கூலி, இறக்கும் கூலி, பண்டம்
இடத்துக்கு எடுகூலி, இன்ஷூரன்ஸ் எக்ஸ்சேஞ்ச்செலவு இவற்றைச்
சேர்த்து கணக்குப்பார்த்து, கம்பனியாரிடத்தில் இரும்பு வாங்குவதில்
அக்கணக்குப்படி இலாபம் சேருகிறதா எனத்தெரிந்து அதற்குத் தக்கபடி
விலை கொடுக்கச் சம்மதிக்கவேண்டும். அடிக்கடிச் சித்தம் மாறாமல் இருக்
கும் பொருட்டு வர்த்தகக் கைத்தொழில் இலாகா ஒன்று அதற்கென்று
வேறேயாய் கவர்ன்மெண்டில் ஏற்படவேண்டும், இப்படிப்பட்ட விவகா
ரம் பாரி வேலைகளுக்குத்தான் நடத்தப்படவேண்டும். இடமாய் இரும்பு
மண், மலிவாய்விறகு, மலிவாய்ச்சுண்ணாம்பு காரங்கள், போக்குவரவுச்
சுளுவு, விலைப்படும் இடம் அருகாமையிலிருக்கும் சௌகரியம், இப்பேர்ப்
பட்ட சன்னதிகளுக்கு அநுகூலமான இடங்களை கவர்ன்மெண்டாருடைய
அநுபோகசாலி உத்தியோகஸ்தர் நியமிக்க, அவ்விடங்களைவிட்டு வேறு
இடங்களில் இந்தவேலை நடக்கலாகாது. ஒதுப்புறமான இடங்களில் நெருங்
கிய காடுகளுக்குச் சமீபத்தில் கட்டைக்கரியாலேயே நடத்தக்கூடிய சொற்ப

வேலைக் கிரமங்களுக்குப் பிரத்தியேகமான விவகாரங்கள் நடக்கவேண்டும். இக்கீழ்த்தரக் குத்தகை பிடிப்பார்க்கு, கவர்ன்மெண்டார் தம் வசத்தில் மீத்துவைத்து இருக்கிற காடுகளில் எம்மட்டுமாவது கொடுத்து, அதனில் எவ்வளவு காடு ஒரு வருஷத்தில் அழிபடுகிறதோ அதற்குப் பதினன்கு மடங்கு விஸ்தீரணத்துக்குச் செடிவைத்துக் கொடுக்கும் படியாத்தியம் சர்க்காருக்குக் கிடைக்க நிபந்தனை செய்து கொள்ளலாம், இது சரிப்படாவிடின், காட்டு இலாகாக் காரரே கட்டைவிறகு நயமாய்ப்போட்டுக்கொடுக்க ஏற்றுக்கொள்ளலாம். இரும்புவேலை சரியாய் நடந்தால்தான் மற்றத் தொழில்களும் செழிப்பாய் நடக்குமானபடியால் இப்படிப்பட்ட பல வழிகளில் இரும்பு வேலை நடந்துபெருக கவர்ன்மெண்டார் உபகரிக்கலாம். நிலம், சுரங்கம், காடு இவைகள் கவர்ன்மெண்டார் ஆதீனம் கவர்ன்மெண்டாரைப்போல் முதல் போடக்கூடியவரில்லை, வேலைசாமர்த்தியமாய் நடத்தக்கூடியவரில்லை, வேலை முடிந்த சாமானை வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ள வழிகள் பெற்றார் இல்லை. கடற் சுங்கப்பேச்சையே யெடுக்க வேண்டாம். அளவற்ற கனிப்பொருள் கடவுளாற் கிடைத்திருக்கிறது, அதனைக்கிரயம் கொடுத்துவாங்கி தம் காரியங்களில் அமைத்துக்கொள்ள நாட்டினரிதயத்தில் வேண்டிய அக்கறையுமிருக்கிறது.

இந்தியாவில் விசேஷத் தேவையாயிருப்ப தெல்லாங்கூடி ஒழுங்குபட்ட புத்தித்திறமையும், ஒழுங்கான நடவடிக்கையும்தான். இவை இரண்டும் கவர்ன்மெண்டார்க்குக் கிடைக்கும், ஆகையால் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்திற் முதலில் சகாயஞ்செய்யவேண்டும், குடிகள் எத்தனமே அங்கங்கு ஆகக்கூடியதைக் கவர்ன்மெண்டார் ஆதரித்துப் பார்த்துப்போகவேண்டும். இந்தவேலைகளை நடத்துவதில் முதல் முதலிற் கொஞ்சகாலம் வரையில் நேரிடும் ஆபத்துகளால் வேலைமடங்காது உத்தரவாதம் கவர்ன்மெண்டாரால் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் வேண்டிய முதல் குடிகளிடத்திலேயே பெயரும். காப்டின் டவுன்ஷெண்ட் சொற்போலே, குடிகள் சொந்தமாய் ஏற்பட்டு வேலைநடத்திவருவதற்கு விரோதம் ஆகாதவிடங்களில் இராஜாங்கம் நடத்துவார் வேண்டிய புதியமுயற்சியைத் தாமேசெய்கிறதனால், தமக்கே இலாபம் இருக்கிறசங்கதி இருக்கட்டும், அவ்வளவு அக்கறைப்பட்டுக் கவர்ன்மெண்டார் வேலைசெய்வது குடிகளிடத்தில் அன்புபெற்ற கவர்ன்மெண்டார் கடமையுமாம். இராஜாங்கச் சகாயம் இராஜாங்க விசாரணை இவ்விரண்டும் இல்லாவிட்டால் இந்தியாவில் எந்தவேலையும் நடக்கமாட்டாது, எந்தப் புதுத்தொழிலும் தலையெடுக்காது. இவ்விரண்டும் இனமாய் முதல் முதலிற் கிடைத்தால், நாளாவட்டத்திற் செலவாய்ப்போன பொருள் திரும்பியும் கிடைத்துவிடுவதுடன், இச்சீமையின் பொருளளம் விசேஷமாய் விர்த்திப்படும்.



## காதம்பரி.

(ஆறும் அத்தியாயத் தொடர்ச்சி.)

திடீரென்று நேர்ந்த எதிர்செய்ய வகைபற்ற உயிர்க்கேடான அப்பெருந்துக்கத்தைப் பார்த்து என் தந்தை இரட்டித்த நடுக்கமுடையராய் மரணபயத்தாற் சுழலும் சஞ்சல தாரகங்களுடன் துக்கத்தாற் சோர்வுற்றுக் கண்ணீர்பெருகவிடும் கண்களைத் திசைகளிலிங்குமங்கும் செலுத்துபவராய் உலர்ந்த அண்ணத்தராய்த் தன்னைக்காப்பாற்றவல்லமையிலராய்க் கலக்கமுற்றதா லிடுகுவிழுந்து பலனற்ற இறக்கைகளா லென்னைமறைத்து அக்காலத்திற்குரிய உபாயத்தைத்தேடி ஸ்னேகபரவசராய் என்னை இரக்ஷிப்பதிலேயே கவலையுடையவராய் இன்னது செய்வதென்று தோன்றாதவராய் மார்பிலென்னை யணைத்துநின்றனர். அக்கொடியனோ கிளைக்குக்கிளை தாவிப் பொந்தின்வாயில் வந்து கிழுஞ்சென்ற கரும்பாம்பினுடல்போற் பயங்கரமாயும் பலவிதக்காட்டுப் பன்றிகளி னுணீர் நாற்றம்பொருந்தியதாயுமுள்ள அங்கையுடையதாய் வில்லினுணேற்றுவதிலாய வடுப்பெற்ற மணிக்கட்டுடையதாய் யமதண்டம்போன்ற இடது புயத்தைநீட்டிப் பிதாவைப்பன்முறை மூக்கிலறைந்து கதறக்கதற வெளியிலிழுத்து உயிர் நீங்கச்செய்தனன். அற்ப ஜந்துவாதலாலும் பயத்தினுற் சுருங்கிய சரீரமுடையதாதலாலும் ஆயுசு பாக்கியிருந்தமையாலும் பிதாவின் சிறகுகளின் நடுவடைந்திருந்த என்னை அவன் பார்க்கவில்லை. தளர்ந்த கழுத்துடைய மரித்தபிதாவைத் தலைகீழாய்ப் பூமியிலெறிந்தான். அவர்காலிடுக்கில்வைத்த கழுத்துடன் நன்றாய் மடியிலொட்டிக்கொண்டிருந்த யானும் அவருடன் கூடவேவிழுந்தேன். புண்ணியம் பாக்கியிருந்தமையாற் காற்றினுல் ஒருங்குசேர்ந்த பெருஞ்சிறகுகளின்மேல் விழுந்தவனாய் என்னைக்கண்டேன். அதனாற்றான் என் அங்கங்கள் சிதறவில்லை. அப்பாதக னம்மரத்தினுச்சியினின் றிறங்குவதற்குள்ளாக யான் இலைவர்ணத்தனாதலின் செம்மையாயறியப்படாத உருவுடையனாய் உயிரைவிடத்தகுந்தகாலத்திலும் கொடியன்போற் பிதாவைவிட்டுவிட்டுக் குழந்தையாதலின் மற்றொரு வயதிலேற்படத்தக்க ஸ்னேகரஸத்தை யறியாளுய் உடன்பிறப்பான பயத்தினுல் மாத்திரமே வசப்படுத்தப்பட்டவனாய்ச் சிறிதுற்ற சிறகுகளாற்றேர்ச்சியடைந்து இங்குமங்குந் தவழ்ந்து அந்தகன்வாயினின்று மீண்டவனாய் என்னை நினைந்து சமீபத்தில் வேடஸ்திரீ காதணிக்குபயோகிக்குந் தளிர்களுடையதாய்ப் பலராமர் உடைபோற்கரிய வருணத்தினுல் திருமாலின் தேககாந்தியைப் பரிகசிப்பது போன்றதாய் நிர்மலமான யமுனையின் நீர்ப்பிரிவுகள்போன்ற இலைகளுடையதாய்க் காட்டுயானைகளின் மதநீரால் நனைந்ததுபோன்ற கிஸலயங்களுடையதாய் விந்தியவனபூமியின் கூந்தலெனும்படி யழகுற்றதாய்ப் பல

ழிரவாக்கும் பலகைகளுடைய ஒரு பெருந்தமாலதருவின் ஸுஷிரபிரணம் பிரவேசியாத அகன்றவழியை மற்றொருபிதாவின் மடியைப்போலு மடைந்தேன்.

இதற்குளவ்வேடன் மரத்தினின்றிறங்கிப் பூமியிற் சிதறிக்கிடந்த கிளிக்குஞ்சுகளைச் சேர்த்தெடுத்துக்கொடிகளாலாய கயிறுகளாற்கட்டி இலைகளாற் றைத்த கூடையிற்போட்டுக்கொண்டு வேகமான நடையுடன் ஸேநாபதி சென்றவழியை நோக்கி அத்திசையிற் சென்றனன். உயிராசை மிகுந்தவனாய் ஆதலபித்ருமரணசோகத்தாலுலர்ந்த இருதயமுடையனாய் வெகு உயரத்தினின்று விழுந்ததனாற் சோர்வுற்ற சரீரமுடைய என்னை நடுக்கத்தினாலேற்பட்டு ஸர்வாங்கங்களையும் தபிக்கச்செய்யும் கொடியதாகம் பீடிக்கத் தொடங்கியது. இதற்குள் அப்பாவி வெகுதூரம் சென்றிருப்பானென்று சிறிது கழுத்தை நிமிர்த்திப் பயத்தினாற் கலங்கிய கண்களாற் றிசைகள்தோறும் பார்த்துப் புல்லசைந்தாலும் அவனே திரும்பி வந்ததாய் அடிக்கடி அப்பாவியையே நினைத்து அத் தமாலமரத்தி னடியினின்று புறப்பட்டுச் சலத்திற்குச் சமீபஞ் செல்ல யத்தனித்தேன்.

---

[illegible]ராம் அத்தியாயம்.

## தவப் பெருமை.

சிறகுமுளைக்காமையால் திறனற்ற கால்களுடன் சஞ்சரிப்பதாய் அடிக்கடி முகப்பக்கமாய் விழுவதாய்ப் பலமுகமாய்த்தடுக்கிவிழும் சரீரத்தை ஒருவிலாவினால் தாங்கி நிறுத்துவதாய்ப் பூமியிற் செல்வதிலவாவுடன் பழக்கமின்மையாலொரு காலினாலேயே யடிவைத்துக்கொண்டு நிமிர்த்திய முகத்துடன் இடைவிடாது திணரித்திணரி மூச்சு விட்டுக்கொண்டு புழுதியால் மங்கலடைந்து நகர்ந்துவரும் என் மனதிற் றோற்றியது: 'உலகில் எவ்விதமான கஷ்டதசையிலும் பிராணிகளின் செயல் உயிராசையின்மீது வெறுப்புறவதில்லை. இப்புவியிற் சமஸ்தமான ஜந்துக்களுக்கும் உயிரைவிட விரும்பத்தக்கது வேறில்லை. நற்பெயர்வாய்ந்த தந்தை இவ்விதமிறந்திருக்கக் குறைவற்ற புலன்களுடன் யானின்னும் உயிர்வைத்துக் கொண்டிருக்கின்றேனே. கருணையிலனாய்க் கொடியனாய் நன்றியறியாத என்னை நிந்திக்கவேண்டும். பிதுர்மரணசோகத்தையும் நிர்த்தயனாய்ப் பொறுத்துக்கொண்டு ஜீவிக்கின்றேனே. அந்தோ, உபகாரத்தையும் எண்ணினேனில்லை. என்னிருதயம் தீச்செயலுடையது. என் தாய் லோகாந்தரமடைந்ததும் தீராத் துயரையும் தன்னுள் அடக்கி முதிர்ந்தவயதினராயினும் பிறந்தவன்றுமுதற் பலபல உபாயங்களால் என்னை வளர்ப்பதனாலாய பெருங் கிலேசத்தையும் அன்பின் பெருக்கினால் மதியாது தந்தை பரிபாலித்தனரே. அவை



யாவையு மொரே யடியில் மறந்தேனே. இவ்வுயிர் கடினமானது. உபகாரியான தந்தை எங்கேயோ செல்கின்றாரே. யான் இன்னும் பின்றொடரவில்லையே. உயிராசை யாரைத்தான் கடிவாளம் போட்டிழுப்பதில்லை? இத்தகைய துரவஸ்தையிலிருக்கையிலும் தாகம் என்னைப் பீடிக்கின்றதே. பிதுர்மரணதுக்கத்தை அலக்ஷ்யம் செய்த என் கொடிய தன்மையே தண்ணீர் குடிப்பதில் விருப்பாய் மாறி வந்ததோ வென்று நினைக்கின்றேன். ஓடைக் கரையோ இன்னும் வெகுதூர மென்று தெரிய வருகின்றது. சலதேவதைகளின் தண்டையொலியோ என்னும்படி கலஹம்ஸங்களின் கூச்சல் இதோ தூரத்திற் கேட்கின்றது. சாரஸங்களின் கூச்சல் பட்டதும் படாததுமாய் ஒலிக்கின்றது. இதோ தாமரைத்தாதுவின் வாசனை அதிதூரத்தினின்று திசைகள் தோறும் பரவுதலாற் குறைந்து வீசுகின்றது. பகலும் சகிக்கமுடியாத நிலைமையை யடைந்தது. ஆகாயத்தின் நடுவடைந்த வாதித்தன் கரங்களாற் பிரகாசிக்கும் வெயிலை நெருப்புப்பொறிக்குவியலைப்போலும் சொரிகின்றான். வெயிற்பட்டுச் சூடேறிய பொடிமணற்களாற் செல்ல முடியாத பூமியோ தாகத்தை மிகுதியாய் உண்டாக்குகின்றது. கொடிய தாகத்தினாற் சோர்ந்த என் அங்கங்கள் சிறிதும் நடக்கச் சக்தியற்றனவாயின. என்மீதே யான் வல்லமையற்றவனாயினேன். மனம் தபிக்கின்றது. கண்களிருளடைகின்றன. நான் இச்சியாவிடினும் கொடிய விதி இப்பொழுதே எனக்கு மரணத்தைத் தரலாகாதா?'' இவ்வாறெல்லாம் யான் சிந்தித்து வருங்கால்:—

அவ்வோடையின் சமீபத்திலுள்ள தபோவனத்தில் **ஜாபாலி** என்னும் அருந்தவ முனிவர் வசித்தார். **ஹாரீதன்** என்ற அம்முனிவர் குமாரன் சனத்குமாரன்போற் சமஸ்தவித்தைகளால் நிர்மலமான மனதுடையராய், சமவயதான மற்றும்சில ருஷிகுமாரர்களால் தொடரப்பெற்றவராய், அதே வழியாய் இரண்டாவதான சூர்ய பகவான்போலும் மிகுந்த தேஜஸ்ஸுடைமையாற் கண்ணைக்கூசுவிக்கு முருவுடைய அவயவங்களாற் சூரியமண்டலத்தினின்று குதித்தவர்போலும் மின்னல்களினின்று குதித்தவர்போலும் தோன்றுபவராய், உருக்கிய பொன் நீராற்போலும் பூசப்பட்ட தேகமுடையாராய், சிறிது சிவந்தும் சுத்தமாயும் பிரகாசிக்கும் தேககாந்தியால் இளவெயிலுடன் கூடிய பகலையும் காட்டுத்தீயுடன் கூடிய வனத்தையும் காண்பிப்பவராய், காய்ச்சிய உலோகம்போற் சிவந்ததாயும் பல தீர்த்தங்களில் நீராடிப் பாவனமாயும் தோளின்மீது வேயப்பட்டுமுள்ள நேராய் நிற்கும் ஜடையுடையவராதலின், காண்டவவனத்தைத் தகிக்க விரும்பிக் கபடமாய்ப் பிரமசாரிவேடம் பூண்ட அக்கினிபகவான் போன்றவராய், தபோவனதேவதையின் தண்டையையொத்ததாய் வேதசாசனங்களின் சக்கிரம் போன்றதாய் வலது காதிற்றொங்கும் படிக ஜபமாலையாற் சோபையுற்றவராய், சகல விஷயானுபவங்

களினின்று விலகுதனிமித்தம்† திரிஸத்தியத்தால் நெற்றியில்‡ பஸ்மத்ரிபுண்ட்ரகத்தால் அலங்கரிக்கப்பட்டவராய், ஆகாயத்திற்செல்ல அண்ணாந்து பார்க்கும் கொக்கைப்போன்றதாய்ச் சொர்க்கத்தின் வழியைக் காண்பிப்பது போன்றதாய் என்றும் நிமிர்ந்த கழுத்துடையதாயுள்ள படிகக்கமண்டலுவை அங்கையிற் பிடித்தவராய், கறுத்தும் வெளுத்துமுள்ள காந்தியுடையதாய் தோள்பட்டையினின்று தொங்கும் மான்தோலால் தபசிலாசையாலுட்கொள்ளப்பட்டு மறுபடி வெளிப்படும் தூமராஜியாற் போலும் சூழப்பட்ட சரீரமுடையவராய், மிகவும் மெலிந்திருத்தலால் இளந்தாமரை நூற்களால் செய்யப்பட்டது போன்றதாய்க் காற்றிலாடுவதாய் மாமிசமின்மையின் பிரிந்து வெளித்தோன்றிய விலாவெலும்புகளைக் கணக்கிடுவது போல்வதாய் இடது தோளின்மீது வேயப்பட்டுள்ள பூணூலாற் பிரகாசிப்பவராய், தேவதார்ச்சனைக்கு எடுத்த வனலதா புஷ்பங்கள் நிறைந்த குடலையை நுனியில் வகிக்கும் ஆஷாடதண்டத்தை வலது கையிற் கொண்டவராய், கொம்பு நுனியால் கல்லி எடுத்த ஸ்நாநோபயோகமான மண்ணைவகிப்பதாயும் பழக்கமுற்றதாயும் நீவாரதான்யங்களாற் போஷிக்கப் பெற்றதாயும் நாணற்பூக்கொடிகளாற் கவரப்பட்ட சஞ்சலமான கண்களுடையதாயுமுள்ள தபோவனமானினாற் றொடரப்பெற்றவராய், விருக்ஷம்போல் அழகிய மரப்பட்டையாற் சுற்றிய சரீரமுடையவராய், § கிரிபோல் மேகலையுடையவராய் இராகுபோல் பன்முறை ‖ ஸோமருசி பார்த்தவராய், தாமரைக்கூட்டம் போற் சூர்யகிரணங்களை யுட்கொள்பவராய், நதிக்கரை மரம்போல் எப்பொழுதும் நீரால் அலம்பப்பட்டு நிர்மலமான ¶ சடையுடையராய், யானைக் குட்டிபோல் அலர்ந்த ஆம்பற்றண்டுத் துண்டின் வெண்மையான ** தந்தமுடையராய். அசுவத்தாமன்போல் †† கிருபாநுகதராய், நக்ஷத்திரகணம் போல் ‡‡ சித்ரமிருகக்ருத்திகாசிலேஷோபசோபிதராய், கோடைப்பகல் போல் §§ பகுதோஷக் குறைவுற்றவராய், மழைகாலம்போல் அடங்கிய ‖‖ ரஜஸின் வியாபார முடையராய், வருணன் போல் ¶¶ ஜலவாசம் செய்பவராய், ஸ்ரீவிஷ்ணுபோல் *** நரகபயத்தை நீக்கினவராய், சந்தியாரம்பம்போற் சிவந்த ††† தாரகங்களுடையராய், காலை வேளைபோற் இன

† மனதினாலும் வாக்கினாலும் சரீரத்தாலும் பாபம்செய்வதில்லை என்று சத்தியம் செய்தல், ‡ மூன்றுகோடாய் விபூதியிடல். § தாழ்வரை, அரைஞாண் ‖ சந்திரன், ஸோமக்கொடி, ¶ விழுது, சடை, ** பல், யானைத் தந்தம், †† கிருபாசார்யனுடன் கூடியவராய் ‡‡ சித்திரை, மிருகசீர்ஷம், கார்த்திகை, ஆயில்யம், இவற்றால் அழகுற்றவராய், பலவகை மானின் தோலாலலங்கிருதராய்; §§ பல இரவுகள், பல குற்றங்கள் ‖‖ தூளி, ரஜோகுணம் ¶¶ ஜலத்தில் வசித்தல், ஜலவாச மென்னும் விரதம். *** நரகலோகம், நரகாசுரன் ††† கண்பொம்மைகள், நக்ஷத்திரங்கள்.



வெயிற் சிவப்புற்றவராய், இரவியினிரதம்போற் கெட்டி செய்யப்பட்ட* அக்ஷசக்கிரமுடையவராய், சிறந்த வரசன்போல் † மந்திரங்களைச் சாதிப்பதால் ‡ விக்கிரகத்தைக் குறைத்தவராய், சமுத்திரம் போற் குடிலமான சங்கச்சுழியின் மங்களவடையாள முடையராய், பகீரதன் போற் பன்முறை § கங்காவதாரத்தைக் கண்டவராய்; வண்டு போற் பன்முறை புஷ்கரவனவாசங்களையனுபவித்தவராய்; வனத்திற் சஞ்சரிப்பவராயினும் ‖ மகாலயப்பிரவேச முடையராய், ¶ கட்டுப்படாதவராயினும் மோக்ஷார்த்தியாய் ஸாமத்தையே உபயோகிப்பவராயினும் என்றும் ** தண்டத்தைக் கொண்டவராய், நித்திரையுடையராயினும் †† விழித்தவராய், இரண்டு கண்களுடையராயினும் ‡‡ வாமலோசன ரஹிதராய், தாமரை யோடைக்கு ஸ்நானம் செய்ய வந்தனர்.

பெரும்பாலும் நல்லோர் மனம் தயையால் என்றும் நனைந்ததாயும் காரணமிலாவன்பு மிகுந்ததாயுமுளது. அவர் இத்திசையிலிருந்த என்னைப்பார்த்து இரக்கங்கொண்டவராய்ச் சமீபத்தில் நின்ற மற்றொரு முனிகுமாரனிடம் சொல்லலாயினார்: "இதோ ஒரு கிளிக்குஞ்சு சிறகுறு விலாக்களுடன் இம்மரத்தினுச்சியிலிருந்து விழுந்திருக்கின்றது. கழுகின் வாயினின்று நழுவி விழுந்திருத்தல்வேண்டும். வெகு உயரத்தினின்று விழுந்தமையாற் குற்றுயிராய் மூடிய கண்களுடன் பன்முறை முகத்தால் விழுகின்றது. அடிக்கடி பெருமூச்சு விடுகின்றது. மூக்கை யடிக்கடி பிளக்கின்றது. தலையைத் தூக்கவும் சக்தியில்லை. ஆதலின் இதன் பிராணன் இருப்பதற்குட் சென்று எடுத்து ஜலக்கரையில் இறக்குவாய்" என்று சொல்லி என்னை ஓடைக்கரைக்கு அவனால் எடுத்துப்போயினார். சலத்தைக்கிட்டியதும் தண்டகமண்டலுக்களை ஒருபக்கத்தில் வைத்துவிட்டுச் சக்தியற்றவென்னைத் தானே எடுத்துப்போய் விரல்களால் வாயைத் திறந்து சில நீர்த்துளிகளைக் குடிக்கச் செய்தனர். நீர்த்துளிகளால் என்னுடலை நனைத்துப்புதிதாய் உயிர் வரச்செய்து கரையினருகில் முளைத்த தாமரையினிலைகளின் ஜலத்தினாற் குளிர்ச்சியான நிழலில் வைத்து விதிப்படி ஸ்நானம் செய்தனர். ஸ்நானமானதும் பலப்ராணாயாமங்களாற் சுத்தராய் பவித்திரங்களான அகமர்ஷண மந்திரங்களைச் சபித்துப் புதிதாய்க்கொய்த செந்தாமரைப் புஷ்பங்களுடைய தாமரையிலைத்தொன்னையில் நிமிர்ந்தவண்ணம் சூரியனைக் குறித்து அர்க்கியம் கொடுத்துக் கரையிலேறி

* கண்ணின் சக்கிரவடிவு, த்ருவசக்கிரம், † மந்திரம், ஆலோசனை ‡ சண்டை, சரீரம் § கங்கையினிறக்கம், கங்கையின்படிகள், ‖ பெரிய மாளிகைகள், பெருலயம் (concentration of mind) ¶ ஸம்சார பாசத்தால் கட்டப்படாதவரெனல் தோற்றும் விரோதத்தை நீக்கும், ** தடி, தண்டோபாயம், †† ஜாக்கிரதையுடையவர் என்பது கருத்து ‡‡ இடது கண்ணில்லாதவர், ஸ்திரீயிலாதவர்.

னர். தோய்த்து வெளுத்த மரவுரியை யுடுத்திக்கொண்டு நிலவுடன் கூடிய
சந்திவெயிலைப்போலும் சைவிஞற் கோதிய நிர்மலமான ஜடையுடையராய்
அவர்தெள்ளிய ஓடைநீராற் கமண்டலுவை நிரப்பிக்கொண்டுபுதிதாய் முழ்கி
நனைந்த ஜடையுடைய முனிகுமாரவர்க்கத்தாற் தொடரப்பெற்றவராய் என்
னை எடுத்துக்கொண்டு தபோவனத்தைக்குறித்து மெதுவாய்ச் சென்றார்.

சிறிது தூரம் சென்ற பின்-திசைகடோறும் எப்போதும் நிறைந்த புஷ்
புபலங்களுடைய பனை, மஞ்சாடி, தமாலம், கூந்தற்பனை, வகுளம், ஆகிய
இவைகள் நிறைந்ததாயும் ஏலக்கொடிகள் படரப்பெற்ற தென்னஞ்சோலைக
ளுடையதாயும் லோத்திரம், வெற்றிலை, இலவங்கம் இவற்றினசையுந்தளிர்க
ளுடையதாயும் வண்டுக் கூட்டங்களின் ரீங்கார நிறைந்த ஒட்டு மாமரங்க
ளுடையதாயும் மதங்கொண்ட பல குயில்களின் கோலாகலங்களுடையதா
யும் மலர்ந்த தாழையின் தாதுக்குவியல்களாற் பிஞ்சாவன்னமாயும் பாக்கு
மரங்களிலூசலாடும் வனதேவதைகளுடன் கூடியதாயும் தூமகேதுவின்
வர்ஷம்போல் தர்மவிருத்தைக் காண்பிக்கும் காற்றினல் தூற்றப்படும்
மிகவெண்மையான புஷ்பசமூகங்களை இடைவிடாது உண்டாக்குவதாயு
மூள்ள தருக்கள்நெருங்கிய காடுகளாற் சூழப்பட்டதாய், பயமில்லாது
சஞ்சரிக்கும் நூற்றுக்கணக்கான புள்ளிமான்களாற் சபளவர்ணமாயும்
மலர்ந்ததாமரையோடைகளாற் சிவந்ததாயும் மாரீச மாயைமானினுல் வே
றுடன் கடிக்கப்பட்டு மறுபடிமுளைத்த கொடிகளுடையதாயும் தாசரதியின்
வில்நுனியாற் கிழங்குக்காகக் கல்லப்பெற்ற பள்ளங்களாற் காடு மூரா
டானதாயும் உள்ள தண்டகாரணிய பூமியால் அழகுற்றபக்கங்களுடைய
தாய், சமித்து, குசம், குசுமம் மிருத்திகை இவைகளை எடுத்துவரும் அத்
தியயனம் சொல்லுஞ்சிடர்களாற் றொடரப்பெற்றுப் பலவிடங்களிலும் பிர
வேசிக்கும் முனிவர்களால் நிறைந்த சமீபப் பிரதேசமுடையதாய், குதூகல
முடைய மயில் கூட்டங்களாற் கேட்கப்படும் கலசங்களின் நீர்முகக்குந் தொ
னியுடையதாய், ஓயாத நெய்யாகுதியினுற் சந்தோஷமடையும் அக்கிகள்
சரீரத்துடன் முனிவர்களை அமரலோகம் அடைவிக்கவிரும்பி அதிகமாய்மே
ற்செல்லுந் தூமரேகைகளைச் சுவர்க்கத்திற்குச்செல்லும் வழியாகக்கட்டிய
படிக்கட்டுகளைப்போலும் காண்பிப்பதாய்ச் சமீபத்திலிருப்பனவாயும் முனி
வர்களின் சேர்க்கையாற் போலக் கலக்கமற்றனவாயும் அலைவரிசைகளிற்
பிரதிபிம்பிக்கும் சூரியபிம்ப வரிசைகளுடையனவாயும் தபசிகளைப் பார்க்க
வந்த சப்தருஷிகள் நீராடப்பெற்றனவாயும் நன்றாய்மலர்ந்த பல ஆம்பல்கள்
ருஷி ஜனங்களை உபாசிக்க இறங்கிய நட்சத்திரக் கூட்டம்போலு மிரவில்
வசிப்பனவாயுமுள்ள வாவிகளாற் சூழப்பெற்றதாய்க் காற்றினல் வளைந்
கிய நுனிகளுடன் வனலதைகளால் வணங்கப் பெற்றதுபோல்வதாய்,
ஓயாதுவிழும் புஷ்பங்களுடன் தருக்களாற் பூசிக்கப்பட்டதுபோல்வதாய்க்



கட்டியதளிர்களாகிய அஞ்சலிகளுடன் மரங்களா லுபாசிக்கப்படுவது
போல்வதாய், பர்ணசாலைகளின் முற்றங்களில் உலர்த்திக்காய்ந்த சாமாக
தானியங்களுடையதாய், உரத்த அத்தியயனஞ்செய்யும் பிரமசாரிக
ளுடையதாய், ஓயாது கேட்டுக்கற்ற வஷட்காரத்தைத் திருப்பித்திருப்பிச்
சொல்லுங் கிளிகளுடையதாய், பலசாரிகைப்புட்கள் கூச்சலிடும் பிரம்மணி
ய சப்தமுடையதாய், காட்டுக்கோழி அருந்தும் வைசுவதேவ பலிபிண்ட
முடையதாய், சமீபவாவியின் கலஹம்சக் குஞ்சு தின்னும் நீவார பலியுடைய
தாய், பெண்மானின் தளிரனைய நாவினல் நக்கப்பெற்ற முனி பாலர்களுடை
யதாய், ஓமத்திற்பாதி கொளுத்தப்பட்டு மடமடவென்று சப்திக்குஞ் சமி
த்து குசம் குசுமமுடையதாய், கல்லினலுடைத்த இளநீரால் நனைந்த சிலை
களையுடையதாய், புதிதாய் ஒடிந்த மரப்பட்டையின் ரசத்தாற் சிவந்த பூதல
முடையதாய், செஞ்சாந்தினு லெழுதிய சூரியமண்டலத்தில் வைத்த அலரிப்
புஷ்பங்களுடையதாய், இங்குமங்கும் விபூதிக்கோட்டினல் வரையப்பெற்ற
முனிஜன போஜன பூமியின் இரக்ஷையுடையதாய், பழக்கிய வானரங்கள்
கைகொடுத்து வெளியிலழைத்துப்போயும் மறுபடி பிரவேசிக்கச்செய்
தும் வரும் வயதுசென்ற அந்தகதபசிகளுடையதாய், யானைக்குட்டிக
ளாற் பாதிதின்று போடப்பெற்ற தாமரைத் துண்டங்களாற் சரஸ்வதியின்
கொடிக்கையினின்றும் நழுவிய சங்கவளைகளாற் போலும் விசித்திரமான
தாய், முனிவர்கட்காக மான் குட்டிகள் கொம்பின் நுனியாற் கல்லி யெடுக்
கும் பலவிதக் கிழங்குகளுடையதாய், சலநிறைந்ததும்புவாய்களாற் காட்டு
யானைகள் நிரப்பும் விருக்ஷப்பாத்திகளுள்ளதாய், ருஷிகுமாரர்களாற் பிடுங்
கப்படுங் காட்டுப்பன்றிகளின் கடைப்பற்களினிடையி லொட்டிய நீலோற்
பலக்கிழங்குகளுடையதாய், மயில்களின் இறக்கைக்காற்றினுற். மூண்டப்
படும் முனிவர் ஓமாக்கினியுடையதாய், ஆரம்பிக்கப்பட்ட நெய்யா குதியின்
அழகிய கர்தமுடையதாய், பாதி பக்குவமான ஹவிஸின் புண்ணிய வாசனை
யாற் பரிமளமாய், ஓயாத நெய்யின் ஆகுதி தாரையாற் சஞ்சாரஞ்செய்யும்
அக்கினின் சப்தமுடையதாய், உபசரிக்கப்படும் அதிதிவர்க்கமுடையதாய்,
பூசிக்கப்படும் பிதிரு தெய்வங்களுடையதாய், துதிக்கப்படும் அரிஹரப் பிரம்
மாதியுடையதாய், உபதேசிக்கப்படும் சிராத்த விதியுடையதாய், விளக்கப்
படும் எக்ஞவித்தை யுடையதாய், ஆலோசிக்கப்படும் தர்மசாஸ்திர முடையதா
ய்வாசிக்கப்படும் பல புஸ்தகங்களுடையதாய், விசாரிக்கப்படும் சகலசாஸ்த்தி
ரார்த்தங்களுடையதாய், கட்டப்படும் பன்னசாலையுடையதாய், மெழுகப்
படும் முற்றங்களுடையதாய், பெருக்கப்படும் குடிசையினுள் ளிடங்களுடை
யதாய், ஆரம்பிக்கப்படும் தியான முடையதாய், சாதிக்கப்படும் மந்திர
முடையதாய், பழகப்படும் யோக முடையதாய், கொடுக்கப்படும் வனதேவ
தா பலியுடையதாய், கட்டப்படும் முஞ்சி அரை ஞாணுடையதாய், தோய்க்
கப்படும் வற்கல முடையதாய், சேகரிக்கப்படும் சமித்துக்களுடையதாய்

விரிக்கப்படும் மான்றோலுடையதாய், எடுக்கப்படும் தானியங்களுடையதாய், உலர்த்தப்படும் தாமரைக் கொட்டைகளுடையதாய், கோக்கப்படும் உருத்திராக்ஷமாலைகளுடையதாய், வைக்கப்படும் பிரம்புத்தடிகளுடையதாய், உபசரிக்கப்படும் யதிகளுடையதாய், நிரப்பப்படும் கமண்டலமுடையதாய், கலிகாலங் காணாததாய், பொய் பழகாததாய், மன்மதன் சேர்விப்படாததாய், கமலாசனன் போலும் மூவுலகம் புகழ்வதாய், திருமால் போலும் நாஹரிவராக ரூபங்களைக் காண்பிப்பதாய், சாங்கியம் போலும் * கபிலாசிரிதமாய், மதுரையினுத்தியானம் போலும் † பலக்கொழுப்பினால் அடங்கிய ‡ தேனுகாதிகளுடையதாய், உதயனன்போலும் சந்தோஷமடைவித்த § வத்ஸகுலமுடையதாய், கிம்புருடராஜ்யம்போலும் முனிஜனங்களெடுத்த ஜலகலசங்களாலேற்படும் || த்ருமாபிஷேக முடையதாய், கோடைக்காலத்தின் முடிவுபோல் நெருங்கிய ஜலவீழ்ச்சி யுடையதாய், மழை நாள்போல் பெரிய வனத்தின் நடுவிற் சுகமாய்த் தூங்கும் ¶ ஹரிணயுடையதாய், அநுமான்போற் சிலைத்துண்டுகளின் அடியாற் பொடிசெய்யப்பட்ட ** அக்ஷாஸ்திக்கூட்டமுடையதாய், காண்டவ வனத்தையெரிக்க யத்தனஞ் செய்த அர்ச்சுனன் போலும் ஆரம்பித்த †† அக்நிகாரியமுடையதாய், ‡‡ சுராபிவிலேபனமுடையதாயினும் என்று முண்டாகும் அவிர்த்தூமகந்த முடையதாய் ¶ மாதங்ககுலத்தினால் வசிக்கப்பெற்றதாயினும் பவித்திரமாய், பாவும் தூமகேதுவுடையதாயினும் நிலையிலதாய், பரிபூரண ||| த்விஜபதி மண்டல முடையதாயினும் எக்காலுமுள்ள விருக்ஷங்களால் நெருங்கிய இருளுடையதாய், அதிக இரமணீயமாய் வேறான பிரமலோகம்போல் ஓர் ஆச்சிரமத்தைக் கண்டேன்.

அதன்கண் மாலின்யம் நடவடிக்கைகளிலல்லாது ஹவிர்த்தூமங்களிலும், முகச்சிவப்பு கோபங்களிலல்லாது கனிகளிடத்தும், கோணல் சுபாவங்களிலல்லாது குசநுனிகளிலும், சாஞ்சல்யம் மனங்களிலல்லாது வாழையிலைகளிலும், கண்ணி ¶¶ ஸிராகம பரஸ்திரீகளிடத்திலல்லாது குயில்களிடத்தும், கழுத்தைக்கட்டுதல் சுரதங்களிலில்லாது காமண்டலுக்களிலும், மேகலைக்கட்டு பிரணயகலஹங்களிலல்லாது விருதங்களிலும், ஸ்தனஸ்பர்சம் காமினிகளிடத்தல்லாது ஹோமதேனுக்களிடத்தும், பக்ஷபாதம் வித்யாவிவாதங்களிலல்லாதுசேவல்களிடத்தும், பிரமித்தல் சாஸ்த்ரார்த்தங்களிலல்லாது ப்ரதக்ஷிணங்களிலும், †வஸுப்புகழ்ச்சி ஆசையாலல்லாது திவ்ய கதைகளிலும், எண்ணுதல் சரீரத்திலல்லாது ருத்திராக்ஷ மாலைகளிலும், முனி ‡ பாலநாசம் மிருத்யுவாலல்லாது யஞ்ஞதீக்ஷைகளாலும், § ராமானுராகம் யௌவனத்தினாலல்லாது ராமாயணத்தினாலும், முகங்கோணுதல் தனகர்வத்தினாலல்லாது ஜரையினாலுமே ஏற்பட்டன. அங்கு மகாபாரதத்திற் || சகுனிவதமும் புராணத்தில் வாயுவின் செயலும் வயது முதிர்தலால் விப்ரர்பதநமும், உத்தியான சந்தனதருக்களில் ஜாட்டியமும் அக்கினியினிடத்தில் ¶ பூதியுடைமையும் மான்களிடத்துப் பாட்டுக்கேட்கும் விசாரமும் மயில்களிடத்து நிருத்தவாசையும் நாகங்களிடத்துப் ** போகமும் குரங்குகளிடம் †† ஸ்ரீபலவாசையும் மூலங்களிடத்து ‡‡ அதோகதியும் காணப்பட்டன.

* கபிலையென்னு மானுடையதாய், கபிலாசார்ய (ரென்னும் சாங்கியாசிரிய)ரை அண்டியதாய், † வலிமை, பலராமன், ‡ ஒரு விதப்பசு, தேனுகாசுரன் § உதயனனென்பான் உத்ஸ ராஜாக்களின் மந்திரி, வத்ஸ=வத்ஸராஜன், கன்று || விருக்ஷம், கருமனெனப் பெயர்பூண்ட கிம்புருஷர் தலைவன், ¶ சிங்கம், விஷ்ணுபகவான் ** அக்ஷகுமாரன, இந்திரியங்கள் அஸ்தி=எலும்பு, †† அக்நியின் காரியம் ஹோமாதி ‡‡ வாசனைப்பூச்சு, சுரபிமானின் சாணம் §§ புலையர், யானை ||| பிராமண சிரேஷ்டர், சந்திரன் ¶¶ ஆசை.



ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

ப. கி. கல்யாணராம சாஸ்திரி.

---

## புருஷவசீகரம்.

1. கற்பினுக் கழகு செய்யுங் கன்னிபாஞ் சாலி தன்னைச்
சொற்பயின் மொழியாள் சத்ய பாமையு நோக்கிச் சொல்வாள்
விற்பொரு புருவத் தாயுன் வேந்தரை வரையு நீயா
ளற்புத மியம்பி யானென் னையனை யாளச் செய்வாய்.

2. ஆடவ ருனைக்கொண் டார்க ளைவரே யெனினு முன்னைத்
தேடுமா றவர்க டம்மைச் செய்யுமுன் றிறந்தா னென்னே!
வாடிநா னிருப்ப மற்றை மாதரார் மனையை நாடி
யோடிச்சென் றலையு மென்ற னொருவனை யாள்கி லேனே!

3. என்றவ ளேழை தானு மேங்கலு மெழிற்பாஞ் சாலி
பின்றலின் மனத்தி னோடப் பேதையை நோக்கிச் சொல்லும்
நன்றென நாடி நாளும் நவிலும்பன் மாற்றந் தம்மை
யொன்றிய சிந்தை மேற்கொண் டுரைத்திடப் பணித்தி யேயோ?

† அஷ்டவசுக்கள், தனம் ‡ பால=வால=சிறுவன், தலைமயிர் § ராமனிடத்துப் பிரியம், ராமை (ஸ்திரீ) யினிடத்து ஆசை, || துர்யோதனன் மாமன், பறவைகள், ¶ சம்பத்து, சாம்பல் ** இன்பானுபவம், படம் †† சம்பத்தின்சுகம், விளாங்கனி. ‡‡ நாசமடைதல், வேரூன்றுதல்.

4. மணவினை முடித்தெம் மோடு மகிழ்வுற விளங்கு மந்தக்
கணவனைக் கண்முன் கண்ட கடவுளா மெனவுட் கொண்டுங்
குணமுறி னவரு முள்ளக் குறிப்புக்க ளனைத்துங் கூடுந்
தணந்தவர் நோக்க நாமுந் தாங்கிடா தழிவோ மென்றும்.

5. மகப்பெறு செல்வம் வாழ்வு மகிழ்வுறு போக மின்னுஞ்
சகப்பிர சித்தம் பின்னைச் சந்தனன் மலர்கள் காட்சி
புகக்கவர் முத்தி லோகம் புனைந்திடு மணிசண் மற்று
மகக்களிப் புடனின் றுள மனைத்துமே யவரா லென்றும்.

6. சுடச்சுடச் சுடரும் பொன்போற் சுகமுறுந் துன்பந் தன்னைப்
படப்பட வென்றுட் கொண்டு பட்சமாய் நாளு முன்ற
னுடற்கணி யணிந்து மற்று மூனமில் காதல் கொண்டும்
மடக்குணத் தாலு மாயன் மனமுவந் திடச்செய் வாயே.

7. காதல னாகவன் றன் கால்களைக் கழுவி நீயு
மாதன மளித்தும் பாத வருச்சனை செய்து மேத்தி
யாதர வோடு தூய மருளிப்பல் பணியுஞ் செய்தால்
நாதனுன் னன்பை நாடி நயமுடன் றழுவி நிற்கும்.

8. ஐயன தரவம் வாயி லணுகிடக் கேட்கி லன்னை
வொய்யென வெழுந்து நீயு முவகைகொண் டுனது கேள்வன்
கையினைப் பற்றி யன்னான் களிப்புற நோக்கிப் பின்னைத்
துய்யநல் லினிமை சான்ற சொன்மொழிந் தழைத்து வாராய்.

9. சேடியை நோக்கி யொன்றைச் செய்யெனக் கணவன் கூறி
லோடிநீ யதனை யப்போழ் தொருநொடி யினிற்செய் கிற்பாய்
நாடிமற் றவர்த மெண்ண நயப்படி நடக்கி னுன்னைக்
கூடிவாழ்ந் திருப்ப னந்தக் கோகுல நாத னம்மா.

10. மருமமன் றேனு நின்முன் மணமகன் மொழிந்த மாற்றங்
கருமமென் றுன்னி நீயுங் கரந்திடல் வேண்டு மற்றுன்
பெருமகன் றுய்க்கு மந்தப் பெருமைசார் மாத ருன்னைத்
தருமமல் லாத சொல்லித் தாழ்த்தினுந் தளரே லன்பில்.

11. கணவன தொக்கல் மற்றுங் கணக்கிலா நண்பர் தங்கட்
குணவுடை யனைத்து மீந்து முபசரித் தவரைப் போற்றி
மணந்தவன் முனியும் வஞ்ச மாந்தரைக் காணி னுள்ளந்
தணந்தகன் றிடுதல் வேண்டுந் தையலே கேட்டி சொல்லோ !

12 ஆடவர் தம்மை யஞ்சி யடங்கலு மழுக்கா றின்றி
மூடமார் மனவி கற்ப முழுமையு மழித்து மோனம்



நாடிநீ யுனது நாதர் நடுவணி லாத போழ்து
கூடிப்பே சிடுத லுன்றன் குமரன திடத்துங் கூடா.

13. உயர்குடிப் பிறந்த மாத ருறவையே தேடு நாளுந்
தயருறு குடியும் பொய்யுந் துன்பமாம் வெகுளி தானு
மயலவர் பொருளை வெளவும் மாசையு மதிக ஊணும்
பயின்றிடும் பாவை மார்தம் பழக்கமே பழியென் றஞ்சி

14. நடந்திட நாதன் றானும் நண்ணிவந் துனையே நாடுந்
தொடர்ந்திடும் புகழு முன்றன் றொல்பகை யனைத்து நீங்குந்
தடங்கண்மா தேவி நீயுந் தளிர்த்திடத் துயர மின்றித்
திடங்கொள வாழ்வ தென்றுந் திண்ணமென் றறிந்தி டாயோ?

15. என்றெடுத் தியம்ப மாது மெழுந்தவ ளடியைப் போற்றி
யுன்றன தருள்பெற் றேனு முய்யுமா றுரைத்த மாற்ற
மென்றுமிவ் வுலகிற் றோன்று மேந்திழை பலரு மோர்ந்து
நன்றென நாடத் தங்கள் நாதரோ டினிது வாழ்வார்.

பிரணதார்த்திஹர சிவன். பி. ஏ.

---

# பஞ்சபூதவிசாரணை

ஆணவாதிதளைகளாற் கட்டுண்டுவருந்தும் உயிர்கள் வீடுபெறும்பொருட்டு இறைவனாலளிக்கப்பட்ட உலகம் பஞ்சபூதங்களாலேயே யாக்கப்பட்டதென்பது சமயசாத்திரங்களும் லௌகிகசாத்திரங்களும் ஒப்பச்சித்தாந்திக்கும் விஷயம். இவ்வுலகத்திலே, அவ்விறைவனாலேயே கொடுக்கப்பட்ட தனுகரணங்களினுதவியால் ஆன்மாக்கள் தம் கருமபலனை யனுபவித்து ஞானத்தையும் கொஞ்சங்கொஞ்சமாய் யடைந்துகொண்டிருக்கும். அந்தஞானந்தானும் பலதிறப்பட்டுப் பலவகையானடையப் படுவதாயிருக்கும். அவற்றுளொன்று நம்மைச்சுற்றிலுமுள்ள பொருள்களைப்பற்றிய விசாரணை. 'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்ற பழமொழிக்கேற்ப, நாம் நித்தியமூடாடிவரும் பொருள்களைச் சற்றுங்கவனியாது, அவற்றினால் தக்கவிசாரணை செய்வோரெய்தும் அரும்பயன்களை யிழந்துவிடுகிறோம். உதாரணமாக, பஞ்சபூதங்களையே ஒவ்வொன்றா யெடுத்துக்கொண்டு அவைகாட்டுமுயரியபொருள் இவையவென ஒருபெரியவர் "பக்திசாகரம்" என்னுந்தமது கிரந்தத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறார்.

I. **பூமி**:—இது பலவகையாயிருக்கும்.

(1) **மலை** :—ஜனங்கள் அதன்மேற் போகின்றார்கள். மேலேயிருந்து கீழேவருகின்றார்கள். உச்சிவரை ஏறுகின்றார்கள். அதனுடைய சரிவு வழியாய்க் கீழேயிறங்குகின்றார்கள். மழை அருவியருவியாய் அதன்மேற் பெய்கின்றது, காற்று கொடூரமாய் அடிக்கின்றது, இவைகளெல்லாம் மலையைச்சிறிதும் பாதிப்பனவல்ல. அதற்கு ஓட்டமுமில்லை ஆட்டமுமில்லை. எப்பொழுதும் உறுதியாய் அசைவில்லாததாயிருக்கிறது.

இந்தவிஷயம் மனதிற் சஞ்சலத்திற்குக் காரணமாயிருக்கிற பேராசை பெருங்கோபங்களை விட்டுவிடவேண்டு மென்றும் பொறுமையும் சாந்தமும் மனனிற்றவும் உண்டாகப் பழகல்வேண்டுமென்றுங் கற்பிக்கின்றது.

(2) **மரம்** :—ஜனங்கள்வந்து அதன்நிழலில் உட்காருகிறார்கள். அதனுடையகிளைகளைவெட்டித் தள்ளுகிறார்கள். அதிலிருந்து பழங்களையும் புஷ்பங்களையும் பறித்துக்கொள்ளுகிறார்கள். இவைகளி லெதுவாவது எக்காலத்திலாவது மரத்துக்குக்கோபத்தை யுண்டுபண்ணுகிறதில்லை.

இந்தவிஷயம், பிறருக்கு நன்மைசெய்வதற்கே நம்வாழ்நாளைத் தத்தம் பண்ணல்வேண்டுமென்றும், அப்படிச்செய்யுங்காலத்து நாம் துன்பப்படவரினும் அத்துன்பங்களைச் சகித்துக்கொண்டு எடுத்ததை முடித்தல் வேண்டுமென்றுங் கற்பிக்கின்றது.

(3) **நிலம்** : ஜனங்கள் அதனை அடிவரை வெட்டுகிறார்கள். அதில் ஆழமான கிணறுகளெடுக்கிறார்கள். அதனுடைய தளத்தில் மிதிக்கிறார்கள். இவையன்றி யின்னும் அநேகவிதமான அக்கிரமங்களும் செய்கிறார்கள். அஃது எவ்வளவு பொறுமையாய் இவற்றை யெல்லாஞ் சகித்துக் கொள்ளுகிறது!

உலகத்தையும் அதிற்செய்யும் முயற்சிகளையும் நீக்கிப் பரம்பொருளை வழிபடுதற்கண் மனத்தைத் திருப்பியவனுடைய ஒழுக்கமும் இப்படித்தானிருக்கும். சுத்த புருஷர்கள் பொறுமைக்கும் ஆத்மதியாகத்திற்கும் நிதரிசனமாயிருக்கிறார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

II. **காற்று** :—அதற்கு நற்கந்த மென்றும் துர்க்கந்த மென்றும் பேதம் கிடையாது. தற்சமயத்திற்கு இரண்டையும் முனங்காமல் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் தன்னுடைய தனிச்சுபாவத்தை, தான் இவ்விரண்டிலிருந்தும் வேறாயிருக்குந் தன்மையை யிழந்து விடுகிறதில்லை.

இதே விதமாக நல்லோர்கள், துன்மார்க்கர்கள் துஷ்டர்களிருக்கும் கூட்டங்களுட்பட்டு, கொஞ்சங்கூட முனங்காமல் அவர்கள் செய்யுந்துன்பங்களைச் சகித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் தங்கட்கு இயல்பாகவுள்ள சுத்தியையும் சித்த சமாதானத்தையும் ஒருவகையானும் இழந்துவிடுவதில்லை. ஆதலால், அநேக மருள்வலைகட்கு மத்தியில் இருந்தபோதிலும் நல்லோர்கள் அவ்வலைகளுட் சிக்குவதில்லை.



III. **ஆகாசம்**:—அதில் மழை பெய்யலாம், சூறுவளியடிக்கலாம், மின்மின்னலாம், பெருந்தீப்பற்றி யெரியலாம். ஆனால் அது துலாம்பரமாய் அழுக்குப் படியாமல் இருக்கிறது. பயங்கரமான சூறைக்காற்றுகளின் மத்தியிலும், சிவந்து கொழுந்து விட்டெரியும் அக்கினிகளின் மத்தியிலும், மிகவிரைந்தோடு நீரோட்டங்களின் மத்தியிலும் தங்கியும் ஆகாசமானது அவைகளாற் பாதிக்கப்படாது அசைக்கப்படாது தங்குகின்றது. பருவங்களுக்கு மாறுபாடுவரினும் தான் மாறுபடுதலின்றி என்றும் ஒரு தன்மைத்தாய் நிலவுகின்றது.

இவ்விதமாக ஆகாசம், குணநேர்மையையும், உபேக்ஷையாயும் நிர்ப்பயமாயும் காலத்தைத் தள்ளுமாற்றையுங் கற்பிக்கிறது.

IV. **நீர்** :—அது நாம் தளர்ச்சியாயிருக்கும் பொழுது அத்தளர்ச்சியை நீக்குகிறது, உடம்பைச் சுத்தி செய்கிறது, தன்னிடத்துக்கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு அழுக்குச் சாமானையும் கறைபட்ட துணியையும் சுத்திகரிக்கிறது. தான் எப்பொருள்களில் தங்குகின்றதோ தனக்குச் சமீபமாக எப்பொருள்கள் கொண்டு வரப்படுகின்றனவோ, அப்பொருள்களுக் கேற்றபடி நானாபேத ரூபங்களையும் நானாபேத நிறங்களையும் கொண்டு அவைகளைச் சுத்திகரிக்கிறது.

இதனால், நாம் பிறரோடு கலக்கும்பொழுது அவர்களைச் சன்மார்க்கத்திற்குக் கொண்டுவரும் பொருட்டே கலத்தல் வேண்டுமென்று அறிகிறோம். பிறருக்கு நன்மை செய்யுங்காலத்து நம்முடைய காரியத்தின் பொருட்டுச் சுயநயம் பாராட்டியாவது இழிகுணமேலிட்டாவது செய்யாமற் பரோபகார சிந்தையோடு செய்தல் வேண்டுமென்றும் இதுவே கற்பிக்கின்றது.

V. **அக்கினி** :—அது ஸர்வ சுத்திகாரி. சகலவிதமான அசுத்தங்களையும் அபகரித்துக் கொள்ளுகிறது. எவ்விதமான இருளையும் நீக்கி எப்பொருளையும் விளக்கமாயும் ஆனந்தமாயும் தோன்றும்படி செய்யவல்லது.. சாதிசமயபேதங்களின்றி யாவருக்கும் நன்மை புரிகின்றது.

இவ்வாறே நாமும் பிறருக்குப் பிரயோஜனமாயிருத்தல் வேண்டுமென்றும், நற்குணமும் நல்லொழுக்கமுமுடையாருக்கெல்லாம் அடங்கி யொழுகுதல் வேண்டுமென்றும், இதனால் அறிகிறோம்.

[இனிப் பக்தி சாகரமுடையார் சந்திரனைப்பற்றியுமுடன் கூறுதலின் அதனையும் ஈண்டுத்தருகின்றோம். கமுகந்தோட்ட நியாயமாய் வேறு சிலவும் எடுத்த விஷயத்துளடக்கல் கூடுமாகலின் பஞ்சபூத விசாரணையுட் சந்திரவிசாரணையு மடங்குமாறுணர்க.]

VI. **சந்திரன்** :—சதா மாறுதல்களடைந்து கொண்டிருக்கிறது. சில வேளைகளில் ஒருநாள் இரண்டுநாளிற்கு அது காணப்படாமலிருக்கிறது. மறு

படியும் ரூபத்தில் மிகக்குறுகி ஓர் இளங்கிரணமாத்திரமாய்க் கண்ணில் தட்டுப்படுகிறது. பிற்பாடு நாளடைவில் வளர்ந்து தன்னுடைய பூரண சொரூபத்தை யடைகிறது. அப்பொழுது அதைப்பூரண சந்திரன் என்று சொல்வார்கள். ஆனால் இந்த மாறுதல்களெல்லாம் அதனுடைய பால் நிற வொளியைக் கொஞ்சங்கூடக் குறைப்பனவல்ல. அமாவாசையாயினும் அர்த்த சந்திரனாயினும் பூரணசந்திரனாயினும் அதன் கிரணங்களெல்லாம் அதே ஒளியைப் பரப்புகின்றன. விளக்கமும் பிரகாசமும் எப்போதும் ஒருபடியவாயே இருக்கின்றன.

இதனால் நாம் அறிவது : சரீரம் பெருக்கலாம் அல்லது சிறுக்கலாம், செழிப்படையலாம் அன்றித் தளர்வடையலாம். இத்துணையும் அடைவது சடந்தானே. ஆனால் ஆத்மாவோ நித்தியமாயும் மாறுதலடையாததாயும் இம்மாறுதல்களுக் கிடையில் அப்படியே யிருக்கிறது. பரமாத்மாவாகிய கடவுள் நித்தியராய் என்றும் அழிவில்லாதவரா யிருக்கிறார். அவரையே நாம் வழிபடல் வேண்டும். நம்முடைய மனத்தை அவர்பாற் செலுத்த வேண்டுமே யொழியக் கணந்தோறும்மாறும் உலகவிஷயங்களிற் செலுத்தப்படாது.

உமாபதி.

---

## வாசகபுஸ்தகங்கள் : ௬, ௭.

கனம்பொருந்திய ஸ்ரீ மார்ஸ்டன் துரையவர்களால் அச்சிடப்பட்டு வெளியாகும் மாணாக்கர்கட்குப் பெரிதும் பயன்படத்தக்க வாசகபுஸ்தகங்கள் பல. அவைதம்முள் நம்முடையபார்வைக்கு அனுப்பப்பட்டன ஆறும் வாசகபுஸ்தகமும் ஏழாம்வாசக புஸ்தகமுமேயாம். இவ்விருவாசக புஸ்தகங்களும் ம-ா-ா-ஸ்ரீ கனம்பொருந்திய ராவ்பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்., இயற்றியனவாம். இத்தமிழுலகம் நமது பிள்ளையவர்களையும் தமிழ்மொழியின்கண் அவர்களாற்றலையும்பற்றிப் பெரிதுமுணர்ந்திருக்கின்றதேயன்றி அவர்கட்குப் பலவிதத்தாலும் மிகுதியுங் கடமைப்பட்டுமிருக்கின்றதென்பது ஒருதலை. தமிழ்மொழியிற் புலமைசான்ற நமது தாமோதரம் பிள்ளையவர்கள் போன்றவித்துவச்சிரோமணிகள் பண்டிதர்களும் பாவலர்களும் பயிலத்தக்க வாற்றிலேயேபெரிதும் உழைத்து வந்தார்களே யன்றிக் கல்வி யறிவிற்றேரும் இளஞ்சிறார்கள் பயிலத்தக்க வாற்றில் இதுகாறு மொன்றுஞ் செய்தாரல்லர். ஆகவேயிப்போழ்து இவ்வாசக புஸ்தகங்கள் அன்னார் பெயரான் வெளிப்போந்தமைகண்டு யாம் கழிபேருவகை பூக்கின்றேம். இனியிது நிற்க. இவ்விரு



வாசகபுஸ்தகங்களும் தற்காலத்துச் சிலர் எழுதும் இடர்ப்பட்ட தமிழ்நடையினியன்ற போலிப்புத்தகங்கள் போலாது செவ்விய தமிழ்நடையில் இயற்றப்பட்டுங் குறித்தமாணாக்கரது சத்திகட்கேற்றவாறு வாசகநடை அமையப்பெற்றும், விஷயங்கள் தக்கவாறுபயிலும் மாணவருளத்திற்பதியும்படி செய்யவல்லபடங்கள் ஆங்காங்குச் செறிக்கப்பட்டு மிருக்கின்றன. நமது பிள்ளையவர்கள் தமிழ்நடையிலொருவித இனிமை யெப்பொழுதுமுண்டு. அஃதிவற்றின்கண்ணும் நன்றுயமைந்துளது. செய்யுட்பாகங்களும் நன்மைபயக்கத்தக்கனவே. எவையேனுஞ்சில விலக்குப் பதங்களுளவென்று கருதிப் பாடல்களை யறவேயொழித்துவிடாது அவையிற்றைத் தற்காலவிருப்பிற்குத்தக்கபடி சிறிதுமாற்றி யச்சிட்டிருக்கும்பான்மை யாவரானும் பெரிதும் மதிக்கத்தக்கது. இவ்விருநூல்களும் பள்ளிக்கூடங்கள்தோறும் குறித்த வகுப்புக்களுக்குப் பாடங்களாக நியமிக்கப்படல் வேண்டுமென்பது எமது அபிப்பிராயம்.

---

## சமாசாரங்கள்.

**திராவிடப் பிரகாசிகை**:—இது கோப்பாய் **ஸ்ரீசபாபதி நாவலரவர்கள்** இயற்றிய ஒரு தமிழ் வசனநூல்; பாயிரம் தமிழின் றெய்வப்பழமைமரபியல் இலக்கணமரபியல் இலக்கிய மரபியல் சாத்திர மரபியல் ஒழிபியலென்னும் ஆறுபிரிவுகளுடையது; பலதொடர் நிலைச்செய்யுட்களைப்பற்றிய கருத்துக்களும், சில இலக்கண விவாதங்களினொருதலைதுணிவும், சங்கங்களைப்பற்றியகுறிப்புக்களும், கல்விச்சிறப்புங்கலைபயின் முறையும் பயிற்று முறையும் இவைபோல்வன பிறவு மடங்கியது; சைவசித்தாந்தக்கோள் பலதெரிப்பது; திருவாவடுதுறை மாதவச்சிவஞானயோகிகள் நடையைப்பெரிது மநுசரித்துளது; 224-பக்கங்கள் கொண்டது; பயிலுநரியல்பும் பயிற்றுநரியல்பும் பண்டிதர்கண்மட்டுமே பயிலத்தக்கது; இதன் விலை ரூ. 2.

***

**பிரவேச பரீட்சை**:—சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையிற் சிலவித்தியார்த்திகள் பின்வரப்போகும் வினாக்களை முன்னரே தீயவழியாலுணரப்பெற்று எழுதினார்களெனவும் அதுபற்றி யெல்லாவித்தியார்த்திகளுக்கும் மீட்டுமொருமுறை பரீட்சை நிகழவேண்டுமெனவும் பேச்சு நடக்கின்றது. இது மெய்தானென்று பலரும் வலியுறுத்துகின்றனர். இஃதுண்மையேற் பலகலைச்சாலைகட்கும், ஆசிரியர்கட்கும், மாணாக்கர்கட்கும் பெரிதுமிடர்ப்பாட்டினை விளைக்குமென்பதற் கோரையமுமில்லை. இதனாலே நமது சென்னைச் சர்வகலா சாலைக்கும் மிகுந்த பணச்செலவுங் காலகரணமு முண்

டாகின்றன. இனியேனும் இத்தகைய குறைபாடுகள் நிகழாதிருக்குபடி யாவரும் நடக்கவேண்டும்.

***

**போதகாசிரியர்கூட்டம்** :—இம்மாதம் 22, 23 - ஆந்தேதிகளிற் சென்னைராசதானி முழுவதிலுமுள்ள பலகலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலுமுள்ள போதகாசிரியர் பலரும் ஒருகூட்டங்கூடிக் கல்வி விஷயமான பல்முடிவுகள் செய்தனர். அவற்றுட் சில பிரைமரிபாடசாலை யுபாத்திமாரை யுயர்தரத்தினராக்கி அவர்க்கு அதிக சம்பளமளித்தல், எப். ஏ. பரீட்சைக்குத் தர்க்கமும் ஒருபாடமாக நியமிக்கப்படுதல், லோயர் செகண்டரிப் பரீட்சையைப் பள்ளிக்கூட விஷயங்களி னின்றும் விலக்குதல் முதலாயினவாம்.

***

**சைதாப்பேட்டைத் தமிழ்ச்சங்கம்** :—சென்ற 21 - ஆந்தேதியன்று சைதாப்பேட்டைப் போதகாசிரிய வித்தியாசாலையிலொருதமிழ்ச்சங்கந்தாபிக்கப்பட்டுச்சபைகூடிற்று. அன்று பிற்பகல் 3 - மணிக்குக்கூடிய சபையிற் சென்னைக்கிறிஸ்தியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள்** பி.ஏ. அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்துழி அன்னார் மாணாக்கரு ளொருவராய **ஸ்ரீ பி.ஏ. பிராணதார்த்தி ஹரசிவ னவர்கள், பி.ஏ.,** தமிழின் பெருமையைப்பற்றி யொருவியாசம் படித்தனர். வியாசகர் கருத்துக்க ளெல்லாம் பொது நன்மையைப்பற்றியனவாம். சபா நாயகர் வியாசகர் கூறியனவற்றை வலியுறுத்து முகத்தால் தமிழ்மொழி பரவுமார்க்கமும், சாமானிய சனங்கள் சாஸ்திரங்க ளுணருமாறும் அவற்றிற் கேற்றவழிகளின்னின்னவென்றும் விரிவாய் விளக்கி யாவரும் மகிழுமாறு இனியதமிழ்நடையிற் பேசிமுடித்தனர். இத்தகையதமிழ்ச் சங்கங்கள் இன்னும்பலவாய்க் கிளைத்துப் பற்பல விடங்களினுந் தோன்றி நமது தமிழ்மொழியினை வளர்க்க முயலுமென் றெண்ணுகின்றேம். இவற்றின் முயற்சிகள் யாவற்றினும் எல்லாம் வல்லகடவுள் உதவிபுரிவாராக.

***

**தனிப்பாசுரத்தொகை** :—நமது "ஞானபோதினி"ப் பத்திரிகையிற் பரிதிமாற்கலைஞனார் என்பவர் "தனிப்பாசுரத்தொகை" யென்ற தலைக்குறியிட்டுச் சிற்சில அகவற்பாக்கள் வெவ்வேறு விஷயங்களைப்பற்றி யடிக்கடி யெழுதிக்கொண்டு வருகின்றனர். அப்பாடல்கள் சென்ற சஞ்சிகையொடு நாற்பதாகின்றன. நாமும் நமது நண்பர்களும் அவர்தம் நண்பர்களும் வேண்டினமையின் அவர் அந்த 40 - பாட்டுக்களையும் ஒருங்கு திரட்டித் "தனிப்பாசுரத்தொகை முதற்பகுதி" யென வெளியிட்டிருக்கின்றனர். அது நாற்பது பக்கங்களுள்ளது; உயர்ந்த பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றது; யாவரும் வாங்கி வாசித்து மனப்பாடம் பண்ணத்தக்கது. அதன் விலை, அணா - 4.

# ஞானபோதினி.

ஸம்புடம். III. | 1900ஆ ஜனவரிமீ 20உ. | புத்தகம் [illegible]

600 008.

## இராஜ விசுவாசம்.

ஆங்கிலேயர் இந்தியாவிற் கால்வைத்து ஏறக்குறைய மூன்று நூற்றாண்டாகின்றன. முதலில் அவர்கள் வாணிபஞ் செய்யவந்தனர் என்பதும் பின்னர் இந்தியாவிலுள்ள வளப்பெருக்கால் நாடு பெற நாடினரென்பதும் சரித்திரங்கூறும். சென்ற நூற்றைம்பது வருடங்கட்கு முன்வரையிலும் பிராஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேய வர்த்தகர்கட்கும் ஓயாத சண்டைகள் நடந்துவந்தன. கடைசியாய் வந்தவாசியில் நடந்த சண்டையிற் பிராஞ்சுக்காரர் முறிபடவே ஆங்கிலேய கம்பெனியாருக்கு இந்தியாவைக் கைக்கொள்ள முயலலாமென்ற எண்ணம் உறுதிப்பட்டது. அவர்கள் மகம்மதியரை இலகுவாய் வென்றபோதிலும் மராட்டியரைத் தோற்கடிக்க ஐம்பது வருடங்கட்கு மேற்சென்றது. இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அவர்களும் சலித்துப்போயினபடியால் கம்பெனியாருடைய ஆளுகைவலுத்தது. 1858-ம் ஞூ வரையிலும் கம்பெனியாரே இத்தேசத்தை ஆண்டுவந்து, படைச்சேவகர் கலகஞ் செய்தபின்னர் மகிமைதங்கிய - இந்தியச் சக்ரவர்த்தினியென்று பின் கௌரவம்பெற்ற-மாதரசியின் செங்கோலுக்கு உட்படுத்தினர். அதுமுதற் சென்ற 1897-ஆம் வருடம் வரையிலும், அதாவது நாற்பது சம்வற்சரங்களிலும், இந்தியாவிற் பெரிய குழப்பங்கள் நேரிடவாவது ஜனங்களுடைய உயிர் பொன் பொருள்களுக்கு அழிவு நேரிடவாவது இல்லை. நாளுக்கு நாள் கல்வி நாகரீக விருத்தியும் சுகமும் இராஜ விசுவாசமும் ஓங்கிவந்தன. பம்பாய் இராஜதானியில் முக்கியமாய்ப் பூனாவில், கொள்ளைநோய்வந்துற்ற நாள்முதற் குடிக்கும் இறைக்கும் ஐக்கிய வேறுபாடானதாகத் தெரிகிறது. இவ்வேற்றுமைக்குக் காரணம் பக்ஷபாதமில்லாமல் ஊன்றிப்பார்க்கு மனைவருக்கும் காலவேற்றுமை பொ

ன்றேயொழிய வேறில்லை என்பது கரதலாமலகம்போல் விளங்கும். மற்றை யுபகாரணங்களைச் சற்று விரித்துரைப்பாம்.

ஆங்கிலேய அரசாட்சியினாரம்பத்தில் இந்தியாவிற்குவந்த துரைமார்கள் தூரதேசத்தில் தங்களினங்களை விட்டு அன்னியர்மத்தியில் வந்திருந்தபடியால் நாட்டு ஜனங்களுடன் ஊடாடி அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து நீதிசெலுத்தின ரென்றும் அதற்கு முக்கிய காரணம் அன்னார் பெரியகுடும்பத்தின ரென்றும் உயர்குலத்தினரென்றும் சொல்லுவது வழக்கம். அஃது ஒருவாறு உண்மையே. ஏனென்றால் தயாளமும் ஜீவகாருண்யமும் உயர்ந்தோர் மாட்டேயுள. இழிகுலத்தினர் கல்வி எத்துணை கற்பினும் பெருந்தன்மை கொண்டொழுகுதல் பிரயாசம். பெரியோர் சிறியோர் என்றவித்தியாசம் அன்னார் உணருகின்றிலர். குடிகள் போய்த் தங்கள் குறைகளைச்சொன்னாற் காதுகொடார்; தங்களுடைய முன்னிலைமையை நினைக்கின்றிலர்; "முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை, யிந்திரனா வெண்ணி விடும்" என்றபடி தங்களை இந்திரராய் மதித்தொழுகுகின்றனர். இலக்ஷ்மி யிருக்கிறவரையிலும் காலஞ்செல்கின்றது; இராகுதசை வந்தடைந்தால் அவர்களுக்குப் பிறர்கஷ்டமும் மானுடவாழ்க்கைத் தொல்லைகளும், கீழ்ப்பட்ட குடிகளின் துன்பங்களும் மனத்திற் படுகின்றன. "சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற், கொல்லப் பயன்படுங் கீழ்" என்றார் நாயனாரும்.

ஆங்கிலேயர் புதிதாய் இந்தியாவிற்கு வந்தகாலத்தில் அவர்களுக்கு இந்தத் தேசத்திலுள்ளார் செய்த மரியாதையைப் போன்று இராஜபாஷை பரவிய இக்காலத்திலுள்ள இந்தியர்கள் செய்யவில்லை என்ற வயிற்றெரிச்சல் ஒருபக்கம்; இந்தியர்களும் அவர்களைப்போன்று பன்னூல்களையும் பயின்று ஆங்கிலச் சோதனைகளில் உயர்ந்த கௌரவம்பெற்று அவர்கள் வகித்துவரும் உன்னத ஸ்தானங்களைப்பெற்று வருவதனால் அவர்களுடைய உண்டிக்கிடையூறாய் வந்து விட்டனரே யென்ற மனவருத்தம் ஒருபக்கம்; மேற்றிசைப் படிப்பால் நாடாளுகையின் குற்றங்களை யுணர்ந்து தங்கள் குறைகளை நீக்கும்பொருட்டு ஆங்காங்குச் சபைகூடித் துரைத்தனச் சிறுமைகளை இங்கிலாந்திலுள்ள சுதேசிகளறியக் கூறுகின்றனரே யென்ற துயரம் மற்றொருபக்கம்; அன்னார் கூறுங்



கூற்றுக்களை யெல்லாம் இந்தியர்கள் ஆங்கிலத்திலும் சுதேசபாஷைகளிலும் உலகமெங்குமுளார் உணரும்படி வரைந்து வெளியிடும் பத்திரிகைகளை நிறுத்தல் அசாத்தியமாய் விட்டதே என்ற மனப்புழுக்கம் வேறொரு பக்கம். இத்தகைய வெப்பங்கொண்ட ஆங்கிலேயர் மட்டுமே, இந்தியர் துரோகிகள், சுய ஆளுகைக்குரியரல்லர், மேற்றிசைக் கல்விபடிப்பித்தது பெருந்தவறு, ஆகையால் இனி, அதற்குரிய உதவியைத் துரைத்தனத்தார் நிறுத்தவேண்டும், எனப் பலவாறாகப் பிதற்றுவர். ஆனால் இந்தியர்களுடன் ஊடாடுந் துரைமக்கள் இந்தியரைப்பற்றிச் சிறிதும் சிறுமை சொல்லத் துணியார். லார்ட் ரிப்பனைப்பற்றி இந்தியரெவரேனுங் குறைகூறியதை யாம் கேட்டிலம். அவரும் ஆங்கிலேய துரைமகனார் தாமே.

ஊறும் புழுவும் மிதித்தாற் கடிக்கும். வறுமை யறியாது மேலோர் பெருமையை. குக்ஷிவாதை பக்ஷத்தைக் கெடுக்கும். ஆதலின் எந்த நாட்டிலும் இராஜ விசுவாசம் ஓங்கவேண்டுமென்றால் இறைமகன் குடிகளின் வறுமையை நீக்கவேண்டும்; அவர்கள் அதிருப்திப்படவிடங் கொடாதிருத்தல் வேண்டும், அவர்கள் உயிருக்கும் பொருளுக்கும் சேதம் வாராமற் காத்தல்வேண்டும்; சுயநயத்தையும் பெருமையையும் பாராட்டாமற் 'குடியுயரக்கோனுயரும்' என்ற கொள்கையைச் சிரமேற் கொள்ளவேண்டும்; குடிகளுடைய மதத்தைத் தம்மதம்போற் பார்க்கவேண்டும்; அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதிக்குறைந்த பகுதிப்பணம் கொள்ளல் வேண்டும். இத்தகைய பொதுநியாயங்களைக் கவனியாத பக்ஷத்திற் "கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற், கடும்புலி வாழுங் காடு நன்றே" என்றேகுவர் குடிகள். "கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியுங், கோணிலை திரியின் மாரிவறங் கூரு, மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை, மன்னுயிரெல்லா மண்ணாள் வேந்தன், றன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்" என்றார் மணிமேகலையினும்,

1877-ஆம் வருடத்தில் இந்தியாவைச் சுற்றிப்பார்க்க வந்தமேற்றிசை உயர்குல நிபுணர் ஒருவர் சுயதேசஞ் சேர்ந்தபின்னர் அவருடைய இனத்தார் இந்தியாவைப்பற்றிப் பலவினாக்கள் எழுப்பியதில் ஒன்றாகிய இந்தியர் எத்தன்மையுடையர் என்பதற்கு அவர் "வங்

கான தேசத்திலுள்ளார் நமக்குறவினராவர், பம்பாய் இராஜதானியிலுள்ளார் நமக்கு நண்பராவர், சென்னை இராஜதானியிலுள்ளார் நம்மைச்சுற்றி வாலைக்குழைக்கும் ஞமலிகளாவர்'' என்ற மறுமொழிகொடுத்ததாய் யாம் சிறு பிராயத்திலே கேள்விப்பட்டனம். இவ்விடையை நன்றாய்க் கவனிக்குமளவில், சென்னை இராஜதானியிலுள்ளார்க்கு இரண்டு விசேடகுணங்கள் ஏற்படுகின்றன. அவையாவன கீழ்ப்படிதல், விசுவாச முடைமை. இஃதிப்படியிருக்க இந்தியாவின் இப்பகுதியிலுள்ளவர்களுடைய கீழ்ப்படிதலையும் விசுவாசத்தையும் பற்றி ஐயமுறுதல் எங்ஙனம் துரைத்தனத் தாருக்குத்தகும்? ஐயப்படாவிடின் லௌகிக பௌதிக விஷயங்களிற் சிறப்புற்றோங்காத ஏழைப்போதகாசிரியர்கள் இராஜாங்க விஷயமாய்ப் பேசுஞ்சபைகளிலும் குழாங்களிலு மிருக்கவுங் கூடாது, வாயைத் திறக்கவுங் கூடாது என்ற உத்தரவு பிறத்தற்கு நியாயமென்னை? காலக்கொடுமையே யன்றி வேறிலது.

நியாயமும் காருண்யமும் துரைத்தனத்தின் தூண்கள். நியாயங்குன்றினும் காருண்யங்குன்றலாகாது. குலைக்கிற நாய்க்குக் கருப்பங்கட்டி போட்டாற் குலைக்குமோ? பசிகெடுத்தாற் பரமனென்றும் பாமரனென்றும் பார்ப்பாருளரோ? தன்னுயிர்போல் மன்னுயிர் காத்தல் தலையே யன்றோ? பகைஞரிருவர் பன்னாட்பிணங்கினும் பரிந்து போஜனம் பகர்ந்தால் அன்னார் பிணக்குத் தீருதல் வழக்கன்றோ? பசி தீர்ந்தபின் பகைஞருமுளரோ? ஆதலினால் இராஜகாரியங்களை நடத்தும் விவேகிகள் முக்கியமாய்ச் சிந்திக்க வேண்டியது குடிகளின் க்ஷேமம். அதை நீக்கிச்சுயலயத்தைமட்டுங் கருதுவோர் 'விலங்கொடு மக்களனையர்'. குடிகளின் க்ஷேமத்தை நாடும் உத்தியோகஸ்தர்களை ஜனங்கள் ஒருபொழுதும் மறப்பதில்லை. இவ்விராஜதானியிலுள்ள பல ஜில்லாக்களிலும் ஜனங்களுக்கு ஏதேனும் நன்மைசெய்தவர் பெயர் மறவாமலிருக்கும்பொருட்டுக் கட்டிய பாலங்கள், கோரிகள், வாசகசாலைகள், பள்ளிச்சாலைகள், புண்ணியசாலைகள் முதலான நன்றியறிதல் விளக்குங் கட்டிடங்களெத்தனையோ இருக்கின்றன வன்றோ?

தவிரவும், என்னை என்மேற் பக்ஷமாயிருவெனல் யார் சொல்வது? எத்தனை நாள் நடக்கும்? செங்கோலே செங்கோலஞ்செயும்.



அன்றியும், இந்தியர்கள் நாகரீகமுள்ள ஆங்கிலேயருடைய ஆட்சிக்குட்பட்டவர்களாதலால் அவர்களுக்கு இராஜ விசுவாசங் குறைய ஏதுவில்லை. வலியுடையான் ஒருவன் நம் சிகையைப் பிடித்திருக்க வலியிலாத நாம் தும்மினால் நம் தலையன்றி யார் தலைநோவும்? இஃது எவரும் அறிந்த விஷயமே. பரமேபெரிது என்று நினைக்கும் இந்தியர் இவ்வுலகவதிகாரத்தைக் கருதுபவரல்லர். அவர்கள் லௌகிக உயர்வைப்பெற இன்னும் தலைமுறை அனேகங் கழியவேண்டும்.

தற்காலத்தில் தென் ஆபிரிக்காவில் யுத்தம் நடப்பது எவருக்குந்தெரிந்த விஷயம். இதில், இதுவரை சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கும் பெரும்பான்மை யுத்தங்களில் மாண்டவரின் தொகையைப்பார்க்கிலும் அதிக உயிர்ச்சேதம் நேரிட்டிருக்கிறது. நாளதுவரை இந்த யுத்தத்திற் பிரிட்டிஷார் பக்கத்திற் கொல்லப்பட்டவர் 1027, காயப்பட்டவர் 3675, சிறைப்படுத்தப்பட்டவர் 2511, ஆகமொத்தம் 7213. இன்னும் யுத்தம் ஓயவில்லை. பலமான சண்டை இனிமேற்றான் நடக்கப்போகிறது. ஏனென்றால், ஆப்கனிஸ்தானிலும் ஆபிரிக்காவிலும் யுத்தத்திற் கீர்த்திபெற்ற லார்டு ராபர்ட்ஸ், கிச்சனர் என்ற இரண்டு கடும்புலிகள் ஏராளமான இராணுவத்துடன் ஆபிரிக்காவிற்குப் போயிருக்கின்றன. இவர்கள் போவர்களைத் தொம்சஞ்செய்து வெற்றிபெறுவரென்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள். "எண்ணித் துணிக கருமந் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு." இதுகாறும் பிரிட்டிஷாருடைய பெயருங் கீர்த்தியும் உலகமெங்கும் பிரசித்தம். அப்பெயரும் கீர்த்தியும் குன்றாதபடி இந்தியர்கள் தங்களாற் கூடியவரை பொருளுதவிசெய்து வருகின்றார்களென்பதை அன்றன்று வெளிப்படும் பத்திரிகைகளிற் காணலாம். நிஜாம் ஒருவரே பெருந்தொகை யளித்திருக்கின்றனர். இராஜ விசுவாசமில்லாவிட்டால் இக்கொடிய பஞ்சகாலத்திற் சுதேசிகள் உணவின்றி மரிப்பதைப்பார்த்தும் இந்தியர்கள், அன்னியதேசத்தில் நடக்கும் யுத்தத்திற்குத் துரைத்தனத்தார் வேண்டுதலின்றிப் பணவுதவி புரிவார்களா?' இதுநிற்க.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆளுகை நூறுவருடம் பூர்ணமாகிற்றென்றும், இந்தியாவை நூற்றாண்டிற்கு மேல் ஆண்ட ஜாதி

யாரில்லை யென்றும், இன்னும் பலவாறாக அஞ்ஞானம் நிறைந்த ஆத்துமாக்களின் பிதற்றல் துரைத்தனத்தார் செவிகளிற் படவே அவர்கள் இந்தியர்களை நம்புதலொண்ணாது என்ற அநுபவவிரோதமான கொள்கையை மேற்கொண்டு ஒழுகுகின்றனர் போலும்! மகம்மதியர் எண்ணூறு வருடங்கள் வரை துரைத்தனஞ் செலுத்தவில்லையா? அவர்கள் காலத்தில் இந்தியருக்கு வரி விஷயத்தில் தாக்ஷணிய மிருந்தபோதிலும் மதவிஷயத்திலும் சுயாதீனத்திலும் இடர்ப்பாடுகள் எத்தனையோ இருந்தனவன்றோ? இவ்விடர்ப்பாடுகள் ஒன்றும் நமக்கு இழையாமலும், கல்வியையும் நாகரீகத்தையும் தவிக்குங் குழவிகளுக்கு அன்னை போன் றுதவிவரும் பிரிட்டிஷாருக்குக் கேடெண்ணுவாரு முளரோ? அபத்தம்! அபத்தம்!! கெடுவார் கேடு நினைப்பார். குறைகளில்லாத துரைத்தனம் கிடையாது. குறைகளை நிவிர்த்திசெய்தற்பொருட்டுந் துரைத்தனத்தாருங் குடிகளின் காரியஸ்தர்களும் அடிக்கடி கூடிப்பேச வேண்டும். அங்ஙனஞ் செய்யின் குடிகளின் மன வெப்பந்தீரும்; ஐக்கியம் அதிகரிக்கும். சத்திரமிடாதபுண் உட்கண்வைக்கும் என்பது அநுபவமன்றோ?

உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

பூர்ணலிங்கம் பிள்ளை.

---

## ஆட்போக்கி.

இப்பெயரிய தலம் தேவாரம்பெற்ற தலங்களினொன்றாய் விளங்குவது. இதற்குத்தேவாரம் அருளிச்செய்தார் திருநாவுக்கரசு சுவாமிகள் ஒருவரே. அவர் அருளிச்செய்த தேவாரப்பாசுரங்களானும், வேறு பதிகத்தில் இத்தலத்தைச் சுட்டலானும் அவரது அபிப்பிராயம் இத்தலம் ஆட்போக்கி யென்றே வழங்கல் வேண்டுமெனத்தோன்றும். ஆயினும் இருவிதமாகத் திரிக்கப்படும் திருவாட்போக்கி யென்னும் பிரயோகத்தைப் பிழைபடுநெறியில்



வாட்போக்கி யென்றே யிருத்தல் வேண்டுமென்று துணிந்து அவ்வாறே வழங்குவாராயினர் பிற்காலத்தார். அது பிழைபடு நெறியாமாறு: தேவாரத்துத் தலத்தைக் குறிக்கும் வரிகள்

ஆல நீழல் அமர்ந்த வாட் போக்கியார்
அடுத்த கின்னரங் கேட்கும் வாட் போக்கியை
அந்தி யின்னொளி தாங்கும் வாட் போக்கியார்
ஆற்ற வும்மருள் செய்யும் வாட் போக்கியால்
ஆறு செஞ்சடை வைத்த வாட் போக்கியார்
ஆனஞ் சாடி யுகந்த வாட் போக்கியார்
ஆர்த்த கங்கை யடக்கும் வாட் போக்கியார்
ஆடல் பாட லுகந்த வாட் போக்கியை
அட்ட மாமலர் சூடும் வாட் போக்கியார்
அரக்க னுக்கருள் செய்த வாட் போக்கியார்

எனவரும். இவற்றுள் தலப்பெயர் வாட் போக்கியெனக் கொள்வோமாயின் ஐந்து வரிகள் மோனை பிழைக்கின்றன. ஆட்போக்கியெனின் பிழைக்குமாறு ஒன்றுமில்லை. தேவாரபடனஞ் செய்வோரும் பதிப்பாசிரியர்களும் வகரவுடம்படு மெய்யை யவ்வாறு கொள்ளாது தலப்பெயர் முதலெழுத்தெனக்கொண்டமை பரிதபிக்கத்தக்கதே. மோனைபிழைக்கும் வரிகளிலும் மகரத்தின்மேல் வந்த வொற்றுப்புள்ளியைக் களைந்து உடன் அடுத்துவரும் வகரத்தையுங் களையின் வரிகள் ஒழுங்காகின்றன. இனித்திருவாலம்பொழில் என்னுந் தலத்தேவாரத்தும்

"ஆரமுதா மணிதில்லைக் கூத்தன் றன்னை
வாட்போக் கியம்மானை யெம்மானென்று"

என்னும் வரிகள் காணப்படுகின்றன. இவ்விடத்து வாட்போக்கி யென்பது ஆட்போக்கி யென்றிருத்தல் வேண்டும். ஏனென்றால் மோனைபிழைக்கின்றது. மற்றவரிகள் எவ்வாறிருக்கின்றனவென் றறியும் பொருட்டுப் பாசுரமுழுதும் நோக்குவோம்.

"பார்முழுதாய்விசும்பாகிப் பாதாளமாம்
பரம்பரனைச் சுரும்பமருங் குழலாள்பாகத்
தாரமுதா மணிதில்லைக் கூத்தன் றன்னை
(யா) வாட்போக்கியம்மானை யெம்மானென்று

*வாரமதா மடியார்க்கு வாரமாகி*
*வஞ்சனைசெய் வார்க்கென்றும் வஞ்சனுகுஞ்*
*சீரரசைத் தென்பரம்பைக் குடியின் மேய*
*திருவாலம் பொழிலானைச் சிந்திநெஞ்சே."*

இதனுள் மட்டுமே மோனை பிழையாதாயிற் றென்று கோடல்வேண்டுவதில்லை. பசுகரணங்க ளெல்லாம் சிவகரணமாய் நிகழப்பெற்ற உண்மை ஞானியாகிய வாகீசப்பெருமானது அருள் வாக்கிற் பிறந்த பாசுரங்களில் மோனையில்லாதன காண்டல் மிக அரிது, ஆதலின் இவ்வாறு பலவரிகளையும் மோனை பிழைப்பதறியாமை வழங்கல் பெரியதோர் இழுக்கேயாகும். பதிகம் பெற்றதலப்பெயர்களைக் காட்டுஞ் சில விருத்தங்கள் வழங்கிவருகின்றன. ஆங்கும் திருவாட் போக்கியென ஒருநூலை அணியாது தலப்பெயர் கூறப்பட்டிருக்கின்றது.

மற்றுச் சிவதலமான்மியச்சுருக்கம் என்றொரு நூலகத்து இத்தலத்தினது மான்மியம் விளக்கப்பட்டிருக்கின்றது. ஆரிய வரசனொருவன் மணிவிருப்பாற் றலந்தோறுந் திரிந்தெய்த்து இத்தலங்குறுகிவழிபட, சிவபிரான் நீர்த்தொட்டியொன்று காட்டி யதனைக்காவிரி நீரால் நிரப்பி யுன்குறை முடித்துக்கொள்க வென்றுஞ்ஞாபித்தார். அரசன் நீரெல்லாந் தொட்டியுண்டு வெறுமையாத் தோற்றல் கண்டு சினந்து உடைவாளை யோச்சநினைந்தான். அக்கணத்தே வாண்மறைந்து மணிபுறப்பட்டது. இவ்வற்புதங் கண்ட அரசன் மணியின் மேற்பற்று விட்டுச் சிவபணிவிடை புரிந்து கதியடைந்தான். இக்கதையின் ஆதாரத்தைக் கொண்டு வாட்போக்கியே சிறந்த பிரயோகமென்று சாதித்தல் கூடும். ஆயினு மிது கதையே ஆட்போக்கி யென்னும் பிரயோகத்திற் கேற்பவு மிதனைத் திரித்தல் எளிது. திருநாவுக் கரசு சுவாமிகள் கருத்து ஆட்போக்கியே யென முன்னர் நன்கு காட்டப்பட்டது. ஆகலின் வாட்போக்கியென்பது பிழையே, ஆட்போக்கி யென்பது வழக்கே.

அனவரத விநாயகம்பிள்ளை.



# பேகனார் சிற்றுரை.

## IV-வது. பகை தீர்த்துக்கோள்ளல்.

(அதாவது:—தமக்குத்தீங்கு செய்தார்க்குப் பதில் தீங்குசெய்யவிரும்புதல்.)

பகை தீர்த்துக்கொள்ள ஒருவன் பார்ப்பது முரட்டுத்தனத்திற் சேர்ந்
தது. இதை எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவன் விரும்புகிறானே, அவ்வளவு
க்கு அவ்வளவு துரைத்தன வதிகாரிகள் அவனை அடக்கவேண்டும். முதல்
முதல் தீங்கு இழைத்தவனால் துரைத்தன ஆணைக்கு விரோதம் செய்யப்பட்
டது, அதற்காகப் பகைவைத்துப் பதில் தண்டனைசெய்யத் தானே புறப்படு
கிறவனால் துரைத்தன ஆணைக்கு விரோதம் நடப்பதுடன் துரைத்தனமே
கலைய வேண்டியதாகிறது. அடைந்ததீங்கைக் கவனிப்பதனால் இழைத்தவன்,
அடைந்தவன், இருவர்க்குள் ஏற்றத்தாழ்ச்சி இல்லாமற் போகிறது; கவ
னிக்காவிடின், கேடு அடைந்தவன் மற்றையவனிலும் கவுரவ நெஞ்சினன்
ஆகிறான். 'பிழை பொறுப்பான் மன்னனாவான்' என்றார் ஸாலொமன்.
பிழையை மன்னிக்கிற தென்றால், எவ்வளவு நற்புத்தி உள்ளத்தில் சேர்ந்து
ஆகவேண்டியது; மன்னிக்கும் புத்தி இல்குவில் வாராதே.

நடந்துபோனது எப்போதும் கழிவுதான், மீளாதது; நிகழ்வதும் நிக
ழப்போகிறதுமான இரண்டு சல்லியமே வேண்டியதிருக்க, அறிவுடையோர்
கழிந்ததைப்பற்றிக் கவலைப்படுவது வீண் காரியம் எனக், கழிந்ததை நினை
யாது விடுவர். பிரயோசனம் ஒன்று நாடாது தீங்கு இழைப்பதையே கருதித்
தீங்கு இழைப்பவர் கிடையாது, ஏதோ பொருட்பயனோ, உவப்போ, பெரு
மையோ, இப்பேர்ப்பட்ட மற்ற எதுவோ, அடையக்கருதியே, முதல் முத
லில் தீங்கு இழைப்பர். அவ்வாறு கருதி நமக்குத்தீங்கு இழைத்தவனிடத்தில்
நமக்கு என் சண்டை? நம்மைவிடத் தன்காரியத்தில் அவன் கருத்து வைத்
தது சகஜந்தானே. யாராவது துஷ்ட குணம் இயல்பாய்ப் பெற்றுத்தீங்கு
இழைப்பரேல், அவர் முட்செடிகளுக்கும் முள்ளுக்கும் ஒப்பாவர். ஏனெனில்
அவற்றிற்குக் குத்தத்தான்தெரியும், அதனிலும் சிறந்தவேலை தெரியாது.

எந்தெந்தத்தீங்குக்குத் துரைத்தனத்தார் ஏற்படுத்திய நீதிமுறையிற்
பரிகாரம் அடைய வழியில்லையோ, அப்பேர்ப்பட்ட தீங்கு அடைந்தவன்,
பதில் தீங்கு செய்ய, யத்தனிப்பது ஒருவாறு ஒப்புதலாம்; அப்போதுகூட,
பதில் தீங்கு செய்ய நினைப்பது துரைத்தனத்தார் தண்டனைக்குள் அகப்படா
ததாயிருக்கவேண்டும், அகப்பட்டதாயின் இவர்க்கு எதிரி முன்னர் ஒருவரே
இருந்தது போக, இப்பொழுது எதிரி இருவர் ஏற்படுத்திக் கொண்டவ
ராவர்.

பகை தீர்ப்பார் சிலர் தம்மால் நடந்ததென எதிரி அறிய விரும்புவர். இவர்க்குப் பதில்தீங்கு இழைப்பதே பிரதானமாயிராது, முதல்முதலில் தீங்கு இழைத்தார் அறிந்து மனவேதனைப் படவேண்டுமென்ற நினைப்பு இருக்கிறபடியினால், இதனை ஒரு பக்ஷம் ஏற்கலாம். எதிரி அறியாமல் எதிரிக்குத்தீங்கு இழைக்கப்பார்த்தலில் பயங்கொள்ளித்தனமுண்டு, இருட்டில் அகப்பட்டவனை இருட்டு மறைவிற் குத்துகிற பழிசேரும்.

நண்பு பாராட்டி மோசக்கருத்து வைத்திருப்பதையும், நட்பைப்பேணுதிருத்தலையும் தீராப்பாவமென எண்ணின ப்ளாரென்ஸுக்கு ட்யூக்ப்பிரபுவான காஸ்மஸ் என்ன சொல்கிறார்: "வேதாகமத்தில் எதிரியை மன்னிக்கச் சொல்லிக் கட்டளை பிறந்திருக்கிறதே யொழிய, கூட்டாளியை மன்னிக்கும்படி வேதாகமங்களில் ஆணைகிடையாது". இவ்வளவு கடுமையாய் காஸ்மஸ் நவின்றாரே, ஜோப்புக்கு அவ்வளவு கடுமை பிறக்கவில்லை. ஜோப் சொன்னதாவது "கடவுளால் அமைத்த நன்மைகளை அடைகிற நாம், தீமைகளையும் பெறச்சம்மதிக்க வேண்டியவர்களாகிறோம்". அப்படியே, நம்மினக்கம் பெற்றார்களில், நல்லோர், தீயோர் கலந்திருப்பதனால், தக்கபடி பார்த்து இணங்கவேண்டும். ஒன்று உண்டு, தாம் அடைந்த தீங்கை நினைந்து வெம்புருவார், தாம் பெற்ற புண் ஆறாது புண்ணாகவே இருக்கப்பார்ப்பவரை ஒப்பர். அதனை மறப்பரேல், புண் ஆறி நீங்குமல்லவா?

ஊர்ப்பகை தீர்க்கத்துணிந்தார் வெகுவாய்க் காரியத்தை ஜெயித்தனர். ஸீஸரைக் கொலைசெய்தது, பெர்டினக்ஸைக் கொலைசெய்தது, ப்ரான்ஸில் 3-வது ஹென்றியைக் கொலைசெய்தது, இப்படிப்பட்ட கொலைகள் இன்னும் எத்தனையோ, அக்கொலைகளால் நினைத்த காரியங்கள் முடிந்தன. அப்படியன்று, சொந்தக்காரியங்களிற் பகை தீர்த்துக்கொள்ளப் பார்ப்பாருடைய கருத்து, இவர்களும் சூன்ய மந்திரம் செய்வாரும் ஒரேதினுசிற் சேர்வர். இவ்விருதரத்தார் நோக்கமும் கொடியன, அவர்கள் வாழ்வும் துன்புறும்.

## V-வது. வறுமை.

துறவறம் ஏற்ற ஸ்டோயிக்ஸ் இனத்தினர் வழிப்படி, ஸெநேகா திறமையாய் உரைத்ததாவது: "செல்வத்தாற் கிடைக்கும் நன்மைகளைப்பார்த்து அவற்றைநாம் அடையலாகாதா, என்று ஆசை உண்டாம், வறுமையில் விளங்கும் நற்குணங்களைப்பார்த்து நம்மிடத்தில் மதிப்பு உண்டாம்.' இயற்கைவிட்டு விலகிய கிரியாசித்தியைப்பார்க்க எப்படி ஆச்சரியமாயிருக்கிறதோ, அப்படியே, வறுமையில் செம்மையைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கும். ஸெநேகா இன்னும் திறமாய் உரைத்ததாவது, (கிறிஸ்தவச் சமயவறிவுபெறாதவர் இவ்வளவு அறிந்தது விசேஷம் தானே):—"எளிதிற் கலையும் உடலில், தெய்வப் பிறப்புக்கு உள்ள மனவலிமை இருத்தல் பெரியவிசேஷம்." இவ்வாறு செய்



யுளில் நவின்றாற் பொருந்தும் உலக இயற்கையினும் மிக்க கற்பனை நவிலும் செய்யுளர், இக்கருத்தை மறைத்து விளம்புவர், பூர்வீகக்கவிஞர் விநோதமான கதை ஒன்றுசொல்வர். இதனாற் கிறிஸ்தவர்க்கு இருக்கவேண்டிய குணம் விளங்கும். அதாவது, ப்ராமதியஸை அவிழ்க்க ஹெர்க்குலிஸ் செல்லுகையில், மட்கலத்தில் உட்கார்ந்து அகன்ற கடலைக் கடந்தாராம், ப்ராமதீயஸ் என்றால் மானிட இயல்பு எனப்பொருள், ஓயாஅலை அடிக்கும்வாழ்வு என்னும் கடலை, எளிதில் அழியத்தக்க உயிரைக்கொண்டு, கிறிஸ்தவரிடத்தில் இருக்கவேண்டிய மனஉறுதியை இக்கதையினால் விளக்கினர்.

இப்படி ஏற்றி மொழிவது கிடக்கட்டும், செல்வத்தில் விளங்கவேண்டுவது மிதமிஞ்சா நடத்தை, வறுமையிலும் சிறுமையிலும் விளங்கவேண்டுவது, மனந்தளராமை, மிதமிஞ்சாத்தன்மையினும் மனந்தளராமையே நூலறிவுடையோர் சிறந்தது என்பர். கிறிஸ்தவவேதத்திற் பழைய பகுதியில் விளங்குவது செல்வமும், புதிய பகுதியில்விளங்குவது சிறுமையுமாம். இப்படியிருந்தும், புதியபகுதியால் நாம்பெற்ற நற்கதிசிறந்தது, கடவுளது கருணைவிளக்கத்தின் தெளிவு புதிய பகுதியில் ஜாஸ்தி. பழைய பகுதியிற்கூட தாவிதர் பாக்களைக் கவனித்தால், உவப்பு உரை எத்தனையோ, துவிப்புரையும் அத்தனை காணலாம். ஸாலோமனர் கொண்டாட்டங்களைக் காட்டியதைவிட, ஜோபருடைய துயரங்களை உரைத்தற்குப் பழையவேதத்திற் பரிசுத்த ஆவிஜாஸ்தியாய் முயன்றது. செல்வத்தில் நடுக்கங்களும் துயரங்களும் எப்படி உண்டோ, அப்படி வறுமையில் ஆசைகளும், மனந்தேறுவதற்கு நியாயங்களும் உண்டு. தையலாற் சித்திரவேலை செய்வதில், கீழ் ஆதாரத்துணியின்வர்ணம் ஒக்க விளக்கமாம்; கறுப்பாயிருக்க, அதன்மேற் சித்திரம் எழுதுவது உவப்பை விளக்கும் சிவப்பு வர்ணமாயிருந்தால், சித்திரத்துணி எடுப்படுகிறது. அப்படிக்கன்றிக்கீழ்த்துணி பளபளப்பாயிருந்து மேற் சித்திரம் கறுப்புவர்ணமாய், ஏக்கமுறப்பெற்ற தையல் எடுபடுவதில்லை. கண்ணுக்கு உற்றது உள்ளத்திற்கும் ஒக்கும். வாசனைப்பொருள்களை நசுக்கியே வாசனை வெளிப்படுப்பது போலவே, நன்னடக்கையானது வாசனையை ஒக்கும், செல்வத்தால் வெளிப்படுவது ஒருவர் குணதோஷங்களும், வறுமையால் வெளிப்படுவது அன்னாரது நற்குணங்களாம்.

## VI-வது. கபடவேஷம்-வஞ்சகம்.

வஞ்சகம்செய்வது, சாமர்த்தியத்தில் தாழ்ந்த இனமாவது. சமயம் வலி அறிந்து பொய்யைவிடுத்து, மெய்யை இயற்றுவதென்றால், ஆளிடத்தில் வுள்ள. அறிவும், வலிவானநெஞ்சம் இருந்தால்தான் முடியும். அதனால் தான் நிர்வாகம் செய்யப்பெறுவாரில், திடமில்லார்களே வஞ்சகம் செய்வர்.

லிவியர்வைப்பற்றித் "தம் கணவர் சூதுவாதுகளுக்கும், தம்புதல்வர்
வஞ்சகத்துக்கும் லிவியா ஈடுஜோடியாயினர்" என்றார் டாஸிடஸ். அகஸ்
டஸ் சூதாய்நடந்ததும், டைபீரியஸ் வஞ்சகமாய் நடந்ததும் இதனால்
ஏற்படுகிறது. வைடெல்லியஸை எதிர்த்துப் படையெடுக்கும்படி வெஸ்
பாஸியனுக்கு ம்யூஸியானஸ் தைரியம் சொல்லுங்கால் என்னமொழிந்தார்
என்றால் "அகஸ்டஸினுடைய கூரானபுத்திக்கு விரோதமாயாவது டைபீரிய
ஸினுடைய கபடமான அடக்கத்துக்கு விரோதமாயாவது நாங்கள் நினைத்
துக்கலகத்தில் இறங்கவில்லை". கபடவேஷம் என்றும், வஞ்சகம் என்றும்,
வாயடக்கம் என்றும், மூன்று பிரத்தியேகமான ஒழுக்கங்கள் உண்டு,
அவற்றைச் சரியாய்ப்பகுத்தறிக. எச்சங்கதிகளை நேரேசொல்லத்தகும்,
எவற்றை அடக்கி மறைக்கவேண்டும், எச்சங்கதிகளை அரைப்பங்கு வெளி
யிடலாம், யாரிடத்தில் எச்சமயத்தில் வெளியிடலாம் இடக்கூடாது, என்று
தாம் அறியும் சாமர்த்தியம் ஒருவர்க்கு உண்டாமானால், இதுதான் சீமை
களையாளும் மந்திரிக்குரியதந்திரம், வாழ்க்கையில் உதவும் தந்திரம், இப்
படி டாஸிடஸ் அபிப்பிராயப்படுவது ஒப்பேயாம். அச்சாமர்த்தியத்தின
ர்க்கு வஞ்சகம் இடைஞ்சற் செய்யுமேதவிர, வஞ்சகம் அவர்க்கு முற்றி
லும் வேண்டாதது. அவ்வளவு சாமர்த்தியம்படையாதார், வாயடக்கமா
யும் வஞ்சகமாயும் எல்லா வேலைகளிலும் நடந்துகொள்ளவேண்டும். குரு
டர் தட்டித்தடவிக்கொண்டே நடக்கவில்லையா, அப்படிச்சமயம்பார்த்துச்
சாயத் தெரியாதார் எவ்வேலையிலும் ஒருவராய் வாய் அடங்கியிருத்தலில்
நன்மையுண்டு. சாமர்த்தியர் எனப் புகழ்ப்படைத்தாருடைய சங்கதியைப்
பார்க்கப்போனால், நடவடிக்கையில் மறைக்காது எண்ணங்களைவெளியிட்
டவர்களாகவும், நிஜம்பேசினவர்களாகவும், அவர்கள்பேச்சை நம்பக்கூடிய
வர்களாகவும் இருந்தனர். அவர்கள்பேச்சில் அவ்வளவு சுளுவு இருந்தும் எப்
படிப் புகழ்பெற்றனர் என்றால், அவர்கள் செம்மையாய்ப் பழகிய குதிரை
யைப்போன்றவர்கள்; எவ்விடத்தில் நிற்கிறது, எவ்விடத்தில் திரும்புகி
றது, எனமற்றெவர்க்கும் அவ்வளவு தெளிவாய்த் தெரியாது. வஞ்சகம்
சொல்லாமல் முடியாதசமயம் நேரிட்டுவிட்டால், ஏற்கனவே நேரப்பேசி
எல்லாரும் அறிய நம்பிக்கையுடன் வாலாயமாய் நடந்துவந்து பரவியபுகழி
னால் ஏதோ ஒருசமயத்தில் வஞ்சகத்துடன் நடப்பது புலப்படாமற்போம்.

அவரவர் தம்இயற்கையை மறைப்பது மூவழிப்படும். தமது இயற்
கை இத்தன்மைத்து எனப் பிடியே கொடாமல் ஒழுகுவார்வழி முதலா
வது, அவரே ஆழியர், வாயை அடக்கிப்போவர், தம்மிடத்தில் பிறர் சந்
தேகப்படுகையில் அச்சந்தேகத்துக்கு ஆதாரம் இல்லை எனத்தோற்றுவிப்
பார்வழி. இரண்டாவது, இவர் பிறர்சந்தேகத்தைத் தீர்க்குமட்டில் வஞ்
சகம்செய்வார். இதுதான் வஞ்சகம் தம்மிடத்தில் இல்லாததன்மை தம்



மிடத்தில் இருப்பதெனக் காட்டும் போலிநடத்தை. மூன்றாவது, இதுவே
கபடவேஷமாம். இம்மூன்றில்,

I. முதலது, ஆழியர் அடக்கம். இதுசிறந்தநடை, ஊரார்வெளியி
டக் குற்றம் கேட்போரிடத்தில் இச்சிறப்பு இல்லையாயின் உதவாது. தம்
நினைப்பை வெளியிடாதார் மற்றையர் தம்மனதில் நிகழ்வதை உரைப்பப்
பெறுவர், ஓயாமல் அரற்றுவாரிடத்தில் யார்தாம் தம்உள்ளத்தைத்திறப்பர்,
வெளியிடாதார் எனப் புகழ்பெற்றாரிடத்தில் மற்றையர்க்குத் தம் நினைப்
பை விளம்பப் புத்திபோம். திறந்த வெளிக்காற்று அடைப்புக்குள்ளல்ல
வா மோதுகின்றது? கோயிலில் ஊரார்குற்றம் உரைப்பதைக்கேட்பது
குற்றம் யாருமறிய வெளிப்படவேண்டுமென்றன்று. குற்றப்பட்டார் நெஞ்
சு தவிப்பது நீங்கும்பொருட்டு. குற்றவுரைகேட்க நியமிக்கப்பட்டிருக்கும்
பாதிரியர், உள்ளம்வெந்து ஆறக்கொட்டுவதைத் தாம்மாத்திரம் உணர
ப்பெறலாமேயொழிய, காதில்விழும் குற்றங்களைப் பரவவிடலாகாது. விரி
க்காது அடக்கப்பட்டு நிகழ்வதுதான் சமயநெறிகளில் இரகசியம் எனப்
படுவதும் உடலுக்கு உடையில்லையாயின், எப்படி அருவருப்போ, அப்ப
டியே நினைப்பை மூடாமல் விட்டாலும் அருவருப்பு உண்டாம். எவரும் தம்
காரியங்களையும் ஒழுங்குகளையும் வெளிப்படையாய் விடாராயின் மிக்க
மதிப்புப்பெறுவர். வாய்க்கு வரும் வரையும் கொட்டும் அறிவீனர் பகுத்
தறிவிலாதார், பதறிப்பேசுபவர், கேட்டதை நம்புபவர், அறிவிற்கு எட்டி
யதையெல்லாம் கொட்டி, எட்டாததையும் கொட்டவிரைவர். நினைப்பைக்
கண்டபடி வெளிவிடாத அடக்கம் அநுகூலம் செய்யும், மூறைப்படும்.
நினைப்பை முகத்தினாற் காட்டாமல், வேண்டின் நாவால் மட்டும் நினைப்பு
வெளிப்படும்படி நடப்பது நன்றாம். கர் நவிலும் மொழியால் ஒருவர்
நோக்கம் குறிக்கப்படுவதைக் காட்டிலும், முகத்தாற் குறிப்படுவதே ஜாஸ்தி
யாதல்பற்றி, முகஜாடையால் நினைப்பு வெளிப்படும்படி விடுவது கெடுதல்
செய்யும்.

II. இரண்டாவது, வஞ்சகம். ஆழ்ந்த வாயடக்கப்பட்டார்க்கு வஞ்ச
கம் செய்யவேண்டிய வேலை அகத்தியம் நேரிடும். வாயடக்கம்பெற்றார்
கொஞ்சமாவது வஞ்சகம் செய்யாமல் முடியாது, இருபக்ஷத்திலும் சாயா
மல் திராசுமுனையாய் நடுநிலைப்பட்டு ஒருவர் நிற்பதை மற்றையர் கலைக்காதி
ரார்; அவரைச்சூழ்ந்து, பேச்சுகளை விடுத்து, கேள்விகள் கேட்டு, மனதை
வெளிப்பட இழுக்க, தம் சார்பு எப்படியேனும் வெளிப்படும். மௌனம்
சாதிப்பது எக்கச்செக்கமாம், மௌனமே தம் சார்பை விளக்கலாம். குறி
சொல்லுவார் வழக்கப்படி இரட்டுற மொழியலாகாதோவெனில், அது
வெகுநாட் சமாளிக்காது. வஞ்சகம் கொஞ்சம் செய்யாமல் வாய் அடக்கம்
நிறைவேறாது; வாயடக்கத்தினர்க்கு வஞ்சகம் கைச்சரக்காம்.

III. மூன்றாவதான கபடவேஷமோ வென்றால், அது குற்றமே; காரியக்கேடேயாம். பெருத்த அருமையான சங்கதிகளிற் கபடவேஷம் உதவலாம். மதிகெட்டோ, பயங்கொள்ளித்தனத்தாலோ, உள்ளத்திற் சீர்கேடுகள் இருந்து; அவற்றை மறைக்கும் பொருட்டு, மற்றச்சங்கதிகளிலும் மறைப்பை வழங்காவிடின் மறைக்குந் திறமைதவறுமேயெனப் பயந்தோர் கபடவேஷம் போடுவர்.

(வாயடக்கம், வஞ்சகம், கபடவேஷம் என முவ்வகைப்பட்ட மறைவைக் கரவம் எனக்கீழே தொகுத்துக்குறிப்பம்). நமது கருத்து வெளிப்பட்டால் நமக்கு விரோதிகளாயிருப்பவர் எச்சரிக்கைப்பட்டு, இடைஞ்சற் செய்யலாம். அப்படி நம் கருத்துக்கு விரோதம் உண்டாகாமற் போகப்பார்ப்பது, கரவத்தால் ஆம் முதற்சாதகமாம். நம் கருத்தை முதலிலேயே விளம்பரப்படுத்தினால் அதை முடிக்கவே வேண்டும். தவறின் ஊரார் ஏசுவர், தவறாது என்ற நிச்சயம் நமது வசமன்று. பின்னால் ஏச்சுநேரிடா வண்ணம் முன்னேயே வாயடக்கமாயிருப்பது, கரவத்தால் ஆம் இரண்டாம் சாதகமாம். மூன்றாம் சாதகம் என்னவென்றால், பிறர் உள்ளத்தை அறியவகையுண்டு. ஏனெனில் நினைத்தபடி பேசுவாரை மற்றையர் தடுக்கார், பேசுவார் பேசட்டும் என வாளாவிருப்பர், தம் உள்ளத்து நினைப்புக்களை மறைப்பர், வெளியிடுவதும் இடாததும் தமது உசிதமாதலின் வெளியிடாது நினைப்புக்களைக் கரப்பர். "பொய்விடுத்து மெய்யை யறி" என ஸ்பானியர் சொல்வதுண்டு. கபடவேஷத்தாலன்றி மெய் அறிய ஒண்ணாது என இவர் நினைத்தனர் போலும்.

கரவத்தால் ஆம் சாதகம் மூன்று என்றதற்கு நிரவலாய் மூன்று பாதகங்களும் உண்டு. அதாவது கரவம் பெற்ற நடத்தையால், பயங்கொள்ளித்தனம் ஏற்பட்டுப்போகிறது, வைத்த குறிப்பை எட்ட நேரமுயல்வதற்கு ஊனம் உண்டாகிறது; இது முதல் பாதகம். கரவத்தினர் நோக்கம் வெளிப்படாததனால், இவர்க்குச் சகாயம் செய்யக்கூடியவர்க்கு விலகிநிற்பர்; தம் நோக்கம் கைகூட இவர் தனிப்பட வேலைசெய்யும்படி நேரிடுகிறது. இது தான் இரண்டாவது பாதகமாம். மூன்றாவது பாதகம் தான், மிக்க விரோதம் செய்யக்கூடியது, அதாவது, எவர்க்கும் மற்றையருடைய நம்பிக்கையும் நற்சிந்தையும் அவசிய மாகையால், அவை கரவத்தினர்க்குக் கிடைக்காமற்போம்.

ஆகையால் மொத்தத்தில் ஒருவர் எப்படி நடந்துகொள்ளலாமென்றால், மறைத்தும் பேசுகிறவர் அல்லர் என்று வெளிற் பேர் பரவியிருக்கவேண்டும், தன்னுடைய நினைத்தபடி கொட்டிவிடாது அடக்கம் அப்பியாசமாயிருக்க வேண்டும், அரிதாய்ச் சிற்சில சமயங்களிற் சமயத்துக்கு இசைய வஞ்சமும் இருக்கலாம். கதியாய் வேறுவழியின்றிக் கபடவேஷம் போடாமல்



தீராத சந்தர்ப்பம் நேரிட்டால், கபடவேஷம் வழங்கலாம். இப்படிக் கலந்து போவதே தகுதியாம்.

டி. ஆர். இராமநாதையர்.

---

## குருட்டுப்பையன்.*

(கோம்மி.)

1. ஒளியி னருள்பெரி தென்றுரைப் பீரஃ
தொன்று முனக்குத் தெரியாதென்பீர்
களிமிகு மவ்வொளி யெப்பொரு ளென்றேநீர்
காட்டுவீ ரேழைக் குருடனுக்கே.

2. சூரியன் நற்பிர காசமென் றேமிகத்
துள்ளிக் குதிக்கிறீர் - சற்றுநில்லும்,
சூரியன் சூடுதா னல்லும் பகலவன்
சொல்லுவீ ரெப்படிச் செய்கிறானே?

3. தூங்கும் பொழுதிர வாமன்றி யேயானுந்
துள்ளியா டும்பொழு தேபகலாந்
தூங்காம லென்றும் விழித்திடு வேனாயிற்
றோன்றுமே யென்றும் பகற்பொழுதாய்;

4. என்பெரு மூச்சுட னென்கதிக் காகநீ
ரேங்குகி றீரது வீணலவோ?
நானொரு நாளு மறிந்திலா வப்பெரு
நஷ்டத்தை நன்றாய்ப் பொறுப்பனன்றோ!

5. நான்பெறக் கூடாத வெப்பொருளும்மென்ற
னல்ல களிப்பைக் கெடுக்கவேண்டாம்!
வான்புள்ளைப் போலவே யிப்படிப் பாடவே
வேந்தனைப் போல விருந்திடுவேன்.

---

## கிரேக்கர் பிணநீற்றுக் குடுவை.†

1. அமைதியுரு வுற்றொழுகு மழகினொடு கற்புநிலை
யகலாத பூங்கன்னியே!
ஆயின்முடி வில்லாத நீள்கால மௌனமிவை
யருமையுடன் வளர்குழவியே!

* Cibber's the Blind boy. † Keats's Ode to a Grecian Urn.

குமரிநட மாடுமவன் கதைசொலு புராணிக
குயிலிகழுங் குரலினொடுநீ
கொங்குநிறை கோகனக மாலையென நமதுகவி
மேலுமினி தேசொலுவ்வயே !
அமைவுபெற நினதிடைத் தோன்றுமுரு சுபரலது
மனிதரல திருவர்கதையோ ?
அணிகொளெத் தேவரிவர் ? அன்றியெம் மனிதரிவர் ?
அச்சநிறை கன்னியிவர்யார் ?
தமைமறந் தேனோடும் ? ஏனோ வெருட்டிடுவர் ?
தப்பியுயி ரோட்டமென்ன ?
தாளமொடு தம்புருக் குழலினொடு வீணையேன் ?
தனையறிவில் விவசமென்னோ ?

2. கேட்டபண் ணினிதாயி னும்மதிற் கேளாத
பண்ணினிய தாகுமலவே ?
கீதமிகு மிசைகுழலிர் பாடுங்கள், தூலமாங்
காதினுக் கல்லவெனினும்,
வாட்டமொன் றின்றிநீ பண்மிக வொலித்திடலும்
வசையிலா ஞானசெவியும்
வாய்பிளந் தமுதமென மூழ்குமதி லல்லவோ
வண்ணமினி தாயகுழலே !
வீட்டினையொ ழித்தறுந் தோப்புமர வடிநின்று
வேய்ங்குழ லிசைக்குவேளே !
வாடாது தருவினிலை யுதிராது நீயென்றும்
வாயொராய் பண்ணையொழியாய் !
தீட்டுவேன் முத்தமெற் கிடுபுதுணி காதலா
தீண்டுவது மென்றுமிலையே !
திகையாதி, வாடிடா தவளழகு, நீ நிறைவை
திருவினிட நேசமிகவே !

3. அடரிலைக ளுதிர்காத வன்றியும் வசந்தத்தை
யென்றுமக லாதசுகமே
ஆகா ! நிறைந்தகிளை யே ! யென்று மயராம
லருமையுடன் புதிதாகவே
தொடரிசை சொரிந்திடுந் தூய்மைமிகு மானந்த
சுகநிறையு மிசைவலோனே !
சொல்லுகு லிர்ச்சியாய் சுகமனு பவித்திடத்
தோன்றலுற வென்றென்றுமே



படராசை யேநிறைதல் பார்க்குமா றென்றுமொரு
பசுமையாம் யௌவனத்தைப்
பரிவுட னடைந்தவொரு பக்குவமி கானந்த
பரவசக் காதலே ! நீ
யிடர்நிறையு மானுடர்த மாசைகளை யெல்லோரு
மென்றுமே விடுவை ! இதனை
யெண்ணிடவெ னிதயமும் மேங்கிடுவ தேமுக
மெரிந்திடலு நாவுலருமே !.

4. பூசனைகள் போடவே போகுமிவர் யார்கொல் ? நீள்
பட்டுமயி ரார்ந்துடையெலாம்
பூமாலை மிக்குடைய கன்றுவா னேக்கிப்
புறம்பிட விழுத்திடுவது
வாசனைத் தளிர்கொளெப் பலிபீட மோ ? மூடு
மந்திர நிறைந்தகுருவே !
வாரிதி நெடுங்கரை வியந்திடுமெ வூரன்றி
வரைமுடித் தருமநிலையில்
யோசனைகள் தோறுநற் காட்சியை வியந்திடுமெ
வூரன்றி மேலுநதியி
னோரத்தி லெந்தவூர் பத்தியுட னிக்காலை
யூரார் துறந்தனர்களோ ?
நாசமிகு மூரே ! நி னூற்புறமு நிச்சத்த
நாடுமல வோவின்றைமேல் !
நாடித்த னூர்நாச மானவகை யென்னென்று
நவிலயார் மீண்டிடுவரோ ?

5. அட்டிகா தேசத்தி னருமையாம் விம்பமே
யாடவரு மரிவையருமா
யணிபெறச் செய்துபுற் பூண்டுகள் கிழே
யருங்கிளைகள் மேல்விளங்கக்
கட்டழகு வாழ்ந்தவெண் கல்லுருவ நிலையேமுன்
முடிவிலாக் காலநிலைபோற்
கருத்தினுக் கிசையாத வுருவே கலக்கிடுங்
கல்லாய மௌனவடிவே !
கிட்டியதொர் மூப்பினூற் கெடுமித்த லைமுறை
கிடைத்திடா வேறுதுன்பங்
கேளாது மானுடர்க் கொல்லுழியு மேகுளிர்
குறிஞ்சிநற பாவே ! தினம்

*நட்டியலு நண்பனாய் நல்லழக னுண்மையே*
*யுண்மையே நல்லழகென*
*நவின்றிடுவை நீயிங் கறிந்தும் முணர்ந்திடுத*
*லுடியது மீதல்லவோ ?*

என். எஸ். அருணாசல ஐயர்.

---

# மார்க்கண்டேய கதாமணி.

---

## காப்பு.

### கலிவிருத்தம்.

*" திகட சக்கரச் செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயக*
*னகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்."*

## கடவுள் வணக்கம்.

### சிவபெருமான்

### கலிநிலைத்துறை.

*ஊரி லான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்*
*பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்*
*சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு*
*நேரி லானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்.* (௧)

### சுப்பிரமணியக் கடவுள்.

### குறள் வெண்பா.

*அமரர்க் கபயகர மன்றளித்தெஞ் சந்நிதிவாழ்*
*குமரர்க்கா ளாமென் குறை.* (௨)

### மார்க்கண்டேயனார்

### சிந்தியலிசைக் கொச்சகக் கலிப்பா.

*'மார்க்கண்டப் பெருமானின் கருணையினின் மிருகண்டப்*
*பேர்க்கண்ட வன்றனக்குப் பிள்ளையா நற்றவத்திற்*
*பார்க்கண்ட லங்கணனைப் பத்தியுடன் பூசித்த*

(2) சந்நிதி - புதுச்சந்நிதி யென்னு மொருபெருங் கோயில், "குமரர்க்கு ஆள் நாம்" என்க.



*மார்க்கண்டன் சீர்வாழ்த்தா நாவென்ன நாவே*
*மன்னுதவன் சீர்வாழ்த்தா நாவென்ன நாவே.* (௩)

*'நின்றசீர்த் தவமதனி னேயமுட னிற்பார்க்கெங்*
*கென்றுந்தீங் கொன்றுமிலை யென்றுணர்த்த வந்தெமது*
*குன்றவிலி சேவடியாற் கூற்றுதைப்பித் தெண்விதிவெல்*
*லின்றவன்சீர் கேளாத செவியென்ன செவியே*
*யெம்முனிசீர் கேளாத செவியென்ன செவியே.* (௪)

## அவையடக்கம்.

### அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

*கந்தமெனும் பெருங்கடலு ளரனடியர் காதையொன்று சற்பார்க் கூக்க*
*முந்திமிகப் பயிலுவிக்க முதுமொழிக ளவைசெறித்து முற்று மென்று*
*சுந்தரத்துப் பாசெறியுந் தோன்றலார் பணித்தவழி சொற்றொனித்தைச்*
*சிந்தைமகிழ்ந் தறிவினரு மனம்போல நிலைநிறுத்தல் செய்வார் மன்றோ.*

## கடகமாபுரச் சிறப்பு.

திருமகளாகிய பொன் குலவ, அலைகளாகிய திரைகள் மடிந்து விளங்கச் சுலாய்த் தோன்றுங் கடலை யாடையா வுடுத்து, அருவிமாலை தூங்கா நிற்கும் வடவிமயப் பொருப்பையுந் தென்பொதிய வரையையும் ஆரவடமணிந்தாலும் இருபெருந் தனங்களாக்கொளீஇ, பெருநதிகளாகிய கால்களையும், நீர்நிலைகளாய ஓடைகளையுங் கொண்டொளிரும் பரதகண்டப் பூமகளின் வதன திலகம் போன்றும், தவக்கையினர்க் கணியா யவர்பிரியாது தரிக்கப் பெறுதலாற் கடகமேய்ந்தும் விளங்கா நின்ற **கடகமாபுரம்** எனப் பெயரிய நகரமொன்றுளது. அதனணி கண்டுணரல் ஆயிரம் விழிபடைத்த ஆகண்டலனார்க்கும், இத்தனையவென வகுத்துக் கூறல் அவ்வளவு நாப்படைத்த அனந்த வரவத்தார்க்கும் அம்மம்ம! அரிதரிது சாலவு மரிதே யென்னிற் சிறியனே னளவிற்றாமோ, அஃது ஐந்திணையும் பொலிவுபெற விளங்கும் நாடுகளாற் சூழப்பட்டுள்ளது. "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினுந்-தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்" எனப் புறநானூற்றினும், "கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்-விரிகதிர்வெள்ளி தென்புலம் படரினும்" எனச் சிலப்பதிகாரத்துஞ் செப்பியாங்கு கதிரவன்

(3) கண்டவன் = ஞானக் கண்ணையுடைய தவன். "நாவென்ன நாவே', என்றது மண் மரம் கல் இவையிற்றினுள்ள நாக்களுடன் சிற்கைநா, கலப்பைநா இவையுமுளவென்று அடியார்க்கு நல்லாருரைத்தாராகலின்.

(4) உண்மைச்சரியையினை உலைவின்றித் தாழாதுஞற்றினாராகலின், ஊழையு முப்பக்கங் கண்டனர் என்க. "செவியென்ன செவியே' என்றது மண் மரம் கல் இவையிற்றினுஞ் செவியிருத்தலான். கொச்சகக் கலிப்பா விரண்டும் படர்க்கைப் பரவல்.

மைந்தனாகிய காரிக்கோள் இடபம் சிங்கம் மீனமென்னு மிராசிகளுடன்
மாறுபடினும், தூமகேது தோன்றினும், பரந்த கிரணங்களையுடைய வெள்ளி
மீன்றான் நிற்றற்குரிய வடதிசையினில்லாமே தென்றிசைக்க ணோடினும்,
கருநீற்று வெண்ணீறாந் திருநீற்றைப் பரவப்பூசிய பரமநாதன் றிருமேனி
சிவணநின்ற கருவி மாமழைகள் தாம் மாறுபடாமே கடலகம்புக்குத் தட
நீர் முகந்து, மலைகளிற் சரிக்கு முறவானே யவ் வரையரையன் மகளுருவ
மானப்போந்து படீஇ, அங்கர வேதாகம முழக்கம்போன் முழங்கி, அன்ப
ரிருதயக் குகைக்கணணவும் பரஞ்சோதி நேரத்தடித்து, அஃதவர்க்களிக்கு
மளிபோலத் துளித்துச் சோனைகாட்டி, தம்பருவப் பெயலாகிய பெரு
வளத்தை யென்று மெங்கணும் பொழிதலை யுடைத்து.

அதனானே யாற்றுநீர் தேக்கிப் பருவநோக்கிச் செந்நெற் கதிருடன்
அறுகையுங் குவளையையுங் கலந்து தொடுத்த மாலையை மேழியிலே சூட்
டிப் பூமியை யிரண்டாகப் பிளப்பாரைப்போல, இரப்பவர் சுற்றத்தையும்
புரப்பவர் கொற்றத்தையுந் தம்முழவானே சுரப்பிப்பான் பொன்னேர்
பூட்டி நின்ற கங்கைப்புதல்வராங் காராளர் ஏரைப்பாடும் ஏர்மங்கலப்
பாட்டும், அழுகுசே றறிந்து விளாவி விழுமிய முளைகளை யிந்திரத் தெய்வ
தம் பராய் வித்துந ரோதையும், பறித்து நடுவார் குழனியும், தேவதேவ
பரமாத்தன் ஜீயரைக் காய்ந்து சிட்டரை யளித்தலியையப் பைங்கூழ் அடர்
த்தகளைகளைக் களைதல் செய்வார் கம்பலையும், கல்வி கேள்வி ஒழுக்கிவை
யேறவேற அறிவோங்கி வளர்ந்தாங்கு நீரேறவேற வானுற வளர்ந்த பைங்
கூழ்கள்.

"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விதேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே."—(சிந்தாமணி.)

என்றாங்கு விளைந்தனவற்றை யரிந்து குவைப்பார், இந்நென்மணியைப் பல
வாற்றாற் செலுத்து மறவழியானே திறக்க மிறுப்பது வேண்டா இதனானே
சேறுமென வுரைத்தறுத்தாரா யேறிக்குவித்து விண்ணுறுத்து மேலேறி
நோக்குங்கால், இந்திரன் முதலிய விமையவர் யாவரும் கணிகையர் பாட
லாடற் களிப்பினும், அவர் முதலிய அரமகளிரது வுரைத்தடக் குயத்தடத்
தும் ஓயாது திளைத்திருந்தாராக, அவையிற்றைப் பார்த்திரக்கங் கொண்டு,
அந்தந்தோ! இச்சிற்றின்பமாய அழிதன் மாலையவற்றிற்காகவா பரிமே
தம், வாசபேயம், உத்தியம், அக்கினியாதேயம், அக்கினிட்டோமம், தரிச
பூரணமாசம், சாதுர்மாசியம் அதிராத்திரம், சோடசியாதி யாகங்களையும்,
ஏனைய புண்ணியங்களையு மியற்றுகின்றனர்? யாமினிப் பூதலஞ்சார்ந்து சிற
ப்பு நூலாகிய சிவாகமவிதிப்படியே சிந்தையு மொழியுஞ் செல்லா நிலை



மைத்தாய வந்தமிலின்பத் தழிவில் வீடாகுஞ் சிவசாயுச்சிய முத்தியினையே
விரும்பிச்சரியை யாதி சதுட்டய சாதனங்களையனுட்டிக்க வேண்டு மென்
றெண்ணினார் போன்றிறங்குவார் ஆர்ப்பும், சூட்டைப் பிரித்துத் துவைத்
தற்குக் கடாவிடுகின்றார் பொலி பாடுதலாகிய முகவைப்பாட்டும், தம்முழை
யடுத்தாரைக் குற்றநீக்கிச் சுற்றம் வேருக்கித் தனியோகில் நிறுத்துந் தண்
ணளித்தவரேய்ப்ப, நென்மணியை வைக்கோல் பதரிவை கழீஇத் தம்மில்லி
டத் துறுத்துவாரோதையும், என்று மருதூர்கள் கெழுமிய நாட்டின் வளத்
தது மந்நகரமேயாம்.

அன்றியுங் கடலிலே காற்றான் வந்த நல்லிலக்கண மமைந்த நிமிர் செல
வினையுடைய மன்காளன், சாரங்கன், கங்காநீலன், மௌவழகன், கொங்கா
ளன், சன்ன சம்பான், குங்குமச்சோரன், கரியான், நீலன், சாரன், மள்
ளான், உரஞ்சிவந்தான், நல்லான், கருங்காற் சம்பானாதிய பெயர்களை யுடை
யனவாய், சுவரிதகம், ஆக்கிரந்திகம், வல்கிதம், இரேசிதம் என்னு நடை
பயின்றனவாய் விளங்கும் பரியினங்களும், கோசிகம் பீதகம் பச்சிலை அரத்
தம் நூண்டுகில் சுண்ணம், வளநம் பஞ்சு கிரட்டு பாடகம் கோங்கலர் கோ
பம் சித்திரக்கம்மி குருதி கரியல் பேடகம் பரியட்டக்காசு வேதங்கம் புங்
கர்க்காழகம் சில்லிகை தூரியம் பங்கம் தத்தியம் வண்டை தவற்றுமடி நூல்
யாப்பு திருக்கு தேவாங்கு பொன்னெழுத்து குச்சரி தேவகிரி காத்தூலம்
இறஞ்சி வெண்பொத்தி, பணிப்பொத்தி யென்று சொல்லப்பட்ட ஆடைத்
தொகுதியும், மலைபாரம், திமூரன் பச்சை, கிழான் பச்சை, பச்சை வெட்
டை, அரிசந்தனம், வேர் சுக்கொடி யென்றறைபப்பட்ட ஆரத்துவையும்,
அம்பரேச்சம், கத்தூரி, சவாது, சாந்து, குங்குமம், பனி நீர், புழுகு, தக்கோ
லம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், வசு வாசி, கிரியாசம் தைலமென்னும்
வாசவர்க்கங்களும், மேருவிற்றோன்றிய மாணிக்கமும், சாம்பூநதப் பொன்
னும், செந்தமிழ்ச் செவிலியாய்ச் சகத்திற்கதித்த தவத்தின் மிகுந்த அகத்திய
னார் எழுந்தருளும் பொதியத்திற் பிறந்த சந்தனம் அகில் என்பவற்றின் தொ
குதியும், யவன தேசக் கண்டு சருக்கரையும், எழில் கழீஇ விளங்கு மிலங்
கை நகரத்தினிய வுணவும், ஆண்டுக் கடலிலுண்டாஞ் தெளியொளி முத்தக்
குவியலும், சுரநதிப்பொருளும், காவிரிப்பயனும், கடார தேசத்ததாறுகரும்
பொருளும், இவை யொழியப் பெரியவு மரியவு மாகிய பலவகைப் பொருள்
களும் நிலமங்கைப் புறநெளிய வந்தவந் திண்டி யினிதாகத் தங்குகையினு
லே வளத்தின் றலைதெரியா வகனிட ஆவணங்களையும், விண்ணவருலகமும்
அடிவீழ்ந்து வணங்க வுயர்ந்தமாட மாளிகைகளும், மணவிழவறா மறுகர்களை
யுங் கொண்ட பெரும்புகழது மதுவேயாம்.

ஆண்டுள்ளாரோ கல்வி கேள்விகளாற் சிறந்து அமரர்ப்பேணியும், ஆவு
கிகளை யருத்தியும், நல்ல பசுக்களோடு எருதுகளைப் பரிகரித்தும், அந்தணர்

க்குளவாம் புகழ்களை நிலைபெறுத்தியும், புண்ணியங்களைச் செய்தும் அவையிற்றைச் செய்யமாட்டார்க்குத்தாந் தானமுதவியும் பசும்பத மீந்தும் இங்ஙனம் அறத்தொழின் முட்டுப்படாக் குளிர்ந்த அருளுடனே வாழுந்தகைய தலையாயாரென்க.

## மிருககண்டுயேர் தவவிசேடம்.

இன்னன சிறப்புக்கள் வாய்ந்த எந்திர துவசங்க ளியைந்து, கதிர்மதி செலவைத் தடுத்துயர்ந்த மதிலாற் சூழப்பட்ட நகரத்திலே, நைமிசாரணியமும் நிகரின்றி விளங்குந் தவாரணியத்திலே, ஒருமையுறூஉம் இருபிறப்பாளர் கோமானும், முக்கணுற் பெருந்தோளுடை யைம்முகக்கடவுளாம் அறுமீன்காதலனை யீன்ற எழுவகைப் புவனத்து மெண்வகை யுருக்கொடுவிளங்கி, ஒன்பானுருக்கொடு நடிக்கும் பத்துத் திருக்கரங்களையுடைய அதிபரமாத்த பதியாகிய பரமசிவனது திருவடிகளையே பற்றுக்கோடாக்கொண்டவராய், தங்கண் ஒன்றிலேயே ஆலத்தையு மமிர்தத்தையும் பொழிந்துவைத்திருக்கும் மங்கையர்மயக்கான் மாழ்காதவராய், பஞ்சாக்கினி மத்தியின்று பஞ்சேந்திரியங்களையு மவித்து, பஞ்சாக்கரத்தையுன்னிச் செய்யுந்தவத்திற் றமக் கொப்புயர் வில்லாதவராய், சத்துவ குணக்குன்றமாய், சந்தேக விபரீத மயக்கஞான மில்லாராய், விபூதி ருத்திராக்க தாரணராய், வேதாகம உபநிடத சித்தாந்த புராணேதிகாசாதி வித்தியாபாராவாரமாய், தத்துவஞானத் தலைஇயராய், ஆதிசைவசாரிய பீடமாய் விளங்காநின்ற குச்சக முனிவர் என்பார் ஒருவர் இருந்தனர். அவர், விண்ணிலத் தருகிக்காணும் மேதகு வடமீனன்றி யிம்மண்ணிடத்து நேர்சொல மடந்தையர் யாருமில்லாத பண்ணையும் வென்ற தீஞ்சொற் பாவைத் திருவனை மணந்து, அவளுடன் காகத் திருவிழிக்கு மொரோமணி கலந்தாங்கு இருவராகத்து மோருயிர்பெற்றாற்போது முழுவலன்புடையராய் வாழுங்கால், அம்மாதுசிரோமணி தன் குடித்தவப்பயனெலாந் திரண்டொரு வடிவெடுத்தாற் போன்ற ஓர்குமரனை வயிறு வாய்த்தின்றாள். அவற்குக் கௌச்சிகன் என்று பெயரிட்டனர். அக்கௌச்சிகவிருடியனார் "மகனறிவு தந்தையறிவு" என்பதற்கிணங்கித் தந்தைபோன்ற நற்குண நற்செய்கையுடையராய், வேதசிவாகமமெய்க்கலைகளில் விற்பன்னராய், "மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை-யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளியதற் கிலக்கியராய் ஒழுகு நாளிலே பதிபசுபாசங்களி னிலக்கணங்களை யுணர்ந்தா ராதலின் நித்திய வநித்திய வஸ்து விவேகந் தோன்ற இகமுத்திரார்த்த பலபோக விராகம் பிறந்து முமுட்சுத்துவ முற்றாராய்த் தம்மனத் தின்னன மெண்ணுவ ராயினர்.

ஆன்மாக்களுக்குப் பிறவிவருவது இருவினையின் காரணத்தினாலன்றோ? அப்பிறவி யென்பது இருக்குமளவையுந் துன்பமென்பன அகலாவாம். அதனைக் கடக்கலாமோ வெனில் எளிதன்று. தோன்றல் ஒடுங்கல் என்னுஞ்சுரப்பு வற்றுப்புக்களை யுடையனவாய், மதியை விழுங்குங்காமம் என்னும் பெரும்பாம்பு நீங்கா துறைவனவாய், விடயங்களாகிய இரைகளை நுகருங் கரணங்கள் என்னும் மீன்கூட்டங்கள் சுழல்வனவாய், பெருமிதம் என்னும் பரப்பையுடையனவாய், நோய்கள் என்னும் ஒழியாத புலால்மணம் வீசுவனவாய், மாறிமாறித் தோன்றி மடங்குஞ் சுகதுக்கங்கள் என்னும் அலைகள் மோதுவனவாய், மனம் ஆகிய வஞ்சராச மகராமுழல்வனவாய், அடங்குத லில்லாத அகங்கார மமகாரங்களாகிய ஆமைக் கணங்கள் திரிவனவாய், அவா வென்னு மளவு கடந்த ஆழத்தை யுடையனவாய், களவாகிய பாரும் மலையு முள்ளனவாய், கலகமென்னும் விடங்கள் தங்கிய புழுக்கள் நெளிவனவாய், குற்றங்களென்னும் நுரைக டோன்றுவனவாய், சிந்தைக்கு மொழியுஞ் செல்லாநிலைமைத்தாய அத்துவித முத்திக்கரையைச் சேராமே விலக்கித் தமக்குளகப்படுத்தும் அரிவைய ரென்னுங் கொடுஞ்சுழிகளை யுடையனவாய், கோபமாகிய வடவாமுகாக்கினி கொதித்தமர்வனவாய், யாவருங் கண்டஞ்சத்தக்க போகம் என்னும் முதலைகள் பொருந்துவனவாய், மூலமலம் என்னும் உவர்ப்புக் கலந்தனவாய், யோனிபேதங்களாகிய எண்பத்துநான்கிலக்கந் துறைகளையுடையனவாய், விளங்குந் தேவர் மனிதர் விலங்கு பறவை யூர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறவிப் பெருந்துன்ப சாகரங்களா யிருக்கின்றன. இவைகளையெல்லாஞ் சர்வதத்துவ பிரேரகராய சிவபெருமானது திருவடியாகிய தெப்பத்தைக் கொண்டு கடத்தலன்றி, மற்றையவைகளாற் றுண்டி முத்திக்கரைசேரன் முடியாதுமுடியாது. என்றிவ்வாறு ஒருமையுடனுணர்ந்து, அத்திருவடியாகிய தெப்பந் தவமென்னு மரும்பொருளீட்டத்தானே வாய்க்கும்.

" தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்த்
தவந்தனை நேர்வது தானு மில்லையாற்
றவந்தனி னரியதொன் றில்லை சாற்றிடிற்
றவந்தனக் கொப்பது தவம தாகுமே"—(கந்தபுராணம்.)

என்று கடைப்பிடித்துத் தந்தையிடம் விடைபெற்றுத் தவங்கிடப்பான் கானகம் பெயர்ந்தனர். போந்தார் ஓர் தண்புனற் பொய்கை மருங்கிற்சார்ந்து, ஆசனவகையு ளொன்றினமர்ந்து, பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்து, பிரத்தியாகார தாரணைகளை முடித்து, ஆக்கினைத்தானத்திற்குமேல் ஆயிரவிதழ்க் கமலக்கண் அரன் அம்பிகை கந்தக்கடவு ளாயமூவரும் விளங்குகின்ற சோமாஸ்கந்தமூர்த்தத்தைத் தியானித்துப் பற்பலவருடம் அருந்தவ மிழைப்பாராயினர்.

இங்ஙனம் அங்கட் பதுமைபோ லசையாமே மௌன முற்றும் உணவுறக்க நீத்தும், ஐப்புலன்களையு மொருவழிப்படுத்தியுங் குற்றமற நோற்கும்

வேலையிற் பசுக்கள், எருது, எருமை, கடமை, மான், மரை முதலிய மிருகங்கள் ஆண்டணுமித் தத்தங் காயங்களினுற்ற கண்டூயங்களை நீப்பாணிலார்ந்து அன்னவர் வடிவத் துரோஞ்சிச் செல்லுமென்ப - தெளிந்திசினோர். அங்ஙன முறைத்தவழியும் யாவது மறியாராய் நோற்று நிற்க, முனிவர் யாருமிவர்க்கு நிகரலரென்று உம்பரு மிம்பரு முரைகொண்டாட, அதனை யறிந்த காவற்கடவுளாகிய பதும நாப மூர்த்தியும், இஃது முன்னைநாளிற் றிரிபுரமெரிசெய்தழித்த விரிசடைக் கடவுளின் றிருவருளென்று மீப்புகழ்ந்து, அவர் தவவிசேட மறிப்பா னுவணூருடராய்த் தேவகணம் போற்றச் சேணிடைச் சேருபு நின்று திருநோக்கஞ் செய்தருளினர். செய்தார் நிகழ்ந்தன கண்டு அற்புத மெய்தி, இருடி குமாரரின் அருந்தவத்தைச் சீராட்டியவர் முற்சென்று, எற்படு முடம்பைத் தமதெழில் வாய்ந்த மலர்க்கரங்கொடு தைவந்து, 'மாசறு மைந்த! மிருகங்கள் வந்து தம்மெய்க் கண்டூயந் தீர்ப்பான் வன்மையோ டுரைக்குந் தோறும் துளங்கலாகா நிலையையுந் தோற்றத்தையும், அளக்கலாகா வளவினையும் பொருளையும் நீ கொண்டிருந்தமையாற் றவக்குன்ற மென்பதற் கிலக்கு நீயே. ஆகலின் மன்றச் சிறந்தனை, நின்ற புகழினை. நிற்கு இற்றை முதன் மிருக கண்டூயன் என்னுஞ் சிறப்புப்பெயர் வழங்கப்படுக' வென்று திருவாய் மலர்ந் தருளிய மாத்திரையே முனிகுமரனார் உளந்துடிக்க, உடனடுங்க, விழி நீர் சொரிய, உரோமஞ் சிலிர்ப்ப, உரை தடுமாற, கரங்கூம்ப வெழீஇ, ஆனந்தக் கூத்தாடி வணங்கி அன்புடன் றுதிப்பாராயினர்:

சீத ராவுமை சேர்த ராவெம தீத ராவர நாமதா
மோத ராவன மாலை சூடு முகுந்த ராச சகுந்தமூர்
நாத ராவணை யேக்க டிந்திடு நார ணாதழ ணூறுகட்
காத ராவினை மீது கண்டுயில் கண்ண னேகடல் வண்ணனே.

அச்சு தாமுத மச்சு தாகர னன்ன கோதை யசோதைதன்
கச்சு லாமுலை யுண்டு பண்டவள் கைய ணைத்துயில் கொண்டிடு
மெய்ச்சு தாயசு மைச்சு வாசக மென்மொ ழித்திரு நாயகா
நச்சு வாயர வுச்சி மீது நடித்தி டும்பத நளினனே.

சாலி நேர்தரு தாலை யைக்கதிர் தந்த சேய்பெற முந்தைநாள்
வாலி மார்பக மூடு நீடிய வாளி யேவிய மீளியே
யாலி யூரவரு மலைகை தன்முலை யமுதொ டாவி யருந்திமுன்
காலி னூனருள் சகடு தைத்தருள் கடவு ளேகரு ணாகரா.

கேச வாவலி ரோச னற்கெதிர் கிட்டி மூவடி மண்கொளும்
யாச காநர சிங்க மாய்முத லிரணி யற்றெறு முரணினோய்
வாச வாரிச லோச னாம்யில் வாசி யூர்குகன் மாதுலா
தேசி னூயர் தேவ கிக்கொரு செம்ம லாய்வரு செம்மலே.



என்றின்னனவாய துதிகள் பலப்பல மொழிந்து விழுந்து வணங்கியெழுந்தனர். அப்போழ்தத்து ஒருபெருங் கொற்றப்பரிதி முதலா நின்றவைம்படைக்கைப் பதுமநாபன், அங்கவனை நோக்கிச் சிவஞானப் பெருஞ்செல்வத் தவமுனிவ! ஒருகலைப் பிறைக் குழவியைப் பகையரவுட னுலவிவளரப் பணித்தருளி, ஒரு மானை வலத்தும் ஒருமானை யிடத்து வைத்து, உலகு போற்று மறுமுகத்தானை யளித்தான்றன் பூரண திருவருணின்பாற் பொலிக. கழி பிறப்புக்க டோறுங் கெழுமிய பாவங்க ளொழியக்கடவனவென மாற்றம் வழங்கிப் புலவர் குழாத்துடன் பொம்மெனக் கரந்தனர்.

பின்னர் முனிவரனார் முப்புர மெரித்த முக்கட் டேவதேவன் றடங்கருணையால் அகமிக மகிழ்ந்தூங்க, வல்விரைந்து பன்னசாலை நோக்கிச்சேருநிற்ப, ஆண்டுள குச்சக விருடியார் நோற்பான் போந்த கான்முளை பன்னாள் கழிந்தும் இந்நாளும் வந்திலனே. என்று, "கடந்த ஞானியர் தாங்களு மறப்பரோ மக்கண்மேற் காதல்" என்றபடி புத்திர சோக முற்றாராய், பூங்கதிர் வரவு பார்க்கும் பொற்ற புண்டரீகம் போலவும், சந்திரோதய நேடுந் தடவரக்காம்பல் சிவணவும், ஓங்கிய கார்மஞ்சு தேடும் ஓர் மஞ்ஞைமானவும், நீருருகை நோக்கும் அறனசையாள னன்னவும், ஆறுறுக் கப்புறத்தே யிருத்தவல்ல ஞானசாரியன் வருகையாயும் அதித்தீவிரபக்குவி நேரவும், பொருள்வயிற் பிரிந்த காதலன் வரவு பார்க்கும் பத்தினிப் பெண்டிர் புரையவும், இவரது வருவானேக்கும் பயிர் கடுப்பவும், கோனேக்குங் குடியேய்ப்பவும் இவரது வருகையை யெதிர்பார்த்திருப்ப, அந்த வளர்மறை யாகம வுணர்வு வண்மை படைத்த வுறவரும் அவட்சென்று தாதை பாதத்தில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்க, அவரும் அருந்துணை விழந்தோ னண்டரமுதத்தை யெதிர்கண்டாற் போலவும், வருந்து மிடியன் சேமவைப்பினைப் பெற்று லொட்டவும், ஊரையிலாக் களிகொளீஇக் கலைத்தோற் றவிசினின்றெழீஇக் கரை யுடைத்தெழு நீத்தம் போற் பேரன்பு பொங்கப் புதல்வனை யெடுத்து உச்சி மோர்ந்து மடிக்கணிருத்திப் புறந்தடவி மகிழ்வுட னுரைப்பாராயினர்.

(இன்னும் வரும்)

நா. கதிரைவேற் பிள்ளை.

# ஆசார விளக்கம்.

---

### சூத்திரம். 2.

### இனி நன்னூல் சூத்திரம்.

“ அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.”

எனக்கூறுதலானு மக்குணங்கள் மக்கள் விலங்கு புள்ளாதியுயிர்களு க்கு ஒரு சில வேறக்குறைய வுண்டென்பது தெற்றென விளங்கும்நூலோ ர்வு (அறிவுவளர்ச்சி) ஊகம் மறுமை பேணல் (தெய்வங்கொளல்) மூன்றுமே மனிதர்க்குண்டாம்விசேட ஞானங்களாம். இதனையே பகுத்தறிவு விவேகம் என்பர்.

சிலர் உலக ஞானமாத்திர முடைமையால் திரியக்காதி ஜெந்துக்களுக் குக் குறுக்குடலும், கீழ் நோக்கியமுகமும். இகபரசுக மிரண்டு நோக்குந் தகையுடைமையால் மானுடர்க்கு மேனோக்குடலும், கீழ் மேன்மையமாக (குறுக்கு) முகமும் அமைக்கப்பட்டுள்ளன வென்பார்.

ஆசாரத்தாற் பெறுஞ்சுகம், இம்மைச்சுகம், மறுமைச்சுகம் எனவிருபா ற்று. அவற்றுளிம்மைச் சுகம் மக்கள் விலங்காதிகளுக்குப் பொது. மறு மைச்சுக மானுடர்க்கு விசேடம். அஃது விவேகத்தாற் பெறத்தக்கது. அவ்விவேக (பகுத்தறிவு) விசேடம் பற்றி நரர்க்கு மனிதர் என்று பெயரா யிற்று. (மனிதன் என்றபதம் மந் * என்னும் தாதுவினடியாகப் பிறந்த பெயர்.) விலங்கு பக்ஷியாதியொப்ப மறுமைச்சுகம் வேண்டாருள்ளும் இம் மைச்சுகம் வேண்டாரிலர். மறுமைச்சுகம் வேண்டுநரும் சரீரசுகமின்றி அஃது சாதித்துப்பெற முடியாத தொன்றாதலால் அவர்க்கும் (சரீராதிசுகம்) அவசியமே.

### திருமந்திரத்தில்.

“ உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை யானிருந் தோம்புகின் றேனே”

---

* மந்=அறி=to know + நித=மனித= அறிந்த=known,



என்று கைலையங்கிரியில் எழுபதுகோடி யுகம் யோகுவீற்றிருந்த திருமூல நாயனுரே மறுமைச்சுகங்களைத் தரத்தக்க ஞானம் உடம்பின்றி யெய்தாது, அவ்வுடம்பு கூடியிருக்கினும் அஃது நன்னிலையிலிருந்தாலன்றி அஃதேலா வாகலின் உடலை நன்னிலையில் வைத்துக் காக்கவேண்டுமென்று குறித்தலும் இதை வற்புறுத்தும். இக்கருத்தையே ஔவையார் நூறளில் “ தருமம் பொருள்காமம் வீடெனு நான்கு, முருவத்தா லாய பயன்” என விளக்கினர்.

விலங்காதி யுயிர்களுக்கு நூலுணரறிவின்மையின் அஃதுடைய மனி தரில் ஜாதி தேச மதப் பகுப்பின்றி இம்மைச்சுகம் வேண்டுநர் இம்மை மறுமைச்சுகங்கள் வேண்டுநர் என்ற விருதிறத்தின ரனைவருக்கும் அன்ன வர்க்கு நன்மையடைவழி போதித்தற் பொருட்டே இந்நூலென்பான் “ நலத்திலார்வத்தவர்க்கே” என்னப்பட்டது.

தன் சுகத்துக்கேற்ற நல்லாகாரந் தேடல், குளிர் காற்றுதியிடையூறு நீக்கும் சுத்தமான நல்லில்ல மியற்றிக் கோடல், தன்னினம் பேணியூட்டல் குளித்தல், முதலிய வாசாரங்களை எறும்பாதி யுயிர்களிட மானுடருங்கற் றுக்கொள்ளலாமென ஆன்றோரு முணர்த்திருக்கின்றனர்.—அஃது

“ நற்தெறும்பு தூங்கணம்புட் காக்கை யென்றிவைபோற்
றங்கருமம நல்ல கடைப்பிடித்துத் —தங்கரும
மப்பெற்றி யாக முயல்பவர்க் காசார
மெப்பெற்றி யானும் படும்.”—ஆசாரக்கோவை 96.

முதலிய வாக்கியங்களால் விளங்கும்.

இனி ஜடபதார்த்தங்களில் அயங் காந்தங்கண்டு சாரல், ஓரினவணுக் கள் தம்மினஞ்சாரல், வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் முதலிய தம்வடிவுகாத்தல் முன்னுள இனத்தோடுசாரூல் இனத்தொடுசார்ந்து தம் மைப்பருக்கச் செய்தல், முதலிய தொழிற் பண்பு பண்புகள் விளங்கக்காண் டலின் அவையிற்றிற்கு மறிவுகோடலி னிழுக்கென்னெனில் அவையாவும் அப்பொருட்களின் குணபேதங்களன்றி உயிரொடுகூடி யுணருமுணர்ச்சி யன்றெனவிடுக்க. இஃது நன்னூல் “வானவர் மக்க ணரகர் விலங்குபுள் ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே” “பல்வகைவடிவிரு நாற்றமைவண் ணம், அறுசுவையூறெட்டுயிரல் பொருட்குணம்” “தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல், நீங்க லடைத னடுங்க லிசைத்தல், ஈதலின்னனி விரு பொருட் டொழிற்குணம்” முதலியவற்றலோர்க.

சுகத்தில் விருப்புள்ளவன் ஆசாரத்தை விரும்ப வேண்டும் என்பதற் குப் பிரமாணம் மநுதர்ம சாத்திரம், அத். 108-சுலோகம்,

ஆசார: பரமோ தர்ம: ஶ்ருத்யுக்த: ஸ்மார்த்த ஏவ ச ।
தஸ்மாதஸ்மின் ஸதா யுக்தோ நித்யம் ஸ்யாதாத்மவான் த்விஜ: ॥

(இ-ள்) வேதத்திலும் ஸ்மிருதியிலுஞ்சொல்லப்பட்டஆசாரமேஎல்லோருக்கும் முக்கிய தருமமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் சுகப்பட இச்சையுள்ளவன் இந்தச் சாத்திரத்தில் முயற்சியுள்ளவனாயிருக்க வேண்டியது.

திருவள்ளுவர் குறள்.

"பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை."

பராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் 37-ஆம் சுலோகம்.

சதுர்ணாமபி வர்ணாநாமாசாரோ தர்மபாலக: ।
ஆசாரப்ரஷ்டதேஹாநாம் பவேத்தர்ம: பராங்முக: ॥

ஆசார நிருபணம் - (இ-ள்) நான்கு வருணத்திற்கும் தருமத்தைக் காக்கத்தக்கது ஆசாரம், அதைத்தவறின தேக முடையவர்களுக்குத் தருமம் முகங்காட்டா தொழியும் (எ-று)

ஆசாரத்தினாற் சகலரும் ஆயுள் செல்வம் இகலோகசுகம் பரலோகசுகம் இவைகளைப்பெறுவார்கள். ஆசாரந்தவறினவர் இவைகளைப்பெறுவதில்லை, ஸத்புருஷருக்கு ஆசாரம் லக்ஷணமாமென்று பாரதம் ஆநுசாஸநிகபருவங்கூறுகின்றது. ஆரணிய பருவத்திற் கோபம் பொறாமை அகங்காரம் பிடிவாதம் இவைகளற்று நடுவுநிலைமை சாந்தி முதலிய குணங்களை யுடையவர்களே இஷ்டர். அவர்களதுஅநுஷ்டானமேஆசாரமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக மநுபோதாயனர் முதலானோர் கூறினார்கள். இதனால் நான்கு வருணத்தார்க்கும் பொதுத்தருமத்தைச் சிறிதுகூறவேண்டுமென்று கேள்விசெய்த வியாசருக்குத் தருமத்திற்குக்காரணமாகிய நல்லொழுக்கத்தைப் போதுதருமமென்று பராசரர் உத்தரம்அருளிச்செய்தார்." இவைபோன்றன பலவுள. விரிவஞ்சி விடுத்தாம்.

இனிச்சூத்திரத்து ஆகமம் என்றுகூறி உரையில் வேதம் எனச்சுட்டியதெஃதாமெனில் ஆகமம் என்றபதம் வேதத்துக்குப்பரியாயநாமமாதலாலும், வேதம் (வித்=ஞானம்) வித் என்னும் தாதுவினடி யாகப்பிறந்த வேதம் என்றசப்தம் தர்மாதர்மங்களை யறிவிக்குநூலுக்கு (அறிதற்கருவிக்கு)ப் பெயர், ஆகமம்=ஞானம் (அறிவு) சகலஞானங்களையு மறிதற்கருவிக்கு (அல்லது வருவித்தற்கருவிக்கு) ப்பெயர். இவ்விரண்டு சப்தங்களு மொருபொருட் கிளவிகளாதலாலும், அங்ஙனங்கூறப்பட்டது. (பெயரானும்பொருளானு மொற்றுமையுறினும் இருவேறு பகுதிகளையல்லது நூல்களையுணர்த்தவேண்டுதலின் இரட்டுறமொழிதலென்னு முத்தியாற் கூறப்பட்டதென்பாருமுளர்.)



உண்மைப்பொருள்களைக் கேட்டற் கருவியாதலாற் சுருதி யென்றும், நியதமாக வுணர்தற்குக் கருவியாதலால் நிகமம் என்று, ஆதிகுருவினின்றும் தொடங்கிப் பாரம்பரியமாய்ப் பயிலப்படலால் ஆம்நாயமென்றும், சுயம்புவாகிய பதியினின்றுந் தோன்றினமையாற் சுயம்புவென்றும், பேர் பெற்றவேதம் பொது சிறப்பென விருபாற்று. சதாசிவப் பிரமத்தினது தற்புருடாதி நான்குமுகங்களிற் றோன்றிய இருக்காதி நான்கும் பொது, ஊர்த்துவமுகத்திற் றோன்றியகாமிகாதி இருபானெட்டும் சிறப்பு எனப்படும். சுருக்கிக் கூறலாம் வேதம் சூத்திரம்; விரித்துக் கூறலாம் ஆகமம் பாடியம் என்பாருமுளர். உதாரணமாக "லிங்கார்ச்சனை யுயர்ந்த பலன்றரும்" எனவேதம் (சூத்திரம்) கூறும், ஆகமம் (பாடியம்) லிங்கவேதங்களித்தனை, இஃதிஃதிப் பலன்றரும், அநுட்டிக்க வேண்டிய பக்குவர் இத்தகையார் என்றுகூறி, அது புரிபவனியற்ற வேண்டிய சௌசம் (சுத்தி) ஸ்நாநம் ஸ்களீகரணம் கரந்யாசியம் அங்கந்யாசம் பிராணாயாமம் சந்திமார்ஜ்ஜநம் தர்ப்பணாதிகளும் பூஜையிற் செய்ய வேண்டிய அந்தர்யாகம் தானசுத்தி திரவியசுத்தி ஆசனம் பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் அபிஷேகம் தூபம் தீபம் நைவேத்யம் அருச்சனை தோத்திரமாதி யுபசாரங்களும், ஆலயாதி நிர்மாணக்கிரமங்களும், பிரதிஷ்டாதி கிரமங்களும் நன்றுப் ஒழுங்காய் விளங்கவிரித்துக் கூறும். ஆகமாதாரமன்றியே புராணங்களும் மிருதிகளும் விளங்குகின்றன. இன்றேல் (ஈசுர வாக்யாதாரமின்றி) அவை பிரமாணமாகா தொழியுமென்றுணர்க. வேதம் சூத்திரமாதலால் அதிற் பலபரிபாகிகளுக் கவசியமான பூர்வபக்ஷ சித்தாந்தங்கள் ஞானநுபவ முடையாரன்றி ஏனையர் அறியக் கூடாதபடி கலந்து கிடக்கின்றன. ஆகமம் ஆக்கியோனாற் செய்யப்பட்ட பாடியமாதலாற் பூர்வபக்ஷமிஃது சித்தாந்த மிஃது என ஐயந்திரிபற வெத்தகைப் பரிபாகிகளு மெளிதிலுணருமாறு விளக்கப்பட்டிருக்கின்றது. ஈசுரவாக்கியங்களில் மூலாகமங்களைப் போல ஒவ்வொரு விஷயத்தையும் பற்றித் தெளிவாயும் ஒழுங்காயும் பூரணமாயும் விரித்துரைக்குஞ் சாத்திரம் வேறின்று. முற்றுணர்ந்த ஆக்கியோனன்றி யேனையர் உண்மைகண்டு கூறல் அசாத்யமாகலிற் சதாசிவப்பிரமத்தாற் கூறப்பட்ட காமிகாதி யாகமங்கள் சித்தாந்த மென்னப்பட்டன. அவைகள் பாசுபதம் காளாமுகமாதி மதங்கூறியவாகம பாகங்களைப் பூர்வபக்ஷ வாதங்களெனக் கண்டிப்பதாலு முண்மை தெற்றென விளங்கும். ஆதலால் முற்றுணர்வற்ற சிஞ்சிக்ஞர் தத்தமக்கொத்தவாறு பாடியங்கூறல் ஒன்றுக்கொன்றெவ்வாப் பூர்வபக்ஷங்களு முள்ளிட்டனவாம், ஆக்கியோன் பாடியக்கருத்தை யொட்டிய பாடியமே சித்தாந்தமாம். இவை முன்னனையாவு முற்றுமோர்ந்தே நீலகண்ட

பாடியக்காரரும் "வேதாகமங்களுக்குப் பேதங்காணேன்" என்றனர். (வேதாகமாதி) சகல சாஸ்திரங்களையும் மகாதேவனாகிய மகேசுவரன் செய்தா னென்பது பாரதம் சாந்திபருவம்.

"ஸர்வஜ்ஞேந ஸர்வஶாஸ்த்ராணி ப்ரோக்தானி மஹேஶ்வர:"

முதலிய வாக்கியங்களால் விளங்கும்.

ஆகமாதி.ஐந்திறப்படி நூல்கள் வருமாறு: வேதம்—இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம். வேதாந்தங்களாகிய உபநிடதங்கள்: 108. திராவிட வேதம்: 2. தேவாரம் திருவாசகம்.

## ஆகமம். 28.

1. காமிகம்
2. யோகஜம்
3. சிந்தியம்
4. காரணம்
5. அஜிதம்
6. தீப்தம்
7. சூக்குமம்
8. சகச்சிரம்
9. அஞ்சுமான்
10. சுப்பிரபேதம்
11. விசயம்
12. நிச்சுவாசம்
13. சுவாயம்புவம்
14. ஆக்கினேயம்
15. வீரம்
16. ரௌரவம்
17. மகுடம்
18. விமலம்
19. சந்திரஞானம்
20. முகவிம்பம்
21. புரோற்கீதம்
22. லளிதம்.
23. சித்தம்
24. சந்தானம்
25. சர்வோக்தம்
26. பாரமேசுரம்
27. கிரணம்
28. வாதுளம்

உபாகமங்கள்: 224.

புராணங்கள்: 18.

### சைவ புராணம். 10.

1. சைவம்
2. பவிஷியம்
3. மார்க்கண்டேயம்
4. இலிங்கம்
5. ஸ்காந்தம்
6. வராகம்
7. வாமனம்
8. மச்சம்
9. கூர்மம்
10. பிரமாண்டம்

### வைணவ புராணம். 4.

11. காருடம்
12. நாரதீயம்
13. வைணவம்
14. பாகவதம்

### பிரம புராணம் 2.

15. பிரமம்
16. பதுமம்



### சூரியபுராணம். 1.

17. பிரமகைவர்த்தம்

### அக்கினி புராணம். 1.

18. ஆக்நேயம்

### இதிகாசங்கள்.

1. பாரதம்
2. சிவரகசியம்
3. இராமாயணம்.

## மிருதிகள் 18.

1. மனுமிருதி
2. பிரகற்பதிமிருதி
3. தக்கமிருதி
4. யமமிருதி
5. கௌதமமிருதி
6. ஆங்கிரமிருதி
7. யாஞ்ஞவல்கியமிருதி
8. பிரசேதமிருதி
9. சாதாதபமிருதி
10. பராசரமிருதி
11. சம்வர்த்தமிருதி
12. உதனமிருதி
13. சங்கமிருதி
14. லிகிதமிருதி
15. அத்திரிமிருதி
16. விஷ்ணுமிருதி
17. ஆபத்தம்பமிருதி
18. ஆரீதமிருதி

## ஆயுள்வேதம். 1.

### ஆயுள்வேத வழிநூல்கள்.

ஸ்ரீகண்டர் ஜீவரக்ஷாமிர்தம் 12000
சரகம்
வீமபாகம்
நளபாகம்
அகஸ்தியர்
கொங்கணர்
இராமதேவர்
கருவூரார்
கோரக்கர்
பாம்பாட்டிச்சித்தர்
கஜசாஸ்திரம்
அசுவசாஸ்திரம்
கோசாஸ்திரம்
திருமூலர் திருமந்திரம்
மச்சமுனி
தன்வந்திரிபகவான்
போகர்
சட்டைமுனி
திருமூலர்
நந்தீசுரர்
தேரையர்
பதார்த்தகுண சிந்தாமணி
தைலவருக்கச் சுருக்கம்
அகப்பேய்ச்சித்தர்
யூகமுனி
பிரமமுனி
புலிப்பாணி முனிவர்
திருவள்ளுவர்
கௌயாலிசித்தர்
மாந்திரீக நூல்கள்

முதலிய சித்தர்களின் வைத்திய மாந்திரீக நூல்கள்.

### உபாகமம் சிவதருமோத்தரம்.

### சிவாகமம் பத்துக்கும் வழிநூலாதும் பத்ததிகள். 18.

1. தூர்வாச சிவர்பத்ததி
2. பைங்கள சிவர்பத்ததி
3. உக்ரஜ்யோதிபத்ததி
4. ஸ்ரீகண்டர்பத்ததி

5. விஷ்ணுகண்டர்பத்ததி
6. சுயோதர்பத்ததி
7. வித்யாகண்டர்பத்ததி
8. இராமகண்டர்பத்ததி
9. ஞானசிவர்பத்ததி
10. ஞானசங்கரர்பத்ததி
11. சோமசம்புபத்ததி
12. ப்ரம்மசம்புபத்ததி
13. திரிலோசனசிவர் பத்ததி
14. அகோரசிவர் பத்ததி
15. வருணசிவர் பத்ததி
16. ப்ரசாதசிவர் பத்ததி
17. இராமநாதசிவர் பத்ததி
18. ஈசானயசிவ ...த்ததி

## ஆன்றோர் நூல்கள்.

விக்ஞானேசுவரயோகிஸ்மிருதி
பாவதீபிகை
பெருவாயின்முள்ளியார்
ஆசாரக்கோவை
திருவள்ளுவர் திருக்குறள்
மறைஞானசம்பந்த நாயனார்
சைவசமயநெறிஉடைப்பிரதீபிகை
ஒழிவிலொடுக்கம்
அங்காதிபாதம்
அருணந்திதேவநாயனார்
சிவஞானசித்தியார்
ஔவையார் குறள்
ஆத்திசூடி
கொன்றைவேந்தன்
மூதுரை
குமரகுருபரசுவாமிகள் நீதிநெறி விள
க்கம்
நல்வழி
தத்வப்பிரகாசம்
நன்னெறி
முதுமொழிக்காஞ்சி

## முதலிய நூல்களின் வழி.

ஆங்கிலேய சுகாதார வைத்தியநூல்களும் தத்துவசாத்திரங்களு முதகரிக்
கப்படும்.

## விஞ்ஞாபனம்.

உத்தம குணமிகு பத்திராதிபரே! மேலேகுறித்த நூல்களனைத்து மென
க்குக் கிடைப்ப தருமையாயுங்கிடைக்கினு மோதி யறிவதருமையாயு மிருத்
தலாலும் ஒவ்வொரு வகுப்பிலுங்கிடைத்த சில நூல்களைக் கொண்டு யேனை
யவற்றின் கருத்தை யூகித்து மிருதி புராணங்களின் உரைகளால் அநேக
நூல்களின் கருத்தை யோர்ந்து அதனாலெனக் குண்டான யுக்தி அநுபவங்
களைக் கொண்டெழுதத் துணிந்து உபக்கிரமிக்கின்றேன். அநேக நூல்களைத்
தேடிக்கொண்டு மிருக்கின்றேன். ஆதலால் தாங்களும் தங்கள் ஞானபோ
தினிப் பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்யும் நண்பர்களுங் கூடியவரை
யெனக்குதவியா மரிய நூல்கள் சம்பாதித் துதவுவார்களாகில் மிக்க நன்றி
பாராட்டுவேன். அதான்று; நண்பர்கள் ஒவ்வோர் ஆசாரத்தையும்பற்றித்
தங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களையும் பிரமாணங்களையும் வரைந்
தெனக்கு நேரா யனுப்புவார்களாகுல் வந்தனத்தோடு பெற்று எனது புத்த
கத்திற் சேர்த்து வெளிப்படுத்துவேன்.

வி. சிவஞானம்.



# விவேகசாகரர்.

---

## 3-வது அத்தியாயம்.

சபையார்களெல்லோருந் தத்தம் மின்னுக்கிச் செல்லுங்கால், தாரை
தாரையாய்ப் பெய்தமழையானது ஓய அதனோசை கொஞ்சம் கொஞ்ச
மாய்க் குன்றியது. அங்ஙனஞ் சத்தமும் சபையோர் குழாமுமொழிந்து
தன்னவைக்களத்தி லமைதிவந்து சேரலும், நவாபு விவேகசாகரரைத்
தனியாகவழைத்து, " ஐய வுத்தமரே ! உமது திறமை யின்றுதான் எஞ்சபை
யாருக்குப் புலப்பட்டது. தற்காலத்திற் கல்வியிற் கரைகண்டவ ரநேகரு
ண்டு. ஆனால் அத்திறத்தாருட் பெரும்பாலார் தாம் கற்றதைப் பிறருக்கு விள
ங்குமாறுரைக்கும் வன்மைவாய்க்கப்பெறாது ' இணரூழ்த்தும் நாறாமலரனை
யர்' ஆகின்றனர். நீவிர் கற்றகல்வியும் பெற்றவறிவுமென்னென வுரைக்க?
மற்றோராலாகாதெனினும், உம் சொல்வன்மையான் சற்று எம்மனோர் உற்
றறிந்தோம். இதுநிற்க, நாம்முன்னரேயே வுமக்கு வேண்டியதைக் கே
ட்டுப் கொள்க வென்றவாறு இப்பொழுது ஞாபகப்படுத்துகின்றோம். வே
ண்டியதென்ன ? என்று சந்தோஷமாயுரையாடினார்.

விவேக :—ராஜாவே ! யான் பணம் வேண்டிலேன், நிலம் வேண்டி
லேன், பட்டமும் வேண்டிலேன். முன் நீர் ' நம்மிடமில்லாதது எது'
வென்றுரைத்தீரோ அதுதான் எனக்கு அவசியம் வேண்டியதாயிற்று.

நவாபு :—ஆம். நம்மிடமில்லாதது இந்நானிலத்தி லெதுதானுண்டு ?

விவேக :—நும்மிடமில்லாதது ஒன்றுமில்லையோ ?

நவாபு :—ஆம். தடையென்ன? அதற்குச்சந்தேகம் உளதோ ?

விவேக :—ஓகோ ! அப்படியா ! மனப்பாக்கியந்தா னும்மிடமில்லா
தது. வேறென்ன ?

நவாபு :—ஹோ ! மனப்பாக்கியம். மனப்பாக்கியமா நாம் பெற்றி
லேம்? பகலவனொளியையும் பழிக்கவல்ல வொளிபொருந்தி யுயர்ந்துவிளங்
கும் ரத்தினங்களா லிழைக்கப்பட்ட சிங்காசனத்திலிருந்து, இருபுடையும்
எம் குடிகளும் மந்திரி பிரதானி முதலியவருந் துதித்துக்கொண்டிருக்கச் செவ்
வரசு புரிந்துவரும் நாமா மனப்பாக்கியம் பெற்றிலேம் ? ஹோ ! நன்று
மிகவும் நன்று.

விவேக :—ஆம். ஒருவன் மனப்பாக்கிய மொருவனுயர்வுக்குத்தக்க
அளவாயிருப்பின் நீர் செப்பியதொக்கும். ஆனால், என்னபிப்பிராயத்திலோ,
ஒருவனுயர்வடைய அவனுக்கு மனக்குறைவு முயர்வடைகிறதென்பது பொ
ருந்தியுளது. மகாகவியாகிய மில்டனாரும் " ஒருவனுயர வுயரப்பக்கத்
தார்க்குப் பொறாமையும் அதனாலவனுக்குக் கேடு முயர்கின்றது' எனச் சாத்
தான் வாயிலாக வற்புறுத்தியிருக்கின்றனர்.

**நவாபு** :—உண்மையே. ஆயினும் என் பக்கருள்ள பிரஜைகளும் ராஜாங்க அங்கத்தார்களு மெம்மிட மதிப்ரீதியும் வாஞ்சையும், நல்லெண்ணமுமுடையாராதலை நீ ரறிகிலீர் போலும். இதுகாறும் அவர்கள் நம்மைத் தெய்வம்போலன்றோ கொண்டாடி வருகின்றனர்!

**விவேக** :—ஆம். ஆம். நானெல்லா முழுது முணர்ந்தவனே. அவர் தம் முகமனெல்லா முமக்கு முக்தியாய்த் தானிருக்கிறது. வேறென்ன? ‘கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயி, னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர் - இல்லானை, யில்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்’ என்பதை யறியவில்லையோ? முழுமூடனாயினும் துன்மார்க்கனாயினும் பாதகனாயினு மவனிடம் பொருளிருக்குமாயின், அவன்பா லியாருஞ் சென்று அவனுக்குக்குற்றேவல் செய்தலியல்பன்றோ? அங்ஙனமாக, அரசனையடுத்து அவன் மொழி கேட்டு அவன் வசத்தனாகியவனைக் கொண்டாடுதலோ வியப்பாகும்? அரசன் அரசனாயிருக்கு மெல்லை யவனை யெங்ஙனமாகினும் அகமகிழ்வித்துத் தம் பயனைக் கொள்ளவே சமயம் பார்ப்பர். ஆயினும், அரசனென்பான் ‘கண்ணிற் சொலிச்செவியினோக்கு மிறை மாட்சி’ யாதலான், யார் யார் எக்குறை கூறினும் தான் நீருந்தாமரையும்போலக் கலவாது மொருசார் மனத்தனாகாது, ‘வித்தகமாய்க், காதி விளையாடியிருகை வீசி வந்தாலுந், தாதிமனை நீர்க்குடத்தே’ போல நியாயத்திலேயே கண்ணாயிருந்து பகுத்தறிந்து நீதி செலுத்த வேண்டும். ஆதலின்—,

**நவாபு** :—மிகவு முண்மையே. நிறுத்தும். யாமறிவோம். இப்பொழுது நீர் பொருள்வேண்டாமென்று சொல்லிவிட்டீர். மனப்பாக்கியமே யாம் பெற்றிலோம். பெறினும் பிறர்க்குதவ வழியின்று. நம்முடைய சமஸ்தானத்திற் பிரதான வுதவிமந்திரியாக வேணுமிருக்க மனமுடையீரோ?

**விவேக** :—அரசர் சொர்க்கமளிப்பினு மென் சுயாதீனமிழவேன். மந்திரியாதற்கு, யான் வஞ்சனை, பொய், தந்திரம் முதலிய குணங்கள் பொருந்தியவ னல்லேனாதலான், அதற்குத்தகுந்த சத்பாத்திரமும் நானல்லன்.

**நவாபு** :—அதற்கும் பிரிய மில்லையா! ஆஹா! நன்று, நன்று, இனி நீர் மற்றவரைத் தூஷிக்காமலிரும். நானோ சூரியன் போல நம் நாட்டில்விளங்கித் துலங்குதலான் சந்தேகப்படவேண்டியதில்லை. நம்மதி நம்மிடந்தானே

**விவேக** :—ஆம். சந்தேகமா! நும்மதி நும்மிடந்தான். சூரியனொளியவனிடந்தான். அதிசயமில்லை. நீர் சூரியனுக்கொப்பாயின், நீர் ராகு. கேதுக்களாலெத்தனை சமயம் பங்கப்பட்டிருப்பீர்.?

**நவாபு** :—ஹா! ஹா! உமக்கு எப்பொழுதும் விகடம் பேசலும் அநர்த்தம் பண்ணலுமே வழக்கமாயிற்று. இதனையுணர்ந்தே, நாம் ‘விகட



என்னும் பட்டம் சேர்த்துக்கொடுத்தோம். பின், நீர் இங்கு நாடிவந்தது தானென்னை?

**விவேக** :—வேறொன்று மன்று. எங்குங்காணுதலைத்தா னிங்கு காண வந்தது. ஏனெனில் கோயிலுக்குக் கோபுரம்போற் குடிகளுக்குக் கோவாகுமென்பது கேட்டுளேன். ஆனாலிங்குவந்து பார்த்தபின்பு அம்மொழி மெய்ம்மொழியோ பொய்ம்மொழியோ வென்றாயிற்று. நீர் பார்வைக்குப் பத்துப்பன்னிரண்டடி யுயர்ந்திருப்பினும், உமக்கும் மற்ற சாதாரண மனிதர்க்கு மெள்ளுப்பிரமாணங்கூடப் பேதமில்லையெனக் கண்டறிந்தேன்.

**நவாபு** :—உண்மையாகவே யுருவத்திலு மங்கப்பிரமாணத்திலும் நாமு மற்ற மனிதருமொன்றே. செல்வம், சிறப்பு, அதிகாரம், கீர்த்தி யிவற்றிலோ நாமேனையரினும் பத்துப்பன்னிரண்டு அடிமட்டுமென்று பன்னூறு கெஜமே யுயர்ந்திருக்கின்றோம்.

**விவேக** :—கேட்பானேன். எவையாயினும் நல்வழியிற் செலுத்தப்படாவிடில் அவையே யருந்துயருளுய்த்துவிடும்.

**நவாபு** :—ஏது? நீர் சொல்வதை நோக்கின் நாம் நல்வழியினின்று பிறழ்ந்துவிட்டாற் போலாகின்றதே. அதென்ன அது? சந்தேகம்.

**விவேக** :—ஆமாம், ஐயமென்றுமெல்லவா கூறவேண்டும்?

**நவாபு** :—ஓய்! விவேகசாகரரே! நீர் பேசுவதெல்லா மெமக்கு ஒருகால் மகிழ்ச்சியையும், ஒருகால் வியப்பையும், ஒரு சமயம் சினத்தையும், ஒரு சமயம் கனத்தையும் விளைவிக்கின்றது. ஆதலிற் பேச்சை நிறுத்திவிடும்.

**விவேக** :—சமஸ்தானங்களிற்றான் உண்மைக்கு மரியாதை கிடையாதே. இதை விவேகசாகரர் நன்றாயறிந்தவர் தாம். அந்தோ! இதை யுணர்ந்தன்றோ, மந்திரி முதலியோர், தன்னயத்தின் பொருட்டும் அரசர் மகிழ்வின் பொருட்டும் பொய், வஞ்சனை முதலிய சாதித்தேனும் அரசர் தம்பாலராக ‘நீர் வழிப்பட்ட புணை’ யாகின்றனர்.

இவ்விதமாகக் குறிப்பாயும் வெளிப்படையாயுங் குத்திக்குத்தி வாங்குந்தன்மையான சம்பாஷணைக்கோ நவாபு மனம் படைத்திலர். அப்படியாக, விவேகசாகரர் பளிங்குபோன்ற களங்கமில் மனத்தாராதலான் நவாபு பிறரைத் தூஷிக்கப்படாதெனினு மவர்குற்றங்களைக் கூறிக்கொண்டேயிருப்பவராகின்றனர். கடைசியாய், நவாபு கடுங்கோபங் கொண்டு ‘நீர்போய் விடுமென்று’ சொல்ல, விவேகசாகரர் ‘போனாற் றானென்னை? நானீயே’ யென்று மறுமொழிதந்து நின்றனர்.

**நவாபு** :—ஹே! ஹே! இது என்ன, போக்கடாத்தனமோ? நானீயா?

**விவேக** :—ஆம். ஆம். நானீயே. நானீயே தான். சந்தேகமென்ன?

நவாபுவோ இது கேட்டலும் மண்டெரியில் மண்ணெண்ணெய் வார்த்தாற்

போலாயினர். திடீரெனத்தன் உடைவாளை யுருவிக்கையிற் பிடித்து ஓங்கிக்கொண்டு 'போய் விடும். இன்றேல், நீரிதற்கே பலியாவீர்' என்று வீசவாரம்பித்தனர். வேறென் செய்வர்? அவரோ பழிக்கு அஞ்சாப் பச்சைப் பட்டாணி. ஆயினு மிதுவரை நற்குண மமைந்தவ ராதலாற் பொறுத்துப்பார்த்தனர். விவேகசாகரரோ போவெனப்போகிலர். கொடுப்பதைக் கொள்ளுகிலார். வாயை மூடியுமிருக்கின்றிலர் நவாபுக்கு இவர் உடம்பு போலாய் விட்டனர்.

இதனையறிந்து விவேகசாகரர் திடுக்கிடா நெஞ்சராயினும் பயந்தவர்போற் பாவனை செய்து கொண்டு, "மகாராஜாவே! பொறும், பொறும். கோபம் பாபம், பாபம் பழி, கோபத்தாற் கெட்டவர் அநேகர். 'கோபத்தாற் சௌசிகன்றவத்தைக் கொட்டினன், கோபத்தானகுடனுங் கோலமாறினன், கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன், கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே" என்பதை நோக்கும். 'நானீ' என்பதன் பொருளுணர்ந்த பின்பு என்சிரசைத்துணித்து விடும். எனக்கும் சம்மதந்தான் என்றனர்.

'அர்த்தமென்ன அர்த்தம்! நான் (விவேகசாகரன்) நீ (அரசனாகியநான்) என்பது தானே. வேறென்ன? அதாவது நானும் நீரும் சமமென்று சொல்லிவிட்டீர். அதுதானே?' என்று நவாபு சீறிச்சீறிக் கூறினார்.

'அப்பா! என்னத்தைச் செப்ப? அப்படியா அர்த்தம்? நானீயென்றால் நான் (விவேகசாகரன்) ஈ (அற்பஜெந்துவாகிய ஈ) ஆகுவேன் என்பதுபொருள். அதாவது நான் ஈக்களைப்போன்று தூரத்தத்தூரத்த வந்து கொண்டேயிருப்பேனென்பது தான். ஐய! வேண்டுமென்றால் கொன்றுவிடும்' என்று மிகவும் பணிவுடையார்போற் பகர்ந்து நிற்க, நவாபுமிகவும் வெட்கப்பட்டு, 'ஆகட்டும். நீரீயாயின் நாளைக்கு ஈக்களோடு வந்து சேரவும். இல்லாவிட்டால், இதற்கு இரையாகு முமது சிரம்' என்று வற்புறுத்திக் கூறி விடைகொடுத்தனுப்பினர்.

(இன்னும் வரும்)

தே. ச. ஆண்டியப்ப பிள்ளை.

## புத்தகக் குறிப்புக்கள்.

**அன்னி பெஸண்டு சரித்திரம்:**—இஃது ஒன்பான்வகைய விருத்தங்கள் 76 கொண்டது; மன்னார்குடி வெஸ்லியன் மிஷன்காலெஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் பி. ஆர். கிருஷ்ணமாசாரியாரென்பார் செய்தது; மதுரைத் தியசாபிகல் சங்கத்தாரது வேண்டுகோட்கிணங்கிச் செய்யப்பட்டது. 12-பக்கங்களுள்ளது; இதன்விலை அணா - $1\frac{1}{2}$, தபாற்கூலி பிரத்தியேகம். நமது அன்னி பெஸண்ட் அம்மை யவர்களைச் சின்னாட்களின் முன்னர் அடையாற்



றிற் பிரசங்கிக்கக்கேட்ட யாம் இந்நூல் போலும் பல்லாயிரக் கணக்கான நூல்கள் அவ்வம்மை விஷயமாக வியற்றப்பட்டினும் அவை யனைத்தையும் விரும்பா நிற்பேம். இது நிற்க. இனியிதன் குண குணங்களைப்பற்றிச் சிறிது பேசுவோம்:—இவர் பாக்களனைத்தும் இடர்ப்படுதலின்றி யினிது செல்கின்றன வெனினுஞ் சொற்செறி விலவாம். சில பாடல்களிற் பதஜாலங்கள் செய்துளரெனினும் இவர் சங்கச் செய்யுளில் அதிகப் பழக்கமிலார் போலும் காணப்படுகின்றனர். கடவுள்வணக்கப் பாடலின் மூன்றாமடியிற் சொல்லானந்தமும் மோனைப் பிறழ்வும், இரண்டாம் பாடலிற் பொருத்தமி லுவமையும், நான்காஞ் செய்யுளின் றொடக்கத்திற் சந்தச் சிதைவும், பத்தாங்கவியிற் பொருட்டெளி வின்மையும், பான்மயக்கமும் பதினோராம்பாட்டி லொருமைப் பன்மை யுறழ்ச்சியும் 'நாலாட்டின் பருவம்' 'ஒவ்விய', 'மீட்டுதற்கு', 'அருள்விக்கும்' என்பனவாதிய வழக்காறல்லாச் சொற்பிரயோகமும், பத்தொன்பதாங்கவியின் மூன்றாமடியிலிழுக்கிய மோனையும், இருபதாம்பாட்டில் 'தம்' என்பதைத் 'தன்' என்றதும், இருபத்தோராம்பாட்டின் முதலடியிற் 'சென்றவெழில்' என்றசொல்லானந்தமும், 'திவ்வியசொல்' 'கனித்திரயம்' என்றற்றொடக்கத்த இழிதொடர்ப் பிரயோகமும், சமயத்திற்கேற்ற சொற்பெய்யாமையும், சந்தவிருத்தவியல்புணராமையும் 'பார்க்கலாது' என்பதுபோன்ற சொல்வழூஉவும், 'நிறம்பி' 'கனித்து' என்பனமுதலான அச்சுப்பிழைகளும், வாழிகூறும்பாவில் மூன்று பெரியயாப்புப்பிழைகளுமாகிய இன்னோரன்ன பல்வகைவழூஉக்கட்கு மிலக்கியமாய்நின்று மிளிருமிதற்கு இத்துணை யாரவாரமென்? வாழ்த்துச் செய்யுளில் அன்னிபெஸண்டு அம்மை பெயரைத் தக்கவாறு அமைக்கவறியாது பெரிதுமிடர்ப்பட்டு 'இழுக்குடையபாட்டிற் கிசைநன்று' என்றபடி யிசையிலிழுத்துப் படித்துப்பாடிப் பாட்டுடைத் தலைவியார்மாட்டுப் பெருவசை யிழைத்துளர். அந்தோ! செந்தமிழ்ப்பாண்டிநாட்டின் றலைநகரே! உண்மைகாண வேண்டி 'நாயகன் கவிக்குங் குற்றநாட்டிய கழகமாந்தர் மேய' நற்றலமே! நீயோ இத்தகைய போலிநூல்களையெல்லாந் தலையிற்கொண்டு கழிபெருங் களியாட்டயர்வது? தகாது! தகாது!!

**திருவிடைமருதூர்க் கலம்பகம்:**—இது திருவெவ்வுளூர் இராமசாமிச் செட்டியாரவர்கள் இயற்றியது; 44-பக்கங்களுள்ளது; இதன்விலை அணா-2. இந்நூலாசிரியர் ஏறக்குறைய 40-பதிகங்களும் பல சித்திரக்கவிகளும் விடுகவிகளும் கீர்த்தனங்களும் தோத்திரங்களும் முதலாயின பல சிறுநூல்களும் தாமேபாடி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றனர். இந்நூலையிவர் பாடுதற்கட் சுதந்தரயூகமுங் கற்பனைத்திறனும் பெரிதுங்காட்டியிருக்கின்றனர். கலம்பகவுறுப்புக்கள் பதினெட்டனையு மெடுத்துரைப்பதனோடு சில புத்துறுப்புகளுஞ் சேர்த்து யாத்துளர். இது நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டுளது.

**முனிமொழிப்பிரகாசிகை**:—இது கிறிஸ்டியன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்களுளொருவராகிய நாகைப்பட்டினம் வேதாசலம்பிள்ளையவர்கள் எழுதியது; இது "தேவர்குறளும்" என்னும் ஔவை திருவாக்கிற்போந்த 'முனிமொழியும்' என்னுந் தொடர்க்குக் கோப்பாய் சபாபதிநாவலரவர்கள் கூறிய பொருளை நியாயவாயிலான் மறுத்துரைப்பது; செவ்விய தமிழ்வசனநடையிலமைந்துளது. இதன்விலை அணா-1.

**விவேகசரித்திரம்**:—இப்பெயரியநூல் ஆக்கியோர் தமிழ்ப்பண்டிதர் தி. கோ. நாராயணசுவாமி பிள்ளையென்பவர். இவ்வாசிரியரே விநோதசரித்திரம் முதலிய ஜனானுகூலமான நூல்கள் பல இயற்றியிருக்கின்றார். கதை சொல்லும் விஷயத்தில் மிகுந்த சாமர்த்தியமும், கதை வாயிலாகவே நீதிகளைப்புறத்தே காட்டிப்புகட்டலும் இவ்வாசிரியரிடத்து விசேஷமாகக் காணப்படுகின்றன. இந்நூலினாலறியக்கூடிய நீதிகளைத்தொகுத்துக் கூறலாமென்று உத்தேசித்துச் சிரமமெடுக்க வேண்டுவதாவசியம், ஏனென்றால், ஆசிரியர் தாமே தமது நூன்முகத்து இரண்டாம் பகுதியில் அவைகளை விளக்கமாயும் விரிவாயும் காட்டியிருக்கின்றார். மற்று, இந்நூலானது, 'விவேகன்' என்னும் ஒரு புருஷன் தனது வாணாளில் நடந்த பெரும்பான்மை விஷயங்களைத்தானே கண்டறிந்த வண்ணமும் தான் பிறர்பாற் கேட்டறிந்த வண்ணமுமாகப் பிறர்க்கறிவுறுத்து மாதிரியாக எழுதப்பட்டிருக்கின்றது. இத்தகைய நூல்கள் ஆங்கிலத்திற் பலவுள. கதையில் நிகழும் விஷயங்கள் சாதாரணமாய் உலகில் நிகழ்வனவே. நாடகவழக்கினைப் பின்பற்றியதாயினிக்காலத்திற்குப் பொருந்தாதாய்விடும். விவேகனுடைய சித்தவுறுதியும் அன்புடைமையும் அருளுடைமையும், ஆபத்சகாயருடைய பெருந்தன்மையும் மனத்திடமும் விதரணியினது இல்லறதருமவறிவும் நல்லொழுக்கமும் நன்கு தெரிக்கப்பட்டன. விவேகனுக்கு அந்தியகாலவாழ்வு முந்தியகாலவாழ்க்கையின் பயனென்பதும் கௌரியம்மையின் இடையிட்டுவந்த கஷ்டம் அவளது சிறந்த குணத்தை வெளிப்படுத்தற்கும் எத்திறத்தோரையும் ஊழ்லாட்டுமென் றறிவித்தற்குமே நிகழ்ந்ததென்பதும் விளக்கமுறக் கிளக்கப்பட்டன. முத்தனது மூடத்தனத்தின் லக்ஷணமும் சிறிது கல்விபெற அவனிடத்து நிகழ்ந்த செயலும் கல்வியின் பயனைக் கரதலாமலக மென்னக் காட்டா நின்றன. கல்வி, நீதிசாரம், கல்வியும் செல்வமும் என்பவற்றைப்பற்றி விரிந்த உபந்நியாசங்களும், தமிழ், தத்துவோற்பத்திலயம், ஒற்றுமை, நல்லினஞ்சேர்தல், நலம் என்பனவற்றைப்பற்றிச் சுருங்கிய உபந்நியாஸங்களும் நூலகத்துக் காணப்படுகின்றன. 'கல்வி' யுபந்நியாஸத்தில் பேகனென்னும் ஆங்கில நூலார்வாக்கியங்கள் பல மொழிபெயர்ப்பு வாயிலான் எடுத்தாளப்பட்டன. 'தமிழ்' உபந்நியாசத்தில் அமிர்தமென்னும் ஆரியத்தின் சிதைவாய தமிழென ஞானமூர்த்தி சாற்றலின் அவ்வாறொரு கொள்கையு முண்டென்றறிகின்றோம்.



நீதிசாரத்து அகங்காரத்தைக் கிழங்ககழ்தலையே பிரதானமாக கூறுதல் தக்கதே. தத்துவோற்பத்திலயம் வேதாந்த சாத்திரங்களைப்பற்றியது. நீதிசாரத்தையும் தத்துவோற்பத்திலயத்தையுங் குறிக்கொண்டு கேட்ட விதேகன் அவற்றைப்பிறர்க்குச் சொல்லுமதுகை பெற்ற பின்னரும் தற்கொலை செய்து களேபரங்களைதல் மனத்தில் உறுதியூன்றிப் பக்குவமுதிர்ச்சி வந்தாலல்லது வேதாந்தக் கேள்வி பெரும் பயன்றராதென்பது குறித்தது போலும். உபந்நியாசங்களிலெல்லாம் தருக்க நெறியால் விவகரிக்கு மாற்றலும் நீதிகளைக்கதைவழியாற் கற்பிக்கு முறைமையும செவ்வனே காணலாம். தலப்பெயர்கள் எண்ணிக் கூறுதற்கண் முறையொன்று பற்றப்படாமை குறையென்று கூறலாம். ஆபத்சகாயர் சோதிட சாஸ்திரப்பயனை மறுத்தல் நியாயவழியா னன்றமையின் யாவரு மேற்கொள்ளற்பாலது. பெண் கல்வியை நிதரிசனவாயிலானும் விதிவாயிலானும் வற்புறுத்தல் முறைப்பட்ட தொன்றே. கௌரிக்கும் சௌரிக்கும் சம்பாஷணை தன்னருஞ் சுவைத் தாயமைந்துளது. தமிழ் இலக்கியங்களுட் காணப்படும் அநேக அருஞ்செய்யுள்கள் உதாரணத்திற்காகவும், மேற்கோளிற்காகவும், நூனடையிற்சேர்த்தும் பிரயோகிக்கப்பட்டன. அநேக பழமொழிகள் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறுபயோகிக்கப்பட்டு நூற்பொருள் விளக்கமும் மணக்கட்களிப்புந்தருகின்றன. நூல் எழுதப்பட்ட வாசகநடை, திரிசொற்கள் பெரும்பான்மை பயிலுதல் பற்றியும், இலக்கணப்பிரயோகங்கள் நிரம்ப ஆட்சிப்படல் பற்றியும் சாமானியர்க்கன்றே என ஐயமெழுப்பும். நடையும் ஒரு தன்மைத்தன்றி நாநாவிதமாயிருக்கின்றது. ஆயினும் வனப்புக்கள் மிகுந்து வாக்கியங்கள் இன்னோசைப்பட்டு நடக்கின்றன. அன்றியும், வசனநூல்கள் தமிழிற்பல ஏற்படினல்லது ஒவ்வொரு நூலும் ஒருதன்மையினையே குறித்தியங்குதல் கூடாது. அவ்வாறியங்கலு மிக்காலத்தாகாது. குது குலித்து சொற்பனம் முதலிய பிழைபாடுற்ற மொழிகளும், அறுகூலள், சித்திரித்து, அர்த்தித்து முதலிய நவீன பிரயோகங்களும், உழை, வயின், அன்றுஎன்னும் சொற்களும் உபயோகிக்கப்பட்டனவெனக்கூறலாம். எனினும் இவை யொழிந்த பாகங்கள் சாலச்சிறந்தனவாம். நூலாசிரியரிடத்து கதை சொல்லுஞ் சாமர்த்தியம் யாம்முற்கூறியவாறே சிறந்து காணப்படுகின்றது. எத்துறைக் கல்வியும் இவரது நூல்களின்றுறையிற் காணலாம். தருக்கம், இலக்கணம், லௌகிகம், வேதாந்தம், ஒழுக்கம் முதலிய கலைகளின் சாரங்களெல்லாம் ஆண்டாண்டெடுத் தாள்கின்றார். நூலினைப் படிப்போர் முயற்சியின்றி யறிவுபெறுதல் ஒருதலையென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை.

## சமாசாரங்கள்.

**சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேசபரீட்சை**:—யாம் முன்சஞ்சிகையிற் குறித்ததுபோலப் பிரவேசபரீட்சைக்கு மறுபரீட்சையொன்று செய்யப்படல்வேண்டுமென்று ஏற்பாடாய்விட்டது. அதன்கண் இரண்டாம் பாஷைகளாகிய தமிழ் வடமொழி தெலுங்கு முதலியனவொழிந்த பிற பாடங்களிலேயே மாணாக்கர் பரீட்சிக்கப்படுவர். அப்பரீட்சையும் ஏறக்குறைய மார்ச்சுமீ த்தின்றொடக்கத்திலிருக்கலாம். தமிழ் முதலாயினவற்றிலும் பரீட்சைகளிருக்குமாயின் பரீட்சையான உடனே பாடபுத்தகங்களைக் கவனியாமலுங்கிழித்து மெறிந்துவிட்ட மாணாக்கர்கள் என்னபாடுபடா நிற்பர் என்பதை யாவருஞ்சற்று யோசிக்கவேண்டும். இனியித்தகைய குறைபாடுகள் நிகழாதிருக்குமாறு யாவரும் நடந்துகொள்ளவேண்டும்.

**ஜான் ரஸ்கின் துரையவர்கள்**:—இவர் இந்தமாதத்தில் ஒருவாரத்திற்குமுன் இங்கிலாந்தில் தேகவியோகமாயினரென்று கேள்வியுற்று மிகவும் விசனப்படுகின்றோம். அவர் இனிய ஆழ்கருத்துடைய ஆங்கில வாசகநடையெழுதிய புலவர்பிரான். மக்களுயிர்வாழ்க்கை நலத்தைப் பெரிதுங்கருதியுழைத்து வந்தமாபுருடரென்பது அவரெழுதிய 'பார்ஸ்கிளாவிஜீரா' அல்லது 'தொழிலாளிகட்கெழுதிய நிருபங்கள்' என்பதனாலறியப்படும். அவர் சித்திரசாஸ்திரமும்சிற்பநூலும் கைவந்தவரென்பதும் அவற்றின்முகமாகமாந்தர்க்குப் பலவிதநீதிகளும் அறிவுறுத்தாரென்பதும் அவர்செய்துள 'தற்கால சித்திரக்காரர்கள்', 'இல்புனைநூலினேழுவிளக்குக்கள்' என்றநூல்களாலினிது விளங்கும். கைத்தொழில் கெட்டுலைந்து சனங்கள் வறுமையுற்றதற்கும் இதுபோலும் பிறதீங்குகட்கும் மூலகாரணமாவன நாடோறும் புதிதுபுதிதாகக் கண்டுபிடிக்கப்படும் யந்திரங்களேயாம். அவைசெய்வோனது புத்திசாதுரியத்தை விளக்கியும் பெருமுதற்போடுவோனுக்கு மிக்கலாபம் பயந்தும் உதவுவனவெனினும் பொதுநோக்காகப் பார்க்குமிடத்து நாட்டின் சுகசீவனத்திற்குப் பேரிடையூறுகளாமென்பது அவருடையகொள்கை. மேலுமிவர் நல்லொழுக்கமும் தத்துவஞானமும்பரோபகார சிந்தையுமுடையவர். இவருக்குவயது 80-க்குமேலாம்.

**புதுவருட மரியாதைகள்**:—இவ்வருடம் சென்னை இராசதானியிற் கனம்பொருந்திய உயர் நீதிஸ்தலத்து நியாயாதிபதி பிரமஸ்ரீ எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுக்குக் கே. ஸி. ஐ. இ. பட்டமும், வன்பாக்கம், ஆக்டிங் அட்வொகேட் ஜெனரல் ஸ்ரீ பாஷியமையங்காரவர்கட்கு 'நைட்' பட்டமும் கொடுக்கப்பட்டன.

**திரான்ஸ்வால் யுத்தம்**:—இப்பொழுது நடந்து வாராநிற்கும் இப்போரின்கண் 'ஏர்ல் ஆப் ஆவா' என்ற பட்டப்பெயர் பெற்ற லார்ட் டப்பரின் துரையவர்களது மகனார் காலஞ்சென்றனரென்பது கேள்வியுற்ற யாம் மிகவும் விசனப்படுகின்றோம்.

# ஞானபோதினி.

புத்தகம் III. } 1900௵ பிப்ரவரிமீ 20௳. { நெ. 7.

## நூதனவாசகப் புத்தகங்கள்.

இவை லாங்குமன்ஸ் சங்கத்தாராற் பதிப்பிக்கப் படுகின்றன. இவையனைத்தும் தென்னிந்தியாவின்கணுள்ள பாடசாலைகளிற் படிக்கு மாணாக்கர்களுக்கு ஆங்கிலநூன் முறைப்படி தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளைப் புதுவழியிற் கற்பிப்பனவாம். இவை தம்முள் தமிழ் வாசகப் புத்தகங்களைப்பற்றியே நாம் பேசப்புகுவது. இந்தமிழ் வாசகப் புத்தகங்களினும் பிரதம சிக்ஷைக்குத் தக்க சொற்பாடங்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ள முதல் வகுப்புப் புத்தகம் ஒன்று எமதுபார்வைக்கு அனுப்பப்பட்டமையின் அதன் ஏற்றத் தாழ்வுகளைக் குறித்து எமதபிப்பிராயங்களை வெளியிடுகின்றோம்.

கல்விப் பயிற்சியைக்குறித்து நமது சென்னைத் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் விதிகளுக்கிணங்க இம்முதல் வகுப்புப் புத்தகம் இயற்றப்பட்டிருக்குந் தன்மையைக்குறித்து மிகவுஞ் சந்தோஷப் படுகின்றோம். லாங்குமன்ஸ் சங்கத்தாரவர்களு மித்தகைய சிறு நூல்களை மாணாக்கர்களது நன்மைகருதி இயற்றுவித்து அச்சிடப் புகுந்தமை யாவராலும் பாராட்டத்தக்கதே. அவர்கள் தாங்கள் பதிப்பிக்கும் புத்தகங்களை யெல்லாம் உயர்ந்த பளபளப்புள்ள கடிதத்திற் பார்வைக்கு நேர்த்தியாகத் தோன்றும்படி மிக்க சிரத்தையோடு மச்சிடுவது வழக்கம். அதுபோலவே இந்த முதல் வகுப்புப்புத்தகத்தையும் நல்ல கடிதத்திற் சிரத்தையோடுமச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றனர். என்றாலு மச்சங்கத்தார் விஷயத்திலு

மவர்களச்சிடும் புத்தக விஷயத்திலும் எப்பொழுதும் அன்புகூர்ந்த யாம் அவர்கள் இப்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்திவரும் நூல்களிற்கண்ட சிற்சில குறைபாடுகளை அவர்களது நன்மைகருதியும் தமிழ் பயிலு மிளைஞரது நன்மை கருதியும் ஒருவாறு எடுத்துக் காட்டுகின்றோம். இதனால் நமது லாங்குமன்ஸ் சங்கத்தார் எம்மைப்பற்றியும் எமது நோக்கத்தைப் பற்றியும் வேறுபட நினையாரென் றெண்ணுகின்றோம்.

முதற்கண்:—தமிழ் முகவுரையில் வல்லொற்று மிகவேண்டிய இடங்களி லெல்லாம் வல்லொற்று மிக்கில. அதே முகவுரையிற் "சில இலக்கணக் குறிப்புகளும் வினாக்களும் அச்சிட் டிருக்கின்றன" எனச் செயப்பாட்டுவினைப் பிரயோகத்தைச் செய்வினைப் பிரயோகமாகக் கூறியது மயங்கவைத்தல் என்னுங்குற்றமாம். இதற்கடுத்த அறையில் (Paragraph) "மொழிகளும் அரும்பதங்களும்......சேர்க்கப்பட் டிருக்கின்றன," என்றும் "இவை அநுபந்தமாக அமைக்கப்பட் டிருக்கின்றன" என்றும் செயப்பாட்டுவினைப்பிரயோகஞ் செய்திருத்தலே முன்னதை வழுவென வற்புறுத்தும்.

இரண்டாவது:—எண்மானம் என்றபாடம் மிகவும் நன்றாகப் பிள்ளைகளின் மனப்போக்கறிந்து செய்யப்பட்டிருத்தல் பற்றிக் களிகூருகின்றோம். எனினும் எண்மானமென்ற சொற்றொடர் தமிழ்ச்சொல்லும் வடசொல்லுமாகக் கலந்து புதுவது புனைந்து செய்த இழிதொடராம். இவைபோலு மிழுக்கிய சொற்றொடர்ப் பிரயோகங்களுக்கு உதாரணமாகப் பகுத்தோனை (பக்கம்-8) என்பது முதலான சொற்றொடர்களைக் காணலாம். இத்தகைய இழிசொற்றொடர்ப் பிரயோகங்களைக் கண்ணுறும் புதிதாக வெளிப்படும் புத்தகங்களைப் பரிசோதிக்கு மதிகாரம் வாய்ந்த நமது திவான் பஹதூர் வன்பாக்கம் கிருஷ்ணமாசாரிய ரவர்கள் மிகவுங் கண்டிப்பாரென்பது ஒருதலை.

மூன்றாவது:—ஓரெழுத்து மொழிகளைக்கற்பிக்கும் பாடத்தில் இளஞ்சிறார்க்குத் "தீவை" என்று கற்பித்தல் எவ்வாறேற்புடைத்தாகுமோ? தெரியவில்லை. மூன்றாம் பக்கத்தில் "நீர்க்கால் நீர்ப்பானை" என்று வலிமிக்கு எழுதியவர் "நீர்த்துளி நெய்ப்பானை" என்று வலிமிக்கெழுதாமைக்குத் தக்ககாரணம்



இன்னதென்று புலப்படவில்லை. இத்தகைய வலிமிகா வழூஉக்கள் இப்புத்தகத்தின்கட் பலவாக மலிந்துகிடக்கின்றன. ஐந்தாம் பக்கத்தில் "இது வீணை ஓசை" என்ற வாக்கியத்தில் ஓசை என்பது அவ்விடத்திற் கேற்ற சொல்லன்றென்பது மிகச் சாமானியர்க்கும் விளங்கும். இதுபோலவே 7 - ஆம் பக்கத்திற் "கிளி... ஆடும்" என்புழி ஆடும் என்ற சொல்லுந் தக்கதன்மை காண்க. அதேபக்கத்திற் 'கூட்டின் மேலே' எனற்பாலதைக் "கூடுமேலே" என்று பிரயோகித்தல் இலக்கணவழுவாம்.

நான்காவது:—பதினோராம் பக்கத்தின் தலைப்பில் "நல்ல—என்பது போல இந்தப் பாடத்தில் இரண்டு மெய்யெழுத்துக்கள் சேர்ந்து வந்திருக்கும் சொற்கள் எவை?" என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கின்றது. இவ்வினா தேய்த்து, பார்த்து முதலிய சொற்களுக்கு ஏற்புடைத்தாமே யன்றி 'நல்ல' என்பதுபோலும் சொற்களுக்கு எவ்வாறு ஏற்புடைத்தாகுமோ? தெரியவில்லை. இவ்வாறு பலவையும் மருட்டத்தக்கனவும், பிழைபட்டனவுமான வினாக்களை அப்பியாசங்களிற் சேர்ப்பதனாற் போந்த பயன் என்னோ? 'பந்து பாடம்' எனவும் 'கிளிசிறகு' எனவும் 'எனக்கு தருவி' எனவும் ஏன் உபயோகிக்கவேண்டும்? இவையெல்லாம் எழுதியவர்மனத்திற் பிழையெனப் படவில்லையோ? எட்டாம் பாடத்திற் 'சக்ரம்' என்றவர் ஒன்பதாம் பாடத்திற் 'சித்ரம்' என்னாது 'சித்திரம்' என்பானேன்? 'கரும்புதின்னக் கூலிவேண்டுமா?' என்புழி வினாக்குறியிட்டெழுதியவர் 'சர்க்கரையும் மணலும் சரியா' என்புழியும் வினாக்குறியிட் டெழுதாததென்னோ?

ஐந்தாவது:—உத்தமம் அதமம்முதலிய கடினமான வடசொற்களை இளஞ்சிறு[illegible]யிலும் இப்புத்தகத்தின்கண் உபயோகித்தமை அத்துணைச் சிறப்பினதன்று. பத்தொன்பதாம் பக்கத்தில் 'ஆமணக்கும் பருத்தியும் அடரவிதைக்காதே' எனவும் 'அன்புள்ளகுணம் அலையில்லாநிதி' எனவும் எழுதப்பட்டுள்ள வாக்கியங்களில் 'அடர' என்பதும் 'அலையில்லா' என்பதும் குறித்த மாணாக்கர் கல்வியளவுக்கு மேற்பட்ட சொற்களன்றோ? மேலும் இவ்விருவாக்கியங்களும் மோனை நயங்கருதி எழுதப்பட்டனவேயன்றி மாணாக்கர் கல்வியளவு கருதி எழுதப்படவேயில்லை. இவ்வாறு மோனை நயங்கருதி வாக்கியங்களெழுதலைக் கண்டால் வெறுக்கு

மியல்புடைய நமது நவீன புத்தக பரிசோதகர் ஆகிய ஸ்ரீகிருஷ்ண மாசாரிய ரவர்கள் இப்புத்தகத்தை யெவ்வாறு விரும்புவாரோ? தெரியவில்லை.

ஆறுவது:—இருபத்தோராம் பக்கத்திற் 'பாலுடன் கலந்த நீர் பாலாகும்' என்று கூறப்பட்டிருக்கின்றது. அஃதெவ்வாறாகு மோ? இறைவனுக்கே வெளிச்சம். 'பால் போலும்' என்பதே தெரிது. 'காற்று ஒடுக்கமாயிருக்கிறது' என்ற வழக்காறல்லா வாக்கியமும் "சின்னபெண்" 'சின்னகதைகள்' என்பனவாகிய இழிந்த திசைச்சொற் பிரயோகமுங் காண்க. 24-ஆம் பக்கத்திற் காணப்படும் 'ஒல்லி' என்னும் சொல் எவ்விலக்கியத்திற் பயின்றுளதோ?

ஏழாவது:—ஜீவஜந்துக்களின் ஒலிக்குறிப்புக்களைக் கூறும் பாடத்தினால் இம்முதல் வகுப்புப் புத்தகத்தை எழுதியவரது இயற்கைப் பொருளுணர்ச்சியும் தமிழ்நூன் மரபுணர்ச்சியும் நன்கு வெளிப்படுகின்றன. 'கழுதை கூவுகிறது' எனவும் 'யானை வீரிடுகிறது' எனவும் 26-ஆம் பக்கத்திற் 'காக்கைகள் கத்துகின்றன' எனவும் கூறப்பட்டிருத்தலை யாவருமுற்று நோக்கக்கடவர். 'கழுதைக்குட்டி முறுவலிக்கிறது' என்ற வாக்கியம் எவ்வாறு முதல் வகுப்பு மாணாக்கர்களுக்கு விளங்குமோ? அறிகிலோம். இப்புத்தகமெழுதியவர் மாணாக்கரது தாரதரமறிந்து எழுதுவதில் மிகவுங் கைவந்தவர் போலும்! இனி அதே பக்கத்தில் 'ஆந்தைகள் கிளைக் கூட்டுகின்றன' என்பது எங்ஙனம் பயிலுகின்றதோ? 'ஆந்தைகள் குழறுகின்றன' எனப்பயில்வதை யாமறிவேம்.

எட்டாவது:—இம்முதல் வகுப்புப் புத்தக வகுத்தவர்க்குத் தக்கதமிழ்ச் சொற்களிருக்கவும் வடசொற்களைப்பெரிதும் உபயோகப்படுத்தும் தீவழக்கம் உண்டுபோலும்! தேகத்தின் உறுப்புக்களை அறிவுறுத்தும் பாடத்தில் மூக்கைக் கூறுதற்கு 'நாசி' யென்றும் உள்ளங்கால்களைக் கூறுதற்குப் 'பாதங்கள்' என்றும் கூறுதல் யாது காரணம்பற்றியோ? இவ்வாறே 'தாலம்' 'போசனம்' 'பானபாத்திரம்' 'விருத்தம்' 'ஆலசியம்' 'தூலிகை' 'நித்திரை' முதலாய பலவகைப்பட்ட சொற்களுங்காண்க. இவையனைத்திற்குந் தக்க தமிழ்ச்சொற்கள் இலவோ? இன்னும் இந்நூலெழுதியவர் வீணே



கச்சில திசைச்சொற்களை உபயோகப்படுத்தியதன் காரணம் நன்கு விளங்கவில்லை.

ஒன்பதாவது:— 35-ஆம் பக்கத்திற் 'சிங்கம், யானை, கோழி பசு-இவற்றின் குட்டிகளுக்குப் பெயரென்ன?' என்ற வினாவிற் குட்டி என்னுஞ்சொல்லை உபயோகித்தல் எவ்வாறு சால்புடைத்தாகும்? குட்டி என்பது சிங்கம், யானை என்பனவற்றோடு செல்லுமேயன்றி கோழி, பசு என்பனவற்றோடு எப்படிச் செல்லுமோ? மாணாக்கரிடத்திற்றக்க சொல்லை எதிர்பார்ப்பவர் தாமும்மேற் கூறிய நான்கினுக்கும் பொதுவான சொல்லையன்றோ பிரயோகிக்க வேண்டும். இவை யனைத்திற்குந்தக்க பொதுச்சொல் அகப்படாவிடின் அவ்வினாவை அறவே யொழிக்கவேண்டும்.

பத்தாவது:—அதேபக்கத்தில் வினைச் சொல்லைப்பற்றி விரித்து விதி கூறியிருப்பது மிகவும் நன்றாயிருக்கிறது! அவ்விதி மாணாக்கர்க்கு எவ்வாறு விளங்குமோ? அன்றியும் அம்மாணாக்கர்கட்குப் பாடஞ்சொல்லும் உபாத்தியாயர்களுந்தாம் அதனை எவ்வாறு விளக்குவரோ? இவையெல்லாம் சென்னைத் துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்குங் கல்விப்பயிற்சி விதிகளை அனுசரித்து எழுதப்பட்டன போலும்!

பதினொன்றாவது:—நிறங்களைப் பற்றிக்கூறு மிருபதாம் பாடத் திற் 'பூவரசம்பூ மஞ்சள்' எனவும் 'புல் பச்சைநிறம் உள்ளது' எனவும் கூறப்பட்டுள. பின் வாக்கியத்தில் விளக்கிக் கூறியவர் முன்வாக்கியத்திலும் விளக்கிக் கூறியிருக்கவேண்டும். அங்ஙனம் கூறாவிடின் அவ்வாக்கியம் சிறு பிள்ளைகளுக்கு வேறுபொருளும் பட்டு அவரை மருட்டுமென்க.

பன்னிரண்டாவது:—ஆங்கில பாஷையின் குறியீட்டிலக்கணத் தை மேற்கொண்டெழுதும் இந்நூல் செய்தவர் சிலவிடங்களில் அப்பாஷைக்குரிய குறிகளை யனுசரித்தும் சில இடங்களில் அனுசரியாமலும் எழுதுதல் மாறுபாடன்றோ?

பதின்மூன்றாவது:—சில திசைச்சொற்களை யுபயோகிக்குமிடத்து ஒரு திறமாகவே உபயோகித்தல் சிறப்பாம். ஆகவும் இவர் ஓரிடத்திற் 'குல்லாய்' என்றும் மற்றோரிடத்திற் 'குல்லா' என்றும் உபயோகிப்பர். அதன்காரணம் எமக்குப் புலப்படவில்லை.

**பதினான்காவது:**—இந்த நூலிற் பிராமணர்கள் வழங்கும் பல சொற்களும் எழுதப்பட்டுள்ளன. அவற்றுட் சில ஏனையோர்க்கு வெறுப்பு விளைக்கத்தக்கனவாம். இதற் குதாரணம் நாற்பதாம் பக்கத்திற்காண்க. அதே பக்கத்தில் 'அந்தப் பஞ்சபாத்திரத்திற்குப் பிடித்துக்கொள்ளப் பிடியுண்டு' என்னு மிவ்வாக்கியத்திலுள்ள 'பிடித்துக்கொள்ள' என்ற சொற்றொடர் பயனற்று நிற்கின்றது. அத்தொடரில்லாமலே அவ்வாக்கிய மினிது விளங்கும். அத்தொடரிருப்பதனாலே மயக்க முண்டாகுமேயன்றி வேறொரு பயனுமில்லை.

**பதினைந்தாவது:**—43 - ஆம் பக்கத்தில் 'நேர்க்கோடு' என்று தவிர்வழி வலிமிக்கதும், 46 - ஆம் பக்கத்தில் எண்களைக் கூட்டும் வகையில் 'நீங்கள் கற்பித்துக் கொடுப்பீர்களா?' என்று கேட்பதாக மாணாக்கன்வாயிற் கடினபதம் போட்டதும், 48-ஆம் பக்கத்தில் 'தமிழ் எண்வடிவமும் உச்சரிப்பும் - ஒன்று - க, இரண்டு - உ.........பத்து - கo' என முறை பிறழவைத்ததும், 49 - ஆம் பக்கத்திற் 'பழங்கள் பலவிதமாகச் சிறிதும் பெரிதுமா யிருக்கும்' என்புழிப்பன்மை யொருமை மயக்கமும், 53-ஆம் பக்கத்திற் 'காலைப் போசனம்' 'பகற்போசனம்' என்பனவாகிய இழி தொடர்களும் பிழைபட்டனவாகாவோ?

**பதினாறாவது:**—'வித்துக்களைச் செக்கிலிட்டு ஆடி'யோ? 'ஆட்டியோ'? 'நெசவுக்காரனோ'? 'நெசவுகாரனோ?' 'கூடோ' 'கூண்டோ'? 'வரகுக்கூழோ?' 'வரகுகூழோ?' இவை தம்முள் எவை நேரியன?

**பதினேழாவது:**—60-ஆம் பக்கத்திற் சொண்டுபோய்த் "[தமிழில் வினைச்சொற்கள் முற்றுவினை யென்றும் எச்சவினை யென்றும் இரண்டுவிதம்.]" என்று விளக்கிவிட்டு, அதற்கு முன்னருள்ள 57-ஆம் பக்கத்தின் அப்பியாசங்களில் 'இப்பாடத்தினின்று முற்றுவினை 6 - ம் எச்சவினை 4 - ம் எடுத்து எழுதுக' என்று பிள்ளைகளைக் கேட்டல் எந்த நியாயம் பற்றியோ? அன்றியும் முற்றுவினையெச்சவினைகளைப் பற்றி முதல் வகுப்பு மாணாக்கரை வினவுதல் மிகவும் அசம்பாவிதமா மென்க.

இன்னும் இவைபோல்வனவாகிய பிழைகள் பலதிறப்பட்டு மலிந்து கிடக்கின்றன. நூல் முழுதும் பார்க்கப்புகுதல் மணற்



சோற்றிற் கல்லாராய்தலொக்கும். இம்முதல் வகுப்புப புத்தகத்தை நமது லாங்குமன்ஸ் சங்கத்தார் தாம் அச்சிடுதற்கு முன்னர் தக்க தமிழ்ப்பண்டிதர்களிடங் காட்டித் திருத்திக்கொண்டிருந்தால் இது மிக்க நலமுடைத்தா யிருந்திருக்கும். இனியேனும் மேல்தாம் அச்சிடப்போகும் புத்தகங்களைத் தக்காரிடங் காட்டித் திருத்தி யச்சிடுவார்களாக. இனி இத்தகைய சிறு நூல்களைப் பற்றி யாம் அதிகமாக எடுத்துரைப்பது எமது வழக்கத்தொடு மாறுபடுமேனும், நமது லாங்குமன்ஸ் சங்கத்தார் விஷயமாகவே இத்துணையும் எழுதினு மென்பதுணர்க.

பத்திராதிபர்.

---

## பர்த்ருஹரி.

---

### 7. பரோபகாரநெறி.

*காருங் கதிரவனுங் களிமதியுங் காவுறு*
*மாருங் களிமரனு மாவுமிவை - நேராவர்*
*தாய்பிதாவைப் போலநலந் தாம்புரிவ ரீதறிகு*
*ராய்பரோப காரநெறி யாம்.*

கமுகு கதலி மா பலா விளா முதலிய தருக்கள் பிறர் கொள்ளும்பொருட்டுச் சுவையுள்ள கனிச் சுமையைச் சுமந்து தாழ்கின்றன. புயலினம் புத்தமுதங்கொண்டு பூவுலகிற் பொழியுமாறு பல்லிடமும் போய்ப் பரவுகின்றன. இவ்வாறே, மேலோரும் எல்லா நலனும் நிரம்பப்பெற்றும் கடுமை முதலாய தீக்குணமிலராய் யாவர்க்கும் எய்தற்கெளிய ராதலன்றிப் பிறர் இடத்துத்தாமே சென்று உதவுகின்றனர். அவ்வாறு அவர் செய்வது கைம்மாறு கருதியன்று. கை, புகழ்கருதியோ நாவினுக்கு இனிய உணவளிப்பது? அன்றியும், மெய்யின்மீது தாக்கற்கு வரும் கோலினடியைக் கைசென்று தாங்குமாறு அவர், தாம் வருந்தியும் பிறர்க்கு வரும் இடுக்கண் ஒழிப்பர். இம்மட்டோ? தமக்குத் தீங்கிழைப்பவருக்கும் நன்மையே புரிவர். மாந்தர் தன்னை வெட்டி வீழ்த்துந் தனையும் மரம் குளிர்நிழலைக்கொடுத் துதவுகின்றதன்றோ? மரங்கள் பழுப்பதும், நதிகள் பிரவகிப்பதும், பசுக்கள் திரிவதும் பரோபகாரத்தின்பொருட்டே யாதல்போல நமக்குச் சரீரமும் பரோபகாரார்த்தமே யளிக்கப்பட்டுளது. அறிவும், ஜீவகாருணியமுமுடைய மேலோரது செவி நல்லநூற்பொருட் கேள்வியினாலும், கைஈகையினாலும் விளங்குமேயன்றிக் குண்டலத்தாலு கங்கணத்தாலும் பொலிவனவல்ல. அங்ஙனமே அன்னோர் தேகமும் பரோபகாரத்தினால் ஒளிபெறுமே யன்றிச் சந்தனம்

புழுகு கஸ்தூரி கர்ப்பூரம் சவ்வாது குங்குமம் ஆகிய இவற்றின் பூச்சினால்
ஒளிபெறுவாம். கதிரும் மதியும் கமலத்தையும் குமுதத்தையும் மலரச்செய்
தல் கைம்மாறு கருதியன்றே. அதுபோல உயர்ந்தோர் பிறர்க்குதவுதல்
அவரிடம் பயன் கருதியன்று. பரோபகாரமே உத்தமர்க் கியற்கை. அவர் சுய
காரியதுரந்தாராயிரார். தமது காரியத்தைவிட்டுப் பிறர்காரியம் நாடிப்
பயன் படுத்துவோரே உத்தமர். தமது வேலைக்கு ஊனமில்லாமற் பிறர்
வேலையில் முயல்பவர் மத்திமராவர். தந்நலத்தின் பொருட்டுப் பிறர்
நலத்தைக் கெடுப்பவர் அதமராவர். இவர் பிறப்பால் மானிடராயினும்
செய்தொழிலில் அரக்கராவர். இவரினும் தாழ்ந்தோராய், யாது பயனு
மின்றி அன்னியருடைய உடைமைக்கு அழிவுசெய்து அல்லலிழைப்போரா
கிய அதமாதமரைப்பற்றி யாது சொல்லலாம் ? உத்தம குணமுடையோர்
தம்மைச்சேர்ந்த நட்பாளரது மனம் பாவத்தொழிலில் இழியும்பொழுது
அதனையடக்கி அத்தீச்செயலினின்றும் திருப்புவர். திருப்புதலல்லாமலும் நற்
செயலை நாடிச் செய்யத் தூண்டுவர். மித்திரனுடைய நற்குண நற்செய்கை
களைப் பலரும் அறியப்பரிந்து பரக்கப்பேசுவர். அவனுக்கு வறுமை
முதலிய கேடுவந்தவிடத்து அற்றகுளத்தி லறுநீர்ப் பறவைபோலத் தீர்வா
ரல்லர். வற்றியகுளத்திலும் ஒட்டிய ஆம்பலும் கொட்டியும்போல
உடனுறைந்து நலம்புரிய நாடுவரேயன்றிக் கெடுமிடத்துக் கைவிடார்.

‘உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதே’

இவரதியற்கை. நண்பன் கருத்துவந்த பொருளைக் குறிப்பாலறிந்து
கொடுத்து அவனை மகிழுறுத்துவர். இப்பெருங்குண முடையாரையே து
ணைக்கொள்ளல் வேண்டும். பரோபகாரமே அணிகலனுக் கொண்ட அறி
வாளர் தம் உடலையும் பொருள்செய்யார். அசேதனமான பாலுமன்றோ தன்
னோடளாய நீரினுக்குத் தனது சுவை முதலிய நீர்மையை யளிக்கின்றது ?
அந்நீரும் தனது நண்பன் தீயினால் வெப்புறுதற்காற்றாது அக்னிப் பிரவேசம்
செய்கின்றது. அதுகண்ட பாலும் தோழனையிழந்த துயராற் சுடுநெருப்
பில் துள்ளிக் குதிக்கின்றது. அங்ஙனமே, மேலோர் பிறர்க்குதவி புரித
லின் கண்ணே சிபிச்சக்கரவர்த்தியும் சந்திரனும் போலத் தமது உடலையும்
வழங்குகின்றனர்.

மற்றும் அம்மேலோர் மெய்வருந்திப் பன்முயற்சிகள் செய்து பொரு
ளினை ஈட்டுதல், தாமே யுண்டுடுத்துக் களித்து வாழ்தற் பொருட்டும், பல
மலர்களினும் பறந்துசென்று ஆங்காங்குள்ள தேனைக்கொணர்ந்து கூடுகட்
டிச் சேமித்துவைக்கும் தேனீயானது இறுதியில் அதனைப் பிறர் கொள்ளத்
தான் துய்க்காது இழத்தல்போல, கள்வர் முதலோர் கவர்ந்துபோகத் தாம்
அப்பொருளைவைத்து இறுதியில் இழத்தற் பொருட்டுமன்றி, பிறர் இறத்துப்
பயன்படுத்தற் பொருட்டேயாம். இன்னும் மேன்மக்கள் செல்வமுடைய



ராதல் ஊர்நடுவிற் பயன் மரம்பழுத்ததனையும், ஊருணிநீர் நிறைந்ததனையும்
ஒக்கும். “ஆற்றுப்பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு ஊற்றுப்
பெருக்கால் உலகினை” ஊட்டல்போல, பொருள் வருவாயின்றிப் பெரிதும்
வறுமையுற்று வருந்தற்குரிய காலத்தும் மேன்மக்கள் பிறர்க் குபகரித்தலிற்
பின்னிடார்; சோணாட்டிலுள்ள இளையான்குடி யென்னும் ஊரின்கண் மாற
னென்னும் பேருடைய மகானொருவர் சிவபத்திச் செல்வராய் தமது இல்
வாழ்க்கைத் துணையான மனைவியோடும் இல்லறம் நடத்திவருபவர் அன்ன
தானஞ்செய்து அடியாரைப் பூசித்தலில் தமது பொருண்முழுவதையும்
செலவிட்டுவறியராகியும் இல்லந்தோறும் சென்றிரந்து பெற்றபொருளினை
க்கொண்டு பெரியாரை உபசரித்து வந்தனர். இங்ஙனம் நிகழ்ந்தாநிற்க,
ஒரு நாள் இரந்தவிடத்தும் ஏதும்பெறுமையால், ‘இந்நாள் அடியாரைப்
பூசிக்கப்பெற்றிலோமே !’ யென்றிரங்கி மெலிந்து இல்லத்திருப்ப, அன்றி
ரவில் இறைவனே அவரது பத்தியின் மிகுதியைப் பார்த்தற்பொருட்டு ஒரு
விருத்தவடிவங்கொண்டு மழையாலனைந்து குளிரால் நடுங்கி அவருடைய
இல்லத்தை யடைந்தபோது அம்மாறர் பெருமகிழ்ச்சியோடு அப்பெரி
யாரையேற்று உபசரித்து உணவளித்தலும்மானுடவுருக்கொடு வந்த அப்
பெருமான் தமது திவ்ய ரூபத்தைக்காட்டி அவர்க்குத் தமது பதத்தை
யளித்தனன் என்னும் சரிதமும் வழங்குகின்றதன்றோ ? இவ்விளையான்கு
டிமாறநாயனாரது சரிதத்தால் மேலோர் தாம் வறுமையாற்றளர்ந்த கால
த்தும் பிறர்க்குபகரித்தலினீங்கார் என்பது பெறப்படுமாறு காண்க.

“ இடனில் பருவத்து மொப்புரவிற் கொசார்
கடனறி காட்சி யவர்”

என்ற திருக்குறளின் பொருளை ஈண்டுக்காண்க.

அகிலலோகங்களையும் அகட்டிடை அடக்கி அளித்தருளும் அச்சுதனை
யும், அரக்கர் குலங்களையும், அடைக்கலம்புக்க மைந்நாகத்தையும், வட
வானலத்தையும் ஆழியானது தன்னுள் அடக்கித் தாங்குகின்றதன்றோ ?
பல பன்னுவதேன் ? கேசவன் ஆமையாகி அனைத்துலகங்களையும் அடிபி
னின்று சுமப்பதும், துருவன் எல்லாவற்றினுக்கும் மேனின்று ஒளிமண்ட
லங்கள் யாவையும் நிலைநிற்கச் செய்வதும் பரோபகாரமேயன்றோ ?
இங்ஙனமன்றிப் பிறர் நலத்திற் பயன்படாத உயிர்கள் இப்பிரமாண்டமா
கிய கனியிற்றோன்றி அழியும் கொதுகேபோலப் பிறவிப்பயனற்றனவே
யாம்.

பிறர்மாட்டு உதவிசெய்தற்கு மனமுதலிய கருவிகள் நன்னிலைக்கண்
அமைந்திருத்தல் வேண்டும். ஆனதுபற்றி ஆசாபாசத்துட் கட்டுண்டு அல்
லற்படுமாகலின் பல்பொருள் வெஃகும் பற்றறுக்கவேண்டும். மட்கலவியா
பாரியொருவன் தன் வர்த்தகத்தால் வரும் ஊதியத்தைக் கணக்கிட்டுப்

பெருக்கிப் பெருஞ்செல்வமடைந்தவனாக வீணான மனோராஜ்யஞ்செய்து தன்னில்வாழ்க்கையில் மனைவியை உதைப்பதாக எண்ணி மட்கலங்களை யுதைத்து முதலிழந்ததுபோல, தான் மேற்கொண்ட காரியம் வெகுளியின் கொடுமையால் ஊறுபடுமாதலின் பொறையுடைமையைப் போற்றி யொழுகல்வேண்டும். விவேகமின்மை யடியாக ஒருவன் தீச்செயல்களிலுழந்துத் தீமை நுகர்கின்றானாதலால் அன்னான் கல்விமுதலியவற்றால் உளதாம் செருக்கடங்கல் வேண்டும். இருளுலகஞ் சேர்க்கைக்கு ஏதுவாதலின் மறத்தினிடத்து மனத்தைச் செலுத்தாது, அதனை அறனிடத்தே அமைத்தல் வேண்டும். பொய்த்தலிற் பெரிய தொருபாவமிலதாகலின் மெய்ம்மையை நாடியுரைத்தல்வேண்டும். அறிவினரோடு பழகாவிடின் புத்திவளர்ந்து செப்பமுறாதாகலின், யாவன் பலநாடுகளிற் சென்றுலாவுகிறான், யாவன் புலவரைப்போற்றி வழிபடுகின்றான், அன்னானது புத்தி நீர்மிசைப்பட்ட நெய்த்துளியே போலப் பலவிடயங்களிலும் பரவுகின்றது என்னும் உண்மையை அறிந்து அறிஞரை அடுத்து உறைதல்வேண்டும். இழிந்தோரை உயர்த்தியும் உயர்ந்தோரை இழித்தும் ஒழுகுபவன் பெரியதொரு வசையெய்தி அறம்பொருள்கள் அழியப்பெறுகின்றான். ஆகலின், சான்றோரைச் சம்மானித்தல்வேண்டும், சோர்வுபார்த்துக் கேடிழைப்பாராதலின் பகைவரையும் உறவுகொள்ளல்வேண்டும். குருவினிடத்து வணக்கமில்லாவிடின், அது பலரும் இகழ்தற்கு ஏதுவாதலின் அவர் மாட்டு எக்காலும் எப்பாலும் வணக்கமுடையராய் ஒழுகல்வேண்டும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

எனவும்,

"இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக"

எனவும் கூறியவாறு புகழின்றிப் பிறந்தும் பயனில்லையாதலின் பிறவிப்பயனாகப் புகழைத்தேடல்வேண்டும். இரங்காதவழி அகத்தூய்மையும் புருஷார்த்தலாபமும் இலவாமாதலின் இடர்ப்பட்டார் மாட்டு அருளுடையராதல்வேண்டும். நல்லோர் அமுதொக்கும் அறச்செயலுடையராய், பிறரிடத்துள்ள நற்குணம் அணுவளவினதாயினும் அதனை மலையென உயர்த்தி மனமகிழ்ச்சியோடு நம்முடைய அளவிறந்த உதவிகளால் உலகத்தை இன்புறுத்துகின்றனர். இதனை இனி வரும் சிறுகதையால் அறியலாகும்.

ஒருகால், திருமாமகளருளாற் பெற்ற மலர்மாலையை ஒரு தெய்வமகள் துருவாசமுனிவருக்களிக்க அவர் அத்தெரியலை, அக்காலை நகர்வலம் வாராநின்ற சுரபதிக்களித்தனர். அத்தேவர்கோனும் அத்தெய்வமருமலர்மாலையைத் தானூராநின்ற ஐராவதத்தின் மத்தகத்தின்மீது அணிந்தனன். அக்களிற்றரசு அதனை யெடுத்துக் கீழெறிந்து காலாற்றுவைத்திடலும், அது



கண்டு கோபமுனி மிகவெகுண்டு 'இச்செய்கை அவ்விந்திரனது செல்வச் செருக்கானன்றோ ஆயது' என்று தீவிழித்து அச்சுரபதியை 'நின்செல்வ முற்றும் கடலினுட் புக்கொளிக்க' எனச்சபிக்கவே, அவனுடைய செல்வமெல்லாம் ஆழியுள் வீழ்ந்து மறைந்தன. பின்னர், வறியனான இந்திரன் பிரமனை முன்னிட்டுக்கொண்டு சகல தேவரோடும் திருமாலையடைந்து வேண்டினவளவில் அவ்வருட்பரமன் இந்திரனிழந்த செல்வங்களைக் கடலைக் கடைந்து மீண்டுங் கொள்ளுமாறு அவர்க்குக் கட்டளையிட்டருள, அஃதறிந்த வானவரனைவரும் தத்தமாயுதங்களோடு ஆழிகடையச் செல்லவே திருமால் அவரை நோக்கி அவர்தம் படைக்கலங்களைப் புறத்தில்வைத்துவிட்டுக் கடையுமாறு ஆஞ்ஞாபித்தருளினன். அவர் அவ்வண்ணமே ததீசிமுனிவரை யடைந்து தம் எதிகளைப் பாதுகாத்துப் பின்பு தமக்கீந்தருளும்படி அத்தவமுனிவரை வேண்ட, அவரும் அவற்றை விழுங்கிவிட்டுத் தவத்திலமர்ந்தனர்.

இப்பால், விண்ணவர் பரமன்திருவருளால் மந்தரத்தை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிச் சந்திரனைத் தூணாக்கி ஆழியைக்கடைந்து அமுதத்தையும், முன்பு அதனுளாழ்ந்து மறைந்தபொருளனைத்தையும் அடைந்து வாழ்கையில் அசுரரோடு போர்செய்ய நேர்ந்தபோது ஆயுதம் வேண்டி, அருந்தவம் புரியும் ததீசிமுனிவரை யடைந்து தம்குறை நிகழ்த்திவேண்டலும்,

"மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடு தற்கு"

என்றவண்ணம் பிறர்க்குதவிபுரிதலே பேறெனக்கொண்டு அப்பெருந்தவமுனிவரர் தம் பின்புறத்தெலும்பைக் கொண்டு வயிரப்படையாக்கி, பொருநரைப் பொருதுவெற்றி கொள்ளுமாறு விளம்பித் தமதுடற் சுமையொழித்து உயர்பதமுற்றனர். பின்னர், வேண்டாரைப்பொருது வீழ்த்தி வெற்றிகொள்ளவேண்டிய விண்ணவரனைவரும் அவ்வாறே அம்முற்றத்துறந்த முனிவரது முதுகெலும்பை எடுத்துப் படைக்கலமாக்கிப் பகைவரைப் பொருது வெற்றிபெற்றனர். ஆகவே, பரோபகாரமே சீரிய பேரறம் என விளங்குதலறிக. இப்பரோபகாரப் பெருங்குணம் ஆறறிவுடைய மக்களிடத்தே யன்றிப் பிறபொருள்களிடத்தும் உள்ளனவென்பதைப் பசு, நதி முதலியவற்றின் செயலினாலும், தன்னை எய்தற்கெய்தி அம்புகோத்த வேடனுக்குத் தன்னுடலையீந்த புறவின் செயலினாலும் நன்கறியலாகும்.

---

* அவர் விழுங்கிய ஆயுதம் யாவும் முதுகெலும்பாய் அமைந்திருந்தன என்பதறிக.

## 8.—தைரிய நெறி.

வெங்கனலுந் தண்புனலாம் வேலையிடந் தெள்ளமுதாஞ்
சிங்கமுமோர் நல்ல சிறுமானாந் - தங்கருமத்
தூக்கமுடை யாருக்கவ் வூக்கமே நன்மையெலா
மாக்குமிது தைர்யநெறி யாம்.

தேவர் பாற்கடலை அமுதமெழக் கடைந்த காலத்து, அவ்வாழியிற்றோ
ன்றிய ஐராவதம் கற்பகம் மணிமுதலிய பொருள்களால் திருப்தியடைந்து
விடாமலும், ஆலாலம் வடவைத்தீ ஆகிய இவற்றைக்கண்டு அஞ்சிக்கை
சோரவிடாமலும் தாம் அடையக்கருதிய அமுதெழுங்காறும் மனவெழுச்சி
யோடு முயன்றனராதலின் ஊக்கமுடையார் தாமெடுத்தகருமங்கட்கு இடை
யூறுகள் அடுத்துவரினும் இடையறாது முயன்று அவற்றை முடித்தேவிடுவர்.
அதமர் இடையூற்றுக்கு அஞ்சி ஒருதொழிலையும் செய்யமுயலார். மத்திமர்
தொழிலைத் தொடங்கி, இடையூறு வருங்கால் அதனைவிலக்க வகையறியாது
எடுத்த காரியத்தை விடுத்து வருந்துவர். உத்தமரோ, தமது கருமத்துக்கு
இடையூறுகள் பலவாய் வரினும் அவற்றை அஞ்சிச் சிறிதும் மனந்தளராமல்
முயன்று கருதிய பொருளைப்பெறுவர். அன்றியும் கருமமே கண்ணாயினோ
கிய ஊக்கமுடைய உத்தமர் மெய்வருத்தம் பாராமலும், பசி நோக்காமலும்,
கண்டுஞ்சாமலும், எவ்வெவர் தீமையு மேற்கொள்ளாமலும், அவமதிப்புங்
கொள்ளாமலும், பாரிற் படுக்கநேரினும் பஞ்சணையிற்றுயிலநேரினும், அடை
காய்நுகரவரினும் அறுசுவையுண்டியே உண்ணக்கிடைப்பினும், கந்தையுடுப்
பினும் கனகாம்பரந்தரிப்பினும், வெறுப்பு விருப்புக்கொள்ளாது மனத்தைச்
சமநிலைப் படுத்தித் தம்முயர்சி கைகூடுந்தனையும், இன்பத் துன்பங்களை
இலக்ஷியஞ் செய்யார். இன்னும் நன்முயற்சிக்கண் ஊக்கமுடைய உத்தமர்
தம்மை 'ஒருவர் முன்புகழினும் இருவர் பின்பிகழினும்' 'மெய்த்திரு வந்துற்
றாலும் வெந்துயர்வந் துற்றாலும்' மரணம் இன்றுவரினும் நின்று வரினும்
நன்னெறியினின்று ஒருகாலும் விலகார். தீராது மனம்மாதராது விழிநோக்
கென்னும் வாளினாற் பிளவுறாது. அவர்மனம் சின மென்னுஞ் சுடு நெருப்
பால் தீக்கப்படுவதில்லை. பொருளின்பங்களிற் பற்றென்னும் வன்கயிறு
அவர்மனத்தைப் பிணித்தலில்லை. இத்தன்மையோர் தமது ஊக்கத்தினால்
எல்லாவுலகையும் தம்வயமாக்குகின்றனர். எரிதழலைத் தலைகீழாகப் பிடிப்
பினும் அதன்சுவாலை கீழாகுமோ? அவ்வாறே, ஊக்கமுடைய மேலோர் கீழ்
மக்களாற் சிறுமையுறினும் அவரது தைரியகுணத்தைச் சிறுமைப்படுத்த
வொண்ணாது. நற்செயல்களில் ஊக்கத்தைக் கைசோரவிடுதலினும், உயர்வ
ரையின் உச்சியினின்று கல்லும் முள்ளும் நிறைந்த படுகுழியில் விழுந்து
உறுப்புக்கள் நொறுங்கி அழியப்பெறுதலும், தீவிடமுடைய கொடிய பாம்
பின்பற்களிற் கைவைத்தலும், கொதித்தெரியும் தீக்குழியிற் குதித்திறத்தலு
மே மேலாகும்.



தைரிய மென்னும் சற்குண முடையார்க்குக் கனலும் புனலாகும்.
பெருங்கடலும் சிறுகுட்டமாகும். மேருவும் பரலாகும். சிங்கமுஞ் சிறு
மானாகும். நல்லபாம்பும் மெல்லிய மாலையாகும். நஞ்சமும் நல்லமுதமா
கும். எனவே, துன்பந்தருஞ் செயல்களும் மனந்தளராத மேன்மக்கட்கு
இன்பந் தருவனவேயாகும். அன்றியும் அவர்கள், மரம் வெட்டுண்டு குறை
யினும், சந்திரன்தேய்ந்து குறையினும், அழிவுறாது வளர்வதேபோல, தமக்
கேனும் தம் மினத்தார்க்கேனும் துயர்வரினும். அதனால் ஊக்கங்கெட்டு
உலைவுறார்.

மிக்க நீரைக் கொள்ளமாட்டாத ஏரியின் கீழுள்ளபயிர் அவ்வேரியில்
நீருள்ளளவும் செழித்திருந்து அந்நீர் குறைந்துவறண்டால் தானுந்தளர்ந்து
வாடி வருந்தல்போல, யாதும் முயற்சி செய்யாது, சிறிது பொருள்வருவா
யுடைய சுற்றத்தாரையடுத்து அவர் கொடுக்கத்தின்று வாணாள் கழிக்கும்
வீணரான சோம்பர் அச்சுற்றத்தாரிடத்துப் பொருள் இருக்குமளவும் சுகித்
திருந்து அவர் செல்வங்குறைந்து வறுமையுற்றால் தாமும் வறுமையாலடர்
ப்புண்டு வருந்துவர். ஊக்கமுடைய மேலோரோ, வாளின்மேல் நின்றாடு
வோர் கண்ணை அதன்மேலே செலுத்தி ஆட்டந்தவறாமலும் அபாயம் வாரா
மலும் தமது ஆட்டத்தை யாரும் வியப்ப முடித்தல்போல, தாங்கொண்ட
கருமத்தின் கண்ணே ஊன்றிநின்று காரியத்தை முடித்துப் பயனடைகின்ற
னர். அன்றியும், காற்றினால் அசைந்தாடும் சிறியகொம்பும் வளர்ந்து முதிர்
ந்து காழ்கொண்டால் அதுவே களிறுகட்டற்குரிய கந்தாதல்போல, ஒரு
வன் இடைவிடாது முயன்று வருவானாயின் அவனே பிறரை மேற்கொள்
ளத்தக்க வன்மையுடையனாவான். ஆதலின் மேலான காரியத்தையே இடை
யீடின்றி முயன்றுசெய்து முடித்தல்வேண்டும். அற்பகாரியத்தைச் சிறுவர்
செய்து அவ்வளவில் திருப்தியடைவர். எலியின் சோங்கை சிறிது தானி
யத்தினால் நிறையும். அங்ஙனமின்றி அரிய பெரியகாரியத்தையே முயன்று
முடித்தல் ஆண்மைக்கு அழகாம். அஃது ஒருகாற் கைகூடாவிடினும் அத
னாற் புகழேயன்றி இகழ்வில்லை. குறுநரியின்மீது குறிவைத்தெய்து அதனை
வீழ்த்துதலினும், கோளரியின்மீது எவியவாளி பிழைப்பினும் அதனால் இழுக்
கில்லை. ஒருவருக்கு நல்லகுலமும் தீயகுலமும் அவரது முயற்சியாலாவன
வன்றி இயற்கையா லாவனவல்ல. குலனேயுமன்றி, பொருளும் புகழும்
தவமுமெல்லாம் ஊக்கமுடையாரது முயர்சியினாலேயாகும்.

அறிவுடையார் தாம் எடுத்தகாரியம் முடிவுறுமளவும் அதனை முடித்த
லின்கண் தமக்குள்ள மனோபலத்தைப் பிறரறியவிடார். பிறரது மனவலி
யை அவரது உறுப்புக்கள் இருக்கும் தன்மையால் அறியவல்லராவார். எல்
லாம் வல்லனான திருமாலும் மாவலிபால் மண்கொண்ட காலையில் தன்
முயற்சி பிறரறியாதவாறு உருக்கரந்து சென்றான். ஆகையினால், உலகமெ
ல்லாம் முயற்சிக்கண் ஊக்கமுடைய பெரியாரது குறிப்பின் கீழ்ப்பட்டன

வாகும். இத்தகைய பெருமை அன்னார்க்கு அவர்தம் முயற்சியினாலே எய்துகின்றது. அஃதில்லான் மடிமையினாற் சிறுமை யெய்துகின்றான்.

'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்'

என்றதூஉங்காண்க. மேற்குலத்திற் பிறந்தும் முயற்சியின்றிச் சோம்பித்திரியுமவன் கரும்பிற் பிறந்தும் அதன் நுனிப்பூங்கொழுந்து பயன்படாதவாறுபோலப் பயன்பெறாது சிறுமையடைவான். சேற்றிற் றோன்றினும் தாமரை சிறப்புறுதல்போலக் கீழ்க்குலத்துத் தோன்றினும் ஊக்கமுடையார் பெருமை யடைகின்றனர்.

மற்றும், ஊக்கம்நிலை நிற்ப தொன்றாகலின் அவ்வூக்கமுடைமையே செல்வமுடைமையாம். ஏனைப்பொருள் ஊக்கம்போல நிலைநிற்ப தொன்றல்லாமையின் அதனையுடைமை செல்வமுடைமை யாகாதென்க. இப்பெருங்குணமாகிய ஊக்கத்தையுடையார் கைப்பொருளை இழப்பரேனும் அவ்விழவை இழவென்று கருதி இன்னலுறார். தளராத மனவெழுச்சியுடையான் மாட்டுச் செல்வம் தானே வழிதேடிச் செல்லும். நீர்ப்பூக்களின் தாள்கள் அந்நீரினளவின வாதல்போல ஒருவரது பெருமையும் வினைசெயலின்கண் அவர்க்குளதாய ஊக்கத்தி னளவினதேயாம். இத்தளராதவூக்கமுடையார், தமது முயற்சிக்கும் அம்முயற்சியால் தாம் அடையக்கருதும் உயர்ச்சிக்கும் இடையூறுகளால் அழிவுவந்தவிடத்தும், கணையினாற் புண்பட்டாலும் களிறு சிறிதும் கலக்கமுறாது தனது பெருமையையே காட்டுதல்போல, சிறுமையுற்றுச் சிதையாமல் தமது பெருங்குணத்தையே நிலைநாட்டுவர். மனவெழுச்சி யென்னும் இப்பெரிய குணம் ஒருவருக் கில்லையாயின், முயற்சியின்மையும், அஃதின்மையாற் பொருளின்மையும், அஃதில்லையாகவே கொடையும் அக்கொடையினால்வரும் மகிழ்ச்சியும் இல்லவாம். ஒருவர்க்குத் தம்பகைவரினும் மிக்க மெய்வன்மையும் படைவன்மையும் உள்ளன வெனினும் ஊக்கமொன்றிலராயின் அவ்வூக்கத்தையுடைய ஒன்னலரையஞ்சி இன்னலுறுவர்.

* "பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்."

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்.

(இன்னும் வரும்.)

---

## வாழ்க்கைப்பயன்.

---

### I. பெருவழக்கு.

நாம் வாழ்நாட்களின் மிகவும் முக்கியமாகக் கற்கவேண்டிய விஷயம் எவ்வாறுவாழ்வ தென்பதே. மனிதர் உயிரோ டிருப்பதற்குக் கவலைப்



படுமளவு வேறொன்றுக்குங் கவலைப்படுகின்றிலர். அங்ஙனமாகவும் அது நன்றாயிருப்பதற்குத் தாம் முயலாதிருக்குமளவு வேறொன்றிலு மிருக்கின்றாரல்லர்.

இஃதெளிய காரியமன்று. தமது வைத்தியப் பழமொழிகளினாரம்பத்தில் **இப்பாக்ரடிஸ்** என்பவர் "நமது வாழ்நாட்களோ சில, கலைகளோ நெடிய, பருவமோ வோடுகின்றது, ஆராய்ச்சி யெவ்வாறு முடியுமோ? முடிவுரையோ அரிதாம்" என்று கூறினார்.

"கல்வி கரையில கற்பவர் நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல - தெள்ளிதி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து" என்றார் **நாலடியாரினும்.**

இன்பமும் வாழ்க்கையின்கண் வெற்றியு நம்மைச்சார்ந்தனவே யன்றி நம்மைச்சுற்றிய நிலைமைகளைச் சார்ந்தனவல்ல. "பிறராலழிபவர் தொகையினுந் தாமே யழிபவர் தொகை மிக வதிகம்; புயற்காற்றுக்களினாலாதல் நிலநடுக்கங்களினாலாத லழிந்த வீடுகளினும் நகரங்களினும் மனிதர் கைகளாலழிந்தன மிகவதிகம்". அழிவிருவகைத்து: ஒன்றுகாலத்தின் செயல், மற்றையது மனிதரது. அழிவனைத்தினு மக்களழிவே மிகத்துன்பம் விளைப்பது. **செனிகா** என்பவர் கூறுமாறு மக்கட்குக் கொடும்பகை யவர்தம் மனமே. **லாப்ருவர்** என்பவர் "பிறரைத் துயருறுத்துவதிற் பலர் தமது காலத்தைப் பெரிதுங் கழிக்கின்றார்கள்" என்று கூறுகின்றார். மக்கள் தம்மை மிகவு நன்றாய் விரும்புகிறார்களே யன்றிக் கூர்ந்த வறிவுடன் விரும்புகின்றார்களல்லர்.

சிலவேளைகளில் யான் எவற்றினுநலங்காண்பவனாகக் குறைகூறப்படுகின்றேன். ஆனால் யான் வாழ்க்கையின் இடர்ப்பாடுகளையுந் துயரங்களையும் எப்பொழுது மறியாமலாவது மறந்தாவதிருக்கவில்லை. மனிதர் சந்தோஷமா யிருக்கலாம்; அற்றன்றேற் சாதாரணமாய்க் குற்றம் அவரதே; நம்முட் பலர் தாம் நுகருமின்பத்தினும் மிக்க வின்பத்தை நுகராது விடுகின்றார்கள் என்று மட்டுங் கூறியிருக்கின்றேனே யன்றி அவர்கள் சுகமாயிருக்கிறார்களென்று எப்பொழுதுங் கூறினேனலேன். இஃதுயிர்வாழ்க்கையை யின்னு மதிகத் துன்பகரமாக்குகின்றது. ஏனெனில்

'அஃதற் றாகலாம்' என்னுஞ் சொற்களே
பேசுறு மல்ல தெழுதுறுஞ் சொற்க
ளெவற்றினு மிகவு மின்னாதனவாம்.

நன்மை தவறாகப் பொருத்தப்பட்டாலும் வரம்புகடந்து சென்றாலுந் தீமையேயாம். ஓர் இயந்திரத்தி லொருசக்கிர மல்லது ஒரு பல்லேனுந் தன்னிலையைவிட்டுத் தவறியிருந்தால் அவ்வியந்தரம் முழுவதையும் பயனிலதாக்கிவிடும். உலகப்படைப்பி னொழுங்கொடு நாம் முரணுவோமாயின் அதற்கேற்ற

வாறே துன்பப்படுதலை யெதிர் பார்க்கவும் வேண்டும். மிதமிஞ்சிய வீரம்
கடாத்தன்மையும் அத்தகைய நேசஞ் சோர்வும், அத்தகைய காசமுத்தம்
பொருளாசையுமாக முடிகின்றன. ஒருவனுக்குப் பால் மற்றவனுக்குப் பா
ஷாண மென்னும் பழமொழியுமுண்டு. இதுகாறுமெவரு மியற்கை யொ
ழுங்குகளின் மாறுபாடு ஒன்றேனும் மிக்க நன்மை பயத்தற்பாற்றென்று காட்
டும் வன்மை பெற்றிலர். ஒருமனிதன் விழுந்து காலொடிந்தது பற்றிப் பூமை
யக் கவர்ச்சிமுறையை மாற்றுதல் உள்ள நிலையை யுயர்த்தாது.

பாரஸீகர் நன்மைக்கடவுளை யின்பம்விளைப்பவ னென்றுந் தீமைப்
பேயைத் துன்பம்விளைப்ப தென்றுங் கருதியிருந்தார். உண்மையாய் நமக்கு
உயிர் வாழ்க்கையிற் றுன்பங்களுண்டாதல் நாம் பிழை யென்றுணர்ந்தன
வற்றைச் செய்தலாகிய அறிபிழைகளினாலேயே ; அன்றியும் நம் அறியாப்
பிழைகளினாற் சில வேளைகளில் ஏறக்குறைய அதேயளவு வாழ்க்கைத் துன்
பங்கள் விளையலாம்.

முதல்வகையாகிய அறிபிழைகளைப் பற்றி நாம் நமக்கு என்றுந் தவறு
வழி காட்டி யொன்றை நாட்டியிருக்கின்றோம். யாம் பிழைசெய்வதெல்லாந்
திறந்த கண்களோடே ; ஏனெனில் நாம் வேண்டுமென்று மூடினாலன்றிக்
கண்கள் திறந்திராவிடிற் புத்தியில்லாம லொருகாரியஞ் செய்தபோதிலும்
அது பாவமன்று.

பின்வகைய அறியாப் பிழைகளைப் பற்றி நமது பகுத்தறிவின் மேலும்
நமது பெற்றோர் மூத்தோர் நேசராகிய இவர்களது பகுத்தறிவின் மேலும்
நமது கல்வியின் மேலும் நம்மேலும் நம்பிக்கை கொள்ளவேண்டும். மெய்
யாகவே நமது கல்வி நமக்கோ ரவயவமாம். நம்மனைவர்க்கும் நாம் அறிவு
கொளுத்திக் கற்பிக்கவேண்டிய மாணாக்கனொருவ னெவ்விதத்திலேனு
முளன்.

பிறரிடத்திலிருந்து நாங் கற்றுக்கொள்ளுங் கல்வியானது நமக்கவயவ
மாதலினும் மிகச்சிறந்த அவயவமாகின்றது நாம் பிறர்க்குக் கலைபயிற்று
தல்.

“ ஆசானுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னாகும்.”
“ அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்விதி னுரைப்ப வவ்விரு காலு

மையறு புலமை மாண்புடைத் தாகும்” என்றார் நன்னூலுடையாரும்.

பாடசாலையை விட்ட போழ்திலேயே படிப்பு முடிகின்றிலது.
அஃதுண்மையில் அப்பொழுதுதான் ஒருவாறு தொடங்குகின்றது. அது
வாழ்நாள் முழுவதும் நடக்கின்றது. சேனிகா என்பவர் “மனிதர் தாம் உடல்
விருத்தி செய்யுமளவு உளவிருத்திசெய்தும் இன்பத்திற்கு முயலுமளவு



அறத்திற்கு முயன்றும் வருவாரேல் எவ்வளவு நன்றாயிருக்கும்!” என்று
கூறினார்.

உண்மையிற் சில குலத்தார் விதிவாதிகளே. அவர் கருத்தில் ஒவ்வொன்
றும் முன்னரே விதிக்கப்பட்டுளது. மக்கள் விரும்பினும் விரும்பாவிடினும்
நிகழவேண்டியது நிகழ்ந்தேதீரும். மனிதனை அவர்கள் ஒருயர்ந்த பேராற்ற
லுடைய பொருளின் விளையாட்டினிமித்த முண்டாகிய தானே யியங்கும்
ஒரு கருவியாக மதிக்கின்றார்கள். பிறகு ஆலோசிக்கவேண்டிய முதல் விஷ
யம் வாழ்க்கைநூல் என்று ஒன்றுண்டோ இல்லையோ என்பதே. காலம்
மென்னுங் கடலில் நம் வாழ்க்கை மரக்கலத்தைச் செலுத்தக் கூடுமா? அல்
லது நாம் மிதந்துகொண்டே யிருக்கும்படி விதிக்கப்பட்டிருக்கின்றோமா?
இதற்கு மறுமொழி உள்ளங்கை நெல்லிக்கனியே. மனிதன் மனிதனே; தன்
விதிக்குந்தலைவன்

“ ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்” என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்.
அற்றன்றேற் குற்றமவனதே. “நீ இருக்கவேண்டு மென்று விரும்பு
கின்றபடியே இருக்கின்றாய்; ஏனெனில் அன்போடும் உண்மையான எண்
ணத்தோடும் நாம் விரும்புவனவெல்லாம் அவ்வாறே ஆகத்தக்கவண்ணம்
நமது சித்தத்தின் வன்மை கடவுட்டன்மை பெற்றிருக்கின்றது”

நமது விதியை நாம் அடக்கியாளும் வன்மை நமக்கு உண்டெனில்
எப்படி யிருக்கவேண்டுமென்று விரும்புகின்றோ மென்றும் வாழ்க்கை
யென்னும் செழித்த நிலத்தை நாம் எவ்வாறு மிகுதியும் பயன்படுத்தலா
மென்றும் நாம் நம்மையே வினவிக்கொள்ளுதல் மிகவு மின்றியமையாத
தாகின்றது.

நமது கருத்து நம்மை நம்மாலியன்ற வளவு மிகவும் பயன்படத்தக்க
வர்களாக்கிக் கொள்வதாக வேண்டும். ‘முழுவதும் ஒற்றுமைவாய்ந்த பூர்ண
நிலையை அடையத்தக்கவாறு தனது வல்லமைகளை மிகவும் நன்றாய் உயர்
ந்து அளவற்ற விருத்தியாகும்படி செய்துகொள்ளலையே ஒவ்வொரு மனித
னும் குறிக்கொளவேண்டும்’ என்று ஹம்போல்ட்துரை சொன்னார். ஜீன்
பால்ரீச்டர் கூறுமாறு ஒரு மனிதன் தனது பொருள்களை எவ்வளவு உபயோ
கப்படுத்தலாமோ அவ்வளவு தன்னையே உபயோகப்படுத்திக் கொள்ளல்
வேண்டும் என்பதும் ஒவ்வொரு மனிதனுக்கும் உற்ற இலக்காம்; ஆயினும்
நாம் இதன்கண் நந்நன்மை நாடி ஒன்றும் முயலப்படாது. அன்றி, முயல்வ
மேல் நாம் தவறிப்போவது ஒருதலையாய் முன்னரே விதிக்கப்பட்டுளது.

பேகனார் கூறியபடி எந்த மனிதனுக்கும் அவனது சொந்தப் பொருட்
செல்வம் ஒரு விதத்திலேனும் அவனது வாழ்க்கைப்பயனாக முடியாது.
ப்ளேடோ அரிஸ்டாடில் புத்தர் பால் முதலானவரைப் போன்ற பேரறிவா

ணர் தமக்காகவே தமது நலங்களை முற்றுவித்துக்கொள்ளலோடு ஒருநாளும் திருப்தியடைய மாட்டார்கள்.

இனிப் பிறர்க்காக நாம் நன்றாக உபயோகப்பட வேண்டுமென்று யான் நினைத்துக் கொள்ளுகின்றேன். அப்படியானால் நாம் எவ்வளவு இனியவேலை செய்யவேண்டி யிருக்குமென்று உடனே எடுத்துக்காட்டுகின்றேன். ஒரு கிரேக்கப் பழமொழி நம்மை நாமுணர்தலின் றியமையாமையையும் அதைச்செய்வதன் அருமையையும் பற்றிக் கூறுகின்றது. உயிர்வாழ்க்கை நன்றாயிருக்கக்கூடியவளவு விசேஷச் செய்தியில்லாமலும் ஆச்சரியப்படத்தக்க தொன்று மில்லாமலும் வாழ்ந்த ஸிரீடீப்ரோளன் என்பவர் தமது முப்பது வருஷகால அதிசயமும் கூறுகிறதற்குச் சரித்திரமாகவே தோன்றாமல் ஒரு சிறுசெய்யுட் பகுதிபோலவும் கட்டுக்கதை போலவும் தமக்குத் தோன்றியதாக வலியுறுத்துகின்றார்.

தொன்றுதொட்டுத் தற்காலமட்டும் புத்திசொல்லுதல் என்பது வர்தனமற்ற வேலையாய் முடிந்தது. எவனைப்பற்றி அவனது தலைவன் பாதிரியிடம் "கடைசியில் நாம் அவனைக் கொல்லத்தக்கவளவு நமக்குப் புத்தி சொன்னான்" என்று சொன்னானோ அந்த நியூஜீலாண்டு தேசத்தனாகிய மதமாறுவோனுடைய விசனகரமான விதியையும் யான் மறக்கின்றிலேன். ஆயினும் முதன்முதல் எளிதிற் கிடைக்கக்கூடிய புத்தியைக் கேளாதவர்கள் பின்னர்க் கழிவிரக்கத்தை மிக்க வருத்தத்தின்மேற் பெறுவார்கள். ஏதேனு மொன்றாக இருக்கவும் ஏதேனு மொன்றைச்செய்யவும் விரும்புகிறவர்களுக்கு அவர்களுடைய அநுகூலத்தைக் கருதியே தம்மையுந் தங்களுயிரையும் பயன்படுத்தும்பொருட்டுச் சில உபாயங்கள் சொல்லவேண்டுமென்பதே என் கருத்து.

(இன்னும் வரும்)

சருக்கை - வரதாசாரியன்.

---

## கடற்கரையுலா.

### கலிவிருத்தம்.

சொல்வளர் தமிழ்கமழ் தொண்டை நாட்டினி
னல்வளச் சென்னைமா நகர்க்க டற்கரை
வல்வெயின் மிகுமொர்நாண் மாலைப் போழ்தத்தென்
செல்வியும் யானுமாச் சென்று சேர்ந்தனம்.



2. ஆவயிற் றண்புன லருகி னேகினே
மேவிய தளர்வொடு வியர்வு நீங்கினே
மோவலி லலைசனு மொலித்து மேல்வரு
மாவினை வொடுமெழீஇ மருங்கொ துங்கினேம்.

3. ஒதுங்கிய பினர்ச்சிறி தூற்று நோக்கினே
மதங்கிளர் திரைகளின் வன்பு கண்டியாங்
கதங்கொள லின்றியுட் களிப்ப டைந்துபல்
விதங்குதி கொளுங்கடல் வியந்து நின்றனெம்.

4. நின்றயா மிருவெமு நேர்ந்து லாவிய
சென்றனஞ் செல்வுழிச் சிறிய னொண்டுக்
கொன்றிய தண்மணை லூழுது வந்தன
மன்றவே யதுகண்டு மறைந்து றைந்தனெம்.

5. இற்றைநான் றைப்பல விளைஞ ரோவிந்தக்
கற்றன வெழுதுபு கருத்திற் போற்றுறு
நற்றொழி லலவனை நனிநி கர்க்குந
ருற்றவென் றலைவிர்நீ ருணர்த்தி ரென்றனள்.

6. என்னலு மற்றன்றெ னினிய மாதராய்
நன்னயக் கடலிறை ஞண்டென் கைகளாற்
றன்னில மகளெனுந் தலைவி மேனியி
லின்னெழிற் றொய்யினன் கெழுது கின்றனன்.

7. எனவிள நகைபுரிந் தியாணி யம்பலுந்
தனதழ கியமுகர் தையல் சேர்ந்தன
ளெனதொரு விறலினை யிகழ்ந்து நின்றனி
ரெனைகொலோ வொளித்தலின் றிசைமி னென்னவே.

8. கூறிய வளவினிற் குறிப்பி யானென்றும்
வேறுறக் கொண்டிலேன் விளங்கு புந்தியாய்
சீறிநின் முகநிறந் திறம்பு கிற்பதென்
றேறிய லறிகலென் றெருட்டு கிற்றியோ ?

9. நீயிரே நிகழ்த்திபு நின்ற செய்தியை
யாயுழி யதனினின் றாழ்க ருத்தொன்று
மேயதும் முளத்தென விராம்பு தற்கினி
தேயதொர் காரண மியம்பல் வேண்டுமோ ?

10. வனிந்த வின்மொழி யென்னை நும்முளந்
தேனுந்து மின்றமிழ்ச் செய்ய பாவலீர்
ஞானந்த வாதவஞ் ஞுண்டின் பாங்கர்ச்சென்
றூனந்த மெய்துவ மன்பின் வம்பிரோ.

11. என்றென்றென் காதலி யிட்ட வாணையை
நன்றென மேற்கொடு நண்ண லும்மவ
ணின்றளுண் டனைத்துமே நினைப்பி னும்விரைஇத்
துன்றின தொளைவெளித் தோன்ற லின்றியே.

12. உதுகண்டென் மனைவியு முற்ற தென்கொலோ
கதுமென ஞெண்டெலாங் கரந்த காரண
மிதுவெனச் சுட்டித லியது மோபொருட்
புதுமையின் சுவைநலன் புகலு நாவலீர் !

13. சேயலையந் தளிர்புரை சிறிய தாளெழிற்
கயல்விழி நின்முழங் கால்கள் கண்ணுறீஇ
யயலவை நிற்கவு மஞ்சி யோடின
வியல்பிது வாகவு மென்கொ னின்வினா ?

14. அன்பினோ டழகுநன் கார்ந்த மங்கையே
வன்பகை யாளரை வழியிற் கண்டக்கால்
மென்பகை யுடையர்தாம் வெருவி யோடுவ
ரென்பது வையகத் தியற்கை யேயன்றோ ?

15. போதும்போ துந்தமிழ்ப் புலவ ரேயினி
யோதுதற் குரியதா யுற்ற காரண
மேதொன்று முண்டெனி லெடுத்துக் காட்டுதிர்
காதலின் மெய்ந்நிலை கண்ட வந்தணீர் !

16. இவ்வுரை யான்செவி யேற்ற பின்னரென்
செவ்விய மடந்தையே சிறிது கேட்டியா
லெவ்வகை யுயிர்களு மினிது தாந்தமைத்
தெவ்விற்காத் துக்கொள நேர்ந்த மெய்ம்மையே.

17. ஆதலி னவையெலா மரிய தம்முயிர்க்
கேதமே தாயினு மெய்து மோவெனப்
போதலுற் றனமற்றுன் புந்தி தோன்றுவ
தீதென விசைத்தியோ வெனுமெல் தையலே !



18. விந்தையே நும்முரை வேறு தியெனஞ்
சிந்தையிற் கொண்டிலேன் செம்மை சான்றநற்
பைந்தமிழ் வாணரே பகர்தி ராலவை
தந்தமைக் காத்தலோ தக்க காரணம் ?

19. நன்மையை நாடுறு ஞான வானையு
மன்மையை யாற்றிடு மறிவி லானையுந்
தன்மதி தனிலொப்பத் தான்கு றிக்கொளல்
புன்மைய தாமன்றிப் புலமைப் பாலதோ ?

20. அத்துணை யறிவந்த வலவற் குண்டுகொன்
முத்துறழ் முறுவனின் மொழிக ளின்பொருண்
மெத்தவு மழகிது மேன்மை சான்றநங்
கத்தன்றன் படைப்பினுங் காண்டி ரோயகுறை ?

21. இறைவனார் படைப்பினு மிருக்கு மோசில
குறையெனுங் கருத்தியான் கொண்டி லேன்மற்றெ
னறிவினிற் றோன்றிய வையப் பாட்டினம்
மறைதனைக் காணிய மனங்கொண் டேனரோ.

22. அம்மம்ம யாமுரை யாடு மவ்வயிற்
றம்மையே தாநிகர் தன்மை யாளர்கள்
செம்மைசேர் மேனியர் சேந்த குஞ்சியர்
விம்மிய தோளினர் விளைந்த யாக்கையர்.

23. மயலென வுயிரினை மதிக்கு மாண்பினர்
செயலருஞ் செய்கைகள் செய்ய வல்லவர்
புயலென முழங்குபு போர்செய் வீரர்க
ளயவுரை நண்ணலர் நால்வர் போந்தனர்.

24. போதரக் கண்டனள் பொருக்கென் றொன்றையு
மோதல ளென்னிடை யோடி வந்தெனை
யாதர வொடுந்தழீஇ யயர்ந்து நின்றனண்
மூதறி வுடையவென் முதல்வி மாணவே.

25. பாகட்ட மென்மொழிப் பாவை யேயுற்ற
மாகட்ட மென்னைகொல் வகுத்து ரைத்திநீ
போகட்ட மலரிது புரிந்து கொள்ளென
வாகட்டு மென்றதை யன்பிற் கைக்கொண்டாள்.

26. என்னதா மிருப்பினு மிந்த வீரர்க
டன்னமும் பயமின்றித் தமக்குத் தோன்றிய
பன்னரு வழியெலாம் பயின்று லாவுத
லின்னல்செய் மாக்கள திழிந்த செய்தியாம்.

27. மடமையார் வீரர்கள் மகளிர் தம்மியல்
பொடுபயின் றவரல ருணருஞ் செவ்வியு
முடையவ ரல்லரா லவரை நீசினர்
கிடுவது சாலுமோ வினிய மஞ்ஞையே !

28. இனியிது நிற்கவா மிருவெ மும்முனர்
நனியுறை யாடிய் நலத்த செய்திமீட்
டினிதின்மேற் கொள்ளுதற் கியைதி யோவென்றன்
பனிமதி முகத்தினாய் பரிந்து சொற்றியால்.

29. தாமெதை யோவெணித் தமவ ழிச்சென்ற
பாமரர் தமைக்கண்டு பயந்த தென்கொலாங்
காமர்பூந் தலைவிதற் காப்பெ னச்சொலு
மாமுறை யல்லது மற்றென் சாற்றுவாய்.

30. நங்கையர் மணியென நவிலு நன்மையாய்
தங்குமிவ் வுலகினிற் றயங்கு யிர்ப்பொரு
டங்கட்காத் திடலவை தமவி யிற்கையென்
றுங்குநின் செயல்களா லுணர்ந்து கொண்டியோ ?

31. ஒக்குமொக் கும்மும துரையெ னுமகிழ்ந்
தக்கொள்கை யேயுற வமைந்த தாமன்றித்
தக்கது வேறிலை சரத மென்றனள்
புக்கது தண்மதி புகழ்கொண் டோங்கியே.

32. அப்புறம் யாங்களு மன்பி னாடினெந்
துப்புறழ் வாயின யே பாடல்க
டிப்பியக் குரலினிற் சிறிது பாடின
ளுப்பங்காற் கடற்கரை யுலாவிப் போந்தனெம்.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரி.



## சாந்திவிலாசம்.

நிலையா மையுள நினையா நசையான்
கபமே றியுமடன் காக்க முயல்வன்.

11. கண்குருடாய்ப் பல்லசைந்து வலிய வாண்மை
கரைந்துடலந் திரைந்தெழில்செய் ரோம மெல்லாம்
வெண்மையவாய்க் கரநடுங்கிக் கலங்கிச் சிந்தை
மிகமெலிந்து நமன்றூதர் வீத னண்ணு
மண்மைதனை யடிக்கடிஞா பகமூட் டப்பெற்
றறிந்துமினு முடல்காக்க வேண்டி மிக்க
தண்மையொடும் வைத்தியனை யிரந்து கேட்டுத்
தளர்கின்றே னெனைப்புரக்குந் தழற்கண் ணானே

வீதனண்ணு மண்மைதனை யடிக்கடி ஞாபகமூட்டல்=புறப்படு புறப்படு என்றுகூறல். தண்மை யொடும்=சாந்தத்தோடும்.

அடங்கிலை யுண்மூப் பாற்புல ழிந்தும்.

12. சடரவன லிறந்தினிய காம வார்த்தைச்
சலதிவறந் திந்திரிய வாசிக் கூட்டந்
திடமிழந்து சென்றோடி யோடி வாடித்
திரிந்தவிழுந் திவ்விதத்திற் றெய்வந் தன்னு
லடும்பகையாம் புலவேட ரொழிவை யுற்றார்
அனைத்தினுக்கு மூலமதா யகத்தின் றீர்வைக்
கிடமடைய விலையிதனுக் கென்செய் வன்யா
னெங்குசெல்வே னெனைப்புரக்கு மெம்பி ரானே.

வினையாற் கேள்வி விளைப்ப திருளே.

13. பலபலவா முபாயங்கள் செய்து தேயம்
பலசென்று பணந்தேடிச் செலவு செய்து
நிலமதிக்கப் பெருந்தூலம் படைத்தேன் சால
நீண்டவிது வயதுவரை யறிஞர் பல்லோர்
சொலுமுரைகண் மிகவினவி மதியிற் றேய்தற்
றொடங்குதிதி முதற்குருவின் காறுங் கங்குற்
புலிமிகல்போ லஞ்ஞானம் வளரப் பெற்றேன்
போதமுற விலையடியற் புரப்பை தேவே.

வலிமகிழ்ந் தாள்வீ வருமென் றெண்ணிலன்
மன்றலை வலியான் மதிக்கிலன் கூற்றும்.

14. பெருமூலகி லொருமூலை தன்னின் மேவும்
பெற்றியனை யெமனாத ரெவணங் காண்பர்
ஒருபோழ்து கண்டிடினுங் கொடிய செய்கை
யோங்குமெனை யென்செய்வார் வலிமை யாலே
வருமவர்க ளெதுவேனுஞ் செயினு மென்றன்
மன்னவனாற் கொலச்செய்வ னென்றே யிவ்வா
றரியதிட முற்றெமனை நினையா துற்றே
னந்தோவீ ததிசயமென் னறிவுள் ளானே.

மறையி லையம் வைப்பான் மடனே
உள்ளதின் றுமென் றுள்ளுவன் மடத்தான்.

15. அரியமறைப் பொருளேனும் பொய்த்தி டாதா
ஆதிபர னுவதறம் பாவர் தன்னை
உரியநிய மனம்புரிதன் மறந்தி டானு
ஓங்குபழி யெமனேனு மின்று காணு
இருளறநா னெனுநித்ய னுயி டேனு
யென்றிவணம் பலவிதமு கிப்பே னுகிப்
பெருங்கொழுப்பி னகத்தாலே மிகுசந் தோடம்
பெற்றெனினும் லக்ஷியம்வைத் திலனென் றேவே.

நியமனம்புரிதல்=ஏற்படுத்தல்.

(இன்னும் வரும்)

விருதை - சிவஞானம்.

---



## ஹிரண்மயி சரித்திரம்.

எனும்

## யுகளாங்குளீயகம்.

(இரட்டை மோதிரம்.)

### I. அத்தியாயம்.

ஓர் உத்தியானத்தின் கொடிவீட்டில் இருவர் நின்றுகொண்டிருந்தனர். அப்பொழுது புராதநமாகிய தாமிரலிப்த நகரத்தின் ப்ரதேசத்தைப் பரிசுத்தம் செய்துகொண்டு முடிவில்லாத நீலாகாயமன்ன சமுத்திரம் மெதுவாய் ஒலித்துக்கொண்டிருந்தது.

தாம்ரலிப்த நகரத்தின் குணதிசையில் ஒரு விசித்ரமான மாளிகையிருந்தது. அதன் அருகில் மிகவும் அழகாய் அமைக்கப்பட்ட கொடிவீடொன்றிருந்தது. அக்கொடி வீட்டிற்குத் தநதாஸன் என்னும் பெயரிய வணிகன் தலைவனாயிருந்தான். வணிகன்புதல்வி ஹிரண்மயி கொடிவீட்டினில் நின்றுகொண்டு ஓரிளங்குமரனுடன் உரையாடிக்கொண்டிருந்தாள்.

ஹிரண்மயிக்கு விவாஹகாலம் அதிக்கிரமித்தது. அவள் தனக்கிஷ்டமான கணவனை வரிக்கவேண்டுமென்னும் கருத்தினளாய், பதினோராம் வயதுமுதல் முறையே அஞ்சு ஆண்டுகள் இக்கடற்கரையில் வாஸம் செய்துகொண்டு ஸாகரேச்வரீ-தேவியை வழிபட்டுவந்தனள். ஆனால் அவளது மநோரதம்நிறைவேறவில்லை. யௌவநபருவமடைந்த அப்பெண்மணி அவ்வாலிபனுடன், தனிமையாய் ஏன் பேசவேண்டுமென்று இதைப்படிக்கும் நண்பர்களுக்குச் சந்தேகம் நிகழக்கூடும். ஹிரண்மயி நாலுவயதுச் சிறுமியாயிருந்தபொழுது இவ்வாலிபனுக்கு எட்டுவயதாயிருந்தது. இவ்வாலிபனது தந்தை சசீஸேதசெட்டி தநதாஸனது நண்பனாயிருந்தமையாற் சிறுமியும் சிறுவனும் ஒரேயிடத்திற் பால்ய ஸ்நேஹிதர்களாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சசீஸேதனகத்திலும் சரி, அல்லது தனதாஸனது வீட்டிலுஞ்சரி அவர்கள் எப்பொழுதும் நண்பர்களாகவே இருந்தார்கள். இப்பொழுது பெண்ணுக்கு வயது பதினாறு வாலிபனுக்கு வயது இருபது. ஆயினும் இவ்விருவரும் தம்முட் பால்யம் முதற் பெருகிவந்த ஸ்நேஹஸம்பந்தத்தை விட்டிருக்கவில்லை. சிறிதுகாலம் வரையில் அச்சம்பந்தம் பிரிந்திருந்தது. யுக்தகாலத்தில் இருவரது தாய்தந்தையர்களும் சிறுவனுக்கும் சிறுமிக்கும் விவாஹம் நிஷ்கர்ஷை செய்திருந்தனர். விவாஹத்திற்கு லக்நம்கூட நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஹிர்ணமயியின் தந்தை திடீரென்று தான் விவாகம் நடத்தப் போவதில்லையென்று சொன்னான். அந்நாள் முதல் ஹிரண்மயி

மீண்டும் புரந்தரனைப் பார்த்தவளல்லள். இந்தத்தினம் விசேஷமாய்ப் பேச
வேண்டிய திருக்கின்றது, தயைசெய்து வந்துபோகவேண்டும் என்று புரந்
தரனே அவளுக்குச்சொல்லி யனுப்பினான். ஹிரண்மயி கொடிவீட்டின்
அருகில் வந்து 'என்னை எதன்பொருட்டு வரவழைத்தாய், இப்பொழுது நான்
பாலிகையல்லேன் ; இவ்வாறு நான் தனியே வந்து உன்னுடன் பேசுவது
சரியாய் இருக்கவில்லை. இனி எனனைக் கூப்பிடுமபக்ஷத்தில் நான் வருவதி
ல்லை' என்று கூறினாள்.

'பதினாறு வயதிளம் பெண், நான் இனிப் பாலிகையல்லேன்' என்று
சொல்வது மிகவும் ரஸம் நிறைந்தவார்த்தை; ஆனால் அந்த ரஸத்தை அறு
விப்பவர் அங்கே எவரும் இருக்கவில்லை. புரந்தரனது வயதாயினும் அல்லது
மனோபாவமாவது அத்தகையதாய் இருக்கவில்லை.

புரந்தரன் மண்டபத்தின் மீது படர்ந்திருந்த கொடியினின்று ஒரு
மலரைக்கொய்து அதனைத் துண்டு துண்டாய்த் துணித்துக்கொண்டு,—
நான் இனிக் கூப்பிடுவதில்லை. நான் தூரதேசத்திற்குப் புறப்பட்டுப் போ
கின்றேன். உன்னுடன் சொல்லிவிட்டுப் போகலாமென்று இங்கே வந்தேன்
என்றான்.

ஹிரண்மயி—தூரதேசத்திற்கா ? எங்கே ?

புரந்தரன்—சிங்களத்தீவிற்கு.

ஹிரண்மயி—சிங்களத்திற்கா ? ஏன் ? சிங்களத்திற்கு ஏன் போக
வேண்டும் ?

புரந்தரன்—ஏன் போகவேண்டுமா? நான் செட்டியன்றோ? வியாபாரத்
தின் பொருட்டுப் போகின்றேன்.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே புரந்தரனுடைய கண்களி
னின்று நீர் ததும்பித் தாரைதாரையாய்ப் பெருக ஆரம்பித்தது.

ஹிரண்மயி மனச்சோர்வுற்று யாதொன்றும் பேசாமல் எதிரே உள்ள
கடலின் அலைகளின் சூரியகிரணங்கள் அழகாய்த் தவழ்வதைப் பார்ப்பளா
யினாள். காலை நேரமாகையால் மெல்லிய குளிர்ந்தகாற்று வீசிக்கொண்டி
ருந்தது. அவ்விளங் காற்றினால் எழுந்த சிற்றலைகளில் இளஞாயிற்றின
கதிர்கள் படிந்து அசைந்து கொண்டிருந்தன. ஸமுத்திர ஜலத்தில் அக்கதிர்க
ளின் எண்ணிறந்த உஜ்வலரேகைகள் பரவிக்கொண்டிருந்தன. கோம
ளாங்கியின் அங்கத்தில் தரிக்கப்பட்டிருந்த சுத்த வெள்ளி ஆபரணங்கள்
எனச் சமுத்திரத்தின் தரங்கங்கள் ஒளிர்ந்தன. கூடற்கரையில் நீர்வாழ்பறவை
கள் வெண்மையான கோடுகள் போல் தாங்கள் விரும்பிய வண்ணம் சுற்
றிக் கொண்டிருந்தன. ஹிரண்மயி இவற்றையெல்லாம் பார்த்தாள், நீல
மான ஜலராசியைப் பார்த்தாள். சூரிய கிரணங்களின் கிரீடையைப் பார்த்



தாள், தூரத்திலிருந்த படவுகளைப்பார்த்தாள், நீலநிறம் பொருந்திய விசும்
பின்கண் கரிய நக்ஷத்திரம் போல் வட்டமிட்டுக் கொண்டிருந்த பக்ஷியைப்
பார்த்தாள். கடைசியில் நிலத்தின் மீது விழுந்திருந்த வாடிப்போன
மலரைக் கண்ணுற்று " நீ ஏன் போகவேண்டும் ? இது வரையில் உங்கள்
பிதா போய்க்கொண்டிருந்தாரே" என்றாள்.

புரந்தரன் "எங்கள் தந்தைக்குவயசு அதிகரித்து வருகிறது. என
க்கும் பொருள் சம்பாதிக்கும் வயது வந்திருக்கின்றது. என் தகப்பனா
ருடைய அநுமதியையும் பெற்றிருக்கின்றேன்."

ஹிரண்மயி லதாமண்டபத்திலிருந்த மரத்தின்மேல் தலையைச்சாய்த்து
நின்றாள். புரந்தரன் பார்க்கப் பார்க்க சுந்தரமான மன்மதனது விளையாட்
டிடம் போன்று விளங்கிய அவளது நெற்றி குறுகியது, அதரம் துடித்தது,
நாசித்துவாரங்கள் விரிந்தன, ஹிரண்மயி அழுதாள்.

புரந்தரன் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவளும் ஒரு
முறை விசும்பினை நோக்கினாள். பூமியைப்பார்த்தாள். நகரத்தைப் பார்த்
தாயிற்று. சமுத்திரமுமாயிற்று, எல்லாவற்றையும் பார்த்தாயிற்று. எதனாலும்
நிற்கவில்லை. கண்ணீர் பெருகிக் கபோலம் நனைந்து போயிற்று. புரந்தரன்
கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, " இவ்வார்த்தையை உன்னுடன் சொல்லி
விட்டுப் போகலாமென்று இவ்விடம் வந்தேன். என்றைக்கு உன் தகப்பனார்
உன்னைக் கலியாணம் பண்ணிக் கொடுப்பதில்லை யென்று சொன்னாரோ,
அன்று முதல் சிங்களத்தீவிற்குப் புறப்பட்டுப் போகவேண்டுமென்று தீர்
மானம் செய்துகொண்டிருக்கிறேன். சிங்களத்தினின்று மீண்டு திரும்பி
வரக்கூடாதென்றும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். உன் ஞாபகம் சுத்த
மாய் மறந்து போய்விடும் பக்ஷத்தில் அப்பொழுது மறுபடியும் திரும்பி
வருவேனோ என்னவோ எனக்கு விசேஷமாய் வார்த்தைகளைச் சொல்வ
தற்கு ஞாபகமில்லை, உனக்கும் விசேஷமாய் வார்த்தைகளைச் சொன்னால்
தெரியாது, இதுமட்டும் தெரியச்சொல்லுகின்றேன். என்னவென்றால் இந்த
ஜகத்தின் சம்சாரமெல்லாம் ஓர் எடை, நீ ஓர் எடை, ஆயினும் ஜகமெல்
லாம் சேர்ந்தும் உன் எடைக்கு சமானமாக வொண்ணாது, இவ்வளவு மாத்தி
ரம் உனக்கு நான் சொல்லக்கூடும்; அதிகமாய்ச் சொல்லவல்லேன் அல்
லேன்" என்று உடனே வேறு பக்கமாய்த் திரும்பிக்கொண்டு பத்தடி நகர்
ந்து வேறொரு மரத்தின் இலையைக்கிள்ளினான். கண்ணீர் வேகம் சற்றுத்
தணிந்தபின் மறுபடியும் திரும்பிவந்து " நீ என்னை மிகவும் காதலித்திருக்கி
றாய் என்று நான் நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறேன், ஆனால் என்றைக்
காவது ஒருநாள் அந்யனொருவனுக்குப் பத்நியாவாய், ஆகையால் என்னை
ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டாம், மறந்துவிடு, உனக்கும் எனக்கும்
இதேகடைசி முகதரிசனம், இனி மீண்டும் பார்க்கப்போவதில்லை." என்றான்.

இவ்வாறு சொல்லிப் புரந்தரன் புறப்பட்டுச் சென்றான். ஹிரண்மயி அழவாரம்பித்தாள். அழுகையை நிறுத்தி, மனத்தில், "நான் இன்று மரித்துவிடும் பக்ஷத்திற் புரந்தரன் சிங்களத்திவிற்குப் போவானா? இக்கொடியாற் கழுத்தைச் சுருக்கிட்டுக்கொண்டு நான் ஏன் சாகக்கூடாது, அதவா கடலில் விழுந்து ஏன் முழுகிப்போகக்கூடாது?" என்று எண்ணிக்கொண்டு மறுபடியும் "நான் மரித்தபிறகு புரந்தரன் சிங்களத்திற்குப் போனாலென்ன? போகாவிட்டால் என்ன? அதனால் எனக்கென்ன வாயிற்று?" என்று யோசித்துக்கொண்டு மறுபடியும் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தாள்.

## II. அத்தியாயம்.

தநதாஸன் தன் பெண்ணைப் புரந்தரனுக்கு ஏன் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதில்லையென்று சொன்னானோ அஃதெவர்க்கும் தெரியாது. அதன் காரணத்தை அவன் ஒருவருடனும் சொல்லவில்லை. யாரேனும் கேட்டால் ஒருவிசேஷ காரணமிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வந்தான். அநேகர் வந்து கந்நிகையைக் கேட்டார்கள். ஆனால் தநதாஸன் யாருடைய சம்பந்தம் செய்வதற்கும் உடன்படவில்லை. அவன் விவாக விஷயமான பிரஸ்தாபத்தையே காதிற் போட்டுக்கொள்வதில்லை. பெண் பெரியவளானாளே யென்று தாயார் அதிகமாய் ஆக்ஷேபனை செய்துவந்தாளாயினும் தநதாஸன் அதற்கெல்லாம் காது கொடுக்காமலிருந்தான். "நமது குருவரட்டும் அவர் வந்த பிறகு இந்தப் பிரஸ்தாபம் செய்யலாம்" என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

புரந்தரன் சிங்களத்திவிற்குப் புறப்பட்டுப்போனான். அவன் சிங்களத்திற்குப்போய் இரண்டு வருஷம் ஆயிற்று. திரும்பிவரவில்லை, ஹிரண்மயிக்கும் கல்யாணம் ஆகவில்லை. அவள் பதினெட்டுவயது நிறைந்த யௌவந குமாரியாய், உத்தியானத்தின் மத்தியிற் புதிதாய்த் தளிர்த்த மாமரத்தை நிகர்த்துத் தநதாஸனுடைய கிருஹத்தில் விளங்கிக் கொண்டிருந்தாள்.

ஹிரண்மயி இதனால் துக்கமடையவில்லை. கல்யாணவார்த்தை வரும்பொழுது அவளுக்குப் புரந்தரனது ஞாபகம்வரும். அலர்ந்த மலர்மாலையால் எழிலுற்றதும், சுருண்டகரிய குந்தளம் அடர்ந்ததும் மந்தஹாஸம் தவழ்ந்ததுமான அவனுடைய அழகிய முகமண்டலம் அவளுக்கெதிரில் உருவெளித்தோற்றமாய்த் தோற்றிக் கொண்டிருக்கும்; அவனது கமலமன்னகரத்தில் விளங்கிய வைர மோதிரங்களணிந்த விரல்கள் தன் ஞாபகத்துக்குவர ஹிரண்மயி அழவாரம்பிப்பாள். "என் தந்தை என்னை யாருக்குக் கொடுத்தாலும் அவரையே நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டும். தந்தையின் ஆக்ஞையை மீறுவதென்றால் முடியாதகாரியம். ஆனால் வேறு புருஷனுடன் சம்பந்தமேற்படுமாகில் உயிர்ப்பிணம்போல் நான் நாட்களைக் கழிக்க வேண்டும்" என்று தனக்குள் எண்ணிக்கொள்வாள்.



இவ்வாறிருந்தும் அவளது தந்தை அவள் கல்யாணவிஷயத்தைப்பற்றிச் சிறிதும் பிரயத்னம் செய்யாமல் இருப்பதைக்கண்டு ஆச்சரியமடைவாள். ஜநங்கள் பெண்பிள்ளைகளை இந்தவயது வரையில் விவாகமில்லாமல் வீட்டில் வைத்துக்கொண்டிருப்பதில்லை. ஒரு சமயம் வைத்துக்கொண்டிருந்தாலும் அவர்களுக்குக் கல்யாணம் பண்ணி வைத்துக்கொண்டிருப்பார்கள். தந்தை கல்யாண விஷயமாய் யார் வந்து சொன்னாலும் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. அதற்குக்காரணமென்ன? ஒரு நாள் அவளுக்குத் தற்செயலாய் இவ்விஷயத்திற் சிறிது சூசனை கிடைத்தது.

தநதாஸன் பலவித வியாபாரங்கள் செய்துவந்ததில் அவனுக்குச் சீனதேசத்து ஒரு விசித்ரமான பெட்டி கிடைத்தது. அப்பெட்டி மிகவும் பெரியதாயிருந்தது. தநதாஸனுடைய மனைவி அதில் தன் சொத்துக்களைவைத்துக் கொண்டிருந்தாள். தநதாஸன் சில புதிய நகைகள்செய்து மனைவிக்குப் பரிசு அளித்தான். அவள் பழைய நகைகளுடன் அந்தப்பெட்டியைத் தன் பெண்ணுக்குக் கொடுத்தாள். ஹிரண்மயி அவ்வாபரணங்களைப் பெட்டியினின்று எடுக்கும்பொழுது அதில் எழுதிய காகிதத்துண்டு ஒன்று கிடைத்தது. எழுத்துப் பூர்த்தியாயில்லை.

ஹிரண்மயிக்குப் படிக்கத்தெரியும்; அத்துண்டுக் காகிதத்தில் முதலில் தன்பெயர் எழுதியிருந்தமையால் அது இன்னதென்றறிய வேண்டுமென்னும் ஆவலுடன் அதைப்படித்தாள். கடிதத்தின் பாதிமாத்திரமே யிருந்தமையால் பொருள் விளங்கவில்லை. யார் யார்க்கெழுதினார்? எதன்பொருட்டெழுதினார்? என்பது தெரியவில்லை. ஆனால் இருந்தவரையிற் படித்தமாத்திரத்திலேயே அவளுக்கு மிகவும் பயமுண்டாயிற்று. கிழிந்துபோன துண்டுக் காகிதத்தில் வரையப்பட்டிருந்த தென்னவெனில்,

ஜாதகத்தைக் குணித்துப் பார்க்கையில்..............ஹிரண்மயி அவ்வளவு ஸ்வரண விக்ரகம்................வாஹமானால் பயங்கரமான விபத்து ..............த்ஸர்......முகத்தை பரஸ்பர...........ஆகும்.................

ஹிரண்மயி இன்னதென்று விளங்காத விபத்தின் பயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு மிகவும் பயந்துவிட்டாள். இந்தச் சமாசாரத்தை ஒருவருடனும் சொல்லாமல் காகிதத்துண்டை எடுத்து வைத்துக்கொண்டாள்.

## III - அத்தியாயம்.

இரண்டு வருஷங்களுக்குமேல் மற்றொரு வருஷமாயிற்று. ஆயினும் புரந்தரன் சிங்களத்தினின்று திரும்பி வரும் சமாசாரமே இல்லை. ஆனால் ஹிரண்மயியின் இதயத்தில் அவனுடைய காமனை நிகர்த்த உருவம் முன்போலவே ஆழமாய்ப் பதிந்திருந்தது. 'புரந்தரன் என்னை மறந்திருக்கமாட்டான். அப்படி மறந்திருந்தால் மறுபடியும் திரும்பிவருவானே' என்று அவள் தனக்குட் சொல்லிக்கொண்டாள்.

இப்படி இரண்டாண்டுகள் சென்றன. மற்றொரு வருஷமும் ஆயிற்று. ஒருநாள் திடீரென்று தநதாஸன் பிரயாணப்பட்டு "அனைவரும் பரிவார ஸஹிதமாய்க் காசிக்குப் போகவேண்டும், குருஸந்நிதானத்திலிருந்து சிஷ்யன் வந்திருக்கிறார். அவ்விடத்துக்கே வரவேண்டுமென்று ஆசார்யர் கட்டளையிட்டிருக்கிறார். அங்கேயே ஹிரண்மயியின் விவாகம் நடக்கவேண்டும். அங்கே மூன்று வரன்கள் பார்த்திருக்கிறது" என்று சொன்னான்.

தநதாஸன் மனைவியையும் மகளையும் அழைத்துக்கொண்டு காசிக்குப் போனான். குறித்த காலத்திற் காசி நகரையடைந்த பிறகு தநதாஸனுடைய குருவான ஆநந்தஸ்வாமிகள் வந்து தர்சனமளித்து விவாஹத்திற்கு லக்நம் நிஷ்கர்ஷை செய்து சாஸ்த்ரோக்தமாய் வேண்டிய வஸ்துக்களைச் சித்தம் செய்யும்படி அநுஜ்ஞை பண்ணினார்.

கல்யாணத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகள் சாஸ்த்ரோக்தப் பிரகாரம் ஸித்தமாயின. ஆனால் சந்தடியில்லை, கும்பற்கூடவில்லை, தநதாஸனது ஜனங்களுக்குத் தவிர மற்ற எவர்க்கும் கல்யாண சமாசாரமே தெரியாது. கேவலம் சாஸ்த்ரீயமாய் வேண்டியதென்னவோ அவ்வளவு மாத்திரம் ஆயத்தமாயிற்று.

பாணிக்கிரஹணதினத்தின் சாயங்காலம் ஆயிற்று. இராத்திரி ஒன்றரை மணிக்குமேல் மிதுனலக்நத்தில் முகூர்த்தம் வைக்கப்பட்டிருந்தது. வீட்டிலுள்ளவர்கள் தவிர மற்றெவரும் வரவில்லை. அதுகாறும் தநதாஸனுக்கொழிய மற்றொருவருக்கும் வரன்யாரென்பது தெரியாது. எந்த ஊர் வரனென்பதும் தெரியாது. ஆனால் ஆநந்தஸ்வாமி வரனை நிச்சயம் பண்ணியிருந்தமையால் அபாத்திரனாயிருக்கமாட்டானென்று யாவருக்கும் நன்றாய் நம்பிக்கையுண்டாயிருந்தது. அவன் வரனுடைய பரிசயத்தை ஏன் சொல்லவில்லையோ அஃதவனுக்கே தெரியவேண்டும். ஒரு சிறிய அறையில் ஒரு புரோகிதன் கந்யாதனத்துக்கு வேண்டியவற்றை வைத்துக்கொண்டு ஏகாங்கியாய் உட்கார்ந்திருந்தான். தநதாஸன் ஒருவன்மாத்திரம் ரேழிக்கு வெளியில் மாப்பிள்ளையின் வரவை யெதிர்பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். உள்ளே அந்தப்புரத்திற் கந்நிகை ஸர்வாலங்கார பூஷிதையாய் உட்கார்ந்திருந்தாள். மற்றொருவரும் எங்கும் இல்லை. ஹிரண்மயி தன்மனத்திற்குள், 'இஃதென்ன ரகசியம் எப்படியும் புரந்தரனுக்குக் கொடுத்துக் கலியாணம் பண்ணப் போகிறதில்லை. யாராயினும் செய்துகொள்ளட்டும். அவனென்னவோ எனக்குத் தலைவனாவதில்லை யென்பது கண்டிதம்' என்றெண்ணிக்கொண்டாள். இச்சமயத்தில் தநதாஸன் கல்யாணப்பெண்ணைக் கூப்பிடவந்தான். அவளைக் கன்யாதானம் செய்யவும் விவாகமண்டபத்துக்கு அழைத்துக்கொண்டு போவதற்கு முன் தகப்பன் அவளது இரண்டு கண்களையும் துணியினாற் கெட்டியாய்க் கட்டினான். 'அப்பா, இதென்ன?', வென்று ஹிரண்மயி கேட்டாள். அதற்கு தநதாஸன் 'குருவின் உத்தரவு', என்று



சொல்லியதன்றி, நீ என் ஆக்ஞைப்பிரகாரம் நடக்கவேண்டும், மந்திரங்களெல்லாவற்றையும் மனத்திலேயே சொல்லிக்கொள்ள வேண்டும்' என்றும் சொன்னான். அதைக்கேட்ட ஹிரண்மயி யாதொன்றும் பதில் உரைக்கவில்லை. தனதாஸன் பார்வையற்ற கந்நிகையின் கையைப்பிடித்துக்கொண்டு கன்யாதானப் பந்தலுக்கு அழைத்துக்கொண்டு போனான்.

ஹிரண்மயி கன்யாதானமண்டபம் சேர்ந்தாள். அவள் கண்திறந்து பார்க்காமற் போயினும் மாப்பிள்ளைகூடத் தன்னைப் போலவே கண் கட்டப்பட்டிருந்தானெனத் தெரிந்துகொண்டாள். இவ்வாறு விவாகம் ஆயிற்று. அவ்விடத்தில், குரு, புரோஹிதன், தநதாஸன் இவர்கள் தவிர, மற்றெவருமில்லை. தம்பதிகள் இருவரும் எவரையும் பார்க்கவில்லை. சாஸ்திரப்படி ஒருவருக்கொருவர் சுபதிருஷ்டி ஆகவில்லை.

கன்யாதானமான பிறகு, ஆநந்தஸ்வாமி, வதூவரர்களைப்பார்த்து, உங்களிருவருக்கும் விவாகமாயிற்று. நீங்களிருவரும் ஒருவரையொருவர் பார்க்கக்கூடாது. கன்னிகையின் கன்னிகைப்பருவத்தை நிவாரணம் செய்வதே இவ்விவாகத்தின் கருத்து. இந்த ஜன்மத்தில் நீங்கள் ஒருவரையொருவர் பார்ப்பீர்களோ பார்க்கமாட்டீர்களோ சொல்லமுடியாது. ஒருவேளை பார்த்த போதிலும் பரஸ்பரம் அடையாளம் கண்டுகொள்ள முடியாது. அடையாளம் பிடிப்பதற்கு நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். என்கையில் இப்பொழுது இரண்டு மோதிரங்கள் இருக்கின்றன ; இரண்டும் ஒரே மாதிரியாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. இம்மோதிரங்களிற் பதித்திருக்கிற ரத்தினங்கள் சாதாரணமாய் எங்கும் அகப்படா. இரண்டு மோதிரங்களின் இரத்தினங்களிலும் பின் பக்கத்தில் ஒவ்வொருமயில் ஒரேமாதிரியாய்ச் செதுக்கப்பட்டிருக்கின்றது. ஒரு மோதிரம் மாப்பிள்ளைக்கும் மற்றொன்று மணப்பெண்ணுக்கும் தருகின்றேன். இத்தகைய மோதிரம் மற்றொருவருக்கும் கிடைக்காது. வேறெவரிடத்திலும் இல்லை. அவற்றிற் செதுக்கப்பட்டிருக்கும் மயிலைப்போற் செதுக்குவதற்கு மற்றொருவராலும் ஆகாது. இதை நானே சொந்தமாய்ச் செய்தேன். பெண் எந்தப்புருஷனுடைய கையில் இம்மோதிரத்தைக் காண்கின்றாளோ அவனே அவளுடைய கணவன் ; அவ்வாறே வரன் எவளுடைய கையில் இம்மோதிரத்தைப் பார்க்கின்றானோ அவளே அவனுடைய மனைவி. நீங்கள் இருவரும் இம்மோதிரத்தை இழக்கக்கூடாது. யாருக்கும் கொடுக்கவும்கூடாது. அந்நத்திற்கில்லாமற் போனாலும், விற்கக்கூடாது. அன்றியும், இன்றுமுதல் அஞ்சுவருஷம் வரையில் உங்கள் இருவரில் ஒருவரும் இம்மோதிரங்களை யணியக்கூடாது. இன்றையதினம் மாசிமாசம் சுக்லபக்ஷ பஞ்சமி இரவு பதினொருமணியாயிறது. இன்றைக்கு அஞ்சாம் வருஷம் மாசிமாசம் சுக்லபக்ஷ பஞ்சமியன்று இரவு பதினொருமணி வரைக்கும் இம்மோதிரங்களை யணியக்கூடாது. அணிவதை

நான் நிஷேதித்திருக்கிறேன். இந்த என் உத்தரவை மீறிநடக்குமிடத்திற் பெரியதோர் அமங்களம் நேரும் என்று சொன்னார்.

இவ்வாறு சொல்லிவிட்டு ஆநந்தஸ்வாமிகள் புறப்பட்டுப் போனார். தனதாலன் தன் மகளின் கண்களைத்திறந்தான். ஹிரண்மயி கண் திறந்து பார்க்கும்பொழுது புரோகிதனும் அவளுடைய தந்தையும் ஆக இருவரே இருந்தார்கள். அவளைப் பாணிக்கிரஹணம் செய்த புருஷன் காணப்படவில்லை. விவாகமான அவ்விராத்திரி அவள் ஒருத்தியே காலங்கழித்தாள்.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

## ஐயவினா.

---

ஞானபோதினிப் பத்திராதிபரவர்கட்கும் பத்திரிகாநேயர்களுக்கும்.

ஐயன்மீர்,

பிற்குறிக்குஞ் செய்யுளில் கடித்த எழுத்திற்காணப்படுந் தொடர்ச்சொற் கட்கு "அழகைவேண்டி" னெனப்பொருள் கோடல் பொருத்தமுடைத்தேயோ? அப்பொருள் சரியேல் தக்கவாறு பதம் பிரித்துக்காட்டல் வேண்டும்; சரியன்றேல் வேறு தக்கபொருள் விரிக்குமாறு விரும்புகின்றனன்.

செய்யுள்:—

முயலக னலகை பூத கணங்களை முனிய வேண்டிற்
றுயருறு பிணியு மாகச் சோகமுந் தவிர்க்க வேண்டி
வியவிசை யறிப வேண்டின் **மலைவலம் புரிவார் வல்லார்**
மயலறு புகழை வேண்டின் மலைவலம் புரிவார் வல்லார்.

ஐயுற்றோன்.

---

அறக்கடவு ளருள்வாழி.

## கடவு ளுண்மை. *

---

### காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆங்கிலத்தி லேபார்ன லெர்மிட்டென் றெழுதிவைத்த வகவற் பாவைப்
பாங்குபெறச் செந்தமிழ்த்தண் கவிதையினா லிசைப்பதற்குப் பரிவி னோடு
மோங்கியுயர் விசும்பினுக்கு முதவிபுவி சூழ்ந்திருக்கு முலகத் திற்கும்
தீங்கிலர்சேர் நாகினுக்கு முதலான வொருவனையெஞ் சிந்தை சேர்ப்பாம்.

* Parnell's *Hermit* with some modifications.



### நூல்.

வேறு.

இளமைப் பருவ முதற்கொண்டே யிமைய மலையி னொருசார்பில்
வளமை மிகுந்த வுலகினர்கள் வாரா விடமாம் மறைவிடத்திற்
களைக ணென்றே யனவரதங் கடவு ளடியை மறவாது
தளைதல் செய்தே யைம்புலனைத் தபசி யொருவன் வாழ்ந்திருந்தான். (1)

அந்த முனிக்கக் காட்டினிடத் தமைந்த சருகே பூஞ்சேக்கை
மந்த விருள்பாய்ந் தடர்கொடியின் மறைவி லிருக்கும் பெரும்புகரே
பெந்த வளமு மிகுந்துளவில் லிறுக்குங் காற்று லிங்கங்கே
சிந்து பழங்க டினும்பண்டந் தூரவி னீருட் கொளுந்தண்ணீர். (2)

நீர்மே லெழுத்தாம் யாக்கையினை நிலையா வுடைய மானுடர்கள்
பார்மேல் வாழு மிடத்திற்குப் பல்கா வததூ ரத்துள்ளா
னேரா ரேற்றின் மீதமரு மெம்மா னுமையா ளொருபாகா
காரார் மிடற்று போற்றியெனக் கருதிக் காலங் கழித்துவந்தான். (3)

என்ன தூய்மை யுடையேம்பா மிக்காட் டகமே பொன்னுடா
மென்ன விருக்கின் றேமன்றே வெனப்பூ ரணமாக் கொண்டிருந்தா
னின்ன போழ்தி லந்தமுனிக் கென்று மில்லாச் சந்தேக
முன்னத் திருந்தே யுருக்கியதா லுதவென் னென்று னுரைப்பக்கேள். (4)

தீயாங் குணமே குடிகொண்ட தீயோர்க் கேவீ றும்புகழுந்
தூயோ ரன்னார் கால்பணிந்து தொண்டு செய்து கீழ்வாழ்த
லேயே யீதென் னிதனுண்மை யீச னொருவ னுண்டுகொலென்
றுய்வா மெனவே யுளத்தெண்ணி யாச்சி ரமத்தி னகன்றனனால். (5)

கடத்தற் கரிய கடுங்காட்டைக் கடந்தத் தபசி செலும்போழ்து
தடத்திற் சிறிய வொருபையன் றுதாய் சரணென் றடிபணியக்
குடத்திற் கங்கை யடக்கியநங் கோமா னருளால் வாழியவில்
விடத்திற் போந்த தெதுகருதி யெனப்பல் கேள்வி கேட்டனனால். (6)

இம்மா திரியா யிருந்தவத்தோ னிசைத்த கேள்வி களுக்கெல்லாஞ்
சும்மா விருக்கா தச்சிறுவன் சூழ்ச்சி யாக விடைபகர
வெம்மோ டேநீ வருதியென விசைந்தாங் கவனும் பின்செல்லத்
தம்முட் டாமென் றனைவோருஞ் சாற்றும் வண்ண மடிபெயர்ந்தார். (7)

ஒற்றை யாழி யந்தேரோ னேடி யொளித்தான் குடவரையிற்
கற்றோர் புகழுங் கடன்ஞாலங் கங்குல் சூழப் பெற்றதுவால்
மற்றம் முனியும் வாலிபனும் வந்தார் வழியோ ரத்திருந்த
கொற்றக் குடையை மேலுயர்த்த கோமா னரண்ம னையைக்கடந்து. (8)

அங்கம் மன்ன னுள்கள்பல ரழைத்தம் முனியோ டிளவலையு
மிங்கிம் மனையில் விரவிருந்தே யேகற் பால ரெனக்கூறிச்
சங்கத் துடன்ப துமநிதியுந் தழைய வோங்கு மனையுட்சென்
றங்கைப் பனிநீ ரேந்தியவர்க் காறு சுவையூ ணல்கினரால். (9)

அன்பி னளித்த வுணவுதுகர்ந் தனந்தல் வரது மமளியடைஇ
யின்பின் முனியுஞ் சிறியவனு மிரவிற் றங்கண் படைகொளது
மென்னில் வுலகை யிருள்சூழ்ந்த திதனை யான்சென் றழிப்பலெனத்
தண்ணென் கதிரம் புலிபரப்பித் தாரா கணத்தோ டெழுந்தனனால். (10)

கலிவிருத்தம்.

மாலுநன் மலைமல ரவனுங் காணொணா
வாலமுண் டவன்றன தடியை யெண்ணியே
ஞாலமு மற்றுள நவையி லாதவு
மாலுறு துயிலினால் வளர்ந்த கண்களே. (11)

விண்டல மதனிலே விளங்கு ஞாயிறு
மண்டில மொளிசெய வருகின் றனெனத்
தண்டலை சூழ்தரு தனிவ னந்தனில்
வண்டுறை * யிலசத்தன வாரணங்களே. (12)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

ஆர்ப்பப் பறவை யினங்களெலா மம்போ ருகங்க ளலர்தரப்
போர்த்த விருளும் போயொளிப்பப் பொங்கு கீழைத் திசைவிளக்க
மேற்செல் வதற்கவ் விருவருக்கு மெத்த வுதவத் தனித்திகிரித்
தேர்க்கட் பரிதி யுருவத்திற் றிகழ்ந்தான் றனசெங் கரனீட்டி. (13)

(இன்னும் வரும்.)

சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.

---

* எழுத்திலாவெழாது லென்க.



## பரீக்ஷை வினாக்கள்.

## MADRAS CHRISTIAN COLLEGE.

### Third Class, December 1899.

I. சீவகசிந்தாமணி : இத்தொடர்மொழியைப் பகுத்துப் பொருளு மிலக்கணமுங் கூறுக. இந்நூலிற் குற்ற வேறுபெயர்களென்ன ? இதனோ டொருங்கெண்ணப்படுமேனைய காப்பியங்கள் யாவை ? இது முதல் வழி சார்பெனு மூவகைநூல்களு ளெதன்பாற்படும் ? ஏன் ? இந்நூலின் சிறப்புக் களுட் சில பகர்க. இதனான் நீவிருணர்ந்தமட்டிற் சைனரது கொள்கைகளி லிரண்டெழுதுக.

II. ஆசிரியர் நச்சினார்க்கினியரது காலமு மிடமுஞ் சமயமு மின்ன வென வரைந்து சுட்டுக. இப்புலவர்பெருமா னுரைவகுத்துள வேறுநூல் கள் யாவை ? அவை தம்முட் இச்சிந்தாமணியுரைக்கு முன்னரே யுரை வகுக்கப்பெற்றுள நூல்யாது ? காரணங்கூறுக. இவர் இக்காப்பியத்தைக் காப்பியமென்று கூறுதல் சாலாதென்றலேன் ? அற்றே லவர்கருத்தின் வண்ண மிதனை யெதன்பாற் படுத்தலமையும் ?

III. இனி வருவனவற்றை யினிது விளக்கி ஆண்டாண்டு வினவிய வினாக்கட்குத் தக்க விடைபகர்க :—i. 'பன்மாண் குணங்கட் கிடனாய்ப் பகை நண்பொடில்லான், றன்மாண் பமைத்த புனைநல்லறம்': இதற்கு நேரே கொண்டுகூட்டாது பொருளுரைப்பிற் படுமிழுக்கென்னை ? அதனை விளக்குக. ii. 'தோணுற்றோர் தெய்வந்துணையாய்த்துயர் தீர்த்த வாறு': இது நிலைப்பூட்டுங் குறள்யாது ? iii. 'நஞ்சுற்ற காம நனிநாகரிற் றுய்த்த வாறு': நஞ்சுற்ற காமமோ நஞ்சுற்ற காமமோ ? எது நேரிது ? விடைக்கு நியாயங் கூறுக. iv. 'புண்மேற் புடையிற் புகைந்து': இதற்கு வேறு எவ்வகையானும் பொருளுரைக்கலாம் ? அப்பொருட் பொருத்தத்தை யா ராய்க. v. 'கோனாறு செய்வான் கருதிச்சிறை கொண்டவாறு': கோன் யார் ? 'செய்வான்': இஃதென்ன சொல்லெனபர் நச்சினார்க்கினியர் ? இதனையவர் முடிக்குமாறியாது ? வேறெவ்வாற்றானும் முடிக்கலாம் ? vi. 'மைந்நாக வேலி மலிபல்லவ தேயம்': இதற்குற்ற மற்றைய பொருள் களையுங் கூறி அவைதம்முட் சிறந்த திஃதெனக்குறிக்க.

IV. (a) "கற்பாலுமிழ்ந்த மணியுங்கழு வாது விட்டா
னற்பா லழியுந் நகைவெண்மதி போனி றைந்த
சொற்பா லுமிழ்ந்த மறுவும்மதி யாற்க ழுவிப்
பொற்பா விழைத்துக் கொளற்பாலர் புலமை மிக்கார்."

இதற்குப் பொழிப்புரையெழுதுக. இதற்குச் சொற்களைக்கொண்டு கூட்டாது நேரே நிறுவிப் பொருள்காண்க. இச்செய்யுளென்னுதலிற்று? இதனெருத்தீற்றடிகளிற் சந்தவின்பஞ் சிதையாமைப் பொருட்டு எவ்வெப் பாடங்கள் கோடல்வேண்டும்.

(b) "மதியங் கெடுத்த வயமீனெனத் தம்பி மாழாந்
துதிதற் குரியாள் பணியாளுடனுய வாறு
நிதியின் னெறியின் னவன்றோழர் நிரந்த வாறும்
பதியின் னகன்று பயந்தாளைப் பணிந்த வாறும்."

இதற்குப் பதவுரையெழுதுக. இதனிறுதியடிக்கு வேறிருபொருள் கூறுக. முதலடிக்கணுள்ள உவமையினை யாண்டுக் கொண்டுகூட்டிப் பொருள்காண்டல் சிறப்புடைத்தாகும்?

V. (a) (1) 'கொண்டார் குடங்கையளவேயுள கண்ணினுள்'; (2) 'கண்வாளறுக்குங், கமழ்தாரவன்; (3) 'பழங்கொடெங் கிலையெனப் பரந்து பாய்புனல், வழங்கமுன் னியற்றிய சுதைசெய் வாய்த்தலை'; (4) 'காமனுஞ் சாமனும் போலுங் காட்சிய'; (5) 'வெப்பின் முப்பழச் சுளைத்தலைத்தணிர்' இவற்றின் பொருளை விளக்கிக் குறிப்புரை யெழுதுக. (b) (1) 'குலத்தலை மகளிர்தங் கற்பின்': இதன் புகழ்பொருள்யாது? அதனோ டிதனைப் பொருத்தி விளக்குக. (2) 'எல்லாம்' என்பதடுக்கிவரும்போது எவ்வாறு வரும்? மேற்கோள் காட்டுக. (3) தேவர் கூறிய மகளிரான் மலர் மரங்கள்யா? அவை யெவ்வாறு மலர்ந்தன? (c) 'முந்நீர்': இதற்குப் பகுதிப்பொருள் கூறுக; ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கு முள்ள வேற்றுமை காட்டி இச்சொல் இன்னதென்று தக்கவாயிலான் நிறுவுக.

VI. (1) சேர்தல், தேன், புகலல், நோக்கு, புண், வெறி, செம்மல், புயல், ஒடிவு, வெற்றம்: இச்சொற்கட்கு அரும்பொருளெழுதுக. (2) உலகம், சுண்ணம்: இவை தமிழ்ச்சொற்களோ வடசொற்களோ? காரணத்துடன் விடுக்க. (3) திணைமயக்கம், யாற்றுநீர்ப் பொருள்கோள்: இவற்றை விளக்கி யுதாரணஞ் சிந்தாமணியினின்றுங் காட்டுக. (4) 'உளமெலி மகளிரி னொடுங்கு மென்பவே'; 'ஆடு கூத்தி யாடல் போன்ற': எவை? ஏன்? (5) தழங்குரல், கொண்மென, கம்பலம்; இவையிற்றின்கணுள்ள இலக்கண விசேடமென்ன? (6) விருத்துவண்டு, செந்நெல்: இவற்றிற்குப் புணர்ச்சி விதி யெழுதுக.

VII. (a) விபரீதவுவமை, பொதுநீங்குவமை யென்பனவற்றை விளக்கி அவற்றிற்குள்ள வேறு பெயர்களையும் வரைக. (b) தொகையுவமை, உவமைத்தொகை; உவமை, உருவகம்: இவைதம்முள் வேறுபாடென்ன? (c) எடுத்துக்காட்டுவமையணிக் கின்றியமையாதனவாய சிறப்பிலக்கணங்கள்



யாவை? அவைதம்மு ளொவ்வொன்றனையு மொரேயுதாரணத்துக் காட்டுக. (d) 'எல்லாவணிகளுக்கு மிது பொதுத்தன்மையேயாம்': எது?

VIII. i. 'உருவக வுருவக' மென்றாலென்னை? இஃது "அடுக்கிய தோற்றம் விடுத்தல்பண்பே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்தினொடு மறுதலைப்பட்டுக் குற்றமுடைத்தாகாதோ? ii. வேற்றுப்பொருள் வைப் பணியை விளக்கி அதன் வகைகளையும் அடைவே காட்டுக.

iii. சென்றாற்குடையாமிருந்தாற்சிங்காதனமா
நின்றான் மரவடியாநீள்கடலு—ளென்றும்
புணையாமணிவிளக்காம்பூம்பட்டாம்புல்கு
மணையாநெடுமாலிற்கரவு. இச்செய்யுளைச் சீர்செய்து தளையறுக்க; இதன்கணுள்ள யாப்புப் பிழையினை யெடுத்துக்காட்டுக.

IX. i. "மாரனழுங் கம்பெய்யு மான்கணமுங் கம்பெய்யும்
வீரனின்று வாரா விடின்."

ii. "புதுமணத்த காதலனும் பூவையும்புன் வாயி
லெதிருற்று நாண்டமர்கண் டெய்திக்—கதுமென்
றொருவர்க் கொருவர் வழிவிடப்பல் காற்பி
னிருவரும்போய் மீள்வா ரெதிர்."

iii. "கலைவல புலவர்கள் களிசி றக்குங்கா
றிலகவி னயத்தரு மினிதெ னக்கொளே
னலமுறப் படித்தவர் நயங்கொள் சிந்தையு
முலவுறுந் தந்திறத் துறுதி யற்றரோ."

iv. "காரறலின் வண்டலிற் கஞ்சமல ரப்புன்னை கண்மலர் சொரிந்த காட்சி, சருதுஞ் சாற்கால மதியுடுத் திரளொடு கலந்துவின் னெழுமாட்சியே, நேர."

v. "ஓடாத மானேமாற் றுரையாத செம்பொன்னே யொளியா மின்னே, தேடாத திரவியமே தெவிட்டாத செந்தேனே திங்கள் கண்டும், வாடாத வாரிசமே யின்னுமொரு காலெதிர்நீ வருகிற் பாயோ, சாடாத நவமணியே நான்செய்த மாதவமே நளின மாதே." மேற்போந்தனவற்றின் கணுள்ள அணிகளை யெடுத்துத் தெளிவுபெறக் காட்டுக.

X. நச்சினார்க்கினியர் பரிமேலழகியார் ஆகிய இவ்விருவர்தம் உரைநடைகளையும் உரைவகுக்கு மாற்றல்களையும் பற்றி விரித்துச் செவ்விய தமிழ்நடையிலொரு வியாச மெழுதுக.

## சமாசாரங்கள்.

தனிப்பாசுரத்தொகை:—இதைப்பற்றி லோகோபகாரிப் பத்திராதிபரபிப்பிராயம்:—நமது பார்வைக்கு அனுப்பப்பட்ட இச்சிறு நூலின் இயல்புகளைப்பற்றிச் சிறிது பேசுவோம். இது மேற்பார்வைக்குச் சிறு நூலேயாயினும் இதனுள்ளடங்கிய விஷயங்களை நோக்குமிடத்து மிகப்பெரிய நூலென்றே யாவருந் துணியவேண்டும். இது நாற்பது தனிப்பாசுரங்களுள்ள நூல். இதன்கணுள்ள ஒவ்வொரு பாசுரமும் பதினான்கடி கொண்ட நேரிசையாசிரியப்பாவாம். ஒவ்வொன்றும் ஒரு பெரிய விஷயத்தை யெடுத்து மிகவும் நுட்பமாக ஆராய்ந்த பின்னர் வெளியிடப்பெற்ற கருத்துக்களுடையது.

இந்நூல் சிற்சில விடங்களில் ஆங்கில நூற் கருத்துக்களையு முடன்றழுவிக்கொண்டு விளங்குகின்றது. இவ்வளவு சிறப்புள்ள இதனை யாக்கியோர் யாது காரணத்தாலோ நூலைத் தமது மெய்ப்பெயரால் வெளியிடாது புனைவுப் பெயராகிய பரிதிமாற் கலைஞர் என்பதனால் வெளியிட்டிருக்கின்றனர். இவர் இந்நூலின் முகவுரையின் கண் "இனி யிந்நூலினை வெளிப்படுத்தும்வழி எனதுண்மைப்பெயரை மறைத்துப் பரிதிமாற் கலைஞன் எனப்புனைவுப்பெயர் நிறுத்தி வெளிப்படுத்துகின்றேன், நன்னூலொன்று செய்தானது புகழின்மையா னிகழப்பட்டொழிதலும் புன்னூலொன்று செய்தான துயர்ச்சியாற் சாலவும் புகழப்பட் டிலங்கலும் நாடொறுங் காண்டலினென்க" எனக் கூறுகின்றனர். அதன்கண் அவர் குறித்தகாரணந் தக்கதேயெனினும் அவர் தமது மெய்ப்பெயர் கரந்துரைக்கத் தக்கவளவு பயப்பட வேண்டுவ தவசியமன்று.

இனி யிதனிற்க. சில பாசுரங்களை யெடுத்து விவகரிப்போம் :—I. கடவுள் : இப் பாசுரத்தில் நமது பாவலர் உள்ளவாறே கடவுளைப் பற்றிச் சர்ச்சை செய்யப் புகுந்துழி இடையில் தமது பகுத்தறிவு சோர்தல் கண்டு பக்திவாயிலான் நுழைந்து கடவுளின் கருணைத் திறத்திற்குப் பாத்திரராக வேண்டுகின்றனர். II. அறிவு : இதிற்காட்டப்படும் உருவகங்களெல்லாம் மிகவும் நன்குபமைந்திருக்கின்றன. IV. துயில் : இதுவெகு விநோதமாயும் புதுமையாயு முளது ; சில கூற்றுக்களுக்குப் புதுக் கருத்துக்களுங் காட்டுகின்றனர். V. மலர் : மலரைக் காணுந்தோறும் ஆசிரியர்க்கு எவ்வாறு நெஞ்சங் குதிகொள்கின்றதோ அவ்வாறே யெமக்கும் இப்பாசுரத்தைப் படிக்குந்தோறும் நெஞ்சங் குதிகொள்கின்றது. உள்ளவாறே நிகழப்பெற்ற தமது மனோ விகாரங்களெல்லாம் படிப்போரிடத்தும் நிகழுமாறு செய்யவல்ல கவிஞர்கோமான் இவரென்பது இதனால் தெரிகின்றது.



XII. விண்மீன் : இதனிடத்தில் நமது கலைஞர் புனையும் ஐயவணிகள் மிகவுஞ் சிறந்து விளங்குகின்றன. XVI. உடல் : யாக்கையின் நிலையாமையையும் இழிவையுமே யெடுத்தெடுத்துக் கூறுவது நந் தமிழ்ப்புலவர்களது மரபாயிருக்க இவர் யாக்கையை மிகவும் புகழ்ந்து பலவாறு புனைந்து கூறுகின்றனர். இருபத்து மூன்றாவது பாசுரத்தினால் இவர் புலான் மறுத்தற்கொள்கையுடையா ரென்பதும் இருபத்தைந்தாவது முப்பத் தோராவது பாசுரங்களினால் இந்நூலுடையார் சமூகந்திருத்துவோர் குழாத்தைச் சார்ந்தவரென்பதும் வெளியாகின்றன.

இனி நந்தம் புலவர்பிரான் பாடிக்கொண்டு செல்லுந்தன்மையைச் சற்றுற்று நோக்குவோமானால் அவர் சர்வானுகூலவாதி யாகவே காணப்படுகின்றனர். இவர் இப்பாசுரங்களில் எந்த மூலையிலேனும் வாக்குத் தடைப்பட்டவராகக் காணப்படவில்லை. எவ்விடத்தை யெடுத்து வாசித்த போதிலும் அவ்விடமெல்லாம் இவரது செய்யுணடை யினிமையாகவே யோடுகின்றது. இவ்வொவ்வொரு பாட்டிலுஞ் சொன்னயமும் பொருணயமும் மிகவுண்டு. இவ்வளவு அழகு வாய்ந்த இந்த நூல் யாவரும் வாங்கி வாசித்து மனப்பாடம்பண்ணத்தக்கது. தமிழின்மீ தாசையுள்ள ஒவ்வொருவரிடத்திலு மொருபிரதியிருக்க வேண்டியது மிகவும் அவசியம். இது மிகவும் பளபளப்பான காகிதத்தில் தெளிவாக அச்சிடப்பட்டுளது. இதன் விலை அணா - 4. நூல் வேண்டியவர்கள் சென்னையிலுள்ள முக்கியமான தமிழ்ப்புஸ்தக வியாபாரிகளிடத்திலும் எம்மிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

* * *

மறுபிரவேசபரீட்சை :—இது நாளது பிப்பிரவரிமாதம் 28 - ஆந் தேதிமுதல் நான்கு நாளளவு நிகழும். முன்னர் நடந்த பரீட்சையில் தேறினவர்கள் தொகை மிகவுங் கொஞ்சம். அவர்கள் மட்டுமே யிம்மறுபரீட்சைக்குப் போகலாமென்று சர்வகலாசங்கத்தார் விதித்திருப்பதனால் அவ்வாறு முற்பரீட்சையில் தேறினவர்களில் ஏறக்குறைய நூற்றுக்கு இதன்கண் ஐவராவது தவறிவிடக்கூடும்; ஆகவே மொத்தத்தில் தேறுவோர் தொகை மிகச்சிறிதாயிருக்கும். இவ்வாறு நமது சர்வகலாசங்கத்தில் விஷயங்கள் நடப்பது பலர்க்கும் வெறுப்பு விளையாநின்றதென்பதொருதலை. உதாரணமாக, மைசூர் சமஸ்தானத்திலும், ஹைதிராபாத் சமஸ்தானத்திலும் அவ்வத்துரைத்தனத்தார் இனி நங்கஞ் சென்னைச் சர்வகலாசங்கத்துப் பரீட்சை விஷயமாக இவ்விதப் பிறழ்வுகள் மீட்டும் நேரிடுமாயின் தங்கள் கலாசாலைகளை வேறு பிரித்து மும்பாபுரி, காளிகட்ட முதலிய மாநகரங்களிலுள்ள சர்வகலாசங்கங்கட் குட்படுத்தி விடுவதே யுத்தமமென்று கருதுகின்றார்கள்.

* * *

டாக்டர் லாட் :—இந்தத் துரையவர்கள் அமெரிக்காக் கண்டத்தின்கணுள்ள ஐக்கியமாகாணங்களின் சிறந்த நகரங்களி லொன்றாகிய 'யேல்' நகரச்

சர்வகலாசங்கத்தைச் சார்ந்த பட்டாசாரியர்களி லொருவர். இவர் தத்துவ சாஸ்திரத்திற் பெரிதுங் கைவந்த புலவர் பெருமானார். இவரது பிரசங்கங்களெல்லாஞ் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஆண்டர்சன் மெமோரியல் ஹாலின்கண் நடக்கின்றன. அவையிற்றைப் பேராவலோடுங் கவனித்துக் கேட்டுக்கொண்டு வாரா நிற்கும் யாம் அவை விஷயமாகச் சிறிது பேசுவாம். இவரது பிரசங்கங்களெல்லாம் பெரியதா மாரவாரமொன்று மின்றி மிகவும் எளிய நடையில் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்கவாறு செய்யப்படுகின்றன; ஆழ்ந்த நுட்பமான கருத்துக்கள் பலசெறிந்துள்ளன; மிகவுங்கவனித்துக் கேட்போரே அவருடன் சென்று பொருளுணரவல்லராவார்; இடையிற் சிறிது கவனியாது விடுத்தவர்களுக்குக் கொஞ்சம் அவருடன் சேறல் கஷ்டமாயிருக்கலாம், அவர் பேசிப் போதரும் விஷயம் 'சமயதத்துவமும் அவற்றின் பகுதிகளும்.' இதனைப்பதினைந்து பிரசங்கங்களில் விரித்துக் கூறுவான் தொடங்கி ஏறக்குறையப் பன்னிரண்டு பிரசங்கங்களு மாய்விட்டன. இவையனைத்தும் ஒருங்கே சேர்ந்து ஒரு புத்தக ரூபமாக வெளிப்படு மென்றெண்ணுகின்றோம்.

***

**கல்வியிலாகா** :—இதைப்பற்றி டாக்டர் மில்லர் துரையவர்களினுடைய அப்பிராயம்: கி. பி. 1882 ஆம் ஆண்டு நடந்த கல்வி விசாரணை (எடுக்கேஷன் கம்மிஷன்) யின்படி பார்க்குமிடத்துத் துரைத்தனத்தார் வித்தியாசாலைகளைக் காட்டிலும் மிகவும் அதிகமாகப் பிறவித்தியாசாலைகளைக் கவனித்து உதவிசெய்து பாராட்டவேண்டுவதே கல்வியிலாகாவின் தலைவர்களது முக்கியமான கருத்தாகவேண்டு மென்பது தெற்றென விளங்கும்; அப்படியிருக்க, நமது சென்னைக் கல்வியிலாகவோ அதற்கு நேர்மாறாக நடந்து வாராநின்றது. இஃது இந்தியா துரைத்தனத்தாராலுங் கவனிக்கப்பட்டுப் பிழையென்று வலியுறுத்தப்பட் டிருக்கின்றது. அங்ஙனமாகவு மின்னும் சீர்திருத்தம் அடைந்திற்றிலது நமது சென்னைக் கல்வியிலாகா. இந்தச் சென்னையிராசதானியிற் கல்வி சீர் குலைந்திருப்பதெல்லாம் பிறவித்தியாசாலைகள் துரைத்தனத்தாரால் அவ்வளவு கவனிக்கப்படாமையாலேயே. இனிச் சென்னையிற் கல்வியின் சீர்திருத்தம் ஏதேனுஞ் செய்யவேண்டுமாயின் கல்வியிலாகா உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும் அந்த எடுக்கேஷன் கம்மிஷன் என்னுங் கல்வி விசாரணைப் புத்தகத்தை உளங்கொளப் படித்து அதன்கட் கூறப்பட்டுள்ள ஒவ்வொன்றையுந் தவறாது நடத்தவேண்டும். என்றைக்கு அவ்வாறு துரைத்தனத்தாரும் பிறருஞ் செய்யப் புகுவார்களோ அன்றைக்குத்தான் தென்னிந்தியாவின் கல்வி சீர்ப்படும்.

***

**கான்வோகேஷன்** :—இதன்கண் கனம் பொருந்திய எப்-ஏ. நிக்கல்ஸன் துரையவர்கள் அடுத்த மாதத்திற் புதிதாகப் பட்டம் பெறும் மாணாக்கரை நோக்கிப் பிரசங்கஞ் செய்வார்.

OFFICE OF THE REGISTRAR OF ... APR 1900 MADRAS.

# ஞானபோதினி.

புத்தகம் III. } 1900ளு மார்ச்சுமீ 20உ. { நெ. 8.

## நக்கீரனார்
## தெய்வப் புலமைமாட்சி.

"நன்றே ஞான்கி னென்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே."

### முகவுரை.

செழுந்தமி ழென்னுங் கொழுந்தமிழ்க் குழவியை
மன்றினுட் குனிக்குங் கொன்றையஞ் சடையோன்
மறுமுனி தவத்திற் குறுமுனிக் கருள
வாங்கவ னினிதெழுந் தேற்றுப் பாங்குறக்
குறங்கினி லிரீஇ வெரிந்புறந் தைவர
இயல்வகை யென்னும் பயில்பா லூட்டிச்
சின்னாள் வளர்த்த பின்னர் மன்னிய
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான்
பீடுற வமர்ந்த கூடன்மா நகரின்
மெய்யுற விருந்த தெய்வப் புலமைப்
பெருமதிப் புலவோர்க் கருமையி னுதவ, வவரு
முளந்தளும் புவகையி னலம்பெற வேற்று
நூற்பொரு ளென்னுஞ் சீர்க்கலன் செறித்து
நூலெனு மாடையும் வாலணிக் கொளீஇச்
சொற்சுவை பொருட்சுவை கனிந்த பல்
னல்லுண வருத்தியும் பல்வே றாட்டுச்
சங்க மென்னும் பொங்குயர் தடத்தினு
மாலவா யென்னுங் கோலமார் காவினும்
வடமொழி யென்னு மடங்கெழு தோழியொ
டுடம்படுத் தொருங்கு விளைப்பக் குடம்புரா

கொங்கைப் பொறை செழு கொழுந்தமிழ் மங்கை
யாறு வேட்கையி னுடி மேனாட்
கீரனுவிற் சீரிதி னமர்ந்தனள்
கவின்கெழு திருமக ணறும்பொதி யவிழ்க்குங்
கொழுந்தா மரையின் மேவி
யெழுந்தினி திருந்த வியல்பினு லெனவே.

இந்துணைப் பெருஞ்சிறப்பு மொருங்கு வாய்ப்பப் பெற்றுக் கடைச்சங்கத்துத் தலைமைப் புலமைத்திற மேற்கொண்டு பொலிக ஆசிரியர் நக்கீரனார் பெருமை யொருநாவுடைய வொருவரா லெடுத்தொரு துறைப்படுத்துரைக்கப்படும் நீரதன்று. ஆயினும், பிற்காலத்தாரிற் சிலர் இவ்வாசிரிய ருரைவழிக்கொடு முரணியவ் வுரையிற் குற்றங்காண்டலும், அங்ஙனங் குற்றங்கண்டார்க்குத் துணை நின்று அவருரை நிறுத்துதற்பொருட்டு ஆசிரியர் தெய்வப் புலமைத்திறத்தை யிழித்துக்கூறியங்ஙனங் கூறுதலாற் கழுவாயின்றிக் கருநெறி நரகிற் கிடந்துழலுதற் கேதுவாகிய பெரியோர் அபசாரம் புரிந்து வருதலும் பல்கித் தாங்கெடுதலல்லாமலுந் தம்மைச்சார்ந்த அறிவின் மாக்கட்கு மங்ஙனஞ் செய்யக்கற்பித்து ஆரவாரஞ் செய்தலின், அச்செருக்குரையாளர் மறுக்க மொழியவும் நல்லறிவாளர் நயப்பது வேண்டியும் ஆசிரியர் நக்கீரனார் வரலாறும், அவர் தெய்வப்புலவரென்பதும், அவரருளிச்செய்த நூல் வரலாறும், களவியலுரையிவர் கண்டதன்றென்பா ருரைக்குமாறும், அங்ஙனங் கூறுவாருரை பொருந்தா தென்பதும், பிற்காலத்தா ரிவருரையிலிலக்கண வழுவாராய்ந்தவாறும், அவ்வாராய்ச்சி பயனில் புல்லுரையேயா மென்பதும் பிறவுந்தந்து காட்டி முடித்தலை நுதலி யெடுத்துக் கொள்ளப்பட்ட திவ்வுரை யென்பது.

## நக்கீரனார் வரலாறு.

இவர் ஆண்டாண்டு 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என்று கூறப்படுதலானும், பொருளதிகார வுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர் இவரைப் 'புலவுத்துறந்த பொய்யா நோன்பினர்' என்றெழுதலானும் இவர் சைவவேளாளரிற் கணக்கர் வகுப்பிற் பிறந்தவரென்பது பெறப்படும். இனியிவரைச் 'சங்கறுப்ப தெங்கள் குலம்' எனுஞ்செய்யுளை பற்றி யக்குலத்தினரென்



பாருமுளர்; இவ்வரலாறு ஆன்றோர் நூலுரைகளிற் காணப்படாமையானும் இதனை நிறுத்தும் வேறுபிரமாணங்கள் வேறொருவாற்றாற் பெறப்படாமையானும், தொல்லாசிரியர் மெய்யுரையொடு மாறுபடுதலானும் அங்ஙனங் கூறுவாருரை வறிதாமென்றொழிக. இவர் பிறந்தவூர் மதுரைமா நகரேயாம். இவர் இளம் பிராயத்தில் யாங்ஙன மொழுகினரென்பதும், இவரது விசேடவுரிமைக்குணங்களும், இவர் எக்காலத்து எவ்வரசன் அரசாண்டபோது சங்கமேறியிருந்து தமிழாராய்ந்தா ரென்பதும் பிறவும் ஒருதலையாகத் துணிந்துரைக்கு மெய்ந்நூற் பொருள் காணாமையான் அவையினிது விளங்கா. இனியிவர் சங்கமேறியிருந்து தமிழாராய்ந்த ஞான்று இவரைக்குறித் தெழுந்த வரலாறும் ஓரோர் நூலில் ஓரொருவாறாய் ஒன்றோடொன்று மலைவுபட நிகழ்த்தப்படுதலின துவு மொரு நெறிப்படாதாயிற்று. அதுவும் அவ்வந்நூலிற் கிடந்தவாறே யீண்டெடுத்துக் காட்டுதும்;

## திருவிளையாடற் புராணம்.

வங்கிய சூடாமணி யெனனும் சண்பகமாறன் மதுரையிற் செங்கோலோச்சி வருநாளில் ஒரு முறை மரங்களும் புதல்களுங் கொடிகளுங் குழைத்து அரும்பவும் தென்றற்காற்றுப் பொதிய மலைச் சாந்தத்தின் நறுமணத்தை அளவிக்கொண்டு மலர் முகைகளின் முழுநெறி யவிழ்த்து வண்டினம் யாழிசைத்தியல்வாக நலிப்ப மெல்லிதின் வீசவும் இளவேனிற் காலம் வந்தது. அக்காலத்து ஒரு நாள், சண்பகமாறன் தன் மனைவியோடு ஓரிளமரக்காவிற் புகுந்து ஆண்டுள்ள செய்குன்றின் மேல் வேறு இருந்தான். இருப்ப, மெல்லிதின் வீசுந்தென்றற்காற்றுப் பண்டு போற்கமழாது வேறொரு தன்மைப்படக்கமழ்ந்தது. கமழ்தலுஞ் சிந்திப்பான், "என்னை! இம்மணம் இளமரக்காவின் வாயவிழ்ந்த மலர்களின் மணமன்று, காற்றுக்கு இயற்கையில் மணமில்லாமையின் அதற்குரியது மன்று, இருந்த வாற்றான் ஈதொரு வேறு தன்மைத்தான மணம்" என்றிவ்வா றெல்லா மெண்ணித் திரும்பித்தன் மனைவியை நோக்கினான். நோக்கினாற்கு வாய்ப்புடைத் தாயிற்றோர் கூந்தன்மணமாயிருந்தது. அம் மணம் தன் மனைவியின் கருங்குழலிலிருந்து மிகவினியதாகக் கமழ்ந்தது. பின்னர், 'இம்மணம்

இவள் கூந்தற் கியல்பினமைந்ததோ, அன்றிப்பூவும் நறுங்கூட்டும் இடப்படுதலிற் செயற்கையானமைந்ததோ; யான் கொண்ட இவ்வையுறவை யுணர்ந்து செய்யுள் செய்ய வல்லார்க்கு ஆயிரம் பொன்றருவேன்' என்று கோவில் புகுந்து அவன் றான் எண்ணியவாறே பொன் முடிந்த கிழியைக் கொணர்வித்துச் சங்கப்புலவர் முன்றூக்கினன். இதனைக்கண்ட சங்கப்புலவர் தம்மிற்றனித்தனி தேர்ந்து தாந்தாங்கண்டவாறே செய்யுள் செய்துரைப்ப அவை யொன்றும் பொருளில வாதனோக்கிப் பெரிதும் எய்த்துக் கவலுறுவாராயினர். இஃதிவ்வாறிருப்ப, ஆதிசைவர் மரபிற் பிறந்து, இளம்பருவத்தே தன்றந்தைதாயொழியப்பிரமசரிய நிலைமேற்கொண்டொழுகும் தருமியென்னு மிளைஞன்றான் வதுவையயர்ந்து கொள்ளும் பெருவேட்கையால் ஆலவாயி லவிர்சடைக்கடவுள் திருமுன்போந்து குறையிரப்பான்: "எந்தையே! அடியேன் தந்தைதாயரைச் சிறுபருவத்தே யிழந்தேன்; இப்போது புதுமணங்கூடும் வேட்கையேன்; ஐயனே! என்மனக்கவலை தீர்த்தருளுதற்கு இது பதம்; இல்லறத்தொடு படுதலின்றி யெளியேன் நின்றிருவடிக்கு அருச்சனை செயற்பாலனோ, அல்லனே; நீ எல்லாமறிதி! பாண்டியன் மனக்கோள் உணர்ந்தடியே னுய்தற்பொருட்டு ஒருசெய்யுளியற்றித் தருக" என்றிவ்வாறெல்லா மிரந்து வேண்டுதலும், சிவபெருமானிரங்கிக் "கொங்கு தேர்வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ்செப் பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற், செறியெயிற் றரிவை கூந்தலி, னறியவு முளவோ நீ யறியும் பூவே" எனுஞ்செய்யுளையியற்றி நல்க அதனைக்கொண்டுபோந்து சங்கப்புலவர் கையிற் கொடுப்ப, அவரும் அச்செய்யுட் சொல்வளமும் பொருள்வளமு மாய்ந்து பார்த்து, 'நல்ல! நல்ல!' என்று மகிழ்ந்தார். மகிழ்ந்து பாண்டியன் முன்சென் றவருரைப்பப் பாண்டியனுஞ் செய்யுட்பொருள் தன் கருத்தோடியைதலிற் பெரிது முவந்து 'புலவரொடுஞ் சென்று தமிழ் கொணர்ந்த வேதியன் ஆயிரம்பொன்னும்பெறுக' வென்று கூறி நல்கினன். அவ்வாறு வேந்தன் நல்குதலும் அவைப் புறத்துத் தூக்கிய பொற்கிழியையறுக்கப்புகுந் வேதியனை நக்கீரனார் விலக்கி யிச்செய்யுளிற் குற்றமுள தென்றார். என்றலும் வேதியன் மிக வருந்திக் கொணர்ந்த செய்யுளைச் சிவ பெருமான் திரு



முன்வைத்து "ஐயனே! வறுமையாலடியேன் படுந்துயர் குறிக்கொள்ளேன், சின்னாளுஞ்சிற்றறிவு முடையபுலவர் பேரறிவும் பெருந் தன்மையு முடைய நின்செய்யுளிற் குற்றங் காண்பதே, அதுவன்றியும் நின்னை நன்கு மதிப்பாரு மிலராவரே, இவ்வாறு நிகழ்ந்த இவ்விளிவரவு நினக்குறுவதன்றி, எனக் கொன்றுமில்லை' என்று மிகவிரங்கிக் கூறுதலும், சிவ பெருமான் ஒரு புலவன் போல வடிவுகொண்டு வெளிப்பட்டுச் சங்கத்தார் வைகும் அவைக் களத்தைச்சேர்ந்து அவரை நோக்கி 'நமது செய்யுட்கு வழுவேறினர் யார்?' என்றார். உடனே, நக்கீரனார் சிறிதும் அஞ்சாது, 'நாமே அச்செய்யுட்கு வழுவுரைத்தாம்' என்றுரைப்பச் சிவபெருமான் 'வழு வென்னை?' என்று வினவினார். வினவுதலும், 'அதிற் சொல் வழுவின்று, மற்றுப்பொருள் வழுவுளதாம், என்னை? குழல் நறுந்தென்றல் கொழுவிய மலர்மணம் பெற்றுழியன்றிக் குழல்தானே யியல்பாகக் கமழுந்தன்மைத் தன்றாம்; அன்றாக, 'அரிவைகூந்தலி னறியவுமுளவோ' என்று, அதற்கு இயல்பிலேயே விரைகமழுந் தன்மையுண்டென உலக வழக்கொடு மாறுகொண்டுரைத்தலி னென்பது' என்று விடுத்தார். அற்றேல், * நங்கைப் பெண்டிர்க்குங் குழன்மணஞ் செயற்கைத்தோ வென்றிறைவன் வினவுதலும் அதுவு மவ்வாறேயென்றார். பின், வானர மகளிர்க்கும் அம் மணம் செயற்கைத்தோவென, அதுவு மன்னதேயென்றார். அதன்பின், நீர் வழிபட்டேத்தும் திருக்காளத்தியப்பர் பாகத்தமர்ந்த ஞானப்பூங் கோதையார் ஈர்ங்குழலு மந்நீர்மையதோவென அதுவு மந்நீரதேயென்றார் நக்கீரனார். இச்சொற் கேட்டலும் புரிசடைப் பெருமான் எரிவிழித்திமைக்குந் தந்நுதல் விழிதிறப்ப, அதற்கு மஞ்சாராய் நக்கீரனார் பொய்விழி யிந்திரன் போல்நும் மெய்ம்முழுதும் விழியாயினுஞ் சிறிது மஞ்சேன், நும் பாடல்பொருட் குற்றமெய்தி வடுப்பட்டது தேற்றமே யென்றார். இதற்குண் மதிமுகிழ்ச் சடையோன் நுதல்விழிச் செந்தீ வீசிய வெப்பம் பொறாது பொற்றாமரைத் தடத்துள் வீழ்ந்தார் நக்கீரனார். சிவபெருமானும் தம்வடிவங் கரந்து மறைந்தார்.

இனி, ஏனைச் சங்கப்புலவ ரெல்லாரும் மெய்விதிர் விதிர்த்து உள்ளமுடைந்து, அரசுபோகியகுடியும், விழுமிய நன்மணியிழந்த

* நங்கைப் பெண்டிரைப் பதுமினியென்றல் வடநூல்வழக்கு.

முத்துவட்டமும், அறிவின்மக்கள் கல்வியும், கொழுமதியில்லா வா
னும்போல், நக்கீரனாரை யிழக்கப் பெறுதலாற் பெரிதும் பொலி
விழந்து வருந்தி 'இறைவனொடு வாதுசெய்த பிழையாங்ஙனந்
தீருமோ? உய்வதெது' என்று எண்ணிப் பின்னர் ஒருவாறு
தேறுதலடைந்து சிவபெருமான் திருமுன்படைந்து 'அரக்கன்பெ
ருப்பெடுத் தெய்திய விடரைப்போக்கிய இறைவனே, ஆலமுண்ட
அண்ணலே! நல்லவுந் தீயவுமியற்றினார்க்கு நிரலேயின்பமுந் துன்
பமுமீந்தவரை யுய்விக்கும் பேரருளினை, இங்ஙனம் ஒறுத்ததுசால்
புடையதாயினும், இப்போது அப்பிழையைப் பொறுத்தருள்க' எ
ன்றுபெரிதுங் குறையிரப்ப அருள்வள்ளலுவந்து பொற்றாமரைத்
தடத்தருகிற் புலவர் குழாம் நடுவில் தோன்றி நின்று அருட்கட
லாகி யொளிவிரிக்குந் திப்பிய வடிவத்துடன் அன்புருவாய்க்
கரையேறி வந்து 'ஞானப்பூங்கோதையார் தெய்வக்கூந்தலுக்குக்
குறைகூறிய பொல்லா நாவுரையைத் திருக்காளத்தியப்பரன்றி
வேறியார் பொறுப்பார்' என்று ஆழவாராய்ந்து 'கைலைபாதி
காளத்திபாதியந்தாதி' பாடியருளினார்; அப்போதே 'கோவப்
பிரசாத'மும் 'பெருந்தேவபாணி'யும் 'திருவெழுகூற்றிருக்கை'
யும் வேறுவேறியற்றிச் சிவபெருமான் திருவடிமேற் சாத்தி
நாவுரை குழற, மயிர்சிலிர்ப்ப, உள்ளங்குழைந்து உச்சிக்கூப்பிய
கையுடன் பன்முறை குடந்தம்பட்டுத் தொழுதங்கிருந்தார். பின்
னர்ச் சிலநாட் சென்று ஆலவாயி லழனிறக்கடவுள் குறுமுனி
வனை யழைத்து நக்கீரனார்க்கு இலக்கண வுபதேசஞ் செய்வித்தன
ரென்று மிக விரித்துக்கூறும். இனி,

### சீகாளத்திப்புராணம்.

மதுரைமா நகரிற் பாண்டியன் செங்கோலோச்சு நாளில் நக்
கீரனார் முதலிய சான்றோர் இறைவனாற் கொடுத்தருளப்பட்ட
தெய்வப்பலகை தம்புலமை வரம்பறிந்து நிலையிட்டிடந்தர அதன்
மீதேறி யிருந்து செழுந்தமிழ் ஆராய்ந்திருந்தார். இவ்வாறிருப்ப
ஒருநாட் பாண்டியன் தன் பொன்மாடத்து மேனிலைமேல் தன்
னாருயிர்க் காதலியொடும் அமர்ந்தான். ஆயகாலையில் இளந்தென்
றல் அவ்வணங்கின் குழன் மணத்தை அளைந்துகொண்டு வீசப்
பாண்டியனும் இது நம்மனைவி குழன்மணமென்று துணிந்து பின்



றான் சருகிய விதனை யமைத்துச்செய்யுள் இயற்றும் புலவர்
ஆயிரம் பொன் கொள்பவென்று அவ்வாயிரம் பொன்னையு
முடிந்த கிழியொன்றைச் சங்கமண்டபத்தின் முன் தூக்கினான்.
இதனைக்கண்ட சங்கப்புலவ ரெல்லாருந் தாந்தாங்கண்டவாறே
பொருளமைத்துப் பாண்டியனுக் குரைப்ப அவனுமவற்றையெல்
லாம் மறுத்துக் கூறினான். பொற்கிழி யறுப்பவரின்றி யிருந்தது.
இவ்வாறிருப்பப் பாண்டிநாட்டில் மாரிவறண்டு கடுங்கதிர் வெம்
மைமிகுந்து உலகமெல்லாம் பொறுக்கலாற்றாத கொடியதொரு
வற்கட காலம் வந்தது. உயிர்களெல்லாம் உய்வது காணமற்
பெருந்துயருழந்தனர். அப்போது ஆலவாயி லவிர்சடைக்கடவு
ளைப் பூசித்து அருச்சிக்குந் தலைமையுடைய தருமியென்னுமந்த
ணர் இனி நாம் உயிர் பிழைக்குமாறில்லை யாதலின் வளமலிந்த
நாடுநோக்கிச் செல்லுதும் எனத்துணிந்து சிவபெருமான்றிரு
முன்படைந்து 'பெரும! இவ்விடத்தில் இனியிருந்தாற் சாவேன்;
வேறுநாடு புகுந்து மழைவளஞ் சுரந்தபின் மீண்டு மிவ்விட
மணைந்து நின்றிரு வடித்தொழும்பி யற்றுவேன்' என்று பிரிவதற்
காற்றாது தொழுது அழுதார். 'அழுது அசங்குறையாதே,
வழுதி தன்மனத்தடக்கிய பொருடெரித்துச் செய்யுள் செய்
வார்க்குத் தருதற் பொருட்டு ஆயிரம் பொன் முடிந்த கிழி
யொன்று தூக்கினான், அதனை யிச்செய்யுளறைந்து பெறுக' என்
றருளிக் "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளை நல்
கினார் ஆலவாயமர்ந்த வண்ணலார். நல்கியதனை யேற்றுப் பாண்
டியன் முன் போந்து அவன் செவியிலமிழ்து உகுத்தது போற்
சொல்லலும், மற்றவனு மிதனைக்கொண்டுபோய்ச் சங்கப்புலவர்க்
குச் சொல்லியவரை யுடம்படுத்துக வென்றான். அந்தணரும் புல
வர் முன்னவ்வாறே போந்திசைப்பப் புலவரெல்லாரு முவக்கும்
வழி, ஆங்கவருள் நக்கீரனார் 'இப்பாக்குற்ற முடைத்து' என்றார்.
என்றலும் வேதியன் றனுக்குற்றுக் கடவுளிடத்திதனைத் தெரி
விப்ப அவரும் புறம்போந்து புலவரை நோக்கி 'இதில் வழுவா
ராய்ந்தார் யார்?' என்று கேட்ப, நக்கீரனார் 'நான்' என அவர்
'குற்றமியாது' எனக்குழலுக்குச் செயற்கை மணமன்றி யியற்கை
மணமிலதாக, அதனை யுள்ளது போற் கூறுதலி னிஃதில்லது கூற
லென்னுங் குற்றமாமென்றார் நக்கீரனார். இறைவனார் 'அரம்பை

யர்குழலுஞ் செயற்கை மணத்ததோ' என, 'அதுவு மக்கதே' என்றார் நக்கீரனார். பின் இறைவனார், 'இறைவிகூந்த லத் தன்மைத்து' என, 'அதுவுமத்தன்மைத்தே' என்றார் நக்கீரனார். உடனே இறைவன் நுதல்விழிதிறப்ப, 'யான் வடிவேலாங் கண்காட்டினு மஞ்சேன், அச்செய்யுளிற் குற்றங் குற்றமே' யென்றார் நக்கீரனார். பின்னர்ச் சிவபெருமான் 'எம்மோடு முரணி இமயம் பயந்த வுமை கூந்தலுக்குங் குறை சொல்லத் துணிந்தமையால், 'அறிவிலாய்! நீ குட்டநோய் கொண்டு வைய மெங்கும் அலைக' என, நக்கீரனார் உடனடுங்கிக் 'கருணையங் கடலே! புழுத்தலை நாயினேன் கூறிய அறியாப் பொய்யுரை பொறுத்தருளல் வேண்டும்' என்றுபலகா லிறைஞ்சி நாத்தழுதழுப்பவாழ்த்தினார். இவரது வழி பாட்டிற் கிரங்கி அத்தனார் 'இத் தொழுநோய் கயிலை காணிற்றீரும்' என்று மறைந்தார். பாண்டியன் முதலானோரும் இறைவன் திருவிளையாடலை நினைந்து வியந்தார். தருமியென்னுமந்தணர் பொற்கிழிபெற்றுவாழ்ந்தார். நாடுவறப்பு நீங்கி வளஞ்சுரந்தது. இதன்பின் நக்கீரனார்க்குத் தொழுநோயுற்று விரல் நிரை யழுகி விழுதன் முதலியன முறை முறை முதிர்ந்து பெருந்துயர் மிக்கது. நக்கீரனாரு மிதனைக் கயிலைகண்டு தீர்த்துக் கோடுமென்று ஊக்கிச்சங்கப் புலவர் மிகவருந்த அரிதிற் பிரிந்து புறம்போந்து பல நாடு, நகர், காடு, மலை, மரு நிலங்கடந்து காசி, திருக்கேதாரம் முதலிய வடநாட்டுச் சிவதலங்களைத் தரிசித்து, இமயமலைக்குச் செல்லும் வழியிற் செல்வார் கைகால் குறைந்து வெள்ளென்பு தோன்ற மிகவரிதிற் பெயர்ந்து தாம்போம் வழியில் ஒரு பெரிய தடமொன்று கண்டார். அக்குளக்கரை ஒருபெரிய ஆலமரம் நிற்ப அதனையடைந்து மனம் விரும்பிச் சிறிதிளைப்பாறினார். அங்ஙனமிருப் புழி, அம்மரக்கோட்டில் ஓரிலை யுதிர்ந்து ஒரு பாதி கரையிலும் பிறிதொரு பாதி நீரிலும்பட விழுந்தது, கிழக் கரையில் விழுந்த பகுதி யொரு மீனுண் குருகாயும் நீரில் விழுந்த பகுதியதற்கிரையாம் மீனும் வடிவங் கொண் டொன்றை யொன்றீர்த்தன.

நாகப்பட்டினம் - வேதாசலம் பிள்ளை.

---



# விக்கிரமோர்வசி நாடகம்.

---

## பிரஸ்தாவனை.

### நாந்தி.

புவனமெலாம் வியாபித்த புருடனென மறையோராற் புகலுகிற்பா
னெவர்தமக்குமுரிமையிலா வீசனெனும் பெயருரித்தா வேற்றுக் கொள்வான்
றவனனிவீட் டாசைகொடு பிராணாதி யொடுக்கியறி தன்மை யாள
னெவனவனே மெய்ப்பத்தி யோகத்தா லெளியசிவ னெம்மைக் காக்க. (க)

சூத்திரதாரன் :—(நேபத்தியத்தை நோக்கி) மாரிஷ! இவ்விடம் வருதி.

நடன் பிரவேசித்தல்.

நடன் :—பாவ! இதோ வந்தனென்.

சூத்திரதாரன் :—மாரிஷ! பன்முறை யிச்சபையோராற் பழைய மகாகவிகளுடைய நாடகங்க ளபிநயித்துப் பார்க்கப்பட்டன. ஆதலினிப்பொழுது யான் நூதனமான "விக்கிரமோர்வசீயம்" என்னும் நாடகத்தை யபிநயிப்பதாயிருக்கின்றேன். நமது நடர்களையெல்லா மவரவர்கள் பாத்திரங்களி லாயத்தமா யிருக்கும்படி செய்வாயாக.

[நிட்கிரமித்தல்.

நடன் :—அங்ஙனமே.

சூத்திரதாரன் :—இப்பொழுது கனம்பொருந்திய சபையோர்களைப் பிரார்த்திக்கின்றேன். (பாடுதல்)

நண்பரொன் றுரைதரு நயத்தி னாயினும்
பண்புறும் புருடனின் பக்க லென்றுமே
யண்மிய கவுரவத் தாயி னன்பொடுங்
கண்ணுவீர் காளிதா சகவி நூலரோ. (உ)

(ஆகாயத்தைநோக்கி) என்னை? யான் சபையோர்களிடத்து விஞ்ஞாபனஞ்செய்து கொள்ளும்பொழுது பீடிக்கப்பட்ட குரரீ பட்சிகளின் தொனிபோல அந்தரத்தி லொருவித சப்தங் கேட்கின்றதே! (சிறிது ஆலோசித்து) நன்று. அறிந்தேன் (பாடுதல்)

அரிநாம முனிவன்ற * னூருவினிற் றோன்றியமர வணங்கு தானு
மிருநிதியின் கிழவ†னவை யின்பமுற நடனஞ்செய் தேகு மெல்லை [த்
நிருதர்தாஞ் சிறைசெய்த தன்மையினால் வருத்தமெய்தி விகரின் மற்றை
தருமாத ரபயமென விரங்கிமிகக் கூறுவதிச் சத்த மாமால். (௩)

[நிட்கிரமித்தல்.

பிரஸ்தாவனை முற்றிற்று.

---

* நாராயணருஷி. † குபேரன்.

## முதலங்கம்.

---

இடம்:—ஏமகூட பர்வதச் சாரல்.
காலம்:—காலை.
பாத்திரங்கள்:—அரம்பை, சகசந்யை, மேநகை முதலியதேவமாதர்.

எல்லோரும்:—காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்!! தேவர்களிடத் தன்புபூண்டு ஆகாயத்திலேனுந் திறமை யுள்ளவன் யாவனேயாயினும் எங்களைக் காக்கவேண்டும்.

புரூரவன் இரதாரூடனாய்ச் சாரதியுடன் பிரவேசித்தல்.

அரசன்:—வருத்தப்படவேண்டாம்! வருத்தப்படவேண்டாம்!! சந்தியபண்ணித் திரும்பும்படியான யான்யாவரினின்று முங்களைக் காக்கவேண்டும்?

அரம்பை:—அரக்கரது கர்வத்தினின்றும்.

அரசன்:—அவர்கர்வத்தால் உங்களுக்கு நேர்ந்த அபராத மென்னையோ?

அரம்பை:—மகாராஜ! செவிசாத்தல்வேண்டும். அகோர தவம்புரிவோரிடத்துச் சங்கையுறு மிந்திரனுக்கு அழகிய ஆசைக்குரியா யிருப்பவளும், தனது ரூபத்தினால் மற்றையமாதரை யருபியாக்குபவளும், தேவலோகத்துக்கு அலங்காரமானவளும், எங்கள் பிரியசகியுமாகிய ஊர்வசியென்பாள் குபேரன் சபையில் நடனஞ்செய்து திரும்பும் சமயத்து இரணிய புரவாசியான கேசி யென்னும் அரக்கனாற் சித்திரலேகையாகிய அவள் தோழியுடனுஞ் சிறைசெய்யப்பட்டாள்.

அரசன்.—நன்று. அத்துஷ்டன் எத்திசைநோக்கிச் சென்றான்? அறிவீர்களா?

சகசந்யை:—வடகீழ்த்திசை நோக்கி.

அரசன்:—ஆயின் அச்சத்தை விடுங்கள். உங்கள் சகியைத் திருப்பிக்கொண்டுவரத்தகுந்த யத்தனஞ்செய்கின்றேன்.

எல்லோரும்.—சந்திரன் பேரனை நமக்கு இதுதான் அழகு.

அரசன்.—எவ்விடத்திலென்னை யெதிர்பார்க்கின்றீர்கள்?

அரம்பை.—இந்த ஏமகூட சிகரத்தில்.

அரசன்.—(சாரதியை நோக்கி) வடகீழ்த்திசையிற் றேரைத்திருப்புவாய்.

சாரதி.—அப்படியே. (அவ்வணமே திருப்புதல்)

அரசன்.—நன்று. இவ்விரதவேகத்தினால் முன்னர்ப்போகுங் கருடனையும் பிடிக்கலாமெனி லிவ்விந்திரன் பகைவனைப்பிடிப்பது மோர் அருமையோ? (பாடுதல்)



தேரியலும் வேகத்தாற் றிரணமென மேகங்கள்
சோழ்ந்து பறக்கின்ற தின்பரிகள் சிரத்தமைந்த
வேருறுவெண் சாமரங்க ளிம்மியுமே யசைகிலவாற்
றேரின்முக டுறுங்கொடிக டிரும்பியொரு பாற்சாய்ந்த. (௪)

[அரசன் நிட்கிரமித்தல்.

அரம்பை.—யாம் அரசனிடங் குறித்தவிடஞ் சேர்வோம்.

எல்லோரும்.—அப்படியே. [ஏமகூடமலைச்சிகரத்தேறுதல்]

அரம்பை.—அவ்வரசர் நம் வருத்தத்தை யொழிப்பாரோ என்னவோ?

மேநகை.—அதற்குச் சந்தேகமு முண்டோ? நம்மகேந்திரரே யுத்தகாலங்களில் எல்லா உலக பாலர்களுமிருப்ப விவரையே சேனாபதியாய் நியமிக்கின்றபோது இவர்பராக்கிரமத்திற்குக் கேட்பானேன்?

சகசந்யை.—(சிறிதுதூரத்திற்பார்த்து) சகிகாள்! மனவருத்தத்தை யொழியுங்கள். அதோ நம் அரசனது சோமதத்த மென்னு மிரதம் குதிக்கும் மான்கொடியோடு காணப்படுகின்றது. காரியசித்தியின்றி யவர் திரும்பவேமாட்டார்.

(எல்லோருஞ் சிறிதுதூரத்திற்பார்த்தல்)

அதிவேகமான தேரோடு அரசன் பயத்தால் மூர்ச்சித்துச்
சித்திரலேகையின் மடிமீது சாய்ந்த
ஊர்வசியுடன் பிரவேசித்தல்.

சித்திரலேகை.—வருத்தப்படவேண்டாமம்மா!

அரசன்.—ஏ! பயத்தால் மூர்ச்சையான பாவாய்! (பாடுதல்)
மிகவாகப் பயங்கொண்டு மூர்ச்சையுற்ற வெழிலாரு மின்னனாளே!
மகவான்றன் மகிமையொரு மூவுலகுங் காத்தளிக்கு மாண்ப தன்றே
மிகலாருந் தானவரா னேர்ந்தபய நீங்கியதா லிரவி தோன்ற
விகசிக்குங் கமலநிகர் நின்விழியை மலரத்துதியென் விமல மாதே. (௫)

சித்திரலேகை.—அந்தோ! உயிர்ப்பினாற் பிராணனுளதெனத் தெளியலாமேயொழிய வேறு குறிகளைக் காணேனே. இன்னும் மூர்ச்சைதெளியவில்லையே! என்செய்வது?

அரசன்.—மங்காய்! இம்மாது மிகவும் நடுக்க முற்றிருக்கின்றாள். (பாடுதல்
தனத்தினின் மீதுறை சந்தத் தீர்திட
(லனத்தினின் சாயலா) ளலரின் பந்தமென்
மனத்தினின் றுளக்கமு மாறிற் றின்றினு
மெனப்புலப் படுத்துமா (லினிய பாவையே!). (௬)

(ஊர்வசி சிறிது கால்கையசைத்தல்.)

சித்திரலேகை.—மனதைத் திடப்படுத்திக்கொள்; நீ தேவநங்கையல்லையோ அவர்கட்குரிய தைரிய முனக்கில்லையே!

(ஊர்வசிவிழித்தல்.)

அரசன்.—மாதே! உனது சகி சிறிது மூர்ச்சைதெளிகின்றாள் உற்று நோக்குவாய். (பாடுதல்)

இருள்சீத்து விளங்குமதி யெனத்துமஞ் சிறிதமிலா
திரவிடையி லெரிதீப மெனக்கரைக ளிடிந்துவிழ
வரைமாத்தி ரையிற்றெளியு மலைபாருங் கங்கையைப்போ
லுணர்வுசாலும் பொற்புடைய வூர்வசியுந் தெளிந்தனளே. (௭)

சித்திரலேகை.—பிரியசகி! பயத்தையொழிக்தி. உனக்கிடையூறு செய்த பாவிகள் தொலைக்கப்பட்டார்கள்.

ஊர்வசி.—மகிமையுடைய இந்திரனாற்றானோ?

சித்திரலேகை.—மகேந்திரனாலன்று. அவனுக்குச் சரியான மகிமைதங்கிய மகாபுருடனாகிய புரூரவச்சக்கிரவர்த்தியால்.

ஊர்வசி.—(அரசனையுற்று நோக்கித்தனக்குள்) அசுரராலெனக்கு உபகாரமன்றோ செய்யப்பட்டது.

அரசன்.—(மூர்ச்சைதெளிந்த ஊர்வசியைநோக்கித்தனக்குள்) நாராயணருஷியை வசீகரிக்கச்சென்ற தெய்வமாதர்கள் அவர் ஊருவினின்றுற்பவித்த இவளைக்கண்டு நாணுற்றுச்சென்றது மிகவும் சரியே. மற்றும் இவள் தபஸ்வியினுடைய சிருஷ்டியாக இருக்கத் தக்கவளல்லள். ஏனெனின், (பாடுதல்.)

அலைவிக்கும் விடயத்தி னின்று நீங்கி
யருமறைக ளுணர்ந்துமதி மந்த மாய
மலையென்ன முதியமுனி படைப்பா னல்லன்
வனிதையர்கள் தனக்குநிக ரென்ன வோதும்
கலைமதியோ சிங்கார ரசமோ னேரார்ந்த
காமன்கொல் மகிழ்ச்சிமிகு வசந்தன் கொல்லோ
வலைகடலிற் பிறவாத வமுத மன்ன
வழகுருவைச் செய்தவனே யறிகி லேமால். (௮)

ஊர்வசி.—சகீ! நமது சகிவர்க்க மெப்படியிருக்கின்றதோ?

சித்திரலேகை.—அது நம்மையளித்த மகாராசாவினாற்றான் தெரியவரும்.

அரசன்.—(ஊர்வசியைநோக்கி) அழகியாய்! உன் சகிமார்கள் மிகவுந்துக்கத்துடன் தோன்றுகின்றார்கள்.

(பாடுதல்)



கணங்குறித்துத் தற்செயலாய் நினைப்பார்த்த நலமுடையோர் காணு ராயிற்
கணங்குழையே! மனவருத்த மெய்துவரென் றுரைத்திடினே காதலென்று
மிணங்கியநற் சகிமாதர் நின்னைக்கா ணுதுமன மிரங்கிச் சால
வணங்குறுவ ரெனச்சொலலு மிறும்பூதோ வாய்ந்தறியா யணங்க னாளே. ()

ஊர்வசி.—(தனக்குள்) இவரது வசனம் இவர் நற்குலத் தவரென்று தெரிவிக்கின்றதே! நன்று! சந்திரனிடத்தில் அமிர்தமிருக்கிற தென்பது மோராச்சரியமோ? (வெளியாய்) ஆதலாற்றான் என்மன மவர்களைக் காணவேண்டி ஆதாமுறுகின்றது.

அரசன்.—(கையாற்சுட்டி) மெல்லியலே! ஏமகூடத்தினின்று—(பாடுதல்)

கரும்பாம்பு விழுங்கியுமிழ் கான்மதியின் விளங்குன்முகம்
விரும்பிநின்ற னேசரெலா மிக்காண்பர் பாரணங்கே. (௰)

(ஊர்வசி பிரியத்தோடு அரசனைப்பார்த்தல்.)

சித்திரலேகை.—சகீ! எங்குப்பார்க்கின்றாய்?

ஊர்வசி.—சமமான சுகதுக்கத்தையுடைய விச்சனத்தை.

சித்திரலேகை.—(நகைத்துக்கொண்டு) யாரை?

ஊர்வசி.—சகிமார்களை.

அரம்பை.—(களிப்புடன்) சகிகாள்! இப்பொழுது நம்மரசர் சித்திரலேகையுடனும் நமது பிரியசகியான ஊர்வசியுடனும் விசாகநட்சத்திரங்களுடனும் கூடிய திங்களென்ன வருகின்றார்.

மேநகை.—(உற்றுநோக்கி) மகாராசர் ஊறில்லாமலும், நமதுசகி சித்திரலேகையுடனும் வருகின்றார். நமது இரண்டுவித அபீஷ்டமும் நிறைவேறின.

சகசந்யை.—தானவர்களைச் சயிப்பது மிகவுங்கடினமன்றோ?

அரசன்.—இதுதான் ஏமகூட சிகரம் தேரைத்தரையிற் செலுத்துக.

சாரதி.—அப்படியே. [இரதத்தைத்தரையிற் செலுத்துதல்.

அரசன்.—(தனக்குள்) இத்தலத்திலிறங்கியதனாற் பெரும்பயனை யடைந்தேன். (பாடுதல்)

அசைதந்த தேரினு லிவ்வூர்வசியி னணிப்புயமாந்
திசையானை மத்த மடியனேன் றோள்கடாந் தீண்டியது
நசைமுதன் மாரன் விதைத்த கணத்திலே நாறியபோல்
விசையா யுடல்யான் சிலிர்த்து மகிழ்ச்சி மிகுந்தனனே. (௧௧)

ஊர்வசி.—(நாணி) சித்திரலேகா! அப்படிச் சிறிதுநகருவாய்.

சித்திரலேகை.—(சிரிப்புடன்) அப்படிப்போகக்கூடாது.

அரம்பை.—நமக்கு உபகாரியாயிருந்த அரசனை யெதிர்கொள்வோம்

(எல்லோரும் எதிர்கொள்ளுதல்)

அரசன்.—வலவ! தேரை நிறுத்துக. (ஊர்வசியைப்பார்த்துப் பாடுதல்)

பன்னுறுங் கொடியொடு பருவ மெல்லியல்
துன்னிய தன்மையைத் தோற்று விக்குமா
னன்னுதல் சகிகளை நன்னை லாலென்றன்
மன்னலத் தேரொடும் வலவ! நிற்றியால். (கஉ)

(சாரதியங்ஙனமேசெய்தல்)

எல்லோரும்.—நமது பாக்கியவசத்தால் மகாராஜர் வெற்றியுடன் விளங்குகின்றார்.

அரசன்.—நீங்களுமுங்கள் சகியுடன் சேர்ந்ததால்.

ஊர்வசி.—(சித்திரலேகை கையைப்பிடித்துக்கொண்டு இரதத்தினின்றிறங்கி) சகிகாள்! என்னைநன்றாய்த் தழுவிக்கொள்ளுங்கள். மறுபடியு முங்களையான் காண்பேனென்று இதுகாறும் நினைக்கவேயில்லையே.

(எல்லோருந்தழுவிக்கொள்ளுதல்)

அரம்பை.—நம் மகாராசா நீடூழிகால மிந்நிலத்தைக் காத்தளிப்பாராக.

சாரதி.—மகாராஜ! கீழ்த்திசையில் வேகமாக ஒருபெரிய இரதம் வருகிறசப்தம் கேட்கின்றது. (பாடுதல்)

மின்னுடன் கூடிய மேக மாமென
விண்கத் திடத்தவா விழியு மோடிய
சொன்னநற் றேர்வளை அலங்கப் பூண்டவ
னுன்னதச் சிகரமீ துறைகின் றனெவன். (கங)

(எல்லாருமத்திசைநோக்குதல்)

மாதர்கள்.—அவன் சித்திரரதனோ?

சித்திரரதன்பிரவேசித்தல்.

சித்திரரதன்.—மகேந்திரோபகாரியாய நீர் பராக்கிரமத்துடன் விளங்குகின்றீர்.

அரசன்.—ஓ! கந்தருவராஜனோ? மித்திர! சௌக்கியமோ?

(இருவருமிரதத்தினின்றிறங்கியாலிங்கனஞ்செய்துகொள்ளுதல்.)

சித்திரரதன்.—நண்ப! ஊர்வசி கேசியென்னும் மரக்கனாலபகரிக்கப்பட்டாளென்று நாரதரால் அறிந்த இந்திரன் கந்தருவசேனையை யனுப்பினன். செல்லுஞ்சமயத்து நடுவழியிற் சாரணரால் நும்முடைய ஜயத்தைக்கேள்வியுற்று நும்மைக் காண்பதன்பொருட்டு வந்திருக்கின்றோம் இந்திரோபகாரியாகையால் எங்களுடன் இந்திரனைக் காணப்போக வேண்டும். (பாடுதல்)



ஆதியிலிம் மாதரசை யரிமுனிவன் படைத்திந்தான்
காதுசின வெங்கணிறூர் கற்பதரு மன்னவற்கு
நீதியொரு சிறிதுமிலா கிருதரினின் றளித்தாயிப்
போதுமன்றோ நின்னுடைய புயவலியை யென்னென்பேம். (கச)

அரசன்.—மித்திர! அற்றன்று. (பாடுதல்)

மகவானைச் சேர்ந்தவர்கள் மாற்றாரைச் சயிப்பதவன்
றகவுடைய வலிமையன்றே தனிமைமிகுங் குகையினெழு
மிகலாருஞ் சிங்கத்தி னெதிரொலியுங் கைம்மலையை
மிகவாகப் பிளிறச்செய்ம் மேன்மையினை யடையுமன்றே. (கரு)

சித்திரரதன்.—நன்று! நன்று!! கர்வமின்மையன்றோ பராக்கிரமத்திற்கழகு.

அரசன்.—நண்ப! மகேந்திரனைப் பார்ப்பதற்குத்தகுந்த வமயமிஃதன்றாதலின் தாமே யிம்மாதையப் பிரபுவிடஞ் சேர்ப்பியும்.

சித்திரரதன்.—தங்களிஷ்டப்படியே. (தேவமாதர்களை நோக்கி) நாம் போகலாமோ?

ஊர்வசி.—(தனியாய்) சகீ! சித்தரலேகே! நமக்கு உபகாரியாயிருந்த மகாராஜனிட முத்தரவு பெற்றுக்கொள்ள யான் அசக்தையாயிருக்கின்றேனாதலின் நீ எனக்குப் பிரதி நிதியாய்க் கேட்பாய்.

சித்திரலேகை.—(அரசனையணுகி) மகாராஜ! ஊர்வசி தானுந்தங்கள் கீர்த்தியு மிந்திரலோகத்திற்குச் செல்ல உத்தரவு கேட்கின்றாள்.

அரசன்.—மறுபடியும் யாஅ பார்த்தலின் பொருட்டுப்போகலாம்.

(தேவ கன்னியர்கள் கந்தருவனுடன் போதல்.)

(ஊர்வசி மாந்திரந்தடையுற்றவ ளென்னநடித்து)

ஊர்வசி.—எனது ஏகாவலிவடம் இக்கொடியிற் சிக்கிக்கொண்டது. சித்திரலேகா! அதை யறுப்பாய்.

சித்திரலேகை.—பலமாய்ச்சிக்கிக் கொண்டதே விடுவிக்க முடியாது போற்றோன்றுகின்றது. ஆயினு மிருக்கட்டும் விடுவிக்கின்றேன்.

ஊர்வசி.—(புன்னகையுடன்) சகீ! இவ்வார்த்தையை மறவாதே.

(சித்திரலேகை விடுவிக்கின்றாள்.)

அரசன்.—ஆ! (பாடுதல்)

ஒளிருமதி முகத்தினளைக் கணநேரம் யானுனை வுபகரித்த
விளங்கொடியே! இனியுனக்குத் தகுதியுறு கைம்மாறு யாது செய்
[கேன்.

சாரதி.— வாசவன் பகையை வாரிதி சேர்த்தி

மாசில் புகழுது வாய வர்த்திரம்
புற்றினிற் பாம்பு புகுதருமா போல்
விற்றிறற் கோலே வேகமாய் நூந்த
மம்பருத் தூணி யடைந்தது காணீர். (கஎ)

அரசன்.—இரதத்தைத்திருப்புக.

சாரதி.—அப்படியே, (அவ்வணமே திருப்புதல் அரசனிரதத்திறங்குதல்.)

(ஊர்வசி பெருமூச்செறிந்து அரசனைப்பார்த்துக் கொண்டே சகியுடன் போதல்)

அரசன்.—ஏகுமார்க்கத்தை நோக்கினவளாய் ஐயோ ! கிடைத்தற்கரிய பொருளை யென்மன மிச்சிக்கின்றதே ! (பாடுதல்)

உலகளந்தோ னுயரடியை நோக்கிப்போ மூர்வசியுந்
துலங்குமொரு தடமதனிற் றோன்றுகின்ற நுனியொடிந்த
மலரினின்று நூலிழுக்கு மாவன்ன மெனவென்ற
னலமனத்தை யிழுத்துக்கொண் டையோசெல் கின்றனளே! (கஅ)

முதலங்கம் முற்றிற்று.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

# வெனிஸ் வர்த்தகன்.

## ஆறுங்களம்.

அதே இடம்: வெனிஸ் நகரம்.

(கிராஷியானோவும் சாலரினோவும் வேஷதாரிகளாய் வருதல்.)

கிரா.—நம்மை லாரென்சோ நணுகுற நவின்ற கொட்டிலுமிஃதே.

சால.—[illegible] குறித்த கடிகையும் ஆயது.

கிரா.—[illegible] அன்பர்கள் குறித்த கடிகையின் முன்னரே முடுகி வாராதது ஞலிவர் ஆலனி யஞ்செய லதிசயம் விளக்கும்.

சால.—[illegible] நன்கு கட்டுவான், [illegible] நட்பு நிறுவா திருக்க
முடுகுறும் விசையின் மும்மடங் கென்றும்
கடுப்புடன் சித்தசன் கபோதஞ் செலுத்திடும்.



கிரா.—எக்கா லத்து மியல்பே யஃதின்:
குண்ணவுட் காருக லுற்ற காலையில்
உளதாங் கடும்பசி யுடனே யுண்டபின்
எழுபவ னெவனுளன் ? முன்ன மியற்றிய
கட்டமாங் கதியெலாங் கால்பெயர்த் தப்பின்
தணிவி லுற்சாக மொடுதிரும் பிச்செயும்
அசுவமுண்டோ ? உளவாம் பொருளெலாம்
அனுபவித் தலினு மளவிலா வூக்கம்
செலுத்துபு தேடப் படுவன் றனவே
பரத்தையின் குணமுள பவனந் தன்னாற்
றழுவிப் புல்லித் தனுதரி மைந்தனை
இகந்து தகிலுடை யிளையோ னிடம்பனைப்
போன்று மரக்கலம் போதா லெற்றே!
தாசி யியல்புடைச் சதாகதி தன்னால்
மழையினும் வெயிலினும் வருந்தின பக்கமும்
சிதர்ந்த சிதையுமாய்ச் சிதைவுறு நாவாய்
மெலிந்து தளர்வுறீஇ மிகுவறி யவனும்
இடம்பன் போலு மீளலெத் தகைத்தே ?

சால.—இதோ லாரென்சோ வருகிறானினும்
இதைக் குறித்தினி மேற் பெயர்த்தும் பேசுவாம்.

(லாரென்சோ வருதல்.)

லாரெ.—இனிய நண்பர்கா ளித்துணைக் காலம்
தாழ்த்துநான் போந்த தவற்றினைப் பொறுமின்.
என்வழி பார்த்துமை யிருக்கச் செய்தது
என்பணி யேயலால் யானலே னெனைப்போற்
காதலி நாடிநீர் கள்வரிற் றிரிதர
வாஞ்சித் திடுங்கான் மற்றுமக் கிப்படி
நானும் வழிபார்த் திருப்பே னுறுதும்.
இவ்வயி னெனது தந்தையாம் யூதன்
உளனும் உள்ளே உள்ளார்யார் கொல் ?

(ஜெசிக்கா வேலைக்காரன் உடையுடன் தோன்றுதல்.)

ஜெசி.—யாவர்நீர் ? உமது தொனியால் யானுமைத்
தெரிந்துளேன், சரதமே யாயினுந் தெள்ளிதின்
ஐய மகன்றிட வுறைதிரா லெனக்கே.

லாரெ.—உனது காதல னுடைய லாரென்சோ

ஜெசி.—உண்மை லாரேன்சோ! உண்மையா வென்றன்
அன்ப! மற்றுமையலால் யாவரை யித்துணை
நயந்தேன். நானும் மவளா யிருத்தலை
உமையலால் லாரென்சோ! உணர்வாரார்?

லாரே.—என்னுடையவளாய் நீயுளா யெனற்கு
நின்விசுவாசமும் கடவுளுங்கரி.

ஜெசி.—ஈதோ பிடியு மிந்தப் பெட்டியைப்
பிரயா சத்திற் கேற்றபே றளிக்கும்
எனைநீர் கண்ணுறு வண்ணம் எல்லியா
இருத்தலி னுவந்தே னெனதுவேற் றுடையால்
மிகவும் வெள்கினே னாயினும் வேட்கை
கண்ணிலா ததுவே காதலி னோர்புரி
சின்னி ரிழுதைச் செய்கைக டெரியார்
தெரிந்திட வல்லரேற் சேவக னாகநான்
திரிந்ததை நோக்கச் சித்தசன் றானுஞ்
செந்நிறங் கபோலஞ் சிவணநா ணுறுவன்.

லாரே.—இறங்குதி. எனக்குத் தீவர்த்தியாளா
இருத்தல் வேண்டும்.

ஜெசி.— என்ன? எனது
நாணந் தெரிக்க நானுமோர் பந்தம்
பிடித்திடல் வேண்டுமோ பிடியா தேயது
மிகத்தெளி வாயுள தன்றோ மெய்யாய்
இப்பணி காதல! எவர்க்குமெற் றெரிப்பதே
கரந்துநா னிருக்கக் கடவேன்.

லாரே.— காதலீ!
சேவகன் றனது சிறந்த வுடையினும்
எழில்கரந் தேயுளாய் ஒல்லையில் வருதி.
ஏகாந்த மாமிரா வேகிடும் வல்லையிற்
பசானியோ விருந்தி னமையெதிர் பார்க்கிறார்.

ஜெசி.—கதவுதா ளிட்டினுஞ் சிலடக் கற்றுடன்
உம்முட னொல்லையி லுற்றிடு வேன்யான்.

(மேலே போதல்.)

கிரா.—என்றன் றலைமுடி யாணைமற் றிவடான்
அந்நிய மதத்தளே யூதை அல்லள்.

லாரே.—அவளைநான் மிக்க வாதர வோடும்
வேட்டிலே னெனில்யான் மேவுக சாபம்



ஏனெனி லென்மதிப் பதுபிச கிலதெனில்
அணையா ளறிவுடை யவள்காண். என்றன்
நாட்ட முண்மை நவிலுமேல் வனப்பினள்
நிசத்த ளெனவவள் நிரூபித் துள்ளாள்.
ஆதலி னென்ற னசைவிலாச் சிந்தையில்
அவளு மவ்வா றறிவொடு வனப்பும்
மெய்யு முடையளாய் மேவிவீற் றிருப்பாள்.

(ஜெசிக்கா கீழேவருதல்)

என்ன? வந்தனையோ? ஏகுமின் றுணைகாள்.
நமைப்போல் வேடம் பூணுறு நண்பர்
இதுவரை நமக்கா வெதிர்பார்த் திருப்பரே.

(ஜெசிக்காவோடும் சோலாரினோவோடும்
போதல்.)

அந்தோணியோ வருதல்.

அந்.—அங்கே ஆர்?

கிரா.—ஐயா! அந்தோணியோர்!

அந்.—சீச்சீ கிராஷியா னேனைஞ் சினேகர்
எங்குளர்? இப்பொழு தொன்பான் கடிகை
கழிந்தனங் காதல ருமக்காக் காத்தனர்
இற்றை ஞான்றிரா வேடக் கூத்திலை
மாருதந் துணையா வந்தது பசானியோ
கடிதிற் கப்பற் கேகுவ ரும்மை
நாட விருபது பெயரைநா னுய்த்துளேன்

கிரா.—கனிமகிழ் வுற்றே னிஞ்ஞான் றிரவே
ஓடஞ் சிதைவிரித் துய்த்தலி னலையே
இன்பமீ விளைப்ப தெற்குவே றிலையே.

(எல்லாரும் போதல்.)

எஸ். வி. கள்ளப்பிரான் பிள்ளை.

# வாழ்க்கைப்பயன்.

## I. பெரு வழக்கு

(258-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

மனிதன் எப்படித்தனது அமயங்களை வீணாக்குகின்றான் என்பதைக் காண்டல் உண்மையாகவே விசனகரமாயிருக்கின்றது. கவலையின்றி வீணாக்கப்படுகின்ற ஆசிகளைக்கொண்டு எத்தனையோரையோ இன்பப்படுத்தலாம். உங்களுடைய இன்பங்கள் தோற்ற மாத்திரையி லுண்மையாகாது எப்பொழுதும் மெய்யாகுமாறு கவலையாயிருமின். இன்ப மென்ற பெயரில்லாவிடில் வெறுக்கத்தக்க அநேக விஷயங்களை யாம் அப்பெயருடைமை பற்றிச் செய்கின்றோம். அநேகர் உபயோகமுள்ளதொன்றுஞ் செய்யாததனாலேயே தாம் சுகம் அநுபவிக்கிறதாக எண்ணுகின்றனர். மனவின்பங்கள் மிகச்சுவையுடையன வாகவும் நீடித்தனவாகவு மிருக்கவும், இன்பமென்ற மொழி ஐம்புலனுகர்ச்சியைச்சார்ந்ததெனப் பிறர் எண்ணுகிறார்களென்பது தோன்றுகின்றது. எதனுடைய சௌக்கியத்தில் மனச்சௌக்கியம் சார்ந்துளதோ அந்த நமது கிடைத்தற்கரிய சரீரத்தை நம்முட்சிலர் புறக்கணிக்கின்றனர்; வேறு சிலர் கவலையின்றிக் கெடுக்கின்றனர். தொழிலைஞ்சான்ற பொருள்களினின்றும் பெறக்கூடிய இன்பத்திற்பாதியேனும் நாம் பெறுகின்றிலோம். பொதுஜன சித்திர கூடத்துக்கு நமது லண்டன் பட்டணத்தாரில் எவ்வளவு பேர் போயிருக்கிறார்களோ என்பதை யோசிக்குமிடத்து யான் ஆச்சரியப்படுகின்றேன். நூலின்பச்சுவை காண்டலின்கண் நாம் பெரிதும் பயில்கின்றிலேம். எத்துணையோர் ஆங்கிலநாது காட்சிசாணிடத்திற்குச் சென்றிருக்கின்றனர், அல்லது அதன் இன்பத்தை நுகர வல்லராகின்றனர்? நாம் வாழு முலகத்தின்கணுள்ள பொருள்களின் வனப்பையும் நந்தலைக்கு மேலுள்ள வானத்தின்கட் காணப்படும் பொருள்களின் வனப்பையும் நம்முட்பலர் கண்டு களிகூர்கின்றிலர். நம்மாலியன்றவளவு செய்யாவிடினும் மற்றையவற்றினும் அதிகமாக இசையைப் பயன்படுத்துகின்றோம். மற்ற பிராணிகளுக்கு இயற்கையறிவு மட்டும் இருக்க, மனிதனுக்குப் பகுத்தறிவு முளதெனப்புகழ்ந்து கொள்ளுகின்றோம்; அப்படியிருந்தும் நாம் புகழ்ந்து கூறும் அவ்வறிவினால் மக்களின்பத்திற்கு உண்டாகும் அநுகூலங்கள் எவ்வளவு கொஞ்சம்! பொதுப்பட நோக்குமிடத்து மனவுணர்வுடைமை இன்ப ஊற்றாகாது துன்ப ஊற்றாங்கொல் என்று சந்தேகிக்கப்பட்டுளது. மெய்யாகவே ஸினிக்ஸ் என்னும் ஒருவகைத்தத்துவசாஸ்திரிகளாலும் அவ்வாறே ஆசங்கிக்கப்பட்டுளது. ஏனைய பிராணிகள் தம்மை நொந்து கொள்வனவல்ல. நாம்மட்டும் நம்மையே நொந்து கொள்கின்றோம். மனிதன் பொய் விடயங்களிற்றலைப்பட்டு வீணாகத்தான் மனங்கலங்குகின்றான். நாம் ஆச்ச



160956.

வையப்பாடுகளினாலும் பல்வகைக் கவலைகளினாலும் நம்மையே வருத்திக்கொள்கின்றோம். இன்னவெனச் சுட்டியுணரப்படாத விஷயங்கள் நம்மைச் சுற்றிலும் எப்புறமும் சூழ்ந்துள்ளன வெனினும் அவைபற்றி யாம் அமைதியற்றிருத்த லொண்ணாது.

ஆயினும் நாம் கவலைப்பட வேண்டுவதில்லை யெனினும் சாக்கிரதையாயிருக்க வேண்டும். ஒரு சிறிதும் நாம் சகமாட்டோம் [illegible] எண்ணுகின்ற விஷயங்களிலும் சாக்கிரதையாயிருக்க வேண்டும். [illegible] தம்மொடு மறுதலைப்பட்ட தீயொழுக்க நீக்கத்திற்கு வேண்டிய அமைந்தவறிவினும் நல்லொழுக்கங்கள் செவ்வனே நடத்தற்கு அதிக வமைந்தவறிவு வேண்டுமென்று நம்புகின்றேன். உண்மையாக நோக்குமிடத்து மறம் முதற்பார்வையிலேயே நாம் நடுங்கத்தக்கவளவு உருக்குலைந்திருக்கின்றது. முதற்கண் அஃது ஏதேனும் ஓரறம் போலாதெனின் நம்மை மயக்குதல் மிகவுமரிதாம்'' என்று செஸ்டர்பீல்டு பிரபு கூறுகின்றார்.

பல நல்லியல்புடையராயிருந்தும் தம்மை அன்பிலரும் பன்மனமுடையரு மாகும்படி கவலையின்றி விடுத்தொழிந்த மாக்களுட் பலரை நாமனைவரும் கண்டுளோம். பாமர்ஸ்டன் பிரபு என்பவர் குழந்தைகளெல்லாம் நல்லனவாகவே பிறந்தன வெனக்கூறியமைபற்றிச் சமயநூலோரால் குறை கூறப்பட்டார். எப்படியும் உண்மையாகவே ஒருவன் மிகத்திய நிலைமையடைதற்கு முன் சிறிது இடர்ப்படல் வேண்டியிருக்கின்றது.

“உலகின்கட் காணப்படும் தீயவழிகளைப் பற்றிப்பேசுமிடத்தும் நாம் திடீரென்று தீயவராகின்றிலேம்; ஆனால் நந்த மியல்பைக் குலைப்பதற்குச் சிறிது காலமும் இடர்ப்பாடும் வேண்டியிருக்கத்தக்கபடி கடவுளருளாற் படைக்கப்பட்டிருக்கின்றோம். துறக்கத்தினின்றும் வல்கன் என்பவன் விழுந்தாங்கு ஒரே நாளில் நாம் அறத்தினின்றும் வீழுகின்றிலேம்.”

[இவ்வாறே நகுஷ சக்கிரவர்த்தியும் மலைப்பாம்பாக வீழ்ந்த கதையாவரு முணர்வர்.]

ஒவ்வொருவனையும்பற்றித் தனித்து நோக்குதலினின்றும் குலத்தைப்பற்றி யொருங்கு நோக்குப்புகுமிடத்து நாம் நமது அநுகூலங்களை வீணாக்குதல் இன்னு மதிகமாக நடுக்கத்தக்கதன்றோ! நம்முன் உண்மை யென்னும் பெரிய கடல் முழுதும் வெளிப்படாதிருக்கவும் அதனை யறியாத நாமனைவரும் கடற்கரையில் விளையாடி வழக்கமாய் அக்கப[illegible]றவற்றினும் அழகிய சிப்பிகளையாதல் மெல்லிய கடற்பாசிகளையாதல் பொறுக்கித்திரிகின்ற குழந்தைகளே யாகின்றோம் என்று சொல்லி மனிதரெல்லாம் நியூடன் கூற்றுக் கிணங்கலாம். நாம் பயனியல்புகளறிந்த பொருள் ஒன்றேனுமில்லை. காலமுதன் மாலை காறும் யாம் உழைகின்றோம்; ஆயினும் இயற்கைப்பெரு

JL
Rm211,M97
M97.3-4

ளியல்புகளையும் இயற்கைப்பொருள்வலிகளையும் இன்னும் நன்றாய்ப் பயன்படுத்தக்கூடுமானால் ஒன்றிரண்டு மணி நேரத்திற்குள் உடற்குரிய நியாயமான விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொண்டு மனத்தையும் ஐம்புல வுணர்ச்சிகளையும் பயிற்சி செய்தற்கு வேண்டிய காலமும் பெற்றுக்கொள்ளலாம். நீராவி இன்னும் முற்றிலும் பயன் படுத்தப்படவில்லை. மின்சாரப் பயன் நமது இளமைப்பருவத்தில் அறியப்படவில்லை. யாம் இப்பொழுது தான் அவைகளை யுணரத்தொடங்குகின்றோம். யாற்றோட்ட வன்மை யெல்லாம் இன்னும் கடலிற் பயனின்றிக்கழிகின்றன. மயக்கு மருந்துகள் முன்னரே கண்டு பிடிக்கப்பட்டிருந்தால் எத்துணையோ பயங்கரமான துன்பங்கள் விலக்கப்பட்டிருக்கலாம்! இன்னும் எடுத்துக்காட்டத்தக்க உதாரணங்களை முடிக்க ஒரு புத்தகம் முழுவதும் செல்லும். நமக்கு முன்னும் நமது காட்சிக்குட்பட்டும் ஆயிரக்கணக்காகக் கண்டுபிடிக்கத் தக்க விஷயங்கள் கிடக்கின்றன என்பதனை யொருவரும் ஐயுறமாட்டார். ஐயகோ! உண்மை யென்னும் பெரிய கடல் தம் முன்னே வெளிப்படாது வாளா கிடக்கவும் கிறித்தவ சாதியாரென்று சொல்லிக் கொள்கின்றவர்கள் ஒருவரை யொருவர் அழித்தற்கும் மண்ணாசை பிடர் பிடித்துந்துதலான் விலங்குகளைப் போலப் பொருது மாய்தற்கும் கோடி கோடியாகப்பொருளை வீணாக்காநின்றனர்! இஃதென்கொலோ!!

சென்ற தலை முறையில் நமது குழந்தைகளுட் பலரைக் கற்றுக்கோடலின்றி வாளா விடுத்தலில் திருத்தி கொண்டிருந்தோம். இற்றை ஞான்றினும் நியாயமாக நோக்குமிடத்து அவர்தம் மெய்க்கருத்து யாழ்நாளோடு ஒருவித இயைபுமின்றியிருக்கின்ற கல்வியே யெனினும் 'மிதமிஞ்சியபடிப்பு' என்று சிலர் இகழ்தல் நம்காதிற்பட்டு மிருக்கின்றது. கல்வியினும் மடமைக்குப்பொருள் அதிகம் செலவாம் என்பதை யுணரகில்லாது செலவழிக்க மனமிலார் இன்னும் சிலர் உளர்; ஆயினும் ஏறக்குறைய நம்பிள்ளைகளனைவரும் சிறிதேனும் சற்றவராயிருந்தால் நான் அவ்விஷயத்தில் இப்பொழுது ஆராய்ச்சி செய்யப்புகாவிடினும் மிகவுந்தக்க முறையைத்தழுவியிருக்கின்றோமா என்று ஐயுறுதல் நேரிதாகலாம். நமது பாடசாலைகளில் ஒழுக்கப் பயிற்சி மிகவும் கவனிக்கப்படவில்லை யென்று மட்டும் கூறுவேன். கட்டளைகளிற் சிலவற்றை மீறி நடப்பீரேல் மிகத் தவறுசெய்பவராவீர் என்பதும், மற்றோரைத் துன்புறுத்துவீரெனினும் இப்பிறப்பிலாவது இன்பத்தை அதிகப்படுத்திக்கொண்டீவீர் சிறிது நன்னிலையிலிருப்பீர் என்பதும், தற்சிராட்டும் பணவாசையும் மிதமின்மையும் மடியும் இவைபோல் வனபிற இனிய தீக்குணங்களெல்லாம் நியாய மெனப்படாவேனும் மற்றோர்க்குத்தீமை பயப்பன வெனினும் தனக்கு நன்மை பயப்பனவாம் என்பதும் ஒவ்வொருவனும் தன்னைப்பற்றியே கருதுவானாயின் இயற்கையாகவே சுகமுமின்பமுமுள்ள வாழ்க்கையையே விரும்பாநிற்பான் என்பதும், நல்லோனாகவும் அறவோனாகவு மிருத்த லெவ்வளவு நேரிதாகவும் மேம்பட்டதாகவு மிருப்பினும் குற்றமற்ற இனியவிளையாட்டுக்களினும் தன்னயந் துறக்கும்படி நேரிடுகின்றது. ஒருங்கு நோக்குமிடத்து அஃது ஆத்மபரித்தியாக வாழ்க்கையாக முடியும் என்பது மடங்கிய ஒரு மிக்க சாமனியக் கொள்கையே போந்த பயனாயிற்று.



அந்தோ! வீட்டினி லன்பிற் போற்றுநா
மந்தை மேய்க்கு மாண்பறு தொழில்செய
நந்தலில் கவற்சி நண்ணி யுழல்வதில்
வந்தன மற்ற வளர்பல கலைகளைச்
சிந்தை செய்வதிற் சேர்பய னுண்டுகொல்?
ஏனையோர் போல வெளிய மாதொடு
மினிய நீழலிற் றனிவிளை யாடலுந்
தன்னுடை யரிய வின்னுயிர்க் காதலி
குழலின் சிக்கினைக் கோதுந்
தொழிலு மவற்றிற் றூயன வன்றோ?

இதற்கு முற்றிலும் மறுதலைப்பட்டதே யுண்மை. ஆனால் தீயோன் தீமையின் சிறப்பியல்புகளாகிய தடைப்படுதலும் சிறையடைதலு மெய்தி இறுதியில் எசமானர்களெவரினும் மிகத்தீய தனது ஆசைகட்கு அடிமையாகின்றான். மறுபடியும் சில விளைஞர் மறத்தில் மனிதனியல் வாய்ந்ததொன்றுளதென்றெண்ணுகின்றனர். ஆனாலெத்தகைய வலியுள்ள பேதையுந் தீயவனாயிருத்தலியலும். அறவோனாதற்கே மனிதத்தன்மை வேண்டும். அதுவே மெய்யான சுவாதீனமாம். உண்மை வழியால் நோக்குமிடத்து மறமே அடிமைத்தன்மை. ஒருவித ஒழுக்கம்தவறுதல் பற்றி நம்மையிழிவு படுத்தாது; ஆயின் நம்மைஅஃது இழிவு படுத்துதல் பற்றித்தவறுகின்றது. ஏதேனும் அதிசயமான தோரொழுக்கநூற் பிறழ்வினால் தவறு நேரிதென்று கொள்ளப்படின் அஃது இன்பமன வமைதிகளினழிவிற்குக் கருவியாயிருக்கின்றது.

பாவமும் துக்கமும் பிரிக்கப்படாதன வென்ற கோட்பாட்டை வலியுறுத்தச் சமயநூற்புலவன் வாய்மொழி யொன்று மெடுத்துக்கூறேன்; ஆனால் இவ்விஷயத்திற் சேஸ்டர் பீல்டு என்ற உலகநடையிற் பெரிதுமடிபட்ட பிரபுவின் வாய் மொழியையேதக்க சான்றாக நம்பி மேற்கொள்வேன். அவர் தம்மகற்கு விடுத்த நிருபங்களிலொன்றில் வேறு பல நன்மதி காட்டிய பின்னர் "நல்லொழுக்கத்தால்விளைந்த நன்மைகளிவைகண்டாய். இத்தகைய நல்லொழுக்க முடையார் நடையை மேற் கொள்வாய். நீ நன்மை வாய்ந்த பெரிய மனிதனாக வேண்டுவையேல் அதுவே இன்பம் விளைக்க வல்ல நல்வழியாம்" என்று முடிக்கின்றார்.

சீருக்கை. - வரதாசாரியன்.

# திருநகர்த்தாள் கொடுத்துதவிய திருத்துறை.

[இச்சிறுநூல் இயற்றப்பட்ட வரலாறு :—வெயில் நன்றாய்க்காய்ந்து முற்றுந்துறந்த முனிவர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு மந்தணர்க்கும் உள்ளும் வெளியும் வறண்டு தண்ணீர்! தண்ணீர்! எனக்கதறும்படியிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் 11-30 -க்குச் சைதாப்பேட்டையிலிருந்து புகைவண்டியேறிச் சுமார் 19 - வயதுள்ள வைணவ வாலிபனொருவன பட்டணம் 'பார்க்கு' ஸ்டேஷனில் வந்திறங்கினான். இறங்கிச் சற்றுதூரம் பெரிய ரஸ்தாவழியாய் நடந்து பின்னர் ஒற்றைவாடைச்சந்தில் திரும்பும்போது தன்முன், சுடர்கான்று விளங்குஞ் சுட்டபொன் சிலையெனத் தயங்கும் இருவர் பெண்வடிவாய்க் கைகோத்து வீதியின் ஒருபக்கம் நிற்கக்கண்டனன். கண்டதும், இச்சிறுவன் தலைவணங்கிக் கண் கீழ்நோக்கிச் செல்லுந் தன்னீர்மை ஏதோ அப்போது சற்று நீங்கினதனாலும், அம்மாதுசிரோமணிகளிவன்பாலேதோ ஓரருள் புரியவேண்டி வந்து நின்ற தெய்வத் தோற்றத்தினராதலாலும், அவரை இவன் சற்று உற்று நோக்கினான். அத்தெய்வ வேளையிற் கிருபாகடாக்ஷத்தோடு பொருந்திய அவ்விருவர் குவளைக்கண்ணும் இவனை நோக்க, இச்சிறுவன் கேளாவண்ணம் ஏதோ தமக்குட்பேசிய வவ்விருவர் திருவாய்களும் இவனைப் பிள்ளாயென்றழைத்தனவே.

இச்சிறுவன்பால், வேண்டியோர்க்குதவும் நற்குணம் இனிதமையப் பெற்றிருந்தனனும், 'விதிபோலெமக்குரு நின்றனை யாவிகொண்டெம்மை இரே' என்றிச் சிறுவனை பின்பாடியபடி விதிபோற்றள்ளினுந் தள்ளாமை நீர்த்தாய் நின்றனராதலாலும், அவர் தந்தாமரைப் பாதங்களையே தன்னுடைய கண்களிரண்டும் நோக்கின வண்ணமாய் அவரை யணுகலுற்றனன். அவர் இவனை 'இவ்வூர் வைராகிமடம் நிற்கும் நிலையறிதிரோ?' என்ன, இவன் 'அடியேன் அறிவேன் அன்னையீர்' என்றனன்.

பின்னவருள் மூத்தவள் 'நாங்கள் இருப்பது காவிரி சீரங்கம் பெரிய பெருமாள் கோயில், இங்கோர் காரியமாய் வந்திருந்தோம், இஃது அங்கே போகும் பயணம், நீர் இத்திறவுகோலைப் பெற்று வைராகி மடத்தருகிலிருக்கு மெமதகத்துக் தந்துபோகக் கோருகின்றனம். இஃதெமதகத்துப் பணப்பெட்டிச் சாவி, என்று சொல்லுமளவில் அவருட் சிறியவள் அத்திறவுகோலைச் சர்வாலங்காரத்தோடும் பொருந்தியதன் திருமார்பினின்று மோராபரணங் கழற்றுவது போற் றொடிவளைக்கையாற் றுழாவியெடுத்து நீட்டினள். நீட்டிய வத்திறவுகோலைத் தன்றிருக்கைகளாற் பெற்றவச்சிறுவன்



'அன்னையீர் நுமது திருநாமம் அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகின்றேன்' என, அவருட் பெரியவள், 'யாம் அலர்மேல்மங்கையும் அவள் நற்றாயும் ஆகிய இருவர். எமது பெயர் ஆண்டுப் பிரசித்தம் என்று முடித்து மறுவீதியாகிய பெரிய 'பப்ளிக்' 'ரோட்டை' யடைந்து மறைந்தனர்.

பின்னர் இவ்வாலிபன் அத்திறவுகோலைக் கட்டப்பட்ட மங்கலநாணோடு கையிற்றாங்கித் தான் சென்ற வேலையைச் சடுதியில் முடித்துப் பின்றனக்கு அந்தரங்க சினேகிதராயும் பச்சையப்பசாலையிற் பிரதமகலா பரீட்சைக்குப் படிப்பவராயும் இருக்கும் பா. இராமாநுஜா சாரியர் என்பவரைக்கண்டு திறவுகோலைக் காட்டி அதன் வரலாற்றையுமுரைக்க அவர் 'இஃது ஆச்சரிய விஷயம், முன்பின் னறியாது உம்மிடத்து இச்சாவியை யவர் எவர்தாமாயினுமீவரோ? மேலும் அது பணப் பெட்டிச்சாவி என்றனரே; சாவியும் விற்றுலுமிரண்டணைக் கிடைக்கத் தட்டில்லை. எதற்கும் நீர்போய் இதை யாங்கீந்தெம்மிடம் வாரும்' என அவ்விளையோனச்சாவியுடன் வைராகிமடங் கோயிலுக்கு நேரெதிரே வருகையில் தன் முன்னோனாவிலின் கிடக்கையிலிருந்து தான் முன்கண்ட இருவருள் மூத்தவளானவள் தன்னை நோக்கி முன்வரக்கண்டு காலடி பெயர்க்காதங்ஙனே நின்றனன். அம்மாதுசிரோமணியுமெதிர் நின்ற கோயிலுக் கெதிர்வந்து நின்று அச்சாவியைப் பெற்று அக்கோவிலினுள்ளேயே புகுந்தனள். இச்சிறுவன் திரும்பி வீட்டுமுகமாய் ஐந்தடி வைக்குமுன் 'இதோ ஈந்தேன் பெற்றனையோக—— திறப்பதோர்தாள் !' என்னுமொரு வாக்குச் செவிபடக்கேட்டு, திரும்பிக் கோவிலுட் புகுந்தெப்புறமுஞ் சுற்றிப்பார்த்தொருவருமில்லாமையாற் பின், முன்சொன்ன தன் சினேகிதர் வீட்டிற்கேகி அன்றந்திப்போழ்து கழித்து, விளக்கு வைக்கக் கோயிலடைந்து, ஆங்குள்ள திருக்குளத்திலந்திக்கடன் கழித்து, கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீனிவாச மூர்த்தியைக் கண்டு வணங்கித் தீர்த்தப் பிரசாதம் பெற்றுத் தாயார் சந்நிதிக்கேகித் தொழுது, தம்மோடு நின்ற ஒருவரை 'இப்பிராட்டியின் திருநாமமடியேனறியப்போகுமோ?' என்னவப்பெரியவர் 'அலர்மேல் மங்கையிவள் திருநாமம்' எனச்சொற்றமை கேட்டு, திருமேனி புளகாங்கிதங் கொண்டனனாய், ஆநந்தபாஷ்பம் பொழிய நிலமிசைப்படிந்து வீழ்ந்து துதித்துவிட்டு, பின் அவ்விரவு முழுவதூஉம் இதே எண்ணமாய் முற்சொன்ன இராமாநுஜாசாரியர் வீட்டிற் கழித்து மறுநாட்காலைச் சைதையம்பேட்டை யடைந்து இந்நூலியற்றினன்.]

(கட்டளைக்கலித்துறை.)

1. கண்ணன் கழலிணைக் கீழடி யாட்செயு நற்பதவி
விண்ணைந் திருநகர்ப் பத்தரீட் டம்யாம் பெறவுதவும்

வண்ணஞ் சிறியதோர் பொன்னந் திருந்தா ளிதுவாவாற்
றண்ணக் தழாய்ப்பெற நண்ணு மனமே மலர்ந்தருளே.

2. அருளா ழியலைத் தெதிர்மடை நூக்கிப் புரள்வதொக்குந்
திருமாற் றிறமெம் மிடத்துமெம் மோரிடத் தும்மறிவாற்
பொருளாற் பெருகிய நங்கையர் நந்தம் பிராட்டியர்க
டெருளார் மனமருள் வானெமக் கீந்தாரிக் கோதிறவே.

3. திறவுகோ லீந்தெந் திறக்கரு ளீந்தவெவ் வப்பனையே
மறவா தடைந்தேத் துகையாகி லென்று மவனருளாற்
பிறங்குமோர் பொற்று மனைப்புவெனப்பே ரணிபெறவே
யிறவா திளையா திணையடிக் கீழ்ப்பெற லாமனமே.

4. மனமே திறவுகோ லீங்கிது கொண்டுன் மடைதிறந்து
புனலே யெனப்பெரு குந்திரு மாலருள் பெற்றிடுவாய்
கனவு நனவுங் கழியா தவனை நன் னீர்கொடாட்டி
வனமாலை யந்தண் டுழாய்கொடு சூட்டுவ சூடலாமே.

5. சூட்டுவ சூடித் திளைத்தெதிர் நின்றவர் டார்பனைவா
னீட்டிய கைதடுத் தாங்கவர் பெண்மன மாட்கொடுபோய்
கூட்டிய வாயர்தந் தேவிய ராய்க்கண்ட மாயவனு
ரீட்டிய விண்ணகர்க் காட்பெற வீந்தார் திருவருளே.

6. திருவரு ளென்றுந் திகழ்தரு மொகசுநந் தீவினையாற்
பெருகிய மும்மல மற்றிட வாங்கஃ தார்திரையார்
கருநீர்ப் பெருங்கட லாய்த்திகழ் மாங்கதன் மேலிடத்தே
கருநீல வண்ண னுலகுண்ட வாயொடுங் கண்வளர்மே.

7. வளர்பொரு ளீட்டுநின் னேர்தொழி னியினி யீங்கொழிவாய்க்
கிளரக னீர்க்கட னீத்தெதிர் நன்னக ரேகியமா
றளரிடை கண்டெமக் கீந்தான் றுறக்கந் திறப்பதொர்தா
டளரிடை யுற்றூர்க் கினிநாந் தளரிடை நீக்குவமே.

8. நீக்குவம் யாம்பெரு மானினை யாத வலைக்கொடுபோய்ச்
சேர்க்கல மெம்மவ னீட்டிய விக்குழாங் கூற்றுவர்க்கே
போக்கல மத்துணைப் பொய்ந்நக ரெய்தத் திருவருளாற்
போக்குவ மத்துணை பொன்னக ரெய்த விறந்தெழாமே.

9. இறந்தெழு நன்னகர் யாம்பெறு முன்னுயு மிவ்வுலகே
பிறந்தவ ருய்க்குல மும்பல நற்குல முந்திகழூர்
சிறந்தவர் விண்ணோர் தொழுவரு ளரிது வாழியரோ
திறந்துவிண் ணோர்நகர் புக்குய்யத் தாள்பெறு நன்னகரே.



10. நன்னகர் யாம்பெறு முன்னுயு நல்வழி காட்டிடுவான்
பொன்னகர்த் தாணமக் கீந்தன னெம்மிறை யும்மதியாற்
றுன்னிய நம்மவர் வாழ்ந்திடத் தாடுழா விக்கொடுபோய்ப்
பன்னிய ரேத்துபைப் பாம்பணை யானைப் பணிமனமே.

(இன்னும் வரும்.)

சை. கிருஷ்ணமாசாரியன்.

---

# பொருண்முறை நூல்.

## IV - ஆம் அத்தியாயம்: பொருள் பகிர்தல்.

---

(II-ஆம் சம்புடம், 147-ம் பக்கத்தொடர்ச்சி.)

நிலம், கிருஷி, முதல், இவற்றின் உதவியாலீட்டப்பெற்ற பொருள்
முழுதும் பல்லோரிடத்தும் எவ்வாறு போய்ப் பரவுகின்றது. எவ்விதமாய்ப்
பாகம் செய்தால் நயநஷ்டமின்றிப் பலரும் நியாயமான பாகுபாடெனநினைக்
கும்படியாகும். இவ்விதப்பாகுபாடுதான் நியாயமானதென உறுதியாய்ச்
சொல்லவியலாது. அபிப்பிராயம் பலவாறுயிருக்கின்றது. கவர்ன்மெண்டார்
தாங்கள் முன்னின்று இப்பொருளைப் பாகுபாடு செய்தால் யாருக்கும் நஷ்ட
மின்றிநியாயமாய் நடக்குமென்பது சிலருடைய அபிப்பிராயம். இப்படி இரா
ஜாங்கத்தார் பிரவேசிக்கும் பக்ஷத்தில் அநேக காரணங்களினால் ஈட்டக்
கூடிய பொருளும் குறையும்; எப்படி யெனின் மொத்தமாய்ச்சேர்ந்து பொ
ருளீட்ட நிமித்தம் பாடுபடுகிறவர்கள் கவர்ன்மெண்டார் இவர்களுக்குப் பகிர்
ந்து கொடுப்பது இன்னவிதமென்றும் இவ்வளவென்றும் தெரியாது. இதிற்
சேர்ந்த ஒவ்வொருவனும் தான் சம்பாதித்தது தனக்குச்சேராது அதிகபா
கம் மற்றவர்க்கும் போயினும் போகலாமெனும் எண்ணங்கொண்டு அவ்வ
ளவு சிரத்தை எடுத்துக்கொள்ளான். ஆகையினால் ஈட்டவேண்டிய பொரு
ளினளவும் குறையினும் குறையும்; குறையவே பாகுபாட்டிலும் அவரவர்க்
கு வரும் பாகமும் குறையும். ஆயினும், நிலம், கிருஷி, முதல், இவற்றிற்
குரியவர்கள் தம் போட்டியினாற் பொருள் பாகுபாட்டில் அநேக நஷ்டமும்
உண்டாகின்றது. இத்தகைய விஷயங்களிற் கவர்ன்மெண்டார் முன்னிற்
பது அதிக அனுகூலமாயிருக்கும் சில விஷயங்களில் இது * அனுகூலமாயிரு
க்கும் இருக்கிறது. எவ்வித அனுகூல மென்பதைப்பற்றி பின்பு கவனிப்
போம். கவர்ன்மெண்டார் பிரவேசிக்காதிருக்கும் போது, நிலம், கிருஷி,

* see: Land Legislation for England.

முதல் இவைகளின் உதவியினால் ஆக்கப்பட்ட பொருள் எப்படிப் பகிரப்படுகிறதெனப்பார்ப்போம். அஃதாவது இப்பொருளில், நிலமும் அதைச்சேர்ந்த உபகரணங்களும் உடையார் எவ்வளவு பாகம் அடைவார்களென்பதும், முதலாளிகள் எவ்வளவு பெறுவார்களென்பதும், கிருஷிக்குரிய பற்பல மனிதர்கள் அடைவதின்னதெனவும் பார்ப்போம். மேற்சொன்ன மூன்று வகுப்பினராகத்தான் ஜனங்களும் பிரிவுபட்டிருக்கிறார்களென்பதில்லை. ஏனெனில் நிலமுடையவர்களே முதலுடையவர்களாகவுமிருக்கலாம்; முதலாளிகள் தாமே கிருஷியும் செய்யலாம். ஆயினும் நில வுதவிக்காக வரக்கூடிய பொருள் இவ்வளவெனவும் கிருஷிக்கு இவ்வளவெனவும் முதலுக்கிவ்வளவெனவும் நியமிப்பதற்கு அதற்குரிய விஷயங்களையும் விதிகளையும் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது. அவ்விதிகள் என்னவெனப்பார்ப்போம்.

ஆக்கப்பட்ட பொருளில் நிலமுடையாரடைய வேண்டிய வாரமும், முதலாளிக்குச்சேர வேண்டிய வட்டியும் வினையாளருக்குரிய கூலி முதலியனவும் அடங்கியிருக்கின்றது. நிலமுடையார் தந்நிலவுதவியினால் வருஷத்தில் தாமடையக்கூடிய பாகத்திற்கு வாரமெனப்பெயர். இதை இவர் அடையும் விதம் இப்படியெனவும் இது பல தேசங்களில் எப்படி இருக்கிறதென்பதும், இந்தியாவில் இஃது எம்மாதிரியாயிருக்கிறதென்பதும், அப்படியிருப்பதற்குக் காரணமும் இதைச்சேர்ந்த மற்ற விஷயங்களும் வேறோர் அத்தியாயத்தின் கண் விரித்துரைக்கப்படும்.

மேலெடுத்துக் கூறப்பட்ட பொருளில், முதல் கொடுத்து உதவி செய்ததற்குப்பதில் வருஷாந்தரம் முதலுடையார் அடையும் பாகத்திற்கு வட்டியெனப்பெயர். எல்லா விடத்திலும் வட்டி ஒரே விதமாக இருக்கிறதில்லை. இவ்வாறிருப்பதற்குக் காரணம் இன்னின்னவென்பதைக்குறித்து மற்றோரிடத்து எடுத்துக்கூறுவாம்.

வினையாளராற் செய்யப்படும் கிருஷிக்கும், வினை செய்விப்போர் தம்பாட்டுக்கும் வரும்பொருள் முறையே கூலியெனவும், † இலாபமெனவும் பெயர் பெறும்.

நிலமுடையான் ஒருவன், முதலுடையான் ஒருவன், கிருஷிக்குரியவன் வேறொருவன் என இருக்க வேண்டுமென்பது ஆவசியகமில்லை. இக்காலத்தில் நடந்துவரும் விவசாயம், வர்த்தகம் முதலிய தொழில்களிற் கிருஷி ‡ செய்விப்போரே முதலுடையவர்களாயிருக்கிறார்களென்பது நமக்குச் சாதாரணமாய்த் தெரிந்த விஷயம். இப்படிக்கில்லாமலே ஒருவன் கடன் வாங்கி வியாபாரம் செய்வானாயினும் புத்திமானாயிருப்பிற் கூடிய சீக்கிரத்தில் தானும் முதலுடையவனாய் விடுகிறான்.

† Profits. ‡ Employers.



அப்படித்தான் அதிக முதலுக்குரியவனான பிறகு, அம்முதலைப் பிறருக்கு வட்டிக்குக் கொடுப்பதைப்பார்க்கிலும் தன்னுடைய வியாபாரத்திலேயே உபயோகிப்பதனால் தனக்கு வட்டியைப்பார்க்கிலும் அதிக லாபம் வரவும் கூடும். அப்படி வருவதிலிருந்துதான் முன் வாங்கிய கடனையும் தீர்த்துத்தன் வியாபாரத்தையும் விருத்திசெய்கிறான். தனக்கு அதிக லாபம் வருவது தான் உபயோகித்த முதலினால் மாத்திரமன்று, தான் உபயோகிக்கும் விதத்தையும் தன் புத்திக் கூர்மையையும், சில வேளைகளில் ஒருவன் அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது.

(இன்னும் வரும்.)

கல்குளம். குப்புசாமி முதலியார்.

## பகவத்கீதை.

[நீ யுக்தமான கர்மங்களை ஆசரித்துக்கொண்டு வரவேண்டும். ஆத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்கார முள்ளவர்களுக்கு, ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பிரத்தியக்ஷமாய் அறிந்தவர்களுக்கு, நமஸ்காரம் முதலாகிய பணிவிடைகள் செய்து அவர்களிடத்தில் ஆத்ம ஞான உபதேசம் அடைய வேண்டும்].

35. ஓ பாண்டவா (அர்ச்சுனா)! இதை (ஆத்மஞானத்தை)த்தெரிந்து கொண்டால் நீ மறுபடியும் இப்படி அஜ்ஞானத்தை யடையாய். இதனால், ஆத்மாவினிடத்தும் என்னிடத்துங் கூட எல்லாப் பூதங்களையும் பார்ப்பாய்.

[அவர்களால் ஞானத்தை உபதேசிக்கப்பெறின், நீ இப்பொழுது கலக்கமுற்றிருப்பது போல மறுபடியும் கலங்காய். உனது மயக்கம் நீங்கும். இந்த ஞானத்தினால் நான்முகப் பிரமன் முதற் புல்லீறாகவுள்ள எல்லாப் பிராணிகளையும் உனது ஆத்மாவினிடத்தே காண்பாய். பிறகு "இப்பூதங்களனைத்தும் என்னிடத் திருக்கின்றன" என்று காண்பாய். அவைகளெல்லாம் வஸுதேவரது புத்திரனான வாஸுதேவனென்னும் என்னிடத்திருப்பதாயும் காண்பாய் :—

"பரமேசுவரேசே மாநி", (இவைகளெல்லாம் பரமேசுவரனிடத்தே இருக்கின்றன), அஃதாவது, எல்லா உபநிஷத்துக்களிலும் பிரஸித்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடி க்ஷேத்திரஜ்ஞ-ஈசுவர ஐக்கியத்தை உணர்வாய் - ஆத்மாவும் ஈசுவரனுமொன்றென்று அறிவாய். பூதங்கள் = பிரமன் முதற் புல்லீறாகவுள்ள பிராணி வர்க்கங்கள்].

['அஜ்ஞானம்'=மோஹம்=ஆத்மாவினிடத்துத் தேகம் முதலான அபிமானங்களை வருவித்துக் கொள்ளல். இதுவே மமகாரம் முதலியவைகளுக்கு ஆதாரமாம். பிரகிருதி சம்பந்த மில்லாத ஆத்மவஸ்துக்களெல்லாம் ஒன்றுக்கொன்று சமானமாய் வித்தியாச மில்லாமலிருக்கும்; ஸர்வேசுவாருக்கும் சமானமா யிருக்கும்].

[இப்பொழுது கூட அர்ச்சுனன் ஞானியேயாம். அவனுக்கு ஞான மில்லாமற் போக வில்லை. ஆயினும், பிராரப்த வசத்தினால் அது மூடப்பட்டு அல்லது, மறைபட்டு, அவனுக்கு மோஹம் (பிரமை) ஜனித்தது. ஞானத்தினால், ஆத்ம பூதனான என்னிடத்து எல்லாப் பூதங்களையுங் காண்பாய்-எல்லாவற்றிற்கும் நானே ஆதாரமென்று காண்பாய்].

[எல்லா ஆத்மாக்களும் என்னிடத்திருந்து பிறந்தமையால், எல்லாப் பூதங்களுக்கும், உனக்கும், பரமபுருஷனாகிய எனக்கும் உள்ள சம்பந்தத்தை நீ காண்பாய்].

36. பாபிகளெல்லாரையும்விட மிகுந்தபாபங்களைச் செய்தவனான போதிலும், எல்லாப் பாபங்களையும் ஞானம் என்னும் தெப்பத்தினாலேயே தாண்டுவாய்.

[மோக்ஷமடைய விரும்புகிறவனுக்குப் புண்யமுங்கூடப் பாபமாகவே எண்ணப்படும்].

[இது முதல் மூன்று சுலோகங்களிற் சாதனமாகிய ஞானத்தின் விஷயம் சொல்லப்படுகின்றது].

[இதனால், ஞானத்தை அப்பியசிக்கிறவன் தன்னிஷ்டப்படி பாபம் செய்யலாமென்று அர்த்தமாகாது. ஆயின், பின்வரும் 38-ஆவது சுலோகத்தில், பரிசுத்தம் செய்வதில் உத்தமமானது என்றுசொல்லப்பட்ட ஆத்மஞானமானது அவன்கீழ்க்கடையில் (இதற்குமுந்திச்)செய்திருந்த பாபத்தை, அஃது எவ்வளவு பெரியதாயினும், போக்கும் என்பது இந்தச்சுலோகத்தின் தாற்பரியமாகும்].

ஞானம் பாபத்தை எப்படிப்போக்கும்? உதாரணங் காண்க:—

37. ஓ அர்ச்சுனா! நன்றாய்ப் பிரகாசிக்கின்ற நெருப்பு ஸமித்துக்களை (கட்டைகளை) எப்படிப் பூர்த்தியாய்ச் சாம்பலாக்குமோ அப்படியே ஞானம் என்னும் நெருப்புக் கர்மங்களையெல்லாம் பூர்த்தியாய்ச் சாம்பலாக்கும் (நசிக்கச்செய்யும்).



[எந்தக் கர்மத்தினால் இந்தச்சரீரம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்தக்கர்மத்திற்குப்பெயர் "பிராரப்தம்". இஃது அனுபவத்தினாலேயே நசிக்கவேண்டும், அஃதாவது, அதனை அனுபவித்தே தீரவேண்டும். அதனைப்போக்க முடியாது. ஆகையால், இந்த ஜன்மத்தில் ஞானமுண்டாவதற்குமுன் செய்யப்பட்டவைகளையும், ஞானத்துடன் கூட உண்டானவைகளையும், அநேக பூர்வ ஜன்மங்களிற் செய்யப்பட்டவைகளையும்—இந்தக் கர்மங்களை மாத்திரமே ஞானம் நசிக்கச்செய்யும்.

ஞானமென்னும் நெருப்பினாற் கர்மங்கள் சாம்பலாகின்றனவெனின், அவை பயனற்றவைகளாகின்றன. உண்மையில் ஞானம் கர்மங்களைச் சாம்பலாக்காது. சரியான அறிவு, அல்லது, தெளிவான ஞானத்தினாற் கர்மங்கள் பயனைக்கொடுக்கச் சக்திபற்றுப் போகின்றன. எந்தக் கர்மவிசேஷத்தினால் நாம் இப்பொழுது ஜன்மமெடுத்திருக்கிறோமோ அந்தக்கர்மம் பயனை விளைவித்துவிட்டது. அந்தப்பயனாவது இந்தத்தேகமாம். ஆகையால் இந்தப் பயன் பூர்த்தியாய் அற்றுப்போகிறவரையில் அந்தப்பிராரப்த கர்மம் நசிக்காது. ஆயினும் இன்னும் பயன்கொடாமலிருக்கிற மற்ற கர்மங்களெல்லாம் ஞானத்தினால் நசிக்கின்றன. அந்த மற்ற கர்மங்களாவன: இந்த ஜன்மத்தில் ஞானமுண்டாவதற்கு முன்னும் ஞானமுண்டான பின்னும் செய்யப்பட்டவைகளும், அநேக பூர்வஜன்மங்களிற் செய்யப்பட்டவைகளுமாம்].

38. ஞானத்துக்குச் சமானமாய்ப் பரிசுத்தஞ்செய்யக்கூடியது இந்த உலகத்தில் வேறொன்றும் இல்லை. யோகசித்தியையடைந்தவன் காலக்கிரமத்தில் தானாகவே அந்தஞானத்தைத்தன்னுடைய ஆத்மாவினிடத்துக் காண்கின்றான்.

['யோகம்'=கர்மயோகமும் ஸமாதியோகமும். 'சித்தி'=யோக்யதை. கர்மயோகத்தினாலும் (காரியங்களினாலும்) ஸமாதியோகத்தினாலும் (தியானத்தினாலும்) மேன்மையடைந்து மோக்ஷத்தைநாடிப் பாடுபடுகிறவன் வெகுகாலம் இவ்விதமாய்த்தவஞ்செய்யின் (அப்பியாசஞ்செய்யின்) ஞானம் அவனுக்குத் தனக்குத்தானே உண்டாகும்].

[குருவின் உபதேசப்படி தினந்தோறும் ஞானவடிவாய் ஆசரிக்கப்படுகின்ற கர்மயோகத்தினாற் சித்தியடைந்தவன் ஆத்ம ஞானத்தைத் தானாகவே அடைவான்.]

[ஒருவருடைய உபதேசமில்லாவிடினும், மிகுந்த சிரத்தையுடனும் பக்தியுடனும் செய்யும் கர்மங்களினாலும் தியானத்தினாலும் ஆத்மஞானம் சித்திக்கும்.]

நிச்சயமாய் ஞானம் பிராப்தியாவதற்கு உபாயம் சொல்லப்படுகின்றது:

39. சிரத்தை யுள்ளவனும் ஆஸக்தி (ஆசை) யுள்ளவனும் விஷயங்களினின்று திருப்பப்பட்ட இந்திரியங்களை யுடையவனும் ஞானத்தை யடைவான். ஞானமடைந்து கொஞ்சகாலத்திலேயே பெரிய சாந்தியை யடைவான்.

[சிரத்தை, அஃதாவது, நம்பிக்கை யிருந்தவன் ஞானமடைவான். ஆனால் அவன் கொஞ்சம் மந்தமான ஸ்வபாவமுள்ளவனா யிருக்கலாம். ஆகையால், அவன் ஞானத்தைச் சம்பாதிப்பதற்கு வேண்டிய சாதனங்களை எப்பொழுதும் செய்துகொண்டிருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டது. அச்சாதனங்களாவன : குருமார்களைச் சேவித்தல், அவர்களது உபதேசங்களைக் கேட்டு மனனம் செய்தல் முதலியன. நம்பிக்கையும் ஆஸக்தியுமுள்ளவன் தன் இந்திரியங்களை யடக்கச் சக்தியற்றவனா யிருக்கலாம்; ஆகையால், அவன் தன் இந்திரியங்களை விஷயங்களின்மீது செல்லாது தடுத்தாளவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இப்படி நம்பிக்கை, ஆஸக்தி, இந்திரிய நியமனம் ஆகிய இந்த யோக்யதைகளை யுடையவன் ஞானமடைவது திண்ணம். மேலே 34 - ஆவது சுலோகத்திற் சொல்லப்பட்ட நமஸ்காரம் முதலாகிய வெளிக்காரியங்களினால், வேண்டிய ஞானம் சித்திக்காதிருக்கலாம், ஏனெனின், அவை சரீர தர்மங்களாகும், அவற்றைச் செய்பவர்கள் மனப்பூர்த்தியாயில்லாமல் மேலுக்கு மாத்திரம் செய்பவர்களாயிருக்கலாம். ஆனால், இப்படிப்பட்ட மோசம் நம்பிக்கை, ஆஸக்தி முதலியவைகளில் நேராது. ஆதலால், இவையே நிச்சயமான ஞானசாதனங்கள். இந்த ஞானத்தைச் சம்பாதிப்பதனாற் பயனென்னை? ஞானமடைந்த பிறகு வெகு சீக்கிரத்திலேயே 'பெரிய சாந்தம்' என்னப்பட்ட மோக்ஷத்தை யடைகின்றான்].

[நம்பிக்கையாவது சந்தேகமில்லாமை, மதக்கோட்பாடுகளின் ஆகமத்தில் உறுதியான புத்தி, அந்த ஆகம விதிகளைச் சலிக்காமலும் வெறுக்காமலும் சந்தோஷமாய் மனமொப்பிச் செய்தல். அர்ச்சுனன் போர்செய்ய மாட்டேனென்று மறுத்ததற்குப் பிரதியாய்ச் சொன்ன சுலோகங்களில் இஃது ஒன்றாம். ஏனெனின், அவன் தன்னுடைய க்ஷத்திரிய தர்மங்களில் நம்பிக்கை பூர்த்தியாயில்லாமற் சந்தேக புத்தி யுள்ளவனாயன்றோ போர்புரியேனென்றது.

ஞானத்தினால் மோக்ஷம் சித்திக்குமென்று எல்லாச் சாஸ்திரங்களும் நியாயங்களும் பிரசித்தமாய்ச் சொல்லுகின்றன].

['சிரத்தை யுள்ளவன்' = ஞானத்தை விருத்தி செய்துகொள்வதிற் சிரத்தை யுள்ளவன். 'ஆஸக்தி யுள்ளவன்' = அதன்கண்ணே மனமுள்ளவன்].



இந்தச் சுலோகம் ஞானசாதனங்களைச் சொல்லுகின்றது. ஞானத்தினால் மோக்ஷம் சீக்கிரத்திற் சித்திக்கும் என்னும் விஷயத்தில் நீ சந்தேகப்படாதே. சந்தேகித்தல் பாபமாகும். எப்படியெனின், கேள் :

40. அறிவில்லாதவனும் (அஜ்ஞனும்), நம்பாதவனும், சந்தேகப்படுகிற மனதுள்ளவனும் நாசமடைவான். சந்தேகப்படுகின்றவனுக்கு இவ்வுலகமுமில்லை, பரலோகமுமில்லை, சுகமுமில்லை.

[ஆத்ம ஞானமில்லாதவரும், தனது குருவின் வாக்கியத்தில் விசுவாஸமில்லாதவனும் கெடுபவர்களாயினும், அவர்கள் சந்தேகப்படுகிறவன் கெடுமளவு கெடார். சந்தேகப்படுகிற மனதுள்ளவன் பாபியாவன். எப்படியெனின், மானுடருக்கெல்லாம் சாதாரணமாயுள்ள இவ்வுலகங் கூட எப்பொழுதும் எல்லா விஷயத்திற்கும் சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பவனுக்குப் பயன் தராது. மறு வுலகமும் அவனுக்கில்லை. அவனுக்கு ஒருபொழுதும் சுகமுமில்லை; ஏனெனின் இவையனைத்துங் கூட அவனுக்குச் சந்தேகமானவையேயாம். ஆகலின், நீ சந்தேகித்தல் தகாது].

[உபதேசக் கிரமத்தினா லுண்டாகிய ஞானமில்லாதவனும், உபதேசிக்கப்பட்ட ஞானத்தை விருத்திசெய்து கொள்வதில் அக்கறையில்லாதவனும், உபதேசிக்கப்பட்ட ஞானத்தின் விஷயத்திற் சந்தேகமான மனமுடையவனும் கெடுவான். இப்படிச் சந்தேகமான சித்த முள்ளவனுக்கு இவ்வுலக முதலானவையே இல்லையெனின், அவனுக்கு மோக்ஷமெப்படிச் சித்திக்கும்? ஆகையால், சந்தேகப்படுகின்றவன் சுகத்துன் துளியையும் அநுபவிப்பவனாகான்].

[இது முதலாயுள்ள சுலோகங்களில் ஞான விரோதிகளுக்கு உண்டாகும் பயன்கள் சொல்லப் படுகின்றன].

[மறுவுலகமாகிய ஸ்வர்க்கம் அவனுக்கு இல்லாமற் போவதெப்படியெனின், அவனுடைய புத்தி சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பதனால் அவன் தனக்குரிய கடமைகளைச் செய்வதில்லை, தர்மங்களை நிறைவேற்றுவதில்லை. இதற்காக அவன் நரகங்களில் தண்டிக்கப் படுவான், ஆதலின் ஸ்வர்க்கத்திற்குப்போக ஆஸ்பதமில்லை].

41. ஓ தனஞ்ஜயா (அர்ச்சுனா)! யோகத்தினாற் களையப்பட்ட கர்மங்களை யுடையவனையும், ஞானத்தினாற் பிளக்கப்பட்ட சந்தேகமுடையவனையும், திருடமான மனமுடையவனையும் கர்மங்கள் பந்திக்க மாட்டா.

[எவனொருவன் பரமார்த்த ஞானத்தினால் தர்மாதர்ம ரூபங்களாயுள்ள கர்மங்களை விட்டானோ; ஞானத்தினால்,— ஆத்மாவும் ஈசுவரனும் ஒருவனே என்னும் ஞானத்தினால், ஸம்சய மற்றவனானோ; அவன் (இப்படிப் பரமார்த்தத்தை யறிந்தவன்) எப்பொழுதும் ஜாக்கிரதையுள்ளவனாயிருப்பது மன்றி, எல்லாக்காரியங்களையும் (கர்மங்களையும்) ஸத்வரஜஸ்தமோகுண வியாபாரரூபங்க ளென்று அறிகின்றான். ஆதலால், கர்மங்கள் அவனைப் பந்திப்பதில்லை, அநிஷ்டமான பயனைக் கொடுப்பதில்லை].

[இது வரையிற் சொல்லப்பட்ட யோகத்தினால் கர்மங்களை ஸந்நியஸிக்கவேண்டியது (விட வேண்டியது), ஞானாகாரமாக மாற்றவேண்டும்: கர்மங்களாவன-பந்தத்திற்குக் காரணமாயுள்ள பிராசீன (பழமையான) கர்மங்கள்].

கர்மயோகத்தினால் மனதைச் சுத்திசெய்து கொண்டு, ஞானத்தையடைந்து அதனால் தனது சந்தேகத்தை நிவர்த்திசெய்து கொண்டவன் கர்மங்களினால் கட்டுப்படான். அன்றியும், ஞானம், கர்மம் ஆகிய இவைகளை யநுஷ்டிக்கும் விஷயத்திற் சமுசயமுள்ளவன் நாசமடைவான் இவ்விரண்டு காரணங்களினாலே:

42. ஆகையால், அஜ்ஞானத்தினால் உண்டானதாயும், இருதயத்திலிருப்ப தாயுமுள்ள ஆத்மவிஷயமான இந்தச்சந்தேகத்தை ஞானமென்னுங் கத்தியினால் நறுக்கி, யோகத்தை யாசரிப்பாயாக. ஓ பாரதவம்சத்தோனே! எழுந்திரு.

['அஜ்ஞானம்'=அவிவேகம். 'இருதயம்'=புத்தி. 'யோகம்'=பரமார்த்த ஞானத்திற்குச் சாதனமான கர்மத்தை யாசரித்தல். 'எழுந்திரு'=யுத்தத்திற்கு எழுந்திரு.

சந்தேகமென்பது மிகவும் பாபகரமானது. அதனை ஞானத்தினால், ஆத்மாவைப்பற்றிய உண்மையான அறிவினால், கொல்லு. இங்குச்சந்தேகமென்பது தன்னுடைய ஆத்மவிஷயத்தைக் குறித்தேயன்றி வேறன்று. ஆகலின், அஃது ஆத்மஞானத்தினாலேயே நீங்கவேண்டும். ஞானமானது சோகமோஹாதி தோஷங்களைப் போக்கும். உனது நாசத்திற்குக்காரணமாகிய சந்தேகத்தை இவ்வாறாக நிவர்த்திசெய்துகொண்டு, உண்மையான ஞானத்தையடைவதற்குச் சாதனமாகிய கர்மயோகத்தை யநுஷ்டிக்கக்கடவை. இப்பொழுது யுத்தத்திற்கு எழுந்திரு].

[அஜ்ஞானம் அநாதியாயுள்ளது. கர்மயோகாநுஷ்டானஞ் செய்-அதற்காக எழுந்திரு].



[இவ்வொரு அத்தியாயத்தின் கடைப்பாகத்தில், சாத்தியமான விடங்களிலெல்லாம், எதிர்நிற்கும் சத்துருவை உத்தேசித்தேனும், அல்லது, அல்லற்படுத்தும் யாதொரு சத்துருவை யுத்தேசித்தேனும், அர்ச்சுனனை நோக்கிக் கிருஷ்ணபகவான் யுத்தத்திற் கெழுந்திருவென்று உபதேசிக்கிறார். மூன்றாவது அத்தியாயம் 43-ஆவது சுலோகத்தைப்பார்க்க].

இவ்வாறாக உபநிஷதர்த்தத்தை விளக்குவதும், பிரம்மவித்தையைப்
போதிப்பதும், யோகசாஸ்திரமும், ஸ்ரீகிருஷ்ணார்ச்சுன
ஸம்வாதமுமாகிய பகவத்கீதைகளில்
ஞானயோகத்தைப்பற்றிய
நான்காம் அத்தியாயம்
முற்றிற்று.

## ஐந்தாம் அத்தியாயம்.

# ஸந்நியாஸ யோகம்.

நான்காம் அத்தியாயம் 18, 19, 21, 22, 24, 32, 33, 37, 41 ஆகிய இந்தச் சுலோகங்களிற் பகவான் கர்மஸந்நியாஸத்தைப் பற்றிச் சொன்னார்; ஷை அத் - 42-ஆம் சுலோகத்தில் அர்ச்சுனனைப் பார்த்து யோகஞ் செய்யச் சொன்னார், அஃதாவது, கர்மாநுஷ்டான லக்ஷணத்தை யுபதேசித்தார். கர்மாநுஷ்டானத்திற்கும் கர்ம ஸந்நியாஸத்திற்கும், ஸ்திதி (அசை வற்றிருத்தல்) க்கும் கதி (அசைவுற்றிருத்தல்) க்கும் போல, பரஸ்பர விரோத மிருக்கின்றமையால் அவை யிரண்டும் ஒரு புருஷனால் ஓரே காலத்திற் செய்யப்படுவது (அநுஷ்டிக்கப் படுவது) அசாத்தியமாம். அவற்றை வேறு வேறு காலங்களில் அநுஷ்டிக்கவும் நிர்ணயம் ஏற்பட வில்லை. ஆதலால், இவ்விரண்டில் ஒன்றே அர்ச்சுனனது கடமையென்று தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்தக் கர்மாநுஷ்டானம், கர்மஸந்நியாஸ மெனுமிரண்டினில், எஃது உத்தமமானதோ அதையே தான் அநுஷ்டிக்க வேண்டு மென்றும், மற்றதை விடவேண்டு மென்றும் அர்ச்சுனன் நினைக்கின்றான். இதையுத்தேசித்து அவன் பகவானைப் பார்த்து இந்த 5-ஆம், அத் - 1-ஆம் சுலோகத்தில் அவையிரண்டில் எது மேலான தென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு வினவுகின்றான்:

மூன்றுமத்தியாயத்தின் ஆரம்பத்தில், அர்ச்சுனன், ஞானமும் கர்மமும் ஒருவனிடத்திலேயே கலந்திருத்தல் கூடாமை கண்டு, இவையிரண்டினுள்

எதுமேலானதோ அதைச் சொல்லுமெனப் பகவானைக் கேட்டான். அதற்கு அவர், ஸாங்கியர்களுக்கு (சந்நியாசிகளுக்கு) ஞானமும், யோகிகளுக்குக் கர்மாசரணையும் விதிக்கப்பட்டன வென்று தீர்மானமாய்க் கூறினார். அன்றியும், 3-ஆம் அத் 4-ஆம். சு-ல் "கர்மங்களை விடுகின்ற மாத்திரத்தினாலேயே ஞானசித்தியைப் பெறான்" என்று சொன்னமையால், ஞானத்துடன் கூடிய ஒழிவு முக்திக்குச் சாதனமென்று விளங்குகின்றது. கர்மயோகமும், 4-ஆம் அத்-42-சு-ல் சொல்லப்பட்டதனால், முக்திக்குச் சாதனமாகவே ஏற்படுகின்றது. கர்மயோகம், சந்நியாசமெனு மிரண்டில் எது, ஞானமில்லாத ஒருவனுக்கு, மேலானதோ அதைத்தெரிந்து கொள்ளும் பொருட்டு அர்ச்சுனன் இப்பொழுது வினவுகின்றான் :

அர்ச்சுனன் சொல்லியது :

1. ஓ கிருஷ்ணா! கர்மங்களின் சந்நியாசத்தையும், மறுபடி யோகத்தையுஞ் சொல்லுகின்றீர். இவற்றில் யாதொன்று மேலானதோ, நன்றாய் நிச்சயிக்கப்பட்ட அதனை எனக்குச் சொல்லும்.

[சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்களைச் செய்யாதொழித்தல் வேண்டுமென்று சொல்லுகிறீர் ; அவற்றைச் செய்வது அவசியமான கடமையென்றுஞ் சொல்லுகிறீர். ஆகையால், அவையிரண்டில், விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்வது மேலானதோ, அல்லது, அவற்றைச் செய்யாதொழிப்பது மேலானதோ வென்று, எனக்கொரு சந்தேக முண்டாயிருக்கின்றது. மேலான மார்க்கத்தையன்றோ அநுசரிக்கவேண்டும் ? இரண்டு மார்க்கங்களையும் ஒருவனே அநுஷ்டித்தல் கூடாமை பற்றி, கர்மயோகம் கர்மசந்நியாச மெனுமிரண்டினில் எதனால் நான் முக்தி பெறுவே னென்பதை நிச்சயமாய்ச் சொல்லும்].

['கர்மசந்நியாசம்=ஞானயோகம். இரண்டாம் அத்தியாயத்தின் முற்பகுதியிற் கர்மயோகத்தையே செய்யவேண்டு மென்றும், அதனால் அந்தக்கரண சுத்தி யுண்டான பிறகு ஞானயோகத்தை யாசரிக்க வேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டது. 3, 4, அத்தியாயங்களில், ஞானயோகாதிகாரிகளுக்குங் கூடக் கர்மநிஷ்டையே பிரசஸ்தமானது (நல்லது). அது ஞானத்தின் சகாயமின்றியே ஆத்மப் பிராப்திக்குச் சாதனமாகும் என்று கர்மயோகம் சொல்லப்பட்டது. இந்த ஞானயோகம், கர்மயோகம் எனு மிரண்டினுட் சுலபமாய் ஆசரிக்கக் கூடியதாயும், சீக்கிரத்தில் ஆத்மப் பிராப்தியை யுண்டாக்கு விப்பதாயும், மேலானதாயு முள்ளதைச் சொல்லும்.]

[நியமித்தல் முதலான கர்மங்களினால் உலகங்களையெல்லாம் ஆகர்ஷிப்பவராதலின் கிருஷ்ணன் எனப்பட்டார். சந்நியாசமே சிரேஷ்டமாயின் அதற்கு இந்த யுத்தம் விரோதமாகும் என்பது சங்கையின் பொருளென்க.



சந்நியாசமெனின் யதியாசிரமமன்று. சந்நியாசம் யாதென்பதைப்பகவானே இந்த 5 - ஆம் அத் - 3 - ஆவது சு - ல் சொல்லப் போகின்றார்.]

[கடந்த நான்காம் அத்தியாயத்தில் ஞானத்தின் தன்மையை எடுத்துரைத்து, அதனை யாசரித்தல் யோகமார்க்கத்தின் ஓரங்கமென்று சித்தாந்தப் படுத்தினார். இப்பொழுது கர்மம் முக்திக்குச் சாதனமென்று விவரிக்கப் புகுகின்றார். இந்த அத்தியாயத்தில், சாங்கிய மதமும் யோக மதமும் கர்மத்தைக் குறித்து ஒரே மாதிரியாய்ப் போதிக்கின்றனவென்று பகவான் நிரூபிக்கின்றார். கர்மங்களை யெல்லாம் ஒழித்து ஞானத்தையே சார்ந்திருத்தல் வேண்டுமென்பது சாங்கிய மதத்தின் முக்கியமான கொள்கையாயினும், கர்மங்களை யெல்லாம் ஆசரிக்கவேண்டு மென்பது யோகமதத்தின் சித்தாந்தமாயினும், இவ்விரண்டிற்கும் வித்தியாச மில்லையாம். எப்படி யெனின், யோகமார்க்கத்தின்படி கர்மத்தை யநுசரிப்பதாவது சரியான ஒழிவுடன் கூடிச்செய்தலாம் ; இங்கு ஒழிவெனின், கர்மஞ் செய்யாமை யன்று, கர்மங்களைப் பற்றில்லாமற் செய்தலாம்.]

சந்தேகத்தைத் தெளிவிக்கும் பொருட்டுத் தமது அபிப்பிராயத்தைப் பகவான் சொல்லுகின்றார்.

தி. அ. சுவாமிநாத ஐயர்.

---

## சாந்திவிலாசம்.

---

உயிர்க்குந் தொறும்வய தொழிந்து குறையுந்
துய்ப்பி லறம்பவர் தொலைந்து மிருக்கும்.

16. வரும்யாமந் தொறுமுடலின் கட்டு விட்டு
வருகின்ற துயிர்ப்புவெளி விடுக்கா நின்ற
தரந்தோறுந் தீர்க்காயுட் குறைந்து சாலத்
தாழ்கின்ற தின்பமநு பவிக்குந் தோறும்
பெருகுபுண்யங் குறைவாகா நின்ற தாசைப்
பெந்தனியான் றொழில்கள்செய்யச் செய்ய மீட்டு
நரகளிக்குங் கொடும்பாவம் விருத்தி யாகி
நண்ணுகின்ற தென்புரிவ னில்லை தேவே.
இறப்பொரு தலையென் றியற்றில னலமவன்.

17. சகிக்கரிய துயர்த்தொகுதி முழுதுஞ் சாருந்
தலமான வெம்மார்க்கந் தனக்குச் செல்லல்
செருக்கரிய திரிபுவனத் துள்ளோ ராயுட்
செறிகலையை நாசமிழை நமனைக் காண்ட

துருக்குமவ னல்விதி நரகத் துன்ப
முற்றிடுத லானவிந்தச் செயல்கள் யாரும்
பகுப்பின்றி யடைவதொரு தலையா மிப்பாழ்ம்
பகைமறந்து நாள்வீணிற் கழிக்கின் றேனே.
துயில்துய்ப் பெச்சத் தொடர்பின் மடன்மான்.

18. எச்சமயத் தெதுபெறினு மதனை யுண்ண
விசைந்திடலிற் றவனமுறுங் கால மின்னி
ரிச்சையொடு பருகுவதிற் கங்குற் போதோ
ரிடத்தடைந்து படுத்திடலின் மகவைச் சால
நச்சிமிக வோம்புதலின் மாதர் போக
நண்ணுதலிற் செயத்தக்க வறிய மாந்தர்க்
கொச்சைகளும் விலங்குகளுஞ் சமமே யாகுங்
கூர்ந்துணைக்கிற் பேதமில்லை சோதி லானே.
அளிப்பனோர் வட்டிக் கறப்பய னோரான்
மறைகொளா ரோர்தாண் மதித்துநந் தந்தரும்.

19. சிரமமிக வடைந்துழன்று தேடி வைத்த
செம்பொனெலா நூற்றிலொரு பங்கு லாபந்
தருவனென வொருசீட்டிற் சிறிது தீட்டித்
தரவதனை வாங்கியுட னதனுக் கீவ
னருமறையா தியநூல்க ளெல்லா மிங்ங
னறத்திலொன்று தரின்மறுமைக் கண்ணூ றாகப்
பெருகுபலன் கிடைக்குமெனல் கேட்டு மையம்
பெற்றனுவுந் தந்திலன்யான் பெற்றத் தானே.
துனிசிறை யிழப்பிற் சுகமென் பொன்னூல்?

20. உடன்மெலிவை யடைந்தாலு நோயுற் றாலு
மொழியாதி யிந்திரிய மழிவுற் றாலு
மடுபகைஞர் கைவசமே யாகி னாலு
மருத்தநமக் கின்பருளுங் கொல்லோ காமம்
படர்மொழியெங் ஙனமுண்டா மிங்ஙன் சொற்ற
படியடைய வில்லையெனி னுமனித ராயுட்
கிடுமளவு முனதுகொலீ துணர்ந்தும் வீம
மின்றியெனு பவம்புரிகின் றனன்மா தேவே.

(இன்னும் வரும்.)

விருதை. சிவஞானம்.

---



## சமாசாரங்கள்.

**ஸ்ரீமதி அமிர்தவல்லி யம்மாள் தாலாட்டு** :—இது திருவனந்தபுரத்தின்கண் ஹைகோர்ட்டு பென்ஷன் ஜட்ஜி, திருமணம்-மௌதார்ய விதரண வண்மை மாட்சியிற் சிறந்த ஸ்ரீமான் வேதாத்ரீசதாச முதலியாரவர்கள் பௌத்ரியாகிய ஸ்ரீமதி அமிர்தவல்லியம்பாள் மீது பாடப்பட்ட தொரு தாலாட்டு நூலாம். இதன்கண் சசு கண்ணிகளுள. இவற்றை விழுமிய பொருளு மொழுகிய வோசையு முடைத்தா யிரண்டடி தம்முளொத்து வருங்குறள் வெண்செந்துறையின் பாற்படுத்தல் வேண்டுமென்பது இதனை யாக்கியோரது விருப்பமாம்; இஃது அவரது முகவுரையான் இனிது விளங்குகின்றது. இந்நூலின்கட் சில கண்ணிகள் வெண்டளை தழுவியும், சில தழுவாமலும், சில தழுவியுந் தழுவாமலும் பாடப்பட்டுள்ளன. இவ்வாறன்றி யிவை யனைத்தும் ஒருதிறப்படப் பாடப் பட்டிருப்பின் மிகவும் நலமுடையனவா யிருக்கும். இந்நூலில்ஆங்காங்குப் பாட்டுடைத்தலைவியின் குலப் பெருமைகள் பல கூறப்பட்டுள. அவை கூடமாகவே கூறப்பட்டுள வாதலின் அவை படிக்கப் புகும் மாதரார்க்கு எளிதிற் பொருள் விளங்குதற் பொருட்டுப் பக்கங்களி னடியிற் குறிப்புரையு மெழுதி யிருக்கின்றனர். இது கல்வி யறிவாளர்க்கென்று எழுதப்படாது கல்வியறிவிற் சிறிது சிறிது தேரும் மடந்தையர் பொருட்டென்று எழுதப்பட்டமையின் அத்தன்மையுணர்ந்தும் 'இழுக்குடைய பாட்டிற் கிசை நன்று' என்ற தமிழ் மூதாட்டியினுரை யுணர்ந்தும் ஒன்றுங் குறைகூறாது விடுக்கின்றாம்.

***

**சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சை** :—இவ்விஷயமாகச் சென்ற சஞ்சிகையிலுஞ் சிறிது கூறியிருக்கின்றனம். இப்பொழுது மறு பிரவேச பரீட்சையிற்றேறிய மாணாக்கர்களது பெயரும் வெளியாயினமை கண்டு யாம் அதைப்பற்றிச் சில சொல்லுத லேற்புடைத்தாம். இதன்கண் நூற்றுக்கு ஐவர் வீதமாக மாணாக்கர் தேறாமற் போயினரென்றக் குறைய பூகோளசாஸ்திர வினாப்பத்திரந் சிறிது கடினமா யிருந்தமையே யென்கின்றனர். [see note]

***

**தமிழ் எம். ஏ** :—நமது சென்னைச் சர்வகலாசாலை யேற்பட்டு இதுகாறுந் தமிழ் மொழியில் எம். ஏ. பட்டம் பெற்றவர்கள் தொகை மிகவுங் கொஞ்சமே. 1896-ஆம் வருஷம் திருமணம்-செல்வக்கேசவராய முதலியாரவர்களும், இவ்வருடம் நெல்லை-அனவரத விநாயகம்பிள்ளை யவர்களுமாகிய இவ்விருவருமே தேறினார்கள். முன்னவர் சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராவார். பின்னவர் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ...

ஜிற் படித்துக்கொண்டிருந்த வித்தியார்த்திகளு ளொருவர் ; நமது பத்திரிகைக்கு அடிக்கடி விஷயதானஞ் செய்துவருபவர். இவர் தேறியமைபற்றி யாமனைவரும் களிகூர்கின்றும். இன்னு மிவர்கள் போலப் பலருந்தேறி நந்தமிழ் மொழியைப் பெரிதும் வளர்ப்பார்களென்று நம்புகின்றனம்.

***

**சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் வித்தியார்த்திகளின் பரிசீற்கோடை** :—இஃது அடுத்த ஏப்பிரல் மாதம் இரண்டாந் தேதி திங்கட்கிழமை யன்று நிகழப்போகின்றது. அற்றை ஞான்று லார்ட் பிஷப்பு அவர்கள் சபா நாயகராக வீற்றிருக்கப் போகின்றனர்.

***

**டாக்டர் மார்ட்டினே** :—இப்புலவர் பெருமான் ஆங்கில நூல் பலவகை வந்த தத்துவசாஸ்திரிமார்களிற் றலை நின்றவர். இவர் தேக வியோகமாயினரென்று கேள்வியுற்ற யாம் பெரிதும் மனவருத்த முறுகின்றும். இவர் தத்துவ சாஸ்திர விஷயமாகப் பல அருமையான நூல்களியற்றி ஆங்கில பாஷை நிலவுறும் நாடுகளனைத்தையுங் கடமைப் படுத்தியவ ரென்பது ஆங்கிலம் பயன்ற யாவரு முணர்ந்த விஷயம்.

***

**சென்னைச் சட்ட நிருபணசபை**:—இது நிகழும் மார்ச்சுமீ 30உ வெள்ளிக்கிழமை யன்று பகல் 11 மணிக்குமேல் நிகழப் போகின்றது. இதன்கண் தண்ணீப்பாய்ச்சு வரிச் சட்டத்தின் யுக்தாயுக்தங்களைப் பற்றியும் இவை போல்வன பிறவற்றைப் பற்றியும் தர்க்கங்கள் நடக்கும்.

***

**தங்க நாணயம்** :—இந்த மாதம் 26உ முதல் தங்க நாணயமாகிய பவுன்களே பெரிதும் பயின்றுவருவனவாம். அது பதினைந்து ரூபாய்க்குச் செல்லும். இதன் நன்மை தீமைகளைப்பற்றிச் செல்வநூற் புலவர்களது கருத்து இன்னதென்று தெரிந்து கொள்ளல்வேண்டும். இதனால் இந்தியமாதர்களுக்குப் பெருமகிழ் வுண்டாகலாம்.

***

**விஞ்ஞாபனம்** :—நமது கையொப்பக்காரர்களுக்கும் விஷயதானஞ் செய்யும் நட்பாளர்களுக்கும் யாம் அறிவிப்பது யாதெனில் :—இனிமேற் [illegible] எழுதுவோரும் விஷயமனுப்பு வோரும் பின்வரும் மேல் விலாசத்திற்கு அனுப்புவார்களாக :—

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. மேல்விலாசம் பார்த்து ஞானபோதினிப் பத்திராதிபர் மகா-௱-௱-ஸ்ரீ, எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை யவர்கட்குக் கொடுப்பது என்பதேயாம்.

OFFICE OF THE [illegible] 25 APR 1900 MADRAS.

ஞானபோதினி.

புத்தகம். III { 1900ஸு ஏப்ரல்மீ 20உ. { நே. 9.

## நக்கீரனர்
## தெய்வப் புலமைமாட்சி.

இப்புதுமையைக் கண்டு வியந்து அதனை நோக்கி வைகிய நக்கீரனைக் கதுமென ஒரு பெரும்பூதந் தோன்றி, உமைமா னிளங்கன்றைக் கவர்ந்த உழுவைபோலக் கவர்ந்துசென்று ஒரு மலைமுழைஞ்சினுட் புகுத்துத்தாளிட்டுச் சென்றது. செல்ல, அம்மலை முழைஞ்சினுண் முன்னரேயிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றென்பதுமக்களும் நக்கீரனை நோக்கிச் சொல்வார் 'ஐய ! நீ வருதலால் ஆயிரமென்னுந் தொகை நிரம்பியது, இப் பூதம் நீராடச் சென்றது, திரும்பி வந்ததும் நம்மையெல்லாம் ஒருங்கே செகுத்து உண்ணும், நீ வாராவிடில் இவ்விடர் நேராதுகாண்' என்று மிகநொந்து கூறினர். இதுகேட்ட நக்கீரனர் அறிவுமாழ்கிச் சிறிதுமிடர்ப்படாது அவர்க்கு நேரும் ஏதத்தை நீக்குதற்கு முருகக்கடவுள்திருவடித் தாமரைகளை வழுத்தி யாறெழுத்தினையு மோதுவலென்றுதெளிந்து அவ்வாறே யோதித் திருமுருகாற்றுப்படை மொழிந்தார். மொழிதலும் அருள் வள்ளலாகிய அறுமுகக் கடவுள் குறுநகை யிலங்கத்தோன்றி, அணுகிய பூதத்தைக் கதையாலடித்துவீழ்த்தி மலைமுழையிலுள்ளோரை விடுவித்தார். இதன்பின், நக்கீரனர் முருகனைத் தொழுது "மறை முதல்வ ! உமை புதல்வ! ஆலவாயமர்ந்த நீலகண்டனைச் செந்தமிழ்க் குணா பகர்ந்தவென் னிழுக்க மொழியக் கயிலைகாணுதி யென்றனன் கண்ணுதல், அண்ணலே ! இன்னு மதுகண்டிலேன், இங்கென் விழுமந்தீர்த் ததுகாட்டுதியால்." என்றழுது குறையிரப்பச் செவ்வேளிரங்கிக் "கயிலை யென்று வாளா திசைபுணர்த்தோதாது கூறினனையனிதனல், தென்கயிலையாகிய காளத்தியானுமிக்கோய் தீரும்" என்று நினைந்து நக்கீரனை நோக்கி 'இப்பொய்கையில் மூழ்கினும் கயிலைப்பொருப்பைக் காண்பை' என, அவரு முருகனை யிறைஞ்சி யேத்தி யவ்வாறே யப்பொய்கையின் மூழ்கிய

பொன்முகரி தீர்த்தத்திலெழுந்தார். எழுதலும் மேனிமேற் பரவிய நோயுந்தீர்ந்து முளையிள ஞாயிறு விளங்குவதென்ன ஒளி விரியத்தோன்றிப் பாவிற்பொதிந்து கிடந்தநுண்பொருள்பெற்று உவந்தான்போலச் சிவபெருமானை நேரிற்கண்டு கைதலைமேற கூம்பக் கண்ணீர் முத்தென அரும்ப நாவுரை குழறப் பரவிப்பரவிக் காளத்தியப்பருங் கயிலையப்பரும் வேறென்றுங் கருத்தின்றி யொற்றுமை கொளுத்திக் 'கயிலைபாதிகாளத்திபாதியந்தாதி' கட்டளையிட்டருளினார் நக்கீரனார் என்று விரித்து விளக்கும். இனி,

### திருப்பரங்கிரிப்புராணம்.

தமிழ்க்கடலை யளந்துகொண்ட அறிவின் மாட்சிமைப்பட்ட நக்கீரனார் பரங்குன்றிற் சரவணப் பூந்தடத்தில் நாடொறுங் குடைந்து பூசனைக்கடன் முறைபெறக்கழிப்பிப் பின் மதுராமாநகர் செல்வார். இனித்தேவரிற் சிறுநுதலம்மை குறுமருங்கமைந்த மறியமை கையின் மாணிக்க வண்ணரையும், மக்களிற் கானமீனுயர்த்திய வழுதியையுமன்றிப் பிறரொருவரையுஞ் செய்யுளிலமைத்துப் பாடுவதில்லையென்னும் உறுதிக்கோளுடையார். இவ்வொழுகலாறுடைய நக்கீரனாரை யொறுத்துத் தாம்பாடல்பெறுவதற் கெண்ணிய முருகக்கடவுள் பரங்குன்றிற் சரவணப்பொய்கையிலவர் நீராடப்போதும் பொழுதறிந்து தன்பாலுள்ள அண்டாபரணனை யழைத்து 'நக்கீரனை யொருகுறை யேற்றி நமது மலையிற் சிறைப்புகுத்தி மீளுக' என்று பணித்தார். அப்பணிமேற்கொண்டோன் போந்து, முறைப்படி பூசனைப் பெரும்பயமாற்றியஞ்செழுத் துருவேற்றிக்கொண்டு கரைமருங்கோங்கிய ஆலமரநிழலில் ஒரு பாறை மீதிருந்த நக்கீரனாரெதிரில் பொய்கைக்கரையில் ஓராலிலையைக்கிள்ளியிட அது கரையிலொருபாதியும் நீரிலொருபாதியுமாக விழுந்தது. விழுந்த இலையின் கரையிற்படிந்த ஒருகூறு குருகாயும் நீரிற்படிந்த பிறிதொருகூறு கயலாயும் வடிவுதிரிந்து, இவ்விரண்டும் இருபுறம் பதைப்பது கண்டார். கண்டுளம் நைந்து இரங்கி யவற்றினருகிற்போந்து நகத்தாற் கிள்ளிப் பிரித்து விட, "அவை யிரண்டும் வாயங்காந்து குருதிகான்றிறந்தன. அக்கணத்தில் அண்டாபரணன் அழன்று சீறியெதிர்ந்து 'முருகனுறையு மிக்குன்றிற் கொலைபுரிந்தனை' என்றுரைத்து வெருவப்பிடித்துச் சென்று குகையினுட் புகுத்துப் பாறை மூடிப்



போயினான். நக்கீரனார் பெரிதும் வருந்தி யிது முருகனைப்பாடாக் குறையென்று அருட்குறிப்பானுணர்ந்து 'உலகம்' என்றெடுத்துக் 'கிழவன்' என்று முடித்துத் திருமுருகாற்றுப் படையருளிச் செய்தார். இனியிதிற் கிழவன் என்று முடித்தமையாற் 'கிழவனாய் வருதற்கு நமக்கு நாட் செல்லும்' என்று கனவினருளிச் செவ்வேள் மறைந்தார். இதனை யுணர்ந்தெழுந்த நக்கீரனார் 'இளையோன்' என முடிக்குஞ் சீரை மாற்றிக்கூறுதலும் திருமுருகன் றோன்றி யவர்க்கு அருணல்கினான் என்று சுருங்கக் கூறும்.

இனியிவைதம்முள் திருவிளையாடற்புராணம், ஆசிரியர் நக்கீரனார் 'கொங்குதேர் வாழ்க்கை' எனுஞ்செய்யுளிற குற்றமாராய்ந்தவாறும், சிவபெருமான் அவரை யொறுத்துணர்த்தியவாறு மாத்திரமே யுரைப்பச்சீகாளத்திப் புராணம் அவர் அச்செய்யுளிற் குற்ற மாராய்ந்தவாறும், அங்ஙன மாராய்தலாற்போந்த பெருங் குற்றங்கடிதற் பொருட்டுக் கயிலைக்குச்செல்லும் வழியில் முருகக்கடவுள் திருவருணோக்கஞ் சித்திக்கப்பெற்றுக் காளத்தி மீண்டிறைவனைத்தொழுது கிடந்தவாறும் கூறத்திருப்பரங்கிரிப் புராணம் அவர் முருகக்கடவுள் திருவருட்குறிப்பாற் சிறையிடப்பட்டுத்திருமுருகாற்றுப்படை யியற்றியுய்ந்தவாறு மாத்திரமேயோதியொழிதல் மேற்கிளந்து கூறிய மூன்று வரலாற்றையும் உய்த்து நோக்குவார்க்கு இனிது விளங்கும். இனியிம்மூவகை வரலாற்றுள்ளும், திருவிளையாடற்புராண முடையார் தன் மனைவி குழன் மணத்தை வியந்து கொண்ட பாண்டியன் வங்கிய சூடாமணி யென்னுஞ்சண்பக மாறனென்பர், சீகாளத்தி புராணமுடையார் வறிதே பாண்டியனென்று கூறி யொழிந்தார்; திருப்பரங்கிரிப்புராணமுடையார் அவ்வரலாற்றை முழுவதுமே கூறாதொழிந்தார். புறநானூறு முதலிய தொகைநிலைச் செய்யுட்களை யுற்றுணர்வார்க்கு வங்கிய சூடாமணி சண்பகமாறன் எனும் பெயர்கள் புதுமையுடையனவாய்த் தோன்றும். பழைய தமிழ் வேந்தர்க்கும் மக்களுக்கும் இடப்பட்டு வழங்கிய பெயர்கள் செவ்விய தமிழ்ச்சொற்களாகவாதல், வடசொற்கள் விரவினும் அவை தமிழ்ச்சொற்போல மெல்லென்றிசைக்கும் மாட்சியுடையவாகவாதல் நிகழுந் தன்மையவாம்; 'பாண்டியன் அறிவுடை நம்பி,' 'நெடுஞ்செழியன்' 'உக்கிரப்பெருவழுதி,' 'மாவளத்தான்,' 'வேற்பஃறடக்

கைப்பெரு நற்கிள்ளி,' 'இளஞ்சேட்சென்னி', 'சேரமான்மாவெண்
கோ,' 'யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறை,' 'உதி
யஞ் சேரலாதன்,' 'இடைக்காடனார்,' 'ஒக்கூர்மாசாத்தனார்',
'கண்ணகனார்', 'கயமனார்' என்றற் றொடக்கத்துப் பெயர்களே
யிதனையினிது நிறுத்துக்கரிபோக்கு மென்பது. இனித்தமிழிற்றிரு
விளையாடற்புராண மியற்றிய ஆசிரியர் இவ்வரலாறுகளைப் பன்
முறையாய்ந்து பொருந்தக் கூறுமாறின்றி வடநூலிற் கிடந்தவா
றே யெடுத்துத்தமிழில் மொழி பெயர்த்திட்டார். வடநூலாசிரி
யர் பெரும்பாலும் ஒரு நூலியற்றப் புகுந்துழி உலக வழக்கொ
டும் ஆன்றோர் வழக்கொடும் மாறுபடாவாறு வரலாற்று முறை
மையை யுணர்ந்து ஆய்ந்து பொருந்தக் கூறுவதின்றித் தாந்தாங்
கண்டவாறே யொன்றும் பலவு மெடுத்துக்கொண்டு அவற்றை
மாற்றியுங் குறைத்தும் வேறு பலவற்றை யிடையிற்புகுத்தி விரித்
தும் உண்மை தோன்றாவாறு பலபடக்கூறுவர். இவ்வாறியற்றிய
நூற்பொருளியல் பறியாதாரதனையே முதனூலாகக் கொண்டுவழி
நூலியற்றுவர். அங்ஙனமியற்றும்வழியவ்வழிநூலும்அதனாற்பழுது
படுமா மென்பது. இனி வடநூற்பொருளைத் தழுவாது செந்தமிழ்
நூலியற்றிய தொல்லாசிரிய ரெல்லாரும் உள் பொருளைக்கிடந்தவா
றெடுத்துண்மை தோன்ற உரிமையின் விளக்கி யுயர்ந்தாரென்பது
சிலப்பதிகாரம் பெரியபுராணம் முதலிய பழைய தமிழ் நூல்களா
லுணர்ந்துகொள்க. வடநூலாசிரியர் தம்பாடை மேற் சென்ற
கடும்பற்றுள்ளத்தாற் றமிழில் வழங்கியமக்க ளியற்பெயர்களையும்
வடசொல்லாற் றிரித்துக்கூறுதலிற் 'சண்பகமாறன்' 'வங்கியசூடா
மணி' எனும் இயற்பெயர்கள் தமிழ்ச்சொற்களாய்த்தமிழில் வழங்
கியவா றொருவாற்றானும் புலப்படவில்லை. அல்லதூஉம், வடநூற்
றிருவிளையாடற் புராணமுடையார் தாமே படைத்திட்டுக்கொண்
டெழுதியனவோவென்று எண்ணுதற்கும் இடஞ்செய்து கிடக்கும்.
என்னை? ஒருவரியற்பெயரைக் கூறப்புகுந்தார்க்குப் பாடை வேற்
றுமைபற்றி யதனையுந் தம்பாடையில் மொழிபெயர்த்துக்கோடல்
பெரிதும் இழுக்காய் முடிதலானும், இயற்பெயரைக் கிடந்தவாறே
கூறுதலாற்போந்த வழுவின்மையின் அதனை யுள்ளவாறே யுணர்ந்
தார் இயற்பெயரைக் கிளந்தோதுவராதலானுமென்பது. இனிச்
சீகாளத்திப்புராணமுடையார் தாமாராய்ந்தும் பெறப்படாத இயற்



பெயரை வடமொழியிற் கிடந்தவாறே கூறுதொழிதல் பெரிதும்
நன்கு மதிக்கப்படுவ தொன்றாமென்பது.

இனிக் கதைவரலாறும் ஒன்றோடொன்று மலைவு படுமாறு
காட்டுதும்:—திருவிளையாடற் புராணமுடையார் பாண்டியன் இள
வேனிற்காலத் தொருநா ளிளமரக்காவிற் புகுந்து தன் மனைவி
யொடு வைகினானெனக் கூறினார்; சீகாளத்திப் புராணமுடையார்
பாண்டியன் தன்மாளிகை மேனிலைமேல் தன்மனைவியோ டிருந்தா
னென்றார்; அவர், தாய்தந்தையரை யிளம்பருவத்தே யிழந்ததரு
மியென்னும் மறைச்சிறுவன் தான் மணம்புரிதற்குப் பொருள்வே
ண்டி யிறைவனை யிரந்தானென்றார்; இவர், பாண்டிநாட்டில் மழை
வறங்கூர்ந்து வற்கடகால மிகத்தான் வறுமையால் நலிந்து வேறு
நாடு போதற் கெண்ணித் தருமியென்பவன் இறைவனை விடைவே
ட்ப இறைவனிரங்கிச், செய்யுள் கொடுத்தான் என்றார்; அவர்,
செய்யுள் பெற்றதருமி யதனை முதலிற் சங்கப் புலவர்க்குக் காட்ட,
அவர் நல்ல வென்று வியந்து பாண்டியனுக்குச் சென்றுரைப்ப
அவனுமகிழ்ந்து தருமிக்குப் பொற்கிழி யறுத்துக்கொள்ளப் பணி
ப்ப அவ்வாறே போந்து தருமி யறுக்கப் புகுங்கால் நக்கீரனார்
மறுத்தார் என்பர்; இவர், அதனைப்பெற்ற தருமி முதலிற் பாண்
டியனிடத்திற் சென்று காட்ட அவனுவந்து மற்றிதனைச் சங்கப்
புலவர்க்கு ஏற்பித்துரைத்திரென அவ்வாறே யவரும் போந்து
சொல்லக்கேட்ட புலவருள் நக்கீரனாரிது குற்றமுடைத்தென்றார்
என்று கூறினார்; அவர், இறைவன் புலவனாய்த்தோன்றி நீர் வழி
படும் ஞானப்பூங்கோதையார் கூந்தலு மத்தகையதோ வென்று
வினாயினார் என்றார்; இவர், வாளா இறைவி கூந்தலும் அத்தன்
மையதோ வென்றாரென்றார்; அவர், இறைவன் திறந்த நுதல்விழி
வெப்பம் பொறாது நக்கீரனார் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்
தார் என்றார்; இவர், இறைவன் நக்கீரனாரைக் குட்டநோய் கொள்
கவென அதனை யஞ்சித்தொழுத நக்கீரனாரைக் கயிலைகாணிலிது
தீருமென்று கூறி மறைந்தான் என்றார். இனிச் சீகாளத்திப் புரா
ணமுடையாரும் திருப்பரங்கிரிப் புராணமுடையாரும் தம்முண்
மாறுகொண் டுரைக்குமாறு காட்டுதும். சீகாளத்திப் புராணமு
டையார், நக்கீரனார் கயிலைகண்டு தொழுதற் கெண்ணித் திருக்
கேதாரமுதலிய வடநாட்டுத் தலங்களைக் கடந்து செல்வுழிச்

செல்லு நெறியில் ஒரு குளமும் அதன் கரையிற் செவ்விய ஓர் ஆலமரமும் நிற்பக்கண்டு அதன் நிழலிற் சிறிதிளைப்பாறியிருப்ப அம்மரத்தின் இலை யுதிர்வையே தலைக்கீடாகக் கொண்டு ஒருபூதம் அவரை ஒரு மலைக்குகையிற் புகுத்த ஆண்டுத் தனக்கு முன்னிருந்தவரைக்கண்டிரங்கி யவர்பொருட்டுத் திருமுருகாற்றுப்படை மொழிந்து எல்லாரையும் உய்யக்கொண்டாரென்பர்; திருப்பரங்கிரிப்புராணமுடையார், காடொறும் பரங்குன்றிற் சுனையில் நாட்கடன்கழித்துத் தன்னைத் தொழாது செல்லும் நக்கீரனாரைப் பரங்குன்றின் முழையிற் சிறைப் புகுத்திப்பின் ஆற்றுப்படை பாடுவித்தார் முருகக்கடவுள் என்பர்.

இனி யிலவற்றுட் பாண்டியன் றன்மனைவியோடு வைகியவாற்றை இடமாத்திரையா னிருவரும் வேறுபடுத்துக் கூறுதலினது பெரியதொரு வேற்றுமை யாகாதென்பது. இனி இறைவன்மாட்டு அன்பு முதிர்ந்து பொருண்மேற் சென்ற பற்றைத் துவரத்துறந்து கரணங்க டூயவாகி யவ்விறைவ னருள்வழி நிற்குந் திருத்தொண்டர் இறைவனை எமக்கு மனைவிவேண்டும், பொருள்வேண்டுமென்று குறையிரந்து கொள்ளாது தங்குறையை யறிவித்தன் மாத்திரையி னமைந்தொழுந் தன்மைய ராதலாற் றிருவிளையாடற் புராணமுடையார் இறைவனிடத் தரிமை யன்பு முறையுளி நிகழ்த்துந்தருமி யென்பவன் முன்சென் றிறைவனை வறுமையயர்தற்பொருட்டுப் பொருடால்வேண்டுமெனக் குறையிரந்தானாகக் கூறுதல் பொருத்தமின்றாம். இனிப் பாண்டிநாடு முழுவதூஉம் மாரிவறப்ப வளஞ் சுரவாது யாண்டும் வறுமைமிகுந்து மாவுமக்களும் பெரியதோ ரிடருழந்தா ரென்று அதனைத்தாம் நேரிற்கண்டிருந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் * "பன்னீராண்டு பாண்டி நன்னாடு, மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது" என்று நிலையிட்டுரைத்தலானும், இறையனாரகப் பொருளுரைப் பாயிரத்தினும் இவ்வாறே கூறப்படுதலானும் அறிவுடை நன்மக்களெல்லாரும் இவ்வற்கடகால நிகழ்ச்சியைத் தழீஇக்கொண்டு மொழிதலானுஞ் ஸ்ரீகாளத்திப் புராணமுடையார் அவ்வற்கடகாலத்தின் வறுமைநோய்பொறுக்கலாற்றாது தருமி யென்பவர் வேறு நாடு போதற்கு விடை பெறுதல் வேண்டி யிறைவனைக் குறையிரந்தா ரென்றல் உலக வழக்கொடும் புலனெறி வழக்கொடுந் திறம்பாத மெய்

* மணிமேகலை, பாத்திரமரபு கூறியகாதை.



யுரையாம். அல்லதூஉம், தருமி யென்பவர் இறைவனை மனைவி வேண்டும் பொருள் வேண்டு மெனக்குறையிரவாது, வறுமைநோய்களைந்துகோடன் மாத்திரையே குறித்திறைவனை வேண்டினாராகக்கூறும் ஸ்ரீகாளத்திப் புராணமுடையார்கூற்றுப்பெரிதும் நன்கு மதிக்கப்படுவதொன்றாம்; இவர் இவ்வரலாற்றின் மெய்ம்மை யாராய்ந்துணர்ந்து கூறினாரென்பது கடைப்பிடிக்க. இறைவன்றந்த செய்யுளைக்கொண்டு போந்து தருமி யென்னு மறைச்சிறுவன் சங்கப்புலவர்க்குக் காட்டியவழி ஆங்கே நக்கீரனா ரதைக் குற்றமுடைத்தென இயம்பாது சங்கப்புலவர் அச்செய்யுளை வியந்து கொண்டுபோய்ப் பாண்டியனுக்குரைப்ப அவனும் உவகைமிக்குப் பொற்கிழி பெறுக வென்ற சொற்படி தருமி கிழியறுக்கப்புகுந்தவழி யாண்டு அதற்குக்குற்றங் கூறினாரென்றல் ஒரு சிறிதும் பொருந்தாமையான், திருவிளையாடற் புராணமுடையார் கூற்று ஆன்றோர் வழக்கொடு மாறு கொள்ளும். மற்றுச் ஸ்ரீகாளத்திப் புராணமுடையார், செய்யுள் பெற்றுக்கொண்ட தருமி யதனை முதலிற் பாண்டியனுக்குச் சென்று காட்ட அவன் உவந்து இதனைச் சங்கப்புலவர்க் கேற்பித்துப்பின் பொற் கிழிபெறுகவென்று கூறினனென்றும், அவ்வாறே யவர் சென்று அதனையுரைப்ப அப்போது நக்கீரனார் குற்றங் கூறினாரென்றும் உலகவழக்கொடும் ஆன்றோரொழுக்கத்தொடும் மாறுகொள்ளாவா றோதுதலின் இஃதுண்மை நிறுத்தும் பொன் மொழியாமென்பது. இனியிறைவன் புலவனாய்ப்போந்து நக்கீரனாரை நோக்கி யிறுதியில் ஞானப்பூங்கோதையார் குழலு மங்கீர்மையதோ வென வினவினாராகக்கூறும் திருவிளையாடற் புராணமுடையார் கூற்று இறைவி கூந்தலுமத்தன்மையதோ வென வினவினாராகக் கூறும் ஸ்ரீகாளத்திப்புராணமுடையார் கூற்றினுஞ்சிறக்குமாம். என்னை, பொதுப்பட இறைவி கூந்தலை யெடுத்துக்கூறுதலாற் 'கைலை பாதிகாளத்தி பாதியந்தாதி' பாடுதற்குக்காரணம் பிறிதொன்றாற் பெறப்படாமையானென்பது. இனித்திருவிளையாடற் புராணமுடையார் இறைவன்றிறந்த நுதல்விழி வெப்பம் பொறாது நக்கீரனார் பொற்றாமரையில் விழுந்தார் என்பதூஉம், ஸ்ரீகாளத்திப் புராணமுடையார் இறைவன் அவரைக்குட்ட நோய் கொள்க வெனக் கூறினனென்பதூஉம் மாறுபடாவாம்.

என்னை? நுதல்விழி திறந்தவளவில தம் மெய்யில் வெம்மைமிகப் பொறுக்கலாற்றாக் கொடுந்துயர் விளைதலின், மற்றதனைப் பரிகரித்துக் கோடற்பொருட்டுப் பொற்றாமரைத் தடத்தில்வீழ்ந்து, பின் இறைவனருள் சிறிது முகிழ்த்தலின் அதனை நீங்கி வெளிப்பட்ட நக்கீரனார்க்கு முன்பற்றிய வெம்மையால் மெய்நிலைமாறுபட்டுத் தொழுநோய் முதிர்ந்ததென்பது கருத்தாகவின்னென்க. இனி, நக்கீரனார் கயிலைகாணச் செல்லும் நெறியிற் பூதத்தினாற் கவரப்பட்டுத் திருமுருகாற்றுப்படைமொழிந்து உய்ந்தாரெனக் கூறும் சீகாளத்திப்புராணமுடையார் கூற்றுமெய்ப்பொருள் நிலையிட்டுரைக்கும் அறிவுடை நன்மொழியாமெனப்படும், இவ்வாறன்றிப் பரங்குன்றில், முருகக்கடவுள் பாமாலை பெறுதற்கெண்ணி யொருகாரணங்காட்டியவரை மலைமுழையிற் புகுத்திச்செய்யுள் கொண்டு பின் அவரைச் சிறைவீடு செய்து அருள்புரிந்தாரெனக் கூறும் திருப்பரங்கிரிப் புராணமுடையார் கூற்றுலகநெறியொடு மாறுகொண்டு இயற்கையின் நடவாச்செயற்கைத் திறத்தைப் புனைந்தெடுத்துக் கூறுதலானும், அதனால் தாம் பாமாலைபெறுதற் கெண்ணுதலின் தன்னைப் பற்றுதலென்னுங் குற்றமும் நடுநிலைதிரிந்து பொருத்தமில் காரணத்தாற் சிறைபுகுத்தலிற் சமனிலை வழுவுதலென்னுங் குற்றமு மிறைவன்மாட்டெய்துதலானும், இனி, நக்கீரர்தாமு முருகக்கடவுளிடத் தெழுந்த அன்பினாற் செய்யுள்செய்யாது அச்சம்பற்றிச் செய்தாரெனவும், சிவபெருமானையே பாடும் வழுவாநோன்புடைய ராயின் அந்நோன்பொடிகளிப்பின் முருகனைப்பாடினாரெனவும், முருகக்கடவுள் தாமுந் தம்மாற் றொழப்படுந் தன்மையரல்லரென்றெண்ணினாரெனின் அது நூலுணர்வும் மெய்யுணர்வுமின்றி முருகனையும் மூத்த பிள்ளையாரையும் உமாதேவியாரையும் இறைவனொருவனே கொண்டபலவேறுபட்ட அருட்கோலங்களாமென்று மறைமொழிவிளந்த மந்திரவுணர்வொடு முரணியக்கோலங்கடம்முள் வேறுபாடு கற்பித்துக்கொண்டொழுகுந் தெரிவின்மாந்தரொழுக்கத்தொடுபட்டுச் சிறுமையெய்தினாரெனவுங்கொள்ளக் கிடக்குமாதலானும் அவருரைபொருந்தாதென்பதும் அறிவுடையாரெல்லார்க்கு மினிது விளங்குமென்பது. இனித் திருமுருகாற்றுப்படையில் அஃதியற்றப்பட்ட வரலாறு யாண்டுங் காணப்படாது.

நாகபட்டினம் - வேதாசலம்பிள்ளை.



# தேசாபிமானி.

## சதைவரலாறு.

அநேக நூற்றாண்டுகளுக்குமுன் நமது இந்ததேசம் சுதேச இராஜாக்களால் ஆளப்பட்டுவந்தது. அக்காலத்தில் மேற்கே வெகுதூரத்துக்கப்பால் ரோமாபுரி என்கிற இராஜ்ஜியம் வெகு பிரசித்தி பெற்றிருந்தது. ரோமுக்கு முன்னால் கிரேக்கு தேசமானது வெகு பலப்பட்டிருந்தது. சிற்பசாஸ்திரம் முதலிய நாகரீகவித்தைகளில் கிரேக்கர் மிகத் தேர்ச்சியடைந்திருந்தார்கள். நமது முன்னோர் எவ்வாறு வேதாந்தத்திற் பேர்பெற்றிருந்தார்களோ கிரேகர் நாகரீகவித்தைகளில் எவ்வாறு பிரசித்தியடைந்திருந்தார்களோ அவ்வாறே ரோமரும் இராஜநீதிகளிலும் இராஜதந்திரங்களிலும் விசேஷ ஞானம் பெற்றிருந்தார்கள். ரோமாபுரியென்பது ஐரோப்பா என்றுசொல்லப்படும் கண்டத்தின் தென்பாகத்திலுள்ள இடலி தேசத்தின் மேற்கரையிற் கடற்கரைக்குச் சுமார் 20-மைல் தூரத்தில் டைபர் நதிக்கரையில் * ஏழுமலைகளின்பேரிலுள்ள ஒருபட்டணம். இந்தபட்டணம் ஆதியில் ரோமுலஸ் என்பவனாலுண்டாக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. பிறகு அவருக்குப்பின்னாற் பல ராஜவம்சங்களுண்டாய்க் கடைசியாக டார்குவின் என்னும் வம்சத்தார் ஆளுகையில் அவர்களில் ஒருவன் ஒரு பிரபுவின் மனைவி கற்பைப் பலாத்காரத்தால் அழிக்கக் குடிகள் வெகுண்டு இராஜங்கத்தாரைத் துரத்திவிட்டு ஸெனெட் என்னும் ஒரு சபைசேர்த்து அச்சபையாரால் வருஷாவருஷம் கான்ஸல் என்னும் ஓர் அதிகாரியைத்தெரிந்தெடுத்து அவருக்கு ஒருவருஷம்வரையில் சர்வாதிகாரத்தையும் கொடுத்துத் தாங்களே ஆளத்தலைப்பட்டனர். பிரபுக்கள் தாங்களே இராஜாங்கத்திலுள்ள எல்லா அதிகாரத்தையும் வகித்துக்கொண்டமையால் அவர்களுக்கும் குடிகளுக்கும் பல தடவைகளில் சச்சரவுகள் உண்டாய் பிரபுக்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் குடிகளுக்குத் தங்கள் அதிகார பாத்தியதையைப்பகிர்ந்து—விசேஷ அதிகாரமும் தன் அதிகாரத்தை மீறி ஒரு காரியமும் நடக்கக்கூடாததுமான—டிரிபியூன் என்னும் ஒருபிரதிநிதியை ஏற்படுத்திக்கொடுத்தனர். இஃது இவ்வாறிருக்க ரோம்பட்டணமானது சுற்றிலுமுள்ள பட்டணங்களையெல்லாம் ஜெயித்து நாளுக்குநாள் விருத்தியாகி இடையிலுள்ள மற்றநாடுகள் முழுமையும் கவர்ந்தது. இவ்வாறாகவே பட்டணவாசிகளென்றும் நாட்டாரென்றும் ஜனங்களில் பேதம் உண்டாய்ப் பட்டணவாசிகள் தங்கள் அதிகார பாத்தியதையை நாட்டாருக்குக் கொடுக்கச்சம்மதமின்றி வெகு சண்டைகளும் குழப்பங்களுமுண்டாயின.

* ஏழுமலையாவன—காபிடொலின், பெலடைன், அவன்டைன், கொய்னல், யஸர்யூனல், விமினல், கலிரினல்.

ரோமும் இடலியேயன்றி ஐரோப்பா கண்டத்தைச்சேர்ந்த விசேஷநாடு
களையும் ஆப்பிரிக்காவின் வடபாகத்தையும் ஜெயித்து ஆசியா கண்டத்தின்
மேற்பாகத்திலும் தன் நாகரீகமும் அதிகாரமும் பரவச்செய்தது.

இவ்வித வெற்றிகளுக்கு நன்றாய்த் தேர்ச்சி பெற்ற சேனைகள் திரளாய்
வேண்டியும், அதுபற்றி அதை நடத்தச் சேனைத்தலைவர் வேண்டியும், அவர்
வசத்தில் அச்சேனைகளை நிலையாக ஒருவருஷமாவது வைப்பது அவசியமா
யிற்று. அதுபற்றிச் சேனைகளுக்குத் தமது தலைவரிடத்திலேயே பற்றுண்
டாய்ப் பட்டணவாசிகளை லக்ஷியம் செய்யாமல் அவை தமது தலைவர் சொற்
படியே நடந்தன. இச்சேனைத் தலைவரே எல்லா அதிகாரங்களையும் கவர்ந்து
சக்கிரவர்த்தி என்று பட்டப்பெயர் பெற்றனர். அவர் ஆளுகையில் ஸெனேட்
என்று சொல்லப்படும் ராஜ சபையும் கான்ஸல் என்று சொல்லப்படும் அர
சின் தலைமை அதிகாரமும் டிரிப்யூன் என்று சொல்லப்படும் குடிகளின்
பிரதிநிதித்துவமும் தமது அதிகாரத்தை யிழந்து பேருக்கே யிருந்தன. சக்
கிரவர்த்தி அதிகாரம் நாடு முழுமையும் செல்லச் செல்ல அனைவரும் அவர்
கீழ் ஏற்றத்தாழ்வின்றிச் சமமாயினர். சட்டங்கள் ஏற்பட்டு அச்சட்டத்துக்
குச் சக்கிரவர்த்திதவிர மற்றவர்கள் அடங்கியவராயினர். இம்மாதிரி நான்கு
நூற்றுண்டாயினதும் கான்ஸ்டைன்டைன் என்னும் மகா சக்கிரவர்த்தி ரோமா
புரியை விட்டுக்கிழக்கே கருங்கடலுக்கும் மார்மோராக் கடலுக்கும் இடை
யில் வசதியான துறைமுகத்தில் தன்பெயரால் கான்ஸ்டான்டிநோபில்
என்னும் நகரம் உண்டாக்கி அதையேதான் ராஜதானியாக்கிக் கொண்டனன்.
இக்காலத்திற் கிறிஸ்து மதமானது உண்டாய்க் கொஞ்சங் கொஞ்சமாய்ப்
பரவிக் கொண்டிருந்தது. முன்னிருந்த சக்கிரவர்த்திக ளெல்லாம் அதற்
குத்தங்களா லானவரையில் இடுக்கண் செய்தும் அஃது அழியாமற் செழித்
துக்கொண்டே வந்தது. கான்ஸ்டன்டைன் தானே கிறிஸ்துமதத்தைத் தழு
வவும் கிறிஸ்து மதம் இராஜ்ஜியம் முழுமையும் பரவியது. கிறிஸ்து மதம்
எங்கும் பரவியதனால் அதிலேயும் அதிகாரமும் ஒழுங்கும் வேண்டியதாயி
ருந்தது. இராஜாங்கத்திற் பல அதிகாரிகள் இருந்ததுபோலவே மதத்திலும்
பல அதிகாரங்கள் ஏற்பட்டாயின. ரோமாபுரியில் ஒரு போப்பும் (மதத்
தின் தலைமை அதிகாரி) கான்ஸ்டான்டிநோபிலில் ஒரு போப்பும் (பேட்ரி
யார்க்கு) ஏற்பட்டனர்.

ஒரு சக்கிரவர்த்திக்கு 2-குமாரர்களாக ஒருவன் கிழக்கே கான்ஸ்டான்
டிநோபிலிலும் மற்றவன் மேற்கே ரோமிலும் அரசாண்டான். ரோம் அரசா
ட்சியானது வம்சத்தாரைவிட்டு மிலேச்சர் கைவசப்பட்டுக் கடைசியாகக்
கி. பி. 475-ஆம் வருஷத்தில் அரசேயில்லாமற் போய்விட்டது; கடைசியில்
ஓர் அரசாட்சி யோதுமென்று பேருக்குமாத்திரம் ரோம் கீழ்நாட்டுக் குட்பட்
டிருந்தது. ரோமிலுள்ள போப் சக்கிரவர்த்திக்குச் சமீபத்திலில்லாததனால்



சக்கிரவர்த்தியின் அதிகாரத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தானே யடை
ந்து கடைசியாக 9-ஆம் நூற்றுண்டில் டியூடன் என்கிற ஜர்மனியிலிருந்த
மிலேச்ச சக்கிரவர்த்திக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். ஆகையால்,
அது முதல் ரோமிலுள்ள போப்பாகிய மதகுருவுக்கு இச்சக்கிர வர்த்தி
ஒருவாறு அடங்கினவனுன். பிரான்சு, ஸ்பெயின், ஜர்மனி, இடலி முதலிய
மேல் நாடுகளெல்லாம் இச்சக்கிரவர்த்திக்கு அடங்கியவை யாயின. ஒவ்
வொரு சக்கிரவர்த்தியும் பட்டாபிஷேகம் போப்பைக் கொண்டே செய்ய
வேண்டி யிருத்தலால் போப்பின் அதிகாரம் அளவற்றனவாயின. ஓர் அரச
னைப் புதிதாய் ஏற்படுத்தவும் ஓர் அரசனை அரசினின்று தள்ளவும் வல்லவனு
யினுன். டியூடன் சக்கிரவர்த்திகள் தங்கள் தேசமாகிய ஜர்மனியிலேயே
இருந்தார்கள். பட்டாபிஷேக காலத்தில் மாத்திரம் ரோமுக்குப்போய் உட
னே திரும்பி விடுவார்கள். ஆகவே ரோமில் போப்பைத்தவிர வேறு யாரும்
குடிகளை அடக்குவாரிலர். அநேக பிரபுக்கள் உண்டாய் ஒவ்வொருவரும்
தமது வீட்டைக் கோட்டையாகக் கட்டிக்கொண்டு தகுந்த அரணுடிருந்து
குடிகளை வருத்தியும் தாங்கள் ஒருவரோடொருவர் சச்சரவு செய்து கொண்
டுமிருந்தனர். தம்மாலியன்ற மட்டும் இவர்களை யடக்கப் போப்பன்முறை
முயற்சிசெய்தும் அவை பயன்படாதுபோயின. கடைசியிற் பிரஞ்சுக்காரனு
கிய ஒருபோப் பட்டத்துக்கு வந்ததும் ரோமைவிட்டுத் தன்தேசத்தில் அவி
க்கினன் என்னுமிடத்திற் போய்ச் சேர்ந்து அங்கேயே யிருந்தான். ரோமா
புரியில் நடுத்தெருவில் நண்பகலில் உயிருக்கும் சொத்துக்கும் மிக்க பய
முண்டாயிருந்தது.]

## அத்தியாயம் – 1.

வேனிற் காலத்தில் ஒருநாள் சாயங்காலம் சிறுவர் இருவர் அவனி
டைன் மலையடிவாரத்தில் டைபர் நதிக்கரையோரமாய்ப் போய்க் கொண்டி
ருந்தார்கள். அவர்கள் சென்றபாதை விசேஷ நடமாட்ட மில்லாமலும் ஊரு
க்குச் சற்றே புறம்பாயுமிருந்தது. கொஞ்சதூரத்துக் கப்பால் யாதோர்
ஒழுங்கு மின்றி இங்கு மங்கும் சிறுகுடிசைகளும் அவைகளினிடையில் ஒவ்
வொருபிரபுவின் கோட்டை கொத்தளங்களோடுகூடிய கோபுரங்களுங் காண
ப்பட்டன. நதியின் ஒரு பக்கத்திற் செம்பட்டவர் குடிசைகளும் அவைகளுக்கப்
பாற் கோட்டைகளும், ஸ்தம்பங்களும் ஸ்தூபிகளும் நிறைந்த ஆலயங்களும்
உள்ள ஜெனிகுலம் என்னும் பர்வதம் தோன்றிற்று. மற்றொரு புறத்தில் முன்
குடி பெருத்து இப்போது குடிகளின்றிப் பாழாய்ப்போன அவன்டைன்
மலையானது அநேகமடங்களோடு கூடிவிளங்கிற்று. அம்மடங்களின் கோயி
லில் அடிக்கும் மணிச் சத்தமானது காதுக்கினிமையாக ஆற்றங்கரையில்
முழங்கிக் கொண்டிருந்தது.

சிறுவர்கள் இருவரில் மூத்தவனுக்கு வயது சுமார் இருபது இருக்கும்.
நெட்டையாய் அதிக காம்பீரத்தோற்றத்தையு வுடையன். அக்காலத்தில்

மடத்திலே தான் வெகு சிரமத்துடன் சிறிது கல்வி கற்பது வழக்கம். அவ்வாறு கற்கும் மாணுக்கர் சாதாரண ஜனங்களைப்போலாது சாம்பல்வர்ணமாயுள்ள ஒருநெடுஞ் சட்டையைத் தரித்துவந்தார்கள். அவர்களைப் போலத் தாழ்ந்த உடுப்பே தரித்திருந்தானென்றாலும் அவன் தோற்றம் மிகக்கண்ணியமாயிருந்தது. அவன்முகம் வெகு அழகாயும் மலர்ச்சியாயும் இருந்ததென்றாலும் ஏதோ அவன் ஆழ்ந்த யோசனையில் மூழ்கினுன் என்னும்படி தோன்றிற்று. அவன் அதனுல் நிகழ்காலசம்பவங்களைவிடப் பூர்வசரித்திரங்களிலும் இனி நடக்கப்போகும் விஷயங்களிலும் பிரியமுள்ளவனுகக் காணப்பட்டான்.

இளையவனே மிக்க அமைதியும் இனிமையுமுள்ள தோற்றத்தையுடையவன். தமையன்சொல்வதை அவன் மிக்க ஆவலோடு கேட்பதை நோக்கின் மாதர்க்குரிய இனியகுணங்கள் அவனிடத்தில் உள்ளனபோலும். தாழ்ந்த உடையைத் தரித்திருந்தான் என்றாலும் அது சுத்தமாயிருந்தது. அவன் தலைக் குல்லாவினின்றும் வெளிவந்து தோள்வரையில் தொங்கிய நீவிக் கோதிவிட்ட மயிர்ச்சுருளை நோக்கின் பிரியமான அன்னையின் பெருமை விளங்கும்.

இருவரும் நதிக்கரையோரமாக ஒருவர்தோளில் மற்றொருவர் கைபோட்டுக்கொண்டு நடந்து செல்லுகையில் அவர்கள் தோற்றமும் இளமையும் ஒருவரோ டொருவருக்குள்ள வாஞ்சையும் கண்கவர் வனப்பாயிருந்தது.

“என் தம்பி, இந்தச் சாயங்காலவேளைதான் என் மனதுக்கு நிரம்ப ரம்மியமாயிருக்கிறது. நீ ஒருவன்தான் ஆகாசக்கோட்டை கட்டும் என்மனோராஜ்ஜியங்களையெல்லாம் கனவாக எண்ணுமல் நினைவாக வெண்ணுகிறாய்; நமது தந்தையோ நான் ஏதோ நல்ல விஷயங்களைப் புத்தகங்களிலின்றும் கூறுவதாக எண்ணுகிறார்; தாயோ, தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு “எவ்வளவு படித்திருக்கிறான் பிள்ளை பார்த்தாயா” என்கிறாள்; மடாதிபதி கனோரேர்ம் மறுபடியும் இந்தஸ்திதியிலிருக்கவேண்டும்” என்று நான்கூறும் போதெல்லாம் வேதவாக்கிய விரோதமாய்ச் சொல்வதாக நினைக்கிறார்கள். நீயோ என்னைப்போலப் படித்திராவிட்டாலும் என்மனோராஜ்ஜியங்களிலும் வீண் எண்ணங்களிலும் கலந்துபேசுவதனுல் எனக்கு ஊக்கத்தையும் மனக்கிளர்ச்சியையும் உண்டாக்குகிறாய். இதனுல் ஒவ்வொரு சமயத்தில் நமது பிறப்புணர்ப்பை மறந்து டியூடர் சக்கிரவர்த்தியின் இரத்தந்தான் நமது தேகத்தில் ஓடுகின்றதோ என்று ஊகிக்கிறேன்” என்றான் கோலன் என்னும் மூத்தவன்.

“என் அருமைக்கோலாவே, தெய்வம் நம்மைச் சூதுபண்ணிவிட்டது. உனக்கோ, நமது தந்தையின் ராஜகம்பீரத்தைக்கொடுத்தது; எனக்கோ, நமது தாயின் சாந்தகுணத்தைத்தந்தது”.



“அப்படியாயின் நீயே மேம்பட்டவனுவாய்; ஏனெனில், நான்மிலேச்ச வம்சத்தனுகிறேன்; நீயோ ரோமனுவாய். சாதாரண ரோமன் வடக்கு அரசனைவிட விசேஷமாக மதிக்கப்பட்டகாலமு மிருந்தது. இருக்கட்டும், நமது வாழ்நாளிலேயே விசேஷமாறுதலைக்காணலாம்”.

“நான்காண நீ நல்ல ஸ்திதிக்குவந்தால் அதுவே எனக்குத் திருப்தி; இப்போதே உன்னை எல்லாரும் மகாவித்துவா னென்கிறார்கள். உன்னைக் கோலன்ஹு வம்சத்தார் உபசரித் தழைப்பதைக் கேட்கும்போதெல்லாம், தாயார் ‘நீ நல்லபதவிக்கு வருவாய்’ என்று கூறுகிறாள்” என்றான் இளையோன்.

“கோலன்ஹுவா! வீண் டம்பாசாரிகள்; தாங்கள் நிரம்பப்படித்தவர் போலவும் படித்தவரை ஆதரிப்பார்போலவும் நடிக்கின்றனர். அவர்கள் என்னை உபசரிப்பதெல்லாம் எல்லாரும் என்னை வித்துவான் என்பதனுலும், அவர்களிடத்திலேயேயுள்ள வீணுஷகர்களைவிடச் சாதுரியமாய் நான் வசனிப்பதனுலேயுமே. ஆமாம்; அவர்களால் என் அந்தஸ்து உயரும்; எவ்வாறு என்பாயோ - நெஞ்சுலர்ந்து பட்டினிகிடக்கும் நமது குடிகளைவருத்தி அவர்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த திரவியத்தை அவர்களினின்றுந் தாக்ஷிணியமின்றிக் கொள்ளைகொள்ள ஓர் உத்தியோகமளிப்பர். குடிகளிடத்தில் ஈவிரக்க மில்லாதவர்கள். குடிகளிடத்திற் பச்சாத்தாயப்படுகிற எவனையாவது எக்காலத்திலாவது உயர்த்தியிருக்கிறார்களா? இல்லை. நான் நல்லபதவிக்கு வந்தால் என்னைப்போலுள்ள தாழ்ந்த குடிகளால் உயர்த்தப்படவேண்டுமேயொழிய இந்தப் பிரபுக்களின் உதவியால் உயர்ந்த பதவிக்குவர யான் ஒருபோதும் சம்மதியேன்.”

“அண்ணு, நீ நகரவாசிகள்மேல் வைத்துள்ள அவாவினுல் எங்களுக்கு உன் பிராணனின் பேரிலுள்ள அபிமானத்தை எங்கே மறந்துவிடுகிறாயோ என்று பயப்படுகிறேன். நீ எவ்வித உயர்ந்தபதவிக்கு வந்தாலும் அதனுல் ஆபத்து நேரிடுமாயின் என்மனம் ஒருபோதும் சகியாது.”

“உயர்ந்த பதவிக்குவர எவ்வளவு இடுக்கண்நேரினும் அதை நான் சிறிதேனும் ஒருபொருட்டாய்க் கொள்ளேன். உயர்ந்தபதவி! - வீண் மனோராஜ்ஜியம்! என் சூழ்ச்சிகள்போதும். இனியுன் கருத்தென்ன?”

இவ்விதமான தன் மனோராஜ்ஜியங்களை நீக்கி நல்லபடவு-சுத்தமான உடை - பிரபுக்கள் கொடுமைக்கு அகப்படாத தூரத்தில் ஆனந்தமாக நித்திரைசெய்யக் கட்டில்-இப்படியாகச் சிறுவர்கள் தங்கள் கண்களிக்க விரும்புகிற விருப்பங்களே கொண்டுள தன் தம்பி சூழ்ச்சியிற் கலக்கலானுன்; பின்னுல் இவன் நல்லபதவிக்கு வந்தபோது தன் எண்ணம் சரியோ தம்பி அவா சரியோ என்று எண்ணி எத்தனைதரம் இந்த சம்பாஷணையைப்பற்றி நினைத்து நினைத்து உருகுவான்.

"கொஞ்சங் கொஞ்சமாக நான் பொருள்சேர்த்து அதோ வருகிறதே அம்மாதிரி ஒரு படவுவாங்கி அதில் வியாபாரம்செய்வேன். உனக்கு வேண்டியகையெழுத்துப் பிரதிகளெல்லாம் வாங்கிக்கொடுப்பேன். அஃது எனக்கு எவ்வளவு ஆநந்தமாயிருக்கும்!"

"தம்பி உனக்கு வேண்டியதை நான் தரட்டும். ஆனாலும் அந்தப்படவின் எஜமானனுக்கும் சந்தோஷத்தைக்காண வில்லையே! முன்னும் பின்னும் சுற்றிலும் படவுகாரர் பார்ப்பதைப்பார்த்தால், இந்தமகா பட்டணத்தில் நண்பகலிற் கொள்ளைக்காரருக்காகப் பயப்படுகிறார்கள் போலத் தோன்றுகின்றனர். கொஞ்ச தூரம்போவதற்குள்ளேயே ஒரு ரோம்பிரபுவையே அந்தக் கொள்ளைக்காரனுகக் காணலாம். ஐயோ! நாம் என்ன கதிக்குவந்து விட்டோம்!".

மேலே கூறிய படவானது டைபர் நதியில் வெகு வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. முன்னணியில் நால்வர் யாரோசத்துருவை எதிர் பார்ப்பவர்போல ஆயுத பாணிகளாய் நின்றார்கள். படவும் மறைந்து விட்டது. சிறுவர்களும் தாங்கள் வந்து நெடுநேர மாய்விட்டதென்று வீட்டுக்குத் திரும்பினார்கள்.

"தம்பி, உபர்டோ சன்னியாசி தன் மடத்தில் ஒரு விசேஷமான கையெழுத்துப் பிரதியிருப்பதாக சொல்லி யிருந்தார். இன்று மாலை வருவேனென்று யான் சொல்லி யிருந்தேன். நமது பேச்சில் மறந்துவிட்டேன், நீ சிறிது நேரம் இங்கேயேயிரு; இந்த அவனிடைன் மலையிலேறிக்கொஞ்ச தூரம்போய் உடனே திரும்புகிறேன்", என்றான் கோலா.

"நானும் வரக்கூடாதா"?

"கூடாது; நீ இன்று அதிகமாய் நடந்து அலுத்துப் போயிருக்கிறாய். சிறிது இளைப்பாறுவாய். இதோ வருகிறேன்."

பையனும் எதிர்த்துப்பேச மாட்டாது ஒத்துக்கொண்டு கண்ணுக்கெட்டினவரையில் தன் தமயனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் குளிர்ந்த காற்றிலிருந்ததும் காலை தன் தங்கை ஐரீன் தன்னைப் புஷ்பங்கள் கேட்டது ஞாபகத்துக்கு வந்தது. உடனே எழுந்து அங்குள்ள புஷ்பங்களைக் கொய்து ஒருமாலை கட்டிக்கொண் டிருந்தான். இவன் காதுக்குப் பெருங்கூச்சல் சமீபத்தில் கேட்டது.

"யாரோ பிரபு விருந்துண்டு திரும்புங் கோலம் போலும்!"

இந்த நற்காட்சி என்றாலும் சிறிது ஒதுங்கி யிருப்பேன், என்று கைம்மாலையோடு ஒதுக்கமாம் யேய்ச் சேர்ந்தான்.

உடனே ஒரு பெருங்கூட்டம் அவன் கண்ணுக்குத் தென்பட்டது. ஆயுதபாணிகள், இருவர் இருவராய் முன்னே குதிரையின் பேரிலும் பின்னால் ஏரா



ளமான ஜனங்கள் ஈட்டி பாலா முதலிய ஆயுதங்களுடனும் மதக்குறி எழுதிய ஓர்ஸினோ கொடி மேலே பறத்தலையுங் கண்டான். கண்டதும் அவன் மனம் நடுங்கிற்று:—ஏனெனில் அந்நகரத்தில் ஆயுதபாணிகளாற் சூழப்பட்ட ஒரு பிரபுவினிடத்திற் காட்டுமிருகங்களை விடப் பயமதிகம்-என்றாலும் அவன் எங்கு ஓடுவது? அவர்கள் நெருங்கிவிட்டார்கள்.

"அடே, பையா-ஒருபடவு இந்த வழியாய்ப் போனதைப்பார்த்தாயா? எத்தனை நாழிகை யிருக்கும்?" என்று ஓர்ஸினோ வம்சத்தலைவனாகிய மார்டினோ டி போர்டோ என்பவன் கேட்டான்.

சிறுவனோ பயந்து, "அரை மணிக்கு முன் ஒரு படவு இவ்வழியாய்ப் போயிற்று" என்றான்.

"முன்னாலே பச்சைக்கொடி போட்டு நேரோ ராயிற்றா"?

"ஆமாம்".

"சரி, சந்திரன் புறப்படுவதற்கு முன்னால் அதைப் பிடிக்கவேண்டும். பையனும் கூடவே வரட்டும். அவனை விடாதேயுங்கள்; ஒரு வேளை கோலன்னுவுக்குச்சொல்லி விடுவான்."

இவ்வாறாக "ஓர்ஸினி ஓர்ஸினி" என்ற இரைச்சலுடையராய் அச்சிறுவன் எவ்வளவு வருந்திக்கேட்டும் அவனை விடாமல் அவன் கையிலும் ஒரு வில்லைக்கொடுத்து இழுத்துக்கொண்டு போனார்கள். முன்னாற்போன படவு சற்றுத்தூரத்திலுள்ள கோலன்னுமார் கோட்டைக்குச் சாமான் கொண்டு போவதாயும் அதைத்திருப்பி மார்டினோ தன் கோட்டைக்குக்கொண்டு போக எத்தனித்தே சேனையுடன் வந்ததாயும் அவர்கள் சம்பாஷணையாற் சிறுவனுக்குத் தெரிய வந்தது. பயம் பின்னும் அதிகமாய் விட்டது. இவன் கோலன்னு கக்ஷியைச்சேர்ந்தவன். கொலன்னுவும் ஓர்ஸினோவும் ஜன்மப் பகையாளிகள்.

சிறிது தூரம் சென்றதும் படவு கண்ணுக்குத் தென்பட்டது. மார்டினோ படவு நமது தானென்று சந்தோஷித்தான். கூடவேயிருந்த ஜர்மானிய படைத்தலைவனோ, ஆளரவம் காணப்படுகிறது; சிறிது நிதானி என்றான். இதற்குள் யுத்த முஸ்திப்புடன் ஆயுதபாணிகளாய்ச் சிலர் வந்தார்கள். கொலன்னுவுக்கும் ஓர்ஸினோவுக்கும் மும்முரமான சண்டை யுண்டாயிற்று. குதிரைக்காரரோ பூர்ண கவசம் தரித்திருந்தமையால் காயம்மட்டிலர். இடம் நெருங்கி யிருந்தமையால் எதிரிகள் பதாதி கலங்கின. இது தான் சமயமென்று மார்டினோ குதிரைப் பட்டாளத்தை ஏவினன். இதற்குள் ஒத்தாசைக்குக் கோலன்னுவுக்கு அநேகர் வந்து விட்டார்கள். மார்டினோ ஒன்றும் தோன்றாமற் பின்னிடையும்படி உத்தரவளித்தான். கவசம் பூண்ட குதிரைக்காரரோ தப்பினார்கள். பதாதிகளிற் சிலர் குன்றின்மேலேறி ஓடி ஒளித்தார்கள்; வேறு சிலர் நதியில்

றங்கி நீந்தி அக்கரை சேர்ந்தார்கள்; பாதையில் நேரே ஓடிய மற்றவர்களோ
விசேஷமாய் வெட்டுண்டு மடிந்தார்கள். அப்படி யோடியவர்களிற் கோ
லாவின் தம்பியும் ஒருவன். பயத்தினால் அவன் தலை கிறு கிறு என்று சுற்றி
யது. அதிவேகமாக ஓடுகிறான். ஐயோ! பாவம்!! தந்தை தமயனை விட்டு
ஒரு போதும் பிரியாதபாலகன். மரங்களெல்லாம் பின் தங்கின; நதியும் ஒரு
பக்கம் போய் விட்டது; இன்னும் ஓடுகிறான். பின்னாற்குதிரைகளின் குளம்
புச்சப்தமும் சத்துருக்களின் குரூரச் சிரிப்பும் கேட்கிறது; தன் தமயன் தன்
னைவிட்டுப் பிரிந்துபோன இடத்துக்கு வந்து விட்டான் பின் திரும்பினான்
குதிரைக்காரர்கள் ஈட்டியுடன் பக்கலில் நிற்பதைக்கண்டான் மலையினின்
றும் வெகு வேகமாகத்தனக்காக ஓடிவருகிற தன் தமயனையுங்கண்டான்.

"அண்ணா! அண்ணா!! என்னைக்காப்பாற்றுவாய்!" எனவும் ஒருகுதிரை
க்காரன் ஈட்டியை அவன்மேலோங்கினான் உடனேயவனும் பிணமாய்வி
ழுந்தான். ஒருமணிக்குமுன்னே அதிபாலியமாயும் குதூகலத்தோடு மிருந்த
சிறுவன் அதேயிடத்தில் ஈட்டியாற் குத்துண்டு கிடந்தான். குதிரைக்காரன்
ஈட்டியைப்பிணத்தினின்றும் பிடுங்கிப்பின்னும் சத்துருக்களைத் துரத்தலா
னான். ரியன்ஜியும் கீழ் இறங்கி முழந்தாளிட்டு உட்கார்ந்தான்; சிறிதுநேர
த்துக்கெல்லாம் கோலன்னாவம்சத் தலைவனாகிய ஸ்டீபனும் மற்றவரும் வந்
தார்கள். முன்னேவந்த குதிரைக்காரர்கள் இவர்கள் முன்னணியே.

"ரியன்ஜி - இதென்ன? அப்பா!" என்றான் ஸ்டீபனும். "என்தம்பி.
அறியாதகுழந்தை! நிரம்ப சாது! அவன் இரத்தம் புல்லிற் சிந்தியிருக்கி
றது. மஹாப்பிரபோ எனக்கு நியாயம் கிடைக்கவேண்டும்" என்றான்
ரியன்ஜியும். "யார் அவனைக்கொன்றது? ஓர்ஸினிதான் அவனைக்கொன்
றிருக்கவேண்டும். உனக்கு நியாயம்கிடைக்கும்".

ரியன்ஜியோ தன் தம்பியின் முகத்தில் உதிரம் ஓடுவதை உற்றுப்பார்
த்து, "நியாயம் நியாயம்", என்று கத்தினான்.

வந்தவர்கள் இவ்விதக்கொலைநேரிடுவதைத் தினமும் கண்டவர்களாயி
னும் அவர்கள் மனமும் உருகிற்று. அவர்களில் மிக அழகுள்ள ஒருவன்
கத்தியை உருவிக்கொண்டே கொலன்னா சமீபம்வந்து ஓர்ஸினிதான் இவ்
விதக்கொலை செய்திருக்கவேண்டும். அந்தக்கொலைக்காரனைத் தொடர்வோம்
என்றான்.

"ஏட்ரியா, நாம் வெகு தூரம்வந்துவிட்டோம். இனிப்போவது அபா
யத்துக்கிடமாம்" என்றார் பெரிய கொல்லன்னாவும்.

இதற்குள் முன்னால் துரத்திக்கொண்டு போனவர்கள் திரும்பினார்
கள். ஸ்டீபன் அவர்கள் தலைவனைப்பார்த்து உன்னுடைவீரத்திற்கு மெய்ச்சி
னோம். இச்சிறுவனை யார்கொன்றது? அவன் நமது கட்சிக்காரனாயி
னனே" என்றார்.



"யார்? அந்தச்சிறுவனா? அப்படியானால் ஏன் அவன் மாரிடினோ
வோடிருந்தான். அந்தத்தப்பிதத்துக்குத் தகுந்த சிக்ஷைநடந்தது. ஓர்ஸி
னோவைச் சேர்ந்தவனென்று எண்ணி நான்தான் அவனைக்கொன்றேன்"
என்றான்.

"நீயா கொன்றாய்! மஹாப்பிரபோ, ஸ்டீபன்துரையே!! எனக்கு நி
யாயம் கிடைக்கவேண்டும்" என்று கர்ச்சித்தான் ரியன்ஜியும்.

"ஐயோ! பாவம்!! நான் ஓர்ஸினோவாயிருந்தால் தண்டிக்கிறேனெ
ன்று சொன்னேன். நடந்தது வேறாய்விட்டது. அதற்காக விசனப்படுகி
றேன். இதற்குப்பதில் வேறு ஏதாவது உதவிசெய்கிறேன்" என்று மிகவும்
பச்சாத்தாபத்துடன் சொன்னார் பெரியவரும்.

"இந்தா, இதை எடுத்துக்கொள். உன்தம்பி ஆத்மா பாத்தையடையும்
படி ஜபம்பண்ண உதவட்டும்" என்று ஒருபை பொன்னை ரியன்ஜி பக்கத்திற்
போட்டுவிட்டுத் தந்தையைப்பார்த்து, "அப்பா, நாம் படவண்டை சீக்கிரம்
போகவேண்டும்" என்றான் கொலன்னா புத்திரனும்.

"சரி, யாராவது இருவர் பிணத்தண்டை யிருக்கட்டும்; என்ன துக்க
சம்பவம்! ஏன் இப்படிநேரிட்டது" என்றுசொல்லி எல்லாரும் வந்தவழியே
திரும்பினார்கள்.

ஏட்ரியனோ, ரியன்ஜிக்கு ஆறுதல்சொல்லச் சிறிது நின்றான். பெரிய
வரும் கூப்பிடவே "நான் உனக்குச் சகோதரனாயிருக்கட்டும். உன்னைப்போ
லும் எனக்கு ஒரு சகோதரன் வேண்டும்" என்று சொல்லிப் பிரிய மனமில்
லாமலே அழுது கொண்டே ஏட்ரியன் மற்றவர்களோடு சென்றான்.

ரியன்ஜியோ பதில் சொல்லவுமில்லை, ஏட்ரியன் சொன்னது அவன்காதி
லேறவுமில்லை. பெரியராஜ்ஜியப் புரட்சிக்குக்காரணமான மனோராஜ்ஜியங்
களில் மூழ்கி யிருந்தான். கூடவிருந்தப் பட்டாளத்தார் இருவரும் தங்கள்
கவசத்தைப் பாடையாகக் கட்டவும் திடீரென்று நினைவு வந்து அவர்களை
அப்புறம் போகச் சொல்லி இரத்தம் ஒழுகும் தன் தம்பியின் தேகத்தை
மண்ணோடு சேர்த்துக் கட்டிக்கொண்டான்.

சிறுவன் விழும்போது கையில் வைத்திருந்த பூமாலை இன்னம் அவன்
கையினின்றும் நழுவவில்லை. அதைக் கண்டதும் ரியன்ஜிக்குத்தன் ஒரே தம்
பியின் நற்குணங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்து விட்டன. "ஐயோ
தம்பீ! தம்பீ! நமது தாயாரை இனி நான் எவ்வாறு காண்பேன்! இரவையும்
தனிமையையும் எவ்வாறுசகிப்பேன்! கொலையாளி - கோலன்னா வானதனால்
நியாயம் கிடையாதாம்-தம்பியின் இழவிற்கா இந்தப்பணம்-அவர்களிடத்தில்
நியாயம் கிடையாதாம்" என்று சொல்லிப் பிணத்தைக் குனிந்து பார்த்து
முணுமுணு வென்று சிறிது ஜபித்து முகம் வெளுக்க எழுந்து நின்றான். அவ்
வாறு ஜபித்து எழுந்ததும் ரியன்ஜி வேற்றுமனிதனாய் விட்டனன்.

தம்பிமரணத்தோடு அவன் வாலிபமும் போய்விட்டது. தம்பி மரணம் நேரிடாவிடின் பின்னால் ரோமாபுரியை மீட்டவன் லீண்மனே ராஜ்ஜியக்காரனாகவும் பிட்ராக்குக்குச் சரியான கவியாகவும் வித்துவானாகவுமே யிருந்திருப்பான். அதனால் தேசாபிமானம் கனவாயிருத்தலின்றி மெய்ப்பொருளாய் நின்று கொழுந்து விட்டோங்கிற்று. அப்போது பழிக்குப் பழிவாங்குமெண்ணம் அதற்கு நீர்பாய்ச்சியது போலாம். அதுவேரூன்றித் தழைத்தோங்கி யொருவிதத் தெய்வீகத்துவத்தையும் அடைந்தது.

---

முதலதிகாரம் முற்றிற்று.

க. கிருஷ்ணசாமி ஐயர்.

## ஆசார விளக்கம்.

---

### சூத்திரம்-3.

இந்நூ லருக்க னெனவுல கெங்கு
மன்னுக மறுசொன் மருவுழி யாடி
வண்ணக் கூட்டொளி நண்ணுத லொத்தே.

(இ-ள்.) இந்நூல் = ஆசார விளக்கமெனப்பெயரிய விந்நூல், உலகெங்கும் = தமிழ் வழங்கும் நிலமெங்கும், அருக்கனென = இருளை நீக்கிப் பொருள்களைத் தோற்றுவித்துச் சுகமடையச்செய்துபகரிக்கும் பகலவன் போல, மன்னுக = (அறியாமையான் வருந்துன்பங்களை யஃதோட கற்றிச் சதா சாரங்களை விளக்கி இகபரமோக்க சுகங்களை யெய்தச்செய்துபகரித்து) நிலைபெறுக ; எ-று.

இரட்டுற மொழிதலென்னு முத்தியான் இந்நூல் = தேசம் ஜாதி மதங்களுக்குரித்தாய்ச் சிறக்காது மானுடரனைவர்க்கும் பொதுவாஞ் சிறப்பிற்றாகிய இந்த நூற்பொருள், மறுசொன் மருவுழி = வேறு பாடையுருவொடு தோன்றுமிடத்து, வண்ண வாடிக்கூட்டு ஒளி நண்ணல் ஒத்து = பலவண்ணக்கண்ணாடிகளானமைத்த கூட்டின்கண் சார்ந்த சார்ந்தபக்கலுள்ள வாடி வண்ணத்தொடு பொருந்தி விளங்குழி ஒளிதன் பயனாகிய விளக்க லொன்றையே செய்தல் போன்று இந்நூற்பொருளும் பல் வேறுபாடைகளிற் சார்ந்து அவையிற்றினுருவொடு விளங்குழிக் கருத்தானும் பயனானும் வேறுபாடின்றியே, உலகெங்கும் = பூவுலகின் கண்ணுள்ள எல்லாத் தேயங்களினும், அருக்கனென மன்னுக = பூவுலகநிலம் விளங்குந்தகையனேயாயினும் இந்தியா எகிப்து பிரான்சு இலந்தன் ஆத்திரேலியா முதலிய தேயங்களிலொரே காலத்துத் தோன்றாது தேயவேறுபாட்டிற் கிணங்கக்கால வேறுபாடுடைத்தாய்த் தோன்றும் பகலவனொளி போலப் பல்வேறு தேய பாடைகளினும் காலாந்தரத்திற் சார்க. நூல் என்ற பதம் நூற்பொருளுக்காதலான் ஆகுபெயர்.



இந்நூற்பொருள் நன்னூல் தொல்காப்பிய முதலியனபோலத் தமிழ்ப் பாடை யொன்றற்கே சிறப்பிற்றாகாது ககோள பூகோள கணித நூல்களைப் போல (தேசம் சாதி மதங்களுக்குப் பொதுவாவதோடு, பாடைகட் கெல்லாம் பொதுவாம் விடைய முடைத்தாதலானும், பற்பல தேயங்களின் ஆசாரங்களை நுவன்று இது நல்லது இது தீயது எனக்கூறலானும், தேசகன பேதம் பற்றி யாசார பேதமாதற் கவசியங்கூறலானும், இஃதைப் பல பாடைகளிற் செய்து உலகநிலம் பரவச்செய்ய வேண்டுமென்பது ஆக்கியோன் கருத்தாதலானும், அங்ஙனம் பயன் படுமாறு ஒளி யொன்றே பல வண்ண வாடிக் கூட்டின்கண் வைகியக்கால் ஒரு பக்கலுள்ள சிவப்புக் கண்ணாடியோடு சேர்ந்து சிவந்தவுருவொடும், பச்சையத்தத்துப்பட்டுப் பச்சை மேனியொடும் பொன்னிறவாதரிசனத்துற்றுப் பொன்மை யெழிலொடும், இவ்வணஞ் சார்ந்த சார்ந்த தருப்பண நிறத்தொடும் பல் வேறு வகைப்பட்டு விளங்கினும், விளக்குதற்றொழில் வேறு பாடின்றி யொன்றேயாதல் போன்று இந்நூற்பொருளும் பல வேறு பாடைகளிற் சார்ந்து அவையிற்றினுருவொடு விளங்கினும் கருத்தானும் பயனானும் வேறு பாடின்றி விளங்குந் தனகத்தாம் என்றதூஉம், மறுசொன் மருவுழிப் பொருள் வேறுபாடின்மை யுணர்த்தப் போதரும், அஃது ஒரு காலத்துப்பல் வேறுருவடைதற்குவமை. வேறுபட்ட காலங்களிற் (வேறுபட்ட பாடைகளிற்) றோன்றுவதற்கு அஃது வமையாகாது; அதான்று, காலாந்தரத்திற் றோன்றுவதை இந்நூலிற் கூறுவதெற்றுக்கு? இப்பொருள் வேறு பாடைகளிற்றோன்றின் அந்நூல்களினவை வழங்கு நிலன் கூறலே சாலும் என்பார்க்குப்பல வேறு தேயங்களிற்பல வேறு காலங்களிற் றோன்றினும் தோன்றும் பகலவன் ஒருவனேயாதல் போலப் பல வேறு காலங்களிற்பல வேறு தேயங்களிற் பலவேறு பாடைகளிற்றோன்றினும் அங்ஙனந் தோன்றுவது இஃதொன்றேயாகலின் அவ்வினுக்கட்குடனின்றென்றுணர மறுப்பான் வேறுவமை யெடுத்து "அருக்கனெனச் சார்க வுலகெங்கும்" என்னப்பட்டது.

வேறுபாடை யுருவொடு தோன்றுமாறு செய்வார் தங்கருத்தையுமிந்நூலுட் கலவாதுள்ளவாறே பொருள்வேறுபடாது செய்க. தங்கருத்தைக் கூறவேண்டிற் றங்கருத்தாக வேறு தோன்றக்கூறுக. ஓதுவா ரிந்நூற்பொருளிஃதென் றுள்ளவாறுணர்தற்பொருட்டு என்றுரைப்பான் "மறுசொல் மருவுழியாடி வண்ணக்கூட்டொளி நண்ணுதலொத்தே" என்னப்பட்டது. ஆக்கியோனே உரைவரைந்ததூஉந் தன்கருத்து வேறாகாமைக்கே. இஃது இருசூத்திரவியல்பிற்று மொருசூத்திரம்.

கருத்து.

இந்நூல் தமிழ்நாடெங்கும் அருக்கனென அறியாமையை நீக்கி ஆசாரங்களை விளக்கி நிலைபெறுக இந்நூற்பொருள் மறுசொன் மருவுழிப் பல்வண்ணவாடிக் கூட்டொளி போற்பொருள் வேறுபாடின்றியே அருக்

கன்போல வேறுபட்டதேயங்களில் வேறுபட்டகாலங்களிற் றோன்றியுலகெங்குஞ் சார்க. (எ - று) இந்நூற்பொருள் அருக்கனென வேறுபட்ட காலங்களில் மறுசொன்மருவுழிப் பல்வண்ணவாடிக் கூட்டொளியொத்துப் பொருள்வேறுபாடின்றியே உலகெங்குஞ்சார்க என்பது மொன்று.

## சூத்திரம் - 4.

### அவையடக்கம்.

தெளிவுற வொன்றுந் தெரிந்தில னேனும்
பிறர்நயம் பேணிப் பகர்தலிற் குணத்தைக்
கருதி மிருகக் கழிமதங் கொளல்போ
லேற்ப ரென்சொலு மெழிற்புல வோரே.

(இ-ள்). தெளிவுற் வொன்றுந் தெரிந்திலனேனும் = யான் ஐயந்திரிபின்றித் தெளிவு பொருந்தும்படி எதுசெயல் பயனொடு ஆசாரமொன்றுந் தெரிந்திலனாயினும், பிறர்நயம் பேணிப்பகர்தலின்=அநேகர் சதாசாரங்களைத் தெரியாமலும் தெரிந்தும் விபரீதபுத்தியாலவைகளை யவமதித்தும், விகற்பவுணர்வினராற் கலக்கப்பட்டையமெய்தியும் தாமே அசிரத்தை வைத்தும் அவைகளை யநுசரியாது பல துன்பங்களையடைந்து இம்மை மறுமைச் சுகங்களைத் தாமிழத்தலோடு தாமுறைபதிக் கன்னுறை பகை யொருவல் நட்பென்று முத்திறத்தினர்க்குந் தீங்கிழைத்த லெக்கிப்பிரிந்து அவர் நன்மையடைய வேண்டுமென்று விரும்பிக்கூறுதலான், குணத்தைக் கருதிக் கழிமிருகமதங்கொளல் போல்=நிடேதிக்குந் தன்மைத்தாகிய மான்மதத்தை அதன் நல்லவாசனையாதி நற்குணத்தைவிரும்பிப் பயன்றரும் பொருளாக அங்கீகரிப்பதுபோலே, என்சொலு மேற்பர் உண்மையில் நிடேதிக்கத்தக்க எனது புன்சொல்லையும் (பிறர் நயம்பேணிய உபகாரங் கருதிப்பயன்றரு மொழியாக) அங்கீகரிப்பர், எழிற்புலவோர் அழகிய அறிவான் முதிர்ந்தோர், எ-று.

### பதசாரம்.

ஜீவர்தெளிவுற வொன்றையும் தெரிதலசாத்தியம் அறிவுவிருத்தியாமளவுமறியாமையும் விருத்தியாகலின்*உதாரணமாக ஒருவன் வேப்பமரத்தைக் கண்டு மரம் என்றுமாத்திரம் அறியின் அஃதுண்மையின் மரமாகலின் இஃதுதிப்பொதுப் பெயராள்வழக்கத்தான் அவனறிந்தவறிவு ஐயவிபரீதங்களினின் பாற்படாத தெளிவாகலின் மரம் என்றதுயாது காரணம்பற்றி யென்றவையம் உண்டாகாது, அவன் பூட்டேற்றப்படும் அறியாமையு மவற்கின்றாம். வேம்பிற் பட்டுவருங்காற்று தொத்து ரோகங்களையும் விடங்களையும் நிவர்த்திக்கும் என்று செவியுற்றானொருவன் யாதுகாரணத்தால் அக்காற்றுக்கு அக்குணங்களுண்டாயின வென வறிந்தார் பால் விசாரித்து இலை பெருகிய



வேம்பு எல்லாவித நச்சணுக்களையும் விசேடமாய்த் தன்பாற் கொண்டு தொத்துரோக விஷாணுக்கள் நஞ்சையும் விஷங்களையு மாற்றும் அமிர்தம் போன்ற ஜீவவாயுவை நிசுவாசிப்பதனால் அந்நிசுவாசத்தோடு கூடிய காற்றிற்கு மக்குணங்க ளுண்டாயின வெனத்தேர்கின்றான். அங்ஙனந் தேர்ந்தும், தொத்துரோக விஷாணுக்க ளெத்தகையன? சர்ப்ப விஷாணுக்க ளெத்தன்மையன? அவைகள் யாது காரணங்களால் எவற்றினின்றுந் தோன்றுகின்றன? அவைகளின் நச்சுத்தன்மைகளை வேம்பின் நிசுவாசத்தோடுகூடிய காற்று எங்ஙன மாற்றும்? தொத்துரோக அணுக்கள் விஷாணுக்கள் வேம்பின் நிசுவாச அணுக்கள் மனித சரீரதாதுக்களில் என்ன பேதங்களை யெப்படிச் செய்கின்றன? என அவைகட்குக் காரணங்களை விசாரிக்கின் அவ்வினாக்களுக்குத் தெளிவுற விடையிறுக்க எத்துணை நூல் வல்லுநரு மிடர்ப்படுவர் ஒருவாறு விடையிறுக்கினுங் காரணத்துக்குக் காரணம் விசாரிக்கிலென்னாம்? இங்ஙனமே வேம்பின் வேர் மது உரி இலை கொழுந்து சீர்க்கு பூந்தேன் பிஞ்சு பிஞ்சின்பால் வித்து பிண்ணாக்கு நெய் சிராய்ப்புகை பழம் பிசின் பூவாடைக்காற்று நிழல் களுக்கு ஒவ்வொன்றுக்கும் பல்வேறு குணங்களுள்ளன. அக்குணங்களுக்குக் காரணங்களையும் அக்காரணங்களுக்குக் காரணங்களையும் தெளிவாய் விசாரிக்கப் புகின் தாபர, வைத்திய, இரசாயன சாத்திர நிபுணர்களுக்கும் எத்துணை யறியாமை வந்தேறும்! இப்பேதங்களெல்லாம் பஞ்ச பூதப்பகுப்பிற்படும் ஒடுங்கு முறையிலவற்றிற் சூக்குமம் குணதத்துவம் அதனிற் சூக்குமம் மூலப் பிரகுருதி அதனிற் சூக்குமம் கலாதத்துவம் அதனிற் சூக்குமம் ஜகத் பரம காரணமாகிய மாயை அதற்காதாரம் சக்தி அதற்காதாரம் சத்து ஆம். அவை தோன்று முறையில் சத்து மகாமகா சூக்குமம் சக்தி மகா சூக்குமம் மாயை சூக்குமம் கலாதத்துவம் அதனிற்றூலம் அதனிற்றூலம் மூலப்பகுதி அதனிற்றூல மர்காயம் அதனிலொன்றுக்கொன்றதி தூலம் வாயு அனல் நீர்மண் ஆம். இவைகளினிருக்கைகளைப் பற்றிப்பலர் பலவாறு கூறுகின்றனர். (1) இவைகளிற் றனக்குக் காரணந் காரணங்களை நோக்க ஆகாய மிகத்தூலப் பொருள். அதைப்பற்றி எத்துணை நுணுகி விசாரித்தாகிக்கினும் அதனிலைமையித் தன்மைத் தெனத் தெளிவுற நிதானித்த லருமையாம். காரணத்தை நோக்க வதிதூலப் பொருளாகிய ஆகாய நிலையை மனத்தறிதலருமையாகிய அதில் நுட்பத்தினுட்பமாகிய பொருள்களின் றன்மைகளை யெங்ஙனந் தெளிவுற நிதானிப்பது? அத்தகைச் சூக்குமப் பொருள்களினின்று தோன்றித் தூலித்துச் சப்தேந்திரியத்துக்கு விஷயமாய் அதனிற்றூலித்துச் சத்தபரிசங்களுக்கு விஷயமாய் அதனிற்றூலித்துச் சத்தபரிசரூபங்களுக்கு விஷயமாய் அதனிற்றூலித்துச் சத்தபரிசரூபரசங்களுக்கு விஷயமாய் அதனிற் றூலித்து சத்த பரிசரூபரசகந்தங்களுக்கு விஷயமாகி வான்கால் அனல் புனல் மண்ணெனப் பேர்பூண்ட பூதபஞ்சி காரணங்கள் அவையிற்றிற் றோன்றிய நூற்றிருபான்

உபரசச் சத்துக்களாகிய லோகபேதங்கள் (2) வாயுபேதங்கள் அவையிற்றின் சேர்க்கைகளிற் றோன்றிய அநந்த பேத சத்துக்கள் பன்னிரு தோடவணுக்கள் அவைகளின் நூனுதிக்க சமசங்கர பேதங்களோடு தோன்றிய (வித்துவியர்வை முட்டை பைகளிற் றோன்றிய வுயிரோடுகூடிய வுடல்களில்) தாவரங்கள் பத்தொன்பது நூறாயிரம் பேதங்கள் அவற்றில் ஒவ்வொன்றின் ஒவ்வோர் அங்கத்தினு மமைந்தவணுக்களின் பேதங்களையும் தெளிவுறவறிய முயலில் ஒவ்வொருகாரணம் விசாரிக்குங்காலும் அறியாமை தோன்றியநந்த வறியாமை கணக்கிட நேரிடும். இங்ஙனமே ஆசாரத்தினும் "நல்லாகாரங்கொள்க, எனில் எது எது நல்லாகாரம்? அப்பொருள்கள் எத்தகையணுக்களின் கூட்டங்களாலாயின? அவ்வணுக்கள் எங்ஙனந் தோன்றின? என்பனவாதிய சங்கைகள் நிகழ்ந்துழித் தெளிவுற விடையிறுக்க விடர்ப்பாடுண்டாமென்பது துணிவு. இங்ஙனமெத்தகை நூல் வல்லுநராலுமறிதற் கருமையாங்காரண காரியங்கண் முற்றும் யானெங்ஙனம் தெளிவுறவுணர வல்லுநனவன் என்பான் "தெளிவுற வொன்றுந் தெரிந்திலனேனும்" என்றும்

இங்ஙனம் ஒருபொருள் ஓர் ஆசாரம் பற்றிக்காரண காரியங்களைத் தெளிவுறவோராதான் உலகிற் கவசியமாகிய சகலாசாரங்களையும் முற்றுமொரு பொருளோடு நீக்கமின்றி நின்றுரைத்த இருடிகளுரைக்காத வெது செய்து பயன்றோன்ற விளக்கிக் குயிறல் முற்று மேலாமை ஆகலிற்கூறுவாளா விருத்தலே சாலு மெனில், அற்றன்று, யான் எற்குத்தோன்றியவாறு புகலாது ஆகமாதி நூல்களினுதாரம் பற்றி என்னளவு ஆசார நூல்களை யோதி யுக்தி யநுபவங்களோடொட்டி யுணராதாருலகின் மிகுத்துளராதலினன்னவர் சுகம் பலமாதி நன்மையடைதலை வேண்டி நுவல்கின்றனன் என்பான் "பிறர் நயம் பேணிப்பகர்தலின்" என்றும்,

கத்தூரி தள்ளத்தக்க மிருகமதமாயினும் துர்வாடைகளைப் போக்கி நல்வாடை தந்து நோய் கெடச்சுகம் பயப்பது போல இந்நூலுங்கல்வி கேள்வி சாரமறியாதார்க்குத் துராசாரங்களைப் போக்கிச் சதாசாரந்தந்துன்பகல வின்பம் பயப்பதா முபகாரத்தைப்புரிய வேண்டுமென்னு மாசையொடு செய்தலின் இனிதி னங்கீகரிப்பர், "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு" "தாமின்புறுவதுலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்," "அருட்செல் செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள" என்ற நாயனார் வாக்கியங்கட் கிலக்கியமாம் அழகிய அறிவான் முதிர்ந்தோர் என்பான் "பிறர் நயம் பேணிப்பகர்தலிற் குணத்தைக்கருதி மிருகக்கழி மதங்கொளல் போலேற்ப ரென்சொலு மெழிற்புலவோரே" என்றுங் கூறப்பட்டன. எனவே மெய்ப்பொருள் காணுதார் அறிவிலார், தாமின்புறுவதுலகின் புறக்காணுதார் கல்வியிலார், அருட்செல்வமிலார் இழிஞர், ஆகலின் அல்லாராம்



அன்னவர் அறியாமை பொறாமை அருளின்மை காரணமாகச் சாற்றுஞ் சொற்கள் கணிக்கத்தகாதன வென்ப.

பலர் பலவாறு கூறுவன:—சாருவாகர் வான்றவிர நான்கு பூதங்களுளவென்பர். மிகப்புத்தி சாலிகளெனக் கொண்டாடும் புத்தரும் அங்ஙனமே பூத நான்கென்பர். தார்க்கிகர் ஆகாயம் வரை கொள்வர். சாங்கியர் மூலப்பகுதி வரை யொப்புவர். ஏகான்ம வாதிகள் மாயாரூப ஜகத்து இல்பொருள் கயிற்றரவென பிராந்தியாலிருப்பதாய்த் தோன்றுகின்றதென்பர். பிரகிருதி ரூபப்பிரமவாதிகள் பிரகிருதி வரை யொப்புவர். பல அநுபவ சாத்திரிகள் (Scientists) ஆகாயம் (Ether) வரை யொப்புகின்றனர். ஹெர்பெர்ட்ஸ்பென்சர் (Herbert spencer) பொருள் (Matter) செயல் (Motion) களைக்கூறி அவைகளுக்குக் காரணமாகிய சக்தி (Force) மனதுக்கெட்டாததாய் அளவற்றதாய் ஆதியந்த மற்றதாயிருக்கிறதென்று சக்தியை மாயையோடபேதமா யொப்புகின்றனர். இங்ஙனஞ் ஜகத்காரணங்களைப் பற்றிய வபிப்பிராயத்திற் பல வேறுபாடுகளுள்ளன.

(2) உபரசச்சத்துகள். Metals.

(3) H. Spencor. "All these phenomena from their great features even to their minutest detail are necessary results of the persistence of force under its forms of matter and motion. "That which persists unchanging in quantity," but ever changing in form, under these sensible appearances which the universe presents to us, transcends human knowledge and conception, is an unknown and unknowable power which we are obliged to recognise as without limit in space and without beginning or end in time."

* சித்தாந்தசாகரம் "அறிவெவ் வளவிற் றறியா மையுமற், றறிதொறுந் தேவை யதிகப் படலான்"

ஆக்கியோன்பெயர்=சிவஞானயோகி

வழி=ஆகமாதியைந்திறப்படு நூல்களின்வழி

நுதலியபொருள்=நன்னடைகள்

நூற்பயன்=அறப்பொருளோடு இம்மை மறுமை மோக்கசுகங்கள்.

நூற்பெயர்=ஆசாரவிளக்கம்.

அதிகாரிகள்=சுயநன்மைபர நன்மைவிரும்பும் உலகிற் சமயத்துட்பட்டோருஞ் சமயத்துட்படாரும் ஆனமானுடரனைவரும்.

விகற்பம்=வெதுபலன்களை விளக்கிக்கூறல்

எல்லை=தமிழுருவிற்று யிந்நூற்குத் தமிழ்நாடுகளெல்லாம் எல்லை. பொருளா லுலகிற்குப் பொதுமையாதலின் மானுடர் வியாபித்த உலகமுழுதும் எல்லை.

விருதை - சிவஞானம்.

பாயிரமுற்றிற்று.

# ருக்குமணி சரித்திரம்.

## அத்தியாயம்-I.

விளம்பி வருஷம் பங்குனிமீ 15உ இரவில் மாயவரம் ரயில்வே ஸ்டேஷனில் கும்பகோணம் திருச்சிராப்பள்ளி மதுரை முதலிய இடங்களிற்குப் போகவேண்டியதற்காக, அநேகர் காத்துக் கொண்டிருந்தார்கள். போக வேண்டிய இடங்களுக்குச் சீட்டு வாங்கி வெகு நேரமாய்விட்டது. புகை வண்டி வரவில்லை வரவில்லையென்று அநேகர் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருசார், வண்டி தண்டவாளத்தினின்றும் நழுவி விழுந்து விட்டதோ வென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒருசார், வண்டிகளை இழுக்கும் நீராவியந்திரம் கெட்டுப்போய் விட்டதோவென்று பேசிக்கொண் டிருக்கிறார்கள். இப்படிப்பலர்கூடிப் பலவிதமாய்ப் பேசிக்கொண்டிக்கையில், வண்டி வருமோசைகேட்டது. பின்பு இரண்டு நிமிஷத்துக் கெல்லாம் வண்டிவந்து விட்டது.

உடனே, அநேகர் வண்டியினின்று மிறங்கினார்கள். அநேகர் வண்டியிலேறினார்கள். இவ்விதமாக அவ்விடத்தில் மிகக்கூட்டமும் பேரொலியுமாருந்தது. இப்படியிருக்கையில் **சுப்பையர்** என்று பெயர் பெற்ற ஓர் அந்தணர் வண்டியின் ஒரு கதவை அதன் பிடியை யழுத்தித்திறந்தார். உள்ளே **காதர் மஸ்தான்** என்னும் துலுக்கன் அவன் மனைவி இரண்டு குழந்தைகள் ஆக நான்கு பேர்களே உறங்கிக் கொண்டிருந்தார்கள். சுப்பையர் வண்டிக் கதவைத் திறந்தவுடன் மஸ்தான் சரேலென விழித்துக்கொண்டு, கதவைப் பிடித்து இழுத்துச் சாத்திக்கொண்டான்.

"யார் ராலே கதவைத்தறடா" என்றார் சுப்பையர்.

"போங்காணும் போரீரா ஒரு அறைகுடுக்கட்டுமா" என்றான் மஸ்தான்.

"யேண்டாலே படவா என்னை நீ அறையறதா."

"சீச் சீப்போம்."

"ஒனக்குத்தான் காணியாச்சியோடா இந்த வண்டி."

"ஆமாம் போங்காணம் போம்."

"ஒரு வண்டிக்கி எட்டுப்பேர்னுடா ஒக்காரணம்."

"பொகு ருல் பார்த்தவர்தான் போம்."

இப்படி ஒருவருக்கொருவர் வார்த்தை தடித்தது. சுப்பையருங்கூட இருந்த அவர் அம்மாஞ்சி கிருஷ்ணசாமிஐயரும், கதவைப் பலமாகப் பிடித்திழுத்து உள்ளே போக, அத்துலுக்கன் அவ்விருவரையும் பிடித்துக் கீழேதள்ளி விட்டான். உடனே சுப்பையருங் கிருஷ்ணையருமாக ஒருங்கே,



'ஏ போடர் போடர்' என்று கூவினார்கள், கூவினவுடன் சேவகன் அந்த ஸ்டேஷனுக்கு அதிகாரி, வண்டி யோட்டுபவன், இன்னு மநேகர் கூட்டமா யோடி வந்தார்கள். வந்து அந்தப் பிராமணரிருவரையும் அதே வண்டியிலேற்றி விட்டு அவர்கள் எல்லோரும் போய்விட, வண்டியும் மாயவரத்தை விட்டுப்புறப்பட்டு விட்டது.

வண்டியிலுட்கார்ந்து கொண்டிருந்தவர்கள் இரண்டு மூன்று மைல் போகிறவரைக்கும் ஒருவருக்கொருவர் பேசவில்லை. பிறகு சுப்பையர் அம் மௌனநிலையைப் பின்வரும் வார்த்தைகளினால் மாற்றுவித்தார்.

"எந்தூருக்குபோரீர் ராவுத்தரே"

"போய்யாபோ, சென்னப்பட்டணத்திலிருந்து வாரேன் அரைவிநாடி தூங்கலேய்யா. எந்த ஊருக்கு நீபோரேங்காணும்"

"மதுரைக்கிப் போரேனப்பா"

"என்னாத்திக்கி"

"ஒரு கல்யாணவிஷயமா ஏற்பாடுபண்ணப்போரேன், அஞ்சாறுநாள் அங்கேருக்கணம். என்னகஷ்டம்போ"

இப்படி இவ்விருவரும் பேசிக்கொண்டு எத்தனையோபொய்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அத்துலுக்கன் மாயவரத்துக்கடுத்த சீர்காழியிலிருந்து புறப்பட்டு வந்தவன், சுப்பையரா தஞ்சாவூருக்குத்தான் போகிறார். அதிகதூரம் தாங்கள் புகைவண்டியிலேறிப் போவதாகச் சொல்லிக்கொண்டால் தங்களுக்குப்பெருமையென் றெண்ணிக் கொண்டார்கள். இதுநிற்க. மஸ்தான் தனது சட்டைப்பையிலிருந்து ஒரு சுருட்டை யெடுத்துவாயில் வைத்துக்கொண்டு அதைக்கொளுத்தினான். உடனே அம்மாஞ்சி கிருஷ்ணையர் தலையில் அடித்துக்கொண்டு,

"அத்தான் அப்பவே சொன்னேனே, துலுக்கப்பய வண்டிலே ஏறுதேன்னு, கேட்டியா?".

உடனே சுப்பையர் "ப்ரஷ்டப்பயலே சுருட்டுக் குடிக்காதடா" என்றார்.

மஸ்தான் கொல்லென்று சிரித்தான். பிற்பாடு சுருட்டை எறிந்துவிட்டு "எறிந்திட்டேங்காணும் சும்மாரும், கத்தாதீம்" என்றான்.

"எந்த டேஷன்லே எறங்கரேப்பா" என்று சுப்பையர் மஸ்தானைக் கேட்டார்.

"கும்போணத்தில் எறங்கிமேக்காலிக்கிப் போறேன்"

"ஒங்கூர் லேல்லாம் வெளச்ச எப்புடி"

"என்னா வெளஞ்சா என்னாபோ, 'வரிபோட்டுல்ல ப்ராணத்தைத் வாங்கிட்டான்".

அம்மாஞ்சி கிருஷ்ணையரோ இப்படிச் சுப்பையரும் மஸ்தானுமாகப் பேசிக்கொண்டிருக்கையில் வெற்றிலைப் பெட்டியைத்திறந்து வெற்றிலை போட்டுக்கொண்டு எச்சில் துப்புவதற்காக எழுந்திருந்து மஸ்தான் மனைவியிருந்த பக்கத்துக்குச் சென்றார். கிருஷ்ணையர் சரீரம் சிறிது ஸ்தூலமாயிருந்ததனால் எவ்வளவு தேகத்தை ஒடுக்கிக் கொண்டு போனாலும், அவரது தேகம் மஸ்தான் மனைவிமேற்பட்டு விட்டது; உடனே அவள் எழுந்தாள். மஸ்தானும் அதைப்பார்த்து விட்டான். அவர் செய்ததை ஒரு பெரிய அநியாயமாக எண்ணி “ஏய் நீ பாப்பானா? கோஷாமேலே உள்ளறயோடா” என்று கூவினான். கிருஷ்ணையர் நடுநடுங்கிப்போய்க் கால்கை உதற மயிர்க் கூச்சலெடுக்க “நான் ஒடுங்கிக்குண்டு தானே போனேன்” என்று மெல்லச்சொன்னார். எச்சிலையும் முன்னமே விழுங்கிவிட்டார். சுப்பையர் எழுந்து அம்மாஞ்சியைப் பிடித்துக் கொண்டு “தான் என்னமோ தெரியாத்தனமாப் பண்ணிவிட்டான், விட்டுடுசொல்றேன். ஒக்காரு” என்று மஸ்தானை நோக்கிச் சொல்லிவிட்டு, கிருஷ்ணையரையும் தான் கண்டிப்பதாக அவன் நினைத்துக்கொள்ளட்டுமென்று “ஏ க்ருஷ்ணா நாளைமொதக்கண்டு அப்படியெல்லாம் பண்ணாதே” என்றார் மஸ்தானுமுட்கார்ந்துகொண்டான், புகைவண்டியும் கும்பகோணம் போய்ச்சேர்ந்தது. மஸ்தான் வண்டியைவிட்டுக் கீழிறங்கி அவ்விருவரிடத்திலும் வெகுமரியாதையுடன் விடைபெற்றுக்கொண்டு மனைவி குழந்தைகளுடன் போய்விட்டான்.

ஒரு மணிநேரத்தில் வண்டியும் கும்பகோணம் புறப்பட்டுத் தஞ்சாவூர் போய்ச்சேர்ந்தது. மதுரைக்குப்போவதாகச்சொன்ன அவ்விருபிராமணர்களும் வண்டியினின்று மிறங்கினார்கள். இவர்களிருவரும் இறங்கும்பொழுது வண்டியிலேறுவதற்காக ஒரு சுமங்கலி நிற்க சுப்பையர் மிகவியப்புற்று, “பலேபலே அம்மாஞ்சி நம்மகாரியம் ஜயமாறத்துக்குத் தடையென்ன?” வென்று கத்தினார். வண்டியைவிட்டு இறங்கிச் சீட்டுக்கொடுக்கவேண்டிய இடம்போய்க் கிருஷ்ணையர் வெற்றிலைப்பெட்டியை அவிழ்த்தார். சீட்டு உள்ளேகாணப்படவில்லை. சுப்பையர்மேற் குற்றத்தையேற்றிவிடவேண்டுமென் றெண்ணிக்கொண்டு “அத்தான், இடுப்பிலேவச்சுண்டிருந்தயே டிகட்டைகுடு” என்றார் கிருஷ்ணையர், சுப்பையரோ கிருஷ்ணையரிடஞ் சீட்டைக்கொடுத்ததாகவே சாதித்தார். எவ்வளவுதேடிப்பார்த்தும் சீட்டு அகப்படவே இல்லை. சுப்பையருங் கிருஷ்ணையரும் விழுப்புரமிருந்து தஞ்சாவூருக்குக் கொடுக்கவேண்டிய சத்தத்துக் கிரட்டைமடங்கு செலுத்தினார்கள். ஸ்டேஷன் விட்டு வெளியேவந்து திருவையாற்றுக்கு மாட்டுவண்டி திட்டம்பண்ணிக்கொண்டு இவ்விருவரும் வண்டியிலேறிப் போனார்கள். போகிறவழியிற் பொழுதும்விடிந்தது; சீட்டுக்களும்விபூதிசம்புடத்திற் காணப்பட்டன.

முதலத்தியாயம் முற்றிற்று.

கு. ரா. ஸ்ரீநிவாசன்.



# ஹிரண்மயி சரித்திரம்.

## அத்தியாயம் - ச.

விவாகமான பின்பு தனதாஸன் மனைவியையும் மகளையும் அழைத்துக்கொண்டு தன்னூர் வந்து சேர்ந்தான். நான்கு ஆண்டுகள் சென்றன. புரந்தரன் திரும்பிவரவில்லை. ஹிரண்மயிக்கு அவன் மறுபடி திரும்பி வந்தாலென்ன? வராமற்போனால் என்ன? இரண்டு மொன்றேயாம்.

புரந்தரன் ஏழு ஆண்டுகள் கழிந்தும் வரவில்லையே என்று ஹிரண்மயி சிறிது துக்கமுற்றனள். அவள் மனத்தில், என்னை இன்னும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பதனால் வரவில்லை என்று சொல்வது மிகவும் பொருந்தாததா யிருக்கின்றது; அவன் உயிருடன் இருக்கின்றானோ இல்லையோ, அதுவே சம்சயமா யிருக்கின்றது; அவனைப்பார்க்க வேண்டுமென்று இஷ்டப்படுவதில்லை, இப்பொழுது நான் வேறொருவனுடைய மனைவியாயிருக்கின்றேன், ஆனால் என்னுடைய பால்ய சினேகிதன் ஜீவித்திருக்கட்டும் என்று நான் ஏன் விசாரிக்கக்கூடாதென்று யோசித்தனள்.

தனதாஸன் ஏதோ சில காரணங்களினாற் சிந்தாக்கிராந்தனா யிருந்தான். தினக்கிரமத்திற் சிந்தையும் அதிகரித்துவர, கடைசியிற் கொடிய நோயில் வீழ்ந்தான். சிறிது காலத்திற்குள்ளாகவே அவனுக்கு மரணம் சம்பவித்தது. தனதாஸனது மனைவியும் பதியுடன் அநுமரணம் செய்தாள். ஹிரண்மயிக்கு ஒருவருமில்லை. அவள் பலவிதங்களிலும் தன தாயாரின் கால்களைப் பிடித்துக் கொண்டு இப்பொழுது சாவவேண்டாம் என வேண்டிக் கொண்டாள். ஆனாற் செட்டியின் பத்னி அதனைக் கேட்டாளில்லை. ஹிரண்மயி ஏகாங்கியாய் இப்புவியில் யிருந்திருந்தாள்.

உடன்கட்டை யேறுகையில் ஹிரண்மயியின் அன்னை மகளை நோக்கி, “குழந்தாய், நீ ஏன் யோசிக்கின்றாய்? உனக்கென்னவோ கணவன் ஒருவனிருக்கவே இருக்கின்றான். குறித்த காலத்திற்குப் பிறகு அவனை நீ பார்த்தாலும் பார்க்கக்கூடும். அப்படிப் பார்க்காமற் போகும் பட்சத்தில், நீ இனிப் பாலிகையல்லை, இவ்வுலகில் முக்கியமான துணையென்று சொல்லப்படும் செல்வ மென்பது உனக்கு மிகுதியாயிருக்கின்றது. யோசிக்க வேண்டாம்,” என்றாள்.

ஆனால் அவ்வாசை விபலமாய்ப் போய்விட்டது. தனதாஸனது மரணத்துக்குப்பின் பார்த்தபொழுது அவன் ஒன்றும் செல்வம் வைத்துவிட்டுப்போகவில்லை. ஒரு பெரிய வீடு, சம்சார சாமக்கிரிகள், சில ஆபரணங்கள், இவைதப்ப மற்றெவையுமில்லை. இதைப்பற்றி ஹிரண்மயி விசாரித்தபொழுது, தனதாஸனது வியாபாரத்தில் சில வருஷங்கள் நஷ்டமேவந்ததென்றும், அதை ஒருவருக்கும் சொல்லாமல், அதனால் நேர்ந்த கடன்களைத்

தீர்க்கும்படியான முயற்சியைச் செய்துவந்தானென்றும், கடனடைப்பது அசாத்தியமெனத்தோன்றி அதனாற் சிந்தை அதிகரித்துக் கடைசியில் அவன் மரணத்துக்கு ஏதுவாய் முடிந்ததென்றும் தெரியவந்தது.

இச்சமாசாரம் மற்றைச் செட்டிகளுக்குந் தெரியவர, அவர்கள் ஹிரண்மயியினிடம்வந்து, 'உன்தந்தை எங்களுக்குக் கடன்காரனாய் மரித்துவிட்டான், எங்கள்கடன்களைத் தீர்க்கவேண்டும்' எனக் கேட்டார்கள். ஹிரண்மயிவிசாரிக்கையில் அவர்கள் கூறியது உண்மையென்று தெரியவந்ததன்மேல், தன் யாவத்சொத்தையும் விக்ரயித்து, தகப்பன்பட்டகடனை யெல்லாம் தீர்த்தான். குடியிருந்த வீடுகூடக் கடன்கொடுத்தவர்களின் சுவாதீனமாய்விட்டது. பின்னர் ஹிரண்மயி அன்ன வஸ்திரங்களுக்குக் கூட வழியில்லாமற் பட்டணத்திற்கு வெளியில் ஒரு விடுதியில் தனிமையாய் வாசம் செய்துவந்தாள். அவளுக்குப் பரமோபகாரம் செய்யத் தகுந்தவர் ஆநந்த ஸ்வாமி; அவர் தூரதேசத்தில் இருந்தார். அவரிருக்கும் இடத்திற்கு அழைத்துக் கொண்டுபோவார்கள் ஒருவருமில்லை.

## ஐந்தாம் அத்தியாயம்.

ஹிரண்மயி யௌவனமும் எழிலும் வாய்க்கப்பெற்றிருந்தனள். ஒரு வீட்டில் யாதொரு சகாயமுமில்லாமல் ஒருத்தியாய் இருப்பது சரியாயிருக்கவில்லை. அதனால் அபாய முண்டாகும். களங்கத்திற்குக் காரணமாகும். அவளிருந்த வீட்டுக்குப் பக்கத்துவீட்டில் அமலை என்பவள் வாசம் செய்தாள். அவள் விதவை; அவளுக்கு ஒரு சிறுபிள்ளையும் நாலைந்து பெண் குழந்தைகளும் இருந்தன. அமலைக்கு யௌவன காலம் கழிந்தது. நல்ல நெறியுள்ளவ ளென்று பெயரெடுத்திருந்தாள். ஹிரண்மயி இரவில் அவள் வீட்டுக்குப் போய்ப் படுத்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் ஹிரண்மயி அமலை வீட்டுக்குப் படுத்துக்கொள்ளும் பொருட்டுப்போன பொழுது, அமலை, புரந்தர செட்டி ஊரை விட்டுப்போய் எட்டு வருஷம் கழிந்த பிறகு திரும்பி வந்திருக்கின்றான் என ஊரில் ஜனங்கள் பேசிக்கொள்ளுகிறார்களென்று கூறினாள். அப்பொழுது அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஹிரண்மயிக்குக் கண்ணீர் ஆறாய்ப்பெருகிற்று. அமலைக்கு இது தெரியவில்லை. இந்த வையகத்தில் அவளுக்கு மிகுந்திருந்த கடைசி சம்பந்தமும் அற்றுப்போயிற்று. புரந்தரன் அவளை மறந்து போனான். அப்படி மறவாமல் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருந்த பட்சத்தில் மறுபடியும் திரும்பி வருவதற்கு இடமிராது. புரந்தரன் இப்பொழுது மறந்திருந்தாலென்ன, எவ்வளவோ, ஞாபகம்வைத்திருந்தாலும் லாபம் அவ்வளவே; அவளுக்கு என்ன பயன்? ஆனால் எவனுடைய நட்பை எப்பொழுதும் மனதின்கண் இருத்தி ஞாபகத்துக்குக் கொணர்ந்து நித்தியமும் காலத்தைக் கழித்தனளோ, அத்தகையவன் தன்னை மறந்தானே எனக்கருதி அதனால்



மனோவியாகுல மடைந்தனள். ஹிரண்மயி ஒரு முறையேனும் மறந்தனளல்லள். என் நிமித்தம் இது காறும் தூரதேசத்தில் இருந்தாயிற்று. அன்றியும் அவரது தந்தையும் பரலோகமடைந்தனன். இனியும் ஊருக்கு வராமல் எங்கேபோவது? என்று ஒருசமயம் யோசித்துக்கொள்வதும், மற்றொருசமயம், நான் விபசாரதோஷத்துக்கு உட்பட்டுவிட்டேன். அல்லாக்கால், புரந்தரனது ஞாபகம் ஏன் வந்துகொண்டிருக்கின்றது? என்று தன்னைத்தானே திரஸ்கரித்துக் கொள்வதுமாயிருந்தாள்.

அமலை.—புரந்தரன் என்பவனது ஞாபகம் உனக்குவரவில்லையா? புரந்தரன், இப்பொழுது சிலமாசங்களுக்குமுன் காலதர்மமடைந்த சசீசுதசெட்டியின் மகனல்லனோ? என்றாள்.

ஹிரண்மயி.— ஆமாம், தெரியும்.

அமலை.—அவனே இப்பொழுது மீண்டும் திரும்பிவந்திருக்கின்றவன். எத்தனையோ கப்பல்களின்மேல் எவ்வளவோ பொருள் ஈட்டிக்கொண்டு வந்திருக்கின்றான். கணக்கிடத்திறமன்று. அவ்வளவு செல்வம் இந்த நம்தாம்ரலிப்த நகரத்தில் எப்பொழுதும் எவரும் கண்டதில்லை.

ஹிரண்மயியின் தேகத்தில் இரத்தவேகம் அதிகமாயிற்று, தன்வறுமையை மனதில் நினைத்தாள் பூர்வஸ்திதியையும் ஞாபகப்படுத்திக் கொண்டாள். வறுமையின் ஜ்வாலை அதிமகத்தான ஜ்வாலை; அந்த ஜ்வாலைக்கு இவ்வளவற்ற செல்வம்அவளுக்குக் கிடைக்குமேல் எவ்வளவோ மேலாயிருக்குமல்லவா? இப்படியோசித்துக்கொண்டிருந்தால் யாருக்காயினும்இரத்தவேகம் அதிகரிக்காமலிருக்குமா? அப்படி யாகாமலிருப்பதுஅரிவையர்களுக்குள்மிகவு மரிது. ஹிரண்மயி சிலநிமிஷங்கள் அப்படியே மறந்திருந்தவள் போலிருந்து பிறகு வேறு விஷயத்தைப் பற்றி பிரஸ்தாபிக்கலானாள்; கடைசியில் நித்திரைக்கும் போகும் சமயத்தில், அமலா, அந்தச் செட்டியின் மகனுக்குக் கல்யாணமாயிருக்கின்றதா, என வினவினாள். அமலை, இல்லை, இன்னும் கலியாணமேயில்லையாம் என்று மொழிந்தாள்.

ஹிரண்மயியின் உடம்பு சிலிர்த்தது. அன்றிரவு மற்றொன்றும் பேச்சு நடக்கவில்லை.

(இன்னும் வரும்.)

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

# வாழ்க்கைப்பயன்.

## I-பெருவழக்கு

[303-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

டேகார்டே என்பவர் சாமானிய உலகவாழ்க்கைக்கு வேண்டித் தாம் எடுத்துக்காட்டிய விதிகளை நான்கு பழமொழிகளிற் செறித்துக் கூறுகின்றார். அவையாவன :—(1) தான்தோன்றிவளர்ந்த சமூகத்தில் வழங்கும் சட்டங்களுக்கும் சமயக்கோள்களுக்கும் உட்பட்டிருத்தல்வேண்டும் என்பதூஉம், (2) தான் தொழில்புரியவேண்டிய அமயங்களிற் காலதாமதமின்றித் தன் அறிவாலியன்றவளவு செய்தலேயன்றிக் குறைகூறாது விளைந்தபயன்களைப் பொறுத்துக்கொடல் வேண்டும் என்பதூஉம், (3) ஐம்புலவாசைகளைத்தீர்த்துக்கொள்ள முயல்வதனினும் அவற்றையடக்கி யாளுதலில் இன்பங்காண்டல் வேண்டும் என்பதூஉம், (4) மெய்யறிதலையே தன் வாழ்க்கைத் தொழிலாகக் கோடல்வேண்டும் என்பதூஉமாம்.

ஒரு காலத்திற் சனங்களாற் புகழ்ப்பெற்ற தனது யூபியஸ் என்ற புத்தகத்தில் லிலி என்பவர் தாம் சொல்லக்கருதிய புத்திமதிகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறுகின்றார். "யாட்டுக் குட்டி உறங்குழி உறங்கி வானம்பாடி எழுவுழி எழுக. களிப்பு மேவுக ஆனால் அதன்கண் அமிழ்தியுறுக. முகங்கடுத்தலின்றிப் பொறையுடையோனாகுக. தலைதெரியாது மோதுதலின்றித் தைரியமுடையோனாகுக. நீ உடுக்கும் உடைகள் துய்யனவாயிருக்கட்டும். நீயுட்கொள்ளு முணவு மிதமிஞ்சியிருத்தலின்றிச் சுகம் விளைப்பதாயிருக்கட்டும். உனது பொழுது போக்கு அதன்சொல்லாற்றலின்படி நேரிய விளையாட்டிலேயே நிகழட்டும். தக்ககாரணமின்றி யொருவனையும் ஐயுறவேண்டாம். ஆராய்ச்சியின்றி யெவனையும் நம்பவேண்டாம். ஒவ்வொருவனது அபிப்பிராயத்தின் படியும் நடக்கத்தக்க எளிமையும் உன் கொள்கைகளின்படியே நடக்க வேண்டுமென்ற விடாப்பிடியும் ஒழிக. கடவுட்குத் தொண்டு செய்தலும் அவனை அஞ்சுதலும் விரும்புதலும் உடையனாகுக. உன் விருப்பத்தின் படியாதல் உன் நண்பரது விருப்பத்தின் படியாதல் கடவுள் உனக்கு நன்மை புரிவார்."

நன்கய மென்றெண்ணுகின்றனவற்றிற் பழிக்கஞ்சாது முயன்று பின்பற்றுதலில் தம்மையும் பிறரையும் ஒருங்கே துன்பத்திற் காளாக்குவோர், நன்கயம் பாராட்டுவோர் தீயோர் இவர்கள் மாத்திரையேயோ? பல தக்கமாக்களும் பல நன்னூல்களும் மிக்க மேதக்ககருத்துக்களை யுட்கொண்டிருக்குமபொதுவாக நோக்குமிடத்து அதுபோலும் பிழையின்கண் வீழ்தலைபாவரும் ஒத்துக்கொள்ளல்வேண்டும். அவர் பாவவாழ்க்கையை யின்பவாழ்க்கையாகவும் அறத்தையாத்ம பரித்தியாகமாகவும் துறவே சமயமாகவும் வகுத்துக்காட்டினர். இன்னும் வாழ்க்கையில் ஒவ்வொருநாளும் இனியனவனைத்தும் பிழைப்பட்டனவென்றும் சமயத்தின மெய்யியல்பு வெறுப்பு அருவருப்பு முகமலர்ச்சியின்மை முதலியனவே யென்றும் நம்மைச்சூழ்ந்துள மிகப்பேரொளிவாய்ந்ததும் இளவெயிலுடையதுமாகிய இயற்கைவனப்புத் தீமையேயன்றி நன்மையன்றென்றும் இது புன்மாயையாற் கவர்ந்து கோடற்பொருட்டு வைக்கப்பட்டதோர் வலையாமேயன்றி எல்லாநன்மைக்கும் தலைவனாகிய இறைவன் நமக்குக்கருணைகூர்ந்துதவிய இன்பவூற்றினுள் ஒன்றன்று என்றும் நினைக்குநர்போலக் காணப்படும்பலதக்கோரையும் அறிவேம்.



"துன்ப வழிபதுவே துன்பமிலா நல்லுலகின்
இன்பமுற வுய்க்குமென வெண்."

என்ற ஈரழகிய பாவடிகளிற் கோபர் என்பார் நமக்குக் கூறியதகாண்க.

யாம் துன்பமின்றி வாழ்தலியலாது என்றல் ஒருதலையேயாம். நிழலின்றிவெயிலில்லை. நாம் பெரிதுமன்புபாராட்டுவோரை நருக்கலைபாய் இழத்தலாதிய நமது வாழ்க்கையிடையூறுகள்விளைக்கும் துன்பங்களைத்தவிர்த்து இன்னும் பலவகையவான துன்பங்களையு மிடர்ப்பாடுகளையும் எதிர்பார்க்கத்தக்க வளவு இவ்வுலகின்கண் நமதுயிர்வாழ்க்கை யமைக்கப்பட்டுளதாகவும் உலகம் இன்னும் இளமை யுடையதாகவும் நமது வாழ்க்கைக்கின்றியமையாதனவற்றையும் நம்மைச்சூழ்ந்துள பொருள்வளங்களின் இன்பங்களையும் அறியாதவராகவும் இருத்தல் உற்றுநோக்கற்பாலதே. ஆனால் கௌபர் என்பார் துன்பவழியதுவே துறக்கவழியாம் என்று வாய்ப்பறையறைகின்றார். ஆகவே யிவ்வுலகத்திலின்ப வாழ்க்கை இனி யவ்வுலகத்திற் றுன்பம் விளைவிக்கும் என்பது திண்ணமாம். அம்முற்றிலும் தவறான எண்ணம் பல்கவலையுள்ளோர்க்கு மனக்கவர்சியும் துன்பமும் ஆசங்கையுமாகிய இன்னோரன்ன தீமைகளை விளைத்து விட்டது.

இத்தகைய பெரும்பேற்றிற்குக் கடவுளிடத்து நன்றியறிதலுள்ளாராயிருந்து துன்பத்தினாலாதல் அசௌக்கியத்தினாலாதல் தம்மிடத்தில் அவ்வின்பவாக்கங்களே ஊறும் ஊற்றுக்களுடையராகாதவர்களது வாழ்க்கை நெறியை விளக்கும் உயர்ந்ததோர் உரிமை கொடுக்கின்றதென்று உணரவேண்டியுமிருக்க, பல நன்மை வாய்ந்த விஞ்ஞர் சயிர்க்கையென்ற மனோவியாதியினால் வருந்தித்தாமின்பமுடைய ராகின்றமைபற்றித் தம்மையே இடர்ப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். கௌபர் சன்மார்க்க சங்கத்தாரெனப் பெயர் வாய்ந்த குழாத்தைச் சேர்ந்தவராயிருந்தும் அவருபதேசமொழிகள் 'காடிபடித்தால் அதற்கு நோவுமென்று கருதாது காண்போருக்கு இன்பமளிக்குமன்றே. ஆகலின் அதுதவறும்' எனக்கூறுவோரென்றுமெகாலே யென்பவராற் புனையப்பட்டவரது எண்ணத்தாற் சிறிது கறைபட்டனவாமன்றோ?

வாழ்க்கையில் தாமறியாதவைகளைப்பற்றி மக்களுட் பலர் தம்மையே வருத்தித் துயருறுத்திக் கொள்கின்றனர். ஆயினும் "நல்லனுமறிஞனும் சிற்சில சமயங்களில் உலகத்தொடு வெகுண்டும் சிற்சில சமயங்களில் அது கண்டிரங்கியும் இருப்பார். ஆனால் தனது கடமையைச் செய்தவனொருவனும் உலகத்தை வெறுத்துத் திருப்தியடையா திருக்கவில்லை."

"நலமுடையா னீசனென நண்ணியறிந் தானே
யுலகொழுங்கி னுண்மையுணர்ந் தோன்."

தன்னைச் செய்தலால் முன்னையினுமதிகமாக நம்மையின்பகரமாக்காத கடமையும் மருந்தில் வேட்கையு மில்லையென்று சேனிகா கூறுகின்றார்.

"தன்றொழின் முடித்து நின்றாள் தையலா ளியற்கை தானும்
நின்றொழின் முடித்து நிற்பாய் நீயவட் பழித்த னீத்தே."

என்று மில்டன் என்பார் கூறுதலுங்காண்க.

நம்மைப் படைத்தோன் இயற்கை யின்பத்தை நாம் முற்றிலும் நுகர வேண்டுமெனக் கருதாவிடில் அவையனைத்தும் கண்ணுக்குப் பேரழகுடையனவாகவும் செவியினுக் கின்னிசையனவாகவும் செய்திரான். தன்னையே நன்கு அடக்கியாளுவதனால் ஒருவன் ஏனையோர்க்கு எவ்வளவு அமைதியை விளைக்கின்றான் என்பதனையும் தனக்கே எவ்வகை இன்பம் விளைத்துக் கொள்கின்றான் என்பதனையும் அளவிட்டுரைத்தலரிதாம்.

யான் பலவாற்றானும் பெரும்பாலும் நினைக்குமாறு இக்காலம் மிக அற்புதமாகவும் இனியதாகவும் அறிவொளியுற்றதாகவு மிருந்தாலது நமது அதிர்ஷ்டமே யன்றி நம்மாலாகிய செய்கையன்று. அது பற்றி யாம் செருக்குறுதலின்றி யிறைவனை வந்திக்கற்பாலம்.

ஆயினும் யாம் நன்றியறித லுடையோமாயிருந்து வாழ்க்கையின் அளவற்ற பேறற்கரும்பேறுகளை முழுதும் நுகரவேண்டியிருந்தும் துன்பங்களாதல் கவர்ச்சிகளாதலின்றி யிருத்தலியலாது. வாழ்க்கை யென்பது வால்போல் என்பவரால் நினைக்குநர்க்கு இன்பமுடிவுடை நாடகமும் உணருநர்க்குத் துன்பமுடிவுடை நாடகமுமாகப் புனையப்பட்டுளது. யோசிக்கு மிடத்துச் சிலவேளைகளில் அது துன்ப முடிவுடை நாடகமாக விருக்கின்றதெனினும் பெரும்பாலுமின்ப முடிவுடைநாடகமே. ஆனால் அது நம்விருப்பதைச் சார்ந்ததே யன்றி வேறன்று. "வாழ்விலும் சாவிலும் நல்லோர்க்குத் தீமை நிகழாது" என்றார் சாக்ரடீஸ் என்பவரும். உண்மையாகவே துன்பமெடுத்துரை நிமித்திகர் கூற்றினும் இன்ப மெதிர்பார்க்கு நிமித்திகர் கூற்றே நேர்மையுடைத்தாகின்றது. துன்பத்தையாதல் வருத்தத்தையாதல் நாம் நுகராநிற்கு மோவ்வொரு கணத்தையும் எண்ணுந்தோறும் இன்பம் நுகர்ந்த பல்லாண்டுகளையும் கவனியாது விடுக்கின்றோம்.



நாம் எப்பொழுதும் நந்தம் முயற்சிகள் கைகூடுமென்றெதிர் பார்த்தலொண்ணாது. இயற்கையும் சிலவேளைகளிற் றவறுகின்றாள். ஆனால் உன் சௌக்யத்திலும் க்ஷேமத்திலும் செருக்குற்று உன்னையே உயர்த்திக்கொள்ளாதே. இடுக்கண் வந்துற்றகாலை யின்பம் வாராதென் றெண்ணாதே.

விவிலிய நூலில் ஒருபெயர் போன வாக்கியம் 'அழிவிற்குச் செலுத்தும் வாயில் விரிந்தும் வழியகன்று மிருக்கின்றன; ஆண்டெய்துவோர் பலர். நல்வாழ்க்கை வாயில் நேராகவும் வழி ஒடுக்கமாகவு மிருக்கின்றன. அதனைக்காண்போர் சிலர்' என்று நமக்குக் கூறுகின்றது.

ஆனாலிஃதடிக்கடி நேரிய பொருள் காணப்படாது நிற்கின்றதென்றெண்ணுகின்றேன். நேரிய வழிகுறுகியும் காணற்கரிதாகியு மிருக்கின்றதெனக் கூறப்பட்டிருக்கின்றதே யன்றிக் கரடுமுரடாகவும் வருத்தம் கொடுக்கத்தக்கதாகவு மிருக்கின்றதெனக் கூறப்பட்டிலது. எல்லாப்பக்கங்களிலும் பிரிந்து போகின்ற சிறுவழிகளுள்ள ஒரே நேரியவழியுளதென்பதற்கோரையப்பாடுமில்லை. கடலிலுள்ளதோர் நாவாய்க்கு ஒரே உண்மைவழியுண்டு. திசைகாட்டுங் கருவியின் மற்றைப்பக்களனைத்தும் அஃதிருக்கவேண்டிய பட்டினத்தினின்றும் விலக்கிவிடும். ஆனால் உண்மைவழி மற்றையவற்றினும் கரடுமுரடாகவாதல் புயற்காற்றுடையதாகவாத லிருக்கின்றதென்பதுபோதராது.

தவறுடையனவும் அறிவில்லனவும் ஆவன அடிக்கடிமிக்க இன்பமுடையனவும் சிலவேளைகளில் அக்கணமளவிற் களிப்புறுத்துவனவுமா மென்பதை மறுத்தலியலாது. அங்ஙனஞ்செய்த லசங்கதமாம். அது தீமைக்குக் கவருமியல்புண்டென்பதையே யாசங்கித்தலாகும். யான்காட்ட விரும்புவதெல்லாம் இத்தகைய வேட்கைகட் கிடங்கொடுத்தலான் இனி வரக்கடவ துன்பத்தைக் கொடுத்துக் கணப்பொழுதே நிகழவல்ல வின்பத்தினை விலைக்கு வாங்கிக்கொள்கின்றோம் என்பதும் ஒத்துநோக்கு மிடத்து மிகச்சிறியவைபத்தின் பொருட்டு மிகவுமதிகமா யிழக்கின்றோமென்பதும் நம்பிறப்புரிமையை ஈசாவைப்போல ஒருவேளைக் கூழுக்காகவிற்றுப் பிற்காலத்துக் கழிவிரக்கத்தினால் ஒருமணி நேரம் களிப்புடைய பயித்தியத்தை வாங்குகின்றோம் என்பதுமேயாம். உண்மை வழியால் நோக்குமிடத்து யாமின்ப முடையராயிருக்க விரும்பினால் நன்மை வாய்த்தோமாயிருக்க வேண்டும் என்று இவ் வாழ்க்கையைப் பற்றியே கூறுகின்றேன். தற்சீராட்டினும் தன்னயத்துறவினாலதிக வின்பம் விளையும்.

சுகமு மின்பமு மொருகாலு மொருங்கு செல்லா. நமக்குத் தோன்றுகின்றபடி தம்மை யின்பமுடையராக்கிக் கொள்வதற்கு வேண்டியன வனைத்தையு முடைய பலர் பரிதபிக்கத்தக்க நிலையிலிருக்கின்றார்கள். அதிர்ஷ்

டம் நமக்கு அதிகமாகத்தரக் கூடும். ஆனால் அவ்வதிகத்தைப்போதிய வள வினதாக ஆக்கிக்கொள்வது நமது மனமே.

"எம்மன மேயெமக் கினிய ராச்சிய
மிம்மையி னின்பெலா மிதன்கட் காண்கின்றோம்"

**வாவனார்ஜியூஸ்** என்பவர் "பொருளும் பதவியும் கௌரவமும் எல்லோராலும் பெறுதலியலாது. ஆனால் ஒவ்வொருவனும் நன்மையு மருளு மறிவுமுடையோனா யிருத்தலியலும்" என்று கூறினார். உண்மைச் செல்வம் நம்முடைமையைச் சர்ந்ததன்று; நம்மியல்பைச்சார்ந்ததேயாம். நாம் நுகரும் பயன்கள் அவ்வவற்றிற்குத் தக்கவாறு நம்மை உத்தரவாதிகளுமாக்குகின்றன.

**கிரிசாஸ்டம்** துறவி "தற்காலநிலை நாடகக்காட்சியேயாம்; மனிதன்றொழில் அதன் கண் ஓராட்டமாம். செல்வமும் வறுமையும் ஆளுவோரும் ஆளப்படுவோரு மின்னபிறவும் வெவ்வேறு நாடக பாத்திரங்கள். ஆனாலிற்றை நாட்கழிந்துவிடின் நாடகசாலை யடைக்கப்படும்; வேஷங்கள் களையப்படும்; பிறகு ஒவ்வொருவனும் அவனது தொழில்களுமாராயப்படும். ஒவ்வொருவனுமவன் செல்வமுமல்ல; ஒவ்வொருவனும் அவன் உத்தியோகமுமல்ல. ஒவ்வொருவனுமவன் பதவியுமல்ல; ஒவ்வொருவனுமவன் வலியுமல்ல; ஆனால் ஒவ்வொருவனு மவன்றொழில்களுமே யாராயப்படுவனவாம். நந்தொழில்களெல்லாம் ஆராய்ச்சிக்காலத்து நிலைநிற்கு மென்று நம்பி நடப்பாம்.

அவ்வாராய்ச்சியாதாகலாம்? எவ்வளவு செய்துளோ மென்பதன்று; எவ்வளவு செய்ய முயன்றுளோ மென்பதேயாம். வாழ்க்கையின்கண் வென்றி பெற்றேமோ என்பதன்று வென்றி பெறுதற்குரியோமா என்பதே.

"பிறர்மனப் படிகுற் றேவல் பேணிச்செய் கலனே யிம்மைப்
பிறவியொன் றற்றுக் கற்றோன் பேசரு மின்ப முற்றோ
னறம்வழு வாத வெண்ண மவனணி கவச மாகுங்
கறையறு வாய்மை யன்னோன் கருதரு வன்மை யாகும்."

உண்மையாகவே மெய்யான இன்ப வாழ்க்கை அறிவறங்களோடு கூடிய வாழ்க்கையேயாமன்றித் தீமையுந் தற்சேராட்டு முள்ளதன்று. பாவமே மெய்யான தற்கொலையாம். "என் மைந்தனே என் சட்டத்தை மறவாதே; என் கட்டளைகளை நின்மனத்தின் கட்போற்றிக் கொள்வாய்; ஏனெனிலவையனைத்தும் உனக்கு நீடித்த வாழ்க்கையையும் அமைதிப்பையு மளிப்பனவாம்" என்றார் சாலமனும்.

பெருவழக்கு முற்றிற்று.

சருக்கை - வரதாசாரியன்.



# திருப்பரங்கிரிக் குமரன் தாலாட்டு.

## காப்பு.

சேலாட்டும் பண்ணைத் திருப்பரங்கி ரிக்குகன்றன்
றாலாட்டுக் கைந்துகரத் தந்திமலர்த் தான்பணிவாம்.

1. பூமேவும் வேதன் பொறிமார் பகன்சொலரன்
றாமேவு நன்னுதற்கட் டோன்றுஞ் சுடருருவோ.

2. சீர்சேர் சுடர்ப்பொறியைச் செஞ்சுடரோன் கையேந்தி
வார்சரவ ணத்தடத்தே வைக்க வளர்ந்தவனோ.

3. சிவனும்வெண் ணீறிலங்கச் சேர்திலக நெற்றித்
தவள மதிநிகர்பூந் தண்முகமோ ராறனோ.

4. மூவலிலா வாறு முகமலர வோராறு
பாவையர்பா லூட்டவுண்ட பண்ணினிய வாயானோ.

5. பெற்றோர்கற் றோர்க்குப் பெருங்கருணை காட்டியன்பு
முற்றோங்க மேவுமியன் முந்நான்கு கண்ணனோ.

6. எண்டருசீர் முத்தமிழி னின்சுவையைக் கொண்டருளுங்
குண்டலஞ்சே ரீராறு கோலவள்ளைக் காதானோ.

7. செயிர்தீர்மா ணிக்கமணி சேரைம் படையாம்
வயிரமணித் தார்துலங்கும் வண்ணமணி மார்பானோ.

8. மாலெனுமம் மானும்பொன் மானுங்கண் டுண்மகிழப்
பாலவிளை யாடல்செயும் பன்னிருகைப் பெம்மானோ.

9. தும்பி முகன்புகழச் சோதிநவ ரத்நமணிச்
செம்பொற்றண் டைகலிக்குஞ் செந்தளிர்ப்ப தாம்புயனோ.

10. தவநா ரதர்முனஞ்செய் தக்கமகந் தோன்று
நவமார் தகரிவர்ந்து ஞாலம்வலம் வந்தவனோ.

11. உள்ளத்தன் பார வுமையாள் களபமுலை
வள்ளத் தமுதுதர வாங்கியுண்ட காங்கெயனோ.

12. காலின்மணிக் கிண்கிணிகள் கல்லெனநன் கோலமிட
வேலு மரன்றனெண்டோ ளேறிவிளை யாடுமன்னோ.

13. விந்தையுறும் வேதன் மெலியச் சிறையிலிட்டுத்
தந்தைக்கோங் காரவுரை சாற்றுங் குருபரனோ.

14. வேத நெறிதழைக்க வேதாக மஞ்செழிக்கப்
போதகஞ்செய் தோங்குபரி பூரணக்ரு பாநிதியோ.

15. முத்தேவர் விண்ணோர் முனிவரரெந் நாட்டவரு
மெய்த்தேவ வென்றுநிதம் வேண்டுஞ் சிகாமணியோ.

16. நாலா ரணம்பரவு நாரா யணியளித்த
வேலா யுதமேந்தும் வீரப்ர தாபமன்னே.

17. கோங்கவிழ்ம லர்க்குழலார் கூர்நயன வண்டுகள்பாய்
செங்கடப்பந் தாரிலங்குஞ் சீர்சேர் புயாசலனே.

18. கார்த்திகே யப்பேர்கொள் காவலநீ காத்திடெனச்
சீர்த்தியுறு மந்தணர்கள் சேவிக்கும் வான்பொருளோ.

19. இச்சைமிசப் பச்சைமயி லேறியொரு மாங்கனிக்கா
யுச்சிதமா யோடி யுலகைவலம் வந்தவனே.

20. ஆலமர்ந்த நால்வோர்க் கவிர்மெய்ந் நிலைகாட்டு
மேலவர்க்கு மேலாய் விளங்குங் குருமணியோ.

21. கண்மணியோ மேலாக் கருதும் பணிமணியோ
விண்மணியோ யோகியரும் வேண்டுஞ்சிந் தாமணியோ.

22. முக்கனியோ தேனோ முதிர்ந்த சுவையமுதோ
தக்கவர்க ளோத்துஞ் சடாட்சரத்தின் வான்பொருளோ.

23. தத்துவப்பூங் கொத்தோ சத்தர்நிதம் போற்றுசித்தோ
கத்தர்வேய் முக்தர்குளக் கண்ணுதித்த வாணிமுத்தோ.

24. பண்ணொரு மின்பப் பயனோ நிராமயனே
விண்ணோர் கருதுமண வெட்சிபணி யும்புயனே.

25. வானையளா வும்பொதிகை மாமுனிவ னுள்ளமிசை
ஞானவொளி வீசு நலமா மணிவிளக்கோ.

26. சோற்பரங்கி ரிப்பழனி சோலைமலை யேரகஞ்செந்
திற்பதிகுன் றுடலெனுஞ் சீர்த்தலமே வும்பரனே.

27. சீர்வதியுஞ் செம்பொற் சிலையுதித்த பைந்தொடியா
ளோர்வதியு முத்தமிட்டேந் தின்பக் களஞ்சியமோ.

28. எண்ணியபோ தெல்லா மெதிர்தோன்றி வாழ்வுமிக
நண்ணும் படிவரங்க ளல்குந் தயாநிதியோ.

29. பத்தர்செய்த குற்றங்கள் பாரா துளம்பொறுத்துச்
சித்தியளித் தாளுஞ் சிவஞான தேசிகனே.

30. ஏயுமடி யேன்ற னிடர்தீர்த்தென் சித்தமுமோர்
கோயிலென வுள்ளத்திற் கொண்டுறைசி வக்கொழுந்தோ.

31. அக்ரமச் சூரபத்ம னாதி யசுரரற்
விக்ரமங்காட் டென்னவரி வேண்டுமுப ராண்டகையோ.



32. தவவீர மேவசுரர் தம்மொ டமர்செய்ய
நவவீரர் சூழநடு நாயகமா நின்றவனே.

33. வானோர்சு ரேசனொடு வானவரும் வந்திறைஞ்சச்
சேனா பதியாகிச் சேர்ந்தமர்செய் சேவகனே.

34. வீரமிகு தாருகனோர் வெற்பாகக் கண்டுவைவேல்
சோரமற விட்டுத் தொளைத்துவெற்றி கொண்டவனே.

35. ஆயிரத்தெட் டண்டங்க ளாண்டவிறற் சூரபன்மன்
சாயக்கூ றிட்ட சமரவடி வேற்கரனே.

36. சூரா தியரொழியத் தூங்கவடி வேல்விடுத்து
வீராதி வீரனென மெய்ப்பேர்கொள் வித்தகனே.

37. தீயனெனுஞ் சூரபன்மன் சேவன்மயி லாகிநின்று
தூய சரணிறைஞ்சித் தோத்திரிக்கக் காத்தவனே.

38. விசயமிகக் கண்டவண்டர் வேண்டவெள்ளை யானை
யிசையும் பவனிவந்தங் கின்பருளுஞ் செவ்வேளோ.

39. விண்ணரசுங் கற்பமைந்த மென்சசியு மெய்ச்சசிய
பெண்ணரசொண் டெய்வப் பிடியைமணஞ் செய்தவனே.

40. திருமுருகா வென்றொருபெண் சிந்தையிற்சிந் திக்கு
மருமையுணர்ந் தங்கை யளித்தாண்ட பூரணனே.

41. கற்றுணர்நக் கீரன் கவின்முருகாற் றுப்படைநூ
லுற்றமணத் தார்போ லுவந்தருளு மொள்ளொளியோ.

42. மாமன் மருமகனே மன்னன் றிருமகனே
கோமதிப ரங்கிரிவாழ் கோனும் பெருமகனே.

43. பூண்பங் கயப்பதனே பொன்னேற்றாள் றன்சுதனே
மாண்பமைப ரங்கிரிக்கண் வாழும்பா ரங்கதனே.

44. சுகமாரு நற்றவனே தொல்கலைகள் வல்ல
தகுசீர் பரங்குன்றந் தங்குமெங்கள் கொற்றவனே.

45. தொழுஞ்சுரர்சே னாபதியோ சொல்லருஞ்சீர் மேவும்
செழும்பரங்கி ரிக்கட் சிவானந்த வாரிதியோ.

46. வானுறுதெய் வப்பிடிக்கும் வண்குறவர் பொற்கொடிக்குந்
தான மழகளிறே தண்பூங் கொழுகொம்போ.

47. அன்பிற் புகழ்சொ லருணகிரி நாதர்தமக்
கின்பமைநற் பேறளிக்கு மேர்ப்பரங்கி ரிக்கரசோ.

48. வன்பிணிதா ரித்திரம்பேய் மாமலடு கூன்செவிடு
துன்பூமை நீங்கியுய்யத் தூய்வரந்தந் தாள்பரனே.

49. என்னைப் புகழ்ந்துரைக்கும் யாவர்களு மின்பமுற
மன்னூர் திருவருள்செய் வண்பரங்கி ரிக்குகனே.
50. அருள்பரங்கி ரிக்குகன்று லாட்டைக்கற் றோர்கள்
மருளகன்ஞா னந்திருவும் வாய்ந்துபெரும் பேறுறுவார்.

திருஎவ்வுளூர் - இராமசாமி செட்டி.

---

## பரீட்சை வினாக்கள்.

---

## MADRAS CHRISTIAN COLLEGE.

[Matriculation Class. April 1900]

I. (a) **பெருந்தேவனார் பாரதம்**:—இந்நூலைத்தவிர்த்துத் தமிழிற் செய்யுளுருவத்திலுள்ள வேறு பாரதங்கள் யாவை? அவற்றிற்கும் இதற்குமுள்ளவேறுபாடென்னை? பெருந்தேவனாரது காலமுஞ் சமயமு மின்னவெனக்காட்டுக. இவர் பெயரையே தமக்கும் பெயராகக்கொண்டார் வேறு எவ்வெவர்? (b) 'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்' என்றாலென்னை? இந்நூலைப் 'பாரதவெண்பா' வென்றலும் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றலும் தம்முண்முரணாவோ? விளக்கி விடை யெழுதுக. இந்நூலாசிரியரது செய்யுணடையைப்பற்றிச் சுருக்கி யெழுதுக.

II. i. 'போர்வீரர் தம்மோடும் போந்தரசு கொள்வீரோ' என்று சுத்தவீரராகிய பாண்டவரை நோக்கிக் கண்ணன் கூறுதல் நேரிதோ? விடைக்கு நியாயங்கூறுக. ii. 'வெண்டலையி லூணுகந்த செல்வன்' இதன்கணுள்ள கதையை ஐந்து வரிக்குள் எழுதி இத்தொடரிலுள்ள சொன்னயமுங் காட்டுக. iii. 'வந்தவாகாண்குமது', 'என்னோடெழுத்தோவிது': இவற்றின்கண் 'அது, என்றும், 'இது' என்றும் சுட்டப்பட்டனயாவை? இவற்றிலுள்ள இலக்கண விசேடங்களென்ன? iv. 'இரு' என்னும் பகுதியடியாகப் பிறந்து நான்கனுருபு பெற்ற இறந்தகாலத் தன்மைப்பன்மை வினையாலணையும் பெயரும், 'போ' என்னும் பகுதியடியாகப்பிறந்து இரண்டனுருபுபெற்ற எதிர்காலத்தன்மை யொருமை வினையாலணையும் பெயரு மெழுதுக.

III. (a) குறிப்புரையெழுதுக:—(1) பெற்றத்தனிமுரசம் (2) அதிரதர் (3) சாதாரணஞ் செய்யுஞ் சாதேவன் (4) அரிவை (5) தற்பரம் (6) குருநாடு (7) தொளைநிரை (8) காங்கேயன். (b) மேதினி, ஐயன், உயிர், மாயோன், காசினி, குடை, அச்சுதன், முனிவர், தண்டலை, கண்டகன், கடல், உதி: இவற்றிற்குப் பகுதிப்பொருள் கூறுக. (c) இடக்கரடக்கல், மங்கலம்; அஃறிணையியற்பெயர், சாதி யொருமைப்பெயர்; ஏவல்வினை, முன்னிலை வினை; முதல் வேற்றுமைக் கருத்தா, மூன்றாம் வேற்றுமைக் கருத்தா இவை தம்முள் வேறுபாடென்ன? (d) இடுகுறியாக்கம், இலக்



கணை, காரகம், மெய்யீற்றுடம்படுமெய், வேற்றுமையக்கம்: இவையிற்றை யுதாரண முகத்தான் விளக்குக.

IV. (1) பாஞ்சாலி பட்டவடியாது? அஃதெவ்வாறு வருணிக்கப்பட்டுளது? அங்ஙனம் வருணித்தல் எவ்வணியின் பாற்படும்? (2) மாலவன், நாகணை, கோயில், பெருமாள்: இச்சொற்களுக்கு இலக்கணக்குறிப் பெழுதுக. (3) சூழ்சபை, பொருபடை, கழறொழுது, பாழ்ங்கிணறு: இவற்றிற்குப் புணர்ச்சிவிதி யெழுதுக. (4) சூள், பாழி, நாப்பண், முசலம்: இவற்றிற்குப் பொருள்கூறுக. (5) வாகுவலயம், குணத்தொனி, அர்த்த சந்திர பாணம்: இவற்றிற்குத் தக்க தமிழ்சொற்றொடர்கள் வரைக.

V. (a) இனி வருவனவற்றை யினிது விளக்கி ஆங்காங்கு வினவிய வினாக்கட்குத்தக்க விடைபகர்க.

(1) "ஆமளவு நட்புகந்தா லன்றாகி னின்றதே
தேமருவு தாரோய் செரு."

(2) "பெண்டுகளும் பிள்ளைகளும் பித்தர்களு மென்னறிவார்"
இஃதென்னவணி? இது யார் யாருக்கெப்பொழுதெதுகருதிக்கூறியது?

(3) "மாணாத மாமலர்த்தாண் மால்."
இதன்கணுள்ள யாப்புவிசேடமென்னை? இத்தகைய யாப்புவிசேடம் அமைந்துள செய்யுளடிகள் வேறு மூன்று காட்டுக.

(4) "பொய்வீ, டினிதுசெய்யும் பாண்டவர்."

(b) 'என்னவரசாள்கையிது' என்று வீமன் வெறுத்துக் கூறிய வழித் தருமன்கூறிய விடைபொதிபாடலையும், கண்ணன் விதுரன் வீடணைந்தபோது விதுரன் புகழ்ந்துகூறிய பாடலையு மெடுத்தெழுதுக.

VI. i. "இகுளை கேண்மோ விகுளை கேண்மோ, பெற்றமூர்ந்த கற்றைச்சடையனைச், சற்று நோக்கினேன் றன்னை தகைத்தனள், பாழியிற் பாய்கோ பனிவரை யுருள்கோ": இச்செய்யுளின்கணுள்ள திசைச்சொற்களை யெடுத்தெழுதி அவை யின்னின்னநாட்டுத் திசைச்சொற்களென்றுங் கூறுக. ii. "ஆற்றுவரேற் றோள்வலியாற் கொள்வதுவுமாற்றாரேற், றோற்பதுவும் வேந்தர்க்குச் சொல்லியதே" ஈண்டு ஒருமைப்பயனிலை கொடுத்தமைக்குத் தக்க நியாயமென்ன? iii. தொழிற்பெயர் எவ்வெப்பொருள்களில் வரும்? வகைக்கோருதாரணங்காட்டி வரைக. iv. 'ஆல், ஆன் உருபுகள் உடனிகழ்ச்சிப்பொருளிலும், ஒடு ஓடு உருபுகள் கருவிப்பொருளிலும் ஓரோவிடத்து அருகிவரும்': இக்கூற்றைத்தக்க வுதாரணங்காட்டி நிறுவுக.

VII. நிமிச்சக்கரவர்த்தி கதையைச்சுருக்கி யொருபக்கத்திற்குக் குறையாமற் செவ்விய தமிழ் நடையிலொரு வியாசமெழுதுக; இக்கதையாலறியத்தக்க நீதியையுமெடுத்துக்காட்டுக.

---

## சமாசாரக்குறிப்புக்கள்.

**இராஜாங்கவிஷயத்திற் றலையிடாமை:**—சில மாதங்களுக்கு முன்னர்க் கல்வி இலாகாவைப்பற்றிய விதிகளடங்கிய புத்தகத்திற் கலைச்சாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலுமுள்ள போதகாசிரியரனைவரும் எக்காலத்திலும் எந்தக் காரணத்தை யுத்தேசித்தும் இராசாங்க விஷயத்தைப்பற்றி மாணாக்கரிடத்தாதல் நண்பர்களிடத்தாதல் பேசக்கூடாது; அத்தகைய விஷயங்கள் பேசப்படும்சபைகளுக்குஞ் செல்லக்கூடாது. அன்றி அவற்றினிடத்துத்தாங்கள் தலையிடுவாரேல் அவர்களை யாதரித்துவரும் கலைச்சாலைத் தலைவர்களால் அவர்கள் தத்த முத்தியோகத்தினின்றும் நீக்கப்படுவரென்று புதிதாக ஒருவிதி காணப்பட்டது. அது கண்ட பலதக்கோரும் இவ்விதியாற்றங்களுக்கும் பிறருக்கும் நேரிடக்கடவ பல்வித இடர்ப்பாடுகளையு மெடுத்துரைத்துக் கனம்பொருந்திய துரைத்தனத்தாரவர்களிடம் முறையிட்டுக்கொண்டார்கள். துரைத்தனத்தாரும் அம்முறைப்பாட்டைச் செவியேற்றுச் சிறிது கடைக்கணித்தனர். அஃதாவது போதகாசிரியர்கள் இராசாங்க விஷயத்தைப்பற்றிப் பேசுங் கூட்டங்களிற் சென்றாலும் அங்கே தாமொன்றும் எழுந்து பேசி ஆரவாரஞ் செய்யாது வாய்வாளாதிருக்க வேண்டு மென்பதே. இதுநிற்க நிசமும் ஏப்ரல் மாதம் முதற்றேதி யன்று போர்ட் செஜட்டில் இராசாங்க விஷயங்களிற் சபையிலும் மாணாக்கரும் தலையிடுதல் தவிர்வாராக; அன்றி மீறி நடப்பாரேல் அவர்கள் கலைச்சாலையினின்றும் நீக்கப்படுவாரென்றதோர் புதுவிதியும் காணப்படுகிறது.

***

**மாணாக்காற்றுப்படை:**—இது கும்பகோணத்தினகணுள்ள 'டவுன் ஹைஸ்கூல்' என்னும் நாகரிக ஆங்கிலேய வித்தியாசாலையைப்பற்றிய தோர் புகழ்ச்சிக் கவியாம். (இது) 335-அடிகளுள்ள நேரிசையாசிரியப்பாவினியன்றுளது. இதனை யியற்றினார் அவ்வித்தியாசாலையின் கண்ணேயே தமிழ்ப் புலமைநடாத்திவரும் பின்னத்தூர்-பிரமஸ்ரீ-அ. நாராயணசாமி ஐயரென்பார். இவர் சிறந்த கல்விமான் என்பதும் சங்கச்செய்யுட்களிற் சென்று பருகிப் பெருத்து கவிமழை பொழியும் காளமேகம் போல்வாரென்பதும் இந்நூலைப்படிப்போர் யாவர்க்குமினிது விளங்கும். இதே அபிப்பிராயம் ஆண்டுக் குடந்தையம்பதியிற் றுரைத்தனக் கலாசாலையில் தமிழ்ப் புலமை நடாத்தும் புலவர் பெருமான் பிரமஸ்ரீ. உ. வே. சாமிநாத ஐயரவர்கள் சிறப்புப்பாயிரத்தானும் வலியுறுகின்றது. இது நிற்க. இந்நூலின்கண் கல்வி பயிலக்கருதி வேணவாவுற்று அதற்கு நேரியவழி காணப்பெறாது வறுமைபால் எய்த்துமெய்த்தி மனங்கவலும் மாணாக்கனொருவனைக் கலைநலஞ்சான்று மேம்[illegible]து காரணமாகத் துரைத்தனத்தாரால் சிறப்புப்பட்டங்கள் அளிக்கப்பெற்று உயரியதோர் அதிகாரமுமெய்தி நின்றானொருவன் ஆற்றுப்படுத்துமாறுகாண்க. இதிற் குடந்தைமாநகரின் வர்ணனைகளும் மேற்கூறிய வித்தியாசாலைச் சிறப்புக்களும் இவைபோல்வன பிறவும் காணப்படும். இந்நூல் பண்டிதரானவராலும் பெரிதும் பாராட்டத்தக்க தொன்றாம். இதன்கட் புதிய[illegible]லக்கருத்துக்களுந் தக்கவாறமைக்கப்பட்டிருக்குந் தன்மை யாவரும் நன்கு மதிக்கத்தக்கதே.

# ஞானபோதினி

14- 1900 MADRAS

புத்தகம். III. } 1900ளு மேமீ 20௳ { நெ. 10.

## நக்கீரனார் தெய்வப்புலமை மாட்சி.

அவ்வாறாயினும் அந்நூலில் அதனாசிரியர் திருப்பரங்குன்றை முதலெடுத்தோதுதலின், அவ்வாற்றுப்படை திருப்பரங்குன்றிற் செய்யப்பட்டதென்று உய்த்துணர்ந்து கொள்ளாமோவெனின்;—கொள்ளாமன்றே, ஆசிரியர் நக்கீரனார் மதுரையிற்றோன்றி யதனையடுத்துள்ள பரங்குன்றின் மிக்கபற்றுடையராகலானது பற்றி யதனைமுதலெடுத் தோதினாராதலின்; திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளருந் தாந்தோன்றிய நகரைச் சிறந்தெடுத் தோதுதலும் இதனை டொருபுடை யொற்றியுணரப்படுமென்பது. இனி ஏட்டுச்சுவடிகளில் திருமுருகாற்றுப்படையின்கீழ்க் "குன்றமெறிந்தாய்" எனவும் "குன்றமெறிந்ததுவும்" எனவும் இரண்டு வெண்பாக்களெழுதப்பட்டுள்ளன; இவ்விரண்டு வெண்பாக்களின் நடை வளத்தையும், சொல்லமைதி, பொருளமைதிகளையும் உற்று நோக்கும்வழி, அவையிரண்டு மிகப்பழைய காலத்தன வென்பதும், நக்கீரனா ரியற்றியனவேயாமென்பதும் இனிதுவிளங்கும். அல்லதூஉம் பத்துப்பாட்டுக்களொவ்வொன்றின்கீழும் அவ்வப்பாட்டுக்களின் கருத்துப்பொருளை விளக்கியும், அவ்வப்பாட்டுடைத்தலைமக்கள் பெரும்புகழ்விளக்கும் ஒருவாற்றான் வரலாறு தெரிப்பனவாகிய ஒன்றிரண்டுமூன்று வெண்பாக்களெழுதப்பட்டிருத்தலின் மற்றவை யவ்வவாசிரியரால் தாந்தாம்பாடிய பாட்டுக்களின்கீழ் எழுதப்பட்டனவென்பது ஐயுறவின்றித் துணிந்து கொள்ளப்படுமென்பது. இம்முறை வழுவாது அப்பத்துப்பாட்டுக்களின் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையினும், அதனாசிரியர் தாமும் அதன் வரலாறுவிளக்கும் இரண்டு செய்யுட்களெழுதினார். இனி யிவ்விரண்டு செய்யுட்களும் ஆசிரியர்தாம் ஆற்றுப்படைமொழிந்த பொழுதியற்றப்பட்டனவோ, ஆற்றுப்படையையேனையவென்பது பாட்டுக்களுடன் கோவைசெய்து முறைப்படுத்திய போதியற்றப் பட்டனவோ வென்றாராயலுறுவார்க்குத் துணிதற்கருவி யின்மையின் அவையும் விளங்கா, ஆயினும், கோவை

செய்துமுறைப்படுத்தியபோது ஒருதலையான் அதன்வரலாறு தெ
ரித்தற்பொருட்டு அவை யெழுதப்பட்டிருத்தல் வேண்டுமென்
பது துணியப்படும். இவ்விரண்டிற் "குன்ற மெறிந்ததுவும்"
எனுஞ்செய்யுளில் "இன்றெம்மைக், கைவிடா நின்றமையுங்
கற்போதும்பின் மீட்டமையும்" என்று கூறப்படுதலின், நக்கீரனார்
மலை முழையுட் சிறைப்பட்டவாறும், பின் நீட்கப்பட்டவாறும்
ஒருதலையான் நிகழ்ந்தன வென்பது பெறப்படும். இனி, "குன்ற
மெறிந்ததுவும்" என்னுஞ் செய்யுளும் "குன்ற மெறிந்தாய்" என்
னுஞ் செய்யுளு மொழிய வேறு எட்டுச்செய்யுட்கள் திருமுருகாற
்றுப்படைச்சுவடிகளின்கீழ் எழுதப்பட்டிருக்கின்றன. மற்றிவையும்
ஆசிரியர் நக்கீரனாரியற்றியனகொலென்று ஆராயப்புகுந்தவழி, அச்
செய்யுட்களில் 'வீரவேல்' 'தாரைவேல்' 'தீரவேல்' என்றற்றொ
டக்கத்து விரவியற்சொற்றொடர்களும், 'நம்புகிலேன்' எனுந்
தொன்னெறிப்பட்டியலாச் சொல்லமைப்பும், 'கோலப்பா' 'வேல
ப்பா' முதலிய தொன்றுதொட்டு நடவாவழக்கும் பயிலக்காண்ட
லானும், அவைதம்முள்ளும் இறுதிக்கணின்ற இரண்டுசெய்யுட்
களும் "ஆசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்,
பூசையாக் கொண்டே புகல்" எனவும், "நக்கீரர் தாமுரைத்த
நன்முருகாற் றுப்படையைத், தற்கோல நாடோறுஞ் சாற்றினால் -
முற்கோல, மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித், தானி
னைத்த வெல்லாந் தரும்" எனவும் நக்கீரனைப் படர்க்கைப்படுத்
துரைத்துத் திருமுருகாற்றுப்படையைச் சிறப்பித்துக் கூறுதலா
னும், திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளர் தாமோதி
யபதிகத்தின்கீழ்த் தம்பெயரைக் கிளந்துகூறிப் பதிகச் சிறப்பு
மமைத்துக்கடைக்காப்பிடுமாறுபோல, ஆசிரியர்-நக்கீரனார் தாமுந்
தம்பெயரையு நூற்சிறப்பையும் அங்ஙனம் படர்க்கைக்கண்வைத்
து வேறுபடுத் தோதினாரென்பார்க்கு "இன்றென்னைக், கைவிடா
நின்றதுவுங் கற்போதும்பிற் காத்ததுவு, மெய்விடா வீரன்கை
வேல்" என்று தம்மைத் தன்மைக்கண் வைத்தோதிய ஆசிரியர்
தாமே தம்மைப்பின்படர்க்கையில் வைத்து வேறுபடுத்தா ரென்
றல் பொருந்தாமையானும், அன்றியங்ஙனம் வேறுபடுத்தாரெ
னக் கொள்ளினும் "ஞானசம்பந்தன் உரைசெய்த" என்பது
போற்றம்மை "நக்கீரன் றானுரைத்த" என்றுவைத்துக் கூறுவ
தன்றி "நக்கீரர் தாமுரைத்த" என்றுயர்த்துக் கூறுதல் ஏலா



மையானும், அவர் தம்மையங்ஙனம் உயர்த்துக்கூறாரென்பது
"சிறியேன் சொன்ன வறிவில்வாசகம்" என்பிறாண்டும் அவர்
கூறு மாற்றாற் றெளியக்கிடத்தலானும் அவை பிற்காலத்தாரால்
நூற்சிறப்பாக எழுதப்பட்டனவாமென்பது இனிதுவிளங்கும்.
அல்லதூஉம், ஆசிரியர், நக்கீரனார் கூறிய இரண்டு செய்யுட்களி
லிறுதிச் செய்யுளினிறுதியிற்கிடந்த "மெய்விடா வீரன்கைவேல்"
எனுஞ் சொற்றொடரிலுள்ள 'வீரவேல்' எனுமொழிகளை வேறு
பிரித்தெடுத்துக்கொண்டு "வீரவேல் தாரைவேல் விண்ணோர்
சிறைமீட்ட" என்று தொடங்குதலானும், ஏனை யொன்பது செய்
யுட்களும் அங்ஙனம் அந்தாதித்தொடைப்பட நிகழாமையானும்
முன்னிரண்டு செய்யுட்களும் ஆசிரியர்-நக்கீரனா ரியற்றினவாமெ
ன்பதூஉம், பின்னெட்டும் பிற்காலத்தாரியற்றியனவா மென்ப
தூஉம் தெற்றென வுணரப்படுமென்பது.

இனி, இங்ஙனம் ஆசிரியர்-நக்கீரனார் வரலாறு பலநூல்களில்
ஒன்றோடொன்று மலைவுபட நிகழ்த்தப்படுதலின், மற்றது முழுவ
தூஉம் பொய்படும் போலுமென நினையற்க. ஆசிரியர் தாம் இறை
வன்றந்த "கொங்குதேர் வாழ்க்கை" எனுஞ்செய்யுட்குக் குறை
கூறிய தங்குறுமொழியைப் பொறுத்தருளுமாறு 'திருவெழு
கூற்றிருக்கை'யிற் "சிறியேன் சொன்ன வறிவில் வாசகம், வறி
தெனக் கொள்ளா யாகல் வேண்டும்" எனவும், 'பெருந்தேவபா
ணி'யிற் "கூடலால வாய்க் குழகனை, தறியா தருந்தமிழ் பழித்
தன னடியேன்" எனவும் "எம்பெருமான் வேண்டியது வேண்
டா, நிகழ்ந்தேன் பிழைத்தே னடியேன்" எனவுங்கூறிக்
குறையிரத்தலானும், இவை யெல்லா நிகழ்ந்த விடம் மது
ரைமாநகரென்பதூஉம், இறைவன் விழித்த நுதற்கண்வெப்பம்
தம்மெய்யிற்பற்றி எரிவு செய்ததென்பதூஉம், 'திருவெழு கூற்
றிருக்கை' இறுதிவெண்பாவில் "ஆலவாயிலமர்ந்தாய்—தணிந்
தென்மேன், மெய்யெரிவு தீரப்பணித்தருளு வேதியனே" எனவும்,
'பெருந்தேவபாணி' இறுதி வெண்பாவில் "என் மேற், சீற்றத்
தைத் தீர்த்தருளுந் தேவாதி தேவனே, யாற்றவுநீ செய்யு மருள்"
எனவும் அவர்தாமே கூறுமாற்றாற் றெளியக் கிடத்தலானும்,
இறைவன் றமக்குக் கட்டளையிட்டவாறு கயிலைகாணச்செல்லு
நெறியின் மலைமுழையிற் றம்சிறைபுகுத்தப்பட்டுப் பின் செவ்
வேள் திருவருளால் அதனினின்று மீண்ட முறைமை "இன்றெம்

மைக், கைவிடா நின்றதுவுங் கற்போதும்பின் மீட்டதுவு, மெய்விடா வீரன்கைவேல்" என்றவர் 'திருமுருகாற்றுப்படை' யிறுதி வெண்பாவிற் பொதுப்பட வைத்துரைப்பதன்கட் பெறப்படுதலானும், தாங் கயிலைகாணச்சென்றமை முற்றுப்பெறாது வியத்தகு பரிசாற் காளத்தியையே யதுவாகக்காணும்படி நேர்ந்த பெற்றி நோக்கி யவ்விரண்டற்கும் ஒற்றுமைசெலுத்திக் "கயிலைபாதிகாளத்திபாதியந்தாதி" அருளிச்செய்ததனா லவ்வுண்மை யறியக்கிடத்தலானும் அவ்வரலாறுமுழுவதூஉ மெய்ப்பட நிகழ்ந்ததாமென்பது ஐயுறவின்றி நிலையிட்டுரைக்கப்படு மெனக்கொள்க.

இனி, இறைவன் றிருவுருக்கொண்டு நக்கீரனார் விழியெதிர் தோன்றினானெனவும், பின் அவரோடு வழக்காடி மறைந்தானெனவுங் கூறுவனவெல்லாம் யாண்டும் இயற்கையின் நடவாச்செயற்கையாதலின் மற்றிவை யெல்லாம் மெய்த்திறங் கொண்டு நிகழாப் பொய்ப் பொருள்களா மென்று வேறொரு சாரார் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிறழக்கூறி நலமுறார். ஆசிரியர் - நக்கீரனார்தாமே அங்ஙன நிகழ்ந்தவற்றையெல்லாம் இனிதெடுத்துக் கூறுதலின், அப்பெற்றியார் கூறும் அறிவில்லுரை வறிதாய்ப் போலிப்படுமென்பது நல்லுணர்வுடையா ருணர்ந்து கொள்வ ரெனவிடுக்க. அல்லதூஉம், மக்கட்பிறவியின் உறுதியுணர்ந்து உலக வாழ்க்கையி லமரலொழிந்து அவை மாறிமாறிவரு மியல்புணர்ந்து கழித்துத்தம்முயிர்க்கு நீங்காநிலைக்களனாயுள்ள துளக்கறும் பொருளியல்பறிந்து அப்பொருட் செயலினும் அறிவினுந் தஞ்செயலு மறிவுந்தோய்ந்து ஒருபெற்றியே யொருபேரின்பநுகர்ந்தமைய நினைந்திருக்கும் அறிவுடை நன்மக்கள் பண்டைநாட் டொடங்கி யின்றளவும் நிலவப்பெற்ற இச்செந்தமிழ் நாட்டொடு, அப்பிறவியினுண்மைப் பயனறியாது தம்வாணாண் முழுவதூஉம் உலக வாழ்க்கையிலழித்து வேறொருறுதி நாடாது, அங்ஙனங் கழித்தலையே தமக்குப்பெருமதிப்பாகக் கொண்டொழுகும் மாக்கள் நிறையப்பெற்ற ஏனைநாடுகளை ஒப்பிட்டு, அவ்வொப்புமையாலிச் செந்தமிழ்நாட்டில் நிகழ்ந்த அரும்பேரற்புதங்களைப் பொய்யென்று நினைந்தொழுகுவார்க்கு நல்லறிவு கொளுத்தி யவரைச் செந்நெறிக் கடாவுதல் ஒருவாற்றானுஞ் சாலாததொன்றாமென வொழிக. திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளருந் தாந்தா நிகழ்த்திய அற்புதங்களையும், இறைவன் றமக்குச்செய்யும்



அருட்பாடுகளையுந்தாமே தத்தஞ்செய்யுட்களில் அமைத்துக் கூறுதலும், அதனைப் பிற்காலத்தறிவுடை நன்மக்கள் பலரு* மெய்யெனத்தேறி நன்கு மதித்தலுங்காண்க. இறைவன் றன்னடியார் பொருட்டு இயற்றிய திருவிளையாடல்களும், திருத்தொண்டர் பிறருய்யும்பொருட்டு அவ்விறைவனருள்வழிநின்று நிகழ்த்திய பேரற்புதங்களும் இச்செந்தமிழ் நாட்டிற்போல வேறு பிறவற்றில் நிகழக்காணாமையான் வேற்றுநாட்டிலுள்ள மாக்கள் இன்னோரன்னவற்றைக்கேட்டலும் பெருநகைபுரிந்து எள்ளுவர். அதுபற்றி யவர்க்கு இரங்குவதேயன்றி யவரை யிகழார் பெரியோ ரென்பது. யாவராயினுமாக, இறைவன் ஒருதிருவிளையாடல் புரிந்தானென்றாதல், ஒருதிருத்தொண்டர் ஒருபேரற்புதம்நிகழ்த்தினா ரென்றாதல் கேட்டுழிக் கதுமென எள்ளி நகையாடாது அங்ஙன நிகழ்ந்ததனுண்மையை யாராய்ந்துணர்தல் அவர்க்கு இன்றியமையாததாமென்பது கடைப்பிடிக்க.

இனியொரு சாரார் திருவிளையாடற் புராணத்தையே கருவியாகக்கொண்டு தமிழ்ச் சங்கமெனவொன்றில்லை யெனவும், காசியிலிருந்த வடமொழிச்சங்கத்தை நோக்கித் தமிழ்ப்புலவர் புனைந்தெடுத்துக்கட்டிய கட்டுரையதுவாமெனவும், தமிழ்ப்புலவர் பொய்யும்புளுகும் புனைந்து கொண்டு அரசரையிரந்து பரிசுபெற்றுண்டு நாட்கழிக்கும் மிடிபடுவாழ்க்கைக் கையறியாமாந்தரெனவும், அவர் கூறுமாறுபோலத் தமிழ் அத்துணைப் பெருஞ்சிறப்பினதும் தொன்று தொட்டது மன்றாமெனவுந் தமக்குத் தோன்றியவாறெல்லாம் இளிவரக்கூறிப் பெரிதுமார்த்தலின், அவருரை புரைபடுமுகத்தாற் றமிழின்றொன்மையும், தமிழிலிருந்து பல சொற்கள் வேறு பாடைகளில் வழங்குதலும், தலைச்சங்கமிருந்த காலமும் கடைச்சங்கவரலாறும் ஈண்டெடுத்துக்காட்டி, இறுதி யவ்வாற்றானாசிரியர்-நக்கீரனார் காலமுங்காட்டுதும்.

இனி, இப்போது 'இந்து மகாசமுத்திரம்' என மிகப்பிரசித்தி யுற்று விளங்கும்மாகடல் பல்லாயிர வாண்டுகளுக்குமுன் நிலனாயிருந்ததென்பது ஆங்கிலநூல் வல்லார்க்கு இனிதுவிள

---

* மாக்ஸ்முலர், போப், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை முதலான பேரறிவாளர் பலரும் இன்னோரன்ன பேரற்புதங்களைப் பெரிதுந்தேறி நன்கு மதித்தல் காண்க. 'இந்தியா நமக்கென்ன கற்பிக்கும்?' 'திருவாசக மொழிபெயர்ப்பு' 'திருஞான சம்பந்தர் கால நிர்ணயம்.'

ங்கும். அவர், பல வேறுவகைப்பட்ட தேயங்களிலுள்ள மக்களின் உருவமைப்பும் உறுப்பமைவும் ஒத்துநோக்கி யவர்தம்முள் இனங்கண்டுரைப்பதாகிய * மக்களினநூலானும், இயங்கியற்பொருள் நிலையியற்பொருள்களைப் பகுத்துக்கொண்டு ஆராயும் நூல்களானும், அவ்விந்துமகாசமுத்திரத்திலுள்ள சில தீவுகளிற் கண்டெடுக்கப்பட்ட தமிழெழுத்துக்க ளெழுதிய செப்பேடுகள் கருங்கற்களானும் கிழக்கே சந்தாத்தீவுகள் வரையினும் மேற்கே மடகாசிகர் தீவுவரையினும் அகன்று கிடந்த இலெமூரியா என்னும் நிலன் ஒருகாலத்தெழுந்த பெருவெள்ளத்தால் ஆழ்ந்துபோயிற்றென்றும், இங்ஙனமாழ்ந்துபோன பெருநிலன் இந்நிலவுலக முழுவதற்கும் நடுவிற்கிடந்தபெரும்பரப்பாகலான் இறைவனாற் படைக்கப்பட்ட மக்கள் முதன்முத லிந்நிலத்திருந்து பின் நாற்றிசையினும் பிரிந்துபோய் வேறுபட்டன ரென்றும், அவ்வாறதிலிருந்த தொல்லோர் வழங்கியபாடை தமிழ்ப்பாடையா மென்றும் பொருளினிது விளங்கச் சொல்லுந்தோறும் காரணங்காட்டி நிறுவி விளக்குவர் †. இனி வேறொருசாரார் ஆரியர்கள் முதன்முதற் காஸ்பியன்கடலையடுத்த இடங்களிலிருந்து பின் பன்முகமாகப் பரந்து சென்றார்களென்ப ‡. இனிப்பிறிதொரு சாரார் ஆரியர்கள் காஸ்பியன் கடலையடுத்த இடங்களில் முதன்முதலிருந்தார்களென்பார் மதத்தை மறுத்து, காந்திநேவிய தீபகற்பத்தின் தெற்கில் முதன்முதலிருந்து பின் பன்முகமாகப்பிரிந்து சென்றார்களென்பர் §. அவ்வாறவர் கூறுமாற்றான் ஆரியன் முதன் முதலிருந்து பின் பிரிந்த இடமாத்திரம் பெறப்படுமாமன்றித் தமிழர்களுக்கும் உலகத்திலுள்ள எல்லா மாந்தருக்கும் அஃதேயிடமாமென்பது அதனாற் போதராமையின் யாம் முற்கிளந்துகூறிய இலெமூரியா என்னு நிலப்பரப்பே தமிழர்கள் தொன்றுதொட்டுவதிதற்கு இடமாயிருந்த தென்பதூஉம், அந்நிலப்பரப்பழிந்துபடலே யதனுடனழிந்தோர் போக ஒழிந்தோர் இந்தியா, மலையதீபகற்பம், சீயம், பலுசிதானம், பாரசீகம், அராபியா, துருக்கி, கிரீசு, இத்தலி முதலான பலவேறுவகைப்பட்ட தேயங்களின் தென்பாகங்களிற் சென்று குடியேறி யங்ஙனங்குடியேறிய தேயங்களின் ஒழுகலாற்றிற்கேற்ப நாடோறும் ஒழுக்கமும் உருவமும் பாடையும் வேறு

* Ethnology. † Professor Haeckel ‡ Prof. Sayce.
§ Prof. Penka and Prof. Sayce.



பட்டு வாழ்ந்தார்களென்பதூஉம் இனிது விளங்கும். அது வன்றே, * கடவுள் : ஒன்று : எட்டு : கொல் : ஈன் : வேறு : சுருங்குமுதற் பலதமிழ்ச்சொற்கள் பலவேறுவகைப்பட்டபாடைகளில் வழங்கப்படுவதூஉ மென்க. இன்னும் இதனாற்போதரும் உண்மை என்னெனின்; பண்டை நாளில் மக்கட்பரப் பென்பது இரண்டு கூறுபட்டு, ஒன்று வடக்கே காந்திநேவிய தீபகற்ப முதலான இடங்களில்வதிய, ஏனையது தெற்கே இலெமூரியா என்னும் பெருநிலப்பரப்பில் வதியப் பின் வடக்கிலுள்ள காந்திநேவிய முதலான இடங்கள் தட்பமிகுந்து உயிர்வாழ்தற்கு அரிதாய் மாறினமையால் ஆண்டுறைந்த ஆரியர் தென்றிசைநோக்கிப் பன்முகமாய்ப் பரந்துபோந்தும் தெற்கிலுள்ள இலெமூரியா என்னு நிலப்பரப்பு வெள்ளங்கொண்டழிதலின் ஆண்டிருந்தோர் வடதிசை நோக்கிப் பன்முகமாய்ச்சென்றும் ஒருவரோடொருவர் விராய் ஒருவர்பாடையை யொருவர்கற்று ஒருவர்ஒழுக்கத்தை யொருவர்தழீஇ ஒருவரை யொருவர் வெற்றிகண்டு ஒருவர் ஒருவரையாண்டு இவ்வாறெல்லாம்ஒன்றுபட்டு வேறுபிரித்துக் காணப்படாநீர்மையராயின ரென்பதாம். இங்ஙனம் இவ்விருவேறு மக்கட்பகுதிகளும் ஒருங்குகூடி ஒன்றாய்ச்சமைதலின், தாமரை : மீன் : அடவி : நீர் : தீ : காலம் : உலகம் : மணி : முத்து : மென்மை : கருமை : திண்மை : வன்மை : வெண்மை: பசுமை, கருமை : தண்மை : கவான் : ஊன்:அவை:அந்தி : சுண்ணம் : வண்ணம் : பீழை : விழி : பகு : சுடு : கட்டு : தள் : மிகு : சால் : பற முதலிய செந்தமிழ்ச் சொற்கள் வடமொழியினும், சூரியன் : சந்திரன் : அமிழ்தம் : காரணம் : எந்திரம் : சீக்கிரம் : குங்குமம் :சமுத்திரம் : கருமம் : அற்புதம் : பசு : விரோதி : தேவர் முதலிய வடசொற்கள் செந்தமிழினும் கலந்து வழங்குவனவாயின. இனி, 'இந்துமகாசமுத்திரம்' எனப்பெயரிய மாகடல் பல்லாயிர மாண்டுகளுக்குமுன் பெருநிலப்பரப்பா யிருந்ததென்று நீவிரோதியது பெரிதும் வியத்தக்க தொன்றுகாண், ஆயினும், அதனை ஆங்கிலநூல்வல்லார் கூறுமாறுபற்றி நீவிரும் எடுத்துக்கொண்டுரைத்தலின், மற்றது எம்மனோரால் தேறப்படுந்தகையதன்று, என்னை ? தமிழ்நூலிலிருந்து காரண மெடுத்துக் காட்டி நிறுவாமையான் என்னு மெமர்க்குறுதி பயத்தற்பொருட்டுத் தமிழ் நூன்முகத்தானும் அதனைச்சிறிது விளக்கிக்காட்டுதும்.

* God : One : Eight : Kill : Yean : Various : Shrink.

தமிழில் மிகப்பழங்காப்பியமென அறிவுடையோர்பலரும் ஒத்தெடுத்த 'சிலப்பதிகார'த்திற் கிளக்கப்படுவனயாவும் உண்மைப் பொருள்களா மென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. அதில் ஆசிரியர்-இளங்கோவடிகள் *"வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்றார்; இனி வேனிற்காதையில் "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் "அக்காலத்து அவர்நாட்டுத்தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கு மிடையே † எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ்முன்பாலை நாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகாரைநாடும் ஏழ்குறும்பனை நாடு மென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண் டொழிதலாற் குமரிப்பௌவ மென்றார்" என்று கூறினார்.

---

* காடு காண்காதை † இதனால்,எழுநூற்றுக்காவதம் அகன்று கிடந்த நாற்பத்தொன்பது நாடுகள் கடல் கொள்ளப்பட்டனவென்பது புலனாம். இந்நாள் அளவைப்படி ஒரு காவத மென்பது பத்துமைலாக எழுநூறு காவதமும் ஏழாயிரமைலெல்லையளவாம். ‡ இந்து மகாசமுத்திரம் இப்போது ஆங்கிலநூல்வல்லார் அளந்தறிந்தவாற்றான் இருநூற்றைம்பது இலட்சஞ் சதுரமைலுடைய தென்பதியாருமறிவர். இதனாலது சிறிதேறக் குறைய ஐம்பதுஇலட்சம் மைல் நீளமும் ஐம்பது இலட்சம் மைல் அகலமுமுடையதென்பது பெறப்படும். பெறவே, இவ்வைம்பது இலட்சம் மைல் நீளத்தில் ஏழாயிரமைல் நிலனாயிருந்த கடல் கொள்ளப்பட்டதென்பது. இப்போதுள்ள மோரீசுதீவுக்கும் வம்பாய்நகரத்திற்கும் இடையிலுள்ள நீர்ப்பரவை இரண்டாயிரத்தைந்நூறு மைல் நீளத்தது. இனி மோரீசுதீவுக்குத் தெற்கேயுள்ள கேர்கியூலன் என்னுந் தீவுக்கும் மோரீசுதீவுக்கு மிடையிலுள்ள நீளமும் அவ்வளவினதேயாம். ஆகவே நீளத்தில் இப்போதுள்ள குமரிமுனையிலிருந்து கேர்கியூலன் என்னுந் தீவுக்குத் தெற்கிலுள்ளவரையிலும் அகலத்தில் மடகாசிகர் தீவுமுதற் சுமத்திரா, சாவா முதலிய தீவுகளையுள்ளடக்கிய சந்தாத் தீவுகளளவும் நீண்டு விரிந்துகிடந்த குமரிநாடு (இலெமுரியா) கடல்கொண்டொழிந்ததென்க.

நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளை.



## வாழ்க்கைப் பயன்.

### II. சூழ்ச்சி.

[354-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

வாழ்க்கையின்கண் வென்றி பெறுதற்குச் சாமர்த்தியத்தினும் சூழ்ச்சியே யதிக முக்கியமானது. ஆனால்அஃதியற்கையில் அமையப்பெறாதவர்க் கெளிதி லெய்தாது. ஆயினும் பிறர் விரும்பத்தக்கனவற்றைக் கவனிப்பதனாலேதேனும் சிறிது செய்யலாம்.

இன்பம் பயக்கவல்ல அமயங்களைக் கைசோரவிடன்மின். எல்லோரிடத்தும் மரியாதையாயிருமின். மான்டேக் மாதரசி "மரியாதையைச் செலவின்றிப்பெறலாம்; ஆனால் அதைக் கொண்டெல்லாவற்றையும் வாங்கலாம்" என்று கூறினாள். உண்மையாகவே பொருளினாற் பெறுதற்கரிய பலவற்றையும் இன்சொலாற் பெறலாம். அற்றேல், நீவிர் சந்திக்கு மொவ்வொருவரையும் வசீகரிக்க முயலுமின். 'அவர்களது மனத்தை வென்றுவிட்டால் அவர்தம் பணப்பையையும் கொள்ளலாம்' என்று பர்லே பிரபு எலிசபத் மகாராணிக்குக் கூறினார்.

வன்மை தவறுழியெல்லாம் சூழ்ச்சிவெல்லும். அதற்கு மேற்கோளாகச் சூரியனையும் வாயுவினையும் பற்றிய ஒரு பழைய கட்டுக்கதையை லிலியெடுத்துக்கூறுகின்றார். "சூரியன்வாயு என்ற இருவருக்குள் யாவர் மிக்க வலியுடையாரென்பது பற்றி யெழுந்ததோர் விவாதம் அழகுபெறக் குறிக்கப்பட்டுளது. ஒரு கனவான் வெளியில் நடந்துசெல்லுழிக் காற்றானது அவர் மேலாடையைப் பறக்க அடிக்க எண்ணி மிக்க வலியுடனே ஒலியிட்டுச் சுழன்றடித்தது. இதனால் ஆடை முன்னினுமுறுதியாய் அவன் முதுகைப்பற்றிக்கொண்டது. பின்பு சூரியன் தன் உஷ்ணமான கிரணங்களா லக்கனவானை வாட்ட அவன் வெயிலாற் சிறிது களைப்புற்று ஆடையொடு தான்புக்கிருந்த மெய்ப்பையையும் களைந்தெறிந்தான். அதுகண்ட வாயு சூரியனே வெற்றி பெற்றதாக வொப்புக்கொண்டார்."

மனிதரைப் பின்னிருந்தோட்டுவதனினும் முன்னிருந்து நடத்துதலெளிதென்றும் எவ்வாற்றானும் கட்டாயப்படுத்துவதனினும் வழிகாட்டல்மிகவும் நன்றென்றும் எஞ்ஞான்றும் மனத்தில் வைத்துக்கொள்வீர்.

"வேண்டுநவற்றை விரும்பிப் பெறுவுழி
யாண்டு மிளநகை பெய்தலே நன்று
வாளின் முனையினாற் போழ்வ தன்று."

நம்முடன் பழகும் பலரும் நம்மிடத்து நம்பிக்கை கொள்ளவும் அங்ஙனம் நம்புதற்குத் தகவுடையோமாகவும் நாம் முயலல்வேண்டும். உண்

மையினும் நன்னடக்கையே பலர்து செல்வாக்கினுக்குங் காரணமாயிருக்கின்றது. உயர்ந்த உத்தியோக மெதுவுமின்றி ஆச்சரியமான செல்வாக்குடைய பிரான்ஸிஸ் ஹொர்னர் என்பவரைப்பற்றி அவரது முகத்திற் பத்துக்கட்டளைகளும் பொறிக்கப்பட்டன என்று சிட்னி ஸ்மித் கூறுவது வழக்கம்.

நேர்மையோடும் அறிவோடும் நும்மாலியன்றவளவு பிறரது விருப்பத்தின் வண்ணம்நடக்க முயலுமின்; ஆனால் 'அன்'றென மறுத்தற்கஞ்சன்மின்.

இன்புடன் 'ஆ' மென்றெவ்வொருவரும் கூறுவிடினும் எவரும் 'ஆம்' எனவாளா கூறுதலியலும்; ஆனால் 'இல்லை' யெனக்கூறுதல் அதனினும் வருத்தமானது. அவ்வாறுகூற முடியாது அழிவுற்றிருக்கின்றோர் பலர்.

சிற்றசியாவின் குடிகள் 'இல்'லெனுமசையைக் கூறவல்லரல்லாமையினாலேயே அடிமைகளாயினரென்றும் வாழ்க்கை நடையில் 'இல்லை' யெனச் சொல்லுதல் அவசியமாயின் அதனை யகமலர்ச்சியொடு சொல்லுதல் சிறிதும் அவசியத்திற் குறைந்ததன் றென்றும் ப்ளூடார்க் என்பார் கூறுகின்றார். ஒரு தொழில்பற்றி நம்முடன் சம்பந்தப்பட்டவரெவ்வொருவரும் நம்மொடு தொழில்செய்தலின்பமே யன்றித் துன்பமன்றென்றெண்ணி மறுபடியும் நம்மிடத்து வரவிரும்ப நாம் முயலவேண்டும். தொழில் அநேகர் எண்ணுவதினு மதிகமாய் மனவிருப்பங்களைச் சார்ந்துளது. ஒவ்வொருவரு மன்புடனும் மரியாதையுடனும் நடத்தப்பட விரும்புகின்றனர். நூற்றுக்கு அரைவீத மெய்தும் பொருள்வருவாயைப் பார்க்கிலும் நன்றாய்க் கபடமற்ற இனிய நடை ஒருகாரியத்தை முடிக்கும்.

பெரும்பாலும் ஒருவன் தான் விரும்பினால் தன்னையே யின்பப்படுத்திக்கொள்ளலாம். 'இன்புறுத்த விரும்புவதே அதனைச்செய்து முடிப்பதிற் பாதி வேலையாயினுமாகின்றது. ஆனாலங்ஙனம் செய்ய விருப்பமற்றவரெவரும் பிறரை யின்புறுத்தார். இப்பெரும் பேற்றை யிளமையிலடையாவிடிற் பிற்காலத்தில் மிக வதிகவருத்தமாய்க் காண்பீர். பலர் தம் உயர்ந்ததிறமையினாலன்றித் தந்நன்னடக்கையினாலேயே வெளிப்படையாய் வாழ்க்கையின்கண் வென்றி பெற்றனர். ஆனால் நன்மனமும் பட்சமான வெண்ணங்களுமுள்ளதக்கோருட்பலர் தம் முரட்டுத்தனத்தினாலேயே பலரை விரோதிகளாக்கிக் கொள்கின்றனர். மேலும் பிறரை யின்புறுத்தும் வன்மையே ஒரின்பமாம். இதன்கண் முயன்றால் நும்முயற்சி பாழ்போகாது.

சாக்கிரதையாயு மமைதியாயு மிருமின். அன்புள்ள நெஞ்சப்போலமைதியுள்ள மனமும் அவசியம். உறுதியுமமைதியும், ஆபத்தும் வருத்தமுமுள்ள காலங்களில் உம்மைப் பத்திரமாய்க் காப்பாற்றுவனவேயன்றி எந்த விஷயங்களிலும் மதிக்க முடியாப் பயனுடைய துணைகளுமாம்.



உம்மினும் புத்தியிற் சிறியோரைக் காணுழி யவரை யவமதிக்க உமக்குரிமை யாதுமில்லை. பெருநிதியினும் பேரறிவைச் சுதந்தரமாய்ப் பெறுவது மிகவுமேதக்கதன்று. இரண்டிலும் நேரிய உபயோகத்தினாற்றான் சீர்த்தியெய்துகின்றது. மேலும் பலர் புறத்திற் றோன்றுவதைப் பார்க்கிலும் உண்மையில் அதிக ஞானவான்களாயிருக்கின்றார்கள்.

மனிதரினும் நூல்களைப் படித்தல் மிக வெளிதாம். மக்களியல்பை யறிவதிற் கண்கள் பேருதவி செய்கின்றன. கண்ணொன்றும் நா பிறிதொன்றுஞ் சொல்வுழி அநுபவசாலிகள் முன்னதையே நம்புவார்கள். மிக்க தயவு வேண்டிய உத்தியோகங்களை நம்பன்மின். மனிதர் மனிதரோடும் மகளிர் மகளிரோடும் முதற் பார்வையிலேயே நேசங்கொள்ளார். ஒத்தநோக்குமிடத்துப் பிறனொருவன் நம்மை மறுத்து அதிகமாய் வாக்களித்தால் அதை முற்றும் நம்புதல் கூடாது. அவன் உண்மையற்றவனாகாவிடினும் தானெண்ணுவதனினும் ஒருவேளை யதிகமாய்ச் சொல்லுவானல்லது அவனுக்கு நம்மாலாகவேண்டிய தேதேனுமிருக்கும். ஆகையாலொருவன் றன்னைப்புறத்தில் நேசனாகக் காட்டிக்கொண்டால் அதுகாரணம் பற்றி யவனகத்திலும் நேசனென நம்பன்மின். அற்பகாரணத்தாலெவனையும் பகைவனெனக் கருதலு மொழிதிர்.

நாம் பகுத்தறிவும் ஞானமு முடையோமெனக் கூறுவதனால் நம்மையே புகழ்ந்து கொள்ளுகின்றோம். ஆனால் மக்களெஞ்ஞான்றும் தத்தம் பகுத்தறிவின்வழிச் செல்கின்றார் என்றெண்ணுதல் பிழையே. நாம் அற்புதமும் முன்பின் மலைவுமுள்ள பிராணிகள். எத்துணை யறிவின்வழிச் செல்கின்றோமோ அத்துணை ஒருகால் இன்னும் அதிகமாய்த்திரிபுணர்ச்சியும் கோபமுமாகிய இவற்றின்வழிச் செல்கின்றோம். நாம் பிறரோடு வாதித்து அவரைத் திருத்தியடையச் செய்தலின்றி அவரது தயவைச்சம்பாதித்து நம்பக்கஞ் சேர்த்துக்கொள்கின்றோமென்பதே போந்தபயனாயிற்று. மேலுமிவ்வியல்பு தனித்தனி மாந்தர்க்குப் பொருந்துவதெனினும் மக்கள் குழாங்கட்கு மிகவும் பொருந்துகின்றது.

வாதமெப்பொழுதுஞ் சிறிதபாயகரமானது. அஃதடிக்கடி விரோதமும் விபரீதமு முண்டாக்குகின்றது. நீவிர் வாதத்தில் வெற்றிபெறலாம், ஆனால் நண்பனை யிழப்பீர். அஃதொரு நஷ்டமே. நீயிர் அவசியமாய் விவாதம் செய்ய வேண்டியிருந்தால் நும்மாலியன்றவளவு ஒத்துக்கொண்டு ஏதோ ஒரு விஷயம் கவனிக்கப்பட்டிலதென வெடுத்துக்காட்ட முயலுமின். வாதத்திலெப்பொழுது தாம் தோற்றனரென்பதை யறிந்தோரைக்காண்டல் மிகவரிதாம். அன்றியுமொருவன் வாதத்திலடிபட்டால் அது நியாயமேயெனத்திருத்தி யடைவானென்பது போதாராது. உண்மையாகவே வாதத்தினாலொருவனைத் திருத்தியடையச்செய்ய முயலுதல் பயனற்றதென்று சொல்வது குற்றமாகாது. நுந்தம் விவாத விஷயங்களைத் தெளிவாகவும் சுரு

க்கமாகவும் சொல்லிப்பிறனது கோட்பாடுகளையே அவன் ஐயுறச் செய்தால் நீவிர் எதிர்பார்க்கக் கூடியனவெல்லாம் நடந்துவிட்டன. அஃதே நாமடைந்த முதற்படியாகின்றது.

தனித்து நோக்குழிச் சம்பாஷணையு மொருவித வித்தையாம். "டேகார்டே, சர்ஐசக்நியூடன், இவர்களினும் எக்காலாட்டலைவனும் அதிக நன்மை வாய்ந்த நண்பனாவா" னென்று செஸ்டர்பீல்டு பிரபு கூறியது உசிதமன்றாயினும் பேசுதற்கு அதிக சரக்குள்ளோர் ஒருகாலும் சிறந்த நாவலராகார்.

நன்றாய்ப்பேசுதற்கு வேண்டிய வருத்தம் நன்றாய்க் கவனிப்பதற்கு வேண்டுமென்று யான் கூறேன். ஆனால் நிச்சயமாகவே அஃதொருவாற்றானெளிதன்று. சற்றேறக்குறைய முன்னதைப்போலவே முக்கியமானதுதான். நீர் கேட்பனவற்றை நுண்ணிய ஆராய்ச்சியுடையோன் போலாதல் நியாயாதிபதிபோலாதல் கேளன்மின். ஆனால் நும் அபிப்பிராயத்தை வெளியிடா தடக்கிப் பேசுவோனது மனோவிகாரங்களில் நுழைந்தறிய முயலுமின். நீர் அன்பும் அருளுமுள்ளீராயிற் பலரும் உமது புத்திமதியை நாடுவார்; அதனாலுமக்கும் பிறருக்கும் கவலையும் வருத்தமுமுற்ற காலை உதவிசெய்து சுகம் விளைப்போராக இருத்தல்பற்றி ஒருவிதத் திருத்தி யுண்டாகும். நும் மிளமையிலெவரும் நும்மை யதிகமாய்க் கவனிப்பாரென் றெண்ணன்மின். இருமின், கேண்மின், நாற்புறமுங் காண்மின். அருகிலுள்ளோர் விளையாட்டின் சுவையைப் பெரிதும் நுகர்கின்றனர் என்றொரு பழமொழியுண்டு. பிறரால் நீர் கவனிக்கப்படா திருக்கும் போழ்தே நிகழும் விஷயங்களை அவரினுமதிகமாகக் குறித்துணராவிடினும் அவரைப்போலவாயினுங் குறித்துணரலாம். அஃதேயநேகமாய்ப் பிறருக்குத் தன்னை மறைக்குமையிட்டது போலாம்.

பலருக்கு ஆராய்தல் வருத்தமான காரியமாயிருத்தலின் அதனிக்கத்தின் பொருட்டு அடிக்கடி உம்மை நீர் மதிக்கின்றபடியே தாமும் மதிக்கின்றார்.

நீயிரே நுமக்குப் பகைவர் படைத்துக்கொள்ளாதீர்; அதனினுந் தீய காரியம் வேறொன்றுமிலது. "மூடனிடம் அவன் மூடத்தனத்திற் கேற்றபடி பேசன்மின்; ஏனெனில் நீரும் மூடராக மதிக்கப்படுவீர்." குளிர்ந்த விடை கோபத்தை நீக்குமென்பதை மறவாதீர்; ஆனாற் கோபமான மறுமொழியும் இகழ்ச்சிக்கு மூடத்தனத்தில் நிகராகாது. பதின்மரிலொன்பதின்மர் வைதாலு மடித்தாலும் பொறுப்பர். ஆனாற் பிறரால் நகையாடப் பெறுதலைப் பொறார். பிறரால் நகையாடப்பெறுதலைத் தவிர்த்துப் பெரும்பாலும் மற்றவை யனைத்தினையு மெளிதில் மறப்பார்.

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு"



என்ற பொய்யில்புலவன் பொருளுரையும் ஒருவாற்றானீண்டேற் புடைத்தாதல் காண்க.

ஏமாந்தமையே தான் பிறர்க்குப் புலனாவதினும் அதிக இனிமையுடையதாம். அதன்ஸ் நகரத்தனாகிய ட்ராகிலஸ் என்பான் பைத்தியங்கொண்டு பிரேயஸ் பட்டினத்திலுள்ள நாவாய்களனைத்துந் தனவெனக் கருதி யிருந்தகாலை கிரீடோ என்பானாற் பைத்தியம் நீக்கப்பட்டபோது அவற்றைத் தம்மிடத்தினின்றும் யாரோ கொள்ளை கொண்டாரென்று மிகவும் வெறுத்து முறையிட்டுக்கொண்டான். "பரிகாசத்திற் காயினு மொருநண்பனை யிழத்தல் மூடத்தனமாம்; கவலையின்றி யிருபக்கத்திலும் சேரானைப் பிறர் மனத்திற் றைக்க வல்ல ஒரு நயங்கூர் விடையின் பொருட்டுப் பகைவனாக்கிக் கொள்வது அதனினும் அறிவின்மையிற் குன்றாதது" என்று செஸ்டர் பீல்டு பிரபு கூறுகின்றார்.

கிக்கிப்போ னொருவனை யைப்படவாதல் பிலுக்கர் தந்திர மென்னு நூலில் ஸ்கிரப் என்பான் 'அவர்கள் குலுங்கச்சிரித்ததனால் என்னைப்பற்றியே பேசினார்கள்' என்று கூறினாற்போல நம்மைத்தான் இகழ்ந்து நகைக்கிறதாக வெண்ணவாதல் சித்தராயிராதீர். ஆனால் எவராயினும் உம்மை நகையாடினு லதற்றுள்ளாகாதீர். நீருமவருடன் மனமொப்பிச் சேரக்கூடுமாகில் அவர் காரியத்தைத் தலைகீழாக்கிவிட்டு நஷ்டமடையாது லாபமடைவீர். தான் பிறரால் நகையுண்டகாலத்து அந்நகையின் சுவை காண்பானை யெல்லோரும் விரும்பாநிற்பார். அதுவும் நியாயமே; ஏனெனில் அது நல்லறிவும் நல்லியல்பு மவனிடமுளவெனக் காட்டுகின்றது. நீயிரே நும்மை நகையாடிற் பிறரும்மை நகையாடார்.

உம்மபிப்பிராயங்களிற் றைரியமாயிருமின். சிலவேளைகளி னகையாடப் பெறுதலை யெதிர்பார்க்கவேண்டும். அப்பொழுது அஃதொரு தீங்கும் விளைக்காது. நீருண்மையாக வுள்ளபடி தோன்றுதலில் நகையாடத்தக்க தொன்றுமில்லை. ஆனால், நீர் இல்லாதபடி நடிப்பதில் நகையாடற்கு வேண்டிய வளவுளது. ஏதோ ஒரு பொய்யான குறைபாட்டிற்காக மக்களடிக்கடி தம்மையே நொந்துகொள்ளுகின்றார், கோபமுறுகின்றார், பிறரொடு விரோதஞ்செய்து கொள்ளுகின்றார்.

கபடமற்றும் ஒர்சமுற்று மிருமின். உம்மைப்பற்றியே யதிகமாய்ப் பேசிக்கொள்ளன்மின். உம்மைப்பற்றியாதல், உமக்காகவாதல், உமக்கெதிராகவாதல் பேசுதல் தவிர்க. ஆனாற் பிறர் தம்மைப்பற்றி வேண்டியமட்டும் பேசிக்கொள்ளட்டும். அவ்வாறு செய்தலை விரும்புவதனாற்றா னங்ஙனஞ் செய்கின்றார்கள். அவர் சொல்வனவற்றிற்குக் காதுகொடுத்தால் உம்மைப்பற்றியென்னும் நல்லெண்ணங் கொள்வார்; எவ்வாற்றானும் உங்கடமையாயிருந்தாலன்றி நீர் ஒரு மனிதன் புல்லறிவினனென்றுதல் பொறி

யறையென்றுதல் எண்ணுவதை அவனுக்குக் காட்டன்மின். நீர் அவ்வாறு செய்தால் அவன் முறையீட்டினுக்குத் தக்க காரணமுளது. நீவிரும் உம் முடிவுகோளிற் பிழைபோகலாம். உம்மைப்பற்றியும் அதே எண்ணம்-அதுவும் சிறிது நியாயத்துடன் - அவனுங்கொள்வான்.

பர்க் என்பார் ஒரு காலத்தில் ஒரு குலத்தை ஒருங்கே தான் பழிக்கக் கூடாதென்றார். ஒரு வகுப்பினரையாதல் ஒரு தொழிலினரையாதல் எதிர்ப்பது மிகவும் அநியாயமும் மடத்தனமுமாகும். தனித்தனி மனிதரடிக்கடி பொறுத்து மறப்பார். ஆனால் மக்கட்குழாம் எப்பொழுது மங்ஙனஞ் செய்கின்றதில்லை. மேலுந்தனித்தனி மனிதன் ஓரவமதிப்பினும் தீங்கையெளிதாய்ப் பொறுப்பான். அசங்கதமாகத் தோற்றுவதனினும் வேறொன்றும் மனத்தைப் புண்படுத்துவதில்லை. மனிதரைக் கோபமூட்டுவதனாலும் பரிகாசம் செய்வதனாலும் உம் காரியம் கைகூடாது.

கீதையென்னும் புலவர்பெருமான் எக்கர்மானோடுசெய்த சம்பாஷணைகளில் ஆங்கிலரைத் துதித்தார். ஓரவையில் அவர் பிரவேசிக்குமாறும் அங்கே நடந்து கொள்ளுமாறும் எவ்விடத்து மவரே பெருமானர்களென்றும் உலக முழுதும் அவரதேயென்றும் ஒருவன் எண்ணுமளவு நிச்சயமாகவும் அமைதியாகவும் இருக்கின்றனவாக அவர் கூறினார். எக்கர் மான் என்பவர் நிச்சயமாகவே ஆங்கிலர் சேர்மானிய இளைஞரினும் புத்தியிலாதல் கல்வியிலாதல் நன்மனத்திலாதல் மேலானவர்களல்லர் என்றார். கீதை விவாதவிஷயம் அஃதன்று. அவர்தம் மேன்மை இத்தகைய விஷயங்களிலாதல், அவர்கள் பிறப்பு அதிர்ஷ்டங்களிலாதல் இல்லை. இயற்கையாய் அவர் இருந்தபடியே இருத்தற்கு வேண்டிய தைரியத்திற்றான் அவர் மேன்மையுளது. அரைகுறை யென்பதே அவர் அறியார். அவர் நிரம்பிய மனிதர். சில வேளைகளில் முழுமக்கள் என்பதையும் ஒத்துக்கொள்ளுகின்றேன். ஆனால் அது சிறிதேயெனினும் யாம் அனைவரும் கவனிக்கவேண்டியதே.

எத்தொழிலிலும் பொறுமையாயிருமின். பலர் தம் வேண்டுகோட்குப் பிறர் இணங்குதலினும் தம் சரித்திரத்தைக் கேட்கவேண்டுமென்று விரும்புவார். அதை யெதிர்ப்போருட் பலர் களைத்தொழிந்தார். எவற்றினும் மேலாகச் சினங்கொள்ளன்மின்; கொண்டாலும் வாயடங்கி வெளிக்காட்டாதீர். குளிர்ந்தவிடை கோபத்தை நீக்கும்; ஆனால் அன்பமொழி கோபமூட்டுமாதலின் சினத்தின் நீங்குமின். செற்றம் செய்யாதீர். எவ்வாற்றானும் தீங்கு செய்ய விரும்பாதீர்.

வேண்டா இடங்களிற்சென்று தலையிடாதீர்; அதைத் தவிர்த்துப் போதிய இடம் யாங்கணு முளது. ஜேம்ஸ் அரயன் ஈயினிடம்; 'யான் மூன்று இராச்சியங்கள் உடையேன் அல்லேனோ? அவ்வாறாக அவற்றைவிட்டு என் கண்ணிற்றானோ பறக்க வேண்டும்?' என்று கூறினார்.



சிலர் தவறு பேசுவதிலும் நொந்த புண்ணிற் கோலிட்டாற் போல விசனகரமான விஷயங்களை நினைப்பூட்டுவனவற்றைப் பற்றிப் பேசுவதிலும் அபிப்பிராயங்களில் வேறுபாடு விளைப்பதிலும் சாமர்த்தியமுடையராயிருக்கின்றார்கள்.

மக்களைப்பற்றிய வறிவினு மிக்க பயனுள்ளதொருநூலுமில்லை. அறிவுடன் நியாயந் தீர்க்க வல்லராயிருக்க வேண்டுமென்பது மிகவு மின்றியமையாதது. எவரை நம்பலாம் எவரை நம்பக்கூடாதென்பதேயன்றி யவரை யெத்துணை யெவ்விஷயத்தில் நம்பலாமென்பதும் மிக முக்கியமானது. இஃதொருவாற்றானு மெளிதன்று. உம்முடனின்றும் உமக்குக் கீழாக நின்றும் வேலை செய்வோரை நன்றாய்த் தெரிந்தெடுத்தலும் சதுரரைச் சதுரமான விடத்திலும் விருத்தரை விருத்தமான விடத்திலும் வைப்பதும் சாலவு மின்றியமையாதன.

ஒருவன் மீது ஐயங்கொள்ளில் அவற்குத்தொழிலிடாதீர். ஒருவற்குத் தொழிலிடில் அவன்மீது ஐயங் கொள்ளாதீர்.

பெரும்பாலும் நம்பாதாரினும் நம்புவோர் நேர்வழியிலிருக்கின்றார்கள்.

நம்பிக்கை பூரணமாயிருத்தல் வேண்டுமே யன்றிக் குருட்டுத்தனமாயிருத்தல் வேண்டுவதில்லை. 'முழுது நம்புமின் அல்லது நம்பவேநம்பாதீர்' என்ற விவியன் வேண்டுகோட்கு அறிவின்றி யிணங்கினனாதலின் விவேகியாயினும் மேர்லின் தன்னுயிரை யிழந்தான்.

எப்பொழுது மாராய்ச்சியுடையோரா யிருக்கவேண்டின் ஒவ்வொருவரும் எப்பொழுதும் சொந்த யோசனைப்படியே செய்க. உம்மிஷ்டத்தை நீரே செய்யாவிடில் அதன்படி பிறர் நடப்பாரென் றெதிர்பார்த்த லொண்ணாது. "ஞானவானுக்கு வாய்மனத்திலே; அறிவிலானுக்கு மனம் வாயிலே, ஏனெனில் அவன் எண்ணுவது அறிவது எல்லாவற்றையும் சொல்லிவிடுகின்றான்."

உமக்களிக்கப்பட்டுள வறிவைப் பயன்படுத்துமின். உம்பகுத்தறிவையு மனுசரித்துக் கொண்மின். உம்பகுத்தறிவு தவறு மியல்பில தன்றாயினும் நீர் பிழைசெய்தல் சிறுபான்மைத்தாகும்.

பேச்சு வெள்ளிபோன்றது அல்லது வெள்ளிபோலிருக்க வேண்டும்; ஆனால் மௌனம் பொன்போன்றது.

பேசுதற்கு விஷயமில்லாத காலையும் பேச்சிலாசையுள்ளதனாலேயே பலர் பேசுகின்றார்கள். அது நாவின் றொழிலாயிருப்பதனினும் மனத்தின் றொழிலா யிருத்தலே நலம். வீணாய்ப்பேசுந்தன்மை அஃதாவது பேசவேண்டுமே யென்பதற்காகவே பேசுவதிலாசை வென்றியினழிவிற்குக் காரணமாயுளது. மக்கள் பேச்சின் வெறியினால் ரோகவும் வேகமாகவுந் தள்ளுண்டு தாம் கருதியனவற்றிற்கு முற்றிலும் மாறுதலைப்பட்ட விஷயங்களைச் சொல்

விப் பின்னர் அவ்வாறு பேசியிருத்தல் கூடாதென் றெண்ணுகின்றனர்; அல்லது நாவிற்குத் தொழிலிடுதலைத் தவிர்த்து வேறொரு கருத்துமின்றித் தகவற்ற விஷயத்தைப் பற்றிப் பேசுகின்றார்கள்.

இவ்வாறு பேச்சிலடக்கப்படாத கருத்தின்மையும் அபரிமிதமுமே வாழ்க்கையின்கண் அளவற்ற சேட்டிற்கும் அழிவிற்குங் காரணமாயுள; அது சுட்டிச் சொல்லப்பட்டவர்களுக்குச் சினமூட்டுகின்றது; வினைபோரிடத்துக் கலசத்தையும் வேற்றுமையையும் விளைக்கின்றது. வாளாவிடிற் றாமேமறையத்தக்க அற்பமான வருத்தங்களையும் குற்றங்களையும் கொணருகின்றது.

டெமரேடஸ் என்பான் ஓரவையிற் பேசாதிருந்ததற்குக்காரணம் மொழியின்மையோ வறிவின்மையோ வென்று வினவப்பட்டபோது 'ஒரு மூடன் மௌனமா யிரான்' என்று விடைபகர்ந்ததாக ப்ளூடார்க் கூறுகின்றார்.

" பரபரப்பாய்ப் பேசுவோனைக் காண்பீரா ? அவனினும் பேதையிட மிருந்து அதிகமா யெதிர்பார்க்கலாம்" என்றார் சாலமனும்.

நும்மேன்மையைக் காட்ட முயலாதீர். நம்மிற் சிறியரென வுணரச் செய்வதினும் மனிதனை யதிகமாய்க் கோபமூட்டுவது இல்லை.

உம்முறையே சரியெனச் சாதியாதீர். எவ்வளவு நிச்சயமா யிருப்பினும் தவறா யிருக்கலாம். நமது ஞாபகசக்தி நாமாச்சரியப்படத்தக்கவளவு நம்மையே யேமாற்றுகின்றது. காதுங் கண்ணுஞ் சில சமயங்களில் மோசம் போகின்றன. நம்மனக் கோட்டங்கள் அன்பினொடும் ஆதரிக்கப்பட்டாலும் வலியுள்ள அடிப்படை யில்லாதிருக்கலாம். மேலும் நேரியரா யிருந்தாலும் அதிக நிச்சயம் பாராட்டாவிடில் ஒன்றும் இழக்கமாட்டீர்.

இன்னும் தொழில் செய்வதிலும் அதிக நிச்சயமாயிராதீர். ஓர்சமயத்தை யுந் தவறவிடாதீர். 'கைக்கெட்டினது வாய்க்கெட்டாது.'

காத்திருக்கும் வழியறிவாருக்கு எல்லாங் கைகூடுமெனக் கூறப்பட்டுளது. தருணம் வாய்த்தபோது தப்பாது பிடித்துக்கொண்மின்.

" எப்பொருளுந் தாமாக வெய்துழி வேண்டார்கட்
சப்பொருள்வேண்டினுமெய் தா."

ஓர்சமயத்தைத் தவறவிட்டால் மற்றோர்சமயம் வாராதே யிருக்கலாம்.

" மக்கடந் தொழிலெனு மாபெருங் கடலுண்
மிக்குள தோரலை வெள்ளத் தோடெழிற்
செல்வக் கரையிற் சேர்த்திடு மதுதான்;
ஒல்வகை விரும்பி னுவருயிர் வாழ்க்கைக்
கடற்செல வெல்லாம் கையறு துன்பமாந்
தட்ப்புளி னத்திற் றடையுண் டலைவர்:
இத்தகைப் பெருங்கட லினின்மிதக் கின்றோம்.



ஒத்த பேரலை யொன்று வந்துழி
கைக்கொண் டெழுதும்; அதான்று:
மெய்ப்பய னிழத்தன் மிகவுந் திண்ணமே"

கவலையோடிருமின்; ஆனால் அளவுக்கு மிஞ்சிய கவலையொழிக. 'என்னர்தவறொன்றுஞ் செய்யான்'

எப்பொழுதுந் தூய உடை உடுமின். நாமுடுக்க வேண்டுவதின்றியமையாததாதலின் அது மிக நன்றாயி யிராவிடினும் நன்றாகச்செய்து கொள்ள வேண்டும். பெரும்பணம் பெற்றதும் உடுப்புழி யதிகநேரம் பிடிப்பதுமான உடைவேண்டாம். ஆனால் நற்றுணியாகவே யிருத்தல் வேண்டும்; தற்காலத்திற் பலர் மக்களை யுறுதியுமுடையினான் மதித்தல் விந்தையாயிருக்கின்றது. நீர் சந்திப்பவருட் பலரை யுடையினான் மதிக்கின்றீர். இன்னும் பலர் உம்மையும் தோற்றத்தினாலேயே மதிக்கின்றார். உம்மைப் பார்ப்பவர் நூற்றுவரிருந்தால் உம்மை யறிவோன் ஒருவனே யுளன்; மேலும் நீர் உம்மைப்பற்றியே சிறிது மசாக்கிரதையா யிருந்தால் மற்ற விஷயங்களிலு மவ்வாறே யிருப்பீரென்று திட்டமாய்ச் சொல்லத்தக்க தன்றாயினும் ஒருவாறு சொல்லலாம்.

மக்கள் குழாத்திலிருப்புழி நன்மையுமினிமையும்வாய்ந்தநடக்கையுடையோரை யோர்ந்துணர்மின் " நன்னடையே மனிதனை மனிதனாக்குகின்றது" என்றொரு பழமொழி சிறிதுயர்வு நவிற்சியாகக் கூறினும் மிக்க வுண்மை பொதிந்துளதேயாம். "அழகிய வடிவமே யனைவோரையுந் தன் வயப்படுத்தும்" " யாவர்க்கு நன்னடக்கை சிறிது. சிலர்க்கு நன்னடக்கையே யாவும்" " மதிப்புங் கல்வியறிவும் தோன்றியாட்பை உறுதிப் படுத்துவனவாயினும் பிறர்மனங் கவர்வனவல்ல; நடையுடை பாவனைகளினாற் கண்களைக் கவர்மின்; அழகு மினிமையும் வாய்ந்த சொற்களாற் காதுக்கின்பமூட்டுமின். உடனே அவருளம் மலர்ந்து உம்மை யேற்றுக் கொள்ளுமென்று நிச்சயமாய் அன்றி யநேகமாய்ச் சொல்லலாம்." கண்ணுங்காது மெல்லோருக்குமுள. ஆனாற் கூரியவாராய்ச்சி சிலரிடமே யுளது; முன்கூறியபடி உலகமொரு நாடகசாலை; நாமனைவரும் நடர்கள். ஓராட்டத்தின் கண் வென்றி பெறுதல் எவ்வளவு அஃதாடப்பட்ட விதத்திற் சார்ந்துள தென்பதை யாவருமறிவார்.

செஸ்டர்பீல்டு பிரபு தன் மகனைப்பற்றிப் பேசுமிடத்து இவ்வாறு கூறுகின்றார்: " தெரிந்த விடமெல்லாமவன் மாட்டன்புடையனவாகச் சொல்லுகின்றார். அது பற்றி யான் பெரிதும் மகிழ்கின்றேன். ஆயினுமவனைத் தெரியுமுன்னரே அவனிடத்து விருப்பும் பின்னர் அன்பும் உடையராகவேண்டுமென்று விழைகின்றேன். நீரவற்றைப் பயனற்றன வென நினைப்பீரேல் என்றும் மக்களியல்பை யறியாதவராவீர். அவ்விஷயங்களில் எவ்வளவு கவனஞ் செலுத்தினும் போதா. அவைகளே யென்றும் மனத்தின்கண் அன்பு

நீர் பாய்ச்சுகின்றன. அவ்வற்பு நீரிடைத்தோன்றும் குமிழியே பெரும்பாலும் அறிவாம்."

நாமகள் போலவே பூமகளும் மக்கட்கு வாழ்க்கையிற் கருணைபுரிகின்றாள். ஒருவன் திருடினாலுங் குற்றமன்று. மற்றொருவன் வேலியை யெட்டிப் பார்த்தாலுங் குற்றமே யாம் ஒருவன் இன்பமனத்தொடும் மற்றொருவன் துன்பமனத்தொடும் செய்வாராதலின். 'நாவன்மையும் கலை நலமு நல்லெழிற்றுணையின்றி யொளிர்வனவல்லம்' என்றார் ஹாரஸும்.

சருக்கை - வரதாசாரியன்.

---

# தேசாபிமானி.

## அத்தியாயம்.—II.

இப்படியாக அநேக வருஷங்கள் சென்றன. சிறுவன் இறந்ததை மூத்தவன் கீர்த்திப் பிரதாபத்தினாற் பெற்றவர்களும் மறந்தார்கள். ஆனால் அம்மூத்தவனோ அதை மறக்கவுமில்லை; அந்தக் கொலையாளிகளை மன்னிக்கவுமில்லை. அந்தக் கொலை நடந்ததற்கும் தான் ராஜ்யாதிபத்தியம் அடைந்ததற்கும், கொண்ட வெண்ணம் வீண்கனவா யிருந்ததற்கும் அது கைகூடியதற்கும் இடையிலுள்ள மத்தியகாலமே—அந்தக் காலத்தில் ரோம் இருந்த நிலைமையைக் கூறத் தகுந்தபருவம்.

ரோமிற் பற்பல ஜாதியார் நாளாவட்டத்திற் சேர்ந்து மற்றவர்களோடு கலந்தும் ரோமர் தங்கள் முன்னோர் லோகசக்கிரவர்த்திகளா யிருந்ததை மறந்தவரல்லர். ரோம் குடியரசா யிருந்த காலத்திற் குடிகளிடத்திலிருந்த நன்னடக்கை யெல்லாம் போய் அவர்களிடத்துள்ள அடங்காத்தனமாத்திரமிருந்தது. இவ்வகைக் குடிகளிடத்திற் பிரபுக்களும் கொடுங்கோலராயிராது கொள்ளைக்காரராயினார். ஐரோப்பா முழுவதும் சர்வாதிகாரம்வகித்த போப்பே, தன்னாட்டில் மதிப்பின்றித் தன் தேசமும் தனக்குச் சுவாதீன மில்லாமற் சிறையிலிருப்பவன் போன்றனன்.

பிரஞ்சுக்காரனாகிய ஐந்தாவது க்ளிமாண்டு இந்த உபத்திரவம் சஹிக்க மாட்டாது தன் தேசத்தில் அவிக்கினன் என்னுமிடத்திற் போய்ச் சேர்ந்தான். பேருக்காவது இருந்த போப்பும் நகரைவிட்டுப் போய்விடவே பிரபுக்களை ஒருவரு மடக்குவாரிலர். இடலியிலுள்ள வெனிஸ், மிலன், ப்ளாரன்ஸ், என்னும் மற்ற நகரங்களெல்லாம் நாகரீகமடைந்து வெகு சிறப்படைய ரோம் மிக்க ஈனஸ்திதிக்கு வந்து கொண்டிருந்தது. நகரத்தின் 13 பாகத்தினும் ஒரு தலைவனைத் தெரிந்தெடுத்தார்கள். இவர்கள்தாம் நியாயாதிபதிகள். இந்தச் சபையாருக்குத்தாம் பேருக்கு எல்லா அதிகாரமும். ஒரு சமயம்



போப்பும் மற்றொரு சமயம் பிரபுக்களும் ஸெனேடர் என்ற ஒருவனை ஏற்பாடு செய்வார்கள். அவர் அதிகாரம் பேருக்கு வரம்பற்றிருந்தும் அவர் சிறிதும் சக்தியிலர். அவ்வாறு வரும் ஸெனேடரும் பிரபுக்களே. நியாயமென்பது சிறிதும் கிடையாது. கக்ஷியே பிரதானமா யிருந்தது.

இவ்வாறு கோட்டைகட்டிக்கொண்டு கூலிக்குப் பலத்த சைன்னியங்களை வைத்துக்கொண்டிருந்த பிரபுக்களில் மிக்கபலம் பெற்றவர் கோலன்னா, ஓர்ஸினி என்ற இருவர். இவர்களிற் கொலன்னா வம்சத்தார் சிறிது நாகரீகமுள்ளவர்கள்; என்றாலும் இருதிறத்தார்களும் ஒருவரோடொருவர் வெட்டிமடிவதே அவர்கள் தொழிலாயிருந்தது. இவ்விதக் கொடுங்கோலராது குரூரத்தைச் சகியாது குடிகளும் ஏங்கினர். சக்கிரவர்த்தியும் போப்பும் இங்கேயே யிருந்தால் இவ்வித அக்கிரமம்நடவாதே என்று மனநொந்தனர். போப் அவ்விடம் இல்லாததனாற் குடிகளுக்கு வருவாயுமில. போதாக் குறைக்குக் கொள்ளைக்காரர் உபத்திரவமும் அதிகமா யிருந்தது. அவ்வாறு வந்த கொள்ளைக்காரரில் வேர்னர் என்பவன் பெருங்கூட்டம் ஒன்று சேர்த்துக்கொள்ளையடிக்க ஆரம்பித்தான். திடீரென்று ஒரு கோட்டையைவளைப்பார்கள். இவர்களை எதிர்க்கச் சேனையில்லாததனால் உள்ளேயிருப்பவர்கள்திரளான கப்பங்கட்டித் தப்புவார்கள். வேர்னரும் "ஈவிரக்கம் தெய்வம் இவற்றிற்குச் சத்துரு" என்ற பட்டப்பெயர் வகித்தான். சிறிது நாள் கழித்துத்தன் தேசமாகிய ஜர்மனிக்குப் போய்ச்சேர்ந்தான். அவனிடத்தி லிருந்தவர்களில் வால்டர் டி மாண்ட்ரில் என்பவன் போனவர்போக நின்றவர்களை ஒன்று சேர்த்துத் தன் வீரத்தாலும் புத்திக்கூர்மையாலும் தானே தலைவனாய்த் தன்னைக்காண்போர் எவரும் நடுங்கும்படி செய்துவந்தான். போப்பின் பிதிரார்ச்சித நாடுகளெல்லாம் சிறிது பிரபுக்களாற் கவரப்பட்டும் மற்றவை இக்கொள்ளைக் காரருக்கு இரையுமாயின. ஆகையாற் போப்பின் வரும்படி மிகக் குறைந்தது. போப்பின் பொக்கிஷம் நிறையவும் குடிகள் க்ஷேமப் படவும் ஆறவது க்ளிமாண்டு ஒரு சூழ்ச்சி செய்யலாயினன்.

இதற்குச் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னால் எட்டாவது போனிபேஸ் என்பவர் சோறின்றிக் கிடந்து வருந்தும் ரோமர் சந்தோஷப் படவும் தம் பொக்கிஷம் நிரம்பவும் ஜுபிலீ பண்டிகை ஒன்று உண்டாக்கினான். ஜுபிலீப் பண்டிகைக்காலத்தில் ரோமாபுரியின் கோயிலைத் தரிசிப்பவர்களுக்குப் பாபவிமோசன மென்று பறையறைவித்தான். நாலா பக்கங்களிலுமிருந்து யாத்திரீகர் திரள் திரளாய் வந்தார்கள். இருவர் குருக்கள், பொன்னை எண்ண முடியாது இரவும் பகலும் கை ஓயாது வாங்கிப் போட்டுக்கொண்டேயிருந்தார்கள். பின்னால் வந்த க்ளிமாண்டுக்கு நூறுவருஷத்துக்கொருதரம் இப்பண்டிகை வருவது நெடுங்காலமாயிருந்தது. ஆகையால் மோசே ஜுபிலி என்று 1350௵ ஐம்பது வருடத்துக்கொன்று உண்டாக்கினான்.

நமது சரித்திரம் தொடங்குவதற்கும் இதற்கும் மூன்று வருடமுள. ரோமிற் கொள்ளையுங் குரூரமும் அதிகமாயிருந்ததனாற் குடிகளுக்குப் பிரபுக்களிடத்தில் அதிக கோபமும் வெறுப்பு முண்டாயிருந்தன.

போப்பின் பிரதிநிதியாகிய ரேய்மாண்டு, யாத்திரீகர் வருதற்குப்பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளைக்காரர் பயமற்றிருக்கத் தன்னாலான வரையிற் சூழ்ச்சிதேடினான்.

நமது சரித்திரம் தொடங்குங்கால் ரோம் இவ்வித ஸ்திதியிலிருந்தது. பிரசித்தி பெற்ற பழைய பேர் இன்னும் மறையவில்லை. பேருக்கு அதுதான் லோக சக்கிரவர்த்தினி. ஏதாவது ஒரு தேசாபிமானி கிளம்பினால் அவன் எண்ணம் நிறைவேறும்போல் தோன்றிற்று.

## அத்தியாயம் III: குழப்பம்.

1347௵ ஏப்ரல்மாதத்தில் ஒருநாள் சாயங்காலம் பழையரோமும் புதியரோமுங்கூடும் மைதானவெளியில் ரோமிலுள்ள ஜனங்களெல்லாந் திரளாய்க்கூட்டங்கூடினார்கள். அன்றுகாலைதான் மார்டினோ டி போர்டோ என்னும் பிரபுவின் பட்டாளங்கள் ஒரு தட்டான்வீட்டில் நுழைந்து அவன் வீட்டிலுள்ள சாமான்களையும் திரவியங்களையும் சூறையாடின. ஊர் முழுமையும் பிரபுக்களிடத்திற் கோபமும் பகைமையும் அதிகரித்தன.

“நான் ஒருநாளும் இக்கொடுங்கோன்மைக் குட்படேன்” என்றான் ஒருவன்.

“நான்மாத்திரமோ”.

“நானும்மாட்டேன்”.

“சுவாமி ஆணை நானும்மாட்டேன்”

ஜனங்கள் ஒன்றுசேர்ந்து ஓர்ஸினோவின் அரண்மனைக்கு அதிககோபத்தோடு மேற்கூறியவாறு பேசிக்கொண்டுபோனதைக்கண்ட பிரபுச் சிறுவன் ஒருவன் அவர்களைநோக்கி, “என் சிநேகிதர்களே, நீங்கள் உட்படமாட்டேனென்று கூறுங்கொடுமை யாது?” என்று கேட்டான்.

உடனே இரண்டு மூன்றுபேர் “பிரபோ, தாங்கள் கொலன்னாவைச் சேர்ந்தவராதலின் எங்களை நடத்துவீர், எங்களுக்கு நியாயமும் கிடைக்கும்படிசெய்வீர்” என்றார்கள்.

இதைக்கேட்டதும், “சொலன்னாவும் நியாயமுமா? இரண்டுக்கும் வெகுதூரமாயிற்றே, அதைவிடக் கடவுளுக்கு அங்கமுண்டென்று கூறலாமே”, என்று செப்பி, ஒருபெரிய சம்மட்டியைச் சுழற்றிக்கொண்டு “ஹா, ஹா” வென்று வெகு இகழ்ச்சியாக நகைத்தான் இராக்ஷஸாகாரமுள்ள ஒருவன். “கொல்லு, கொல்லு அவனை, அவன் ஓர்ஸினி” என்றார் பலர்; என்றாலும் அந்த ராக்ஷஸன்பேரில் ஒருவனாவது கைதூக்கவில்லை.



சிறிதுநேரஞ்சென்றதும் “அவன் கூறுவது உண்மைதான்” என்றானொருவன்.

“ஆமாமப்பா, அவன்சொல்வதைக் கேட்போம், ஓர்ஸினோ கொடுங்கோலர்தாம், கொலன்னாவும் கொடுமையில் அவர்களுக்குத் தாழ்ந்தவர்களல்லர்” என்று தன் கத்தியையுருவிக்கொண்டே மொழிந்தான்மற்றொருவன்.

“ஏ துஷ்டா! நீ பொய்சொல்லுகிறாய்,” என்றுசொல்லிக் கடைசியாகக் கூறியவனைநோக்கிச் சென்றான் பிரபுச்சிறுவனும். இதுகண்டதும் அவன் சிறிது விலகினான். பிரபுச்சிறுவனும் ராக்ஷஸாகாரமுள்ள கம்மாளனும் நேர் நின்றார்கள். தாங்கள் பிறந்ததுமுதற் கீழ்மக்களை அலட்சியம் செய்தே வழக்கப்பட்ட பிரபுக்களுக்கு இவ்விதசச்சரவுகள் புதியனவல்ல. அன்றியும் வெகுவாய்அவர்களை வெறுத்துநிந்தித்துக்கர்ச்சிக்கும் கும்பல்அவர்களைக்கண்டதும் சூரியனைக்கண்டபனிபோலக் குலைந்துவிடும். ஆனதுபற்றி எட்ரியனாகியபிரபுச்சிறுவனும் கம்மாளனது ராக்ஷஸாகாரத்தையும் அவன்கைகொண்டிருந்த ஆயுதத்தையும் சிறிது இலக்ஷியம் செய்யாது அவனை விலகச்சொன்னான். “ஓ நண்பர்களே! உங்கள் வீட்டுக்குப்போங்கள், ஓர்ஸினோவின் அக்கிரமச்செயல்களுக்கு நாங்கள் உடந்தையென்றாவது அவர்களுக்கும் எங்களுக்குமுண்டாகும் சச்சரவுகளில் எங்கள்நயத்தையே நாங்கள் பாராட்டுபவர்களென்றாவது எண்ணங்கொண்டீர்களானால் உங்களபிப்பிராயம் பிசகே. இதுநான் உண்மையாகச்சொல்லுகிறேன். இந்தக் கத்தியை நான் உருவினது உங்களுக்காகவும் ரோமிலுள்ள அக்கிரமக்காரர்களுக்காகவும் ஓர்ஸினோவுக்கு எதிரியாகவுமே என்று நினையுங்கள்” என்றான் எட்ரியனும்.

“இவ்வாறே ஒவ்வொரு கொடுங்கோலருங் கூறுகின்றார்கள். அவர்களொருவரோடொருவர் சண்டைசெய்வதும் கொலன்னா வம்சத்தானொருவன் ஓர்ஸினோவைச்சேர்ந்த ரொட்டிக்காரன் கழுத்தை வெட்டுவதும் மற்றொருவன் ஓர்ஸினோ தையற்காரன்பெண்ணை யிழுப்பதும் எங்கள் நன்மைக்கும் ஜனங்கள் நன்மைக்கும் ரொட்டிக்காரர் தையற்காரர்கள் நன்மைக்குமல்லவோ!” என்று தன் சம்மட்டியை ஒரு கல்லின்மேலூன்றிக்கொண்டு மிக்க துணிவுடன் மொழிந்தான் கம்மாளனும்.

“ஏ தோழா, ஒரு கொலன்னா குற்றம்செய்வானேயாயின் அஃது அவனுடையதேயொழிய அவன் கட்சியைச்சேராது. நல்லகட்சியிலுங் கெட்டவர்களிருக்கவுங்கூடும்” என்று துக்கத்துடன் கூறினான் எட்ரியனும்.

“ஆமாம், தலைமைபடைத்துக்கே சரியானதுணைவரில்லை” என்று கொலன்னாவிடத்தில் மதகுருவான போப்புக்குண்டான அபிமானத்தைக்குறிப்பிட்டுச் சாதுரியமாக மொழிந்தான் கம்மாளனும்.

“ஆ! பெரிய தேவ தூஷணம், கொலன்னா! கொலன்னா!” என்று அக்கட்சியார் கூறினார்கள். “ஓர்ஸினோ, ஓர்ஸினோ” வென்றும் எதிர்ச்சப்தங்

கேட்டது. எல்லாருக்கும் மேலாகத் தன் ஆயுதத்தைச் சுழற்றிக்கொண்டு “மஹாஜனம்” என்றிரைச்சலிட்டான் கம்மாளனும்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒருவன் கொடுமையைச் சகியாது ஒன்று சேர்ந்த ஜனங்கள், பிரிந்து இருதிறத்தாராய்த் தங்கள்தங்கள் கட்சியிற் சேர்ந்தார்கள். ஓர்ஸினோவம்சத்தாருக்குப் புதிதாய்த்துணைவர் பலர் ஒத்தாசைக்குவந்தனர். கொலன்னா வம்சத்தார் ஒருபக்கமும் ஓர்ஸினோவம்சத்தார் மற்றொருபக்கமும் இந்த இரண்டுகட்சியிலும் சேராது “மஹாஜனம்” என்று இரைச்சலிட்ட வேறு சிலர் சண்டையிற்சேராது ஒதுங்கியிருக்க, அவர்கள் விசேஷமதிப்புவைத்துள்ள கம்மாளன், கொலன்னாவம்சத்தானின் கம்பீரத் தோற்றத்தைச் சகியாதோ, சண்டைசெய்யவேண்டுமென்னும் அவாவினால் தூண்டப்பட்டோ, சிறிதுமயங்கி ஓர்ஸினோகட்சியிற் சேரவும் அதுகண்டு அவர்களும் அந்தக்கட்சியிலேயே சேரலானார்கள்.

கலகம் குழப்பங்களில் ஒவ்வொருவனும் தனக்கு அரை மனதாயிருக்கும் போதுங்கூடத் தன்மன மில்லாமலே அக்கலகத்திற் சம்பந்தப்பட்டவனாகிறான். குடிகள் கலகத்திற் கும்பலிலுள்ள ஒவ்வொருவனும் தன்னிஷ்ட மில்லாமலே சண்டையில் முன்னே தள்ளப்படுகிறான். எட்ரியன் தன் நண்பர்களுக்குச் சிறிது புத்திமதி சொல்லத் துவக்குகையில் அவர்கள் அதைக் கவனியாமற் கொலன்னா வம்சத்தைச்சேர்ந்த மேலான கனவான் தங்கள் படையிலிருப்பதனாற் பெருமை பாராட்டி அவனை முன்னணியில் வைத்து எதிரிகளைத் தாக்கினார்கள். எட்ரியன் யுத்த சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றிருந்தமையால் அந்தஸ்திலும் ஆயுதப்பயிற்சியிலும் தனக்குச் சமமானவர் இல்லாத எதிரிகளை எதிர்ப்பது தகாதென்று இகழ்ந்து தன்மேல் இரண்டொருவர் எய்த ஆயுதங்களை மாத்திரந்தடுத்தான். விசேஷ நற்குணம் ஏதும் அவனிடத்தில் உள்ளனவாக இதுவரையில் வெளிக்குத் தோன்றாவிடினும் அவன் பந்துக்களிடத்துள்ள தீக்குணங்களொன்றேனு மவனிடத்திலில்லாததுபற்றி எல்லாராலும் விசேஷமாய்க் கொண்டாடப்படும் நல்ல வம்சமும் சம்பந்தமும் உள்ள அவன் இரத்தத்தைச்சிந்த அவன் பகைவரிலொருவருந் துணியாததனால், அவன்மேலெறிந்த ஆயுதங்கள் வெகு சில. இதுவரையிற் சண்டையிற் கலக்காத கம்மாளன் மாத்திரம் மிக்க துணிகரத்தோடு அவன் எதிர் வந்து ‘கொலன்னாவானாலும் ஓர்ஸினோவானாலும் ஜனங்களுக்குப் பகைவரென்று நான் முன்னமே கூறவில்லையா? ஏதோ ஒரு பிரபுவின் குற்றத்திற்காக உன் ஜனங்கள் எத்தனை பேர்களைக் கொல்கிறார்கள். பார்த்தாயா? இவ்வாறுதான் ஒவ்வொரு பிரபுவும் மற்றொரு பிரபுவின் குற்றத்திற்காக ஜனங்களைக்கொன்று, “நான் எவ்வளவு நியாயமாயிருக்கிறேன் பார்” என்று கூறுவது வழக்க மென்று கோபத்தோடு சொன்னான்.



“நான் உனக்கு இப்போது பதில் கூறேன். இம்மாதிரி இரத்தம் சிந்துவது உனக்கு உண்மையாக விசனகரமாயிருக்குமானால் நாம் இருவரும் சேர்ந்து இதைத்தடுக்கலாம் வா” என்றழைத்தான் எட்ரியனும்.

“என்னையா கூப்பிடுகிறாய்? நான் வர மாட்டேன். இன்று அடிமைகள் இரத்தம் சிந்தட்டும்; பிரபுக்களின் இரத்தத்தால் அதை அலம்ப வேண்டிய காலம் நாளை வரும்” என்றான் கம்மாளனும். எட்ரியனும் அவனோடு மேலே வார்த்தையாடப்பொறாது “ஏ துஷ்டா! அப்பாற்போ” என்று கூறித் தன் கத்தியின் அடிக்கட்டையால் தள்ளலும் கம்மாளன் தன் சம்மட்டியை மேலே சுழற்றி யெறிந்ததனால் எட்ரியனும் இலாகவமாய்க் குதித்து அதற்குத்தப்பித்துக் கொள்ளாதிருப்பானாயின் மடிந்தேயிருப்பான். கம்மாளன் இரண்டாந்தரம் சுழற்று முன்னமே எட்ரியன் கத்தி அவன் வலது கையில் இருதடவை தாவவும் சம்மட்டியும் கீழே விழுந்தது; அவன் கைப்பலமும் போயிற்று. கம்மாளனைக் கொலன்னா வம்சத்தார் சூழ்ந்துகொண்டு “கொல்லு கொல்லு” என்று கதறினார்கள். கொலன்னாவிடத்திற் கூலிக்குச் சண்டைசெய்யும் ஒரு ஜர்மானிய படைச்சேவகன் “அவனை யார் கொல்வது?. அவன் அமைதிக்கும் ஒழுங்குக்கும் விரோதமாகச் சத்தியம்பண்ணித்தந்த பயங்கரமான பாதகர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவனாயினனே! ரியன்ஜியின் துணைவன்; எப்போதும் குடிகளைப் பற்றியே புலம்புகிறான்” என்று திருந்தியும் திருந்தாததுமாய் இடாலிய பாஷையில் மொழிந்தான்.

“ஏ. மிலேச்சா, நீ சொல்வது சரி, கொலன்னா, ஓர்ஸினோ, எல்லாரும் வாருங்கள்; என்மார்பைத்திறந்து மேலுடுப்பைக் கிழித்தெறிந்துவிட்டு உங்கள் கூரிய ஆயுதங்களா லென்னிருதயத்தை ஆழத்தோண்டுவீரானால், உங்களெல்லாருக்கும் விரோதமாயுள்ள ‘ரியன்ஜியும் குடிகளும்’ என்பதை நடுவிற் காணுவீர்கள்” என்று மொழிந்தான் அந்தத் தாஷ்டீகமான கம்மாளனும். இவ்விதமாய் அவன் சொன்னதும் அவன் பேச்சின் உரத்த சத்தமானது மற்றெல்லாச் சத்தங்களையு மடக்கி அமைதியுண்டாக்க ‘ரியன்ஜியும் குடிகளும்’ என்று அவன் வாயிலிருந்து வந்ததும் அஃது ஒன்றுக்கு நூறாய்க் கூட்டத்தினின்றும் எதிரொலியெழும்பிற்று.

கம்மாளன் சொல் ஒவ்வொருவர் மனத்திலும் நன்றாய்ப்பட்டது. ரியன்ஜி என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்தில் எட்ரியனது முகக்களை மாறத் தனக்குத்தானே ஏதோ சொல்லிக்கொண்டு சிறிது நேரம் அங்கு யுத்தகளத்திலேயே நின்று துக்கமான மனோராஜ்ஜியத்தில் மூழ்கியிருந்தான். கூச்சல் அடங்கினதும் அவன் மயக்கந் தெளிந்து “தோழா! உன் காயத்துக்காக விசனப்படுகிறேன்; நாளை என்னைக்காண்; எனக்கு நீ குற்றம் செய்ததாய் உனக்குப் புலப்படும்” என்று கம்மாளனைப்பார்த்துச் சொல்லிவிட்டுத் தன்

னோடு கூடவிருந்த ஜர்மானிய படைத்தலைவனுக்குச் சைகைசெய்து ஜனங்கள், பிரபுவானதனாற் பயபக்தியோடு வழிவிடக் கூட்டத்துள் நுழைந்து அப்புறம் சென்றான். அவ்வாறு அவன் செல்லுகையில் அக்கூட்டத்தில் அவனைப்பற்றி அவன் காதிற்படும்படி ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்ட விதமாய் பேச அவன் வம்சத்தார் ஒருநாளுங் கேட்டிரார்கள்:

"இவன் ஒரு கொலைஞன்" என்றானொருவன்.

"என்றாலும் மாதர் கற்பழிப்பவனல்லன்" என்று, சிரித்துக்கொண்டே சொன்னான் மற்றொருவன்.

"கொலைக்காரனு மல்லன்; என் தகப்பனைக்கொன்றவன் அவனல்லன்" என்றான் வேறொருவன்.

"இதுவரையில் ஒருவரும் அவனைச் சபித்ததில்லை; ஆகையால் நாம் வாழ்த்துவோம்" என்றான் இன்னொருவன்.

"ஆ! தெய்வந்தான் நமக்குத் துணைபுரியவேண்டும்; இந்தப்பாம்பு இன்னும் குட்டி; நாளாவட்டத்தில் விஷப் பல்முளைக்கும்" என்று நரைத்த தாடியுள்ள கிழவனொருவன் தன் தடியை ஊன்றிக்கொண்டே சொன்னான்.

"தாதா! உமக்கு வெட்கமில்லையா அவன் எவ்வளவு அழகுள்ள வாலிபன்! கொஞ்சமேனுங் கர்வமுண்டா? அவன் எப்படிச் சிரிக்கிறான் பாரும்!" என்று ஓர் அழகுள்ள ஔவை கூறினாள்.

"ஒருவன் பெண்சாதியைப் பார்த்துப் பிரபு சிரிக்கும்போது புருஷனுக்குக் கண்ணியமென்னவிருக்கும்?" என்று பதிலுரைத்தான் கிழவனும்.

இது கேட்டதும் "அப்படியன்று; ஒருவன் பெண்சாதியையாவது கன்னிகையையாவது அவர்கள் அநுமதியின்பேரில் அழைத்துக்கொண்டு போனால் அது நியாயமென்று எனக்குத் தோன்றுகின்றது. ஆனாற் கத்தி கேடயங்களுடன் ஒரு ஸ்திரீயைப் பலாத்காரமாய் இழுத்துக்கொண்டு ஒரு பிரபு சென்றால் அவனைத் துஷ்டனென்றும் கூத்திக்கள்ளனென்றும் சொல்ல வேண்டியிருக்கிறது" என்றான் அங்கிருந்த கசாப்புக்காரனொருவன்.

இவ்வாறாக பிரபுச்சிறுவன் சென்றபோது ஒவ்வொருவரும் தம்மனத்தில் தோன்றியவாறு கூறினாரேனும் ஜர்மானிய படைத்தலைவன் செல்லலும் அவனுக்கு மிக்க பயத்தோடும் ஒதுங்கினார்கள். ஆனாலது மரியாதையாலன்று; அவனைக்கண்டதும் அவர்கள் கண் இரத்தம் தெறிக்கவும் முகம் வெளுக்கவும் தலை குனியவும் உதடு நடுங்கவும் ஏதோ ஜன்மப்பகையாளியைப் பார்த்ததுபோல நடுக்கமும் பயமுமுண்டாயிற்று. ஜர்மானிய படைத்தலைவனும் இதைக்கண்டுகொண்டு சிறிது சிரிப்பும் சிறிது கோபமுமாய் ஜனங்களைத் தள்ளிக்கொண்டு போனான்.



"இந்த ஜர்மானிய பாதகர்களுக்கு விநாச காலம் வாராதா?" என்றானொருவன்.

"சுவாமி அப்படியே ஆக வேண்டும்" என்றான் மற்றொருவன்.

"வாயை மூடு அப்பன் காதிற் பட்டதோ நீ உயிரிழந்தாய்" என்று சுற்றிப்பார்த்துக் கொண்டே சொன்னான் வேறொருவன்.

"ஆ ரோமாபுரி! ரோமாபுரி!! கூலிக்கமர்ந்த ஒரு மிலேச்சன் காலடிச் சத்தங்கேட்டதும் நீ நடுத்தெருவில் நடுங்க என்ன கதிக்கு வந்து விட்டாய்!" என்று மற்றவரிலும் சிறிது மேம்பட்ட தோற்றமும், கறுத்த உடையுமுள்ள ஒருவர் வெகு துக்கத்தோடு சொன்னார்.

உடனே கசாப்புக்காரன் கை கட்டி வாய் பொத்திக்கொண்டு "நமது வித்துவான்களிலும் தனவான்களிலும் ஒருவராகிய இவர் கூறுவதை நாம் காது கொடுத்துக்கேட்போம்" என்றான்.

"அவர் ரியன்ஜியின் தோழரில் ஒருவர்" என்றான் மற்றொருவன்.

நல்ல வம்சத்திற் பிறந்து கீர்த்தி பெற்ற **பேன்டால்போ** என்பவன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டும் துக்கம் வெட்கம் கோபம் இவைகளைக் காட்டுங்குறிகள் முகத்தில் தோன்றவும் கும்பலினின்றும் வெளிப்பட்டுச்சென்றான்.

இஃது இவ்வாறிருக்க. ஏட்ரியனும் கூட்டத்தைக்கடந்து ஜனங்களின் சந்தடியில்லாத ஒருதெருவிற் போய்நின்று தன்னுடன் கூடவந்தவனை நோக்கி, "**ரோடால்ப்!** இன்று நமது ஜனங்கள் ஒருவரையும் வருத்தக்கூடாது அந்தக்கும்பலிற்போய் மார்டினோவை நானே அவன் குற்றத்திற்காக என் கத்திக்கு இரையாக்குவதாக நமது ஜனங்களிடத்திற் போய்ச்சொல்லி அவர்களை அந்தச்சண்டைச் சமூகத்தினின்றும் விலக்கி யிட்டுக்கொண்டுபோ. நானேபோய்க் கலகத்தை அடக்கப் பிரயத்தனித்தேனேயானால்என்னைக்கண்டபோதே அவர்கள் யுத்தத்திற்குக் கிளம்பிவிடுகிறார்கள். உன்னிடத்தில் அவர்களுக்கு மதிப்பு இருக்கிறது. ஆகையால் நீபோ" என்றான்.

"அடிகளின்மதிப்போ. உமதுகட்டளை மிக்ககடினமாயிருக்கின்றது; இன்னும் இரண்டொருமணிகாலம் அவர்கள் இரத்தஞ்சிந்துவது எனக்குக் களிப்பைத்தரும் என்றாலும் மன்னிக்கக்கோருகிறேன். தங்கள் கட்டளைப்படி நடப்பதில் தங்கள் பந்துவாகிய எங்கள் எசமானன்கட்டளைப்படி நடந்தவனாவேனா? தனது தவிர மற்றவர்களது தனத்தையும் இரத்தத்தையும் பராமரியாத கொலைஞனாகிழவன் ஸ்டிபன் உப்பையன்றோ நான் தின்கிறேன். அவர் கட்டளைப்படி நடக்கவன்றோ நான் சத்தியம்செய்து கொடுத்திருப்பது?" என்றான்.

ஏட்ரியனுக்கு உடனே கோபம்வந்துவிட்டது; ஆயினும் அடக்கிவழக்கப்பட்டவனாதலால் வெளிக்குக் காண்பிக்காமல் எழும்பியகோபத்தை யுள்ளடக்கிக்கொண்டு அமைதியோடும் கவுரவத்தோடும் பின்வருமாறுகூறினான்:

"என்கட்டளைப்படிநட, இந்தக் கலகத்தையடக்கி, நாம் பொறுத்தவர்களாயிருப்போம். இன்னும் ஒருமணிக்குள் அமைதியுண்டாக்கி நாளை என்னிடம்வா, உனக்குத் தகுந்தவெகுமதி செய்கிறேன். இந்தப்பை அச்சாரமாக இருக்கட்டும்; இனி என் பந்துவின்பெயரைப் பயமரியாதையோடு கூறுவாய், அவர் பெயரால்தான் நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உற்றுக்கேள்; சத்தம் அதிகமாய்விட்டது, சண்டைமும்மரம் அதிகரிக்கிறது ஒருநிமிஷமும் நில்லாதே, உடனேபோ"

ரோடால்ப் மேற்குலத்தானுடைய உறுதியையும் சாந்தகுணத்தையும் கண்டு சிறிதுகலங்கி மறுமொழிகூறாது தலையசைத்துக் கொடுத்தபணத்தைத் தன்மடியில் வைத்துக்கொண்டு ஜனங்கள் கும்பலாய்நெருங்கியிருக்குமிடம் சென்றான். அவன்போவதற்கு முன்னமே அங்கே நடந்ததுவேறாய்விட்டது.

அந்தவிடத்திலேயே தனித்துநின்ற வாலிபனாகிய குதிரைவீரனோ, சூரியன் அஸ்தமிக்கச் செவ்வானத்தின் ஜோதி தன்கவசத்தின்மேல்விளங்கும் கூலிப்படை வீரனைக்கண்ணுக்கெட்டியவரையிலும் பார்த்துப் பிறகு "நிர்ப்பாக்கியநகரமே! எவ்வளவோ மகிமைகளை ஞாபகப்படுத்தும் உற்பத்திஸ்தானமே! ஆயிரக்கணக்கான ஜாதியாருக்கெல்லாம் அரசியாயிருந்து கைசோர்ந்த மாதே! பயங்கொள்ளிகளும்பிரஷ்டர்களுமாகிய உனது புத்திரர்களால் அரசிழந்து எவ்வளவு பாழடைந்தாய்! உனது பிரபுக்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்யவும் உனது ஜனங்கள் பிரபுக்களைச் சபிக்கவும், மதாசாரியர்கள் ஒருவர்க்கொருவர் சமாதானம் உண்டாக்குவதை விட்டுச் சண்டைமூட்டவும் உன்மதத்தலைவன் அடைக்கலஸ்தானத்தையே வீடாகவும் வேற்றரசர் விட்ட மானியங்களே தனது ராஜ்ஜியமாகவும் ஒரு பிரஞ்சுக்கிராமமே தனது ராஜதானியாகவும் ஆக உனது ஆகாயமளவிய மதில்களை விட்டுப் போகவும் மிகவும் பெருமைபாராட்டக்கூடிய வம்சத்திற் பிறந்து அநேக சக்கிரவர்த்திகள் குமாரர்களும் தேவர்கள் பரம்பரையி லுண்டானவர்களுமாகிய நாங்களே எங்களிடத்திற் சம்பளத்தைப் பெற்று எங்கள் கோழைத்தனத்தைப் பரிகசிப்பவர்களும் குடிகளையடிமைகளாக்கித் தங்கள் எசமானரையே எதிர்ப்பவருமாகிய கூலிப்படையின் துணையைக்கொண்டு அகந்தைக்கும் வெறுப்புக்கும் இடமான நாட்டைக் காக்கவும் ஆய்விட்டாயே! ஐயோ! ரோமிற் பரம்பரைத்தலைவர்களாகிய எங்களுக்குத் தகுந்த அரண் குடிகளின் நன்றிகொள் இருதயந்தான் என்பதை மாத்திரம் உணர்வோமேயானால்" என்று தனக்குத்தானே வெறுப்புடன் சொல்லிக்கொண்டான். தான் கூறியவற்றின் உண்மையை நன்றாய் உணர்ந்தவனாகில் அவன் கண்களினின்றும் துக்கக்கண்ணீர் தாரைதாரையாகப்பெருகிற்று. பெண்கள் அழும் கோழைக்கண்ணீர் போலாது உயர்ந்த பதவியிலிருந்து ஈனஸ்திதிக்கு வந்த ஒரு ஜாதியாரை நினைத்துப் பெருகியதனால்



தெய்வத்தன்மையையொத்தது பற்றிச் சிறிதும் வெட்கமின்றித் தன் கண்ணீரைச்சிந்தித் துடைத்தான்.

அந்த இடத்தைவிட்டு அவன் நீங்க முயலுகையில் திடீரென்று "ரியன்ஜி ரியன்ஜி" என்னுந்தொனிவானம் பிளக்கும்படி அவன் காதிலடிபட்டது. காபிடோல் மதிற்சுவர் முதல்டைபர் நதியின் அடிவரை அத்தொனியே பிரதியொலித்தது. அத்தொனி அடங்கியதும் எங்கும் ஒரே விதமாக மூச்சுப் பேச்சு இல்லாமற் சாவுக்குச்சமமான நிச்சப்தம் உண்டாயிருந்தது. கும்பலுக்கெல்லாம் அப்பால் மற்றவர்களுக்கும் மேலாக மற்றவர்களுக்கெதிரிற்பாழாய்ப்போன கட்டடங்களினின்றும் பெயர்த்தெடுத்துச் சண்டைகளில் அரணாய் உபயோகித்த முன்னைய மேன்மையும் தற்காலத்திய துக்கத்தையும் காண்பிக்கும் தூண்களின் பேரில் தன் ஜாதியாரெல்லாரிலும் முன்னாளில் தன் நாட்டுக்கிருந்த கீர்த்திப்பிரதாபத்தையும் தற்காலத்தில் அதன் அவகேடான நிலைமையையும் ஆழ்ந்துணர்ந்த அபூர்வமான ரியன்ஜி நின்றான். கும்பலிருந்த விடத்துக்குச்சிறிது தூரத்தில் தான் நின்றதனால் வட்ரியனுக்கு ரியன்ஜியின் உருவம் மாத்திரம் தோன்றிற்று. அவன் உரத்த குரலின் மெல்லிய ஒலியே காதிற் கேட்டது. சொல்வோனது சிறந்த விவேகத்தாற் கேட்டோர் அநுதாபத்தாலும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கொதிக்கும் மனோபவங்களைப் புகட்டச்செய்ததும் அக்காலத்திலிருந்தோரெல்லாம் மிக்க அபூர்வமானதென்று கொண்டாடியதுமாகிய வாய்ச்சாலத்தின் சொல்லமுடியாத சித்தியைத் தங்கள் தலைமேல் வெயிற் காய, சத்தம் ஓய்ந்தும் சுற்றிலும் ஊடாடிக்கொண்டிருந்த ஜனங்களிற் கண்டான். ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்த வட்ரியன் கண்ணுக்கு அந்த உருவம் சிறிது நேரந்தான் தோன்றிற்று. அந்தத் தொனியும் உற்றுக்கேட்ட அவன் காதிற் சிறிது நேரம் தான்பட்டது; ஆயினும் வட்ரியன் விரும்பினதை உண்டாக்க அது போதுமானதாயிருந்தது. தாங்கள் உட்கொண்டிருந்த கொதிப்பான எண்ணங்கள் ஆறுதலைக்காண்பித்த முன்னைவிட அதிக ஆவலோடு நெடுநேரம்கேட்ட இரைச்சல் பிரசங்கத்தின் முடிவைத் தெரிவித்தது. அப்போது சிறிது தாழ்ந்து ஜனங்கள் கலைந்து நாலுபக்கங்களிலும் சென்று வழிகளில் அங்கங்கே கூட்டங்கூட்டமாய் நின்று அந்தப்பிரசங்கத்தால் தங்கள் மனத்திற்பட்ட அபிப்பிராயங்களை வெளியிட்டுக்கொண்டிருந்தார்கள். பிரசங்கித்தவரது ஆவியேகேட்போர் இருதயத்திற்சென்றதோ என்னும்படி ஒவ்வொருவர் முகமும்மலர்ந்தது; நாவும் மொழிந்தது. மேற்குலத்தாரது அக்கிரமத்தை விரித்துக்கூறினான்; என்றாலும் ஒரேவார்த்தையிற் கீழ்மக்கள் கோபத்தையடக்கினான். சுவாதீனத்தைப் பிரசங்கித்தான்; என்றாலும் அவர்கள் மனம்போனபோக்காய்ப்போகாது தடுத்தான்; நாளையாகட்டுமென்று வாக்களித்து இன்று அவர்களை அமைதிப்படுத்தினான். அவர்கள் சண்டைக்காக அவர்களைக் கண்டித்தான்; என்றாலும் அவர்கள்பட்சத்தில் நின்றான். நாளை நியாயங்கி

டைக்கும் என்ற உறுதிமொழியால் இன்று அவர்களிடத்துள்ள பழிவாங்க வேண்டுமென்னு மெண்ணத்தையடக்கினான். ஆயுதம், அஸ்திரம், சத்தி, விருது இவை ஒன்றேனும் இல்லாவிடினும் இடுக்கணடைந்த ஜனங்களிடத்தில் உபந்நியசிப்பவன் சக்தியோ அதிகம், வார்த்தை சாதுரியமோ விசேஷம் அவன் விவேகமோ அபாரம்.

க. கிருஷ்ணசாமிஐயர்.

---

# முத்திராராட்சசம்.

---

## [தற்சிறப்புப்பாயிரம்.]

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகமெலா முவந்தேத்து மொருமுதலை யுன்னியெந்தை யொளிருந் தாளெந்
தலைமிலைந்து சபாபதிச்செந் தமிழாசான் றனைவாழ்த்தித் தமிழ்நூ லாக
நலமிளிரும் வடமொழியின் முத்திரா ராட்சசநன் னாடகத்தைப்
புலமைசெறிவிசாகதத்தன் புனைந்ததனை மொழிபெயர்த்துப்புகல்கின்றாமே.

---

## வாழ்த்து.

### எழுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்முடிவாழும்பெண்ணிவள்யார்கொல் பொலிசசிகலையினுள்பெயரென்
சொன்மதியதுவேயதன்பெயரறிந்துஞ் சொல்லெனவிமறந்தெவனோ
வின்மதியன்றிவ்வஞ்சியைக்கேட்டேன்விசயைசொல்வாள்பிறையலதேற்
றன்மனைக்கினணங்கங்கையைக்கரப்போன் சதுர்மொழிகாக்கசந்தமையே.

### இதுவுமது.

ஒளிர்கழ றம்மா னிலமதோ கதியை யுறுமெனப் பையவுங் கடக
மிளிர்தன கரங்கள்விரயத் தெரிப்பான் மிசையுயர்த் துழியெலாவுலகுந்
தளர்தரு மென்னக் குறுக்கியும் விழியாற் சகமெரி மெனச்சினமின்றும்
புளகமார் புராரி தயங்கியுட் கூசிப் புரிநடம் புரக்கநந் தமையே. (3)

---

## முன்னுரை.

சூத்திரதாரன் :—(ஒருபுறம்நோக்கி) அதனுடன் அமைக. மிகைபடக் கூறேல். (திரும்பி) இப்பொழுது சியாமந்தவடேசுவரன்றன் பேரனும் பிருதுவின் மகனுமாகிய விசாகதேவகவிஞன் இயற்றிய முத்திராராட்சசப் பெரிய நாடகத்தினை யாடும்வண்ணம் சனங்களால் ஆணையிடப்பெற்றுளேன். ஆதலின், என்பால் நிகழும் அவிரயங்கண்டு, சாப்பியச்சிறப்பொருங்குணர்ந்த காணுநர் யாவரும் களிசிறப்பா ரென்பதுமெய்யே. (பாடுகின்றான்.)



நன்னிடம் வித்திடத் தக்க தோர்விதை
யென்னவன் விதைப்பினு மினிதி னோங்குவா
னன்னில மவனிய னூட லின்றியே
மன்னெழில் வளம்பெற வளர்க்கு மேயரோ. (4)

இப்போது யான் வீட்டிற்குச் சென்று எனது இல்லாளையழைத்துக் கொண்டு வந்து அவளுடன் யான் சங்கீதகஞ் செய்யப்போகின்றேன். (சிறிது சென்றுபார்த்து) என்றன் வீட்டிற்குட் செல்லுகின்றேன். (அவிநயஞ் செய்துகொண்டு நுழைந்து பார்த்து வந்து தனக்குள்) ஏடி ! நமது வீட்டிற்குளேதோ பெரிய திருவிழாப்போலக் காணப்படுகின்றதே ! அஃதன்றியுஞ் சேவகர்களுந் தந்தம் தொழில்களைப் பரபரப்புடனே செய்கின்றார்களே ! இஃதென்னைகொல் ? (பாடுகின்றான்.)

சிலர்,

தண்ண நீர்சொடு தாம்வரு வார்சிலர்
சண்ணிப் பான்பணைச் சாந்தரைப் பார்சிலர்
கண்ணி லாந்தொடை கட்டுகிற் பார்சிலர்
சுண்ண மும்மொலி தோன்ற விடிப்பரே. (5)

இருக்கட்டும். இதைக்குறித்து என் மனைவியை யழைத்துக் கேட்பேன். (நேபத்தியத்தினுள்ளே யொருபுறம் நோக்கி) குணவதி! தந்திரசாலீ ! தேக சௌக்கியஞ் செய்யவல்லாளே ! அறம்பொருளின்ப மாக்குகிற்பாளே ! இல்லாண்மை முற்றும். இனிதுணர்ந்தாளே ! ஓரே யொருகாரியத்தின் பொருட்டுச் சீக்கிரம் வா.

நடி வருகின்றாள்.

நடி :—ஆரியபுத்திரா ! இதோ இருக்கின்றேன். நினது ஆணையை யேற்று அதன்படி செய்வேன்.

சூத்திரதாரன் :—அவ்வாணை நிற்க. மற்று, இப்போது பெரியோர்களாகிய பிராமணர்களை யழைப்பதற்கு நமது குடும்பத்தின்கட் காரணமாயிருப்பது யாதோ ? அல்லாக்கால், இச்சிறந்த விருந்தினர் நந்தம் மடைத்தொழிற் சிறப்பை யுணர்ந்து இங்கே வந்தனரோ ? சொல்.

நடி :—ஐய ! இச்சிறந்த பிராமணர்களை யானே யழைத்தேன்.

சூத்திரதாரன் :—காரணமென்னை ? சொல்.

நடி :—இன்று சந்திரகிரகண மன்றோ ?

சூத்திரதாரன் :—உனக்கிப்படி யார் சொன்னார்கள் ?

நடி :—இப்படி யிவ்வூரார் சொல்லிக்கொண்டார்கள்.

சூத்திரதாரன் :—ஆரியே ! அறுபத்துநாலு கலைகளுளொன்றாகிய சோதிடநூலில் யான் மிகவும் பயின்றிருக்கின்றேன். இடையே, பெரியோர்களா

கியபிராமணர்களைக்கருதிச் செய்யும் அடிசிற்றொழில்களுமாகட்டும். மற்றைப்படி, இன்று சந்திரகிரகணமென்று சொல்லி யாரோ உன்னை யேய்த்துவிட்டனர்! பார்! (பாடுகின்றான்.)

சூழ்மதிப் பிறையதாய்ச் சுடருஞ் சந்திரற்
கீழ்மைய கொடியகோட் கேது வோடுறீஇத்
தாழ்மைய வலிகொடு தாக்கு வோனெவன் ?—

**நேபத்தியத்துள்** :—யானிருக்கும் போது சந்திரனைத் தனது வலியினால் தாக்க விரும்புவோன் யார் ?

**சூத்திரதாரன்** :—(பாடுகின்றான்.)

வாழ்மதி புதனொடு வதியி னுய்வனே. (6)

**நடி** :—ஐய ! இவ்வுலகிலிருந்து கொண்டு சந்திரனைக் (கேதுக்) கோளின் தாக்குதலினின்றுங் காக்கவிரும்புவோன் யார் ?

**சூத்திரதாரன்** :—அதனை யானுங் கண்டிலேன். மெய்யே. அது நிற்க. அவன் மீட்டுஞ் சொல்வானானால் அவனது குரலினால் அவனைத் தெள்ளிதினுணர்வேம். (பாடுகின்றான்.)

சூழ்மதிப் பிறையதாய்ச் சுடருஞ் சந்திரற்
கீழ்மைய கொடியகோட் கேது வோடுறீஇத்
தாழ்மைய வலிகொடு தாக்கு வோனெவன் ?

**நேபத்தியத்துள்** :—யானிருக்கும்போது சந்திரனைத்தனது வலியினால் தாக்க விரும்புவோன் யார் ?

**சூத்திரதாரன்** :—(கேட்டு) யானறிவேன். கௌடில்லியன் ! (நடியஞ்சி நிற்கின்றாள் ; சூத்திரதாரன் பாடுகின்றான்.)

எவன்றன் வெகுளித் தீயதனா லொழில்கொ ணந்த குலமெரித்தா
னவன்றன் குடில மதியினகத் தைய மதிக்கி ரகணமென
றவனிற சொற்கேள் விப்படலு றுண்மௌ ரியசந் திரகுத்த
னவன்றன் பகைஞர் தாக்கலென்றோரரிய பொருளுட் கொண்டனனே.

ஆகவே நாம் போவோம்.

[இருவருஞ் செல்லுகின்றனர்.

---

## அங்கம் - I முதற்களம்.

(சாணக்கியன் தன்குஞ்சிலை விரித்துக் கையினாலதை புருவிக்கொண்டு வருகின்றான்.)

**சாணக்கியன்** :—யான் இருக்கும்பொழுது தனதுவலிகொண்டு சந்திரகுப்தனைத் தாக்குவதற்கு விருப்பங்கொள்பவன் யாவன் ? சொல். (பாடுகின்றான்.)



கூடிய வேழத்தைக் கொன்றிழி சோரியே
மூடிய வாய்மடுத் தல்கந்திச் செம்மதிச்
சீய வாயிற் செறிபற் பிடுங்கிட
மேய சிந்தை விரும்புநன் யார்கொலோ ? (8)

மேலும், (பாடுகின்றான்.)

நந்தர் தங்குலத் திற்குமா விடஞ்செறி நாக
நந்து கோபச்செந் தீவளர் நற்புகைக் கொடியென்
விந்தை யார்சிகை விரிந்திடல் விழைதா லின்றிப்
புந்தி யற்றுத்த னுயிரினைப் போக்குவோன் யாரே ? (9)

அன்றியும், (பாடுகின்றான்.)

கோனந் தக்குலக் கானங் கொளுத்துமென்
மான மார்சின வாவொளி யூடுபோய்த்
தானந் தம்முற்றுச் சாவுஞ் சலபம்போ
லூன மெய்துமா றுள்விழை மூடன்யார் ? (10)

சார்ங்கரவா ! சார்ங்கரவா ! !

மாணவன் வருகின்றான்.

**மாணவன்** :—ஐய ! உத்தரவிடுக.

**சாணக்கியன்** :—மைந்த ! யான் வீற்றிருக்க விரும்புகின்றேன்.

**மாணவன்** :—ஆசிரிய ! வாயிலருகிலுள்ள அவைகுழுமிடத்தில் ஒருபிரப்பிருக்கையுளது. அது தாங்கள் வீற்றிருக்கத்தக்கது.

**சாணக்கியன்**:—மைந்த! மிகத்தலைமையான சிலதொழில்களில்முயன்று மனமுளையாநின்றேன் ; மற்று மாணாக்கர் கீழ்ப்படியாமையினாலன்று. (ஓராதனத்திருந்து தனக்குள்) இந்தச்செய்தி யெவ்வாறு சனங்களுக்கு வெளியாயிற்று. இராட்சசனோ நந்தகுலம் அழிந்ததனாற் கோபங்கொண்டு, பருவதகேசனாகியதன், தகப்பன் கொலையுண்டதனால் முன்னரே வெகுண்டுள மலயகேதுவையடுத்து "உன்னை நந்தராச்கிய முழுதிற்கும் மன்னவனாக்கி உனக்குப் பட்டங்கட்டுவேன்" என்றுசொல்லி, அப்படிச்சொல்லியதனைமுற்றுவிக்கும்படி பலமிலேச்சராசகர்களைத் துணைவலியாகக்கொண்டு விருஷலனாகியசந்திரகுப்தனைத் தொலைக்க விரும்புகின்றான். மற்றுநந்தவமிசத்தைத் தொலைக்குமாறு யான் செய்த பிரதிஞ்ஞையோ உலகம் முழுவதும் அறிந்ததே. அவ்வாறே கடத்தற் கரிய பிரதிஞ்ஞையென்னும் யாற்றினையுங் கடந்தேன். அது நிற்க. உலகம் அறிந்த இச்செய்தியை அவர்கள் மறக்கும்படி செய்ய எனக்கு வல்லமை யில்லையோ ?-(மௌனம்). இஃதெனக் கேன் ? (பாடுகின்றான்.)

நந்தகுலக் கானையென்றன் வெகுளிச் செந்தீ
நனிமடுத்துத் துயர்மேக நண்ணார் மாத

றிந்துமுகந் தமைக்கரிய வாக்கி யென்ற
 னிருஞ்சூழ்ச்சிக் காற்றினெழூஉ மடமை நீற்றான்
மந்திரிமா ரெனுமரங்க டம்மை மூடி
 வாழ்ந்தசனப் பறவைகளைக் கலக்கி யோட்டி
நந்தவதோய் தலினன்று பற்றி மேன்மே
 னலிவின்றி யெரியவிட வின்மை யானே. (11,

ஏவலர்மன் னவர்க்கஞ்சி யுயரி ருக்கை
 யிருந்தவெனைச் சீயென்று நீத்த வன்றைப்
பாவமிஃ தென்றுமிகத் துயர்கூர்ந் தம்ம
 பரிவினொடு தலைகுனிந்து பார்த்தோர் தாமே
மாவலிய வரியேறுன் றாசு வாவை
 மலையுச்சி தனினின்று முருட்டி யாங்குச்
சாவநந்தக் குலமுழுதும் யான ழித்த
 தகையையின்று தலைநிமிர்ந்து காண்க மாதோ. (12)

இப்போது என்றன் சூட்பாரம் நீங்கிற்று. ஆயினும் விருஷலன் (விடலை) பொருட்டு இன்னுஞ் சஸ்திரங் கைக்கொள்கின்றேன்.—(பாடுகின்றான்.)

உலகத்தி னிதயமுதி யொன்பா னோய்க
 ளொக்குநவ நந்தர்களு மொழிந்து போனா
ரிலகுபுனற் றடத்தினின்மா மலர்கா னின்றி
 யிருந்திடல்போற் றிருமகளு மௌரி யன்பா
னலனுடனே வீற்றிருக்கின் றனளஃ தல்லா
 னட்பாளர் பகைஞரெனு மிருவர் கட்குந்
தலையன்பு பகையென்ற பலன்க டாமே
 சமமாகப் பகுத்திடப்பட் டனவே யன்றோ? (13)

அவ்வாறே யான் நந்தர் குலத்தை வேரொடு களைந்தும் பயனென்னை? யான் இராட்சசனை யடக்காதிருக்குங்காறும், திருமகளைச் சந்திரகுப்தனோடு சேர்த்திருந்தாலும் பயனில்லை.—(யோசிக்கின்றான்.) ஓ! நந்தர் குலம் நாசமுற்றும், இராட்சசன் அவர்கண்மீது வைத்துள அன்பிற்கோ அளவில்லை! நந்தகுலத்திற்குத் தூரபந்துவாகவேனும் ஒருவனிருக்கின்ற வரைக்கும் அவன் எனக்குப் பகைஞனே. விருஷலனுக்கு அமைச்சனாந் தன்மையை யடைதற்கு இன்னும் அவன் அருகனல்லன். எனது சூழ்ச்சியினால் இராட்சசன் சந்திரகுப்தனைத் தாக்குதலினின்றுந் தவிருமாறு முயற்சிசெய்தல் வேண்டும். துணையற்ற நந்தவமிசச் சருவார்த்தசித்தி வானப்பிரஸ்தாசிரம முற்றபோதினுங் கொல்லப்பட்டனன். அங்ஙன மிருப்பவும், இராட்சசன் மலயகேதுவோடுகூடி என்னைத் தாக்குவான் மிகவும் முயலுகின்றனன்.—



(வெள்ளிடையை நோக்கி) ஓ! இராட்சச! நல்லமைச்ச! சாதுவே! மக்களுட் பொன்னே! நன்று! நன்று!! ஆ!—(பாடுகின்றான்.)

சேவகரிவ் வுலகதனிற் பொருள்வி ழைந்தே
 செவ்வர்தம்மாற் றொழில்புரிகின் றாரா னார்தா
மாவலிற்போ கூழ்ப்பொழுது மவர்ச்சேர் கின்றா
 ரவர்மீட்டு மந்நிலையை யடைவா ரென்றே
மேவரிது நிற்போலத் தலைவன் றன்ன
 வினைப்பொறையை யவன்செய்நல நினைந்து தங்கட்
காவனன்மை நோக்காது பத்தி யோடு
 மவனிறந்த பினுந்தாங்கு வோரா யம்மா! (14)

இப்பொழுது யான் செய்யும் முயற்சியெல்லாம் உன்னைச் சந்திர குப்தன்பாற் சேர்த்திடல் கருதியே. இந்த விருஷலனுக்கு அமைச்சனாவதனாலெப்படி நன்மையுண்டாகும்?—(பாடுகின்றான்.

அறிவிலிவீர மிலியிவர் தம்மோ
 டன்புசெய் வதிற்பய னென்னை
யறிவொடு வீர மிருந்தெனை பயனோ
 வன்புறு பத்தியொன் றிலதே
லறிவொடு வீரம் பத்தியு மொருங்கே
 யமைந்திடு சேவகர் தாமே
பிறிதரா மனைவி போலெப்போழ் தத்தும்
 பிரியமுற் றிருப்பவ ரன்றே. (15)

ஆதலின் யானும் இவ்விஷயத்திலுறங்குகின்றிலேன். அவனை வசப்படுத்துவண்ணம் என்னாலியன்றமட்டும் முயலாநின்றேன். அதுநிற்க விருஷலன் பர்வதகேசன் ஆகிய இவர்தம்முள் எவனேனும் ஒருவனது நாசத்தினாற்சாணக்கியனைச் சிக்கெனப்பிடிக்கலாமென்று எண்ணங்கொண்ட இராட்சசனே, எங்களுக்கு மிக்கவுபகாரியும் நண்பனுமாயிருந்த துணையற்ற பர்வதகேசனை விஷகன்னிகை (கடுமகள்) யினாற்கொன்றனனென்று அவன்மீது பழிபிறப்பித்தனன், அதுவும் அவ்வாறேயுலகிற் பரவாநின்றது. பர்வதகேசன் மகனாகிய மலயகேது "சாணக்கியனால் நின்தகப்பன் கொலையுண்டான்" என்று வாதராயணன் சொல்லக்கேட்டுப் பயந்தோடிவிட்டனன். இவன் இராட்சசனோடுகூடி, அவன்றன் புத்திசாதுரியத்தினாலே யுதவிபெற்று நம்மையெதிர்ப்பினும் எதிர்க்கலாம். அவனை மீட்டுங் கொல்லப்புகின் அஃதாவது இராட்சசனே பர்வதகேசனைக் கொன்றான் என்று பரவியுளபழியை மாற்றிவிடும். மேலும், நண்பர்பகைஞரென்னு மிருதிறத்தாருள்ளும் உண்மையுள்ளாரையும் உண்மையுள்ளார்போலே நடிப்பவரையும் ஆராயவேண்டுமென்ற ஆசையுடையாரும், மலநாட்டினரும், பலவகைப்பாஷைகள் பேசுநரும், பல்விதநடையுடையாளரும், பலமாறுவேஷக்காரருமாகிய ஒற்றர்ப

ல்லோர் என்னுன்னுப்பட்டுளார். குசுமபுரக் குடிகளுக்குள் நந்தனும் ; அவனமைச்சனுமாகிய இவர்பால் அந்தரங்கநேசமுள்ளோரைப், பொருளாராய்ச்சியின் மிகத்தேர்ந்த என்றனொற்றர் ஆய்ந்துகொண்டிருக்கின்றனர் பத்திரபடன்முதலிய பிரதான புருஷர்களாகிய சந்திரகுப்தனது நன்மையையே நாடுவோர் தத்தஞ் செயல்களின் பயனை யென்னிடத் துரைத்துத்தத் தமது ஆசையைப் பூர்த்திசெய்து கொண்டனர். அரசனிடின் பத்திலேயே கருத்தும், அரசன தருகினின்று நீங்காமையும், பரீட்சித்து உண்மையென் றறிந்த பக்தியும், மிகுந்த சாக்கிரதையும் உள்ள என் மனிதர்கள் பகைவன் அனுப்பும் விஷயங்கலந்த பானங்கொடுப்பவரைத் தவிர்க்குமாறு நியமிக்கப்பட்டுளர்.—என்றன் சகபாடியும் நண்பனுமாகிய விஷ்ணுசர்மன் என்பானொருவனுளன் அவன் உசனச நூலினும், தண்ட நீதியினும், எண்ணெண் கலைகளுளொன்றென வியம்புஞ் சோதிடத்தினும் மிகத்தேர்ந்தவன் ; இராட்சசனுக்குமிகவும் ஆப்தனும், நந்தனது மற்றை மந்திரிகள் யாவருக்கும் நண்பனுமாவான். அவன் நந்த குலத்தை யருக்குமாறு யான் செய்த சூள்முடிந்தபின்னர்க்கு சுமபுரத்திற்கு வந்து அமண் வேடம் பூண்டு உலவா நின்றான். அன்றியும் அவன் இப்பொழுது ஒரு பெருந்தொழில் செய்து முடிக்கப்போகிறான். அப்பொழுது பிறர் நகையாடற் பாலதாகும் ஈனமொன்னும் நம்பிலுளதாகாது.—மற்று, விருஷலனோ வெனில், இராச்சிய முழுதும் முதலமைச்சனாகிய வென்பால் ஒப்பித்து விட்டுக் கவற்சியற் றிருக்கின்றனன். அன்றியும், ஓரரசனை அவன்றனே யிரச்சிய காரியங்களை யெல்லாம் பார்ப்பதனுளவாந் துக்கங்களடைய வொட்டாமல், மந்திரிமார் அரசன் இராச்சிய பரிபாலனஞ் செய்வதன் கண் உதவி புரியின், அத்தகைய இராச்சிய நன்னிலையிலேலே சியிருக்கும்.—(பாடுகின்றான்.)

உரிமைசா லடன்மிக வுளவராயினு
நரகய விந்திரர் நலத்த நாடுக
ளருமதிப் பிறர்துணை யன்று கர்ப்பரேற்
பெரியவர் துயர்நிலைப் பேதுற் றாரோ.

[சாணக்கியன் போகின்றான்.

முதற்களம் முற்றிற்று.



# பொருண்முறை நூல்.

## IV - ஆம் அத்தியாயம்.

### பொருள் பகிர்தல்

(309-ம் பக்கத் தொடர்ச்சி.)

வினைசெய்விப்போர் தாங்கள்வைத்திருக்கும்முதலினாலும் தங்களுடைய சாமர்த்தியத்தினாலும் தங்களுக்கு வரும்இலாபம் மிகுதலும், குறைதலும் ளைத் தெரிந்திருந்தும், தாங்கள் வர்த்தகத்திற்காக வைத்த முதற்பொருளுக்குத் தக்க இலாபம் வர வேணுமென் றெண்ணுகின்றார்கள். வினைசெய்விப்போ ரொருவன் தன் முதலையே வைத்து வியாபாரம் முதலியது செய்தானாயினும், இலாபம் முதலியவை கணக்கிடும் நிமித்தம் தனக்கோர் முதற்பொருள் இருந்ததாக வெண்ணாமல், இதில் உபயோகித்த பொருள் கடன் கொண்ட முதலென எண்ணல் வேண்டும். வினைசெய்வா னொருவன் நூற்றுக்கு ஐந்து ரூபாய் வீதம், வட்டிக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்குகின்றான். இதைக் கொண்டு ஓர் பஞ்சாலை ஸ்தாபிப்பதற்காக வேண்டிய இயந்திரங்களும் மற்றுமுள்ள உபகருவிகளும்வாங்குகிறான். இம்முதற் செலவன்றியும், அவ்வாலைஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்குவரிரூபா 100-கொடுத்தல்வேண்டும். தான் வைத்த கூலியாட்களுக்கு வருஷமொத்தத்தில்கொடுக்கவேண்டிய கூலி ரூபா-6,000. ஆலைக்குப் பஞ்சு வகையறு வாங்குவதற்கு ரூ. 4000 வேண்டியிருக்கிறது. கடன் கொண்ட முதலுக்கு நூற்றுக்கு ஐந்து வீதம் கொடுக்கவேண்டிய வட்டி ரூபா. 250. ஆகவேஇதன் விஷயமாக இவனுக்கு ஏற்படும் செலவு மொத்தத்திற்கு விவரம் யாதெனப்பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| ஆலையிருக்கும் நிலத்திற்கு வரி. | ... ... | ரூபா. 100-0-0. |
| வினை யாட்களுக்கு கூலி. | ... ... | ரூபா. 6,000-0-0. |
| பஞ்சு வகையிறுக்கள். | ... ... | ரூபா. 4,000-0-0. |
| கடன் வாங்கிய ரூபா. 5,000.க்கு வட்டி. | | ரூபா. 250-0-0. |
| ஆக மொத்தச் செலவு | | ரூபா. 10,350-0-0. |

இவனுக்கு வரக்கூடிய*மொத்த வரும்படியில் இச்செலவைக் கழித்துப் பார்க்கின் மீதியிருந்தவைதான் இவன் அடையும் இலாபம். ஆலையி லுண்டாகும் வஸ்திரம் முதலிய பொருள்களை விக்கிரயம் செய்வதால் வரக்கூடியது ரூபா-12,000. இவன்செய்தசெலவு ரூபா-10,350. போக இவனுக்கு இலாபம் ரூபா-1650. முதற்பொருள் கடன் வாங்காது இவனுடைய சொந்தப்பொருளு

* Gross income.

யிருக்கும் பக்ஷத்தில் அதற்குரிய வட்டி ரூபா 250-ம் இவன் இலாபத்திற் சேர்ந்து ஆக இலாபமொத்தம் ரூபா, 1000-ஆகிறது.

மற்றெல்லா விஷயங்களிலும் இதே நிலைமையிலிருக்கும் வேறொரு வினைசெய்விப்போனுக்கு, தன் அதிர்ஷ்ட ஈனத்தினாலோ அல்லது சாமர்த்தியமின்மையாலோ இலாபம் ரூபா 300 தான் வருகிறது. இதிலும் முதற் பொருளுக்குச் சேரவேண்டும் வட்டியைக் கழித்துப் பார்த்தால் மீதியாகும் 50 - ரூபாய்தான் இவனுக்கு இலாபம் ஆகிறது. இது தான் இவனுக்கு வருஷமுழுதும் உழைத்ததின் பயன்.

இக்காலத்தில் நடக்கும் வியாபாரங்களில் சாதாரணமாய் * வினைசெய்விப்போன்தான் நஷ்டத்திற்குப் பாத்திரவானாகிறான். ஏனெனில், நிலத்திற்குரியானுடைய வாரமும் முதலுக்குரியானுடைய வட்டியும் வினையாட்களுக்குரிய கூலியும் முதலிலேயே ஏற்பாடாய்விடவேண்டியிருக்கின்றதேயன்றி வினை செய்விப்போனுடைய மொத்த வரும்படியைப் பொறுத்ததன்று. ஆயினும் இத்தகைய செலவுகளெல்லாம் போக இவ்வளவு இலாபம்வரும் என்னும் நிச்சயம் இவனுக்கில்லாவிட்டால் இவன் சாதாரணமாய் இவ்வேலையிலிறங்கமாட்டான். அப்படி இறங்கின போதிலும் ஒருதரம் நஷ்டம் வந்தால் மற்றொருதரம் அதிக இலாபம் வரும், அதனால் இரண்டையும் நிரவிக்கொள்ளலாம் என்னும் எண்ணமேயன்றி வேறில்லை. சிலருக்கு அதிக அதிர்ஷ்ட ஈனத்தினால் நஷ்டமே மேலிடுவதுமுண்டு. அத்தகையர்கள் வியாபாரவிஷயங்களுக்குத் தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். அப்படி நஷ்டமேற்படும் போலிருந்தபோதிலும் எதில் நஷ்டம் குறைவாயிருக்குமென்று தோன்றுமோ அதில் பிரவேசிக்கவேண்டியிருக்கிறது. வியாபாரத்தில் வினைசெய்விப்போனுக்கிருக்கும் கஷ்டமே கஷ்டம். நிலமுடையான் தன் நிலத்துக்குக் † குடியானவன் வருமுன்னமே, கொடுக்கவேண்டிய வாரம் இவ்வளவென முடிவுசெய்து கொள்ளுகின்றான். முதலாளியும் பணம் கொடுப்பதற்கு முந்தியே வட்டி யிவ்வளவென்றும் ஏற்பாடு செய்து கொள்ளுகிறான். வினையாட்களும் தங்களுக்குச் சேரவேண்டிய கூலி இவ்வளவினதெனவும் வினைசெய்விப்போனிடம் ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள். இவனுடைய இலாபமோ அப்படி முடிவதற்கில்லை. தன்வேலை முழுதும் முடிந்து, அதனாலாகிய பொருள் முழுதும் விற்பனையான பிறகுதான் தன் இலாபமின்னதெனவும் தெரியும். மற்றவர்களுக்குச் சாதாரணமாய் நஷ்டம் ஏற்படுவதில்லை. இவனுக்கோ இது முடிந்தவுடன் இலாபத்திற்கேது மில்லாவிட்டால் நஷ்டமின்னதெனவும் தெரியவரும்.

* Employer.
† Tenant.



இப்படிச் சொன்னதினால் * வினையேவுவோன் மற்றவர்களுக்கு முதலிலேயே வாரமும், வட்டியும், கூலியும் கொடுத்து விடுகிறானென்பதுமில்லை. ஆயினும் வருஷத்திற் கோர்தரமாயினும், அல்லது மூன்றுமாதத்திற்கு ஓர்தரமாயினும் வாரத்திற் கொருமுறையாயினும், வார முதலியவை கொடுக்கவேண்டுமென்று மாத்திரம் ஏற்பாடு செய்து கொள்ளுகின்றான்.

(இன்னும் வரும்.)

கல்குளம் - குப்புசாமி முதலியார்.

## பரீட்சை வினாக்கள்.

I. (a) சீவகசிந்தாமணிச் செய்யுணடை வளத்தைச் சுருங்கவிளக்கி, அதற்குத் தொல்காப்பியனார் கூறிய பெயரையும் எழுதுக.

(b) 'நாமகளிலம்பகம்' எனுஞ் சொற்றொடர்க்குப் பொருளுரைத்து, அப்பொருளைக் கதையினோடியைத்துக் காட்டுக.

(c) ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைநடைக்கும் பரிமேலழகர் உரைநடைக்கும் உள்ள வேறுபாடென்னை? இவ்விரண்டினும் நலம்பாடுற்றது யாது? ஏன்?

(d) 'தண்டியலங்கார சாரத்திற்கு' முதனூலெது வென்ப? தமிழில் வேறிரண்டு அணிநூல்களெவை?

II. (a) கீழ்வரும் செய்யுட்களிலுள்ள பாடபேதங்களை எடுத்தெழுதி அவற்றுள் இன்னின்ன செவ்விய வென்பதுங் காட்டுக. (1) "பாத்தரும்பசும்பொனின் மாடத்துச்சிமேற், றூத்திரண் மணிக்குடநிரைத்துத் தோன்றுவ". (2) "யாமமும்பகலுமறி யாமையாற், பூமிமாநகர் பொன்னுலகொத்ததே."

(b) "குங்குமத் தோளி னானுங் கொழுங்கயற் கண்ணி னாளுந்
தங்கிய காதல் வெள்ளந் தலைப்பறப் பருகு நாளுட்
டிங்கள்வெண் குடையி னாற்குத் திருவிழுக் குற்ற வண்ணம்
பைங்கதிர் மதியிற் றெள்ளிப் பகர்ந்தெடுத் துரைத்து மன்றே."

இச்செய்யுளுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய கருத்துப் பொருளைத் தெளிவாயெடுத்தெழுதுக.

*Employer

(c) "கைபுனை சாந்தமுங் கடிசெய்மாலையும்" எனுஞ் செய்யுளுரையில் "இனிப் பிறர் மாசுபட்டதென்று நாளுமே பூவாகிய படாம் போர்த்தவுமாம்." என்றதிற்'பிறர்' என்பது யாரை?

(d) "நெடுங்கொடி நிழன்மதி நெற்றிதைவர, வுடம்புவேர்த் தினமலழுபுறாதிகோக்கலி, னடுங்குபு நல்வரை மாடத்துச்சிமே, லடங்கி வீழ்த ருவியினழுவபோன்றவே":—இச்செய்யுளிற் போந்த குறிப்புப்பொருளென்னை?

III. i. சச்சந்தன் ஒழுக்கத்தை புணர்வதனாற் போதரும் பயன்யாது? இவன் எத்தன்மையான்?

ii. நிமித்திகன்: தருமதத்தன்;—இவ்விருவரும் யார்? இவர் எவ்வெச்சமயத்தி லெவ்வாறு உரை நிகழ்த்தினரென்பதுஉம், அவ்வுரையளவானுணர்த்தப்படும் அவர் குணங்க ளிவையென்பதூஉம் எழுதுக.

iii. "அடிகளிற் றெருத்திலிட்ட, வன்னைப்பூந் தவிசு தன்னை நூமவிமேவிட்ட தொக்கும்":—இஃதியார் கூற்று? இக்கூற்றினுண்மையை யாராய்ந்தெழுதுக.

IV. (1) 'ஒன்பதின்சாண் நடப்பினும்' என்னலாமோ? பொருத்திக்காட்டுக.' (2) எழுவர் தம்மகலம் பூசி' இதில் 'எழுவர்' யார்யார்? (3) "நகராதலின் ஊடற்குக்காரணங் கூறுராயினார்" இதனை இனிது விரித்துக்காட்டுக. (4) பழைய அரசமகளிர் ஊசலாடு மிடம்யாது? (5) குயிலை யின்புறூவுடையார் என்னென்று கூறுப. (6) அறந்தரு திகிரிக்கு வழியடையாவன யாவை (7) கடையாமத்திற்கண்ட கனவின் பயனென்னை? (8) குரவராவார் யார்?

V. (1) கீழ்வருவனவற்றிற்கு உவமை கூறப்பட்டனயாவை:?—கமுகம்பாளை, கோழித்தலை; மகளிர்செவி, தோள், விரல்கள்; கழுத்து, குலந்தாய்மை. (2) "குழவிக்கோட்டிளம் பிறையுங் குளிர்மதியுங் கூடினபோலழகுகொள் சிறுநுதலு மணிவட்ட மதிமுகமும்":—இதனை மேற்கோளுடன் விளக்கியெழுதுக. (3) பிணையல்: சூட்டு: கண்ணி:—இவை தம்முள் வேற்றுமைகாட்டுக. குறங்குசெறி, கடிப்பிணை, தெய்வவுத்தி:—இவற்றைப் பொருளுடன் விளக்குக.

VI. (a) கீழ்வருஞ் சொற்களுக்குப்பொருள் எழுதுக:—இன்பிடி, ஞாயில், ஆவணம், ஐயவி, தூரால், சருவீ, மடையூல், பவணம், பிண்டி, உவளகம், நாந்தகம், கப்பணம்,

(b) பின்வருவனவற்றை யினிதுவிளக்குக:—(1) 'எத்தருமயிற்குழாம்' (2) அட்டொளியாத்தம்' (3) 'குஞ்சிமாண்கொடி' (4) 'வைகளுஞ்மவைகின்று' (5) 'அமணங்கு குடியிருந்தஞ்சுணங்கு பரந்தவே,'



(c) பின்வருவனவற்றிலுள்ள சொற்பொருள் விசேடங்களை விளக்கியெழுதுக:—(1) 'முல்லையங்குழலார்' (2) 'மாண்பினஞ்சுமமிர்தமும்போல் குணத்த பொருகயற்கண்' (3) 'பொனங்கொடி யமிர்தனும் பொன்னெடுங் குன்றனும்' (4) 'துணைபுண ரன்னத் தூவி' (5) 'வேழந்தற்றிய வெள்ளில்,'

VII. (a) "எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருடிருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோற்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானுத் தகையவே":—

இச்செய்யுளை வினைமுடித்துக்காட்டி யுவமையை விரித்துப் பொருத்தியெழுதுக.

(b) "அரவுகான்றிட்ட வங்கதிர் மாமணி, புரவு நீர்முத்து முள்ளுறுத்துள்ளன, விரவன் மாந்தர்க்கு மின்னவை யீவதோர், புரவு பூண்டனர் பொன்னகர் மாந்தரே":—இதற்கு மூன்றுவகையாற் பொருளெழுதி யின்னது சிறந்ததெனக் காட்டுக.

VIII. (1) ஒட்டணி: உள்ளுறையுவமம்:—இவைதம்முள் வேறுபாடென்னை? (2) பொருள்கோளிலும் அணிவகையிலும் 'நிரனிறை' யைச் சேர்த்தெண்ணியதற்குக் காரணங் கூறுக.

(b) (1) தற்குறிப்பேற்ற வணியை வகைப்படுத்தி யிலக்கணமெழுதுக. சிலேடை எத்தனை பகுதியதாம்? "நிறைபடுவ புட்குலமே" எனுஞ் செய்யுள் எதன்பாற்படும்? (2) சங்கீரணம், ஒப்புமைக்கூட்டம், இலேசம் இவற்றை விளக்குக.

(c) "தருமன் தண்ணளி யாற்றன திகையால்" என்பதும் "நெடுங்கொடிநிழன்மதி நெற்றி தைவர" என்பதும் எவ்வெவணி பற்றிவந்தன?

XI. (a) 'போற்றி' என்னுஞ்சொல்லுக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர்கூறிய பொருளுரைத்துச் சொல்லிலக்கணங்கூறி மேற்கோளுங்காட்டுக.

(b) பின்வருவனவற்றை யுதாரண முகத்தான் விளக்குக:—'உம்மீற்றுவந்ததோர் எவல் கண்ணியவியங்கோள்' (2) 'ஒருமை பன்மை மயக்கம்' (3) 'பகுதிப்பொருள் விகுதி' (4) 'முன்னிலைப்புறமொழி.'

## சமாசாரங்கள்.

க்ஷேத்திரகணிதபால்போதினி முதற்புத்தகம் :—நமது பார்வைக்கனுப்பப்பட்ட இஃது ஆங்கிலபாஷையினின்றும் சேஷம்பாடி - ராஜகோபாலாசார்ரியார் பி. ஏ. என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு விசேஷமான விவரணங்கள் குறிப்புக்கள் அப்பியாசங்கள் வேறுமுறை நிரூபணங்கள் மெல்வரிச்சட்டமாகிய எடுத்துக்காட்டிய வேறுபல ரூப நிர்மாணக் கோட்பாடுகள் விஷயநிரூபணக் கோட்பாடுகள் ஆகிய இவற்றுடன் லோயர்செகண்டரி, பண்டித பரீட்சைகள் முதலாயினவற்றிற்குப் படிக்கும் வித்தியார்த்திகளின் உபயோகங்கருதிப் பதிப்பிக்கப்பட்டுளது. ஏறக்குறைய இருநூறு பக்கங்களுள்ளது. வேண்டிய யாவற்றையும் மாணாக்கருளங்கொளத்தக்கவாறு தெளிவுபெறக்கூறுவது. மிகவும் நேர்த்தியான காகிதத்திற் பார்ப்போர்க்கு விஷயங்கள் முதற்பார்வையிலேயே விளங்கும்படி யச்சிடப்பட்டுளது. கனம்பொருந்திய நியாயாதிபதி ம-ா-ா-ஸ்ரீ டிவான்பஹதூர் சர் எஸ். சுப்பிரமணிய ஐயர் கே. ஸி. ஐ. ஈ. அவர்களுக்கு அங்கிதஞ்செய்யப்பட்டுளது; யாவரும் வாங்கி எளிதில் விஷயத்தை உணரத்தக்கது. இந்த க்ஷேத்திரகணிதசாஸ்திரமானது ஆதியில் யூக்லிட் என்னும் புலவர்பெருமானாற் கிரேக்கபாஷையில் எழுதப்பட்டிருந்தது. இது சென்னை ஜரிஷ் அச்சுக்கூடத்தலைவராகிய வி. ஜே. மாணிக்கவேலுமுதலியார் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டுளது. இதன்விலை அரு-பத்து. இனி யிதுநிற்க, திரிசிரபுரத்திலுள்ள எஸ். பீ. ஜீ. கலாசாலை கணிதசாஸ்திர பட்டாசாரியராகிய மாலிம் துரையவர்களாலும் அடைக்கலம்பிள்ளை யவர்கள் பி. ஏ. என்பவராலும் ஆங்கிலமுந் தமிழுமாகக்கலந்து அச்சிடப்பட்டு வெளிப்போந்த க்ஷேத்திரகணித நூலொன்றுளது. அந்நூலையிதனோடு சீர்தூக்கி யாராயுமிடத்து அதனினும் இது பெரிதும் சிறப்புடைத்தாம் என்பது பார்க்குநர் யாவர்க்கும் பொள்ளெனப் புலப்படும். ஆகவே இந்நூலினை யாவரும் வாங்கிப்படிப் பார்களென்று நம்புகின்றனெம்.

* * *

விபூதிருத்ராக்ஷதாரணநிருபணம் :—இஃது இராஜமன்னார்குடியின்கண் வசிக்கும் "மகா மகோபாத்தியாயார்" என்னும் பட்டம்பெற்ற தியாகராஜதீக்ஷிதர் அவர்களால் சம்ஸ்கிருதத்தில் வேத உபநிஷத்தாதி பிரபலப் பிரமாணங்களைக்கொண்டு எழுதப்பட்ட மேலானகிரந்தம். வைதிக சமயத்தாரனைவர்க்கும் மிக்கபிரயோசனமாயுள்ளது. தமிழ்ப்பாஷையில் எட்டயபுரம் சமஸ்தான வித்துவான் பிரம்மஸ்ரீ வெங்கடாசல தீக்ஷிதரவர்களால் இஃது மொழிபெயர்க்கப்பட்டு திருநெல்வேலிஜில்லா விருதை சிவஞான யோகிகளால் பார்வையிடப்பெற்று அச்சிடப்பட்டு வருகிறது. நாளது ஜுன்மீ 20-தேதிக்குள் அது வெளிவரும். வேண்டியவர்கள் வி. சிவஞான யோகிகளுக்கு எழுதித்தருவித்துக்கொள்ளலாம். இதன் விலை ரூபா க-0-0.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 JUL 1900
MADRAS
600 008

# ஞானபோதினி.

புத்தகம். III. } 1900ஹு ஜுன்மீ 20வ {நெ. 11.

## காங்கிரஸ் மகாசபை—V.

(176 - ம் பக்கத்தொடர்ச்சி).

மத்திய மாகாணங்களுக்கு இராஜதானியாகிய நாகபுரியில் 1891ஹு கூடின ஏழாவது காங்கிரஸில் செய்த அநேக தீர்மானங்களுள் * காட்டிடங்களைக் குறித்து ஏற்பட்டிருக்கும் சட்டங்களால் மனிதர்களும் ஆடுமாடுமுதலிய சாக பக்ஷணிகளாயுள்ள மிருகங்களும் படும் கஷ்டங்களைக் குறித்துச் செய்த தீர்மானம் ஒன்று. இந்தச் சட்டத்தால் வரும் கெடுதிகளைப் போக்கவேண்டும்நிமித்தம் எல்லா இராஜதானிகளிலும் முக்கியமாய்ச் சென்னை இராஜதானியிலும் கீழ் உத்தியோகஸ்தர்கள் இச்சட்டங்களை நிறைவேற்றும் விதத்தைக் குறித்து விசாரணை செய்தால் நலம் என்று இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்து, விசாரணை செய்தபின் ஏற்படும் குறைவுகளைக் களைந்தெறிந்து விட்டால் குடிகள் க்ஷேமமடைவார்கள் என்பது பற்றி இந்தியா கவர்ன்மெண்டாரைக் கேட்கவேண்டுமென்னும் இத்தீர்மானம் செய்யப்பட்டது. மகாகனம் பொருந்திய சென்னை கவர்னரும் † காட்டுச்சட்டத்தில் அதிக கவனம்வைத்து தான் பல இடங்களைப்போய் வருஷாந்தரம் பார்க்கும்போது பலவகைக்குடிகளும் தம்மிடம் இது விஷயத்தைக் குறித்து முறையிட்டுக்கொண்டதனாலும் கூடிய வரையில் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஜனங்களுக்குச் சமையல் செய்வதற்கும் மற்றக்காரியங்கட்கும் உபயோகமாகும் விறகும், வயல்களுக்கு எருவாய் உபயோகப் படவேண்டியதற்குரிய தழைகளும், ஆடுமா

* Forest Laws. † Forest Act.

டுகள் மேய்ச்சலுக்காகவேண்டும் புல், கொடி, தழை முதலியவைகளும் வேண்டுமளவு உபயோகப் படுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்துகொண்டுவருகிறார்கள். கவர்ன்மெண்டார் காட்டை வளர்த்துவிருத்திக்குக் கொண்டுவருவது குடிகளின் பொருட்டேயன்றி வேறல்ல. முற்காலத்தில் இயற்கையிலேயே தண்டகாரண்ணியமெனப் பெயர்பூண்ட ஆரண்ணியத்தைப் போல் அநேக வனங்களிருந்தன. இப்போதோ ஜனத்தொகை நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டு வருவதனால் ஜனங்கள் முன்னிருந்த காடு காம்புகளைத் திருத்தி அவற்றைப் பயிரிடுவதற்குத் தக்க நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். மழை அதிகமாய் பெய்து வந்ததற்கும் அடர்ந்த காடுகள் அநேகமிருந்ததும் முக்கியமான காரணங்களிலொன்று. மரங்களின் உபயோகத்திற்கு மாத்திரமேயன்றி ஈரத்தைப் போகவிடாது காக்கவேண்டியதற்கும் காடுகளை விருத்தி செய்யவேண்டியிருக்கிறது. காடுகளிருத்தல் மழை பெய்வித்தற்குரிய கருவிகளுளொன்றாயும் மழை பெய்தபின் நிலத்தீரத்தை நிலைபெறச் செய்வதற்குரிய கருவிகளுள் ஒன்றாயுமிருக்கிறது. ஆகவே காடுகளை பந்தோபஸ்து செய்து புல், கொடி, செடி, மரம், பெரிய விருக்ஷங்கள் இவைகளை விருத்தி செய்துக்கொண்டு வருதல் மிகவும்முக்கியமானகாரியம். குடிகளுக்கு மேற்கூறிய பிரதிபந்தங்களில்லாவிடின் அதிகபந்தோபஸ்த்து செய்தல் மிகவும் நலம். அதற்குத்தகுந்தபடி இராஜாங்கத்தார் சட்டங்களைத்திருத்தியும் புதுவிதிகள் ஏற்படுத்தியும் குடிகளுடைய நன்மையை மிகவும் கோருவார்களென நம்புகிறோம். இது விஷயத்தைக் குறித்துக் காங்கிரஸில் ஐந்துதரம் பிரஸ்தாபித்திருக்கிறார்கள்.

1895-வருஷத்தில் பூனாவில் கூடின பதினோராவது காங்கிரஸில் இந்தியாவின் * எல்லைகள் நீள்வதைக்குறித்து ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. † இந்திய கவர்ன்மென்டைக் குறித்த சட்டத்தின் 56 பிரிவில் வடமேற்கெல்லை வடகிழக்கெல்லை என்னும் இவைகளைக்குறித்து ‡ பாராளுமன்றால் அவற்றின் விஸ்தீரணம் இவ்வளவினதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைமீறி இந்தியாவிற்கு வடமேற்கிலும் வடகிழக்கிலும் ஆங்கிலேய அரசாக்ஷி

* Frontier question. † Section 56 of the Act relating to the Government of India.
‡ Parliament.



ஸ்தாபிக்கப்பட்டுக் கொண்டேவருகிறது. இதன்பொருட்டு நேரிடும் படையெடுப்பின் செலவுகள் யாவும் இந்தியா மாத்திரமேகொடுக்கவேண்டுமென்பது அன்றி இங்கிலாந்து தானும் தனக்குரிய பாகத்தைக் கொடுக்கவேண்டுமென்பதும், இல்லாவிட்டால் இந்தியா தாளாது என்பதும், எல்லைகளை விருத்திசெய்து கொண்டேபோவது கேட்டைத்தருமென்பதும் காங்கிரசாரின் அபிப்பிராயம். இது விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் பலவாறாயிருக்கின்றன: அஃதெப்படியாயினுஞ்சரி. அதிக செலவில்லாவிட்டால் பாதகமில்லை. * இதற்குத்தகுந்த ஏற்பாடுகளைக் கூடியசீக்கிரத்தில் நிறைவேறச் செய்வார்களென நம்புகிறோம்.

இந்தப் பதினோராவது காங்கிரஸிலேயே †பத்திரிகைகள் பிரசுரஞ் செய்வதைப்பற்றி ஏற்பட்ட இந்தியா கவர்ன்மெண்டாருடைய உத்திரவைக்குறித்து ஓர் தீர்மானஞ் செய்தார்கள். 1891௵ ஜூன்௴ 25௳ இந்தியா கவர்ன்மெண்டார் பத்திரிகைகளைக் குறித்து ஒரு நோடிசு வெளிப்படுத்தினார்கள். அதாவது பிரதிதினம், வாரத்திற் கொருமுறை, வாரத்திற்கு மூன்றுமுறை, மாதத்திற்கு ஒருமுறை, அல்லது இரண்டுமுறை பிரசுரஞ் செய்யப்படும் சமாசாரப்பத்திரிகைகள் கவர்ன்மெண்டாருடைய சில கஷ்டமான நிபந்தனைக் குட்படவேண்டுமென்பது. இந்த நோடிசு சுதேச ராஜாக்களுடைய நாடுகளில் ஆங்கிலேயர் தாமே அரசு செலுத்தும் பாகங்களிலுள்ள பத்திரிகைகள் பிரசுரஞ்செய்யும் அச்சாபீசுகளைக் குறித்து உண்டாக்கப்பட்டது. இவ்வாறு செய்தது நியாயமல்லவென்றும் இந்தநோடீசை இரத்து செய்யவேண்டுமென்பதுங் காங்கிரஸின்கோரிக்கை.

1888௵ வங்காள வடமேற்கு மாகாணங்களுக்கு இராஜதானியாகிய ‡ அலஹாபாத் என்னுமிடத்துக் கூடின நாலாவது காங்கிரஸில் உப்புவரியைக் குறித்து ஒரு தீர்மானஞ் செய்தார்கள். இதைக்குறித்து ஒன்பது தரம் காங்கிரஸில் பிரஸ்தாபஞ் செய்யப்பட்டுளது. அவ்வருடம் வரையில் மணங்கொன்றுக்கு வரி இரண்டு ரூபாய் போட்டுவந்தார்கள். அது முதற்கொண்டு மணங்கொன்றுக்கு இரண்டரை ரூபாயாக ஆக்கிவிட்டார்கள். இவ்

* Majority and minority report of the Royal Commiosion on the Indian expendture.
† Newspapers. ‡ Allahabad.

வரியோ மற்றவரிகளைப்போ லல்லாது ஏழைகளும் கொடுக்க வேண்டி வருவது. அஃதில்லாமல் போஜனம் செய்வது கூடாமையால் ஏழைகள் இது விஷயத்தைக் குறித்து வருத்தப்படுவ தியல்பே. இவர்களிற் சிலர் அன்ன பானாதிகளில் உப்பு வாங்கி உபயோகப் படுத்துவதற்குச் சக்தியில்லாமையினால் கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய விதிகளுக்கும் விரோதமாய் கழிகளிலிருக்கும் உப்பு நீரை உபயோகித்தும் வருகின்றார்கள். இது மிகவும் பரிதபிக்கத் தக்கது தான். இஃதெப்படியாயினும் கவர்ன்மெண்டார் உப்புவரியைக் குறைக்காததற்கு வரும்படி குறைந்து போகுமே யென்பது கவர்ன்மெண்டாருடைய காரணங்களுள் ஒன்றாயிருக்கலாம்.

இந்தியா அனேக * மாகாணங்களாகவும், † இராஜதானிகளாகவும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் கவர்னர், கம்மீஷனர் முதலிய பட்டம் பெற்றவர்களால் ஆளப்பட்டு வருகின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாயிருப்பதற்கு இந்தியா கவர்ன்மேண்டு என்று பெயர். அனேக விஷயங்களில் இதற்குட்பட்டு நடக்க வேண்டியவைதான் மற்றவைகள். இந்த கவர்ன்மெண்டின் தலைமையான அதிகாரிக்குத்தான் ‡ வைஸிராய் என்றும் கவர்னர் ஜெனரல் என்றும் பெயர். சைனியச்செலவு, இங்கிலாந்தில் இந்தியாவின் கவர்ன்மெண்டுக்காகச் செய்யும் செலவு, கவர்ன்மெண்டாரிட, கடனுக்கு வட்டி, இத்தகைய செலவுகள் தவிர மற்றெல்லா டிபார்ட்மெண்டு அதிகாரமும் மாகாண கவர்மெண்டாரும் செலுத்திக்கொண்டு வருகின்றார்கள். அதற்குரிய செலவுக்கு அவ்வவ் நாட்டில் வருகின்ற வரும்படியைக்கொண்டு செலுத்தும்படியாய் இந்திய கவர்ன்மெண்டார் விடவில்லை. செலவுக்குமாத்திரம் இடமுண்டேயன்றி அதற்கு வேண்டிய வரும்படிக்கு மாகாண கவர்ன்மெண்டார் இந்தியாகவர்ன் மெண்டாருடைய கையைத்தான் எதிர் பார்க்கவேண்டியிருக்கிறது. அவர்களே கிருபை கூர்ந்து, பற்பல மாகாணத்துக் கவர்ன்மெண்டாரை நோக்கி, உங்களிட தேசத்திலுற்பத்தியாகும் வரும்படியில் உங்களிடசெலவுக்காக இவ்வளவிவ்வளவு பாகம் தருகிறோம், அதைக் கொண்டு காரியத்தை நிறைவேற்றுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் ஒவ்வொரு மாகாணத்துக் கவர்ன்மெண்டாரும் ஏரிமராமத்து, ரோட்டுமராமத்து, நூதனரோட்டு

* Provinces, † Presidencies ‡ Viceroy.



கள் போட்டுவித்தல் முதலிய நாட்டு க்ஷேமங்களைக் குறித்த வேலைகள் செய்ய எண்ணமுடையவர்களா யிருந்தபோதிலும், செலவுக் கோரளவும் மொத்த வரவிலிருந்து மாகாணத்து கவர்ன் மெண்டுக்குக் கொடுப்பதற் கோரளவும் இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்படுத்தி விட்டிருக்கிறபடியால், மாகாணத்துக் கவர்ன்மெண்டார் மேலொன்றும் செய்வதற்கில்லை. இதன் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டாரும் மாகாணத்து கவர்ன்மெண்டார்களும் ஐந்து வருஷத்திற்கொருமுறை ஓருடன்படிக்கை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவ்வுடன்படிக்கை இன்னவெனவிரிவாய் கூறுவோம் எல்லோரும் தெரிந்துகொள்ளவிருப்ப முடையவர்களா யிருப்பார்களாகலின். * உடன்படிக்கையின் ஷரத்துக்கள் அநேகமாய் இந்தியா கவர்ன்மெண்டார் நினைத்தபடி ஏற்படுத்திக் கொண்டதே யன்றி வேறல்ல. சிலஷரத்துகள் நிர்பந்தமாயிருக்கும்போது அதைக்குறித்து மாகாண கவர்ன்மெண்டார் முறையிட்டுக்கொள்ளும் பக்ஷத்தில் ஒருக்கால் ஒருவாறு ஷரத்துக்களை மாற்றுகிறதுமுண்டு. இத்தகைய உடன் படிக்கைக்கு "புரோவின்ஷியல் காண்டிராக்ட்" என்று பெயர்.

† இந்தியா கவர்ன்மேண்டு ‡ மாகாணக்கவர்ன்மேண்டு என்று சொல்லப்பட்ட இருவகைக் கவர்ன்மெண்டாரும் இவ்வுடன்படிக்கைகளின் ஷரத்துபடிக்கு பிரதி மாகாணங்களின் வரும்படியில் சில பாபத்துக்களைப் பூராகவும் சிலவற்றில் ஓர் பாகமும் கைக்கொண்டு, செலவுகளிலும் தத்தமக் கேற்படும் பாகத்தைக் கொடுக்கின்றார்கள். ஒவ்வொரு மாகாணங்களைக் குறித்து ஈண்டு எடுத்துரைக்கின் விரியுமாகலின், நாமிருக்கும் இச்சென்னை இராஜதானியை மாத்திரம் இது விஷயத்தைக் குறித்து உற்று நோக்குவாம். இதற்கு வரும்படி அநேக மார்க்கங்களில் வருகின்றன. நிலவரி, நீர்வரி, § உப்புவரி, ஸ்டாம்பு, இன்கம்டாக்ஸ், கல்வி, கட்டடம், காடு இவையும் இவை போல்வன பிறவும் வரும்படிக்கு ஆதாரமானவைகள். இவைகளில் வரும் வரும்படி முழுதும் இந்த கவர்ன்மெண்டாருக்குச் சுதந்தரமில்லையென்று முன்னமே குறிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தியா கவர்ன்மெண்டார்

* Quinqennial Contract. † Government of India. ‡ Provincial or Local Government. § Salt—Cess.

கொடுத்ததைக்கொண்டுதான் இவர்கள் செலவுசெய்யவேண்டும். அவர்கள் கொடுக்கும் விதம் எத்தன்மைத்தெனப் பார்ப்போம். சென்னைகவர்ன்மெண்டாருக்கு இன்றி அமையாச் செலவு யாவெனப்பார்த்துக்கொண்டு அதன் பிறகு இவ்விடத்தில் வரக்கூடிய வரும்படியின் மார்க்கங்களின் ஓர்பாகம் அதாவது கால், அரை, முக்கால், இக்கவர்ன்மென்டாருக்கு விட்டுவிட்டுப் மற்ற பாகத்தைத் தாங்களெடுத்துக் கொள்ளுகிறார்கள். வரும்படி மார்க்கங்களிற் சிலவற்றை இவர்களுக்குப் பூராவும் கொடுத்து விடுகிறார்கள். இன்னுஞ்சிலவற்றைத் தாங்களே பூராவும் அநுபவிக்கிறார்கள். அப்படி இந்தியா கவர்ன்மெண்டார் தாங்களே யனுபவிப்பது உப்புவரும்படியும், அபீன், கஞ்சா, போஸ்டாபீசு, தந்தி ஆபீசு இவைகளிலிருந்து உற்பத்தி ஆகும் வரும்படியுமேதான். சென்னை கவர்ன்மெண்டார் அப்படித் தாங்களே அநுபவிப்பது லா, போலீசு, கல்வி, சென்னை கவர்ன்மெண்டு றெயில்வே என்னு மிவைகளிலிருந்தும் இன்னும் சிலவற்றி னின்றும் வரும் வரும்படிதான். இவற்றை விவரமாக இனி எடுத்துக் காட்டுவோம். ஐந்து வருஷத்திற் கொருமுறைச் செய்யும் உடன்படிக்கை 1896—97-ளு முடிந்து, 1897-8-ம் வருஷம் முதல் இன்னமொரு அத்தகைய உடன்படிக்கை நடவடிக்கைக்கு வந்துகொண்டிருக்கிறது. மேலே கூறப்பட்டுள்ளவைகளை நன்கு அறியும் பொருட்டு கான்டிராக்ட்டின் முதல் வருஷமாகிய அவ்வருஷத்து வரும்படியையும் செலவையுங் குறித்து சற்று ஆராய்ச்சிசெய்வோம்.

1897—98-ம்ளுத்தில் பல்வகையிலும் மொத்த வரவு சுமார் 936¾ இலக்ஷரூபாய். மொத்தச்செலவு சுமார் 369-இலக்ஷரூபாய். போக பாக்கி ரூபா 567-இலக்ஷம். இதற்கு விவரம் :—இக்கவர்ன் வரவுகளின் விவரம்.

| | மொத்தவரவு. ரூபா (இலக்ஷம்) | பாகம் | மெண்டுக்கு வரவு. (இலக்ஷம்) |
|---|---|---|---|
| 1. நிலவரி மொத்தம் ... | 603·68 | ¼ | 150·92 |
| 2. ஸ்டாம்பு ... | 86·00 | ¾ | 63·15 |
| 3. எக்ஸைஸ் ... | 146·20 | ¼ | 36·55 |
| 4. இன்கம்டாக்ஸ் ... | 24·74 | ½ | 12·37 |
| 5. காட்டுவரும்படி ... | 21·36 | ½ | 10·68 |
| 6. ரிஜிஸ்டிரேஷன் ... | 15·30 | ½ | 7·65 |



| வரவின் விவரம். | மொத்தவரவு ரூபா (இலக்ஷம்) | பாகம். | இக்கவர்ன் மெண்டுக்கு வரவு. |
|---|---|---|---|
| 7. வட்டி வரவு ... | 3·46 | ½ | 1·73 |
| 8. உப்பு ஸெஸ் வகையரு ... | ·77 | 1 | ·77 |
| 9. கஸ்டம்ஸ் ... | ·70 | 1 | ·70 |
| ஆகமொத்தம் ... | 902·21 | | 284·52 |
| சிலபாபத்தில் கழிவு— | ·63 | | கழிவு— ·63 |
| போக ... | 901·58 | | போக ... 283·89 |
| **ஸிவில் டிபார்ட்மெண்டு.** | | | |
| 10. லா, ஜஸ்டிஸ் | | | |
| (A) ஸிவில்கோர்ட்டுகள் ... | 8·04 | 1 | 8·04 |
| (B) ஜெயில்கள் ... | 4·50 | 1 | 4·50 |
| 11. போலீஸ் வகையரு ... | 4·38 | 1 | 4·38 |
| 12. கல்வி ... | 1·79 | 1 | 1·79 |
| 13. வைத்தியம் ... | 1·28 | 1 | 1·28 |
| 14. சாஸ்திரீகத்தொழில் ... | 2·28 | 1 | 2·28 |
| ஆகமொத்தம் ... | 22·27 | | 22·27 |
| **ஒழிபு.** | | | |
| 15. பென்ஷன் ... | ·53 | 1 | ·53 |
| 16. அச்சாபீசு ... | 1·13 | 1 | 1·13 |
| 17. பேபர்வகையரு ... | 2·03 | 1 | 2·03 |
| ஆகமொத்தம் | 3·69 | | 3·69 |
| **றெயில்வேக்கள்.** | | | |
| 18. கவர்ன்மெண்டு றயில்வே | 2·58 | 1 | 2·58 |
| **மராமத்து.** | | | |
| 19. ஏரி கால்வா | 1·83 | 1 | 1·83 |

| வரவின் விவரம். | மொத்தவரவு ரூபா (இலக்ஷம்) | பாகம். | சென்னை கவர்ன்மெண்டுக்குவரவு. |
|---|---|---|---|
| 20. கட்டடம் ரோட்டு | 1·92 | 1 | 1·92 |
| 21. லோகல்பண்டு பகுதி ... | 2·97 | 1 | 2·97 |
| ஆகமொத்த வரவு... | 936·84 | | 319·15 |
| 1896—1897 வருஷத்திய கையிருப்பு... | | | 22·95 |
| ஆக வரவு மொத்தம்... | | | 342·10 |

இக்கவர்ன்மென்டாருக்கு நேரிடும் செலவுகளிலும் இந்தியா கவர்ன்மென்டாரும் சில பாபத்தில் தாங்களும் செலவுகளில் ஓர் பாகம் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். செலவாகிற மார்க்கங்கள் இன்னதெனவும் இவ்வளவினதெனவும் ஆராய்ந்துபார்ப்போம்.

| செலவுகளின் விவரம். | மொத்தம். ரூபா (இலக்ஷம்.) | பாகம். | சென்னை கவர்ன்மெண்டின்பாகம். ரூபா (இலக்ஷம்) |
|---|---|---|---|
| 1. திரும்பவும் கொடுக்கவேண்டுவன. | 1·32 | 1 | 1·32 |
| 3. நிலவரும்படிவசூல் | 54·61 | 1 | 54·61 |
| 5. உப்புவரும்படியைக்குறித்து | 15·76 | ¼ | 3·94 |
| 6. ஸ்டாம்பு | 3·44 | ¾ | 2·57 |
| 7. எக்ஸைஸ் | 9·92 | ¼ | 2·48 |
| 9. கஸ்டம்ஸ் | 2·35 | 1 | 2·35 |
| 10. இன்கம்டாக்ஸ் | ·28 | ½ | ·14 |
| 11. காடுகாவல் | 15·74 | ½ | 7·87 |
| 12. ரிஜிஸ்டிரேஷன் | 8·30 | ½ | 4·15 |
| | 111·72 | | 79·43 |
| 13. வட்டிச்செலவு | 3·72 | ½ | 1·86 |
| 15. தபாலாபீசு | 1·08 | 1 | 1·08 |



| ஸிவில்டிபார்ட்மென்டு சம்பளம் வகையரு | மொத்தச் செலவு. ரூபா (இலக்ஷம்) | பாகம். | சென்னை கவர்ன்மென்டார் செலவு ரூபா (இலக்ஷம்). |
|---|---|---|---|
| 18. பொதுவிசாரணை (கவர்னர் முதலானவர்கள்) | 10·07 | 1 | 10·07 |
| 19. லா, ஜஸ்டிஸ். | | | |
| A. லா கோர்ட்டுகள் | 46·25 | 1 | 46·25 |
| B. ஜெயில்கள் | 11·58 | 1 | 11·58 |
| 20. போலீசு வகையரு | 46·62 | 1 | 46·62 |
| 21. ரேவு (Marine) | ·08 | 1 | ·08 |
| 22. கல்வி | 17·47 | 1 | 17·47 |
| 24. வைத்தியம் (Medical) | 13·05 | 1 | 13·05 |
| 25. பொலிடிகல் | ·85 | 1 | ·85 |
| 26. சாஸ்திரீகம் | 4·28 | 1 | 4·28 |
| ஆ | 150·25 | | 150·25 |
| ஒழிபு. | | | |
| 29. பென்ஷன் வகையரு | 15·90 | 1 | 15·90 |
| 30. ஸ்டேஷனெரி, அச்சாபீசு | 10·37 | 1 | 10·37 |
| 32. சில்லரைச்செலவு | 1·72 | 1 | 1·72 |
| ஆ | 27·99 | | 27·99 |
| 33. பஞ்சம் | 15.97 | 1 | 15·97 |
| 37. றெயில்வேபோடுதல் | ·28 | 1 | ·28 |
| 38. கவர்ன்மென்டு றயில்வே | 1·50 | 1 | 1·50 |
| 43. மராமத்து | 32·38 | 1 | 32·38 |
| 45. கட்டடம்வகையருக்கள் | 21·23 | 1 | 21·23 |
| 46. லோகல்பண்டுக்கு | 2·95 | 1 | 2·95 |
| ஆகமொத்தம்... | 369·07 | | 334·92 |
| கையிருப்பு உள்பட சென்னை கவர்ன்மெண்டுக்குச்செலவினிமித்தம் வரவு | | | ...342·10 |
| ஆகவே 1897-98வருஷத்திறுதியில் கையிருப்பு. | | | 7·18 |

மூன் கையிருப்பில்லா விடில் வரவைப் பார்க்கிலும் செலவு மிகுந்து விடும். எப்படி எனின் இந்தியா கவர்ன்மெண்டார் கொடுத்து இக்கவர்ன்மெண்டுக்கு வந்த வரவு ரூபாயோ 319·15 லக்ஷம். செலவான ரூபாயோ 334·92 லக்ஷம். ஆகவே வரவைப் பார்க்கிலும் 15·77லக்ஷம் செலவு அதிகம். மேற் குறிப்பிட்டிருக்கும் எண்களை ஆராயின், சென்னையில் மொத்த வரும்படி ரூபாய் 936·84-லக்ஷ மெனவும், அதில் சென்னை கவர்ன்மெண்டார் பெறுவது 319·15-லக்ஷம் எனவும், இந்தியா கவர்ன்மெண்டார் கைக்கொள்வது சுமார் 617·69-லக்ஷம் எனவும், வருஷாந்தர மொத்தச் செலவு ரூபா 369·07-லக்ஷம் எனவும், சென்னைகவர்ன்மெண்டார் செலவழிப்பது 334·92-லக்ஷ மெனவும், ஆகவே மொத்தசெலவில் இந்தியா கவர்ன்மெண்டார் கொடுக்கும் ரூபா 34·15-லக்ஷ மெனவும், இந்தியா கவர்ன்மெண்டார் கைக் கொள்ளும் வரவு 617·69-லக்ஷத்தில் இச்செலவும் போய்விட்டால், இந்தியா கவர்ன்மெண்டார் நிகரமாய் கைக்கொள்வது 583·54 - லக்ஷ மெனவும் தெரியவருகின்றது. இஃதன்றியும் உப்புவரும்படி முதலிய சிலவற்றிற்கு இந்த கவர்ன்மெண்டாருக்கு யாதொரு சுதந்தரமே கிடையாது. மேலும் மேற்குறித்த 22·95-லக்ஷம் கையிருப்பு இல்லாவிடில் 1897-8-௵த்திய செலவுக்கு கஷ்டப்பட வேண்டியதாயிருக்குமே. வரவு அதிகமாயிருந்தால் ஏரி, குளம், கால்வாய், ரோட்டு வகையறுக்களைக் கவனித்து லோகல் கவர்ன்மெண்டார் விருத்தி செய்யலாமே என்னும் எண்ணங் கொண்டு காங்கிரஸில் இதைக்குறித்து ஒரு நிர்மானஞ் செய்தார்கள். மேற்குறித்த ஐந்து வருஷத்திய உடன்படிக்கை மறுபடியும் புதுப்பிக்கும் போது ஷரத்துகளைத் தகுதியுடையன வாக்கி அதிக வருமானத்திற்கு இடஞ் செய்து கொண்டு இவ்விராஜதானிக்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்யவேணு மென்பதுதான் காங்கிரஸின் கோரிக்கை. இராஜாங்கத்தாரும் இதற்குரியன யாவற்றும் செய்வார்களென நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள சுமார் 30-கோடி (30,00,00,000) ஜனங்களில் வருஷப் பிரதி வருஷம் ஜீவனத்திற்கு ஆதாரம் சிறிதேனுமில்லாமல் பசிப்பிணியால் பீடிக்கப்பட்டு உழல்பவர்கள் ஐந்து கோடிஜனங்கள். இவர்களின் தொகை வருஷந்தோறும் அதிகப்பட்டுக் கொண்டே வருகின்றது. இவர்கள் பசியினால் வருந்தாவண்ணம் ஜீவனத்திற்குரிய மார்க்கம் யாதாமொன்று தேடவேண்டுமே. இதைக் குறித்து கவர்ன்மெண்டார் அதிகமாய்க் கவனித்தல் வேண்டு மென்பது 1894௵ சென்னையில்கூடின பத்தாவதுகாங்கிரஸின்மூன்றாவது தீர்மானம். இப்படிப் பசியால்வருந்துவதற்கு ஜனங்கள் தாமும் காரணராகின்றார்கள். இந்தியா முழுதும் இருக்கும் பயிரிடக்கூடிய நிலங்கள் எல்லா ஜனங்களுக்கும் போதுமானதாக விருக்கின்றது. இதைப்பகிர்ந்து பார்க்கின் ஆளொன்றுக்கு சராசரி சுமார் இரண்டு ஏக்கர் வீதம் வருமென்று * ஸ்ரீ வில்லியம் ஹண்டர் துரையவர்கள் முதலாயினோர் கணக்கிட்டிருக்கிறார்கள். தற்கால நிலைமையில் † இந்தியாவின் சிலபாகத்தில் பயிரிடுவதற்குப் போதுமானமனிதர்களில்லாமலும்மற்றும்சிலபாகத்தில்நிலம் தன் விளைபொருளால் போஷிக்கக் கூடிய அளவுக்கு அதிகமாகவும் ஜனங்கள் நெருங்கியிருக்கிறார்கள். இந்நாட்டார்க்குச்சாதாரணமாய்ச்சீவனத்தின் பொருட்டாயினும், வேறுவிநோதத்தின் பொருட்டாயினும் தாங்கள் பசியால்வருந்தியபோதிலும்தன்னூரைவிட்டுப் போவதில் விருப்பமில்லை, பசியால் மரணமடையினும் தன்னூரிலேயேசாதல் வேண்டுமென்னும் வழக்கத்துணிபையுடையவர்கள். மற்றநாட்டாரோ இப்படிக்கில்லை. "பிரிட்டிஷ் ஜயில்ஸ்" என்று சொல்லப்படும் இங்கிலாந்து, ஸ்காட்லண்டு, ஐயர்லண்டு என்னு மூந்நாட்டிலும் உற்பத்தியாகிற ஜனங்கள் தந்நாட்டை விட்டு போகேமென்றிருப்பாராகில் தங்களுக்கும் நன்மையின்றி பிறர்க்கும் சவுக்கியமின்றி பசியால் வருந்தி மேற்கூறப்பட்ட இந்நாட்டு ஜனங்களைப் போல் உழலவேண்டுமேயன்றி வேறில்லை. இங்கும் நாகரிகமும் மேனாட்டுப் பழக்கங்களும் விரவுவதினால் இப்போது ஜனங்களில் சிலர் தம்மூரை விட்டு அன்னபானாதிகள் அகப்படும் வேற்றூர்கட்குச் சென்று அவ்விடத்துக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து ஜீவித்து வரத் தொடங்கிவிட்டார்கள். பசியினால் வருந்த வேண்டி வரும் இக்காரணமேயன்றி மற்றுமுள்ள காரணங்களைக் கவர்ன்மென்டார் தீர்க்க விசாரணைசெய்து இதனால் வரும் கஷ்டநஷ்டங்களை நிவர்த்தி செய்து விடுவார்களென்று நம்புகிறோம். காங்கிரஸாரின் எண்ணம் அதுவாகவே யிருக்கலாம்.

* Sir William Wilson Hunter. † See Page 30 Hunter's History of the India People.

நீர்வரியைக் குறித்தும் 1894ஆ௵ சென்னையில் கூடிய பத்தாவது காங்கிரஸில ஓர் தீர்மானஞ் செய்தார்கள். அவ்வரி விதித்தற் கேற்பட்டிருக்கும விதிகள் சிறந்தன அல்ல வென்றும் அதிக நியாயமுள்ளவற்றைச் செய்தலே நலமென்பதுந்தான் மேற்படி தீர்மானத்தின் அபிப்பிராயம். மாகாணத்திய கவர்ன்மெண்டார்களும் தத்தமக்கோர் *நீர்வரிச்சட்டம் ஏற்படுத்திக் கொண்டார்கள். கவர்ன்மெண்டார் தங்கள் வரும்படிக்கும் பழுதுவராமலும் குடிகளுடைய சவுக்கியத்திற்குக் குறைவு வராமலும் காப்பார்களென்றெண்ணுகிறோம்.

இதுவரையில் காங்கிரஸ் கூடிய பல வருஷங்களிலும், பலவிடங்களிலும், ஆப்காரி, விவசாயம், பருத்திநூல்வரி, கல்வி, போட்டிப்பரிக்ஷை, மாகாணக் கவர்னருடைய ஆலோசனை சபை, பஞ்சத்து நடவடிக்கை, காடுகாவலினால் வரும் நயநஷ்டம், இந்தியாவின் எல்லைகள், இன்கம்டாக்ஸ் (வரும்படி வரி), நியாயஸ்தானம், ஜூரிகள், நிலவிஷயங்கள், † சட்டச் சீர்திருத்தஞ் செய்யும் சபை, மெடிகல் ஸர்விஸ், ‡ ராணுவம், போலீசு, சமாசாரம் பிரசுரிக்கும் ¶ அச்சாபீசுகள், இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்மெண்டாரோடு செய்யும் ஐந்து வருஷத்திய § உடன்படிக்கை, இந்தியா வரவு செலவுகளைக் குறித்த இராயல்கமிஷன், உப்புவரி, இந்தியா செக்ரடரியின் ஆலோசனைசபை, சர்வகலாசாலை, நீர்வரி, இவையும் இன்னுமிவைபோல்வன பிறவற்றையுங்குறித்தும் பேசியிருக்கிறார்கள். இவற்றில் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து எடுத்துக்கொண்ட அபிப்பிராயங்களின்னவெனவும், யாதோ காரணங்கண்டு கவனிக்காவிட்டன இன்னவெனவும், சில தீர்மானங்களில் இஷ்டமுள்ளனவாய் கவர்ன்மெண்டாரால் எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருவன இன்ன தீர்மானத்தின் இன்னபாகமெனவும் முன்னம் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. முழுதும் படித்துப் பார்க்க நன்கு விளங்கும். இராஜாங்கத்தில் நடந்து வரும் ஏற்பாடுகளின் நிறைவு குறைவுகளை எடுத்தோதலினாலும், தங்களுடைய அபிப்பிராயங்களினால் ஜனாபிப்பிராயமின்னதெனவும் இராஜாங்கத்தார் தெரிந்து ஜனங்கள் நன்மையை நாடி காரியங்கள் செய்து

* Madras Irrigation Cess Act VII of 1865 † Legislative Council ‡ Army ¶ Press § Quinquennial Provincial Contracts.



வருவது அநுகூலமாதலால் காங்கிரஸிருப்பது கவர்ன்மெண்டாருக்கு ஓர் பேருதவியேயன்றி வேறில்லை. காங்கிரஸிலுள்ளவர்களும் தங்களை நாடிய ஜனங்களுக்கு எவ்வாறு நன்மை புரியவேண்டுமோ அவ்வாறு செய்து கொண்டு வருவார்களென நம்புகிறோம்.

கல்குளம். குப்புசாமி முதலியார்.

---

## முத்திரா ராட்சசம்.

### அங்கம் I: இரண்டாங்களம் :—

நிபுணகனென்னு மோரொற்றன் யமபடத்தைக் கையிலேந்திக்கொண்டு வருகின்றான்.

**ஒற்றன் :**—(பாடுகிறான்.)

மற்றைய தேவர்தம் பத்த மாந்தரைச்
செற்றனு ருயிர்கொடு செல்லு கின்றதான்
மற்றைய தேவரை வணங்கு வானென்வன்
பற்றியான் காலனைப் பணிகின் றேனரோ. (17)

துன்ப மெய்தினுந் தொல்சம ணர்கழன்
மன்ப ணிந்தவர் வாழ்க்கைக ணல்லவாங்
கொன்ப டைக்கலங் கொண்டுகொல் வானவன்
றன்ப தத்துணை தம்மைவ ழுத்துவேன். (18)

ஆகையால் யானிவ்வீட்டிற்குட் புகுந்து யமபடத்தைக் காட்டிப் பாடுகின்றேன்.

[சாணக்கியனது வீட்டினுட் செல்லுகின்றான்.]

**மாணவன் :**—(அவனைநோக்கி) நண்ப ! உட்செல்லாதே.

**ஒற்றன் :**—ஏ ! பார்ப்பான் ! யார் வீடிது ?

**மாணவன் :**—மிகச் சிறந்தபெயர் வாய்ந்த என்றன் ஆசிரியர் வீடிது.

**ஒற்றன் :**—(சிரித்துக்கொண்டு) இஃதென்றன் அறத்துணைவன் வீடாமாதலி னென்னைப் புக விடுவாயோ ? உன்றனுவாத்தியானுக்குத் தன்மோபதேசஞ் செய்கிறேன்.

**மாணவன் :**—(வெகுண்டு) சீ! அறிவிலி! என்றனாசிரியனினும்மேயறநூலி னற வல்லை கொலோ ?

**ஒற்றன் :**—ஏ ! பார்ப்பான் ! கோபித்துக் கொள்ளாதே ! யாவரும் யாவற்றினும் வல்லவராகார். ஆகவே உன் உவாத்தியானுக் கேதோ

கொஞ்சந் தெரியும். அதுபோலவே என்போலியரும் கொஞ்சந்தானறிவார்கள்.

**மாணவன் :**—(மிகவெகுண்டு) வடா! மூர்க்கா! முற்றுமுணர்ந்த வென்னாசிரியரிடத்தி னின்றுங் (கல்வியைக்) கவர்ந்துகொள்ளவோ விரும்புகின்றனை?

**ஒற்றன் :**—ஏ! பார்ப்பான்! உன்ற னுவாத்தியானுக்கெல்லாந் தெரியுமென்கிறாயே! சந்திரனை வெறுப்பவன் யாவனென்று தெரியுமா?

**மாணவன் :**—வடா! மூர்க்கா! இதனை யறிவதனா லென்றன் குரவர்க்கு யாதுபயன்?

**ஒற்றன் :**—ஏ! பார்ப்பான்! உன்ற னுவாத்தியான் அறியவேண்டுவதனையறியான். கமலீஞ் சந்திரனை வெறுக்கின்றதென்பதை மாத்திர முணர்வாய். இதோ பார்!—(பாடுகின்றான்.)

செவிய பங்கயஞ் சீரிதே
சவிய சந்திரன் றன்வர
லவிய வுட்களிப் பன்றியே
குவியு மாறுளங் கோடியால். (19)

(சாணக்கியன் கரந்துவருகின்றான்.)

**சாணக்கியன் :**—(கேட்டுத் தனக்குள்) நன்று! சந்திரகுத்தனுக்கு விரோதிகளை யிவன் மூலமா யறிவேன்.

**மாணவன் :**—ஏ! மூர்க்கா! என்னை யொன்று கிடக்க வொன்று பேசுகின்றனை?

**ஒற்றன் :**—ஏ! பார்ப்பான்! இது சமயத்துக் கேற்றதுதான். ஆனால் -

**மாணவன் :**—என்ன?

**ஒற்றன் :**—என் பேச்சைக் கேட்பவர் அதனைத் தாமே யறிந்துகொள்ளவேண்டும்.

**சாணக்கியன் :**—(வெளியாய்) நண்பா! தடையின்றி யுள்ளேவருதி! உன் பேச்சைக் கேட்டறிபவனைப் பெறுவாய்.

**ஒற்றன் :**—நான் உள்ளே போகின்றேன் (உள்ளேபோயணுகி) வெல்க வெல்க!! ஆரியா!

**சாணக்கியன் :**—(தனக்குள்) நிபுணகன் இன்ன காரியத்தின் பொருட்டு அனுப்பப்பட்டனனென்று யானறிகிலேன்—(மௌனம்) ஓ! உணர்ந்தேன்! உணர்ந்தேன்!! சனங்களது கருத்தையும் நோக்கத்தையும் அறியுமாறு அனுப்பப்பட்டான் நிபுணகன்! (வெளியாய்) நண்பா! மிகவும் நன்று! இப்படியிருப்பாய்.



**ஒற்றன் :**—எசாரன்க ளுத்தரவுப்படி.

(தரைமீதிருக்கின்றான்.)

**சாணக்கியன் :**—நண்பா! உன்னையனுப்பிய தெதன்பொருட்டோ அதனைக் கூறுக. பிரசைகள் விடலற்ற விரோதிகளா?

**ஒற்றன் :**—நன்று. நமதையன் சந்திரகுப்தனாற் றமது சோகநீங்கியசனங்கள் அவன் மாட்டுறுதிய மன்புமுடைய ராயினர். ஆயினும் அமைச்சனாய இராட்சசனை யடுத்தார் மூவர் இந்நகரின்கணுளர். அவர் நந்தஞ் சந்திரகுப்தன் அரசாளல் பொறார்.

**சாணக்கியன் :**—(வெகுண்டு) தாம்வாழல் சகியாரென்று சொல்லுதி—நண்ப! - அவர்கள் யாவர்?

**ஒற்றன் :**—அவர்தம்பெயர்க ளின்னவென் றுணர்கிலாது தங்கள்பாலிதனை யான்சொல்லவும் வருவலோ?

**சாணக்கியன் :**—அவர்தம் பெயர்களை யறிய விரும்புகின்றேன்.

**ஒற்றன் :**—ஐய! இதனைக் கேள். முதலாவன் ஒரு சமணன்; நடுவுநிலைமை குன்றுது அவர்களைச் சேர்ந்துளான்.

**சாணக்கியன் :**—(தனக்குள்) நந்தம் பகைஞன்பா லன்புடைய சமணன்! (வெளியாய்) அன்னான்பெயரென்னைகொல்?

**ஒற்றன் :**—அவன் பெயர் 'ஜீவசித்தி'.

**சாணக்கியன் :**—அன்னான் நந்தம்பகைஞர் பாலனென் றெங்ஙன முணர்ந்தனை?

**ஒற்றன் :**—அமைச்சன் ராட்சசனா லனுப்பப்பட்ட விஷகன்னிகையை (கடுமகளைக்) கொண்டு பர்வதேசுரராசனை யவன் கொன்றமையாலுணர்ந்தேன்.

**சாணக்கியன் :**—(தனக்குள்) ஜீவசித்தி யென்ற வொற்றனன்றே! (வெளியாய்) நண்ப! இரண்டாவன் யாவன்?

**ஒற்றன் :**—மற்று, அவன் அமைச்சன் ராட்சசனுக்கும் மிகப் பிரியமுள்ளவனும், காயஸ்தனுமாய 'சகடதாஸன்' என்போன்.

**சாணக்கியன் :**—(தனக்குள் நகைத்து) காயஸ்தன்!—ஓரிலகுமாத்திரை. பகைவனாயினும் அவ்வாறு சொல்வது தக்கதன்று. அவன்பால் நமது நண்பன் சித்தார்த்தகனை நியமித்திருக்கின்றேன் (வெளியாய்) நண்ப! மூன்றாவனின்னனென்றறிய விரும்புகிறேன்.

**ஒற்றன் :**—(நகைத்து) மூன்றாவனோவெனின் அவன் அமைச்ச ராட்சசனுக்கிரண்டாவதுடய மாவான், புட்புரத்துறைவோன், வணிகர்தந்தலை

வன்; சந்தனதாஸப் பெயரினன். இராட்சசன் நகரைவிட்டோடும்போது அவனது வீட்டின்கண்ணேயே தன் மனைவிமுதலாயினுரை விட்டுவிட்டுப் போயினுன்.

**சாணக்கியன் :**—(தனக்குள்) இவனிராட்சசனுக்கு ஆன்மநேயனல்லனேல் அவனிவன்பாற் றன்மனைவியை விடுத்துப்போகான். (வெளியாய்) சந்தனதாஸன் வீட்டிலே யிராட்சசன் றன் மனைவியை விட்டுப் போயினுனென்று யெப்படியறிந்தனை?

**ஒற்றன் :**—ஐயா! இம்முத்திரை மோதிரத்தினுலேயே யானறிந்தேன். (மோதிரத்தைக் கொடுக்கின்றுன்.)

**சாணக்கியன் :**—(முத்திரை மோதிரத்தை வாங்கிப்பார்த்து வாசிக்கின்றுன்) இராட்சசன்.—(தனக்குள் நகைத்து) இனி யிம்மோதிரத்தினுலே யிராட்சசனைப் பிடித்துக்கொண்டேன். (வெளியாய்) நண்ப! நீ யெவ்வாறிதனை யடைந்தனை? அதனைச் சாங்கோபாங்கமாய்க் கேட்க விரும்புகின்றேன்.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

---

# ஹிரண்மயி.

## ஆறும் அத்தியாயம்.

அப்புறம் ஒருநாள் புன்சிரிப்புதவழும் முகத்துடன் ஹிரண்மயியை அணுகி, 'என்னடி' இப்படிப்பட்ட குணமுள்ளவளா நீ! நீ இப்படிப்பட்ட காரியம் செய்யத்தகுந்தவளா! என்று மிருதுவாய்க் கண்டித்தாள்.

**ஹிரண்மயி**—என்ன செய்தேன்?

**அமலே**—இத்தனை தினங்களாயும் என்னுடன் சொல்லவேண்டாமா?

**ஹிரண்மயி**—நான் என்ன சொல்லவில்லை?

**அமலே**—புரந்தரசெட்டிக்கும் உனக்கும் இவ்வளவு சினேகமா?

**ஹிரண்மயி**—சிறிது வெட்கினவளாய், 'நாங்களிருவரும் சிறுபிராயமாயிருந்தபொழுது, அவன் எங்கள் பக்கத்துவீட்டில் இருந்தான். அதைச் சொல்லமாட்டேனு என்ன'?

**அமலே**—வெறும் பக்கத்துவீட்டுக்காரனுக மாத்திரம் இருந்தானுபார், என்னகொண்டுவர்திருக்கின்றேன்! இப்புடிச்சொல்லிவிட்டு, அமலே ஒரு பெட்டியை யெடுத்து அதினின்று மிகவும் அபூர்வமும் மகாப் பிரகாசமும் அதிகமான மதிப்பேறப்பெற்றதுமான ஓர் வஜ்ரஹாரத்தை ஹிரண்மயிக்குக் காண்பித்தனள், செட்டியின் மகளுக்கு வஜ்



ரங்களின் விலை நன்முய்த்தெரியு மாகையால் அதைப்பார்த்து விம்மிதமுற்று "இது மிகவும் விலையுயர்ந்தது, எங்கிருந்து கொணர்ந்தாய்" என்றுள்.

**அமலே**—இதனைப்புரந்தரன் உனக்கனுப்பினுன் நீ என் வீட்டிலிருப்பதைக் கேள்விப்பட்டு என்னைக் கூப்பிட்டு இதனை யுனக்குக் கொடுக்கும்படி சொல்லிக்கொடுத்தான்.

**ஹிரண்மயி**—அப்படியேபார்த்து, "இதனை வாங்கிக்கொள்ளும் பட்சத்தில் என்னுடைய வறுமை நீங்கிப்போகு"மென்று யோசித்தனள். தனதாஸனுடைய ஆதரவினுல் பிறந்தபெண், அன்னவஸ்திரங்களுக்குக்கஷ்டப்பட்டு, அந்தக்கஷ்டம் நிவாரணமாவதற்கு அவகாசம் உண்டாகியும், ஒரு நிமிஷநேரம் மனக்கவலையுற்று, பிறகு பெருமூச்சுவிட்டு, 'அமலா, இதை வாங்கிக்கொள்வதற்கு எனக்கிஷ்டமில்லையென்று அவ்வர்த்தகரிடம் சொல்' என்றுள்.

**அமலே**—(ஆச்சரியமடைந்து), 'உனக்கென்ன பைத்தியமா? இல்லாவிடில் நான்சொல்லும் பேச்சில் நம்பகம் இல்லையா? என்றனள்.

**ஹிரண்மயி**—நீ சொல்வதை நம்புகின்றேன். பைத்தியக்காரியல்லேன்; நான் அதை வாங்கிக்கொள்வதில்லை.

அமலே மிகவும் வருத்தமடைந்தாள் ஆயினும் ஹிரண்மயி அதை வாங்கினுளில்லை. அதன் பேரில் அமலே ஹாரத்தை எடுத்துக்கொண்டு அரசனுகிய மதனதேவனிடம் சென்று நமஸ்கரித்து அவனுக்குக் காணிக்கையாக அளித்துத் 'தாங்கள் இதைத் தயைசெய்து கிரகிக்கவேண்டும் இது தங்களுக்கு யோக்கியமானது' என்று விண்ணப்பம் பண்ணினுள். அரசன் ஹாரத்தை அங்கீகரித்து அமலேக்கு எதேஷ்டமாய் பொருள்கொடுத்தான். ஹிரண்மயிக்கு இஃதொன்றும் தெரியாது.

இன்னுஞ்சில நாட்கள் சென்ற பின்னர், புரந்தரனது பரிசாரிகைகளில் ஒருத்தி ஹிரண்மயிபாற் போந்து,'நீங்கள் கூரைக் குடிசையில் வசிப்பதைக் கேட்டு எங்கள் பிரபு மிகவும் வருத்தப்படுகின்றுர். தாங்கள் அவரது இளமைத்தோழி. அவர் இல்லமே தங்கள் இல்லமாயிருக்கின்றது. ஆயினும் தாங்கள் அங்கே வந்து இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அவர் தங்கள் பிதாவின் வீட்டை கடனகாரர்களிடத்திலிருந்து கிரயத்திற்கு வாங்கியிருக்கிறுர். அதை உங்களுக்குத் தானமாய்க் கொடுத்திருக்கிறுர். ஆகையால தாங்கள் அங்கே போய் வசிக்கும்படி பிரார்த்திப்பதாய்த் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லியனுப்பினுர்' என்றுள். ஹிரண்மயிக்கு வறுமைத் துன்பத்தைக் காட்டிலும் தகப்பனுர் வீட்டை விட்டு வந்தது அதிக துக்கமாயிருந்தது. எவ்விடத்தில் பாலியத்தில் விளையாடிக்

கொண்டிருந்தாளோ, எவ்விடத்தில் தாய் தந்தைகளுடன் கூடியிருந்தாளோ, எவ்விடத்தில் அவள் தாய்தந்தையர்கள் தேக வியோக மடைந்தனர்களோ, அவ்விடத்தில் மறுபடியும் இந்த நிலைமையில் போய் வாசம் செய்வது மிகவும் கஷ்டமாய்த் தோன்றியது. அந்த வீட்டின் சங்கதியைச் சொல்லும் பொழுதே, அவள் கண்களில் நீர் ததும்பி தாரைதாரையாகப் பெருகியது. அவள் பரிசாரிகைக்கு ஆசிகூறி இத்தானத்தை நான் கிரகிப்பது உசிதமன்று. ஆயினும் ஆசையை யடக்கமுடியவில்லை. உங்கள் பிரபு அவர்களுக்கு சகலவித மங்களங்களும் அபிவிர்த்தியாமாறு நான் பிரார்த்திக்தேனென்று போய்ச்சொல்லு' என்றாள்.

பரிசாரிகை வணங்கி உத்திரவு பெற்றுக்கொண்டு போய் விட்டாள். அங்கேயே அமலையும் உட்கார்ந்திருந்தாள். ஹிரண்மயி அவளை நோக்கி, 'அமலா, நான் ஒருத்தியாக அங்கேபோய் வசிக்கமாட்டேன். நீயும் அங்கே வந்து கூட இருக்கவேண்டும் என்றாள்.

அதற்கு அமலை யொப்புக்கொள்ளவே, இருவரும் போய், தனதாஸன் வீட்டில் வாசம் செய்துகொண்டிருந்தார்கள். ஆயினும் அமலை அடிக்கடி புரந்தரன் வீட்டுக்குப்போவதை ஹிரண்மயி அறிந்துகொண்டு, அவ்வாறு செல்லக்கூடாதென மறுத்தாள். அமலை போவதை நிறுத்தி விட்டாள்.

தகப்பன் வீட்டுக்கு வந்தது முதல் அவளுக்கு ஒருவிதத்தில் ஆச்சரியமுண்டாயிற்று. ஒரு நாள் அமலை, 'ஹிரண்மயி, நீ சம்சார நிர்வாஹத்தைப்பற்றி யோசிக்க வேண்டாம். நீ வெளியே சென்று கஷ்டப்படவேண்டிய அவசிய மில்லை. அந்தப்புரத்தில் எனக்கு சேவகவேலையா யிருக்கின்றது. காசு வரும்படிக்கு யாதொன்றும் குறைவில்லை. நீ வீட்டில் யஜமானியாயிருக்கலாம்' என்று சொன்னாள். அமலையின் கையில் 'ஜவேஜு' நடமாட்டமாயிருப்பதைக் கண்டு ஹிரண்மயிக்கு ஆச்சரிய முண்டாய் அவள் மனதில் பலவித சந்தேகங்கள் தோன்றின.

## ஏழாம் அத்தியாயம்.

விவாகமான ஐந்தாம் மாசி மாதம் சுக்கிலபக்ஷ பஞ்சமி வந்தது. ஹிரண்மயி இத்தினத்தை ஞாபகத்தில் வைத்திருந்தாள். மாலைப் பொழுதில் அப்படியே மனச்சோர் வுற்றவளாய் உட்கார்ந்திருந்தாள். உட்கார்ந்தவண்ணமே, மனதில், 'குருவின் அனுமதிப்படி நாளையத்தினம் முதல் நான் மோதிரத்தை யணிந்து கொள்ளலாம். ஆனால் அணிவதற்குத் துணிவேனோ? அணியாக்கால் எனக்கென்ன லாபம்? பெரும்பாலும சுவாமிகள் தென்பட்டாலும் தென்படலாம். ஆனால் சுவாமிகளைப் பார்க்க எனக்கிஷ்டமில்லை. இவ்வளவேயன்றி, வெகுகாலமாய் அந்நிய புருஷனுடைய உருவத்தை எதற்காக மனதின்கண் இருத்திவைப்பது! அடக்குவதற் கரிதான இம்மனதைச் சபித்தலே நன்று. இல்லாவிடில், தர்மத்தைத் துறந்து பதிதையாய்ப் போய்விடுவேன்' என்று எண்ணினாள்.



இத்தருவாயில் அமலை விம்மிதத்துடனும் பரபரப்புடனும் வந்து 'என்னவோ, பெரும் விபத்து வந்தது போலிருக்கின்றது. எதுவும் தோன்றவில்லை! என்னவாயிற்றோ! சொல்லக் கூடவில்லை என்று பயப்பட்டு கூறினாள்.

அமலை-என்னவாயிற்று? அமலை-அரசனது அந்தப் புரத்திலிருந்து உனக்காக பல்லக்கு வந்திருக்கின்றது. தாஸதாஸீ ஜனங்கள் வந்திருக்கின்றனர். உன்னை யழைத்துக் கொண்டு போவார்கள் போலும்.

ஹிரண்மயி—உனக்குப் பைத்தியம் பிடித்தது. என்னை அந்தப்புரத்துக்கு ஏன் அழைத்துக்கொண்டு போவார்கள்?

இவர்கள் இங்ஙனம் உரையாடிக் கொண்டிக்கையில் இராஜ தாதியானவள் வந்து தண்டனிட்டு இராஜாதிராஜபரம பட்டாரகிய ஸ்ரீமதன தேவன் ஹிரண்மயியை இந்த நிமிஷத்தில் பல்லக்கில் உட்காரவைத்து அந்தப் புரத்துக்கு அழைத்துவரவேண்டு மென்று ஆஞ்ஞாபித்திருக்கின்றாரெனச் செப்பினாள்.

ஹிரண்மயி ஆச்சரிய மடைந்தாள். ஆனால் வரமாட்டேனென்று சொல்வதற்கு முடியாது. அரசனது ஆணை தவற வொண்ணாதது. அன்றியும் ராஜாமதன தேவனது அந்தப்புரத்திற்குப் போவதில் எவ்வித சமயமும் இல்லை. அவன் பரமதார்மிக னென்றும் ஜிதேந்திரியனென்றும் கீர்த்திபெற்றவன். அவனது பிரதாபத்தினால், எந்த ராஜ புருஷனாயினும் ஸ்திரீகளின் மீது எவ்வித அநாகிருதத்தைப் புரிவதற்கும் துணியமாட்டான்.

ஹிரண்மயி—அமலையைப்பார்த்து, 'அமலா, நான் இராஜ தரிசனத்திற்குப் போக உடன்பட்டிருக்கின்றேன். நீயும் என்னுடன் கூடவா' என, அவளும் 'ஆகட்டும்' என்றனள்.

அவளைக்கூட வழைத்துக்கொண்டு, ஹிரண்மயி பல்லக்கேறி சென்று அரசனது அந்தப்புரத்தினுட் சென்றாள். செட்டியின் மகள் வந்தனளென வாயில் காப்போர் அரசனுக்கறிவித்தனர். இராஜாக்ஞையைப்பெற்று வாயில் காப்போர் ஹிரண்மயியை மாத்திரம் ராஜசமுகத்துக்கு அழைத்துச் சென்றனர். அமலை வெளியே நின்றாள்.

## எட்டாம் அத்தியாயம்.

ஹிரண்மயி—அவனி பாலனைக்கண்டு விம்மித மெய்தினள். அரயன் நீண்ட வுருவமமைந்த புருஷனாயும், கவாடமன்ன மார்பினனாயும், நீண்ட கையினனாயும் நன்றாய் அமைந்த வடிவமுள்ளவனாயும் சிறந்த நுதல் பொருந்தியவனாயும், அகன்று நீண்ட கண்களுள்ளவனாயும் சாந்த மூர்த்தியாயும் விளங்கினான். இவ்வ

ளவு எழிலமைந்த ஆடவர் பெண்களின் காட்சிக்கு அகப்படு
வது அரிது. நரேந்திரன் செட்டியின் மகளைக் கண்ணுற்று
இத்தகைய கட்டழகிதன் அந்தப்புரத்தில் இருப்பது அற்ப
மெனவறிந்து கொண்டான்.

**அரசன்**—ஹிரண்மயி நீதானா?

**ஹிரண்மயி**—அடியாள் தங்கள் அடிமை.

**அரசன்**—நான் உன்னை வரவழைத்த காரணத்தைக்கேள். நீ கலியாணம்
பண்ணிக் கொண்ட சங்கதி ஞாபகமிருக்கிறதா.

**ஹிரண்மயி**—ஞாபகம் இருக்கிறது.

**அரசன்**—அன்றிரவு ஆனந்த ஸ்வாமிகள் உனக்குக் கொடுத்த மோதிரம்
உன்னிடம் இருக்கின்றதா?

**ஹிரண்மயி**—மகாராஜா, அம்மோதிரம் என்னிடமிருக்கின்றது. அஃதெல்
லாம் மிகவும் இரகசியமான சங்கதி தங்களுக்கு அஃதெவ்
வாறு தெரியவந்தது?

**அரசன்**—அதற்கு விடைபகராது, 'அம்மோதிரம் எங்கே இருக்கிறது? எனக்
குக் காட்டு' என்றனன்.

**ஹிரண்மயி**—அதனை வீட்டில் வைத்து வந்திருக்கிறேன். ஐந்து ஆண்டுகள்
நிறைவதற்கு இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன. ஆ
கையால் அதனை அணிவதற்கு ஆனந்தஸ்வாமிகள் கூறிய நி
ஷேதம் இன்னும் நிவாரணமாகவில்லை.

**அரசன்**—நல்லது. அம்மோதிரத்திற் கநுரூபமான மற்றொரு மோதிரத்தை
உன் கணவனுக்கு ஆனந்தஸ்வாமிகள் கொடுத்ததை பார்க்கும் பட்
சத்தில் அடையாளத்தினால் கண்டுபிடிக்க உன்னால் முடியுமா?

**ஹிரண்மயி**—இரண்டு மோதிரங்களும் சமானமானவை யாகையால் அடை
யாளங் கண்டு பிடிப்பேன்.

அப்பொழுது வாயில் காப்பாள் ஒருத்தி அரசனதாணைப்படி தங்கப்
பெட்டியொன்றைக் கொணர்ந்தனள். அரசன் அப்பெட்டியைத் திறந்து
அதனுள்ளிருந்த மோதிரத்தை ஹிரண்மயி கையில் கொடுத்து 'இம்மோ
திரம் யாருடையது பார்'' என்று கேட்டான்.

**ஹிரண்மயி**—அதை வாங்கிக்கொண்டு, விளக்கின் வெளிச்சத்தில் பார்த்து,
'தேவா, இம்மோதிரம் என் நாதனுடையதே. ஆயின் தங்க
ளுக்கு, இது எங்கிருந்து கிடைத்தது?' என்று வினவி சிறிது
யோசனையுள் ஆழ்ந்து மீண்டும், "தேவ, இதனால் யான் பதி
ஹீனை ஆயினேனெனக் கருதுகின்றேன். ஏனெனில் ஸ்வஜ
னங்களற்று மரிப்பவர்களின் பொருள் தங்கள்கோசத்துக்கு



வருகின்றது. இவ்வளவேயன்றி, அவர் உயிருடன் இருப்ப
ரேல், அவர் இதனைத்தியாகஞ்செய்வது அசம்பவம்! என்றனள்.

**அரசன்**—(நகைத்து) என்பேச்சை நம்பு, நீ பதிஹீனை அல்லை; சுமங்க
லியே.

**ஹிரண்மயி**—அப்படியாயின், தாங்கள் அவரை வஞ்சித்து இதனை யவரிட
த்தி லிருந்து அபஹரித்திருக்கவேண்டும்.

**அரசன்**—இத்தகைய சாகச வார்த்தையைக் கேட்டு விஸ்மிதமுற்று 'நீ மிக
வும் சாகசியாயிருக்கின்றாய்! ராஜா மதனதேவன் திருடனென
மற்றெவரும் சொல்லவில்லை' என்றான்.

**ஹிரண்மயி**—இல்லாவிடில், தங்களுக்கு இம்மோதிரம் எங்கேகிடைத்தது?

**அரசன்**—ஆனந்தஸ்வாமி உன்விவாகத்தின் இராத்திரியில் இதனை யென்கை
யில் போட்டார்.

அப்போது ஹிரண்மயி வெட்கித் தலைகுனிந்து, 'ஆர்ய புத்திர, என்
குற்றத்தைப் பொறுத்தருளல் வேண்டும். நான் பேதை; அறியாது கடிய
மொழிகளைக் கூறினேன்'' என்றாள்.

தி. அ. சுவாமிநாத ஐயர்.

---

# பேகனார்சிற்றுரை.

---

## 27-வது நட்பைப்பற்றி. (நண்பர்=இஷ்டர்).

க்ரீட் (Crete) தீவில் 57-வருஷம் வரையில் ஒரே தூக்கமாய்த்தூங்
கின **எபிமெநைடஸ்** (Epimenides), ரோமாபுரிக்கு (Rome) இரண்டாவது
அரசர் நூமா (Numa), ஸிஸிலியில் எட்நா எரிமலை நுழையில் புகுந்த
**எம்பிடாக்ளிஸ்** (Empedocles), இறந்தாரைப் பிழைப்புமூட்டிய தியாநா
(Tyana) ஊரவரான அப்பலோனியஸ் (Apollonius), இவர்கள் தெய்வ
ப்பிறப்பினர், ஒண்டியாயிருந்து காலங்கழித்தனர் எனப் பொய்க்கதைகள்,
கிரிஸ்தவச் சமயத்துக்குப் புறம்பான சமயங்களில் உண்டு. கிரிஸ்தவச்சம
யத்தில் ஆதிகாலத்து அடியார்கள், சாமியார்கள், இவர்கள், ஒண்டியா
யிருக்கப் பிரிந்தகதைகளோ மெய்யானவை. ஒதுங்கித் தனிமையாய் வா
ழ்தல் ஒன்றையேகருதுவது யோக்கியமல்ல. விலங்கின் இயல்புற்றார்
செய்யும் வேலை அது; அப்படி ஒண்டியாய்த் தனியேவாழ்ந்து தியானத்
தில் போதுபோக்கும் நினைப்பு இல்லாதமட்டும், அத்தனித்தவாழ்வில்
உயர்வுயாதும் இல்லை. தியானம்செய்யக் கருதி ஒதுக்கத்தில் வாழ்வார்

தெய்வத்தன்மை அடைந்தவராவர். ஆகையால், "கூட்டத்தைவிட்டு ஒண்டியாய் வாழக்கோருவோர், விலங்குப்பிறப்போ, அல்லது தெய்வப்பிறப்போ இரண்டில் ஒன்று" என்றதைவிட பொய்யும் மெய்யும்கலந்த அவ்வளவு சுருக்கமாய் எழுதல் அருமையானது. தனித்தவாழ்வு எத்தன்மைத்து, எம்மட்டும் அதனை அப்பியசிக்கலாம் என, மனிதர்செம்மையாக அறியமாட்டார்கள். ஜனநெருக்கத்தில் வாழ்தலினாலே மாத்திரம் அறிவின் எழுச்சிக்கு விரோதமான இணக்கம் ஏற்பட்டுவிடாது. பத்துபேர் ஓர் இடத்தில் சேர்வதினால் 10-படங்களைச் சேர்த்துவைப்பதைக்காட்டிலும் அறிவிற்கு ஊனம் ஒன்றும்நேரிடாது. பத்துப்பேர் கூடி அன்பின்றிப்பேசினாலும் 10-வாத்தியங்களை வாசிப்பதினால் உண்டாகும் ஓசையைவிட அறிவு அழிதற்கு ஏது ஒன்றுமில்லாமல் இருக்கலாம். "குடிகள் அடர்ந்த பெரிய ஊரில்தான், தனிமையைவிசேஷமாய் அநுபவிக்கலாம்." என்ற லத்தின் பாஷைப் பழமொழியானது, உண்மையைச் சரியாய் விளக்குவது. விரிந்த ஊரில் நண்பினர், சிதறிக் குடியிருப்பர், அவ்வளவுவிரிவு இல்லாத சிறிய ஊரில் வசிப்பவரைப்போல நெருங்கார். எமது பட்சமோவென்றால் மெய்யானநண்பினர் கிடைக்காமையே கடுமையான தனிமையாம். மெய்யான நண்பினர் இல்லாதார் இருப்பிடம்தான் காணலாம். நட்புக்கு அமையாத இயல்பினரை விலங்குப்பிறப்பாகச் சொல்லல்வேண்டும். அவர் மனிதப்பிறப்பல்லர்.

அகத்து எழுச்சியால் உள்ளம் பொங்குவதை வெளியிட்டு ஆறுவது இஷ்டர்களைப் படைத்தார்க்குக் கிடைக்கும் முதற் பிரயோசனம். உள் உடலில் உப்புசம், வீக்கம் உண்டாய், அழுக்கு அடரும் நோய், எப்படி ஆபத்தானதோ, மருந்துகொடுத்து அழுக்கை வெளிப்படுத்தி அந்நோயை எப்படி தீர்க்கிறோமோ, உள்ளத்து நடவடிக்கையும் அத்தன்மைத்து, உள்ளத்தின் கோளாறுகளுக்கு மெய்யான நண்பர்தான் சரியான சிகிச்சையாவர். நமது துயரங்கள், உவப்புகள், அநுதாபங்கள், ஆசைகள், சந்தேகங்கள் யோசனைகள், உள்ளத்தை அழுத்துவன. இவற்றைக்கரவாது நண்பரிடத்தில் சொல்லிக்கொள்ளலாம். கோயில் பாதிரிமாரிடத்தில் நாம் செய்ததப்புகளை விளம்புவதுபோல நண்பர்களிடத்தில் நமது அநுதாபங்களைத் தெரியப்படுத்துவதினாலும் மனது ஆறுகின்றது.

நண்பர் இவ்வாறு அவஸியம் வேண்டியிருப்பதைக்கருதி, அரசபுரிந்த பெரியோரும் நண்பர்களை நாடினதைக்கேட்க வேடிக்கையாயிருக்கும். தமது க்ஷேமத்துக்கும் மேன்மைக்கும் குறைவுநேரிட்டாலும் குற்றம் இல்லை என இஷ்டரைநாடினர். அரசகுலத்தில் பிறந்தார்க்கு ஈடானவர் தம்நாட்டில் கிடையாதாதலின், தாழ்ந்தாரை உயர்த்தி, இதனால் காரியவிரோதங்கள் இருப்பினும், அவர்களுடன்தழுவி நடக்கவேண்டியிருக்கிறது.



அரசர்தம் கருணையினாலோ, வார்த்தை யாடிக்கொண்டிருக்கவோ, இவ்வா
று அரசர்களால் உயர்த்தப்பெற்றோர்க்கு அந்தரங்கர் எனப்பெயரிடுவது
வழக்கம். அந்தரங்கர் என்பதைவிட, லத்தின்பாஷையில் சொல்வதுபோல,
கவலையைப் பங்கிட்டுக்கொள்வோர் எனல் மிகப்பொருத்தமானது.

இப்பெயரினால் நிஜச்சங்கதி சரியாய் விளங்கும். புத்தியீனவரசர்,
கோழைமனதினர் இவர்களேயன்றி, புத்திவலிவுபெற்ற வரசர்களும் ருக்
குமப்புத்தியரும் இஷ்டர்களைப் பொறுக்கிவைத்துக் கொண்டதுண்டு, வயிற்
றுப்பிழைப்புக்காகத் தம்மிடத்தில் அடிமைப்பட்டாரையும் சிநேகத்துக்காக
த் தாமே உயர்த்திச் சிநேகிதர்களாகத் தாமும்நடத்தி, நாட்டார் தம்மிரு
வரையும் சிநேகிதர்களாக எண்ண விடங்கொடுத்துச், சாதாரணச் சிநே
தர் இருவர் எப்படிப் பேசிக்கொள்வார்களோ, அப்படியே அரசர்களும்
பேசிப்பழகினதுண்டு.

ரோமாபுரியில் ஆதிக்கம்பெற்ற எல். ஸல்லா வானவர்: (L. Sulla)
பிற்பாடு மகத்துப் பட்டம் பெற்ற பாம்பிக்கு (Pompey) விசேஷவிடங்
கொடுத்து ஸல்லாவுக்கும் தாம்மிஞ்சினவர் என பாம்பி குலாவுதலாச்சுது.
எப்படியென்றால், ஸல்லா கோரிய ஊர்நாட்டாமைத்தனத்துக்குப் போட்
டியாய்வந்த மற்றொருவர்க்குப் பாம்பி, தாம் பாடுபட்டு, இச்சங்கதி ஸல்லாவு
க்குத் தெரிந்து ஸல்லா வெகுண்டு ஓங்கிப்பேசவே, "மறையும் சூரியனை
யார் மதிப்பர், கிளம்பும் சூரியனையேமதிப்பர்" என அவ்வளவு அலட்சிய
மாய் பாம்பி பேசி யடக்கினர்.

ஜூலியஸ்ஸீஸரால் (Julius Cæsar) டெஸிமஸ் ப்ருடஸுக்கு (Decimus
Brutus) இடங்கொடுக்கப்பட்டு, இவர்மேல் அவர் மோகம் ஏறித், தன்
வார்ஸுக்குப் பிற்பட்ட பாத்தியத்தைத் தம் உயில் பத்திரத்தில் ப்ரு
டஸுக்கு எழுதி வைத்தார். இவரே ஸீஸர் கொலைக்கு ஏற்பட்டார். எப்
படியெனில், சகுனங்கள் விரோதமாயிருந்ததற்காகவும், கால்பர்னியா
(Calpurnia) கண்டகனவின் நிமித்தியத்தினாலும், துரைத்தனச்சபையை
நீக்கிவிடலாமாவென, ஸீஸர் யோசித்துக்கொண்டிருக்கையில், ஸீஸர் கை
யைப்பிடித்து ஆஸனத்திலிருந்து எழுப்பி, மனைவிக்கு இன்னுமொருதரம்
நல்லகனவு கிடைக்கிறவரையில் துரைத்தனச்சபையை நீக்காமல் வைத்து
க்கொள்ள, இந்த ப்ருடஸ்தான் தூண்டினது!

ஸிஸரோவின் (Cicero) பிலிப்பிக்ஸில் (Philippics) வரைந்திருக்கிற
அந்டோனியஸால் எழுதப்பட்ட நிருபத்தில், ஸீஸருக்கு சூனியம் இட்
டாரென ப்ருடஸை கண்டிருக்கிறது.

இழிகுலத்தரான அக்ரிப்பாவை (Agrippa) அகஸ்டஸ் (Augustus)
மிகவும் உயர்த்திவிட்டபடியால், தன்பெண்ணையாருக்கு மணக்கலாமென
அகஸ்டஸ், மெஸிநாஸுடன் (Maecenas) கலந்தகாலத்தில் இவர், "அக்ரி

பாவுக்கு, மணந்தால் ஆச்சு, இன்றேல், அக்ரிபாவை கொலைசெய்யவேண்டும். இவ்விரண்டு யோசனையைத்தவிர, வேறுயோசனைக்கு இடம் இல்லை, அவ்வளவுசலுகை **அக்ரிபாவுக்குக்** கொடுத்தாய்விட்டது" என மெஸினஸ் சொல்லசங்கோசப்படவில்லை. **டைபீரியஸ்ஸீஸருக்கும்** (Teberius Caesar) ஸெஜானஸுக்கும் (Sejanus), நைச்சியம் விசேஷப்பட்டதின்மேல் அவர்களிருவரையும் தோழர் என்றார்கள். இவர்க்கு அவர் எழுதியநிருபத்தில் அவர் கூறுவதாவது, "நமது ஒருமையின் நிமித்தம் இச்சங்கதிகளை உம்மிடத்தில் மறைக்கக்கூடவில்லை." இவ்விருவர்க்கு மிகுந்த ஒருமையைப் பார்த்து நட்பு என்னும் அம்மைக்குத் துரைத்தனத்தார் பீடம் ஒன்று சமர்ப்பித்தனர். செப்டிமஸ் ஸெவரஸுக்கும் (Septimus Severus) ப்ளாஷியானஸுக்கும் (Plautianus) இதேதினுசான ஒருமைப்பாடு உண்டாய், ப்ளாஷியானஸினுடைய பெண்ணை மணந்துகொள்ளும்படி தன்மூத்தகுமாரனைக் கட்டாயப்படுத்தினார். ப்ளாஷியானஸுக்குப் பரிந்து குமாரனை அவமானப்படுத்துவர்; "அவர்மேல் எனக்கிருக்கும் நேசத்துக்காக எனக்குப்பின் அவர் உயிரோடிருக்கட்டும்" எனத், துரைத்தனச் சபையாருக்கு எழுதவும் எழுதினார். மேலே எடுத்து உதகரித்தமன்னர் **ட்ரேஜன், மார்கஸ் ஔரிலியஸ்** இவர்களைப்போன்ற சாதுத்தன்மையராயின் இளகியநெஞ்சத்தால் சிநேகிதர்களை வைத்துக்கொள்ளலாச்சுது எனலாம்; இஷ்டம்பாராட்டியதாக மேலேகாட்டிய மன்னரெல்லாம் வல்நெஞ்சராயும் கடுமையான அமல்செய்வராயும் சொந்தநன்மை கருதுகிறவராயும் இருந்தபடியால் இம்மையில் மனிதர்க்குக் கிடைக்கக்கூடிய செல்வம், தமக்சக்கிடைத்திருந்தும் தமக்கு ஒத்த நண்பர் இல்லாவிடின், தமது இன்பமுயர்ச்சி அரைவாசி குறையும் என, அவர் நம்பினதைக் காட்டுகிறது. தமக்குப்பிள்ளை பெண்டுகள் இருந்தும் நண்பரை நாடினர், பிள்ளை பெண்டுகளோடே கூட நண்பரும் அவசியம் வேண்டியிருப்பது இதனால் விசிதமாகிறது.

தம் ரகசியங்களை யாரிடத்திலும் சொல்வதில்லை, இரண்டொன்றைச் சொன்னாலும், மனதில் மிக்கவருத்தப்படுத்தும் ரகசியங்களை எவ்வளவேனும் வெளியிடுகிறதில்லையெனத் தன்முதல் எஜமானர், கெட்டியுடைய, **ட்யூக்சார்லஸ்**-என்பவரைப்பற்றி (Duke Charles, the Hardy) காமினியஸ் (Comineus) எழுதுவதை நாம் மறக்கலாகாது. இவ்வளவு தம்நினைப்புகளை அடக்கிப்போய் அவர்க்குக் கிழவயது ஆன பிறகு, அவர் அறிவு தளர்ந்து, பெலித்து விட்டது என்றும் **காமினியஸ்** சொல்கிறார். காமினியஸுக்கு இரண்டாம் எஜமானராக ஏற்பட்ட 11-வது லூயி-என்பவரைப்பற்றியும் அதேப்பிரகாரம் அவர் எழுதியிருக்காலும் பொருந்தும். 11-வது லூயி-யும். நினைவுகளை யடக்கித்துன்பப்பட்டார். "உனது உள்ளத்தையே நீ உண்ணாதே" எனும் உவமையாய்ப் பிதாகோரஸ் (Pythagoras) உரைத்தது, மறைபொருளாயினும் ஏற்றமொழியாம்.



தமதுஆர்த்தரங்கங்களைச்சொல்லும்படியான நண்பர் கிடையாதாரைப்பற்றி, அவர்கள் தம் உள்ளத்தையே புசிப்பதாய்ப் பேசுவது, அதிசயோக்திப் பிழையானாலும், ஒருவாறு நிஜமே. நண்பரால் ஆகும் முதல் பிரயோசனத்தைப் பற்றி நான் முடிவில் செல்லவேண்டிய இன்னுமொரு அதிசயம் என்னவென்றால், நண்பரிருப்பதினால் இரட்டை லாபம் கிடைக்கிறது, நமது இன்பநுகர்ச்சி இரட்டிக்கிறது, துயரம் பேர்பாதியாகிறது. தமக்கு உண்டான உவப்பை தம் இஷ்டரிடத்தில் கூறுவதினால், உவப்பு, ஜாஸ்தியாகிறது; துயரத்தைக்கூறின், துயரம் தணிகிறது. இரஸவாத நூலர் தமது மருந்து, பலவழியிலும் வேலைசெய்து நோயை நீக்கி, உடலைக்காப்பாற்றுமே தவிரப் பிரதிகூலம் செய்யாதென விளம்புவதுபோல், இஷ்டர் என்னும் மருந்தும் உள்ளத்துக்குஅத்தன்மைத்து. இரஸவாதநூலரர்பேச்சுத்தான் எதற்கு. இயற்கையைப்பார்த்தாலே தெரியும், செயற்கையினால் இயற்கை வலிவுறும், புறத்ததான அதிர்ச்சியை சேர்க்கையானது சரியாய்த் தாக்கிக்காப்பாற்றும்; உள்ளத்துச்சங்கதிகளிலும் நேசம் அவ்வாறு பயன்படும்,

அந்தக்கரணத்துக் கோளாறுகளை ஒழிக்க இஷ்டர்கள் உதவுகிறதை முதல் பிரயோசனமாய்க் காட்டி, யப்படியே மயங்கிய அறிவைத்தெளிய வைப்பதும் இஷ்டர்களால் உண்டாகும் இரண்டாம் பிரயோசனமாவது. அந்தக்கரணக் கோளாறுகள் இஷ்டர்களால் நிவர்த்தியாகிச் சரியான நிலைமையடைவது எப்படியோ அப்படி அறிவுமயங்கி குழம்புங்கால், இஷ்டர்களால் அறிவுதெளியும். இஷ்டர் நம்பிக்கையாய்மொழியும் நற்புத்திக்கு இத்திறமை உண்டு என்பது மாத்திரமே யல்லாமல், தம்மனதில் பல நினைப்புகள் உண்டாய்க் குழம்பும்போது, எவரிடத்தில் தம் எண்ணங்களைச் சொல்லினும், எண்ணங்கள் தெளிந்து, மயக்கம் நீங்கும். எடுத்துச்சொல்லும் போது எண்ணங்களைப் பலவாறாய் மாற்றிக் கோர்த்து வெளியிடவேண்டி யிருக்கிறது, தமக்கே குழப்பமாயிருந்த எண்ணங்கள் தெளிந்து அறிவுக்கு ஒளியுண்டாய், அறிவு நடைபெறும், ஒருநாள்முழுவதும் சிந்தனைசெய்வதைவிட தாமே ஒருமணிநேரம் இஷ்டரிடத்தில் வார்த்தையாடுவதினால், அதிகத் தெளிவு அறிவுக்கு உண்டாகிறது.

வார்த்தையாடுவது, சித்திரம் எழுதும் துணியைப் போன்றது, சித்திரக்காரர் கற்பனை துணியில் விரிவு அடைகிற மாதிரியாய் பேச்சினால் உள்ளத்து எண்ணங்கள் விரிவு அடையும், பேசாது உள்ளே யிருந்தால் மூட்டமாயிருக்கும், எனப் பார்ஸிகவரசனைப் பார்த்து, தெமிஸ்டாக்ளிஸ் (Themistocles) உரைத்தது உண்மையாம். நம்மிலும் அறிவில் சிறந்து புத்திசொல்லத்தகுந்த இஷ்டர்களாலே தான் அறிவு ஒளிஅடையும் என்பதில்லை. சிறந்த அறிவுபெற்ற இஷ்டர்கள் கலந்தால் உத்தமந்தான், மற்றெவர்க்கு எடுத்துத் தம் நினைப்புகளைச் சொன்னாலும் தம் உள்ளத்தில் புதிய ஒளி உண்

டாகிறது. அறுக்க உதவாச் சாணைக்கல்லால் கத்தி கூராய் அறுப்பதுபோலத் தமக்குப் பயன்படாச் சிற்றறிவினரிடத்திலும், நமது எண்ணங்களை எடுத்துக் கூறுகையில் நமது அறிவு சீர்ப்படுகிறது. எடுத்துக்கூறி வார்த்தையாட இஷ்டர் இல்லாவிடின், ஒருபொம்மையை எதிரில் வைத்துக்கொண்டாவது ஒருவர்தம் எண்ணங்களைப் பிரஸ்தாபிப்பதில் குணம் உண்டு என்னும்படி பக்கத்தில் ஒருவரை இஷ்டர் என வைத்துப்பேசுவதில் அவ்வளவு பிரயோசன மிருக்கிறதாகிறது.

இப்படிச்சரியான இஷ்டர்களால் ஆகக்கூடிய இரண்டாவது பிரயோசனத்தில் சேர்ந்த மற்றொரு சங்கதியைக்கூறினால் இரண்டாவது பிரயோசனமுற்றுறும், அதாவது இஷ்டர் சொல்லும் இதமானபேச்சே இரண்டாம்பிரயோசனம். இச்சங்கதி வெளிப்படையானது தம் விடுமொழியில் ஹெராக்ளிடஸ் (Heracletus) உரைப்பதாவது, "வறட்சியான ஒளி உத்தமம்". ஒருவர்க்குத் தம் சொந்த அறிவினால் விளங்கும் ஒளியைவிட மற்றொருவர் புத்திசொல்லவரும் ஒளி காமக்குரோதங்களால் அவ்வளவுகோணியதன்று. நமது நினைப்புக்கும் நமது விவகாரத்தைப்பற்றி இஷ்டர்க்கு உண்டாம் நினைப்புக்கும் உள்ள தாரதம்மியம் எவ்வளவென்றால் இதம்கோரும் இஷ்டர்க்கும் நம்மை முகஸ்துதிசெய்து ஏமாற்றக்கோருவோர்க்கும் எவ்வளவு தாரதம்மியமோ அவ்வளவாம். ஒருவர் தம்மைத்தாமே வியந்துகொள்வதைவிட ஜாஸ்தியாய் மற்றையவர் முகஸ்துதிசெய்யலாகாதாதலால் அவ்வாறு தம்மைத்தாமேவியந்து மோசம்போவதற்கு, இதமான இஷ்டர் பேச்சுத்தான் பரிகாரம். இஷ்டர் நமக்கு கதியைப்பற்றிப் புத்திசொல்வது இருவழிப்பட்டது. நமது நடவடிக்கையைப்பற்றி புத்திசொல்லலாம். நமது பிழைப்புத்தொழிலைப்பற்றி புத்திசொல்லலாம். நமது நடவடிக்கை ஊரார்க்கு ஒப்பாயிருக்கவேண்டிய விஷயத்தில் நமது இதமான அன்பர்பேச்சு மிகவும்பிரயோசனமாம். ஏனென்றால், தம் நடத்தையைப்பற்றி அவரவரே பரிசோதித்துப் போவதானால் கடுமைஜாஸ்திப்படும், நன்னடக்கை நூல்களைப்படித்தறியலாமென்றாலோ, அதனால் மனம் இளகுதல் மிகவும்மட்டு, மற்றவர்களிடத்தில் நமது குற்றங்கள் வெளிப்படுவதைக் குறித்து ஒழிக்கலாமென்றாலும் மற்றவர்சங்கதி நமக்குப்பொருந்தாமல் நிற்கும் இதமான இஷ்டர்பேச்சே, கேட்கவும் அநுசரிக்கவும் தகுதியானது. இதம்சொல்ல இஷ்டர் இல்லாமையினால் பெரும்பாலார் செய்யும் பிசகுகளையும் அசந்தர்ப்பங்களையும் யோசிக்க எவ்வளவு விசித்திரமாயிருக்கிறது. அதனால் பொருள் நஷ்டம் மான நஷ்டம் எவ்வளவோ நேரிடுகிறது எப்போதாவது கண்ணாடியில் முகத்தைப்பார்த்து உடனே தம் முகஜாடையை மனிதர்மறப்பது உண்மை என்று ஸேண்ட் ஜேம்ஸ் சொல்லும் பிரகாரம் அநேகர் தம் ஞாபகம் இன்றிநடப்பது உண்டு,



பிழைப்புத்தொழிலில் இஷ்டர்பேச்சு உதவுவதைப்பற்றியோ என்றால், ஒற்றைக்கண்பார்வையே போதும் இரட்டைக்கண்பார்வையால் எப்படி விசேஷப் பிரயோசனமிருக்கிறது, ஆட்டத்தில் சேர்ந்தான்கவனம் சிறந்தது, ஆட்டத்தை சும்மாப்பார்ப்பார் கவனம் அவ்வளவு விசேஷமானதல்ல, கோபமுண்டவன் அறிவுதுலக்கமானது, கோபங்கொள்ளாதுபக்கத்தில் நிற்பான் அறிவுக்குத்துலக்கம்மட்டு. துப்பாக்கியை ஒன்றின்பேரில் சுமத்தி சுடுவதில் என்னவிசேஷமிருக்கிறது, கையில்பிடித்து சுடுவதில் காரியத்தாழ்வு இல்லையே, இப்படியெல்லாம் பிதற்றித் தம்மைத்தாமதித்துத் தம்மறிவினாலேயே எல்லாக்காரியங்களையுஞ் சாதிக்கலாம் என எண்ணிக்கொள்ளல் தப்பிதம். எவ்வளவு தம்வேலையில் சாம்பாடுபட்டும் இதமான இஷ்டர்பேச்சினால்தான் வேலைமுடியும். அப்படியானால், பல இஷ்டர்கள்பேச்சை கேட்கலாமோவென்றாலும் ஒரு காரியத்தில் ஒரு இஷ்டரது பேச்சும், மற்றொருசமயத்தில் வேறொருவர் பேச்சும்கேட்டு, நடப்போமே யென்றாலும், ஒருவர்பேச்சையும் கேட்காததைவிட இவ்வழியோக்கியந்தான். பலரைக்கேட்டு ஒழுகுவதில் கெடுதியாவது:—முதல் முதல் குணமானபேச்சு பிறக்காமலே போய்விடலாம், இஷ்டர் சரியானபாத்திரமாகாவிடின், யோசனைசொல்லுங்கால் தம்தம் நோக்கத்துக்குத்தக்கபடி மாற்றிப்புரட்டி இஷ்டர்சாதாரணமாய்ப் புத்திசொல்வார்கள். இரண்டாவது, இஷ்டர்சொல்லும்பேச்சில் தீங்குவரலாம், அவர் மனப்பூர்வகமாய்ச் சொல்லியபேச்சாயினும், அதனில் சாதகபாதகங்கள் கலந்திருக்கும். நோய்க்காக வைத்தியரை அழைத்தால், அவர் நோயைத்தீர்க்கத் தெரிந்தவராயினும், நமது உடல்கூறுபாட்டை யறியாதிருக்கலாம். நோய்தீர்ந்தும் மற்றப்படி உடல்கெட்டு மரணம்சம்பவிக்கலாம். பலபேர் யோசனையில் இந்தப்பாதகம் உண்டு, அப்படிக்கன்றி நமது சீக்குப்போக்குகளை முற்றிலும் அறிந்த இஷ்டர் ஒருவரையே நம்பிப்போனால், இந்தக்காரியத்தில் இப்படிசாதகம் செய்துகொண்டாலும் மற்றக்காரியத்தில் இப்படிபாதகம் உண்டாகிறதே என அவர் யோசிப்பர், ஆகையால் பலபேர் ஆலோசனைவேண்டாம், அதனால் கலவரம் ஜாஸ்தி வேலை நடக்கவேண்டியதற்கு உபயோகப்படாது.

இஷ்டரால் ஆகும்பிரயோசனம்:—முதலாவது காமக்குரோதங்களினது ஆட்டமிராது. இரண்டாவது அறிவுதெளியும். மூன்றாவது பிரயோசனமோ மாதளம்பழத்தில் முத்துசிதறியிருப்பதுபோல் பலதுறையுள்ளது. ஒருவர்க்காக அவரது இஷ்டர்வேலைகளில் பிரவேசித்து தாமேவேலையை நடத்தும்படி யிருப்பது. மூன்றாம்பிரயோசனம், இங்கு இஷ்டர்களால் ஆகுந்தக்கதைப் பார்க்கவேண்டுமானால், இவ்வுலகில் ஒருவர் தாமே தம் வேலையைப்பார்ப்பதில் மரியாதைக்கு விரோதம் எத்தனை சமயங்களில் நேரிடும்படி யிருக்கிறது என யோசித்தால்போதும். ஆனதுபற்றியே

"இதமான இஷ்டரைத் தாமாகப்பாவிக்க வேண்டியது", தம்மைவிட சிறந்தவராயவர் எனினுமமையும். அநேகர் வாழ்நாள் வரையில் சுகமாய் வாழ்ந்து சில காரியங்களில் அன்பு பாராட்டி, நிறைவேறுமுன் காலஞ்செய்து விடுகிறார்கள். தம்குழந்தைக்கு ஏதோ ஒருகாரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டியிருக்கும், கோரிய ஒரு வேலையைப்பூர்த்திசெய்து நடத்தவேண்டியிருக்கும், இப்பேர்ப்பட்டது எவ்வளவோ வுண்டு. இதமான இஷ்டர் சகாயத்தால் தம் காலத்துக்குப் பின் தம் கருத்து இயலும், எவருக்கும் தம் உடலில் உயிர் ஒன்று வெளிக்காரியங்களில் உயிர் ஒன்று ஆக உயிர் இரண்டு உண்டு. தாமோ ஓரேவிடத்தில் இருப்பர், தம் வேலையோ பலவிடங்களில் கிடக்கும், ஆப்தமான இஷ்டர்கள் உண்டாயின் இஷ்டர்கள் வெளிக்காரியங்களில் பிரிந்து நின்று வேலை பார்ப்பர். தாமே நேரே நின்று நடத்தத்தகாதவேலை எத்தனை இருக்கின்றன. நம்பெருமையை நாம் குலாவலாமா, நம்மை நாமே புகழலாமா, இரந்து கேட்பது எப்பொழுதும் யோக்கியமாமா? நாமே நேரே நடத்தக்கூடாத இன்னும் எத்தனை சங்கதிகள் உண்டு. இப்பேர்ப்பட்ட சங்கதிகளில் நாம் நேரே நிற்பது அவமானமாயும், நமது இஷ்டர்கள் நமக்காகப் போய் முன்னிற்பது எவ்வளவு மானமாயும் இருக்கிறது. ஒருவர்க்கே எத்தனை துறைகளும் முறைகளும் ஏற்படுகின்றன. குமாரனிடத்தில் பேசுங்கால் தாம் தகப்பனார் மரியாதையை விடாமற் பேசவேண்டியிருக்கிறது. பெண்சாதியினிடத்தில் பேசப்போனால் கணவன் மரியாதை இருந்தே தீரும், விரோதியானிடத்தில் பேசப்போனால் சமயத்துக்குத் தக்கவாறு இஷ்டர் பேசலாமே யொழிய நாம் பேசப்போனால் நம்முடைய மரியாதை தவிரக்கூடவில்லை. இப்பேர்ப்பட்ட சமயங்களுக்குக் கணக்கேயில்லை; தாம் நேரே நடவடிக்கை நடத்த அசந்தர்ப்பப்படும்போது, இஷ்டர்கள் நேர்ந்தால் சரி, நேராராயின் அவ் வேலையை முற்றிலும் துறப்பதே உத்தமம்.

டி. ஆர். இராமநாதய்யர்.

---

## ருக்குமணி சரித்திரம்.

---

### அத்தியாயம். 2.

"அத்தான் மோசம் போனமே" என்று சொல்லிக்கொண்டு, சீட்டுகளை யெடுத்துச் சுப்பையர் கையில் கிருஷ்ணையர் கொடுத்தார்."

"அப்பவே, நன்னாப்பாக்கச் சொன்னேனே."

"ஆமாம், அப்ப பாத்தேன் ஆப்படவேல்லையே."



"நடக்கறதுபோ மேல்க்காரியத்தைப்பாப்போம்."

"என்த்தான், ஒங்க மாப்ளேக்கி வயசென்னாச்சு."

"பன்னண்டு வயசு ரொம்பி ஆறுமாச மாச்சாம் இப்பபார்ப்பமே. நம்ப ருக்குமணிக்கேத்த ஆம்டையான்னுதான். அடுத்தாத்து ராமசாமய்யருஞ் சொன்னார்."

"நம்ப ருக்குமணிக்கும் பன்னன்டறை வயசாயிட்டாப்லேற்கே."

"ஆமாய், பதிமூணுநாள் அவனுக்கிவள் சின்னவளாம். ஊருக்கு முன்னே மொறை வச்சுக்கூட்டுடாதே. எல்லாம் ஒருவழியா ஏற்பாடாகட்டும்."

"கட்டாயம் ஏற்பாடாய்குன்னு சொனனீரே."

"சகுனத்லெத பாத்துன்னுடா சொன்னேனன்."

"சகுனம் பலிக்கறத்துக்கென்ன தடை நம்ப பெரியவாள்ளாஞ் சொல்லிருக்காளே."

"அதெல்லாங் கடக்கறது ரொக்கமாப்பணம் வேணுமேடா என்னடா பன்றது."

"நம்ம ஆனா. ருனா. ரனா. சொக்கலிங்கஞ்செட்டி கடைதான் இருக்கே."

"வழியாக்குடுப்பனா."

"கல்யாண் நாளோல்யோ இது. நம்ம தாட்சணியத்துக்கு வேறொண்ணை வட்டிக்குக் குடுப்பன் அவன்."

"வட்டி ஜாஸ்திதான். எல்லாத்துக்கும் வரனென்னு ஏற்பாடாய்ட்டு. நாளு, அவனைப் போய்க் கெஞ்சிக் கூத்தாடிப்பாப்போம்."

"அதுக்கெல்லாம் சிறியவனன்னே அவன்."

"நம்மாலே ஆனமட்டும் பாப்பமே பலிச்சாப்பலிக்கறது பலிக்காத போனாப்போறது."

வண்டி திருவையாறு வந்து சேர்ந்தது. இவ்விருவரும் அண்டையிலிருந்த காவிரிக்குச் சென்று ஊற்றிறைத்து ஸ்நானம் செய்து விபூதிருத்ராக்ஷந்தரித்து ஜபஞ்செய்து விட்டு காவிரியினின்றும் புறப்பட்டு அக்கிராரத்துக்கு வந்து பஞ்சநத ஸ்வாமி கோவிலுட்புக்கு சுவாமி தெரிசனஞ்செய்து விட்டு கீழ்த்தெருவிலிருக்கும் சுப்பையரது மைத்துனன் வெங்கட்ராமய்யரகத்தைப் போய்ச்சேர்ந்தார்கள். வெங்கட்ராமய்யர் உள்ளே உட்கார்ந்து கொண்டிருந்தார். சுப்பையரில்லத்துட் சென்றவுடன், வெங்கட்ராமய்யர் எழுந்து ஆசனங்கொடுத்து "வரணம் வரணம், வரணம்" என்று மிக வன்பாக வழைத்து, "அடியே ஆர் டி உள்ளே, காலலம்பரத்துக்கு ஜலங்கொண்டா" என்று சொல்லி மனைவியை யழைத்தார்.

மனைவி உள்ளேயிருந்து சற்று நேரம் பொறுத்து வர, சுப்பையரும் கிருஷ்ணையருமாகக் காலைச் சுத்தி செய்துகொண்டு வெங்கட்ராமய்யருடன் சாப்பாட்டு வேளை வரைக்கும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். வெங்கடராமய்யர் "அவாளாரு" என்று கிருஷ்ணையரைச் சுட்டிக்கேட்டார்.

"எனக்கு நேர் அம்மாஞ்சி கிருஷ்ணன்னு நாமதேயம்" என்றார் சுப்பையர்.

"ஏதோ பகவதனுக் ரகத்தாலே அவாளுக்குண்டு. அவளழகை இன்னிக்கெல்லாம் பாத்துக்கிண்டிருக்கலாம். அவளுக்கும் ஒங்கக்குட்டிக்குந்தான் ஏர்வைன்னு நான்தான் சொல்லி யனுப்பிச்சேன். சொல்லியனுப்பிச்சத்து மேலே அவா வந்திருக்காள்."

"நல்லது, ப்ராப்தியிருந்தா நடக்கிறது, வெங்கட்ராமையரே நீங்க இருக்கச்சே நமக்கெதானுங் கொரைவு உண்டோ."

"ஜாதகம் இங்கதானே இருக்கு."

"பாத்து நாளைக்கி எடுத்துத்தரேன்."

"நம்ம ஜாதகம் வேணுமோ."

"இருந்தாக் குடுத்துட்டுப்போங்கோ நீங்க பாத்தா சரித்தான்."

"சகுனங் கிகுனமெல்லாம் நன்னாத்தான் ஆயிருக்கு."

"போய்ட்டுவரளா; காரிய மிருக்காப்லே தான்ருக்கு."

"ஒண்ணுமில்லை இதான் காரியம்."

"நாளைக்குக்கட்டாயம் பார்த்து எடுத்துத்தரேன்."

"போய்ட்டு வரேன்."

சுப்பையரும் "போய்ட்டு வரேன்" என்று சொன்னார்.

"ஆகா" என்று சொல்லி விட்டு ஐயாசாமி ஐயர் உள்ளே போய் விட்டார்.

பிறகு சாப்பாடாச்சுது. அம்மாஞ்சி கிருஷ்ணையர் சாப்பாடானவுடன் படுத்துறங்கி விட்டார். மற்றிருவரும் புறப்பட்டு, சகுனம் முதலியவைகளைச் செவ்வையாய்ப் பார்த்துக்கொண்டு ஐயாசாமி அய்யர்வீடு நோக்கிப் புறப்பட்டார்கள். பதினைந்து நிமிஷ தேசகாலத்துக்கெல்லாம் ஐயாசாமி அய்யர் வீடுபோய்ச்சேர்ந்து, அப்பொழுது அவர் போஜனம் பண்ணிக்கொண்டிருந்தமையால், சற்று நேரம் வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பிறகு ஐயாசாமி அய்யர் வர அநேக விஷயங்களைப்பற்றி வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டு வெங்கட்ராமய்யர் வந்த விஷயத்தைப்பற்றி வெகு நயமாக ஆரம்பித்தார். ஐயாசாமி ஐயரை நோக்கி,



"பையன் ஜாதகமிருந்தால் கொஞ்சம் குடுங்கோ பார்ப்போம்" என்றார்.

"என்னத்துக்கு."

"இவாளை என்னோடே வந்திருக்காளே இவாளைத் தெரிஞ்சிருக்கலாமே."

"ஆரு தெரியலியே."

"இருக்கறது யோழி, சுப்பையரவாள் என்னு சொல்லுவாள்."

"அப்படியா."

"நல்ல சம்பன்னாள். நம்ம தங்கையைத்தான் குடுத்திருக்கு அவாளுக்கு. ஒரு கன்னிகை."

"ஹாஹா!! எனக்கித்தனை நாளாய்த் தெரியாது."

"அதுக்கென்ன இவ்விடத்துக் கென்னபொது அபுருவமாயிருக்கே."

"அடிக்கடிதான் வந்து கண்டிருக்கேனே."

"என்னமோ நீங்கதான் அப்படி சொல்ரகள்."

"இவ்விடத்திலே ஐயா சாமய்யர்னு ஒரு பெரிய மிராஸ்தாரிருக்காராமே."

"ஆமாம்."

"அவருக்கொரு பையன்ருக்கானுமே."

"ஆமாம் இருக்கான். அழகா நன்னாயிருப்பன்."

"நம்மாத்துக் குட்டிக்கி——————."

"ஆமம் ஏற்பாடு பண்ணிப்பிட்றது. பொண்ணும் பிள்ளையு மொவ்வுமா, பார்த்துண்டகளா."

"பதிமூணுநாள் பெரியவனு மிந்தப்பையன், நம்ம குட்டியெவிட."

"ஆனாசரி, பாதகமில்லை. சாப்ட உடனே ஆகாங்காரியம் நமக்கு. அடியே சமையலாய்டுத்தாடி."

இக்கேள்வி, காதில்பட்டவுடன், உள்ளேயிருந்து தனது சிறு குழந்தை மூலமாய், இன்னுஞ் சமையலாகவில்லையென்றும், வெகு சீக்கிரத்தில் சமையலை முடித்து விடுவதாகவுஞ் சொல்லி யனுப்புவித்தாள்.

"சரி-அத்திம்பேரே உங்களுக் கெத்தனை கலநெல்லுக்கண்டுது."

"ஆயிரத்தியின்னூறுகலங் காணவேண்டியத்துக்கு எழுநூறு கலந்தாங் கண்டிருக்கு."

"ஏன்ப்படி."

"எத்தனைபோ காரியம். நமக்கு ஊர்லேருக்கச் சரிப்படலை, நோட் வரி, தண்ணித்தீர்வைன்னு, வரி எதேஷ்டமா வாங்கிப்டாளோல்லோ? என்ன மிஞ்சும்."

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

---

## சில பொருள்கள்மேல் நோக்கி யெழுவதேன்?

'மரத்தின் பழம் ஏன் கீழே விழுகிறது' என்று முற்காலத்து ஒரு மேற் புலவிஞ்ஞானிக்கு ஒரு சந்தேகம் நிகழ்ந்தது. அச்சந்தேகந்தீரப் பற்பல தோற்றங்களையும் ஆராய்ச்சிசெய்து பின்னர் * பௌமியாகர்ஷண நியாயம் என்பதைக் கண்டுபிடித்தார். அஃதாவது இவ்வண்டத்திலுள்ள வஸ்துக்களியாவும் தத்தம் பிரமாண தாரங்கட்கேற்ப ஒன்றையொன்று ஆகர்ஷிக்கும் என்பதாம். இதனாலே மரத்தின் பழம் போன்ற சிலப்பொருள்களையும் சந்திரன் வாயு முதலியவற்றையும் நிலம் கவருகின்றது.

இஃதிப்படியிருக்கச் சில பொருள்கள் மேனோக்கிச்செல்வதையும் கவனிக்கிறோம். நீருட்கிடத்திலும் கட்டை மேனோக்கி யெழுகின்றது. விளக்கெரியும் காலத்து அதன்கட்பெய்த எண்ணெய் ஆவியாக மாறி மேனோக்கிச் செல்கின்றது. ஒருவித வாயுவடைத்த புகைக்கூண்டும் மேனோக்கியே எழுகின்றது. நீரினும் கட்டை இலேசானது; அப்படியே பூமியைக்கவிந்து கொண்டிருக்கும் வாயுவினும் எண்ணெயின் ஆவியும் புகைக்கூண்டில் அடைக்கப்பட்ட வாயுவும் இலேசானவை. இதனால் தன்னைச்சுற்றிய பொருளினும் இலேசாகவிருக்கும் ஒவ்வொன்றும் மேல்நோக்கியே எழுமென்பது போதருகின்றது. ஆயினும் மேற்சொல்லிய பொருள்கள் பௌமியாகர்ஷண நியாயப்படிக்கு நிலத்தால் கவரப்படாமற் போகவில்லை. ஆனால் பொருள்கள் தம்மினும் இலேசான பொருள்களின் மத்தியில் கிடக்கும் பொழுதுதான் அவை நிலத்தால் கவரப்படும் தன்மை கண்ணுக்குப் புலப்படும்.

பொருள்கள் மேல் நோக்கி எழுவதற்குச் சுற்றியிருக்கும் பொருள்களை விட இலேசாக இருக்கவேண்டுமென்று மேலே சொன்னோம். இஃது ஒரு காரணமேயன்று. விளக்கெரிகையில் வர்த்தியின் மூலமாய் எண்ணெய்மேலெழுகின்றது. இதற்குக்காரணம் எண்ணெயினும் வர்த்தி இலேசு என்பதன்று. மற்றென்னை? ஈண்டு நிலக்கவர்ச்சி (பௌமியாகர்ஷணம்) யென்னும் † மயிர்ப்புழைக்கவர்ச்சி (ரோமத்துவாராகர்ஷணம்) யென்னும் இருவிதக் கவர்ச்சிகளிருக்கின்றன. மயிர்ப்புழைக் கவர்ச்சி யென்பதற்கு மயிரின் நுண்ணிய புழையூடே பொருள்கள் கவரப்படுந்தன்மை யென்பது பொருள். மயிர்போலும் தொளையுடைய குழா யொன்றை எடுத்து அதன் ஒருமுனை நீருட் கிடக்கும்படி ஒரு தொட்டித்தண்ணீரில் நிறுத்துவோம். இங்கே பௌமியாகர்ஷண நியாயப்படிக்கு நீர்த்துளிகளை குழாய் ஒரு பக்கத்தும் நிலம் அதற்கெதிர்பக்கத்தும் கவருகின்றன. ஒருவன் இரண்டு எதிர்ப்பக்

* Laws of Gravitation. † Capillary phenomena.



கங்களிலும் இழுக்கப்பட்டால் என் செயமாட்டுவான்? வலியுள்ளவன் பாலன்றோ போதல் வேண்டும். ஈண்டு நீர்த்துளிகள் நிலத்தால் கவரப்படுவதினும் குழைப்பக்கங்களால் அதிக வலிமையோடும் கவரப்படுவதினால் நீர்த்துளிகள் குழையின் மேற்பக்கமாக எழும். ஆதலின் வர்த்தியிலுள்ள புழையும் மயிரைப்போல் நுண்ணியதாயிருப்பதால் எண்ணெய்த் துளிகளை நிலம் கவர்வதினும் வர்த்தியதிகவலிமையோடும் கவருகின்றது. இதனாற்றான் எண்ணெய் வர்த்தியினூடே மேல் எழுவது.

ஆதலின் பொருள்கள் மேல் எழுவதற்கு மற்றொரு காரணம் நிலக்கவர்ச்சியினும் மயிர்ப்புழைக் கவர்ச்சி யதிக வலிதாயிருப்பதே. இம்மயிர்ப்புழைக் கவர்ச்சியினால் மைபொற்று கடிதமும் மை உரிஞுகின்றது. மரங்களின் தண்டின் மூலமாக வேரில் ஊற்றும் ஜலம் மேலேறுகின்றது. தமிழ் மூதாட்டியும் 'சலியாநிலாந் தெங்குதாளுண்ட நீரைத்தலையாலே தான் தருதல்' என்று கூறியிருக்கின்றனள்.

சித்தூர்-சுப்பிரமணியாசாரி.

---

## பரீக்ஷா வினாக்கள்.

### I.

I. (a) சிலப்பதிகாரம் : இதனைப் பகுத்துப் பொருளுமிலக்கணமுங் கூறுக. இதனை இயற்றினர் பெயரும் இயற்றிய காரணமும் யாவை? இஃதியற்றப்பட்ட காலத்தை வரைந்து சுட்டுக. (b) இந்நூல் நுவலும் நீதிகள் யாவை? இதற்குங் கம்பராமாயணத்திற்கு முள்ள யாப்புநடை வேறுபாடுகள் யாவை? கதையுங் காதையு மொன்றேயோ? காரணத்துடன் விடுக்க.

II. இனி வருவனவற்றை யினிது விளக்குக :—(1) யாப்பறை மாக்களியல்பிற் கொள்ளார். (2) நிதொழி படூஉஞ் சிறுமைய வல்லன். (3) மகிழ்துணை தழூஉ மின்னிள வேனில். (4) அதள்புனை யரணமு மரியா யோகமும். (5) பூச வுருவிற் பொலந்தெளித் தனையவும். (6) ஊடல்கண்டவர் கூடல்கண்டிலர் னையுமைந்தர்க ளுய்யவே. (7) வாரண மரற்ற வந்து சாரவுயிர் மாற்று நேமி நாரணன். (8) பூவலர் மின்றுதனி யன்றுபொது வென்பார்.

III. (1) இளைசூழ் மிளையொடு வளைவுடன் கிடந்த, விலங்குநீர்ப் பரப்பின் வலம்புண ரகழியிற், பெருங்கை யானை யினநிரை பெயருஞ், சுருங்கை வீதி. (2) ஆயிரங்கண்ணோ னருங்கலச் செப்பு, வாய்திறந் தன்ன மதிலக வரைப்பு. (3) மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தற்குக்; கலிகெழு கூடற்

செவ்வணி காட்டக், காரா சாளன் வாடையொடு வருஉங் காலம். (4) சுடுமணோங்கு வடுநீங்கு சிறப்பின், முடியா கொடுக்குங் கடிமனை வாழ்க்கை. (5) பொலந்தெரி மாக்கள் கலங்கஞ ரொழித்தாங், கிலங்குகொடி யெடுக்கு நலங்கிளர் வீதி. இவற்றுள் (1) க்கு விளங்கிய கருத்தினையும் (2) க்கு உவமையின் நயமும் (3) க்கும் (4) க்குங் கொள்ளக்கிடக்கும் பொருள்களும் (5) - இன்ள 'ஒழித்த' என்பதற்கு முடிபிலக்கணமுந் தெளிவுபெற வெழுதுக.

IV. (a) அடியார்க்கு நல்லார் கூறுமாறு இல்லறமுந் துறவறமுமாவன யாவை? (b) கூடன்மாநகர்க் காட்சியைக் கூறுவான் புகுந்த ஆசிரியர் பெரும்பொழுதாறனையும் வருணித்த தென்கருதியோ? (c) சிறுபொழுதாறுத லெங்ஙனம்? விடைக்கு நியாயங் கூறுக. (d) கொற்கை, சிறுமலை, தொண்டி: இவை பொருநாட்டு லெவ்வயினுள்ளன? இவை யெவ்வெவற்றாற் பெயர்பெற்றன? (e) 'அடிகள்' என்றது ஆண்பாலார்க்கே யன்றிப் பெண்பாலார்க்கும் வருதலுண்டோ? மேற்கோள் காட்டுக. (f) 'வால்வெண் சங்கு: இருபெயரொட்டுப் பண்புத்தொகை' யென்றார் அடியார்க்கு நல்லார். அஃது அற்றாதலெங்ஙனம்?

V. (1) ஒருபொருட் பன்மொழி, வேற்றுமைமயக்கம், அநுகரணை வார்த்தை, பிறிதினவிற்சியணி, வேற்றுப்பொருள்வைப்பணி, தற்குறிப்பணி யென்பனவற்றை யுதாரணமுகத்தான் விளக்குக. (2) 'உற்றதெல்லாம்,' 'இல்லைக்கொல்லுதி': இவை யிலக்கணத்திற் கொவ்வுமோ? விடைக்குவிதி கூறுக. (3) கோபம், சாபம், லோபம் என்னுஞ் சொற்களடியாகப் பிறந்த தெரிநிலை வினைப்பகுதிகள் யாவை? (4) அடியார்க்கு நல்லார் 'குறுங்கண்' என்பது சாளரத்தைக் குறிப்புழி ஆகுபெயராமென வமைவுடைத்தேயோ? (5) 'தலைக்கோலரிவை,' 'தோரியமடந்தை': இத்தொடர்களை விளக்குக.

VI. (a) பின்வருஞ் சொற்களைப்பற்றிக் குறிப்புரை யெழுதுக:— இறையோன், வைகறை, கூடல், ஒப்தல், கடவுள், ஓசனித்தல், மஞ்சன், கோயில், புத்திரர், யாவது. (b) சயரதன் மயங்கிவீழ்ந்துழிப் புட்களொலித்தலையும் விண்மீனொளித்தலையுங் கம்பரெவ்வாறு குறிக்கின்றார்? (c) ஸ்ரீராமபிரான் தமக்கெதிரே நேரிற் செல்லவும் நங்கைமார் 'எனைவரோ விராமனென்பா' னென்? (d) மன்னவனுணையெனக் கைகேசி கூறிய மொழிகளைச் செவிசாத்திய பெருமான்றன் முகத்தினைக் கவி கூற்றெனக் கம்பர் கழறுமாறு யாது?

VII. (1) சிலப்பதிகாரமுடையார் 'எண்ணென்கலையோர்' என்றது யாரை? அவர்தம் இயல்பினை அப்புலவர்பிரான் கூறுமாறே வரைக.

(2) "தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாற்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம்."



இக்கருத்தடங்கிய பாடலொன்று இராமாயணத்தினின்றுந் தருக.

(3) "ஐயனே! நிற்குத்தந்தை கூறியதும் யானுரைப்பதுமாகிய வொன்றுண்டு" என்று கைகேயி சொன்னபோதும், "பரதன் நாடாள நீ காடேக வேண்டும்" என்றபோதும் ஸ்ரீராமபிரான் கூறியவிடை பொதிபாக்களை யெழுதுக.

VIII. (a) சமயோசிதமாகச் சொற்களைப் பெய்தலுங் கற்பனை செய்தலும், பின்னர் நிகழ்வதனை முன்னரே தோற்றச் செய்தலுங் கம்பர்தம் மியல்புகளென்பதற்குத் தக்க சான்று பகருக. (b) நீவிர் சிலப்பதிகார மூர்காண்காதையா னுணர்ந்தமட்டிற் கவுந்தியடிகளது குணகுணங்களைப் பற்றி யொருபக்கத்திற்குக் குறையாமற் செவ்விய தமிழ்நடையில் வரைக. (c) பின்வருஞ் செய்யுளடிகளை யலகிட்டு விருத்தப்பெயர் விளம்புக. அவையிற்றின்கண் யாப்பு விசேடங்களிருப்பின் அவற்றையுஞ் சுட்டுக. (1) நியமையாவையினுஞ் சிறந்ததியாள். (2) மேன்மேல்வந்து முந்திவணங்கிமிடைதாளான். (3) நாணிறுதொளவேகிறுமளிர் கங்குலாகியங்கையே. (4) மின்பொருவுதேரின்மிசைவீரன்வருபோழ்தில்.

II.

I. (a) பதினெண் கீழ்க்கணக்கினுட்டிருக்குறளுமொன்றேயோ? திருக்குறளினைப்பற்றி வழங்கும் பழமொழியாது? திருக்குறளை மேற்கொண்ட நூல்களுள் நான்கெழுதுக. (b) மக்களுறுதிப்பொருள் நான்காயிருப்ப நாயனார் மூன்றனைமட்டுங் கூறியதென்? பொருட்பாலென்புழிப் பொருளென்றது தனை? (c) வடமொழி மகாஸ்காந்த புராணத்தின்கண் இத் தென்மொழிக் கந்தபுராணம் இத்துணைப்பகுதித் தென்பதனைத் தெளிவுபெறக் காட்டுக. (d) தம்மொடு முரணிக் கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் பாடி முடித்தனரென் றுணர்ந்த கம்பர், 'கச்சியப்பனென்றசடாக் காந்த மெனுங் கருங்கடலைக் கலக்கிற்றேயோ?' எனக் கூறினரென்பது பொய்புனையென்று தக்க காரணங்காட்டி நிறுவுக. (e) கந்தபுராணத்தான் வெளிப்போந்த வரிய விலக்கண நூல் யாது? அஃதெவ்வாறு வெளிப்போந்தது?

II. (1) இறை நடுவுநிலைமையை யுணர்த்துமாறெங்ஙனம்? (2) 'முட்டாமற் செய்தவாறு மகனை முறை செய்தான் கண்ணுந் தன்கை குறைத்தான் கண்ணுங் காண்க': இதன்கட் பொதிந்துள கதைகளை நன்னான்கு வரிகளிற் செறித்தெழுதுக. (3) 'கோலொடு நின்றானிரவு' எதுபோலும்? (4) 'இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா மன்னவன் கோற்கீழ்ப்படின்' எவ்வாறு? (5) தேவர் கூறிய வொற்றிலக்கணத்தைத் தொகுத்து வரைக. (6) கடவுளை யுயிருக்குயிரென லெம்மதக்கோள்பற்றி?

III. (a) பின்வருங் குறள்கட்குப் பரிமேலழகியாருரை யெழுதுக:—

i. 'அந்தணர்நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்." அந்தணர், அறம்: இவற்றிற்கு உறுப்பாற்றலாற் பொருள் கூறுக.

ii. 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனொடு நேர்.' ஈண்டுப் பைங்கூழென்பதற்கு முடிபிலக்கணங் கூறுக.

(b) 'கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த னடுமுரண்டேய்க்கு மரம்': இதற்குப் பரிமேலழகியார் கூறிய பொருண்முடிபியாது? அம்முடிபினாற் போந்த பயனென்னை? அதனை வடநூலாரெப்பெயரான் வழங்குப? (c) 'மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ, டியைந்துகண் ணோடா தவர்': பரிமேலழகியார் இதற்குக் கூறிய பொருளென்னை? பிறருரைத்த பொருள்யாது? அதனைப் பரிமேலழகியார் ஆராயுமாறெவன்? இதற்கின்னும் வேறு வகையால் நயங்கெடாது பொருளுரைத்துக்காட்டுக.

IV. (1) 'பரம்பொருண்மகனோர், திருமுகங்கொடு சதுர்முகன்போல் விதிசெய்தான்' எவ்வாறு? (2) சிவபிரான் தன்முனர்ச் சிறை நீங்கிநின்ற வயனை 'எய்த்தனை போதும் பன்னா ளிருஞ்சிறை யெய்தி' யென்றழிப் பிரமன் கூறிய விடையாதுகொல்? (3) குடிலைச்சிறப்புரை செய்யுளை யெடுத்தெழுதுக. (4) 'வரம்பில் காமர் பெற்றுடைக்குமரவேள்', 'மாமலர் மேலுறை புரிந்தவன்': இவற்றை இனிது விளக்குக. (5) 'தன்னையே தனக்கொப்பவன்': இஃதெவ்வணியின் பாற்படும்? இம்முடிபுநேரிதேயோ? விடைக்கு நியாயங்கூறுக. (6) 'அயனுந்தேற்றுவோம்': பிறவினைப்பகுதித்தாய தேற்றுவென்பதனைத் தன்வினைப் பொருளிற் பிரயோகித்தல் சாலுமோ மேற்கோள் காட்டுக.

V. (a) ஊர்தி, அங்கண், இறைவன், பொற்றை, பராபரன், புத்தேள் இச்சொற்களைப்பற்றிக் குறிப்புரை யெழுதுக. (b) எடுத்துக்காட்டுவமை, செய்யுட்பொருட்பேறு, பலபடப்புனைவு, புனைவிலிபுகழ்ச்சி யென்னு மணிகளை யுதாரணமுகத்தான் விளக்குக. (c) இலக்கணை, உபலக்கணம், காரகம், குளகம், முற்றெச்சம்: என்பனவற்றை விளக்கி யுதாரணங்காட்டுக. (d) இருபெயரொட்டாகு பெயர், அன்மொழித்தொகை; இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்; ஏவல்வினை, முன்னிலைவினை; சாதியொருமைப்பெயர், அஃறிணையியற்பெயர்: இவை தம்முள் வேற்றுமையாவை?

VI. (1) 'அரசன் ஆலயஞ் செய்வித்தான்': இஃது ஏவும் வினைமுதலோ இயற்றும் வினைமுதலோ? நியாயங்கூறுக. (2) தொழிற்பெயர் எவ்வெப்பொருளில் வரும்? உதாரணங்காட்டுக. (3) தன்வினை முதல்வினை கொண்டு முடியுனவும், பிறவினை முதல்வினைகொண்டு முடியுனவுமாய வினையெச்சங்களெவ்வெவை? 'கோழிகூவிப் பொழுது புலர்ந்தது': இதன்கட் கூவி யென்பதவ்வாறு முடிகின்றதோ? விடைக்கு விதியெழுதுக.



III.

I. (a) இல்வாழ்க்கை மகப்பேறு—இப்பெயர்கட்குப் பொருளும் பொருட்புணர்ச்சியு மெழுதுக. (b) அளைதல், அவை, கறை, கலை, குழுமுதல், கொடும்பாடு, எச்சம், கிரீவம், இப்பெயர்கட்குப் பொருள்வரைக. (c) கண்ணுவமுனிவனும், பாரத்துவாசமுனிவனும் புத்திரப்பேற்றினை வியந்துரைத்த கவிகளில் யாதேனு மொன்றைவரைக. (d) இவை யெந்நூல்களில் நம்பாடத்துள்ளதாக ஒருநூலையெழுதுக.

II. 1. "மதலையைப் பெறுநாட் டின்பம் வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோ யடையிற் றுன்பம் வியன்பரு வத்துந் துன்பங்
கதமுறு காலர் வந்து கைபற்றிற் கணக்கி றும்ப
மிதமுற லெந்நாள் சேயா லெற்றைக்குந் துன்பமாகுல்."—
இதற்குப் பதவுரையெழுதுக.

2. "மறலி செயன்மாற்றி வயதராலுற் பெற்ற
திறன்மகப் பேருஞ் சிவசிவா—பெறுபே
றெழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப் [க.
பண்புடை பக்கட் பெறின்."—இதற்குப் பொழிப்புரையெழுது

III. 1. (a) குழந்தையின் சொல்லைக் கேளாத பெற்றோரெவற்றை வியப்பர்? (b) பெற்றோர் புத்திரரிடத்துச் சத்த பரிசங்களா லின்புறுவ தெங்ஙனம்? (c) "மயக்குறு மக்கள்"—என்பதற்குக்காட்டிய காரணங்களெவை? (d) "எச்சமிழந்து வாழ்வார்"—யாவர்? செய்யுளால் விடைதருக.

2. (a) "இன்னடிசில் புக்களையும் மக்கள்"—இப்பொருள்வாய்ந்த வேறோர் தொடர்மொழிநம் பாடபுத்தகத்தினின்றெழுதுக. (b) "மகப்பெறுனிடர்கள் வானவர்த மூர்க்குப் புகப்பெறார்"—இவ்வாக்கியத்திற்கு நியாயமென்னை? (c) "எழுமைப்பிறப்பு"—என்பனயாவை?

IV. 1. "தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லா மினிது."—இச்செய்யுளைப்பிரித்து எழுத்துப்புணர்ச்சி இலக்கணச்சூத்திரம் வரைக. 2. வட்டக்கடல், அஞ்செவி, பைங்கிளி, நீயேதந்தனை, மண்கொணர்ந்தான்—இப்புணர்ச்சிகட்குச் சூத்திரமெழுதுக.

3. "மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்
றம்மின வன்றொட ராகா மன்னே."

இச்சூத்திரத்திற்குரையெழுதி யுதாரணங்காட்டுக,

4. நடந்தகால், நடந்தக்கால்,—இவை தம்முட்பேதம் யாது? 5. குற்றியலுகரம், உயிரளபெடை, காலங்காட்டும்விகுதி—இவற்றிற்குச் சூத்திரம் வரைக?

V. 1. பிராமணன் பொற்காப்புக் காசைப்பட்டுப் புலியினால் மரணமடைந்தகதை யார் யாருக்குச்சொன்னது. 2. சித்திரக்கிரீவன், இலகுபதனன்,

இரணியகன், சரற்கவன், சூடாகர்ணன்—இப்பெயர்கள் யாரைக்குறித்தன. 3. ஒருவன் குலமு நடத்தையுந்தெரியாது அவனுக்கிடங்கொடுத்தவன் கதியைபற்றித் திருஷ்டாந்தங்காட்டிய கதையைப்பத்துவரியில் உயர்ந்த நடையிலெழுதுக. 4. மகவான்-தென்புலத்தார் என்னும் பெயர்கட்குக் காரணமென்ன? இவை யாரைக்குறிக்கும். 5. மரம் தன்னை வெட்டுகிறவனுக்கு நிழல் கொடுக்கவில்லையா?—இவ்வாக்கியம் எச்சமயத்தில் எவரால் எதுபற்றிக் கூறப்பட்டது.

---

## சமாசாரக்குறிப்புகள்.

சென்னை லாகாலீஜ்:சென்னை கவர்ன்மெண்டார் தங்களிட லாகாலீஜில் பி.எல். பரீக்ஷைக்கு வாசிப்பவர்கள் இதுவரையில் ஆறு மாதத்திற்கொருதரம் ஐம்பது ரூபாய்வீதம் ஒன்றரை வருஷத்திற்கு நூற்றைம்பது ரூபாய் கொடுத்து வாசிக்க வேண்டியதாயிருந்தது. நாளது ஜுலைமீ முதல் அவ்வகுப்பிற்கு ஆறுமாதத்திற்கொருமுறை 75. ரூபா வீதம் ஒன்றரை வருஷத்திற்கும் 225. ரூபாய் கொடுத்தால் தான் இவர்களிட காலீஜில் வாசிக்கலாமென உத்திரவு பிறப்பித்து விட்டார்கள். இதற்குக்காரணம் வரவுக்கு மிஞ்சின செலவாதல்போலும். தென்ஜில்லாக்களிலிருந்து வந்து வாசிக்கும்மாணவரிற் சிலர் திருவனந்தபுரம் லாகாலீஜில் சேவர்களென்று கேட்கிப்பதற்கிடனுண்டு.

சைவபூஷண சந்திரிகை:—இஃது சைவச் சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களின் தோற்றம் பேதம் பெருமை அவைகளைத்தரிப்பதாலுண்டாம் பயன்களை விளக்கி விழுமியதமிழ்நடையில் யாழ்ப்பாணம் ந. கதிரைவேற்பிள்ளை யென்பவரொருவரா லியற்பட்டுளது. இஃது 67-பக்கங்களுள்ள சிறிய நூலேயாயினும் இதனில் மேற்கூறிய தாரணங்களைப்பற்றிய அவசியமான 66 விடயங்கள் அடங்கியிருக்கின்றன. விபூதி உருத்திராக்கங்கள் உத்தமதாரணங்களென்று அவைகளைமறுக்கும் வைணவநூல்களைக் கொண்டே நிரூபணஞ்செய்யப்பட்டிருக்கிறது. விவிலியமதத்தினர்க்குமவையொப்பக்கூறப்பட்டுளது. விபூதிவகை என்றதலைப்பின்கீழ் "சிரௌதம் சமார்த்தம் இலௌகிகம் என மூன்றுபகுப்பினையுடைத்து" "முன்னையவிரண்டும்" பிராமணர்க்கும் பின்னையது மற்றையோர்க்கும் ஆகும்" "இவையன்றி வைதிகவிபூதி சைவவிபூதி எனத்திருநீறு இருவகைப்படும். வைதிகவிபூதியாவது வேதவிதிப்படி செய்யப்பட்ட யாகங்களிற் பொடிப்பட்ட நீறாகும். சைவவிபூதியாவது இருவினையொப்பு மலபரிபாகமுற்ற சிவசத்திநிபாதர்க்கு உரியதாய்ச் சிவாகமவிதிப்படி சிவதீக்ஷைசெய்யப்பட்ட அக்கினியிற் பொடிப்பட்டநீறாம். அநுகற்பம்அநுகற்பம் உபகற்பம் அகற்பம்



என நான்குவகைப்படும், என்றுளது. இதில் சிரௌதசமார்த்த இலௌகிக விபூதிகள் இங்ஙனம்பிறப்பது என்றுரைக்கப்படவில்லை. இவ்வருணத்தார்க்கு இவ்விபூதியாமெனவும் என்றதலைப்பின்கீழ் "சிவபெருமான் உமை விநாயகர் கந்தர் வைரவர் வீரபத்திரர் என்னுங்கடவுளரது யாகசாலையிலே உற்சவம் முதலியகாலங்களில் வெந்துவிளங்கிய திருவெண்ணீறு பிராமணக்ஷத்திரியர் வைசியர் என்று மூவர்க்குமுரியது. திருக்கோயிலின்கண்ணும் திருமடங்களினுமுள்ள திருமடைப்பள்ளியிற் பாகஞ்செய்ததனாலுண்டாகிய திருநீறு சூத்திரருக்கு மாகும்" என்றுளது. இதில் மேற்கூறிய வைதிக சைவ விபூதிகளில் இஃது இவ்வருணத்தவர்க்கென வரையறுத்துத் தெளிவுபெறக் கூறப்படவில்லை. ஐருத்திராக்கவிசிட்டம் என்றதலைப்பின் கீழ் "முத்துமணி பவளமணி பொன்மணி தாமரைமணி பளிங்குமணி புத்திரதீபமணி சங்குமணி துளசிமணி முதலிய பலவகைமணிகளினும் சிவபெருமானது கண்மணியாகிய உருத்திராக்கமணியே சிறந்தது" என்று வரையப்பட்டுளது. மணியைப்பற்றி ஒன்றுக்கொன்றுயர் வெனக்கூறிச் சர்வோத்தமமானது உருத்திராக்கமென அக்ஷமாலிகோபநிஷத்திலும் பராசரபுராணத்தும் வேறு புராணங்களிலும் விஸ்தாரமாய்க் கூறப்பட்டுளது. இப்புத்தகத்தும் "செபமாலைவகையும் பலமும் என்றதலைப்பின்கீழும் புத்திரதீபம் சங்குபவளம் முத்து படிகம் தாமரை பொன்மணிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றிலொன்றினும் துளசிமணிசேர்த்துக் கூறப்படவில்லை. சில புராணங்களில் அஃது தரிக்கத்தகாதது என்றவாக்கியங்களுமுள. இங்ஙனமிருக்க மற்றுள மணிகளோடு கணிக்கப்படாத துளசிமணி அவைகளோடு கணிக்கப்பட்டுளது. நான்கு வருணத்தாருக்கு முரியமணி என்றதலைப்பின்கீழ் "வெண்ணிறமணி பிராமணருக்கும் கருமைசேர்ந்த பொன்னிறமணியாகிய கபிலநிறமணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியருக்கும், பொன்னிறமணி வைசியருக்கும் கருநிறமணி சூத்திரருக்கும் தரித்தற்குரியனவாம்" என்றுளது. வெண்ணிறமணிகள் ஓரிடத்துங் காணப்படவில்லை. ஆதலால் பிராமணர் உருத்திராக்ஷதாரணஞ் செய்கிறதா விட்டுவிடுகிறதா? என்ற சந்தேகம் பலர்க்கு விளைவிப்பதற்கேதுவாகின்றது. இவ்வையப் பாடுகள் நிகழாதவாறு நூல் சிறிது செப்பஞ் செய்யப்படிற் பெரிதும் பயனுடைத்தாம்.

ஆயினும் இஃது சிறந்ததொருசைவ கிரந்தமாம். இஃது சைவராயினோர் யாரும் வாங்கி வாசிக்கத்தக்கது.

***

ஸால்ட் டிபார்ட்மெண்டில் அஸிஸ்டண்டு இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்காக வருஷந்தோறும் நடத்தும் போட்டிப் பரீக்ஷையை இவ்வருஷம் நிறுத்திவிட்டார்களெனத் தெரியவருகிறது.

***

ஆங்கில துரைத்தனத்தார் ஆப்பிரிக்கா கண்டத்தின் தெற்கேயுள்ள டிரான்ஸ்வால் என்னுங் குடியரசின இராஜதானியாகிய பிரிடோரியா நகரை இம்மாதமுதலில் பிடித்துக்கொண்டார்கள். ஆங்கில நாட்டார் கொடிபறக்கும் எல்லாத் தேயங்களினும் இந்த சமாசாரம் சேர்ந்ததும் மிகுந்த மனக்களிப்பை யுண்டாக்கியது. இஃது இனிது விளங்குமாறு இந்தியா கவர்ன்மெண்டார் கொடுத்த லீவு தினமாகிய இம்மாதம் 11ட சோமவார தினம் இந்நகரிலும் மற்றெல்லா நகரங்களில் நடந்ததைப்போல் சிறந்த விழாக்கொண்டாடப்பட்டது. அந்நாள் சுகமே காலஞ்சென்றன. பல விடங்களிலும் துவஜங்கள் நாட்டப்பட்டன. பூரணகும்பங்கள் நிறுத்தப்பட்டன

அன்னதான முதலியனவும் வழங்கினார்கள். அன்றிரவு பற்பல வீதியும், மாடமாளிகைகளும், பற்பல இல்லங்களும் தீபாவளியால் அலங்கரிக்கப்பெற்று சந்திர மண்டலமும் சூரியமண்டலமும் போன்று விளங்கின.

***

**லாங்மன்ஸ் இரண்டாம் வகுப்புப் புத்தகம்** :—இப்புத்தகத்தை நம்முடைய பார்வைக்கு அனுப்பிய லாங்குமன்ஸ் சங்கத்தாருக்கு வந்தனம் தந்தனம். முன்னொரு சஞ்சிகையில் முதல்வகுப்புப் புத்தகத்தைப்பற்றி சிற்சில விஷயங்கள் வரைந்திருந்தனம். அவற்றைக்குறித்து இப்புத்தகத்தில் சிறிது கவனித்திருக்கின்றாரென்பது விளங்குகின்றது. இப்புத்தகத்திலும் வழுக்கள் பொதிந்தனவேனும், முன்னர் காட்டியவைபோன்று வெளிப்படையான தவறுகள் ஒன்றுமில்லையென்றே சொல்லலாம். புத்தகநடை செந்தமிழ்நடையாயிருப்பின் நலம் 70-ம் பக்கத்தில் 7 - வது பத்தியையும், 38 - ம் பக்கத்தில் 5, 6, 7 - பத்திகளையும், 19 - ம் பக்கத்தில் 7 - வது பத்தியையும் வாசிப்பவருக்கு, மேற்கூறிய தமிழ் நடைக்குறை நன்குவிளங்கும். உண்டு, உள ; அன்று, அல்ல ; ஒரு, ஓர் இவற்றை உபயோகப்படுத்தும்முறையை இப்புத்தகவாக்கியோன் அறிவாராயின் இப்புத்தகங்களை வாசிக்கும் சிறுவர் சிறுமியர் பயன்பெறுவர்.

***

**ஹோ அண்டுகோ பாக்கெட்டு டைரி** :—இந்த டைரி இரண்டுமாதத்திற்கு முன்னமே எமக்கு அனுப்பப்பட்டிருந்தும் அதைப்பற்றி நம்முடைய பத்திரிகையில் ஒன்றுஞ் சொல்லாமல் காலஹரணஞ்செய்ய நேரிட்டதைப்பற்றி விசனிக்கின்றோம். இதற்குக் காரணம் யாம் சென்னைமாநகரைவிட்டு கோயமுத்தூருக்குச் சென்றதுமன்றி கோடைக்காக நம்முடைய கல்லூரி சாற்றப்பட்டு அவணின்று அனந்தசயனம் வரும்படி நேரிட்டதுமே. இதற்காக எம்மை பெருமாள்செட்டி அண்டு கம்பெனியார் மன்னிப்பாராக. பாக்கெட்டு டைரியைப் பிரித்துப்பார்க்குமளவில் அதில் காட்டப்பட்டிருக்கும் நானாவிஷயங்களுக்கு மட்டுமே அணா 4 கொடுக்கலாமென்று தோன்றுகிறது. காலபலத்தைக் கூறு முற்பாகத்தில் கவனக்குறையைக் காட்டும் சில தப்பிதங்களைக் களைந்துவிடின் நல்லகடுதாசியில் தினத்திற்கு ஒரு பக்கம் விட்டு நேர்த்தியாய் அச்சிட்டிருக்கும் இந்த டைரி சிறப்புறும்.

***

**வாலிபர் வைத்தியன்** :—இதையாக்கியோர் பொள்ளாச்சி வாரவர்த்தமானியின் பத்திராசிரியராகிய கெ. சி. துரைசாமி என்பவரே. தற்காலத்தில் வாலிபரும் வாலைகளும் தங்களுடைய உடம்பின் கூறுபாடு தெரியாததனால் நானாவிதத் துன்பங்களை யடைகின்றனர் என்பது எவருமறிந்த விஷயமே. இந்தக் குறைப்பாட்டை நீக்க முயன்று இச்சிறிய புத்தகத்தை எழுதி அச்சிட்டு உதவியதற்குத் தக்க கைம்மாறு யாதெனின் இப்புத்தகத்தைத் தமிழறியும் காளைகளும் கன்னியரும் வாசித்து அறிவீனத்தால் விளையும் வியாதிகளையும் துர்வழக்கங்களையும் விலக்கி அவர்களும் அவர்களுடைய சந்ததிகளும் க்ஷேமமுறுதலே. பிரமச்சாரிகளென்ற வேடந்தரித்து ரோகங்களுக்கிருப்பிடமாய்த் திரியும் பலரும், இதைவாசித்துப் பயன்படுவர் என்று நம்புகின்றோம். ஆண் பெண்பாலர்களின் ஜனனேந்திரியங்களை விவரமாய் எடுத்துக்கூறி படத்தொடு இந்நூல் வெளியிடும் பக்ஷத்தில் இதன் பயன் பெரிதாம் என்பதற்கு ஐயமில்லை. இப்புத்தகம் சென்னை தாம்ஸன் கம்பெனியிலும் வாரவர்த்தமானிப் பத்திராசிரியரிடத்திலும் விலைக்கு அகப்படும். இதன் விலை 4 அணா நான்கு.

# ஞானபோதினி.

புத்தகம். III. } 1900ஹ ஜூலைமீ 20உ {Cp. 12.

## * பாரதஸாரம்.

### I-அத்தியாயம்.

### முகவுரை.

வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் என்னும் பெரியநூற்பிரிவில், பாரதம் இராமாயணமென்னுமிரண்டும் இதிகாசத்துளடங்கும். ஆகவே பாரதமும் உலகத்திலுள்ள அரியபெரிய கிரந்தங்களுள் ஒன்றாகும். † "பாரதஃபஞ்சமோவேதஃ" என்று இதை வேதத்தோடுசேர்த்து ஐந்தாவது வேதமென வழங்குதலினாலும் இதனுடைய பெருமை நன்குவிளங்கும். இதைச்சற்றேனும் ஆய்ந்தறியாது இக்காலத்தவரிற் சிலர் இதனுடைய பெருமையைக்குறைக்க வெண்ணுதல் அறியாமையேயாம். இதனை வாசிக்கப்புகுவோர் வெறுப்பென்பதை யொழித்து மேலானவர்களாற் செய்யப்பட்ட நூலாதல்பற்றி அதற்குரிய கௌரவமும் வைத்து அதிக ஊக்கத்துடனும் விருப்பத்துடனும் அதனை அணுகிலொழிய அதிற்பொதிந்திருக்கும் உண்மைகள்யாவும் எளிதிற் புலப்படா. யாதேனுமொரு பொருளின் சிறப்பை நன்கறியவேண்டுமாயின், நமதுகண்கொண்டு அதை நன்றாய்ப்பார்த்தல் வேண்டுமல்லவா? கண்ணை மூடிக்கொண்டிருந்தால்பொருளின்னதென எப்படி அறிதல்கூடும்? அதுபோலவே நூல் நுவலும்பொருளையும் நன்கறியவேண்டுமாயின் மனக்கண்ணையும் நன்றாய்த் திறந்துபார்த்தால்தான் பொருள் நன்குபுலப்படும். ஒருவன் தன் மனது வெறுப்பெனும்வழிஒழித்து விருப்பெனும் நெறிப்பட்டவுடன்,

* Adapted from Mrs. Annie Beasant's—"Mahabharata."

† भारतः पञ्चमो वेदः । ஹாரதஃ பஞ்சமோவேதஃ ।

இந்நூலை எவ்வாறு வாசித்தல் தக்கதெனப் பார்த்தல்வேண்டும். இந்நூலின் பிரிவாகிய "பதினெண் பருவங்கள் ஒவ்வொன்றிலுமிருக்கும் முக்கிய விஷயங்களைத் திரட்டிப்பார்ப்போம். அதாவது இந்நூலி லடங்கியுள்ளன யாவை? இந்நூல் போதிக்கும் நீதிகள்யாவை? இதிற் சொல்லப்படும் பல்வகைஜனங்களின் நடையுடைபாவனைகள் யாவை? அவர்கள் செய்தனவும் செய்யாதனவும் யாவை? தேவர்கள் அவர்களுக்கு எச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு உதவிசெய்து கொண்டுவந்தனர்? எவ்வாறு இடையூறியற்றிக்கொண்டு வந்தனர்? இவற்றையெல்லாம் நன்காராய்தல் வேண்டும்.

அக்காலத்தில் தேவர்களும், தேவதைகளும் தாம் நேரே வந்து மானிடர்களுக்கு உதவி புரிந்து போயினர் என்று சொல்வது இக்காலத்திற் சிலர்க்குப் பரிகசிக்கத்தக்கதெனத் தோன்றும். அதற்குக்காரணம் அன்னோர்க்குத் தம்மதத்தினுண்மை சிறிதேனுந் தெரியாமையே யன்றி வேறில்லை. இந்துசமயத்தவர்களே இப்படியிருப்பார்களாயின் மற்றுப்புறச் சமயத்தவர்கள் அறிவின்மையாலும் அழுக்காற்றாலும் தாம்வேண்டியவாறு பிதற்றுதலுக்கோர் அளவுமுண்டாகுமோ?

எவ்விதமாக உற்றுப் பார்க்கினும் பாரதம் பெருமையுடையதாகவே காணப்படுகிறது. காவியமாக எடுத்து நோக்கினும் அதற்குரிய உறுப்புக்களெல்லாம் பொருந்திப்பொலிந்து விளங்குகின்றது. ஒவ்வொரு ஜாதியாரிடத்தும் பல நூல்களுள்ளன. சில ஜாதியாரிடத்தில் இவை அதிகமாகவும் வேறுசிலரிடத்தில் கொஞ்சமாகவுமிருக்கின்றன. இவர்களிடத்தில் காவியங்களும், சரித்திரங்களும், சாதாரண கதைகளும், தத்துவம், மதம் இவைகளைக்குறித்த நூல்களுமுள. சிறந்த ஜாதியாரென்று உலகத்தோரால் நன்கு மதிக்கப்படுவதும், குறைந்த ஜாதியாரென்று சொல்லி யிகழப்படுவதும், அநேகமாய் அந்தந்த ஜாதியிலுள்ளோராற் செய்யப்பட்டுத் தொன்றுதொட்டு வழங்கிவரும் அருமையான நூல்களின் குணத்தாலு மினத்தாலுமேயன்றி வேறில்லை. ஆய்ந்து பார்க்குமளவில் இந்தியர்களிடமிருக்கும் கிரந்தத்தைப் பார்க்கினும் சிறப்புடையன வேறொரு ஜாதியாரிடத்தும் இல்லையென உறுதியாய்ச் சொல்லவியலும்,



கிரீக்ஜாதியாருடைய சரித்திரத்தில் பத்து வருஷத்து * யுத்தத்தைக்குறித்து, எவற்றையும்வெகு விநோதமாயெடுத்துச்சொல்வதில் வான்மீகி, வியாசர் இவர்களுக்குச் சமானமான † ஹோமர் என்னும் கவிசெய்த காவியத்தையும், இன்னும் தத்துவங்கள், சரித்திரங்கள் முதலியனவற்றைக் குறித்தெழுதியிருக்கும் பெரியவர்களைப்பற்றியும் அவர் செய்த நூல்களிற் சிலவற்றையும் நம்மவரிற் சிலர் கற்றுங்கேட்டுமிருக்கின்றார்கள். அவர்களாற்செய்யப்பட்ட கிரந்தங்களை வாசிப்பவர்கள், மிகவும்சிறந்தகாவியங்கள்செய்யுந்திறமையுடைய கவிகளும், தத்துவ சாஸ்திரிகளு மிருந்திருக்கிறபடியால் ‡ கிரீஸ் என்னும் தேசமானது அக்காலத்துஎவ்வளவுசிறப்புற்றிருத்தல்வேண்டுமென்று ஆச்சரியத்துடன் வினவுகின்றார்கள். மேனாட்டிலுள்ளவர்களுக்குக் கொஞ்சக்காலத்திற்குமுன்புதான் சம்ஸ்கிருதபாஷையின் பரிமளவாடை யடித்தது. அதன் பின் அவர்களிற் சிலர் அதன்வாசனை நன்குணர்ந்து, அதிலுள்ள சிறந்தநூல்கள் சிலவற்றைக்கற்றறிந்து, இத்தகையநூல்களைச்செய்த இந்தியர்கள் அக்காலத்து மிகவும் சிறந்த நிலைமையிலிருந்திருத்தல் வேண்டுமென வுன்னித்து இவர்களைப்பற்றி விசேஷித்துச் சொல்லத்தொடங்கினார்கள். மஹாபாரதம் உலகத்திலுள்ள எல்லாக்கிரந்தங்களினும் மிகவும்சிறப்புள்ளது. மற்றைப் புத்தகங்களுள் ஒன்றேனும்நாமறிய விரும்பும் விஷயங்களனைத்தையும், நமக்குறுதி பயத்தற்குரிய அருமையான விஷயங்களையும் ஒருங்கே பொருந்தினதன்று. பாரதத்தின் பாஷை நடையோ மிகவுஞ்சிறந்தது. அதிற் சொல்லப்பட்ட கதைகளோ அதனினும் சிறந்தன. ஆகையால் நம்முன்னோருடைய பிரயோஜனத்தை நாடியும் நம்பிரயோஜனத்தைக் கருதியும் நம்முன்னோராற் செய்யப்பட்டுள்ள இப்பெரிய நூலுள் ஒருசிறு பாகத்தையேனும் நம்மவர்கள் கற்றுக்கேட்டுத் தெளியாதிருத்தல் மிகவு மாச்சரியமான விஷயம்.

இதனருமையும் பெருமையும் முக்கியமாய் மூன்று விஷயங்களிலடங்கியுள்ளன. அவையாவன:— (1) அதிலுள்ள நீதிகள். (2) அது போதிக்கும் தத்துவம். (3) அதிலடங்கியுள்ள சரித்திரம்.

(1) நன்னடக்கை யின்னதெனவும் அதற்குரிய விதிகளின்னவெனவு மெடுத்துச்சொல்வது நீதியின்பாற்படும். சனக்குக் கற்பாரொருவனுக்கு அதற்குரிய விதிகளுங் கொடுத்திருக்கிறபடி

* Trojan war. † Homer. ‡ Greece.

யால் அவற்றைக்கொண்டு கணக்குக்களையும் தப்பிதமின்றிப் பூர்த்திசெய்கிறான். நடக்கையும் இது விஷயத்தில் கணக்கைப்போன்றதுதான். இதற்கும் விதிகளுள்ளன. அவற்றைக்கைப்பற்றினால்தான் நல்வழியில் நடத்தல்கூடும். நீதிசாஸ்திரமானது ஒருவனைப் பார்த்து "நீ நல்வழியில் நட, துன்மார்க்கத்திற் செல்லாதே" என்று சொல்லுகிறதில்லை. ஆனால், நல்லதின்னதென்பதும் கெட்டதின்னதென்பதும், ஒருவன் செய்யத்தகுவன இன்னவென்பதும், செய்யாதொழிக்கத்தக்கன இன்னவென்பதும் அது எடுத்துக்கூறுகின்றது.

மகாபாரதம், நாமெப்படி நடத்தல் வேண்டுமென்பதை எடுத்துக்காட்டி நன்னெறியை நன்றாய்ப்போதிக்கும் குருவைப்போன்றது. இளஞ்சிறார்க்கேயன்றி வயதின் முதிர்ந்தோர்க்கும் அறிவு புகட்டுகின்றது. குழந்தை, புதல்வன், புதல்வி, ஆண், பெண், என்னும் இவர்கள் தங்கள் நிலைமையில் செய்யவேண்டுவன வற்றை எடுத்துரைக்கின்றது. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று சொல்லப்பட்ட நான்கு வருணத்தாரும் இவற்றிற் சேராத பஞ்சமர்களும் நாடோறும் நடந்துகொண்டு வரவேண்டிய மார்க்கங்களும் அதில்விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. வாணிகத்தைத் தனக்குத் தொழிலாகக் கொண்டானொருவன் நடக்கவேண்டிய மார்க்கங்களும் விளக்கப்பட்டுள. குடும்பத்திலுள்ள ஸ்திரி, புருஷர்; மகன், தந்தை; தாய், மகள்; இவர்கள் ஒருவர்க்கொருவர் நடக்கவேண்டுமாதிரியும் அதில் நடத்திக்காட்டியுளது. ஒவ்வொருநாளும் உலகவாழ்க்கையில் சாதாரணமாய் நிகழும் விஷயங்களும் விரிவாயும் சாதுரியமாயும் கதாரூபமாகக் காட்டப்பட்டுள்ளன.

அஃதெப்படியெனின் ஒருவனைப்பார்த்து நீ "வாய்மையே வழங்கல்வேண்டும்" என்று சொல்வதற்குப்பதிலாக, அரிச்சந்திரனைப்போன்று சத்தியத்தில் நின்றவர்களைப்பற்றியும் அதனால் அவர்களுக்கு வந்தநற்கதியைக்குறித்தும் வற்புறுத்துகின்ற அநேக கதைகள் சொல்லப்பட்டுள்ளன. "நீ பொய்சொல்லலாகாது" என்று சொல்லுவதற்குப் பதிலாகப்பொய்சொன்னவர்களுக்குநிகழ்ந்த துன்பங்களை எடுத்துக்காட்டும் கதைகளும் அதில் அநேகம் பொதிந்துள்ளன. இதில் இதைப்போன்ற பற்பலநீதிகளைத் தெரிக்கும் கதைகள் இன்னும் பலவுள. நன்னடக்கையின் விதிகள் இவையெனவும், அவைகளை அனுட்டிக்குமாறு இன்னவெனவும்



பாரதம் நன்கு புலப்படுத்துகின்றது. நன்னடைக்குரிய விதிகளை மாத்திரம் எடுத்தெழுதியிருப்பின் அதனுண்மை அவ்வளவு நன்றாய்விளங்குவதரிது. அதைப்பார்ப்பவரிற்பலர்,

"சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்" என்னுந்தேவர்குறளை ஒருவாறு நோக்கி; சொல்லுதல் சுலபம் நடத்தல்கஷ்டமெனச் சொல்லிப் போவார்களேயன்றி அவ்வாறு நடக்க முயலார். அத்தகையர்களுக்கு அந்தந்த விதிகளைத் தாம் தம் வாழ்நாளில் நடந்து காட்டியவர்களின் சரித்திரங்களையுமுரைத்து விதிகளையும் எடுத்துக்காட்டினால் அவர்கள் அவ்விதிகளை முன்னிலும் நன்குமதிப்பதுமன்றி நடக்கவு முயல்வார்கள்.

அறிவிலார் சிலர் நினைப்பதுபோலன்றி, ஒருவன்றன் நன்னடை தனக்கும் பிறர்க்கும் அத்தியாவசியகமானது. ஜயாபஜயமும், சுகதுக்கமும், ஐசுவரியமும் ஒருவனுக்கு நடையால்வருவன. இதைக் குறித்து ஒரு கதையுமுண்டு. பிரஹ்லாதன் தன் நன்னடையின் பலனாக ஒருகாலத்துத்திரிலோகசாம்பிராஜ்ஜியத்தையுமடைந்திருந்தான். அப்போது இந்திரன் ஒரு வேதிய வேடங்கொண்டு அவனிடம்சென்று அவன் சீடனாகஅநேகநாளிருந்து அவனுக்கு அதிகபிரீதிவருமாறு ஒழுகிக்கொண்டு வந்தான். ஒருநாள் தனது சீடனிடத்து அதிக விசுவாசம் பிறக்கவே அவனை அழைத்து உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் நான்தருகின்றே னென்ன, இந்திரனும் உன் நன்னடையை யான் விரும்புகிறேனென்றான். பிரஹ்லாதன் என் செய்வானினி! தன்னுடைய பிரதானமான இக்குணத்தைத்தானஞ்செய்து விடுவதனால் யாது விளையுமோ என்னு மச்சமுடையவனாயிருந்த போதிலும் தான் வாக்களித்துவிட்டபடியால் வேறொன்றுஞ் செய்வதற்கில்லாது தடையின்றிக் கொடுத்தேனென்றான். நிகழ்ந்ததைக்குறித்துப்பிரஹ்லாதன் மனக்கவலையுற்றுயோசித்துக் கொண்டிருக்குமளவில் அவன் தன் தேகத்தினின்றும் ஒருஜோதி அருநிற உருவத்தோடு வெளிப்போந்தது. அதைப்பார்த்து பிரஹ்லாதன் நீயாரென்ன, அஜ்ஜோதியானது நான் உன் நன்னடையின் ஸாராம்சம், நீ என்னை எறிந்து விட்டாயாதலின் உன்னைவிட்டுப் பிரிந்தேகுகின்றேன், உன்றன் சீடனாகிய அப்பிராமணனிடத்து வாசஞ்செய்யப் போகின்றேன் என்றது.

அதன்பிறகு வேறொரு ரூபம் முன் மாதிரியாகவே வெளித்தோன்றியது. அதை யாரென வினவியபோது அது, நான் நேர்மை என்னும் பெயர் பெற்றவன் எப்போதும் நடையோடு குடிகொண்டிருப்பவன். அஃதுன்னை விட்டேகவேயானும் புறப்படவேண்டியிருக்கிறது என்று சொல்லிப்போய்விட்டது. இம்மாதிரியாகவே அவனிடம் குடிகொண்டிருந்த வாய்மை, பொறுமை, வீரம் முதலிய சகலகுணங்களும் சென்றுவிட்டன. ஐசுவரியம் அவனை விட்டுப்பிரியும்போது அவனை நோக்கி "ஓ பிரஹ்லாதா! உன் குணத்தினால் மூன்றுலகினையு முனக்குட்படுத்தி ஆண்டனை. இதனை அறிந்து தேவர்களுக்கரசனாகிய ஆயிரங்கண்ணன் பிராமணவேடம் பூண்டு சீடனாய் உன்பிரீதியைச்சம்பாதித்துஉன்குணத்தைக் கவர்ந்துகொண்டான். சிறந்த அறிவும் ஆண்மையும் பொருந்தின பிரஹ்லாதனே! எனக்கும் மற்றவைகளுக்கும் மூலாதாரம்நல்லொழுக்கமாகிய நடையேயன்றி வேறில்லை" யெனக்கூறி அக்குணம் போனவிடத்து ஐசுவரியமும் சென்றது. *

மகாபாரதத்துப்பொதிந்துள்ள அநேககதைகளினின்றும்நாம் அறியக்கூடியது இன்ன மொருவிஷயம் உளது. அதாவது, எது ஒருவனுக்கு நன்னடை எனக் கொள்ளப்படுகிறதோ அதுவே மற்றொருவனுக்கும் நன்னடையாகவேண்டு மென்பதில்லை. ஒருவன் நடக்கவேண்டிய முறை அவனுடைய நிலைமைக் கியைந்தது. மாணாக்கனாயிருந்தால் உன்னுடைய கடமை உபாத்தியாயர்சொற்படி நடக்கவேண்டுவது. உபாத்தியாயராக விருக்கும்பக்ஷத்தில் மாணவர்கள் இவ்வாறுநடத்தல் வேண்டுமென்று நீ அவர்களுக்கறிவுறுத்துவது நியாயந்தான். தகப்பனா யிருக்கும்பக்ஷத்தில் பிள்ளைகளை அபிவிருத்திக்குக்கொண்டு வரத்தக்க காரியங்களைச் செய்தல் உன்னுடையகடன். பிள்ளையோ தன்தகப்பனார் சொற்படி, "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்னு முதாட்டியின் மூதுரைக்கிணங்க நடத்தலே தகுதி. ஒருவன் தன்னிலைமையின்னதென்றும் அதற்குரிய நடையுடையனாதல் வேண்டுமென்றும் அறிந்து நடந்தாலொழிய அவன் தனக்கும் பிறர்க்கும் பயன்படான். கல்விகற்கும் சிறுவர்கள் மாணவர்க்குரிய கடமைகளைப் பூர்த்திசெய்து கொண்டுவரவேண்டுமேயன்றி ஸம்ஸாரத்தைத் தாங்குவோனுடைய கடமைகளைத் தாங்கள் தலைமேற்கொள்ளல் நமக்கும்

* சாந்திபருவம் § 124.



பிறர்க்கும் துன்பத்தை விளைவிக்கும். மகாபாரதம் அநேகசந்தர்ப்பங்களில் ஒருவனுடைய நடைக்கும் நிலைமைக்குமிருக்கும் சம்பந்தத்தைப்பற்றியும், தாரதம்மியத்தைக் குறித்தும் வற்புறுத்துகின்றது.

மேலும், ஒவ்வொருவனும் தானறிந்து நடக்கவேண்டிய நானாவித நடைகளைக் குறித்தும் கூறுகின்றது இப்புத்தகம். மற்றவைகளோ அப்படியில்லை. சில புஸ்தகங்கள் சிலர்க்கே பயன்படும். கடின நடையில் எழுதப்பட்டவை கற்றவர்க்கன்றி மற்றவர்க்குப் பயன்படா.

மதவிசாரணை செய்யும் சில புத்தகங்கள், இலக்கணம், இலக்கியம், தர்க்கம், முதலியவைகளில் பாண்டித்திய முடையார்க்கே உபயோகமாகும். நிரக்ஷர குட்சிக்கு யாது பிரயோசனம்? பாரதமென்னும் புத்தகமோ அப்படிப்பட்டதன்று. எல்லோர்க்கும் பயன் படத்தக்கது. ஒருவன் கற்றது எவ்வளவு குறைவாயிருந்தபோதிலும், அவன் தனது சக்தியால் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்களும் இதிற்சிலவுள. கல்லாதவர் கேட்டறியலாம். கற்றவர் ஒவ்வொருவரும் கற்றுக்கேட்டுமறியலாம். அதனால் மிக்க பயனையுமடையலாம். வேறு நூல்கள் கற்காமற்போனபோதிலும் கற்றறிய அவகாச மில்லாமற்போயினும், இத்தப்புத்தகத்தையாயினும் வாசிப்பார்களாயின் தாம் உய்வதற்குரிய மதஞானமும் குணஞானமும் எளிதில் அடையலாம்.

(2) அதிற்சொல்லப்பட்ட தத்துவங்கள் புத்தியைக் கொண்டு அறிய வேண்டியவைகள். மனிதனுடைய புத்தி மிருகம் முதலிய ஜெந்துக்களுடையபுத்தியைக் காட்டிலும்விசாலமும் கூர்மையுமுடையது. பகுத்தறிவும் சேர்ந்து ஆறறிவுடையனாதலின் இவனது புத்தி மிகவும் சிறந்தது. மேலே தத்துவமறியக்கூடிய புத்தி யென்றது இப்பகுத்தறிவும் சேர்ந்த புத்தியைத்தான். தத்துவ நூல்என்பது கடவுள் மனிதன், பிரபஞ்சம், இவற்றின் சொரூப முதலிய குணங்களையும், ஒன்றிற்கொன்றுள்ள சம்பந்தத்தையும் எடுத்துச்சொல்லி அவற்றையெல்லாம் ஒரொழுங்கு படுத்திக் காட்டுவது. மகாபாரதமும் ஒரு பெரிய தத்துவத்தைக் கற்பிக்கி

ன்றது. ஆய்ந்துபார்க்கின் அது தான் இச்ஜகமுழுதும்பரந்திருப்பது. எல்லாவற்றிற்கு மொரு முதல்வன் உண்டென்றும் அவனைத்தான் ஈசுவரன், பரப்பிரம்மம் முதலிய பேரிட்டு வழங்குகிறார்களென்பதும் ஒவ்வொரு ஜெந்துவினிடத்தும் ஒவ்வொருவஸ்துவினிடத்தும் குடிகொண்டிருப்பவன் அவனேயென்றும் போதிக்கின்றது. சூரியசந்திரர் தாம் தினஞ்செய்துவரும் வேலைகளைச் செய்யும்படி செய்கிறவனு மவன்தான். புல், பூண்டு, மரம், கொடி, செடி, மிருகம் முதலிய பலவகைப்பிராணிகள், தேவர்கள், மனிதர்கள் இவர்களின் உயிருக்குயிராயிருப்பவனும் அவன்தான்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்."

பிறந்திளைத்த உயிருக்குயிராயினன் எனவே இறைவனில்லாதவிடமென ஒன்றில்லை என்கிறது. அவனெங்கு மிருக்கிறனெனவே எல்லாவற்றிலு மிருப்பது ஒருயிரே, அவ்வுயிர்தான் கடவுளும். இவ்விதமாய்ப்பார்க்கும்போது எல்லாஜெந்துக்களும் ஒன்றேயாம். இதனால் நமக்கு எல்லா ஜெந்துக்களிடத்தும் அன்பும் ஆர்வமும் அருளுமிருத்தல் வேண்டுமென்பது புலப்படுகின்றது. எல்லாவுயிர்களிடத்தும் ஒருபொது உயிர் பொருந்தியிருப்பதினால், பிறவுயிருக்கு எவ்விதத்துன்பஞ்செய்தாலும் நாம் நமக்கே துன்பம் செய்துகொண்டதுபோலாகின்றது; ஆகவேதான் மன்னுயிரையுந் தன்னுயிரைப் போற்பாதுகாத்தல் வேண்டுமென்பது. இதைக்குறித்து மொருகதையுமுளது. உஷீநாரன் என்னும் மறுபெயர்பூண்ட சிபிச் சக்ரவர்த்தி இராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டுவந்தான். மன்னர்களுக்குத் தன்னாட்டிலுள்ளாரனைவரையும் தன்னுயிரைப்போல் பாதுகாத்தல் கடமையாதலின், அதைச்சிபிச் சக்ரவர்த்தி சரியாய் நிறைவேற்றிக்கொண்டு வருகின்றானா, இல்லையா என்று சோதித்துப்பார்க்கும்பொருட்டு, தேவேந்திரனும் அக்கினிபகவானும் பருந்தும் புறாவுமாக வேடந்தரித்தார்கள். பருந்துபுறாவைத்துரத்திக்கொண்டேகவே புறா அரசனிடம் அதிவேகமாய்ப்



பறந்துபோய்த் தன் இரையான புறாவைத் தன்னிடம் சேர்க்கும்படி பருந்து அரசனைக்கேட்க, தன்னிடம் சரண்புகுந்த ஜெந்துவை அநாதரணையாகவிடுதல் தர்மமன்று; ஆகையால் கொடுக்கமாட்டே னென்றனன். பருந்து இராசனைநோக்கி, "ஓ அரசனே உன்னுடையகடமை எல்லாரையும் காக்கவேண்டுமென்பதென்றல்லவோ சொல்லுகிறாய். அப்படியாயின் நான் விரும்பிப் பின்பற்றிய இரையின்றிப் பசியால் யான்வருந்தி அதனால் மரணமடையின் அதுவும் பாவமாகாதோ? ஒன்றைக்காத்து மற்றொன்றைக் காவாதிருத்தலின் பயன்யாது?" என்று விதண்டாவாதம் செய்ததும் அவனப்பருந்தை நோக்கி உனக்கு ஆகாரம் வேறென்ன வேண்டுமானாலும் தருகின்றேனென்ன, மற்றவையினிடத்து எனக்கு விருப்பமில்லையெனப் பருந்து முறையிட்டது. புறாவைக்கொடுக்க மனமில்லாதபக்ஷத்தில், அப்புறா எவ்வளவு நிறையுள்ளதோ அவ்வளவு உன்னுடைய மாமிசமாயினும் கொடுத்தால் தான் எனக்குத் திருப்தியாகுமே யொழிய வேறொன்றும் திருப்திசெய்யாதென்றது. அதற்கோ அரசன் அகமகிழ்ச்சியுடன் சம்மதித்தான்.*

அதிகக்களிப்புடன் துலையின் ஒரு தட்டில் புறாவை வைத்து மற்றொரு தட்டில் தன் தேகத்துமாமிசத்தில் கொஞ்சம் சேதித்து வைத்தனன். "மெலியது மேன்மேலெழச்செல்லச்செல்ல வலிதன்றேதாழும் துலைக்கு" என்பதற்கொப்ப, புறா இருந்த தட்டு, தரையை விட்டெழும்பவேயில்லை. இவன் தன்தேகத்திலிருந்த தசையை யெல்லாங் கொஞ்சங் கொஞ்சமாக அறுத்தறுத்துத் துலைத்தட்டில் வைத்துப் பார்த்தும் அதிலிருந்தது அக்கினிபகவானாதலின், அத்தட்டு மேலெழவேயில்லை. அஸ்திமாத்திரமிருந்த அவ்வரசன் அந்தத்தில் ஒன்றுந் தோன்றாமல் தானும் தராசின்றட்டில் ஏறினான்; உடனே ஆனந்தமடைந்தான், இருதட்டும் ஒரு நிலையினின்றனவாதலின். இவன் தன் தேகத்தின் மீதும் அபிமானமில்லாது தன்னைச்சரண்புகுந்தது எவ்வளவு அற்பமான ஜெந்துவாயிருந்தபோதிலும் அதை எப்படியாயினுங்காத்தல்தலையெனக்கடைப்பிடித்து நிறைவேற்றியதற்கு மிகவும் சந்தோஷமும் அன்பும் ஆர்வமுமுடையராய்த் தேவேந்திரனும் அக்கினிபகவா

* ஆரண்ணிய பருவம். §. 130. 131.

னும் தங்கள் நிஜஸ்வரூபத்தை அவனுக்குக்காட்டி ஆசீர்வதித்து வேண்டிய வரமுந்தந்து போயினர்.

(3) இவ்விதமான தத்துவோபதேசங்களிற் சிறந்த தன்றியும், மகாபாரதம் ஒரு பெரிய சரித்திரமாகவு மிருக்கின்றது. சில விஷயங்களில் சரித்திரத்திற்கு வேண்டுவனவற்றைப் பார்க்கினும் அதிக குணங்கள் பொருந்தி யிருப்பினும், ஒரு பெரிய சரித்திரமென்பதற்கையமேயில்லை. பதினெண்பருவங்களடங்கிய இப்பெரிய புத்தகம் சுமார் ஐயாயிர வருஷங்கட்கு முன் நடந்தனவற்றை நடந்தவாறே சொல்கின்றது. ஐயாயிர வருஷங்கட்குமுன் ஸ்ரீகிருஷ்ணபகவான் மனுஷ காயத்தைவிட்டுத் தன் ஸ்வரூபத்தையடைந்தார். அவரதுமானிடரூபம் இவ்விடத்தினின்றுசென்றதும், கலியுகம் பிறந்தது. இதிலுள்ள சரித்திரமும் சற்றேறக்குறைய அதனோடே முடிவாகின்றது. முதலில் இது உண்மையான சரித்திரமென்றும், கட்டுக்கதையன்றென்றும் ஒருவன் தெளிந்து அறிதல்வேண்டும். இப்பாரத யுத்தத்தில் இந்தியாவிலிருந்தக்ஷத்திரிய வம்சத்தின் வேர் அடியோடே அறுந்துவிட்டது. இந்தியாவுக்கு யாதொரு பழுதும்வாராது ஓரிருப்புமதில்போலிருந்து காத்துக்கொண்டு வந்த க்ஷத்திரிய வம்சம் அநேகம் இதில் அடியோடேமாண்டு போயின. அப்படி யிதிற் சென்றதுபோக எஞ்சினின்றது பலமற்று இளைப்புற்றிருந்தது. வச்சிரக் கவசம்போன் றிருந்த இச்சாதியார் மடிந்ததனால் இந்தியா எளிதில் இழிவடைவதற் கேதுவாயிற்று.

கலியுகமாகிய இக்காலத்திலேயோ ஜனங்கள் சாதாரணமாய்த் தெய்வங்களிடத்தும் அவை நடத்திவரும் காரியத்தினிடத்தும் குறைந்த நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள். ஐம்பொறிகளால் நுகரும்விஷயங்களில் அமிழ்ந்து விடுகின்றார்கள். பஞ்சேந்திரியத்தாலறியக் கூடியவற்றை மாத்திரம் நம்பத்துணிகிறார்கள். அநேகர்க்கு தாங்கள்தங்கள்கண்ணினால் பார்க்கக்கூடாதவைகளிலும் அல்லது பரிச முதலியவற்றால் அறியக்கூடாதவற்றிலும் நம்பிக்கை கிடையாது. அப்படிச்சொல்லுதல் அவர்க்குக் காக்கை வெளிதென்பது போலாகும். கடவுளும் அவர்கள் புலனுக் ககப்படாராதலின் கடவுளென்பவ ரொருவரிருக்கிறாரோ வென்று கூடக் கேட்கத் தலைப்படுகிறார்கள். இதுவே சிலர்க்கு ஐயவினாவாயிருக்



கின்றது. அவர்கள் முழுதும் நம்பமாட்டோம் என்று சொல்லத் துணிகிறதுமில்லை. முற்றும்நம்பிநடக்கிறதுமில்லை. அவர்கள்நடை மாத்திரம்நாஸ்திகருடைய நடைபோன்றுளது. பிரதிதினமும் கடவுளாலாகும் ஒவ்வொருகாரியமும் அவராலானதாக நமதுகண்ணுக்குத்தோன்றவில்லை. ஆய்ந்தறிவதும் எளிதில் கஷ்டமாய்த்தோன்றுகின்றது. இதைத்தெரியாத ஜனங்கள் எல்லாவற்றிற்கும் காரணம்பிரபஞ்சத்தின் இயற்கைவல்லமை யென்கின்றார்கள். சூரியன் உதிக்கிறானென்றும் சந்திரன் தனது குளிர்ந்த கிரணங்களோடு கூடி நல்ல பிரகாசத்தைத் தருகின்றானென்றும், ஜலம் ஓடுகிறதென்றும், நெருப்பெரிகிற தென்றும் சொல்லுகிறார்கள். இப்படி இவைகள் நடப்பது இவற்றின் சுபாவமென்றும் சொல்வார்கள். ஆயினும் ஆய்ந்து பார்க்கின் ஒவ்வொன்றிலுமொரு தேவதையிருந்து காரியத்தை நடத்திக்கொண்டே யிருக்கின்றதெனப்புலப்படும். நெருப்பு வீட்டிலெரியினும் காட்டிலெரியினும் அதுவும் ஒரு தெய்வத்தாலன்றித் தானேயெரியாது. கடவுளிவ்விடத்தில் தீயின் ரூபமாயிருக்கின்றார். அக்கினிபகவான் இவ்விடத்து அவ்வெரியுருவமாய்க் காட்டுகிறார். கங்காநதியின் ஜலமானது ஒருபெரிய அடங்கா வெள்ளமாக வருவதும் ஒரு தேவதையின் காரியமேயன்றி வேறன்று. கங்கையானவள் தேவலோகத்தில் வேறு ரூபத்தோடு கூடியிருந்தபோதிலும் இவ்விடத்து ஓர் நதி ரூபமாயிருக்கிறாள். இதை நம்பாவிட்டால் மகாபாரதம் நம்மறிவிற்கு என்றும் புலப்படாது. மயக்கத்தையே விளைவிக்கும். எல்லாவிஷயங்களும் நமக்கு இப்போது எப்படிப்புலப்படுகிறதோ அப்படியே பாரதத்திற்சொல்லாமல், அந்நாள் எப்படி நடந்ததோ அப்படியேகூறப்பட்டுளது. காண்டவவனந்தீயினாலழிந்தது என்று சொல்வதற்குப் பதிலாக அக்கினிபகவான் எரித்தழித்தாரென்றுசொல்வதுமரபாயிருக்கிறது. தேவர்கள் வருகிறார்களென்பதும்போகிறார்களென்பதும்தேவதைகள் இதைஆக்குகின்றனவென்பதும் அதை அழிக்கின்றனவென்பதும் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. தெய்வத்தில்நம்பிக்கையில்லாதவர்கள்,இப்படிச்சொல்வதெல்லாம் கற்றோர் தம்சாமர்த்தியமே யன்றி உண்மையாய்ப் பார்க்கும்போது ஒன்றுமில்லை யென்பார்கள். அன்றைக்கு நடந்தது இன்றைக்குந்தான் நடந்துவருகின்றதென்று சொன்னால் அநே

கர் நம்பார்கள். இவர்கள் நம்பினாலென்? நம்பாக்காலென்? அன்றைக்கெவ்வளவு நடந்து கொண்டுவந்ததோ அது இன்றைக்கும் தான் நடந்துவருகின்றது. அக்காலத்தோ, தான் எதிர் நின்று காரியம் நடத்துவதை ஜனங்களும் பார்க்க விட்டிருந்தார். இப்போதோ அப்படிப் பார்க்க விடுகிறதில்லை. ஏனெனின் மனிதர்கள் விஷயங்களுக்கு அடிமையாய்ப் போய் இறைவனை விருப்புடன் நாடுகிறாரில்லை. பரமனுடைய பாததாமரையைப் பணியும் பரிசுத்தமனதுள்ள ஞானிகளுக்கே பரமனைப்பார்த்தல் எளிது. அத்தன்மையானவர்கள் இப்போதுமிருக்கிறார்கள். அவர்களும் இப்புஸ்தகத்தில் அதிக நம்பிக்கையுடையவர்கள். அவர்களுக்கும் இதிலுள்ள கதைகள் விந்தையாகத்தோன்றா.

பிரபஞ்சத்தினது கண்ணுக்குப் புலப்படாப்பாகத்தை, சுபாவாதீதமென்று சிலர் சொல்லுகிறார்கள். அதுபிழையேயாகும். பிரபஞ்சத்தின் பெரும் பாகத்தினும் நமது கண்ணால் காணக்கூடாத எவ்வளவோ லோகங்கள், அண்டங்கள், பிராணிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைதாம் நாமிருக்கும் இப்பூமியை இயக்குகின்றன. ஆகலின் சுபாவாதீதமென்பது பொருந்தாது.

அந்நாட்களில் கடவுளர் வந்து மனிதர்களுக்கு உபதேசம் செய்து போயினார்கள். சில சமயங்களில் நேரேயும் சில சமயங்களில் ரிஷிகள் மூலமாயும் அறிவு ஊட்டுவித்தார்கள். மனிதர்கள் உபயோகத்திற்கு மந்திரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. மந்திரமென்பது ஒரு வார்த்தை அல்லது ஒரு வாக்கியம், அதனுடைய சப்தம் நமது கண்ணுக்குப்புலனாகாத. லோகங்களில் அதிக வல்லமை பெற்றிருக்கிறது. அம்மந்திரத்தைஉச்சரித்தமாத்திரத்திலேயே அருமையானகாரியங்களெல்லாம் சாத்தியமாகின்றன. ஆழ்ந்தாலோசிப்பதற்கு அக்காலத்து மனிதர்களறிந்து கொண்டிருந்தார்கள். ஆகையினால் அவர்கள் எண்ணங்களை எண்ணியவாறு நிறைவேற்றத்தகுந்த வன்மையுடையனவாயிருந்தன. மனிதன் கடவுளைப்பற்றித் தியானித்ததாகவும் அவர் அவனிடம் வந்ததாகவும் நாம் அனேக விடங்களில் சொல்லப்பட்டிருக்கிறதைக் கற்றுங் கேட்டுமிருக்கிறோம். அஸ்திரத்தைப்பற்றி நினைத்தான். அஸ்திரம் அவன் கைக்கு வந்தது என்று சொல்லப்பட்டிருப்பதை யாம்



அறிந்திருக்கிறோம். எண்ணத்துக்கு அப்போதிருந்த சக்தி இப்போதுமிருக்கிறது. மேற்புல விஞ்ஞானிகள் அதன் சக்தியைச் சில நாளாகப்பரீக்ஷை செய்துகொண்டு வருகின்றார்கள். அக்காலத்தும் அம்மந்திரங்களைக்கொண்டு கடவுளை யழைக்கவாவது அல்லது ஓரஸ்திரத்தை அடையவாவது எல்லா மனிதராலும் முடியவில்லை. தக்கஞானமுள்ளவர்கள் உபயோகித்தால் பலனுண்டேயன்றி மற்றவர்களால் யாதொன்று முடியாதிருந்தது. இக்காலத்திலும் யோகிகளிற் சிலர் தாம் தம் எண்ணத்தை இவ்வாறு உபயோகிக்கலாம். ஏனெனின் அப்போதிருந்த கடவுளர் தாம் இப்போதுமிருந்துகொண்டிருக்கிறார்கள். அவர் தாம்வேறொருவராய் மாறவுமில்லை. அவர் அன்று ஏற்படுத்தின விதிகளுமாறுபடவுமில்லை. மனம் மாறிப்போனவர்கள்மனிதர்களேயன்றிக்கடவுளரல்லர். மனிதர்கள் சக்தியற்றவர்களாய்ப் போய்விட்டார்கள். அதற்குக்காரணம் அவர்களுக்குக்கடவுளிடத்து நம்பிக்கையும் பக்தியுமில்லாமையே யாம்.

தேர்ப்பாகன் தன் இரதத்திற் பூட்டியிருக்கும் குதிரைகளை எப்படிச் செலுத்துகின்றானோ அப்படியே இவ்வுலகைக் கடவுளும் நடத்துகின்றார். பாகன் தன்னிடத்திலேயே இருந்து கலினத்துப்பூட்டியிருக்கும்வாரை எப்படியிழுக்கின்றானோ அதற்கியையப் பரிகளும் இரதத்தை யிழுத்துச்செல்லுகின்றன. அதைப்போன்று கடவுளும் உலகமாகிய இரதத்தின்மீது உட்கார்ந்து நானாவிதசக்திகளாகியகுதிரைகளைத் தன் இச்சாசக்தியாகிய வார்கொண்டிழுக்க உலகமும்செல்லவேண்டியவழிச்செல்கின்றது. எப்படிச்சென்றால் நலமோ அப்படி நடத்தப்படுகின்றது. உலகும் இம்மாதிரி தன் பிரயாணத்திலேயே சென்று கொண்டிருக்கிறது. இப்படிச் செல்வதற்கோர் நேர் பாதையுண்டு. அதற்குக்கிளைவழிகளுமுண்டு. உலகம் தன் பிரயாணத்தின் உத்தேச இடத்தைச் சீக்கிரமடையவேண்டுமெனின் மேற்சொன்ன நேரிய வழியாய்ப் போதல்வேண்டும். பார்வைக் கினிமையாய்த் தோன்றுங் கிளைவழிகளிற் போதற்கே மானிடர்க்கிஷ்டம். கடவுள் நேரிய வழிக்கிருபுறத்தினும் ஆழ்ந்த கால் வெட்டி வழிகாட்டு மரங்களும் பள்ள மிருப்பதைத் தெரிவித்தற்குரிய தம்பங்களும் நாட்டுவித்திருக்கிறார். இவ்வளவு ஏற்பாடு செய்தும் மனிதர்கள் கண்ணை மூடிக்கொண்டு வேண்டுமென்றுதானெனுமகங்காரத்தோடுஒதுங்கிப்போனால்பள்ளத்

தில் விழுந்து தம்பத்தில் தாக்கிக் கைகால்களைமுறித்துக்கொள்ளுவார்கள். அதைத் தான், அவர்கள் துன்ப மனுபவிக்கிறார்களென்றும் நாம் சொல்லுகிறோம். இத்துன்பங்களும் கஷ்டங்களும் அகப்படுதற்கரிய அருமருந்தாகும். பார்வைக்கு மாத்திரம் பரிமளம் பிரகாசத்தோடு கூடியிருக்கும் அக்கிளைவழிகளில் இறங்கும் போதே இவ்வளவு துன்பமுள்ளதாய்ச் செய்துவைக்காவிடின் மனிதர்கள் தாம் கதிபெறுவதற்காகச் செல்லவேண்டிய நேரிய வழியை விட்டுப் பற்பல கிளைவழிகளிற் சென்றுவிட்டால், இவர் கதிபெறுதற்குரிய நேர்பாதைக்குத் திரும்பிவருவ தருமை.

சிலகாலங்களில் ஒரு ஜாதியார் முழுதும்நேர்வழிதப்பிச் செல்கின்றார்கள். அவர்போம்குறுக்குவழியிற் கடவுள் நின்றுகொண்டு ஒரு பெரிய யுத்தத்தையாவது, பஞ்சத்தையாவது, அல்லது ஒரு கொள்ளைநோயையாவது வருவித்து இவர்களை மருட்டி நன்னெறிக்குத் திரும்புமாறு செய்கிறார். ஒரு பெரிய ஜாதியார் துன்மார்க்கத்திற் போவதற்குப் பிரயத்தனம் பண்ணினால் போகவிடாது தடுத்தல் வேண்டும். போய்விட்டார்களாகில் மறுபடியும் இதற்கு வரமாட்டோம் என்று சொல்லும் புத்திவரும் வரையில் துன்பப்பட்டுத்தீரவே வேண்டும். எந்தயுத்தத்தின்சரித்திரம் மேலத்தியாயத்தின்கண் கூறப்படப்போகிறதோ அப்பாரத யுத்தமானது தேவர்களால் உண்டாக்கப்பட்டது. இந்தியரும் துன்மார்க்கத்தினின்றுந்திரும்பி மேலேகூறப்பட்ட நேர்மையான வழியடைந்து கதிபெறுவதற்கு இந்த யுத்தம் இன்றியமையாததாக இருந்தது.

(இன்னும்வரும்.)

கல்குளம். குப்புசாமி முதலியார்.

---

## தாமரைத்தடம்.

### தரவு கொச்சகக்கலிப்பா.

1. பொன்மயிலுஞ் சொன்மயிலும் போத மகிழ்சிறந்து
புன்மையின்றி நாளும் பொருந்தி விளையாடு
நன்மையுறு பாண்டிவள நாட்டின் றலைநகராம்
வன்மைதனி பெற்றவெழின் மாமதுரை யம்பதிக்கண். (க)



2. வையைக் கரையில் வளர்ந்தோங்கி வானுலவு
மையைத் தமக்கிளையான் வன்பிற் றளைப்பவலை
கையைப் பிசைந்து கலுழ்ந்துகண்ணீர் காலவிட்டுச்
செய்யிற் பயிர்வளர்க்குஞ் சீரார் தடங்காவில். (உ)

3. மன்னுமொரு செந்தா மரைத்தடத்திற் சென்றுட
னன்ன ரொருஞான்றை நாளந்திக் காலையினிற்
றன்னந் தனியேயான் சார்ந்தேனு வென்பின்ன
ரென்னை யறியாம லென்னினிய வில்லாளும். (௩)

4. போந்து மறைந்துநின்றாள் பொய்கைக் கரைசென்று
சேர்ந்து கடவுளையான் சிந்தித் திருப்புழிக்கொம்
பார்ந்து பறவையெலா மன்பி னிசைகூட்டி
யேய்ந்து பரிதி யெழல்கண்டு கொண்டாடி. (௪)

5. நின்றனவப் போழ்தத்து நீரின் முளைத்தெழுந்து
றோன்றியசெந் தாமரையின் றூயநறும் போதனைத்து
மென்றாழ் வரல்கண் டினிதி னலர்ந்தனயான்
மன்ற விழிவிருந்து வாய்த்த தெனமகிழ்ந்தேன். (௫)

6. தண்ணீ ரருகிற் றனிச்சென்றேன் றாமரையி
னுண்ணீர்மை கண்டே னுளத்துவகை கொண்டேன்றங்
கண்ணீர் வடித்தவவை கண்ணுற்ற யானுமின்பக்
கண்ணீர் வடித்தேன் களிகூர்ந்து நின்றேனால். (௬)

7. என்னே யியற்கைநல மென்னே யிறைமகிமை
யென்னேயென் னேயென்ன வின்பக்கூத் தாடினேன்
கொன்னே யிராதுகரங் கூப்பித் துதித்தேன்யான்
றன்னேரி லாத தனிக்கருணை வள்ளலையே. (௭)

8. கூடிவாழ் வோரோ குறையா வலியினர்மற்
றோடிவில கிட்டா ருறவு துறகணென்றே
நாடி யறியா நமரங்க டோவன்றே
பீடுடைய தாமரைகாள் பெட்பி னுருங்குறைவீர் ? (௮)

9. நும்மியல்பு கண்டு றனித்துணர்கி லார்பலரே
யிம்மையே யிவ்வுலகை யின்பவுல காக்குகிற்பீ
ரம்மம்ம நுந்த மறிவுடைமை யென்னென்கோ
தம்மின் மலர்கா டழியேற் கொருமுத்தம். (௯)

10. என்றுசொல்லி முத்த மிடுதலுமென் றன்பின்னர்
நின்றமனை யாள்யா னினையாத வண்ணமின்னே
யொன்றியவிவ் வின்ப மொழியுமெனச் சொல்வாள்போ
லென்றன் விழியை யிமைப்பொழுதி லேபுதைத்தாள். (௧௦)

11. ஈதுணர்ந்த யானுமென்ற னின்னுயிர்நற் காதலியே
போதும் விடுதியெனப் பூவொன்று நீர்கொய்தென்
மீதுள்ள காதலுக்கு வேண்டு மறிகுறியாப்
பேதையேற் கீயிலொன்றும் பேசேன் விடுவலென்றாள். (௧௧)

12. நன்றுநன்று நின்றன்மொழி யென்று நகையாடி
யென்றன் கருத்திஃ தெனயா னவிலுமுனந்
தன்றன்விருப் பிற்குத் தடையொன்றுஞ் சொல்லாம
னன்றுநன் றென்றேனா நாடி விடுத்துநின்றாள். (௧௨)

13. நங்கா யியற்கையெனு நல்லா ளழகெல்லா
நங்கண்ணாற் கண்டு நனிநுகரத் தக்கனகாண்
பொங்கு மனத்துவகை பூத்தின்ப மெய்தாது
தங்கு மவளழகைத் தான்குறைத்த னேரிதுகொல்? (௧௩)

14. மக்களெலாங் கண்டே மகிழுறுதல் வேண்டுமென்று
தக்க கடவுளார் தாம்படைத்தா ரஃதுணரா
யிக்குமொழிக் காரிகையே யென்றலுமன் னாளெழுந்து
துக்க முருளியற்கை தூய குணமுடையாள். (௧௪)

15. தன்னுடைய மக்களெலாந் தன்பக்கற் போந்துமிகத்
தன்னுடலைப் பற்றியுறத் தாவிமேல் வீழ்ந்திழுத்துத்
தன்னை மிதித்தாலுந் தாய்களிப்புக் கொள்ளலன்றி
யென்னையணு காதீ ரெனச்சீற்றங் கொள்வாளோ? (௧௫)

16. வாய்பொதிந்த செப்பினிடம் வைகுமலர் போலாது
பாய்புனலு ணின்று பலருந்தன் பால்வந்து
தாய்போற் கருதியவர் தாந்தாம் விரும்பியன
வாய்புகொள வேண்டியன்றோ வன்னாண் முகமலர்தல்? (௧௬)

17. ஆற்றன்றேற் கேண்மினென தன்புடையீர் நாமுண்ணு
மிற்ற பொருள்களெலா முண்ணா தொழிந்திடுவா
நற்றண் புனலினிநாம் நம்வாய் பருகலமே
சற்றுமசை யாதியற்கை தன்னழகு கண்டிருப்பாம். (௧௭)



18. இவ்வாறு வாதித் தெனதின் னுயிர்த்துணைவி
யொவ்வா தமதுரைமற் றுந்தோல்விக் கீடாக
விவ்வேளை யோடிச்சென் றெற்கினிய பூவொன்று
செவ்வே கொணர்மினெனச் செப்பினா ளப்படியே. (௧௮)

19. மலரொன்று கொண்டு வரநீரு ணீந்தி
யலகின் றலர்ந்த வலர்தம்மு ளன்ன
னிலகுற்று நின்ற வியல்வண்டு வீழா
நலன்மேவு பூக்கொய்து நானோடி வந்தேனால். (௧௯)

20. வந்தென் றலைவியினை வாயார வாழ்த்தியெழி
னந்தாத தாமரையி னாண்மலரை யாண்மகிழ்ந்து
தந்தே னவள்கரத்திற் றையலுமஃ தேற்றினிய
மந்தநகை செய்து மலர்ந்தாண் முககமலம். (௨௦)

21. தங்க வினத்தாரைத் தாங்களே கண்டக்காற்
பொங்கு மனத்திற் புரிந்தன்பு பாராட்டி
யங்கே யுபசரித்த லன்னார் வழக்கன்றோ
விங்கெனுளக் கஞ்ச மினிது மலர்ந்ததே. (௨௧)

22. அப்போதென் னாருயிர்க்கொம் பன்னா ளெனைநோக்கி
யிப்போது காண்மினோ விப்போதை யென்னலுநின்
கைப்போதுந் தாமரைகாண் கட்போதுந் தாமரைகா
ணெப்போதுந் தண்முகமு மொண்டொடியே தாமரைகாண். (௨௨)

23. போதாக் குறைக்குநின்றாட் போதுகளுந் தாமரைகா
ணாதலா லம்மலரு மன்பினழ கோங்கியதான்
மாதேநின் கைப்பரிச மாண்புறுகண் ணோக்கமுந்தம்
மீதே படப்பெற்றால் வீறாவோ வெப்பொருளும். (௨௩)

24. என்ன வுரைசெய் தெளியேனு மம்மலரை
யின்ன றவிர்க்கு மெழிற்பொருளே யென்றுமுத்தந்
துன்னி யிடுதலுமென் றோகைமுகங் கோட்டினா
ளென்னினுமிப் போதுநமக் கோர்மிக்குத்தோன் றுங்கொல்? (௨௪)

25. இந்தவுரை யென்செவியி லெய்து மளவினிலே
சந்த வடிவுடைய தையாலித் தாமரைநின்
னிந்து முகத்தி லிடுமுத்தந் தானளிக்குஞ்
சிந்தைகொளின் பத்திற் சிறிதேனு மீயவற்றோ? (௨௫)

26. என்றறிவான் வேண்டியா னிட்டே னொருமுத்த
மன்றியுமச் செந்தா மரையி னலர்தானு
நின்றன்கைப் பங்கயத்தி னேர்ந்தழகு மிக்கொளிர்பு
நின்றதனைக் கண்டேனு னின்மலச்செம் பொன்னனையாய் ! (௨௬)

27. உண்மை யெனிலிவ் வுரைதானிப் பூந்தடத்திற்
றண்மை மிருந்திலங்கு தாமரையின் போதொன்றை
யண்மியிவண் யானிலெனென் றுணர்த்த மாய்வளைத்து
முண்மகிழ்ந்து நீர்தா மொருமுத்த மிட்டதென்றோ ? (௨௭)

28. தாது முகுத்துத் தலையவிழ்ந்து தேன்றுளிக்கும்
போதுகண்ட வென்மனந்தான் பொன்னே யுனதெழில்கொள்
சீத மலர்முகங்கண் சிந்தித்து நிற்பவெற்குக்
காதன் மிகுந்ததனாற் கண்ணேயான் முத்தமிட்டேன். (௨௮)

29. பூவிற் கணிகலமோ பொங்குறுசெந் தேனுகும்
பாவிற் கணிகலமோ பண்கொண்ட கற்பனைபூங்
காவிற் கணிகலமோ கஞ்சமலர் வாவியென்ற
றாவிக் கணிகலநீ யன்றோவென் றாரணங்கே. (௨௯)

30. காம்புறழ்பைந் தோளுடைய காதலியு மென்மீது
தோம்புனைந்து சொல்லுதற்குத் தோன்றும விஃதுரைத்தா
டாம்புரிந்த வெச்செயற்குந் தக்கவா காரணங்க
டாம்படைத்துக் கூற றமிழ்வாணர் தம்மியல்பாம். (௩0)

31. இதுநிற்க யானோ ரெழின்மலர்கொய் பாக்குக்
கதுமென்ன வொன்றுங் கருதாது நீரிற்
புதுமலரி னுப்பட் புகுந்துழியென் றுனி
லதன்கொடிசுற் றிக்கொண்டா லன்றோவென் போக்கென்கொல்.

32. நீயிதனைச் சற்று நினையா தொருமலர்க்காப்
போயதனைக் கொண்டு புகவெற் பணித்தமையை
யாயும் பொழுதி னதுதா னெவர்தமையு
மேயேவி னுள்ளமிரும் பென்றெண்ணச் செய்யுமரோ. (௩௨)

33. செந்தா மரைக்கொடியாள் சீர்க்கற் புடையளவள்
சந்தமலர் கொய்வான் கடுகிவரு வோரையவர்
தந்தாள் செறிந்திடா டானே விலகிற்பா
ளந்தோ நுமதுமொழி யம்ம வதிசயமே. (௩௩)



34. அல்லதவ டன்பாலோ ரன்னியனென் காதலனைச்
சொல்லலளோர் காரணமுஞ் சுற்றிலைத்துக் கொள்வளேற்
கொல்லும் வினையாள் கொடியா ளெனும்பெயர்தா
னெல்லுமே யொல்லுமந்த வூறு விளைப்பாட்கே. (௩௪)

35. காரணமொன் றில்லாதக் கன்னிப் பசுங்கொடியா
ளோரணங்கே யெண்ணே லிருப்பாளென் றன்றாட்கியா
னோரணங்கு செய்கிற்பா னுற்றேனு லஃதொன்றே
சீரணவு காரணமாஞ் சிந்தித்துக் காண்மாதோ. (௩௫)

36. விள்ளரிய தம்முயிர்க்கே வீதல் வருமேனு
முள்ளற்க வொன்ற னுயிர்நீத்த லென்றுதிரு
வள்ளுவனார் வாய்மலர்ந்த வண்மைத் திருக்குறளும்
முள்ளத்தி னின்று மொழிந்ததுகொ லொண்புலவீர் ! (௩௬)

37. நீவிர் மறக்கினுமந் நீள்கொடியா டான்மறவாள்
பாவலரே யென்று பரிகசித்தா ளென்னையென்றன்
பாவையனை யாள்யானத் தாமரைப்பூம் பைங்கொடிக்கு
மேவரிய நல்லறிவு முண்டோ விளங்கிழையாய் ! (௩௭)

38. எனுவினவி நிற்க வெனுது தலைவி
தனுதுமேற் கோளைவலி தானுறுத்தல் வேண்டி
யுனுது சொலப்புகுந்தீ ரெதுக்குமுந்தம் வாத
மனுநிகளுக் கெட்டாதும் வான்றருக்க வண்மையென்றாள். (௩௮)

39. வாளா விகழ்ந்தாலும் வன்மைபெறு துன்வாதம்
வாளார் விழிவெருட்டல் வைதலிவை யாவுமுன்கோ
ளோக்குந் தோல்விநிலை சூழ்ந்தறிதி மங்கையர்தஞ்
சூளா மணியாகத் தோன்று மடவனமே. (௩௯)

40. நீற்பீர் சிறிது நியாயநூல் வல்லீர்நுஞ்
சொற்படியப் பைங்கொடிக்குத் துன்ப மிகவுநும்மா
லுற்பவித்து மன்னு ளுமக்கொன்றுஞ் செய்யாமை
வற்புறுத்து மன்றோவென் வாதத் தினைப்புகலீர் ? (௪0)

41. என்றோ வொருபொழுதி லென்னதுமுன் றன்னதுமா
முன்னல் வினைதுணையா மூட்டிப்பா ழுல்லேனு
றன்னருகர்ப் போந்ததன்றி நோக்குமிடத் துன்மேற்கோ
ளென்னமோ வன்மைபெற லெற்கியம்பு வாய்மயிலே ! (௪௧)

42. மேலொன்றுஞ் சொல்லாள் வெகுண்டாடன் மெய்வியர்த்தாள்
வேலொன்று கண்ணாள் விதனமீக் கூர்ந்தவணோர்
பாலொன்றி நின்றாள் பனிமுகம்வா டக்கண்டென்
பாலொன்று மின்மொழியாய் பைவரனீ யெய்தியதென் ? (௪௨)

43. கூறாயெ னின்சொற் குயிலே யெனது மன
மாறுதிப் போழ்தே யறிவுறுத்து வாயென்னை
வேறாகக் கொள்ளாய் விளம்பா யெனவுரைத்தோ
ராறேனுங் காணே னவட்டமீஇ முத்தமிட்டேன். (௪௩)

44. இட்டேன் முகமலர்ந்தா ளென்மீது தன்கரம்வேய்ந்
தட்டேன் றுளித்தெழல்போ லுற்றவிழி நீர்பெய்தாண்
மட்டேறுஞ் செங்குமுத வாய்மலர்ந்து பாடினாள்
விட்டா டனதுடன் மின்னே ரிடையாளே. (௪௪)

45. ஏமமிக வெய்தினேன் யானு மிவைகாணூஉத்
தேமலர்க்கஞ் சக்கிழவன் செம்பரிதி விண்ணிவர்ந்தான்
காமருசெந் தேன்மொழியென் கைப்பிடித்துக் கோடலும்யாந்
தாமரைப்பூம் பொய்கைவிட்டுச் சார்ந்தோ மெமதிலமே. (௪௫)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

# வாழ்க்கைப்பயன்.

## III. பணவிஷயம்.

ஆங்கில தேயத்தில் வீண் செலவின்மையின் மேன்மை போதியவளவு அறியப்பட்டில தென்றஞ்சுகின்றேன். நந்தேயத்தார் உழைத்துச் சம்பாதிக்கின்றார்; ஆனாற் பிறதேயத்தார் நம்மினும் மட்டாகச் செலவிடுகின்றார். அறிவுயர்ந்த குவேக்கர் விருத்தாப்பியனொருவன் 'பிள்ளாய், நீ செல்வமுள்ளோனாயிருப்பாயா என்பது நீ செலவிடுவதைச் சார்ந்ததேயன்றி நீ சம்பாதிப்பதைச் சார்ந்ததன்று' என்றுகூறினான். "செழித்தோங்குதற்கு மிதமான செலவே மூலமந்திரமாம்" என்பது உற்று நோக்குமிடத்து அதன் சொற்பொருளாலேயே விளங்குகின்றது.



செல்வ விஷயத்தைத் தவிர்த்தும் எதிர்கால வேட்கைகளைக் கருதி மிச்சம் பிடித்து வைப்பது அறிவுடைமையும் நேர்மையுமே. 'வறுமைவாயிலில் வந்துற்றகாலை நேசம் சாளரத்தின் வழியாய் வெளிப்பறக்கும்' என்றொரு பழமொழியு முளது. ஆயினும் மனைவியையும் குழந்தைகளையும் உணவின்றி யாதல் உடையின்றி யாதல் தக்க மருத்துதவியின்றி யாதல் இளைப்பாறலும் காற்றில் உலாவலுமின்றியாதல் இருக்கக் காண்பதும் தாம் போதிய வளவு சுறுசுறுப்பா யிருந்திருந்தாலாதல் குற்றமற்றதாயினும் அனாவசியகமான ஒரு சீராட்டை மறுத்திருந்தாலாதல் அவர்களைத் துன்பக்கவலைகளி னீக்கலாம் என்றுணர்தலும் விசனகரமானவையே.

பணவாசை கொண்டு அதனை மட்டாய்ச்செலவிடுதல்இழிந்ததே; ஆனால் சுவாதீனத்தின் பொருட்டுச் செலவைக்குறைத்தல் நேரியதும் வீரத்தன்மை பொருந்தியதுமாம்.

எப்பொழுதும் கணக்குவைம்மின். அதனையும் கவலையொடு வைத்துக் கொண்மின். ஒவ்வொரு குறிப்பையும் குறிக்கவேண்டுமென்று யான் எண்ணுகின்றிலேன். ஆனாற் பணமெவ்வாறு போகின்றது, பொருள்களின் விலையெவ்வளவாகின்றன என அவற்றை யறியுமாறு வைத்துக்கொண்மின். தனது வருவாயையும் தனது செலவையு மறிந்தோ னெவனும் வீண் செலவில் வீழான். பொருளழிப்போ ரனைவரும் தாம் செய்வனவற்றை யாலோசியாது செய்வதனாற்றான் அவ்வாறு போகின்றார்கள். எவனும் அழிவென்னும் செங்குத்துப்பாறையைத் திறந்த கண்களோடும் எட்டிப்பாரான்.

அற்றேல் நீர் எதைச்செய்வுழியும் வருவாய்க்குத் தக்கபடி வாழ்மின். சிறிதேனும் மிச்சம்பிடிமின். ஆனால் எவற்றினும் மேலாகக்கடன்வாங்காதீர். ஒருவனுக்கு வருடாந்தர வருவாய் இருபது பவுனும் வருடாந்தரச் செலவு பத்தொன்பது பவுன் பத்தொன்பது ஷில்லிங் ஆறு பென்சுமா யிருந்தால் பயன் இன்பமே. வரவு இருபது பவுன் செலவு இருபதுபவுன் ஆறு பென்சுமா யிருந்தால் பயன் துன்பமே என்று டிக்கென்ஸ் (தாம்நேராக அப்புத்திமதியைக் கூறாது மிகாபர் என்பவரைக் கூறச் செய்தாலும் அது புத்தியிற் குன்றாதது) கூறுகின்றார். ஆயினும் ஒருஷில்லிங்கேவேற்றுமை. உமதுகையில் ஐம்பது காசுமட்டு மிருந்து ஒருவார முழுதும் அதற்குமேல் ஒன்றுங் கிடையாதெனில் ஒருவனிடம் ஒரு ரூபாய் கடன்வாங்கி நன்குண்டு வாழினும் ஒருபடி நெல்லை வாங்கி அதைக்குற்றி யதனாற் சீவனம் செய்மின்: கடன் அடிமைத்தன்மையே யெனல் குற்றமாகாது. 'கடன்படு வோர் துயர்க் கடற்படு வோரே'. வாழ்க்கையிற் பல பொருள்கள் நமக்கிணங்காதனவாம். மிக்க அனுபவசாலியான ஹோரஸ்கிரீலி என்பவர் நன்றாகவும் உண்மையொடும் 'பசி, குளிர், கந்தை, உழைப்பு, நிந்தை, ஐயம், அநியாய இகழ்ச்சிகள், இவையனைத்தும் துன்பகரமானவை, ஆனாற் கடன் அவையனைத்தினும்

மிகத்தீயதே என்றுங்கடன்படாதே என்றுங்கூறினர். 'கடன்கொண்டு வாழாமை முன்னினிதே' என்றார். இனியநாற்பதுடையாரும் கடனுடைய கொடுமையைக் கவனித்தே கம்பநாட்டாழ்வாரும் "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினனிலங்கைவேந்தன்" என்றுமுவமித்தார்.

காப்டேன் என்பவர், "மீத்தவர் செலவழித்தவராகிய நன்னிலையிலிருப்போர், வீண் செலவாளிகள் என்று உலகம் எப்பொழுதும் இருவகையாக வகுக்கப்பட்டுளது. எல்லா வீடுகளையும் இயந்திரங்களையும் பாலங்களையும் நாவாய்களையும் கட்டியதும் மனிதனை நாகரிகமுள்ளோனாகவும் ஐக்கியுள்ள மற்ற பெரிய வேலைகளைச் செய்ததும் மட்டாய்ச் செலவிடுவோர்களே. தம் வருவாய்களை வீணாக்கினோர் எப்பொழுதும் அவர் தம்மடிமையாக இருந்திருக்கின்றார்கள், இயற்கை யொழுங்கும் இறைவன் விதியும் இஃதிவ்வாறிருக்க வேண்டுமென்பதே. தாங்கள் எச்சரிக்கை யற்றும் எண்ணமற்றும் சோம்பேறிகளாயும் இருந்தால் தம்மையே தேற்றிக் கொள்ளவேண்டும் என்று நான் கூறுவேனாயின் நான் ஒரு படிறனுவேன்," என்று கூறினர்.

'இபீசஸ் என்னுமிடத்தில் ஆர்டெமிஸ் கோயில் கடன்காரர்களுக்குக் கடன் கொடுத்தவரிடமிருந்து அவர்கள் அடைக்கலம் புகுந்தால் தஞ்சமும் ஒத்தாசையு மளிக்கின்றது. ஆனால் மட்டாய்ச் செலவிடுவோரின் அடைக்கல இடத்துக்கு எல்லாநன்மன துடையோரும் போகலாம். அஃதவருக்குச் சௌக்கியமா யிருத்தற்கு இன்பகரமும் கண்ணியமும் விசாலமுமான இடத்தைத் தருகின்றது' என்று ப்ளூடார்க்கூறியிருக்கின்றார். அற்றேற் கடன்வாங்காதீர். காரியமின்றிக்கடன் கொடாதீர்; உமக்குப் பணமும் வராது வந்தனமும் வராது. ஏனெனில் கடன் வாங்குவோரெப்பொழுதும் தாம் தீங்குசெய்யப்பட்டோராக எண்ணிக்கொள்ளுகின்றார்கள். உம்மாலானதைத் தாராளமாகக் கொடுங்கள்; ஆனால் அது திரும்பி வருமென்றெதிர்பாராதீர்.

பணம் முதலில் மெல்லவந்தால் அதுபற்றி அதைரியப்படாதீர். அஃதோரிடத்துந் திரும்பாது நேரே செல்லும் ஒருநெடுமறுகு. பணம்முதலில் எளிதாய் வரும்படி நேரிட்டால் நல்ல மறுகுகளும் தீய மறுகுகளும் கோணலுள்ளன என்றும், காலம் செல்லச்செல்ல உமக்கு ஒரு வேளை பணம் அதிகமாக வேண்டியிருக்கு மென்றும், எண்ணிக்கொண்டு அதை முழுவதும் செலவிடாது ஒருமழை நாளுக்குச் சேர்த்து வைம்மின். வியாபாரத்திற் பலர் முதலில் அதிக அதிர்ஷ்ட முடையோரா யிருந்ததனல் அழிவுற்றிருக்கின்றார்.

செல்வமுடையோராக அவசரப்படாதீர். 'நீர் தக்கதொரு சித்திரத்தை விலை கொடுத்துப் பெற விரும்பாவிடினும் காலம் வாய்த்துழி அதுவே தன்னை நீர் விலை கொடுத்துப் பெறுமாறு செய்யு' மென்றார் ரஸ்கின்துரையவர்களும்.



பணத்தைப்பற்றிக் கவலைப்படாதீர். அதிக பணம் சம்பாதிக்கச் சிலரே யெதிர் பார்க்கலாமாயினும் சுறுசுறுப்பா யிருந்து மட்டாய்ச் செலவிடுவோனெவனும் உலகில் நன்றாக வாழலாம். நாமடிக்கடி பணம் அயோக்கியமாய் வருகின்ற வந்ததென்று கேட்கின்றோம். ஆனால் வறுமை அநியாயமாய் வருகின்றதென்பதே நடக்கிற விஷயம். வறியரெனப்படுவோர் சிறிதுடையவ ரல்லர். அதிகமாக வேண்டுவோரே வறியரெனப்படுவர்.

தமது இனிய பிரசங்கங்களி லொன்றில் ஸர் ஜேம்ஸ் பேஜெட் என்பவர் தாம் நடைகளையுற்று நோக்கி யிருந்த தம் மாணாக்கரது விவரத்தைக் கூறினர். ஆயிரவரில் இருநூற்றுவர் தம் வேலையை விட்டார், செல்வவான்களாயினர். அல்லது இளமையிலேயே இறந்தார். மீந்த எண்ணூற்றுவரில் அறுநூற்றுவர் நன்னிலை யெய்தினர்; அவர்களுட் சிலர் மிக்க மேதகவுடைய நன்னிலை யெய்தினர். இவருட் பதினைவர் பரீட்சைகளிலென்றுந் தேறவில்லை. பதின்மர் மிதமின்மையினாலாதல் குலவினாலாதல் தவறிவிட்டார். முழுத்தொகையாகிய ஆயிரவரிற் பார்வைக்குத் தங்கையி லகப்படாத காரணங்களால் தவறினோர் இருபத்தைவரே. மருந்தைப்போன்ற ஏனைய வாழ்க்கை வழிகளில் உம்மைப் பயனுள்ளோராகச் செய்து கொண்டால் உம்மைப் பயன் படுத்துவாரென்று நீர் நிச்சயமா யிருக்கலாம்.

உண்மையாகவே வாழ்க்கையின் மெய்யான இன்றி யமையாமைகளைப் பற்றி யெவனும் மிக்க கவலைப்படவேண்டாம். இயற்கையிலே மனிதனுக்கு வேண்டுவது சிறிது, கொடுப்பது பெரிது. இதற்கு எதிராக அவசியமல்லன செலவு வருவிப்பனவாகவுள. ப்ராங்க்லின் கூறியபடி 'ஒரு பாவத்தை வளர்க்கக்கூடியது இரு குழந்தைகளை வளர்க்கும்.'

டியூக் ஆப் வெல்லிங்டன் அறிவுடன் கூறியபடி 'உயர்ந்த வட்டி முதலுக்குக் கேடு' என்பதனை மறவாதீர்.

ஒருகூடையிற் பலமுட்டைகளை வைக்காதீர். உமக்கெவ்வளவு நன்றாய்ப்
புத்தி கூறியிருந்தாலும் எவ்வளவு நன்றாய் நீ ராலோசித்துப் பார்த்திருந்தா
லும் கணக்குக்களனைத்தினையும் தலைகீழாக்கத்தக்க தேதேனு மொன்று சம்ப
விக்கலாம். மகா புத்திசாலிகளாகிய வியாபாரிகளும் சாவகாரிகளும் பிழை
போகின்றார்கள். புத்தியுள்ள வியாபாரி யொருவன் எதிர்பார்ப்பதெல்லாம்
பெரும்பாலும் சரியாயிருக்க வேண்டுமென்பதே. நாம் மிக்க இளைஞராயிருப்
புழியே இரண்டும் இரண்டும் நான்கென் றறிகின்றோம். ஆனால் அவை யிரு
பத்திரண்டும் ஆகலாம்; அங்க கணிதத்தின்படி இரண்டையும் இரண்டையும்
கூட்டினால் நான்கு பெறுவோமென்பது சாலவுமுண்மையே. ஆனால் வாழ்க்
கை நடக்கையில் அஃதொரு மயக்கம். அப்புத்திமதியை யநியாயமாய்ப் பொ
ருத்துவதனால் முன்னுக்கு வரக்கூடியவரிற் பலர் அழிவுற் றிருக்கின்றார்.

அமரிக்கையாய்ப் பொருள்களை வாங்கிக் கொண்மின், பிருஹாம் பிரபு படமெடுக்கும்படி சிறிதுநேரம் கூட அசைவற்று உட்கார முடியாதென்றும் எப்பொழுது உட்கார்ந்தாலும் கோணலாய்ப் போகும் என்றும் கூறப்பட்டுளேம்.

வியாபாரத்திற் பலர் ஓரறையில் அசைவற்றுட்கார முடியாமையினால் அழிவடைந்துளரென்று பேக்ஹாட் கூறுவது வழக்கம்.

தான் விரும்பினும் விரும்பாவிடினும் ஒவ்வொருவனும் ஒருவாறு ஒரு தொழிலாளியே.

நம்மனைவர்க்கும் செயற்பால கடமைகளும் காரியம் நிர்வகிக்க ஓரில்லமும் ஒழுங்குசெய்யச் செலவுகளும் உள. பெருவிஷயங்களைப்போலச் சிறு விஷயங்களும் சிலசமயங்களிற் றீங்கு விளைப்பனவுமாம்.

நல்லவேளையாய் வியாபாரங் கைகூடுதல் கூரிய புத்தியினும் சாதாரணவறிவு கவலை கவனம் இவைகளை அதிகமாய்ச் சார்ந்துளது. 'கடையை நீர் வைத்துக்கொண்டால் கடையும்மை வைத்துக்கொள்ளு'மென்றொரு கர்நாடகப் பழமொழியுமுளது. அதேகருத்துள்ள கதையொன்றை ஜெனுபனும் கூறுகின்றார்.

“பாரஸீக தேயத்தரசன் தனது நேர்த்தியான குதிரையைக் கூடிய சீக்கிரத்தில் மிக்க கொழுப்புடையதாக்க விரும்பி அத்தகைய விஷயங்களில் வல்லோரென நினைக்கப்பட்டிருந்தவருள் ஒருவனைக் கேட்க அவன் ‘அதன் எஜமானன் கண்ணே’ யென்றான்”

தொழிலுக்குரிய பழக்க வழக்கங்களிற் பயிற்சி மிகவு மின்றியமையாதது. சில நாட்கள் முன்னமே தான் என் நேசரில் கெட்டிக்காரனொருவன் நல்ல திறத்தினரிலும் தூயகுணத்தினரிலும் வாழ்க்கையின்கண் வெற்றி பெறுத்தனக்குத் தெரிந்த பலரைப் பற்றியும் யோசிக்குமிடத்து அடிக்கடி அவர் தவறுதலின் காரணம் அவர் தாமதமாயும் நேரந்தப்பியும் பிறருடன் முழுமனதுடன் வேலைசெய்ய முடியாமலும் சிறு விஷயங்களில் விடாப்பிடியாயும் உண்மையாகவே நாம் ‘தொழினலமன்மை’ யென்று கூறுகிறபடியே இருப்பதனாலேதான் என்றெனக்கு நிச்சயமாய்ச் சொன்னான்.

பெரு விஷயங்களிற்போலவே சிறு விஷயங்களிலும் முறைமையும் ஒழுங்கும் மிகவும் முக்கியமானவை. “தகுந்தஇடத்திற்றகுந்தபொருள்” என்பது பொன்போன்ற விதி. அவற்றின் காரியமானவுடன் பொருள்களை யவற்றினிடத்தில் வைப்பதிற் சிறு கவலையெடுத்துக் கொண்டாற் பிறகு உமக்கு வேண்டியபோது மிக்க கஷ்டத்தை நீக்கும்.

‘ஒழுங்கின்மை யொரு குடியானவன் தன் களஞ்சியத்தில் நெல்லும், கோதுமையையும், கடலையையும் சேர்த்துப் போட்டுவிட்டுப் பிறகு தனக்கு அரிசியடையாதல் கோதுமையடையாதல் கடலைக்குழம்பாதல் வேண்டுமானால் அவற்றைத் தனித்தனியாக உபயோகப்படுத்திவைத்துக் கொள்ளாமல் தானியம் தானியமாகப் பிரிக்கவேண்டியது போலுமென்றெனக்குத் தோன்றுகின்றது' என்று ஜெனுபன் கூறுகின்றார்.



அதனை விளக்குதற்கு ஒருகப்பலை யுதாரணம் காட்டுகின்றார். கடலில் ஒரு புயற்காற்றடித்தால் வேண்டிய தின்னதென்று பார்க்கவும் பயன்படுத்த வருத்தமானதை எறியவும் நேரமில்லை. எனெனிற் கடவுளர்கள் கவலையற்றோரைப் பயப்படுத்தித் தண்டிக்கின்றார்கள். தவறு செய்யாதவரையவர்கள் அழிக்காவிடில் நாம் திருப்தியா யிருக்கலாம். எல்லாவற்றினிடத்தும் நேரிய கவனம் செலுத்துவோரைப் பாதுகாப்பரேல்அவரிடம் யாவரும் நன்றியாராட்டற் பாலர். ஒவ்வொன்றையு மதற்குத் தக்கவிடத்தில் வைம்மின்.

தத்துவசாஸ்திரிகள் உண்மையாகவே அனைவரு மில்லாவிடினும் அரிஸ்டாடில் முதல் கார்லைல் வரையிலிருந்தவர்கள் வியாபாரிகளைப் பற்றிக் குறைவாய்ப் பேசியிருக்கின்றார்கள். யான் வியாபாரமே யிழிந்தது என்றும் பெரும்பாலும் தாழ்ந்ததென்றும் கூறவேன். ப்ளேடோ தன்பிரஜாதிபத்தியத்தினின்றும் வியாபாரிகளைத் தள்ளிவிட்டார். அதில் வேலையாயிருக்க யாராவது விரும்பினால் அன்னியர்களுக்கு இத்தகைய இழிந்த பதவியே. ஆயினும் வியாபாரம் அவசியமாய்ப் பலாது வேலையாயிருக்கவேண்டி யிருக்கின்ற காதலாற் குணத்தினிடம் அவர்கள் அதிகாரம் அவசியமாய்த் தீங்குவிளைப்பதாகவும் புத்திப் பயிற்சியொடு ஒவ்வாதும் இருந்தால் அதுமெய்யாகவே விசனகரமானது. அஃதற்றன்மை யதிர்ஷ்டமே. உண்மையாகவே தொழிலாளிகள் தம்காலத்திற் செலவழிக்கக்கூடியதையே பிறவிஷயங்களிற் செலுத்தலாம். ஆனாற்கலைஞர் கவிஞர்இவர்களினின்றும்மாத்திரம்உதாரணங்கள் எடுத்தால் நான் வானநூற் புலவனும் வியாபாரியுமான நாஸ்மித்தையும் சாவகாரியும் சரித்திரக்காரனுமான க்ரோட்டையுங் காகிதம் செய்வோனும் புராதனக் கலைஞர் குழாத்தின் றலைவனும் ராஜரீகக் குழாத்தின்பொக்கிஷக்காரனுமாகிய ஸர்ஜே இவான்ஸையும் வியாபாரியும்பிறகுகோதீர்த்தபுரியிற் பௌமிய நூற்புலவனுமாகிய ப்ரேட்ஸ்விச்சையும் சாவகாரியும் கவிஞனுமாகிய ப்ரீடையும் யான் கூறலாமானால் சாவகாரியும்கணிதசாஸ்திரியும் பல வருடங்கட்கு ராஜரீக குழாத்தின் பொக்கிடக்காரனும் உபசபைத்தலைவனுமாகிய என் சொந்தத் தகப்பனாரையும் இன்னும் பலரையுங் கூறுவேன்.

பொருள்கள் மலிவாயிருக்கும் பொழுது வாங்கி அவை கிராக்கியாயிருக்கையில் விற்பதற்குக் கார்லைல் உறுதியாக ஆக்ஷேபித்தார். விளக்கமுடியாத ஏதோ ஒருவழியால் நாம் பருத்தியின் குறைந்த விலையை நிச்சயிக்க வேண்டுமென்றும் தற்காலத்துக்கு நாம் பருத்தி விலையைக் குறைப்பதற்குக் கவலைப்படவில்லை என்று கூறவேண்டுமென்றும் மற்ற ஜனங்களிலும் குறைந்து விற்கக்கூடாதென்றும் கூறுகின்றார். ‘சகோதரர்காள்! நாம்

குறைத்து விற்கவேண்டாம் நாம் அவர்களைப்போலவே விற்போம்' இஃது சாத்தியமா யிருப்பதே யன்றி வலியற்றதாகவு முளது. நாம் குறைந்த பருத்தி சாமான் விற்றால் குறைந்த உணவு வாங்கவேண்டும். கார்லைல் குறைந்த விலைக்கு அதிகம் விற்கலாம் என்றெண்ணிக் கொள்ளுகின்றார். ஆதலின் அவர் விதிப்படி நடந்தால் மனிதர் உடைவேண்டியிருப்பார். ஆனாற் குறித்த விலை கொடுக்க முடியாதிருப்பார். ஆனாற் குறைச்சலா யெடுத்துக்கொள்ள முடியும். ஆயினும் அவர் நாம் அதை மறுத்துப் பிறருடையையும் உணவையும் கைக் கொள்ளுமாறு செய்கின்றனர். நீர் மலிவாய்க் கொண்டுவரக் கூடியவற்றைக்கொடுத்து உம்மால்முடியாததை வாங்கிக்கொள்வதே வியாபாரத்தின் மூலநிலை. மலிந்தழிவாங்கி அருகிய வழி விற்பது வியாபாரத்தின் முக்கிய விதியாயிருப்பதே யன்றி எல்லாவற்றினும் சிறந்தது. ஏனெனில் லங்கனஞ் செய்வதில் நீர் தம் விளைச்சலை விற்க அதிகமாய் விரும்புவோரிடமிருந்து வாங்க உம்சாமான்களை யதிகமாய் விரும்புவோர்க்கு விற்கின்றீர்கள்: வேறெவ்வழியும் கொல்லன் மறுகிற் சூசிவிற்றல்போலப் பயனற்றதாம்.

மனிதரில் மிகப் பெரியோரும் இன்பமுடையோரும் நன்மையாய்ந்தோரும் மிக்க வறியோரா யிருந்திருக்கின்றார்கள். வேர்ட்ஸ் வோர்த்தும் அவன் சகோதரியும் பல வாண்டுகட்கு வாரம் முப்பது ரூபாய் வருவாயை வைத்துக்கொண்டு சீவனம் செய்துவந்தார்கள். அதுவும் அவர்கள் மிக்க இன்பகரமா யிருந்தவேளைகளுளொன்றே. [சத்திமுத்தப்புலவரும் வறுமைக் கடலிலாழ்ந்து வருந்திய தன்மையாவரும் அறியகிற்பர். 'நாராய், நாராய், செங்கால் நாராய்'' என்ற பாடலும் அதனை வலியுறுத்து மாறறிக.]

நீர் செல்வவானா யிருக்கவேண்டு மென்று விதிக்கப்படாவிடின் சேர்க்கையும் பிரியமும் ஒரு வீடு போன்ற இடத்தையும் சிறிய குடிசையையும் ஒருலகம் போலாக்கி விடும்.

சருக்கை.வரதாச்சாரியன்.

---

## பேக்கனார் சிற்றுரை.

---

### 19-வது துரைத்தனத்துத் தலைமை.

இனிமேலடையவேண்டியது அதிகமாயில்லாமல் ஏற்கனவே கிடைத்திருக்கும் மிகுதி நீங்குமோ என அஞ்சும் நிலைமை மிகவும் துன்பம் செய்யும். துரைத்தனத்துக்கு தலைமை வகிக்கிறவர் நிலைமை இப்படிப்பட்டது. நாட்டில் முதன்மையராதலின், கோரவேண்டிய விஷயம் விசேஷமாயில்லை. அதினாலேயே அவர்கள் புத்தி மெலிவுறும், அன்றியும் தமது உடைமைகளுக்கு



நஷ்டம் வரலாமோ எனப்பலவழியில் தாமாய் திகிலடைந்து, உள்ளம் குழம்பி புத்தி தத்தளிக்கும். திகில் விசேஷப்பட்டு மற்ற எண்ணங்களை ஒழுங்காய்க் கொண்டுபோம்படியான பேரவா ஒன்று இல்லாது இருக்கும். எவருடைய மனதையும் அறிவது கஷ்டமாதலின், "அரசர் உள்ளம் குறிப்புக்கு அகப்படாது" என்று கிறித்தவ வேதத்தில் பிரமாணம் ஏற்பட்டு இருப்பதற்கு மேலே கூறிய தத்தளிப்பே ஒரு காரணமாம். சில அரசர்கள் தமக்காகச் சிலகோரிக்கைகளை கற்பித்துக்கொள்வார்கள், அற்பகாரியங்களில் ஆசை வைத்துக்கொள்வர். ஏதோ ஒரு கட்டடமோ அல்லது புதிய சபையோ, ஏதோ ஒரு ஆளை உயர்த்துகிறதோ, ஏதோ ஒருவித்தை, தம்கைவேலை இவற்றில் புகழ்பெற வேண்டுமென்றோ, தாமாய் கருதுவர். ரோமபுரியில் நீரோ (Nero) சக்ரவர்த்தி ஹார்ப் (harp) வாத்தியம்வாசிக்கமுயன்றார். டாமிஷியன் (Domition) அம்பு எய்வதில் குறிப்புப் பிசகாதிருக்கப் பாடுபட்டார். காரகல்லா (Caracalla) வண்டியோட்டுவதில் திறமைக்காக ஆசைப்பட்டார். இப்படி எவ்வளவோ உதாரணஞ் சொல்லலாம். சாதாரண ஜனங்களுடைய புத்திக்கு எட்டாத சங்கதி ஒன்றுண்டு. அதாவது இம்மைப்பயன் விசேஷமாய் ஏற்கனவே கிடைத்து, அதற்குமேல் ஓங்க இடமில்லாமல் இருப்பதைவிட சொற்ப இம்மைப்பயன்களும் இனிமேல் கிடைக்கவேண்டிய ஸ்திதியில் இருந்து அதற்காகப் பாடுபட்டு, அவைகளை கெலிப்பதில் மனதுக்கு உவப்பு ஜாஸ்தியா யுண்டாம். இதற்கு இன்னும் பல உதாரணங்களுள. முதல் முதலில் எல்லாம் தமக்கு அனுகூலமாய் முடிந்த எத்தனை அரசர்களோ, முழுதும் அவ்வாறு அனுகூலம் சம்பவிப்பது அசாத்தியமாதலின், பிற்பாடு பிரதிகூலங்கள் நேரிடவே, வீண் திகில் பட்டு, சிந்தை யழிந்தனர். மஹா அலக்ஸாண்டரும் (Alexander tho great), டையக்கிளிஷியனும் (Diclesion) நாமறிந்த ஐந்தாவது சார்லஸ் (Charles V), இன்னும் பலரும், இதற்கு இசைந்த உதாரணமாவர். மேன்மேலும் ஏறிப்போன ஒருவர்க்குத் தடை நேரிடின், தம்மனதுக்கே ஒப்புதலற்று, அவர் சொரூபம் தோன்றாமல் மாறுவர்.

துரைத்தனத் தலைமை நடத்துவதில் பக்குவம் எப்பேர்ப்பட்டது என்றால், பக்குவா பக்குவங்களைக் கலந்துபோவது அருமையாம்., பக்குவமான நடையிலும் பல வழிப்பட நடத்தவும், அபக்குவத்திலும் பல வழிப்பட நடத்தவும் வேண்டிவரும் சமயத்துக்குத் தக்கபடிப் பல வழிப்பட நடத்துதலில் பிழையில்லையெனினும், சமயங்களுக்கு விரோதமாக, வழிப்பாடுகளை மாற்றுவது பிழையேயாம். வெஸ்பாஸியன் (Vespasion) கேட்டகேள்விக்கு; அப்பல்லோனியஸ். (Apollonius) சொன்னபதில் ஏற்றது. நீரோ சக்கிரவர்த்திக்கு (Nero) கெடுதி என் நேரிட்டதென்றார். "ஹார்ப் (harp) வாத்தியம் வாசிப்பதில் ஸ்தானங்கள் அறிந்து விரல்களை அழுத்தத் தெரிந்தவர்தான், துரைத்தன விஷயத்திலோ சில சமயங்களில் தந்திகளைச்

கடுமையாய் மீட்டுவர், சில சமயங்களில் அவற்றை அதிகமாய்த் தளர்த்துவர் எனப்பதில் சொன்னார். அப்பேச்சு உண்மைதான். அதிகாரிகள் சமயங்களில் விசேஷ கண்டிப்பாயும் மற்ற சமயங்களில் ஊழலாயும் இருப்பதைப் போல் அதிகாரத்தோரணைக்கு இடஞ்சல் மற்றெதுவும் அவ்வளவு செய்யமாட்டாது.

இக்காலத்து அரசர்களுடைய விவேகமான நடத்தையை எடுத்துரைக்கும் பட்சத்தில், ஆபத்துகள் நெருங்கினபின் அவற்றைவிட்டு சாமர்த்தியமாய் அவர்கள் விலகினதாயும், ஆபத்துகளை கொஞ்சகாலம் வரைக்கும் ஒதுக்கினதாயும், தெரிய வருமே ஒழிய, அவைகள் எப்பொழுதேனும் வாராதிருக்கத் தகுந்த நற் சிந்தனைகள் செய்ததாய் தெரியவராது. ஐயோ பாவம்! அதிருஷ்டவசங்களுக்கு அவர்கள்தான் எப்படி எதிர்நிற்கக்கூடும். ஆனாலும் ஆபத்துக்களுக்கு வழி ஏற்படாமல் நம் கூடியவரையில் நாம் ஜாக்கிரதைப்படலாம். திடீரென்று நெருப்புப் பற்றுவதை யார் தடுக்கலாம். எந்தப்பக்கத்திலிருந்து நெருப்பு புறப்படுமோ எவர்தான் சொல்லலாம். அரசாளுகிறவர் வேலைகளில் ஆபத்துக்கள் பலமாகவும் பலவாகவு மிருந்து அரசாளுகிறவருடைய சொந்த புத்தியில் ஆபத்துகளுக்கு வகையுண்டு. ஏனென்றால், டாஸிடஸ் (Tacitus) சொல்லுகிறதுபோல் அரசர்கள் கொள்ளும் கருத்துக்கள் பெரும்பான்மையாய் ஆச்சிரப்பட்டும் முன்பின் விரோதமாயும் இருக்கும். விரைவாய் காரியம் முடியக்கோருவது தலையார்க்கு இயல்பான பிழையாம், உபாயங்களைச் செலுத்த சாவகாசப்படுமேயென்று பொறுமையை ஆள அவர்க்குத்தெரியாது.

அயல் அரசர்களிடத்திலும், தம் பெண்சாதி பிள்ளைகளிடத்திலும் கோயிலாளும் குருக்கள் பாதிரிமாரிடத்திலும் நாட்டுப்பிரபுக்களிடத்திலும் கீழ்த்தரப்பட்ட பிரபுக்களிடத்திலும் வர்த்தகரிடத்திலும் குடிகளிடத்திலும் ராணுவத்தாரிடத்திலும் அரசர்கள் நடந்து கொள்ளும்முறைவேறுபடும், ஜாக்கிரதையாய்க் கண்காணிப்புடன் ஊன்றி அரசர்பார்க்கப் பெறாராயின் இவர்கள் எல்லாராலும் ஆபத்துக்கள் நேரிடலாம்.

1. அயல் அரசரிடத்தில் ஜாக்கிரதையா யிருத்தல்:—பொது விதி சொல்லத்தரமில்லை. ஏனென்றால் சமயங்கள் வெவ்வேறுபடும். ஆனால் ஒரொழுக்கத்தை மாத்திரம் பொதுவாக யெடுத்துக்காட்டலாம். அதாவது:—அரசர்கள் மற்ற அரசர்களுடைய நடவடிக்கையின்பேரில் விழிப்பாயிருக்கத்தவறலாகாது, அதிக சீமையை அடைந்தாகிலும் வியாபாரம் விசேஷப்பட்டாகிலும் சீமையை அநியாயமாய் ஆக்கிரமித்தாகிலும் இன்னும் எப்படியாகிலும், இச்சேரத்தில் உள்ளதைவிட தமக்குகெடுதி விளைவிக்கும் சாதனங்கள் மற்ற அரசர்கள் அடையாதபடி, எப்பொழுதும் கண்ணோட்டமாய் இருக்கக்கடவர், இப்பேர்பட்ட சந்தர்ப்பங்கள் நேரிடாமல் முன்னேக்குப் பட்டுக்காப்



பது ஸ்திரமான மந்திராலோசனை சபையார்கடமை. ஆங்கிலேய நாட்டில் எட்டாவது ஹென்றியும் (Henry VIII). பிரான் சுதேசத்து முதலாவது பிரான்ஸிஸ்ஸும் (Francis of France), ஜெர்மனியில் சக்கிரவர்த்தியான ஐந்தாவது சார்லஸ்ஸும் (Charles V of Germany) இம்மூவர் நாட்டாமை ஐரோப்பாவில் செல்லுகையில், எந்த ஒருவர்க்கு ஒருகுழிநிலம் கிடைத்தாலும் மற்ற இருவரும் இணங்கி அதனைத்தடுப்பர், யுத்தத்திற்கும் அணிவர், பொருள் ஊக்கியம் கருதி சும்மா இரார் இட்டலி (Italy) க்ஷேமப்பட்டதும், இப்படித்தானென்று குக்யார்டைன் (Quicciardine) சொல்லுகிறார். நேபில்ஸ் அரசர் பெர்டினண்டோவும் (Ferdinando of Naples)ப்ளாரன்ஸ் (Florence), மிலன் (Milan) இவற்றிற்குத் தலைமையர் லோரன்சியஸ்ஸும் (Lorenzius) லூடோவிகஸும் (Ludovicus) இணங்கி இத்தாலியா க்ஷேமப்பட்டது. அயல் அரசரால் கெடுதிநேரிட்ட பின்னர்தான் யுத்தம் தொடக்கலாம் என்பது மத்தியகாலத்துப் பள்ளிக்கூடத்தினர் சிலருடைய அபிப்பிராயம் ஒப்பல்ல, ஏனெனின், ஆபத்துக்கு இடம் உண்டாம்படியாகுமுன் முன் நடவடிக்கை இருந்து, அடிதடி நேரிடாவிடினும் யுத்தத்துக்கு புகுவது முறைப்படும்.

2. அரசாளுகிறவர் பெண்சாதிமாரிடத்தில் நடந்துகொள்வதைப் பற்றி:—ராணிமார் கொடியர்பலர் இருந்தனர். தம் கணவர்க்கு விஷமிட்ட தாய் லிவியாவுக்கு (Livia) பேருண்டு. சுலிமான் (Sulyman) அரசர் பெண்சாதி ராக்ஸ்லானே (Roxolana) என்பவர், தம்கணவரது சீரிய இராஜகுமாரன் சுல்தான் முஸ்தாபா (Sultan Mustapna) வைக்கொன்று அவருக்குத் துன்பம்செய்து, பிற்பாடு குழப்பம் உண்டாக்கினள். இங்கிலாந்தில் இரண்டாவது எட்வர்ட் (Edward II) என்பருடைய ராணியர்தம் கணவரைத்துரைத்தனத்தினின்று நீக்கிகொல்வதற்கு முக்கியமாய் ஏற்பட்டனர். தன் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளைத்துரைத்தனத்தில் நாட்டவேண்டுமென்றுவது ராணிமார்கள் அவிசாரிகளாய் போய்விட்டாவது, இப்பேர்ப்பட்ட ஆபத்துக்கள் நேரிடும்.

3. ராஜவம்சத்து குழந்தைகளிடத்தில் நடந்துகொள்வது:—இவ்விஷயத்தில் எத்தனையோ துன்பங்கள் நேரிட்டதுண்டு. குழந்தைகள்பேரில் பெற்றோர் சந்தேகப்படுதலினால் தீங்கே நேரிடும். மேலே சொல்லியபடி முஸ்டாபாவை (Mustapapa) க்கொன்றபின் சுலிமான் (Sulyman) வம்சத்தினர்க்குப் பேர்கெட்டுப்போய், நாளைக்கும் தர்க்கியில் (Turkey) புது அரசன் ஏற்படும்போது, அவர் சந்ததியரல்லர் என்று நினைக்கப்படுகிறார்கள். இரண்டாவது செலிமஸ்ஸை (Slymus) பொய் சந்ததியாக சொல்ல இல்லையா! கிரிஸ்பஸ் (Crispus) என்ற தன்குமாரர் விசேஷ இடக்காராயிருந்தபடியால் தகப்பனான மகா கான்ஸ்டான்டைனஸ் (Constantinus the great) தம் குமாரரைக்கொன்று அதனால் தம் வம்சத்தினருக்கு ஆபத்

து உண்டாய் கான்ஸ்டன்டைனஸ் (Constantionus) கான்ஸ்டன்ஸ் (Constanci) என்கிற பிற்பட்ட குமாரரிருவரும் துர்மரண மடைந்தார்கள். அவர்களுக்கும் இளைஞரான கான்ஸ்டாஷியஸ் (Constantius) இனுடைய கதியும் துர்மரணமெனலாம், நோய் கண்டிறந்தவராயினும், அவர்மேல் ஜூலியானஸ் (Julianus) படையெடுத்த பின்னரே இறந்தாராதலின் மாஸிடனில் இரண்டாவது பிலிப் (Philip II of Macedon) தன் குமாரர் டெமிடிரியஸை (Demetrius) கொன்றதின்பேரில் அவருக்கே ஏக்கம் பிடித்து ஏக்கத்தினாலிறந்தார். இன்னும் எத்தனை உதாரணங்களோ எடுக்கலாம், குமாரர்களின்பேரில் அவநம்பிக்கைப்பட்டு பெற்றார் க்ஷேமமடைந்ததற்கு உதாரணம் எத்தனையானாலும் அகப்படும். பாஜசட் (Bagazet) டுக்கு விரோதமாக செலிமஸ்ஸும் இங்கிலாந்தில் இரண்டாவது ஹென்றிக்கு (Henry II) விரோதமாக அவர் குமாரர் மூன்றுபேரும் வெளிப்படையாக யுத்தத்துக்கு புறப்பட்டு விட்டபின் பெற்றவர் அபிமானம் அறந்தது கெடுதியாக முடியவில்லை.

4. கோயில் குருக்களிடத்தில் நடந்து கொள்வது:—குருக்கள் மார்க்கு அகம்பாவம் பிடித்தால், அதனால் அபாயம் நேரிடலாம். காண்டர்பரி (Canterbary) மடத்தில் ஆன்செல்மும் (Anselm) தாமஸ் பெக்கட்டும் (Thamas a Backet) பீடம்பெற்று அரசரை யெதிர்த்தனர். அவர்களுக்கு எதிர்ப்பட்ட அரசர்களாகிய வில்லியம் ரூபஸ் (William Rufus)ஸும் முதலாவது, இரண்டாவது, ஹென்றிகளும் (Henry I & Henry II) வலிவான நெஞ்சினராதலின் ஈடுகொடுத்தனர். கோயில் குருக்கள்மார் எனும் ஒரு வகுப்பினர் இருக்கின்றமையினால் தப்பு ஒன்றும் நேரிடாது. குருக்கள்மார்க்கு வெளியரசர் ஒத்தாசை கிடைத்ததனாலும், நாட்டிலுள்ள அரசர்களாலாவது பிரபுக்களாலாவது நியமிக்கப்படவேண்டுவதன்றி மகாஜனங்களால் குருக்கள்மார் நியமிக்கப்படும்படியாய் இருந்ததனாலும் வித்தியாசங்கள் நேரிடும்.

5. பிரபுக்களிடத்தில் நடந்துகொள்வது:—பிரபுக்களை நெருங்கவிடாமல், விலக்குவது பிசகல்ல. ஆனால் அவர்களை மிகவும் தாழ்த்துவதில் அரசாளுகிறவர் உத்தரவாதம் தளர்ந்து தம் அதிகாரம் உயர்கிற ஒருபிரயோசனம் உளதாயினும் தம் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்கிற விஷயத்தில் சாதகம் குறைவுபடும், அரசர்க்குக் காவலும் குறைவுபடும். இங்லண்ட் அரசர் ஏழாவது ஹென்றியின் சரித்திரம் எழுதியிருப்பதில் நன்குகாட்டியதாவது, பிரபுக்களை அவர் தாழ்மைப்படுத்தியதின்மேல், அவர் துரைத்தனத்தில், கஷ்ட நிஷ்டூரங்கள் மிகுந்தன. பிரபுக்கள் அவர் அரசாட்சிக்கு விரோதம் செய்யாவிடினும், அவர்க்கு ஒத்தாசை செய்யாது விலகினர், எல்லாவேலையையும் தாமே ஏற்று முடிக்கவேண்டியவராயினர்.



6. இரண்டாம் படிப்பிரபுக்களிடத்தில் நடந்து கொள்வது:—இவர்களால் கெடுதி நேரிடமார்க்கம் காணோம். இவ்வகுப்பினர் பல விடங்களிற் பிரிந்து கிடப்பர். பேச்சில் எப்பொழுதாவது தாட்டியமாய்ப்பேசுவர். அதனால் என்னகெடுதி? ஒன்றும் இல்லை. முதற்படிப் பிரபுக்களுக்கு, இவ்வகுப்பினர் போட்டியாவர். அவர்கள் மிஞ்சினால், இவர்களைக்கொண்டு அடக்கல்கூடும். குடிகளை நேரே ஆள்கிறவர்களாதலின், குடிக்கலகம் நேரிடும் வேளைகளில் அவர்களை அடக்கிக்கொண்டு போதற்கு இவர்கள் உதவுகிற மாதிரி யாரும் உதவமாட்டார்கள்.

7. வர்த்தகர்கள்:—வர்த்தகர்கள் உடலில் நரம்பு ஒத்தவர் ஆவர். வர்த்தகர்கள் செழிக்காவிடின், நாடானது கைகால் அவயவங்கள் இருந்தும் நரம்பில் இரத்தம் அற்ற உடம்பை ஒக்கும். வர்த்தகர்கள் பேரில் வரியைச் சுமத்துவதினால் அரசர்க்கு நன்மை இராது. வரிபோட்டதாய்ப் பேர் உண்டாகுமே தவிர வரியால் மொத்த வரும்படி கீழ்நோக்கும்.

8. குடிகளாம் மகாஜனங்கள்:—இவர்களால் கஷ்டம் விளையாது. யாராவது விசேஷ சாமர்த்தியத்தினர் அவர்களுக்குத் தலைமைவகித்து நடத்தினால் என்னவோ தெரியாது. அவர்கள் சமயத்துக்கும் ஒழுக்கத்துக்கும் பிழைப்புக்கும் விரோதம் அரசரால் நேரிட்டால், சீமையில் கலகம் ஏற்படும். அது அரசுக்குக் கெடுதியாம்.

9. இராணுவத்தினர்:—இவர்கள் ஒன்று சேர்ந்து பிரத்யேகமான வகுப்பினராய் விவகாரப்பட்டு, அப்போதைக்கப்போது பொருள் இனாம் பெறல் வழக்கப்பட்டிருந்தால், நாட்டுக்குக்கெடுதியுண்டாம். ரோமபுரிச்சரித்திரத்தில் ஜானிஸரியர், ப்ரிடோரியர் எனப் படையர் ஏற்பட்டு வம்புசெய்யவில்லையா? தண்டுகளைப் பல தலங்களில் பிரித்துவைத்து, அவர்களுக்குத்தக்க சேனைத்தலைவர்களை நியமித்து, அவர்களைச் சரிவரக் காத்து பழகுவித்து, பொருள் இனாம் கொடுக்கிற வழக்கமின்றிக் கொண்டுபோவதில் நாட்டின் காவலுக்குக் குணமே யொழிய, தீங்கு காணோம்.

நவக்கிரகங்களுக்கும் அரசர்களுக்கும் ஒற்றுமை சொல்லலாம். நவக்கிரகங்களுக்கும் வழிபாடு இயற்றுகின்றனம், அரசர்களுக்கும் அப்படியே. நவக்கிரகங்களுக்கும் ஓய்வு இல்லை. அரசர்களுக்கும் அப்படியே ஓய்வு இல்லை. அரசர்களைப்பற்றிய சங்கதிகளைக் கடைசியாக இரண்டேபேச்சாய் எடுத்தாளலாம். "அரசரே, நீர் மானிடர்தான், அரசரே, நீர்தான் தெய்வம், கடவுளின் ஸ்தானத்தில் இருப்பவர்நீர்." முதற் பேச்சை நினைப்பில்வைத்துப் போனால், பேராசையடையீர். இரண்டாம் பேச்சை நினைப்பில் வைத்துப்போனால், புத்திக்கு வந்தபடி கடுந்துரைத்தனம் நடத்துவதைக்கடிவீர்.

டி. ஆர். இராமநாதையர்.

# நாடகவிலக்கணச்சுருக்கம்.

## முதற்பாகம்.

நாடக மென்பது நாட்டியமே பிரதானமாயுள்ள நிருத்த விசேஷமாகும். அது பார்க்கத் தகுந்ததாதலின் ரூபமென்றும், ராமர் முதலியோரது அவஸ்தையை (ரீதியை) தன்னிடத்தாக்கொண்டு நடன் வர்த்திப்பது உண்டாதலின் ரூபகம் என்றும் சொல்லப்படும்.

இங்கு நாடகத்திற்கு உபகாரகமாகிய நாட்டியத்தின் தன்மை (ஸ்வரூபம்) முதலில் விவரிக்கப்படுகின்றது. அபிநயத்தினால் சிருங்காராதி ரஸங்களுக்கு ஆசிரயமாகிய தீரோதாத்தர் முதலாகிய நாயகர்களது குறிப்பை யநுசரிப்பது (அநுசரித்து நடப்பது) நாட்டிய மெனப்படும்.

அபிநயமென்பது, அவயவங்களை யசைப்பது முதலாகியவற்றினால் தெரிவிக்கக்கூடிய அர்த்தங்களைத் தெரிவித்தல். அஃது ஆங்கிகம், வாசிகம், ஸாத்விகம், ஆஹார்யம் என நான்கு வகைப்படும். ஆங்கிக மென்பது அங்கங்களினாலமைந்தது; வாசிகம், வாக்குகளினாலமைந்தது; ஸாத்விகம், ஸத்வத்தினாலமைந்தது (இங்கு, ஸத்வம் எனின், ஒருவருக் குண்டாகிய சுகம் துக்கம் முதலியவை தனக்குண்டாகியதுபோல் பாவிக்கும் மனதுடைமை); ஆஹார்யம், ஆபரணம் முதலியவற்றாலமைந்தது.

நாட்டியப் பிரஸ்தாபத்தை யநுசரித்து நிருத்தியமும் நிருத்தமும் நிரூபிக்கப்படுகின்றன.

கேவலம் பாவத்திற்கு இடமாயிருப்பது நிருத்தியமாம். பாவம் என்பது ரஸாபிஞ்ஞான யோக்யதை; அஃதாவது, ரஸத்தைக் கிரகிக்குமறிவு. வாக்யத்தினாலேனும் அபிநயத்தினாலேனும் தெரிவிக்கப்படும் ராமர் ஆதியாயுள்ள தீரோதாத்தர் முதலான நாயகர்களுடைய சுகம் துக்கம் ஆகிய இவைகளின் அநுபவத்தினாலுண்டாகிய வாஸனா ரூபமான ஸம்ஸ்கார மெனப்படும் ஸபையோரது விகாரமே பாவமென்று சிலர் கூறுவர்.

தாளத்திற்கும் லயத்திற்கும் இடமானது நிருத்தமாம். தாளமென்பது பாட்டுப்பாடும்பொழுது அதற்குத் தகுந்தபடிக் கைகளைத் தட்டுதல் முதலியன. லயமென்பது நிருத்தியம், கீதம், வாத்தியம் ஆகிய இவைகளின் சமபாவம்.

“ந்ருத்” தாதுவிற்குக் “காத்திரவிக்ஷேபம்” (தேகத்தை யசைத்தல்) அர்த்தமாம். ஆகையால், சிருங்காரம் முதலிய ரஸமே விஷயமாயுள்ளதும், அங்கங்களின் அசைவு முதலியவற்றினாலாகிய அபிநயமே அதிகமாயுள்ளதுமாயிருப்பது “நிருத்திய”மெனப்படும். நிருத்தியம், நிருத்தம் ஆகிய இவ்விரு பதங்களும் ஒரே தாதுவினின்றும் பிறந்தமையால் காத்திரவிக்ஷேப (தேக அசைவு) அர்த்தத்தில் இரண்டும் சமானமேயாம். ஆயினும் அநுகாராத்மகத்துவத்தினால் (அநுகரித்தல் உளது ஆனதுபற்றி) நிருத்தியமென்பது நிருத்தத்தினின்றும் பிறிதாயிற்று.



“நட”என்னும்தாதுவினுக்குக்“கொஞ்சம் அசைவு”என்று அர்த்தமாகின்றமையால், ரஸவிஷயமும் ஸாத்விகாபிநய விசேஷமும் பொருந்தியிருப்பது “நாட்டிய” மெனப்படும். அன்றியும், வாக்கியார்த்தாபிநயம் பொருந்தியது நாட்டியமாம்; பதார்த்தாபிநயம் பொருந்தியது நிருத்தியமாம். இதுவே நாட்டியம், நிருத்தியம்ஆகிய இவ்விரண்டினுக்கு முள்ள வேற்றுமையாம்.

பதார்த்தாபிநயமே ஸ்வரூபமாயுள்ள நிருத்தியம் ‘மார்க்க’ மென்றும், அஃதல்லாத நிருத்தம் ‘தேசி’ யென்றும் சொல்லப்படும். மேற்கூறிய நிருத்தியம், நிருத்தம் ஆகியவிரண்டும் மெதுவாய் ஆடப்படுமாயின் ‘லாஸ்ய’ மென்றும், (கூத்துமிக்கு) பலமாய் ஆடப்படுமாயின் ‘தாண்டவம்’ என்றும் சொல்லப்படும்.

இவ்வகைப் பேதங்களமைந்த நிருத்தியமும் நிருத்தமும் நாடக முதலியவற்றில் உசிதாநுசாரமா யுபயோகிக்கப்படுகின்றன. வஸ்து (கதை), நேதா (நாயகன்), ரஸம் (சிருங்கார முதலிய ரஸம்) ஆகிய இவை பேதிப்பதனால் ரூபகமானது பத்துவிதமாயேற்படுகின்றது. அப்பத்து விதங்களாவன :—1. நாடகம், 2. ப்ரகரணம், 3. பாணம், 4. ப்ரஹஸநம், 5. டிமம், 6. வ்யாயோகம், 7. ஸமவகாரம், 8. வீதி, 9. அங்கம், 10. ஈஹாம்ருகம் என்பவையாம். இவற்றி லொவ்வொன்றிற்குமுள்ள வித்தியாஸம் வஸ்துபேதத்தினாலும், நாயகபேதத்தினாலும், ரஸபேதத்தினாலும் உண்டாகின்றதென்பது தாற்பரியமாம்.

ரூபகத்திற்குச் சரீரம்போன்றதாகிய வஸ்து (கதை) ‘ஆதிகாரிகம்’ என்றும் ‘ப்ராஸங்கிகம்’ என்று மிருவகைப்படும். அந்த வஸ்து ‘விருத்தம்’, ‘இதிவிருத்தம்’ என்றுஞ் சொல்லப்படும். மேற்சொல்லிய இரண்டு விதமான வஸ்துக்களில் ஆதிகாரிகவஸ்து முக்கியமானது. அது ராமாயணத்தில் ஸீதையின் விருத்தாந்தம் போன்றது. அந்த முக்கியமான கதைக்கு அங்கமாயுள்ள கதை ‘ப்ராஸங்கிகம்’ எனப்படும். ப்ராஸங்கிகம் = ப்ரஸ்தாபவசத்தினால் வந்தது. இது ராமாயணத்தில் ஸுக்ரீவாதிகளின் விருத்தாந்தத்தைப் போன்றது.

முக்கியமாகிய அந்த ஆதிகாரிக வஸ்து அதிகாரியினாலேனும் அதிகாரத்தினாலேனும் நிறைவேற்றத்தகுந்தது; அஃதாவது பயன் வெளியாகும் வரைக்கும் நிறைவேற்றத்தகுந்ததென்றுபொருளாம். அதிகாரம் = பயனுக்குரிமை; அதிகாரி=அதிகாரமுடையவன். முக்கியவஸ்துவினுக்கு அங்கமாகிய ப்ராஸங்கிகமென்பது, ஒருகாரியத்தினிமித்தமாய்ப் பிரவர்த்திக்குங் காலத்துத்தன்காரியம் நிறைவேறுவதாயுள்ளதாகும்.

அந்தப் பிராஸங்கிக வஸ்துவென்பது ‘பதாகை’ என்றும் ‘ப்ரகரி’ என்று மிருவகைப்படும். அநுபந்தத்துடன் கூடியது, அஃதாவது, ராமாயணத்தில்

ஸுக்ரீவாதிகளின் விருத்தாந்தத்தைப்போல முக்கியகதையின் சம்பந்தானுவர்த்தனம் வெகுதூரம் வரையிலுள்ளது 'பதாகை' யெனப்படும். ஓரிடத்திற் சம்பந்தமுள்ளது, அஃதாவது, சிரமணாதிகளின் விருத்தாந்தத்தைப்போல யாதேனுமோரிடத்துக் கொஞ்சம் அநுவர்த்தனமுள்ளது 'ப்ரகரி' எனப்படும்.

பதாகையைப் பற்றிப் பிரஸங்கித்ததனால், இங்குப் பதாகாஸ்தானகம் சொல்லப்படுகின்றது.

பிரகிருதத்திலுள்ள கதையினுடன் திடீரென்று வந்து சேரும் கதையின் சரியான விவரணங்களடங்கிய விசேஷணங்களோடு அந்நியாபதேச வார்த்தையைக் குறிப்பது பதாகாஸ்தானக மெனப்படும். அந்நியாபதேசமென்பது பிரகிருதத்திலில்லாத வொரு அர்த்தத்தைக் காரணமாய்க் கொண்டு பிரகிருதத்திலுள்ள அர்த்தத்தைத் தெரிவிப்பதாம். இது, பிரகரண வசத்தினால், மேலே வரக்கூடிய அர்த்தத்தைத் தெரிவிப்பதில் பதாகையைப் போல் வர்த்திக்கின்றமையால் இதற்குப் பதாகாஸ்தானக மெனப் பெயர் வாய்த்தது. இந்தப் பதாகாஸ்தானகமானது அந்நியோக்தி (அந்நியாபதேச வார்த்தை) யினாலும், ஸமாஸோக்தி (பிரஸ்துதத்தில் அப்பிரமேயத்தைத் தோற்றுவிக்கும் வார்த்தை) யினாலும் இரண்டு விதமாகும். உதாரணம்:—

(1) ரத்நாவளி:—ஓ தாமரைக் கண்ணி! எனக்கிது போகவேண்டிய சமயமாம்; நான் போகின்றேன். நீ ஸுப்தி யடைந்து என்னாலேயே பிரதிபோதிக்கத்தகுந்தவளாவாய்," என்று தாமரைக் கொடியெனு மனைவியைத் தூங்கச்செய்வான் போல அஸ்தமஸ்தக நிவிஷ்டகரனான சூரியன் தோன்றினின்றான்.

தாமரைக்கண்ணி=தாமரைப் பூக்களென்னுங் கண்களையுடையவள்; தாமரைப் பூவைப்போன்ற கண்களையுடையவள், ஸுப்தியடைதல்=மூடிக்கொள்ளல், குவிந்து கொள்ளல், நித்திரைசெய்தல். பிரதிபோதித்தல்=விகஸிக்கச்செய்தல், எழுப்புதல். அஸ்தமஸ்தக நிவிஷ்டகரன்=அஸ்தபர்வத்தின் மீது சேர்க்கப்பட்ட கிரணங்களையுடையவன், எறியப்பட்டதை யெடுத்து வைத்துக்கொள்ளப்பட்ட கைகளையுடையவன்.

(2) அருணைக்கலம்பகம், பிரிவுவிலக்கல்.—

ஆரும்வி ரும்பிய கல்விமே லாசையு மக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாய்ப் பாடிய பாவலர் போலவே
நீரும ருந்தமிழ் செப்பிடு நீர்மைய றிந்திவ ணேகுவீர்
மேருவெ டுஞ்சிலை யத்தனார் வீறரு ணாபுரி வெற்பரே."

(3) ரத்நாவளி:—"தடையில்லாத உத்கலிகைகளினாலும், மிகவும் பிரஸன்னமான முகத்தினாலும், க்ஷணகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஜ்ரும்பைகளினாலும், அதிகமான சுவஸோத்கமங்களினாலும் ஆகிய ஆயாசத்தையுடைய இந்த உத்யானலதையை, மன்மத வேதனையையடைந்த அன்னிய ஸ்திரீயைப் பார்ப்பதுபோல் பார்க்கின்ற நான் ராணிக்குக் கோபாவேசத்தினால் மிகவுஞ் சிவந்தமுகத்தை யுண்டாக்குகின்றேன்.



உத்கலிகை=வெளிவந்த மொட்டுகள்; உயர்ந்த கோரிக்கைகள். ஜ்ரும்பை=விகாஸம்; கொட்டாவி விடுதல். சுவஸோத்கமம்=காற்றினால் மேலே தள்ளப்படுதல்; மேல்மூச்சு விடுதல்.

ஆதிகாரிகத்துவத்தினாலும், இருவிதப் பிராஸங்கிகத்துவத்தினாலும் அந்தக்கதா சரீரம் (வஸ்து, அல்லது, கதை) மறுபடி மூன்று விதங்களாம்; அவையாவன.—1. பிரக்கியாதம், 2. உத்பாத்யம், 3. மிச்ரம்.

பூர்வகாலத்துக் கதைகளினின்றும் புராணங்களினின்றும் சங்கிரகிக்கப்பட்ட கதை பிரக்கியாத மெனப்படும். (மகாவீர சரித்திரம் முதலியவை). கவியினால் புதிதாய்க் கற்பிக்கப்பட்ட கதை உத்பாத்ய மெனப்படும். இதனைக் கற்பிதமென்றுஞ் சொல்லுவர். (மாலதீமாதவம் முதலியவை). மேற்சொல்லிய இரண்டு மடங்கியது, அஃதாவது, பிரக்கியாதமும் உத்பாத்யமுஞ் சேர்ந்தது, மிச்ர மெனப்படும்.

(இன்னும் வரும்)

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

## ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசம்.

1. ஞானமார்க்கத்தில் விவேகமும் வைராக்கியமு மில்லாமல் ஒன்றுஞ் சாத்தியப்படாது. விவேகமாவது சத்தியமாகிய கடவுளினின்றும் தோற்றமாகிய பொய்யுலகத்தைப் பிரித்தறிவதாம். வைராக்கியமாவது செல்வம் அதிகாரம் போகம் என்றிவற்றிற் பற்றின்மையாம்.

வைராக்கியம் பலவகைப்படும்; அவற்றுள் ஒன்று உலகத்துன்பத்தில் உண்டாகும் அதிதுக்கத்தினாற் பெறப்படுவது. ஆனால், இதனைவிட நல்லதான வைராக்கிய மொன்றுண்டு. அது உலகத்தில் அடையப்படும் நன்மைகளெல்லாம் பொய்யென்றுணரும் ஞானத்திலுதிப்பது. இந்த நன்மைகளும் மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய தன்மையிலேயே யிருக்கின்றன. இவ்விதமாக எல்லாவற்றையும் அடைந்தும் ஒன்றையு மடையாதவனா யிருக்கிறான்.

2. உண்மை ஞானத்தை யடைவோர் தொகைமிகக் கொஞ்சம். பகவற்கீதையில் "ஆயிரத்திலொருவன் ஞானத்தையடைய முயற்சிக்கிறான்; அப்படி முயற்சிப்பவர் ஆயிரம்பேர்களி லொருவனே தான் குறித்த பொருளையடைகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. ஒருமனிதனுக்கு உலகத்தில் எவ்வளவு ஆரம்பற்று இருக்கிறதோ, அவ்வளவுதூரம் ஞானமடைதல் கஷ்டமாயிருக்கிறது. எவ்வளவு அற்பம் பற்றோ, அவ்வளவுக்கு ஞானம் அவனுக்குச் சாத்தியமாகின்றதென்று சொல்லலாம்.

4. ஞானநிலைப்பேதம் :—பாவநிலை ; பிரேமநிலை. ஸச்சிதானந்த வஸ்துவைத் தியானிக்கும்பொழுதோ அநுபவிக்கும்பொழுதோ வாக்கும் மனமும் மவுனமாகி நிற்கும் நிலை பாவநிலை. ஸச்சிதானந்த வஸ்துவாவது ஸத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்று குணங்கள் மட்டுமே அதற்கு உண்டென்று சொல்லக்கூடிய பரம்பொருள். ஜீவனால் (சாமானிய ஜனங்களால்) அடையக்கூடிய முடிவுநிலை பாவநிலையே.

5. பிரேமநிலை :—பிரேமை (கடவுளிடத்து வைக்கப்படும் பேரன்பு) சிலராலேயே யடையப்படுந் தன்மையது. அதனை யடைவோர்கள் மனிதர்களேயாயினும் அசாதாரண சக்திமான்களாய், தெய்வ சங்கற்பத்தால் விசேஷகாரியங்கள் நடத்திக்காட்டப் பிறந்திருக்கிறார்கள். தெய்வசக்திக்கும் தெய்வமாட்சிக்கும் பாத்திரர்களாகிய இவர்கள் ஒருவகுப்பினராய் வாழ்கின்றனர்.

ஈசுவர அவதாரங்களும், ஈசுவர அம்சங்களாகிய உயர்தரப் பக்தர்களும் இவ்வகுப்பைச் சார்ந்தவர்களாம்.

"பாவநிலை பழுக்காத மாம்பழம் பிரேமை பழுத்த மாம்பழம்." பிரேமை (ஈசுவரபக்தி) ஸச்சிதானந்தத்தைக் கட்டுவதற்காக பக்தர்கள் கையில் வைத்திருக்கும் கயிறுபோலாம். [பத்திவலையிற்படுவோன் காண்க.—திருவாசகம்] பக்தன் ஈசுவரனைத்தன் கையில்வைத்து ஆட்டுகின்றான் என்று சொல்லும்படி யத்தனைபிடிப்பு இருவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. எப்பொழுது ஈசுவரனை வாவென்று பிரார்த்தித்தாலும் அவர் வரக்கடமைப் பட்டிருக்கிறார்.

பாரசீக புத்தகங்களில், "தசைக்குள்ளே எலும்பு இருக்கின்றது. எலும்புக்குள்ளே மச்சையிருக்கின்றது, மச்சைக்குள்ளே...................... எல்லாவற்றுக்கும் அடியில் பிரேமை இருக்கின்றது" என்று எழுதப்பட்டிருக்கின்றது.

6. பிரார்த்திப்பதெப்படி? உலகத்திலுள்ள விஷயங்களை வேண்டி நாம் பிரார்த்திக்கக்கடவோமல்லம். நாரதரைப் போலப்பிரார்த்திப்போம். நாரதர் ராமச்சந்திரரை நோக்கிக்கேட்டார் "இராமரே, உம்முடைய பாதகமலங்களில் பக்தி (அன்பு, வழிபாடு, தற்போத நீக்கம்) யை எனக்கு அருளும்". "அங்ஙனமே யாகுக" என்றார் இராமர், "ஆனால், வேறொன்றையுங் குறித்துக் கேட்கமாட்டீரா?" இதற்கு, நாரதர், "பகவானே, பிரபஞ்சத்தை மயக்குந் தன்மையதாகிய உம்முடைய மாயையால் நான் மயங்காமலிருக்கும்படி



கடாக்ஷிக்கவேண்டும்" என்று மறுமொழி புகன்றார். ராமச்சந்திரர் மறுபடியும் "அங்ஙனமாக; நாரதரே, வேறொன்றும் வேண்டாமா?" என்றார். நாரதர் "இல்லை, பகவானே, எனக்கு அவ்வளவேபோதும்" என்று உத்தரங் கூறினர்.

7. ஞானம் பலபேதப்பட்டு விளங்கும். முதலாவது லௌகிகர்களுக்கு உரித்தான ஞானம். இது போதுமானபடி பலமுடையதன்று. இதனை, ஓரறை நடுவில் இருந்து அவ்வறையை மட்டுமே பிரகாசப்படுத்தும் தீபவொளிக்குச் சமானமாகச் சொல்லலாம். பக்தனுடைய ஞானம் இதனினும் அதிக பலமுடையது. இதனை அறைக்கு உள்ளும் புறம்பும் உள்ள பொருள்களைக் காட்சிக்குப் புலப்படச்செய்யும் சந்திரஜோதிக்கு உவமை சொல்லலாம். ஆனால், இன்னும் சிறந்த ஞானமாகிய அவதாரங்களினுடைய ஞானமிருக்கின்றது. அதனை யின்னும் அதிக பிரகாசமுடைய சூரிய ஜோதிக்கே யுவமை கூறல் தகும். அந்த ஜோதி அறையின் உள்ளும் புறம்புமுள்ள எத்தனை நுண்பொருள்களையும் தெளிவாகக் காட்டவல்லதாம். அவதாரத்தினிடத்தில் அஸாத்தியமென்ற பேச்சேகிடையாது. அவதார புருஷர்கள் உலகத்திலுள்ள அதிசாமானிய விஷயங்களை விளக்கிக் காட்டுவது போலவே ஜீவபரவிஷயங்களைப்பற்றிய ஆசங்கைகளை நிவிர்த்திசெய்து தெளிவுதருகின்றனர். மனிதர்க்குப் பிரதானமான நுட்பவிஷயங்களைப் பற்றி யவர்கள் பிரசங்கிக்கும்பொழுது சிறுபிள்ளையிருந்தாலும் அவ்வளவையும் கிரஹிக்கும். பலயுகங்களாகச் சேர்ந்திருக்கும் அஞ்ஞான விருட் குவியலைச் சிதறவடித்தோட்டும் தெய்வஞான சூரியர்களென்று சொல்லத்தக்க மாட்சியுடையவர்கள் அவ்வவதார புருஷர்கள். கடைசியாக, சந்திர ஜோதியும் சூரிய ஜோதியுங் கலந்தாலுந் தன்மையினாலே சந்திர சூரிய ஜோதியென்று சொல்லத்தகும் அபூர்வக் கலப்புஜ்ஜோதியொன்றுண்டு. பக்திஞானம் என்னும் இரண்டும் ஒருங்கேயுடைய சைதன்ய தேவராதி யவதார புருஷர்களினுடைய அபூர்வ ஞானத்திற்கு இதனை யுவமைப்படுத்துக் கூறலாம். அது ஏககாலத்தில் சூரிய சந்திரர் ஆகாசத்திற் றோன்றினாற்போலொத்த தன்மையுடையது. இவ்விதமாக, பிரகிருதியில் சூரிய சந்திரர் சேர்க்கை எத்துணை யபூர்வமோ, அத்துணை யபூர்வம் பக்தியும் ஞானமும் ஒரேமனிதனிடத்துக் காணப்படுகை என்றறியற்பாலது.

8. உலக விஷயங்களில் அழுந்திய மனிதன் தெய்வ ஞானத்தை யடைதல் கூடாது. தெய்வதரிசனம் அவனுக்குக் கிடையாது. கலங்கின ஜலத்தில் சூரியனாவது சுற்றிலுமுள்ள எந்தப்பொருளாவது பிரதிபிம்பிக்குமா? ஆனால் இதற்கு ஏதாவது பரிகாரமுண்டா? லௌகிகனுக்கு ஈடேற்றமென்பதில்லையோ? என்றால், உண்டு. கலங்கினஜலத்தில், சினக்காரம்போன்ற சுத்திகரிக்கும் வஸ்துவொன்றையிட்டால், ஜலம் சுத்தமடையும்; அசுத்தங்களெல்லாம் பாத்திரத்தினடியிற் போய்த்தங்கும். விவேகமும் வைராக்கிய

மூம் சுத்தீகரிக்கும் கருவிகள். இவ்விரண்டையும் உபயோகித்து லௌகி
கன் சுத்த புருஷனுகிறான்.

9. சாதந நிலைகள் :—

௧. சாதுசங்கம், அதாவது நல்லோர் கூட்டுறவு.

௨. சிரத்தை, அதாவது ஆத்மபரசம்பந்தமான பொருள்களிடத்து லக்ஷி
யம்.

௩. நிஷ்டை, அதாவது தான்குறித்த பொருளிடத்து மனத்தைச்செ
லுத்தி அங்கே அதனை இடையறாது நிறுத்துகை.

குறித்தபொருள், ஒருவனுடைய குருவாயிருந்தாலு மிருக்கலாம், நிர்க்
குண தெய்வமாயிருந்தாலு மிருக்கலாம். அல்லது சகுண ஈசுவரனும் அவ்வீ
சுவரனது அநந்த தோற்றங்களிலொன்றாயும் இருப்பினுமிருக்கும். அன்றி
ஒருவனது குலதேவதையாயிருந்தாலு மிருக்கும். வைஷ்ணவர்கள், தங்கள்
நிஷ்டைக்கு உரிமைப் பொருளாக விஷ்ணு அல்லது ஸ்ரீ கிருஷ்ணனைத் தெ
ரிந்து கொள்ளுகிறார்கள். சாக்தர்கள், காளி, துர்க்கை,என்று பலபேதப்படும்
சக்தி (லோக மாதா) யைத் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

௪. பாவநிலை, அதாவது ஈசுவரனென் றெண்ணிய வளவில் வாக்கு
மன மிரண்டு மடங்குகை.

௫. மகாபாவநிலை; பாவம் அதிகரித்தபொழுது, அதாவது ஈசுவரனி
டத்து மனவொருமைப்பாடு உச்சநிலையை யடையும்பொழுது, மகாபாவம்
பிறந்ததென்று சொல்லத்தகும். பைத்தியகாரனைப்போலச் சிலவேளை சிரிக்
கையும் சிலவேளை அழுகையும் பக்தனிடத்துக் காணப்படும். அவனுக்குத்
தன் சரீரத்திலுள்ள சுதந்திரமெல்லாம் மறைந்துபோகின்றது. இந்நிலை
ஜீவர்களால், அதாவது சரீரவிச்சையைக்கலையும் வன்மைபெறாத சாமானிய
மாந்தர்களால் அடையப்படுவதன்று. மஹாபுருஷர்களுக்கே அது ஸாத்திய
மாம். மாந்தர்களது ஈடேற்றத்திற்காக உலகில் வந்துதோன்றும் அவதார
ங்களே மஹாபுருஷர்களாம்.

௬. பிரேமையும் மஹாபாவமும் ஒன்றற்கொன்று அணையாயிருக்கின்
றன. பிரேமை யென்பது ஈசுவரனிடத்தில் வைக்கப்படும் உழுவலன்பு.
கிரமமாகப் பார்த்தால் ஞானமார்க்கத்தில் உயர்ந்தநிலை பிரேமையேயாகும்
இந்நிலையின் லக்ஷணங்கள் இரண்டு. ஒன்று, இவ்வுலகத்தை மறந்துவிடு
தல்; மற்றொன்று, தன்னை (சரீரத்தையும் உள்ளிட்டு) மறந்துவிடுதல். இந்
நிலையை அடைந்திருந்த சைதந்யதேவர் ஈசுவரபக்தியில் மூழ்கியிருந்த
மையால், பலமுறை தம்மையும் மறந்து தாம் போன இடங்களிவையென
அறிய அசக்தராயிருந்தார். ஒருவிசை தம்முன்னே காணப்படும் வனத்



தைக்கண்டு, அவர் 'இது பிருந்தாவனம்' (கோகுலம்) என்று சொல்லும்படி
யவ்வளவுதூரம் மறந்திருந்தார். பூரியென்னுமூரில் கடலைக்கண்டு அது
யமுனையென்று கருதினார். இந்நிலையில், அவர் கடலில் விழுந்துவிடுவார். இ
ரண்டு மூன்று தடவை அவருடைய நண்பர்களும் சிஷர்களும் அவர் போய்
விட்டாரென்றே நினைத்தார்கள். இந்நிலைதான் பக்தனைமுடிவுநிலைக்கு அ
தாவது ஈசுவரனிடத்துக் கொண்டுபோகின்றது. பக்தன் கடவுளைத் தரிசிக்
கின்றான். வாழ்க்கைப்பயனை யடைகின்றான். தெய்வக்காட்சி யவனுக்குச்
சாத்தியமாகின்றது.

10. திடீரென்று ஞானத்தையடைதல் கூடாத காரியம். ஞானமடைத
லும் அடையாமையும் காலத்தைப்பொறுத்திருக்கிறது. ஒருவன்மிகக்கொடு
மையான ஜ்வரத்தினால் வருந்துகிறானென்றுத்தேசித்துக் கொள்வோம். அப்
படிப்பட்ட சந்தர்ப்பங்களில் வைத்தியர் கொயினாவைப்பிரயோகித்தல் அடா
து. பிரயோகித்தாலும் அதுபயன்படாதென்று அவர்க்குத்தெரியும்.முதலாவ
து ஜ்வரம்நோயாளியைவிட்டுப்பிரியவேண்டும்.அது காலத்தைப்பொறுத்தது.
அப்புறந்தான் கொயினா பிரயோஜனந்தரும். சில வேளை கொயினா அல்லது
வேறு எந்தமருந்துங் கொடுக்காமலே ஜ்வரம் விட்டுநீங்கினாலும் நீங்கும்.
இந்த திருஷ்டாந்தத்தை வைத்து ஞானத்தை யடைய விரும்பும் பக்குவியி
ன் றன்மையையுமறிந்து கொள்ளலாம். அவன் உலக வியவகாரங்களில் அ
மூழ்கியிருக்கும்வரை, அவனுக்குச் சமயபோதனைகள் பெரும்பான்மையும் ப
யன்படாமற் போகின்றன. உலக விஷயாநுபவத்தில் போதுமானகாலம்
அவன் மகிழ்கவென்று விட்டுவிடுதல் அத்தியாவசியகம். பிற்பாடு சிறிது
சிறிதாக உலகத்திலுள்ள பற்று நீக்க மடையும். அவனுக்குச் சமய போ
தனை செய்வதற்குத் தக்ககாலம் இதுதான். இதுவரை, எவ்வகைப் போதனை
களும் அவனுக்குப் போதியாமலிருத்தலே நலம். போதித்தால் அவை அவ
னாலேற்றுக் கொள்ளப் படமாட்டாவென்பது உறுதி. (செங்கல்லும் சாந்து
ங்குழைத்துக் கட்டப்பட்ட) பக்காச்சுவரில் ஆணியறைய நினைத்தால் முடி
யுமா? சுவரில் ஆணிமுனையழுந்துமுன்பே அது ஒடிந்துபோமென்றலே தகு
தி. முதலையை வாளால் வெட்டுதல் எவ்வளவு மூடத்தனம்? வாள்கொஞ்சங்
கூடக் காயம் உண்டுபண்ணாதென்பது தீர்ந்தவிஷயம். ஆகையினால் இப்ப
டிப்பட்ட விஷயங்களிலெல்லாம் காலத்தைப் பிரதானமாய்க் கவனித்தல்வே
ண்டும். ஒரு குழந்தை இரவிற் றூங்கப் போகும்பொழுது 'அம்மை, எனக்கு
வெளியே போகவேண்டி யிருக்கும்பொழுது என்னை எழுப்பிவிடு' என்று
சொல்லிற்று. இது கேட்ட, அம்மை 'குழந்தாய்! வெளியே போகவேண்டி
யிருத்தல் தானே உன்னையெழுப்பிவிடும். இதற்காக நீ என்னிடத்தில் சொல்
லவேண்டியதில்லை' என்றாள். ஞானதாகம் அநேகமாய் காலத்தை முன்னிட்
டு ஏடை பெறுகின்றது. குருவெல்லாம் துணைமாத்திரமாயிருக்கிறார்,

11. மாம்பழம் தின்னக்கருதி நாம் ஒரு தோப்பினுட் பிரவேசிப்பதாக எண்ணிக்கொள்வோம். அநேக ஆயிரக்கணக்காயிருக்கும் மரங்களை எத்தனையுண்டென்று எண்ணிப்பார்ப்பதும், லக்ஷக்கணக்காயிருக்கும் கிளைகளை இத்தனையிருக்கின்றனவென்று கணித்தறிவதும், கோடிக்கணக்காயிருக்கும் இலைகளைச் சரிபார்த்தறிவதும் அவசியமோ? அவசியமென்று ஒரு மூடனுஞ் சொல்லான். நாம் உடனே வந்தகாரியத்தை முன்னிட்டு மாம்பழம் தின்னப்புகுவோம். அதுபோலக் காலத்தையும் சக்தியையும் வீணாக்குகின்றனவென் றுணராது கடவுளைப்பற்றிய விவகாரங்களிற் புகுந்து சிக்கிக்கொள்ளுதல் மகாமூடத்தனம். இந்தப்பிரகாரமாகக் காலத்தை வியர்த்தமாக்குதலைவிட்டு ஒருவன் உடனே முக்கியமாய்ச் செய்யவேண்டிய கடமை யெதுவென்றால் ஈசுவரபக்தி செய்தலாம்.

12. ஈசுவர தரிசனமென்பது எல்லாருக்கு மெளிதில் விளக்கிக் காட்டப்படுந் திறத்ததன்று. ஆயினும், அது கைகூடிவருங் காலத்துத்தோன்றுங் குறிகளைவைத்து அதனிலைமையைத் தீர்மானிக்கலாம். நாடகங்கள் நடிக்கப்படும் அரங்கிற்கு நீங்கள் போயிருந்திருப்பீர்களே. நடர்கள் வந்து நடிக்கத் தொடங்குமுன் அங்கேயுள்ள ஜனங்கள் ராஜதந்திரம், இல்லறதருமம், சர்க்கார்வேலை முதலியவற்றைக் குறித்துப் படபடப்பாய்ப் பேசிக்கொண்டிருப்பார்கள். திரையைத் தூக்கினவுடனே, மலைகளும், குடில்களும், நதிகளும் காட்சிக்குப் புலப்படுகின்றன. பிற்பாடு சகல சப்தங்களும் அடங்குகின்றன. சம்பாஷணைகளெல்லாம் நிறுத்திவிட்டு ஒவ்வொருவனும் தனக்கு முன்னே காட்டப்படும் காட்சியை ஏகாக்ரசித்தத்தோடு நோக்குகின்றான். ஈசுவரதரிசனம் அநுக்கிரகிக்கப் பெற்றவனுடைய நிலையும் அநேகமாய் இப்படிப்பட்டதாதாமென்று சொல்லலாம்.

அனவரதவிநாயகம்பிள்ளை.

---

## சமாசாரக் குறிப்புகள்.

**திராவிடபாஷா சங்கம்:**—இச்சபையை விருத்திக்குக்கொண்டு வரவேண்டுமென்றும் திராவிடபாஷையை ஆதியிலிருந்த நிலைமையிலே யிருக்கவிடாது நாளுக்குநாள் வளர்த்திக்கொண்டு வரவேண்டுமென்றும் எண்ணி அதற்குத்தகுந்த காரியமும் நாளடைவில் சிறிதுசிறிதாய்ச் செய்து கொண்டு வந்தவர்களுள் தமிழ்பாஷையின்கண் அதிக ஆர்வங்கொண்டு அதுவும் மற்ற பாஷைகளைப்போல் விருத்தியாகிக் கொண்டுபோகவேண்டும் என்னும் எண்ணங்கொண்டு சென்ற சிலவருஷமாக அதற்குரிய நடவடிக்கை நடத்திக்கொண்டு வந்தவர்களுள் முக்கியமானவர்களில் ம-ா-ா-ஸ்ரீ, விளாங்குப்பம் தாதாசாரி சேஷாத்திரி யாச்சாரியா ரென்பவரும் ஒருவர். இவர் இச்சபையை விருத்திக்குக் கொண்டுவருவதற்குத் தன்னாலியன்ற வளவு வேண்டிய

REGISTERED
22 AUG. 1901
OFFICE ... MADRAS.

# ஞானபோதினி.

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

160956

வால்யூம். IV.

1900-ஆகஸ்டு முதல் 1901-ஆகஸ்டுவரை.

பத்திராதிபர்:—பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பித்தது.

1901.

செல்வகேசவராய முதலியார், (திருமணம்) எம். ஏ.—முதலாழ்வார்கள் வைபவம்.
சொக்கலிங்கம் பிள்ளை, (ஸி. எஸ்).—கடவுளுண்மை
சோமசுந்தரம் பிள்ளை, (சா.) பி. ஏ.—மகாராணி யவர்கள் மீது இரங்கற்பா, இந்து ஜனசமூகச் சீர்திருத்தம்.
தமிழ்ப் புலவர்.—தோத்திரப்பா.
தங்கவேலு முதலியார், (நீன்றை).—சோமசுந்தர நாயகர்.
திருமலைக் கொழுந்து பிள்ளை, பி. ஏ.—கல்லாட வாராய்ச்சி.
நீலமேக சாஸ்திரிகள், (பிரமஸ்ரீ).—பௌத்தமதம்.
நால்நலங் காண்போன்.—சீவக சிந்தாமணி.
பத்திராதிபர்.—விஞ்ஞாபனம், புது நூற்றாண்டு.
பரிதிமாற் கலைஞன்.—தனிப்பாசுரத்தொகை.
பலராம ஐயர், (என்).—குயில், காணமற் போனதோர் ஒட்டை, திருவிடை மருதூர் கலம்பக வாராய்ச்சி.
பாலசுந்தர முதலியார், (தண்டலம்).—சமய தத்வஞானம்.
பிரணதார்த்தி ஹரசிவன், பி. ஏ.—சிலப்பதிகார வாராய்ச்சி.
முத்தைய முதலியார், (செய்யூர்).—கல்விச் செல்வம்.
முருகேச முதலியார், (தி. மே).—ஜெயகாந்தன்.
வரதாசாரியர், (சருக்கை).—வாழ்க்கைப்பயன்.
வாசுதேவைய பந்துலு, (ஜ. ப).—மதுரைத் தமிழ்ச்சங்கம்.
வேதாசலம்பிள்ளை, (நாகப்பட்டினம்).—வேனிற்பாட்டு.
ஸ்ரீநிவாச ஐயங்கார், (கு. ரா.) பி. ஏ. ருக்மணி சரித்திரம், மகாதேவ கோவிந்த ரானடே.
ஸ்ரீரங்காசாரியர், (தி. கோ).—இராமாநுஜாசாரியர் சரிதம்.

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900ஞு ஆகஸ்டுமீ 20உ { நெ. 1.

## விஞ்ஞாபனம்.

திருந்திய தமிழமு தருந்துநன் மாந்தர்காள்!

யாம் சென்ற மூன்றுவருடங்களாக ஞானபோதினி யென்னும் இவ்வுயர்தரச் செந்தமிழ்ப் பத்திரிகையைப் பற்பல விடையூறுகளி னிடையினுங் கைசோரவிடாது நடத்திவந்தோம். இப்பொழுது நான்காம்வருட ஸம்புடமுந் தொடங்கியிருக்கின்றோம். இச்சஞ்சிகைகளிலெல்லாம் நல்விஷயங்கள் எழுதி நன்மை புரிந்த நல்லறிவாளர்க்கும் சந்தாத்தொகை யளித்துப்பத்திரிகை பெற்று வந்த நண்பர்களுக்கும் மனப்பூர்வமாக வந்தன மளிப்பதோடு அம்மாட்சியுடையார் தமது போதத்தையும் ஆதரவையும் நாளும் உதவல் வழுவார் என்னுந் துணிவுடையேமாயினேம்.

சென்ற வருஷத்திய ஸம்புடத்தை நோக்குவார்க்கு இத்தகைய உபகாரம் இவ்விதத்தில் உலகிற்குச் செய்யப்பட்ட தென்பது விளங்கும். கடவுளுண்மை, வானம்பாடி, மல்லிகை மாதவர், வாழ்க்கைப்பயன், நூல்விழைவு, பேக்கனார் சிற்றுரை, தேசாபிமானி, பாரதஸாரம் முதலியன ஆங்கிலமொழியிலுள்ள பிரபலகவிகள் பிரபலவசனங்கள் என்றிவற்றின் மொழிபெயர்ப்பாம். காதம்பரி, முத்திராராட்சசம், விக்கிரமோர்வசி நாடகம், சாந்திவிலாசம் முதலியன ஸம்ஸ்கிருத பாஷையினின்றும் மொழிபெயர்க்கப்பட்டன. கடற்கரையுலா, தாமரைத்தடம், திருப்பரங்கிரிக் குமரன்தாலாட்டு, பெண்கல்விக்கும்மி முதலியன ஸ்வயமாக யாக்கப்பட்ட அருமைச் சிறு-

பிரபந்தங்களாம். இவையன்றித் தமிழ்க்கவிசரிதம், நக்கீரனார் தெய்வப்புலமைமாட்சி, சிலப்பதிகார ஆராய்ச்சி முதலிய தமிழ்க்கலை விளக்கங்களும், மதிவாணன் கதை, கமலினி முதலிய விநோதக் கதைகளும் எழுதப்பட்டன. இன்னும் பலவுள. விரிக்கிற்பெருகும். விஷயத்தொகுதியை யுற்றுக்கவனிப்போர் நீதிசாரம், ஞானோபதேசம், லௌகிகமுறை, சுவைதருகதை, நவீனசாஸ்திர போதம் என்னும் பலவகை வகுப்புக்களுள் ஒவ்வொன்றும் நமது பத்திரிகையில் இடம் பெற்றனவென் றறியாமற்போகார்.

ஆயினும் செய்தன வொழியச் செய்யற்பாலன உளவென்பதை மறுக்கின்றோமல்லம். முதலாவது, விஷயங்கள் இதுவரை கடின நடையும் எளிய நடையுங் கலந்த தமிழ் நடையில் எழுதப்பட்டு வந்தனவாதலின் சில விஷயங்கள் பெண்கள், பாமரர், சிறுவர் என்னும் எண்ணுட்பட்ட சிலர்க்குப் பயன்படாவாயின. இனி வருவனவெல்லாம் இலக்கண வழுவில்லாத எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதப்படல்வேண்டு மென்பதே எமது கொள்கை. இதனை விஷயதானஞ் செய்பவரெல்லாந் தயைகூர்ந்து கவனிப்பாராக. மாறுபடு மிடங்களில் பத்திராதிப சுதந்திரம் பாராட்டித் திருத்தங்கள் செய்யப்படும்.

இரண்டாவது, தமிழ்ப்புலவர்கள் சரித்திரங்கள் பலபல நூல்களிற் சிதறுண்டு கிடக்கின்றன. ஐதிகங்களாகவும் வழங்குகின்றன. அவற்றையெல்லாங்கூட்டிப் பொய்களைந்து காலநிர்ணயம் சரித்திரநுட்ப மென்றிவற்றோடு வெளியிடுதல் அத்தியாவசியகம். தஞ்சை, கழுக்குன்றம், சிராப்பள்ளி, காஞ்சி முதலிய இடங்களில் அகப்பட்ட சிலாசாஸநம் முதலியவற்றினால் சோழராஜகுலபரம்பரை சோழநாட்டின் முற்காலஸ்திதி யென்றின்ன வரையறுக்கப்பட்ட வரை ஆங்கிலத்தில் தோன்றியிருக்கின்றன. அவற்றைத் தமிழ்மாட்டு அபரிமித ஆசையுடையாரும், பி-ஏ., எம்.ஏ., பரீக்ஷைகளுக்குச் சரித்திரபாடங்களிற் பிரவேசிப்போருமேகதேசமாய்க்காணும் மதுகை யடைகின்றனர். அவற்றின் ஸாரமாயினும் தமிழ்மொழியிலெழுதப்படின் மிக்கநன்மையுண்டாம். மற்று, இதுவரை தோன்றிய நூல்களின் விபரங்களும் அவற்றுள்



இது கொள்ளற்பாலது இது தள்ளற்பாலது என்னும் விவேகவுணர்ச்சியும் போதிக்கப்பட்டிலது. அன்னதொன்று வெளியாதல் அநேகர்க்குப் பயன்தரும். சைவசமயம், வைணவசமயம், வேதாந்தம், கிறிஸ்தவமார்க்கம், மகம்மதியமார்க்கம், பௌத்தமதம், சமணமதம், என்பவற்றின் சாரங்களும் சுருக்கியெழுதப்படல்வேண்டும். உடலுறுபிணிகளை நீக்குதற்குமேற்புலத்தோர் நூதனமாய்க்கண்டுபிடித்த *வசீகர நித்திரை முதலிய பிரயோகங்கள், உயிருறுபிணியைத் தொலைத்தற்கு அவர் மேற்கொண்ட ஞானசாதன முறைகள் முதலியன தமிழ் மாந்தர்க்குத் தெரிந்திருப்பின் அஃதோர் அற்புதமாயிருக்கும். இவ்வாறே, செய்யற்பாலனவற்றை வகுப்பான் புகின் அளவின்றி விரியும். இவற்றை ஒருவருடத்திலோ இரண்டு வருடத்திலோ செய்து முடித்தல் கூடாத காரியம். எனினும், எழுதுதற்கு ஊக்கமிக்க பண்டிதர்களும், பத்திரிகையைவிடாது வேண்டுமாயின் இதனையே வாரந்தோறும் பிரசுரித்து நடத்தற்குப் பொருளுதவியும் இருப்பின் எத்துணைக் காரியங்களும் முடிக்கக்கருத்துக் கொண்டிருக்கின்றோம், காத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதுணர்த்துமாறு இவ்வளவு தூரங் கூறினோம்.

தந்நாட்டின் மீதும் தம்மொழியின் மீதும் அபிமான மிக்க செல்வர்கள் பத்திரிகையின் கருத்துக்களை நன்கு சிந்தித்துத் தம்மாலியன்ற பொருளுதவி விஷய வுதவிசெய்து தெய்வத் திருவருள்பெற்று வாழ்வார்களாக.

பத்திராதிபர்.

---

## † பாரத ஸாரம்.

### அத்தியாயம். I.

### முகவுரை.

(III-ம் சம்புடம் 454-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

யாதேனுமொரு யுத்தத்தில் குத்துண்டிறந்த குதிரையின் தொகையையும் போர்வீரர்களின் தொகையையும் கவனிக்கும்

---

* Mesmerism. † Adapted from Mrs. Annie Besant's MAHABHARATA.

போது மிகப் பயங்கரமாயிருக்கிறது. மரணதத்துவத்தைப்பற்றி யோசிக்கும் பொழுது அப்படிப் பயப்படுவதற்கு நியாயமில்லை. மனிதர்களும் மற்றுமுள்ள ஜெந்துக்களும் தாமிருக்கும் தேகம் தமக்கு இனி யிருக்கத்தகாத நிலைமையை அடைகிறபோது அவ்வுடலைவிட்டு நீங்குகிறார்கள். இதைத்தான் மரணமென்றும், மனிதர்கள் சாகிறார்கள் விலங்குகள் சாகின்றன என்றும் நாம் சொல்லிக்கொள்கிறோம்.

இவ்வுடலம் விழுந்தபிறகு அதிலிருந்த ஆத்மா தான்செய்த இருவினைக்கேற்ப முன்னிருந்த தேகத்திலும் சிறந்ததோர் தேகத்தையாவது இழிந்ததோருடலையாவது தனக்கிருப்பிடமாகக் கொள்கிறது. நாம் தரிக்கும் அங்கி நாம் வளர வளர நமக்கு அளவு சரிப்படாது கிழிந்துபோவதுபோல் நமதுடம்பும், வளரும் ஆத்மாவுக்குச் சரிப்படாது போம்போது உடைந்து போகின்றது. மரணத்துக்கு அதிபதியான கூற்றுவனைக்கொடியவனென்று எண்ணாது நமக்கு நன்மை நாடுபவனாகவே எண்ணல் வேண்டும். ஏனெனின் இருந்த உடலிலேயே அழுகச்செய்து ஆத்மாவை உபத்திரவஞ்செய்யாது தக்ககாலத்தில் ஆத்மா விருத்தியாகும்படி விடைகொடுக்கின்றானாதலின். இப்பெரும் பாரதயுத்தத்தில் மாண்டோர் பலர் சுவர்க்கத்தில் மாட்சிமை பெற்றார்.

ஈசுவரனுடைய இச்சை நிறைவேற்றுவதுதான் மற்றெல்லாத் தெய்வங்களுடைய வேலையும். அவ்வீசுவரன்தான் பிரமன், விஷ்ணு, ருத்திரனென்று சொல்லப்பட்ட திரிமூர்த்தி ஸ்வரூபமாயுள்ளவர். பிரபஞ்ச முழுவதும் தம் ஸ்வரூபத்தை யடைய வேண்டுமென்பதுஈசுவரனுடைய இச்சை. அவ்விருப்பத்தைநிறைவேற்றுவதற்காகத்தான் மற்றதேவதைகள் பாடுபடுவதேயன்றி தத்தம் சுயநன்மையைக் கருதியன்று. இத்தேவதைகளெல்லாம் தமக்கென ஒன்றின்றிப் பகவானுடைய விருப்பத்தைச் செய்து முடிக்கவேண்டியிருத்தலின் இவர்களுடைய கடமைக்கும் மனிதர்கள் தாம் நடக்கவேண்டிய முறைமைக்கும் வித்தியாசமுண்டு. தேவதைகள் மனிதர்களைப் பரீக்ஷிக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் இவர்கள் போம்வழியிற் கஷ்டங்களையுந் துன்பங்களையும்



உண்டாக்கி விடுகிறார்கள். அவர்களப்படிச் செய்வது, இவர்களிதற்கெல்லாம் பய்ப்படாமல் தைரியமுடையவர்களாய் அதிக பலமும் நல்லறிவும் வாய்த்துநேரியவழிக்குவரவேண்டுமென்பதேயன்றி வேறோரெண்ணத்தினாலன்று. இவ்விஷயத்தில் தேவர்கள் செய்யத்தக்கன மனிதர்கள் செய்யத்தகாதன. ஏனெனின் நியாயாதிபதி குற்றஞ்செய்த வொருவனைத் தண்டிக்கிறான்; அவன் தண்டனை செய்யும்போது நாம் ஏன்செய்யலாகாதென அக்குற்றவாளியை நாம் தண்டித்தல் தகுமோ? தகாது. ஒருவன் ஒருபொருளைத் திருடினால் அத்திருடனை அதற்காகக் காவற்சாலையிலடைக்கிறார்கள். களவாடியபொருள் உன்னுடையதாயிருந்தபோதிலும் நீயவனை அப்படித் தண்டித்தலாகுமா? நீ அப்படிச்செய்தால் அது பிழையெனக் கொள்ளப்படும். பிழையெனக் கொள்ளப்படுகிறவைகள்ஏன் அப்படி எண்ணப்படுகின்றன? சுயகாரியம் சுயேச்சை அல்லது அகங்கார மமகாரம் என்னுமிவற்றை நாடிச்செய்தலின். ஒருவன் ஆண்டவன் ஆக்ஞைப்பிரகாரம் செய்யாது தன்னைத் திருப்திசெய்துகொள்ளும்பொருட்டு தன் மனம்போனவாறுநடப்பானாயின் அவன் செய்யுங் காரியமும் அநேகமாய்ப்பிழையாகவே முடிகிறது.

எந்த ஜாதியாயினும் நன்மார்க்கத்தை விட்டுத் துன்மார்க்கத்திலேயே சென்றுகொண்டிருந்தால் அவசியம் அதிகத் துன்பத்தை யடையுமென்னும் உண்மையானது பாரதத்தை வாசிப்பதனாலும் நன்கறியக் கூடியது. இப்பலனை அடையும்படிசெய்து வருவனவும் தேவதைகள்தாம். இந்தியர்களுக்குப் பூர்வீகமிருந்ததுபோலவே நற்குணமும், சுத்தமான இருதயமும், தெய்வபக்தியுந் திரும்பிவந்தால்தான் இந்தியாவிற்கு முன்னொருகாலத்திருந்த சம்பத்தும், பலமும், சுயேச்சையு முண்டாகும். இதைத் தவிர வேறொருவழியுங் கிடையாது. எந்த ஜாதியாரும் பெருமை, சிரேஷ்டம் இவைகளை யடைவது அவர்களுடைய சற்கருமத்தின் பலனேயன்றி வேறில்லை. ஒரு ஜாதியார் தகாதன செய்துகொண்டு வருவார்களாகில் அவர்களுடைய பெருமையும் தாழ்ந்துகொண்டே வரும். எந்தஜாதியார் தகுந்தனவற்றைச் செய்துகொண்டு வருகிறார்களோ அவர்கள் பெருமையிலும் வளர்ந்துகொண்டே வருகிறார்கள்.

ஒரு ஜாதியில் ஒரு பெரியமாறுதல் உண்டாகிறதற்குத் தக்க காலம் வரும்போது அந்த ஜாதியில் பெரியவர்கள் தோன்றுகிறார்கள். அத்தகைய காலம் இந்தியாவிற்குச் சுமார் ஐயாயிரவருஷத்திற்குமுன் வந்தது. இத்தருணத்தில் இதற்காகப் பிறப்பவர்களிற் சிலர் நற்குணத்திற் பெரியவராயிருக்கிறார்கள்; சிலர் தீக்குணத்திற் சிறந்தவராயிருக்கிறார்கள். அந்தந்தச் சாதியார் கிருதார்த்தராவதற்கு இத்தகையர்கள் பிறக்கவேண்டியிருக்கின்றது. இவர்கள் இத்தருணத்தில் இவ்வேலைக்கென்றே, முன்ஜன்மங்களிலேயே தங்களைச்சன்னத்தஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். நற்குணத்திற் பெரியவருக்கும் தீயகுணத்திற் சிறப்புற்றோருக்கும் இதுதான் முதல் ஜன்மமென்பது வேண்டுவதில்லை. நல்லவர்கள் தேவதைகளுக்குத் தக்கதருணத்தில் இப்பூமியில் வந்து பிறந்து உதவி புரியவேண்டியதுபற்றி முன்ஜன்மத்தில் நலத்தையே நாடி அதிகமாய்த் தேடிச் சம்பாதித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். துஷ்டர்களிற் சிறந்தோரும் முன் ஜன்மத்தில் வேண்டிய துர்க்கிருத்தியஞ்செய்து அதற்குப் பலனாக இத்தருணத்திற் பிறந்து, கடவுளரும் நற்குணமுடையாரும் செய்வனவற்றிற்கு விரோதமானவைகளையே செய்துகொண்டு வருவதனாற் கஷ்டங்களை விளைவித்துக் கொள்கிறார்கள். அப்போது அந்த ஜாதியார் தாம்போய்க்கொண்டிருந்த வழி தவறென்று தெரிந்து நன்மார்க்கத்தை நாட ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். நல்லவர்களும் தீயவர்களும் தங்கள் வினையைத் தாங்களே யாக்கிக்கொண்டு அப்படியானவர்கள். நல்லவர் தேவதைகளுக்கு உதவியும் தீயவர் அவர்கள் செயலுக்கு விரோதமும் செய்துகொண்டு வருகிறார்கள். ஒருவரைத் தாழ்த்தியும் ஒருவரை யுயர்த்தியும் வைக்கவேண்டுமென்ற எண்ணமோ கடவுளுக்கில்லை. மனிதர்கள் தாம்தம் வினைப்பயனின்படி வரவேண்டிய இடத்திற்கு தேவதைகள் அவர்களைச் செலுத்தவே அவர்கள் அதில் வந்து பிறக்கிறார்கள்.

முதற்பருவமாகிய ஆதிபருவத்தின்கண் பாரதயுத்தத்தின் பொருட்டுச்சுவர்க்கத்தில் நடந்த ஏற்பாடுகளின்னவென்று எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. இதற்காகத் தேவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து யோசனைசெய்தார்கள். யுத்தத்தை நடத்தும்பொருட்டுச் சிலர் பூமியிற்போய்த் தலைவராகப் பிறக்கவேண்டியதற்கு



நான்குபேரை நியமித்தார்கள். இந்நால்வரும் முன்னொருகாலத்து இந்திரரா யிருந்தவர்கள். தேவர்களுடைய அரசனுக்கு இந்திரனென்றும் தேவேந்திரனென்றும் அநேகபெயர்களுண்டு. அப்போதிருந்தஇந்திரன் சற்றே கர்வம் அடைந்திருக்கவே அஃது அடங்கு நிமித்தம் அவனுடையபட்டம்சிலகாலம்வரையில் நீங்கும்படி சர்வேசுவரன் செய்துவிட்டார். இந்திரனைப்பார்த்துக் கோபித்து 'உன்னைப்போன்று மமதை உடையவர்கள் என்னுடைய கிருபைக்குப் பாத்திரராகார்கள்' என்றுசொல்லி, 'நீயும் இன்னும் உனக்கு முன்னிருந்தநான்குஇந்திரர்களும்பூமியிற்போய் மனிதராய்ப்பிறந்து நான்சொல்லுங்காரியத்தைமுடித்துமறுபடியும் சுவர்க்கம்வந்து சேரலாம்' என்றார். இவர்களில்நால்வர் ஈசுவரனைப்பார்த்து "நாங்கள் மானிடகர்ப்பத்திற்பிறந்தபோதிலும்தேவதைகள் எங்களுக்குத் துணையா யிருத்தல்வேண்டும்" என வேண்டிக்கொண்டார்கள். ஐந்தாவதிந்திரன் தனக்குப்பதிலாகத்தன்னிடமிருந்து ஒருவனை உற்பத்திசெய்து இதன்பொருட்டு விடுவதாகச்சொல்லவே அதையும் அங்கீகரித்தார். தக்கதருணம் வந்தபோது நான்கிந்திரர்களும் தர்மர், பீமன், நகுலன், சகாதேவன் என்பவர்களாகப் பிறந்தார்கள். யமதர்ம இராஜாவுக்குப் பிறந்தவர் தருமர்; வாயுவினுடைய புத்திரன் பீமன்; அசுவினி தேவதைகளுக்குப் பிறந்தவர்கள் நகுல சகாதேவர்கள். அருச்சுனனோ முன்ஜன்மத்தில் நரன் என்னும் ஒரு பெரிய இருஷியாயிருந்து அப்போதிருந்த தேவேந்திரனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தவன். இவ்வைவருடைய சரித்திரம்தான் மேலத்தியாயங்களிற் கூறப்படும். இவர்கள்தாம் பாரத யுத்தத்தில் ஜயம்பெற்றுப் பயனடைந்தவர்கள்.

இந்த யுத்தத்திற்குப் பிறகு வேறுயுகம் பிறக்கவேண்டியிருத்தலின், ஸ்ரீமகாவிஷ்ணுவும் கிருஷ்ணனென்னும் நாமதேயத்தோடு அவதாரஞ்செய்தார். தன்னுடைய ஆதிசேஷனையும் உடன்கொண்டுவந்தார். இவருடைய தமையனார் பலராமர்தான் ஆதிசேஷாம்சம். உலகம்தான்போகவேண்டியநன்மார்க்கத்தினின்றுந் தவறித் துன்மார்க்கத்திலேயே அதிகமாய்ப்பிரவேசித்துப்பாபங்களுந் தீமைகளும் அதிகரித்துப் பூமிதாங்காத நிலைமைக்கு வந்துவிடுந்தருணத்தில் தீமையையொழித்துநன்மையைநிலைநாட்டும்வண்ணம்சர்வே

சுவரனே பூதவுருவங்கொண்டு இங்குப் பிறப்பதுண்டு. இப்பிறப்பிற்
குத்தான் அவதாரம் என்றுபெயர்.

பரதனுடைய வமிசத்தாரைக் குறித்துச்சொல்லுஞ் சரித்தி
ரமாகையால் இதற்குப் பாரதமெனப் பெயர். பரதன் துஷ்யந்த
மகாராஜாவுக்குச் சகுந்தலையினிடமாகப் பிறந்தவன். "மஹா"
என்பது "பெருமைபொருந்திய" என்றும்; "பாரதர்" என்பது
'பரதவமிசத்தார்' என்றும் பொருள்படும். ஆகவே "மஹாபார
தம்" என்பதற்குப் பரதவம்சத்தாரைக் குறித்துச் சொல்லும்
சரித்திரமென்பது பொருள். இவ்வமிசத்திற் குரு வென்னும் ஓர்
அரசனிருந்தான். அவன்தான் சந்நியாச ஆசிரமத்தை அதிகமாய்
வகித்தவன். அவன்தானிருந்து ஜப தப யாகமுதலியவற்றை நிறை
வேற்றிய இடத்திற்குக் குருக்ஷேத்திரமென்று பெயர். இவ்விடத்திற்
றான் பதினெட்டுநாள் யுத்தமும் நடந்தது. குரு சந்ததியாரில்
மூன்று சகோதரர்க ளிருந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்
குத் திருதராஷ்டிரனென்று பெயர். அவனே பிறவிக்குருடன். அவ
னுடைய பிள்ளைகள்தாம் பாரதயுத்தத்தில் தர்மமில்லாப் பக்கத்தி
ருந்து யுத்தஞ்செய்தவர்கள். இரண்டாவது பிள்ளைக்குப் பாண்டு
வெனப் பெயர். பாண்டுவின் புத்திரர்தாம் திருதராஷ்டிரனுடைய
பிள்ளைகளுக்கு விரோதமாய்ச் சண்டைசெய்தவர்கள். மூன்றா
வது பிள்ளைக்கு விதுரனென்று பெயர். இவன் மிகவும் சன்மார்க்க
நெறியிலிருந்தவன். இராஜ்ஜியத்தி லுயர்ந்த வேலையி லிருந்து
கொண்டிருந்தான். இவர்களுடைய சரித்திரத்தைக்குறித்துத்தான்
பதினெண்பருவங்க ளெழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பருவத்து
முரைக்கப்படும் முக்கியவிஷயத்தை நோக்கி அவ்வப்பருவத்திற்
குப் பெயரிடப்பட்டுள்ளன.

இச்சரித்திரம் நைமிசாரண்ணியத்தில்சௌனகாதி முனிவர்க
ளுக்கு உரோமஹர்ஷணர் என்பவருடைய புதல்வராகிய உக்கிர
ஸ்ரவர் அல்லது ஸூதபுராணிகர் என்னும் பெயர் பூண்டவராற்
சொல்லப்பட்டது. ஸூதபுராணிகர் வியாசருடைய மாணாக்கர்.
இவர் இந்த இருஷிகளிடம் வந்தவுடன் அவர்களி லொருவர் இவ
ரைநோக்கி எங்கிருந்து எழுந்தருளுகிறீர்களென் றுபசரிக்கவே,
ஜனமேஜய மகாராஜா செய்த சர்ப்பயாகத்திற்குப்போய் வருகிறே
னென்றுசொன்னார். அவ்விடத்திற்சொன்ன மகாபாரதக்கதையை



த்தானுங்கேட்டு அறிந்தேனென்றார். கிருஷ்ண த்வபாயன வேத
வியாசர் என்னும் ருஷியால் இவ்விதிகாசம் செய்யப்பட்டது. கரு
நிறமுள்ளவராகையாற் கிருஷ்ணனென்றும், தீபத்திற் பிறந்தபடி
யால் துவபாயனனென்றும், வேதங்களைக் காண்டமுதலியனவாகப்
பிரித்தபடியால் வேதவியாச ரென்றும் இந்நூலாசிரியருக்குப்
பெயர். நைமிசாரண்யத்து ருஷிகளும் விருப்பத்துடன்கேட்கவே
இவரும் பரதர்களுடைய சரித்திரத்தைச்சொல்லத்தொடங்கினார்.

## அத்தியாயம். II. (ஆதிபருவம்).

### பாரதவீரர்களின் இளமைப்பருவம்.

மகாபாரதத்து ஆதிபருவத்தில் எடுத்தெழுதி யிருக்கப்பட்ட
னவற்றுள் முக்கியமானவைகளிற் சிலவற்றை உற்றுநோக்குவாம்.
அதிற் பாரதவீரர்களின் வாலிபத்தைப் பற்றியும் அவர்களுடைய
மூதாதைகளைப் பற்றியும் உற்றார் பெற்றாரைப் பற்றியும் அவர்க
ளுடைய நிலைமை, அவர்களுடையகல்வி இன்னு மிவைபோல்வன
பலவற்றைப்பற்றியும் நாமறியலாம். இதை நாம்வாசிக்கும்
போதே மேல் முகவுரையிற் சொன்ன தர்மங்கள் அல்லது விதிக
ளெல்லாம் எவ்வாறு எவ்வளவு அநுபவத்திற்குக் கொண்டுவரப்
பட்டிருக்கின்றன வென்பதையுங் கவனித்துப் பார்க்கவேண்டும்.

இதில் அதிகசிரேஷ்டமானவர் பீஷ்மாசாரியர். ஆரியவமிசத்
திற் பெருந்தன்மை பூண்டு ஒழுகியவர்களில் இவர் ஒருவர். இவ்
வுலகிலுள்ளவ ரனைவர்க்கும் இவர் ஒழுக்கம் மேல்வரிச்சட்டம்
போன்றது. அநேகர் தெரிந்தும் தெரியாதும் விழுகிற பாவங்க
ளில் ஒன்றிலேனும் இவர் விழுந்ததில்லை. அவர் வாழ்நாள் முழு
தினும் எந்தக்காரியத்தை எந்தக்காலத்திற் செய்தல்வேண்டுமோ
அக்காலத்திலேயே அந்தக்காரியத்தைச் செய்துமுடித்தவர். நடுவு
நிலைமைதவறினதேயில்லை. அவரே ஒரு பெரிய உபாத்தியாயர்.
ஒருபெரிய மந்திரி. புத்திரலக்ஷணம், காவன்முறை, இராஜாங்கதந்
திரம் இவற்றில் இவர்க்கு இணையானவர் ஒருவருமிலர். இவர்
வாழ்நாளின் ஒவ்வொருபாகத்திலும் தமக்குரிய கடமையைப்பழுத
றச்செய்துகொண்டுவந்தார்.

மை பீஷ்மர் பிறக்க அநேக காலங்களுக்குமுன் தேவலோகத்தில் ஒருதிருவிழா நடந்தது. அதற்கு அநேகதேவர்களும் ருஷிகளும் வந்திருந்தார்கள். அநேக அசுவமேதயாகஞ்செய்து அப்பலத்தினால் அமராவதியை அடைந்த மஹாபீஷ்மனென்னும் அரசனும் அவ்விடம்வந்திருந்தான். நதிபதியாகியகங்கையும் வந்திருந்தனள். இவர்களெல்லோரும் ஒன்றாய்க் கூடியிருக்கும்போது காற்றினால் கங்கையின் மார்பிலுள்ள வஸ்திரம் சற்றுவிலகவே தேவர்கள் இதைக் கவனியாது தலை குனிந்துகொண்டார்கள். மஹாபீஷ்மனென்னுமரசனோ அவ்வாறு தலைகுனியாது வணங்காமுடியனாயிருந்தான். அவனெண்ணத்தையுஞ் செயலையுங் கண்ட பிரமாவானவர் இவனைச் சபித்துவிட்டார். அதாவது அதர்மமான சிந்தையினாலும் ஒழுக்கத்தாலும் தனக்கு இனிவரப்போகிற துன்பங்களையும் கஷ்டங்களையும் அவர் முன்னதாகச்சொன்னார். [நம்முடைய எண்ணம், செய்கை இவற்றின் பலன்தான் கர்மமெனப்படுகிறது. தேவர்கள் அல்லது ருஷிகளிடும் சாபந்தான் அப்படி அனுபவிக்கவேண்டிய கர்மத்தை முன்னதாகச் சொல்வது.] இவ்வரசன் கங்கையின் கற்பைப் பங்கப்படுத்துவதற்கு எண்ணங்கொண்டானாதலின், சுவர்க்கத்தைத் துறந்து பூமியிற்போய்ப் பிறக்கும்படி ஆக்ஞாபித்தார்; "கங்கையும் பூலோகத்திற் போயிருந்து உனக்கு அதிக துன்பத்தை உண்டாக்குவாள். உனக்கு எப்போது கோபம்வரும்படி செய்கிறாளோ அப்போது உனக்கு நானிட்ட சாபந் தீருஞ்சமயம் வரும்", என்று பிரம்மா அவ்வரசனுக்குரைத்தார்.

மகாபீஷ்மன் இவ்வுலகில் திரும்பவும் போய்ப் பிறக்கவேண்டிய நாளும் வந்தது. சந்திரவமிசத்திற் குருலிங்க சங்கமபக்தியுள்ள பிரதீபனென்னு மரசனுக்கு இவன் மகனாய்வந்துதித்தான். ஒருநாள் பிரதீபன் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது கங்கையானவள் திவ்யரூபமுடைய ஒரு கன்னிகையுருவங்கொண்டு இவ்வரசனுடைய வலது தொடையில் வந்து உட்கார்ந்தாள். அவன் கண்விழித்துப்பார்த்ததும் அவள் தன்னை விவாகஞ்செய்துகொள்ளும்படி வேண்டினாள். அவன் அவளைநோக்கி "மருமகளும் மகளும் இருக்கவேண்டியது இத்தொடை; மனைவியிருக்கவேண்டியது மற்றைத்தொடை; நீயிருப்பது வலது தொடையாகையால் உன்னை மருமக



ளாகப் பாவித்தல் வேண்டுமேயன்றி மனைவியாக ஏற்றுக்கொள்ளவியலாது. வேண்டுமானால் என் மகனுக்கு உன்னை விவாகஞ்செய்விக்கிறேன்" என்றான். அதற்கவள் "உன் பிள்ளையையே விவாகஞ் செய்துகொள்ளுகிறேன். ஆனால் உன்புத்திரன் நான் செய்வன நல்லனவென்றும் நல்லனவல்லவென்றும் அறிந்து நடப்பது அருமையாயிற்றே. அதுதான் மனதுக்குக் கொஞ்சகவலையாயிருக்கிறது. தகுதியான ஏற்பாடு செய்தால் நலம்." என்று சொல்லிப்போய் விட்டாள். அரசனும் அவன்றன் மனைவியும் செய்த தவவிசேடத்தால் மஹாபீஷ்மனென்னு மரசன் இவர்க்கொரு சற்புத்திரனாக வந்தவதரித்தான். அப்புத்திரனுக்குச் சந்தனு வென்னும் பெயரிடப்பட்டது. சாந்தகுணமுள்ளவனுடைய பிள்ளையாதல் பற்றி இவனுக்கு இப்பெயர்வாய்த்தது. சந்தனுவுக்குத்தக்க பருவம் வந்தவுடன், அவனை வரவழைத்து "ஓ சற்புத்திரனே! தெய்வலோகத்திலிருந்தொரு கன்னிகை முன்னொருகால் என்னிடம் வந்துபோனாள். அவள் இப்போது வந்து தன்னை விவாகஞ்செய்துகொள்ளும்படி உன்னைக்கேட்பாள். அதற்கு நீயொன்றும் மறுத்துச்சொல்லாமற் சம்மதித்தல்வேண்டும். அவள் உனக்குப் பாரியையானதும் அவள் செய்யுங் காரியம் உனக்கு எப்படித்தோன்றினாலும் அவற்றைக் குறித்து யாதொன்றுங் கேட்காதே. அவளை யாரென்றும், எவ்விடமிருப்பவளென்றும், எவ்விடத்திருந்துவந்தவளென்றும் நீ கேட்கலாகாது. தகப்பனுடைய ஆக்ஞைப்படி அவளை நீ உன்மனைவியாகப் பெறுவாயாக." என்றான். பிரதீபன் தக்ககாலத்திற் பிள்ளைக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தான் மான்தோல் மரவுரி சடைமுடி தரித்துத்தவஞ்செய்வான் புறப்பட்டுவிட்டான். அதுமுதல் சந்தனுவும் தன்னாட்டை நன்றாக ஆண்டுகொண்டுவந்தான். ஒருநாள் கங்கையாற்றின் கரையில் தான் உலாவிக்கொண்டிருக்கையில் தேவகன்னிகை ஒருத்தியைக்கண்டு காமுற்று அவளைத்தனக்கு நாயகியாக வேண்டுமென்றுவேண்டினான். அவள்தான் கங்கை. அவள் அவனை விவாகஞ்செய்துகொள்ளச் சம்மதித்தாள். ஆயினும் அவனை நோக்கி, "என்னுடைய காரியத்தில் தாங்கள் பிரவேசித்தல் கூடாது. இன்சொல்லேயன்றிக் கடுஞ்சொல் கிட்டவே வருதல் கூடாது. என்னைச் சுகமாய் வைத்திருக்கிறவரையில் உம்மோடி

கூடியிருப்பேன். ஆனால், நான் செய்யுங் காரியங்களிற் பிரவேசித்தாலுஞ்சரி கடுஞ்சொல் என்காதிற் பட்டாலுஞ்சரி உம்மைவிட்டு உடனே பிரிந்தேகுவேன். இது நிச்சயம்" என்று சொன்னாள். அப்படியே யாகட்டும் என்றுடன்பட்டான் சந்தனுமகாராஜனும். அவர்களிருவருக்கும் மணம் முடிந்தபின் மணமுறு பல நாள் மிகுந்த சுகத்துடன் காதலிருவரும் கருத்தொருமித்து வாழ்ந்துகொண்டு வந்தார்கள். முதற்குழந்தைபிறந்தவுடன்கங்கைஅதையெடுத்துக் கங்கையாற்றிலெறிந்துவிட்டாள். குழந்தையைப்பார்த்து அவள் "இப்படி யான்செய்வது உன் நன்மையை நாடியே" யென்றாள். இரண்டாவது குழந்தைக்கும் அதே கதிதான். மூன்று நான்கு, ஐந்து, ஆறு, ஏழாவது குழந்தையு மிப்படியே மடிந்தது; ஐயோ பாவம்! என் செய்வான் அரசன்? அவன் மனமோ பதைக்கிறது; உடலோ துடிக்கிறது. இவள் நடத்தையோ இது விஷயத்தில் இவனுக்குச் சிறிதேனுஞ் சரிப்படவில்லை. ஆசையென்னு மந்தகாரம் இவன் சண்ணைமூடி யிருந்ததனால் வாய் திறந்து ஒன்றுஞ் சொல்வதற்கில்லை. ஆனால் இவள் காரியமோ பொறுத்து முடியவில்லை. எட்டாவது பிள்ளை பிறந்தவுடன், கங்கையானவள் அதனையும் கங்கையிலெறிய வெண்ணினாள். ஏதாவது சொன்னால் மனைவி பிரிந்துபோய் விடுவாளே என்னும் பயமிருந்தபோதிலும் குழந்தைகளின் கதியை நினைத்து இப்பயத்தைத் துறந்து அவளை நோக்கி "நீ இதைக் கொல்லாதே? நீயார்? குழந்தை யாருடையது? உன்னுடைய குழந்தையை ஏன் இப்படிக் கொன்றுகொண்டு வருகிறாய்? கொலைப்பாதகி! இப்பாவங்களுக்கென் செய்வாய்?" என்றான்.

சந்தனு மகாராஜன் என் செய்வான்! ஐயோ பாவம்! இருதலைக் கொள்ளியின் எறும்புபோல் இருந்தலைந்தான். கடைசியிற் பிதாவின் கட்டளையையும் மறந்தான். அவன் அவ்வாறுசொன்னபோது கங்கை அவனை நோக்கி "இனி உன்னுடைய இந்தப் பிள்ளையைக் கொல்லவில்லை. நம்முடைய உடன்படிக்கைப்பிரகாரம் நானும் உம்முட னிருக்கவேண்டிய காலமும் முடிந்துவிட்டது. நான்தான் கங்கை; ஜந்நு முனிவர் புத்திரியாகையால் எனக்கு ஜாநவி யென்று வேறொரு பெயருமுண்டு. எனக்குப் பிறந்த எட்டுக் குழந்தைகளும் அஷ்டவசுக்களே யன்றி வேறல்லர். இவர்



கள் ஒருபெரியஇருஷியினிடமிருந்து நந்தினி யென்னும் காமதேனுவைக் களவாடிப்போய் விட்டார்கள். அவர்களில் தயா என்பவன்தான் இக்காரியஞ் செய்தவன்; மற்றவர்கள் இதற்கு உதவி புரிந்தவர்கள். இருஷி மிகவுங் கோபங்கொண்டு எல்லாரையும் 'நீங்கள்செய்த பாவத்தின் பலனை அனுபவிக்கும்பொருட்டுப் பூமியிற் போய்ப் பிறக்கக்கடவீர்கள்' எனச் சபித்துவிட்டார். பிறகு அவரைக்கெஞ்சிக் கூத்தாடிக் கேட்கவே மனமிரங்கித் தயா என்பவன் தவிர மற்றவர்கள் உலகினிற் பிறந்த ஒருவருஷத்திற்குள் மானிட உடலம் விட்டு இவ்விடம் வந்துவிடுவீர்களென்றும் தயா மாத்திரம் பூமியி லனேகநாளிருந்து உழன்றபின்பு தான் இவ்விடம் வரலாமென்றுஞ் சொன்னார். பிறகு அஷ்ட வசுக்களும் என்னிடம் வந்து எனக்குக் குழந்தைகளாய்ப் பிறக்கவேண்டு மென்றும், பிறந்த வுடனே தங்களைக் கங்கையி லெறிந்துவிட வேண்டுமென்றும் என்னை வேண்டிக்கொண்டார்கள். மானிடயாக்கையி லிருப்பது சிறையிலிருப்பதுபோ லிருந்தது. இவ்வுலக வாழ்க்கையினின்றும் நிவர்த்திக்கும் வண்ணம் அவர்கள் விருப்பத்தின்படி செய்தேன். சாந்தமும் அருளும் வாய்ந்து அரசசிகாமணியாய் விளங்கும் ஓ சந்தனுமஹாராஜனே! இருஷியின் சாபத்தினால் இவனொருவன்தான் இப்பூமியிற் கொஞ்சகால மிருந்து மறுபடியும் சுவர்க்கமடையவேண்டியவன்" என்று சொல்லி இக்குழந்தையையும் தற்காலம் தன்னுடன் கொண்டு கங்கையானவள் அரசன் கட்புலனுக்ககப்படாது போய் விட்டனள்.*

சாதற்குச்சனங்கள் சாதாரணமாய்த் திகிலடைகிறார்கள். தேவதைகள் இவ்விடம் வந்து பிறந்திருக்கிறபோது தாங்கள் ஒரு சிறைச்சாலையிலகப்பட்டுக் கொண்டதுபோ லெண்ணுகிறார்கள். மரணத்தை அச்சிறையினின்று தம்மை மீட்கிற ஒரு நண்பனைப் போலப் பாவிக்கிறார்கள். இவ்வுலகிலுள்ள நாம் ஒரு குழந்தை பிறக்கும்போது அதிக ஆனந்தக்களிப்பிலாழ்ந்து ஒருவன் இறக்கும்போது சற்றேனும் யோசியாது அறிவீனத்தினால் அழுகையே நம் தொழிலாகக் கொள்கிறோம். இஃது எப்படியிருக்கிறதென்றால் நமது சிநேகனைச் சிறையிலடைக்கும்போது ஆடல் பாடல் சங்கீத முதலியவை கூடிய விழாவுடன் விருந்துண்டு,

* ஆதிபருவம் [96 - 99.]

அவனைச்சிறையினின்று விடுக்கும்போது வருத்தத்துடன் அழுத
லையொழிக்கும். எப்படி அஷ்ட வசுக்களையும் கங்கையானவள் மா
னிடதேகமாகிய கூண்டினின்றும் விடுதலை செய்தனளோ அதைப்
போலவே ஒவ்வொருமரணமும்சம்பவிக்கும்போது கடவுளொரு
வர், அடைபட்டிருக்கும் ஆத்மாவை விடுதலை செய்கிறார். நமக்
கு வருத்தத்தை யுண்டாக்கித் தீங்கு விளைப்பதுபோல் நமக்குப்
புலப்படும் விஷயங்களெல்லாவற்றிலும் கருணையங் கடவுளுடைய
நல்லெண்ணத்தைக் காணுமாறு இக்கதை நமக்கு நன்கு தெரி
விக்கிறது. இவர்கள் நமக்குத்தீங்கு செய்வார்களென்றெண்ணு
வது நமது அறியாமையேயாம்.

கங்கையானவள் தன்னெட்டாவது புத்திரனைத்தன்னுடன் கொ
ண்டுபோனதாக மேலே சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? அவன்
யௌவனப்பருவமுற்றதும் அவனைச்சந்தனுவினிடம் கொண்டுவந்து
விட்டுப்போயினள். சந்தனுமகாராஜாவினிடம் வந்தபோது அந்தப்
பிள்ளை நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்கு கலைகளி
லும் மிக்கபாண்டித்திய முடையவனாய்க் காணப்பட்டான். எனவே
க்ஷத்திரியருக்குரிய ஆயுதப்பயிற்சி, ஆனையேற்றம், குதிரையேற்
றம் முதலியனவற்றிலும் சிறந்த வீரனெனத் தெரியவருகிறது. அவ
னுடைய பலமும் பராக்கிரமமும் அதிகம். சாஸ்திரஞானம் எவ்வ
ளவு அதிகமாயிருந்ததோ அவ்வளவு சிறப்புற்றிருந்தன அவனு
டைய தகப்பனாரிடமிருக்கவேண்டிய பக்ஷமும் பக்தியும். சமயம்
வாய்த்தபோது இதை மற்றவர்கள் அறிந்து ஆச்சரியப்படவும்
ஆயிற்று.

ஒருநாள் சந்தனு மகாராஜா வேடிக்கையாய் யமுனையாற்றங்
கரையில் உலாவிக்கொண்டிருந்தபோது பெண்களுக்குரிய எல்லா
லக்ஷணமும் அதிக அழகும் வாய்ந்த ஒருகன்னிகையை அவ்விடங்
கண்டு அவளைத் தன் நாயகியாக்கிக்கொள்ள விருப்பங்கொண்டான்.
அவளோ அழகுவாய்ந்தவளா யிருந்தபோதிலும் இழிகுலத்தவ
ளாகிய மீன்வலைஞனுடைய பெண். அவள் பெயரோ மச்சகந்தி.
பரிமளகந்தியென்பது பராசரரால் கொடுக்கப்பட்ட மறுபெயர்.
இவள் கன்னியா யிருக்கும்போதே இவருக்கு இவளிடமாகப்
பிறந்தவர் வேதவியாசர். அவளுடைய தகப்பன் அரசனைநோக்கி
"நீ என் குமாரத்தியினிடம் உற்பவிக்கும் புதல்வனுக்கு உனக்



குப் பிறகு பட்டங்கட்டி வைக்கிறேனென்று வாக்குத்தத்தஞ்செய்தா
லொழிய, என்புதல்வி யுனக்குப் பத்தினியாகாள்" என்றான்.
முன்னமே இரத்தினம்போன்ற பிள்ளை யொருவனிருந்தலின்,
தான் அனுபவிக்க விரும்பிய சிற்றின்பத்தின் பொருட்டு அவனை
நீக்க எண்ணமில்லாதவனாய் அதிக வருத்தத்தோடும் வீட்டுக்குத்
திரும்பினான். தன் தகப்பனார் அதிக வருத்தமுற்றிருப்பதை அவர்
முகக்குறிப்பாற்கண்டு அதிக பக்ஷத்துடன் அதற்குக் காரணம்
யாதெனக்கேட்க அவர் தமதெண்ணத்தை இவனிடம் ஒன்றுஞ்
சொல்வதற் கில்லாமையால், அவன் அரசனுக்கு அந்தரங்க
மான மந்திரியினிடம் சென்று அரசனுடைய மனக்கிலேசத்தை
எப்படி நீக்கலாமென்றுயோசித்தான். அம்மந்திரியாரும் மீன்
வலைஞனுடைய குமாரத்தியின் விருத்தாந்தத்தைச் சவிஸ்தார
மாய்ச்சொல்லவே தேவவிரதனென்னும் பெயர்பூண்ட இப்பிள்ளையும்
தன்னுடன் சில க்ஷத்திரிய வீரர்களை அழைத்துக்கொண்டு மச்ச
கந்தியின் தகப்பனிடம் சென்று "உன் குமாரத்தியாகிய மச்சகந்தி
(பரிமளகந்தி, சத்தியவதி)யை அரசன் தன்பத்தினியாக்கிக் கொள்ள
விரும்புகிறான். தடையில்லாது கொடுத்தல் வேண்டும்" என்று
சொல்லவும், சத்தியவதியின் தகப்பன் தேவவிரதனை நோக்கி
அரசனுக்கு இதற்கு முன்னமே ஒரு புத்திரனிருக்கிறான். அவனு
க்கு இராஜ்ஜியம் கிடைக்குமேயொழிய சத்தியவதிக்குப்பிறக்கும்
புத்திரனுக்கு அஃதில்லாமற்போய்விடுமே. ஆகையினாற்றான் கொடு
க்க எண்ணமில்லை யென்றான். அதற்குத் தேவவிரதன் தன்னுடன்
கொண்டுவந்தவர்களையும் வைத்துக்கொண்டு மீன்வலைஞர் தலைவ
னை நோக்கி "என் சபதத்தைக்கேள். நீ விரும்பியவாறெல்லாம் செ
ய்கிறேன். நான் தான் சந்தனுமகாராஜாவின் பிள்ளை. என்பெயர்
தேவவிரதன். இனி என் தந்தைக்கு உன் புத்திரியினிடமாகப்
பிறக்கும் பிள்ளையே எங்களுக்கெல்லாம் அரசனாயிருக்கட்டும்"
என்று தன் தகப்பனாருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பொ
ருட்டுத் தனக்குரிய இராஜ்ஜியத்தையும் எறிந்து விட்டான். இப்ப
டிச் செய்தும் சத்தியவதியின் தகப்பன் திருப்தியடையாது தே
வவிரதனைப் பார்த்து "நீ உன்வாய்மையை நிலைநிறுத்துவாய் என்
பதில் எனக்குச் சிறிதேனும் சந்தேகமேயில்லை. ஒருவேளை உனக்
குப் பிறக்கும் பிள்ளைகளும் அப்படியே யிருப்பார்களா வென்பது

தான் சற்றே சந்தேகத்திற்கிட மாயிருக்கிறது" என்றான். அதற்கவன் வலைஞர்தலைவனை நோக்கி "நான் முதலில் இராஜ்யத்தைத் துறந்தேன். புத்திரர்களுடைய விஷயத்தைக் குறித்தும் இப்போதே ஒரு முடிவு செய்துவிடுகிறேன். அதாவது இன்று முதலென்றும் பிரமசாரியாய் இருந்து விடுகிறேன். புத்திரனில்லாமல் யான் இறந்தபோதிலும் நான் புத் என்னும் நரகம் புகாது சுவர்க்கத்தையே யடைவேன். என் தகப்பனாருடைய விருப்பத்தை எப்படியாயினும் நிறைவேற்றினால் போதும்" என்று சொன்னதும் எல்லோரும் மிகவும் ஆச்சரியமடையவும், தேவர்கள் புஷ்பமாரி பெய்து இவன் தான் பீஷ்மன் இவன் தான் பீஷ்மனென்று ஆரவாரித்தார்கள். ஆம், இவன்தான் பீஷ்மன், இவனையிப்படிச் சொல்வதற் கோரையமுமுண்டோ? மற்றவர்களெல்லாம் எதைத்தம்முயிருக்குச் சமானமாகப் பாவிக்கிறார்களோ அதைத் துறந்து தன் வாய்மையே ஆதிமுதற் கடைப்பிடித்து நிறைவேற்றியவனல்லவா இவன்? எல்லாம் முடிந்த பிறகு சத்தியவதியைப் பார்த்து "அம்மா! இந்த இரதத்தில் எழுந்தருளுக, நமது வீட்டுக்குப்போகலாம்" என்றான். வயினதும் தன் தகப்பன் முன்பாகக் கொண்டு வந்து விடவே தகப்பன் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து பிள்ளையைப்பார்த்து,

"தந்தையர்க் குதவு முதவியி னெனக்குச்
சதமடங் குதவினை யுனக்கு
மைந்தருக் குதவு முதவியிற் சிறிது
மாதவஞ் செய்திலே னுக்கச்
சிந்தையிற் றுறக்கம் வேண்டுமென் றெண்ணிச்
செல்லுமின் னல்லதன் னுயிர்மேல்
மூந்துறக் காலன் வரப்பெறு னென்றே
முடிவிலா வொருவர மொழிந்தான்"

"ஓ! குழந்தாய்! நீ விரும்பினாலொழிய மரணம் உன்னை அணுகாதொழிக. பாவசிந்தை யென்பது சிறிதேனும் இல்லாத சற்புத்திரனே! உன்னுடைய உத்தரவின்பேரில் தான் யமன் உன்னை யணுகுவான்" என்று ஆசீர்வதித்தான்.

(இன்னும் வரும்)

கல்குளம்-குப்புசாமி முதலியார்.



## கமலினி.

### அத்தியாயம் - XXI.

"எவ்விடத் தழகு நன்னரிசைந்தகட் களிப்புண் டாக்கு
மவ்விடத் தமைந்தி ருக்கு மரியபல் குணமு மன்றே"

மனிதர்கள் தங்கள் மனத்தைக் கவரும்படியான தன்மையுள்ள பெண்ணைக் காணுங்காலம்வரையுந் தங்கம் மனைவியர்க்கு உண்மையா யிருப்பார்கள். அம்மனக் கவர்ச்சியானது வன்மையதாயின் அதற்கவர்கள் இடங்கொடுக்கிறார்கள். இஃது எவ்வாறிருக்கின்றதென்றால் ஒரு கயிறானது எவ்வளவு பளுவைத்தாங்குமோ அவ்வளவிற்குமேற்படுமேல் அறுந்துபோய்விடுமென்பதைப்போலவிருக்கிறது. ஆசை யெப்படி மனிதருக்கோ அப்படியே பொருள் பெண்களுடைய இளகிய மனமாகிய கயிற்றிற்கொரு பளுவாகும். பொருளினால் மேன்மையடைந்த ஒருவனை எத்தகைய பெண்ணும் விரும்புவாள். ஆனால் தான் மணம்புரிந்த நாயகனைவிட்டு வேறு ஆடவனை அணையநினைக்கும் பெண் அப்பொழுதே உற்பவித்தழியும் மலரினைப்போலும்.

காதல் வனத்தில் மலரும் புஷ்பத்தைப்போலும். அரேபியா தேசத்துத் தாழையைப்போல மலர்ந்ததும் அழிகின்றது. காதலோ வாழ்நாளாகிய ஒருபெரியவனத்தில் மலர்ந்தும் சிறப்பினையிழந்து அழிகின்றது. மேலும் அக்காதல் காற்றுமழைக்காலத்துவானத்திற்றோன்றும் ஒற்றை நட்சத்திரத்தைப்போலும். எவனொருவன் அம்மலரைமுதலிற் பார்க்கின்றானோ அவனுக்கு அம்மலர்தாழ்கின்றது. அவன் அதைப்பறித்துச்செல்லுகின்றான்.

ஒவ்வொரு மனிதனும் பெண்களினெழிலினால் மயங்கிடுவான். பெண்களழகையோ பொன்னினாலடையக் கூடும். முற்காலத்திலுமிக்காலத்திலும் இப்படியே நடந்துவருகின்றது. இவ்வுலகமே ஒருபெரிய சந்தை. அச்சந்தையில் எவன் அதிகவிலை கொடுக்கின்றானோ அவன் அத்தகைய பொருளையுமடைகிறான். ஆனால் அவ்விலை அச்சமயத்திற் கேற்றதா யிருத்தல்வேண்டும். அவ்வளவுதான், மற்றொன்றுமில்லை.

மனைவியினிடத்து மிகவும் அன்புபாராட்டிய வீரமார்த்தாண்டனை விட்டுவிட்டு அரசனிடத்து நட்புப்பாராட்டிய குணவதியின் தன்மையைச் சிறிது ஆராயின் முற்கூறிய விடயங்களின் உண்மை தெற்றெனவிளங்கும். ஒருவன் நன்மையை யடையவேண்டுமாயின் பல துன்பமடையவேண்டும். இது சாதாரணமாக உலகில் நடைபெறுஞ் சட்டமாம். எது வலிமையிற் சிறந்ததோ அது நெடுநாள் இவ்வுலகில் நிலைமுண்டாகும் போரின்கண் வெற்றிபெற்று நீடூழிவாழும் என்று உயிர்நூற் புலவர்கள் கூறுவார்கள். அதன் உண்மையை இச்சந்தர்ப்பத்தில் ஆலோசிப்போமாயின் குணவதியின் ஆசையாகிய வலிமையுடைய பொருள் நிலைநிற்கவேண்டுமாயின் பாவச்செயலைச் செய்யத்தான்வேண்டும். நம் வாழ்நாள் முழுவதும் ஒரு பெரிய நீடித்த பாவவாழ்க்கையென்போரின் கூற்று மொருவாறு ஏற்புடைத்தாம். நாம் உயிருடன்வாழ அனேகம் பொருள்களை அழிக்கின்றோம். ஏனெனில் இவ்வுலகில் வலிமையுள்ளதே நீடித்துநிற்கும்.

இத்தகைய மாபாதகத்தை நம்குணவதி எதற்குச்செய்தனள்? பேராசையெனும் கள்வனது தூண்டுதலினாலன்றே! ஆம்! பேராசை யென்பதன் தன்மைதான் என்னை? உயர ஏறஏற வளர்ந்துகொண்டேவரும். அது கணக்கில்லாப் படிக்களையுடையதோர் ஏணியாமன்றே! அவ்வேணியை யடையவிரும்பிய ஒருவன் அதன் உயரத்தையறிந்ததில்லை. உயரச்சென்றதும் அதற்கு முயரமான இடத்தையடைய மனம் அவாக்கொள்கின்றது. ஒரு கணப்பொழுதேனும் சந்தோஷத்தையடைய விரும்புங்கால் கணக்கற்ற பொருளும் பயனில்லாதல் உண்மையேயன்றோ? அறிவையடைதற்கு ஏதேனும் ஒரு வரையறையுளதோ? நாம் எவ்வளவு படிக்கின்றோமோ அவ்வளவும் நம் அறியாமையையன்றோ விளக்குகின்றது. நாம் பதினாயிரம்வருஷம் உயிருடன்வாழினும் சூரிய சந்திரர் தன்மையையேனும் அன்றி அவைதாம் வானத்திலிருக்கச்செய்த பொருளின் குணத்தையேனும் அறியவல்லமோ? எப்பொழுதும் பேராசையானது பெருநஷ்டத்தையே விளைக்கும். அதுபோற் குணவதியின் பேராசையானது தீமையை விளைவிக்காமலிராது. கார்காலத்திற் றோன்றுஞ் சூரியனையொப்ப உலகிற்கு அற்பநாழிகையே இன்பம் விளைத்துப்பின்னர்க் கடுமழையைய



விளைக்குந்தன்மையையொப்ப தத்சமயத்தில் இம்மையல் இன்பத்தையே விளைத்துப் பிறகு பொறுத்தற்கு முடியாத துன்பத்தை விளைக்கும்.

மனைவியினிடத்து மட்டின்றி யாசைபாராட்டும் வீரமார்த்தாண்டனுக்குக் குணவதியை அனேகநாட்கள் விட்டுப் பிரிந்திருத்தல் மிகவும் வருத்தமேயென்பதை நாம்முன்னமே தெரிவித்திருக்கின்றோம். ஆம் என்செய்வான்? தன்னிடத்து இதுகாறும் ஒருவாறாக நடந்துவந்த மனைவி அரசனை யடைந்தநாள்முதற் பின்னும் பதின்மடங்கு அவனிடத்தே யன்புபாராட்டி வந்தாள். தன் நாயகனுக்குத் துரோகஞ் செய்கிறோமே என்று அதற்குப் பதிலாகப் பின்னும் அதிக அன்பு குணவதி காட்டுகின்றனளோ? என்னையோ? அன்றி அவனுடன் இன்னுஞ் சில நாட்கள் தாமே நாம் தங்கியிருக்கப் போகின்றோம்; அதிசீக்கிரத்தில் அரசன் அவனை நீக்கிவிடுவதாக வாக்களித்திருக்கின்றனனென்றதனாலோ? அன்றித் தான் மிகவும் அன்புபாராட்டினால் தான் கணவனுக்குத் துரோகஞ்செய்வது தெரியாமலிருக்குமென்ற எண்ணத்தினாலோ அவள் அவ்வாறு நடந்தனள். குணவதி இவ்வாறு நடப்பதானது வீரமார்த்தாண்டனது ஆசையைமிகுதியும் வளர்த்து அவளைவிட்டுப்பிரிய மனமிலனாய்ச் செய்தது. இராசாங்ககாரியமாக விடியற்பொழுதிற் செல்லவேண்டுமாயின் பத்துநாழிகைக்கே மிக வருத்தத்துடன் செல்லுவான். இவ்வாறு ஒழுகுதலானது குணவதிக்கே தீங்கை விளைத்தது. எவ்வாறெனின் தன் ஆசைநாயகனைக் காணாமல் வருத்தமடைதலாம். அவளும் என்செய்வாள்? கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டது.

குணவதி அரசனைச் சந்தித்து அனேகநாட்களாயின. அரசன் ஆவலுடன் அவளையணைய எதிர்பார்த்திருக்கின்றான். ஒருநாள் மாலை வீரமார்த்தாண்டன் இராசாங்க காரியமாகச் சென்றிருந்தான். அப்பொழுது அரசன் குணவதியை யடைந்து ஆதரத்துடன் தழுவிக்கொண்டு,

"என், அருமைக்குணவதி! இன்றைக்கேனும் நாம் இன்பமுடன் இருக்கலாகுமோ?" என்றான்.

குணவதி சும்மாவிருந்தனள். அவள் முகத்தைப் பிரியத்தோடும் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் கன்னங்களைத் தன் கைகளால் மெதுவாகத்தட்டினான். அவளழகை மிகவும் வர்ணித்தான். அவனது வர்ணிப்பானது குணவதிக்கு இன்பத்தை யுண்டுபண்ணிற்று, அவள் தன் அழகில் மிகவும் கர்வமுற்றவளாகலின். அடிக்கடி அவளைத் தழுவிக்கொண்டு சிருங்கார வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருந்தான்.

"ஏ குணவதி! நீ மிகவும் அழகாயிருக்கின்றனை. சீக்கிரம் அவ்வீரமார்த்தாண்டனினின்றும் உன்னைப் பிரித்துவிடுகின்றேன். உன்னை முழுவதும் என்னுடைமை என்று எம்பொழுது பாவிப்பேனோ? அக்காலமெக்காலமோ?" என்று சொல்லிக்கொண்டு அவளுடைய இரண்டு தோள்களிலும் தன்கைகளைவைத்து முத்தங்கொண்டான்.

"தாங்களிவ்விதம் பிரியம் பாராட்டலானது எனக்குத்துன்பத்தை விளைக்கின்றது, அடிக்கடி தங்களைப் பிரியநேரிடுகின்றதாகலின்" என்றாள் குணவதி.

"ஆயின் நாளைமுதல் வீரமார்த்தாண்டனைச் சிலகாலம் அரண்மனைக்கே வராமலிருக்குமாறு செய்கின்றேன்" என்றான் சத்தியகீர்த்தி.

"அப்படியே செய்யுங்கள்" என்று குணவதி பெருமூச்சுவிட்டுக்கொண்டு சொன்னாள்.

மறுநாள் வீரமார்த்தாண்டன் அரண்மனைக்கு வந்ததும் "சுந்தரன் உதவி அரண்மனையிற் சிலகாலம்முக்கியமாய் வேண்டியிருத்தலின் நீயே காவலிற் றலைமைபூண்டு இருக்கவேண்டும்" என்றான் அரசன். வீரமார்த்தாண்டன் அவ்வாறு தன் மனைவியைப் பிரிந்திருப்பதற்கு மனமிலனாய் அரண்மனையை விட்டு எங்கேனுமோடிப்போவதாய்த் தீர்மானித்துக் குணவதியுடன் ஆலோசித்தான். அவனுக்கு ராஜத்துரோகம் செய்வதில் மனமில்லையென்று உணர்ந்தான்; மிகவும் மனவருத்தத்துடன் வெளியேசென்றான். வீரமார்த்தாண்டன் சுந்தரியை அழைத்துக் குணவதியின் குணத்தைப்பற்றிப் பயமுறுத்தி வினவ அவள் பயங்கொண்டு ஏதோ அரசன் குணவதியிடத்துப் பிரியம் பாராட்டுகின்றான் என்றாள். உடனேகோபத்து



டன் மனைவியை மறுமுறை யோடிப்போகலாமென்று கேட்டான். அவள் மறுத்ததும் தான் இனி அரண்மனைக்கு வருவதில்லையென்றும் அரசனைக்கொலைசெய்தபிறகே வருவதாயும் சபதங்கூறிவிட்டு வெளியே சென்றான். பிறகு குணவதி அரசபத்தினியாயினள். அரண்மனையிலுள்ளாரெவரும் அரசன் தீயவொழுக்கத்தை யுணர்ந்து மனம் வருந்தி ஏதோ தீங்கு அரசனுக்குச் சம்பவிக்கப்போகின்றதென்று உறுதியாய் நம்பினார்கள். விசையையோ மிகவும் வருத்தமுற்றாள்.

இருபத்தோன்ற மத்தியாயம்முற்றிற்று.

சருக்கை-இராமசாமி ஐயங்கார்.

---

## ஆசார விளக்கம்.

நூல்

பொதுவியல்

முதல் அதிகாரம்-இலக்கணம்

சூத்திரம்—ரு.

ஆசார விலக்கணம்.

உடலுயி ருறுதி யெய்தி யுய்தற்
கின்றி யமையா விடுக்கண் காணு
இன்பிசை யொள்ளிய வெண்ணு ளாக
மருபவர் தம்மா லமையு மெனத்தேர்
விரும்பத் தக்க வொல்லும் வியனடை
யாசா ரம்மென வறையுநூற் கணமே. (ரு)

### இதன் பொருள்.

உடல் உயிர் உறுதி எய்தி உய்தற்கு இன்றியமையா—உடலும் உயிருந்திடனடைந்து வாழ்தற்கு மிக்கவவசியமாயும், இடுக்கண்காணு—(தான் துன்படையா திருத்தலன்றி மற்றையர்க்குந் துன்பத்துக்கேதுவான காரியங்களைச் செய்யாதிருப்பதால்) அன்னியர் துன்பத்தைக்காணற்கேது வல்லாததாயும், இன்பிசை—உடன் மனங்களுக்குச் சுகத்தைத் தருவதாயும், ஒள்ளிய—யாவராலும் விரும்பத்தக்க பரிசுத்தமும் மேன்மையுமானதாயும், எண்ணுளாக மருபவர் தம்மாலமையுமெனத்தேர்—தெள்ளிய வுணர்வாலெழுதப்பட்ட ஐய விபரீதங்களினீங்கிய யாவராலு மதிக்கத்தக்க, நூல், நாவினுண்மை தேர்வான் நுண்ணிய பலநூற் கேள்விகளா னிறைந்தார்க் கெழு.

ந்தலுகம், மையிலறிஞர் மெய்யநுபவம், ஆகியமூன்று மொற்றுமைப்படலால் இஃது பொருந்து மெனவாராய்ந் துணர்ந்ததாயும், விருப்பத்தக்க=மனதுக் கினியதாயும், ஒல்லும்=இயன்றதாயும் உள்ள, வியன்நடை=யாவரும் பாராட்டத்தக்க சிறந்த நன்னடையினையே, ஆசாரமென அறைபு நூற்கணமே=ஒழுக்கம் என்று அழகிய நூற்றொகுதி சொல்லும். (எ-று.)

உடற்சுகவலியெனவே மனச்சுகவலியுண்மையின் இரண்டையு மொன்று சேர்த்துரைக்கப்பட்டது.

நினைத்தல் சிந்தித்தல் மகிழ்தலாதி தொழிற்கு மனமே உயிர்க்கு இன்றியமையாக் கரணமாதலானும், சிந்தித்தலாதிய தொழிலில் மனமென வுயிரென்வேறு பிரித்தறியக்கூடாத வபேத முண்மையானும், இங்கு மனத்தை உயிரெனப்பட்டது.

உயிர்க்குக் கரணமாகிய மனத்தை உயிர் என்றது ஆகுபெயர்.

இனி உறுதி என்பதற்கு, அறிவு உண்மையென்ற பொருள்களுண்மையின், உயிர் நல்லறிவு எய்தியுய்தற் கத்திடாவசியகமாகிய நடை(=நன்னுணர்ச்சி, நல்லார் புணர்ப்பு, நற்பயிற்சி) எனினும், உயிர்உண்மைநெறி யெய்தியுய்தற் கத்தியாவசியகமாகிய, நடை(=அநித்தியப்பொருளிஃதென விசாரித்தோர்தல் அதிற் பற்றின்மை ஐம்புலனடக்கல் தவம்புரிதல் ஞானமடைதல்) எனினும் பொருந்தும். இவற்றுள் முன்னது பொதுவும் பின்னது ஆத்திகர்க்குமாம்.

பதசாரம்.

**உடல் உயிர்க்குறுதி** :—உடற்குறுதி பயந்து வளரச்செய்வது ஆசாரமெனில், உடற்குறுதி பயந்து வளர்க்கும் மது தூர்மாம்ச பக்ஷணம் பேருண்களிலும் ஆசாரவிலக்கணத்துக் கதிவியாப்தி தோஷம்வரும், அவை உயிர்க்கு (மனதுக்கு) கலக்கம் மதம் சோம்பல்களைத்தரும் ஆகலின் அத்தகையனவொழித்தற்பொருட்டு உடற்குறுதிபயப்பதோடுஉயிர்க்கு முறுதிபயக்கும் என்னுமிலக்கணமுங் கூட்டப்பட்டது.

**இடுக்கண்காணு**:—உடலுயிர்க் குறுதிபயக்குஞ்சரிதமே ஆசாரமெனில் அந்நியர் உடலுயிர் பொருள்கட் கிடுக்கணிறுதி பயப்பனவாகிய களவு கொலைகளிலும் (அவ்விலக்கணத்துக்கு) அதிவியாப்தி தோஷம்வரும், அக்குறைபாடொழித்தற்பொருட்டு அந்நியர் துன்பங்களைக் கட்புலன் செவிப்புலன்களாலோர்ந்து வருந்தற் கேதுவல்லாத என்ற விசேடணமுங் கூட்டப்பட்டது.

**இன்பிகை**:—அந்நியர் துன்பங்களைக் காணுதற்கேதுவல்லாத அல்லது அந்நியர் துன்பமடைதற் கேதுவல்லாத சரிதமெனில், பொறாமை சோம்பல்களிலு மதிவியாப்தி தோஷம்வரும், அதைத்தள்ளுதற்காகத்தனக்கு இன்பத்தைத்தரும் என்ற விசேடணமுங் கூட்டப்பட்டது.



**ஒள்ளிய**:—தனக்கு இன்பந்தரும் இயல்பினையுடையது ஆசாரமெனில் வியபிசாரம் (களவுப்புணர்ச்சி) பிறர்பொருளையவரறியாது துய்த்தலாதிகளிலு மதிவியாப்தி தோஷம்வரும். அவை யநுபவத்தி லொருவாறு இன்பமாயினும் துய்ப்பானுக்கு உடையான் காணிற்றீங்குண்டா மென்றவச்ச முதலிய விடர்ப்பாடுகளுண்மையானும் அவை நியாயமற்றனசெயல்களாதலானும் அஃதொழித்தற்பொருட்டு ஒள்ளிய (குற்றமற்ற, மேன்மையான) என்ற விசேடணமுஞ் சேர்க்கப்பட்டது.

**எவ்வுலாகமநுபவந்தம்மாலமையுமெனத்தேர்**:— மனதுக்கு ஒள்ளியதானது ஆசாரமெனில் மதுபானங் கட்குடிப்பார்க்கொள்ளியதாயும், மதவிருத்திக்காகக் கொலைசெயல் எச்சிலுண்ணல் ஒரு சமயிக்கொள்ளியனவாயும், பகலுறக்கஞ் சோம்பலுடையார்க் கொள்ளியதாயும், மனிதரைக் கோறல் நரமாம்ச பக்ஷிணிகட்கொள்ளியதாயும், களவாடல் திருடர்க்கொள்ளியதாயும், அசுத்தாகாரங்கொளல் துராசாரமுடையார்க் கொள்ளியதாயும் புழுவையருந்த லொருநாட்டார்க் கொள்ளியதாயும் இருக்கின்றன. ஆகலினவற்றிலு மதிவியாப்தி தோஷம்வரும், அது நீக்கும் பொருட்டு ஒரு விஷயம் பற்றி யாவராலு மதிக்கப்பெற்ற நூலின் சித்தாந்தமும் (சுருதி,) நுண்ணுணர்வினர் யுக்தியும், குற்ற மற்ற வநுபவமும், ஆகிய மூன்றானு மிஃது பொருந்தும் எனத்தெளிந்த என்ற விசேடணமுங் கூட்டப்பட்டது.

உதாரணமாக, வாமமதஸ்தர்மதுபானஞ்செய்தல்மிகச்சிறந்த புண்ணிய காரியமென்று கூறுகின்றனர். அம்மதக்கிரந்தங்களும் அஃது ஒள்ளிய செயலென்று கூறுகின்றன. வாமநூல் பூர்வபக்ஷமாதலால் அதனைக் கண்டித்து மதுபானந் தீய வினைச்செயலென்று வேதங் கூறல் அறிஞரனைவரு மொப்பத்தக்க நூல். மதுக்களில் பித்தத்தை யதிசரிக்கச்செய்யும் ஒருவித விஷச்சத்துண்மையால் நாளாவிருத்தியில் மூளையின் றெள்ளியவுணர்விற் காதாரமாகும் சத்தைக்கெடுத்து அறிவிற்குப் பேதத்தை யுண்டாக்குவதன்றிப்பல தீங்குகளுக்கு மேதுவாமெனல் யூகம். அநேகர் மதுபான மிகுதியாற் றமது நிலைமைகளை மறந்து தடுமாறி நடத்தல், இலங்கிரியில் மனம் பயின் றஃதின்றிச் சற்று நேரமுமிருக்கக்கூடாதவராய்க் குடித்துழலல், தமது சொத்துக்களை மதுபானத்திலிழந்து தரித்திரராதல், மதுபானத்தின் மிக்க பழக்கத்தால் ஆகாரங்கொள்ளுதலின்றிச் சரீரமுலர்ந்து பலஹீனமடைந்து புத்தி நன்னிலையிலின்றிப் பிதற்றி மரணமாகிய பலனையடைதல், அன்னவரை யனைவரு மெள்ளல், அன்னவர் நன்மை தீமையறியாது மயங்கல், என்றிவை யநுபவம்.

இலிங்கபுராணம் அத்தியாயம் 87. "தீம்புனல் வடித்ததையல்லாலேத மற்றொழியக் குடித்திட்லாகா" ஷை அத் 76. "வடியா தெடுக்கினுண் புழுக்கள்கொலையுறும்", நன்னெறி "தண்ணீர் நிலநலத்தால்-அற்புதமாம்" முதலிய வாக்கியங்களால் சுத்தமான நல்ல நிலத்திலூறிய புழுக்கணீங்க

வடிக்கப்பெற்ற இனிய சுத்தஜலமே பானஞ்செய்யத்தக்கது என்பது சுருதி. சுக்கான்கற்பூமி ஊசரபூமிகளி லூறுநீர் அவ்வச்சத்துக்களோ டுண்மையானும், குப்பைமலம் அழுகல்கணிறைந்த குட்டம்கேணி நீர் அங்குண்டாமழுகலணுக்கள் அணுக்கிருமிகளோடுண்மையானும், அசுத்தநீர் அருந்தினால் அநேக ரோகங்களுண்டாமென்று நூல்களானுமறிந்தாரானுங் கேள்விப்படலானும், புத்திக்கு மங்ஙனமாமெனத் தோன்றலானும், * அறுவகை வடிப்பில் உசிதமான வடிகொண்ட வடியலையருந்தல் தேகசுகாதிக் கேதுவாமென்றநுமானித்தோர்தல் ஊகம். சுக்கான்கற்பூமியி லூறிய ஜலம் வெகுநாட் குடித்தார்க்குக் கல்லடைப்பு அல்லது கபக்கட்டும் சின்னாளருந்தினார்க்கு நீர்க்கடுப்பும், ஊசரநீரருந்தினார்க்கு இரத்தக்கடுப்பும், அழுகல்கலந்த நீரருந்தினார்க்கு ஜ்வரம் பெருவயிறு நீராமையும், கிருமிகலந்த நீரருந்தினார்க்கு பேதி மந்தமும் உண்டாவது அநுபவம். அவ்வநுபவமுணர்ந்தார் மெய்ம்மொழியும் அவையுரைத்த நூலும் அத்தன்மையனவேயாம். இம்முத்திறத்தும் பொருந்தும்விடயம் இரு கக்ஷியார்க்கும் ஒப்பத்தக்கது என்பது தெளிவு. அதனைத் தாயுமானவர் "ஊகமறு பலவசன மூன்றுக்கு மொவ்வுமீதுபயவாதிகள்சம்மதம்" எனக்கூறி யருளியதானு மோர்க.

விரும்பத்தக்க:—என்னானாக மறுபவர் தம்மாலமையுமெனத் தேர்நடையே ஆசாரமெனில், நானாக மறுபவங்களுக்கு ஒருவனை உபகரித்துக் காத்தல் நற்செயலெனல் ஒத்ததேயாயினும் குழியில் விழுந்துகிடக்கும் அழுகுநீரோடும் விரணகுஷ்டரோகம், தொத்துரோகங்களையுடைய அசங்கியமானவனைப் பரிசித்தெடுத் துபசரித்தலினும், பெருச்சாளி, அண்டங்காக்கை மாம்சபக்ஷணங்களினும் அதிவியாப்திதோஷமுண்டாம், அதனையொழித்தற்பொருட்டு மனோக்யமாயுமிருக்கத்தக்க வென்னும் விசேடணமுஞ் சேர்க்கப்பட்டது.

ஒல்லும்:—விரும்பத்தக்க சரிதமே யாசாரமெனில், பேருண் பேராசையா லதியுண்பு, மிகுபோகம் முதலியவைகளினும் அதிவியாப்தி தோஷமுண்டாம், அஃதொழிதற்பொருட்டுப் பொருந்திய அல்லது இயன்ற என்ற விசேடணமுஞ் சேர்க்கப்பட்டது.

### கருத்து.

ஆசாரம் என்பது உடலுயிர் உறுதியடைந்து வாழ்தற் கத்தியாவசியகமாயும், மற்றையர் துன்பத்துக்கேதுவல்லாததாயும், இன்பந்தருவதாயும், ஒள்ளியதாயும், தெள்ளியநூல் யுக்தி யநுபவங்களாற் சிறந்ததென்று நிர்மாணிக்கத் தக்கதாயும், யாவரானும் விரும்பத்தக்கதாயும், இயன்றதாயும்,

* அறுவகை வடிப்பு—கலைவடி, கல்வடி, கரிமண்வடி, கதிர்வடி, சனல்வடி, தெளிவடி.



உள்ள சிறந்த நல்லொழுக்கமாம் என்று நூற்றுருதிகூறும். எனவே ஆசாரமென்பது உடலுயிர் திடனிழந்து கெடுதற்கேதுவாயும், அந்நியர்க்குத் துன்பம் விளைவிக்கத்தக்கதாயும், துன்பந்தருவதாயும், ஈனமானதாயும், தெள்ளியநூல் யுக்தி யநுபவங்களுக் கொவ்வாததாயும், அருவருக்கத்தக்கதாயும் உள்ள அநாசாரத்துக்கு மறுதலையான யாவரானும் பாராட்டத்தக்க நல்லொழுக்கமென்று கொள்ளக்கிடந்தமை காண்க.

(இன்னும் வரும்.)

விருதை-சிவஞானயோகி.

## சந்தான குரவர்.

ஓரும் வேதாந்தமென்றுச்சியிற் பழுத்த வாராவின்பத் தருங்கனி பிழிந்த சாரங்கொண்டு சைவசித்தாந்தத்தைத் தமிழுலகெல்லாம் உய்யுமாறு சாத்திரரூபத்தில் வெளிப்படுத்தித்தந்த பெரியோர்களாகிய மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்னும் நால்வரையுமே சந்தான குரவரென வழங்கி வருகின்றோம். இவர்களுடைய குருத்துவம் திருக்கயிலாயச் சிவபிரானிடத்தினின்றுந் தோன்றி வழிவழியாக வருகின்றதென்று மதிக்கப்படுதலானும், இந்நால்வருட் பிந்திய மூவரும் முறையே தத்தமக்கு முந்தியோரைக் குரவராக் கொண்டமையானும், மற்றைச் சமய குரவர் முதலியோர் ஒவ்வொருவருஞ் சிவபிரானால் நேரே யநுக்கிரகிக்கப் பெற்றமையானும், சந்தானகுரவர் என்னுங் குறியீடு இவர்களுக்கே சிறப்பாகப் பொருத்தமுற்றதாயிற்று. இவர்களுக்கு முந்திய குரவர்கள் முறையே சிவபெருமான், நந்தியடிகள், சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதி முனிவர் என்னும் ஐவருமே என்பது சைவசமயிகளது கொள்கை.

சைவருட் பெரும்பாலார்க்குச் சந்தானகுரவர் இன்னின்னார் இவர்கள் செய்த நூல்கள் இன்னின்ன வென்பதுமட்டுமே தெரியவருமன்றி இவர்கள் திகழ்ந்தகால மிது இவர்கள் சீவியகாலத்தை யொட்டி நடந்த அற்புதங்கள் இவையென்பது விளங்குவதன்று. ஆயினு மிவ்விஷயங்கள் கேள்விமுறையாற் பல பெரியோரகத்து முழங்குவனவேயாம். அவற்றைக் காலவரையறை யொன்றொழியத் தொகுத்துச்செய்த நூலொன்று சில மாசங்களுக்குமுன் யாம் கண்டோம். அதன் பெயர் சந்தானாசாரியபுராண சங்கிரகம். அதனை யாக்கியோர் திருவாரூர் சுவாமிநாததேசிகர். இவர் தமது பாயிரத்திற் புராணவரலாறு கூறுங்காலத்து 'எம்பெருமக்கள் காதை' (சந்தானகு

ரவர் சரிதம்) பதினெண் புராணத்துட் பவிடியத்திற் கூறப்பட்டது என்கின்றனர். நூற்பெயருட் சங்கிரக மென்றமையால் பவிடியத்தில் சரிதம் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது போலும். அது பவிடியத்திலுளதாயினும் இலதாயினும் நாட்டில் வழங்குங் கேள்வி மொழிகளைப் பெரும்பான்மை யொத்திருக்கின்றமையின் அதனைப் பின்பற்றிக் குரவர்கள் சரித்திரத்தைச் சுருக்கிக்கூறுகின்றோம்.

## மெய்கண்டதேவர்.

சோழ நாட்டிலே, கம்பை நதிக்கு வடகரையிலுள்ள கடந்தை நகரத்திலே, காராளர் குலதிலகராய் அச்சுதர்களப்பாளர் என்னும் பெயரினராகிய பிரபு ஒருவர் இருந்தார். அவர் பலவிதமான செல்வங்களை யடைந்தும் அவற்றாற்றிருப்தி பெறாது அருஞ்செல்வமாகிய புத்திரப்பேற்றை யபேக்ஷித்துத் தங்குருவாகிய சகலாகம பண்டிதரை யடைந்து அவர் பாத கமலங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி 'ஐயனே அளவுபடாத பேரறிவுடைய மதலையொன்று யான் பெறும்படி தேவரீர் கடாக்ஷிக்க வேண்டு' மென்ன, அவரும் தேவாரத் திருமுறையைக்கொடுவந்து பூசித்துக் கயிறுசாத்திப் பார்த்தார். அப்பொழுது, திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவெ லாம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னும் பதிகம் காணப்பட்டமையால் ஆசிரியர் அகமிக மகிழ்ந்து, தம் மடியில் வணங்கி நின்ற கடந்தையூர் மாணாக்கரை நோக்கி 'பொன்னிநதிக்கு வடபாற்றிகழும் திருவெண்காட்டை யடைந்து, வேண்டிய வரங்களை யீந்தருளும் பெருமைத்தாய் அவ்விடத்து விளங்கும் முக்குளத்தில் மூழ்கி, பிரமவித்தியா நாயகியையும் சிவபெருமானையும் பக்தி சிரத்தையோடு வழிபட்டு, சிவனடியார்களுக்கு மகேசுவர பூசையும் செய்து அவ்வடியார்கள் பணியையே சிரக்கணியாகக் கொண்டு இன்னு மிவைபோன்ற அறச்செயல்களையும் உன்னுடைய மனைவியோடு செய்து அந்த ஸ்தலத்திலேயே சிலகாலம் வசிப்பாயாயின் உமையொருபாகரது திருவருளால் ஞானமே யோருருவெடுத்து வந்த தென்னும் தன்மையனாகிய ஒரு புதல்வனைப் பெறுவாய். இது சத்தியம். ஐயுறவு சிறிதும் வேண்டியதின்று' என்றார். என்னலும் அச்சுதர்களப்பாளர் ஆசிரியரை மெய்யன்போடு வணங்கி 'இற்றைப்பொழுதே, தாழ்க்காது என் மனையாளோடுஞ் சென்று, தேவரீர் விதித்த வண்ணஞ்செய்வேன்' என்று கூறி விடைபெற்றுக்கொண்டு தம திருப்பிடஞ்சேர்ந்தார். பின்னர் தமதாசாரியராகிய சகலாகமபண்டிதரால் சுட்டப்பட்ட சுவேத வனத்தை [சுவேதம்-வெண்மை, வனம்-காடு] யடை



ந்து பல தருமங்களும் வழுவாதியற்றிவந்தார். இவ்வாறு ஓராண்டு கழிதலும் ஒரு நாள் சிவபெருமான் அவரது கனவிற்றோன்றி "அன்பனே, இப்பிறப்பில் புத்திரப்பேறடையும் விதி உனக்கில்லை" யென்றனர். அது கேட்ட அச்சுதர்களப்பாளர் "சந்திரமௌலீ! திருஞானசம்பந்தப்பெருமான் சொன்னலம் பொருணலங்கள் மலிய உம்மை யேத்திய நற்றமிழ் மறையைச்சிந்தித்து அது மெய்ம்மையென்றே நம்பினேன். இதுவே விதியாம். ஆதலால் இம்மையிலேயே சற்புத்திரனை எனக்கு அருளல் வேண்டும்" என்று பலமுறை யிரந்து துதித்தார். அப்பொழுது சிவபெருமானும் இரங்கி "பக்தனே, உன் துதிகளைக்கேட்டுப் பேருவகையுற்றோம். ஞானபோனகமுண்ட பாலன் நம்மைத் துதித்தபாடலே ச்ருதி யென்று நீ நம்பினையாகலான், உன்னிடத்து அந்தக்காழிச்சம்பந்தனைப் போலவே ஒரு புத்திரன் வந்தெய்துவான்" என அருளிச்செய்து மறைந்தனர். இதனைக்கேட்ட அச்சுதர் களப்பாளர் அலகிலா வானந்தமுற்று முன்போலவே அறங்களெல்லாம் வழுவாது செய்துகொண்டு வந்தார். அக்காலை அவரது மனையாள் கருப்பவதியாயினாள். பத்தாந்திங்கள் வருதலும் உலகுய்யச் சிவஞானபோதமருளிய பிள்ளையார் தந்தையாரும் மற்றையாருங் களிக்குமாறு உதயஞ்செய்தார். சாதகரும முதலிய சடங்குகள் யாவும் முறையே நடத்தப்பட்டன. அச்சுதர்களப்பாளரும் தம்மனைவி சுற்றங்களோடு கடந்தைமாநகரையடைந்து அங்குத்தம்மாளிகையிலிருந்தார். அவர் பிள்ளையோடு நகரிக்கு வந்தெய்திய செய்தியறிந்தோ ரெல்லாம் பிள்ளையை வந்து கண்டு குதூகலங்கொண்டு திரும்புவர். நாமகரணஞ் செய்தற்குக்காலம் வந்தபொழுது நமது பிள்ளையார்க்கு 'சுவேதவனப் பெருமான்' என்னும் நாமஞ்சூட்டினார்கள். கடந்தையிலே யுள்ளாரனைவரும் சந்தோஷிக்குமாறு பிள்ளையார் அத்தலத்திலிருந்த காலத்து அவரது மாமனார் திருவெண்ணெய் நல்லூரினின்றும் வந்து அவரைத் தமதூருக்குக் கொண்டுபோய் வைத்துப் பாராட்டி வளர்த்துவந்தார். சரியை கிரியை யோகம் என்னும் மூன்று சாதனங்களும் முற்பிறப்பிலேயேமுடித்துச் சாமுசித்தராய்த்திகழ்ந்த பிள்ளையார் திருவெண்ணெய் நல்லூரிற்றங்கிய விக்காலத்து அவர்க்குவயது மூன்று. இது நிற்க. திருக்கயிலாய மலையினின்றும்புறப்பட்டுப் பொதியைக்கு விமானமீது சென்றுகொண்டிருந்த பரஞ்சோதி முனிவர் அப்பதிவந்தவுடனே தம் விமானம் தானே நிற்றலைக்கண்டார். காரண மின்னதென ஞானதிருஷ்டியாலுணர்ந்த முனிவர் விமானத்தினின்று மிழிந்து சுவேதவனப்பெருமானுக்கு மெய்யுணர்வு வந்திருத்தலைத் திருவருளாற்றேர்ந்து அவருக்கு தீக்ஷை செய்து, மெய்கண்டான் என்னும் தீக்ஷா நாமமுந்தந்து, சிவஞானபோதநூலைப் பொழிப்போடு தங்குரவரிடத்திற் கேட்டபடியே யிவருக்கு மருளி "இதனைச் செந்தமிழாலாக்குக" என்றாஞ்ஞாபித்துப் பொதியைபோயடைந்தார். பின்னர், மெய்கண்டார் பொல்லாப்பிள்ளையார் சந்நிதிக்கேகித் தாங்கேட்ட உப

தேசப்பொருளைச் சிந்தித்துத்தெளிந்து நிட்டை கூடிவந்தார். தமதாசாரியர் ஆஞ்ஞையை யுன்னிச் சிவஞான போதத்தைத் தமிழாலருளிச்செய்து அதற்கு வார்த்திகப்பொழிப்புரை யென்றொரு பொழிப்புஞ் செய்துவைத்தார். அக்காலத்துப்பரிபக்குவர்கள் அநேகர் தம்மைச்சரணடைதலும் அவர்களுக்கெல்லாம் கிருபை புரிந்து சிவஞானபோதத்தை பொருட்பொலிவுறக் கற்பித்தருளினார். சின்னாட்செல்லுதலும், இவரது குலகுருவாகிய திருத்துறையூர்-சகலாகம பண்டிதர், தம்மை மாணாக்கர் தரிசிக்காமைக்காகக் கவன்றாராயினும் திருவெண்ணெய் நல்லூருக்குப்போகலாமென்னத் துணிந்து முன்னே ஆள்விடுத்தார். மெய்கண்டாரும் அவர் வரவு கேட்டு மிகமகிழ்ந்தார். அவ்வூர் வேளாளரெல்லாம் தத்தம் வீடுகளையும் வீதிகளையும் அலங்கரித்து மாடங்களைப்புதுக்கி வாழை கமுகு தோரணங்கள் நாட்டி, தங்கள் குருவை யெதிர்கொண்டு வணங்கினார்கள். ஆகம குரவரும் வழிபாடுகளை மகிழ்ந்தேற்று ஊரையடைந்து வீதிவலம் வந்து சிவபெருமானைக் கோயிலிற் சென்றிறைஞ்சித் திருமடத்துட்புகுந்தார். திருமடத்தில் அவர்க்கு நடக்க வேண்டிய உபசாரங்கள் அனைத்தும் சரிவர நடத்தப்பட்டன. மெய்கண்டாரோ இவர் வரவைச்சிறிதும் எதிர் நோக்காது தமதிருப்பிடத்தில் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லிக்கொண்டிருந்தார். ஆகம பண்டிதர் மெய்கண்டார் கருத்தையறிய விரும்பி யவரிருக்குமிடஞ்சென்று சமீபத்தில் உலவினார். ஆண்டுள்ள மாணவர்கள் ஆணவம் என்னும் மொழிக்கு நான்முகமாகப்பொருள் விசாரித்தலைக்கண்டு, மெய்கண்டாரை நோக்கி ஆகமகுரவர் சினஞ்செறிந்த மனத்தோடு "ஆணவத்தின் சொரூப மறிவீரோ" வென்று கேட்ட வளவில், அவரும் தமது தர்ச்சனி விரலினால் குரவரையே சுட்டிக் காட்டினர். உடனே ஆகமகுரவர் சிவஞானங்கைவரப்பெற்று மெய்கண்டார் கழலிற்பணிதலும், அவர் குரவரை 'அருணந்தியே' யெனவிளித்து விபூதிப்பிரசாதங் கொடுத்துத் தமது குரு தமக்கநுக்கிரகித்த வண்ணமே தாமும் இவருக்கு அநுக்கிரகித்து சிவஞானபோதத் தமிழ்ச் சூத்திரங்களையுரைத்து வார்த்திகப்பொழிப்புரையும் தெளிவாக உபதேசித்து அளவுகடந்த அன்போடு இவரைத் தமது முதன்மாணாக்கராக்கொண்டார். பின்னர் ஸ்ரீ பஞ்சாக்ஷரமும் மகாவாக்கியமும் முறையே உபதேசித்தருளினார். இவ்விதமாக அருணந்தியார், மனவாசகங் கடந்தார், சிற்றம்பல நாடிகள் முதலாக நாற்பத்தொன்பதின்மர் பரிபாகமுற்ற பக்குவர்களுக்கு சிவதீக்ஷைசெய்து மெய்ப்பொருளை யுணர்த்தி அவர்களையெல்லாம் உய்யக்கொண்டார். மாணாக்கர்களுக்கு உபதேசித்தலும் நிட்டை கூடலுமே தொழிலாகக்கொண்ட இவர்க்கு அத்துவித சோகம்பாவனையே நித்திய தொழிலானமையால் நின்மல சிவன் முத்தராகி ஆனந்தரூபியாய் முடிவில் சிவத்துவமெய்தினார்



## அருணந்தி சிவாசாரியார்.

திவ்ய க்ஷேத்திரமாகிய திருத்துறையூரிலே, ஆதிசைவகுலத்தார் புரிந்த தவமே யோருருவெடுத்து வந்ததென்ன ஒரு சற்புத்திரர் அவதாரஞ் செய்தார். சாத கருமம், நாமகரணம், அன்னப்பிராசனம் முதலிய கிரியைகளனைத்தும் தக்க பருவங்களில் சாத்திரவிதிப்படி நடத்தப்பட்டன. பின்னர், உபநயனம் நடத்தவேண்டிய பருவம் வருதலும் அக்கிரியையை வேதாகமங்கள் கூறு நெறியிலே முடித்து காயத்திரி யுபதேசமுஞ் செய்தனர். அந்நாண் முதல் பிள்ளையார் கருமகாண்டம் பத்திகாண்டம் ஞானகாண்டமென முத்திறப்படும் வேதத்தினைப் பலகாலுமோதிப் பின்னர் ஆறங்களிலும் பயின்று இறுதியில் காமிகமுதல் வாதுளமீறாகவுள்ள சைவாகமங்களை உபாகமஞ் சார்பாகமங்களோடு கற்று இக்கல்வி யெல்லாம் அமையா வென்று தமிழிலும் மிக வல்லவராயினார். ஒப்புயர்வற்ற கல்வியை விரும்பிக் கற்று வல்லராயினமை கண்ட புலவர்கள் இவரைச் சகலாகம பண்டிதரென அழைக்கத்தொடங்கினர். சமயம் விசேஷம் நிர்வாணமென்னுந் தீக்ஷை வகைகளும் ஆசார்யாபிஷேகமும்பெற்று உத்தம சைவாசாரியராய் விளங்கிய இவர் தம்மிடத்து வந்தோர்க்கெல்லாம் ஆகம வழியில் தீக்ஷைசெய்து சைவசமயமே சமயம் என்னும் உண்மையை நன்குபுலப்படும்படி சொல்லிவந்தார். இவ்வாறு சிறப்புற்று வாழுநாளிலே திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவர்முன் தமது ஞானம் தடையுற்றமைகண்டு அவரது பாதத்தில் விழுந்து தம்மை யுய்யக்கொள்ளுமாறு வேண்டினார். மெய்கண்டதேவரும் இவரது விருப்பினை நிறைவேற்றி அருணந்தியென்னும் சிறப்புப்பெயர் சூட்டினர். பின்னர், அருணந்தியார் மறைஞான சம்பந்தர்க்கு உபதேசித்து, சிவஞானசித்தியார் இருபாவிருபது என்னுஞ் சாத்திரங்களை அருளிச்செய்து பரசிவோகம் பாவனையிலமர்ந்தவாறே சிவத்துவ மெய்தினார்.

## மறைஞான சம்பந்த சிவாசாரியார்.

புண்ணிய நதியாகிய வெள்ளாற்றின் கரையருகில், திருத்தூங்கானைமாடம் என்னும் மறுபெயர் கொண்ட திருப்பெண்ணாகடம் (கடந்தை) என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலே, பிராமணர்கள் செய்ததவம் உருவெடுத்து வந்ததென்னும்படி ஒருவர் அவதாரஞ்செய்தார். சகல கிரியைகளும் கிரமமாக நடத்தி, ஏழாம் ஆண்டிலே அவருக்கு உபநயனஞ் செய்தார்கள். அவர் தோன்றிய மரபு மறையோர் மரபாதலின், வேதங்கள், ஆகமங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், ஆறுசாத்திரங்கள் இவையெல்லாம் முறையே கற்றுப் புலமை நிரம்பி மறைஞான சம்பந்தர் என்னுஞ் சிறப்பு நாமமும் பெற்றார். பின்னர், இவர் அருணந்தியாரையடைந்து 'என்னைப் பரசமய மகற்றி யாட்கொண்டருளும்' என்று விண்ணப்பிக்க அவரும் ஆகம நெறிமுறையே சிவதீக்ஷைகள் செய்து சிவஞானோபதேசஞ்செய்தார். அவரிடத்து

விடைபெற்று, மறைஞானசம்பந்தர் சிதம்பரத்தை யடைந்து சிற்சபாநாதரை வலங்கொடுபணிதலும் வேதாகமங்களோருங்கே சிறப்பித்தோதும் ஐந்தெழுத்தை யிடைவிடாது செபித்தலுமே தம்பணியாகக் கொண்டு வீற்றிருந்தார். அந்நாளிலே உத்தமபரிபாகராகிய உமாபதியார்க்குத் தத்துவ ஞானோபதேசஞ் செய்து திருக்களாஞ்சேரியிற் சிலகால மமர்ந்து பின் பரமுத்தி யெய்தினார்.

## உமாபதி சிவாசாரியர்.

சோழநாட்டிலே, உத்தமோத்தமதலமாகிய சிதம்பரத்திலே, அந்தணர் மரபிலே உமாபதி யென்பவர் தோன்றிச் சகலகலைகளிலும் வல்லவராகிப் பொன்னம்பலவ ரிருதாளே புகலெனப்பற்றி விதித்தகாலங்களில் அவரைப் பூசித்து வந்தார். தில்லைச் சிவபிரானைப் பூசிப்பார் மூவாயிரவராகலின் மூவாயிரநாட்களி லொருமுறையே ஒவ்வொருவரும் பூசிக்கும் பேறுபெறுவர். நம்முமாபதியாரும் தமக்கு ஏற்பட்டதினத்தில் பூசைமுடித்து விருதுகளோடு தந்தச் சிவிகையிலேறிச் சிவனடியார்கள் இருபுடையுஞ் சூழ்ந்துவர வீதிவழித் தம்மில்லத்திற்குத் திரும்பினார். அப்போழ்து மறைஞான சம்பந்தர் சிவிகையை நன்குநோக்கி 'அடியார்கள் சூழ்ந்துவர பகற்குருட்டன் பட்டகட்டையிற் போவதைப் பார்த்தீர்களா' என்றார். இம்மொழிகள் தமது செவியிற்புகுதலும், உமாபதியார் அடங்காவன்பும் மகிழ்ச்சியுங் கொண்டு உடனே சிவிகையை விட்டிறங்கிப் பரிசுத்த மூர்த்தியாகிய சம்பந்தர் திருவடிகளை வணங்கி 'பார்த்தவுடனே பகற்குருடென்றருள் செய்தீர். அடியேனுக்கு அதன் உண்மையையுரைத்துப் பூரணஞானத்தை உபதேசித்தருளல் வேண்டும்' என்றிரந்து நின்றார். அன்புமிக்க குரவரும் தமது வாக்கியப் பொருளுரைத்தார். பின்னர் உமாபதியார், சாமானியரே மேற்கொண்டொழுகற் பாலதாகிய வருணபிமானத்தை யறக்களைந்து மிகுந்த பக்தியோடு தம்மாசிரியர் குறிவழி நின்றார். அக்காலத்திலே மறைஞான சம்பந்தர் தம்மிடத்தே பணிசெய்தொழுகும் உமாபதியார்க்கு இருவினை யொப்பு மலபரிபாகம் வந்த தன்மை யுய்த்துணரக் கருதி, 'செய்தொழிலிற் பாவமில்லது நெய்தற்றொழில்' என்னும் உறுதி கடைப்பிடித்து அத்தொழிலாலே ஜீவிக்குஞ் சாதியார் நெருங்கிய வீதியிற் சென்று, நூற்பாவிற் செலுத்திய கூழின் சேடம் கொண்டு வார்க்குமிடத்து தங்கரத்தை நீட்டி அதனை வாங்கியுண்டார். உண்ணுங்காலை யவர்கரத்தின் கீழொழுகுங் கூழை அருகர் நின்ற உமாபதியார் ஏந்தியுண்டார். மறைஞான சம்பந்தர் உமாபதியாரை யழைத்துப்போய் அவருக்கு ஞானோபதேசஞ் செய்து சிவஞானபோதம் முதலிய நூல்களையும் அவற்றினது நுட்பங்களையும் திருவாய் மலர்ந்தருளினார். உமாபதியாரோ சிவானந்தவாரியில் மூழ்கித் தம்மை யொப்பாரும் தம்மின் மிக்காரும் இன்றி விளங்கினார். இத்தகைய பெருவாழ்வு பெற்ற நம்முமாபதியாரை வேதியர்கள் அறியாராகி இவர் தமக்கு விதித்த ஆசாரங்களி



னின்றும் வழீஇயினார் என்று கருதி எல்லாருங் காணும்படி இவர் பிராமணத் தன்மையை யிழந்தாரென் றிகழத்தலைப்பட்டார்கள். அக்காலை, மறுகுல வேந்தனாற்பெற்ற கொற்றவன்குடிக்கேகி அவ்விடத்து ஒருமடமமைத்து, சிவனடியார்கள்சூழச் சிவபூசையாற்றித் தியானாதிகள் செய்து கொண்டிருந்தார். இவ்வாறு ஞான நிட்டைகூடி வாழ்ந்திருக்கு நாளிலே, சிதம்பர நடேசர்க்குப் பூசைசெய்யும் முறைநாள் வந்தது. அஃதுணர்ந்த உமாபதியார்சிதம்பரத்துக்குச் சென்று கோயிலுட் புகுந்தார். மனம்வேறுபட்ட மறையோர் 'புகுதல் கூடாது. வந்தவழியை நோக்கிச்செல்க' என்று கூறித் தடைசெய்தனர். இக்கொடிய மொழிகேட்ட உமாபதியார் தம்மடத்தை யடைந்து மானதபூசை செய்தார். இவரை வெறுத்துத்தள்ளிய பிராமணர் பூசைசெய்யும்பொருட்டுத் திருக்கதவ நீக்கிஅம்பலவாணர் சந்நிதிமுன்னர்க் குறுகினர். ஆண்டுப்பேடகத்தைக் காணாது அஞ்சித்தடுமாறி யீதென்ன மாயமென்னமாழாந்து சிவபிரானைநோக்கிக் குறையிரந்தார். அப்போழ்து, 'தன்முறைப் பூசையைச் செய்கின்ற நம்மன்பன் உமாபதிப்பேர் அந்தணன்மாட்டமர்ந்தோம்' என்றோ ராகாசவாணி யார்த்தெழுந்தது. அதனை வேதிய ரனைவருங்கேட்டு உமாபதியாரை யடைந்து, யாங்கள் செய்த குற்றத்தைப்பொறுத்து நடராச பூசை செய்யத் தேவரீர் இன்னே எழுந்தருளல் வேண்டுமென்று விரும்பினர். உமாபதியாரும் அந்தணர் பின்னே சென்று பூசை முடித்து மீட்டும் மடம் வந்து சேர்ந்தார். இது நிற்க.

முற்காலத்திலே ஒரு முனிவன் பன்னாளுஞற்றிய சிவபுண்ணிய முதிர்ச்சியால் அகக் கரணங்கள் வசப்பட ஞானசாஸ்திர படனஞ் செய்து பேரறிவாளனாகி வாழ்ந்திருக்கும் நாளிலே ஒருபாவத்தைச் செய்து வைத்தான். அக்காரணத்தாற் பூலோகத்திற் புலையர் குலத்தி லவதரித்தான். அவன் பெயர் பெற்றான். பாலப்பருவம் நீங்கிக் காளைப்பருவ மடைந்தவுடனே தன்பிதா வேண்டுகோளின்படி தன் குலத்துள்ளேயே ஒரு பெண்ணை மணந்தான். இவ்வாறு சின்னாட் செல்லுதலும் பூர்வஞானம் மனத்தில் வந்துதிப்பத் தன் மரபிலுள்ள கீழ்மைகளையெல்லாஞ் சகிக்கலாற்றானாகிச் சேரியை விட்டுப்பிரிந்துபோயினான். உண்மைஞானத்தி லழுந்தியபெற்றான் தன் சுற்றம் மனையென்பனவற்றை நீக்கிச் சிதம்பரத்தை யடைந்து கோயின் மதிற்புறத்தினின்றுஞ் சிவபிரானைத் தொழுதிருந்து சிறுபொழுது போக்கிப்பின்னர் நாடோறும் கோயின் மடைப்பள்ளிக்கு விறகு வெட்டிக் கொடுவந்து கொடுக்கும் பணிவிடையை மேற்கொண்டொழுகினான். அந்நாளிலே சிவபிரானது திருவருளும் பெற்றானுக்கு முத்தியடையுங் காலமும் ஒத்துவர, பெருமான் கனவிற்றோன்றி,

> "அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
> குடியார்க் கெழுதியகைச் சீட்டு—படியின்மிசைப்

பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

என்னும் திருமுகத்தை யீந்து, 'எம்மிடத்துப் பேரன்பு பூண்ட உமாபதியென்னும் பெரியோன் கொற்றவன் குடியில் வாழாநின்றான். அவன்பாற் சென்று பணியியற்றி யித்திருமுகத்தைக்கொடு. அவன் உனக்கு மும்மலநீக்கம் வருவித்து முத்திதந் தருளுவன்' என்றருளித் திருவுருக்கரந்தார். கனவு நீங்கிய வளவில், சாம்பானார் திருமுகம் தமக்கு வந்த வரலாற்றருமையைச் சிந்தித்து மிக மகிழ்ந்து கொண்டாடினார். பின்னர்ச் சிவன் ஆஞ்ஞாபித்தபடி கொற்றவன் குடியை யடைந்து பன்னாளாக விறகுப் பணி செய்துவந்தார். ஒருநாள் பணி மழையால் முட்டுப்பட்டது. அந்நாள் மடத்தில் அமுதமைக்கத் தாழ்த்தது. அஃதறிந்த உமாபதியார் தாமதமென்னையென்று கேட்டவளவில் மடைத்தொழிலோர் வணங்கி "சுவாமி! பன்னாளாகப் பஞ்சமனொருவன் விறகளித்து வந்தான். இற்றைஞான்றவன் வந்திலன்" என்றார். உமாபதியார் 'அனையன் நாளை வருவானாயின் அவனை யெம்மிடத்துத் தம்மின்' எனக்கட்டளையிட்டு மடைத் தொழிலோரைப் போகவிடுத்தார். மறுநாட் காலையில் சாம்பானார் இரட்டிப்பங்கு விறகு கொண்டு மடத்தருகு வந்தார். வந்தமை உமாபதியார்க்குத் தெரிவிக்கப் பட்டது. குரவருந் தமதிருக்கை விட்டெழுந்து முன்றிலை நண்ணிச் சாம்பானாரை நோக்கி, 'அப்பா நீயார்? எங்ஙனமிங்கு வந்தாய்? எல்லாம் விடாமற்சொல்' என்று கேட்டார். சாம்பானாரோ ஒன்றுங்கூறாது சிவனார் தந்த திருமுகத்தை உமாபதியார் முன்னர் வைத்து விழுந்து வணங்கினார். அடியார்கள் ஓடித் திருமுகத்தைக் கொண்டுவந்து தருதலும் வாங்கி நோக்கி ஆரூரது அத்திருமுகமென்றுணர்ந்து அதனைச் சிரமிசை யேற்றிக்கண்களிலொற்றி கரசரணாதியவயவங்களெல்லாங் கம்பிக்க ஆனந்தக்கூத்தாடினார். பின்னர், சிவனார் ஆணையை நினைந்து சாம்பார் சுத்த சத்திநிபாத முற்றமை நோக்கிச் சத்திய நிர்வாண தீக்ஷைபால் அக்கணத்தே அவர்க்கு முத்தியளித்தார். இதனைக் கேள்வியுற்ற சாம்பார் மனைவி முதலியோர் எவனோ ஒரு பிராமணன் எங்கள் பெற்றானைத் தீக்கொளுவச்செய்தானென் றரசனிடஞ்சென்று முறையிட்டார். அரசனுமிவர்பால் வந்து வணங்கி 'பிராமணோத்தமரே, இன்று சிலர் என் சிந்தைகலங்குமாறு செய்தனர்' என்று குறிப்பால் தான் வந்த காரணமுணர்த்தினான். உமாபதியார் தீக்ஷையின் மகிமையை விஸ்தாரமாக எடுத்துப்பிரசங்கித்தார். 'அடியேன் ஐயந்தெளியுமாறு இன்று மொருதீக்ஷை செய்து காட்டல் வேண்டு' மென்று அரசன் விரும்ப, உமாபதியார் சூழ்ந்து நின்ற அடியார் குழாங்களை நோக்கி சத்திநிபாதம் பெற்றாரொருவருமின்மை கண்டு சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்யு நீரினூற்றழைத் தோங்கி நின்ற முள்ளிச்செடியைத் தெரிந்துகொண்டு 'அரசனே, அடியார்களெல்லாம் ஒருவர்பின் னொருவராக நோக்கியும் பக்குவரப்பட்டிலர். பரசிவ வழிபாட்



டிற் சிறந்த புண்ணியர்க்கு உண்ணுமாறு காய்கள் தந்த முள்ளிச்செடியீதோவுள்ளது. அதனை முத்தியடைவிப்பேன் காண்க' எனப்புகன்று அச்செடியினை அருளால் நோக்கினார். அது சிறந்த ஜோதியாகி அரசனையுள்ளிட்டோரனைவருங்கண்டு சேவிப்ப விசும்பிற்சென்று சிவனுருவெய்திற்று. நிகழ்ந்த வண்ணங்கண்ட அரசன் பட்டாடை முத்துமாலை முதலிய கொடுத்து உமாபதியாரைப்பூசித்து 'அடிகளது பெருமையறியாது பிழையிழைத்தேன் கமித்தருள்க' என்று வேண்டித்தன் னரண்மனைக்கு மீண்டான்.

பின்னர், அருணமச்சிவாயர் முதலிய பக்குவர்கட்கு ஞானோபதேசஞ் சாத்திரோபதேசஞ் செய்து சித்தராய் அமர்ந்திருக்கு நாளில் நடராஜதரிசனார்த்தம் சிதம்பராலயத்துட் பிரவேசித்தார். ஆங்கிருந்த வேதியர் இவரைக் கண்டருவருத்து மதிற்புறத்தே கொண்டுவந்து தள்ளிவிட்டுத் தாங் கோயிலுட் புகுந்து சிவனார்க்குத் திருவிழா நடத்தத் தொடங்கினார். விழாக்கொடி யெழாமை கண்டவேதியர் மிக வருந்திப்பெருமானை நோக்கிப் பிரார்த்திப்ப, "கேளீர் பிராமணர்களே, நமது பக்தன் உமாபதி வருவனாயின் கொடியேறும்" என்றோரசரீரிவாக்கு விசும்பிலெழுந்தது. அக்கணமே யாவரும் உமாபதியார் மடத்தையடைந்து, சிறியேமாகிய யாங்கள் செய்த பிழை பொறுத்துக் கோயிற்கு எழுந்தருளித் திருவிழா வமைத்தல் வேண்டுமென்று விண்ணப்பித்தனர். உமாபதியாரும் அவ்வடியார் சூழப் பொன்னம்பலவர் திருமுன் எய்தி

"ஒளிக்கு மிருளுக்கு மொன்றேயிட மொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே."

என்னும் பாசுரத்தை பாடி விழாச்செய்து முடித்தனர். பின்னர் அதனையே முதலாகவுடைய கொடிப்பாட்டோடு சிவப்பிரகாசம், வினாவெண்பா, திருவருட்பயன், உண்மை நெறிவிளக்கம், போற்றிப் பஃறொடை, சங்கற்பநிராகரணம், என்னும் சித்தாந்த சாஸ்திரங்களையும், [illegible], திருப்பதிக் கோவை, சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், என்னும் சைவமரபு விளக்க நூல்களையும் அருளிச்செய்தார்.

இன்னுஞ் சின்னாட்கழிய உமாபதியார் கோயிற்புராணம் என்னும் பெயரிய சிதம்பர க்ஷேத்திரமான்மியத்தை யாத்து அதனை யரங்கேற்றுமாறு கோயிற்குக் கொணர்ந்த பொழுது ஆண்டுள்ளார் இவரை யம்பலத்துட்புகுதவொட்டாது தடைசெய்தனர். நடராஜப்பெருமான் திருவுளமிரங்கி உமாபதியார் பெருமையை யுலகிற்குப் புலப்படுத்த வெண்ணி, ஒருநாட் சாயங்காலம் அந்தணர் தன்னுருவத்தைக்காணாதவாறு மறைந்தருளுதலும் அவர்கள் சோகமுற்றுக் கரையத்தொடங்கினர். அப்பொழுது நாம் உமாபதியேட்டைத்

துட்டங்கினோ மென்றோ ராகாசவாணி கூறிற்று. இதனைச் செவியுறக்கேட் டமறையவர் தாய்ப்பசுவைப் பிரிந்த கன்றென உமாபதியார் பக்கல் வந்தெய்தி 'அந்தணர் குல சிகாமணியே, மூழுமக்களாகிய யாங்கள் இழைத்த தவற்றினைப்பேணலாகாது' என்று வேண்டி அவர் பாதகமலங்களில் வீழ்ந்து பணிந்தனர். பணிந்து, "சுவாமீ, அடியேங்கள் நடராஜப் பெருமானுக்குப் பூசை செய்யுமாறு கோயிலுட் சென்றோம். அங்குப் பெருமானைக்காணாது அழுங்கினோம். அக்காலை 'உமாபதி பேடகத்து ளுறைகின்றோம்' என்று வானி லெழுந்த தொருசொல்" என்று விண்ணப்பித்த வளவில், உமாபதியார் 'எம்மாற் குறையொன்று மில்லை. எழுதிய கோயிற் புராணத்தைப் பேடகத்துள் சும்மாவைத்துப் பூசித்தோம்.' என்றார். அது கேட்ட பூசுரர் 'அடிகளே, இப்புராணத்தை அம்பலத்தில் வைத்து அரங்கேற்றி யருளுமின்' என வேண்டித் தில்லைநகரை யலங்கரித்து, கொடி தோரணங் குடை சாமரை சின்ன முதலிய சூழச் சிவிகையொன்று மடத்திற்குக் கொடுவந்து 'தேவரீர் இதனுள் எழுந்தருளல் வேண்டு' மெனப் பிரார்த்தித்தனர். அவ்வாறே உமாபதியாரும் அந்தணர் தாங்குஞ் சிவிகையேறிக் கோயிலையடைந்து புராணத்தைப் பூசித்து வாசிக்கத்தொடங்கின அளவில் பெருமானும் மன்றி லெழுந்தருளினர். யாவருமிகமகிழ்ந்து புராணத்தைப் பக்திசிரத்தையோடு கேட்டனர். புராணமும் அரங்கேற்றப்பட்டது. பின்னர்ச் சிலகாலம் உண்மையடியார்கள் போற்ற உலகில் வாழ்ந்திருந்து உமாபதியார் நித்திய பரம் பொருளாகிய சிவத்தோடு அத்துவிதமாயினர்.

(இன்னும் வரும்.)

அனவரதவிநாயகம் பிள்ளை.

---

## அன்னி பெஸன்ட் அம்மை சரித்திரம்.

ஞானபோதினியைப் படிக்கும் நண்பர்காள்!

சென்ற தேசாபிமானிச் சஞ்சிகைகளு ளொன்றனிடத்துக் கும்பகோணக் கலாசாலை மாணாக்கருள் தி. வே. அரங்கசாமி யென்னும் பெயர் கொண்டெழுந்த வொருவர் ஆன்றோராட்சியுஞ் சொற்பொரு ளுணர்ச்சியும் பத்திரிகை யொழுங்கும் விடயதான மரபுமாகிய இன்னோரன்னவற்று ளொன்றேனுஞ் செவ்வனே யுணர்தற்பேறு வாய்க்கப் பெறாது காதுகேளாக் கண்ணிலா னொருவன் 'ஐயகோ! யாவரோ ஒருவர் என்னைப் புடைத்துத் தெழிக்கின்றனரே! என்செய வல்லேன்! என்செய வல்லேன்!!' என்று வாய்விட்டழுது கூவி முறையிடுதலொப்ப, அன்னிபெஸன்ட் அம்மை சரித்திர விடயமாகப் பலவற்றை யியைபின்றிப் பிதற்றிப் புலம்புகின்றனர்.



அவர் தம் பிதற்றுரைக்கும் புலம்புரைக்கும் இயைபின்மைக்கும் உதாரணமாகச் சில காட்டிய பின்னர்; அவரது வாதத்திற்கு மொருமருந்து குறிப்பாம்.

"அன்னி பெஸன்ட் அம்மை யவர்களை யுலகெல்லாம் அறியுமே" என்று முதற்கணெழுதிய விவர், தாமே யெழுதிய இவ்வாக்கியத்தின் பொருளாற்றலை யுணரகில்லாது, பின்னர் இரண்டாம் வாக்கியமாக, "இந்த மாதரசியார் தமது ஜீவசரித்திரத்தைத் தாமே இங்கிலீஷ் பாஷையில் எழுதி வெளியிட்டிருக்கின்றனர்" என்று எழுதியது வேண்டாகூற லாதலை நோக்கி 'ஐயா! நும்மொடு யான் தெரியாது வாதப்போர்க்கு வந்துவிட்டேன்' என்று கூறித் தங்கவுளிற் புடைத்துக் கொண்டொழிவாராக. இவ்வாறு முன்பினியைபுகள் கண்டெழுதமாட்டாதார்க்கு மூச்சேன் பேச்சேன்? இனி யின்னணம் வாக்கியந்தோறும் வழூஉக்காணப் புகுதல் மணற் சோற்றினிற் கல்லாராய்தல் மானுமாதலின், தாலீபுலாக நியாயம்பற்றி அவர் தங்கூற்றுக்களினியல்பினை அறிவுடையோர் உய்த்துணர்வாராக.

இவ்விருவாக்கியங்கட்குமேல், அன்னி பெஸன்ட் அம்மை சரித்திரத்தைப் பாடினாரின்னா ரென்பதைப்பற்றி யோரையப்பாடும் நிகழ்ந்திற்றில தாகவும் அந்நூல் செய்தவர் அவரே யென்றும் அஃதீரிரவிலேயே யெழுதப்பட்டதென்றும் இவர் கூறிக் கொம்பு குறித்தலை யுற்றுநோக்குமிடத்து நூல் செய்தாரும் அவரல்லர்; அஃதீரிரவினு மெழுதப்படவில்லை யென்பது கொள்ளக் கிடக்கின்றது. அந்நூல் 76 விருத்தமான பாக்கள் கொண்டதென்பதும் அன்னி பெஸன்டு அம்மையார் மீதுள்ள அன்பினாலாதல் மதுரைப் பிரமஞான சபையார் வேண்டுகோளினாலாதல் அந்நூல் செய்யப்பட்டில தென்பதும், "அவர்கள் முன்பாகப் படித்துப் பொருள் செய்யப்பட்டது" என்பதனால் நூல் செய்தகாரணம் பொருள் வருவாய் செய்து கோடலே யென்பதும் நந்த மரங்கசாமியார் கூற்றால் வலியுறுகின்றன. நாயகன் கவியையும் பொருள் செய்யாத நகரினரோ இப்போலி நூலைப் பொருள் செய்திருப்பார்? அற்றேற் 'பாலபாரதி' யென்னும் பட்டமோ வெனில், "ஈதலரிதெனினு மின்சொலினு நல்கூர்த, லோகோ கொடிது கொடிதம்மா" என்ற நீதிக்கிணங்கி மதுரைமா நகரத்தார் அதனை அளித்திருத்தல் வேண்டும்; அன்றியும், அப்பட்டமளித்தார் மதுரைமா நகரினரேயோ வென்பதூஉம், ஐயுறற்பாற்று; புறநாடுகளினின்றும் வயிற்றுப் பிழைப்பு நிமித்தம் போந்து மதுரைமா நகரின் கண்ணே வாசஞ்செய்வார் தாமும் பாண்டி நாட்டினரெனவும் மதுரையம்பதியின ரெனவும் வாய்ப்பறை யறைந்து கொள்கின்றனராதலின்,

ஜனவரி மாதத்து ஞானபோதினிப் பத்திரிகையில் இப்போலிநூல் ஆராய்ச்சி செய்யப்பட்டுளது. அவ்வாராய்ச்சி மிகச் சுருக்கமாகவும் செவ்விதாகவுஞ் செந்தமிழ் நடையி லெழுதப்பட்டுளது. தமது மேற்பார்வைக் கனுப்பப்பட்டா லன்றித் தற்காலத்து நூல்களு ளொன்றனையும் பொருள்

செய்யாத அப்பத்திராதிபரோ இப்போலி நூலை யொருபொருட் படுத்தி யாராய்ச்சி செய்வார்? அவர் அங்ஙனஞ் செய்ததும் மதுரைப் பிரமஞான சபையார், பத்திராதிபர் தாம் மேற்பார்வையிட்டு அந்நூலினைப் பற்றிய தம்கருத்தினைத் தெனத் தமது ஞானபோதினிப் பத்திரிகையிற் குறித்தற் பொருட்டு அனுப்பினமையி னென்க. அல்லாக்கால் அவர் இந்நூலினைப் பற்றிப் பேசுதற் கென்னை? அப்பத்திராதிபர் இது பண்டிதர் பாராட்டுதற்குவதொரு நூலன்றுமாறு தெளிவுபெறக் காட்டியிருத்தலே யன்றிப் போலி நூலென்றுந் தெரித்தனர்; அதுபற்றியே நம் அரங்கசாமியார் அழுகையெல்லாம். அடியுண்டார் அழுதல் இயல்பாமன்றே. ஞானபோதினிப்பத்திராதிபர் எழுதி ஐந்து திங்கட்குமேற் செல்லுமட்டும் வாளாதிருந்து இப்பொழுது எழுந்து புலம்புவதைக் கவனிக்குமிடத்து, பத்திராதிபர் கூற்றுக்கு உத்தரஞ் சொல்லத் தோன்றாமையால் வேறு யாரேனுஞ் சொல்ல மாட்டார்களா வென்றெண்ணி யிருக்காறுந் திக்குத்தோறுந் திகைத்தமையும், 'ஆறினகஞ்சி பழங்கஞ்சி' யென்றாற்போல நாட்கழித்து எழுதியக்கால் ஒருவரும் அத்துணை கவனிக்கமாட்டாராகவே ஞானபோதினிப் பத்திராதிபர் எங்கே கவனித்து நம்மை மறுக்க வரப்போகின்றன ரென்றெண்ணினமையுமே யதற்குற்ற காரணங்களாமாறு காண்க. அந்தோ! இவரெதிர் பார்த்ததற்குமாறாக யாம் இதனைக்கண்ணுறும்படி நேரிட்டது அவரது துரதிர்ஷ்டமேயன்றோ? ஞானபோதினிப்பத்திராதிபர் தமது ஆராய்ச்சியென்னு மகாபாணப் பிரயோகத்திற்கு இந்நூன்முயலை யோரிலக்குவைத்தெய்தது நமது பண்டிதர் ஸ்ரீகிருஷ்ணமாசாரியரவர்கட்கு ஒரு கௌரவமேயாயினும், அவர்மேலொரு பிழையே யாமென்பது எமது கொள்கை.

இனி விடயத்தை யுண்மை தோன்ற வாதிக்குமிடத்துப் பசசாலங்கள் செய்து தப்பியோடுதல் ஒரு தோல்வித்தான மென்பதைத் தேசாபிமானி பாலிறங்கி யரற்றுமரங்கசாமி யாரறிவாராக.

"'திவ்விய சொல்'லும் 'சனித்திரய'மும் தம் நாவிற்கு ஆகா வென்று நீக்கு மியல்பினர்" என்றார். திவ்வியவசனமும், பலத்திரயமும்; திஞ்சொல்லும், முக்கனியுந் தம் நாவிற்கு ஆகுமெனக் கொள்ளுமியல்பினர் மற்றையவற்றை நீக்காமலென் செய்வர்? நம்பத்திராதிபர் மேற்கொண்ட வியல்பு நல்லதாமாக அரங்கசாமியா ரியல்போ சங்கரமாயிருக்கின்றது.

"உம்பரெல்லாம் ஆய்ந்து நின்ற" என்புழி மகரத்தை யகாரத்தொடு கூட்டிக்கொள்ளேமென முரணினும் இலக்கண விவரைப்பிடர் பிடித்துந்தி மகராகாரங்கொள்ளும்படி செய்யுமென்பதை மறந்தனர் கொலோ? அந்தோ! பிராமணராயிவர்க்கு இக்கதி வந்ததன்பற்றி மிகவும் பரிதபிக்கின்றோம்.

சிந்தாமணிச்செய்யுளை மேற்கோள் காட்டுமிடத்து, 'விஞ்சை' யென்றெழுதவறியாது 'விஞ்ஞை' யென்றெழுதிய விவர்க்கேனோ வீண்வாய்!



ஆகந்தக்குற்றமே யாங்காங்கு மலிந்து கிடக்கின்ற இந்நூலில், முதற்கவி மட்டிலேயே நம்பத்திராதிபர் ஆகந்தக்குற்றங்காட்டி னின்றார். இவர் தாங்கொண்ட கொள்கையை வலியுறுத்த வேண்டுமாயின், ஒரு நூலின் றொடக்கத்திலுள்ள செய்யுளை யெடுத்தே மேற் கோள் காட்டல் வேண்டுமேயன்றி நூலினடுவணுள்ள தோர் செய்யுளினை யெடுத்துக்காட்டி யொழிதலேற் புடைத்தன்றென்க. அன்றியுஞ் சிந்தாமணியாதிய சங்கச் செய்யுள்கட்கு ஆகந்தக்குற்றங்கூறலடாதென் றுரைக்கும் ஆசிரியர் நச்சினார்க்கினியரது பத்துப்பாட்டுரையையு முற்றுநோக்கித் தெளிவாராக. இனிப்பதினாயிரக் கணக்கான செய்யுள்செய்யும் மகாகவிகளாகிய கம்பர்முதலாயினார் 'கிரங்கு சாத்கவய:' என்ற வடநூல் விதிப்படி சிறிது வழீஇயினுமிழுக்கில்லை; 70 அல்லது 80-செய்யுண்மட்டிலே, கிரைத்தண்டு பிடுங்க ஏலேலப்பாட்டுப் பாடிய கதையாய் முக்கி முயன்று செய்யும் புன்கவிகட்கு அவ்விதி யொவ்வாதாம் பிறவென்க. யானைக்கு மதம்பிடித்தா லழகாமன்றிப் பூனைக்கு மதம்பிடித்தா லழகாகாதே.

இனி 'யகர'த்திற்கு 'இகர'ம் மோனையா மென்று யாப்பிலக்கணங்கள் கூறுகின்றனவே யன்றி 'அகரம்' மோனையாமென்று யாண்டுங் கூறிற்றில. சிந்தாமணி திருக்குறளாதிய நூல்களிற் சில செய்யுட்களில் மோனைத்தொடையே தழுவப்பட வில்லையாக, அவற்றுண் மோனைப்பிறழ்வு காட்டப் புகுந்துவிட்டார் அரங்கசாமியார்! எதுகை மோனை நியமமெலாம் பிற்காலத்தார்க்கென்று முன்னூலார்வகுத்த விதிகள். அவற்றால் ஓசையின்பம் பயத்தல் கண்டு அவற்றை யநுசரித்தே பிற்காலத்தார் யாவரும் நூல் செய்வாராயினர். அவற்றின் வழீஇயினரெல்லாம் முற்காலத்துச் சங்கச்செய்யுட்டமிழ் நடையையே தழுவுவாராயினர். இவ்வாறன்றி நமது கிருஷ்ணமாசாரியர் கட்டுரைச்சுவையற்ற வெளிய தமிழ்நடையிலெழுதியிருத்தல் நூல் படித்த யாவரும் அறிவர்; இப்புன்னூலுக்கு ஓசையின்பமுமில்லாதொழியின் விகாரப்பேய் மலிந்துள இந்நூல்வழி யாவர் செல்லுவார்? "கனிபானுறுரோவனுன்" என்றெழுதித் தொலைத்திருந்தாற் குற்றங் கூறாது விடுத்தேயிருப்பர் நமது ஞானபோதினிப் பத்திராதிபர். 'பிரமன் முதலும்பரெல்லாம், ஆய்ந்து நின்ற மறைமுடிவிற் பழுத்த செழுங்கனியானுன் யாரோவனுன்' விவேகமுள்ள அரங்கசாமியார் கண்ணுக்காதல் புலப்பட்டமை பற்றிக்கழிபேருவகை பூக்கின்றோம்; எனினும் பிரமம் புலப்பட்டுப் பேறடைந்தார் பாடெல்லாம் நம்போலியார் மொழிவேலினுற் போழுண்டு போதலாமாயின் அதனையவாவுவா ரொருவருமிலராவரென்க.

இரண்டாஞ் செய்யுள் பொருத்தமிலுவமை யுடைத்தாதலைப் பாட்டிலுள்ள இருவகை யடைமொழிகளையு மொட்டிநோக்கி 'ஐயகோ! உவமை பொருத்தமின்றாய்க் கழிந்ததே!' என்று கருதி யடைமொழியாளரா யொதுங்கக்கடவர்.

புல்லறிவாள னொருவன் வாய்க்கு வந்ததைப் பிதற்றி 'இஃது ஏகபாதம்; இதற்கு நால்வேறு பொருள் காண்மின்' என்றுழிப் பேரறிவாளர் தங் கல்வி நலத்தால் அதற்குப் பொருள் கண்டாராயின் அஃது அவரது மேம்பாட்டை வலியுறுத்துமே யன்றிப் புல்லறிவாளனுக் கொன்று மின்றாம். அதுபோல நமது அரங்கசாமியார் வாய்க்கு வந்தன கூறினும் அவற்றிற்கும் பொருள் காணவல்லர் பத்திராதிபர். அத்தகையார் பொருட்டெளிவின்மை யென்றால் அது தம்போலும் பண்டிதரல்லாத பிறர்க்கே யென்றுணர்க. நூலெழுதியவர்க்கே பொருள் விளங்காமையா லன்றோ நமது அரங்கசாமியார் வந்து விளக்க வேண்டியதாயிற்று; இதுவு மொக்கும், நூலேயிவ ரெழுதியிருந்தாலன்றோ அவர்க்குப் பொருளுந் தெரிந்திருக்கும்? நூலியற்றினர் யாவரோ? அஃதிறைவனுக்கே வெளிச்சம்.

நமது ஞானபோதினிப் பத்திராதிபர் இப்போலி நூலின்கண் ஒருமையையன்றிப் பன்மையும் மயங்கிக் கிடத்தல் கண்டு காட்டினாராக, நமது அரங்கசாமியார் அவரை இந்நூலின் 'முழுமையுந் தெரிந்தவராகக் காண்கிலர்' என்கின்றனர். அவர் தமது பத்திரிகையின்கண் அதிக இடமின்மை பற்றி நூலிலுள்ள முழுமையுங் காட்டா தொழிந்தனர்; இனிக் கடவுளை ஒருமையாகவும் பன்மையாகவு முரைத்தலேயன்றி யுயர்திணையாகவு மஃறிணையாகவு முரைத்தலும் வழக்கே: அது யாவர்க்கு முடன்பாடே. இதையெடுத்து உவமைகூறி னஃதேற் புடைத்தாமா றெங்ஙனம்? அன்னி பெஸண்டம்மை யென்ன! கிருஷ்ணபகவானா? கிருஷ்ண பகவானைப் பலருங் கடவுளென்று தொழுது கொண்டாடுதல் போல நமது அன்னிபெஸண்டம்மையை யெவருங் கடவுளென்று தொழுது கொண்டாடக் காண்கிலமால். ஓ! ஒக்கும்! ஒக்கும்!! நமது அரங்கசாமியாரும் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியரும் போன்றார் 'யாங்கள் தொழுந் தெய்வம் அன்னி பெஸண்டம்மையே' யென்று சொல்வார்கள் போலும்!

'நாலாட்டின் பருவம், ஒவ்விய, மீட்டுதற்கு அருள் விக்கும் என்பன வர்திய வழக்கா றல்லாச் சொற்பிரயோகம்' என்று ஞானபோதினிப் பத்திராதிபர் அறைந்ததற்கண் யாதோ ரிழுக்குமின்றே. அங்ஙனமாகவு மிவர் மேற்காட்டியவற்றிற்குத் தக்க மேற்கோள் நல்லிசைப்புலவர் நவின்ற பாமுறைகளினின்று மெடுத்துக் காட்டித் தம்பக்க நிறுவும் வலியிலராய் அமங்கலப்பேதை யென வழுதாற்றுகின்றனர். ஐகாரச்சாரியை பெற்று ஓராட்டை ஈராட்டை நாலாட்டை யெனப்பயின்று வருமேயன்றி 'நாலாட்டின்' என 'இன்'சாரியை பெற்றுவருதல் மரபன்று, அது 'மரபுக் கொத்ததே' யென்று வாளாகாரண மின்றி மயங்கி யுரைத்தல் அரண்யருதிதமாய்க் கழியு மென்க. 'எதுகைக் கேற்ப நாலாட்டின் என்றார்' என்றலும் வழு; இத்தகைய சொற்களுபயோகியாமலே யெதுகை மோனை நயம்பெறப் பாடலே சிறப்புடைத்தாம், அவ்வாறு பாடத்தெரியார் விடிற்பாட்டாது வாய்வாளாமை மேற்கொண்டொழிதலே மாண்புடைத்தாம். அவற்றை நிறுவமாட்டாமையின் நூலாசிரியர் மீது அவை குற்றங்களாகவே நிலவுகின்றன வென்பது மலையிலக்கே.



பாடினாரும் பாடப்பட்டாரும் மக்களாயுயிர்த்திருப்புழி ஆரந்தக்குற்றம் படப்பாடலாகா தென்ற விதியினுணர்ச்சிக்கு இவர் யாவர்? இவரது உணர்ச்சி யெல்லாம் இழிதகவுடைய திரிபுணர்ச்சியே.

'சென்ற வெழிலாரன்னி' யென்புழியிருவரு மக்களாயுயிருடனிருப்புழியங்ஙன மிசைக்கப்படாது. இதனுண்மையை யுய்த்துணரு மதுகையிலராய அரங்கசாமியார் அறிவகற்றுங்கல்வி' யென்ற நீதிநெறி விளக்கச்சொற்றொடரை யெடுத்துக்காட்டுவாராயினர். அஃதீண்டைக் கேலாமை காண்க.

அறிவுடையீர்காள்! இவர் 'மலைமகள்', 'கலைமகள்', 'அலைமகள்' என்ற மங்கலமுதன் மொழி பெற்ற சொற்றொடர்களை யெடுத்துக்காட்டுகின்றனர். இவையனைத்தும் ஆரந்தக்குற்ற முள்ளனவாய் நச்சுத்தன்மை பூண்டனவாயினும், "நஞ்சுமமுதமாம் மங்கலம்புகினே" என்ற இந்திரகாளிய முடையார் ஆணையின்படி புரையில்லனவாம். இந்திரகாளிய நூற்பெயருங் கேட்டறியாத விப்புல்லறிவாளர் மாட்டு யாம் யாது புகல்வது?

"நாசத்தின் வினையுலப்பக் கைப்பிடித்த வாணமுவி" யென்புழி மோனை பிறழ்ந்து கொண்ட குறிதவறி அது நூலின்மீதும் நூலுடையார்மீதும் வீழ்ந்து குலைபாடியற்றி விட்டது கண்டு நம் அரங்கசாமியார் பரிதபிப்பது நேரிதே. கூறியவற்றையே மீட்டு மீட்டுங்கூறிப் பெருங்குரல் காட்டியழுதிரங்கும் பழுது அரங்கசாமியாலெய்திய தெவனோ? 'வாழி கூறும் பாவிற்பெரிய யாப்புப்பிழைகள் மூன்றுள' வென்றவெம் ஞானபோதினிப்பத்திராதிபர் கூற்றின் பகுவாயி னெயிற்றினிடைக்கிடந்து அஞ்சுறும் அரங்கசாமியார் நிலையைச் சற்றே கண்ணுறுவீர்! அறிவான் மிக்கீர்! இனி ஞானபோதினிப்பத்திராதிபர் 'அன்னிபெஸண்டு அம்மை சரித்திரம்' என்னுமொரு போலிநூலின் மீதேற்றியுள்ள குற்ற மனைத்தும் பரிகரிக்கப்படாமல் மீட்டும் அக்குற்றங்கள் கொடிகளாகவே நின்று அந்நூலுடையார் மேல் உலவி வட்டமிடுகின்றன. இப்போது நந்த மரங்கசாமியார் கதை வறுப்புச்சட்டியினின்று நெருப்பினிடத்திலேயே வீழ்ந்ததுபோலாயிற்று. இனியேனு மிவ்வாறு பொருளியல்புணரு முரணின்றி வாதப்போர்க்கு வந்து சொற்காலொடிந்து எற்றுண்டொழியாதிருக்கக்கடவர். 'இளங்கன்று பயமறியாது' என்றாற்போலக் கல்வியறிவிற்றேரு மிளஞ்சிறாராகிய நமது அரங்கசாமியாரை யாமொன்றுஞ் செய்யாது சிறிது கடைக்கணித்து விடுகின்றாம்.

சமுத்திரபுரவாசி.

## சமாசாரக் குறிப்புகள்.

மகாகனம் பொருந்திய விக்டோரியா சக்கிரவர்த்தினி புத்திரர்களில் இரண்டாவது புத்திரராகிய ஆல்பர்ட்டு என்றும் டியூக் ஆப் எடின்பரோ என்றும் பேர்பெற்றவர் 1844-ம் வருஷம் ஆகஸ்டுமீ 6உயிற் பிறந்தவர். 1874-ம் வருஷம் ஜனவரிமீ 23உ ருஷியாவுக்குப் பிரதான நகரமாகிய பீற்றர்ஸ்பர்க் என்னும் பட்டணத்தில் தற்காலத்திய ருஷிய சக்கரவர்த்தியின் அத்தையாரைக் கல்யாணஞ் செய்துகொண்டார். இவர்களிருவருக்கும் பிறந்த குழந்தைகள் ஐவர். இவர் யுத்த கப்பல் அதிகாரிகளுக்குத் தலைமையாயிருந்தவர். இவர் கிடைசென்ற நாளது வருஷம் ஆகஸ்டுமீ 7உ மண்ணுலகம் விட்டு விண்ணுலகமேகினர். அதற்கு பிரிட்டிஷ் ராஜ்யமுழுதும் வியசனசாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. ராஜவிசுவாசத்தில் தமக்குச்சமமில்லையெனக் கருதப்பட்ட இந்தியரும் மிகவும் வருத்தமடைந்திருக்கிறார்கள். மஹா ராணியினுடைய வயோதிகதிசையில் வந்து அநுபவித்த துக்கங்களில் இதுவும் ஒன்றாகும். ஆயினும் இது மிகவும் உதிர சம்பந்த மானதையால் அதிக வருத்தப்படுவது இயற்கையேயாகும். அங்குள்ளவர்கள் அந்த அம்மாளைத் தேற்றுவார்களென்று நம்புகிறோம்.

***

**முதற்குறள் உண்மை.** அவைதமக திரஸ்காரி என்பவர் ஒருவர் முதற்குறள் உண்மையென்னும் நூல் செய்து பத்திராதிபரது அபிப்பிராயத்திற்கு அனுப்பியிருக்கிறார். அதை நன்காராய்ந்து வருகிற சஞ்சிகையில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படும்.

***

**திருவிடைமருதூர்க் கலம்பக அரங்கேற்றம்.** ம-ள-ள-ஸ்ரீ திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியார் அவர்கள் பக்தியார்ஜுநம் என்னும் திருவிடைமருதூரின்மீது இயற்றிய கலம்பகப் பிரபந்தமானது சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் ஹாலில் சென்ற ஜூலைமீ 29உ ஆதிவாரம்முதல் பிரதி ஆதிவாரமும் பற்பல வித்வான்களால் பிரசங்கிக்கப்பட்டு வருகின்றது. அவர்களில் முதல் ஞாயிற்றுக்கிழமை பிரசங்கித்தவர் பிரம்மஸ்ரீ சதாவதானி சுப்பிரமணிய ஐயர் அவர்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை பிரம்மஸ்ரீ கோபாலாசாரியரவர்கள், மூன்றாம்வாரம் ம-ள-ள-ஸ்ரீ தண்டலம் பலசுந்தர முதலியார் அவர்கள். இதுவரையில் இத்தகையர்களால் அதிவிநோதமாக மேற்படி கலம்பகப் பிரபந்தமானது அரங்கேற்றப்பட்டு வந்திருக்கிறது. வருகிற வாரங்களிலும் இவர்களும் இவர்களைப்போன்ற வித்வான்களும் பிரசங்கிக்கப் போகிறதாகத் தெரியவருகிறது.

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900ஹு செப்டம்பர்மீ 20உ { புத்தகம். 2.

## †பாரதஸாரம்.

### அத்தியாயம். II. (ஆதிபருவம்)
### (பாரதவீரர்களின் இளமைப்பருவம்).

(16-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பீஷ்மாசாரியர் கொண்டுவந்த கன்னிகையைச் சந்தனுமகாராஜா கண்டு ஆனந்தங்கொண்டு தன்னருமைப் புதல்வனை ஆசீர்வதித்து நின்றதும்,

"அம்புவி யரசன் மாமனு மரசனடிபணிந் தவயவத் தழகா [னைத்தர
னும்பரும் வியக்குங் கிளியைமுன் விறத்தி யொடுங்கினன் வாய்புதைத்
னெம்பெருமானீ கேட்டருளனக்கே யிசைந்தமெய்த் தவம்புரி யிவளை
வம்பவிழ் மலர்மா தென்பதே யன்றி வலைஞர்மா மகளெனக் கருதேல்."

என்றதன் மேலும் வலைஞர்தந் தலைவன் தன் மகளுடைய வரலாற்றை முற்றுஞ்சொல்லி முடித்தான். பிறகு சந்தனு மகாராஜா,

"இன்று நற்றின மென்றிளந் தோகையை
மன்ற லெய்தினன் மாநிலம் வாழ்த்தவே."

அவளுடன்சேர்ந்து அநேகநாளின்புற்றிருந்து சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரு புதல்வர்களைப் பெற்றான். இவன் இறுதிக்காலத்தில் இவ்விரு புத்திரர்களையும் பீஷ்மரிடம் ஒப்பித்து இவ்வுலகம்விட்டு விண்ணுலக மடைந்தான். இவரில் மூத்தவனாகிய சித்திராங்கதனுக்கு இவர் பட்டஞ் சூட்டுவித்து இருவரையும் எல்லாவிதங்களிலும் தாம் பாதுகாத்துவந்தார். கொஞ்சக்

† Adapted from Mrs. Annie Besant's MAHABHARATA.

காலத்திற்குள் சித்திராங்கதன் ஒரு யுத்தகளத்தில் மடிந்தான். பிறபாலே அவன் சகோதரனாகிய விசித்திரவீரியனைத் தான் சிம்மாசனாதிபதியாக்கி அரசு புரியும்படி செய்துவைத்தார். இவனுக்குத் தக்க பருவம் வந்து விட்டபடியால் சலக்ஷணமுள்ள ஒரு கன்னிகையைப்பார்த்து மணவினை முடிக்க வெண்ணினர் பீஷ்மர். அக்காலத்தில் மணமகள் ஸ்வயம்வரத்தில் வரனை அடைகிறது வழக்கமாயிருந்தது. அதாவது மணமகளே தன் கண்ணுக்கு ரம்மியமான புருஷனை அதற்காகக் கூடிய சபையினின்றுந் தேர்ந்தெடுத்து அவனுக்கு மாலை சூட்டுவது வழக்கம். இதற்குத்தான் ஸ்வயம்வரமென்று பெயர். அத்தருணத்தில் அநேக ராஜாராஜாக்களுங்கூடித் தங்கள் தங்கள் புஜபல பராக்கிரமங்களை யெல்லாம் காட்டுவது வழக்கம். இவற்றிலெல்லாம் யார் சிறந்து விளங்குகிறானோ அவன்தான் அப்பெண்ணை அடைதல்கூடும். அந்தக் காலத்திற் காசிராஜாவின் புத்திரிகளாகிய அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்று மூவருடைய கலியாணத்திற்காக ஸ்வயம்வரம் நாட்டப் பெற்றிருந்தது. விசித்திரவீரியனோ அதிக இளம்பிராய முள்ளவன். ஸ்வயம்வரத்திற்கு வரும் எல்லா அரசர்களையும் வென்று கன்னியரைக் கொண்டு வருவதற்கோ இவனுக்குப்போதுமான சாமர்த்தியமில்லை. பீஷ்மர் இவனுக்குப் பதிலாகப்போய் மூன்று பெண்களையும் தம் ரதத்தில் ஏற்றிவைத்துக்கொண்டு எல்லா அரசரையும்பார்த்து "ஓ அரசர்களே! ஸ்வயம்வரத்தில் எந்த அரசனும் மணமகளைத் தன் வலிமையினாற் கொண்டுபோகலாம். வேறு யாரேனும் அப்பெண்களை விரும்பும் பக்ஷத்தில் எவன் கொண்டுபோய் விட்டானோ அவனைப் புறங்கண்டு பெண்களை மீட்டுக்கொண்டு போகலாம். இதுவும் சாஸ்திரத்திற்கொத்த நடபடிக்கைதான். சாஸ்திரப்படி நான் இப்போது நடந்தேன். வேண்டுமானால் உங்களில் யாவராயினும் என்னுடன் போர் புரிந்து இப்பெண்களைக் கொண்டுபோகலாம்" என்றார். உடனே அங்கிருந்த அரசர்களெல்லாம் அதிக கோபங்கொண்டு இவரை யெதிர்க்கவே இவர் தனிமையாய் எல்லாரையும் புறங்காட்டி ஓடும்படிசெய்து காசிராஜனுடைய பெண்களைத் தம் தம்பிக்கு விவாகம்செய்யும்பொருட்டுத் தம்முடன் கொண்டுவந்துவிட்டார். ஒருவன் தன் மகளையும் மருகியையும் உடன்பிறந்தாளையும் பார்ப்பதுபோல் அவர்களைப் பார்த்தாரேயன்றி வேறொரு வித



மான எண்ணங்கள் இவருக்கு ஜனிக்கவேயில்லை. இரதத்தைச் செலுத்திக்கொண்டு வரும்போது மூவரில் மூத்தவளாகிய அம்பை என்பவள் இவரைநோக்கி "நான் வேறொரு புருஷனை என்மனத்திற்கொண்டேன். தயவுசெய்து என்னை விடல் வேண்டும்" என்று வேண்டவே அவளை அனுப்பிவிட்டு மற்றிருவரையும் தன் தம்பிக்கு விவாகம் செய்வித்தார். விசித்திரவீரியன் சிலநாள் இல்லறம் நடத்திப் புத்திர சந்தானமின்றி இறந்துபோய்விட்டான். புத்திரரில்லாமலிவன் இறந்துபோகவே வம்சம் க்ஷீணதசையடைந்து போகுமேயென்கிற எண்ணம் சத்தியவதியை மிகவும் பிடித்துக்கொண்டிருந்தது.

சத்தியவதி இதனாலதிக மனத்துயரமடைந்து ஏக்கமுற்றிருந்தாள். பிறகோர்நாள் பீஷ்மரை யழைத்து "உன் தந்தையின் குலம் சந்ததியில்லாமல் நாசமாய்ப் போகலாமா? இனியாவது பட்டாபிஷேகம் செய்துகொண்டு விதந்துவாய்ப் போயிருக்கும் அம்பிகை அம்பாலிகை என்னுமிருவரையும் மணந்து புத்திரபாக்கியம் பெற்றுச் சந்தனுவம்சம் இடையறுவண்ணம் காப்பாற்றும்படியாய் உன்னை மிகவும் பிரார்த்தித்து அதிக விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். நீ இதை மறுக்காது உன் அன்னையாகிய என் வேண்டுகோளிற்கு இணங்கல் வேண்டும்" என வேண்டினாள். சிநேகிதர்களும் பந்துக்களும் சத்தியவதி வேண்டிக்கொண்டதுபோலவே பீஷ்மரை மிக்க விநயத்துடன் தங்களுக்கும் தங்கள் நாட்டிற்கும் அரசராய்த் தங்களை அளித்துப் பாதுகாக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இல்லற வாழ்க்கையும் சிம்மாசனமும் தங்களை யேற்றுக்கொள்ளும்படி அவரை நோக்கிச்சென்றன. இவர் அன்று செய்த சபதம்தான் குறுக்கே நின்றது. சபதந்தான்; ஆயினும் என்? பீஷ்மருக்குச் சத்தியத்தினும் மேலான பொருள் வேறொன்றுண்டோ?

"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற."

என்பது இவர்க்கும் பொருந்தினதன்றோ? பீஷ்மர் தமது சிற்றன்னையை நோக்கி "அம்மா, தாங்கள் சொல்வது சரிதான். தர்ம சாஸ்திரத்திற்கும் ஒற்றுமையானதுதான். ஆயினும் பிரமசரியத்தையே நான் எப்போதும் விரதமாகக்கொண்டு ஒழுகுவே

ன்றுகூறிய சபதம் உங்களுக்குந்தெரிந்த விஷயந்தானே. என் சபதத்திற்கு விரோதமாய் நடக்கவும் எண்ணுவேனோ? திரிலோக சாம்ராஜ்ஜியம் வருவதானாலும் சரி, அல்லது அதனினும் சிறந்த பதவி கிடைக்கிறதாயிருந்தாலுஞ்சரி, அவற்றையொரு பொருளாக மதிப்பேனோ? ஒருக்கால் மண் தன் மணத்தை மாற்றினும் மாற்றும்; ஜலம் தன் குளிர்ச்சியை நீக்கினும் நீக்கும்; ஒளி தன் உருக்காட்டுமியல்பினை ஒழிக்கினும் ஒழிக்கும்; வளி தன் பரிசம் மறைக்கினும் மறைக்கும்; அக்னி தன் சூட்டையகற்றினு மகற்றும்; ஞாயிறு தன்னொளியிழக்கினு மிழக்கும்; திங்கள் தன் தண்கதிர் விலக்கினும் விலக்கும். விண் தன் ஓசைசெய்யாற்றலை விடுக்கினும் விடுக்கும். விருத்திரனை வென்றோன் தனது ஆண்மை இழக்கினும் இழக்கும். தருமதேவதை நடுவுநிலைமை குன்றி ஒருபுடைச்சாரினும் சாரும். யானோ சொன்னசொல் பிறழேன். தாயே! என்னை மன்னிப்பாயாக" என்றார். சத்தியவதி எவ்வளவு வருத்தத்துடன் பிரார்த்தித்தும் பீஷ்மர் அவளுடைய வேண்டுகோளுக்கு இணங்காது மேலும் சொல்லத் தொடங்கினார், "அன்னாய்! சத்தியத்தினின்றும் தவறுதல் க்ஷத்திரியருக் கடுக்குமா? உன்னுடைய மனவருத்தம் நீங்குமாறு ஒருயுக்தி சொல்லுகிறேன். சந்தனு வம்சம் நாஸ்தியாய்ப்போகக் கூடாதென்பதுதானே உன்னுடைய கோரிக்கை. அதுதான் என்னுடைய விருப்பமும். க்ஷத்திரிய வம்சம் இறுதியடையும்போலிருக்கும்போது தக்கவர்களைக் கொண்டு புத்திர சந்தானம் பெறுகிறது வழக்கம். இது தொன்றுதொட்டு வழக்கமாய் வந்துகொண்டிருக்கின்றது. ஸ்மிருதியினுடைய அத்தாக்ஷியுமிருக்கிறது. வேண்டுமானாற் பெரியவர்களையும் அழைத்து விசாரித்துத் தகுதியானவற்றைச் செய்யலாம். சந்தேகம்வேண்டுவதில்லை"யென்று அன்னையைத்தேற்றி ஒருபெரிய இருஷியைவரவழைத்து விதந்துவாயிருக்கிற ராஜஸ்திரீகளிடமாகப் புத்திரருண்டாகும்படி செய்யலாம், அப்புத்திரர்கள் விசித்திரவீரியனுடைய புத்திரர்களாகவே மதிக்கப்படுவார்களென்று சொல்லவே சத்தியவதிக்குப் பூர்வஞாபகம் வந்தது. தான் கன்னிகையாயிருந்தபோது தன்னிடம் பராசரருக்கு ஒருபிள்ளை பிறந்ததென்றும், பிறந்தவுடன் தன்னை விட்டுவிட்டு உடனே தன் தகப்பனுடன் அந்தப்பிள்ளை சென்றுவிட்டதென்றும், அந்தப்பிள்ளை



தான் கிருஷ்ண த்வபாயன வேதவியாசரென்றும் சொன்னாள். தன் அன்னைக்கு எப்போதாவது கஷ்டகாலம் சம்பவிக்கும்போது தன்னை நினைத்தால் தான்வந்து உதவிபுரிந்து போவதாகச் சொன்னதாகவும் சொன்னாள். தன் புத்திரனை நோக்கிப் "பீஷ்மா, நீ விரும்பும் பக்ஷத்தில் வியாசரைக்குறித்துத் தியானிக்கிறேன். அவர் உடனே வருவார்" என்று சொல்லி அவரை நினைத்ததும் உடனே வந்து தோன்றினார் வியாசர். அப்போதிருந்த அசந்தர்ப்பத்தை அவருடன் சொல்லவே அதற்கவர் "ஆமாம்! வேண்டுமாயின் புத்திர சந்தானம் உண்டாகும்படி செய்யலாம். அதற்கும் தக்க காலம் வேண்டாமா? திடீரென்று இப்போதே உண்டாகவேண்டுமென்பது உமது விருப்பமாயின் தம்பியினுடைய பத்தினிகள் என் விகார ரூபத்தைச் சகித்து என்னுடன் கலந்தால்தான் புத்திர சந்தானமுண்டாகும். அவர்கள் இதைச்சகித்து என்னுடன் சேர்வார்களாகில் அதுவே அவர்கள் அகோர தபசு செய்ததற்குச் சமானம்" என்று வேதவியாசர் தன் அன்னையினிடம் சொன்னார். சத்தியவதி தன் மருமக்களை அதிக பிரயாசப்பட்டு இந்த இருஷியுடன் சேர இணங்கும்படி செய்தாள். அப்படிச்செய்தும் மூத்தவள் இவருடைய கறுத்த முகத்தையும், தாமிரவர்ணம் போன்ற சடையையும், தீப்பொறிபறக்கும் கண்களையும், வளர்ந்து மார்பினிடம் புரளும் தாடியினையும் கண்டு அவர் தன்னை யணுகினவுடன் சகிக்க முடியாது பயந்து கண்ணை மூடிக்கொண்டனள். தன்னை அநுபவித்துப்போம் வரையில் மூடின கண்களைச் சற்றேனும் திறக்கவேயில்லை. ஆகவே அவளுக்குப் பிள்ளையாய்ப்பிறந்த ஆத்மாவோ தான் முன்செய்த கர்மசேஷத்தினாற் கண்ணிலாத் தேகத்தில் இருந்துழலவேண்டி வந்தது. வியாசரும் அவளுக்குப் பிறக்கும்பிள்ளையானது பிறவிக் குருடாயிருக்குமென்று முன்னதாகவே சொன்னார். இப்பிறவிக் குருடன்தான் திருதராஷ்டிரமகாராஜா. அம்பாலிகையோ ருஷியைப்பார்த்ததும் பயந்து தேகம் வெளுத்துப்போய் விட்டாள். அவளிடமாகப் பிறந்தபிள்ளையோ வெண்குட்டம் பிடித்தவனாய்ப் போய்விட்டான். இவன்தான் பஞ்சபாண்டவர்களுடைய தந்தை. இவன்பெயர் பாண்டுமகாராஜா. இவ்விரண்டு பிள்ளைகளும் இப்படிப் பிறப்பார்களெனத் தெரிந்தவுடன் ஒருபழுதுமில்லாத பிள்ளை ஒன்றுவேண்டுமெனச் சத்திய

வதி வேதவியாசரை வேண்டிக்கொண்டு தன் மூத்தமருமியை அழைத்து இருஷியினிடம் மறுபடியும் போகச்சொன்னாள். தன் மாமியாருடைய வார்த்தைக் கிணங்காது தன் வேலைக்காரியாகிய ஒரு சூத்திரஸ்திரீயைத் தனக்குப்பதிலாக அவரிடம் அனுப்புவித்தாள். அவளோ இவர்களைப் போன்று கர்வங்கொள்ளாது இருஷியினுடைய பெருமையை நினைந்துப் பயபக்தியுடனும் அதிக விசுவாசத்துடனும் நடந்து கொண்டாள். வியாசர் அவளை ஆசீர்வதித்து அவளிடம் செல்லவே தருமதேவதையேஒருருவெடுத்து அவளுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தது. அந்தப் பிள்ளைக்குத்தான் விதுரனென்று பெயர். வேதவியாசருக்கு இத்தருணத்திற் பிறந்தவர்கள் மூவர். மூத்தவன் திருதராஷ்டிரன், இரண்டாவது புத்திரன் பாண்டு, மூன்றாவது புத்திரன் விதுரன். முதலிருவரும் பாரதயுத்தத்து இருதிறத்தார்க்கும் முறையே தந்தையராயினர். விதுரரோ திருதராஷ்டிரனுக்கு மந்திரியாயிருந்தார்.

இம்மூவரையும் இளமைப்பருவத்தில் பீஷ்மர் தன் பிள்ளைகளைப் பாதுகாப்பதுபோற் பாதுகாத்து வந்தார். அம்மூவரும் தங்கள் குலாசாரத்திற்குத் தக்க சடங்குகள்செய்து முடிக்கப்பெற்றவுடன் வித்தியாப்பியாசம்செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் தாம் அறியவேண்டிய வேதத்திலும் பாண்டித்தியமடைந்தார்கள். வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், கதாயுதப்பயிற்சி, கத்திவிளையாட்டு, தர்ம சாஸ்திரம் இவைகளெல்லாவற்றிலும் மிக்க தேர்ச்சியடைந்திருந்தார்கள். சரித்திரம், புராணம், பற்பல கலைகள், வேதம், வேதாங்கம் என்னுமிவற்றிலும் அதிக விற்பத்தி உடையவர்களானார்கள். அக்காலத்திற் புத்திரர்களின் தேகப் பயிற்சியில் தாய் தந்தையர் எவ்வளவு கவனம் வைத்திருந்தார்களோ அவ்வளவுகவனம் அவர்கள் புத்திரர்க்குவேண்டிய மதஞானம் குணஞானம் என்னுமிவைகளிலும் பூர்த்தியாய் வைத்திருந்தார்கள். *

இவர்களில் மூத்தவன் பிறவிக்குருடனாய்ப் போய்விட்டபடியால் அவன்றன் இளையோனாகிய பாண்டுவுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தார் பீஷ்மர். திருதராஷ்டிரனுக்குச் சுவல தேசாதிபதியின் புத்திரியாகிய காந்தாரியைப் பாரியையாக்கினார். "கொ

* ஆதிபருவம் [§ 109]



ல்லைக்குக்கள்ளி, குடிக்குச்சகுனி" என்னும் பேர் பெற்ற குடிகேடனாகிய சகுனியின் சகோதரி இவள். இவளோ மகா பதிவிரதை. கல்யாணமாவதற்கு முன்னமே தனக்கு வாய்க்கும் புருஷன் கண்ணிலானென்க் கேள்வியுற்றதும் மிகப்பரிதபித்துப் பற்பல பொருள்களையும் பார்த்து அநுபவிக்கத் தனக்குவரும் நாயகனுக்குக் கண்ணில்லாதபோது தனக்கு மாத்திரம் கண்ணிருக்கலாகுமோவென்று தன் கண்ணையும் வஸ்திரங்கொண்டு கட்டிவிட்டதாக ஒருகதையுமுண்டு *. ஸ்திரீகள் 'தங்கணாயகரிற்றெய்வம் தவம் பிறிதில்' வென்றெண்ணி அவர்களிடத்து வைத்திருக்கும் பயம் பக்தி விசுவாசம் என்னுமிவற்றில் இந்து ஸ்திரீகளுக்கு நிகராக வேறு ஸ்திரீகளை ஒப்பிட்டுச்சொல்லுதல் கூடாது.

யாதவர்களுக்கரசனாகிய சூரசேனவர்மன் மகள் பிருதா (குந்தி) என்பவளைப் பாண்டு பத்தினியாக்கினார் பீஷ்மர். இவள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய தந்தையாகிய வசுதேவருடைய சகோதரி. இவளுடைய ஸ்வயம்வரத்திற் பீஷ்மருடைய விருப்பத்திற் கிணங்க இவள் பாண்டுவிற்கு மாலையிட்டாள். கொஞ்சக் காலத்திற்குப் பிறகு மத்ர தேசாதிபதியாகிய சல்லியனுடைய சகோதரி மாத்திரி என்பவளையும் இவருக்கு மனைவியாக்கினார். இரண்டாவது மனைவி வந்த ஒரு மாதத்திற்குள் அநேக ராஜ்யங்களைச் செயித்து மிகுந்த திரவியங்களை அஸ்தினாபுரத்திற்குக் கொண்டு வந்தார். பாண்டு மகாராஜா தன்னிரண்டு பத்தினிகளையும் தன்னுடன் கொண்டு வேட்டையாடும் விருப்பத்துடன் காட்டிற்குச்சென்று அவ்விடத்திலேயே கொஞ்சக்காலம் வாசஞ்செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் இவர் வேட்டையாடும்பொருட்டு வெளியிற் சென்றதும் அவ்விடத்தில் மானுருக்கொண்டு இன்பம் நுகர்ந்து கொண்டிருந்த இருஷி இருஷி பத்னியின்பேரில் தன் மதிமயக்கத்தால் ஓர் அம்பு எய்தார். அருளிலராயிருந்தபடியால் இருஷியின் சாபத்திற் காளாகவேண்டி வந்தது. "உன்மனைவியுடன் இன்பம் நுகர வெண்ணிச் சேர்வாயாயின் இறக்கக்கடவாய்" என்று சொல்லி இருஷியும் அவர் பத்தினியும் பாண்டு மகாராஜா எய்த பாணத்தின் கொடுமைபொறுக்க முடியாது உயிர் துறந்தார்கள்.

* ஆதிபருவம் [§ 100] † ஆதிபருவம். [§ 111 - 114.]

இருஷியின் சாபத்தைக் கேட்டதுமுதல் சுகமற்று ஏக்கமுற்றிருந்தான் அரசனும். இன்பமனுபவிக்க முடியாமற் போயிற்றே என்னுமெண்ணத்தினாலுண்டான துக்கமன்று; புத்திர சந்தானமில்லாது சாகவேண்டுமே என்னும் வருத்தந்தான். இவ் வருத்தம் நாளுக்கு நாள் அதிகரிக்கவும் தன்னுடைய பொருளையெல்லாம் தானஞ்செய்துவிட்டு வனசஞ்சாரம் செய்யும்பொருட்டுப் புறப்படவே குந்தி, மாத்திரி, என்னுமிரண்டு மனைவியரும் அவனுடன் சென்றார்கள். *

பாண்டுவிற்குப் பிள்ளையில்லா ஏக்கமே பெரிய ஏக்கமாயிருந்தது. இதற்கென் செய்யலாமெனக் குந்தியினுடன் ஆலோசிக்கவே அவள் தன் புருஷனைப்பார்த்து "நான் கன்னிகையாயிருந்தபோது தூர்வாசமகருஷிக்குப் பணிவிடை செய்யும்படி என் தாய் தந்தையர் என்னை நியமித்தார்கள். அவருக்கு நான் அப்படியே தொண்டு செய்துகொண்டு வருநாளில் அவர் என்பணிவிடைக்கு மிகவும் சந்தோஷப்பட்டு எனக்கு ஒரு மந்திரம் உபதேசித்துப் போயினார். அந்த மந்திரத்தை எந்தத் தேவதையைக்குறித்து உச்சரிக்கிறேனோ அந்தத் தேவதை பிரசன்னமாய் நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றும். வேண்டுமானால் அவர்களாற் புத்திரசந்தானம் பெற்றுப் புத் என்னும் நரகத்தினின்றும் தப்பித்துக்கொள்ளலாம்" என்றாள். இதைக்கேட்டதும் அரசன் மிகவும் மகிழ்ந்து "அப்படியானால் தர்மதேவதையைவரவழைத்து அவரிடமாக ஒரு புத்திரனைப் பெறுவாயாக" என்றான். அப்படி அறக்கடவுளுக்குப் பெற்ற பிள்ளைதான் தர்மர். யுதிஷ்டிரர் என்பது அவர்க்கு மறுபெயர். அதற்குப்பிறகு பர்த்தாவினது வேண்டுகோளுக்கிணங்கி வாயுவினிடமாகப் பீமனைப்பயந்தாள். பின்பு தேவேந்திரனை நினைத்தமாத்திரத்தில் அவன் வரவும் அவனிடமாக அர்ச்சுனனை யீன்றாள். தன் கணவனுடைய விருப்பத்தின்படி அந்தமந்திரத்தைத் தன் சககளத்தியாகிய மாத்திரிக்கும் உபதேசிக்க அவள் அசுவினி தேவதைகளுக்கு நகுலசகாதேவரென்னுமிரட்டையரையீன்றாள். இவர்கள் தாம் பஞ்சபாண்டவர்கள்; தேவதைகளுக்குப் பிறந்தவர்கள். இவர்களும் தேவர்கள் தாம். இதைக்குறித்து முகவுரையிலேயே முன்னம் கூறப்பட்டுளது. இவர்களில் நால்வர் முன் இந்திரா

* ஆதிபருவம் [§118—119]



யிருந்தவர்கள். அர்ச்சுனன் ஒருவன்தான் நரன் என்னும் ருஷியாயிருந்து இப்போது இப்பெயர்வகித்து இந்திரனுக்குப்பிள்ளையாய்ப்பிறந்தவன். பாண்டுமகாராஜா தனக்கு நேர்ந்தசாபத்தைமறந்து ஒருநாள் மாத்திரியொடுங்கூடி முயங்கமுயன்றான். அவள் என்னசொல்லித்தடுத்தும் கேட்கவேயில்லை. அவளிடம் இன்பம் நுகர எண்ணங்கொண்டு அவளைத் தொட்ட மாத்திரத்திலேயே இவன் பிராணன் போய்விட்டது. மாத்திரியின் மடியின்பேரில் அவன் உயிர் விட்டதும் இவள் தேம்பித்தேம்பி அழுங்குரலைக்கேட்டுக் குந்தி ஓடிவந்து பார்க்க, தன் கணவன் இறந்து கிடப்பதையுங் கண்ணுற்று இவளும் அவளுடன்சேர்ந்து அழ ஆரம்பித்துவிட்டாள். இவர்களிருவரும் தாம் தாம் தங்கணவருடன் போகவேண்டுமென்னும் விவாதம் உண்டாயிற்று. கடையில் ஒருவாறான முடிவும் ஏற்பட்டது. மாத்திரியின் மடியில் உயிர்விட்டபடியால் தானே அவருடன் போகவேண்டியது நியாயமென்றும் அதற்குக் குந்தி யிணங்கவேண்டுமென்றும் மாத்திரி வேண்டிக்கொள்ளவே. குந்தியும் அரைமனத்துடன் சம்மதித்தாள். உடனே தன்னிரண்டு பிள்ளையையும் குந்தியினிடம் ஒப்பித்துத் தானுந் தன் கணவனுடன் போய்விட்டாள். குந்தி நகுல சகாதேவர்களையும் தன் புத்திரர்களைப்போலவே அதிகக்கவலையுடன் பாதுகாத்து வளர்த்துக்கொண்டு வந்தாள். உடனே சில ருஷிகள் குந்தியினிடம் போய் அவளையும் ஐவரையும் அஸ்தினாபுரிக்குக் கொண்டேகிப் பீஷ்ம திருதராஷ்டிரர்களிடத்து ஒப்பித்துச் சென்றார்கள். பாண்டுவிற்குரிய ஈமக்கிரியைகளும் சிராத்த சடங்குகளும் தகுதியாய் நிறைவேற்றப்பட்டன. *

திருதராஷ்டிர மகாராஜாவுக்கும் காந்தாரியினிடமாக நூறு புத்திரரும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். இவர்களில் மூத்தோனாகிய துரியோதனன் பீமன் என்றைத்தினம் பிறந்தானோ அன்றைத்தினத்திலேயே அவனும் அவனிமிசைத் தோன்றினான். ஆயினும் துரியோதனன் பிறந்தபோது துர்க்குறிகள் பற்பல காணப்பட்டன. காற்றும் மழையுங்கலந்துவீசின. நாயும் நரியும் ஊளையிட்டலறின. காகமும் கழுதையும் கரைந்துகத்தின. இத்தகைய துர்க்குறிகள் அநேகம் நிகழ்ந்தன. நல்ல காலத்திற் கேற்கப் பிரபஞ்சமும் அதி

* ஆதிபருவம் § 120-127.

னுள்ள வஸ்துக்களும் ஆனந்தமடைந்து அலங்காரமாய்த் தோன்றும். காலம் கெடுதியாயிருந்தால் அதற்குத்தக்க கெட்ட குறிகளையும் தோற்றுவிக்கும். இக்குழந்தையாலே குலம் நாசமாகப் போகவேண்டியிருக்கிறதன்றோ? அதற்குத்தக்கபடி மிசிர பதார்த்தங்களும்கூட ஏக்கமுற்றிருந்தன. அவனுடைய ஜாதகத்தை விதுரர் பார்த்து உலகத்திற்கு நாசம் வருமென்றெண்ணி இவனையெறிந்துவிடுவதே உத்தமமென்று திருதராஷ்டிரனுக்குப் புத்தி சொன்னார். அவனுக்குத் தன் முதற்புத்திரனை எறிந்து விடுவதற்குச் சிறிதேனும் மனம் வரவேயில்லை. தன்னுடைய நாசத்திற்கும் தன் தேச மழிவதற்கும் துரியோதனன் காரணனாயினான். இதற்கெல்லாம் காரணம் தகப்பனுடைய அறிவீனமே யன்றி வேறில்லை. புத்திரவாச்சல்லியத்தை மாத்திரம் பார்த்தானே தவிர தானொரு அரசனென்பதையும் தன் குடிகளுடைய சேக்ஷமத்திற்குக் கடமைப்பட்டிருக்கின்றனென்பதையும் முழுதும் மறந்தான் போலும். *

நன்னெறி விட்டுத் துன்மார்க்கத்திற் பிரவேசித்த உலகிற்கு நன்னெறியைக் காட்டும்பொருட்டு எண்ணங்கொண்ட தேவர்களுடைய தொழிலுக்கு உதவியாகும்பொருட்டுப் பிறந்தான் துரியோதனன். முன் ஜன்மாந்தரத்தில் தான் செய்த செயலுக்குத் தக்கபடியும் தன்னெண்ணங்களுக்குத் தக்கவாறும் இத்தகையவேலைக்குரியனாய் இவன் இத்தருணத்திற் பிறக்கவேண்டி வந்தது. இவன் மிக்க பலமுடையவன். அதிகதைரியசாலி. கடவுளிடத்தும் சிறிது பக்தியுள்ளவன். அரசனுக்குரிய கடமைகளில் பெரும்பான்மையும் தான் அநுஷ்டித்துக்கொண்டும் வந்தான். ஆயினும் தன்னயத்தையே கருதுபவன்.

“நானே எல்லாவற்றிற்கும் முதன்மையாக வேண்டும். நானே அரசனாகவேண்டும். நான் எண்ணியவாறு எல்லாமியங்க வேண்டும்” என்னுமித்தகையனவே அவனுடைய எண்ணங்கள். தன்னைப்பார்க்கினும் வேறொருவன் ஏதேனுமொரு காரியத்தை நன்றாய்ச்செய்தால் மனம்பொறான்.

“அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்”

* ஆதிபருவம். [§ 115.]



என்பதைச் சிறிதேனும் ஓரான். பொறாமை மேற்கொண்டெழவே மனசு நிம்மதி யென்பதே அவனுக்குத் தெரியாதாயிற்று. அழுக்காறுதான் அவனுக்கு அந்தத்தில் அந்தகனாய்வந்து தோன்றியது. துரியோதனனைப் பார்க்கினும் யுதிஷ்டிரர் வயதினால் முதிர்ந்தவரானதனால் இவர்தாம் நியாயப்படி அரசு செய்வதற்குரியவர்.

பாண்டவர்களும் துரியோதனாதியரும் ஒரேயிடத்தில் வளர்ந்துகொண்டு வந்தார்கள். பீமன் அதிகபலவான். காளையர் குறும்பு அதிகமுடையவன். விளையாடும்போதே அவனுடைய துஷ்டத்தனம் முன்னிற்கும். மற்றெல்லோரையும் மூக்கைப்பிடித்து ஆட்டுவான். அனேகம்பேரை ஒரேகாலத்தில் ஜலத்தில் அழுத்தி மூச்சுத்திணறும்படி செய்துவிடுவான். மற்றவர்களெல்லாம் ஆற்றங்கரையிலுள்ள மரத்திலேறிப் பழம் பறிக்கும்போது இவன் கீழிருந்துகொண்டு சண்டமாருதம்போல் மரத்தை அலைக்க எத்தனித்த மாத்திரத்தில் மரத்திலுள்ள பழங்களும் அதைப்பறிப்பவர்களும் பொத்துப்பொத்தென்று கீழேவிழுவார்கள். இவன் பலமோ அவ்வளவு சிறந்தது. கெட்ட எண்ணத்துடன் இவன் இப்படிச் செய்யாமற்போனபோதிலும் இந்த முரட்டாட்டம் மற்றவர்களுக்குப் பிடிக்கவேயில்லை. பலமுள்ள பிள்ளைகள் யோசனை செய்யாது தங்கள் பலத்தை உபயோகிப்பதனால் எல்லாருடைய விரோதத்தையும் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். பீமனுடைய பலத்தைப் பார்க்கப் பார்க்கத் துரியோதனனுக்கு அழுக்காறு அதிகரித்துக் கொண்டேவந்தது. அவனைக் கொன்றுவிடவும் தீர்மானித்துவிட்டான். தன்னெண்ணத்தை நிறைவேற்றும்பொருட்டுக் கங்காநதிதீரத்தில் ஒரு வசந்த மாளிகை சமைப்பித்துப் பாண்டவர்களை விருந்துண்ண வரும்படி கோரினான். விருந்து நடக்குந்தினத்தில அந்தரங்கமான சிநேகிதனைப்போன்று நடித்து விஷங்கலந்த அன்னத்தைப் பீமனுக்குத் தன் கையாலேயே கொடுக்கத் துணிந்தான். போஜனமானபிறகு ஜலக்கிரீடை ஆடும்பொருட்டுக் கங்கையிலிறங்கினார்கள். ஆடியபிறகு எல்லாரும் கரையேறிவிட்டார்கள். பீமனும் கரை ஏறினான். அதற்குள் விஷம் தலைக்கேறிவிட்டது. மயக்கங்கண்டு மண்மேற்படுத்துத் தூங்கிவிட்டான். மற்றவர்கள் இதைக் கவனிக்கவில்லை. துரியோதனன் மாத்திரம் பின்தங்கி பீமன்விஷத்தினால் தன் உணர்ச்சியற்றிருக்கும்போது ஆற்றங்கரையில் படர்ந்

இருக்கும் கொடிகள்கொண்டு கட்டிப் பீமனைக் கங்கையிலெறிந்துவிட்டான். பீமன் கங்கையில் விழுந்ததும் பாதலம்போய் நாகலோகத்தைச்சேர்ந்தான். அங்கிருந்த சர்ப்பங்களெல்லாம் தங்கள் காளி, காளாத்ரி, யமன், யமதூதி, என்னும் தங்கள் விஷப்பற்களாற் கடிக்கவே தன்தலைக்கேறியிருந்த விஷமானது மாறிப்போய்விடவும் தனக்கு உணர்ச்சியும் சற்றுதித்தது. உணர்ச்சி வந்ததும் தன்னைப் பிணித்திருந்த கொடிகளையறுத்துச் சர்ப்பங்களைக் கொன்று குவிக்கவும் ஆரம்பித்தான். சர்ப்பங்கள் தங்களரசனாகிய வாசுகியினிடம்போய்த் தங்களைக் காக்கும்படி முறையிட்டன. அங்கிருந்த உயர்ந்த சர்ப்பங்களிலொன்று பீமனுடைய மூதாதையாயிருந்தது. அதனுடைய வேண்டுகோளுக்கிணங்கி வாசுகி பீமனுக்கு அமிர்தகுடத்தினின்றும் கொஞ்சமமிர்தம் குடிக்கும்படி செய்தான். குடித்ததும் பலம் அதிக விர்த்தியாய் விட்டது. எட்டு நாள் கழித்து தன்னூருக்குத்திரும்பினான். நடந்தவற்றைத் தன்னன்னை, தமயன், தமபியர்க்கும் ஆதியோடந்தமாய்ச் சொன்னான். விதுரர், யுதிஷ்டிரர் இவர்கள் இதனை வெளிக்குத் தெரியாமலே அடக்கிவிட்டார்கள். இவ்வளவு பக்ஷமாயிருந்தும் துரியோதனன்மாத்திரம் தன் கெட்ட எண்ணத்தை யொழிக்க முயலவில்லை. பாண்டவர்களிடத்துத் தான் வைத்த விரோதமும் கிருஷ்ண பக்ஷத்து இருளைப்போல் நாடோறும் விருத்தி யடைந்து கொண்டே வந்தது.

(இன்னும் வரும்)

கல்குளம் - குப்புசாமிமுதலியார்.

---

## சீவகசிந்தாமணி.

---

இந்நூலினைப்பற்றி ஆராய்வான் புகுந்த யாம் இந்நூலாசிரிய ராகிய திருத்தக்க தேவர்காலத்து நாகரிகத்தைப்பற்றியே முதற்கண் நோக்குவாம்.

**ஆசிரியர்காலம்** :—சீவகன் சரித்திரங் கூறப்பட்டுள்ள இக்காலம் பௌத்தமதம் பலராலும் பற்றப்பட்டொழிந்து இந்துமதம் முந்திய நிலையை முற்றும் பெறாது நடுவே இருதிறத்தார் கொள்கையுள்ளுஞ் சிலவற்றைத் தமவெனக்கொண்டு தமக்கெனப் பிறிதொரு மதமொன்றைப் புனைந்து கொண்டு அவ்விருதிறத்தாரினும் வேறுயினராய்ச் சைனரெனப் பெயர்பூண்ட மதத்தினர் மிக்கிருந்த காலமே யாமென்றற்குப் பல நியாயங்களுள்ளன. இக்காப்பியமே சைன நூலாமென்பது எல்லாவற்றினுஞ் சிறந்த நியாயமாம். இதுவே கடைச்சங்கத்தார் காலமெனபதும் விளங்கும். யாங்ஙனமெனின். ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'இத்தொடர் நிலைச்செய்யுள் * தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமு மாதலானும்' என்றெழுதியதனானும் அவைதாமே கடைச்சங்கத்தார்க்கு இலக்கணமென்பது இறையனாரப்பொருளுக்கு நக்கீரரெழுதிய வுரையானும், தொல்காப்பிய நச்சினார்க்கினியத்தானும் பிறவாற்றானும் அறியப் படுதலானுமென்க.

**இந்தியாவின் நாடுகள்** :—நமது இந்துதேசமானது இக்காலத்திற் பற்பல சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும். அவற்றுளெல்லாம் ஏமாங்கதமென்னு நாடானது "இசையாற்றிசைபோயது" எனக்கூறப்பட்டுள்ளமையின் மற்றையவற்றினுஞ் சிறப்புற்றிருந்த தென்பதற் கையமில்லை. இத்துணைச் சிறப்பினதாய இந்நாட்டின் தலைநகர் இராசமாபுரமாம். அது கடற்கரையிலிருந்ததென நகர வருணனையில் விளங்கக் கூறப்பட்டுள்ளது. இதுதான் அக்காலத்திற் செல்வம், கல்வி, குணமுதலியவற்று ளெல்லாந் தலைமை பெற்றிருந்தது. இந்நாட்டைக் குருகுலத் தரசர்கள்சில ராண்டு வந்தனரென்பது தெரிகிறது. அவரிற் றலையாயினார் சச்சந்தனென்பானும் அவன் மகன் சீவகனென்பானுமே. இவருள்ளும் சீவகன் கொடையானும் கல்வியானும் முறை செய்தலானும் மிக்கு விளங்கினனென்பது இந்நூலின் பெயராலேயே கொள்ளக் கிடக்கின்றது. இதுவேயன்றித் தக்க நாடு, பல்லவதேயம், மத்திமதேயம், விதேகநாடு, தாதகிநாடு முதலிய தேயங்களும் கேமமாபுரம், ஏமமாபுரம், பூமிதிலகம், வாரணவாசி முதலிய நகரங்களும் இக்காலத்திற் பிரசித்தி பெற்றிருந்தன வென்பதுந் தோற்றுகிறது.

**சாதி** :—நால்வகைச் சாதிபேதங்களும் இக்காலத்தேயும் இருந்துள்ளன. அன்றியும் ஒவ்வொருவரையும் இவர் நால்வகைச் சாதியில் இச்சாதியினரென வரையறுத்துச் சுட்டுதல் இயலாதாதலின் இவ்வருணக் கலப்பாற் பிறந்த அநுலோமப் பிரதிலோமர்களும் * சங்கரசாதியினரும் அக்காலத்தேயும் இருந்துளர். இஃது இராசமாபுரத்துக் கடைத்தெரு வருணனையிற்

"பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்தம் மகலம் பூசி
மாசன மிடம்பெறாது வண்கடை மலிந்த தன்றே"

எனத்தேவர் கூறுமாற்றானும் "நான்கு சாதியும் அநுலோமப் பிரதிலோமருஞ் சங்கரசாதியும் பற்றி "எழுவர்" என்றார்" என உரையாசிரியர் கூறுமாற்றானும் அறியப்படும்.

---

* தேவரென்றது இந்நூலாசிரியராகிய திருத்தக்கதேவரை.

* சங்கரம்=கலப்பு.

**பாஷை** :—இக்காலத்துச் சிங்கள முதலாய பதினெண் பாஷையும் பயில வழங்கின. அதனை "முட்டிலா மூவறு பாடைமாக்கள்" எனத்தேவர் கூறுவதனாலறிக. அன்றியும் 'மிலேச்சராதலின் ஐயறிவிற்குரிய "மாக்கள்" என்னும் பெயராற் கூறினார்' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதினமையின் இலக்கணத்திருத்தமில்லாத சொற்களைச் சொல்லுவோராகிய மிலேச்சர் எனப்பெயர் பெற்றார் சிலர் இருந்தனரென்பதூஉம் விளங்கும்.

**உணவு** :—அரிசி, நெய், தயிர் இவைகள் இவரது உணவிற்கு உபயோகிக்கப்பட்டன. கறி, துவை முதலிய உணவின் பேதங்களுமிருந்தன. பெரும்பாலார் வெற்றிலை யுபயோகித்தனர்.

**ஆலயவணக்க முதலியன** :—இக்காலத்திற் சினாலயங்கள் பற்பலவிருந்திருத்தல் வேண்டும். "திங்கள் முக்குடை யான்றிரு மாநகர், எங்குமெங்கு மிடந்தொறு முண்மையால்" எனக் கூறப்பட்டுளது. இங்ஙனம் கவி தமது மதாபிமானத்தாற் புனைந்திருத்தலுங்கூடும். திருவிழாக்களும் நித்தியநைமித்திய கருமங்களாகிய * யாக முதலியனவும் தேவருடைய பலியும் நடந்துவந்தன. அரசர் முதலாகப் பல்லாயிரவர் ஒருங்குகூடி இப்பலிகளைச் சேவித்தனர். இக்காலங்களிற் சங்கம், முழவு, முரசு முதலிய இசைக்கருவிகள் முழக்கப்பட்டன. இவ்வாலயங்களில் இருபாலாருந் தொழுது வந்தனரென்பது இடைநகரிடம் 'மாலையும் பூணு மயங்கப்பட்டுச் சிலைபோலுநுதலினாரோடே யாடவரும் கலக்கப்பட்டுத் தேவிருப்பிடமிது வென்றையந்தரும்' என்றதனாற் போதருமென்க.

"குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் அகலம்"

எனத் தேவர் கூறுதலிற் கார்த்திகைத் திருநாளிற்குன்றின் மேல் விளக்கிட்டு வந்தனரென்பது விளக்கமாம். இதனாற் திருவண்ணாமலைத் தீபத்தையே குறிப்பிட்டனரென்பதும் ஊகிக்கப்படுகிறது. அஃதக்காலத்தேயும் அத்துணைச் சிறப்பினதா யிருந்திருத்தல் வேண்டும்.

இச்சைனர்கள் அருகனையுஞ் சித்தனையுஞ் சாதுக்களையுந் தன்மத்தையும் வணங்கி வந்தார்கள். இஃது இவருக்கு முக்கிய நமஸ்காரமாகிய பஞ்சநமஸ்காரம் என்பது அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்குதற்குரியனவாகிய ஐந்து மந்திரங்களாதலின் நன்கு விளங்கும்.

**மதக்கொள்கைகள்** :—இவர் மதவிஷயமாகிய சில கொள்கைகள் மற்றைய மதக்கொள்கைகளே போன்று பிறமதத்தாராற் கொள்ளப்படாதொழிவனவேயாம். ஒரு மனிதனாதல் பிராணியாதல் இறக்குந்தருணத்திற் பஞ்சநமஸ்கார மந்திரத்தைச் செவியில் ஓதினால் உடனே அவ்வுபதேச

* பூசையை யாகமென்பர் சைனர்.



த்தால் அவ்வுயிர் தன்னுடம்பை யொழித்துத் தேவனாகி விண்ணிற் செல்லுமென நம்பியிருந்தனர். இன்னும் இம்மந்திரம் வழித்துணையாகுமெனக் கூறப்படுவதுமுண்டு.

"ஆருயிர்க் கிழத்தி தன்னை
யின்பமிக் குடைய சீர்த்தி யிறைவன தாணை கூறித்
துன்பமில் பறவை யூர்தி சேர்த்தினன்"

எனத் தேவர் கூறியதற்கு "அவனை 'ஓம் ணமோ அரஹந்தாணம்' என்னுமொழி" என நச்சினார்க்கினியர் உரையெழுதினமையான் இஃதுணரப்படும். உயிர்நீங்கும்பொழுது தியானம் வந்ததலினால் வீடுபெறும் என்பது இவர்கொள்கை. வானவர் கால் நிலத்திற்றோயா வென்றும் அவர் நோக்காலே நுகர்வரென்றும், மனிதரூபமாய் உலகில்வந்து தம்மையொழிய வேறுகதியில்லாத சமதன்பருக்கருள்புரிவரென்றும், அவர்வினையுலந்தாற் றமது நிலையினின்றும் விழுந்துவிடுவரென்றும், அவருக்குயிர்போகப் பதினைந்து நாள்களுளவெனக் கண்ணுமிமைக்குமென்றும், செல்வமுண்டாதற்குப் பலிநடத்தல் வேண்டுமென்றும் நம்பியிருந்தனர். காவன்மகளிர் அரசற்கு வெற்றிநிலைபெறும்படி செய்துவதற்காகவே சில ஸ்ரீகோயில்கள் ஏற்படுத்தப்பட்டன. கனாக்கண்டால் அது பலித்தேவிடுமென நினைத்திருந்தார்கள். கடையாமத்திற் கனாக்கண்டால் அது கடிதிற்பயக்குமெனவும் நம்பினர். கனவுக்கு முற்பட்டுத்தோன்றுதபொருளே யில்லை என் இவர் கொள்கை. இதனைக்,

"கல்லாதான் கண்ட கழிநுட்பங் கற்றார்முற்
சொல்லுங்காற் சோர்வு படுதலால்—நல்லாய்
வினாமுந் துறாத வுரையில்லை யில்லை
கனாமுந் துறாத வினை"

என்னும் பழமொழியா லுணர்க. அன்றியும் சீவகன் சரிதமுழுவதுங் கனவின் பயனாகவே கூறப்பட்டிருத்தலுங்காண்க. காந்தருவதத்தை யாரிலம்பகக் கதையால் இவர் சோதிடத்திலும் மந்திரவித்தையிலும் நம்பிக்கை வைத்திருந்தார்களென்பது மறியப்படும். தம்பால் வந்து மீளும் பெரியோர்களுடன் எழடியளவு சென்று வருவோர் ஸப்தபயத்தினின்று நீங்கி ஸப்தபரமஸ்தானத்தைப் பெறுவரென்பது இவரது நூற்கொள்கை. உயிர்கள் எண்ணிறந்த பிறவிகளிற் றோன்றுவன என்பதும் ஒரு பிறவிக்கு முன்னர் இத்துணைப்பிறவி யெடுத்தோமென்பது கணக்கிடற்கரிதென்பதும், இப்பிறவிகடோறும் வெவ்வேறு உறவினரை யுடையோமாதலின் ஓர் பிறவியிலுள்ள உறவினருக்காக இரங்கல் அறிவின்மையா மென்பதும், சாதலும் பிறத்தலும் ஆதலும் அழிதலும் எல்லாம் தம் வினைகளின் பயத்தான் விளைவன வென்பதும், ஆண்டுச்சாதற்கும் அழிதற்கும் நோதலும் பிறத்தற்கு மாதற்கும் இன்புறுதலும் எல்லாம் அறிவிலாரது செயல்களாம் என்பதும், அவ்

வினையுறுதல் பொருட்டு இயல்பாமென்பதும் இவரது கொள்கைகள். இவற்றையெல்லாம்

"சாதலும் பிறத்தறானுந் தம்வினைப் பயத்தி னாகும்
ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்
நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளியென்றான்."
"தொல்லைநம் பிறவி யெண்ணிற் றொடுகடன் மணலு மாற்றா
எல்லைய வவற்று ளெல்லா மேதிலர் பிறந்து நீங்கிச்
செல்லுமக் கதிக டம்முட் சேரலஞ் சேர்ந்து நின்ற
இல்லினு ளிரண்டு நாளைச் சுற்றமே யிரங்கல் வேண்டா"

எனச்சச்சந்தன் கூற்றாகத் தேவர்கூறுதலானுணர்க. இதனாற்றுன்பமாவது உள்ளத்தோர் கோட்பாடே யன்றிப்பிறிதில்லை யென்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்கு மென்பதூஉம் இதனை யறிவதே யறிவென்பதூஉம் கையில் வெண்ணெயிருக்க நெய்க்கழுவாரிலராதலின் தம்முள்ளத்துப் பிறிதுபட வுள்ளல் வழியானே யிடர்ப்பாட்டினை நீக்க முயலாது வருந்துவார் அறிவிலரென்பதூஉம், இங்ஙனம் இன்பதுன்பங்கள் மனக்கோளே யன்றி வேறல்லவாதலின் அவைகளைப் பொருட்படுத்தாது ஒருவுதலே நன்றென்பதூஉம் இவர்கள் நன்குணர்ந்தார்களென்பது பெற்றாம்.

**மணம்:**—பெருந்திணைப் பாற்பட்ட இராக்கத மணமும் இக்காலத்தில் மணமெனவே கொள்ளப்பட்டிருந்த தென்பது தெரிகிறது.

**கூத்து:**—இக்காலத்திலே நாடகசாலைகள் பற்பல விருந்தன வாகல் வேண்டும். அவற்றிலே மகளிர்பெரும்பாலும் நடித்துவந்தனர். இது "கொலைத்தலைய வேற்கணார் கூத்து" என்றதனானும் "காமர் வல்லி மாதரார் கூத்தருத பள்ளியுள்" என்றதனானு முணரப்படும்.

**இராகம்:**—இராகஞானம் பெரிதும் பயன்படுத்தப் பட்டதென்பது புலப்படுகின்றது. இது விசயை மயிற்பொறியைப் பையப்பைய மேன்மேற் றூரந்து விசையுடனோடும்படி முறுக்கவு முணர்ந்தாளென்புழிப் பிறிதோருவமமொடாது இசைப்பாட்டு ஒரு ஸ்தானத்திலிருந்து மற்றொரு ஸ்தானத்திற்கு மெல்லச்செல்லுதலை உவமமெடுத்துரைத்ததனாலறியப்படும். அன்றியும் காந்தருவதத்தை பாடுதலிலும் யாழ்வசித்தலிலும் மிக்கு விளங்கினதாகக் கூறப்பட்டமையும் அவளை இசையில் வென்ற சீவகனை 'வீணைக்கிழவன்' எனப்பதிகத்தும் 'பண்ணினுக்கரசன்' எனச்சுரமஞ்சரியாரிலம்பகத்தும் 'யாழாசிரியன்' எனக்கந்திய சிந்தாமணியிலும் புகழ்ந்திருத்தலும் காண்க. இன்னும் இதனை ஆமந்திரிகையினிலக்கணத்தானும், "ஒழிந்த கருவிகளோடு கூடி, முழவையுஞ் சுவையையுமுடைய நரம்பையுடைய யாழ்"



என்றதனானு மறிக. இக்காலத்துச் சனங்களெல்லாம் ஆடல் பாடல்களின் மிக மகிழ்ந்தனர் போலும்.

**ஆட்டுக்கடாச்சண்டை கோழிச்சண்டை முதலியன:**—இக்காலத்திலே நமது தேயத்திலேயும் சிற்றறிவினராகிய சிலமனிதர்கள் ஆட்டுக்கிடாய்களையும் கோழிகளையுங் குறும்பூழ்ப்பறவை முதலிய சேவல்களையும் போர்க்கொளுத்திக் களிப்படைந்தார்களென்பதறிகிறோம். இது

"கோட்டிளந்த கர்களுங் கொய்ம்ம லராதோன்றிபோற்
சூட்டு டைய சேவலுந் தோணிக் கோழி யாதியா
வேட்டவற்ற தாருள்ளார் வெருளிமாந்தர் போர்க்கொளீஇக்
காட்டி யார்க்குங் கௌவையுங் கடியுங் கௌவை கௌவையே."

என்றதனானும்,

"பூந்தலை வாரணப் போர்த்தொழி லிளையவர்
*நாத்தலை மடிவிளிக் கூத்தொடு குயில"

என்றதனானும் உணரப்படும். ஆயினும் இஃது அக்காலத்தேயும் நன்மக்களால் வெறுக்கப்பட்டதென்பதும் இன்னணம் அவற்றினது புண்ணைக் கருதாராய்ப் பின்னும் போரை விரும்பி ஆரவாரஞ் செய்வோர் செல்வச் செருக்கினையுடைய மாந்தரேயா மென்பதுந் தோன்ற அவரை "வெருளி மாந்தர்" எனத் தேவரிழித்துரைத்தமையா னறிக.

**உழவு:**—ஓடு நீரானது பரந்துவழங்கும்படி நீர் வரத்தறிந்து கற்படுத்திய வாய்க்காலின் தலைப்புக்கள் ஆங்காங்கிருந்தன. தண்ணீரைக் கோட்டகத்தே நிறைப்பதற்காக வாய்த்தலையிடந்தொறும் நாட்டிலுள்ளார் படவிடுவது வழக்கம். உழவர்கள் எருமைக்கடாக்களையும் எருதுகளையுங்கொண்டு நிலத்தை யுழுதார்கள். அங்ஙனம் உழுவார் நிலமகளையும் இந்திரனையுந் தொழுது முளையை விளைகவென்று வித்துவார். இம்மள்ளர்கள் மது வுண்பது வழக்கம். விளைவு முற்றினபின்பு நெல்லையரிந்து சூட்டைச் சுமந்து சென்று போரிடுவார்கள். பின்பு கடாவிட்டு நெல்லைப் பொலி செய்வார்கள்.

**வாணிகம்:**—இக்காலத்தே கருப்பாலைகள் இருந்தன. நெல்லையும், கரும்பின் பாகையும், மலரையும், இளநீரையும், வெற்றிலையையும், பழுக்காய்களையும், பழங்களையும், ஓர்க்கோலை, சங்கம், பவளம், முத்து, உப்புமுதலிய கடல்படு பொருள்களையும், அவரை துவரை முதலிய புன்செய்த் தானியங்களையும் வண்டிகளிற்கொண்டுபோய்இடந்தோறும் விற்றுவந்தனரென்பது தெரிகின்றது. பெரிய தனவந்தர்களாகிய வணிகர்களுக்கு அவரவர் தரத்திற்கேற்ப அரசராற் பட்டப்பெயர்களும் பொற்பூ முதலிய பணிகளுங் கொடுக்கப்பட்டன. இதனைப்,

* நாத்தலை மடிவிளி—நாவின்றலையை மடித்துச்செய்யும் ஒலி.

"பட்டமும் பசும்பொற் பூணும் பரந்தொளி நிழற்றுந் தீந்தேன்
அட்டுந்தா ரலங்கன் மார்ப ராவணங் கிளக்க லுற்றேன்"

என்றதனானும் 'எட்டி காவிதிப் பட்டந்தாங்கி' எனப் பெருங்கதையினும் 'எட்டிப் பூப்பெற் றிருமுப்பதிற்றியாண், டொட்டிய செல்வத் துயர்ந்தோ ராயினன்' என மணிமேகலையினும் இவ்வாறே கூறப்பட்டிருத்தலானுமறிக. சுரங்கங்களைவெட்டிப் பொன்முதலிய உலோகங்களைக் கொண்டுவந்தார்களென்பதுந் தெரிகிறது.

**இராசாங்கம்:**—இக்காலத்துச் சனங்கள் அரசனிடத்தே அதிக மரியாதை பாராட்டி வந்தார்கள். அரசனும் குடிகளை மிக்க அன்புடன் பாதுகாத்துவந்தான். யோக்கியதையும் கல்வியுமுள்ள அமைச்சர்களு மிருந்தனர்.

**அரசரதுமேன்மை :**—அரசர்கள் கடவுட்டன்மை யுடையவரெனவும், அவர் தேவரினும் பெரியரெனவும், அவர் உறங்குவாராயினும் அவரொளி யுலகைக் காவாநிற்கு மெனவும், அவராணையைக் கடந்து நடந்தவர் இடும்பை நோய்க்குங் குட்டநோய்க்கும் நரகத்திற்கு மிரையாவாரெனவும் அரசு முறைமை பிறழுமாயின் 'இவ்வுலகு கோள் நிற்கு நிலை குலைந்து இராநாழிகை குறையப் பகற்பொழுதுகள் மிக்கு மாரியின்றாய் நிலம் விளைவு சுருங்கிப் பசிமிக்கு மகளிர் கற்பழிந்து அறச்சாலைகளு மின்றிக்கெடும்' எனவும் எண்ணியிருந்தனர். அரசர்க்கிருந்த அதிகாரமும் மிக அதிகமெனல் தெரிகின்றது. அவரிடம் நெருங்கிக் குற்றங்குறைகளை யெடுத்துரைப்போர் மிகத்துணிந்தவரா யிருந்திருத்தல் வேண்டும். 'தம்மை யொருவன் வாழ்த்துவனாயின் அவனை யருளியாக்கலும் தம்மை யொருவன் வைவனாயின் அவனை யருளா தழித்தலும்' அவர்களுக்கு அப்பொழுதே யாகு மெனவும், 'மன்னருடைய கோபம் தீங்குசெய்தவர்களைத் திரண்ட சுற்றத்தோடுஞ் சுடும்; அவரது அருள் அவரை விரும்புவாருண்டாயின் அமுதுபோலுறுதி பயக்கும்; அவரது செற்றம் அவரை விரும்பாதார்க்கு நஞ்சுபோற் கரந்து நின்று கொல்லும்' எனவும், 'மன்னவர்களான் வருநவையை யஞ்சுவார். அவர் காய்வனவற்றையுவமை கூறுமிடத்துங் கூறார் நினைப்பதுஞ் செய்யார்' எனவுங் கூறப்பட்டுள்ளது. இங்ஙனமாயினும் இக்காலத்தேயும் அமைச்சர் மாத்திரம் நூல் வழக்கறிந்தவராதலின் அரசனிடத்துத் தீயன கண்டால் இடித்துக் கூறிவந்தன ரென்பதறிகிறோம்.

**அரசனறங்கள்:**—அரசரும் மற்றையோரும்பொதுஜன நன்மைகுறித்து யாவர்க்கும் விலக்குதலில்லாத அடிசிற்சாலை முதலியனவும், தண்ணீர்ப்பந்தரும், வித்தியாசாலைகளும் ஏற்படுத்தி அறத்திற்காக இறையிலி நிலங்களும் (ஸர்வமாந்யம்) கொடுத்து வந்தனர். முற்காலத்திருந்த குறைகளிற் பல தற்காலத்திலவாயினும் அத்துணை யறஞ்செய்தல் இக்காலத்தில்லையென்றே சொல்லல்வேண்டும்.



**அரசன் பொழுதுபோக்கும் வகை :**—அரசன் விளையாடுவதற்காக அரண்மனையை யடுத்து ஓர் காவற்சோலையும், அச்சோலையில் அவனுறைவதற்காகப் பள்ளிமாட மண்டப மொன்றும், செய்குன்றுகளும், உத்தியான வனங்களும் இருந்தன. 'கூத்தினரவமும் பாட்டினரவமும் முழவினரவமும் யாழினரவமு மாகிய குறைதலில்லாத ஓசையாலே அரசற்கு நாள்கடோறு நாள் கழியாநின்றது.' நகரத்தருகே கடல் கப்பல் முதலியவற்றைச் சமைப்பித்து விளையாடுதலு மிவர்க்கியல்பு. இவ்வரசருக்கு அகப்பரிவார மகளிராகிய அரசச் சுற்றத்தாருடைய குழாங்களும் (ஐஞ்ஞூற்றுவர்) நிருத்தகீத வாச்சியத்திற்குரிய மகளிரும் காமமொழிந்தநுகர்ச்சி கொடுத்தற்காக இருந்துளர். இன்னும் பலபோகமங்கையரும் (ஐந்நூற்றுவர்) இருந்தனரென்பது புலப்படுகிறது. 'மயிலின் றன்மையார் என்ற பன்மையாற் றேவியர் பலராயிற்று' என ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவதனால் இஃதறியப்படும். இங்ஙனம் இவ்வரசர்கள் உண்மையில் நல்லரேயாயினும் சிற்றின்பத்தின் மூழ்கிக் காமமென்னும் பெரும்பகைவனைத் துரத்த ஆற்றலற்றவராய்த் துறத்தற்கரிய வேட்கை மிகுதியினாற் றமது அரசியனெறியினின்றும் வழுவித் தாம் வீணே காலங்கழித்துத் தமது பகைவரால் வெல்லப்பட்டொழிந்ததேயன்றித் தம்மைச் சார்ந்தோர்க்குந் தமது குடிகளுக்கும் பெரியதோரிடர்ப்பாட்டை விளைவித்தனர். இவரெல்லாம் ஊழ்க்கோளே பெரிதெனக்கொண்டு தமதறிவினைப் பயன் படுத்தாது வாணாள் வீணாள் போக்கினர். ஐயகோ! இவருக்கு இவ்வறிவு ஒன்று மாத்திரம் இருந்திருக்குமாயின் நமது தேயம் எத்துணைச் சிறப்புற்றிருக்கும். அங்ஙனமாயின்,

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்"

எனவும்,

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

எனவும் நீதிநூலார் வாளாது கூறினாரல்லோவெனின், அற்றன்று அவர் இவ்வாறுரைத்தது பேரவாவினை யறுத்தல் வேண்டுமெனவற்புறுத்துதற்கேயாமென்க. அன்றியும் இத்தகைய கடா வெழுப்புவோர் அவர்தாமே

"அறிவினாற்
காற்றொழி லென்று கருதற்க கையினான்
மேற்றொழிலு மாங்கே மிகும்" எனவும்

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்" எனவுங் கூறுவதனை யறியாரென விடுக்க.

**போர்க்கருவிகள் முதலியன:**—அரசனுக்கு யானை முதலிய நால்வகைச் சேனைகளுமிருந்தன. படைவீரர் பழகுவதற்காகத் தேரேறு மிடங்களும் குதிரையேறு மிடங்களும் வாட்டொழில் செய்யு மிடங்களும் விற்றொழில் செய்யு மிடங்களும் இருந்தன. வில்லும் வேலும் வாளுமே இவரது முக்கிய ஆயுதங்கள். குந்தம், சக்கிரம் முதலிய ஆயுதங்களுமிருந்தன. தமது மெய் வாள் முதலிய படைகளால் ஊறுபடாமலிருத்தற்குக் கேடக மென்னு மெய்காப்புக்கருவியும் உபயோகித்தனர். இக்கருவி காடித்தோலாற் செய்யப்பட்டதென்பது தெரிகிறது. புலித்தோலாற்செய்த கவசத்தை வீரர்களணிந்து கொள்வது வழக்கம். வாகனங்களிலேறுத வீரர்கள் கவசம் பூணுதல் மரபன்று. விளையாட்டுக்களுள்ளே யானைச்செண்டு குதிரைச்செண்டு என இரண்டு வகை யுண்டு. இவையாடும் முற்ற வெளியைச்செண்டு வெளியென்ப. யானைப்போர் அக்காலத்து மிக்கிருந்தது போலும். யானைகள் நெருங்கி வந்து போர் செய்யாமலிருத்தற்கு இரும்பால் யானை நெருஞ்சி முள்ளாகப்பண்ணிய கப்பண மென்னுங் கருவிகளைச் சிதறுவார்கள். யானை மருப்பை யறுத்துக் கூர்மையிட்டு அது வலிகொள்ளும்படி கிம்புரி யென்னும் பூணிடுவார்கள். நகரின் மதிலைச்சார யானைக்கூடங்கள் இருந்தன. மதிலுக்கு உள்ளேயும் புறத்தேயும் ஆழமான அகழிகளிருந்தன. புறத்தேயுள்ள அகழியினின்றும் கோயிலகழிக்கு நீர் வருதற்காகக் கால்வாய்கள் செய்யப்பட்டிருந்தன. வீதியிற்செல்லும் யானைகள் தன்னுள் வீழா திருத்தற்பொருட்டு இது மேலே மூடப்பட்டிருக்கும். இக்கரந்த சற்படை கரந்து படையெனவும் கரந்துறை யெனவும் வழங்கும். இம்மதிலிலே பலவகைப்பொறிகளிருந்தன வென்பதும் அவை யவனரால் இயந்திரிக்கப்பட்டன வென்பதுங் கூறப்பட்டுள. யுத்தத்திற்குச்செல்வோர் பலவகைமாலை சூடிக்கொள்வது வழக்க மென்பதறிகிறோம். இதனை

"வெட்சி நிரைகவர்தன் மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேற் செல்வது வஞ்சியா—முட்கா
தெதிரூன்றல் காஞ்சி யெயில்காத்த னொச்சி
யதுவளைத்த லாகு முழிஞை—யதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்" என்ற கலிவெண்பாவானு முணர்க.

படைகளுக்கஞ்சிக் கண்ணிமைத்தல் தோல்விக் குறியென்பதூஉம் சுத்த வீரர்கள் அங்ஙனம் இமையாரென்பதூஉம் இவர் கொள்கை. இதனை

"விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னொட்டன்றோ வன்க ணவர்க்கு" என்னுந் திருக்குறளானுமறிக.

போர்க்களத்தின் முகநோக்கி வீழ்தல் வீரக்குறிப்பெனவும் அங்ஙனம் ஓரரசன் வீழ்வானாயின் அவன் சந்ததியாரேனும் பிற்காலத்திற் பகைவென்று



இராச்சியாதிகாரத்தை மீளவும் பெறுவரெனவும் எண்ணியிருந்தனர். அரசன் தனது மனைவியை முன்னே போக்கிப் பின்னர்த்தான் யுத்தத்துக்குப் போகுதல் முறைமை யென்பதூஉ மிவர் கொள்கை.

**பெண்கள் நிலைமை:**—இனி யிக்காலத்தே பெண்களுக்கிருந்த உரிமையையும் அவர் நிலைமையையுஞ் சிறிது கவனிப்பாம். இப்பொழுது தொம்பரச்சிகள் என வழங்கும் பெயரினையுடைய கழைக்கூத்தியர் அக்காலத்தே மிக்கிருந்தனர் போலும். அவர் கயிற்றிலே குதித்துக் கலனொலிப்ப ஆடுங் கூத்தைத் தேவர் செவ்வியதோரிடத்து உவமைபாக்கூறுகிறார். அது வருமாறு:

"கூடி னார்க ணம்மலர்க் குவளை யங்கு ழியிடை
வாடு வள்ளை மேலெலாம் வாளை யேறிப் பாய்வன
பாடு சால்க யிற்றிற் பாய்ந்து பல்க லனொ லிப்பப்போந்
தாடு கூத்தி யாடல் போன்ற நாரை காண்ப வொத்தவே". இவ்வாறே

"மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேறு மன்னந் தனிக்கயிற்றிற்—போநீள்
கழைக்கோ டையரேய்க்குங் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்" எனப் புகழேந்திப்புலவர் கூறுவதுங்காண்க.

பெண்கள் கமுகமரத்திலே கயிற்றை நாலவிட்டு அதைப் பிடித்துக்கொண்டு ஊசலாடுவது வழக்கம். இதனை "ஊசலாடு பைங்கமுகு" என்றதனானும்,

"கோழ ரம ணிமடற் கூந்த னெற்றி யேந்திய
மாழை யந்தி ரள்கனி மாம ணிம ரகதஞ்
சூழ்கு லைப்ப சுங்க முகு சூலு பாளை வெண்பொனூ
ழூழ்தி ரண்ம ணிக்கயி றூச லாட விட்டதே"

என்றதனானு மறிக. மகளிர் பந்தாடுவது வழக்க மென்பதறிகிறோம். பந்தாடுவதற்காகவே சில விடங்களு மிருந்தன. பந்தாடலின் விகற்பங்களும் பலவாறாகக் கூறப்பட்டுள. அவை யார்வமுடையார் பலர்க்கும் விருப்பந் தருவனவேயாமெனத் துணிந்தே மாதலின் ஈண்டுக் கூறுதும்:

"வைத்த பந்தெ டுத்தலு மாலை யுட்க ரத்தலுங்
கைத்த லத்தி னோட்டலுங் கண்ணி நெற்றி நீட்டலும்
பத்தி யிற்பு டைத்தலும் பைய ரவி னாடலும்
இத்தி றத்த பந்தினோ டின்ப மெல்லை யில்லையே."

(இதன்பொருள்):—பந்தைக் கையாற் றொடாதே காலாலே தட்டியெடுத்தலும் காத்தலும் கையிலே கொள்ளலும் செல்ல வோட்டுதலும் கண்ணியையுடைய நெற்றியிலே நீட்டுதலும் ஒருகாலைக் கொருகாலுயரப் பந்

திபாகப் புடைத்தலும் தாம் நிலையிலே நின்று அரவுபோலப் பந்துலாவுத லுண்டாம்படி புடைத்தலுமாகிய இக்கூற்றவாகிய அப்பந்தினோ டுண்டான வின்பம் முடிவில்லை யென்க'.

இப்படியே விமலையாரிலம்பகத்தில் விமலை பந்தடித்தாளென்னும் பொழுது கூறப்பட்டுளது. அரசனிடத்தே தமக்குரிய துறைகள் முற்றக் கற்று அவையிலே யாடுதலுடைய அரம்பையன்னார் ஐஞ்ஞூற்றுவர் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளதனாற் சிலபெண்கள் நாட்டியம் பயின்றிருந்தார்க ளென்பது விளங்கும். அன்றியும் கூத்தநூலென்றே ஒரு நூலுண்மையுங் காண்க.

**விலை மகளிர் :**—"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி, லேதில் பிணந்தழீஇ யற்று" எனத் தெய்வப் புலவரால் இழித்துரைக்கப்பட்டவரும் நிதியாகிய தசையைக் கைக்கொண்டு உடலைக் கைவிடுவோருமாகிய வரைவின் மகளிர் இக்காலத்துப் பற்பலரிருந்தனர். இஃது இராசமாபுர வருணனையிற் பரத்தையர் வீதி வருணனையால் அறியப்படும்;

**பெண் கல்வி :**—இனி யாம் அவசியம் கூறவேண்டுவதோர் விடய முளது. அஃது இக்காலத்திற் பெண்கல்வி நிராகரிக்கப் படாமற் பராமரிக்கப்பட்ட தென்பதே. இதனைத் தன்னைப் பிரிய வருந்திய விசயையைத் தேற்றுவான் புக்க சச்சந்தன் கூற்றாக,

"வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனூல் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினைய யாதல்
ஒண்டொடி தகுவ தன்றா லொழிகநின் கவலை யென்றான்"

எனத்தேவர் கூறுவதனா லறிக. இதனாற் சிலபெண்களேனும் நூலாராய்ச்சியிற் பெரிதும் வல்லவராயும் கல்வியின் மிகத்தேர்ந்தவராயும் பேரறிவுடையராயு மிருந்தார்களென்பது பெற்றாம். பெண்கள் கல்வி கற்கவேண்டிய தவசியமோ என்பதைக் குறித்துத் தற்காலத்துத் தார்க்கிகர்கள் ஆங்காங்கு முழங்கக் கேட்ட யாம் சிலர் அது நமது தேயத்தின் நன்னிலைமைக்கு இன்றியமையா தென்பதைத் தெற்றென வறிந்தும் நம்முன்னோர்கள் இதனை யாதரித்து வந்தார்க ளென்பதை யறியோமே இதுகாறும் வழக்காறாகாததொன்றை நாமெவ்வாறு நன்றெனக்கூறுவது என்றிங்ஙனம் பலவாறு ஆலோசித்து மாழ்குகின்றார்க ளென்பதை யறிந்துளோம். தாம் நன்றெனவறிந்ததை யுறுதிப்படுத்தற்கு ஏதேனும் வழியுளதோவென ஆவலுடன் தேடாநிற்குமவர்க்கு இஃதோர் மேற்கோளாகுக. சிலமகளிர் சங்கீதமும் நன்குணர்ந்திருந்தார்க ளென்பதறிகிறோம். இங்ஙனம் அவர் நிலைமை பலவிதத்திலும் மேம்பட்டிருந்த தென்பது நன்குவிளங்கும்.



பெண்கள் * கடிப்பிணை, குழை, மகரம், வளை, ஆழி, மேகலை, கிண்கிணி, குறங்குசெறி, சிலம்பு, பாடகம் முதலிய அணிகளை அணிந்திருந்தார்கள். அவர் அக்காலத்திலணிந்திருந்த அணிகளிற்பல இப்பொழுது வழங்குவதில்லை போலும்.

**சிற்பந் தொழில் :**—இனியக்காலத்துச் சிற்பத்தொழில் முதலியவற்றைச் சிறிது கவனிப்பாம் : இவை பெரும்பாலும் இத்தேயத்தின ரல்லாதவரும் யவன முதலிய மேற்றேசங்களிலிருந்து வந்தவரும் யவனரெனப் பெயர் பெற்றோருமாகிய கிரேக்கர் முதலியோரது தொழிலேயா மென்பதும் நமது தேயத்தார் அவைகளை நன்றாக அறிந்தில ரென்பதும் விளங்குகின்றன. இவ்யவனத் தச்சரே அக்காலத்துக் கம்மியத்தொழி லெல்லாஞ் செய்து வந்தனர் போலும். இவர் வேலையிற்சிறந்தவரென்பதை இராசமாபுரத்து அகநகர் மதிலிலே நூற்றுவரைக்கொல்லி, நூக்கி யெறிபொறி, துவக்கு சங்கிலி, விட்டேறு, பேய், பெரும்பாம்பு, கோண்மா, விற்பொறி, விடுகுதிரை, தொடர்வாள், கற்பொறி, பாவை, அன்னம், மாடம், கொள்ளி, கொக்கு, கூகை, ஐயவித்துலாம், இருப்புப் பன்றி, நாகம், விடுசகடம், குரங்கு, தகர், அரிகயிறு இவைகளும், எவ்விடத்துந் திரிந்து செம்புருகின நீரையுமிழ்வனவும், பகைவர் வேதற்குக் காரணமான உருகுவட்டை யுமிழ்வனவும், நெய்யை யுமிழ்வனவுமாகிய யவனரியந்திரித்த விசித்திரப்பொறிகள் பல அமைந்திருந்தனவாகக் கூறப்பட்டிருத்தலாலும் கடைத்தெருவருணனையிற் "பொன்யவனப்பேழை"யைச் சிறப்பித்துக் கூறுவதனாலு முணர்க. அன்றியும் இவ்வாறே பெருங்கதையிலும், மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும், திருவிளையாடற் புராணத்திலுங் கூறப்பட்டுளது.

"தம்புலங்க ளால்யவனர் தாட்படுத்த பொறியே" எனத்தேவர் கூறுமாறுபோல, "அமரரணைலா, மறிவினுணிறவு கம்மி யன்செயவுமரிய வாயவனர் புரியுமிப், பொறிகள் செய்யும்வினை யின்ன' எனப்பரஞ்சோதி முனிவருங் கூறுதல் காண்க.

**கப்பல் யாத்திரை :**—இக்காலத்திற் சிலர் கப்பல் யாத்திரைசெய்து வந்தார்களென்பதும் விளங்குகிறது. இராசமாபுரம் கடற்றுறை முகமெனக் கத்திய சிந்தாமணியிற் கூறப்பட்டுளது. புகாரினது ஆழத்தால் நகரளவுங் கலம் வந்த தென்றார் நச்சினார்க்கினியரும்.

இங்ஙனம் 'திருத்தக்கதேவர் காலத்து நாகரிகம்' ஒருவாறு கூறப்பட்டது. இன்னும் சைனரது மதக்கொள்கைகளும் அக்காலத்துச் சனங்களது விருப்பு வெறுப்புகளைப்பற்றினவுமான பல்வேறு வகையினவாய நுண்ணிய விஷயங்கள் அநேக முள்ளன. அவையெல்லாம் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. 'சீவகசிந்தாமணி யாசிரியர் காலத்து நாகரிகம்' எனத் தலைப்பிட்டுக்

* கடிப்பிணை=குதம்பை போல்வதோர் பணி.

கொண்டு சச்சந்தனது நாட்டுவளம் நகர்வளம் முதலாக அவன் சரிதத்தினின்றும் விஷயங்களை யெடுத்துரைத்தது எதனாலோவெனின் நூல்கள் பலவற்றினும் அவ்வவ்வாசிரியரது காலத்துநாகரிகமே விளங்கக் கிடக்குமென்னும் பெருநியதி பற்றி யென்க,

நூல்நலங் காண்போன்.

---

## ருக்மணி சரித்திரம்.

---

### அத்தியாயம் 3.

என்ன அநியாயம்! என்ன அநியாயம்! மூன்று பெண்களை வைத்துக்கொண்டு யோக்கியதையாய்க் காலங்கழிப்பது அசாத்தியம். எவ்வளவு ஆயிரங்கள் உளவேனும், சௌக்கியமாய் இருக்க முடியாது. அப்படியிருக்க, ஸ்வல்ப ஆஸ்தி இருப்பவர்களுக்குள்ள கஷ்டங்களைப்பற்றி நினைக்கும்பொழுதே, மிக்க மனவருத்த முண்டாகிறது. ஆடு மாடுகளை ஏலம் போடுவது போல, பெண்களையும், பிள்ளைகளையும், நமது பெரியோர் ஏலம் போடுகிறார்கள். தங்கள் பெண்பிள்ளைகள் மணம் என்பது இன்னதென்று அறியமுடியாமலிருக்கும் பொழுதே கலியாணஞ்செய்து வைத்துவிடுகிறார்கள். பின்னர், தாங்கள் மணம் புரிவித்தவர்கள் சுகமாய்க் கூடிவாழ்ந்திருப்பார்களா வென்பது நமது பெரியோர்களுக்குச் சிறிதேனுங் கவலையில்லை. அதுநிற்க, ஸ்வல்ப ஆஸ்தியுடன் பெண்களை வைத்துக்கொண்டிருப்பவன் கஷ்டங்களைப்பற்றி சற்று யோசிப்போம். மாப்பிள்ளை தேடுவதே மிகக் கஷ்டம். படிப்பிருந்தால் சொத்து இல்லை. பணமிருந்தால் படிப்பில்லை. இவ்விரண்டு மிருந்தாலோ, மாப்பிள்ளையது விலை அதிகமாய் விடுகிறது. அது மாத்திரமல்ல. பெண்ணைக்கொடுப்பதாக வருபவன் மனம் மிகநொந்து போகும்படி செய்து விடுகிறார்கள். நல்ல வழக்கம்! நல்ல வழக்கம்!! பிள்ளை வைத்திருப்பவன் ஏழையாயிருப்பானாகில், அவனுக்கும் இதே விதத் தொந்திரவு தான். அவனுக்கு ஜீவனத்துக்குள்ளவை யெல்லாம் விற்றுவிட்டு எல்லாவற்றையும், பெண்ணின் தகப்பனிடத்தில் கொடுத்துவிட்டு, இரண்டு பேராய் பிச்சைக்குப் போகவேண்டியதுதான். கலியாண மென்பது நமக்குள் இவ்வளவு கஷ்டமான வியாபாரமாயிருக்கிறது.

ஐயாசாமி ஐயர் மறுநாள் ஜாதகம் கொடுப்பேனென்று சொல்லியும், அவர் சொன்னபடி நடக்கவில்லை. ஏனெனில் அவர் பிள்ளையின் தகப்பன். தான் சற்று மேலாயிருந்து பேச வேண்டும் என்பது அவர் கொள்கை. அவர் கொள்கை மாத்திரமல்ல. அவருடையஸ்தானத்திலிருக்கும் எல்லாரது கொள்கையும் அதுதான். பிறகு மூன்று நாளைக்கு ஒவ்வொரு தினத்துக்கு



நான்குநடை வீதம் சுப்பையர் அலைந்தபிறபாடு, ஜாதகத்தைக் குறித்துக் கொடுத்தார். சுப்பையர் கொண்டுவந்து அநேக ஜோஸ்யர்களிடத்திற் காட்டி ஜாதகங்கள் பொருந்தினவென்பதைப்பற்றி மிகச் சந்தோஷத்துடன் வேங்கட ராமையரிடம் வந்து,

"பார்த்திண்டு வந்தாட்டேன் எல்லாஞ் சரியாயிருக்கு" என்று மிக உரத்திச்சொன்னார்.

" சரி, இனிமேல் பணத்தைப்பத்தி பேச வேண்டியதுதானே"

" ஆமாம்"

" எவ்வளவுலே நிற்கும்"

" ஆயிரத்திச் சொச்சத்தில் நிற்கும்"

" அவ்வளவுலேயா"

" அதுக் கென்ன பண்றது"

" முடியாது போல் ருக்கே"

" ஆனாப் பேசவேண்டாமா"

" இல்லை, இல்லை, பேசுங்கோ. எப்படியானுஞ் சரிப்படுத்றது"

" சரி"

" ஆயிரத்திலே நிற்கும்படி பாருங்கோ"

" சரி நான் போய்ட்டுவரேன், நீங்க ஆத்லேயிருங்கோ. யார் ராது பயலே இவாளே கோவிலுக்குள்ளே அழைச்சுண்டு போடா"

வேங்கடராம ஐயர் உடனே புறப்பட்டு ஐயாசாமி ஐயர் வீடுபோய்ச் சேர்ந்தார். போய் வெகு நேரம் பணத்தைப்பற்றித் தகரார் நடந்தது. வேங்கடராம ஐயர் 500 - ரூபாயில் ஆரம்பித்தார். ஐயாசாமி ஐயர் 1500 - ரூபாயில் ஆரம்பித்தார். கடைசியாக, 1000 - ரூபாய் கொடுத்தாற் சுப்பையரது பெண்ணைத் தனது மகனுக்குக் கலியாணஞ் செய்து கொள்ளுவதற்குச் சம்மதித்தார். வேங்கடராம ஐயருஞ் சம்மதித்தார்.

மேல் நடந்ததைச் சொல்லுவதற்கு மனங் கூசுகிறது. சுப்பையரது சொந்த மைத்துனன் சுப்பையரை மோசஞ்செய்வதற்கு ஆரம்பித்தார். என்னவென்றால், ஆயிரம் ரூபாய், சுப்பையர் ஐயாசாமி ஐயருக்குக் கொடுக்க வேண்டுமென்று பேசியிருந்தாலும், சுப்பையரிடத்தில் ஆயிரத்திருநூறு கொடுக்கிறேனென்று பேசியிருப்பதாகச் சொன்னார். என்னமோசம்! ஏன்? அண்ணன் தம்பியையும், புருஷன் பெண்சாதியையும், மோசஞ் செய்யும்பொழுது இஃது ஓர் அதிசயமா?

வேங்கடராம ஐயருக்கு வேலை யொன்றுமில்லை. உண்பதும், உறங்குவதும், பிறரைப்பற்றி வம்பளப்பதுந்தான் அவர்காரியம். எவ்விஷயமும் தனக்குத் தெரியுமென்பது அவர் கொள்கை. யார் எது சொன்னாலும் அது அவருக்கு லக்ஷியமில்லை. இன்னமும், எல்லாரது பணமும், தன்னிடத்தில்

வந்து குவியவேண்டுமென்பது அவரது ஸ்வப்னம். ஒருவித சம்பாத்யமுமில்லாததனால் இவ்வளவு அநியாயமான ஒரு மோசத்தைச் செய்ய எத்தனித்தார்.

"ஆயிரம் ரூபாய்க்கு இசையமாட்டேன் னுட்டாரோ" என்றார் சுப்பையர்.

"மாட்டேன் னுட்டார்"

"இன்னங்கொஞ்சம் பாருங்கோ"

"என்னாலானமட்டும் பார்த்துட்டேனே"

"இன்னம் ஒருதரமாவது பாருங்கோ"

"அது சரிப்படாது"

"நான் வாணாப் போய்ப்பாக்கறேனே"

"ஆனால் பாருங்கோ" என்று சிறிது முகக் கடுப்புடன் வேங்கடராம ஐயர் சொன்னார். இது சொல்லுவதற்குச் சிறிது தயங்கினார். பிறகு அவருக்குத் தைரியமுண்டாயிற்று. வேங்கடராம ஐயருக்கு, சுப்பையர் நேராய்ப் போகும்பக்ஷத்தில் ஐயாசாமி ஐயர் நிஜத்தைச் சொல்ல மாட்டாரென்பது நிச்சயம். அதனாற்றான் இவ்விதமாய், நிஜம் பேசுபவரைப்போலச் சொல்லிவிட்டார்.

"சரி ஆனால் போய்ட்டுவரட்டுமா" என்று சொல்லிச் சிறிது தூரஞ் சென்று, திரும்பிவந்து, அம்மாஞ்சி கிருஷ்ணையரைக் கூப்பிட்டார்.

கிருஷ்ணையர், விலாப்புடைக்கத் தின்றுவிட்டார். ஒட்டுத் திண்ணையில், உத்தரீயத்தை விரித்துப்போட்டு, தூங்கவேண்டுமென்ற எண்ணத்துடன் கண்களை மூடிக்கொண்டார். தூக்கமோ வரவில்லை. வயிறு வெடித்துப்போகும்போலிருக்கிறது. வயிற்றுவலியும், நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகரிக்கிறது. ஆகையினால் மேலுங்கீழுமாகப் புரண்டுகொண்டு, கண்ணைமாத்திரம் திறவாமல், காலை அகற்றிப் படுத்துக்கொண்டார். சுப்பையர் கூப்பிட்டவுடன் சரேலென்று கண்விழித்து, "அத்தான், கொஞ்சம் ஸ்ரமமாருக்கு, போங்கோ, வரேன்" என்று அடித்தொண்டையோடு கத்தினார்.

"தெரிந்ரம், போகச்சே, இதுதானே. எந்திரா நடக்கறது" என்று சுப்பையர் கோபத்துடன் சொல்வதைக்கேட்டு, நடு நடுங்கி, மெல்ல மெல்ல ஆடிக்கொண்டு வந்தார்.

இவ்விருவரும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டே, ஐயாசாமி ஐயர் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். போனவுடன், வெளியிலிருந்த மாப்பிள்ளைப் பையனைக் கூப்பிட்டு "அப்பா இருக்காராப்பா" என்று கேட்டார்.

"இருக்கார், கூப்படட்டுமா" என்றான் அந்தப்பையன்.

"கூப்டு, அப்பா"



உடனே பையன் உள்ளே ஓடி, தகப்பனாரை நோக்கி, "அப்பா, ஆரோ வந்திருக்காள். கூப்டறதா"

"யார்ராது" என்றார்.

"யாரோ, ரெண்டுபேர் வந்திருக்கா"

ஐயாசாமி ஐயர் எழுந்து ஜன்னலாலெட்டிப் பார்த்து சுப்பையர் வந்திருக்கிறாரென்பதை அறிந்து "அப்பா உள்ளே இல்லேனு சொல்லிப்டு" என்றார். பையன் உடனே வெளியிலோடி, "அப்பா, உள்ளே இல்யாம்" என்று சொல்லிவிட்டு, மறுகேள்வி கேட்பதற்கு முன், உள்ளே ஓடிப்போய் விட்டான்.

சுப்பையர் மறுநாளும் திருவையாற்றில் இருந்தார். சாயங்காலம், வேங்கடராம ஐயர் வெளியிலிருந்து வந்து "என்னாலே ஆனமட்டும் பார்த்தேன். ஐயாசாமி ஐயர், பையனுக்கு இந்த வருஷங் கலியாணம் பண்றதில்லைன்னுட்டார்" என்றார்.

"நாங்க ஊருக்குப் போய்ட்டு வரலாமா"

"சரி."

இவ்விருவரும் திருவையாற்றை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்.

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

## மானவிஜயம்.

சேரநாட்டின் தலைநகராகிய கருவூரின்கணிருந்து சேரமான் கணைக்காலிரும்பொறை யென்னும் ஓரரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் நல்லிசைப் புலவராகிய பொய்கையாரிடத்து அறிவுநூல் பல ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவன்; பொருட்செல்வமே யன்றிச் செவிச்செல்வமுமுடையான். இத்தகைய அறிவுநசையுற்ற அண்ணல் தனது நாடு காவலைப் பெரிதுங் கருதானாயினன். அறிவின் மீதுள்ள அவன்றன்பேரவாப் பிறிதொன்றனையும் பற்றி யெண்ணுதற் கிடந்தரவில்லை. அவன் தனது நாடு முழுதும் நன்னிலையிலிருக்கின்றதெனவும், தன்போலவே பிறரும் நல்லியல்புடையாரெனவும் நம்பி யொழுகினன். அவன் அவ்வாறு ஒழுகுதல் பிறநாட்டுவேந்தரைத் தன்மீது வஞ்சிசூடி மேற்சென்று சேருமாறு தூண்டிற்று.

சேரநாட்டின் நிலைமை இவ்வாறாகச், சோணாட்டின்கண் உறந்தையம்பதியிலோ, சோழன்செங்கணான் உலகநூல் முற்றக்கற்றுப் பலதுறைப் பயிற்சியுமுடையனாயிருந்தான். அவன் இத்துணையோடமையாது அறிவுநூலும் நல்லாசிரியனை யடுத்து வழிபட்டுணர்தர விழைந்தனன். அவ்வா

றே தான்கொண்ட விழைவு கைகூடுதல் கருதிய கோச்செங்கட் சோழன், பொருட் செல்வத்தை யொருபொருளென மதியாப் புலவர் பொய்கையாரை வேண்டினான். அப்புலவர் பிரான் செங்கணான் அறிவுநூலுணர்ச்சிக்கு இன்னும் அருகனல்ல னென்றுன்னி அவனது வேண்டுகோட் கிணங்கினாரல்லர்.

இங்ஙனமிருப்ப, ஏதோ ஒரு காரணம்பற்றிச் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் வழக்குண்டாய் ஒருவரோடொருவர் போர் செய்யும்படி நேரிட்டது. அங்ஙனமே போரும் கழுமலமென்னும் ஊரின்கண் நடந்தது. அதன்கட் சோழனே வாகைமிலைந்தனன். அஃதேயுமன்றிச் சேரமானும் அவன்றன் ஆசிரியராகிய பொய்கையாரும் சோழனாற் சிறைகொள்ளப்பட்டனர். அவ்வாறு போரிற் பிடியுண்ட அவ்விருவரும் சிறைக்கோட்டத் திடப்பட்டனர்.

அதன் பின்னர்ச்சோழன் மறுநாட் காலைப் பொய்கையாரை யழைத்துத் தன் வல்லமை தோன்றப் "பொய்கையாடாப் பொய்கையாரே! இப்பொழுது நீவிர் நந்தம் போராற்றல் கண்டிரன்றே. மேலும் நீவிர் நமது கைச்சிறையாயினீர்; யாம் நினைத்தபடி யெல்லாம் நும்மையாட்டவும் வல்லேம்" என்று கூறினன். அஃதுளத்துட்கொண்ட அருந்தமிழ் வாணர் சோழனை ஏறட்டுப் பார்த்து, "அண்ணலே! அறியாது கூறினாய், நீ யென்னைச் சிறைப்படுத்தவும் வல்லையோ? யானே யென்னைச் சிறைப்படுத்தினேனே யன்றி வேறெவரும் அங்ஙனஞ் செய்தாரல்லர், செய்யவும் வல்லரல்லர்" என்று ஆழ்கருத்தோடும் பேசினார். அங்ஙனம் அவர் பேசியதனுட்கருத்தினை உய்த்துணராத செங்கணான், "நீவிர் நமது சிறைப்பட்டதும் பொய்யோ? 'பொய் கையார்' என்று நுமக்கிட்ட பெயர் சாலும்!" என்று கூறிப் புன்னகை செய்தனன். அது கண்ட பொய்கையார் சிறிதும் அஞ்சாது, "ஓ! புல்லறிவாள! நின்பேதைமை நன்றாயிருந்தது! இத்துணை உய்த்துணரும் மதுகையிலாத நீயும் என்னை யடுத்து அறிவுநூல் கற்ற லெங்ஙனமியையும்? நீ யெனது யாக்கை மட்டிலே சிறைப்பற்றினையே யன்றி, எனது இன்னுயிரையுஞ் சிறைக்கொண்டனையோ? அஃது எனது பழவினைகாரணமாகத் தனது பாந்தநிலையி னீங்கிச் சுரிந்து சுருங்கி அணுவாகி இவ்யாக்கையின்கண்ணே வதிகின்றது கண்டாய். பேதை நீ பெரிதும் பொல்லாய்! வேறுபட நினைத்ததென்?" என்றலும், சோழன் சிறிது புன்முறுவல் செய்து அவரைவிட்டுச் சிறைக்கோட்டத்திற் கேக விடுத்து, அவர்க்கு வேண்டியதொன்று முதவாது ஆண்டு அவர்தஞ் செயல்களை யாராய்வான் விரும்பினன்.

விரும்பியாங்கே அற்றை ஞான்றிரவில் அரசனுஞ் சிறைக்கோட்டத்தி னருகர்ச் சென்று உற்றுநோக்கினான். அவ்வளவில் இறைவனைப்பாடி நின்ற புலவர் நிலமகளை நோக்கி, "உலகமாதாவே! இதுகாறும் நின்னிற் பிரிந்தே



படுத்துறங்குமாறு நேரிட்டது; அப்பொழுதெல்லாம் பெரிதுந் துன்புற்றேன். இப்பொழுதோ யான் உன்றன் அருமைத்திருமடியிலேயே படுத்துக் கொள்ளும் பெரும்பேறு பெற்றேன். இனி யெனக்கென்னோ குறை?" என்று சொல்லிக் களிகூர்ந்தார். இவையனைத்தையுங் கண்ணுற்ற சோழன் அவரது இன்பவுளங்கண்டு மகிழ்பூத்து, மற்றை நாள் வைகறைக் காலத்திலேயே பொய்கையாரிடஞ் சென்று அவரை வலம் வந்து வணங்கிச் சிறைவீடு செய்து துதித்தனன்.

இவ்வாறு சோழன் செங்கணான் நெறிப்பட்டமை தேர்ந்த பொய்கையார் அவன்மீது களவழி நாற்பது என்னுமொரு செந்தமிழ்நூல் பாடித் தம் மாணாக்கருட் டலைநின்றவனாகிய சேரமான் கணைக்காலிரும்பொறையைச் சிறைவீடு கொண்டு பேராவலோடுந் தமது மாணவனைச்சிறைக்கோட்டத்திற் கண்டு இந்நற்செய்தியை அவற்குரைத்து அரசன் முன்னர்ச் சேரமானையுங் கொண்டு சென்று இருபெரு வேந்தரையும் நட்பாளராக்கி அவ்விருவர்தங் குறையையும் ஒருங்கே நீக்குங் கருத்தினராய் வருகின்றார்.

இது நிற்க. சிறைக்கோட்டத்தின்கணிருக்குஞ் சேரமான் கணைக்காலிரும்பொறை, தனது ஆசிரியர் பொய்கையாரைப்போல மனவமைதியும் இன்பமுங் காணாதுச் சிறைக்களமுற்ற நான்முதல் உணவுகோடலொழிந்திருந்தான்; தான் இவ்வாறு போரிற்றோலைவுண்டு காவலிலிருத்தலையே பற்றி யெண்ணி யெண்ணிப் பெரிது மேக்கமுற்றயர்வாறாயினான். அவன் தான் இந்நிலையிலிருந்து வருந்துவதனினும் உயிர்துறத்த லுயர்வாமன்றோ வென்று மெண்ணினான். இன்னணந் துன்புற்று அரிதிற் பொழுது போக்கும் சேரமான் தண்ணீர்வேட்கைமீதூரப், பொறுக்கலாற்றாது சிறைக்கோட்டங் காவலரைவிளித்துத், தான்றன் ஏவலைப் பணிக்குமாறு போலப் பருகுநீர் கொணர்மினெனப் பணித்தனன். அவ்வாறு பணிப்பக்கேட்ட காவலர் உடனே செல்லாராய்ச் சிறிது காலந்தாழ்த்துச் சென்று நெடுநேரங் கழித்த பின்னர்க் கொஞ்சந் தண்ணீர் கொண்டு போந்தனர்.

இடையில் இவ்வாறு சிறைகாவலருள் ஒருவனுந் தனது பணியை அத்துணைக் கவனியாது சென்றமையைக் கவனித்து நின்ற சேரமான் தான் அவர்கட்கு ஆணையிட்டமைபற்றிப் பெரிதும் மனமுளைந்தான். பின்னர் அவர்களுளொருவன் தான்கொண்டுபோந்த தண்ணீரைச் சேரமான் பருகுமாறு மிக்க வெக்கழுத்தத்தோடும் நின்று ஒருகையால் நீட்டினான். நீட்டியவளவிற் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கு மனந்துணுக்கெனச் சுருங்கலும் முகமும் வெள்ளென விளர்த்தது. அரசனுங் காவலன் நீட்டிய நீர்க்கலத்தைக்கைக் கொண்டானல்லன். உடனே கோட்டங்காவலன் வெகுண்டு வரம்புகடந்து மன்னவனை நோக்கி, "உமக்குத் தண்ணீர் வேண்டுமோ வேண்டாமோ? இவ்வாறு பொய்க்காயினும் என்னைத் தண்ணீர் கொணரும்படியேவினீரென்

பது முன்னரே யுணர்ந்திருப்பேனேல் இதன்கண் யான் தலையிட்டிருக்கவே மாட்டேன். நும்மியல்பு நன்றாயிருந்தது! உமக்கேதேனுஞ் சிறிது சித்தப்பிரமையு முண்டோ?" என்றுசொல்லி நகையாடினன். அதற்கும் வாளாதிருந்தனன் சேரமான். அதன்மேல் அக்காவலன் அரசனை நோக்கி, "நீர் அருந்தினு லருந்துமின், அருந்தாக்கால் வருந்துமின். எனக்கென்னை?" என்றுரைத்து அந்நீர்க்கலத்தைச் சேரமானருகிலேயே வைத்தகன்றனன்.

அங்ஙனம் அவன் அகன்றவளவிற் சேரமான் சிந்திப்பான்: "இவ்வாறு போரின்கட் டொலைவுற்றும், விழுப்புண்பட்டிறந்து வீரசுவர்க்க மெய்தாது உயிர் கொண்டு நின்றும், பகைவன் கைப்பட்டுச் சிறைக்களத்திருந்தும், ஆண்டுப்பலராலும் எள்ளி நகையாடப்பெற்றும், உயிர் வாழ்ந்திருப்பதனினும் அதனையின்னே துறத்தல் மேதக்கதன்றோ? இருப்புத்தொடரிற் பிணிப்புண்ட ஞமலிபோல, ஈண்டு வாழ்வதனால் யாது பயன்? மானமேயுயிரினும் மாண்புடைத்தாகுமால்" என்று அந்நீரினைப் பருகாமலேயிருந்து உயிர் துறந்தனன். இதனைக்காவலரும் அறிந்திலர். அந்தோ! "மான மிழந்தபின் வாழாமை முன்னினிதே" என்ற புலவர் வாக்கும் பொய்யோ?

பின்னர்ச் சிறிதுபோழ்தினுள் ஆண்டு அகமகிழ்ச்சியோடும் அடைந்த பொய்கையார் அரசன் செங்கணானது முத்திரை பொறித்த திருமுகத்தைக் காட்டிச் சிறைக்கோட்டத்தினுட்புகுந்து சேரமான் கணைக்காலிரும்பொறை கிடந்தவிடஞ் சென்றார்; அவனைக்கண்டார், கலங்கினார், கலுழ்ந்தார், எழுந்தார், விழுந்தார், அறிவழிந்தார், தன்னை மறந்தார்; மீட்டும் அறிவு கூடியெழுந்தனர், சேரமானை யுற்றுநோக்கினர், பற்றித்தூக்கினர், தம்மார்பம் எற்றித்தாக்கினர். அவ்வேளையிலோரேட்டிற் செந்தமிழ்ச் செய்யுளொன்று வரையப்பெற்றுக் கணைக்காலிரும்பொறைக்கு அணித்தாக்கிடந்தது; அதனை யெடுத்தார், படித்தார், கைசோரவிடுத்தார். அண்ணல் சேரமானை வாரியணைந்து பெரிதும் வாய்விடுத்தழுதரற்றினார். காரியம் மிஞ்சிப்போயிற்றென் றுணர்ந்த நற்றமிழ்ப்பாவலர் தமது நன்மாணாக்கன் பிரிவினை யாற்றகில்லாது ஆண்டே பொட்டெனத்தரையினில் வீழ்ந்து மாய்ந்தனர்.

அவ்வோதை கேட்ட சிறைகாவலரனைவரும் வெருஉக்கொண்டு சேரமான் வீழ்ந்து கிடக்குமிடஞ் சென்று கண்டனர். உடனே அவர்கள் சிறிதுபோதும் தாமதியாது சோழன் செங்கணான்பாலோடி யுற்றதுரைக்கப் புகுந்தார்கள். அவ்வமயத்தில் இராசமாதேவி அறிவுடைநங்கையென்னுந் தன் தோழியாற் றேற்றப்பட்டு அரசன்பாற்சென்று தான்கண்ட தீக்கனவுகளனைத்தையும் மொழிந்து மனம்வருந்தி நின்றாள். உடனே சோழனும் காலந்தாழ்த்தலின்றிச் சிறைக்கோட்டஞ் சென்றுசேர்ந்து ஆண்டுப் புலவருமாணாக்கரு மொருங்கே யிறந்துகிடப்பக்கண்டு, தேவிகண்ட தீக்கனவின்பயன் பலித்தவாறுணர்ந்து பெரிதும் புலம்பினான். உண்மையுணர்ந்து தன் சிறை



காவலரைத் தெழித்தான், பழித்தான், சிறைக்கோட்டத்தை யழித்தான். பின்னர்த் தான் அறியாது செய்த இப்பாவச் செயல்கட்குங் கழுவாயாகத் தேவகுலம் பலகுயிற்றினான்.

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி.

---

## பேக்கனார் சிற்றுரை.

---

### 50 - ஆவது:—படிப்பு. *

படிப்பு உவப்புக்கும், அலங்காரத்துக்கும், வேலைத்திறமைக்கும் உதவியாம். உவப்புக்காகப் படிப்பவர், கூட்டம் விட்டுப்பிரிந்து தனிமையிற் படிக்க வேண்டியவர்களாவர். படிப்பால் அலங்காரம் கோருகிறவர் சம்பாஷணையிற் பிரகாசிக்கக் கோரவேண்டியவராவர். எடுத்த வேலையைச் சரியாய் ஒழுங்குபடுத்தி ஒப்புற முடித்தல், படிப்பினால் திறமை அடைந்தவர்களால் தான் ஆகக்கூடியது. இயற்கைத்திறமையால் வேலை முடிவு பெறலாம். தனிச்சங்கதிகள் திருத்தமாய் நிதானிக்கவும் படலாம், ஆனாற் பல சங்கதிகளும் யோசனைகளும் சேரும் காரியங்களில் அவற்றைச் சரியாய்க் கவனித்து மொத்தத்தில் முடிவு செய்வதில், படிப்பாளிகளால் நிறைவேறுகிற அவ்வளவு மற்றவர்களால் நிறைவேறாது. ஒருவர் தம்பொழுது முழுதையும் படிப்பிலே போக்குவது, ஓர் விதமான பித்தமாம். எப்பொழுதும் தம்படிப்புப்பேச்சே பேசுகிறவர்களுக்கு டம்பக் குற்றம் சேரும். விவகாரங்களிற் படித்தபடி நடவடிக்கை செய்கிறவர்கள் கற்றறிமூடராவர். படிப்பினால் இயற்கை மேம்பாடடையும், படிப்பே அனுபவத்தினால் மேம்பாடடையும். எப்படியென்றால், இயற்கையால் வளரும் செடிகளைக் கத்திரித்துவிட வேண்டுவதுபோல், இயற்கைத்திறமையும் படிப்பினால் ஒழுங்குபட வேண்டும். படிப்பையே முழுதும் பிடித்துப்போனாற் புத்தி உண்மையினின்றும் ஒதுங்கலாம், அவ்வாறு ஒதுங்காதிருக்க அனுபோகத்தை அனுசரிக்க வேண்டும். சூதர் படிப்பால் என்ன பிரயோசனமென்று அவமதித்துப் பேசுவர். கபடந்தெரியாதார் படிப்பைப்பார்த்துப் பிரமிப்பர். நற்புத்திமான்களுக்கே படிப்பை உபயோகத்திற்குக் கொண்டுவரத் தெரியும். படிப்பின் பிரயோசனம் படிப்பினாலேயே தெரியாது. படிப்பைப் பிரயோசனமாக்கிக்கொள்ளும் திறமை படிப்பிற்கு அப்புறப்பட்டது, உயர்ந்தது, வெளிநோக்கத்தாலேயே கிடைப்பது.

எதிரியை வாதத்தில் வெல்லவேண்டுமென்ற ஒரே கருத்துவைத்தும், வாசிப்பதை முழுதிலும்நம்பி ஒப்புக்கொள்ளுகிறதென்றும், மற்றையருடன்

* Bacon's Essays—On Studies.

கலக்கும்போது பேச்சுக்கிடைக்கவேண்டுமென்ற ஒரே கருத்துக்கொண்டும் வாசிக்கலாகாது; வாசிப்பதைச் சீர்தூக்கியோசனை செய்து தம் அறிவை ஒழுங்குபடுத்தும்பொருட்டு வாசிக்கவேண்டும்.

உதட்டால் தடவி உருசிமாத்திரம் பார்க்கும்படியான உணவையொத்த புத்தகங்களும் சில உண்டு, மெல்லாது சும்மாவிழுங்கமாத்திரம் வேண்டிய உணவையொத்த புத்தகங்களும் உண்டு, நன்றாய்மென்று உட்கொண்டு ஜீரணமாகி இரத்தத்திற் கலக்கவேண்டிய உணவை யொத்த புத்தகங்களும் உண்டு, அதாவது, அங்கங்கே பார்த்துப் போட்டுவிடவேண்டிய புத்தகங்கள் சில, முழுதும் வாசித்துக் கவனிக்காமல் விடவேண்டிய புத்தகங்கள் சில, கஷ்டப்பட்டு முழுவதும் வாசித்துக் கிரமத்துடன் கவனித்துச் சிந்தையில் ஆழ்த்தி அறிவிற்கலக்கும்படி செய்யவேண்டிய புத்தகங்கள் சில, குமாஸ்தாவைத்துப்படிக்கவேண்டியபுத்தகங்கள் சில, குமாஸ்தாக்கள் அவற்றைப்படித்து அவற்றிற் சில சந்தர்ப்பங்களைப் பெயர்த்து எடுத்துக்காட்ட, அவற்றை நாம் வாசித்தாற் போதும் என்னும்படியான புத்தங்களுமுள. நமக்காகக் குமாஸ்தாக்கள் படிக்கக்கூடிய புத்தகங்களெல்லாம், கடைந்தரமான புத்தகங்கள், முதல்தர புத்தகங்களைக் குமாஸ்தாக்களைக்கொண்டுபடித்தல், இறக்கப்பட்ட திராவகங்களைக் குடிப்பதுபோல் ரசமற்றிருக்கும். வாசிப்பால், தெரிந்தசங்கதிகள் நிறைவுபெறும்; சம்பாஷணையாற் சுறுசுறுப்பாய் மொழியும் திறமையுண்டாகும், எழுதலாற் கசடற்ற வலியுற்ற அறிவு பெறலாம். ஆகையால் எழுதிப் பழகாதார்க்கு விசேஷ ஞாபகசக்தி இல்லாமற்போகாதது போலச், சம்பாஷித்துப் பழகாதார்க்குச் சமயத்தில் உதவும் அறிவு இல்லாமற்போகாது; அதிகமாய்ப் புத்தகங்களையெடுத்து வாசியாதார்க்கு, விசேஷமாய்ப் படித்திருப்பதுபோலக் காட்டிக்கொள்ளும் பாசாங்குத்திறமை யில்லாமற்போகாது.

சரித்திரப் புத்தகங்களை வாசிப்பதனால் யுக்தாயுக்தம் தெரியும்; செய்யுட் புத்தகங்களை விசேஷமாய் வாசித்திருப்பார்க்குச் சாதுரியமாய்ப் பேசும் திறமையுண்டாம், கணிதநூல் பயின்றார்க்குப் புத்திநுண்ணியதாம், பௌதிக நூற்படிப்புப் பெற்றவர் ஆழ்ந்த அறிவினர் ஆவர், நீதிநெறிநூல் வாசித்தோரிடத்தில், பரந்த நினைவுகள் தோன்றி, அவர்கள் நடக்கை சிறக்கும்; தர்க்கவலங்கார நூல்களிற் பயின்றார் சர்ச்சையில் மும்மரிப்பர். "படிப்பு நெறியை அமைக்கும்" என்றது பிரமாணந்தான்.

உடலிற் குற்றம் இருந்தால் அதனைத் தகுந்த உடற்பயிற்சியினாற் போக்கவில்லையா? அப்படியே அறிவில் உள்ள குற்றங்களையும் இசைந்த படிப்பினாற்களைந்துவிடலாம்; இடுப்புக்கும் குடல்களுக்கும் பந்தாடுவதனால்வலிமை உண்டாம், சுவாசப்பைக்கும் மார்புக்கும் துப்பாக்கிசுடும் பயிற்சியினாற் குணம் உண்டாம், இரைப்பைக்கு மெதுவான கால் நடையினாற் குணம் உண்டா



ம், குதிரைச்சவாரியினால் மூளைக்குவலியுண்டாகிறது, இன்னும் எத்தனையோ உதாரணம் சொல்லலாம். இப்படியே யாரொருவருடைய புத்தி கலக்கப்பட்டுத்திரிகிறதோ, அவர் கணிதநூல்களைப் படிக்கட்டும்; கணிதநூல் படித்துப் போம்போது கவனம் எம்மட்டுப்பிரியினும், மறுபடியும் அடியைப்பிடித்துச் சொல்லிவந்து ஞாபகம்வைத்தே தீரவேண்டும். நுட்பமான வித்தியாசங்களை உணரத்தெரியாத மந்தர் மத்தியகாலத்துப் பள்ளிக்கூடத்தார் புத்தகங்களைப்படிக்கட்டும். இவர்கள் கடுகிற்றொளை செய்தவர்கள் அல்லவா? விரிவானபுத்தி இன்றி ஒருவிஷயத்தை யெடுத்துப் பேசுங்கால் மற்றொரு சங்கதியை ஞப்தி பண்ணிக்கொண்டு உதாரிக்கத் திறமையில்லாதார், நியாய விசாரணைச் சபைக்குவரும் வழக்குக்களைச் சகலரும் கிரந்தங்களைப்படித்துத் (வழக்குக்களைக் கண்ட புத்தகங்களைப் படித்துத்) தெரிந்துகொள்ளட்டும்." இப்படியே அறிவில் இருக்கும் ஈனம் ஒவ்வொன்றுக்கும் தகுந்த சிகிச்சை நடத்தும் வழியுண்டு.

டி. ஆர். இராமநாத ஐயர்.

---

## கடவுளுண்மை.

(III-ஆம் சம்புடம். 273-ம் பக்கத்தொடர்ச்சி).

காலை யெழுந்து கடன்முடித்துக் கறைக்கண் டனைச்சிந் தனைசெய்து
வேலை சூழு முலகினுக்கு வேந்த னுகு மவன்பாற்போய்
நாலுங் கொண்டிம் மண்மிசைநீ நன்மந் திரியோ டிருந்துன்செங்
கோலைச் செலுத்து கெனச்சொன்னார் குறையி றவனு மிளையவனும். (14)

சொல்லிச் சிறிது பொழுதிருந்து சொல்லற் கரிய மாதவத்தோன்
மெல்ல வனையான் முகநோக்கி மேற்செல் வதற்கெங் கட்குவிடை
யொல்லை யளித்தி யெனலுமவ னுதயத் தெழுந்து சேவையுற்றீர்
பல்லும் விளக்கி யுள்ளீர்நீர் பாலுட் கொண்டு படர்கவென்றான். (15)

என்று கூறி யம்மன்னன் வேலை யாளர் தமைக்கூவித்
தின்று சுவைப்பால் கொடுவந்தித் துறவி யோடவ் விளைஞனுக்கு
மன்ற வளித்தி ரெனலுமவர் மகிழ்வோ டோடி மனைப்புறம்போய்க்
கன்றி னவைப் பால்கறந்து கலசத் திட்டுக் காய்ச்சினரால். (16)

மாற்றுத் தங்கத் தாற்செய்த வள்ள மதனிற் பாற்பெய்து
காற்றிற் கடுகிக் கல்விலைப் புனலோர் முனிக்குங் காளைக்கு
நேற்றிற் பொலியு மிறையவனை யிதயத் திருத்தி யருந்துமெனப்
போற்றித் தாது மருந்தினராற் புகழ்சேர் முனியுங் காளையுமே. (17)

### வேறு.

பாலருந்தித் தவழ்ந்தியும் பால்பருவத்தினனுங்
காலையிருள் சீக்குங்காய் சதிரவன்மேல் வருவதன்மு
னிலயநீத் தரையளிடஞ் செலவேற்று ரப்பொழுது
சீலமுடைச் சிறுபையன் செங்*கோல்வள மொளித்திட்டான். (18)

அருந்தவனன் னன்செய்கை யறிந்துமதி யான்போலப்
பொருந்துபல வாசிகளப் புரவலற்குப் புகன்றெழலும்
விருந்தினனை வழிவிடுவான் வெற்றிமிகு வேந்தனுந்தன்
றிருந்தியசீர்த் தயங்குமணி வாயில்வரைச் சென்றனனால். (19)

மன்னவனே முதலாக மற்றுமுள வெல்லோரும்
பன்னரிய தவத்தினன்றன் பதமலரிற் பணிந்தெழுந்து
நன்னர்மிகுந் திருநீறு நன்களிக்கப் பெற்றராய்ப்
பொன்னதனுற் செய்தவளம் போனவழி யவராறியார். (20)

அரவமோசா டெட்டிடமு மீளப்பாற வரசியற்றும்
புரவலன்றன் பொன்வாயிற் புக்கதற்பின் னிருவோரும்
பெருகுவழி மேற்கொண்டார் பிற்படவப் பொன்வாயிற்
றிருமருவுந் திருநாட்டின் னைகிகுத்துச்செலவுற்றார். (21)

தூகவஞ் † சேர்ந் திசைசெய்யுஞ் சோலைகளுங் குளங்களுஞ்சேர்
பாதையிலே செலும்போழ்து பகலவனுச் சியிற்போத
வாதபத்தின் மிகையாலே யுடல்சோர வலைந்துலைந்தோர்
பாதவத்தி னிழலிலே படுத்துறங்கிச் செலநினைந்தார். (22)

நினைத்தாங்கே யொருமாத்தி னிழலிலே சிறிதுறங்கிப்
பனைத்தாவும் பொழுதிருக்கப் பனகவணி யணிந்துபுரஞ்
சினத்தாலே சிரித்தெரித்த சிவபெருமான் றிருவடியை
யுனத்தாலே தொழுதயினை ருடனெழுந்து செலவுற்றார். (23)

வண்டினங்க ளிசைபாடக் குயில்கூவ மயிலாலுந்
தண்டலைக ளவற்றினையுந் தனிக்கடந்தங் கோர்சிறா
ரண்டலுட்வெங் கதிரவன்றன் னாழலை யாற்றிடுவான்
வெண்டைகளார் மேற்கடலிற் றிளைத்தனன்காண் கதிர்களொடும். (24)

(இன்னும்வரும்.)

சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.

* செங்கோல்வளம் = பொன்வள்ளம். † தூகவம் = வண்டு.



## சாந்தி விலாசம்.

அறிவுறிப் கக்க லாம்பந் றனைத்தும்
நல்லறி வுற்றிக் கில்சிறை யோப்பாம்.

21. மக்கள்கட னுதவியல ரெனவென் முன்னம்
வருகின்ற ரிதுபொழுது மனைவி மார்கள்
புக்கரவம் பங்கையினி லடைந்த தொத்தார்
புரியில்லங் காவலறை போற்றோ ரின்றேன்
கக்கியது நிகரிதிலோர் கணமே னுங்காற்
கணமேனும் வசிக்கமன நசையுற் றின்று
லொக்கறமை யடியகைளுர் படையிற் றண்டே
னூர்தந்தாள் பரங்கருணை யுடைய தேவே.

மகவாந் றபற வந்தனன் றுறப்போன்.

22. நிலையுதலில் பாலியத்தால் யவனர் தன்று
ணிசழ்ந்தன நிகழ்ந்தனவே தினங்கள் வீணுய்த்
தொலைந்தன தொலைந்தனவே யினிமே லின்லிற்
றனிக்கணமு முறத்தகுதி யிலையில் விட்டு
விலகுபவ னுக்கோரை நலமே னென்று
மிகவிவித நிச்சயத்தா லறிவுள் ளானு
யிலம்விடுத்துச் செல்பவனுங் கரும காரை
யினிதாற்றத் திரும்புகின்றான் கடிதி னன்றே.

அருளா னெறிபுரை யவரிஞ முறவார்
மறம்புரிந் தும்மடன் மதிக்க நினைப்பன்.

23. அத்தமறு யார்நமக்கு வியாசர் யாவ
ரணியாஞ்ஞ வத்கியர்யா ரவர்பா லர்க்குத்
தந்தைசொலல் போளமக்குப் பலகாற் சொற்றார்
தனிநலங்க ளலகிறயைக் கடலாய் லோக
சொந்தவுற வினராய்ன் னவர்க்காண் கின்றோந்
துகள்கொளைமை வரைவிலிருள் வரையாப் பொல்லா
நிந்தைகளுக் குரியவராத் தெரிந்தோ மின்னு
நிலமதிக்க விரும்பினகம் மடமெக் காழ்த்தே.

இருளும் வெறுந்து மென்னகக் கருவிழுன்.

24. மதிமயங்குந் தாமிசிர நரகத் துள்ள
மருட்குகையி லிருள்சக்ர வாளத் தப்பாற்

றுறையுயிருள் பாசலத்தி லிருள்பூ மீது
தவன்றியகார் கிரலவிரு ளான வெல்லாம்
பதியெனதந் தக்கரணத் தின்மு னல்லாய்ப்
பாவிக்கத் தக்கதன்றாய்ப் பணிசெய் யாளாங்
கதியுறற்குந் தகுதியின்றாய் விளங்கு மென்றன்
கருளொழிக்க வல்லவர்யார் கதியென் றேவே.

விட்டவர் பற்றலேன் விடனே யில்விடில்.

25. காமமிகுத் தவன்மேக விரணம் பெற்ற
காலநசை மின்னாரைக் கைவிட் டப்பா
லாமயமெய் தியதெண்ணி யச்ச மெய்தா
தவர்கூட்டிற் றய்க்கின்ற னிவிதங் காம
வேமநசை யுடையவருஞ் சிலநாட் போக
மிகந்திருப்ப ரீடணைகள் சுகமன் றென்று
தோமறவோர்ந் தொழித்தவரை விருப்ப மீர்க்கிற்
றன்னுகதி யென்னிடபத் தொளிர்மா தேவே.

தீமையி லார்வந் தேற லுலகியல்.

26. நீதியினு லடைநிதியின் மறத்தா லுற்ற
நிதியுயர்வென் விதித்தவனந் தனினி டேடித்
தோதனமென் பயன்மனைவி போகந் தன்னி
னொளிகெடுக்கும் விலைமாத ரின்பென் மாட்சி
சாதமுறை சுருதிநிடே டித்த தான
தாழ்விடய மெலாமிந்த வுலகின் பத்திற்
கேதுவென வமைகின்ற தர்தோ தீய
தினிக்கின்ற தென்குறையீ தினையி லானே.

நாத்திகனும்மலன் நகப்பொருள் புதைப்போன்.

27. ஆத்திகனேற் பயன்சுருதிப் பொருள்க ளெல்லா
மடைந்திரப்ப வர்க்களிக்கத் தக்க தன்றி
நாத்திகனே லுலகசுக நிமித்தம் வவ்வி
யனிச்செலவு செயத்தக்க தங்ங னின்றி
வைத்ததனைப் புதைத்தவருந் தக்காத் தற்கென்
னேதுவென்ன வாராய்ந்து நுணுகியுள்ளிப்
பார்த்துமறிந் திலன்றீய நசையஞ் ஞானப்
* படுவருந்தும் பலன்கொலெழிற் பரம தேவே.

* படு = கள்.



அலாத தழுகேன் றனைவன் மயக்கான்.

28. அறுறய்வா ஞனிக்கோண றன்னைப் பன்றி
யகட்டினதி பருமனைவெங் குரங்கு மேவி
மானுத பல்லிழிப்பைக் கழுதை யாரும்
மனம்வெறுக்கும் கொடுந்தொனியை மனிதன் வீங்கிப்
புறுகத் கடிப்புசனைப் பெட்டை யின்பாற்
பொருந்திடக்கண் டிச்சைகொடு புணரு மந்த
கோணிடு மந்தந்தி னன்றைநு யன்றிக்
குழசெந்தென் றந்தில்லார் குறிப்பர் தேவே.

மதன்பித் தேற்றன் மதித்துய் வேறேனே.

29. சுகந்துய்க்கச் சென்றவனு யகி * துண் டத்தைத்
தனிப்பல்லாற் கடிப்புனெனி லனமார் தற்குப்
புகுந்தொருவன் படைப்பவன்ற னுனிக்கை தன்னைப்
புரிந்து † சுறித் திடிற்குறையென் னிந்த வாறு
சகத்திலுள மூடரைமன் மதனபித் தாக்குந்
தசையிவணம் வெளிப்பட்டு மதனை யெள்ளி
மிகத்துறக்க வெனினுமதை யுன்னி மெய்யாய்
வெட்சமுற வேனும்வலி யுற்றி லேனே.

(இன்னும்வரும்)

விருதை - சிவஞானயோகி.

## குயில்.

மாம ரக்கிளை தம்மின் மகிழ்ந்துவாழ்
கோம ளக்குயி லேயிசை கூவுவாய்
சாமி தந்த தனிக்குரல் காட்டினும்
நீமை யொன்றுள தோவினிச் செப்புவாய். (1)

மன்னி யோங்கும் வசந்தமும் வந்தது
மின்னி யெங்கு மலர்கள் விரிந்தன
வின்னி சைக்குயி லேயினிக் காட்டுவாய்
பொன்ன நாடுடை யார்புகழ் கீதமே. (2)

* துண்டம் = முகம். † சுறித்தல் = கடித்தல்.

மேகம் வானி லதிர்ந்து வெடிக்கவும்
வேக மாயிவண் விட்டு விலகிடுங்
கோகி லப்பெடை யேயிசை கூவுவாய்
மோக மண்ணினும் விண்ணினு மூடவே. (3)

மந்த மாருதம் வந்து தவழ்மலர்க்
கந்தம் வீசுநற் காவினின் மாமரஞ்
சொந்த மாகத் துணையொடும் வாழிசை
யந்த மாங்குயி லன்புடன் பாடுவாய். (4)

வசந்த கால மகிழ்ந்திசை பாடுவாய்
சசந்து மாரி தனிற்குரல் காட்டிலாய்
வசந்தம் வாடி மழைமகிழ் வாய்ந்திடும்
பசந்த தோகை மயிலுன் பகைகொலோ? (5)

மலர்ம ணந்த மரங்கள் கனிர்விட
வலரி ளந்தழை யன்பிற் சதித்திடுங்
குலவு பூங்குயி லேகொடு மாரியி
னிலைகு லைந்தவ னின்றனை சாற்றுவாய். (6)

மாம ரந்தளிர் விட்டு மலர்ந்திடத்
தேமொ ழிக்குயி லேயுனைத் தேடினேன்
பூம ணத்துடன் போதருந் தென்றல்சேர்
காம ரத்திடைக் கண்டு மகிழ்ந்தனென். (7)

வேறு.

துதலை யின்னிசைக் கோகில மேகின திசைபோ
விதழ்கு வித்தொலி செய்தனை யென்பதோர் மயிலின்
சதியைக் கண்ணுற்றுத் தானுந்தன் றோகையை விரித்துக்
குதிகொண் டாடும்வான் கோழியின் செய்கையைக் குறிக்கும். (8)

உன்றன் மாளிகை யுயர்பெரும் பசுமர முனக்குத்
தென்ற லோடுமா காயமே சிறந்ததோர் வழியா
மென்று மாரியில் லாதவோர் காலமே காலம்
நன்று நன்றுவாழ் நானுனைப் போலநான் பெறினே. (9)

ந. பலராம ஐயர்.

---



## சமாசாரக் குறிப்புக்கள்.

விகாரி-சார்வரி வருஷத்திய பஞ்சம்.—பாரதக்கண்டத்தில் பன்னிரண்டு வருஷத்திய பஞ்சமொன்றிருந்ததாகக் கேள்வியுற்றிருக்கிறோம். இது கதையிலுள்ளது. சென்ற தாது வருஷத்தில் வந்தபஞ்சம் தென்னிந்தியாவில் உள்ளோரனைவர்க்குந் தெரிந்த விஷயமே. சென்ற இரண்டு வருஷமாக இருக்கும் பஞ்சமோ அதைப்பார்க்கிலும் அதிகமாகப் பரவியும் மிக்க கொடூரமுள்ளதாயுமிருக்கிறது. இந்தியாவிலிருக்கிற ஜனத்தொகை 29-கோடி. அதில் ஐந்தில் நாலுபங்கு ஜனங்கள் வியவசாயத்தையே நம்பி ஜீவிக்கிறார்கள். வியவசாயத்திற்கோ வருண பகவானுடைய தயவில்லாவிட்டால் ஒன்றும் முடியாது. இப்போது இந்தியாவில் மழைபெய்யும் மாதமோ, இரண்டொன்றுதான். மற்ற மாதங்களிலெல்லாம் வெயில் மிகுதியாகவேயிருக்கிறது. பருவமழை யில்லாவிட்டால் வறட்சியேற்பட்டு செய்தமாகுல்களெல்லாம் தண்ணிலைமையின்றுவதனால் முடிவில் ஆகவேண்டிய உடவாரங்குறைந்துவிடுகிறது. அநேக இடங்களில் மாகாணஞ் சாவியாய்க் குறைந்த பலன் உண்டாகிறது. அடியோடே ஒன்றுமில்லாமலும் போகிறது. கூலிக்கு வேலை செய்பவர்களுக்கும் வேலைக்கிடமில்லாமலிருக்கிறது. இவ்வருஷத்திய பஞ்சமானது 4-லக்ஷத்து இருபதினாயிரம் சதுரமைல் பரப்பிலுள்ள ஜனங்களைப் பிடித்திருக்கிறது. 60-லக்ஷம் ஜனங்கள் பஞ்சத்தில் வருந்துகிறார்கள். இவர்களில் கொஞ்சம் திடமுள்ளவர்கள் ரிலீப்வேலை செய்து பிழைக்கிறார்கள். அந்த வேலை செய்வதற்குஞ் சக்தியில்லாதவர்களுக்குக் கவர்ன்மெண்டாரும் இந்தியாவிலுள்ள பற்பல சுதேச ராஜாக்களும் இன்னும் உதாரகுணமுள்ள கனவான்களும் பணமென்பதைப் பாராது அலமந்தழுதுழுமுயிரைக் காப்பாற்றுவதே தங்கடமையெனக் கொண்டு அன்னவஸ்திர முதலியன கொடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு நாமெல்லோரும் நன்றியுடையவர்களாயிருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார்மட்டும் 15-கோடி ரூபா இதற்கென்று பிரித்து வைத்திருக்கிறார்களாம். இந்தியாவிலுள்ளவர்களன்றியும், இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா இன்னும் பற்பல தேசங்களில் இந்தப் பஞ்சத்தின் கொடுமையைக் கேட்டவர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் இயன்றவளவு கொடுத்துச்சேர்ந்த தொகையை வைசராய் துரையவர்களுக்கு அனுப்பிவித்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் கப்பல் கப்பலாய் அரிசியும் அனுப்புகிறார்கள். இதுவரையில் இதைத்தவிர 124-லக்ஷம் ரூபாய் செலவாயிருக்கிறது. பஞ்சத்தின் கொடுமையோ பார்ப்பதற்கும் கேட்பதற்கும் பயங்கரமாயிருக்கிறது. சர்வஜீவ தயாபரக் கடவுளே இதினின்றும் ஜனங்களைக்காத்துக் கூடியசீக்கிரத்தில் தக்கமழை பெய்யச்செய்து ஸுபிக்ஷம் வருவிக்கும்படி பிரார்த்திக்கின்றோம்.

இடாலியா தேசத்தரசன் அவ்விடத்திலிருக்கும் ஒரு பெண் கல்விச்சாலை வருஷாந்திர வெகுமானக்கொடை கொடுத்துத் தன் அரண்மனைக்குத் திரும்புஞ் சமயத்தில் கொலைபாளி யொருவனால் திடீரென்று கொல்லப்பட்டான். "குடியரசே யெங்குமிருக்க வேண்டும், அரசர்களிருந்து அரசுசெலுத்தவே கூடாது" என்னும் எண்ணமுடைய கூட்டத்தாருடைய தூண்டுதலின்பேரில் இது நடந்ததாகத் தெரியவருகிறது.

***

**சென்னை கவர்னர்:**—இப்போதிருக்கும் கவர்னர் (Sir Arthur Havelock) ஸர் ஆர்த்தர் ஹாவ்லக் துரையவர்கள் இந்த இராஜதானியிலிருக்க வேண்டிய ஐந்து வருஷம் வருகிற மார்ச்சு௴ 18௳யோடே முடிவாகிறது: இவர்க்குப் பிறகு வரவேண்டிய கவர்னரும் நியமித்தாய் விட்டது. அவர் பெயர் லார்ட் ஆம்டில் (Lord Amphthill) இப்போதிருப்பவர் ஜனங்களிடத்தில் அதிகவிசுவாசமும் அன்பும்வைத்து வேண்டியவைகளைத் தேர்ந்து செய்துவருகிறார். ஜனங்களும் இவரிடம் அதிக கௌரவமும் மதிப்பும் வைத்திருக்கிறார்கள். இவருக்குப் பிறகு வருகிறவரும் ஜனங்களுடைய குறைகளை விசாரித்து அவர்களுடைய சௌக்கியத்திற்குரிய ஏற்பாடுகள் செய்வாரென்றெதிர்பார்த்திருக்கின்றோம்.

***

சென்ற சில நாளாக மழை பெய்துகொண்டு வருகிறது. பஞ்சத்தினால் வருந்தி வடக்கேயுள்ள நாடுகளிலும் இம்மழையுண்டெனத் தெரியவருகிறது. மழை வேண்டுமளவு பெய்து ஏரி, குளம், குட்டை, மடுவு, ஆறு இவைகளில் ஜலம் பூர்ணமாய் கொஞ்ச நாளைக்குள் நாடுகளெல்லாம் நன்றாகும். அசுத்தமாகிய பதார்த்தங்களையும் இன்னும் வேண்டாதன யாவையும் பல ஆறுகள் அடித்துக்கொண்டு போய் சமுத்திரத்தில் தள்ளுவதுபோற் இப்பஞ்சத்தினையும் இப்போது பெய்துவரும்மழை கடலிற் கொண்டுய்க்குமென்றெண்ணுகிறோம். கூடிய சீக்கிரத்தில் பஞ்சப் பிராஞ்சியத்திலிருக்கும் வார்ந்திபேதியின் வாயு மடங்கிப்போய்விடும்.

***

சைனா யுத்தத்திற்குப்போன கப்பல்களில் ஒரு கப்பலுக்குரிய செலவை சிந்தியா மகாராஜா தான் கொடுப்பதாய் ஏற்றுக்கொண்டார். அது வைத்திய சாலைக்கப்பல். இதன் பட்டுபடி 20 இலக்ஷம் ரூபாய். இதில் இருக்க உதாரத்துவகுணம் இந்தியாவைப்பீடிக்கும் பஞ்சத்தினால் வருந்தும் ஜனங்களிடத்திலேயே யென்னும் ஏக்கம் எல்லாரிடத்தும் இருக்கிறது. மகாராஜாவினிட மிருக்கும் ஏராளமான பொருளில் இத்தருணத்தில் பஞ்சத்தின் பொருட்டும் இருபது லக்ஷம் ரூபா கொடுப்பதனால் அவர் செல்வத்திற்குக் குறைவு நேரிடா தென்றும் அப்படியே கொடுப்பார் என்பதும் இந்தியர் ஐரோப்பியர் என்னும் இவர்களுடைய கோரிக்கை. இதைச்சீக்கிரம் பூர்த்தி செய்வாரென நம்புகிறோம்.

OFFICE ... OF BOOKS, REGISTERED 12 NOV. 1900 MADRAS

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900௵ அக்டோபர்௴ 20௳ { புத்தகம். 3.

## பாரத ஸாரம்.

### அத்தியாயம். II. (ஆதிபருவம்.)

### (பாரத வீரர்களின் இளமைப்பருவம்.)

(52 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநா
ளேடாக மாமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ"

"அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
யிருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம்"

குருவம்சத்துப் பிள்ளைகள் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் சச்சரவு பண்ணிக்கொண்டு வீணிற் காலங்கழிக்கிறதை அரசன் கண்டு, அவர்களுக்குரிய ஆயுதப்பயிற்சி முதலியன கற்பிக்கும் பொருட்டுக் கிருபாசாரியரிடம் அவர்களை ஒப்பித்தான். அவர்கள் இவரிடம் சிலகாலம் வரையில் ஆயுதப்பயிற்சி செய்துகொண்டு வந்தார்கள். அக்காலத்துக் கிருபரில்லத்துத் துரோணாசாரியர் என்னும் பெயர்பூண்ட பிராமணோத்தமர் ஒருவர் வந்திருந்தார். இவர் கிருபாசாரியருடைய தங்கையாகிய கிருபியின் புருஷர். பரத்வாஜர் என்னும் முனிபுங்கவருடைய புத்திரர். பாஞ்சால தேசாதிபதியாகிய பிருஷதர் என்னுமரசன் புத்திரனாகிய துருபதனுடன்

தாமும் தம் தகப்பனாரிடம் ஒன்றாய் அஸ்திர சஸ்திராப்பியாசஞ் செய்துதேர்ந்தவர். துரோணர் இதற்கு மேலும் பிருகு முனிவர் புத்திரரிடம் இக்கலையைக் கற்றதுமன்றி அவரிடமிருந்து அநேக அஸ்திர சஸ்திரங்களையும் பெற்று அவற்றைப் பிரயோகஞ்செய்யும் முறையையும் நன்றாயறிந்தவர். பிறகுயாதோ ஒரு காரியார்த்தமாய் அப்பொழுது பாஞ்சாலதேசத்திற்கு அரசனாயும் முன்னொருகால் தன் சகபாடியாயு மிருந்த துருபதனைப் பார்க்கும்பொருட்டு அவனரண்மனைக்குட் சென்று தான் தன் ஸ்நேகிதனைப்பார்க்க வந்திருப்பதாக அவனுக்குத் தெரிவிக்கும்படி சொன்னார். இவ்விஷயங்காதிற் பட்டதும் துருபதன் விஷஜெந்துவைப்போற் சீறி, பணச்செருக்கினால், வந்தவனைக் கோபக்குறியாற் சற்றுக் கடுகடுப்புடன் பார்த்து "ஏழைகளுடன் அரசர்கள் ஸ்நேகமுஞ் செய்வார்களோ? ஒருவன்தானரசனா யில்லாவிடில் அரசருடன் எப்படி ஸ்நேகம் செய்யத்தக்க அந்தஸ்துக்குவரக்கூடும்?" என்று துரோணருடன் போய்ச்சொல்லும்படி அவரிடமிருந்து வந்தவனைத் திருப்பியனுப்பி விட்டான். "தொன்மை மறவேல்" என்பதையும் அடியோடே அலக்ஷியஞ் செய்துவிட்டான். ஆலோசியாது சொல்லிய அவ்விஷயம் அவனுக்குப் பின்பு அதிக அநர்த்தமாய் முடிந்தது. துரோணர் ஒன்றும் மேற்சொல்லாமல் திரும்பி அஸ்தினாபுரிக்கு வந்து தன் மைத்துனனாகிய கிருபருடைய வீட்டில் தங்கியிருந்தார். துப்பாக்கி வயிற்றிற் பீரங்கி பிறந்தாற்போன்று அவர்க்குப்புத்திரராய் உதித்த அசுவத்தாமா அப்போது அரசிளங் குமாரர்களுக்கு வில்வித்தை கற்பித்துவரும் கிருபருக்கு அவ்விஷயத்தில் அதிக உதவி புரிந்துகொண்டு வந்தார். *

ஒருநாள் துரியோதனாதியர் பந்துவிளையாடிக் கொண்டிருந்தபோது அப்பந்து தவறி ஒரு பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துவிட்டது. அதை யெடுக்க அவர்களி லொருவராலும் முடியவில்லை. அவர்களுடைய உபாத்தியாயராகிய கிருபராலும் முடியவில்லை. பந்தாடும் பிள்ளைகள் எல்லாப் பக்கமும் பார்த்துப் பார்த்து விழித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விழிக்கும் விழிப்புக்கு பத்துத்திக்கும் போதாவாயின. அத்தருணத்தில் துரோணர் அந்தப்பக்கமாய்ப் போய்க்கொண்டிருந்தார். அவர்கள் அவஸ்தைப் படுகிறதைப்பார்த்து அவர்களை அணுகிச் சங்கதி இன்னதென்று தெரிந்துகொண்டு தன் கையிலுள்ள பவித்திரத்தைக்கையினின்றுங்கழற்றி, பந்து விழுந்திருந்த கிணற்றிலெறிந்து அங்கிருந்த தருப்பைப் புல்லிலிரண்டொன்று அதன்பிறகு எறியவே அது பந்தை வெளியிற் கொண்டுவந்துவிட்டது. பிறகு ஓர் புல் மோதிரத்தையும் வெளியே கொணர்ந்தது. அதைக்கண்ட பிள்ளைகளனைவரும் அதிக ஆச்சரியமும் ஆனந்தமுமடைந்து அவருக்கு யாதேனும் உதவி புரியவேண்டுமென்னு மெண்ணமுடையரானார்கள். பிள்ளைகளை அழைத்து "நீங்களிதைப்போய்ப் பீஷ்மரிடம் சொன்னாற் போதும். வேறொருதவியும் புரியவேண்டாம்" என்றார் துரோணர். பிள்ளைகள் அதிக குதூகலத்துடன் தம் பிதாமகராகிய பீஷ்மரையடைந்து நடந்த சங்கதியைச் சொன்னார்கள். பிள்ளைகளுக்குத் தக்க ஆசிரியரை அடைய இதுவரையும் விசாரித்துக்கொண்டேயிருந்த பீஷ்மர் இந்தச் சங்கதி கேட்டவுடன் இவ்வளவு வல்லவர் துரோணராய்த் தான் இருத்தல் வேண்டுமென்னும் துணிபு கொண்டு கிருபர் இல்லத்திற்கு உடனே அவரை நாடிச் சென்றார். துரோணரும் தன் சரித்திரமெல்லாம் அவர்க்குச் சொல்லி முடித்தார். குருபுத்திரர்களுக்கு ஆசிரியராக வேண்டுமென்று அவரைவேண்டிப் பிள்ளைகளை அதிக ஆனந்தத்துடன் அவரிடம் ஒப்பித்துவிட்டார். *

குருபுத்திரர்கள் தம் குருவை யடைந்ததும் அவர் இவர்களை நோக்கிக் "குழந்தைகாள்! என்மனதிலோரெண்ணமிருந்து என்னை எப்போதும் சஞ்சலப் படுத்திக்கொண்டே யிருக்கின்றது. நீங்கள் என்னிடம் வில்வித்தை முதலியன பயின்று திறமுடைய வில்லாளிகளானதும் என்னெண்ணத்தை உங்களிலெவரேனும் 'முடிக்கவல்லேன்' என்று சொல்லத்துணிவீர்களா? அஃது உங்கள் விற்றிறத்தினாலேயே முடிக்கக்கூடியதுதான்" என்று துரோணர் சொன்னதும் மற்றவர் மவுனஞ்சாதிக்கவும் அர்ச்சுனனொருவனே "உமது எண்ணம் எதுவேயாயினும் அதை முடித்துவிட்டுத்தான் மற்றெக்காரியத்தையும் கவனிப்பேன்" என்றான். அர்ச்சுனன் ஆசானிடம் கல்வி பயின்ற காலமெல்லாம் அவராணையைச் சிரமேற்கொண்டு சிறிதேனுந்தாமதமின்றி நடந்து வருவானாயினன்.

* ஆதிபருவம் [§ 128, 129, 131, 152.]

* ஆதிபருவம். [§ 133.]

இவனுடைய விசுவாசத்திற்கிணங்கத் துரோணரும் இவனிடத்தில் அதிகப்பிரீதியும் அன்பும் ஆர்வமும் வைத்திருந்தார். ஒருநாளிரவில் அர்ச்சுனன் அன்னமருந்திக் கொண்டிருக்கையில் தீபம் திடீரென்று அவிந்துபோய்விட்டது. ஆயினும் சாப்பிடுவதை நிறுத்தவில்லை. இருட்டாயிருந்தும் பழக்கத்தினாற் கையானது அன்னத்தை அள்ளிவாய்க்குக்கொண்டு கொடுத்துமீள்வதைக்கண்டு சாதகமே இதற்குக்காரணமெனத் தெரிந்து

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்."

பழக்கத்தினாற் பற்பலபயனையும் அடையலாமென்றிருக்கவே இரவிலும் தான் வில்வித்தை பயில ஆரம்பித்தான். இவனுடைய விடாமுயற்சியையும் புத்திக் கூர்மையையும் ஆசிரியர் கண்டு மிகவும் வியந்தார்.

எவ்வளவு அற்பமான விஷயமாயிருந்தாலும் அதனையும் அர்ச்சுனனைப்போல் ஒருவன் கவனிப்பானாயின் பயனுடையன இன்னவென்பதையும் தேர்ந்து தெளிதல்கூடும்.

துரோணரிடம் அக்காலத்தில் வில்வித்தை கற்கும்பொருட்டு அவரைத்தேடிவந்தவர்களனேகர். ஏகலைவன் என்பவனும் இவர்களிலொருவன். இவன் நிஷதர்களுடைய அரசனது புத்திரன். நிஷதர் வேடுவச்சாதியாரைப் போன்றவொரு ஜாதியார். இவன் இவரிடம்பரிந்து தானிவர்க்குச் சீடனாக வேண்டுமென்று கேட்டும் துரோணர் "அஸ்திர சஸ்திர அப்பியாசத்தில் மந்திரமும் கலந்திருக்கிறபடியால் அவற்றையுந் தக்கவருணத்திற் பிறந்தார்க்கு மாத்திரந்தான் உபதேசிக்கக்கூடும். உன்னைப்போன்ற இழிகுலத்தினர்க்கு உபதேசித்தல் கூடாதே, ஆகையால் உனக்கு உபதேசஞ்செய்தல் முடியாது" என்றுசொல்லி அவனை அனுப்பிவிட்டார். ஏகலைவன் சிறிதேனும் கோபங்கொள்ளாது அவரது பாததாமரையைத்தொட்டுக் கண்ணிலொற்றிக்கொண்டு வந்தவழியே திரும்பித் தன்னூடு சென்றான். பிறகு இவனோர் சிலம்பக்கூடம் தயார்செய்து துரோணரைப்போன்ற ஓருருவமைத்து அவ்வுரு



வையே தனக்குக் குருவாய்க்கொண்டு குருபுத்திரர் கற்றதற்கு மேலும் தான் கொஞ்சக் காலத்திற்குட் கற்றறிந்துவிட்டான். இதற்கு யாதுகாரணம்? தான் குருவினிடத்துவைத்த பக்தியும்; தானெடுத்துக்கொண்ட காரியத்தை எவ்விதத்தினும் முடித்தலே கடனெனக்கொண்ட தனது ஊக்கமும் விடாமுயற்சியுமல்லவா அதிக சீக்கிரத்திற் பஞ்சவரைக்காட்டினும் இவன் மிஞ்சினவனாய்ப் போகவேண்டிவந்தது? ஊக்கமும் விடாமுயற்சியும் ஒருவனெக்காலத்தும் தான் அணியும் ஆபரணமாகக் கொள்ளவேண்டாமா? குருபுத்திரர்கள் வேட்டையாடக் காட்டுக்குச்செல்கையில் அர்ச்சுனனுடைய சுணங்கன் ஏகலைவனுடைய சிலம்பக்கூடத்துட்சென்று துரோண பிம்பத்தை அசுத்தம்செய்ய ஆரம்பிக்கவே ஏகலைவன் கோபங்கொண்டு வில்லெடுத்துக் கணைதொடுத்துவிட்டான். அஃது அந்த நாய்த்தேகத்தில் நாற்புறத்தும் பாய்ந்து வாய் வழியாய் வந்துவிட்டது. அதைப் பொறுக்கமாட்டாது அந்த நாயானது குலைத்துக்கொண்டே தன் எஜமானனைத்தேடித் திரும்பிச் சென்றது. அவன் 'இதன்பேரில் இவ்வற்புதமான பாணப்பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறதே. இது தனக்கும் எனக்கும் தான் தெரியுமென்று துரோணர் சொன்னாரே. அவரிங்கு நம்முடன் வரவில்லையே. வந்தாலும் இதன் பேரில் அப்பாணத்தை எய்யமாட்டாரே. இதை யிவரிடம் கற்றறிந்தவன் வேறொருவன் இங்கு இருக்கத்தான் வேண்டும்' என்று நிர்மானித்து, சுணங்கன் போனவழியே தானும் செல்ல அஃது ஏகலைவனுடைய சிலம்பக்கூடத்தைச்சேர்ந்தது. அதிலிருந்த ஏகலைவன் வெளியில் வந்துபார்க்க அர்ச்சுனனும் அவனைச் சேர்ந்தவர்களும் வரக்கண்டு எதிர்கொண்டு அழைத்துவந்து தக்க உபசாரம் செய்து வித்தியாப்பியாசத்தைப்பற்றி வினவும்போது சுணங்கன் மீது பாணமெய்ததற்குக்காரணமும் அறிந்துகொண்டான் அருச்சுனன். அவனுக்குக்குரு துரோணரென்பதும் அவன் சொல்லக்கேட்டு அவனிடம் செலவு பெற்றுக்கொண்டு எல்லாரும் அரண்மனைக்குத் திரும்பிச்சென்றார்கள். அன்றுமுதல் அர்ச்சுனன் சற்று ஏக்கமுற்றிருக்கிறதைத் துரோணர் அவன்றன் முகக்குறியாலறிந்து அவனையழைத்து அதற்கு யாதுகாரணமென வினவ, அவன் "தாங்கள் எனக்குமாத்திரம் தான் கற்பித்தேனென்ற ஒரு விசேஷ பா

ணப்பிரயோகம் ஒரு வேடன் தங்களிடம் கற்று அதைப்பிரயோகித்து எனது சுணங்கனைக்கொன்றான்" என்றனன். அதற்கவர் "அந்தச் சிஷனை எனக்குக் காட்டுவாயாக, யான் கற்றுக்கொடுக்கவேயில்லை" என்று உறுதியாய்ச்சொல்லலும் அவனையிட்டுக்கொண்டு ஏகலைவனுடைய சிலம்பக்கூடம் சென்றான். துரோணர் வருகிறாரென்பதை உணர்ந்து எதிர்கொண்டுசென்று வேண்டிய உபசரணை செய்து அவரை யோராசனத்திருத்தித் தான் கைகட்டி வாய்புதைத்து அவர் முன் நின்றான். அவர் அவனை நோக்கி "நீ இப்பாணப்பிரயோகத்தை எப்படிக்கற்றாய்" யென்றார். அவன் எதிரிலிருந்த பிம்பத்தைச் சுட்டிக்காட்டித் "தங்களுருவாய இச்சிலையினின்றும் கற்றேன்" என்று சொல்லவும், இவன் குருவினிடம் வைத்திருக்கும் விசுவாசத்தையும் பக்தியையும் கண்டு ஆச்சரியமடைந்து அர்ச்சுனனுக்கும் அதைக்காண்பித்து நின்றார். அர்ச்சுனனும் வியந்து வெட்கித் தலைகுனிந்தான். பக்தியிற்சிறந்த சீடனாகிய ஏகலைவன் குருவைப்பார்த்துத் "தங்கள் தயவினால் இவ்வளவு விருத்தியடைந்தேன். குருதக்ஷிணை கொடுக்க விரும்புகிறேன். என்னாலியன்றது எதுவாயினும் தங்கள் விருப்பத்திற்கிணையக் கொடுக்கிறேன்" என்றான். அவர் "மற்றொன்றும் வேண்டாம், உன் வலது கைப்பெருவிரலைக் காணிக்கையாய்த்தா" என்றார். சற்றேனும் வருத்தமென்பதின்றி அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு அதைத்தறித்துக்குருவிற்குமுன்பாக வைத்தான். குரு இவனுடைய பக்திவிசேஷத்திற்கு மிகவும் வியந்து "இனி ஏகவல்லியனென்பது உன் பெயராகட்டும்; உன்னுடைய பக்திக்கும், ஊக்கத்திற்கும், விடாமுயற்சிக்கும் யாம் மிகவியந்தனம்" என்றுசொல்லி விடைபெற்று அர்ச்சுனனும் துரோணரும் திரும்பி அரண்மனை அடைந்தார்கள்.

இவ்விதமாக வலக்கைப்பெருவிரலிழந்தான் ஏகலைவன். வலக்கைப் பெருவிரலில்லாவிடில் ஒருவன் வில்லாளியாயிருந்து யாது பிரயோசனம்? பார்ப்பவர்களுக்கு துரோணர் செய்தகாரியம் மிக்க குரூரமாகத் தோன்றுதா? ஆம்; தோன்றும். ஆயினும் அவர்செய்தது நியாயந்தான். எப்படி? ஒருவன் தன் முற்பிறப்பில்தனக்கிருந்த நல்லெண்ணம் நற்செய்கை இவற்றிற்குத்தக்கவாறு இந்த ஜன்மத்தில் தக்க இடத்தில் தக்ககுண ரூப லாவண்யத்தோடும் பிறக்கிறான். தீயெண்ணம் தீச்செயலுடையவனும் அதற்குத்தக்கபடி பிறக்கிறான். ஒருவன் தேகமும் அவன் பிறந்திருக்கும் வர்ணாச்சிரமமும் தன் பூர்வ கர்மத்திற்குத்தக்கபடிதாம் இருக்கும். இவன் இச்சாதியிற் பிறந்து தனக் குரியனவலாதனவற்றை அடையவிரும்புதல் கூடாதாகலின் தனக்கிக்கதி வரும்படி ஆயிற்று. அப்பலனை அடைவிப்பதற்குத் துரோணர் ஒருகாரணமாக இருந்தார். இஃது இவனுடைய கர்மபலன். இவன் தன் கர்மசேஷம் க்ஷயித்துப்போகிற வரையிற் பொறுத்திருந்தால் எல்லா நன்மையுந் தாமேவந்து இவனைச்சேரும். இவனுக்கு இவ்விஷயத்திற் பொறுமையில்லை. தன்வர்ணத்திற்குத் தகாதென் றேற்பட்டிருந்தனவற்றை யடையத் தன் கையைக்கொண்டு தான் அடைய முயற்சிசெய்தமையால் தன் கைபோகும்படிநேரிட்டது. ஆயினும் அவனுடைய குருவிசுவாசமும், பொறுமையும், ஊக்கமும், விடாமுயற்சியும், வேண்டியவேலை செய்துகொண்டிருந்தன. இவையெல்லாம் இனி இப்பிறப்பினும் பலனடையலாம் என்பதைத்தெற்றென விளக்கின. மறுஜன்மத்திலடையும் பலனுக்கோ ஓரளவில்லை.



ஒருநாள் துரோணர் தம்மாணவர்களைப் பரீக்ஷிக்க எண்ணங்கொண்டு ஒருபக்ஷி பிம்பத்தை "ஒரு மரக்கிளையில்வைத்துத் தம் மாணவர்களை அழைத்து அதனை ஓம்பெய்து கொல்லுங்கள், பார்ப்போ'மென்றார். முதலில் தர்மர் தம்கையில் வில்லுமம்பும் எடுத்து நின்றார். துரோணர் அவருக்கு அப்பக்ஷியைக்காட்டி "அப்பா தர்மா! உன் கண்ணுக்குப்புலப்படுகிறது எது? பக்ஷியா? மரமா, நானா? அல்லது உன் சகோதரர்களா?" என்றார். அதற்கவர் "எல்லாரும் என்கண்ணுக்குப் புலப்படுகிறார்கள்" என்றார். "அப்பா தர்மா, ஒதுங்கிநில், குறியையுன்னால் அடிக்க முடியாது" என்றார் துரோணர். அர்ச்சுனன்தவிர மற்றச்சகோதரர்களும் தர்மரைப்போன்று ஒதுக்கிவிடப்பட்டார்கள். அதற்குப்பிறகு அர்ச்சுனன் வில்லும் கையுமாக வந்தெதிர் நின்றான். அவனையும் மற்றவர்களைக்கேட்ட கேள்வியை மறுபடியுங்கேட்டார். இவன் "பக்ஷி மாத்திரம் என் கண்ணுக்குப் புலப்படுகிறதே யன்றி, மரமும் தெரியவில்லை, தாங்களும் தெரியவில்லை" என்றான். "உனக்குப் பக்ஷிமாத்திரம் தெரியும் பக்ஷத்தில் அஃது எப்படியிருக்கிறது எனக்குக்கொஞ்சம் விளங்கச்சொல்" என்றார் துரோணர். விஷயங்களை எப்போதும் உற்று நோக்கும்

அர்ச்சுனன் "பக்ஷியின் சிரசு மாத்திரம் தெரிகிறதேயன்றி அதனுடைய மற்ற அவயவங்களுள் யாதேனும் தெரியவில்லையே" யென்றான். துரோணர் அர்ச்சுனனுடைய திறமையைக்கண்டு வியந்து அதிக ஆனந்தமடைந்து "அப்பா அர்ச்சுனா, எடுவில்லை. விடு கணையை" என்றார்.

இதில் அர்ச்சுனன் காட்டிய திறமை என்ன? உற்றுநோக்குந் திறமை. *அஃது ஒவ்வொருவர்க்கு மிருக்கவேண்டியது அதிக ஆவசியகமானது. ஒன்றை இலக்குவைத்துப் பார்க்கும்போது மற்று ஐந்தாறு விஷயங்கள் அதே காலத்தில் நமது கண்ணுக்குப்புலப்படுமானால் நாம் வைத்த குறியை எப்படி அடித்தல்கூடும். எதை முதலிற் கவனிக்க ஆரம்பிக்கிறோமோ அது முடியும் வரையில் நமது கவனம் வேறோரிடத்திலும் செல்லக்கூடாது. சென்றால் முதலுக்கே மோசந்தான். இது விஷயத்தில் தர்மர் முதலியவரைப்போன்றிராது அர்ச்சுனனைப் போன்றிருத்தல் வேண்டும். இதனை இளஞ்சிறாரேயன்றி வயதின் முதிர்ந்தோரும் அதிகமாய்க் கவனித்து நாடோறும் நடக்கவேண்டுவது அவசியமல்லவா?

அர்ச்சுனன் முதலியவர்களுடைய ஆயுதப்பயிற்சி முதலியன முடிவு பெற்றதும் இவற்றை அரங்கேற்ற ஓர்நாள் ஏற்படுத்தினார்கள். அன்றைத்தினம் அந்நகரத்தாரும் அதைச்சூழ்ந்த நகரிலுள்ளவர்களும் அரண்மனையிலுள்ளார் அனைவரும் ஒருங்கே அரங்கேற்றுமிடத்தில் வந்துகூடினார்கள். அதற்குத்தக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. குரு புத்திரர்கள் ஒவ்வொருவரும் தந்தம் திறத்தைக்காட்டினார்கள். அர்ச்சுனன் எல்லாரினும் மிக்க திறமையுடையவனாய்த் தோன்றினான். எல்லாப்பக்கங்களிலும் ஓடும்படி சூத்திரமமைத்த ஓரிருப்புப்பன்றி ஒன்றன்மீது ஓரம்பெய்துவாட்டி வீழ்த்தியது அவ்விடத்திற் காட்டியஅநேக விநோதக் காட்சிகளிலொன்று. ஏககாலத்தில் தன் வில்லினின்றும் அர்ச்சுனன் ஐந்து அம்பு அப்பன்றியின்மீது எய்தான். அவையனைத்தும் ஒரேகாலத்து அதன் வாயினுழைந்துஐந்துவழியாய் வெளித்தோன்றின. இவையெல்லாம் முடிவேறுந்தருணத்தில் அக்குழாத்தில் ஒரு பெரியசத்தம் கேட்டு எல்லாரும் திடுக்கிட்டு நாற்புறமும் பார்த்தார்கள். அப்போது ஜனங்களை நீக்கிக்கொண்டுவந்து

* Close attention, Concentration.



தோன்றினான் ஒருசிறுவன். ஆயினும் வீரத்திற்பெரியவன். கர்ணன் என்னும் பெயரினான். அவனும் துரோணருடைய மாணாக்கர்களிலொருவன். அர்ச்சுனனுடைய திறமையைப்பார்த்துத் திராப் பொறாமையுடையவன். அர்ச்சுனன் காண்பித்த எல்லாவிநோத வேடிக்கைகளைத் தானும் ஒன்றுவிடாமற் காண்பித்து அரங்கிலுள்ளோர் அனைவரும்ஆநந்தமடையுமாறு செய்தனன். பிறகு உடனே அர்ச்சுனனுடன் குஸ்திக்கு நின்றான் கன்னன். அப்போது வழக்கப்பிரகாரம் இருவரிலொருவனாகிய அர்ச்சுனன் பேரும்குலமும் எடுத்துரைத்தார் கிருபாசாரியர். மற்றவனுடைய குலமும் கோத்திரமும் விசாரித்தார்கள். கர்ணன் தன் தாய்தந்தையர் இன்னாரெனத் தெரியாததனால் மயங்கினான். வெட்கத்தினால் தேகம் வெளுத்தான். இதை மற்றவர்கள் அறியாததற்குமுன் துரியோதனன் சரேலென அவ்விடம் வந்து "அர்ச்சுனனுடன் அரசனாயிருப்பவன்தான் குஸ்திக்கு வரலாமென நீங்களெல்லோரும் யோசிக்கும்பக்ஷத்தில் கர்ணனையும் அரசனாக்கிவிடுகிறேன்" என்று சொல்லி உடனே அவனை அங்கதேசத்திற்கு அரசனாக்கினான். அவனும் இந்நன்றி யறிகுறியாய் "நம்முடைய நண்பு நமன் ஒருவன்தவிர மற்றெவராலும் மற்றெதனாலும் பிரிக்க முடியாதொழிக" என்றுகூறிச்சபதம் செய்துகொண்டான். அப்போது தேர்ப்பாகன் ஒருவன், வயதின் முதியோன், அவன் தட்டித்தடுமாறி வந்து தானெடுத்து வளர்த்த பிள்ளையின் திறத்தைக்கண்டு தான் தான் தகப்பனென எல்லாருக்கும் முன்வந்து நின்றான். கன்னனும் அவன் தாள்பணிந்து அர்ச்சுனனுக்கு முன்வந்து நின்றான். அப்போது, வீமன் கோபத்துடன் கொதித்தெழுந்து கன்னனைத்தேர்ப்பாகன் பிள்ளையென விகழ்ந்து அவன் அர்ச்சுனனுடன் குஸ்திக்கு நிற்றல் தகாதென்றுரைத்த மாத்திரத்தில் துரியோதனன் தன் துணைவன் கர்ணன் பேரைக்காக்கும் பொருட்டுத் திடீரென்று குதித்தெழுந்து "கர்ணனை அரசனாக்கியும் இப்படி இகழ்வது அதர்மல்லவா?" என்று அங்குநின்றவர்களை உரத்த தொனியுடன் வினவ ஆரம்பிக்கும்போது கதிரவனும் மேற்குச்சமுத்திரத்து மூழ்கினான். வந்தவர்களும் வந்த வழியே பிரிந்தேகினார்கள். வில்வித்தையில் அர்ச்சுனனைப்பார்க்கிலும் கர்ணன் சிறந்தவனோ? அல்

லது அருச்சுனன்தான் சிறந்தவனோ? என்னு ஐயம் அப்போதுந் தீரவில்லை. இன்றளவும் அதே நிலைமையிற்றானிருக்கிறது.

கல்குளம் - குப்புசாமி முதலியார்.

---

## கமலினி.

### அத்தியாயம்.—XXII.

*"மீளருந் தருமந் தன்னை வெல்லுமோ பாவஞ் சொல்வாய்"*

வீரமார்த்தாண்டன் அரண்மனையைவிட்டுச் சென்று சிலகாலமானதும் சுந்தரன் விசயையினை இரகசியமாய்ப் பலாத்காரமாய் இராக்கத மணம்புணர இதுவே நல்லசமயமென்றெண்ணி ஒரு தந்திரஞ் செய்தனன்.

அரசன் குணவதியின் மோகவலையிற்சிக்கி இராசாங்க விஷயங்களையும் சரிவர நடத்தாமல் வீணே காலத்தைக் கழித்தனன். தன் பெண் யுவதித்தன்மை யுற்றதனால் மணஞ்செய்விக்க வேண்டுமென்னும் எண்ணமே அவனிடத்து உற்பவிக்கவில்லை. அவன் கொடுமதி சீக்கிரத்திற் றீமையை விளைக்குமென்று விசயை உண்மையாக எதிர்பார்த்தனள், 'பெண்கள் காமம்பிடித்தவர் உய்வரோ' என்ற மெய்ம்மொழியை முழுதும் நம்பினளாகலின்.

ஒருநாள் விசயை தன் தந்தையின் தீக்குணத்தைப் பற்றி எண்ணி மனம் வருந்தும்பொழுது இன்னலே உருக்கொண்டு வருபவள் போன்று சுந்தரி யென்னுமொரு கிழக்கூனி வந்தனள். விசயை மிகவும் மரியாதையுடன் ஓராசனத் திட்காருமாறு சொல்லித் தன்னிடம்வந்த காரியத்தை வினவினாள். அதற்குச் சுந்தரி,

"உன்னைப்பார்த்தால் மிகவும் ஆயாசமடைந்தவள்போல் தோற்றுகின்றாய்" என்றாள்.

"அப்படி மனவருத்த மொன்றுமில்லை. ஏதோ என் தங்கையைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன், அவ்வளவுதான். வேறொன்றுமில்லை." என்றாள் விசயை.

"உன் பெயர் என்ன?"



"என்னை இன்னளென்று அறியாயோ? ஏதோ முக்கியமான காரியமாக என்னிடம் வந்ததாகவன்றோ இதுகாறும் நினைத்திருந்தேன்."

"ஆம். உண்மையே. இவ்வரண்மனையில் ஒருத்தியுடன் இரகசியமான வார்த்தைகள் பேசவேண்டுமென்றே வந்தேன். அவையெல்லாம் போகட்டும். உன் பெயர் என்னை?"

"என்னை விசயை என்பார்கள்."

"விசயையா! நான் கேள்விப்பட்ட பெயரே. மறக்கவில்லை. அரசனுக்கு என்ன உறவு?"

"அரசன் மகள்தான் யான்."

"ஏதோ தங்கை என்று சொன்னாயே. அவள் யாவள்?"

"அவள் இவ்விடமில்லை."

"நான் ஏதோ கேள்விகள் கேட்கின்றேனென்று மனத்தளர்ச்சி யடையவேண்டாம். அவள் பெயரை மாத்திரம் சொல்."

"அவள் பெயர் கமலினி."

"மதிமுகனென்றவனுடன் ஓடிப்போனவளோ?"

"அஃது என்னவோ எனக்குத்தெரியாது."

"உனக்கு உண்மையாகத் தெரியாதா? ஆயின் சரிதான்." என்று சிறிது யோசிப்பவள்போலச் சுந்தரி பாசாங்கு செய்தனள்.

"என்னிடம் ஏதேனும் காரிய மிருக்கின்றதோ?"

"உன்பெயர் விசயவல்லி யம்மையாயின் இரகசியமான விஷயங்கள் பேசவேண்டி யிருக்கின்றன."

"ஆனால் தடையின்றிச் சொல்லலாம். இஃது அந்தரங்கமான இடமே. யாரும் இவ்விடம் இப்பொழுது வரமாட்டார்கள்."

"உன் தங்கை—சமலினி—நாலைந்து நாழிகைவழித்தூரத்திற் கப்பல்தங்கியிருக்கின்றாள்.—என்ன? ஆச்சரியப்பட வேண்டாம். நான் சொல்வது மிகவும் உண்மையே. அவள் உன்னைப்பார்க்க மிகவும் விரும்புகின்றாள்."

"இன்னும் ஏதேனும் முக்கியமானவிஷயம் சொன்னாளோ?"

"உண்மையைச் சொல்லட்டுமா? நான் அவளுக்கு உயிர்த்தோழி. என் புத்திரிபோல் அவளை நினைக்கின்றேன். என்னவோ

அவள் தகப்பன் போர் செய்வதற்குப் படையெடுத்து வருமுன் அவள் உன்னைக்கண்டு சில விஷயங்கள் சொல்லவேண்டுமாம்."

"அவளுடன் இன்னும் யாராவது தங்கி இருக்கின்றார்களா?"

"அவளுடன் கனகமாலை, மதிமுகன் ஆகிய இவ்விருவரும் வந்திருக்கின்றார்கள். மதிமுகன் ஒரு க்ஷணமும் அவளை விட்டுப்பிரிகிறதில்லை. ஏதேனுந் தீங்கு சம்பவிக்குமென்று பயப்படுகின்றான்போலும்."

"என்னை அழைத்துச் செல்வாயோ?"

"உனக்கு அவள்மீது பிரியமிருக்குமாயின் உடனே வரவேண்டும். அழைத்துச்செல்கின்றேன். மிகவும் இரகசியமாக வரவேண்டும். அரண்மனையில் யாருக்கும் நீ கமலினியிடம் செல்வதாகத் தெரியலாகாது."

"இது மாலைப்பொழுதாகலின் யாதொரு கஷ்டமும் நேரிடாது. யான் புறப்பட்டு விட்டேன். வா போகலாம்" என்று எழுந்து நின்றாள்.

சுந்தரியும் எழுந்து அவளை அரண்மனையினின்றும் அனேகஞ் சிறு சந்துகள் தோறும் அழைத்துக்கொண்டு போனாள். இருளாகலாற் போம்வழியும் நம்விசயையாலறிய முடியவில்லை. சிறிது தூரத்திற்கப்பால் இரண்டு குதிரைகள் கட்டிய வண்டியொன்று நின்றுகொண்டிருந்தது. அவ்வண்டியினுட்புறத்தில் இரண்டு பேர் கரிய உடுப்புத் தரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். சுந்தரி அவ்வண்டியினருகுபோய் "அம்மா விசயே! இந்த வண்டியில் ஏறிக்கொள். உனக்கு நடந்தால் இளைப்பாயிருக்கும். சீக்கிரம் கமலினியிடம் போகலாம்" என்றனள். விசயை அப்படியே ஏறிக்கொண்டாள். காற்றினும் கடுகிக் குதிரைகள் பறந்தன.

தன் எதிரில் இரண்டு மனிதர் உட்கார்ந்திருப்பதையும், குதிரைகள் மிகவும் வேகமாய்ப் போவதையும் நினைத்துச் சிறிது விசயை சந்தேகமுற்றனள். பிறகு இம்மாதிரி இரகசியமாய் அழைத்துவரும்படி கமலினி ஏற்பாடு செய்திருந்தாலுமிருப்பாள் என்று தெளிந்தனள். வெகுநேரமாயும் குறித்த இடம் அடையாமையாற் சந்தேகமடைந்து எதிரில் உட்கார்ந்திருப்பவரைக் கேட்டனள். அதற்கு அவர்கள் இன்னும் காதவழிதாரமிருக்கின்றதென்று



சொன்னார்கள். உடனே வண்டி குதிரைகள் இளைப்பாறுமாறு தங்கிற்று. இருவரும் விசயையினை வண்டியினின்றும் வெளியே செல்லவிடவில்லை. பொழுது புலருஞ் சமயத்து ஒரு சிறு குடிசையிற் றங்கினார்கள். அக்குடிசையை யடைந்ததும் விசயை 'கமலினி எங்கே?' என்றனள். சுந்தரனும் அவன் சேவகனுமாகிய இருவரும் 'இன்னும் அரைக்காவத தூரத்திற்றான் கமலினி இருக்கின்றாள். பகற்பொழுதில் அவளைச் சந்தித்தல் முடியாது. அவள் இருப்பிடம் யாவரும் அறியலாகாது. ஆகையால் இன்று மாலை போகலாம்' என்றனர். விசயை இவர்கள் வார்த்தையை நம்பவில்லை. ஆயினும் என் செய்வாள்? சுந்தரனை இன்னனென்று அவள் தெரிந்து கொள்ளவில்லை, அவன் மாறுவேடந் தரித்திருந்தனனாகலின். பிறகு விசயை "நீங்கள் என்னை இம்மாதிரி அதிக இரகசியமாய் இவ்வளவு தூரம் அழைத்துவருவதைப்பார்த்தால் எனக்குச் சந்தேகமுண்டாகின்றது. என்னை யாது காரணத்திற்காக அழைத்து வந்தீர்கள்? கொலை செய்வதற்கா? அதற்காயின் இவ்வளவு பிரயாசை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டியதேயில்லையே. உண்மையைச் சொல்லுங்கள்" என்று பயத்துடனும் அதிகாரத் தொனியோடுங் கேட்டனள்.

"உன்னை அழைத்து வந்ததன் உண்மையைக் கூறினதனாற் றானென்ன? இனி எங்கள் கையிற் சிக்கிவிட்டாய். முதலில் என்னை இன்னனென்று உனக்குத்தெரியுமா? சிறிது ஆலோசித்துச்சொல். பார்க்கலாம்" என்று சுந்தரன் சொன்னான். விசயை கோடையிடியிடிப்பக்கேட்டுப் பயப்படும் நாகங்களைப்போலவும், புலியைக் கண்டு நடுங்கும் ஆட்டுக்குட்டியைப்போலவும் பயந்து,

"உன் பெயர் சுந்தரனன்றோ? அடே! கொடிய! என்னை ஏன் இப்படி வருத்துகின்றாய்? உனக்கு யாதொரு தீங்குஞ்செய்யாத என்னை இவ்விதத் துன்பத்திற் காளாக்குவித்தல் நேரிதோ?" என்றாள்.

"உன்னுடைய அழகின் ஒளிக்கதிர்களாகிய அம்புகள் என் மார்பைப் பிளந்துகொண்டிருக்க யாதொருதீங்கும் செய்யவில்லை என்று என்ன பாசாங்குசெய்கின்றாய்! இன்னும் மூன்று தினங்கள் இரவும் பகலும் இடைவிடாமற் பிரயாணமாகப்போக ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். யான் குறித்த இடத்தையடைந்ததும் உன்னை

அழைத்துச்செல்வதன் காரணத்தைச் சொல்கிறேன். இனி அடிக்கடி எங்களை வினவுவதிற் பிரயோசனமேயில்லை" என்று சுந்தரன் சொன்னான்.

"பாக்குவெட்டியிடை யகப்பட்டுக்கொண்ட பாக்கு வெட்டுண்ணாமற்போமா? எப்பொழுது நீயர்களாகிய உங்கள் வலையிற் சிக்கிக்கொண்டேனோ அப்பொழுதே யான் துன்பத்திற்காளாயினேன். நீங்கள் என்னதான் செய்கிறீர்களோ கடைசிவரையிற் பார்க்கின்றேன். பிறகு இறைவனிருக்கின்றான்" என்று விசயை பெருமூச்செறிந்து கூறினாள்.

* * * * * *

விசயை வரும் வண்டியானது பாண்டியநாட்டின் தலைநகராகிய மதுரை யடைந்தது. மதுரையில் ஒரு சாதாரணமான வீதியிற் சீநிவாசன் என்பவன் வசிக்குங்கிருகத்தை யிவர்கள் அடைந்தார்கள். விசயை இருக்க ஒரு தனி அறை விடுத்தனரேனும் மிகவும் சாக்கிரதையாய்ச் சுந்தரன் பாதுகாத்து வந்தான்.

சீநிவாசனுக்கு விசயையினைக் கண்டதுமுதற் சுந்தரனிடத்து ஒருவிதப்பகைமை யுண்டாயிற்று. அதற்குக்காரண மின்னதென்று அவனுக்கே தெரியவில்லை.

இருபத்திரண்டாமத்தியாயம் முற்றிற்று.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

## ருக்மணி சரித்திரம்.

---

சுப்பையர், பொழுது விடிகிறதற்கு இரண்டு நாழிகைக்குமுன், ஐயம்பேட்டை வந்துசேர்ந்தார். அவர் மாப்பிள்ளை, ராயம்பேட்டையில் இருந்தார். வீட்டுக்குப்போவதற்கு வழி, சரியாய்த் தெரியவில்லை. ஆகையால் அவரும் அவர் அம்மாஞ்சியும், ரெயில்வே ஸ்டேஷனுக்கடுத்த ஒரு சாவடியிலுட்கார்ந்துகொண்டு, பொழுது விடிகிறதற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"அம்மாஞ்சி, சகுனமாயும் பிரயோஜனமில்லாதெ போச்சே" என்றார் சுப்பையர்.

"ஆமாம் அத்தான், நாம் பொறப்படச்சே வந்தாளே, அவசொமங்கலிதானோ?"



"ஆமான்டா ஆமாம்"

"எனக்கு சந்தேகமாத்தான் ருக்கு, அத்தான்"

"இல்லவே இல்லை. அவ, எறங்கச்சே அவமேலாக்கு நகந்துது, பளபளந்து தாலியிருந்தது, அதெத்தான், நான் பார்த்தேன்."

"வெறுஞ்சாட்டைப் பார்த்துச்சொல்ரேபோல் ருக்கு என்டா அத்தான். இப்பொ கம்மனாட்டிக மயிர் வாங்கறதில்லை தெரியுமோனோ?"

"அப்படியா?"

"பின்னெ, இல்லாதபோனா எதுக்குடா வாங்கறது? அதுலெ என்னலாபஞ் சொல்லு"

"பெரியவா வழக்கத்தை மாத்தறதா? என்ன அநியாயம்! உனக்குநிச்சயமாத் தெரியுமா?"

"தெரியுமடா தெரியும். மயிர்வாங்கிப்டாயாத்ரம் வழியாருக்காளாக்கும். என்னெக்கேட்டா வாங்காதவாதான் வழியாருக்கா"

"சாஸ்த்ர விருத்தமாச்சேடா"

"சாஸ்த்ரத்லே, ஆம்டயானோடே பொண்டாட்டியெ செத்து போகச்சொல்லிருக்கே. இப்பொ ஆர் செத்துப்போறா? மயிரெச் சரெச்சுப்டறதும் உடம்பு மழமழன்னு, காலையாட்டமா ஆய்ட்றாள். எப்போதும் போலதான் ருக்கட்டமே. வழியாயிருக்றவா எப்போதும் வழியாயிருப்பா"

"நீ யென்னமோ சொல்றயே, நான் பாத்தேனேடா, தாலியே"

"ஒருவேளை தாலியும் வாங்காதேர்க்காளோ என்னவோ"

"அது போறது சனி, விடு. ஸஹஸ்ர நாமத்தெச் சொல்லுவம்வா"

ஸஹஸ்ர நாமஞ் சொல்லி முடிந்ததும், பொழுதும் விடிந்தது. அவ்விருவரும், அண்டையிலிருந்த குளத்தில் முகங்கழுவிவிட்டு, விபூதியிட்டுக்கொண்டு சந்தியாவந்தனஞ் செய்துகொண் டிருந்தார்கள். இப்படியிருக்கையில், அரைக்கால் மைல் தூரத்தில் இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருவன், அழுக்குப்படிந்த வஸ்திரம் உடுத்திக்கொண்டு, மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். மற்றொருவன் சட்டைபோட்டுக்கொண்டு அண்டையில் நின்று பேசினான்.

"வஞ்சாமி பிடிச்சிட்ரதா"

"இல்லேடா, தஞ்சாவூர் இலாகாடா இது"

"பிடிக்கப்படாதா?"

"நீபோய், பாபனாசங் கொளத்தங்கரேலெரு நான் வந்துட்டேன் போசட்னு"

உடனே, அவன் போய்விட்டான். அவன் யார் என்றால், கும்பகோணம், சப்கோர்ட் சேவகன். மற்றொருவன், சுப்பையருக்குக் கடன்கொடுத்-

திருப்பவன். அநேகந்தடவை சுப்பையரைப் பணங்கேட்டும், அவர் கொடுக்காதிருந்ததனால், அவர்மேற் பிராது செய்தான். அவன்பக்ஷத்தில், செலவு தொகையுடன் முதலைச் சுப்பையர் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பும் ஆய்விட்டது. மறுபடியும் போய் ஐப்திக்குப்போனபோது, அவரது சொத்தை அப்புறப்படுத்த முடியவில்லை. ஆகையால், அவரைப்பிடித்து, நியாயாதிபதிமுன் கொண்டுவந்து விடும்படி உத்தரவாய்விட்டது. அதற்காக ஒரு சேவகனை அழைத்துக்கொண்டு, சுப்பையர் தஞ்சாவூரிலிருப்பதை அறிந்து புறப்பட்டான். தஞ்சாவூருக்கு வந்திறங்கினவுடன், அவர் திரும்பி வருவதைக்கண்டு, கூடவுந்திரும்பினான். அவர் ஐயம்பேட்டையி லிறங்கினவுடன் தானுமிறங்கினான். விடியுமட்டும் ரெயில்வே ஸ்டேஷனில் இருந்துவிட்டு, இப்போது சுப்பையரிருக்கும் குளத்தண்டை போனான். வழியில் ஒரு குதிரைவண்டிக்காரனைக் கண்டு, "அடே, வண்டியிலே, நாங்கள் மூனுபேரும் ஏறுவம். ராத்ரி சொன்னபடி ரொம்ப வேகமாய்ப் பாபநாசத்துக்கு அடிச்சுக்குண்டு போய்டணம். நீ கேட்டதைக் குடுக்றேன், அதோ, ரெண்டு பேர்ருக்காளே அவா எது சொன்னாலுந் தலைபாட்டு. சரிதானா?" என்றான்.

"சரி சாமி" என்று சொல்லி வண்டியெ மறைவில் ஓட்டிக்கொண்டு போனான்.

கடன் கொடுத்திருப்பது, இராமசாமி செட்டி-செட்டி குளத்தண்டை போய்ச்சேர்ந்தான். சுப்பையர் உடனே "செட்டியார்வாள் எப்போ?" என்றார்.

"சாமி தண்டம் இப்பதான்"

"எங்க போறகள்?"

"ராயம்பேட்டக்கித்தான்"

"நானும் அங்கதான்போறேன்; என்னகாரியம்?"

"அங்கெ, கிஷ்ணமாசாரி பணங்குடுக்கணுஞ் சாமி"

"அப்டியா, எவ்வளவு?"

"இரண்டாய்ரரூபா. ரண்டு வருஷ மாச்சு"

"போவமா?"

"போவம் ஏவண்டிக்காரா இங்கவாடா"

"வண்டி யென்னத்துக்கு?"

அம்மாஞ்சி கிருஷ்ணையருக்கு ஶ்ரமமாயிருந்தபடியால், "வாரா இருக்கட்டமே" என்று மெல்லச் சொன்னார்.

"ஆனா சரி" என்றார் சுப்பையர். ஆனாற் சிறிது மனவருத்தத்துடன்தான். மேலும், "என்னடா கேக்கரே மூனுபேருக்கு, ராயம்பேட்டக்கி"

"குடுத்ததெ, குடுங்கசாமி."

"சொல்லுடா."



"அரை ரூபா குடுங்க"

"ஆளுக்கு ஓரணா, இஷ்டமா"

"ரெண்டணா வச்சுக்குங்க"

"ஒன்னரையணா இஷ்டமாயில்லையா"

"சரி ஏறுங்க"

"ஒக்காருங்க செட்டியாரே"

எல்லாரும், வண்டியி லுட்கார்ந்தவுடன் வண்டியை வெகு வேகமாய் விட்டுவிட்டான். சுப்பையருக்கு, அது ராயம்பேட்டைக்குவழி இல்லையென்று தெரியும். ஆனாலும், சிறிதுநேரம் பார்த்துவிட்டு, "என்ன செட்டியாரே இப்படி விட்ரான்" என்றார்.

"என்னடா அது?" என்றார் செட்டியார்.

"அங்கெ சாமி, ஒரு ஆனமா வரக்கா இருக்குங்க. ஆத்துக்கு பாலமில்லெ அதுக்குல்லெ சுத்திப்போறேங்க இப்படி" என்றான் வண்டிக்காரன்.

"இருக்காக்கும். விடுவிடு" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கிருஷ்ணையர் சொன்னார். முன்னமே சொன்னபடி, கிருஷ்ணையருக்குச் சிறிது ஸ்தூலதேகம். ஆகையால் அவருக்கு வண்டியிலிருந்து இறங்கினால், சௌக்யமாயிருக்கும்போ லிருந்தது. நடந்து போவோம் என்றாலோ, அவரால் கூடவில்லை. ஆகையினாற்றான் சீக்கிரம் வண்டியை விடச்சொன்னார்.

இரண்டுமையிலுக்குமேற் போய்விட்டான். சுப்பையருக்கு, என்னவோ மனதிற் தோன்றிற்று. செட்டி மோசஞ் செய்வதாகத் தோன்றிற்று. அதைப் பற்றிப் பேசமுடியவில்லை. ஏனெனில், செட்டிபக்ஷம் வண்டிக்காரன். இவர்கள் இருவரையும் கொறுக்கிவிடுவான். கிருஷ்ணையருக்கு இச்சங்கதி யெல்லாந் தெரியாது. அவர், பெருமூச்சு விட்டுக்கொண்டு "கிருஷ்ணா, கிருஷ்ணா" என்று சொல்லிக்கொண்டிருந்தார். சுப்பையர் கண் கொவ்வைப்பழம் போற்சிவந்து, கண்களிலிருந்து தண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. அதைச் செட்டி பார்த்து, தனக்குட் சிரித்துக்கொண்டான்.

எல்லாவித எண்ணங்களும் சுப்பையர் மனத்திற் குழம்பிக்கொண்டிருந்தன. தான் வந்த காரியமென்ன! இப்படி மோசம்போனதென்ன! எங்கேயாவது, கல்யாணத்துக்குப் புறப்பட்டு, இப்படி அகப்பட்டுக்கொள்ளுகிறதுண்டா? ஆனாலும், ஒருவேளை, மூன்று மைலுக்கப்புறம் அப்பால மிருக்கக்கூடாதா? செட்டியார் அவ்வளவுதூரம் செய்யமாட்டார். எல்லாவற்றிற்கும் காரணம், நமது விதிதானென்று நிச்சயித்துக்கொண்டு, "செட்டியாரே, எத்தனை மைலாச்சு" என்றார்.

"ஒன்னரெ மைலாயிருக்குச்சாமி"

"இன்னம் பாலம் எவ்வளவு தூரம்?"

"இன்னம் ஒருமைல்"

சரியாய் ஐந்து மைலாய்விட்டது. சுப்பையர் தன் கவலையில் ஆழ்ந்திருந்ததனால், கணக்குச் சரியாய்த் தெரியவில்லை.

பாபநாசம் வந்து சேர்ந்தார்கள் எல்லோரும். சேகவனுக்கு, செட்டி கண்ணைக்காட்டினான். உடனே, சுப்பையர், தேம்பித்தேம்பி அழுதார். அவர் அழுதால் யார்விடுவார்கள்? இரண்டுமணி நேரத்துக்கெல்லாம், புகைவண்டி வந்தது. கும்பகோணம் ஸ்டேஷனிலிறங்கி, அங்கால்வரும் சப்கோர்ட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

பகலிற் பன்னிரண்டரை மணியாய்விட்டது. சூரியனது வெப்பம், மிகுந்ததாபத்தை உண்டாக்கிற்று. ஒருவரும் இன்னும் சாப்பிடவில்லை.

"என்ன ஐயா, சொல்றீர் பணத்துக்கு" என்று சொல்லி, செட்டி மௌனத்தைக் கலைத்தான்.

"அதான் தந்துட்றேன்னேனே. இப்பசரிப்படாது. வாறேஜெயிலுக்குப்போறேன்" என்று குழறிக்கொண்டு சொன்னார்.

"சத்தியமா ஐயா"

"சத்யமாத்தான்"

"சடக்கறதுசாமி இப்பொகொஞ்சம் குடுங்க அப்புறம்பாத்துக்கலாம்"

"வாண்டாம் ஜெயிலுக்குப்போறேன்."

"இல்லேசாமி நூறுரூபாயாச்சிங்குடுங்க."

"ஒண்ணுமில்லே"

"கடக்கட்டும் சாப்புட்டு வாருங்க சாமி"

உடனே அடுத்த தெருவிலிருக்கும் சாப்பாட்டுக் கடைக்குள், எல்லாரும் நுழைந்தார்கள்.

(நான்காம் அதிகாரம் முற்றிற்று.)

கு. ரா. ஸ்ரீனிவாஸ ஐயங்கார்.

## சந்தான குரவர்.

(34-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதமாகச் சந்தானகுரவர் சரிதம் ஒருவாறு முடிவெய்தியது. இங்கேகூறிய கதைகளிற் சிலபாகங்களை மாற்றியுரைப்போரும் சிலபாகங்களை யறவொழிப்போரும் சைவநூல் வல்லாருள்ளேயே பலருண்டு. அதற்கெல்லாங் காரணம் இதுவரை அவர்கள் சரிதங்களைக் குறித்து நூலொன்று மேற்படாது ஐதிகங்களே எம்மருங்கினும் வழங்கிவந்தமையேயாம். சரித வேறுபாடுகள் சந்தானகுரவரைப் பற்றி யுண்டாகும் அபிப்பிராயங்களை



எவ்வழியிலேனும் மாற்றுதற் கிடமில்லை யென்று யாம் கண்டமையின் அவற்றைக் கொண்டுவந்து வீண்காலம் போக்காமல் விடுக்கின்றோம். உதாரணமாக, மெய்கண்டதேவர் ஞானோபதேசம் பெற்ற பருவம் இரண்டாமாண்டென்றார் ஆறுமுக நாவலர். மறைஞானசம்பந்தர் கைக்கோளர் வீதிவழிச்சென்று ஓரகத்துக்கூழருந்தி நிற்கையிற் கூழ்வார்த்துநின்ற பெண்ணொருவள் சிவிகையேறி யாடம்பரத்தோடு சென்ற உமாபதியாரைக்காண விருப்புற்று விரைந்து சென்றாளாக, இவர் 'பட்ட கட்டையிற் பகற்குருடன் போதலைக்கண்டு என் இத்தனை யாச்சரியம்?' என மொழிந்து அவளைத்தடுத்து உமாபதியாரையுந் தமது அருள்வலையி லிழுத்தார்; அக்கணமே உமாபதியாரும் புகுந்து கூழின்சேடத்தை யேந்திக்குடித்து நன்ஞான முற்றார் எனச்சிலர் மாற்றிவழங்குகின்றனர். இவற்றால் உண்டாகும் நலங்கேடுகள் வலியுடையனவல்ல வென்று யாவரும் அறிவர்.

இனி, சிவஞானபோத ஆங்கில மொழிபெயர்ப்புகாரர்* நூலாசிரியரைப்பற்றி விஸ்தரிக்குமிடத்து ஐதிகம் பின்வருமாறு கூறுகின்றதென்று சொல்லி மெய்கண்ட தேவரது சரித்திரத்தைத் தாங் கேட்டபடி எழுதியிருக்கின்றார். அதிற்காணப்படுவன விசேஷ மாறுபாடுகளல்லவாயினும் அவற்றைத் தெரிந்துவைத்தல் நலமேயாகலின் மொழிபெயர்த்துத்தருகின்றோம். 'தஞ்சை நாட்டில் திருவெண்காடெனப்படும் சுவேத வனத்தருகிலுள்ள திருப்பெண்ணாடமென்னும் கிராமத்தில் அச்சுதர் என்பார் ஒருவர் நெடுநாட் பிள்ளையில்லாதிருந்தமையால் சுவேதவன ஈசுவரனிடத்துப் பிள்ளைவேண்டிச் சதா வரங்கிடந்தார். ஒருநாட்காலை இவர் கோயிலையடைந்து பொற்றாமரையில் மூழ்கி ஸ்தோத்திர தியானாதிகள் முடித்து எழுந்தவுடனே பொற்றாமரைப்படியில் அன்று பிறந்த குழந்தை யொன்று இருத்தல் கண்டு அதனை மார்போடணைத்துக் கடவுளுடைய பெருங்கருணைக்காக அவரை வாழ்த்திக் குழந்தையைப் வீட்டிற்குக் கொண்டுபோய்த் தம் மனையாளிடத்துக்கொடுத்தனர். இவர்களிருவரும் குழந்தையை வளர்த்து வந்தார்கள். சுவேதவன ஈசுவரனது கொடையாகலின் குழந்தைக்குச் சுவேதவனன் என நாமகரணஞ்செய்யப்பட்டது. காலஞ் செல்லச்செல்ல அச்சுதருடைய உறவினர் சுற்றத்தார் ஏதோ கீழ்க்குலத்துப்பிறந்து கண்டெடுக்கப்பட்ட குழந்தையை இவர் வளர்த்து வருகின்றனரென விவரை இகழத்தலைப்பட்டார்கள்.

இதனாற் பெற்றாரிருவரும் மிகக்கவலை யுற்றிருந்தார்கள். ஆகவே, அச்சுதருடைய மைத்துனர் திருவெண்ணெய்நல்லூரிலிருந்து இவரைப் பார்க்க வந்தவர் குழந்தையைத் தாம் எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துக் கொள்ள விரும்பினதைக் குறிப்பாகக் காட்டியவுடனே அச்சுதரும் குழந்

* ம-ா-ா-ஸ்ரீ ஜே. யம். நல்லசாமிபிள்ளை அவர்கள், டிஸ்ட்ரிக்டு முன்சீபு, நந்தியாலயம்.

தையை மனமுவந்து கொடுத்துவிட்டனர். ஆதலால் மூன்றாம் ஆண்டிலிருந்து குழந்தைக்குறைவிடம் திருவெண்ணெய்நல்லூராயிற்று. ஆனால் குழந்தை பிறந்தது முதல் ஊமையாயிருந்தது. ஆயினும் மணலினால் சிவலிங்கஞ்செய்து பூசை புரிதல், சிவலிங்கத்தின் முன்னேயிருந்து நிட்டை புரிவதுபோலக் கண்மூடியிருத்தல் முதலிய செயல்கள் அக்குழந்தையிடத்துக் காணப்பட்டமையால் அதனுடைய பெருந்தன்மையான மனப்போக்கும் வெளிப்பட்டுக்கொண்டு வந்தது. ஒருநாள் அவ்வழியே சென்ற சிவன் முத்தராகிய சித்தபுருஷரொருவர் குழந்தையைக்கண்டு ஆநந்த மெய்தி அதனுடைய உயர்ந்த பக்குவத்தை யூகித்தறிந்து அருட்பார்வையால் நோக்கி அதன் பெயரை 'மெய்கண்டதேவன்' எனமாற்றிச் சிவஞானபோதத்தாற் போதிக்கப்படும் தத்துவஞானத்தை யதற்கு நன்கு உபதேசித்தருளினர். மெய்கண்டதேவரோ தமது ஐந்தாம் பிராயங் கழியுமளவும் ஊமையாயே யிருந்தபோதிலும், பொல்லாப் பிள்ளையாரென்னும் நாமமுடைய திருவெண்ணெய் நல்லூர்க் கணேசப்பிரானிடத்தில் உபதேசத்தெளிவாகிய மேலுபதேசம் பெற்றுக்கொண்டு வந்தார். சூத்திரப் பொழிப்பும் சூர்ணிகைகளும் அவராலேயே மெய்கண்டதேவர்க்குக் கிடைத்தன வென்றுஞ் சொல்லப்படுகின்றது. இனி ஐந்தாமாண்டு கழிந்தவுடன் தேவர் திருவாய் மலர்ந்து சிவஞானபோதத்தைப் பிரசங்கித்து அநேகமாணவர்கட்கு அநுக்கிரகித்தார். அக்காலத்தில், திருத்துறையூரிலே சகலவேதாகமங்களிலும் பாண்டித்தியமடைந்து அக்காரணத்தினால் சகலாகம பண்டிதரெனப் பெயர்பெற்று விளங்கிய அருணந்தி சிவாசாரியர் என்னும் ஒரு பிரபலவித்வான் இருந்தார். அவர் தமது சிஷ்யக்குழாங்களோடு திருவெண்ணெய் நல்லூர்க் கெழுந்தருளினர். அங்குத் தங்கிய காலத்து அவருடைய மாணாக்கரிற் பல்லோர் மெய்கண்டதேவர் உபதேசங்களைக் கேட்டு மகிழ்ந்தவர்களாய் அருணந்தியாரை விட்டுப் பிரியத் தொடங்கினர். சிஷ்யர்கள் ஒருவர்பின் னொருவராய்த் தம்மை விட்டு நீங்குதலைக்கண்டு சகியாதவராகிய அருணந்தியார் மெய்கண்ட தேவரை நேரிற்கண்டு அவரைத் தொலைத்து வரவேண்டுமென்று தீர்மானித்து அவரிருக்குமிடஞ்சென்றார். மெய்கண்டதேவர் கிருபாகடாக்ஷம் பண்டிதர்மேல் விழுதலும் அஞ்ஞான அகங்காரங்கள் அவரை விட்டு நீங்கின. பின்னர் அருணந்தியார் தேவரது தலைமாணாக்கராகிச் சிவஞான சித்தியார் முதலிய வழி நூல்களியற்றினர். இங்கே ஒருவிஷயம் கவனிக்கத்தக்கது. மெய்கண்டதேவர் வேளாளர், அவரது வளர்ப்புப் பிதாமாதாக்களாவது வேளாளரே, ஆயினும் பிராமணருள் உத்தமோத்தமஸ்தானத்தை வகித்திருந்த அருணந்தி சிவாசாரியரும் அவருக்குச் சிஷ்யராக மனங்கோணவில்லை.

மெய்கண்டதேவரைப்பற்றி யாம் சரிதத்தால் அறிந்ததெல்லாம் அவரது பிறப்பு வளர்ப்பு, அவர்க்கு ஞானோபதேசம் கிடைத்தது, அவர் தமது மாணாக்கர்களுக்கு ஞானோபதேசஞ் செய்தது என்பவையே. இவையே



யன்றி யவர் நைஷ்டிக பிரமசாரியா கிரஹஸ்தரா வென்பதுபோலக் கிளக்குங் கேள்விகளுக்கு விடை யகப்படுவதாயில்லை. எனினும், ஒழிவிலொடுக்கஞ்செய்த கண்ணுடைய வள்ளலாரை இவர்க்குத் தாயராக்கியிவ்விருவரையும் பற்றிவழங்கு மைதீகமொன்றுண்டு. வேதாகமோக்த சைவ சமயாசாரியராய் விளங்கிய மெய்கண்டதேவர்க்குப் புத்திரனாயவரித்த வள்ளலார் மேலான ஞானநெறியிலேயே மனம் பற்றினவராய்ச் சரியை கிரியையோகமென்னும் மூன்று பாதங்களையும் பழித்து நூலெங்கும் தற்போத வொடுக்கமே வேண்டற்பாலது என முழக்கி யதனைத்தவிர வேறொன்றுங் கூறாது தற்கறிகுறியாக (தற்போத) ஒழிவிலொடுக்கமெனத் தமது நூற்குப் பெயருமிட்டருளி யதனைத் தந்தையாரிடத்துக் கொண்டுபோய்க் காட்டினர். மெய்கண்டதேவரோ பக்குவவேறுபாடுகளுக் கேற்ப வழங்கிவரும் வழிபாட்டு வேறுபாடுகளையு மாதரித்து வந்த ஞானக்களஞ்சியமாதலின் இதனைக் கண்டுமனமுளைந்து பூசையிலிருந்தவாறே சிறுகோப வெளிப்பாட்டினால் தமது திருமேனியிலிட்டிருந்த விபூதிதிரிபுண்டரக் குறிகளை யழித்துச் 'சைவசமயத்துக்கும் அச்சமயத்தின் சின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களுக்குங் கேடு வந்ததே' என்று இரங்கினர். இன்றும், வள்ளலாரினத்தார் கைகளிற் குறிகளையிட்டு அழிக்கும் வழக்கத்தைச் சுட்டிக்காட்டி யிக்கதை மெய்ம்மையே யென்று நிறுத்துவார். ஆனால், சித்தாந்த சமய பானுவாகிய மெய்கண்டதேவரிடத்திலுதித்த வள்ளலார் இவரிடத்தேயே யுபதேசம் பெற்றுக்கொள்ளாது வேறுவழியிற் புகுந்ததற்கும், அதிபிரபலமுடைய இவரைத் தமது நூலுளொரு முறையாயினும் எடுத்து வழங்காததற்குந் தக்க காரணம் புலப்படவில்லை. வள்ளலார் முதல் வெண்பாத்தொடங்கிப் பலமுறையும் சீகாழிச் சம்பந்தப் பெருமானை வாழ்த்தினராகலின்

"பட்டினத்துப் பிள்ளையினைப் பத்ரகிரி யைப்பரவி
விட்டுவிட மாட்டார் வெறுவீடர்—வெட்ட
வெறு வெறும்பை நாய்கறண்ட வேந்தர்வர [illegible]ர்த்
துறுமுவதைக் காட்டுவோ மோ."

"சுந்தரனார் சேரர்கோன் சோழர் குறுமன்னன்
மைந்தருட நம்முடலை வாட்டினர்கள்—அந்தமிலாப்
பத்தரொடு ஞான வயிராக் கியர்பலர்க்கும்
ஒத்ததுசார் போதவொழிவு."

160956

என்னும் திருவெண்பாக்கள் அந்நூலுட் காணப்படவில்லையாயின், அவர் காலம் சம்பந்தர் காலமேயெனச் சொல்ல வேண்டிவரும். பட்டினத்துப் பிள்ளைபத்ரகிரிகாலம் சாலிவாகனசகாப்தம் 850-என்று உத்தேசமாகத் தெரிகின்றமையின் மெய்கண்டதேவரது காலமாகிய சாலிவாகனசகாப்தம் 1150-க்குப் பின்னர்த்தான் வள்ளலார் உலகத்துப் பிறந்தார் என்று உறுதியாய்க்

கூற முடியவில்லை. மற்று, கண்ணுடைய வள்ளலாரைப்பற்றிச் சீகாழியில் வழங்கும் ஐதிகம் வருமாறு: சீகாழிப்பதியில் ஒரு செல்வவந்தர் வீட்டிற் செல்வப்பிள்ளையாய் அவதரித்து அக்காரணத்தினாற் சகல கலைஞானங்களிலும் அபரிமித விற்பத்தியடைந்து தேகும் அவகாச முதலியன பெற்றிருந்த நமது வள்ளலார் தினந்தவறாது திருக்கோயிலுக்குப் போவது வழக்கம். அப்பதியிலேயே அவதரித்துச் சிவபெருமானது செல்வக்குமாரராய் விளங்கிய ஞானசம்பந்தப்பிள்ளையாரது அருட்சரிதங்களைக் கேட்டல் மாத்திரையேயன்றி, அவற்றுட் பெரும்பான்மையும் நிகழ்ந்த இடத்தில் தாமும் தங்கும் பெரும்பேறு பெற்றமையால் வள்ளலார் பிள்ளையாரிடத்துப் பேரன்பு பூண்டு அவரையேதமக்கு ஆசிரியராக்கொண்டு உபாசித்து வந்தார். உபாசனையின்பலனாகிய ஞானந் தம்மனத்துள் தோன்றிய காலந்தொட்டு வள்ளலார் பிரதிதினமும் கோயிலுக்குப்போய்த்திரும்பித் துயின் றெழுந்து ஒரு வெண்பாச் செய்துவந்தார். கோயிலில் நெடுங்காலம் போக்கி மீளுதல் இவர்க்கியல்பாகலின், இவர்க்கு வழிகாட்டியாகக் கந்தன் என்னும் ஒருவேலைக்காரன் நிவர்த்திசகிதம் உடன் செல்வது வழக்கமாயிருந்தது. இருநூற்றைம்பத்து மூன்றாம் *வெண்பாவிற் குரிய தினத்தில் நெடுநேரமாயும் வள்ளலார் வீட்டிற்குத் திரும்புவதாயில்லை. மத்தியில் மின்னலுமிடியும் மழையும் மிகுந்து தெருக்களிலெல்லாம் வெள்ளம் ஓடத்தலைப்பட்டது. கந்தன் வீட்டிலேயே யிருந்து விட்டான். வள்ளலார் தரிசனம் முடிந்து கோயில் வாயிலையணுகிக் கந்தாவென்னலும் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானே கந்தனுருக்கொண்டு அவ்விடத்துத் நிவர்த்தியுங் கையுமாப்புகுந்து வழிவிட்டான். வீடுபோய்ச்சேர்ந்ததும் பழைய கந்தன் மன்னிப்புக் கேட்டற்காக ஒடுங்கி முன்வந்து நின்றான். கூடவந்த கந்தனைத் திரும்பிப்பார்த்தவர் அவனைக்காணாராய்த்திகைத்தார். பின்னர் இஃது எமது ஞானசம்பந்தன் அருள்விளையாட்டே யாகுமெனத் துணிந்து அன்றிரவு வெண்பாப் பாடிமுடித்து அந்நூலுக்கு ஒழிவிலொடுக்க மெனப்பெயருமிட்டுத்தம்பக்கலுள்ள ஞானபக்குவர்களிடத்து மனமுவந்து கொடுத்தார். காலையெழுந்ததும் தம்பெருந்திரவிய மத்தனையும் அரைக்கணத்தில் வாரியிறைத்துத் துறவுமேற்கொண்டார். இவ்வாறு வழங்குமைதிகத்தை நம்புவாரிற் சிலர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் உரைகண்ட நூல்களெல்லாம் சற்றேறக்குறைய அவர் காலத்தனவேயாம்; ஒழிவிலொடுக்கக் காலமும் இருநூறு வருஷங் கட்குட்பட்டேயிருக்கும் என்கின்றனர். அதனுடைய மெய்ம்மை பொய்ம்மைகளை யாராயப்புகின்விரியும்.

---

* கண்மணியி லாகாய நீழல் கலந்தாற்போல்
உண்மையைநீ யுண்டென் றெனையுணர்த்தித்—தண்ணெனவே
பார்த்திருந்த சித்திரம்போற் பார்த்தானை நாம்பரவித்
தோத்திரஞ்செய் யாப்பிறவிச் சொல்.



இனி, சந்தானசாரிய புராணசங்கிரக நூலைப் பின்பற்றி மெய்கண்டதேவரது மாணாக்கருள் ஒருவராகச் சிற்றம்பலநாடிகளைக் கூறினோம். அவ்விஷயம் சற்று ஆராய்ச்சி செய்யற்பாலது. இவ்வாசிரியர் இயற்றிய துகளறுபோதமென்னும் சித்தாந்த சாஸ்திரப்பாயிரத்தில்

'பதிபசு பாசந் தெரிந்தந்த பாச
விதிவழியை வென்றதனின் வேறாய்—கதிவழங்கு
மெய்கண்டான் சந்தானமேவிச் சிவாநந்தங்
கைகண்டார் காணார் கரு''

எனக்கூறுதல்பற்றி இவரை மெய்கண்டதேவரது சீடரெனத் துணிந்தார்போலும். சிற்றம்பல நாடிகளென்னும் பெயரால் மூவர் பெரியோர் வாழ்ந்திருந்தனர். அவருள் துகளறுபோதம் திருச்செந்தூரகவல் முதலிய நூல்கள்செய்த சீகாழிச் சிற்றம்பல நாடிகளே ஆதிகாலத்தவர் என்று நித்தற்குத் தக்க நியாயங்களுள. அவ்வாசிரியரைப் பற்றித்தான் நாம் "ஒருசமயம் இவர் மெய்கண்டதேவரிடத்து உபதேசம் பெற்றிருக்கலாம்" என்றுசொல்ல நாவெடுக்கலாம். ஆனால் துகளறுபோத முகவுரைக்காரர் "சிவப்பிரகாசத்திற்கு உரையியற்றிய மதுரைச் சிவப்பிரகாசர் "ஓது புகழ்ச்சகாத்த மாயிரத்து நானூற்றொரு பதின்மேற் செல்கின்ற காலந்தன்னின், மாறுபயில் மதுரையில்வாழ் சிவப்பிரகாசன்" என்னு மிவ்வுரைச் சிறப்புப் பாயிரத்தால் இற்றைக்கு நானூற்றுப்பத்து வருடத்திற்குமுன்பிருந்தாரென்று விளங்கலானும், அவர் 'திருவருள் கொடுத்து" என்னுஞ் சிவப்பிரகாசச் செய்யுட் கியற்றிய தமதுரையில் "உற்றசரியை" எனும் துகளறுபோதப் பாயிரச்செய்யுளை யெடுத்துக்காட்டுதலானும், இத்துகளறுபோதவாசிரியர் உமாபதி சிவாசாரியாரருளிய திருவருட்பயனிலுள்ள "தாடலைபோற்கூடியவை" எனுமுவமையைத் தந்நூலில் "சாற்றி லீதற்குவமை தாடலைபோல்" எனவெடுத்தருளுதலானும் இந்நூல் சற்றேறக்குறைய நானூற்றைம்பது வருடங்கட்குமுன் னியற்றப்பட்டதென்பது இனிதுவிளங்கும்" என்றுகூறினராகலின் உமாபதியார்க்குப் பின்வந்து அவர்நூலி லிருந்' துவமையெடுத்தவர் மெய்கண்டதேவரிடத்து நேரில் உபதேசம் பெற்றாரென்பது எளிதில் மறுக்கப்படும். அன்றியும் துகளறுபோதம் பல சித்தாந்தநூல்களொப்பப்பிரமாணமாகக் கருதப்படுந் தன்மையது. உரையாசிரியர்கள் அநேகர் எடுத்தாண்டிருக்கிறார்கள். உமாபதியார் காலத்திற்குமுன் இது தோன்றியிருக்குமாயின் சாத்திரத்தொகுதியுட்பட்டுக் கணிக்கப்படுதற்கு யாதோர் இடையூறுமிருந்திருத்தல்தகாது. ஆகலானும் சிற்றம்பல நாடிகள் பிற்காலத்தவரே யாகின்றனர்.

தமிழ்நூல் ஆராய்ச்சி நன்கமையப்பெறாத சிலர் சைவசமயநெறி சிவதருமோத்தர முதலிய நூல்செய்தார் நால்வருள் ஒருவராகிய மறைஞான

சம்பந்தரே யெனத் துணியுந் திரிபுணர்ச்சியுடையரா யிருக்கின்றனர். மூன்றாங்குரவராகிய கடந்தை - மறைஞானசம்பந்தர் சிவஞானச்செல்வராய் அத்தியாசிரமியாய்ச் சகசநிட்டையுடையராய் விளங்கிய பெரியரென்றே ஐதிகம் வழங்குகின்றதனாலும் சைவசமயநெறிமுதலிய இயற்றினாரைக் குகை-மறைஞானசம்பந்த நாயனாரென்று தமிழுலகம்வழங்குவதன்றியும் இவர் சிதம்பரத்துச் சைவாசாரியரென்றுங் கூறுதலாலும் அவர் வேறு இவர் வேறு என்பதே தேற்றம்.

சைவசித்தாந்த சாத்திரங்களுள் எட்டுச் சாத்திரஞ் செய்தவர் உமாபதிசிவாசாரியரேயென்று யாம் முன்னர்க் கூறிய அவர் சரித்திரத்தால் தெரியவரும். அவர்செய்தவேனைய நூல்களின் பெயரும் கூறினோம். அவை திருப்பதிகக்கோவை, திருப்பதிக்கோவை, சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், கோயிற்புராணமென்பன. திருப்பதிகக்கோவை யென்பது மூவர் பெருமக்களும் அருளிச்செய்த தேவாரத் திருமுறைகளில் மறைந்துபோனவொழிந்தெஞ்சிய வற்றிற்கு அளவு பெயர் முதலியன சொல்வது. இத்தேவாரங்களுக் குரிய தலங்களின் பெயர் முறைகளை எடுத்துரைப்பது திருப்பதிக்கோவை. பெரியபுராணஞ்செய்த அருண்மொழிச் சேக்கிழாரது அற்புத சரிதத்தை யுரைப்பது சேக்கிழார்புராணம். உமாபதியாரிடத்து விஷயங்களைப் பெருக்கி யுரைத்தல் அதிசயோக்தியலங்காரத்தில் மிகத்திளைத்தல் முதலிய துர்க்குணங்களில்லை யென்பது ஆங்கிலநூல் வல்லாருங் கண்டறிந்த உண்மை. திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணத்து வருங்கதைகளைச் சுருக்கி ஒரு செய்யுள் இரண்டு செய்யுட்களில் விளக்கிக் காட்டும் நூலே திருத்தொண்டர்புராண சாரமாம். வடமொழியிலுள்ள சிதம்பர க்ஷேத்திர மகாத்மியம் தமிழிற் கோயிற்புராணமெனச் செய்யப்பட்டது. உமாபதியார் வடமொழியிலும் வல்லாரென்பது அவரது வருணம் குலம் முதலியவற்றால் விளங்குமாயினும், அவராற் செய்யப்பட்ட பௌஷ்கராகம விருத்தியை யதற்கே ஒரு சான்றாகக் காட்டல் தவறாகாது. தருக்க நூல்களது சாரங்களெல்லாந் தன்னகத்தடக்கியது என்றும், சித்தாந்த உணர்ச்சிக்கு மிகச்சிறந்த நூலென்றும் கேள்விப்படுகின்றோமேயன்றி நூலை நேரே பார்த்ததில்லை. திருவாவடுதுறை மடத்திலுள்ளதென்றுங் கேள்வி.

அனவரத விநாயகம் பிள்ளை.

(இன்னும் வரும்.)

---



## தனிப்பாசுரத் தொகை.

### நூல்.

வாய்வா ளாமை மேயநற் குரவீர்காள் !
பேசலி ரெனினுநும் பெருங்கருத் துணர்வல் :—
'சிறியபா மறிவே முறையினி முழுவதும்
பொறையொடு முழைப்பை'யென் றறிவுறுப் பீர்கள் !
கலையின் றும்மியல் கல்கல மாட்சியீர் !
அரிய கதைசொலி யாதது மறிதலு
மின்னலை மென்பிறல் ; பொன்னுல கினருநும்
புலவர் கருத்தின் போக்கறி கலரே.
மக்களும் பொருளுமென் வாழ்குர வோரே.
இயற்கையின் பல்குர லினிலெலைச் சுற்றி
இசைக்குர லோர்வலர், எத்துணை யெளியென்யான் !
நினைவுவா டாமலர் கோர்த்து கூட்டுதி
அனைத்துமென் பாட்டியென் றறிவேன்
அறிதர மெய்யெலா மளிப்பையென் னிறைவே.

### போர்.

முந்தை நாட்களின் மூதறி விலார்சற்
சிந்தை யாளர் சிறிது மருளிலர்
மண்ணசை யானும் பெண்ணசை யானும்
பொன்னசை யானும் புகழ்நசை யானும்
தன்னலங் கருதார் நாட்டி னுயிர்களைக்
கொன்னே யம்ம கொன்று குவித்தனர் !
அறநெறி முதிரா மறநெறிக் காலத்து
வன்போ ரென்பது வல்லடி வழக்காம்.
அன்போ டறனு மருளும் பழுத்தொளி
ரிற்றை ஞான்றினும் வெற்றுப் போர்செய
வெற்றிக் கோவென் னினிய மாந்தர்காள் ?
ஆருயி ரோர்பலே போரினுஞ் சிறக்க ;
பொறையுள மெங்களும் பொருந்துக ;
அறைகடல் சூழிவ் வங்கண்ஞா லத்தே.

பரிதிமாற்கலைஞன்.

## இளையாழ்வார் என்னும்
## ஸ்ரீராமாநுஜாசாரியர் சரிதம். *

### காப்பு.

கட்டளைக்கலித்துறை.

மங்காத செல்வ மலிபெரும் பூதூர் வளநகர்வந்
தங்கார் வணன்றிரு மால்சம யத்தை யவனிமிசைப்
பொங்கா தரவின்வைத் தோனற் சரிதம் புகலவருள்
கொங்கார் கமலச் சரணென் றலைமிசைக் கொள்ளுவனே.

### அவதாரிகை.

மலரவனாற்படைக்கப்பட்ட அண்டங்களனைத்திற்கும் அப்புறத்ததாய், அயன்முதற்றேவர்க்கும் அடைதலரியதாய், அகப்பற்றும் புறப்பற்றுமற்ற அடியருக்கெளியதாய், பல்லாயிரரவி கூடியுதித்தாற்போலும் அளவிடற்கரிய வொளியினையுடையதாய், அனைத் துலகத்தாலும் புகழப்படுவதாய், ஆனந்தமயமாய், தன்னையடையுநர்க்கு இப்பொல்லா நிலத்தில் மாண்டு பிறக்குந் துயரினை மாற்றுவதாய், அகண்ட காலமேயன்றிக் கண்டகால மியலப்பெறுததாய், ஒப்புயர்வில்லாததாய், நித்தியமாய் விளங்கும் திருநாட்டின்கண்,

† "மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத வின்ப" த்ததாய்ப்

பொன்னிறப் பொழில்களும், சந்திரகாந்த விமானங்களும், மணிமதில்களும், கோபுரங்களும், மண்டபங்களுமுடையதாய் மறை முதற்கலைகள் இனைத்தென்று சுட்டுதற்கரிய தோற்றத்ததாய் இயங்குகின்ற வைகுந்த நகரத்தின் திருமாமணி மண்டபத்து நாப்பண், அனந்த கருடர் முதலிய நித்தியராலும், ஏனைய முக்தராலும் போற்றப்படுபவனாகிப் பொன்மகளும் மண்மகளும் புறத்திலமர, ஆழிமுதலைம்படையுந்தாங்கி ஆரகேயூராதி அணிகளும், உலகனைத்திற்கும் இவனே ஒரு நாயகமென்பதை யுணர்த்தும் ‡ "கதிராயிர மிரவி கலந்தெறித்தாலொத்த நீண்முடியும்" அணிந்து, ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் திருமால், அவ்வைகுந்த மாநகரிலுள்ளார் எக்காலத்தும் பேரானந்தத்தையே நுகருமாபோல ஏனைய உலகிலுள்ள எல்லாவுயிர்களும் தத்தம் முயற்சியால் அப்பேருலகினையடைந்து இன்புற்று வாழலாம்படியிருக்க அவ்வாறு செய்துய்யாமல், தன்னைத்தரிசித்தல், போற்றல் முதலிய செய்தற்பொருட்டுத் தந்தருளிய கண், வாய் முதலான உறுப்புக்களில் அவனை "வாயினாற் பாடியும் மனத்தினாற் சிந்தித்தும்" § "அரங்க

* இது அச்சிலிருக்கிறது. சீக்கிரம் வெளிவரும்.
† சீவகசிந்தாமணி. ‡ பெரியாழ்வார் திருமொழி. § திருமாலை.



னூர்க்காட்செய்யாதே" * "உண்டியே யுடையே யுகந்தோடி" † ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபடாநிற்கக்கண்டு இவ்வுயிர்கள் நம்மை யறியாது வருந்தி வாடுகின்றனவே! என்று திருவுள்ள மிரங்கி, நடுக்கடலிற் றிசைதப்பி யலைபவனுக்குக் காருணிகனான ஒருவன் தோணியை யுதவினாற்போலப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து அல்லற்பட்டுழலும் மக்களுக்குப் பவக்கடல் கடந்துய்யலாம்படி மீளவுங் கருணைகொண்டு கிணற்றினுள் வீழ்ந்த குழந்தையையெடுக்க அதனுள் உடன்குதிக்கும் தாயைப்போலத் திருமால் தான், இப்புவிதனில் இராமகிருஷ்ணாதி யவதாரங்களைச்செய்து உலகைத்திருத்தப் புக்கவிடத்தும், தன்னை யவர்கள் அறிந்துய்யமாட்டாதே விமுகராய்த் "தந்நெஞ்சிற் றோற்றியதேசொல்லி" இடும்பையிற் புகுந்து வருந்துகின்றனர்.

இங்ஙனமாக, ஸர்வேச்வரன் தனது நிர்ஹேதுக கிருபையினால் மானைக்காட்டி மான்பிடிப்பாரைப்போல, அவர்தம்மோடொத்த பண்பினரென்றெண்ணலாம்படி ஆழ்வார்களை யவதரிப்பித்தான்.

இவ்வாழ்வார்களோவெனில், ரிஷிகள்போல யோகமுதலிய முயற்சியாலாகும் ஞானமுடையராகாமல், அவனருளாற் போந்த அளவிலாப் பரம ஞான வைராக்கிய பக்தியுடையராய் எல்லாரும் ஓதியுய்யத்தக்க செவிக்கினிய செஞ்சொற்றமிழ்நூல்களால் சகலவேத வேதாந்த ஸாரார்த்தங்களை அருளிச்செய்து உலகத்தை வாழ்வித் தவராதலின இவர்கள் ரிஷிகளினுமதிக மேம்பாடுடையர்.

இவர்தம் அவதாரக்கிரமம் ஏதோவெனின், ஈச்வரன், ஸ்ரீ பூமி நீளா தேவிகளையும், ஸ்ரீபஞ்சாயுதங்களையும், ஸ்ரீவத்ஸ கௌஸ்துபம் முதலிய சின்னங்களையும் அனந்தன் கருடன் முதலோரையும் நோக்கி 'நீவிர், எற்றபடி பூலோகத்திற் பலசாதிகளிலும் பிறந்து உலகத்துயிர்களைப் பிறவிப்பெருங்கடலினின்றுங் கரையேற்றிவிடுங்கள்' என்று நியமித்தருள, அவர்களும் அவ்வாறே ‡ ஆழ்வாராதியராக அவதரித்தார்கள்.

இத்தனையோடமையாமல் திருமால், வேதங்கட்கு மாறுபடப்பொருள் கூறுவண்ணம் அவற்றிற்குத் தக்க பொருள் கூறி நிலைநிறுத்தத் திருவுள்ளங்கொண்டு,

|| "சென்றாற் குடையா மிருந்தாற் சிங் காசனமாம்
நின்றான் மரவடியா நீள்கடலுள்—என்றும்

* திருப்பாவை. † பெருமாள் திருமொழி.
‡ ஆழ்வார் - ஈச்வரனது குணங்களில் ஈடுபட்டு ஆழ்ந்தவர் என்பது கருத்து.
|| இயற்பா - முதல் திருவந்தாதி. உபதேசரத்தினமாலை.

"புனையா மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாந் திருமாற் கரவு" என்றபடி,

எக்காலத்தும் தன்னைவிட்டு நீங்குதலில்லாத திருவனந்தாழ்வானை நோக்கி "நீயும் உலகத்துதித்து வேதார்த்தங்களைச் செவ்வனே வெளியிடக் கடவாய்' என்று கட்டளையிட, அத்திருவனந்தாழ்வானும் 'இளையாழ்வான்' என்ற திருநாமத்துடன் அவதரித்தார்.

---

## நூல்.

எல்லாப் பொருள்கட்குங் காரணமாயுள்ள மேகமானது கலைமகளின் உருவம்போல வெண்ணிற முடையதாய் விண்ணிடைப் பரந்து கடலிற் படிந்து நீரினைக்கவர்ந்து உமையவள் திருமேனிப்பொலிவே போலக்கருமை நிறங்கொண்டு சென்று, ஆகாயத்தின் வயிற்றைக்கிழித்து ஊடுருவிச்செல்லும் சிகரத்தையுடைய நந்திமலை குளிர்ச்சியடையப் பொழிந்த தண்ணீர், காமதேனுவின் மடிசுரந்து பொழிந்த மதுரமான பால்வெள்ளம் போலத்திசைகள் தோறுஞ்சென்று செழிப்பிக்கும் அருவிநீர்த் தாரைகள் அம்மலையிலிருந்து இறங்குந்தோற்றம், இந்திரனது மார்பிலுள்ள முத்துவடத்தையொக்கும். அன்றியும், அம்மலையிலிருந்து இறங்கி மண்மீது திரண்டு செல்லுந் தோற்றமானது, முன்பு ஆதிசேஷன் வாயுபகவானுடன் சபதஞ்செய்து தன் ஆயிரம் படங்களையும் விரித்து மிக்க உயர்வினையுடைய 'மேருவரையின் சிகரங்களையெல்லாம் மறைத்ததையும் ஒக்கும். இத்தகைய மேன்மையுடன் செல்லும் அந்தவெள்ளமானது யானைத்தந்தத்தின் முத்துக்களையும் அகிற்கட்டைகளையும் சந்தனத்தருக்களையும் குங்குமத்தருக்களையும் முறித்து, வரையாது கொடுக்கும் இயல்புவாய்ந்த நன்மக்களேபோலவும், தன்னைக் கருவிருந்து பெற்ற மேகம்போலவும் தானே ஊர்தோறுஞ்சென்று மலைபடு பொருள்களனைத்தையும் கொடுக்கப்பெயர்ந்து மடுக்கள், குளங்கள் ஏரிகள் ஆகிய இவற்றைநிரப்பி மீட்டுந் தன்னினமான கடலையே நோக்கிச்செல்லல், ஒரு கற்புடைய மடந்தை தன் தலைமகனிடஞ் செல்லுங்கால் தனக்குக்கிடைத்த சந்தனம் முதலிய போகப்பொருள்களைக்கொண்டு செல்வதையும், முற்பிறப்பிற்செய்த நல்வினையானது பிற்பிறப்பில் அச்செய்தானையே நாடிச்செல்வதையும் போலும்.

இத்துணைப் பேரழகுவாய்ந்த 'பாலாறு' என்னும் பெரியதொருநதி பாயப்பெற்றதும்; மா, பலா, வாழை, தெங்கு, கமுகுமுதலிய பல விருட்சங்கள் குலவப்பெற்றதும்; கல்வி சிற்பம் கைத்தொழில் வர்த்தகம் என்னும் இவை கவினப்பெற்றதும்; நவரஸபாவ கற்பனாலங்காரகவீரரின் புகழ்கமழப் பெற்றதும்; பொய்கை பூதம் பேய் மழிசையர்கோன் முதலிய ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்றதுமாய இத்தொண்டை நன்னாட்டின்கண், மூவரும் மற்



றைத்தேவரும் முத்தரும் சித்தர் முதலிய பக்தரும் பற்றிக்கிடக்குமிடமாய்; நீரிற்றோன்றும் செந்தாமரை வெண்டாமரை செவ்வல்லி கருங்குவளை முதலியன எப்போதும்மலர்ந்து, நாரை அன்னம்முதலிய பறவைகள் நிறைந்து, சான்றோர் செய்த நூற்பொருள்போலாழ்ந்து, அவரறிவேபோற்றெளிந்து, அன்னோர் புகழே போற் பரந்து அவரது இதயம்போற் குளிர்ந்து, தம்மிடமிவர்ந்துபடிந்து தாபங்களை யாற்றிக்கொள்ளுமாறு யாவரையுங் கரமெடுத்தழைப்பதுபோல அலையெறிந்து என்றும் விளங்குகின்ற நீர்அருந்தமானதப் பெருவாவிபோலும் பல தடாகங்கள் சூழப்பெற்றதாய்; நீர்த்திரைகள் திரையெழில்காட்ட, செந்தாமரைகள் விளக்கொளிசெய்ய, வண்டுகள் சுருதிகூட்ட, மதவொலி மத்தளவொலிசெய்ய, மாங்குயில்கள் தீங்குரலாற்பாட, குவளைகள்விழித்துநோக்க ஒருநாடகசாலைபோலத் தோன்றும் சோலைகள் சூழ்ந்துள்ளதாய்; அட்டிற்புகையும் அகிற்புகையும்வேள்விப்புகையும் மேகத்திற்சென்று மழையைக் கமழ்விக்கும் மாடமாளிகளுள்ளதாய்;பல தவமுனிவர்வாழும் மடங்களும் பலவகைமண்டபங்களும் மறைமுதற்பலகலைகளும் பயிற்றப்படும் பலகலாசாலைகளும், பார்ப்பனர் முதலியோரைப் பரிவுடன் உண்பிக்கும் அன்னசாலைகளும் இலகுவதாய், தென்மொழியும் வடமொழியும் முற்றுங்கற்றநாவலரும் பல்சுவையும் தோன்றப்பாடும் பாவலரும் தங்கப்பெற்றதாய்; வான்மதியைத்தாவும் கோபுரமதில்களையும், பலவிழாக்களையும்பெற்ற ஆதிகேசவப்பிரான் அமர்ந்தருளும் திருக்கோயிலிலகுவதாய்; பலராலும் கொண்டாடப்படும் * 'பூதபுரி' எனவும் 'ஸ்ரீபெரும்பூதூர்' எனவும் வழங்கும் திருப்பதியில், 'ஸ்ரீ கேசவ ஸோமயாஜி' என்ற பிராமணோத்தமருக்குத் திருக்குமாரராய், இராமகிருஷ்ணர்கள் முறையே கோசலைதேவகியர்களுடைய கர்ப்பத்தை விரும்பியவதரித்தமைபோன்றுபாலக் † காந்திமதியம்மங்காரின் கர்ப்பத்தை விரும்பி யடைந்து குணதிசையிற் சூரியன் உதிப்பதுபோல் இளையாழ்வான் அவதரித்தார்.

இவரது அவதாரம் - கலியுகம் - 4118க்கு [நாலாயிரத்து நூற்றுப்பதினெட்டுக்கு] மேலும், சாலிவாகன சகம் - 939க்கு [தொளாயிரத்து முப்பத்தொன்பதுக்கு] மேலும் சென்ற பிங்கள வருஷம், சித்திரை மாதம், பன்னிரண்டாந்தேதி, சுக்கிலபக்ஷம், வெள்ளிக்கிழமை, திருவாதிரை, ஆயுஷ்நாமயோகம், பத்திரவாகரணம், கடகலக்கினம்—ஆகிய இச்சுபகாலமென்ப. இப்பொழுது கலிபிறந்து 5002 [ஐயாயிரத்து இரண்டு] வருஷங்களும், சாலி

---

* பூதபுரி-பூதங்களால் ஏற்படுத்தப்பட்டதென்றும், பூதங்களை மிகுதியுங் கொண்டிருந்தது என்றுங் கூறுவர். ['பூதேசுவரர்' என்று ஆங்குள்ள சிவபிரானுக்கும் பெயர்வழங்குதலறிக.] இனி, 'பூதூர்' என்ற தமிழ்மொழியே அங்ஙனம் வடமொழியாக உச்சரிக்கப்பட்டதெனவுங்கூறுநர்.

† காந்திமதியம்மங்காருக்கு - 'ஸ்ரீ பூமிப்பிராட்டியார்' என்றும் பெயர் வழங்கும்.

வாசனம் 1823 [ஆயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்று] வருஷங்களும் ஆகின்றன. எனவே, இற்றைக்குச் சற்றேறக்குறைய 884 [எண்ணூற்று எண்பத்திநான்கு] வருடங்களாகும். என்றால், கிறிஸ்து பிறந்த 956 [தொளாயிரத்து ஐந்நூற்று ஆறு] வருடங்கட்கு மேல் என்க.

(இன்னும் வரும்.)

ஸ்ரீரங்கா சாரியர்.

# * ஒழிவிலொடுக்கச் சிறப்புப்பாயிரவுரை.

வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தான் — உள்ளத்
தழிவிலடுக் குந்தேனை யன்பரெலா முண்ணு
மொழிவி லொடுக்கநூ லோர்ந்து.

இச்செய்யுள் கருதிற்றியாதோ வெனின், இந்நூன்முகத்து ஆசிரியர் பெயர் முதலியவற்றைக் குறித்து நிற்றலிற் சிறப்புப்பாயிர வொழுக்க முணர்த்தல் கருதிற்றென்க.

**வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன் வள்ளன் மலர்த்தாடலை மேல் வைத்து** என்பது வள்ளலா ரென்னுந் திருப்பெயருடையவர் ஞானாசாரிய கிருபராகிச் சமயவாதிக டருக்கச் செருக்குகள் பிற்பட்டொழியப் பேரருணெறியான் வெற்றிகொண்டு சீகாழியென்னுந் திருநகர்க்கண்ணே மெய்ந்நெறிவிளங்க வீற்றிருந்தருளிய திருஞான சம்பந்தப் பிள்ளையாரது வள்ளற்றன்மையுடைய மலர்போலுந் திருவடிகளைத் தமது நன்முடிக்கண் ஓர் பொன்முடியாக வணிந்து.

**ஓர்ந்து உள்ளத் தழிவிலடுக்குந் தேனை யன்பரெலா முண்ணு மொழிவி லொடுக்க நூலுரைத்தான்** என்பது அத்திருவடிகளின் அருட்டுணையால் தத்துவங்களைத் தாஞ் சடமென்றோர்ந்து உணர்ந்து அவற்றைக்கடந்து தற்காட்சியோடு திருவருட்காட்சியுஞ் செய்து அங்ஙனம் வாதனையான் அசைந்தெழும் போதம் தேசற்று அதனை யத்திருவரு ளொளியின் அடக்கியாண்டு மென்மேலுமெழாநின்ற சிவானந்தத் தேனைத் தாம் அநுபவஞ் செய்தவாறு அதன்கண் அன்புள்ள பக்குவருஞ் செய்தற்பொருட்டு அச்சிவானந்தா நுபவ அந்தரங்கமெல்லாம் வெளிப்பட்டு விளங்க ஒழிவிலொடுக்க மென்றோருபதேச முறையை யுரைத்தருளினார் என்றவாறு.

**வள்ளலென்னும் பெயர்**—ஆசிரியர்க்குத் தாம் முன்னிருந்த கிரியாசாரிய நிலைக்கண் அவ்வாசிரிய மரபின் வழித்தாய்வந்த காரண வபிடேகச் சிறப்புப் பெயரென்க. அல்லதூஉம் பின்னர் ஞானாசாரிய நிலைக்கண் தமதருண்ஞான நோக்கான் இயைந்த கண்ணுடைய வென்னுங் காரண விசேடணமேற்கொண்டு நின்ற இவ்வள்ளலென்னும் பெயர் ஈண்டு அவ்விசேடணம் இசையெச்சநிலையி னிற்ப நின்றதெனினு மமையுமென்க. இஃது வினைபண்பு முதலிய அடுத்ததொகை நிலைச் சொற்றொடராகாது தொகா நிலையாய்த் தனித்தொடர்பயனிலை யண்மைப்பொருளுணர்ச்சியின்றி இடையிட்டு நிற்கத் தான் செய்யுண்முதற்கண் தனித்திருத்தலமையின் ஆற்றலின்றாலோ வெனின், அற்றன்று; கொடைமடங்குறித்த குணங்காரணமாக வந்த இவ்வள்ளலென்னும் பெயர் தன்னுறுப்புகளுட் கொடை குணம் புகழ் அழகு வளமை யென்னும் நல்வகைகுறித்த பல்பொருட்பகுதியான் வண்மை யென்னு முதலுறுப்பான் ஆசிரியர்க்குளவாய அக்கொடை முதலிய அருட்குணங்களைக் குறிப்பிற் புலப்படவிரித்தலின் பொருளாற்றலுண்டென்க. அல்லதூஉம் இப்பெயர் உயர்பொருட்கிடனு யுடனிலைக்கூட்டாய் ஒரு நெறியசைத்தா யோரினத் தழுவிப் பல்வகைக் குறிப்பிற்படர்ந்து முற்றியைபுவண்ணப் பெருஞ் சொல்லாக நிற்றலின் சொல்லாற்றலு முண்டென்க.

ஆயின் இவ்வாசிரியர் பெயர் இச்செய்யுளின் இடைகடைகளின் ஒன்றில் நிறுத்தாது முதலடி முதற்சீர் எதுகைத்தொடைக்கண் நிறுத்ததிற் குறித்து யாதோவெனின், ஒன்றிரண் டெனக்கொண் டுருமறை யாகம நன்றிரு முடிபினடுநிலை நடாஅய்ப் பலம்பெறுதத்துவ நியதியிற் போந்துண் மலந்தெறுமதிஞர் வாழ்த்திப்பரவும் ஆசிரியர் சன்மார்க்க முதலியமார்க்க நான்கனுள் தலைமையிற்றலைமையாய உத்தம சன்மார்க்கத்தின ரென்பது குறித்ததென்க. இங்ஙனம் உத்தம சன்மார்க்கத்தினர் என்பதை ஆசிரியர் கூறிய "இது வென்றதெல்லாம் பொய்யென்று" னென்னுந் திருவெண்பாவாற் காண்க.—இஃதின்னும் விரிக்கிற் பெருகும்.

**குருராயனென்பது** - திருஞான சம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப்பெயராய் நின்று, ஓதியுணர்ந்து பன்னாட் பலசாதனங்களின் முயன்று முயன்று ஆசாரியத்தன்மை யொருவாறு அரிதிற்கிடைப்பப் பெற்றும் ஓரோர் காலங்களில் அவத்தைவயப்பட்டு மயங்கும் மற்றையாசாரியர் போலாது ஓதாமல் வேதாகமாதிகளை முற்றுமுணர்ந்து இறைப்போதும் ஓர் சாதனங்களின் முயன்றதின்றி ஞானாசாரிய அருளிலக்கணங்களைத்தும் தாமே தம்பானிரம்பிநிற்ப அமர்ந்தன ரென்பதூஉம், ஓதியுணர்ந்த அவ்வாசாரியர்க்கெல்லாம் அவரவ ரறிவின்கண் அருளுருவாய் நின்றறிவித்தும் ஆசாரியவுருவாய் வெளிநின் றநுக்கிரகித்தும் நின்றன ரென்பதூஉம், திருநோக்கஞ்செய்தன் முதலிய அறுவகைத் தீக்கையானு மன்றித் தமது திருவுருவைக்காண்டல் நினைத்தன் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன்பெறநின்ற திருவருட் பெருமையரென்பதூஉங் குறித்ததென்று



* ஒழிவிலொடுக்கம் கண்ணுடைய வள்ளலார் என்பவராலியற்றப்பட்டது: இவ்வுரை திருவருட் பிரகாசவள்ளலா ரென்னும் வடலூர்-இராமலிங்கம் பிள்ளையவர்களாற் செய்யப்பட்டது.

ணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாகமாதி யுணர்ந்தமை முதலிய வற்றை ஆசிரியர்கூறிய "தன்மையு முன்னிலையு" மென்னுந் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராய னென்பது வாதுவென்ற சம்பந்த னென்பதற்கு மேனிற்கவைத்த விதப்புக்குறிப்பாற் பிள்ளையார் இவ்வவதாரத்தின் மேனின்ற வவதாரத்திலுங் குமார சற்குருவாய் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்தருளிய ஆசாரியத்தலைமையுங் குறித்ததெனக் கொள்க.

### அருணகிரிநாதர்.

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்களந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
றென்ன வனங்கநன் னீற்றுற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே.

என்றதனாற் பிள்ளையா ரிவ்வவதாரத்திற்கு மேனின்ற வவதாரத்திற் குமார சற்குருவென்பது காண்க.

### கல்லாடம்.

உழன்மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கினின் றேத்தக் குருமொழி வைத்தோய்
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்.

### சித்தியார்.

அருமறையா கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை

என்பவைகளா லரனார்க்கு மகத்தியனார்க்கு முபதேசித்த வாசாரியத் தலைமையையுணர்க.

ஆயின் குருவேந்தனென்றது குருராயனென்றது எதுகுறித்தற்கோவெனின் நான்கன் வேற்றுமையானடுத்து மிக்குயர் நெறிப்பொருண்மையின் வந்த காரகச் சிறப்பொருதலைத் தொடர்மொழிப்பெயராய இக்குருராயனென்பதன்கட் குருவென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் ராயனென்பதன் முதனிலை யெழுத்துத் தமிழியல் விதியின்றி யாரியவியல் விதிப்படி மொழிக்கு முதலாகியும் வந்து இருவகையியலுங் கோடலின் இதனைத் தம்பெயராக வுடைய பிள்ளையாருந் தமிழ்நூல் வடநூலென்னு மிருவகைநூற்கு முரியாரென்பது குறித்ததற்கென்க. ஆசிரியர் "மறைப்புலவன் றமிழ்க்குரிசில் சீகாழிச்சம்பந்த" னென்றதனா லிருவகைநூற்கு முரியாரென்பது காண்கவென்க. அல்லதூஉம், பொருள் வேறுபடாது சிறிதே வடிவு வேறுபட்டு நின்ற குருராயனென்பது தன்னையுள்ளூன்றி நோக்கினர்க்கு இலைமறை காய்போல் ஞாவென்னுமுயிர் மெய்யோடிருந்த தன் முன்வடிவம் உட்கொண்டு விளங்கக்காட்டி நிற்கின்றதாக



லின் இதனையுடைய பிள்ளையாருந் தமது கடவுட்டன்மை வேறுபடாது உத்தமபுருட வுருவங்கொண்டு நின்றதம்மை யன்பான் உள்ளூன்றி நோக்கினார்க்குக் குமாரசற்குருவென்னும் பெயர்கொண்டு அளவிகந்த சூரியருதயம் போன்று ஒளிவீசுந் தம் முன்னுருவாய தெய்வத் திருவுரு வுட்கொண்டு விளங்கக்காட்டி நின்றன ரென்று குறித்தற் கென்பதூஉமாமென்க.

### ஆளுடைய பிள்ளையார் புராணம்.

மறையவர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார்.

என்று மூவாண்டிற் பிள்ளையார் திருவருள் வடிவைக்கண்டு சீகாழிப் புள்ளார் வியந்து கூறியவாறாய இச்செய்யுளால் உள்ளூன்றி நோக்கினார்க்குத் தம் முன்னுருவைக் காட்டி நின்றனரென்பது காண்கவென்க.

இனி யின்றியமையாக் * காட்டினதேற் காட்டுவதன்றி மற்றைய விரிக்கிற் பெருகுமென்க.

அல்லதூஉம், குருவென்பதன் ஈற்றுயிர் மெய்யோடு ராயனென்பதின் முதலுயிர்மெய் புணராப் புணர்க்கையாய் நின்ற தாகலின் இங்ஙனம் ஆனந்தவடிவராகிய பிள்ளையாருந் தாங்கொண்டருளிய மானிடத்திருவுருவோடு புணராப் புணர்க்கையாய் நின்றனரெனக் குறித்தற்கென்பதூஉ மாமென்க.

அல்லதூஉம், குறிலிணைக்கெதிர் நெடில்குறி லெண்ணீட்டாக நிற்பவும் ஈற்றினவ் வெண்ணீடின்றி யொற்று நிற்பவுந் தொடர்ந்த மொழியாதலிற் பிள்ளையாரும் பக்குவர்க்கு மறைப்பொருளாயு மதிபக்குவர்க் கருப்பப் பொருளாயு நின்றனரென்று குறித்தற்கென்பதூஉ மாமென்க. இங்ஙனங் குருராய னென்பதிற் குவ்வென்பது இருள் ருவ்வென்பது அருள் ராயனென்பது விளங்கச் செய்கின்றோன் பொருளாம். இதனாற் குவ்வென்னும் அசுத்தாவத்தையில் நின்றோரை ருவ்வென்னுஞ் சுத்தாவத்தையில் தாம் நின்றவண்ண நிறுத்துகின்றோர் குருவாவர். இச்சுத்தாவத்தைக் காதாரனாகியும் அதீதனாகியும் விளங்கி யிவ்வவத்தையினின்றும் அக்குருவாயினோர் தாழாதவண்ணம் அருள்செய்து நின்று அதீதப்படுத்துகின்றோன் ராயனாவன் ஆகலின் இதனானு முணர்கவென்க.

எழுத்தாதிப் பல்வகைக் குறிப்பிற் பொருணெறிப்பற்றி நின்ற நோக்கஞ் செறிவு நுட்பம் இங்கிதம் இன்பம் கம்பீரஞ் சிறப்பு உறுதி முதலிய நற்குணந் தழீஇய சொற்புணர்ச்சிதென்றே ஆசிரியரும் "சரிதாதி நான்கினுக்கு" மென்னுந் திருவெண்பாவி னிடைக்கண் குருராய னென்றிதன் பெருமைதோன்ற வைத்தனரென்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

---

* காட்டு = உதாரணம்.

வாதுவென்ற சம்பந்த னென்பதிற் பொதுவானே வாதுவென்றது என்குறித்தோவெனின், எண்வகைக் குன்றத் தெண்ணாயிரவராய பாயுடுக்கைப் பறிதலைச் சமணர்கள் ஒருங்கே கூடித் தென்மதுரைக்கண் செந்தமிழ்ப் பாண்டியனை முன்னிட்டுச் செருக்காற் செய்த சுரவாதம் அனல்வாதம் புனல்வாதங்கள் பிற்படத் திருநீற்றானுந் திருவாக்கானும் வென்று திறல்கொண்டமை யன்றியும் பரசமயகோளரி யென்று தானே யொலித்த திருச்சின்னத்தின் தெய்வப்பேரொலி கேட்டு உளம் பொறாது எதிரிட்டு மறித்த போதமங்கைப் புத்தநந்தியின் பொய்த்தருக்கமும் புழுத்தலையும் பொடிபட்டழியவும் பின்னர் உள்ளது போன்று இல்லதைப்பற்றிச் சாக்கியக் குழுவுட்டலைவனாய சாரிப்புத்தன் சிற்சில வகையாற் செய்த சமயவாதந் தலைதடுமாறவுஞ் செந்தமிழ் வேதத் திருமுறை தாங்கி மேம்படுமெழிஞான் வெற்றிகொண்டமையும் திருவோத்தூரின்கண் அரனுக் கிடுபனை யாண்பனையாயிற்றேயென் றசதியாடிய வமணக்குழூஉக்களின் வாய்வாதங்கள் மண்பட்டொழியத் தாம் திருவாய் மலர்ந்த திருக்கடைக் காப்புள் ஓர் மொழியானே அவ்வாண்பனை பெண்பனையாகச் செய்து விறல்கொண்டமையுங் குறித்ததென்க.

அல்லதூஉம், வாதென்பது இலக்கணையாகக்கொண்டு பெருமண நல்லூரின்கட் டிருமண நல்விழாவைத் தரிசிப்பான் வந்த மக்கட் கெல்லாந் தொன்றுதொட் டிடைவிடா தடவிழற் போற்சூழ்ந்துள பிறவிப் பெருவாதுக ளனைத்தும் வென்றதூஉம், திருப் பாச்சிலாச்சிராமத்தின்கண் மழவன் மகளார்க்கடுத்த முயலகவாது வென்றதூஉம், மருகற்கண் ஓர் வசியனுக்கடுத்த விடவாது வென்றதூஉம், இவை முதலியவுங் குறித்த தெனினுமாமென்க. வெற்றிகொண்ட பொருட்டிறன் முதலியவற்று ளொன்றேனுந் தோன்றக் கூறாது இலேசானே வாதுவென்றது என்றது என்குறித்தோவெனின் பிறர்க்கு இங்ஙனம் வேறல் தம்மானுந் துணைமையானும் பற்பலநாட் பற்பலவகையின் முயற்சி செயினு முற்றுதெனினும் பிள்ளையார்க்குச் செந்தமிழ் பொழியுந் திருவாக்கானே யாண்டாண்டு அவ்வேறல் முற்றியதென்பது குறித்தென்க. வாது என்பது குருராயனென்பதனோடுஞ் சம்பந்த னென்பதனோடுஞ் சாராது நடுநின்றமையின் அத்துவித நெறியினுஞ் சேராது துவிதநெறியினுஞ் சாராது நின்ற பதிதவாதிகளது பயனில்வாத மெனினும் அமையுமென்க. எதிரேற்கப்பட்டு எதிர்வினை கிழ்ப்பட மேற்கொள்வினை யெழுச்சிப்பொருளின் வந்த வெல்லென்னும் பிறவினைப் பகுதியானடுத்த வென்றவென்னும் பெயரெச்சஞ் சம்பந்தனென்னும் பெயர் கொண்டு முடிந்து இங்ஙனம் வெற்றிகொண்ட பருவம் பிள்ளையார்க்கிளங் குமாரப்பருவமெனக் குறித்ததென்க. என்னை? எச்சமென்ப திளஞ்சேய் மேற்றாதலின்



சம்பந்தனென்பது பிள்ளையார்க்கு மூவகைக்கண் மூவுலகும் புகழப் பொற்பொடு புணர்ந்த வற்புதத் திருப்பெயராகலின் ஆண்டுப் பெருமான் அருளாப் பிராட்டியாரளித்த சிவஞானத்தெள்ளமுதருந்தி அச் சிவஞானத்திற்குரிமைபூண்டமை குறித்ததென்றுணர்க. ஆயின், சிவஞான சம்பந்தனென்னாது சம்பந்தனெனவைத்தது என்கொலோவெனின், சிவஞானத்திற்கும் அன்றிச் சிவானந்தம் ஆனந்தாதீத மென்பவைக்கு முரிமைபூண்ட தலைமைபற்றியும், அவற்றை யுலகுயிர்க் கிங்ஙனமென் றுணர்த்தியுரிமை செய்விக்கு மாட்சிபற்றியும் அங்ஙனம்வைத்ததென்க. அல்லதூஉம், சுருக்கச்சொல்லுதல் வனப்பினாற் சம்பந்தனெனவே சிவஞான சம்பந்தனென வுரிமைச் சிறப்பு வழக்கால் தானே தோன்றுமெனவைத்த தெனினுமாமென்க. எங்ஙனமெனின், இந்திரனென்பது இறைமைச்சிறப்பு வழக்கால் தேவேந்திரனையும், உடையானென்பது பொருட் சிறப்பு வழக்காற் பொன்னுடையானையுங் குறிக்குமாகலினென்க.

வள்ளன் மலர்த்தா ளென்னும் ஒருவகைவனப் பிருவகைச் சந்தி மூவகை மொழித் தொகைச் சொற்றொடர்க்கண் வள்ளலென்னுங் குணப்பெயர் வினைமுதற் றொழிற் பயனுறப்படு முடைமைக் குணப்பெயராய் நின்று பிள்ளையாரது திருவடிகள் தம்மை யடைந்தோர்க்கு வரையாதானந்தப் பேற்றை யளித்து அவரைத்தாங்கிக் கோடலைக் குறித்ததென்றுணர்க.

அஃதேல் ஆநந்தப் பேற்றைத் தருதற்குந் தாங்கிக் கோடற்குங் கருத்தர் பிள்ளையாரன்றே அங்ஙனமிருப்பத் திருவடிகட் கிங்ஙனங்கூற லெங்ஙனமெனின் திருவடிகள் தம்மை வழிபடுவோர்க் கோங்கி யின்பமீதற்பொருட்டெழுந்தருளும் பிள்ளையாரது படர்ச்சி நிகழ்ச்சிக் கருவியாய் நின்று அவரை யவ்வழிபடுவோர்பால் வருவித்தலானும், ஞானதீக்கை பண்ணுங்கா லவர் சென்னியிற் சூட்டப்பட்டு ஐக்கியம் வருவித்தலானு நித்தியானந்தப் பேறு வாய்க்கு மாகலி னிங்ஙனமென்க.

அல்லதூஉம், வாட்டமிலருளுங் கோட்டமில் குணனும் அசையாநிலையு நசையாமனனும் வெகுளாப்பண்பும் விடாப்பேரன்புஞ் செவ்வியின்மரீஇ யெவ்வெவ ரெவ்வகை வேட்டன ரவ்வகை விருப்பொடு குறிப்பின் வரையாதீதல் வள்ளற்றன்மை என்பவாகலி னிவ்வள்ளற்றன்மையைத் தம்பா லடைந்தோரிடை யடைவித் தருளுங் கருணைபற்றி யங்ஙனங் கூறிய தெனினுமமையுமென்க. அஃதேல் வள்ளற்றன்மை வழங்கும் மலர்போலுந் திருவடியென்றன்றே யுரைவிரித்தல் வேண்டு மங்ஙனமின்றி வள்ளற்றன்மையுடைய மலர்போலுந்தாளென விரித்திருக்கின்றதேயெனின் அங்ஙனமடைவித்தலும் வள்ளற்றன்மையே யாகலினும் உடைய தொன்றன்றே யுதவப்படுமாகலினும் இங்ஙனம் விரித்தலங்ஙனங் கூறற்கு மமைதியா மென்க.

அல்லதூஉம், அருளின் றியமையாத வள்ளற்றன்மைக் கவ்வருளே முதற் காரணமாமாகலின் ஆனந்தவடிவராகிய பிள்ளையா ரவ்வானந்தப் பேற்றை யளிக்கும் வள்ளற்றன்மைக்கு முதற்காரணமாகிய திருவருட் சத்தியே திருவடியென்று குறித்தற்குக் காரணத்தைக் காரியமாக ஈண்டுபசரித்த தெனினு மமையுமென்க.

அல்லதூஉம், எமது திருவடிகளை வழிபடின் வீட்டின்ப மெளிதிற்றருவேமென்று பிள்ளையார் விதித்தருளிய வருள்விதிப்படி யறிந்து வழிபடின் அவ்வழிபாட்டா னவ்வீட்டின்பந் தரப்பெறுதல் உண்மையாகலி னவ்வுண்மை நோக்கி யீண்டுக் கூறியதெனினும் பிள்ளையார் திருமேனி முற்றுந் தெய்வத்தன்மைபூரணமாகலின் அதனையறிவிக்க வீண்டுக்கூறியதெனினுமமையுமென்க. திருவடிகட்கு அடையாய வள்ளலென்பதூஉம், ஆசிரியர் பெயராய வள்ளலென்பதூஉம், அடியிணை, எதுகைத் தொடையாய் எழுத்தளவை ஒரோவழி பொருளாலு மொற்றுமைகொண்டு நின்று பிள்ளையாரது திருவடிக்கீகைக்கும் ஆசிரியரதிபக்குவத் தன்மைக்கு முள்ள வொற்றுமைப் பொருத்தம் விளக்கின வென்க. (இன்னும் வரும்.)

---

# கட்டுரைத் தொகுதி.

---

## I. புத்தகங்கள்.

ஆங்கிலர் துரைத்தனத்தின் பயன்களுள் முக்கியமானதும் மேன்மையானதுமாகிய புத்தகங்களை யாவரும் எளிதிலடைந்து இன்பமடையலாகும்.

புத்தகங்கள் தாம் கோபித்துக்கொள்ளாமலும், அடியாமலும், வையாமலும் கற்பிக்கும் உபாத்தியாயர்கள். அவைகளை நெருங்கினால் உறங்கார்கள். அவைகள் அரிய பொருள்களை எல்லோருக்கும் ஒரே தன்மையாய் மறையாமல் வெளிப்படையாகப் போதிக்கும். புராதன பண்டிதர்களை யொப்ப ஓர் அரிய நூலின் பொருளைத் தம் மாணாக்கர்களுக்கும் சொல்லாமல் மறைப்பதில்லை. தம்மினும் மேன்மையாராவர் என்னும் பயம் இவர்களிடத்தில்லை. புத்தகங்கள் தாம் கூறும் பொருள்களை மாறாகக் கிரகித்தால் பரிகாசம் செய்யாது. அவரவர்கள் நிலைமைக்கேற்ற புத்தகசாலை வைத்துக்கொள்வதே நலம். அத்தகைய புத்தகசாலையின் ஏற்றம் இத்தகைத்தென்று மதித்தல் முடியாது.

படிப்பிற் பிரியமுள்ளயாவரும் புத்தகங்களே உண்மையான நண்பர்களென்று சொல்லுவார்கள். அத்தகைய நண்பர்கள் எக்காலத்தவரும் எத்தேயத்தவருமாயிருப்பார்கள். இந்நண்பர்களை இஷ்டமிருந்தாற் பாராட்டலாம். இல்லாமற்போனால் நீக்கிவிடலாம். சில நண்பர்கள் பழைய காலத்துச் செய்திகளையும், இயற்கையரசியின் இரகசியங்களையும், சிலர் எவ்வாறு



உய்வதென்பதையும், எவ்வாறு இறப்பதென்பதையும், சிலர் நீடித்த வாழ்வை எவ்வாறு அடையலாகுமென்பதையும் கற்பிக்கின்றார்கள்.

எத்தகைய துக்கத்தையும் போக்குவதன்றியும் புத்தகங்கள் சந்தோஷத்தைமேன்மேலும் உண்டாகச் செய்கின்றன. கவிமாரி பொழியுங் கம்பர், திருவள்ளுவர் முதலாயமேகங்களை நாம் பிரியப்பட்டபொழுது வார்த்தையாடச் செய்வது எவ்வளவு ஆச்சரியம்!

மேலும் புத்தகங்களோ யௌவன பருவத்தில் நன்னடக்கையை யுண்டுபண்ணும்; வயோதிகபருவத்தில் காலத்தை யினிமையாகச் செலவழிக்கச் செய்யும்; தனிமையின் கொடுமையினைத் தவிர்க்குந் தமராகி. மிகவுந் திறமையுற்ற புராணிகன் ஒருவன் ஸ்ரீமத் ராமாயணத்தைப் பிரசங்கித்தால் ஸ்ரீராமனது துக்கத்தைத் தமதெனப்பாவித்துச் சனங்கள் அவைகளை யடைகின்றார்கள். வருத்தமில்லாத பயத்தைக் கொடிய செயல்களைப்பற்றிக் கூறும் புத்தகங்கள் நம்மனத்தில் விளைக்கின்றன. நல்ல புத்தகங்களுள்ள இடமே சகல கலாசாலை.

நாம் படிக்கும் புத்தகம் மிகவும் இனிமையாக விருந்தால் உண்ணவும் எழுந்துசெல்ல மனம் வருவதில்லை. முற்காலத்தில் ஏட்டுச்சுவடிகள்தாம் கிடைக்கும். அச்சுவடிகளை மிகவும் விலைகொடுத்து வாங்கவேண்டும். அன்றியுஞ் சில வித்துவான்களிடத்தேதாம் ஏட்டுச் சுவடிகள் கிடைக்கும். அவர்கள் உயிர்போனாலும் அவைகளைப் பிறர் பார்த்துப் படிக்கவும் வேறு பிரதி செய்துகொள்ளவும் மனமொவ்வார்கள். இத்தகைய பண்டிதர்களின் கொடுமதியால் அனேக அருங்கலங்களை நம் தமிழ்மாது இழந்தனள்! இதற்காக நாம் அனைவரும் இரங்கவேண்டியிருக்கின்றது.

புத்தகங்களில்லாத வறையை உயிரில்லா உடலெனப்பாவிக்கவேண்டும். உலக சரித்திரங்களைப் படித்தலால் ஒரு சிறுவன் நரை மூப்பு இவைகள் இல்லாமல் வயோதிகனாகின்றான். வயோதிக பருவத்தால் உண்டாகும் அநுபவம் எளிதிற் படிப்பினால் அடையலாகும்.

படிப்பினால் மேன்மையடைந் தொருவனது சாதிகுலத்தை யாவரும் கவனியார். கல்வியினால் அடையும் கௌரவம் பொருள் முதலியவற்றால் அடையும் மேன்மையினும் பாராட்டத்தக்கது.

பயனற்ற நூல்களைப் படித்தல் தீய நண்பர்களுடன் பழகுவதைப் போலும். மேலானநம் கொள்கைகளையெல்லாம் மாற்றித் துன்பத்தை யடைவிக்கும். நண்பர்களை யாராய்ந்து கொள்ளல்போற் புத்தகங்களையும் ஆய்ந்தெடுக்கவேண்டும். கண்ட புத்தகங்களைப் படித்தல் கூடாது. இப்புத்தகங்கள் தாம் படித்தல் வேண்டுமென்று கூறுதல் இயலாது. எத்தகைய புத்தகங்கள் நம் மனத்திற் கின்ப மளிக்குமோ அத்தகையபுத்தகங்களையே தேடியெடுத்துப் படிக்கவேண்டும்.

நாம் செய்யவேண்டிய கடமைகளை விட்டுப் புத்தகங்களையே சதாகாலம் வாசித்தல் கூடாது. அப்படிச் செய்தால் நகரங்களைத் தீயிற் படுத்த பிறகு கைப்பற்றுதலை யொப்பாமுடியும். இது ஷேக்ஸ்பியர் அபிப்பிராயம்.

புத்தகங்களிற் சிலவற்றை மிகவுங் கவலையாகப் படிக்கவேண்டும். அதிற் கூறிய பொருள்களை நம்மனத்தில் சிந்தித்துத்தெளியவேண்டும். சிலவற்றைக் களைத்தபொழுது மேலாகப் படித்தல்வேண்டும். சில நூல்களிலெல்லாவற்றையும், எல்லா நூல்களிற் சிலவற்றையேனும் படித்தறிதல் முக்கியம். நாம் ஓர் இடத்திலிருப்பினும் பல இடங்களிலும் சஞ்சரிக்கலாம். வேதாந்த நூல்களை யாம் ஆராயப்புகுந்தால் கனவின் தன்மையை யொக்குமேனும் மேலுலகத்தை எளிதிலடையலாகும். செல்வரும் வறியரும் பேதமின்றி நூல்களின் செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளலாகும். ஒரு புத்தகசாலையைச் செவ்வனே உபயோகித்தால் இந்திரன்றன் இனியவாழ்க்கையையும் விரும்பமாட்டோம்.

## II. தேசசஞ்சார வின்பம்.

“ பார்த்த வனைத்தின் பகுதி யானே ”

தேசசஞ்சாரஞ் செய்யச் சாதகங்கள் நம்முன்னோரைப் பார்க்கிலும் நமக்கு அதிகமாயுள்ளன. முற்காலத்தில் மாட்டுவண்டிகளிற் பிரயாணஞ் செய்யவேண்டி யிருந்தது. கள்வரால் நேரும் பயம் அக்காலத்தே அதிகம். இதனாற்றான் நம்மவர்க்குத் தேசசஞ்சாரத்திற் சிறிதும் பிரியமில்லை. மேன்மையான ஆங்கில துரைத்தனத்தால் இருப்புப் பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது குறைந்த பணங்கொண்டு பல தேசங்களையும் சுற்றிப் பார்த்தலியலும்.

தேசசஞ்சாரத்தாற் பயனடைய வேண்டுமாயின் சிலர் நடந்தே செல்லல் வேண்டு மென்கிறார்கள். இருப்புப்பாதையில் ஒரு தேசத்தினின்று மற்றொரு தேசத்திற்குச் செல்வோமாயின் இயற்கையரசியின் எழிலினையும், முக்கியமாய்க் காணவேண்டிய விசேஷங்களையும் பார்க்க முடிவதில்லை யென்கின்றார். தேசசஞ்சாரஞ் செய்பவர்பிழையை இருப்புப்பாதை மேலேற்றிப் புகைவண்டியாற் பயனில்லை யென்னலாகாது. இவைகள் வருத்தமின்றிப் பணச்செல வதிகமில்லாமல் நம் முன்னோர்கள் கேட்டுமறியாத தேயங்களை யதிசீக்கிரத்திலடையச் செய்விக்கின்றன.

விநோதார்த்தம் தேசசஞ்சாரஞ் செய்யச் சக்தியுள்ளவர் வீணேகாலத்தைக் கழிக்கக்கூடாது. எவன் உலகத்தைக் காண்கின்றானோ அவனுடையது இவ்வுலகம். தேசசஞ்சாரத்தால் இன்பமடைய வேண்டுமாயின் முதலிற்றான் சந்தோஷமடையவேண்டும்.

புத்தியற்ற மாந்தர் பயனின்றித்திரிவார்கள். பெரியோர் தேசசஞ்சாரஞ் செய்வார்கள். ஒரு பட்டணத்தை யடைந்ததும் பார்க்கவேண்டிய



பொருள்கள் யாவெனச் சந்தேகஞ் சனிக்கும். அரசர்கள் காரியாசனத்திருத்தலையும், நியாயஸ்தலங்களையும், கோயில்களையும், இறைவன் திருவாபரணங்களையும், கோட்டைமதில் முதலியவைகளையும், துறைமுகங்களையும், ஐதிமுற்ற விடங்களையும், விசித்திரமான தோட்டங்களையும், அவ்வத்தேசத்தவர் விரும்பும் வேடிக்கைகளையும், அவர் நடையுடை பாவனைகளையும், அவர் நாட்டியசாலைகளையும், நடிக்கும் முறைமையையும், கல்விச்சாலைகளையும், படிப்பிக்கு முறைமைகளையும், இன்னு மிவைபோல்வன வற்றையும் கவனமாய்ப் பார்க்கவேண்டியது அவசியம்.

நாம் போகும் ஒவ்வொரு நகரத்திலு மிவ்வளவையும் பார்க்கவேண்டுமாயின் சிறிது பிரயாசை யெடுத்துக்கொள்ளவேண்டி வரும். நாம் செலவழிக்கக்கூடிய சகலத்தையும் பொருளையும் யோசித்தே முற்கூறியவைகளைப் பார்த்தல்வேண்டும்.

தேசசஞ்சாரத்தால் மனமகிழ்ச்சி யடைவதுடன் நோயற்ற வாழ்வையுமடையலாகும். புத்தகங்களிற் பல தேசங்களின் வர்ணனைகளைப்படிக்கலாம். தேசசஞ்சாரஞ்செய்ய வேண்டியதில்லை யென்று சிலர் கூறுவார்கள். எப்படி ஒரு சித்திரத்தின் மூலம் சித்திரத்திலும் மேன்மைத்தோ அப்படி வர்ணனைகளைவிட வர்ணியங்களை நேரிற் போய்ப்பார்ப்பதால் நன்மையுண்டாகும். குற்றாலத்தருகே மலையருவி வீழ்ச்சியைப்பற்றிய வர்ணனையைப் படித்தலாலெய்தும் மகிழ்ச்சியும் நேரிற்காண்டலால் அடையும் மகிழ்ச்சியும் சரியாமோ? ஒருகாலும் ஆகா. புத்தகங்களிற் கூறிய வர்ணனைகளைப் பார்த்த பிறகு வர்ணியங்களை நேரிற் கண்டால் நம்கவனமானம் முற்றும் அப்பொருளின் மேலேயே செலுத்த முடியும். நேரிற்கண்டவர் வர்ணனைகளைப் படித்தால் அவைகளைப் பற்றிய இனிய வெண்ணம் ஞாபகப்படுத்தப் படுகின்றது.

ஆறுகளை நோக்குவதனா லுண்டாகும் மனவெழுச்சி இனைத்தென்று சொல்லுதல் முடியாது. காவிரியின் யாற்றிடைக்குறையிற்றுயிலும் அரங்கனது திவ்விய நகரத்தை யடைந்து காவிரி கொள்ளிடம் ஆகிய இவைகளின் ஆற்றங்கரையில் உட்கார்ந்தனுபவிக்கு மின்பம் இத்தகைத்தென்று கூறுதலும் முடியுமோ?

சில தீராநோய்கள் ஒரு தேசத்தினின்றும் மற்றொரு தேசத்திற்குப் போவதனால் தீருகின்றன. இஃது அனுபவ முறையிற் கண்டது.

இனித்தேசசஞ்சாரஞ் செய்யுமாறு எகும் இளைஞரிற் சிலர் அவ்வத்தேசங்களின் தீய நடவடிக்கைகளை மேற்கொண்டொழுகுகின்றனர் என்று சிலர் கூறுகின்றார்கள். எப்பொழுதும் தீமையும் நன்மையுங் கலந்தே யிருக்கும். புத்திமான்களே தீமையை யொழித்து நன்மையை மேற்கொள்வார். ரோஜாமலரைப் பறிக்கவேண்டுமானாற் கிளைகளில் முட்களிருக்கின்றனவென்று பறியா தொழிதல் மூடத்தனமன்றோ?

தேசசஞ்சாரஞ் செய்யாதவர் தம் நாட்டில் இன்பமடையார். நிழலி னருமை வெய்யிலிற் சென்ற பிறகே தெரியுமாபோல வேறு நாடுகளைக்கண்ட பிறகே தம் நாட்டிற் சுகம் மாந்தர் அடைவார்கள்.

சீதாபதி.

## புத்தகக் குறிப்புகள்.

**நீலா** :—இப்பெயர் வாய்ந்த புத்தகமொன்று நமது பார்வைக் கனுப்பப் பட்டது. இது அருணாசலய்ய ரென்பவரா லாயது. இதை நாவல் என்று கூறுதல் பொருந்தாது. ஒரு தமிழ்க் கதையென்றே சொல்லவேண்டும். இக்கதை படிப்படியாய் வளர்ந்திலதாயினும் படிப்போர்க் கொருவகை யின்பமளிக்கும். இப்புத்தகத்திலாங்காங்கு சில சொற்பிழைகளு மெழுத்துப்பிழைகளும் பொதிந்து கிடைத்தலால், "மேலுமேலு மிவ்வழியே முயற்சிசெய்ய," விருப்புமையர் இனியாகிலும் கவனித்துத் தக்க பண்டிதர்களி னுதவிபெற்று நல்வழிப்படுவாரென்று நம்புகிறோம்.

**விவேகபாநு** :—இப்பெயரிய மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை யொன்று திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடியில் ஸ்ரீ கணபதி யானந்தசுவாமி யென்பவரால் சென்ற மாசந்தொடங்கிப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. இப்பத்திரிகையின் இரண்டாம் புத்தகம் நமது பார்வைக்கு அனுப்பியதற்காகப் பத்திராதிபர்க்கு வந்தன மளிக்கின்றோம். இதில் முக்கியமாய் மதவிஷயத்தினைக்குறித்துப் பற்பல மதத்தினர்க்கும் உடன்பாடானவற்றை யெடுத்துத் தெள்ளிய நடையில் கற்றோரும் மற்றோரும் அறிந்து ஆனந்தங்கொள்ளுமாறு எழுதப்பட்டுவருகிறது. இத்தகைய பத்திரிகையொன்று எப்புறமும் சென்றுலாவவேண்டுவது ஆவசியகமே. இதற்குரியோரனைவரும் இடைவிடாமல் முயன்று இது நாடோறும் விர்த்தியடையத்தக்க ஏற்பாடு செய்வார்களென நம்புகிறோம்.

## சமாசாரக் குறிப்புகள்.

**ஞானபோதினிப் பதிப்புகள்** :—ஞானபோதினியி லவ்வப்போழ்து தோன்றும் விஷயங்களைச் சிறுநூல்களாகப் பிரசுரஞ் செய்யுமவசியம் நேரிடின் அவை யிப்பெயரானழைக்கப் படும். இது முந்தித்தோன்றியது இது பிந்தித்தோன்றியது என்று அறியும்படி அவற்றிற்கு எண்ணமுந் தரப்படும். இப்பொழுது **பர்த்ருஹரி**, **தமிழ்க்கவி சரிதம்** என்னும் நூல்கள் பதிப்பிக்கப்பெற்று வருகின்றன. வெளிவரும்போது பர்த்ருஹரி முதலெண்ணமாயும் தமிழ்க்கவி சரிதம் இரண்டாவதாயும் வரும். பர்த்ருஹரி இயற்றினோர் சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர், ம-ா-ா-ஸ்ரீ கா. கோபாலாசாரியர் அவர்கள். தமிழ்க்கவி சரிதம் இயற்றினோர் சென்னை பிரெஸிடென்ஸி காலேஜ் புரொபஸர் ம-ா-ா-ஸ்ரீ, **தி. மி. சேஷகிரிசாஸ்திரியாரவர்கள்.**

OFFICE ... BOOKS. 12 DEC. 1900 MADRAS.

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900ளு நவம்பர்மீ 20உ {புத்தகம். 4.

## § பாரத ஸாரம்.

"நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராஜன் மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக வங்கூரெ ழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ."

"சீத நாண் மலர்க் கோயின் மேவுசெந் திருவி னுபகன் றேவ நாயகன்
வேத நாயகன் பூத நாயகன் விரத நாயகன் விபுத நாயகன் [நினைந்
போத காதிபன் முதலை வாயிடைப் பொறைது ளர்ந்துமுன் பொதுவி லே
தாதி மூலமே-யென்ன முன்வரு மாதி நாயக னடிவ ணங்குவாம்."

### அத்தியாயம். II. (ஆதிபருவம்)
### பாரதவீரர்களி னிளமைப் பருவம்.

(90-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு குரு புத்திரர்களுடைய அரங்கேற்றம் முடிந்ததும் துரோணர் தம்மாணவர்களாய அவர்களை யழைத்து "எனக்கு நீங்கள் குருதக்ஷிணை கொடுக்கவேண்டாமா? நீங்கள் (பாஞ்சால தேசாதிபதி தனக்கிழைத்த தீச்செயலைக்கூறி) பாஞ்சாலதேசத்தின் மீது படையெடுத்துச் சென்று அதனரசனாகிய துருபதனைத் தேர்க்காலிற் பிணித்து அவனுயிர்க்கொரு குறையும் நேரிடச்செய்யாது என்னிடம் கொண்டுவந்து விடுங்கள்," என்று சொன்னதும் கௌரவர்களும் பாண்டவர்களும் உடனே படையெடுத்துச் சென்று பாஞ்சாலன் நகரை நாற்புறமும் வளைத்துக்கொண்டார்கள். துருபதன் இதைக் கேள்வியுற்று யுத்தசன்னத்தனாய்த் துரியோதனாதியர் சூழ்ந்திருந்த பக்கஞ்சென்று அவரனைவரையும் வெருட்டி ஓடும்படிச்செய்து பாண்டவரிருந்த பக்கஞ்சென்றான். துருபதனுடைய தேர்வீரர், யானைவீரர், குதிரைவீரர்,

§ ADAPTED FROM MRS. ANNIE BESANT'S **MAHABHARATA.**

அனைவரையும் பாண்டவ ரைவருஞ்சேர்ந்து பதாதிகளாக்கி அவர்களையும் ஏறுதிகளாய்ப் பறக்கடித்ததும் அரசனே பாண்டவரைவராகிய புலிகளின் வாயி லகப்பட்டுக்கொண்ட ஆட்டைப்போன்று அலமந்துநிற்க அர்ச்சுனன் அவனைத் தேர்க்காலிற்கட்டித் தனது ஆசிரியர் துரோணர் முன்னம் கொணர்ந்து நிறுத்தினான்.

துரோணரோ கோபமென்பது சிறிதுமின்றி அகமலர்ந்து அவனைப்பார்த்து இனியவார்த்தை சொல்லத் தொடங்கினார். "உன்னுயிருக்குப் பயம்வேண்டாம். ஆயினும் அது உன்பகைவனாகிய என்கையிற்றானிருக்கிறது. இப்போதாவது முன்னிருந்த சிநேகத்தை நினைத்து அதை மறுபடி விருத்திசெய்ய எண்ணமுண்டோ உனக்கு? உன் உயிருக்கு ஹானிவாராது. பயம்வேண்டாம். பிராமணருக்குரிய முக்கியகுணம் மற்றவர் குற்றங்களை க்ஷமித்து அவரைக்காத்தல்தான். என் தகப்பனார் ஆசிரமத்தில் நாம் பற்பல வித்தை கற்று அன்று பிரிந்ததுமுதல் நாளுக்குநாள் நாம் வளருவதுபோல் உன்னிடம் எனக்கிருந்த நேசமும் அன்பும் வளர்ந்துகொண்டே வந்தது. ஓ க்ஷத்திரிய ஸிம்மமே! யான் வேண்டுவது உன்னுடைய சிநேகந்தான். வேறொன்றும் வேண்டாம். நீ இப்போது தோற்றுப்போனதால் உன்னுடைய இராஜ்ஜியமுழுதும் என்னுடையதே. எனக்குவந்த குருதக்ஷிணை இது. யான் விரும்பின் முழுதும் உனக்குத் திரும்பவுங் கொடுத்துவிடலாம். ஆயினும் உன் சொல்லே உனக்குக் கூற்றாய் நிற்கின்றது. அரசனல்லாதவன் எப்படி அரசனுக்குச் சிநேகனெனக் கூறிக்கொண்டு வரலாம்! என்று என்னை இகழ்ந்தா யல்லவா? நம்மிருவருடைய சிநேகம் பாலியசிநேக மாயிற்றே; அது என்றைக்கும் நிலைபெற்றிருக்க வேண்டாமா? மேலும் நாம் வாசிக்கும்போதே எனக்குப் பாதிராஜ்ஜியம் கொடுப்பதாக மனமகிழ்வுடன் வாக்குதத்தம் செய்தாயல்லவா? பிறகு என்னுடன் பேசுவதற்கும் நாணினையன்றே? ஆகையினால் நான் பாதி இராஜ்ஜியத்தை வைத்துக்கொள்கிறேன்,

'அன்றெனக்கு நீயிசைந்த வவனிபாதி யமையுமற்
றின்றுனக்கு நின்றபாதி யான்வரைந்து தருகுவன்
குன்றெனக்கு விற்றிலங்கு கொற்றவாகு வீரனே
யுன்றனக்கு வேண்டுமென்ன வுயிரும்வாழ்வு முதவினான்.'

உனக்குப் பாதிகொடுக்கிறேன். வளப்பம் பொருந்தியதும் பாகீரதியின் தென்புற முள்ளதுமான தேசத்திற்கெல்லாம் நீ அரசனாயிரு. அதற்கு வடக்கிலுள்ள இராஜ்ஜியமெல்லாம் என்னுடையதா யிருக்கட்டும். நான் பேருக்குமாத்திரம் அரசனாயிருந்தால் போதும். உன்சிநேகந்தான் வேண்டும். உன்னுடைய விருப்பம் யாது?" என்னலும் அரசன் தலைவணங்கி உயிர்நின்றதே போதுமெனத் திரும்பிப்போனான். தன்னை யவமதித்தவனாகிய துருபதனுக்குத் தக்க தண்டனை செய்தனுப்பிவித்தார் துரோணரும்.*



தன்னெஞ்சே தன்னைச்சுட்டும், துருபதன் தன்னூர் சேர்ந்து தன்னைத் தேர்க்காலிற் கட்டிக்கொண்டுபோன விஜயன் கழுத்தைக் கட்ட ஒரு கன்னிகையும் தன்னை அவமானம் செய்த துரோணர் கழுத்தைவெட்ட ஒரு வீரனும் தனக்குப் பிறக்கவேண்டுமென்னு மவாவுடையவனாய் ஆரியர்களை அழைத்து விசாரித்து புத்திர காமேட்டியாகஞ் செய்தான்.

'நறுகட் குருவின் தலைதுணிக்கத் தகவோர் மகவுந் தனஞ்சயன்றோ
ளுறுகைக் கொருபூங் கன்னியையும் பெறுவான் வேண்டி யுற்றிரந்தான்.'

அவ்வேள்வியினின்றும் தான்விரும்பிய புத்திரனையும் புத்திரியையும் பெற்றான். திஷ்டத்துய்மன், திரௌபதை என்பன முறையே அவர்தம்பெயர். துரோணரைப் பதினைந்தாநாள் பாரதயுத்தத்திற் பூர்த்திசெய்தவன் இவன். இவளோ அசுரர் குலமழியச் சீதை தோன்றியவாறு அரசர்குலம் முடியத் தான்தோன்றி தன்குழலும் அவர் தம்குலமும் ஒருங்கே முடித்தவள்.

(இரண்டாமத்தியாயம் முற்றிற்று.)

## § அத்தியாயம். III.

(பாண்டவர்களுக்குவந்த ஆபத்துக்களும், அவற்றின் நிவாரணமும், அவர்தம் ஜயமும்.)

பாண்டவரும் துரியோதனாதியரும் அஸ்திர சஸ்திரப்பயிற்சியில் மிக்க தேர்ச்சியடைந்து கொஞ்சநாளைக்குள் மகா வீரர்களானார்கள். அவர் தம் இளமைப்பருவமும் எளிதிற் சென்றது. தக்க

* ஆதிபருவம் 135 - 140. § ஆதிபருவம் தொடர்ச்சி.

காலத்தில் திருதராஷ்டிரர் தமது தம்பியின் தனயனாகிய தர்மருக்கு, தைரியம், மனஉறுதி, பொறுமை, ஈகை, கபடமின்மை என்னும் மித்தளைய நற்குணங்கள் பற்பல அதிகமாய்ப் பொருந்தியிருந்ததனாலும், அரசிளங் குமரர்க்கெல்லாம் இவற்றிலும் மற்றெவற்றிலும் மேம்பாடுடைமைபற்றியும் இவரே தமக்குப்பின் னரசுக்குரியரென விளம்பரஞ்செய்தார். இவ்வாறு தருமருக்குத்தான் பட்டமென நிச்சயமானதும் தம்முடைய நற்குண நன்னடைகளினாலும், ராஜரீகம் நடத்துந் திறமையினாலும் தம் 'தந்தையினும் மிக்கோ' னெனப் பல்லோராலும் கொண்டாடும்படியாய் விளங்கினார் தருமர். தர்மருடைய சகோதரரனைவரும் பற்பல திக்கிலும் படையெடுத்துச்சென்று ஜெயங்கொண்டு பல அரசர்களிடத்தும் திறைகொண்டு மீண்டனர். இவர்தம் இராஜ்ஜியமும் முன்னினு மிப்போது அதிக விஸ்தீரண மடைந்து விட்டது. பாண்டவர்களுடைய வீரத்தன்மையும் அவர்கள் நாடோறும் பெறும் ஜெயமும் கேள்வியுற்ற நாள்முதல் திருதராஷ்டிரன் பொறாமை மேற்கொண்டு இரவிலும் தூங்காமல் இதே சிந்தனையா யிருந்தான். * இவனுக்கு அழுக்காறு எவ்வளவு அதிகரித்துக் கொண்டுவந்ததோ அதனினும் அதிகமாய் அதிகரித்தது பாண்டவர்களுடைய செல்வமும், புகழும். இவர்களிடத்தில் ஜனங்களுக்கிருந்த விருப்பமும் வினயமும் அப்படியே யதிகரித்தன. ஐவர்தமக்குள் ஒற்றுமையும் அன்பும் ஆர்வமும் அதிகமாயிருந்தன. கண்ணில்லாததனாலிதைக் காணப்பெறாது கேட்கப்பெற்று, புறக்கண்ணில்லாததோடு அகக்கண்ணு மில்லாதவனாய் அழுக்காறுடையனாய்த் தன் பிள்ளைகள் மாத்திரம் இச்சூரியர் முன் மின்மினிபோலத் தோன்றுகின்றார்களே என்னும் ஏக்கங்கொண்டு தன் துன்மந்திரிகளில் ஒருவனாகிய கணிகன் என்பவனை அழைத்து அவனுடனிதைப்பற்றி ஆலோசிப்பானாயினான். அவனும் இதைக்குறித்து ஒருகதை கண்ணிலானுக்குச் சொல்லத்தொடங்கினான்:— "அரசர்க்கரசே! ஒருகாலத்து ஒருகாட்டில் ஓர் நரி வாசஞ்செய்துகொண் டிருந்தது. இதற்குச் சினேகதர்களோ கீரியும் எலியும் ஓநாயும் ஓர் புலியும். ஒருநாள் ஒரு மான் அக்காட்டில் மேய்ந்து இரைவேண்டிய அளவுகொண்டு ஓர் மரநிழ

* ஆதிபருவம். § 141.



லில் படுத்துறங்கியது. அதைப் பிடிக்கும் நிமித்தம் அந்நரி எலியை அழைத்து 'நீ அதன் காலைக்கடி' என்றது. மற்றொரு சினேகிதனாகிய புலியை அழைத்து 'நீ அந்த மான் தூக்கத்தினின்றுந் துள்ளிக்குதித்து ஓடும்போது ஒரே பாய்ச்சலாய் அதன் மீது பாய்ந்து அதனைக்கொல்' என்றது. மான் மாமிசமும் இந்த யுக்தியினால் போஜனத்திற்குத் தயாராய்விட்டது. நரி தன் சினேகிதரெல்லாரையு மழைத்து "ஸ்நானம் செய்துவிட்டு வாருங்கள். அதுவரையில் இதை நான் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேன்." என்றது. இதை நம்பி எல்லாம் ஸ்நானத்திற்குப் போய்விட்டன. இதுவோ உளவறிந்த நரி. ஸ்நானத்தை முடித்துக்கொண்டு புலியானது முன்புவந்தது. வந்தவுடன் நரி அதை நோக்கி "புலியண்ணா! எலியானது தன் உதவினால் தான் இந்த ஆகார முனக்குக் கிடைத்ததென பெருமைபாராட்டிக் கொள்கிறது" என்றது. இது சொல்வதற்குள் தன்னுடைய பராக்கிரமத்திற்கு இது ஏற்றதன்றென்னு மெண்ணங்கொண்டு "இவ்விரை எனக்குவேண்டாம்" என்று வேறே தனக்கு இரைதேடப் போய்விட்டது. பிறகு எலிவந்தது. அதனைநோக்கி "எலித்தம்பி! இங்கே கீரிப் பங்காளி யிருக்கிறான். உன்னை உடனே கொன்று பங்கிட்டுக்கொள்ளுவான்." என்றுசொன்னதும் அது பயந்து ஓட்டம் எடுத்தது. ஓநாயும் தன்னிடத்து புலி கோபத்துடனிருக்கிறதென்று நரி சொல்லக்கேட்டு நடுக்கங்கொண்டு வந்தவழியே நடந்துவிட்டது. கீரி இரையை நாடி வந்ததும், நரி அதைப்பார்த்து 'மற்ற மூவருடனும் போர்புரிந்து வென்று அவர்கள் வெந்நிடச்செய்தேன். நீ எனக்கெவ்வளவு!' என்று சொன்னதும் அது பயந்து பறந்து போய்விட்டது. பிறகு நரியோ சுவஸ்தமாய் மானை ருசிபார்த்துத் தின்று கொண்டிருந்தது.' இதைப்போன்று அரசர்களும் தங்கள் பகைவர்களை சமயம் பார்த்து சாம பேத தான தண்டமென்னும் சதுர்வித வுபாயத்தால் வென்று தாம் ஜயமடைதல் வேண்டும்." என்று சொல்லி இதன் கருத்துக் கியைய நடத்தல் நலமென்றான் கணிகன்.

ஜனங்கள் தருமனை மிகவும் புகழ்ந்து அவர்தாம் தங்களுக்கு அரசராக வேண்டுமென்பதைப் பலவிதத்திலுஞ் செவியுற்றுத் துரியோதனன் மிக்க வியசனமுமுற்று; தன் தந்தையிடஞ் செ

ன்று, "தாங்கள் தக்க காலத்தில் கவனிக்காவிடின் அரசுரிமை பாண்டு வமிசத்தினர்க்கே போய்விடும். ஆகையால் இப்போது அவர்களுக்கு நல்லவார்த்தை சொல்லி தந்திரமாக அவர்களை வாரணாவதத்திற்குப் போம்படி ஏற்பாடுசெய்து விடல்வேண்டும். எனக்குப் பட்டமான பிறகு வேண்டுமானால் ஐவரும் அவர்தம் தாயும் இங்குத் திரும்பிவரலாம்." என்றான் துரியோதனன். ஆயினும் அரசனுக்கு அவர்களிடத்தில் யாதொரு குற்றமும் புலப்படவில்லை. ஆகையால் வேறொரு விதமாய்த் தன்னெண்ணத்தையும் தன் பிள்ளையினது வேண்டுகோளையும் நிறைவேற்ற முயன்றான். அவர்களை அரசன் அழைத்து வாரணாவதத்தில் சிவபிரானுக்கு நடக்கும் உற்சவத்திற்குப்போக விருப்பமிருந்தால் அதற்குத்தக்க ஏற்பாடு செய்வதாய்ச் சொல்லவே அவனது நோக்கமறிந்து "போகமாட்டோம்" என்று சொல்வதற்கஞ்சி, போவதாக ஐவரும் ஒத்துக்கொண்டார்கள். துரியோதனன் தனது துன்மந்திரிகளான துச்சாதனன், கர்ணன், சகுனி முதலியவர்களுடன் கலந்து யோசனைசெய்து ஐவருடைய உயிர்க்கு ஹானி வரும்படியான ஏற்பாடு செய்ய ஆரம்பித்தான். புரோசனன் என்னுமொருவனுக்கு இலஞ்சங்கொடுத்து வாரணாவதத்தில் ஒரு பெரிய மாளிகை கட்டும்படி செய்தான். அம்மாளிகை முழுதும் சணல், குங்கிலியம், அரக்கு முதலிய திரவியங்களாலானது. பாண்டவர்களை அதிலிருக்கச்செய்து பிறகு யாருக்குந் தெரியாது நெருப்பு வைத்துக் ஐவரையும் கொன்று சாம்பராக்கிவிடலாமென்பது அவனுடைய எண்ணம்.

தருமர் அஸ்தினபுரியைவிட்டு வாரணாவதத்திற்குத் தன் தம்பிமாருடனும் தாயாருடனும் புறப்பட்டபோது அவ்வூராரெல்லாம் இவரைப் பின் சென்று தாங்களும் அவருடன் வந்துவிடுவதாக முறையிட்டார்கள். தருமர் அவர்களை நோக்கி "உங்களுடைய அன்புக்கு மிக்க களிப்படைந்தோம். அரசனை நாம் நம் தந்தையாக எண்ணல் வேண்டும். அவனிடத்துப் பக்தியும் பயமும் விசுவாசமுமிருத்தல்வேண்டும். அவன் நமக்கெல்லாம் தலைவன். அவன் சொற்படி நடத்தலே நம்முடைய கடமை. அரசன் சொற்படி நான் இப்போது போகிறேன். நீங்களு மிங்கேயே யிருந்து அவன்



சொற்படி நடத்தல்வேண்டும். கூடிய சீகிரத்தில் நானும் திரும்பி வருவேன்" என்று அவர்களைத் தேற்றித்திருப்பி அநுப்புவித்தார். தருமருடன் விதுரரும் கொஞ்சதூரம் பின் சென்று புத்திமதிகளைச் சொல்லி மற்றவர்களுக்குத் தெரியாத ஒரு பாஷையில் துரியோதனனுடைய துர்க்குணத்தையும் துற்செயலையும் எடுத்துக்காட்டி தர்மரைக்குறித்து "ஏ தர்மா, எஃகினாற் செய்திராத ஆயுதத்தை நம்பாதே. ஒருவன் தீயினின்றும் தப்பித்துக்கொள்ள வேண்டுமானால் தன்னுடைய கிரகத்தைக் குள்ளநரியினது வீட்டைப்போன்று செய்துகொள்ளல். (அதாவது வெளிவருவதற்கு அநேக வழி வைத்துக்கொள்ளல்) வேண்டும். நான்கு பக்கமும் சுற்றிப்பார்த்தால் வேண்டியவழி தெரியும்" என்னவும் அவர் தம் குறிப்பை குறிப்பா யுணர்ந்துகொண்டார். புதியநகரை அடைந்ததும் புரோசனன் தான் சமைத்துவைத்த மாளிகையில் அவர்களைத் தங்கும்படி வந்து வேண்டவே அவ்வேண்டுகோளுக்கிணங்கி அங்கு தங்குவதாக ஒத்துக்கொண்டார். ஆயினும் சந்தேகம் அவரைவிட்டு நீங்கவில்லை. விதுரர் மொழியும் தன் விழிக்கெதிரிலேயே நின்று கொண்டிருந்தது. வெளிவழிகள் தெரியும் வண்ணம், தினமும் வேட்டைக்குப் போம்போது இதைக்குறித்துக் காட்டிற்கேகும்வழிகளைக் கவனித்துவருவாராயினர், கடைசியில் விதுரரிடமிருந்து வந்திருந்த ஒருவனைக் கொண்டு ஓர்பாதை தனது பள்ளியறைக்கும் வேட்டையாடிவரும் காட்டிற்குமாகச் செய்து கொண்டார்.

இவ்வரக்குமாளிகையில் ஒருவருஷகாலம் ஐவரும் குந்தியும் வசித்துக்கொண்டு வந்தார்கள். தீவர்த்தி வைப்பதற்கு வழி பார்த்துக்கொண்டே யிருந்தான் புரோசனனும். அவனிலும் சாமர்த்தியமுடையனாய் அவனுக்குமுன் தயாராயிருந்தான் பீமன். ஒருநாள் இராத்திரி குந்திதேவியானவள் அநேக பிராமணர்க்குப் போஜனம் செய்துவித்தாள். அன்றிரவு அவ்விடத்திற்கு ஒரு வேடுவச்சி தன்னைந்து பிள்ளைகளோடும் வந்து சேர்ந்தாள். விருந்துண்டு அயர்ந்து அங்கேயே படுத்துறங்கிவிட்டார்கள் இவர்கள். இவர்களிருந்த சங்கதி பீமனுக்குத் தெரியாது. புரோசனனுறங்கிக்கொண்டிருந்ததுதான் தெரியும். அவன் வைக்க வெண்ணியிருந்த தீயைத் தானே வைத்து நான்கு பக்கமும் தீ மூன்

டதைக் கண்ணுற்று தன் தமையன் தம்பிமார் தாய் என்னுமிவர்களைத் தன்முதுகிலும் தோள்களிலுமாகக்கொண்டு சுரங்கவழியாய்க் காட்டை யடைந்து விதுரரிடமிருந்து வந்திருந்த தூதனை அவ்விடங்கண்டு களிகூர்ந்து அவன் தயாராய் வைத்திருந்த படகிலேறி கங்கையைக் கடந்து தென்புறஞ்சென்று மற்றவர்களைத் தூங்கச் செய்து தான் காவல் காத்துக்கொண்டிருந்தான். இதற்குள் அரக்குமாளிகை எரிகிறதைக்கண்ட அவ்வூரார் அதனைச் சூழ்ந்து அணைக்கமுயன்றும் முடியவில்லை. மறுநாட் காலையில் சாம்பரான மாளிகையின் மத்தியில் புரோசனனுடைய எலும்பும் மற்றைவருடைய அஸ்தியும் அகப்பட்டது. அவ்வூராரெல்லா மதிக துக்கத்துடன் அதைக்கொண்டு அஸ்தினபுரிக்குச்சென்று அரசன் முன்பாக வைத்து நேரிட்டதைச் சொல்லி அழ ஆரம்பித்துவிட்டார்கள். இவர்கள் இப்படிச் சொல்வதற்குமுன் அரசன் அழுததற் களவில்லை. அவன் சுதன் துரியோதனனு மப்படியே. அங்குள்ள மற்றனைவரும் அழவே விதுரரும் அழுதார். ஆயினும் அவருக்கு அவ்வளவு துக்கமில்லை அரக்குமாளிகை எரிந்ததின் உண்மை யறிந்தவராதலின்.* குருட்டரசன் அழுதது தான் அதிக விசித்திரமானது.

மேற்சொன்னவாறு கங்காநதியின் தென்கரையில் அடர்ந்த காட்டிடத்து தர்மர் முதலாயினோர் நித்திரைசெய்துகொண்டிருக்க அவர்களைப் பீமன் தன் கண்கொட்டாமல் காத்துக் கொண்டிருந்தான். இக்காட்டில் அநேகநாட் செல்கையில் ஓர் நாளிரவு இடும்பாசுரன் என்னுமோ ரிராக்கதன் நரர்களுடைய வாசனை வருவது கண்டு தன் தங்கையை யேவிப் பார்த்துவரச் சொன்னான். அவள் அங்குவந்து பலாட்டியனும் வச்சிர யாக்கையனு மிருந்த பீமனைக் கண்டு அதிக மோகங்கொண்டாள். அவர்களைக் கொல்லவேண்டுமென்னும் எண்ணம் பறந்துபோய் விட்டது. அவள் அவனுக்கு உடனே தன் தமையனால் நேரிடப்போகிற தீங்கை எடுத்துரைத்துக்கொண்டிருக்கையில் இடும்பனென்னுந் தன் தமயனும் அவளைத்தேடி அங்குவந்து சேர்ந்து தங்கையைக் கடிந்து அவளையும் அவள்தம் சிநேகிதர்களையும் கொல்வதாகத்† தன்னிராக்கதத் தொண்டையுடன் சொல்லிக்கனை

* ஆதிபருவம். † 113-152.



த்தான். அவளும் நடுக்கங்கொண்டாள். பீமன் அவனைப்பார்த்துச் சிரித்து "அப்பா தம்பி! நில், நில், அங்கேயேநில்! சுகமாய்த் தூங்குகிறவர்களை எழுப்பிவிடாதே. வேண்டுமானால் என்னுடன் நில் யுத்தத்திற்கு" என்று சொல்லி ஒரு குதி குதித்து இராக்கதன்மீது பாய்ந்து தூங்குகிறவர்களுக்கு நித்திரைபங்கம் வாராது வெகுதூரத்தில் அரக்கனை இழுத்துக்கொண்டு போய்விட்டான். இருவரும் குஸ்திக்கு ஆரம்பித்துவிட்டார்கள். பிறகு இவர்களும் பக்கங்களிலிருந்த செடி கொடி மரம் மட்டை கல் கட்டி என்னுமிவைகளைவாரி ஒருவர்மேலொருவர்எறிந்து அகோரமாய்ச்சண்டை செய்கையில் தூரத்தில் சப்தம் கேட்டு விழித்துக்கொண்டு பீமனைக்காணாது அவனைக்கூவி அழைத்தார்கள். அதற்குள் அவனும் சண்டையை சீக்கிரம் முடிக்கும்வண்ணம் இடும்பனைத் தூக்கிபந்துபோல் ஆகாயத்தில் வீசி எறிந்தான். கீழே விழுந்ததும் அவன் முதுகு இரண்டாய்ப் பிளந்துபோய்விட்டது. சாதுக்களாகிய ஜனங்களுக்கு ஹிம்சை செய்துவந்த பலாட்டிய துஷ்டர்களை ஒழிக்கும்வண்ணம் பீமன் இதைப்போன்ற அநேக சண்டைகள் இதற்குப்பின்பு செய்யவேண்டி வந்தது. துஷ்டர்கள் பூமியிலதிகரித்து உபத்திரவஞ்செய்யுங்கால் அவர்களழிந்து படும் வண்ணம் தேவர்கள் பீமனைப்போன்றவர்களை யனுப்புவிக்கிறார்கள். சாதுக்களையும் பலமில்லாதவர்களையும் துஷ்டரினின்றுங் காப்பாற்றுவது தான் பீமனுடைய முக்கிய கடமை.

இடும்ப னிறந்ததும் அவன் தங்கையான இடும்பி இராக்கத ரூபத்தை யொழித்து அழகுவாய்ந்த ஓர் மானிட ரூபங்கொண்டு பீமனுக்கு நாயகியாய் அவனுக்குக் **கடோத்கசன்** என்னும் ஒரு பிள்ளையைப் பெற்றாள். பாண்டவர்களுக்குப் பற்பல சமயங்களில் இவன் மிக்க உதவியாயினான். பிறகு சின்னாள் பாண்டவர்கள் அக்காட்டிற்றங்கி வேட்டையாடி சீவனஞ்செய்துகொண்டிருக்கையில் வேத வியாசர் இவர்களிடம் வந்து இவர்களை **வேத்திரகீயம்** (முந்நூற்று மங்கலம்) என்னும் சிற்றூர்க்குக் கொண்டுபோய் அவ்விடத்து ஓர் பிராமணர் வீட்டிலிருத்தித் தாம் திரும்பிவருமளவும் அங்கிருக்கலாமென்று சொல்லிப்போய் விட்டார்.

(இன்னும் வரும்)

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

# உடலுள வியைபு.

ஆத்மதத்துவநூலை நன்கு கற்றறிந்தோர் உளத்தைச் சித்துப்பொருளெனவும், உடலை அசித்து அல்லது சடப்பொருளெனவுங் கூறுகின்றனர். உடலுளமாகிய இவை தம்முளுள்ள இயைபினை நோக்குமுன்னர் இவற்றின் றன்மையை நோக்குதல் சால்புடைத்து.

இவ்வுளநூலைப் பயின்ற பலர் இவற்றின் றன்மையைத் தத்தம் மனத்துக்கேற்பப் பல்வேறு வகையான் வரையறுத்துக் கூறுவாராயினர். இச்சாத்திரத்திற் றேர்ச்சிபெற்றவருளொருவராகிய **டிச்செனர்** * என்பார் 'மனமென்பது எண்ணம் உணர்ச்சி விருப்பம் ஆகியவிவற்றின்றொகுதியே' எனக் கூறியிருக்கின்றனர். இவ்வரையறையை யாம் ஏற்புடைத்தாகக் கொள்ளிற் பஞ்சேந்திரிய வாயிலான் யாமுணரும் சுவை, பரிசம், ஒளி, நிறம் முதலியவற்றின் றொகுதியையே சடப்பொருளெனக் கூறவேண்டியிருத்தல் காண்க. ஆனால் இச்சுவை பரிசமென்பன சடப்பொருளின் காட்சியேயென்பதும், ஒரு பொருளின் காட்சியையே அப்பொருளாக மதித்தல் குற்றமென்பதுஞ் சிற்றறிவுடைய பேதையர்க்குமெளிதிற் புலப்படும் விடயமே. சடப்பொருளின் றன்மையை நன்குணராத நாம், நாமுணருஞ்சுவை பரிசம் ஒளிநிறமுதலிய காட்சியாற் சடப்பொருளொன்றுண்டிருத்தல் வேண்டுமெனத் துணிதல்போல, மனத்தை நாம் நேரே பார்த்தலரிதாயினும் அதன் புறக்காட்சிகளாய எண்ணம் உணர்ச்சி விருப்பமுதலியவாற்றான் மனமெனு மொன்றுண்டென நாம் துணிகின்றோம். ஆதலின், எண்ணம் உணர்ச்சி விருப்பம் முதலிய மனத்தின் காட்சியேயென்பதூஉம் மனமல்லவென்பதூஉம் பெற்றாம். **பார்க்லே**† யென்னும் பெயரிய மற்றொருவர் இதனினும் பெரிதும் வேறுபடுவர். இவர் சடப்பொருளின்மையைக் கூறுவான்றொடங்கி, நாம் சடப்பொருளின் காரணத்தா லுண்டாவனவாய்க் கருதும் சுவை பரிசம் ஒளி நிற முதலியவை இப்பிரபஞ்சத்தைச் சிருட்டித்த முழுமுதற் கடவுளின் விருப்பத்தின் காரணத்தாலுண்டாவனவென முடியாநிற்பர்.

உடலுளமாகிய இவற்றின் றன்மையைக் கூறுமிடத்துப் பலர் பல்வேறபிப்பிராயத்தினரா யிருப்பினும் இவ்விரண்டின் கண்ணும் மிகவும் நெருங்கிய வொற்றுமையுளதெனக் கூறுதல் யாவர்க்குஞ் சம்மதமாயிருக்கின்றது. இவ்வொற்றுமை யித்தகையதென வரையறுத்துக்கூறுமுன்னர் இஃதுளதென யாவருமுணர்தற்குக் கருவியாய சில நியாயங்களை முன்னர்க் கூறுவாம்.

* Titchener † Berkeley.



உடலிற்கு முளத்திற்கு மொற்றுமையுளதெனத் தெரிவிக்கும்அத்தாட்சிகளுட் பல நம்முடைய அனுபவத்தினு லறியற்பாலன. மானுடர் தம் வயதிற் கேற்பமுதிர்ந்த அறிவுடையராதலும், தத்தந் தேகநிலைக்குத்தக்க நுண்ணறிவுடையராதலுமே தேகத்திற்கும் மனத்திற்குமுள்ள வொற்றுமையைக் குறிப்பதற்குத் தக்க சான்றாவன காண்க. இவற்றுண் முதற்கூறியது யாவர்க்குந் தெரிந்த விடயமே. நாம் செய்யுங் காரியங்களுள் இவை செயற்பாலன, இவை செயற்பாலன வல்லவெனத் தீர்மானிக்குந் திறன் குழந்தைகளிடத்திற் காண்கிலோம். இத்தகைய சத்தி மானுடர் வயது முதிர்ந்துழிப் பெறுவரேயன்றி, இளம்பிராயத்தின் கண்ணே பெறுதலிலர். பின்பு, தக்க பிராயமடைந்துளோர்க்குங் குழந்தைகளுக்குமுள்ள வேற்றுமை யாது? அவர்கள் இக்குழந்தைகளைக் காட்டிலும் பருத்த தேகத்தையுடையவர்களாதலு மன்றிப் புத்திவிசாலத்தையுடையவர்களாதலு மன்றோ? இளம்பிராயத்திற் குழந்தைகள், நாமவர்களைத் தமக்குத் தீங்கு பயப்பனவற்றைச் செயச்சொல்லினும் அவற்றைச் சிறிதேனும் யோசியாது செய்து எளிதின் மோசம்போதலும், அவர்களே வயது முதிர்ந்துழி யித்தகைய தீச்செயல்களுக் கிணங்காராதலுங் காண்க. இவ்வுண்மை பெரும்பாலாரிடத்திற் காணற்பாலது. நாகரிகமுங் கல்வியென்பதுஞ் சிறிதேனுமில்லாது அஞ்ஞானமாகிய விருளான் மறைக்கப்பட்டுள பேதையர்களிடத்து இவ்வுண்மையைக் காண்டலரிது. இவர்கள் வயது முதிர்ந்துழியும், மற்றவர்களைப் போலாது, குழந்தைப் பருவத்துள்ள பேதைத்தன்மையையே மேற்கொண்டு தங்காலத்தைக் கழியாநிற்பர். ஆதலினிவர்களுக்குங் குழந்தைகளுக்குமுள்ள அறிவினை நோக்குமிடத்துச்சிறிதேனும் வேற்றுமையின்மைகாண்க. பின்னர் இரண்டாவது அத்தாட்சியாக் கூறியதென்னையெனில் நமது புத்தியின் முயற்சியானது நந்தேக வியல்புக்குத்தக்கவாறுளதென்பதே. இதுபற்றியே நாம் நோயினுற் றுன்புறுகாலையில்நமது புத்தியை யொரு காரியத்தின் கண்ணே மிகுதியுஞ் செலுத்தி அதற்குத்தக்க முடிவெய்தல் மிகவுமரிது. இஃதன்றி நாம் சத்தியற்று இளைப்பாற் களைத்திருக்குங்காலையில் எக்காரியத்தின் கண்ணும் நம்புத்தியைச் சிறிதேனு முபயோகித்தலரிதாதல் காண்க. அன்றியும் நமது தேகக்கிளர்ச்சியானது காலைப்பொழுதும் மாலைப்பொழுது மதிகரித்துப் பகற்பொழுதிற் குறைதலையொக்க, நம் உள்ளக்கிளர்ச்சியுங் காலைப்பொழுதும் மாலைப்பொழுதுமாகிய விரண்டினு மதிகரித்துப் பகற்பொழுதிற் குறைகின்றது. இனி மேற்கூறிய வொற்றுமையைக் காட்டிலுந் தேகத்தினோருறுப்பாய மூளைக்கும் மனத்துக்குமுள்ளவொற்றுமை மிகவுஞ் சிறப்புடைத்தென்பது பின்னர் வரும் அத்தாட்சிகளா னெளிதிலறியற்பாலது. அவற்றுட்சில:—

(1) புதிதாய்ப்பிறந்த குழவியின் மூளையானது அதன் ஏழாமாண்டுவரையும் விரைவாகவும், பின்பு நாற்பதாமாண்டுவரையுஞ் சிறிது சிறிதா

கவு மதிகரிப்பதுமன்றி, இப்பருவ மடைந்தபின்னர் பத்துவருடத்துக் கொருமுறை சிறிது குறைதலுமுடைத்து. மானுடர் தம்மூளையினளவுக்குத் தக்க புத்திவிசாலமுடையராவ ரென்பது அனேகருடைய கொள்கை. அறிவிலிகளுடைய மூளை மிகவுஞ் சிறிதென்பது யாவராலு மங்கீகரிக்கப்பட்டவிடயம்.

(2) நமது புத்தியை யொரு காரியத்தின்கண்ணே யூன்றி நெடுநேரம் நாம் யோசித்துக்கொண்டிருந்தால், இக்காரிய முடிந்தபின்னர் நமக்கு ஒருவிதத் தலைவலி யுண்டாதலையும், நமது மூளையி னிலைமை சிறிது வெப்பத்தினா லுயர்தலையுங் காண்கின்றோம். இவ்வித மிடைவிடாது நமது புத்தியைச் செலுத்துங்கால், அதற்கேற்ப நமது மூளையிலுதிரம் பரவுதற்கு வேண்டிய வுணவு தேடவேண்டியிருத்தலும், அற்றேல் நாம் புத்தியை யுபயோகித்தலே அரிதாதலுங்காண்க.

(3) நமது மூளை பல பிரிவினையுடைத்தாய்ப் பிரிவுகடோறும் பல பெயர்களினால் வழங்கப்பெறும். இவற்றுட் சிறந்தன சிந்தனைக்கருவி* தசையியக்கக்கருவி † உயிர்நிலைக்கருவி § என்னுமிம்மூன்றே. இவற்றுண் முன்னையது தலையின் முற்புறத்தும் பின்னையது பிற்புறத்துமுள. முற்புறத்துள்ளதாகிய ஸெரிப்ரமென்பது பல பிரிவினை யுடைத்து. நாம் இதன் முற்புறத்திற்றுக்குறின் ஞாபக சத்தியையும், பிற்புறத்திற் காட்சியையும், உச்சியில் விருப்பத்தையு மிழக்கின்றோம்.

(4) நாம் பகலிலுழைத்தலா லுண்டாமிளைப்பி னிமித்தம் இரவில் நித்திரைபோகின்றோம். ஆயினும், நாமிரவிற் கண் விழிக்கவேண்டியிருப்பின், அங்ஙனமே நமது விருப்பமானது தேகத்தளர்ச்சியை மேலிட்டு, இரவினுங் கண் விழிக்கச்செய்விக்கின்றது. இக் கண்விழித்தலால் நாம் கருதிய தொழிலைப்புரிவதுமன்றி, அத்தொழிலில் நாமுபயோகிக்கும் புத்திக்குத்தக மூளையின்கண் இரத்தம் பரவுதலையுமுடையோம். ஆதலின் நம் விருப்பத்தினால் மேற்கூறிய தொழில்களைப் புரியவல்லோம்.

இத்தகைய அத்தாட்சிகளானுடலிற்கு முளத்திற்கு மொற்றுமையுளதென யாவருமொருங்கே துணியினும், இச்சம்பந்த மித்தன்மைத்தென வரையறுத்துக் கூறுவதில் வேறுபடுவர். இச்சாத்திர முணர்ந்த சிலர் உடலுளமாகிய விரண்டு மொன்றெனவும், சிலர் இவை பெரிதும் வேறுபாடுடைய இரண்டு வெவ்வேறு பொருள்களெனவும் மாறாய கொள்கையராவர். **பெயின்** ** என்பவர் உடலுளமாகிய விரண்டும் வெவ்வேறாய இரண்டு தொழிலையுடைய ஒரே பொருளெனவும், ஹக்ஸ்லி †† என்பவர் நாமெல்லோரும் அறியுந்தன்மையையுடைய யந்திரங்களை யொப்ப

* Cerebrum. † Cerebellum. § Medulla Oblongata.
** Bain. †† Huxley.



மெனவும், இக்கொள்கையையேயுடைய வேறு சிலர் இவை ஒரு காகிதத்தி னிரண்டு பக்கங்களை யொப்பவெனவுங் கூறுகின்றனர். ஆகையால் மேற்கூறியோர் உளத்தின் றொழிலும் யாக்கையின் றொழிலுமொன்றெனக் கொள்ளும் ஏகேச்சுரவாதிகளாவர். சிலசமயத்தில் மனத்தினுதவியின்றியே யாக்கையின்றொழிலும், யாக்கையின் றொழிலின்றியே மனத்தின்கண் விருப்பமும் நிகழ்தலானும், இம்மனம் யாக்கையாகிய விரண்டிற்குமுள்ள வொற்றுமையையே சிறந்தகாரணமாக்கொண்டு இவர்தம்மதத்தினை நிலைநிறுத்துதலானும், இவர்தங்கொள்கை சால்புடைத்தன்றென்பது யாவரும் எளிதி லறியத்தக்கதே. இக்கொள்கையை மேற்கொண்டவர்களே யிரண்டு பாகுபாட்டினையுடையராவர். ஒருசாரார் லோகாயதமதத்தினர் அல்லது சடமாயா வாதத்தினரெனவும், மற்றொருசாரார் மானதபூசையை மேற்கொண்டாரெனவும் பெயர் பெறுவர்.

லோகாயத மதத்தினர் கொள்கையாதெனில் உலகத்திலுள்ளது சடப்பொருளொன்றேயென்பதும் நாம் மனமெனக்கொள்வது இச்சடப்பொருளின் மற்றோருருவம் அல்லது பலனேயென்பதுமாம். இக்கொள்கையானது ஆத்மதத்துவநூலைப் பிராணிநூலோடு ஒரு தன்மைப்படுத்துவதைக் காண்க. அஃதாவது, ஈரல் * என்பது பித்தநீரைப்பிலிற்றல்போல மூளையானது எண்ணங்களைப் பிலிற்று நீர்மைத்தென்பதாம். இக்கொள்கைக்குக் கற்றோர் பின்வரு மிரண்டாக்ஷேபங் கூறுவர்.

i. மூளையின் றொழிலானது நரம்பினோடு சம்பந்தப்பட்டுளதேயன்றி, எண்ணங்களை நோக்குமிடத்துச் சிறிதேனுஞ் சம்பந்தப்பட்டிலதென்பதும்.

ii. இக்கொள்கையை நாம் ஏற்புடைத்தாகக் கொள்ளின், நம்மையந்திரத்திற் கொப்ப மதிக்கவேண்டி நாம் சுயேச்சையா யொரு காரியத்தையுஞ் செய்யத் திறனற்றவர்களாகின்றோ மென்பதைக் குறித்தலான், இஃதுண்மையன் றென்பதுமாம்.

பின்பு† **மானத பூசை**யை மேற்கொண்டாரது கொள்கை யாதெனில் இப்பூமியிலுளது மனமொன்றே யென்பதும் நாம் சடப்பொருளெனக் கூறுவது மனத்தின் வெளியுருவமே யென்பதுமாம். இக்கொள்கையையே மாயாவாதமெனவுங் கூறுவர். இதுவு மேற்புடைத்தன் றென்பது பின்வரு மாக்ஷேபங்களாற்புலப்படும்.

i. இக்கொள்கையை யாமுண்மையென மதிப்பின் வெளிப்பொருளின்றியே மனத்தின்கண் எண்ணம் நிகழுமெனக் கொள்ளவேண்டியிருத்தல் காண்க. ஆனால் நமதெண்ணம் வெளிப்பொருளின் காணத்தானே யன்றி, தாமே யுதித்திலவென்பதை நம்முடைய அனுபவத்தினால் நாமறிகின்றோம்.

* Liver. † Spiritualism.

ii. சடப்பொருளொன்றே பூமியின்கண் வியாபித்துள தெனக்கொள்ளின், மனத்தைக்குறித்து நமக்குள்ள வபிப்பிராயங்களும், வேறுபடாது, ஒரே பொருளினைக் குறித்து நமக்குண்டா மபிப்பிராயத்தை யொத்தல்லவோ இருத்தல் வேண்டும். அவை யங்ஙனமில வென்பது யாவருமெளிதிலறியுந் தன்மைத்தே.

ஆதலின் ஏகேச்சுரவாத மேற்புடைத்தன் றென்பதூஉம் உடலுளமென்பன விரண்டும் வெவ்வேறு பொருள்களென்பதூஉம் பெற்றாம். **பிளேடோ** * **அரிஸ்டாடில்** † ஆகிய இவர்களுக்கு முன்னிருந்தோர் இவ்விருபொருள்களுஞ் சடப்பொருளின் றன்மையுடையன வென்றெண்ணியிருந்தனர். பிறகு **பிளேடோ** வென்பவ ரிக்கொள்கையின் குற்றத்தை வெளிப்படுத்தி, இவற்றுண்மனத்தைச் சித்துப்பொருளெனவும் யாக்கையைச் சடப்பொருளெனவுங் கூறி, இவ்விரண்டும் வெவ்வேறு குணத்தையுடைய இருவகைப் பொருள்களென்றுங் கொள்கையை நிலைநிறுத்தினர். பின்பு இவ்விருபொருள்களு மொன்றோ டொன்றொத்து நடத்தலைச் சற்றோர் பின்வருமாறு கூறுகின்றனர்:—

1. மூளையிலுண்டாந் திரிபிற்கொத்தகச் சடப்பொருளின்கண்ணுந் திரிபுண்டாதலா லிரண்டு மொப்ப நடக்கின்றனவென வொருசாரார் கொள்கின்றனர். இக்கொள்கையைச் சிறப்புடைத்தென மேற்கொண்டாருள் **டேகார்ட்** ‡ என்பவரும் அவர் தம்மாணாக்கரும் அடங்குவர். இவர் சித்துப்பொருளிற்கும் சடப்பொருளிற்கும் யாதொரு சம்பந்தமு மிலதென்றும், அப்படி ஏதேனுஞ் சம்பந்த மிருப்பினும் அது கனலிற்கும் பனிக்கட்டிக்குமுள்ள சம்பந்தத்தை யொக்குமென்றும் அறைவர்; இவர் பொதுப்பட இங்ஙனங் கூறியிருப்பினும், மனிதனை நோக்குமிடத்து மனத்திற்கும் யாக்கைக்குமொருவித சம்பந்தமுள தெனவும், அச்சம்பந்த மிவ்விருபொருளின் றன்மையா லுண்டாகாது, கடவுளின் விருப்பத்தின் காரணத்தாலுண்டாமெனவுங் கூறுவர். நாம்செய்யு மொவ்வொருகாரியமும் கடவுள் விருப்பமிருப்புழி நிகழ்வதாக்கொள்ளினும், இக்கொள்கை மாறுகொளக்கூற லென்னும் வழுவினை யுடைத்தாம். ஏனெனில் இக்கொள்கையர் முன்னை மனத்திற்குஞ் சடப்பொருளிற்கும் யாதொரு சம்பந்தமு மிலதென மறுத்துப் பின்னைச் சகல அண்டங்களிலும் புகழ்பெற்ற சித்துப்பொருளாகிய கடவுட்குஞ் சடப்பொருளிற்குஞ் சம்பந்தமுள தெனக் கூறுகின்றனர். ஆதலின் இவர் முன்னர் மறுத்தவிடயத்தையே பின்னர் நாட்டுகின்றவராவர். இக்காரணத்தால் இக்கொள்கையும் நிலைநிறுத்தப்படாது தாழ்தல் காண்க.

2. மேற்கூறியதி னின்றும் மாறுபா விக்கொள்கை யாதெனில், மனத்தின் கண் நிகழ்வன மூளையின் காரணத்தா லென்பதூஉம், இம்மூளையின் மூலமாய் மனமானது யாக்கையின் றொழிற்குக் காரணமா மென்பதூஉ-

* Plato † Aristotle ‡ Descartes,



மாம். சிலர், உடலுளமாகிய இவை இரண்டுஞ் சடப்பொருளாயும் அல்லது இரண்டுஞ் சித்துப்பொருளாயு மிராது, ஒன்று சடப்பொருளாயும் மற்றொன்று சித்துப்பொருளாயு மிருத்தலால், இக்கொள்கை காரண காரியத்தைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் நியாயத்திற்கு மாறாயிருப்பதெனக் கொண்டு, இதை மறுக்கின்றனர். ஆனால், இவ்விரண்டு மொருதன்மையனவாய பொருளாயிராவிடினும், ஒருதன்மையனவாய நியாயங்களை மேற்கொண்டுநடத்தலால், இக்கொள்கைக்கு மாறா யிருப்பதாகக் கூறப்பட்ட நியாயத்தையும் இஃது ஒருவாறு பூர்த்திசெய்தல் காண்க. விருப்பமானது தேகத்தளர்ச்சியையு மேலிட்டு நாம் செய்யக்கருதுந் தொழிலைச் செய்விக்குந்திறனைத்தருதல், நோயின் காரணத்தால் மனத்தை யொருதொழிலினிடத்தே யூன்றி அத்தொழிலைச் செய்யமுடியாமை ஆகிய இவைகளான் உடலிற்கும், உளத்திற்கும் மிகவும் நெருங்கிய வொற்றுமை யுளதென யாவருமெளிதிலுணருமாற்றலுளர். ஆதலின், இக்கொள்கை சிறப்புடைத்தென யாவராலுங் கோடற்பாலது.

சி. என். சரவண முதலியார்.

---

## நாடக விலக்கணச் சுருக்கம்.

---

III-ஆம் சம்புடம் 475-ஆம் பக்கத்தொடர்ச்சி.

இப்படிப்பட்ட வஸ்து (கதை)வானது திவ்யம்(தேவதைகளுடையது) மார்த்தியம் (மனிதர்களுடையது), மிச்ரம் (அவையிரண்டுங் கலந்தது) என மூன்று விதங்களா யிருக்கும்.

பிரக்கியாதமான அந்த வஸ்துவானது தர்மம், அர்த்தம், காமமென்னும் திரிவர்க்க (மூவகை)ப் பயன்களைக் கொடுக்கும். அவ்வாறு கொடுக்கப்படும் பயன் ஒன்றாகவும், அதன் சம்பந்தமாகவும், இரண்டாகவும், மூன்றாகவுங் கூட இருக்கும்.

வஸ்துஸ்வரூப நிரூபணம் முற்றிற்று.

### வஸ்துவின் அங்க நிரூபணம்.

மேற்சொல்லிய வஸ்துவினுக்கு அங்கங்களாயும் காரியஸித்தி ஹேதுக்களாயும் (காரியம் நிறைவேறுதற்குக் காரணங்களாயும்), இருக்கப்பட்ட 1. பீஜம், 2. பிந்து, 3. பதாகை, 4. ப்ரகரி, 5. காரியம் எனும் அர்த்தப் பிரகிருதிகள் ஐந்துள,

மரத்திற்கு விரையைப்போல முதன் முதலிற் கொஞ்சமாய் உத்தேசிக்கப்பட்டுப் பிறகு கிரமமாய் அநேக விதங்களாக வளர்கிற காரியகாரணம் **பீஜ**மெனப்படும்.

**ரத்நாவளியில்.**—இளவரசன் இரத்நாவளியை யடைவதற்குக் காரணமாகிய யௌகந்தராயனுடைய காரியம் ஆரம்பத்திலேயே குறிப்பிக்கப்பட்டது. யௌகந்தராயன்.—"சந்தேகமேன்? நமக்கநுகூலமாயுள்ள தெய்வம் தீவாந்தரங்களிலிருந்தேனும், சமுத்திரத்தினடுவி லிருந்தேனும், திகந்தங்களி னின்றேனும், விரும்பிய பதார்த்தத்தைத்தந்து கொடுக்கும்..." இதில், அரசனுடைய விருத்திக்குக் காரணமாய்ச் செய்யப்பட்ட யௌகந்தராயனுடைய பிரயத்னம் பீஜமாகும்.

**வேணீஸம்ஹாரத்தில்.**—திரௌபதியின் தலைக்கூந்தலை முடிப்பதற்குக் காரணமாகிய பீமசேனனுடைய கோபாபிவிருத்தியினால் தர்மராஜாவுக்குண்டாகிய உற்சாகம் பீஜமாகும்.

ஒரு காரியத்திற்கு மற்றொரு காரியத்தினால் விச்சேதம் (இடையூறு) உண்டான காலத்து, அந்தக்காரியம் இடைவிடாது நடக்கச் செய்வதற்குக் காரணமாயிருக்கும் பிரயத்னம் **பிந்து** வெனப்படும். இஃது அவாந்தர (நடுவில் நேர்ந்த) பீஜம் என்பதற்குப் பிரதிபதமாய்க் கொள்ளத்தகும். நீரின் மீது எண்ணெய்த் துளியைப்போல் இது பரவுவதனால் இதற்குப் பிந்து வெனப்பெயரிடப்பட்டது.

**ரத்நாவளியில்.**—நடுவிற் செய்யப்பட்ட மன்மத பூஜை யென்னும் காரியம் ஆனபிறகு கதையின் பிரயோஜனத்திற்கு இடையூறு உண்டான காலத்துப் பின் நடக்கவேண்டிய காரியத்திற்குக் காரணமாகிய "சந்திரனுடைய பாதங்களை (கிரணங்களை)ச் சேவிப்பதற்கு (அனுபவிப்பதற்கு) எதிர்பார்ப்பது போல, உதயனராஜாவின் பாதங்களை (அடிகளை)ச் சேவிப்பதற்கு (பூஜிப்பதற்கு) அரசர்களெதிர் பார்க்கின்றார்கள்" என்னும் வார்த்தையை ஸாகரிகையானவள் கேட்டு, "எவருக்கு என் தந்தையினால் நான் கொடுக்கப்பட்டேனோ அந்த உதயன மகாராஜா இவரே" என்று (சொல்லிக்) கொள்வதனால், நடக்கவேண்டிய கதையின்பிரயோஜனத்திற்கு அது காரணமாகின்றது.

விசேஷதூரம் வரைக்கும் வரும்படியான உபகதை **பதாகை** எனப்படும். **இராமாயணத்தில்** ஸுக்ரீவாதிகளின் விருத்தாந்தம் பதாகைக்குதாரணமாகும்.

கொஞ்சதூரம் வரைக்கும் வரும்படியான உபகதை **ப்ரகரி** எனப்படும். **இராமாயணத்தில்** ஜடாயு, சிரமணாதிகளின் விருத்தாந்தம்ப்ரகரிக்குதாரணமாகும்.



முக்கியமான பயனை நிறைவேற்றுவதும் கடைசிக் கதையின் அவயவமானதுமா யிருக்கிற பிரயோஜனம் **காரிய**மெனப்படும்.

பயனை விரும்பியவர்களால் ஆரம்பிக்கப்படும் காரியத்திற்கு 1. ஆரம்பம், 2. பிரயத்னம், 3. பிராப்தியினாசை, 4. நியதாப்தி, 5. பயனுறல் என்னு மவத்தைகளைந்துள.

இதனை யெவ்விதத்தேனும் சாதிப்பேனென்று யாதேனு மொரு பெரிய காரியத்தை யுற்சாகத்துடன் மேற்கொள்ளல் **ஆரம்பம்** எனப்படும்.

அவ்வாரம்பத்தினால் விரும்பிய பயன் நிறைவேறாவிடின் அது நிறைவேறுவதற்குத் தகுந்த வுபாயங்களைத் தேடுதல் முதலாகிய அவசரத்துடன் கூடிய வியாபாரம் **பிரயத்னம்** எனப்படும்.

உபாயத்தினாலும் அபாய சங்கையினாலும் (யாதேனும் தீங்கு நேரிடுமெனும் பயத்தினாலும்) இஃதிவ்வாறென்று நிச்சயிக்கக்கூடாத பலப்பிராப்தி (பயனுறல்) யினாலாகிய ஆசை **பிராப்தியினாசை** எனப்படும்.

தீங்கு நேருமெனும் சந்தேக மில்லாமல் நன்றாய் நிச்சயிக்கப்பட்ட ஏகாந்த பயனது பிராப்தி **நியதாப்தி** எனப்படும்.

பூர்த்தியான பயன் பிராப்தியாவது **பயனுறல்** எனப்படும்.

### ஸந்திபஞ்சக ஸ்வரூப நிரூபணம்.

**ஸந்தி** என்பது ஒரு பிரயோஜனத்திற்குச் சம்பந்தப்பட்ட கதையின் பாகங்களுக்கு வேறொரு பிரயோஜனத்துடன் சம்பந்தமாம்.

அர்த்தப் பிரகிருதிகளாகிய (கதையின் சரீரத்திற்குக் காரணங்கள்) 1. பீஜம், 2. பிந்து, 3. பதாகை, 4. ப்ரகரி, 5. காரியம் என்னப்பட்ட ஐந்தும் கிரமமாய் (முறையே) அவஸ்தாபஞ்சகமாகிய (ஒரு பயன் சித்திப்பதற்கு ஏற்பட்ட நாயக வியாபாரங்கள் ரூபமான உபாயங்களின் ஸ்திதி விசேஷங்கள் ஐந்தாகிய) 1. ஆரம்பம், 2. பிரயத்னம், 3. பிராப்தியினாசை, 4. நியதாப்தி, 5. பயனுறல் என்பவைகளுடன்கூடுமாயின் 1. முகம், 2. பிரதிமுகம், 3. கர்ப்பம், 4. அவமர்சம், 5. உப ஸம்ஹாரம் என்னும் ஸந்திகள் ஐந்தும் ஆகும்.

அநேகமான பிரயோஜனங்களினாலும், ரஸங்களினாலும் உண்டாகிய பீஜத்தின் உற்பத்தி **முகஸந்தி** எனப்படும் (இதனோடு பீஜாரம்பங்களுக்குச் சம்பந்தமுண்டு.)

பீஜம், ஆரம்பம் ஆகிய இவ்விரண்டின் சம்பந்தத்தினால் (இவ்விரண்டுங் கலப்பதனால்) இந்த முகஸந்திக்கு 1. உபக்ஷேபம், 2. பரிகரம், 3. பரிந்யாஸம், 4. விலோபனம், 5. யுக்தி, 6. பிராப்தி, 7. ஸமாதானம், 8. விதானம், 9. பரிபாவனை, 10. உத்பேதம், 11. பேதம், 12. கரணம் எனப்பன்னிரண்டு அங்கங்களுண்டு.

முன் சொல்லப்பட்ட லக்ஷணங்களுள்ள பீஜத்தை நிலைக்கச்செய்தல் **உபக்ஷேபம்** எனப்படும்.

**ரத்நாவளியில்.**—"அநுகூலமான தெய்வம் தீவாந்தரங்களினின்றேனும், சமுத்திரத்தி நடுவிலிருந்தேனும், திகந்தங்களிலிருந்தேனும், விரும்பிய பதார்த்தத்தைச் சீக்கிரமாய்த் தந்து சேர்க்கும்" என்று திரைக்குள் யௌகந்தராயன் வத்ஸராஜனுக்கு (இளவரசனுக்கு) ரத்நாவளி கிடைப்பதற்குக் காரணமாகிய தெய்வாநுகூல்யமுள்ள தன்னுடைய வியாபாரத்தை (தன்காரியத்தை) "பீஜத்துவ"த்தினால் இங்கு ஸ்தாபித்தான்.

அந்த பீஜம் விஸ்தரித்தல் **பரிகரம்** எனப்படும்.

**ரத்நாவளியில்.**—"அப்படி இல்லாவிடின் சித்தருடைய உபதேசத்தின் மீது நம்பிக்கையினால், விரும்பப்பட்டதும், கப்பல் உடைந்ததனால் சமுத்திரத்தில் முழுகி மிதந்ததுமாகிய செப்பப்பலகை ஸிம்மளேசுவரனுடைய புதல்விக்கு அகப்படுவது எங்கே" என்பது முதலாய் "எல்லா விதத்திலும் நமது அரசனுக்கு மங்களமாகின்றது" என்பது வரைக்குமுள்ள வாக்கியங்களினால் அந்த பீஜமே வளர்த்திச் சொல்லப்படுவதனால் இது "பரிகரம்."

அந்த பீஜத்தின் நிறைவேற்றம் **பரிந்நியாஸம்** எனப்படும்.

பீஜத்திற்கு அநுகுணங்களாகிய குணங்களை வர்ணித்தல் **விலோபனம்** ஆகும். விலோபனம்=ஆசையுண்டாக்குதல்.

பீஜத்தின் பிரயோஜனம் யுக்தமானதென்று நிச்சயித்தல் **யுக்தி** ஆம்.

சுகத்தின் வரவே **பிராப்தி** எனப்படும். மனதுக்குச் சுகம் தோற்றுவது "பிராப்தி" யாம்.

பீஜத்தின் வரவு (தோற்றம்) **சமாதான** மெனப்படும்.

எதனாற்சுகமுந் துக்கமு முண்டாகுமோ அதனைத் தெரிவித்தல் **விதானம்** ஆம்.

**வேணீஸம்ஹாரத்தில்.**—திரௌபதி பீமஸேனனைப்பார்த்து, "நாதா, திரும்பிவரும் உம்மால் நான் சமாதானப்படுத்தப் படவேண்டும்" என்றதற்குப் பீமஸேனன், "ஓ பாஞ்சாலவரசனது புத்திரீ! இனிவெறும் சமாதானத்தினாற் பிரயோஜன மென்னை? யுத்தத்தில் கௌரவர்களெல்லாரையும் பாக்கியின்றிக் கொல்லாமல் அவமான மிகுந்து லஜ்ஜைகொண்டு வாடின முகத்துடன் கூடிய பீமஸேனனை நீ இனிப்பாராய்" என்பதனால் யுத்தம் சுகத்திற்கும் துக்கத்திற்கும் காரணமாதலின் இது "விதான"மாயிற்று.

பீஜத்தைக்குறித்து மிகுந்தஆச்சரியகரமானவார்த்தைகளைச்சொல்லிப் பிரவசமடைவது **பரிபாவனை** எனப்படும்.



ரஹஸ்யத்தை வெளியிடுதல் **உத்பேதம்** எனப்படும். ரகசியமான பீஜத்தை வெளியிட்டுச் சொல்லுதலாம்.

பீஜமாயிருக்கப்பட்டது விருத்தியடைவதற்குத் தகுந்த விதமாய்ப் பிரேரேபித்துச் சொல்லுதல் **பேதம்** எனப்படும்.

**வேணீஸம்ஹாரத்தில்.**—திரௌபதியானவள் பீமஸேனனைப் பார்த்து "நீர் எனது வியாகுலமே காரணமாய்ப் போர்புரியப் போகின்றீர். ஜாக்கிரதையாய்ச் சண்டைசெய்யுங்கள். சத்துருக்கள் பலசாலிகளாம்" என்பது முதலாய்ச் சொன்னதற்குப் பீமசேனன்தன்னுடைய பிரதாபங்களை யெடுத்துரைத்து அவளுடைய மனதிலிருந்த குரோதத்தை உற்சாகப்படுத்தி (விருத்திசெய்து) பேசினான். இது "பேதம்" எனப்படும்.

பீஜத்திற்குத் தகுந்த காரியத்தை ஆரம்பித்தல் **கரணம்** எனப்படும். பீஜமான விஷயம் முடிவுபெற்றுப் பயன்தருவதற்குத் தகுந்த காரியத்தைச் செய்ய முயலுவதாம்.

மேற்கூறிய பன்னிரண்டு அங்கங்களில் 1. உபக்ஷேபம், 2. பரிகரம், 3. பரிந்நியாஸம், 4. யுக்தி, 5. உத்பேதம், 6. ஸமாதானம் ஆகிய ஆறும் முக்கியமானவை. முகஸந்தியில் இவை ஆறேனு மிருக்கவேண்டியது அவசியமாம்.

(இன்னும் வரும்.)

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

## பௌத்தமதம்.*

---

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஸ்ரீமத் புத்தஸ்ய சாஸ்த்ரம் ஜகதி பஹுவிதம் வர்த்ததே தஸ்யசிஷ்யா:
சத்வாரஸ் ஸுப்ரஸித்தா: ப்ரதமபடிதயோ: புஞ்ஜவாத ஸ்த்வனாரம்
ஸ்தம்ப: கும்பச்ச குட்யம் ஜகதிதமகிலம் ரோத்தரஸ்மின் க்ஷணேஸ்யாத்;
ஞேயம் ஞானமேயம் வததிமுககதஸ் த்வக்ஷகம்யம் பரஸ்து.

* இது இவ்வாசிரியர் வடமொழியிற் செய்திருக்கிற புத்தகத்தின் சுருக்கம்.

ஸ்ரீ புத்தருடைய சாஸ்த்ரம் ஜகத்தில் வெகுவிதமாய் விளங்குகிறது அவருக்கு சிஷ்யர்கள் நால்வர் ப்ரபலமாய் இருந்தார்கள். முதல் இருவரும் பரமாணுக்கூட்டவாதம் செய்தவர்கள். தூண், குடம், சுவர், முதலான ஜகமெல்லாம் உத்தரக்ஷணத்தில் இல்லை என்பார்கள். அறிவினால் ஊஹிக்கப்படுவதே வஸ்துவாவது என்று முதலாவர் சொல்வர். ப்ரத்யக்ஷத்துக்கு வரத்தகுந்தது தான் அந்த வஸ்து என்று இரண்டாவர் சொல்வர். இவ்விருவர் பெயராவன ஸௌத்ராந்திகர், வைபாஷிகர் என்பனவாம். பிருதிவி முதலான பூதங்களினுடைய அணுத்திரட்சியே குடம், தடாகம், நெருப்பு, வாயு முதலிய வெளிப்பொருள்களாம். அதனைத்தவிரத்தடிப்பான பொருள் வேறு ஒன்றும் இல்லை. ஸமஸ்த ஜகத்தும் க்ஷணம் தான் உள்ளது. தீபத்தின் சுவாலைபோல வேலைசெய்யும் தன்மை யுள்ளபடியால் க்ஷணம்தான் இருப்பது. இதுவரையிலும் ஸௌத்ராந்திகர், வைபாஷிகர் இருவரும் ஒத்த அபிப்பிராயப்பட்டவர்கள். குடம் முதலானது தன்சொரூபத்தை அறிவிற் புகுத்திவிட்டு இல்லாமற்போம். அறிவில் அறிவாய்ப் புகுந்த சொரூபத்தாற் சென்றுபோன குடம்முதலானவை ஊஹிக்கப்படுவன என்று ஸௌத்ராந்திகர் சொல்வர். குடம் முதலானவை அறிவுக்கு ப்ரத்யக்ஷமாவன; எல்லாம் ப்ரத்யக்ஷமே என்பது வைபாஷிகர் பக்ஷம். ஸ்கந்தம் என்பது தேகத்திற்குள்ளே ஸங்காதரூபமாக இருப்பது இருவருக்கும் பக்ஷந்தான். வெளி விஷயங்களுடன் கலந்த இந்திரியங்களை ரூபஸ்கந்தம் என்பர். நான் என்றும், இது என்றும், நிர்விகல்பமான அறிவு விஞ்ஞான ஸ்கந்தம். குடம் என்று பிரிந்த அறிவு ஸம்ஞா ஸ்கந்தம். ஆசை முதலான தர்மா தர்மங்கள் ஸ்ம்ஸ்கார ஸ்கந்தம் என்னப்படும். எப்பொருளும் க்ஷணந்தான் இருக்கும், உண்டாகிறது துக்கந்தான் என்ற பாவனையால். சுத்தமான விஞ்ஞான பந்தியே மோக்ஷமாவது. க்ஷணமாயும் துக்கமாயும் இருப்பதை நித்யம் என்றும் சுகம் என்றும் நினைப்பது அவித்தை. அதனால் ஆசை முதலிலுண்டாம். அதனாற் பிரவிருத்தி உண்டாம். அதனால் அதிருஷ்டம் உண்டாம். அதனால் விஞ்ஞானமாகிற ஜீவனுக்குப் போகத்தில் இச்சையுண்டாம். அதன்மேல் திரவியத்திற் பிரவேசம் உண்டாகிறது. அதன்மேல் கர்ப்பநீர் தடிக்கிறது, அதன்மேல் உடல் உண்டாகிறது. அதன்மேல் விஷயவிஞ்ஞான சுகதுக்காதி விஷயத்தில் இச்சை உண்டாகிறது. அதன்மேல் அதை அடையும்படி பிரவிருத்தி உண்டாகிறது. அதன் மேல் மனுஷ்யத்தன்மை முதலான அபிமானம், கிழத்தனம், மரணம், இவைகள் உண்டாம். ஒன்றுக்கு ஒன்று காரணமாயும் காரியமாயும் எப்பொழுதும் ஏற்றம்போலே சுழல்வது. ஸங்காதம் ஆவதற்கு யுக்தி என்பர். சுலோகத்தில் முககத: என்பது ஸௌத்ராந்திகரையும், பர: என்பது வைபாஷிகரையும் குறிக்கும்.



[illegible]
[illegible]
[illegible]
[illegible]

யோகாசார ஸ்த்ரிதியோ நிகிலமபி ஜகத் ஞானபின்னம் நஹிஸ்யாத்
ஞானஸ்யாகாரபேதோ கடபட கடிதம் ஸர்வமேதத் க்ஷணேஸ்யாத்
தஸ்மின் நைராத்ம்ய புத்யா பஹிரிதிவிதிதே வஸ்து மாத்ரே விமுக்தம்
விந்தேத் வித்வான் மஹாத்மா மதமிதமகரோச் சூன்யவாதம் சதுர்த்த:

புத்தர்க்கு மூன்றுவது சிஷ்யர் யோகாசாரர். எதுவும், க்ஷணந்தான் இருக்கும். அறிவில்தான் இருக்கும். வெளிப்பட் டிருப்பதாகத் தோன்றுவது ப்ராந்தி. அந்தப்ராந்திக்கு ஏற்றவிஷயம் இல்லை. இப்படி நைராத்மிய பாவனையால் வெளி விஷயத்தில், இது, அது என்ற ஆலயவிஞ்ஞானம் மாத்திரம் நின்று ஈசுவரன் என்கிற ஸர்வஞ்ஞ விஞ்ஞான பந்தியில் அடங்குவதே மோக்ஷம். இது யோகாசாரர் மதம்.

நாலாவதவர், மாத்யமிகர். அவர் சூந்யவாதர். அதாவது, அதிஷ்டானமின்றியே விஷயப்பிரமம் வருகிறது. விஷயம் க்ஷணந்தான் உள்ளது. வ்யவகாரத்துக்கு வரும். ஆனாற் பொய். நிஜத்தைவிசாரித்தால் சூந்யம் தான் முடிவில் நிலைப்பது. இப்படிப்பட்ட பாவனை செய்து சூந்யத்தியானம் பண்ணி சூந்யமாவதே மோக்ஷமாம்.

திருவிசைநல்லூர் - நீலமேக சாஸ்திரி.

---

## * அத்துவித வாக்கியத் தெளிவுரை.

---

அத்துவித மென்னுஞ் சொல்லில் அகரம் அன்மை இன்மை மறுதலை யென்னும் மூன்றனுள் ஒன்று பயக்கும். அவற்றுள், இன்மைப்பொருள் கொண்ட மாயாவாதி, இரண்டின்மை ஒரு பொருளன்றி இரண்டு முதலியனவா யெண்ணப்படும் பொருள்க ளில்லாமையால், அத்துவிதம் என்னுஞ் சொற்குப்பொருளொன் றென்பதே யாமெனவும், ஒரு பொருளாயினுங் குண குணியின் வேற்றுமை தோன்ற நிற்பிற் கேவலமொன் றுதலின்மை

* இது திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ சிவஞானயோகிகள் அருளிச்செய்த திராவிடமா பாடியத்திலுளது.

யால், அத்துவித மென்ப துபசாரச் சொல்லாய் முடியுமாகலால், தன்னின்
வேறாயொரு பொருளுமின்றித் தானுங் குணமுடைய பொருளென விசே
டிக்கப் படுதலின்றி நிர்விசேடமாய் நிற்கும் பரப்பிரமப் பொருளென்பது
அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருளாகக் கோடலின் அவர்கள் கேவ
லாத்துவிதிகள் எனவும் வழங்கப்படுவர்.

இராமாநுசர் சிவாத்துவித சைவர் முதலோரும் அவ்வாறே யின்மை
பற்றி யொன்றே யெனப் பொருள்கொண்டு, சத்திசங்கற்ப முதலிய குணங்
கள் பரப்பிரமப் பொருளுக் குளவென்று உபநிடதங்கள் கூறுதலானும்,
அவை செய்கை யென்றற்கோ ரியைபின்மையானும், பசுபாச முண்மையு
முபநிடதங்களி னோதுதலானும், அவைகளோடு முரணிக் கேவலாத்துவித
மெனக்கோடல் பொருந்தாமையின், தன்னோடியை யுடைய பசுபாசங்களா
னுந் தன்குணங்களாய •சத்திசங்கற்ப முதலியவற்றானும் விசேடிக்கப்
பட்டு விசிட்டமாய் நின்ற பரப்பிரமம் இரண்டில்லை யென்பதே அத்துவித
மென்னுஞ் சொற்குப் பொருளென விசிட்டாத்துவிதங் கோடலா லவர்கள்
விசிட்டாத்துவிதிக ளெனவழங்கப்படுவர்.

பேதவாதிகள், மறுதலைப் பொருள் பற்றி இரண்டன் மறுதலையாகிய
ஒன்றெனப் பொருள்கொண்டு, அங்ஙனங் கொள்ளவே அவ்வொன்றன் மறு
தலையாகிய இரண்டாவது முண்டென்றற் கிழுக்கின்மையின் அத்துவித
மென்பதுந் துவிதமென்னும் பொருளைப் பயக்குமென்று போவர்.

அவரெல்லா மச்சொற்கு ஒன்றேயெனப் பொருள் கொண்டு தத்த
மதங்களோடு முரணாமைப்பொருட்டுக் கேவலம், விசிட்டம், மறுதலை
யென்னு மடை கட்டி யிடர்ப்பட்டு* ப்பொருள் கொள்வர்; அவருண்
மாயாவாதி கூறுங் கேவலமும் பேதவாதி கூறுமறுதலையுஞ் சுருதியோடு
முரணுதலி னீண்டைக் கேலாவாம்; ஏனையோர் கூறும் விசிட்டம் பொ
ருந்துமாயினும், அத்துவிதத்துக்குப் பொருளொன்றெனக் கோடல் பொ
ருந்தாது; என்னை? ஒன்றென்பது பொருளாயின், ஒன்றெனவே விளங்
கக்கூறவமையும்; அவ்வாறின்றி அத்துவித மென வுய்த்துணர வைத்
தோத வேண்டாமையானும், ஒன்றெனப் பொருள் கொள்ளின் மாவாக்
கியப் பொருள்பயப்பதோர் விசேடமின்மையின், அத்துவித மென்பது
பற்றி யாதொரு பயன்படாமை யானுமென்க. மற்றென்னையோ அத்து
வித மென்னுஞ் சொற்குப் பொருளெனின், சித்தாந்தசைவ ருரைக்குமாறு
காட்டுதும்: "அது நீயாகின்றாய்" எனவும், "அது நானாகின்றேன்"
எனவும், "அது வதுவாகின்றது" எனவு மூவிடம் பற்றி நிகழுந்தத்துவ
மசிமுதலிய மாவாக்கியங்களைக் கேட்டவழி, அது வென்பதொரு பொ

* இடர்ப்படும் என்பதூஉம் பாடம்.



ருள், நீ யென்பதொரு பொருளாகலின், ஒரு பொருண் மற்றொரு பொ
ருளா மாறு யாங்ஙன மென்னுமைய நீக்குதற் கெழுந்ததாகலின் அது
வதுவாதற் கேதுவான் அவ்விரண்டற்கு * முளதாகிய சம்பந்த விசேட
முணர்த்துதலே அத்துவித மென்னுஞ் சொற்குப் பொருளென் றுணர்ந்து
கொள்க.

அற்றேல், அத்துவித மென்னுஞ் சொல்லாற் பெறப்படுஞ் சம்பந்தம்
ஐக்கியமோ, தாதான்மியமோ, சமவாயமோ, சையோகமோ வெனக்கடா
யினார்க்கு, ஆற்று நீருங் கடனீருந் தம்மிற் சேர்ந்தாற் போலவுங் குடாகா
யமு மகாகாயமுந் தம்மிற் சேர்ந்தாற் போலவுமா மெனின், அங்ஙனஞ்
சேர்ந்தவழி யொருபொருளே யாயினும் ஒன்றெனவே யமையும்; அத்து
விதமெனவுய்த் துணரவைத் தோதவேண்டா; அன்றியு மொன்றாயவழி
யதுவது வாய் நின்றறிதலாகிய ஆன்மவிலக்கண முத்திக் காலத்தில்லை
யெனப்பட்டு வழுவாமாகலின் அது பொருந்தாமையானும், குணகுணி கட்
குத் தம்மிலுளதாகிய சம்பந்தம் போலுந் தாதான்மிய மெனில், ஆன்மா
முதல்வனைப் போலக் குணகுணிப் பொருளாய் நிற்பதன்றி முதல்வனுக்குக்
குணமாகாமையான், அவ்வாறியைதல் கூடாமையானும், தாதான் மியத்
தின் வேறாய் நையாயிகர் கூறுஞ் சமவாயு மொன்றின்மை யானும், விர
லும் விரலுஞ் சேர்ந்து நின்றாற்போலச் சையோக மெனின், அவ்வியாவ்
விய விருத்தியாகிய சையோகம் வியாபகப் பொருட்குக் கூடாமையானும்,
யாதானுமோ ரியைபுபற்றிக் கூறப்படுஞ் சொரூப சம்பந்த மெனின், அது
மாவாக்கியப் பொருளை வலியுறுத்தற் கெழுந்த அத்துவிதச் சொற்குப்
பொருளாகாமையானும் † சொரூப சம்பந்த மாத்திரையிற் சிவானந்தத்
தை யநுபவித்தல் கூடாமையானும், இவற்றின் வேறாயின்ன தென்றறிய
வாராத அநிர்வசன மெனின், அங்ஙனங் கூறுதன் மாயாவாதி கூற்றாய்
வழுவாமாகலானும், அவை யெல்லா மீண்டைக் கேலாமையின் வேறு
விடுக்குமா றென்னை யெனிற் கூறுதும்:—ஒரு பொருளை அவயவ அவயவி
களாயாதல், குணகுணிகளாயாதல், வேற்றுமைப்பட்டிரண்டாய் நிற்றற்
கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல இருபொருளே யதுவதுவா
யொற்றுமைப்பட்டு ஒன்றாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமு மெனத்
தாதான்மிய சம்பந்த மிருவகைப்படும்; அவற்றுண் முன்னையது தாதான்
மிய மென்றும், பின்னையது அத்துவித மென்றும் வழங்கப்படும்; அத்து
வித மென்னுஞ் சொல்லியல்பு மேற்கூறிய வாற்றான் வேறுபொருட்டு
மாறின்றி அன்மைப்பொருள் பற்றி யிரண்டென வேற்றுமைப் படாமை
நிற்றலே யாமென்க. இதுவே ஆசிரியர் கருத்தென்பது "அத்துவித மென்
னுஞ் சொல்லேயந்நிய நாத்தியை யுணர்த்து மாயிட்டு" என்றதனானும்

* அவ்விரண்டு என்பதூஉம் பாடம். † ளாகாதானும் எ—ம்.

புடை நூலாசிரியர் "பிரிவருமத்துவித மாகுஞ் சிறப்பினதாய்" என்றுடம் பொடுபுணர்த் தோதியதனு னறிக.

இவ்வத்துவிதம் அபேத சம்பந்தமாகிய ஐக்கியா ஐக்கியமு மன்றிப் பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமு மன்றிப் பேதசம்பந்த மாகிய சையோகமுமன்றிக் கலப்பும், உடனாதலும், வேறாதலு மாகிய மூன்றுந் தன்கட்டோன்றி நிற்றல் பற்றி யம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படுமாகலான், அவ்வத்து விதத்திற் கொவ்வோரிடங்களி "னலை கடலிற் சென்றடங்குமாறுபோல்" எனவும் வானத்தின் வானும் மணத்தின் மணமும் போலெனவும் அபேதவுவமையும் "பண்ணையு மோசையும் போலப் பழமதுவு, மெண்ணுஞ் சுவையும் போல்" எனவும் "நீரு மமுதமும் போலாங் காணரனாருள்" எனவும் பேதாபேத வுவமையும், இரும்பைக் காந்தம் வலித்தாற்போலியைந்து" எனப்பேத வுவமையும் ஒரு புடை யொப்புமை பற்றி யெடுத்துக் காட்டுபவாகலின், இங்ஙன மூரணுவபோல வேறுவேறு பெயரெடுத்துக் காட்டுதல் பற்றி மலையற்க.

இம்மூன்றியல்புந் தன் கட்டோன்ற விவற்றிற்கு வேறாய் நிற்கும் அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையாவது :—ஆன்ம போதமுங் கண்ணொளியுந் தம்முளத்துவிதமாய் நிற்றலா மெனக் "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம் போற், காண வுள்ளத்தைக்கண்டு காட்டலின்" எனவும் "காட்டக்கண்டிடுந் தன்மையுடைய கண்ணுக்கேயு முயிர் காட்டிக் கண்டிடுமா போலீசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவான்" எனவும் "அறி வொளிபோற் பிரிவருமத்து விதமாகும்" எனவு மூன்று நூலாசிரியருஞ் சித்தாந்த முடிவுணர்த்தும் வழியிதனையே யெடுத்துக் காட்டியவாறறிக.

இவ்வத்து விதம் ஏனையோர் போலக் கேவலம், விசிட்டம், மறுதலையென்னுத லொன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலிற் சுத்தாத்து விதமென வழங்கப்படும். ஈண்டுச் சுத்தமென்றது யாதொன்றானும் விசேடிக்கப்படாது நிற்றலை ; அது விசேடத்தைச் "சுத்த சத்தை" எனத் தார்க்கிகர் கூறும் வாய்பாட்டானு மறிக. இங்ஙன மொருபொருள், இருதன்மையான வியாபகமும் வியாப்பியமுமான இருபொரு ளொருதன்மையான் ஒற்றுமைப்பட்டு நிற்குந் தாதான்மிய சம்பந்த மொன்றுண்டெனவும், அதுவே அன்மைப்பொருள்பற்றிய அத்துவித மென்னுஞ் சொல்லான் உணர்த்தப்பட்டதெனவும் அறியப்படாதார் தத்தமக்கு வேண்டியவாறு இவ்வுண்மை யுணர்த்துமன்றி விஞ்ஞான தீக்கையாலுடல் பொருள்களோ டொப்பச் சற்குரவன் கையிற்றானஞ் செய்தளித்த பொருளொன் றறியு மறிவு சலியாமைப் பொருட்டு நாளுஞ் சிவபூசையிற் செபகன்மங்க ளோடொப்பச் 'சிவோ



தாதா' வென்னு மந்திரமோதி ஆன்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூபரோடு தானஞ் செய்தளித்துந் தான் சுதந்திரனே சிவனுடைமை யல்லன், எனப்பிணங்கிப் பரமசற்பாத்திரத்திற்றானஞ் செய்த பொருளை அபகரிக்க நினைக்கும் நினைவுடையாரோடு பேசினு முய்தியில்லதோர் கொடியபாவமென்றொழிக. தன்னைத் தானஞ் செய்தலாவது : தான் சிவனுக்குப் பரதந்திரனென்றறிந்து அவனருளல்லா தொன்றையுஞ் செய்யானாகி நிற்றலேயாமென்றுணர்தல். அற்றேல் மலவாசனை நீங்குதற்பொருட்டுத் தன்னைத் தானஞ் செய்ததாகப் பாவித்தன்மாத்திரையே யாகலின் அது பற்றியிழுக்கென்னை யெனின் :—அங்ஙனமாக. அப்பாவனை போலியோ உண்மையோ வெனக் கடாயினார்க்கு, உண்மை யெனின், பரதந்திரராதற் கிழுக்கில்லை ; போலியெனின் ; பசித்தவன் உண்டான்போல வெத்துணைப் பாவகஞ் செய்யினும் பசிநீங்குதல் கண்டிலமாகலின், அதுபோலப் போலிப்பாவனையான் மலவாசனை நீங்குமாறின்மையின், அது வீண்டொழிலாய் முடியும் ; இன்னும் பாவனை போலியென்பார்க்குப் பாவனை வழியாச் செய்யும் மந்திர கிரியைகளும் போலியாய் முடியும் ; முடியவே, பாவனை முதன் மூன்றானு மவர் செய்யுஞ் சிவதீக்கையும், சிவபூசையும், சிவத்தியான முதலிய வெல்லா வாசாங்களு மங்ஙனம் போலியாச் செய்வது தமக்காயினும் பிறர்க்காயினும் பயன்படுமாறின்மையின் மாணாக்கரை வஞ்சித்துத் தம்முடம்பை யோம்புதற் பொருட்டுச் செய்யுமாரவார மாத்திரை போலு மென்றொழிக.

(இன்னும் வரும்.)

---

## பெண் கல்வி.

---

சோதரர்காள் ! சோதரிகாள் !

எனது சிற்றறிவிற் கெட்டிய சில விடயங்களைச் செந்தமிழ் வல்லோர் பலராற் சிறந்து விளங்கும் இஞ்ஞானபோதினியின் வாயிலான் வெளியிடுவான் றுணிகின்றேன்.

ஒரு விடயத்தினை வெளியிடுந் தன்மையோரெவரும் தன் பொருட்டுக் கூறுதலென்றும், பிறர் பொருட்டுக் கூறுதலென்றும் தன் பொருட்டும் பிறர் பொருட்டுந் தழுவிக் கூறுதலென்றும் ஆகிய இம் முத்திறத்தினுளேதேனு மொன்றன் வழிப்பட்டோராதல் வேண்டும்.

யானோ எனதையவிபரீதங்களை யறக்களைந்துகோடல் கருதித் தன்பொருட்டுக் கூறுதலென்னுங் கொள்கையினையே மேற்கொண் டுளேனாதலிற்

டன்னூ லாராய்ச்சியில் வல்ல இப்பத்திரிகாசிரிய ராதியர் தமது சஞ்சிகையுள் இந்நிருபம் இடம் பெறத்தக்கதன்றெனத் தவிர்க்காரென நம்புகின்றனன்.

சில காலந்தொட்டுக் கல்வி யென்னும் பொதுச்செல்வம் பெண் எனும் மொழி யொன்றனைத் தன்மேற்கொண்டு பெண் கல்வி யென்று சிற்சிலராற் பிரித்தோதப்பட்டு வருதலைக் காண்கின்றோம். பெண் கல்வியெனப் பிரித்தோதிய வழியே ஆண்கல்வி யென மற்றொரு சிறப்புப்பெயரும் அக்கல்விக்குச் சித்தித்தது. ஆயினும் இவ்விருபால் வேற்றுமைப் பெயர்களன்றி, அந்தணர் கல்வி, அரசர் கல்வி, வைசியர் கல்வி, சூத்திரர் கல்வி என வருண வேற்றுமைப் பெயர்களும் வகுக்கப்படா திருப்பது மகிழத் தக்கதே. அவ்வாறும் வழங்க நேருமேல் நான்கு வருணத்திலுள்ள இருபாலாரும் தத்தமுட்கலாம் விளைக்கத்தலைப்படவும் கூடும். அவ்வா றெல்லாமின்றி இம்மட்டோடும் நின்றது அக்கல்வி செய்ததவமும் நடுநிலை யாளராகிய பெரியோரது ஆசீர்வசன பலனுமேயாம். இது நிற்க.

இனி அவ்வாறு வழங்கப்படுதற்குக் காரணம் யாதென்பதைச் சற்று நோக்குவோமாயின் கல்வி என்பது ஆதிகாலத்து ஆண்பாலொருவர்க்கே உரித்தா யிருந்ததென்றும் பெண்பாலார் கல்வி கற்றுவந்த தில்லையென்றும், தற்காலம் ஆங்கிலேயராளுகையினால் நம்மவர்க்கு மகளிர்களையுங் கல்வித் தேர்ச்சி யுடையவர்களாக்குவதில் புது விருப்பந்தோன்றி வருகிறதென்றும் அபிப்பிராயப் படுஞ் சிலர் பெண்கள் கற்பது பிழையென மறுப்பதேயாம். புது நாகரீகத்துட் சேர்ந்ததேயாயினும் நமக்குப் பயன் தரத்தக்கவைகளை நாம் கைக்கொள்வதில் எவ்வித ஆட்சேபமுமில்லை. அவ்வாறு ஆட்சேபிப்பவர்களே புதிதா யேற்பட்ட புகை வண்டியிலேறுமலும், புதிதா யேற்பட்ட தந்தியில் அவசரம் நேர்ந்துழிப் பேசாமலும், புதிதா யேற்பட்ட காயிதங்களில் வரையாமலும், புதிதாயேற்பட்ட அன்னியநாட்டு மெல்லாடைகளைத் தரியாமலும், புதிதாயேற்பட்ட அன்னிய நாட்டுத் தட்டுமுட்டுக்களை வாங்காமலும், புதிதாயேற்பட்ட பதனிட்ட பற்பல நாற்காற் பிராணிகளின் சர்மங்களினால் உள்ளும்புறமும் பொதிந்து மூடப்பட்டதும், ஒரு குதிரை இரு குதிரை நாற் குதிரை முதலியவைகள் பூட்டப்பட்டதும், கையினாற் செலுத்தத் தக்கனவும், காலினாலுதைக்கத் தக்கனவும் ஆகிய பற்பலவகைச் சகடங்களை யூர்ந்து செல்லாமலும், புதிதாயேற்பட்ட பற்பல வகையான மெய்க்கவசங்களை யணியாமலும், புதிதாயேற்பட்ட காலங்காட்டுங் கருவிகளைத் தமதில்லங்களி லமைக்காமலும், புதிதாயேற்பட்ட பற்பலவகைச் சிற்றுண்டிகளை விரும்பாமலும், புதிதாயேற்பட்ட விசித்திராபரணங்களையும் பட்டாடைகளையும் நமது மங்கையர்க்கு வாங்கி யளியாமலும், இன்னும் சொல்லத் தொலையாத வெண்ணிறந்த புதிய வழக்கங்களைக் கையாடாமலும், நிராகரிப்பார்களாகில் அப்போழ்தத்தில்



அதனை யாமொப்பவேண்டியதே. அத்தகைய நெறியுடையோரெவரு மிக்காலத்திலை யென்பதை யெவரு மறுக்கப்புகார். ஆதலின், மற்றின்னோர் வீண்வாதந் தொடுப்பதெற்றிற்கோ? அறிகிலம். இது நிற்க, இனி அத்தகையார் கொள்கைப்படி பெண் கல்வி முற்காலத்திலிருந்த தில்லையென்பதாவதுண்மைகொலோ வென்பதையுஞ் சற்று ஆராய்வோம்.

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

என்ற **நாலடி நானூற்று** முதுமொழியே கல்வி யிருபாலார்க்கும் பொது வென்பதையும், பெண் பாலார்க்குக் கல்வி யழகைப்போற் சிறப்பினைத் தருவ தெதுவுமின்றென்பதையும் நன்கு விளக்குகின்றது. அன்றியும்,

"பெருந்த டங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே"

எனும் **கம்பராமாயணம்** பாலகாண்டம் நாட்டுப்படலம் 36-வது செய்யுளினால், பெண் கல்வி முற்காலத்திலும் தேச நன்மைக் கறிகுறியாக நம் முன்னோராற் சிறப்பித்து வரப்பட்டுச் செழித்திருந்த தென்பது தெற்றென்வுணரக் கூடியதா யிருக்கின்ற தன்றியும் பிற்கூறிய செய்யுளின் பின்னிரண்டடிகளினாற் (பெண்கள் படித்தால் நடை கோணுவார்களென்று சிலர் கொள்ளும் மயக்கமும் மாய்ந்திட) கற்புடை மங்கையர்க்கே உதார குணமும் இன்சொல்லுமுண்டாதலியல் பென்னுமுண்மை யநுபவத்தினையும் அறிவுறுத்தியபடியாயிற்று. இவைகளுமன்றி ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் மொழிபெயர்த்தருளிய **பேரூர்ப்புராணம்** திருநீற்று மேட்டுப்படலம்;

"அத்தகு தான்மிகற் கமைந்த கற்பினாள்
கொத்தொளி விரிதருங் கொடிமின் போறலான்
வித்துரு லதையென விளம்பு நாமத்தாண்
முத்தமிழ்க் கல்வியு முற்றக் கற்றுளாள்."

"அழகினிற் கல்வியி னொரு மொப்பிலா
மழலையங் கிளவியாண் மதுரச் செந்தமிழ்
பழகிய மாதர்கள் பலர்தற் சூழ்தரக்
கழகமுள் ளவர்கள்கை விதிர்ப்ப வைகுவாள்."

எனும் 4-5-வது செய்யுட்களினாலும், பெண்கள் முற்காலத்தில் முத்தமிழ்ப் புலமையும் வாய்ந்திருந்தார்களென்பதோடு, அவ்விதப் புலமையும்

அபூர்வமானதென நினைத்தற்கிடந் தராது "மதுரச்செந்தமிழ் பழகிய மாதர்கள் பலர் தற்சூழ்தர" எனத் தெளித்துரைக்கப்பட்டு மிருக்கின்றது. இதனால் முற்காலத்துக் கல்விகற்ற பல பெண்களும் ஒருங்குகூடி யளவளாவியது முண்டென்பதோடு "கழக முள்ளவர்கள் கைவிதிர்ப்ப வைகுவாள்" என ஆண்பாலாரும் அதிசயித்து வியக்குங் கல்விப் பெருக்கினைப் பெண்கள் பெற்றிருந்தார்களென்பதும் இனிது பெறப்படுகின்றது.

இன்னும் சிந்தாமணியில் விஜயையைத் தேற்றுவான் புகுந்த சச்சந்தன், அவளை நோக்கி

'வண்டுமொய்த் தரற்றும் பிண்டி வாமனால் வடித்த நுண்ணூ
லுண்டுவைத் தனைய நீயு முணர்விலா நீரை யாகி
விண்டுகண் ணருவி சோர விம்முயிர்த் தினையை யாதல்
லொண்டொடி தகுவ தன்றா லொழிகநின் கவலை யென்றான்."

எனக் கூறியதாகக் பெறப்பட் டிருத்தலினாலும், பெண்கல்வி முற்காலத்தே யுளதாயிருந்ததென்பது திண்ணம் திண்ணம்.

கம்பர் வீட்டிற் பணிப்பெண்ணா யிருந்தவளும் அநேக சமயோசிதமான சித்திர கவிகளைப்பாடிய தாகக் கேட்டிருக்கின்றோம்.

இத்தகைய பற்பல சாட்சியங்களையும் எவ்வாறு மறைக்க முடியுமோ? அறிகிலம். இவைகள் தமக்குப் பிரமாண மல்லவென மறுத்தாலன்றி, மறைக்க வழியில்லை. ஈண்டுக்காட்டிய பிரமாண மல்லவெனத் துணிந்து கூறப்புகுவோ ரெவரும், வேதம், அங்கம், புராணம் முதலிய நமது மதத்திற் காணிவேர்களாய முன்னூல்க ளனைத்தினையும், பிரமாணமாகக் கொள்ளாராதலின், அத்தகைய புறமதத்தினரது கூற்றிற்கு யாம் விடையளிக்கவேண்டிய விதியுமின்றெனவிடுக்க. அன்றியும் அன்னார் மொழியால் நம்மவர்க்கு வரக்கடவதாம் இழுக்கொன்று மிலையென்க.

நாமகளே பெண்பாலென முறையிடும் நமது வேதாதிப் பிரமாணங்களை யுணர்ந்தவர்க்கு, வேறு பிரமாணங்களைத் தேடி யெடுப்பதும் வேண்டற்பாலதன்றாம்.

"அன்னை தயையு மடியாள் பணியு மலர்ப்
பொன்னி யழகும் புவிப் பொறையும்—வன்னவுடல்
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசி லிவை யுடையாள் பெண்".

என்ற வெண்பாவிலும், பெண்கள் கல்விப் பாடுடையவர்களா யிருத்தல் வேண்டு மென்பது தோன்ற "விறன்மந்திரி மதியும்" எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுளது. படியாத பெண்ணிற்கு, விறன் மந்திரியின்மதி, எவ்வாறு பிராப்தியுண்டாம், அத்தகைப் பெருமதி யில்லாதவள் பெண்ணல்ல வென்றன்றோ பொருள்படுகின்றது.



உண்மைச் சகோதரர்களே! இவற்றினை யெல்லாம் ஆழ நோக்கி வீணான வித்தியாசம் பாராட்டாமல், உங்கள் அருமைப் பெண்களையும், சோதரிகளையும், கல்வித் தேர்ச்சியுடையவர்க ளாக்குவதில் ஊக்கத்துடன் முயலுங்கள். எடுத்துக்கூறும் எம்போலியர்மீது குரோதம் கொள்ளாதீர்கள். அறிவுடைமையா லுண்டாகும் அன்பே தம்பதிகளின் நீண்ட ஐக்கியத்திற்குக் காரணமன்றி, அறியாமை யாலுண்டாகும் மூட வாஞ்சையன்று. அம்மூட வாஞ்சை கில்ட்டு நகைகளினாலும், சீட்டிச் சேலைகளினாலுங்கூட கல்லாப் பெண்களுக்கு மாறிவிடக்கூடும். கல்லாத சில பெண்களின் சம்பாஷணை சில சமையங்களில் பித்தர்க்கும் நகைவிளைக்கக் கூடியதாயிருக்க, வியாபகர்களான ஆடவர்களுக்கு எவ்வளவு அருவருப்பை விளைக்கக் கூடியதாயிருக்கும். அந்தோ! இப்பெருந் துக்கத்தை யுள்ளமட்டில் எவ்வாறு அநுபவிப்பது. அறிவை விருத்திசெய்வதில் இரு பாலாரும் சம நிலையுடையவர்களே யென்பதை மனத்திற் பதியுங்கள். அபூர்வமாய் ஒரு பெண் படித்திருந்தால், அதுவும் அற்ப படிப்பாயிருந்தால், அப்பெண் அகங்கரித்தலியல்பே. எல்லாப் பெண்களும் கல்வியாளரா யிருக்கநேரின் அவ்வகங்காரம் தனக்குத்தானாய் மாய்ந்துவிட யாது தடை! அவர்கள் மட்டிலன்று உலகிலுள்ள எல்லா ஜீவர்கட்கும் அச்சுபாவ முளதேயாம். ஓர் ஊரில் ஒரே வயித்தியரிருந்தால் அத்தன்வந்திரிக்கு உள்ள செருக்கு மளவு கடந்ததாயிருத்த லநுபவசித்தம். சில குக்கிராமங்களில் இழிதொழிலாளராகிய சில வகுப்பினரால் உயர்குலத்தினரும் செல்வ முடையோருங் கூடப்படும்பாடும், அவர்களடையு மிறுமாப்பும், அநுபவ முடையார்க்கு விளங்குமன்றி இதிலெழுதுவதிற் பயனில்லை. ஆதலின் செருக்கிற்குக் காரணம் போதுமான விருத்தி யில்லாமையே யாம்.

பெண்பாலார் அடங்கி நடப்பதற்காக அவர்கள் அறிவைச் சுருக்கிவிட நினைப்பதிலும், அவர்களது உணவைச் சுருக்கமுயலுதல் மிகுந்த புண்ணியமே. ஆடவர்போல் சமபோஜனமின்றி காட்டில் உண்டாகும் கந்த மூலங்களையே உண்ண வேண்டுமென ஏனோ விதிக்கக்கூடாது. அங்ஙனம் விதியுளதேல் அவர்களது தேகபலங்குன்றி இரத்தம்வற்றி ஊக்கமும் மனோ தைரியமும் தன்வழியொடுங்கி சொன்னபடி யெல்லாம் படிந்து நடப்பார்கள். அங்ஙனமின்றி, ஆடவர்கள் உண்ணும் அன்ன பானாதிகளையும் பண்டு பலாதிகளையும் பெண்பாலார் சர்வ சுதந்திரமாய் உண்ணவும், ஆடவர் புனையும் அணிகளிலும் நூறுமடங்கு அதிகமான ஆபரணங்களைப் புனையவும், ஆடவருடுக்கும் உடைகளிலும், எண்மடங்கு விலையுயர்ந்த சேலைகளை யுடுக்கவும், மனமுவந்து இடந்தந்து அறிவைமட்டிற் சுருக்கிவிடுவதனால் எவ்வாறடங்கி நடப்பார்கள். பின்னும் அற்பகுணமும் பேராசையும் டம்பமுந்தானே கொழுந்துவிட்டு வளர்கின்றது. அத்தகைப் பேதையர்களின் சொற்படி யொழுகில் துன்பமும் வறுமையும் மிகுவதன்றிச் சுகமும் லாபமும் எவ்வா

றுண்டாகும். மனையாளின் ஆலோசனையைக் கணவன் கேட்பது குற்றமெனின், மந்திரியின் மதியுடையவளே பெண்ணெனப் பெரியோர் கூறியிருப்பதெற்றிற்கு? அம்மதி அன்புடைய நாயகனுக்கன்றி மற்றெவர் பொருட்டுப் பயன்படத்தக்கது? இதற்குக் குசேல முனிவரே பெருஞ் சான்றாகும். இதுவுமன்றி ஆன்றோர் பலரது துணிபு மதுவேயா மென்றற்குப் பற்பல பிராமணங்களு முளதாகும். ஆதலின், 'ஸ்திரீ புத்தி பிரளயாந்தகா' என்றும், 'தையல் சொற்கேளேல்' என்றுமுள்ள முதுமொழிகட்கு, தந்நலம் விற்றுண்ணும் பரத்தையர் வலையிற்சிக்கி அவர் சொல்வழி நடப்பது கேட்டைத் தருமென்பதே பொருளன்றி, தனது நன்மையையே கோரிச் சதாகாலமும் கடவுளைத் துதிக்கும் பேரன்புபூண்ட உத்தம மனைவியின் சொல்லை நிராகரித்து நடத்தலென்பது பொருளன்றாம். அவ்வாறு உத்தம மனைவியாய் ஓர் ஆடவர்க்கு ஒருபெண் அமையக் கற்பிலக்கணங்களை யுணர்த்தும் பன்னூற் பயிற்சியே முதற் காரணமாதலின், அத்தகைக் கல்வியை நமது பெண்பாலார்க்கு அறிவுறுத்தி இருபாலாரும் சுகமடைவதிற் சோர்வடையாதீர்கள். பெண்கல்வி முற்காலத்தே நம்மவரில் தழைத்திருந்த நாகரிகமென்பதையும் மறவாதீர்கள்.

சகோதரர்களே! வந்தனம்.

அசலாம்பிகையம்மாள்.

---

## சரித்திர விநோதாமிர்தம்.*

---

அதிவீர ராமபாண்டியனையும், அவர் நாடு நகர் முதலியவைகளையும் பற்றிப் பேசுமுன், பொதுவிலே பாண்டியர்களும், அவர்களைச் சார்ந்தவைகளுமாஞ் சில விசேடங்களைப்பற்றி ஆராய்வாம்.

'பாண்டியர்' என்பது 'பாண்டி' என்று நாட்டாலேற்பட்ட பெயரென்றும், 'பாண்டி' என்பதே 'பாண்டியர்' என்னுமரசனு னேற்பட்ட பெயரென்றும், அவை பழமை என்றும் பொருடரும் 'பண்டு' என்பதன் விகாரங்களென்றுங் கூறுவர். நாடு என்னும் பொருட்டாம் 'பாண்டில்' என்பது, 'செந்தில்' என்பது 'செந்தி' என நின்றபடி நின்று, சிறப்புவகையால் அந்

* முன் ஞானபோதினியின் 3-வது சம்புடம் 4-வது புத்தகத்து முதலிற்காணும் 'நூல் விழைவு' என்றும் 'புத்தகப் பொருட்புகழும் பேறும்' என்னும் அதுவும், 'சரித்திர விநோதாமிர்தம்' என்னு மிதுவும் அதிவீரராமபாண்டியன் சரித்திரத்தின் பிரிவுகளெனக் கொள்க.



நாட்டைக்குறித்தது என்பது மொன்றாம். இங்ஙனே இது தனித்தமிழ்ப்பத மென்னப்படும். உரைத்தவற்றிற் பண்டையோர் பாண்டியர், பண்டைநாடு பாண்டிநாடு என்ற காரணம் எக்கருத்துப் பற்றியோவெனின், "பாண்டியர் எனைத் தமிழரசரான சேர சோழர்கட்கு முற்பட்டவர்களும், ஆதலின் அவர்நாடு குறித்தவன்னோர் நாடுகட்கு முந்தியதாமெனக்கூறத் தடையின்றன்றே?" எனப்பொறித்துள்ளாருஞ் சில ஆங்கிலராதியரின் கருத்துப் பற்றியென்க.* சிலர், சந்திரவமிசத்துப் பாண்டு புத்திரர்களாகிய பஞ்சபாண்டவர்களின் வழித்தோன்றல்களா வாரிவராகையான், பாண்டியர்களென்னப்பட்டார்கள்; அவர்நாடும் அதுபற்றிப்பாண்டியென்னப்பட்டது எனவும், இப்பொருளின் இது வடமொழிப் பெயரெனவுங் குறிப்பர். இம்மொழியிற் 'பாண்டு' என்பது வெண்மையும், அவ்வண்ணசம்பந்த முற்றதோர் நோயுமாய், அவ்வுரோக முள்ளவனும், விசித்திரவீரியற்குச் சந்ததியின்மையாற் பெரியோர் சம்மதப்படி அன்னோன்பத்தினி அம்பாலிகையினிடத்து வியாசபகவான்றிருவருளால் உற்பத்தியானவனும்ஆகியஅவனுக்காகு பெயராயமைந்தது. அத்தகையோன் மகாராவார் பாண்டவரென்க. இவண் அமைத்துக்கூறிய சுட்டின் உட்பொருளியாதோவெனின், கீழே காட்டியபடிப் பாண்டவர்களொப்பப் பாண்டியர்களும் ஆதிசந்திர வமிசத் தரசர்களே யாவதுமன்றி, முற்பட்டவக் குருகுலக் கௌரவர் அல்லது ஐவராம் பஞ்சவர் பெயரால் இச்செழியரும் கௌரியர் எனவும், பஞ்சவர் எனவும் கூறப்படுதலா மஃதென்க.

இது நிற்க, புத்திரர்களைவிட்டுப் பாண்டுவு மாத்திரியும் பரமபதஞ்செல்ல, குந்தியோடு அப்புதல்வர் அத்தினபுரம்வந்து வளர்ந்து இடையிற் பலவு நடக்கப் பின்னர்த் துரோபதையை மணம்புரிந்து, முனிவருரைப்படி அவருட்சவ்வியசாசி தீர்த்தயாத்திரைசென்று பாண்டிநாடடைந்தபோது, "† சித்திரவாகனன் பயந்த சித்திராங்கதை யென்னுஞ் செஞ்சொல் வஞ்சி"யைக் கடி முடித்ததைக் கவனத்திடைப்படுக்கில், அக்காலத்திய பாண்டுவுக்கு முன்னர், வெகுகாலத்திலேயே சிறப்புற்றுப் பாண்டிய

*. இவ்விடத்துப், "பிராட்டியைத்தேடிச் செல்லவுற்ற வானரர்கட்குத், தெற்கிலே பொன்னுனிருமித்து அணிபல் பொருத்திய பாண்டியன் கோட்டை வாயிலைக் காணலாமென இராமாயணங் கூறுமாற்றால்" என ஆங்கிலத்து மெடுத்துக்கூறலும், பாண்டிநாடு புராதன மென்பதை விளக்குதலு மோர்க.

† நெல்சன் (Nelson) என்பவர், அருச்சுனன் பாண்டியர் கன்னிகைகளில் ஒருவரையு மணந்திலனெனத்தாமே தம் கண்கொண்டு பாரதத்தைப் பாராக்குறையாற் கூறுவர். வேற்றோரவர் சித்திராங்கதையை மலையத்துவசபாண்டியனின் புத்திரியென மயங்கியுரைப்பர்.

ரும், அவர் நாடும் அப்பெயரான் நிகழ்ந்ததென்னக் கிடக்கையான், பாண்டி வாலாயின பெயரென்று மிக்கடைக்கூற்றுச் சற்றும் பொருத்தமில்கூற்றும் அதனாஃது வடமொழிப் பெயரென்பது தகுதியின்மையுமா மாறுணர்க. மகததேயத் தலையனான சிங்கவாகுவின் புத்திரன் **வியசனென்பான்** இலங்கை யரசனானபோது, ஓர் பாண்டியன் புத்திரியை விவாகம் பண்ணினான். இவன் இங்ஙனம் பாண்டிய சம்பந்தமுறு முன்னமே இவன்றம்பி புத்திரனொருவன் **பாண்டுவாசனென்னும்** பெயரினனாய் உற்றனனென்று மிதுவும் கூறிய வதனோடியைந்து பாண்டுவென்னும் பெயர் பொதுமை யினிகழ்ந்து வந்ததெனலை விளக்கும். ஆயின், தென்னவர்க்குக் கூறிப்போந்த வேற்றிருபெயரும் வழங்கியதெனக் கொண்டாலென்னை? அல்லதூஉந் * தடாதகைப்பிராட்டியாங் **கௌரியின்** கால்வரு கௌரியர் எனவும், **பஞ்சவத்திரன், பஞ்சானனன், பஞ்சகிருத்திய நடனன்** ஆம் சோமசுந்தர பாண்டியனின் வழியாளர் பஞ்சவர் எனவுங் கோடல்தகு மன்றே? வேறு பற்பல கூறலனைத்தும் அவரவர் யுத்திவாத சமர்த்தென்றொழிக.

பாண்டியர் நாமாவளிகளில், ஆலாசிய மகத்துவம், திருவிளையாடற் புராணமாகிய விவற்றின்படி 73-பாண்டியரும், மற்றோர் கொடிவழிப் பட்டியின்படி † 74-பாண்டியருங் காணப்படுகின்றனர். இவையிரண்டுங் குலசேகர பாண்டியனை ஆதியாகக்கொண்டு, முறையே மலையத்துவச பாண்டியன், தடாதகைப்பிராட்டி, சோமசுந்தர பாண்டியன், உக்கிரபாண்டியன், வீரபாண்டியன், விக்கிரமபாண்டியன், என மேலே செல்லுவதை அப்புராணங்களின் முகத்தானும், **செயவேலர்** நூற்றொகுதிகளானும், தமிழ்க்கவி சரிதத்தானும், தக்கண விந்துதேச சரித்திர சங்கிரகத்தானும், ஏனைய சிலவற்றானுந்தெளிக. அநுலோம பிரதிலோமாதியரும், பாண்டியர் வமிசத்தோடு நேரே யுரிமைபூணாதவரு மாகிய பாண்டியர் நாமாவளியிற் காணப்படும் ‡ சோமசேகர பாண்டியன்முதல் பராக்கிரம பாண்டியனை இறுதியாகவுற்ற 41-பாண்டியர்களில் 23-ஆவது பாண்டியராக நம் அதிவீரராம பாண்டியருடைய பெயர் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வட்டவணை தொடர்புற்ற கொடிவழிப்பட்டியு மன்று. அதிவீரர் பெயருக்கு அடுத்து முன்னேனும் பின்னேனும் அவர் தமையனாராகிய வரதுங்கராம பாண்டியர் பெயரைக்காட்டியது மன்று. ஆயினும், 38-ஆவதாக வரதுங்கபாண்

* இத்தடாதகைப் பிராட்டியை ஐரவபாடையி லெழுதப்பட்ட சரித்திரங்களிற் கண்டபடி ஏரிக்கு வென்பான் புத்திரி யென்றும், சிலப்பதிகாரத்திற் கூறப்படும் பாதியுரு இளவரசிக் கோலமும் மற்றப்பாதியுருபோர்வீரக் கோலமுமாம். உடையாதியவற்றா லலங்கரிக்கப்பட்டுற்ற **மதுராபதியும்,** மணிமேகலையிற் கூறப்படும் சிந்தாதேவியும் ஆகியவரேயென்று கூறுவது சுதேசபாஷா விற்பன பண்டிதர்களால் ஏற்றுக்கொள்ளப் படுவதன்று.

† Page 212 - 218. Archæological Survey of Southern India, Vol. ii, by Robert Sewell.

‡ Page 219 - 220. Do do do



டியன் என்றோர் பெயர் காணப்படுகின்றது.

குறித்திட்டபடி காட்டியவுங் காட்டாதுற்றவுமாம் நாமாவளிகளனைத்தும் ஒன்றற்கொன்று மாறுபட்டனவும், ஐயப்பாட்டிற் காஸ்பதமானவுமே யாம். அன்றியு மவையிற்றினைக் கவனித்துச் செல்லச்செல்லக் காலமாறுபட்டனவும், ஒருவன் பெயரே பல தடவை வந்தனவும், ஒருவற்கேயுள்ள பல பெயர்கள் வெவ்வேற்றரசர்போற் குறிக்கப்பட்டனவும், இன்னும் பல வேறுபாட்டு மயக்க நிலைக்க ணுற்றவுமாமெனக் காணுதல் எளிதாம். சொற்ற பெயரட்டவணைகளிலுள சில நாமங்களையிட்ட காலவரையறையாதிய நிதானத்திறுக்காஞ் சாசனாதிகளைக் கண்டடைந்துஞ் சேகரித்து முள்ளார் சிலர். கீழே கூறிய வனைத்தினையும் யூகித்துணரின் இவை யாவுமோரோரேதுவிற் குரித்தாமன்றிப் பூர்ண நம்பிக்கைக் கேதுவல்லவாம் எனற்கு ஐயமின்றே.

சானகியைத் தேடிச்சென்றவர் சூரிடனத்தமியாத * நாடாம் வட அருவவண்மை அமெரிக்காவின் பாகத்தே சென்றுற்றனர் எனவும், பார்த்தன் இராசசூயயாகத்தினுக்கு வேண்டும் பொருணிமித்தம் அச்சுவேத வண்ணர் நாடுற்றுத் தனஞ்செயனாயினான் எனவும், ஐரோப்பிய நாட்டை மிகநணுகிய பலத்தின நாட்டுச் சாலமக்கோமான் தேவகுலப்பணிக்கென மயிற்பீலியுஞ்சந்தாதியவுமாம் பண்டம்மலையாளத்து நின்றுங்கொண்டேகினான் எனவும், உரோமக வரசனொருவன் தன்னாணியமிக்கப்பட்டதோர் பெருங்கோட்டத்துள் உலகத்துற்ற பற்பல தெய்வ விக்கிரகங்களையும் வைத்துப்பூசித்து வந்த வக்கால், சைவ வைணவ விக்கிரகங்களாதிய பரதகண்டச்சிலைகளு மவற்றுட் காணப்பட்டன எனவும், ஐரவதேய வரசர்களிடத்தும், பாண்டியராதிய விறைவர்களிடத்தும் பரஸ்பரந் தானாபதிகள் காரிய விடயங்களையிட்டுச் சென்றனர் எனவும், அரபியரால் வீசகணிதாதிகளும், தாலமையராதியராற் சோதிடாதிகளும் நம் சம்பந்தமாகக் கிடைக்க, அங்ஙனே ஐரோப்பியரவை கற்றறிந்து சிறந்தனர் எனவும், மதுரையோடு சீனகிரேக்க உரோமகர்கட்கும் வியாபாரத் தொடர்புற்றிருந்தது எனவும், பல ஐரவ பாடைகளிலும், கடவுள், ஒன்று, எட்டு, கொல், ஈன், புழுதி, பல, கோணை, பலகோணம், வேறு, சுருங்கு, மண், கட்டில், பாதை, தோகை, அப்பன், அம்மை, பேச்சு, பானை, சாந்து, மாங்காய், கக்கரி, குக்கில், பாண்டம், பாத்தி, பாதி, தறைமுதலிய அநந்தமான தமிழ்மொழிகள் ஆதியிலேயே கலந்துற்று நின்று நிகழ்கின்றன எனவும், தமிழ்நாடு முதலியவற்றிற் பற்பல ஊர்களினும், பூர்வத்திற் பாண்டிநாட்டோடு சேர்ந்து பின்னர் மேற்பாகஞ் சேரனுக்கும் கீழ்ப்பாகஞ் சோழனுக்குமாய்ப் பிரிவுபட்டுற்று ஆகவே தமிழ்நாட்டு மூவேந்தரானும் ஆளப்

* சற்றேறக் குறைய-கூ-மாதம் உதயாத்தமன மற்ற நாடு.

பட்டுச் சிறந்தோங்கிய * செந்தமிழ் நிலமான கோயை நகரின் தெற்கில் இரண்டரைக் காவதச் சேய்மையிலுற்ற † பொருளாட்சியாம் பொள்ளாட்சியினும், சொற்றவக் கோய்முத்தூரின் கீழ்த்திசையினதாகி அரைக்காவதத் தூறும் ‡ வெள்ளனூரினும் இற்றைக்கு முறையே ௯௰௮ - ௪௰௮ வருடங்களின்முன் ஐரோப்பிய அரசராம் ஆகத்தச்சர் முதலியோரின் அதிகாரச் செலாவணித் தங்க நாணயங்கள் பூமியினின்றும் நிட்சேபமாக எடுக்கப்பட்டன எனவும், ஏகதேசம் ௫௰௮ - வருடங்களின்முன் மதுரையிலேயே ||சீனியன் என்னும் பெயரிய ஐரவகீழைத்திசையரசனின் பொற்காசொன்று கிடைத்தது எனவும், ஐரவர் தற்காலம் பாகுபாடுற்ற நங்கண்டத்தினோர் சிறுபிரிவாம் மத்திய ஆசியாவினின்றும் தற்கால விருப்புத்தானமா மங்குச் சென்றுற்றவர் எனவும், அமெரிக்கரு மத்தகையினரே எனவும், நம்முள்ளும் அந்நிய நாட்டாருள்ளும் தக்க சாத்திரிகள் கூறுமவையும், மிகுபழமையினேயே நமக்கும் ஏனைய கண்டத்தார்க்கும் தொடர்புண்டெனலை நிரூபித்தாலும், அவையுந் தெரித்தபடி ஓரோர்விதக் காரணங்களா னோரோர் வகைகளிற் றகுமேயன்றிச் சேய்மையவாம் ஆதிகாலச் சரிதங்கட்கவை சான்றும் ஆதாரவுமா மாறின்றே என்க.

(இன்னும்வரும்)

சாமிநாதபிள்ளை.

---

## கலங்கரை விளக்கம்.

---

### கலிவிருத்தம்.

ஓது செல்வமிக் கோங்கிய சென்னையி
னீதி சாலை நிமிர்தரு சேட்சிமை
மீது நின்று மிளிர்ந்திருள் போழுபு
சோதி யொன்று சுழன்றொளிர் கின்றதால். (௧)

* திராவிடசத்த தத்துவத்திற் காண்க.

† இங்குக் கிடைத்தவை ஓர் பானை நிறைவுற்ற ஆகத்தர் - தீபரியர் ஆம் அரசர்களின், பொற்காசுகளா மென்க.

‡ இக்கிராமத்திற் கிடைத்தது ஐந்து ஆட்சமை யளவான உரோமகர் தங்க நாணயங்களா மென்க.

|| சீனியன்=Zeno.—ஏனைய ஐரவராதியரின் பெயர் முதலியன 'சரித்திர விநோதாமிர்தத்தின்' முகவுரையில் இங்கிலீஷினுந் தமிழினும் விளக்கப்பட்டன.



அளக்க ரிற்செல வார்ந்துவங் கம்மெலாந்
துளக்க முற்றுத் துயரடை யாவணம்
மளக்க ரும்புக ழாளர் கலங்கரை
விளக்க மென்னவொன் றிட்டனர் மேலைநாள். (௨)

அன்ன வெண்ணங்கொண் டாக்கின ரேனுமஃ
தின்ன மும்பல வின்பய னல்குபு
மன்னு கிற்றன் மதிக்கு மெமதுள
முன்னி யுன்னி யுவகை சிறக்குமால். (௩)

உலக மாந்தர்க் கொளியே யுயர்ந்ததென்
றிலகு முண்மை யினிது விளக்குபு
மலைக வின்றுயர் மாடத்து மீமிசைப்
பலக திர்த்திரள் பண்பிற் பரப்புமே. (௪)

ஆக்க மோங்குந மாங்கில மன்னவர்
தாக்கு தம்பிர தாபம் பகையிருள்
போக்கு தற்குப் பொருந்து மறிகுறி
யாக்கொள் கிற்ப தமைவுடைத் தேயரோ. (௫)

மன்ற மேறுபு வாய்மொழி கூறுநர்
நின்று தங்கொள்கை நேர்ந்து நிறுவுந
ரொன்று மெய்ம்மை யுணர விழையுந
ரென்றின் னோர்கட்கு மேனைய மக்கட்கும். (௬)

கரவு செய்யலிர் கட்டுரை கூறுமி
னொருவன் றேவ னுளன்கண்டீ ரென்றுதன்
சிரநி வந்துயர் செவ்விய கோலெனும்
விரலிற் சுட்டி விளம்புதன் மானுமே. (௭)

மக்கட் கின்னுரை மாண்பின் வழங்குந
ரொக்க யாரு மொருங்குறக் கேட்டற்குத்
தக்க தோருயர் தானத்தின் மேலெழீஇத்
தொக்க தங்கைகள் சொல்லுழி நீட்டல்போல். (௮)

வன்பு மாக்கள் வழிப்பட் டுழலுபு
துன்புற் றுரைத் துயர்களை நீதித்தா
யின்ப மீகுவ லென்வயிற் போதுதி
ரென்ப வட்போன் றிருங்கதிர் வீசுமால். (௯)

கடமை யிற்பிறழ் கல்லார் பொதுளிவிண்
டடவு மாடத் தலைக்கண் விளக்கந்தான்
படமெ டுத்துயர் பாந்த ளரையன்றன்
சுடிகை மேவுஞ் சுடர்மணி போலுமே. (௧௦)

உம்பர் நோக்கி யொளிசெய்து சுற்றிவந்
திம்ப ரிவ்விளக் கெங்கணு மின்னலா
னம்ப னந்த நறுந்தமிழ் வேட்டவ
னெம்பி ரான்சடை யென்றலு மொக்குமே. (௧௧)

சூற்றி நின்று சுடர்க்கற்றை வீசலா
னுற்று நோக்குந ருள்ள மலர்த்தலான்
மற்றி ராப்பொழு தத்தின் வயங்கலான்
வெற்றி வேணியன் மேலொளிர் திங்களோ ? (௧௨)

ஓரும் போழ்தினி லுவ்விளக் கம்புடை
சாரும் பற்பல் றனிமலை தானடுத்
தேரி யன்றுய ரின்னலஞ் சான்றபொன்
மேரு மாமலை மேலொளி ரீசனோ ? (௧௩)

எண்ணு மிந்நக ரேயிவ் விளக்கமே
கண்ணி மாந்தரைக் காக்குங் கறைமிடற்
றண்ண லார்த மருள்கெழு மாவலக்
கண்ணெ னுவிது கண்டுளம் பொங்குமால். (௧௪)

இங்கி ருக்குமெ மின்றமிழ்ப் பாவலர்
தங்க ளுக்குத் தழைத்துவந் தெம்முள
மிங்கி தத்தி னெழுந்து குதித்துறப்
பொங்கு மாறு புகலுதற் பாலதே. (௧௫)

வென்றி மாப்படை வீரர் புரந்திட
நன்றிவ் வாங்கில ராச்சிய ஞாலத்தி
னென்று மென்றூழ் மறைகுத லில்லையா
மென்று கூற லியையு மியையுமே. (௧௬)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

---



## விநோதக் கடவுள் வாழ்த்து.

### இருபத்து நான்குசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கவிவாணர் வட்டத் தலைப்பாகை கட்டிநற் கவியெழுதி யேட்டின்மஞ்சட்
காப்புமிட் டவ்வூரி னிற்பரிசு பெறுமாறு காணவரு செய்திகேட்டுக்
கைகா லடுக்கமுற் றறிவுங் கலங்கியங் கஞ்சலச லென்றுவேர்த்தக்
கணத்தின்மனை யாட்டியைக் கூவிநீ கடிதினிற் கதவுபூட் டித்தாழிடா

யவதியிவ் வேளையினி லிந்தவிதம் வருமென் றறிந்திருந் தானேற்றையே
யயலூர் புகுந்தவன் போனபின் வரலாகு மதையினிப் பேசுவதனு
லாவதிலை சிறிதுபொறு பேசாதை வாயிலினி லாரோவொ ராட்பேசினு
னவன்று னடிவந்த பழிகார னெனமன மழிந்துட்ன் மறந்துகுழறிச்

செவையாகநாற்காலி தனைமெத்தைமீதுவிரி திண்டையுங் கான்மாட்டில்லை
சீக்கிரஞ் சோற்றின்மே லிலைபோ டெனக்குமொரு தெண்ணீரி லேசெம்புதா
கிடமாக விருமனம் பதறுதை யென்மோ திரங்காதி லெங்குகாணேன்
றேடுசுண் ணக்கரண் டகமதனில் வெற்றிலை செறிந்தபை கிடக்கிறதெடு

தவறுத படிசென்று தொழுவைமாட் டுக்கா றனிற்கட் டெனப்பேச்சுமே
தடுமாறி மனைவியைத்தா யென்று தாய்தனைத் தந்தையென மகனைமகளாய்த்
தாமுறைமை பிசகிப் பிதற்றுபிசி னர்க்கண்டு சஞ்சல முறுதுபாரிற்
றனகனக மாதிய நலஞ்சீர்த்தி முதலநனி தந்துதவு வாய்கடவுளே.

சேறை. அனந்தநாராயண ஐயர்.

---

## புத்தகக் குறிப்புகள்.

### *முதற்குறளுண்மை.

இந்நூல் துவிதமத திரஸ்காரி என்பவராலியற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது. இது 233. பக்கங் கொண்டதோர் பெரிய புத்தகம். இந்நூலாசிரியர் தமது இயற்பெயரை யொழித்துக் காரணப் பெயரையே கொண்டாரெனவும் ஒருவாறு ஊகித்தற் கிடனுண்டு. இப்புத்தகம் வெளிவருவதற்கியாது காரணமென ஆராய்வோமாயின் இத்தகைய காரணப் பெயருக்குக் காரணமும் தெரியவரும். சுமார் இருபத்தெட்டு வருடத்திற்கு முன்பு (ஆங்கிரசஹ தைமீ) ஸ்ரீ-சோமசுந்தர நாயகரென்பவர் செய்த " சிந்

* இப்புத்தகம் வேண்டுவோர் மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற் பெற்றுக்கொள்ளலாம். இதன் விலை ரூபா ஒன்று.

**தாந்த சேகரம்**" என்னும் நூலில் தெய்வப் புலமைத் திருவள்ளுவரியற்றிய உத்தரவேதத்து முதற்குறளைப் பீடிகையாகக் கொண்டு அதற்குத் தமக்குத் தோன்றியவாறு ஒருரை கூறி அத்வைதத்தை மறுத்தாரென்றும் அதை மறுத்துத் "திருவள்ளுவர் முதற்குறள்" என்னும் ஓர் நூல் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. பிறகு ஓர் காலத்து அதைக்குறித்தெழுந்த விவாதத்தின் பயனாக அத்வைதப் பொருளை ஸ்தாபித்து "**முதற்குறள் வாதம்**" என்னும் நூல் **துவிதமத திரஸ்காரி** என்பவரால் இயற்றப்பட்டதெனவும், அப்பொருளை மறுக்கும் பொருட்டு "**முதற்குறள்வாத நிராகரணம்**" என்னு நூலேற்பட்டதாகவும், இதற்கெதிராக அத்வைதப் பொருளையே ஸ்திரமாய் ஸ்தாபிக்க வேண்டி "**முதற்குறளுண்மை**" என்னு மிந்நூலெழுந்ததாகவும் தெரியவருகிறது. இதனாசிரியர் மேலே சொன்ன **துவைத மததிரஸ்காரி** என்பவர்.

முதற்குறள்: "அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

இதற்குப் பரிமேலழகியருடைய உரை வருமாறு:—

அந்வயம்:—எழுத்து எல்லாம் அகரமுதல உலகு ஆதிபகவன்முதற்று- எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; (அதுபோல) உலகம் ஆதி பகவனாகிய முதலையுடைத்து. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பாற் பிறத்தலானும், ஆதி பகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி இயற்கை யுணர்வான் முற்று முணர்தலானுங் கொள்க. உலகென்றது ஈண்டு உயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதி பகவன் முதற்றேயென உலகின் மேல்வைத்துக் கூறினார்; கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக் கொள்க. இப்பாட்டான் **முதற்கடவுள துண்மை** கூறப்பட்டது.

இஃதிப்படி நிற்க, இதன்கண் மதவுண்மை நிச்சயிக்கப் புகுவோர் தத்தமக்குத் தோன்றிய உரைதந்து அதுதான் வள்ளுவர் கருத்தென வரைந்துளார். அத்வைத முதலிய தத்வக் கொள்கையினை யிதிலேற்றி மொழியப் புகுவார் அன்னோர்.

அகரம்நாத மாத்திரையான வியற்கைத்தோற்றமுடைத்தாய்நிறைந்து முதன்மையுற்று நிற்ப ஏனைய வெழுத்துக்களெல்லாம் அதனியக்கத்தான் விகார முயற்சியிற்றோன்றி அதனானே வியாபிக்கப்பட்டுப் பர தந்திரமுடையவாய் நிலவுதல்போல, ஆதிபகவன் இயற்கையுணர்வினானே முற்று முணர்ந்து எங்கும் நிறைந்து முழு முதல்வனாய் விளங்கிநிற்ப, உலகனைத்தும் அவனாணையான் வியாபிக்கப்பட்டுச் சுதந்திரமற்றுப் பரதந்திர முற்று



விளக்கீடாக வுடல்கரண மெய்தித்தோன்றி இடவிஷய வியாபார முடையவாய் நிலவா நின்றன வென்பதிதன் கருத்தா மென்ப.

அத்வைதக் கொள்கை யுடையார் இக்குறளிற்கு, அகரம் மற்றைய வெழுத்திற் கெல்லாம் முதற்காரண மென்றும் நிமித்த காரணமன்றென்றும் அதுபோல் கடவுளும் உலகிற்கு (குடத்திற்கு குலாலனைப் போன்று) நிமித்த காரணனாகாது முதற்காரணனாகின்றார் என்றும் பொருள் செய்கின்றார். அதாவது மண்ணாகிய முதற்காரணம் திரிந்து குடமாகிய காரணமாதல் போல கடவுளே உலகமாக (ஜீவன் முதலியவைகளாக) ப்பரிணமிக்கின்றாரென்பது. மண்ணே குடமானாற்போல கடவுளே உலகமானாரென்பது. அதாவது பரமாத்வா வேறு ஜீவாத்மா வேறென்பதில்லை, இரண்டுமொன்றேயா மென்பது அவர்தம் கொள்கை. அகரத்தை மற்றை யெழுத்துக்களுக்கு நிமித்த காரணமெனவும் அதைப்போன்று கடவுளும் உலகத்தோற்றத்திற்கு நிமித்தகாரணரெனவும் சொல்லியோருடைய கூற்றை மறுத்துத் தங்கொள்கை நிறுத்தற் பொருட்டு எழுந்தது இம் "முதற்குறளுண்மை" என்னும் நூல். இதனிமித்தம் அனேக விஷயங்கள் இடையிடையே எடுத்தெழுதப் பட்டுள்ளன. இவ்வாறு துவைத பக்ஷமென்று தாங்கொண்டதை மறுத்தலேதமது கருத்தாக்கொண்டு வெளிவந்த இந்நூலாசிரியர் **துவைதமத திரஸ்காரி** என்னும் புனைவுப் பெயர்பூண்டு தோன்றினார். உண்மை அறிய வேண்டி இவ்வாறு எழுதப் புகுவோரும் வாதிக்கப் புகுவோரும் ஒருவரை யொருவர் மரியாதையின்றி வையப் புகாது பிரமாணங்களைக் கொண்டு உண்மையைச்சாதித்தலே மேலானதென்பது தெரியாத விஷயமல்லவே! இருவருள் எவரொருவர் வையினும் அது அவருடையகுணத்திற்குங் குலத்திற்கு மிழுக்கேயன்றி மேன்மையாகக் கொண்டாடப் படமாட்டாது. இது நிற்க. வேண்டிய கூறலும் வேண்டா கூறலும், மிகைபடக் கூறலுமாகிய வற்றைக் குறித்து ஈண்டு விரிக்கிற் பெருகுமாகலின் அவற்றைக் குறித்து ஒன்றும் வரையாது விடுகின்றாம்.

இவ்வாறு தத்துவ விஷயமாய் வாதஞ் செய்வதில் பிரயோசன முண்டென்பதே எமது கொள்கையும். இதனால் ஒருவாறு இஃது உண்மை இஃதுண்மை யன்று என்று ஏற்படும்; ஐயமுந் திரிபுமொழியும். நடுவு நிலைமை யுண்டாம். மூர்க்கத்தனமும் முரட்டுத் தனமும் மூலையிற் பதுங்கும். அஞ்ஞானமான இருள் நீங்கும். சாதுக்கள் நட்புண்டாகும். அசத்தியம் அசத்தியமெனத் தெளிதல் கூடும். இத்தகைய நன்மைகள் பலவுண்டாம்.

* * *

**மகாதேவன்.**—இஃதோர் தமிழ்க்கதை. சடகோபாசாரியார் கம்பெனியிற்பதிப்பிக்கப்பட்டது. 20 அத்தியாயமும் 144 பக்கமுங் கொண்ட ஒரு

சிறு புத்தகம். விலை அணா 6. இந்துகுடும்பங்களில் கலியாணமுதலிய விஷயங்களில் நடக்குமக்கிரமங் களைவான்புகுந்த மகாதேவன் இடம்பொருளேவல்காலம் முதலியவற்றின் கொடுமையால் தன் முயற்சி கைகூடாது ஏக்கமுற்று இவ்வுலகினின்று மேகுகின்றான். இக்கதை எளியநடையில் யாவருக்கும் புலப்படும்படியா யெழுதப்பட்டிருக்கிறது.

---

## சமாசாரக் குறிப்புகள்.

---

**மோக்ஷமூலர்:**—ஆங்கில நாட்டில் **கோதீர்த்தபுரி** (Oxford)யில் பன்னாளாக வாசஞ் செய்துவந்த மோக்ஷமூல பட்டாசாரியர் (Professor Max Miller) சென்ற அக்டோபர்மீ காலஞ்சென்று விட்டனர். இந்தியருடைய நன்மையை நாடினவர்களி லிவர் ஒருவர். இவருக்கு வடமொழி (சம்ஸ்கிருத பாஷை) யிலிருந்த ஆர்வத்திற் கோரளவில்லை. இருக்கு வேதம் ஆங்கில மொழியில் வெளிப்படுத்திய மகான் இவர். இந்தியர்களுடைய பாஷை, மதம், குணம், நடை இவைகளைக்குறித்து மிகவும் சிலாகித்திருக்கின்றனர். இத்தகைய விஷயங்களைக் குறித்துப் பற்பல நூல்களும் செய்திருக்கின்றார். இந்தியரும் அதிகதுக்கங் கொண்டாடுவதற்கு அநேக காரணங்களுண்டு.

⁂

**சென்னை இராஜதானி கல்வி விருத்தி.**—இந்த இராஜதானியில் மொத்த ஜனத்தொகை சுமார் 300 - லக்ஷம் அல்லது மூன்று கோடி. இதில் வயோதிகர், யௌவனர் என்னு மிருவகுப்பின ரொழியப்பள்ளியில் கற்கும் பருவத்தினருள் ஆண்பாலார் 2,642,909; பெண்பாலார் 2,701,657; ஆகமொத்தம் 53,44,566. எனவே சுமார் ஐம்பது லக்ஷமென்று ஏற்படுகிறது. மேலும் சிறுமியர் தொகையே (58,748) அதிகமாயிருக்கிறது. இஃதிப்படியிருக்க் தற்காலம் கல்விகற்கும்மாணவருள் ஆண்பாலார் 7,16,763; பெண்பாலார் 124,284 ; ஆகமொத்தம் கல்வி கற்குஞ் சிறுவர்கள் 8,40,047 ; அதாவது சுமார் எட்டரை லக்ஷம். பெண்களின் தொகையைப் பார்க்கிலும் ஆடவர்கள் 5,91,479 அதிகமாய் இருக்கிறார்கள். மொத்தத்தில் வாசிக்கக்கூடிய பருவத்திலிருக்கும் சிறுவர் சிறுமியர்களுள் நூற்றுக்குப் பதினைந்து விழுக்காடு தான் கல்வி கற்கிறார்கள். மற்றவர்களுக்கு கல்வி பரவாததற்குரிய அநேக காரணங்களுள் தாய் தந்தையரின் ஏழைமையே முக்கியமானது.

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1900௵ டிசம்பர்மீ 20உ { புத்தகம். 5.

## மாதர் சுதந்திரம்.

மாதருடைய தற்கால நிலைமையை நன்குணரவேண்டுமாயின் முற்கால நிலைமையை யறிந்த பிறகே ஒருவாறு எடுத்துரைக்கலாகும். இறந்த செய்திகளை யிற்றெனத் தெரித்தல் முடியாதேனும் பழைய புலவர்பெருமான்களுடைய நூல்களைக்கொண்டே தெளியவேண்டி யிருக்கின்றது. ஒரு கண்ணாடி நிலையுருவத்தை யன்றி மற்றைப்பொய்யுருவங்களைப் பிரதிவிம்பித்துக் காட்டாதவாறுபோல அக்காலத்து நடையுடை பாவனைகளையே வெளித்தோற்றுவிப்பார்கள் கவிஞர்கள். ஆனும் கண்ணாடியில் விம்ப உருவத்துடன் வெள்ளிடை ஆங்காங்குக் கலந்திருக்கின்றமை போலச் சிறிது பொய்யும் உண்மையுடன் சேர்ந்திருக்கும். உண்மையை யுணரவிரும்பு மொவ்வொருவரும் அன்னப்புள்ளின் திறத்தினை மேற்கொள்ளவேண்டும். அத்திறனில்லையெனில் என்றும் நீங்காத மயர்கத்துடன் வாழ்நாளைக் கழிக்கவேண்டியதே யன்றிப் பிறிதில்லை.

அற்றேல் நம்முடைய பழைய காவியங்களுஞ் சாத்திரங்களும் என்ன தெரிக்கின்றன? உலகிலுள்ள சாதியார் எவரும் நம் தேயத்தைக் கண்டதன்முன் வடக்கில் உயரத்தை யறிய முடியாத இமயமலையும், மேற்கிற் கடந்து செல்லமுடியாத மலைத்தொடர்களும், கிழக்கிலுந் தெற்கிலும் மலைவரிசையுங் கடலும் யாறுஞ் சிறந்த அரணாக விருந்தபோது ஆங்கிலராற் பெரிதும் வளர்க்கப்பட்ட நாகரிகத்தின் விதைகள் நமது நாட்டில் முன்னரே விதைக்கப்பட்டுள என்னலாம். அத்தகைய நாகரிகத்தை நாம் அனைவரும் அன்புடன் பாராட்டும் இராமாயணம், மகாபாரதம், மநு முதலிய நூல்களைப் படித்தால் அறியக்கூடும்.

தசரதன் மனைவியாகிய கைகேயி ஒருகாலத்துச் சாரதியாயிருந்தனளென்பது கூறப்பட்டிருக்கின்றது. ஒரு பெண்ணிற்கு வாக்குத்தத்தஞ் செய்ததை நிறைவேற்றத் தன் அருமந்த மகனையும் பதினான்கு வருஷம் வனவாசம் செய்யுமாறு ஏவினன் தசரதன். இவ்விஷயங்களெல்லாம் பெண்கள் கூட்டிலடைபட்ட மிருகங்களை யொப்பப் பாராட்டப் படவில்லை என்பதையும், மாறுந் தகைமையையுடைய மாதரே யாயினும் அவர்க்களித்த வாக்குத்தத்தம் சிறிதேனும் அசட்டை செய்யப்படவில்லை என்பதையுந் தெரிவிக்கின்றன. ஜானகி தன் நாயகனை ஸ்ரீராமபிரானைத்தொடர்ந்து சென்று அவன்றனிமையை யினிமையாக்கியதை யாலோசிக்குமிடத்துப் பெண்கள் புருடர்களின் அடிமைகளாகப் பாவிக்கப்படவில்லை யென்பதும் அவர்கள் ஆடவர் தந்துன்பத்தை யொழிக்குமினிய மருந்தனையாரென்பதும் தெரியவருகின்றன. அகலிகையின் அரந்தையை ஸ்ரீராமன் ஒழித்ததை நினைக்கப்பெண்களைத் துன்பம் அடையாமற் காத்தலே மேதக்க மனிதரின் கடமையென்பதும், அவள் அவனைத் துதித்தேத்தியதைக் கவனிக்குமிடத்துப் பெண்கள் கற்றல் அக்காலத்தில் மிகவும் சாதாரணமாமென்பதும், சீதை தன்கற்பை யழிக்கப் பலமுறை முயன்ற இராவணனுக்குச் சிறிதும் இடங்கொடாமையைக் கருதுழிக் கற்பே யுயிரினுஞ் சிறந்ததென்று அவர்களாற் பாவிக்கப்பட்டதென்பதும் ஆகிய இத்தகைய விஷயங்கள் நாம் தெரிந்துகொள்ளவேண்டி யிருக்கின்றன.

இதுநிற்க, மகாபாரதத்தின் விஷயமாகக் குறித்துக் கவனிக்கலாம். மாதர்க்கு ஊறு மனமாரச் செய்வதில்லை யென்ற சபதத்தினாலன்றே வீட்டுமன் இறந்தான். திரௌபதிக்கிழைத்த தீங்கன்றே பல அரசர்களைப் பாண்டவருடன் சேர்ந்து துரியோதனனுக்கு விரோதமாகப் போர்புரியச்செய்தது.

மகாபாரதத்திற்கும் பிற்பட்ட மநுவின் காலத்தைக் கவனித்து நோக்குவாம். மநுவும் குழந்தைகள் மணம்புரிதல் கூடாதென்றும், மணஞ்செய்யுங் காலங்களில் வீணிற் பணஞ் செலவிடுதலிற் பயனில்லையென்றும், மாதர்களை எப்பொழுதும் மரியாதையோடும் அன்போடும் பாராட்டவேண்டுமென்றுந் தெரிக்கின்றனர்.



முற்காலத்தில் மாதரின் சுதந்திரநிலை இத்தகைத்தாக, தற்காலத்தில் அவர் தம் நிலையைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். நம் மாதரின் தற்கால நிலைமைக்குக் காமப்பித்தேறிய மகம்மதியர் ஆளுகையே முதற்பெருங் காரணமாம். மற்று இந்நிலைமை மகம்மதியர் ஆளுகைக்கு நாம் உட்படாத நாட்களுக்கு முன்னரிருந்த தாயின் நாம் அனைவரும் மற்றைச் சாதியாரின் முன் வெட்கபபட வேண்டியதே. இப்போது இத்தகைய கொடியராளுகையினின்றும் விடுபட்ட நாம் ஏன் நம் மாதர்களை நம்மைப்போலப் பாவிக்கவில்லை? அதற்குக் காரணம் சிறிது சூழ்ந்து சிந்தித்தாற்றெரியலாம். இடையில் விளைந்த தீய வழக்கத்தினால் நம் தேயத்துப் பெண்களை யெல்லாம் பெரும்பாலும் கல்வியொளி நலங்கூர்ந்து தழைத்தோங்க விடாது கொடியமனையகஞ் செறித்து நின்றமையின் அக்கொடிகள் பாமலர் பூத்துப் புகழ்மணங் கமழாது சுரிந்து சூம்பிச் சாம்புவனவாயின.

இப்பொழுது மாதர்க்குச் சுதந்திரம் கொடுப்பதன்முன் அவர்களை நன்றாய்க் கலைபயிற்றவேண்டும். அங்ஙனஞ் செய்த பிறகே அவர் தம் உரிமையாகிய பலவகைச் சுதந்திரங்களையுங் கொடுத்தல் வேண்டும். அவ்வாறன்றி யிப்போழ்தே கொடுத்தல் தேளிற்கு மணியங் கொடுத்த கதையாய் முடியுமேயன்றி வேறில்லை யென்பது எமது துணிவு. அன்றியும் அஃதறிவிலா னிடத்துள்ள பணம் வீணிற் செலவழிந்தொழிதல் போலுமென்க.

இரவில் மேகத்தால் மூடப்பட்ட வானத்தில் தோன்றும் தனி விண்மீன்க ளென்ன ஆங்காங்குக் காணப்படும் அசலாம்பிகையம்மையைப் போன்ற மாதர்களே தாம் வெகுகாலமாயிழந்த சுதந்திரங்களைத் தக்கவாற்றான் எய்தற்கு உரியரும் அருகருமாகின்றார்கள்.

சருக்கை - இராமசாமி ஐயங்கார்.

---

## சிலப்பதிகார வாராய்ச்சி.

(தொடர்ச்சி.)

மேற்கூறிய விஷயங்களை வைத்துக்கொண்டு நமதாசிரியரிக் காப்பியத்தையாக்கினார். மிகக் கொஞ்சமான விஷயங்களை வைத்துக் கொண்டோர் பெருங்காப்பிய மியற்றல் வியப்பன்றே! அவ்விதமாக்கக் கற்பனா சக்தி சால்வு

மின்றியமையாதன்றே? அத்தகைய நமதிளங்கோவின் கற்பனையைப்
புகழவேண்டி யொவ்வொரு காதையாக வாராய்ந்து, அக்காதைகளின் யாப்பு
நமது நவீனப்பயிற்சிக் கெவ்வாறு பொருத்து முடைத்தென்பதையும் நோக்
குவாம்.

இந்நூலின் முதற்காதை மங்கல வாழ்த்துப் பாடல்; இதிற் றெய்வவ
ணக்கஞ்செய்து கொண்டு கதா நாயகனும் நாயகியுமாகிய கோவல கண்ணகி
யரின்குணங்களைப் புகழ்ந்து, அவர்தம்மண வினையையுங் கூறுகின்றார். நாம்
முற்கூறியாங்கு இக்காதை தொடங்கும் அடிகள் நிரம்பக் கம்பீரமாயிருக்
கின்றன. இக்காதையிற் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் தெய்வவணக்
கம். இத்தெய்வ வணக்கம் மிக விநோதமாக விருக்கின்றது. ஆரியர்கள்
இருக்குவேதத்திற் கூறியுள்ள ஸோமசூரியர்களையே வணங்கியிருக்கிறார்.
இதற்குக் காரணம் நன்கு புலப்படவில்லை.

இரண்டாவது காதையாகிய மனையறம்படுத்த காதையில், கோவல
கண்ணகியருடைய பரஸ்பர வன்பையும், சம்போக சுகத்தையும், இல்லற
மினிது நடத்தலையும்பற்றிச் சொல்லுகிறார். இக்காதையிற்றான் நமதாசிரி
யரி னினிய நடையாரம்பிக்கிறது. இதிற் கோவலன் கண்ணகியை நலம்
புனைந்துரைக்குமடிகள் மிக வற்புதமாயிருக்கின்றன.

மூன்றாவது அரங்கேற்று காதையில் மாதவி யென்னும் நாட்டியப்
பெண்ணின் நாட்டிய வித்தையை ராஜ சபையிலரங்கேற்றினதைப் பகருகி
றார். இவ்விஷயம் பதிகத்திற்சொல்லப்படாததனால் ஆசிரியர் வேண்டுமென
வருவித்துக்கொண்ட தாகிறது. கண்ணகியைக் காதலித்துவாழ்ந்து வந்த
கோவலன் மாதவி யிடத்து மனதைச் செலவிட்டானெனக் காட்டவேண்டி
யிருத்தலால் அதற்குத்தக்க சந்தர்ப்ப மேற்படுத்துவான் கருதி நம
தாசிரியர் இக்காதை வரைந்துளர். ஒருநாட்டியப் பெண்ணிடத்துக் காதல்
கொள்ளத்தகுந்த சமயம் நடனஞ் செய்யுஞ் சமயமே. அதிலேயும், வேறொ
ரு புருஷனை யனுபவியாத இளம்பிராயத்தோடும், அளவற்ற வனப்போ
டும், அருமையான நடனப் பயிர்சியோடுங் கூடியமாதாக வேற்படுத்தி யதி
லேயும் அவளுடைய பயிற்சியையும், அதனாலாய கீர்த்தியையும் நாட்டக்
கருதி நடிக்குந் தருணமெடுத்துக் கொண்டது ஆசிரியரின் நுட்பவறிவைக்
காட்டுகிறது. இக்காதையில், விலைமாதர்களில் ஒருபெண்ணைப் பன்னிரண்டு
வயது வரையிற் சங்கீதம், நாட்டியம் முதலியவற்றிற் பயிற்றுவித்துப்பிற்கு
தக்க தோர் சபையின் முன்னர் அரங்கேற்றுவது வழக்க மென்பதைக் காட்
டுகிறார். இவ்விடத்திற் கூறியுள்ள வாத்தியக்காரர்களின் நிலைமை, முறை,
நிபந்தனைகள் முதலியவைகள் நூலாசிரியரின் சங்கீதப் பயிற்சியைக் காட்டு
கின்றன. இவ்வளவு தகுந்த சமயத்தை யெடுத்துக் கொண்டவர், அதைத்
தக்கவாறு மேற்கொண்ட காரியத்திற் றுபயோகப்படுத்தாதது மிகவிசனிக்



கத் தக்கதே! இவ்விதம் நாட்டிய மாடிய பெண்ணினிடத்துக் கோவலனுக்
கும் கோவலனிடத்து மாதவிக்கு முண்டான காதல் காசளவேயாயிற்று!
நாட்டியம் முடிந்ததும், மாதவியின் மாலைவிலையிடப்பட்டது. அம்மாலையை
வாங்குவோனையே மாதவிமணப்பதாகச் சென்றாள், மாலையைக்கோவலன்
வாங்கினான். ஆதலின் மாதவிக்கும் கோவலனுக்கு முண்டானகாதலுக்குக்
காரணம் கேவலம் கோவலனுடைய தனமன்றோ? தனது பத்தினியைத்
தக்கவாறு நேசித்து வாழ்ந்துவரும் கோவலனுடைய திடசித்தமானது கேவ
லம் ஒருமாலையினாலோமயங்கிற்று! மாதவியின் பெயராலேயோ பேதப்
பட்டது!! அரங்கேற்றுங்காலத்துக் கோவலனு மிருந்ததாகக் கூறினாரில்
லையே? அவ்விதமிருந்ததாகக் கொள்ளினும், அந்நாட்டியத்தைக் கண்டு
கோவலன் மனங்கலங்கிற்றென்று கூறவேண்டாவோ? கோவலன் மாத
வியின் நாட்டியத்தைக்கண்டு கலங்கினானாதலின் மாலையை வாங்கினானென்
றாலும், மாதவி கோவலன்பாற் கொண்ட அன்பு எம்மட்டு? தகுந்த
சமயத்தை யெடுத்துக்கொண்டவர், மாதவியின் நடனச் சிறப்பையும்,
அதைக்கண்ணுற்ற கோவலன் கொண்டமையலையும், அவனுடைய மனவி
கற்பங்களையும், அவன் நெஞ்சின் ஊசலையும், அவன் துணிவையும், படி
ப்படியாய்க் கூறியிருப்பாராயின் படிப்போர் மனதைப்பரவசப்படுத்தி யிரு
ப்பார். இத்தகையை சமயம்மட்டும் வாய்க்கில், சுகப்பிரியர், கம்பன், கா
ளிதாசன் முதலிய கவிச்சக்கிரவர்த்திகள் விணாக்கார்கள்; படிப்பவர்மனதே
பரிதபிக்கும்படி செய்து விடுவார்கள். கம்பராமாயணம், மிதிலைக்காட்சிப்ப
டலத்தில், இராமனுக்கும், சீதைக்கும் காதலுண்டான விவரங்கூறுஞ் செ
ய்யுட்களை யாரேபுகழாதார்? இவ்வாசிரியர் மாதவியின் நடனத்தைத் தக்க
வாறுவருணித்து அதனால் திடசித்தமுடைய கோவலன்வேற்றுமை யடைந்
தானென்றால், மிகச்சிறப்பாயிருந்திருக்கும். இதன்பயனை நாம் பிரபுலிங்க
லீலையில் மாயையின் நடத்தி லனுபவிக்கிறோம்.

"அல்லம ரிவர்தாந் தாமென் றறிதர வறிதி ராமற்
சொல்லுக வெனவ டிக்குந் தோற்றம்போன் மத்த ளத்தை
வல்லவ னறைத லோடு மாயைநெஞ் சூச லாடச்
சில்லரி மணிச்சி லம்பு சிலம்புற வாடு கின்றாள்."

"முன்னுற விருந்த ஞான மூர்த்திமேல் விழியு மார்த்துப்
பின்னுற நின்ற மூர்த்தி மான்மிசைப் பெயரு நெஞ்சு
மன்னுற விருத்தி நின்று மாயைதா னடித்தாள் கண்டோர்
தந்நய னமுமா நெஞ்சுந் தன்மிசை வந்து வீழ.

எனுஞ் செய்யுட்களைப்படிப்பவரெவர்தாம் மாயையின்டத்தையனுபவியார்?
இப்படியே காளிதாசன் ஆங்கிலக் கவியாய டெனிஸன் முதலியவர்களும்
வரைந்திருக்கிறார்கள். ஆதலின், நமதுநூலுடையார் இக்காதையிலவர்தம்

புலமையைக் காட்டியுள்ளாரேயன்றிப் படிப்போர்மனதைக் கவரவில்லை. சரித்திரவமைப்பினால், இவருக்கு, ஒருமனிதன், ஒருமண்டபம், குளம், நகர முதலியவற்றைச் செவ்வனே சிறப்பித்து வருணிக்கத் தெரியுமேயன்றி, மனோபாவங்களை யனுபவிக்குமாறு ஊடுருவிவருணிக்குந் திறனவ்வளவில்லை யென்றேசொல்லவேண்டும். இக்கூற்றை, மேன்மேலுமுறுதிப் படுத்துவாம். இவ்விதமாய், இக்காதையில் அடிகள் கோவலனைக் கண்ணகியிடமிருந்தும் பிரித்து மாதாவியின்பாற்படுத்திவிட்டார்.

இனி, அந்திமாலைச் சிறப்புச்செய் காதையின்கண் கோவலன் மாதவியின் சுகானுபவத்தையும், அந்திமாலையையும், அத்தருணத்திற் றணந்தும் மணந்துமுள்ள நாயகர் நாயகிகளின் மனோபாவங்களையும், சந்திரோதயத்தையும், மாதவியின் மனக்களிப்பையும், கண்ணகியின் துயரத்தோடுகூடிய தோற்றத்தையும், மாதர்கள் மணிவிளக்கேற்றி அவற்றினைப்பணிந்தபின் வாசற்றிண்ணைகளில் வைப்பதையும், மிக நேர்த்தியாய் வருணித்துளர். ஆயின், இக்காதையும் பதிகத்திற்கூறப்படாததாதலின், இதற்குமோர் காரணமிருக்க வேண்டும். அஃதே, கோவலனோடுகூடிய மாதவியின் மனக்களிப்பையும், கணவனைப்பிரிந்த கண்ணகியின் கவலையையும் தெரித்தற் பொருட்டாம். ஆயின், ஆசிரியரெம்மட்டுமெடுத்த காரியத்தை முடித்தார்? மாதவியின் உற்சாகத்தைக் கூறினரேயன்றிக் கண்ணகியின் கவலையைக் கழறிலர்! கண்ணகியின் துயரத்தோற்றத்தைச் சொன்னாரன்றி யவடன் துயரத்தினளவைப் பகர்ந்திலர். இப்பொழுதே, கண்ணகியிடத்துப்படிப்போர்க்கு அநுதாபமுண்டுபண்ணவேண்டியது. அதற்கு, அவளுடைய வெளித்தோற்றத்தைப் பார்க்கிலு மவடன் மனநிலையே தகுதியானது. அம்மனநிலையைக் காட்ட நமதாசிரியரெடுத்துக்கொண்ட தருணமே சிறப்புடைத்து! அப்படியிருந்தும் காரியத்தைச் சாதியாது விட்டனரே! மாலைப்பொழுதில் மாதர்கள் மணிவிளக்கேற்றிவைத்துத் தம் மணவாளரோடு மகிழக்கண்ட கண்ணகி தங்கணவனை நினைந்து தவித்தனளென்று சொல்லியிருப்பாராயின் மிகச்சிறப்பாகுந்திறன் சிறிதேயாமென்பதற் கிஃதோர் சான்றாகும்.

பிரணதார்த்தி ஹரசிவன்.

---

# ருக்மணி சரித்திரம்.

## அத்தியாயம். 5

பொழுது விடிந்து 20- நாழிகையாயிற்று. அம்மூவருஞ் சாப்பிட்டு அப்பொழுதுதான் எழுந்தார்கள். சுப்பையர் மனங்குழம்பிக் கொண்டிருந்தது. என்ன செய்யலாம்! பைத்தியம் பிடித்தவர்போற் குழறுகிறார். செட்டிக்கும்



ஒன்றும் தோன்றவில்லை. பணமோ குறைந்தவட்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்திரத்திற் குறித்தகாலமொரு வருஷந்தான். அதற்குமேல் 18 மாதம் பொறுத்திருந்தான். அப்பொழுதுகூடச் சுப்பையர் பணத்தைக்கொடுத்தாரில்லை. சுப்பையரோ சிறைச்சாலை போய்விடுவேனென்று சொல்லுகிறார். 1,500 ரூபாயையா இழந்து விடுகிறது? செட்டியார் அன்றைக்கே உயிர் துறந்து விடுவார். இதற்கு ஓர் ஏற்பாடுசெய்ய வேண்டுவதா யிருக்கிறது. வெகு நாளாக அகப்படாமலிருந்து இப்பொழுது அகப்பட்டிருக்கிறார். இப்பொழுது அவரை விட்டுவிட்டாற் பின்பு என்ன செய்கிறது. எப்படித்தான் பணத்தை வாங்குவது? ஐயோ பின்பு வருவதொன்றையும் யோசியாமல் சிறைச்சாலைக்குப் போய்விடுவே னென்கிறாரே. அவர் வார்த்தையிற் செட்டிக்கு முழுவதும் நம்பிக்கையில்லை. ஆயினும், பாம்பின் பல்லைப்பிடித்து விஷபரீக்ஷைசெய்வோர்க ளாரேனுமுண்டோ? நியாயாதிபதிமுன் சுப்பையரைக் கொண்டுபோய் நிறுத்தி விடலாம். ஆனால் இவ்விதமே அவர் அங்குச் சொல்லிவிட்டாலோ: பெருந்தொகை யன்றோ போய்விடும். சீ! சீ! அது செய்யலாகாது. மேலுஞ் சிறைச்சாலைக்கு ளடைத்துவிடுவோ மென்றாற்கூட, மாதமொன்றுக்குப் பதினைந்து ரூபாய் அவர்செலவுக்காசக் கொடுக்கவேண்டுமே! அவ்வழியிலிணங்கக் கூடாதென்று செட்டியார் நிச்சயித்துக்கொண்டார். சுப்பையரிடத்திலிருந்து, இனிமேல் நயத்திற்றான் பணம் வாங்கவேண்டுமென்று தீர்மானித்தார்.

மேற்காரியமென்ன செய்யலாம்? அடுத்த தடவை பார்த்துக்கொள்ளலாமா, அல்லது வேறு ஏற்பாடுகள் செய்யலாமா? இனிமேற் காலதாமதஞ் செய்வது நன்றாயிராது. வேறு என்ன செய்வது? செட்டியார் வெகுநேரமாலோசித்தார். நாட்டுக்கோட்டையானிடங்கடன்வாங்கிச் சுப்பையருக்குக் கொடுத்து, பணத்தைத் தான் வாங்கிக்கொண்டு போவதே நலமென்று உத்தேசித்தார். சுப்பையர் அவ்வளவு அதிக வட்டி கொடுக்கமாட்டேனென்றாலோ—என்னவோ, பார்த்துக்கொள்வோம். இவ்வாறு ஒரு முடிவு தன் மனத்திற் செய்துகொண்டு செட்டியார்,

"ஐயரே, ரெண்டுபேருக்கும் லொகுவா இன்னொன்று செய்யலாமா?"

"என்ன?"

"கடன் வாங்கிக்கொடுக்கிறேன் குடுக்கிறீரா?"

"அதெல்லாம் எதுக்கு ஜெயிலுக்குப் போறேன்னா."

"சும்மாப் பேத்தாதீங் காணம்"

"என்னது?"

"பாப்பாரா இருந்துக்குட்டு"

"அப்படித்தான்; வேறு என்ன வழி?"

"சொப்பனத்லெகூட உம்மெ ஜெயிலுக்கனுப்பிக் கணமனுனெணச்சில்லெங் காணும் சும்மா பேச்றீர். நான் என்னு சொல்ரேன்னு. அ.ரு.ரா. மனிகைலே கடன் வாங்கித் தாரேங்காணும்"

"வட்டி ரொம்பக் கேழ்ப்பனே"

"அது என்னுச்சிம் போய்ட்டுப்போகிறது. அதுபார்த்துக்கட்டுமாய்ய"

"நீர் லொகுவாத்தஞ் சொல்றீர் குடுக்கிறவனுக்குன்னு, தாவே தீர்ந்துபோகிறது"

"அடுத்த வர்சம் வெளெஞ்சிச்சானு எல்லாக் கடனும் அடெச்சுட மாட்டேம்"

"அதுருக்கட்டும். என்ன வட்டி கேட்பன்"

"ஒன்றை தான்"

"அவ்வளவா?"

"ரொம்ப மலுவுல்ல இப்போ"

"முன்வட்டி இடுத்து னுடுவேனே"

"அது இல்லாமோ நாட்டுக்கோட்டையான் யாவார முண்டா?"

"ரெண்டாயிர ரூபான்னு வாங்கணம்"

"ஆமாஞ்சாமி ஆமாம்"

"அடே அப்பாடா"

"இல்லாட்டி வேற ஏதாச்சிம் ஏற்பாடு பண்ணுங்க"

"சரி பாரும்"

செட்டி இவர்களை அழைத்துக்கொண்டு போய், அ. ரு. ரா. செட்டியாரண்டை போனுன், வெகு நேரம் தகரார் நடந்தது. கடைசியாக இராமசாமி செட்டியார் கையொப்பம் வைப்பதாக ஒப்புக்கொண்டதனுல், சுப்பையருக்குக் கடன்கொடுப்பதாக நாட்டுக்கோட்டைச்செட்டி ஒப்புக்கொணடான். சுப்பையர் பணத்தை வாங்கி இராமசாமிசெட்டியாரிடங் கொடுத்துவிட்டு மீதி இருந்த 97-ரூபாயை எடுத்துக்கொண்டு, அஸ்தமயமாகுஞ் சமயத்திற் கும்பகோணங் கடைத்தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தார்.

அவர், இதுவரையில் நடந்ததெல்லாவற்றையு மறந்தார். கடைத்தெருவிலிருந்த சமான்களெல்லாவற்றையும் வாங்கிவிட வேண்டுமென்ற அவாக்கொண்டு, ஒரு சாமானைப் பார்த்தவுடன், அது இருந்தால், தன் மனைவி சந்தோஷப்படுவாள், என்கிறுர்;. இன்னென்றைப்பார்த்துத் தனது பெண் அது வைத்துக்கொண்டு சந்தோஷப்படுவாள் என்கிறுர்; மற்றென்றைப்பார்த்துத் தனது சிறு குழந்தைக்கு அது வாங்காமற் போகக்கூடாது என்கிறுர். இவ்விதமாகச் சிறிதேனுந் தனது ஸ்திதியைப்பற்றி யோசியாமல், தான் கண்டதை யெல்லாம் வாங்கிக் கொண்டிருந்தார். ஒவ்வொன்றையும் வாங்கி வாங்கி அம்மாஞ்சியிடங் கொடுத்துப் பார்க்கச் சொல்வார். அம்மாஞ்சி,



கிருதயுகத்து மனுஷ்யர். அவருக்கு எதைப்பார்த்தாலும் புதிதாய்த்தோன்றுகிறது. வாங்கவேண்டுமென்ற ஆசையு மிருக்கிறது. ஆனுல் எல்லாம் விலை அதிகமாயிருந்தனவென்ற எண்ணத்தில், ஒன்றையும் வாங்கவில்லை. சுப்பையரோ,

"கண்ணுக்கு நன்னார்க்கோல் யோடா? அதைச் சொல்லு. வெலெ கடக்கறது" என்றுர். அம்மாஞ்சி

"நன்னுத்தான்ருக்கு" என,

"நாயகர்வாள்! வெலெென்ன" என்று கடைக்காரனைச் சுப்பையர் கேட்டார்.

"ஜயாக்குத்தானே"

"ஆமாம்"

"ஆறு இரண்டு வெலெ சொல்லப்படாது. என்டா ஜரிகை மொக்குக் கட்டின பட்டுச்சேலெல்ல"

"ஆமாம்" என்றுன் அவன் குமாஸ்தா.

"ஆறு சரி. இருபத்தஞ்சு ரூபா குடுங்க"

"அடே அப்பாடா"

"என்ன" என்று நாயகர் சிரித்தார்.

"ஆனெவெலெ, குதெரெவெலென்னு சொல்லரான்; சொல்லிக் குடுங்கோன்னு"

"அப்பறஞ் சொல்றத்தைக் கேக்கறேன்"

"அம்மாஞ்சி, பத்தொன்பது ரூபாய் கொடு" என்றுர் சுப்பையர்.

"சரிப்படாது சாமி"

"எட்ரு சொல்றேன்" என்று சுப்பையர் சொல்ல அம்மாஞ்சி பணத்தை எடுத்துக் கொடுத்தார், அதை வாங்கிக்கொண்டு "வச்சுக்குங்கோன்னு"

"ஏது சாமி"

"நாளைமுன்னெ இங்கே வரவேண்டாம்?"

"குசால வாங்க சாமி, இப்பொ கட்டாது"

"சரி இருபது ரூபாயா வச்சுங்கோம். இன்னிக்கு நரிமுகத்லே முழிச்சேர்" என்றுசொல்லிப் பணத்தைக்கொடுக்க, வியாபாரமு முடிந்தது.

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்.

---

## இராமாநுசாசாரியர் சரிதம்.

---

இவர் அவதரித்ததைக்கேள்வியுற்ற திருமலைநம்பிகளும், ஸ்ரீபெரும்பூதூர்க் கெழுந்தருளிக் கேசவசோம யாஜியாரைக்கண்டு அவர்க்குவந்தனை வழி

பாடுகளியற்றிப்பின், அவர் தம்புத்திரனையும் முகவொளிதிகழக்கடைக்கணித்தருளி 'இவன் அனைத்திலக்கணங்களாலும் நிறைந்தவன்; எல்லாநூல்களையும் கற்றுவல்லனாகுந் தன்மையுடையன்; ஆதலின், 'இளையபெருமாள் [லக்ஷ்மணன்] என்ற பெயர்க்குத் தகுதியானவன்' என்று பன்னிரண்டாநாள் அவர்க்கு 'இளையாழ்வான்' என நாமகரணஞ் செய்தனர். பின்பு, அன்னப்பிராசனம், சவுளம், உபநயனம் முதலிய சடங்குகளையும் அதற்குத் தக்க காலங்களிற் றவறுமல் விதிப்படி நடத்தி, அங்கோபாங்கங்களோடும், பதக்கிரமங்களோடும் வேதங்களனைத்தையும், மற்றும் பதினென்குவித்தைகளையும் கற்பிக்க அவற்றில்தேறி, பதினறுகலைகளாலும் நிறைந்த பூரணசந்திரன்போலப் பதினறு சடங்குகளாற் பண்புற்றுப் பதினறுட்டைப்பிராயமுடையரானவாறே, பிரமசாரிமுதலோர்க்குத் துணைபுரியத்தக்க இல்வாழ்க்கை என்னும் நல்வாழ்க்கையை மேற்கொண்டார்.

இங்ஙனமாகையில், பெருமாள்கோயில் திருப்புட்குழியின்கண் யாதவப்பிரகாசர், எனப்பெயர் பூண்ட ஏகதண்டியான ஒரு துறவிஒருவர் பூர்வபக்ஷம் வேதாந்தம் கற்பிக்கின்றாரெனச்செவியுற்று இவ்விளையாழ்வார் ஆங்கெழுந்தருளி, அவர்பக்கல் வேதாந்தவிழுப்பொருள் கேட்கும் ஏனையரோடு தாமும் ஒருவராய்க் கற்றுவாராநிற்க அவ்வளவில், மழலைமங்கலத்துக் கமலநயன பட்டருக்கு அவர்தம் பத்தினியாகிய * பெரியபிராட்டியாரிடத்தில், குரோதனவருஷத்திற் பௌர்ணமியும், திங்கட்கிழமையும், புனர்வசுநக்ஷத்திரமும் கூடியசுபதினத்தில் ஒருபுத்திரருதிக்க அவருக்குச் சாதகன்மமாய பிறகு அப்புத்திரருக்கு அம்மானனதிருமலை நம்பி அங்கே எழுந்தருளிக் கமல நயனபட்டரைக்கண்டு அவர்க்குவழிபாடியற்றிப் பின்பு அவர்குழந்தையையும் தமது தாமரைக்கண்களால் நோக்கி, 'இவன், எல்லாநற்குணங்களையுமுடையனாய்ச் சகலகலைகளையும் ஓதியுணர்ந்து வைதிகனுவான்' எனத்திருவுள்ளமுகந்தருளி, அம்மைந்தனுடைய தந்தையானகமல நயனபட்டரையுங்கொண்டு அப்புத்திரனுக்குக் 'கோவிந்தன்' என்றுநாமகரணஞ் செய்வித்தார். இப்புத்திரரும், சவுளம் முதலிய சடங்குகள்யாவுஞ் செய்யப்பெற்றுக்கல்விக்கு உறைவிடமாய், கற்றோர்க்கு அணிகலனாய் விளங்கினார்.

இப்படி இருக்கையில், திருப்புட்குழியில் யாதவப்பிரகாசருடனே இளையாழ்வார் வேதாந்தம் பயில்கின்றாரென்று கேட்டுமிக்க ஆவலுடன் அங்கு வந்து தாமும் வேதாந்தம் கற்கத்தொடங்கினார். இவ்வாறு கற்றுவருகையில் ஒருநாள் யாதவப்பிரகாசன் ஒரு வேதவாக்கியத்திற்கு மாறுகப்பொருள் கூற இளையாழ்வார் அதைத் தடுத்துச் சரியானபொருள் சொல்ல † அந்த

* இப்பெரிய பிராட்டியார் இவ்விளையாழ்வருக்குச் சிறியதாய்.

† அஸத்தியத்தினின்றும் வேறுயது; அஞ்ஞானத்தினின்றும் வேறுபட்டது [பிரமம்] சத்தியமாகிய குணமுடையது; ஞானமுடையது [பிரமம்]



ஸந்நியாஸி அவரை மருட்டினார். அப்பால், இளையாழ்வார் ஒருநாள் யாதவப்பிரகாசருக்கு எண்ணெய் தேய்த்துக்கொண்டிருக்கையில் வேறொரு வேதவாக்கியத்திற்கும் தகுதியற்ற பொருளொன்றுரைக்க அதுகேட்ட இளையாழ்வார் துன்புற்றுக் கண்ணீர்மல்க, அக்கண்ணீர் யாதவப்பிரகாசருடைய தொடையில்வீழ்ந்தது. வீழ்ந்த அக்கண்ணீர் அவர்தம்தொடையில் தீப்போற்சுட அவ்யாதவப்பிரகாசர் பதறிக் குலைகுலைந்து இளையாழ்வார் முகம் நோக்கி, 'நீர் துயரமுற்றுக்கண்ணீர்மல்கியது என்னோ?' என்ன, அவர் 'நீவிர் தக்க பொருள் கூறாது மாறுகொளக்கூறியவாறே எனக்குக்கண்ணீர்மல்கிற்று' என்றார். இங்ஙனங்கூறக்கேட்ட யாதவப்பிரகாசர் இளையாழ்வார்பக்கல் கடுஞ்சீற்றங்கொண்டு, 'யான் சொல்லியபடி கேட்டிருப்பீராயேல் வாசித்திரும்; இன்றேல் விட்டுச்செல்லும்' என்றார். பிறகு, இருவரும் சிந்தைகலங்கித் தவிர்ந்திருக்க, யாதவப் பிரகாசர் தம்முடைய மாணக்கருள் தமக்கு இயைந்தவரையழைத்து ஏகாந்தத்தில், 'நீங்கள் யான் சொல்லியபொருளை தகுதிஎன்றிருக்க, இவ்விளையாழ்வார் ஒருவருமே தடுத்துப் பேசுகின்றார்; அவராலேநமது அத்துவிதக்கொள்கை குறுகும், இவர் முடியும்விரகென்னே?' என்று கேட்க, அவர்களும் பலபடி படும்வகைசொல்லயாதவப் பிரகாசரும் சிஷ்யர்களை நோக்கி 'நீவிர் சொல்லும்செய்கைகள் யாவும் பழிபாவங்கட்குக் காரணமாகும்; அவைவாராமலும் நினைத்தபடி கூடவும் * மணிகர்ணிகையில் இவ்விளையாழ்வாருக்கு மரணமுண்டாக்குகையே எனதுகருத்து' என்ன, அவரும் அங்ஙனே சம்மதித்துத் துரியோதனன், தருமபுத்திரர் முதலோர் திறத்துப் பெரும்பகைகொண்டு அவர்களை அரக்குமாளிகையில்இருத்திக்கொளுத்தக்கருதியது போலவே, இளையாழ்வாரையழைத்து 'நீர் இங்கில்லாவிடில் எமக்கொருகுறைவாயிருக்கின்றது; ஆதலின் முன்போலவே வேதாந்தத்தைத்தடையின்றிப் படித்துவாரும்' என்று நன்மையுரைத்து அவரைவசப்படுத்தி, ஒருநாள் கங்காயாத்திரை செய்வதாய்த் தீர்மானித்துப் புறப்பட்டுச்சென்று வழியில் தங்கியவிடங்களில் இளையாழ்வாரும், அவர்தம்பியரான கோவிந்தபட்டரும் ஒன்றுசேராவண்ணந்தடை செய்துகொண்டு மிக்கபகைமை பாராட்டியே உபசரித்துச் செல்கையில் விந்தியப்பிரதேசத்திலே ஒருபள்ளக்கரையில் தடாக்கருமவயத்தராய் இளையாழ்வாரும் கோவிந்தபட்டருங்கூடிநின்றவாறே, அக்கோவிந்தபட்டர் அங்கு ஒருவருமில்லாமை கண்டு இதுவே தக்க சமயமெனக்கொண்டு, கங்காயாத்திரை செய்வதன் காரணத்தை அவர்க்குக் குறிப்பித்து அகன்றுபோகச்சொல்லித் தாம் ஒருவரே போந்தார்.

பின்னர், இளையாழ்வாரும் சிந்தை கலங்கி யவ்வழிவிட்டுக் குறுக்கே சென்று ஒரு மரத்தடியிலே நின்றுகொண்டு பார்க்க, அவ்விடம் வெம்பிபெரிகானமாய் நீர் நிழலற்றுப்,

* மணிகர்ணிகை—காசியில், கங்கைக்கரைக்கணுள்ள வொருதீர்த்தத் துறை என்ப.

* "பொருந்தார் கைவேனுதிபோற் பரற்பாய மல்லடிக்கட் குருதிசோர,
விருப்பாதகான் விரும்பிவெயிலுறைப்ப வெம்பசி நோய்கூர்"

என்றபடி வெப்பமான பரற்களையுடையதாய்க் கொடியதாபத்தைச் செய்யத்தக்க சூரிய கிரணங்களையுடைய தான 'விந்தியாடவி' என்ற அப்பெருங்காட்டிற் றுணைசெய்வாரொருவருமிலராய் வழிதிகைத்து மதியெல்லா முள்கலங்கி வருந்தி நிற்கையில், ஆபத்ரக்ஷகனான பகவான் வில்லும் வாளுங்கொண்டு மனைவியுடன்கூடி யிடர்கெட வந்து அவர்தம் முன்னே தோன்றுவாளுயினுன். இளையாழ்வாரும் அவர்களைக்கண்டு கலக்கந்தீர்ந்து உள்ளந்தேறி, 'நீங்கள் எங்கு நின்று வந்தீர்கள்; எங்குச் செல்கின்றீர்கள்?' என்று கேட்க, அவர்களும் 'வடதிசையிற் சித்தாச்சிரமத்தினின்று வருகின்றோம்; இனி, † சத்தியவிரத க்ஷேத்திரம் செல்கின்றோம், என்ன, இவரும் 'யானும் உங்களுடன் ‡ புண்ணியகோடி வர நினைக்கின்றேன்' எனக்கூற அவர்களும், முன்னடியிட்டுச் செல்லவே இவரும் பின்னே செல்வாராயினுர். இவ்வாறு அக்காட்டைக் கடந்து செல்லுமளவில், இரவியும் அக்கானகத்தின் வெம்மைக் காற்ருது மேற்கடலிற் குளிக்கச் சென்றனன். இவர்களும் தத்தமக்குரிய மாலைக்கடன்களைக் கழித்தபின்னர், முடிவிலாவல்லிருளாய் முன்னடி தோன்ருமற் காளராத்திரியாய் நள்ளிருளானவாறே இளையாழ்வார்தாமும் அவர்களுடனே ஓரரசவிருக்கத்தடியிற்றங்கியிருந்தார். அப்பொழுது அவ்வேடனது மனைவியும் நீர்வேட்கைகொள்ள அவனும் ஆங்கருகிலுள்ளபருகுதற்கேற்றதொரு கிணற்றிலுள்ள நீரினைப்பொழுது விடியக்காட்டுவேனென்ருன். அதுகேட்ட அவ்விளையாழ்வாரும், 'அந்தோ! பிறர்க்குதவிபுரிதலையே பேரணியாக்கொண்ட இவர்கட்குமுன்பின் தெரியாத இவ்விடத்துயான் செயற்பாலதென்னே!! என்று காலையில், ‖ "கனவிருளகன்று" ¶ "கீழ்வானம் வெள்ளென்ற வாறே கொழுமலரணவிக் கூர்ந்தது குணதிசைமாருதம்" வீச § "அரியரியென்ற பேரரவங் கேட்டெழுந்து காலைக்கடனைச்செய்து முடித்து வழிநடத்துமவர்களைத் தேடிக்காணுமையால் திசைதோறு நோக்கிக் கூவிக் காலடிதோன்றியவழியே நடந்துவருமளவிற் கதிரவன்குணதிசைச் சிகரம்வந்தணைய நாடுகள் நன்ருய்த்தோற்றக்கண்டு, 'நேற்றுநின்றநிலைக்கு இப்படியுமொருவெளிநாடுகாணப் பெற்றதே'! என்று பெருங்களிகொண்டு நாற்புறமும்நோக்க, அந்நோக்கினவிடத்துத் தோப்பும் கிணறும் அக்கிணற்றருகே நாலிரண்டு மனிதரும் நிற்கக்கண்டு இளையாழ்வாரும், அவர்களிடஞ்சென்று,

* பெருமாள் திருமொழி.
† சத்தியவிருதக்ஷேத்திரம்-காஞ்சீபுரம்.
‡ புண்ணியகோடி.
‖ திருப்பள்ளியெழுச்சி.
¶ " "
§ " "



'இஃது எத்தேசம்? எவ்வூர்? எந்தவிடம்?' என்று கேட்க அவர்களுமிவரை நோக்கி "அந்தகர் திலதமே இஃதென்ன புண்ணியகோடிவிமானம் முன்னே நிற்கக்கண்டிலீரோ?" என்றனர். அதுகேட்டஇவர் பேரானந்தப் பெருங்கடலில்மூழ்கி. இராமனது கணையாழிகண்ட சீதைபோலவும், 'கண்டேன் சீதையை' என்ற அநுமானது வார்த்தையைக் கேட்ட இராமன் போலவும், மதுவனத்திற் புகுந்த குரக்கினத்தரசன் போலவும், கண்ணன் கழலிணைகளையே யெண்ணி 'எத்திறம்'! என்ற ஆழ்வாரைப்போலவும், செவ்வனே அறியாது திகைத்துநின்ற தமக்குத் துணை செய்தவர்களையே திருமகளும் திருமாலுமெனக் கருதி மோகித்துக் கிடந்தார்.

பின்பு தாமே தம்மைத் தேற்றிக்கொண்டு, 'அருச்சுனன்கூடத் திரிந்த கண்ணன் அவன்றன்னைத் தனது விசுவரூபத்தால் மயங்க வைத்தாற்போல என்னையும் தன் நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்து உருக்காட்டாதே பொளித்து' என்றின்னன பல மொழிந்து புலம்பிப் பிறகு பேரானந்தமடைந்து பெரியதொரு ராஜமார்க்கத்தாற் சென்று கோவிற்குறுகி அத்தியூரானது அடியிணை வணங்கிக் கண்ணீர் மல்கல் மெய்சிலிர்த்தல் முதலிய மெய்ப்பாடடைந்து, அத்திருமால் தான் தோன்றி மறைந்ததன் காரணமறிந்து, அச்சாலைக்கிணற்றிலே பேரருளாளருடைய திருவாராதனம் முதலியவற்றிற்குத் திருமஞ்சனங் கொண்டு வந்து சமர்ப்பித்து வருபவராயினுர்.

தி. கோ. ஸ்ரீரங்காசாரியர்.

(இன்னும் வரும்.)

## சந்தான குரவர்.

இனி யிவர்கள் திகழ்ந்த காலமிவையெனத் தீர்மானிக்க முயலுவமாயின் குறுக்கிடுங் கஷ்டங்களுக்கோ அளவில்லை. இவர்கள் இருந்தகாலம் அகத்தியர் காலமன்று, தொல்காப்பியர் காலமன்று, நக்கீரர் காலமன்று, வள்ளுவர் காலமன்று, சம்பந்தர் காலமன்று, சுந்தரர் காலமன்று, கச்சியப்பர் காலமன்று, கம்பர் காலமன்று; என்ருலும் இவர்கள் கால நிர்ணயத்திற்குவேண்டிய ஆதாரங்களைத் தேடிப்பிடித்தல் சிரமமே. நேற்றுத் திகழ்ந்த தாயுமானவர் சிவஞான முனிவராதி மகான்களைப்பற்றியே உறுதியாக் கூறுதலியல வில்லையே! சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னிருந்தனர் இருநூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னிருந்தனர் என்று உத்தேசமாய்ச் சொல்வாரையன்றிச் சாலிவாகன சகாப்தம் இந்த ஆண்டிற் பிறந்தார் அல்லது உயிர் துறந்தார் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கல்விமான்கள்

எவ்வளவு துர்லபம்! நேற்றைப் பெரியோர்களுக்கே இந்தப் பாடாயின் அவர்களுக்குச் சில நூற்றாண்டுகளுக்குமுன் ஜீவித்திருந்த சந்தானகுரவர்களைப்பற்றிச் சொல்வானேன்? ஆனால் ஒரு காரியத்தில் மட்டும் சைவர்கள் மிகச் சுறுசுறுப்பா யிருந்திருக்கிறார்கள். சைவ சமயவகுப்பினருள் எவனாயினும் ஒருவன் அசாமானியக் கல்வியறிவும் சிறந்த ஒழுக்கமுமுடையனாய்த் தோன்றுவனாயின் அவன் மரணமடைந்த மாசமும் திதியும் பாட்டிலமைத்து ஏட்டில் எழுதிவைக்கப்படும். ஏனெனில், ஆண்டு தவறாது அவற்குக் குருபூசை செய்தல் வேண்டுமாம். மாசம் திதியோடு ஆண்டும் எழுதிவைப்பதுண்டு, ஆயின் அறுபது ஆண்டுகளும் மாறிமாறி வருகின்றனவே. குறிப்பிக்கப்பட்ட ஆண்டு எந்த வட்டத்தைச் சேர்ந்ததென் றெங்ஙனம் நிச்சயிப்பது? இவ்வழக்கம் இன்னும் நம்மவர்களை விட்டதாகத் தெரியவில்லை. நம்மவருள் யாவரையாவது நோக்கி "நும் பாட்டனார் மாண்ட ஆண்டு என்னை சகாப்தம் என்னை?" என்று உசாவுவமேல், அவர் எதிர்பாராத கேள்வியாக முடியும் நமது கேள்வி. மாசம், பக்ஷம், திதி யென்றாலோ யோசியாமலே விடை பகர்வர், அவற்றை யறிந்து வைத்திருப்பது சிரார்த்தங்களுக்கு அவசியமாதலின் காலநிச்சய வுணர்வில் நம்மவர்களுக்குள்ள உபேக்ஷையை மிகச்சிறந்த குணமென்று சிலர் பாராட்டுகின்றனர். பூர்வ காலத்தவர் மத்திய காலத்தவர் தற்காலத்தவர் என்னும் பகுப்பே தமிழ் நாட்டுப்புலவர் மனத்தில் உதிக்கிற தில்லையாம். ஒவ்வோர் ஆசிரியரும் அவர் தோன்றிய காலம்பற்றி மதிப்புப்பெறாது அவரிடத்துள்ள மாட்சிபற்றி மதிக்கப்படுகின்றனராம். நூல்களை மதித்தலும் இம்முறைபற்றியே நடைபெறுகின்றதாம். இவை யெல்லாம் உண்மையாயின் இவ்வொழுக்கங்களை மேற்கொண்ட நாட்டினரைக்காட்டிற் சிறந்தாரொருவ ரில்லையென்று உறுதியாகச் சொல்லலாமே. இவை யெல்லாம் உண்மையாயின், தொன்றுதொட்ட வழக்கு, தொல்லாசிரியர் வழக்கு, மரபு, முதலிய பதங்கள் பலமுறையுந் தமிழ் நூல்களுட காணப்படும் அற்புத மென்ன? மற்று, உண்மைதானெது வெனில், 'பழமை' என்னும் பதத்திற்குப் பலபொருள்கள் உண்டு. சில வித்வான்கள் சங்கமருவிய நூல்களையே பழ நூல்கள் என்று சொல்வார்கள். சிலர் திருவாசகம் தேவார முதலிய நூல்களைப் பண்டைக்காலத்தனவென்பர். இன்னுஞ் சிலர் கம்ப ராமாயணம் வில்லிபாரதம் முதலியவற்றை யத்தன்மையனவென்று கூறியமைவர். பெரும்பான்மையோர்க்கு பாஷையியல்பு முதலியன இன்னுந் தெரிந்தவாறில்லை. ஒரு பதத்தை முற்காலத்தோர் வழங்கியபடியன்றி வேறுநெறியில் வழங்கப்படாதாம். கல்வியறிவுசான்ற தற்காலத்துப்பெரியோர் நூதனமாவழங்குவராயின் 'இது நமது பாஷைக்குக் கிடைத்ததோ ருதியம்' எனமகிழ்ந்தேற்றுக் கொள்ளாது இஃது என்ன புதுப்பிரயோகம்? என்று இகழ்ந்து தம்மடமையை வெளிப்படுத்துகின்றனர். உலகவழக்கில் இப்பதம் உண்டு என்று காட்டினும் அது



சிறப்பில்லையாம். பதமாயினும் விஷயமாயினும் பழையதாயிருத்தல்வேண்டும் அல்லது பழையவழக்கையாயினும் மிக அநுசரித்துவரல் வேண்டும். அதற்கு அங்கீகாரம் கிடைத்தலில் தடையேயிராது. ஆதலால், காலத்தைப் பற்றித் தமிழர் உபேக்ஷையாயிருக்கின்றனர் என்பது தவறு. அதனருமையையறியும்பாக்கியம் இதுவரைபெற்றிலர் என்பதேயுண்மை. காலமொன்றில்மட்டுமா, எத்தனை அரியவிஷயங்களில் அவர்கள் பின்னடைந்தவர்களாயிருக்கின்றார்கள்? 'நூலாராய்ச்சி' என்ற சொற்றொடரின் அர்த்தத்தையுணர்ந்தார் இக்காலத்துத்தான் எத்தனைபேருள்ளார்? பண்டைக்காலத்தாராய்ச்சியைவிளக்க இலக்கணவிளக்கச் சூறாவளியொன்றுமே யமையாதா? இக்காலத்தாராய்ச்சியைப்பற்றியோ இங்கெடுத்துக் கூறுதல் அநாவசியகம்.

இனி, யாம் முந்திச்சொல்லியபடியே சந்தானகுரவர்கள் முத்தியடைந்ததினங்கள் ஒருசெய்யுளிற் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதுவருமாறு:

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடன்னி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னி
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

இந்நால்வருள் முதல்மூவர் காலத்தைப்பற்றியேதுஞ்சொல்லயாம் அசக்தராயிருப்பினும் உமாபதி சிவாசாரியர் காலத்தைப்பற்றி யுறுதியாகச் சொல்லல் கூடும். இவர் இயற்றிய நூல்களுளொன்றாகிய சங்கற்ப நிராகரணத்திலே நூற்காரணமுதலியன கூறவந்தவிடத்து 'எழஞ்சிரு நூறடுத்த வாயிரம் வாழுமாற்சகன' என்று நூல்வெளிப்பட்ட காலத்தைச் சுட்டினார். அக்காலமாவது சாலிவாகன சகாப்தம் 1235 [கி. பி. 1313.] ஆனிமாசம் [illegible]றுந்திருவிழாநாள் என்றுங் குறித்திருக்கின்றார். இப்பொழுது நடக்குஞ் சகாப்தம் 1823 எனவே உமாபதியார் காலம் சுமார் 600-வருஷங்களுக்கு முந்தியதென்பது சித்தமாயேற்பட்டது. இங்குக் குறித்த காலம்முதலியன சுட்டியிருக்குமிடம் நூலுட்பட்டபடியாற் கம்பர் காலம் கச்சியப்பர் காலம் என்பவற்றைப்பற்றி வழங்கும் பொய்ப்பாடல் சொருகுபாடல்களைப்போல மதிக்கப்படும் தரத்ததன்று. இனி யிதனைக்கொண்டே உமாபதியார்க்கு முந்திய இருவர்களது காலங்களையும் ஒருவாறு நிச்சயிக்கலாம். குறைந்தபக்ஷம் இவர்காலத்துக்கு நூறு வருஷங்களுக்கு முன்னமேயே மெய்கண்டதேவர் தோன்றியிருக்க வேண்டும். இவ்வாறு உத்தேசமாகக் கூறப்படுமேயன்றி, வேறுசான்று அகப்படும்வரை தீர்மானமாகக் கூறல் முடியாது. ஆயினும் 'மெய்கண்டசாஸ்திரம்' பதிப்பித்தோர் இவர்கள் காலத்தையன்றாயினும் இவர்களது நூல்கள்தோன்றிய காலத்தை வரையறுத்துக்கூறுகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவஞானபோதம் | சகாப்தம் | 1145. |
| 2. | சிவஞானசித்தியார் | ,, | 1175. |
| 3. | இருபாவிருபது | ,, | 1176. |
| 4. | உண்மைவிளக்கம் | ,, | 1177. |
| 5. | சிவப்பிரகாசம் | ,, | 1228. |
| 6. | திருவருட்பயன் | ,, | 1229. |
| 7. | வினாவெண்பா | ,, | 1230. |
| 8. | போற்றிப்பஃறொடை | ,, | 1231. |
| 9. | கொடிக்கவி | ,, | 1232. |
| 10. | நெஞ்சுவிடுதூது | ,, | 1233. |
| 11. | உண்மைநெறிவிளக்கம் | ,, | 1234. |
| 12. | சங்கற்பநிராகரணம் | ,, | 1235. |

இவ்வாறாக ஒவ்வொரு நூலுக்குங் காலத்தைக் குறிப்பிட் டுரைத்திருக்கிறார். சாமானிய அறிவினர் இதனைக் காண்பாராயின் உண்மையென்று நம்புவரே யன்றிச் சிறிதுஞ் சந்தேகிக்கமாட்டார். சகாப்தநாள் உத்தேசமாகவாவது குறிப்பிக்கப் பட்டனவோவெனில், அதற்கு அறிகுறி யொன்றுங் காணேம். ஆதலால் இப்பதிப்புரை காரரை நோக்கி 'நுங்கூற்றுக்கு ஆதாரம் யாண்டு உளது?' என ஒருவர்கேட்டல் குற்றமாகாது. மற்று இம்முறையிலவர் ஆண்டுகளை யெண்ணியதற்குப் போந்த காரணங்களையும் அதிற்படும் குற்றங்களையும் விசாரிப்பாம். யாம் முன்னமே கூறியபடி சங்கற்பநிராகரணகாலம் சகாப்தம் 1235-என்பது அந்நூலாலேயே யறிந்திருக்கின்றோம். இவர்கால நிர்ணயத்தை யுற்றுநோக்குவமாயின்,

"உந்திகளிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று."

என்னும் பழவெண்பாவிற் கூறிய நூல்வரு முறையைப்பற்றிப் பிந்தியொவ்வொராண்டாகச் சிவப்பிரகாசம் வரை தள்ளிக்கொண்டு போயிருக்கிறாரென்பது தெளிவாயிருக்கின்றது. மற்றைப்படி இந்த முறையில்தான் நூல்கள் தோன்றினவென்பதற்கு என்ன பிரமாணம்? முறைதான் இதுவேயென்று வைத்துக்கொள்வோம். திருமூலர் ஆண்டிற்கொரு மந்திரமாக மூவாயிரந் திருமந்திரம் கூறிமுடித்தார் என்று பெரியபுராணம் கூறுவதுபோல உமாபதியாரும் ஆண்டிற்கொரு நூல்செய்தார் என்பதற் காதாரமென்னை? உண்மை விளக்கத்துக்கும் சிவப்பிரகாசத்துக்கும் 51-ஆண்டு இடையீடு தந்தமை மத்தியில் மறைஞான சம்பந்தர் இருந்த காரணம் பற்றிப்போலும். இனி ஒரு சாலை மாணாக்கராகிய அருணந்தி சிவாசாரியார்



மனவாசகங்கடந்தார் என்னுமிருவருள் அருணந்தியார் தமது நூல்களை மற்றவர் உண்மை விளக்கமியற்றுமுன் இயற்றினர் என்றது எக்காரணம் பற்றி? இன்னும், அருணந்திசிவாசாரியர் மெய்கண்ட தேவரது குலகுருவென்று ஐதிகத்தால் விளங்குகின்றதே. அஃது உண்மையாயின் மெய்கண்டதேவரது பிதாவை வெண்காட்டுக்குய்த்த சகலாகம பண்டிதர் இவரேயல்லரோ? ஆயின், சிவஞானபோதத்துக்கும் சிவஞான சித்தியார்க்கும் இடையிற் கிடந்த காலம் 30 யாண்டு என்பது எங்ஙனம் பொருந்தும்? மெய்கண்ட சாத்திர முகவுரையிற் காணக்கூடும் காலக்கூற்றுக்கள் இவ்வித ஆக்ஷேபங்களுக்கிடந்தருதலின், உண்மையிலுண்மையாகிய சங்கற்ப நிராகரணகாலமாகிய 1235-ஆம் சகாப்தமும் மற்றையவற்றைப்போன்றது தானோ என்று மயங்கவேண்டி யிருக்கின்றது. இதற்கு மட்டுமாவது சங்கற்ப நிராகரணத்தில் வரும் அடியைக் காட்டி யிருப்பாராயின் நலந்தந்திருக்கும். இம்மட்டும் யாம் கூறியது மெய்கண்ட சாத்திர முகவுரைகாரர் மீதுள்ள யாதொரு துவேஷத்தினாலுமன்று, காலவறிவில் ஊக்கம் பிறந்திருக்குந் தற்காலத்திற் பிரமாணத்தோடு கூடி வாராத ஆயிர விஷயங்களை எழுதுவதினும் பிரமாணத்தோடு கூடிய ஒரு விஷயத்தை நன்கு கூறித்தாமும் மகிழ்ந்து பிறரையு மகிழ்வித்தலே பெருமையுடைத்து என்று காட்டுதற்கேயாமென்க.

இனிச் சற்றுமுன் எடுத்துக் காட்டப்பட்ட வெண்பாவால் திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் என்னும் நூல்கள் ஏனைய பன்னிரண்டோடுஞ் சேர்ந்து வருவனவென்பது தெள்ளிதின் விளங்கும். இப்பதினான்கையுமே சைவ சித்தாந்த சாஸ்திரமெனவும் மெய்கண்ட சாஸ்திரமெனவும் வழங்குவர். சைவமென்பது ஆகமத்திற்குப் பெயராகலின் அதிற் பெறப்படும் சித்தாந்தமாகிய பதிபசு பாசமென்னும் திரிபதார்த்த லக்ஷணங்களை யெடுத்துரைக்கும் நூல்கள் சைவ சித்தாந்த சாஸ்திர மெனப்பட்டன. பெரும்பான்மை நூல்களுக்கு முதனூல் மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞானபோதமே யாகலின் மெய்கண்ட சாஸ்திரமெனவும் வழங்கப்பட்டன. மெய்கண்ட சாஸ்திர முகவுரைகாரும் இந்நூல்களுக்கும் காலஞ்சுட்டி யிருக்கின்றார்.

| | |
|---|---|
| திருவுந்தியார் சகாப்தம் | 1070 |
| திருக்களிற்றுப்படியார் | 1100 |
| சிவஞானபோதந் தோற்றியகாலம் ச. | 1145 |

என்று இவரே கூறினாராக, திருக்களிற்றுப் படியார் சிவஞானபோதந் தோன்றுதற்கு 45 ஆண்டுகளுக்குமுன் நிலவியது எனப்போதருகின்றது. அதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்னர்த் திருவுந்தியார் தோன்றியதாம். இவற்றை எவ்வணம் நம்பி அங்கீகாரஞ் செய்வது? இத்தகைய காலவரையறை கூறுவோர் தமது வாக்கியங்கள் பெருநூல்களிற் சங்கமாய்க் காணப்படுதல்

பற்றி அவை சுருதி வாக்கிய மொப்பப் பிரமாணங்களாம் என எண்ணப்படும் என்று உறுதிகொண்டே யிங்ஙனங் கூறினரோ வெனவும் ஓர் ஐயம் நிகழ்கின்றது. இவ்விதமாகக் காலவரையறை செய்வோர் மெய்கண்ட சாஸ்திர முகவுரைகாரர்மட்டு மல்லர். '1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழ்' என்பதைப்பற்றி ஒரு பிரபல ஆங்கில பத்திரிகையிற் றோன்றும் வியாசங்களும் இந்நீர்மையனவே. அவற்றுள், நக்கீரர், கபிலர், இடைக்காடராதி புலவர்களது காலம் வெகு தீர்மானமாகக் கூறப்பட்டிருக்கின்றது. உண்மையென்று கண்டவற்றை மட்டும் அடைமொழியின்றிக் கூறலாமே யொழிய, உத்தேசாதி வழிகளாற் பெறப்படுவனவற்றை உண்மையென்று பிறர் மயங்குமாறு கூறப்புகின் உண்டாகும் மோசம் அதிகம். தற்காலத்துக் காலவிஷயமாய் எது எழுதப்படினும் அது ஆதாரத்தோடு தோன்றல் அத்தியாவசியகம்; அன்றேல், உண்மையும் பொய்யுங் கலந்து சஞ்சலம் விளைதற் கேது வுண்டாகின்றது.

இனி, திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் என்னும் நூல்களை யியற்றினோர் யாவரென்றும் அவரைப்பற்றியுள்ள சரிதங்களவையென்றுங் கூறுதலும் அவசியமே யாகலின், அவற்றையும் ஈண்டுத் தருகின்றோம். திருவுந்தியார் அருளிச் செய்தவர் திருவியலூர் - உய்யவந்த தேவர்.

திருக்களிற்றுப் படியார் அருளிச் செய்தவர் திருக்கடவூர் உய்யவந்த தேவர் ஊர் எழுத்துப் பேர்களிரண்டு மொன்றே யாயிருத்தலினால் இவ்விருவரும் எதாவது ஒரு குரு பரம்பரையைச் சார்ந்தவர்களோ இவர்களுக்குள்ளும் குரு சிஷ சம்பந்தமுண்டோவெனச் சந்தேகித்தல்கூடும். சந்தேகித்தல் நியாயமே; இவர்களது குரு பரம்பரை விஷயம் எளிதில் விளங்குவதாயில்லை. திருவுந்தியார் செய்த தேவர் மற்றவர்க்காசிரிய ரென்பது திருக்களிற்றுப்படியாரிற் கரதலாமலக மென்னக் காட்டப்பட்டிருக்கின்றது. திருவுந்தியாரில் வரும் வாக்கியங்கள் பல திருக்களிற்றுப்படி யாரில் எடுத்தாளப்பட்டன வன்றியும் முன்னையதன் விவரணமே பின்னையது என்றுந் துணிந்து சொல்லலாம்.

அன்றியும், இவர்களைக் குறித்தொருகதை ஐதிகத்தில் வழங்கி வருகின்றது. திருக்கடவூர் உய்யவந்ததேவர் பூர்வ புண்ணிய மிகுதிப் பாட்டினால் ஞான சாத்திரங்கள் கற்றுப் பரிபக்குவ மடைந்து மெய்ஞ்ஞான குருவைக் கருதிக் கொண்டிருக்குங்கால் அவரைச் சந்தித்த ஒரு பெரியார் 'திருவியலூரிலே உண்மை ஞானமெய்திச் சிவானுபூதிச் செல்வராய் உய்யவந்த தேவர் என ஒருவர் வீற்றிருக்கின்றார், நீ அவர்பாற் செல்லையாயின் ஞானத்தைப்பெற்று இன்புறுவாய்' என்று கூறித் திருக்கடவூரரை யவ்விடத்துக்குப் போகவிடுத்தார். இவரும் அப்பெரியார் பணியைச் சிரமேற்கொண்டு அவ்வூர்க்குச் சென்று தெருத்தோறும் விசாரித்தார், எங்குங் காணாது



திகைத்துக் கொண்டிருக்கு மவரைக்கண்ட ஒரு புண்ணியவான் 'ஏன் ஐயா மயங்கி நிற்கின்றீர்?' என இவரை வினவினான். இவரும் தமது விருத்தாந்தங்களை நன்கெடுத்துக்கூறவே, அவன் 'அவரிருக்கு மிட முதலியவற்றை நன்கு விசாரித்துக்கொண்டு வந்தீரல்லீர் போலும். சதுர்வருணத்தாரிருக்கும் வீதிகளிற்றேடி யவரைக் கண்டு பிடிப்பதெவ்வணம்? இவ்வழியாகச் சென்றால் அவரைக் காண்பீர்' எனக்கூறி ஓர் அசுத்தச் சந்து நெறியில் தேவரைத் திருப்பிவிட்டான். தேவரும் வழிநெடுக விசாரித்துக் கொண்டு செல்லுகையிற் சிலர் ஒரு கஷாப்புக்கடையைக் காட்டி. 'இதில் வியாபாரம் பண்ணிக்கொண்டிருக்கிற முதலாளிதான் ஐயா உம்முடைய உய்ய வந்த தேவர்' என்றார். இவரும் அது கேட்டு மனந் துணுக்குற்றுத் திகைத்து நின்றார். செய்வ தின்ன தென்று தோன்ற வில்லை. அருளுடையாரெல்லாம் அருவருக்கு நீர்மையவாகிய புலாற்குவியலின் நடுவிற் சென்று தமக்குமுன்போதித்த பெரியார் மொழியையே உறுதியாய் நம்பி நமஸ்கரித்தார். திருவியலூர்த்தேவரும் அந்நமஸ்காரத்தை யங்கீகாரஞ் செய்துவிட்டுத் தங்காரியத்திற் சுறுசுறுப்பாயிருந்தார். இவருக்கின்னும் சந்தேக மதிகமாயிற்று. கடைசியாக மரியாதையோடு போய்விடுவோம் என்று இவர் எண்ணி விடைபெற்றுக்கொள்ள எத்தனிக்குஞ் சமயத்தில் அவருக்கும் அன்றையவேலை முடிந்து கடை மூடுந்தருணமாயிற்று. திருவியலூர்த் தேவர் 'வந்தகாரியமென்ன?' என்று கம்பீரமாக இவரை நோக்கிக்கேட்டார். தேவர்க்கிருந்த முகமலர்ச்சி அருணோக்கம் முதலியவற்றைக்கண்டு ஆநந்தபரவசராய் 'அடிகளிடத்தில் உபதேசம் பெற்றுக் கொள்ளுமாறு வந்தேன்' என்று சொல்லும் பொழுதே, தேவர் 'அறிந்துளோம் தாமிருக்கு மிடம். நமது கடையில் நிகழும் தொழில் முதலியவற்றைக்கண்டு விகற்பமா யெண்ண வேண்டாம். பக்குவமடைந்த ஆன்மாக்களாய்க் கீழான பிறப்பிற்பட்டு வருந்துவனவற்றை விரைவில் மேற்பிறப்படைவித்து வழிப்படுத்துமாறு நாமே அருள் வாளாற் செத்துகின்றோம்' என்று தமது நிலையை ஒருவாறு சுட்டி யிவரையாட்கொண்டார். உண்மையை விட்டுச் சொல்வோமாயின் திருவுந்தியாரை யொழித்துத் தெளிந்த வுணர்வுதருஞ் சாத்திரந் தமிழ் மொழியிலில்லை யென்றே சொல்லலாம். 45 மூவடித்தாழிசைகளால் விவகாரமுறையானன்றி அதிதீவிர பக்குவர்க்கென்றேற்பட்ட குறுக்கு முறையால் மேலான சிவஞானத்தைப் போதிக்கும் நூல் இதுவே. இனி, இந்நூலை முதனூலாக் கொண்டு 100-வெண்பாக்களால் ஒருவழிநூல் செய்த திருக்கடவூர்த் தேவர் தமது நூலை யெடுத்துக்கொண்டு தில்லை யம்பலத்துச் சென்று அரங்கேற்றித் திருக்களிற்றுப் படியில் வைத்த அளவில் களிறு பைந்நிமிர்ந்து அதனை வாங்கி அம்பலவாணரது திருவடியிற் சமர்ப்பித்தது; அது கண்ட பெரியோர் அந்நூலைத் திருக்களிற்றுப் பாடியாரென்றனர் என்றும் ஓர் ஐதிகம் வழங்குகின்றது.

மலர்தலை யுலகத்துப் பலதலைச் சென்று
மாழ்குறு முயிர்களும் வீழ்வுறு சைவ
நெறியினைச் சாத்திரத் தறிவுற விளக்கிய
எந்தம் உய்ய வந்த தேவரும்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவரும்
கருணைந்த நூல்புகல் அருணந்தி தேவரும்
மோன மென்பது ஞான வரம்பெனு
முதியோர் மாற்றங் கதிசேர் தேற்றமென்
றந்நிலைத் தங்கிய பன்னுமறை ஞான
சம்பந்த தேவரும் வெம்பந்த நீக்கும்
உமாபதித் தேவரும் சமானமில் குரவரென்
றுள்ளி யவர்மொழி தெள்ளு தமிழ்வாய்க்
கற்றுங் கேட்டு மற்றுளந் தெளிந்து
நிட்டை புரிந்துஞ் சிட்ட ராகுதல்
அலைநின்ற மாந்தர்க்குத் தலைநின்ற கடனே

அனவரத விநாயகம் பிள்ளை.

---

## உள்ளப்பயிற்சி.

### 1. நூலறிவு.

தற்காலங்களிற் புத்தகங்களின் மூலமாய்க் கல்வியறிவு பெரும்பாலும் புகட்டப்படுகின்றது. அறிவுக்குப் புத்தகங்கள் நிச்சயமாகவே மிக்க பயன்படத்தக்க வுதவிகள். கைத்தொழிற்பயிற்சிக்கும் நாகரீகத் தேற்றத்துக்குங்கூட அவை சிறிதளவு பயன்படும். ஆனாலவையனைத்து மொருபோதும் மனோவிருத்திக்கேற்ற முதன்மையான வியற்கை யூற்றுக்களாகா. இவைகளின்றி அமையாதனவாகிய கலைப்பிரிவுகளினும் இவைகளினாற்றல் மிகவும் பாரித்துரைக்கத் தகாதென்பது எமது கருத்து. எவ்வாறாயினு மவைகள் புதுவதுபடைக்கு மாற்றலுடையன வல்ல. அவையனைத்துங் கல்வி யறிவின் தேர்ச்சிக்குற்ற துணைக்கருவியாமே யன்றி வேறல்ல. தூரதிருஷ்டிக் கருவியும் அணுதரிசனியும் நமதாராய்ச்சிகளிற் புதிய புதிய நினைத்து மிராத ஆச்சரியங்களைப் புலப்படுத்துகின்றன. ஆனாலிவைகளை யடிக்கடி பயன் படுத்துவதனால் மருண்டு, நாம் நமது கண்களை உபயோகிப்பதனாலெய்தும் பயனை நன்கு மதித்துப் பாராட்டாம லிருக்கக்கூடாது. இவ்விரண்டையும் போலவே புத்தகங்களும் நமக்கு இயற்கையின் கூர்மையான முன்னறிவினா லுதவிகளாகக் கிடைத்திருப்பனவற்றோடு சேர்ந்த செயற்கைக் கருவிகளே யாம். உயிர் வாழ்க்கை, அனுபவம், தாமே சிந்தித்தல், உணர்தல், அறிந்து கொண்டபடி



நடத்தல், இவைகளே அறிவுக்கு முதன்மையுந் தகுதியுமுள்ள மூலங்களாகுமேயன்றி நூல்கள் அன்னணமாகாவாம். இவற்றைக் கைக்கொண்டொருவன் மேற்புகுவானாயின், புத்தகங்கள் அப்பொழுதே அவனது மனத்திற் பல வெள்ளிடைகளை நிரப்பித் தவறான வெண்ணங்களுட் பலவற்றைத் திருத்திக் குறைவாயின பற்பலவற்றையும் பூரணமாக்கும். ஆனாலொருவன் தான் மேற்புகுதற்கு வாழ்க்கையி லனுபவமில்லாதிருப்பானாயின் அவனுக்குப் புத்தகங்கள் உழுது நெகிழாத கட்டாந்தரையில் வீழுமாரியும், வெயிலும் போற் பயனற்றனவாம்.

சாலறி வூற்றினிற் றதும்பி மேலெழூஉம்
நூலைத்தூ நதியென நுவலு கோவதன்
மேலொரு வாய்ப்புன னீரின் வேட்கையை
யேலநன் கென்றென்று மினிதிற் றீர்க்குமால்.

அத்தகை யறிவுடை யவனொ ருத்தனே
மெத்தவுந் தூண்டிமேன் மேலு மோங்குறு
முத்தமச் சாத்திரத் தூற்ற வன்மையை
நித்தமு முணர்தர னேரு மேயன்றோ?

இஃது ஒருவாறு செய்யுணடையி லமைக்கப்பட்டிருப்பினும் பொதுவானதொரு சிறந்த வுண்மையை அடக்கிக்கொண்டுளது. தாதுக்களொன்றையேனும் பார்த்திராத மனித னொருவனுக்குத் தாது பரீக்ஷண சாஸ்திரம் நுட்பப் பொருளை வெளிப்படுத்திக் காட்டாமையாற் பயன் படாத வாறுபோல, கவி சரிதமுஞ் செய்யுட்களும் வாழ்க்கை யென்பதின்ன தென்றறியாத கேவலவித்தியார்த்திகளுக்குப் பயன்படாவாம்; இனியவோசையிற் பழக்கமில்லாதானுக்குச் சங்கீதப் பிரசங்கமும் பயன் படுவதன்று; ஆத்தும பக்தியாதல் வாழ்க்கைத் தூய்மையாதல் இல்லாதவனுக்கும் வேதப்பிரசங்கங்களும் பயன் படாவாம். நூலறிவெல்லாம் பிரதிபலித்து எதிரொலி போன்று புறவழித் தாய்வருகின்றது. மெய்யறிவு நினைத்தலாற்றலையுடைய ஆன்மாவினின்றும் உலராத வேரூன்றி வளர்கின்றது. புறப்பொருள்களுளதனைத்தான் கொள்ளவேண்டினுங் கேவலங் கடன் கோடல்போலாது, உயிருள்ளவோரவயவியானது தன்மய மாக்கிக் கொள்ளுமாறு உட்கொள்ளுகின்றது.

### II. ஊன்றிய நோக்கம்.

ஆதலான் வாலிபர்கள் கற்கத்தொடங்கும்போது நூற் கூற்றினுணர்ச்சியையே யெப்பொழுதும் மேற்கொண்டு புகாமல், தங்களாலியன்ற மட்டும் விஷயங்களைப்பற்றிய நேர்மையான வூன்றிய நோக்கத்தோடு படிக்கவேண்டுமென்று யாம் அறிவுறுத்துகின்றோம். "உற்று நோக்குதல் எவ்வாறு?" என்று தலைக்குறியிட்ட சிறந்த நூலொன்று வரையப்பட்டுளது. இம்மும்மொழிகளும் நம்முடைய கல்வித் தொடக்கத்திற் சிறந்த பகுதியில் நம்மை வழி நட-

த்துங்கட்டுரையாகலாம். அற்றேல், இப்பகுதி அந்தோ! மிகப்பரிதபிக்கப் படத்தக்கவாறு, கவனிக்கப்படா தொழிகின்றது! மனத்தின் கண்ணே பல்வகைப்பட்ட உயர்ந்த வழங்கிய பொருள்களை மிகுதியாய் நிரப்புதன் மாத்திரையிலே யன்றி யொல்லாத் தொழில்களினு மிகப்பயன் படத்தக்க கண்களையுபயோகப் படுத்துவது யாங்ஙனென்பதையும் போதிப்பதனால் இயற்கைகளெல்லாம் விசேஷ மதிப்புடையனவாய் வழங்குகின்றன. நமது கண்களை நன்றாகத்திறந்துகொண்டு போகும்போதே, ஒன்றையேனுங்கவனித்துக் காண்கின்றேமல்லேமென்பது மிகவு மதிசயமே. இஃதெவ்வாறென்றாலோ, கட்பொறியும் மற்றையன போலப்பயிற்சியடைய வேண்டும். பழக்கக்குறைவானும், அடிமைத் தனமாய்ப் புத்தகங்களையே சார்ந்திருத்தலானும், இப்பொறிமழுங்கி மந்தமாகி, இறுதியில் தனதியற்கைத்தொழிலையுஞ் செய்தற்கு இயலாததாய் விடுகின்றது. தாங்கள் காண்பன இன்னவென்றறியவும், கவனியா விடத்துக் காணத்தவறக்கூடியனவற்றைக் காணவுமே கற்பிக்கப்படும் பாடங்களனைத்தும் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் முதன்மை யுள்ளனவாகக் கருதப்படட்டும். நிலைத்திணைப் பொருணூல், விலங்கியனூல், தாது பரீக்ஷணசாஸ்திரம், பௌமிய சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம், சிற்பநூல், ஓவியநூல், நற்கலை, இவையனைத்தும் மிகப்பயன் படற்பாலனவாம். காட்சி யறிவு புகட்டுமிந்நூல்களின் இன்றியமையாத வுணர்ச்சி சிறிதேனு மில்லாமையால் மிக்க நூற் பயிற்சி வாய்ந்த சிறுவர்களுக்கு எத்துணையோ பலதேசங்களின் காட்சியும் ஒத்து நோக்குமிடத்துப் பயனிலவாயின!

ச. கி. சுந்தராசாரியன்.

---

## பாரதஸாரம்.

பாண்டவர்கள் சந்நியாசியைப்போன்று பிக்ஷை யெடுத்துக்கொண்டு வந்து குந்தி கையிற் கொடுக்க அதை அவள் பாகம் செய்து இரண்டுகூறாக்கி ஒன்றைப் பீமனுக்கும் மற்றொன்றைத் தானும் தன் மற்ற புத்திரர்களும் உண்டு காலங்கழித்து வருவார்களாயினர். ஒருநாள் பீமன் தவிர மற்றவர்கள் வெளியே சென்றிருக்கையில், அவர் தங்கியிருந்த வீட்டுப் பிராமணனும், அவர் தம்மனைவியும் மற்றவிரண்டு குழந்தைகளும் துக்கமுற்று, பிராமணன் தன்னை யாவது தன் மக்களிலொருவரையாவது அசுரனுக்குப் பலியிடல் வேண்டும் என்னனும் தன்மனைவி மற்றவர்களுயிரோடிருக்கும் வண்ணம் தன்னைப்பலியிட்டால் நலம் என்றனள். பெண் தான்போதல் நலமென்றனள். சிறு ஆண்குழந்தையோ, அறிவதற்குப் போதுமான வயது ஆகாதபடியினால், அக்கொடிய அசுரனைத் தான் ஒரு புல்லினாற் கொல்வதாகச் சாமர்த்தியாய்ச் சொல்லிற்று. அக்குழந்தையைக்கண்டு புன்னகை கொண்ட தாய் தந்தையரை நோக்கிக் குந்தியானவள் இதற்கு யாது காரணமென வினவலும், பிராமணன் குந்திதேவியை நோக்கி 'அம்மணி! இந்த வூர்க்கருகில் ஓர் இராக்கதனிருக்கிறான். அவன் பெயர் பகாசுரன். இவ்வூரில் முந்நூறு பிராமணர் வீடுகளிருக்கின்றன. ஒவ்வொருவரும் வருஷத்திற் கொருமுறை ஒரு வண்டி சாதம், ஒரு பிள்ளை, இரண்டு எருமைக்கிடா அவனுக்குக் கொண்டுபோய்ப் பலியிடல் வேண்டும். அல்லாவிடில் இவ்வூர் அடியோடே போய்விடும். இப்படியாக வெகு நாள் நடந்துகொண்டு வருகிறது. நாளை என்னுடைய முறை. அதற்காகத்தான் ஏக்கங் கொண்டிருக்கிறேன்" என்று சொன்னதைக் கேள்வியுற்று, குந்தி தன்னைந்து பிள்ளைகளி லொருவரை வண்டி சாதத்தையும் கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்லுகிறேனெனச் சொன்னாள். அதற்குப் பிராமணன், "என் வீட்டில் விருந்தினராய் வந்திருக்கிறவர்களை யிப்படிச் செய்யச் சொல்லும்படியான அவ்வளவு கொடியவனல்லன் யான்" என்றான். "பிராமணர்கள் என்றும் காக்கப்படல் வேண்டும். என்னுடைய பிள்ளையாகிய இவன் (பீமனைச் சுட்டிக் காட்டி) மிக்க பலசாலி. அவனுக்கோர் ஆபத்தும் நேரிடாது" என்று சொல்லிப் பீமனை அழைத்து அவனிடம் இதைப் பற்றிச் சொன்னதும் அவனும்மிக்க உல்லாசத்துடன்போவதாய் ஒத்துக்கொண்டான். வெளியிற் சென்றிருந்த தருமர் வந்து நடந்ததைக் கேள்வியுற்று மனக்கிலேசமடைந்து தாயைச் சிறிது கடிந்தார். அதற்கவள் "அப்பா தர்மா! உன்குல தர்மத்தை மறந்தாய் போலும்! நம்மை யடைந்த பிராமணனுக்கு உதவி செய்ய வேண்டுவதில்லையா? பீமனாற் செய்ய முடியும் என்றுதான் சொன்னேன். அவனுடைய பராக்கிரமமும் பலமும் உங்களுக்குத் தெரியா. மேலும் க்ஷத்திரிய தருமங்களில் அடுத்தவர்களைக் காக்கவேண்டுமென்பதும் ஒன்றல்லவா!" என்று சொல்லிச் சமாதானஞ் செய்தாள். ஏற்பாட்டின்படி பீமனும் இரண்டெருமை பூட்டிய ஒரு வண்டி சாதமுங் கொண்டு தானே வண்டியை ஓட்டிக்கொண்டு பகாசுரன் இருக்குமிடஞ் சென்றான். இவனுக்கோ பசியாயிருந்தது. இவன் பண்டியை ஆற்றங்கரையில் விட்டுக் கடாக்களை அடித்துத் துரத்திவிட்டான்; அவைகளும் வீட்டை நோக்கித் திரும்பிச்சென்றன. இவனும் தண்ணீரருகில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்துவிட்டான். பண்டியிற் பாதியன்னமு மாயது. தனக்குப் பலிவரும் வருமென வழிபார்த்துக் கொண்டிருந்த பகாசுரன் அது வரக்காணாது அது வழக்கமாய் வரும்வழி நோக்கி ஆற்றுக்குச் சமீபத்தில் வந்து சேர்ந்தான். கடாக்கள் ஊர் சேர்ந்தவுடன் திகிலதிகமாய்ப்போய் அன்று முறைப் பிராமணனை ஊராரெல்லாம் வைய ஆரம்பித்து விட்டார்கள். அவனும் குந்திதேவியை ஒறுக்க ஆரம்பித்தான். அவள் பீமன் ஜெயத்துடன் வருவானெனச் சொல்லித்தேற்றியும் அவனுக்கும் நம்பிக்கை வரவில்லை. அவ்வூராரும் நகைத்தார்கள். மற்றெல்லோருடைய கதியும் எப்படியாமோவென ஏக்கங்கொண்டு திகிலடைந்திருந்தார்கள். இஃதிப்படியிருக்க ஆற்றங்கரை யடைந்து

அன்னத்தை யள்ளி ஆவாவுடன் நின்று கொண்டிருந்தவனைப் பகாசுரன்
கண்டு நெருங்கி முதுகில் ஓர் அறை ஓங்கி அறைந்தான், ஆயினும் பீமன்
அவனைப்பார்த்து நகைத்துவிட்டு முன்னிலும் அதிகவேகமாய்ச் சாப்பிட ஆர
ம்பித்தான். பிறகு பகாசுரன் பக்கலிலிருந்த ஒரு மரத்தைப் பிடுங்கி பீமன்
மீதெறிந்தான். அதைத் தன்னிடது கையிற் பிடித்துக் கொண்டு பீமன் சாப்
பிட்டுக்கொண்டே யிருந்தான். தனது பல்லையு முதட்டையும கடித்து எற
ட்டுப் பார்க்கும் பகாசுரனை நோக்கித் "தம்பீ! சற்றுப்பொறு, சாப்பிட்டு
முடிந்ததும் வருகிறேன்" என்று சொல்லி, சாப்பாடு முடிந்ததும் நீரோடை
யிற் கைவாய் சுத்திசெய்து கொண்டு சந்தோஷத்துடனே திரும்பிக் கோபம்
கொப்புளிக்கு முகத்தையுடைய பகாசுரனை எதிர்த்துச் சண்டைசெய்தான்.
இது இடிம்பாசுர வதத்தினும் மும்முரமா யிருந்தது. கடையில் இராக்கதனை
அந்தரத்தெறிந்து அந்த உடலம் கீழ்விழுந் தருணத்தில் அதைத் தன் முழந்
தாளில்வைத்து முறித்தான். பகாசுரனிம்மாதிரியாய் மரித்தான். அரக்கன்
சுற்றத்தாரை யழைத்து நரமாமிச பக்ஷணம் செய்வதை யொழியுங்களென
அறிவுறுத்துப் பிறகு மூந்நூற்று மங்கலம் சேறலும் இவனுடைய ஜயம்
சற்றுமுன்னே யறிந்த அவ்வூரார் இவனை யெதிர் கொண்டழைத்து உபசா
ரம் செய்து அசுரன் அழிந்தானென்று அதிக சந்தோஷத்தை யடைந்து சுக
மாகவாழ்ந்து கொண்டிருந்தார்கள். பாண்டவர்களும் சிலநாள் அங்குறைந்
திருந்தார்கள்.

மூந்நூற்று மங்கலத்திற் பாண்டவர்கள் தங்கியிருந்தபோது ஒரு
வயோதிக பிராமணன் அவர்களிடம்வந்து துருபதன் துரோணர் என்னு
மிவர்களுக்குள் நடந்த விவாதத்தைக் குறித்தும் துரோணர் இவனை அவமா
னம் செய்ததற்காக அவரைக்கொல்லும் நிமித்தம் ஒரு பிள்ளையும் தன்னை
ஜெயித்த வீரனாகிய அர்ச்சுனனுக்கு மனைவியாதற்கோர் கன்னிகையுமாகப்
பெற்ற திட்டத்துய்மன் திரௌபதை இவர்களைப்பற்றியும் சற்று விவர
மாய்ச் சொல்லக் கேட்டார்கள்.

முன் சொல்லிப்போனபடி வியாசர் திரும்பிவந்து பாண்டவர்களைப் பா
ஞ்சாலனுடைய பிராதன நகருக்குப்போம்படி சொன்னார். துரோபதை முற்
பிறப்பில் தனக்கு நாயகன் வேண்டு மென ஐந்து தரம் கடவுளைப் பிரார்த்
தித்ததாகவும் மறுபிறப்பிலே ஐந்து நாயகர் அவளுக்கு வாய்ப்பார்களென்று
வரமீந்ததாகவும் சொல்லி அவள் சுயம்வரத்திற் று அவர்களைப்போம்படி
செய்தனர். அதன் பிரகாரமே அவள் ஐவர்க்கும் மனைவியாக வேண்டி
யிருந்தது. பாண்டவர்கள் பாஞ்சாலதேசத்திற்குப் போம்வழியில் ஒரு கந்த
ருவனுடைய விருப்பத்தின்படி தங்களுக்குத் தௌமியர் என்பவரைக் குருவா
கக்கொண்டு அவரையும் தம்முடன் கொண்டு துருபதன் நகரை நோக்கிச் செ
ன்றார்கள். அவ்விடத்திற்குப்போன அநேக பிராமணர்களுடன் சேர்ந்து
சென்றார்கள்.

கல்குளம். குப்புசாமிமுதலியார்.



ஸ்ரீபகவான் சொல்லியது:

2. கர்மபரித்தியாகம் (ஸந்நியாஸம்), கர்மயோகம் (கர்மாநு
ஷ்டானம்) ஆகிய இவ்விரண்டு மார்க்கங்களும் மோக்ஷசாதனங்க
ளேயாம். அவற்றிற் கர்மயோக மானது கர்மஸந்நியாஸத்தை
விடச் சிரேஷ்ட மானதாகும்.

[ஸந்நியாஸம்=கர்மங்களை விடுதல். கர்மயோகம்=கர்மங்களை ஆசரித்
தல். இவையிரண்டும் ஞான முண்டாவதற்குக் காரணங்களா யிருப்பத
னால் மோக்ஷம் விளைவிக்கக்கூடியவைகளேயான போதிலும், அவற்றிற் கர்ம
யோகமே சிரேஷ்டமானதென்று துதிக்கப் படுகின்றது. குறிப்பு.—கர்ம
யோகம் உண்மையான கர்ம ஸந்நியாஸத்தைவிட மேலானதென்று பக
வான் சொல்லவந்தவ ரல்லர். உண்மையான கர்மஸந்நியாஸம், அஃதா
வது, ஞானத்துடன் கூடிய கர்ம ஸந்நியாஸமானது கர்மயோகத்தை விட
மிகவும் மேலான மார்க்கமாம். ஆனால், கர்மயோகமானது கர்மஸந்நியாஸ
த்தைவிட சுளுவானதாயும் ஞானமில்லாத கர்மஸந்நியஸத்தை விட மே
லானதாயுமிருக்கின்றது].

[ஞானயோகம், கர்மயோகம் என்னுமிரண்டும் ஒன்றனுதவிமற்றொன்ற
ற்கில்லாமலே மோக்ஷமளிக்கக் கூடியவைகளாயிருக்கின்றன].

3. எவன் துவேஷியானோ, விரும்பானோ, அவன் எப்பொ
ழுதும் சந்நியாசியென்று அறியப்படத் தகுந்தவன் (எவனுக்குத்
துவேஷமில்லையோ, விருப்பமில்லையோ, அவன் நித்திய சந்நி
யாசி யெனப்படுவான்). ஓ பெரும்புயங்களை யுடையோனே! தொந்
தங்களில்லாதவன் (புண்யம் - பாபம், நன்மை - தீமை முதலிய
இரட்டைகளுக் குட்படாதவன்) ஆயாசமின்றிக் கர்மபந்தத்தி
னின்று விடப்படுகின்றானன்றோ?

[துக்கத்தையேனும் துக்கசாதனங்களையேனும் வெறுக்காமலும், சுகத்
தையேனும் சுகசாதனங்களை யேனும் இச்சிக்காமலும் ஒருவன் இவ்வித
மாகக் கர்மங்களைச் செய்து கொண்டிருந்தால், இராகத் துவேஷங்களுடன்
கூடியவ னல்லனாகையால், கர்மஞ் செய்வோனாயினும் அவன் எப்பொழுதும்
சந்நியாசியாகவே இருப்பவனாய்க் கொள்ளப்படத் தகுந்தவன். கர்மயோகி
யானவன் கர்மங்களை யாசரித்துக் கொண்டிருந்தாலும் இராகத்துவேஷங்க
ளில்லாதவனாதலால் அவன் நித்திய சந்நியாசி யெனப்படுவான்].

[கர்மயோகியா யிருந்து கர்மயோகத்தின்கண் அமர்ந்துள்ள ஆத்மா
நுபவத்தினிடத்தே திருப்தியடைந்தவனாய், மற்றெதன் மீதும் விருப்ப
மேனும் துவேஷமேனும் (வெறுப்பேனும்) இன்றி நடப்பானாயின், அவன்
நித்திய சந்நியாசியாவன்; எப்பொழுதும் ஞானநிஷ்டையிலிருப்பவனாவன்].

[இந்தச் சுலோகம் ‘சந்நியாசம்’ என்னுஞ் சொல்லினர்த்தத்தை விளக்
குகின்றது. சந்நியாச மென்பது ஞானத்திற்கு அந்தரங்கமாம்].

சந்நியாசமுங் கர்மயோகமும் வேறு வேறு மனிதர்களா லநுஷ்டிக்கப்
படத் தகுந்தனவாயும், பரஸ்பர விரோதமுள்ளனவாயு மிருக்கின்றமை
யால், அவற்றின் பயன்களும் விரோதப்பட்டே இருத்தல் வேண்டும்.
அஃதன்றி, இரண்டு மார்க்கங்களும் மோக்ஷம். என்னு மொரே பயனை
யெப்படி யளிக்கக்கூடுமென்னின், பகவான் சொல்லுகின்றார் :

4. குழந்தைகள் (அறிவிலிகள்) சாங்கியத்தையும் யோகத்
தையும் வேறு வேறென்று சொல்லுகிறார்கள் ; பண்டிதர்கள்
(அறிவுடையோர்) அங்ஙனமுரையார். இவ்விரண்டு மார்க்கங்களி
லொன்றை நன்றாயநுஷ்டிப்பவன் இரண்டு மார்க்கங்களின் பிர
யோஜனத்தையு மடைவான்.

[வேறு வேறென்று சொல்வதெனின், விரோதமுள்ள பிரத்யேகமான
பயனைக் கொடுப்பன வென்பதாம். சாங்கியம், யோகமெனு மிரண்டிற்கும்
மோக்ஷமே பயனாகும். ஆதலின், பயன் விஷயத்தில் விரோதமில்லை. ஞானத்
துடன் கூடிய கர்ம சந்நியாசம் சாங்கியமெனப்படும். ஞானத்திற்குச் சா
தனமாகிச் சமபுத்தியுடன் கூடியகர்மமே யோகமெனப்படும்.

‘சந்நியாசம்’ என்றும், ‘கர்மயோகம்’ என்றும் முதன் முதலிற் கேள்வி
கேட்கப்பட்டது. ஆயினும், பகவான் ‘சாங்கியம்’ என்றும், ‘யோகம்’
என்றும் பேசுகின்றார். சந்நியாசமே சாங்கியமென்பதும், கர்மயோகமே
யோகமென்பதும் (ஞானமுஞ் சமபுத்தியுங் கூடியவிடத்து), பகவானுடைய
கொள்கையென்க].

[கர்மயோகம் ஞானயோகத்தை யுண்டாக்கு மென்றும், ஞானயோகம்
ஆத்மாவ லோகனத்தை (ஆத்மாவைத் தரிசித்தல்) உண்டாக்குமென்றும்
வித்தியாசமான பிரயோஜனங்களைச் சொல்லுவோர் பண்டிதர்களல்லர்.
இரண்டிற்கும் ஆத்மாவலோகனமே பயனாகும்].

[சாங்கியமும் யோகமும் அந்தரங்கங்களே யாதலின் விரோதமான
வை யல்ல.]

[சாங்கியம், யோகம் எனுமிரண்டையும்பற்றிச் சொல்லுகின்ற இரண்
டாம் அத்தியாயம் 39-ஆவது சுலோகத்தைப் பார்க்க.]

மேற்கூறிய இரண்டு மார்க்கங்களி லொன்றை மாத்திர மநுசரிப்பத
னால் இரண்டு மார்க்கங்களின் பயனையு மொருவனெப்படி யடைவானெனின்:

5. எந்த ஸ்தானம் (நிலைமை) சாங்கியர்களினா லடையப்
படுகின்றதோ, அது யோகிகளினாலு மடையப்படுகின்றது. சாங்கி



யத்தையும் யோகத்தையும் ஒன்றாய் எவன் தெரிந்துகொள்கின்றா
னோ, அவன் தெரிந்தவனாவன்.

[சாங்கிய ரென்போர் ஞான நிஷ்டர்கள், சந்நியாசிகள். அவர்கள்
மோக்ஷமென்னும் ஸ்திதியை யடைகின்றார்கள். அதே ஸ்திதி யோகிகளினாலு
மடையப்படுகின்றது. இவர்கள் ஞானமடைந்து விரக்தர்களாகி அந்த
ஸ்திதியை யடைகின்றார்கள். யாதொரு பயனையும் விரும்பாமல் (நிஷ்காமிக
ளாகி), தாம் செய்யுங் கர்மங்களை யெல்லாம் ஈசுவரனுக்கு அர்ப்பணம்
செய்து, கர்மங்களை யாசரித்தல் ஞானப்பிராப்திக்கு உபாயமென்று கருதி,
கர்மஞ்செய்வோர் யோகிகளாவர். பயன் ஒன்றாயிருப்பதனால் சாங்கியமும்
யோகமும் ஒன்றேயென்று எவன் அறிகின்றானோ அவனே சரியாய் அறிந்
தவனாவன்.]

[ஞானநிஷ்டர்களினா லடையப்படும் ஆத்மாவலோகனமே கர்மயோக
நிஷ்டர்களினாலு மடையப்படும். இவ்வாறு பயன் ஒன்றாயிருப்பதனால்
ஞானயோகம் கர்மயோகம் எனு மிரண்டும் ஒன்றேயாம், அஃதாவது, வை
கல்பிகங்கள் (=ஒன்றையாசரித்தால் மற்றொன்றை யாசரிக்க வேண்டிய
தில்லை.]

[யோகத்தினாலுங் கூட ஞானப்பிராப்தியின் வழியாய் ஞானப்பயன்
அடையப்படுகின்றது].

6. ஓ பெருந்தோள்களை யுடையோனே (அர்ச்சுனா)! ஸந்நி
யாஸ மென்பது யோகமின்றி அடைவதற்குச் சாத்தியமான
தன்று. யோகத்துடன்கூடிய முனியானவன் சீக்கிரத்திற் பிரமத்
தை யடைகின்றான்.

[கர்மமில்லாமல் ஸந்நியாஸ மடைவது கஷ்டம். கர்மாநுஷ்டானஞ்
செய்கின்ற ஞானியானவன் சீக்கிரமாய்ப் பிரமத்தை யடைகின்றான்.
இங்குச் சந்நியாஸமென்று கூறியது பாரமார்த்திக (உண்மையான) சந்நி
யாஸத்தை யென்க; யோகம் என்பது வைதிககர்ம யோகமாம், வேதத்தில்
விதிக்கப்பட்ட கர்மங்களை ஈசுவரார்ப்பணமாகவும் பயனைக் கருதாமலும்
செய்தலாம். ‘முனி’=ஈசுவரனது திருவுருவைத் தியானிப்பவன் (மனனஞ்
செய்பவன்). இங்குப் பிரம்மம் என்பது இப்பொழுது சொல்லப்பட்ட சந்நி
யாசமென்று (பிரம்மஞான மென்று) அர்த்தமாகும் ; ஏனெனில், சந்நியாச
மென்பது பரமாத்ம ஜ்ஞானமே யாம் (பரமாத்மாவை யறிதலாம்).- தைத்
திரீய உபநிஷத்து, 4-78: “ந்யாஸ இதி ப்ரஹ்மா, ப்ரஹ்மாஹி பர : பரோ
ஹி ப்ரஹ்மா.”

யோகசாதனம் பெற்ற முனியானவன் சீக்கிரத்திற் பிரம்மம், அல்லது,
உண்மையான சந்நியாசத்தை யடைகிறான். உண்மையான சந்நியாசமாவது

பரமார்த்தஞான நிஷ்டையேயாம். ஆதலின், கர்மயோகமே சிரேஷ்டமென்று நான் சொன்னேன்.]

[பின் சுலோகத்தின்படி, கர்மயோகத்தைவிடச் சந்நியாசமே சிரேஷ்டமாகின்றது. இப்படி யிருக்க, கர்ம சந்நியாசத்தைவிடக் கர்மயோகமே சிரேஷ்டமானதென்று 5 - ஆம் அத். 2 - ஆம் சுலோகத்திற் சொல்லியது எப்படிப் பொருந்துமெனின், கேள் : கேவலமான கர்மசந்நியாசம், கேவலமான கர்மயோகம் ஆகிய இவை யிரண்டினில் எது சிரேஷ்டமானதென்று நீ கேட்டதற்குக் கர்மசந்நியாசத்தைவிடக் கர்மயோகமே சிரேஷ்டமென்று அதற்குத் தகுந்த மறுமொழி சொன்னேன். இப்படிச் சொன்னது ஞானத்தை யுத்தேசித்துச் சொல்லப்பட்டதன்று. ஞானாபேக்ஷை யுள்ள சந்நியாசமே சாங்கிய மென்பது எனது அபிப்பிராயம். அதுவே பரமார்த்த யோகமாகும். வைதிக கர்மங்களை யாசரித்தல்கூட இதற்காகவேயாதலின், வைதிக கர்ம யோகத்திற்கு ஸந்நியாஸ மென்றும் யோகமென்றும் பெயராம். வைதிக கர்மயோகத்தினாற் சாங்கியம் விளைகின்றதென்பதை இந்தச் சுலோகம் உணர்த்துகின்றது.]

[கர்மயோகத்தை அநுசரிக்கிறவன் ஸ்வயமாய் ஆத்மாவை மனனம் செய்து, சுகமாகக் கர்மயோகத்தைச் சாதித்துக்கொண்டு, கொஞ்சக்காலத்திலேயே பிரம்மத்தை, அஃதாவது, ஆத்மஸ்வரூபத்தை யடைகின்றான். ஞானயோகத்தை யநுசரிப்பவன் மிகுந்த துக்கத்துடன் (சிரமத்துடன்) ஞானத்தைச் சாதிக்கின்றான். இவ்வளவு சிரமப்படவேண்டி யிருப்பதனால் ஆத்மாவை யடைவதற்கு வெகுகாலம் செல்லும்.]

[யோகமில்லை யெனின் மோக்ஷம் முதலிய பயன்கள் சித்திக்கமாட்டா. ஆதலின், சந்நியாசிக்குக் காமங்களை ஜயித்தல் முதலிய துக்கமே யன்றி வேறொன்றுமில்லை. மோக்ஷம் தவிர மற்ற பயன்கள் சில்லறைப்பயன்களாகையால் அவை பயன்களே யல்லவென்பது தாற்பரியமாம். பெரும் பயனை விளைவிக்கக் கூடியதற்குச் சொற்பமான பயன் பயனேயாகாது. இரத்தினத்திற்கு ஒருபிடி அரிசியைப்போலாம். யோகத்துடன் கூடின் சந்நியாசம் பெரும்பயனை விளைவிக்கும். முனி=சந்நியாஸமுள்ளவன்].

7. கர்மயோகியானவன் பரிசுத்தமான மனமும் ஜயிக்கப்பட்ட தேகமும், அடக்கப்பட்ட இந்திரியங்களும் உள்ளவனாயும், எல்லாப் பூதங்களுக்கும் ஆத்மாவாயுள்ளதையே தனது ஆத்மாவாய் ஆக்கிக் கொண்டவனாயும் இருந்து, (அவன்) கர்மங்களைச் செய்துகொண்டிருந்த போதிலும் பற்றுள்ளவனாகான்.

[கர்மயோகம் செய்பவன் சித்தசுத்தியுண்டாகி மனதைச் சுவாதீனப்படுத்திக்கொண்டு, இந்திரியங்களை ஜயித்து, எல்லாப் பூதங்களுந்தானாகவும், தான் எல்லாப் பூதங்களாகவும் பாவித்துக் கர்மங்களைச் செய்தால் அவன் அந்தக் கர்மங்களினாற் கட்டுப்படான்.



சரியாய்ப் பார்க்கிறவன், அஃதாவது, நான்முகப்பிரம்மா முதற் புல்லீறுகவுள்ள பூதகோடிகளனைத்துக்கும் ஆத்மாவாயுள்ளதே தனது ஆத்மாவென்று அறிந்தவன் பற்றுள்ளவனாகான்; அவன் லோகஸங்கிரகார்த்தமாய் (உலகத்தவர்கள் கெட்டுப்போகக்கூடாதென்னு முத்தேசத்துடன் அவர்களுக்கு நல்வழி காட்டும் பொருட்டு) க்கர்மங்களைச் செய்துகொண்டிருந்தபோதிலும் அந்தக் கர்மங்கள் அவனைப் பற்றாவாம்.]

[கர்ம யோகியானவன் சாஸ்திர சம்மதமானதாயும் பகவதாராதனரூபமானதாயு முள்ள கர்மங்களை யாசரித்துக்கொண்டு, அதனாற் பரிசுத்தமான மனதுள்ளவனாகி, தான் கர்மங்களில் வேலைசெய்து கொண்டிருப்பதனாற் சுலபமாய் ஜயிக்கப்பட்ட மனதுள்ளவனாகி, அதனாலேயே மற்ற இந்திரியங்களையுங் கூட ஜயித்தவனாகி, தனது ஆத்மாவும் தேவர் முதலானோருடைய சரீரங்களிலுள்ள ஆத்மாக்களும் ஒருருவமுள்ளவர்களென்னும் ஆத்மயாதாத்மிய ஞான முள்ளவனாகின்றமையால் எல்லாப் பூதங்களின் ஆத்மாவும் தன்னுடைய ஆத்மாவே, அஃதாவது, தனது ஆத்மாவைப்போல அவர்களும் ஞான ஸ்வரூபிகளே என்னும் ஞானமுள்ளவனாகி, ஆத்மாவல்லாததனிடத்து ஆத்மாபிமானப் பற்று உள்ளவனாகான்.]

[இந்தச் சுலோகம் 6 - ஆவது சுலோகத்தின் பிற்பகுதியை விவரிக்கின்றது. எல்லாப் பூதங்களையு மடைந்த பரமேசுவரன் ஸர்வபூதாத்ம பூதன் (பூதங்களுக்கெல்லாம் ஆத்மாவா யிருப்பவன்); அவனைத் தனது ஆத்மாவாயுள்ளவ னெனின், பரமேசுவரன் தன்னைச் சமீபத்திற்சேர்த்துக்கொள்வான் என்னும் ஞானமுள்ளவன்].

8. 9. தத்துவத்தை யறிந்தவன் (பிரம்ம ஞானி) கண்களினாற் பார்த்து, காதுகளினாற் கேட்டு, தேகத்தினாற் பரிசித்து (தொட்டு), மூக்கினால் வாசனையறிந்து, நாக்கினாற் புசித்து, கால்களினால் நடந்து, தூங்கி, மூச்சுவிட்டு, பேசி, மலமூத்திரங்களைத் தள்ளி, விஷயங்களைக்கிரகித்து, கண்களை மூடித்திறந்து இவ்வாறெல்லாம் செய்தபோதிலும் இந்திரியங்கள் இந்திரிய விஷயங்களிற் பிரவர்த்திக்கின்றன (செல்லுகின்றன) வென்று நிச்சயித்துக்கொண்டு, (ப்ரப்பிரம்மமாகிய) நான் ஒன்றையுஞ் செய்யவில்லையென்று சித்தசுத்திகொண்டு நினைப்பான்.

[ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை, அஃதாவது, பரமார்த்தத்தை யறிந்தவனே தத்துவ ஞானியாவன். அவன் தத்துவத்தினிடத்தே மனதை நிறுத்தினவனாய் எப்பொழுது, எப்படி, மேற்சொல்லியவாறு நினைக்கவேண்டு

மெனின், "கண்களினாற் பார்த்து, காதுகளினாற் கேட்டு...... ......"—இவ்வாறுசெய்து வரும்பொழுது என்று கொள்க.

இப்படி எல்லா வியாபாரங்களும் அகர்மங்களென்னு மெண்ண முள்ளவனுக்குக் கர்மமில்லை யெனுமறிவு உண்டாவதனால் கர்ம ஸந்நியாஸத்திற்கே அதிகாரமாம். அவன் கர்ம சந்நியாசத்திற் குரியவன். கானலில் நீரிருக்கின்றதென்று எண்ணி அதனைக் குடிப்பதற்குப் போனவன், ஜலமில்லையென்று தெரிந்தபிறகு தாகத்தைத் தணித்துக்கொள்ள அந்தக் கானலண்டை போகானன்றோ?]

[தத்துவத்தை யறிந்தவன், ஞானமே ஸ்வபாவமாயுள்ள எனக்குக் கர்ம மூலமான இந்திரியம், பிராண முதலியவற்றின் சம்பந்தத்தினால் இப்படிப்பட்ட கர்த்ருத்துவம் (செய்தேனெனல்) உண்டாயிற்றே யன்றி அந்தக் கர்த்ருத்துவமானது ஸ்வபாவ சித்தமாய் ஏற்பட்டதன்றென்று நினைப்பான்].

[இவ்விரண்டு சுலோகங்களும் சந்நியாச மின்னதென்று சொல்லுகின்றன].

ஆயின், தத்துவ ஞானமில்லாதவன் கர்ம யோகியாய்க் கர்மத்தை யநுசரித்து வருவானாயின், அவனுக்குச் சொல்லுகிறார்:

10. கர்மங்களைப் பிரம்மார்ப்பணம் செய்து, ஆசைவிட்டு, (கர்மங்களைச்) செய்பவன், தாமரையிலை ஜலத்தினால் நனைக்கப்படாததுபோல், பாபங்களினால் தாக்கப்படான்.

[இந்தச் சுலோகம் கர்மசந்நியாசம் செய்யாதவனைக் குறித்துச் சொல்லுகின்றது. ஒரு சேவகன் தன்னுடைய எஜமானுக்காக வேலைகளைச் செய்வது போல, ஈசுவரப் பிரீத்யர்த்தமாய்க் கர்மங்களைச்செய்து, மோக்ஷமென்னும் பயனைக்கூட விரும்பாதவன் பாபத்திற் குள்ளாகான். அவன் செய்யுங் கர்மங்களுக்குப் பயன் மனது சுத்தியாவதேயாம்].

["பிரம்மம்"=பிரகிருதி. பின் சுலோகத்திற் சொல்லியபடி, கர்மங்களின் கர்த்ருத்துவத்தை, இந்திரிய ரூபமாய்த் திரிந்திருக்கிற பிரகிருதியினிடத்துவைத்து, பயன்களின் மீது ஆசைவிட்டு, "நான் ஒன்றும் செய்வதில்லை" என்று நினைந்து கர்மங்களைச் செய்பவன், தேகமே ஆத்மா என்று கொள்ளும் அபிமானமே ஸ்வரூபமாயுள்ள, பந்தத்திற்கு (கட்டிற்கு)க்காரணமாயுள்ள பாபத்திற்குள்ளாகான்].

[ஸந்நியாஸ யோகத்துடன் கூடியவனே கர்மத்திற்குள்ளாகான் என்பது இந்தச் சுலோகத்தின் தாற்பரியமாம்].

11. யோகிகள் ஆத்மசுத்தியின் பொருட்டுப் பற்றை விட்டுச் சரீரத்தினாலும், மனதினாலும், புத்தியினாலும், கேவலமான இந்திரியங்களினாலும் கர்மத்தைச் செய்கின்றார்கள்.



['கேவலமான'=மமகாரமில்லாத. இந்த அடைமொழி சரீரம், மனது, புத்தி, இந்திரியங்கள் ஆகிய இவை யொவ்வொன்றிற்கும் சேர்க்கப்படவேண்டும்.

கர்மங்களைச் செய்தல் ஈசுவரன்பொருட்டே யன்றிப் பயன் பொருட்டன்று என்றெண்ணிப் பயன் மீது பற்றைவிட்டு யோகிகள், அஃதாவது, கர்மயோகிகள் ஸத்வசுத்தி நிமித்தமாய் (மனது சுத்தப்படும் பொருட்டு)க்கர்மங்களைச் செய்வார்கள். ஆதலின், நீ இந்த மார்க்கத்திற்கே உரியவன், உனக்கு இதில் தான் அதிகாரம். நீ கர்மமே செய்யக்கடவை].

[சரீரம் முதலியவற்றால் சாதிக்கத்தகுந்த கர்மத்தை, ஸ்வர்க்கம் முதலிய அநுபவங்களை யடைவோமென்னும் விருப்பத்தைவிட்டு, ஆத்மாவினிடத்துள்ள பழமையான கர்மபந்தம் நசிக்கும் பொருட்டுச் செய்வார்கள்].

[பூர்வீகர்களுடைய ஆசாரம் இப்படிப்பட்டதென்று இச்சுலோகம் தெரிவிக்கின்றது].

12. யோகயுக்தனாயிருப்பவன் கர்மத்தின் பயன்களைவிட்டு நிஷ்டையிலுண்டான சாந்தியை (பாரமார்த்திகமான சித்த சாந்தியை) அடைகின்றான். யுக்தனல்லாதவன் காமத்தின் தூண்டுதலினாற் பயன்மீது ஆசைவைத்து கட்டப்படுகின்றான்.

["ஈசுவரனுக்காகக் கர்மங்களைச் செய்கின்றேன், என்னுடைய பயனுக்காக வன்று" என்னும் சித்த சமாதான முள்ளவன் யுக்தனெனப்படுவான். இப்படிப்பட்ட சமாதானத்தையடைந்து கர்மங்களைச் செய்கிறவன் முதலில் ஸத்வசுத்தி (அந்தக்கரண சுத்தி) யையும் பிறகு ஞானப் பிராப்தியையும், பிறகு சர்வகர்ம சந்நியாசத்தையும், பிறகு ஞான நிஷ்டையையும் அடைந்து கடைசியாய் மோக்ஷமென்னும் சாந்தியைப் பெறுகின்றான். காமத்தின் பிரேரபணையினால் "எனக்குப் பயன் வேண்டும்" என்னும் எண்ணத்துடன் கர்மங்களைச் செய்வோன் பயனுக்குப் பற்றுள்ளவனாகிக் கர்மபந்தத்திற் குட்படுகின்றான். ஆதலால், நீ யுக்தனாகக் கடவை].

[யுக்தனாகி, அஃதாவது, ஆத்மாவைவிட வேறான பயன்களின்மீது சபல மில்லாதவனாய், ஆத்மாவினிடத்தே முக்கியமாய் மனதுள்ளவனாய், கர்மத்தின் பயன்கள் மீது ஆசையில்லாமல், கேவலம் ஆத்ம சுத்திக்காகவே கர்மஞ்செய்து, நைஷ்டிக சாந்தியை (ஸ்திரமான ஆத்மாநுபவரூபமான ஆனந்தத்தை) அடைகின்றான். ஆகையால், பயன் மீது விருப்பமில்லாதவனாய் இந்திரிய ரூபமாய்த் திரிந்திருக்கிற பிரகிருதியினிடத்துக் கர்மங்களைச் சந்நியசித்து (விட்டு), நீ பந்தத்திலிருந்து தப்பிக்கொள்ளும் பொருட்டே கர்மங்களைச் செய்யக்கடவை].

[பரமார்த்த மறிந்தவனோ வெனின் அவன்]

13. எல்லாக் கர்மங்களையும் மனதினால் ஒழித்துவிட்டு, இந்திரியஜய முள்ளவனாகி, செய்யாதவனும் செய்வியாதவனுமாய், ஒன்பது துவாரங்களுள்ள பட்டணமாகிய தேகத்திற் சுகமாயிருக்கிறான்.

[கர்மங்கள் நால்வகைப்படும் : நித்திய கர்மங்கள்=தவறாமல் அவசியமாய்ச் செய்யவேண்டியவை; நைமித்திக கர்மங்கள்=அப்போதைக்கப்போது விசேஷகாலங்களிற் செய்யப்படுவன; காம்ய கர்மங்கள்=யாதேனும் பிரயோஜனத்தை யுத்தேசித்துச் செய்யப்படுவன ; இவை செய்தே தீரவேண்டுமென்னும் கட்டாயமில்லை ; நிஷித்த கர்மங்கள்=செய்யத்தகாவென்று மறுக்கப்பட்டவைகள்.

பரமார்த்த ஞானமுள்ளவன் மேற்சொல்லிய கர்மங்களை யெல்லாம் மனதினால், அதாவது, கர்மங்களில் அகர்மபாவனை யென்னும் விவேக புத்தியினால், ஒழித்து, தேகம், வாக்கு, மனம் ஆகிய இவைகளின் வியாபாரங்களையும் விட்டு, ஆயாச மில்லாமல், சந்தோஷமான மனதுள்ளவனா யிருக்கிறான். தேகம், வாக்கு, மனம் ஆகிய இவைகளின் வியாபாரங்க ளில்லாமைபற்றி, அவனுக்கு ஆயாசமில்லை, மனது சாந்தமாயிருக்கும். ஆதலின் அவன் சந்தோஷமா யிருக்கிறான் என்று சொல்லப்பட்டது. அவனுக்கு ஆத்மாவைவிட வேறான பிரயோஜனமில்லை. அவனிருக்கு மிடமாவது, தலையில் ஏழு துவாரங்களும், மல மூத்திரங்களை வெளிப்படுத்து மிரண்டு துவாரங்களும் ஆகிய ஒன்பது துவாரங்களோடு கூடிய சரீரமேயாம். இதற்கே ஒன்பது துவாரங்களுள்ள நகரமென்று பெயர். இந்த நகரத்திற்கு அதிகாரியாகிய தலைவன் ஆத்மாவாம்; குடிகளாவன ஐம்புலன்களும், மனதும், புத்தியும், இவற்றின் விஷயங்களுமாம்; இக்குடிக ளனைவரும் தங்களது பிரபுவாகிய ஆத்மாவுக்கு வெளிச்சங்கதிகளைத் தெரிவிக்கும் கரணங்களாம் ; இவர்கள் செய்யும் வேலை யெல்லாம் பிரபுவின் பிரயோஜனத்திற் காகவேயாம். இந்தப் பட்டணத்தி லவன் தானாக ஒரு காரியமுஞ் செய்பவனுமல்லன், செய்விப்பவனு மல்லன்; இப்படிச் சுகமாயிருக்கிறான். தேகமே ஆத்மா வென்று நினைக்கும் அஜ்ஞன் (அறிவிலி) தேகத்தில் ஆத்மா இருக்கிறானென்று நினையான்].

[கர்த்துருத்துவம் (செய்யும் அதிகாரம்) ஆத்மாவினுடைய பழைய கர்மத்தினா லுண்டாகிய தேக சம்பர்கத்தினால் விளைந்ததேயன்றி, ஸ்வரூப சித்தமாய் ஏற்பட்டதன் றென்னும் விவேகத்துடன் கூடிய மனதுள்ளவனாகி, எல்லாக் கர்மங்களையும் ஒன்பது துவாரங்களோடுகூடிய சரீரத்திற் சந்நியசித்து (=ஒழித்து=கர்த்துருத்துவத்தை நிறுத்தி), தான் தேகத்தை யொட்டியிருக்கும் விஷயத்திற் பிரயத்னமின்றி, தேகத்தைக் கொண்டு செய்வியாதவனாய்ச் சுகமாயிருக்கிறான்].

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.



# சரித்திர விநோதாமிர்தம்.

(154-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இஃதென்னை ? புத்தகங்கள் பத்திரிகைகளாதியவற்றின் மூலமாகத் தற்காலம் ஆங்கிலப்பயிற்சியு முடையார் சிலர், நம் நாட்டின் தமிழ்க்கவிகட்கும், கவிப் புத்தகங்கட்கும், அரசராசாரியர்கட்கும், ஏனைப் பலவற்றோடு தமிழுக்குமே கூடக் காலவளவுரைத்தாரேயெனின், அவர்கூறிய அவையாவு நுட்பமதியுறா * ஐரவரது உலக சிருட்டி வருடமாம் ஐயாயிரத்தினையுட் சருதியவாறு குறிக்கப்பட்டன ;—"அந்தோ! இவர்க்கு யுகங்கள் சம்மதமின்றாயினவே ! அஃதங்ஙனமே யாயினும், வேதங்களு மிவர்க்குடன்பாடின்றாயினவே ! யாதுபுரிக !" என்று பகருவாரும்,—

—ஞானபோதினியுள் வித்துவான் திருமயிலைச் சண்முகம்பிள்ளை யவர்களே போல, அவர் கூறுங்காலங்களை யுரையாம லுரைத்து, இடியாமலிடித்துக் கண்டிப்பாரும், அங்ஙனமே அவர் கூற்றை யெடுத்துரையாம லிரங்கி வருந்தியபோக்கில், நாலாயிர ஐயாயிர வருடத்தின் பிற்பட்டதே தமிழ், என்ற கருத்தொன்றனை மாற்றி, அதன் மூலமாக ஏனைய வவர்கூற்று மழியவெனக்கொண்டு,—'நெடியோன்குன்றமுந் தொடியோள் 'பௌவமும்' என்னுஞ் சிலப்பதிகாரச் செய்யுட்கண் 'முதலூழி யிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து' என அடியார்க்கு நல்லாருரைத்ததனானும், அகத்தியத்தை இலக்கணமாகக் கொண்டாராய்ந்த முதற்சங்க மிருந்தகாலம், ஆதிகற்பத்தில் கிருதயுகத்துப் பிற்பகுதியென்க; அகத்தியம் தொல்காப்பிய மென்னு மிரண்டனையு மிலக்கணமாக வுடைய இடைச்சங்க மிருந்தகாலம் ஆதிகற்பத்தில் திரேதாயுகத்து முற்பகுதியென்க; என்னை ? "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்து இடைச்சங்கத்து" என்று அடியார்க்கு நல்லார் உரைத்ததனானும், இச்சங்க விலக்கணங்களுள் ஒன்றாகிய தொல்காப்பியம், வாதராயண முனிவர் தோன்றி வேதந் துறைசெய்த காலத்திற்கு முன்னரேயே செய்யப்பட்டுள்ளது என்பது போதரத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர வுரைக்கண், "இவர் இந்நூல் செய்தபின்னர் வேதவியாசர் சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தார்" என்று உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உரைத்தமையானும், வேதவியாசர் கூறுசெய்தகாலம், ஆதிகற்பத்துத் துவாபரயுகமென்பது கந்தபுராணத்தார் கருத்தாகலானும், அதுவே எஞ்சைவசித்தாந்த பானுவாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானவர்கட்குந் துணிபாகலானுமாம் இவற்றானும், ஏனைய ஆசிரியர்கட்டுரைகளானும், தமிழ்

* (ie.) Those that have not paid deep attention to Astronomy, Astrology, Geology and the commentaries on the Bible by Cornelius á Lapide.

மொழி அநாதியே இறைவனு லருளப்பட்ட தொன்றென்பது தெற்றென வுணர்க” என்று தெளிப்பாரும்,—

—உத்தேசிக்கிற் பல்லாயிர வருடங்களின்முன் கடலாழத்திற் பட்ட மதுரை வித்திரண பாகநாட்டின் தமிழ்ச் செப்பேடுகளும், அக்கருங்கல் வெட்டுச் சாசனங்களும் ஆழத்திற் கிடைத்தனவே எனவும், இப்பிரிவு நாட்டினின்றே மானிடர் ஆதியிற் சிருட்டிக்கப்பட்டுப் பல்லிடத்தும் பிரிந்தகன்றனர், அக்கால் அவர்பாடை தமிழேயா மெனவும் விளங்கச் சொல்லுந்தோறுங் காரணங்காட்டி நிறுவி விளக்குறுமாறு காண்க, என்றுகூறுவாரும்,—

ஆ! ஆ!! உலகமுண்டாகி ஆறுயிர வருடமென்பதே சரியென்னுந் தங் கூற்றை மறந்து துணிந்து, உ௨௦௨ - வருடங்களுக்குமுன்னர் ஆதிசந்திர வமிசகுல பாண்டியர் தோற்ற மென்றுரைத்து மேலும் பொச்சாந்து, பத்தாம் பாண்டியனாகிய அனந்தகுண பாண்டியன் காலத்தில் இராமர் இலங்கையினையடைந்தாரென்று மயங்கிப்பேசுவர் சிலர்; இவண் மயக்கமியாதோவெனின்-திரேதாயுகமே இராமர்கால மாதலின் அதன் அந்தத்தே அக்காகுத்தனூர் வரவெனக்கொளினும், துவாபரயுகமாம் - அ௦௬௦௦௦ - வருடமும் நிகழ் கலிவருடம் ரு௦௦௦-முங்கூடவாம், எட்டிலக்கத்து அறுபத்தொன்பதினாயிரம் வருடங்களின் முன் அவர் வந்தாரென்று கூறியதாமே என்பதாம். என்னே? அவர்க்கது சம்மதமின்றே, சொற்பகாலமே இராமரெல்லை யென்பரெனின், அதனைவிட்டுக் கீர்த்தி விபூடண பாண்டியனும் நாற்பத்தாறும் பாண்டியன் காலத்துக் குறிக்கப்படும் சலப்பிரளயம் இவ்வீராயிர வருடங்களினிடையிற் சம்பவித்திலதாமென இவர் தெய்வ வாக்காகக் கொள்ளும் ஐரவர்களுடைய வாக்குக் கென்செய்வதென்க. அங்ஙனமன்று சலப்பிரளயமெனப் புராணிகள் கூறியதைக் குறித்தேயன்றி அங்ஙன முண்டாயதென்பதவர்க் குடன்பாடன்றே யெனின், குறித்திட்டாங்கு வேதத்தையும் இதிகாச கணிதாதிகளையும் நம்பார் கூற்றுக்கு யாங்கூறுவதென்னை? “நிரையவித்து நீராடலாக வுரைப்பார்-உரையவித் தொன்றுஞ் சொலில்லை” என்னுமாறு அவர் கூற்றை யெதிர்த்துப்பேச வலியில்லேமெனக் கழிவாருமுளரா மென்றுகூறி, அங்ஙனே யதன் நுட்பத்தை யறிந்தமைக, என்று உரைப்பாரும் உளர்.

இதுகிடக்க.—மகாகவியாகிய கம்பநாடர், சேரசோழ தொண்டைமா நாடுகட்கெல்லை குறித்த ஆங்குப் பாண்டியர் நாட்டிற்கு மெல்லை குறித்தார். அது,—

“வெள்ளா றதுவடக்கா மேற்குப் * பெருவழியாந்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார

* இஃது மேற்குத்தொடர் மலைக்கணவாய் வழியாக மலையாளத்தில் அச்சன்கோயில் மார்க்கமுறுஉம்பாதை யென்பர்.



ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லை பதி”

என்பதாம். இவ்வைம்பத் தறுகாதம், * காதமொன்றிற்குத் தற்கால ஆங்கில அளவையாம் † பத்துமைல் ஆகும். அங்ஙன மாகுங்கால்-ருசு௦-மைலாம் பாண்டியன்றே? இவ்வித்திரணத்தையும் அதாவது தன்பெருக்குத் தொகையையும், ஏனைய நாடுகட்கு மவ்வாறும் வித்திரணங்களையுங் கவனித்து நோக்கச் சற்றும் அவ்விசாலங்கட் கிடமின்றிப் பொருத்தமில் பொய்யே யஃதாகும். ஆயினும் அம்மகாவித்துவான் காலத்துக்காதமொன்றிற்கு மைல் குறைவுற்ற கணக்காகவாவது, நாடுகடலாற் கொள்ளப்படாது ஒருவாற்றாற் பூமி விசாலித்தாவது இருந்திருத்தல் வேண்டும். கம்பர் வேறு படித்தாம் பூர்விக அளவு குறித்திருப்பரோ, அஃது அக்காலத் தெவ்வாறு இருந்ததோ எனக் கொண்டாலன்றிக் கம்பர் காலத்தினும் அல்லது அதற்குப் பல வருடங்களுக்கு முந்தியுங்கூடக் கடற்பெருக்கிலதாமாகையின், தற்காலத் தரசர் வகுத்துக் கொண்டவாறு கடல் வித்திரணத்தையு முட்படுத்திக் கொண்டாவது சொற்றவெல்லை கூறப்பட்டிருக்கலாம், என்பதோர் வகைத்துணிவும்,—

கிழண்மக் குறித்தாங்குப் பல்லாயிர வருடங்களுக்குமுந்தி, இப்போது இந்து மகாஸமுத்திரம் சிந்து மகாசமுத்திரம் என்னும் பெயரிய இந்து அல்லது சிந்துவானது ‡ சந்தத்தீவு கீழாக ‖ மடுகாசகர்த்தீவு மேலாகக் கொண்டுகிடந்த இடையகன்ற § இலேமுறியாவென்னும் பெயரிய தமிழ் நிலவளாகத்தைப் பெருகியழித் தாழ்த்தியதென ¶ ஏகல் சாத்திரியா ரிசைப்பதானும், “வடிவேலெறிந்த வான்பகைபொறாது, பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக், குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள” எனச் சிலப்பதிகாரக் காடுகாண் காதையிற் கிடைப்பதானும், சொற்றதின் இளவேனிற் காதையில், “நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்” என்றதற்கு “அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கு மிடையே எழுநூற்றுக் காவதவாறும், இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும், ஏழ்மதுரைநாடும், ஏழ்முன் பாலைநாடும், ஏழ்பின் பாலைநாடும், ஏழ்குன்றநாடும். ஏழ்குண காரைநாடும், ஏழ்குறும் பனைநாடு மென்றும், இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரிகொல்ல முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியுந் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால்...” என்றுரை யாசிரியர்

* காதம் எழரைமயில், ஐந்துமயில் எனவும் வேறுசவுங் கூறப்படும். மலையாளக்காவதம்-ஈ௲-மயிலாம். அதனை நான் கென்றுஞ் சாதாரணத்திற் கொள்ளுவர்.

† மைல்=Mile. ‡ Sunda Islands. ‖ Madagascar. § La Morea. ¶ Pro. Haeckel.

அடியார்க்கு நல்லார் கூறுவதானும், நங்கவிச்சக்கிர வர்த்தியாருக்கு வெகு சேய்மையாம் பூர்வத்தே யேற்பட்டிருந்த வெல்லையினை இவர்காலத்து மிசைத்து வந்தபடியே கூறினரெனல் மற்றோர் வகைத்துணிவும் ஆகலாம்.

சி. சாமிநாதபிள்ளை.

---

## காணாமற் போனதோர் ஓட்டை.

### ஆசிரிய வணக்கம்.

கோவடிவே லோனைமனங் கொள்பரிதி மாற்கலைஞன்
சேவடியே யெந்தந் திரு. (1)

### காப்பு.

எற்று தெண்டிரை யுவரிசூ ழிருப்புவி யதனி
லுற்று நோக்குத லுறுபய னுதவுமென் றுணர்ந்த
வொற்றை யாயலைந் தோடிய வொட்டையின் கதையெம்
மொற்றை வாளுல கைக்களிற் றருளினா லுரைப்பாம். (2)

### நூல்.

விண்ணு லாவுபூம் புனலகில் விரைமகிழ் சந்தா
ரெண்ணி லாசவான் றேய்மரம் பலவெடுத் தெங்கு
மண்ணில் வானமு தாய்த்தவழ்ந் தோடிய வரைப்புக்
கண்ணு தற்பிரான் களித்தமர் காசிமற் றதன்பால். (3)

மேற்றி சைக்கணோர் வேனில்வேந் தரசுவீற் றிருக்குங்
காற்ற சைவிலாக் கடுஞ்சுரங் கருதுவார் மனமு
மாற்ற லோடுகாண் பவர்கணு மதன்பெய ரொருகாற்
சாற்று வோர்தநா வும்புகைந் தழறத் தயங்கும். (4)

[illegible]றில் சினத்தி னுப்பணின் றெரிதருங் கோபி
நீறு சேரிதற் கொப்பன நிகழ்த்தன்மின் மிணிவான்
வீறு சேரிர வியைப்பொரும் விளக்கொளி யுலகை
நூறு மங்கியை நிகரென் றுவல்வதை மானும். (5)

ஓடிவி னாயகன் பரத்தைபா லொழுகுவ துணர்ந்த
வடிவி லாமகன் மனமென வெதும்பியவ் வடலை
சுடுமெ னாத்தனைத் தார்தலை புகவெருட் டியவக்
கொடுமை சால்சுரத் தொருபகற் கொடுவழி யூடே. (6)

கோங்கு விம்முகார்க் குழலுமைக் கொடியிடப் பாகந்
தங்கு பேரொளி விளக்கினாற் சழக்கிலா மனத்தான்
பொங்கு மக்கமும் பூதியும் புனைந்தபொன் மேனிச்
செங்க லாடையான் சிவசிவ வெனுந்திரு வாயான். (7)



மண்பொன் மாதெனு மும்மடி மயக்கினின் மாழாந்
துண்மை தேர்தலின் றழலும்புன் மாக்களை யொருவிப்
பெண்ணை மாபலா வழையொடு பிடவம்பா *திரியா
ரொண்மை தங்குகா னகவரை யுறுமுழை யுறைவோன். (8)

பைய ராமதி யணிமுடிப் பரமனின் றூடச்
செய்ய தாமரைத் தேவுதந் திருத்துணை யகன்று
நையு மாதரார் நெஞ்சென நஞ்சென விதித்த
வெய்ய பாலையுட் சென்றனன் விருப்புக்கைப் பிகந்தோன். (9)

செல்லு மெல்லையிற் செல்லவா ணிகர்வழிச் செல்வோ
ரொல்லை நாற்புற மோர்தரு விழியினோ ரிருவோர்
வல்லை வந்தனர்க் கண்டனன் வணங்கினோர் வாழ்த்தி
நில்லு மென்றவர் நிறுத்தியந் நிமலனு மொழியான். (10)

### வேறு

ஐய நீவிரோ ரத்திரி நேடியே
நையு நும்முள நானறிந் தேனதன்
செய்ய காலினுஞ் சேர்வலக் கண்ணினு
மெய்து மூனமுண் டோவெற் கியம்புவீர். (11)

என்ற வன்மொழி யேற்றவ ராமென்றார்
தன்று முன்பற் றுறந்ததுண் டோவென்றான்
பின்றை யும்மதன் பெற்றியற் றேயென்றார்
கொன்றை சூடி யடியவன் கூறுவான். (12)

வருத்த முற்றவர் காளய வாணத்தி
னொருத்த லைப்பரத் துற்றது தேன்மற்றோர்
பருத்த பாற்றினைப் பையுமுண் டேயன்றோ
கருத்தி னின்றதைக் கட்டுரை மின்னென்றான். (13)

சாத மாயவ் விராவணந் தானெம
தரவு சூடிய வண்ண லறிகுவா
னிரித ரும்மதை யாண்டுணர்ந் தாயதன்
விரி பெருங்கதை விள்ளு மறிவினோய். (14)

ஒற்றை யாழியந் தேரவ னெண்குடக்
குற்றி டாமுனம் பற்ற வுணர்த்துவாய்
பற்று நீக்கிய பண்பநின் னல்லருள்
பெற்று ளேமெனச் சொற்றனர் பேதையர். (15)

நீள்க ழுத்தினை நேடுபு வாடிய
வாள்வி சித்த மருங்குடை வாணிகர்

கோள்வ லங்கொளுங் குன்றை வளைக்குமவ்
வேள்வ லங்கொள் விழிய னறிகுவன். (16)

கரிய வன்மலர்ப் புங்கவன் காணுணைக்
கரிய வன்மிடற் றோன்கரி காணெனக்
கரிய வன்றிமி லத்திரி கண்டிலே
னுரிய னும்மினன் னுற்றவை கேட்டிலேன். (17)

பேய்வ னப்புடன் பெட்டு நடிக்குமிவ்
வேய்வ னத்துள் விகரந்தகல் வீரினி
தாய்வு திற்கட் கணிசல ஞாருள்
வாய்த னக்கணி வாய்மையே யென்பரால். (18)

பொய்யு ரைப்பவர் போனக மின்றியே
வெய்ய வாரழற் கும்பியின் வீழ்வராற்
செய்ய வொட்டைகண் டேனெனச் செப்பில்யா
னைய கோநர காழ்ந்தளு ரெய்துவேன். (19)

வேறு.

என்றவுரை கேட்டவ ரிமைப்பொழுதி னிற்பாய்ந்
தூன்றனது செங்குருதி யோடுகுட ருண்ணத்
தூன்றுமிடை வாள்கொடு துணிப்பரின தாகங்
கன்றெனவி னின்றபுலி யேற்றினை நிகர்த்தோய்! (20)

மந்தநகை மாவன மயூரநடை வான்சே
ரிந்துவத னத்தளெழி லின்பவலி பங்கா
ரெந்தையெமை யாளுடைய வீசனடி சாரும்
பந்தமில் தன்படிவங் கொண்டபடு பாவீ! (21)

வன்மைய விரண்டுதிமி லெந்தமய வாணம்
பன்மணி பரித்தொருவும் பான்மையத ஞனீ
சின்மதி துரப்பவத னைக்கயவு செய்தாய்
பின்வருவ தெண்ணிலைகொல் பித்துடைய பேதாய்? (22)

மன்னுகதிர் கால்வயிரம் வானவுடு மானும்
மின்னிவெயில் வீசுமர விந்தமணி வெய்யோன்
பன்னியெனுஞ் செம்பதும நாயகி பயந்த
நன்னரொளிர் முட்டையென நாற்றிசையு நாறும். (23)

வானவர் பிரானுயிர் வளைத்தவல னாக
மீனுமணி யாறுட னிரண்டுடனொ ரொன்று
மேன்னி விளங்குமொளி மிக்குவிடு கோள்கண்
மானுமெனு மாமணி யிழந்துமினும் வாழேம். (24)



வேறு.

என்றவர் செறுத்துரைத் திறைவன் பாலிதந்
கொன்றிய மனுவழி யொழுகுந் தண்டமாண்
டென்றென வொளிவிடு மின்ன கைம்முகத்
தன்றவ வடைகுவான் றுவி யீர்த்தனர். (25)

மடிபிடித் தொருவன்மொய் வலிபற் றீர்க்கவும்
பிடர்பிடித் தொருவன்றன் பின்னின் றுந்தவும்
படர்புகழ்த் துறவியின் பரிசு தாம்பம
படர்கொடு செலுமுயிர்ப் பண்பு போலுமால். (26)

கடலுடைப் புவியினைக் காத்து வாழ்வெனக்
குடையுடைக் கோவினைக் குறுகிச் சொற்றவ
கடுநடை யொட்டையைக் களவு செய்தவிச்
சடைமுடிக் கயவனைத் தகவொ றுத்தியால். (27)

எனக்குறை யிரந்தன ரெழில்கொள் வாணிகர்
மனக்குறை மாற்றுமம் மன்னர் மன்னனுந்
தனக்கெதிர் நின்றவத் தகைமை யாளனை
நினக்குறு வனவெவை நிகழ்த்து வாயென்றான். (28)

வெற்பிறை தருங்கொடி விழையுஞ் செந்துகிர்
வெற்பினை யுளத்திரீஇ விளங்கு சிந்தைய
னற்புத மவையுளா ரடைய வேயவண்
மற்புய மன்னனை வாழ்த்திக் கூறுவான். (29)

வையநின் னாணையின் வாழு மாறருள்
செய்யுமன் னவவொளி திகழும் வேலவ
செய்யவொட் டகம்வழிச் சேறல் கண்டிலேன்
கையத ரதனடிச் சுவடு கண்டனென். (30)

வேறு.

தூற்று வார்மணற் சுவடுகண் டெத்தெனத் தோய்த
லூற்று நோக்கியே யுடன்வரும் பாகரை யொருவி
யொற்றை யாயலைந் தோடிய வொட்டையென் றுணர்ந்தேன்
சற்றை வார்சடைக் கண்ணுதல் கரியெனக் கறிதி. (31)

மன்ன கேட்டியம் மணற்சுவட் டினிர்சில நொய்தே
துன்ன லாலொரு கான்முட மாமெனத் துணிந்தே
னன்ன வட்டையி னடர்ந்திரு புடையினு மணைந்த
பன்ன மோர்புற மேயயின் றிருக்குமப் பரிசால். (32)

உன்னி யன்னதன் வலக்கணி லூனமென் றுரைத்தேன்
புன்ன மும்மிடை யிடைச்சில கழிபடாப் பண்பின்

முன்னம் பல்வினொன் றின்றென முன்னினென் முதல்வ
தன்ன மும்மறி யேனதைச் சரதமீ துணர்வாய். (33)
மற்று மோர்புடை மதுகர மிசைத்தலி னதன்மீ
துற்ற தோர்புறத் தேனென வுணர்ந்தனெ னொருபாற்
சுற்றி யாய்வுறு முறவியின் றொடர்பினி லொருசார்
நெற்று வார்தினைப் பையென நிகழ்த்தினெ னினைந்தே. (34)
என்று ரைத்தவ னிணையடி மலரினி லிறைஞ்சி
மன்ற லந்தொடை மன்னனும் வணிகருந் தொழுதார்
பின்ற லின்றிய பெரியனுந் தன்னிடம் பெயர்ந்தா
னென்று முற்றுநோக் குதற்சிறப் புலகினர்க் கிசைத்தே. (35)

முற்றிற்று.

ந. பலராம ஐயர்.

---

## சமாசாரக் குறிப்புகள்.

**சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலை வருஷோற்சவம்:**—இது வருடந் தோறும் நடந்து வருதல்போல இந்த வருடமும் டிசம்பர்மீ 29-ஆம் தேதியன்று நடக்கும். அன்று காலையிற் பழையமாணாக்கர் குழாங்கூடிப் பல விடயங்களையும் பற்றிப் பேசுவார்கள். இடையிற் சிற்றுணவும் வழங்கப்படும். மாலையிற் பொதுக் கூட்டங்கூடி அதன்கண் பிரசங்கங்கள் செய்யப்படும்.

***

**மில்லர்சிலை:**—இது நிகழும் டிசம்பர் மாதங் கழிந்தபிறகு 1901-ஆம் வருடம் ஜனவரிமீ முதற்றேதியன்று புது நூற்றாண்டின் முதல் விடயமாகத் திறக்கப்படும். அதனைத் திறப்பார் அதிமேன்மை தங்கிய சென்னைக் கவர்னர் அவர்களாகிய ஆன்ட்ஹில் பிரபு அவர்கள் என்று கேள்விப்படுகின்றோம். அன்றைத்தினம் விசேஷக் கொண்டாட்டத்தோடும் விளங்குமென்று எதிர் பார்க்கின்றோம்.

***

**றாவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பி. ஏ. பி.. எல்:-** இவரை யறியாதார் தமிழ் நாட்டில் எவருமில்லை. இவர் இவ்வருடம் நிகழ்ந்தனவும் நிகழ்வதுமாகிய தமிழ்ப்பரீக்ஷைகளனைத்திற்கும் ஏற்பட்ட பரீக்ஷகர்களது தலைவராவர். இவர் சென்ற சின்னாட்களாக மிக்க அசௌக்கியமா யிருக்கின்றனரெனக் கேள்வியுறுகின்றோம். இவ்விடயம் எமக்கு மிகவும் அசுகத்தை [illegible]க்கின்றது. இவ்வாறே பிறக்கும் விளைக்கும் என்பதில் ஐயப்பாடேயில்லை. இவர் நோயினீங்கித் தேகம் சௌக்கியமடைந்து நீடூழிவாழுவான் இறைவனைப் பிரார்த்திக்கின்றனம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 FEB. 1901
MADRAS

Supplement to this issue of Jnana Bodhini.

# நமது சக்ரவர்த்தினியார்.

ஆங்கிலநாட்டின் மகாராணியாரவர்களும் நமது இந்தியாதேசத்தின் சக்கிரவர்த்தினியாரவர்களும் பொதுஜன நன்மையே ஒருருவெடுத்து வந்தாற்போன்ற அரசியாரவர்களுமாகிய நமது விக்டோரியா மகாராணியா ரவர்கள் தேகவியோகமாயினார் என்பது கேட்ட எமதுள்ளங் கலங்குகின்றது; உடல் நடுங்குகின்றது; அறிவழிகின்றது; ஆதலின் எமது துக்கமுழுவதையும் எடுத்துரைக்க முடியவில்லை. இதனைக்குறித்து அடுத்த சஞ்சிகையில் விரித்தெழுதுவோம்.

பத்திராதிபர்.

23—1—01.

சென்னை-600 00

# ஞானபோதினி.

ஸம்புடம். IV. } 1901௵ ஜனவரி௴ 20உ { புத்தகம். 6.

## புது நூற்றாண்டு.

சென்ற டிசம்பர்௴ 31-ஆந் தேதியோடு 1900-ஆம் வருஷமும் 19-ஆம் நூற்றாண்டும் ஒருங்கே கழிந்தன. நிகழும் ஜனவரி௴ 1உயில் 1901-ஆம் வருஷமும் 20-ஆம் நூற்றாண்டும் ஒருங்கே பிறந்தன. கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த விஷயங்களனைத்தும் யாவரும் உணர்ந்தனவே. உலகந்தான் தொடங்கியதுமுதல் நேரிய வழியிற் புகுந்து உயர்நிலையை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றது.

மனிதனுக்குத் தடைகளாயிருந்த ஐம்பெரும் பூதங்களும் இப்பொழுது அவனுக்குப்பேருதவி புரிவனவாயின. புதிய புதிய இயந்திரங்கள் நாடோறும் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவைகள் உலகிற்குப் பெரும் பயன் விளையத்தக்கவாறு பயன் படுத்தவும் படுகின்றன. துரைத்தனத்தார்க்கும் குடிகட்கு முள்ள வேறுபாடுகள் சிறிதுசிறிதா யொழிந்து கொண்டிருக்கின்றன. ஒருவரையொருவர் உள்ளவாறே உணர்ந்து அவ்வவர் மனக்கோளுக்கேற்றபடி பொதுநன்மை நாடி நடக்கத் தலைப்படுகின்றனர். துரைத்தனத்தாரைக் கண்டு அஞ்சியொழுகும் இயல்புபோய் அவர்களிடத்து அன்புகொள்ளும் இயல்பு உதித்தோங்குகின்றது. கைத்தொழிற் சாலைகளும் பொறித்தொழிற் சாலைகளும் புதிய புதிய இருப்புப் பாதைகளும் இவைபோல்வன பிறவும் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு நாட்டிற்கு நன்மை புரியா நின்றன. பல ஆங்கிலமுறைகளும் கல்வி தொழில் முதலிய விஷயங்களில் அநுசரிக்கப் பட்டுவருகின்றன. மேற்புலவாணரது கலைபயிற்றுமுறைகளைத்

தழுவியே மாணாக்கருக்குத் தாம் மேற்கொள்ளும் கல்வியில் ஆர்வம் பிறக்குமாறு இனியவழியிற் கல்வி கற்பிக்கப் படுகின்றது. கட்டிடங்களும் தெருக்களும் தற்கால சுகாதார விதிகளுக் கிணங்கக் கட்டப்பட்டும் ஒழுங்கு படுத்தப்பட்டும் வருகின்றன. மிருகங்களையும் மனிதர்களையும் பெரிதும் வருத்திச் செய்யப்படும் வேலைகளுட் பல இயந்திரங்களாற் செய்யப்படுதலிற் பொதுப்பட நாட்டின்கட் கருணைத்திறம் மிகுந்து வருகின்றது. சனசமூகச் சீர்திருத்தங்களும் அறிவுடையோர் மகிழத்தக்க வழியிற் செய்யப்படுகின்றன. பயனின்றியும் பொருளின்றியும் இருந்த போலி ஆசாரங்களுள் அநேகம் சழிவனவாயின. பெண்கல்வி மிகுதியும் பாராட்டப்படுகின்றது. பாலிய விவாகம் அதிகமாய் நிகழ்கின்றில. புனர்விவாகமும் ஆங்காங்கு நடக்கின்றன. நெடுந்தூரங் கடற்பிரயாணம் செய்துவந்தவர்கள் சாதியுட் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். நீதிமார்க்கமும் நியாயவழிகளும் குறுகிக்கிடத்தலின்றிப் பரந்துவிசாலித்து யாவரும் இடுக்கணின்றிச்செல்லத்தக்கவாறு அமைந்திருக்கின்றன. நீயர் தொகையும் சுருங்கிக்கொண்டு வருகின்றது. சுதேசாபிமானமும் சுபாஷாபிமானமும் மிகுந்து வருகின்றன. ஆங்கில நூற்பயிற்சி மிக்குடைய நம்மவருள் அநேகர் நம் தமிழ்மொழியை அலட்சியஞ் செய்யாது கவனிப்பாராயினர். நாடோறும் புதுமையான கதைகளும் நாடகங்களும் பத்திரிகைகளும் செய்யுட் பிரபந்தங்களும் வெளியாகின்றன. தமிழ்ப் பிரசங்கங்களும் தமிழ்ச் சங்கங்களும் நடந்து வருகின்றன. காலத்தினருமையும் பணத்தினருமையும் நம்மவரால் நன்குணரப்பட்டு அவை தக்கவாறு செலவிடப்படுகின்றன. வீண்பொழுது போக்கும் வீண்பொருட் செலவும் குறைந்து கொண்டுவருகின்றன.

இவை யாவற்றையும் உற்றுநோக்குநருள் யாவரே உலகம் உயர்நிலை நோக்கிச் செல்லாது வீழ்நிலை நோக்கிச் செல்லுகின்றது என்று கூறப்புகுவார்? அறிவுடையீர்காள்! அன்னணங் கூறுவோர் எப்பொருளினும் இன்பங் காணாது உழலும் புன்மக்களாகவே மதிக்கப்படுவா ரென்பதில் ஐயப்பாடுமுண்டோ? இது நிற்க. இவ்வாறு நாடோறும் பல திறத்தானும் விரிந்து செறிந்து நன்மையரும்பி இன்பமலர்ந்து வானுறவோங்கும் இவ்வுலகநன்மரம்



ராவ்பஹதூர்-சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள், பி.ஏ., பி.எல்.



என்றும் தும்பிச் சாம்பாதவாறும் மக்களுக்கு இன்னிழல் கொடுக்குமாறும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் கருணைமழை பொழிந்து அதனைக் காப்பாராக.

பத்திராதிபர்.

---

## தமிழுலகம்.

புது நூற்றாண்டு பிறந்து யாவும் இனிது செல்லும் என்றெண்ணி எதிர்பார்த்து நின்ற நந்தந் தமிழுலகம் பெரிதுந் துன்புறத்தக்கதோர் நிகழ்ச்சி கேட்டு நடுநடுங்குகின்றது. அந்தோ! புதுநூற்றாண்டு பிறந்த அற்றை ஞான்றே செந்தமிழுலகிற் செம்மை சான்று விளங்கிய நமது ராவ்பஹதூர் - சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவபிரான் திருவடி நீழலிற் சென்று சேர்ந்தனர். என்னே உலகம்! என்னே வாழ்க்கை!!

தமிழ்ப்புலவ ரில்லங்களிற் பனையோலைச் சுவடிகளிற் சிறைப்பட்டுக் கிடந்து தவித்த செந்தமிழணங்கு நல்லாடை யுடுத்துத் தெலுங்கு, கன்னடமாதிய பாங்கிமாரோடும் அச்சுவாகனமேறி நாடெங்கும் உலாவருமாறு செய்தற்கட் பேரூக்கமெடுத்து உழைத்து நின்ற நம் பிள்ளையவர்கள் காலஞ் சென்றன ரென்பதுணர்ந்த யாவரே தமது அவல மெய்ப்பாட்டினை யடக்க வல்லார்? அவ்வாறாக யாம் எமது துன்பத்தையடக்கப் புகுதலெவன்? மனத்தின் கணுள்ள துக்கம் வாய்விடுத்துக் கூறுமிடத்துச் சிறிது தணியுமன்றே; அங்ஙனங் கூறுதற்கட் குறை நிகழுமாயினும் உலகம் எம்மைப் பொறுக்க.

### வாழ்க்கை.

நமது தாமோதரம் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணத்துச் சித்தூர்-வைரவநாத பிள்ளையவர்களது குமாரர். இவர் கி. பி. 1832 - ஆம் வருடம் பிறந்தனர். ஆண்டுள்ள யாழ்ப்பாணத்துக் கல்லூரியில் ஆங்கிலமும், சுன்னாகம் முத்துக்குமாரசுவாமி பிள்ளையவர்களிடம் தமிழ்க்கலையும் பயின்றனர். 1852-ஆம் வருடம் அக்கல்லூரியினின்றும் பரீட்சையிற்றேறிப் பட்டம் பெற்று வெளிப்போந்தனர்.

பின்னர்க் கோப்பாயி லுள்ளதோர் கல்விச் சாலையிற் போதகாசிரியராய் அமர்ந்தனர். அக்காலத்துச் சென்னையில் விளங்கிய பேர்ஸிவல் துரையவர்களால் அழைக்கப்பட்டுச் சென்னைக்குப் போந்து தினவர்த்தமானி யென்றதோர் தமிழ்ப் பத்திரிகையை நாடோறும் பதிப்பித்து வந்தனர். அங்ஙனம் பதிப்பித்தற்கண் நமது பிள்ளையவர்கள் உலகிற்குக் காட்டிய தமிழ் நூற்பயிற்சியும் ஆராய்ச்சி வன்மையும் அவர்க்கு மிக்கபுகழ் விளைத்தன. இஃதுணர்ந்த துரைத்தனத்தார் பிள்ளையவர்களை இராசதானிக்கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராய் அமரும்படிவேண்டிக்கொண்டனர். அங்ஙனம் அக்கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்திவருபவர் 1857-ஆம் வருஷத்து முதன்முதலில் ஏற்பட்ட சென்னைச் சர்வகலாசாலைப் பிரவேச பரீட்சையில் தேறினர். பின்னர் அவ்வாறு தேறி நான்கு திங்கள் கழியுமுன் 1858-ஆம் வருடத்தில் நிகழ்ந்த பி.ஏ. பட்டப் பரீட்சையிலுந்தேறினர். எனவே நமது தாமோதரம் பிள்ளையவர்கள் சென்னைச் சர்வகலாசாலையில் முதலிற் பி. ஏ. பட்டம்பெற்ற இருவருள் ஒருவராவர். பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றவுடன் கள்ளிக்கோட்டைக் கல்விச் சாலையில் உதவி உபாத்தியாயரா யனுப்பப்பட்டனர். ஆண்டிருந்து சென்னைக் கோட்டையில் உயரியதோர் உத்தியோகத்தி லமர்ந்து பலதுறைகளாலும் தமது வாய்மை, நேர்மை, மேற்கொண்ட கடமைதவறாமை ஆதிய நற்குணங்கள் காரணமாகப் புகழ்ப்பெற்று விளங்கி 1882-ஆம் வருடம் உபகாரச் சம்பளம் பெற்று வேலையினீங்கினர். இடையில் இவர் கோட்டையில் வேலையிலமர்ந்திருக்கும் போழ்தே 1871 - ஆம் வருடம் பி. எல். பரீட்சையிலுந் தேறியிருந்தனர். ஆகவே தாம் வேலையினீங்கினவுடனே 1884-ஆம் வருடம் குடந்தையம்பதியில் நியாயவக்தாவாய் அமர்ந்தனர். அதன்மேற் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் நியாயாதிபதியாயிருந்து உலகிற்கு நன்மை செய்வாராயினர். அக்காலத்தில் அவர்க்கு மகப்பிரிவு நேரிட்டமையின் வேலையை விடுத்துச் சென்னைக்கு வந்துவிட்டனர்.

## தமிழ்நூற் பதிப்பு.

இதுநிற்க. குடந்தையிலிருந்தபொழுது அச்சிடப்படாத பல அருமையான தமிழ்நூல்களைப் பனையோலைச் சுவடிகளைக் கொண்டு



பரிசோதித்துப் பதிப்பிக்கத் தொடங்கினர். அவ்வாறு அவர் பதிப்பித்த நூல்களுட் பெரும்பாலன சாமானிய சனங்கள் பயிலாதனவும் அதிகமாய் விலைப்படாதனவுமாகிய இலக்கணநூல்களாம். தமிழின்மீது ஆர்வம் மிகுந்த இற்றைஞான்றினும் அவைகள் பெரிதுங் கவனிக்கப் படுகின்றிலவாமாக அந்நாட்களில் அவை விலைப்பட்டில என்பதோர் ஆச்சரியமன்று. அன்னணம் அவர் பிரசுரித்த இலக்கண நூல்கள் தொல்காப்பிய நச்சினார்க்கினியம், தொல்காப்பியச் சேனாவரையம், வீரசோழியம், இறையனாரகப் பொருளுரை, இலக்கண விளக்கவுரை என்பனவாம். பின்னர்த் தமிழிலக்கியங்களுட் பெரிதும் திரிசொற்களான் யாக்கப்பட்ட தணிகைப்புராணமும் சிறுகாப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படும் சூளாமணியும் பிள்ளையவர்கள் முயற்சியான் வெளிப்போந்தன. இவைதம்முட் பல பகுதிகள் பிரதமகலாபரீட்சைக்கும், பி. ஏ., எம். ஏ., பரீட்சைகட்கும், அவ்வக் காலங்களிற் பாடங்களாய் ஏற்படுத்தப்பட்டன. இவர் பதிப்பித்த நூல்களெல்லாம் இவரது சங்கச்செய்யுட் பழக்கத்தினையும், நுணுகியுணருங் கூரியமதியினையும், ஆராய்ச்சிவன்மையினையும் பெரிதும் புலப்படுத்துகின்றன. அவ்வந் நூல்களின் பதிப்புரைக்கட் பல அரிய பெரிய விடயங்களைச் சிக்கறவாராய்ந்து தெள்ளிதிற் றெரித்துளர். இவர் தமது இறுதிக்காலத்தில் எட்டுத்தொகையு ளொன்றாகிய அகநானூற்றினைப் பரிசோதித்து வந்தனர். ஐயகோ! அகப்பாட்டு அகப்பாட்டாகவே நின்றது.

## புலவர் மதிப்பு.

இவ்வாறு மிகப் பெருமை வாய்ந்த நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தமை காரணமாக இவர்க்குப்புகழ் மிகுவதாயிற்று. தமிழ்ப் புலவர்களிடத்து மிக்க நன்குமதிக்கப் பாடுற்றனர். பற்பல நாட்டுத் தமிழ்ப் பண்டிதர்களும் இவரைச் சலஞ்சலத்தைச் சூழும் வலம்புரியெனச் சூழ்வாராயினர்.

## பரீட்சிக்குந் திறமை.

இத்தகைய புலவர் பெருமானது ஆற்றலும் நல்லொழுக்கமுங் கண்டு சென்னைச்சர்வகலாசாலையார் இவரைப் பரீட்சைக் கர்த்தராகப் பல்லாண்டுகளில் நியமித்தனர். இவர் அங்ஙனம் அத்தொழில் புரியுமிடத்துத் தமக்கியல்பாயுள்ள நேர்மையும் மாணவரிட

த்து இரக்கமுங் காட்டியேவந்தனர். சென்னைச் சர்வகலாசாலையில் தமிழ்ப் பரீட்சைக் கர்த்தர்களா யிருந்த கனவான்களெவரும் இவரது கல்விக்கு ஈடாவாரல்லர். இவர் பரீட்சை வினாக்களெல்லாம் மாணாக்கரது நுட்பமதியினைப் புலப்படுத்துவனவாம். மாணாக்கர் இயல்பறிந்தும் வகுப்பின் தரமறிந்தும் குறித்தகால வளவறிந்தும் வினாப்பத்திரிகை கொடுக்கும் பரீட்சாதிகாரியை யிழந்த தமிழ் மாணாக்கரின் துரதிர்ஷ்டத்தை யென்னென்பேம்! இத்துணை நலம்வாய்ந்த இவர் நம் சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுள் ஒருவராகவு மிருந்தனர்.

## நூலாசிரியத் தன்மை.

பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் போகத் தாமே புனைந்தியற்றியன கட்டளைக் கலித்துறை யென்னுமோர் இலக்கண நூலும், வசன சூளாமணி யென்னுமோர் உரைநடை நூலும், சைவமகத்துவ போதம் என்னு மொரு சைவசமய நூலும், ஆறும்வாசக புத்தகம், ஏழாம் வாசக புத்தகம் என்னும் கல்வி யறிவிற்றேரும் இளஞ்சிறார்க்கென வகுத்த வசன நூல்களும் பிறவுமாம். இவரது உரைநடை செந்தமிழ்த் திரிசொற்கள் மலிந்து சொல்லடுக்கும் பதசாலங்களும் இயைந்து கட்டுரைச் சுவைநயங் காட்டி இயல்வது. இவ்வியல்புபற்றியன்றே இவர்தம் வசன சூளாமணி பிரதமகலா பரீட்சைப் பாடமா யேற்பட்டதூஉ மென்க.

## ஒழுக்கம்.

இவரால் ஆதரிக்கப்பட்டோரும் இவர்க்கு நண்பராய் நண்ணினோரும் பலதிறத்தினர், தென்னாடெங்கும் இவரையறியாதார் எவருமில்லை. இவர் உண்மைதோன்ற வாதஞ்செய்வுழித் தமது நண்பர்களுக்காகச் சார்ந்து பேசியும் பிறருக்காக விலகிப் பேசியும் ஒழுகுறு மியல்புடைய சில போலிமாக்கள் போலாது எப்பொழுதும் நடுவு நிலைமை குன்றாதவாறு நடந்து வந்த நற்றமிழாளர். தவறுநர் நண்பரேயாயினும் நொதுமலரே யாயினும் அவரை நல்லறிவூட்டித் தெருட்டுவார் இவர். நம் பிள்ளையவர்களும் திவான் பஹதூர்-வி. கிருஷ்ணமாசாரியரவர்களும் நண்பர்களேயாயினும் மாறுபட்ட இடங்கள் பலவுள. இன்னும் இவர் தற்காலத்துப் பிறர்வன்மை கண்டு அழுக்காறடையும் புன்மக்கள்



போலாது பிறரது பேராற்றல் கண்டுழி யெல்லாம் அன்னாரை வியந்தும் ஆதரித்தும் பரிசிலளித்தும் போற்றியும் கொண்டாடியும் ஒழுகிவந்தவர். அந்தோ! இத்தகைய அன்புடை யண்ணலை இழந்த தமிழ்வாணர் பெரிதும் கறவையிற் பிரிந்த கன்றெனக் கையற்று அயர்வார்கள் என்பதொருதலை.

## பட்டப் பேறு.

நமது சென்னைத் துரைத்தனத்தார் எப்பொழுதும் யோக்கியதை கண்டுழி யெல்லாம் கவனித்துத் தக்கபட்டமளித்து வருபவராதலின் நமது தாமோதரம் பிள்ளை யவர்கட்கும் ராவ் பஹதூர் என்ற பட்டத்தினை 1895 - ஆம் வருடத்தில் அளித்தார்கள்; அஃதன்றியும் தமக்குத் தமிழ் மொழியின் கண் ஐயப்பாடு நேர்ந்துழி யெல்லாம் அவரிடங் கேட்டுந் தெளிந்தனர். இவ்வாறு இவர் துரைத்தனத்தார்க்கேயன்றிப் பிறர்க்கும் நிகழ்ந்த ஐயங்களையும் அறுத்தனர். எனவே, இவர் வாய்மொழி பலர்க்கும் மேற்கோளாயின.

## இறுதிக்காலம்.

இவரது தேக சௌக்கியம் 1888 - ஆம் வருஷம் நிகழ்ந்த புத்திர சோகங் காரணமாகச் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டு இறுதியிற் சென்ற ஆறுமாதமாக மார்பு நோய் கண்டு வைத்திய நூல் வல்ல பலருதவி செய்துஞ் செவ்வைப்படாது போயிற்று. ஆகவே நற்குணமும் நேரிய வாழ்க்கையு முடையவரும், செந்தமிழ்ப் புலவரும், பல தமிழ்நூற் பதிப்பாசிரியரும், சென்னைச் சர்வ கலாசாலைப் பல்லாட்டைப் பரீட்சைக் கர்த்தரும், தமிழ் வள்ளலாரும், சென்னைச் சர்வகலாசாலை யவயவிகளுளொருவரும், நமது ஞானபோதினிப் பத்திரிகைக்குப் பேராதரவா யிருந்தவரும், பாவலர் நண்பரும், எம்மீது ஆர்வமுடையாரும், எம்மைத் திராவிடசாஸ்திரி யென்றழைப்பாரும் ஆகிய நமது தாமோதரம் பிள்ளையவர்கள் இவ்வுலகினின்றும் நீங்கினார். இத்தகைய புலவர் கோமான் இறந்துபட்டார் என்பது தெரிந்த தமிழர் குழாம் இரங்குமாறு இற்றென எம்மாற் புனைதலியலாது. இவர் இறந்துபாடு தமிழுலகஞ்செய்த பாவமோ தேவர் தந்நயம்பற்றிச் செய்த கொடுமாயமோ? அறியேம்.

இனிக் காட்டகத்து மலர்ந்து மனிதர்க்கு இன்பம் பயவாது தாமேயழியும் மலர்கள்போலப் பல தமிழ்வித்துவான்கள் உலகில் வெளிப்போதராது காலஞ்சென்றனர்; அன்னோர் கதி மிகவு மிரங்கத்தக்கதே. இவ்வாறன்றி நமது தாமோதரம் பிள்ளை யவர்கள் பல நூல்கள் அச்சிட்டும் சில நூல்க ளியற்றியும் பலரோடளவளாவியு மிருந்து காலஞ் சென்றமையின் இவர் இறந்தும் இறவாதவரே யென்பது யாவரு முணர்ந்ததே.

காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போ
ஞமோது செந்தமிழி னன்னூல் பலதொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றவெவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச்செந் நாப்புலவீர்!

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி.

---

## * பாரத ஸாரம்.

---

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளு மப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனு மப்பயன் பொலிவுற நுகரு
ஞாதமு முலகம் படைத்தளித் தழித்து ஞானமா யகிலமு நிறைவுற்
றாதியு நடுவு முடிவுமாய் நின்ற வாதியா னடியிணை பணிவாம்.

### அத்தியாயம். III.

(பாண்டவர்களுக்கு வந்த ஆபத்துக்களும் அவற்றின் நிவாரணமும், அவர்தம் ஜயமும்)

184-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பாஞ்சால தேசத்திற் கரசனாகிய துருபதன் தனது புத்திரி திரௌபதைக் குரிய நாயகன் அர்ச்சுனன் தானெனத் தீர்மானம் செய்துகொண்டு, பஞ்சபாண்டவர்கள் தங்கள் நாட்டி லிலையே யென வேக்கங்கொண்டு ஒரு யுக்தி செய்து அவர்களைத் தன் தனையை ஸ்வயம்வரத்திற்கு வரவழைத்து அர்ச்சுனனுக்குத் தன் மகளை மாலையிடச் செய்யலா மென்று மனதைத் திடஞ்செய்து கொண்டான். ஸ்வயம்வர சமாசாரம் பரதகண்ட முழுதும் பரவச் செய்தான். துரோணர்தம் மாணாக்கர்களில் வில்வித்தையிற் சிறந்தவன் அர்ச்சுனன், என்பது துருபதனுக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயமல்லவா! அவனும் அதற்குத் தகுந்தபடி அர்ச்சுனனைத்தவிர வேறொருவரும் வளைக்க முடியாத

* Adapted from Mrs. Annie Besant's—"Mahabharata."



ஒரு பெரியவில் தயார் செய்து ஸ்வயம்வர மண்டபத்து நாட்டி ஆகாயத்தில் அதிக தூரத்தில் எப்போதும் சுழன்று கொண்டே யிருக்கும்படியானமச்சயந்திரம் ஒன்று கட்டி, அந்த வில்லை வளைத்து நாணேற்றி எவனொருவன் ஏக காலத்தில் ஐந்து பாணந்தொடுத்து அவையனைத்தினையும் மச்சயந்திரத்தின்மீது விட்டுஅதைக் கீழே அறுந்து விழும்படி செய்கிறானோ அவன்தான் தன் மகளுக்குரிய மணமகனாவானென்று முரசறைவித்தான். அவ்வாறு செய்வதற்கு அர்ச்சுனனொருவன் தான் உளனென்பது துருபதனுடைய துணிபு. ஸ்வயம்வரத்திற்குவந்திருந்த அரசர்களோ அநேகர். அவர்களது மனமுங் கண்ணும் துரோபதையினிடத்து மயங்கி நின்றன. வியாசருடைய தூண்டுதலினாற் பாண்டவர்களும் இச்சுவயம்வரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வேடிக்கை பார்க்கும் பொருட்டு வலதேவ ரென்னும் மறு பெயர் பூண்ட பலராமரும் அவர்தம் தம்பி கிருஷ்ண பகவானும் அவ்விடம் வந்திருந்தார்கள். கருணையங் கடலாகிய பகவான் தன்னருளுருவாகிய கண்கொண்டு அருச்சுனனையும் அவன்றன் சகோதரர்களையும் கண்டார். முதற்றரம் நரனென்னுந் தன் சிநேகிதனைப்பார்த்தது இவ்வுலகி லிப்போதுதான்.

ஸ்வயம்வரத்திற்குரிய முதற்சடங்குகளும் முடிந்தன. அரசர் குழாங்களிலிருந்த ஒவ்வொருவரும் வில்லை யெடுத்து வளைத்துப்பார்த்தார்கள். வளைக்கவே முடியவில்லை. தனக்குரிய நாயகனை நாடி நின்ற துரோபதையின் நயனங்களும் சோர்வுற்றன. கடைசியிற் கர்ணன் தன் பீடத்திருந்து ஒரு குதிகுதித் தெழுந்து வில்லிருக்கும் இடத்தைச் சேர்ந்து அதனை அதிகச் சுலபமாயெடுத்து நாணேற்றிப் பாணத்தையுந் தொடுத்தான்.

பாண்டவர்களும் தங்களெண்ணம் பயன்படா தென நினைத்தார்கள். இதற்குள் வில்லைக் கர்ணன் வளைத்ததைக்கண்ட கன்னிகை கணீரென்ற சத்தத்தோடு சூதனைத் (தேர்ப்பாகனை) தனக்கு நாயகனாகக் கொள்ளே னென்றாள். கர்ணனோ கோபத்துடன் வில்லை விரைவாய் எறிந்துவிட்டுத் தன்னிடஞ் சென்றான். பிறகு, பிராமணவேடம் பூண்டு பார்வைக்குப் பலாட்டியனா யில்லாமற் போனபோதிலும் ஆஜானுபாகுவாயிருந்த அர்ச்சுனன் தான் முன் சென்று வில்லை யெடுத்துச் சிரமமில்லாமலே நாணேற்றி ஐந்து பாணமும் தொடுத்து மச்சயந்திரம் அறுந்துவிழுமாறு விடுத்தனன். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பெய்தது. நாற்புறமும் வாத்திய கோஷமுழங்கியது.

'பூமழை சொரிந்தார் விண்ணோர் பொன்மழை பொழிந்த மேகம்
பாமமா கடல்க ளெல்லாம் பன்மணி தூவி யார்த்த
கோமுனிக் கணங்க ளெல்லாங் கூறின வாசி சொற்ற
நாமவேற் றிரௌப தைக்கு நல்வரன் கிடைத்தா னென்றே'

விலையுயர்ந்ததும் கண்ணுக்கு இரமணீயமானதுமான ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற துரோபதை மந்தகாசத்தோடும் ஒரு

கையில் தங்கப் பாத்திரத்தில் ஜலமும் மற்றொருகையில் மாலையுங்கொண்டு அர்ச்சுனனை யணுகித் தான் தனக்கு நாயகனாக வரித்ததற் கறிகுறியாக மன்மதன்போன்ற அழகுடையான் மீது மணமாலையை யிட்டு வணங்கி அவனருகில் நின்றனள். அவன் அவ்விடத்தைவிட்டுச் செல்ல ஆரம்பித்தவுடன் அவளும் உடன்சென்றனள். கூடியிருந்த அரசர் குழாத்துள் ஒரு முழக்கம் உண்டாயிற்று. அது யாது? 'க்ஷத்திரிய வம்சத் துதித்த பெண் க்ஷத்திரியனைத் தனக்கு நாயகனாக வரியாது ஒரு பிராமணனை நாயகனாகக் கோடலியலாது!' என்பது தான். அவர்களி லனேகர் ஒருங்குகூடி அர்ச்சுனனைப் பின்றொடரும் துரோபதையைப் பலாத்காரமாய் இழுத்துக் கொண்டுவந்து விட ஆரம்பித்தார்கள். அர்ச்சுனன் ஒருவில்லை யெடுத்தான். பீமன் ஒருமரத்தைப் பிடுங்கி நுனியையும் அடியையும் தரித்து அதனைத் தனக்கோர் ஆயுதமாகக் கொண்டான். இவர்களிருவருமாக அர்ச்சுனனுடன் போர் புரியவந்த அரசர்களனைவரையு மெதிர்த்து யுத்தஞ் செய்தார்கள். அங்கிருந்த சல்லியனும், கர்ணனும், துரியோதனனும் மற்றெல்லோரும் பிராமணரிருவர் இவ்வாறு க்ஷத்திரிய சிம்மங்களோடு நெடுநேரம் நின்று போர் புரிவதற்கு அதிக ஆச்சரிய மடைந்து வெட்கினார்கள். கடைசியாகக் கிருஷ்ணபகவான் தான் முன் வந்து சண்டையை விலக்கித் துரோபதை அர்ச்சுனன் பின் சென்றது நியாயமெனச் சொல்லவே சண்டையும் ஒழிந்தது. ஐவரும் தாங்கள் தங்கியிருந்த உறைவிடத்திற்குத் தமதன்னையை நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் வீட்டுவாயிலில் நுழையும்போது குந்திதேவியானவள் வீட்டிலே ஒருள்ளறையி லிருந்தாள். விளையாட்டிற்காக இவர்கள், "இன்றைக்ககப்பட்டபிக்ஷையைக் கொணர்ந்தோ" மென்றார்கள். அதன்பொருளைக் கவனியாது, "நீங்களெல்லோரும் சுகமா யனுபவியுங்கள்" என்றாள். வெளியில் வந்து பார்க்கத் துரோபதை யிருக்கக்கண்டு "என்ன அவசரம்! இப்படி யறியாது சொல்லி விட்டோம்!" என்று பதைபதைத்துக் கையை நெரித்துக்கொண்டாள். தருமரை நோக்கி "அப்பா! என்வாக்கும் பொய்த்துப் போகக்கூடாதே. துரோபதைக்கும் பாவம் வந்து சம்பவித்தல் தகாதே. இதற்கென்ன செய்யலாம்" என, அதற்குத் தருமர், 'அதற்கென்ன! அர்ச்சுனன் தன் விற்றிறத்தினால் அவளைக்கொண்டான். அவனே அவளை மணம் புரியட்டும்' என்னலும், தனக்கு முதியவர் இருவரிருக்கத் தான் முந்தி விவாகம் செய்து கொள்ளல் கூடாதென்றான் விஜயன். பிறகு, வியாசர் துரோபதையினுடைய மணத்தைக் குறித்துச் சொன்னது தருமருக்குத் தற்காலம் ஞாபகத்திற்கு வந்தது. விதிப்பயன்படி அவள் ஐந்து பேருக்கும் மனைவியாதல் வேண்டும் என்றார் தருமர். இதற்குள் ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் தமக்கு முதியோனாகிய தருமராஜன் பாதபங்கஜத்து வீழ்ந்து நமஸ்கரித்துத் தான் ஸ்ரீ கிருஷ்ணனென்பதை அவருக்குத்தெரிவித்



தார். அவரை இன்னாரென அறிந்தவுடன் அனைவரும் ஆனந்தங்கொண்டு களிக்கூத்தாடினார்கள். அதிககாலம் அவர்களுடனிருந்தால் ஐவருடைய ஊரும் பேரும் நிலைமையுந் தெரிந்துபோ மென்று தான் சீக்கிரம் செலவு பெற்றுக்கொண்டு சென்றார். அன்றிரவு போஜனமுடிந்ததும், ஐவரும் ஒருவர் பக்கத்தொருவர் படுத்துறங்கினார்கள். அவர்கள் தலைப்புறம் தாயும் பாதத்திற் பத்தினியும் படுத்துக் கொண்டார்கள். நித்திரை செய்வதற்கு முந்திப் பற்பல அஸ்திர சஸ்திரங்களைப் பற்றியும் யுத்தங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். திஷ்டத்துய்மன் தனது தங்கையை க்ஷத்திரியனுக்குக் கொடுப்பதற்கின்றி ஒரு பிராமணனுக்குக் கொடுக்க வேண்டிவந்ததே யென்று ஏக்கங்கொண்டு அவள் நிலைமையைக் குறித்துப் பரிதபித்து ஐவரிருந்த இடத்தைச் சேர்ந்து அவ்வீட்டுப் புறத்து ஒதுங்கி நின்று அவர்கள் பேசும் விஷயத்தைக் கவனித்து அவர்கள் க்ஷத்திரியராய்த்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்து உடனே தனது தந்தையினிடம் வந்து அவர்கள் வைசியருமல்லர், சூத்திரருமல்லர், அவர்கள் பூண்டது பிராமணவேடமேயொழிய உண்மையில் உயர்ந்த குலத்துதித்த க்ஷத்திரியர்கள் தாமென்று உறுதியாய் அதற்குரிய காரணங்களோடும் சொன்னான். மேலும் அவர்கள் பாண்டு புத்திரர்களாகத்தான் இருக்க வேண்டுமே யன்றி வேறெவருமல்லரென்றான்.

இதைக் கேள்வியுற்ற துருபதனுடைய புஜங்கள் பூரித்தன. ஆயினும் இதனுண்மை ஸ்திரமாய்த் தெரியும்பொருட்டு ஒரு புரோகிதனை அவர்களிடம் அனுப்புவித்தான். தருமர் அவனுக்குத் தாங்களின்னாரென்பதைத் தெரிவிக்காமல் துரோபதையைச் சுயம்வரத்தில் தாங்கள் சன்மார்க்கமாய்க் கொண்டதேயொழிய துன்மார்க்கத்திற் கொள்ளவில்லையென்றும் அரசன் இதனிமித்தம் வருத்தப்படலாகாதென்றும் சொல்லி அனுப்புவித்து விட்டார். அரசன் இவர்களுக்கொருவிருந்து செய்து இவர்களின்னவருணத்தாரென நிச்சயிக்கும் பொருட்டு, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வருணத்தாருள் ஒவ்வொரு வகுப்பினரும் விரும்பக் கூடிய பற்பல சிறப்புப்பொருள்களை அவர்கட்கெதிரில் வைத்தான். போஜனம் முடிந்ததும் இவர்கள் அதிக உற்சாகத்துடன் அவர்களெதிரிலிருந்த அநேக பொருள்களின்மேல் நாட்டத்தைச் செலுத்தாது அஸ்திர சஸ்திரம் இருந்தவிடம் சென்று அவற்றைத் தம் கைக்கொண்டார்கள். அதினின்றும் அரசன் இவர்கள் க்ஷத்திரியரென்றே தீர்மானித்தான். அவர்களை அணுகித் தாங்கள் இன்னாரெனத் தெரிந்து கொள்ள விருப்பமுடையவனாயிருக்கிறேனென்று சொல்லியபோது தருமர் தாமும் மற்றவரும் இன்னாரெனத் தெரிவித்து அரக்கு மாளிகையினின்றுந் தப்பித்துக்கொண்டு வந்த செய்தியினையும் அதற்குப்பிறகு நடந்த இடும்பாசுர பகாசுரவதங்களையும் இடையில் நடந்த மற்ற விஷயங்களையும் சொல்லி முடித்தார்.

பிறகு துரோபதையினுடைய கலியாண விஷயத்தைக்குறித்து ஒரு முடிவு செய்ய வேண்டி வந்தது. துருபதன் ஐந்து சகோதரர்களில் எவரையேனும் தன் மகள் மணம் புரியலாமென்றான். யுதிஷ்டிரர் (தருமர்) துரோபதை ஐவருக்கும் மனைவியாதல் வேண்டுமென்பது தம் தாயின் கட்டளையென்று சொன்னார். துருபதன் தருமரைநோக்கி "அப்பா, சுசீலனே! ஒருத்தி எப்படி ஐந்து நாயகனை அடைதல் கூடும்? சுருதி யுக்தி அநுபவமென்னு மூன்றுக்கும் முரண்பாடான விஷயமாயிற்றே இது? சாஸ்திர மெல்லாவற்றிலும் வல்லவனல்லனோ நீ!" என்று சொல்லலும், அவர் "பொய்யென்பதே இதுவரையில் என் நா அறியாது. பாவ காரியத்திற்கும் என்மன மெழாது. 'நானு மறியேன் அவளும் பொய் சொல்லாள்' என்பதற்கேற்ப எந்தாய் உத்திரவு செய்தாள். அஃது எனக்குப் பிழையெனத் தோன்றவில்லை" என்றார். இப்படிச் சொன்னது துருபதனுக்குத் திருப்திகரமானதாயில்லை. இந்த விஷயத்தைக்குறித்து இருவரும் விவாதம் செய்து கொண்டிருக்கையில் வேதவியாசர் வந்து சேர்ந்தார். துருபதன் இதைக் குறித்து அவரிடம் விண்ணப்பம் செய்து கொண்டான். வியாசர் துருபதனைக் கொஞ்ச தூரத்திற்கு அழைத்துக்கொண்டு போய்ப் பாண்டவர் ஐவருள் அர்ச்சுனன் தவிர மற்றவர்கள் முன்ஜன்மத்தில் இந்திரபட்டம் பெற்றிருந்தவர்களென்றும், அர்ச்சுனன் மாத்திரம் அக்காலத்து இந்திரனுடைய பிள்ளை யென்றும் தெரிவித்து அவர்களுடைய நிஜஸ்வரூபத்தையும் அவனுக்குக் காட்டினார். பிறகு துரோபதையினுடைய பூர்வ சரித்திரத்தையும், இவ்வாறு இப்போது வாய்க்க வேண்டிய காரணத்தையுஞ் சொல்லி முடித்தார். அதன் பிறகு துருபதனும் ஒருவாறு திருப்தி யடைந்தான்.

பாண்டவர்களுடைய செல்வமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. துவாரகையினின்று ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அளவிலாத்திரவியம் அனுப்புவித்துக்கொண்டே வந்தார். துரியோதனனும் அவனுடைய துன்மந்திரிகளும், பாண்டவர் அரக்கு மாளிகையினின்றுந் தப்பித்துக்கொண்டு ஓடிவிட்டார்களென்று இப்போது தெரிந்தவுடன் அவர்களைக் கொல்வதற்குரிய பல நூதன வழிகளையும் பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்கள். இடம் பொருளேவல் இம்மூன்றினும் விருத்தியடைவதற்குமுன் அவருடன் போர் புரிந்து அவரை ஜயித்தலே தகுதியானதென்றான் கர்ணன். பீஷ்மரோ இத்தகைய நடவடிக்கைக் குடன்படார். பாதி இராஜ்ஜியம் பாண்டவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தலே நீதி யென்பது அவருடைய கொள்கை அவர் துரியோதனனை நோக்கி "அப்பா துரியோதனா! நல்ல பெயரே ஒருவனுக்குரிய பலம். பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் மடியாதிருந்தது

* [§ 167-200. ஆதிபருவம், வியாச பாரதம்.]



நாம் செய்த பூஜாபலன். குந்திதேவி உயிரோடிருப்பது நம்முடைய அதிர்ஷ்டம். மனிதரிற் புலி போன்றவனே! குந்தி அரக்கு மாளிகையில் இறந்தாளென்னுஞ் செய்தி கேட்ட ஜனங்களெல்லாம் உன்னை நிந்தித்தார்களேயொழிய புரோசனனை அவ்வளவு நிந்திக்கவில்லை. பாண்டவர்கள் தீக்குத் தப்பி உயிருடன் வந்தது உனது அதிர்ஷ்டமேயாம். உனக்கு வந்த கெட்ட பெயரும் ஒருவாறு மாறிவிடும். குருவம்சத் துதித்தோனே! அவர்கள் உயிரோடிருக்கும் வரையில் அவர்களுக்குரிய பாகத்தை அபகரித்துக்கொள்ள இடிக்கரசாகிய இந்திரனாலும் முடியாது பாண்டவர்க்கு நற்குணமும் ஐக்கியமும் பொருந்தியிருக்கிறது. அவர்க்குரிய பாகத்தைக் கொடாதிருத்தல் நலமன்று. நன்னெறியில் நடக்க உனக்கு விருப்பமிருக்கும் பக்ஷத்திலும், எனக்கு விரோதமாய் நடக்க விரும்பாதிருக்கும் பக்ஷத்திலும், எல்லாருடைய நல்ல அபிப்பிராயமும் நீ விரும்பும் பக்ஷத்திலும் இவ்விராஜ்ஜியத்தில் பாதி பாகம் பாண்டவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும் என்றார் பீஷ்மர். துரோணரும் விதுரரும் அதேமாதிரியாய் எடுத்துச் சொன்னார்கள். கர்ணன் மாத்திரம் இவர்கள் சொன்னதற்கு விரோதமாய்ச் சொல்லிக்கொண்டே வந்தான். கடைசியாக திருதராஷ்டிரர் விதுரரையனுப்பி பாண்டவர்களை அஸ்தினபுரிக்குக் கொண்டு வரும்படி சொன்னார்.

பாண்டவர்கள் ஊரை வந்து சேர்ந்ததும் ஜனங்களடைந்த ஆனந்தத்திற்கோரளவில்லை. திருதராஷ்டிரன் அவர்கட்கொரு பாதிராஜ்ஜியம் கொடுத்து **காண்டவபிரஸ்த** மென்னு மிடத்தில் அவர்களை யிருக்கச்செய்தான். அவ்விடம் ஒரு பெரிய பாலைவனமாயிருந்தது. இவர்கள் அங்கு சென்றதும் வியாசருடைய உதவியால் அங்கோரிடம் அமைத்து அழகிய நகரொன்று உண்டாக்கிக் கொண்டார்கள். ஜனங்கள் அதனழகைக்கண்டு ஆனந்தங் கொண்டு இந்திரன் நகராகிய அமராவதியினும் சிறந்து விளங்கும் தன்மையினால் அதற்கு **இந்திரபிரஸ்தம்** என்னும் பெயரிட்டார்கள்.

அப்பட்டணத்திருக்கையில் ஒரு நாள் **நாரதமுனிவர்** அவ்விடத்திற்கு விஜயம் செய்தார். பாண்டவர்களுடன் கலந்து பேசிக்கொண்டிருந்தபோது, பொதுவில் ஒரு பத்னி இருப்பதனால் ஒரு வேளை அவர்களுடைய ஐக்கியத்திற்கு இடையூறு நேருமென்றெண்ணி அது விஷயத்தில் ஒருவித ஏற்பாடுசெய்து கொள்ளும்படிச் சொல்லிவிட்டுப் போய் விட்டார். துரோபதை ஐவரில் ஒருவரோடிருக்கும்போது மற்றவர்கள் பிரவேசிக்கக் கூடாதென்றும் அப்படி நேரிடின் பாவம் நீங்குப்பொருட்டுப் பன்னிரண்டு வருஷம் வனவாசஞ் செய்து விட்டு வரவேண்டுமென்றுந் தங்களுக்குள் ஒரு ஏற்பாடு செய்து கொண்டார்கள். அப்படி நடந்துவருநாளில் ஒரு நாள் ஒரு பிராமணனுடைய ஆடுமாடுகளை கள்ளர்கள் களவு செய்து கொண்டு போய்விட்டார்கள். அப்பிராமணன் பாண்டவர்களிடத்தில் வந்து முறையிட்டுக் கொ

ண்டான். அப்போது அர்ச்சுனன் அந்தணனுடைய பொருளை மீட்டுக் கொடுப்பதாக வாக்களித்தனன். அவனுக்கு வேண்டிய ஆயுதங்கள் தருமரும் திரௌபதையுமிருந்த அறையிலிருந்தன. என் செய்வான் அருச்சுனன்! பிராமணனைக் காவாவிடில் பழி மன்னவனைச் சேரும். துஷ்ட நிக்கிரகம் சிஷ்ட பரிபாலனம் செய்யாத அரசன் பாபத்திற் காளாவன். இருதலைக் கொள்ளியி னெறும்பு போன்றான் அர்ச்சுனன். அஸ்திர சஸ்திரத்திற்காக அறையில் நுழைந்தால் ஆரணியத்திற்குப் போகவேண்டிவரும். பிராமணனைக்காவாவிடில் பழிவந்து சேரும். ஆயினும்ஒருவாறு துணிவுசெய்துகொண்டான். "காட்டிற் போகவேண்டி வந்தால் தனது காயந்தான் கஷ்டப்படவேண்டிவரும். தர்மசிந்தையும் சற்கருமமும் தேகத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம். பஞ்சபூதங்களாலாய இவ்வுடம்பு அழியினும் புகழும் கீர்த்தியும் அதற்குப்பின்னும் நின்று நிலவும்." என்று சொல்லிக்கொண்டு தமயனும் திரௌபதையுமிருந்த பள்ளியறையுட் சென்று வேண்டிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வெளி வந்து திருடர்களைப் பின்தொடர்ந்து அவர்களை வென்று ஆடுமாடுகளைப் பிராமணனிடம் சேர்த்துப் பிறகு தருமரிடஞ்சென்று அவர் தமக்குள் ஏற்பட்ட ஏற்பாட்டின்படி பன்னிரண்டு வருஷம் வனவாசஞ்செய்து விட்டு வருவதாய்ச் சொன்னான். தருமரோ வருத்தமுற்று மனத்தளர்ச்சி யடைந்து அர்ச்சுனனை நோக்கித் "தம்பி! நீ என்னறையிற் புகுந்ததற்குக் காரணம் எனக்கு நன்றாய்த்தெரியும். அதனால் எனக்கொரு வருத்தமுமில்லை. வனத்திற்கேக வேண்டாம். நான் சொல்வதைக்கேள். எனக்கொரு தீங்கிழைத்ததாகவும் எண்ணாதே. உன்குணத்திற்கோர் குறைவு நேரிடவுமில்லை"? என்று சொல்லியும் கேளாதவனாய் "உண்மையினின்றும் சிறிதேனும் பிறழேன், அது தான் எனக்குத் துணை" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்று விட்டான்.

ஆரியர்க்கிருக்கும் அநேக நற்குணங்களுள் உண்மை வழியொழுகுதல் முதன்மையானது. இதனுண்மை பாரதத்தில் எவ்விடத்தும் விளங்கும். மெய்ம்மையை விரும்பலும் பொய்மையை அகறலும் ஆரியருள் எல்லாவருணத்தார்க்கும் எல்லா மரபினருக்கும் பொருந்தியுள்ள குணம். ஒருவன் பொய் சொல்லி யொழுகுவானாயின் அவன் தன் குலத்திற்கும் கோத்திரத்திற்குங் குறை உண்டு பண்ணினவனாவன்.

அர்ச்சுனன் அவ்வாறாக தீர்த்தயாத்திரை செய்யும்பொருட்டுப் போகையில் ஒரு நதியிலிறங்கி ஸ்நானஞ் செய்து பிறகு பூஜைசெய்து கொண்டிருக்கும்போது உலூப்பை என்னும் நாககன்னிகை யொருத்தி வெளி வந்து அவனை இழுத்துக்கொண்டு போய்விட்டாள். தியானம் முடிந்ததும் திரும்பிப் பார்த்தான். பிறகு அவளை இதற்கு யாது காரணம் என்று வினவ அவளும் அவன் பேரில் ஆசைகொண்டாளெனத் தெரிந்து அவருடைய விருப்



பத்திற் கிசைய நடந்து மறுநாட் காலை வரையில் அவளோடிருந்தான். பிறகு அதைவிட்டுப் புறப்பட்டு பலபுண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து கடைசியாக துவாரகைக்கு வந்து சேர்ந்தான். தன் சிநேகனைப் பார்க்கும்பொருட்டு மகா பரிசுத்தாத்துமாவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் அவனிடம் வந்து அவனை அழைத்துக்கொண்டு தமதில்லஞ் சேர்ந்தார். அவ்விடத்தில் அவன் ஸ்ரீகிருஷ்ண பகவான் தங்கையாகிய சுபத்திரையைப் பார்த்ததும் அவள்மீது அதிக மோகங்கொண்டான். ஸ்ரீ கிருஷ்ணபகவான் க்ஷத்திரியருடைய வழக்கப்படி தன் தங்கையைத் தூக்கிக்கொண்டு போய்விடலாமென்று அவனுக்குச் சொல்லி விட்டார். இது சங்கதி அருச்சுனன் யுதிஷ்டிரருக்குத் தெரிவித்து அவருடைய சம்மதமும் பெற்று சில நாளங்கே சமயம் பார்த்துக் கொண்டிருந்து, அது வாய்த்தபோது அவள் தனியாய் உலாவிக்கொண்டிருக்கும் தருணத்தில் அவளைத் தூக்கித் தன்னிரதத்தின் மீது வைத்துக்கொண்டு தன்னூர் நோக்கிப்புறப்பட்டு விட்டான். யாதவரும் விருஷ்ணிகளும் இந்தச் சங்கதி தெரிந்து அதிக கோபங்கொண்டு அர்ச்சுனனைப் பின் தொடர்ந்து போர்புரிவதற்குச் சன்னத்தரானார்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவான் இனியவசனங் களால் அவர்களுடைய கோபத்தை யாற்றினார். "அர்ச்சுனனைப் பின்பற்றி நல்லவார்த்தை சொல்லி அவனை யிங்கு கொண்டு வாருங்கள். அவன் அதிக சுத்தவீரன், நம்முடைய கைக்கு அவனைவிட சிரேஷ்டமான புருஷன் வேறெவனகப்படப்போகிறான்" என்று பகவான்சொல்லியவளவில் அவர்கள்போய் அர்ச்சுனனைப் பின்றொடர்ந்து தோத்திரஞ் செய்து திருப்பிக்கொண்டு வந்தார்கள். துவாரகையில் சில நாளிருந்தான் அர்ச்சுனன்; பன்னிரண்டு வருஷம் முடிந்ததும் அதை விட்டுப் புறப்பட்டு அதிக ஆடம்பரத்தோடும் பரிவாரங்களோடும், ஸ்திரீதனங்களோடும் தன்னகர்க்குச் சென்றான்; அவனுக்குச் சுபத்திரையினிடமாக அபிமன்யு பிறந்தனன்; இவனுடைய வாழ்நாளோ மிகவும் சுவல்பம். கீர்த்தியோ மிகவும் பெரிது: சோமன் என்னுந் தேவனுடைய புத்திரன் இவன். இவனுடைய பூர்வஜன்மத்துப் பெயர் வர்ச்சசன் என்பது. பூமியின் மீது பதினாறு வருஷகால மிருந்து குருக்ஷேத்திரத்திற் சண்டைசெய்து அவனுக்குக் குறித்திருந்த காலம் முடிந்ததும் சுவர்க்கம்வந்து சேரும்படி அவனுக்கு உத்திரவாயிருந்தது.*

காண்டவ வனத்தில் ஒருநாள் அர்ச்சுனனும் கண்ணபிரானும் விளையாடிக் கொண்டிருந்தபோது, அக்னிபகவான் பிராமண வேடம் பூண்டு அவர்களிடம் வந்து இந்திரனால் காக்கப்பட்ட அக்காண்டவ வனத்தைத் தகிக்க வேண்டி அவர்களுடைய உதவியை விரும்பினான். இதைக்குறித்தது அவன் முன்னமே பிரம்மாவுடன் யோசனை செய்ததாகவும் அவர்அதற்கு நர நாராய

* §201-223, 277. வியாசபாரதம், ஆதிபருவம்.

ணாயிருந்தவர்கள் அப்போது பூமியில் கிருஷ்ணார்ச்சுனர்களா யிருக்கிறார்களென்றும் அவர்களிடஞ் சென்றால் உதவி செய்வார்களென்றுஞ் சொல்லக் கேட்டுஅங்கு வந்ததாக அக்னிபகவான் சொன்னார். அர்ச்சுனன் அக்னிபகவானைநோக்கி "என்னிடத்தில் தகுந்த வில்லும் வேண்டிய அம்புகளுமில்லை. தகுந்த இரதமும் அதிற் பூட்டுவதற்கு வேகமா யோடத்தக்க குதிரைகளும் வேண்டியிருக்கின்றன. கேசவனுக்கும் ஒரு பெரிய ஆயுதம் வேண்டியிருக்கிறது" என்றும், அப்புவிற் கதிபதியாகிய வருணனைக்குறித்து அக்னிபகவான் தியானித்த வளவில் அவர்வரலும் அர்ச்சுனனுக்குக் காண்டீவ மென்னும் ஒரு பெரிய வில்லையும், அம்பு என்று மருத அம்பறாத்தூணியையுங் கொடுக்கும்படிக்கும், ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு பெருமைவாய்ந்த சக்கிரத்தைக் கொடுக்கும்படிக்கும் வேண்ட அவரும் அப்படியே கொடுத்துப்போனார். காண்டவ வனத்தில் அக்கினியும்பிரவேசமாய் விட்டது. அதைஅணைக்கும்படி இந்திரன் சப்தமேகங்களுக்குங் கட்டளையிட்டான். அதைத் தடுக்கும்பொருட்டு அர்ச்சுனன் வருணாஸ்திரம் விட்டான். அந்தவனம் பதினைந்து நாள் வரையில் எரிந்து கொண்டிருந்தது. அதினின்றும் உயிர் தப்பி ஓடியவர்கள் அறுவர். மாயனென்னும் அசுரனும் அதினின்று ஓடி வந்து தன்னைக் காப்பாற்றும்படிக்கு அர்ச்சுனனை வேண்டினான்.

இஃதிப்படி முடிந்ததும் இந்திரன் தனது சுதனாகிய அர்சுனனுடைய வல்லமைக்கும் தைரியத்திற்கும் வியந்து, அர்ச்சுனன், கேசவன் இவ்விருவருக்கெதிரில் தோன்றி வேண்டிய வரம்பெறலாமென் றியம்பினான். அர்ச்சுனன் தனக்கு தேவாஸ்திரங்களைத்தரும்படிக்கேட்டான். அதற்கவன் "தேவதேவோத்தமனாகிய மகாதேவன் எப்போது உன்னுடைய செயலைக் கண்டு மகிழ்கிறானோ அப்போது என்னுடைய ஆயுதமெல்லாம் உனக்குத் தந்துவிடுகிறேன்" என்றான்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் தனக்கும் அருச்சுனனுக்கு மிருக்கும் சினேகம் எப்போது மிடையறா திருத்தல் வேண்டு மென்னும் வரம் பெற்றார். *

மூன்ற மத்தியாய முற்றிற்று.

ஆதிபருவமும் முற்றுப்பெற்றது.

கல்குளம். குப்புசாமி முதலியார்.

* §224 - 246. வியாச பாரதம், ஆதிபருவம்,

## சிலப்பதிகார வாராய்ச்சி. *

(166-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு, கோவலனுக்கும் மாதவிக்கும் மனவேற்றுமை யுண்டாகி, யொருவரைவிட் டொருவர் பிரிதலைக் கூறுகின்றார். இதற்கு, ஊரார் பலர்சேர்ந்து கொண்டாடும் விழாவின் பொருட்டுக் கடலாடச்சென்றுள்ள தருணத்தை யெடுத்துக்கொண்டிருக்கிறார். இக்காதையில், இந்திரன் பொருட்டு முற்காலத்தவர்செய்துவந்த வொரு விழாவை வருணிக்கிறார். இவ்விழா அக்காலத்தில் நடந்துவந்த தென்பதை மணிமேகலையிலும் காணலாம். சிலப்பதிகாரக் காலத்திற்கு நெடுநாள் முன்பே இவ்விழாவனுசரிக்கப்பட்டு வந்திருக்கிறதென்றும் துணியலாம். பாரதத்திற் கோகுல ஆயர்கள் விழாச்செய்யக் கண்ட கண்ணன் அவ்விழாவைத் தான் பெற்றுக்கொண்டு, அதனால் நேர்ந்த ஆபத்தைக் கோவர்த்தனகிரியைக்கொண்டு தடுத்தாண்டது இந்திரன்பொருட்டுச் செய்த விழாவன்றோ? இந்தக் காதையில், நூலாசிரியர் †புகாரின் சிறப்பைச் செவ்வனே வருணித்துளர். சேரநாட் டிளவரசராகிய இவர் வேற்றரசன் தலை நகராகிய புகாரை இவ்வளவு சிறப்பித்தது அவர்தம் நடுவுநிலைமையைக் காட்டுகின்றது. இவருடைய நகரவருணனை யானது அதிவீரராமன் வருணனையைப் போல வயூக கற்பனைகள் நிறைந்து, உயர்வு நவிர்ச்சியணிக்கிலக்கிய மாகவில்லை. கம்பன் வருணனையைப்போன்ற நயமுமில்லை. ஆயினும், உள்ளவற்றை யுள்ளப்படி யுரைப்பதிலேயும், தருணத்திற் கியையச் சொற்களைப் பெய்வதிலேயும், அணிகளைப் பயன்படுமாறு ஆள்வதிலேயும், மிகச்சமர்த்தர் என்பதைக் காட்டுகிறது. இக்காதையில் (வரிகள் 204-240) பொது மகளிரையும் அவர் தம்மிருக்கையையும் வருணித்திருப்பது மிக மேன்மையா யிருக்கின்றது. அவிடத்தில், அவர் அணிசிறந்து விளங்குவதைக் காணலாம். ஆயின், கடலாடு காதையெனப் பெயர்கொடுத்த காதையிற் கடலாடுதலையே வருணிக்க வில்லை. மாதவியையும் கோவலனையும் கடற்கரையிற் காட்டினரே யன்றி ஊரார்கடலாடினதை வருணித்திலர். கடலின் தோற்றத்தையும் அதைக் கண்டவுடன் மனிதர்களுக் குண்டாகக்கூடிய மனோ பாவங்களையும் குறித்திலர். கடலின் நிலைமையைச் சமயத்திற்கேற்ப வுத்பிரேக்ஷித்தாருமில்லை. இது மெத்த வியக்கத்தக்கதே? நமது கவிகள் கடலைப்பற்றிப் பேசச் சமயம் வாய்த்ததாயின் அதை வருணியாமலும், உத்பிரேக்ஷியாமலும் விடார்கள். இராமன் முதலியோர் அணைகட்டக் கடலை நெருங்கிய பொழுது கடலைப் பலவிதத்தாலு முத்பிரேக்ஷித்துளர் கம்பநாட்டாழ்வார். சுபாகு, சுகேசர்களுடைய இன்னல் சகிக்கமாட்டாது பாற்கடலுடையானிடத்துத் தேவதைகள் முறையிடச் சென்றபொழுது வருணிக்கிறார் ஒட்டக்கூத்தர். தன் பத்தினியைத்

* 5-வது. இந்திர விழவூரெடுத்த காதை. 6-வது. கடலாடு காதை. 7-வது கானல் வரி. 8-வது. வேனிற்காதை. 9-வது கனாத்திற முரைத்த காதை.

† புகார்=காவிரிப்பூம் பட்டினம்.

தணர்ந்து கடற்கரை வழியே நளன் செல்லும்பொழுது வெகு நேர்த்தியாய் வருணித்துளர் புகழேந்தி. மற்றும் வடமொழி, ஆங்கிலக் கவிவாணரு மப்படியே. நம தாசிரியர்க்குமட்டும் அது தோன்றவில்லை. இதுவே நாம் கூறியபடி அவர் குறைக்கு மற்றோர் சான்றாகும். இதற்கீடாக, நமதாசிரியர் புகாரையும், அங்குள்ள ஆவண வீதியையும், பண்டக சாலைகளையும் விவரமாய் வருணித்திருக்கிறார். இத்தகைய பொருள்களை வருணிப்பதில் நமது இளங்கோவடிகள் ஒப்புயர் வற்றவர். இக்காதையில், அக்காலத்தவர்கள் பூண்டிருந்த ஆடையாபரணங்களையும், இக்காலத் திருப்பதுபோல வக்காலத்தும் கப்பல்களை நடத்துவதற்குத் தீபஸ்தம்ப மிருந்த தென்பதையும், இப்பொழுது பலகையிற்றீட்டியிருப்பதுபோல்,அப்பொழுதும், ஒவ்வொரு கடையிலு மின்னின்ன பண்டங்கள் விற்கப்படுமென்பதைக் காட்டப் பலநிறமுள்ள கொடிச் சீலைகளுயர்த்தப்பட் டிருந்தன வென்பதையும், கூறியிருக்கிறார்.

மாதவியையும் கோவலனையும் பிரிப்பதற்கோர் முகாந்திரங் கற்பித்திருக்கிறார். அதாவது, அவ்விருவர்களும், கடற்கரையி லுட்கார்ந்து யாழ் தாங்கி வரிப்பாட்டுப் பாடுகிறார்கள். அப்பொழுது, கோவலன் காவிரியைப்பற்றிப் புகழ்ந்து பாடுவதில், குறிப்பாற் றனக்குப் பிறமாதிடத்து அன்புள்ளதுபோற் காட்டினான்.இதையறிந்த மாதவி, ரஸிகையாதலால் அவனைக் கண்டிக்கவேண்டி வேடிக்கையாய்த் தான்பாடிய பாட்டிற் றனக்குப் பிறரிடத்துக் காதலுளதுபோற் காட்டினாள். கேட்டிருந்த கோவலன் கோபித்து யாழைச் சுழற்றிக் கீழே யெறிந்துவிட்டு, மாதவி யென்ன ஆறுதல் சொல்லியுங் கேளாது சென்றுவிட்டான். அவர் பிரியுங்காலங் கிட்டியதன்றோ? இவ்விடத்தில், நமது ஆசிரியர் ஒருலக வியற்கையைக் காட்டியிருக்கிறா ரென்று நமக்குத் தோன்றுகிறது. இதில், ஒரு புருஷனுக்கும், பெண்ணிற்குமுள்ள பேதத்தைக் காட்டுகிறார். புருஷர்கள் எப்பொழுதும் தங்கள் மனைவிகள் தம்மையே நேசிக்கவேண்டுமென்றும், பிற புருஷரை யெக்காரணத்தாலும் புகழக்கூடா தென்றும் விரும்புகிறார்கள். அவர்கள் எவ்வளவு உண்மையாயிருப்பினும், அவர்களைப் பொய்யர்களென்றும், உறுதியற்றவர்க ளென்றும், சபல சித்தர்களென்றும் சந்தேகித்துக் குற்றஞ் சாட்டுகிறது வழக்கம். இப்பூமான்களோ தாங்கள் பிற மாதர்களிடத்துக் காதல்கொண்டு சென்றால் மட்டும், பெண்கள் குற்றஞ் சாட்டக் கூடாதாம். தெரியாததுபோ லிருந்துவிட வேண்டுமாம். தெரிந்தும் பேசக்கூடாதாம். ஆனால், பெண்களோ, தமக்கு எப்பொழுதும் தம் கணவனன்பே வேண்டிய தென்றும், அது கிடையாவிடத்து வருந்தியும், கிடைத்தவிடத்துக் களித்தும் வருவார்களேயன்றித் தாம் தந்நிலைமையிற் றவறார். இதை நமதாசிரியர் கோவலன், கண்ணகி, மாதவி இவர்கள்பாற் காட்டியிருக்கின்றனர். மாதவி பாடியுள்ள வரிப்பாட்டுகள் அவளுடைய கானப் பயிற்சியையும், மனப் பயிற்சியையுங் காட்டுகின்றன. இக்காதை முழுமையும், அகப்பொருட்சுவை நிறைந்துள்ள பாடல்களாகவிருக்



கின்றது. இவ்விடத்தில், அற்பக் காரணத்தின்பொருட்டுக் கோவலன் மாதவியைவிட்டுப் பிரிந்திருப்பதாகக் காட்டியிருப்பதால், படிப்பவர்க்கு மாதவியிடத்துத் தாபமுண்டாகிறது. இஃதே, பொதுமகளி ரிடத்துச்செல்லும் பூமான்களின் தன்மை!

மாதவியிடத் துண்டாகும் தாபம் வேனிற்காதையி லதிகரிக்கிறது. இங்கு அவளனுப்பும் கடிதமானது அவளுடைய அறிவின் முதிர்ச்சியையும், வினயத்தையும், மனக்களங்க மின்மையையுங் காட்டுகிறது. இக்கடிதத்தைப்பெற்ற கோவலன் அதைப் பொய்யெனப் புறக்கணித்து விட்டான். இவ்விடத்தில், இளங்கோவடிகள் பொதுமக ளிருடைய சாகசச் செய்கைகளனைத்தையுங் கூறுகின்றார். கோவலன் கொடுமையைக்கேட்ட மாதவி படுந்துயரம் படிப்போர்மனதை யிளகச்செய்யும். இந்நிலையில் மாதவியை விட்டுவிட்டுக் கனலி சான்றாய்க்கைப்பிடித்த காரிகையாகிய கண்ணகியிடம் வந்துவிட்டான் கோவலன்.

இனிக் கனாத்திறமுரைத்த காதையில், கண்ணகி கண்ட கனவைக் கண்ணகி தேவந்தியினிடம் சொல்லுவதாகவும், சொல்லி முடிந்ததும் கனவிற்கேற்பக் கோவலனவளிடத்துச் சென்றதாகவுங் கூறியிருக்கிறார். இவ்விடத்தில் தேவந்தியின் வரலாறு தருகிறார். அதனால், அத்தேவந்தி கண்ணகிக்கு அன்னியளென்றும், அவள் கண்ணகியிடத்துத் தாபங்கொண்டது அவளுடைய பரிதபிக்கத் தகுந்த நிலையைக் கண்டென்றும் வெளியாகிறது. இத்தேவந்தி நூலாசிரியரின் சிருஷ்டி, தேவந்தியின் சரித்திரத்தால் தேவந்தியும் கண்ணகிபோலவே துக்க மனுபவித்தவளென்று தெரிகிறது. ஆதலின், அத்தகையாளைக் கண்ணகிக் காறுதல் சொல்லவிட்டது புகழற்பாலதே! பட்டவர்க்கன்றோ துன்பத்தின் கொடுமை தெரியும்? அவருக்கன்றோ ஆற்றுமாறும் நன்கு தெரியும்? அதனாலன்றோ,

"பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறாப் பேதை யறிவாளோ"

என்றார் தாயுமானவரும்?.

பிறகு, கோவலன் வந்ததும், வந்தவுடன் தன்னுடைய முந்திய செய்கைக்கிரங்கியதும், வாணிபம்நோக்கி மதுரைக்குச் செல்ல நினைத்ததும், கண்ணகியின் கனவு கேட்டார்க்குக் கவலையை யுண்டுபண்ணும். இதுவே, காப்பியமெழுதுவோரின் தந்திரம். கோவலன் சொல்லக்கேட்ட கண்ணகி தன்னுடைய சிலம்புகளி லொன்றைவிற்று முதலாகக்கொண்டு வாணிபஞ் செய்யலாமென்று சொன்னாள். இங்கு, கோவலன் கண்ணகியை மதுரைக்கு வாவென்றழைத்தது மிகவும் கிராமியமாயிருக்கின்றது. இந்தவிடத்தில் தன்னுடையநடத்தைக்கு வருந்தியதாகக் கோவலனைக்காட்டி, மதுரைக்குப் போவதாகக் குறிப்பாய்க்கூறச் செய்திருக்கலாம். கணவன் பிரியக்கேட்ட கண்ணகி

தானுங்கூடவருவதாகப் புறப்பட்டாளென்றால் மிகச் சிறப்பாக விருந்திருக்கும். இராமன் வனமேகுவதற்குத் தன்னிடத்து விடைபெறக்கண்ட சீதை கண்ணுங் கண்ணீருமாய், மரவுரிதாங்கிக் கணவன் கையைப் பிடித்துக்கொண்டாளென்று வால்மீகியும், கம்ப நாட்டாரும் கூறியுள்ளார். இஃதே கவித்திறம்! நமது ஆசிரியர்க் கித்திறமை குறைவென்றே சொல்லல்வேண்டும். இதன் பிறகு, கோவலனுங் கண்ணகியும் மறுநாட் காலையில் மதுரைக்குப் புறப்படுவதாகத் தீர்மானித்தார்கள். (இன்னும் வரும்)

பிரணதார்த்தி ஹரசிவன்.

# ஹிரண்மயி சரித்திரம்.

## ஒன்பதாம் அத்தியாயம்.

**ஹிரண்மயி** இராஜமஹிஷி! இதனைக்கேட்டு ஹிரண்மயி ஆச்சரியமெய்தினள். ஆயினும் சிறிதேனும் சந்தோஷப்பட்டாளில்லை. விசேஷமாய் விசனமே அடைந்தவளாய் நான் இத்தனை நாட்களாய்ப் புரந்தரனை அடைகிலேன் ஆயினும் அந்நியனது பத்னியாயிருக்கும் சங்கடத்தை அனுபவித்தேனில்லை. இதுமுதல் எனக்கு அந்த வியசனம் ஆரம்பித்திருக்கின்றது. அவ்வளவேயன்றி உண்மையில் மனதில் புரந்தரனது பத்னியாகிய யான் பரபுருஷனாகிய இவ்வரசனிடத்து அன்புவைத்து இம்மகாத்மாவின் இல்லத்தைப் பாவனமாக்குவ. தெங்ஙனம்? என்று யோசித்துக் கொண்டிருக்கையில் அரசன், "ஹிரண்மயி, நீயோ என் மஹிஷியாய் விட்டனை. ஆனால் நின்னைப்பரிக்கிரஹிப்பதற்கு முன்னரே உன் மூலமாய்ச் சில அம்சங்கள் தெரியவேண்டி யிருக்கின்றன. நீ கிரயதனம் கொடாமலே புரந்தரனது வீட்டில் எவ்வாறு வசிக்கின்றாய்?" என்று வினவினான்.

ஹிரண்மயி முகத்தைக் கீழே தொங்கவிட்டாள்.

அரசன் மீண்டும் அவளைநோக்கி, "உனது சேடியாகிய அமலை அடிக்கடி புரந்தரனுடைய வீட்டுக்குபோய் வருவதேன்?" என்று கடாவினான்.

ஹிரண்மயி மற்றும் அதிகமாய் வெட்கித் தொங்கிய தலையுடன், ராஜா மதனதேவன் எத்தனை ஸர்வஜ்ஞனாயிருக்கின்றான் என்று எண்ணினாள். அப்பொழுது அரசன், "இன்னுமொன்று விசேஷ சங்கதி யொன்றுளது. நீ பரநாரியாயிருந்தும், புரந்தரன் நல்கிய வஜ்ரஹாரத்தை வாங்கிக்கொண்டது எதற்கு?" என்று மற்றொரு கேள்விகேட்டான்.

இம்முறை ஹிரண்மயி பேசலுற்றாள்:—ஆர்யபுத்ர, நீங்கள் ஸர்வஜ்ஞராகமாட்டீரென்ற சங்கதி இப்பொழுது விளங்கியது, வஜ்ரஹாரத்தை யான் மறுபடியும் திருப்பிவிட்டேன்.



**அரசன்**:—நீ அவ்வஜ்ர ஹாரத்தை எனக்கு விற்றுவிட்டாய். இதோ அந்த ஹாரத்தைப் பார்.

இவ்வாறு கூறி பெட்டியினின்று ஹாரத்தை யெடுத்துக் காட்டினான்.

ஹிரண்மயி அவ்வஜ்ரஹாரத்தைக் கண்டு இரும்பூதுகொண்டு, "ஆர்யபுத்ர, நானே தங்களிடம்வந்து இவ்ஹாரத்தை விற்றேனா?" என்று கேட்டாள்.

**அரசன்**:—இல்லை: உன் சேடியோ, அல்லது, தூதியோ கொண்டுவந்து விற்றாள். அவளைக் கூப்பிடட்டுமா?

ஹிரண்மயியின் கோபத்துடன் விளங்கிய முக மண்டலம் இனிய நகையால் மலர்ந்து, அவள், "ஆரியபுத்திர, அபராதத்தை மன்னியுங்கள், அமலையைக் கூப்பிடவேண்டியதில்லை. இவ்விக்கிரயத்தை யானே ஒப்புக்கொள்ளுகின்றேன்." என்றாள்.

இந்தத்தடவை அரசனுக்கு ஆச்சரிய முண்டாய், "மாதர்கள் சரித்திரம் மதிக்க வொண்ணாதது. அந்நியனது பத்தினியாகிய நீ புரந்தரனது வார்த்தையை யேன் கைக்கொண்டாய்?" என்றான்.

**ஹிரண்மயி**:—காதல் நல்கிய கொடையென்று பெற்றுக்கொண்டேன்.

அரசன் மற்றும் ஆச்சரியமுற்று, "அஃதெவ்வாறு? எவ்விதமான காதற்கொடை?" என்று கேட்டான்.

**ஹிரண்மயி**:—நான் அஸதி* மகாராஜா! தாங்கள் கொள்வதற்குத் தக்கவளல்லேன். நான் பிரமாணம் செய்கின்றேன். எனக்கு உத்திரவளிக்கவேண்டும். என்னைக் கலியாணம் பண்ணிக்கொண்டதை மறந்து விடுங்கள்.

ஹிரண்மயி அரசனுக்கு நமஸ்காரம் செய்து, வெளியேபோகயத்தனிக்கையில், விம்மிதத்துடன் விளங்கிய அரசனது முகம் தற்செயலாய் மலர்ச்சியுடன் ஒளிர்ந்தது. அவன் உரக்கச் சிரித்தனன். ஹிரண்மயி பின்னுக்கு மீண்டனள்.

**அரசன்**-ஹிரண்மயீ, நீயே கெலித்தாய்; நான் தோற்றேன். நீ அஸதி அல்லை. யான் உன் நாதனும் அல்லேன், போகவேண்டாம்.

**ஹிரண்மயி**-மகாராஜா, அப்படியாயின், ஈதென்ன அவாந்தரம். எனக்குத் தெரியப்படுத்துங்கள். நான் அதிசாமான்னியமான பெண்பிள்ளை. என்னுடன் தங்களைப்போன்ற கம்பீர பிரகிருதியுள்ள ராஜாதி ராஜாக்களின் ரகசியம் அசம்பவம்.

அரசனுக்குச் சிரிப்பு நிற்காமல், "எம்போலியரான அரசர்களிடத்திலேதான் இத்தகைய ரகசியங்கள் சம்பவம். இற்றைக்கு ஆறாண்டுகளுக்குமுன்

* ஸதி=பதிவிரதை: அதற்கெதிர்மறை அஸதி.

உன் நகைப்பெட்டியில் ஒரு காகிதத்துண்டு அகப்பட்டதன்றே? அஃது எங்கே இருக்கின்றது?" என்றான்.

**ஹிரண்மயி** - மஹாராஜா, தாங்கள் ஸர்வஜ்ஞரே யென்பதற்கு எட்டுணையும் சந்தேகமின்று. கடுதாசித்துண்டை வீட்டில் வைத்திருக்கின்றேன்.

**அரசன்** - நீ பல்லக்கில் மறுபடியும் வீட்டுக்குச்சென்று அந்தப் பாதி பத்திரத்தைக் கொண்டுவா. நீ வந்தால் சகல விருத்தாந்தமும் கூறுவேன்.

---

## பத்தாம் அத்தியாயம்.

ஹிரண்மயி அரசனது உத்தரவு பெற்று தன் வீட்டுக்கேகி முன்சொன்ன பத்திரப்பாதியை எடுத்துக்கொண்டு மறுபடியும் அரசன் சந்நிதிக்கு வந்தாள். அரசன் அப்பத்திரப் பாதியைப்பார்த்து பெட்டியினின்று மற்றொரு பாதியையும் எடுத்து ஹிரண்மயியின் கையிற்கொடுத்து, இரண்டையும் சேர்க்கச் சொன்னான். ஹிரண்மயி சேர்க்க, இரண்டு துண்டுகளும் ஒன்று சேர்ந்தன. இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் படிக்கும்படி அரசன் சொன்னவண்ணம் ஹிரண்மயி படித்தனள். எவ்வாறெனின்:—

"ஜாதகத்தைக் குணித்துப் பார்க்கையில் நீங்கள் யோசித்தவாறு நடத்தத்தகுந்த தன்று. (ஹிரண்மயி) யவ்வளவு சுவர்ண விக்கிரகத்தை வெகுகால கஷ்டத்திலிருத்துவது சரியன்று. அவளுக்கு விவாகமானால் பயங்கரமான விபத்து உண்டாய், உயிருள்ள வளவும் கஷ்ட மனுபவிப்பாளென்று குணித்ததில் ஏற்பட்டது. ஐந்து ஸம்வத்ஸரங்கள் வரையிலும் தம்பதிகள் முகத்தைப் பரஸ்பரம் தரிசனம் செய்யாதிருக்கும் பட்சத்தில் இந்தக் கிரஹதோஷத்தினின்று நிவிருத்தி உண்டாகும். அந்த ஏற்பாட்டை நான் செய்கின்றேன்."

படித்து முடிந்தபிறகு, அரசன், 'இந்தக் கடிதம் ஆநந்த ஸ்வாமிகள் உன் தந்தைக் கெழுதியது' என்றான்.

**ஹிரண்மயி**-அஃது இப்பொழுது ஏற்பட்டது. எதற்காக எனக்கு விவாக காலத்திற் கண்களைக் கட்டியிருந்தார்கள்; ஏன் இரகசியமாய் அவ்வற்புதக் கல்யாணம் நடந்தது; அஞ்சு வருஷங்களாகிறவரையில் மோதிரங்களையணிந்து கொள்ளக்கூடாதென ஏன் நிஷேதிக்கப் பட்டிருந்தது என்னும் இவையெல்லாம் இப்பொழுது தெரிந்தன. மற்றொன்றும் தெரியாது.

**அரசன்**-காயிதம் வந்தவுடன் உனது பிதா உன்னைப்புரந்தரனுக்குக்கொடுத்துக்கல்யாணம் செய்யவேண்டுமென்று நிஷ்கரிஷைசெய்திருந்தது உனக்குத்தெரிந்தேயிருக்கின்றதன்றே? புரந்தரன் அந்தத் துக்கத்தினாற் சிங்களத்தீவிற்குப்போயினான். அதுவும் தெரிந்திருக்கலாம்.



பிறகு ஆநந்தஸ்வாமிகள் வரனைத் தேடும்பொருட்டு வரனது ஜாதகத்தைப் பார்க்கையில், வரனுக்கு 75 வருஷத்துக் கதிகமாவே ஆயுள் இருக்கிறதென்று தெரியவந்தது. ஆனால் அவனுக்கு இருபத்தெட்டாம் வயதில் பெரிய கண்டம் இருந்தது. அவ்வளவேயன்றி அவ்விருபத்தெட்டு வயதுக்குமுன், கல்யாணமான அஞ்சுவருஷங்களுக்குள் மனைவியின் படுக்கையில் படுத்தால் அவனுக்கு மரணம் உண்டாகுமென்றும், அது தீர்ந்துபோனால் நீண்ட ஆயுளுள்ளவனா யிருப்பானென்றும் தெரியவந்தது.

ஆகையினால் வரனுக்கு இருபத்து மூன்று வயதானபிறகு விவாகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதுகாறும் உனக்குக் கலியாணம் ஆகாமலிருந்தால், உன்மனது சஞ்சலிக்குமென்றும், மேலும் இரகசியமாய் வேறே விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென்றும், உனக்குப் பயம் இருக்கவேண்டுமென்றும், இந்தப் பத்திரப்பாதி உன் நகைகளுடன் வைக்கப்பட்டது.

அதுவுமன்றி, விவாகமான ஐந்து வருஷம் வரையிலும் பரஸ்பரம் பார்க்காமலிருப்பதற்குத் தகுந்த உபாயத்தை யேற்படுத்தியது உனக்கே தெரிந்திருக்கின்றது. ஆகையால் புருஷனுக்கும் மனைவிக்கும் பரஸ்பரம் பரிச்சயம் உண்டாகவில்லை.

ஆனால் இப்பொழுது ஐந்தாறு மாதங்களாய்ச் சிறிது 'தடபுடல்' ஆயிற்று. ஆநந்த ஸ்வாமிகள் இங்கேவந்தார். நீ வறுமையால் வருந்துவதைக் கேட்டுச் சாலவும் துக்கித்தார். அவர் உன்னைப் பார்க்கவந்தார். ஆனால் உன்னைப் பார்க்கவில்லை. அவர் வந்து என்னைப்பார்த்து உன் விவாக விர்த்தாந்தத்தை ஆமூலாக்கிரம் சொல்லி, "ஹிரண்மயி வறுமை நிலைமையில் இருந்தது எனக்குத் தெரிந்திருந்தால், அதற்கேதேனும் நல்லுபாயம் செய்திருப்பேன். தங்கள் இவ்விஷயத்தில் ஏதாவது உபகரித்தால் அதை மிகவும் பெரியதாய் மதிப்பேன், ஹிரண்மயியும் அவள் கணவனும் ஒருவருக்கொருவர் பாராமலிருக்கும் வண்ணம் செய்யவேண்டும்" என்று சொல்லியதன்றி உன்பர்த்தாவின் பரிசயத்தையுங்கூடச்சொன்னார். அதுமுதல், அமலை உன் வீட்டுக்காரியங்களைப் பார்க்கும்படி நானே ஏற்பாடு செய்தேன். உன் பிதாவின்வீட்டை நானே கிரயத்துக்குவாங்கி நீ வசிக்கும்பொருட்டு விட்டேன். வஜ்ஜிரஹாரத்தை நானே உன்னிடம் அனுப்பினேன். அவ்வாறு செய்தது உன்னைப் பரீக்ஷிக்கும் பொருட்டு.

**ஹிரண்மயி**-அப்படியாயின், தங்களுக்கு இம்மோதிரம் எங்கேகிடைத்தது. ஏன் தாங்களே என்பதி யென்றுகூறி மோசம் செய்தீர்கள்? புரந்தரனது வீட்டில் 'ரொக்கம்' கொடாமல் வசிப்பது சரியன்றென ஏன் ஆக்ஷேபனை செய்யப்பட்டது?

**அரசன்**-ஆனந்த ஸ்வாமிகள்வந்து எனக்கு இந்த விருத்தாந்தமெல்லாம் சொன்ன வுடனே உன்னைச்சுற்றிக் காவலிருப்பதற்கு ஜனங்களை யேற்படுத்தினேன். அந்தத்தினமே, அமலையின் வசம் ஹாரத்தை யுன்னிடம் அனுப்பினேன். இன்று ஐந்து வருஷங்கள் நிறைகின்றபடியால் உன் தலைவனை வரவழைத்து, அவருக்கு விவாக விருத்தாந்தம் முழுமையும் சொல்லி, இரவு பதினொருமணிக்குச் சரியாய் மோதிரத்தைக் கொண்டுவந்து வைத்திருந்தால் மனைவியுடன் சேரலாமென்று சொல்லியதற்கு, அவர் சம்சாரத்தில் சேர்ந்திருக்கத்தனக்கிஷ்டமில்லையென்றும், ஏகாங்கியா யிருப்பதாயும் சொன்னார். 'அதுசரியன்று. என் உத்திரவு, பிரகாரம் நடந்துக்கொள்ள வேண்டும்' என நான் சொல்லியதன்மேல் அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் அப்பெண் நல்லொழுக்க முள்ளவளோ, தீய வொழுக்கமுள்ளவளோ என்பதை நன்றாய் விசாரிக்கவேண்டும். கெட்டவொழுக்க முள்ளவளெனத் தெரிந்து என்னுடன் அவளைச் சேர்த்தால் தங்களுக்குப் பாப ஸ்பரிசம் உண்டாம் என்று சொன்னார் அதற்கு நான், 'மோதிரத்தைக் கொடுத்து விட்டுப்போம். அவள் ஒழுக்கத்தைப் பரீக்ஷித்துச் சொல்கின்றேன்' என்றேன். அவர் மோதிரத்தை ஒருவர் கையிலும் நம்பிக்கொடுப்பவ ரல்லர். ஆனால் என்னைநம்பிக் கொடுப்பதாய்ச் சொல்லி அதனைக் கொடுத்தார். நான் மோதிரத்தை வைத்துக்கொண்டு சோதித்ததில் நீ கெலித்தாய்.

**ஹிரண்மயி**-தாங்கள் எந்தப் பரிக்ஷையை எப்படி நடத்தினீர்களோ? நான் எப்படி ஜயித்தேனோ? எனக்கு விளங்கவில்லை.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையில் மங்கள சூசகமாய் வாத்தியங்கள் முழங்க வாரம்பித்தன.

**அரசன்**-'இரவு பதினொரு மணியாயிற்று; பரீக்ஷை விசாரத்தைப் பிறகு சொல்லுகின்றேன். இப்பொழுது உன்பதி வந்திருக்கின்றார். சுபலக்னத்தில் பரஸ்பரம் சுபதிருஷ்டி உண்டாகட்டும்' என்றான்.

அப்பொழுது பின் பக்கத்திலிருந்த கதவு திறக்கப்பட்டது. நீண்ட வுருவமைந்த புருஷனொருவன் அவ்வாயிலின் வழியாய் அவ்வீட்டினுள்வந்து நின்றான்.

**அரசன்** - ஹிரண்மயி, இவரே உன்நாயகன்.

ஹிரண்மயி பார்த்தாள். அவளுக்கொன்றும் தோன்றவில்லை. ஜாக்கிரா வஸ்தைக்கும் சொப்பனாவஸ்தைக்கும் உள்ள வேற்றுமை அறியாது மயங்கினாள். பார்க்கவே புரந்தரன்!

இருவரும் ஒருவரை யொருவர்பார்த்துத் தூண்போல் அசைவற்று அறிவழிந்து நின்றனர். பரஸ்பரம் தங்களைத் தாங்களே நம்பாதிருந்தனர்.

அரசன் புரந்தரனைநோக்கி, 'நண்பனே, ஹிரண்மயி உனக்குத் தகுந்த மனைவியாகையால் வீட்டுக்கழைத்துக் கொண்டுபோ. இவள் இப்பொழுதும்



முன்போலவே உன்னிடத்தில் அன்புள்ளவளாகிறாள். நான் இவளை அல்லும் பகலும் காவல்வைத்தும் பார்த்திருக்கின்றமையால் இவள் வேறொருவனிடத்திலும் காதலுள்ளவ ளல்லளென்றும் தெரிந்துகொண்டேன். உன் இஷ்டப்பிரகாரம் அவளைப் பலவிதத்திலும் சோதித்துப்பார்த்தேன். நானே அவளுடைய நாயகனென்று சொன்னேன். ஆனால் அவள் ராஜ்ய ஆசையினாற்கூட உன்னை மறக்கவில்லை. அவள் உன்னிடத்திலேயே ஆழ்ந்த காதலுடையளா யிருக்கின்றாள். சந்தேகங் கொண்டவன்போற் சில வார்த்தைகளைச் சொன்னேன். அவற்றிற் கவள் துக்கமுற்று, 'நான் நிர்த்தோஷி, என்னைக் கிரஹிக்கவேண்டு'மென்று சொல்லியிருந்தால் உன்னை யவள் முற்றும் மறந்தாள் எனக் கூறுவேன்; ஆனால் ஹிரண்மயி அவ்வாறு உரையாது, 'மகாராஜா, நான் அஸதி, என்னைத் தள்ளிவிடுங்கள்' என் றுரைத்தாளெனச் சொல்லி, பிறகு ஹிரண்மயியைப்பார்த்து, 'ஹிரண்மயி, உன்னுடைய மனோபாவங்களை யெல்லாம் நன்றாய் அறிந்து கொண்டேன். நீ 'அந்நியபதியின் சேர்க்கை செய்யக்கூடாதென்றும் நான் அஸதி யென்றும்' சொன்னாய். நீங்களிருவரும் சுகமாயிருக்க வேண்டுமென்று நான் ஆசீர்வாதம் செய்கின்றேனென்றான்.

**ஹிரண்மயி**-மகாராஜா, எனக்கு இன்னொரு சங்கதி சொல்லவேண்டும். இவர் சிங்களத் தீவில் இருந்தார். காசியில் எனக்கு மிவருக்கும் திருமணம் ஆனதெவ்வாறு? அவர் சிங்களத்தினின்று காசிக்கு வந்திருந்தபட்சத்தில் எங்களுக்கேன் தெரியாமற் போயிற்று?

**அரசன்** - ஆநந்த ஸ்வாமிகளும் புரந்தரனுடைய பிதாவும் ஒன்றாய் ஆலோசித்துக் கொண்டு ஜனங்களை யனுப்ப, அவர்கள் இவரைச் சிங்களத்தினின்று காசிக்கு அழைத்துக்கொண்டு வந்திருந்தார்கள். விவாகமானவுடனே மறுபடியும் சிங்களத்திற்குப் புறப்பட்டுப் போனார். பிறகு இந்த நகரத்துக்கு வரவில்லை. ஆகையால் உங்களொருவருக்கும் தெரியவில்லை.

**புரந்தரன்** - மகாராஜா தாங்கள் எப்படி எங்களுடைய வெகுகால மனோரதத்தை ஈடேற்றினீர்களோ அப்படியே ஜகதீசுவரனும் தங்களுடைய மனோரதங்களையும் பூர்ணம் செய்வாராக. இன்று நாங்கள் எங்ஙனம் சுகமடைந்தோமோ, அத்தகைய சுகசாலிகள் தங்கள் இராஜ்யத்தில் இதற்கு முன் எப்பொழுதும் இருந்ததில்லை.

முற்றிற்று.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

# ஆசார விளக்கம்.

## இலக்கண வதிகாரம்.

### சூத்திரம். 5

ஒல்லும் நடை. *

பொதுவில் உடலுயிர் உறுதியடைந்து வாழ்தற் கத்தியாவசியகமாயும், மற்றையர் துன்பத்துக் கேதுவல்லாததும், தனக்கின்பந் தருவதும், ஒள்ளியதும்; தெள்ளிய நூல் யுக்தி யநுபவங்களாற் சிறந்த தென்று தீர்மானிக்கப்பட்டதாயும், விரும்பத்தக்கதாயும் இருக்கினும், மண்வெட்டல் சுமத்தல் இரும்படித்தல் மரம் வெட்டல் முதலிய கடின வேலை செய்கின்ற கூலியாட்களுக்கு மிகுந்த சத்துள்ள கம்பு, கேப்பை, அன்னம் ரொட்டிகளும் கோதுமை முறட்டு ரொட்டிகளும் மந்த மாமிசங்களும் ஜீரணித்துப் பலந்தருந் தன்மையுள்ளனவாம். கடின வேலையின்றி நிழலிற் சுகவாசியாயிருப்பவர்க்கு அவை அஜீரணம் பொருமல் வயிற்றுப்போக்கு முதலிய துன்பங்களைத்தரும். மிருது சரீரிகளாகிய சுகவாசிகளுக்குச் சீரணித்துப் பலந்தருஞ் சிறு அரிசிச்சாதம் இரசம் குழம்பு முதலியன. கடின வேலை செய்யும் கூலியாட்களுக்கு வயிறுநிறைய நிரப்பினும் அவர்கட்குரிய வேலைகளைச்செய்யப் போதுமான பலந்தருந்தன்மைத்தனவாகா. ஒரு தன்மைத்தாம் தொழில் புரிவாருள்ளும் சிலர்க்கேற்கு மாகாரத்தினளவு வேறு சிலர்க் கேற்காது. சுகவாசிகளுக்குச் சீரணமாய்ப் பலந்தருமிலேசாகாரமும் மெலிந்த அல்லது ரோகசரீரிகளுக்குச் சீரணமாய்ப் பலந்தராது. சிலர்க்கு நெய்யதிக அளவுஞ் சுகம் பலந்தருகின்றது. சிலர்க்குக் குறைந்த அளவு அசீரணம் வயிற்றுப்போக்குகளை யுண்டு பண்ணுகின்றது. தயிர் சிலர்க்கு கூதிர்ப்பருவம் கார்ப்பருவங்களில் வாதரோகத்தை யுண்டுபண்ணுகின்றது. சிலர்க்குச் சுகந்தருகின்றது. பகலிற் புசிக்கச் சீரணிக்கும் பலத்தவாகாரஞ் சிலர்க்கு இரவிற் சீரணிப்ப தின்று. சிலர்க்கு இரவிற் சீரணிப்பது பகலிற் சீரணிப்பதின்று. விடியற்காலக் குளிர்ந்த ஜலஸ்நாநம் பலர்க்குத் தேகசுகந் தருகின்றது. சிலர்க்கதுவே சுகவீனத்தை விளைவிக்கின்றது. சிலர்க்குக் கடின வேலையும் சிலர்க்குச் சுலபவேலையும் சிலர்க்கு மனோமுயற்சியும் சிலர்க்குத் தேகமனோ முயற்சிகளிரண்டும் ஏற்கின்றன. சிலர்க்கு முயற்சி யொன்று மேற்பதின்று. மிகுந்த காற்றுச் சிலர்க்குச் சுகமும் பலர்க்குச் சுகஹீனமுந் தருகின்றது. உஷ்ணதேசத்தி லாரோக்கியந் தரும் ஊண் நடை உடைகள். குளிர்ந்த தேசத்தில் தீங்கு விளைக்கின்றன. குளிர்ந்ததேயத் தாரோக்கியம் தரும் ஊண், நடை, உடைகள் உஷ்ணதேயத்திற் றீங்கு விளைக்கின்றன. இங்ஙனமுள்ள மாறுபாடுகளநந்தம்.

ஒருவர் சரீரத்துக்குப் பொருந்திய சுசி ஊண் முதலியன மற்றையர்க் கங்ஙனம் வேறுபாடுறலநுபவத்துக் கண் கூடாகக்காண்டலின், அவ்வவர் தேயம் நிலைமை தேகம் பலம் தொழில் பழக்கங்கங்களுக்கும் காலத்துக்குந் தக்கபடி பொருந்து மாசாரத்தையேயநுஷ்டிக்கத்தக்கது என்பதை வற்புறுத்தி யுணர்த்தும் பொருட்டு ஒல்லும் என்ற விசேடமும் அவசியமாயதோர்க. இத்தகைய வேறு பாடுகளை ஆங்காங்குத் தெளிவுற விளக்குதும்.

* "What is one man's meat may be another man's poison; and those only are wise who, in seeking to conform to what they believe to be the general laws of health concern themselves with the principles, rather than the practice, laid down for their guidauce." (How to Make the Best of Life. by J. Motimer Granville. M. D.)



### காட்டு.

தைத்திரீயோபநிஷத், சிக்ஷாவல்லி 6-வது அநுவாகம்.

𑌯𑌾𑌨𑍍𑌯𑌨𑌵𑌦𑍍𑌯𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌸𑍇𑌵𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑍋 𑌇𑌤𑌰𑌾𑌣𑌿 । 𑌯𑌾𑌨𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌸𑍁𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌵𑌯𑍋𑌪𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑌿 𑌨𑍋 𑌇𑌤𑌰𑌾𑌣𑌿 ॥

(இ-ள்) எந்தக் காரியங்கள் நிந்திக்கப்படத் தக்கவைகளல்லவோ அந்தக் காரியங்கள் அநுஷ்டிக்கப்படத் தக்கவைகள். வேறு காரியங்களன்று.

எங்களுடைய நல்லொழுக்கங்கள் உங்களா லநுட்டிக்கப்படத்தக்கவை, மற்றவை யநுட்டிக்கப்படத் தக்கவை யன்று.

மநுதரும சாத்திரம் அத். 2. சு. 6.

𑌵𑍇𑌦𑍋𑌽𑌖𑌿𑌲𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍀𑌲𑍇 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌮𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍇𑌵 𑌚 ॥

(இ-ள்) இருக்கு முதலிய நான்கு வேதங்களும், இந்த வேத மறிந்த இருடிகளின் ஸ்மிருதியும், அவர்களின் அநுஷ்டானமும், சாதுக்களின் ஒழுக்கமும், தன் தன் மனதின் சந்தோஷமும், தருமத்துக்குக் காரணமாக விருக்கின்றன.

இவ்வெண்வகை யிலக்கணத்துள் ளாசாரங்களடங்குமாறு.

(1) உடலுறுதியெய்தி யுய்தற்கின்றி யமையா வொழுக்கம் எனவே நாண்முறைத்தூய்மை, உடற்றூய்மை, உடைத்தூய்மை, பயிலிடத்தூய்மை, நல்லாகாரம், நல்வாயுச் சுவாசித்தல், தொழிற்றூய்மை, சுசியினர் புணர்ப்பு தேகமுயற்சி முதலியனவும்.

(2) உயிர் உறுதி யெய்தியுய்தற் கின்றியமையா வொழுக்கம் எனவே உடலுறுதி யெய்தியு ய்தற்குரைத்த வொழுக்கங்கள், கள்ளுண்ணாமை கவலாமை கோபமின்மை அழுக்காறாமை முதலியனவும்.

(3) இடுக்கண் காணா வொழுக்கம். (அந்நியர்க்கு) எனவே கள்ளாமை இன்சொல் கொல்லாமை இன்னாமை அன்புடைமை அருளுடைமை கண்ணோட்டம் முதலியனவும்.

(4) இன்பிணை யொழுக்கம் (தனக்கு) எனவே, அகமின்மை பொறையுடைமை கவலாமை அவாவின்மை அறிவுடைமை திருப்தி முதலியனவும்.

(5) எண்ணுனூ கமநுப்வந்த மாவமையு மெனத்தேர் ஒழுக்கம் எனவே சுசி நெறி புறங்கூறாமை ஒழுக்க முடைமை நன்றியறிதல் நல்லோர் நட்பு சிற்றினஞ்சேராமை முதலியனவும்.

(6) விரும்பத்தக்க ஒழுக்கம் எனவே நல்லாகார முதலியன ஒண்மைக் கல்வி முதலியனவும்.

(7) ஒள்ளிய வொழுக்கம் எனவே நடுவுநிலை புண்ணிய விருப்பம் தீவினையச்சம் முதலியனவும்.

(8) ஒல்லும் ஒழுக்கம் எனவே மிதாகாரம் மிதபோகம் மிதமுயற்சி மிதவொண்மை முதலியனவும் கொள்ளக்கிடந்தமை காண்க.

இனி எண் வகையிலக்கணங்களு மோராசாரத்துக் குளதாதலெங்ஙனமெனில் உதாரணமாக) (1) வைகறைக்குளிப்பு சோர்வு உஷ்ணங்களைப் போக்கி உடலுக்குப் பலமுஞ் சுறுசுறுப்புந்தரும், (2) மனதுக்குப் பலத்தையும் தெளிவையுந்தரும், (3) அந்நியர் துன்பத்துக் கேதுவன்று, (4) தனக்காரோக்கிய வின்பந்தரும், (5) நூலால் ஊகத்தால் அநுபவத்தால் ஆரோக்கியந் தரத்தக்கதென்று தீர்மானிக்கப்பட்டது, (6) விரும்பத்தக்க நற்றோற்றத்தையும் அழகையுந்தரும், (7) அறிஞராலனு சரிக்கப்படு மேன்மையது, (8) அநுசரிப்போர் சரீர நிலைமைக்கேற்றவாறு புரியிலித்துணை நன்மைகளைப் பயக்கும் என்க.

இங்ஙனம் ஆசாரங்களனைத்துக்கு மிவ்விலக்கணங்களைப் பொருத்திக் காண்க.

விருதை - சிவஞானயோகி.

---

## இராமாநுஜாசாரியர் சரிதம்.

இங்கு இவரிவ்வாறிருக்க அங்கு யாதவப்பிரகாசரும் அவர்தம் மாணுக்கரும் குழாங்கூடி நிற்கையில் கோவிந்தப்பட்டர் இளையாழ்வாரின்றித் தாம் தனியே செல்ல அவர்கள் அக்கோவிந்த பட்டரை நோக்கி 'வந்தீரோ, இளையாழ்வா ரெங்கே ? என்றுவினவக் கோவிந்த பட்டர் அவரைக் கண்டிலேன்' என்றனர். அப்பால் யாதவப் பிரகாசர் தம் மருகிலுள்ளாரைத் தேடுமாறு கட்டளையிட அவர்களுமங்ஙனமே தேடியுங் காணாமையால் 'ஆ! ஐயோ!! அவருக்கு எத்தகைய தீங்கு நேர்ந்ததோ ? என்று யாவரும் மனக்கலக்க முடையராய்ப் பின்பு தாம் கருதி வந்த கங்கா யாத்திரையை நிறைவேற்றக் கருதி விரைவொடு சென்று கங்கைக்கரை யடைந்தனர். அங்ஙனம் போன அவர்களனைவரும் கங்கையில் நீராடா நிற்க, ஒரு நாள் கோவிந்தபட்டரும் * அகமர்ஷண ஸ்நானம் பண்ணும்போது, ஒருலிங்கம் தமதருகே, வந்து சேர இஃதென்! என்று வியப்புற்று யாதவப் பிரகாசருக்குக் காட்ட, அவரும் மிக்க அன்புடையராய் அக்கோவிந்தபட்டரை நோக்கி 'நீவிர்தெய்வபக்தி பெரிது முடையரோதலின் கங்காஸ்நானபயன் கைபுகுந்தாற் போலக் கங்காதரனே நுங்கைப் புகுந்தான்' என்று இவர் மாட்டுப் பெரும் பக்தி செய்து நிற்க, மற்றுயாவரும் 'லிங்கங்கைச் சேர்ந்த காரணத்தாலிவர்க்கு 'உள்ளங்கை கொணர்ந்த நயினார்' எனப் பெயரிட்டழைக்கத் தொடங்கினார்கள். யாதப் பிரகாசரும் கங்கா ஸ்நானம் பண்ணிமீண்டு ஜகந்நாதம், அகோபிலம் என்ற ஸ்தலம் வழியாக வர உள்ளங்கை கொணர்ந்த நயினாரும், 'இந்த லிங்கத்தைத் தக்கதொரு இடத்திற் பிரதிஷ்டை செய்து வருகின்றேன்' என்று கூற அவ் யாதவப் பிரகாசரும் 'அவ்வாறே செய்யும்' என்று இவரை வழி நடுவே யனுப்பி விட்டுப் பெருமாள் கோயிலை நோக்கிப் போந்தார்.

பின்பு, உள்ளங்கை கொணர்ந்த நயனாரும் தம்பிறப்பிடமான மழலைமங்கலஞ் சென்று ஆங்குள்ள புலவர்திலகர் யாவரையு மொருங்கு திரட்டித் தன் கையகத்தேயுள்ள இலிங்கத்தைப் பிரதிட்டைசெய்து அதனிடத்தே பத்திகொண்டு வாழுமளவில், காளத்தி நாதன் இவரது நிலைமையைப் பெரிதுமுவந்து 'நீர் நம்பக்கல் வந்திருப்பீராக' என்றிவர்க்குச் சொப்பனமளித்து அங்ஙனமே, தன்னருகிலுள்ளார்க்கும் 'நீங்கள் உள்ளங்கை நயினாரையழைத்து வாருங்கள்' எனக்கட்டளையிட அவ்வாறே அவர்கள் யாவரும் மழலைமங்கலஞ்சென்று 'உள்ளங்கை நயினார்' என்னுங் கோவிந்த பட்டரைப் பல்வகையாய்ச் சிறப்பித்து அழைத்துப்போய், அந்நிலைக்குரிய இலச்சினை யீந்து இவரைத் தமக்கு முக்கியராக்க, இவரும் அப்படியே யமர்ந்திருந்தார்.

பின், யாதவப்பிரகாசரும் பெருமாள் கோயிலை யடைந்து இளையாழ்வாரைக்கண்டு ஆச்சரியங்கொண்டு அவரை நோக்கி, நீர் சிறுநீர் கழித்துவரச் சென்றபின்னர்க் காணப்பெறாமையால் மனத்தளர்ச்சி யுற்று வருந்தாநின்றோம்.' இவ்வளவும் உம்மைக்கண்டதே ! என்ன, இவரும் தாம் வழிதப்பியலைந்ததையும், அப்பாலொரு வில்லிகாரணமாப் போந்ததையும் விவரமாய்க் கூறக்கேட்டு இவரது பெருமைக்கு வியந்து அவர்பால் உள்ளங்கலந்து மிக்க அன்புடையராய்க் கோட்டிக்கண் கூட்டிக்கொண்டு வேதாந்தம் படிப்பிக்கத் தொடங்கினார்.

இவ்வளவில் இரண்டு வைணவர்கள் பேரருளான் கோயிற்கணின்றும் நம்பெருமானைச் சேவிக்க வெழுந்தருளி அப்பெருமானைத் திருவடி தொழுது, ஆங்கெழுந்தருளியிருந்த 'யமுனைத் துறைவர்' என்ற ஸ்ரீ ஆளவந்தாரையும் வழிபட்டு நிற்க, அவரும் 'இவ்வைணவர்களை நோக்கிப்பெருமாள் கோயில்

---

* அகமர்ஷண ஸ்நானமாவது—பாபத்தைப் போக்கவல்லதொரு இருக்கையுச்சரித்துக்கொண்டு செய்யும் ஸ்நானம் என்பர்,

விசேடங் கேட்டருள்கையில் வைணவர்கள் கீழ்நிகழ்ந்த விருத்தாந்த மனைத்தையும் கூறினார்கள். அதுகேட்ட யமுனைத்துறைவரும், இந்தளத்திற்றாமரை பூத்தாற்போல இவ்விபூதியின்கண் இப்படியு மொரு பரமபுருடரிருக்கப் பெற்றதே! எனக் களிகூர்ந்து அவ்விளையாழ்வாரைக் காணவிரும்பித் தம்முடைய மாணாக்கருடன் புறப்பட்டுப் பெரியபெருமாளிடம் விடைபெற்றுப் போந்து திருக்கோவலூர் வழியே வருகையில் அவண் வீற்றிருந்த ஆழ்வார்கள் நயினாரையுந் திருவடிதொழுது அப்பால், நகர்களுள் தலைமையாகவைத் தெண்ணப்படும் காஞ்சிமா நகரத்தெழுந்தருள, ஆங்குள்ள வைணவர்களும் வரந்தரும் பெருமாளரையரும், ஸ்ரீ சடகோபரும், அதிக கோலாகலத்துடன் எதிர்கொள்ள வரவே, ஸ்ரீ ஆளவந்தார் ஆனந்தப்பெருக்கிலமிழ்ந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அவர் கொணர்ந்த தீர்த்தப் பிரஸாதங்களை யங்கீகரித்து நின்றார். அப்பொழுது திருக்கச்சி நம்பிகளும் பேருவகையோடு அவர் தம் திருவடிகளில் அடைவுகெடவீழ்ந்து வணங்க, யமுனைத்துறைவரும் அவரை முடிபிடித்தெடுத்து, 'கஜேந்திரதாஸரே! பேரருளாளர்க்குத் திருவாலவட்டக் கைங்கரியம் நடந்து வருகின்றதா'? என்ன, அவரும் வாய்புதைத்துத் தேவரீரது கிருபா விசேடத்தாற் பேரருளாளர் கொண்டருள்கின்றார் என்றனர். பின்பு, ஆளவந்தார் திருக்கச்சி நம்பியையுங் கூட்டிக்கொண்டு * "உலகேத்து மாழியானத்தியூரான்" என்ற பேரருளாளரைச் சேவிப்பான் புக்கு, முதற்கண் பேரருளாளர் பெருந்தேவியாரை நமஸ்கரித்து மீண்டு பிரதக்ஷிணமாய் வருகையில் ஆங்கொரு புற்றினருகே † திருவனந் தாழ்வானையுஞ் சேவித்து அதனருகே கரியமாணிக்கத் தாழ்வாரையும் வணங்கி யெழுந்தருளுங்கால், யாதவப்பிரகாசரும் அவர்தம் மாணாக்கர் குழாமுமாகப் பெருமாளைச் சேவித்து வலங்கொண்டு வாராநிற்க, அது கண்ட ஸ்ரீயாளவந்தாரும் தம்பக்கலுள்ள நம்பியைநோக்கி 'இக்குழாத்துள் இளையாழ்வார் யார்'? என்னவே அவரும், 'சிவந்து நெடிய வடிவுடையராய் ஆஜானுபாகுவாய் நடுவே வருகின்றவர்' என்று விண்ணப்பஞ்செய்தனர். ஆளவந்தாரும் அவரைக் களிப்புடன் தமது திருக்கண் மலர்களால் நோக்கி 'ஆ! முதல்வனிவனே' என்று அவரைச் செவ்வனே கடைக்கணித் தருளிப்பின், பெருமாளை நோக்கி 'நீர் ‡ "தாம் வேண்டுங்காமமே காட்டுங் கடிது" என்றவாறு அவரவர் விருப்பத்தை யளித்திடு மருளாழியரோதலின் அடியேனுக்கு இவ்விளையாழ்வாராகிய மகான் நம்சமயப் பிரவர்த்தகராமாறு அருளவேண்டும்; || "அடைக்கலம் புகுந்த வென்னை யஞ்சலென்னவேண்டும்" என விண்ணப்பஞ்செய்து பிறகு அத்திகிரியின்மீதெழுந்தருளிய மலைநாதபிரானடி பணிந்து, திருக்கச்சி நம்பியைப் பேரரு

* இயற்பா—இரண்டாம் திருவந்தாதி. † திருவனந்தாழ்வான்—(திருமாற்குப் பாயலாகும்) ஆதிசேஷன். ‡ இயற்பா—இரண்டாம் திருவந்தாதி. || திருச்சந்த விருத்தம்.



ளாளரது கோயிற்கண்ணே நிறுத்தி, ஆளவந்தார் அத்தருணத்தில் இளையாழ்வார்க்கொருநல்ல வார்த்தை சொல்லப்போந்த வமயங்காணப் பெறாமையாலே மீண்டு, தாமும் தம்முதலிகளுமாகத் திருவரங்கம்பெரிய கோயிற்கணெழுந்தருளினார்.

இதன்பின், யாதவப்பிரகாசரும் தம்மாணாக்கர்களுடன் வேதாந்த மாராய்ந்து கொண்டிருக்குங்கால் அந்நாட்டரயன் மகளையொரு பிரமராக்கதன்பற்ற அரசன் இங்கு மந்திரம் வல்லாரெவரேனுமுண்டோ? என்றாராய்ந்து நிற்கையில் யாதவப்பிரகாசரே சிறந்த மந்திரவாதியா மெனக் கேள்வியுற்று அவர் பாற்றூதனுப்ப அத்தூதுவன் வந்து அரசனதாணை கூறக் கேட்டு, தூதுவனை நோக்கி, 'நீவிர் அப்பிரமராக்கதனுக்கு, யாம், போமாறு கட்டளையிட்டோம் எனச்சொன்மின்' என, அவ்வாறே சொன்னார்கள். அது கேட்ட ராக்கதன் 'யாம் அவனை யங்கினின்று மகன்றுபோகச் சொன்னதாகச்சொன்மின்' என்றிறுமாப்புடனுரைக்கக் கண்ட தூதுவர்கள் அதனை யாதவப் பிரகாசருக் கறிவிக்க அவரும் கடுஞ்சீற்றங்கொண்டு தாமும் தம் திரளுமாகச்சென்று அரசனவைக்கண் ஒருமாமந்திரத்தைத் தனது நாவிடையே வழுத்திக்கொண்டு இராக்கதனருகே நின்று முட்டிபிடிக்க அதுவும் தன்காலை நீட்டி 'வாடா! யாதவப்பிரகாசா! நீ ஜபிக்குமந்திரத்தை யானன் கறிவல்' என, வதனைச்சொல்லி, யானிம்மந்திரத்திற்கும் நினக்கும் அகல்வேனோ? நீ நினது பிறப்புமறியாய்; எனது பிறவியு மறியாய் என்னை யாதவப்பிரகாசர் அற்றேல், நீ முற்றுங்கற்ற பிரானேயாவாய், எனது பிறப்பென்? அங்ஙனே நின் பிறப்புமென்? அறைதி' என்னவே அதுவும் அவனை நோக்கி நீ மதுராந்தகத்து ஏரி கரையின்கணொருபுற்றி லுடும்பாயிருந்தனை! ஒரு கால் கோயிற் பெருங்கூட்டம் வடதிருவேங்கடஞ் செல்லா நிற்புழி ஆங்கு வைணவர்கள் நீராடி யமுது செய்தவிடத்துச் சிந்திய வடிசிலை யுண்டவளவில் இப்புலமைவாய்ந்த மானுடப்பிறவியெய்தினாய். யானோ பார்ப்பனச்சாதியிற் பிறந்து வேள்வியியற்றினேன், அதில் மந்திரவோமம் முதலிய நேர்ந்தமையாலெனக்கிப்பிறவி வாய்த்தது என்றது. ஆயின் நீயார் மந்திரத்தைக்கண்டஞ்சுவை என உன்பக்கல் வேதாந்தம் பயின்று வருபவர்களுள் நித்திய சூரிகட்குத் தலைவராயிருப்பார் காணொருவர், என்ன யாதவப் பிரகாசரும் அவரை இன்னாரெனச் சுட்டுக்காட்டுதி என்றனர். உடனே பிரமராக்கதன் இளையாழ்வாரைக் காட்டி 'இவர் யான்,போமாறு கட்டளையிடுவாராயின் அக்கணமே போவேன்' என, அவரைநோக்கி, இளையாழ்வாரே! நீர் இதனைப்போகச்சொல்லு மென்றவளவில் அவரும் அவ்வாறே சொல்லியருளினார். அதுவும் "நும் திருவடித்தாமரைகளை என் தலைக்கணியாய்ச் சூட்டினா லன்றிப்பேகோன்" என்றவத் தருணத் திளையாழ்வாரும் அதன் வேண்டுகோட் கிணங்கினார்.

(இன்னும் வரும்)

தி. கோ. ஸ்ரீரங்காசாரியன்.

# வாழ்க்கைப் பயன்.

## III. பணவிஷயம்.

(சம்புடம் III. 466-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

'கடவுள் ஒரு தீர்க்க தரிசியை யாட்டு மந்தைகளிலிருந்தன்றி வேறெவ்விடத்தினின்றும் எடுக்கமாட்டார்' என்று மஹம்மது கூறியபடி கூறுவிடினும் எத்தனைப்பெரியோர் வறியோராயிருந் திருக்கின்றனர் என்பது உண்மையாகவே ஆச்சரியகரமானது. பணம் நமக்குச் செய்யக்கூடியதை யுயர்வுநவிற்சி யாகக் கூறுவதொரு சாதாரணமான பிழை. அஃதுணவு விஷயத்திலேயோ?

செல்வனொருவன் சௌக்கியவானாக வேண்டில் அவன் ஏழைபோல் வாழற்பாலன். காலையுண்டிக்குத் தேயிலைக் கஷாயத்தோடாதல் காப்பிக் கஷாயத்தோடாதல் ரொட்டியையும் வெண்ணெயையும் வேண்டுமாகிற் சிறிது தேனையாதல் சேர்த்துக்கொண்டு உண்பதனினுஞ் சிறந்ததென்னுளது? இரண்டாம் வேளைக்குரொட்டியும் பாற்கட்டியுந்தவிரச் சிறந்தன வேறென்ன இருக்கின்றன. நன்றாகச் சமைக்கப்பட்ட சாதாரண வுண்டியும் நமக்குப்பசியும் இருந்தால் ஒரு பட்டணத்ததிகாரியின் வீட்டு விருந்தைப்போ லின்பந்தரும். அவற்றின் காலத்தில் உண்ணற்கு வேண்டிய நல்ல பதார்த்தங்கள் ஒத்துநோக்குமிடத்துச் சிறுவிலையனவாம்; அவற்றின் காலமில்லாவிடிற் சுவையற்றுள்ள இழிபொருளும் விலையுயர்வால் ஒரு விருந்தைப்போலும் நன்றாயிருக்கின்றது.

அது நூல் விஷயத்திலா? மெய்யாகவே தான் படிக்கக்கூடிய நூல்களை விலைக்குப்பெற முடியாதவன் வறியோனே. சமயநூல், நாடகம், காப்பியம் முதலாய மிகவும் நல்ல நூல்கள் இப்பொழுதைப் பழமொழியின்படி ஒருபாட்டுப்பாடி வாங்கப்படலாம். பணத்திற்குச் சௌக்கிய மாதல் புத்தியாதல் நேசமாதல் அழகாதல் இன்பகரமான வீடாதல் வாங்கலாமா?

'டியூக் ஆப்ட்ஸ்' என்பவர் மிக்கபணக்காரர். அவரைஎவரும் நேசஞ்செய்யவில்லை. பீகீ என்பவர் பசியாற் செத்தார். அவரை நினைத்து ஜனங்கள் இப்பொழுது விசனப்படுகின்றார்கள்' என்று கன்பியூஷியஸ் கூறுகின்றார்.

"எவற்றினும் மேலாய் இரும்பொருளின்பம்
பயக்குமோ? சுற்றிலும் பாராய்! என்ன
இனியதன் பங்கள் எழிலார் துக்கம்!
உவற்றின் காட்சி கண்டொன்றும் விரும்பிலேன்'
உவற்றின் துன்பு கண்டொன்றும் விரும்பிலேன்"

"அதிகசெல்வவான்கள் தமக்கே அந்நியர். தொழிலின் மலைவிருக்கையில் தம்மன சரீர சௌக்கியங்களைக் கவனிக்க நேர முடையாரல்லர்" என்று பேகனார் கூறுகின்றார்.



பொன் விலங்கா யிருந்தாலு மது தீயதே. உண்மையாகவே பணம் மிக்க மனக்கவற்சியினூற்றாகின்றது. அதற்குங் கவலைகளுள. வறுமைக்குங் கவலைகளுள. பணவிஷயத்திற் செல்வவான்கள் பணத்தின் எசமானரல்லர். அதன் அடிமைகளே. பிஷப் வில்ஸன் கூறியபடி பணம் பெரும்பாலும் அதனையுடையார்க்குக் கவலையாகின்றதேயன்றி வதைக்குங் கருவியாகவுமுளது. மெய்யாகவே பலர் பணத்தாலழிவுற்றுளர் பொதுப்படவைத்து நோக்குமிடத்துச் செல்வர் ஏழைகளினும் பணவிஷயங்களைப்பற்றி யதிகமாய்க் கவலைப்படுகின்றார்கள். ஞானவான்களைத் தவிர மற்றெவர்க்கும் பணம் இன்பந்தராது. செல்வமுடையோனதற்கு அதிக ஆசைப்படுவோன் என்றும் ஏழையாயிருப்பான்.

"வாரிக்கோட்டையில் இருந்து ஒன்றையும் பார்த்து இறும்பூதடையாதிருத்தலினும் ஒரு சிறு வீட்டிலிருந்து வாரிக்கோட்டையைப் பார்த்து இறும்பூதெய்துதலே நன்று" என ரஸ்கின் துரை கூறுகின்றார்.

பணத்தினின்பத்தை நுகரவேண்டுமாகில் அதன்கண் மனம் வையாதீர்! போதிய வளவிருந்தா லஃதும்மைக் காப்பாற்றும். அதிகமாக இருந்தால் அதனை நீர் காப்பாற்றவேண்டும்.

ஒட்டை யுறுகிலேன் உறுசுமை நீங்கினேன்
குடிகட் கரசலேன் கோன்சொ லஞ்சிலேன்
கருதேன் வழிநாள் கழிந்ததற் கிரங்கேன்.
போரொன்று மின்றி யானின்று சாந்தமாய்
இயங்கா நின்றேன் இனிமை யாகவே.

விரும்புதற்குச் சிலவும் அஞ்சுதற்குப் பலவும் உடைய மனத்தின் நிலைமை விசனகர மானதே.

செல்வனே யானால் வறியனும் நீதான்
மிக்கசுமையினால் மேற்புறம் வளைந்த
கழுதை போலக் கடுஞ்சுமைச் செல்வப்
பொறையைச் சுமந்து போவாய் நீயும்
சாவே நின்றன் றனிச்சுமை களையும்.
பின்னாள் வேண்டிப் பெரும்பொருள் சேர்க்க
மிகக்கவலை கொண்டு வீணாய்ப் பெறற்கரும்
நந்தம் வாணாள் நாம்போக் குதலெனே?
நோய்காண் போழ்திலும் நுகர்போ கத்திலும்
களிசெய வல்லவோ கழறுமின் னிவைகாண்.
ஒருமூச் சதிகமாய் உதவிட வாதில்

சாம்பொழு துறுதுயர் தணிப்ப வாதல்
வல்லன வாங்கொலோ வாய்திறந் துரைமின்.
பணம் காசழுத்தத்திற் கிழுக்கின்றது.
நிலத்தையும் பொன்னையும் நினைக்கின் றேனலேன்
ஊங்குமீங்கும் ஓர் ஒற்றியெற் கிமினோ
எய்ப்பினில் வைப்புச் சாலையி லாயினும்
பிறர்கைம் முறியி லாயினும் அன்றி
அயரதச் சாலையி லாயினும் எனக்குத்
தனித்தொரு பங்கு கிடைப்பினும் போதும்
என்செல விற்குமேற் சிறிதள வாயினும்
அதிர்ஷ்ட மளிக்குமா றவாவு கின்றனென்''

என்று ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் வேடிக்கையாய்க் கூறுகின்றார்.

''ஏழை பலவற்றை விரும்புகின்றான்; ஆனாற்பொருளாசை பிடித்தோன் எல்லாவற்றையும் விரும்புகின்றான்'' என்று செனிகா கூறுகின்றார்.

இரண்டு காசுக்கும் எண்ணெய்க்கும் இல்லாவிடிற் கைம்மாறு கருதாக் கருணையாளர்கள் இன்னும் அதிகமா யிருப்பார் என்று பரிகாசமாய்க் கூறப்பட்டுளது. 'இடைவிடாது பணந்தேடல், இன்னும் மேன்மையான காரியங்களுடையோரது காலத்தில் அதிக பாகத்தைக் கழியுமாறு செய்கின்றது' என்று பேகனார் கூறினர். ஏனெனிற் செல்வம் வாழ்க்கையை யதிகரிப்பதனான் மட்டும் நல்லதே யன்றி வாழ்க்கைச்செல்வத்தையதிகரிப்பதனால் நன்மையில்லை. வறுமை வித்தியார்த்தியின் மனைவியாகக் கூறப்பட்டுளது. நம்பொருள்பற்றியமொழிகளே பொருளுள்ளன. நாமடிக்கடி ஒருவன் பணம் செய்வதாகவும் பணத்தாற் செய்யப்பட்டதாகவும் பணத்திற் சுற்றுவதாகவும் கேட்கின்றேமே யன்றிப் பணவின்பத்தை நுகருவதாகக் கேட்கின்றிலேம். மெய்யாகவே பணம் சம்பாதிப்போர் தமக்காகச் சம்பாதிக்கின்றாரல்லர். ''அவன் பணத்தைக் குவிக்கின்றானே யன்றி யாரதை யெடுத்துக் கொள்ளுவா ரென்று சொல்ல முடியாது.''

செனபனது விருந்திற் சார்மிடீஸ் என்பவன் செல்வத்தினும் வறுமை சிறந்ததெனச் சொன்னான். ''ஏனெனிற் சௌக்கியமா யிருக்கின்றோமென் றுணர்தல் பயத்திலிருப்பதனினும் நல்லதென்றும் தன் றேயத்தாரால் அவநம்பிக்கைகொள்ளப் படுவதனினும் நம்பிக்கைகொள்ளப்படுவது நல்லதென்றும் நாமனைவரும் ஒத்துக்கொள்ளுகின்றோம். ஆனால் இந்நகரில் யான் செல்வனாயிருக்கையில் முதலில் எவனேனுமொருவன் என் இல்லத்துள் வலியொடுபுக்கு என்பணத்தைக் கவர்ந்தும் எனக்கும் சரீரக்கேடுசெய்வானோவென்றி யான் பயந்தேன்......இப்பொழுதி யான் கண்வளர்வான் படுத்துக்கொள்ளலாம், என்னைக் கோயிலிற் பூசை செய்யக் கூப்பிடுகின்றிலர்.



துரைத்தனத்தார் ஐயப்படுமளவு செல்வனல்லேன். நகரத்தை யென்னிஷ்டப்படி விட்டேகுதற்கும் அதன்கண்ணே யிருத்தற்கும் சுவாதீனமா யிருக்கின்றேன். யான் செல்வவானா யிருந்துழி ஜனங்கள் சாக்ரடீஸ் முதலாய இழிந்த தத்துவ சாஸ்திரிகளுடன் சேர்வதற்காக வைவது வழக்கம். இப்பொழு தென்நேசரை யான் தேர்ந்துகொள்ளலாம். ஏனெனில் யான் ஏழையாயினதனால் எவரும் என்னிடம் கவனம்வையார். யான் அதிக பணமுடையோனாயிருந்துழி எப்பொழுதுந் துன்பகரமா யிருந்தேன். நான் எப்பொழுதும் ஏதேனுமொன்றை யிழந்துகொண்டிருந்தேனாதலின் இப்பொழுது நான் வறியோனாயினதனால் ஒன்றும் இழக்கின்றிலேன்; ஏனெனிலிழத்தற் கென்னிடம் ஒன்றும் இலது. ஆயினும் யான் எப்பொழுதும் ஏதேனு மொன்றை யடைவேனென்று ஆற்றித் தேற்றுகின்றேன்.''

சார்மிடீஸ் கூறியதில் மிக்க உண்மையுளது. ஆனாலது முழு உண்மையுமன்று. மேலுஞ் சார்மிடீஸ் அதைக்கூறிய பொழுது இசையினால் உற்சாகப்படுத்தப்பட்ட ஒரு நல்ல விருந்து சாப்பிட்டு மயக்குண்டிருந்தான்.

புத்தியுடன் பயன்படுத்தினாற் பணம் அதிகமாகச் செய்யக்கூடும். ஒரு சாதுரியப் பேச்சுள்ள பிரெஞ்சுக்காரன் பணம் இராஜாதிராஜன் என்று சொன்னான். பணம் நாம் விரும்புவதை யடையும் வழிகாட்டுகின்றது. புதியகாற்று, நல்லவீடு, நூல்கள், இசை முதலானவை நுகரப்படக்கூடுமாகிற் பணம் அவையிற்றை வாங்கும். சாவகாசம் நற்பயன் விளைக்குமேற் பணம் நாமதை மேற்கொள்ளுமாறு செய்கின்றது. உலகம் சந்தோஷகரமானதென்று பார்த்தால் நம்பிரயாணங்கட் கது காசுகொடுக்கும். 'நந்நேசர்க்கு உதவி புரிதலும் துன்புற்றவரை யதினீக்கலும் கூடுமாகிற் பணம் நமக்குப் பெரும்பேற்றை யளிக்கின்றது. அற்றேலதைநீ இருதயத்தில் வையாது நினைவின்கண் வைத்துக்கொள்வீர்' என்று ஸ்விப்ட கூறினார். பணத்தை யதற்காகவே விரும்புவோனும் மட்டாய்ச் செலவிடுதலை யதிகமா யனுசரிப்போனும் கேவலம் ஒரு பொருளாசைபெற்ற இயந்தரமா யிருப்போனுமே தரித்திரர். இழிந்த சிறு கவலைகளினீங்குதல் வாழ்நாட்களுட் கற்கவேண்டிய விடயங்களுளொன்று. பொருளாசை மிகவும் இழிந்தனவற்றுள் ஒன்று. பொருளதிகமாய் ஈட்டினும் கண்டபடி செலவழிப்போனுமுளன். அளவுக்கு மிஞ்சி யிறுகப்பிடிப்பவனுமுளன். ஆதலினது வறுமைக்கே யிடனாகின்றது. எட்வேர்ட் கோர்டினேயின் பேரில் உள்ள உலகறிந்த சரமகவியில்பின் வருமாறு கூறுகின்றது.

'நாஅம் கொடுத்தது நம்மிடத் துளது
நாஅம் அழித்தது நம்மிடத் திருந்தது
நாஅம் மிகுத்தது நம்மிடத் திலது.'

அதே கருத்தடங்கிய பிறிதொரு பாடங்கூறுமாறு:—

யாஅன் மிகுத்ததை யிழந்துவிட் டேனல்
யாஅன் அழித்த தென்னிடத் திருந்தது
யாஅன் கொடுத்த தென்னிடத் துளது.

"வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு—மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றோ
வெய்ப்பினில் வைப்பென் பது".

என்றார் பழமொழிக்கண் மூன்றுறையரையனாரும். மிக்க செலவுள்ளோரா யிராவிடினும் தாராளமாயிருமின். தம்மைச் செல்வராக்கிக் கொண்டாலும் ஏழைகளா யிருப்போரும் தம்மை ஏழைகளாக்கிக்கொண்டாலும் செல்வராயிருப்போருமுளர். ஏழைகளின்மீது தயையுள்ளோர் இறைவர்க்கே கடன் கொடுப்பார். அவர்க்கிவர் கொடுத்ததை யிவர்க் கவர்திருப்பிக் கொடுப்பார். செல்வனுகிய இளைஞற்கு வள்ளலார் கொடுத்த புத்திமதி தனித்தனி மனிதர்க்கும் பொருந்துவதாக எண்ணப்படும்; ஏனெனில் நாம் நம் குழந்தைகளையும் ஏழைகளையும் மனத்தில் வைத்துக் கொள்ளல்வேண்டும். உம் வருவாய் உமதேயாகில் உம்முன்னோரிடமிருந்து நீர் பிதிரார்ஜிதமாகப்பெற்றது உமது மட்டுமன்று. பணக்காரர்கட்குக் சேவர்களைப்போல்வர். நாம் நம்பணத்திற்குக் கணக்குச் சொல்லவேண்டும் அது நம்மிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ள ஒரு சாமான் பணம் நாம் கருவமுற்றிருக்கும்படியானதொன்றுமில்லை. "இவ்வுலகிற் பணக்காரரைக் 'கர்வமுற்றிருக்தல்' வேண்டாமென்றும் நாம் நுகரபொருள்க ளெல்லாவற்றையு மேராளமாகக் கொடுக்கும் நியந்தமற்றக் கடவுளைத் தவிர நிச்சயமற்றசெல்வத்தை நம்பக்கூடாது."

"நன்மை செய்யவேண்டுமென்றும் நற்றொழிலி லதிகமாய்க் கவனஞ் செலுத்தவேண்டுமென்றும் கொடுக்கச் சித்தமாகவும் அறிவிக்க இஷ்டராகவும் இருத்தல் வேண்டுமென்றும், அந்தமற்ற வாழ்க்கையைக் கைப்பிடிக்கும்படி வரவேண்டிய காலத்துக்குத் தமக்கே சேர்த்துவைக்கவேண்டுமென்றுங் கட்டளையிடுமின்."

சமயநூல் தீங்கனைத்தினுக்கும் மூலகாரணம் பொருளாசையென்று கூறுகின்றதே யன்றிப் பொருளென்று கூறுகின்றிலது. "பணம் அதிமானல் அதன்மேற் கவலைவைக்கவேண்டாம்" ஏசு மலையிலிருந்து கூறிய உபதேசத்திலும் அதே காரணங் கூறப்பட்டுளது. "பாச்சையும் துருவும் அழிக்கும் கள்வர் உடைத்துத்திருடுவனவுமான பொருளுடைய இவ்வுலகில் உமக்குப் பணம் சேர்த்து வையாதீர்," "ஆனாற் பாச்சையும் துருவும் அழிக்காததும் கள்வர் திருடாததுமான விண்ணுலகில் உமக்காகச் சேமதனம் சேர்த்து வைத்துக்கொண்மின். ஏனெனில் உம் பொருளிருக்குமிடத்தே உம்மனமும் செல்லும்."

பணவிஷயம் முற்றிற்று.

சருக்கை - வரதாசாரியன்.



---

# ருக்மணி சரித்திரம்.

---

## அத்தியாயம் - 6

கடன்வாங்கின இரண்டாயிர ரூபாயில் முப்பதுரூபாய்தான் பாக்கியிருந்தது. சுப்பையர் வியாபாரங்கள் முடியுமுன்னமே இருட்டி விட்டது. செட்டி தன்னை இலகுவாய் விட்டுவிட்டால், பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொண்டிருந்தார். அந்தப்பிரகாரமே தேங்காய் உடைத்தார். கும்பேசுவரன் கோயிலுக்குப்போயிருந்தார். ஸ்வாமி, அம்மன், இரண்டுசந்நிதியிலும் அருச்சனைசெய்துவைத்தார். எல்லாமுடிந்தன. இராத்திரி $10\frac{1}{2}$ மணி வண்டியிற் புறப்பட்டுச் சீர்காழிக்குப் போவதாக ஏற்பாடு செய்திருந்தார். கோயிலைவிட்டு வெளியே போகும்போது துவஜஸ்தம்பத்தண்டை ஒருவர் வந்து சுப்பையரை நோக்கி

"தாங்களிருப்பது எந்தூர்?" என்றார்.

"ஏன்?"

"கேழ்க்கிறேன். சொல்லுங்கோளேன்."

"சீயாழி."

"இன்னம் எத்தனைநாள் இங்கே?"

"இதோ ஊருக்குத்தான் போறோம்."

"எத்தனை நாளாச்சு இங்கேவந்து?"

"காலம் பறத்தான வந்தோம்."

"இவ்வளவு சுருக்காகப் போவானேன்"

"நீங்களார்? தெரியலியே!"

"இந்தஊர்தான் காமாட்சி ஜோஸ்யர் தெரு"

"அப்படியா இந்த ஊர்லே நல்ல பிள்ளைகளா ஆப்டுமோ"

"எவ்வளவு வேணும் நான் பிடிச்சுத்தரேன்."

"இப்ப ஊருக்குப் போகணுமே என்ன பண்றது!"

"நாளைக்குப் போகலாம்ணு அதுக்குள்ளே, ஒண்ணு ஏற்பாடு பண்ணித்தரேன்."

"நிச்சயமா?"

"நிச்சியமா."

“ஏண்டா அம்மாஞ்சி, இன்னிக்கும் நாளைக்கும் இருந்து பார்ப்பமா?” அம்மாஞ்சியு மொத்துக்கொண்டார்.

“எந்த மாதிரிப்பையன் வேணும் நல்ல பணக்காரப் பையன்களுமிருக்கா. நல்ல படிச்ச பையன்களுமிருக்கா. இது கொஞ்சம் அது கொஞ்சமாவும் ஆப்டும். எப்படி வேணும் சொல்லுங்கோ?” என்று அவர் கேட்டார்.

“ரெண்டுங் கலந்தாப் லேர்ந்தாத்தான் தேவலை.”

“அப்படி, சுப்பராமன் பிள்ளை ஒண்ணு ராமஸ்வாமி அய்யர் பிள்ளை ஒண்ணு. பந்த நல்லூர் மைனர் ஒண்ணு. நல்ல இடமா மூணு இடம் இருக்கும்.”

“எங்கே, எங்கே, மைனர் ஆரு.”

“டபீர் தெருவிலே இருக்கானே பையன் கண்ணுக்கு நன்னாருப்பன். வயது பதினாறுதான் ஆச்சு. மாமாதான் ஸ்டேட்டைப்பாத்துகரார் அம்மா இருக்கா வேறே பிக்கில்லை பிடுங்கலில்லை. நல்ல வரந்தான்.”

“எவ்வளவு ஆஸ்தியோ?”

“அஸல் க்ராமம் ஒண்ணிருக்கு.”

“எவ்வளவு பொரும்?”

“எழுபத்தையாயிரம் குருடன் குடுப்பன்.”

“அப்படியா அதை எசைச்சு விடுங்களேன்.”

“அதுக்கு என்னன்னா மாமாவைப் பிடிக்கணம்.” அவனைப் பிடிச்சுட்டுமோ நம்மகாரியம் ஆய்டுத்து.

“எல்லாம் நீங்கதான்.”

“பணம் ரொம்ப ஆகுமே.”

“எவ்வளவு ஆகும்.”

“இரண்டாயிரத்துக்குக்கொறையு வன்னு தோணலே”

“அடேயப்பா.”

“என்ன அப்படிச் சொல்றகளே பறதைப் பசங்களெல்லாம் அந்நூறு ஆயிரம் கேழ்கச்சே மகாராஜன் அவன் கேக்கறத்துக்கு என்னதடை? அதுவும் ரொக்கங்குடுக்காலம்.

“பாத்துக்குவோம் நாளைக்கு பேசாம அதைப்பத்தி”

“சரி” என்று சொல்லி அப்பிராமணன் படுக்கைக்கு அவ்விருவரையும் தனது கிருகத்துக்கு அழைத்துக்கொண்டு போய்ச்சேர்ந்தார்.

கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார்,

---



## புத்தகக் குறிப்புகள்.

**வியாசமஞ்சரி** :—இப்புத்தகத்தின் பெயரினாலேயே இதிலடங்கியவையின்னவென ஒருவாறு தெரிய வரும். இதில் “ஊன்றிப்பார்த்தல்” முதலாக “ஆங்கிலவரசாட்சி” யிறுதியா 52 - விஷயங்கள் இனிய, எளிய, தெளிவான நடையில் எழுதப்பட்டுள. இது 103 - பக்கங்களுடையது. சென்னை இராசதானியிலுள்ள பாடசாலைகளில் **லோயர் செகெண்டரி மெட்டிரிகுலேஷன்** என்னும் பரீட்சைகளுக்கு வாசிக்குமாணவர்களுக்கு இது மிகவும் உபயோகப்படக் கூடியது. சென்ற பல்லாண்டுகளாகச் சென்னைச் சர்வகலாசங்கத்துத் தமிழ்ப் பரீட்சைக் கர்த்தர்களில் முக்கியமானவரான ம-ா-ா-ஸ்ரீ தண்டலம் பாலசுந்தர முதலியாரவர்கள் இதற்கு எழுதிய முகவுரையினாலேயே இப்புத்தகம் மாணாக்கர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருத்தல் வேண்டுமென்பது பெறப்படும். இதன் விலை : 4 அணா.

**போஜ சரித்திரம்**:—ஆங்கில ஆரிய மொழிகளிற் றேர்ச்சியெய்தியோருட் சிலர் பிறபாஷை நூல்களை நன்கு கற்று நாடக விலக்கணத்தை நன்குணர்ந்து அவ்வுணர்ச்சி துணைக்கொண்டு தமிழ் மொழியுள்ளும் நாடகங்களியற்றத்தலைப்பட்டனர். அவற்றுளொன்று தற்காலத்துத் தோன்றி நிலவுதலுறும் **போஜசரித்திரம்** என்னுந் தமிழ் நாடகம்.

போஜ ராஜனுடைய சரித்திரத்தினொரு பகுதியைக் கூறுதலாற் போஜசரித்திரம் எனப்பெயர்பெற்ற இந்நாடகம் வடமொழியிலுள்ள பிரபல ஆதாரகிரந்தங்களைத் தழுவி இயற்றப்பட்டுள்ளது. இந்நூலால் நமது பரதக்கண்டம் பலநூற்றாண்டுகளுக்கு முன்னர் எந்நிலைமையிலிருந்ததென அறிதல்கூடும். நூலுட் கூறப்படுங்கதை எளிதிற் கிரகிக்கப்படுந் தன்மையதாயும் இடையறாது இன்பந்தருவதாயு நிற்றலின் இது நாடகமோவெனச்சிலர் ஐயுறவும் சிலர் இது நாடகமன்று கதைப்புத்தகமே யெனத்துணியவும் புகுதல் அசம்பாவிதமன்று. ஆனால் அத்தன்மையால் நாடக லக்ஷணக் குறைவு பாடுண்டோ வென்னிற் சிறிது மில்லையெனவே சொல்லவேண்டியிருக்கின்றது. யுக்தியாற் சங்கதிகளை யறியவைக்கும் சம்பிரதாயங்கள் வேண்டிய அளவிற் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. நூலமைந்த நடையோ எளிய தமிழ் நடை. இந்நூலாசிரியர் வடமொழிப்பதங்களும் விரவி வருவதனால் தமிழ் நடைக்கு ஒரு கம்பீரமும் ஏற்றமும் அழகும் உண்டாமென்னுங் கருத்து துணிவைத்தழுவி அநேக சமஸ்கிருதபதங்களை வழங்கியிருக்கின்றனர். இந்நூலுட்காணப்படும் செய்யுள்களிற் பல நூலாசிரியரியற்றினவேயாயினும் கம்பராமாயணம், பிள்ளையார் புராணம், அரிச்சந்திர புராணம், நைடதம், தாயுமானவர் பாடல், இராமலிங்கப்பிள்ளை அருட்பா முதலியவற்றினின்று மெடுத்த மேற்கோள்களாவனசில, பாடல்களெல்

லாம் பொருளெளிதில் விளங்குவன. நவரஸங்களும் ஆங்காங்கே பொருத்த முறப்பிரயோகிக்கப்பட்டுக் கற்போரை வசீகரிக்கின்றன. இடையர்கள் சம்பாஷணையும், பில்லர்கள் சம்பாஷணையும் அச்சாதியார் சுபாவங்களை நன்கு விளக்குவதோடு குதூகலந்தருவனவா யமைந்திருக்கின்றன. அதிபுத்திமானும் அதிமூடனும் அதிபாக்கியவானும் அதிதரித்திரனும் நூலகத்துப்போந்து அவரவர்குணங்களை வெளிப்படுத்து கின்றார்கள். இரண்டு ராத்திரிகளில் அரங்கத்தில் நடித்துக்காட்டத்தக்கது. முதற்கட் பேராசையாலும் வஞ்சனையாலும் உண்டாகும் தற்காலவெற்றியும் பின்னர்த் தீய ஒழுக்கத்திற்கும் அநீதிக்கும் காலக்கிரமத்தில் தானே யுண்டாகக்கூடிய நாசமும் மிகத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

---

## சமாசாரக் குறிப்புகள்.

---

**சை. இரத்தின செட்டியார்** :-சென்னை ரிப்பன் பிரஸ் அதிகாரியாயும் இந்து மதத்தில் அதிக பற்றுள்ளவராயும், ஜனோபகாரியாயும், தமிழ்ப் பாஷையிற் பல வேதாந்த நூல்களை அச்சுவாகன மேற்றினவருமான இவர் நாளது மாசம், 8௳ செவ்வாய்க்கிழமை காலஞ்சென்று விட்டனர். தமிழுலகு இவருக்கு அதிகக்கடமைப் பட்டிருக்கின்றது.

* * *

**மகாதேவ கோவிந்த ரானடே** :—இந்தியா தேசத்துக் கல்விமான்களிலும், தேசாபிமானிகளிலும் தலைநாயகம்போலப்பிரகாசித்தும், ராஜாங்கவிஷயங்களிலும் ஆசாரச் சீர்திருத்தத்திலும், தொழிலபி விருத்தியிலும், தேசநன்மைக்குரிய எல்லா விஷயங்களிலும் தான் முன்னின்று முடித்தும், ஐரோப்பியர்கள், இந்துக்கள், மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், இன்னும் மற்றவர்களுடைய நம்பிக்கையையும் பெற்றுப் பம்பாய் ஐகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராய் விளங்கியும் இமாலயற் முதல் கன்னியா குமரிவரையிலும் உள்ள இந்தியர்கள் தம்மைத் தலைவரென மதிக்கப் பெற்று மிருந்த இவர் நாளது௴ 16௳ புதவாரம் இரவு 10½-மணிக்கு மண்ணாட்டை விட்டு விண்ணாட்டை அடைந்தனர். இவரது பிரிவாற்றாமையால் வருந்தாத இந்தியரு முளரோ !

* * *

**பஞ்சம்**:—இஃது இந்தியாவை இனி நாடாதபடிக்கும் அப்படி அதுமீறி வந்தாலும் ஜனங்களை வருத்தாது அதனை அடித்துத் துரத்திவிடும்படிக்கான ஏற்பாடு செய்யவேண்டி இந்திய கவர்ன்மெண்டார் ஒரு கமிஷன் இப்போது ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
10 APR. 1901
MADRAS.

# ஞானபோதினி.

ஸம்புடம். IV] } 1901௵ பிப்ரவரி௴ 20௳ {புத்தகம். 7.



விக்டோரியா சக்கிரவர்த்தினியார்.

## விக்டோரியா சக்ரவர்த்தினியார்.

ஆங்கில நாட்டார்க்குப் பெரும் புகழும் பெரு வாழ்வும் வந்தது முக்கியமாய் இரண்டு காலங்களிலென வொருவாறு சொல்லல் கூடும். இவ்விரண்டு தடவைகளிலும் அந் நாட்டை அரசு செலுத்தி வந்தவர் பெண்பாலார். இவ்விருவரில் ஒருவர் பதினாறாம் நூற்றாண்டினிறுதியில் இராஜ்ஜியபாரஞ் செய்த எலிஜபெத் மகாராணியவர்கள். மற்றவர் பெயர் இந்நாட்டார்க்கும் எந்நாட்டார்க்கும் சொல்லாமலே விளங்கக்கூடியது. ஆங்கிலேயர் பரதகண்டத்திற் கால் வைக்கத்தலைப்பட்டது முன்னவர் காலம். இக்கண்ட முழுதும் தம்முடையதென்று துவஜம் நாட்டி இந்நாட்டுச் சிற்றரசர்களையெல்லாங் கூட்டித் தாம் இந்திய சக்ரவர்த்தினியென்னும் பெயர் பூண்டது விக்டோரியா வென்னும் மாதரசி; ஆதிகாலத் ஆங்கில அரசரிற் பிரபலமான * அல்பிரட் என்பவரது 38-ஆவது சந்ததியார். இவர் எலிஜபத் மகாராணிக்குப்பிறகு அரசு செலுத்தி வந்த எட்டு அரசர்களுக்குப் பின் றோன்றி அரசு புரிந்தனர். சென்ற நூற்றாண்டில் 1819௵ மே௴ 24௳ லண்டன் பட்டணத்திற் கென்ஸிங்டன் என்னும் அரண்மனையில் மூன்றாவது ஜியார்ஜ் என்னு மரசருடைய நான்காவது புத்திரராகிய † கென்ட் என்பவர்க்கு விக்டோரிய மேரியாவினிடம் வலம்புரியினிடமாகப் பிறந்த முத்தைப் போன்று பிறந்தது ஒரு குழந்தை. இக்குழந்தைக்குத் தாயாருடைய பெயரும், ருஷியா சக்கிரவர்த்தியினுடைய விருப்பத்தின்பேரில் அவர் பெயரும் சேர்த்து அலெக்ஸாண்ட்ரினா விக்டோரியா என்னும் நாமகரணம் செய்யப்பட்டது. தந்தையின் குணமும் தாயின்வனப்பு மோருருவெடுத்துவந்த தன்னது இக்குழந்தை. மூன்றாவது ஜியார்ஜ் என்பவருடைய புத்திரர்களில்

* Alfred the Great, 871—901 AD.  † Duke of Kent.

விக்டோரியாவின் பிதா அதிக நற்குணமும் நன்னடையுமுடையவர். அந்நாடு முழுதும் அவரைத் தாய் தந்தையரைப்போற் பாவித்துவந்தது. அத்தகைய குணம் வாய்த்திருந்தவர்க்குப் பிறந்த பெண்ணும் அவரினும் மேம்பாடுடைய குணமும் நடையும் பிறவும் உடையளாயிருந்தனளென்பது அப்போதே ஒருவாறு புலப்பட்டது. தாயாரும் ஜெர்மனிதேசத்துப் பிரபுக்களில் அதிக பிரபலமுள்ளவர்களிலொருவருடைய குமாரத்தி. பெல்ஜிய நாட்டரசராய **லியோபால்ட்** என்பவருடைய சகோதரி. முதற்புருஷனிறந்த பிறகு அந்தச்சாதியாருடைய வழக்கத்திற்கு விரோதமில்லாதபடியினால், கேன்ட் என்பவரை இரண்டாவது புருஷனாகக்கொண்டாள். இவளும் பல நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவள். விக்டோரியாவை நன்னடையிற் பழக்குவித்துக் குடிகளிடத்துத் தான் வைக்கவேண்டிய விசுவாசம், காருண்யம் முதலியன காட்டுவித்தவள். தகுந்த வயதானதும் இக்குழந்தைக்கு வித்தியாப்பியாசம் செய்வித்து மற்ற சடங்குகளும், நிறைவேற்றினார்கள். குழந்தையும் நாளுக்குநாள் கல்வி, குணம் இவற்றில் அதிக அபிவிருத்தி அடைந்துகொண்டே வந்தது. குழந்தைப் பருவத்திலேயே இக்குழந்தை தன் தந்தையை இழக்கவேண்டி வந்தது. தாயாரும் தன் அம்மானும் இக்குழந்தையை அதிக கவலையோடு பாதுகாத்து வந்தார்கள். அதிக செல்வத்திலிருந்தபோதிலும் குழந்தையைத் தான்போனபடி விடாமற் காலையிலெழுந்து காலைக்கடன் முடிப்பதுமுதல் இரவு நித்திரை போம்வரைக்கும் இன்னின்னமாதிரி பொழுதுபோக்கல் வேண்டுமென்று செய்த ஏற்பாட்டின்படியே யாவும் நடந்துகொண்டுவந்தன. அக்காலத் தரசராயும் தனக்குப் பெரிய பிதாவாயுமிருந்த நான்காவது **ஜியார்ஜ்** என்பவர் தன்னிடத்தில் வைத்த அன்பிற் கறிகுறியாய் நவரத்தினங்களு மிழைத்த தன்னுருவமைந்த படமொன்று தந்தார். படிப்பிற்குரிய செலவின் நிமித்தம் வருஷந்தோறும் 60,000 பவுன் அல்லது சுமார் ஒருலக்ஷ ரூபாயும் கொடுத்துவந்தார். வித்தியாப்பியாசமான ஆறுவருஷத்திற்குள் ஜர்மன் பாஷையும் பிரஞ்சு பாஷையும் நன்றாய்ப் பேசும்படியான சாமர்த்தியமும், லத்தீன்பாஷையிற் பிரபலகவிகளாய **வர்ஜில், ஹோரஸ்** என்பவர்களாற் செய்யப்பட்ட காவியங்களை வாசித்தறிந்துகொள்ளக்கூடிய திறமையு முண்டாயின. அங்ககணி



தம், பீஜகணிதம், க்ஷேத்திர கணிதம் என்னு மிவற்றிலும் போதுமான விற்பத்தி உண்டாயிற்று. சங்கீதத்திலும் சித்திரவேலையிலும் அதிக ஆவலுடையளாயினள். தன்வயதொத்த குழந்தைகள் கூட விருந்து பொழுதுபோக்குவதற் கில்லாம லிருந்தது மாத்திரம் குழந்தைக்குக் கொஞ்சம் வருத்தமாயிருந்தது. இளம்பிராயத்திலும் தன்னயங்கருதாது பிறர் நன்மையையே நாடவேண்டு மென்னும் எண்ணம் இயற்கையிலும் செயற்கையிலும் உடையளாயினள். இதற்கனேக திருஷ்டாந்தங்கள் உள. தான் இன்னாரென அறிந்துகொள்ளாதபடி உடை உடுத்துப் பற்பல கடைகளுக்குப்போய்ப் பலதினுசுகள் தான் வாங்குவதும் பிறர் வாங்குவதைக் கவனித்துப் பார்ப்பதும் உண்டு. இப்படி நடந்துவந்த ஒருநாள் ஒருஸ்திரீ ஒரு ஹாரத்தைத் தான்வாங்க விரும்பி வியாபாரியை அதன்விலை யாதென விசாரிக்க அவன் ஒருவிலை சொன்னான். அதற்குத் தகுந்தபணம் தன்னிடத்தில்லாததனால் அவனைமறுபடியும் அதற்கும் குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படமாட்டாதோவென வினவலும் அவன் முடியாதென்றவுடனே அவள் அறிவுடையவளாதலின் 'கிட்டாதாயின் வெட்டென மற' வென்பதற்கிணைய அதனிடத்திருந்த விருப்பத்தை ஒழித்துத் தன் சக்திக்கேற்ற வேறோர் ஆபரணம் வாங்கி வீட்டிற்குச் சென்றனள். இவற்றையெல்லாம் கவனித்திருந்தாள் விக்டோரியா. அந்த ஸ்திரீயினுடைய அறிவுக்கு வியந்து அவள் போன பிறகு வியாபாரியினிடம் அவளின்னாரெனத் தெரிந்துகொண்டு அந்தஹாரத்தைத்தான் பணம் கொடுத்து வாங்கி ஒரு கடிதம் வரைந்து அவளுக்குக் கடிதமும் ஹாரமும் அனுப்புவித்தாள். பெண்ணாய்ப் பிறந்தும் மற்றப் பெண்களைப்போல அவா வென்பதற்குடையாது அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்தாயினும் தானாவது வாங்கவேண்டும் அல்லது தன் புருஷனாவது தனக்கு வாங்கித்தரல் வேண்டும் என்று 'மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா' வெனப்பிடித்துக் கடன் வாங்கியாவது நகை செய்வித்துக் கொள்ளல் வேண்டுமென்னும் எண்ணம் விட்டு எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து நடந்ததற்கு வியந்து தான் வாங்கியனுப்புவித்ததென்பதுதான் அக்கடிதத்திலடங்கிய விஷயம். இந்திய நாட்டில் அனேக ஸம்சாரங்கள் அழிவதற்குக் காரணம் அந்த ஸ்திரீக்கு இருந்த அறிவுதமக்கில்

லாமையல்லவா? அவ்வறிவு இருந்ததற்காக அல்லவா விக்டோரியா மாதாசி அதிகமாகவியந்து அம்மாதிரி நடப்பித்தனர்? இதைப்போன்று பிறர் நயத்தைநாடி நடந்த அநேக சந்தர்ப்பங்கள் இன்னும் உள. தனது தாய்தந்தையர் அன்புபாராட்டி வந்தவர்களிடத்தில் தானும் அப்படியே யிருத்தல் வேண்டுமென்பது அவளுடைய எண்ணம். நடையும் அதற்கியைந்தது. தன் தகப்பனார் வெளியூர்க்குப் படையெடுத்துச் சென்றபோது அவர் தம் சேனை கலகம்செய்து தீங்குவிளைக்க யத்தனித்தபோது ஹில்மன் என்னும் பேருடைய ஒருபதாதி தான் தன் தானையிலுண்டான குழப்பத்தை அடக்கி ஜயமுண்டாதற்கு வேண்டியவற்றைச்செய்து வந்தான். தம்நாடுசேர்ந்ததும் அவன் வயோதிக பருவத்தை யுத்தேசித்துத் தமதரண்மனைக் கருகில் ஒரு சிறு வீடு கட்டிக்கொடுத்துக் காப்பாற்றிவந்தனர். சில காலம் சென்றதும் அவனிறந்துவிட்டான்; அவனுடைய மனைவியும் நோயாளியான குழந்தைகளுமிருந்தன. தன் தந்தையாரிறந்த பின்னரும் அவர்களுக்குஎவ்வளவோ உதவி செய்து வைத்தியர்களைக்கொண்டு சிகிச்சை செய்துவந்தனள் நமது மாதாசி. தனக்குப் பட்டாபிஷேகமானதும் அவ்விடம் விட்டு வேறோர் அரண்மனைக்குச் செல்லவேண்டிவந்தது. நோயாளியாயிருந்த பெண்ணுக்குத் தான் ஒரு பைபில் (கிறிஸ்துவேத புஸ்தகம்) வாங்கி அவள் வாசித்து மனசுக்கு அமைதி யுண்டாம் பொருட்டு அனுப்புவித்தனள். தானரசியாயும் தன் சிநேகிதர், ஏழைகள் என்னு மிவர்களிடத்துவைத்திருந்த விசுவாசத்திற்கோரளவில்லை. "தொன்மை மறவேல்" என்பதை எப்போதும் மறந்தாளல்லள். வாய்மை, பொறை, அன்புடைமை, அருளுடைமை, ஈகை இன்னும் இவைபோன்ற குணங்களெல்லாம் வாய்க்கப்பெற்றது தனக்கும் பிறர்க்கும் இகத்திற்கும் பரத்திற்கு மிக்க உதவியாயிருந்தது.

விக்டோரியாவுக்குத் தன் பத்தாவது வயதுவரைக்கும் தனக்கும் சிம்மாசனத்திற்கும் அவ்வளவு சமீபமென்பது தெரியாது. பிறகோர்நாள் வமிசாவளியைப் பார்த்துத் தெளிந்து தன் உபாத்தியாயரைக் கேட்க அவர் "ஆம், மெய்தான், நீ இதினும் முன்பு அறியவேண்டுவது அநாவசியமென்று அவ்விஷயம் உனக்கெட்டாதபடி வைக்கப்பட்டது" என்னலும் அக்குழந்தை "ஒருவேளை



நான் அகங்கரிப்பேனென்பதற்காக அம்மா அவர்கள் இப்படி ஏற்பாடு செய்திருக்கலாம். சில குழந்தைகள் தங்களுக்கு வரும் உயர்ந்த அந்தஸ்தைக்குறித்துப் பெருமைபாராட்டிக் கொள்ளக்கூடும். ஆனால் எனக்கு அம்மாதிரியான எண்ணம் உண்டாகவில்லை. அதை நினைக்கநினைக்க ஒருவிதமான அச்சமும், அப்பதவிக்குரிய கடமைகளைச் சரியாய்ச்செய்து முடிப்பதற்குக் கடவுள் எனக்குத் தைரியமும் புத்தியும் கொடுக்கவேண்டுமே என்னும் ஏக்கமுந் தாம் மேலிடுகின்றன. ஆயினும் என்னாலியன்றவளவில் என்னுடைய குடிகளுக்கும் உறவினர்க்கும் மற்றெவர்க்கும் நன்மையே நாடுவேன். எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் இதுவிஷயத்தில் எனக்குத் துணைசெய்வாராக" என்றனள். அக்குழந்தையின் புத்திகூர்மையேகூர்மை.

அந்த வருஷத்திலேயே அரசுபுரிந்துவந்த நான்காவது ஜியார்ஜ் காலஞ்சென்றுவிட்டனர். அவர்க்குப்பிறகு அவருடைய சகோதரர் நான்காவது வில்லியம் என்ற பட்டத்துடன் சிம்மாசனத்திற்குவந்தார். இவரும் தனது தம்பி புத்திரியின்மீது அதிக விசுவாசம் வைத்திருந்தார்.

1836௵ மே௴ விக்டோரியாவினுடைய அம்மானும் ஆல்பர்ட், அர்னெஸ்ட் என்னும் அவர் குமாரர்களும் லண்டன் பட்டணத்திற்கு வந்தார்கள். அப்போதுதான் நங்கையர் சிகாமணி தனக்குரிய நாயகனை முதற்றரம் கண்ணுற்கண்டது. அவர்களிருவரில் இளையோனாகிய ஆல்பர்ட் என்பவன் பேரில் தான் இவள் நாட்டம் விழுந்தது. அவர்கள் சிலநாள் அங்குத் தங்கியிருந்து பிறகு தங்களுடைய நாட்டிற்கேகினார்கள்.

1837௵ மே௴ 24 தேதியானதும் அந்நாட்டுச் சட்டப்படி அவளுக்கு யுக்தவயது வந்ததாக எண்ணப்பட்டு அவள் அரசுக்குரியாளெனவும் மதிக்கப்பட்டனள். அதேவருஷம் தனது பெரியபிதாவான வில்லியம் என்பவர் காலஞ்சென்றுவிட்டனர். அந்நாட்டு வழக்கப்பிரகாரம் விக்டோரியாவுக்கு இந்தச் சமாசாரம் தெரிவிக்கும்பொருட்டு ஆங்கிலநாட்டுப் *பெரியபாதிரியாரும் இன்னுஞ்சில பெரியமனுஷர்களும் இளவரசியாரிருந்த அரண்மனைக்குவந்து பொ

* Archbishop of Canterbury.

ழுது விடிவதற்குச் சற்றுநேரமிருந்ததுகண்டு அங்கிருந்த பணிப்பெண்களை அழைத்து இந்தச் சமாசாரத்தை இளவரசிக்கு தெரிவிக்கச்சொல்லலும் நித்திரை பங்கம்செய்வதற்கு அவள் பயந்து நிற்றலைக்கண்டு இவர்கள் எப்படியாயினும் எழுப்பித்தான் தீரவேண்டும் என்ற வளவில் அவள் சென்று எழுப்பிச் சமாசாரத்தைச் சொன்னபோது அதிக வருத்தமுற்றுப் பள்ளியறையைவிட்டுத் தன்னைப் பார்க்கவந்த குரு, பிரதான மந்திரி இவர்கள் முன் பாதத்தான் கண்ணும் கண்ணீருமாய் வந்து நின்றனள். ஆயினும் மனோதைரியத்தை விடவில்லை. இறந்த அரசன் நல்லபதவியடையும் பொருட்டும் தான் அரசியாவதற்கு வேண்டிய தைரியம் கொடுக்கவும் தன்பொருட்டுக் கடவுளைக் குறித்துத் தியானம் பண்ணும்படி எதிரிலிருந்த குருவை வேண்டித் தானும் சற்றுநேரம் கடவுளைக் குறித்துத் தியானஞ்செய்ய ஆரம்பித்தாள். இது முடிந்தவுடன் தன்னுடைய பெரியபிதாவின் மனைவியாகிய அடிலேயிட் அம்மாவுக்கு நேர்ந்த துக்கத்தை ஆற்றும்பொருட்டு உடனே ஒரு கடிதம் வரைந்து, "மகா கனம்பொருந்திய மகாராணியார்" என்னும் மேல்விலாசம் எழுதி அனுப்புதலும் அருகிலிருந்தவர்கள் இனி அவர்கள் ராணியார் அல்லாததனால் மேல்விலாசம் பிழையென்று சொல்ல, அதற்கு "ஆம், எனக்கும் தெரியும் அவர்கள் சிரழிந்திருப்பதை நானா அவர்களுக்கு முன் ஞாபகம் மூட்டுவது? அப்படி எழுதுவதற்கு என் மனமும் கையும் எழா!" என்று சொல்லிக் கடிதத்தை அனுப்பிவிட்டாள்.

மேய௴ 21௳ மந்திராலோசனை சபையாரைக் கூட்டுவித்ததும் அவர்கள் விக்டோரியாவைத் தங்களுக்கரசியாக அங்கீகரித்துக்கொண்டார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் நடக்கவேண்டிய சடங்குகளும் நிறைவேறின. அவர்களைத் தான் தன் முன்னோர் காத்துவந்தது போலக் காப்பதாகவும், ஆங்கில நாடு அபிவிருத்தியடைவதற்குரிய மார்க்கமெல்லாந் தேடுவதாகவும் அது நிறைவேறும் பொருட்டுப் பார்லிமெண்டார் தனக்கு மிக்க உதவி செய்வார்களென்றும் எவற்றிற்கும் மேலாய எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் அருள்பற்றி நிறைவேற்ற எண்ணியிருக்கிறதாகவும் சொல்லி முடித்தார்கள்.

* Privy Councillors.



சிறு வயதாயிருத்தல்பற்றி இக்காலங்களில் நடக்கவேண்டியபடி நடந்துகொள்வது அருமையென வெண்ணியிருந்தவர்களுடைய எண்ணமெல்லாம் இழும்படி அதிக மேன்மையாக நடந்துகொண்டார்கள். இதைக்கண்ட பலரும் வியக்கவும் அப்போதிருந்த பிரதான மந்திரியாராகிய * மெல்போர்ன் என்பவரும் அதிக ஆனந்தங் கொண்டார். இராஜரீக தந்திரங்களெல்லாம் மிகப்பெருமைவாய்ந்த இவ்வரசிக்கு அவற்றை முதலிற் கற்றுக்கொடுத்தவர் இவர்தாம். 1837௵ ஜூன்௴ 21௳ செயின்ட் ஜேம்ஸ் கோட்டை வாயிலிலும், இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து என்னும் நாடுகள் முழுதிலும் விக்டோரியா மகாராணியார் இந்நாடுகளுக்கு அரசியாராக விருப்பாரென முரசமுழங்கின. பிறகு பட்டாபிஷேகமும் அதிக ஆடம்பரத்துடன் நடந்தது.

சிம்மாசனத்திற்குவந்த சில நாளைக்குள், மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருபதாதியினுடைய மரணசாதனத்திற்குத் தன்னுடைய கையெழுத்து இடவேண்டிவந்தது. அரசியாருடைய தயாளகுணத்தை என்னென்றெடுத்துரைப்பது! அந்தச் சாதனத்தை வெல்லிங்டன் பிரபு தம்கையிற் கொடுத்ததும் கண்கலங்கி நின்று அவரை நோக்கி "ஐய! இவனுடைய குணத்தைக் குறித்து நல்லது யாதேனும் சொல்வதற்கில்லையோ?" என்றனர்.

பிரபு.—ஒன்றுமில்லையே! இவன் மூன்று தடவைகளிற் சேனையைவிட்டு எதிரி ஸைனியத்திற் போய்ச் சேர்ந்துவிட்டான்.

அரசி.—பிரபுவே, சற்று யோசித்துப்பாருங்கள். ஓருயிரைக் காப்பாற்றுங்கள்.

பிரபு.—மகாகனந் தங்கிய மாதரசி! எனக்குத் தெரிந்த அளவில் அவனுடைய நற்குணம் எனக்குத் தோற்றவில்லை. ஆயினும் சில சாக்ஷிகள் இவனுடைய குணத்தைப்பற்றிப் புகழ்ந்துரைத்தார்கள். ஒருவேளை நல்ல மனிதனாக இருக்கலாம். பதாதிக்குரிய லக்ஷணம் சிறிதேனும் கிடையாது.

அரசியார் "இவ்வளவாயினும் அவன் விஷயத்திற் சிலர் சிபார்சு செய்தார்களென்று சொன்னதற்கு அநேக வந்தனம்" என்று சொல்லி மரண சாதனத்தின்பேரில் "மன்னித்தோம்" என்று

* Lord Melbourne.

எழுதிக் கைந்நடுக்கத்துடன் அதை வெல்லிங்டன் பிரபுவினிடத்தில் தள்ளிவிட்டார்கள்.

அரசி இன்னும் சிலகாலம் சென்றபிறகு தன் பிரதான மந்திரியை அழைத்துத் தன் தகப்பனார் பட்ட கடன் முழுதும் தீர்க்க வேண்டுமென்னும் அவாவிருப்பதாகத் தெரிவித்து அதற்குரிய ஏற்பாடு செய்தனள்.

பிரதான மந்திரியாகிய மேல்போர்ன் துரையவர்கள் இராஜாங்க விஷயத்தில் மாத்திரமேயன்றி மற்ற விஷயங்களிலும் ஆலோசனை சொல்லிக்கொண்டு வந்தார். அரசியாரும் அவரைப் பிதாவைப் போற் பாவித்து அவரிடத்தில் அதிக நம்பிக்கை வைத்து நடத்திக் கொண்டு வந்தார்கள். அவரும் அதற்குத் தகுந்தபடி நடந்து வந்தார். இஃதிப்படியிருந்தபோதிலும் இராஜரீகத்தை நடத்துவதில் தன் பார்வைக்கு வரும் ஒவ்வொரு விஷயத்திற்கும் காரணங் காணாது மேற்காரியம் நடத்துவதேயில்லை. ஒருகால் மெல்போர்ன் துரையை அரசியாரின் திறமையைக் குறித்து அவர் தம் சிநேகிதரொருவர் கேட்டபோது, அவர், "பத்து அரசர்களிடத்திலிருந்து நிர்வகித்தல்சுலபம்; இவ்வரசியாருடைய ஆக்ஷேபங்களுக்கெல்லாம் பதிற் சொல்லி மிருந்து வருவது மிகவும் அசாத்தியம்" என்று சொல்லியிருக்கிறார். மேலும் ஒரு சமயத்தில் இராஜாங்க விஷயமான ஒரு பத்திரத்தைக் கையெழுத்துப் பெறும்பொருட்டு அரசியாரிடத்திற் கொடுக்க அவர்கள் அதை வாங்கி வைத்துக்கொண்டு தன் மனசாக்ஷி திருப்தியடையும்பொருட்டு அதைக்குறித்து அனேக கேள்விகள் கேட்டார்கள். சிலவற்றிற்குத் தகுந்த சமாதானம் சொன்னார். சிலவற்றிற்குச் சரியான சமாதானம் சொல்ல அவகாசமில்லை. எல்லா ஆக்ஷேபங்களுக்கும் சரியான சமாதானம் தான் பெற்றபிறகுதான் அவர் தம்முடைய கையெழுத்தைப் பெறலாமென்று அரசியார் சொன்னதும், மந்திரியார் 'அப்பத்திரத்திற்கு அன்றுகையெழுத்துச் செய்யாவிட்டால் அநேகமுக்கியமான காரியங்களுக்கு இடையூறுநேரிடும், ஆகையாற்கையெழுத்துச்செய்துதான்தீரவேண்டும்' என்றனர். அதற்கரசியார்சற்றுக் கோபச்சின்னத்துடன் முறுவல்செய்து, "பிரதிமையென்று என்னை நினைத்துவிடலாகுமோ! பிரபுவே! நல்ல தின்னதென்றும் நல்ல தல்லது



இன்னதென்றும் தெரிந்து நீதி நடத்தும்படி கற்பிக்கப்பட்டேனேயன்றி, தாங்கள் இப்போது சொல்கிற வண்ணம் நடக்க வேண்டுமென்று எனக்குயாரும் சொல்லிக்கொடுக்க வில்லை. மேலும் அவசர நிமித்தம் கையெழுத்துச் செய்தல் வேண்டும் என்கிறீர்கள். மனசாக்ஷிக்கு விரோதமாக எவ்வளவு அவசரமான காரியமாயிருந்தபோதிலும் காரியத்தைத் தேற விசாரியாது கையெழுத்துச் செய்யமாட்டேன்" என்றனள். மந்திரியாரும் தன் சொல் அங்கீகரிக்கப்படாததுபற்றித் தலை குனிந்து அன்றைக்கு அரசியாரிடம் செலவு பெற்றுக்கொண்டு திரும்பிவிட்டனர். இதைப்போன்று அநேகந்தடவைகளில் நடந்தது. கைந்நாட்டுப்போர்வழியல்லள் என்பதைத் தெரிந்து மற்ற மந்திரிகளும் மற்றுமுள்ள உத்தியோகஸ்தர்களும் தங்கள் தங்கள் வேலையை அதிகக் கவனத்துடன் பார்க்க ஆரம்பித்தார்கள். இஃதிப்படியிருப்பினும் மந்திரியாரிடத்தில் தான்வைத்த விசுவாசத்திற் கோரளவில்லை. அவரை விட்டு ஒரு வேளையாயினும் தனியே போஜனம் செய்வதற்கு விரும்பாள்.

அநேக தேசத்து இராஜாக்கள் சக்கிரவர்த்திகள் குடிப்பிரதிநிதிகள் பட்டாபிஷேக மகோற்சவத்தைக் கண்கொண்டு பார்த்து ஆனந்த மடையும் பொருட்டு இலண்டன் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள். 1838௵ ஜூன்௴ 14௳ பட்டாபிஷேகத்திற்கு முகூர்த்தம் வைக்கப்பட்டிருந்தது. அன்றைத்தினம் அலங்காரம் பண்ணப்பட்டு ஊர்உலா வந்து வெஸ்மினிஸ்டர் என்னு மிடத்தில் ஆக்கப்பட்டிருந்த நவரத்தின கசிதமான மண்டபஞ்சேர்ந்து இராஜாராஜாக்கள் முன்பும் மற்றையவர்கள் முன்பும் பட்டாபிஷேகச்சடங்கு நிறைவேறியது. அரசியார் அதிக *உயரமாயில்லாத போதிலும் மிக்க கம்பீரத்துடன் வீற்றிருந்தார்கள். அவர்களுக்குச் சூட்டின முடியிற் பதித்திருந்த † நவரத்தினங்களும் கோடி சூரியப் பிரகாசந்தந்தன. அநேக அரசர்களும் பிரபுக்களும் வந்து நமஸ்காரம் செய்து போயினர். ‡

---

* 5 அடி 2 அங்குலம். † அதன் மதிப்பு 1,12,760 பவுன் அல்லது சுமார் 17 லக்ஷம் ரூபாய் பெறும்படியானது.

‡ அரசியார்க்கு வருஷாந்தரச் செலவிற்கு 3, 86, 000, பவுன் அல்லது சுமார் 58-லக்ஷம் (57, 90, 000) ரூபாய் பார்லிமெண்டார் கொடுத்துவந்தார்கள்.

1819௵ ஆகஸ்ட்டு௴ 26௳ ஜெர்மனி தேசத்துக் * கோபர்க் என்னும் சிற்றரசர்க்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்குத்தக்க பருவத்தில் நாமகரணமுதலிய சடங்குகள் நிறைவேற்றப்பட்டது. இக்குழந்தைக்கு † ஆல்பேர்ட் என்னும் பெயர் வைத்தார்கள். இக்குழந்தையும் புத்திகூர்மையுடையதாயிருந்ததனால் சிறுவயதிலேயே கல்வியில் அதிகவிருத்தி அடைந்துவிட்டது. விக்டோரியா மகாராணியார்க்கு அம்மான் பிள்ளை இக்குழந்தை. 1836௵ தன்னுடைய அத்தையையும் அத்தை பெண்ணையும் பார்க்கும் பொருட்டு இலண்டன் பட்டணத்திற்குப் போய்வந்ததாகமேலே கூறப்பட்டிருக்கிறது. அப்போதுதான் முதற்றரம் விக்டோரியா இப்பிள்ளையைப் பார்த்து அவர்தம் தமையனுடன் போயிருந்தும், வயதிலும் மூன்றுமாதம் சிறியவராயிருந்த போதிலும் இவருடன் சில நாள் பழகியபிறகு இவருடைய அபூர்வகுணங்களைக்கண்டு மகிழ்ந்து இவரையே தனக்கு நாயகனாக்கிக்கொள்ள எண்ணங்கொண்டாள். ஆயினும் அப்போது அவ்வெண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. தன்னுடைய பட்டாபிஷேகமானதும் அதைக்குறித்து வியந்து ஆல்பெர்ட் எழுதிய கடிதத்தைப் பார்த்துக் களிகூர்ந்திருந்தாள். பிறகு ஆல்பெர்ட்டும் அவர்தம் தமையனும் லண்டன் பட்டணத்திற்கு விக்டோரியாவைப் பார்க்கும்பொருட்டுப் போயிருந்தார்கள். அப்போது, தானே ஆல்பேர்ட்டை வரவழைத்துத்தன்னுடைய நாணத்தைச்சற்றுவிலக்கிவைத்துத் தன்னுடைய வெண்ணத்தை ஒருவிதமாய் வெளிப்படுத்த அதன் குறிப்பறிந்து அவரும் சம்மதித்தார். இரண்டொருநாள் சென்றதும் பார்லிமெண்டாரை வரவழைத்துத் தன்னெண்ணத்தை அவர்கட்குத் தெரிவித்து அவர்களுடைய சம்மதமும் பெற்றாள். விவாகமகோற்சவத்திற்குரிய ஏற்பாடுகளெல்லாம் செவ்வனே நடந்தன. 1840௵ பிப்ரவரி௴ 10௳ அதற்குரிய நாளாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்தச் சுபதினத்தில் விவாகமகோற்சவம் பட்டாபிஷேக மகோற்சவத்தினும் அதிக ஆடம்பரத்துடன் நடந்தது. அன்றுமுதல் மன்னனும் மனைவியும் உடலிரண்டேனும் உயிரொன்றேயாயினர்.

* Duke of Saxe-Coburg-Saalfeld,

† Prince Albert,



அரசியார்க்கு வந்த ஆபத்துக்களோ அநேகம். பல முறைகளில் உயிர்க்குச்சேதம் நேரும்போலிருந்தது. கடவுளுடைய கிருபையால் எல்லாம் ஆதவன் முன்னர் அறுகம்புற் றங்கிய பனிபோலாயின.

ஆல்பர்ட் பிரபு அரசியார்க்கு அதிக உதவியாம்பொருட்டு ஆங்கிலபாஷையும் அதிலுள்ள சரித்திரங்களும் நாடோறும்இடைவிடாது கற்றறிந்தார். சுகதுக்கத்துக்குரிய ஒருவர் தம்முடன் எப்போதும் இருந்து தமக்கு ஆலோசனை சொல்லிவந்தது மகாராணியார்க்குப் பேருதவியாயிருந்தது.

1840௵ நவம்பர்௴ 21௳ ஒரு பெண்குழந்தை பிறந்தது. இதற்கு விக்டோரியா அடிலெயிட் என்னும் பெயரிடப்பட்டது. இம்முதற் பெண் 1858௵ ஜனவரி௴ 25௳ ஜெர்மனி தேசத்து சக்ரவர்த்திக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த அம்மாவுடைய புத்திரர்தாம் தற்காலத்தில் ஜெர்மன் சக்ரவர்த்தியாயிருக்கிறார்.

1841௵ நவம்பர்௴ 9௳ மகாராணியார்க்கு முதற்பிள்ளை பிறந்தது. அதற்கு ஆல்பர்ட் எட்வர்ட் என்னும் பெயரிடப்பட்டது. இதுதான் பட்டத்திற் குரியபிள்ளை; இது பிறந்தவுடன் நாடெங்கும் விழாக்கொண்டாடப்பட்டது. ஆனந்தத்திற் கறிகுறியாகச் செய்த பலவற்றுள்ளும் கடுந்தண்டனை விதிக்கப்பட்டுச் சிறைச்சாலையிலிருந்தவர்களெல்லாம் விட்டுவிடப்பட்ட தொன்று. மகாராணியார் தம்மைத்தம் தாயார் கல்வியிலும் மற்ற விஷயத்திலும் கவனம் வைத்து விருத்திசெய்தது போலவே தாமும் தம் கணவரும் இக்குழந்தைக்குக் பல கலைகளும் போதிப்பித்து வந்தார்கள். 1863௵ மார்ச்சு௴ 10௳ டென்மார்க் அரசன் புத்திரியாய அலெக்ஸாந்திராவை இவர்க்கு மணவினை முடிப்பித்தார்கள். இவர்க்கு ஆண்மக்கள் இருவர் பிறந்தனர். இவர்களிற் சென்னை முதலிய இடங்களுக்கு 1890௵ வந்த முதற்பிள்ளையாகிய பிரின்ஸ் ஆல்பேர்ட் விக்டர் என்பவர் 1892௵ சுரத்தினால் உயிர் துறந்தார். இவர் தகப்பனாரும் 1876௵ இந்தியாவிற்குவந்து பலவிடங்களைப் பார்த்துவிட்டுப் போனார். காலஞ்சென்ற நமது மகாகனம் பொருந்திய மகாராணியார்க்குப் பிறகு இவர் ஜனவரி௴ 23௳ யன்றே

இராஜாவாகவும் இந்திய சக்ரவர்த்தியாகவும் தங்கள் குடிகளால் அங்கீகரிக்கப்பட்டனர். இவர்க்குப் பின் பட்டத்திற்கு வருவதற்கு * **ட்யூக் ஆவ் யார்க்** என்ற ஒரு பிள்ளை இருக்கிறது.

மகாராணியார்க்குப் பிறந்த மூன்றாவது குழந்தையின் பெயர் **பிரின்ஸெஸ் ஆலிஸ்** என்பது. நாலாவது குழந்தைக்கு † **ஆல்பிரட்** என்று பெயர். இவர் 1870௵ இந்தியாவிற்கு வந்து சில விடங்களைப் பார்த்துச் சென்றார். 1874௵ ருஷியா சக்ரவாத்தியின் புத்திரியை விவாகம் செய்துகொண்டார். இவர் மனைவி இப்போதிருக்கும் ருஷிய சக்ரவர்த்திக்குச் சகோதரியார். இவர்க்கொரு பிள்ளையும் நான்கு பெண்களும் உள. இவர் சென்றவருஷம் காலஞ்சென்றுவிட்டார்.

ஐந்தாவது குழந்தையும் ஆறாவது குழந்தையும் பெண்கள். **மேரி லூயிஸ்** என்னும் ஆறாவது குழந்தையை மகாராணியார் தம் குடிகளில் ஒருவராய ஆர்கயில் (Duke Argyle) பிரபுவின் புத்திரர்க்கு விவாகஞ்செய்து கொடுத்தார். தமக்குக் குடிகளிடத்திருந்த விசுவாசமும் குடிகளுக்கு அரசியாரிடத்திருந்த அன்பும் பக்தியும் முன்னிலும் இவ்விவாகத்தினால் அதிகரித்தது. அரசியாருடைய மருகர் இப்போது கனடா நாட்டுக் கவர்னர் ஜெனரலாயிருக்கிறார்.

ஏழாவது குழந்தையும் எட்டாவது குழந்தையும் பிள்ளைகள்; ஒன்பதாவது பிறந்தது பெண். அரசியார்க்கு இக்குழந்தையிடத்து அதிக விசுவாசமிருந்ததனால் விவாகமானதும் மகளை விட்டுப் பிரிய மனமில்லாததனால் மருகனையும் தந்நாட்டிற்கு வரவழைத்து வைத்துக்கொண்டனள். இவர் ஆப்பிரிக்கா யுத்தத்தில் 1897௵ மாண்டுபோயினர். அரசியார் பெற்றெடுத்த ஒன்பது குழந்தைகளில் ஆண்பால் நால்வர் பெண்பாலைவர். தற்காலமிருப்பவர்கள் இரண்டு பிள்ளைகளும் நான்கு பெண்களும். மேற்கூறியபடி இவர்கள் ஐரோப்பா கண்டத்து அரசர்களுக்கு மருகராயும் மருகியராயும் மைத்துனராயுமிருக்கின்றனர்.

இவர்கள் தந்தையாராகிய மகாகனம் பொருந்திய **பிரின்ஸ் ஆல்பேர்ட்** என்பவர் ஆங்கிலநாட்டின் நன்மையும் அதைச்சார்ந்திரு

* Duke of York. † Duke of Edenburgh.



க்கும் மற்றநாடுகளின் அபிவிருத்தியையும் அதிகமாய் விரும்பிச் செய்யக்கூடியனவற்றைத் தாம் செய்தும் அரசியாரைக் கொண்டு செய்வித்தும் வந்தார். பற்பல நாட்டினோடுஞ் சம்பந்தங்கள் பெருகும்பொருட்டு 1851௵ ஒரு பெரியபொருட்காட்சி * ச்சாலை ஏற்பாடு செய்தனர். இஃது அநேக அபிவிருத்திக்குக் காரணமாயிருந்தது. நாளுக்குநாள் ஆங்கிலநாட்டுக் குடிகள் இவரிடத்து அதிக அன்புவைக்கத் தலைப்பட்டார்கள். 1861௵ அவர் இறந்துபோனபோது ஆங்கிலநாடு முழுதும் துக்கசாகரத்தில் மூழ்கியது. மகாராணியார் தம் நாயகனிடம் வைத்திருந்த அன்பும் பக்தியும் உலகத்தில் வேறொரு பத்தினிக்குத் தன்னாயகனிடத்தில் அவ்வளவு இருந்தனவென்று சொல்வது அருமையாகும்.

1858௵வரை கம்பெனியார் ஆண்டுவந்த இந்தியாவை அவ் அவ்வருஷ முதல்தான் நேரில் ஆள்வதாய்த் தெரிவித்து இந்தியாவைக் குறித்த விஷயங்களையெல்லாம் தாம் அதிகமாய்க் கவனித்து வருவதானார்கள். 1877௵ ஜனவரி௴ முதல்தேதி இந்திய தேசத்திலுள்ள அரசர்களையும் மற்றும் பிரபலமானவர்களையும் **டெல்லி** பட்டணத்திற்கு வருவித்து **இந்திய சக்ரவர்த்தினியா**ரென்னும் பட்டமும் வகித்தனர். இவர்கள் இராஜ்ஜியபாரம் செய்துவந்த சென்ற 63 † வருஷங்களிலும் அதிக பெரிய யுத்தங்களும் பெருங்கலகங்களுமில்லாதிருந்ததனால் இவர்கள் ஆளுகைக்குட்பட்டிருந்த பற்பல நாடுகளும் மற்ற நாடுகளைக் காட்டிலும் பல்வளங்களிலும் செழித்தோங்கின.

இம்மகாராணியாருடைய ஆளுகையில் இந்தியாவில் தபால் ஆபீசு, இருப்புப்பாதை, தந்தி, கல்வி, விவசாயத்திற்குரிய பெருங்கால்வாய்கள், குடிகளுக்கு இன்னும் எண்ணில்லாத பல நன்மை பயக்கத்தக்கன உண்டுபண்ணப்பட்டு நாடோறும் அபிவிருத்தி அடைந்துவருகிறது. இவைகளின் பயனைப் பலரும் அநுபவித்திருக்கிறார்களாகையால் அவைகளை இங்கு விரித்துக் கூறாது விடுகின்றோம். இத்தகைய மகாராணியாரவர்கள் சென்ற ஜனவரி

* The International Exhibition of 1851.

† ஆப்பிரிகா யுத்தமாத்திரம் பெரிய யுத்தமென்றே சொல்லல் வேண்டும். ஒரு விஷயத்தில் இதற்கும் பெரியது வேறொன்றிருத்தலைக் காணோம். ஆரம்பித்து ஒருவருஷம் நான்குமாதம் ஆயின; இன்னும் முடிந்தபாடில்லை.

மாசம் 22-ஆந்தேதி மாலை * $6\frac{1}{2}$-மணிக்குத் தேகவியோகமாயினர் என்பது கேட்டு உலகமனைத்துந் துக்கசாகரத்தில் மூழ்கி வருந்துகின்றது. இனியென்செய்வது !

நமது மகாகனம் பொருந்திய மகாராணியா ரவர்களுடைய நற்குணமும் நற்செய்கையும் எவரும் அறிந்து ஆனந்தங்கொள்ளக் கூடிய விஷயம். இந்தியாவிலுள்ள பெண்பாலாரும் தங்கள் புருஷர்களிடத்தும் சுற்றத்தாரிடத்தும் பெற்றோர்களிடத்தும் நடந்து கொள்ளுவதற்கு நம் மகாராணியார் தாம் நடந்து காட்டிய வழியைப்பின்பற்றி நடப்பார்களெனவும் புருஷர்களும் தாங்கள் நடப்பதற்கு உதவியானவற்றைக் கைக்கொண்டு நடப்பார்களெனவும் நம்புகின்றோம். இவளைப்போன்ற அரசியாரும், தாயாரும், பத்தினியும், பெறுவது அருமையாகும். இப்போதுஇந்திய சக்ரவர்த்தியாயிருக்கும் இவரது புத்திரரும் தம் தாயைப்போன்றே தம் குடிகளை ஆதரித்து வரும்படி தைரியமும் மனவூக்கமும் இவர்க்குத் தந்தருள எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளைப் பிரார்த்திக்கின்றனம்.

கல்துளம்-குப்புசாமி முதலியார்.

[இதை யடுத்துப் பதிப்பிக்கப்படும் விளம்பரம் நமது துரைத்தனத்தாரவர்களால் அச்சிடப்பட்டு வெளிப்படும் கெஜட்டிலுள்ளவாறே பெயர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றது. ஆங்கிலத்துள்ளதனை யாமே நேரில் மொழிபெயர்த்து அச்சிடக்கருதினோமெனினும் அவகாசக் குறைவால் இவ்வாறு செய்யும்படி நேரிட்டது. ஆகவே அந்த விளம்பரத்தில் எவையேனும் மொழி பெயர்ப்பு வகையானும் பிறவகையானும் குறைவுக ளிருக்குமாயின் அவற்றிற்கு யாம் உத்தரவாதியரல்லேமென்பதுணர்க.

பத்திராதிபர்.]

* Madras Time - 11-50 P. M.



# விளம்பரம்:

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1901-ம்வூ பிப்ரவரிமீ 11உ.

நெ 115.—கீழேவரும் இந்தியா கவர்ன்மென்டாருடைய கெஜெட் எக்ஸ்ட்ரார்டினெரி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறது:—

## ஹோம் இலாக்கா.

### பப்ளிக்.

கல்கத்தா, 1901-ம்வூ பிப்ரவரிமீ 5உ.

நெ. 510.—மாட்சிமைதங்கிய மன்னராகிய இந்துதேசத்துச் சக்கிரவர்த்தியானவர் இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் அடியிற்கண்ட நிருபத்தைக் களிகூர்ந்து அனுப்பியிருக்கின்றனர்.—

" இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—என் அன்புக்கும் பெருந் துக்கத்துக்கும் இடமாகிய என் தாயார் (யாவரும்) துயரடையும்படி தேக வியோகமான காரணத்தினால், மிகப்புராதனமான வம்சபரம்பரை வழியாக எனக்குக் கிடைத்த ஸிம்ஹாஸனத்தை யான் உரிமை வாயிலாகப்பெற்றேன். என் இந்திய ராஜ்ஜியங்களிலுள்ள சுதேச ஸமஸ்தானங்களை ஆண்டுவரும் அதிபதிகளுக்கும் குடிஜனங்களுக்கும் என் வாழ்த்துரை அனுப்பவும், அவர்களுடைய க்ஷேமத்தில் எனக்கு மனப்பூர்த்தியாயுள்ள சிரத்தையை அவர்களுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கவும் இப்போது விரும்புகிறேன். எனக்குமுன் மிகவும் பிரசித்தி பெற்றவரும், என் துயரத்துக்குக் காரணமாய் மரித்தவருமான மஹாராணியாரே - இந்து தேசத்து விவகாரங்களைப் பரிபாலிப்பதென்னும் பொறுப்பைத் தாமே நேரில் வகித்தவரும், அந்த அகண்ட தேசத்தின் துரைத்தன விஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிக சம்பந்தத்தைப் பெற்றிருந்ததற்கு அறிகுறியாகச் சக்கிரவர்த்தினி என்னும் பட்டத்தை வகித்தவருமாகிய இத்தேசத்துமுதல் வேந்து.

" இந்தியாவைச் சேர்ந்த சகல விஷயங்களிலும் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியார் நேரில் இடைவிடாத ஆழ்ந்த சிரத்தை காட்டி வந்தார்கள்; அத்தேசத்துக் கோடானுகோடி பிரஜைகள் அச்சக்கிரவர்த்தினியார் விஷயத்திலும் அவர்களது ஸிம்ஹாஸனாதிபத்தியத்திலும் தெரிவித்த ராஜவிசுவாசமும் அன்பும் எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றன.

" சக்கிரவர்த்தினியாருடைய மேன்மைதங்கிய நீடித்த ஆளுகையின் கடைசி வருஷத்திலே தென் ஆபிரிகாவில் நடந்த யுத்தத்தில் சுதேச ஸமஸ்தான அதிபதிகள் தேசாபிமானத்தினாற் செய்த பெருந் தன்மையான உதவியினாலும், சுதேச ராணுவத்தார் தங்களுடைய ஜன்ம தேசத்தின் எல்லைகளுக்கப்பாற் செய்த பராக்கிரமமான சேவகத்தினாலும் மேற்படி ராஜ விசுவாசமும் அன்பும் பிரசித்தமாய் விளங்கின.

" அந்தச் சக்கிரவர்த்தினியாருடைய விருப்பத்தினாலும் அநுமதியினாலுமே யான் இந்தியாவுக்கு வந்து, பிரசித்திபெற்ற புராதனமான ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஸமஸ்தான அதிபதிகளையும் பிரஜைகளையும் பட்டணங்களையும் நேரிற்கண்டு தெரிந்துகொண்டேன்.

" அப்போது என்மனதில் ஆழ்ந்து பதிந்த விஷயங்களையான் ஒருபோதும் மறவேன்; முதல் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியாரைப் போலவே யானும் சகல வகுப்புகளைச்சேர்ந்த என் இந்திய குடிஜனங்களின் அசேஷ க்ஷேமத்திற்காகப் பாடுபடவும் அந்த ஜனங்களுடைய இடைவிடாத ராஜவிசுவாசத்திற்கும் அன்பிற்கும் அச்சக்கிரவர்த்தினியாரைப் போலவே பாத்திரனாகவும் முயல்வேன்.

(ஒப்பம்) எட்வர்ட், மன்னரும் சக்கிரவர்த்தியும்."

விண்ட்ஸர் காஸில்;

1901-ம் வரு பிப்ரவரி மீ 4உ.

---

# அரசிபிரிவாற்றுமை.

## கலிவிருத்தம்.

1. ஈங்குற மிந்தியர்க் கியைந்த வாறெலாம்
பாங்குற நலம்பல புரிந்து செய்தவ
ளாங்கில நாட்டினல் லரசி யாகிய
வோங்கொளி விசயைத னுயிர்து றப்பதோ ?

2. நின்மலக் குணத்தின ணைய மிக்கவ
ளன்மையே விரதமா நயந்து நின்றவள்
புன்மையை நாடொறும் போக்கி யாண்டவள்
பன்மகார் துதிசெயப் பாரி னீங்கினள்.

3. ஐயகோ வினியந மரசி போயினள்
செய்யகோல் செலுத்திய செல்வி போயினள்
வையகங் காத்தருண் மாது போயின
ளுய்யவாழ் வுடையபைந் தோகை போயினள் !

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

4. பொங்குபுகழ் விசயையெனுங் கோமாட்டி விண்ணுலகம் புக்க போழ்து
தங்குமொளிப் பரிதிசென்று தண்கடலில் வீழ்ந்திட்டான் றணந்த பாரின்
மங்கையுள நைந்திருளின் படாம்போர்த்து வருந்தினண் மயங்கிப் பின்ன
ரெங்குமுள வெவ்வுயிரு மரசிபிரி வாற்றும லிரங்கிற் றம்மா !

5. செம்மைநெறி திறம்பாது பல்லாண்டு தன்றலைவற் சேர்ந்து வாழ்வா
டம்மையகஞ் சென்றவழித் தாயிறந்து போனதொரு தகைமை மானப்
பொம்மலிளம் புவிமகளு நீயிறப்பக் கண்டுமனம் புழுங்கு கின்றாள்
விம்முயிர்த்துத் தொழுகின்றா ளெழுகின்றா ளழுகின்றாள் விழுகின் றாளே.

6. இவ்வுலகின் மகளிரது மேன்மையினை யியையவினி தெடுத்து நாட்டிச்
செவ்விபெற வரசாண்ட விசயையெனுஞ் சீமாட்டி தேவர் வாழு
மவ்வுலகின் கணுமன்னர் மேதகவை யன்பினெடுத் தறையு மாறு
நவ்விவிழி மாதரசி விண்ணுலகிற் கெழுந்தருளி நடந்தாய் போலும்.

7. பெண்ணெதற்கு முரியளல டன்வயமு முடையளலள் பேதை யாவ
ணண்ணியதன் றலைவனுக்குக் குற்றேவ லாட்டியென நாளுந் தம்மு [ளும்
ளெண்ணமிட்டுப் புன்மொழிகள் பலபிதற்றித் திரிதருஞ்சில் லெனியர்தே
வண்ணமர்தப் போலிவகை மொழிபொய்ப்ப நீயாண்ட மகிமையென்னே!

ஷை வேறு.

8. அரசற் குரிய மனையாட்டி யரசி யாவண் மற்றொளிரு
மரசிக் குரிய தலைமகனே யரச னல்லன் மெய்யிதெனப்
பரசு நினது நாட்டுவிதி பகரா நின்ற பரிசதனான்
விரைசேர் குழலி னார்பெருமை மிகுதி யென்றல் போதருமால்.

தரவுகொச்சகக் கலிப்பா.

9. தண்டார்ச் சிறப்புடைய தையானின் னாணையிற்
கண்டாய் புதுமையெலாங் காரிகைமார் தந்தலையிற்
கொண்டாடு மாதே குவலயத்திற் பன்னலமு
முண்டாகும் வண்ண முவந்தருளி யாண்டனையே.

10. பூண்டநின்கோ னல்லசெயல் பொல்லார்க்கு மாதலினான்
வேண்டியவெச் செல்வமுநீ வேட்டபடி பெற்றனைமுன்
னாண்ட வரசிறு மம்மே நினக்குமிக
நீண்டபெரு வாழ்வினையின் னேர்மையன்றோ நல்கியதால்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

11. நயமுறு மன்னே நின்னை நாடெனு முடம்பி னுற்ற
வுயிரென மொழிகோ வன்றி யொளியுடை விழியே யென்கோ
செயிரிலா வறிவே யென்கோ செவ்விய மனனே யென்கோ
வயமுறுக் கொண்ட தன்ன வான்படைச் செல்வ மாதே.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி.

---

## சிலப்பதிகார வாராய்ச்சி.

---

இனி நாடு காண் காதை. இப்பொழுதுதான் இந்நூலின் ரஸபாகத்திற்கு வந்துளோம். இதுவரை, நாமாங்காங்குக் கூறியபடி கவித்திறனும், நயமுமில்லாமற் கல்வித்திறமையே நிறைந்துள்ள பாகங்கள். ஆயினும் ஆசிரியரின் இனிய நடையாலவையனைத்து முற்சாகத்தை விளைவித்து வந்தன. இனித்தொடங்கும் பாகமே இளங்கோவினுடைய உண்மைத்திறனைக் காட்டுகின்றது. இனிக்கூறும் காதைகள் கதையின் தொடர்ச்சிக்கு அனுவசியமானவைகள். மதுரையை விட்டுப்புறப்பட்டால், பதிகத்திற் கூறிய கதையின்படி, அடுத்தாற்போல மதுரைக் கடைத்தெருவிற் சிலம்பை விலைகூறவேண்டியதுதான். இதற்கிடையி லிருக்கும் காதைகள் ஆசிரியராக வருவித்துக் கொண்டவைகள். அவைகளை வருவித்துக்கொண்ட காரணம், இவர்களது பரிதவிக்கத்தக்க துன்பத்தை யெவ்வளவு தாமதமாய்க் கூற



லாமோ அவ்வளவு தாமதப்படுத்த வேண்டி வருவித்துக்கொண்டதாக ஏற்படுகிறது. அப்படி வருவித்துக்கொண்ட காதைகளாயினும், கதையோடு பொருத்த மற்றிருப்பனவாகக் காணவில்லை. ஏதோ அவைகளிருக்க வேண்டிய அவசியம் போலவே தோன்றுகின்றன. படிக்கும் பொழுதே நாமும், கோவலன், கண்ணகியுடன் மதுரைக்குச் செல்வது போலவே யிருக்கின்றது.

நாடுகாண் காதையிற்றானவர்கள் புகாரை விட்டு மதுரைக்குப் புறப்படுகிறார்கள். புறப்படும் பொழுது தம்மூரை விட்டுத் தாமறியாவூருக்குப் புறப்படுவதனாற் றமது நாமதேவதைகளை வலம்வந்து வணங்கிச் செல்கிறார்கள். இது போலவே, இராமாயணத்திற் சீதை வனம்போகையில், கங்கை யமுனைகளைத் துதிக்கிறார்கள். இவ்விதங்கோட்டங்களை வலம் வந்து புறப்பட்டது முதற் கவுந்தியின் றொகுப்பு வரும்வரை யொருவரோடொருவர் பேசவே யில்லாது மவுனஞ்சாதித்துச் சென்றார்கள். அவர்களை அப்பொழுது மௌனமாய் வைத்தது ஆசிரியரின் இயற்கையறிவைக் காட்டுகின்றது. இம்மவுனத்திற் கிரண்டு முகாந்திரங்களுள. ஒன்று இவர்கள் ஒருவர்க்குந்தெரியாது ஊரை விட்டோடுவதனாற் பேசினாலாரேனுங்கண்டு கொள்ளலாம். இரண்டாவது, கோவலன் மனது தன்னுடைய பழைய புத்தியீனத்திலும், புதிய வியாபாரத்தின் லாப நட்டத்திலும், தாங்கடக்க வேண்டிய வனவிலங்குகள் நிறைந்த நெடுவழியிலும் மனதைச்செலுத்தி யிருப்பதியல்பு; கண்ணகியும் தனது கனவையும், அக்கனவுப்படி தாங்கள் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டதனாலினியுங் கனவு பலித்து விடுமோ வென்னுங் கவலையுடனிருந்திருக்கலாம்.

இனி யிவர்கள் கவுந்தி யென்னும் ஒரு ஜயினச் சந்நியாசினியைக்கண்டு அவளுடன் மதுரைக்குச் செல்கிறார்கள். இந்த விடத்திலிவளைக் கொண்டு வந்தது மிக அவசியமே, ஏனெனில், கோவலனுங் கண்ணகியுமோ சிறுவர்கள். உலகவனுபவ மற்றவர்கள். வழி தெரியாதவர்கள். மிக்கவலையோடு கூடிய சித்தமுள்ளவர்கள். துன்பப்பட்டவர்கள். இத்தகையினர் காட்டின் வழி ஒரு - 30 - காவதங் கடக்கவேண்டும். ஆதலின், இத்தருணத்திற்குக் கவுந்திபோன்ற உலக வனுபவமுள்ளவளும், அவர்களிடத்து அனுதாபங்காட்டக்கூடியவளும், புத்திபுகட்டக் கூடியவளுமான ஒருமூதறிவாட்டிவேண்டியதின்றியமையாததே! கவுந்தியும் அப்படி அவர்களை மிகக் கருத்தோடு காத்து அவர்களுக்கு மதுரை செல்லும் வழியையும், வழியிலுள்ள நாட்டுவளப்பத்தையுங் காட்டிக்கொண்டு சென்றாள். இவ்விடத்தில், நமது நூலாசிரியர் நாட்டின் வளப்பத்தையும், கழனிகள், அவற்றில்வேலைசெய்யும் மள்ளர்கள், அவர்க ளனுட்டிக்குஞ் சிலவழக்குக்கள் முதலியவற்றையும் செவ்வனே வருணிக்கிறார். கவுந்தியின் புத்திபுகட்டும்.

வாக்கியங்களும், சம்பாஷணைகளும் அவர்களை யுற்சாகப்படுத்திக் கொண்டு வந்தன. இவ்விதம், நன்னெறி யுபதேசிப்பதிலும், ஊர் முதலியவற்றை வர்ணிப்பதிலும், பக்திமார்க்கத்தையநுட்டிப்பதிலும், சினங்காட்டலிலும், கவுந்தியை விசுவாமித்திரரோ டொப்பிடலாம். இவர்கள் போகும் பொழுது ஒரு சோலையிற் சாரணர்களைக் கண்டதாகவும், கவுந்தி அவர்களைவழி பட்டதாகவுங் கூறப்பட்டுளது.

இனி நாம் வம்பப் பரத்தையர் சாபகட்டத்திற்கு வருகிறோம். இவ் வம்பப் பரத்தையர்களைக் கவுந்தி சபித்தது அநீத மென்றே நாம் நினைக்கிறோம். அவர்கள் செய்த குற்றமென்னை? யௌவனத்தோடும் வனப்போடுங் கூடிய புருஷன்பெண்சாதிகளைப் பார்த்த வம்பப்பரத்தையர் அவர் யாவரென்று கேட்க வெண்ணங்கொண்டு கவுந்தியடிகளை நோக்கி யதிவினயத்துடனும், மரியாதையுடனும்,

“ நோற்றுணல் யாக்கை நொசிதவத் தீருட
னாற்றுவழிப் பட்டோ ராரென”, வினவக் கவுந்தியடிகள்,
“ என், மக்கள் காணீர் மானிட யாக்கையர்
பக்க நீங்குமின் பரிபுலம் பின” ரென,

இப்பொய்யுரை யோன்றுள மொழிகேட்டவர்,

“ உடன்வயிற் றோர்க ளொருங்குடன் வாழ்க்கை
கடவது முண்டோ கற்றறிந் தீர்?”

என்றனர். உடனே கவுந்தி அவர்களை முதுநரி யாகெனச் சபித்தாள். இஃதென்ன குற்றம்? அவர்கள் யாரெனக் கேட்கக் கூடாதா? தெரிந்து கொள்ளும் விருப்பமொவ்வொருவருக்கு மியல்பன்றே? அதற்குக் கவுந்தி சொன்ன மொழி பொய்யாகத்தோன்றியது அவர்களுக்கு. ஒருவேளை கண்ணகியும் கோவலனும், ஸ்த்ரீபுருஷசம்பந்த முள்ளவர்களென்று ஐயுறவென்ன காரணங்களவர்களுக்கிருந்தனவோ? அப்படியிருந்தும், சொன்னீரென்று கேட்கவில்லை. மரியாதையாய், அப்படியாயின் இப்படியிருத்தல் கூடுமோ? என்றனர். அப்படியும் அவர்கள் பிழையாகச் சொல்லவில்லை. கண்ணகி கோவலன் மனைவியல்லளோ? ஆதலிற் கவுந்தி சபித்ததற்கும், ஆசிரியர்

“ தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க”,

என்றெழுதுவதற்குந் தக்கதோர் முகாந்திர மின்மையால், கவுந்தி சபித்தது அநீதியென்றே கொள்கிறோம். பிறகு, இவர்கள் உறையூர் புகுந்தார்கள்.

பி. எ. பிரணதார்த்தி ஹரசிவன்.

# உள்ளப் பயிற்சி.

## III. பாகுபாடு.

ஊன்றிய நோக்கம் நன்றே. அதனினும் நன்று நேரிய வூன்றிய நோக்கம். ஆயினும் இப்பிரபஞ்சத்தின்கண்ணே பல்வேறு வகைப்பட்ட பொருள்க ளிருத்தலால் அப்பொருட்டொகுதிகளை மனத்தி னதிகாரத்தினுள் வைத்தடக்கிச் சீர்ப்படுத்துவதற்கு ஏற்றதோ ருறுதியான வழியிலதாயின் உற்றுநோக்குந் திறமை அமிழ்ந்து கலக்கமுறுமென்ப தொருதலை. நாம் **பாகுபாடு** என்றுரைப்பதெல்லாம் இவ்வொழுங்குபடுத்தும் முறையையேயாம். கடவுள் பேரறிவின் தோற்றமாகிய உலகெங்கணும் அது தெளிவாய் விளங்குதலின் மனிதன் பகுத்தறிவினாற் கண்டுரைக்கக் கூடியதேயாம். இப்பாகுபாடு இறைவன் தன் பேரறிவினாற் பொருள்கள் யாவற்றினிடத்துஞ் சார்த்தி யிருக்கின்ற முதன்மையான வகுப்பொருமையைப் பற்றியதாம். வெளித்தோற்றத்திற்கெல்லாம் மிகவும் வேறுபடுவனபோலும் பொருள்களுட் பொதுத்தன்மை படைத்துக்காட்டலில் இவ்வொருமை தானே விளங்கும். நுட்பமாய் உற்றறிகிற கண்களினாற் பற்றப்பட்டுழி, இப்பொதுத் தன்மைகள், தாமே இவ்வுலகினிற் காணப்படும் மிகப் பலவகைய வேற்றுமையுள்ள பொருள்களையும் பெரிதுஞ் சிறிதுமாகிய அளவுள்ள பொதுவினம் சிறப்பின மென்றுரைக்கப்படுகிற சில கூட்டங்களாகப் பகிர்வதற்கு உற்ற துணைகளாகும். பொருள்களைத் தேர்ந்து சீர்தூக்கி, ஒவ்வொன்றின் நலமிஃதென்றும் அலதிஃதென்றும் பகுத்தறியும் மனமுடையானுக்கு இவ்வினங்கள் தம்மியல்பிலேயே விளங்குவனவாம். ஆதலின், மாணாக்கனது முதற்கடமை, தான் காணு மனைத்தினுமுள்ள பொதுத்தன்மைகளைக் கவலையுடன் உற்று நோக்குதலேயன்றி மிகவும் வெளிப்படையாய்த் தோற்றும் வேறுபாடுகளையும் குறிக்க வேண்டுவதே. ஏனெனில், விடயங்களின் வேற்றுமை நயங்கள், சாயல் ஒளியுடன் செல்லுதல்போலப் பொதுத்தன்மைகளோடும் ஒருதலையாய் உடனியலுகின்றன. அவைகள் தாமே ஒருண்மைப் பொருளாகாவிடினும் ஒரு பொதுவினத்தை மற்றொன்றினின்றும், ஒரே பொதுவினத்தின்க ணடங்கிய சிறப்பினத்தை மற்றையவற்றினின்றும் பிரிக்கின்றன. எல்லாப் பொருள்களின்கண்ணும் நாடவேண்டிய பாகுபாடல்லது முறை, **இயற்கை ஒழுங்கு** எனப்படும். மொழியகராதியின்கணுள வார்த்தைகளின் ஒழுங்குபோலாதல், லின்னீயன் என்பவரது முறைமையின்படி நிலத்திணைப் பொருணூலிலுள மலர்களின் நிரைபோலாதல், செயற்கை முறைப்பாடுகளெல்லாங் கற்கப்புகுபவர்களுக்குத் தொடக்கத்திற் பயன்படத்தக்க உதவிகளாகலாம். ஆயினும், தனித்து அவையிற்றையே சார்ந்து உபயோகித்தா லவைகள் மெய்யறிவுக்கு இடையூறுகளாயினுமாகும். இயற்கைப்

பொருத்தத்தி னியைபுகளின்படி பொருள்களைச் சேர்க்கும் பயிற்சியடைதலை ஒவ்வொரு சிறுவனும் குறிக்கொளல் வேண்டும். சிறப்பியல்புகளைப் பற்றிய நேரிய ஊன்றிய நோக்கத்தோடு பொது வினைவுகளைப் பற்றி நுனிப் புன்மேய்ச்சல் போன்ற நோக்கமும் கலந்திருந்தாலொழிய அப்பழக்க மடைதலியலாது. நீர்க்குமுதம் தனது பெயரினாற் குமுதவினத்தோடு உண்மையாகவே யாதோரியைபு மில்லாதிருப்பினும் அதன்கண் ஒருவகையா மென்பது தோற்றுவித்தல் போலச் சாமானிய சனங்கள் இட்டமலர்களின் பெயர்களும் புறத்தியலும் ஒற்றுமை பற்றியேயன்றி ஆராய்ச்சி முதிர்வின்கண் ஏற்பட்டனவல்ல. செடி கொடிகளின் குணத்தையும், உறுப்புக்களையும் நுட்பமாய் உற்றுநோக்கிய நிலத்திணைப் பொருணூல்வல்லனே, அவ்வாறன்றி நீர்க் குமுதத்தைக் சகசா வினத்தினுட் படுத்தி, தானவ்வாறு செய்தற்குத்தக்க காரணங்களையும் நுமக்கு எடுத்துக் காட்டுவான். தேசசஞ்சாரம் மிகவும் எளிதாகிய இக்காலத்தில், உற்றுநோக்குதற் பயிற்சி அடைதற்கு உதவியாக, வாலிபர்கள் சமயம் நேரிடும்போதெல்லாம் தத்தமநாட்டின்கணுள்ள பொருட்காட்சிச் சாலைகளைப் போய்க்காண ஒருபொழுதும் தவறக் கூடாதென்றும், ஆங்குச் சென்றுழி, அவ்விடத்திற் குரித்தாகிய சிறப்புடைப் பொருளினிடத்திலேயே பொதுவாய்த் தங்கள் சிந்தையைச் செலுத்த வேண்டுமென்றும், யாம் அறிவுறுத்த வேண்டும்.

பொருந்திய வனைத்தையும் பொதுவி னோக்கினாற்
றிருந்திய மனத்தினிற் சிறிது மில்லையாம்.

## IV. பகுத்தறிவு.

கவனமாய் உற்றுநோக்கி நன்றாக வகுக்கப்பட்ட விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு மனம் தர்க்கித்தல் என்னும் செய்கை முறையால் மிகவும் நுண்ணியதோர் கட்டிடம் கட்டத் தொடங்குகின்றது. பொருள்கள் இத்தன்மையன வென்றறிதலோடு, அவை அவ்வாறாத லெங்ஙன மென்றும், அவை எப்பயன் கருதினவென்றும் நாம் அறிய விரும்புகின்றோம். பொருள்கள்தமது பல்வகைப்பட்ட பொதுவும் சிறப்புமாகிய இனங்களின் வகுப்பொருமையிற் குறையாதவாறு தெய்வ உளத்தின் உண்மை யொருமைப்பாடு, பொருள்கள் நிலைத்துவளரும் செய்கை முறைகளில் ஓரின்றியமையாதவொற்றுமையை உண்டாக்குகின்றது. இறைவனிடத்தினின்றும் வெளிப்பட்டுத் தோன்று மன்னுயிர்களின் சிறப்பொருமையால், தெய்வவொருமை காரணமாகப் புலப்படும் இவ்விருவகைத் தோற்றங்களைப்பற்றியும் நாம் ஆராயவேண்டுவதொருதலையாகின்றது. கடவுளினது பேரறிவினின்றும்வெளித்தோன்றும் நமது பகுத்தறிவு நமக்குரிய சிறியவாழ்க்கைகளின் செய்கைமுறைகளில் ஓரொற்றுமையை, அல்லது, (யாவரு முணரச் சொல்லுழி),ஒழுங்கிணக்கத்தைச் செய்து காட்டுவதி லிடைவிடாது தலைப்பட்டுக்கொண்டிருக்கிறது. பாங்காக முன் உரைத்ததுபோன்று, இவ்வண்ணம், பகுத்தறிவிலும், பகுத்தறிவினாலும், பகுத்தறிவிற்காகவுமே நிலைத்திருக்கு மிவ்வுலகத்தின் செயலனைத்தினும் அவ்வகை பொருமையையும், இணக்கத்தையும், இன்றியமையாச் சார்பையும் நாடும்பொருட்டு இயற்கையாகவே நாம் தீர்மானிக்கின்றோம். பொருட்டொடர்ச்சியின்கண் இத்தகைய ஒற்றுமையை நாடுமாறு ஒரு மனிதனைத்தூண்டும் உள்ளத்தினியல்பைக் கபால வித்தகர் காரணத்துவ மென்பர். ஏனெனின் கடவுளினின்றும் தொடங்கிய ஆற்றல்களின் இன்றியமையாத தொடர்ச்சியின்கண், ஒரு பொருளுக்குச் சற்றுமுன் நேருகின்ற விடயமே, சாமானிய சனங்களால் அப்பொருளின் காரணமெனக் கருதப்படும். நன்கு விளங்காத கேவல விடயங்களைப்பற்றிய அறிவையே வழக்கமாய் உட்கொள்ளத்தக்கவாறு அவ்வளவு ஆழப்பதியாத மன நிறைவுடைய மக்கள் சிலர் உளர். இதுநிற்க, நாடொறும் நாம் காணுமாறு, ஒரு விஷயத்திற்குக் காரணங்காணாது மகிழ்ந்திருத்தலினும் அதற்கு ஏதேனும் ஒரு காரணத்தை உண்டென உடனே ஒப்புதல், சாமானியமானமானுட புத்தியினுக்குக் காரணநாட்டம் உற்ற வியல்பாமென்பதற்குத் தக்க சான்று பகரும். இவ்விடயத்திற் சிறுவர்கள் முக்கியமாய்க் குறிக்கொளல் வேண்டியது யாதெனின், உண்மைக் காரணத்திற்குப் பிரதியாக ஒரு பொருளுக்கு அகஸ்மாத்தாய் முற்பட்டுத் தோன்றிய ஒன்றனை மெய்க்காரண மெனக்கொண்டு எளிதில் மருளும் வழக்கத்தினால்* ஏமாந்து போகாமலிருத்தலேயாம். நமது தென்னிந்தியாவின் குடதிசைக் கடற்கரை நாடுகளிற் பெய்யும் அளவிறந்த மழைக்குக் காரணம் அராபிக்கடலின் அண்மையும், மேற்கு மலைத்தொடரின் உயர்ச்சியுமா மென்பது எளிதாய் விளங்கும். மழைக்காலத்தில் மதுரையின் சீதோஷ்ண ஸ்திதியை அதே காலத்திலுள்ள சென்னை அல்லது பெரியகுளத்தின் சீதோஷ்ண ஸ்திதியோடொத்துப் பார்க்கும்போது, இவைகளினும் அது குளிர்க்குறைவாயிருப்பதற்குக் காரணம், மதுரை, நாட்டின் நடுவிலே இருப்பதும், சென்னை கடலடுத்திருப்பதும், பெரியகுளம் மலையடிவாரத்திலிருப்பதுமாமென உணர்தல் அரிதன்று. ஆயினும் விடயங்கள் மிகவும் கலந்து செறியப்பெற்றனவும், மனோவிகாரங்கள் பெரும்பான்மையும் வன்மை வாய்க்க பெற்றனவுமாகிய, ஒழுக்கவியல் அரசவியல்களில், தனக்கு அடிப்படையாயுள்ள விஷயங்களின் காரண வியைபை நிரூபியாது மேற்கொள்ளுகின்ற ஒருவகைத் தருக்க முறைக்கு உதாரணங்கள் அடிக்கடி காணலாம்.



'தன்னரசும், பிரபு வரசும் கலந்ததோர் துரைத்தனத்தினின்றுமே, இத்தேயத்தின் துன்பங்களனைத்தும் உண்டாகின்றன' வென்றும் 'குறைவற்ற ஒரு குடி அரசாட்சியை யேற்படுத்தி மந்திரவாதியின் கோலிற்

* இதனை ஏதுப்போலியென்றும், போலிக்காரண மென்றுங் கூறுவர் தருக்க நூலார். (Fallacy of non causa pro causa.)

போல ஓரே அடியில் அவையனைத்தையும் நீக்கலாகும்' என்றும், தான் அறிவித்த அபிப்பிராயத்தைப் பல 'முகமாகப் பல்வகை உதாரணத்தோடு வலியுறுத்திக் கூறிய ஒரு பெயர் பெற்ற குடித்தலைவன் இராசாங்க விஷயமாகச்செய்த பிரசங்கத்தை யாம் ஒரு முறை செவிசாத்தினேம். மனித சமூகத்தில் உண்டாகிய தீங்குகள் அனைத்திற்கு முற்ற மானசீகமானதோர் போலிக்காரணத்தையும் அது போலவே மானசீகமானதோர் போலித்தீங்கொழிவழியையும் மேற்கோடலாற் புரைபட்டதோர் விவாதம் இஃதென்பது நன்கு புலப்படும். சிறுவர்களுக்குத் திருத்திய தர்க்கவாத வழக்குப் பயிற்சியில், முன்காலத்துப் பிளேடோ வென்னும் புலவர் பெருமான் குறித்தவாறு, சிறிது காலம் திட்டமான கணிதப்பயிற்சிக்குட்பட வேண்டுமென்று, அவர்களுக்கு, நிச்சயமாகவே யாம் முதலில் அறிவுறுத்துவோம். எவ்விதத் தருக்கவாதத்திற்கும் இன்றியமையாததாகிய மனவுறுதி பயக்கும் சக்தியை இது வலியுறுத்தும். அன்றியும் இன்றியமையாப் பற்றுக்கோடு, நீக்கரிய தொடர்ச்சி, அல்லது தனிக்காரணத்துவம் என்ற இவற்றின் பொருள் என்ன வென்று அநுபவம் இல்லாதார்க்கு மெய்ம்மையாய் உணரவும் போதிக்கின்றது. ஆயினும் அவர்கள் இவ்வளவில் நிற்கக்கூடாது. மிக்க நுட்ப அறிவினருஞ் சில வேளைகளில் திருத்தமாகக் கணக்கிடத் தவறத்தக்க பல் வேறு மாறுபாட்டியல்புகளுக்குட்பட்டு விநோதமாய்த் தமக்குள்ளே செய்தும் செய்வித்தும் நிகழும் விஷயங்களும் ஆற்றல்களுமாகிய இவற்றின் செறிவை ஆதாரமாகக்கொண்ட மங்களது முடிந்தகொள்கையிற் சிறந்ததும் மிக முக்கியமானதுமாகிய ஒரு பகுதிக்குக்கணித நூலின் தர்க்கங்கள் ஒரு பொழுதும் பயிற்சி முறை ஆகா; ஏனெனில் அவைகள் நூல்நெறிக் கோட்பாடுகளையும் சங்கேதங்களையுமே மூலமாகக் கொண்டிருத்தலால் ஒருவாறு மொழிந்த பிறகு வேறுபடுதற்பாலன அல்லவாம். இராசாங்கநீதி சனசமூக விஷயங்களில் நமது வாதங்கள் கணித நூலின்கணுள்ள நியாயங்களினும் உறுதிக்குறைவு உடையனவல்ல. 'மற்று அவைகளினும் மிகக்கடினமாயும், விரிவாயுமுள தம்மனோவிகாரங்களும் தம்பக்கநிறுவும் வேட்கையும் ஆகிய இவை காரணமாக எழூஉம் ஒருபுறநோக்கம், விரைந்துரை, முடிவு, மனக்காட்சியின் மருட்கை ஆகிய இத்தகைய பெருந்தீங்குகளையே பரிகரிக்க வேண்டும். அரசியலுக்குரிய ஐயப்பாட்டின் காரணத்தைக் கண்டு தெளிதலில் அவ்வியல் வல்லோன் தவறுவானாகில் அது நூலின்கண் உள்ள ஐயப்பாட்டினாலன்று; மற்று, விஷயங்களைப்பற்றிய உணர்ச்சிக் குறைவினாதல், அவற்றைப்பற்றிய நேரிய நன்மதிப்புக் கொள்ளாதவாறு தடுக்கும் மனோவிகார வேட்கைகளின் செயலினாதல், தவறலாம்.

(இன்னும் வரும்.)

ச. கி. சுந்தராசாரியன்.

## கல்விச் செல்வம்.

" எண்டருநா லெண்பத்து நான்கு நூறாயிரத்தோடுண்டுபல் யோனி யெல்லா மொழித்து" ஆழாழியைக் கையினால் நீந்திக் கரையதனைக் கண்டாலன்ன அத்துணைச் சிறப்புடைத்தாய இப்பெறலரு மானிடயாக்கையைப் பெற்ற மாண்பினர் யாவரும், சின்னாளிருந்து பின்னாளழிவுபடும் இழிந்த தன்மைத்தாய், யார் மாட்டும் நில்லாது சகடக்காற்போல மாறிமாறி வரும் பொருட் செல்வத்தை யெட்டுணையும் பொருட்படுத்தாது, அறம் பொருளின்பம் வீடெனும் புருஷார்த்தங்கள் நான்கினையும் ஆண்பெண்ணெனு மிருபாலார்க்குங் கொடுத்தற்குப் பெரியதோர் கருவியாய்ப் புகழை நிலைநாட்டிக் கவலையேதேனும் வந்துழி, உடுக்கை யிழந்தவன் கைபோல் வந்துதவுந் தன்மைத்தாய கல்விச் செல்வத்தைக் கைக்கோடலே சிறப்புடைத்தாம். அத்தகைய கல்விச் செல்வத்துக்கு வரையறையொன்று மிலது. பூர்வம் இங்கிலண்டில் கிரீக் லத்தின் பாஷையிற் கொஞ்சம் கற்ற வொருவனைக் கல்விமான் என மதித்தனர்; இந்தியாவில் ஸம்ஸ்கிருதங் கற்றுச் செய்யுள் செய்யவல்லானைக் கலைவலோனெனக் கொண்டாடினர்; ஆனால் இப்பொழுதோ, பாஷையின் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியில் தேர்ந்திருத்தலேயன்றிக் கல்வியின் பிரிவுகளாகிய உளநூல், உடனூல், தருக்கநூல், தத்துவநூல், கணிதநூல், முதலிய பல நூல்களிலும் இயன்றவளவு கற்று,

" தொட்டனைத் தூறுமணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்றபடி அறிவைக் கூடுமானவளவு விருத்தி செய்தலே சரியானபடி கல்வியைக் கற்றலாகுமெனக் கூறுகின்றனர். உலகத்தில் நல்லார் குறைந்தும் தீயார் மிகுந்து மிருத்தல்போலப் புத்தகங்களிலும் உத்தம புத்தகங்கள் ஸ்வற்பமாயும் அதம புத்தகங்கள் எண்ணிறந்து மிருக்கின்றன. குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்வது போலன்றி, அவற்றுள் உத்தம புத்தகங்களையே தெரிந்தெடுத்து வாசித்தல் வேண்டும். அங்ஙனம் வாசிப்பதிற் பன்னாடை யொத்துக்குற்றத்தைக் கொள்ளாது நீரைப்பிரித்துப் பாலைப்பருகும் அன்னமொத்துக் கோதொரீஇக் குணத்தையே கொள்ளல் வேண்டும். நாம் அநேக புத்தகங்களை வாசிப்பதின் முக்கியக் கருத்தாவது நமது அறிவை விருத்தி செய்து அதனால் ஞானத்தை அடைவதற்காகவே யன்றி வேடிக்கையாகப் பொழுதைப் போக்குவதற்காகவன்று. இங்ஙனம் பொழுது போக்காகப் புத்தகங்களைக் கவனமின்றி வாசிப்பவர் முனைப்புல் மேய்ந்து செல்வரேயன்றி உண்மைச் சுவையினை யொருநாளும் அறியார். புத்தகங்களின் உண்மைப் பயனையடைய விரும்புவோர் முதலாவது அந்நூலிலுள்ள விஷயங்களை நன்கறிந்து கொள்ளல் வேண்டும்; பின்னர் அந்நூலையாக்கியோ

னது கருத்துக்களைப்பற்றி யாராய்ச்சி செய்தல் வேண்டும். வாசிப்போரது புறக்கண்ணுக்குத் தோற்றாது அகக்கண்ணுக்கு மட்டில் அகப்படுமாறு பல நுண்ணிய விஷயங்களை மறைபொருளாய்க் கூறுவது நூலாசிரியரது வழக்கம். அத்தகைய அரிய பெரிய நூல்களை ஆழ்ந்த கருத்துடனும் தீர்க்க யோசனையுடனும் உற்று நோக்கிப்பொருள் கொள்ளல் வேண்டும். அல்லாக்கால் தத்தம் மனம் போன வாறெல்லாம் பொருள் கொண்டு ஆசிரியர் கருத்துடன் முரண்பட்டிடர்ப்படா நிற்பர்.

தொடங்குங்காற் றுன்பமாயிருப்பினும் இறுதியில் இன்பம் பயப்பது கல்வியேயாம்; அன்றியும் பலவகைத்தாய செல்வங்களுள்ளும், கேடில்லாத விழுமிதாய செல்வம் கல்விச்செல்வமே யன்றி ஏனையவையல்ல. யாங்ஙனமெனிற் கல்விச் செல்வமுடையார் கொடையிற் கர்ணனிலும் மேம்பாடுடையராவர். கல்விச்செல்வம் பொருட் செல்வம் போன்று கொடுக்கக் கொடுக்கக் குறையாது மேலும் மேலும் விருத்தியாகும். பொருட் செல்வத்தைப் பெற்றோருக்கு அப்பொருளே பெரியதோர் துன்பமாய் முடியும். அன்னோர் மனத்துள் தம்பொருளைக் கள்வர் கவர்வரோ, பங்காளிகள் பகிர்வரோ, என்னும் எண்ணங்களெஞ்ஞான்றும் குடிகொள்ளும். பிறந்த காலையிற் கொண்டு வந்த தொன்றுமில்லை; பிறிது மிறந்த காலையிலுடன் செல்லும் பொருளுமில்லை யென்றோராது குறைந்துவிடுமே யென்னும் பயத்தால் தானுமனுபவியாது மனமொப்பிப் பிறர்க்குங்கொடாது "பாடு பட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக் கேடுகெட்ட மானிட'ராவர். தனங்காக்கும் பூதத்துக்கும் இவருக்கும் யாது வித்தியாசம்? கல்விப் பொருளோ அற்றன்று. இதற்குக் கள்வராதி பகைவரிலர். கல்வியைப் பெற்றோர் இம்மையில் தேருந்தோறும் நூல்களிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை யகமகிழக்கண்டு மறுமையிலு முயர்சதியெய்தி யெந்நாளும் இடையறுவின்பத்தை நுகர்வர். செல்வத்துக்கு நீராலும் தீயாலும் அழிவுண்டு; கல்விக்கு அத்தகைய அழிவு ஒரு நாளுமின்று. பொருட் செல்வமானது புத்திரர் மனைவியர் மனத்துள்ளும் பொறுமை யென்னு மொரு பாவியைக் குடியேற்றி அவரால் தமக்காபத்தையே விளைவிக்கும். கல்விச் செல்வமோ அன்னார்க்கு நற்புத்தி கூறி அவரை நன்னெறியில் நிறீஇத் தமக்கு வரும் அபாயத்தைப் போக்கும் உபாயத்தைக் கொடுக்கும். செல்வப் பொருள் அது கொடுபடும் சில்லோர்க்குப் பயன்படுமே யன்றிப்பல்லோர்க்கும் பயன்படக் கூடியதன்று. கல்விப் பொருளோ ஒரு விளக்கிற் பல விளக்குக்களும் அவற்றினின்றும் பற்பல விளக்குக்களும் ஏற்றிக் கொள்ளுமா ஒருவருக்குக் கொடுக்கின், அவர் பலருக்கும், அவர் பற்பலருக்குங் கொடுக்க, எண்ணிறந்தவருக்குப் பயன்படும். செல்வத்தைப் பிறருக்குத் தானஞ்செய்யின், அதனைப் பெற்றவர் உழைப்பின்றிப் பெற்றமையின், "தான் வருந்திப் பெறாத பொன்னுக்கு மாற்றுமில்லை யுரையுமில்லை" யாதலால் பொருளைத்



தீயவழியிலிறைத்துத் தாமுங் கெட்டுத் தம்மைச்சார்ந்தோரையும் குடியராயுங் கூத்தியராயு மாக்கிவிடுவர். கல்விப்பொருளைக் கொடுக்கின், அதனைப் பெறுபவர் தீயரேயாயினும், அவர் பெறுங் கல்வியால் அவரது அஞ்ஞானமானது ஒளியைக் கண்ட இருள்போல் நீங்க அவரது தீக்குணத்தீச்செயல்களையொழித்து நன்னிலை யெய்துவர்; அன்றியுமவரைச் சேர்ந்தோரையும் சன்மார்க்கத்தில் நிறுத்த முயல்வர். செல்வப் பொருளைக் கொண்டார்க்குத் திருப்தி யென்பதே கிடையாது. "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, யம்மா பெரிதென் றகமகிழ்க" என்பதை யொருநாளு மோரார். அன்னோர் "ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங் கட்டியாளினுங் கடன் மீதிலே" என்றபடி தமது ஆசைக்கு யாதும் வரையறையிலாது விடுத்துப் பொருளோ பொருளோ வெனப் பொருட் பைத்தியங்கொண்டு 'ஊணையடித்து உலைவாயிற் போடவே' நோக்கங்கொண்டிருப்பர். கல்விச் செல்வங் கொண்டாரோ, தம்மிடம் பிறர் கற்றுங்கேட்டும் பயன்படுமாறு தம்மாலியன்றவரை உதவுவரே யன்றித் தாம் மட்டிற் சாரதாபீடமாயும் கல்விக் களஞ்சியமாயும் பிறங்க, ஏனையோர் சுத்த சூனியராய் மூட சிரோமணிகளாயழிந்துவிட வேண்டுமென்று ஒருபொழுதுங் கருதார். செல்வத்தைக் கைக்கொண்டோர் கல்விப் பொருளைத் தேடாது விடுவரேல் அன்னோர்க்கு அகக்கண்ணில்லாது போதலே யன்றி முகக்கண்ணு மொளியிழந்துபோம். கல்விசால் புலவரேனும் அன்பொழுக்கங்களிற் சிறந்த பெரியவர்களேனும் இவர்களைக் காணவரின் அவர்களைக்காணாததுபோலப் பாவித்துக் கண்ணிலிகுமரராய் வணங்கா முடியராய், முகத்தைத்திருப்பி எக்கழுத்தத்துடன் அண்ணாந்திறுமாந் தேப்பம் விட்டு நிற்பர். அந்தோ! அஞ்ஞான மென்னும் இருளானது நல்லோரது முகதரிசனமுஞ் செய்ய வொட்டாது இவர்களுடைய கண்களை மறைக்கின்றதோ அல்லது,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்னும் நாயனார் அருமைத்திருவாக்கின்படி இவரது கண்கள் உண்மையாகவே ஊனக்கண்களாய் விட்டனவோ அறியோம். கல்விப்பொருள் கொண்டவரோ, பெரியவர்களையும் அறிவுடையாரையும் கண்டுழிமிகவும் மனமகிழ்ந்து முகமலர்ந்து அவர்களுக்கு இன்சொற்கூறி யுபசரித்து 'அடக்கமமரருளுய்க்கு' மாதலின் மிகவும் அடக்கத்துடனிருப்பர். செல்வப்பொருளுடையாருக்குத்தம் நாட்டில் மட்டும் சிறப்பும் தம் பரிஜனங்களிடத்து மட்டிற் செல்வாக்கு முண்டு. கற்றவர்க்கோ 'சென்ற விடமெல்லாஞ் சிறப்பு'. "கதுமென நின்னைக் கைப்பிடித் தோர்தமக், கெதுவு நன்னாடே! எதுவு நல்லூரே!!" என்றார் நந்தம் ஆசிரியர் பரிதிமாற்கலைஞரும். செல்வப்பொருள் விரைவிலழியுந் தன்மைத்தாதலின், அழிந்த அக்கணத்திலேயே பெற்ற

தாயும் வேண்டாள்; உற்ற மனைவியும் வேண்டாள். கல்விப்பொருளோ என்றும் அழியாது ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யெழுமை யெழுபிறப்பும் போயுதவும்.

கல்வி யில்லாதவர் மக்களுட்பதராவர், இவர் பெரிதும் பயனில் சொற் பாராட்டுதலின். யாவரு மில்லாதவிடத்து அசுவமேத யாகம்புரிதலாகக் கற்றவரில்லாத விடத்துக் கல்லாதவர் வாய்க்கு வந்தபடி பிதற்றலாமே யொழியக் கற்றார்முன் வாய்திறத்தல் தமதறியாமையைப் பறையறைந்து காட்டுவதொக்கும்.

" கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்"

என்றார் நாயனாரும். இவர்களுக்கென்றே மௌனத்தை மலரவன் படைத்துள்ளான். இன்னோர் கற்றவ ரவைக் களமேறுவது கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றன்றே. கற்றவருக்கு அக்கல்வியே பொலிவு நிறைந்த அணிகலனாகும். அன்னோருக்கு மற்றோரணிகலன் வேண்டாவாம். செல்வப் பொருளுடையார் கல்விப்பொருளும் பெறுவரேல், பொன்மலர் மணம் வீசினாலொப்பச் சிறப்படைவர். கல்விப்பொரு ளில்லாதவரிடத்துண்டான செல்வமானது பத்தடுத்த தீமைத்து.

" நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

என்றார் பொய்யில் புலவரும்.அளவிடற்கரியஇக்கல்வியின் பெருமைகளைஇங்ஙனம் ஒவ்வொன்றா யெடுத்துக்கூறின் முடிவுபடுந்தகைமைத்தோ? கல்வியுடையவனே மனிதனெனப் படுவான். ஏனையோர் நன்மரமாவர். கல்விச் செல்வமே செல்வமெனப்படும். ஏனைய செல்வமெல்லாம் 'செல்வம்' (செல்லுவோம்) எனக்கூறிமாயுந் தன்மையவாம்.

இத்துணைச் சிறப்புடைத்தாய கல்வியைக் கற்று அதன்படி அணுவுந் தவறாது ஒழுகல்வேண்டும்.

" கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக."

கற்றபடி ஒழுகாரேல், இவர் பெற்ற கல்விப்பொருளால் யாதுபயனோ? ஆடையுடுத்து மேடை மீதேறிப் " பொய் புகல்வதினும் பெரிய தொருபாவமில்லை" யென வாய்ப்பறையறைந்து, பின்பு இவரே பொய்சொல்லப் புகுவாராரானால், குங்குமஞ் சுமந்த கழுதைக்கும் இவருக்கும் யாது வித்தியாசம்? கல்வி கற்று அதன்படி யொழுகாதவரைப் பின் பற்றுவது அம்பிதுணையாக யாறிழிந்தவா றொக்கும். ஆகவே கல்வி கற்றலும் அதன்படி நிற்றலும் இன்றி யமையாதவை ஆயினும் 'கல்வி கரையில கற்பவர் நாட்சில, மெல்ல



நினைக்கிற் பிணிபல' வாதலின் சகல பாஷைகளிலும் வல்லவராய் விடுவமென்பது முடியாத காரியம். இக்காலத்திற் கலைபயில்வோர் பலரும் பொருளீட்டற்குத் துணைக் கருவியாகிய ஆங்கிலத்தையே பயில்வாராகின்றனர். கனம் பொருந்திய சர்வகலாசாலையார் சுயபாஷை யென்பதொன்றை யுடன் சேர்த்திராவிடில், இப்போது கலாசாலையிற் பயிலும் மாணவரிற் பலர் தமது சுயபாஷை யின்னதென்பதையும் சிறிது காலத்தில் மறந்துவிடுவர். சுயபாஷை யென்பதொன்றுண்டோ வெனவும் ஐயுறுவர். பரீக்ஷைகளில் தேறுவதற்குத் தமிழு மின்றியமையாத வொன்றாக நியமிக்கப்பட்டுண்மையின், இற்றை ஞான்று தமிழ்மணமானது சற்றேனும் கமழ்கின்றது. இப்போதையமாணவர்கள் கலாசாலைகளில் தமிழ்கற்கும் முறையை அம்மவோ! என்னென்றுரைப்பது? இவர்களிற் பலர்க்குத் தமக்குப் பாடமாயுள்ள இலக்கணத்தை நன்னூலெனக்கூற நாவெழாது நியனூலெனக் குழறிக்கழிப்பர். தமிழைப்பற்றிச் சொல்லுங் கூற்றெல்லாம் இவர்க்குக் கூற்றுவனாகவே தோற்றும். பரீக்ஷை நெருக்கத்திற் சனியான தமிழுடனும் அழவேண்டுமே என மனம் வருந்திப் பரீக்ஷையில் தேறவேண்டிய அவ்வளவுக்கு மட்டில் தட்டித்தடுமாறிக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் படித்துத் தொலைப்பர். செந்தமிழ்பயிலும் என்னரிய நண்பர்காள்! சற்றுச் செவிசாய்ப்பீராக! நாம் பிறந்ததும் வளர்ந்ததும் தமிழ் நாடன்றோ? நாம் வீட்டிற் பேசியதும் பேசுவதும் இனிய தமிழன்றோ? திரைகடலோடித் தூரதேசம் போயினும் பிறந்த நாடெனில், ஆர்வமும் அன்பும் அச்சுயநாட்டின் மீதுண்டாவது யாவருக்கும் இயற்கையேயன்றோ? அஃதேபோல் ஆங்கிலங்கற்று ஆனந்தக் கூத்தாடினும், சுயபாஷையின் மீதுள்ள ஆர்வத்தை யெட்டுணையேனும் மறப்பது சாலுமோ? செந்நலங்கனிந்து கட்டழகுவாய்ந்த இன்பவல்லியரைக் கடிமணம் புரிந்து களித்திருக்கும் காளையரும், ஈரைந்து மாதம் வருந்திப் பெற்றுச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த அன்னைக்குத் துயரெனில், அரைக்கணமுந்தரியாது அன்பும் ஆசையும் பிடர்பிடித்துந்த விரைந்து சென்று உதவுவரோ? அன்றித்தாழாத் தளராத்தலைநடுக்காத்தண்டேன்றா வீழா விறக்கு மிவண்மாட்டு நாமேன் கவனம் செலுத்தல் வேண்டு மென்றயர்ந்திருப்பரோ? இதனை நீவிரே சற்று ஆராயுமின். ஆங்கிலத்தால் ஆயிரமாயிரமாய் வரினும் தமிழால் வருவது வறுமையேயெனினும், தொண்டை நாதனைத்தூதிடை விடுத்து, முதலையுண்ட பாலனையழைத்து, எலும்பைப் பெண்ணுருவாக்கி மறைக்கதவினைத்திறந்த கன்னித்தண்டமிழ் எனச்சிறப்பு வாய்ந்த நம் தமிழன்னைக்கு இற்றை ஞான்று குறையெனின், இனி அரைக்கணமும் நாம் சும்மாவிருத்தல் சாலுமோ? ஆகையால் மாணவர்காள்! எழுமின்!! எழுமின்!!! நம்பால்வரும் பழிக்கு இடங்கொடாது இனியேனும் தமிழை அன்புடன் பயின்று அதன் விருத்தியை நாட முன் வருமின்!

செய்யூர்-முத்தைய முதலியார்.

# அத்துவித வாக்கியத் தெளிவுரை.

அற்றேற் கருடபாவனை செய்வோன் கருடனாதல் கண்டிலம், அப்பாவனையால் விடந்தீர்தல் கண்டனமாகலிற் போலிப்பாவனையும் பயன்படுமென்பது பெறப்படுமாலெனின், அறியாது கூறினாய், மாந்திரிகன் றன்னுடம்பைக் கருடனாகப் பாவிப்பானல்லன், மற்றென்னையோவெனின், கருடனுக்கதிதெய்வமாக நிற்குமந்திர மூர்த்தியாகத் தன்னான்மாவைப் பாவிப்பன், அங்ஙனம் பாவித்தவழிச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய வான்மா வாண்டம் மந்திர ரூபியாய் நிற்றற் கிழுக்கின்மையின் அதுபற்றி யாசங்கையின்மையுணர்க. இன்னும் பாவனைகளு முபாசனங்களுங் கற்பித்துக்கொண்டு செய்யும் போலி யென்றன் மாயாவாதி கூறுங்கூற்றாதலின், அது சைவசித்தாந்தத்திற் கேலாமையறிக. அற்றேல், ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு மியல்புடைய னென்றற்கும், அதனானே தன்னாற் கணிக்கப்படு மந்திர ரூபியாய் நிற்பனென்றற்கும் பிரமாண முண்டாயினன்றேயது பற்றிக் கருடபாவனை முதலாயின வுண்மைப்பாவனை யென்று கொள்ளப்படும்; ஆதலினிவற்றிற்குப் பிரமாண மென்னையெனின்;—சர்வ ஞானோத்தர முதலிய ஆகமங்களே பிரமாணமெனவறிக. அஃதெங்ஙனமெனிற் காட்டுதும்:—சர்வ ஞானோத்தரத்திற் பசுவும், பாசமும், அதிகாரஞ்செய்திருப்பதாகிய பதியும், அதிகாரத்தி னொழிந்து தன்னியல்பி னிற்பதாகிய சிவமு மெனப்பதார்த்த நான் கென்றெடுத்துக்கொண்டு, அவற்றிற்குத் தனித்தனி யிலக்கணமுணர்த்திப் பின்னது கேட்ட ஆறுமுகக்கடவுளுக்கு, அங்ஙன மப்பிரமேயமாய், ஒன்றோடுவமிக்கப்படாததாய், அதிசூக்குமமாய், வியாபகமாய்த் தன்னியல்பினிற்குஞ் சிவத்தை யறியுமாறெங்ஙன மென்னு மாசங்கை நிகழாமைப் பொருட்டுச் சிவப்பொருளத் தன்மைத்தாயினும், அதனை யறிதற்குபாயங் கூறுகின்றாம்; அவ்வுபாயம் வாதிகளெவரானு மறியப்பட்ட தன்றாய்க் குரு பரம்பரையினறியப்படுவது; ஒருவருக்கும் யாங் கூறினேமல்லேம்; அதனை நீ கேட்பாயாக வென்றதன் பெருமையை யெடுத்துக்காட்டி அனாதி முத்தனாய் நின்ற சிவனுக்குரிய தன்மைகளும், அத்தன்மையனாகிய சிவனே நானெனச் சிவோகம் பாவனை செய்யுமாறும், அவ்வாறன்றித் துவித பாவனை செய்தாற் படுமிழுக்கும் விளங்க விரித்துணர்த்தித் துவித பாவனையைக் கைவிட்டுச் சிவோகமென அத்துவித பாவனை செய்வோன், ஏகதேசமாய் நின்றறிவதாகிய சிற்றறிவினீங்கி, முழுதும் வியாபகமாய்நின்றறிவதாகிய முற்றுணர்வு விளங்கிச் சிவனை யறிந்து தான் சிவனேயாவனெனச் சிவனையறிதற் குபாயங்கூறிப்பின்னது கேட்ட ஆறுமுகக்கடவுளுக்கு மேலுத்தேசங் கூறும்வழியும், இலக்கணங் கூறும் வழியுஞ் சிவனுமான்மாவு மிருபொருளென வைத்தோதுதலிற் சிவனின் வேறு



கிய வான்மா சிவோக மெனப்பாவிக்கும் அத்துவித பாவனையாற் சிவனேதானாக ஐக்கியமாமாறெங்ஙன மென்றாசங்கை நிகழாமைப் பொருட்டு, ஆன்மாத் தன்னியல்பே யறியாது பசுத்துவத்தோடு கூடிய வழிப்பசுவாய் நின்றான், அதுபோலத் தன்னையறிந்து சிவத்துவத்தோடு கூடியவழிச் சிவமாய் நிற்பதற்கையமில்லை, ஆதலாற் றன்னையுந் தலைவனையும் அபரபர பேதத்தானுந் தூலசூக்கும பேதத்தானு மெப்பொழுதும் பயின்றறிதல் வேண்டுமென்றோதினீர்; அற்றேல், ஆன்மாவி னியல்பு தனித்து நில்லாது பசுத்துவத்தோடுகூடிய பசுவெனவுஞ் சிவத்துவத்தோடுகூடிச் சிவமெனவும் பல தன்மைப்பட்டு நிற்குமா றென்னை யென்று மீளவுமையுறாமைப் பொருட்டு அதவா வொன்றெடுத்துக் கொண்டு தெளிவு பிறவாது மீள மீள மயங்குதற் கேதுவாகிய வார்த்தைகளை விகற்பித்திங்ஙனம் பலவாகச் சொல்வதென்னை யெனக்கூறி யொழித்தெல்லாச் சங்கைகளு நீங்கித் தெளிவுபெறுதற் கேதுவுந் தொகுத்தொரு வார்த்தையி னுணர்த்துவான் புகுந்து "சர்வோதருமம்" என்றருளிச் செய்தார். இதன்பொருள், ஆன்மா அங்ஙன மிருதன்மைப் படுமாறென்னை யென்றையுறாதெல்லாப் பொருளின் றன்மைகளு மான்மாவுக்குளவாம்; அஃதெங்ஙனமெனின் ஆன்மா வெதனையா னெனப்பற்றினான் அதனதன் சுபாவமே தன் சுபாவமாந் தன்மையுடைமையான் (யுடையான் என்பதூஉம் பாடம்) அதுவதுவாயே நிற்பனென்றிங்ஙன மான்மாவை யறியுமாறு தொகுத்துக் கூறினாங்கண்டு கொள்க வென்பதாம். இங்ஙனந் தொகுத்துணர்த்தி, இன்னு மிவ்வாறறியு மான்ம ஞானத்தின் பெருமையும் அதனாற் பெறும் பேறும் அதனை யறிதற் குபாயமும், அறிந்தானது பெருமையும் விரித்துக்கூறி யிதற்கு மேற்சொலற்பாலது சிறிதுமில்லை, ஆகலான், மனோவிகற்பங்களை யொழித்திங்ஙன மதனுண்மை யறிந்துபாயங்களைச் செய்வோன், இங்கே சீவன் முத்தனாய் அகம்புறமெங்கும் வியாபித்துத் "தத்தருமி தருமியா தருமி" யெனப்பட்ட முற்றுணர்தன் முதலிய வெண் குணங்களையுடையவனாய் (யுடையனாய் என்பதூஉம் பாடம்) இங்ஙனஞ் சிவத்துவத்தைப் பெற்றுச் சிருட்டிப்படுந் தன்மை முதலிய வின்றிச்சிவசமமாவன். இத்தன்மை யுடையவனுக்குத் தவம், செபம், தியானம், பூசை முதலியன வொன்றும் வேண்டா; சத்திய முக்காலுஞ் சத்தியம்; இதற்கு மேலறிதற்பாலன வொரு நூலினுமில்லை யென வலியுறுத்திப்பின்னு மான்மா வெல்லாவற்றினும் அதுவதுவாய் நிற்கு மாற்றைப் பூதான்மா முதலறுவகைப்படுத்தி விரித்துநின்று கூறுதுங் கேட்பாயாக வென்றெடுத்துக்கொண்டு, பூதபரிணாமமாகிய வுடம்பினியல்புகளும், ஆன்மா அவ்வுடம்பைப்பற்றிய வழிப் பூதான்மாவென நிற்குமாறும், அகத்தின் கண்ணவாகிய வாக்குகளினியல்பும், ஆன்மாவவற்றைப் பற்றி யந்தரான்மாவென நிற்குமாறும், சூக்கும பூத முதலிய தத்துவங்களினியல்பும், ஆன்மா சுத்த தத்துவங்களைப் பற்றியவழித் தத்துவான்மாவென நிற்குமாறும், தத்துவங்களுள்ளும் ஆன்மா வெவ்வேறு தத்துவங்

களைப்பற்றிய வழி யவ்வத்தத்துவ மயமாயே நிற்பனென்பதூஉம் (னென்பதும் பாடம்), ஆன்மாப் போத்துருத்துவ (போத்திருத்துவ பாடம்) மெய்திப்புருடதத்துவனென நிற்கு மியல்பும், அங்ஙனம் புருடதத்துவ மயமாய் நின்று பிரகிருதி குணங்களைப்பற்றி யின்பதுன்பங்களை நுகரும் வழிச்சீவனென நிற்கு மென்பதூஉம், சுரர், நரர், விலங்கு, புள், தாவர மெல்லாவற்றிற்கு மதி தெய்வங்களுள வெனவும் தாவரசங்கமங்களுண் மந்திரங்களா லதிட்டிக்கப்படாத வுயிர்களில்லை யெனவும், மந்திரங்களையுச்சரிக்கு முறைமை யிவ்வாறெனவும் இவ்வாறு மந்திரங்களி னியல்பும், அவ்வம்மந்திரங்களைக் கணிப்புழியான்மாப் படிகம்போல அவ்வம் மந்திர மயமேயாகி மந்திரான்மாவென நிற்குமாறும், அதனின் வேறாகிய வவ்வை வகைப் பெயரு நீங்கியவழி மேற்கூறியவத்துவித பாவனையாற் பரமான்மாவென நிற்றல் சித்தென்று சாதிப்பொதுமைபற்றி யியற்கை யாதலுந் தெரித்துணர்த்தி, இங்ஙனமாகலான் அத்துவித பாவனையுடையோன் ஞானக் கண்ணினாற் சிவனை யான்மாவிற் கண்டு முழுதும் வியாபகமாய் நின்றறிவதாகிய முற்றுணர்வுடையவனாய், அவ்வப் பொருளியல்பெல்லா மறிந்து மலவாசனை நீங்கிக் கேவலமாய் நின்று முடிவுகாண்கில்லாப் பேரின்பத்தைப் பெறுவானென முடிந்தது முடித்துக்காட்டி யிங்ஙனம் ஸ்ரீகண்டருத்திரக் கடவுள் ஆறுமுகக் கடவுளுக்கு ஞானபாகஞ் செவியறிவுறுத்தருளினார் ; இன்னு மிதனையிங் குரைத்தவாறு பற்றி விரித்துரைத்துக் கொள்க.

இவ்வாகமத்துளித்தனை வலியுறுத்திச் சிவனோ டொற்றுமைப்பட நின்று தன்னைப் பாவிப்பதாகிய ஆன்மஞான மோனமொன்றே யப்பிரமேயமாயொன்றோ டுவமிக்கப்படாது நின்றவச்சிவனை யறிதற்குபாய மென்றும், அங்ஙனம் பாவிக்கவே யச்சிவனோ டொற்றுமைப்பட்டுப் பேரின்பத்தைப் பெறுவானென்பதும், அசுத்தப்பொருளோ டொற்றுமைப்பட்டு நிற்குமாறெங்ஙன மென்னுமைய நீக்குதற்குத் தொகுத்தொரு வார்த்தையாற் கூறுதுமென்றெடுத்துக் கொண்டு ஆன்மாவெதனை யெதனையானெனச் சார்ந்தா னதனதன் சுபாவமே தன் சுபாவமாய் அது வதுவதுவாய் நிற்பனென்று கூறியிங்ஙன மேவலாற் சிவனோ டொற்றுமைப்பட்டு நிற்புழிச் சிவன் குணங்களாகிய வெண்குணங்களுந் தன்றன்மையாகக் கொண்டு சிவனேயாய் நிற்பன், இதுவே சிவத்தைப் பெறுதலென்றும், இதற்கு மேலாய பலனொரு நூலானு மில்லை முக்காலுஞ் சத்தியமென வலியுறுத்தியும், ஆன்மா வெல்லாவற்றினு மதுவதுவாய் நிற்குமாற்றை யின்னும் விளங்கக்கூறுதுமென்றெடுத்துக்கொண்டு, பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா வென்ற றுவகைப்படுத்து, அவ்வவற்றிற் கூறிய வழி யவ்வப்பெற்றது வதுவாய் நிற்பனென வாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தையுவமை கூறியும், இங்ஙனமேனை யாகமங்



கூறிய வழி யவ்வப்பெற்றது வதுவாய் நிற்பனென வாண்டு நிற்குமாறு விரித்துணர்த்தியும், படிகத்தையுவமை கூறியும், இங்ஙனமேனை யாகமங்கள் போலப்பொருள் கவர்ச்சிப்படுதற் கிடங்கொடாத வண்ணம் ஆறுமுகக்கடவுள் மாட்டுவைத்த கருணை மிகுதியான, அங்கை நெல்லிக்கனி போல வான்மாவினியல்பு விளங்கவுணர்த்திப் பலகாலும் வலியுறுத்தி யெல்லா வாகமங்களினுஞ் சிறந்ததென்பது தோன்றச் சர்வ ஞானோத்தர மெனப் பெயருமிட்டருளிச் செய்த ஸ்ரீ கண்ட ருத்திரக்கடவுளின் றிருவுளக் குறிப்பிங்ஙன மென்க.

இனியுடல் பொருளாவி மூன்று ஞானதீக்கையின் முதல்வனுக்கெனத் தானஞ்செய்தளித்தலான் முன் செயற்கையாற் றன்னுடைமையாய் நின்ற மூன்றுந் தானஞ்செய்த பின்னர்த் தனக்கின்றிச் சிவனுக்குடைமையாயவாறு பெற்றாம். பெறவே, ஆண்டுப்பொருளென்ற துடம்புபோல வொற்றுமை யுடைத்தாய்த் தன்னானுகரக்கிடந்த வுடல்வினையே யன்றி முன்பே தன்னாற் றுறக்கப்பட்டிழிந்த தரப்பொருளன்றென்பது தானே போதருதலானும், அவ்வாறின்றி யாண்டுப் பொருளென்ற தெல்லாவற்றிற்கும் பொதுவெனக் கொள்ளினும், உடல்வினையு மவற்றுளடங்குதலானும், அங்ஙன முதல்வனுக்கென்றீந்த வுடல் வினையை மீளவுந் தானுகரக் கருதுவோன் அவ்வாறு தானஞ்செய்தளித்த வான்மாவை மீளவுஞ் சுதந்திரனாகக் கருதுவோன் சிவசம வாதிபோலொப்பவனு மாதலின் முதல்வனுக்கென்றளித்த பொருளைத் தானுகரக் கருதுதல் பெரியதோ ரிழுக்காதலறிக. இன்னுந் தன்னுடம்பே தனக்கின்றி முதல்வனுக் குடைமையாக ஈந்த வழி யவ்வுடம்பிடமாக வரும் வினைப்பயனைத் தானுகருதற்கோரிபல் (யை ?) பின்மையு மறிக. இன்னுந் தனக்குத்தானே சுதந்திரமின்றிச் சிவனுக்குடைமையாய வழித் தான் மற்றொன்றுட னுகருமாறு யாண்டையதென்க. தன்னாலளிக்கப்பட்ட பொருள் மூன்று முதல்வனென்று கொண்டானென்பதனானன்றோ (னென்பதன்றோ-பாடம்) "என்றனாவியுமுடலுமுடைமை யெல்லாமுங் குன்றே யனையாயென்னை யாட்கொண்ட போதே கொண்டிலையோ" எனவும், "உடலிடங் கொண்டா யினி யுன்னை" எனவும் "என்றவனை" எனவும் "என்று கொண்டாயென்னை" எனவும் "நாமொழிந்து சிவமான" தெனவு மோதியவாறறிக.

**அத்துவித வாக்கியத்தெளிவுரை**

முற்றும்.

192-ஆம் பக்கத்தொடர்ச்சி

5-ஆம் அத்தியாயம் (ஸந்நியாச யோகம்.)

[இந்தச் சுலோகமுங்கூட 'ஸந்நியாஸ' சப்தார்த்தத்தை விவரிக்கின்றது. 'மனதினால் ஒழித்து' என்பதனால், அபிமானத்தியாகம் (அபிமானத்தை, பற்றைவிடுதல்) சொல்லப்படுகின்றது].

14. ஆத்மா கர்த்துருத்துவத்தைப் படைப்பதில்லை உலகத்தின் கர்மங்களைப் படைப்பதில்லை. கர்மப்பயன்களின் சம்பந்தத்தைப்படைப்பதில்லை (உண்டாக்குவதில்லை). ஸ்வபாவமே பிரவர்த்திக்கின்றது.

[கர்மங்கள்—உலகத்திற்கு வேண்டிய இரதம், பானை, வீடு, மேடை முதலியன. கர்மப்பயன்களின் சம்பந்தம்—மேற்சொல்லிய பதார்த்தங்களைச் செய்தவனுக்கு அவற்றின் பயன்களோடு சம்பந்தம். ஸ்வபாவம்—அவித்யா ரூபமான பிரகிருதியென்னும் மாயை.]

[ஆத்மா (தேகத்திற்கு அதிபதி) வானது நம்மை வேலை செய்யத்தூண்டுவதில்லை. நாம் காரியங்கள் செய்வது ஆன்மாவின் பிரேரபணையினாலன்று. ஆத்மா ஒரு காரியத்தைச் செய்விப்பது மில்லை, செய்வது மில்லை, அதற்கும் காரியங்களின் பயனுக்கும் சம்பந்தமுமில்லை. காரியங்களைச் செய்யும் நமக்கும் அந்தக் காரியங்களின் பயனுக்கும் சம்பந்தமுண்டாக்குவது ஆத்மாவன்று. ஆத்மா ஒன்றைச் செய்விப்பதுமில்லை, செய்வதுமில்லையெனின், மற்றுயார் எனின்,—காரியங்களைச்செய்வதும் செய்விப்பதும் ஸ்வபாவத்தின் வேலையாம். அந்த ஸ்வபாவத்திற்கு அவித்தையென்றும், பிரகிருதியென்றும், மாயையென்றும் பெயராம். 7-ஆம் அத். 14-ஆவது சுலோகத்தைப்பார்க்க.]

[தேவதைகள், பசுக்கள், பக்ஷிகள், ஸ்தாவரங்கள் முதலியவைகளை ஸ்வரூபமாயுள்ள பிரகிருதியுடன் கூடியிருக்கப்பட்ட இந்த உலகத்தில் அவ்வவற்றின் கர்த்துருத்துவத்தையும், கர்மங்களையும், அக்கர்மங்களினாலுண்டாகும் பயன்களுக்குச் சம்பந்தங்களையும், பிரபு, அஃதாவது, கர்மத்திற்கு வசப்படாமல் ஸ்வபாவமான ஸ்வரூபத்தோடு இருக்கப்பட்ட ஆத்மா, சிருஷ்டிப்பதில்லை. மற்று எப்படி எனின்—கர்த்துருத்துவம் முதலியவைகளெல்லாம், அநாதிகாலமாயுண்டாயிருக்கப்பட்ட பூர்வ பூர்வ கர்மங்களினால், தேவர் முதலிய ஸ்வரூபங்களாகிய பிரகிருதியின் ஸம்ஸர்க்கத்தினாற் (சம்பந்தத்தினாற்) செய்யப்பட்ட அந்தந்த ஆத்மாபிமானத்தினால் விளைந்த வாஸனைகளினாற் செய்யப்படுகின்றன. அவை ஆத்மஸ்வரூபத்தினாலுண்டானவையல்லனவாம். ஸ்வபாம்—பிரகிருதி.]

[வஸ்துவின் ஸ்திதியைக்கொண்டு பார்த்தாற் கர்த்துருத்வம் இல்லையென்பது இந்தச் சுலோகத்தின் தாற்பரியமாம். ஜீவாத்மாவைப் பிரபுவென்பது ஜடங்களை யுத்தேசித்து.]



15. ஆத்மா எவருடைய பாபத்தையும் ஸ்வீகரிப்ப (மேற்கொள்வ) தில்லை. புண்யத்தையும் ஸ்வீகரிப்பதில்லை. ஞானம் அஜ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கின்றது; அதனாற் பிராணிகள் மோகமடைகின்றார்கள்.

['எவருடைய உம்' : பக்தர்களுடையவும். ஆயின், என்ன உத்தேசத்துடன் பக்தர்கள் பூஜை, யோகம், தானம், ஹோமம் முதலிய நற்கர்மங்களைச் செய்கின்றார்களெனின், பகவான் சொல்லுகின்றார்: விவேகமானது அஜ்ஞானத்தினால் மூடப்பட்டிருக்கிறது; அதனால் ஸம்ஸாரத்திலுழலுகின்றவர்கள் (அவிவேகிகள்) மோகித்து "நான் செய்கின்றேன்", "நான் செய்விக்கின்றேன்," "நான் அநுபவிக்கின்றேன்," "நான் அனுபவிக்கச் செய்கின்றேன்" என்பது முதலாய் நினைக்கின்றார்கள். இதனாற் பக்தர்கள் செய்யும் பூஜை முதலிய நற்கர்மங்களும் அஜ்ஞானத்தினாலேயே யென்று ஏற்படுகின்றது.]

[சுலோகத்தில் 'ஆத்மா' என்பதற்கு 'விபு' என்னும் பதமுபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 'விபு' எங்கு மிருப்பவன். தேவதைகள் முதலிய சில தேகங்களில் மாத்திரமே ஆத்மா இருக்கிறதென்பதும் மாறுடர் முதலிய தேகங்களிலில்லை யென்பது மில்லை என்று தாற்பரியமாம்—எங்கும் நிறைந்திருக்கிறதென்பது பொருள். இந்த ஆத்மாவானது தனக்குச் சம்பந்தப்பட்டவர்களா யெண்ணப்படுகிறவர்களுடைய பாபத்தையும் போக்காது; தனக்கு விரோதிகளா யெண்ணப்படுபவர்களுடைய புண்யத்தையும் போக்காது. ஆகையால், ஆத்மா ஒருவனுக்குச் சம்பந்தியும் மற்றொருவனுக்கு விரோதியுமாதலில்லை.

['அஜ்ஞானம்'=ஞானத்திற்கு விரோதியாகிய பூர்வ பூர்வ கர்மம். இதனால் இந்த ஆத்மாவின் ஞானம் ஸங்கோசிக்க (குறுக்க)ப்பட்டது. இந்தக் கர்மத்தினாலேயே தேவர் முதலானோருடைய தேக சம்பந்தமும், தேவர் முதலானோருடைய தேகங்களில் ஆத்மாபிமானமென்னும் மோஹமு முண்டாகின்றன. அதனால், அப்படிப்பட்ட ஆத்மாபிமான வாஸனையும் அதற்குத் தகுந்த கர்ம வாஸனையு முண்டாகின்றன. வாஸனையினால் விபரீதமான ஆத்மாபிமானமும் கர்மாரம்பமும் ஏற்படுகின்றன.]

16. எந்த ஆன்மாக்களின் அஜ்ஞானமானது ஆத்மாவினுடைய ஞானத்தினால் நாசஞ்செய்யப்பட்டுளதோ, அவர்களுடைய ஞானமானது அந்தப் பர தத்துவத்தைச் சூரின்போலப் பிரகாசிக்கச் செய்யும்.

[ஞானம்=ஆத்ம விஷயமான விவேகஞானம். சூழ்ந்து மூடிக்கொண்டிருப்பதனால் மோகத்தை யுண்டாக்குகின்ற எவருடைய அஜ்ஞானமானது ஆத்ம விஷயமான விவேக ஞானத்தினால் கழிக்கச் செய்யப்பட்டதோ, அவ

ருடைய ஞானம், சூரியனைப்போல், எல்லா வஸ்துக்களையும் பிரகாசிக்கச் செய்கின்றது. அதுவே பரமார்த்த தத்துவமாம்.]

[எந்த ஆத்மாக்களின் ஆத்மஞானத்தினால் கர்ம ஸஞ்சய ரூபமான அஜ்ஞானம் நசிக்கச் செய்யப்பட்டதோ, அவர்களுடைய இயல்பான, சிரேஷ்டமான, அந்த ஞானமானது ஸங்கோச மில்லாததாய், எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும்.]

[ஈசுவரனை நேராய்த்தெரிந்து கொள்வதே—ஈசுவர விஷயமான பிரத்தியக்ஷ ஞானமே—அஜ்ஞானத்தைப் போக்குகின்றது.]

17. அதனிடத்துப் புத்தியுள்ளவர்களும், அதுவே ஆத்மாவென்று எண்ணுகிறவர்களும், அதனிடத்தே அபிநிவேசமுள்ளவர்களும் (அதனிடத்தே மனதைச் சலனமில்லாமல் வைத்திருப்பவர்களும்), அதுவே பரமகதியென்றிருப்பவர்களும், ஞானத்தினால் பாபங்களைப் போக்கிக்கொண்டவர்களும் மறுபடி பிறவாமையை யடைகின்றார்கள்.

['அது'=பிரம்மம். இந்த லக்ஷணங்களுள்ள ஸந்நியாசிகள் மறுபடியும் தேக சம்பந்த மடையார்; ஜன்மமெடார்; மோக்ஷமடைவார்.]

['அது'—ஆத்மா. அந்த ஆத்ம விஷயமான மனதுள்ளவரும், அந்த அப்பியாசத்திலாசையுள்ளவரும், அதுவே முக்கியமான பிரயோஜனமென்றெண்ணுவோரும்; எந்த அவஸ்தையிலுள்ள ஆத்மாவுக்குப் புனராவிருத்தி (மறுபடி வருதல், மறு பிறப்பு) இல்லையோ, அந்த ஆத்மாவை யடைவார்கள். மேற்கூறிய லக்ஷணங்களுள்ளவர்கள் ஸ்வஸ்வரூபத்தோடுகூடிய (தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்திலிருக்கிற) ஆத்மாவை யடைவார்கள்.]

ஞானத்தினால் ஆத்மவிஷயமான அஜ்ஞானத்தைப்போக்கிக்கொண்டவர்கள் தத்துவத்தை (உண்மையை) எப்படிப் பார்க்கின்றார்கள்?—கேள்:

18. வித்தையுடனும் விநயத்துடனும் கூடிய பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாயைப் புசிப்பவனிடத்தும் (சண்டாளனிடத்தும்) ஞானிகள் சமபுத்தியுள்ளவர்களாயிருப்பார்கள்.

['விநயம்'—உபசமம், சாந்தி; உத்தம ஸம்ஸ்காரங்களினால் வரும் தன்மை. இங்கே சொல்லப்பட்ட பிராணிகளில், மிகவும் உத்கிருஷ்டமாய்ப் பிராமணனைச் சொன்னார்; அவன் உத்தம ஸம்ஸ்காரங்களினால் ஆத்ம தத்துவ பராயணனானவன், மிகுந்த ஸாத்விக குண முள்ளவன். அந்த அந்தஸ்துக்குக் கீழ்ப்பட்டதாய்ப் பசு சொல்லப்பட்டது. அது ஸம்ஸ்காரங்களில்லாதது, மத்தியமமானது, ராஜஸகுண முள்ளது. கேவல தாமஸகுண மதிக



மாயுள்ள, ஸம்ஸ்காரங்களில்லாத, அதமமான யானை முதலியவை கடைசியாய்ச் சொல்லப்பட்டன. இவை யெல்லாவற்றிலும், புத்திசாலிகள் (பண்டிதர்கள்) ஒன்றையே, ஒரு ஆத்ம தத்துவத்தையே காண்பார்கள்; அந்த ஆத்ம தத்துவமானது ஸாத்விக ஸம்ஸ்காராதிகளின் ஸம்பர்க்கமில்லாததாயும் (முக்குணங்களுக்குச் சம்பந்தப்படாததாயும்) விகாரமில்லாததாயுமிருக்கின்றது.]

[பிராமணன், பசு, யானை முதலிய விஷமாகாரங்கள் (உருவவித்தியாசங்கள்) பிரகிருதியைச்சேர்ந்தவைகளேயன்றி, ஆத்மாவைச் சேர்ந்தவை யல்ல. ஆத்மாவானது, ஞானஸ்வரூபமானதால் (ஞானமாகிய ஒரே உருவமுள்ளதாதலால்) எல்லாவிடத்தும் சமமேயாம் என்று ஆத்ம ஞானிகள் நினைப்பார்கள்.]

[பரமேசுவரனுடைய ஸ்வரூபங்களெல்லாவற்றையும் எல்லாவிடத்தும் சமமாய்ப் பார்ப்பது அபரோக்ஷ (நேரான) ஞானத்திற்குச் சாதனமென்று இந்தச் சுலோகம் தெரிவிக்கின்றது].

ஆக்ஷேபணை.—நீர் சொல்லிய பண்டிதர்கள் பாபிகளாவர். அவருடைய அன்னத்தைப் புசிக்கக்கூடாது. ஏனெனின், விதி இவ்வாறிருக்கின்றது:

நந்வபோஜ்யாந்நாஸ்தே தோஷவந்த:

ஸமாஸமாப்யாம் விஷமஸமே பூஜாத—(கௌதமஸ்மிருதி, 17,,20).

"சமானமானவர்களை வேறுவிதமாகவும், சமானமில்லாது, தாழ்மையானவர்களைத் தனக்குச் சமமாகவும் பூஜிக்கப்பட்ட, மரியாதை செய்யப்பட்ட இடத்தில் அன்னமுண்ணலாகாது."

சமாதானம்.—அவர்கள் பாபிகளாகார்கள். எங்ஙனமெனின்,—

19. யாருடைய மனது, எல்லாவற்றினிடத்தும், சம திருஷ்டியடைந்திருக்கிறதோ, அவர்களால் இவ்வுலகத்திலேயே, பிறவி (த்துன்பம்) ஜயிக்கப்படுகின்றது. பிரமமானது தோஷமில்லாததும், சமமானது மன்றோ? ஆகையால் அவர்கள் பிரம்மத்தினிடத்தே உள்ளவர்களாவர்.

[பிரம்ம மொன்றையே பார்ப்பவர்களாயும், எல்லாப்பூதங்களிலும் பிரம்மம் சமமாகவே இருக்கின்றதென்னும் நினைவு கொஞ்சங்கூடச் சலியாத மனத்தை (அந்தக்கரணத்தை) யுடையவர்களாயும் இருக்கிற ஞானிகள் பூமியின்மீது உயிர்த்திருக்கும்பொழுதே பிறவித் துன்பத்தை ஜயிக்கின்றார்கள். நாய் தின்னும் புலையர்கள் முதலானோருடைய அசுத்தமான சரீரங்களிற் பிரம்மமானது அவர்களது அசுத்தத்தினால் தோஷப்பட்டதுபோல் மூடர்களுக்குத் தோற்றியபோதிலும், பிரமமானது குணபேதங்களினால் உண்டாகும் பேதங்களில்லாததாய்த் தோஷமற்றதாய்ச் சுத்தமாயிருக்கின்

றது. பிரம்மம் நிர்க்குணமாதலின் அதற்கு ஸ்வகுணபேத (சொந்தமாகிய குணத்திற் பேத) மில்லை. ஆசை (காமம்) முதலானவைகள் தேகமாகிய க்ஷேத்திரத்தின் குணங்களேயன்றி ஆத்மா (சைதன்யம்) வினுடையன வல்லவென்று 13 ஆவது அத். 6-ஆவது சுலோகத்திலும், ஆத்மாவானது ஆதியில்லாதது (பிறப்பில்லாதது), அதற்குக் குணங்களில்லை யென்று 13 ஆவது அத். 31-ஆவது சுலோகத்திலும் பகவான் சொல்லுகின்றார். ஆத்மாவினிடத்துப் பேதங்களைக் காட்டுவதற்குக் கடைசிக் குறிகளெனப்பட்ட அந்த்ய விசேஷங்களுமில்லை. ஏனெனின், ஒவ்வொரு சரீரத்திலும் அவையிருக்கின்றன வென்பதற்கு நிதர்சனமில்லை. ஆகையாற் பிரம்மம் சமமாகவும் ஒன்றாகவுமே யிருக்கின்றது. இந்தக் காரணங்களினால் ஞானிகள் (பண்டிதர்கள்) பிரம்மத்தினிடத்தே இருக்கின்றார்கள்.

வைசேஷிக மதப்பிரகாரம் அந்த்ய விசேஷ மென்பது ஒரு நித்தியவஸ்துவினிடத்து, அதனை மற்றொரு நித்திய வஸ்துவினின்று பகுத்துக்காட்டுவதற்காக, இருக்கப்பட்ட ஒருவிதமான லக்ஷணமாம்; அந்த லக்ஷணம் இத்தன்மையதென்று எடுத்துச் சொல்ல முடியாததாம். வேறுவேறாய் ஒவ்வொரு நித்திய வஸ்துவுக்கும் அதனைக் குறித்துக் காட்டுவதற்காக அமைந்திருக்கும் லக்ஷணமாம். வேறுவிதங்களால் தெரிந்திருக்கப்பட்ட ஒருவித்தியாசத்திற்குக் காரணம் காட்டும் நிமித்தமாக இந்த 'அந்த்ய விசேஷ'மென்னும் லக்ஷணம் ஊகிக்கப்படுகின்றது. நித்திய வஸ்துக்களாவன:—பிருதிவி (மண்), அப்பு (ஜலம்), தேயு (சோதி), வாயு, ஆகாசம் (ஈதர் Ether), காலம், தேசம் (Space), ஆத்மா, மனம் ஆகிய இவைகளினுடைய அணுக்களாம். ஆத்மாவினிடத்து அந்த்ய விசேஷங்கள், அது வித்தியாசமாய்க் காணப்படுவதனால், ஊகிக்கப்படுகின்றது. இதை வேதாந்திகள் ஸ்தாபிதமானதாக ஒப்புக்கொள்ளார். சரீரவித்தியாசத்தினால் ஆத்மாவில் வித்தியாசமிருக்கிறதென்று சொல்லக்கூடாது; ஏனெனின, ஒரு யோகியானவன் ஒரே காலத்திற் பலசரீரங்களைத் தரிக்கவல்லவனா யிருக்கின்றான்.

தேகம் முதலானவைகளின் தொகுதியே ஆத்மாவென்னும் அபிமானமும், அதுவே "நான்" என்னும் அகங்காரமும் ஞானிகளுக் கில்லாததனால் அவர்களுக்குச் சரீரங்களின் தோஷங்கள் கொஞ்சங் கூடச்சம்பந்தப்படாத தோஷவாசனையும் அவர்களை யணுகாது. மேலேயுதாகரிக்கப்பட்ட கௌதம சூத்திரமானது, சரீரம் முதலியவற்றின் தொகுதியே ஆத்மாவென்று அபிமானங்கொண்டு அகங்கார மடைந்திருப்பவர்களுக்கு மாத்திரமே உரித்தாகும்; ஏனெனின், அது பூஜிப்பவர்களையும் பூஜிக்கப்படுபவர்களையுங் குறிக்கின்றது. பூஜிப்பதிலும், தானம் கொடுப்பதிலும், சில குணவிசேஷங்கள் கவனிக்கப்படுகின்றன; பிரம்மஞான முள்ளவர்களுக்கும், ஷடங்கங்களெனப்படும் ஆறுசாஸ்திரங்களிற் றேர்ந்தவர்களுக்கும், நான்கு வேதங்களிற் சமர்த்தர்களுக்கும், இன்னும் இவைபோன்ற யோக்கிதை யுள்ளவர்களுக்கும் அவர்களுடைய குணவிசேஷங்களுக்காகப் பூஜை செய்யப்படுகின்றது, தானம் கொடுக்கப் படுகின்றது. ஆனால், பிரம்மமோவெனின், அது சர்வ குணதோஷசம்பந்த மில்லாததா யிருக்கின்றது; நற்குணமுமில்லை, தோஷமுமில்லை, ஆகையால் ஞானிகள் 'பிரம்மத்தினிடத்து இருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டது. இஃதன்றியும், மேலே ஆக்ஷேபணைக்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட கௌதம சூத்திரம் கர்மவிஷயமானது; இங்கு நாம் 13-ஆவது சுலோகம் முதல் (இந்த அத்தியாயத்தின் கடைவரைக்கும்) பிரஸ்தாபிப்பது ஸர்வகர்மஸந்நியாஸயோக விஷயமாகும்.]



['இவ்வுலகத்திலேயே': சாதனத்தை யாசரிக்கும் தசை (ஸ்திதி) யிலேயே. 'பிறவி': ஸம்ஸாரம். பிரகிருதியின் சம்பந்தமென்னும் தோஷமில்லாமற் போவதனாற் சமமாயிருக்கும் ஆத்மவஸ்துவன்றோ பிரம்மமாகும்? ஆத்மசமத்துவத்திலிருப்பவர்களானால், பிரம்மத்தினிடத் திருப்பவர்களேயாவர். பிரம்மத்தினிடத் திருப்பதன்றோ ஸம்ஸார ஜயமாகும்? ஆன்மாக்கள் ஞானஸ்வரூபிகள் (அவை ஞானஸ்வரூபிகள், ஒரேஸ்வரூப முள்ளவைகள்) என்னும் சமத்துவத்தையே நினைத்துக் கொண்டிருப்பவர்கள் முக்தர்களே என்று அர்த்தமாம்].

[இதற்குக் கீழ்ச் சுலோகத்திற் சொல்லிய சமத்துவத்தையே இந்தச் சுலோகம் துதிக்கின்றது].

ஆத்மாவாகியபிரம்மமானது தோஷங்களில்லாததாயும் சமமாயுமிருக்கின்றது. ஆகையால்,

20. நிலையான புத்தியுள்ளவனும், மோக மில்லாதவனும், பிரம்மஞான முள்ளவனும், பிரம்மத்தினிடத்தே இருப்பவனும் (பிரம்மமா யிருப்பவனும்) இஷ்டமானதை யடைந்து சந்தோஷிக்கக்கூடாது. இஷ்டமில்லாததை யடைவதனாற் பயப்படவுங் கூடாது.

['நிலையான புத்தியுள்ளவன்': எல்லாப் பிராணிகளிலுமுள்ள ஆத்மா ஒருவனே; அவன் சமமானவன், தோஷமில்லாதவன் என்னும் நிச்சயமுள்ளவன். 'பிரம்மத்தினிடத்திருப்பவன்': கர்மங்களைச் செய்யாதவன்; எல்லாக் கர்மங்களையுஞ் சந்நியசித்த (விட்ட) வன்.

தேகமே ஆத்மா வென்று நம்பிக்கொண்டிருக்கிறவர்களுக்குப் பிரியமும் அப்பிரியமும் சந்தோஷத்தையுந் துக்கத்தையுமுண்டாக்குகும். கேவலம் ஆத்மாவையே பார்க்கிறவனுக்கு அப்படிப்பட்ட சந்தோஷமுந் துக்கமுமுண்டாகமாட்டா; ஏனெனின், ஆத்மாவுக்கு ஒருபொழுதும் பிரியமுமில்லை, அப்பிரியமுமில்லை].

[ஆத்மாவினிடத்து ஸ்திரமான புத்தியுள்ளவன் 'நிலையான புத்தியுள்ளவ'னாவன். 'மோகம்'=நிலையில்லாத சரீரத்தையும் நிலையான ஆத்மாவையுமொன்றெனப்பாவிப்பது. அஃதில்லாதவன் 'மோகமில்லாதவன்.' "பிரம்மஞான முள்ளவன்'—'பிரம்ம வித்'=ஆத்மாவின் உண்மையை யறிந்தவன். 'பிரம்மத்தினிடத்தே யிருப்பவன்'=அந்தஞானத்தையே (பிரம்மத்தின் உண்மையான ஞானத்தையே) அப்பியாசஞ் செய்து கொண்டிருப்பவன். ஒவ்வொரு சரீரத்திலிருக்கும்பொழுது பழைய கர்மவாசனையை யநுசரித்துச் சில விஷயங்கள் பிரியமாயும், சில பிரியமில்லாமலு மிருக்கும். ஸ்திரமில்லாத இந்த இஷ்டாநிஷ்டங்களை யடைந்து சந்தோஷத்தையாவது பயத்தையாவது கொள்ளக்கூடாது.]

[இந்த அத்தியாயத்தில் இனிவரும் சுலோகங்களினால் ஸந்நியாஸம், யோகம், ஞானம் என்கிற மூன்றும் மொத்தமாக விவரிக்கப்படுகின்றன].

அன்றியும், பிரம்மத்தினிடத் திருந்துகொண்டு,

21. வெளி விஷயங்களிற் பற்றில்லாத அந்தக்கரணமுள்ளவனாகி அவன் ஆத்மாவினிடத்து எந்தச்சுகமுண்டோ அந்தச்சுகத்தை யடைகின்றான்; பிரம்மத்தினிடத்துச் சமாதியுடன் கூடிய அந்தக்கரண முள்ளவனாகி, அவன் ஒருபொழுதும் குன்றாத சுகத்தை யடைகின்றான்.

[ஆத்மாவினிடத்துக் குறைவில்லாச் சுகத்தையடைய விரும்புகிறவன் க்ஷணகாலமாத்திரமாயிருக்கிற வெளிவிஷய சுகங்களினின்று இந்திரியங்களைத் திருப்பி உள்ளிழுக்கவேண்டும்].

['வெளிவிஷயங்களிற் பற்று'=ஆத்மாவைவிட வேறான விஷயங்களின் அநுபவம். எவன் வெளிவிஷயாநுபவங்களில் ஸங்கமில்லாத மனமுள்ளவனாகி, ஆத்மாவினிடத்தே சுகத்தை யடைகின்றானோ அவன் பிரகிருதி யப்பியாசத்தைவிட்டுப் பிரம்மாப்பியாசத்துடன் கூடிய மனமுள்ளவனாகிப் பிரம்மாநுபவ ரூபமான அக்ஷய (குறைவில்லாத) சுகத்தையடைகின்றான்].

[இந்தச்சுலோகத்தினால் யோகத்தின் ஆதிக்யம் (விசேஷத்துவம்) வெளியிடப்படுகின்றது. காமம் (விருப்பம்) இல்லாத ஆத்மாவினிடத்து எவன் சுகத்தை யடைகின்றானோ, அவனே பிரம்மத்தைக்குறித்த யோகத்துடன் (தியான முதலியவைகளுடன்) கூடிய ஆத்மாவுள்ளவனாகி அந்த அக்ஷய சுகத்தையடைகின்றான். தியானம் முதலானவைகளுடன் கூடியவனுக்கே குறைவில்லாத ஆத்ம சுகமுண்டாகும்; வேறெவ்விதத்திலுமுண்டாகாது.]



இன்னு மிந்தக்காரணத்தினாலும் அவன் இந்திரியங்களை வெளி விஷயங்களினின்று நிவர்த்திக்கவேண்டும்.

22. விஷயங்களும் இந்திரியங்களும் சம்பந்தப்படுவதனாலுண்டாகிற அநுபவங்கள் எவையோ அவை துக்கத்திற்குக் காரணங்களேயன்றோ? அவை முதலுங் கடையு முள்ளவை. (சொற்பகால மிருப்பவைகளாம்). ஓ குந்தி புத்திரா! (அர்ச்சுனா)! ஞானமுள்ளவன் அவைகளிற் பிரீதி செய்யான்.

[இந்திரியங்களும் இந்திரிய விஷயங்களும் சம்பந்தப்படுவதனாலுண்டாகும் போகங்கள் துக்க காரணங்களேயாம்; ஏனெனின், அந்தப்போகங்கள் அவித்தையினாலுண்டாயின. நமக்குச் சம்பவிக்கிற எல்லாத் துக்கங்களும் அந்தப்போகங்களினின்றே விளையவில்லை யென்றுங் காண்கிறோம். இவ்வுலகத்தி லெப்படியோ அப்படியே பரலோகத்திலும் 'காரணங்களே' என்பதிலுள்ள ஏகாரத்தினாலறிக. சமுசாரத்திற் சுகமென்பதன் வாசனை மாத்திரம் கூட இல்லை யென்று தெரிந்து கொண்டு, ஒருவன் இந்திரிய விஷயங்களென்னுங் கானலினின்று இந்திரியங்களை நிவர்த்திக்கவேண்டும். அந்தப்போகங்கள் துக்க முண்டாக்குவதே யன்றி, அவைகளுக் கொருமுதலும் (ஆதியும்) கடையும் (முடிவும்) இருக்கின்றன. ஓரிந்திரியமானது தனது விஷயத்துடன் சம்பந்தப்படுவது (ஸம்யோகப்படுவது) அந்தப்போகத்திற்கு ஆதியாகும், இந்திரியம் விஷயத்தினின்று பிரிவது (வியோகப்படுவது) அதற்கு முடிவாகும். போகங்கள் அவற்றின் ஆதிக்கும் அந்தத்திற்கு மிடையிலுள்ள நிமிஷ மாத்திரத்திலுண்டாகிற அநித்தியமானவைகள். பரமார்த்த தத்துவத்தை யறிந்த விவேகியானவன் இவைகளிற் சந்தோஷமடையான். பசு முதலானவைகளின் மிருகத்தன்மையையுடைய மூடர்கள் மாத்திரமே இந்திரிய விஷயங்களில் ஆனந்திப்பார்கள்].

அன்றியும், சிரேயோமார்க்கத்திற்கு (நற்கதிக்கு) த்தடையாகிக் குறுக்கே நிற்கின்ற சத்துருவான தோஷமொன்றுளது; அது தீத்தன்மையது; அதனுடன் போராடுவது வெகு கஷ்டம்; எல்லா அநர்த்தங்களும் அதனாலேயே உண்டாகின்றன; அதனை ஒதுக்கித் தள்ளுவது வெகு பிரயாசையான காரியம்; அந்தச் சத்துருவைத் துரத்தியடிக்கும் பொருட்டுப் பலமான பிரயத்னம் பண்ணவேண்டுமென்று பகவான் சொல்லுகின்றார்.

23. எவன் இங்கேயே, சரீரத்தை விடுவதற்கு முன்னமே, காமத்தினாலும் குரோதத்திலும் உண்டாகிற வேகத்தை (ஆகவேசத்தை)ச்சகித்துக் கொள்ளச்சமர்த்தனாகின்றானோ, அந்த மனிதன் யோகமுள்ளவன்; அவன் சுகமுள்ளவன்.

(இன்னும் வரும்.)

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

# ஆர்க்கிமதேயர் கண்டவிதி.

ஆர்க்கிமதேயர் என்பவர் ஒரு மேற்புலவிஞ்ஞானி. பொருளின் இயல்களை யறிய முயன்றவர்களில் இவர் ஒருவர். இவர் கண்டுபிடித்த உண்மை இவர் பெயராலேயே 'ஆர்க்கிமதேயர் கண்டவிதி' என்று வழங்கி வருகிறது.

திரவ பதார்த்தத்திற் போடப்பட்ட ஒவ்வொரு வஸ்துவும் மேலே எழுப்பப்படுகிறது. உதாரணமாகத் தண்ணீரில் நெட்டியைப் போட்டால் அது மேலே எழும்புகிறது. ஒரு மரத்துண்டைப் போட்டாலும் அதுவும் உடனே எழும்புகிறது. தண்ணீர் அவ்விடத்தில் இல்லாவிட்டால் அந்நெட்டியும் மரத்துண்டும் கீழே விழுந்துவிடுமென்பதிற் சந்தேகமில்லை. அவற்றை விழாதவண்ணம் எழுப்புவதெது? தண்ணீரே. இதனால் தண்ணீர்க்குமேலெழுப்புஞ் சக்தியுண்டென்றறிகிறோம். ஆனால் அத்தண்ணீரில் இருப்புத்துண்டு முதலிய பளுவான வஸ்துக்களை இட்டால் மேலெழும்புவதில்லையே; ஆண்டு அத்தண்ணீர்க்கு மேலெழுப்புஞ் சக்தி இல்லையோ என்று சந்தேகிக்கலாம். இதனைத் தெளிந்தறியும்பொருட்டு ஒரு சோதனை செய்யலாம்.

ஒரு தராசை யெடுத்து அதன் ஒரு தட்டின் கீழாக ஒரு கயிறு கட்டி அதில் ஓர் இருப்புத்துண்டைக் கட்டுங்கள். மற்றொரு தட்டில் எடை சரிவரு மட்டும் மணலையாவது சிறு கற்களையாவது போடுங்கள். பின்பு ஒரு செம்பிற் சலம் கொண்டுவந்து இருப்புத்துண்டு மாத்திரம் தண்ணீரில் அமிழும்படி வையுங்கள். அப்போது மணலுள்ளது வலிதாகத் தாழ்தலைக் காண்பீர்கள். மீண்டும் தராசு முன்னைய நிலைக்குவர மணலினின்றும் சிறிது எடுத்துவிடவேண்டியதாயிருக்கும். அதாவது, இருப்புத்துண்டு தன் எடையிற் சிறிது குறைந்துவிட்டது. தண்ணீரிலிருக்கும்போது மாத்திரம் சிறிது எடை குறையக் காரணமென்ன? நெட்டி முதலியவற்றை மிதப்பித்த தண்ணீர்க்குள்ள மேலெழுப்புஞ் சக்தி இவ்விடத்தும் இருப்புத்துண்டை மேலெழுப்ப முயலுதலேதான் காரணம். ஆதலின் இத்தன்மையாகிய மேலெழுப்பும் சக்தி தண்ணீர்க்கெப்பொழுதுமுண்டு. இச்சக்தியால் தண்ணீரிலிட்ட வஸ்துக்கள் எடை குறைவதுபோல் தோன்றும்.

தண்ணீரிலிட்ட வஸ்துக்கள் வாஸ்தவமாகவே எடை குறைகிறதா என்று தெளிய—தராசின் ஒரு தட்டில் இருப்புத்துண்டையும் சலமுள்ள ஒரு செம்பையும் வைத்து எடை சரிவருமட்டும் மற்றொரு தட்டில் மணலையிடுங்கள். பிறகு இருப்புத்துண்டை யெடுத்துச் செம்பிற்குள்ளிருக்கும் சலத்திற்போடுங்கள். இப்பொழுதும் தராசின் முள் முன்போலவே நேராய் நிற்பதைக்காண்பீர்கள். இதனால் இருப்புத்துண்டு தண்ணீரிலிருக்கும்

* Principle of Archimedes.



போது வாஸ்தவத்தில் எடை குறைவதில்லை என்றும் ஆனால் தண்ணீரில் அந்தரமாய்த் தொங்கவிடும்போது சிறிது எடை குறைவதுபோல் தோன்றுமென்றும் அறிந்துகொள்ளலாம்.

ஆயின் தண்ணீரில் இட்ட வஸ்துக்கள் தம்மெடையில் எவ்வளவு குறையுமென்பது தெளிய வேறொரு சோதனை செய்யவேண்டும்.

முன்னெடுத்த தராசையே எடுத்துக்கொண்டு அதனடியில் ஓர் ஆழாக்கைக் கயிற்றாற் கட்டித்தொங்கவிடுங்கள். வேறோர் ஆழாக்கை யெடுத்து அது நிறைய மணலையாவது சிறு கற்களையாவது போட்டு உள்ளே நீர்புகாதபடி ஒரு மூடியுமிட்டு முன் தொங்கவிட்ட ஆழாக்கின் கீழ் இதனையும் வேறொரு கயிற்றால் தொங்கவிடுங்கள். (ஆழாக்கினளவு உட்புறம் வெற்றிடமில்லாமல் முழுவதும் இரும்பாக இருப்பதொன்று பெறக்கூடுமானால் இன்னும் உத்தமம்). பிறகு எடை சரிவருமட்டும் மற்றொரு தட்டில் மணலையாவது சிறு கற்களையாவது போடுங்கள். பிறகு அகன்ற ஒரு பாத்திரம் கொண்டுவந்து மணலுள்ள ஆழாக்கு தண்ணீரில் அமிழும் வரைக்கும் அப்பாத்திரத்தில் தண்ணீர் விடுங்கள். அப்பொழுது அவ்வாழாக்கு முன்சொல்லியவண்ணம் எடை குறைந்து மற்றொரு தட்டுத்தாழ்வதைக்கவனிப்பீர்கள். எவ்வளவு எடை குறைகிறதென்பதைக்கண்டு பிடிக்க மேலுள்ள வெறும் ஆழாக்கினிறையச் சலம் விடுங்கள்; உடனே தராசின் முள் நேராக நிற்பதைக் காண்பீர்கள். இதனால் கீழுள்ள ஆழாக்கு தண்ணீரில் அமிழும்போது ஆழாக்குச் சலத்தின் எடை குறைகிறதென்பது தெளிவாய் விளங்குகிறது. இதுபோலவே '**எத்தன்மையான வஸ்துவும் தண்ணீரில் அமிழும்போது தன்னளவு தண்ணீரின் எடை குறைகிறது**'. இச்சூக்குமத்தைத் தான் ஆர்க்கிமதேயர் கண்டு பிடித்தார். ஆதலின் இதற்கு '**ஆர்க்கிமதேயர் கண்டவிதி**' என்று சொல்லப்பட்டு வருகிறது.

வஸ்துக்கள் தண்ணீர்க்குள் தம்மளவு தண்ணீரின் எடை குறைவதற்குக் காரணம் முன் சொன்னபடி அவ்வெடையளவு வலியோடும் தண்ணீர் அவ்வஸ்துக்களை மேலெழுப்புஞ் சக்தியேயாம்.

மேல் விளக்கியவற்றால் சில வஸ்துக்கள் தண்ணீரில் அமிழ்வதேன் சில மிதப்பதேன் என்பது எளிதில் அறியக்கூடியதாயிருக்கிறது. தண்ணீரில் அமிழ்ந்த வஸ்துக்கள் தம்மளவு நீரின் எடை வலியோடு அத்தண்ணீரால் மேலெழுப்பப்படும் என்று முன் சொன்னோமல்லவா? அவ்வாறு மேலெழுப்பும் வலியானது வஸ்துக்களின் வாஸ்தவ எடைக்கு மிஞ்சுமாயின் அவ்வஸ்துக்கள் மேலெழுப்பப்பட்டு மிதக்கும்; அவ்வாறன்றிக் குறையுமாயின் அவை தண்ணீருள்ளும் கீழ் நோக்கிவிழும். வஸ்துவின் எடையும் அதனை மேலெழுப்பும் திரவத்தின் வலியும் சமானமாதலரிது; அரிதெனினும் உண்டாயின் அது மிதத்தல் அமிழ்தல் இரண்டுமின்றி இட்டவிடத்தில் இருக்குமென்றறிக.

சி. சுப்பிரமணியாசாரி, பி. ஏ., எல். டி.

# மகாராணியவர்கள்மீது இரங்கற்பா.

---

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சூல்சாங்கு முகிலென்னச் சுடர்தாங்கு மிரவியெனச் சுவறு தென்றும்
பால்தாங்கும் வேலையெனப் பயன்றுங்கொ ளாதருளிற் பரிந்து நீள்செங்
கோல்தாங்கிக் குடிதாங்கிக் குணந்தாங்கிக் குறைதாங்கிக் கொற்றந் தாங்கி
மால்தாங்கு முலகமெலாம் புரந்தபெரு மாட்டியுமே மரித்தா ளென்னே !

நிதியிருந்தென் படையிருந்தென் நிலமிருந்தென் நீரிருந்தென் நிகரி லாத
பதியிருந்தென் பற்றுடைய பலரிருந்தென் பலமிருந்தென் பரந்த கேள்வி[ணு
மதியிருந்தென் நட்பிருந்தென் மகவிருந்தென் மற்றிருந்தென் மறுத்தற்கொண்
விதியிருந்த படியன்றே வேந்தர்சிகா மணியுமிறந் தடைந்தாள் விண்ணில்.

சேணரச ருளம்வியந்து சிரந்துளக்கப் பெரும்புவியிற் றிறலின் மிக்க
ஆணரச ரடிவணங்க முடிபுனைந்த பெண்ணரசி யணங்கே நின்போற்
பேணரச ரினிச்செங்கோல் பெற்றரசு புரிந்திடினும் பெறுதற் கொண்ணு
மாணரசி நின்குணங்கள் மறப்பவரு முண்டுகொலோ மாந்தர் தம்முள்.

பெண்பாலா ரெல்லாரும் பெருமையிழந் தாவலிப்பப் பெரியோர் மற்றோர்
கண்பாலா றுயொழுக்கிக் களியிழப்பக் கலியையா யிரத்தி ராண்டி
னெண்பாலா மகரமதி யிசைந்தவொரு பான்றெய்தி யிழந்தோ முன்னை
விண்பாலா ரமரரிறை விருந்தேற்பப் பெருந்தவங்கள் விளைத்த தாலே.

தொழுந்தகையமுடிவேந்தர்பற்பலர்கள்தோள்புணர்ந்து துறையொன்றின்றி
செழுந்தகையகற்பிழந்தாயெனும்அலரைச்செவிக்கொளவுமிசையா துள்ளத்[ச்
தழுந்தியநற் கருணையினு லவ்வசைதொன் றுனையாண்ட வரசி வாழ்வை
இழந்தனையோ புவிமடந்தா யிழந்தனையோ எளியநிலை யெய்தி னையோ ?

வற்புடைய பலமதத்து வாதியர்க்குந் தாயகமாய் வழங்கு மிந்தப்
பொற்புடையிந்தியதேசம்பொறுத்தாயென்றொருமனதாய்ப்போற்றுமாறுன்
அற்புடைமை தனைக்காட்டி யாண்டவொரு பெருமதியி னருமை நோக்கிற்
கற்புடைய கவின்விளக்கே நினக்கிணையார் மன்னர்தமுட் கருதுங் காலே.()

மெய்சுமந்த புயிர்களெலா மிடிசுமந்த விளையையென மிகவு மேங்கிக்
கைசுமந்த தலையினராய்க் கரைந்துருக வொருசேடன் கணக்கி லாத
பைசுமந்த வகன்புவியைப் பசியவிரு தோள்சுமந்து பரித்த நீயும்
பொய்சுமந்த வாழ்க்கையினை யகன்றுவீ போயினையோ புவனி மீதே. (எ)



## தரவு கொச்சகக் கலிப்பா.

நீராழி யில்லா நெடுவிசும்பிற் சென்றுலவு
மோராழி யோனு முளநாணி* மெய்சுருங்கப்
பேராழி சூழும் பெரும்புடவி யெங்கெங்குஞ்
சீராழி யொன்றே செலுத்தியதும் பொய்யாமோ ? (அ)

மன்னுயிர்க ளியாவும் மணியுதரத் தாட்சுமந்து
முன்னரிது வீன்ற முதுசெல்வ மக்களென
வுன்னி யுலகிற் குறுதுயர்கண் டுள்சாம்பி
யன்னை யுலந்தா யெனக்கேட் டழியாரார் ? (கூ)

### ஷை வேறு.

ஆங்கிலவாண் டாயிரமே லமைந்தொளா யிரத்தொன்றி
லோங்குஜன வரிமாதத் துயரிருபா னிரண்டதனிற்
றுங்கியவிப் புவிச்சுமையைத் தனதெண்பா னிரண்டாண்டி
லீங்கொழித்தெங் கேகினையோ வெம்மிரக்கங் காணுதே? (௧௦)

கண்ணிழந்த வவனியெலாங் களியிழந்த துயிர்களெலாம்
மண்ணிழந்த துன்கருணை மணமிழந்த மலரேபோற்
பெண்ணிழந்த தரசினிமேற் பெயரிழந்த துன்றுழி
விண்ணிழந்த துன்கொடியை வினையிழந்த செவ்விடனும். (௧௧)

அசலாம்பிகையம்மாள்.

---

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

எல்லையிலா வகண்டவெளி தனிலமையுமைம்பூத மெங்குஞ் சேர்ந்து
பல்லுருவா யண்டங்கள் பலவாகி யவற்றிலுயிர் படைத்து மீண்டு
மில்லையெனச் சிதைத்தழிக்கு மிறைவனங்கட் புலன்றேன்றே நிலைசந்துநிற்க
வல்லையெம தன்புமிகு வான்பதியே யெமக்கியைந்த வருத்த நீகேள். (௧)

வாரிதனி லோர்துளியோ மணல்வனத்தி லோரணுவோ மதிப்பி னிந்தப்
பாரிதனின் மனுக்குலத்தோர்படுந்துயரைபென்னென்பேன்பைங்கூழ்நல்ல
மாரிதனிற் செழித்தோங்கி வறப்புறவே வாடுகின்ற வகையே போன்று
சீரியநல் லறந்தழைக்கப் படிபுரந்த மாராணி சேர்ந்தாள் வீடே. (௨)

வீடடைந்தாளிகச்செல்வம் விட்டகன்றாளோய்வின்றி வெய்யோன் காக்கும்
நாடடைந்த பெரும்பேறுமவளோச்சும் செங்கோன்மை நவிலப் போமே
காடடைந்தார் வீடுதனைக் கண்டடைந்தார் கொடுங்கோலாற்கலங்கியன்றுண்
மாடடைந்த பலவரசர் வனசமெனக் கதிரோன்முன் மகிழ்ந்து வாழ்ந்தார்.

---

* மெய்சுருங்க சூரியன் நாளொன்றிற்கு 9 அங்குலம் தனது சுற்றளவிற் சுருங்கி வருதலை யுணர்த்தியபடி.

செல்வநிறை யாங்கிலமென் றேசமதின் முன்னுதித்துச் சிறந்ததானைப்
பல்விலைய முத்தளிக்கும் பரவைசூழ் மூலகிலொளி பரக்க வீசி
நல்வளமுற் றுயிரோம்ப வறுபத்து மூவருடம் நாப்பணின்று
கொல்வினைஞர் பனிதவிர்த்துப் பகலரசியத்தமித்த கொடுமை என்னே? (௪)
என்சொல்வேனவள்புரந்த நாவலந்தீ வதனின்முன் னிடையூ றந்தோ
முன்செய்த நாற்சாதி பகைவிளைக்கத் தமைக்காக்கும் மொய்ம்பொன் றின்றி
மன்செலுத்துங் கோன்முறணி மகம்மதிய ரியரசர் வசத்தி லுற்று
வன்சொலொடு மறமியற்று மகராட்டி ரருமமையே வதைத்தார் மிக்க. (௫)
கடும்புயலில் வேலையிடைக் கரைகாணு மரக்கலமோ! காட்டில் வாழுங்
கொடும்புலிகைப் புல்வாயோ கொல்லரிமுன் மதக்களிறோ குரங்கு கைசேர்
தொடுமலர்த்தாரொத்ததெனச் சொலற்குரிய விந்நாட்டின் றுன்ப நீக்க
நெடுமுடிசூழ் பெண்ணரசே நினையிழந்த துயரெமக்கு நீங்கா தம்மா. (௬)
மகமதிய ரெனுமுழுவை யிந்துவெனும் பசுவினொடு மகிழ்ந்து வாழ
அகமகிழ்வெய் திடப்பொருளோ டாருயிரி னிடர்நீக்கி யாண்ட வெங்கள்
சகம்புகழும் பேரரசே தாயற்றோர்க் கோர்துணையே தவிர்த்தோர்க் கென்றும்
முகமலர வீந்தருளு முளரிமலர்த் திருமகளே முடிந்தாய் மண்மேல். (௭)
தன்மகனைக் கான்செலுத்தித் தசரதனு முயிர்விடுத்தான் சகியா தன்று
நின்பதியோ டிறவினரும் நின்மதலை தருசேயும் நின்முன் மாண்டும்
அன்புமிகு தாயகமே யகத்தெழுநின் றுயரடக்கி யயலார்க் குற்ற
துன்பமதைக் கண்டிரங்கித் துயர்களைநின் பேராற்றல் சொல்லப் போமோ.

ஷை வேறு.

பொன்னுடைக் குன்றஞ் சூழும் புகழிந்து தேச மெங்கும்
மன்னுயி ரோம்பிச் சக்ர வர்த்தினி யெனும்பேர் பூண்டாய்
மின்னுறு யாக்கை நீத்து விண்ணவ ரிடுக்கண் டீர்க்கப்
பொன்னுல காட்சி பெற்றுப் போயினை போலு மம்மா. (௯)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பதிதா னிழந்துலகி றனியே யுழன்றரசி படிமீதுருண்ட வதுதான்
புதிதோ விளம்புமிடை முடியே தரித்தரசர் புகழோ டிருந்து முதல்வன்
எதுவோ விதித்ததன் படியே நடப்புறுமிங் கெவரே தடுப்பதிவணிக்
கதியே யெமக்குவரு மெனவே திடப்படுமின் கடைநாள் வருமளவுமே. ()

நேரிசை வெண்பா.

பெண்ணரசி மாண்டுமவள் பெற்றெடுத்த நற்புதல்வன்
மண்ணரச ரிற்பெரிய மாராயன்—றண்ணளிசேர்
ஏழாவ தாங்கணக்கில் எட்வார்டெனும்பூபன்
ஏழைக்களுக் கோர்துணையா மீங்கு. (௧௧)

சா. சோமசுந்தரம் பிள்ளை.

---



அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பெண்ணெனினு மாணெனினு மறிவினுயர்ந் தாலரசு பெறலா மென்னத்
திண்ணமிகு நிலவுலகி லரசுரிமை பெற்றுயர்ந்து செங்கோ லோச்சித்
தண்ணளியா லுயிர்களெலாங் காத்தருளுந் தயாநிதியே சமான மில்லா
வண்ணமணி முடிபுனைந்த விக்டோரி யாளெனும்பேர் வாய்ந்த மாதே. (௧)

என்றுநுங் குறையின்றிக் கல்வியினாற் கேள்வியினா லொழுக்கத் தாற்பொற்
குன்றுமென னுங்குணத்தா [illegible] முயற்சியினாற் குறிக்கு மன்பா
னன்றுரு மகப்பேற்றாற் கண்மையினாற் கொடையினா னலத்தால் யார்க்கு
முன்றுனென் றிடமகுடந் தரித்தரசாண் டிருந்தனைநின் முறைநன் றுமே. ()

பாரிடத்திற் சிறந்தலண்டன் பட்டணமே நீவாழும் பதியாக் கொண்டாங்
கோரிடத்தி லிருந்தாலுங் கீர்த்தியினா லுன்குடைக்கீ ழுறைவார் நெஞ்சாஞ்
சீரிடத்தெல் லாமிருந்தாய் நின்போற்செங் கோன்முன்னஞ் செலுத்து மன்ன
ராரிடத்து நின்னரசாட் சியிற்கண்ட வற்புதங்க ளறிந்தி லோமே. (௩)

அற்புதத்தின் வகைகளென்னென் றெடுத்துரைப்பே மாயினுஞ்சற் றுறைவா
சொற் றனத்துங்கண்டறியாத்தந்திதபால்மின்சாரச்சுடர்விளக்கு [முன்னாட்
கற்புறவான் பறந்துசெலும் புகைக்கூடு திசைகாட்டுங் கருவி யாதி
பற்பலயந் திரமின்னும் யாங்கள்கேட் டறியாப்பற் பலவு மன்றோ. (௪)

அரசுபெற்ற நாண்முதலா விதுகாறும் பகைவர்வலி யடக்கி யாண்ட
திரமைமிகு செயசாலி யாயிருந்தா யஃதுநின்பேர் செப்பும் யார்க்கும்
வரபலயோ நீசெய்த மாதவமோ விவையுனக்கு வாய்த்த வாறு
விரசுபெருங் கற்புடைய விக்டோரி யாளெனும்பேர் மிளிர்கோ மாதே. (௫)

மண்ணுலகத் தினிலரசு புரிந்துயிரெல் லாம்புரந்த வண்ணம் போல
விண்ணுலகத் தினும்புரக்கச் சென்றனையோ விஃதன்றி வேறோ ரேது
வெண்ணுவதற் கிடமிலையே யெங்களைக்கை விட்டகலற் கிணையி லாத
பெண்ணுருவப் பேரரசே விக்டோரி யாளெனும்பேர் பெற்ற தாயே. (௬)

துட்டரெனும் பெருஞ்சுமையைத் தொலைத்தருணின் னீதியினாற் றூய சற்பா
விட்டமுறும் வேளையெலா மழைபெயச்செய் துடல்குளிர்வித்திட்ட நின்னை
யெட்டனையா வதுமறந்து பிரிந்திருக்க முடியாமை யெண்ணி யிப்பார்
பட்டநின்சீ ருருத்தன னுள்ளடக்கிக் கொண்டதந்தோ பயில்கோ மாதே. ()

ஒருமகவைப் பிரிந்தாலு முடல்பதைத்துத் தாய்தேடி யோடி யன்பால்
வருதலுல கியற்கைபன்னா ளுன்குடைக்கீழ் வாழனந்த மக்கா மெங்க
ளருமைபா ராட்டியுள மகிழாது பிரிந்தனைநீ யந்தோ யாங்கள்
தருமதயா நிதிவாவென் றழைத்தாலும் வாராய்நின் றயைபோ தென்னே. (௮)

துன்றுருந் தொழுத்தகுநின் றண்ணளியின் குணங்களெலாந் தொகுத்தன்
பன்னூறு முன்னூடனே பழகியவர் கடிதத்தாற் பலவா றுகச் [பாகப்
சொன்னார்கள் கேட்டதன்றிக் காணநாம் நினைப்பிரிந்த வயராற் றேமே
லென்னுவர் கண்டவர்க ளெங்கோநீ யரசிருந்த வியற்கை நன்றே. (௯)

பின்னுமன்பா லொருவாறுதெளிவடைந்தோந் தாயைப்போற்பிள்ளையென்ன
மன்னுமொரு பழமொழியுண் டதற்கேற்ப நீபெற்ற மைந்தன் றூறு
மென்னுமிள வரசேநின் போரசைத் தாங்கியிருந் திடலா லென்றுந்
அன்னுபுகழ் பெருசக்ர வர்த்தினிநீ யானந்த சுகியாய் வாழி. (௰)

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

## சமாசாரங்கள்.

---

**அறிவு விளக்கம்:**—இப்பெயர் கொண்டதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை திருவனந்தையினின்றும் பிரசுரிக்கப்படுகிறது. 24 பக்கங்கொண்டது. ஸ்ரீ வள்ளல் சோ. சிவஞானதேசிகர் என்பவர் பத்திராதிபராக வெளியாகின்றது; அரும் பெரும் பொருள்களைப்பற்றி விரித்துக்கூறும் இத்தகைய பத்திரிகைகள் நாளும் பல்குவனவாக.

***

**மகாராணியவர்கள் ஞாபகச்சின்னம்:**—இது விஷயமாகச் சேரும் பணங்கொண்டு வைத்தியசாலை வைக்கவேண்டுமென்றும், பெண்கல்வி விருத்திக் குரிய பெருவழிகளை நாடவேண்டுமென்றும், கனம் பொருந்திய டாடா அவர்களது ஆராய்ச்சிச் சாலையைப் பலப்படுத்த வேண்டுமென்றும், சுதேச பாஷைகளில் மகளிரைக்கொண்டே அரசியார் சரித்திரத்தைக் காப்பியம் பெருகுவித்தல் வேண்டுமென்றும், பொருட்காட்சிச்சாலை யேற்படுத்தவேண்டுமென்றும், நற்கலைக்கழகமுங் கைத்தொழிற் சாலையும் இந்தியாவில் ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். இவற்றுளொவ்வொன்றும் ஓராற்றுலேற்புடைத்தாமாறு காண்க.

***

**தென்னாப்பிரிகா யுத்தம்:**—இவ்யுத்தத்தில் இதுவரைக்கும் செலவான பணம் 810-லட்சம் பவுன், அஃதாவது $121\frac{1}{2}$ கோடி ரூபாயாம். வாரமொன்றுக்கு 12-லட்சம் பவுன், அஃதாவது 180-லட்சம் ரூபாய் செலவாகின்றனவாம். சென்ற $1\frac{1}{2}$-வருடமாக நடந்துவரும் இவ்யுத்தம் கடிதில் நின்றுவிடுமென்றும் போவர்கள் நம் ஆங்கிலர்களைச் சரணடையப் போகிறார்களென்றும் பத்திரிகைகள் கூறுமாறு, யாண்டும் போர்நின்று பொறைமல்குக.



மகாதேவ கோவிந்த ராணடே.

# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901௵ மார்ச்சு௴ 20உ { புஸ்தகம். ௮.

## மகாதேவ கோவிந்த ராணடே.

புதிய நூற்றாண்டு பிறந்து நமது தேயத்தோரெல்லோருக்கும் இன்பத்தை விளைக்குமென்றிருந்தபோழ்து நமது நாட்டோருக்கு ஆற்றாத துன்பத்தை விளைத்த ஒரு கடுஞ்சாவு நிகழ்ந்தது. நமது நாட்டோரெல்லோருக்குங் குருவைப்போலிருந்தவரும், அபரிமிதமான புத்தி கூர்மையுள்ளவரும் முழுதும் அகங்காரமற்றவருமான மகான் மகாதேவ கோவிந்தராணடே நமது உலகத்தை விட்டு விண்ணுலகஞ் சென்றார்.

இவர் 1843-ம் வருஷத்தில் பிராமண சாதியில் உயர் குலத்தில் கோலாப்பூரிற் பிறந்தவர். இவருக்குச் சகோதரர்கள் இருவர். ஒருவர் இந்தூர் நாட்டில் உயர்ந்த பதவியில் அமர்ந்திருக்கின்றார். மற்றொருவர் தென்னாப்பிரிக்கா ராணுவத்தில் உத்தியோகம் வகிக்கின்றார். ஆரம்பத்திலே பம்பாய் எல்பின்ஸ்டன் கலாசாலையிற் படிக்கத் தொடங்கினார். இவருடைய புத்தி சாதுரியத்தையும், மேலான அறிவையும் இவருக்கு உபாத்தியாயர்களாயிருந்த ஐரோப்பியர்களே கண்டு மிகவும் வியந்தார்கள். வெகு சீக்கிரத்திற் பி. ஏ., எம். ஏ. பரீக்ஷைகளிற்றேறினார். இவருக்கு எம். ஏ. தேறியதும், இவர் எம். ஏ. வகுப்புப் பிள்ளைகளுக்கே, வெகு நேர்த்தியாய்ப் பாடஞ் சொன்னாரென்றால்; நம் நேயர்களே அவரது அறிவு மிகவும் ஆழ்ந்ததென்று அறிந்துகொள்ளலாம். பிறகு இவர் சட்டப் பரீக்ஷையிலுந்தேறி, பம்பாய், உயர் நீதிசாலையில் நியாயவாதியாயினர். ஆனல் அவர் வெகுநாள் வக்கீலாயிருக்கவில்லை. 1866-ஆம் வருஷம் முதல் உதவி நியாயாதிபதியாகவும், ஜில்லா நியாயாதிபதியாகவும், சிறுவழக்கு நியாயாதிபதியாகவும், இன்னும்

பல உயர்ந்த பதவிகளிலும் அமர்ந்தார். கடைசியாக 1893-ஆம் வருஷத்தில் இவர், சம்மானுக்கருவொருவராகிய கலாம் பொருந்திய டிலாங் அவர்கள் இறந்தபோனவுடன், பம்பாயிலுள்ள உயர் நீதிசாலை நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டனர்.

இம்மகானுடைய பெருமையை யெல்லாம் சுருக்கமாய் எழுதுவதென்பது அசாத்தியமான காரியம். நமது தேசத்தை எவ்விதத்திலாவது முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டு உழைத்தவர்களுள் இவர் பிரதானமானவர். எச்சபையா யிருந்தாலுஞ்சரி, எவ்விடத்திலாவது நடத்தப்பட்டு வந்தாலுஞ்சரி, அது தேசத்துக்கு நன்மை பயக்கத்தக்கதாய்மட்டு மிருக்கவேண்டும். அவர் அதற்காக உழைப்பாரென்பது திண்ணம். அவர் ராஜ்ஜிய உத்யோகஸ்தரா யிருந்ததுடன் நமது காங்கிரஸ் மகாசபையை நடாத்துபவருள் தலைநின்றவருமா யிருந்தார். காங்கிரஸ் மகாசபையை ஆதியில் ஏற்படுத்தினதும் இப்பேரறிவாளரே. தாம் சாமளவும் அதற்காகப் பெரிதும் பாடுபட்டு உழைத்தார். அதனால் அவருக்கு எவ்வளவோ நஷ்டங்கள் வந்தன. அவைகளை யெல்லாம் அவர் நஷ்டமாகவே பாவிக்கவில்லை.

“ நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது”

என்ற வள்ளுவனார் வாக்கு இவர் விடயத்தி லுண்மையாகவே முடிந்தது. தமது முதிர்ந்த அறிவுகொண்டு அம்மகா சபையை முன்னுக்குக் கொண்டுவரும் வழிகளை நாடிச் சிறிதேனுஞ் சலியாமல் நடாத்தி வந்தனர்.

மேலும், இவர் இந்தியர்களுக்கு எவ்வளவு உயர்ந்த பதவி கிடைக்கக்கூடுமோ அவ்வளவு உயர்ந்த பதவியி லமர்ந்திருந்தும், சிறிதேனும் அகங்கார முள்ளவரல்லரா யிருந்தார். ஒருவன் எவ்வளவு தாழ்ந்தபதவியி லிருப்பவனா யிருந்தாலும் அவரைப்போய் எளிதிற் பார்க்கலாம். எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசிக்கொண்டிருக்கலாம். அவர் காட்சிக்கு எளியார், இன்சொலுடையார், அவருக்குக் கோபமென்பது இன்னதென்று தெரியாது. யாரேனும் இரண்டு எளியோர்கள் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ள அவரிடம் வந்து சேர்ந்தால், அதை முழுவதும் விசா



ரித்து, அவர்களைச் சாந்தப்படுத்தி வழக்கைத் தீர்த்தனுப்புவார். அந்தோ! இவ்வளவு உயரிய குணமுள்ளோர் வேறு யாரேனுமுளரோ? இத்தகைய பேரறிவாளரை, அன்புடையண்ணலை, அருளறம் பூண்டோரை யிழக்கும்படியான தெளர்ப்பாக்கியத்தை யென்னென்றுரைப்பது? நமது தேசத்து வழக்கங்களையெல்லாஞ் சீர்திருத்த வேண்டுமென்ற பேரவாவுடன், தம் வாழ்நாள் முழுவதும் உழைந்தார். இறந்து போவதற்கு 18-நாட்களுக்குமுன் ‘நான் ஹிந்து மதத்தேனுமல்லேன், மகம்மதிய மதத்தேனுமல்லேன், எல்லாருக்கும் பொதுவான கடவுளை வழிபடு மதத்தார்களி லொருவனாவேன்’ என்று சொன்னார். ‘ஏழைகளுக்கெல்லாம் நேயன்’ என்பதே இவருடைய பெயர். நாம் அனுசரித்துவரும் அநேக வழக்கங்களை மாற்றினால் நமது தேசத்திற்கு நன்மையுண்டாகுமென்றும், நாம் இன்ன இன்ன மார்க்கத்திலுழைத்தால் நலமுண்டென்றும் தெளிவாய்ப் பலமுறை பேசியிருக்கிறார். இந்து வழக்கச் சீர்திருத்தச் சங்கமென்றே ஒரு சங்கமேற்படுத்தி யிருக்கின்றார். இவர் மிகுந்த பரோபகாரி, தமது புத்தியினாலேயன்றித் திரவியத்தாற் பலருக்கும் உதவி புரிந்திருக்கிறார். இவர் இறந்தது நமது நாட்டாருக்கே அளவிடக்கூடாத பெருநஷ்டமென்பது ஒருதலை.

இவர் பம்பாய் மாநகரத்தில் நியாயாதிபதியா யிருக்கும்பொழுது உயர்ந்த அறிவுடன், நியாயத்தையே கடைப்பிடித்து நடந்து வந்தார். அவரோடுகூட இருந்த மற்றைய நியாயாதிபதிகளெல்லாருக்கும் இவரிடத்தில் மிகுந்த மரியாதையுண்டு. இவர் தீர்ப்புகளெல்லாஞ் சிறிதேனும் நியாயத்தினின்றும் வழுவினவல்ல. ஆகையாற்றான் அவர் பிணத்தை மயானத்துக்குக் கொண்டுபோனபொழுது வெள்ளைக்காரர்களி லுயர்ந்த பதவியை வகிப்போர்களும் அவரது சாவினால் நிகழ்ந்த துக்கம் ஆற்றாமற் கூடவே வந்தார்கள். இவருடைய வாழ்க்கை படாடோப மற்றதுமாவதனோடு மேன்மையும் வாய்ந்தது. இம்மகானது ஞாபகம் நமது மனத்தைவிட்டு என்றென்றும் நீங்காதென்று பம்பாய்ப் பிரதான நியாயாதிபதி யவர்களாகிய ஜெங்கின்ஸ்என்பவர் சொல்லுகிறார். இவருடைய மேன்மையை யறிந்தே இராஜாங்கத்தார், இவருக்கு ஸி-ஐ-இ பட்டமும், ராவ்பகதூர் பட்டமும் இவருக்குத் தக்க காலத்தில் அளித்தார்கள்.

இவர் அநேகம் புத்தகங்களும் எழுதியிருக்கிறார். அவைகளில் முக்கியமானவை 'மகாராஷ்ட்ரர்களின் சரித்திரம்' எனப்பெயர் பூண்ட புத்தகங்கள். இன்னும் இரண்டு மூன்று புத்தகங்களில் சரித்திரத்தை முடிப்பதாக நினைத்திருந்தார். ஐயோ கொடிய கூற்றுவன் இவரைச் சீக்கிரமே நம்மைவிட்டுப் பிரித்துக்கொண்டு போய்விட்டனனே !

இப்படியாய்ச் சகலருக்கும் நன்மை புரிவோரும், மிகுந்த பணிவையுடையவரும், எப்பொழுதும் தமது தேசநன்மையைக் கண்முன் வைத்துக்கொண்டு தமக்குக் கேடுவந்தாலுங் கவலையாது வருபவராயிருந்த மகான் இறந்தால் யாவரே துக்கப்படாதார்? இவர் வாழ்நாளை அநேகர்போல வீணாகக் கழிக்கவில்லை. செல்வமிருந்தென்ன பதவியிருந்தென்ன? மற்றையோர்களுக்கு இவையிருப்பதிலென்ன பிரயோஜனம்? இவர்போலும் நல்லறிவாளரிடத்தன்றோ லக்ஷ்மி குடியிருக்கவேண்டும். தெய்வபக்தியில் மிகவு மாழ்ந்து பரமனே கதியென்று நம்பி, பிறருக்காகவே தமது புத்தி செல்வம் எல்லாவற்றையுங் கொடுத்துவந்த மகானது ரூபம் நமது மனத்தைவிட்டு எக்காலும் நீங்காது. ஒருவருக்கும் மற்றொருவருக்கும் ஒரு ஜாதியாருக்கும் மற்றொரு ஜாதியாருக்கும், ஊன்றிப் பார்த்தால் வித்தியாசமில்லை யென்றும், யாரிடத்திலும் தெய்வத்தன்மை உளதென்றும், யாவரையும், ஒன்றுக்கும் பிரயோஜனமற்றவரென்று சொல்வதிற் பயனில்லை யென்றும் போதித்த பரமபுருஷர் இவர். நன்மையே விரதமாக நயந்து நின்றவராகிய ரானடே, பிறர் தம்மைப் புகழ வேண்டுமென்று ஒரு காரியமுஞ் செய்வதில்லை யென்பதைத் தமது சீலத்தாலும், நாயவொழுக்கத்தாலுங் காண்பித்தார். ஒரு சமயம், சாவு என்பதை ரானடே விவரித்து இவ்வாறு கூறுகின்றனர்: நாம் இறந்துபோகுஞ் சாவொன்றுளதென்றும், சாவு சாகுஞ் சாவொன்றுளதென்றுஞ் சொன்னார். "மெய்ம்மறந்து, ஆன்மா பிரிந்து, தனது துன்பம் தேகவருத்தம் முதலிய எல்லாவற்றையு மறந்து, தனது கடமையினின்றும் வழுவாமல் உலகத்துக்கு நன்மையையே நாடி உழைத்து வரும் மகானது சாவு இறந்தது. தனது ஆன்மாவை மறந்து, காயசுகத்திலேயே உழலுகின்றவன் இறக்கிறான். ஆகையால், உலகத்தோர் சாவெனச் சொல்வது சாவன்று" என்று இம்



மகானே சொல்லியிருக்கின்றனர். "அவருக்குப் பின்தங்கி யிருக்கும் நாம் அவர் செய்த நன்மையை மறவோம். அவர் வாழ்நாளை அவர் வீணாகக் கழிக்கவில்லை யென்றும், அவருடைய தெய்வபக்தி, உயர்ந்த கோட்பாடு, உலகத்தோருக்கு நன்மையையே புரியவேண்டுமென்ற ஆசை இவையெல்லாம் நம்மை நன்மார்க்கத்திற்குக் கொண்டு வரவேண்டும். அவர் வாழ்நாளை நமது கண்முன் வைத்துக் கொண்டு அவர் உழைத்த வழியிலேயே நாம் உழைக்க வேண்டும். ஒரே கடவுள் உண்டென்றும், எல்லோருஞ் சகோதரர்களென்றும், அவர் செப்பியபடி நாம் நடந்தொழுக வேண்டும். அவரோ இறக்கவில்லை. ஆகாயத்திற் பளபளவென்று மின்னும் நக்ஷத்திரங்களி லொன்றா யிருந்துகொண்டு, நமது காரியங்களை யெல்லாம் உற்றுநோக்கி, நமது ஒழுக்கங்களைச் சீர்திருத்துகிறார்" என்று பம்பாய் உயர்நீதி சாலை நியாயாதிபதிகளி லொருவராகிய சந்திரவர்க்கர் புனைந்துரைக்கின்றார். உலகமுள்ளவரைக்கும் அவர் பெயர் நமது தேசத்தோர் மனத்திருந்து அவர்களை நல்வழியிலுய்க்கு மென்பதற்கு ஐயமுமுண்டோ ?

கு. ரா. ஸ்ரீனிவாஸ ஐயங்கார்.

---

## விக்கிரமோர்வசி நாடகம்.

---

### இரண்டாம் அங்கம்.

இடம் :—ஆஸ்தான மண்டபத்தின் ஒரு சார்.
காலம் :—எற்பாடு.
பாத்திரம் :—விதூஷகன்.

### பிரவேசகம்.

விதூஷகன் :—(சிரித்துக்கொண்டு) சிராத்த பட்சியங்களை நினைத்துக் கொண்ட பிராமணனைப்போல இராஜ இரகசியத்தைக் கூட்டமுள்ள விடத்தில் என் நாவினால் அடக்கமுடியவில்லை. ஆகையினால் அரசன் ஆஸ்தான மண்டபத்தினின்றுந் திரும்புகிறவரையும் இந்த இடத்திற்றானே யிருப்பேன். (காரியாசன மண்டபத்தின் ஒரு சார் நிற்றல்).

நிபுணிகை பிரவேசித்தல்.

நிபுணிகை:—'பெண்ணே! எதுமுதல் நம் அரசர் சூரியோபஸ்தானஞ் செய்துவிட்டுத் திரும்பினரோ அதுமுதல் உத்கண்டிதராய்க் காணப்படுகின்றார். ஆதலின் நீ சென்று மித்திரனை ஆரிய மாணவகனிடத்திருந்து அரசன் உத்கண்டிதத்தின் காரணத்தை யறிந்து வருவாயாக' என்று காசிராஜ புத்திரி என்னிடஞ் சொன்னாள்.—இப்பார்ப்பானை எவ்விதம் வஞ்சிப்பது?— நல்லது.—ஒன்றோடொன்று சம்பந்தமில்லாத புற்களின் நுனியிற்றங்கியிருக்கும் பனித்துளிகள் வெகுகாலந் தங்கியிராமைபோல இராஜ இரகசிய மிவனிடந் தங்கியிராது. அவனைத் தேடிப்பார்ப்பேன். (பரிக்கிரமித்தல்) இதோ சித்திரத்திலெழுதிய வானரம்போல வாயை மூடிக்கொண்டு நிற்கின்றான். அருகிற் செல்கின்றேன். (சமீபித்து) ஆரிய! நமஸ்காரம்.

விதூஷகன்:—மங்களமுண்டாகுக. (தனக்குள்) இத்துஷ்டச் சேடியைப்பார்த்ததும் இராஜ இரகசியமானது மனத்தைப் பிளந்துகொண்டு வெளிவருகின்றதே. (வெளிப்பட) நிபுணிகே! சங்கீத வியாபாரத்தை விட்டு இவ்விடமெங்கு வந்தனை?

நிபுணிகை:—தேவியினுடைய கட்டளையினால் உம்மைத்தான் பார்க்க வந்தேன்.

விதூஷகன்:—மகாராணி என்ன கட்டளையிடுகின்றாள்?

நிபுணிகை:—தன்னிடத்தில் எப்பொழுதுந் தாங்கள் பிரியமாக விருந்தீர்களாம். தான் வருந்தினால் நீங்கள் சகிக்கமாட்டீர்களாம். இப்பொழுது மிகவுந் துக்கமடைந்திருக்குந் தன்னை அலட்சியஞ் செய்கின்றீர்களாம். இவ்வளவுதான் தேவி என்னிடஞ் சொல்லியது.

விதூஷகன்:—அவளுக்கு வருத்தமுண்டாக நமது மித்திரன் ஏதேனுஞ் செய்தனனோ?

நிபுணிகை:—எவள் நிமித்தமாக உத்கண்டிதராய் அரசர் இருக்கின்றாரோ அவள் பெயரால் நம் மகாராணியை அழைத்தனராம்.

விதூஷகன்:—(தனக்குள்) என்னே ஆச்சரியம்? நமது சனம் பொருந்திய மித்திரனாலேயே இரகசியம் வெளிப்பட்டதென்றால் நாம் ஏன் நாவை அடக்கிக்கொண்டு விசனமுற்றிருத்தல் வேண்டும். (வெளியாய்) என்ன? 'ஊர்வசி' என்று அழைத்தனனோ? ஆம். அத்தேவமாதைப் பார்த்தநாள் முதல் உன்மத்தங் கொண்டவராய் நம்மகாராணியை மாத்திரமன்றி, விநோதத்தி லிச்சையில்லாதவராய், என்னையும், வருத்துகின்றார்.

நிபுணிகை:—(தனக்குள்) அரசனுடைய இரகசியமாகிய கோட்டையை எனது உபாயத்தால் இடித்துவிட்டேன். (வெளியாய்) இப்பொழுது மகாராணியிடம் என்ன தெரியப்படுத்துகின்றது?



விதூஷகன்:—நிபுணிகே! கானலைக்கண்டு மயங்கியிருக்கும் மித்திரனைத் தெளியச்செய்து கொண்டிருக்கின்றேன். அது முடிந்த பின்னைத்தான் தேவியினுடைய முகத்தைப் பார்ப்பேன் என்று போய்ச்சொல்.
[நிஷ்கிரமித்தல்.

நிபுணிகை:—உத்தரவுப்படி செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

வைதாளிகன்:—(நேபத்தியத்துள்) தேவன் ஜயிக்கக்கடவன். (நேபத்தியத்திலிருந்தே பாடுதல்).

இரவியின் கிரண மிருளினை யொழிக்கு
 மியைபினை மானவே நுந்தம்
பொருவறு மொளியான் மாந்தரின் பயத்தைப்
 போக்கலி னவனைநீர் நிகர்ப்பீர்
இரவிதான் தங்கும் வானக நாப்ப
 ணிறைப்பொழு தாதலி னீவிர்
பிரியமொ டுறைவீர் பகலத னுறும்
 பிரிவிலி னின்புடன் மாதோ.

விதூஷகன்:—(செவிசாய்த்து) காரியாசனத்தினின்று நம் மித்திரன் எழுந்து இம்மார்க்கமே வருகின்றான். ஆதலின் இவ்விடம் போய் நிற்கின்றேன்.
[நிஷ்கிரமித்தல்.

பிரவேசகம் முற்றிற்று.

சருக்கை - இராமசாமி ஐயங்கார், பி. ஏ.

# இந்து ஜனசமூகச் சீர்திருத்தம்.

ஐயன் மீர்,

கற்றோர் பலர் நிறைந்த இக்கல்விக் கழகத்தின்கண்ணே நற்றமிழ்தேர் வல்லார் பலரிருக்க இற்றைக்கு நானிவ் விஷயத்தைக் குறித்து உபந்நியசிக்கத் துணிந்த தென்னையோ வெனின், நீவிர் இதுகாறுங் கேட்டறியாத நூதன விசேடங்களை யெடுத்துரைக்க வல்லேன் யான் என்னும் இறுமாப்பினாலாவது இந்து ஜனசமூகச் சீர்திருத்த விஷயமாய் யான் கூறப்புகு மாற்றத்தைவிட வேனையோர் யாவரேனும், சொன்னயம் பொருணயம் பொருந்தப் பிறருக்கு நற்பயன் பயக்கத்தக்க விதமாய் இவ்விஷயத்தைக் குறித்து உபந்நியசிக்க வல்லாரல்ல ரென்னும் துணிபினாலாவதன்று. ஆயின், மனிதர் வாழ்நாட்களில் அவரவர்க்குறூஉம் நன்மை தீமைகளோடு சம்பந்தப் பட்டியலுமாகையால் அதை ஐயந்திரிபற வறிந்ததற்கியைய நடத்தலாலே,

நந்தேச மனைத்தும் ஈடேறுதற் கேதுவாகிய இவ்விஷயத்தைக் குறித்து அவ்வவ் வமயங்களில், என் சிற்றறிவிற் கெட்டிய சில தோற்றங்களை நாம் முன்னர் விரித்துரைப்பின் ஒரு வேளை பயன்படினும் படுமென்னும் கருத்தாற் றுணிந்து நின்றேன். இத்துணிவின் றிறனை, சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் திராவிட பாஷாபிவிர்த்தி சங்கக் காரியதரிசி உபந்நியசிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்ட வளவிலேயே இசைவதற் கேதுவாய் நின்றது.

இது நிற்க, ஐந்து சொல் நான்கு சந்தியால் முடிந்து அனைத்தும் ஒரு பொருள் காட்டி நிற்கும் இந்து ஜனசமூகச் சீர்திருத்தம், என்னும் சொற்றொடருள் முற்பகுதியாகிய இந்து ஜனம் என்னும் சொற்றொடர், வடக்கிற் பனிவரை முதற்றெற்கே குமரி பரியந்தம், மேற்கே சிந்து நதி, அரபிக் கடன் முதற் கிழக்கே குடாக்கடல் வரையிற் பரந்து கிடக்கும், இந்திய என்னும் தேசத்தில் வசிப்பவர்களென்றும், வேதாகமபுராணக் கோட்பாட்டிற்கிசைய, உட்பிரிவு பலவாகித் தொன்று தொட்டிந் நாள்வரை நம்மவர் மனதில்வேரூன்றி உறுதி பெற்றிருக்கும்இந்து சமயத்தை யநுசரிக்கும் ஜனமென்றும், இருபொருள் பட்டுக்கிடக்கும். இவற்றில் முன்னதை யேற்புழிப் பற்பல காலங்களில், இந்தியாவின் வரம்பிற் கப்பாலுள்ள புறத்தேசங்களினின்று படையெடுத்து வந்து, ஈண்டுக் குடியேறி நிலைத்து இங்குள்ள சிலரையுந், தம்வசப்படுத்தி நிற்கும், மகம்மதியர்களையும், முன்னொரு காலத்திற் பாரசீக தேசத்தினின்றும், தங்களுட்டரசன் கொடுங்கோன்மைக்குத் தப்புமாறு, இந்நாட்டில் அடைக்கலம் புகுந்து நிலைகொண்டிருக்கும், பாரசீகரையும் கருநிறமேகம் உயர்வரை பொழியச் சிறு பெருநதிகளா பொருங்கு சேர்ந்து பல்வேறு தேசங்களிற் பரந்து வந்து ஆங்காங்குள்ள குளம்பல நிரம்பி வளமுறப் பண்ணைவாய்ப் பாய்வது மன்றிப் பண்பிலாச் செய்களைப் பலன்றரச் செழிப்பித்து அலகி லுயிரோம்பு நற்புனற்பெருக்கெனப், பூலோகமெங்கும் புகாவிடமின்றி பெங்கும் பரந்து இழிந்தோரையும் உயர் வுறவேற்றும் கிறிஸ்தவ மார்க்கத்திற்குட் பட்டோரையும், பார்ப்பனர் முன்னம்பாகத்தை முன்னிட்டுத் தீர்விலா உயிர்வதை செய்தன ராகையால், அன்னோர் செய்யும் அநியாயம் பொறுது, செம்மைசேர் அறத்தினைச் செய்வது வேண்டிற், கொல்லாவிரதமே கொள்ளற்பாலது என நல்லோர் புகழ்ந்திட நிர்வாணம் நிலை நாட்டிய புத்தரைப் பின்பற்றும் பௌத்த மதத்தினரையும் அம்மதக் கொள்கை பலசிதைந்து புறமதக் கொள்கை பலவிரவி அருகமதம் என மறுபேர் பூண்ட சைநசமயத்தை யநுசரிக்கும் சைநரையும் வேறு பல புறச்சமயத்தினரையும் உள்ளிட்டுப் பொருள்படுமாதலால், அப்பொருள் இவ்விஷயத்திற் கண்டோரைக்குறித்தல் பொருந்தாது. பிறிதொரு பொருளாகிய, இந்துமதத்தை யநுசரிக்கும் ஜனமென்பதை யேற்புழி, நம்மனோரை யொருவாறு குறிப்பினும், உற்று நோக்கின் அக்கருத்து இதற்கு முற்று மிசைந்ததாய்த் தோற்றவில்லை. என்னை? இந்துமதம் என்று ஒருமதம் இல்லை.



கிறிஸ்த்தவமதம் மகம்மதியமதம், என்பவைகள் முறையே, கிறிஸ்து, மகம்மது என்பவர்களா லேற்படுத்தப்பட்ட மதம் என்பதுபோல் இந்து மதம் என்பது அவ்வாறு கொள்ளற் பாலதன்று. இந்தியாவிலுள்ளோரால் அநுசரிக்கப்படும் மதமென்று புறத்தேயத்தினர் கொடுத்த பெயரேயன்றி வேறன்று தற்காலத்தில் அதுவும் பொருந்தாது, இந்தியாவிலுள்ளபெரும்பான்மையோர் அநுசரிக்கும் மதமெனில் ஒருவாறு பொருந்தும். அம்மதம் எத்தகைமைத்தென வினவுமேல், கிறிஸ்த்தவமதம், மகம்மதிய மதம்முதலானவைகளைப் போலச் சுருங்கி விளக்குவதற் கெளியதன்று. ஏனெனில், இருளன், சாமுண்டி, சாத்தான், காத்தான், மாரியாத்தாள் முதலிய பைசாசங்களையும், அகால மரணமடைந்தவர்களையும் தெய்வமாகப்பாவித்து அத்தேவுக்கள், உவந்தளித்து உவப்புறுமாறு, மது மாமிசங்களைக்கொண்டு பூசித்து, உடுக்கையடித்து ஆவேசங் கொண்டு அத்தேவுக்களின் அநுக்கிரகம் பெற்றுக்கொள்ள முயலும் பேதை மாக்களும், பாம்பு, பல்லி, கருடன், கழுகு, பசு, எருது முதலிய ஊர்வன, பறப்பன, நடப்பன வாகிய அற்ப ஜந்துக்களை வணங்கி முத்திபெற முயலும் மூடபக்தியுள்ளோரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளாகிய சிவபிரானை தந்தெய்வமெனக் கொண்டு, அவருக்கு விழாச்செய்து கொண்டாடிப் பூசிக்குமாறு மனைவிமக்கள் உண்டாக்கிப் பணியும் சைவர்களும், பாற்கடலில் அரவணைமேற்றுயில் கொள்ளும் பூவைப்பூவண்ணனாகிய திருமாலை தந்தெய்வமெனக்கொண்டு திருப்பதிதோறும் காவடிக்கச் சுற்றிப் பெருமாளைச் சேவித்துத்திரியும் வீரவைணவர்களும், இல்லறம் விட்டுத் துறவறம் புக்கு யோக நிலையிலும் யோகிகளும், அதன் பயனாகிய ஞானத்தைப் பெற்ற ஞானிகளும், இந்து மதத்தினரெனப்படுவார்கள். ஆயினும் மேலே குறிக்கப்பட்ட பலரும் தங்கடங்கள் தெய்வத்தைக் கொண்டாடும் பொழுது, சைவச்சின்னமாகிய விபூதியையாவது, வைணவச் சின்னமாகிய, திருமண், சந்தனம் முதலியவற்றையாவது கொள்ளுதல் வியற்கையாதலால், இந்துமதமென்பது, விபூதி, திருமண் முதலியவற்றை அணிந்து கொள்வார் அநுசரிக்கும் மதமெனப் பொருள்படும். ஆகவே இந்து ஜனமென்னில் நீற்றைப் புனைபவரும் திருமண்ணையணிபவருமெனினுமமையும். இத்தன்மையோர் தக்க நாகரீகம் பெற்றுச் சீர்திருத்த மடைதலே இந்து ஜன சமூகச் சீர்திருத்த மென்பதாம்.

இந்து ஜன சமூகச்சீர்திருத்த மென்பது இவ்விந்து ஜனங்கள் சிற்சில விஷயங்களில் நாகரீக விருத்தி குன்றிக்கிடத்தலால் அக்குறைவை நிறைவு பெறச் செய்தல் எனப்பொருள்படும். இக்குறைவு உளதோ விலதோ வென ஐயுற்றுப் பற்பலர் பல்வேறு அபிப்பிராயங் கொள்ளா நிற்கின்றனர். இவ்விந்தியாவிற் கலியின்கொடுமையால் நல்லோர் பெரியோரின்றிக் காலவரையால் வான்மாரி பொழியாது அங்க, விலை யேறுந்து மிகவும் துன்பத்திற் காளாகேனும் என்பார் ஒருசாரார்; வேதாகம முறைமாறி வருணாச்சிரம

தருமங்கெட்டுப் புலையனும், வேதியனோடுறவாட நேரிட்ட தென்பார் ஒருசாரார்; உலகமிருமாறு அநியாயமேலிட்டு ஐயாயிரப் புரட்டுண்டாகி அனைவரும் ஒன்றுசேர்ந்து பாவபுண்ணிய நிலையறியாது நரகத்திற் காளாய் நாசமுறுங் கால நேரிட்டதென்பார் ஒருசாரார்; உண்மையிலே சீரின்மையுள தேனும், அச்சீர்கேட்டைத்திருத்துந் திறனறியாரெனச் சீர்திருத்தச் சங்கத்தினர் மேற் குறைகூறுவார் ஒருசாரார். காலத்தாற் சீர்கேடுதானே மாறுமென்பார் மற்றொருசாரார். *இவ்வாறு பல்லோர் பற்பல அபிப்பிராயங் கொள்வதென்னெனில் அவரவர் கொள்கை தங்கள்தங்கள் அறிவு விருத்தியினளவின தேயாம்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு".

என்றார் பெரியோராகலின் ஒரு விஷயத்தின் உண்மையை நன்காராய்ந்துணராதார் தங்கள் தங்களிட்டம் போனபடி அபிப்பிராயங் கொள்வதோர் வியப்பன்று. ஆயின் இன்னோர் கொள்கை தவறெனில் மற்றியார் கொள்கை உண்மையுடைத்து? என வினவுவமேல், ஒரு பொருளின் குறைகுணங்களை யாராய்ந்து அறியப்புகின் அப்பொருளின்கண் காய்தல் உவத்தலகற்றி, உள்ள குணத்தைத் தெரிந்து கொள்ளுந் திறனுடையார் அபிப்பிராயமே கொள்ளற்பாலது. இத்தகைய மாண்பினரே கற்றோராவர். இவரே,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

என்னுந் திருக்குறளிற் கேற்பத் தாங்கள் கற்பனவற்றை ஐயந்திரிபறக் கற்றபின்னர் அக்கல்வி யறிவிற்கிசைய அடங்கி நடப்பவர். ஏனையோர் கற்றோமெனச் சொல்லித் தங்கள் கல்வித்திறனைச் சுயகாரியநாடி, ஆதாயவிருத்திக்குபயோகப்படுத்தித் திரிவாராகையால் அன்னோரைக் கல்லாரெனக் கொள்ளுதல் குற்றமன்று. கற்றறிந்தாரென்பதைத் தங்கள் நன்னடக்கையாற், பிறரறிந்து பின்பற்றுமாறு போதிக்கமுயலாது,

"ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு".

என்னும் குறளில் மொழிந்துள்ளபடி, உருவத்தாலும் சொல்லாலும் செய்கையாலும் வஞ்சிக்கும் பரத்தையர் ஆலிங்கனமானது அவ்வஞ்சனையை யாராய்ந்து அறியும்திறனற்ற அறிவிலிகட்கு முன்னரினியதுபோலத்தோன்றிப் பின்னுயிரை யபகரித்தலால், அது காமவழியால் உயிரை யபகரிக்கின்ற மோகினி முதலாகிய தெய்வப் பெண்பாற்றுதலாகுமென்பதை யறிந்தும், பலர் விலைகணிகையரிற்புக்கு அங்கவரோடுல்லாச கீர்த்தனம் பாடுங்கால்,

"பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே



உன்னை நாடுவ னுன்னருட் டுவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே".

என்று தாயுமானவர் பாடிய வேதாந்தப்பாடல் பாடுபவரும்,

"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்".

என்ற குறட்பாவிற் கிணங்கப் பகையும், பாவமும், அச்சமும், பழியும் ஆகிய இந்நான்கும் பிறன்மனை விழைந்து அவளிடத்துச் செல்பவனை விட்டு நீங்காமையால் இருமை யின்பமும் அவன் இழப்பானென்பதை யறிந்திருந்தும், இதற்குச்சான்றாக, இராமாயணக் கதையை ஆதியோடந்தமாய்க் கேட்டிருந்தும், பிறன்மனை நயப்பவரும்,

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து"

என்பதற்கேற்பத் தன்னைக்கண்ட வளவிலேயே ஒருவன் மயக்குற்று வருந்தத்தக்க அழகினையுடையாளொருத்தி, இயற்கைப் பலங்கொண்டே யெதிரியை வெல்லத்தக்க வலிமையுடையான், வாளாயுதமுங்கொண்டு மாற்றான் மேற்செல்லலொத்து, குறிப்பு நோக்கையுந் துணையாகக்கொண்டு, வாலிபர் மனமும் கண்ணும் தன்மேல் வண்டெனப்பறந்து வீழச்செய்யும் திறனுலவளை வருத்துந் தன்மையும்,

"குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போலநகும்".

என்னுங் குறட்கூற்றிற் கிணங்க, ஒருவனை நேரே குறியாகக்கொண்டு பாராதவளவல்லது, ஒரு கண்ணைச் சுருக்கினாற்போல் அவனைப்பார்த்து, பின்பு தனக்குள்ளே மகிழ்வுகாட்டி, அவன் மனதைச் சூறைகொள்ளுந் தன்மையும், ஆடல்பாடல் செய்யும் கணிகையர்களுக் கியற்கையென வறிந்திருந்தும் அக்கணிகையரைத் தமது வீட்டிலாடச்செய்து, நட்பினரோடு சூழவிருந்து அன்னோர்ந்து பார்த்திறுமாந்திருக்கும் ஏழைமாக்களும்,

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்".

என்னும் குறட்பாவிற்கிசைய, அறிவற்றிருப்பதனால், உறங்குபவர்கள் இறந்தவரின் வேறாகாமைபோல மதுபான முதலிய லாகிரி பதார்த்த மருந்துபவரும் நஞ்சுண்டிறப்பவரை யொப்பார் என்பதை நன்றாயறிந்தும், நாடோறுங் கள்ளுண்பவர் கதியை அனுபவத்திற் பார்த்திருந்தும் லாகிரி பதார்த்த மருந்தித் திரிவாரும்,

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்

இட்டார் பெரியோ ரிடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி.

என்னும் நல்வழி வெண்பாவிற் கண்டபடி, யோக்கியதையாலும், நடத்தை
யாலும், செய்கையாலும், மேலோர் கீழோராவதே யொழியப் பிறப்பினால்
மனிதனுக்குக் கீழ்ச்சாதி மேற்சாதி வித்தியாசமில்லை யென்பதைத் தெரிந்
தும், நல்லோராயினும் கீழ்ச்சாதியோ ரென்றிகழ்ந்து, அவர்கள் மரணத்
தருவாயில் உதவியின்றிப் பரிதாப நிலையிலிருப்பினும், கீழ்ச்சாதியானைத்
தீண்டவுங்கூடாதென்று ஈரமில்லா நெஞ்சத்தராய் விலகிப்போகும் மேற்
சாதியார் எனச்சொல்லித் திரிபவரும்,

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வியழகே யழகு”.

என்றநாலடிக் கருத்தின்படி, மேனி மினுக்கிக் கண்டவர் கண்ணைக் கவரத்
தக்க விதமாய், நீர்கொண்ட மேகம்போற் கறுத்து நீண்ட கூந்தலும், விலை
யுயர்ந்த ஆடைகளும், மஞ்சள், புனுகு, சவ்வாது முதலிய பூசிக்கொள்ளத்
தக்க வாசனைத் திரவியங்களும், புறத்தே அழகுபெறச்செய்விப்பினும்
(ஆண்களுக்கு “நல்லறிவு எல்லாச் சிறப்புந்தரும்” என்றாராகையால், அவ்
வறிவிற்கு முதற் காரணமாகிய கல்வி அகத்தழகினுமாறு), பெண்களுக்கும்
அக்கல்வியே உண்மையழகைத் தரத்தக்கதாகையால், மேற்கூறிய புறவழகு
பயன்படா தென்பதை யறிந்தும் பெண்கல்விக்கு விரோதஞ்செய்யும்
பேதைமாக்களும், பிள்ளைகளறியாத பாலியவயதில் தகப்பன் பிதிரார்ஜி
தத்தை வீண் விரயஞ்செய்தானாகையால், அத்தந்தை கடனுக்குச் சிறுவர்
பாத்தியராகாரென, நியாயாதிபதிமுன் வழக்கிட்டுக் கட்சிபேசுபவராயினும்
தன்மக்களுக்கு அறியாவயதில் மணமியற்றிச் சாத்திர முறைப்படி செய்தோ
மென்னுங் குதர்க்கவாதிகளும் ஆங்கிலரோடு ஒத்து நடத்தப்பட வேண்டு
மென்று இராஜாங்கத்தாரோடு வாதாடுபவராயினும் பள்ளர் பறையர் முத
லிய எளிய சாதிகளைத் தாம் வசிக்கும் தெருவிலேயும் நடக்கச் சகியாத
அமைச்சர் மதித்திறன் மிக்காரும், தாங்கள் தாழ்ந்த நடையினராய்த் தண்
டூன்றி, கூன்முதுகோடு தவழுங் காலத்து, மனையாளிறப்பிற் பிறிதொரு
விவாகம் செய்ய முயன்றாலும், கருத்தறியாப் பிராயத்திற் சிறுமிகளுக்குப்
பதுமை விவாகம்போல் மணமியற்றி, அவர்கள் தாங்கள் நன்றாய்ப் பார்த்து
மறியாத கணவர்களிறப்பின், சாந்துணையும் கைம்பெண்களாகவே யிருக்கவே
ண்டு மென்று விதவாவிவாகத்திற்கு விரோதஞ் செய்து, சுயகாரியம் நாடிப்
பெண் கேடு சூழ்பவரும், ஆகிய இவ்வியல் பினரைக்கற்றோர் என்பதெங்ங
னம்? வறுமையும், பழியும், பாவமும் தருமவைகளைக் கைக்கொண்டு, செல்வ



மும் புகழும் அறமுந்தரும வைகளைக் கைவிட்டுத்தானே தன்னிருமைப்
பயன்களையுங் கெடுத்துக்கொள்ளுதலேபேதைமை யென்னுங்கருத்தமைந்த

“பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்”

என்னும் குறட் கூற்றுக்கேற்ப, கல்விப்பெருக்கத்தா லுண்டாகும் உண்மை
யூதியம் கைவிடுத்துப் பாவத்தொழில் பூண்டொழுகுமிவரைக்கற்றோரென்னல்,
மொட்டைத் தலைச்சியைக் கூந்தலழகி யென்று விளித்தலொக்கும். ஆகவே
சுற்றும், கல்லாராகிய இவர்வாய்ச் சொல், நாம் கொள்ளாது, கற்றுணர்ந்
தார் கூறும் விழுமிய பொருளை அங்கீகரித்து ஆராய்ந்தறிந்து தன்னுயிரோடு
மன்னுயிரும் இகபர சாதகமெய்துமாறு நன்மையைப் பயத்தலே பேர
றிவின் பயனாதலால் இற்றைக்குயான் நம்முன்னர், இவ்விந்து ஜன சமூகச்
சீர்திருத்தம் விருத்தியின்றிப் பண்டுள்ள நிலையிலே, நீடித்து நிலைத்த தெக்
காரணம்பற்றி யென்பதை, விழுமியோர் கூற்றிற்கேற்ப விளம்பலுற்றேன்.
ஏனெனில், நந்தேசத்தின் தற்கால நிலைமையை, நாகரீகத்தல். மிகப்பெருகி
அதன் பயனாக எண்ணுதற்கரிய நற்பேறுகள் பலபெற்றுள்ள பிறதேசங்
களின் நிலைமையோ டொப்பிடுமேல், ஆதவன் முன்னர் ஒளிமழுங்கிக்
கிடக்கும் அம்புலி போற் பெருமையிழந்து, மாரிநாட் கார்முகில் வெளிற்
காலத்து வெண்முகிலானு லொத்து, ஐம்பெரு நிலமுந் தனித்தனி ஈனும்
ஐம்பெரு நிதியுங்குன்றி வேட்டை வாய்க்கிட்டும், உயிரினைச் சுணங்
கன் பலவந்து சூழ்ந்திடு மாறுபோல் அரேபியர், மொகலாயர் பின்னர்
ஐரோப்பியராகிய பலர்வந்து இடம் பெறலுற்று மகிமை குன்றிக் கிடக்கும்
இந்நாவலந் தீவானது, நாகரீகக்குறைவால், நற்பயன் பெறாது நாளுக்கு
நாட் கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனைப்போற் பின்வாங்கி நிற்கும் நிலைமை
யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குமே. நந்தேசமிவ்
வாறிழிந்து கிடப்பதற்கேது வென்னெனில், இதற்கோர் மூலகாரணமா
கிய முதற்காரணமும் அதனினம்பற்றிவந்த பல்வேறு காரணங்களுமுண்டு.
முதற்காரண மாவதியாது? உவர்க்கடலாடையாயுடுத்திடு புவியின்கண்
சொற்பல பேசும் பற்பலதேயம் பரவிக்கிடப்பினும், எத்தேய மன்றி இனி
யொரு தேயத்தில், தோன்று தொட்டின்றளவும் கனவளவேனுங் கண்டறி
யப்பெறாத, சாதி வேற்றுமையும் இதினின்றும் விளைந்து இதற்குபகாரணங்க
ளான பலவற்றுள் முக்கிய மானவைகளான, பாலிகாவிவாகம், கைம்பெண்
கள் புனர்விவாக மின்றி யிருத்தல், பெண்கல்வி விருத்தியாகாமை, ஆடவர்
கணிகையரை விழைதல், ஆடம்பரச்செலவு முதலியவைகளேயாம் என்று
ணும், சாதிவேற்றுமையைப்பற்றி விவரிக்கப் புகுங்கால் இடையிடையே
அதன் பயனாகிய மற்றுள்ள தீமைகளும் விவரிக்கப்படும்.

(இன்னும் வரும்.)

சா. சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ.

# சீவக சிந்தாமணி வசனம்.

## விநாயக வணக்கம்.

### நேரிசை வெண்பா.

சிந்தா மணிக்குமேற் செவ்வனுறு திப்பொருட்கோர்
சிந்தா மணியாஞ்சிந் தாமணியென் - சிந்தா
மணித்தந் திருதிக்கை வைத்தொளிரச் செய்யு
மணித்தந் திருதிக்கின் வாய்.

## செந்தமிழ்ப் பரமாசாரிய வணக்கம்.

### குறள் வெண்பா.

திருத்தக்க நூல்வசனந் தெள்ளமிர்திற் செய்மா
திருத்தக்கான் மெய்ப்பதமே சேர்.

## காவியக்காப்பு.

### கலிநிலைத் துறை.

மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவா தவின்பந் தலையாயது தன்னி னெய்தி
யோவா துநின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவா திதேவ னவன்சேவடி சேர்து மன்றே.

## அவையடக்கம்.

கல்லின் பகுதியவாய இரத்தினங்க ளியாவும் மணிநூல் வல்ல வேகடியாற் கழுவப் படாவாயின் அவையிற்றி னன்மை கெடும். அங்ஙனே நிறைமதியன்ன கலைக ணிறைந்த சொல்லின் பகுதிய பெற்ற மறவும், புலமை மிக்க சான்றோர் தம்மறிவுநீராற் கழூஉ வழகாக வமைத்து நன்மை குன்றுமே வைப்பார் என்னுந் துணிபானும், முத்துப்பவளம் சங்கு என்பன உவர்ப்பையுடைய கடற்கட் டோன்றினும், குணம்நிறைந்த விழுமியோர் அவையிற்றைக் கைவிடாது சீரியவாக் கொள்ப. அதுபோல மெய்யாகிய புராணப் பொருளாலே சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாய அந்தமி லின்பத் தழிவில் வீடாம் முத்திப் பேற்றை யடைதுமென் றிருப்பார், எனது உவர்க்குந் தன்மையை யுடைய சொற்கள் விழுமிய வல்ல வாயினும், அவை பொதி பொருளுடைமை நோக்கி நல்லவாக் கொள்வரெனு முறுதியினானும், திருத்தக்க தேவனுஞ் செந்நாப் புலவ னியற்றிய சிந்தாமணிப் பாற்கடலை மதித்துச் செந்தமிழ் பயில்வார் வாய்த் தேக்கற் குரிய அமிர்த சாரத்தைத் திரட்டுபு தொகை விரியின் வசனநடையின் வைத்தனன்.



நோய்க்குற்ற மாந்தர் மருந்தின்சுவை நோக்க லில்லார்
தீக்குற்ற காத லுடையார்புகைத் தீமை நோக்கார்
போய்க்குற்ற மூன்று மறுத்தான்புகழ் கூறு வேற்கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும்வழு வல்ல வன்றே.

அவையடக்கம் முற்றிற்று.

## நாமகளிலம்பகம்.

### நாட்டு வளம்.

உலக மாகிய வொருபெரு நங்கையின் றெய்வ மங்கல வணிகலன் றிகழுங் கந்தர மன்ன பரத கண்டத்திலே, மேலாய் விளங்குந் திருமுகம் போல்வதும், நாவுறையும் புலமகளாகிய கலைமகளும், பூவுறை தலைமடந்தையாந் திருமடந்தையுந் தன்னை நீங்காமே நின்று தழுவ, அமிழ்தினு மினிய பாக்கள் பெருமையோடு விளங்குங் கலைகளிலே தட்டற நடந்த கேள்வி வேந்து அரசுவீற் றிருப்பதும், காயின்றும் முதிர்ந்த தெங்கு கனி வீழ்த்த, அவை கமுகிற் றாக்கி வீழலானே தேன்றூறு கிழிந்து, பலவின்பழம் போழ்ந்து, தேமாங்கனி சிந்தி, அரம்பைப் பயங்கள் சிந்தும் அணிவளனுடைத்தும், புகழாற் றிக்கெங்கும் போயதும், நாவலர் நவின்ற நாட்டியலுட் சிறந்த வமைத்தை யங்கதமாக்கொண் டிலகுவதும், இன்னோரன்ன பல சிறப்புக்களை யுடையதும் ஆகிய ஏமாங்கதம் எனப் பெயரிய நாடொன்றுளது.

அந்நன் னாட்டகத்தே திண்டோள் வல்ல சீவகசாமியின் களிற்றின நேரக் கருவிமா முகிலினம் புரலை மேய்ந்து, பொன் மயக்கொண்டறைத் தார்புனை தருணுஞ் சின்மயப் பரம்பொருளாமென்னை யாளுடை யெண்குண விறையவன் றன்சடைபோன் மின்னி, மலைசேர்ந்து, விண்ணிவர்ந்து, வாய்விட்டு முழங்கி, ஒன்றுகூடி, ஆகாயத் தண்டிற வெள்ளிக்கோல்களை வரிசையினடுக்கி மலையினுச்சிக்கண் வைத்தாற்போல மழை பொழிந்தன. அவ்வேந்தறன் முழவுபோன் முழங்குமலையின் குவட்டினின்று மிழியு மருவித்திரளும், பிறைக்கோட்டாற் றகர்க்கப்பட் டிறங்குந் தேன்றிரளும், திரண்மாடக்கட் செறிந்த வெண்டுகில் செந்துகிற் கொடிகளே போலத் தோன்றும். அங்ஙன மிந்திரனகலத் தாரம்போல் வீழும் அருவி வெள்ளமானது வரையாது கொடுக்குங் காதலமுடைய நன்மக்களைப்போல நித்திரள், சந்தனம், அகில், பழமுதலிய ஆங்குள்ள வளங்களை யெல்லாம் ஊர்க்கணிருந்த நல்குரவார்க் குய்ப்பானெண்ணி வாரிமடுத்து, முகம்கொண்டு, தென்னையிலைபோலப் பரந்து, நாட்டைநண்ணி, வாய்க்கால்கட்டேங்க வோடிற்று. அதுகாலை நாட்டிலுள்ளாரெவரும் மிக்க குரலையுடைய பறையினாற் சேரியிற் பயன்விரித்துப் படலிறிவான் மொய்த்தனர். அவரங்கிட்ட

மையான் வேட்டையிற்பட்ட வேழம்போலத் தணிந்து சென்ற வெலற்கருந் தீம்புனல், குலமகளிர் சற்பதேபோலக் கோட்டகம், ஏரி, செய், வயன்முதலியவற்றிற் குலவிநிறைந்தது. புரப்பவர் கொற்றத்தையு மிரப்பவர் சுற்றத்தையுந் தந்தொழி லொன்றானே விளைத்துக்காக்கு மேழியந்திருவார், ஒன்றுக்கொன்று பிரியாது மாமனையு மருகனையும்போன்ற வன்பினையுடையனவும், காமனையும் அவன்றம்பி சாமனையும் புரையுங் காட்சியனவும், பூவும் அரிசிப் புல்லுந்தின்ற வயிற்றனவும், தஞ்தொழிலின் மிக்கனவும் ஆகிய நெறித்த கொம்பரையுடைய எருமைக் கடாக்களையும் எருத்தினங்களையும் பூட்டி, வரான்மீன் கூட்டங்க ளிரிய வுழுவாரளவிலர். அது முற்றியபின் அவர் தந்தாயதுசேறுசெய்த வயலிடங்கடோறும் நெல்விதைப்பாரும், செவ்விய நாற்றைக் கடைசியர் குழுவொடு நடுவாருமாயினர்.

நடுவார்தம் பேரோதையைக் கார்காலஞ் செய்வான் வந்த மங்குன் முழக்கென்று மயில்க ளேங்கியாட, அவ்வொலியை முன்னர் மழையோவென் றயிர்த்தயர்ந்த குயிலினங்க ளுண்மையென்று வெரீஇ யலமந்து காதலர்ப்பிரிந்த கற்புடை மகளிர்போலக் காவகத்தொடுங்கின. பின்னர்க் களைகட்டல் செய்தாருட் கடையராவார் மதுவார்ந்த களியானே தாமரைகுவளை முதலியனவற்றைத் தத்த முழுவலன்புடைத் துணைவியருறுப்பென மயங்கி விடுத்து அத்தொழின்முடிக்க, முத்துப்பந்தன்ன கருவுயிர்த்துப் பாதிரிப் பூவையுங் கெடுத்த நாவினையுடைய நத்தைகொண்டு நாரைமீதோச்ச, அப்பக்கி யதுதிரையென்று மெல்லவெழுந்து மேலாலும். இன்னனவாய வேண்டுவினை முடித்த மழவரோம்பிய,

சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போன்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்த நூற்
கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.

மீனின் விழியளவாயினும் வெறுநில மின்மையானே புவியினர் கண்டு புகழ்தற்கரிதாய், மேலவர்கண்டு மெச்சுதற் குரித்தாய வயல்கடோறும் நிறைந்த கருப்பங்காடுகளும், சிந்தா நின்றாலு மறைக்குஞ் செந்நெற்பயிர்களும் முற்றினமையானே யொல்லென்னு மொலியவாயின. அதுகண்ட மண்மகள் புதல்வரா முண்மையின் மிக்கார் பிறைபோலுங் கொடுங்குயத்தை வலக்கைபற்றிச் செந்நெற்காடொடு முன்களைபறியாதனவற்றையுங் களிப்போடரிந்து குவித்துக் களமேற்ற, மேகங்களின் செலவையுந் தடுத்தோங்கிப் பக்கத்தகன்றுகாணும் நெற்கூடுக ளிருக்கப்பெற்ற அக்களநிலம், இப்போரையும் பொறுக்ககில்லேனென வாய்விட்டரற்றன்மானப் பொலியெழுந்தது. நெற்றிப்பொருள் வாங்கி வழங்கும் புண்ணியர்போலக் கணுவுடைக் கரும்பைத்



துண்டித்து ஆலையிலிட்டு நசுக்கிப்பிழிந்து, அடைந்தார் பருகி விஞ்சிய சாற்றை யடுதலா லுண்டாகும் புகைபரந்து மேற் சேறலிற் பரிதி சிவந்தது. உழவர் களத்தே தூற்றிக் குவைத்த நெல்லுட் டினைப் பொருநரது வறுமை நீங்கக் கொடுத்தன போக எஞ்சியவற்றை விற்றற்கும் வைத்தற்குங் காரணமாம் பண்டிகளும், சர்க்கரைப் பாகுநிறை பண்டியும், மலர் இளநீர் வெற்றிலை பாக்குக்குலை குழையும் பழம், "ஓர்க்கோலை சங்கமொளிர் பவளம் வெண்முத்த-நீர்ப்படு முப்பினோ" டைந்தாய கடல்வளம் பொதுளிய பண்டிகளும், ஈரெண் கூலமு நிரப்பிய சகடங்களும், ஒழிந்த பண்டங்க ணிறைந்த பண்டிகளுமாகத் திசையெங்கு நிறைந்து நாடொறு மித்தன்மைத்தாய் விளங்குவன மருதம் வீற்றிருக்குமவ் வயலிடங்களே. யானினிக் கூறுதற்கு நின்றன குடியிருப்பூர்களே.

அவ்வூர்க்க ணுள்ள மூங்கினட்ட குவளைமலர் நெருங்கிய ஓடைகளிலே நீர்வற்றலாற் சிறிது வாடிய வள்ளைக் கொடிமீது வாளை மீன்கள் பாய்தல், கழைக் கூத்தியர் மூங்கிற் கம்பத்தினின்று மிறங்கிப் பக்கத்தி னமைந்த கயிற்றிற் குதித்து ஆபரண மொலிக்க ஆடுவ தொக்கும். கரையிலிருந்த நாரைகள் அக்கூத்தைக் காண்பவர் போன்றன. வாவியின்கட் புகுந்து விளையாடும் மகளிரது கலைவடங்க ளற்றுதிர வெடுப்பாரின்றிக் கிடந்தமைபால், அவ்வாவிகள் யாவும் மேகலை யணிந்து, ஆகாய நட்சத்திரத்தைப் பூத்தது போலும். செல்வச் செருக்கினாற் பலர் ஆட்டுக் கடாக்களையும், தோணியினின்றும் வந்த சூட்டுடைக் கோழி முதலா வுள்ளவற்றையும், காடையாதிய சேவல்களையும் வகுத்து வைத்து, அவை புண்ணுடையனவாயிருத்தலையும் நினையாராய்ப் பின்னரும் போரை விரும்பி மூட்டி யார்க்கும் ஓதையும், விலக்குங் கௌவையுமே யவ்விடத்திற் காடவாரமாம். யாவரையும் நீக்கா துணவருத்தும் அன்னசாலையும், வைகறை யறலிற் பூவுஞ் சந்தனமு மிட்டு வைத்திருக்குந் தண்ணீர்ப் பந்தரும், கூத்தாடரங்கு மிவையன்றி ஐம்பொறியா னுகர்தற் குரிய பொருள்கள் யாவும் ஆங்காங்கு நிறைந்து ததும்பாநிற்கும். அவ்வூர்களிற் சத்திரமு மாயிரம்; தருமத்திற்கு விட்ட வரியிலா நிலங்களும் ஆயிரம், ஓதுஞ்சாலைகளு மாயிரம்; மகளிர் கோலஞ் செய்யு மிடமு மாயிரம்; தொழிலின் மடியாத கம்மியர்களு மாயிரம்; கல்யாணமும் ஆயிரம்; ஊர்ப்பாதுகாப்பாரும் ஆயிரமாம். சிறப்பெவற்றிற்கு மிடம் இந்நாடே யென்ப.

நற்ற வஞ்செய் வார்க்கிடந் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்
நற்பொ ருள்செய் வார்க்கிடம் பொருள்செய் வார்க்கு மஃதிடம்
வெற்ற வின்பம் விழைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்றை நாடு வட்ட மாக வைகு மற்ற நாடரோ.

(இன்னும் வரும்.)

நா. கதிரைவேற் பிள்ளை.

# ஸ்ரீராமாநுஜாசாரிய சரிதம்.

பின்பு சூரியன், இராமாநுசனெனும் திவாகரனது புகழ்பரவிச் சென்று தனதொளியினைத் தகைக்குங் கொல்லோ? என்றையுற்று 'மற்றை'நாட்களினு மற்றை நாளில் ஒளிமிகுந்து குணதிசைக் குன்றை யொன்றியவளவில், காமமாகிய காட்டை யழித்து வஞ்சனை என்னும் வேரைப்பறித்துப் பொய்யாகிய புதரை யெரித்துக் கடினமாகிய கரம்பு திருத்தி உண்மையாகிய எருவிட்டு நெஞ்சமாகியவயலில் தெய்வபக்தியாகிய விதை விதைத்துப் பக்குவமாகிய நீர்பாய்ச்சி விஷயமாகிய பட்டிமேயா வண்ணம் சாந்தமாகிய வேலி யமைத்துப் பிரமஞானமாகிய பயிர்தழைக்கக் கருணையாகிய கதிர் தோன்றி நிற்க அதனை* "யெட்டினோடி ரண்டெனுங் கயிற்றினால்" பிணித்து முதிர்ச்சி யென்னுங் களங்கொண்டு சென்று முத்தியாகிய முழுப்பயன் வாய்க்கப்பெற்றவர்களாகிய நம் யமுனைத் துறைவரது சீடர்கள் யாவருந்திரளாக இருந்து பெரிய நம்பிகளுடனே 'வைணவ சமயத்தினை நிலைநிறுத்துவார் எவரோ?' என்றுகேட்க, அவரும், 'ஸ்ரீஆளவந்தார் பெரிதும் கடைக்கணித்தருளியதும், அவரது திருவிரல்கள் நிமிர்ந்ததும் உங்கள் திருவுள்ளத்தில் நிலையிட வில்லையோ? என்றனர். அதுகேட்ட அம்முதலிகள் பெரியநம்பிகளை நோக்கித் 'தேவரீர் மீட்டுமொருகால் கச்சிநகர் சென்று இளையாழ்வாரைத் திரும்பக் கொணர வேண்டும்' என்ன அவருமுடனே புறப்பட்டுச்சென்ற காலத்தில், இளையாழ்வாரும் பேரருளாளர் தமக்குத் திருக்கச்சிநம்பி முகமாய் நியமித்தபடி அப்பெரிய நம்பிகளை யாசிரியராகப் பெறவெண்ணித் திருவரங்கம் பெரிய கோயில் நோக்கிச் செல்கையில் மதுராந்தகத்தில் இருவரும் வந்திறங்கினார்கள்.

இங்ஙனமாக, பெரிய நம்பிகள் ஆங்கெழுந்தருளிய ஏரிகாத்த பெருமாளைச் சேவிக்கக் கருதிச் செல்ல அவரை இளையாழ்வாரும் தூரத்திற் கண்ணுற்றுத் துயர்க்கடலினீங்கி ஆனந்தக்கடலிலாழ்ந்து, எண்ணியபலன் எதிர்ந்து வந்ததே! என்று உடல்புளகிக்க, ஆனந்தக் கண்ணீர் சொரிய நம்பி பாற்குறுகி வணங்க, அவருமிவரை யெடுத்தணைத்து உச்சிமோந்து நின்றவளவிலே, இளையாழ்வார், 'இப்பொழுதே யடியேனுக்கு இதோபதேசஞ் செய்தருளல் வேண்டு'மென்ன அவர், 'கடலாடை சூழ்ந்த நிலமாமகளது முகமோ? திலதமோ? கண்ணோ? எனக்கவிஞர் கருத்தைக் கவரத்தக்கதும்; 'தேவலோகமும் இதன் அழகிற்குத் தோற்றுவானத்தில் மறைந்ததோ'! என்றையுறத்தக்கதும்; பேரருளாளன் முதலிய பதினெண்மர் பாங்காயுறையத்தக்க பண்புடையதும்; காமாக்ஷியம்மையும் கருத்தியைந்து தரித்திருக்குமாறு கவினப் பெற்றதும்; எத்தகைய தீவினையோரையும் முத்தராக்

* திருச்சந்த விருத்தம்.



கத்தக்கதும்;'பிரமதேவனது படைத்தற் றொழிலின் சிறப்புணர உதாரணமாயதும்; பலபடி பன்னியுரைத்தலாற் பயனென்! 'முத்தொழில்களையும் ஆற்றுதலானும், முத்திடானு மளித்தலானும் எல்லையிலா சீரினானும் யான் திருமாலுக்கு ஒப்பாவேன்' எனத்தக்கதும், இனி, இன்ன பொருளுண்டோ? என்றுகேட்குங் கேள்விக்கிடனின்றி யெவ்வெப் பொருள்களும் எந்நாளும் மலிந்திருக்கப் பெற்றதும்; இடையருமல் அதிர்க்கும் பேரிகைகளின் பேரொலியால் உதிர்ந்த பெரிய நட்சத்திரங்களைப் போன்ற சங்கிலியாற் கட்டப்படும் வலிய யானைகளுலாவுஞ் செம்பொன்சோதி வீதிகளை யுடையதும்; இரவியின் புரவி செல்லாவண்ண மோங்கி யவ்விரவியை, உத்தராயணமாச் செலுத்துவதும், ஒருகால் அத்தகைய புரவியுஞ் சற்றுத் தங்கியிளைப் பாறவோங்கிய சோலைகளையுடையதும்; தன் புகழே திரண்டு விண்மதியாய் விளங்கப்பெற்றதும், 'செம் பொன்னாலாகிய மாடமாளிகைகளின் உபரிகைக்கணுள்ள மாதர்கள் பாடும் பாட்டால் வெட்கமடைந்து தும்புரு முதலோர் தேவலோகத் தொளித் தார்களோ! எனத் தக்கவுயர்வு பெற்றதும்; அத்துணை மாதர்கள் கூந்தலிற்கு ஊட்டும் அகிற்புகை சென்று கடலினை நீல நிறமாக்கியதுமான காஞ்சி நகரத்து அத்திகிரியிற் புண்ணிய கோடிவிமானத்தே "*அயர்வரும மரர்களதி பதி" யாகிய பேரருளாளனது ஸந்நிதியில் உபதேசிக்கின்றோமென்றார்.

அது கேட்ட நம் இராமாநுஜர்†, சரீரம் மின்னலைப்போலத் தோன்றிய பொழுதே அழியுமாதலின், ஒரு கணமேனும் தாமதியாது ஈண்டேயருள் செய்ய வேண்டு'மென்ன அவரும் அங்ஙனே யுபதேசித்து, 'இராமன், நாட்டை ஆளுதற்காக ஸ்ரீபாதாழ்வான் முடியிலே தன் திருவடிகளை வைத்துக் காட்டுக்குச் சென்றவாறு, யமுனைத் துறைவரும் நுமக்காகத் தமது அடிக்கமலங்களை என்றலையின்மீதிருத்தித் திருநாடடைந்தனர் என்றெண்ணக்கடவீர் என்று இளையாழ்வாரைத் தேற்றினர். [ஆனதுபற்றி நம்யமுனைத் துறைவர் இளையாழ்வாருக்கு நேரேயாசிரியராமாறுகாண்க. இதுபற்றியே †"யதிகட்கிறைவன் யமுனைத்துறைவனிணையடியாங் கதிபெற்றுடைய விராமாநுசன்" என்று பிள்ளையமுதனாரும் அருளிச் செய்தது].

பின் அவ்விருவரும் தமக்குள் மகிழ்ந்து பெருமாள் கோயிற்கண் ஏக, ஆங்கெழுந்தருளிய திருக்கச்சி நம்பியும் எதிர்கொண்டு போந்து நம் பெரிய நம்பியைத் தண்டனிட, அவருமிவரைக்கடைக் கணித்தனர். இவ்வாறாக;

அப்பால் இளையாழ்வார் தம்மில்லஞ்சென்று ஆங்கே பெரிய நம்பிகட்கும் இடம் அமைத்து அவர்க்கு வேண்டுவனயாவுமீந்து உபசரிக்க நம்பிகளும் ஆறுமாதம் எழுந்தருளியிருந்து இராமாநுஜருக்குச்சமயக்கோட் பாட்டு நூல் முதலிய யாவற்றையும் பயிற்றினார். இங்ஙனம் நிகழ்கையில், ஒருநாள்

* திருவாய்மொழி. † இராமாநுசநூற்றந்தாதி.

சில வைணவர்கள் இளையாழ்வாரை நோக்கிப் பசி எம்மைவருத்துன்றது' என்றவாறே அவரும் தமதில்லாளைக் கூய் 'அன்னமில்லையோ?' என்ன, அம்மனையாளும் 'சுன்னம்' எனக்கேட்டுத் தம்மனதிற் பின்னங்கொண்டு, அம்மனைக்கிழத்தியை வேறொரு காரியத்திலேவித் தாமே அட்டிலிற் சென்று ஆராய்கையில் ஆங்குப் பழைய சோறிருக்கக் கண்ணுற்றுக் கடுஞ்சீற்றமுடையராய், மனையாளைநோக்கி *"இடும்பையாலடர்ப் புண்டிடுமினோ துற்றென் றிறந்தவர்க்கில்லையேயென்று - நெடுஞ்செலான் மறுத்த நீசை" என்றனர்.

இத்தனையோடமையாமல், மீட்டுமொருநாள் கிணற்றங்கரையில் இவ்விளையாழ்வார் மனையாளும், பெரியநம்பியின் மனையாளுமோர் தோண்டிகாரணமாகத் தமக்குள் மாறுபட்டுப் பேசியதைப் பெரியநம்பிகள் கேட்டருளித் தம் தேவியைக் கோபித்து அதனை இளையாழ்வார்க்கும் அறியாது தேவிகளையும் கோயிலுக் கழைத்துச் சென்றார். பின், நீராடச்சென்ற இராமாநுஜர் மீண்டு தமது மாளிகை வந்ததும் ஆங்குப் பெரிய நம்பிகளைக் காணப் பெறாமையால் அருகிலுள்ளாரைக் கேட்க அவர்களும் நிகழ்ந்த செய்தியாவுங் கூறக்கேட்டுத் தம்தேவியை வெறுத்துப் பிறந்தகமே போக்கித் தாமும் † "இல்லற மில்லேல் துறவு" என்கிறபடியே இல்லறம் நீக்கித் துறவறம் கொள்ளக் கருதி அனந்த ஸரஸில் மூழ்கியப்பாற் பேரருளாளரது கோயிற்கணெழுந்தருளித்,

‡ "தாயே தந்தையென்றுந் தாரமேகிளைமக்களென்றுந்நோயே பட்டொழிந்தேன்" என்றிவ்வாறுரைத்து அப்பெருமானையே ஆசிரியனாகக்கொண்டு வேண்டாநிற்புழி அருளாளனு முள்ளமுவந்து அர்ச்சகர்முகமாய்த் திரிதண்ட முதலியவற்றையும் ஈந்தருளி, § 'நம் இராமாநுஜனை மடத்திலிருத்தி வாரு மெனத்திருக்கச்சி நம்பிகட்கு அருளிச் செய்ய அவருமங்ஙனே செய்தனர்.

அதன் பின்னர் நம் இராமாநுஜரும், துறவறத்தைக் குறைவற நடாத்துங்காலத்து, ஸ்ரீயமுனைத்துறைவரது திருவுள்ளக் கருத்து நிறைவேறுமாறு நமக்குத் துணைபுரிவாரெவருளரோ! எனக்கவன்று 'கோவிந்தபட்டன்' என்பானை நினைந்து 'அவனே நமக்கு நன்மை புரியுந்தகைமையன்', 'விஷயப்பற்றினை வெறுத்தவன்', 'சாத்திரத்தை நம்புந்தன்மையன்' இனி, அவனை நம்முடன் சேர்க்கவல்லாருண்டாகிலன்றோ நலமாவது' 'இதனைத் தலைக்கட்டுபவர் பெரிய திருமலைநம்பிகளே' எனத்துணிவு கொண்டு அவர் பக்கல் ஒரு வைணவரை நோக்கித் 'தேவருடைய மருமகனான வட்டமணிக் கோவிந்தபட்டர் அடியேனுடன் கல்விபயின்ற, ஒரு சாலைமாணாக்

* திருமொழி. † இயற்பா. ‡ பெரியதிருமொழி.

§ இவர்க்கு 'இராமாநுஜர்' என்ற திருநாமமும் அப்பேரருளாளனு லளிக்கப்பட்ட தென்க.



கன், ஏதோ சேர்க்கை வேறுபாட்டாற் காளஹஸ்தியாகிற கடுங்காட்டில் திரிந்துழலாநின்றான். தேவரீர் அவனை அடியேன் பொருட்டாகச் சற்கருணை கொண்டு திருவடிக்காட் செய்யவேண்டும்" எனக் கூறுமாறனுப்பினர். இஃதிங்ஙனமாக.

(இன்னும் வரும்)

தி. கோ. ஸ்ரீரங்கா சாரியர்.

---

## திருப்பரங்கிரிக் குமரனூசல்.

---

### விநாயகர் காப்பு.

**நேரிசை வெண்பா:**

தேசம் புகழுந் திருப்பரங்கி ரிக்குகன்ற
னூசற்பா மாலைக் குவந்தருளும் - வாசத்
திதழிபுனை யும்பெருமா னீன்றமத யானை
வதனமுறு மெம்பெருமான் வந்து.

பேர்பரவுந் திவ்வியமண் டபத்தி னூடே
பிறங்குமுயர் செம்பவளக் கால்க ணட்டி
யேர்பரவும் வயிரமணிக் கொடுங்கை மாட்டி
யிசைந்தொளிரு மரகதத்தால் விட்டங் கூட்டி
யார்பரவு முத்துமணி வடங்கள் பூட்டி
யவிர்கனக பீடமிட்ட வூசன் மீது
சீர்பரவும் பிடியொருமா னொருபான் மேவத்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (க)

செங்கமல மலர்மகளோர் வடந்தொட் டாட்டச்
சிலைநனுதற் கலைமகளோர் வடந்தொட் டாட்டச்
சங்கொளிர்கை ரதிமாதோர் வடந்தொட் டாட்டச்
சசிவதனச் சசிமாதோர் வடந்தொட் டாட்ட
மங்கலமே னகையரம்பை கவரி வீச
வளமருவுஞ் சுரமாதர் வாழ்த்துக் கூறத்
திங்கள்பல வெனத்தாளத் தார நாலத்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (உ)

சோதிமணி முடிகளுபர் முடிகண் மேவச்
சுடர்செய்மணிக் குண்டலங்கள் செவிகண் மேவு

160956

வேதமிலா தவிர்வலயர் தோட்கண் மேவ
விசைத்தொளிரு முத்தார மார்பின் மேவ
வோதருவீ ரக்கழல்கண் மலர்த்தாண் மேவ
வுயர்ந்தநவ வீரர்விண்ணோர் பக்க மேவத்
தீதிலாத் தமிழ்ப்பயிர்கள் செழித்து மேவத்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௩)

நாலார ணங்களெனு மறைக ளார்ப்ப
நவமுறுதம் புருவீணை நயங்க ளார்ப்பத்
தோலாத கவிப்புலவர் பாட லார்ப்பச்
சுபமுயர்வாத் தியமாம்பல் லியங்க ளார்ப்பக்
கோலாக லத்தமரர் வாழ்த்த லார்ப்பக்
குலவியமெய் யடியவர்தோத் திரங்க ளார்ப்பச்
சேலாரும் விழியாரா லாத்தி யேந்தத்
திருப்பாங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௪)

சோமனையொண் சிரங்கொள்பசு பதிகண் டாட
சுவர்க்கப்பா லளித்தவுமை மகிழ்வி னாட
மாமதிப்பா ரணன்றீர மேவி யாட
வாரிவெண்ணெ யுண்டிடுமோர் மாம னாடக்
கோமளமா ரமுதகும்பத் தனமார் தேவ
குஞ்சரியா மமுதனையாள் குலவி யாடத்
தேமலியும் வெட்சியந்தார் புயங்க ளாடத்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௫)

கம்புருக மொழியுரைத்த சாமி நாத
தயாநிதியே மாநிதியே யெனச்சி ரார்ந்த
கிம்புருடர் கருடர்வித்யா தரர்க ளாகர்
கேதமகல் பொன்னாடர் மிகக்கொண் டாடத்
தும்புருநா ரதரினிய கீதம் பாடத்
தூயரம்பை யுருப்பசிமா தடைகண் காட்டுஞ்
செம்புருவ வின்மடவா ராட னீடுந்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௬)

நவ்விநேர் விழியாளோர் வசிய மாது
நரியகனல் வெட்டுண்ட கைதா வென்னப்
பவ்வமா ருலகினருள் மகிழ்வு நீடிப்
பரவப்புங் கேருகக்கை பாலித் தாண்ட



யவ்வனம னேன்மனியின் பாலா மேலா
யதார்த்தமிகு தெய்வானைக் கினிய லோலா
திவ்வியவண் சுனைநீர்விண் மாத ராடுந்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௭)

அரனுதற்கண் வந்தவரே யாடி ரூசல்
ஆறுமுகங் கொண்டவரே யாடி ரூசல்
இரவிநிகர் மேனியரே யாடி ரூசல்
ஈராறு தோளுடையீ ராடி ரூசல்
உரவர்புக ழுரவுடையீ ராடி ரூசல்
ஊழகற்றி யாள்பவரே யாடி ரூசல்
திரமன்னு மந்தணர்சூழ்ந் திறைஞ்சிப் போற்றுந்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௮)

சயங்கொள்வடி வேலுடையீ ராடி ரூசல்
தகுசேவற் கொடியுடையீ ராடி ரூசல்
வயங்குசமு தாடுடையீ ராடி ரூசல்
வண்மயில்வா கனமுடையீ ராடி ரூசல்
புயங்கள்வரை யெனவுடையீ ராடி ரூசல்
புனிதவெட்சித் தாருடையீ ராடி ரூசல்
தியங்கிடா தருள்சுரந்து காக்கு மெங்கள்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௯)

பால்வண்ணற் கோமுபதேசித்தீ ராடி ரூசல்
பவளவண்ணற் றுணைநயந்தீ ராடி ரூசல்
மால்வண்ணற் கரசளித்தீ ராடி ரூசல்
வண்பொன்வண்ணற் கருள்புரிந்தீ ராடி ரூசல்
மேல்வண்ணச் சூர்தடிந்தீ ராடி ரூசல்
மேகவண்ணன் மருகென்றீ ராடி ரூசல்
சேல்வண்ண விழிமடவார் சிறக்குந் தூய
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௧௦)

தேறுமறை யாகமசாத் திரங்கள் வாழச்
செப்பரிய கௌமார சமயம் வாழ
வீறுதருந் திவ்யசடக் கரமும் வாழ
விபூதிருத்தி ராக்கமணி மேலாய் வாழக்
கூறுமழை முகில்வாழப் பசுக்கள் வாழக்
குறையகலந் தணர்புரியும் வேள்வி வாழச்
சீறிடா திதுபடித்தோர் கேட்டோர் வாழத்
திருப்பரங்கி ரிக்கரசே யாடி ரூசல். (௧௧)

திருஎவ்வுளூர்-இராமசாமி செட்டியார்.

# திருவிளையாடற் கருப்பொருள் வெண்பா.

---

## காப்பு.

### விநாயகக் கடவுள்.

தேமேவு கூடற் றிருவிளையாட் டெட்டெட்டும்
பாமேவு வெண்பாவாற் பாடவே—மாமேவு
மைம்மலையிற் கோடொன்றன் மாபா ரதந்தீட்டுங்
கைம்மலையின் றாளெமக்குக் காப்பு. (க)

### சோமசுந்தரக் கடவுள்.

துருவிக்கும் பன்றிதரு குட்டிக்குந் தாழ்ந்த
குருகுக்கும் முத்தி கொடுத்த—வருளாளன்
செய்ய திருப்பாதஞ் சென்னியிற்கொண் டிந்நூலை
யுய்ய வுரைப்பா முவந்து. (உ)

### அங்கயற் கண்ணம்மையார்.

தென்னன் றிருமகளாய்த் தென்மதுரை வந்தருளி
முன்ன மரசு முறையாண்ட—கன்னி
யிருபோதும் முட்போது மேத்தித் தொழுவார்க்
கொருபோது மில்லையிடை யூறு. (ங)

### சுப்பிரமணியக்கடவுள்.

வேதனைக் குட்டி வியன்சூர் தனையட்ட
நாதன் றிருநாம நாடோறு—மோத
வினையகலு மல்லலெல்லாம் வேருடனே மாயு
மெனையனவுங் கைகூடு மிங்கு. (ச)

### நாமகள்.

சைவப் பரஞ்சோதி தாட்கமல முச்சியிற்கொண்
டையன் விளையாட் டறைவதற்குத்—துய்ய
மருவாரும் வெண்டா மரைவாழு மம்மை
யிருபாதங் காப்பா மெமக்கு. (ரு)

### திருநந்தி தேவர்.

வந்து சிவனடியை வந்திக்கும் வானவரை
முந்திப் பிரம்பான் முனிந்தொறுக்கு—நந்தி
யடிக்கமலஞ் சூடி யகவிருளைப் போக்கித்
துடிக்கமலம் மாய்ப்பாந் துணிந்து. (சா)

### திருத்தொண்டர்கள்.

சுந்தரர் சம்பந்தர் சொல்லரசர் வாதவூர்
வந்தவ ராதியடி வாழ்த்தவே—சந்ததமு
மன்புண்டா மின்புண்டா மாய பொருளுண்டா
முன்புண்டா மெல்லா முதிர்ந்து. (எ)

### அவையடக்கம்.

சுந்தரன்ற னாடலினைச் சொல்லத் துணிந்தெழுந்த
வெந்தாழு மென்னே யிதுநகைப்பே—செந்தமிழோர்
கொள்வா ரொருவேளை கூடலிறை தன்பாத
முள்வா ரதனா லுவந்து. (அ)

காப்பு முற்றிற்று.

---

## பாயிரம்.

### பாண்டித் திருநாட்டுப் படலம்.

சங்கப் புலவர் தமிழ்வீசுஞ் சம்புமைமே
ளங்கர சாண்ட வருள்வீசுஞ்—சங்கரனா
ரன்ப ரடிவீசு மாதலாற் பாண்டிநா
டென்பர் சிவலோக மிங்கு. (கூ)

### மதுரைத் திருநகரப் படலம்.

செங்கமலம் வெண்கமலஞ் சீர்யோக பீடமதா
யங்கமலை வாணிசித்திக் சாமதுரை—துங்கத்
திலதமாம் பூமிக்குத் தேரி னிகரா
யிலதிலது வேறுதல மிங்கு. (க0)

### தலவிசேடம்.

கேட்ட வுடன்முத்தி கிழான பாதகர்க்கும்
வாட்ட மிலாதளிக்கும் வாழ்மதுரை—நாட்டம்
புரியரனார் வந்தாண்ட பொற்பதியீங் குற்று
லரியயனுந் தாழ்வா ரடி. (கக)

### தீர்த்தவிசேடம்.

அஞ்சுல நாட்டி யருங்கங்கை நீர்விடுத்து
மஞ்சுறுந் தீர்த்த மருங்கமைத்தா—னஞ்சுரா
னந்திமுத லோர்களிக்க நாடில்வே றெப்புளதோ
விந்துமுடி நண்ணு மிறை. (கஉ)

### மூர்த்திவிசேடம்.

இத்தலத் திலிங்கமோ தெண்ணான் கிலக்கணத்த
தத்தலத்துக் கொப்புளதோ வாயுங்கா—லெத்தலத்து
மிம்மூர்த்தி யேமூர்த்தி யேனெனிலிங் கேவாழ்வான்
மும்மூர்த்தி தம்மின் முதல். (௧௩)

பாயிரம் முற்றிற்று.

---

## நூல்.

### இந்திரன் பழிதீர்த்த படலம்.

விச்சுவனை மாய்த்து விருத்திரனை வீட்டுபழி
சச்சைபோற் சுற்றக் கருத்தழிந்து—துச்சவன
னேற்றிக் கடம்பவனத் தெட்டானை மீதானைப்
போற்றிப் பழியற்றான் போர்த்து. (௧௪)

### வெள்ளையானைச் சாபந்தீர்த்த படலம்.

சம்புவனி யம்புயத்தைச் சார்ந்தடையுந் தூர்வாச
னும்பர்பதிக் கீயவவ னூர்ந்துவரு—மும்பலைத்
தேய்க்கமுனி சாபத்தாற் றென்மதுரை நம்பனைநீர்
தோய்க்கவருள் பெற்றதுகாண் றேல். (௧௫)

### திருநகரங் கண்ட படலம்.

வாணிகனுஞ் சங்கரனும் வந்துகுல சேகரன்பா
லேணிசெய்க டம்பவன மென்றுரைக்கப்—பேணிமதி
சிந்தமிர்தத் தான்மதுரை செய்துமகப் பெற்றடைந்தான்
பந்தமறுத் தாதி பதம். (௧௬)

### தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலம்.

பண்டை யருட்படியே பார்வதிமூ வாண்டுருவங்
கொண்டுமலை யத்துவசன் கோமகத்தி—லுண்டாய்ப்பின்
கோலோச்சி னண்மதுரை கூறுகன்னி நாடாக
மாலோச்சி விண்ணுற்றான் மன். (௧௭)

### தடாதகைப் பிராட்டியார் திருமணப்படலம்.

திக்குவிசயஞ்செய்து செக்கானை வெல்லவரன்
பக்கமுற முன்சேர் பறம்பேக—நக்கனெழிற்
கன்னி தனைமணந்து கன்னிநகர் சுந்தரனென்
மன்னவனா யாண்டான் மகிழ்ந்து. (௧௮)



### வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம்.

செய்ய பதஞ்சலியுஞ் சீரார் புலிமுனியு
முய்ய நடமன்ன முண்ணவே—யையனவர்
காண நடித்தான் கடிமணத்தின் மற்றவரும்
பேண மதுரையினிற் பின். (௧௯)

### குண்டோதரனுக் கன்னமிட்ட படலம்.

ஊண்விஞ் சியதென் றுமைதருக்கிச் சென்றுரைப்பச்
சேண்விஞ் சியவூண் சிகரத்தை—நாண்விஞ்சக்
குண்டோ தரனாற் குறைப்பித்தான் கூடலினிற்
கண்டோர்க ளஞ்சத்தி கைத்து. (௨௦)

### அன்னக் குழியும் வைகையு மழைத்த படலம்.

நாவணியம்மை முன்னிற்க நாயகன்குண் டோதரற்கே
பூணியலுண் டேநீர்க்கா வோடவரன்—சேணியகங்
கைவிடுக்க வாய்விடுத்தான் கைகொட்டி முன்குதித்தா
னைவிடுக்கக் கூடலினி னன்கு. (௨௧)

### எழுகடலழைத்த படலம்.

காஞ்சனையாள் கோதமரின் கட்டுரையா லீர்படியும்
வாஞ்சையினைப் பூஞ்சிகையாள் வந்துரைக்க—நாஞ்சிலம
ராலவாய்ச் சொக்கனே முத்தியையு மங்கீந்தா
னலவாத் தீர வழைத்து. (௨௨)

### மலயத்துவசனை யழைத்த படலம்.

தன்னம்மைவல் பற்றியுவர் தான்மூழ்க வுற்றதெனு
அன்னைமகி ழக்கூட லாதிபரன்—பொன்னுலகில்
வாழுமலை யத்துவசன் வந்தடையச் செய்திருவோ
ரேழுகடன் மூழ்குவித்தா னிங்கு. (௨௩)

### உக்கிரபாண்டியன் திருவவதாரப் படலம்.

ஆனை யுரியானு மம்பிகையுந் தாமகிழ
வேனைவிண் ணோர்களுமே யேமுறத்—தானையுடன்
சூரனை யன்றட்டுத் தொன்மதுரை யுக்கிரம
வீரனாய் வந்துதித்தான் வேள். (௨௪)

ஏ. சங்கரலிங்கம் பிள்ளை.

---

# தமிழ்ப்புலவர்கள் நிலைமை.

---

அங்கிலேய மொழியிற் சிறிது பயின்றசில தமிழ் நாடர்கள் தமிழ்ப்புலவர்கள் வித்தியாசாலைகளுக்குச் சிறந்ததோருடையும் உடுப்பும் இன்றிவருகின்றார்கள் எனக்கூறியதே யாமும் செவிப்புலனுற்றோம். அஃதுண்மையே.

விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல்நிறைய மோதிரங்கள் வேண்டும்—அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.
அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையாற் பாடுபெறும்

என இவைபோன்றன பெரியாரும் கூறியுள்ளார்.

இரக்கப்போனாலும் பாக்கப் போகவேண்டும்
மந்திரம் தெரியாத குருக்களுக்கு மணியோசை பலம்

என்னும் பழமொழிகளும் அடிப்படுகின்றன.

ஆயின் வித்தியாசாலை நடாத்துபவர்க்கு அனுகூலமாகக் கருதியோ நகைசெய்து இகழல் வேண்டுமெனக் கருதியோ தமிழ்ப்புலவர் வினை தடைசெய்ததனாலேயோ இன்றியமையாததாகிய ஒன்று மாத்திரம் எடுத்துக்கூறாது விடுத்தனர் பாவம் பாவம். அங்ஙனம் எடுத்துக்கூறியோர் குலமக்களாதலின் நகைசெய்து இகழ்தல் வேண்டுமென்னும் கருத்துடையாரல்லர் எனத் துணிகின்றோம்.

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. என்றலின்,

மற்றென்செய்ய வேண்டுமெனின்:—அக்குலமக்கள் செல்வராயின் வேண்டுவன கொடுத்துப் புலவர்கள் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக்கண்டு தாமும் மகிழ்வர். வறியராயின் அன்புடன் இனிதுநோக்கித் தாமும் இரங்கித் துன்புறுவர். அது நிற்க, இனி இன்றியமையாதாகிய ஒன்று மாத்திரம் எடுத்துக்கூறாது விடுத்தனர் என்பதைக் கூறுகின்றோம்.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.
அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்



செல்வச் செவிலியா லுண்டு.
வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதான் எய்துமுலைப்பெய்
தடுவது போலுந் துயர்.
ஞானமும் கல்வியும் நாழியரிசியிலே.
பணமென்ன செய்யும் பத்துவிதஞ்செய்யும்.
கூண்டிலே குறுணி நெல்லிருந்தால்
மூலையிலே முக்குறுணி தெய்வம் கூத்தாடும்.

என்று இவைபோன்றவற்றைச் சிறிதாராயின், எல்லாவற்றுக்கும் பொருளே இன்றியமையாததாயிருக்கின்றது.

"முனிவரு மன்னரு முன்னுவ பொன்னால்முடியும்".

என இங்ஙனம் கடந்த பெரியாரும் கூறியுள்ளார். தமிழ்ப் புலவர்கட்கும் அஃது ஒன்றுதான் குறைவு பட்டிருக்கின்றது. அவர்கள் நிலைமை இங்ஙனமாயின் சிறந்ததோருடை முதலியன உடுத்தல் அவர்கட்கு எங்ஙனமியலும்?

எல்லாமிருக்கிறது பெட்டியிலே
இலைக்கறி கடையச் சட்டியிலே

என்றபடி அவர்களது பொருளின்மையை மாத்திரம் மெல்ல விடுத்து மற்றைய எல்லாம் எடுத்துக்கூறப் புகுந்தால்தக்கதோர் மாதவேதனமின்றி மிகப் பரிதாப நிலையில் நின்று வருந்துகின்ற தமிழ்ப்புலவர்கள் என்ன செய்வார்கள். இலக்கண இலக்கியங்களைநன்குகற்றும் தக்கதோர் மாதவேதன மில்லாமையாற் கவலைப்படுகின்ற சில தமிழ்ப் புலவர்களை யாம் இங்கு எடுத்துக் கூறின் மனங்கரைந்து வருந்தாதவர் யாவர்? என்செய்யலாம்?

நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.
இடுக்கண் வருங்கா னகுக.
போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.

என இவைபோன்றனவற்றை எண்ணி எண்ணித் தான் அப் பொருளின்மையாலுண்டாகும் கவற்சியைச் சிறிது சிறிதாக மாற்றிக்கொள்ளல்வேண்டும். இக்காலத்துத் தமிழ்ப் புலவர்கட்கு அதைவிடினும்வேறே வழியில்லை போலும்.

இடிப்பொடிந்த கோழிக்கு உரற்குழியேகதி.
பூவேந்தர் முன்போற் புரப்பரிலை யெனினும்
பாவேந்த ருண்டென்னும் பான்மையாற் - கோவேந்தன்

மாறனறிய மதுரா புரித்தமிழோர்
வீறனையே சற்றே மித.

அடகெடுவாய் பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோ மறிவில் லாமல்
திடமுளமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை
தடமுலைவே சையராகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தைய லார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை
என்னசென்மம் எடுத்துலகி லிரக்கின் றோமே.

என்ற இச்செய்யுள்களையும் நோக்கின் பொய்யாமொழிப்புலவர் படிக்
காசுப் புலவர்கள் காலத்திலேயே தமிழ்ப் புலவர்கட் குரிய செல்வப்பெரு
க்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல நன்கு புலப்படுகின்றது.

தமிழிலே பிறந்து தமிழையே யுண்டு தமிழிலே வளர்ந்து தமிழையே
பேசும் தமிழ்ச்செல்வர்களனைவரும் அச்செய்யுள்களையும் நினைத்தொறும்
நினைத்தொறும தலைகவிழ்ந்து செல்லத் தக்கதோர் செயலேயன்றோ? மலை
யாளம் மைசூர் முதலிய சுதேசராஜப் பிரபுக்களும் சமஸ்கிருத பண்
டிதர்களுக்கு மாத்திரம் உதவி செய்கின்றார்களே யன்றித் தமிழ்ப்புலவர்க
ளுக்கு ஒரு சிறிதும் உதவிசெய்கின்றார்களில்லை; தமிழ்ச்செல்வர்கள் அதனைக்
கண்ணுற்றும் செவியுற்றும் அங்ஙனம் செய்கின்றார்களில்லை. இதனை எவ
ரோடுசொல்லலாம்? காலக்கொடுமை யென்றே கருதல் வேண்டும்.

தமிழ்ச் செல்வர்கள் வைவாகிக முதலிய காலங்களிற் புரோகிதம் சங்
கீதப்புலவர் விகடகவி முதலோருக்கு மரியாதை செய்கின்றார்களேயன்றித்
தமிழ்ப் புலவர்களைக் கௌரவப்படுத்தி ஒரு மரியாதையும் செய்யக் கண்டி
லோம் கேட்டிலோம். சிலர் செய்யினும் சங்கீதப் புலவர் முதலோருக்குச்
செய்ததிலும் பெரிதும் குறைவாகவே காணப்படும். இஃதென்னை பாவம்!
பாவம்!!

தமிழ் நாட்டுப் பெருஞ்செல்வர்களிற் சிலர் ஒருப்படின் மதுரையின்
கணிருந்த தமிழ்ச் சங்கம்போல ஒன்றேனும் நியமித்துக் காத்துவரல் அரிதா
குமோ? இங்ஙனம் ஒருப்பட்டுச் செய்யின் தமிழ்நாடு தமிழ்நாடாகித் தமிழ்
மணங்கொண்டு எல்லோர்க்கும் புகழும் புண்ணியமும் விளைவித்தல் திண்
ணம் திண்ணம்; திருவருளும் இங்ஙனமே கூட்டுக.

மாணவர்கள் தமிழ்ப்புலவர்களை அவாவுகின்றிலர் என்கின்றனர். நன்று.
தமக்குரிய மனைவியை விட்டு அயலார் மனைவியை விரும்பி முயல்வது போ
லப் பதிபசுபாச இலக்கணங்களை ஆராய்ந்துணரத் தமக்குரிய தமிழ் மொழி



யைக் கல்லாமல் அவமதித்துவிட்டுப் பொருள் புகழ் ஒன்றே விரும்பி அங்கிலேய பாஷையொன்றையே பெரிதும் முயன்றுசுற்கு மாணவர்கள் தமிழ்ப் புலவர்களை எங்ஙனம் அவாவுவாராவர்?

"புகழ்பொருள் பற்றாகப் போற்றிய கல்வி
இகழப் படுவன வென்றிசினோ ரான்றோர்."

தமிழ் நாட்டிற் சிலர் இந்து மகாவித்தியா சாலையென்று பெயர் மாத்திரம் வைத்திருக்கின்றனர். அதில் தமிழ்ப்புலவர்சளிலர். இருக்கினும் மாத வேதனம் சில; அச்சிலவும் மாதந்தோறும் கிடைப்பதரிது. அதிகாரம் செய்வதற்கு மாத்திரம் பற்பலர் எழுவர். மாதவேதன மென்றால் ஒருவரும் பேசார். இஃதென்னை, இந்து மகாவித்தியாசாலை யென்று பெயர் வைத்தற்கேற்ப மற்றும் ஒருதமிழ்ப்புலவனை நியமித்துத் தமிழை வளர்த்தா லன்றோ தகுதியாகும். மாம்பழ முண்ணுதவொரு பறவைக்கு மாம்பழவுண்ணி எனப்பெயர் வந்தது போலிருக்கின்றதே! என்னை!

தமிழ்மொழியில் தருக்க முதலிய நூல்கள் பெரிதும் இல்லை, அவையிற்றை இக்காலத்தில் எழுதுவாருமிலர் என்கின்றனர். இக்காலத்தில் அங்கிலேய பாஷையில் அவ்வகைப்பட்ட நூல்கள் தோன்றியதற்குக்காரணம் என்னை? அதனைச் சிறிதாராய்வராயின் அங்ஙனம் சொல்லப்புகார். அவ்வகைப்பட்ட நூல்களை மாத்திரமல்ல, அவற்றினு நுட்பமாகிய நூல்களைப்பெரிதும் எழுதவல்ல தமிழ்ப்புலவர்கள் இக்காலத்தும் இருக்கின்றனர்.

அவர்கட்கு வேண்டிய பொருளுதவி செய்து அவ்வகைப்பட்ட நூல்களை எழுதுவித்தல் வேண்டுமென்று தமிழ்நாட்டுப் பெருஞ் செல்வர்கள் சிறிதும் கருதுகின்றிலர். தமிழ் நாட்டிற் பரம்பரைப் பெருஞ் செல்வர்களும் இருக்கின்றார்கள். அச்செல்வர்தம் செல்வப் பிள்ளைகளும் மேலும் மேலும் அங்கிலேய பாஷையேயன்றிக்குலமொழியாகிய தமிழ்மொழியைக் கற்றுணர்ந்து உரைத்துக் கேட்டுப் பழைய நூல்களைச் செல்வாக்கிலேறுத வண்ணம் பலபலவாக அச்சிற் பதிப்பித்தும் ஏட்டில் எழுதுவித்தும் செல்வாக்கில்வைக்கின்றார்களிலர்.

பெரிதும் செல்வப் பெருக்கில்லாத தமிழ்ப்புலவர்கள் இவ்வெண்ணங் கொள்வதனாற் பயனென்னை?

செல்வப் பொருளோ சில வாதற் பாலன
பல்வகை யாகும் பசிப்பிணியான்—ஒல்கிய
மக்களோ பற்பலர் மாநிலத்துச் செல்வம்
தக்காங்கு நேடத் தகும்.

மாகறல் - கார்த்திகேய முதலியார்.

# தோத்திரப்பா.

படங்கொண்ட சேடன் சுமக்கின்ற புவியைப்
பரிக்கின்ற தயரதன்றன்
பாலனாய் வந்துதா டகையையென் றகலிகை
படுந்துயரை மாற்றிமிதிலை
யிடங்கொண்டு வின்முறித் தச்சனகி தனைமணந்
திளைதாய் சொல்லின்வண்ண
மிலக்குவ னொடுங்கா னடைந்துகர தூடணு
தியர்மாளவாளிதொட்டு
வடங்கொண்ட பூண்முலை யரக்கியை யறுத்துமா
ரீசனை வதைத்துமனை
வங்கணங் கொடுசேது பந்தனஞ் செய்திரா
வணனையெம னுலகமேற்றித்
திடங்கொண்ட வீடணற் கரசுத விராகவன்
திருமருக னேயென்னையாள்
சிந்திப்ப வெட்டாத முத்தமிழ்த் தேசிகா
சிவயோக நாதமுதலே.

வசுதேவ புத்ரனாய் நந்தகோ குலமதில்
வளர்ந்தெசோ தைப்பிராட்டி
வனமுலையி லமுதுண்டு பூதனை யெனுங்கஞ்சன்
வரவிட்ட பேயைமாய்த்துப்
பசுமேய்க்கு நாளையிற் கோவர்த்த னத்தைப்
பறித்தொருகை யாற்கவித்துப்
பாறயிரும் வெண்ணெயு நெயுந்திருடி யுண்டிடையர்
பாவையர் தமைப்புணர்ந்து
விசுவாச முற்றபாண் டவதூத னாகிமேல்
விசையனுக் கிரதமூர்ந்து
வெற்றிவிழை கஞ்சன்முத லானதுட் டரையெலாம்
வென்றுகைச் சக்கிரத்தாற்
சிசுபாலனைக்கொன்ற கண்ணன்மரு காகுகா
சிறியேனை யாளவருவாய்
சிந்திப்ப வெட்டாத முத்தமிழ்ச் தேசிகா
சிவயோக நாதமுதலே.



3. பணியிட்டு மெய்யின்மண மிட்டுவத னத்தினிற்
பசுமஞ்ச ளிட்டுவன்னப்
பாவாடை யிட்டிரு தனத்திலுத் தரியமொரு
பாற்றெரிய விட்டுமையுங்
கணியிட்டு நெற்றியிற் பொட்டிட்டு மலரொத்த
கையில்வளை யிட்டுவைரக்
கணையாழி விரலிலிட் டுப்பொற் சிலம்புமிரு
காலிலிட் டாடவர்க்கே
தணியாத மோகமிட் டுப்பொருள் பறிக்கத்
தனித்தலைவு கின்றவஞ்சத்
தையலர்கண் மையலில் விழுந்திடா மற்சூரர்
தலைமவெல்ல வேலெடுத்த
திணிதோள குறவள்ளி மணவாள கார்த்திகைத்
திருநாள வெனையாளவா
சிந்திப்ப வெட்டாத முத்தமிழ்த் தேசிகா
சிவயோக நாதமுதலே.

4. எள்ளளவு மெய்ம்மொழிகள் பேசாது நாப்பொய்க்
கிருக்குமிடம் விழியோவுன
தெழில்கண் டிடாதுசிற் றிடைமாத ரைக்காண
விச்சிக்கு மிருகைகளோ
கள்ளவிழு மலரெடுத் தர்ச்சியா செவியுநின்
கதைகேட் டிடாவெனதிரு
காலுநீ மனமகிழ்ந் துறைதிருப் பதியிலெக்
காலுமே காதவஞ்ச
வுள்ளமோ சற்றேனு நினைகிலா திவ்வா
றுறுப்படைந் துழலுகின்றே
னுள்ளபடி யுன்னிட முரைத்துவிட் டேன்கருணை
யுடனுள்வ துன்பரங்காண்
டெள்ளமுத மேகரும் பேசருக் கரையே
திருப்பரங் கிரியின்முருகா
சிந்திப்ப வெட்டாதமுத்தமிழ்த் தேசிகா
சிவயோக நாதமுதலே.

5. நீலமலை போன்மேனி யுந்தலைக ளாறுட
னெருப்பனைய விழிமுனான்கு
நிலவொத்த தந்தமுங் கைம்மூ விரண்டுமாய்
நிலைகலங் கிடமுனிந்து

காலனொரு பாசமுங் கைக்கொண்டு மேதிக்
　　கடாவேறி வன்முன்வந்து
கட்டடா குத்தடா வெட்டடா வென்னுங்
　　கவரடா வெனுமுன்னமே
வேலுமயி லுங்கிங் கிணிக்காலு மாகநவ
　　வீரருட னிங்குவந்து
வென்றடித் துத்தாத் திச்சமனை யுனதுதாள்
　　வீடெளிய னுக்குதவுவாய்
சீலசர வணபவ கடம்பசண் முககுகா
　　தேவர்சிறை மீட்டதேவே
சிந்திப்ப வெட்டாத முத்தமிழ்த் தேசிகா
　　சிவயோக நாதமுதலே.

6. காவல்புரி வேனென் றுரைத்துமா னுடர்பாற்
　　சருங்கோழி யுஞ்சேவலுங்
கள்ளுமுட் டையுமுருங் கைக்காயு மாட்டுக்
　　கடாவுமுத வென்றுவாங்கிச்
சீவனஞ் செயுமாட னிருளன் கறுப்பணன்
　　செல்லிபத் திரகாளியித்
தேவதை களைக்கடவு ளென்றெனது சிந்தையாற்
　　சிந்தியே னெந்நாளுமே
மாவனுட னுன்னையே பாடுவே னெளியேனை
　　யாதரிக் கக்கருணைசெய்
தன்பருக் கெளியவா விருமாது பக்கத்
　　தமர்ந்தவா வெனையாண்டவா
சேவலங் கொடியுடைய வாவேல வாமறைது
　　திக்கின்ற வாவிங்குவா
சிந்திப்ப வெட்டாத முத்தமிழ்த் தேசிகா
　　சிவயோக நாதமுதலே.

ஒரு தமிழ்ப்புலவர்.

---



பிரம்மஸ்ரீ
## சேஷகிரி சாஸ்திரியாரவர்கள், எம். ஏ.
## இறந்துழிப் பாடப்பெற்ற
## கையறு நிலை.

---

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கல்வியினிற் சேடனையு நற்குணத்திற் குன்றினையுங் கடுத்து நின்ற
செல்வமுறு கலைஞருக்குச் சேடகிரிப் பெயரிட்ட செம்மலை நோக்கிப்
பல்விதத்துங் களிசிறந்தேம் பாரிடத்தி னுஞ்சீர்த்தி பரவல் கண்டே
மொல்வகையி னின்னன்புக் குரியேமாய் ஈரொரு முவவா நின்றேம். (௧)

எந்தமக்கோர் பற்றுக்கோ டெனவிருந்த மறையவனே யெம்மி னீங்கி
விந்தையினும்விந்தையெனமறைந்ததற்கோர்புதுப்பொருளும் வியப்பாட்டி
யந்தரர்கள் கைம்முகிழ்த்து நினையழைத்தா ராதலினா னன்னார் மாட்டு
மந்தநகை புரிந்துமன மகிழ்ந்தும்ப ருலகுசென்ற வகைமை யென்னே! (௨)

இவ்வாறு யாமன்றி யெம்போலு மேனையரு மிருத்த றோர்ந்து
மெவ்வாறு பிரிந்தனைகொ லெம்மிரக்கங் கேட்டிலைகொ லின்சொ லாள
வொவ்வாது நினதுசெய லொருமொழியு மெமக்குரையா தோடிப் போதல்
செவ்வாக யாவரே கொள்கிற்பார் சேடகிரிச் செம்ம லேயோ! (௩)

ஆரியமாக் கடல்கடைந்திட் டாரமிழ்த மளித்தவெழி லண்ண லேயோ
சீரியசெந் தமிழ்க்கடலிற் குளித்துமுத்த நல்கியவெஞ் செல்வ னேயோ
பாரியனு மாந்திரத்தின் மண்மனைத்துஞ் சொன்றிலவு பவன் னேயோ
வேரியப்பன் மலர்களனு மொழிகளெலா மேற்கொண்ட வேந்தனேயோ! (௪)

### ஷை - வேறு.

பழிநூ றுலகர் பகர்ந்தாலும் பாராட் டாமன் மேற்கொண்ட
வழியே சென்று கொள்கைகளின் வாய்மை கண்டு மகிழ்ந்தவற்றை
யெழுதா வெழுத்தி னிட்டெவரு மேற்கு மாறு செய்தவனே
மொழிநூல் வகுத்தாய் நின்செல்வு முறையோ முறையோ முறையேயோ ()
உண்மை தவறு வுத்தமனே யொழுக்க நலஞ்சான் றுயர்ந்தவனே
தண்மை செறிந்த வருட்கடலே தன்னை யடுத்தார் தமக்கரணே
வண்மை சுனிந்த கற்பகமே மயக்க விருளை நீத்தவென்றே
றுண்மை மிகுந்த வறிவுடையாய் நுவலா யெங்ங னொளித்தனைகொல்? (௬)

### தரவு கொச்சகக்கலிப்பா.

ஏழிசைக்கு மிருப்பிடமே யெம்மொழியு முணர்ந்தவனே
யாழிசைத்தல் வல்லவனே யாவருக்கு நல்லவனே

யாழிபுடை சூழுலகை யானந்த வுலகுசெய்தாய்
பாழென்ன நீயிறந்திப் பார்தோன்றச் செய்தலெவன்? (௭)

துணிவிழந்த மதியென்னச் சுவையிழந்த கூத்தென்ன
வுணர்விழந்த வுடலென்ன வொளியிழந்த விழியென்ன
மணியிழந்த பணியென்ன மணமிழந்த மலரென்ன
வணியிழந்த மகளென்ன வருஞ்சென்னை தோன்றுமரோ. (௮)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பற்பல பாடை யுள்ளும் பரிவுட னுழைந்தா ராய்ந்து
சொற்பொருட் கார ணங்க டுகளறத் தோன்று மாறு
செற்பமும் விதண்டை தானுஞ் சேராது தெளிவி னோடுங்
கற்பவர் களிகூர்ந் தென்றுங் கிருதிடச் செய்த கோவே! (௯)

மன்றினில் வாண ஞர்த்த மலரடி புகுந்தா யேனு
நன்றிற னறிவு தூய்மை நுவலரு செஞ்சொ றேர்ந்தோ
ருன்றனை மறத்த லுண்டோ வுயர்வினு முயர்ந்த வண்ணு
வன்றெலா முருக்கொள் சேட கிரிபெனு நங்கோ மானே! (௧௦)

வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி.

---

## சரித்திர விநோதாமிர்தம்.

(196-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இஃது இங்ஙனமாக.—நம்பாண்டியர், இடைச்சங்கமிருந்த கபாடபுரம் முடத்திருமாறன் காலத்துக் கடல்கொண்டபின் தோன்றியதும், அதனினு முன்பே அங்ஙனம் கடலாலழிந்த முதற்சங்கமிருந்த தக்கண மதுரையால் தான் உத்தரமதுரையெனக் கூறப்பட்டதும், தற்காலத்தே யுள்ளதுமாகிய மதுரையைச் சார்ந்த கொற்கை யென்னும் பதியை ஆண்டுவந்தவோர் சிற்றரசரென்றும், அங்ஙனமன்று, இவர் மதுரையரசரே, இவர் தமயன் இவரை இளவரசாகக் கொற்கையி லிருத்தினரென்றும், சிலகாலங் கொற்கையே இராசதானியாக இருந்து வந்ததென்றும், இரண்டும் இராதானியாக விருந்துவர, இவரும் இவர் தமயன் வரதுங்கராம பாண்டியரும் ஒருமித்துத் தனித்தும், கொற்கையினு மதுரையினும் வதிந்துவந்தனரென்றும் பலபடக்கூறுவர். கொற்கையம்பதியில் இவர் இருந்து வந்தனரென்பதை நறுந்தொகையில்,

“வெற்றி வேற்கை வீர ராமன்
* கொற்கை யாளி குலசே கரன்புகல்

---

* மதுரைமாற மங்கலவு பாந்திமத்துறந் கொற்கையே இதுவென, இந்திய பூர்விக விவரணப் புத்தகம் 6-ம் காண்டம் - 80 - 83 - ம் - பாகங்களிற் கூறப்படுகிறது.



நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னாற்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே”

என்பதாற்றெளிக.—கொற்கையைச் சூழ்ந்த நாட்டை “* மாறோகம்” என்றும், அந்நாட்டார் பெண்மகளைப் பெண்மகன் என்றுங் கூறுபவெனத்தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையில் ஓர் குறிப்புக் கிடைப்பதனால், இக்கொற்கை நிடதநாட்டிற்கு மாவிந்தபுரமும், விதர்ப்ப நாட்டிற்குக் குண்டினபுரமும், கோசல நாட்டிற்கு அயோத்தியாபுரியும் போல்வதாகிய நகரமாம் - என்றும், அது,

“தோடுகமழ் சந்தன வனத்திடை துளைந்தே
நீடுதமி ழின்சுவை யளைந்துநெடு நாளா
யாடுமயி லன்னவர்க ளன்னநடை போலே
வாடைமிசை தென்றல்புகும் வையைவள நாடு.”

“வெவ்விருக ணரிடையை மின்னென மருண்டே
செவ்விபெறு கேதகை செறிந்தலரு நாடு
நவ்வியனை யாரளக நள்ளிருள தென்றே
மவ்வலரு சேயலரும் வையைவள நாடு”

எனப் புகழத்தக்க வையைவள நாடாகிய பாண்டி நாட்டின் நகர்மாதலால், கூறியபடியே மதுரைக்கு இரண்டாவதாய் அல்லது† வதிலாய் இராசதானியாக இருந்துவந்த தென்பதே தகுமெனக் கூறுவரொரு சாரார். இதனை இங்ஙனமே நிறுவி, மதுரைக்கு முற்பட்டபூர்வ இராசதானி கொற்கையென்பதே ஒத்தது எனக்கோடல் நலம். வேறும் இதற்காதாரமாக, அக்கொற்கை வெகுபூர்வ பட்டணமா யிருந்து வந்ததென்பது, மதுராபுரியின் வேறாய தென்பதும்,

“ ..........................................பாண்டியனாடு
மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி
வெப்பு நோயுங் குருவுந் தொடரக்
கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்.”
* * * * *

என்னுஞ் சிலப்பதிகாரத்து உரைபெறு கட்டுரையும்,

“தெற்கட் குமரி யாடிய வருவோன்
பெற்றோர்ச் செழியன் கொற்கையம் பேரூர்க்
காவுதங் கடந்து... ... ... ... ... ...”

என்னும் மணிமேகலையின் ஆபுத்திரன்றிறமறி வித்தகாதையும், வெளியிட்டுரையா நிற்பதோடு, பாண்டியர் பழைய விராசதானியே யென்று சிந்

---

* இஃது புறநானூற்றில் ‘மாறோக்கம்’ என்றே யாளப் பட்டுள்ளது.
† இங்ஙன மரியதிசைச் சொற்கள் மருவலை ஆங்காங்குக் கண்டுணர்க.

தாமணி சிலப்பதிகாரமுதலிய அரிய பெரிய கிரந்தங்களைத் திருத்தி எழுதா வெழுத்திலேற்றிய நுட்பக் கல்விமானும் * பெரும்புலவராசிரியர், † வியலர் என்பவர்களோடு பொருவநுவலா நிற்பர். கொற்கைக்கும் முற்பட்ட இராசதானி "கலியாணபுரம்" எனுமொன்றெனக் கூறுவாருளரேனும் கேவலாதாரங்களு மதற்காதாரவாய்க் கிடைத்தில எனவும், இற்றைக்கு உகுரா-வருடங்களின்முன் சொற்றவிக் கலியாணியை யாண்டவேந்தராசு, இலங்காபுரிக் குரவனொருவனைப்படுத்திய கொடுமையைத் தாங்கலாற்றாது, அத்தீவின் காவேற்றவைதைகள், சமுத்திரம் புரண்டு அவன் நாட்டை யழிக்கவென ஆக்கியாயித்தவண்ணம், சிந்துமுந்திப் பெரும்பட்டணமிலக்கம், பாதவகிராமந் தொள்ளாயிரத்தெழுபது, நன்முத்துக்குளிப் போர்பதி நானூறு ஆக முக்காலே மூன்றுவீச அரைவீசமுமாகவக் கலியாணபுரிப் பிரதேசத்தை அமிழ்த்த தென்னுமது பெருநம்பிக்கைக்குரியதல்ல தாகுதலை அறிவாற்றெளிக, எனவும் கூறுவாருமுளர். இதை யூன்றியுள்ளக் கொற்கையும் மதுரையுமென்றது போற் கொற்கையுங் கலியாணபுரியுமா யோர் காலிரண்டிடமும் அரசுவாசத்தானத்ததா விருந்திருக்கலா மென்பதொரு புடையொப்புமாகலாம்.

கொற்கை நம் பரதகண்டத்தின் தென்கீழ்த்திசையில் வியாபார தோரணையிலுயர்ந்து சிறந்த முத்துச்சிப்பிகள் குளிக்குந்தலமா யிருந்ததெனவும், அதன் பெருமையனைத்தும், பின்னால் ‡ ஏதமாபுரம் பாரசிகமாகியவற்றோடு வர்த்தகப் பொலிவுற்றதும், தென்சமுத்திரக்கரைத் துறைப்பட்டணங்களில் ஐந்தாவதாகக் கொள்ளுஞ் செல்வப்பெருக் குற்றதுமாகிய ‖ காயற் பட்டணத்துக் கேறியதெனவுஞ், சரித்திராசிரியர்கள் காட்டியுள்ளார்.

இங்ஙனங்கூறிய இவையனைத்தின் நுட்பவாராய்ச்சியாறும், இக்கொற்கையை இராஜதானியாகக் கொண்டாராகு நம் அதிவீரராமபாண்டியர், மேலேயுரைக்குமாறு கச்சியப்பராதியர்க்கு முந்திய கவியெனல் ஐயமற விளங்குவதாம்.

"எதிர்மலைந் தேற்ற வெஞ்சமத் தரச ரிந்திறை கடையளந் தறியா
மதுரையும் புகாரும் வஞ்சியும் புரக்கு மானவேல் வழுதியர் பெருமான்
அதிர்பொலன் கழற்கா லடலதி வீர னறிபத் தெரிந்துநன் கிசைத்த [பார்,
முதுமொழிக் கூர்ம புராணமுற் றுணர்ந்தோர் முத்திவீட் டின்பினிற் றிருப்"

என்னுங் கவி யுபசாரமேற்று. மேலே "சங்கப் பலகையின் விசேடம்" என்னும் மகுடத்தில் நம்பாண்டியரின் தமயனாரியற்றிய பிரமோத்தர காண்டத்தைப்பற்றிய "தறங்குதிரைப் பெருங்கடல் சூழ்வனி......" என்ற கவியு மித்திங்கயதே யாமென்பதை யாண்டுக் காண்க.

* Periplus. † Wheeler. ‡ Aden.
‖ காயல்=கழிக்கரைத் துறையினை யுடையது.



இப்பால், "இகலராசரேறு" ஆகிய நம்பாண்டியமா நாவலரின் பெருமையும், * கூர்மபுராணத்தின் பெருமையும், "ஆண்டியிலிருவர் - பாண்டியிலிருவர்" என்றும், "கூர்மம் புகுந்த வூரிற் - குடியிருக்க லாகாது." என்றும் வழங்கும் பழமொழியான் விளங்கும். "ஆண்டியி லிருவர்", என்பதற்குத் தமிழ்க்கவி கூறும் புலமைத் திறமை வளமிக்கார், "ஆண்டாண்டிமை" வழக்கை மேற்கொண் டொழுகுபவரும்,

† "உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று"

என்ற மெய்கண்ட சாத்திரம் பதினான்கும்,

‡ "தசகா ரியமூன்று தக்கதொண்டை முன்று
சிவாச் சிரமமே நிட்டை—வசமிரண்டு
மாலையுமவ் வேசித்தி மன்றுவெண்பா வோடுமணி
வேலைவிழி யாளே விளி"

என்ற பண்டார சாத்திரம் பதினான்கும் ஆகிய ‖ ஆகமக் குறிகாட்டுஞ் சைவசித்தாந்த சாத்திர வுரிமைப் பெருமான்களாகிய கச்சியப்பசுவாமிகளும், சிவஞான யோகிகளும் ஆகிய இருவர் என்றும், "பாண்டியிலிருவர்" என்பதற்குப் பன்னூலாசிரிய தீர்க்க பண்டிதர்களாகிய வரதுங்கராம பாண்டியரும் அதிவீர ராமபாண்டியரும் ஆகிய இருவர் என்றும், இந்நால்வருந் தமிழ்த் தெய்வத்தைத் தமக்கே சிறந்த வுரிமைத் தெய்வமாகக் கொண்டவ ரென்றும், அறிகப்படவும், வேறுகவுங்கூறுப. "கூர்மம் புகுந்தவூரிற் குடியிருக்க லாகாது" என்பதற்கு,—கூர்ம புராணத்தை நன்குணர்ந்த புலவர் வசிக்கு மூர்களில் ஏனைபுலவர்கள் தத்தம் பெருமையுஞ்

* கூர்மம்=கு+ஊர்மம்=கௌர்மம்=மெல்ல நடந்தூர்ந்து செல்லுவது, குற்சிதமாகிய வேகமுள்ளது, சலத்தைக் கெடுப்பது.
† திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்.
‡ தசகாரியம், உபதேசப் பஃறொடை, தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை, தசகாரியம், பஞ்சாக்கரப் பஃறொடை,
‖ ஆகமக்குறி காட்டல் இவை - உ௰அ - ஆகிச்சிவாகமமாகிய, காமிக முதல் வாதுள மீறாகவுள்ள இருபத்தெட்டனையுங் குறித்தல்.

சாதுரியாதிகளுந் தோன்றப் பொருமைபெற வாழக் குடிப்புகுதல் அரிதின
ரிதா மெனவும், வேருகவுங் கூறுப,

[☞ ஞானபோதினியின் ஸம்புடம் IV, புத்தகம் 4-முதற்கொண்டு
பக்கம் - 150-ல் சரித்திர விநோதாமிர்தத்தில் 5 - ம், வரியில், அரசனு
னென்பதை அரசானெனவும், ஷை 152-ம், பக்கம். 10-ம் வரியில், திரு
பெயரும் - என்றதின் பின், வழக்கற் கேது வென்னை யெனின், அது விபர்
சுவின் பரிணய பந்தத்தின் பின்னர் எனவும், 154 - ம் பக்கம் 7 - ம் வரி
யில், மதுரையிலேயே என்பதை மதுரையிலே எனவும், 194 - ம் பக்கம்
15 - ம் வரியில் ௮௰௬௦௦௦ - என்பதை 861000 - எனவுங் கொள்க.]

சி. சாமிநாத பிள்ளை.

## சமாசாரக் குறிப்புகள்.

**சரித்திர விநோதாமிர்தம்** என்னும் அதிவீரராம பாண்டியன் சரித்திர
த்தை நாம் பார்வையிட்டோம். உயர்ந்த செந்தமிழ் நடையில் முன்னின்ற
பெயருக்கொப்ப விநோதமாகவே எழுதப்பட்டுளது. தொல்காப்பியாதி
இலக்கணங்களும், சிந்தாமணியாதி இலக்கியங்களும், இனையவும் இதில் ஆள
ப்பட்டுள்ளன. கொச்சி திவான்ஜிபவர்களும், நியாயாதிபதிசளாதியவர்களும்,
வனைக்கனவான்களும், நாமும் இதன் நலம் விருப்பிக்கைச் சாத்திட்டுளோம்.
ஞானபோதினியின் III. 4-ல் - நால்விழைவு எனவும், IV. 4, 5 - ல் - சரித்
திரவிநோதாமிர்தம் எனவும் அதிற்சில பாகங்களை வெளியிட்டுளோம். இன்
னும் - 2 மாதங்களில் இஃது அச்சாகி வெளிவந்து விலவும் போதும்.

**பிரமஸ்ரீ சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள், எம். ஏ; :**—நமது சென்னை
மாநகரத்திலுள்ள இராசதானிக் கலாசாலையிற் சம்ஸ்கிருத பட்டாசாரியராக
வும் சப்தத்துவ சாஸ்திர நிபுணராகவும் இருந்த இப்புலவர் பெருமான் இம்
மதி 4-ஆந்தேதி யன்றைப்பகல் ஒருமணிக்குக் காலஞ் சென்றன ரென்பது
கேட்ட பாஷாபிமானிகள் யாவரும் பெரிதுந் துக்கப் படுவார்களென்பதற்கு
ஐயமில்லை. இவர் சம்ஸ்கிருத பாஷையிலேயே கலாசாலையில் தலைமைப்
புலமை நடாத்தினு ரெனினும் சுதேச பாஷைகளிலும் பெரிதும் உழைத்து
வந்தார். இவ்வாரிய சிகாமணிக்கு ஐரோப்பிய பாஷைகளில் ஆறும் இந்
திய பாஷைகளிற் பன்னிரண்டும் எழுதப் பேச விவசரிக்க வருமாம். இவர்
இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மானியா, அமெரிக்கா முதலிய இடங்களிலும்
மிகப்பேர் பெற்றவரென்ப. இத்தகைய பெரும்புகழாளர் பிறவியாற்றமிழ்
மொழிபேசுவோரே யாதலின் தமது வீட்டின்கட்பேசு மொழி தமிழேயா
யிற்று. அத்தமிழ் மொழிக்கு இவர் 'திராவிட சப்ததத்துவம்' என்னும்
பெயரிய தோர் புதுமை வாய்ந்த இலக்கணமும், 'தமிழ்க்கவி சரிதம்' என்
னு நூலுஞ் செய்து நம்பாஷையை முன்னுக்குக் கொண்டுவாரா நின்றனர்.
இவ்வளவு பெரும் புலமை வாய்ந்த நமது சேஷகிரி சாஸ்திரியார் காலஞ்
சென்றமை நமது தமிழ்நாடு செய்த தவக்குறைவே யன்றித் தெலுங்க
நாடு முதலிய பிறநாடுகளுஞ் செய்த தவக்குறைவுமாம் என்ப தொருதலை.


# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901௵ எப்ரல்மீ 20௳ { புத்தகம். 9.


## மகாபாரதம்.

இந்தியா தேசத்தில் பழைய இதிகாசங்களாயுள்ளன மகா
பாரதமும் இராமாயணமுமாம். இதிகாசமென்பது பழையதா
கிய கதையைக்கூறுவது. அது தொல்காப்பியத்திற் கூறப்படும்
தொன்மை என்பதனேடொக்கும். பழங்கதைமேற்செல்லும்
இவ்விதிகாசம் இருவகைப்படும். ஒன்று தான்தோன்றிய காலந்
தொட்டு எழுதப்படாமல் கர்ண பரம்பரையாய் வழங்கி வந்தது;
மற்றொன்று முதலில் எழுதாக்கேள்வியாய்ப் பயின்று வந்து பிற்
காலத்துப் புலவர்களால் இடையில் கூட்டியும் குறைத்தும் புதுக்
கியும் திருத்தி யாக்கப்பட்டது. எப்போதும் எழுதாக் கேள்வியா
யே வழங்கி வந்த இதிகாசங்கள் உலகத்தில் மிகச்சில. அவை
பிறதேசங்களில் ஒன்றிரண்டு உளவேனும் இந்தியாவில் ஒன்று
தானும் உளதாய்க் காணப்படவில்லை. ஆகவே மகாபாரதம் மேற்
கூறிய இரண்டாம் வகுப்பைச்சார்ந்த இதிகாசமாதல் வேண்டும்.
அது யாங்ஙனமென்பது முன்னர்க் கூறுமாற்ருல் தெள்ளிதின்
உணரப்படும்.

மகாபாரதத்திற் கூறப்படும் பெரிய யுத்தம் இற்றைக்கு
மூவாயிரம் வருஷங்களுக்கு முன் நடந்ததாக எண்ணப்படுகின்
றது. இவ் யுத்தம் நிகழ்ந்த சில வருஷங்களில் அதனைப்பற்றியும்
அதில் விளக்கமடைந்து புகழ்படைத்த வீரர்களைப் பற்றியும் பாட்
டுக்கள் இயற்றப்பட்டுச் சூதர் மாகதர் முதலிய புகழ்வோரால்
ராஜ சபைகளிலும் மற்று மிடங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுக்
கர்ண பரம்பரையாய் உலகத்தில் பயின்று வந்தன. அவைகளை

யெல்லாம் ஒருங்குசேர்த்துப் பிற்காலத்தில் கிருஷ்ண துவைபாயனர் என்னும் புலவர் ஒரு பேரிதிகாசமாக யாத்தனர். அவர் காலத்திலேயே பாரத யுத்தத்தைப் பற்றிய உண்மைச் சரிதங்களெல்லாம் மறைந்துபோய், உண்மை வீரர்களல்லாதோரே யுத்தத்தில் விளக்கமுற்றவர்களாய்த்தோன்ற, தீயோர் அழிய நல்லோர் சிறப்படைதலாகிய அறநூற் கொள்கையை எடுத்துரைக்கும் செய்யுளாய் விட்டது மகாபாரதம். காளிதாசன் இரகுவமிசத்தை இயற்றினது போலாக, வான்மீகி இராமாயணத்தை இயற்றினது போலாக, கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை இயற்றினவரல்லர்; பாரத யுத்தத்தின்மேற் சென்ற பழைய சிற்றிதிகாசங்களையெல்லாம் ஒருங்குதிரட்டி ஒரு பேரிதிகாசமாக யாத்தனர் என்க. வியாசரென்னும் அவருடைய காரணப்பெயரும் இதனையே தெரிக்கும்; அப்பதத்திற்குத் தொகுத்தோர் என்பது பொருளாகலின்.

இவ்விதமாகக் கிருஷ்ண துவைபாயனர் மகாபாரதத்தை யாத்தது இன்ன காலத்தில் என்று ஒரு தலையாகக் கூறுதலியலாது; இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னரே யாத்தனரென்றே சொல்லலாம். கிறிஸ்து பிறக்க ஐஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் புத்தமதமுண்டாயிற்று. அப்படிப் புத்தமதந்தோன்றிய காலத்து வழங்கி வந்த ஆஸ்வலாயன சூத்திரத்தில் பாரதம் அல்லது மகாபாரதம் என்று ஒரு நூல் கூறப்பட்டுளது. ஆகவே அக்காலத்திற்கு முன்னரேயே பாரதக்கதைமேற் சென்ற சிறு செய்யுட்களெல்லாம் ஒருங்கு சேர்க்கப்பட்டு ஒரு நூலாக யாக்கப்பட்டு விட்டனவென்பது தெளியப்படும்.

இவ்வாறு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபடியே மகாபாரதம் இப்போது இருக்கவில்லை. காலஞ்செல்லச் செல்ல அது வளர்ந்து கொண்டே வந்து விட்டது. மகா பாரதத்தில் இப்போது தொண்ணூறாயிரம் சுலோகங்களுக்கு மேல் உள்ளன. அதற்கு ஒரனுபந்தமாய் வழங்கும் அரிவமிசத்தையும் சேர்த்தால் சுலோகத்தின் தொகை லக்ஷத்திற்கு மேற்படும். இவற்றுள் இருபதினாயிரஞ் சுலோகமே பாரதக்கதையைக் கூறுகின்றன. ஆதலால் கிருஷ்ண



துவைபாயனரால் யாக்கப்பட்டபோது மகா பாரதத்தின் சுலோகத்தொகை இருபதினாயிரமளவென்றே கொள்ளவமையும். மகாபாரதத்தின் முகவுரையாகிய அநுக்கிரமணிகையில் உபாக்கியானங்கள் சேர்க்கப்படுமுன்னர் வியாசர் மகாபாரதத்தை இருபத்து நாலாயிரஞ் சுலோகங்களால் இயற்றினரென்றும் புலவோர்கள் அதனையே பாரதமென்று கொள்வாரென்றும் கூறப்பட்டுளது. இக்கூற்று மேல் எடுத்துரைத்த கொள்கையை நன்கு வலியுறுத்துகின்றது. மகாபாரதம் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபின் பரத கண்டத்திற்றோன்றிய புலவர்களொவ்வொருவரும் அதனைச் சிறிது சிறிதாக வளர்த்துக்கொண்டே வந்தார்கள்; வடதேசத்திலுள்ள ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்கள் சரித்திரங்களும் அதனுட்கூறப்பட வேண்டுமென்று விரும்பினார்கள்; புதுமதங்களை ஸ்தாபிக்க வந்த ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் கொள்கைகளெல்லாம் அதனுள் எடுத்தாளப்பட வேண்டுமென்று கருதினார்கள். கற்றறிவில்லாத சனங்களுக்கு அறிவு புகட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு அறநூற்பனுவல்களும் நீதி நூற்பனுவல்களும் அதனோடு சேர்க்கப்பட்டன; சாதிதர்மங்களும் ஆசிரமதருமங்களும் அக்கருத்துடனேயே அதனோடு புணர்க்கப்பட்டன. இவ்விதமாகவே ஆதிகாலத்தில் இப்பரதகண்டத்தில் வழங்கி வந்தனவான தேவர்களையும், முனிவர்களையும், அரசர்களையும் பற்றிய பலவித கதைகளும் அதனோடு கோக்கப்பட்டன. புத்தமதம் வீழ்ந்து கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொண்டாடுதலே பரத கண்டத்தில் பரவியபோது மகாபாரதமும் காலத்துக்கிணங்கக் கோலங்கொண்டு கிருஷ்ணனுக்குப் பரத்துவம் கூறும் நூலாய் மாறிற்று. இவ்வாறாகவே மகாபாரதம் காலம் வளர வளர்ந்துவந்து, தனது இதிகாசத்தன்மைகெட்டு, இப்போது சமயக் கொள்கைகளுக்கும் தர்மோபதேசங்களுக்கும் வெறுங் கட்டுக்கதைகட்கும் ஓரிருப்பிடமாய் இருக்கின்றது.

மகாபாரதம் இவ்வாறு அதிகமாக வளர்ந்ததன் பின் அதனை மேலும் வளரவொட்டாமல் தடுத்தற்காக இற்றைக்கு ஆயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன் ஒருபாயம் செய்யப்பட்டது. பர்வசங்கிரகமென முகவுரையொன்றியற்றி அதனுள் மகாபார

தத்துட் கூறப்படும் விஷயங்களொவ்வொன்றையும் எடுத்துக்காட்டிப் பர்வங்கள் ஒவ்வொன்றிலுமுள்ள சுலோகங்கள் இத்தனையென்று கணக்கேற்படுத்தப்பட்டது. இந்தக் கணக்கின்படி மகாபாரதத்துச் சுலோகத்தொகை எண்பத்து நான்காயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து. இப்படிக் கணக்கேற்பட்டதன் பின்னும் மகாபாரதம் வளராமல் இருந்ததோவென்றால் இல்லை. காலாந்தரத்தில் புது விஷயங்களும் புதுச்சுலோகங்களும் இடையிடையே சேர்க்கப்பட்டு இப்போது அது தொண்ணூறாயிரம் சுலோகங்களுள்ளதாயிருக்கின்றது. இது மேற்கூறியபடி அரிவமிசம் என்னும் அநுபந்தத்தை நீக்கிக்கண்ட கணக்கென்றறிக.

இவ்விதமாகப் பழைய நூல்களின் இடையிடையே புது விஷயங்களையும் புதுப்பாட்டுக்களையும் சேர்ப்பது சம்ஸ்கிருதத்தில் மாத்திரம் நிகழ்ந்ததன்று. அது தமிழ் நூல்களிலும் ஏறக்குறைய ஒவ்வொன்றிலும் காணப்படுகின்றது. சீவகசிந்தாமணியைத் திருத்தக்கதேவரியற்றியது இரண்டாயிரத் தெழுநூறு செய்யுட்களாலென்பது அதன் இறுதியிலுள்ள 'முந்நீர் வலம்புரி' என்றற்றொடக்கத்து ஓம்படைச் செய்யுளால் தெரியவருகின்றது. அதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியார் கருத்து மிதுவே. இப்போது சீவக சிந்தாமணியில் மூவாயிரத்து நூற்று நாற்பத்தைந்து செய்யுட்களுள்ளன. ஆகவே மேற்கூறிய இரண்டாயிரத்தெழுநூறு மொழிய எஞ்சிய நானூற்று நாற்பத்தைந்து செய்யுட்களும் வேறு புலவர்களாற்பாடி இடையிடையே சேர்க்கப்பட்டனவென்பது கூறாமேயமையும். இவைகளெல்லாவற்றையும் கந்தியார் என்பார் செய்து சேர்த்தார் என்பது சிலர் கொள்கை. தென்தேசத்தில் தமிழ்ச் சைவர்களால் மிகவும் கொண்டாடப் படுவதாகிய பெரிய புராணத்தைச் சேக்கிழார் நாலாயிரத்து இருநூற்றைம்பத்து மூன்று விருத்தத்தாற் பாடினாரென்று கொற்றங்குடி உமாபதி சிவாசாரியாரால் தாமியற்றிய திருத்தொண்டர் புராணசாரத்தின் ஈற்றில் கூறப்பட்டுளது. இப்போது பெரிய புராணத்தில் நாலாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றொன்பது விருத்தங்களுக்குமேற் காணப்படுகின்றன. ஆகவே உமாபதிசிவாசாரியர் கூறிய கணக்கிற்கு மேலதிகமாயுள்ளநாற்பத்தாறு விருத்தங்களும் இடையிடையே வேறு புலவர்களால் பாடிச் சேர்க்கப்



பட்டிருத்தல் வேண்டும். இவைகளை வெள்ளி பாட்டென்றும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்காசிரியராகிய வெள்ளியம்பலத்தம்பிரான் பாடிச் சேர்த்தாரென்றும் கூறுப. இவ் வெள்ளிபாட்டுக்கள் கம்பராமாயணத்தும் மூவர்களியற்றிய தேவாரத்திடத்தும் வேறு நூல்களிலும் காணப்படுகின்றன. இவ் வெள்ளியம்பலத்தம்பிரான் போன்ற நாணிலிகளாகிய புலவர்களால் நம் சம்ஸ்கிருத தமிழ் நூல்கள் தம் சிறப்பும் மதிப்பும் கெட்டுக்கிடக்கின்றவற்றிற் களவில்லை.

மகாபாரதத்தின் பாகங்கள் ஒவ்வொன்றும் மேலே விளக்கியபடி வெவ்வேறு காலத்தில் இயற்றிச் சேர்க்கப் பட்டவைகளா யிருத்தலின் அதனுட் கூறப்படும் ஒழுக்கங்களும் வழக்காறுகளும் இப்பரதகண்டத்தில் ஒரே காலத்தில் நிகழ்ந்து வந்தன வென்று கொள்ள முடியாது; அதுவுமன்றி இன்னபாகத்தில் கூறப்படும் ஒழுக்கங்கள் இன்னகாலத்தின வென்று கூறுதலும் இயலாது. இதனை ஆய்ந்தறிய வல்லரல்லாதார் மகாபாரதத்துட் கூறப்படும் ஒழுக்க வழக்கங்கள் யாவற்றையும் ஒரே காலத்தின வெனக்கொண்டு பேரிடர்ப் படுவரென்க. உதாரணமாக மகாபாரதத்தில் கிருஷ்ணனுக்குப் பரத்துவங் கூறப்படுவதனால் அது பாரதயுத்தம் நடந்தகாலத்திலாக, மகாபாரதந் தோன்றியகாலத்திலாக, பரதகண்டத்தில் நிகழ்ந்து விளங்கிற்றென்று கொள்ளற்க; மகாபாரதம் கடைசியாய்த் தொகுக்கப்பட்டபோது நிலவிய தொன்றென்றேகொள்க. கிருஷ்ணனுக்குப் பரத்துவங் கற்பிக்கப்பட்டது புத்தமதம் பரதகண்டத்தில் நின்று நீங்கியபோதென்றே கொள்ளப்படுகின்றது. அது கிறிஸ்து பிறந்த நான்காம் நூற்றாண்டிலென்று சொல்லுப. இது போல்வன இன்னும் பலவுள. இவைகள் யாவும் வினாநிகழ விடமில்லாதவாறு ருசுப்பிக்கப் படவில்லை. அதனால் மகாபாரம் கடைசியாய்த் தொகுக்கப்பட்ட காலம் நான்காம் நூற்றாண்டென்றே ஒரு தலையாகக் கொள்ளற் கிடமில்லை. இவ்வாறே மற்றக் கிரந்தங்களின் காலமும் இன்னும் ஒன்றேனும் செவ்வனே வரையறுக்கப்படாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் அக்கிரந்தங்களில் அவை தோற்றியகாலம் சொல்லப்படாமையும் அவை காலந்தோறும் மாறுபாடடைந்தமையுமாம்.

உபாக்கியானங்கள் யாவற்றையும் நீக்கி விட்டால் மகாபாரதம் தமிழிலுள்ள வில்லிபுத்தூரர் பாரதத்தைப் பெரிதுமொக்கும். ஆகவே வில்லிபுத்தூரர் பாரதத்தைப் படிப்பதனால் ஒருவர் ஆதியில் கிருஷ்ண துவைபாயனரால் யாக்கப்பட்டபோது மகாபாரதம் இவ்வாறிருந்ததென்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். வில்லிபுத்தூரர் பாரதம் தமிழ் நாட்டில் மிகவும் பயில வழங்குவதற்கும் நல்லாப்பிள்ளை பாரதம் பயில வழங்காமைக்கும் காரணம் முன்னது உபாக்கியானங்களால் கதைத்தொடர்ச்சி இடையிடு படாது யாற்றொழுக்குப்போல் சென்றினிது முடிதலும் மற்றது உபாக்கியானங்கள் மிக்குக் கதைத்தொடர்ச்சி யாண்டும் இடையீடு பட்டுக்கிடத்தலுமே போலும். உபாக்கியானங்கள் யாவற்றையும் கதைக்கு வேண்டாதனவென்று கொண்டு வில்லிபுத்தூரர் நீக்கிவிட்டது அவைகள் பிற்காலத்தனவென்பதே அவரது கொள்கை யென்பதைக் காட்டாது போகினும் அவரோர் மெய்ப்புலவரென்பதை நன்கு விளக்குகின்றது.

பரத கண்டத்திலும் மற்றத் தேயங்களிலும் ஆதியில் தோன்றிய வேதம் முதலிய பழைய நூல்கள் யாவும் எழுதாக் கேள்வியாயே நெடுங்காலம் பயின்று வந்தன. இதற்குக் காரணம் எழுத்து அக்காலத்தில் தோன்றாமையேயாம். பரத கண்டத்தில் எழுத்துத் தோற்றியது கிறிஸ்து பிறக்க ஐஞ்ஞூறு வருஷங்களுக்குமுன் என்பது பலபிரபல நியாயங்களால் நாட்டப்பட்டுள்ளது. ஆகவே ஆதியில் எழுதாக் கேள்வியாயிருந்த மகாபாரதம் தோன்றியது கிறிஸ்து பிறக்கப் பல நூறுவருஷங்களுக்குமுன் என்பது போதரும். கிருஷ்ண துவைபாயனர் பழைய சிற்றிதிகாசங்களை ஒருங்கு சேர்த்து மகாபாரதத்தை யாத்த காலத்தில் கூட எழுத்துத் தோற்றவில்லை என்பதே பலருடைய கொள்கை. எழுத்தில்லாதபோது ஒரு நூல் எழுதப்படுவதும் இல்லை. மகாபாரதத்தைவியாசர் சொல்லக் கணேசர் எழுதினார் என்று அதன் முகவுரையிற் கூறியிருக்கின்றதே எனின் அது பிற்காலத்தாரால் இடையில் சேர்க்கப்பட்டதொன்றெனக. பல பிரதிகளில், முக்கியமாய்த் தென்தேசத்துப் பிரதிகளில், அது காணப்படாதிருத்தலினாலே அது இடையிற்றோன்றிய தொன்றென்பது நன்கு



விளங்கும். அது நால்களைப் பட்டையிலும் ஓலையிலும் எழுதுதல் பெருவழக்காய் வந்ததன்பின் தோன்றி யிருத்தல் வேண்டும்.

பாரதயுத்தத்தை நடத்திய பாண்டவர் கௌரவர் என்னும் இருதிறத்தாருள் கௌரவர்களே ஒழுக்கமுள்ளவர்களென்றும் நியாயமும் அவர்கள் பக்கமே என்றும் அவர்களைத் தங்கள் வஞ்சகத்தினால் பாண்டவர்கள் வென்றார்களென்றும் இவ்வாறாகிய உண்மைச்சரிதம் பின்பு புலவோர்களால் திரிக்கப்பட்டதென்றும் சிலர் கொள்வார்கள். இவர்கள் கொள்கை விரிக்கிற் பல்கும்.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

---

## ஸ்ரீராமாநுஜர் சரிதம்.

(301-ஆம்பக்கத் தொடர்ச்சி).

இவ்விளையாழ்வாரிங்ஙனம் நான்காம் நிலையினை மேற்கொண்டு ஒழுகுஞ் செய்தி கேட்ட கந்தாடைமுதலியாண்டானும், ஆரிய குலதிலகரான திருமறுமார்பனெனும் மறுபெயர் பூண்ட கூரத்தாழ்வானும் பெருமகிழ்ச்சி கொண்டு காஞ்சிமா நகரஞ்சேர்ந்து இளையாழ்வானது இணையடி வணங்கி 'அடியோமுக்குப் * பஞ்ச ஸம்ஸ்காரங்களை யருளல்வேண்டும்' என்று வேண்ட இராமாநுசரும் அவரது வேண்டுகோளைத் தலைக்கட்டியருளினார். இது நிற்க,

யாதவப்பிரகாசனும், தன் தாயின் கட்டளைப்படி உடையவரைச் சரணடைந் துய்யக்கருதித் தான் முன்பு ஒழுக்கந்தவறியதற்குப் பிராயச்சித்தமாகப் பூவலஞ் செய்ய வேண்டுமே! மூப்படைந்து உடல் மெலிந்தமையால் அங்ஙனஞ் செய்யதலரிதாகும்! எனக்கவலையுடன் கண்வளர்கையில், பேரருளாளன் "நம் இராமாநுசனை ஒருதரஞ்சுற்றி வருவதே பூவலஞ் செய்வதினும் மேலானது" என்று ஸ்வப்பனந் தந்தருளினார். யாதவப் பிரகாசன் அக்கனவின் உண்மை கொள்ளாது ஒன்று மறியான்போலத் திருக்கச்சி நம்பியுடன், 'யானொன்று நினைத்திருக்கின்றேன்; அதனைப் பேரருளாளரிடம் விண்ணப்பஞ் செய்து அவர் திருவுள்ளமானபடியைச் சொல்லவேண்டும்' என்ன, நம்பியும் அவ்வாறே செய்யப்பேரருளாளர், கனவு தந்தபடியையும் அதனை நம்பாமையையும் அருளிச்செய்தார். அப்பால் அவ் யாதவப் பிரகாசன் இராமாநுசனது அருள் நோக்கிற்கிலக்காய்ச் சின்னாள் கோவிந்தஜீயர் என்ற பெயருடன் இவ்விருள்தரு மாஞாலத்தே இன்பமுற்று

* தாபம் [ஸமாச்ரயணம்], திருமாள், தாஸ்யநாமம், மந்திரோபதேசம், யாகம் [பூசை] என்பன.

'யதிதர்மஸமுச்சயம்' எனு மோர் நூலினையியற்றிப் பின் பரமபத மடைந்தான்.

பின் இராமாநுசனும் கச்சியில் கூரத்தாழ்வானுக்கும் முதலியாண்டானுக்கும் 'மீமாம்ஸை' என்னும் நூலினை அருளிச்செய்து கொண்டிருக்குங்காலத்து, ஸ்ரீ ஆளவந்தாருடைய சிஷ்யரனைவரும் கோயிலில் நம்பெருமாள் ஸந்நிதிக்கட் சென்று 'நம் இளையாழ்வாரை இங்ஙனே அழைப்பித்தருளவேண்டும்'எனப் பிரார்த்தித்து, அப்பால் திருவரங்கப் பெருமாளரையரையும் உடையவரை யெழுந்தருள்விக்குமாறு வேண்டியனுப்ப அரையரும் உடனே புறப்பட்டுப் பேரருளாளர் ஸந்நிதிக் கெழுந்தருளினார். இச்செய்திகேட்ட திருக்கச்சிநம்பியும் அவரை யெதிர்கொண்டு சென்று அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்ய அவரும் இவரை வணங்க இருவரும் ஒருவரையொருவர் குசலமுசாவி நிற்கையில் அரையரும் நம்பியுடன் 'அருளாளனைச் சேவிக்கவேண்டும்' என்று கூற, நம்பியும் அவ்வாறே அழைத்துச்சென்றார்; அரையரும் பேரருளாளனது குழலழகிலும் வாயழகிலும் கண்ணழகிலும் ஈடுபட்டு அடிமுதல் முடியீறுகச் சேவித்து நிற்கப் பெருமாளும் போரவுவந்து தீர்த்தம் முதலிய தந்து தமது பரிவாரங்களையுமனுப்பினார். அரையர் அவற்றிற் சிறிதும் பற்றிலராய் 'யான் வேண்டுவது உடையவரையேயன்றி மற்றிவற்றை யன்று' என்ன அருளாளனும் 'தந்தோம்' என்றருளினார். அப்பால் உடையவர் அரையருடன்,

"வண்டினமுரலுஞ் சோலை மயிலினமாலுஞ் சோலை
கொண்டல் மீதணவுஞ்சோலை குயிலினங் கூவுஞ்சோலை
அண்டர்கோ னமருஞ்சோலை"

பொருந்தப் பெற்றதும், அந்தணர் துறைபடிந்து மூழ்குகையில் நீர் துளும்பப் புஷ்பங்களிலுள்ள தேன் சொரியத்தக்க நீர்வளமுடையதும், செந்தாமரை முகத்தினழகையும், கருங்குவளை கண்ணினழகையும் காட்டுங் கவின் பெற்றதும், சந்தனமரங்களைப் பெரியவரையினின்று ஈர்த்துச் செல்லும் காவிரி நன்னதி யாயப்பெற்றதும், இரவிற் சிறைவண்டினங்கள் எம்பெருமான் குணம்பாடி மல்லிகையாகிய வெண் சங்குகளை யூதும் தன்மையுடையதும், அன்னங்கள் செந்தாமரைமலரிற் சென்றூசலாடி அம்மலர்களிலுள்ள மகரந்தப்பொடி யாடி விளையாடும் வளம் வாய்ந்ததும், ஓர் மணி வரையில் இளஞாயிறெழுந்தாற்போல அரவணையிற் றுயில்கொள்ளும் அநந்த னமர்ந்தருளப்பெற்றதுமான திருவரங்கம் பெரிய கோயிலை நோக்கிச்சென்றார். இங்ஙனஞ்சென்ற உடையவரை ஆங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாவரும் எதிர்கொண்டழைத்துச் சென்று நம்மாழ்வார், ஸ்ரீரங்கநாயகியார் முதலோரையும், அப்பால் படம்கொண்ட பாம்பணையிற் பள்ளிகொண்ட பரமனையும், கடல்விளங்கு கருமேனியம்மானுமான அழகிய மணவாளனையும் தரிசிப்பித்தனர்.



அப்பொழுது பெரிய பெருமாள் நம் இராமாநுசனை நோக்கி, * 'உபய விபூதியையும் நுமக்கே தந்தோம்; நீர் இங்ஙனே வீற்றிருக்கக் கடவீர்' என்று நியமித்தருளினார். அதுகேட்ட இராமாநுசர், பெரிய நம்பியை நோக்கிப், "பெரியார்க்காட்பட்டக்காற் பெருத பயன் பெறுமாறு" என்றபடி 'நம் திருவடிக் காட்பட்டமையா லன்றோ இப்படிப் பெருமாள் அருளியது' எனவுரைத்துப் பின் அக்கோயிலிலுள்ள குறைகளனைத்தையும் நிறைவேற்றி நித்தியோற்சவம் முதலியவற்றையும் நடத்திவருவாராயினார். இப்படியிருக்கையில், சைவசமயத்திற் புக்கிருந்த உள்ளங்கை கொணர்ந்த நயினாரை வைணவ ராக்குகைக்குத் திருமலைநம்பி பாற்சென்ற ஸ்ரீவைஷ்ணவர்கள் பெருங்களிப்புடன் மீண்டு வந்து இராமாநுசனடி வணங்கி நிற்க, இராமாநுசனும், 'நீர் சென்ற செய்தியாதாயிற்று' என்ன, அவர்களும், "யாம் திருமலை நம்பியுடன் காளஹஸ்திக்குச் சென்று ஆங்கோர் குளக்கரையிலுள்ள மரத்தடியில் தங்கி யிருந்தோம், ஆங்கே நயினாரும் சிவபிரானுக்கு அபிஷேகஞ் செய்தற்பொருட்டுக் குடமெடுத்து வந்தார். அது கண்ட திருமலை நம்பி அந்நயினாரை நோக்கிக் "கொன்றைச் சடை முடியானைக் குளிர நீராட்டினால் என்னுனக் குண்டாம் பயன்" என்ன, இதனை அவர் காதிற் கொள்ளாமல் தமது காரியத்திலேயே கண்ணாகச் சென்றார்.

பின்பொருகால் முன்போல அங்குநயினார் வர அவர் வரும்வழியில், "திருமாலே பரம் பொருள்" எனுங் கருத்துகொண்ட ஒரு சுலோகத்தை ஒரு சீட்டிலெழுதி யெறிந்துவிட நயினார் அதனைக் கையிலெடுத்து நம்பியிடம் குறுக அவ்விருவருக்கும் அதுகாரணமாக † வாதமுண்டாயிற்று. அது வருமாறு :—

க. நயினார்.—(கீழேவீழ்ந்த சீட்டை யெடுத்து) 'உங்கள் கையில் நின்றும் நழுவிய பொருள் இதுவோ'? என்றார். *.

திருமலை நம்பி.—'பிறருடைய பொருள் நழுவுமேயன்றி எமது பொருள் நழுவாது' என்றார். ‡.

உ. நயினார்.—'நீங்கள் எல்லீரும் என் ஓரிடத்தே நடப்பது'?என்றார். †.

திருமலை நம்பி.—'மார்க்கம் கலக்கமற்றிருக்கையாலே' என்றார். ††.

---

* நித்திய விபூதி [வைகுண்டம்], லீலாவிபூதி [இப்பூலோகம்] என்பன.

† இவ்வாதத்தில், கேள்வியும் ஸமாதானமும் சிலேஷையாய்ப்பல பொருள் பயக்குமாறு காண்க.

* இதன்பொருள்.—'உங்கள் தெய்வமான திருமால் நித்தியன் அன்று' என்பது.

‡ " 'பிற தெய்வங்கள் அநித்தியமேயன்றி எமது தெய்வமான திருமால் நித்தியனே' என்பது.

† " 'நீங்கள் எல்லீரும் விஷ்ணுவையே பரதெய்வமாகக் கொண்டிருப்பது என்?' என்பது.

†† " 'இம்மதத்தில் அபாயம் சிறிதுமில்லை யாதலின்' என்பது.

௩. நயினார்.—'சேவலருக்கு மார்க்கம் உண்டோ'? என்றார். ‡‡.

திருமலை நம்பி.—'கையில் பொருள் கொண்டு செல்பவருக்கு இவ்வழியே தக்கது' என்றார். **.

௪. நயினார்.—'ஆனால், நீங்கள் உற்றாரைவிட வந்தீர்களோ'! என்றார். §.

திருமலை நம்பி.—'கறவைகள் கொள்ள வந்தோம்' என்றார். [கறவைகள் - பசுக்கள்.] §§.

௫. நயினார்.—'உண்மையே! பசுக்களின் பாத தூளிகள் நல்லொழுக்கமுடைய பெரியார்க்கு வேண்டுவதே'! என்றார். ||

திருமலை நம்பி.—'அது இடமறிந்து சேர்படில் நல்லது' என்றார். *

௬. நயினார்.—'இப்படியே நீங்கள் சொல்வது புதுவார்த்தை' என்றார்.

திருமலை நம்பி.—'இது பழைய வார்த்தையே' என்றார்; என்றால், முன்னே கூறி வந்ததும் இப்படியோ என்பது.

அப்பால் நயினார் பேசத்திறனற்றவராய் நம்பிபக்கல் மிக்க பக்தி கொள்ள நம்பியும் அவரைப் பெரிதும் கடைக்கணித்தருளினார். மற்றொரு நாள் அம்மரத்தடியிலே நம்பி தமது சிஷ்யர்கட்குத் திருவாய்மொழியில் "திண்ணன் வீடு" என்ற பதிகத்திற்கு அர்த்தம் அருளிச் செய்யாநிற்க, நயினாரும் அங்குப் பூப்பறித்தலைத் தவிர்த்து அவ்வர்த்த விசேடங்களைக் கேட்டிருந்தார். பின் நாலாம் பாட்டில் "எம்பெருமானுக் கல்லாற்

‡‡ ,, 'எல்லாம் கடவுளுக்கே உரியன என்றிருப்பவர்க்கு எந்த வழியாகில் என்'? என்பது. [இங்குக் கேவலர் - தமக்குள் தாம் ஆனந்தப்படும் (ஆத்மாநுவம் பண்ணும்) சிலரன்று.]

** ,, திருமாலை தெய்வமாகக் கொண்டவர்க்கு இவ்வைஷ்ணவ மதமே தக்கது என்பது.

§ ,, அப்படியாகில், நீங்கள் சிவஸ்தலமாகிய இங்கு வந்தது உமக்குரிய திருமாலைவிட்டோ? என்பது.

§§ ,, [இனி, உமது உற்றாராகிய எம்போல்வாரை விடவோ? என்பதுமாம்.] 'அறிவில்லாதாரை நல்வழிப்படுத்த' என்பது.

|| இதன் பொருள்.—நயினார் அந்த வாக்கியத்திற்கு வேறு பொருள் கொள்ளாமல் கிரமமாகக்கொண்டார். 'பசு' என்றதற்கு, நந்தி (இருஷபம்) எனக்கொண்டு அதன் பாததூளி பெரியார்க்கு வேண்டுமே! என்றார். என்பதுமாம். [இன்னும், பசுபாததூளி-விபூதியுமாம்]

* ,, 'அதுவும் தக்க இடத்திலிருக்குமாயின்' என்பது அஃதாவது, இவரது கருத்து விபூதியாகிலும் சேராத இடப்பட்டு அமையுமாயின் நலம் என்பதாகும்.



பூசும் பூசனையும் தகுமோ?" என்ற தொருவாக்கியத்தைக் கேட்ட அக்கணமே நம்பி திருவடிகளிலே அடைவு கெட வீழ்ந்து வணங்கி நின்றார். இதனையறிந்த மற்றைச் சைவர் யாவரும் நம்பியை நோக்கி 'நீர் இங்ஙனம் நம்நயினாரை மயக்கிக்கொள்ளல் அடுக்குமோ?' என்ன, அவரும் யாம் மயக்கிய விதத்தை அவரையே கேட்பீராக' என்றனர். பின்பு அவர்கள் நயினாரை 'வாரும்' எனக்கைப்பிடித் தழைக்க அவரும் கையையுதறி 'நுமக்கும் எமக்கும் பிணையில்லை' என்று முகந்திருப்பிக் கொண்டார். அதற்கப்பால், அச்சைவர் 'எமது பிரான் துணைவருவாரென்று நும்முடன் போர்செய்ய எண்ணிவந்தோம், அவன் எங்கள்கனவில் "யமுனைத்துறைவர், இளையாழ்வார், கோவிந்தப்பட்டர் [உள்ளங்கைக் கொணர்ந்த நயினார்] ஆகிய இவர் பகவத் அம்சபூதர்களாய் நாஸ்திகர்களைத்தொலைத்து உலகத்தை வாழ்விக்க அவதரித்தார்கள். அவருள், இக்கோவிந்த பட்டருக்குக் காசியில் வாசஞ்செய்யவேண்டு மென்ற கருத்திருந்தமையால், அவ்வெண்ணத்தையொழிக்கைக்காக நாமே உள்ளங்கைக் கொணர்ந்த நயினார் எனப்பெயரிட்டழைத்ததே யொழிய வேறில்லை" என்றான்' எனக்கூறி மீண்டு சென்றார்கள். பின்பு, நயினாரும் நம்பியுடன் திருமலை அடைந்து ஆசார்ய பக்தியுடன் வீற்றிருப்பாராயினார்" என்பது கேட்ட நம் இராமாநுசர் அந்த வைணவரைப் பெரிதுமுவந்தருளினார்,

பிறகு சின்னாட் கழித்துப்பின்னால், இராமாநுசன் பெரியநம்பி திருமாளிகைக்குச் சென்று 'தேவரீர் ஆளவந்தாரிடம் கேட்ட அர்த்த விசேடங்களனைத்தையும் அடியேனுக் கருளவேண்டும்' என்ன, அவரும் அங்ஙனமே செய்தபின், 'இன்னும் சிற்சில பொருள் விசேடங்களுண்டு அவற்றைத் திருக்கோட்டியூர் நம்பியாரிடம் சென்று கேட்பீராக' என்றனர். அது கேட்ட இராமாநுசன் உடனே திருக்கோட்டியூர் சென்று நம்பியின் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கித் தமது வேண்டுகோளைத் தலைக்கட்டித்தருளுமாறு வேண்டலும் அவர் முகங்கொடாமலிருக்க, இராமாநுசன் மீண்டும் திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளினார்.

பின்னர், மீட்டும் மீட்டும் பதினெட்டுத்தரம் அந்த நம்பியிடஞ்சென்றும் அவர் பேசாதிருக்கக்கண்டு பெருந்துயருடையராய் நம்பெருமாளிடம் நடந்தவெல்லாவற்றையும் கூறித் தம் இணைமலர்க்கண்ணீர்ததும்பிநிற்க அப்பெருமான், அப்பொழுது திருக்கோட்டியூர்நம்பியின் சிஷ்யரொருவர் கோயிலுக்குவந்து மீண்டு செல்லுங்கால் அர்ச்சகர் முகமாய் "நம் இராமாநுசனது வேண்டுகோளைத் தலைக்கட்டுமாறு நுமது ஆசிரியர்க்குச் சொல்லக்கடவீர்" என்றருளினான். இஃதறிந்த நம்பியும் இராமாநுசனது பெருமைக்கும் ஊக்கத்திற்கும் வியந்து அர்த்தம் அருளிச்செய்யக்கருதி இளையாழ்வாரைத் தண்டும் பவித்திரமுமாக வருமாறு கட்டளையிட் டனுப்பினார். இளையாழ்வார், கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் உடனழைத்துவர, நம்பி

உடையவரை நோக்கி 'நம்மைத் தனித்துவரக் கட்டளையிட்டிருக்க நீர் இவ்விருவரையும் அழைத்துவந்ததென் ?' என்ன, அவரும் 'தேவர் நியமனப்படி தண்டும் பவித்திரமுமாக வந்தேன்' என்றனர். அதுகேட்ட நம்பி, 'ஆகில் இவருள் தண்டுயார் ? பவித்திரம் யார் ?' என, கூரத்தாழ்வானை நோக்கி 'இவர் தண்டு' எனவும், முதலியாண்டானை நோக்கி 'இவர் பவித்திரம்' எனவும் கூறினர். பின்பு, நம்பியும் 'நீர் இப்பொருள் விசேடத்தை எவர்க்கும் அறிவியா திருப்பீராக' என்றோதி "நலந்தருஞ் சொல்" என்ற மந்திரத்தை யருள இராமாநுசன் ஆசிரியருடைய உத்திரவைமீறி அதனை ஆங்குள்ளார் பலர்க்கும் அருளிச் செய்வாராயினர்.

தி. கோ. ஸ்ரீரங்காசாரியர்.

---

## பாரத ஸாரம். *

(216-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### IV. அத்தியாயம்.

**(சபா பருவம்)**

(பாண்டவர்களுக்கு நேரிட்ட தீங்குகள்.)

இந்த அத்தியாயத்தின்கண் இரண்டாம் பருவமாகிய சபாபருவத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்களை யெடுத்துச் சுருக்கிச் சொல்லப்படும்.

பாண்டவர்களுடையதாய பாகத்தை முன்னிட்டுக்கூடிய மூன்று சபைகளில் நடந்த வர்த்தமானங்களைக் குறித்துக் கூறியிருப்பதனால் இப்பருவத்திற்குச் **சபாபருவம்** என்னும் பெயர் ஏற்பட்டுளது.

மேலத்தியாயத்தில், காண்டவ வனம் எரியுண்டு அழிந்த காலத்து அர்ச்சுனனுதவியினால் **மயன்** என்னும் தானவனொருவன் உயிர் தப்பி வெளிப்போந்தானென்று கூறப்பட்டிருக்கிறதல்லவா ? அந்தத்தானவன் அர்ச்சுனனிடம் போந்து தன்னுயிர் தந்ததற்காகத் தான் பார்த்தனும் ஓர் பிரதியுபகாரம் செய்ய விரும்பியிருக்கிறதாகத் தெரிவித்ததும் அர்ச்சுனன் தான் அதை ஏற்றுக்கொள்ளேனென்று சொல்ல, அவன் மிகவுமிரங்கிக் கேட்டுக்கொண்டதின்பேரில் தன்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு அவன் விரும்பியதைச் செய்யலாம் என்று சொன்னான். அவன் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் சென்று இதைத் தெரிவித்தவளவில் அவர் யுதிஷ்டிரருக்கு ஒரு மாளிக்கைக் கட்டித்தரும்படி சொன்னார். மயன் அதிக ஆனந்தத்துடன் இதைச்செவி

* Adapted from **Mrs. ANNIE BESANT'S MAHABHARATA.**



யுற்று நவரத்ன கசிதமான ஒரு மாளிகைகட்டுவதற்குத் தகுந்த ஓரிடத்தைக்கண்டு குறிக்கும்பொருட்டு ஊருக்குத் திரும்பிப்போனான். *

பிறகு ஸ்ரீ கிருஷ்ண பகவான் தன் நகருக்குப் போய்விட்டார். அவர் மகா விஷ்ணுவி னவதாரமா யிருந்தபோதிலும், வயதில் தனக்குப் பெரியவர்களா யிருந்தவர்களிடத்தில் தான் எவ்வளவு விநயமாய் நடந்து வந்தாரென்பதைக் கேட்பவர்களெல்லாம் தாங்களு மப்படியே நடத்தல் நலமென்று கொள்ளவேண்டு மல்லவா ? தான் போம்போது பிராமணர்களுக்கும் யுதிஷ்டிரருக்கும் பீமனுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவர்களுடைய உத்திரவுபெற்றுப் போனதாகவும் பிராமணர்களிடத்தில் தான் அதிக அன்புவகித்தாரெனவும் கூறப்பட்டிருக்கிறது.

மயன் தான் முன்னொரு காலத்தில் விந்து வென்னும் ஏரிக்கரையில் தானவர்கள் செய்த யாகத்தில் மிஞ்சிநின்ற நவரத்னங்களைச் சேர்த்து வைத்திருப்பதாகவும், தானவ அரசனுடைய கதாயுதம் ஒன்றும், வருணனுடைய **தேவதத்த** மென்னுஞ் சங்கொன்று மிருக்கிறதாகவும் பாண்டவர்களுக்குத் தெரிவித்து, தானவ்விடஞ்சென்று அவைகளைக்கொணர்ந்து கதாயுதத்தைப் பீமனுக்கும் தேவதத்தமென்னுஞ் சங்கை அர்ச்சுனனுக்கும் தந்து, நவரத்தினங்களை மாளிகைக் கட்டுவதற்கும் வைத்துக்கொண்டான்.

மாளிகையின் சுவர்களோ சுவர்ணத்தினாலாயது. ஆடகம், கிளிச்சிறை, சாம்பூனதம், சாதரூபம் என்னும் நால்வகைப் பொன்னினாலும் பற்பல மண்டபத்திலுள்ள தூண்களும் கம்பங்களும் செய்யப்பட்டு, கோமேதக நீல பவள புஷ்பராக மரகத மாணிக்க முத்து வைடூரிய வைரம் என்னும் நவரத்தினங்களால் இழைக்கப்பெற்றது. நடுவில் ஒரு குளம் அமைக்கப்பெற்றிருந்தது. அதன் கரையும் படிகளும் சலவைக்கல்லாலாயின. அக்குளக்கரையில் பற்பல விதமான வாசனை வீசும் மரங்களை வைத்து, குளத்தில் அம்சங்களும் மற்ற நீர்வாழ் பறவைகளும் விடப்பட்டிருந்தன. பதினான்கு மாதத்திற்குள் தமக்கோரொப்புமுயர்வும் வேறொன்றுமில்லை யென்பதான அவ்வரண்மனை கட்டி முடிக்கப்பட்டது. கிருகப் பிரவேச சடங்கு நிறைவேற்றும்பொருட்டு ஓர் தினமும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதற்குப் பற்பல நாடுகளிலிருந்து இராஜராஜாக்களும், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர் முதலியவர்களும் வந்திருந்தார்கள்; இவர்களெல்லோரும் அங்கே ஒருங்கு கூடினர். இதுதான் சபாபருவத்திற் கூறப்பட்டுள்ள முதற் சபை, அதற்கு முனிபுங்கவராகிய நாரதமாமுனிவரும் எழுந்தருளியிருந்தார். அவர் வந்தவுடனே, ஐவரில் முதியோராகிய தருமர் தம் தம்பிமாருடன் எழுந்து அவர்க்கு வந்தனை வழிபாடுசெய்து யோக க்ஷேமங்களைக் குறித்து பேசிய பிறகு முனிவர் தருமரை நோக்கி அநேக கேள்விகள் கேட்டார். இந்து சாஸ்திரப்

* வியாசபாரதம், சபாபருவம். § 1

பிரகாரம் அரசன் பிரஜைகளுக்கெல்லாம் அதிபதி. விஷ்ணுவின் அம்சமென்று சொல்லப்படுவன். அவனுடைய கடமைகளோ எண்ணிறந்தன. அவன் நல்லவனாயிருந்தால் அவன் குடிகளும் க்ஷேமமடைவார்கள். மாந்தர் செய்வது மன்னவனைச் சேரும். அரசன் இன்னின்னபடி நடத்தல்வேண்டுமென்று பீஷ்மரும் விரிவாய் சொல்லியிருக்கிறார். அவைமேலே கூறப்படும். நாரதர் தருமரை அருகிலழைத்து உட்காரவைத்துக்கொண்டு "அப்பா தர்மா! உன்காலத்தைத் தினந்தோறும் தர்மார்த்த காம மோக்ஷ சம்பாத்தியத்தின் பொருட்டுச் செலவுசெய்துகொண்டு வருகிறாயா? உன்னிடம் தன் மந்திரிகளாயில்லாமல் நற்குணம் நற்புத்தி வாய்ந்த மந்திரிகளை வைத்திருக்கிறாயா? உன்னுடைய சைனியங்களுக்கு மாதந்தோறும் சம்பளம் சரியாய்ச் சேர்ந்துகொண்டுவருகிறதா? உனக்காக பற்பல யுத்தங்களில் உயிரைத்தந்த ராணுவ வீரர்களின் சம்சாரங்களை ஆதரித்து வருகின்றாயா? யுத்தத்தில் வென்ற மாற்றாரை ரக்ஷித்து வருகின்றாயா? எல்லாரும் உன்னை யெளிதில் வந்து பார்த்தல் கூடுமா? அவர்கள் உன்னைத் தங்கள் தந்தைபோல் பாவித்து உன்னை அணுகும்படி வைத்திருக்கின்றாயா? உன் வரும்படியில் எவ்வளவு கூறு செலவுசெய்கிறாய். வேளாளர்கள் எல்லாம் சுகமாயிருக்கிறார்களா? மழைநீரில்லாமற்போனால் உன்னாடு வளம் குறைந்துபோமாகையால், பற்பல விடங்களிலும் ஏரிகளும் குளங்களும் ஏற்படுத்திவைத்திருக்கின்றனையா? விவசாயிகள் சுகமாயிருக்கிறார்களா? அவர்களுக்குவேண்டிய வித்து முதலியவைகளைச்சேகரித்துத் தந்து வருகின்றனையா? சுயநலம் பாராட்டியேனும், அகங்காரத்தாலும் அநீதி நடந்து கொண்டு வருகிறதோ! உன் மந்திரிகள் இலஞ்சம் வாங்காதிருக்கிறார்களா? வரிகளும் அநியாயமாய்ப் போடாதிருக்கிறார்களா? குருடர்களையும், முடவர்களையும் ஊமைகளையும், அங்கவீனர்களையும், சிநேகிதரற்றவர்களையும், சந்யாசிகளையும், தகப்பன் பிள்ளையைப் பாதுகாப்பதுபோல் காப்பாற்றி வருகின்றனையா? அரசே! அறுவகைத் தோஷங்களையும் அகற்றிடுபா. அவை, தூக்கம்,சோம்பல், பயம், கோபம், அதைர்யம், தாமசம், என்பனவாம்." இவற்றையெல்லாங் கேட்டுக்கொண்டிருந்த தர்மர் நாரதரை வணங்கி இனி இவற்றில் அதிக கவனம் வைப்பதாகச் சொன்னார். நாரதர் அதற்குப் பிறகு அச்சபையிலுள்ளோருக்குத் தேவலோகத்திலுள்ள அரண்மனைகளுடைய விசேஷங்களை எடுத்துச்சொல்லினார். *

நாரதர் அப்போது சொன்னவற்றிலிருந்து அரிச்சந்திரனென்னுமரசன் மாத்திரந்தான் இந்திரனோடு அவன் மாளிகையிலேயே இருப்பதாகத் தெரியவந்தது. தர்மர் அவ்வரசனுடைய குணவிசேஷத்தைக் குறித்து வினவினார். தன்னுடைய தகப்பனார் நிலைமையைப்பற்றியும் விசாரித்தார். அதற்கு நாரதர் "அப்பா தர்மா, அரிச்சந்திரமகாராஜா இராஜசூய யாகஞ்செய்ததினால் அப்பதவியை அடைந்தார். உன் தகப்பனாரும் உன்னை உலகத்தை ஜெயித்து இராஜசூய யாகத்தைச் செய்து தனக்கும் பிரயோசனம் உண்டுபண்ணும்படிசொன்னார்" என்றார். இவற்றைத் தான் தருமருக்குத்தெரிவித்து இராஜசூய யாகத்தினருமையையும் குறிப்பித்துப்போனார். அந்த யாகத்தின் முடிவில், யாககர்த்தாவை சக்கிரவர்த்தியாகவிளம்பரஞ் செய்வார்கள். அந்த தேசத்து அரசர்களெல்லாம் அவரை அரசர்க்கரசாக மதித்தல்வேண்டும். குணத்திலும் பராக்கிரமத்திலும் பெரியவனாயிருந்தால் தான் அவனை மதித்து அவனைத்தங்களுக்குத்தலைவராகக் கொள்வார்கள். யுதிஷ்டிரர் தன்னையும் தன் மந்திரிகளையும் தான் அத்தகைய யாகம் செய்வதற்கு யோக்கியன் தானாவென்று கேட்டார். அப்போது அவர் நாடு இருந்த நிலைமையே அவர் பற்பல நற்குணம் வாய்ந்த அரசரென்பதற்குச் சாக்ஷியாக விருந்தது. அவர் குடிகளிடத்தன்பு பூண்டு வித்தியாசம் பாராட்டாது எல்லாருடைய நன்மையையுங் கோரி பாடுபட்டு வந்தார். அவருக்குச் சத்துருவென்பாரொருவனில்லாதபடியால் அவருக்கு ஜனங்கள் அஜாதசத்ரு எனப்பெயரிட்டார்கள். ஒவ்வொருவரையும் தன் குடும்பத்திலொருவராகப் பாவித்து நடத்திவந்தார். தன்னுடைய சகோதரர்கள் பலவிதத்திலும் உதவி புரிந்து வந்தார்கள். இராஜ்ய முழுதும் சண்டை சச்சரவின்றி யிருந்தது. ஜனங்கள் தத்தமக்குரிய தொழிலில் கவனம்வைத்து விருத்திசெய்ய ஆரம்பித்தார்கள். மாதம் மும்மாரி பெய்து எல்லாம் சுபிக்ஷமாயிருந்தது. வாய்மையே துணை கொண்ட யுதிஷ்டிரர் காலத்து, சத்துருபயம், வியாதிபயம், அகாலமிருத்யு, சூன்யம் முதலியன ஒன்றேனுங்கிடையாது, பற்பல நற்குணம் வாய்ந்த இந்த அரசனைப்பார்த்து மந்திரிகள் "அரசே! உங்களைப் பார்க்கிலும் இதனைச்செய்ய யோக்கியதை யுடையவர் வேறெவரிருக்கிறார்கள்" என்றார்கள். இவர்கள் இப்படிச் சொன்னபோதிலும், தான் அதை உடனே அங்கிகரிக்கவில்லை. இதைப் பற்றித் தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தார். "காரியத்தைத் தீர்க்காலோசித்து செய்தல் வேண்டும். நம்முடைய வரவு யாகத்துக்குரிய செலவிற்குப்போதுமா? மற்ற யோக்கியதை நமக்கிருப்பது எப்படி நிச்சயம்?" என்று நன்றாய்த்தெளியும் பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தன்னிடம் வரும்படித் தெரிவித்தார். அவரைப்பார்க்கினும் யோசனை சொல்லக்கூடியவர் யாவரிருக்கிறார்கள்!

ஸ்ரீ கிருஷ்ணபகவானும் தூதுவன் வந்து சொன்ன மாத்திரத்தில் புறப்பட்டு வந்து சேர்ந்தார். தர்மர் அஸ்வமேதயாகம் செய்வதற்குக் கருதியதைக்கேட்டு, "ஐய! அதற்கு இடையூறு ஒன்றுளது. நீவிரோ யாகத்தைச் செய்வதற்கு யோக்கியதை யுடையவர். எல்லா அரசர்களும் உம்மைச் சக்கிரவர்த்தியாக அங்கிகரித்தால்தான் நீர் இந்த யாகத்தை ஆரம்பிக்கலாம். புஜபல பராக்கிரமம் பொருந்திய ஜாரசந்தன் என்னுமொரு அரசனிருக்கிறான். அவன் உன்னைத் தனக்குத்தலைவனாக அங்கி

* வியாசபாரதம், சபா பருவம் § 5-11.

கரிக்க மாட்டான். அவன் பார்க்கப் பயங்கரமானதோர் நரபலி இடவெண்ணியிருக்கின்றான். அதற்கு நூறு நரர்கள் வேண்டும். அவர்களும் அரசர்களாயிருத்தல் வேண்டும். இதற்காக அவன் எண்பத்தாறு அரசர்களை இதுவரையில் வெற்றிகொண்டு சிறைச்சாலையில் அடைத்து வைத்திருக்கிறான். இன்னும் பதினான்குபேர்கள்தான் வேண்டும். ஜராசந்தனை இதை நிறைவேற்றாமற் றடுப்பவன் தான் அதிக கீர்த்தியடைவான். ஆகையால் யாகத்தைப் பற்றி நினைப்பதற்குமுன் ஜராசந்தனைச் செயிக்கவேண்டும். ஜராசந்தனுக்கோ அளவற்ற சேனைகளிருக்கின்றன. ஆகையால் அவனைப் படைகொண்டு வெல்வது அருமை. தந்திரத்தால் தான் வெல்லல் வேண்டும்" என்றான். ஸ்ரீ கிருஷ்ணபகவானும், பீமனும் அர்சுனனும் அவனிடம் போக வேண்டியதென்று ஏற்பட்டது. கண்ணனுக்கு அதிக சமயோசிதமான யுக்திகள் தெரியும். பீமஸேனனிடத்திலோ அதிகபல முண்டு. அருச்சுனன் பேரைச் சொன்னாலும் அதிர்ஷ்டம் உடனே வரும். யுதிஷ்டிரர் தம் தம்பிகளுக்கு வரும் தீங்கைக்குறித்துச் சற்றே யோசித்தார். அப்போது ஸ்ரீ கிருஷ்ணபகவான் தருமரைநோக்கி "நீவிர் என்னுடைய எண்ணத்தை யறிந்தாலும், என்னிடத்தில் உமக்கு நம்பிக்கை யிருந்தாலும் உடனே பீமனையும் அர்ச்சுனனையும் என்னுடன் அனுப்புவீராக." என்று சொன்ன மாத்திரத்தில் யாதேனும் தடையின்றி தம்பியர்க்குப் புத்திமதி சொல்லி யனுப்புவித்தார். மூவரும் *ஸ்நாதக பிராமணர்களைப் போன்றுடுத்து ஜராசந்தன் ராஜதானியாகிய மகதத்திற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் அந்நகர் சேர்ந்ததும் அவ்வூரார் பூஜிக்குமோர் மலைச்சிகரத்தைத் தகர்த்து, அவ்வூர் கோட்டை வாயில்களில் மாற்றரசர்புகும் வாயிலால் உட்சென்று, வீதிகளில் அகப்பட்ட வஸ்துக்களை யெல்லாம் அபகரித்துக் கடைசியில் அரண்மனை வாயிலடைந்தனர். பிராமணர்களென்றறிந்த மாத்திரத்தில் அரசன் திடீரென்று தன் ஆசனம் விட்டெழுந்து மரியாதை செய்து உட்காரும்படி வேண்டினான். இவர்கள் அம்மரியாதையாவும் ஏற்றுக்கொண்டிலர். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அரசனைநோக்கி "நீவிர், எம்மை நல்லிருள் கழிந்தபின்பு காண்மின்" என்றனன். அப்போது அரசன் வந்து இவர்களைப் பார்த்து "ஐயன்மீர்! உங்கள் வேஷத்தோடிருப்பவர்கள் சந்தனமும் புஷ்பமும் அணியார்கள். நீங்கள் செய்த துராக்கிருதமான செய்கைகளையும் செய்யாக் கனவிலும் எண்ணார்கள்.

*ஸ்நாதகமென்பது ஓர் விரதம், அதாவது பிரமசரியத்திற்குப் பின்னும் கிருகஸ்தாச்சிரமத்திற்கு முன்பு மனுசரிக்கப்படுவது. கிருகஸ்தனைப்போன்று வஸ்திரமும் பிரமசாரியைப்போன்று ஒற்றைப்பூணூலும் தரித்து, பலாச தண்டம் நீக்கியிருக்கும் பிராமணன் ஸ்நாதக பிராமண னெனப்படுவான். இவ்விரதங்கொண்டவனுக்கும், பிரமசாரிக்கும் கிருகஸ்தனுக்கும் வேற்றுமைகள் இன்னும் சிலவுள.



தங்களுடைய நடவடிக்கைக்குரிய காரணம் யா" தென்றான். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் "பிராமணர்களே யன்றி, க்ஷத்திரியர்களும் வைசியர்களும் ஸ்நாதக மென்னும் விரதத்தை யனுட்டிக்கலாம். யாங்களணியும் சந்தனம் இந்நாட்டிற்குவரும் லக்ஷ்மீகரத்தைத் தெரிவிக்கும் படியானது. விரோதியின் அரணை சரியான வாயிலால் அடைதல் கூடாது. ஆகையாலதற்குத் தகுந்தபடி செய்தோம். விரோதியினிடமாக எங்கள் வேலையைப் பூர்த்தி செய்யாமல் அவனுடைய மரியாதையை யேற்று விருந்துண்டு கொண்டிருக்க மாட்டோம்" என்றார். ஜராசந்தன் திடுக்கிட்டு "ஐயா! யானிழைத்த தீங்குயாது?" என்றான். நரபலியிடப் பிரயத்தனம் செய்ததே பெருந்தீங் கென்றார். அதைத் தடுக்கும் பொருட்டுத் தானும் தன் துணைவரும் அங்கு வந்ததாகவும் அவர்களின்னார் என்பதையும் எடுத்துரைத்தார். "மகததேசாதிபதியே! சிறைப்படுத்தி யிருக்கிற அரசர்களை விட்டுவிடுவாய்! அல்லாவிடில் யமனுடைய வுலகம் காண்பாய்! யுத்தத்திற்குடனே புறப்படுவாய்" என்றார். அவனும் யுத்தத்திற்குச் சம்மதித்துத் தநயனைச் சிம்மாசனத்திலேற்றி, பீமனுடன் மல்லயுத்தம் செய்ய ஆரம்பித்தான். பதினான்கு நாளாயும் அது முடியவில்லை. அந்நாள் முடிவில் ஜராசந்தனுக்குப்பலம் ஒடுங்கிவருதல் கண்டு ஒரே பிடியாய்ப்பிடித்துச் சுற்றி யடித்து முழங்காலில் அவன் முதுகை வைத்தொடித்தான் பீமன். ஜராசந்தன் உயிர்துறந்தான். ஸ்ரீ கிருஷ்ணபகவான் சிறைப்பட்டிருந்த அரசர்களை விடுவித்தனர். அவரும் பீமார்ஜுனரும் ஜராசந்தனுடைய தேரிலேறி அவ்விடம் விட்டு வந்தனர்; சிறைமீண்ட அரசர்களும் சிறைப்படுத்தின அரசன் புதல்வனும் யுதிஷ்டிரரை அரசர்க்கரசாக அங்கீகரித்தார்கள். *

தருமருக்கிளையவர்களாகிய நால்வரும் நாற்றிக்கிலும் படையெடுத்துச் சென்றனர். அர்ச்சுனன் வடக்கிலும், பீமன் கிழக்கிலும், சஹாதேவன் தெற்கிலும், நகுலன் மேற்கிலும் சென்றான். இவர்கள் நாற்றிக்கிலுமுள்ள அரசர்களை வென்று தம் தமயனைச் சக்கிரவர்த்தியாக அங்கீகரிக்கும்படி செய்தார்கள். நான்கு திக்கிலும் சென்றவர்கள் நவரத்தினங்களோடும் கணக்கற்ற திரவியத்தோடும் திரும்பிவந்தார்கள். அவற்றை யெல்லாம் தம் தமயன் முன்வைத்து நமஸ்காரஞ்செய்து அங்கீகரிக்கும்படி வேண்டினார்கள். பிறகு தருமருக்கு அஸ்வமேதயாகஞ்செய்து முடிக்கலாமென்னும் தைரியமும் வந்தது †

(இன்னும்வரும்.)

கல்துளம் குப்புசாமிமுதலியார்.

* வியாச பாரதம். சபாபருவம்: [§ 16-24]
† வியாசபாரதம் சபாபருவம். § 25 - 33

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர்.

"ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாராவின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்டசைவசித் தாந்தம்."

என்னு மெய்கண்ட சமயம், புறமதத்தர் கூறும் பித்துரை பேதுரைகளால் அலக்கழியா வண்ணம் சமயாசாரியர், சந்தான குரவர் முதலியோர் தோன்றி வரம்பு கட்டிச்சென்றனர். காலக் கதியால் வரம்பழியவே அதை மீட்டுக்கொடுக்க வந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் தங்கடமையை நன்கு முடித்துத் தற்சிவத்துற்றனர் எனக்கேட்டு மனந்திகைக்கின்றது. அந்தோ! அவர் மறைந்ததால் சைவ சமயிகளுக்கோர் ஊன்றுகோல் கை நழுவி விட்டது போலும். சென்ற 35 வருடங்களாகச் சைவ சம்பந்தமான அனேக காரியங்கள் அவர் செய்திருப்பதாலும், அவைகளின் பலனைப் பலரும் அனுபவித்துக்கொண்டு வருவதாலும், அவர் நம்மைவிட்டுப் பிரிந்தாரென்பது தோன்றவேயில்லை. அவர் காலமாய்விட்டதால் உண்டான மன நோயைப் பல பத்திரிகைகளும் பண்டிதர்களும் முறையிருட்டிருப்பதால் அம்மகா புருஷரத்தினத்தினிடத்தன்பும் நன்றியும் பாராட்டாத சாம்பவனெவனுளன்? அவர் வேதாகம வுணர்ச்சியையும் விஜய வைபவத்தையுங் கேட்க விரும்பாத ஆரிய னெவனுளன்? அவர் வாக்கு சாதுரியத்தையுந் தீர விசேடத்தையும் வாத கம்பீரத்தையுந் தெரிய விரும்பாத வேதபாஹ்ய னெவனுளன்? ஆகவே அவர் பிரதாபத்தை யிடங்கொடுத்த வரையில் ஒருவாறு சுருக்கி யெழுதலாயிற்று. விஷயங்கள் தொடர்ச்சியா யிராவிடின் உலகம் நம்மைப்பொறுக்க.

## பிறப்பு வளர்ப்பு.

நமது நாயகரவர்கள் சென்னைச்சூளையில் நிலைபெற்றிருந்த ஓர் வைணவ குடும்பத்தில் கி. பி. 1846௵ ஆகஸ்டு௴ 6உ ஆதிவாரம் சிம்மலக்கினத்தில் நான்குகோள் உச்சவமாகச் சைவத்துறை விளங்கப்பிறந்தனர். அரங்கசாமி யெனத்தாய் தந்தையர்களிட்ட பெயரை இவருக்குப்பந்துவான அச்சுதானந்தரெனும் ஓர் சைவசன்னியாசி மாற்றி சோமசுந்தரமென வழைத்துத்தாம் வளர்த்துச் சிவாதிக்யம் போதித்துச் சைவராக்கி வடமொழி தென்மொழி கற்பித்துவந்தனர். இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலமுந் தெலுங்கும் பயின்று பிரவேச பரிக்ஷை வகுப்பு வரையில் வாசித்துக்கொண்டிருந்தார். இன்னம் நான்கு பாஷைகளிலும் போதிய ஞானம் வருவித்துக் கொண்டு * இந்நகர விசாரணைச் சாலையில் உத்தியோகத்திலமர்ந்திருந்தார்.

* Madras Municipality.



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர்.

## சமய விசாரணை:

அச்சுதானந்தர் ஏகான்ம வாதத்திற் பற்றுடையவராய்த் தம் மாணாக்கருக்கும் அதையே போதிப்பாராயினர். கற்ற விஷயங்களைத் தம் நுண்ணிய ஆராய்ச்சியாற் சீர்தூக்கிச் சிக்கறுப்பதாகிய பெருங்குணமிவரிடத்திருந்ததாலும் செவியிற்பட்டதை யெல்லா நம்பும் பேதைமையில்லாமையாலும், ஏகான்மவாத நூல்களில் தமக்குச் சந்தேகமும் போதனையில் முரணு நேர்ந்துழி ஆசிரியரை விடாது தக்க சமாதானங்கள் கொடுக்கும்படி நெருக்குவர். நுட்பமான கேள்விகளால் பலமுறை ஆசிரியர் விடையிறுக்க முடியாது மயங்கியதுண்டு. அப்போது நாயகரவர்கட்கு வயது 20 இருக்கலாம். அது புறச்சமயிகள் சைவத்திற்கின்னல் தேடிக்கொண்டிருந்த காலம். கறையான் குட்டை சபாபதி முதலியார் என்பவர்க்கிவர் உதவியாயிருந்து பிரசங்க வாயிலாய்ச் சைவ சமய உண்மையினைப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார். அவரது சிவநேசத்தன்மையை உணர்ந்த மதுரைநாயகம்பிள்ளை யென்பவர் இலவசமாய்க் கொடுத்த மெய்கண்ட சாத்திரத்தை முழுவதுங் கற்று; ஆசிரியர் போதனையிலுள்ள வழுக்களை அவர்க்கு எடுத்துக்காட்டி யச்சாத்திரத்தில் பற்றுண்டாகும்படி செய்தார். பின்பு அச்சுதாநந்தர் காஞ்சியை யடைந்து ஆதிசைவரிடம் ஆசாரியாபிடேகமுற்று, ஏகாம்பர சிவயோகியாரெனத் தீக்ஷா நாமம் பெற்றுக்கொண்டனர். நாயகரவர்கள் வைணவத்திற் பிறந்து, பின்பு தமக்கு ஏகான்மவாதம் போதித்த ஆசிரியருந் தாமுஞ் சைவ சித்தாந்த போதகராயினமையை நோக்க, அவராராய்ச்சியின் தெளிவு நன்குபுலப்படும். உத்தியோக நிர்ப்பந்தத்தால் சமயப் பாதுகாப்புக்குவேண்டுங் அவகாசங் கிடைக்கப் பெறுமையின் தஞ்சுய நயத்தையும் போற்றாது 1881௵ வேலையை விட்டு நீங்கினர்.

## நூலாசிரியத் தன்மை.

நாயகரவர்கள், சற்றேறக்குறைய 100 சத் கிரந்தங்கள் இயற்றியுள்ளார். அவைகளில் "வேதபாஹ்ய சமாஜகண்டநம்" என்னும் முதல் நூல் 1868௵ ஆகஸ்டு௴ வெளியாயிற்று. சுந்தர சிவாசாரியர் என்பவர் பெயரால் தாம் இயற்றிய சிவாதிக்ய ரத்நாவளி க-ம் பாகத்திற்கு உ-பாகம் பின்பு இயற்றி 1873௵ வெளியிட்டு அந்நூலைப் பூர்த்தி செய்தார். அந்நூலுடன் அவர் புகழும் வெளியேறிற்று. அவரியற்றிய மற்றைய நூல்கள், சைவசூளாமணி, பரதத்துவப் பிரகாசிகை, பிரம்மதத்வ நிரூபணம், அர்ச்சாதீபம், ஆதி சைவப்பிரபாவம், சித்தாந்த ரத்நாகரம், சித்தாந்த ஞான போத முதலியனவாம். பிந்திய விரண்டுஞ் சஞ்சிகை ரூபமாய்ப் பல அருமை நூல்களை யுள்ளடக்கி வெளிப்போந்தன. அவற்றின் அந்தம் "மெய்கண்டசிவ தூஷண நிக்கிரஹம்" என்னு உண்மை நூல். இது அவருடைய இறுதிக்காலத்திற்கு 6-திங்கள் முந்தி வெளிப்பட்ட நூல். ஆக 33 வருஷம்

கிரந்தகர்த்தரா யுழைத்தாரென்பது தெரியவருகிறது. இவர் நூல்களை இரண்டு பெரும் பிரிவுகளாக்கலாம். ஒன்று சைவத்தின் பெருமையைக் கூறுவது; மற்றொன்று புறமதங்களின் புறங்கூற்றுகளை விசாரித்து அம்மத சொரூபங்களிலுள்ள வழுக்களை யெடுத்துக்காட்டுவது. அப்பைய தீக்ஷித சுவாமிகளும் இவ்வாறே சுயமதஸ்தாபனமாகவும் புறமத பங்கமாகவும் நூலியற்றி யுள்ளாராதலினாலும், புறமதத்தினர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்த வேண்டுமென்ற காருண்ய மேலீட்டா லக்கிரந்தங்களை நாயகரவர்கள் சலியாமல் இயற்றியதாலு மவருக் கழியாப்புகழும் புண்ணியமும் சித்தித்தன. தமிழில் கத்தியரூபத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகளை இவர்தான் முதன் முதல் வெளியிட்டவர் இவர் தமக்கெனவோர் மணிப்பிரவாள நடையைக் கற்பித்துக்கொண்டு வாசிப்பவர்க்கின்ப மூட்டும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்.

## பிரசங்கங்கள்.

அவர் கிரந்த கர்த்தாவா யிருந்ததுமன்றித் தமிழ் நாடெங்குமுலவித் தம் பிரசங்க கர்ச்சனையால் சைவத்திற்குப் பழிகூறியவர்கள் ஓடிப்பதுங்கும்படி செய்திருந்தார். தென்தேசத்தின் ஒவ்வொரு பிரதான நகரத்தாருமவர் பிரசங்க மழையைச் செவியான் மாந்திய துண்டு. சைவசித்தாந்தத்தின் மகிமை இவர் பிரசங்கத்தால்தான் அதிகமாய் வெளியாயிற்று. "சமயங்களெல்லாஞ் சித்தாந்தத்திற்கு அங்கமாகும்; சித்தாந்தத்திற் கெம்மதமுஞ் சமமதம். இதற்குமேற்பட்டுச் சமயப்பொறுமை யுடையது மற்றெம்மதமுமில்லை" என்னு முண்மையினைக் காட்டிப் பலரைச் சித்தாந்திகளாக்கிவிட்டனர். திரிசிரபுரத்தில் இவர் அடுத்தடுத்துப் பிரசங்கஞ்செய்ய நேரிட்டதால், அங்குள்ள அந்தணர்பலர் இவர் வாக்கைக் குருமொழியாகக் கொண்டிருந்தனர். இவர் பிரசங்கத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி ஒரே சிந்தனையாயுற்றுக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவர் அப்பையதீக்ஷிதரவர்களைப் போன்று சதநூல்களியற்றி, ஹரதந்தரைப்போன்று தீரம் வகித்துத் திருஞான சம்பந்தரைப் போன்று திருமேனிகொண்டு, திருநாவுக்கரசைப் போன்று சிவவேடம் பொலிந்து, சுந்தரரைப்போன்று தாமரைத்தண்ணீர்க் கொப்பாமில்லற வாழ்க்கையை நடத்திச் சேக்கிழார் போன்று அடியார் பெருமையைவிளக்கி, மணிவாசகரைப்போன்று இன்னிசையாய்க் கனிவாய்ப் பிரசங்கித்தால் யாவர்தான் இவர் கட்டில் அகப்படாதார். திருநெல்வேலிச் சிவாலயத்தில் தத்துவ மண்டபத்தில் இவர் சில வருடங்கட்குமுன் செய்த பிரசங்கத்தின் அருமையையும் வலிமையையும் அளவிடற்கரிதென அப்பதியிலுள்ளார் இன்றும் இறும்பூதெய்துகின்றனர். சென்னையில் அவர் பிரசங்கங்களால் விளைந்த பலன்களை நோக்குழி, அவர் அருண் மூர்த்தியெனவே யெண்ணலாம். சமயாசாரியர் நால்வர்க்கும் பல் ஸ்தலங்களிற் றிருவிழா உண்டானதிவரின் பெருமுயற்சியாற்றான்.



## நன்குமதிப்பும் பட்டப்பேறும்.

இவ்வாறு பல நூல்களானும், சைவப்பெருமணங் கமழுந்தரித கம்பீர வாக்கினாற் செய்த பிரசங்கங்களானும், சித்தாந்தத்தினுண்மை பிரகாசிப்பிக்கச் செய்தமையின், மடாதிபதிகள், ராஜாக்கள், ஜமீந்தாரர்கள் இவருக்கு வேண்டிய உதவி புரிந்துவந்தனர். ராஜா பாஸ்கர சேதுபதியவர்கள் "வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்"; என்னும் பட்டப்பெயர் தந்து மேம்பாடியற்றினர். திருவாவடு துறையார் "பரசமயகோளரி" யென ஆசீர்வதித்தனர். சாம்பவர்களெல்லாஞ் "சைவமார்த்தாண்டன்" எனப் புகழ்ந்து கொண்டாடினர்.

## இறுதிக்காலம்.

முப்பது ஆண்டுகளாகச் சைவ நுட்பங்களிலாழ்ந்து உழைத்துவந்த இவரது தேக சௌக்கியம் 1898ஆ முதல் குன்றிக்கொண்டேவந்தது. அதையு நோக்காது தங்கடமையை நிறைவேற்றிக்கொண்டே வந்தார். சதுர்வேதம் போன்ற நான்கு கிரந்தங்கள் இவ்விறுதிக்காலத்து வெளியாயின. வெளி நகர்களிலும் பல பிரசங்கங்க ளிடையிடையே நடந்துகொண்டு வந்தன. அவர் சென்னையிற் கடைசியாய்ச் செய்த பிரசங்கம் காசிவிஸ்வநாதர் ஆலயத்தில். அப்பிரசங்கத்தின் சுவை இன்றுமினித்துக் கொண்டிருக்கிறது. அது நடந்து ஒரு திங்கள் முடியுமுன் விசுவேஸ்வரர் அவருக்குத் தாரகமந்திரமோதியது அவ ருபன்னியாச மகிழ்ச்சியாலெனச் செப்பலாம்.

நாளது 1901ஆ பிப்ரவரிமீ 22உ சுக்கிரவார மாலை 4 மணிக்குத் தங்குருக்களைத் தருவித்து, விபூதிப்பிரசாதம் பெற்றுத்தரித்துத் தன்குமாரரைத் தேவார திருவாசகங்களோதச் செய்து கவனித்துத்தாமே "திருச்சிற்றம்பலம்" எனப்பூர்த்தி செய்து, கைகூப்பிச் சிரசிற்சேர்த்து "இதோ இடபவாகன ரூடராய் அர்த்த நாரீஸ்வரர் வந்திருக்கிறார். தரிசியுங்கள்" என்னுந் திருவார்த்தையுடன் மௌனஞ் சாதித்துச் சிவராஜ யோகத்திலமர்ந்திருந்தார். மார்த்தாண்டன் படும் வேளை வந்தது. ஹரஹர! "சைவ மார்த்தாண்டன்" அவ்விதானத்தை யுற்றார்.

"செய்யுந் திருவொற்றி யூருடை யீந்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே"

என்பதிற் கிஞ்சித்தும் பிழையாம லுற்றதை நோக்க நாயகரவர்கள் தெய்வீகத் தோற்றமும் சிவப்பிரீதி மறைவுமுற்றாரென்பதே துணிபு.

ஸி. தங்கவேலு முதலியார்.

# அசூயாதேவி.

இருடிகளினு லியற்றப்பட்ட பதினெண் புராணங்களும் மற்றுமுள்ள இதிகாசங்களும் **அசூயாதேவியின்** மகத்துவத்தைப் பிரகாசிக்கச் செய்யாமலிருப்பதைப் பார்த்தால் யார்தான் கிலேசமடையார்? இந்தப் பெயரை யுச்சரிக்கக் கேட்டமாத்திரத்திலேயே இவளின்னாரென்பது இதை வாசிப்போர்களுக்கெல்லாம் தெரியாமலிராது. யுகயுகாந்தரங்களிலும் தனது சக்தியை மூவ்வுலகிலும் பிரயோகித்து ஹரிஹரப்பிரம்மாதிதேவர்களையும் மனிதருலகிலவதரிக்கச் செய்தவளும், எல்லாப்புராணங்களு மியற்றப்படுவதற்குக் காரணபூதையாயிருந்தவளு மிவளே யாவள். முற்காலத்தில் சுராசுரர்கள் சமுத்திரமதனத்தினால் "சதுர்தச (பதினான்கு) ரத்னங்க"ளைக் கைக்கொண்டனரென்பது புராணப் பிரசித்தமான விஷயமன்றோ? அப்போதே இவள் கூடத் தேகதாரியாகிப் பிறந்திருந்தும் தனது மாயையின் வல்லமையினால் அதிருசியளாகி (கண்ணுக் ககப்படாதவளாகி) அசுரரைக் கணவராக வரித்துக்கொண்டு, அம்ருதத்தைத்தனது கணவராகிய தைத்தியருக்கே உரியதாக்கிக்கொடுக்க வேண்டுமென்ற வுபாயத்தை யிவள் கற்பித்தனள். இந்தப்பிரகாரமாக சுராசுரர்களுக்குப் பேதபாவனையை யுண்டாக்கினள். ஆயினும் தம்மைப்பீடித்துக் கொண்டிருக்கிற இவள் யாரென்று சுரர்களுக்கு மசுரர்களுக்குந் தோற்றமற்போனது மிகவுமாச்சரியமானதேயாம். ஆகையால் இவளுடைய மகிமை வர்ணிக்க முடியாத தென்பதேசரி.

தேவலோகத்தை வெகு விதங்களிற் பீடித்ததன்றிப் பூலோகத்திலும் தான் யாரென்பதை ஜனங்களுக்கெல்லாம் தெரிவிக்கும் பொருட்டு நாமிருக்கு மிவ்வுலகத்தையுங் கூட இவள் தன்னுடைய நிவாஸஸ்தான மாக்கிக்கொண்டனள். கடந்த யுகங்களில் தபாலாபீசும் தந்திதபாலு மில்லாதிருந்ததைக்கண்டு சிந்தையினால் மனமிகவு நொந்தவளாகி **அசூயாதேவியானவள்** நாரதமுனியைத் தனது ஏஜண்டாக (காரியஸ்தராக) நியமித்தாள். இது முதலான பற்பலவுபாயங்களினால் இவள் தன்னுடைய மாயாசக்தியின் மூலமாய் இவ்வுலகத்திற் பிரகாசித்துக் கொண்டும் பேதபாவனையின் பீஜங்களை (வித்துக்களை) விதைத்துக் கொண்டு மிருக்கின்றாள்.

இவள் பூலோகத்து அரசர்களில் அஹிதசிந்தனைகளை (கெட்ட எண்ணங்களை) விதைத்து வேரூன்றச்செய்து உலகத்திற் கினிமையாகிய சாந்தத்தைக் கெடுப்பாள். தந்தை மகனுக்கும், புருஷன் மனைவிக்கும், மித்திருக்கும் துவேஷ பாவனையை உண்டாக்கிக் கொண்டிருப்பாள். இந்த விக்கின காரிணியானவள் பற்பல விதமாய் ஒருவர்க் கொருவர் விரோதமான அபிப்பிராயங்களை யுண்டாக்குவதுமன்றி ஜனங்கள் கலகத்தை விசுவசிக்கும்படியும்



செய்கின்றாள். இவள் கொடுத்துவருந் தொந்திரவுகளை நாம் பொறுப்பது அசாத்தியம்.

இந்த மாதேவியானவள் நமது பரதகண்டத்துக்குக்கூடத் தயைகூர்ந்து தரிசனமளித்திருக்கிறாள். இவள் நமது நாட்டிற் பிரவேசித்தவுடனே கலகம் முதலான உபத்திரவங்கள் தலைகாட்டின. இவளுடைய தசையினாலேயே பிருதுச் சக்கிரவர்த்தி தமது இராச்சியத்தை மாத்திரமேயன்றித் தம் ஜீவனையுங் கூட இழந்தார். நமது பரதகண்டமானது இவளுடைய ஸங்க (சேர்க்கை) தோஷத்தினால் அந்நிய வரசர்களினாளுகைக்குள்ளாகவேண்டி வந்தது. நம்மெல்லாருடைய துர் தசாவஸ்தைக்குங் காரணபூதை இவளே யாவள். **ஸத்யதேவதையைப்** பஜிப்பவருங்கூட இவளுடைய ஸங்கத்தினால் தாங்கள் வழிபடுந் தேவதையினின்று தூரமானார்கள். நற்குணங்கள் இவளுடைய தரிசனமாத்திரத்தினால் ஓட்டம் பிடிக்கின்றன. இவளுடைய பராக்கிரமம் மேன்மேலு மதிகப்பட நமது தேசோன்னதையின் இலக்ஷணங்கள் குறைந்துபோய்க்கொண்டே வருமென்று மறுபடியுஞ் சொல்லவேண்டிய அவசியமில்லை.

எவனொருவன் இவளை வரித்து(நேசித்துறவாடி)க்கொள்கிறானோ அவன் இவ்வுலகத்தில் தன்னுடைய தநு மன தனங்களை (தேகம், மனது, திரவியங்களை)யும் போக்கடித்துக் கொள்வது மன்றிப் பரலோகத்தில் எள்ளளவும் நன்மையடையாது, யமராஜனால் சிக்ஷிக்கப்பட்டு எக்காலத்து மெரிந்து கொண்டிருக்கிற நரகாக்கினிக் குழியிலாழ்ந்து சங்கடங்களை யநுபவிக்க வேண்டிவரும்.

பத்திரிகைகளின் விஷயத்தில் இந்த **அசூயாதேவியானவள்** பாலாரிஷ்டமாகப் படுத்துவள். நமது **ஞானபோதினி** விஷயத்தி லிவள் மிகுந்த தயையுடன் தரிசனங்கொடுக்க ஆவல் காட்டியும் அதனை நடத்துபவர்பின்னலிங்கமல்லாது **பூர்ணலிங்க**மாதலின் தேவியின் வல்லமை நடந்தேறாதாயிற்று. தேவி மாயைவடிவமானவள். மாயையோ பூரணலிங்காகாரமான பரமசிவனுக் கடங்கம். அன்றியும், அச்சிவபிரானது பிரத்தியக்ஷரூபமான **சூரியநாராயண** மூர்த்தியே இப்பத்திரிகையை விளக்குவித்து, மாயையெனு மிருள்மூடாது தனது கிரணங்களைப் பரப்பிக்காத்துப் பிரகாசிக்கச்செய்து வருகின்றார். இது நிற்க, திரிமூர்த்திகளாயினும் **நாரதமாமுனியைக்** கண்டால் வணங்கிநிற்பாரன்றோ? நாரதரோ **அசூயாதேவியின்** முதன்மையான ஏஜண்டு. டெலக்ராப் மாஸ்டரான நாரதர் முகமனியம்புவதிலும் தாம் லோகோபகாரி யென்று காட்டுவதிலும் மிகத்தேர்ந்தவர். ஆகவே அவரை **அசூயாதேவி** நம்பால் அனுப்பாதிருக்குமாறு அவளைப் பிரார்த்திக்கின்றேன். நாரதருடைய விஜயம் இத்திக்கில் வேண்டாம். ஆயினும் அசூயாதேவியி னுபாயங்களோ பல விதமானவை. திரேதாயுகத்தில் மந்தரையின் மனதிற் புகுந்து

ஸ்ரீராமனைப் பதினான்கு வருஷகாலம் வனவாஸஞ் செய்யும்படி விதித்தமகாத்மா இவளன்றே?

விக்கினகாரிணியும், தோஷங்கள் நிறைந்தவளுமான இந்த அசூயா தேவியின் புத்தியையும் சக்தியையும் வர்ணிப்பது அசாத்தியமாகும். சனி மகாத்மியத்தைப் படிப்பவருக்கும் கேட்பவருக்கும் எழுதுபவருக்கும சனீசுவரனாற் பாதை யுண்டாகாதென்று கிழவரும் கிழவிகளும் தமது பௌத்திர பௌத்திரிகளுக் குரைப்பதுண்டு. அதே மாதிரி, அசூயாதேவியின் மான்மியத்தை "ஞானபோதினி" ப்பத்திரிகையிற் பிரசுரிப்பதனால் 'அதற்கு அவளுடைய ஸங்கத்தினாலுண்டாகக்கூடிய தோஷங்கள் தூரமாவதற்கும், அவளுடைய ஏஜன்டான "நாரதர்" அணுகாதிருக்கவும் போதுமான சாந்தி யென்று நம்பி, அசூயாதேவியின் மகாத்மியத்தை இங்குஎழுதலானேன்.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

# இந்துஜனசமூகச் சீர்திருத்தம்.

(293-ஆம் பக்கத் தொடர்ச்சி).

"நிறம்" என்று பொருள்படும் "வர்ணம்," என்னும் வடமொழிப்பதமும், "வமிசம்" என்று பொருள்படும் "சாதி" என்னும், வடமொழிப்பதமும், இந்துக்களுக்குள் வழங்கும்; நான்கு நிறத்தினர் தேசம் எனப் பொருள்படும் "சதுர்வர்ணியா" என்னும் வடமொழிப்பதம் இந்தியாவுக்குத் தொன்றுதொட்டுள்ள ஒரு சிறப்புப்பெயராம். தற்காலத்திலும், சாதி வேற்றுமை, இந்துக்களுக்கேயுரிய ஓர் அடையாளமென்று வேறு தேசத்தவர்களும் நினைக்கின்றார்கள்.

சாதிவேற்றுமை, ஐரோப்பியருள்ளும், மற்றும் பிறதேசத்தவருள்ளும் வழங்கிவரும். கல்வியாலும், செல்வத்தாலும் உயர்வு தாழ்வைக்குறிக்கும் படித்தரத்திற்கு (Rank) அது ஒப்பாமேயொழிய வேறன்றென்று சிலர் வீணே பிதற்றுகின்றார். இவ்வாறு கூறுதல் தவறு. என்னை? உயர்வு தாழ்வைக்குறிக்கும் படித்தரமானது, எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அவரவர் மேம்படு செய்கையாலும், செல்வத்தாலும் பெறத்தக்கது. இந்திய சாதியோ, அவ்வாறல்லாது அவரவர் பிறப்பினளவினதேயாம். அஃது ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினராதற் கிடங்கொடாது. தாழ்ந்த வகுப்பினன் தக்கோனெனப் புகழெய்தினும், உயர்சாதிச்சேர்தல் கிட்டாது. பெருவலியுள்ள மன்னரேயாயினும் உயர்சாதிப்பெயரை மரியாதையைக்



குறிக்கும் பட்டமாகவேனும் பிறருக்குக் கொடுத்துக் கனப்படுத்தவு மியலாது. மடையனேனும் பார்ப்பனன் பார்ப்பனனே; வள்ளுவரையொத்தானேனும் பறையன் பறையனே. ஒரு வகுப்பினன் மற்றொரு வகுப்பினனாதற்கு முயல்வதைவிட *கர்த்தபம் குதிரையாதலெளிது. ஆகையால் அன்னோர் கூற்று அறியாமையை விளக்கும்.

முற்காலங்களில் நெடுங்கால வழக்கங் கைவிடாது அதைப் பின்பற்றலே ஆசாரமென்றெண்ணப்பட்டது. இது, ஜனசமூகம் முன்னுக்குவாராது நின்ற நிலையிலேயே தங்குவதற் கேதுவாயிற்று. தற்காலத்திலோ உண்மை ஆராய்ந்தறிதல் மேலிட்டிருத்தல் பற்றி முற்காலந் தொடங்கிவழங்கி வரும் ஒவ்வொரு ஏற்பாடும் தொன்மை யுடைத்தேனும் நன்மைபயக்குமேல் அதனைக் கைக்கொண்டு இன்றேல் அதனை நீத்தலே பேரறிவாம். என்னை? நீடித்து வழங்கிவரும் ஆசாரங்களையும், நிபந்தனைகளையும், ஆழ்ந்த யோசனையும் போதுமான காரணங்களு மின்றிக் கடிதலாவது நீத்தலாவது கூடா வொழுக்கம். ஆகவே இவ்விந்தியாவில் நீடித்து வழங்கிவரும் சாதி வேற்றுமையின் நன்மைதீமைகளை யாராய்ந்தறிதல் வேண்டும். ஆராயப் புகுமிடத்து, நன்மை தீமைகளை விரித்துரைக்குமுன் சாதிவேற்றுமையின் உற்பத்தி யபிவிர்த்தி முதலியவற்றை சோதித்தறிதல் அவசியமாகும்.

சாதி வேற்றுமை தோன்றியதற்கு நம்மனோர் கூறுமுகாந்திரமென்னை? பலவுள. இந்துக்களின் சாஸ்திரங்களில் ஒன்றிலும் ஒருவிதமாகக்கூறுவதில்லை. ஒன்றற் கொன்று மாறுபடக்கூறி யிருக்கின்றன. பிர்ம்மாவின் வாய், தோள், தொடை, அடி, முதலிய நான்கு ஸ்தானங்களினின்றும், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய நான்கு வருணத்தாரும் தோன்றினர் என்னும் கதை சாதாரணமாய் இந்தியா வெங்கும் வழங்கிவரும். பூ: புவ: ஸ்வ: என்ற மூன்றுவார்த்தைகளினின்றுந் தோன்றினர்களென்று சதபத பிராமணம் கூறும். வேதத்தினின்று தோன்றினர்களெனத் தைத்ரீயபிராமணம் கூறும். இதே புத்தகத்தில் வேறொரு பாகத்திற் பார்பனர் ஸுரரிடத்தினின்றும் சூத்திரர் அசுரரிடத்தினின்றுந் தோன்றினரென்பது கூறப்பட்டுளது. ஒரு புத்தகத்தில், மனிதர்கள் வைவஸ்வத ருஷியின் புத்திரர்களென்றும், மற்றொரு புத்தகத்தில், மனுவின் சந்ததியாரென்றும் சொல்லப்படுகிறார்கள். வேறொரு புத்தகம் அதே பெயருடைய ஒரு பெண்ணினின்றுந் தோன்றியதாகக் கூறும்.

பாகவத புராணம் சத்தியயுகம் என்று பொருள்படும் கிரேதா யுகத்தில் மனிதர் ஒரே சாதியாராயிருந்தாரென்றும் வாயு புராணம் திரேதா யுகம் வரையில் சாதி பலவாகப்பிரிக்கப் படவில்லையென்றும் கூறும்.

---

* கர்த்தபம்=கழுதை.

இவ்வாறு ஒன்றற்கொன்று மாறுபடக் கூறியிருத்தலால், இச்சாத்திரங்களின் கூற்று ஒன்றேனும் உண்மையாகா. நியாயஸ்தலத்தில், சாட்சிகள் ஒருவரோடொருவர் மாறுபடக்கூறுவரேல் நியாயாதிபதி ஒரு சாட்சியையேனும் உண்மையென்று ஒவ்வாரல்லவா? மாறுபடக்கூறும் இச்சாத்திரங்களும் தெய்வானுகூலம் பெற்றதென்பது எவ்வாறுகொள்ளப்படும்?

ஆயின் **சாதிவேற்றுமையின்** உண்மையென்னை? (1) வது **வமிசவேற்றுமை**. இது, வமிசம் என்று பொருள்படும் **சாதி** என்னும் பதத்தாலும் நிறம் என்று பொருள்படும் **வர்ணம்** என்னும் பதத்தாலும் நன்கு விளங்கும். ஆரியர்கள், மத்திய ஆசியாவிலேதோ ஒரு பாகத்தினின்று, ஜனப்பெருக்கத்தாலோ, பிழைப்பின்மையாலோ, தங்கள் குடிசைகளைச் சுமந்துகொண்டு, ஆடுமாடுகளையும் ஓட்டிக்கொண்டு நூதனபூமி நாடிவருங்கால், யாவரும் ஒரே சாதியராயிருந்தார்கள். அவர்கள் குளிர்பூமியினின்றும் வந்தவர்களாகையால் வெண்ணிற மேனியுடையவர்கள். பின்பு இந்து தேசத்தில் சிந்துநதிக்கரையை வந்தடுத்துப் புராதனக்குடிகளாகிய கருநிறத்தினரை யோட்டிப் பயிர்த்தொழிலில் பயின்றாராதலால், **ஏர்** அல்லது **கலப்பை** என்று பொருள்படும் **ஆர்** என்றும் வடமொழிப்பதத்தினின்றும் பிறந்த **ஆரியர்** என்னும் பதம் உழவர் என்று அர்த்தங்கொள்ளுமாதலால் அப்பெயரைத் தமதெனக்கொண்டு, விரோதிகள் எனப்பொருள்படும் **தாசியர்** என்னும் பெயரைப் பூர்வீகக்குடிகளுக்குத் தந்தார்கள். பின்னர், நாகரீக விர்த்திக்கு, உழவே தலைமையாதலால், முன்னர் நாடோடிகளாய்ப் பல்லூர் திரிந்து முடிவில் இந்தியாவில் வேளாண்மை பூண்டு நிலைத்துக்கனம் பெற்றாராதலால், **ஆரியர்** என்னும் பதம் பெருந்தகைமையரென்று பொருள்பட்டது. இவரோடு இடைவிடாது போராடிக் கடைசியில் பூர்வீகர் சிலர் இவர்க்குட்பட்டடங்கிக் குற்றேவல் செய்தாராகையால், **தாசன்** என்னும் பதம் அடிமையென்று பொருள்பட்டது. பின்பு **தாசர்** என்றும் பெயர் கருநிறத்தினர் யாவருக்கும் பொதுவாகக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு துவக்கத்தில், வெண்ணிறத்தார், கருநிறத்தார்; வென்றார், வெல்லப்பட்டார்; சுயாதீனர், அடிமை; என்பவர்களை முறையே குறிக்கும் **ஆரியர்**, **தாசியர்** என இருவகுப்பினர் தாம் இருந்தார்கள். வேதத்தில் இவ்விருவகுப்பினரைத்தவிர வேறு சாதிகள் கூறப்படவில்லை. அக்காலத்தில் ஆரியர்களுக்குள்ளும் உள்வகுப்பினரில்லை. அவர்களே சமயத்திற்கேற்பப் பலதொழிலும் செய்துவந்தனர்; சமாதானம் நிறைந்துள்ள காலத்துப் பயிரிட்டும் பண்டமாற்றியும், ஆனிரைகாத்தும், யுத்தகாலங்களில் திடதேகத்தினர் ஆயுதபாணிகளாய்ச் சென்று எதிரிகளைக்களத்தில் வென்று மீண்டும் தம் பரிவாரத்தோடு, "மேழிச்செல்வம் கோழைபடா"தெனக் கலப்பையைக் கைப்பற்றுவாராயினர். இதை இருக்கு வேதத்திற்பரக்கக் காணலாம். இந்நிலைமை சுமார் கி. மு. 2000 அல்லது 1400 வருஷங்களுக்கு இடையிலுள்ளது.



பின்பு, ஆரியர், தாசியர் என்னும் இருவகுப்பினருள்ளும், சிற்சில வித்தியாசங்களுண்டாகவே வேறு சாதிகளுண்டாயின. என்னை? வைதீகச் சடங்குகள் நாளுக்கு நாள் அதிகமாய் விர்த்தியாகவே, கங்கையாற்றங் கரையிலுள்ள அநேக பேரரசர்கள் எண்ணிலாப் பலிகொடுக்கவும் முடிவிலாச் சடங்குகளும் ஆராதனைகளும் செய்யவுந் தலைப்பட்டாராதலானும், இச்சடங்குகளையும் பலிகளையும் ஊனமின்றிச் செய்து முடிக்குமாறு ஏற்படுத்தப்பட்ட குருமார்கள் அதிகத்திறமையுடையாராதலானும் அக்குருமார் நாளுக்கு நாள் ஏனையோரை விட உயர்வுடையாரென்று கருதப்பட்டார். முடிவில் அவரோர் சாதியரானார். அவர்கள் தங்கள் வாணாளை வைதீகச் சடங்குகளையும் விதிகளையும் கற்பதிலேயே செலவிட்டார்; அவரே அச்சடங்குகளை முடிக்கவல்லார். ஆகையால் நாளடைவில், அவரே வைதீகச்சடங்குகளுக்கு உரியராயினரென ஏனையோர் நினைக்க விடமாயிற்று. குருத்துவம், தெய்வத் தன்மையுடையதென்று ஜனங்கள் அறியாமையாலெண்ணவே அப்பாத்தியம் சந்ததி பற்றிவரத் தொடங்கிற்று. பின்பு அன்னோர் ஏனையரோடு சம்பந்தம் செய்தல் கூடாதென்று விலக்கினார். ஆடவர் ஏனையர்மகளிரை மணமியற்றினும், பெண்கள் தம் சுற்றம் விட்டுப் பிறசுற்றத்து வரனைக் கொள்ளுதல் கூடாதெனக் கடிந்தார். இவ்வழக்கம் முற்றி உறுதிப்படவே, குருமார்கள் ஒரு சாதியானார். அவரே பார்ப்பனர்.

(இன்னும் வரும்.)

சா. **சோமசுந்தரம் பிள்ளை.**

---

## மழை விண்ணப்பம்.

### நேரிசை யாசிரியப்பா.

கடலுடைக் கண்ணறைக் காடுடை யுலகில்
மடைதிறந் தன்ன வான்வழங் காமையின்
இல்லறம் வாழ்வாங் கினிது வாழ்நரும்
நல்லர்வரினு நகைமுகங் கோணுவர்
சுரக்குங் கிணறுந் தொல்பொரு ளாளரும்
இரக்கச் செலினு மிடுவா ரிலையே
நிலத்திற் கடலி னேரிழை மார்பில்
இலமில் றீன்று மின்று குன்றுமே
எலியின் வடிவுடை யினையதோர் சவலை
வலிந்து சுவைத்து வாய்ப்புண் கொளுமவ்
வாய்ப்பு ணாற்று மிருந்து முலர்ந்தன

தாய்வயிற் றுயிரொடு தானுயங்கு கிற்கும்
உள்ளவிடங்கண்டுவந்து வாழ்த்திக்
கொள்ளைகொண்டு குளிர்பவர்போலக்
கோடாசிலைமுட் கூர்ங்கள்ளியெருக்கு
வாடாவெனினு மருங்குறு வாரிலை
ஒழுக்குத் துன்பமும் உறுபுகைத் துன்பமும்
ஒழிந்தனவெனினும் உளனெழுந்திலதே
கானவானமுசள் கவின்று பல்குங்
கானஞ் செல்லக் காலெழுந்திலதே
செல்வங் குறைந்த செல்வர் மக்கள்போற்
பல்வகை வாழையும் பாக்குஞ் சாம்பின
புழுகு மணங்கமழ் பூவுடைக்கானப்
புழுகு பூனைபோற் பொரிந்து போயின
சமுகுங் கொடியுங் களித்துணினும்
அழலையாற்று தலைக்கனல் கொளுமே
வெய்துடைக் கொடுங்கோல் வேந்தனின்மையால்
நெய்தல் பூவாது நெய்தல் பூத்துக்
காவலின்றிக் கல்லென முதிரினும்
ஏவருவப்பர் இரங்குந ரல்லால்
மகிழ்ச்சியின் வீங்கு மங்கையுங் காளையும்
இகழ்ச்சியே வீங்கி யேங்குவனராவர்
குறுந்தொடிச் சிறுமியர் கோலம்வே யாமையின்
எறும்பின் குழாங்களு மெழுகில சுருளும்
கொடுங்கோ னடாத்துங் கோமான் றன்கீழ்ப்
படுவன வெல்லாம் படுவன வுயிர்கள்
துறவெளிதாகுந் துயரமுந் தவிரும்
உறுதி கூறி யுளந்துணைப்பட்டில
தென்புநீர் குடிப்பித் தென்பு முரிக்கினும்
பொன்பெற்றுங்குப் பொங்குவர் கள்வர்
மணஞ் செயுங் குளமே படுவே முதல
பிணங்கள் செழுவலிற் டெருமுடை வீசும்
வஞ்சக்கனலும் வயிற்றுத் தணலும்
எஞ்சா தெழூஉ மேனைத்தழலொடு
வாழுஞ் செல்வர் மற்றும் வாழ
ஏழையர் மற்று மேழையராவர்
கடன்கொண்டாரெலாங் கவல்குளிப்பன்ன
கடன் தந்தாரெல்லாங் களிப்புக் குளிப்பர்



தங்கு திரைக்கால் தழூஉஞ் சேய்கண்டு
செங்கோலரசர் சிவந்து களைப்பர்
அன்பிற்பெற்ற வன்னையுமகற்றி
பெண்கான் முளையலர் என்னவன் னெஞ்சள்
சூலுடை மடந்தை தோளொரு குழவியும்
பாலொரு குழவியும் பற்றிக் கணவனொடு
குண்டுநீரின்மை குதித்த கிணற்றுழிக்
கண்டு வெள்கிக் கண்ணீர் நிறைப்பள்
மானம் போர்த்த வாழ்புடைப் பெரியார்
தானஞ் செடுத்துந் தளர்வர்தஞ் சிறார்க்கு
உண்ண மதலைகள் உதைத்துப் புலம்பக்
கண்ணீர்காறு கவலும் புட்கள்
தேனினிதுண்டு தேன்களி பாடும்
வேனில் வேண்டுநர் வேண்டா வென்பர்
பெருக்கிய செலவுடைப் பெருஞ்செல்வரெல்லாம்
சுருக்கிச் சுருக்கித் தொலைப்பர் தம்வாணாள்
தாளைப் பிடிக்கினு நாளைவாவென்று
சூளைபோன் றுள்ளஞ் சூடுறுவார் சிலர்
கோலிய வெண்ணகைக் கோலங்கரப்ப
வாலிய வெண்டலை மல்கிய வெங்கணும்
கிள்ளைப் பழக்குங் கிளிவந்து கொஞ்சுங்
கொள்ளைத் தண்டலை குழைகில குழையும்
பிள்ளையுங் கிள்ளையும் பெருக்கிச் செருக்கும்
வள்ளல் மயங்க வெம்மருங்கு மயங்கும்
செங்கோலரசுபோல் தெறுகதிர் திங்களேல்
இங்குச் சிலவாழ்தலினிதாகு மென்பர்
இன்புதந்தரித்த வெருதுமுதல
துன்புகொண்டுழூஉம் சுடச்சுட வெய்யோன
பாலும் பழமும் படைத்த வங்காடி
தோலு மென்புந் துவன்றிப் புலால் செயும்
யாற்றுளைப்பசி யாடுமேயினின்
ஆற்றருங் கொடுமை யளப்பரிதாகும்
இடங்கழியாள ரிலட்பெறு பாக்கெணிச்
சுடல் வேண்டா சான்றோர் துன்பப்படுவர்
பூத்த குடிமகளிர் போழ்தின் மணம்பெறார்
காத்த கொடிபர்புன் கைக்கெளியராவர்
பல்ல கண்ணினர் பல்ல செவியினர்

பல்ல நாவினர் பாவலர் மழுங்குவர்
இன்னபெரிய விடுக்கனும் விளையும்
என்னினியறைகுவதியா மெடுத்தைய
மழை பெயல்வேண்டு மழை பெயல் வேண்டும்
மகப்பொருட்டானு மழை பெயல் வேண்டும்
தண்ணிய புனலொடு தண்ணிய பிறையும்
தண்ணிய கொன்றையுந் தண்ணருட்கடற்கு
நண்ணிய பெரும நம்ப
எண்ணினின்னின் வல்லுநரெவரே

மாகறல் கார்த்திகேய முதலியார்.

## கந்தபுராண ஸாரம்.

### இருபானெண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

### உற்பத்திகாண்டம்.

உலகெலா முணர்வரிய முருகனிரு சரணமது வுன்னிவாழ் கச்சி யப்ப
னுபயதிரு வடிபணிந் தருள்வியா தற்கிட னேதுகந் தன்பு ராண
வுட்கிடை யெடுத்தன்பி னேதியிரு மைப்பயனு மோங்கிமிக வாழு வாமா
லும்பர்புகழ் வெள்ளிமலை நம்பரனை யம்மைபெய ரொல்கவிம யக்கு மகளாய்
அலகிலன் பொடுதவ முஞற்றமுனி வர்க்கர னறிக்கவா கமமெய்ஞ் ஞான
மயன்கோ விலேகர்வரை யாய்புவிட மதனேகி யங்கம்வெந் தழிய யோகன்
றகன்றனையி னேன்புகண் டருமணங் கேட்டெவரு மாகவந் தருளின்முற்றி
யநங்கனையெழுப்பிவந் தமரவம ரர்க்காக வறுமுகங் கொண்டு பொறியாற்
சிலம்பாள் சிலம்புதிர வோடவளி துணையாற்செறிந்தபொறி சேர்த்த டத்திற்
சிறுவரறு வோராகி யறுவர்முலை யுண்டாடல் செய்யவிறை கூடு சிலையா
டிரட்டேது விற்கந்த னுகிச்சி லம்புவரு தேவிமார் மக்க டுணையாச்[ருவாய்
செறியவொரு * தகர்கொண் டயன்சிரங் குட்டியொருசிறைவைத்தகற்று கு
இலகுமிரு வல்லியர்க் கருளிவிபு தர்க்காக வெண்ணில்படை பெற்றெழுந்து
வெதிர்வரையு முரவரையு நீற்றவசுரேந்திர னிரங்கியே கிடவி லேக
நீர்ம்பொறை யிருந்துபுரி பூசிக்க வெண்ணிறல மேன்றசுர மீண்டு செந்தி
யெழுந்துவரலாறுகேட் டருள் †புதச் சந்நிதிய வென்றனக் கருளை யளியே. (௧)

* தகர்—ஆடு. † யாழ்ப்பாணத்து உபயகதிர்காமம்.



### அசுரகாண்டம்.

சூரசைகவி சூழ்ச்சியிற் காசிப னுழைச்சென்று தயருறுத் தொத்தபுணர்விற்
சூரனரி யாம்பன்மா முகனுதி வெள்ளங்க டோற்றிடத் தாதை தவமே
சொல்லரிய வின்பமென் றறிமாணி சரிதையுஞ் சொல்லவனை வீரமகமே
துன்றுவள னென்றகல யாகம தியற்றியே தொல்வரம் பலவடைந்து
கூரவிற்ப வீங்குரை * புன் மதமண்ட கோசமுங் கற்றுவிச யத்தில் விசயங்
கண்டெதிர்கொள் பாட்டனொடு வந்தவனி துன்னவே கணர்துதிக் கரியு ருத்ர
கதியர்நிலை கூறநகர் செய்தமுடி சூடிக் களிஇயரசு செய்து புலவோர்
காலாள ராகவரி பகைபாதி முளையரைக் கடிதீன மோத்தை முகிகாற்
றூரசைவலன் வாதாவி தோன்றியுறு வர்க்குமை துறுநாளொர் சசியைவௌ
சூர்சூழ்ந்த துன்னியே யிந்திரன் மனைவேணு துன்றிவழி பட்டுலரவே [வச்
சொல்விந்த மலைவளர முனிவரன் காவிரியொ டுற்றுவரை சூள்வ ழங்கித்
தொட்டழுத் திப்பிலம் போய்க்கொன் றிருக்கவரி சொல்லிற் கவிழ்க்கந்தியும்
வரசைல மகள் கேள்வனைப்பணிய வேவல்செயும் வானவர் புலம்ப மருதன்
வண்கைலை யுறவுன்ன வயிராணி சோகிக்க வையனுட் காவலிற் போய்
வரமுனச முகிபிடித் தொருகையற் றேங்கமுதல் வாணரைச் சிறைபு குத்தி
வருத்தின னெனக்கேட்ட புதுமையுறு சந்நிதிய வந்தருள்வையின்றெனக்கே (௨)

### மகேந்திர யுத்த காண்டங்கள்.

தோள்வீ ரனைத்தூது போக்கமா தனவரை சுழன்றழுந் தேறி யுததி
துள்ளியரி கொன்றிலங் கைவீழ்த்தி யதிபலற் றொலையநகர் சென்று கயனுந்
தொல்லுயிர் விடப்பட் டினத்தழகு கண்டரி சுதன்புலம்பக் கனவினிற்
றோன்றியருள் செய்தபின் றேற்றியவை புக்கெமது தோன்றலியல் கூறியுக்ர
ஆளரிப் தெனவகன் றொருசத முகன்காவ லாளரை வதைத்து நகரை
யழித்தாயிரத்தோளர் வயிரவா கறுகுமுக னுதியர்க் கொன்று மீள
வந்நகர் புரிந்தனைச் சியில்கொண்டு சமர்செய்ய வாயத்த மாகவாகு
வவன்மொழிந் தனவருள வலைவாய் விடுத்தீழ மதனிலே மத்த கூடந்
தாள்கொண்டிருப்பமன் வரவுமுனி கூறலுந் தநயனை விடுக்க முதனுட்
சமர்செய் தொளிக்கவிரு நாட்டந்தை வலிகெடத் தனயன்மூன்றினிலுமாகத்
தனிவாகு நகர்புக் கடர்த்திரணி யன்னோடு சருவமீ னுக வங்கித்
தனயன்மூ வாயிர ரறப்பகை சுடர்ப்பகை தனிப்புதல்வர் மாள வரியுங்
கோளிருங் குலிசம்விட் டொருசூரன் மாயையுங் கொன்றுமா மரமிரண்டு
கூறுப் பிளந்துமயில் சேவலாய் வரவூர்தி கொடியாக நாட்டியமர்
குதூகலித் திடவிரணியன் *கையறு நிலைசொலிக் கோவென் றிரங்க வலிமை
கொள்சிறை யகற்றியருள் சந்நிதிக் கந்தைய குற்றங்க ணீக்கி யருளே. (௩)

* புன்மதம்—மாயாவாதம்.

## தேவதக்ஷ காண்டங்கள்.

திருப்பரங் குன்றெழுந் தருளியனை யானையைத் திருமணங்கொண்டு குடியின்
சீரேற்றி வரைபுகுந் தமரப் புரந்தரன் சேர்தன் பதிந்து துறவிற்
சேரவெணி யாண்டளப் போனாலோ காயதத் திநெறியின் மாற்ற வவணிற்
சிறக்கமுனை குருவடுத் தொருசூ ரனாலின்னல் சேர்தலென் செப்புமெனலுங்

கருப்பரங் குன்றவுப தேசமய னன்றுதக் சற்கருளி நோன்பு சருதக்
காட்டிட வவன்றவஞ் செய்தீச னருள்பெறீஇக் காணாபல மகவை யீன்று
கணிமருக னாமதி சபிக்கவது கங்கா தரக்கடவுள் காக்க வுமையாள்
கயிலைவிட் டருகதிப் பணிலமாய்க் குழவியாய்க் கடவுடவ மாய்மனைக்கத்

திருக்குற் றகன்சயிலை தக்கனை வங்குளார் தாந்தள்ள வெகுளி தள்ளத்
தந்தைமக மவிவிலக் கிச்சாலை செய்துவிதி தன்மகத் தெவரு மனாசச்
சங்கரற் கவிகொடா தாற்றத் ததீசிமுனி தான்றடுத் தவற்கு விடைக
டகவுரைத் தோம்ப சரிதைமால் சாபமுஞ் சாற்றவுந் தான மசமும்

விருப்புறச் சிவைநண்ண வேசவீ சன்பொரு வீரபத் திரனில் யாகம்
வீட்டியச் சிரஞ்சிறு விதிக்காக வடிமுடியை வேண்டிநே டிட்ட சரிதம்
விள்ளவர னற்பூசை யுற்றனன் கருவியிது குந்தனே விரதம் வேட்ப (௪)
வேண்டிய வடைத்தைகுற வள்ளிபுணர் சந்நிதிய வெளியனே னுய்யவிலையே

### முதனூலளவு.

### இன்னிசை வெண்பா.

புராணம்பன் மூன்றிலக்கம் போங்கிரந்த மத்து
ளிராதபொரு ளெங்குமிலை சங்கிதையா றைம்பதெனக்
காண்டமுனை ரீசத்துக் காண்டமிரா றுண்முதலா
முண்டதமிழ்க் கந்தமதே யாம். (௫)

### சேந்தமிழ்க் கந்தபுராணச் சிறப்பளவு.

### நேரிசை வெண்பா.

காண்டமா றேபடலங் காணூற்று நாற்பத்தொன்
றீண்டுபதி னாயிரமுந் நூற்றெண்ணைந் — தாண்டவா
றெண்பாத் தமிழ்க்கந்தக் கௌகச்சி யப்பனாற்
றிண்பார் நிறைத்தானென் றே. (௬)

யாழ்ப்பாணம் - நா. கதிரைவேற் பிள்ளை.

* கையறுநிலையாவது கணவனோடு மனைவியர் கழிந்துழி அவர்சுட்பட்ட அழிவு பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தி, தாம் இறந்துபடாதொழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறு நிலையாம். இதனை "கழிந்தோர் தேஎத்தழிபடருறீஇ—யொழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்" என்று ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர் கூறியதனானு முணர்க.



## ஜெய காந்தன்.

### முதல் அங்கம் - முதற்களம்.

இடம்:—காஸ்மீரநாடு, அரசியின் அந்தப்புரம்; காலம்—மாலை.

(ரத்னாவதி தன் தோழி சகிதமாய் வீற்றிருத்தல்).

**ரத்னாவதி**:—குண்டலே!

**குண்டலை**:—அம்மணி.

**ரத்னாவதி**.—என் மனம் ஏதோ ஓர் வாறாக இருக்கிறது, அதோ இருக்கும் வீணையை எடுத்துக்கொண்டுவா, தேவாரத்திலுள்ள சில பாடல்களைப் பாடிக்கொண்டிருப்போம்.

**குண்டலை**.—அப்படியே அம்மணி. (வீணையை எடுத்துவந்து கொடுக்க ரத்னாவதி அதைப் பெற்றுப்பாட ஆரம்பிக்கிறாள்.)

திருச்சிற்றம்பலம்.

இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - திரிபுடை.

மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனி னிப்பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடிமுடி
நற்றவாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே.

கோணியபிறை சூடியைக்கறை யூரிற்பாண்டிக் கொடிமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனை பிறப்பில்லியை
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனை படப்பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவை சொல்லுவார்க்கில்லைதுன்பமே.

(சத்ருஜித் என்னும் அரசன் வருகிறார். ரத்னாவதி திடுக்கிட்டெழுந்திருக்கிறாள்.)

**சத்துருஜித்**.—(ஓராசனத்தில் உட்கார்ந்து) பிரியே! இப்படி உட்காரு. (ரத்னாவதி உட்காருகிறாள்.)

**சத்துருஜித்**.—காதலீ! உன்னுடைய வீணா கானத்தால் ஈஸ்வரனை தியானம் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் யான் வந்து அதற்கு இடையூறு செய்யலானேன். அதைப்பற்றி மன்னிப்பாயாக.

**ரத்னாவதி**:—பிராணநாதா! அதென்ன அப்படி சொல்லுகிறீர்களே. யானா தப்பை மன்னிப்பது, நன்றாயிருக்கிறது.

**சத்ருஜி**:—பெண்மணீ! நீயோ ஈஸ்வர தியானம் செய்துகொண்டிருந்தனை. எப்போது நீ ஈஸ்வர தியானம் செய்யத்துணிந்தனையோ அப்

போதே நீஅப்பெருவள்ளலாரது அருள் நோக்கத்திற்கு ஆளாயமர்ந்திருக்கும் அடியார்களில் ஒருத்தியாயினையே, அவ்வாறிருக்க யான் மன்னிப்பு கேட்கத்தகாதோ?

**ரத்ன.**—பிராணநாதா! அடியார்களுக்கு அவ்வளவு பெருமை யிருக்கின்றதோ?

**சத்.**—பெண்ணே, தடையென்ன?

"ஞாலமுண்டவன் தலைமிசை சுமப்பன் மெய்ஞ்ஞானிவேண்டுவவெலாம்
ஆலமுண்டவன் அவன்பின்னே திரிகுவன் அவனடித்துவட்கன்றே
சீலமன்னரும் மற்றுளத்தேவரும் திசைதிசை தொழுதேத்த [தோன்"
காலிரண்டையும் தலைமிசை வையெனக்கழறுவோன் கமலநான்முகத்

என்றபடி ஒருவன் உண்மையான அடியவனாயினால் பின் அவனை மாபலி சக்ரவர்த்திநிமித்தம் இவ்வுலகை உண்ட திருமால் தனது சிரசில் வைத்துச் சுமக்கவும், அவனுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் அப்போதைக்கப்போது கொடுத்துவர ஆலகாலவிஷத்தையுண்ட சிவபெருமான் அவனுக்குப்பின் திரியவும், தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன் அவனது பாதங்களைத் தன்சிரசின்மேல் வைக்கவும், மற்றய தேவர்களும் முனிவர்களும் தேச மன்னர்களும் திசைதோறுஞ் சென்று அவனுடைய வரவை யெதிர்பார்த்திருக்கவுமன்றோ நேரும். அன்றியும் நம்முன்னோர்கள் எல்லாம் "அடியார்க்கடியே னாவேனோ" எனவும் "அடியார் நடுவுளிருக்கு மருளைப்புரியாய்" எனவும் "தொண்டரோ இறைவருள்ளத் தொடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" எனவும் அவ்வளவு சிலாக்கியப்படுத்திச் செப்பியிருக்கிறார்களென்றால் அவர்களுடைய பெருமைக்கும் ஓர் வரம்புமுண்டோ!

**ரத்ன.**—பிராணநாதா! இவ்வளவு பெருமை யெல்லாம் உண்மையான அடியவர்கட்குத் தானே.

**சத்.**—ஆம் கண்மணி, உண்மையான அடியவருக்கே தான்.

**ரத்ன.**—அவ்வாறாகில் தாங்கள் எப்படி என்னை அவர்களுடன் சேர்க்கலாம்?

**சத்.**—ஏன் சேர்க்கப்படாது? பிறரால் ஏவப்பட்டு நீ ஈஸ்வரத்தியானஞ் செய்யவில்லை பார். அதில் ஊக்க மிருந்தன்றோ நீ பிரவேசித்தனை ஆகையால் உண்மையாக பக்தி செய்பவளே ஆவை.

**ரத்ன.**—பிராணநாதா! நமது குழந்தை ஜெயகாந்தன் இப்போது இங்கு வருவதாய்ச் சொல்லியனுப்பினன். காரணம் யாதோ தெரியவில்லை. தாங்கள் இன்று அவனைப் பார்த்தீர்களோ?

**சத்.**—பிரியே! யான் உன்னிடம் சொல்லவந்ததும் அவனைப் பற்றியேதான். யாம் இது காறும் அடியார் பெருமையைப்பற்றி வார்த்தையாடி யிருந்ததில் அதைச் சற்று மறந்தேன்.



**ரத்ன.**—பிராணநாதா? என்ன விசேஷம்.

**சத்.**—பெண்மணி, நாம் நமது ஜெயகாந்தனுக்குப் பேசியிருந்தோமே பெண்—.

**ரத்ன.**—ஆம், விதேக நாட்டரசன் புதல்வியாகிய சந்திர முகி.

**சத்.**—அவளிருந்த மாளிகையை சோள நாட்டரசன் அர்த்தராத்திரியில் கொளுத்திவிட்டானாம்.

**ரத்ன.**—ஏன் அப்படி?

**சத்.**—அவ்வரசன் மிகவும் இளமைப்பருவம் உடையவன். தனக்கு அப்பெண்ணை விவாகம் செய்தளிக்கும்படி கேட்டானாம். அப்பெண்ணுக்குடையவன் கொடேனென்று மறுக்கவும் இவ்வாறு செய்தனனாம்.

**ரத்ன.**—அப்பெண் முதலானவர்கள் விழித்துக்கொண்டு அதனின்றும் தப்பித்துக்கொள்ளவில்லையாமோ!

**சத்.**—அதுதான் தெரியவில்லை. சற்று யோசித்து தப்பித்துக்கொண்டிருப்பார்களென்று யான் நினைக்கவில்லை. ஏனெனில் வேண்டுமென்று செய்தவர்கள் நாற்புறமும் ஏக காலத்தில் கொளுத்தியிருப்பார்களே யொழிய ஒருபக்க மாத்திகொளுத்தியிரார்கள். அப்படியிருந்தால் அதிலுள்ளவர்கள் தப்பித்துப்போவதற்கு எவ்வாறு இடங்கொடுக்கும்.

**ரத்ன.**—அப்பெண்ணினுடைய தந்தை யிருப்பாராகில் இவ்வண்ணம் நடக்குமா?

**சத்.**—என்ன! அவர் இருக்கும்போது அப்பயலுடைய தகப்பன் பட்டபாட்டையும் சொல்லப்போமோ? சதா நடுக்கந்தானே. அவர் இருந்தால் கேவலம் இவ்வளவு கொடூரமான செய்கைக்கு இடங்கொடுக்குமா?

**ரத்ன.**—நம் குமாரனுக்குத் தகுந்த நாயகி நாம் பார்த்த அளவில் அவள் ஒருத்தியே. ஆஹா! அவளுக்கு அழகும் குணமும் ஒருங்கேயன்றோ பொருந்தியிருந்தது. வேறு அத்தகைய பெண் கிடைக்கப்போமோ நம் குமாரனுக்கு!

**சத்.**—பெண்ணே நாம் வருத்தப்படுவதால் ஆவது என்ன? இன்னானுக்கின்னபடி என்று எழுதியுள்ளபடி யல்லவோ முடியும்.

**ரத்ன.**—உண்மைதான் பிரர்ணநாதா—பிராணநாதா! நாம் அப்பெண்ணைப் பேசி முடிவு செய்த பிறகு யான் எவ்வளவோ அகமகிழ்ச்சிகொண்டிருந்தேன்.

**சத்.**—ஆம் பிரியே, நீ மாத்திரந்தானா? யானும் இவ்வளவென்று வரையறுக்கப்படாத இன்ப சாகரத்தில்தான் மூழ்கியிருந்தேன். நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது. ஆனால் அதற்காக நாம் வருந்துவது எட்டுணையும் சரியல்ல.

**ரத்ந.**—என் பிராணநாதா நமது ஜெயகாந்தன் இதைக் கேட்டபிறகு எவ்வாறிருக்கிறான்? வருத்தமுடையவனாய்க் காண்கின்றானா என்ன?

**சத்.**—கொலுமண்டபத்தில் வீற்றிருந்து ராஜாங்க விஷயங்களிற் கவனித்திருந்த அவன் முகம் இச்செய்தியைக் கேட்கவும் சந்திரனைக் கண்ட தாமரை மலர்போல் வாட்டங்கொண்டது. உடனே அவன் எழுந்து வேறு ஒன்றும் பேசாது தனது விடுதிக்குட் சென்றான்.

**ரத்ந.**—பிராணநாதா! அவன் அப்பெண்ணைப் பார்த்தது கூடவில்லையே அப்படியிருக்க அவனுக்கு வருத்தம் உண்டாகவேண்டிய காரணம் என்ன?

**சத்.**—பெண்மணி, அவன் நேரில் பார்த்திராவிட்டாலும் அப்பெண்ணின் புகழை நம்மால் கேள்விப்பட்டிருக்கின்றானல்லவா?

**ரத்ந.**—ஆம், இனி யார்தான் என்னசெய்யலாம். மிஞ்சிவிட்டது. (சற்றுப் பொறுத்து) இவ்வளவிலேயே நாம் விவாஹத்தை நிறைவேற்றியிருக்கலாம். நீங்கள் ஏதேதோ காரணங்கள் சொல்லி தாமதித்து வந்தீர்கள். அதன் பயன் இவ்வாறாயிற்று.

**சத்.**—பிரியே! எதற்கும் காலம் வரவேண்டாமா "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி யெடுத்த கருமங்களாகா" என்ற மூத்தோர் வாக்கியப்படி எதெது எந்தெந்த காலத்தில் எவ்வாறு முடியவேண்டுமோ அவ்வாறு முடியுமேயன்றி நம்முயற்சியினால் ஒன்றும் ஆகா.

**ரத்ந.**—ஆம் பிராணநாதா, ஆம்! ஆம்! "வருந்தியழைத்தாலும் வாராதுவாரா, பொருந்துவன போமினென்றாற் போகா." உண்மையே.

**சத்.**—நாயகி! ஜெயகாந்தன் வருகிறான்போலிருக்கிறது.

(ஜெயகாந்தனும் சரசாங்கனும் பிரவேசித்தல்.)

**சத்.**—குழந்தாய் வா இப்படியுட்காரு. (ஜெயகாந்தன் உட்காருகின்றான்.)

**ரத்ந.**—அப்பா நீ யேன் முகவாட்டங்கொண்டிருக்கவேணும்? எதற்காக? அப்பெண் இல்லாவிட்டால் ஆயிரம் பெண்கள் இருக்கிறார்கள்.

**சரசாங்கன்.**—அம்மம்மா ஒரு வார்த்தை

**ரத்ந.**—என்ன சொல்.

**சரசாங்கன்.**—இல்லையம்மா நான் ஒரு பெண்ணைக் கட்டிக்கொண்டு படுகிற துன்பத்தை இன்னதென்று சொல்லி முடியாதே. ஆனாலும் நீங்கள் இந்த பிள்ளைக்கு ஒரேமட்டாய் ஆயிரம்பெண்களைக் கட்டவேணுமென்று சொல்லுகிறீர்களே. நன்றாயிருக்கிறது. வேறு எமன் வேண்டியதேயில்லை.



**சத்.**—அடா மூடாத்மா! ஆயிரம் பெண்களையும் கட்டிக்கொள்ளுகிறதென்பது அர்த்தமல்ல. ஆயிரம் பெண்களில் நம்மனதுக்குகந்த ஓர் பெண்ணை வரிக்கிறது என்று ஆகும்.

**சரசா.**—ஓ அப்படியோ ஆனால் சரிதான். இப்போது சரி; ஆயிரம் பெண்களையும் கட்டினால் ஆசாமி அன்றே பைசல்.

**ஜெயகாந்தன்.**—அம்மா யான் அப்பெண்ணை நேரில் பார்த்ததில்லையென்றாலும் நீங்கள் சொன்னவற்றிலிருந்து அப்பெண் அதிக ரூபலாவண்யம் அமையப்பெற்றவள் என்றும் குணவதியென்றும் அறிந்துகொண்டேன் ஆகையால் எல்லாவித லக்ஷணங்களும் பொருந்தியிருக்கின்ற அவள்போன்ற பெண் எனக்கு வேறொருத்தி கிடைப்பளோ! பிதா! அதுமிக்க அருமையிலும் அருமை.

**சத்.**—ஆம்! அதற்கு நாம் என்ன செய்யலாம்.

**ரத்ந.**—கிடைக்காமல் என்ன? நீ அதிர்ஷ்டசாலியாக இருக்கும்பட்சத்தில் இதைப்பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமான நற்குணமும் ரூபலாவண்யமும் அமையப்பெற்ற பெண்கள் கிடைக்குமே.

**சரசா.**—அதுதான் இல்———. ஆஹா கிடைக்கும் கிடைக்கும்! பதின் மடங்கா? ஆயிரமடங்கல்லவோ இவர் அதிர்ஷ்டத்துக்கு சொல்லவும் வேண்டுமா? உள்ளதும் போய்விட்டதே.

**சத்.**—சரசாங்கா! என்னேரமும் உனக்கு விளையாடுவதுதானா வேலை. எதற்கும் சமயமில்லையா?

**சரசா.**—இல்லை மஹாராஜா இளவரசர் வருந்துவதைப்பார்த்தால் எனக்கு மனம் தாளவில்லை. (ஜெயகாந்தனைப்பார்த்து) இளவரசே! பயப்படவேண்டாம். இதற்கும் பதினாயிரம் பங்கு மேம்பட்டதை யான் கொண்டுவருகிறேன். ஆனால் கொஞ்சம் யோசிக்கின்றேன்.

**ரத்ந.**—என்னடா யோசிக்கின்றாய்?

**சரசா.**—மற்றொன்றுமில்லை. எங்கள் தந்தைக்குத் தந்தையிருந்தாரே அவர் இந்த தொழில் செய்துதான் ஜீவித்துவந்தாராம். நடுவில் எங்கப்பா அதைவிட்டுப் போட்டிருந்தார். இப்போது அதை ஆரம்பிக்கலாமா வேண்டாமா என்றுதான் யோசனை. பெரிதல்ல நம் இளவரசருக்காக ஆரம்பிக்கிறேன்.

**ஜெய.**—அம்மா என் மனதை யான் எவ்வளவு தைரியப்படுத்தினாலும் நிலைக்கவில்லை. என்னசெய்வேன்.

சரசா.—"கிட்டாதாயின் வெட்டென மற" என்று மாத்திரம் பத்திருக்கிறீரே! அகப்படாவிட்டால் மறந்துவிடல்லவோ வேண்டும்.

ஜெய.—சீ துஷ்டா, என் முன்னில்லாதே.

சரசா.—"கிழோராயினும் தாழவுரை" அடுத்தவரி. (மெள்ளப்போய் விடுகிறான்.)

ஜெய.—அடே

ரத்ந —குழந்தாய் அவனுடன் ஏன் கோபிக்கவேணும் அவனுக்கு சதா விளையாட்டுப் புத்திதான். ஜென்மத்தில் பிறந்தது போகுமா.

சரசா.—(திடீரென திரும்பிவந்து) அம்மா, "செருப்பாலடித்தாலும்" என்பதை விட்டுப்போட்டீர்களே.

(அனைவரும் நகைக்கிறார்கள்.)

சர்சா.—அப்பா இப்போதுதான் என் மனம் நிம்மதிப்பட்டது. எமது இளவரசர் தாம் கொண்ட மனக்கிலேசத்தினின்றும் சிரித்தாரே.

ஜெய.—பிதா! அம்மாளிகையை யார் கொளுத்தியது கேள்விப்பட்டீர்களா?

சாசா.—ஐயையோ பழையபடியே அச்சிந்தனைவந்துவிட்டதே, சரி சரி. மஹாராஜா இப்போதே எனக்கு விடையளிக்க வேண்டுகிறேன். யான் சென்று லட்சக்கணக்காய் கொண்டுவருகிறேன். இனி தாளாதுபோல் இருக்கிறது.

சத்.—உஸ், பேசாமலிரு. (ஜெயகாந்தனைப்பார்த்து) குழந்தாய்! கேரளநாட்டரசன் புதல்வன் கொளுத்தினனும்.

ஜெய.—யார்! பிதா! கேரள நாட்டரசன் புதல்வனாகிய வீரகேசரியா?

சத்.—ஆம்.

ஜெய.—ஓ. அவன் எனக்கு நன்றாய்த் தெரியுமே. அவனுக்கு என்மேல் அத்தியந்தப் பிரீதியாயிற்றே. பிதா! அப்படியானால் எனக்கு விடையளிக்க வேண்டும் யான் சென்று நடந்த வர்த்தமானங்களையெல்லாம் தெரிந்து வருவதோடு அப்பெண் பிழைத்திருக்கிறதும் அல்லது அக்கினிக்கு இரையாய் விட்டதும் தெரிந்து வருகிறேன்.

ரத்ன.—குழந்தாய் ஜெயகாந்தா! நீ ஏன் போக வேண்டும்? வேவுகாரரையனுப்பித் தெரிந்துவரச் செய்யலாமே.

சத்.—ஜெயகாந்தா! கண்மணி! அது தான் எனக்கும் யுக்தமாய்த்தோற்றுகிறது.

(இன்னும் வரும்.)

தி. மே. முருகேச முதலியார்.



## சமாசாரக் குறிப்புகள்.

**சென்னை புது கவர்னர்** :—குடிகளுக்கும் மற்றவர்களுக்கு முண்டான குறைகளை மகாகனம் பொருந்திய கவர்னர் துரையவர்கள் பற்பல ஜில்லாக்களுக்கும் தாம் விஜயம் செய்யும்போது, கற்றறிந்தோர் மாத்திரமே வந்தனோபசார பத்திரிகை மூலமாய்த் தெரிவித்துக் கொள்வது வழக்கம். இவர்களே நேரில் சொல்லிக்கொள்வதற் கில்லாதபோது, பல விதங்களிலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சில்லறைக்குடிகள் தங்கள் கவர்னரைக் காண்பதும் அப்படிக் கண்ணுற் கண்டாலும் அவரையணுகி தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்வது அதனினும் அருமை. அஃதப்படியிருக்க, இப்போதிருக்கும் கவர்னர் துரையவர்களோ தாம் பற்பல ஜில்லாக்களுக்குப் போம்போது குடிகளைத் தாம் நேரில் தன்னருகில் வரவழைத்து அவர்களுடைய குறைகளைக் கேட்டுத் தேறுதல் சொல்லி தன்னால் கூடியவரையில் சகாயம் செய்வதாய் வாக்களித்து வந்திருக்கிறார். இவர் பச்சாதாபமுள்ளவ ரென்பது சொல்லாமலே தெரியவரும். இவர் குடிகளிடத்து வகித்திருக்கும் பக்ஷமும், நல்லெண்ணமும் இடையூறின்றி முழுதும் நிலைபெற்றிருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றோம். இவருடைய எண்ணம் நிறைவேறுவதற்குக் கடவுள் துணை புரிவாராக.

**புரோவின்ஷியல் கான்டிராக்டு** :—அதாவது பற்பல மாகாணங்களும் ஐந்து வருஷத்திற் கொருமுறை இந்தியா கவர்ன்மென்டோடு வருத்துச் செலவுகளைக் குறித்துச்செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு. சென்னை மாகாணத்து கான்டிராக்டும் வருகிற வருஷத்தோடு முடிவாகிறது. இவ்வுடன்படிக்கையினால் இவ்விராஜதானியில் வரக்கூடிய வரும்படியில் சிலபாகம் தான் இந்த கவர்ன்மென்டார் தங்களுடைய செலவுக்காக வைத்துக்கொள்ளலாம். மற்றவை யெல்லாம் இந்திய கவர்ன்மென்டாருக்குப் போய்ச் சேர்ந்துவிடல் வேண்டும். வரும்படி மார்க்கம் பல உண்டு. அவை நிலத்தீர்வை, நீர்த்தீர்வை, உப்புத்தீர்வை, வரும்படித்தீர்வை, ஸ்டாம்பு வரும்படி, காட்டு வரும்படி, றயில்வே வரும்படி முதலானவை. இந்திய கவர்ன்மென்டார் இவற்றிற் சிலவற்றைத் தாங்களே முழுதும் வைத்துக்கொண்டு சிலவற்றின் சில பாகத்தை சென்னை (மாகாண) கவர்ன்மென்டுக்கும் கொடுக்கிறார்கள். அதாவது நிலவரியில் கால்பாகம் கொடுத்து முக்காற்பாகம் தாங்கள்கொள்ளுகிறார்கள். சென்ற௵ அம்மாதிரியாகக் கொடுத்திருப்பது நிலவரியில் 140 லக்ஷம். நிலவரி மொத்தம் 560 லக்ஷத்தில் மீதி 420 லக்ஷமும் தாங்கள் கொள்கிறார்கள். இம்மாதிரியாய் பற்பல விதத்திலும் சென்னை கவர்மென்டுக்கு இந்தியா கவர்மெண்டார் கொடுப்பது 327 லக்ஷம் ரூபாய். சென்னை ராஜதானியின் செலவே சென்றவருஷம் சுமார் 332 லக்ஷம். வரவுக்குமிஞ்சியே செலவு 5 லக்ஷமாகிறது. இப்படி வரவு மிகக்கொஞ்சமாயிருந்தால் நடக்கவேண்டிய முக்கியமான வேலைகள் எப்படி நிறைவேறும். அதற்காகத்தான் இனி யேற்படும் உடன்படிக்கையிலாவது இந்த ராஜதானி தன் வரும்படியில் இன்னும் சற்று சாஸ்தியாய் அநுபவிக்க விடும்படி இந்தியா கவர்மெண்டாரைக்கேட்டுக்கொள்ளல் வேண்டும். அவர்களைக்கேட்பது யார்? சென்னை கவர்ன்மென்டும் அவர்கள் மூலமாய்இவ்விராஜதானி ஜனங்களுக்குப் பிரதிநிதியா யிருக்கும் கனம் பொருந்திய லெஜிஸ்லேடிவ் கவுன்ஸில்

மெம்பர்களும்தான். மற்ற மாகாணங்க ளடைகிறபாகமும் இந்த ராஜதானி யடைகிறபாகமும் ஒற்றிட்டுப் பார்த்தால் நம்மாகாணம் தனக்குரிய பாகத்தையடையவில்லை யென்பது நன்றாய்த் தெரியவரும். நியாயத்தை எடுத்துக் காட்டி முறையிடுவார்களாகில் நலம் பிறக்கினும் பிறக்கும். முன்னிலும் அதிகமாகப் பெற்றாலொழிய குடிகளுக்குப் பிரயோசனமான வேலைகளெடுத்து முடித்த லருமை.

**திராவிட பாஷா சங்கம்**:—இந்த சங்கம் பிறந்து சுமார் மூன்று வருஷமாகிறது. இக்குழந்தையி னபிவிருத்தியைக் குறித்தும் இது வரையில் ஒன்றுங் கேட்டோமில்லை. பால் கொடுக்குந்தாய் அகப்படாவிட்டால் அக்குழந்தை வளர்வது எப்படி? நற்றாய் இக்குழந்தையின் கதியைப்பார்த்துப் பரிதபித்தும் யாது பயன்! இத்தனை வருஷமாயும் குழந்தை தவழ்கிறதென்றாயினும் நடக்கமுயல்கின்றதென்றாயினும் கேட்டோமில்லை. கிடந்த படுக்கையைவிட்டு எழவில்லைபோலும். அஃதுயிருடன் இன்னுமிருக்கின்றதோ என்று அயிர்க்கவேண்டியிருக்கின்றது. இப்படி நினைக்கவும் வருத்தமாயிருக்கிறது. ஐயகோ! இக்குழந்தை எப்பொழுது படுக்கையினின்று தவழ்ந்து, நின்று, நடந்து, சிரித்து, மகிழ்ந்து, விளையாடுமோ! எப்போது நம்மை மகிழ்விக்கச் செய்யுமோ? அந்தநாள் எந்த நாளோ? நற்றாய் முன்னுக்கு வந்து குழந்தை க்ஷேமத்திற்குரிய செவிலித்தாயையும் பாலூட்டு தாயும்தேடிக் கண்டுபிடித்து குழந்தையை அவர்கள் வளரச்செய்வார்களென நம்புகிறோம். நற்றா யின்னாரென்று நமக்குப் புலப்படவில்லை. ஒரு வேளை காலஞ்சென்ற சேஷாத்திரியாச் சாரியராயிருக்கும் பக்ஷத்தில் ! அவர் போய் விட்டபடியால் அவருடன் இக்குழந்தையு மிறந்துவிட்டதோ வென்று ஐயுறுவாராயினர் சிலர். அவர் நற்றாயல்லராயின் நற்றாயெவரோ தெரியவில்லை. அத்தகையர் முன்னுக்குவந்து வேண்டியவைகளைச் செய்து குழந்தைத் தோஷந்தாங்கியிருந்தால் அதைப் போக்கடித்து பாலூட்டுதாய்கண்டு பிடித்து நல்ல பாலூட்டிவளர்த்து எல்லோரும் இக்குழந்தை இளமைப்பருவமும் யவ்வனப்பருவமு மடையச் செய்வார்களாயின் இத்தகைய குழந்தையே மற்றவர்களுக்கும் மிகப்பிரயோசனமா யிருக்கும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடமாதிய பாஷைகள் அப்போதன்றே மிக்க மணம் வீசும். திராவிடர்களும் சுகந்த மடைந்து ஆனந்த முறலாம். நம்குழந்தையைப் பெற்றெடுத்த பெரியோர்காள்! வம்மின்! வந்துக் குழந்தையைக் காப்பாற்றி வளர்மின்!

**சென்னைராஜதானியின் ஜனத்தொகை**:—பத்து வருஷத்திற்கு முந்தி எடுத்த ஜன சங்கியையில் இவ்விராஜதானியில் குடியிருந்தவீடு சுமார் 67 லக்ஷம். இப்போது 71 லக்ஷம். அப்போதிருந்த ஜனத்தொகை 355 லக்ஷம் அல்லது சுமார் மூன்றரைகோடி. இப்போதோ 382 லக்ஷம் அல்லது சுமார் மூன்றே முக்காலே யரைக்கால் கோடி. பத்து வருஷத்தில் 26 லக்ஷம் ஜனம் அதிகமா யிருக்கிறது. அப்போதிருந்த ஆடவரோ 176 லக்ஷம். இப்போதே 188 லக்ஷம். அப்போதிருந்த பெண்டுகளின் தொகையோ 180 லக்ஷம். இப்போதோ 193 லக்ஷம். பத்து வருஷத்தில் 13 லக்ஷம் பெண்டுகளதிகமா யுற்பவித்திருக்கிறார்கள். ஆடவரோ முன்னிலும் 12 லக்ஷமதிகமா யிருக்கிறார்கள். இப்போது ஆடவரைப்பார்க்கிலும் பெண்டுகள் (193—188) 5 லக்ஷமதிகமா யிருக்கிறார்கள். அதாவது 1000 பேர் ஆடவரிருந்தால் பெண்கள் 1026 பேரிருக்கிறார்கள். அப்போதிருந்த வீட்டைப்பார்க்கிலும் இப்போது (4,20,000) நாலுலக்ஷத்து இருபதினாயிரம் அதிகமாயிருக்கிறது.

# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901ஞு மேமீ 20உ {புத்தகம். 10

## சமயதத்துவஞானம்.

உலகத்திலுள்ள பற்பல ஜாதியாரும் தாம் வழிபட்டுவரும் கடவுள் மூர்த்தங்களின் இலட்சணங்களைப்பற்றியும், அவற்றை வழிபடுவதற்குரிய மார்க்கங்களைப்பற்றியும், அங்ஙனம் வழிபடுவதனால் விளையும் பலப்பிராப்திகளைப்பற்றியும், மதசம்பந்தமான மற்றும் பற்பல கோட்பாடுகளைப் பற்றியும், "பேதித்த சமயமோ வொன்றுசொன படியொன்று பேசாது" என்ற அறிஞர் வசனப்படி அபிப்பிராயத்தில் வேறுபட்டவர்களாயிருக்கினும், அண்ட சராசரங்கள் யாவற்றிற்கும் மேலான தனி முதற்கடவுளொருவர் இருக்கின்றனரென்பதைக் குறித்தும், அவரை ஆன்மாக்கள் வழிபட்டொழுகக் கடமைப்பட்டவைகளென்பதைக் குறித்தும், அவ்வான்மாக்கள் தாம் அடையவிரும்பும் சகல இன்பங்களுக்கும் அத்தனி முதற்கடவுளின் தண்ணருளை மேகத்தின் வருகையை யெதிர்பார்த்தேங்கி நிற்கும் பைங்கூழ்போல் நாடிநிற்றல் வேண்டுமென்பதைக்குறித்தும், கடவுள் நிர்ணயித்த விதிவிலக்குகளையுணர்ந்து அவராணையின்வழி நிற்பவர்கள் இறுதியில் ஏதோ ஒரு வகையான இன்பத்தை யெய்துவார்களென்பதைக் குறித்தும் சற்றேறக்குறைய ஒத்த அபிப்பிராயமுடையவர்களாகவே யிருக்கின்றார்களென அந்தந்த ஜாதியாருடைய மத சித்தாந்தங்களை யாய்ந்தறிந்த புத்திமான்கள் நிச்சயித்திருக்கிறார்கள். நம்முடைய தேசத்தின் அபிவிருத்தியில் மிகுதியும் நாட்டமுடைய ஒவ்வொருவரும் இந்த விஷயத்தைச் சித்தசமாதானத்துடன் கவனிப்பார்களாக. ஏனெனின் தற்காலத்தில் நமது தேசத்திலே மதத்துவேஷமென்னும் அசுத்தானிலம் மேலிடுந்தோறும் சகோதரவாஞ்சை

யென்னும் சுடர் நாளடைவிற்குன்றி ஒற்றுமையென்னும் தீபம் அவியத் தலைப்படுகின்றது. ஏதோ ஒரு மதக்கோட்பாட்டை யனுசரித்த நாம் வேறொரு மதஸ்தனுடைய சமயக்கோட்பாடு எவ்வளவு வேறுபட்டதாயிருக்கினும் அவனும் நாமும் யதார்த்தத்தில் ஒரு தனி முதற்கடவுளையே வெவ்வேறு நாமரூபம் முதலியவற்றால் வழிபட்டுவருகிறோமேயன்றிப் பிறிதல்லவென்னுஞ் சமரசஞானம் நம்மிடத்துதிக்கவேண்டுவது அத்தியாவசியம். அச்சமரசஞானமே நமக்கும் அவனுக்குமுள்ள சகோதர வாஞ்சையென்னும் சிசுவை வளர்க்கும் தாய். நம்முடைய மத சித்தாந்தமொன்றுதான் வாஸ்தவமானது, ஏனைய மத சித்தாந்தங்கள் யாவும் ஆபாசமானவை யென்னும் துரபிப்பிராயம் நம்முடைய மனத்தில் நன்றாய் வேரூன்றிவிடுமாகில் நாம் உலகத்திலுள்ள மற்றெல்லா மதஸ்தர்களையும் திரஸ்காரஞ்செய்து நம்மையே பெருமைப்படுத்திக்கொள்ள வேண்டி வரும். அதனால் நாம் தனித்துநிற்கவேண்டி வருமேயன்றி எவனும் நம்முடன் உண்மையில் உறவாடான். இவ்வாறே ஒவ்வொரு மதஸ்தனும் ஏனைய மதஸ்தர்களின் விஷயத்தில் துவேஷம் பாராட்டிக் கொண்டுவருவானாகில் தேசம் சின்னபின்னமாகி ஐக்கியம் கெட்டு நிலைகுலைந்து அன்னிய அரசர்களுக்கு ஒரு நொடியிற் சிறு கவளமாய்விடும். இவ்வாறே நமது தேசம் ஆய்விட்ட விஷயத்தை நமக்கு இத்தேசத்துச் சரித்திரம் வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டுகின்றது.

இவ்வாறு நாம் விவகரித்துக்கொண்டு வருகையில் நாஸ்திகன் இதுதான் நல்ல சமயமென்று மெல்ல நுழைந்து சில வினாக்கள் கடாவுகின்றான். அவையெவையெனில்:—உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் கடவுளென்பவரொருவரிருப்பது நிச்சயமானால் ஏனோ அவர் யாவர்க்கும் ஒரே மதத்தை ஏற்படுத்திக்கொடுக்கலாகாது? யாவரும் உய்யவேண்டிய குழந்தைகளாயிருக்கவும் அக்கடவுள் ஒருவரே பரமபிதாவாயிருக்கவும் குழந்தைகளெல்லாம் இடைவிடாது எப்போதும் ஒன்றோடொன்றுபெரும் போர் விளைத்து ஒருவரையொருவர் துவேஷிக்குமாறு அளவிறந்த சமயங்களை அக்கடவுள் ஏனோ ஏற்படுத்தல்வேண்டும்? இங்ஙனம் செய்வது சர்வஜீவ தயாபரரென்று கூறப்படும் அக்கடவுளுக்கு அழகல்லவே.



இதற்கு நாம் நியாயம் கூறுவோம். உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் ஒரே மதத்தையேற்படுத்தி ஒரே மாதிரியான அனுஷ்டானங்களை விதித்து விடுவாராகில் அக்கடவுளைக்காட்டினும் கருணையற்றவரொருவருமிராரென்றே சொல்லவேண்டிவரும். முதலாவது:—உலகத்தில் பற்பல பிரதேசங்களிலே சீதோஷ்ண நிலைமை முதலிய பற்பல வேறுபாடுகளிருக்கின்றபடியாலும், அவ்வேறுபாடுகளுக் கேற்றவாறு ஆங்காங்குள்ளவர்களின் ஊண் நடை உடை பாவனை முதலிய சமஸ்தமும் வேறுபட்டே யிருக்கவேண்டியபடியாலும், எல்லோருக்கும் ஒரே மாதிரியான அனுஷ்டானங்களையும் விதிவிலக்குகளையும் ஏற்படுத்துவது சர்வஜீவ தயாபரராகிய கடவுளுக்கழகன்று. இது விஷயமாக அநேக திருஷ்டாந்தங்களை எடுத்துக்காட்டக்கூடுமாயினும் அவற்றிற்கெல்லாம் இங்கு இடம் போதாததாகலின் ஒருதாரணம் மாத்திரம் ஈங்கெடுத்துக் காட்டுகிறோம். இப்பரத கண்ட வாசிகளாகிய நமக்குக் கருணைப் பெருங்கடலாகிய கடவுள் விதித்திருக்கும் வேதாகமங்களிலே ஜீவவதை செய்வதையும் புலால் புசிப்பதையும் முற்றும் தவிர்த்திருக்கின்றனர். நாம் நம்முடைய தேகாரோக்கிய முதலிய நலங்களுக்கு அணுவளவும் ஹானி நேரிடாதபடியே மேல் விதிக்கப்பட்டுள்ள கடவுளின் ஆணைவழி இப்பரத கண்டத்தில் ஒழுகலாம். ஏனெனில், நம்முடைய உணவுக்காக நாற்புறமும் இங்கு காய்கனி வர்க்கங்கள் ஏராளமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. பருத்தியினால் நெய்யப்பட்ட சாதாரண ஆடையொன்றே போதுமானது நம்மைக் குளிர் முதலியவற்றினின்றும் காக்க. இதே வேதாகமங்களை அக்கடவுள் (Iceland) ஐஸ்லண்ட் (Greenland) க்ரீன்லண்ட் முதலிய சீதளப்பிரதேச வாசிகளுக்கு விதித்தனரென்று வைத்துக்கொள்வோம். அங்ஙனம் அவர் செய்திருப்பாராகில அவரினும் வன்னெஞ்சப்பேதையரொருவருமிரார். ஏனெனில், அவைகள் பசும்புல்லும் தலையெடுத்து வளர முடியாத அவ்வளவு சீதளம் நிறைந்த பிரதேசங்களாகையால் அங்குள்ளார் மச்சம் பறவை முதலிய பிராணிகளைக் கொன்றுபுசிப்பது அத்தியாவசியம். பெருங்குளிர் தம்மை வருத்தாதவகைக்கு அவர்கள் மிருகங்களின் சருமங்களையே ஆடையாகத் தரித்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றார்கள். இந்த ஸ்திதியில் உஷத்கால ஸ்நானம்,

பூஜை, ஜபம், சந்தியாவந்தனமுதலிய கருமங்களை இப்பரத கண்டவாசிகளாகிய நமக்கு ஏற்படுத்தியிருப்பதுபோல் அப்பிரதேச வாசிகளுக்கும் ஏற்படுத்துவது அவர்களை அல்லற்படுத்துவதாகுமன்றோ? ஆகவே, அச்சீதளப்பிரதேச வாசிகள் ஜீவவதை செய்பவர்களாகவும் மாம்ச பட்சணிகளாகவுமிருப்பது ஈசுவரசம்மதமேயாம். ஆகையால், ஒன்றுக்கொன்று நேர்மாறான தன்மையுள்ள பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குக் கடவுள் ஒரே தன்மையான விதிவிலக்குகளை ஏற்படுத்துவது அவர் பேரருளுக் கேற்றதன்றாம். இரண்டாவது:—தேக சம்பந்தமான அனுஷ்டானவகைகளில் எவ்வாறு வித்தியாச மேற்படுகின்றதோ அவ்வாறே மனதின் பரிபக்குவ விஷயத்திலும் பேதமிருக்கவேண்டியது அத்தியாவசியம். அப்பரிபக்குவங்களுக் கேற்றபடிதானே அந்தந்தப் பிரதேச வாசிகளுடைய மத சித்தாந்தங்களும் இருக்கவேண்டும்? ஒரு பிதாவுக்குப் பிறந்த பல புத்திரர்களும் ஓரிடத்திலேயே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய்ச் சற்றேறக்குறைய ஒரு மாதிரியாகவே வளர்க்கப்பட்டவரினும் அவர்களுடைய புத்திகோசரம் ஒருபடித்தாகவிராமல் வெவ்வேறு தன்மை பெற்றிருப்பதை ஒவ்வொருவரும் கண்கூடாகப் பார்த்திருந்தும், அநேக அம்சங்களில் வேறுபாடுடைய பற்பல பிரதேசவாசிகளும் ஒரு தன்மைத்தாய் பரிபக்குவமடைந்திருப்பார்களென்றுகூற எவருடைய நா எழும்? கணிதசாஸ்திரத்தில் ஒரு விஷயத்தை யெடுத்து ஒரு வகுப்பு உபாத்தியாயர் சற்றேறக்குறைய ஒரே கல்வியளவுடைய பல வித்தியார்த்திகளுக்கும் கூறுவாராகில் அதைச் சிலர் முதன்முறையிலேயே கிரகித்துக்கொள்ளுவார்கள்; மற்றும்சிலர் இரண்டாவது மூன்றாவது ஆவர்த்திகளில் தெரிந்துகொள்ளுவார்கள்; வேறு சிலர் அந்த விஷயத்தை முற்றும் தெரிந்துகொள்ள அசக்தராகவே யிருப்பார்கள். இப்படிப்பட்ட சாதாரண விஷயங்களைக் கிரகிப்பதிலேயே மானுடருடைய புத்தி வேறுபட்டிருக்குமாகில்,

* "நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை சுடராயெல்லாம்
வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெருவெளியைச் சிந்தை
செய்வாம்."

* தாயுமானவர் பாடல்.



என்று அறிஞர் அனுபவவாயிலாகக் கண்டறிந்து கூறியமேற்போந்த குண விசித்திரமுள்ள கடவுளின் விஷயத்தைப் பற்பல பக்குவ பேதங்களையுடைய யாவருக்கும் ஒருபடித்தாய் விளக்க முயல்வது யுக்தமான தன்றாகலின் அநேக மதங்கள் உலகத்தில் நடைபெற்று வருகின்றன. அவைகள் யாவும் பகவானுடைய சம்மதமேயாகும்.

மேற்போந்த நியாயங்களினாலே உலகத்தில் அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள அந்தந்த ஜனங்களின் பரிபக்குவத்திற் கேற்க எத்தனை மதங்கள் தோன்றி நடைபெறினும் அவைகளெல்லாம் ஈசுவரனுக்குச் சம்மதமான மதங்களென்றே ஏற்படுகின்றது. நல்லொழுக்கத்தைக்காட்டி நன்னெறிக்கு உய்க்கத்தக்க நற்சமயம் ஒன்றிருக்க அதன் கோட்பாட்டுக்கு நேர் மாறாக வேறொருவன் வேறோர் ஆபாசமான சமயத்தை உண்டாக்குவானாயினும் அஃதும் பரமபதிக்குப் பிரீதிதானென்று பொருள்பட,

* "விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே
யெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற தாகும்
பரிவினாற் பெரியோ ரேத்தும் பெருவேளூர் பற்றி னானை
மருவிநான் வாழ்த்தி யுய்யும் வகையது நினைக்கின் றேனே."

என்று சைவசமய ஸ்தாபனை செய்வதற்காகவே திருவவதாரஞ் செய்த சமயாசாரியரே கட்டளையிட்டிருக்கின்றனரென்றால் நம்போலியர் ஏனோ வேறொருவருடைய மதத்தைத் தூஷித்துச் சகோதர வாஞ்சையைக்கெடுத்துக் கடவுளுக்கு அருவருப்பை உண்டாக்க வேண்டும்? மதத்துக்குப் பெரியோர் **சமயம்** என்கிற பெயரிட்டிருக்கின்றார்கள். சமயம் என்றால் காலம் என்று பொருள்படும். வாசிக்கும் சமயம், உண்ணும் சமயம், உறங்கும் சமயம் என்னும் சொற்றொடர்களில் சமயம் என்னும் பதம் எவ்வாறு கால வேறுபாட்டைக் காட்டுகின்றதோ அதுபோல், இது சமணசமயம், இது பௌத்தசமயம், இது வைணவசமயம், இது சைவசமயம், என்பன ஒருவன் முறையே சமணனாகவும் பௌத்தனாகவும் வைணவனாகவும் சைவனாகவும் இருந்து கடவுளை வழிபடும் காலங்களெனப் பொருள்படும். இப்போது நாம் கூறிவரும் இந்த சமய சமரசஞான விஷயத்தைக்குறித்து நம் பெரியோர் கட்டளையிட்டிருக்கின்ற அமுதவசனங்களைச் சிறிதெடுத்துக் காட்டுவோம்.

* தேவாரம்.

* "வேதம்பல் பக்குவ மோர்ந்தொரு வீட்டினுக்
கோதும்பல் லாற்றானு முந்தீபற
உண்மைகண் டார்க்கேக முந்தீபற."

வேதமானது ஆன்மாக்களுடைய பற்பல பருவபேதங்களுக்கேற்றவாறு ஒரு மோக்ஷவீட்டுக்கே பல மார்க்கங்களைக் கூறுநிற்குமாயினும் அவ்வுண்மையைக் கண்டறிந்தவர்கள் எல்லா மதங்களும் தம்மை யவலம்பிப்போரை இறுதியில் எம்பெருமானது திருவுள்ளப்படி முன்னும் பின்னுமாக மேலான இன்பத்துக்கே கொண்டுவந்துய்க்குமென வுணர்ந்து எந்த மதத்தையும் விரோதியாரென்று பிரமாணமிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

தண்டலம் - பாலசுந்தர முதலியார்.

---

## † பாரத ஸாரம்.

### IV-ஆம். அத்தியாயம் (சபா பருவம்.)
(பாண்டவர்களுக்கு நேரிட்ட தீங்குகள்.)
337-ஆம் பக்கத்தொடர்ச்சி.

மகாபாரதத்தைப் படிக்கும்போதெல்லாம் பூர்வீகத்தில் இந்தியா எவ்வளவு ஐசுவரிய முடையதாயிருந்ததென்பது நன்றாய்த் தெரியவரும். தெய்வபக்தி முதலும் உலக விஷயங்கள் அதற்கிரண்டாவதாயுமிருந்த காலத்து அப்படி யிருந்தது. தெய்வபக்தி குறையக்குறைய இந்தியாவின் பலமுங் குறைந்துபோய் அது பற்பல அந்நியர் கையிலகப்பட்டுத் தன்னுடைய பொருளெல்லா மிழந்தது. அந்தக்காலத்திலே நவரத்ன கசிதமான அநேக மாடமாளிகைகளும் கூடகோபுரங்களு மிருந்தனவென்று தெரியவருகிறது. யுதிஷ்டிரரைக்காண வந்தகுடிகளும் அரசரும் பற்பலவித ரத்னங்களும், சுவர்ண நாணயங்களும், சுவர்ணத்தாலாய தட்டு முட்டுகளும் அத்தகைய மற்றைச் சாமான்களும், தந்தப்பிடிகளில் ரத்னங்களிழைத்த பட்டாக்கத்திகளும், பட்டுள்ளிட்ட மெய்க்கவசங்களும், அலங்கரிக்கப்பட்ட ரதங்களும், ஆட்டு ரோமத்தாலாய பற்பல வர்ணம் வாய்ந்த கம்பலங்களும், பட்டுவஸ்திரங்களும், அதிக விலையுயர்ந்த படுக்கைகளும், படுக்கைச் சாமான்களும் பொன்னூல் வெள்ளி நூலிவைகளாற் பற்பலப் பூப்போட்டுச் சித்திரி

* அவிரோதவுந்தியார்.
† Adapted from **Mrs. Annie Besant's MAHABARATA.**



த்துள்ள படாக்களும், பற்பல விதமான வாசனைத் திரவியங்களும், உயர்ந்த அகிலும் ஆரமும், எண்ணிறந்த யானை, குதிரை, ஒட்டை முதலியனவும் அவருக்குக் காணிக்கையாக் கொண்டுவந்து வைத்து வணங்கிப் போவார்கள். இந்தியாவி னெப்புறமும் அக்காலத்தில் அதிக ரம்மியமாய்க் காணப்பட்டது. இன்னகாலத்திற்றான் ஏற்பட்டதென்பது இன்னும் சரியாய்க் கண்டறியக்கூடாத ஸ்ரீமத் இராமாயண மகாபாரதங்களில் எடுத்தெழுதப்பட்டிருக்கும் கிரியையக்கியம் இவற்றினுடைய பெருமையைப்பார்க்கும்போதே இந்தியாவினுடைய அக்காலத்திய நாகரீகத்தினுயர்வும், கணக்கற்ற திரவியமும், ஏராளமான ஐசுவரியமும் மிக்கிருந்தனவென்பது நன்கு தெரியவரும். சாமானிய சனங்களும் அதிக நல்ல ஸ்திதியில் இருந்திருப்பதாகத் தெரியவருகிறது. தெய்வபக்தியும் தர்ம சிந்தையும், நன்னடையும் இவைகளின் காரியமாக கடவுளருளுமிருக்கும் பக்ஷத்தில், விளையாத நன்மையும் உளவோ? இகபரத்திற்குரிய எல்லாச்சம்பத்தும் அக்காலத்திருந்தன.'

தருமர் செய்த அசுவமேத யாகத்திற்குப் பற்பல நாட்டரசர்களும் வந்து சேர்ந்தனர். பீஷ்மரையும் திருதராஷ்டிரரையும் அழைத்து வரும் பொருட்டுத் தர்மர் தமது தம்பியருள் நகுலனை அழைத்து அஸ்தினபுரத்திற்கு அனுப்பினர். அவர்களும், விதுரர், துரோணர், துரியோதனாதியர், கிருபர், கர்ணனென்னு மிவர்களும் பாரத யுத்தத்தில் வரும் மற்றைய வீரர்களும் வந்து சேர்ந்தனர். இவர்களெல்லோரும் வந்து சேர்ந்ததும், யுதிஷ்டிரர் தாம் யாகத்திற்குச் சேகரித்துவைத்த திரவிய முழுவதும் பீஷ்மர் துரோணாதியாராய தம் முன்னோரிடம் ஒப்புவித்து, மற்றவற்றை நடத்தத் தனக்கு உத்திரவு கொடுக்கும்படி அவர்களைவேண்டினர். யாகம் ஆரம்பித்தது முதல் கடைசிநாள் வரையில் எல்லாம் செவ்வனே நடந்துகொண்டுவந்தன. அன்றுதான் தருமர் சக்ரவர்த்தியானதற் கறிகுறியாய் அவர் மீது பரிசுத்த தீர்த்தம் சம்ப்ரோக்ஷணை மாதற்குரிய தினம். இந்த சந்தர்ப்பத்திற் கூடிய சபையில் நாரதரும் வந்திருந்தார். இதுதான் இரண்டாவதுகூடிய சபை. அச்சபையிலுள்ளாரை யெல்லாம் உற்றுநோக்கினர் முனி புங்கவர். தேவர்களெல்லாம் மானுடராய்ப் பிறக்கப் போகிறார்களென்பதும் ஸ்ரீமன் நாராயணனே மனுஷ்யாவதார மெடுக்கப் போகின்றானென்பதும், இன்னும் கொஞ்சகாலத்திற்குள் இச்சபையிலுள்ளா ரனைவரும் மண்ணுலகத்தைத் துறக்கச் செய்விப்பா னென்பதும் தாம் முன்னமே கேட்டிருந்தது இப்போது அவர் தம் ஞாபகத்திற்கு வந்தது. அதை நினைக்கும்போது அவர்க்கு அது மிக்க பயங்கரமாய்த்தோன்றியது. ஆகையால்அவர் வாய்திறவாது சிந்தனையோடே வீற்றிருந்தார். பின்வரப்போகிற பெரிய யுத்தத்திற் கறிகுறியாய் இந்தச் சபையிலே சில துர்க்குறிகள் நிகழ்ந்தன. யாகார்க்கியத்தைப் பற்பல அரசர்களுக்குக் கொடுக்கும் பொருட்டுப் பீமன் அதைக்கொண்டு வரும்படி சொன்னான். முதலில் அதை எவருக் களிக்கவேண்டு மென்னும் சர்

தேகம் பிறந்தது. இந்தச் சபையிலிருப்பவர்களிலெல்லாம் யார் முதன்மையோ அவர்க்கே கொடுக்கவேண்டிய தென்பது எல்லார்க்குந் தெரிந்தவிஷயம். யுதிஷ்டிரர் பீமனை யழைத்து "எவரை இச்சபையில் சிரேஷ்டரென மதிக்கிறாய்? யாருக்கு அர்க்கியத்தை முதலில் கொடுக்கவேண்டும்" என்றதற்குப் பீமன் ஸ்ரீகிருஷ்ணபகவானைக் காட்டி, "ஒளியுள்ள பொருள்களுக்கெல்லாம் எப்படி சூரியன் பெரியனோ, இது போன்றே இச்சபையிலுள்ளோர்க்கெல்லாம் கண்ணபிரான் தலைவர்" என்று சொன்னதும் சகாதேவன் முதலில் அர்க்கியத்தை ஸ்ரீகேசவப் பிரானுக்குக் கொடுத்தான். அவரும் அதை ஏற்றுக்கொண்டார். சேதி தேசாதிபதியாகிய சிசுபாலன் மாத்திரம் இதைக்கண்டு கோபம்கொண்டு திடீரென்றெழுந்து, பாண்டவர்களையும் பீஷ்மரையும் தங்கள் கடமை தெரிந்து நடவாததற்குக் கடிந்து, "கிருஷ்ணன் அரசனா? அல்லது வயதில் மூத்தோனா? குலக்குருவா? ஆர்யனா? அவனைப் பார்க்கிலும் சிறந்தோர் இச்சபையின்கண் யாருமிலரோ? அரசர்களை யெல்லாம் வரவழைத்து ஏன் இவ்வாறு அவமானம் செய்விக்கவேண்டும். அவனுக்கேன் முதலில் வந்தனை வழிபாடுகளெல்லாம்!" என்று கடுகடுத்துச் சொல்லி சபையினின்றுந் திரும்பிச்செல்ல யத்தனிக்க மற்ற அரசர்களிற் பலர் அவன் பின் சென்றார்கள். இதைக் கண்ட தருமர் அவனைப் பின்றொடர்ந்து வணங்கி உபசார வார்த்தைசொல்ல பீமன் அவரைத்தடுத்து, "உலகில் அநாதியாயிருக்கும்படியான ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வந்தனை வழிபாடுகள் முதலில் செய்யத்தகா தென்று எவன் நினைக்கின்றானோ அவனுக்கு உபசார வார்த்தையேன், மரியாதையேன்?" என்றான். மானுடவுருவுகொண்டு அங்கிருந்த மகா விஷ்ணுவாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானை வெகுவாய்த் துதித்தான். பிறகு சகாதேவனும் அம்மாதிரியாகவே புகழ்ந்தான். நகுலனும், "எவனொருவன் கமலக்கண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு முதலில் வந்தனை வழிபாடுகள் செய்யானோ அவனுயிர்த்திருந்தும் அவனை நடைப்பிணமாகவேயெண்ணல் வேண்டும். அவனுடன் கலந்து பேசலும் தகாது" என்றான்.

அந்தப் பெரிய சபை முழுதும் மனக்கலக்க மடைந்திருந்தது. யாகம் சரியாய் நிறைவேற வேண்டுமே யென்று ஏக்கங்கொண்ட யுதிஷ்டிரரைப் பார்த்து பீஷ்மர், "அப்பா தர்மா! சுணங்கன் கேசரியைக் கொல்ல நினைத்தாலும் கொல்ல முடியுமா? அச்சுத (ஸ்ரீ கிருஷ்ணபகவா)னோ நித்திரை செய்யும் சிம்மம் போன்றுள" னென்றார். இதைக் கேட்ட சிசுபாலன் கோபத்துடன் வைய ஆரம்பித்தான். இதைப் பொறுக்காது பீமன் அவனுயிரை முடிக்க முயன்றான். அப்போது பீஷ்மர் அவனைத் தடுத்து "அப்பா பீமா! ஸ்ரீ கிருஷ்ணபகவான் சிசுபாலனுடைய தாயாருக்கு வாக்களித்திருக்கின்றனர். "அதாவது அவனுடைய பிள்ளை செய்யும் நூறு தப்பிதம் வரையில் அவனை மன்னித்து விடவேண்டு மென்பது" என்று அவன் பூர்வோத்தரத்தை எடுத்துச் சொன்னார்.



"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்பதனைச் சிசுபாலன் சற்றேனும் யோசியாது வைய ஆரம்பித்தான். பீஷ்மர் அவனைப் பார்த்து "நீயிப்படி வைவதனால் யாதொரு பிரயோசனமும் அடையாய். யாங்கள் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குத்தான் முதலில் வந்தனை வழிபாடுகள் செய்வோம்? அதற்குரிய பயனைப் பெறுவோம். எவனொருவனிவ்வுலகை விட்டு விரைவில் ஒழிய விரும்புகின்றானோ அவனே சங்கு சக்ரதாரியாகிய கமலக்கண்ணனை வாதுக்கழைக்கட்டும்" என்றார். சிசுபாலனுடைய இறுதிக்காலம் வந்து விட்டதென்று அவர்க்கு நன்றாய்த் தெரியும். அதற்குத்தகுந்தபடி சிசுபாலனும் வாசுதேவனை வாதுக்கழைக்க ஸ்ரீ கேசவப்பெருமான் அவனை அருகழைத்து இனிய மொழி மொழிந்து "அப்பா! உன் தாயார் நிமித்தம் நீ செய்து வந்த குற்றத்தை யெல்லாம் இது வரையில் க்ஷமித்து வந்தோம். இதனோடு நூறு குற்றங்களாகின்றன. இது வரைக்குந்தான் க்ஷமிக்கும்படி உன் தாயார் வரம்பெற்றுக் கொண்டிருக்கிறாள்" என்று சொன்னதும் சிசுபாலன் மறுபடியும் இவரை நேரிலேயே வைய எத்தனித்தான். இவனிறுதிக்காலமுங் கிட்டியது. அச்சுதனும் தன் சக்கிரத்தை நினைக்க அது அவர் தம் கைசேர்ந்தது, உடனே அவன் தன் சிரசும் துணிக்கப்பட்டது. இடிவீழ்ந்த பாறைபோல் தெறித்து வீழ்ந்தான். அவன் விழவும் சண்டைச்சரவும் மனக்குழப்பமும் மாய்ந்தன. யாகம் முடிவேறுகிற வரையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தான் முன்னின்று எல்லாவற்றையும் பாதுகாத்தார். யாகமுஞ் செவ்வனே முடிந்தது. அங்கிருந்த அரசர் குழாங்களும் யுதிஷ்டிரரைத் தங்கட்கெல்லாம் தலைவராக மதித்து ஆரவாரித்தனர். பிறகு பற்பல வரசர்களும் தத்தம் நாட்டிற் கேகினர். ஸ்ரீ கிருஷ்ணபகவானும் துவாரகைக்குச் சென்றனர். இவர்களெல்லாம் போவதற்குச் சற்று முன்பாக வியாசர் தருமரை யழைத்து இனிவரப்போம் கெட்டகாலத்தையும் யுதிஷ்டிரர் பொருட்டு நடக்கும் யுத்தத்தில் க்ஷத்திரியர்களுடைய நாசத்தையும் குறித்துக்காட்டிப் போயினர். ஆகையால் யுதிஷ்டிரரும் தாம் சக்ரவர்த்தியாய் அப்போது அதிக ஐசுவரியம் பெற்றிருந்த போதிலும் இனிவருங்காலத்தை உத்தேசிக்க முகமலர்ச்சியு மகமலர்ச்சியு மொழிய, விசனமுற்று யாதேனுங் கடுஞ்சொல் சொல்ல நேரில் அது யுத்தத்திற்குக் காரணமாய்ப் போய்விடும் என்ற பயத்தினால் இன்சொல் அல்லன மொழிவதில்லையென சபதம்செய்து கொண்டார்.*

இதற்குப் பிறகு துரியோதனன் மாத்திரம் சிலநாள் பாண்டவர்களுடன் தங்கியிருந்தான். மாதுலனாகிய சகுனியையும் தன்னுடன்கொண்டு

* வியாசபாரதம், சபாபருவம் § 34—46.

மயன்கட்டின அந்த விசித்திரமான அரண்மனையின் விசேஷங்களைப் பார்க்கும் பொருட்டுப் புறப்பட்டான். அநேக இடங்களில் மதிமயங்கி நின்றான். மயனுடைய யுக்தியினால் சமைக்கப்பட்டவற்றைக் கண்டு மயங்கினான். கண்ணாடி புதைத்திருந்த இடங்களுக்கருகில் போனபோது கீழிருப்பது ஜலமென மருண்டு தொங்கவிட்டிருக்கும் தன் வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டான். ஜலம் நிறைத்துவைத்திருந்த தடாகத்தை ஆடியென்றெண்ணி நடக்க முயல ஜலத்தில்வீழ்ந்தான். ஆடியாலான கதவத்தருகிற் சென்று அங்கொன்றுமில்லாதிருந்ததைக் கண்டு நேரேபோக யத்தனிக்கையில் தன் தலையில் இடித்துக்கொண்டான். இனியிப்படி மோசம்போகக்கூடாதென்றெண்ணிப்போகையில் திறந்திருந்த கதவத்தைக் கண்டு ஆடியாலடைக்கப்பட்டிருக்கிறதென நினைத்து அதன் மீது சாய்கையில் கீழே திடீரென வீழ்ந்தான். இதைக்கண்ட பீமன் கலகலவென்று சிரித்தான். இதனையும் மற்றவற்றையுங்கண்ட நகுல சகாதேவரும், வினையாளரும் நகைத்தனர். இதைக் கண்ட துரியோதனன் கண்ணும் மனமுஞ்சிவந்தன. அழுக்காறும் வெகுளியு மதிகப்பட துரியோதனன் மனசஞ்சலத்துடன் சென்றான். காந்தார தேசாதிபதியும் தன்மாதுலனுமாகிய சகுனியினிடம் இதைக்குறித்து முறையிட்டு இந்த அவமானத்தைப் பொறுப்பதைப்பார்க்கிலும் தன்னுயிர் துறத்தல் நலமெனச் சொல்லி, தர்மருடைய ராஜாதி பத்யமும், அவர்களுடைய ஐசுவரியமும் பிரபலமான ராஜசூயயாகத்தையுங் கண்டால் யார் தான் மனந்தாள்வார்கள். திருதராஷ்டிரனுடைய பிள்ளைகளோ கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் போற்றேய்ந்து போகின்றார்கள். குந்தி புத்திரர்களோ நாளுக்கு நாள் சுக்கில பக்ஷத்துச் சந்திரன் போன்றொளிர்கின்றார்கள்" என்று கதறினான். மாதுலன் மருகனைக்கட்டியணைத்து இனிய வார்த்தை சொல்லி அவன் கோபத்தைத்தணித்து, "அப்பா துரியோதனா! நம்முடைய வரும்படிக்கென்ன குறைவு! அப்படி இதுவும் உனக்குப் போதாதெனக் கருதினால் பாண்டவர்களுடையபொருளையும் சேர்த்துக்கொள்ளுகிறது தானே. அஃதென்ன அருமையா? ஆயினும் அவர்களைப்போரில் வெல்ல முடியாது. அவர்களுடைய சேனைகளோ எண்ணிறந்தன. சூது மார்க்கமாய்த்தான் அவர்களை வெல்லல் வேண்டும். குந்தி புத்திரனுக்குச் சூதாடுவதில் மிக்க பிரியமுண்டு. ஆயினும் நன்றாய் ஆடத்தெரியாது. சூதாடவா வென்றழைத்தால் வரமுடியாதென்று சொல்லான். சூதாட்டத்தில் நான் சமர்த்தனென்பது எல்லார்க்கும் தெரிந்த விஷயந்தானே. குரு புத்திரா! மூன்றுலகிலும் இதில் என்னை வெல்ல வல்லுநர் யாவர்? ஆகையால் சூதாட வரும்படி யுதிஷ்டிரனை வரவழைப்பாய். என் சாமர்த்தியத்தினால் சூதில் அவனிராஜ்ஜியத்தையும் மற்றுமுள்ள பொருள்களையும் வென்று உனக்குத்தருவேன். மாங்கரிற்காளை போன்றோனே! ஆனால் இவற்றை அரசனுக்கு முன்னதாய்த் தெரிவித்துவிடு. அவனதாணைமேற் கொண்டு சூதாட்டத்தில் யு



திஷ்டிரருடைய பொருள்களியாவும் எளிதிற் கைக்கொள்ளலாம்" என்றுதன் மருகன்மீதுள்ள அபிமானத்தால் குடியைக்கெடுக்குஞ் சகுனியிவ்வாறு துரியோதனனையாறுதல் செய்தான். பிறகு சகுனி தன் மைத்துனனாகிய திருதராஷ்டிரனிடஞ் சென்று துரியோதனனுடைய விருப்பத்தைத் தெரிவிக்க, அவன் தன் தனயனைவருவித்து அவன்றன் துர்மதியைக் கண்டித்து புத்தி சொல்லிப் போவென்றான். ஆயினும் துரியோதனன், "முதலையும் மூர்க்கனுங் கொண்டது விடா" வென்பதற்கேற்ப தான் பிடித்ததையேசாதிக்கவெண்ணி அழுக்காற்றின் பயனாய பல துன்மொழியியம்பலாயினான். சகுனி பாண்டவர்களுடைய இராஜ்ஜியத்தைக் கவரும்பொருட்டுக் கவராடல் நலமென்றான். திருதராஷ்டிரன் தன் தனயன் மைத்துனனிவர்களுடைய வார்த்தையைக் கவனியாது விதுரருடன் யோசனை செய்தபிறகுதான் பதில் சொல்வேனென்று சொல்லி விதுரருக்காளனுப்புவித்தான்.

துரியோதனன் தன் தகப்பனாரைப்பார்த்து, "ஐயா? தாங்களென்னுடைய விருப்பத்திற்கிசையாவிடின் என்னுயிர் உடனே துறப்பேன், அப்படித் துறந்தபின்னர் நீவிரும் விதுரரும் சுகமடைவீர்கள்" என்று புலம்பிக்கொண்டிருந்தான். விதுரர் வந்தவுடன் தன் புத்திரன்மீதிருந்த காதலினால், அவருடன் தன் தனயனுடைய விருப்பத்தையுந் தன்னுடைய சம்மதத்தையும் அவன் பெற்றதையுஞ் சொல்லிப் பாண்டவர்களிடம் இவரை இதனிமித்தம் தூது செலுத்தினான். விதுரர் மிக்க மனக்கவலையுற்றவராய் பீஷ்மரிடம் சென்றார். குருட்டரையன் மறுபடியும் தன் மூத்த பிள்ளையை வருவித்து "உன்னெண்ணத்தை நிறைவேற்றவேண்டா" மென்று மிக்க வினயத்துடன் கேட்டுக்கொண்டான். அவன் என்ன சொல்லியும் "கொடிறும்பேதையுங் கொண்டது விடா" வென்பதுபோல் முரட்டுத்தனமாய் நின்றான். இவன் அவர்களுடைய மாளிகையில் தனக்கு நேர்ந்த குறைகளையெல்லாமெடுத்துச் சொல்லி முறையிட ஆரம்பித்தான். தன் புத்திரனைப் பார்த்து "அப்பா, அழுக்காறுடையவனாகாதே, அவர்களுடைய பொருள்களைக் கைக்கொள்ள எண்ணுவது மிக்க அறிவீனம். அந்தத்தில் அது அதிக அநர்த்தங்களை விளைவிக்கும்.

'அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.'

"அதிக ஆசையுள்ளவன் உள்ளதுமிழப்பான். தனக்குள்ளவரையில் திருப்தியுடையவன் சுகமடைவான்" என்று நல்லறிவுச் சுடர்கொளுத்தியும் துரியோதனன் மனந்துலங்காது தான் நினைத்ததையே சாதிக்க முயன்றான். தகப்பனும் தன் மகன் தனது விருப்பத்திற்கு விரோதமாயிருப்பினும் தனயன்மீதுள்ள ஆர்வத்தினால் சூதாடுவதற்குச் சம்மதித்து விடைதந்தான். அதனால் வரக்கூடிய கேடுகளின்னவெனத் தெரிந்திருந்தும் கண்ணொளியோடு மனவொளியுமிழந்த திருதராஷ்டிரன் விதி என்பதை விலக்கமுடியாதென்

றெண்ணினான். ஐயோ பாபம்! ஒருவன் தன் வினைக்குத் தானே காரணமென்பதையும், ஆறறிவுயிர்க்குரிய பகுத்தறிவு தனக்கிருக்கும் வரைக்கும் ஊழை மாற்றுவதற்கு இவன் வல்லவனென்பதையு அறியான் போலும்! விதுரர் இதை விரும்பாதவராதலால் கடைசியில் தன் தமயனை அணுகி "ஐயா! தங்களுடைய உத்திரவு அவ்வளவு சரியானதாகத் தோன்றவில்லை. இச்சூதாட்டம் நம்மவர் நாசத்திற்குக் காரணமாகும், சற்றுயோசிப்பீராக"

* "உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து."
"ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளின்
நேயம்பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் றூலோர் வழக்கு"

என்று இன்னன சொல்லியும் அரசன் வேறுத்திரவு அளியாததைக்கண்ட விதுரர் தமயனது ஆக்ஞையையும் அரசனது ஆக்ஞையையும் நிறைவேற்ற வேண்டி காண்டவபிரஸ்தத்திற்குப் பாண்டவர்களிடம் தூதுசென்றார். அங்குச் சென்றதும் யுதிஷ்டிரரைக்கண்டு அவர் தம் சிறிய பிதா புதிதாய்க் கட்டுவித்த மாளிகையில் வந்து தம் தனயனோடு சூதாடும்படி வேண்டினாரென்று சொல்லவும், யுதிஷ்டிரர்

* "காதல் கவராட்டீல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
தீதன் மறுத்த விவைகண்டாய் - போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி."
"அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்-மறத்தையே
பூண்டு விரோ தம்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து."

இவ்வாறு சொல்லி அதன் பயன் சண்டையாய் முடியுமென்னுங் காரணத்தால் அதை வேண்டாமென்று மறுத்து விதுரரை நோக்கிஅவர் தம் அபிப்பிராயம் யாதென வினவினார். அதற்கவர் தருமனைநோக்கி "அப்பா சூது எல்லா தௌர்பாக்கியத்திற்குங் காரணம், சூதாடுவதற்காக உன்னை வருவித்தல் வேண்டாமென்று அரசற்குச் சொல்லித்தடுக்க முயன்றேன். அவன் என் வார்த்தையைக் கேட்டானில்லை. மேலும் என்னால்இயன்றவளவில்

* நளவெண்பா.



* "ஐயநீ யாடுதற் கமைந்த சூதுமற்
றெய்துநல் குரவினுக் கிழைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணை புன்மைக் கின்றதாய்
மெய்யினுக் குறுபகை யென்பர் மேலையோர்."
"எள்ளுநக சூதினை யிகலி வென்றதூஉங்
கள்ளமேற் கொடுவலை கரந்து வேட்டுவ
ருள்ளுற வமைத்திடு முணவை யோர்கிலாப்
புள்ளின மருந்தின போலு மென்பவே."

என்பதாயவற்றை முன்னொருகாலத்து நளற்குச் சொல்லியவண்ணம் இப்போது யானும் துரியோதனனுக்குஞ் சொன்னேன். அவனு மதைக்கேட்டானில்லை. எதுயுக்தமோ அப்படிச்செய்வாய்" என்றார். "திருதராஷ்டிரர் ஆக்ஞையாயிருந்தபோதிலும் சூதாட எனக்கு விருப்பமில்லை" என்றார் தருமர். ஆயினும் என்செய்வார் இவர்! க்ஷத்திரியதருமம் குறுக்கேநின்றது. அதாவது "சூதாடுவையோ என்று சொல்லியழைத்தால் வரமாட்டேன் என்று சொல்லுதல் கூடாதென்பது." இதை நினைந்து, தர்மர் விதுரரைநோக்கி "ஐயா, நான் அங்கு வருவதற்கு யாதொரு தடையுமில்லை. எனக்கோ சூதாடவிருப்பமில்லை. சகுனி என்னை அழைக்காவிடின் யான் ஆடேன். அவன் என்னைப் பரிகாசம்செய்யு மெண்ணத்துடன் அழைக்கும்பக்ஷத்தில் ஆடாதிரேன்,அதை விரதமாப்பூண்டோனாகலின்" என்றார்.

தர்மர் தாமும் தந்தம்பியரும் தையலும் அஸ்தினபுரத்திற்கேகினார்கள். தர்மருக்குச் சூதாட்டத்திலிருந்த விருப்பத்திற் களவில்லை. ஆயினும் தன் மதியினால் அதனை வெளிப்படுத்தாது அடக்கிவைத்தனர். அவருடைய இக்குறைவும் ஓட்டெடுக்கச் செய்யும்பொருட்டுத் தேவர்கள் இம்மாதிரியாகக் கொண்டுவந்துவிட்டார்கள். அவர்கள் அஸ்தினபுரம் சேர்ந்ததும் புதிதாய்க்கட்டுவித்ததோர் மாளிகையிற் றங்கினர். இதிற்கூடினதுதான் மூன்றாவது சபை. இத்னோடு பாண்டவர்க்குரிய தீங்கு முற்றுப் பெற்றது. †

சூதாட்டத்தில் வல்லவனாகிய சகுனி தருமரைநோக்கி "என்னுடன் சூதாட நும்மால் முடியுமேல் சீக்கிரம் வருக" என்றழைத்தனன். தருமர் அதற்குச் சம்மதித்து ஆட்டத்திலாயினும் சூதில்லாதிருத்தல் வேண்டுமென்று விரும்பினர். சகுனி "யான்தான் ஜயம் பெறுவேன், இது நிச்சயம்! உம்மால் முடியாதென்று நினைத்தீராகில் ஆடாதுவிட்டு விடலாம்" என்று பரிகாசமாய்ச் சொன்னான்.

‡ "வேலை வளையிழந்தால் வேதநெறி பிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீல

* நைடதம். † சபாபருவம் ?? 47—58. ‡ நளவெண்பா.

மொழிவரோ செம்மை யுறைதிறம்பாச் செய்கை
யழிவரோ செங்கோ லவர்.''

என்று நளன்சொன்னதுபோலவே தாமும், "சொன்னசொல் பிறழேன். சத்தியத்தினின்றுந் தவறேன். இது என் சபதம்" என்றார். ஆயினும் அவருடன் தகுந்தபந்தயம் வைத்தாடக்கூடியவர் யாவருளர்? அதற்காகத் துரியோதனன் முன்வந்து தன் ஆஸ்தியை யெல்லாம் பந்தயமாகவைத்துத் தனக்குப் பிரதிநிதியாய்த் தன்மாதுலனையாடச் செய்தான். "சூதாட்டத்தில் ஒருவர் மற்றவர்க்காக ஆடுவது கூடாது. இது வழக்கத்திற்கு விரோதமானது. ஆயினும் தகாததை மேற் கொண்டொழுக விருப்பமிருக்கும் பக்ஷத்தில் ஆட்டத்தை ஆரம்பிக்கலா" மென்றார் தர்மர்.

ஆட்டத்தையும் ஆரம்பித்து விட்டார்கள். தர்மர் தம்முத்துமாலையை முதல்முதல் பந்தயமாக வைத்தார். வட்டை உருட்டினான் சகுனி. உடனே "மாலையை வென்றே" னென்றான். பிறகு தனக்குரிய பொன்னையும் வெள்ளியையும் மற்றுலோகங்களையும் வைத்தனர். அவற்றையும் வென்றான் சகுனி. தன்னிரதத்தை வைத்தார் அதையும் உடனே வென்றான் சகுனி. பிறகு பெண்ணடிமைகளையும் வைத்தார், வென்றேனென்றான். பிறகு ஆணடிமைகளைப்பந்தயமாக வைத்தனர். அவர்களையும் தனதாக்கிக் கொண்டான். பிறகு தர்மர் தம் களிற்றினத்தையும் பிடியினத்தையும், பிறகு சதுரங்கத்தின் மற்றவற்றையும் வைத்தார். சகுனி முன்போலவே வென்றான், இவைகளையுங் முன்போலவே கொண்டான். இதைப் பார்த்திருந்த விதுரர் மனம் பொறாது, பாண்டவர்களுடைய நிலைமையைக்கண்டு பரிதபித்துத் தன் தமயனைப்பார்த்து "ஐயகோ! இப்போதாயினும் இதனை நிறுத்துமின். கவராடல் கடைசியில் அனர்த்தமாய் முடியும். துரியோதனனு பாண்டவர்களுடன் சூதாடுவது! அவன் வெல்வதைக்கண்டு பரமானந்தங் கொள்கின்றீரே! இது தான் கடைசியில் பெரும் போர்க்குக்காரணமாய் முடியும். அதன் காரியமாக மனிதர்களெல்லாம் நாசமடைய வேண்டிவரும். பாண்டவர்களுடைய பொருள்களைக் கவர்வதினால் என்ன லாபம் அடையப் போகின்றீர். இதற்குப் பதிலாய்ப் பாண்டவர்களையே வென்று உம்மவராக்கிக்கொண்டால் அவர்களுடைய பொருள்களைவிட அவர்கள் மிக்க பிரயோசனமுடையராவார்கள். சூதாட்டத்தில் சுவலனுடைய சாமர்த்தியம் நமக்கெல்லாம் தெரிந்த விஷயந்தானே. இந்த மலை அரசனுக்கு அநேக விதங்களில் வட்டை யுருட்டி இந்திரஜாலம் செய்யத் தெரியும். எல்லாம் மோசமே யொழிய வேறொன்று மில்லை. வந்த வழியே சகுனியும் போகட்டும், ஓ பாரதா! பாண்டவர்களுடன் போர் புரிவதற்கு வைத்துக்கொள்ளாதே" என்று தெருட்டினான். துரியோதனன் விதுரரை நோக்கி "ஐயா! அன்னமிட்ட வீட்டிற்குக் கன்னமிடுவீர் போலும். ஏன் இவ்வளவு பக்ஷபாதமாய்ப்பேசு



கின்றீர். இவ்விடத்தை விட்டுப்போய்விடும். கற்பற்ற பெண்டிரை எவ்வளவு வாஞ்சையுடன் வைத்திருந்தபோதிலும் அவர்கள் தம் நாயகனை மோசஞ்செய்து பரபுருஷனிடஞ்சேர்வதிலேயே எண்ணமுடையவர்களாயிருப்பார்கள். நாமென்செய்வது" என்று கடுகடுத்து மொழிந்தான். இவ்விதமான வார்த்தைநாராசம் போற் காதிற்பாய்தலும் விதுரர் தம் தமயனை நோக்கி "பக்ஷபாதமில்லாமல் தங்களுடைய எண்ணத்தைத் தெரிவிப்பீர்களாக" என்று சொல்லித் துரியோதனனுக்கும் புத்திமதி கூறினார். "அப்பா துரியோதனா! என் மீது கோபிப்பதினால் யாது பயன்! குணத்தைக்குறியாது செவிக்கினியன மாத்திரம் சொல்வோர் உன்னுண்மைச் சிநேகிதராகார். அத்தகையர் உன்னன்மையை நாடினவரல்லர். அவர்களை நம்பி மோசம் போகாதே. அத்தகையர் அநேகர் அகப்படுவார்கள்."

" நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

இத்தகையர் அகப்படுவதோ மிகவுமருமை. விருப்பு வெறுப்பென்பதை மாத்திரம் கவனியாது நலமுள்ளதையுங் கவனித்துப் புத்தி கூறுபவனெவனோ அவன்தானுண்மையான சிநேகிதன். நீ என்னை யிகழின் எனக்குப் பாதகமில்லை" என்று சொல்லி மனவருத்தத்துடன் அச்சபையினின்றும் நீங்கிச் சென்றனர்.

அவரிவ்வளவு சொல்லியும் சூதாட்டம் நின்றபாடில்லை. தருமர் தம் ஆடுமாடு சேனைவேலையாட்கள் குடிகள் தமது சிற்றரசர் எல்லாம் பந்தயமாகச் சென்றன. இனி ஐவரும் திரௌபதையுந்தானிருக்கிறார்கள். நகுல சகாதேவர்களையும் பிறகு பீமரர்ச்சுனர்களையு பந்தயவைத்திழந்தார். "இனியுன்னுடையதென்று ஏதேனுமிருப்பின் அதை வைத்தாடும்" என்றான் சகுனி. தம்தம்பியர் நால்வரும் பலவீனராய் நின்றார்கள். மேலும் அடிமைத்தனம் பூண்டுபராதீனமாய் விட்டார்கள். ஐயகோ! அவர்கட்கும் துர்அதிஷ்டம் வந்துசேர்ந்ததே! அதை மாற்று மார்க்கம் யாதொன்றும் காணோம். அவர்கள் விதியானது இதனினும் யாது கொடிய செய்யவல்லது. ஐவரும் துக்காக்கிராந்தராய் மவுனமாயிருக்கும்போது சகுனி தர்மரைப்பார்த்து "ஐயா! ஏன் மவுனம் சாதிக்கின்றீர். உம்முடைய பொருள் இன்ன மொன்றிருக்கின்றதே. வேண்டுமாயின் பாஞ்சாலியைப் பந்தயம் வைத்துப் பாண்டவரை மீட்டுக்கொள்ளுமே" என்றான். அவளுடையபெயர் சகுனியின் வாயிலிருந்து வரக்கேட்டுத் துன்பமுற்றுத் துடித்து "அந்தோ! நமது கதியும் இப்படியாயிற்றே. கிருஷ்ணையையுந் துறக்க வேண்டுவதோ? இல்லறத்தை எவ்வளவு மேன்மையாய் நடத்திக் கொண்டு வந்தவள். மற்றவர்களையு மில்லாளெனத் தகுமோ? இவளையும் பந்தயம் வைத்துத் தோற்க வேண்டுமோ" என்று தமக்குள் பேசிக்கடைசியில் ஒரு வேளை ஜயித்தால் எல்லாரையு மீட்கலாமென்ற எண்ணத்தினாலும்

குதினிடத்தில் தமக்கிருந்த ஆவலினாலும் அவளையும் பந்தயமாக வைத்தார். சபைமுழுதும் மனங்கலங்கி நின்றது. அழுவார் சிலரும் சிரிப்பார் சிலருமாயினர். சகுனிவட்டை உருட்டித் திரௌபதையினையுங் கொண்டான்.

(இன்னும்வரும்.)

கல்குளம்-குப்புசாமி முதலியார்.

---

# * ஒழிவிலொடுக்கச் சிறப்புப்பாயிரவுரை.

---

(116-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தா—னுள்ளத்
தழிவிலடிக் குந்தேனை யன்பரெலா முண்ணு
மொழிவி லொடுக்கநூ லோர்ந்து."

வள்ளலென்பது (இரண்டாவதடியில்) பிள்ளையார்க்குக் காரணச் சிறப்புப் பெயராகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின் இத்துணைச் சிறப்பின்றென்று மறுக்க. என்னெனின், அவயவச் சிறப்பான வயவிக்குணம் வெளிப்படுத்தலே பெரும்பாலு மின்பமாகலி னென்க. இதனைப் "போற்றிமாலுன் முகனுங் காணாத புண்டரிகம்" என்பதனாற் காண்கவென்க. வள்ளமலர்த்தா ளெனப்பாடமோதி வள்ளம்போலுங் குவிந்தவாய் மலரென மலர்க்கடையாகவுரை விரிப்பாருமுளர்; அங்ஙனம் விரித்தலித்துணைப் பெரும்பயனின்றென மறுக்க. இங்ஙன மின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

மலரென்பது, வள்ளற்றன்மையின் அருகுவைத்தமையின் ஈண்டு நிறைதலுங் குறைதலுமாயுள்ள நீர் நிலைக்கட்டோன்றியு மழிந்தும் விரிந்தும் குவிந்தும் வாடியு நின்று வண்ணமு நறையு வாசமுஞ் சிறிதே சிறுபோது கொண்டு பழித்தலாதிய சிறுதொழிற்படு மலர்களை நீக்கி ஆண்டுத்திரிபிலாத் தெய்வத்தெண்ணீர் நிலைக்கண்ணொழியாமலர்ச்சியும்அழியாமணமும் பொன்னிறப்பொலிவும் இன்னறவொழுக்கு மென்மையுந் தண்மையும் வியப்புறு முருவுங் கண்டோர் கண்கவர்காட்சியு மாட்சியுங்கொண்டு முக்காலமுங் குன்று மலரைக் குறித்தமை காண்க. என்னெனிற் பிள்ளையார் திருவடிகள்

---

* ஒழிவிலொடுக்கம் கண்ணுடைய வள்ளலா ரென்பவரா லியற்றப்பட்டது; இவ்வுரை திருவருட் பிரகாச வள்ளலாரென்னும் வடலூர் இராமலிங்கப்பிள்ளை யவர்களாற் செய்யப்பட்டது.



மெய்ஞ்ஞான விளக்கமா யருண்மணம் வீசிப் பொன்னிறம் பொலிந்து ஆனந்தமொழுக்கி மெல்லெனவுற்றுத் தண்ணெனக் குளிர்ந்து தரிசிக்கின் றோர் வியப்புறு முருவா யவரது விருப்பநோக்கம் பரவவென்று மொருதன்மையவா யிருக்கின்றமையினென்க. ஆயின் மலர்போலுந் தாளென் றுவமை விரிந்தபடி நிற்றற் கிடங்கொடாது மலர்த்தாளென்ற தென்னெனின் அத்தெய்வத்திரு மலர்தனைக் கண்டோர்க்குச் சிறிய விடயாநந்தங் தருதலேயன்றித் திருவடிபோற் சிவானந்தந் தரமாட்டாச் சிறுமைநோக்கி யென்க.

அல்லதூஉம் சுபவடிவாய் எவ்வகைச் சுபங்கட்கு முன்னின் றதனை விளங்குறச் செய்வதாய் மகிழ்வுடையோர் யாரு மேற்கொண்டணியப்படுவதாய் நிற்கு நன்மலர்போலு மெனக்கூறினுமமையும். என்னெனின், திருவடிகள் அருள்வடிவா யானந்தப் பேற்றிற்கு முன்னின்றளிப்பதா யறிவுடையோர் தந்தலைமேற் கொண்டணியப்படுவதாய் நிற்றலினென்க.

அல்லதூஉம், மலரையடைந்த வண்டுகள் அதனது தேனுண்டு களிகொள்ளுதல்போற் றிருவடிகளை யடைந்தோரும் அருளானந்தம் பெற்றிருமாத்தலி னிங்ஙனங் கூறியதெனினு மமையுமென்க. இதனைத் தொகையுவமையணியாகக் கூறலின்றி வள்ளன் மலர்த்தாளெனக்கூட்டி யற்புதத்தொகையுவமையணியாகக்கொண்டு பொருள் கூறுவாருமுளர். அவர் கூறுங்கூற்றிற் பெரும்பயனின்றெனமறுக்க. இஃதின்னும் விரிக்கிற் பெருகுமென்க.

தாள் என்பது அடிகட்கன்றியும் முயலுதற்கும் உண்ணின்ற பொருள் வெளிப்படாமைக்கு மதனை வெளிநின்றோருட் சென்று கவரப்படாமைக்குங் காப்பாகக் காப்பினிற்குங் கருவிக்கு மணிதற்சணிழினிருகடையு மிணைத்து நிற்கு மிடைப்பூட்டிற்கு மிடனாகி வந்த பல பொருளொரு சொல்லாகலின் திருவடிகள் தம்மை யடைந்தோரை யாநந்தநிலையுட் சேர்த்தலும், அங்ஙனஞ் சேர்ந்தோர் மீட்டு மவ்வாநந்த நிலையினின்றும் போதவசைவு தோற்றி வெளிப்படாமைக்கு மவத்தைகளுட் சென்று தாக்கிக் கவரப்படாமைக்குங் காப்பாக வருவதுருவாய தன் முன்னிற்றலுஞ் சிவத்துடன் சீவனை யிடைநின்று கூட்டுவித்தலுங் குறித்தது காண்க. இக்குறிப்புணர்த்தவன்றே மலர்க்காலென்னாது மலர்த்தாளென்றதென் றுணர்க.

தலைமேல்வைத்து என்பது ஆசிரியர் தம்மாசாரியராகிய பிள்ளையார் திருவடித்தீக்கை செய்யத் தாம் பெற்றமை குறித்தது காண்க. அஃதேல் வைக்கப்பட்டு எனச் செயப்பாட்டு வினையெச்சத்தா னிருத்தற்பால தன்றோவெனின் ஆசிரியர்க்கத்திருவடிக்கண்ணேயுள்ள பிரியத் தொடர்ச்சியின் பெருமை தோன்ற விங்ஙனம் நின்று அங்ஙனங் குறித்ததென்க. இதற்கு இவ்வாறன்றித் தலைமேற் பாவனையான் வைத்தெனக் குறித்ததென்று கூறுவாருமுளராலோவெனின், அவ்வாறு கூறிற் பிள்ளையாரிந் நூலாசிரியர்க்கு ஞானாசாரியரென்பது மிவர் ஞானதீக்கை யுடையரென்பதும் விளங்குத

3

லின்றி மற்றையாசிரியர்போ லெடுத்த நூலினிது முடிதற்பொருட்டுப்
பாவனையான் வழிபடு கடவுட்பழிச்சினறென் றிலேசிற்கருதப்படுமாசலி
னங்ஙனங் கூறல்மரபன்றென்க. தலையில்வைத்து என்னாது தலைமேல்
வைத்து என்றமையான் மறை முடிக்கண்ணே வயங்காநின்ற வச்செல்வத்
திருவடியின் சீர்மை தோன்றிற்றென்க.

ஓர்ந்து என்பதில் ஓர் என்னும் பிறவினை முதனிலை, அறிவு தனக்கெதி
ரிட்ட வுணர்ச்சிப்பொருட்கண்ணெதிரிடுவதுபோன் றெதிரிடாதுள்ளாழ்
ந்த வப்பொருட்டிற னெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சியு மெதிரிட்ட
பின்னர் விகற்பியா தெதிர்க்குந்தொறு மெதிரிடப் பெயரும் புடைபெயர்ச்சி
யுங் கோடலிற் கருவித்திறனுந் தன்றிறனும் அருட்டிறனும் உற்றுணர்ந்தவ்
வுணர்ச்சி விகற்பியாது தேறி நின்றமையைக் குறித்தது காண்க. இக்குறிப்
புத் தோன்றவன்றே திருவள்ளுவநாயனாரும், "ஓர்த்துள்ள முள்ளதுணரி"
னென்றாரென்றறிக.

உள்ளத்தழிவி லென்பதி லுள்ளமென்பதன்பகாப்பதவியிற்றுப் பகு
பதப் பொருளினிடவாகு பெயரா யனுப் பொருட்கண் வந்த வுள்ளென்னும்
பகுதியுட்புறத்துமப்போதமெழுஞ் சிற்றசைவும் பேரசைவுங் குறித்தது
காண்க.

உள்ளமென்பது வாதனையானுள் ளெழும்போதத்திற் காகுபெயராயது.
வள்ளலென்பதுபோன் றுழுகிசையாய்வா வுள்ளவழிவி லென்னாது
பொறுத்திசையாய் வர உள்ளத்தழிவி லென்றதென்கொலோ வெனின்,
வேற்றுமைவழியாகலினும் போதவசைவு சார்பின்றி யமையாமை குறிக்க
வேண்டுமாகலினும் சாரியையோடு புணர்த்தியங்ஙனங் கூறியதென்க.
அழிவு என்பதில் அழியென்னும் பொது வினைப்பகுதி முன்னர்த்தோன்ற
நிகழ்ச்சிப் பின்னரோர் காலத்து மோரிடத்துமின்றிக் கெடுதற் பெயர்ச்சிக்
கண் வந்ததாகலி னப்போத நிகழ்ச்சி பின்னரொக்காலத்தும் உட்புற மென்று
முணர்க. இங்ஙனமன்றி உள்ளத்தழிவி லென்பதற்கு மனத்தினசைவற்ற
விடத்தெனப் பொருள் கூறுவாரு முளராலோவெனின், மனத்தினசைவு
போதவசைவற்றன்றே யறுமாகலினு மஃதருதவிடத்திஃதெவ்வாற்றானுமறு
தலினும் அது பொருந்தாதென்க. இதனை ஆசிரியர் "கூறியபற்றுதபோதும்
பதறு" மென்னுந் திருவெண்பாவாற் காண்க வென்க.

அடுக்குந்தேனென்பதி லடுக்கு மென்பது அடுத்தலென்னுந் தொழிற்
பெயர்க்கட் டல் விகுதி தன்னொற்றுச் சந்தியொடு நீங்க வெதிர்காலப் பெய
ரெச்சவிடை நிலையும்மை ககரமெய்ச்சாரியை யூர்ந்து தன்னொற்றுச் சந்தி
பெற்றுண்டு நிறையுமிடப்பாடு தோற்றாது செறிதற் பெயர்ச்சியும் அடுக்க
லென்னுந் தொழிற்பெயர்க் கண் ணல்விகுதி நீங்க வவ்வெதிர்காலப் பெய



ரெச்சவிடை நிலையும்மை விகுதி நீங்க நின்று தன் வரவுகண்டோடிய குற்
றுகர மூர்ந்த மெய்க்கண்ணேறி நின்று இறையுமிடைப்போதின்மை படாது
பன்முறை மேன்மேலுறுதற் பெயர்ச்சியும் பொருளாகக் கொண்டிருவகைப்
பகுதி யொருவகை யெச்சமாக நிற்றலின் சிறிது மிடத்தானுங்காலத்தானும்
பிரிவுதோன்றாது செறிந்து பன்முறை மேன்மேலெழுமாநந்தத் தேனென்று
குறித்த தென்றுணர்க.

உள்ளத்தழிவிலடுப்பது ஆநந்தமாகலிற் றேனென்பதை யுவமைக்
குறிப்பாற் சிவானந்தத்தேனென்ற தென்றுணர்க.

தேனுண்ட வண்டசைவின்றி யத்தேன் மயமாயிருத்தல் போல ஆநந்
தாநுபவத்தர் போதவசைவின்றி யிவ்வாநந்தமயமா யிருத்தலுவமையா
கக் குறிக்கப்பட்ட தென்றுணர்க. இதனை யொப்புறைக் கூட்டமொட்டா
திகளாகக் கூறுவாரு முளராலோ வெனினவ்வாறு கூறினும் பொருள் சிதை
யாமையினொருவாறமையு மென்க. போத வசைவின்கட் டோற்றல் விட
யாநந்த மாகலிற் போத வொழிவின் கட்டோற்றல் சிவாநந்த மெனக்குறித்
தற்குள்ளத்தழிவிலடுக்குந் தேனென்ற தென்றுணர்க. எங்ஙனமெனின்
உள்ளத்தழியாமையி னடாத்தேன் என்றெதிர் மறுக்கப்படுதலினென்க.
மதுரம்பற்றித் தேனையாநந்தத்திற் குவமை கூறுவாரு முளராலோவெ
னின், அது நாவிடயமா யிறைப்போது நிற்றலி னித்துணைச் சிறப்பின்றெ
ன்க.

அன்பரெலா முண்ண வென்பதில் அன்பர் என்பது பொருள் புகழ்
ஆதியைக் குறித்துப்பயில்வோரைநீக்கிச் சிவானந்த மெந்நாளடைது மென்
றிடைவிடாததனையே விரும்பிப்பயில்வோரைக் குறித்ததென்றுணர்க. எலா
மென்பது சரியையாதி கன்ம மார்க்கங்களைக் கூறும் பிறநூல்களெல்லாம்
பருவநோக்காது சாதி சமயாசார விகற்பங்களை நோக்கிச் சிலரை நீக்கியுஞ்
சிலரை நிறுவியு மதிகரித்தல்போகாது அச்சாதி சமாதிகளானுயர்ந்தோர்
தாழ்ந்தோரியாரேனும் பருவத்தராயி னிந்நூற்குரிய ராவரென்பது குறி
த்த தென்றுணர்க.

உட்கொள வென்னும் பொருளுட்கொண்டு பொருட்டுப் பொருளிற்
போந்த உண்ண வென்னும் வினையெச்சம் ஆநந்தாநுபவத்திற்கு விடாத
விலக்கணையாயிற் றென்றுணர்க. என்னையெனில், உண்ணலிற் பசிநீங்கல்
போல் ஆநந்தாநுபவத்திற் பசுத்துவநீங்கலினென்க. பயன் காரணம் பற்றி
வந்த வொழிவிலொடுக்க நூலென்பது ஒழிவிலொடுக்க மென்னுநூல் ஒழிவி
லொடுக்கந்தரு நூலென விருவழிக்கும் பொதுவாய சந்தியான் வந்தமையி
ற்றன்னை வேதாந்தத்திற்குஞ் சித்தாந்தத்திற்கும் பொது வென்று குறித்த
தென்றுணர்க.

ஒழிவிலொடுக்க நூலுரைத்தா னென்பதில் வேற்றுமை சரியை யுருபு முதலிய வொன்றும் விரியாது நிற்றலின், ஞானாசாரமன்றிக் கருமாசார மொன்றும் விரியாத விந்நூலி னின்மலத்தன்மை தோன்றிற்றென்றுணர்க. உரைத்தானென்பது ஒருவர் மதிநுட்பத்தால்தாம் கண்டறிந்த மாற்றுயர்ந்த பொன்னின்றன்மையைப் பிறரு மறிந்து பயன் கோடற்குக் கட்டளைக் கல்லினுரைத்துக் காட்டல்போற் சுருதி குருவனுபவத்தாற் றாமநுபவித்தறிந்த சிவாநந்தப் பேற்றின் றன்மையைப் பக்குவருமறிந்து பயன் கோடற் பொருட்டு நூற்கணுரைத்துக் காட்டினாரென்று குறிப்புணர்த்திற்றென்றுணர்க.

என்னெனி னுரையென்பது பொன்னுரையும் பொருளாகக் கோடலி னென்க. உரைத்தான் என்னும் பயனிலை செயப்படுபொருளி னிறுதியினி லையாது செயப்படு பொருட்குங் கருவிப்பொருட்குமேற் "றாடலை மேல் வைத்து" என்பதனிறுதியிற்றொடர்ந்து நின்றதென்னெனிற் சிவஞான தீக்கையுடையரா யுரைத்தாரென்பது மன்றித் தமதாசாரியர் திருவடி சான்றாகத் தாங் கண்ட வநுபவத்தை விளங்க வுரைத்தாரென்பதுங் குறித்தற்கென்க. என்னை ?

தாடலைமேல் வைத்து எனவே சான்றாக வைத்து என்பது தானே யமையுமாகலின், தலைமேல் வைத்து என்பதன்பின்னிற்கக்கடவதாய ஓர்ந்து என்பது செயப்படு பொருட்பின்னிறுதி நிலையாய் நின்றதென்னெனின், இந்நூல் கற்றோர்க்குக் கருமங்குறைந்து ஞான மேலிடுதலுண்மை குறித்தற்கென்க. எங்ஙனமெனின், அவ்வோர்ந்து என்பது வினைக்குறையாகலினென்க. உள்ளத்தழிவிலடுக்குந் தேனை யன்பரெலா முண்ண வொழிவிலொடுக்க நூலோர்ந் துரைத்தான் எனக்கொண்டு போதவொழிவின் கண்ணடுப்பதாய வாநந்தத்தை யன்பரெல்லா மநுபவிக்கும் பொருட்டு வேதாகம முடிபான ஞானநெறியை யாராய்ந்து ஒழிவிலொடுக்க மென்றோர் நூலை யுரைத்தார் எனப்பொருள் கூறுவாருமுளர். அங்ஙனங்கூறின் ஆசிரியர் பரஞான முடையாரென்பது தோற்றாது, அபரஞான முடையராகப் பொருள்படுமாகலினும் அபரஞானத்தாற் கூறப்பட்ட நூல் மிகச் சிறவாமையானு மதுபொருந்தாதென்க.

இந்நூலியற்றற்கேற்ற நற்பொருளுடைமையுஞ் சிறப்புப்பாயிர விலக்கணத்து ளாக்கியோன் பெயரே யென முதனிறுத்தப்பட்ட நிமித்த காரணச் சிறப்புடைமையும் இச்செய்யுண் முடிபுக்கெழுவாயாந் தலைமையுடைமையும் பற்றி வள்ளலென முதனிறுத்தியதென்க. இந்நூலாசிரியர்க் காசாரியரிவரென்பது தோன்றற்கு அவ்வள்ளலென்பதன்புடை குருராயனென்பதை நிறுத்தியதென்க. இங்ஙனம் ஆசாரிய ரென்பவர் பிள்ளையாரென்பது தோன்றற்கு ஞானசம்பந்தனென வைத்தல் வேண்டுமாகலின்



அந்த ஞானத்தைக் குறிக்கும் பாசவெற்றியாய வாதுவென்றவென்பது முன் கூட்டிச்சம்பந்தனென வதன்புடை நிறுத்தியதென்க.

இரண்டாமடிக்கட் பிள்ளையார் தாள்கணிறுத்தத் தொடங்கி முன்னர் அத்தாள்களினியற்கை யருளென்று குறிக்க வள்ளலென்றும், அதன் வடிவமாநந்தமென்று குறிக்க மலரென்றும், முறையே வைத்து வள்ளன் மலர்த்தாளென நிறுத்தியதென்க. தாள்களன்றியும், பிள்ளையாரும் அருளியற்கையரே யென்பது குறிக்கச் சம்பந்தனென்னுஞ் சந்தந்தோற்றிய வுடன் வள்ளற்சத்தந்தோன்ற நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொற்பொருண் முறைநிலை. தாளென்பதற்குந் தலையென்பதற்கு முள்ள சொற்பொருட் சம்பந்த வின்பம் பற்றித் தாடலையென்றும், தலையென்பதற்கும் மேலென்பதற்கு முள்ள உரிமைநோக்கம்பற்றித் தலைமேலென்றும், மேலெனு மிடப்பொருட்டு வைத்தற்றொழில் சிறந்தது பற்றி மேல் வைத்து என்றும் வைத்து என்பதற்கும் உரைத்தானென்பதற்குமுரிய இறுதியும் முதலு மினமாதல் பற்றி வைத்துரைத்தான் என்றும் முறையே நிறுத்தியதென்க. இங்ஙனம் நிறுத்தியவை சொன்முறை நிலையும் சொற்பொருண் முறை நிலையுமாம்.

இங்ஙனம் முற்று முறைநிலை கூறப்புகின் மிகப்பெருதுமாகலி னொருவாறு காட்டினம்; மற்றையவுமிவைகொண்டுணர்க வென்க. இச்செய்யுட் பொருள் ஆசிரியரதருளறிவின் மாட்சிமையை வெளிப்படையானுங் குறிப்பானும் விளங்க விரித்தலின், வாகைத்திணையுட் சால்புமுல்லைப் பொருளின் பாற்பட்டதென்க. என்னை? சால்புமுல்லைப் பொருள், "வான்றோயு மலையன்ன சான்றோர் தஞ் சால்புரைத்தன்று" என்பவாகலின் இச்செய்யுள், தன்னுட்செயப்படு பொருளாய் நின்ற நூற்சிறப்பைத் தன்னானுந் தன்னுருப் புக்களானுங் குறிப்பாற்குறித்து நின்ற நன்னோக்குடைச் செய்யுஞ் செய்யுளென்றுணர்க. அங்ஙனம் குறித்தவை யெங்ஙனமெனின் :—

இச்செய்யுள்தான் கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியப்பா வென்னு முப்பாவினுஞ் சிறந்த வெண்பாவாகலி னிக்குறிப்பால் இந்நூல் சரியைநூல் கிரியை நூல் யோகநூல் என்னு முந்நூலினுஞ் சிறந்த ஞானநூலென்று குறித்ததென்க. தான் ஈரசையானுசிட்டிருவகைத் தளைதழீஇ பொழுகிசைச் செப்பலோசை யான் வந்ததாகலி னிக்குறிப்பா லிந்நூல் ஆகமமுடிவும் வேதமுடிவுங்கூறு மிருவகை நெறியுமொருவகை நெறியாத் தழீஇக் கொண்டிருந்தமை குறித்ததென்க.

தான் ஒன்றடுத்த விரட்டை முப்பத்தாறெழுத்துக்களைக் கொண்டு நிற்றலினிக்குறிப்பானிந்நூல் பாசமொன்றடுத்த தத்துவ முப்பத்தாறென்று மம்முப்பத்தாறன் றன்மை யிவையென்று பகுத்தறிதல் வகையுமுணர்த்துவதெனக் குறித்ததென்க. தான் நான் கடுத்த முப்பத்தாறசைகளை யசை

த்து நிற்றலினிக் குறிப்பானிந்நூல் அத்தத்துவ முப்பத்தாறனையு நிபதிகளேதன் முறையை யுணர்த்துவதெனக்குறித்ததென்க. அஃதேன் முப்பத்தாறன்மே ஞண்கடுத்ததென்னெனின், ஆன்ம தத்துவத்தின்வன்மை தோன்றற் கோரசையும் வித்தியாதத்துவத்தின் வலிதோன்றற் கோரசையும், நாததத்துவத்தின் பெருமை தோன்றற் கிரசையு மிருந்தனவென்க. தான் பதினேந்துசீர் சீர்கொளநிற்றலி னிக்குறிப்பா னிந்நூல் ஆசாரியத்தன்மை சீடத்தன்மை பதித்தன்மை பசுத்தன்மை பாசத்தன்மை உபதேசத் தன்மை பக்குவத்தன்மை யோக நிவிர்த்தி கிரியை நிவர்த்தி சரியை நிவிர்த்தி விரக்தி விளக்கந் துறவுத்தன்மை யருளவத்தைத் தன்மை வாதனை மாண்டார் தன்மை நிலையியல்பு என்னு மிப்பதினைந்தினையுஞ் சீர்பெறக் கொண்டதெனக் குறித்ததென்க.

தானெழுவகைத் தளையினியைந்ததாகலி னிக்குறிப்பா னிந்நூல் ஆன்ம தரிசனம் அருட்டரிசனம் பரைதரிசனம் பரையோகம் பரைமோகநீக்கம் போதவொழிவு இன்பப்பேறு என்னும் எழுவகை நிலையு மறிவிப்பதெனக் குறித்ததென்க. தான் தனிச்சொல் பெற்று நான் கடியுட னடந்ததாகலினிக் குறிப்பா னிந்நூல் கூறுமொப்பற்ற ஞானமும் சுத்தச்சரியை சுத்தக்கிரியை சுத்தயோகம் சுத்தஞானம் என நான்குபாதத்தோடு நடப்பதெனக் குறித்ததென்க. தான் ஒருஉத்தொடையொடு முத்தொடையானியன்றதாகலி னிக்குறிப்பா னிந்நூற்சுருதி குரு அநுபவமென்னு மூன்று மொத்தியன்றதெனக்குறித்ததென்க.

அல்லதூஉம் இச்செய்யுளடி நேரடியாய் விதித்தவெழுத் தெல்லையி னிகவாது நிற்றலி னிக்குறிப்பா னிந்நூல் மெய்வீட்டி னெறித்தா யவ்வீட்டினெறிக் கெல்லையாய ஞானத்தினிகவாது நின்றதெனினுமா மென்க. எல்லை என்னெனிற் * "பத்தெழுத்தென்ப நேரடிக்களவே-யொத்தநாலெழுத்தொற்றலங் கடையே" யென்பவென்க. இங்ஙனங் குறித்தற்கன்றே இச்செய்யுளீற்றடியி னூற்பெயரை வேறடைகொடாது தனிமையினிறுத்திய தென்க.

இச்செய்யுள் சிறப்புப் பாயிரத்ததாயின் அப்பாயிரத்திலக்கண மிதனுளிருந்தவா றெங்ஙனமென்னின் வள்ளலென்பதனால் ஆசிரியர்பெயரும், குருராயன்வாது வென்ற சம்பந்தன் வள்ளன்மலர்த்தாடலைமேல் வைத்துளாதா னென்பதனுன் ஞானசாரியாராகிய பிள்ளையா ருருளுபதேச வழித்தெனவுட்கொளப்படுதலின் வழியும், இந்நூற்றொடர் தமிழ்த் தொடராகலினித் தமிழ் வழங்கு நிலமேயிந்நூல் வழங்கு நிலமெனக் கருதப்படுதலின் எல்லையும், ஒழிவிலொடுக்கநூ லென்பதனால் நூற்பெயரும், ஒழிவிலொடுக்கமெனவன்மொழித் தொகைப் பெயர் மாத்திரையினில்லாது நூலெனவிரித்தமையினிந்நூலுந் தொகை விரியுடையதெனக் கருதப்படுதலின் யாப்பும்,

* தொல்காப்பியம்; செய்யுளியல்-சூத்திரம் 38.



உள்ளத்தழிவி லென்பதனாற் கருதிய பொருளும், அன்பரெலா முண்ண வென்பதினால் அன்பரெலா முணற்பொருட்டிஃதியற்றுக வென்றருள்ளெழுந்தெதிரிட்டு நின்றது ஆசிரியரது பெருங்கருணை யெனக்கருதப்படுதலிற் கேட்போரும், உள்ளத்தழிவிலடுக்குந் தேனென்பதனாற் பயனும் புலப்படு மாகலின் அவை யிருந்தவா றிங்ஙனமென்க.

(சிறப்புப்பாயிரவுரை முற்றிற்று.)

---

## திருவிளையாடற் கருப்பொருள்.

---

### உக்கிர குமாரனுக்கு வேல்வளை செண்டு கொடுத்த படலம்.

12. வேலைமக வான்மேரு வேல்வளைசெண் டால்வெல்ல
வேலையுடை யாற்களித்து விண்ணுற்றான்—சேலலைகட்
காந்திமதித் தாய்க்குங் கவின்மதுரை யுக்கிரற்கு
மேய்ந்தமணங் கண்டா னினிது. (உரு)

### கடல் சுவற வேல்விட்ட படலம்.

13. போகியழைத் தேவப் புனற்கரசன் றென்மதுரைப்
போகி யொலிக்கப் பொருவழுதி—யேகியவிர்
வேலாற் கடல்சுவற வேசெய்து வீழ்ந்தெழுந்தா
னலால முண்டா னடி.

### இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.

14. முத்தமிழோ னல்விண்சென் மூவிறையு ளிந்திரனின்
கொத்தவிழ்தார் தாங்கிக் குயினன்கை—வித்தகனு
மிட்டான் சிறையிலெதி ரிந்திரன்றன் மேல்வளையை
விட்டான் மனைபெற்றான் வென்று.

### மேருவைச் செண்டாலடித்த படலம்.

15. பஞ்சத்தாற் பஞ்சவனும் பாண்டரங்கன் சொற்படியே
யஞ்செண்டான் மேருவினை யன்றடித்து—விஞ்சுதனம்
பெற்றான் மகவீன்றான் பேழ்மதுரை நம்பனடி
யுற்றா னரசாண் டுவந்து.

### வேதத்திற்குப் பொருளருளிச்செய்த படலம்.

16. மாமறையின் மெய்ப்பொருளை மன்கண் ணுவர்முதலோந்
தாமுனிவ ரோராது தன்புறங்காற்—பூமதுரைத்
தற்பரனத் தூயோர்க டாமகிழத் தோன்றியுரைத்
தற்புதமா யேமறைந்தா னிங்கு.

### மாணிக்கம் விற்ற படலம்.

17. வீரனறு கால்வீய விறுமுடி சூடமணி
சோரர் கொளவமைச்சர் சோர்வுறுங்காற்—சீர்மதுரை
மாதவன்வ லாரியுடன் மாணிக்கந் தந்ததன்றே
ரோதிமறைந் தானுண்டா னுய்ந்து.

### வருணன் விட்ட கடலை வற்றச்செய்த படலம்.

18. வருணனும் மாலால் வயிற்றுவலி தீர்ப்பான்
குரவையினை யேவவது கூடற்—பெருகிவரக்
கண்டா னபிடேகன் கார்நான்கா லாலால
முண்டானுண் பித்தா னுவந்து.

### நான்மாடக் கூடலான படலம்.

19. நான்மூன்று செல்லேவ நாணிவரு ணன்மதுரை
தான்மூழ்கத் தென்னவனுந் தாபமுற—வான்முடியி
னுன்மாட நான்முகிலா னன்கமைத்தா னன்றுமு
னுன்மாடக் கூடலந்த நாடு.

### எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்.

20. எல்லாமா யல்லவுமா யெய்தசிவன் கூடலிடை
யெல்லாமாய் வல்லசித்த னெஃறெய்தி—யெல்லாருங்
காணப் பலவாடல் காட்டினான் மாலயற்கு
மாண வளர்ந்தான் மகிழ்ந்து.

### கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்.

21. இச்சித்தன் செய்கையினை யின்றறிவா மென்றவிறை
மச்சறவே நோக்கி மருளோட்டி—யச்சுறவான்
கல்லானைக் கங்கு கரும்பருத்தி னன்மதுரை
யல்லாருங் கண்டத் தரன்.

### யானையெய்த படலம்.

22. மால்பணியாற் சாவகர்செய் மாவேள்வி தோன்றியமா
மால்பணிக்கக் கூடன் மருவுதலும்—வேல்வழுதி
சிந்தா குலமுற்றான் சேவகனுய்ச் சென்றழித்தா
னிந்தார் சடிலத் திறை.

### விருத்தகுமார பாலரான படலம்.

23. மாதவன் வைணவத்து மாணிக்குக் கௌரியினை
வேத விதிப்படியே வேட்பிக்க—நீதமிலாச்
சுற்றத்தார் மெய்ச்சிடமூத் தோன்குமரன் சேயானன்
பெற்றத்தான் கூடற் பிரான்.



### மாறி யாடின படலம்.

24. செய்ய பரதந் தெரிராஜ சேகரனம்
மைய னடங்கண் டகங்குழைந்து—மையணிந்த
வத்தனே கான்மாறி யாடுமென வாடினான்
சித்தனுங் கூடற் சிவன்.

(இன்னும் வரும்.)

ஏ. சங்கரலிங்கம் பிள்ளை.

---

## திருவிடைமருதூர்க் கலம்பகம்.

---

### ஆசிரியவணக்கம்.

உலகிலொளிர் கலைக்கடன்முற் றுண்டுமன விருளகல வோங்கி மின்னி
யலகில்பல கவிஞர்வெருஉக் கொள்ளவதிர்த் தார்ப்பரித்தே யளியனேன்றன்
தலைவறிவுத் தடநிரம்ப மனப்பறம்பிற் றூயதமிழ்ச் சோனை தூவுங்
குலவுபுகழ்ச் சூரிய நாரணமுகிறன் குரைகழலுட் கொண்டு வாழ்வாம்.

கடலாடை யுடுத்த நிலமகடன் எழின் முகமென இலங்கும் இடைமருதூரெம்மான்றன் றாளில் அணிபெறச் சார்த்திய, இக்கலம்பகமாங்கவி மாலையை யியற்றியவர் திருவெவ்வுளூர் இராமசாமி செட்டியார் என்பவர். இவர், திருத்தணிகைக் கந்தசாமி ஐயரிடம் இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபற வோதியுணர்ந்தவர். இவர், பற்பல தலங்களிலுந் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்குங் கடவுளர்மீது பற்பல பதிகங்கள் பாடியுள்ளார். பண்டிதர் பலரும் பெரிதும் பாராட்டத் தகுவதொரு நூலாயிக்கலம்பகத்தை யாராய்வான் புக்கவெம்மைக் கண்டுளவரு மெள்ளாதருள் புரிவாராக, ஆசைபற்றியறைய லுற்றே னாதலின்.

மருதமர மொன்றினைத் தன்னிடைத் தலவிருக்கமாக வமையப் பெற்று விளங்குந் தன்மையால் இந்நகர் இடை மருதூர் எனும் பெயர்த்தாயிற்று இதனை,

"பேசுமெம்மரு தலர்சேய்ப் பினைறகொள்வே ணியனைப்
பூசை செய்துதன் பெயர்முத விடைகளாற் புறஞ்சூழ்
கேச ரங்களை வருவியாக் கிளர்முத லீறு
வீசி நல்லிசை பயில்விக்கும் விமலனுண் மகிழ."

என்னுஞ் செய்யுளா னுணர்க.

கலம்பகமாவது—ஒரு போகும் வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் முதற் கவியுறுப்பாக முதற் கண் அமைத்துப் புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னும் ஈரொன்பா னுறுப்புக்களும், காலத்தான் மரீஇய இடைச்சியார், பிச்சியார், வலைச்சியார், கொற்றியார், கிரையார், பள், கிளிப்பயிற்று, சல்லாபம் முதலியனவும் இவையுமாறு மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கலி நிலைத்துறை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை ஆசிரியத்துறை, வெண்டுறை முதலிய செய்யுள் விகற்பங்களை யுடையதாய் இடையிடையே வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் விரவிவர யமகம், திரிபு, வண்ணம், சந்தம் முதலியனவும் பொருந்த அந்தாதித் தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்து அணிநயஞ் செறியப் பாடப்படுவதொரு பிரபந்தமாம். இதனைப் பாடுங்கால் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும் வேளாளர்க்கு முப்பதுமா மொழிதல் வழக்கென வறைகுப வான்றோர். கலம்பக விலக்கணத்தை இலக்கணவிளக்கம் வச்சணந்தி மாலை பன்னிரு பாட்டியல் முதலிய நூல்களிற் காண்க. ஆசிரியர் தொல்காப்பியனார் தமது செய்யுளியலில் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என்று கூறினமையானும், உரையாசிரியர் நச்சினார்க்கினியார் 'விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்து வரத் தொடுக்கப் படுந் தொடர்நிலை மேலது' என்று உரை கூறினமையானும் இக்கலம்பக மென்னும் பிரபந்தம் எண்வகைவனப் பினுளொன்றாய்ப் புதுவது புனையுந் தொடர்நிலை மேலதாம் விருந்து என்பதனியலுடைத்தாத லாய்ந்துணர்க. இதனைச் சிறுகாப்பியத்து ளடக்குவாரு முளர். அங்ஙன மடக்குதல் பொருந்தா தென்ப தெம்மனோர் துணிபு. "நந்தலில்லா நல்வளத்தோன் மலர்பரப்பி நறைபிலிற்றி யணிமிக் கோங்கக், கந்தமுறுங் கலம்பகப் பாமாலை" என்று கூறியதற் கேற்பப் பல்வகையான நறுமலர்களால் யாக்கப்பெற்ற வொரு பூமாலைபோல் இன்சுவை பொதுளிய பலவிதப் பாக்களாற் புனையப் பெற்றதொரு நூலாமாதலின் இப்பெயர் 'கதம்பகம்' என்னும் வடசொல்லின் சிதைவெனக் கோடல் தகுதியே. இனிக் (கலப்பு + அகம்) எனப்பிரித்து மெலித்தல் விகாரம்பெற்றதாகக் குறித்துப் பற்பல வுறுப்புக்களையுந் துறைகளையுங் கலப்பாகத் தன்னகத்தேயுடைய தெனக் கூறுதலு மொன்று. இன்னும் ஒரு சாரார் பன்னிரண்டு மரக்கால் என்னும் பொருள்படும் 'கலம்' என்னுஞ் சொல்லும், கடவுளது ஆறு குணங்களை யுணர்த்தும் 'பகம்' என்னுஞ் சொல்லுங் குறிப்பினானே பன்னிரண்டு ஆறு என்னுந் தொகைகளை மாத்திரந் தெரித்து, உம்மைத்தொகையாய்ச் சேர்ந்து ஈரொன்



பான் உறுப்பினையுடைய தொருபிரபந்தத்தினைக் காரணக் குறியாயுணர்த்திற் றெனக் கூறுப.

இனி யிந்நூலைப்பற்றிக் கூறப்புகுவாம். சாசாங்கி நாடகத்தையியற்றிய **சலசலோசனச் செட்டியார்** என்னுந் தவப்புதல்வன் இளவயதின் மரித்த ஞான்று, புத்திர சோக மேலீட்டான் உலகவாழ்க்கையில் வெறுப்புற்ற தந்தையாராகிய திரு இராமசாமி செட்டியார், எல்லாம் வல்லமுழுமுதற் கடவுளைப் பாடலே தமக்குப் பொழுது போக்காகவும், மனத்துயராற்று மருந்தாகவுங் கொண்டு இடை மருத நகரில் தாம் வசிக்குங்கால் இக்கலம்பகத்தைப் பாடியருளினமையை யுணர்ந்தோர் யாவரும், இந்நூல் பத்திரஸ முதிர்ச்சி வாய்ந்துள தென்பதை யாங் கூறுமலே தெள்ளிதி னுணர்கிற்பார்.

நூற்பாயிரத்திற் சமயாசாரியர் நால்வரைத் துதிக்குங்கால், அன்னோரைப் 'பிள்ளை', 'பெரியர்', 'பிரியர்', 'அடிகள்', என்று கூறினமையின், ஒரு பிரபுவினிடம் அருள் பெறவேண்டி யாங்கொருவன் அவர் தம் புதல்வனைக் கொண்டாயினும், அவரைத் தெரிந்த பெரியாரைக் கொண்டாயினும் அவர் தம் நண்பினரைக் கொண்டாயினும், அன்றேல் அவர் தம் ஆசிரியரைக் கொண்டாயினுங் காரியசித்தி யடையும் உலக வழக்கினை இந்நூலாசிரியர் இனி துணர்ந்தவராந் தன்மை வெளியில் விளங்கும். களிற்றினைக் களிறுகொண்டு கைப்பற்றுமாபோல் ஒருவனைக் கைவசப்படுத்த விரும்பின் அவனது தன்மை பெற்ற இனத்தாரைக் கொண்டே யங்ஙனஞ் செய்தல் எளிதாமாதலின், 'பெண்ணிடத்தன்' றன் அருள் பெறப் 'பெண்ணினது சம்பந்தத்தை யோரோவோர் விதமாவுடைய விந்நால்வரையும் வணங்கினமை மிகவுமேற்புடைத்தாம்.

இடைமருதா ரெம்மான் மேற்பாமாலை புனைவான் புகுந்த விவர், தமக்குமுன்னரே மும்மணிக் கோவையினைப் பெம்மாற்குச் சார்த்தியவரும், தம்மைப்போல் 'பட்டினத்தார்' என்ற பெயர் வாய்க்கப் பெற்றவரும், * வணிக குலத்தி லுதித்தமையாற் றமக்கினத்தாருமாகிய பட்டினத்தடிகளைத் துதித்தமை பெரிதுஞ் சால்புடைத்தாமாறு காண்க. அன்னாரியற்றிய மும்மணிக் கோவையின்மீதுள்ள ஆர்வமேலீட்டினைத் தெரிப்பான் அதனை "மலைத்தே னோநன், மணிக்கோவை யுனுஞ்சுரபி யின்பாலோ வீதெனமா மதுரச் சொன்மும், மணிக்கோவை யெனும்வளங்கொள் பிரபந்தம்" என்று சிறப்பித்துக்கூறியமையே யாம் மேற்குறித்ததற்குத் தக்க சான்று பகரும்.

முன்னர்ப் பட்டினத் தடிகளைக் கள்வனென மருண்ட பத்திரகிரி மகாராஜா அவரைக் கழுவேற்றத் துணிந்த போழ்தத்து, அவர் கழுமரத்தை நோக்கி

---

*பட்டினத்துப்பிள்ளையார் வணிக குலத்தினரல்லரென்றும் வேளாள குலத் தவதரித்தவரென்றும் சொல்லுப பலர். ப-ர்.

"என்செய லாவதி யாதொன்று மில்லை யினித்தெய்வமே
யுன்செய லேயென் றுணரப்பெற் றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்து மூண்டதுவே"

என்னும் பாடலை யிசைத்த வளவிற் கழுமர மெரிந்து வீழ்ந்த அற்புதச் செய்கையினை வியந்து,

"இயலாதி முத்தமிழ்தேர்ந் தேத்துவெண்கா டர்க்காச்
செயிரார் கழுவெரியச் செய்தாய்" என்று கூறினமையானும்,

வெண்காடர்தம் பரிகலச் சேடத்தைப் பத்திரகிரியா ரிடவுண்டவொரு பெண்ணாய் அந்நல்வினையாற் காசியரையன் மடமகளா யுதித்துப் பின்னர் இடைமருதில் யோகு செய்து வதிந்த பத்திரகிரியாரை யண்மி அவருடன் சிவச் சோதியிற் கலந்த தன்மையினை யுலகினர் இனிதறிவான்,

"நாயுதித்த பெண்ணின் நவைதீர்த்துப் பேறளித்த
வேயுதித்த முத்தே" யென்று புகழ்ந்தமையானும் பட்டினத்தடிகள்மே லிந்நூலுடையார்க்கு உண்டாகும் ஆர்வ மிகுதியினை யாவரே குணிக்கற்பாலர்? அதான்றியும் இவர் தமது நூலில் அவ்வடிகளைப்பற்பல விடங்களிலும் பின்பற்றி யுள்ளார். உதாரணமாகப் பட்டினத்தடிகள் தமது கோயில் நான்மணி மாலையில்,

"வெண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து
நந்தா விளக்கை நந்துபு பெயர்த்த
தாவுபல் லெலிக்கு மூவுல காள
நொய்தி லளித்த கைவளம் போற்றி"

என்று கூறியாங்கு இந்நூலுடையாரும்.

"தடையற வெலியொரு தனியர சுறவருள்
கொடையினி லிசைபெறு குணமுள மகிமையை"

என்று தங் கலம்பகத்திலுரைத்துளர்.

இவர்தம் ஆசிரியராய கந்தசாமி ஐயரது மூதாதையர் உரைத்த கையுலாவின்கண்,

"சிந்தா மணியாஞ் சிலப்பதிகா ரம்படைத்தான்
கந்தா மணிமே கலைபுனைந்தான்—நந்தா
வளையா பதிதருவான் வாசவனுக் கீந்தான்
றிளையாத குண்டலகே சிக்குந்" என்று பெருங்காவியங்களைந்



தின்பெயரும் வெவ்வேறு பொருடருமாறு ஒருங்கே யமைக்கப் பெற்றவா போல், இவரும் நற்று யிரங்கற் றுறையாகிய "வளங்குலவு" மென்னுந் தொடக்கத்த செய்யுட்கண் அமைத்தவாற்றால் இவர் தம் ஆசிரியர் பரம்பரையின் மாட்டு இவர்க்குள அன்பின் மிகுதியும் அவரைப் பின்பற்றிய திறனுஞ் செவ்வனே விளங்குகின்றன. (இன்னும் வரும்.)

ந. பலராம ஐயர்.

---

## கல்லாட வாராய்ச்சி.

---

சிவலோகமென வற்புறுத்திக் கூறப்பட்ட பாண்டி நாட்டில் எம்மொழிக்கும் பின்னிடாத தமிழ்மொழி தோன்றுதொட்டு மூன்று சங்கங்களில் வீறு பெற்று வளர்ந்தது. அவற்றுட் கடையது சற்றேறக்குறைய கி. மு. 1750-ஆம்வருடம் தொடங்கிக் கி. பி. 100-ஆம்வருடம் வரையும் நடந்தது. இக்கடைச்சங்கம் முடத்திருமாறன் காலந்தொடங்கிப் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி காலம்வரை தழைத்தது. இவ்வுக்கிரப் பெருவழுதியார் காலத்தே நாயனாரது திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. அப்போழ்து சங்கப்புலவர்களாய் வீற்றிருந்த கபில பரண நக்கீரராதி நாற்பத்தொன்பதின்மருட் கல்லாடர் என்பவர் ஒருவர். இக்கழகமாந்தர் பெரும்பான்மையும் சிவநேசமுடையவர்களாதலின் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத்தொகைக் கண்ணே தொகையடியாருட் 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனப் புனைந்துரைக்கப்பட்டனர்.

கல்லாடரது சரிதம் வரன் முறையாய்க் கிடைத்திலது. ஆயினும் இவரது குணம், கல்வித்திறன், கடவுண் மாட்டன்பு, மற்றைக் கொள்கைகள் முதலியன இவரது பாடல்களான் அங்கையின் நெல்லி யங்கனியெனத் தெற்றென விளங்கும். இவர் நக்கீர கபில பரணதியரோடுடனுறைந்தவர். நக்கீரர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைத் தமது நெடுநல் வாடையிற் புகழ்ந்ததற்கேற்பக் கல்லாடரும் அவனது பெருமையை ஓர் அகவற்பாவாற் சிறப்பித்தார். கல்லாடரது சீர்த்தி என்றுங்குன்றாது அவர் பேரன்பின் மேலிட்டால் அருளிய கல்லாடத்தினும், கண்ணப்பதேவர் மறத்திலும் நிலைபெறும். கற்றவர்கள் அருந்துதற்கினிய கனியெனத்தகும் கல்லாடம் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்த திருச்சிற்றம்பலக் கோவையாரைச் சங்கப்புலவருள் முரண்பட்ட நக்கீரராதியர் குற்றங் கூறியவழி அவற்றிற்கு 'வழுவமைதி கூறுவானியற்றப்பட்ட நூலெனச் சிலர் கொள்வர். இதனது உண்மையை நிறுவுதற்கும் அல்லாத வழி இக்கொள்கை பொய்யென மறுத்தற்கும் வலியிலம். அஃதெவ்வாறாயினு மாகுக. கல்லாடத்தின் சுவையினைச் சற்றே அநரர்வாம்

அரிய நூல்களின் பெருமை அரிய பழமொழிகளால் வெளிவருகின்றது. 'நாலு மிரண்டுஞ் சொல்லுக்குறுதி', 'திருவாசகத்தி லுருகான் மற்றொரு வாசகத்து முருகான்', 'கம்ப சூத்திரமோ?' 'சிவனின்மிக்க தெய்வமுமில்லை சித்தியின் மிக்க நூலுமில்லை' யென்னும் பழமொழிகள் எவ்வாறு நாலடியார், திருக்குறள், திருவாசகம், இராமாயணம், சிவஞான சித்தியாராதிய நூல்களது பெருமையை விளக்குகின்றனவோ அவ்வாறே 'கல்லாடங் கற்றவனோடு மல்லாடேல்' என்னும் ஆன்றோர் வசனம் கல்லாடத்தின் அருமையைத் தெரிவிக்கும்.

கல்லாடம் பல்லாற்றானும் உயரிய பெருமை வாய்ந்த நூல். சங்கமே பொய்யென மருண்ட மனத்தாற் பிதற்றுவார் இதனையாவது ஆராய்ந்து தெளிவடைக. இந்நூலின்கட் கடைச்சங்கத்தின் சில விருத்தாந்தங்களும், சோமசுந்தரக் கடவுளது பலதிருவிளையாடல்களும், பாரதராமாயண வரலாறுகளும், கண்ணப்பர் காரைக்காலம்மையார் மூர்த்திநாயனார் சாக்கியர் மார்க்கண்டர் முதலாய அன்பரின் திருத்தொண்டின் திறமும், திருமாலின் உக்கிர நரசிம்மாவதார வைபவமும், இன்னுஞ் சில விடயங்களும் கற்றவர் காமுறும் வண்ணம் செந்தமிழ் ஊற்றெடுத்துத் தேனொழுகக் காணக்கிடக்கும்.

தமிழ்மாதின் எழில்நலனை யினிது நுகரவிரும்புநர்க் கிதனினுஞ் சிறந்த வேறு நூலொன்றுமின்று. சொற்பொலிவும் பொருட் பொலிவும் எங்கணும் மலிந்து தோன்றும். மாந்தர்க்குறுதி பயக்கும் அறம்பொருளின்பம் வீடாகிய நான்கனையும் ஒருங்கே பெறுதற் கியைந்தது. வெளித்தோற்றத்தால் அகப்பொருட் டுறைகளை விளக்கியதெனக் காணப்படினும், கடவுண்மாட்டுப்பேரன்பு படைத்தோர்க்கும் காமுகர்க்கும் கல்விப்பயனை யெய்த விரும்புவோர்க்கும் தனித்தனி அவரவர் நினைத்த வின்பத்தினைப் பயக்கவல்லது. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளருளிய திருச்சிற்றம்பலக் கோவையாரை அபியுக்தரொருவர்,

ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

என்றுரைத்த பெரும்புகழ் கல்லாடத்திற்கும் நன்குறப் பொருந்தும்.

கல்லாடத்தால் ஆசிரியரைக் குறித்து யாம் அறியக்கிடந்த வரலாறு பின்வருவதாம்:—கல்லாடர் பூதிப்பெருஞ் செல்வம் படைத்த யோகியர். வேதாகமங்கள் உடம்பாடே யாயினும் ஆகமங்களே யிவர்க்குப் பெருஞ்சிறப்பினவாம். இவரது வருண மின்னதெனத்தோன்றாவிடினும் அந்தணரல்லரெனத் தெரிகின்றது. ஏனெனில் அந்தணரைப் பலவிடத்தும் பெருமித



மாய்ப் புகழ்ந்திருக்கின்றாராகலின். தாமும் அந்தணராய வழி அப்புகழ் ஒரோவழித் தற்புகழ்ச்சியாம். சிவபெருமானது இணைமலர்ப் பாதங்களிவர் மனத்தே யெப்போழ்தும் பதிக்கப்பட்டன. சிவபெருமானது கீர்த்தியைப்பரவுந்தோறும் அடங்காப் பேருவகை மேலிட்டு அருண்மழை பொழிகின்றது. நாஸ்திகர்பால் வெகுண்ட மனத்தினர். அன்பர் பக்கல் தலையன்பு படைத்தவர். உலகியல் முற்று மறிந்தவர். தமிழமிழ் தருந்திய தண்டமிழ்வாணர்.

பொதுவகையான் நாமுரைத்த சிறப்புக்களைக் கல்லாடத்தினின்றும் தக்க காட்டுக்களாற் சிறிது விளக்குவாம்.

கடைச்சங்கத்தைப்பற்றி யிந்நூல் வாயிலாகப் பின்வருவனவற்றை யறியலாம்:—

கடைச்சங்கத்தில் ஒரே காலத்தில் வீற்றிருந்து தமிழாராய்ந்த புலவர் நாற்பத்தொன்பதின்மரே யென்பதற்குக் கல்லாடத்திலும் சிறந்த சான்று வேறிலது. இறையனார் இயற்றிய களவியலைக் குறுமுனியும் புலவர் நாற்பத்தொன்பதின்மரும் அமுதமெனப் பருகினரென்றார்.

செங்கட் பகடு தங்குவய லூரர்க்
கருமறை விதியு முலகியல் வழக்குங்
கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொன் மயக்கமும் வருவன வுணர்த்தி
யைந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்க
ளேழெழு பேருங்கோதறப் பருகவும்
புலநெறி வழக்கிற் புணருல கவர்க்கு
மூற்றவும் பெருக்கு முதற்றுபதர்க்கு
நின்றிறந் துணர்த்தவுந் தமிழ்ப்பெயர் நிறுத்தவு
மெடுத்துப் பரப்பிய விமையவர் நாயகன் (65-ஆம் அகவல்).

அன்பே யுருவெடுத்த தருமியென்னும் அந்தணர் பொருட்டு ஆலவாயண்ணல்,

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

என்னும் பாசுரத்தை அன்பரது மிடிதீர அருளி அதனாற் பாண்டியன் கட்டிவைத்த பொற்கிழியை அவற்குத் தந்தனரென்பது,

கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
யென்னுளங் குடிகொண்டிரும் பயனளிக்கும்
கள்ளவிழ்குழல் சேர்கருணை யெம்பெருமான் (1-ஆம் அகவல்.)

என்னும் அடிகளால் விளங்கும். கொங்குதேர் வாழ்க்கைப் பாசுரம் சங்கத்தார் கோத்த எட்டுத் தொகையுட் குறுந்தொகையில் மூன்றாஞ் செய்யுளாக இறையனாரை ஆசிரியராகக்கொண்டு விளங்கும்.

பின்னர் இச்செய்யுள் புலவர் குழாத்தின் முன்னிலையிற் கல்விச் செருக்கால் வீறடைந்த நக்கீரரால் வழுவுடைத்தெனப் பழிகூறப்பட்டு ஆலவாயண்ணல் புலவருருக்கொடு இறையனாராகலக்கழகத்திற் போந்தபோழ்தும் முரணுடை நெஞ்சால் நக்கீரர் அதன்கட்போலிக் குற்றங் காட்டியபொழுது அதற்குத் தக்க மறுப்புக் கருணையங்கடலாகிய பரமசிவமளிப்பவும், கேடுறுவார்க்கு மதிதேயுமென்னும் ஆன்றோர் மொழிக்கேற்பத் தமிழ் வல்லாராகிய நக்கீரர் முரண்வாதத்தால் தாம் பிடித்ததையே சாதிக்க, அவர்பால் இருவகைக்கருணையில் ஒப்புடையது மறக்கருணையேயென்று கடவுளார் கண்டு செருக்குற்றானைத் தமது அழல்விழியாற் சற்றே நோக்கலும், வாய்வன்மையும் மதிவன்மையும் மெய்வன்மையு மிழந்து நக்கீரர் பொற்றாமரைத் தடத்தின்கண் மூழ்கினர். ஏனைப்புலவர்கள் உருக்கரந்த இறையனாராகிய சோமசுந்தரக்கடவுளை நெஞ்சம் நைந்துருகி நக்கீரர்பாற் கடைக்கணிக்கப் பலவாறு பரவியபோது கடவுளதருளால் மூழ்கிய புலவர் கரையேறி ஆணவமலமொழிந்து ஆலவாயிற் பெருமானடிகளது புகழைச் செந்தமிழாற் பாடினரென்பதற்குப் பின்வரும் பாவடிகள் தக்க சான்று பகரும்.

அருந்தமிழ்க்கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங் களத்தினன். (52-ஆம் அகவல்.)

கல்விச்செருக்கால் அருடருங்கல்வியின் மெய்ப்பயனை யெய்தாது, தற்காப்பினுக்கியைந்தவாளால் ஒருவன் தன்னையே கடிந்து கொள்வதையொப்பக் கழகமாந்தர் கல்வியின் மேம்பாட்டால் ஆணவமலஞ்செறிந்து முக்திவழி அடைபட்டு அவலக்கடலில் ஆழுந்தறுவாயில் திருவள்ளுவர் தோன்றினர்.

இத்திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளைக் கடைச்சங்கப்புலவர் முன்னிலையில் அரங்கேற்றப் புகுந்தாரென்பதூஉம், அந்நூற்குச் சிறப்புப்பாயிரம் அப்புலவர் ஒவ்வொருவராலும் கொடுக்கப்பட்டதென்பதூஉம், அப்பொழுது இறையனார் தாமே அந்நூற்கு முதற்கவியளித்தாரென்பதூஉம், அவர்முக்கண்படைத்த முழுமுதற் கடவுளேயென்பதூஉம், பின்வரும் பாவடிகளால் விளங்கும்.



சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான் (13-ஆம் அகவல்.)

(இன்னும் வரும்.)

எஸ். ஏ. திருமலைக்கொழுந்து பிள்ளை.

---

## ஜெயகாந்தன்.

### அங்கம்—I. முதற்களம்.

(358-ம் பக்கத்தொடர்ச்சி.)

**ஜெயகாந்தன்.**—(*தாய் தந்தையரை வணங்கி*) பிதா! தாங்கள் சொல்லுகிறதை யான் தடுக்கிறதாக எண்ணப்படாது. அங்கு நிகழ்ந்தவைகளை யெல்லாம் பார்த்து வரவேணுமென்ற அவா என்னைப்பிடர் பிடித்துந்துகின்றது. அன்றியும்ஒருக்கால் அப்பெண் பிழைத்திருப்பாளாகில் இனியாவது யாதொரு தீங்கும் அவட்கு நேரிடாது தக்க ஏற்பாடுசெய்து வருகிறேன். அம்மா, தாங்களும் என் பிதாவும் தயைசெய்து விடையளிக்க வேண்டுகிறேன்.

**சாசாங்கன்.**—இவ்வளவும் திண்டாட்டந்தான். இப்போதா தெரியும்!

**சத்ருஜித்.**—(*சற்று யோசித்து*) ரத்னு! உன் அபிப்பிராய மென்ன?

**ரத்னாங்கி.**—ஜெயகாந்தன் சொல்வதும் ஒருவிதத்தில் சரியாய்த்தானிருக்கிறது. தங்கட்கும் அபிப்பிராய மிருக்கிற பட்சத்தில் தகுந்த பரிவாரங்கள் சூழ அனுப்பலாம்.

**சத்.**—ஜெயகாந்தா! உனது தாயாருக்கும் அபிப்பிராய மிருக்கிறது. ஆகையால் நீதக்க பரிவாரங்கள் சூழச்சென்று அதிசீக்கிரத்தில் திரும்பிவிடு கண்மணி!

**ஜெய.**—பிதா! அப்படியே.

**சாசா.**—மஹாராஜா! எனக்கும் விடையளிக்கவேண்டும். யானும் இளவரசருடன் சென்று வருகின்றேன்.

**ஜெய.**—(*சிரித்துவிட்டு*) அப்பா! அப்பா!! நீ வேண்டவே வேண்டாம். உன்னை அழைத்துக் கொண்டுபோவது, பூனைக்குட்டியை மடியில் கட்டிக்கொண்டு சகுனம் பார்த்தது போல்தான்.

சரசா.—பலே ! பலே ! போகும்படி உத்திரவு கொடுத்தபிறகு சந்திரனைக் கண்ட குமுதம்போல் மலர்ந்துவிட்டதே இளவரசர் முகம். பிரபஞ்சமே ஸ்திரீகள் கையில் இருக்கின்றது. ஆனால் நான் வர வேண்டாமோ இளவரசே !

ஜெய.—வேண்டாமப்பா, வேண்டாம்.

ரத்ந.—ஏனப்பா வேண்டா மென்கிறாய் ? இவனை அழைத்துக்கொண்டு போகிறது தானே.

ஜெய.—அப்பா ! அவன் ஒரு நிமிஷமும் அமரிக்கையாயிரான். வேண்டவே வேண்டாம்.

சரசா.—இல்லை யில்லை இளவரசே ! அமரிக்கையாகவே யிருக்கிறேன்.

ஜெய.—ஆனால் வந்து அழு.

சரசா.—அப்படியானால் நான் வரமாட்டேன். என்னால் முடியாது, இள வரசே.

ஜெய.—என்னடா இதுகாறும் வருகிறேன் வருகிறேன் என்று சொல்லி விட்டு இப்போது முடியாது என்கிறாயே! என்ன முடியாது.

சரசா.—அழ முடியாது.

ஜெய.—யார் உன்னை அழச் சொன்னது.

சரசா.—தாங்கள் தான் இப்போது சொன்னீர்களே "வந்து அழு" என்று.
(சத்ருஜித்தும் ரத்நவதியும் சிரிக்கிறார்கள்.)

ஜெய.—(சிரித்துவிட்டு) மூடசிகாமணி ! அழைத்துப் போவதற்கு அவ்வள வாக விருப்பமில்லாமையைக் குறிக்கிறதே யொழிய அழுகிற தென்பதல்ல அதன் பொருள்.

சரசா.—ஓ! அப்படியோ! நான் அப்படி பொருள் கொள்ளவில்லை. தாங்கள் நாடியிருக்கும் பெண்ணை ஒருக்கால் அக்கினி பகவான் விழுங்கி விட்டிருந்தால் தாங்கள் அழவேண்டி யிருக்குமே, அப்போது என் னையும் கூட அழும்படி இப்போதே கேட்டுக் கொள்ளுகிறீர்களா க்கும் என்று நினைத்தேன்.

ஜெய.—அடே ! உன் புத்தியை என்னென்று சொல்வது. இருக்கட்டும், நீ உடனே சென்று பிரயாணத்துக்குத் தயாராயிரு. இதோ யானும் புறப்படுகிறேன்.

சரசா.—அப்படியே இளவரசே. மஹாராஜா! போய்வருகின்றேன். அம்மா! உத்திரவு.



(அரசன் அரசி போய்வா என்று உத்தர வளிக்கிறார்கள்; சரசாங்கன் போய்விடுகிறான்)

ரத்ந.—குழந்தாய்! அவன் ஏதாவது பரிகாசமாக வார்த்தையாடினும் அதனை நீ ஒரு பொருளாகக்கொண்டு அவன்மேல் கோபிக்காதே தெரியுமா ?

ஜெய.—தெரியும் அம்மா.

சத்.—அவன் அதிக யோக்கியன். ஆனால் குறும்புத்தனமாத்திரம் அவனிடம் ஜாஸ்தியாகவிருக்கிறது. குழந்தைகள் தத்தம் தாய் தந்தையரிடத் தில் வேடிக்கையான வார்த்தைகள் சொல்லும்போது அவற்றைக் கவனியாது எவ்வாறு உவகை கொள்ளுகிறார்களோ அவ்வாறு அவன் வார்த்தைகளுக்குச் சந்தோஷிக்க வேண்டுமே தவிர கொ ஞ்சமும் கோபம் கொள்ளப்படாது.
(சரசாங்கன் மறுபடியும் வருகிறான்.)

ஜெய.—என்னடா மறுபடியும் வந்தனை.

சரசா.—ஒருவார்த்தை இளவரசே. நான் என்னமோ தங்களுடன் வருகிற தாகத்தான் ஒத்துக் கொண்டேன். ஒருவேளை என்னுடைய வீட் டுக்காரி போகவேண்டா மென்றால்—.

ஜெய.—நின்றுவிட்டால் போகிறது. அதற்கென்ன இப்போது.

சரசா.—அதை கேட்கத்தான் வந்தேன். ஏன் இளவரசே தாங்கள் கூடத் தானே நின்றுவிடவேண்டியது.

ஜெய.—(சிரித்துக்கொண்டே) பிதா ! இம்மடையனை என்ன செய்யலாம்.

சரசா.—இல்லை மஹாராஜா ! போய்விடுகிறேன்.

சத்ரு.—சந்தியாவந்தன காலமாகிறது, வாருங்கள் போகலாம்.

ஜெய.—ஆம் பிதா.
(அனைவரும் போகிறார்கள்.)

---

## (அங்கம். 1: களம். 2.)

---

இடம்:—கேரளநாட்டு உத்தியானவனத்தில் சித்திரகூடமண்டபம்.
காலம் :—நடுப்பகல்.
(வீரகேசரி என்னும் அரசன் தன் சிநேகர் சூழவீற்றிருத்தல்.)

வீரகேசரி.—தனஞ்சயா! இன்று நம் கூட்டத்தில் அநேகம் பெயர் வர வில்லைபோற் காண்கிறதே.

தனஞ்சயன்.—ஆம், மகாராஜா ! வீரபராக்கிரமனும் இன்னும் சிலரும் வர வில்லை.

**வீரகே.**—ஏன் அவாள் வரவில்லை ? தெரியுமா உனக்கு ?

**தனஞ்.**—அவர்களைத் தாங்கள் சந்திரமுகி என்னும் மாது சிரோமணியை அபகரித்து வரும்படி அனுப்பினீர்களே.

**வீரகே.**—ஆம். ஆம். தனஞ்சயா ! யான் அதை மறந்துவிட்டேன்.

**பூரணன்.**—மகாராஜா ! இவ்வகண்ட பூமண்டலத்தில் செங்கோல் செலுத்தாநின்ற அரசர்களில் தம்மைப்போன்ற கிருபா நோக்கமுள்ள அரசர் வேறு யார் இருக்கிறார்கள். தங்கள் நாட்டில் நடக்கும் கோதானமென்ன ? பூதானமென்ன ? சுவர்னதானமென்ன ? வஸ்திரதானமென்ன ? அன்னதானமென்ன ? இவைளெல்லாம் அபாரமாகத்தானே நடந்தேறிவருகிறது. தங்களைத்தான் கர்ணன் என்று கூறவேண்டும். பாரதத்தில் சொல்லப்பட்ட கர்ணனைக் கண்டவர்கள் யார் ? இத்தகைய பெருமை வாய்ந்த தங்களையடுத்தவரிடத்தில் தரித்திரமும் நிலைபெறுமோ ? பிரபு ! அடியேன் பேரிலும் சற்று கிருபை பாலிக்கவேண்டும்.

**வீரகே.**—பூரணா ! நீ எது விஷயத்தில் குறைவை யடைந்திருக்கின்றாய் ? சொல். இதோ ஓர் கணப்போழ்தில் அதை நிவிர்த்தி செய்கின்றேன்.

**பூர.**—மகாராஜா ! வேறொன்றுமில்லை. நம்முடைய குழந்தை காப்பும் கொலுசும் வேண்டுமென்று சதா தொந்திரை செய்கிறது. நான் என்ன சொன்னாலும் கேட்கவில்லை. ஒரே பிடிவாதமாய் இருக்கிறது. வீட்டிற்குப்போனால் அதன் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை.

**வீரகே.**—பூரணா ! இவ்வளவுதானா ? இதையேன் முன்னமே என்னிடம் சொல்லியிருக்கப்படாது. யான் அப்போதே நிறைவேற்றியிருப்பேனே. ஆயினும் பெரிதல்ல. யான் 'ஓர்' சீட்டு தருகின்றேன். அதை நமது பொக்கிஷதாரரிடத்தில் கொடுத்து உனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்.

**பூர.**—அப்படியே மகாராஜா !

**மூடமதி.**—மகாராஜா ! யானும் உமது பால்ய சிநேகனாயிற்றே. எனக்கும் ஓர் உபகாரம் செய்யப்படாதா ?

**வீரகே.**—யான் சொல்லுவது நன்மையாயினும் தீமையாயினும் அதற்கு யாதொரு மாறும் சொல்லாது யான் உவக்குமாறு நடந்துவரும் உங்கள் போன்றவருக்குச் சகாயம் செய்யாமல் வேறு யாருக்குத்தான் செய்யப்போகிறேன். மூடமதி ! உனக்கு என்னவேண்டும் ? சொல்.



**மூட.**—மகாராஜா ! நமது சமுசாரத்திற்கு ஓர் வைரக்காதணி வேண்டுமாம்; யான் எங்கிருந்து செய்துகொடுப்பது ? யானோ பரம ஏழை. தங்கள் போன்றவருக்கு அது ஒரு பெருங்காரியமல்ல, இதனாலேயே அவளுக்கும் எனக்கும் எந்நேரமும் மன ஐக்கியம் கிடையாது.

**வீரகே.**—மூடமதி ! நீ இதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். யான் செய்து தருகிறேன்.

**மூட.**—பிரபு ! இன்றோடே என் கிலேசம் எல்லாம் ஒழிந்தது.

**தனஞ்.**—மகாராஜா ! இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய அபிப்பிராயத்தையும் சற்று கவனிக்கவேண்டும்.

**வீரகே.**—தனஞ்சயா ! என்ன சொல் ?

**தனஞ்.**—மகாராஜா ! தாங்கள் செய்து வரும் தானங்கட்கு அளவு சங்கியையில்லையென்றும் தாங்களே கர்ணன் என்றும் இவாள் சொல்லுகிறார்களே. தாங்கள் எப்போதாவது தங்கள் மனப்பூர்வமாய் ஒரு தருமமாவது செய்திருக்கிறீர்களா ? சொல்லுங்கள்.

**மூட.**—அடே ! உனக்கென்னடா தெரியுமென்று பேசுகிறாய் ?

**தனஞ்.**—ஆமாம். எனக்கென்ன தெரியும் உங்களைப்போல் புளுவுகிறதற்கு.

**வீரகே.**—தனஞ்சயா ! எப்போதும் உன்னுடைய குறும்பு போகிறதில்லையே.

**தனஞ்.**—இல்லை மகாராஜா. உண்மையைச் சொல்கிறேன்.

(பவரோக பண்டிதர் வருகிறார்.)

**பவரோக பண்டிதர்.**—மகாராஜா அவர்கட்கு வந்தனம் தந்தனம்.

**தன.**—அப்பா ரொம்ப இலக்கணமாக இருக்கிறதே.

**வீர.**—தனஞ்சயா ! இவருக்கு ஆசனமளித்து உட்காரும்படி சொல்.

**தன.**—அப்படியே. மகாராஜா. (பவரோக பண்டிதரைப் பார்த்து) சுவாமின் ! இங்கு எழுந்தருளும். (உட்கார்ந்த பின்) தாங்கள் யாரோ விண்ணப்பஞ் செய்யவேண்டும்.

**பவ.**—அப்பஞ்செய்ய எனக்குத்தெரியாது. நம்மிட சுயம்பாகி வெகு நேர்த்தியாகச் செய்வார். அவரைக்கொண்டு செய்விக்கலாம். (அனைவரும் சிரிக்கிறார்கள்). நமது தவசு பிள்ளைக்கு அப்பஞ்செய்யத் தெரியாதென்று நீங்கள் நகைக்கிறீர்கள். வெகு நேர்த்தியாகச் செய்வார். அதற்கு நான் உத்திரவாதி. மகாராஜா அவர்கள் உத்திரவளிக்கும் பட்சத்தில் இதோ ஒரு நொடியில் செய்விக்கிறேன்.

**வீர.**—இருக்கட்டும். தாங்கள் எந்த ஊர் ?

பவ.—யாமிருந்தது கருவூர். இப்போதிருப்பதிவ்வூர். இனிப்போவது
பேரூர்.

தன.—ஐயா! தங்கள் பெயரென்ன?

பவ.—நம் பெயரா கேட்கின்றீர்.

பன.—ஆம் சொல்லும்.

தவ.—அதள விதள பாதள தராதள அட்ட வட்ட சட்ட திட்ட—, மறந்து
விட்டேன். ஞாபகப்படுத்திச் சொல்லுகிறேன்.

தன.—என்ன ஐயா! உமது பெயரையே மறந்து விட்டீர்.

பவ.—இப்போதுதான் ஞாபகம் வருகிறது. இதோ சொல்லிப் போடுகி
றேன். சற்று இரும். (யோசிக்கிறார்)

தன.—இன்னம்—

பவ.—இதோ. ஐயோ! வந்தது போய் விட்டதே.

தன.—என்ன ஐயா இது. உமக்கு அதிக ஞாபக சக்திபோலிருக்கிறதே.

பவ.—இதோ வந்துடுது. வந்துடுது.

மூட.—எங்கே ஐயா வந்து விட்டது.

பவ.—ஞாபகத்துக்கு.

தன.—ஏதோ சொல்லும் பார்ப்போம்.

பவ.—அதள விதள பாதள தராதள அட்டவட்ட சட்டதிட்ட வீர தீர
சூர அகோர இந்திர சந்திர எந்திர தந்திர மந்திர ஜோஸ்ய
வைத்திய, பவரோக பண்டிதர் ஐயா என் பெயர்.

தன.—சபாஷ். நன்றாயிருக்கிறது! மெத்த நன்றாயிருக்கிறது! இருக்கட்டும்.
தங்கள் பெயர்தான் இவ்வாறு ஆயிற்றே, தங்கள் தகப்பனார் பெ
யரோ?

மூட.—அதுவும் உம்முடைய பெயரைப்போல்தான் நீளுமோ?

பவ.—ஆம். இன்னம் பெரிதாகவேதானிருக்கும். ஆனால்யான் அதைமறந்து
விட்டேன்.

பூர.—உம்முடைய பெயரையே முதலில் மறந்து விட்டீரே? உங்கள் தகப்
பனார் பெயர் எப்படி ஞாபகமிருக்கும்!

தன.—போகட்டும். தாம் ஏது இவ்வளவு தூரம் தயவு செய்தது.

பவ.—வேறொன்றுமில்லை. எமது வாத்தியார் எமக்கு கல்விப்பயிற்சி செ
ய்து வந்த காலத்தில் "மருந்தே யாயினும் விருந்தோ டுண்"
என்று சொல்லிக் கொடுத்திருந்தார். அந்த குருவாக்கைப் பரிபா
லனஞ் செய்ய வேண்டாமா? வேண்டுமா?



தன.—செய்யத்தான் வேண்டும்.

பவ.—சரி. ரொம்ப சரி.

தன.—மெத்த சரி. அதிக சரி. சரி. சரி.

பவ.—நிற்க. எனக்கு இப்போது யமகண்டம் ஒன்று [redacted] வந்திருக்கிறது.
அதற்குத்தகுந்த ஔஷதம் அநேக நாள் வரையில் கிடைக்
காமல் எமது வாகட புத்தகத்தைப் புரட்டி புரட்டி மூலை முடக்
குகள் எல்லாம் பார்த்த பிறகு ஓரிடத்தில் அகப்பட்டது ஐயா
ஓர் தகுதியான மருந்து.

(இன்னும் வரும்.)

தி. ழே. முருகேச முதலியார்,

## புத்தகக் குறிப்புகள்.

**டாக்டர் மில்லர் சரித்திரம்:**—இப்பெயரிய ஒரு புத்தகம் எம்முடைய பார்வைக்கனுப்பப்பட்டிருக்கிறது. இதை ஆக்கியோர் ம-ா-ா-ஸ்ரீ டி. இராஜ ரத்தினம் பிள்ளையவர்கள். இப்புத்தகத்தின் விஷய விசேடத்தைப்பற்றி மறுமாதத்திய பத்திரிகையி லெடுத்தெழுதுவாம்.

**வால்மீகி இராமாயண வசனம், பாலகாண்டம்:**—இஃதெம்பார்வைக் கனுப்பப்பட்டுச் சின்னாளாகின்றன. இதனையியற்றியோர் பிரம்மஸ்ரீ எஸ். எம். நடேச சாஸ்திரியவர்கள். இது சிறுவர் சிறுமியருபயோகத்திற்கும் முதனூலை வாசித்தறியக்கூடாதார் அதிலுள்ள விஷயம் இன்னவென எளி தில் தெரிந்துகொள்ளுதற்பொருட்டும் எழுதுவிக்கப்பட்டதாகத் தோன்று கிறது. இஃது எவ்வளவு பிரயோஜனமாமென்பது மறு சஞ்சிகையில் விளக் கிக்கூறப்படும். இதன் விலை, பேபர், பயண்டு, இவைகளுக்குத் தக்கபடி ரூபா 2-0-0, 1-12-0 ஆக இருக்கிறது.

## சமாசாரக் குறிப்புகள்.

**போயர்கள்:**—நாளது மாதத்தில் போயர் யுத்தவீரர்களில் 500-பேரை கப்பல் மார்க்கமாய் இங்குக்கொணர்ந்து பிறகு றயில் மார்க்கமாய் பல்லாரி க்கு அநுப்புவித்தார்கள். இவர்கள் காப்பிற்கு 250 ஆங்கில வீரர்கள் உடன் சென்றார்கள்.

**சென்னை கவர்ன்மேன்டு:**—இதில் இரண்டாவது மெம்பராகிய வின் டர்பாதம் என்பவர் நீலகிரியில் ஒருநாள் மாலைப்போழ்து பண்டியில் சவாரி

செய்துகொண்டு போகையில் குதிரை மருண்டு பண்டி சாயவே இவரிடது இடதுகையிற் காயம்பட்டது. காயத்தின் கொடுமை பொறுக்கமாட்டாது அக்கையைச் சத்திரமிட்டறுக்கவேண்டி வந்தது. இடக்கை போய் வலக்கையினுடனிருக்கிறார். அவர் அங்கவீனமடைந்ததற்கு அவரை யறிந்தோர் யறியாதோர் யாரும் அவலமுறவேண்டியதாயிருக்கிறது. ஐயோ பாபம்! கூடிய சீக்கிரத்தில் சுகமடைவாரென நம்புகிறோம்.

முதல் மெம்பராயிருந்த அரண்டல் துரையவர்களுக்கு இதனினும் பெரிய உத்தியோகமகப்பட்டுவிட்டது. அவர் அதிக அதிர்ஷ்டசாலி யாதலின் கவர்னர் ஜனரல் சபையினங்கத்தினரி லொருவராக ஆக்கப்பட்டார், அதனிமித்தம் இவ்வேலையைவிட்டு நாளதுமீ 14உ ஸிம்லாவுக்குப் போய்விட்டார். இவர்க்குப் பதிலாக கனம் தாம்ஸன் துரையவர்களை மெம்பராக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**பெண்கல்வி**:—முன்னிலும் இப்போது பெண்கல்வி விருத்தியடைந்துகொண்டு வருகிறது. ஆயினும் உயர்தரக் கல்வியோ அதிமாய்ப் பரவவில்லை. பிராமணப் பெண்கள் மற்றை இந்துப்பெண்கள் கல்வியில் ஊக்கம் வைத்து படிக்க முயல்கிறார்களில்லை. கிறிஸ்தவப் பெண்கள் மாத்திரம் படிப்பில் ஊக்கம் வைத்துக் கற்று முன்னுக்கு வருகிறார்கள், இவர்களிலும் உயர்தரப் பட்டம் பெற்றவர்கள் சிலரே. இந்தியாவிலுள்ள பற்பல சர்வ கலாசாலைகளிலும் எம். ஏ. பட்டம் பெற்ற ஸ்திரீகள் அறுவர். சென்னையில் நாளது வருஷத்தில் நடந்த எம். ஏ. பரீக்ஷையிற் றேறியவர்களில் பெண்பாலார் ஒருவர். கமலரத்னம் என்பது அவர் தம்பெயர். அவர் மிஸ்டர் சத்தியநாதன் என்பவருடைய மனைவியார். மற்றைவரில் கல்கத்தாவி லிருவருளர். அலகாபாத்தில் ஒருவர், லக்நௌவில் ஒருவர், அமடாபாத்திலொருவருளர்.

**விக்டோரியா ஞாபகச்சின்ன நிதி, சென்னை**.—நாளதுமீ 10 - தேதி வரையில் கையொப்பத் தொகை ரூபா 67,825-0-0 ஆகிறது.

**ஒரு ஆங்கிலேயர் தகனம்**:—பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்து, **பாலகங்காதர டிலக் கேஸ்** நடத்திய பிறகு 1898ஸு அலகாபாத் ஹைகோர்ட்டு முதல் ஜட்ஜ் உத்தியோகம் பெற்ற ஜஸ்டிஸ் ஸ்டிராச்சி துரையவர்கள் கொஞ்ச நாள் சுரத்தினாற் பீடிக்கப்பட்டு தேகசௌக்கியத்தின் பொருட்டு ஸிம்லாவிற்குச் சென்றனர். சுரம் அதிகப்பட்டு சென்ற 15உ புதவாரம் இரவு இறந்துவிட்டனர். அவருடைய விருப்பத்தின்படி அவருடலம் ஐரோப்பியர் வழக்கத்தின்படி பிருதிவியிலிடப்படாது அக்னியினிடம் சேர்ப்பிக்கப்பட்டது.

OFFICE ... BOOKS
REGISTERED
8 - JUL. 1901
MADRAS

# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901ஸு ஜூன்மீ 20உ { புஸ்தகம். 11

## தாயுமானர் தத்துவ விசாரம்.

### வணக்கம்.

வாயுமா னவமலமு மறுபிறப்புந் துறவறத்தான் மாற வீசி
யாயும்வே தாகமத்தி னருள்வலியிற் சிவஞான வாழி மூழ்கிப்
பாயுமால் விடைப்பரம * னிருவியலும் பார்த்துணர்ந்து பதத்தி னென்றுந்
தாயுமா னவன்றனிரு சரணமலர் சிரமதனிற் றரித்து வாழ்வாம்.

புராதனமெய்ச் சிவஞான போதமெனுஞ் சித்தாந்தப் பொருளி யாவுந்
தராசுமுனை யாகிறுவிச் சாயாம லநுபவத்திற் றமிழைப் பாடிப்
பராவுசிவ மயமாகிப் பரஞானத் தனிமைநெறிப் பரிமே லேறி
நிராமயதே யத்தேகி நிறைதாயு மானவனை நினைந்து வெல்வாம்.

### முகவுரை.

உலகின்கண்ணின்று ஒன்றோடொன்று முரணி யிகலுறாஉம் பலவேறு வகைப்பட்ட சமயங்கள் போலாது, சமயாதீதமாய் முடிந்த நிலையதாகி விளங்கும் அத்துவிதசைவ சித்தாந்தத்தை நிலைகாட்டிய தந்தையானவரும், பதி பசு பாசம் என்னும் முப்பொருளி னியல்புகளையெல்லாம் உலகமுணர்ந்துய்வான் பெறவைத்தருளிய தாயுமானவரும், எம்மவர்க்குச் சருவமானவரும் ஆகிய ஸ்ரீ தாயுமான சுவாமிகளது திருப்பாசுரங்கள் காரணமாக, அவர் ஒருசமயத்தையுஞ் சாராத பொதுநிலையர் என ஓர் சாரரும், தமது விவர்த்த வாதக் கொள்கையை யுடையார் என ஏகான்ம வாதிக

* இரு இயல் ஆவன:—தடத்த லக்கணம், சொரூபவிலக்கணம் என்பனவாம், இவை முறையே பொதுவியல்பு, சிறப்பியல்பு எனவுங் கூறப்படும்.

ளாகிய மாயாவாதிகளும் மயங்குவாராயினர். இருவர் மாறுகோள் ஒரு தலை துணிதல் எம்மவர்க்கிலக்கணமா விருத்தலான், அவர் தங் கூற்றுக்களை யெல்லாம் அடிகளது சரித வாயிலாகவும், திருப்பாசுர வாயிலாகவும் நடுவுநிலையோ டாராய்ந்து நிச்சயித் துண்மை காட்டுவான் ஈதெழுந்த தென்க.

## சரித்திரச் சுருக்கம்.

வேதங்களாற் பூசிக்கப் பட்டதும், சுத்தாத்துவித சைவசித்தாந்தம் என்னும் அரசு வீற்றிருப்பதும், புகழாற் றிக்கெங்கும் போயதுமாகிய திருத்தலம் சோழநாட்டின் றென்கோடிக் கணுள்ள **ஸ்ரீவேதாரணிய** புரியேயாம். ஆங்கு இற்றைக்குச் சுமார் 200 வருடங்களுக்கு முன்னர், வேளாள வருணத்திலே, உழுவித்துண்போர் வகையினருள் தோன்றிய **கேடிலியப்ப பிள்ளை** என்பார் ஒருவர் இருந்தார். அவர் கல்வி கேள்விகளின் முதிர்ந்து, குருலிங்க சங்கம பக்தியிற் சிறந்து, தம்பெயர்க் கேற்பக் கேடிலராய், அவ்வூர்ச் சிவதல விசாரணைக் கர்த்தராயிருந்தார். அது காலைத் திரிசிர புரத்திலே செங்கோ னடாத்தி யரசு புரிந்த **ஸ்ரீமாந் - முத்து விசயரகுநாத சொக்கலிங்க நாயகர்** என்னும் வேந்தரேறு * பிள்ளை அவர்களது நற்குண நற்செய்கைகளையும், கல்வி கேள்வி யறிவின் பெருமையையுங் கேள்வியுற்று வரவழைத்து, சிறந்த சம்பிரதி உத்தியோகத் தமர்த்தினர்.

பிள்ளையவர்கள் அரசனது வேண்டுகோட்படி உத்தியோக மேற்று, அதற்குரிய கடமைகளைக் குறைவறப் புரிந்து வந்தனர். அங்ஙனம் நிகழு நாளிலே தமக்கு ஒரே பேறு வாய்த்த **சிவசிதம்பரப்பிள்ளை** என்னும் அருமைக் குமாரனைச் சந்ததி யின்றி யிருந்த தந்தமையனார்க்கு முன்னரே சுவீகாரமாகக் கொடுத்து விட்டமை

* பிள்ளை என்பது வேளாளர்க்குரிய காரண வாக்கப் பெயருளொன்று. இறைவனிடத் திருநாழி நெற்பெற்ற காமாட்சி யம்மையார், அதனை விருத்தி செய்தற் குரியார் இவரே யெனத் திருவுளங்கொண்டு "பிள்ளையே!" என்றழைத்தமையால் வந்ததெனக் காரணங் கொள்க. அது "உளளங் குழைந்தா யுழவாற் பெருக்க விதை—பிள்ளையெனக் கூயுதவப் பேணுவிக்க" எனத் திருக்கை வழக்கங் கூறியதனாலும் பெறுதும்.



யால், தமக்குச் சந்ததி யுண்டாகத் திருவருள் செய்யுமாறு † தக்கிண கைலாயத்துள் ஒன்றாய வத் திரிசிராமலைக்கண்ணெழுந்தருளி யிராநின்ற தாயுமானேசுரரைத் திரிகாலங்க டோறும் தந்தேவி சகிதமாகச் சென்று ஒருமையுற்று மெய்யன்புடன் றரிசித்தும், நித்திய நைமித்திகாதிகள் செய்தும், விரத மநுட்டித்தும், தானஞ் செய்தும் வருவாராயினர். அக்காலை, பரத கண்டத் துள்ளாரது தவமெலாந் திரண்டொரு வடிவெடுத்து வந்தாற் போலவும், மன்பதைகளின் மலவிருள் துமிக்க இம்மண்ணுலகிற் றோன்றுவான் விமலன் விடுத்தருளியதோர் சித்தாந்த ஞானசூரியன் மானவும் மகவொன் றவதரித்தது. அப்போழ் தத்துத் தந்தையார் அகமிக மகிழ்ந்து செய்யவேண்டியனவெல்லாஞ்செய்து, தாயுமானேசுரர்க்குக் காணிக்கை முதலியனவுஞ் செலுத்தி, சாதகருமமுஞ் செய்வித்தார். சோதிடத்தில் வல்லார், "சுபவோரையிலே ஐந்துகோளுச்சமாகத் தோன்றியதனால் இவர் தேவாம்சமாக அவதரித்தார் என்றும், அனைத்துலகையு மாளவல்ல நரேந்திரனாக, அல்லது தபேந்திரனாக நிலவுவர்" என்றுங் கூறக்கேட்ட இருமுதுகுரவர் மகிழ்ச்சியை யென்னென்பேம். தாயுமானேசுரர் அருளாலுதித்தமையால் அப்பிள்ளைக்கு அக்கடவுளின் பெயரையே நாமகரணஞ் செய்தனர்.

அப்பால், **தாயுமான சுவாமிகள்** வடமொழி தென்மொழிக் கணுள்ள இலக்கிய இலக்கணங்களையும், வேத சிவாகமோப நிடத மிருதி புராண இதிகாச முதலியன வற்றையும் நன்கு கற்று வல்லராயினர். அவையன்றித் தேவார முதலிய பன்னிரு திருமுறைகளையும், மெய்கண்ட சாத்திரம், அருணகிரி நாதர் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ் முதலிய வற்றையும் தக்காருழை யாராய்ந்து அன்புடன் பாராயணஞ் செய்வார். இங்ஙனம் வருநாளிலே தகப்பனார் இகவாழ் வொருவ, அரசன் அவரது சம்பிரதி உத்தியோகத்தை ஏற்குமாறு வலாற்காரஞ்செய்ய, மறுக்க வியலாமையான் அதை ஏற்று நடத்திவந்தார். தாயுமானசுவாமிகள் சம்பிரதி உத்தி

† திரிசிராமலை தக்கிண கைலாயத்துள் ஒன்றென்பதை, செவ்வந்தி புராணம், தக்கிண கைலாச புராணம் என்பவற்றிற் காண்க. திரிசிரபுரம், திரிசிராப்பள்ளி எனவும் பெயர். இக்காலத்துத் திருச்சிராப்பள்ளி என வழங்கப்படுகின்றது.

யோகத்திற் பதினன்குவயதிலேயே அமர்ந்தாரென்ப. அப்போதில் ஓர் காரிய நிமித்தம் அரசனைக்காண்பான் போந்த சுவாமிகளது திருவடிச் சுவடுகள் அரண்மனையுட் புதுக்குவித்தற்காகக் கொட்டப்பட்டிருந்த மணன்மேற் பதிந்து செவ்வே விளங்கின. பிரதானியும் அரசனும் அவ்வழி வந்தார் பதுமரேகை பதிந்து காணுஞ் சுவடுகளைப் பார்த்து மிக்க ஆச்சரியமுற்று, யாவர் இவ்வழி வந்தார் என, ஆங்கு நின்றார் சம்பிரதியாரே வந்தவர் என்றனர். அரசனும் பிரதானியும் ஐயுறீஇ, அவ்வுண்மை யாராய்வான் சுவாமிகளை ஆங்கழைப்பித்துப் பின்னர் அனுப்பிவிட்டுச் சுவடுகளையொத்து நோக்கித் தஞ்சந்தேகந் தீர்ந்து மகிழ்வுற்றார்; பிரதானி அரசனைப்பார்த்து அரசரேறே! சம்பிரதியாரது அழகைக்கண்டு ஆடவரு மவாவுவரன்றே? "இலங்கெழிலளவு குணமெனவுரைப்பர்." இதற்கு மேற்கோளாக அவரையே யிக்காலத்து யான் றுலங்குறக் கண்டேன். அவரது வடிவத்தை உற்று நோக்கியுள்ளேன்.

அகவடி யுகிர்விரல் புறவடி கரடே
கழலே கணைக்கான் முழந்தாள் குறங்கே
கடிதடங் கொப்பூழ் வயிறதின் வரையே
யிடையே மார்பி னெழுக்கே முலையுகிர்
விரலே முன்கை யங்கை தோளிணை
கழுத்தே முகநகை செவ்வாய் மூக்குக்
கண்ணே காது புருவ நுதலெனு
மாறைந் துறுப்புட னிரண்டும் பாதம்,

என்று பன்னிருபாட்டியலிற் கூறப்பட்டபடி, அவரது முப்பத்திரண்டு உறுப்புக்களும் ஆண்டன்மையோடு தெய்வத்தன்மை சிறந்து, சாமுத்திரிகா லக்கணங்கள் நிரம்பப்பெற்று விளங்குகின்றன. அவர் இன்னுஞ் சிறிது காலத்துள் உலகமெலாந் தன்னேவல் கேட்ப ஆணை செலுத்தும் மகைசுவரிய மகௌதாரிய மகா மண்டலாதிபதியாகிப் புகழ்நிறுவ லொருதலை. நிருபவோ! அவரது காற்சுவட்டிற் பிரகாசிக்கும் பதுமரேகை போல் எவர்க்கு மிருப்பதை யின்றுகாறுங் கண்டு கேட்டிலேன். அவரது நெடுங்கரங்கள் கணைக்காலின் கீழ்த் தொங்குவது தானுங்கண்டிலிரோ? என்று கூறினன். அது தொடங்கி, நாயகன் அவரிடத்து மிக்க பிரீதியும் அச்சமு



முடையனாயினன். இருவினை யொப்பு நேருங்காலமாதலால் இவர்க்கு உண்மையையாராய்தலே பெருங்கடமை யெனத்தோன்றிற்று. அரசனிடத்தில் கவி, கவிராயர், கவிச்சக்கிரவர்த்தி, பண்டிதர், பாரதி, பாவலர், நாவலர், வித்துவான், மகாவித்துவான், வித்துவசிரோமணி, ஆசிரியர், புலவர்முதலிய பட்டங்களைத்தரித்துச் சன்மானம் பெறவருவோர் எவரையும், யதார்த்த வாதஞ் செய்து தக்க விடைகொடாமையால் "உண்மைகாணுதிர்" என்று விடுப்பார். அரசனும் இவரது இளம்பருவத்தையும், கல்விகேள்விகளின் அருமையையும், அதற்குத்தகுந்த வொழுக்கத்தையும் கண்டு நனிவியந்து பேரன்புடையனாயினன். தலையிற் றீப்பிடிக்கக் கண்டான் வேறொன்றனையும் நாடாது தண்ணீரையே தேடுவதுபோல, இவரும் தம் ஐயங்களை யொழித்து உண்மை காட்டவல்ல ஞானாசிரியர் யாண்டையர்? எற்றைத் தினத் தெதிர்ப்படுவர் என்றேக்கமுற் றெதிர்பார்த்திருந்தார்.

அங்ஙன மமரு நாளிலே, அடிகளார் பிறவிகடோறும் ஈட்டிய பெருந்தவப் பேறு காரணமாகவும், இற்றை ஞான்றும் பிற்றைஞான்று முள்ள வுயிர்கள் முப்பொருளி னுண்மை யறிந்து, சித்தாந்த நிலை யேறிச் சிவஞான நிட்டாபரராய், அத்துவித முத்தியை யடைந்துய்தற்குச் சாதன மானவற்றை யோதுவிக்கு முண்மை காரணமாகவும், திருவருண் ஞானப் பெருஞ் செல்வப் பிழம்பாகிய திருமூல நாயனார் மரபிலே தோன்றி, திருக்கைலாயு பரம்பரைச் சந்தானமாகிய மெய்கண்ட தேவநாயனாரது வழிக்குரவரிடத்து ஞானோபதேசம் பெற்ற சற்குரு மூர்த்திகளாகிய மௌன குருசுவாமிகள் திரிசிராமலைப் பரமநாதனைத் தரிசிப்பான் ஆண்டுற்றனர். எந்தந்தையுமான தாயுமானார் அவரைக் கண்ட மாத்திரத்தே, தலைவனைக் கண்டுழித் தன்வயமிழக்கும் உழுவலன்புடைப் பதிவிரதை போலப் பரவசப்பட்டு, காந்தங்கண்ட ஊசிபோன்று தம்மனம் அவர் மாட் டிழுக்கப் பட்டாராய், அடியுற வணங்கி, "எம்பெரும ! தந்திருக்கரத்துள்ள புத்தகம் யாதோ" வென்றனர். குருசுவாமிகள் யாதொன்று முரையாராய் ஏகினர். பின்னரும் பன்முறை வினவி நீழல் போல் தொடர்ந்தனர். அவ்விடங்கடோறும் சுற்றித் திரிந்து, ஊரடங்கிய யாமம் பதினைந்து நாழிகை யளவிலே

யுமானவர் சந்நிதி சென்று * பதுமாசனத் துட்கார்ந்த ளஞசாரியர் இவர்பக்குவங் கண்டு "சிவஞான சித்தி" என்ற ர். தாயுமானர் அகமிக மலர்ந்து, அந்த நாளிலே வாதவூர் தனை ஞானபோதத்தா லேதங் தொலைத்துச் சாதங் காட்டிப் தமளித்தாண்ட பரமபதி, இந்த நாளி லெளியேனையும் ஞான க்தியான் மோனபத்தி யளித்தாட் கொள வெழுந்ததோ வெ று துதித்து, "அருட்கடலே!

க-சிவம் யாது?

உ-ஞானம் என்பதென்னை?

௩-சித்தி எது?" என்று வினவ, ஆசாரிய சுவாமிகள் அவரை நாக்கி. அன்புளாய்!

க-சிவம் என்பது பதி.

உ-ஞானம் என்பது (அந்தப்பதியை உள்ளவாறறியும்) அறிவு.

௩-சித்தி ஆவது அவ்வறிவை வருவிப்பது" என்றார்.

ாயுமானவர் கேட்டுத் "தவராஜ!

1. அப்பதிப்பொருள் ஊர் குணம் குறி செயல் பெயர் தலியன வில்லாதது; சொல்லளவைக்கும் பொருள் அளவை ்கு மெட்டாதது; என்று வேதாகமங்கள் முழங்கவும், தேவ ர் அவையிற்றிற்கு முரணகச் சிவம் என்றல் பொருந்துமோ?

2. சிவம் எனவே, அசிவம், (அமங்கலம்) சிவாசிவம் (மங்க ாமங்கலம்) என்பனவும் பெறப்படலால் அப்பொருள்க ளெவை?

3. அப்பொருள்கள் சிவத்திற்குப் பேதமோ, அபேதமோ, பதாபேதமோ?

4. வியாபகமோ? வியாப்பியமோ? வியாத்தியோ? சுசா யோ? விசாதியோ? சுகதபேதமோ? இவை அல்லாதனவோ?

5. "உண்மையுமா யின்மையுமாய் இருப்பவன்பதி" என் ன்றோ ரருளிய துண்மையாயின், சிவம் (மங்கலமுடையது)

---

* பதுமாசனமாவது யோகாசனங்களுள் ஒன்று. அஃதாவது இடப் க்கத் தொடையின் மேல் வலக்காலினையும், வலப்பக்கத் தொடையின்மேல் டக்காலினையும் மாறவைத்து, இருகாற் பெருவிரலையு மிருகரங்களானும் றியுறப் பிடித்திருத்தல். அதனை "சவ்விய பாக ஊருமேல்" என்னுஞ் தசங்கிதைச் செய்யுளானறிக.



ளாக்கூறல் சால்பேயோ? என்னை, அமங்கலம், மங்கலாமங்கல மும் அவனே யாகலால்.

6. பிரமப்பொருளன்றி யிரண்டாவது பொருள் இல்லை யென்று வேதங்கூறவும், சிவ்ஞானம் என்பதற்குப் பொருள் சிவனை யறியும் அறிவு எனின், சிவன் ஞேயப்பொருளாகவும், ஞானம் காட்சிப்பொருளாகவும் முடிதலால், ஞாதுரு (அறிபவன்) ஞானம் (அறிவு) என்பன வெவை?

7. அந்த ஞாதுரு பரிபூரணனாய சிவனுக்கு வேறா நின்று அறிவனோ? ஒன்றாய் நின்றறிவனோ? வேறும் ஒன்றுமாய் நின் றறிவனோ?

8. சிவன் அறியப்படுமேல், அறிபொருளெல்லாம் தூல மாகிய சடப்பொருளாகியும், அழிவனவாயும், விகாரப்படுவன வாகியும் அறிவானுக்கு வேறவாகியும், கண்டப்படுவனவாகியும் விளங்கு முண்மையால், அவனும் சடத்துவம், அழிவு, விகாரம், பேதம், கண்டப்படுகை முதலிய தன்மையனாய், சித்து, சத்து, நிர் விகாரம், அத்துவிதம் அகண்ட முதலியவற்றை யிழக்குமன்றோ?

9. அறியப்படுதல் கருவி கூடிய விடத்தோ? கழன்ற விடத் தோ? கூடிய விடத்தெனின் கருவிகள் எல்லாம் பசுபாச ஞானங் களாகலின் அந்த ஞானங்களானறியப்படானே? கழன்றுழி யெ னின் அறிதலெங்ஙன்?

10. சிவம் அறியப்படுதல் ஐயக்காட்சியானோ? திரிபு காட்சியானோ? மானதக்காட்சியானோ? சையோகம், சையுக்த சமவாயம், சையுக்த சமவேத சமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேடண விசேடியபாவம் என்னும் வகைத்தாய வாயிற் காட்சியானோ? தன்வேதனைக் காட்சியானோ? யோகக்காட்சியானோ? விகற்பக்காட்சியானோ? நிருவிகற்பக்காட்சியானோ? சுவார்த்தாநு மானத்தினலா? பரார்த்தாநுமானத்தினலோ? சபக்கம், விபக்கம், சபக்கவிபக்கம், ஒப்பு, பாரிசேடம் உலகவாதங்களானே யோ?

11. ஞானம் அறிவானுக்கு இயற்கையா? செயற்கையா? இயற்கையெனிற் சித்தித்தல் வேண்டா. செயற்கையெனிற் சித் திக்கமாட்டா. அஞ்ஞானமு மங்ஙனே யன்றோ?

12\. அங்ஙனஞ் சிந்தித்தல் * சமுதாயவாதமோ? ஆரம்பவாதமோ? விவர்த்த வாதமோ? பரிணாமவாதமோ? விருத்தி வாதமோ?

என்றின்னனவாய தம் ஐயப்பாடுகளை யெல்லாம் விண்ணப்பிக்கக் குருசுவாமிகள் புன்னகை புரிந்து, சகல வர்க்கத்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும் உபதேச முறைமையை ஓர்ந்து,

† ஔத்திரி தீக்கைக்கு அவரப்போது அருகரல்லாமையால் அதற்கு அங்கமாயுள்ள ‡ அறுவகைத் தீக்கையுள்ளான வியற்றி, மைந்த! நீ வினவிய ஐயப்பாடுகளை யெல்லாம் அறுத்து, விபரீத ஞானத்தையும் வீட்டி, சிவஞான நெறியாகிய அத்துவித ஞானத்தைக் கொடுப்பது இந்நூலேயாம். இஃது நங்குரு மரபி னிலவிய சகலாகம பண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரிய மூர்த்திகளா னருளப்பட்டது. இதனைப் பூசித்துப் பாராயணஞ் செய்து வருகின்றும். சிவஞான போத வழிநூலாயுள்ள இது வேதாகம சாரமாகிய சித்தாந்த வியல்பினை யெடுத்துத் தாபித்தலாற் சுபக்கம் என்றும், வேதாகமங்கட்குப் புறப்புறமாகவும், புறமாகவும், அகப்புறமாகவும், அகமாகவுமுள்ள சமயக்கோட்பாடுகளை யெடுத்துக்கண்டனஞ் செய்தலாற் பரபக்கம் என்றும் இருவகைப்படும். மாணவ!

* சமுதாயவாதமாவது எள்ளானாய குப்பை யென்பது. இது புத்தர் சமணர் கொள்ளுமதம். ஆரம்பவாதமாவது நூலானாகிய ஆடைபோல்வதென்பது. இது தார்க்கிகர் மதம். விவர்த்தவாதமாவது கயிற்றிற் பாம்பு போலவும், பேய்த்தேரானாய நீர்த்தோற்றம் போலவும் உள்ள தென்பது. இது ஏகான்மவாதிகளாகிய மாயாவாதிகள் மதம். பரிணாமவாதமாவது பாலினுண்டாகிய தயிர்போல முற்றும் பரிணமித்தலும், நெய்யினுண்டாம் புழுப்போல ஏகதேசத்திற் பரிணமித்தலும் என இருவகைத்து. படங்குடிலாதல் போலவும், வித்து மரமாதல் போலவும் உள்ளது விருத்திவாதம்,

† ஔத்திரி = உதசகிதமாகப் பண்ணுவது. உதசகிதம் = ஓமத்தோடு கூடியது. அது கிரியாவுத்திரி, ஞானவுத்திரி என இருவகைப்படும்.

‡ அறுவகைத் தீக்கையாவன—சட்சு தீக்ஷை, பரிச தீக்ஷை, வாசக தீக்ஷை, மானத தீக்ஷை, சாத்திர தீக்ஷை, யோக தீக்ஷை என்பனவாம். இவையிற்றை அருணபத்ததி, சைவசந்நியாச தீபிகை, காலோத்தரம், சித்தாந்த சேகரம், ஞானப்பிரகாச வியாக்கியானம் என்பவற்றிற் பரக்கக்காண்க,



* "பாரிலுள்ள நூல்களெலாம் பார்த்தறியச் சித்தியிலே
போர்விருத்தப் பாதிபோ தும்."

என்று, அவர் வினவிய வினாக்கட்கெல்லாந் தக்க விடைகொடுத்துச், சித்தாந்த சாத்திரம் பதினான்கனையும் முறையே உபதேசித்தருளினார். பதியிலக்கணம், பசுவிலக்கணம், பாசவிலக்கணம், ஞானாஞ்ஞான இலக்கணம், அத்துவித விலக்கணங்களை யெல்லாம் போதித்தருளுங் காலத்தில் தேசிகநாதர் "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி" "தானெனை முன்படைத்தானதறிந்து தன் பொன்னடிக்கே" "எழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய-தோழனுமாய்" "பண்ணி னூலும் பழத்தினு ளின்சுவை-யென்னி னூழி யெனக்கே கனிதரும் - உன்னி னுன்னுமுன் னாவிடல் விட்டிடும்" எனவருவனவும் தேவாரத்திருப்பதிகங்களையும், "இன்றெனக்கருளி யிருள்கடிந் துள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று... சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்", "ஆதியுமந்தமு மில்லாவரும்பெருஞ்சோதியை" எனவருவனவுந் திருவாசகத் திருச்செய்யுள்களையும், "உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்றும் - அற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவன்" எனவருவனவும் இருபாவிருபதின் செய்யுளையும்,

குமர குருபர குணதர நிசிசரர்
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபதி ரதிசுத சுரர்பதி குலமானும்...
அரவு புனைதரு புனிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென வருளிய பெருமாளே.

என்ற திருப்புகழின் அருட்பாவையும் ஏனையவற்றையும் உதகரித்துண்மை காட்டினரென்ப. அது பற்றியன்றோ தாயுமானசுவாமிகளும் தாம் அருளிச்செய்த அகிற்றுணாக்கண்ணியில்,

"இருநிலனாய்த் தீயாகி யென்ற திருப்பாட்டின்
பெருநிலையைக் கண்டுணர்ந்து பேச்சறுவ தெந்நாளோ."

என்பது முதலாக அவற்றை யெல்லா மெடுத்தாண்டு மன்பதைப் பக்கத்தாரைத் தம்வயப்படுத்தினார். நிற்க, இவ்வுபதேசத்தானே

* இதனை "பாதிவிருத்தத்தா லிப் பார்விருத்த மாகவுண்மை—சாதித்தார் பொன்னடியைச் சாருநாளெந்நாளோ" என்று குருமரபின் வணக்கத்துள் தாயுமானார் அநுவதித்தலுங்காண்க.

வைதிக சைவ சுத்தாத்துவித சைவசித்தாந்தமே உண்மைநிலை யென்றும், சிவபெருமானே பரமபதி யென்றும், அவருடன் இரண்டறக் கலத்தலே அத்துவித முத்தி யென்றும் உணர்ந்து உலகாசையைத் துறந்து முமூட்சுத்துவ முற்றார். மௌன தேசிகர், "நீ இன்னுஞ் சிறிதுகாலமிருந்து இல்லற நடாத்திப் புத்திரனை யீன்று நிற்றி; பின்னர் யாம் வந்து நிட்டைகூடு முபாய மளிப்பேம்" என்றனர். ஆசாரியர் பிரிவை யாற்றாமல் தாயுமானார் வருந்த "சும்மா இரு" என்று அகன்றனர். இவற்றை, சுவாமிகளது திருப்பாடலில் மௌனகுரு வணக்கத்துள்,

சிந்தையற நில்லென்று சும்மாவிருத்திமேற்
சின்மயா னந்த வெள்ளந்
தேக்கித் திளைத்துநா னதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன் றுகாண்
எந்தைவட வாற்பரம குருவாழ்க வாழவரு
ளிய * நந்தி மரபு வாழ்க
வென்றடியர் மனமகிழ வேதா கமத்துணி
பிரண்டில்லை யொன்றென் னவே
வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேச குருவே
மந்த்ர குருவேயோக தந்த்ரகுருவே மூலன்
மரபில்வரு மௌன குருவே. என்றதனானும்,

"வேதாந்த சித்தாந்த சமரசநிர் வாகநிலையும்"
"சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி
மன்னவொரு சொற்கொண் டெனைத்தடுத் தாண்டன்பின்
வாழ்வித்த ஞான குருவே" என்றதனானும்,

---

* நந்தி மரபு ஆவது - தக்ஷிணாமூர்த்தி சிவஞான போதத்தைத் திருநந்தி தேவர்க்கு உபதேசிக்க, அவர் சனற்குமார முனிவர்க்கும், அவர் சத்தியஞான தரிசனிகளுக்கும், அவர் பரஞ்சோதி முனிவர்க்கும், அவர் மெய்கண்ட தேவர்க்கும், அவர் அருணந்தி சிவாசாரியர் முதலாயினோர்க்கும், அவர் மறைஞான சம்பந்த நாயனார்க்கும், அவர் உமாபதி சிவாசாரியர்க்கும், அவர் அருணமச்சிவாயர்க்கும் உபதேசித்த வரன்முறைவழியாம்.



* காட்சியறு மானமுத லாநாவி தங்க டேர்ந்து
நானெனக் குழறு படையுடை பெயர்த்திடவு
நான்குசா தனமு மோர்ந்திட்
† டணுபக்க சம்புபக்க மாமிரு விகற்பமும், என்றதனானும் அறிக.

இப்பால் ஆசாரியர் சேதுதரிசனஞ் செய்து, குமரிமூழ்கிப் பொதிய மலைபோய் அகத்திய பகவானை யடைந்தருள் பெற்று நிட்டையில் அமர்ந்தனர். ஈண்டுத் தாயுமானசுவாமிகள் உபதேச மொழிகளை யெல்லாஞ் சிந்தித்து அவற்றின்படி யொழுகலால் விரத்தி தோன்ற, இலௌகிகத் தொழிலை மறந்துவந்தார். சொக்கநாயக அரசன் அவரது தன்மைகளை யெல்லாம் கேள்வி வாயிலா அறிந்தும், அற்புதத்தன்மையான பலசெய்கைகள் அவரிடத்து நிகழ்ந்ததை நேரிற்கண்டும், அச்சமும் அதிசயமும் அன்பும் உற்று, அவரை அழைத்து உயர்ந்த ஆசனத்தி லெழுந்தருளச்செய்து, சுவாமீ! தேவரீரது மகிமைகளை அறியாமையால் என் உத்தியோகத்தில் அமர்த்தினேன். இனிமேல் தேவரீருக்கு யானே குற்றேவல் செய்யப் பணித்தருள வேண்டு மென்றிரந்து, அவர் நிலைக்கு முட்டுறா வண்ணம் ஒழுகினன். சுவாமிகள் ‡ சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்பவற்றை யெல்லாம் அநுட்டித்து வந்து கிரியாபாத சோபான

---

* காட்சி முதலியன வென்றது, காண்டல், கருதல், உரை, இன்மை, ஒப்பு, ஒழிவு, உண்மை, உலகவழக்கு, இயல்பு என்னும் பொருளளவைகள் என்க. நானெனக் குழறுபடையாவது மாயாவாதக் கொள்கை. நான்கு சாதனமாவன - நித்தியா நித்தியவஸ்துவிவேகம், இகமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதிசட்க சம்பத்து, முமூட்சுத்துவம் என்பனவாம்.

† அணுபக்கசம்புபக்கமாவது - சிவபெருமான் பஞ்சகிருத்திய நிமித்தம் நவபேதங்களாகும் இருவகைப்பகுதி. அவற்றின் விரிவை, யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாச முனிவர் செய்தருளிய "சித்தியார்" உரைக்கண்டெளிக.

‡ சரியையிற் சரியையாவது திருக்கோயில் அலகிடல், மெழுக்குச்சாத்துதல், நந்தவனம் வைப்பித்தல், தலதீர்த்த யாத்திரை செய்தல் முதலியன. சரியையிற் கிரியையாவது இடபாரூடர், கல்யாண சுந்தரர், பிச்சாடனர், உமாமகேசர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகள், விநாயகர், கந்தர் முதலிய ஆவரண மூர்த்திகள் என்பவற்றுள் ஒன்றை வழிபடுதல். சரியையில் யோகமாவது நெஞ்சின்கண் சீகண்டவுருத்திர மூர்த்தியைத் தியானித்தல். சரியையில் ஞானமாவது அத் தியானபாவனையின் உறைப்பினால் மெய்யநுபவ வுணர்வு நிகழ்தலாம்.

முற்றார். அக்காலை யரசன் மண்ணுல கொருவினன். அரசன் மனைவி யிவரது அழகைப் பலமுறைக் கண்டுள்ளாளாகலின் ஆசை மீதூர்ந்து அவரிடஞ்சென்று, "என்னரசாட்சிக்குத் தேவரீரைத் தலைவராக்குவல். என் உடல், பொருள், ஆவி மூன்றுந் தம்மவே. என் வேண்டுகோட்கிணங்கி யெளியேனது பெருங்குறையை முடித்தருள் வேண்டு" மென்று இரந்தாள். பெருமானார் அவள்மன மடங்கவேண்டிய நீதிகளை யெல்லாம் உரைத்து அறிவுவரச்செய்து, தாபதப் பக்கமாக்கி இங்கிருத்தலன்றென் றுணர்ந்து இராமநாத புரத்திற்கு எழுந்தருளினர். அதனைத் தமையனாராகிய சிவ சிதம்பரப்பிள்ளை அவர்களும், சிறிய தாயார் குமாராகிய அருளையபிள்ளை அவர்களும் கேள்வி யுற்று, ஆங்குச்சென்று, சந்ததி விளங்கும்படி திருமணஞ் செய்தருள வேண்டு மென்று பிரார்த்தித்தனர். அவர்க்கு அவ்விடயத்திற் பிரிய மில்லாதிருந்தும் தங்குரு சுவாமிகள தாஞ்ஞையு மதுவாகலானும், தமயனார் வேண்டுகோளு மன்னதாகலானும் மறுத்தல் பாவமென்றெண்ணி யுடம்பட்டு, தங்குலத்திற் றோன்றிய மாட்சிவாய்ந்த நங்கையாளொருத்தியைத் திருமன்றல் புரிந்தனர். இல்லாளோடு தாமரையிலையினீர்போற் கூடி யில்லற தருமங்களையும் நடாத்திவந்தார். அதுகாலை மங்கையர்க்கரசியாந் தேவியார் ஓராண்மகவை யீன்று வைத்துச்சிவபதமடைந்தனர். அக்குழந்தை பெயர் கனகசபாபதிப் பிள்ளை. அக்குமாரரும் "மகன்றந்தைக் காற்று முதவியிவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்பதற் கிலக்கியமாய் விளங்கினர். தாயுமானாரும் * கிரியாபாத நான்கையு முடித்து, யோகபாத சோபானமுற்றார். மௌனதேசிகர் அவணெழுந்தருளி ஞானவுத்திரி யென்னுந் தீட்சைசெய்து, யோக நிட்டைகளினியல்புகளை யுணர்த்தித் துறவுபெற ஆஞ்ஞாபித்துச் சென்றனர். அது தொடங்கி அடிகளார் கௌபீன தாரியாய் வெளிப்பட்டு

* கிரியையிற் சரியை - சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களை யெல்லாஞ் செய்து கோடல். கிரியையிற் கிரியை - ஐவகைச்சுத்தி முன்னாகச் சிவலிங்க வடிவிற்செய்யும் பூசனை. கிரியையில் யோகம் - அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யும் அந்தரியாகம். கிரியையில் ஞானம் - அவ்வந்தரியாக வுறைப்பின்கண் நிகழும் ஒரநுபவவுணர்வு.



* யோகபாதத்தை யநுட்டித்து, சிவஞானப்பெருஞ் செல்வராய் நிட்டை கூடுவாராயினர். சோதிடர்களும் பிரதானியும் கூறியவாறே புவிராசர் கவிராசர் ஆதிய மன்பதைகள் யாவரும் போற்றும் சிவயோகத் தவராசராயினார். அரசர்கள் மலை, நதி, நாடு, ஊர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை யென்னுந் தசாங்கத்துடன், வெண்கொற்றக்குடை, நவமணிமுடி, சிங்காசனம் என்னுஞ் சிறப்படையாளங்களையும் உடையராதல்போலத் தாயுமான சுவாமிகளும் அவாவின்மை, மெய்யுணர்வு, துறவாதிய குணம் என்னும் மலையும், நித்தியானந்தம் என்னும் நதியும், வேதமுதலிய கலைகளானும் அறிதற்கரிய சிற்சத்தித்தானம் ஆகிய நாடும், அநுபூதி என்னுஞ் சுத்தப் பெருவளமுடைய ஊரும், விடயவழிச் செல்லாமல் நிறுத்தித் தன்வயமாக்கும் அருள் என்னும் மாலையும், எவ்வெப் பொருளினிடத்தும் விரைந்துசென்று அவ்வப்பொருளாய் நிற்கும் வியாபகத்துவம் என்னுங் குதிரையும், வினைக்கட்டறுத்துப் பாசப்பகையை யெறிந்து, அன்பாகிய வேகமுற்று ஆரணி சென்னி உரோதயித்திரி என்னுஞ் சத்திகளாகிய மும்மதங்களுடன் தத்துவ கூட்டங்களுட் புகுந்து ஆனந்தத் தேனை யளிக்கும் சிவஞானம் என்னும் யானையும், சமயநிலைகளுக்கெல்லாம் மேற்பட்டு, அத்துவிதப் பெரும்பயனை விளக்கித் துன்பச் சுமையை நீக்குதற் கேதுவாய வைதிகசைவசித்தாந்தம் என்னும் வெற்றிக்கொடியும், தசநாடிகளுந் தசநாதமாகத் தோன்றலின் நாதம் என்னும் முரசும், பிருதிவி முதல் நாதமீறாய் அகம்புறம் என்னு கருவிகளாகி விளங்கும் உலகமெங்கணுமுள்ள ஆன்மாக்களுக்கு அறிவித்தல் என்னும் ஆணையும் ஆகிய தசாங்கங்களுடன், எவற்றையும் ஒருசேரவோரியல்பான் அறியும் பேரறிவு என்னும் ஒரு பெருஞ்சுடர் முடியும், மும்மலப்பகையாலேரும் பிறவி வாதனையைப் போக்கித் தன்னடிக்குள் வைத்துப் பேரின்ப நிழலைச் செய்யும் அந்தண்மை என்னும்

* இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் என்னு நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமுந் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம் என்க. இவற்றை யோக காரிகையினும், திராவிட மாபாடியத்தினும், தத்துவப் பிரகாசத்தினுங் காண்க.

வெண்கொற்றக் குடையும், சமாதி என்னுஞ் சிங்காதனமும் உடையராய், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் சதுரங்கசேனைகளுந் தம்மேவல் கேட்டடங்கி நிற்க, மும்மண்டலத்திலும் தங் கிள்ளாக்குச் செல்ல, * தவராசராய் விளங்கினர் என்க.

நிலவுலகத்துள்ள உயிர்களெல்லா முணர்ந்துடேறும் திருவுளத்தானே தம் அநுபவசாரங்களை யெல்லாந்திரட்டி அத்தியற்புத திருப்பாடல்களாகப் பொழிந்தனர். அவற்றை யெல்லா முடனிருந்த அருளையர் முதலாய மாணவர் எழுதினரென்ப. சுவாமிகள் அருளையர்க்குத் தத்துவோபதேசஞ் செய்து, இராமநாதபுரஞ் சென்று ஆங்கேயே சிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய அத்துவித முத்தியை யடைவான் சமாதிகூடினார். அருளையசுவாமிகள் அகவற்பாவினாலே சுவாமிகளைத் துதித்து, சிவயோகசாதனராய்க் கனகசபாபதிப்பிள்ளை அவர்கட்கு மெய்யுணர் வருளித் துறவுற்றார். இக்குரு பரம்பரையில் தஞ்சைமாநகரின் கீழ்ப்பால் அன்னப்பன் பேட்டையிலுள்ள அம்பலவாண சுவாமிகள் ஆதீனத்தில் அருணாசலப் பிள்ளை என்பார் இருந்தனர் என்ப. இச்சரிதம் வேதாரணிய ஆதீனத்திலே எமது சந்தானாசாரிய சுவாமிகளது உபதேசப்படியும் திருப்பாடற் கருத்தின் படியும் எழுதப்பட்டது.

## திருப்பாடற் சிறப்பு.

வெள்ள மருவு விரிசடையான் வேத வனத்தான் விமலேச
னுள்ள மருவத் திருமூல னுறவின் மருவு மொருமவுன
வள்ள லருளுங் கருணைவெள்ள வாரி மடுத்தே மறைசைநகர்ப்
பிள்ளை முனிவ னருண்முகிலாய்ப் பெய்தான் கருணைத் தமிழ்மழையே. (க)

திருமூலன் மரபினெழுங் குருமவுனி திருவருளைத் திரட்டி வாரி
யருளுறு மானந்த வநுபூதிச் சாரமெலா மருந்தி நாளு
மருளோடு மிருளோட மறைக்காட்டி னெழுந்தாயு மானேன் ஞானப்
பொருளாருஞ் சித்தாந்தத் தமிழ்மழையை யுலகமுயப் பொழிந்தான்மாதோ.

* தவம் என்றது ஈண்டுச் சிவஞான நிட்டையை. அதனை "ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தனை - தம்முதல் குருவுமாய்த் தவந்தனி லுணர்த்தவிட் - டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே" என்னுஞ் சிவஞானபோதச் சூத்திரத்தானறிக.



சிராப்பளிமா மலைமேவுஞ் செவ்வந்திப் பெருமனருள் செய்ய வாங்கிப்
பராபரமு மென்னாளும் பைங்கிளியும் பலபாவும் பாடிப் பாடித்
தராதலமா னுடர்க்கெல்லாந் தண்ணமுதாத் தந்தருளுந் தாயு மான
நிராமயனா ரருள்பெரிய கவிதையினாற் பொருளதனை நினைந்து நிற்பாம். (௩)

அன்னையத் தனுமாய்க் குருவுமாய்த் தேவா யமர்பிள்ளை முனிவன்
மெய்யருளான், மன்னுதத் துவத்தை யவனரு ளறியா மதியிலே னாய்ந்திட
றகுமோ, வென்னவா கிடுமே கன்மவா தியர்க்கும் பிறர்க்குமா வெடுத்த
னன் வேறின், றென்னமா தவஞ்செய் திட்டனோ மறைசை யெம்பிரான்
புகழுரைத் திடற்கே. (௪)

நீரணி சடையா னிருமலன் வரத னிட்கள சகளமா நிறைவோன்
சீரணி கருணைத் திருவுரு வாகித் திருமறைக் காட்டெழுஞ் செல்வ
னீரடிக் கமலத் தாயுமா னவன்ற னிருந்தமிழ்ப் பெருமையென் னளவோ
பாரினிற் படுமோ வெடுத்தமா விடயம் பகருவ லினியினிப் பாக. (௫)

(இன்னும் வரும்.)

யாழ்ப்பாணம், நா-கதிரைவேற் பிள்ளை.

## சமயதத்துவஞானம்.

(366 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஐம்பொறிகட்கும் அந்தக் காரணங்கட்கு மெட்டாத்தனி முதலாயுள்ள பரம்பொருளொன்றினையே உலகத்திலுள்ள பற்பல சமயத்தவர்களும் பற்பல நாமரூபபேதங்களாக வழிபட்டுக்கொண்டு வருகின்றார்களென்றும், ஒவ்வொரு சமயத்தவரும் ஏனைய சமயத்தவருடன் சகோதர வாஞ்சையைப் பாராட்டி யொழுகக் கடமைப்பட்டவரே யன்றி எவ்வளவும் அவரை மனதினாலாவது மொழியினாலாவது மெய்யினாலாவது நோவச்செய்தல் கூடாதென்றும், அங்ஙனம் செய்வது எவ்வளவும் மானுஷீகமன்றென்றும், அது பகவானுடைய திருவுளத்திற்கு அருவருப்பைத் தாராதிராதென்றும் பொருள்பட யாம் சென்ற மாதத்திய சஞ்சிகையில் வற்புறுத்திக் கூறிய பாகத்தைச் சித்தசமாதானத்துடன் வாசித்த கனவான்களுட் சிலர் எம்மை நோக்கி - "ஐயா, மதத்துவேஷங்களும் ஜாதித்துவேஷங்களும் மேலிட்டுச் சின்னாபின்னமாய்ப் போயிருக்கும் நம்தேசத்தவர்கள் ஒற்றுமை பெற்றுய்வதற்கு "சமயதத்துவஞானம்." என்னும் தலைப்பெயரிட்டு நீவி

ரெழுதிய விஷயம் மிக்க அநுகூலமாயிருப்பதைக்கண்டு களிப்
புறுகின்றேமாயினும் எமக்கொரு சங்கையுளது. அஃதியாதெ
னில், - நம்தேசத்தில் வேதமுதலாகப் புராணங்களீறாக யாவும்
ஒன்றுக்கொன்று முரணாய் மதத்துவேஷத்தை விளைப்பதற் கேற்
றவைகளாகவே யிருக்கவில்லையா? திருஞான சம்பந்த சுவாமி
கள் காலத்தில் எண்ணாயிரம் சமணர்கள் கழுவி லேற்றப்படவில்
லையா? மாணிக்கவாசகசுவாமிகள் காலத்தில் பௌத்தர்கள் இந்
தியாவினின்றும் அறவே துறத்தப்படவில்லையா? சிவாலயங்கள்
விஷ்ணு ஆலயங்களாகவும் விஷ்ணு ஆலயங்கள் சிவாலயங்களாக
வும் மதத்துவேஷத்தின் மேலீட்டினால் மாற்றப்படவில்லையா?
பூர்வீக இந்துக்கள் செய்து வந்த இத்தகைய மதத்துவேஷ காரி
யங்களை யோசித்துப்பார்க்குமிடத்து இப்போது நீவிர் கூறிவ
ரும் விஷயம் பூர்வீக இந்துக்களுடைய கோட்பாட்டுக்கு ஏற்றதா
யிருக்குமா? அல்லது இக்காலத்துக் கேற்றவாறு சில நியாயங்
களை நவீனமாக நீவிர் எடுத்துக்காட்டுகின்றீரா? நீவிர் இப்
போது நாட்டவரும் விஷயத்திற்கு இத்தேசத்து முன்னோர்களு
டைய வாக்கியங்கள் பிரமாணங்களா யிருக்கின்றனவா?" என்று
உசாவினராதலின் அவர்களுடைய வேண்டுகோளின்படி ஆன்
றோர் வசனங்களை விளக்கிக்காட்டுவதே யன்றி இவ்விஷயத்தை
ஐயந்திரிபற யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் விரிவாயு
மெழுதுகிறோம்.

(கோடானு கோடியாயுள்ள மதஸ்தர்களுக்குள்ளே அந்தந்த
மதஸ்தரும் எம்முடைய தெய்வந்தான் பெரிது, எம்முடைய தெய்
வந்தான் பெரிதென்று கூறி எங்கும் எதிர்வாதம் பண்ணி வழக்கி
ட்டுக் கொண்டிருக்க அவர்களுக்கெல்லாம் ஆங்காங்குச் சாட்சி
யாகநின்றதாகிய பொருளெதுவோ அதுவாகிய பரமபதியொன்று
பொருள்பட) "சமயகோடிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வ
மென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது?" என்
றும் "மதங்கடோறு நின்றகுருவே." என்று த[illegible]வரும்,
(அந்தந்த மதஸ்தர்களுக்கு வெவ்வேறான கடவுளாகத் தோன்றி யொ
ருவனே அங்கங்கிருந்து அவரவர்களுக்கு அவரவர்களின் அன்புக்
கேற்றவாறு முத்திதருவதற்கேற்ற மூலகாரணமாயிருக்கிறேனெ
ன்று அனைவர்க்கும் உண்மையை விளக்கிய திருமுகமண்டலத்தை



யுடைய மணிபோன்றவனே யென்று பொருள்பட) "சமயக்கட
வுள் வேறு வேறின்றியாவொருவனே யங்கங்கிருந்தன்பர்க்கு முத்
திதருவித்தென்று யாவர்க்கு மறிவித்த வதன மணியே" என்று
சிதம்பரசுவாமிகளும் கூறிய அற்புதவசனங்களை ஆய்ந்து பார்க்
கையில், பரமபதியாகிய ஒருவரே அந்தந்த மதஸ்தர்களுக்கு அவ
ரவர்கள் வழிபடு மூர்த்தங்களாயிருந்து அநுக்கிரகித்து வருகின்
றனரென்பது வெள்ளிடைமலை போன்றிலங்கா நிற்கின்றது.

"அவரவர் தமதம வறிவறி வகைவகை
அவரவ ரிறையவ ரெனவடி யடைவர்கள்
அவரவ ரிறையவர் குறைவிலை ரிறையவர்
அவரவர் விதிவழி யடையநின் றனரே."

அந்தந்த சமயத்தவர்கள் தத்தமக்குள்ள அறிவைக்கொண்டு ஒவ்
வொரு மூர்த்தத்தைத் தமக்குக் கடவுளாக வழிபட்டுவருவார்கள்,
அவ்வாறு அவர்கள் வழிபடு மூர்த்தங்கள் அவர்களுக்குக் குறை
வற்றனவாகத்தா னிருக்கின்றன; ஏனெனில், சமயாதீதப் பழம்
பொருளாகிய சர்வேசுரன் அவரவர்களுக்கு அவரவர்களுடைய
மதத்தின் கோட்பாட்டுக்கேற்றவாறு அந்தந்த மூர்த்தமாக நின்று
பலப்பிராத்தியைத்தர ஆங்காங்குச் சாட்சி பூதமாயிருக்கின்றன
ரென்று பொருள்பட வைணவசமயத்தை விளக்கவந்த நம்மாழ்வா
ரென்னும் சடகோபர் தமது திருவாய்மொழியில் கட்டளையிட்டி
ருக்கின்ற அமுதவசனத்தை யோசிக்கையில், ஒருவன் எந்த மத
ஸ்தனாயிருக்கினும் அவன் தன்பரிபக்குவத்துக் கேற்றபடி எவ்வ
கைப்பட்ட மூர்த்தத்தை வழிபடுவானாயினும் அவனுடைய சமய
கோட்பாடு நம்முடைய சமய சித்தாந்தத்துக்கெவ்வளவு முரண்
படுவதாயிருந்த போதிலும் நமக்கும் அவனுக்கும் பலப்பிராப்தி
யைத் தந்தருள்பாலிக்க அந்தர்யாமியாய் விளங்குங் கடவுளொ
ருவரே யன்றி வேறில்லையென்று விளங்குகின்றது. இத்தகைய
பிரமாணங்களைப் பார்க்குமிடத்து நம்முன்னோரும் சமயவிஷய
மாய்ச் சமரசஞானம் பூரணமாய்ப் பெற்றிருந்தனரென்று கரத
லாமலகம்போல் தெரியவருகிறது. இம்மட்டோ?

"விலகிவீ ழருவித்தாரை வேறுவே றுகு வோடிக்
குலநதிப் பாலிவைப்பி னேகமாய்க் கூடுந் தோற்ற
:)

மலைகில்பல் வழியுமூதா ரணிமையி னொன்றா மாறும்
பலபல மதமு மீற்றி னொருவழிப் படலும் போலும்."

என்று சைவசமயத்தை விளக்கவந்த சிவஞானமுனிவர்களே தமது கச்சிமான்மியத்தின் நாட்டுப்படலத்தில் கூறுகின்றனர். அப்பாசுரத்துக்குச் சுருக்கமாக இங்கு அகலவுரையெழுதி யாம் எடுத்துக்கொண்ட பிரமேயத்தை நாட்டுவோம்.

மலையினின்றும் வெவ்வேறாகக் கீழே வீழ்ந்த அருவிகளானவை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் வெவ்வேறு மார்க்கங்களாக வோடிக் கடைசியாகப் பாலாற்றில் வந்து ஒன்றாய்ச்சேருங் காட்சியானது ஓரூர்க்குக் கொண்டு போயுய்க்கத்தக்க எண்ணிலாப் பற்பல வழிகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் வெவ்வேறாகப்பிரிந்து தோன்றிடினும் கடைசியில் அவ்வூருக்குச் சமீபத்திலே ஒன்றாய் வந்து கூடுவதுபோலவும், உலகத்திலுள்ள பற்பல மதங்களும் இறுதியில் அந்தந்த மதஸ்தர்களைக் கொண்டுவந்து ஒரே வழியில் விடுப்பதுபோலவு மிருக்கிறதென்பது மேற் காட்டிய பாசுரத்தின் கருத்தாகும். எல்லா மதஸ்தர்களும் இறுதியில் ஒரு மார்க்கத்திற்குத்தான் வந்து சேர்வார்களென்பது அந்நூலாசிரியருடைய கருத்தாகுமானால், எவனும் வேறெந்த மதத்தையும் திரஸ்கரிக்கலாகா தென்பதும் அவருக்குடன்பாடென்பது சொல்லாமேயமையும். இதனால் உலகத்திலுள்ள சகல மதங்களும் ஒரு தன்மைத்தானவைகளென்று நாம் இங்கு கூறவில்லை. அவ்வாறிருத்தல் கூடாதென்பதற்கு நியாயம் முன்னமே காட்டியிருக்கிறோம். ஓரூர்க்குக் கொண்டுபோய்விடத்தக்க மார்க்கங்கள் பலவிருக்கினும் அவற்றுள் ஒன்று ராஜபாட்டையாய்ச் செவ்வையானதாகவும், மற்றொன்று வளைந்து வளைந்து நெடுந்தூரமானதாகவும், வேறொன்று கல்லும் முள்ளும் நிறைந்ததாகவும், பிறிதொன்று சோலைகள் இருபுறமுஞ் சூழ்ந்து ரமணீகரமானதாகவு மிருத்தல் போற் பற்பல மதங்களும் முத்தியெனும் ஓரூர்க்கே கொண்டுபோய் இறுதியில் விடக்கூடியவைகளா யிருக்கினும் அவை தம்மை அவலம்பிப்பவர்களுக்கு வெவ்வேறு தன்மை யுடையனவாயிருக்கு மென்பதற்கு ஐயமில்லை. இந்தக் காரணத்தினாலேயே ஏனைய மதங்கள் பொய்மையானவைக ளென்றும் ஆபாசமான



வைகளென்றும் கூறுதலொண்ணாது. உலகத்திலுள்ள ஆன்மாக்களியாவும் சர்வேசுரனுடைய குழந்தைகளானபடியால் அவைகள் யாவும் கடைத்தேற வேண்டுமென்கிற எண்ணம் அவருக் கிராமற் போகாது. ஆனால் மாதாவானவள் தானருமையாகப் பெற்ற நாலைந்து குழந்தைகளுக்கும் ஒரே வகையான ஆகாரத்தைத் தராமல் ஒரு வயதுள்ள குழந்தைக்குப் பால்கொடுத்தும், இரண்டு வயதுள்ள குழந்தைக்கு நொய்யுணவூட்டியும், மூன்று வயதுள்ள குழந்தைக்கு மேன்மையான உணவைச் சிறிதனவாக வுண்பித்தும், ஏழெட்டு வயதான சிறுவனுக்குச் சிறிது வன்மையான உணவளித்தும் வளர்த்து வருவதுபோல, உலகுயிரனைத்திற்கும் பரம மாதாவாகிய எம்பெருமானும் அந்தந்த உயிர்களின் பரிபக்குவத்துக்கேற்பப் பற்பல மதங்களை ஏற்படுத்தி அநுக்கிரகித்துக்கொண்டுவருகின்றனர். எல்லா மதங்களினும் உயர்ந்த மதம் இன்னதென்று யாம் ஈங்கு கூறத்துணியவில்லை. ஒவ்வொரு மதஸ்தனும் தன் மதந்தான் ஏனைய மதங்கள் யாவற்றினும் மேம்பட்டதென்று கருதுவான். அங்ஙனமே ஒவ்வொருவனும் கருதவேண்டியதும் அவசியந்தான். ஏனெனில் அவ்வாறு கருதினாற்றான் அவனுக்கு அந்த மதத்திற் பற்றும் அதன் கடவுள் மூர்த்தத்தில் பக்தியுமுண்டாகும். ஆனால், அவ்வாறு ஒவ்வொரு சமயத்தவனும் தன்னுடைய மதமே ஏனையமதங்கள் யாவற்றுள்ளும் உயர்ந்ததென்று எண்ணுங் காலத்து ஏனைய சமய மார்க்கங்களை அநுசரிப்பவர்களாகிய தன் சகோதரர்களும் தான் வழிபடும் தனிமுதற் கடவுளையே வேறு நாமரூபங்களினால் வழிபட்டுக்கொண்டு வருகின்றனரென்றும், அவர்களும் இறுதியிலே ஈசுவரரது அநுக்கிரகத்திற்குப் பாத்திரராவர்களென்றும் நினைக்கக்கடவன். அங்ஙனம் அவன் நினைப்பானாகில் ஏனைய சமயத்தார்களை மறந்தும் துவேஷியான். இவ்வுண்மையை நம்மனோருக்கு விளக்கிய பலருள்ளும் தாயுமானவரென்னும் மஹாஞானியாரை யாம் நடுநாயகமாகக் கூறலாம். ஏனெனின் "சைவசமயமே சமயம்" என்றும், "அயர் வறச்சென்னியில்வைத்து ராஜாங்கத்திலமர்ந்தது வைதிகசைவ மழகிதந்தோ!" என்றும், 'சந்தான கற்பகம் போலருளைக் காட்டத்தக்க நெறியிந் நெறியேதான் சன்மார்க்கம் (சைவம்)" என்றும் அவர் ஆங்காங்குக்கூறிய வாக்கியங்களின் உண்மையை விசாரிக்கு மள

வில் அவர் பூரண சைவாபிமானி யென்று விளங்குகிறது; ஆயினும் "சமயகோடிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வ மென்றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது?" என்றும், "மதங்கடோறு நின்றகுருவே," என்றும் அப்பெருந்தகையார் வேறு இடங்களிலே கூறியுள்ள வாக்கியங்களை யோசித்துப் பார்க்கையில் அவர் தமது சொந்தசமயத்தில் அந்தரங்க பக்தி பாராட்டினரேனும் ஏனைய எல்லா மதஸ்தர்களையும் ஆன்மநேய வொருமைப்பாட்டுடன் நன்கு மதித்து வந்தனரேயன்றி எந்த சமயத்தவரையும் துவேஷித்தாரில்லையென்று தெரியவருகிறது. யாம்இங்குக் கூறவந்த விஷயம் நவீனமன்றென்பதற்கும், இவ்விஷயத்தையே நம் முன்னோர் நாட்ட முயன்றனரென்று காட்டுவதற்கும் இதுவரையில் சில பிரமாணங்களை யெடுத்துக்காட்டினோம். இன்னுஞ் சில பிரமாணங்களை இந்தப் பிரகரணத்தின் முடிவிலெடுத்துக் காட்டுகிறோம்.

நம்தேசத்தில் வேதமுதலாகப் புராணங்களீறாக யாவும் ஒன்றுக்கொன்று முரணாய் மதத்துவேஷத்தை விளைப்பதற்கேற்றவைகளாகவே யிருக்கவில்லையா? என்ற வினாவுக்குச் சுருக்கி விடை கூறுவோம். உயிர்கள் விதி விலக்குகளை யுணர்ந்து கடைத்தேறும் பொருட்டுப் பரமபதியாயுள்ள கடவுள் வேதத்தை யுண்டாக்கினர். உயிர்கள் முன்னமே நாமெடுத்துக் காட்டியவாறு புத்தி விஷயத்திலும் தேக விஷயத்திலும் பலவகையான பேதங்கள் பெற்றிருக்கின்ற காரணத்தினாலே அவைகள் யாவற்றிற்கும் உதவியாகத் தக்கதாயல்லவா அவ்வேதமென்னும்பொதுநூலிருத்தல் வேண்டும்? அது ஸர்வ ஜீவதயாபரரான கடவுளால் அவ்வாறு தான் பொதுவாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அது முழுவதும் மூலசூத்திரமாயிருக்கிறபடியினாலும் அநேக சோபான மார்க்கங்களைப் படிப்படியாகக் காட்டிக்கொண்டே போகிறபடியினாலும் அவரவர்கள் தத்தம் பருவத்திற்கேற்றபடி அதை அர்த்தம் பண்ணி ஒவ்வொரு மதத்தை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். அஃதெவ்வாறெனின்:—எவ்வித விசாரணையுமில்லாமல் அதிக இளம்பக்குவியாயுள்ள ஒருவனைப்பார்த்து அவனுடைய கண்ணுக்குப் புலப்படுவதாகிய பிருதிவி முதலிய பூதங்களே பொருளென்று சாதித்தும், அவ்விசாரங் கழிந்தபின்னர்



அவற்றின் ஆபாசத்தன்மை அவனுக்குப் புலப்பட்டபோது அவற்றிற்கு மேலிட்ட பொருளை அவனுக்கு உணர்த்துவான் தொடங்கி அவற்றைப் பூர்வபட்சமாக்கி, அவைகள் பொருளாகா, பொறி-புலன்களே பொருள் என்று சாதித்தும், அவ்விசாரங்கழிந்த பின்னர் அவற்றின் ஆபாசத்தன்மை அவனுக்குப் புலப்பட்டபோது அவற்றிற்கு மேலிட்ட பொருளை அவனுக்கு விளக்குவான் அவற்றைப் பூர்வபட்சமாக்கி அவைகள் பொருளாகா, மனமுதலிய கரணங்களே பொருளென்று சாதித்தும், அவ்விசாரங் கழிந்த பின்னர் அவற்றின் ஆபாசத்தன்மை அவனுக்குப் புலப்பட்டபோது அவற்றிற்கு மேலிட்ட பொருளை அவனுக்கு உணர்த்தத் தலைப்பட்டு அவற்றைப் பூர்வபக்ஷமாக்கி, அவைகள் பொருளாகா, ஆன்மாவே பொருளென்று சாதித்தும், அவ்விசாரங் கழிந்தபின்னர் அதன் ஆபாசத்தன்மை அவனுக்குப் புலப்பட்டபோது அதற்கு மேலிட்ட பொருளை அவனுக்கு உணர்த்தத் தொடங்கி அதைப் பூர்வபட்சமாக்கி, அது பொருளாகாது, இந்திரனே பொருளென்று சாதித்தும், இவ்வாறு முறையே சூரியனையே பொருளென்று சாதித்தும், சந்திரனையே பொருளென்று சாதித்தும் படிபடியாகக் கொண்டுபோய், இறுதியில் ஏதோவொரு பதார்த்தத்தை உண்மையென்று குறிப்பது வேதத்தின் கோட்பாடாயிருக்கிறது. அப்பொருளை முடிவிற் கண்ட சிலரோ அதை இத்தன்மையதென்று சுட்டிக்காட்ட ஆற்றலற்றவர்களாயிருக்கின்றார்கள். மேற்கண்டபடி வேதத்திலே பற்பல சோபான மார்க்கங்கள் விதிக்கப்பட்டிருக்கிறபடியினால், வேதாந்தப்பொருளாயுள்ள உண்மையைக் கண்டு தெளியவேண்டுமென்கிற விசாரத்துடன் ஆராய்ச்சி செய்துகொண்டே போகிற ஒரு புருஷனுக்கு ஒவ்வொரு சோபான நிலையையும் நன்றாயுணர்த்துவதற்காக அவ்வவற்றை ஆங்காங்கு விசேஷப்படுத்திக் கூறவேண்டிய தவசியந்தானே! கீழ்ப்பட்ட சோபானங்களை அவன் நன்றாயறிந்து அவற்றைக் கடந்து சென்றாலன்றி மேலுள்ள ஒரு பொருளையறிதல் முற்றும் கூடாதாகலின் அச்சோபானங்களொவ்வொன்றினிடத்தும் அவனுக்குப் பற்றுண்டாகும் பொருட்டு அந்தந்த அவசரத்துக்கேற்றவாறு அந்தந்த சோபனத்தை வியந்து அதுதான் பொருளென்று வேதம் கூறவேண்டியதாய் நேரிட்டது. இச்

தியாதி அளவிறந்த சோபானங்களே உலகத்தில் அளவிறந்த மதங்களாயேற்பட்டன. ஆகவே கேவலம் பூதங்களே நித்தியமானபொருள், அவைகளையன்றி வேறே கர்த்தாவென்னும் பொருளொன்றில்லையென்று கூறித்திரியும் நாஸ்திகனாகிய உலோகாயதன் முதலாக ஒவ்வொரு சமயத்தவரும் வேதத்திற் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு சோபானத்தில் நிற்பவராயிருக்கின்றாராகையால் எவரையுந் தூஷிப்பதாகிலும் அலட்சியம் செய்வதாகிலும் எவ்வளவும் மானுஷிகமாகமாட்டாது.

"அருள்வித்திட்டுக்கருணைநீர் பாய்ச்சி
வேதமென்னும் பாதபம் வளர்த்தனை
பாதபமதனிற் படுபயன் பலவே
அவற்றுள்,
இலைகொண்டுவந்தனர்பலரே இலையொரீஇத்
தளிர்கொண்டுவந்தனர் பலரேதளிரொரீஇ
யரும்பொடுமலர்பிஞ்சருங்காயென்றிவை
விரும்பினர்கொண்டுகொண்டுவந்தனர்பலரே."

என்று அறிஞர்கூறிய அமுதவசனத்தைச் சற்றே யோசித்துப் பார்ப்போம். ஓ கடவுளே! உலகத்திலுள்ள ஆன்மாக்களிடத்து நீவைத்திருக்கும் அருளையே விதையாக விதைத்து அது செழித்தோங்குவதற்காக கருணையென்னும் நீர்பாய்ச்சி வேதமென்னும் ஒரு விருட்சத்தை நீ வளர்த்தனை; அதில் இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்னும் நானாவித பலன்களுக்குள்ளே அவரவர்களுக்கு வேண்டியவற்றை அவரவர்கள் அடைகிறார்கள் என்பது மேற்காட்டிய பாசுரத்தின் பொருளாகும். இதனால் நாம் அறிந்துதெளிய வேண்டுவதியாதெனில்:—பலருக்கும் பயன்படும்பொருட்டு வளர்க்கப்பட்ட யாதொரு மரத்துக்கு இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்பவை இன்றியமையாதனவாகிய பொருள்களாயிருப்பவைபோலவே பல்லுயிர்க்கும் உபகரிக்கும் பொருட்டுப் பகவானாற் செய்யப்பட்டுள்ள வேதத்துக்கும் பற்பல சோபனமார்க்கங்களமைந்திருப்பது இன்றியமையாதது; எப்படி இலை, தளிர், அரும்பு, மலர், பிஞ்சு, காய் ஆகிய இப்பொருள்களில்லாவிடத்துக் கனியென்னும் மேலானதொரு பதார்த்தம் யாதொரு மரத்திலே உண்டாக மாட்டாதோ அதுபோலவே பற்பல சோபானங்களேற்படாவிடில் வேதாந்த சாரமாயுள்ள ஒரு மேலான மதம் ஏற்படாது; கனியாகிய ஒன்றினையே



அடைய விரும்புமொருவன் எப்படி ஏனைய இலை, தளிர் முதலியவற்றைத் திரஸ்கரியாமல் அவைகளெல்லாம் அக்கனிக்கு முக்கியமான சாதனங்களென்று சொல்லவேண்டிவருமோ அதுபோலவே வேதசாரமாயுள்ள மேலானதொரு சமயத்திற்கு (அது எதுவாயிருந்தாலு மிருக்க) ஏனைய எல்லாச் சமயங்களும் அத்தியாவசியமென்றே ஒவ்வொருவரும் கொள்ளல்வேண்டும்; யாதொரு மரத்தை நாடிவருபவர்கள் யாவரும் கனியொன்றைத்தானா உத்தேசித்து வருகிறார்கள்? சிலர் சில சந்தர்ப்பங்களிலே இலைக்காகவும், சிலர் தளிருக்காகவும், சிலர் மலருக்காகவும், சிலர் பிஞ்சுக்காகவும் எப்படி வருகின்றார்களோ அதுபோல் அவரவர்கள் தத்தம் பக்குவத்துக்கேற்க வேதத்தின் ஒவ்வொரு பகுதியாகிய சோபான மார்க்கத்தை நாடிநிற்கின்றனர். பூதங்களே கடவுளென்று சொல்லும் நாஸ்திகனாகிய உலோகாயதனும் அவ்வேதத்தின் ஒரு சுலோகத்தையே தனக்காதாரமாகக்கொண்டு பிரவர்த்திக்கின்றானாகையால் அவனையும் நாம் துவேஷித்தல் கூடாது. அவனிடத்தும் நாம் சகோதர வாஞ்சையைப் பாராட்டவேண்டும். இவ்வாறு வேதமானது பக்குவிகளுக்குப் பற்பலவாறாகப் பேசிக்கொண்டுபோகிற நோக்கத்தை யறிந்துகொள்ளாக் குறையினால் சிலர் வேதத்திலுள்ள பற்பல பாகங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றனவென்கிறார்கள். மேலே நாமெடுத்துக் காட்டிய நியாயங்களினால் வேதத்தில் முரணாயுள்ள பற்பல மார்க்கங்களெல்லாம் பற்பல பக்குவபேதங்களையுடையவர்களுக் கேற்றவைகளாகச் செய்யப்பட்டனவென்று தெரியவருகிறது. இவ்வாறே புராணங்களும் சாஸ்திரங்களும் ஏற்பட்டிருக்கின்றன என்றறிக. ஏனெனில், அவைகள் யாவும் ஆதிநூலாகிய வேதத்தின் ஒவ்வொரு பகுதியையே விளக்கவந்தன. ஆகவே, இவ்வுண்மைகளையெல்லாந் திரவிசாரித்தறிந்தவர் ஒருபோதும் பரசமயத்தவர்களை அலக்கழிக்கத் துணியார். வேதத்தையே பெருத்த ஆதாரமாகக்கொண்ட பூர்வீக இந்துக்களும் இப்போது நாமெடுத்துக் கூறுவதுபோலவே எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவராகி எந்த மதஸ்தரையும் எள்ளாமலிருந்தனரென்பது விசதமாயிற்று.

(இன்னும்வரும்.)

தண்டலம் - பாலசுந்தர முதலியார்.

## பாரதஸாரம்.

### IV-ஆம் அத்தியாயம்.

### சபாபருவம்.

### பாண்டவர்க்கு நேரிட்ட தீங்குகள்.

(376-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

சூதாட்டத்தில் துரோபதையை வென்றதும் துரியோதனன் விதுரனை
நோக்கிப் "பாஞ்சாலியைப் பாண்டவர்களுக்கு முன்பாகக் கொண்டுவந்து
நிறுத்துங்கள். வீடு வாயில்களைக் கலகிடச்செய்யுங்கள். பணிப்பெண்களுறை
விடத் திருத்துங்கள்" என்றான். விதுரர் அவனைக் கடிந்து பதில் சொல்லியும்
துரியோதனன் அதனைக் கவனிக்கவில்லை. தன் வெற்றியின் பிரதாபத்தைக்
கருதினானே யொழிய மற்றவர்க்கும் தனக்கும் வரும் மானத்தைக் கவனித்
தானில்லை. வினையாள னொருவனை விளித்துத் திரௌபதையைத் தன் முன்
கொண்டுவரக் கட்டளையிட்டான். அவனும் அப்படியே கேசரியின் குகையில்
சுணங்கன் நுழைவதுபோல் நுழைந்து பாண்டவர்களுடைய பத்தினியைப்
பார்த்து அவளருகிற் சென்று, அவளைத் துரியோதனன் தர்மரோடு சூதாடி
வென்றனனென்றும் அவளைப் பணிப்பெண்ணாக்க நினைத்திருக்கின்றானென்
றும் சொன்னான். திரௌபதை திடுக்கிட்டு நடந்தவற்றைக் கேட்டுச் சிந்தித்
துத் தெளிந்து அச்சமயத்திற்குத் தனக்குத் தோன்றியயுக்தியைக்கொண்டு
தன்மானத்தையுங்காத்துத் தன் புருஷர்களுடைய அவமானத்தையும் நீக்க
முயன்றாள். வந்தவனையழைத்து "நீபோய் தருமர் தன்னை முன்னர்த்தோற்ற
னரா? அல்லது என்னைத் தோற்றனராவென்று அவரைக்கேட்டு இங்குவா"
என்றாள். அவனங்குச்சென்று தருமரைக்கேட்க அவர் வெட்கத்துடன் தலை
குனிந்து நின்றனர். துரியோதனன் அவனைப்பார்த்து "நீ அவளை யிங்கு கொ
ண்டுவா, அவளே யந்தக்கேள்வியைக் கேட்டுப் பதில்தெரிந்துகொள்ளட்டும்"
என்றான். அத்தூதுவன் தான் அத்தகைய நீச்செயலை நிறைவேற்றவேண்டு
மே யென்னுந் துக்கத்தோடு திரௌபதையினிடஞ் சென்று துரியோதனன்
சொன்னதைத் தெரிவிக்க, அவள் "நீ சபையிலுள்ள பெரியோர்களிடம்
நான் சொன்னதைச் சொல், அவர்கள் என்னை என்னசெய்யச் சொல்கிறார்
களோ அப்படியே செய்வேன்" என்றாள். தூதன் திரும்பிவந்து அவள்
சொன்னதைத்தெரிவிக்க, யுதிஷ்டிரர் இப்போதுதான் அவளையுந் துறத்தலை
நினைத்துத் தனக்குவந்த மானபங்கத்தையும் பொறுத்து இவ்விடம் வரும்
படி சொல்லென்றார். தூதுவன் மறுபடியும் துரோபதையினிடஞ் செல்லச்
சற்று யோசித்து, நிற்கையில் அலஸியம் பொறுக்கமாட்டாத துரியோ



தனன் துச்சாதனனையழைத்துச் "சீக்கிரம் துரோபதையை யிவ்விடம் கொ
ணர்வாய்" என்றான். சொல்வதற்குமுன்பே தன்னிடம் விட்டுக் குதித்தெழு
ந்து சிறிதேனு மானமென்பதின்றி அவளிருந்த அந்தப்புரஞ்சென்று, "பாஞ்
சாலீ! உன் நாணத்தைச்சற்று ஒதுக்கிவைப்பாய். அரையிலென் செய்கிறாய்?
அம்பலத்திற்குவா" வென்று சீறினான். துரோபதை நடுநடுங்கி ஏக்கங்
கொண்டு இருந்த விடத்தை விட்டுத் துரியோதனன் துச்சாதனன் என்னு
மிவர்களுடைய தாயார் மனைவியரிருந்த இடந்தேடி யோடினாள். துச்சா
தனன் அவளைப் பின்றொடர்ந்து கூந்தலைப்பற்றி யிழுத்துச் சபைக்குக் கொ
ணர முயன்றான். ஐயகோ! இவட்கும் இக்கதியேன் வாய்த்தது? அவள்
மீது காற்றுங் கடுகி வீசியறியாதே! அயலார் கண்ணும் தாக்கியிராதே!
சில நாளைக்கு முன்புதான் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள்
கொண்டு மந்திரோச்சாரணத்தோடு அபிஷேகம் செய்யப்பட்டு விளங்
கும் கூந்தலைப்பற்றி யிழுத்துக் கொண்டுவந்து அவளைச் சபையின்கண்
சேர்த்தான். அந்தப்புரத் துடையோடும் இவ்வலங் கோலத்தோடும்
சபையிலுள்ளார் எதிட்டுப்பார்க்கப் பங்கயத்தேவி போன்றவளைக் கண்
ணுங் கண்ணீருமாயிருப்பவளைச் சபையினாப்பண் நிறுத்தினான். "மான
மழிந்தபின் வாழாமை முன்னினிது" என்பதற்கேற்ப அவன் தன்னை மான
பங்கஞ் செய்ததைக் குறித்து மிக்க கோபங்கொண்டு சபையுள்ள வீரர்களை
நோக்கி "வீரர்காள்! இப்படியுஞ் செய்தல் தகுதியோ? உங்கட்கு மான
மென்பது சிறிதேனும் மில்லையோ? இஃதுங்கள் குலத்திற்கடுக்குமோ? குரு
குல மன்னர்தம் தலைவன் இக்குற்றத்தைக்கண்டும் ஏன் மௌனமாயிருக்கின்
றான்?" என்றும், இன்னும் பற்பலவாறாய்ச் சொல்லிப் பிரலாபித்து நின்றாள்.

அவள்தன் நாயகரும் அங்கிருந்தார்களே! அவர்களால் ஒன்றுஞ் செ
ய்ய முடியவில்லையோ? ஐயோ பாவம்! என் செய்வார்கள்! தங்களையுந்
தோற்றுத் தன்வயமற்றுப் பராதீனமுற்று இருந்தார்களாகையால் ஒன்றுஞ்
செய்வதற்கில்லை. இதனை யறிந்து துச்சாதனன் அவளை அடிமை யென்றும்
பணிப்பெண்ணென்றும் வைது அவள் வஸ்திரத்தைப் பற்றி யிழுத்தான்.
கர்ணனும் கல்லென்று சிரித்தான். சகுனியுஞ் சந்தோஷமுற்றான். துரி
யோதன துச்சாதனராதியரடைந்த ஆனந்தத்திற் களவு முண்டோ? இவர்
கள் நால்வருந்தான் அவள்தன் நிலையைக்கண்டு மிக்க களிக்கூத்தாடினவர்.
கள். பிறகு பீஷ்மர் எழுந்து துக்கமேலீட்டினால் மெதுவாய்ப் பேசவாரம்
பித்தார். துரோபதை கேட்ட கேள்விக்குத்தக்க சமாதானம் சொல்ல அவ
ராலு முடியவில்லை. யுதிஷ்டிரன் தன்னைத்தோற்ற பிறகு தனக்கொன்
றுங் கிடையாது. ஆயினும் மனைவியைப் புருஷனினின்றும் பிரித்துப் பார்க்
கலாமா? அவளோ அவனிடத்தைக்கியம், என்று யோசித்து "இதற்கெப்
படி முடிவு சொல்வது? சரியாய் முடிவு சொல்வதசாத்தியம்" என்றார்.
அச்சபைக்கண் அவராலேயே தக்க சமாதானஞ்சொல்ல முடியாமற்போனால்

யார் தாம் முடிவு சொல்ல வல்லவர்? துச்சாதனன் தொந்தரை செய்வதை நிறுத்தினானல்லன். அவளோ கண்ணீராறாய்ப் பெருகவிட்டுக் கதறுவாளாயினாள். இதைப் பீமனால் சகிக்க முடியவில்லை. அவனுக்குக் கோபம் மீதேறி வருகின்றது. தன் தமயனையும் அவளைப் பந்தயத்தில் வைத்திழந்ததற்காகக் கடிந்தனன். எல்லாவற்றையுந் தூதகிலே துறக்கலாம். உயிர்க்குயிராகிய உத்தம பத்னியினையும் இவ்வாறு துறக்கலாமோ வென்றான். "அரசே, அவள் நிமித்தம் உங்கள்மீது கோபித்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அவளைப் பந்தயம்வைத்தாடின கையைக்கொளுத்திவிடுகிறேன். சகதேவா, கொண்டுவா நெருப்பு" என்றான் பீமன். அவனுடைய கர்ச்சனை கோடையிடி போன்று நிச்சப்தமாயிருந்த அச்சபையிலுள்ளோரைப்போய் வருத்தியது. அர்ச்சுனன் அவனுடைய அவசரத்தைக் கண்டு கண்டித்து, "யுதிஷ்டிரர் தம் மெண்ணத்துக்கு மாறாய் 'மாற்றானுக்கிடங்கொடேல்' என்பதற்கேற்ப நடந்தனரே யன்றி வேறென்ன? அப்படி நடந்தபோதிலும் தமயனை எதிர்த்துப் பேசலாமோ?" என்றான். பீஷ்மர் அருச்சுனனை நோக்கி "தனஞ்ஜயா! தர்மர் க்ஷத்திரிய தர்மத்தின்படி செய்தாரென்பதை அறிந்தவனாகையால் யானும் வாய்பொத்தி யிருக்கின்றேன். வேறுவிதமா யிருக்கும் பக்ஷத்தில் அவருடைய இரண்டு கரங்களையும் பற்றித் தீயிட்டுச் சாம்பராக்கி யிருக்க மாட்டேனோ?" என்றார்.

நூற்றுவரில் துரியோதனனுதியர்க்கு இளையோனும் நற்குணம் வாய்ந்தவனுமாகிய விகர்ணன் சபையினின்று அதிக கோபக்குறியுடனெழுந்து சபையாரைக் கடுத்து நோக்கி "ஏன் எல்லாரும் மௌனஞ்சாதிக்கின்றீர்கள். திரௌபதை கேட்ட கேள்விக்கு ஏன் சமாதானம் சொல்லவில்லை?" என்றதும் அங்கிருந்த அரசர்களிலநேகர் அவனைக் கொண்டாடினார்கள். கர்ணன் எழுந்து இவன் தனக்கு முதியோர் முன்பு வாய் கூசாது பேசினதற்காக அவனைக் கண்டித்துத் திரௌபதையை யிம்மாதிரி நடத்தியதே நியாயந்தானென்றுசொல்லித் துச்சாதனனை அழைத்து பாண்டவர்களுடைய உத்தரீயத்தையும் பாஞ்சாலியின் சேலையையும் உரியும்படி உத்தரவு செய்தான். சொன்னமாத்திரத்திற் பாண்டவர்கள் தங்கள் மேலிருந்த வஸ்திரங்களைக் களைந்துவைத்து விட்டார்கள். துச்சாதனன் துரோபதை தரித்திருந்த ஒற்றைத்துகிலையும் உரிய ஆரம்பித்தான். மானுடர் சகாயமற்றுநின்றவள் ஆபத்பாந்தவனை ஸ்ரீமந்நாராயணனே கதியென்று நினைத்து, "கோவிந்தா! அச்சுதா! நாராயணா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! என்னைக்காவாயோ" என்று அவனுடைய ஆயிரநாமங்களையுஞ் சொல்லி அலற, அதை அறிந்த அச்சுதன் இரக்கங்கொண்டு அருட் கண்ணாற் பார்த்தான். தர்மதேவதை மற்றோர்க்குப் புலப்படாது எதிர் நின்று துரோபதையின் ஆடையை வளரச்செய்துகொண்டே வந்தது. துச்சாதனன் இழுக்க இழுக்க பற்பல வர்ணங்களோடு கூடிய வஸ்திரங்கள் வெளியே மாயனுடைய மா-



யத்தால் ஒன்றின்பின்னொன்றாய் வளர்ந்துகொண்டுவந்தன. இப்படி யிழுத்த வஸ்திரங்களின் குவையே ஒரு பெரும்போராய்விட்டது. இவன் எவ்வளவு முயன்றும் இவனாற் சாத்தியப்படவில்லை. கடைசியிற் சோர்ந்து தரைமீது வீழ்ந்தான் துச்சாதனன். பீமனப்போது ஒருமுறை கர்ச்சித்தான். அவன் செய்த சபதம் மிக்க பயங்கரமானது. "க்ஷத்திரியவீரர்களே! யான் சொல்வதைக் கேளுங்கள். இதற்கு முன் இத்தகைய சபதம் செய்துகொண்டார் ஒருவருமிலர். இம்மாதிரியும் இனி நேரிடாது. நான் சொன்னதை நிறைவேற்ற முடியாமற் போய்விட்டால் எம்முன்னோர்களடைந்த நற்கதி எனக்குக்கிடைக்காமற் போகக்கடவது. இங்கெதிர் நிற்கும் பாதகனுடைய (துச்சாதனன்) மார்பைப் பிளந்து அவனுதிரத்தை வெளிப்படுத்திக் குடியாவிடின் எனக்குத் துறக்கங்கிடைக்காமற் போகட்டும்" என்றான். இந்த சபதமோ மிகவும் பயங்கரமானதுதான். இதை நிறைவேற்றுவது மிகவும் அருமையேயாம்.

கண்ணீர் ததும்பக் கலங்கும் துரோபதைக்குச் சமாதானம் சொல்வாரொருவருமிலர். துரியோதனன் துச்சாதனனை அழைத்து துரோபதையைச் சுட்டிக்காட்டி இப்பணிப்பெண்ணை உள்ளே கொண்டுபோ" என்றான். அவனும் அவளை யிழுக்க ஆரம்பித்தான். அவளசையாது ஏக்கங்கொண்டு எல்லாருடைய முகத்தையும் பார்த்து நின்றாள். துரியோதனன் துரோபதையைப் பார்த்து "எல்லாரையும் பார்ப்பதனால் யாதுபயன்? உன் புருஷர்களைக்கேள். அவர்கள் யுதிஷ்டிரர் தங்கட்குத் தலைவரல்லரென்றும், (சத்தியவந்தனாகிய) தர்மரைப் பொய்யரென்றும் சொல்லிவிடுவார்களேயாகில் உன்னையிப்போதே அடிமைத்தனத்தினின்றும் நீக்கிவிடுகிறேன். அல்லது யுதிஷ்டிரர் தாம் உன்னுடைய புருஷரல்லரென்று சொல்லட்டும், நான் உன்னை விட்டுவிடுகிறேன்" என்றான். "யுதிஷ்டிரர் தாம் எங்களுக்குத் தலைவர், எங்களுயிர்க்குமுரியர், தம்மையே தோற்றாரென்று நினைக்கும் பக்ஷத்தில் யாங்களும் தோற்கப்பட்டவர்களாவோம்" என்று பீமன் சொன்னான். கர்ணன் எல்லாரையும் பரிகசித்துத் துரோபதையைப்பார்த்து அவனுடையவேலையைப் போய்க்கவனிக்கச்சொன்னான். மேலும் அவளைநோக்கி "இவ்வசாகுராப்பேர்வழிகளை நாயகராய்க் கொண்டதனால் யாது பிரயோசனம்? நீ யிப்போதாயினும் வேறோர் புருஷனைத் தேடிக்கொள்ளலாம். அவனிம்மாதிரி உன்னை இடையிற் கைவிடான். சூதாடித் தோற்கான்" எனப்பரிகசித்தான். தன் தமயனுக்கும் தர்மத்திற்கும் பயந்து துன்பமே ஒருரு வெடுத்து வந்தாலன்ன பீமன் பெருமூச்செறிந்துகொண்டு வாளாவிருந்தான். துரியோதனன் தருமனை நோக்கி தான் கேட்டவைகளுக்கு உத்தரம் தாருமென்றான். சும்மாவிருக்கும் பீமனைத் தூண்டக்கருதி துரோபதையைத் தன் தொடையின் வந்துட்காரும்படி சொன்னான். இதைக்கேட்கப் பீமன் பொறுப்பனோ? "இனி நிகழப்போகிற யுத்தத்தில் உன் தொடை எலும்பை முறிக்காவிடின் யான் எம்

முன்னோரடைந்த பதவியை யடையாமற் போகக்கடவன்," என்று இரண்டாவது சபதம் செய்தான் பீமன்.

திரௌபதை அந்தத்தில் அந்தகனாகிய திருதராஷ்டிரனிடஞ் சென்று முறையிட்டுக் கதறினாள். தன் பிள்ளையின் துர்க்கிருத்தியத்தால் வரக்கூடிய நாசத்தைப் போக்கு நிமித்தம் அவளுக்கினிய வார்த்தை சொல்லி அவள் கோபத்தைச் சற்றுத்தணித்து "உனக்கு வேண்டிய வரத்தைக்கே" ளென்றான். தனக்குப் பிறக்கும் குழந்தை யடிமையின் பிள்ளை யென்னுமிழி பெயரடையாதிருக்கும் பொருட்டுத் தர்மரை அடிமைத் தனத்தினின்றும நீக்க வேண்டுமென்றாள். இவ்வரத்தைத்தந்து, "வேறோர் வரங்கேட்பா" யென்றான். அவர்தம் சகோதரர் நால்வரையும் அவர்களாயுதங்களுடன் விடுதலை செய்தல் வேண்டுமென்றாள். இவ்வரத்தையுந் தந்தான். "வேறோர் வரமும் வாங்கிக்கொள்" என்றான். அதற்குத் திரௌபதை "இனியாதொரு வரமும் வேண்டாம். என்னாயகர்கள் சுயாதீன மடைந்தார்கள். தங்களுடைய வல்லமையினால் ஐசுவரியமும் பெறுவார்கள்" என்றாள். இதைக்கேட்டிருந்த கர்ணன் "துன்பக்கடலுளாழ்ந்து கரைதெரியாது தியங்கிக்கொண்டிருந்தவர்க்குத் துரோபதை தானோரோடம்போல் நின்று மாலுமியுமாகிக் கரைசேர்த்தன" ளென்றான்.

பிறகு யுதிஷ்டிரர் தன்னிருகரங்களையும் சிரமேற்கொண்டு தன்பிதாவிற்கு அஞ்சலி செய்து "தங்களாக்ஞையின் பிரகாரம் நடக்கச் சித்தமாய்க் காத்திருக்கின்றே" னென்ன குருட்டரையன் அவரை, "உன்னோடு சேர்ந்து சுகத்துடன் வாழ்க" வென்றாசிர்வதித்தான். துரியோதனனுடைய துர்க்குணங்களைக் கவனியாது தன்னையும் காந்தாரியையுமாத்திரம் நினைத்துத் தேறுதல் செய்துகொள்ளும்படி வேண்டினான். ஐவரும் உத்திரவு பெற்றுப் போகுந்தருணத்தில் துரியோதனன் தன் தந்தையிடஞ்சென்று "பாண்டவர்கள் அதிக கோபத்துடன் செல்கிறார்கள். அவர்களையிப்படி விடுவதனால் தேசத்திற்குத் தீங்கு நேரிடும். இன்னொருதரம் சூதாடித் தோற்கிறவர்கள் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாதவாசமும் செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தல் வேண்டும்" என்றான். மதியின் முதிர்ந்தோராகிய பீஷ்ம துரோண விதுரர் எவ்வளவு எடுத்துச்சொல்லியும், காந்தாரியும் இப்படிப் பாண்டவர்களை வருத்துவதைப்பார்க்கிலும் துரியோதனனையேயிழந்துவிடலாம் என்று சொல்லியும் அவற்றைச் செவி கொளாது அரசன் தன்சுதனாய துரியோதனன் சொல்லை அங்கீகாரஞ் செய்தனன். பாண்டவர்களைத் திரும்பவு மழைத்து துரியோதனனுடைய ஏற்பாட்டிற்குடன்படச் செய்து அஞ்ஞாதவாசஞ்செய்து திரும்பிவருகிறவர்களுக்கு அவர்களுடைய பாகத்தையு கொடுப்பதாக வாக்களித்தனன். பின்னடந்த சூதாட்டத்திலும் சகுனியே வென்றான்.



எல்லாவற்றையு மிழந்தார்கள் பாண்டவர்கள். தாங்களுடுத்திருந்த பட்டாடைகளைத் தவிர்த்து மான்றோல் மரவுரி தரித்துக் காட்டிற்குப் போகும் வண்ணம் சென்றார்கள். இந்நிலையைக்கண்ட துச்சாதனன் ஆனந்தங்கொண்டு ஆரவாரித்தான். துரோபதையைப் பார்த்து "இவர்களை யேன் பின் தொடர்கிறாய்? இந்த நபும்சகர்களால் என்னசெய்யக்கூடும்? நீ ஏன் வேறொரு நாயகனைத் தேடிக்கொள்ளக்கூடாது?" என்றான். இதைக்கண்ட பீமன் மந்திரத்தாற் கட்டுண்ட சர்ப்பத்தைப்போன்றிருந்து அவனருகிற் சென்று அவனைக் கடிந்து மேற்சென்றான். துச்சாதனன், பீமனிவ்வாறு நடந்ததற்குக் கைகொட்டி நகைத்து, "புருஷ சிம்மமே! ஏனிவ்வாறு வீராவேசத்துடன் போகின்றாய்" என்று குதித்துக் கூத்தாடினின்றான். பீமன் இந்த அற்பனுடைய வார்த்தையை யொருபொருளாய் மதியாது தனக்கிருந்த கோபத்தையடக்கி அவர்களுக்கு வரப்போகிற நாசத்தை எண்ணிப் பரிதபித்துத் தன் தமயனுடன் சென்றான். அர்ச்சுனன் பீமனை நோக்கி, "அப்பா! சுத்த வீரர்களுடைய எண்ணம் செயலால் தெரியப்படுத்தப்படவேண்டுமேயன்றி வார்த்தையால் வெளிப்படுத்தப்படவேண்டியதில்லை. பதின்மூன்று வருஷம் முடிந்து பதினான்காவது வருஷம் ஆரம்பித்தவுடன் அவர்களுடைய கதி யின்னதெனத் தெரியவரும். நாமப்போதேன் வாய் திறத்தல்வேண்டும்" என்றான். இவனல்லவோ வீரன். தர்மரைத்தவிர்த்த நால்வரும் தங்கள் விரோதியினை யொழிக்காது விடுவதில்லையென சபதம் செய்துகொண்டார்கள். பிறகு ஐவரும் வனத்திற்கு விடைபெற்றுச் செல்லவெண்ணித் திருதராஷ்டிரனிடஞ் சென்றார்கள். அரசன் அதிக துக்கக் குறியுடன் வந்தவர்களை விசாரித்து விடைதந்தனுப்பினான். பாண்டவர்கள் வெட்கத்தினால் பதிலொன்றும் சொல்வதற்கில்லாது திருதராஷ்டிரனுடைய க்ஷேமத்தைக்குறித்துக் கடவுளைத்தியானித்தார்கள். பிறகு விதுரர் குந்திதேவியவரைத் தம்மிடம்விட்டுப்போம்படி ஐவரையுங் கேட்க அவர்களும் இவருடைய விருப்பத்திற்கிசைந்தார்கள். அவர்கள் செய்யப்போகிற வனவாசத்தினால் அவர்கட்கு அநேக நன்மைகளுண்டாகுமென்று சொல்லி விதுரர் ஆசீர்வதித்து அநுப்பினார். அக்காலத்தை ஒருவன் சரியாய் உபயோகிப்பானாகில் அதனால் அவனடையக்கூடிய பலத்தை எத்தகைய எதிரியும் எளிதில் வெல்லமுடியாது "குந்திபுத்ரா! எங்களிடம் விடைபெற்றுச் செல்வாய். உனக்கொரு குறைவும் வராது. எல்லாம் சுபமேயாகும். எங்களுடைய ஆசீர்வாதம் வீணாகாது. பாபமான காரியம் யாதொன்றும் நீ செய்தாயென ஒருவனும் சொல்லான். பதின்மூன்று வருஷகாலமுஞ் சென்றபிறகு க்ஷேமமாய்த் திரும்பிவந்து உன் இராஜ்ஜியத்தைப் பெற்று ஆள்வாய்" என்னும் உறுதிச்சொல் மறுபடியும் சொல்லியனுப்புவித்தார் விதுரர். குந்திதேவியினின்றும் அவள் தன் புத்திரர்கள் பிரிந்தேகவேண்டியதனால் வந்த சோகத்தை யென்னென்று சொல்வது? மிக்க சோர்வுற்றுத் தன்வயமற்றிருந்தாள். கடைசியில் அவர்கள் எல்லோ

ரும் தேரியுந் தோற்றுவிக்கப்பட்டும் ஆனபிறகு வீட்டைவிட்டுப் புறப்பட்டார்கள். முகத்தை முன்றானையால் மூடிக்கொண்டு முன்சென்றார் தருமர். பீமன் தன்னிரு புஜங்களையும் பார்த்தவண்ணமாய்ப் பின்சென்றான். அர்ச்சுனன் மணலை வாரி இறைத்துக்கொண்டு அவன்பின் சென்றான். சகாதேவன் தன் முகத்தில் மண்ணிட்டுக்கொண்டு சென்றான். நகுலனும் தன் தேக முழுதும் மண் பூசிக்கொண்டு சென்றான். துரோபதை துக்கத்தில் மூழ்கினவளாய் வாய்விட்டரற்றியும் அவிழ்ந்து அலங்கோலமாய்த் தலையளவும் புறளும் கூந்தலினால் தன் முகத்தை மறைத்துக்கொண்டும் சென்றனள். அவர்களுடைய புரோகிதராய தௌம்யர் கையில் தருப்பையைக்கொண்டும், யமனைக்குறித்துச் சொல்லப்படும் பயங்கரமான சாமவேத மந்திரங்களை உச்சரித்துக்கொண்டும் சென்றனர்.

பாண்டவர்களிவ்விதமாய்ச் சென்றார்களெனக் கேட்ட திருதராஷ்டிரன் விதுரரை யழைத்து அதனுடைய பொருள் யாதெனக் கேட்டான். அதற்கவர் அரசனை நோக்கி "ஐயா! தருமனோ எப்போதும் அன்பும் அருளுமுள்ளவன். அத்தகையனுக்கு இப்போதிருக்கும் கோபாக்கினியினால் தான் பார்த்த பொருள்கள் அழிவுறுமெனப்பயந்து தன்முகத்தை மூடிக்கொண்டான். பீமனோ தன் விரோதிகளை தன் புஜபலத்தைக் கொண்டு எப்போது ஒழிக்கலாம், எப்போது பழிக்குப்பழி வாங்கலாம் என்று தன் புஜத்தைப் பார்த்துக்கொண்டே சென்றான். அர்ச்சுனன் தான் யுத்தகாலத்தில் பொழியப்போகிற சரமாரிக் கறிகுறியாய் மணலைவாரி வீசிக்கொண்டு சென்றான். சகாதேவன் கஷ்டம் வருங்காலத்து இன்னானெனப் பிறர் தன்னை யறியாதவாறு செய்தான். நகுலன் அதினால் யாருடைய இதயத்தையும் கொள்ளாவண்ண மிவ்வாறு செய்தான். துரோபதை தன் விரோதிகளின் மனைவிமார் அதேவழியில் அவர் தம் புருஷருக் கழவேண்டி வருமே என்பதை எண்ணினவளாய் அப்படிச் சென்றாள். இனிப்பின்னர் பிரேதத்துடன் செல்லும் புரோகிதர் உச்சரிக்கவேண்டியவற்றை தௌம்யர் இப்போது உச்சரித்துச் சென்றார்.

உலகமும் தன்னிடம் நடந்தேறிய குற்றங்களைக் கண்டும் இனி நடக்கப்போகிற அனர்த்தங்களை நினைத்தும் அதிக சிந்தையுடனிருந்தது. இஃதிப்படியிருக்க மற்ற ருஷிகளுடன் நாரதர் தோன்றி "இன்று முதல் பதினான்காம் வருஷம் பிறந்தவுடன் கௌரவர்கள் துரியோதன னிழைத்த தீங்கிற்காக பீமார்ஜுனர்களால் நாசமடையப் போகிறார்கள்" என்று சொல்லி எவ்வளவு சீக்கிரத்திற் றோன்றினார்களோ அவ்வளவு சீக்கிரத்திற் மறைந்துவிட்டார். பாண்டவர்கள் நாட்டினீங்கிக் காட்டிற்குச் சென்றதைக்கண்ட ஆதவனும் அலமந்து அலை கடலுள் மூழ்கினான்.

(சபாபருவம் முற்றுப்பெற்றது.)

கல்குளம் - குப்புசாமி முதலியார்.



# திருவிளையாடற் கருப்பொருள்.

385-ஆம். பக்கத் தொடர்ச்சி.

## பழியஞ்சின படலம்.

25. வேதிய னில்லிட்டோன் வேடனோ வென்றறியா
தாதி யடிபணிய வாலவாய்ச்—சோதியிறை
சங்கையொழித் தான்வணிகன் றன்வதுவை யாமிடத்தில்
அங்கைகுவித் தேற்றவினி தாய்ந்து. (௩௮)

## மாபாதகந் தீர்த்த படலம்.

26. தாதைதனைக் கொன்றேதன் றாயைப் புணர்ந்தகொடும்
பாதகனுங் கூடற் பதியடைந்து—சோதிபதம்
போற்றித் தனதுவினை போக்கினனெ னித்தலத்தும்
எற்றம் மதுரையினி லேது. (௩௯)

## அங்கம் வெட்டின படலம்.

27. ஆசானை வஞ்சித் தவன்மனையைக் கைப்பிடிப்பான்
ஆசான செய்கை யவன்செயலுந்—தேசாய்ப்
பொலிந்தானச் சித்தனையே பொன்றுவித்தா னன்பான்
மலிந்தானவ் வாளான் மலைந்து. (௪0)

## நாக மெய்த படலம்.

28. அனந்தகுணன் றென்மதுரை யாண்டுவரு நாளிற்
சினந்தகிய யோரமணர் சேர்—சினந்தவனாய்
எற்றியமனேவ்க இந்தமுதா னஞ்சொழித்து
வெற்றி யுடனிருந்தான் வேந்து. (௪௧)

## மாயப் பசுவை வதைத்த படலம்.

29. வீர னனந்தகுண வேந்தமணர் விட்டபசு
சார் மதுரையினைத் தான்சேர—ஈரமதி
ஆறணிந்தான் காத்தா னருந்தயிலை காக்கும்
வீறணிந்த நந்தியினை விட்டு. (௪௨)

## மெய்க்காட்டிட்ட படலம்.

30. தானை மிகக்கொணர்வான் சாமந்தன் பெற்றபொருள்
யானை யுரிபோர்த்த வாலவாய்க்—கோனார்க்கே
தந்தா னிறைவருத்தத் தாளிரக்கத் தானையுடன்
வந்தான்பின் சென்றான் மறைந்து..... (௪௩)

### உலவாக்கிழி யருளிய படலம்.

31. வீறுகுல பூடணமன் வேதியரைத் தானிகழத்
தாறுமறை யில்லாது சோர்வுறுங்கால்—ஆறுபுனைச்
செஞ்சடையான் றென்மதுரைத் தேவுவுல வாக்கிழியாற்
பஞ்சவனைக் காத்தான் பரிந்து. (௪௪)

### வளையல் விற்ற படலம்.

32. சேர்ந்தாரு காவனத்தார் தேவியர்கள் கற்பிழந்து
வந்தார் வணிககுல மங்கையராய்—இந்தாரும்
சென்னியான் றென்கூடற் றேவளையல் கையிலிட்டக்
கன்னியரைக் காத்தான் கசிந்து. (௪௫)

### அட்டமாசித்தி யுபதேசித்த படலம்.

33. ஆசாற்குப் பால்கொடுத்த வாரியக்க மாதர்களும்
ஆசார் கருங்கல்லா யாலமர—மேசார
அத்தியுரி மேற்போர்த்த வாலவாய்ச் சொக்கனட்ட
சித்தியுப தேசித்தான் சேர்ந்து. (௪௬)

### விடையிலச்சினையிட்ட படலம்.

34. சென்னிக் கருள்புரிவான் றென்மதுரைச் சொக்கேசன்
மன்னுவட வாயில் வரவிடுத்துப்—பின்னருளால்
இட்டான் விடைக்குறியை யஃதோர்ந்தான் சேய்க்குப்பின்
விட்டா னரசுரிமை வேந்து. (௪௭)

### தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்.

35. சென்னியிரா சேந்திரற்குச் செல்வத்திருமகளை
உன்னு மணஞ்செய்வா னுவந்திசைந்து—பின்னவற்குத்
தந்தா னமர்விளையத் தார்ச்செழியன் சேனையுளார்
உய்ந்தார் அரன்கொடுநீ ருண்டு. (௪௮)

### இரசவாதஞ் செய்த படலம்.

36. பொன்னனையாள் பூவணர்தம் பொற்புருவைக் காணவெண்ணி
இன்னமுதம் அன்பர்க் கிடுநாளி—லன்னவட்குச்
சித்தனா யெய்தித் திருநீற்றாற் பொன்னீந்தான்
அத்தனுங் கூட லரன். (௪௯)

(இன்னும் வரும்.)

ஏ. சங்கரலிங்கம் பிள்ளை.

---



## * வேனிற்பாட்டு.

இஃது, ஆங்கிலமொழியில் வல்ல கிரே (Gray) என்னும் நல்லிசைப் புலவர் நலத்தகவியற்றிய செய்யுளினின்று மொழி பெயர்த்துக்கொண்டு செய்யப்பட்டது. வேனிற்கால இயனெறிவழாமை அக்காலநிலையிற் புறத்தே தோன்றும் உலகியற் பொருட்கண் நிகழும் நிகழ்ச்சியும், அந்நிகழ்ச்சியையே நிலைக்களனாக மொழிந்துகொண்டு அவ்வுலகியற் பொருணிலையாமை புலப்படுத்தித் துறவுள்ளந் தோற்றுவிக்கும் அருமையுஞ் சுருங்கவுரைத்து உற்று நோக்குவாருணர்வெல்லாந் தன்வயிற்படுத்து அவரறிவைப் பெருக்கி யின்பம் பயக்குநீரதாய் நிற்றலின் இவ்வரியபாட்டைத் தமிழினும் மொழி பெயர்த்து விடுதற்கு விரும்பி யதனை யவ்வாறே யியற்றினும். கிடந்தவா றன்றி வேறுபடப் புனைந்துபாடுஞ் செய்யுள்வழக்குப் போலாது, உலகியற் பொருட்பெற்றி யெல்லாங் கிடந்தவாறே எடுத்துமொழிந் துறுதிபயக்குஞ் செய்யுள் வழக்கே தழீஇ வருதலின் இன்னோரன்ன பாட்டுகள் பெரிதும் போற்றப்படுவனவாமென்க. சங்கப்புலவரியற்றிய பழைய தமிழ் நூல்களும், பிற்காலத்துச் சேக்கிழார் போன்ற சில ஆசிரியன்மாரியற்றிய நூல்களும் கிடந்தவாறு புனைந்துகூறும் மெய்ப்பொருட் செய்யுள் வழக்கே தழுவி நடைபெறுவனவாக, மற்றும் மெய்ப்பொருள் வழக்கொடு மலைந்து வடமொழி வழக்கேபற்றி யுற்று நோக்குவாருணர்வெல்லாம் ஊக்கமு முறுதியுமின்றிக்கழிந்து இளைப்படையப் பலப்பல தோன்றியவா றெல்லாம் புனைந்துகூறும் வீண் நூற்பொருளெல்லாம் அத்துணையாகச் சிறந்தெடுத்துப் போற்றப்படுவன வல்லவாமென்று துணிக. ஒரு காப்பிய நூலியற்றுது மெனப்புகுந்து நாட்டுப்படலம் நகரப்படலமென வகுத்து வாளாது விரியப்பாடுதலும், கம்பராமாயணம் சுந்தரகாண்டங் கடறாவு படல முகத்தில் வரையறையின்றி மிக விரித்துப்புனைந்து பாடுதலும் போல்வனவெல்லாங் கேட்போருணர்வுங் காண்போருணர்வுஞ் சலித்து வெறுப்படையத் திரிக்கும் வடமொழி வழக்குப்பற்றி வருவனவாதலான் மற்றவை அத்துணையாகத் தேறப்படுவன வல்லவாமென்பதூஉம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கலித்தொகை, பத்துப்பாட்டு, பெரியபுராணம் முதலிய நூல்களிற்போல நூற்பொருள் நடந்து செல்லு நெறிக்கிடையே கேட்போருணர்வு பாற்படுவகைபான் இன்பந்தோன்றக் கிடந்தவாறெடுத்து மொழிந்து நுண்மையுணர்வு தோற்றி விருப்பமுறுக்க வல்ல மெய்ப்பொருள் வழக்கே பற்றி வருவனவெல்லாம் பெரிதுங் குறிக்கொண்டு போற்றப்படுவனவா மென்பதூஉம் நுண்ணறிவுடையார்க் கெல்லாம் இனிது விளங்கும். ஆங்கிலமொழியில் வல்ல ஷேக்ஸ்பியர், மில்டன், கிரே முதலிய

* Ode on the Spring and also see foot notes to the stanzas below.

கல்விசைப்புலவ ரெல்லாரும் மிங்ஙனமே கிடந்தவா றெடுத்துச்சமய நேர்ந்துழியெல்லா மெய்யுணர்வு தோன்றக் கூறுதலின் அவரெழுதிய நூற்பொருள்களும் மேதக்கனவாமென்பது. எந்நாட்டிலாயினும் எச்சொல்லிலாயினும் எம்மக்களிலாயினும் புகழப்படும் அருங்குணமாட்சிகளுளவாயின் மற்றவற்றை விளங்கக் காட்டிவியந்து பாராட்டுதல் மெய்ப்பொருளாராயும் நடுவுநிலையாளர்க் குரிய கடமையாம். அஃதொழியத் தாமுவந்தனவே நல்ல வென்று தம்முள் வைத்து நலம்பாராட்டுவோ ருலராகள் அறிவுடை மக்கள் கொள்ளாராதலின், அத்துணிவு பற்றி ஆங்கில மொழியிலுள்ள இதனை மொழிபெயர்த்தியற்றினும். இப்பாட்டி னியனெறி தெரிக்கப் புகுந்தமையின் இத்துணையும் இது விரித்ததென்றுணர்க.

இனி, இப்பாட்டை ஆங்கிலமொழியி லெழுதிய கிரே என்னும் புலவர் தம் ஆங்கிலமொழிச் செய்யுள் வழக்குக் கேற்பவும், தந்தேச வொழுக்கங் குலவொழுக்கங்கட் கேற்பவு மதனையியற்றுதலின், பாஷையுஞ் செய்யுள் வழக்குந் தேசவியலும் வேறுபட்ட எம்மனோர்க்கு அங்ஙனங் கிடந்தவாறே யெடுத்து மொழிபெயர்த்து விடின் அச்செய்யுட்பொருளறிந் தின்புறுதல் செல்லாமையின், தமிழ் வழக்குக் கேற்குமாற்றான் அதனைச் சிற்சில விடங்களிற்றிரிவு படுத்தி எதுகை நயம், மோனை நயம், சொற்பொருட் பொருத்தங்கட்கேற்பச் சில கூட்டியமைத்து இதனை யீண்டு வெளியிடத்துணிந்தாம். இன்னும் இதன்கண் திருத்தங்கள் செய்து செய்யுளழகை யுயர்த்த வல்ல நுட்பங்கள் இதனை நோக்கும் நண்பர்கள் அறிவாராயின், அவற்றை அன்புகூர்ந்து தெரிவித் தெம்மை யின்புறுத்துவாராக.

---

ஒளிவளைப்பி னிரதிதனக் குறுபாங்கி மாராகி யொளிர்செஞ் சாந்து
தளிகொளுவ வெழின்முலைமேற் றிமிர்ந்தாங்கு நறுஞ்செந்தாமரைகள் பூப்ப
வெளிவந்து களிதழுவ விளையாடு வியன்பருவ மடந்தை மார்தந்
தெளிபல பகல்விரும்பு மலரவிழ்த்துத் திகழாண்டு பெழுப்பு வாரால். (௧)

அக்கால யிரவதனி லினியவிசை யழகுதர மிழற்று மோர்புட்
குக்கூவென் றிசைகுயிலின் குறிப்பாட்டி னெதிர்வேனிற் குலவு பண்கண்
மிக்கூர வருமிடற்றிற் பொதிகொண்டு வெளியுகுப்ப விரிதண் கோடை
மைக்கூருந் தெளிவிசும்பிற் சிறைதிரட்டு மணந்தெளித்தின் புறக்கு மன்றே. (௨)

(1) முதலாவில் 'வீனஸ்' (Venus) என்பதற்கேற்ப 'இரதி' எனப்பட்டது. இரதி காமன் மனைவி; உயிர்கட்குக் காமவின்பத்தை நல்கிப்பவள். 'வேனில்' முதலிய பருவங்களைப் பெண்களாகக் கூறப்படுதி 'வீனஸ்' என்பவளுக்குத் தோழிமாராகக் கிரேக்கர் கூறுபவாதலின் அவ்வாறு சொல்லப்பட்டது. தமிழ் வழக்குக் கேற்பச் 'சாந்து' 'தாமரை' முதலியவாகச் சில திரித்துச் சேர்க்கப்பட்டவாறு காண்க. ஆண்டு - வருஷம்.

(2) இரவிற்பாடும்புள் - Nightingale. கோடை - மெல்லிதின் வீசும் மேல்காற்று.



பரியுவரைப் பெருமரங்க டிவரிகோடு பயந்தசெழு நிழல்க டோறும்
பொரிபொருட்டுச் செவிரமுறு மரைமரங்கள் பொலிந்துகவியதர்கடோறும்
விரிதிரைக்கைபொருதடத்தின் கரைமருங்கும் விளங்குகலை மகளென்னோடு
முரிதிருப்பப் புறமிடைந்து மருதநில மக்களென வுறுமக் காலை. (௩)

மன்பதையி னவாவளவு வறிதெழுந்து கழியுமது வென்னே யென்னே
யின்பமது வுளந்துளும்பச் செருக்குறுவோ ரிழிவெய்தித் தாழ்த லென்னே
அன்பமுறுபொருளுடையோ ரதுதொலையத் துயரடைத லென்னே யென்னே
யன்புதரு கவலையுட னரிதுழைப்போ ரஃதின்றி யார்த லென்னே. (௪)

நேடியுயிர்க்கு முழுபகடு நிலனசைஇ வறிதிருப்ப நீள்வா னூடு
குடிகொளுயிர்க் குழாம்பரந்து கறங்குமொலிகுலவுறுத லென்னே யென்னே
கடிமலருற் றுறச்சுரக்குங் கழிசுவைத்தேன் பருகவெழு காதல் கூரத்
தடிசிறையி னிளந்தியிறு துளும்புபக லொளிப்புனலி னீந்து மன்றே. (௫)

அவைதம்மிற் சிலமொழிந்த வொளிப்புனலிற் சிறிதுபடீஇ யசைந்து செல்ல
வுவைசில்ல பொலன்விளங்குஞ் சிறைப்படாஅ முயரவிரித்தொளிருயிற்றி
னவையின்றி யவிரொளிமு னலமிளிரப் பலகாட்டி நடப்ப வெல்லா
மிலைதாமிம் மனிதருற வருவாழ்வென் றெழுநினைவின் விழிக்கு மன்றே. ()

இடங்குழுமி நகர்வனவு மெழுந்துயரப் பறப்பனவு முதலா வெல்லாந்
தொடங்குழியே மறிதரவு முடிவுகொளுந் தொழிலரிதி னுஞற்று வோரு
முடங்குநளி யுளம்விளைய நுகர்வோரு மூழ்வலியா லியபல் வண்ணப்
படங்குலவச் சிலவருநாட் பரப்பிடைபோழ்ந் தரிதெழுந்து பரிகு வாரால்.

(3) பரியஅரை - பெருத்த அடி. அரை - Trunk. பொருட்டு - தாமுரடு. செவிரம் - பாசி; அதர் - காட்டுவழி; Glade. கலைமகள் - Muse. புறம் இடைதல் - முதுகு சாய்தல். மருதநிலமக்கள் - நாகரிகமில்லாத நாட்டுப்புறத்தார்; Rustics.

(4) மன்பதை - மக்கட்பரப்பு. உழவுத்தொழில் செய்வோர் வேனிற்காலத்தில் வறிதிருத்தலின் காலாவது வழியில் அவ்வாறு சொல்லப்பட்டது.

(5) வேனிற்காலத்து உழவு நடவாமையின் உழவுமாடு வறிதிருக்குமென்பதாம். அசைஇ - இளைப்பாறி. இக்காலத்துச் சிலவறிதிருப்ப வேறு சில மிக அரிதினுழைப்பதென்னென வியந்தவாறு. கறங்குதல் - சுழலுதல். தும்பி - தருவண்டு. ஒளிப்புனல் - பெய்த்தேர்.

(6) படாம் - போர்வை. நவை - குற்றம்; மேதத்தான் மறைபடுதல். விழிக்கும் - தோன்றும்; விளக்கும்; "விழிப்பத்தோன்று" என்பதனான் இப்பொருட்டாதல் காண்க.

(7) தொடங்குழி - தொடக்கவிடம். மறிதல் - திரும்பிவரல். உஞற்றுதல் - அரிதுமுயலல். படம் - போர்வை. போழ்தல் - ஊடறுத்தல். எல்லாரும் வாழ்நாட் பரப்பை யூடறுத்து விரைந்து வாழுலகு செல்வரென்பதாம்.

இழவூழி னொருகருங்கை யிழைத்த கொடுங்கொலையாரோ விறுமாப்பெல்லாம்
விழவூரும் பெருமுதுமை யதனானே வெறியாட்டு முழுது நீங்கி
பழகூர வவர்பலரு மிரும்புழுதி யாகியயா வுயிர்ப்ப யாவு
மெழவூறு மெமதுளத்தி லிடையறு தக்காலை யெழுந்த வன்றே. (௮)

இனையபல வருமையெலா மினிதொளிர விளவிளையாட் டொருசின் மாக்க
டினையளவு மவைநினையா ரெமைநோக்கி யொழுக்கமறி சிறுமையுள்ளா
யெனைவலைகளை யொருதனியிற் றனிசிர்வை யெழில்கிளரு மகளிரோடு
நனைமகிழ்வு தலைசிறப்ப நலம்பருகி யின்பமுறு நடையை மன்னே. (௯)

வளங்கெழுநற் றெளிமதுவ முடனொருத்த வளரிறு வுனக்கொன் றின்று
துளங்கொளிகால் கலவநனி துலங்கவிரித் தெழவொன்று சிறிது மின்று
விளைப்பருவங் கடுஞ்சிறைகொண் டுயரவெழுந் திறந்ததுநின் பரிதி பட்ட
துளர்வேலில் கழிந்ததினி விளையாட வெழுதுமென வுரைத்தார் மன்னே.

நாகபட்டினம் - வேதாசலப்பிள்ளை.

---

# * வாழ்க்கைப்பயன்.

(237 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

## IV. பொழுது போக்கு.

'எல்லாம் வேலையாயும் விளையாட்டே யில்லாமலும் இருந்தாற் சொக்கன் மந்தியாய் விடுவான்' என்ற பழமொழி யெல்லோராலும் ஒப்புக் கொள்ளப் படுகின்றது. வேலை வீட்டினுள்ளேயே செய்யப்படுவதா யிருந்தால் அதுவும் அவனை மென்மையான பையனாகவும் சோர்வுள்ள மனிதனாகவும் ஆக்கிவிடும். விளையாட்டுக்கள் ஒருவாற்றானும் வீண்காலப் போக்கல்ல. சரீ

8. இழவூழ் - கேடுபயக்கும் விதி. கருங்கை - கொலைத்தொழிலிற் பழகியகை; "கொன்று வாழ் தொழிலினும் வன்பணித் தொழிலினும், கன்றிய தொழிற்கை கருங்கையெனப்படுமே" என்றாராகலின். அயா வுயிர்த்தல் - இளைப்பாறுதல்.

(9) ஈ - ஈப்பறவை; a fly. எழில் - அழகு.

(10) இறல் - தேனடை; உருவகவகையால் இன்பந்தரும் பொருட்டொகுதி மேனின்றது. கலவம் - மயிற்றோகை; உருவகவகையாற் சிறந்த வுடைமேனின்றது. பரிதி - சூரியன். 'நின்பரிதிபட்டது' என்பது வாழ்நாள் கழிந்ததென்பதனைக் குறிப்பானுணர்த்திற்று. இவ்விரண்டு பாட்டானும், உலகியற்பொருள் நிற வுள்ளந் தோற்றுவிக்குமாகவும், அந்நுண்மை யறியமாட்டாதார் வேறு சில இன்பங்களையே பெரிதெடுத்துக் கூறுவரென முதநூற்புலவர் முடிவுரை கூறினர்.

* Lubbuck's "The Use of Life."



ரத்தையும், முக்கியமாக நம்சாதாரணத் தொழில்கள் விரிக்காது சுருக்கக் கூடிய கைகளும் மார்புமாகிய மேற்பாகத்தையும் அவை நன்றாகச் செய்கின்றன.

விளையாட்டுக்கள் மனிதனைச் சௌக்கியமாக இருக்கச்செய்வனவேயன்றி அவன் வேலை செய்வதற்கு ஊக்கமுமளிக்கின்றன. அவை பிறரோடு வாழவும் சிறு விஷயங்களிற் பெருங்கவனம் செலுத்தா திருப்பதற்கும் நியாயமாய் விளையாடுவதற்கும் ஒரு நன்மையையும் அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ளாதிருக்கவுங் கற்பிக்கின்றன.

அவை குறைபிவிருத்தியும் சரீர சௌக்கியமும் நூல்களிற் காணப்படாதனவும் கற்பிக்கக் கூடாதனவுமான குணங்களாகிய தைரியமும் பொறுமையும் அடக்கமும் நல்லியல்பும் ஆகிய இவற்றைக் கொடுக்கின்றன. * டியூக் ஆவ் வெலிங்டன் † வாடர்லூ யுத்தம் ஈடனின் விளையாட்டிடங்களில் ஜெயிக்கப்பட்டதென்று உண்மையொடு கூறினார். சாதாரண பாட சாலைகளிலறியப்படும் மிகவுநல்லனவும் பயனுள்ளனவுமானவை பையன்கள் விளையாட்டிடத்தில் அறிவனவே. விளையாட்டுக்க ளெல்லாம் வாழ்க்கையில் ஊக்கம் விளைப்பனவாய் மட்டும் இருக்க வேண்டுமே யன்றி அவையே தொழிலாய்க் கொள்ளப்படாது.

சௌக்கியத்திற்கு விளையாட்டின் இன்றியமையாமையைப் பற்றி நோக்குமிடத்து யான் நம்பெரிய உடனூற் புலவரிருவரை மேற்கோளாகக் கூறுவேன்.—" விளையாட்டுக்கள் பொழுது போக்குக்களின் முக்கிய பாகங்களை யதிகமாய் உடையன. அன்றியும் தொழிலிலும் தினவேலையிலும் மிக்க பயனுள்ள குறைதிகாரம் செலுத்துகின்றன. எனெனிற் பணத்தில் அவ்வ சாதாரணக் களிப்புறத் தூண்டாமலும் இழிந்த மனதன்றியும் பையன்களையும் மனிதரையும் வேலை செய்யச் சேர்த்து விடுகின்றன. தம்மொடு நன்றாக வேலை செய்வோரொடு நல்ல விஷயங்களி லெல்லாம் கூட்டாளிகளாயிருக்க அவை கற்பிக்கின்றன. வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் வென்றிக்கு முக்கிய காரணங்களுளொன்றாகிய பிறரொடு வேலை செய்யும்வன்மையை யவை கற்பிக்கின்றன. தம் இயற்கையா லில்லாவிடினும் வழக்கமாய் அவை நியாயத்தொடு விளையாடுதற்குக் கற்பிக்கின்றன. போட்டி யெவ்வள வதிகமாயிருந்தாலும் அவற்றிற் றிருட்டாட்டம் செய்தல் எல்லாருக்குமொப்ப அவமானமானது. நேர்மையொடு விளையாடுவோர் நேர்மை யொடு நடப்பதற்கின்னும் சித்தராயிருப்பார். தம் விளையாட்டில் அதிக யோக்கியமாக இருப்பரேல் அது ஜனங்களைச் சட்டத்தின் எல்லைக்குள் வெகு தூர மிருக்கும் பலவற்றையும் சிந்திக்க உதவி செய்யும். நல்லனவும் சுறுசுறுப்புள்ளனவுமான பொழுது போக்குக்களனைத்தினும் காணப்படுவனவும் அவற்றின் பயன் சார்ந்துள்ளனவுமான முக்கிய வடையாளங்களைப்

* Duke of Wellington. † Waterloo.

பார்ப்பேமேல் அதிச்சயங்கள், அதிசயங்கள், ஒழுங்கான வேலையினின்றும் வேறான பிறிதொன்றில் தம் புத்தியைப்பயன் படுத்தும் சமயங்கள், ஆகிய விம்மூன்றில் ஒன்றையாதல் அதற்கு மேற்பட்டனவற்றையாதல் அவையனைத்தும் அடக்கிக்கொண் டிருக்கின்றன வெனக்காண்பேமென்றுயான் நினைக்கின்றேன். இம்மூன்று விஷயங்களின் பொருத்தம் அவை பல உழைப்பாளிகளின் சாதாரண வேலைகளொடு முற்றிலும் மறுதலைப்பட்ட இனிய மாறுபாடுகளைக்கொடுக்கின்றதிலும் வாழ்க்கையின் அற்றைத் தொழிலிற் பயன் படுத்தப்படாததனால் வலியற்றுதல் இழக்கப்பட்டதால் போகக் கூடிய வன்மைகளையும் நற்குணங்களையும் உபயோகிக்கச்சமயம் தருதலிலும் உளதெனத் தோன்றுகின்றது" என்று ஸர் ஜேம்ஸ் பேஜெட் கூறுகின்றார்.

தமது புதிய நீட்பிரசங்கத்தில் "தசையின் வேலையிலும் களைப்பு மனத்தினதே. உண்டாக்குவதில் தசை பிரயாசமே பெடுத்துக் கொள்ளாத ஒரு விதமனக்களைப்பையும் யாமறிவேம். நம்மறிவெலாம் தசைவேலையைப் போலவே மனவேலையும் ரசாயன மாறுபாடடைகின்றதென்றும் அம் மாறுபாடுகள் குறிப்பாகப் பார்ப்புறி வேறாயிருப்பினும் மனத்திலும் தசையிற்போலவே ஒரே வரிசையாயுள வென்றும் மனமாறுபாடுகளின் சிறுமையைத் தசைமாறுபாடுகளின் சிறுமையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் சரியா யிருக்கின்றன வென்றும் நரம்புக்குரிய பதார்த்தத்தின் மிக்க உணர்ச்சியால் நிரப்பச் சரியா யிருக்கின்றன வென்றுமே காட்டுகின்றது.

. தூய குருதியின்-அதாவது தாழ்ந்த வளவுள்ள கருவிகளின் கூட்டுத் தொழிலினால் தூய்தாக்கப்பட்ட குருதியின் - போதிய பெருக்கம் வேலை செய்யும் பாகம் வேகமாகப் புதிதாக்கப்படுதற்கும் தீய விளைவுகள் வேகமாக நீக்கப்படுதற்கும் தசையின் வாழ்க்கைக்கு வேண்டுமாகில், அது மனத்தைப்பற்றியும் உண்மையே ஒருகால் இன்னும் அதிக உண்மையாயிருக்கும். மேலும் பிராணதாரணப் பிரயத்தினத்தில் தன்னினும் இழிந்த உதவிகளையோடி முந்தக்கூடிய ஒரு மூளை முன்னுக்கு வந்திருக்கின்றது. நன்றாய் ஒழுங்குபடுத்தப்பட்ட மிதச்செலவிலும் கலப்பான இயந்திர மெல்லாம் வேலை செய்யக்கூடிய சமயத்திற்கும் களைப்பு வரும் சமயத்திற்கும் நடுவிலுள்ள அதிகபயனுள்ள வேலைசெய்யும் நேரம் மிக ஒடுக்கமான வரையறைகளாற் சூழப்பட்டுளது. யானுமக்குமுன் கூறியிருப்பதில் ஏதேனும் உண்மையிருந்தால் அவ்வரையறைகளை விரிப்பதற்கு இழிவான உதவிகளின் திறமான கூட்டுத் தொழிலாற் களை வாராதிருக்கச் செய்ய அவற்றைத் தைரியப்படுத்துதல் போல் மனத்தை யின்னும் வேகமாக்குவது நல்லவழி யன்று" என்று ராஜரீகக் குழாத்தின் காரிய தரிசியாகிய மைகேல் பாஸ்டர் என்பவர் கூறினார்.



வேட்டை, சுடுதல், மீன் பிடித்தல் இவையெலாம் சாதாரண பாஷையில் விளையாட்டுக்களே. நம்முழைப்பையும் பொழுது போக்கையும் வேட்டைநாயொடும் துப்பாக்கியொடும் மீன் பிடிக்குந் தழியொடும் எடுத்துக் கொள்ளாதவரும் அதன் வசீகரத்தை யுணர்வார். வெகுதூரம் விளையாட்டுக்காகவும் விளையாட்டினாலும் பிழைத்திருந்ததே யன்றி அதை விண்ணுலகில் உயர்ந்த வின்பமெனக் கருதிய நம்முன்னோரிட மிருந்து அதைப் பெற்றுளோம்.

"இறந்தவர்தங் கல்லறையி லிருங்காட்டுப் பன்றிசுற்றும்
மறந்தும்அது தன்னவர்தம் மௌனநிலைக் கிடரியற்று
தறந்தவா வவர்களுந்தா மன்பினிளமைப்போழ்திற்
சிறந்தவிளை யாடல்களைத் தினம்விரும்பி மேலெழுவ."

என்று ஒஸியான் கூறுகின்றார்.

சாந்தை - வரதாசாரியன்.

## சமாசாரக் குறிப்புகள்.

செந்தமிழ்ச் சங்கம் :—திரிசிரபுரம் எஸ். பி. ஜி. ஹைஸ்கூலின் செந்தமிழ்ச் சங்கத்து வருஷபூர்த்தி மகோற்சவம் சென்ற ஏப்ரல்மீ 20௳ நடந்தது. அன்றைத்தினம் கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் தமிழைக் குறித்தோ ருபந்நியாசம் செய்தனராம். அதிற் சிலபாகத்தை எடுத்து இங்குப் பிரசுரிக்கின்றோம் :— "தமிழ்த் தெய்வத்தைப் பெண்ணாகவும் அரசனாகவும் உருவகம் செய்தார்கள். அங்ஙனம் பெண் அணங்காக உருவகித்தபோது அவர்கள் அப்பெண்ணுக்கு இயல்பாக வுண்டென்று காட்டிய அலங்காரங்கள் வியக்கற்பாலது. ஒருவரும் இதுவரை நினைத்து மறியாதது. அதாவது சிந்தாமணி என்னும் காவியமே சிதறுருத் ஆரனப் பணியென்றும், சிலப்பதிகாரமே கெடாத காற்சிலம்பென்றும் அதினின்று எழும் இயலிசை நாடகமென்னும் ஓசைபேதமே அச்சிலம் பொலி என்றும்; மணிமேகலை, மதுரைக்காஞ்சியே கெடாத மேகலாபரண முதலிய இடையணி என்றும்; குண்டலகேசியே காதணி யென்றும் அங்ஙனம் தமிழ் அணங்குக்குக் காதுக்குக்கிட்டியும் நம் காதுக்கு இன்னும் கிட்டவில்லை யென்றும் வளையாபதியே கைவளை யென்றும் ஆண்பால் முதலிய ஐம் பாலே இப்பெண் பாலுக்குரிய ஐம் பால் (கூந்தல்) என்றும், சூளாமணியே சிரோரத்தின மென்றும், வெண்பாமாலையே வாடாத பூமாலை யென்றும் அனந்தவண்ணமும் 10 - அழகாக அமையப்பெற்ற தென்றும் செய்யுளிலமைந்த சீர்முப்பதுமே அப்பெண்ணுக்குவந்த சீர் என்றும், பொன் வண்ணத்தந்தாதியே அன்னவள் வண்ணம் பொன் வண்ணமென்றும், கலை 64-ம் வஸ்திரமாக விளங்கிய தென்றும்,

திருவாசகம், திருவாய்மொழியே வாய்மொழி யென்றும், மாலை மாற்றே அப்பெண்ணின் மாலைமாற்றென்றும் இன்னுமனேக நுட்பமான அலங்காரங் களைச் சொன்னயம் பொருணயம் தோன்ற எடுத்தோதியும், அரசனை ரூபகப் படுத்தியபோது எழுத்து முதல் ஐந்து அதிகாரமே சிருஷ்டி முதற் பஞ்சாதி காரமென்றும் பொருள் கோள் எட்டே அவ்வரசர்க்குப் பொருள்கொளல் என்றும், கஜம், சிவிகை, இரதம் முதலிய பந்தங்களே படைகளாமென்றும் சுழிகுளமே குளமென்றும், பிரபந்தமுடைமையே அவ்வரசு நீர்வளம் பொருந்திய தென்பதும், சிவபெருமான் மண்சுமந்து அடிபட்ட காட்சியே தமிழ்ச் செங்கோலுக்கு யாவரும் கீழ்ப்படிதல் அவசியமென்பதையும் பல எடுத்தோதினார்கள்."

**சென்னை சர்வகலாசாலை:**—இதனடியிற் குறிக்கப்பட்டவர்கள் 1901 ஹ த்திய தமிழ்ப் பரீக்ஷை கர்த்தர்களென்பது தெரியவருகிறது.

**பிரதம பரீக்ஷை கர்த்தர்கள் :—**

(1) ம-ா-ா-ஸ்ரீ, T. இராமகிருஷ்ண பிள்ளையவர்கள், B. A., F. M. U. F. R. H. S. (அக்கிராசனாதிபதி)
(2) ,, J. M. வேலு பிள்ளையவர்கள், F. M. U.
(3) ,, J. லாஜரஸ், F. M. U.
(4) ,, T. பாலசுந்தர முதலியாரவர்கள்,
(5) ,, V. கனகசபை பிள்ளையவர்கள், B.A., B. L.
(6) ,, T. செல்வகேசவராய முதலியாரவர்கள், M. A.

**பூபானிக் பிளேக் :**—(Plague) : இக் கொள்ளைநோய் இவ்விராஜதானி யில் 1898ஹ ஆகஸ்ட்டுமீ ஆரம்பித்தது. இந்தமாசம் முதல்தேதி வரை யில் 5,379-பேருக்கு இது கண்டது. இதில் மாண்டவர்கள் 4,052 - பேர். சேலம் ஜில்லாவில் மாத்திரம் 2,216-பேர் இதனால் இறந்துவிட்டார்கள்.

**கல்வி:**—இந்திய கவர்ன்மெண்டுக்குத் தற்காலத்திற் தலைவராயிருக்கும் கனம் பொருந்திய கவர்னர் ஜனரல் கர்ஸன் துரையவர்கள், கவர்ன்மென் டாருடைய கல்வி விசாரணை டிபார்ட்டு மெண்டிலும், இந்தியாவின் கல்வி அபிவிருத்தியைக் குறித்த சில விஷயங்களிலும் சீர் திருத்தங்கள் சில கூடிய சீக்கிரத்திற் செய்யப்போகிறதாகத் தெரியவருகிறது.

**பர்த்ருஹரி :**—இந்தப் பத்திரிகையிற் பற்பல சஞ்சிகையில்வந்த இந்நீதி விஷயம் ஒன்ருய்த்திரட்டிப் புத்தகரூபமாய் வெளிவந்திருக்கிறது. வேண்டு பவர்கள் ஞானபோதினி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இத னைச் சென்னைச் சர்வ கலாசாலை 1903-ஆம் வருஷத்திய எப். ஏ., (F. A.,) பரீக்ஷைக்குப் பாடமாக ஏற்படுத்தியிருக்கிறார்களெனக் கேட்க மிகவு மூவர் தனம்.

---

# ஞானபோதினி.

ஸம்புடம் IV. } 1901ஹ ஜூலைமீ 20உ { புத்தகம் 12

## மதுரைப்புதுச் சங்கம்.

உலகெலாம் புகழும் பலமொழியுள்ளும் இன்னிசைத்தாங் த மிழன்னம் வீற்றிருந்த பதுமமெனப்படும் மதுரைமாநகரம் நெடு ங்காலமாய்த்தன்னை நாடியிருந்த செந்தமிழ்ச்சங்கத்தினைத்துறந்து குவிந்து கிடந்தநிலை யாவர்க்குந் தெரிந்ததன்றே? ஏறக்குறைய ஈராயிரமாண்டுகளாகத் தமிழ்மகள் அன்புடன் வளர்த்த மக்க ளனைவரும் சிறிது காலந்தாயினைப் போற்றறுமாறு போல் நடித் துப்பின்னர்ப் பிறமக்களை மணந்து இன்பநுகர்ந்து, நாளுக்கு நாட்பெற்றதாயினை யலக்ஷியஞ் செய்து கடைசியாய் முற்றிலும் மறந்தனரோ ? இல்லையாயின் தமிழ்மகள் நாடொறும் மெலிந்து நலிவுற்று ஆதரிப்பாரற்றுக்கிடப்பதற்குக் காரண மென்னைகொல்? "மதுரைமா நகரே ! வேற்று நாயகன் கரங்களாற் றீண்டினனெ னச் சங்கத்தினைத்துறந்து குவிந்தனைகொல் ? பரிதியம் புலவன் னின்னகத்துதித்தும் நீமலராதிருந்த தென்னையோ ? உறக்கங் கொண்டனையோ ? ஊடல் கொண்டனையோ ? அன்றி நின் நாய கனை மறந்து நின்னைத் தீண்டிய கணவனைப் புணர்ந்தனையோ ?" என்று யாவரும் நிந்திக்கலாயினரே ! மதுரைமா நகரத்திற்பிறந்து வளர்ந்தவரும் அந்நகரைத் தம்பதியாக் கூறவும் வெள்குகின்றனர். பரிதிமாற் கலைஞனும் ஊடல் கொண்டனளென நினைத்துப் பல் வகைப்பாடல்களாற்கண் விழித்துப்பார்க்கச் செய்யுமாறு முயன் றும் பயனற்றுப் போனமையாற் பரிந்திரங்கி "மதுரைமா நகர்" என்ப்பெயரிட்டுப் பின்வரும்பாவினை யியற்றலாயினன் :—

**நிலைமண்டில வாசிரியப்பா.**

" உலகமெங்கு மிலகு நகர்பல
கழிபெருஞ் செல்வங் கள்ளாட் டயரத்
தான்மாத் திரையின் வான்மீத் திரியும்
வளமகழ பொய்த்து விளைபொருள் குன்றி
மயங்குறு காலை வயங்குமேழ் திசையோர்

மகீதலத் தின்கட் பகீரதன் போலப்
பேரியா றதனை மாரியு நாணிமெய்
விளர்ப்ப வையையோ டளவக் கூட்டி
விளைவெலா மலியுமா விரும்பிச் செயவொளிர்
மதுரைமா நகரே! மதுரைமா நகரே!
செல்வப் பொருளே சிறப்புடைப் பொருளென
வொல்வகை யுண்மை யுணர்கிலை கொண்டனை.
அதனை யாக்கும் விதம்றிந் தவற்றிற்
றலைப்பட் டுழலுந் தனிப்பெரு நகரே!
நிலைப்பட் டிருக்கு நீர்மையெய் தினையோ?
நினைக்குறித் தந்தோ நினைக்குந் தோறுந்
துன்ப மிகுந்து சோரு மென்னுளம்!
இன்பமீ தாரு மெவர்க்குஞ் சாந்தாம்
பிறந்த நகரெனில்; பேசிய விந்நிலை
யென்னிட மாறிய தென்னைகொல்? அறியேன்.
நின்னிற் பிரிந்து நெடுங்கலை கற்பேன்
சென்னை போந்துஞ் சிறியனே னுள்ளம்
பன்னாள் சென்றும் பரிந்து நிற்காண்
வேட்கை மேவி விரைந்தாண்டு தோறு
மிருமதி நின்வயி னிருந்தேன். அம்ம! நீ
யுயர்நிலை தவறி நயமெலாந் தொலைந்து
வீழ்நிலை யுற்றனை! மேதக்க மதுராய்!
எவன்கொலோ விவ்வா றவநிலை யெய்தினை?
நச்சிப் பாண்டியர் மெய்ச்சி வளர்த்த
சங்க மிருந்து பொங்கிய நன்னகர்
மதுரையென் றுன்றோர் வகுத்துக் கூறிய
தெதிர்மறை யிலக்கணை யென்பது பற்றியோ?
வஞ்சப் புகழ்ச்சியோ? மற்றெனோ? அறியேன்.
நஞ்செனக் கருதியோ நற்றமி ழமுதைப்
பேதைமை கந்தா மாதுய ருறுவாய்
பருகலை யதன் சுவைக் குருகலை யிருத்தி?
மறையெலாம் புகழு மிறையனு ரென்னு
நறுந்தமிழ்ப் புலவர் சிறந்துவீற் றிருந்த
வளநக ராகிய மதுரையு நீகொலோ?
ஆல வாயி னவிர்சடைக் கடவுளை
யேலவா தித்த வின்றமிழ்க் கீரன்
வந்தவ தரித்த மதுரையு நீகொலோ?
தமிழ்மண மிகுந்து கமழு நாடெலா
முள்ள பாவல ருள்ளிநின் பெருமையைத்
தந்தம நூல்களை விந்தை யரங்கினி
லேற்றி நூற்பொருள் சாற்றல் வேண்டியு
மரசர்பாற் பற்பல பரிசு கருதியுங்
காடெலாங் கடந்து நாடொறும் போந்து
முதுதமிழ் கொழித்த மதுரையு நீகொலோ?

பதினெண் கூலமு மிதன்க ணுளவெனச்
சாற்றுவார் போலச் சாத்தனு ரென்னு
மேற்றகைப் புலவர் வேட்டினி திருந்து
மதுரநூல் யாத்த மதுரையு நீகொலோ?
நால்வர் குரவரு மேல்வகைத் தமிழிற்
பண்ணிசைப் பாட்டிற் பரிந்து புகழ்ந்த
மண்ணில்விண் ணகரெனு மதுரையு நீகொலோ?
அமிழ்தினு மினிய தமிழி னின்சுவை
யுணர்ந்தநீர் வையை மணந்த பாண்டியன்
பதியென வயங்கிய மதுரையு நீகொலோ?
வல்லாள ரேத்துங் கல்லாடர் தாஞ்செய்
கல்லாட மென்னுங் கனித்தமிழ் நூலுட்
சொல்லாயுஞ் சங்கத் தொல்பொரு நகரென
வெல்லாருங் கொள்வா னின்னிசை யகவற்
பாத்தொறு முரைத்துப் பரிவுடன் புகழ்ந்த
மதிகுல வேந்தர்த மதுரையு நீகொலோ?
செந்தமிழ்ப் பாற்கடற் புந்திமத் தாற்கடைந்
துட்பொரு ளாகிய தட்பநல் லமுதை
யுரையெனத் தந்த நரைமூ தாள
ரந்தண குலத்தின் விந்தைநயிற் றோன்றி
யன்னார்ப் பற்றிய வின்னாப் பழமொழி
போலி யுரையெனச் சால விளக்கிய
வுச்சிமேற் புலவர்கொ ணச்சினார்க் கினியர்
மாண்புட னிருந்த மதுரையு நீகொலோ?
புலத்தமிழ் தோற்ற போலி மதுராய்!
நலத்தெரி வில்லாய்! நாணிலைபோலும்.
அன்றோ வென்றன் மெய்ந்நடுங் குறுமால்!
அஞ்ஞான்றை யுயர்வென்! இஞ்ஞான்றை யிழிவென்!
மனைவிசொற் கேட்டுத் தனையீன் றெடுத்த
தாயினைப் பசியிற் றீய விடுக்கும்
பதகனை யொத்த மதுரைமா நகரே!
பொருத்தமின் முரணிருள் போக்கியெங் குஞ்சீர்
திருத்தமென் பரிதி திகழ்ந்து தோன்றியும்
பயிலுந் தமிழ்த்தாய் வெயிலுறத் தள்ளித்
துயிலுகின் றனையோ? தொல்சீர் மதுராய்!
நன்றி யறிவிலாய்! குன்றிய சிந்தையாய்!
குறையே நயமெனக் கொண்டு பிதற்றுவோய்!
உன்வயிற் பிறந்தேன் யானென வுரைக்கவும்
வெள்கினேன்! அந்தோ! வெள்கினேன்! அந்தோ!
இன்னமும் வெள்குவோ ரின்னு மெத்துணைப்
பெயரோ? அறியேன். மயலார் மதுராய்!
அழிநிலை யடையா தெழுதி; துயிலுத
லொழிதி; தமிழ்நிலை விழிகொடு காண்டி;
அவளிசைத் தேறல் செவிவாய்ப் பருகுதி;

நந்தலி லின்பஞ் சிந்தையிற் பெறுதி.
என்றே சொற்றே னென்ன வெண்ணலை.
அருந்தமிழ்த் தாயின் றிருந்திய வன்பினுற்
சிறியனே னித்துணை நெறியெனக் கூறினேன்.
என்னை வெகுளலை ; என்னுன் பதனை
வேண்டு மெனினீ வெகுள்க ; மற்றுச்
" சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்திடல்
நல்வினை கோறலின் வேறன்" றென்ன
வுரைத்த புலவனு முளனால். தமரே
யெனினு மவர்பிழை யினிதெடுத் துரைத்தல்
கடனே யன்றோ? கழறாய். அன்றியு
நின்பா லெனக்குள வன்பால் யானுரை
செய்த விதனைநீ நொய்தெனக் கருதி
வாளா காலம் போக்கலை. மீதுராய் !
மீளாய் தமிழ்நலம் விரும்பியுய் வாயென."

அப்பாவின்பயன் கொலோ, மதுரைமாநகர் இப்போழ்தத்துச் சிறிது கண்விழித்துப்பார்க்கலாயினள்? யான் சின்னாண்முன்னர்ச் சென்னைக்குப் போந்த காலத்து, மதுரைக்கட்புதுவதோர் தமிழ்ச் சங்கம் கூட்டுகின்றன ரெனச் சுதேசமித்திரன் பத்திரிகைவாயிலான் அறிந்தயான் கழிபேருவகை பூத்தனன். தமிழறிந்தயாவரும் அங்ஙனங்களிப்படைவா ரென்பதற் கோரையப்பாடுமில்லை. இச்சங்கத்தினைக் கூட்டுதற்குப் பாலவனத்தம் ஜமீன்தாராகிய உக்கிரப்பெருவழுதி யென்னும் இயற்பெயருடைய பாண்டித்துரைசாமித்தேவர் காரணகர்த்தராயிருத்தலையுன்னின் முன்னுஞ் சங்கத்தினைப்பரிந்துபோற்றிய உக்கிரப்பெருவழுதியாரே, தாங்கூட்டிய சங்கங்கடைச்சங்க மென்னும் பெயரெய்திக் கழிந்தனவற்று வொன்றுயிற்றேயெனப் பரிதபித்து மீட்டுமெவதரித்தனர் போலும்! மதுரையம்பதுமம் தன்னையாதரித்தார் விண்ணுலகெய்தினரெனத்துயருற்றுச் "சங்கந்துறந் தன்னமிலாம"ன், மீட்டும் அவரைப் பெறும் ஆகூழ்க்காலத்தினை யுறுமாறு தவமியற்றிய தெனவே கூறல் வேண்டும்.

இனியிது காறும் நிகழ்ந்தனவற்றுள், புதுச்சங்கங் கூடுதல் ஒருதலையெனத் தெரிய வருகின்றமையால், இச்சங்கம் இடையூறின்றி நீடூழி நிலைபெற்றிருத்தற்கு இன்றியமையாதனவற்றை, கற்றறிந்தோர் பல்லருமெடுத்துரைத்தன ராயினும், யானுமவற்றைக் கூறுதலாற் பயனுளதெனத்தோன்றுகின்றமையின், என் சிற்றறிவிற்குப் புலப்பட்டன சிலவற்றை யெடுத்துரைக்கின்றனென்.



சங்கம் நிறுவுதல் மதுரையம்பதியிலாயினுந் தமிழ் வழங்கும், குணகடல், குமரி, குடகம் வேங்கடமெனு நான் கெல்லையுடைத்தாய நாட்டின் பல்லிடங்களிலும், கிளைச்சங்கங்களும்; அருந்தமிழமுதினை யூட்டுதற்குக்கல்லூரிகளும், புத்தகசாலைகளு மேற்படுத்தலோடும், கற்றுத்தேறியவர்க்குப் பரிசும்பட்டமு மளித்தலும், நம்முனோர் செய்தவாறு வடமொழி நூல் பலவற்றை மொழிபெயர்த்தலோடும், ஆங்கிலத்துள்ள, உயிர்நூல், உடனூல், மனிதநூல், செல்வநூல் முதலியவற்றை மொழிபெயர்ப்பித்தும், அங்ஙனஞ் செய்தாரையாதரித்தும், பத்தியமேயன்றிக்கத்தியமும் போற்றியும், சங்கத்து நிகழ்வனவற்றைப் பல்லோரும் அறிதற்கேதுவாய்ப்பத்திரிகைகள் விடுத்தும், இயற்றமிழேயன்றி யிசைத்தமிழும் நாடகத்தமிழும் பெரிதும் வளரச் செய்தும், செந்தமிழறிந்து புது நூலியற்றுபவரை யலகூழியஞ்செய்யும் புல்லறிவாளர்க்கு நல்லறிவூட்டியும் வருதல் வேண்டும். இவையிற்றை யெல்லாம் முதற்கட் செய்யவாரம்பித்தலியலாதாயினும், நாளடைவிற் செய்வரென நம்புகின்றேன். அங்ஙனம் நிறைவேற வேண்டுமாயின், நல்லறிவுக் கண்மயங்கிக் குற்றங் காண்டலே தொழிலாய்க் கொண்ட புன்னெறியினராய போலியாராய்ச்சியரையும் தாம்படித்தநூலின் பொருளுமறியாப் போலிப்புலவரையும் சங்கத் தலைவராக்காது நல்லிலக்கணம் பலகுடி கொண்ட பேரறிவாளரை நியமிப்பாராக.

புதுச் சங்கங் கூட்டுவோர் மேற்கூறியவற்றை நன்காராய்வாராக. எம்மாலவாய்ப் பெருமானருளாற் பரிதியம்புலவரும், உக்கிரப்பெரு வழுதியாரும் சங்கத்தி னூர்வத்தைக் கண்டுகளித்து நீடூழிகாலம் வாழ்வாராக. சங்கமும் புதிதாய் மலர்ந்த மதுரையங்கமலத்து வீற்றிருந்து ஈறில்சீ ரெய்துவதாக.

ஐ. ப. வாசுதேவைய பந்துலு.

## மதிவாணன் கதை.

(III-ஆம் சம்புடம், 44-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

### அத்தியாயம்-கஉ.

இங்ஙனம் பிடியுண்டமாயவன் சிறைக்கோட்டத்திடப்பெற்றான். மற்று, அரண்மனை மாடமீமிசை மன்னவனொடுஞ்சென்ற

மதிவாணன் பாண்டியனது அந்தப்புரத்திலுள்ள மகளிர்க்கிடையேசென்று சேர்ந்தான். சேர்ந்துழி வேந்தனாணையின் வண்ணம் ஆண்டு வேய்ந்துளதோ ரிருக்கையின் கண் வீற்றிருந்தனன். இருந்த மதிவாணனைக்கண்ட மகளிரெல்லாம் உள்ளத்துவகை பொங்கிப் புன்முறுவல் பூத்தனர். அப்போழ்தத்துக் கன்னிமாடத்தினின்றும் பாங்கியர் பலர்புடை சூழ இன்பவல்லியும் போந்து கோப்பெருந்தேவியின் அருகர் நின்றாள். உடனே வேம்பனுந் தன்வயிற் பிறந்த கரும்பனைய கன்னியைச் சுட்டி, "மதிவாண! இவளையன்றோ நீ காண்டல் வேட்டது?" என்று கூறலும் மதிவாணன் "ஐயனே! இந்நங்கையை யன்றோ யான் கைப்பிடித்தல் வேட்டது!" என்றனன். தான் படத்தினிற் கண்ட சாரிகையைக் கண்ணெதிரே காணப்பெற்ற மதிவாணன், தன்பால் நிகழ்ந்த மெய்ப்பாட்டினை யடக்கும் வலியின்றி யுழலுவான் புன்முறுவல் பூத்தான். இன்பவல்லியும் இடையிடையே தனது காதலனைக் கட்கடையால் நோக்குவாள்; உள்ளங்களிப்பாள்; இளநகையரும்புவாள்; ஒருபுறந் திரும்புவாள்; பெருந்தேவியின் புறத்தே நாணத்தினாற்றனது முகத்தினைக் கரப்பாள். இவ்வாறு சிறிது போழ்து கழிந்தது. அதன்மேல் இன்பவல்லி, பொள்ளெனப் போந்து, மதிவாண வள்ளலைத் தாளின்கட்பணிந்தாள். அதனை யெதிர்பாராத அருந்தமிழ்க் குரிசில் மதிவாணனும் இறும்பூது மிகுந்து இன்னசெய்வதென்றறியானாய்ச் செழியனை யொருமுறை யேறட்டுப்பார்த்துத் தன இருகரங்களானும் நங்கையர் தலைமணி இன்பவல்லியை வாரியெடுத்தலும் அவள் அவன் அருகரிருந்த தோராதனத்தின்கண் இருந்தனள்.

அதன்பினர் வழுதி "ஐய! மதிவாண! நும்மிருவர்க்கும் யாங்கள் எமக்குள்ளே மணவினை செய்து முடிக்கவேண்டுமென்று கருதியதற்கேற்ப ஆலவாய்ப் பெருமானடிகளருளினால் நீவிரிருவிருங் காதலுறுவீராயினிர். காதலில்வழிச் செய்யுங் கடிமணங் கடியப்படுவதொன்றன்றோ? 'நும்மிருவர்க்கும் எங்கே மெய்க்காதல் நிகழாது போய்விடுமோ?' என்று ஏங்குவேன்வயிற்றில் தனிப்பெருங் கடவுளார் பாலைப்பெய்தனர்" என்று சொல்லிக்கொண்டிருக்குமளவில், 'மதிவாணன் றந்தையார் தஞ்சைவாணர் மதுரைமாநகரம் போந்தனர்' என்றசெய்தி அரசன் செவிகளில்



வீழ்ந்தது. உடனே யாவரும் எழுந்தனர். மீனவர் கோமான் மதிவாணனை ஆண்டே யிருக்கும்படி பணித்துவிட்டு ஞெரேலென வெளிச்சென்றனன். அவ்வமையத்துப் புடைநின்ற மகளிருங் கோப் பெருந்தேவியோ டகன்றனர்.

அந்நிலையிற் றனித்திருந்த இன்பவல்லி சிறிது வெரூஉக் கொண்டனளாயினும் அதனையண்ணல் மதிவாணனறியாது மறைத்தனள். சிறிதுநேரம் ஒருவரோடொருவர் பேசாது நம்பியும் நங்கையும் வாய்வாளாமை மேற்கொண்டனர். அதன்மேல் மதிவாணன் இன்பவல்லியையணுகி "என்னுயிர்க்காதலீ! நீ நிறம் வேறுபடக்காரணமென்னை? எந்தையார் இவ்வயின் முதலமைச்சராயிதுழி, நாமிருவேமுங் குழவிப்பருவத்து நட்பாளரல்லெமோ? அதனை மறந்துகொல் மடவாய்! நீயின்னணம் நாணுவாயாயினை? நீயெனை மறப்பினும் யானுனைமறப்பலோ? அன்புடையாய்!" என்றலும் இன்பவல்லி, குயிலுநாணுமினியகுரலில் "தேவ! அங்ஙனம் எண்ணலை. என்னினைவிற்றொன்று புணர்ந்து கூறவல்லெனல்லேன். நின்னைக்கண்டேன் காதல்கொண்டேன். அவ்வளவே. அதற்குமேல் யாதொன்று மறியேன்" என்றனள். எப்பொழுது பேசுவாளோவென்று எதிர்பார்த்து அவளது கிளவி வேட்டுநின்ற மதிவாணன் செவியில் அமுதம் பெய்தது போலும் இருந்தன அவள் மொழிகள். உடனே மதிவாணன் "மாதராய்! யாமிருவரும் அரண்மனையினுப்பணுள இளமரக்காவிற்குப்போக ஒருப்படுதியோ?" என்றலும் இன்பவல்லி யெழுந்தனள். அவளைக் கையிற் பிடித்துக்கொண்டு மதிவாணனுமேகினன்.

இஃதிவ்வாறாகத் தஞ்சை வாணரும் மாவீர வழுதியும் அளவளாவிப் பற்பல விடயங்களையும்பற்றிப் பேசியபின்னர் வாணனார் மன்னவனை நோக்கி "மணவினை முடியுங்காறுந் திரிசிரபுரக் கலகச் செய்தியைக்குறித்து நிகழும் விசாரணையை நிறுத்திவைக்கலாம். அங்ஙனஞ் செய்தலே நேர்" என்ற அளவில் உசிதனும் ஓமென விணங்கினன்.

அதன் மேல் நாலைந்து நாள் காறும் மணவினைக்குரிய செயல்களே நிகழ்ந்து கொண்டிருந்தன. அரசனாணையின்படி வள்ளுவராயினார் அரசுவாவின் மீது முரசமேற்றிக் 'கோ

மகள் இன்பவல்லியின் மணவினை நிகழ்ச்சிக்கு அறிகுறியாக நகரெங்கும் அலங்கரிக்க' என்று முழக்கிச்சாற்று முன்னரே, நகருளார் தங் களிப்பிற்கு வெளியறிகுறியாகத் தங்கள் வீட்டு வாயிற்றோறும் பழமணன் மாற்றிப் புதுமணல் பரப்பினர்; பந்தர் பல வேய்ந்தனர்: தூண்களில் தாறிட்ட வாழையுங் காய்க்குலைக் கமுகுந் திரடிங்கரும்புந் தெங்கிளம்பாளையுங் கட்டினர்; மயிலெனக் குயிலெனப் பாம்பெனக் கிளியெனத் தோரணம்பல தூக்கினர்; பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் வைத்தனர்; நறுமணங் கமழு நாண்மலர் மாலைகள் நாற்றினர்.

இனி யரண்மனை வாயிலினலங்காரத்தை யிற்றென வெடுத்துரைத்தல் எம்மனோர்க்கியலா தெனினும் ஓராற்றாற் கூறுகின்றாம். முன்வாயின் முகமெல்லாம் முத்தெடுத்தார்; தாமரை வெண்முளைகள் பாய்த்தினார்; மின்வாய மணிக்கலசத்திற் பொற் செந்நெற்கதிர்கள் சூட்டி விளங்கவைத்தார்; பொன்வாழைகளை மரகதப்பைங்கமுகளோடுந் தோரணவாயிலில் ஏரணவு நாட்டினார்; ஒன்பான் மணிகளினுங் குயிற்றிய மீனக்கொடிகள்பல வானத்தசைந்தன. வலம்புரிச்சங்கம் நலம்புரிந்தேங்கின; மாரியு நடுங்கப் பேரிகை யதிர்ந்தன; வீதி யெங்கும் விழவருவாயின; பதியிலார் வயின்றொறுஞ் சுதிபல வெழுப்பிச் சதிநயங் காட்டினர்; நாடகக்கூத்தியர் ஆடகத்தாக்கிய அரங்கினிலேறி அன்பொடு நடித்தனர்.

இவ்வாறு மதுரைமா நகரமெங்கணும் பொன்னகரு நாணியொதுங்கப் பொலிந்திருந்தது; இந்திரன், காமுற்று நாடொறும் வலம்வரும் மருதமாதேவியின் நாட்கமல முகம்போல, கடலாடை புடையுடுத்த நிலமகளின் விழிபோல, நிலவி விளங்கிற்று.

அரசனுங் குடிகளு மம்ம வேறல
ருரைசெயி னுயிருலா முடல் மாவராற்
கரிசறு காவலன் கன்னி மாமணம்
பரசுபு மதுரையம் பதிவ யங்கிற்றே.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார்.



## உள்ளப்பயிற்சி. *

### V. பகுத்தறிவு.

தர்க்கிக்கும் சக்தியைப் பலப்படுத்துவான் தருக்கநூலையும், ஆன்மதத்துவநூலையும் ஒழுங்காக ஒருவரைக் கற்கத்தொடங்கும்படி யாம் அறிவுறுத்த வேண்டுமாவென்று யாரேனும் ஒரு சிறுவன் எம்மிடத்து வினவ நகைகொள்வான் போலும். இவ்வினாவை விடுக்குதும். "நீர் முதலிற் கேவலமாணாக்கனுக்குரிய செயற்கையொழுக்கத்திற்கு முரணாக இயற்கை நெறியிற் சிந்தித்து வாதிக்கும் சாதாரண வழக்கப்பயிற்சி பெற்றிருப்பின் நிச்சயமாகவே எவ்வகையானும் தொடங்கலாம்." மக்கள் முதன்மையாகக் கால்கள் அடைந்திருந்து, பின்பு அவைகளை உபயோகப்படுத்தியே நடக்கக் கற்றிருக்கின்றனர். இதன் பின் யுத்தத்திற்குரிய நடை பயிற்றும் ஒருத்தியோகஸ்தனிட மடைந்து செலவு கற்கவும், பல்வகைத் திறமுள்ள பெயர்ச்சி புரியவும் தெரிந்து கொள்ளலாம். பயிற்சியடையாத கேவலம் இடப்பெயர்ச்சியில் எம்மடங்கு அனுபவத்தினாலும் இவற்றை அடைதலியலாது. சிந்தனைத் தொழிலினும் இவ்வாறே யாம். முதலில், நீவிர் சிந்தனை செய்மின், சிந்தனை செய்பொருள்களும் பல கொண்மின், பின்னர் ஒருதார்க்கிகனையடைந்து கொள்கை முடிவுகளை நீவிரடைந்தவாற்றைக் கூரிய பார்வையுடன் நோக்கித் தேர்ந்தறிவதை நமக்குப் போதிக்குமாறு அவனைக் கேட்டுக்கொண்மின். இவ்வாறாகில், தர்க்கநூற் கல்வி மிகப்பயன்படுமென்பதில் ஐயப்பாடில்லை. ஆனால் தனித்தர்க்க வியூலினின்றுமே வாழ்க்கைப் பெருஞ்சோலையில் முதிர்ந்தகனி நல்கத்தக்கதோர் கருத்து ஏதேனும் தழைத்தோங்குதலைப் பெற முயல்வது என்றும் வீண் தொழிலே. என்னையெனின் இச்சாத்திரம் யாவகைச் சிந்தனையும் நிகழ வேண்டிய பொதுப்படிகளை மாத்திரம் வரிசையாய்க் குறிக்கின்றதே யன்றி வேறு உண்மைப்பொருளடக்கமொன்றும் கணிதநூல் போன்று இலதாகும். கேவலம் ஒருதார்க்கிகனைச் சிறந்த தத்துவ நிபுணனாக்குவதினும், சிலம்பவித்தை பயிற்றுவோனினின்றும் சிறந்த சுதேசாபிமானியை உண்டாக்குவது எளிதாம். உண்மையில், கருவிநூலனைத்திற்கும் இஃது ஒக்கும். இலக்கணமும் அணிநூலும் ஒருங்கே குறுகிய பயனுடையன. வாழ்க்கையும், அனுபவமும் அளித்த உபகரணங்களைப்பற்றி உரைக்கும் போதே இவை பயன் படுவனவாம். சிந்தனை விதிகளைக் கற்பதனால் அஃகிய வறிவை விரிந்ததாக்கலும், குறுகிய அறிவைப்பரந்த தாக்கலும் இயலா. இடைக்காலத்துத் தத்துவநூலோரின் தருக்க விலக்கணத்திற்கு, உறுதிப்பாடுடைய ஊக்கம், பரந்த அனுதாபம், கூர்ந்த உற்றுணர்வு, பல்வகை அனுபவம், இவையனைத்தும் ஈடாகும். எனி

* The Culture of the Intellect.

னும், இத்தருக்க நூல்பயனற்றதன்று. இது, புதுவதுபடைக்கும் தன்மைத்
தன்றி, ஒழுங்கு படுத்துமாற்றலுடையது. ஓவியம்வரைதற்கு உறுப்புநூல்
பயன்படுமாறுபோல இதுவும் சிந்தனை செய்தற்குப்பயன்படும். உமதுநியா
யத்தின் உருப்படிவத்தினது இணக்கத்திலும் பொருத்தத்திலும், இஃது
உமக்கு மிக்கவுறுதியான பற்றுக்கோடாகின்றது. ஆனால் உறுப்பு நூல் அழ
கிதோர் ஓவியமொன்றைத் தானே தீட்டமுடியாதவாறு போலத் தருக்கவில
க்கணமும் மெய்யறிவை விளைத்தலியலாது. குற்றங்களையும், போலி நியாயங்
களையும், வெளிப்படுத்தலில் இது பெருந்துணைக் கருவியாக நிற்கின்றது.
ஆயின், சிறந்ததோர் உண்மைப்பொருளைக் காண்டல்நெறியிற் செல்லுதற்கு
கலாசாலைகளிற் கிடைக்கப்பெறாத வாழ்க்கையூற்றுக்களினின்று தனது இய
க்கவுண்மையையும், பொருட்காட்சிச்சாலைகளுளொன்றிலும் சேர்த்து வைக்
கப்பெறாத, ஜீவப்பிரபஞ்சத்தைப்பற்றிய விஷயங்களினின்று தனது உப
கரணங்களையும் இது பெற்றுக்கோடல் வேண்டும். இஃது ஆன்ம தத்துவ
நூலிற்கும் பொருந்தும். அந்நூல் இருவகைப் பயனுடைத்தாம். முதற்
கண் மானுட சக்தி அளவினது இன்றியமையா எல்லைகளை நமக்கு அது தெ
ருட்டும். நமது அகந்தையை அடக்கி ஆழ்ந்த அடியற்ற ஆராய்ச்சிப் பெ
ருங்கடலுட் சிறிது வருந்தி ஊடாடினதன் பின்னர் நாம் கருதியிருந்ததைக்
காட்டிலும் மிகப்பரவியது இவ்வுலகமென்றும், அதைப்பற்றிய நமதெண்
ணங்களெல்லாம் பொருட் செறிவற்றனவென்றும் நாம் உணரும்படி அது
செய்யாநின்றது. "இது தீமைநீக்கற் பயனன்றி நன்மை புகட்டற் பய
னன்றே" எனினும் அது அகாரணத்தால் இந்நூல் சிறப்பிலதாகாது. அறி
வின் முதற்பற்றுக்கோடு எல்லை யுணர்ச்சியாம். புட்களின் செயலை மேற்
கொண்டு இறுதியில் இந்திரன்போன்று மாழாந்து அபகீர்த்திபடைத்து
ஆயிரங்கண்ணனுவதைப் பார்க்கிலும் நமக்குரிய இவ்வுலகிலேயே உறுதி
யாய் ஒழுகுதல் சாலவும் நன்று. ஆன்மதத்துவ நூலின் மற்றொரு
பயன் நன்மையாக்கமே. நூல்களனைத்திற்கும் ஆதாரமான சிறந்த இன்
றியமையாத உண்மைகளில் நாம் பழக்கமுற அது பயிற்றுகின்றது. ஆன்
மதத்துவ நூல் தர்க்க நூல் போலக் கேவலம் கருவி நூலன்று; மற்று,
ஒருமனிதனது ஆன்மா அவனது முகவெளிக் குறிப்பிற்குள்ளும் இரத்த
மாம்ச பிண்டத்திற்குள்ளும் பொதிந்து கிடந்தும், மாறுபாடனைத்தையுங்
கடந்தும், ஒரு தன்மைத்தாய் அவைகளின் நிலைமைபெற்ற இனக்குறி
யா மாறுபோல, தோற்றமனைத்தினும் உட்பதிந்து கிடக்கும் அடிப்படை
யானதும் சாரமானதுமான உண்மையைப் பற்றிய நூலேயாகும். தனித்
தனி நூல்களாற் காட்டப்பெற்ற முக்கிய மாறுபாடுகளின் பின்னர்ச் செல்
வழி நாமடைவதும் இஃதே. இது நிலத்திணைப் பொருணூலன்று; உடல்
நூலுமன்று, பௌமிய நூலுமன்று, வான நூலுமன்று, இரசாயன சாத்
திரமுமன்று, மனித நூலுமன்று, அறிவின் தனிப்பகுதிகள், ஒவ்வொன்றும்



தங்கண் ஒருவகை நோக்கமாகவே காணப்படும்; எங்கும் பரவி, எவற்றை
யும் தம்மகத் தடக்கி, இயலுறாஉம் சக்திகள், ஆற்றல்கள், சாரங்கள் ஆகிய
இவற்றின் தொகுதியே ஆன்ம தத்துவநூலின்பாற் படும். வாழ்க்கை
யனைத்திற்கும் இதுவே முழுமுதன் மூலம். மேலும், உள்பொருளனைத்தும்
தன்மயமான பேரறிவினது வெளிவிரிவாகையால் (எனெனில் உள்ளுறை
அறிவின்றேல் இவ்வவுலகம் ஒழுங்குருவாகாது கூலந்துருவாயன்றோ விருக்
கும் !) நந்தம் தனித்தனி சிற்றறிவினால் அறியக்கூடியமட்டில், ஆன்மதத்து
வநூல் அகண்டமான ஒழுங்கிய லுலகின் பேரறிவுணர்ச்சியா மென்பது
போதரும். ஆகையினாலே தான் அரிஸ்டாடில் வெகுகாலத்திற்கு முன்
குறித்தாங்கு, இது கடவுளியல் நூலோடு ஒருமைப்பட்டுளது. மெய்யா
கவே, கடவுளைத் தனித்த சுயம்புவாயும், சுயசக்தி யுடையதாயும், தன்மய
மாயுமுள்ள அனந்த ஞானவடிவெனக் கருதுதலே இக்காசினியை நன்கு
நமக்கு விளக்கும். இக்கருத்தே நேரிய சிந்தனையின் ஒரே பற்றுக்கோடெ
னப் பிதாகோரஸ்ப் புலவர் முதற்கொண்டு ஹேகெல் வரையிலுமுள்ள
சிறந்த தத்துவ வுணர்ச்சி வல்லோரனைவராலும் உறுதியாய்க் கொள்ளப்
பட்ட நியாயம். இனி, இக்காலத்தில் விசேஷமாக ஆன்ம தத்துவநூலை
யெவ்விதத்தினும் பயிலவேண்டும். எனெனில் வெளிற்றோற்றும் புறப்பொ
ருள்களையே ஒருதலைச் சார்பாய்த் தவறுகச் சாரும் மனப்பயிற்சியோடி
ணைந்த, பிரகிருதி சாத்திரத்திற்செவ்விய புதுப்புதுக் காட்சிகளின் தொடர்ச்
சியினாலெய்தும் அதிசயத்தின் பயனால் இக்காலத்திற் கேவலம் பிரகிருதிசாத்
திரத்திலேயே அறிவுடைமை காணப்படு மென்றும், முக்கியமான முடிவுரை
களனைத்தையும் ஒரே யடியிற் காட்டும் மெய்யான மந்திரக்கோல் பொதுப்
பொருள் நிறுவலாமென்றும் மக்கள் சிலர் கருதுவாராயினர். இவ்வாறு
கருதுதல் புறப்பொருண் மேற்கோட் பைத்தியமாகும். எனெனில், ஒரு
புறத்து நூல்களனைத்துஞ் சார்ந்துள அடிப்படையாயினவும், மிகவின்றி
யமையாவாயினவுமான உண்மைகள் பொதுப் பொருள் நிறுவுதற்கு முன்
னரே நமது மனத்தைப் பெரிதும் கவர்கின்றன. மற்றொரு புறத்திற் பிர
கிருதி சாத்திரங்கள் சாதாரணமாய்க் காலக்கிரமமான ஒழுங்கிணக்கங்களை
விரித்துரைக்கின்றன. இவற்றை நுணிப்புன்மேய்ச்சலாகக் காண்பவர் கார
ணங்களாக மருளினும் மருளுவர். அந்நூல்களின் விதியெனப் பட்டன
வெல்லாம் செய்ம்முறைதாமே. அவைதமது எல்லையைக் கடந்து சென்று
லன்றிக்கணக்கிட முடியாத அவற்றின் நிமித்தகாரணமன்றோ, என்றுமெங்
கும், நாம் கடவுளென்று கூறும், தனித்து நின்று எங்கணும் விளங்கும்,
எவற்றையும் படைக்கவல்ல பேரறிவாம். பத்தியுள்ள முதியவனகவி யொரு
வர் பாடினவாறு இவ்வறிவின் முளைகள்தாமே நாமனைவரும். பெரியமுனி
வர்கள் முன் போதித்தவாறு யாம் வசிப்பது மதன்கணே, இயங்குவது
மதன்கணே, உயிர்த்திருப்பது மதன்கணே. என்னை ?

“ஆவதும் பரத்துளே யழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே தெய்வமும் பரத்துளே
யாவரும் பரத்துளே யாமுமப் பரத்துளே”

என்ற பாவலர்வாக்கும் பொய்யாமோ? இளைஞனொருவன் கலாசாலைகளில் தகுதியாக நாடத்தொடங்கவேண்டிய ஆன்ம தத்துவ நூலெல்லாம், சாரமும் நியாயமுமுள்ள கடவுள் நூலும், பயபக்தியோடு கூடிய ஆராய்ச்சியுமேயாம். ஆனால் உண்மையும் ஆண்மையும் பொருந்தப்பெற்ற வாழ்க்கையில் அநுபவத்தினான் மட்டுமே அவன் இவ்விரண்டையும் காணவியலும். அன்னையின் மார்பில் இளைப்பாறியுறங்கும் குழவிபோன்று அவைகளடங்கிய கோட்பாட்டில் உள்ளமியைந்து அமர்ந்தபோதே அவ்விரண்டையுந் தான் கண்டதாக அறிவான்.

ச. கி. சுந்தராசாரியன்.

---

## கல்லாட வாராய்ச்சி.

(393 - ஆம் பக்கத்தொடர்ச்சி.)

திருக்குறள் அரங்கேற்றிச் சில்லாண்டு கழிந்த பின்னர்ப் பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்திற் கற்புக்கரசியாய கண்ணகியின் கணவன் கோவலன் சிலம்புவிற்க மதுரைத் தெருவில் திரிதரும் பொழுது அரசன் தேவியின் சிலம்பினைக் கவர்ந்த கள்வனென வீணே பழிகூறப்பட்டு அரசனது கொலைத்தொழின் மாக்களால் வாளாலெறியுண்டிறந்தான். இதனை யறிந்த கண்ணகி வெகுளி மேலிட்டு நாண் துறந்தோடி அரசன் பாற்சென்று அவனது அறமின்மையை வலியுறுத்தி அவனை அறக்கூற்றிற் கிரையாக்கினள். அதான்றியும் சினமொருவாற்றானுந் தணியாது தனத்தி லொன்றைத் திருகியெறிந்து மதுரையம்பதியைச்செந்தீக்கு விருந்திட்டனள். இவ்வாறு அரசியல் பிழைத்தலாற் பாண்டிநாடு மழை வளங்குன்றிப் பன்னிரு யாண்டு வற்கடஞ்சென்றது. புலவர்களும் நீரில்லா வாவியை விட்டுப் பறவைகள் அகல்வனபோற் பாண்டி நாட்டைத்துறந்து பிறநாட்டிற் றிரிதந்து மழைவளஞ் சுரந்தபின் பாண்டிநாடெய்தினர். அப்பொழுது அகப்பொருளாராய்ச்சி மிகக்குன்றி யிருந்தது.

அத்தருவாயில் அரசன் கவலுற்றிருந்தபோது சோமசுந்தரக்கடவுள் கருணைகூர்ந்து தாம் இறையனாராயிருந்தியற்றிய களவியலென்னும் பெயர்



பெறும் இறையனாரகப் பொருளை வெளியிட்டனர். *அதன் முதற்சூத்திரம்,

“அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.”

என்பதாம். இறையனாரகப் பொருள் ஆலவாயடிகளாலேயே யியற்றப்பட்டதென்பதற்கு,

“உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை
முந்தூறும் பெருமறை முளைத்தருள் வாக்கா
லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்” (3-ம் அகவல்.)

என்பதே கரியாம். முன்னர்ச் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரே யென நிறுவியபோது காட்டிய சிலவடிகளும் களவியலின் பெருமையைக் கூறும்.

இறையனாரியற்றிய களவியலுக்கு உரைகண்டவர் நக்கீரரென்று ஒரு சாராரும் குமாரக்கடவுளுடைய அவதாரமாகிய உருத்திரசன்மரென மற்றொரு சாராருஞ் சொல்வர். பொதுவாய் இறையனாரகப் பொருளுரை நக்கீரரதென்றே கொள்ளுப பலர். இக்கொள்கை மிகவுந்தவறுடைத்தெனத் தோன்றுகின்றது. முதற்கட் களவியல் உரைச்சிறப்புப் பாயிரத்தில் நக்கீரர் படர்க்கை முகத்தாற் கூறப்பட்டமையின் அப்பாயிரத்திற்கேனும் அவர் ஆசிரியரல்லரென்பது போதரும்; மேலும் அப்பாயிரத்திலேயே களவியலுக்குப் பொருள்கண்டார் உருத்திர சன்மரெனச்சிலர் கூறுநிற்பரெனக் காட்டி அது தவறென்று சிலவபிப்பிராயங்களைச் சுட்டி நக்கீரரே மெய்யுரை கண்டாரெனப் பின்னர் வலியுறுத்தப்படுதலானும் உரைசெய்தவர் இன்னாரென ஒருதலையாய்த் துணிதல் அக்காலத்திலேயே முடியாமையாயிருந்தது. கடைச்சங்கத்து வரலாற்றினை வலியுறுத்திக் கூறுதற்குக் கல்லாடத்தினுஞ் சிறந்த ஆதிநூல்களில் இறையனாரகப்பொருளுரையாசிரியர் வணிகர் மரபிற் றோன்றிய முருகக்கடவுள தவதாரமான வுருத்திரசன்மரெனவே தோன்றுகின்றது. இதற்காதாரம் :

“மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்

---

* இறையனாரகப்பொருளின் வரலாற்றினை விரிவா யறியவிரும்புநர் அக்களவியலுரையுட் பரக்கக்காண்க.

பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா றறிய நீயே யாதலின்''

(கல்லாடம் - முருகர்துதி.)

என்பதாம். உருத்திரசன்மர் மூங்கைக் குழவியென்பதற்கு ஆதியாய நூல்
களுள் ஆதாரங்கிடையா. இறையனாரகப் பொருள் உரைச்சிறப்புப் பாயிரத்
தில் மூங்கையெனப் பகரப்பட்டிருக்கின்றதெனின் அப்பாயிரம் செய்தார்
நக்கீரர்பரம்பரையி லுதித்த வொருவர் நக்கீரருக்குப் பெருமை வாய்க்க
அவ்வுரைக்கு நக்கீரரே உரையாசிரியரென முரண்வாதத்தாற் சாதித்ததா
கத் தோன்றுகிறது.

கண்ணுதற் பெருமான் தமது பேரருளாற் பாண்டி நாட்டுள்ள மன்ப
தைகள் இம்மை மறுமை யின்பங்களைத் துய்த்து முத்திவழி மறவாதிருக்
கப் பல திருவிளையாடல்களைப் புரிந்தார். திருவிளையாடலெனும் பதந்திற்கு
ஆன்றோர் முத்திச்செல்வத்தினை விளைக்கும் லீலையெனப் பொருள்கூறுவர்.
அகப்பொரு ளமுதாகிய திருச்சிற்றம்பலக் கோவையாரை கற்போர்க்கு
எவ்வாறு திருச்சிற்றம்பல முடையாரது பேரருள் தொனிக்கின்றதோ,
அவ்வாறே கல்லாடத்தை வாசிப்போர்க்கு கூடல்நாயகன் பேரருள்கூடும்.
செவியுணவிற்சிறந்த இந்நூலின் அருட்டிறத்தைப் பலகாலு மந்நூலினைப்
பயின்று தெளிந்திடுக.

சிவபெருமானது உண்மையடியார்கள் திருமாலினிடத்து அபராதஞ்செ
ய்யார். அலைகடற் றுயில்வோனது மாட்சிமையை மணிவாசகப் பெருமான்
பரசிவப்பிரமத்தின் கரை கடந்த பெருமையை அளத்தற் கொரு கருவியாகக்
கொண்டாரே யொழியத் திருமாலைப் பழித்தனரல்லர். திருமால் பரசிவத்
தின் அருட்சத்தி யாதலின் அவ்வை முதலிய பெரியோர் சிவபெருமானை
முழுமுதற் கடவுளாக் கொண்டாராயினும் சிவபெருமானை நோக்கித் தவஞ்
செய்துமுத்தியெய்த எண்ணுநரைநோக்கி "திருமாலுக்கடிமை செய்" என்றீ
கூறியுள்ளார். ஆகலான் திருமாலை சிவப்பிரகாசச் சுவாமிகளைப்போல்
மால்கொண்டு, வீணே நிந்திப்பவர் உண்மைச் சிவநேச முடையாரல்லர். வாத
ஆரடிகள் சிவபெருமானது அளக்கொணுப் பெருமையை ஒரு வாற்றான்
சிறிது அளக்க முயன்றபோது அத்தனையளத்தற்குத் தூங்கொண்ட கருவியா
கிய மாயோன்புகழை எவ்விதவிழுமம் வாய்க்க விரித்தா ரென்பது, "போற்
றித் திருவகவ" லின் முதலில்,

"நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடியறியு மாதரவதனிற்
கடுமுர ணேன மாகி முன்கலந்



தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணு மலரடி யிணைகள்''

எனக்கூறினமையி னினிது விளங்கும். அன்பு பெருக்கிற் பல்லாற்றானும்
வாதவூரடிகட்குச் சமானராகிய கல்லாடரும் ஆழிவள்ளலது பெருமையைச்
சிவபெருமானது புகழளக்கு மொப்பற்ற கருவியாகக் கொண்டார். ஐந்
தாம் அகவலில்,

"இரண்டுட லொன்றாய்க் கலைந்துகண் படாம
லளவியன் மணநிலை பரப்புங் காலங்
களைகண் கடந்த காமக் கடலுட்
புன்னுனிப் பனியென மன்னுத லின்றிப்
பீர மலர்ந்த * வயாவு நோய் நிலையாது
வளைகாய் விட்ட புளியருந் தாது
செவ்வாய் திரிந்து வெள்வாய் பயவாது
மனைப்புகை யுண்ட கரும ணிடந்து
பவள வாயிற் சுவைகா ணாது
பொற்குட முகட்டுக் கருமணி யமைத்தெனக்
குங்குமக் கொங்கையுந் தலைக்கண் கருது
மலர வவிழ்ந்த தாமரைக் கயலெனப்
வரிகொடு மதர்த்த கண்குழி யாது
குறிபடு திங்க ளொருபதும் புகாது
பொன்பெய ருடையோன் றன்பொர் கெடுப்பச்
தூணம் பயந்த மாணமர் குழிவிக்
கரக்கர் கூட்டத் தமர்விளை யாட
நெருப்புமி ழாதி யீந்தரு ணிமலன்''

என்னும் பாவடிகள் விண்டுவின் பல அவதாரங்களினும் ஓர் ஒப்பற்ற கார
ணத்தால் மிகுந்த பெருமை வாய்ந்துள்ள உக்கிர நரசிம்மாவதாரத்தை
உச்சிதமாய்ப் புகழ்ந்து பரமசிவத்தின் பேராற்றல் பேரருள் முதலியவற்
றை ஒரு வாற்றால் விளங்கவைக்கின்றன. முழுமுதற்கடவுளது இன்றியமை
யா இலக்கணங்களுள் யோனிவாய்ப்பட்டு உதிக்காமை யொன்றாம். பிறப்
பின்மைகூறவே யிறப்பின்மையு மொப்பமுடியும். 'தந்தை பிறந்திறவாத்
தன்மையினு' லென்றார் கவிகாளமேகமும். தொண்ணூற்றைந்தாம் தொ
ண்ணூற்றேழாம் அகவல்களுட் பாரத இராமாயண வரலாற்றினைச் சுருங்க
அணிபெறச்சொல்லிக் கண்ண பிரானுக்கும் ஸ்ரீராமபிரானுக்கும் சிவபெரு
மான் புரிந்த பேரருள் கூறப்பட்டிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

எஸ். ஏ. திருமலைக் கொழுந்துபிள்ளை.

* மசக்கை.

# முதலாழ்வார்கள் வைபவம்.

ஸ்ரீ பாஞ்சசந்நியாமிச பூதரான பொய்கையாழ்வார், காஞ்சீபுரத்தில் திருவெஃகா என்னுந் திவ்விய தேசத்தில், பொற்றாமரைப் பொய்கையில், காஞ்சன பத்ம கர்ப்பத்தில், துவாபரயுகம் பிறந்து எட்டிலக்ஷத்தறுபத்தீராயிரத்துத் தொள்ளாயிர மாகிற ஆண்டின் மேல் நிகழ்ந்த சித்தார்த்தி வருடம் ஐப்பசிமாதம் அஷ்டமித்திதியோடு கூடின செவ்வாய்க்கிழமை திருவோணநாளில், திருவவதாரஞ் செய்தருளினர். உடனே, கச்சித்திருமாலான மணிவண்ணன் எழுந்தருளி, ஆழ்வாரைக் கரதலத்தெடுத்து, உச்சிமோந்து, மார்புறத்தழுவிப் பின்பு பிராட்டி கையிற் கொடுத்தனன். எம்பெருமாட்டியும், ஆழ்வாருக்கு ஸ்தந்ய பானஞ் செய்வித்து விட்டவளவில், எம்பெருமான், ஆழ்வாருக்குப் 'பொய்கை யோகி' எனத்திருநாம மிட்டு, அவரைநோக்கி, " ஆழ்வீர் ! நீர் வேதசாரார்த்தங்களைச் செந்தமிழ்ச்செய்யுளில் அமைத்துப்பாடி அச்செய்யுள்களாலும் நியாசவித்தையாலும் சம்சாரி சேதனர்களைத் திருத்தி நமக்கு ஆட்படுத்தும் வண்ணம் திவ்யதேச சஞ்சாரஞ்செய்து நிற்பீர்" என நியமித்தருளினன்.

ஸ்ரீமந் நாராயண னுடைய கௌமோதகி என்னும் கதாயுதத்தின் சக்தி சுவரூபியாகும் முநிவர் தலைவரான பூதத்தாழ்வார் கீழைக்கடலின் கரையில் திருக்கடன் மல்லைஎன்னுந் திருப்பதியில், மணமலிந்ததோர் மாதவி மலரில், துவாபர யுகத்தில், பொய்கையாழ்வார் அவதரித்த பிற்றை நாளில், அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்தருளினர். வேதமே உருவெடுத்து வந்தாற்போன்ற இவரை, அத்திருக்கடன் மல்லை யெம்பெருமான் வாரியெடுத்து மார்பில் அணைத்துக்கொண்டு சென்று, உலகமாதாவாகிய பெரிய பிராட்டியாரிடத்திற் கொடுக்க, பிராட்டியாரும் திருமுலைப்பாலுண்பித்து விட்ட வளவில், இவர்க்குப் 'பூதயோகி' என்பெயர்தந்து, இவரைக் கண்ணுற்று, " ஆழ்வீர்! நீர் ஆரணசாரங்களை அருந்தமிழ்ப் பாக்களில் அமைத்துப்பாடி அப்பாக்களைக் கொண்டும் நியாச வித்தையை உபதேசித்தும் உலகத்தவரை உய்விக்கும்பொருட்டு பூசஞ்சாரஞ் செய்து திரிவீராக" என ஏவியருளினன்.

எம்பெருமானுடைய நாந்தகமென்னும் வாளாயுதமான நித்தியசூரியின் அமிசபூதரான பேயாழ்வார் மேலை ஆழ்வார்கள் இருவரும் அவதரித்த அந்தச் சித்தார்த்தி வருடம் ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் திருமயிலை மாநகரில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் திருக்கிணற்றிலே உண்டானதொரு செவ்வல்லி மலரிலே திருவவதரித்தனர். அதுகண்ட கேசவப் பெருமான் அவரைத் திருக்கைகளால் தழுவி யெடுத்து உலகுக்கெல்லாம்



அன்னையாகிய எம்பெருமாட்டியார் திருக்கரத்திற் கொடுத்து ஞானப்பாலூட்டுவித்தனர். இவரும் பெருமானையும் பிராட்டியையும் திருவடி தொழுது நின்றனர். இவர் விண்டு பத்தியில் விஞ்சினவராய், இவர்க்குப் பகவதநுபவத்தால் வந்த பாரவசியம் ஏனை யாழ்வார்களிடத்திற்காட்டில் மேலிட்டிருத்தலால், பெருமானும் இவர்க்குப் 'பிராந்தியோகி' என்று நாமகரணஞ் செய்து இவரைநோக்கி, "ஆழ்வீர்! நீர் மாமறையின் சாரங்களைவண்டமிழ்க் கவிகளிலமைத்துப் பாடி, அக்கவிகளின் மூலமாகவும் நியாசவித்தையின் மூலமாகவும், பக்த சேதனர்களைத் திருத்தி அவர்கள் நமது திருவடிகட்கு ஆளாம்படி செய்யுமாறு, நாம் உகந்தருளின ஊர்கள் தோறும் சஞ்சரித்து நிற்கக்கடவீர்" என விடை கொடுத்தருளினன்.

உலகினர் பிறக்கும் வழியாக வன்றியே அப்பிராகிருதராய் அவர்களில் அவதரித்தவர்களான இத்தயோகிகள் மூவரும், எம்பெருமானுடைய நிர்ஹேதுக் கடாக்ஷத்தால், இராஜச தாமச சத்வ மென்னும் முக்குணங்களில் முன்னிரண்டையும் முனிந்து, சத்வமாகிற ஒன்றிலே ஒன்றிநின்று, ஞான பக்திவைராக்கியங்களை உடையவர்களாய், அன்ன பானீயங்களின்றியே, எம்பெருமானுடைய திருவடிகளிலே மெய்யன்பு பதித்து வர்த்தித்திருந்தனர். இருக்குங் காலையில், இல்லறத்தாருடைய உறவு தங்களுக்குப் பொருந்தாமையாலே, இவர்கள், ஒருநாள் இருந்த விடத்தில் மறு நாள் இராமல், திவ்விய க்ஷேத்திரங்கள் தோறும் சஞ்சரித்து வந்தனர்கள்.

இவர்கள், ஒருவரை யொருவர் அறியாமல், தனித்தனியே சஞ்சரித்து வருங்கால், ஸர்வேசுவரனும், இவர்களைக் கொண்டு உலகத்தை உய்விக்கத் திருவுள்ளங்கொண்டிருப்பவனாகையால், இம்மூவரும், ஒருவரை யொருவர் அறியாமல், பெண்ணையாற்றின் தென்கரையில் வாமன க்ஷேத்திரமாகிய திருக்கோவலூரில் வந்து தன்னைச் சேவிக்கும்படி இவர்களுக்குப் புத்திப் பிரதானம் பண்ணினான். இவர்களும் அங்ஙனமே அத்திருப்பதியை அடைந்து எம்பெருமானைச் சேவித்து வெவ்வேறிடங்களில் இருந்தனர்கள்.

சூரியன் அஸ்தமனமான பிறகு முதன்முதற் பொய்கை யாழ்வார் ஒரு ஸ்ரீ வைஷ்ணவருடைய திருமாளிகையிற் சென்று அம்மாளிகையின் இடைகழியின் மீது சயனித்திருந்தனர். பின்னர்ப் பூதத்தாழ்வார் கண்வளர்தற்கு இடந்தேடிக் கொண்டு பொய்கையாழ்வார் பள்ளிகொண்டிருக்கும் இடத்தையடைந்து, " அடியேன் சயனித்தற்கு இம்மாளிகையிற் சற்று இடங் கிடைக்குமோ?" என்று வினவினார். பொய்கையாழ்வார் அது கேட்டு, " சுவாமீ! இங்கே, இவ்விடைகழியில்ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலம்; தேவரீர் எழுந்தருளினால் இருவரும் இருக்கலாகும்" என விண்ணப்பஞ் செய்தனர். அங்ஙனமே அவ்விருவரும் அங்கு இருந்து ஒருவரை

யொருவர் உசாவிக்கொண்டிருக்கும் போது, பிராந்தியோகிகளான பேயாழ்வாரும் அவ்வாறே இடந்தேடிக்கொண்டு அந்தத் திருமாளிகைக்கு வந்து "சயனித்துக்கொள்ள இடங்கிடைக்குமா?" என்று கேட்க, அவர்கள், "சுவாமீ! இவ்விடம் ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" எனக் கூறினார்கள். கூறவே, இவரும் உள்ளுறச் சென்று, மூவருமாக நின்று கொண்டு அளவளாவி யிருந்தனர்.

அவ்வளவிலே திருக்கோவலூர் எம்பெருமானும் பேரிருளும் பெருமழையும் உண்டாக்கித், தானும் அவ்விடைகழியிற் சென்று, அவர்களுக்கு அதிக நெருக்கம் உண்டாகும்படி செய்தருளினான். ஆழ்வார்கள் மூவரும் "முன்னில்லாத நெருக்கம் இப்பொழுது உண்டாய காரணமென்னை? நம்மையொழியவும் இவ்விடைகழியைப்பற்றிநிற்பார்கள் உண்டோ?" என்று அறியும் பொருட்டு "ஞானச் சுடர் விளக்கேற்றி" யும், "உணர்வெனும் ஒளிகொள் விளக்கேற்றி" யும், "வெய்யகதிரோன் விளக்கேற்றி" யும் பார்த்தனர். ஸ்ரீமந் நாராயணனுடைய மைப்படி மேனியையும் செந்தாமரைக் கண்ணையும் நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து, அந்த அநுபவத்தால் உண்டாகிய அன்பின் மிகுதியாலே, பொய்கையாழ்வார், பிறப்பென்னும் பெரும்பிணிக்குப் பரமௌஷதமும், சமுசார சாகரத்தைக் கடக்கலாவதான தெப்பமும், எம்பெருமானுடைய திவ்ய குணரூபஸ்வரூபமுமாய

"வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச்—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
யிடராழி நீங்குகவே யென்று"

என்று தொடங்கி ருக்வேத சாரமான முதற்றிருவந்தாதியும்;—பூதத்தாழ்வார் பரமபதசோபானமே என்னலாவதாய்

"அன்பே தகளியா வார்வமே நெய்யாக
வின்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணர்க்கு
ஞானத் தமிழ்புரந்த நான்"

என்றாரம்பித்து யஜுர்வேத சாராம்சமான இரண்டாந் திருவந்தாதியும்;—பேயாழ்வார் பக்திரசம் முழுகுவதாய் எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணாதிகளைப் பிரதிபாதிப்பதாய்,

"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் றிகழு
மருக்க னணிநிறமுங் கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன்
னென்னாழி வண்ணன்பா லின்று"



என்றெடுத்துச் சாமவேதசாரமான மூன்றாந் திருவந்தாதியும் ஆகிற திவ்விய பிரபந்தங்களைச் சேதனர் உய்ந்துபோமாறு ஞானத்தமிழாக அருளிச்செய்து உலகத்தை வாழ்வித்தருளினார்கள்.

அப்போது பெருமாள் "நீங்கள் இப்போது பாசுரமிட்ட இத்திருவந்தாதிகளை அநுசந்தானம் பண்ணுமவர்கள் எனக்கு ஆவிபோல்வாராய் என் திருவடி யடைவர்கள். இனி உங்கட்கு வேண்டுமான வரங்கேளுங்கள். வேண்டினதை வேண்டினபடியே தருகிறேன்" என்றருளிச்செய்ய, ஆதியோகிகளான இம்மூவரும், "எம்பெருமானே! எளிதில் வந்து நீ ஏழையோங்களை ஆட்கொண்டு திருவடி யளித்தனை இதனிலும் ஏற்றமான பிறிதொன்று எங்கட்கு என்னவேண்டும்? பரமபதத்தைச்சென்று சேர்வதே நாங்கள் வேண்டுகின்றவரம்" என்றனர்கள். அதுகேட்ட பரந்தாமன், "பரமபதம் உங்கட்குக் கைவயமான தொன்றன்றோ? உங்களைக்கொண்டு உலகத்தை உய்விக்க வேண்டுகின்றனன். ஆதலால் இன்னும் சிலகாலம் நீங்கள் இவ்வுலகில் வசித்து இவ்வுலகினரை நல்வழிப்படுத்தி ஒப்புயர்வில்லாத நம்பதம் எய்தும்படி செய்தல்வேண்டும்" எனப்பணித்தான். திரிமூர்த்திகளைப்போல்பவரான ஆழ்வார்கள் மூவரும் அதற்கிசைந்து மாயப்பெரும் பிணியைப் போக்கி, மெய்ஞ்ஞானசாரத்தை வீக்கி, அனைவரையும் அரிநாமத்தைச் சொல்லுமவராக்கி, உலகத்தைத் திருத்திப் பலகாலம் போக்கிப், பின்னர் என்றுமுலவாத பேரின்ப வீட்டை எய்தி இன்புற்றார்கள்.

(இன்னும் வரும்.)

**திருமணம் - செல்வகேசவராய முதலியார்.**

---

## நீர்க்கோட் கருவி. *

'நீர்க்கோட்கருவி'என்பது இருபுறமும் வாய்திறந்துள்ளதோர் வளைந்த குழாய். அஃது உருவத்தில் அடிகுறுகிய பகரத்தையாவது, U. V. என்னும் ஆங்கில அக்கரங்களில் யாதானுமொன்றையாவது, ஒத்திருக்கும். இரண்டு நேர்க்குழாய்களை † இந்தியக்குறுங்கிடைக் குழாயால் மேற்சொல்லியபடி பிணைத்துக் கொளினும் அமையும். இக்குழாயின் ஒருகால் சாதாரணமாய் மற்றையதினும் நீண்டிருக்கும். இதனை 'நீர் வாங்கிக்குழாய்' என்றும் கூறுவார்கள்.

ஒரு நாற்காலியின் மேல் ஜலமுள்ள பாத்திரமொன்று வையுங்கள். பிறகு மேற்சொல்லிய நீர்வாங்கிக் குழாயில் ஜலத்தை நிறைத்து, அதன் வாய்ப்புறங்களை விரலால் மூடிக்கொண்டே அக்குழாயைக் குப்புறக்கவிழ்த்

* The Syphon. † India rubber.

துக், குறியகாலின் வாய்ப்புறத்தை நாற்காலி மேலுள்ள பாத்திரத்தின்
சலத்தில் அமிழ்த்தி விரலை யெடுத்து விடுங்கள். உடனே நெடிய காலின்
வாய்ப்புறத்தின் வழியாகச் சலம் இடைவிடாமல் விழத்தொடங்கும்.
அவ்வாறன்றி, குழாயில் ஜலத்தை நிறைக்காமலே அதனைக் குப்புறக்கவிழ்
த்துக் குறிய காலின் வாய்ப் புறத்தைச் சலத்தில் அமிழ்த்தி, நெடிய காலின்
வாய்ப்புறத்தில் வாயை வைத்துக் குழாயிலிருக்கும் வாயுவை உறிஞ்சி விட்
டாலும் உடனே அவ்வாய்ப் புறத்தினின்றும் ஜலம் இடைவிடாமல் விழத்
தொடங்கும். ஆனால் வெளியிலுள்ள நெடிய காலின் வாய்ப்புறம் பாத்தி
ரத்திலுள்ள நீரின் மட்டத்திற்கு மேற்படும்படி குழாயை நிறுத்தினாலும்,
குறிய காலின் வாய்ப்புறம் பாத்திர நீர்க்குள் அமிழாவிட்டாலும் உடனே
அவ் இடைவிடா நீர்வீழ்ச்சி நின்று போவதைக் காண்பீர்கள்.

மேற் சொல்லியவற்றால், நெடியகாலின் வாய்ப்புறமாக நீர் வீழ்ச்சி
யுண்டாதற்கு வேண்டிய நிபந்தனைகள் இவை யென்பது விளங்கும். முத
லாவது, குழாய் வாயு நீங்கியிருத்தல்வேண்டும். இதற்காக, அக்குழாயில்
ஜலத்தை நிறைக்கவாவது வேண்டும்; அல்லது சிறிய காலின் வாய்ப்புறம்
பாத்திரத்திலுள்ள நீரில் அமிழ்ந்து கொண்டிருக்க நெடிய காலின் வாய்ப்
புறத்தில் வாய் வைத்து உள்ளிருக்கும் வாயுவை உறிஞ்சுதலாவது வேண்
டும். இரண்டாவது, குழாயின் வாய்ப்புறங்கள் பாத்திர நீர்மட்டத்திற்குக்
கீழாகவே இருத்தல் வேண்டும். இதற்காகவே குழாயின் ஒரு கால் மற்
றையதினும் நீண்டிருக்க வேண்டு மென்றதும், அவ்வாறு நீண்டுள்ள கால்
வெளிப்புறத்திருக்க வேண்டு மென்றதும் என்பதறிக. குழாயின் ஒரு கா
லின் வாய்ப்புறத்தை நீருள்ளும் மற்றொருகாலின் வாய்ப்புறத்தை வெளி
யிற பாத்திரத்து நீர் மட்டத்திற்குக் கீழாகவும் நிறுத்த முயன்று கொண்
டோமானாற் கால்கள் எப்படியிருப்பினும் எவ்விடத்திருப்பினும் அவசிய
மில்லை.

முதலாவது, குழாயினுள் வாயு ஏன் இருத்தல் கூடாது? இதை ஆராயு
முன் ஒரு சிறு சோதனை செய்யவேண்டும்; ஒரு வேளை செய்து மிருப்பீர்கள்.
மை நிறைய இருக்கும் கூட்டின் மேல் வாயு புகாதவண்ணம் ஒரு காகிதத்
துண்டைப் பரப்பிக் கூட்டைக் கவிழ்ப்போமாயின்மை சிறிதும் விழாதபடி
அடியிலுள்ள வாயு காகிதத்துண்டை அழுத்துவதைக் கவனிப்பீர்கள். இது
போலவே, 'முப்பது அடி' உயரத்திற்கு அதிகப்படாமல் அவ்வளவு பெரிய பா
த்திரத்தை எடுத்துக் கொண்டு நிறைய நீர்விட்டு வாயு சிறிதும் உட்பு
காதபடிகாகித அட்டையால் மூடிக்கவிழ்ப்போமாயின் அவ்வளவு நீரின்
பளுவையும் காகித அட்டையின் வெளிப்புறத்திலுள்ள வாயு தாங்கிக் கொ
ள்ளும்! இதனால், வாயுவின் அழுத்தல் வலி ஏறக்குறைய முப்பதடி உயரமு
ள்ள நீரின் அழுத்தல் வலிக்குச் சரியாயிருக்கிறதென்று தெரியவருகிறது.



குழாயிலுள்ள வாயுவை நீக்காவிடின் பாத்திரத்துள் அமிழ்த்தின வாய்ப்புற
த்தின் அகத்திலும் புறத்திலும் வாயுவிருந்து நீரைச்சமமாக அழுத்துவதனாற்
குழாய்க்குள் நீர் எழாது என்பது வெளிப்படை. ஆகவே, மற்றைய வாய்ப்
புறத்தினின்றும் நீர் வீழ்ச்சி எவ்வாறு உண்டாம்? ஆகலால் குழாயிலுள்ள
வாயுவை நீர் நிறைத்தலாலாவது உறிஞ்சலாலாவது நீக்கவேண்டும்.

இரண்டாவது, குழாயின் வாய்ப்புறங்கள் ஒன்று நீருள்ளும் மற்றொ
ன்று நீர் மட்டத்திற்குக் கீழாகவும் ஏன் இருத்தல் வேண்டும்? பாத்திரத்தி
லுள்ள காலின் வாய்ப்புறம் நீர்க்குள்ளிருப்பதற்குக் காரணம் வெளிப்படை.
அஃது அந்நீர்க்கு மேலதாயின் நீர் எவ்வாறு குழாயினுட் செல்லும்? இடை
யிலுள்ள வாயு நீரின் ஒவ்வொரு பாகத்தையும் அழுத்துமாதலிற் செல்
லமாட்டாது.

பாத்திரத்து வெளியிலுள்ள காலின் வாய்ப்புறம் நீர் மட்டத்திற்குக்
கீழாக இருக்கவேண்டுவதேன் என்பதைப்பற்றி ஆராய்வோம். முதலில்,
நீர் நிறைத்தலாலாவது உறிஞ்சலாலாவது குழாயிலுள்ள வாயு நீங்கி அது
நீர் நிறைந்திருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். இரண்டாவது குழா
யின் மேற்புறம் அல்லது உச்சி பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக இர
ண்டடி உயரத்திலும் வெளியிலுள்ள காலின் வாய்ப் புறத்திற்கு நேராக
மூன்றடி உயரத்திலும் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். ஏறக்கு
றைய முப்பது அடி உயரத்து நீரின் அழுத்தல் வலி வாயுவிற்கு உண்டெ
ன்று முன்னமே குறிக்கப் பட்டிருக்கிற தன்றோ? இவ்வழுத்தல் வலியோ
டும் குழாயின் இரண்டு வாய்ப்புறங்களின் புறம்பிலிருந்தும் ஆங்காங்குள்ள
நீரை வாயு அழுத்திக் கொண்டிருக்கிறது. ஆனாற் குழாயினுள் வாயு சிறி
தும் இல்லாததால் பாத்திரத்திலுள்ள காலின் வாய்ப்புறத்தின் அகத்தில்
இரண்டடி உயரத்து நீரின் அழுத்தல் வலி மாத்திரமே இருக்கிறது. ஆத
லின் அவ்வாய்ப்புறத்தின் புறம்பினின்றும் வாயு 28 அடி உயரத்து நீரின்
அழுத்தல் வலியோடும் பாத்திரத்து நீரைக் குழாயினுட் செலுத்துகின்றது.
அது போலவே, வெளியிலுள்ள காலின் வாய்ப்புறத்தின் அகத்தில் மூன்
றடி உயரத்து நீரின் அழுத்தல் வலி மாத்திரமே இருக்கிறது. ஆகலின் அவ்
வாய்ப்புறத்தின் புறம்பினின்றும் அங்குள்ள நீரை வாயு 27 அடி உயரத்து
நீரின் அழுத்தல் வலியோடும் குழாயினுட் செலுத்துகின்றது. இரண்டு
வாய்ப்புற மூலமாகவும் நீர் குழாய்க்குள் அழுத்தப்பட்ட போதிலும் பாத்
திரத்துள்ள நீர் அங்குள்ள காலின் வாய்ப்புற மூலமாக ஓரடி உயரத்து
நீரின் அதிகமான அழுத்தல் வலியோடு உட்செலுத்தப்படுவதனால், நீர் பாத்
திரத்திலிருந்து வெளியிலுள்ள காலின் வாய்ப்புறத்தின் வழியாகவே செல்
லத்தலைப்படுகின்றது. மேற் சொல்லியவாறன்றிக், குழாயின் உச்சி பாத்
திரத்து நீர் மட்டத்திற்கு நேராக இரண்டடி உயரத்திலும் வெளியிலுள்ள

காலின் வாய்ப்புறத்திற்கு நேராக ஒரு அடி உயரத்திலும் இருக்குமானால்,
மேற் குறித்த காரணங்களால் வெளியிலுள்ள காலின் வாய்ப்புற மூலமாக
அங்குள்ள நீர் ஓரடி உயரத்து நீரின் அதிகமான அழுத்தல் வலியோடு
குழாயினுட்செலுத்தப்படுகின்றது. ஆதலிற் குழாயிலுள்ள நீரெல்லாம் படிப்
படியாகப் பாத்திரத்தில் வந்து விழுந்துவிடும். இதனால், வெளியிலுள்ள
காலின் வாய்ப்புறம் பாத்திரத்து நீர் மட்டத்திற்கு மேலிருப்பின், அதன்
வாயிலாக நீர் வீழ்ச்சியுண்டாகா தென்பது இப்பொழுது விளங்கும்.

குழாயின் உச்சி, பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக முப்பதடிக்கு
மேற்பட்டிருப்பின், பாத்திரத்துள்ள காலின் வாய்ப்புறத்தின் புறம்பினின்று
நீரை அழுத்தும் வாயுவின் அழுத்தல் வலியினும் அகத்தினின்றும் அழுத்
தும் நீரின் அழுத்தல்வலி அதிகமாகும் என்பது மேற் சொல்லிய காரணங்
களால் நன்கு விளங்கும். ஆகவே, அந்நீர் பாத்திரத்தில் வந்து விழுமே
யன்றி முற்குறித்த இடைவிடா நீர் வீழ்ச்சிக்கு இடங்கொடாததாகும்.
ஆதலின் மேலே சொன்ன இரண்டு நிபந்தனைகளுடன் மூன்றாவது, குழாயி
லுள்ள நீரின் உயரம் பாத்திரத்து நீர் மட்டத்திற்கு நேராக முப்பது அடி
க்கு மிக்கிருத்தல் கூடாது என்பதும் மனத்திற் கொள்ள வேண்டும்.

கடைசியாக, இந்நீர்க்கோட் கருவியாலுண்டாகும் பயன் என்னெனில்
அதனால் மேட்டிலுள்ள நீர் நிலைகளினின்றும் அவற்றின் கரைகளை இடிக்
காமலே பள்ளத்திற்கு நீர் எளிதில் கொணர்தல் கூடுமென்பதேயாம்.

சி. சுப்பிரமணியாசாரியார்.

---

# மூவகை யொருநெறி.

இவ்வுலகத்திலே, இடம் குலம் செல்வம் முதலியவற்றால் பலபேதப்
பட்ட குடும்பங்களிலே பிறந்து பல பேதப்பட்ட தொழில்களிலே மனம்
பற்றி நடக்கும் மாந்தர்க்கெல்லாம் பொதுவியல்பு ஒன்றுண்டு. அவரவர்
சிறப்பியல்புகள் எத்துணை வேறுபாடுடையனவாயினும் இச்சிறப்பியல்புக
ளுக்கு ஆதாரமாய் பொது வியல்பு வேறுபாடுறுவதில்லை. அப்பொதுவிய
ல்புதான் யாதெனின், ஒவ்வொருவரும் செய்யுங் கருமத்தை நிச்சயிக்கின்ற
உள்ளக்கோள். அது மாறாது எங்கணும் ஒருபடித்தாய் இன்பப்பேற்றையே
நோக்கமாகக்கொண்டு விளங்குகின்றது. இன்பந்தானும் புலனின்பம், கர
ணவின்பம், ஆத்மவின்பமென பலவகையாயிருக்கும். புலனின்பம் கரணவி
ன்பமென்பன பக்குவமெய்தார் விழையும் போலியின்பங்களாம். இவற்றை
நுகர்வார் பெறுமின்பமும் காலத்தாலும் அளவாலும் அறுக்கப்பட்டதாம்.
ஆத்மவின்பம் அவைபோலன்றி நிரதிசயானந்த மெனப்படும் மெய்யின்ப



மாம். அவற்றிலுமூன்று எய்த்து வெறுப்புற்றாரே யிதற்குரியவர். புலனின்
பம் கரணவின்பமென்பன பெயர்மாத்திரையான் இன்பங்களாவனவேயன்றி
உண்மையில் அவை துன்பந்தருந்தன்மையனவாம். மற்றுப்பெரியோர் இன்ப
நெறியென்றேற்படுத்தியதும் ஆத்மவின்பம் பெறுதற்கேயன்றி இப்போலி
யின்பங்களைப் பெறுதற்கன்று. இஃதிங்ஙனமாயினும், மூவகை யின்பமும்
இன்பமெனும் பெயர்க்குரியனவாய் மாந்தரை யவரவர் பக்குவ வேறுபாட்
டிற்குத் தகவகுத்து நுகர்வித்துமே நடத்துகின்றன. ஆதலாற்றான் இன்பப்
பேற்றின் நாட்டம் மாந்தர்க்குப் பொது வியல்பென்றல் பொருந்துமாறு.

இனி, எய்துதற்கரிய ஆத்மவின்பத்தை எய்திய பெரியோர் அவ்வின்
பம் வருநிலையை வீடென்றும் அப்பொருளையே குறிக்கும் வடமொழிகளால்
முத்தியென்றும் மோக்ஷமென்றும் சுட்டியிருக்கின்றனர். அன்றியும் மற்ற
வின்பங்களுக்கு அவாவை முன்கொண்டு செல்லவேண்டும். இதற்கு அதுப
டாது; அவாவை யறக்களைந்த பின்னரே பேரின்பம் பிறக்கும் என்று குறிக்
கின்றனர்.

“வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.”
“ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.” என்றார் திருவள்ளுவதேவர்.

தேசந்தோறும் வகைவகையாய்ப்பெரியோர் நிறுத்திய சமயங்களும் இந்நிலை
யினையே குறிப்பா லுணர்த்துகின்றன. உண்மையுள்ளபடி யுணர்ந்தோர்
இவ்வாறே யெண்ணுகின்றனர். நிலை வீடாயினும் நெறி அவாவறுத்தலாயி
னும் கேட்ட மாத்திரையில் அவாக்களை யொருங்கே யறுத்தல் மக்களுள்
அதிபுத்திமான்களுக்கும் இயலுவதன்று. நெறியென்றுரைக்கு மாற்றானே,
சிறிது காலமேனும் அதன்கட் பயிலவேண்டு மென்பது புலப்படுகின்றது.
நெறியாய் நிற்கும் அவாவறுத்தல் பயனுப் நிற்றலின் வேறு நெறிகளையுந்
தனக்கங்கமாகக் கொண்டு நடக்கும். அவைதாம், பக்தி, கருமம், ஞானம்
எனமூத்திறப்படும். அம்மூன்றற்கும் இறுதியில் மார்க்கம் யோகம் என்பன
போன்ற பதங்கள் சேர்த்தும் வழங்கப்படும்.

பக்தியாவது அன்பு. பேரின்பத்திற்குக் காரணமாயிருக்கும் அன்பு
கடவுளிடத்துச் செலுத்தப்படும் அன்பேயாகும். உலகத்துள்ள பொருள்
களிடத்துத் தனித்தனி செல்லு மன்பு விரிந்து உயிர்கள்தோறும் கோயில்
கொண்டிருக்கும் இறைவனிடத்து நிலைத்தொடுங்குங் காலத்து அது மெ
ய்ப்பத்தியின் பயனென்ப. வைதிக சைவ மார்க்கங்களில் போதிக்கப்படும்
நெறியும் அவற்றினை யடுத்துத்தோன்றிய பெரியோர்கள் பெரும்பான்மை
கொண்ட நெறியும் இதுவே. இந்நெறிக்காதாரமாக வடமொழியில் நாரத
முனிவரால் அருளிச்செய்யப்பட்ட பக்தி சூத்திரமொன்றும் சாண்டில்லிய

முனிவரால் அருளிச்செய்யப்பட்ட பக்தி சூத்திரமொன்றும் நிலவுகின்றன. தமிழ் மொழியில் தேவாரம் திருவாசகம் திருமந்திரம் தாயுமானவர் பாடல் முதலியன பக்தி நெறியின் அநுபவப்பயனைத் தெளிவாகக்கூறும் அருள் வாக்கியங்களாம்.

கருமம் என்பது செயல். கருமநெறியென்று கூறப்படுவது உண்மையுணர்ந்த ஞானிகள் கருமங்களைப்புரியுங் காலத்து யாதொரு பயனுங் கருதாது புரியும் முறைமை. இந்நெறி பகவற்கீதையில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. இனிக்கருமநெறி யென்னுஞ் சப்த மாத்திரையால் கடவுளருளை நாடிச்செய்யப்படும் தவமாதி செயல்களுங் குறிக்கப்படும். அவை நிட்காமியதவமாம். உபாசனையாதி வழிபாடுகளும் இதனுட்டானடங்கும். பக்தி யென்பது, உள்ள நிகழ்ச்சியையே குறித்து நிற்றலின்.

ஞானம் என்பது அறிவு. ஞானநெறியாவது உள்ளதனை யுள்ளபடி யறிந்தடங்குதலைக் குறிக்கும். ஞானசாத்திரங்களுளெல்லாம் இந்நெறி தெளிவாகக் கூறப்பட்டுக் கிடக்கும். "எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றோதியபடி பொருள்களின் தோற்றத்தைக்கண்டு மயக்கங்கொள்ளாது, அவைதோறும் நிற்கும் உண்மையை நேரே காண்டலே ஞானமாவது. அக்காண்டலிற் பயிறலையே சமாதியென்பர்.

இவ்வாறு தோற்றமாத்திரையால் மூவகைப்படும் நெறிகள் உண்மையில் ஒன்றே. அவை யுய்க்கும் முடிவும் ஒன்றே. பேரின்பப் பெருக்கே கருதப்படும் முடிவு. பக்தி, உளத்தை யிறைவனிடத் தொடுக்கி அவனைவிட்டொன்றையும் பற்றாதே செய்து இன்பத்துளிருத்துகின்றது. கருமம், நிட்காமிய தவத்தா னிறைவனை யடைவித்துப் பொருள்களிற் பற்றின்மையைத் தந்து நித்திய திருப்தியாகிய நன்னிலையைக் காட்டுகின்றது. ஞானம், மெய்யுணர்தலிலேயே மனத்தைப்பழக்கி உலகமயக்கமறுவித்து நிறைவுடன்கியவாவை முற்றுங்களையு முகத்தானே பேரின்ப நிலையிற் பிரியாதிருக்கச் செய்கின்றது.

எஸ். அநவரத விநாயகம்பிள்ளை.





## திருவிளையாடற் கருப்பொருள் வெண்பா.

(432-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### சோழனை மடுவில் வீட்டிய படலம்.

37. தென்மதுரைக் கோமாற்குஞ் சென்னிக்கும் போர்விளைய
முன்னவனும் வேடனாய் முன்னுற்றுப்—பின்மறையக்
கொய்ந்தவர வீழ்ந்தெழுந்தான் கௌரியன் செம்பியனோ
வீந்தான் மடுவினிலே வீழ்ந்து. (௫௦)

### உலவாக்கோட்டை யருளிய படலம்.

38. கூடலுறை வேளாண் குடிப்பிறந்தா னன்பர்தமை
நாடியமு திட்டுவர நல்குரவால்—வாடியபோ
தாதியுல வாக்கோட்டை யாங்கிய லூணளித்துச்
சோதியுல குற்றான் றுதித்து. (௫௧)

### மாமனாக வந்து வழக்குரைத்த படலம்.

39. செல்வத் தனபதியுஞ் செல்வ மருமகற்குச்
செல்வங் கொடுத்தரணி செல்லவே—வல்வழக்கிற்
றாயத்தார் கொண்டதைத்தாய் சாற்றவளித் தானல்
வாயத்தான் வாணிகனாய் வந்து. (௫௨)

### வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம்.

40. வேதியன் வீய விடைமருதூர் சென்றத்தி
நீதி வரகுணனு நீங்கினனா—யாதி
சிவலோகங் கண்டு திருவருளைப் பெற்று
னவமோச்சித் தென்மதுரை யாண்டு. (௫௩)

### விறகுவிற்ற படலம்.

41. பத்திரனைக் காப்பரன் பரிந்துவிற காளாகிச்
சத்துருவைச் சாதாரி தானிசைத்து—நத்தமதி
லோட்டினா னன்பருள மோங்கிய சிற்சபையி
னாட்டினான் கூட லரன். (௫௪)

### திருமுகங்கொடுத்த படலம்.

42. சீரார் மதிமலியென் செய்யதிருப் பாசுரத்தா
ளோரும் பாணனுக்கு நாறுபனர்—தாரா
னிதியமிக வீந்தயிடி நீக்கினான் கூடற்
பதியமரு மேழைப் பரன். (௫௫)

## பலகையிட்ட படலம்.

43. செய்யதிருப் பாணன் றிருச்செவியிற் கானவிசை
பெய்யவரன் கன்மாரி பெய்வித்தும்—மெய்யன்பன்
பாடினு னன்றும் பரிந்தளித்தான் கூடலம
ரீடிலான் பொற்பலகை யீந்து. (௫௬)

## இசைவாது வென்ற படலம்.

44. பாட்டிசையால் வெல்வதற்குப் பாணன்மனை சானிழ
நாட்டில்வரு பாடினியை நச்சுடைய—சூட்டரவம்
பூண்டான் பரிந்தளித்தான் பொன்மதுரைச் சுந்தரனு
யாண்டா னசரீரி யாய். (௫௭)

## பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம்.

45. மன்ராஜ ராஜனுமே மாமதுரை யாளுகையிற்
பன்னுதவன் சாபத்தாற் பன்றியாய்ப்—பன்னிருவர்
பாலீதாய் மாயத்தாய்ப் பன்றியுருக் கொண்டுசிவன்
பாலீந்து காத்தான் பரிந்து. (௫௮)

## பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்.

46. பன்றி முகம்படைத்த பன்னிருவே ளாளரையு
மன்று வழுதி யமைச்சாக்கிப்—பின்றைத்
தனதுபத மீந்தளித்தான் றண்மதுரை வீறு
மெனதுனதென் றில்லா விறை. (௫௯)

## கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்த படலம்.

47. மங்காச் சிவவேட மாதவனின் சொற்கேட்டுக்
கங்காளற் போற்றக் கரிக்குருவி—யங்கால
வாயடைந்து தாழ வலியனெனும் பேரீந்தான்
பேயடைந்த காட்டுப் பிரான். (௬0)

## நாரைக்கு முத்திகொடுத்த படலம்.

48. வென்றிச் சுகுணன் வியன்மதுரை மீச்சிறப்பை
யன்று தவமுனிவ ரங்கறைய—நன்றெனக்
கேட்டுநரை சென்றேத்தக் கேட்டவரந் தானளித்தான்
மாட்டுநரை யுள்ளான் மகிழ்ந்து. (௬௧)

## திருவாலவாயான படலம்.

49. பொங்கும் பெருங்கீர்த்திப் பூடணனுன் சிந்தலைகைப்
பொங்கி யழிக்கப் புதுப்பித்தான்—வங்கிய
சேகரற்குச் சித்தனுய்த் தென்மதுரை யெல்லையைக்கைந்
நாகத்தாற் காட்டினு னன்கு. (௬௨)



## சுந்தரப் பேரம்பெய்த படலம்.

50. சென்னி யமர்க்கெழுந்த செப்தியினைத் தென்னவன்கேட்
டுன்னி யுடனடுங்கி யுள்ளழுங்கத்—தென்மதுரைச்
சுந்தரனும் வேடுவனுய்த் தோற்பித்தான் மால்படையைச்
சுந்தரப்பே ரம்பு தொடுத்து. (௬௩)

## சங்கப்பலகைதந்த படலம்.

51. நாமகளு மாறெட்டு நற்புலவ ராய்மதுரைக்
காமனடு கண்ணுதலைக் கண்டேத்தி—வாமமுடை
நற்பலகை பெற்றதன்மே னக்கனுட னேழேழாஞ்
சொற்புலவ ராயிருந்தார் சூழ்ந்து. (௬௪)

## தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்.

52. கொங்குதேர் வாழ்க்கையெனக் கூறுதிருப் பாசுரத்தா
லங்கு தருமிக் கருள்புரிவான்—சங்கப்
புலவரிடஞ் சென்றெதிர்த்தான் போதமிலாக் கீரன்
சலமதனில் வீழ்ந்தான் றவித்து. (௬௫)

## கீரனைக் கரையேற்றிய படலம்.

53. வீழ்ந்ததுகண் டேனை வியன்புலவர் துன்புற்றுத்
தாழ்ந்த மனத்தினராய்த் தாந்துதிக்கச்—சூழ்ந்தசடைச்
சம்பிரங்கிக் கீரனையுந் தான்கரையி லேற்றுவித்தான்
வம்பமருங் கூந்தலொடு வந்து. (௬௬)

## கீரனுக்கிலக்கண முபதேசித்த படலம்.

54. ஏற்றி யவன்பா வினிதிற் செவிமடுத்துத்
தேற்று வகையெண்ணித் தென்பொதிகை—வீற்றருளு
மம்முனியாற் கீரற் கருந்தமிழைப் போதித்தா
னெம்முனிவிற் கட விறை. (௬௭)

## சங்கத்தார் கலகந்தீர்த்த படலம்.

55. சங்கப் புலவர்களுஞ் சண்பகம ளுள்கையினிற்
றங்கடங்கள் செய்யுளையே தாந்துதிக்கச்—சங்கரனோர்
மூகையினுன் மூவர் முதிர்புலமை காண்பித்தா
னூகையினு லுய்யவவ ரோர்ந்து. (௬௮)

## இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம்.

56. இடைக்காடன் பாளவ யிகழ்ந்ததனுற் சொக்கன்
வடவால வாய்ச்சேர வந்தித்—துடனடுங்கித்
தாழ்ந்தா னருள்பெற்றான் சங்கப் புலவரடி
வீழ்ந்தான் குலேசனெனும் வேந்து. (௬௯)

## வலைவீசின படலம்.

57. கந்தன் குணியாயுங் கௌரிவலை மாதாயு
நந்திசுறா மீனாயு நண்ணவே—வந்தருளி
மீன்பிடித்து வேட்டுமையை மீண்டான் மதுரைநகர்
தேன்பிடித்த கொன்றைச் சிவன். (௭௰)

## வாதவூரடிகளுக் குபதேசித்த படலம்.

58. தேசு மிகக்கொண்டு திருவாத வூரடிக
ளாசிபெறு வான்றுறையிற் றன்னியுப—தேசமுற
வன்பர்க் களித்தா வணிசேரு மாவென்று
ரின்புற்றான் கூட லிறை. (௭௧)

## நரிபரியாக்கிய படலம்.

59. வருமென்ற நாட்கழிய வைகைத் துறைவன்
திருவாத வூரர்தமைச் சீறி—வருத்த
நரியைப் பரியாக்கி நல்கினனாற் சொக்க
னரிமர்த்த னுவகையுற வன்று. (௭௨)

## பரிநரியாக்கிய படலம்.

60. நல்கும் பரிகணரியாகிக் கானிரவிற்
புல்க வெகுண்டு புரவலனு—மொல்கிமன
முச்சி வெயினிறுத்த வாழிநீர் போற்கங்கை
யச்சமுறச் சென்றதவ னூர்த்து. (௭௩)

## மண்சுமந்த படலம்.

61. ஆற்றுவரும் வெள்ள மணையிடுவா னூரார்க்குச்
சாற்றவுசி தன்வந்தி தான்சோரத்—தோற்றியரன்
பிட்டுக்கு மண்சுமந்தான் பின்படியும் பட்டான்மண்
கொட்டிமறைந் தானடைத்தான் கூறு. (௭௪)

## பாண்டியன் சுரந்தீர்த்த படலம்.

62. சீரார் குலச்சிறையார் செய்ய திருமுகத்தைப்
பாரர மதுரை பரிந்தடைந்து—தேரார்தீ
மன்னேற்றி வெப்புடன்கூன் மாநீற்றா னீக்கினனாற்
றன்னேரில் காழியிறை தான். (௭௫)

## சமணரைக் கழுவேற்றிய படலம்.

63. சங்கரியாள் பாலுண்ட சம்பந்தன் றீரா
லங்கு சமணரைவென் றனைவரை—வெங்கழுவி
லேற்றினா னீற்றொளியை யெங்கும் பரப்பினான்
போற்றவே கூடலுள்ளார் போந்து. (௭௬)



## வன்னியுங் கிணறு மிலிங்கமும் அழைத்த படலம்.

64. நின்வறுவை பொய்யென்று நிந்தித்த மூத்தாண்முன்
வன்னிகுழி லிங்கம் வரவிட்டுத்—தன்வறுவை
மெய்யென்று காட்டினளான் மீமதுரை யுற்றமரு
மையன் றனதருளா லங்கு. (௭௭)

## அருச்சனைப் படலம்.

65. இப்படித் தேவாட லெட்டெட்டு முத்தமிழோன்
செப்ப முனிவர்களுஞ் சிந்தைதெளிந்—தப்பன்
பதியெல்லாஞ் சென்று பரசிவத்தைப் போற்றிக்
கதிபெற் றிருந்தார் களித்து. (௭௮)

திருவிளையாடற் கருப்பொருள் வெண்பா

முற்றிற்று.

வ. சங்கரலிங்கம்பிள்ளை.

---

# ஜெயகாந்தன்.

### அங்கம் I : களம் 2.

(399 - ஆம் பக்கத் தொடர்ச்சி.)

**தனஞ்சயன்.**—ஐயா, பவரோக பண்டிதரே! தாங்கள் செய்தது மெத்தத் தகுதியான மருந்து.

**பவரோக பண்டிதர்.**—ஆம். மிகத் தகுதியான மருந்து.

**தன.**—அப்புறம்.

**பவ.**—அதை அதிக பிரயாசை யெடுத்துச் செய்து முடித்தேன்.

**தன.**—மெத்தப் பிரயாசை யெடுத்துக்கொண்டீரோ?

**பவ.**—ஆம். பிரயாசை யென்றாலும் பிரயாசையா? ஒரு கஜ புடமா? ஒரு குக்கிட புடமா? ஒரு மானிட புடமா?

**தன.**—மானிட புடங்கூடப் போட்டுவிட்டீரா?

**பவ.**—ஆஹா.

**தன.**—சரி, தலைமாட்டு வைத்தியர்தான். அப்புறம்.

**பவ.**—அந்த மருந்தைச் சாப்பிட்டால் அல்லவோ எனக்குண்டான வலி தீரும்.

**தன.**—ஆம் சாப்பிடத்தான் வேண்டும்.

**பவ.**—"மருந்தேயாயினும் விருந்தோடுண்"ணவேண்டும் அல்லவா ?

**தன.**—ஆம். ஆனால்—.

**பவ.**—என்னுடன் யார் சாப்பிடுகிறது ? யாரைக்கூப்பிட்டாலும் வரமாட்டேன் என்கிறார்களே.

**தன.**—அதற்கு என்னசெய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்.

**பவ.**—குடிகளாகிய நமக்கு ஓர் தளர்ச்சிவந்தகாலத்தில் யாரிடம் முறையிடவேண்டும் ?

**தன.**—யாரிடம் முறையிடவேண்டும்? நீர் தாம் சொல்லுமே.

**பவ.**—அரசனிடம் முறையிடவேண்டும் அல்லவா ?

**தன.**—ஆம்.

**பவ.**—அதைத்தான் கேட்கவந்தேன்.

**தன.**—ஆனால் மகாராஜாவை உம்மோடுகூட மருந்து சாப்பிடும்படி கூப்பிடுகிறீரோ ?

**பவ.**—ஆம், வேறு யாருந்தான் சாப்பிடமாட்டேன் என்கிறார்களே! எனக்கு நேர்ந்திருக்கும் வலி மற்றெப்படி நீங்கும் ? விருந்தில்லாமல் யானே சாப்பிடலாமென்றால் குருவாக்கிய பரிபாலனம் செய்வதினின்றும் தவறினவனாவேன்.

**வீரகேசரி.**—ஐயா பண்டிதரே ! உமக்கு ஜோசியம் தெரியுமோ ?

**பவ.**—ஓ ஓ.

**வீரகே.**—ஆனாற் சொல்லும் பார்ப்போம்.

**பவ.**—எனக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்களோ? இதோ சொல்லுகிறேன் பாரும். "ஜோதிடம் பொய்யாது, மெய்யென்பதறிவரிய சூழ்கிரஹணஞ் சாட்சியாம்" இப்போதென்ன சொல்லுகிறீர்கள்?

**தன.**—பேஷ் ! நீ ரம்பப் புத்திசாலி ஐயா நீர்.

(வீரபராக்கிரமன் ஓடிவருகிறான்.)

**வீரபராக்கிரமன்.**—(இரைப்புடன்) மகாராஜா ! மகாராஜா !!

**வீரகே.**—வீரபராக்கிரமா ! என்ன விசேஷம் ? சொல் சீக்கிரம்.

**வீரப.**—(இரைப்புடன்) மகாராஜா ! யான் இப்போது மூன்று மைல் தூரத்திலிருந்து ஓடிவருகிறேன். இந்த இரைப்பு நீங்கியவுடன் சொல்லுகிறேன்.

**வீரகே.**—இவ்வளவு அநாவசியமான சமாசாரங்கள்சொல்லியநீ இரண்டோர் வார்த்தையில் இன்ன முடிவென்று சொல்லப்படாதா ? அப்பென்னைக் கொண்டுவந்து விட்டாயரி ? என்ன ?



**வீரப.**—மகாராஜா ! சற்றுப்பொறுங்கள். இரைப்பு நீங்கட்டும். சொல்லுகிறேன்.

**வீரகே.**—வீரபராக்கிரமா ! என்ன இது! உனக்குப் புத்தியென்பது சற்றேனுமில்லையா ? கொண்டுவந்தேன், இல்லை, என்று சொல்லுகிறதைவிட்டுவேதேதோ குளறுகிறாயே. முட்டாள். சீ போ! என்முன்னில்லாதே.

**வீரப.**—யான் இவ்வளவுதூரம் சென்று வந்ததற்கு இதுதானா வெகுமதி ? நன்றாயிருக்கிறது !

**பவ.**—வெகு நன்றாயிருக்கிறது. மிகவும் நன்றாயிருக்கிறது.

**வீரகே.**—ஏ ! பயித்தியம். உஸ், வாயை மூடு, போதும்.

**பவ.**—மகாராஜா ! என்னுடன் மருந்து சாப்பிடுகிறதற்கு என்ன சொல்லுகிறீர்கள் ? சொல்லுங் கோள்.

**மூடமதி.**—பேசாதிரும் ஐயா !

**வீரகே.**—தனஞ்சயா ! இப்போதாவது அவன் சமாசாரம் இன்னதென்று சொல்லுகிறானா பார் ?

**வீரப.**—போதும் போதும். மகாராஜா ! யான் இவ்வளவுதூரம் போய் வந்ததற்கு "சீபோ" "சீவா"என்கிற பட்டத்தைப் பெற்றேனே! யான் சமாசாரம் சொன்ன பிறகு கிடைக்கப்போகிற பட்டம் வேறாகத்தானிருக்கும். அக்கறை தீர்ந்த பிறகு எதுவும் அப்படி அப்படி தானே.

**வீரகே.**—வீரபராக்கிரமா ! உனக்குப் புத்தியிருந்து பேசுகிறாயா ? என்ன ? எதற்காக உன்மேற் சினந்தேன் என்கிறதை அறிந்துகொண்டாயா நீ ? கேள்விக்குச் சரியான பதிற் சொல்லாமல் என்னென்னவோ அநாவசியமானவைகளை எல்லாம் செப்பினையே யென்றல்லவோ யான் சினந்தது. கோபிக்கவேண்டாம் வா ; போய்வந்த சமாசாரம் என்ன சொல்.

**பவ.**—மகாராஜா ! என்ன சொல்லுகிறீர்? எடுக்கவா மருந்தை?

**வீரகே.**—யார் ஓய் நீ ? பயித்தியக்காரனா யிருக்கிறாய் ! தனஞ்சயா ! இக்கிழவனை உடனே அப்புறப்படுத்து.

**தனஞ்.**—பெரியவரே போம் எழுந்து.

**பவ.**—இல்லை. இல்லை. இல்லை. (அனைவரும் சிரிக்கிறார்கள்.)

**வீரகே.**—இனி மேலாவது பேசாதிரும்.

**பவ.**—(தலையசைத்துக்கொண்டு) அப்படியே! அப்படியே!

**வீரகே.**—வீரபராக்கிரமா. உனக்கு இன்னம் மனம் வரவில்லையா ?

வீரப.—அரசே! தாங்கள் நாடியபெண்மணியைக்கொண்டுவந்து விட்டேன்.

வீரகே.—சபாஷ்! வீரபராக்கிரமா! என்னருகில்வா. நீயல்லவோ நண்பன். உன்னைப்போலும் எனக்கு வேறொரு நண்பன் கிடைக்கப்போகின்றானோ இவ்வுலகில்?

தனஞ்.—ஒருநாளுமில்லை, மகாராஜா!

வீரகே.—நண்பனே! அம்மாது சிரோமணி எங்கே இருக்கின்றாள் இப்போது?

வீரபரா.—ராஜ! போகிகள் பின்னாற் பல்லக்கிற் கொண்டுவருகிறார்கள். முன்னாடி தங்களிடம் சமாசாரம் சொல்லுகிறதற்கு யான் ஓடிவந்தேன்.

வீரகே.—ஒருவரும் பிரவேசிக்கப்படாத மாளிகையில் வீற்றிருந்த அம்மாது சிரோமணியை எவ்வாறு கொணர்ந்தனை?

வீரபரா.—மகாராஜா ஓர் தந்திரமான சூழ்ச்சியன்றோ செய்து கொணர்ந்தேன்.

வீரகே.—எத்தகைய சூழ்ச்சி செய்தனை? வீரபராக்கிரமா?

வீரபரா.—அதைப்பற்றித் தாங்கள் ஏன் கவனிக்கவேண்டும்? தாங்கள் நாடியிருந்த பெண்ணோ கிடைத்துவிட்டாள். இனி அதைப்பற்றி பேசுவானேன்?

வீரகே.—ஆயினும் யான் அதை அறியப்படாதா?

வீரபரா.—ஆனாற் சொல்கின்றேன் கேளுங்கள். யானிவ்விடம் விட்ட அன்று இரவு சுமார் 12 மணிக்கு அம்மாது இருந்த மாளிகையைக் கொளுத்திவிட்டுப்பின்பக்கம் வாயிலில் ஓர் பல்லக்கை வைத்துக்கொண்டு சிவிகையாட்களோடு கவனத்துடன் காத்திருந்தேன். மாளிகை தீப்பற்றி யிருந்ததாலும் அம்மாது நித்திரையிலிருந்து திடுக்கிட்டெழுந்ததனாலும் மனங்கலங்கிப் பின்பக்கவாயிலாய் ஓடிவந்தபோது சிவிகையைக்காட்டி ஏறிக்கொள்ளும்படி சொன்னேன். அக்கினியிலிருந்து தப்பினாற் போதும் என்கிற எண்ணத்தை யுடையவளான அம்மாது பல்லக்கைப் பற்றியும், என்னைப்பற்றியும் யாதொன்றும் விசாரியாமலே பல்லக்குக்குள் ஏறிக்கொண்டனள். உடனே பல்லக்கைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டுவந்தோம்.

வீரகே.—ஆஹா! வீரபராக்கிரமா! உன்னுடைய சமர்த்தே சமர்த்து! உன்னுடைய பெயருக்குத் தகுந்த குணமும் உன்னிடம் அமைந்திருக்கின்றதே. உன்போலும் நட்பு புத்தியுடையவர் வேறொருவர் இருப்பார்களோ?



தனஞ்.—ஏது? இருக்கவே மாட்டார்கள்.

வீரகே.—நண்பனே! நீ இப்போது எனக்குச்செய்த உபகாரத்திற்கு நான் என்ன கைம்மாறு உனக்குச் செய்யப்போகின்றேன்?

வீரபரா.—மகாராஜா! தங்களுடைய தயவிருந்தாற் போதாதா? வேறு உபகாரமும் செய்யவேண்டுமா?

வீரகே.—உன்னை மறந்துவிடுவேன் என்று நினைக்கிறாயா? வீரபராக்கிரமா! என் ஆயுள் உள்ளவரையில் உன்னை மறவேன். இஃது உண்மை.

பவ.—மகாராஜா! நாழி——.

வீரகே.—உஸ், பேசாதே.

பவ.—இல்லை, இல்லை.

வீரகேசரி.—வீரபராக்கிரமா! இவ்விடம் விட்ட அன்று இரவே அம்மாளிகையைக் கொளுத்திப் புறப்பட்டதாகச் சொல்லுகிறாயே! இந்த நாலைந்து தினங்களாக என்ன செய்தீர்கள்?

வீரபரா.—மகாராஜா! யாராவது கண்டுபிடித்து விடப்போகிறார்களென்று சுற்றுவழியாகச் சிவிகையைக் கொணரும்படி கட்டளையிட்டு, எனது மாமியார் இருக்கும் ஊருக்குச் சென்று அவ்விடம் இருந்துவிட்டு இப்போது தான் வருகிறேன். இன்றைத்தினத்தில் இந்தக் காலத்தில் தான் பல்லக்கை இங்குக் கொண்டுவரும்படி சிவிகையாளருக்குக் கட்டளையிட்டு வந்தேன். அவர்களும் கொண்டுவருகிற சமயம்தான்.

வீரகே.—நல்லகாரியஞ் செய்தனை! வீரபராக்கிரமா! அப்பெண் சென்ற நாலுதினமாக உணவுக்கு என் செய்திருப்பாள்?

வீரப.—வேண்டிய உணவுகள் யாவும் பல்லக்கிலேயே தயார் செய்துவைத்திருக்கிறேன். அம்மாதுக்குப் பசிப்பிணி யென்பது சற்றும் அணுகவே அணுகாது.

வீரகே.—அசாத்தியமான காரிய மெல்லாம் செய்த உனக்கு இஃது ஓர் பெரிய காரியமா? அம்மாதுக்குத் தகுந்த உணவெல்லாம் வைத்தேயிருப்பாய்.

பவ.—மகாராஜா! வலி அதிகமாகிறது. நாம் எப்போது சாப்பிடுகிறது மருந்தை?

வீரகே.—தனஞ்சயா! இஃதென்ன பெரிய சங்கடமாயிருக்கிறது! இம் மண்டபத்தினின்றும் அப்புறப்படுத்தி விடு.

**தனஞ்.**—ஐயா! வாரும். (அருகிற்போய்ப் பிடித்திழுக்க பண்டிதர் விழுந்து விடுகிறார்.)

**வீரகே.**—தனஞ்சயா! ஆட்களைக் கூப்பிட்டு இவனைத் தூக்கிக்கொண்டு போய்ப் பயித்தியக்காரர் இருக்கும் வயித்தியசாலையில் விட்டு வரும்படி சொல்.

(தனஞ்சயன் போகிறான்.)

**மூட.**—ஐயா பெரியவரே! எழுந்திரும் (தட்டி யெழுப்புகிறார்.)

**பவ.**—உர். உர்.

**மூட.**—ஐயா! எழுந்திரும் (மறுபடியும் எழுப்புகிறார்.)

**பவ.**—ராஜா மருந்து கேட்கிறார். இதோ கொடுக்கிறேன் (எடுக்கிறார்.)

(தனஞ்சயன் இரண்டு ஆட்களுடன் வருகிறான்.)

**தனஞ்.**—அடா தூக்கிக்கொள்ளுங்கள். (தூக்குகிறார்கள்)

**பவ.**—யாரப்பா அது? விடுங்கள். ராஜாவுக்கு மருந்து கொடுத்துவிட்டு வருகிறேன்.

(தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள்.)

**வீரகே.**—அப்பா சனி தொலைந்தது.

**வீரப.**—மகாராஜா! அவர் யார்?

**வீரகே.**—யாரோ! எனக்கென்ன தெரியும்.

(இன்னும்வரும்)

தி. மே. முருகேச முதலியார்.

---

## புத்தகக்குறிப்புகள்.

### வித்யாரண்ய நகரம்.

[சென்னைச் சடகோபாசாரியண்ட் கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. விலை: அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.]

இச்சிறு 'சரித்திர விநோதக்கதை' இன்பவல்லியின் முதன்மலராக வெளிப்போந்துளது. இதனை யியற்றியோர் ம-ள-ள-ஸ்ரீ கு. ரா. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், பி. ஏ. இங்ஙனமவரும் பெண்டிரும், கற்றோரும் மற்றோரும் படித்துப் பயன்பெறத் தக்கவாறு எளிய நடையிலெழுதப்பட்டுளது; பத்து அத்தியாயங்களுடையது; இதன் முதலில் நூலாசிரியர் பதிப்பாசிரியராகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ.



க்கு வரைந்துள்ள கடிதத்திற்கூறுமாறு, இதனைப் படிப்போருக்கு விஜயநகரம் என்ற பெரிய பட்டணமானது ஒரு சிறு கூட்டத்தாரராலாக்கப்பட்ட விதம் தெரிகின்றது. இப்புத்தகத்தின்கட் பிழைகளதிகமாயில. இதனை வாசிப்போரெவரும் 'படுகொலை' யென்ற அதிகாரத்தின்கீழ்க் கூறப்படுவனவற்றிற் கிரங்குவாரென்ப தொருதலை. அதான்றியும் இரண்டாமத்தியாயத்திற் காட்டப்படும் நூலாசிரியர்தம் நகைமொழிநிலையினைக் கண்டு யாவரே மெய்ச்சி அதனைச் சுவையாதிருப்பார்? இதன்கணிருக்கும் பாத்திரங்களுள் ஹரிஹரன், நரசிங்கன், வித்யாரண்யர் முதலியோர் தாம் பிடித்த காரியத்தை விடாது 'உறுதிபயப்ப கடைபோகாவேனு மிறுவரை காறு முயல்ப' வென்ற கூற்றினுக்குத்தக்க இலக்கியங்களாய் அதன் உண்மையை யெடுத்துக்காட்டி யொளிர்கின்றனர். மற்று, டோக்லாக்கின் இயல்பை நூலாசிரியர் தாமே யெடுத்துக் கூறியிருக்கின்றார். இப்புத்தகமானது அதனைப் பதிப்பித்தோர் புகழையும் வளர்க்கின்றது. இது சென்னை வெ. நா. ஜூபிலி யச்சுக்கூடத்தில் நல்ல காகிதத்திற் பதிப்பிக்கப்பட்டுளது. நூற்றிருபது பக்கங்களுடையது.

### தசரதன் தவறு.

[தி. அ. சுவாமிநாத ஐயர், எவ். டி. எஸ். வெளிப்படுத்தியது; விலை அணா 0—4—0. தபாற்கூலி வேறு.]

சென்னைக்கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய பிரமஸ்ரீ. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் பி. ஏ. புனையும் நாமகள் சிலம்பின் ஐந்தாம் பரலாகிய இந்நூல், இனிய செந்தமிழ் நடையிற் கடலூர்க் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ, ந. பலராம ஐயரவர்களால் இடையிடையே விழுமிய பொருள் பயக்குஞ் செய்யுட்களுடைத்தாய வசனரூபமாய் எழுதப்பட்டுளது. இது நாடக விகற்பங்களுள் ஒன்றாய ஓரங்கம் அல்லது சிறப்பங்கம் என்பதன் பாற்படும். அயோத்திமாநகர மன்னனும் இராமபிரான் தந்தையுமான தசரத சக்கிரவர்த்தி தனது இளமைப்பருவத்து வேட்டையாடச் சென்று நிற்குங்கால் தான் நின்ற புதர்மருங்கி லிருந்த தடத்து ஓர் பார்ப்பனச்சிறுவன் தன் தந்தையின் நீர் வேட்கை தீர்ப்பான் எடுத்துக்கொண்டிருந்த நீரின் ஓசையைக்கேட்டு, யானை நீர் பருகு மொலியென மருண்டு வில்லெடுத்து அம்பொன்றைத் தொடுக்க, அஃதச்சிறுவன் மார்பிற் பாய்ந்தமையால் அவனழுகுரலைக்கேட்டு ஓடித் தான் செய்ததன் பயனைக் கண்ணுற்று வருந்தி அச்சிறுவன் வேண்டுகோளின்படி, நீரை யெடுத்து அவன்றந்தையிடஞ் சென்று கொடுத்து அவர் புத்திரன் தன் தவற்றாலிறந்தமையைக்கூற, புதல்வன் இறந்தமையால் வெகுளி மேலிட்டும், கருணை மீக்கூர்ந்து மன்னனும் மகன் பிரிவாற்றாமையா

விறத்தல் வேண்டுமெனச் சபித்தனரென் றைதிகமாய் நம்மவர்களுள் வழங்கி வரும் வரலாற்றினின்றும் புனையப்பட்டுளது. அவலச்சுவை யுடைத்தாய இச்சிறு நாடகத்தின் நான்காம் களத்தினைப்படிக்கு மெவரும் கன்னெஞ்சராயினும் இரங்குவராதலின், அஃது ஆசிரியரது கல்வித்திறத்தினை நன்கு விளக்குகின்றது. எத்திறத்தராயினும் விதிப்பயனை விலக்கலருமை யென்னும் ஆதிதெய்விகக் கொள்கையை வற்புறுத்திக்காட்டும் இச்சிறு நூல் தமிழ் அறிந்த வெல்லோரும் படிக்கத்தக்கது. பாத்திரங்களெல்லாம் நன்கமைந்திருக்கின்றன. மேன்மையான காகிதத்தில் நற்பெயர் பெற்ற தாம்ஸன் கம்பெனியாரால் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. யாவரும் எளிதில் வாங்கிப்படிக்கத்தக்கவாறு குறைந்த விலை யேற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பாவலர் விருந்து : முதல்நாள்.

[எஸ். பி. சி. கே. அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. மிகவுயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டுளது. 102-பக்கங்களுள்ளது. விலை அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறிஸ்தவகலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள், பி. ஏ.,** இயற்றியது. **தமிழ்மகண்மேகலை**யின் மூன்றாங் கிங்கிணியாய் மிளிர்ந்து தோன்றுமிந்நூல் யாவருங்கண்டு களிப்பான் வெளியுலவும் பருவத்தினை யடைந்தது. பதினொரு சிறுநூல்களையுடையதாய் இருபானிரண்டு விருத்தபேதங்கள் பெற்ற 224-பாக்கள் கொண்டது. படிப்போர் யாவர்க்கும் இழுமெனு மோசை பயப்பதாய்ச் செவ்விய நடையிற் செம்பொருடந்து அற்புத நவீன கற்பனை செறிந்து தத்துவவுண்மையுந் தருக்கநூல் வன்மையுமொருங்கு விளக்கி யுயர்தரு நீதியை மயர்வறக்காட்டும் இந்நூலினால் ஆசிரியரது திறன் இற்றென்று ஒருவாறறியலாகும். நாவுக்கரையர்தம் நவிலரும் பத்தியும், கவிச்சக்கிரவர்த்தியாங் கம்பனார் சொற்றொடைச் செறிவும், கச்சியப்ப சிவாசாரியர்தம் மெய்ச்சிய நடையும் ஒருங்கே யமைந்துளவாம். ஒன்பான் சுவையும் அமைந்து பற்பல அணிநலம் பெற்றுத் திகழுறும் இந்நூலைக்கண்டோர் யாவருங் கண்டே யென்பார். இதனுளடங்கிய 'மணிய சிவனார் கலிவெண்பா'வினாலும் 'அவயவவறிக்கை'யாலும் ஆசிரியர் சுத்தாத்துவிதவுண்மையைக் கூறுமுகத்தானே தோன்றிய பத்தியும், 'கையறுநிலை' யினானே யவலச்சுவை தெரிக்குமாற்றலும், 'கடற்கரையுலா'வினால் தற்காப்புமுறை பெண்ணுஞ் சுபாவநியமத்தினை வலியுறுத்திய வன்மையும், 'தாமரைத்தடம்', 'பட்டினக்காட்சி' களாற் இயற்கை யமைப்பையும் பழவினை முறையையும் ஊழின் வலிமையையுமினிது தெரித்துமுயிர் 'கலங்கரை விளக்க'த்தானாசிரிய



ரது படைத்துரையாற்றலும், 'ஆசானுருநிலை'யாலன்னான் மாட்டுத் தமக்குள அன்பும், 'மதுரை மாநக'ரினாற் சுதேசாபிமானமுஞ் சுபாஷாபிமானமும், 'போலியாராய்ச்சியன்' என்பதனானே நூல்களிற் குற்றமே காண்டலாராய்ச்சியன் றென்றும், 'ஓரையப்பாட்'டினால் உலக நிலையாமையைப்பற்றித் தாங்கொண்ட கருத்தும் புலனாகின்றன. பற்பல விடங்களினு முண்மைதோன்ற வாதித்த விடயங்களை யாவரு மெளிதிலறிவான் றெரிக்குமாற்ற லிவ்வாசிரியர்பால் இனிது விளங்குதலை யாவருமறிவாரென்பது திண்ணம். இதுகாறும் பன்னாளாய்ப் பழையவுண்டியினை யுண்டும் அமையாது வருந்துந் தமிழ்ப் பாவலர்க்கு விருந்தாய் அன்னார் இன்சுவைப் பொருளினையுண்டு தேக்கெறியும் வண்ணந்தோன்றிய விந்நூலைச் சென்னைச் சருவகலாசாலையார் கண்டு மகிழ்ந்து எவ். ஏ., பி. ஏ., முதலிய பரீக்ஷைகளுக்குப் பாடமாயேற்படுத்தி இன்னுமிவ்வாசிரியரைப் பன்னாளும் விருந்திடுமாறு ஊக்குவாரென்று நம்புகின்றோம்.

நன்றியறியாமகன்.

[சென்ட்ரல் புக் டிபோ கே. கிருஷ்ணசாமி ஐயர், பி. ஏ., வெளியிட்டது. விலை அணா 0—8—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,** பதிப்பித்துவரும் **இன்பவல்லி**யின்கண் ஐந்தாம் மலராகும். இதனை யியற்றினார் **ஸ்ரீ. சு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், பி. ஏ.** இதன் கதைப்போக்கு மிகவு மெளிதில் விளங்கக்கூடியதாயிருக்கின்றது. நடை மிகவுமெளிதென்றே சொல்லலாம். நோக்குமிடத்துப் பெண்பாலாரும் நன்கு அதன்கட் பயிலவேண்டுமென்ற கருத்துடன் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது. இதன்நூலாசிரியர் முடியமட்டும் எப்பொருளையும், யாம் நாடோறுங் காணுமாறுபோல, இயற்கையொழுங்கு வழுவாது பொலிவுபெற அமைக்கின்றனர். தற்கால மேற்புல முறைப்படி இந்நூல் பல்லாற்றானும் இயலாநிற்பச் சில பாத்திரங்களின் மேம்பாடு மிகவும் முகஞ்செய்து கிடக்கின்றன. **இலக்குமியினது** சீலம் மிகவும் மேன்மையுள்ளதாமாறு காண்க. அன்றியும், அவள் தன் பெயர் காரணவிடுகுறி யாமாறு தோற்றுகின்றனள். சுந்தரனது தகப்பனெனச் சாற்றப்படும் **இராமநாத ஐயரோ** மிக முன்கோபமுடையாராகின்றனர். இது பற்றிச் சுந்தரனைக் கொல்வதற்குப் பதிலாகப் பிறரொருவரைக் குத்தியதும் மகனைக்கொன்ற பிறகு தான் குத்திக்கொண் டிறத்தலும், முதலியவற்றால் தெற்றென விளங்கும். ஆயினும் நூற் கூற்றையே சார்ந்து ஆராய்வோமாகில் இராமநாத ஐயரது சீலப் புனைவினை நாம் உய்த்துணர்வது அரிதாகின்றது. இது நிற்க. இந்நூலாசிரியர் இயன்றமட்டும் இக்கதை

யைச் செவ்விதாய்ப் பண்படுத்திருக்கின்றனர் என்பது யாவர்க்கும் புலனும். இது நல்ல கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. இதன்கண் 35 - அத்தி பாயமுள. இது 140 பக்கங்கொண்டது. செய்ந்நன்றியும், வாழ்க்கைப் பயனு மறியா ஒருவன் எய்தும் முடிவை வாசிப்போர்க்கு நன்கு புலப்படுத்தி, இஃது அவர்களை அறிவுறுத்துமென்பதொருதலை.

## மதுரை மாலை.

[பண்டிதமித்திர யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. விலை : அணா 0—1—6. தபாற்கூலி வேறு.]

இஃது காலஞ்சென்ற மதுரையம்பதி மகாவித்துவான் சு. சபாபதி முதலியாரவர்களால் மதுரைமாநகர்ச் சொக்கலிங்கப் பெருமான்மீது இயற் றப்பட்டதோர் பாமாலை; நூறு வெண்பாக்களாலாயது; இவையிற்றுள் முதலைம்பது பாடல்களும் முன்னீரடிகளும் பின்னீரடிகளுந் தனித்தனி யமக மடக்குவாய்ந்தனவும் இறுதி யைம்பது பாடல்களும் முன்னீரடிகள் இலை டையும் பின்னீரடிகள் யமக மடக்கும் வாய்ந்தனவுமாயுள்ளது; யாண்டும் எட்டுணையேனு மிடர்ப்பாடின்றி யாக்கப்பட்டுளது; ஆங்காங்குச் சொன்ன யங்களும் பொருணயங்களும் பொலிந்து விளங்கப் பெற்றது; கற்பனைத்தி றன் பெரிதும் வாய்ந்தது; நூல் முழுவதும் ஆழ்ந்த கருத்துக்களடங்கியது; பண்டிதர்கள் யாவரும் அகமகிழ்ந்து படித்துக் களிகூரத்தக்கது; பளபளப் புள்ள உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது; யாவருமெளிதிற் பெற் றுப்படிக்குமாறு மிகவுங் குறைந்த விலையிடப்பட்டுள்ளது; இந்நூலாசிரிய ரது மாணாக்கருள் ஒருவராகிய பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி யாரவர்கள், பி. ஏ., பதிப்பித்தது.

## திருக்கழுக்குன்றக் கலம்பகம்.

[இராயல் விக்டோரிய யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது. விலை அணா 0—2—0. தபாற்கூலி வேறு.]

இந்நூல் திருவிடை மருதூர்க் கலம்பகத்தின் ஆசிரியராகிய திருவெவ்வு ளூர்-இராமசாமிச் செட்டியாரவர்கள் இயற்றியது; பலவகைப்பட்ட யாப்பு விகற்பங்களுள்ளது; சொற்பொருணயங்கள் வாய்ந்தது; பண்டிதர் யாவரும் பரிந்து பாராட்டத்தக்கது; கழுக்குன்ற மான்மிய மனைத்தையுஞ் சுருக்கித் தெரிப்பது; பத்திச்சுவை மிக்கொழுகுவது; சைவராயினோர் யாவர்க்கும் இன்றியமையாதது; மிகவும் பளபளப்புள்ள நல்ல கடிதத்திற் பதிப்பிக்கப் பட்டுளது.

## தாமரை நாண்மலர்.

[இது தி. அ. சுவாமிநாத ஐயர், எஸ். டி. எஸ்., பதிப்பித்தது. விலை : அணா. 0—6—0. தபாற்கூலி வேறு.



இந்நூல் கடலூர்க் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீ ந. பலராமையரவர்கள் இயற்றியது; பிரமஸ்ரீ, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. புனைந்துவரும் தமிழ் மகன் மேகலையுள் நான்காங் கிங்கிணியாம். இதன் கண் ஆறு செய்யுணூல்களுள்ளன; நூலின் பெயருக் கேற்ப, முதற்கண் 'தாமரை' என்றதன்கட் சுந்தரயூகத்தாலமைந்த அரிய கற்பனைகள் செறிந்துள; 'குயில்' என்றதனால் தாம் இயற்கைப் பொருள் களைக் கண்டு தாம் ஆனந்திக்குமாறும், 'காணாமற் போனதோர் ஓட்டை' யென்பதனால் உற்று நோக்குதலாற் போதரும் பயன் இனைத்தெனத் தெருட்டுமாறும், 'ஆசிரிய பஞ்சகம்' என்னு நூலினால் தமக்குத்தமது ஆசிரியர் மீதுள ஆராவன்பும், 'அரசிபிரிவாற்றாமை' யென்பதனால் தமக் குள அரசவிசுவாசமும், 'சீமந்தனி சரிதை'யால் பண்பழையின் ஆசாரச் சீர்திருத்தத்திற்கு ஆவனசில காட்டுமாறும் புலப்படுகின்றன. இவரது பாடல்களெல்லாம் செவிக்கின்பம் பயப்பனவாய்ச் செந்தமிழ் நறுமணங் கமழ்ந்து விளங்குகின்றன; இந்நூல் 82 பக்கங்களுள்ளது; நல்ல உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டுளது. இஃது எப். ஏ. முதலிய பரீக்ஷைகட்குப் பாடமாயேற்படுத்தத்தக்கது.

## நேர்நேர் பழமொழித்திரட்டு.

இது சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, திருமணம். செல்வகேசவராய முதலியாரவர்கள், எம். ஏ. தொகுத்ததோர் அருமையான நூல்; இதன் கண் இரண்டு பாகங்களுள; முதற்பாகம் தமிழ்ப் பழமொழிகட்கு நேர் நேரான ஆங்கிலப் பழமொழி களை அகராதித் தொடைபெறக் காட்டுவது; இரண்டாம்பாகம் ஆங்கிலப் பழமொழிகட்கு நேர்நேரான தமிழ்ப் பழமொழிகளை அகராதித்தொடை பெறக்காட்டுவது. இவ்விரண்டு பகுதிகளின் பயனும் அவற்றின்கட் பயின் றறிந்தவர்க்கே தெற்றென விளங்கும்; இது மிகவும் சிரமப்பட்டுப் பல் லாண்டுகளாக இதற்கென வுழைத்து ஒரு வழிச்சேர்த்துத் தொகுக்கப் பெற்றதாமாறு யாவர்க்கும்புலனாம். நெடுநேரம் யோசித்துங் கிட்டுதற் கரிய ஒத்த கருத்துடைய பழமொழிகள் பல நேர்மைபெறக் காட்டப் பட்டுள தன்மை மிகவும் வியக்கற்பாலதே; இதன்கட் சிற்சில பழமொழி கள் தென்னாடுகளில் வேறுபட வழங்குகின்றன; சில இழிசினர் வழக் குரைகளாம்; சில மரூஉ மொழி பொதுளியன; சில பழமொழிகளெனவே தோன்றாதவாறு அத்துணை நீண்டும், சட்டுரைச் சுவையற்றும், எதுகை மோனை பிறழ்ந்துங் கிடக்கின்றன; இருந்தனவற்றை யிருந்தவாறே யச் சிட்ட நமது முதலியாரவர்கட்கு இவையிழுக்காகா; இந்நூல் கலாசாலை களிற் படிக்கும் மாணாக்கர்கட்குப் பெரிதும் பயன்படத்தக்கது; விலை : அணா. 0—8—0. தபாற்கூலி வேறு.

### ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்.

இஃதோர் அருமையான வேதாந்த நூல். இதைச்செய்தவர் ஸ்ரீ நிச்சலதாசரவர்கள். இந்த நூல் ஹிந்தி பாஷையிலிருந்து தமிழ் நாட்டார்க்குப் பிரயோஜனமாம்படி தஞ்சைமாநகரம் ஸ்ரீமத்-தப்புஸாமி ராஜு அவர்களால் இது மொழிபெயர்க்கப்பட்டு, சென்னை ரிப்பன் அச்சியந்திரசாலைத் தலைவர் ம-ள-ள-ஸ்ரீ சை. சிவசங்கர செட்டியார் அவர்களால் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூபா. 4. இப்புத்தகத்தின் விஷய விசேஷங்கள் மறு சஞ்சிகையில் விரித்துரைக்கப்படும்.

---

## சமாசாரக் குறிப்புகள்.

---

**இராசதானிக் கலாசாலைச் சம்ஸ்கிருத போதகாசிரியர் உத்தியோகம்**:—கனம் பொருந்திய சகலபாஷா நிபுணராகிய தி. மி. சேஷகிரி சாஸ்திரியாரவர்கள், எம். ஏ., காலஞ்சென்ற பிறகு அவருக்குப்பின் அவ்வுத்தியோகத்தை நேரியவழியிற் பார்க்கத் தக்கவர் இல்லையென்றெண்ணிச் சென்னைப் பொதுஜன வித்தியா வி[illegible] அவ்வேலையை நிறுத்தி அதற்குப் பிரதியாகச் சாமானிய [illegible] குறைந்த சம்பளத்தில் நியமித்து விடுவதே யுசிதமென [illegible] கூறினராம். [illegible] நமது தேசாபிமானிகள் [illegible] அவர் கூற்றை நிராகரித்து ம-ள-ள-ஸ்ரீ [illegible]. அரங்காசாரியரவர்கள், எம். ஏ. யை நியமித்திருக்கின்றனர் என்பதுணர்ந்த யாவரும் சந்தோஷப்படுவார்களென்பது திண்ணம்.

***

**சென்னை யுயர்நீதி சாலைக்கு இரண்டாவது சுதேசி நியாயாதிபதி**:—கனம் பொருந்திய நியாயாதிபதி ஷெப்பேர்ட் துரையவர்கள் உபகாரச்சம்பளம் பெற்று நீங்கினராகக் காலியாயிருந்த அவ்வேலைக்கு ம-ள-ள ஸ்ரீ, ஸர். வி. பாஷியம் ஐயங்காரவர்களை நியமித்திருக்கிறார்களென்பது கேட்டு நாம் மிகவுங் களிகூர்கின்றோம். இப்பொழுது நமது சென்னை யிராசதானி யுயர்நீதி சாலைக்கு இரண்டு சுதேசி நியாயாதிபதிகள் ஏற்பட்டமையைக் குறித்து நாம் நமது துரைத்தனத்தாருக்கு வந்தனமுள்ளவராகின்றோம்.

160956